:: ஸ்ரீசீதாராமாப்யாம் நம: ::

1905

மகரிஷி ஸ்ரீ வால்மீகி அருளிய

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

யுத்த காண்டம்

(தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு) – (நான்காம் பாகம்)

श्रीमद्वाल्मीकीयरामायणम्—Volume IV

युद्धकाण्डम् (तमिल)



गीताप्रेस गोरखपुर
GITA PRESS, GORAKHPUR [SINCE 1923]

கீதா பிரஸ், கோரக்பூர்.

॥ ஸ்ரீஹரி: ॥

1905

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

யுத்த காண்டம்

(தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு) – (நான்காவது பாகம்)

श्रीमद्वाल्मीकीयरामायणम्—Volume IV

युद्धकाण्डम् (तमिल)

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ ப₃ந்து₄ஶ்ச ஸகா₂ த்வமேவ ।
த்வமேவ வித்₃யா த்₃ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தே₃வதே₃வ ॥

ஆருயிர் அன்னையும் நீயே, அருமைத் தந்தையும் நீயே,
உறவும் சுற்றமும் நீயே, உற்ற நண்பனும் நீயே,
கற்கும் கல்வியும் நீயே, சேர்க்கும் செல்வமும் நீயே,
அனைத்தும் ஆன என்றன் ஆதிதேவனும் நீயே!

கீதா பிரஸ், கோரக்பூர் – 273 005. (உ.பி.)

Our Publications are available at —

1. Gita Press Sales Depot, Gita Press Mansion,
   8/1-M, Race Course Road (Near Thomas Park Bus-stop)
   COIMBATORE-641018. Mobile : 9943112202
2. Gita Press Gorakhpur Book Shop
   Electro House, No. 23, Ramanathan Street, KILPAUK,
   CHENNAI- 600010. Ph. : (044) 26615959

Translated by :

Pandit. T.S.Kothandaraman, B.A.,B.Lit.,

Chennai—44. Tamil Nadu.

Second Reprint 2018 1,000

Total 4,000

❖ **Price : ₹ 240**

(Two Hundred and Forty Rupees only)

Printed & Published by :

Gita Press, Gorakhpur—273005 (INDIA)

(a unit of Gobind Bhavan-Karyalaya, Kolkata)

Phone : (0551) 2334721, 2331250, 2331251

web : **gitapress.org** e-mail : **booksales@gitapress.org**

Visit gitapressbookshop.in for online purchase of Gitapress publications.

1905 Valmiki Ramayan Part 4 (Tamil)_Section_1_Back

॥ ஸ்ரீஹரி: ॥

பதிப்பாளர் உரை

இராமபிரானுடைய பெருங்கருணையால், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் நான்காவது பாகம் (யுத்த காண்டம்) அடியார்களின் திருக்கரங்களில் வண்ணமிகு மலராக நறுமணம் வீசித் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் மிகப்பெரிய காண்டமாக விளங்குவது, யுத்த காண்டம். பெயருக்கேற்ப, இந்த காண்டத்தில் போர்க்காட்சிகளே நிறைந்துள்ளன.

'அந்தக் காலத்திய போர்களில் என்னென்ன அஸ்திர–சஸ்திரங்களை உபயோகித்திருக்கப் போகிறார்கள்? வலுவான தண்டம், அம்பு, வேல், சூலம், கத்தி, கற்கள் போன்ற பழமையான தாக்குதல் கருவிகளையே உபயோகப்படுத்தியிருப்பார்கள்!' என்று எண்ணிவிட வேண்டாம்.

அது, தவம் செய்து மந்திர சக்திகள் பெற்றவர்கள் மிகுந்திருந்த காலம். மனிதர், அரக்கர், அசுரர், வானரர் போன்ற எல்லோரிடமும் தவ ஆற்றல் இருந்தது. அதனால், கையால் எறியப்படும் ஆயுதங்களைக் காட்டிலும், மந்திர சக்தியால் இயக்கப்படும் சஸ்திரங்களையே அதிகமாகப் பயன்படுத்தியிருப்பார்கள் என்ற எண்ணமும் சரியானதல்ல.

வால்மீகி முனிவர், போர்க்களங்களில் உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்களைப் பற்றியும் அவைகளின் செயல்திறன் பற்றியும் விரிவாகவே வர்ணித்திருக்கிறார். போர்க்கலைப் பயிற்சியும் ஆயுதப் பயிற்சியும் முறையாகவே பயிலப்பட்டன என்பதில் ஐயமில்லை. அத்துடன் போர்க்களத்தில்கூட அறநெறிகள் பின்பற்றப்பட்டன என்பதையும் கண்டு வியக்கிறோம்.

போர்க்காட்சிகள் என்றால் என்ன? 'இவன், அவனைத் தாக்கினான்; அவன், இவனைத் தாக்கினான்' என்ற படப்பிடிப்புத் தானே? வெவ்வேறு வீரர்கள் போர் செய்யும் காட்சிகளைத் திரும்பத் திரும்ப நாம் படிக்க நேர்ந்தால் அலுப்புத் தட்டிவிடாதா? போர்களத்தில், கொலைவெறித் தாக்குதல், தேர் முறிதல், யானை–குதிரைகளின் கோரமான பாய்ச்சல்கள், ரத்தப்பெருக்குடன் மிதக்கும் சடலங்கள் – இவைகளைத்தானே காண முடியும்? சுவையான வேறு நிகழ்ச்சிகளுக்கு இடம் ஏது? – என்பது பாமரத்தனமான சிந்தனை.

ஆதிகவி வால்மீகி பகவான், வெறும் அடிதடியை மட்டும் எழுதி வைத்துவிட்டுப் போகவில்லை. போர்க்களத்தில் எவ்வளவு உத்திகள் உண்டோ, அவைகளையெல்லாம் இப்போது நம் கண்ணெதிரில் நடக்கும் நிகழ்ச்சிபோல உயிர்த்துடிப்புடன் விவரித்திருக்கிறார். 'அரக்கத் தலைவர்களும் வானரத் தலைவர்களும் மிகக்கடுமையாகப் போர் புரிந்தார்கள் என்று மட்டும் எழுதியிருந்தால், அது ஒரு குறையாகவே இதுநாள் வரை பேசப்பட்டிருக்கும். ஆனால், துவந்துவ யுத்தங்கள் நடக்கும்போது, படிப்போரின் மனத்தில் பரபரப்பையும் பேராவலையும் 'அடுத்து என்ன நிகழுமோ?' என்ற

பதற்றத்தையும் தோற்றுவிக்கும்வண்ணம், தான் ஞானக்கண்ணால் கண்ட காட்சிகளை, பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அனுபவிக்கக்கூடிய விதத்தில் தத்ரூபமாக எழுதியிருக்கிறார்.

அதனால்தான், போர்க்களத்தில் ஒவ்வொரு முனையிலும் நடைபெறும் போர்களை படித்துப் படித்து, புதிய உணர்ச்சிகளை அனுபவிக்க முடிகிறது.

ஸ்ரீமந் நாராயணன் இராமனாக மானிட அவதாரம் செய்ததன் நோக்கம், யுத்த காண்டத்தில் இராவண சம்ஹாரத்துடன் நிறைவு பெறுகிறது.

சரணாகதி தத்துவத்தை நிலைநாட்டி அழியாப் புகழ் கொண்ட விபீஷணாழ்வான், இராமனுக்குச் செய்த சிறப்பான தனிச்சேவைகளை யுத்த காண்டத்தில் படித்து மகிழ்கிறோம். நிகும்பிலை யாகம் போன்ற செய்திகளை, விபீஷணனால் மட்டுமே கண்டுணர்ந்து, தக்க எதிர்நடவடிக்கை எடுக்க இயலும்.

கற்பின் கலையான சீதாப்பிராட்டியாரை, அறத்தின் நாயகனான இராமப்பிரபு பத்துமாதங்களுக்குப்பின் கூடி மகிழும் புனிதமான திவ்வியக் காட்சியை யுத்த காண்டத்தில்தான் காண்கிறோம். அடுக்கடுக்காக சம்பவங்கள் நிறைந்தோடும் யுத்த காண்டத்தை, இராமன் அடியார்கள் விரும்பிப் படிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இராமன் திருவடிகளில் புகலடைந்துள்ள நம் எல்லோரையும், அவன் காத்து ரட்சிப்பானாக.

அனைத்து நலன்களையும் அருளவல்ல இந்தப் புனித நூலை, அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். அவ்விருப்பத்திற்கேற்ப, எங்களுக்கு இப்புனித காவியத்தை மிகத் தெள்ளிய நடையில் தமிழாக்கம் செய்து தந்து உதவிய, **சென்னை, பண்டிட் டி.எஸ். கோதண்டராமன், B.A.,B.Lit.,** அவர்களுக்கும், மேலும், இந்நூலின் அச்சுப்பிரதிகளில் மூல சுலோகங்களைச் சரிபார்த்துதவிய, **ஸ்ரீரங்கம், பிரும்மவித்யரத்னா, வைத்ய S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள்** அவர்களுக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம். அவர்களுக்கு எங்களது நன்றி உரித்தாகுக.

பாராயணம் செய்வோர் அனைவருக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.

ஜெய் ஸ்ரீராம்!

கோ₃ஷ்பதீ₃க்ருதவாராஶிம் மஶகீக்ருத ராக்ஷஸம் ।
ராமாயணமஹாமாலாரத்நம் வந்தே₃ऽநிலாத்மஜம் ॥

'சீதா—லட்சுமண—ஹனுமத் சமேத ஸ்ரீராமனுக்கு ஜெய்!'

— **பதிப்பாளர்கள்**

॥ ஸ்ரீஹரி: ॥

தேவநாகரி எழுத்துக்கள்

வடமொழிச் சொற்களைப் பிழையின்றி உச்சரிக்க உதவியாக, ஆங்கில எழுத்துக்களின் துணைகொண்டு 2, 3, 4 என்னும் குறியீடுகளுடன் வடமொழி எழுத்துக்களுக்கு நிகரான தமிழ் ஒலி வடிவங்களும் தரப்பட்டுள்ளன.

[ka] क க	[kha] ख $க_2$	[ga] ग $க_3$	[gha] घ $க_4$
[ca] च ச	[cha] छ $ச_2$	[ja] ज ஜ	[jha] झ ஜ
[ta] ट ட	[tha] ठ $ட_2$	[da] ड $ட_3$	[dha] ढ $ட_4$
[ta] त த	[tha] थ $த_2$	[da] द $த_3$	[dha] ध $த_4$
[pa] प ப	[pha] फ $ப_2$	[ba] ब $ப_3$	[bha] भ $ப_4$
[śha] श ஶ	[sha] ष ஷ	[sa] स ஸ	
[gna] ज्ञ ஞ/க்ஞ	[ksha] क्ष க்ஷ	[ṟi] ऋ ரு	

'ஶ' என்னும் எழுத்து பிசகு, கசடு என்னும் சொற்களில் வரும் 'ச'வைப் போல் ஒலிக்கும்.

'ரு' என்னும் எழுத்து எருது, விருது என்னும் சொற்களில் வரும் 'ரு'வைப் போல் ஒலிக்கும்.

சமஸ்கிருத சுலோகங்களில் சில இடங்களில் 'ऽ' அல்லது 'ऽऽ' என்னும் குறியீடுகளைக் காணலாம். இதற்கு 'அவக்₃ரஹம்' என்று பெயர். இந்த இடங்களில் முறையே 'அ', 'ஆ' என்னும் எழுத்துக்கள் தொக்கி நிற்கின்றன என்பது பொருள்.

॥ ஸ்ரீஹரி: ॥

பொருளடக்கம்

ஸ்ரீமத் பாகவத மகாபுராணம்

(பத்தாவது ஸ்கந்தத்திலிருந்து சில பகுதிகள்)

॥ ஶ்ரீஹரி: ॥

யுத்$_3$த$_4$காண்ட$_3$:

ப்ரத$_2$ம: ஸர்க$_3$:

ஹநூமத்ப்ரஶம்ஸநம்

ஶ்ருத்வா ஹநுமதோ வாக்யம் யதா$_2$வத$_3$நுபா$_4$ஷிதம் ।
ராம: ப்ரீதிஸமாயுக்தோ வாக்யமுத்தரமப்$_3$ரவீத் ॥ (1)

க்ருதம் ஹநுமதா கார்யம் ஸுமஹத்$_3$பு$_4$வி து$_3$ஷ்கரம் ।
மநஸாபி யத$_3$ந்யேந ந ஶக்யம் த$_4$ரணீதலே ॥ (2)

ந ஹி தம் பரிபஶ்யாமி யஸ்தரேத மஹோத$_3$தி$_4$ம் ।
அந்யத்ர க$_3$ருடா$_3$த்$_3$வாயோரந்யத்ர ச ஹநூமத: ॥ (3)

தே$_3$வதா$_3$நவயக்ஷாணாம் க$_3$ந்த$_4$ர்வோரக$_3$ரக்ஷஸாம் ।
அப்ரத்$_4$ருஷ்யாம் புரீம் லங்காம் ராவணேந ஸுரக்ஷிதாம் ॥ (4)

யோ வீர்யப$_3$லஸம்பந்நோ த்$_3$விஷத்$_3$பி$_4$ரநிவாரித: ।
ப்ரவிஷ்ட: ஸத்த்வமாஶ்ரித்ய ஶ்வஸந் கோ நாம நிஷ்க்ரமேத் ॥ (5)

கோ விஶேத்ஸுது$_3$ராத$_4$ர்ஷாம் ராக்ஷஸைஶ்ச ஸுராக்ஷிதாம் ।
யோ வீர்யப$_3$லஸம்பந்நோ ந ஸம: ஸ்யாத்$_3$த$_4$நூமத: ॥ (6)

ப்$_4$ருத்யகார்யம் ஹநுமதா ஸுக்$_3$ரீவஸ்ய க்ருதம் மஹத் ।
ஏவம் விதா$_4$ய ஸ்வப$_3$லம் ஸத்$_3$ருஶம் விக்ரமஸ்ய ச ॥ (7)

யோ ஹி ப்$_4$ருத்யோ நியுக்த: ஸந் ப$_4$ர்த்ரா கர்மணி து$_3$ஷ்கரே ।
குர்யாத்தத$_3$நுராகே$_3$ண தமாஹு: புருஷோத்தமம் ॥ (8)

ப்$_4$ருத்யஸ்து ய: பரம் கார்யம் ந குர்யாந்ந்ருபதே: ப்ரியம் ।
ப்$_4$ருத்யோ யுக்த: ஸமர்த$_2$ஶ்ச தமாஹுர்மத்$_4$யமம் நரம் ॥ (9)

நியுக்தோ ந்ருபதே: கார்யம் ந குர்யாத்$_3$ய: ஸமாஹித: ।
ப்$_4$ருத்யோ யுக்த: ஸமர்த$_2$ஶ்ச தமாஹு: புருஷாத$_4$மம் ॥ (10)

தந்நியோகே$_3$ நியுக்தேந க்ருதம் க்ருத்யம் ஹநூமதா ।
ந சாத்மா லகு$_4$தாம் நீத: ஸுக்$_3$ரீவஶ்சாபி தோஷித: ॥ (11)

அஹம் ச ரகு$_4$வம்ஶஶ்ச லக்ஷ்மணஶ்ச மஹாப$_3$ல: ।
வைதே$_3$ஹ்யா த$_3$ர்ஶநேநாத்$_3$ய த$_4$ர்மத: பரிரக்ஷிதா: ॥ (12)

॥ ஸ்ரீஹரி: ॥

யுத்த காண்டம்

ஸர்க்கம் : ஒன்று

அனுமானைப் புகழ்தல்

அனுமான் தெளிவாக, நடந்தபடி கூறிய நிகழ்ச்சிகளைக் கேட்ட இராமன் மனம் மகிழ்ந்து (பின்வரும்) பதில் மொழியைக் கூறினார்— (1)

''உலகத்தில் வேறு எவராலும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அரும்பெரும் வீரச்செயல், இவ்வுலகில் அனுமானால் செய்யப்பட்டிருக்கிறது. (தெய்விக ஆற்றல் படைத்த மேலுலகத்தோர்களால் கூட செய்ய முடியாத காரியத்தை, மண்ணுலகைச் சேர்ந்த அனுமான் செய்திருக்கிறான்.) (2)

கருடன், வாயு, அனுமான் ஆகியவர்களைத் தவிர, பெருங்கடலைத் தாண்டும் பேராற்றல் படைத்த வேறொருவனை நான் கண்டிலேன். (3)

தேவ–தானவ–யக்ஷ–கந்தர்வ–உரக–அரக்கர்களாலும் உட்புக முடியாததும், இராவணனால் கவனமாகப் பாதுகாக்கப்படுவதுமான இலங்கைப் பட்டணத்திற்குள், மனோதைரியமும் உடல்பலமும் பெற்றுள்ள ஒருவன், தன் பேராற்றலில் நம்பிக்கை வைத்து உள்ளே புகுந்துவிட்டு, மூச்சை வைத்துக் கொண்டு (உயிருடன்) திரும்பி வர முடியுமா என்ன! (4,5)

அனுமானுக்கு நிகரான பல–பராக்கிரமமில்லாத எவன்தான், அரக்கர்களால் கவனமாகக் காக்கப்படுவதும் பிறரால் வெற்றி கொள்ள முடியாததுமான இலங்கையினுள் பிரவேசிக்க முடியும்? (6)

பெருங்கடலைத் தாண்டுதல் முதலான செயல்களைத் தன் வலிமைக்கேற்றபடி ஆற்றலை வெளிப்படுத்தி, தான் ஓர் உண்மையான பணியாளன் என்பதைக் காட்டி, சுக்ரீவனுடைய பெரிய பணியை அனுமான் செய்து கொடுத்திருக்கிறான். (7)

மிகவும் சிரமசாத்தியமான ஒரு செயலைச் செய்யும்படி யஜமானனால் ஏவப்பட்ட ஒரு பணியாளன், அந்தக் காரியத்தை முழுமையாக நிறைவேற்றிவிட்டு, முக்கிய காரியத்திற்குக் கேடு விளைவிக்காத பிற செயல்களையும் செய்து முடித்தால், அவன் உத்தமப் பணியாளன் எனப்படுகிறான். (8)

அனுபவமும் தகுதியுமுடைய ஒரு வேலைக்காரன், தன் தலைவனால் ஏவப்பட்ட காரியத்தை மட்டும் நிறைவேற்றிவிட்டு, அதற்கு அனுகூலமான செயலைச் செய்யாமல் விடுகிறானோ, அவன் இரண்டாந்தர ஊழியன் என்று கூறப்படுகிறான். (9)

அனுபவமும் தகுதியுமுடைய ஒரு வேலைக்காரன், தன் தலைவனால் ஏவப்பட்ட காரியத்தைச் செய்து முடிக்கவில்லையெனில், அவன் கடைநிலை ஊழியன் என்று சொல்லப்படுகிறான். (10)

தன்னுடைய தலைவனால் ஒரு காரியத்தைச் செய்வதற்காக ஏவப்பட்ட அனுமான், அதை முற்றிலுமாகச் செய்து முடித்ததோடு, வேறு பல அருஞ்செயல்களையும் செய்து முடித்திருக்கிறான்; தன்னுடைய சுயகௌரவத்தையும் இழக்கவில்லை; சுக்ரீவனுக்கும் முழுத் திருப்தியை அளித்துள்ளான். வைதேகியைக் கண்களால் கண்டு (பேசிவிட்டு) வந்ததன் மூலம், தருமத்தை நிலைநிறுத்தும்வண்ணம், என்னையும் ரகுகுலத்தையும் மகாபலம் பொருந்திய லட்சுமணனையும் காப்பாற்றியிருக்கிறான். (11,12)

இத$_3$ம் து மம தீ$_3$நஸ்ய மநோ பூ$_4$ய: ப்ரகர்ஷதி ।
யதி$_3$ஹாஸ்ய ப்ரியாக்$_2$யாதுர்ந குர்மி ஸத்$_3$ருஶம் ப்ரியம் ॥ (13)

ஏஷ ஸர்வஸ்வபூ$_4$தஸ்து பரிஷ்வங்கோ$_3$ ஹநூமத: ।
மயா காலமிமம் ப்ராப்ய த$_3$த்தஶ்சாஸ்து மஹாத்மந: ॥ (14)

இத்யுக்த்வா ப்ரீதிஹ்ருஷ்டாங்கோ$_3$ ராமஸ்தம் பரிஷஸ்வஜே ।
ஹநூமந்தம் மஹாத்மாநம் க்ருதகார்யமுபாக$_3$தம் ॥ (15)

த்$_4$யாத்வா புநருவாசேத$_3$ம் வசநம் ரகு$_4$ஸத்தம: ।
ஹரீணாமீஶ்வரஸ்யைவ ஸுக்$_3$ரீவஸ்யோபஶ்ருண்வத: ॥ (16)

ஸர்வதா$_2$ ஸுக்ருதம் தாவத்ஸீதாயா: பரிமார்க$_3$ணம் ।
ஸாக$_3$ரம் து ஸமாஸாத்$_3$ய பூ$_4$யோ நஷ்டம் மநோ மம ॥ (17)

கத$_2$ம் நாம ஸமுத்$_3$ரஸ்ய து$_3$ஷ்பாரஸ்ய மஹாம்ப$_4$ஸ: ।
ஹரயோ த$_3$க்ஷிணம் பாரம் க$_3$மிஷ்யந்தி ஸமாஹிதா: ॥ (18)

யத்$_3$யப்யேஷ து வ்ருத்தாந்தோ வைதே$_3$ஹ்யா க$_3$தி$_3$தோ மம ।
ஸமுத்$_3$ரபாரக$_3$மநே ஹரீணாம் கிமிவோத்தரம் ॥ (19)

இத்யுக்த்வா ஶோகஸம்ப்$_4$ராந்தோ ராம: ஶத்ருநிப$_3$ர்ஹண: ।
ஹநுமந்தம் மஹாபா$_3$ஹுஸ்ததோ த்$_4$யாநமுபாக$_3$மத் ॥ (20)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ப்ரத$_2$ம: ஸர்க$_3$: ॥

த்$_3$விதீய: ஸர்க$_3$:

ராம ப்ரோத்ஸாஹநம்

தம் து ஶோகபரித்$_3$யூநம் ராமம் த$_3$ஶரதா$_2$த்மஜம் ।
உவாச வசநம் ஶ்ரீமாந் ஸுக்$_3$ரீவ: ஶோகநாஶநம் ॥ (1)

கிம் த்வம் ஸந்தப்யஸே வீர யதா$_2$ந்ய: ப்ராக்ருதஸ்ததா$_2$ ।
மைவம் பூ$_4$ஸ்த்யஜ ஸந்தாபம் க்ருதக்$_4$ந இவ ஸௌஹ்ருத$_3$ம் ॥ (2)

ஸந்தாபஸ்ய ச தே ஸ்தா$_2$நம் ந ஹி பஶ்யாமி ராக$_4$வ ।
ப்ரவ்ருத்தாவுபலப்$_3$தா$_4$யாம் க்ஞாதே ச நிலயே ரிபோ: ॥ (3)

மதிமாஞ்ஶாஸ்த்ரவித்ப்ராக்ஞ: பண்டி$_3$தஶ்சாஸி ராக$_4$வ ।
த்யஜேமாம் ப்ராக்ருதாம் பு$_3$த்$_3$தி$_4$ம் க்ருதாத்மேவாத்மது$_3$ஷணீம் ॥ (4)

மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியைக் கூறிய இவனுக்கு, அதற்குரிய பெரிய பரிசுப்பொருளைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன் – என்பது, என் மனத்தை வாட்டுகிறது. (13)

இந்த இனிய நேரத்தில், மகாத்மா அனுமானை நான் கட்டித் தழுவிக் கொள்ளப் போகிறேன். ஏனென்றால், இப்போது அது ஒன்றுதான் என்னிடமுள்ள மிக உயர்ந்த சொத்து.'' (14)

இவ்வாறு கூறிவிட்டு, ஏவப்பட்ட காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பி வந்திருக்கும் பேராண்மை படைத்த அனுமானை, மகிழ்ச்சியினால் தன் அங்கங்களெல்லாம் புல்லரிக்க இறுகக் கட்டித் தழுவிக் கொண்டார். (15)

பிறகு, சிறிதுநேரம் ஆலோசனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, வானரர் தலைவனான சுக்ரீவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, ரகு வம்ச திலகமான இராமன் மீண்டும் இவ்வாறு கூறினார்— (16)

''சீதையைக் கண்டுபிடிப்பது என்ற செயல், எவ்வாறோ செய்து முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், விஸ்தாரமான கடலை நினைத்தவுடன் என்னுடைய உற்சாகம் குன்றிப் போய்விட்டது. (17)

நீர் நிரம்பியதும், கடந்து செல்ல முடியாததுமான ஆழ்கடலின் தென்கரையை, வானரர்கள் ஒன்றாகக் கூடி எவ்வாறு சென்றடைவார்களோ? (18)

சீதையை நேரில் கண்டு பேசிய விவரத்தை என்னிடம் தெரிவித்தபோது, சீதையும் இதே சங்கடத்தைச் சுட்டிக்காட்டினாள் என்றும் கூறினான். எனவே, வானரர்கள் சமுத்திரத்தைக் கடந்து அக்கரை செல்வது என்ற விஷயத்தில் உன்னுடைய திட்டம்தான் என்ன?'' (19)

இவ்வாறு அனுமானிடம் கூறிவிட்டு, தோளாண்மை மிக்கவரும் எதிரிகளை மாய்ப்பவருமான இராமன், மனங்கலங்கி கவலையில் ஆழ்ந்தார். (20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இரண்டு

சுக்ரீவன், இராமனை உற்சாகப்படுத்துதல்!

இவ்விதம், சோகத்தால் வெந்து கொண்டிருந்த தசரதகுமாரர் இராமனைப் பார்த்து, வெற்றித்திரு பொருந்திய சுக்ரீவன் சோகத்தைப் போக்கக்கூடிய சொற்களைக் கூறத் தொடங்கினான்— (1)

''வீரரே! மற்ற சாமான்ய மக்களைப் போல் தாங்கள் ஏன் பரிதவிக்கிறீர்கள்? தாங்கள் இவ்வாறு இருக்கலாகாது. நன்றி கொன்றவன் நட்பை உதறி விடுவதைப் போல, தாங்களும் இந்தக் கவலையை உதறித் தள்ளுங்கள். (2)

இராகவனே! தற்போதைய நிலையும் எதிரியின் இருப்பிடமும் தெரிந்துவிட்ட பின், தங்களுடைய கவலைக்கான காரணத்தை என்னால் காண முடியவில்லை. (கவலைக்குக் காரணமே இல்லை.) (3)

ரகுநந்தனா! தாங்கள் அறிவுமிக்கவர்; சாஸ்திரங்கள் அறிந்தவர்; சிந்தித்துச் செயல்படுபவர்; சாமர்த்தியம் உடையவர். பரமபதம் என்ற உயர்ந்த பலனைக் கெடுக்கும் புத்தியை முற்றுணர்ந்த யோகி விலக்குவது போல, மேன்மையைக் கெடுக்கும் தரக்குறைவான இந்தக் கவலையை உதறித்தள்ளுங்கள். (4)

ஸமுத்$_3$ரம் லங்க$_4$யித்வா து மஹாநக்ரஸமாகுலம் ।
லங்காமாரோஹயிஷ்யாமோ ஹநிஷ்யாமஶ்ச ராவணம் ॥ (5)

நிருத்ஸாஹஸ்ய தீ$_3$நஸ்ய ஶோகபர்யாகுலாத்மந: ।
ஸர்வார்தா$_2$ வ்யவஸீத$_3$ந்தி வ்யஸநம் சாதி$_4$க$_3$ச்ச$_2$தி ॥ (6)

இமே ஶூரா: ஸமர்தா$_2$ஶ்ச ஸர்வே நோ ஹரியூத$_2$பா: ।
த்வத்ப்ரியார்த$_2$ம் க்ருதோத்ஸாஹா: ப்ரவேஷ்டுமபி பாவகம் ॥
ஏஷாம் ஹர்ஷேண ஜாநாமி தர்கஶ்சாஸ்தி த்$_3$ருடோ$_4$ மம ॥ (7)

விக்ரமேண ஸமாநேஷ்யே ஸீதாம் ஹத்வா யதா$_2$ ரிபும் ।
ராவணம் பாபகர்மாணம் ததா$_2$ த்வம் கர்துமர்ஹஸி ॥ (8)

ஸேதுமத்ர யதா$_2$ ப$_3$த்$_3$த்$_4$வா யதா$_2$ பஶ்யாம தாம் புரீம் ।
தஸ்ய ராக்ஷஸராஜஸ்ய ததா$_2$ த்வம் குரு ராக$_4$வ ॥ (9)

தாம் த்$_3$ருஷ்ட்வா து புரீம் லங்காம் த்ரிகூடஶிக$_2$ரே ஸ்தி$_2$தாம் ।
ஹதம் ச ராவணம் யுத்$_3$தே$_4$ த$_3$ர்ஶநாது$_3$பதா$_4$ரய ॥ (10)

அப$_3$த்$_3$த்$_4$வா ஸாக$_3$ரே ஸேதும் கோ$_4$ரே து வருணாலயே ।
லங்கா நோ மர்தி$_3$தும் ஶக்யா ஸேந்த்$_3$ரைரபி ஸுராஸுரை: ॥ (11)

ஸேதுர்ப$_3$த்$_3$த$_4$: ஸமுத்$_3$ரே ச யாவல்லங்காஸமீபத: ।
ஸர்வம் தீர்ணம் ச மே ஸைந்யம் ஜிதமித்யுபதா$_4$ரய ॥
இமே ஹி ஸமரே ஶூரா ஹரய: காமரூபிண: ॥ (12)

தத$_3$லம் விக்லவா பு$_3$த்$_3$தீ$_4$ ராஜந் ஸர்வார்த$_2$நாஶிநீ ।
புருஷஸ்ய ஹி லோகேऽஸ்மிஞ்ஶோக: ஶௌர்யாபகர்ஷண: ॥ (13)

தந்ந கார்யம் மநுஷ்யேண ஶௌண்டீ$_3$ர்யமவலம்ப$_3$தா ।
தத$_3$லங்கரணாயைவ கர்துர்ப$_4$வதி ஸத்வரம் ॥ (14)

அஸ்மிந் காலே மஹாப்ராஜ்ஞ ஸத்த்வமாதிஷ்ட$_2$ தேஜஸா ।
ஶூராணாம் ஹி மநுஷ்யேண த்வத்$_3$விதா$_4$நாம் மஹாத்மநாம் ॥
விநஷ்டே வா ப்ரநஷ்டே வா க்ஷமம் ந ஹ்யநுஶோசிதும் ॥ (15)

த்வம் து பு$_3$த்$_3$தி$_4$மதாம் ஶ்ரேஷ்ட$_2$: ஸர்வஶாஸ்த்ரார்த$_2$கோவித$_3$: ।
மத்$_3$விதை$_4$: ஸசிவை: ஸார்த$_4$மரிம் ஜேதுமிஹார்ஹஸி ॥ (16)

ந ஹி பஶ்யாம்யஹம் கஞ்சித்த்ரிஷு லோகேஷு ராக$_4$வ ।
க்$_3$ருஹீதத$_4$நுஷோ யஸ்தே திஷ்டே$_2$த$_3$பி$_4$முகோ$_2$ ரணே ॥ (17)

பெரிய பெரிய முதலைகள் வாழும் சமுத்திரத்தைத் தாண்டிச் சென்று, இலங்கைக்குள் ஏறிப் புகுந்து, இராவணனை வதம் செய்வோம். (5)

உற்சாகமிழந்து, அவலநிலையடைந்து, மனத்திற்குள் சோகத்தால் தவித்துக் கொண்டிருப்பவனின் எல்லாக் காரியங்களும் கெட்டுப் போகின்றன; அவன் பேராபத்திலும் சிக்கிக் கொள்கிறான். (6)

இங்கே கூடியுள்ள நமது வானரத்தலைவர்கள் வீரசூரர்கள்; செயலாற்றுவதில் திறன் உடையவர்கள். மிகவும் உற்சாகத்துடன் இருக்கும் இவர்கள், தாங்கள் கட்டளையிட்டால் நெருப்பிலும் வீழ்வார்கள். இதனை இவர்கள் முகமலர்ச்சியிலிருந்து அறிந்து சொல்கிறேன். இந்த விஷயத்தில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. (7)

நம்முடைய எதிரியும் பாவியுமான இராவணனை எதிர்த்து நின்று, நமது பேராற்றலினால் அவனைக் கொன்று, சீதையை இங்கே கொண்டு வருவதற்கான ஒரு திட்டத்தைத் தீர்மானித்துக் கட்டளையிடுங்கள். (8)

ரகுநந்தனா! சமுத்திரத்தில் அணை கட்டி, அரக்க மன்னன் இராவணனின் நகரமான இலங்கையைப் பார்க்கும்படியான (இலங்கையில் கால் பதிக்கும்படியான) ஓர் உபாயத்தைக் கூறுங்கள். (9)

திரிகூட மலையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை நகரை (நாம்) பார்த்துவிட்டாலே போதும்! ஒரு தடவை பார்த்துவிட்டால், யுத்தத்தில் இராவணன் கொல்லப்பட்டான் என்று நிச்சயம் செய்து கொள்ளுங்கள். (10)

வருணனுக்கு இருப்பிடமானதும் பயங்கரமானதுமான சமுத்திரத்தில் அணை கட்டாமல், இந்திரன் முதலான தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடி வந்தாலும், இலங்கையை வீழ்த்த முடியாது. (11)

ஆகவே, இலங்கை வரை சமுத்திரத்தில் அணை கட்டப்பட்டவுடனேயே என்னுடைய படை முழுவதும் கடலைக் கடந்து சென்றுவிடும். அப்போதே இலங்கை வெல்லப்பட்டது என்று உறுதியாக நம்புங்கள். தம் விருப்பப்படி உருவம் எடுக்கவல்ல இந்த வானரர்கள், போர்க்களத்தில் வீரத்தை வெளிப்படுத்துகிறவர்கள். (12)

மன்னரே! எல்லாச் செயல்களையும் அழித்துவிடும் இந்த மனக்கவலையை இத்துடன் விட்டுவிடுங்கள். உலகில் மனக்கவலைதான் ஒருவனின் வீரத்தைப் போக்கிவிடுகிறது. (13)

மனிதன் வீரத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அதுதான் எல்லாக் காரியங்களையும் விரைவில் நிறைவேற்றித் தருகிறது. (வெற்றி மாலையைச் சூட்டுகிறது.) (14)

பேரறிஞரே! ஆத்மபலத்துடன் தைரியத்தையும் தாங்கள் இப்போது ஏற்றுக்கொள்ள வேண்டும். தங்களைப் போன்ற பேராற்றல் படைத்த மகாத்மாக்கள், ஒரு பொருள் காணாமல் போய்விட்டாலும் அழிந்துபோய்விட்டாலும், அதற்காக மனத்தைத் தளர விடக்கூடாது. (15)

தாங்கள், அறிவாளிகளில் தலையாயவர்; எல்லா சாஸ்திரங்களின் நுட்பங்களையும் அறிந்தவர். இப்போது, தாங்கள் என் போன்ற அமைச்சர்களுடன்கூட செயல்பட்டு, எதிரியை வெல்லமுடியும். (16)

இராகவனே! போர்க்களத்தில் வில்லைத் தாங்கி நிற்கும் தங்கள் எதிரில் நின்று போரிடும் ஆற்றலுடைய ஒருவனை, இம்மூன்று உலகிலும் நான் காணவில்லை. (17)

வாநரேஷு ஸமாஸக்தம் ந தே கார்யம் விபத்ஸ்யதே ।
அசிராத்$_3$த்$_3$ரக்ஷ்யஸே ஸீதாம் தீர்த்வா ஸாக$_3$ரமக்ஷயம் ॥ (18)

தத$_3$லம் ஶோகமாலம்ப்$_3$ய க்ரோத$_4$மாலம்ப$_3$ பூ$_4$பதே ।
நிஶ்சேஷ்டா: க்ஷத்த்ரியா மந்தா$_3$: ஸர்வே சண்ட$_3$ஸ்ய பி$_3$ப்$_4$யதி ॥ (19)

லங்க$_4$நார்த$_2$ம் ச கோ$_4$ரஸ்ய ஸமுத்$_3$ரஸ்ய நதீ$_3$பதே: ।
ஸஹாஸ்மாபி$_4$ரிஹோபேத: ஸூக்ஷ்மபு$_3$த்$_3$தி$_4$ர்விசாரய ॥ (20)

ஸர்வம் தீர்ணம் ச மே ஸைந்யம் ஜிதமித்யுபதா$_4$ரய ॥ (21)

இமே ஹி ஸமரே ஶூரா ஹரய: காமரூபிண: ।
தாநரீந் வித$_4$மிஷ்யந்தி ஶிலாபாத$_3$பவ்ருஷ்டிபி$_4$: ॥ (22)

கத$_2$ம்சித் பரிபஶ்யாமி லங்கி$_4$தம் வருணாலயம் ।
ஹதமித்யேவ தம் மந்யே யுத்$_3$தே$_4$ ஸமிதிநந்த$_3$ந ॥ (23)

கிமுக்த்வா ப$_3$ஹுதா$_4$ சாபி ஸர்வதா$_2$ விஜயீ ப$_4$வாந் ।
நிமித்தாநி ச பஶ்யாமி மநோ மே ஸம்ப்ரஹ்ருஷ்யதி ॥ (24)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$விதீய: ஸர்க$_3$: ॥

த்ருதீய: ஸர்க$_3$:

லங்காது$_3$ர்கா$_3$தி$_3$கத$_2$நம்

ஸுக்$_3$ரீவஸ்ய வச: ஶ்ருத்வா ஹேதுமத்பரமார்த$_2$வித் ।
ப்ரதிஜக்$_3$ராஹ காகுத்ஸ்தோ$_2$ ஹநுமந்தமதா$_2$ப்$_3$ரவீத் ॥ (1)


தபஸா ஸேதுப$_3$ந்தே$_4$ந ஸாக$_3$ரோச்சோ$_2$ஷணேந வா ।
ஸர்வதா$_2$பி ஸமர்தோ$_2$஽ஸ்மி ஸாக$_3$ரஸ்யாஸ்ய லங்க$_4$நே ॥ (2)

கதி து$_3$ர்கா$_3$ணி து$_3$ர்கா$_3$யா லங்காயா ப்$_3$ரூஹி தாநி மே ।
க்ஞாதுமிச்சா$_2$மி தத்ஸர்வம் த$_3$ர்ஶநாதி$_3$வ வாநர ॥ (3)

ப$_3$லஸ்ய பரிமாணம் ச த்$_3$வாரது$_3$ர்க$_3$க்ரியாமபி ।
கு$_3$ப்திகர்ம ச லங்காயா ரக்ஷஸாம் ஸத$_3$நாநி ச ॥ (4)


யதா$_2$ஸுக$_2$ம் யதா$_2$வச்ச லங்காயாமஸி த்$_3$ருஷ்டவாந் ।
ஸர்வமாசக்ஷ்வ தத்த்வேந ஸர்வதா$_2$ குஶலோ ஹ்யஸி ॥ (5)

ஶ்ருத்வா ராமஸ்ய வசநம் ஹநூமாந் மாருதாத்மஜ: ।
வாக்யம் வாக்யவிதா$_3$ம் ஶ்ரேஷ்டோ$_2$ ராமம் புநரதா$_2$ப்$_3$ரவீத் ॥ (6)




ஸக்ருதே3வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அப4யம் ஸர்வபூ4தேப்4யோ த3த3ாம்யேதத்3வ்ரதம் மம ॥


யுத்த காண்டம் 18/32



‘ஸ்ரீராம்’ என்ற சொல்லின் மகிமையிச 32ால், வானரர்கள் கற்களால் பாலம் அமைக்கிறார்கள்




ஸேது பாலம் கட்டிய பின்பு, ஸ்ரீராமன் இராமேஸ்வரத்தில்
சிவபார்வதிக்குப் பூஜை செய்கிறார்.




லட்சுமணன் உணர்விழந்த நிலையில்,


அனுமான் ஸஞ்ஜீவனீ மூலிகை மலையை எடுத்து வருகிறார்.




தேவராஜன் இந்திரன், தனது ரதத்தைத் தோராட்டி மாதலி மூலம் யுத்தத்திற்காக அனுப்பினான்.
அதில் ஸ்ரீராமன் பிரவேசிக்கிறார்.



இராம-இராவண கோர யுத்தம்



இராவண வதத்திற்குப் பின்பு பெண்களுடன்
மண்டோதரி வேதனை அடைகிறார்.



இராவண வதத்திற்குப் பிறகு,
ரிஷிகள், ஸ்ரீராமனுக்கு வந்தனம் செய்கிறார்கள்.

வானரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தங்கள் காரியம் நிச்சயமாக வீண்போகாது. எல்லை காணமுடியாத சமுத்திரத்தைக் கடந்து, விரைவில் தாங்கள் சீதாப்பிராட்டியாரைக் காணப் போகிறீர்கள். (18)

இதுவரையில் சோகத்தில் ஆழ்ந்திருந்தது போதும். வேந்தரே! இனி போர் செய்வதற்கானக் கோபத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். சீற்றம் கொள்ளாத க்ஷத்திரியனால் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது. ஆனால், எதிரியிடம் கோபம் கொள்பவனைக் கண்டு எல்லோரும் பயப்படுவார்கள். (19)

ஆறுகளின் தலைவனான பயங்கரமான சமுத்திரத்தைக் கடப்பதற்கானத் திட்டம் பற்றி எங்களுடன்கூடக் கலந்தாலோசியுங்கள். ஏனென்றால், தாங்கள் கூர்மையான அறிவு படைத்தவர். என்னுடைய படைகள் கடலைக் கடந்து சென்றுவிட்டாலே போதும், 'வெற்றி நமக்கு' என்று நிச்சயம் செய்து கொள்ளுங்கள். (20,21)

விருப்பப்படி உருவம் எடுக்கக்கூடிய இந்த வானரர்கள் வீரத்துடன் போர் செய்யக் கூடியவர்கள். பாறைகளையும் மரங்களையும் எதிரிகள் மேல் மழைபோலப் பொழிந்து, பகைவர்களைக் கொன்று விடுவார்கள். (22)

போர் புரிவதில் பெருவிருப்பம் உடையவரே! ஏதோவொருவிதமாகக் கடலைக் கடந்து என் சேனைகள் சென்றுவிட்டதைக் கண்டால் போதும், யுத்தத்தில் அவன் (இராவணன்) கொல்லப்பட்டான் (கொல்லப்படுவான்) என்றே நான் எண்ணுகிறேன். விஸ்தாரமாகப் பேசுவதால் என்ன லாபம்? தாங்கள் எப்படியும் வெற்றி அடையப் போகிறீர்கள். நான் நல்ல சகுனங்களைப் பார்க்கிறேன். மனமும் மகிழ்ச்சியுடன் இருக்கிறது.'' (23,24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : மூன்று

இலங்கையின் அரண்கள்

உண்மைப் பொருள் உணர்ந்தவரான இராமன், தகுந்த யுக்திகளுக்கேற்றபடி சுக்ரீவன் சொன்னதைக் கேட்டு, அதனை ஏற்றுக் கொண்டு அனுமானைப் பார்த்துப் (பின்வருமாறு) கூறினார்— (1)

''என்னுடைய தவவலிமையாலோ அணை கட்டுவதாலோ அல்லது கடலை வற்றச் செய்வதன் மூலமோ (அல்லது வேறு எப்படியோ) இந்தப் பெருங்கடலைத் தாண்டிச் செல்லும் திறன் எனக்கு உண்டு. வானர வீரனே! உள்ளே புகமுடியாத அந்த இலங்கைக்கு எத்தனை அரண்கள் இருக்கின்றன? நான் என் கண்களால் நேரே பார்ப்பதுபோல், அவைகள் பற்றிய விவரங்களை எனக்கு விளக்கமாகக் கூறு. (2,3)

நீ இலங்கையை உன் இஷ்டப்படி சுற்றித் திரிந்து, (மாயாவிகளான அரக்கர்களால் தோற்றுவிக்கப்படும் பொய்த் தோற்றமில்லாத) உள்ளபடி விளங்கும் இலங்கைப் பட்டணத்தைக் கண்களால் கண்டிருக்கிறாய். அதனால், இராவணனுடைய சேனையின் அளவு, நகர வாயிலிலுள்ள அரண் ஏற்பாடுகள், இலங்கையைப் பாதுகாப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள உபாயங்கள் மற்றும் (முக்கியமான) அரக்கர்களின் மாளிகைகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுவாயாக.'' (4,5)

வாயு மைந்தரும், பிறர் கூறுவதன் கருத்தை உணரவல்லவருமான அனுமான், இராமன் கூறியதைக் கேட்டதும், இராமனை நோக்கி மறுபடியும் கூற ஆரம்பித்தார்— (6)

ஶ்ரூயதாம் ஸர்வமாக்2யாஸ்யே து3ர்க3கர்மவித4ாநத: ।
கு3ப்தா புரீ யத2ா லங்கா ரக்ஷிதா ச யத2ா ப3லை: ॥ (7)

ராக்ஷஸாஶ்ச யத2ா ஸ்நிக்3த4ா ராவணஸ்ய ச தேஜஸா ।
பராம் ஸம்ருத்3தி4ம் லங்காயா: ஸாக3ரஸ்ய ச பீ4மதாம் ॥ (8)

விப4ாக3ம் ச ப3லௌக4ஸ்ய நிர்தே3ஶம் வாஹநஸ்ய ச ।
ஏவமுக்த்வா ஹரிஶ்ரேஷ்ட2: கத2யாமாஸ தத்த்வத: ॥ (9)

ஹ்ருஷ்டா ப்ரமுதி3தா லங்கா மத்தத்3விபஸமாகுலா ।
மஹதீ ரத2ஸம்பூர்ணா ரக்ஷோக3ணஸமாகுலா ॥
வாஜிபி4ஶ்ச ஸுஸம்பூர்ணா ஸா புரீ து3ர்க3மா பரை: ॥ (10)

த்3ருட4ப3த்3த4கவாடாநி மஹாபரிக4வந்தி ச ।
சத்வாரி விபுலாந்யஸ்யா த்3வாராணி ஸுமஹாந்தி ச ॥ (11)

தத்ரேஷூபலயந்த்ராணி ப3லவந்தி மஹாந்தி ச ।
ஆக3தம் ப்ரதிஸைந்யம் தைஸ்தத்ர ப்ரதிநிவார்யதே ॥ (12)

த்3வாரேஷு ஸம்ஸ்க்ருதா பீ4மா: காலாயஸமயா: ஶிதா: ।
ஶதஶோ ரசிதா வீரை: ஶதக்4ந்யோ ரக்ஷஸாம் க3ணை: ॥ (13)

ஸௌவர்ணஶ்ச மஹாந்ஸ்தஸ்யா: ப்ராகாரோ து3ஷ்ப்ரத4ர்ஷண: ।
மணிவித்3ருமவைதூ3ர்யமுக்தாவிரசிதாந்தர: ॥ (14)

ஸர்வதஶ்ச மஹாபீ4மா: ஶீததோயவஹா: ஶுப4ா: ।
அக3ாத4ா க்3ராஹவத்யஶ்ச பரிக2ா மீநஸேவிதா: ॥ (15)

த்3வாரேஷு தாஸாம் சத்வார: ஸங்க்ரமா: பரமாயதா: ।
யந்த்ரைருபேதா ப3ஹுபி4ர்மஹத்3பி4ர்க்3ருஹபங்க்திபி4: ॥ (16)

த்ராயந்தே ஸங்க்ரமாஸ்தத்ர பரஸைந்யாக3மே ஸதி ।
யந்த்ரைஸ்தைரவகீர்யந்தே பரிக2ாஸு ஸமந்தத: ॥ (17)

ஏகஸ்த்வகம்ப்யோ ப3லவாந் ஸங்க்ரம: ஸுமஹாந் த்3ருட4: ।
காஞ்சநைர்ப3ஹுபி4: ஸ்தம்பை4ர்வேதி3காபி4ஶ்ச ஶோபி4த: ॥ (18)

ஸ்வயம் ப்ரக்ருதிஸம்பந்நோ யுயுத்ஸூ ராம ராவண: ।
உத்தி2தஶ்சாப்ரமத்தஶ்ச ப3லாநாமநுத3ர்ஶநே ॥ (19)

லங்கா புநர்நிராலம்ப3ா தே3வது3ர்க3ா ப4யாவஹா ।
நாதே3யம் பார்வதம் வாந்யம் க்ருத்த்ரிமம் ச சதுர்வித4ம் ॥ (20)

''ஐயனே! நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன். இலங்கையைச் சுற்றிலும் அரண்கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன? எவ்விதம் இலங்கையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? எவ்வாறு படைவீரர்களால் அந்த நகரம் பாதுகாக்கப்படுகிறது? இராவணனுடைய அளவற்ற மகிமையினால் அரக்கர்கள் அவனிடம் எவ்வளவு ஒட்டுதலோடு இருக்கிறார்கள்? இலங்கை எவ்வளவு செழிப்பாக இருக்கிறது? (இடையிலேயுள்ள) சமுத்திரத்தின் பயங்கரத் தன்மை, சேனைகளின் பகுப்பு முறை, வாகனங்களின் எண்ணிக்கை – ஆகியவற்றைச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு, வானரோத்தமரான அனுமான், தான் நேரில் (இலங்கையில்) கண்டதை, அப்படியே சொல்லத் தொடங்கினார்— (7–9)

''(இலங்கையில்) மக்கள், செல்வச் செழிப்புடனும் மனக்களிப்புடனும் இருக்கிறார்கள்; மதங்கொண்ட யானைகள் ஏராளமாக இருக்கின்றன; மாபெரும் தேர்ப்படை இருக்கிறது; அரக்கர் கூட்டம் நிரம்பி வழிகிறது; கணக்கில்லாத குதிரைகள் நிறைந்துள்ள அந்த நகரத்திற்குள் அந்நியர் எவரும் நுழைய முடியாது. (10)

அந்த நகரத்திற்கு விசாலமான மிகப்பெரிய நான்கு நுழைவாயில்கள் இருக்கின்றன. அவைகள் உறுதியாக அமைக்கப்பட்ட கதவுகளுடனும் இரும்புத்தடிகளுடனும் விளங்குகின்றன. (11)

அந்த நுழைவாயில்களில் வைக்கப்பட்டுள்ள உறுதியும் பலமும் ஒருங்கேயுடைய கற்களையும் அம்புகளையும் வீசிப் பொழியும் இயந்திரங்கள், நகரத்தை நோக்கி வரும் பகைவர்களைத் தடுத்து, திரும்பி ஓடச் செய்கின்றன. (12)

வாயில்களில் எஃகினால் செய்யப்பட்ட கூர்மையான சதக்னீ (இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்ட கதை போன்ற) ஆயுதங்கள் நூற்றுக்கணக்கில், அரக்கர் கூட்டங்களால் எந்த நேரத்திலும் உபயோகிக்கத்தக்க நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (13)

மாணிக்கம், பவளம், வைடூர்யம், முத்து போன்ற இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பொன்னாலான உயரமான மதிற்சுவர்கள் ஏறிக் கடக்க முடியாதவை. (14)

அதன் நாற்புறத்திலும் மிகவும் குளிர்ச்சியான தெளிவான நீரை உடையனவும், ஆழங்காண முடியாதவைகளும், முதலைகள்–பெரிய மீன்கள் வசிப்பதுமான அகழிகள் இருக்கின்றன. (15)

அகழிகளைத் தாண்டிச் சென்றால், நான்கு வாயில்களிலும் (தேவைக்கேற்றபடி இறக்கி, ஏற்றக்கூடிய) அகலமான மரப்பாலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தூக்குப்பாலங்களை ஒட்டினாற்போல் ஏராளமான மிகப்பெரிய இயந்திரங்களும், (அவைகளை இயக்குகின்ற வல்லுநர்களின்) வீட்டு வரிசைகளும் இருக்கின்றன. (16)

எதிரிப் படைகள் வந்தால், இந்தத் தூக்குப்பாலங்கள் பட்டணத்தைக் காப்பாற்றுகின்றன. (எப்படியென்றால்,) மரப்பாலத்தை இயக்கக்கூடிய இயந்திரங்களால், பாலத்தில் சிக்கிக்கொண்ட எதிரிப் படைகள் அகழியில் தள்ளப்படுகின்றன. (17)

அவைகளில் ஒரு பாலம் மட்டும் மிகப்பெரியதாகவும் உறுதியாகவும் தகர்க்க முடியாததாகவும் இருக்கிறது. அதில் பொன்னாலான தூண்களும் மேடைகளும் அழகாக விளங்குகின்றன. (18)

இராமப்பிரபோ! இயல்பாகவே போரில் விருப்பமுடைய இராவணன், தன்னுடைய படைகளை அவ்வப்போது மேற்பார்வையிடுவதில் சுணக்கம் இல்லாதவனாகவும் தீர்மானமாகவும் இருக்கிறான். (19)

இலங்கையில் நுழைவதற்குப் பிடிப்பு (ஏதேனும் ஓர் உபாயம்) ஏதும் இல்லை; தேவர்களாலும் நுழைய முடியாதது; பயங்கரமானது; நான்குவிதமான (நீர், மலை, காடு, மதில் போன்ற செயற்கை) அரண்களை உடையது. (20)

ஸ்தி2தா பாரே ஸமுத்3ரஸ்ய தூ3ரபாரஸ்ய ராக4வ ।
நௌபதோ2ऽபி ச நாஸ்த்யத்ர நிராதே3ஶஶ்ச ஸர்வத: ॥ (21)

ஶைலாக்3ரே ரசிதா து3ர்கா3 ஸா பூர்தே3வபுரோபமா ।
வாஜிவாரணஸம்பூர்ணா லங்கா பரமது3ர்ஜயா ॥ (22)

பரிகா2ஶ்ச ஶதக்4நயஶ்ச யந்த்ராணி விவிதா4நி ச ।
ஶோப4யந்தி புரீம் லங்காம் ராவணஸ்ய து3ராத்மந: ॥ (23)

அயுதம் ரக்ஷஸாமத்ர பூர்வத்3வாரம் ஸமாஶ்ரிதம் ।
ஶூலஹஸ்தா து3ராத4ர்ஷா: ஸர்வே க2ட்3கா3க்3ரயோதி4ந: ॥ (24)

நியுதம் ரக்ஷஸாமத்ர த3க்ஷிணத்3வாரமாஶ்ரிதம் ।
சதுரங்கே3ந ஸைந்யேந யோதா4ஸ்தத்ராப்யநுத்தமா: ॥ (25)

ப்ரயுதம் ரக்ஷஸாமத்ர பஶ்சிமத்3வாரமாஶ்ரிதம் ।
சர்மக2ட்3க3த4ரா: ஸர்வே ததா2 ஸர்வாஸ்த்ரகோவிதா3: ॥ (26)

ந்யர்பு3த3ம் ரக்ஷஸாமத்ர உத்தரத்3வாரமாஶ்ரிதம் ।
ரதி2நஶ்சாஶ்வவாஹாஶ்ச குலபுத்ரா: ஸுபூஜிதா: ॥ (27)

ஶதஶோऽத2 ஸஹஸ்ராணி மத்4யமம் ஸ்கந்த4மாஶ்ரிதா: ।
யாதுதா4நா து3ராத4ர்ஷா: ஸாக்3ரகோடிஶ்ச ரக்ஷஸாம் ॥ (28)

தே மயா ஸங்க்ரமா ப4க்3நா: பரிகா2ஶ்சாவபூரிதா: ।
த3க்3தா4 ச நக3ரீ லங்கா ப்ராகாராஶ்சாவஸாதி3தா: ॥
ப3லைகதே3ஶ: க்ஷபிதோ ராக்ஷஸாநாம் மஹாத்மநாம் ॥ (29)

யேந கேந ச மார்கே3ண தராம வருணாலயம் ।
ஹதேதி நக3ரீ லங்கா வாநரைரவதா4ர்யதாம் ॥ (30)

அங்க3தோ3 த்3விவிதோ3 மைந்தோ3 ஜாம்ப3வாந் பநஸோ நல: ।
நீல: ஸேநாபதிஶ்சைவ ப3லஶேஷேண கிம் தவ ॥ (31)

ப்லவமாநா ஹி க3த்வா தாம் ராவணஸ்ய மஹாபுரீம் ।
ஸபர்வதவநாம் பி4த்த்வா ஸகா2தாம் ஸப்ரதோரணாம் ॥
ஸப்ராகாராம் ஸப4வநாமாநயிஷ்யந்தி ராக4வ ॥ (32)

ஏவமாஜ்ஞாபய க்ஷிப்ரம் ப3லாநாம் ஸர்வஸங்க்3ரஹம் ॥
முஹூர்தேந து யுக்தேந ப்ரஸ்தா2நமபி4ரோசய ॥ (33)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 த்ருதீய: ஸர்க3: ॥

இராகவனே! மிக விஸ்தாரமான பெருங்கடலின் அக்கரையில் அது அமைந்திருக்கிறது. அங்கே படகுகள் செல்வதற்கான வழித்தடங்கள் இல்லை. தகவல் (கட்டளைகள்) பரிமாற்றத்திற்கும் வசதி இல்லை. (21)

அந்த நகரம் ஒரு மலையின் உச்சியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது; தேவலோகத்து நகரம் போல் எல்லா மேன்மைகளும் பெற்றது; எவராலும் புக முடியாதது; குதிரை–யானைகள் நிறைந்த இலங்கை வெல்லுதற்கரியது. (22)

அகழிகளும், சதக்னி என்ற பீரங்கிகளும் மற்றும் பலவகையான போர் இயந்திரங்களும் கொடூரமான எண்ணம் படைத்த இராவணனுடைய இலங்கை நகரில் விளங்குகின்றன. (23)

அந்த நகரின் கிழக்கு வாயிலில் பதினாயிரம் அரக்கர்கள் நிற்கிறார்கள். அவர்கள் எல்லோார் கையிலும் சூலம் இருக்கிறது. எவராலும் வெற்றி கொள்ள முடியாத அவர்கள் போர்க்களத்தில் கத்தி முனையாலேயே யுத்தம் செய்பவர்கள். (24)

தெற்கு வாயிலில் நால்வகைப் படையுடன்கூட ஒரு லட்சம் அரக்கர்கள் இருக்கிறார்கள். அங்குள்ள சதுரங்கப் படைவீரர்களின் ஆற்றலுக்கு உவமையே இல்லை. (25)

மேற்கு வாயிலில் பத்து லட்சம் அரக்கர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கேடயமும் கத்தியும் தாங்கியவர்கள். மற்றும் எல்லா அஸ்திரங்களைப் பிரயோகிப்பதிலும் நிபுணர்கள். (26)

வடக்கு வாயிலில் பத்துக்கோடி அரக்கர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் தேர்ப்படையினர்; சிலர் குதிரைப்படையினர். நற்குலத்தில் பிறந்த அவர்கள் மெச்சத்தகுந்த வீரமுடையவர்கள். (27)

நகரின் மையப்பகுதியிலுள்ள படைத்தளத்தில், வெல்லமுடியாத நூறாயிரக்கணக்கான அரக்கர்கள் இருக்கிறார்கள். அங்கே, மொத்தமாக ஒரு கோடி அரக்கர்கள் இருக்கிறார்கள். (28)

அந்த மரப்பாலங்கள் என்னால் நாசமாக்கப்பட்டன; அகழிகள் தூர்க்கப்பட்டன; இலங்கைப் பட்டணம் எரிக்கப்பட்டது; மதிற்சுவர்களும் இடித்துத் தள்ளப்பட்டன. ஆற்றல் படைத்த அரக்கர் படையின் ஒரு பகுதி என்னால் அழிக்கப்பட்டது. (29)

ஏதோ ஒரு வழியாக நாம் கடலைக் கடந்து சென்றுவிட்டால், வானரர்களால் இலங்கை நகரம் அழிக்கப்பட்டது என்று தாங்கள் நிச்சயம் செய்து கொள்ளலாம். (30)

அங்கதன், த்விவிதன், மைந்தன், ஜாம்பவான், பனஸன், நளன், சேனாபதி நீலன் – இவர்களே போதும்! மிகுந்துள்ள படைவீரர்களுக்கு யாதொரு அவசியமுமில்லை! (31)

இராமபிரானே! இவர்கள் (ஆகாயமார்க்கமாகப்) பாய்ந்து சென்று இராவணனுடைய நகரத்தை அடைந்து, அங்குள்ள மலை, காடு, அகழி, கோட்டைவாயில், மதில்சுவர், மாளிகைகள் முதலியவற்றை முற்றிலுமாக அழித்துவிட்டு (சீதாதேவியாரை) மீட்டுக்கொண்டு வருவார்கள். (32)

ஆகையால், வானரப்படையின் ஒப்பிலாத் தலைவர்களான இவர்களுக்கு இப்போதே கட்டளை இடுங்கள். மங்களமான வேளையில் இவர்கள் புறப்படுவதை ஆலோசித்து முடிவு செய்யுங்கள்.'' (33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

சதுர்த$_2$: ஸர்க$_3$:

ராமாபி$_4$ஷேணநம்

ஶ்ருத்வா ஹநுமதோ வாக்யம் யதா$_2$வத$_3$நுபூர்வஶ: ।
ததோऽப்$_3$ரவீந்மஹாதேஜா ராம: ஸத்யபராக்ரம: ॥ (1)

யாம் நிவேத$_3$யஸே லங்காம் புரீம் பீ$_4$மஸ்ய ரக்ஷஸ: ।
க்ஷிப்ரமேநாம் மதி$_2$ஷ்யாமி ஸத்யமேதத்$_3$ப்$_3$ரவீமி தே ॥ (2)

அஸ்மிந் முஹூர்தே ஸுக்$_3$ரீவ ப்ரயாணமபி$_4$ரோசயே ।
யுக்தோ முஹூர்தோ விஜய: ப்ராப்தோ மத்$_4$யம் தி$_3$வாகர: ॥ (3)

அஸ்மிந் முஹூர்தே விஜயே ப்ராப்தே மத்$_4$யம் தி$_3$வாகரே ।
ஸீதாம் ஹ்ருத்வா து மே யாது க்வாஸௌ யாஸ்யதி யாஸ்யத: ॥ (4)

ஸீதா ஶ்ருத்வாபி$_4$யாநம் மே ஆஶாமேஷ்யதி ஜீவிதே ।
ஜீவிதாந்தேऽம்ருதம் ஸ்ப்ருஷ்ட்வா பீத்வாம்ருதமிவாதுர: ॥ (5)

உத்தரா ப$_2$ல்கு$_3$நீ ஹ்யத்$_3$ய ஶ்வஸ்து ஹஸ்தேந யோக்ஷ்யதே ।
அபி$_4$ப்ரயாம ஸுக்$_3$ரீவ ஸர்வாநீகஸமாவ்ருதா: ॥ (6)

நிமித்தாநி ச த$_4$ந்யாநி யாநி ப்ராது$_3$ர்ப$_4$வந்தி ச ।
நிஹத்ய ராவணம் ஸீதாமாநயிஷ்யாமி ஜாநகீம் ॥ (7)

உபரிஷ்டாத்$_3$தி$_4$ நயநம் ஸ்பு$_2$ரமாணமித$_3$ம் மம ।
விஜயம் ஸமநுப்ராப்தம் ஶம்ஸதீவ மநோரத$_2$ம் ॥ (8)

ததோ வாநரராஜேந லக்ஷ்மணேந ச பூஜித: ।
உவாச ராமோ த$_4$ர்மாத்மா புநரப்யர்த$_2$கோவித$_3$: ॥ (9)

அக்$_3$ரே யாது ப$_3$லஸ்யாஸ்ய நீலோ மார்க$_3$மவேக்ஷிதும் ।
வ்ருத: ஶதஸஹஸ்ரேண வாநராணாம் தரஸ்விநாம் ॥ (10)

ப$_2$லமூலவதா நீல ஶீதகாநநவாரிணா ।
பதா$_2$ மது$_4$மதா சாஶு ஸேநாம் ஸேநாபதே நய ॥ (11)

தூ$_3$ஷயேயுர்து$_3$ராத்மாந: பதி$_2$ மூலப$_2$லோத$_3$கம் ।
ராக்ஷஸா: பரிரக்ஷேதா$_2$ஸ்தேப்$_4$யஸ்த்வம் நித்யமுத்$_3$யத: ॥ (12)

நிம்நேஷு கி$_3$ரிது$_3$ர்கே$_3$ஷு வநேஷு ச வநௌகஸ: ।
அபி$_4$ப்லுத்யாபி$_4$பஶ்யேயு: பரேஷாம் நிஹிதம் ப$_3$லம் ॥ (13)

ஸர்க்கம் : நான்கு

இலங்கையை நோக்கிப் புறப்படுதல்!

வீண்போகாத பராக்கிரமம் உடையவரும் மகிமை பொருந்தியவருமான இராமன், நிகழ்வு வரிசைப்படி அனுமான் சொல்லியவற்றைக் கேட்டுவிட்டு, (பின்வருமாறு) மொழிந்தார்— (1)

''அனுமானே! பயங்கரமான அரக்கர்களுடைய இலங்கை நகரைப் பற்றி நீ விரிவாகக் கூறினாய். விரைவில் அந்த நகரத்தை நான் நாசம் செய்துவிடப் போகிறேன் – என்பதை சத்தியமாகக் கூறுகிறேன். (2)

சுக்ரீவனே! இந்த முகூர்த்தத்திலேயே படைகள் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வாயாக. சூரியன் வானத்தின் மையத்தில் இருக்கிறான். விஜயம் என்ற இந்த முகூர்த்தத்தில் புறப்படுவது நற்பலனைத் தரும். (3)

சூரியன் உச்சியை அடைந்திருக்கும் விஜயம் என்ற இந்த முகூர்த்தத்தில் நான் புறப்பட்டுச் சென்றால், சீதையை அபகரித்துச் சென்ற இவன் (இராவணன்), உயிருடன் எங்கே தப்பியோடப் போகிறான்? சீதை, என் பயணத்தை (ஸித்தர் போன்றவர்கள் மூலம்) கேள்விப்பட்டு, வாழ்வின் முடிவுக்கே வந்துவிட்ட ஒரு நோயாளி, நோய் தீர்க்கும் சக்தி பெற்ற மருந்தைக் குடித்தால், தன் உயிர்மேல் அவனுக்கு ஆசை உண்டாகி விடுவதைப் போல, உயிருடன் இருப்பதில் உறுதி கொள்வாள். (4,5)

இன்று உத்தர நட்சத்திரம்; நாளைக்கு ஹஸ்தம். ஆகையால், சுக்ரீவனே! எல்லாப் படைகளுடன்கூட நாம் இன்றைக்கே பயணத்தைத் தொடங்குவோம். (இராமனுக்கு உத்தர நட்சத்திரம் அனுகூலமானது; ஹஸ்தம் அனுகூலமானதல்ல.) (6)

நற்பேறுகளை விளைவிக்கும் நற்சகுனங்கள் தோன்றுகின்றன. எனவே, போரில் இராவணனைக் கொன்று சீதையை மீட்டு வருவேன் என்பது திண்ணம். (7)

என் வெற்றியையும் மனோரத நிறைவையும் சூசிப்பது போல் என்னுடைய (வலது) கண்ணின் மேற்புருவம் துடிக்கிறது.'' (8)

இராமன் கூறியதைக் கேட்ட வானரவேந்தன் சுக்ரீவனும் இலக்குவனும் அதை ஆமோதித்தார்கள். பின்னர், நீதிமுறை அறிந்தவரும் அறநெறியாளருமான இராமன் மீண்டும் கூறத் தொடங்கினார்— (9)

''இந்தப் படையின் புறப்பாட்டுக்கு முன்னதாகவே, சேனாபதி நீலன், வேகமாகச் செல்லக்கூடிய ஒரு லட்சம் வானரர்களுடன், நாம் செல்ல வேண்டிய பாதையைக் கண்டு சீராக்கிக் கொண்டு செல்லட்டும். (10)

சேனாபதி நீலனே! பழம்–கிழங்குகள் அதிகமாகக் கிடைக்கக் கூடியதும், குளிர்ந்த நிழலைத் தரும் மரங்கள் அடர்ந்த காடுகள் கூடியதும், குளிர்ந்த தண்ணீரும் அதிக அளவில் தேனும் கிடைக்கக் கூடியதுமான பாதையில், விரைவாகப் படைவீரர்களை நடத்திச் செல். (11)

தீய எண்ணங்கொண்ட அரக்கர்கள் (செல்லும் வழியில் நமக்கு உணவும் தண்ணீரும் கிடைக்கக் கூடாது என்பதற்காக) கனி–கிழங்கு–தண்ணீரை (நாம் ஏற்கத் தகாதபடி, விஷம் முதலியவற்றால்) கெட்டுப் போகச் செய்வார்கள். ஆகவே, செல்லும் வழியில் நீ கவனமாக இருந்து இந்தப் பொருள்களையெல்லாம் காப்பாற்ற வேண்டும். (12)

பள்ளத்தாக்குகள், உட்புக முடியாத காடுகள், வனங்கள் ஆகியவற்றிற்குள் வானரர்கள் பாய்ந்து சென்று, மாற்றோரின் படை (ஒளித்து) வைக்கப்பட்டிருக்கிறதா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். (13)

யச்ச ப$_2$ல்கு$_3$ ப$_3$லம் கிஞ்சித்தத$_3$த்ரைவோபயுஜ்யதாம் ।
ஏதத்$_3$தி$_4$ க்ருத்யம் கே$_4$ாரம் நோ விக்ரமேண ப்ரயுத்$_4$யதாம் ॥ (14)

ஸாக$_3$ரௌக$_4$நிப$_4$ம் பீ$_4$மமக்$_3$ராநீகம் மஹாப$_3$லா: ।
கபிஸிம்ஹா: ப்ரகர்ஷந்து ஶதஶோऽத$_2$ ஸஹஸ்ரஶ: ॥ (15)

க$_3$ஜஶ்ச கி$_3$ரிஸங்காஶோ க$_3$வயஶ்ச மஹாப$_3$ல: ।
க$_3$வாக்ஷஶ்சாக்$_3$ரதோ யாந்து வாஹிந்யா வாநரர்ஷப$_4$ா: ॥ (16)

யாது வாநரவாஹிந்யா வாநர: ப்லவதாம் வர: ।
பாலயந் த$_3$க்ஷிணம் பார்ஶ்வம்ருஷபே$_4$ா வாநரர்ஷப$_4$: ॥ (17)

க$_3$ந்த$_4$ஹஸ்தீவ து$_3$ர்த$_4$ர்ஷஸ்தரஸ்வீ க$_3$ந்த$_4$மாத$_3$ந: ।
யாது வாநரவாஹிந்யா: ஸவ்யம் பார்ஶ்வமதி$_4$ஷ்டி$_2$த: ॥ (18)

யாஸ்யாமி ப$_3$லமத்$_4$யேऽஹம் ப$_3$லௌக$_4$மபி$_4$ஹர்ஷயந் ।
அதி$_4$ருஹ்ய ஹநூமந்தமைராவதமிவேஶ்வர: ॥ (19)

அங்க$_3$தே$_3$நைஷ ஸம்யாது லக்ஷ்மணஶ்சாந்தகோபம: ।
ஸார்வபௌ$_4$மேந பூ$_4$தேஶோ த்$_3$ரவிணாதி$_4$பதிர்யதா$_2$ ॥ (20)

ஜாம்ப$_3$வாம்ஶ்ச ஸுஷேணஶ்ச வேக$_3$த$_3$ர்ஶீ ச வாநர: ।
ருக்ஷராஜோ மஹாஸத்த்வ: குக்ஷிம் ரக்ஷந்து தே த்ரய: ॥ (21)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா ஸுக்$_3$ரீவோ வாஹிநீபதி: ।
வ்யாதி$_3$தே$_3$ஶ மஹாவீர்யாந் வாநராந் வாநரர்ஷப$_4$: ॥ (22)

தே வாநரக$_3$ணா: ஸர்வே ஸமுத்பத்ய யுயுத்ஸவ: ।
கு$_3$ஹாப்$_4$ய: ஶிக$_2$ரேப்$_4$யஶ்ச ஆஶு புப்லுவிரே தத$_3$ா ॥ (23)

ததோ வாநரராஜேந லக்ஷ்மணேந ச பூஜித: ।
ஜக$_3$ாம ராமோ த$_4$ர்மாத்மா ஸஸைந்யோ த$_3$க்ஷிணாம் தி$_3$ஶம் ॥ (24)

ஶதை: ஶதஸஹஸ்ரைஶ்ச கோடீபி$_4$ரயுதைரபி ।
வாரணாபை$_4$ஶ்ச ஹரிபி$_4$ர்யயௌ பரிவ்ருதஸ்தத$_3$ா ॥ (25)

தம் யாந்தமநுயாதி ஸ்ம மஹதீ ஹரிவாஹிநீ ।
ஹ்ருஷ்டா: ப்ரமுதி$_3$தா: ஸர்வே ஸுக்$_3$ரீவேணாபி$_4$பாலிதா: ॥ (26)

ஆப்லவந்த: ப்லவந்தஶ்ச க$_3$ர்ஜந்தஶ்ச ப்லவங்க$_3$மா: ।
க்ஷ்வேலந்தோ விநத$_3$ந்தஶ்ச ஜக்$_3$முர்வை த$_3$க்ஷிணாம் தி$_3$ஶம் ॥ (27)

ப$_4$க்ஷயந்த: ஸுக$_3$ந்தீ$_4$நி மதூ$_4$நி ச ப$_2$லாநி ச ।
உத்$_3$வஹந்தோ மஹாவ்ருக்ஷாந் மஞ்ஜரீபுஞ்ஜத$_4$ாரிண: ॥ (28)

நமது படையிலுள்ள சிறுவர்–வயோதிகரான வீரர்களை இங்கேயே (கிஷ்கிந்தையிலேயே) விட்டுச் செல்வோம். ஏனெனில், (நடக்கவிருக்கும்) மகாயுத்தம் மிகவும் பயங்கரமானதாக இருக்கும். ஆதலால், போராற்றல் படைத்தவர்களை மட்டும் அழைத்துச் செல்வோம். (14)

பெருங்கடலுக்கு நிகரான, பயங்கரமான, மகாபலம் பொருந்திய நூறு–ஆயிரக்கணக்கான சிறந்த வீரர்களை, வானரச்சிங்கங்களான தலைவர்கள் நடத்திச் செல்வார்களாக. மலை போன்று பேருடல் படைத்த கஜன், பேராற்றலுடைய கவயன், அளவிட முடியாத பலங்கொண்ட கவாக்ஷன் முதலிய சேனாபதிகள் படைகளின் முன்வரிசையில் செல்லட்டும். (15,16)

பாய்ந்து செல்பவர்களுள் சிறந்தவனும் வானரக் காளையுமான ரிஷபன், வானரப்படையின் வலது பக்கத்தைப் பாதுகாத்துக் கொண்டு போகட்டும். (17)

வெல்ல முடியாதவனும், மதங்கொண்ட யானை போன்றவனும், வேகமாகச் செல்பவனுமான கந்தமாதனன், வானரப்படையின் இடது பக்கத்தின் தலைவனாகப் போகட்டும். (18)

ஐராவதத்தில் ஏறிச் செல்லும் தேவேந்திரனைப் போல, அனுமானின் தோள்மீது நான் அமர்ந்து, நமது படையின் மையப் பகுதியில் சேனைக்கூட்டங்களை உற்சாகப்படுத்திக் கொண்டு செல்வேன். (19)

யக்ஷர்களுக்குத் தலைவனும் செல்வத்திற்கு அதிபதியுமான குபேரன், வடக்கு திசைக் காவல் யானை ஸார்வபௌமத்தின் மேல் ஏறிச் செல்வதைப் போல, எதிரிகளுக்குக் காலன் போன்ற லட்சுமணன் அங்கதனின் தோள்மேல் ஏறிச் செல்வான். மகாபலம் பொருந்தியவரும் கரடிகள் தலைவருமான ஜாம்பவான், சுஷேணன், வேகதர்சீ என்ற வானரன் – இவர்கள் மூவரும் (வானரப்படையின்) நடுப்பகுதியைக் காப்பாற்றட்டும்.'' (20,21)

இராமனுடைய கட்டளையைக் கேட்ட பராக்கிரமசாலியும் வானரப்படையின் தனிப்பெரும் தலைவனுமான சுக்ரீவன், வீரம் மிகுந்த வானரர்களுக்கு உரியபடி ஆணையிட்டான். (22)

அப்போது பேராற்றல் கொண்ட அனைத்து வானரக் கூட்டங்களும் (தாங்கள் தங்கியிருந்த) குகைகளிலிருந்தும் மலைச்சிகரங்களிலிருந்தும் விரைவாக வெளியே வந்து, தாவிக் குதித்துச் செல்லத் தொடங்கினார்கள். (23)

பின்னர், வானரமன்னன் சுக்ரீவனாலும் இலக்குவனாலும் 'படைகள் ஆயத்தமாக இருக்கின்றன' என்று அறிவிக்கப்பட்ட தருமாத்மா இராமன், தெற்கு திசை நோக்கிப் படைகள் சூழப் புறப்பட்டார். (24)

நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான யானைகளை நிகர்த்த வானரவீரர்களால் சூழப்பட்ட இராமன் புறப்பட்டுச் சென்றார். (25)

தென்திசை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவருடன் அளவுகடந்த வானரப்படை தொடர்ந்து சென்றது. அந்த வானர வீரர்கள் எல்லோரும் சுக்ரீவனுடைய பாதுகாப்பில் இருந்ததால் உற்சாகத்துடனும் மனக்களிப்புடனும் இருந்தார்கள். (26)

அந்த வானரவீரர்கள் குதித்துக் கூத்தாடிக் கொண்டும், இரைச்சல் போட்டுக் கொண்டும், குதித்துத் தாவிக் கொண்டும், பெருமுழக்கம் செய்து கொண்டும் தெற்குத் திசை நோக்கிச் சென்றார்கள். (27)

நறுமணமும் சுவையுமுள்ள தேனைப் பருகிக் கொண்டும், பழங்களைப் புசித்துக் கொண்டும், மலர்க்கொத்துகளுடன் விளங்கிய பெரிய மரங்களைப் பெயர்த்தெடுத்துக் கொண்டும் (சென்றார்கள்.) (28)

அந்யோந்யம் ஸஹஸா த்$_3$ருப்தா நிர்வஹந்தி க்ஷிபந்தி ச ।
பததஶ்சோத்பதந்த்யந்யே பாதயந்த்யபரே பராந் ॥ (29)

ராவணோ நோ நிஹந்தவ்ய: ஸர்வே ச ரஜநீசரா: ।
இதி க$_3$ர்ஜந்தி ஹரயோ ராக$_4$வஸ்ய ஸமீபத: ॥ (30)

புரஸ்தாத்$_3$ருஷபே$_4$ா வீரோ நீல: குமுத$_3$ ஏவ ச ।
பந்த$_2$நம் ஶோத$_4$யந்தி ஸ்ம வாநரைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருதா: ॥ (31)

மத்$_4$யே து ராஜா ஸுக்$_3$ரீவோ ராமோ லக்ஷ்மண ஏவ ச ।
ப$_3$லிபி$_4$ர்ப$_3$ஹுபி$_4$: ஶூரைர்வ்ருதா: ஶத்ருநிப$_3$ர்ஹணை: ॥ (32)

ஹரி: ஶதப$_3$லிர்வீர: கோடிபி$_4$ர்த$_3$ஶபி$_4$ர்வ்ருத: ।
ஸர்வாமேகோ ஹ்யவஷ்டப்$_4$ய ரரக்ஷ ஹரிவாஹிநீம் ॥ (33)

கோடிஶதபரீவார: கேஸரீ பநஸோ க$_3$ஜ: ।
அர்கஶ்சாதிப$_3$ல: பார்ஶ்வமேகம் தஸ்யாபி$_4$ரக்ஷதி ॥ (34)

ஸுஷேணோ ஜாம்ப$_3$வாம்ஶ்சைவ ருக்ஷைஶ்ச ப$_3$ஹுபி$_4$ர்வ்ருதௌ ।
ஸுக்$_3$ரீவம் புரத: க்ருத்வா ஜக$_4$நம் ஸம்ரரக்ஷது: ॥ (35)

தேஷாம் ஸேநாபதிர்வீரோ நீலோ வாநரபுங்க$_3$வ: ।
ஸம்பதந் ப்லவதாம் ஶ்ரேஷ்ட$_2$ஸ்தத்$_3$ப$_3$லம் பர்யபாலயத் ॥ (36)

த$_3$ரீமுக$_2$: ப்ரஜங்க$_4$ஶ்ச ரம்பே$_4$ாऽத$_2$ ரப$_4$ஸ: கபி: ।
ஸர்வதஶ்ச யயுர்வீராஸ்த்வரயந்த: ப்லவங்க$_3$மாந் ॥ (37)

ஏவம் தே ஹரிஶார்தூ$_3$லா க$_3$ச்ச$_2$ந்தோ ப$_3$லத$_3$ர்பிதா: ।
அபஶ்யம்ஸ்தே கி$_3$ரிஶ்ரேஷ்ட$_2$ம் ஸஹ்யம் த்$_3$ருமலதாயுதம் ॥
ஸராம்ஸி ச ஸுபு$_2$ல்லாநி தடாகாநி மஹாந்தி ச ॥ (38)

ராமஸ்ய ஶாஸநம் க்ஞாத்வா பீ$_4$மகோபஸ்ய பீ$_4$தவத் ।
வர்ஜயந்நக$_3$ராப்$_4$யாஶாம்ஸ்தத$_2$ா ஜநபத$_3$ாநபி ॥ (39)

ஸாக$_3$ரௌக$_4$நிப$_4$ம் பீ$_4$மம் தத்$_3$வாநரப$_3$லம் மஹத் ।
நி:ஸஸர்ப மஹாகே$_4$ாஷம் பீ$_4$மகே$_4$ாஷ இவார்ணவ: ॥ (40)

தஸ்ய த$_3$ாஶரதே$_2$: பார்ஶ்வே ஶூராஸ்தே கபிகுஞ்ஜரா: ।
தூர்ணமாபுப்லுவு: ஸர்வே ஸத$_3$ஶ்வா இவ சோதி$_3$தா: ॥ (41)

கபிப்$_4$யாமுஹ்யமாநௌ தௌ ஶுஶுப$_4$ாதே நரர்ஷபௌ$_4$ ।
மஹத்$_3$ப்$_4$யாமிவ ஸம்ஸ்ப்ருஷ்டௌ க்$_3$ரஹாப்$_4$யாம் சந்த்$_3$ரப$_4$ாஸ்கரௌ ॥ (42)

செருக்குக் கொண்ட சிலர் ஒருவரையொருவர் தூக்கிக் கொள்கிறார்கள்; தூக்கி எறிகிறார்கள்; போய்க்கொண்டிருக்கும் போதே சிலர் உயரே எம்பித் தாவுகிறார்கள்; மற்றும் சில வானரர்கள், ஒருவனைப் பிடித்து மற்றொருவன் மேல் தள்ளிவிடுகிறார்கள். (29)

சிலர், இராமனின் அருகில் சென்று, 'நாம் இராவணனைக் கொல்லவேண்டும்; எல்லா அரக்கர்களையும் கொல்லவேண்டும்' என்று ஆவேசமாகக் கர்ஜிக்கிறார்கள். (30)

எல்லோருக்கும் முன்னதாக ரிஷபன், நீலன், வீரனான குமுதன் ஆகியோர் ஏராளமான படைவீரர்களால் சூழப்பட்டவர்களாகப் பாதையைச் செப்பனிட்டுக் கொண்டு சென்றார்கள். (31)

மகாபலம் பொருந்தியவர்களும் எதிரிகளை அடக்கக் கூடியவர்களுமான அநேக வானரர்கள் புடைசூழ, (படையின்) நடுவில் மன்னன் சுக்ரீவன், இராமன், லட்சுமணன் ஆகிய மூவரும் இருந்தார்கள். (32)

சதபலி என்ற வானரத்தலைவன், பத்துக் கோடி வீரர்களையுடைய, எல்லை காண முடியாத அந்த வானரப்படை முழுவதையும், தான் ஒருவனாகவே தன்னுடைய ஆக்கினையால் பாதுகாத்தான். (33)

நூறு கோடி வானரர்களோடுகூடிய கேஸரி, பநஸன் என்ற படைத்தலைவர்கள் படையின் ஒரு (வலது) பகுதியையும், ஏராளமான வானரவீரர்களால் சூழப்பட்ட கஜன், அர்க்கன் ஆகிய தலைவர்கள் படையின் இன்னொரு (இடது) பகுதியையும் பாதுகாத்து வந்தார்கள். (34)

கணக்கில்லாத கரடிகள் புடைசூழ சுஷேணனும் ஜாம்பவானும், சுக்ரீவனை முன்னால் போகவிட்டு, படையின் பின்பகுதியை நன்றாகப் பாதுகாத்தார்கள். (35)

அந்தப் படையில், சேனாபதியும் வீரனும் பாய்ந்து செல்பவர்களில் தலைசிறந்தவனுமான நீலன் என்ற வானரோத்தமன், பாய்ந்து பாய்ந்து சென்று முழுப்படையையும் மேற்பார்வையிட்டு வந்தான். (36)

தர்முகன், ப்ரஜங்கன், ரம்பன், ரபஸன் ஆகியவர்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வானரப் படையினரை விரட்டிக் கொண்டு சென்றார்கள். (37)

இவ்வாறு, பலத்தால் மதங்கொண்ட வானரச் சிங்கங்களான அவர்கள் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும்போது, மரங்களும் கொடிகளும் அடர்ந்த ஸஹ்யம் என்ற சிறந்த மலையைக் கண்டார்கள். வழியில் மலர்ந்த தாமரைகளைக் கொண்ட ஓடைகளையும் விசாலமான தடாகங்களையும் பார்த்தார்கள். (38)

பயங்கரமாக சப்தம் எழுப்பும் சமுத்திரம் போல் பேரொலி எழுப்புவதும், பெருங்கடலைப் போல் பயங்கரமானதும், அளவில்லாததுமான அந்த வானரப்படை, ஆக்ரோஷமாக சினங்கொள்ளும் இராமபிரானின் (யாருக்கும் நம்மால் இடையூறு ஏற்படக்கூடாது – என்ற) கட்டளைக்கிணங்க, (புதிய பட்டணங்களைப் பார்க்க விரும்பினாலும்) (இராமனுடைய கோபத்திற்குப்) பயந்து, புறநகர்ப் பகுதிகளையும் கிராமங்களையும் விட்டு விலகிச் சென்றது. (39,40)

மகாவீரர்களான வானரர்கள், சாட்டை அடியால் ஊக்குவிக்கப்பட்ட குதிரைகள் போல், இராமபிரானின் அருகில் வேகமாகக் குதித்துக் கொண்டு சென்றார்கள். (41)

புருஷோத்தமர்களான அவ்விருவரும் (இராம–லட்சுமணர்கள்) வானரர்களின் தோளில், சுக்ரன்–பிருஹஸ்பதி ஆகிய இரு கோள்களுடன் கூடிய சூரிய–சந்திரர் போல் பிரகாசித்தார்கள். (42)

ததோ வாநரராஜேந லக்ஷ்மணேந ச பூஜித: ।
ஜக$_3$ாம ராமோ த$_4$ர்மாத்மா ஸஸைந்யோ த$_3$க்ஷிணாம் தி$_3$ஶம் ॥ (43)

தமங்க$_3$த$_3$க$_3$தோ ராமம் லக்ஷ்மண: ஶுப$_4$யா கி$_3$ரா ।
உவாச பரிபூர்ணார்தோ$_2$ வசநம் ப்ரதிப$_4$ாநவாந் ॥ (44)

ஹ்ருதாமவாப்ய வைதே$_3$ஹீம் க்ஷிப்ரம் ஹத்வா ச ராவணம் ।
ஸம்ருத்$_3$த$_4$ார்த$_2$: ஸம்ருத்$_3$த$_4$ார்த$_2$மயோத்$_4$யாம் ப்ரதி யாஸ்யஸி ॥ (45)

மஹாந்தி ச நிமித்தாநி தி$_3$வி பூ$_4$மௌ ச ராக$_4$வ ।
ஶுப$_4$ாநி தவ பஶ்யாமி ஸர்வாண்யேவார்த$_2$ஸித்$_3$த$_4$யே ॥ (46)

அநுவாதி ஶுபோ$_4$ வாயு: ஸேநாம் ம்ருது$_3$ஹித: ஸுக$_2$: ।
பூர்ணவல்கு$_3$ஸ்வராஶ்சேமே ப்ரவத$_3$ந்தி ம்ருக$_3$த்$_3$விஜா: ॥ (47)

ப்ரஸந்நாஶ்ச தி$_3$ஶ: ஸர்வா விமலஶ்ச தி$_3$வாகர: ।
உஶநா ச ப்ரஸந்நார்சிரநு த்வாம் ப$_4$ார்க$_3$வோ க$_3$த: ॥ (48)

ப்$_3$ரஹ்மராஶிர்விஶுத்$_3$த$_4$ஶ்ச ஶுத்$_3$த$_4$ாஶ்ச பரமர்ஷய: ।
அர்சிஷ்மந்த: ப்ரகாஶந்தே த்$_4$ருவம் ஸர்வே ப்ரத$_3$க்ஷிணம் ॥ (49)

திரிசங்குர்விமலோ ப$_4$ாதி ராஜர்ஷி: ஸபுரோஹித: ।
பிதாமஹ: புரோऽஸ்மாகமிக்ஷ்வாகூணாம் மஹாத்மநாம் ॥ (50)

விமலே ச ப்ரகாஶேதே விஶாகே$_2$ நிருபத்$_3$ரவே ।
நக்ஷத்ரவரமஸ்மாகமிக்ஷ்வாகூணாம் மஹாத்மநாம் ॥ (51)

நைர்ருதம் நைர்ருதாநாம் ச நக்ஷத்ரமபி$_4$பீட்$_3$யதே ।
மூலோ மூலவதா ஸ்ப்ருஷ்டோ தூ$_4$ப்யதே தூ$_4$மகேதுநா ॥ (52)

ஸர்வம் சைதத்$_3$விநாஶாய ராக்ஷஸாநாமுபஸ்தி$_2$தம் ।
காலே காலக்$_3$ருஹீதாநாம் நக்ஷத்ரம் க்$_3$ரஹபீடி$_3$தம் ॥ (53)

ப்ரஸந்நா: ஸுரஸாஶ்சாபோ வநாநி ப$_2$லவந்தி ச ।
ப்ரவாந்த்யப்$_4$யதி$_4$கம் க$_3$ந்த$_4$ாந் யத$_2$ர்துகுஸுமா த்$_3$ருமா: ॥ (54)

வ்யூட$_4$ாநி கபிஸைந்யாநி ப்ரகாஶந்தேऽதி$_4$கம் ப்ரபோ$_4$ ।
தே$_3$வாநாமிவ ஸைந்யாநி ஸங்க்$_3$ராமே தாரகாமயே ॥
ஏவமார்ய ஸமீக்ஷ்யைதாந் ப்ரீதோ ப$_4$விதுமர்ஹஸி ॥ (55)

இதி ப்$_4$ராதரமாஶ்வாஸ்ய ஹ்ருஷ்ட: ஸௌமித்ரிரப்$_3$ரவீத் ।
அதா$_2$வ்ருத்ய மஹீம் க்ருத்ஸ்நாம் ஜகா$_3$ம மஹதீ சமூ: ॥ (56)

வானரமன்னன் சுக்ரீவனாலும் இலக்குவனாலும் நன்றாக கௌரவிக்கப்பட்ட ('இலங்கைமேல் படையெடுப்பு' என்ற அவருடைய தீர்மானத்தால் மகிழ்ந்து பாராட்டப்பட்ட) தருமாத்மாவான இராமன், சேனைகளோடுகூட தெற்குத் திசையை நோக்கிச் சென்றார். (43)

அங்கதன் தோள்மேல் ஆரோகணித்திருந்த இலக்குவன், எல்லா மனோரதங்களும் கைகூடப் பெற்றவரும், கிடைக்கும் புத்தறிவை உடனுக்குடன் ஏற்றுக் கொள்பவருமான இராமனைப் பார்த்து, நலன் பயக்கும் சொற்களைக் கூறினான்— (44)

''வெகு எளிதாக இராவணனைக் கொன்று, அபகரித்துச் செல்லப்பட்ட பிராட்டியாரைத் திரும்பப் பெற்று, எண்ணம் கைகூடப் பெற்றவராக, வளம் கொழிக்கும் அயோத்தியை நோக்கிச் செல்லப் போகிறீர்கள். (45)

அண்ணலே! தாங்கள் மேற்கொண்டிருக்கும் காரியத்தின் வெற்றியைக் காட்டும் மங்களமான சிறந்த சகுனங்களையே ஆகாயத்திலும் பூமியிலும் காண்கிறேன். (46)

படைவீரர்களுக்குக் களைப்பு ஏற்படாத வகையில் குளிர்ச்சியான, சுகமான காற்று (உடலைத் தழுவிக் கொண்டு) மெல்ல வீசுகிறது. இங்குள்ள விலங்குகளும் பறவைகளும் இனிய குரலில் ஒலி எழுப்புகின்றன. (47)

எல்லா திசைகளும் மாசற்றவைகளாகக் காணப்படுகின்றன; (மேகம், புகைக்கூட்டம் போன்ற மறைப்பு ஏதுமில்லாமல்) சூரியதேவன் தெளிவாகத் தெரிகிறார்; பிருகு முனிவரின் குமாரரான சுக்ரன், தன் இயற்கையான காந்தியுடன் தங்களுக்குப் பின்னால் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். துருவ மண்டலம் நிர்மலமாகக் காணப்படுகிறது; தூயவர்களும் ஆன்மஒளி பெற்றவர்களுமான சப்தரிஷிக் கூட்டம், துருவ மண்டலத்தை வலம் வருவதாகக் காணப்படுகிறது. (48,49)

மகாமகிமை பொருந்திய நமது இக்ஷ்வாகு வம்ச மூதாதையரான பிதாமகர் திரிசங்குவும், குலகுரு வசிஷ்டரும் நமக்கு எதிரில் மாசற்ற ஒளியுடன் காட்சி தந்து கொண்டிருக்கிறார்கள். அளவில்லாத பெருமை பொருந்திய இக்ஷ்வாகு பரம்பரையினருக்கு, எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்ததான நிர்மலமான விசாகம் (என்னும் இரு தாரகைகள்) குரூரக் கிரகங்களால் பாதிக்கப்படாமல் தெளிவாகப் பிரகாசிக்கிறது. (50,51)

அரக்கர்களின் நட்சத்திரம் மூலம். அதன் அதிதேவதையான நிர்ருதி பாபக்கிரகங்களால் பீடிக்கப்பட்டிருக்கிறது. மூல நட்சத்திரம், அதன் அருகிலுள்ள தூமகேதுவால் தீண்டப்பட்டு, மிகவும் ஆபத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிறது. (52)

இவையெல்லாம் அரக்கர்களின் அழிவுக்காகவே அமைந்திருக்கின்றன. காலபாசத்தினால் வசப்பட்டுள்ளவனின் நட்சத்திரம், அவன் அழிவுக்கு வழிகோலும் கிரகங்களால் தீண்டப்படுகின்றன. (53)

நீர்நிலைகளில் தண்ணீர் தெளிவாகவும் சுவையோடு கூடியதாகவும் இருக்கிறது; வனங்களில் (நமது படைகளுக்குப்) போதுமான பழங்கள் கிடைக்கின்றன; இந்த ருதுவில் புஷ்பிக்க வேண்டிய மரங்களிலிருந்து, மலர்ந்த மலர்களின் நறுமணம் நன்றாக வீசுகிறது. (54)

ஐயனே! தாரகாசுரனை வதைப்பதற்காக, தேவர்களின் சேனை கூடி நின்றதைப் போல, வானரப்படை நன்றாக அணிவகுத்து விளங்குகின்றது. அண்ணலே! தாங்கள் சிறப்பான (இந்த வானரப்படையையும்) நன்னிமித்தங்களையும் கண்டு மனம் மகிழவேண்டும்.'' (55)

இவ்வாறு, தமையனாருக்கு ஆறுதல் கூறிக்கொண்டு உவகையுடன் இலக்குவன் சொன்னான். அதேசமயம் அந்தப் பிரதேசம் முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டு, மாபெரும் வானரப்படை மேலே சென்று கொண்டிருந்தது. (56)

ருக்ஷவாநரஶார்தூ3லைர்நக2த3ம்ஷ்ட்ராயுதை4ர்வ்ருதா ।
கராக்3ரைஸ்சரணாக்3ரைஸ்ச வாநரைருத்தி2தம் ரஜ: ॥
பீ4மமந்தர்த3தே4 லோகம் நிவார்ய ஸவிது: ப்ரபா4ம் ॥ (57)

ஸபர்வதவநாகாஶாம் த3க்ஷிணாம் ஹரிவாஹிநீ ।
சா2த3யந்தீ யயௌ பீ4மா த்3யாமிவாம்பு3த3ஸந்ததி: ॥ (58)

உத்தரந்த்யாம் ச ஸேநாயாம் ஸததம் ப3ஹுயோஜநம் ।
நதீ3ஸ்ரோதாம்ஸி ஸர்வாணி ஸஸ்யந்து3ர்விபரீதவத் ॥ (59)

ஸராம்ஸி விமலாம்பா4ம்ஸி த்3ருமாகீர்ணாம்ஸ்ச பர்வதாந் ।
ஸமாந் பூ4மிப்ரதே3ஶாம்ஸ்ச வநாநி ப2லவந்தி ச ॥ (60)

மத்4யேந ச ஸமந்தாச்ச திர்யக்சாத4ஸ்ச ஸாவிஶத் ।
ஸமாவ்ருத்ய மஹீம் க்ருத்ஸ்நாம் ஜகா3ம மஹதீ சமூ: ॥ (61)

தே ஹ்ருஷ்டமநஸ: ஸர்வே ஜக்3முர்மாருதரம்ஹஸ: ।
ஹரயோ ராக4வஸ்யார்தே2 ஸமாரோபிதவிக்ரமா: ॥ (62)

ஹர்ஷவீர்யப3லோத்3ரேகாந் த3ர்ஶயந்த: பரஸ்பரம் ।
யௌவநோத்ஸேகஜாந் த3ர்பாந் விவிதா4ந்ஸ்சக்ருரத்4வநி ॥ (63)

தத்ர கேசித்3த்3ருதம் ஜக்3முருத்பேதுஸ்ச ததா2பரே ।
கேசித்கிலகிலாம் சக்ருர்வாநரா வநகோ3சரா: ॥ (64)

ப்ராஸ்போ2டயம்ஸ்ச புச்சா2நி ஸம்நிஜக்4நு: பதா3ந்யபி ।
பு4ஜாந் விக்ஷிப்ய ஶைலாம்ஸ்ச த்3ருமாநந்யே ப3ப4ஞ்ஜிரே ॥ (65)

ஆரோஹந்தஸ்ச ஶ்ருங்கா3ணி கி3ரீணாம் கி3ரிகோ3சரா: ।
மஹாநாதா3ந் விமுஞ்சந்தி க்ஷ்வேலாமந்யே ப்ரசக்ரிரே ॥ (66)

ஊருவேகை3ஸ்ச மம்ருது3ர்லதாஜாலாந்யநேகஶ: ।
ஜ்ரும்ப4மாணாஸ்ச விக்ராந்தா விசிக்ரீடு3: ஶிலாத்3ருமை: ॥ (67)

ஶதை: ஶதஸஹஸ்ரைஸ்ச கோடிபி4ஸ்ச ஸஹஸ்ரஶ: ।
வாநராணாம் ஸுகோ4ராணாம் யூதை2: பரிவ்ருதா மஹீ ॥ (68)

ஸா ஸ்ம யாதி தி3வாராத்ரம் மஹதீ ஹரிவாஹிநீ ।
ஹ்ருஷ்டா ப்ரமுதி3தா ஸேநா ஸுக்3ரீவேணாபி4ரக்ஷிதா ॥ (69)

வாநராஸ்த்வரிதம் யாந்தி ஸர்வே யுத்3தா4பி4நந்தி3ந: ।
முமோக்ஷயிஷவ: ஸீதாம் முஹூர்தம் க்வாபி நாஸத ॥ (70)

தத: பாத3பஸம்பா3த4ம் நாநாம்ருக3ஸமாயுதம் ।
ஸஹ்யபர்வதமாஸேது3ர்மலயம் ச மஹீத4ரம் ॥ (71)

அந்தப் படையில் மகாவீரம் படைத்த கரடிகளும் வானரர்களும் இருந்தார்கள். அவர்களுக்கு நகங்களும் பற்களும்தான் படைக்கலன்கள். அந்த வானரவீரர்கள் கை–கால்களின் நுனிகளால் பெரும் புழுதிப் படலத்தை உண்டாக்கினர். அதனால், சூரியஒளி மறைக்கப்பட்டு உலகில் பயங்கரமான இருள் சூழ்ந்துகொண்டது. (57)

கணக்கிலடங்காத வானரப்படை, வரிசையாக வரும் மேகக்கூட்டம் ஆகாயத்தை மறைப்பதுபோல மலை, சிறுகாடுகள், ஆகாயம் முதலியவற்றை மறைத்துக் கொண்டு தென்திசையை நோக்கிச் சென்றது. (58)

ஒரு நதியை அந்தப் படை கடந்து செல்ல நேரும்போது, நதியின் ஓட்டம் தடைபட்டு பல யோஜனை தூரத்திற்கு நீர்ப்பிரவாகம் எதிர்த்து ஓடியது. (59)

அந்த வானரப்படை தெளிந்த நீர் நிரம்பிய தடாகங்களையும், மரங்களடர்ந்த மலைகளையும், சமவெளிகளையும், பழங்கள் நிறைந்த வனங்களையும், இடையிலும்–மேலும்–கீழும்–எல்லாப் பக்கங்களிலும் புகுந்து கடந்து சென்று கொண்டிருந்தது. பூமி முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டு, அந்த மாபெரும் படை போய்க் கொண்டிருந்தது. (60,61)

அவர்கள் எல்லோரும் மனக்களிப்புடன் இருந்தார்கள்; வாயுவுக்கு நிகரான வேகத்தோடு சென்றார்கள். இராமபிரானின் காரியம் வெற்றியடைய வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்ததால், அவர்களுடைய பராக்கிரமம் வளர்ந்து கொண்டே இருந்தது. (62)

வாலிபத்தின் காரணமாக ஏற்பட்ட செருக்கால், மகிழ்ச்சி–மனவலிமை–உடலாற்றல் ஆகியவைகளைப் பாதையில் போய்க் கொண்டிருக்கும்போதே, ஒருவருக்கொருவர் பலவகையில் சாகசச் செயல்களால் வெளிப்படுத்திக் கொண்டு சென்றார்கள். (63)

காட்டுவாசிகளான வானரர்களில் சிலர் வெகுவேகமாகச் சென்றார்கள்; சிலர் பாய்ந்து சென்றார்கள்; சிலர் (வானர இயல்புப்படி) 'கிலகில'வென்று கூச்சலிட்டார்கள். (64)

சிலர், வால்களைத் தரையில் அடித்தார்கள்; கால்களால் உதைத்தார்கள்; மற்றும் சிலர் கைகளை நீட்டி, மலைகளையும் மரங்களையும் பிளந்தார்கள். (65)

மலைவாழ் வானரர்கள் சிலர் மலையுச்சியில் ஏறி பெருங்கூச்சலிட்டார்கள்; மற்றும் சிலர் சிம்மநாதம் செய்தார்கள். (66)

தொடையின் வேகத்தால் ஏராளமான கொடிப்புதர்களை அழித்தார்கள்; பேராற்றல் படைத்த அவர்கள் எல்லாவிடங்களிலும் பறந்து சென்று, பாறைகளையும் மரங்களையும் வீசியெறிந்து விளையாடினார்கள். (67)

நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான எண்ணிக்கையுள்ள பயங்கரமான வானரவீரர்களால் பூமண்டலம் சூழப்பட்டதாயிற்று. (68)

சுக்ரீவனால் பாதுகாக்கப்பட்ட மாபெரும் வானரப்படை, புத்துணர்ச்சியும் களிப்பும் கொண்டு இராப்பகலாகச் சென்று கொண்டிருந்தது. (69)

போர் செய்வதில் உற்சாகம் கொண்ட எல்லா வானரர்களும் வேகமாகச் சென்றார்கள். சீதையை விடுவிப்பதில் பேராவல் கொண்ட அவர்கள், இடையில் எவ்விடத்திலும் சிறிதுநேரம்கூடத் தங்கவில்லை. (70)

தொடர்ந்து சென்று கொண்டிருக்கும்போது மரங்கள் அடர்ந்ததும் பலவகை விலங்குகள் வசிப்பதுமான ஸஹ்ய பர்வதத்தையும், (அதைக் கடந்து) மலய பர்வதத்தையும் அடைந்தார்கள். (71)

காநநாநி விசித்ராணி நதீ3ப்ரஸ்ரவணாநி ச ।
பஶ்யந்நபி4யயௌ ராம: ஸஹ்யஸ்ய மலயஸ்ய ச ॥ (72)

சம்பகாந்ஸ்திலகாந்ஶ்சூதாநஶோகாந் ஸிந்து4வாரகாந் ।
கரவீராம்ஶ்ச திநிஶாந் ப4ஞ்ஜந்தி ஸ்ம ப்லவங்க3மா: ॥ (73)

அங்கோலாம்ஶ்ச கரஞ்ஜாம்ஶ்ச ப்லக்ஷந்யக்3ரோத4திந்து3காந் ।
ஜம்பூ3காமலகாந்நீபாந் ப4ஞ்ஜந்தி ஸ்ம ப்லவங்க3மா: ॥ (74)

ப்ரஸ்தரேஷு ச ரம்யேஷு விவிதா4: காநநத்3ருமா: ।
வாயுவேக3ப்ரசலிதா: புஷ்பைரவகிரந்தி தாந் ॥ (75)

மாருத: ஸுக2ஸம்ஸ்பர்ஶோ வாதி சந்த3நஶீதல: ।
ஷட்பதை3ரநுகூஜத்3பி4ர்வநேஷு மது4க3ந்தி4ஷு ॥ (76)

அதி4கம் ஶைலராஜஸ்து தா4துபி4: ஸுவிபூ4ஷித: ।
தா4துப்4ய: ப்ரஸ்ருதோ ரேணுர்வாயுவேக3விக4ட்டித: ॥
ஸுமஹத்3வாநராநீகம் சா2த3யாமாஸ ஸர்வத: ॥ (77)

கி3ரிப்ரஸ்தே2ஷு ரம்யேஷு ஸர்வத: ஸம்ப்ரபுஷ்பிதா: ।
கேதக்ய: ஸிந்து3வாராஶ்ச வாஸந்த்யஶ்ச மநோரமா: ॥ (78)

மாத4வ்யோ க3ந்த4பூர்ணாஶ்ச குந்த3குல்மாஶ்ச புஷ்பிதா: ।
சிரிபி3ல்வா மதூ4காஶ்ச வஞ்ஜுலா வகுலாஸ்ததா2 ॥ (79)

ஸ்பூ2ர்ஜகாஸ்திலகாஶ்சைவ நாக3வ்ருக்ஷாஶ்ச புஷ்பிதா: ।
சூதா: பாடலயஶ்சைவ கோவிதா3ராஶ்ச புஷ்பிதா: ॥ (80)

முசுலிந்தா3ர்ஜுநாஶ்சைவ ஶிம்ஶபா: குடஜாஸ்ததா2 ।
த4வா: ஶால்மலயஶ்சைவ ரக்தா: குரப3காஸ்ததா2 ॥ (81)

ஹிந்தாலாஸ்திநிஶாஶ்சைவ சூர்ணகா நீபகாஸ்ததா2 ।
நீலாஶோகாஶ்ச வரணா அங்கோலா: பத்3மகாஸ்ததா2 ॥
ப்லவமாநை: ப்லவங்கை3ஸ்து ஸர்வே பர்யாகுலீக்ருதா: ॥ (82)

வாப்யஸ்தஸ்மிந் கி3ரௌ ஶீதா: பல்வலாநி ததை2வ ச ।
சக்ரவாகாநுசரிதா: காரண்ட3வநிஷேவிதா: ॥
ப்லவை: க்ரௌஞ்சைஶ்ச ஸங்கீர்ணா வராஹம்ருக3ஸேவிதா: ॥ (83)

ருக்ஷைஸ்தரக்ஷுபி4: ஸிம்ஹை: ஶார்தூ3லைஶ்ச ப4யாவஹை: ।
வ்யாலைஶ்ச ப3ஹுபி4ர்பீ4மை: ஸேவ்யமாநா ஸமந்தத: ॥ (84)

பத்3மை: ஸௌக3ந்தி4கை: பு2ல்லை: குமுதை3ஶ்சோத்பலைஸ்ததா2 ।
வாரிஜைர்விவிதை4: புஷ்பை ரம்யாஸ்தத்ர ஜலாஶயா: ॥ (85)

தஸ்ய ஸாநுஷு கூஜந்தி நாநாத்3விஜக3ணாஸ்ததா2 ।
ஸ்நாத்வா பீத்வோத3காந்யத்ர ஜலே க்ரீட3ந்தி வாநரா: ॥ (86)

ஸஹ்யம் மற்றும் மலய மலைகளில் விளங்கும் அழகிய சோலைகளையும் ஆறு–அருவிகளையும் பார்த்துக் கொண்டே இராமன் சென்றார். (72)

வானரர்கள் சம்பகம், மஞ்சாடி, மா, அசோகம், நொச்சி, அரளி, திநிசம் முதலிய மரங்களை முறித்து வீழ்த்தினார்கள். (73)

குதித்துக் கும்மாளமிட்டுச் சென்ற வானரர்கள், பாதையில் தென்பட்ட அழிஞ்சல், புங்கன், அத்தி, ஆல், திந்துகம் மற்றும் நாவல், நெல்லி, கடம்பு முதலிய மரங்களையும் வெட்டிச் சாய்த்தார்கள். (74)

அழகான சமவெளிப் பிரேதேசங்களில் வளர்ந்திருந்த காட்டு மரங்கள், வேகமாக வீசும் காற்றின் வேகத்தால் ஆடிக்கொண்டு, அவர்கள் (வானரர்கள்) மேல் மலர்மாரி பொழிந்தன. (75)

தேன் மணம் கமழும் சோலைகளில் ரீங்காரமிடும் வண்டுகள் பறந்தன. சந்தனம் போல் குளிர்ச்சியுடன் உடலைத் தழுவிக் கொண்டு சுகமாகக் காற்று வீசியது. (76)

சிறந்த மலையில் தாதுக்கற்கள் மிகவும் அழகாக விளங்கின. அந்த தாதுக்களிலிருந்து கிளம்பிய தூசி காற்றின் வேகத்தால் நாற்புறமும் பரவி, மிகப்பெரிய வானரப்படையை எல்லாப் புறங்களிலும் மறைத்துவிட்டது. (77)

அழகிய மலைத்தாழ்வரைகளில் எல்லாப் பகுதிகளிலும் நன்றாகப் பூத்து மலர்ந்த தாழை, நொச்சி, மனங்கவர் முல்லை, நறுமணம் வீசும் மாதவி, மலர்ந்த பூக்களைக் கொண்ட மல்லிகைப் புதர்கள், புங்கன், இலுப்பை, மகிழம், பந்தூகம், ஸ்பூர்ஜம், திலகம், நாகம், ஏராளமான பூக்களையுடைய மா, பாதிரி, மலர்களைக் கொண்ட கோவிதாரம், முசுலிந்தம், மருதம், சிம்சுபம், வெண்பாலை, தவம், இலவம், செவ்வண்ண மருதாணி, கூந்தற்பனை, தினிசம், சூர்ணகம், கடம்பு, நீல அசோகம், மாவலிங்கம், அழிஞ்சில், பத்மகம் முதலிய மரம்–செடி–கொடிகள் மீது பாய்ந்து தாவிச் செல்லும் வானரர்களால் சிதறடிக்கப்பட்டன. (78–82)

அந்த இரு பர்வதங்களிலும் சக்ரவாகம், காரண்டவம் என்ற அன்னம், நீர்க்காக்கை, கிரௌஞ்சம் முதலிய பறவைகளும், பன்றி, மான், கரடி, சிறுத்தை, சிங்கம், அச்சமூட்டும் புலி, பேருடல் கொண்ட பல்வகையான யானைகள் முதலிய விலங்குகளும் நீர் பருகுவதற்காக அடிக்கடி வந்து போகும் பெரிய நீர்நிலைகளும் குட்டைகளும் இருந்தன. (83,84)

அவ்விடத்தில் மலர்ந்த தாமரை, செங்கழுநீர், ஆம்பல், கருநெய்தல் மற்றும் நீரில் முளைக்கும் மலர்கள் ஆகியவற்றால் அழகு செய்யப்பட்ட நீர்நிலைகளும் இருந்தன. (85)

அதன் சிகரங்களில் பலவகையான பறவைக் கூட்டங்கள் கூவிக்கொண்டிருந்தன. அவ்விடத்தில் வானரர்கள் நீராடி, நீர் அருந்தி தண்ணீரிலேயே விளையாடினார்கள். (86)

அந்யோந்யம் ப்லாவயந்தி ஸ்ம ஶைலமாருஹ்ய வாநரா: ।
ப$_2$லாந்யம்ருதக$_3$ந்தீ$_4$நி மூலாநி குஸுமாநி ச ॥
ப$_3$ப$_4$ஞ்ஜுர்வாநராஸ்தத்ர பாத$_3$பாநாம் மதோ$_3$த்கடா: ॥ (87)

த்$_3$ரோணமாத்ரப்ரமாணாநி லம்ப$_3$மாநாநி வாநரா: ।
யயு: பிப$_3$ந்தோ ஹ்ருஷ்டாஸ்தே மதூ$_4$நி மது$_4$பிங்க$_3$ளா: ॥ (88)

பாத$_3$பாநவப$_4$ஞ்ஜந்தோ விகர்ஷந்தஸ்தத$_2$ா லதா: ।
வித$_4$மந்தோ கி$_3$ரிவராந் ப்ரயயு: ப்லவக$_3$ர்ஷப$_4$ா: ॥ (89)

வ்ருக்ஷேப்$_4$யோऽந்யே து கபயோ நர்த$_3$ந்தோ மது$_4$த$_3$ர்பிதா: ।
அந்யே வ்ருக்ஷாந் ப்ரபத்$_3$யந்தே ப்ரபதந்த்யபி சாபரே ॥ (90)

ப$_3$பூ$_4$வ வஸுத$_4$ா தைஸ்து ஸம்பூர்ணா ஹரியூத$_2$பை: ।
யத$_2$ா கலமகேத$_3$ாரை: பக்வைரிவ வஸுந்த$_4$ரா ॥ (91)

மஹேந்த்$_3$ரமத$_2$ ஸம்ப்ராப்ய ராமோ ராஜீவலோசந: ।
அத்$_4$யாரோஹந்மஹாப$_3$ாஹு: ஶிக$_2$ரம் த்$_3$ருமபூ$_4$ஷிதம் ॥ (92)

தத: ஶிக$_2$ரமாருஹ்ய ராமோ த$_3$ஶரத$_2$ாத்மஜ: ।
கூர்மமீநஸமாகீர்ணமபஶ்யத்ஸலிலாகரம் ॥ (93)

தே ஸஹ்யம் ஸமதிக்ரம்ய மலயம் ச மஹாகி$_3$ரிம் ।
ஆஸேது$_3$ராநுபூர்வ்யேண ஸமுத்$_3$ரம் பீ$_4$மநி:ஸ்வநம் ॥ (94)

அவருஹ்ய ஜக$_3$ாமாஶு வேலாவநமநுத்தமம் ।
ராமோ ரமயதாம் ஶ்ரேஷ்ட$_2$: ஸஸுக்$_3$ரீவ: ஸலக்ஷ்மண: ॥ (95)

அத$_2$ தெ$_4$ளதோபலதலாம் தோயௌகை$_4$: ஸஹஸோத்தி$_2$தை: ।
வேலாமாஸாத்$_3$ய விபுலாம் ராமோ வசநமப்$_3$ரவீத் ॥ (96)

ஏதே வயமநுப்ராப்தா: ஸுக்$_3$ரீவ வருணாலயம் ।
இஹேதா$_3$நீம் விசிந்தா ஸா யா ந: பூர்வம் ஸமுத்தி$_2$தா ॥ (97)

அத: பரமதீரோऽயம் ஸாக$_3$ர: ஸரிதாம் பதி: ।
ந சாயமநுபாயேந ஶக்யஸ்தரிதுமர்ணவ: ॥ (98)

ததி$_3$ஹைவ நிவேஶோऽஸ்து மந்த்ர: ப்ரஸ்தூயதாமிதி ।
யதே$_2$த$_3$ம் வாநரப$_3$லம் பரம் பாரமவாப்நுயாத் ॥ (99)

இதீவ ஸ மஹாப$_3$ாஹு: ஸீதாஹரணகர்ஶித: ।
ராம: ஸாக$_3$ரமாஸாத்$_3$ய வாஸமாக்ஞாபயத்தத$_3$ா ॥ (100)

ஸர்வா: ஸேநா நிவேஶ்யந்தாம் வேலாயாம் ஹரிபுங்க$_3$வ ।
ஸம்ப்ராப்தோ மந்த்ரகாலோ ந: ஸாக$_3$ரஸ்யாஸ்ய லங்க$_4$நே ॥ (101)

அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டார்கள். மலைமீது ஏறிக்கொண்ட சிலர் அமுதம் போன்று நறுமணம் வீசும் பழங்கள், கிழங்குகள், மலர்கள் முதலியவற்றை மரங்களிலிருந்து பிடுங்கி எறிந்தார்கள். (87)

தேன் நிறம் கொண்ட வானரர்கள், மரங்களில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பதக்குப் பரிமாணம் கொண்ட தேன்கூடுகளிலிருந்து தேனைப் பருகி, மனம் மகிழ்ந்தவர்களாய் சென்றார்கள். (88)

வானரவீரர்கள் மரங்களை முறித்தார்கள்; கொடிகளை இழுத்தார்கள்; மலைப்பாறைகளை உருட்டித் தள்ளிக் கொண்டும் சென்றார்கள். (89)

சில வானரர்கள் தேனைக் குடித்ததால் வெறி பிடித்து ஆர்ப்பரித்தார்கள்; மரங்களிலிருந்து தரையில் குதித்தார்கள்; மற்றும் சிலர் வேகமாக மரங்களில் ஏறினர். (90)

நன்றாக முதிர்ந்த செந்நெல் பயிர்களால் விளைநிலங்கள் நிறைந்திருப்பது போல, அந்த வானரக் கூட்டங்களால் இந்த மண்ணுலகமே நிறைந்தாற்போலாயிற்று. (91)

பின்னர், தாமரைக்கண்ணரும் தோளாண்மை மிக்கவருமான இராமன், மகேந்திரமலையை அடைந்து, மரங்கள் அடர்ந்த மலைச்சிகரத்தை ஏறி அடைந்தார். (92)

தசரதன் மைந்தரான இராமன், மலைச்சிகரத்தில் ஏறி நின்று ஆமை–மீன்கள் நிறைந்த பெருங்கடலைக் கண்களால் கண்டார். (93)

இவ்வாறாக ஸஹ்யம், மலயம் ஆகிய மலைகளைக் கடந்து, தொடர்ந்து வரிசையாக (நேர் வழியில்) சென்று, பயங்கரமாக சப்தமிடும் சமுத்திரத்தை அடைந்தார்கள். (94)

காண்போரைக் கவர்ந்திழுப்பதில் தலையாயவரான இராமன், மலையிலிருந்து இறங்கி சுக்ரீவ–லட்சுமணர்களோடுகூட, கடற்கரையை ஒட்டினாற்போலிருந்த வனத்திற்குள் வேகமாகச் சென்றார். (95)

திடீர் திடீரென்று கிளம்பும் பேரலைகளால் நன்றாகக் கழுவப்பட்ட கற்பாறைகளை உடைய விசாலமான கரையை அடைந்ததும், இராமன் (பின்வருமாறு) கூறினார்— (96)

''சுக்ரீவனே! நாம் எல்லோரும் கடலை வந்தடைந்து விட்டோம். முன்னால் நாம் எதைப் பற்றிக் கவலைப்பட்டோமோ, அதே கவலை இப்போது இங்கே முளைத்திருக்கிறது. (97)

நதிகளின் பதியான இப்பெருங்கடலின் எதிர்க்கரையே இல்லை. (எல்லை காணமுடியாத விஸ்தீர்ணமுள்ளதாக இருக்கிறது.) ஓர் உபாயத்தாலன்றி இந்தக் கடலைக் கடந்து செல்ல முடியாது. (98)

ஆகவே, நமது படைகள் இவ்விடத்திலேயே தங்கட்டும். இந்த வானரப்படையை எவ்வாறு அக்கரைக்குக் கொண்டு சேர்க்கலாம்? என்பது குறித்து, நாம் ஆலோசனை நடத்தலாம்.'' (99)

தோள்வலி மிக்கவரும், சீதை அபகரித்துச் செல்லப்பட்டதால் மனம் நொந்து போயிருப்பவருமான இராமன், கடற்கரையை அடைந்ததும், அங்கே தங்குவதற்கானக் கட்டளையைப் பிறப்பித்தார். (100)

''சுக்ரீவனே! நமது படைகள் அனைத்தும் கரையிலேயே தங்கியிருக்கட்டும். கடலைக் கடந்து செல்வது குறித்து தீவிரமாக மந்திராலோசனை செய்யும் காலம் வந்துவிட்டது. (101)

ஸ்வாம் ஸ்வாம் ஸேநாம் ஸமுத்ஸ்ருஜ்ய மா ச கஸ்சித்குதோ வ்ரஜேத் ।
க$_3$ச்ச$_2$ந்து வாநரா: ஶூரா: க்ஜேயம் ச$_2$ந்நம் ப$_4$யம் ச ந: ॥ (102)

ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா ஸுக்$_3$ரீவ: ஸஹலக்ஷ்மண: ।
ஸேநாம் ந்யவேஶயத்தீரே ஸாக$_3$ரஸ்ய த்$_3$ருமாயுதே ॥ (103)

விரராஜ ஸமீபஸ்த$_2$ம் ஸாக$_3$ரஸ்ய ச தத்$_3$ப$_3$லம் ।
மது$_4$பாண்டு$_3$ஜல: ஸ்ரீமாந் த்$_3$விதீய இவ ஸாக$_3$ர: ॥ (104)

வேலாவநமுபாக$_3$ம்ய ததஸ்தே ஹரிபுங்க$_3$வா: ।
விநிவிஷ்டா: பரம் பாரம் காங்க்ஷமாணா மஹோத$_3$தே$_4$: ॥ (105)

தேஷாம் நிவிஶமாநாநாம் ஸைந்யஸந்நாஹநி:ஸ்வந: ।
அந்தர்த$_4$ாய மஹாநாத$_3$மர்ணவஸ்ய ப்ரஶுஶ்ருவே ॥ (106)

ஸா வாநராணாம் த்$_4$வஜிநீ ஸுக்$_3$ரீவேணாபி$_4$பாலிதா ।
த்ரித$_4$ா நிவிஷ்டா மஹதீ ராமஸ்யார்த$_2$பராப$_4$வத் ॥ (107)

ஸா மஹார்ணவமாஸாத்$_3$ய ஹ்ருஷ்டா வாநரவாஹிநீ ।
வாயுவேக$_3$ஸமாதூ$_4$தம் பஶ்யமாநா மஹார்ணவம் ॥ (108)

தூ$_3$ரபாரமஸம்ப$_3$ாத$_4$ம் ரக்ஷோக$_3$ணநிஷேவிதம் ।
பஶ்யந்தோ வருணாவாஸம் விஷேது$_3$ர்ஹரியூத$_2$பா: ॥ (109)

சண்ட$_3$நக்ரக்$_3$ரஹம் கே$_4$ாரம் க்ஷபாதெ$_3$ள தி$_3$வஸக்ஷயே ।
ஹஸந்தமிவ பே$_2$நெளகை$_4$ர்ந்ருத்யந்தமிவ சோர்மிபி$_4$: ॥ (110)

சந்த்$_3$ரோத$_3$யஸமுத்$_3$தூ$_4$தம் ப்ரதிசந்த்$_3$ரஸமாகுலம் ।
பிநஷ்டீவ தரங்க$_3$ாக்$_3$ரைரர்ணவ: பே$_2$நசந்த$_3$நம் ॥
தத$_3$ாத$_3$ாய கரைரிந்து$_3$ர்லிம்பதீவ தி$_3$க$_3$ங்க$_3$நா: ॥ (111)

சண்ட$_3$ாநிலமஹாக்$_3$ராஹை: கீர்ணம் திமிதிமிங்கி$_3$லை: ।
தீ$_3$ப்தபோ$_4$ாகை$_3$ரிவாகீர்ணம் பு$_4$ஜங்கை$_3$ர்பு$_4$ஜக$_3$ாலயம் ॥ (112)

அவக$_3$ாட$_4$ம் மஹாஸத்த்வைர்நாநாஶைலஸமாகுலம் ।
ஸுது$_3$ர்க$_3$ம் து$_3$ர்க$_3$மார்க$_3$ம் தமக$_3$ாத$_4$மஸுராலயம் ॥ (113)

மகரைர்நாக$_3$பே$_4$ாகை$_3$ஶ்ச விக$_3$ாட$_4$ா வாதலோலிதா: ।
உத்பேதுஶ்ச நிபேதுஶ்ச ப்ரவ்ருத்$_3$த$_4$ா ஜலராஶய: ॥ (114)

அக்$_3$நிசூர்ணமிவாவித்$_3$த$_4$ம் ப$_4$ாஸ்வராம்பு$_3$ மஹோரக$_3$ம் ।
ஸுராரிவிஷயம் கே$_4$ாரம் பாதாலவிஷமம் ஸதா$_3$ ॥ (115)

ஸாக$_3$ரம் சாம்ப$_3$ரப்ரக்$_2$யமம்ப$_3$ரம் ஸாக$_3$ரோபமம் ।
ஸாக$_3$ரம் சாம்ப$_3$ரம் சேதி நிர்விஶேஷமத்$_3$ருஶ்யத ॥ (116)

அணிகளின் தலைவர்கள் யாரும் எந்தக் காரணத்தைக் கொண்டும் தன் அணியைவிட்டு வெளியே போகக்கூடாது. அரக்கர்கள் மறைந்திருந்து நம் படைகள் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்ற பயம் இருப்பதால், மாவீரர்களான வானரர்கள் அக்கம்பக்கம் (எதிரிகள் மறைந்து கொண்டிருக்கிறார்களா? என்று) பார்த்துக் கொண்டே செல்லட்டும்.'' (102)

இராமனுடைய ஆணையைக் கேட்டு, லட்சுமணனும் சுக்ரீவனும் மரத்தோப்புகள் நிறைந்த சமுத்திரக் கரையில் படைகளை நிறுத்தி வைத்தார்கள். (103)

சமுத்திரத்தின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்ட அந்த மாபெரும் வானரப்படை, தேன் நிறம் கொண்ட நீர் நிரம்பிய, பெருமைமிக்க இன்னொரு சமுத்திரம் போல் விளங்கியது. (104)

கடற்கரையை ஒட்டினாற்போலிருந்த வனத்தை அடைந்த வானரோத்தமர்கள், பெருங்கடலின் எதிர்க்கரையை அடையும் பேராவலுடன் அங்கே தங்கியிருந்தார்கள். (105)

அங்கு தங்கியிருந்த படைவீரர்கள் உற்சாகத்துடன் எழுப்பிய பேரொலி, அந்தப் பெருங்கடலின் அலைகளின் ஓசையை அடக்கிவிட்டுப் பெருநாதமாகக் கேட்டது. (106)

இராம கைங்கரியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டதும், சுக்ரீவனால் பாதுகாக்கப்பட்டதுமான வானரப்படை, மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டது. (107)

சமுத்திரக்கரையை அடைந்த வானரப்படை, பெருங்காற்றினால் சமுத்திரம் அலைப்புரண்டு ஆர்ப்பரிப்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள். (108)

அக்கரையைக் கண்ணால் காணமுடியாதபடி விஸ்தாரமாக இருப்பதும், அரக்கர் கூட்டங்கள் வசிப்பதும் (கடல்களிலும் அரக்கர்கள் வசிக்கிறார்கள் – என்று பல இடங்களில் கூறப்பட்டுள்ள உண்மை), வருணனின் இருப்பிடமாக இருப்பதுமான மாபெரும் கடலைப் பார்த்ததும் மிகவும் கவலை அடைந்தார்கள். (109)

அந்தக் கடலில், பகல் பொழுது முடிந்து இரவு ஆரம்பமாகும் ஸந்த்யா காலத்தில், கோபம் கொண்டு திரியும் முதலைகளாலும் பேரலைகளாலும் பார்ப்பதற்குப் பயங்கரமானதும், நுரைக்கூட்டங்களால் சிரிப்பது போன்றதும், அலை வரிசைகளால் நடனமாடுவது போன்றிருப்பதும், சந்திரன் உதயமானவுடன் அதன் பிரதிபிம்பங்களால் நிறைந்திருப்பது போன்றதும், புயற்காற்றைப் போன்ற கொடிய முதலைகளை உடையதும், (நூறு யோஜனை நீளமுள்ள) திமி என்னும் மீன்களை உடையதும், திமிகளையே உண்ணக்கூடிய திமிங்கிலங்களை உடையதும், ஜொலிக்கும் படங்களையுடைய பாம்புகள் நிறைந்து பாம்புகளின் இருப்பிடம் போல் விளங்குவதும், பேராற்றல் படைத்த பிராணிகள் நிறைந்ததும், பலவகையான மலைகள் நிறைந்ததும், நெருங்க முடியாததும், கடந்து செல்ல முடியாததும், ஆழங்காண முடியாததும், அசுரர்கள் வசிப்பதும், முதலை–சுறாமீன்–பாம்புகள் நிறைந்துள்ளதும், காற்றால் அலைபுரண்டு பொங்கியெழும் அலைகள் உயரே எழும்பிச் சென்று கீழே விழுந்து அடங்கிப் போவதுமான பெருங்கடலைக் கண்டு திகைத்தார்கள். (110–114)

பெருங்கடலின் நீர்த்துளிகள் ஒளித்துகள்களாகத் திகழ்ந்தன. அவைகளைப் பார்க்கும் போது கடலில் நெருப்புப் பொறிகள் சிதறிக் கிடப்பது போல் இருந்தது. (ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன.) கடலில் பெரிய பாம்புகள் இருக்கின்றன. (ஆகாயத்திலும் ராகு போன்ற சர்ப்ப வடிவங்கள் காணப்படுகின்றன.) தேவர்களின் பகைவர்களான அசுர–அரக்கர்கள் கடலை வாழ்விடமாகக் கொண்டுள்ளார்கள். (ஆகாயத்திலும் அசுர–அரக்கர்களின் சஞ்சாரம் காணப்படுகிறது.) பெருங்கடல், ஆகாயம் ஆகிய இரண்டும் பார்ப்பதற்குப் பயங்கரமானவைகளாகவும் பாதாளம் போல் ரகசியம் நிறைந்தவைகளாகவும் இருந்தன. இந்தக் காரணங்களால் ஆகாயம் சமுத்திரத்தையும், சமுத்திரம் ஆகாயத்தையும் ஒத்திருந்தன. இவ்வாறு ஆகாயமும் சமுத்திரமும் வேற்றுமையில்லாமல் காணப்பட்டன. (115,116)

ஸம்ப்ருக்தம் நப₄ஸாப்யம்ப₄: ஸம்ப்ருக்தம் ச நபே₄ாம்ப₄ஸா ।
தாத்₃ருக்₃ருபே ஸ்ம த்₃ருஶ்யேதே தாராரத்நஸமாகுலே ॥ (117)

ஸமுத்பதிதமேக₄ஸ்ய வீசிமாலாகுலஸ்ய ச ।
விஶேஷோ ந த்₃வயோராஸீத்ஸாக₃ரஸ்யாம்ப₃ரஸ்ய ச ॥ (118)

அந்யோந்யமாஹதா: ஸக்தா: ஸஸ்வநுர்பீ₄மநி:ஸ்வநா: ।
ஊர்மய: ஸிந்து₄ராஜஸ்ய மஹாபே₄ர்ய இவாஹவே ॥ (119)

ரத்நௌக₄ஜலஸந்நாத₃ம் விஷக்தமிவ வாயுநா ।
உத்பதந்தமிவ க்ருத்₃த₄ம் யாதோ₃க₃ணஸமாகுலம் ॥ (120)

த₃த்₃ருஶுஸ்தே மஹோத்ஸாஹா வாதாஹதமபாம் பதிம் ।
அநிலோத்₃த₄தமாகாஶே ப்ரவல்க₃ந்தமிவோர்மிபி₄: ॥ (121)

ததோ விஸ்மயமாபந்நா த₃த்₃ருஶுர்ஹரயஸ்தத₃ா ।
ப்₄ராந்தோர்மிஜலஸந்நாத₃ம் ப்ரலோலமிவ ஸாக₃ரம் ॥ (122)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ சதுர்த₂: ஸர்க₃: ॥

பஞ்சம: ஸர்க₃:

ராமவிப்ரலம்ப₄:

ஸா து நீலேந விதி₄வத்ஸ்வாரக்ஷா ஸுஸமாஹிதா ।
ஸாக₃ரஸ்யோத்தரே தீரே ஸாது₄ நிவேஶிதா ॥ (1)

மைந்த₃ஶ்ச த்₃விவித₃ஶ்சோபௌ₄ தத்ர வாநரபுங்க₃வௌ ।
விசேரதுஶ்ச தாம் ஸேநாம் ரக்ஷார்த₂ம் ஸர்வதோதி₃ஶம் ॥ (2)

நிவிஷ்டாயாம் து ஸேநாயாம் தீரே நத₃நதீ₃பதே: ।
பார்ஶ்வஸ்த₂ம் லக்ஷ்மணம் த்₃ருஷ்ட்வா ராமோ வசநமப்₃ரவீத் ॥ (3)

ஶோகஶ்ச கில காலேந க₃ச்ச₂தா ஹ்யபக₃ச்ச₂தி ।
மம சாபஶ்யத: காந்தாமஹந்யஹநி வர்த₄தே ॥ (4)

ந மே து₃:க₂ம் ப்ரியா தூ₃ரே ந மே து₃:க₂ம் ஹ்ருதேதி வா ।
ஏததே₃வாநுஶோசாமி வயோऽஸ்யா ஹ்யதிவர்ததே ॥ (5)

வாஹி வாத யத: காந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருஶ ।
த்வயி மே கா₃த்ரஸம்ஸ்பர்ஶஶ்சந்த்₃ரே த்₃ருஷ்டிஸமாக₃ம: ॥ (6)

கடல் ஆகாயத்தையும், ஆகாயம் கடலையும் தொட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகாயத்தில் நட்சத்திரங்கள்; கடலில் முத்துக்கள். இவ்விதம் இரண்டும் சமமான உருவமுடையவாகக் காணப்பட்டன. (117)

ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் எழும்பி இடியோசை எழுப்புகின்றன; பெருங்கடலில் அலைவரிசைகள் எழும்பி பேரிரைச்சல் எழுப்புகின்றன. எனவே, இவை இரண்டுக்குமிடையே தனிச்சிறப்பு ஏதுமில்லை. (வேற்றுமை ஏதுமில்லை.) (118)

போர்க்களத்தில் பெரிய பேரிகைகளின் முழக்கம் போலவே, பெருங்கடலில் பேரிரைச்சல் போடும் அலைகள் ஒன்றோடொன்று மோதித் தாக்குண்டவைகளாகப் பேரொலி எழுப்பின. (119)

வீரம் பொருந்திய அவர்கள், பெருங்காற்றால் அலைபுரண்ட சமுத்திரம் காற்றோடு இணைந்துவிட்டது போலவும், இரத்தினங்களை வாரி இறைக்கும் தண்ணீரின் இனிய ஒலியோடுகூட, ஆத்திரம் கொண்ட நீர்ப்பிராணிகள் நிறைந்ததும், காற்றின் தாக்குதலால் அலைகள் மேலே எழும்பி வான்வெளியில் நடப்பது போலவும் இருப்பதைப் பார்த்தார்கள். (120,121)

அப்போது, வரிசையாக வீசும் அலைகளின் ஒலியினால் பெருங்கடல் கலவரப்பட்டுத் தத்தளிப்பது போல் இருப்பதையும் பார்த்து, வானரர்கள் ஆச்சரியமடைந்தார்கள். (122)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐந்து
இராமனின் பிரிவாற்றாமை

அந்த வானரப் படை, பெருங்கடலின் வடகரையில், படைத்தலைவன் நீலனால் பாதுகாக்கப்பட்டும் ஒழுங்குபடுத்தப்பட்டும் பாசறை அமைத்துத் தங்க வைக்கப்பட்டது. (1)

மைந்தன், த்விவிதன் ஆகிய இரு வானரத்தலைவர்களும் படையைக் காக்கும் பொருட்டு, அவ்விடத்தில் எல்லாப் பக்கங்களிலும் சுற்றிச் சுற்றி வந்தார்கள். (2)

கடற்கரையில் படைகள் நன்றாகத் தங்க வைக்கப்பட்ட பின், அருகில் நின்றுகொண்டிருந்த இலக்குவனைப் பார்த்து இராமன் கூறினார்— (3)

''காலம் செல்லச் செல்ல ஒருவனுடைய சோகம் மெல்லத் தேய்ந்து போய்விடும் என்று சொல்வார்களால்லவா? (ஆனால், என் விஷயத்திலோ) மனதுக்குகந்த மனைவியைக் காணாததால் ஏற்பட்ட சோகம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது. (4)

'என் பிரியமான மனைவி வெகுதூரத்தில் இருக்கிறாள்' என்பதால் நான் வேதனைப்படவில்லை; 'திருடிக் கொண்டு செல்லப்பட்டாள்' என்பதும் எனக்கு வேதனையைத் தரவில்லை. ஆனால், அவள் (வயது, அதாவது, 'ஒரு மாதம் மட்டும் உயிரைக் காப்பாற்றி வைத்திருப்பேன்' என்று) குறித்த கெடு கடந்து கொண்டிருப்பதை நினைத்தே வருந்துகிறேன். (சுந்தரகாண்டம், நாற்பதாவது ஸர்க்கத்தில், 'ஒரு மாதம் மட்டும் உயிரைக் காப்பாற்றி வைத்திருப்பேன்' என்று, அனுமானிடம் பிராட்டி கூறியிருக்கிறார்.) (5)

வாயு பகவானே! என் மனைவி இருக்குமிடத்தில் நன்றாக வீசி, அவள் உடலைத் தழுவிவிட்டு, அப்படியே வந்து என் உடலையும் தழுவுவாயாக. அதன் மூலம் எனக்கு மனச்சாந்தி ஏற்படும். ஆகாயத்திலுள்ள ஒரே சந்திரனை அவளும் பார்க்கிறாள்; அதையே நானும் பார்க்கிறேன் – என்பதில் ஓர் அந்தரங்கமான மகிழ்ச்சி ஏற்படுவதைப் போல. (6)

தந்மே த$_3$ஹதி க$_3$ாத்ராணி விஷம் பீதமிவாஶயே ।
ஹா நாதே$_2$தி ப்ரியா ஸா மாம் ஹ்ரியமாணா யத$_3$ப்$_3$ரவீத் ॥ (7)

தத்$_3$வியோகே$_3$ந்த$_4$நவதா தச்சிந்தாவிபுலார்சிஷா ।
ராத்ரிம்தி$_3$வம் ஶரீரம் மே த$_3$ஹ்யதே மத$_3$நாக்$_3$நிநா ॥ (8)

அவகா$_3$ஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே ஸௌமித்ரே ப$_4$வதா விநா ।
கத$_2$ம்சித்ப்ரஜ்வலந் காமோ ந மாம் ஸுப்தம் ஜலே த$_3$ஹேத் ॥ (9)

ப$_3$ஹ்வேதத்காமயாநஸ்ய ஶக்யமேதேந ஜீவிதும் ।
யத$_3$ஹம் ஸா ச வாமோரூரேகாம் த$_4$ரணிமாஶ்ரிதௌ ॥ (10)

கேத$_3$ாரஸ்யேவ கேத$_3$ார: ஸோத$_3$கஸ்ய நிரூத$_3$க: ।
உபஸ்நேஹேந ஜீவாமி ஜீவந்தீம் யச்ச்$_2$ருணோமி தாம் ॥ (11)

கத$_3$ா நு க$_2$லு ஸுஶ்ரோணீம் ஶதபத்ராயதேக்ஷணாம் ।
விஜித்ய ஶத்ரூந் த்$_3$ரக்ஷ்யாமி ஸீதாம் ஸ்பீ$_2$தாமிவ ஶ்ரியம் ॥ (12)

கத$_3$ா நு சாருபி$_3$ம்பே$_3$ாஷ்ட$_2$ம் தஸ்யா: பத்$_3$மமிவாநநம் ।
ஈஷது$_3$ந்நம்ய பாஸ்யாமி ரஸாயநமிவாதுர: ॥ (13)

தஸ்யாஸ்து ஸம்ஹதௌ பீநௌ ஸ்தநௌ தாலப$_2$லோபமௌ ।
கத$_3$ா நு க$_2$லு ஸோத்கம்பௌ ஶ்லிஷ்யந்த்யா மாம் ப$_4$ஜிஷ்யத: ॥ (14)

ஸா நூநமஸிதாபாங்கீ$_3$ ரக்ஷோமத்$_4$யக$_3$தா ஸதீ ।
மந்நாத$_2$ா நாத$_2$ஹீநேவ த்ராதாரம் நாதி$_4$க$_3$ச்ச$_2$தி ॥ (15)

கத$_2$ம் ஜநகராஜஸ்ய து$_3$ஹிதா ஸா மம ப்ரியா ।
ராக்ஷஸீமத்$_4$யக$_3$ா ஶேதே ஸ்நுஷா த$_3$ஶரத$_2$ஸ்ய ச ॥ (16)

கத$_3$ா விக்ஷோப்$_4$ய ரக்ஷாம்ஸி ஸா விதூ$_4$யோத்பதிஷ்யதி ।
விதூ$_4$ய ஜலத$_3$ாந்நீலாஞ்ஶஶிரேக$_2$ா ஶரத்ஸ்விவ ॥ (17)

ஸ்வப$_4$ாவதநுகா நூநம் ஶோகேநாநஶநேந ச ।
பூ$_4$யஸ்தநுதரா ஸீதா தே$_3$ஶகாலவிபர்யயாத் ॥ (18)

கத$_3$ா நு ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய நித$_4$ாயோரஸி ஸாயகாந் ।
ஸீதாம் ப்ரத்யாஹரிஷ்யாமி ஶோகமுத்ஸ்ருஜ்ய மாநஸம் ॥ (19)

கத$_3$ா நு க$_2$லு மாம் ஸாத்$_4$வீ ஸீதா ஸுரஸுதோபமா ।
ஸோத்கண்ட$_2$ா கண்ட$_2$மாலம்ப்$_3$ய மோக்ஷ்யத்யாநந்த$_3$ஜம் பய: ॥ (20)

கத$_3$ா ஶோகமிமம் கோ$_4$ரம் மைதி$_2$லீவிப்ரயோக$_3$ஜம் ।
ஸஹஸா விப்ரமோக்ஷ்யாமி வாஸ: ஶுக்லேதரம் யத$_2$ா ॥ (21)

திருடிக்கொண்டு செல்லப்பட்டபோது, சீதை என்னை அழைப்பதற்காக 'ஹா, பிராணநாதரே!' என்று கூவிய அந்தச் சொற்கள், குடிக்கப்பட்ட விஷம் வயிற்றில் தங்கியிருந்து உடல் அங்கங்களை எரிப்பது போல், என்னைத் தகித்துக் கொண்டே இருக்கிறது. (7)

சீதையிடம் எனக்குள்ள பிரேமை என்ற அக்னிக்கு, அவள் பிரிவு என்பதுதான் விறகு. அவளைப் பற்றிய சிந்தனையே சுடர்விடும் சுவாலைகள். அந்த அக்னி இரவு–பகலாய் என் உடலை வாட்டிக் கொண்டிருக்கிறது. (8)

லட்சுமணா! நான், நீ இல்லாமல் கடலுக்குள் மூழ்கி உறங்கப் போகிறேன். இவ்விதம் தண்ணீருக்குள் தூங்கும் என்னை, காமம் என்ற அக்னி எவ்விதத்திலும் வாட்டமுடியாது. அழகான அங்கங்களையுடைய அவளும் நானும் இந்தத் தரையிலேயே (இந்தப் பூமியிலேயே) தூங்குகிறோம் – என்ற நினைப்பே, நான் உயிரோடிருப்பதற்குப் போதுமானது. (9,10)

தண்ணீரில்லாத விளைநிலத்திலுள்ள பயிர், அருகிலுள்ள தண்ணீர் தேங்கி நிற்கும் விளைநிலத்திலிருந்து வெளியேறும் நீர்க்கசிவால் எவ்வாறு வாடிப் போகாமலிருக்கிறதோ, அவ்வாறே, அவள் உயிரோடு இருக்கிறாள் என்ற செய்தியைக் கேட்டதாலேயே, நான் உயிர் பிழைத்திருக்கிறேன். (11)

பகைவர்களை வென்று வளம் கொழிக்கும் திருமகள் போன்றவளும், நல்லிடையாளும், தாமரையிதழ் போன்று விசாலமான கண்களையுடையவளுமான சீதையை, நான் எப்போது காணப் போகிறேனோ? (12)

கோவைக்கனிபோல் சிவந்த உதடுகளையுடைய அவளுடைய தாமரை முகத்தைக் கொஞ்சம் மேலே தூக்கி, நோயால் பீடிக்கப்பட்ட ஒருவன் உயிர் காக்கும் மருந்தை பேராவலுடன் பருகுவதைப் போல, எப்போது இதழ் பொருத்துவேனோ? (13)

நெருங்கிப் பருத்துப் பனம்பழங்களைப் போல் விளங்கும் அவளுடைய மார்பகங்கள் சற்றே நடுக்கத்துடன், எப்போது என்னைத் தீண்டப் போகின்றனவோ? (14)

கருமையான கடைக்கண்களையுடைய அவள், என்னைக் கணவனாகப் பெற்றிருந்தும், பாதுகாப்பு இல்லாத அநாதை போல அரக்கர்களின் நடுவில் அகப்பட்டுக் கொண்டு, தன்னைக் காப்பாற்றுபவரைக் காணாமல் தவித்துக் கொண்டிருப்பாள். (15)

ஜனகருடைய மகள்; தசரதருடைய மருமகள்; என்னுடைய பிரிய மனைவி – இவ்வளவு பெருமைக்கும் சுகபோகத்திற்கும் உரிய சீதை, அரக்கர்களிடையே எவ்வாறு தூங்குவாள்? (16)

சரத் காலத்தில் நீருண்ட மேகங்களை விலக்கிக் கொண்டு, நிலாவின் ஒளிக்கீற்று வெளிப்படுவது போல, அரக்கர்களை அடியோடு ஒழித்து, (அவர்கள் பிடியிலிருந்து தப்பி) எப்போது வெளிப்படுவாளோ? (17)

இயற்கையாகவே மென்மையான உடலமைப்பைக் கொண்ட சீதை, தனக்கு எதிரான இடம்–காலத்தில் சிக்கியிருப்பதால், சோகத்தினாலும் உணவு உண்ணாமையாலும் நிச்சயமாக இன்னும் இளைத்திருப்பாள். (18)

அரக்க மன்னன் இராவணனின் மார்பை அம்புகளால் துளைத்து (மாய்த்துவிட்டு), என் மனக்கவலையிலிருந்து விடுபட்டு, எப்போதுதான் சீதையைத் திருப்பிக் கொண்டுவரப் போகிறேனோ? தேவமகள் போன்றவளும், எப்போதும் என் நினைவிலேயே இருப்பவளும், சீலம் பொருந்தியவளுமான சீதை, ஆசைதீர என்னைத் தழுவிக் கொண்டு எப்போதுதான் ஆனந்தக்கண்ணீர் வடிக்கப் போகிறாளோ? (19,20)

அழுக்குப் படிந்த ஆடையை உடனே உதறித் தள்ளி விடுவதைப் போல, சீதையின் பிரிவால் உண்டாகும் ஆற்றாமையை எப்போது களைந்தெறியப் போகிறேனோ?" (21)

ஏவம் விலபதஸ்தஸ்ய தத்ர ராமஸ்ய தீ$_4$மத: ।
தி$_3$நக்ஷயாந்மந்த$_3$ருசிர்பா$_4$ஸ்கரோऽஸ்தமுபாக$_3$மத் ॥ (22)

ஆஶ்வாஸிதோ லக்ஷ்மணேந ராம: ஸந்த்$_4$யாமுபாஸத ।
ஸ்மரந் கமலபத்ராக்ஷீம் ஸீதாம் ஶோகாகுலீக்ருத: ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சம: ஸர்க$_3$: ॥

ஷஷ்ட$_2$: ஸர்க$_3$:

ராவணமந்த்ரணம்

லங்காயாம் து க்ருதம் கர்ம கோ$_4$ரம் த்$_3$ருஷ்ட்வா ப$_4$யாவஹம் ।
ராக்ஷஸேந்த்$_3$ரோ ஹநுமதா ஶக்ரேணேவ மஹாத்மநா ॥
அப்$_3$ரவீத்$_3$ராக்ஷஸாந் ஸர்வாந் ஹ்ரியா கிஞ்சித$_3$வாங்முக$_2$: ॥ (1)

த$_4$ர்ஷிதா ச ப்ரவிஷ்டா ச லங்கா து$_3$ஷ்ப்ரஸஹா புரீ ।
தேந வாநரமாத்ரேண த்$_3$ருஷ்டா ஸீதா ச ஜாநகீ ॥ (2)

ப்ராஸாதோ$_3$ த$_4$ர்ஷிதஶ்சைத்ய: ப்ரப$_3$லா ராக்ஷஸா ஹதா: ।
ஆகுலா ச புரீ லங்கா ஸர்வா ஹநுமதா க்ருதா ॥ (3)

கிம் கரிஷ்யாமி ப$_4$த்$_3$ரம் வ: கிம் வா யுக்தமநந்தரம் ।
உச்யதாம் ந: ஸமர்த$_2$ம் யத்க்ருதம் ச ஸுக்ருதம் ப$_4$வேத் ॥ (4)

மந்த்ரமூலம் ஹி விஜயம் ப்ராஹுரார்யா மநஸ்விந: ।
தஸ்மாத்$_3$வை ரோசயே மந்த்ரம் ராமம் ப்ரதி மஹாப$_3$லா: ॥ (5)

த்ரிவிதா$_4$: புருஷா லோகே உத்தமாத$_4$மமத்$_4$யமா: ।
தேஷாம் து ஸமவேதாநாம் கு$_3$ணதோ$_3$ஷௌ வதா$_3$ம்யஹம் ॥ (6)

மந்த்ரஸ்த்ரிபி$_4$ர்ஹி ஸம்யுக்த: ஸமர்தைர்மந்த்ரநிர்ணயே ।
மித்ரைர்வாபி ஸமாநார்தை$_2$ர்பா$_3$ந்த$_4$வைரபி வாதி$_4$கை: ॥ (7)

ஸஹிதோ மந்த்ரயித்வா ய: கர்மாரம்பா$_4$ந் ப்ரவர்தயேத் ।
தை$_3$வே ச குருதே யத்நம் தமாஹு: புருஷோத்தமம் ॥ (8)

ஏகோऽர்தம் விம்ருஶேதே$_3$கோ த$_4$ர்மே ப்ரகுருதே மந: ।
ஏக: கார்யாணி குருதே தமாஹுர்மத்$_4$யமம் நரம் ॥ (9)

கு$_3$ணதோ$_3$ஷாவநிஶ்சித்ய த்யக்த்வா த$_4$ர்மவ்யபாஶ்ரயம் ।
கரிஷ்யாமீதி ய: கார்யமுபேக்ஷேத்ஸ நராத$_4$ம: ॥ (10)

பேரறிவாளரான இராமன் இவ்வாறு புலம்பிக் கொண்டிருக்கும்போது, பகல்வேளை முடிந்ததால் ஒளி குறைந்த சூரியன் மறைந்து போனான். இலக்குவனால் தைரியமூட்டப்பட்ட இராமன், கமலக்கண்ணாளான சீதையை நினைத்து வருந்தியபடியே மாலைக் கடன்களைச் செய்து முடித்தார். (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஆறு

இராவணன் மந்திராலோசனை செய்தல்!

அரக்க மன்னன் இராவணன், ஆண்மை மிகுந்த இந்திரனைப் போன்ற அனுமான், இலங்கையில் நடத்திய பயங்கரமான அச்சம் தரும் செயல்களை நினைவிலிருத்தி, வெட்கத்தால் சற்றே தலைகுனிந்தவனாக (அரசவையிலிருந்த) எல்லா அரக்கர்களையும் பார்த்துக் கூறினான்— (1)

''அற்பப் பிராணியான அந்த வானரம், உள்ளே நுழைய முடியாததான இலங்கைக்குள் (தங்கு தடையில்லாமல்) புகுந்து பெரும் நாசத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜனககுமாரியான சீதையை சந்தித்துப் பேசியிருக்கிறது. (2)

அனுமான், வழிபாட்டுத் தலத்தையும் மதிற்சுவர்களையும் தரைமட்டமாக்கி, தலைசிறந்த அரக்கர்களையும் கொன்று போட்டிருக்கிறான். இலங்கை நகரம் முழுவதும் பெருங்கவலைக்கு உள்ளாகியிருக்கிறது. (3)

உங்களுக்கு நலம் உண்டாவதாகுக. அடுத்தபடியாக நான் செய்யவேண்டிய காரியம் என்ன? இந்தச் சூழ்நிலையில் நமக்கு நன்மை தரக்கூடிய எந்தக் காரியத்தைச் செய்வது உசிதமாக இருக்கும் என்பதைக் கூறுங்கள். (4)

மாவீரர்களே! ஒரு காரியத்தின் வெற்றிக்கு, ஆலோசனைதான் ஆணிவேர் என்று கல்வியில் சிறந்த பெரியோர்கள் கூறுகிறார்கள். ஆகவே, இராமன் விஷயமாக நாம் கூட்டு ஆலோசனை செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன். (5)

உலகில் உத்தம–மத்திம–அதமர்கள் என்று மூன்று வகை மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நல்லியல்புகளையும் குறைகளையும் நான் சொல்கிறேன். (6)

அரசு நடவடிக்கைகளில் ஆலோசனை கேட்கத்தக்கவர் மூவர் ஆவார்கள். நண்பர்கள்; (தலைவனின்) சுக–துக்கங்களை சமமாக அனுபவிக்கும் உறவினர்கள்; இவற்றுக்கு மேலாக (தலைவனின்) நன்மையில் மிகவும் ஊக்கமுடையவர்கள். இப்படிப்பட்டவர்களோடு கலந்தாலோசித்து, தெய்வத்தின்பால் நம்பிக்கை வைத்துக் காரியத்தைத் தொடங்குபவனை உத்தமன் (முதல் தரமானவன்) என்று சொல்கிறார்கள். (7,8)

எவன், தான் ஒருவனாகவே தான் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி ஆலோசிக்கிறானோ, எவன் தானே தருமத்தைப் பற்றி முடிவு செய்கிறானோ, எவன், தான் ஒருவனாகவே காரியத்தைச் செய்கிறானோ, அவனை மத்திமன் (இடைத்தரமானவன்) என்கிறார்கள். (9)

எவனொருவன் ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன், அதன் நன்மை–தீமைகளைப் பற்றி ஆராயாமலும் தெய்வபலம் இல்லாமலும், 'நானே செய்யப் போகிறேன்' என்ற முனைப்புடன் தொடங்கி, பின், அதை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறானோ, அவனை அதமன் (கடைத்தரமானவன்) என்று சொல்கிறார்கள். (10)

யதே$_{2}$மே புருஷா நித்யமுத்தமாத$_{4}$மமத்$_{4}$யமா: ।
ஏவம் மந்த்ரா ஹி விக்ஞேயா உத்தமாத$_{4}$மமத்$_{4}$யமா: ॥ (11)

ஐகமத்யமுபாக$_{3}$ம்ய ஶாஸ்த்ரத்$_{3}$ருஷ்டேந சக்ஷுஷா ।
மந்த்ரிணோ யத்ர நிரதாஸ்தமாஹுர்மந்த்ரமுத்தமம் ॥ (12)

ப$_{3}$ஹ்வ்யோऽபி மதயோ பூ$_{4}$த்வா மந்த்ரிணாமர்த$_{2}$நிர்ணயே ।
புநர்யத்ரைகதாம் ப்ராப்தா: ஸ மந்த்ரோ மத்$_{4}$யம: ஸ்ம்ருத: ॥ (13)

அந்யோந்யம் மதிமாஸ்தா$_{2}$ய யத்ர ஸம்ப்ரதிபா$_{4}$ஷ்யதே ।
ந சைகமத்யே ஶ்ரேயோऽஸ்தி மந்த்ர: ஸோऽத$_{4}$ம உச்யதே ॥ (14)

தஸ்மாத்ஸுமந்த்ரிதம் ஸாது$_{4}$ ப$_{4}$வந்தோ மதிஸத்தமா: ।
கார்யம் ஸம்ப்ரதிபத்$_{3}$யந்தாமேதத்க்ருத்யம் மதம் மம ॥ (15)

வாநராணாம் ஹி வீராணாம் ஸஹஸ்ரை: பரிவாரித: ।
ராமோऽப்$_{4}$யேதி புரீம் லங்காமஸ்மாகமுபரோத$_{4}$க: ॥ (16)

தரிஷ்யதி ச ஸுவ்யக்தம் ராக$_{4}$வ: ஸாக$_{3}$ரம் ஸுக$_{2}$ம் ।
தரஸா யுக்தரூபேண ஸாநுஜ: ஸப$_{3}$லாநுக$_{3}$: ॥
ஸமுத்$_{3}$ரமுச்சோ$_{2}$ஷயதி வீர்யேணாந்யத்கரோதி வா ॥ (17)

அஸ்மிந்நேவங்க$_{3}$தே கார்யே விருத்$_{3}$தே$_{4}$ வாநரை: ஸஹ ।
ஹிதம் புரே ச ஸைந்யே ச ஸர்வம் ஸம்மந்த்ரயதாம் மம ॥ (18)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_{3}$ராமாயணே வால்மீகீயே ஆதி$_{3}$காவ்யே
யுத்$_{3}$த$_{4}$காண்டே$_{3}$ ஷஷ்ட$_{2}$: ஸர்க$_{3}$: ॥

ஸப்தம: ஸர்க$_{3}$:

ஸசிவோக்தி:

இத்யுக்தா ராக்ஷஸேந்த்$_{3}$ரேண ராக்ஷஸாஸ்தே மஹாப$_{3}$லா: ।
ஊசு: ப்ராஞ்ஜலய: ஸர்வே ராவணம் ராக்ஷஸேஶ்வரம் ॥ (1)

த்$_{3}$விஷத்பக்ஷமவிக்ஞாய நீதிபா$_{3}$ஹ்யாஸ்த்வபு$_{3}$த்$_{3}$த$_{4}$ய: ।
அவிக்ஞாயாத்மபக்ஷம் ச ராஜாநம் பீ$_{4}$ஷயந்தி ஹி ॥ (2)

ராஜந் பரிக$_{4}$ஶக்த்ய்ருஷ்டிஶூலபட்டஸஸங்குலம் ।
ஸுமஹந்நோ ப$_{3}$லம் கஸ்மாத்$_{3}$விஷாத$_{3}$ம் ப$_{4}$ஜதே ப$_{4}$வாந் ॥ (3)

த்வயா போ$_{4}$க$_{3}$வதீம் க$_{3}$த்வா நிர்ஜிதா: பந்நகா$_{3}$ யுதி$_{4}$ ।
கைலாஸஶிக$_{2}$ராவாஸீ யக்ஷைர்ப$_{3}$ஹுபி$_{4}$ராவ்ருத: ॥
ஸுமஹத்கத$_{3}$நம் க்ருத்வா வஶ்யஸ்தே த$_{4}$நத$_{3}$: க்ருத: ॥ (4)

மனிதர்கள் தலை–இடை–கடை என்று பிரிக்கப்பட்டிருப்பதைப் போலவே, மந்திராலோசனைகளும் தலை–இடை–கடை என்று மூன்று பிரிவுகளாக அறியத்தக்கது. (11)

மந்திராலோசனைகளில் பங்கு கொள்பவர்கள், அறநூல் அறிவு என்ற கண்ணைக் கொண்டு ஆராய்ந்து, ஒரேவிதமான முடிவை எடுக்கிறார்களோ, அதை 'உத்தம மந்திராலோசனை' என்று கூறுகிறார்கள். (12)

மந்திரிகளுடைய சொந்தக் கருத்துக்கள் பலவாறாக இருந்தபோதிலும், ஒரு விஷயத்தை நிர்ணயிப்பதில் ஒரே கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கிறார்களோ, அது 'மத்திமம்' என்று சொல்லப்படுகிறது. (13)

ஆலோசனைக் கூட்டத்தில் அவரவர் கருத்துக்களைப் பிடிவாதமாக வலியுறுத்தி, முடிவு செய்யும் விஷயத்தில் ஒற்றுமை எட்டப்படவில்லையோ, அந்த ஆலோசனை 'அதமம்' என்று பெரியோர்களால் சொல்லப்படுகிறது. (14)

ஆகையால், அறிவில் சிறந்தவர்களான நீங்கள் நன்றாக சிந்தித்து, நன்மை பயக்கும் ஒரு காரியத்தை ஒரே மனதாக ஆமோதித்து எனக்குக் கூறுங்கள். நான் அதன்படியே செய்கிறேன். ஆயிரக்கணக்கான வானரவீரர்களுடன் கூட இராமன், நம்முடைய இலங்கைப் பட்டணத்தை முற்றுகையிடுவதற்காக வரப் போகிறான். (15,16)

இராகவன், தன்னுடைய தம்பியுடனும் படை–பரிவாரங்களுடனும், தக்கதொரு வல்லமையால் பெருங்கடலை எளிதாகக் கடந்து வருவான் என்பது நிச்சயம். கடலை வற்றச் செய்வான். அல்லது, தன்னுடைய பராக்கிரமத்தினால் வேறு ஏதேனும் செய்வான். (17)

வானரர்களுடன் பகைமை ஏற்பட்டுவிட்ட இந்தச் சூழ்நிலையில், நமது பட்டணத்தையும் படைகளையும் காப்பாற்றுவதற்கான எல்லா யோசனைகளையும் எனக்குக் கூறுங்கள்.'' (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஆறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஏழு

அமைச்சர்கள் கூற்று!

இவ்வாறு அரக்க மன்னன் கூறியதைக் கேட்டதும், மகாபலம் பொருந்திய அந்த (அமைச்சர்களான) அரக்கர்கள் எல்லோரும் கைகூப்பிக் கொண்டு, இராவணனிடம் சொன்னார்கள்— (1)

''எதிரிப்படையின் பலத்தை அறியாதவர்களும், தம் சேனையின் ஆற்றலை அறியாதவர்களும், அறநெறி கடந்து செல்பவர்களுமான அறிவீனர்கள், மன்னனைக் கதிகலங்கச் செய்கிறார்கள். (2)

அரசே! பரிகம் (குண்டாந்தடி), வேல், கத்தி, சூலம், பட்டாக்கத்தி முதலிய ஆயுதங்களைக் கொண்ட மிகப்பெரிய சேனை இருக்கும்போது, தேவரீர் ஏன் மனச்சோர்வு அடைகிறீர்? (3)

நாகர்களின் தலைநகரமாகிய போகவதிக்குச் சென்று, அவர்களைப் போரில் வென்றீர்கள். ஏராளமான யட்சர்களால் சூழப்பட்டவனும், கைலாச மலைமுகட்டில் வசித்தவனுமான குபேரன், தங்களுடன் பெரும் போர் செய்து, (வெற்றி காண முடியாமல்) தங்களிடம் பணிந்து போனான். (4)

ஸ மஹேஶ்வரஸக்$_2$யேந ஶ்லாக$_4$மாநஸ்த்வயா விபோ$_4$ ।
நிர்ஜித: ஸமரே ரோஷால்லோகபாலோ மஹாப$_3$ல: ॥ (5)

விநிஹத்ய ச யக்ஷௌகா$_4$ந் விக்ஷோப்$_4$ய ச விக்$_3$ருஹ்ய ச ।
த்வயா கைலாஸஶிக$_2$ராத்$_3$விமாநமித$_3$மாஹ்ருதம் ॥ (6)

மயேந தா$_3$நவேந்த்$_3$ரேண த்வத்$_3$ப$_4$யாத்ஸக்$_2$யமிச்ச$_2$தா ।
து$_3$ஹிதா தவ பா$_4$ர்யார்தே$_2$ த$_3$த்தா ராக்ஷஸபுங்க$_3$வ ॥ (7)

தா$_3$நவேந்த்$_3$ரோ மது$_4$ர்நாம வீர்யோத்ஸிக்தோ து$_3$ராஸத$_3$: ।
விக்$_3$ருஹ்ய வஶமாநீத: கும்பீ$_4$நஸ்யா: ஸுகா$_2$வஹ: ॥ (8)

நிர்ஜிதாஸ்தே மஹாபா$_3$ஹோ நாகா$_3$ க$_3$த்வா ரஸாதலம் ।
வாஸுகிஸ்தக்ஷக: ஶங்கோ$_2$ ஜடீ ச வஶமாஹ்ருதா: ॥ (9)

அக்ஷயா ப$_3$லவந்தஶ்ச ஶூரா லப்$_3$த$_4$வரா: புரா ।
த்வயா ஸம்வத்ஸரம் யுத்$_3$த்$_4$வா ஸமரே தா$_3$நவா விபோ$_4$ ॥
ஸ்வப$_3$லம் ஸமுபாஶ்ரித்ய நீதா வஶமரிந்த$_3$ம ॥ (10)

மாயாஶ்சாதி$_4$க$_3$தாஸ்தத்ர ப$_3$ஹவோ ராக்ஷஸாதி$_4$ப ।
நிர்ஜிதா: ஸமரே ரோஷால்லோகபாலா மஹாப$_3$லா: ॥
தே$_3$வலோகமிதோ க$_3$த்வா ஶக்ரஶ்சாபி விநிர்ஜித: ॥ (11)

ஶூராஶ்ச ப$_3$லவந்தஶ்ச வருணஸ்ய ஸுதா ரணே ।
நிர்ஜிதாஸ்தே மஹாபா$_3$ஹோ சதுர்வித$_4$ப$_3$லாநுகா$_3$: ॥ (12)

ம்ருத்யுத$_3$ண்ட$_3$மஹாக்$_3$ராஹம் ஶால்மலித்$_3$ருமமண்டி$_3$தம் ।
காலபாஶமஹாவீசிம் யமகிங்கரபந்நக$_3$ம் ॥
அவகா$_3$ஹ்ய த்வயா ராஜந் யமலோகமஹார்ணவம் ॥ (13)

ஜயஶ்ச விபுல: ப்ராப்தோ ம்ருத்யுஶ்ச ப்ரதிஷேதி$_4$த: ।
ஸுயுத்$_3$தே$_4$ந ச தே ஸர்வே லோகாஸ்தத்ர ஸுதோஷிதா: ॥ (14)

க்ஷத்ரியைர்ப$_3$ஹுபி$_4$ர்வீரை: ஶக்ரதுல்யபராக்ரமை: ।
ஆஸீத்$_3$வஸுமதீ பூர்ணா மஹத்$_3$பி$_4$ரிவ பாத$_3$பை: ॥ (15)

தேஷாம் வீர்யகு$_3$ணோத்ஸாஹைர்ந ஸமோ ராக$_4$வோ ரணே ।
ப்ரஸஹ்ய தே த்வயா ராஜந் ஹதா: பரமது$_3$ர்ஜயா: ॥ (16)

திஷ்ட$_2$ வா கிம் மஹாராஜ ஶ்ரமேண தவ வாநராந் ।
அயமேகோ மஹாபா$_3$ஹுரிந்த்$_3$ரஜித்க்ஷபயிஷ்யதி ॥ (17)

அநேந ஹி மஹாராஜ மாஹேஶ்வரமநுத்தமம் ।
இஷ்ட்வா யஜ்ஞம் வரோ லப்$_3$தோ$_4$ லோகே பரமது$_3$ர்லப$_4$: ॥ (18)

அண்ணலே! பரமேசுவரனுடனான நட்பினால் தன்னைப் பேராற்றல் படைத்தவன் என்றும், திசைக்காவலன் என்றும் செருக்குடன் இருந்த அவன், பயங்கரமாகப் போர்புரிந்த தங்களால் வெல்லப்பட்டான். (5)

யட்சர்களின் கூட்டங்களை அழித்தும் அடக்கியும் பயந்தோடச் செய்தும், தாங்கள் இந்த (புஷ்பக) விமானத்தைக் கைலாசமலையிலிருந்து பறித்துக் கொண்டு வந்தீர்கள். (6)

அரக்கர் தலைவரே! தானவர்களின் தலைவரான மயன், தங்களிடம் பயங்கொண்டு, தங்களுடன் நட்பை விரும்பி, தன் மகளை (மண்டோதரியை) தங்களுக்கு மனைவியாகக் கொடுத்தார். (7)

தங்கள் சகோதரி கும்பீநஸியின் கணவனும், வீரத்தினால் செருக்கடைந்திருந்தவனும், எவராலும் வெல்ல முடியாதவனுமான மது என்ற தானவ மன்னன், போரில் வெல்லப்பட்டு தங்களுக்குக் குற்றேவல் செய்பவனாக ஆக்கப்பட்டான். (8)

தோள்வலிமிக்கவரே! தாங்கள் ரஸாதலத்திற்குச் சென்று, வாசுகி, தட்சகன், சங்கன், ஜடீ முதலானவர்களுடன் போர் செய்து வெற்றி பெற்று, அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தீர்கள். (9)

எதிரிகளை அடக்குபவரே! கணக்கில்லாதவர்களும், எல்லையற்ற ஆற்றல் படைத்தவர்களும், (தெய்வங்களிடமிருந்து) வரம் பெற்றவர்களுமான தானவர்களுடன், தாங்கள் ஓர் ஆண்டுக்காலம் தன் சொந்த பலத்தால் போர் செய்து, தங்களுக்குக் கீழ்ப்படியச் செய்தீர்கள். (10)

அரக்கர் தலைவரே! அப்போது (அந்த யுத்தத்தின்போது) பலவிதமான மாயக்கலைகளையும் தாங்கள் தெரிந்துகொண்டீர்கள். பேராற்றல் படைத்த லோகபாலர்கள், தாங்கள் ஆக்ரோஷத்துடன் போட்ட சண்டையில் வெல்லப்பட்டார்கள். தாங்கள் தேவலோகம் சென்று இந்திரனையும் வென்றுள்ளீர்கள். (11)

பேராண்மை படைத்தவரே! நால்வகைப் படையோடு கூடியவர்களும் சூரர்களும் பலசாலிகளுமான வருணனின் புதல்வர்கள், யுத்தத்தில் (தங்களால்) வெல்லப்பட்டார்கள். (12)

மன்னரே! ம்ருத்யுதண்டம் (யமதண்டம்) என்னும் பெரிய முதலைகள்; முட்கள் நிறைந்த சால்மலி மரங்கள் போன்ற ஆயுத சமூகம்; காலபாசம் என்னும் பேரலைகள்; யமகிங்கரர்கள் என்னும் சர்ப்பங்கள் – இப்படியான யமனுடைய படை என்னும் பெருங்கடலினுள் தாங்கள் மூழ்கி(ப் போரிட்டு) மகத்தான வெற்றியை அடைந்தீர்கள். யமன் போர்க்களத்தை விட்டே ஓடிவிட்டான்! தங்களின் போர்த்திறனைக் கண்டு, அவ்வுலக மக்கள் பேராச்சரியம் அடைந்தார்கள். (13,14)

முன்னொரு காலத்தில், இந்தப் பூவுலகம் பெரிய மரங்களால் நிறைந்திருப்பதைப் போல, இந்திரனுக்கொப்பான வீரமுடைய அநேக க்ஷத்திரியர்களால் நிரம்பியிருந்தது. (15)

வேந்தரே! வெல்லவே முடியாத அவர்களனைவரையும் தாங்கள் அழித்துக் கொன்றீர்கள். ஆண்மை, போர்க்குணம், ஆர்வம் ஆகிய எதனிலும் போர்க்களத்தில் அவர்களுக்கு ஈடில்லாதவன், இராமன். (அப்படிப்பட்ட சாமான்ய மனிதனைக் கண்டா, தாங்கள் அச்சப்படுகிறீர்கள்?) (16)

மாமன்னரே! தாங்கள் இங்கேயே இருக்கலாம். (போர்க்களத்திற்கு வரவேண்டிய நிலை வரவே வராது.) இந்த இந்திரஜித் ஒருவனே தனியாகப் போரிட்டு, எல்லா வானரர்களையும் அழித்துவிடுவான். தாங்கள் கவலைப்படவே வேண்டாம். (17)

மாமன்னரே! இவன் பரமேசுவரனுக்குத் திருப்தியைக் கொடுக்கும் உன்னதமான ஒரு யாகத்தைச் செய்து, உலகில் பெறற்கரிய வரத்தைப் பெற்றுள்ளான். (18)

ஶக்திதோமரமீநம் ச விநிகீர்ணாந்த்ரஶைவலம் ।
க$_3$ஜகச்ச$_2$பஸம்பா$_3$த$_4$மஶ்வமண்டூ$_3$கஸங்குலம் ॥ (19)

ருத்$_3$ராதி$_3$த்யமஹாக்$_3$ராஹம் மருத்$_3$வஸூமஹோரக$_3$ம் ।
ரதா$_2$ஸ்வக$_3$ஜதோயௌக$_4$ம் பதா$_3$திபுலிநம் மஹத் ॥ (20)

அநேந ஹி ஸமாஸாத்$_3$ய தே$_3$வாநாம் ப$_3$லஸாக$_3$ரம் ।
க்$_3$ருஹிதோ தை$_3$வதபதிர்லங்காம் சாபி ப்ரவேஶித: ॥ (21)

பிதாமஹநியோகா$_3$ச்ச முக்த: ஶம்ப$_3$ரவ்ருத்ரஹா ।
க$_3$தஸ்த்ரிவிஷ்டபம் ராஜந் ஸர்வதே$_3$வநமஸ்க்ருத: ॥ (22)

தமேவ த்வம் மஹாராஜ விஸ்ருஜேந்த்$_3$ரஜிதம் ஸுதம் ।
யாவத்$_3$வாநரஸேநாம் தாம் ஸராமாம் நயதி க்ஷயம் ॥ (23)

ராஜந்நாபத$_3$யுக்தேயமாக$_3$தா ப்ராக்ருதாஜ்ஜநாத் ।
ஹ்ருதி$_3$ நைவ த்வயா கார்யா த்வம் வதி$_4$ஷ்யஸி ராக$_4$வம் ॥ (24)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஸப்தம: ஸர்க$_3$: ॥

அஷ்டம: ஸர்க$_3$:

ப்ரஹஸ்தாதி$_3$வசநம்

ததோ நீலாம்பு$_3$த$_3$நிப$_4$: ப்ரஹஸ்தோ நாம ராக்ஷஸ: ।
அப்$_3$ரவீத்ப்ராஞ்ஜலிர்வாக்யம் ஶூர: ஸேநாபதிஸ்ததா$_3$ ॥ (1)

தே$_3$வதா$_3$நவக$_3$ந்த$_4$ர்வா: பிஶாசபதகோ$_3$ரகா$_3$: ।
ந த்வாம் த$_4$ர்ஷயிதும் ஶக்தா: கிம் புநர்மாநவௌ ரணே ॥ (2)

ஸர்வே ப்ரமத்தா விஶ்வஸ்தா வஞ்சிதா: ஸ்ம ஹநூமதா ।
ந ஹி மே ஜீவதோ க$_3$ச்சே$_2$ஜ்ஜீவந் ஸ வநகோ$_3$சர: ॥ (3)

ஸர்வாம் ஸாக$_3$ரபர்யந்தாம் ஸஶைலவநகாநநாம் ।
கரோம்யவாநராம் பூ$_4$மிமாக்ஞாபயது மாம் ப$_4$வாந் ॥ (4)

ரக்ஷாம் சைவ விதா$_4$ஸ்யாமி வாநராத்$_3$ரஜநீசர ।
நாக$_3$மிஷ்யதி தே து$_3$:க$_2$ம் கிஞ்சிதா$_3$த்மாபராத$_4$ஜம் ॥ (5)

அப்$_3$ரவீத்து ஸுஸம்க்ருத்$_3$தோ$_4$ து$_3$ர்முகோ$_2$ நாம ராக்ஷஸ: ।
இத$_3$ம் ந க்ஷமணீயம் ஹி ஸர்வேஷாம் ந: ப்ரத$_4$ர்ஷணம் ॥ (6)

தேவர்களுடைய பெரும்படை என்னும் மகாசாகரத்தில், ஈட்டி, தோமரம் போன்ற ஆயுதங்களே மீன்கள்; சடலங்களிலிருந்து வெளியே சிதறிக் கிடக்கும் நரம்புகளே பாசிகள்; யானைகளே ஆமைகள்; குதிரைகளே தவளைகள்; ருத்ரர்களும் ஆதித்யர்களுமே பெரும் முதலைகள்; மருத்கணங்களும் அஷ்டவசுக்களும் பேருருவம் படைத்த பாம்புகள்; தேர்கள், குதிரைகள், யானைப்படைகளே நீர்ப்பெருக்கு; காலாட்படையே மணற்குன்றுகள் – இதனுள் புகுந்து, இவன் (இந்திரஜித்) தேவேந்திரனைச் சிறைப்படுத்தியதோடு, அவனை இலங்கைக்கும் கொண்டு வந்தான். (19–21)

எல்லா தேவர்களாலும் வணங்கப்படுகிறவனும், சம்பரன், விருத்திரன் முதலிய அசுரர்களை அழித்தவனுமாகிய அவன் (இந்திரன்), பிரும்மாவின் சொற்படி விடுவிக்கப்பட்டு தேவலோகம் போய்ச் சேர்ந்தான். (22)

ஆகவே, பார்வேந்தே! தங்கள் புதல்வனாகிய இந்திரஜித்தையே, இந்த வேலைக்கும் நியமித்து அனுப்பி வையுங்கள். அவன், இராமன் உட்பட வானரசேனை முழுவதையும் (அவைகள் கடலைத் தாண்டி வருவதற்கு முன்னதாகவே) அழித்துத் தீர்ப்பான். (23)

மன்னரே! பாமரனான மனிதனாலும் வானரங்களாலும் ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தைக் குறித்துத் தாங்கள் கவலைப்படத் தகாது. தங்கள் இதயத்தில் இதற்கு (ஆபத்தைப் பற்றிய கவலைக்கு)க் கொஞ்சமும் இடம் கொடுக்கக் கூடாது. (நிச்சயமாக) தாங்கள் இராகவனை வதம் செய்யப் போகிறீர்கள்.'' (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எட்டு

பிரஹஸ்தன் முதலிய அமைச்சர்கள் கூறியது

பின்னர் நீருண்ட மேகம் போன்ற வண்ணமுடையவனும், வீரனும், படைத்தலைவனுமான பிரஹஸ்தன் (எழுந்து) கைகூப்பிக் கொண்டு பின்வருமாறு கூறினான்— (1)

''(மன்னரே!) தேவ–தானவ–கந்தர்வ–பிசாச–பறவை–சர்ப்பங்கள் எல்லாம் போரில் தங்களை எதிர்த்து நிற்க முடியாது என்னும்போது, (கேவலம்) இரண்டு மானுடர்களால் என்ன செய்துவிட முடியும்? (2)

முன்பு, நாங்கள் எல்லோரும், 'நம்மை எதிர்ப்பவர்கள் யாரும் இல்லை' என்ற உறுதியான எண்ணம் கொண்டு, சற்று கவனக்குறைவாக இருந்ததனால் அனுமான் ஏமாற்றிவிட்டான். நான் உயிருடன் இருக்கும் வரையில், அவன் (மீண்டும் இங்கு வந்தால்) உயிரோடு திரும்பிப் போக மாட்டான். (3)

தேவரீர்! எனக்கு உத்தரவு கொடுத்தால் (நாற்புறமும் உள்ள) சமுத்திர எல்லைக்குட்பட்ட மலை–காடு–சோலைகளில் வானரப்பூண்டே இல்லாமல் செய்து விடுகிறேன். (4)

அரக்கர் மன்னரே! வானரர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றுவேன் (என்று உறுதி கூறுகிறேன்). தாங்கள் செய்துவிட்ட ஏதோ ஒரு சிறு பிழை காரணமாக, தங்களுக்கு மனக்கவலை ஏற்படலாகாது.'' (5)

அதற்குப் பின்னர் துர்முகன் என்ற அரக்கன் மிகவும் கோபங்கொண்டு, (அனுமான் செய்த) இந்த குற்றம் மன்னிக்கத்தக்கதல்ல. ஏனென்றால், இது (இலங்கையில் புகுந்து அழித்தது என்பது) நம் எல்லோரையுமே இழிவுபடுத்தியதாகும். (6)

அயம் பரிப$_4$வோ பூ$_4$ய: புரஸ்யாந்த:புரஸ்ய ச ।
ஸ்ரீமதோ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய வாநரேண ப்ரத$_4$ர்ஷணம் ॥ (7)

அஸ்மிந் முஹூர்தே ஹத்வைகோ நிவர்திஷ்யாமி வாநராந் ।
ப்ரவிஷ்டாந் ஸாக$_3$ரம் பீ$_4$மமம்ப$_3$ரம் வா ரஸாதலம் ॥ (8)

ததோऽப்$_3$ரவீத்ஸுஸம்க்ருத்$_3$தோ$_4$ வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரோ மஹாப$_3$ல: ।
ப்ரக்$_3$ருஹ்ய பரிக$_4$ம் கோ$_4$ரம் மாம்ஸஶோணிதரூஷிதம் ॥ (9)

கிம் வோ ஹநுமதா கார்யம் க்ருபணேந து$_3$ராத்மநா ।
ராமே திஷ்ட$_2$தி து$_3$ர்த$_4$ர்ஷே ஸஸுக்$_3$ரீவே ஸலக்ஷ்மணே ॥ (10)

அத்$_3$ய ராமம் ஸஸுக்$_3$ரீவம் பரிகே$_4$ண ஸலக்ஷ்மணம் ।
ஆக$_3$மிஷ்யாமி ஹத்வைகோ விக்ஷோப்$_4$ய ஹரிவாஹிநீம் ॥ (11)

இத$_3$ம் மமாபரம் வாக்யம் ஶ்ருணு ராஜந் யதீ$_3$ச்ச$_2$ஸி ।
உபாயகுஶலோ ஹ்யேவம் ஜயேச்ச$_2$த்ரூநதந்த்$_3$ரித: ॥ (12)

காமரூபத$_4$ரா: ஶூரா: ஸுபீ$_4$மா பீ$_4$மத$_3$ர்ஶநா: ।
ராக்ஷஸா வை ஸஹஸ்ராணி ராக்ஷஸாதி$_4$ப நிஶ்சிதா: ॥ (13)

காகுத்ஸ்த$_2$முபஸங்க$_3$ம்ய பி$_3$ப்$_4$ரதோ மாநுஷம் வபு: ।
ஸர்வே ஹ்யஸம்ப்$_4$ரமா பூ$_4$த்வா ப்$_3$ருவந்து ரகு$_4$ஸத்தமம் ॥ (14)

ப்ரேஷிதா ப$_4$ரதேந ஸ்ம தவ ப்$_4$ராத்ரா யவீயஸா ।
தவாக$_3$மநமுத்$_3$தி$_3$ஶ்ய க்ருத்யமாத்யயிகம் த்விதி ॥
ஸ ஹி ஸேநாம் ஸமுத்தா$_2$ப்ய க்ஷிப்ரமேவோபயாஸ்யதி ॥ (15)

ததோ வயமிதஸ்தூர்ணம் ஶூலஶக்திக$_3$தா$_3$த$_4$ரா: ।
சாபபா$_3$ணாஸிஹஸ்தாஶ்ச த்வரிதாஸ்தத்ர யாம ஹே ॥ (16)

ஆகாஶே க$_3$ணஶ: ஸ்தி$_2$த்வா ஹத்வா தாம் ஹரிவாஹிநீம் ।
அஶ்மஶஸ்த்ரமஹாவ்ருஷ்ட்யா ப்ராபயாம யமக்ஷயம் ॥ (17)

ஏவம் சேது$_3$பஸர்பேதாமநயம் ராமலக்ஷ்மணௌ ।
அவஶ்யமபநீதேந ஜஹதாமேவ ஜீவிதம் ॥ (18)

கௌம்ப$_4$கர்ணிஸ்ததோ வீரோ நிகும்போ$_4$ நாம வீர்யவாந் ।
அப்$_3$ரவீத்பரமக்ருத்$_3$தோ$_4$ ராவணம் லோகராவணம் ॥ (19)

ஸர்வே ப$_4$வந்தஸ்திஷ்ட$_2$ந்து மஹாராஜேந ஸங்க$_3$தா: ।
அஹமேகோ ஹநிஷ்யாமி ராக$_4$வம் ஸஹலக்ஷ்மணம் ॥
ஸுக்$_3$ரீவம் ச ஹநூமந்தம் ஸர்வாநேவ ச வாநராந் ॥ (20)

ததோ வஜ்ரஹநுர்நாம ராக்ஷஸ: பர்வதோபம: ।
க்ருத்$_3$த$_4$: பரிலிஹந் வக்த்ரம் ஜிஹ்வயா வாக்யமப்$_3$ரவீத் ॥ (21)

நமது பட்டணத்தின் மீதும், அந்தப்புரத்தின் மீதும் வானரன் நடத்திய தாக்குதல், அளப்பரிய பெருமையுடைய அரக்க மன்னருக்கு (தங்களுக்கு) இழைக்கப்பட்ட மாபெரும் அவமானமாகும். (7)

இந்த நாழிகையிலேயே, நான் மட்டும் தனியாகப் புறப்பட்டுச் சென்று, பயங்கரமான கடல், ஆகாயம் அல்லது ரஸாதலத்தில் வானரர்கள் பதுங்கியிருந்தாலும் சரி, அவர்களைக் கொன்றுவிட்டுத் திரும்பி வருகிறேன். (8)

பின்னர், மகாவலிமை படைத்த வஜ்ரதம்ஷ்ட்ரன், மிகவும் கோபத்துடன் மாமிசமும் இரத்தமும் தோய்ந்த பரிகம் என்ற ஆயுதத்தைக் கையில் தாங்கி பின்வருமாறு கூறினான்— (9)

''எதிர்க்க முடியாத இராமன், சுக்ரீவன்–லட்சுமணனோடு வந்திருக்கிறான் என்னும்போது, (பகிரங்கமாக எதிர்க்கும் துணிச்சல் இல்லாததால்) ஒளிந்து, மறைந்து வந்துவிட்டுப் போன அற்பப்பதரான அனுமானைப் பற்றி, நாம் ஏன் பேசிக் கொண்டிருக்க வேண்டும்? (10)

நான் இப்போதே சென்று, சுக்ரீவன்–லட்சுமணன்–இராமனை, நான் ஒருவனாகவே பரிகாயுதத்தால் கொன்று, வானரப்படையை ஒரு கலக்குக் கலக்கிவிட்டுத் திரும்பி வரப்போகிறேன். (11)

மன்னரே! தாங்கள் விரும்பினால் நான் கூறப்போகும் இன்னொரு விஷயத்தையும் செவிசாய்த்து அருளவேண்டும். உபாயங்களில் வல்லவனான ஒருவன் சோம்பலுக்கு இடங்கொடாமல் முயற்சி செய்வானேயாகில், அவனே எதிரிகளை வென்று வெற்றி பெறுவான். (12)

அரக்கர் தலைவனே! பேருடல் படைத்தவர்களும் பயங்கரத் தோற்றமுடையவர்களும் விருப்பம் போல் உருவம் எடுக்கக்கூடியவர்களுமான ஆயிரக்கணக்கான அரக்கர்களைத் தேர்ந்தெடுப்போம். மனித வடிவம் ஏற்று காகுத்தன் அருகில் சென்று, ஒருவர்கூடப் பதற்றமடையாமல் ரகுகுல திலகமான இராமனிடம், 'தங்கள் இளைய சகோதரர் பரதனாலேயே அனுப்பப்பட்டு வந்திருக்கிறோம். தாங்கள் விரைவில் திரும்பி வரவேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அவர் நால்வகைப் படையுடன் விரைவில் வந்து சேருவார்' என்று கூறவேண்டும். (13–15)

அப்போது, சூலம்–வேல்–கதை தாங்கிக் கொண்டும், வில்–அம்பு–கத்தி ஆகியவைகளைக் கையில் ஏந்திக் கொண்டும், இவ்விடத்திலிருந்து புறப்பட்டு மிக்க கவனத்துடன் வெகுவிரைவில் நாங்கள் அங்கு (இராமன் இருக்கும் இடத்திற்குச்) செல்வோம். (16)

ஆகாயத்தில் கூட்டங்கூட்டமாக நின்று, அஸ்திர–சஸ்திரங்களை மாரியாகப் பொழிந்து, வானரப்படையைக் கொன்று, யமலோகத்திற்கு அனுப்பி வைப்போம். (17)

இப்படிச் செய்தால் இராம–லட்சுமணர்கள் நம் சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொள்வார்கள். சூழ்ச்சியிலிருந்து மீளமுடியாமல் நிச்சயமாக உயிரை விட்டு விடுவார்கள்.'' (18)

பின்னர், கும்பகர்ணனின் புதல்வன் நிகும்பன் என்ற மாவீரன் மிகவும் சினங்கொண்டு, உலகத்தைக் கதறச் செய்யும் இராவணனைப் பார்த்துக் கூறினான்— (19)

''மாமன்னருடன்கூட நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள். இராம–லட்சுமண–சுக்ரீவ–அனுமானையும், மற்ற அனைத்து வானரர்களையும் நான் ஒருவனாகவே கொல்லப் போகிறேன்.'' (20)

பின்னர், மலை போன்ற சரீரம் படைத்த வஜ்ரஹனு என்ற அரக்கன், கோபத்துடன் உதடுகளை நாக்கினால் தடவிக் கொண்டு பின்வருமாறு கூறினான்— (21)

ஸ்வைரம் குர்வந்து கார்யாணி ப$_4$வந்தோ விக$_3$தஜ்வரா: ।
ஏகோ஽ஹம் ப$_4$க்ஷயிஷ்யாமி தாந் ஸர்வாந் ஹரியூத$_2$பாந் ॥ (22)

ஸ்வஸ்த$_2$ா: க்ரீட$_3$ந்து நிஶ்சிந்தா: பிப$_3$ந்தோ மது$_4$ வாருணீம் ।
அஹமேகோ வதி$_4$ஷ்யாமி ஸுக்$_3$ரீவம் ஸஹலக்ஷ்மணம் ॥
அங்க$_3$த$_3$ம் ச ஹநூமந்தம் ராமம் ச ரணகுஞ்ஜரம் ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டம: ஸர்க$_3$: ॥

நவம: ஸர்க$_3$:
விபீ$_4$ஷணஸமாலோசநம்

ததோ நிகும்பே$_4$ா ரப$_4$ஸ: ஸூர்யஶத்ருர்மஹாப$_3$ல: ।
ஸுப்தக்$_4$நோ யக்ஞஹா ரக்ஷோ மஹாபார்ஶ்வோ மஹோத$_3$ர: ॥ (1)

அக்$_3$நிகேதுஶ்ச து$_3$ர்த$_4$ர்ஷோ ரஶ்மிகேதுஶ்ச வீர்யவாந் ।
இந்த்$_3$ரஜிச்ச மஹாதேஜா ப$_3$லவாந் ராவணாத்மஜ: ॥ (2)

ப்ரஹஸ்தோ஽த$_2$ விரூபாக்ஷோ வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரோ மஹாப$_3$ல: ।
தூ$_4$ம்ராக்ஷஶ்சாதிகாயஶ்ச து$_3$ர்முக$_2$ஶ்சைவ ராக்ஷஸ: ॥ (3)

பரிக$_4$ாந்பட்டஸாந்ப்ராஸாஞ்ஶக்திஶூலபரஶ்வத$_4$ாந் ।
சாபாநி ச ஸப$_3$ாணாநி க$_2$ட்$_3$க$_3$ாம்ஶ்ச விபுலாஞ்ஶிதாந் ॥ (4)

ப்ரக்$_3$ருஹ்ய பரமக்ருத்$_3$த$_4$ா: ஸமுத்பத்ய ச ராக்ஷஸா: ।
அப்$_3$ருவந் ராவணம் ஸர்வே ப்ரதீ$_3$ப்தா இவ தேஜஸா ॥ (5)

அத்$_3$ய ராமம் வதி$_4$ஷ்யாம: ஸுக்$_3$ரீவம் ச ஸலக்ஷ்மணம் ।
க்ருபணம் ச ஹநூமந்தம் லங்கா யேந ப்ரத$_4$ர்ஷிதா ॥ (6)

தாந்க்$_3$ருஹீதாயுத$_4$ாந்ஸர்வாந்வாரயித்வா விபீ$_4$ஷண: ।
அப்$_3$ரவீத்ப்ராஞ்ஜலிர்வாக்யம் புந: ப்ரத்யுபவேஶ்ய தாந் ॥ (7)

அப்யுபாயைஸ்த்ரிபி$_4$ஸ்தாத யோ஽ர்த$_2$: ப்ராப்தும் ந ஶக்யதே ।
தஸ்ய விக்ரமகாலாந்ஸ்தாந் யுக்தாநாஹுர்மநீஷிண: ॥ (8)

ப்ரமத்தேஷ்வபி$_4$யுக்தேஷு தை$_3$வேந ப்ரஹ்ருதேஷு ச ।
விக்ரமாஸ்தாத ஸித்$_4$யந்தி பரீக்ஷ்ய விதி$_4$நா க்ருதா: ॥ (9)

அப்ரமத்தம் கத$_2$ம் தம் து விஜிகீ$_3$ஷும் ப$_3$லே ஸ்தி$_2$தம் ।
ஜிதரோஷம் து$_3$ராத$_4$ர்ஷம் ப்ரத$_4$ர்ஷயிதுமிச்ச$_2$த$_2$ ॥ (10)

''நீங்கள் எல்லோரும் கவலையை விட்டுவிட்டு, தத்தம் விருப்பப்படி உங்கள் காரியங்களைச் செய்து கொண்டிருங்கள். வானரத் தலைவர்களையும் மற்ற எல்லோரையும் நான் ஒருவனே புசித்துவிடப் போகிறேன். (22)

நீங்கள் எல்லோரும் கவலையில்லாமல் விளையாடுங்கள். வாருணி என்ற மதுவைப் பருகுங்கள். போர்க்களத்தில் யானை போல் மதர்த்து நிற்கும் இராமன் மற்றும் சுக்ரீவ–லட்சுமண–அங்கத–அனுமானை, நான் ஒருவனாகவே கொல்லப் போகிறேன்.'' (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஒன்பது

விபீஷணன் கூறியது

பின்னர் நிகும்பன், ரபஸன், மகாபலசாலியான சூர்யசத்ரு, சுப்தக்னன், யக்ஞஹா (வேள்வியைத் தடுத்து அழிப்பவன்), அரக்கன் மகாபார்சுவன், மகோதரன், வெல்லற்கரிய அக்னிகேது, வீரம் மிகுந்த ரச்மிகேது, இராவணனின் மைந்தனும் மகாபலசாலியும் பராக்கிரமசாலியுமான இந்திரஜித், பிரஹஸ்தன், விரூபாக்ஷன், உடலாற்றல் மிக்க வஜ்ரதம்ஷ்ட்ரன், தூம்ராக்ஷன், அதிகாயன், அரக்கன் துர்முகன் ஆகிய அனைவரும் குண்டாந்தடி, பட்டாக்கத்தி, இரும்பு ஆணிகள் நிரம்பிய பிராஸம், வேல், சூலம், கோடாரி, அம்புகள் மற்றும் வில், நீண்ட கூர்மையான கத்திகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, மிகவும் கோபத்துடன் துள்ளிக் குதித்து, பராக்கிரமத்தினால் பற்றி எரிபவர்களாக, இராவணனைப் பார்த்துக் கூறினார்கள்— (1–5)

''இப்போதே சென்று இராம–லட்சுமண–சுக்ரீவர்களையும், இலங்கையை அழித்த அற்ப ஜந்துவான அனுமானையும் கொல்லப் போகிறோம்.'' (6)

கையில் ஆயுதங்களுடன் எழுந்து நின்ற அவர்கள் எல்லோரையும் இடைமறித்து, அவர்களைத் தத்தம் ஆசனங்களில் அமரும்படி கேட்டுக் கொண்டு, கைகளைக் கூப்பியவாறு விபீஷணன் தன் ஆலோசனையைக் கூறத் தொடங்கினான்— (7)

''ஐயனே! நாம் விரும்பும் எந்தவொரு காரியத்தில் வெற்றி பெறுவதற்கு, (நால்வகை உபாயங்களில்) முதல் மூன்று உபாயங்களால் (சாம–தான–பேதம்) சாத்தியப்படாமல் போகிறதோ, அப்போதுதான் தண்டம் (போரிடுதல்) என்ற உபாயத்தை மேற்கொள்வதற்கு உரிய காலம் என்று நீதிநூல் வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள். (8)

அண்ணா! கவனக்குறைவாக இருப்பவன், உலகப் பற்றில்லாதவன், துர்ப்பாக்கியத்தால் தாக்கப்பட்டுத் தள்ளாடிக் கொண்டிருப்பவன் – இவர்கள் விஷயத்தில்தான், அரசநீதிப்படி ஆழமாக சிந்தித்துப் பார்த்து எடுக்கப்பட்ட செயல்கள் வெற்றி அடைகின்றன. (9)

அவரோ (இராமனோ) மிகுந்த கவனத்துடன் இருக்கிறார்; சொந்த ஆற்றலும் ஏராளமான படை பலமும் உள்ளவராக இருக்கிறார்; தேவைப்படாத சமயங்களில் கோபப்படாதவராக இருக்கிறார்; எதிர்த்து நிற்க முடியாத பராக்கிரமத்துடன் விளங்குகிறார். இப்படிப்பட்டவரை எதிர்த்து நின்று வெற்றி பெற விரும்புகிறீர்களே! (10)

ஸமுத்$_3$ரம் லங்க$_4$யித்வா து கே$_4$ரம் நத$_3$நதீ$_3$பதிம் ।
க$_3$தம் ஹநுமதோ லோகே கோ விந்த்$_3$யாத்தர்கயேத வா ॥ (11)

ப$_3$லாந்யபரிமேயாணி வீர்யாணி ச நிஶாசரா: ।
பரேஷாம் ஸஹஸாவக்ஞா ந கர்தவ்யா கத$_2$ஞ்சந ॥ (12)

கிம் ச ராக்ஷஸராஜஸ்ய ராமேணாபக்ருதம் புரா ।
ஆஜஹார ஜநஸ்தா$_2$நாத்$_3$யஸ்ய பா$_4$ர்யாம் யஶஸ்விந: ॥ (13)

க$_2$ரோ யத்$_3$யதிவ்ருத்தஸ்து ராமேண நிஹதோ ரணே ।
அவஶ்யம் ப்ராணிநாம் ப்ராணா ரக்ஷிதவ்யா யதா$_2$ப$_3$லம் ॥ (14)

அயஶஸ்யமநாயுஷ்யம் பரதா$_3$ராபி$_4$மர்ஶநம் ।
அர்த$_2$க்ஷயகரம் கே$_4$ரம் பாபஸ்ய ச புநர்ப$_4$வம் ॥ (15)

ஏதந்நிமித்தம் வைதே$_3$ஹீ ப$_4$யம் ந: ஸுமஹத்$_3$ப$_4$வேத் ।
ஆஹ்ருதா ஸா பரித்யாஜ்யா கலஹார்தே$_2$ க்ருதேந கிம் ॥ (16)

ந ந: க்ஷமம் வீர்யவதா தேந த$_4$ர்மாநுவர்திநா ।
வைரம் நிரர்த$_2$கம் கர்தும் தீ$_3$யதாமஸ்ய மைதி$_2$லீ ॥ (17)

யாவந்ந ஸக$_3$ஜாம் ஸாஶ்வாம் ப$_3$ஹுரத்நஸமாகுலாம் ।
புரீம் தா$_3$ரயதே பா$_3$ணைர்தீ$_3$யதாமஸ்ய மைதி$_2$லீ ॥ (18)

யாவத்ஸுகே$_4$ரா மஹதீ து$_3$ர்த$_4$ர்ஷா ஹரிவாஹிநீ ।
நாவஸ்கந்த$_3$தி நோ லங்காம் தீ$_3$யதாமஸ்ய மைதி$_2$லீ ॥ (19)

விநஶ்யேத்$_3$தி$_4$ புரீ லங்கா ஶூரா: ஸர்வே ச ராக்ஷஸா: ।
ராமஸ்ய த$_3$யிதா பத்நீ ஸ்வயம் யதி$_3$ ந தீ$_3$யதே ॥ (20)

ப்ரஸாத$_3$யே த்வாம் ப$_3$ந்து$_4$த்வாத்குருஷ்வ வசநம் மம ।
ஹிதம் தத்$_2$யமஹம் ப்$_3$ரூமி தீ$_3$யதாமஸ்ய மைதி$_2$லீ ॥ (21)

புரா ஶரத்ஸூர்யமரீசிஸந்நிபா$_4$ந்–
நவாந் ஸுபுங்கா$_2$ந் ஸுத்$_3$ருடா$_4$ந்ந்ருபாத்மஜ: ।
ஸ்ருஜத்யமோகா$_4$ந் விஶிகா$_2$ந் வதா$_4$ய தே
ப்ரதீ$_3$யதாம் தா$_3$ஶரதா$_2$ய மைதி$_2$லீ ॥ (22)

த்யஜஸ்வ கோபம் ஸுக$_2$த$_4$ர்மநாஶநம்
ப$_4$ஜஸ்வ த$_4$ர்மம் ரதிகீர்திவர்த$_4$நம் ।
ப்ரஸீத$_3$ ஜீவேம ஸபுத்ரபா$_3$ந்த$_4$வா:
ப்ரதீ$_3$யதாம் தா$_3$ஶரதா$_2$ய மைதி$_2$லீ ॥ (23)

ஆறுகளின் தலைவனான மிகவும் பயங்கரமான பெருங்கடலை, ஒரே தாவலில் தாண்டிய அனுமானின் செயல்பாடுகளை, இவ்வுலகில் எவனால் அறியமுடியும்? அனுமானம் செய்யத்தான் முடியுமா? அரக்கர்களே! எதிரியினுடைய வீரமும் படைகளும் எல்லையில்லாதவை. எனவே, அவசரப்பட்டு (எதிரியை) அலட்சியம் செய்துவிடலாகாது. (11,12)

எவருடைய பத்தினியை ஜனஸ்தானத்திலிருந்து இவர் அபகரித்துக் கொண்டு வந்தாரோ, அந்த இராமன், அரக்க மன்னருக்கு முன்பு எப்போதாவது குற்றம் செய்ததுண்டா? (13)

'கரன் கொல்லப்பட்டானே?' என்றால் அவன், எல்லைமீறி இராமனிடம் போர்புரிவதற்குத் தானாகவே வந்தான். (தன்னைக் கொல்ல வந்தவனோடு எப்படிப் போர் புரியாமல் இருக்க முடியும்?) தம்மால் இயன்றவரை உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வது பிராணிகளின் முக்கிய கடமை. (இராமன், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்கொண்ட போரில், கரன் மாய்க்கப்பட்டான் என்றால், அது இராமனின் குற்றமா?) (14)

பிறர் மனைவியை (கெட்ட நோக்கத்துடன்) கண்ணெடுத்துப் பார்ப்பது என்பது புகழுக்குக் களங்கம் விளைவிப்பது; ஆயுளைக் குறைப்பது; நால்வகை புருஷார்த்தங்களையும் அழிக்கக் கூடியது; பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது; பாவம் செய்வதை மேன்மேலும் தூண்டி விடுவது. (15)

இதன் நிமித்தமாக (கரன் வதம் செய்யப்பட்டதற்குப் பழி தீர்த்துக்கொள்வதற்காக) சீதை கவர்ந்து வரப்பட்டார் என்றால் (கரனின் அழிவு, இராமன் செய்த குற்றம் அல்ல – என்று நிச்சயமாகிவிட்டதால்), அவர் திருப்பிக் கொண்டுபோய் விடப்பட வேண்டும். (இல்லையென்றால் அவர் காரணமாக) நமக்குப் பேராபத்து ஏற்படும். இந்த விஷயத்தில் சண்டை–சச்சரவுகளால் ஆகப்போவதென்ன? (16)

அறநெறி வழுவாதவரும், பேராற்றல் படைத்தவருமான அவருடன் பகைமை பாராட்டுவது தகாது. இப்போது ஏற்பட்டுள்ள விரோதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு ஒரே வழி, மைதிலியை அவரிடம் சேர்ப்பித்து விடுவதுதான். (17)

யானை–குதிரைகள் நிரம்பியதும், ஏராளமான இரத்தினங்கள் குவிக்கப்பட்டிருப்பதுமான இந்தப் பட்டணத்தை, (இராம–லட்சுமணர்கள்) பாணங்களால் பிளந்து கட்டுவதற்கு முன்னரே, சீதை அவரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். மிகவும் பயங்கரமான, எல்லையில்லாத, வெல்ல முடியாத வானரப்படை இலங்கை நகரை முற்றுகையிடுவதற்கு முன்னதாக, மைதிலியை அவரிடம் சேர்ப்பித்து விடுங்கள். (18,19)

இராமனுடைய அன்புக்குப் பாத்திரமான அவருடைய பத்தினியை, தாங்களாகவே அவரிடம் சேர்ப்பிக்கவில்லையென்றால், சூரர்களான எல்லா அரக்கர்களும் இலங்கைப் பட்டணமும் அழிந்துபோகும் என்பது உறுதி. என்னுடைய தமையனார் என்ற பாச உணர்வினால் தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என் சொற்களைத் தாங்கள் ஏற்கவேண்டும். நமக்கு நன்மை விளைவிக்கும் உண்மையைத்தான் நான் கூறுகிறேன். மைதிலியை அவரிடம் சேர்ப்பித்துவிடுங்கள். (20,21)

மன்னர் மைந்தனான ஸ்ரீராமன் தங்களை வதம் செய்வதற்காக, சரத்கால சூரியனின் கதிர்களுக்கொப்பனவைகளும், தீட்டப்பட்ட கூர்மையான முனைகளையுடையவைகளும், மிகவும் உறுதியானவைகளும் (தங்குதடையில்லாதவைகளும்), வீண் போகாதவைகளுமான பாணங்களைப் பொழிவதற்கு முன்னர், மைதிலியை தசரதகுமாரரிடம் ஒப்படைத்து விடுங்கள். (22)

அண்ணலே! கோபத்தை விடுங்கள். ஏனென்றால், அது சுகத்தையும் தருமத்தையும் அழிக்கக்கூடியது. சுக–சௌக்கியத்திற்கும் நற்புகழுக்கும் காரணமான அறநெறியை கைக்கொள்ளுங்கள். நாம் எல்லோரும் நமது மக்கள்–உறவினர்களோடு உயிரோடு இருப்பதற்குத் திருவுள்ளம் கொள்ளுங்கள். (அதனால், சொல்கிறேன்.) தசரதகுமாரரிடம் சீதையை ஒப்படைத்து விடுங்கள்.'' (23)

விபீ$_4$ஷணவச: ஶ்ருத்வா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
விஸர்ஜயித்வா தாந் ஸர்வாந் ப்ரவிவேஶ ஸ்வகம் க்$_3$ருஹம் ॥ (24)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ நவம: ஸர்க$_3$: ॥

த$_3$ஶம: ஸர்க$_3$:
விபீ$_4$ஷணபத்$_2$யோபதே$_3$ஶ:

தத: ப்ரத்யுஷஸி ப்ராப்தே ப்ராப்தத$_4$ர்மார்த$_2$நிஶ்சய: ।
ராக்ஷஸாதி$_4$பதேர்வேஶ்ம பீ$_4$மகர்மா விபீ$_4$ஷண: ॥ (1)

ஶைலாக்$_3$ரசயஸங்காஶம் சைலஶ்ருங்க$_3$மிவோந்நதம் ।
ஸுவிப$_4$க்தமஹாகக்ஷ்யம் மஹாஜநபரிக்$_3$ரஹம் ॥ (2)

மதிமத்$_3$பி$_4$ர்மஹாமாத்ரைரநுரக்தைரதி$_4$ஷ்டி$_2$தம் ।
ராக்ஷஸைஶ்சாப்தபர்யாப்தை: ஸர்வத: பரிரக்ஷிதம் ॥ (3)

மத்தமாதங்க$_3$நி:ஶ்வாஸைர்வ்யாகுலீக்ருதமாருதம் ।
ஶங்க$_2$கோ$_4$ஷமஹாகோ$_4$ஷம் தூர்யநாதா$_3$நுநாதி$_3$தம் ॥ (4)

ப்ரமதா$_3$ஜநஸம்பா$_3$த$_4$ம் ப்ரஜல்பிதமஹாபத$_2$ம் ।
தப்தகாஞ்சநநிர்யூஹம் பூ$_4$ஷணோத்தமபூ$_4$ஷிதம் ॥ (5)

க$_3$ந்த$_4$ர்வாணாமிவாவாஸமாலயம் மருதாமிவ ।
ரத்நஸஞ்சயஸம்பா$_3$த$_4$ம் ப$_4$வநம் போ$_4$கி$_3$நாமிவ ॥ (6)

தம் மஹாப்$_4$ரமிவாதி$_3$த்யஸ்தேஜோவிஸ்த்ருதரஶ்மிமாந் ।
அக்$_3$ரஜஸ்யாலயம் வீர: ப்ரவிவேஶ மஹாத்$_3$யுதி: ॥ (7)

புண்யாந் புண்யாஹகோ$_4$ஷாம்ஶ்ச வேத$_3$வித்$_3$பி$_4$ருதா$_3$ஹ்ருதாந் ।
ஶுஶ்ராவ ஸுமஹாதேஜா ப்$_4$ராதுர்விஜயஸம்ஶ்ரிதாந் ॥ (8)

பூஜிதாந் த$_3$தி$_4$பாத்ரைஶ்ச ஸர்பிர்பி$_4$: ஸுமநோऽக்ஷதை: ।
மந்த்ரவேத$_3$விதோ$_3$ விப்ராந் த$_3$த$_3$ர்ஶ ஸுமஹாப$_3$ல: ॥ (9)

ஸ பூஜ்யமாநோ ரக்ஷோபி$_4$ர்தீ$_3$ப்யமாந: ஸ்வதேஜஸா ।
ஆஸநஸ்த$_2$ம் மஹாபா$_3$ஹுர்வவந்தே$_3$ த$_4$நதா$_3$நுஜம் ॥ (10)

ஸ ராஜத்$_3$ருஷ்டிஸம்பந்நமாஸநம் ஹேமபூ$_4$ஷிதம் ।
ஜகா$_3$ம ஸமுதா$_3$சாரம் ப்ரயுஜ்யாசாரகோவித$_3$: ॥ (11)

அரக்கர் தலைவனான இராவணன், விபீஷணனுடைய சொற்களைக் கேட்டபின், அவர்கள் எல்லோருக்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தன் மாளிகைக்குள் புகுந்தான். (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்து

விபீஷணனின் நல்லுபதேசம்

மறுநாள் காலை பொழுது விடிந்ததும், தருமம்–அர்த்தம் முதலிய புருஷார்த்தங்களில் நிச்சயமான புத்தியுடையவனும் அருஞ்செயல்கள் ஆற்ற வல்லவனும் வீரனுமான விபீஷணன், தன்னுடைய ஒளிக்கதிர்களின் வீச்சினால் எல்லா இடங்களிலும் நுழைந்து ஒளிபரப்பும் சூரியன், பெரிய மேகக்கூட்டத்திற்குள் நுழைவதைப் போல, (தன்னுடைய தேஜஸ் எந்தவிதத்திலும் குறையாதபடி,) அரக்க மன்னனான தமையனாரின் மாளிகைக்குள் சென்றான். அந்த மாளிகை, பல சிகரங்களைக் கொண்ட மலைபோல் (விஸ்தாரமாக) இருந்தது. மலைமுகட்டைப் போல் மிகவும் உயரமாக விளங்கியது. நன்றாக வகுத்துக் கட்டப்பட்ட உள்கட்டுகளை உடையதாக அமைக்கப்பட்டிருந்தது. சான்றோர்கள் அடிக்கடி அதனை நாடி வந்து கொண்டிருந்தார்கள். அறிவிற்சிறந்தவர்களும் மன்னரிடம் மனப்பூர்வமான அன்பு கொண்டவர்களுமான மகாமந்திரிகள் அங்கே இருந்தார்கள். நம்பிக்கையானவர்களும் செயல்திறன் உடையவர்களுமான அரக்கர்களால் எல்லாப் பக்கங்களிலும் நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது. மதங்கொண்ட யானைகளின் மூச்சுக்காற்றினால் அவ்விடத்தில் காற்று கலங்கிப் போயிருந்தது (காற்றில் மதநீர் வாசனை கலந்து வந்தது). சங்குகளின் பேரொலியால் மகாசப்தம் எழும்பிக் கொண்டிருந்தது. பல்வகையான இசைக்கருவிகளின் இனிய நாதம் அங்கே எதிரொலித்துக் கொண்டிருந்தது. அழகிய பெண்டிர்கள் கூட்டங்கூட்டமாக இருந்தார்கள். ராஜபாட்டைகளில் மக்கள் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே சென்றார்கள். மாளிகையின் கதவுகள் உருக்கி வார்த்த தங்கத்தினால் செய்யப்பட்டிருந்தன. (அந்த மாளிகை) சிறந்த அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கந்தர்வர்களின் இருப்பிடம் போலவும், தேவதைகளின் வசிப்பிடம் போலவும் செல்வச் செழிப்புடனும் பேரழகுடனும் விளங்கிற்று. சர்ப்பராஜன்களின் பெருமாளிகைபோல் கணக்கிட முடியாத இரத்தினங்களால் இழைக்கப்பட்டிருந்தது. (1–7)

எல்லையற்ற ஆன்மஒளி படைத்த அவர், அவ்விடத்தில் தன் சகோதரனுக்கு எப்போதும் எல்லாக் காரியங்களிலும் வெற்றி ஏற்படவேண்டும் என்ற நோக்கத்துடன், வேதவித்தகர்கள் ஓதிவந்த மங்களம் தரவல்ல புனிதமான வேதங்களைக் கேட்டான். (8)

மேலும், கையில் தயிர்–நெய் நிரம்பிய பாத்திரங்களை, மலர்–அட்சதையால் பூசனை செய்து வைத்துக் கொண்டு, வேதமோதிய அந்தணர்கள் வேதபாராயணம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தான். தன் உள்ளொளியால் பிரகாசிப்பவனும் அரக்கர்களால் வணங்கப்பட்டவனும் தோளாண்மை மிக்கவனுமான அவன் (வீபீஷணன்), ஆசனத்தில் வீற்றிருந்த குபேரனின் தம்பியான இராவணனை வணங்கினான். (9,10)

மன்னருக்குச் செலுத்த வேண்டிய வழிவழியாகப் பின்பற்றப்படும் மரியாதை முறைகள் அறிந்த அவன், அவ்வாறே செய்துவிட்டு (வெல்க, மாமன்னர்! போன்ற வாழ்த்துச் சொற்களைக் கூறிவிட்டு), மன்னனின் கண்ஜாடையால் காட்டப்பட்ட பொற்றவிசில் (இருக்கையில்) சென்றமர்ந்தான். (11)

ஸ ராவணம் மஹாத்மாநம் விஜநே மந்த்ரிஸந்நிதௌ ।
உவாச ஹிதமத்யர்த₂ம் வசநம் ஹேதுநிஸ்சிதம் ॥ (12)

ப்ரஸாத்₃ய ப்₄ராதரம் ஜ்யேஷ்ட₂ம் ஸாந்த்வேநோபஸ்தி₂தக்ரம: ।
தே₃ஶகாலார்த₂ஸம்வாதீ₃ த்₃ருஷ்டலோகபராவர: ॥ (13)

யதா₃ ப்ரப்₄ருதி வைதே₃ஹீ ஸம்ப்ராப்தேமாம் புரீம் தவ ।
ததா₃ப்ரப்₄ருதி த்₃ருஶ்யந்தே நிமித்தாந்யஶுபா₄நி ந: ॥ (14)

ஸஸ்பு₂லிங்க₃: ஸதூ₄மார்சி: ஸதூ₄மகலுஷோத₃ய: ।
மந்த்ரஸந்து₄க்ஷிதோऽப்யக்₃நிர்ந ஸம்யக₃பி₄வர்த₄தே ॥ (15)

அக்₃நிஷ்டே₂ஷ்வக்₃நிஶாலாஸு ததா₂ ப்₃ரஹ்மஸ்த₂லீஷு ச ।
ஸரீஸ்ருபாணி த்₃ருஶ்யந்தே ஹவ்யேஷு ச பிபீலிகா: ॥ (16)

க₃வாம் பயாம்ஸி ஸ்கந்நாநி விமதா₃ வீரகுஞ்ஜரா: ।
தீ₃நமஶ்வா: ப்ரஹேஷந்தே ந ச க்₃ராஸாபி₄நந்தி₃ந: ॥ (17)

க₂ரோஷ்ட்ராஶ்வதரா ராஜந் பி₄ந்நரோமா: ஸ்ரவந்தி ந: ।
ந ஸ்வபா₄வேऽவதிஷ்ட₂ந்தே விதா₄நைரபி சிந்திதா: ॥ (18)

வாயஸா: ஸங்க₄ஶ: க்ரூரா வ்யாஹரந்தி ஸமந்தத: ।
ஸமவேதாஶ்ச த்₃ருஶ்யந்தே விமாநாக்₃ரேஷு ஸங்க₄ஶ: ॥ (19)

க்₃ருத்₄ராஶ்ச பரிலீயந்தே புரீமுபரி பிண்டி₃தா: ।
உபபந்நாஶ்ச ஸந்த்₄யே த்₃வே வ்யாஹரந்த்யஶிவம் ஶிவா: ॥ (20)

க்ரவ்யாதா₃நாம் ம்ருகா₃ணாம் ச புரத்₃வாரேஷு ஸங்க₄ஶ: ।
ஶ்ரூயந்தே விபுலா கோ₄ஷா: ஸவிஸ்பூ₂ர்ஜிதநி:ஸ்வநா: ॥ (21)

ததே₃வம் ப்ரஸ்துதே கார்யே ப்ராயஶ்சித்தமித₃ம் க்ஷமம் ।
ரோசதே யதி₃ வைதே₃ஹீ ராக₄வாய ப்ரதீ₃யதாம் ॥ (22)

இத₃ம் ச யதி₃ வா மோஹால்லோபா₄த்₃வா வ்யாஹ்ருதம் மயா ।
தத்ராபி ச மஹாராஜ ந தோ₃ஷம் கர்துமர்ஹஸி ॥ (23)

அயம் ச தோ₃ஷ: ஸர்வஸ்ய ஜநஸ்யாஸ்யோபலக்ஷ்யதே ।
ரக்ஷஸாம் ராக்ஷஸீநாம் ச புரஸ்யாந்த:புரஸ்ய ச ॥ (24)

ப்ராபணே சாஸ்ய மந்த்ரஸ்ய நிவ்ருத்தா: ஸர்வமந்த்ரிண: ।
அவஶ்யம் ச மயா வாச்யம் யத்₃த்₃ருஷ்டமபி வா ஶ்ருதம் ॥
ஸம்ப்ரதா₄ர்ய யதா₂ந்யாயம் தத்₃ப₄வாந் கர்துமர்ஹதி ॥ (25)

இடம், காலம், வினைப்பயன் ஆகியவைகளை நன்றாக அறிந்த, உலக நடைமுறை நன்மரபுகளை (தர்மாதர்மங்களை)ச் செவ்வனே அறிந்த அவன், இனிய சொற்களால் பேராற்றலுடையவனும் தமையனாருமான இராவணனை மனமகிழச் செய்து, பொதுமக்கள் அவ்விடத்திலிருந்து சென்றதும், அமைச்சர்கள் மட்டும் இருக்கும்போது, காரண–காரியங்களை ஆலோசித்து முடிவு செய்யப்பட்டதும் மிகவும் நன்மையைத் தருவதுமான சொற்களைக் கூறினான்— (12,13)

(விபீஷணன் கூறுகிறான்—) ''தங்கள் பட்டணத்திற்குள் எப்போது வைதேகி நுழைந்தாரோ (கொண்டு வந்து சேர்க்கப்பட்டாரோ), அதுமுதல் நமக்குத் தீங்கை அறிவிக்கும் அபசகுனங்கள் காணப்படுகின்றன. (14)

உரிய மந்திரங்களைக் கூறி ஹவிஸ் (நெய், அன்னம், சமித்து) அளிக்கப்பட்டாலும், ஹோம அக்னி நன்றாகக் கொழுந்துவிட்டு எரிவதில்லை; ஹோம குண்டத்திலிருந்து நெருப்புப் பொறிகள் பறக்கின்றன; நெருப்புடன் புகையும் கலந்தே காணப்படுகிறது; (அரணிக் கட்டைகளைக் கடைந்து,) மந்திர ஜபத்தால் அக்னியைத் தூண்டியும் தீ வளர்வதில்லை. (15)

வேள்விச் சாலைகளிலும், வேதபாராயணம் நடைபெறும் இடங்களிலும், சமையற்கட்டுகளிலும் பாம்புகள் காணப்படுகின்றன; (வேள்விக் குண்டத்தில் போடுவதற்காக, சுத்தம் செய்து வைக்கப்பட்ட நெய், அன்னம் போன்ற) அவிப் பொருள்களில் எறும்புகள் மொய்க்கின்றன. (16)

பசுக்கள், பால் மரத்துப் போய்விட்டன; வீரம் மிகுந்த யானைகள் மதநீர் சொரிவதை நிறுத்திவிட்டன; தீனியை ஏற்பதில் விருப்பமில்லாமல் (உடல் மெலிந்த) குதிரைகள் சத்தமில்லாமல் கனைக்கின்றன. (17)

மன்னரே! கழுதைகள், ஒட்டகங்கள், கோவேறு கழுதைகள் ஆகியவற்றின் மயிர் உதிர்ந்து கண்ணீர் வடிக்கின்றன. அவைகளுக்கு மருத்துவர்கள் மருந்து கொடுத்தாலும் முன்பிருந்த நிலையை அடைவதில்லை. (18)

காக்கைகள், கூட்டங்கூட்டமாக எல்லாத் திக்குகளிலும் அலறுகின்றன; கொடிய பறவைகள் (வல்லூறு போன்றவை) கூட்டங்கூட்டமாக உப்பரிகைகளின் மேல் காணப்படுகின்றன. (19)

கழுகுகள் ஒன்றாகக் கூடி நகரத்திற்கு மேலே வட்டமிடுகின்றன; நகரின் அருகில் வந்து, காலை–மாலை வேளைகளில் அமங்களமாக நரிகள் ஊளையிடுகின்றன. (20)

மாமிசபட்சிணிகளான விலங்குகள், கூட்டங்கூட்டமாகக் கோட்டை வாயில்களுக்கு வந்து இடியோசை போல் சப்திக்கின்றன. (21)

மாவீரரே! நமக்குத் தீங்கைத் தெரிவிக்கும் இந்தச் சூழ்நிலையை மாற்றவேண்டும் என்று தாங்கள் விரும்பினால், வைதேகியை இராமனிடம் ஒப்படைத்து விடுவதே சிறந்த பரிகாரமாகும். (22)

மாமன்னரே! செய்ய வேண்டிய காரியம் பற்றி அறியாததாலோ, (எப்படியேனும் அரக்கர் குலம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற) பேராசையாலோ கூறப்பட்டிருந்தாலும், தாங்கள் அதைக் குற்றமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. (23)

நான் கூறிய அபசகுனங்கள், நகரத்திலுள்ள அரக்கர்–அரக்கிகள், அந்தப்புரப் பெண்டிர் மற்றும் எல்லா மக்களாலும் காணப்பட்டிருக்கின்றன. (24)

எல்லா அமைச்சர்களும் இந்த விஷயங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரத் தயங்கினார்கள். ஆனால், என்னால் பார்க்கப்பட்ட, கேட்கப்பட்ட எல்லாவற்றையும் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமையாகும். தாங்கள் அடுத்ததாகச் செய்ய வேண்டிய காரியம் பற்றிச் சிந்தித்து செயல்பட வேண்டுகிறேன்.'' (25)

இதி ஸ்ம மந்த்ரிணாம் மத்$_4$யே ப்$_4$ராதா ப்$_4$ராதரமூசிவாந் ।
ராவணம் ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$ம் பத்$_2$யமேதத்$_3$விபீ$_4$ஷண: ॥ (26)

ஹிதம் மஹார்த$_2$ம் ம்ருது$_3$ ஹேதுஸம்ஹிதம்
வ்யதீதகாலாயதிஸம்ப்ரதிக்ஷமம் ।
நிஶம்ய தத்$_3$வாக்யமுபஸ்தி$_2$தஜ்வர:
ப்ரஸங்க$_3$வாநுத்தரமேதத$_3$ப்$_3$ரவீத் ॥ (27)

ப$_4$யம் ந பஶ்யாமி குதஶ்சித$_3$ப்யஹம்
ந ராக$_4$வ: ப்ராப்ஸ்யதி ஜாது மைதி$_2$லீம் ।
ஸுரை: ஸஹேந்த்$_3$ரைரபி ஸங்க$_3$த: கத$_2$ம்
மமாக்$_3$ரத: ஸ்தா$_2$ஸ்யதி லக்ஷ்மணாக்$_3$ரஜ: ॥ (28)

இதீத$_3$முக்த்வா ஸுரஸைந்யநாஶநோ மஹாப$_3$ல: ஸம்யதி சண்ட$_3$விக்ரம: ।
த$_3$ஶாநநோ ப்$_4$ராதரமாப்தவாதி$_3$நம் விஸர்ஜயாமாஸ ததா$_3$ விபீ$_4$ஷணம் ॥ (29)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த$_3$ஶம: ஸர்க$_3$: ॥

ஏகாத$_3$ஶ: ஸர்க$_3$:

த்$_3$விதீயமந்த்ராதி$_4$வேஶ:

ஸ ப$_3$பூ$_4$வ க்ருஶோ ராஜா மைதி$_2$லீகாமமோஹித: ।
அஸம்மாநாச்ச ஸுஹ்ருதா$_3$ம் பாப: பாபேந கர்மணா ॥ (1)

அதீதஸமயே காலே தஸ்மிந் வை யுதி$_4$ ராவண: ।
அமாத்யைஶ்ச ஸுஹ்ருத்$_3$பி$_4$ஶ்ச ப்ராப்தகாலமமந்யத ॥ (2)

ஸ ஹேமஜாலவிததம் மணிவித்$_3$ருமபூ$_4$ஷிதம் ।
உபக$_3$ம்ய விநீதாஶ்வமாருரோஹ மஹாரத$_2$ம் ॥ (3)

தமாஸ்தா$_2$ய ரத$_2$ஶ்ரேஷ்ட$_2$ம் மஹாமேக$_4$ஸமஸ்வநம் ।
ப்ரயயௌ ராக்ஷஸஶ்ரேஷ்டோ$_2$ த$_3$ஶக்$_3$ரீவ: ஸபா$_4$ம் ப்ரதி ॥ (4)

அஸிசர்மத$_4$ரா யோதா$_4$: ஸர்வாயுத$_4$த$_4$ராஸ்ததா$_2$ ।
ராக்ஷஸா ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய புரஸ்தாத்ஸம்ப்ரதஸ்தி$_2$ரே ॥ (5)

நாநாவிக்ருதவேஷாஶ்ச நாநாபூ$_4$ஷணபூ$_4$ஷிதா: ।
பார்ஶ்வத: ப்ருஷ்ட$_2$தஶ்சைநம் பரிவார்ய யயுஸ்ததா$_3$ ॥ (6)

ரதை$_2$ஶ்சாதிரதா$_2$: ஶீக்$_4$ரம் மத்தைஶ்ச வரவாரணை: ।
அநூத்பேதுர்த$_3$ஶக்$_3$ரீவமாக்ரீட$_3$த்$_3$பி$_4$ஶ்ச வாஜிபி$_4$: ॥ (7)

இவ்வாறு, அமைச்சர்கள் முன்னிலையில், சகோதரனும் அரக்கர் தலைவனுமான இராவணனிடம் இளவலான விபீஷணன் நலந்தரும் சொற்களைக் கூறி முடித்தான். (26)

நலன் பயப்பதும், பொருள் பொதிந்ததும், இனிதாகக் கூறப்பட்டதும், கடந்த காலம்–எதிர்காலம்–நிகழ்காலங்களுக்கு ஏற்றதானதுமான அந்தச் சொற்களைக் கேட்டதும், இராவணன் கோபம் தலைக்கேறியவனாய், தன் நிலையிலிருந்து சற்றும் விட்டுக் கொடுக்காமல், பின்வருமாறு பதில் கூறினான்— (27)

''எவ்விடத்திலிருந்தும் (யாரிடத்திலிருந்தும்) எனக்கு ஆபத்து வரப்போவதில்லை; ஒருபொழுதும், இராமன் சீதையைத் திரும்பப் பெறமாட்டான். இலக்குவனின் சகோதரன், தேவர்களோடும் தேவராஜனோடும் கூடி எதிர்த்து வந்தாலும், என் எதிரில் நிற்க முடியுமா, என்ன?'' (28)

இவ்வாறு கூறிவிட்டு, தேவர்களின் படையை அழிப்பவனும், போர்க்களத்தில் எல்லையற்ற பராக்கிரமத்தைக் காட்டுபவனுமான இராவணன், நலம்தரும் சொற்களை நவின்ற சகோதரன் விபீஷணனுக்கு உடனே விடைகொடுத்து அனுப்பி வைத்தான். (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினொன்று

மீண்டும் மந்திராலோசனை

சீதாப் பிராட்டியாரிடம் மோகவெறி கொண்டிருந்த பாவியான அந்த மன்னன், நண்பர்களின் ஆதரவை இழந்ததாலும், (பிரஹஸ்தன் முதலிய எவரும் விபீஷணன் பேச்சைக் கண்டித்துப் பேசவில்லை – அதாவது இராவணன் செயலை ஆதரிக்கவில்லை.) கொடிய பாவச்செயலைச் செய்துவிட்டதாலும் கவலையில் தோய்ந்து மனம் தளர்ந்தவனானான். (1)

அமைச்சர்களைக் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் கழிந்து போய்விட்டது என்றாலும், அமைச்சர்களுடனும் நண்பர்களுடனும் போர் விஷயமாகக் கலந்தாலோசிக்க வேண்டிய காலம் தற்போது வந்துவிட்டதாக எண்ணினான். (2)

பொற்சாளரங்கள் விளங்குவதும், இரத்தினம்–பவழங்களால் அலங்கரிக்கப்பட்டதும், நன்றாகப் பழக்கப்பட்ட குதிரைகள் பூட்டப்பெற்றதுமான ஒரு பெரிய ரதத்தில் ஏறி அமர்ந்தான். (3)

அரக்கர் திலகமான இராவணன், இடியோசை போல் ஒலியுடன் செல்லும் உத்தமமான அந்தத் தேரில் ஏறி, ஆலோசனை அரங்கத்தை நோக்கிச் சென்றான். (4)

கத்தி, கேடயம் மற்றும் எல்லா வகையான ஆயுதங்களை ஏந்திய அரக்கப் போர்வீரர்கள், அரக்க மன்னன் முன்னாலே புறப்பட்டுச் சென்றார்கள். பலவிதமாக வேடம் தரித்தவர்களும், பல்வகை அணிகலன்கள் அணிந்தவர்களும் இவனுடைய (இராவணனுடைய) இருபுறங்களிலும், பின்னாலும் சூழ்ந்துகொண்டு சென்றார்கள். (5,6)

அதிரதர்கள் என்று புகழ்பெற்ற மாவீரர்கள் ரதங்களிலும், மதங்கொண்ட உன்னத யானைகள் மீதும், நாட்டியமாடும் குதிரைகள் மீதும் ஏறிக் கொண்டு விரைவாகப் பின்தொடர்ந்து சென்றார்கள். (7)

க3த3ாபரிக4ஹஸ்தாஶ்ச ஶக்திதோமரபாணய: ।
பரஶ்வத4த4ராஶ்சாந்யே தத2ாந்யே ஶூலபாணய: ॥ (8)

ததஸ்தூர்யஸஹஸ்ராணாம் ஸம்ஜஜ்ஞே நி:ஸ்வநோ மஹாந் ।
துமுல: ஶங்க2ஶப்3த3ஶ்ச ஸப4ாம் க3ச்ச2தி ராவணே ॥ (9)

ஸ நேமிகே4ாஷேண மஹாந் ஸஹஸாபி4விநாத3யந் ।
ராஜமார்க3ம் ஶ்ரியா ஜுஷ்டம் ப்ரதிபேதே3 மஹாரத2: ॥ (10)

விமலம் சாதபத்ராணம் ப்ரக்3ருஹீதமஶோப4த ।
பாண்ட3ரம் ராக்ஷஸேந்த்3ரஸ்ய பூர்ணஸ்தாராதி4போ யத2ா ॥ (11)

ஹேமமஞ்ஜரிக3ர்பே4 ச ஶுத்3த4ஸ்ப2டிகவிக்3ரஹே ।
சாமரவ்யஜநே சாஸ்ய ரேஜது: ஸவ்யத3க்ஷிணே ॥ (12)

தே க்ருதாஞ்ஜலய: ஸர்வே ரத2ஸ்த2ம் ப்ருதீ2வீஸ்தி2தா: ।
ராக்ஷஸா ராக்ஷஸ ஶ்ரேஷ்ட2ம் ஶிரோபி4ஸ்தம் வவந்தி3ரே ॥ (13)

ராக்ஷஸை: ஸ்தூயமாந: ஸஞ்ஜயாஶீர்பி4ரரிந்த3ம: ।
ஆஸஸாத3 மஹாதேஜா: ஸப4ாம் ஸுவிஹிதாம் ஶுப4ாம் ॥ (14)

ஸுவர்ணரஜதஸ்தூ2ணாம் விஶுத்3த4ஸ்ப2டிகாந்தராம் ।
விராஜமாநோ வபுஷா ருக்மபட்டோத்தரச்ச2த3ாம் ॥ (15)

தாம் பிஶாசஶதை: ஷட்3பி4ரபி4கு3ப்தாம் ஸத3ா ஶுப4ாம் ।
ப்ரவிவேஶ மஹாதேஜா: ஸுக்ருதாம் விஶ்வகர்மணா ॥ (16)

தஸ்யாம் து வைதூ3ர்யமயம் ப்ரியகாஜிநஸம்வ்ருதம் ।
மஹத்ஸோபாஶ்ரயம் பே4ஜே ராவண: பரமாஸநம் ॥ (17)

தத: ஶஶாஸேஶ்வரவத்3தூ3தாந்(ல்)லகு4பராக்ரமாந் ।
ஸமாநயத மே க்ஷிப்ரமிஹைதாந் ராக்ஷஸாநிதி ॥
க்ருத்யமஸ்தி மஹஜ்ஜாதம் ஸாமர்த்2யமிஹ நோ மஹத் ॥ (18)

ராக்ஷஸாஸ்தத்3வச: ஶ்ருத்வா லங்காயாம் பரிசக்ரமு: ।
அநுகே3ஹமவஸ்த2ாய விஹாரஶயநேஷு ச ॥
உத்3யாநேஷு ச ரக்ஷாம்ஸி சோத3யந்தோ ஹ்யபீ4தவத் ॥ (19)

தே ரத2ாந் ருசிராநேகே த்3ருப்தாநேகே ப்ருத2க்3க4யாந் ।
நாக3ாநந்யேऽதி4ருருஹுர்ஜக்3முஶ்சைகே பத3ாதய: ॥ (20)

ஸா புரீ பரமாகீர்ணா ரத2குஞ்ஜரவாஜிபி4: ।
ஸம்பதத்3பி4ர்விருருசே க3ருத்மத்3பி4ரிவாம்ப3ரம் ॥ (21)

கதை, சுழல்தடி, வேல், தோமரம், கோடாரி, சூலம் முதலியவைகளைக் கையில் தாங்கிய வீரர்கள் (பின்தொடர்ந்தார்கள்.) (8)

இராவணன், ஆலோசனை மன்றத்தை நோக்கிச் சென்றபோது, ஆயிரக்கணக்கான இசைக்கருவிகளின் பெருமுழக்கமும், ஏராளமான சங்குகளின் பேரொலியும் எழுந்தன. (9)

மிக உயர்ந்த அந்தப் பெருந்தேர், சக்கரங்களின் பேரொலியால் திடீரென்று எதிரொலி ஏற்படுத்திக் கொண்டு, கண்கவர் வனப்புடன் விளங்கும் அரசபாட்டையை அடைந்தது. (10)

அப்போது, அரக்க மன்னனுக்கு பிடிக்கப்பட்ட தூய வெண்கொற்றக்குடை முழுநிலவைப் போலவே, அழகாகவும் குளிர்ச்சியைத் தருவதாகவும் விளங்கிற்று. (11)

நடுவில் பொற்சரங்களால் அழகு செய்யப்பட்டவைகளும், சுத்தமான படிகத்தாலான கைப்பிடிகளைக் கொண்டவைகளுமான இரு சாமரங்கள், அவன் வலது–இடது புறங்களில் மிளிர்ந்தன. (12)

ரதத்தில் அமர்ந்து சென்று கொண்டிருந்த அரசமணியான அவனை, தரையில் (தெருவோரங்களில்) நின்று கொண்டிருந்த அரக்கக் குடிமக்கள் எல்லோரும் தலைகுனிந்து வணங்கினார்கள். (13)

எதிரிகளை அடக்குபவனும் பேராற்றல் படைத்தவனுமான அவன், 'வாழ்க–வெல்க' என்ற வாழ்த்துக்களால் போற்றப்பட்டு, மனையடி நூல்படி அமைக்கப்பட்டிருந்த ஆலோசனை மன்றத்தை வந்தடைந்தான். (14)

பேராற்றல் படைத்த அவன், தன் தேக காந்தியினால் ஒளிவீசிக் கொண்டு, தங்கம்–வெள்ளியாலான தளத்தை உடையதும், சுத்தமான பளிங்குக் கற்கள் இழைக்கப் பெற்ற நடுப்பகுதியை உடையதும், தங்கத்தகடுகள் வேயப்பட்ட மேல்விதானங்களை உடையதும், விசுவகர்மாவினால் மங்களகரமான அழகுப் பொலிவுடன் அமைக்கப்பட்டதும், எக்காலங்களிலும் அறுநூறு பைசாசங்களால் பாதுகாக்கப்படுவதுமான அரங்கினுள் நுழைந்தான். (15,16)

நீலமணியினால் உருவாக்கப்பட்டதும், 'பிரியகம்' என்ற மான்தோல் விரிக்கப்பட்டதும், திண்டு–தலையணைகளுடன் கூடியதுமான உயர்ந்த சிம்மாசனத்தில் இராவணன் அமர்ந்து கொண்டான். (17)

பின்னர், ஒரு தலைவனுக்கேற்ற தோரணையில், வேகமாக செயல்படும் தூதர்களைப் பார்த்து (பின்வருமாறு) கட்டளையிட்டான்— ''நகரத்திலுள்ள அரக்கப் பெருமக்களை விரைவில் இங்கே அழைத்து வாருங்கள். இப்போது, நாம் பெருமுயற்சியுடன் செய்து முடிக்க வேண்டிய ஒரு காரியம் நிகழ்ந்திருக்கிறது.'' (18)

அரக்கர்கள் அந்த ஆணையைக் கேட்டதும், ஒவ்வொரு வீட்டினுள்ளும் புகுந்து விளையாடுமிடங்கள், பள்ளியறைகள், பூங்காக்கள் முதலிய இடங்களில் தைரியமாக உள்ளே சென்று, அரக்கர்களிடம் அரச கட்டளையைத் தெரிவித்துக் கொண்டு, இலங்கை முழுவதிலும் சுற்றித் திரிந்தார்கள். (19)

அவர்களில் சிலர் அழகிய ரதங்களிலும், சிலர் தனித்தனியே திமிர்கொண்ட குதிரைகளிலும் மற்றும் சிலர் யானைகள் மேலும் ஏறிச் சென்றார்கள்; சிலர் கால்நடையாக நடந்தும் சென்றார்கள். பறந்து செல்கின்ற ஏராளமான கருடன்களால் ஆகாயம் எவ்வண்ணம் விளங்குமோ, அவ்வண்ணமே அந்தப் பட்டணம் ரதம்–யானை–குதிரைகளால் முற்றிலும் நிறைந்து அழகுடன் விளங்கிற்று. (20,21)

தே வாஹநாந்யவஸ்த$_2$ாப்ய யாநாநி விவித$_4$ாநி ச ।
ஸப$_4$ாம் பத்$_3$பி$_4$: ப்ரவிவிஶு: ஸிம்ஹா கி$_3$ரிகு$_3$ஹாமிவ ॥ (22)

ராக்ஞ: பாதௌ$_3$ க்$_3$ருஹீத்வா து ராக்ஞா தே ப்ரதிபூஜிதா: ।
பீடே$_2$ஷ்வந்யே ப்$_3$ருஸீஷ்வந்யே பூ$_4$மௌ கேசிது$_3$பாவிஶந் ॥ (23)

தே ஸமேத்ய ஸப$_4$யாம் வை ராக்ஷஸா ராஜஶாஸநாத் ।
யத$_2$ார்ஹமுபதஸ்து$_2$ஸ்தே ராவணம் ராக்ஷஸாதி$_4$பம் ॥ (24)

மந்த்ரிணஶ்ச யத$_2$ா முக்$_2$யா நிஶ்சிதார்தே$_2$ஷு பண்டி$_3$தா: ।
அமாத்யாஶ்ச கு$_3$ணோபேதா: ஸர்வக்ஞா பு$_3$த்$_3$தி$_4$த$_3$ர்ஶநா: ॥
ஸமேயுஸ்தத்ர ஶதஶ: ஶூராஶ்ச ப$_3$ஹவஸ்தத$_3$ா ॥ (25)

ஸப$_4$யாம் ஹேமவர்ணாயாம் ஸர்வார்த$_2$ஸ்ய ஸுக$_2$ாய வை ।
ரம்யாயாம் ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ஸமேயுஸ்தத்ர ஸங்க$_4$ஶ: ॥
ராக்ஷஸா ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$ம் பரிவார்யோபதஸ்தி$_2$ரே ॥ (26)

ததோ மஹாத்மா விபுலம் ஸுயுக்$_3$யம் வரார்ஹஜாம்பூ$_3$நத$_3$சித்ரிதாங்க$_3$ம் ।
ரத$_2$ம் ஸமாஸ்த$_2$ாய யயௌ யஶஸ்வீ விபீ$_4$ஷண: ஸம்ஸத$_3$மக்$_3$ரஜஸ்ய ॥ (27)

ஸ பூர்வஜாயாவரஜ: ஶஶம்ஸ
நாமாத$_2$ பஶ்சாச்சரணௌ வவந்தே$_3$ ।
ஶுக: ப்ரஹஸ்தஶ்ச ததை$_2$வ தேப்$_4$யோ
த$_3$தௌ$_3$ யத$_2$ார்ஹம் ப்ருத$_2$க$_3$ாஸநாநி ॥ (28)

ஸுவர்ணநாநாமணிபூ$_4$ஷணாநாம் ஸுவாஸஸாம் ஸம்ஸதி$_3$ ராக்ஷஸாநாம் ।
தேஷாம் பரார்த்$_4$யாக$_3$ருசந்த$_3$நாநாம் ஸ்ரஜஶ்ச க$_3$ந்த$_4$ா: ப்ரவவு: ஸமந்தாத் ॥ (29)

ந சுக்ருஶுர்நாந்ருதமாஹ கஶ்சித்–
ஸப$_4$ாஸதோ$_3$ நைவ ஜஜல்புருச்சை: ।
ஸம்ஸித்$_3$த$_4$ார்த$_2$ா: ஸர்வ ஏவோக்$_3$ரவீர்யா
ப$_4$ர்து: ஸர்வே த$_3$த்$_3$ருஶுஶ்சாநநம் தே ॥ (30)

ஸ ராவண: ஶஸ்த்ரப்$_4$ருதாம் மநஸ்விநாம்
மஹாப$_3$லாநாம் ஸமிதௌ மநஸ்வீ ।
தஸ்யாம் ஸப$_4$யாம் ப்ரப$_4$யா சகாஶே
மத்$_4$யே வஸூநாமிவ வஜ்ரஹஸ்த: ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகாத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

அவர்கள் ஓர் எல்லையில் பல்வகையான சிவிகை முதலிய பல்லக்குகளையும், குதிரை முதலான வாகனங்களையும் நிறுத்திவிட்டு, பல சிங்கங்கள் ஒரே நேரத்தில் மலைக்குகைக்குள் அட்டகாசமாக நுழைவதைப் போல, காலால் நடந்து சென்று மண்டபத்தை அடைந்தார்கள். (22)

அவர்கள் மன்னன் திருவடிகளில் பணிந்த பின்னர், மன்னரால் (சமிக்ஞைகளால்) பதில் மரியாதை செய்யப்பட்டு, சிலர் உயர்ந்த பீடங்களிலும், சிலர் தர்பாசனங்களிலும் மற்றும் சிலர் தரையிலும் அமர்ந்து கொண்டனர். (23)

அரசனின் ஆணைப்படி அந்த மண்டபத்தில் ஒன்று கூடிய அவர்கள், தத்தம் தகுதிக்கேற்றபடி இராவணனைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டார்கள். (24)

ஒரு காரியத்தை ஆலோசித்து முடிவு செய்வதில் நிபுணர்களான மந்திரிப்பிரதானிகளும், நற்குணங்கள் பொருந்தியவர்களும், அரச நீதியின் எல்லாப் பகுதிகளையும் அறிந்தவர்களும், நல்வழிகளைக் காட்டும் அமாத்தியர்களும் நூற்றுக்கணக்கில் அங்கே வந்து கூடினார்கள்; ஏராளமான வீரர்களும் வந்து சேர்ந்தார்கள். (25)

பொன்வண்ணமான அந்த அழகிய மண்டபத்தில், அரக்க மன்னனுடைய நலத்தின் பொருட்டும், எல்லாச் செயல்களிலும் வெற்றிபெறும் பொருட்டும் அவ்விடத்தில் ஒன்றாகக் கூடினார்கள். அரக்கர்கள், அரக்கமாமணியைச் சுற்றிலும் அமர்ந்து கொண்டார்கள். (26)

அந்தச் சமயத்தில், தெய்விக குணங்கள் நிறைந்தவனும், நற்புகழ் பெற்றவனுமான விபீஷணன், விசாலமானதும் நன்கு பழக்கப்பட்ட குதிரைகள் பூட்டப்பெற்றதும் பொன்வண்ணச் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான சுபமான அழகிய ரதத்தில் ஏறிக்கொண்டு தமையனாரின் அவைக்கு வந்து சேர்ந்தான். (27)

இளவலான வீடணன், மூத்தவனாகிய அவனுக்கு (ஆசார மரபுப்படி) தன் பெயரைச் சொல்லி, பின்னர் காலில் விழுந்து வணங்கினான். சுகனும் பிரஹஸ்தனும் அவ்வாறே செய்தார்கள். (இராவணன், ஜாடைக் குறிப்பினால்) அவரவர் தகுதிக்கேற்றபடி இருக்கைகளைக் காட்டினான். (28)

அந்த அவையில் வந்து கூடியிருந்த அரக்கர் அனைவரும் பொன்னாலும் பல்வகை மணி–முத்துக்களாலுமான அணிகலன்களை அணிந்திருந்தார்கள். உயர்ந்த ஆடைகளை உடுத்தியிருந்தார்கள். அகில், சந்தனம், மலர்மாலைகளின் நறுமணம் எங்கும் கமழ்ந்தது. (29)

அவையோர்கள் யாரும் கூச்சல் போடவில்லை; உரத்த குரலில் உரையாடவில்லை; ஒருவரும் பொய் பேசவில்லை; எல்லோரும் தத்தம் விருப்பம் நிறைவேறப் பெற்றவர்கள்; பயங்கரமான வீரம் படைத்தவர்கள்; அவர்கள் எல்லோரும் ('என்ன உத்தரவு வருமோ?' என்று) தலைவனின் முகத்தைப் பார்த்தவண்ணம் இருந்தார்கள். (30)

உறுதியான எண்ணத்துடனிருந்த இராவணன், பேராற்றல் படைத்த, பெருந்தன்மையுள்ள, ஆயுதங்களைத் தரித்த அரக்கர்களின் அந்த அவையில், வசுக்களால் சூழப்பெற்ற வஜ்ரபாணியான இந்திரன் போல் பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டிருந்தான். (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

த்$_3$வாத$_3$ஶ: ஸர்க$_3$:

கும்ப$_4$கர்ணமதி:

ஸ தாம் பரிஷத$_3$ம் க்ருத்ஸ்நாம் ஸமீக்ஷ்ய ஸமிதிஞ்ஜய: ।
ப்ரசோத$_3$யாமாஸ தத$_3$ா ப்ரஹஸ்தம் வாஹிநீபதிம் ॥ (1)

ஸேநாபதே யத$_2$ா தே ஸ்யு: க்ருதவித்$_3$யாஶ்சதுர்வித$_4$ா: ।
யோத$_4$ா நக$_3$ரரக்ஷயாம் தத$_2$ா வ்யாதே$_3$ஷ்டுமர்ஹஸி ॥ (2)

ஸ ப்ரஹஸ்த: ப்ரணீதாத்மா சிகீர்ஷந் ராஜஶாஸநம் ।
விநிக்ஷிபத்$_3$ப$_3$லம் ஸர்வம் ப$_3$ஹிரந்தஶ்ச மந்தி$_3$ரே ॥ (3)

ததோ விநிக்ஷிப்ய ப$_3$லம் ப்ருதங்நக$_3$ரகு$_3$ப்தயே ।
ப்ரஹஸ்த: ப்ரமுகே$_2$ ராக்ஞோ நிஷஸாத$_3$ ஜக$_3$ாத$_3$ ச ॥ (4)

நிஹிதம் ப$_3$ஹிரந்தஶ்ச ப$_3$லம் ப$_3$லவதஸ்தவ ।
குருஷ்வாவிமநா: க்ருத்யம் யத$_3$பி$_4$ப்ரேதமஸ்தி தே ॥ (5)

ப்ரஹஸ்தஸ்ய வச: ஶ்ருத்வா ராஜா ராஜ்யஹிதே ரத: ।
ஸுகே$_2$ப்ஸு: ஸுஹ்ருத$_3$ாம் மத்$_4$யே வ்யாஜஹார ஸ ராவண: ॥ (6)

ப்ரியாப்ரியே ஸுக$_2$ம் து$_3$:க$_2$ம் லாப$_4$ாலாபௌ$_4$ ஹிதாஹிதே ।
த$_4$ர்ம காமார்த$_2$க்ருச்ச்$_2$ரேஷு யூயமர்ஹத$_2$ வேதி$_3$தும் ॥ (7)

ஸர்வக்ருத்யாநி யுஷ்மாபி$_4$: ஸமாரப்$_3$த$_4$ாநி ஸர்வதா$_3$ ।
மந்த்ரகர்மநியுக்தாநி ந ஜாது விப$_2$லாநி மே ॥ (8)

ஸஸோமக்$_3$ரஹநக்ஷத்ரைர்மருத்$_3$பி$_4$ரிவ வாஸவ: ।
ப$_4$வத்$_3$பி$_4$ரஹமத்யர்த$_2$ம் வ்ருத: ஶ்ரியமவாப்நுயாம் ॥ (9)

அஹம் து க$_2$லு ஸர்வாந் வ: ஸமர்த$_2$யிதுமுத்$_3$யத: ।
கும்ப$_4$கர்ணஸ்ய து ஸ்வப்நாந்நேமமர்த$_2$மசோத$_3$யம் ॥ (10)

அயம் ஹி ஸுப்த: ஷண்மாஸாந் கும்ப$_4$கர்ணோ மஹாப$_3$ல: ।
ஸர்வஶஸ்த்ரப்$_4$ருதாம் முக்$_2$ய: ஸ இத$_3$ாநீம் ஸமுத்தி$_2$த: ॥ (11)

இயம் ச த$_3$ண்ட$_3$காரண்யாத்$_3$ராமஸ்ய மஹிஷீ ப்ரியா ।
ரக்ஷோபி$_4$ஶ்சரிதாத்$_3$தே$_3$ஶாத$_3$ாநீதா ஜநகாத்மஜா ॥ (12)

ஸா மே ந ஶய்யாமாரோடு$_3$மிச்ச$_2$த்யலஸகா$_3$மிநீ ।
த்ரிஷு லோகேஷு சாந்யா மே ந ஸீதாஸத்$_3$ருஶீ மதா ॥ (13)

தநுமத்$_4$யா ப்ருது$_2$ஶ்ரோணீ ஶாரதே$_3$ந்து$_3$நிப$_4$ாநநா ।
ஹேமபி$_3$ம்ப$_3$நிப$_4$ா ஸௌம்யா மாயேவ மயநிர்மிதா ॥ (14)

ஸர்க்கம் : பன்னிரண்டு
கும்பகர்ணன் கருத்து

அப்போது, போர்களில் எப்போதும் வெற்றி பெறும் இராவணன், அந்த சபையின் எல்லாப் பக்கங்களிலும் பார்வையைச் செலுத்தி, படைத்தலைவனான பிரஹஸ்தனை நோக்கிப் பின்வருமாறு ஆணையிட்டான்— (1)

''படைத்தலைவனே! நன்றாகப் பயிற்சி பெற்ற நம்முடைய நால்வகைப் படையினர், பட்டணத்தைப் பாதுகாப்பதில் தனியாக கவனம் செலுத்தும்வண்ணம் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வாயாக.'' (2)

நிச்சய புத்தியுடைய பிரஹஸ்தன், அரசனின் ஆணையை நிறைவேற்றும் வகையில், இராவணனுடைய மாளிகையின் உட்புறம்–வெளிப்புறங்களில் போதுமான படைவீரர்களைக் கொண்டு வந்து நிறுத்தினான். (3)

பின்னர், வேறு ஒரு படையை, நகரத்தைப் பாதுகாப்பதற்காகத் தக்க இடங்களில் நிறுத்திவிட்டு, மன்னன் இராவணன் முன்னே வந்து அமர்ந்து பின்வருமாறு கூறினான்— (4)

''மன்னரே! கணக்கில்லாத சேனை படைத்த மாமன்னரின் கட்டளைப்படி, உள்ளும் புறமும் முக்கியமான இடங்களில் படைவீரர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் சஞ்சலப்படாமல், தங்கள் மனத்திலுள்ள காரியங்களைச் செய்து முடிக்கலாம்.'' (5)

நாட்டின் நலனை விரும்பும் பிரஹஸ்தனின் சொற்களைக் கேட்ட அரசன், தன் சுகத்திலேயே இச்சை மிக்கவனாய், நண்பர்களிடையே பின்வருமாறு கூறினான்— ''சபையோர்களே! தருமம்–அர்த்தம்–காமம் ஆகிய புருஷார்த்தங்களை நடைமுறைப்படுத்தும்போது முரணான பாதைகள் தெரிந்தால், அவற்றில் நன்மை பயப்பது–நன்மை பயக்காதது, சுகம்–துக்கம், லாபம்–நஷ்டம், உகந்தது–உகந்ததல்லாதது எது? என்பதைப் பகுத்தறியும் திறன் படைத்தவர்கள், நீங்கள். (6,7)

இதற்கு முன் எந்தக் காலத்திலும், உங்களது ஆழ்ந்த ஆலோசனையில் தீர்மானிக்கப்பட்டபடி, ஆரம்பிக்கப்பட்ட என்னுடைய காரியங்கள் ஒருபொழுதும் நற்பலனைத் தராமல் போனதில்லை. குபேரன் முதலிய திக்பாலர்களாலும், நவகிரகங்களாலும், மருத் கூட்டங்களாலும் சூழப்பட்ட இந்திரன் போல், உங்களால் சூழப்பட்டிருக்கும் நான் எல்லையற்ற சுக–சௌக்கியங்களை அடைவேன். (8,9)

நான், உங்களுக்கெல்லாம் ஒரு விஷயத்தைத் தெரிவிக்க விரும்பினேன். ஆனால், (இதுநாள் வரை) கும்பகர்ணன் தூங்கிக் கொண்டிருந்ததால், அந்தச் செய்தியை வெளியிடாதிருந்தேன். பேராற்றல் கொண்டவனும், ஆயுதங்களைத் தாங்கியவர்களில் தலையாயவனுமான கும்பகர்ணன், ஆறுமாத காலம் உறங்கிவிட்டு, இப்போதுதான் கண்விழித்து எழுந்து வந்திருக்கிறான். (10,11)

அரக்கர்கள் சுற்றித் திரியும் இடமான தண்டகாரண்யத்திலிருந்து, ஜனகரின் திருமகளும், இராமனின் பிரியத்திற்குப் பாத்திரமான அரசியுமான சீதை, என்னால் கவர்ந்து கொண்டு வரப்பட்டிருக்கிறாள். (12)

ஆனால், மென்னடை பயிலும் அவள், என் படுக்கையில் பங்குகொள்வதை விரும்பவில்லை. என்னுடைய கருத்துப்படி, சீதைக்கு நிகரான ஒரு பெண்மணி மூன்று உலகத்திலும் இல்லை. (13)

மெல்லிடையாள்; இடுப்பின் பின்பகுதி பெருத்திருப்பவள்; சரத்கால நிலா போன்று ஒளிவீசும் முகம்; பொற்பதுமை போல் பிரகாசம்; மனத்தைக் கொள்ளை கொள்ளும் அழகு! மயனால் உண்டாக்கப்பட்ட மாயை போன்று வசீகரமானவள். (14)

ஸுலௌஹிததலௌ ஶ்லக்ஷ்ணௌ சரணௌ ஸுப்ரதிஷ்டிதௌ ।
த்₃ருஷ்ட்வா தாம்ரநகெ₂ள தஸ்யா தீ₃ப்யதே மே ஶரீரஜ: ॥ (15)

ஹுதாக்₃நேரர்சிஸங்காஶாமேநாம் ஸௌரீமிவ ப்ரப₄ாம் ।
த்₃ருஷ்ட்வா ஸீதாம் விஶாலாக்ஷீம் காமஸ்ய வஶமேயிவாந் ॥ (16)

உந்நஸம் வத₃நம் வல்கு₃ விபுலம் சாருலோசநம் ।
பஶ்யந்ஸ்ததா₃ வஶஸ்தஸ்யா: காமஸ்ய வஶமேயிவாந் ॥ (17)

க்ரோத₄ஹர்ஷஸஹாயேந து₃ர்வர்ணகரணேந ச ।
ஶோகஸந்தாபநித்யேந காமேந க₂லுஷீக்ருத: ॥ (18)

ஸா து ஸம்வத்ஸரம் காலம் மாமயாசத ப₄ாமிநீ ।
ப்ரதீக்ஷமாணா ப₄ர்தாரம் ராமமாயதலோசநா ॥ (19)

தந்மயா சாருநேத்ராயா: ப்ரதிக்ஞாதம் வச: ஶுப₄ம் ।
ஶ்ராந்தோऽஹம் ஸததம் காமாத்₃யாதோ ஹய இவாத்₄வநி ॥ (20)

கத₂ம் ஸாக₃ரமக்ஷோப்₄யம் தரிஷ்யந்தி வநௌகஸ: ।
ப₃ஹுஸத்த்வஸமாகீர்ணம் தௌ வா த₃ஶரத₂ாத்மஜௌ ॥ (21)

அத₂வா கபிநைகேந க்ருதம் ந: கத₃நம் மஹத் ।
து₃ர்க்ஞேயா: கார்யக₃தயோ ப்₃ருத யஸ்ய யத₂ாமதி ॥
மாநுஷாந்மே ப₄யம் நாஸ்தி தத₂ாபி து விம்ருஶ்யதாம் ॥ (22)

ததா₃ தே₃வாஸுரே யுத்₃தே₄ யுஷ்மாபி₄: ஸஹிதோऽஜயம் ।
தே மே ப₄வந்தஶ்ச தத₂ா ஸுக்₃ரீவப்ரமுக₂ாந் ஹரீந் ॥ (23)

பரே பாரே ஸமுத்₃ரஸ்ய புரஸ்க்ருத்ய ந்ருபாத்மஜௌ ।
ஸீதாயா: பத₃வீம் ப்ராப்தௌ ஸம்ப்ராப்தௌ வருணாலயம் ॥ (24)

அதே₃யா ச யத₂ா ஸீதா வத்₄யௌ த₃ஶரத₂ாத்ஜௌ ।
ப₄வத்₃பி₄ர்மந்த்ர்யதாம் மந்த்ர: ஸுநீதிஶ்சாபி₄தீ₄யதாம் ॥ (25)

ந ஹி ஶக்திம் ப்ரபஶ்யாமி ஜக₃த்யந்யஸ்ய கஸ்யசித் ।
ஸாக₃ரம் வாநரைஸ்தீர்த்வா நிஶ்சயேந ஜயோ மம ॥ (26)

தஸ்ய காமபரீதஸ்ய நிஶம்ய பரிதே₃விதம் ॥
கும்ப₄கர்ண: ப்ரசுக்ரோத₄ வசநம் சேத₃மப்₃ரவீத் ॥ (27)

யதா₃ து ராமஸ்ய ஸலக்ஷ்மணஸ்ய
ப்ரஸஹ்ய ஸீதா க₂லு ஸா இஹாஹ்ருதா ।
ஸக்ருத்ஸமீக்ஷ்யைவ ஸுநிஶ்சிதம் ததா₃
ப₄ஜேத சித்தம் யமுநேவ யாமுநம் ॥ (28)

மிகவும் செம்மையான குதிகால்கள்; சிவந்த நகங்களுடன் அழகாக அமைந்த உறுதியான இரு பாதங்கள் – இவைகளைப் பார்த்து, என் காமாக்னி கொழுந்துவிட்டெரிகிறது. (15)

நெய் ஆகுதி செய்யப்பட்ட ஹோமத்தீயின் சுவாலை போன்றவளும், சூரிய பகவானின் வெம்மைக் கதிர் போன்றவளும், அகன்ற கண்களை உடையவளுமான சீதையைப் பார்த்ததும், நான் காமவசப்பட்டேன். (16)

அவளுடைய நிமிர்ந்த நாசி, செழுமையும் அழகும் நிறைந்த முகம், கவின்மிகு கண்கள் ஆகியவைகளைக் கண்ட நான், அவள் வசப்பட்டேன்; காமனுக்கு அடிமையாகிவிட்டேன். கோபம்–மகிழ்ச்சி ஆகிய மாறுபட்ட இரு நிலைகளிலும், சரீரத்தின் நிறம் மாறும்போதும், மனத்துயரம்–உடல்வேதனை ஆகிய காலங்களிலும், என்னை விட்டுப் பிரியாதிருக்கும் காமத்தினால் நிலைகுலைந்திருக்கிறேன். (17,18)

விசாலமான கண்களையுடைய கட்டழகியான அவள், கணவர் இராமன் வருவார் என்று ஆவலுடன் எதிர்பார்ப்பவளாக, ஓர் ஆண்டுக் காலம் அவகாசம் கேட்டாள். (19)

அழகிய கண்களையுடைய அவள் வேண்டுகோளுக்கு நான் இசைவு தெரிவித்தேன். (ஆனால், நாட்கள் கடந்து கொண்டிருப்பதைக் கண்டு) வெகுதூரம் நடந்துவிட்ட குதிரைபோல, நீண்டகாலமாக அனுபவித்து வரும் காமவேட்கையால் நான் களைத்துப் போய்விட்டேன். (20)

(அவர்கள் நீந்தி வந்துவிடுவார்களோ? என்ற சந்தேகத்திற்கு இடமேயில்லை. ஏனென்றால்,) பெருங்கடல் கலக்க முடியாதது; நீர்வாழ்ப் பிராணிகளும் பெரிய பெரிய மீன்களும் வசிப்பது. வானரர்களோ, தசரதன் புதல்வர்களோ எவ்வாறு கடந்து வரமுடியும்? (21)

(வேறொரு விதமாகவும் சிந்திக்க வேண்டியுள்ளது.) ஒரே ஒரு குரங்கினால் நமக்குப் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நிகழ்ச்சிகளின் போக்கை (வெற்றி–தோல்வியை) நம்மால் அறிய முடியவில்லை. எனவே, நன்றாக ஆராய்ந்து உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள். மனிதர்களால் எனக்கு ஆபத்து ஏதும் இல்லை என்பதையும் நினைவிற்கொள்ளுங்கள். (22)

முன்னர் தேவாசுரர்களுடன் நடந்த போரில், உங்கள் உதவியினால்தான் நான் வெற்றியடைந்தேன். அவ்வாறு என் வெற்றிக்கு உதவிய நீங்களனைவரும் என்னுடன் இருக்கிறீர்கள். அரசகுமார்களாகிய அவ்விருவரும் சீதை இருக்குமிடத்தை அறிந்து கொண்டு, சுக்ரீவன் முதலான வானரவீரர்களுடன், (கடலைத் தாண்டி வருவதற்காக) சமுத்திரத்தின் எதிர்க்கரையில் வந்து தங்கியிருக்கிறார்கள். (23,24)

சீதையைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது; தசரத குமாரர்கள் கொல்லப்பட வேண்டும். இவ்விரண்டையும் செய்யக்கூடிய ஓர் உபாயத்தை நீங்கள் ஆலோசித்துத் தீர்மானமாகக் கூறுங்கள். (25)

உலகத்தில், இராமனைத் தவிர வேறு எவராலும் வானரர்களுடன் கூட, கடலைத் தாண்டி வரமுடியாது. எனவே, வெற்றி எனக்குத்தான் என்பது நிச்சயம்.'' (26)

காமத்தில் மூழ்கியிருந்த இராவணனின் பரிதாபமான புலம்பலைக் கேட்டு, கும்பகர்ணன் மிகவும் கோபம் கொண்டு, பின்வரும் சொற்களைக் கூறினான்— (27)

''ஒரு தடவைகூட எங்களைக் கலந்தாலோசியாமல் இராம–லட்சுமணர்களின் ஆசிரமத்திலிருந்து சீதையைக் கவர்ந்துகொண்டு வந்துவிட்டீர்கள். அப்போதே மந்திராலோசனை செய்து நிச்சயமான ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இனி பழைய நிலை திரும்பப் போவதில்லை. மலையில் உற்பத்தியாகும் யமுனை நதி பூமியை அடைவதற்கு முன், யமுனோத்ரியில் உள்ள ஒரு குண்டத்தை நீரால் நிரப்பிவிடுவதைப் போல. (குண்டத்தில் விழுந்த நீர், மறுபடியும் மலைக்கு ஏறிப் போகாது; தாழ்வான சமவெளியை நோக்கியே பாயும்.) (28)

ஸர்வமேதந்மஹாராஜ க்ருதமப்ரதிமம் தவ ।
விதீ$_4$யேத ஸஹாஸ்மாபி$_4$ராத$_3$ாவேவாஸ்ய கர்மண: ॥ (29)

ந்யாயேந ராஜா கார்யாணி ய: கரோதி த$_3$ஶாநந ।
ந ஸ ஸந்தப்யதே பஸ்'சாந்நிஸ்'சிதார்த$_2$மதிர்ந்ருப: ॥ (30)

அநுபாயேந கர்மாணி விபரீதாநி யாநி ச ।
க்ரியமாணாநி து$_3$ஷ்யந்தி ஹவீம்ஷ்யப்ரயதேஷ்விவ ॥ (31)

ய: பஸ்'சாத்பூர்வகார்யாணி குருதே பு$_3$த்$_3$தி$_4$மோஹித: ।
பூர்வம் சோத்தரகார்யாணி ந ஸ வேத$_3$ நயாநயௌ ॥ (32)

சபலஸ்ய து க்ருத்யேஷு ப்ரஸமீக்ஷ்யாதி$_4$கம் ப$_3$லம் ।
சி$_2$த்$_3$ரமந்யே ப்ரபத்$_3$யந்தே க்ரௌஞ்சஸ்ய க$_2$மிவ த்$_3$விஜா: ॥ (33)

த்வயேத$_3$ம் மஹதா$_3$ரப்$_3$த$_4$ம் கார்யமப்ரதிசிந்திதம் ।
தி$_3$ஷ்ட்யா த்வாம் நாவதீ$_4$த்$_3$ராமோ விஷமிஸ்'ரமிவாமிஷம் ॥ (34)

தஸ்மாத்த்வயா ஸமாரப்$_3$த$_4$ம் கர்ம ஹ்யப்ரதிமம் பரை: ।
அஹம் ஸமீகரிஷ்யாமி ஹத்வா ஶத்ரூந்ஸ்தவாநக$_4$ ॥ (35)

யதி$_3$ ஶக்ரவிவஸ்வந்தௌ யதி$_3$ பாவகமாருதௌ ।
தாவஹம் யோத$_4$யிஷ்யாமி குபே$_3$ரவருணாவபி ॥ (36)

கி$_3$ரிமாத்ரஶரீரஸ்ய ஶிதஶூலத$_4$ரஸ்ய ச ।
நர்த$_3$தஸ்தீக்ஷ்ணத$_3$ம்ஷ்ட்ரஸ்ய பி$_3$பி$_4$யாத்$_3$வை புரந்த$_3$ர: ॥ (37)

புநர்மாம் ஸ த்$_3$விதீயேந ஶரேண நிஹநிஷ்யதி ।
ததோऽஹம் தஸ்ய பாஸ்யாமி ருதி$_4$ரம் காமமாஸ்'வஸ ॥ (38)

வதே$_4$ந தே தா$_3$ஶரதே$_2$: ஸுக$_2$ாவஹம்
ஜயம் தவாஹர்துமஹம் யதிஷ்யே ।
ஹத்வா ச ராமம் ஸஹ லக்ஷ்மணேந
க$_2$ாத$_3$ாமி ஸர்வாந் ஹரியூத$_2$முக்$_2$யாந் ॥ (39)

ரமஸ்வ காமம் பிப$_3$ சாக்$_3$ர்யவாருணீம்
குருஷ்வ கார்யாணி ஹிதாநி விஜ்வர: ।
மயா து ராமே க$_3$மிதே யமக்ஷயம்
சிராய ஸீதா வஶக$_3$ா ப$_4$விஷ்யதி ॥ (40)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$வாத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

மாமன்னரே! (சீதையைக் கபடமாகக் கவர்ந்து வருவது என்ற கீழ்தரமான) இந்தக் காரியத்தைச் செய்வதற்கு முன்பே, இப்போது எங்களுடன் பேசும் எல்லா விஷயங்களும் முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் நிகரில்லாத ஓர் அடாத செயலைச் செய்துவிட்டீர்கள். இராவணா! எந்தவொரு மன்னன் அரசநீதிப்படி (மந்திராலோசனை செய்து) முன்னரே தீர்மானிக்கப்பட்டபடி அரசு நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்கிறானோ, அவன் (அந்த நடவடிக்கைகளில் தோல்வி ஏற்பட்டாலும்) பின்னால் தன்னிரக்கம் கொள்வதில்லை. (29,30)

முறைதவறி செய்யப்படுகிற காரியங்களும், மக்கள் நலனுக்கும் அறநூல் நெறிகளுக்கும் புறம்பாக நடத்தப்படும் காரியங்களும் தகுதியற்றவர்களால் வேள்விக் குண்டத்தில் சமர்ப்பிக்கப்படும் பொருள்களைப் போல, (கோரிய நற்பலனைத் தராததுடன்) விபரீதமான பலன்களையும் தரக்கூடியவையாக ஆகிவிடுகின்றன. எவனொருவன், மதிமயக்கத்தால் பின்னர் செய்ய வேண்டிய காரியங்களை முதலிலும், முதலில் செய்யவேண்டிய காரியங்களைப் பின்னரும் செய்கிறானோ, அவன் நியாய–அநியாயங்களைப் பகுத்து அறியாதவன். (31,32)

'எதிரிகள் நம்மைக் காட்டிலும் அதிக பலமுடையவர்கள்' என்பதை அறிந்திருந்தும், செய்ய வேண்டிய காரியத்தில் ஒரு நிச்சய முடிவை எடுக்காமல் சஞ்சலத்தில் ஆழ்ந்திருப்பவனை, கிரௌஞ்சமலையின் உயரே பறந்து செல்ல முடியாத அன்னப்பறவைகள், அதன் இடையிலுள்ள சுரங்கத் துவாரத்தின் வழியாக சுலபமாக எதிர்ப்பக்கத்தை அடைந்து விடுவதைப் போல, பகைவர்கள் எளிதில் வெற்றி கொண்டு விடுகிறார்கள். (முருகப் பெருமான், கிரௌஞ்சமலையின் கர்வத்தை அடக்குவதற்காக, தன்னுடைய சக்தி ஆயுதத்தினால் அந்த மலையைப் பிளந்தார் – மகாபாரதம், சல்ய பர்வம்) (33)

பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல், இந்தப் பாதகச் செயலை நீங்கள் செய்துவிட்டீர்கள். விஷம் கலந்த உணவு, உண்டவனது உயிரைப் பறித்து விடவே செய்யும். (போஜனத்தின்மேல் ஏற்பட்ட பெருவிருப்பத்தால், 'இதில் விஷம் கலந்திருக்கிறது' என்பதை கருத்தில் கொள்ளாமல், அந்த உணவை சாப்பிட்டானேயானால், நேரம் செல்லச் செல்ல, விஷம் தன் வேலையைச் செய்துவிடத்தான் செய்யும். ஆனால், 'நான் இன்னும் பிழைத்திருக்கிறேனே!' என்று நீங்கள் வாதம் செய்தால்,) ஏதோ ஒரு நற்பாக்கியத்தால் இதுவரை இராமன் உங்களைக் கொல்லாது விட்டுவிட்டிருக்கிறான். (34)

பிறரால் நினைத்துப் பார்க்கவும் முடியாத இழிசெயல் உங்களால் செய்யப்பட்டிருக்கிறது. மாசில்லாத புகழ் பெற்றவரே! உங்களுடைய எதிரிகளையெல்லாம் கொன்று, நான் காரியத்தை சரிப்படுத்தி (முடித்து) விடுகிறேன். (நம் எதிரிகளுக்குத் துணையாக) இந்திரன், சூரியன், அக்னி, வாயு, குபேரன், வருணன் ஆகிய எவர் வந்தாலும் சரி, நான் அவ்விருவர்களுடன் (இராம–லட்சுமணர்களுடன்) போர் செய்வேன். (35,36)

மலை போன்ற சரீரம் படைத்தவனும், கூரிய சூலத்தைத் தரித்தவனும், கூர்மையான கடைவாய்ப் பற்களை உடையவனுமான நான், போர்க்களத்தில் ஆவேசமாக சுற்றித் திரிந்து கர்ஜனை செய்தால் இந்திரன்கூட நடுநடுங்கிப் போவான். (ஒருவேளை, இராமன் என்மேல் ஒரு பாணத்தைவிட்டு, அது பயனற்றுப் போகவே,) இரண்டாவது அம்பினை எடுத்து என்மேல் ஏவும் முன்னரே, (அந்த இடைவேளையில்) அவனைக் கொன்று அவன் இரத்தத்தைக் குடிப்பேன். ஆகவே, நீங்கள் கவலையில்லாமல் அமைதியாக இருங்கள். (37,38)

தசரதகுமாரனைக் கொன்று, உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் வெற்றியைத் தேடித்தர, நான் முயற்சி செய்வேன். இராம–லட்சுமணர்களைக் கொன்று, வானர சேனைத் தலைவர்கள் எல்லோரையும் தின்று விடுவேன். நீங்கள் விருப்பம்போல் இன்பத்தை அனுபவியுங்கள்; உயர்ந்த மது அருந்துங்கள்; கவலைப்படாமல் உங்களுக்கு நன்மை தரக்கூடிய செயல்களில் ஈடுபடுங்கள். இராமன், என்னால் யமலோகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவான். பின்னர், நீண்ட நெடுங்காலத்திற்கு சீதை தங்கள் வசத்தில் இருப்பாள்.'' (39,40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

த்ரயோத$_3$ஶ: ஸர்க$_3$:

மஹாபார்ஶ்வவசோऽபி$_4$நந்த$_3$நம்

ராவணம் க்ருத்$_3$த$_4$மாஜ்ஞாய மஹாபார்ஶ்வோ மஹாப$_3$ல: ।
முஹூர்தமநுஸஞ்சிந்த்ய ப்ராஞ்ஜலிர்வாக்யமப்$_3$ரவீத் ॥ (1)

ய: க$_2$ல்வபி வநம் ப்ராப்ய ம்ருக$_3$வ்யாலஸமாகுலம் ।
ந பிபே$_3$ந்மது$_4$ ஸம்ப்ராப்தம் ஸ நரோ பா$_3$லிஶோ ப$_4$வேத் ॥ (2)

ஈஶ்வரஸ்யேஶ்வர: கோऽஸ்தி தவ ஶத்ருநிப$_3$ர்ஹண ।
ரமஸ்வ ஸஹ வைதே$_3$ஹ்யா ஶத்ரூநாக்ரம்ய மூர்த$_4$ஸு ॥ (3)

ப$_3$லாத்குக்குடவ்ருத்தேந வர்தஸ்வ ஸுமஹாப$_3$ல ।
ஆக்ரம்ய ஸீதாம் வைதே$_3$ஹீம் ததா$_2$ பு$_4$ங்க்ஷ்வ ரமஸ்வ ச ॥ (4)

லப்$_3$த$_4$காமஸ்ய தே பஶ்சாதா$_3$க$_3$மிஷ்யதி யத்$_3$ப$_4$யம் ।
ப்ராப்தமப்ராப்தகாலம் வா ஸர்வம் ப்ரதிஸஹிஷ்யஸி ॥ (5)

கும்ப$_4$கர்ண: ஸஹாஸ்மாபி$_4$ரிந்த்$_3$ரஜிச்ச மஹாப$_3$ல: ।
ப்ரதிஷேத$_4$யிதும் ஶக்தௌ ஸவஜ்ரமபி வஜ்ரிணம் ॥ (6)

உபப்ரதா$_3$நம் ஸாந்த்வம் வா பே$_4$த$_3$ம் வா குஶலை: க்ருதம் ।
ஸமதிக்ரம்ய த$_3$ண்டே$_3$ந ஸித்$_3$தி$_4$மர்தே$_2$ஷு ரோசய ॥ (7)

இஹ ப்ராப்தாந் வயம் ஸர்வாஞ்ஶத்ரூந்ஸ்தவ மஹாப$_3$ல ।
வஶே ஶஸ்த்ரப்ரதாபேந கரிஷ்யாமோ ந ஸம்ஶய: ॥ (8)

ஏவமுக்தஸ்ததா$_3$ராஜா மஹாபார்ஶ்வேந ராவண: ।
தஸ்ய ஸம்பூஜயந் வாக்யமித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (9)

மஹாபார்ஶ்வ நிபோ$_3$த$_4$ த்வம் ரஹஸ்யம் கிஞ்சிதா$_3$த்மந:
சிரவ்ருத்தம் ததா$_3$க்$_2$யாஸ்யே யத$_2$வாப்தம் மயா புரா ॥ (10)

பிதாமஹஸ்ய ப$_4$வநம் க$_3$ச்ச$_2$ந்தீம் புஞ்ஜிகஸ்த$_2$லாம் ।
சஞ்சூர்யமாணாமத்$_2$ராக்ஷமாகாஶேऽக்$_3$நிஶிகா$_2$மிவ ॥ (11)

ஸா ப்ரஸஹ்ய மயா பு$_4$க்தா க்ருதா விவஸநா தத: ।
ஸ்வயம்பூ$_4$ப$_4$வநம் ப்ராப்தா லோலிதா நளிநீ யதா$_2$ ॥ (12)

தஸ்ய தச்ச ததா$_3$ மந்யே ஜ்ஞாதமாஸீந்மஹாத்மந: ।
அத$_2$ ஸங்குபிதோ வேதா$_4$ மாமித$_3$ம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (13)

அத்$_3$யப்ரப்$_4$ருதி யாமந்யாம் ப$_3$லாந்நாரீம் க$_3$மிஷ்யஸி ।
ததா$_3$ தே ஶததா$_4$ மூர்தா$_4$ ப$_2$லிஷ்யதி ந ஸம்ஶய: ॥ (14)

ஸர்க்கம் : பதின்மூன்று

மகாபார்சுவன் கூறியது

(தன்னைக் குற்றஞ்சாட்டிப் பேசியதனால், கும்பகர்ணனிடம்) இராவணன் கோபத்துடன் இருக்கிறான் என்பதை அறிந்து கொண்ட மகாபலசாலியான மகாபார்சுவன் சிறிதுநேரம் தனக்குள்ளேயே ஆலோசனை செய்து, (மன்னனின் நன்மதிப்பைப் பெற விரும்பியவனாய்) கைகளைக் கூப்பிக்கொண்டு (பின்வருமாறு) கூறினான்— (1)

''எவனொருவன், கொடிய விலங்குகள் வசிக்கும் காட்டுக்கு வந்தும், அங்கே ஏராளமாகக் கிடைக்கக்கூடிய தேனைப் பருகாமலிருக்கிறானோ, அவன் சிற்றறிவாளன் என்று கொள்ளத்தக்கவன். எதிரிகளை மாய்ப்பவரே! தாங்களே எல்லோருக்கும் மேம்பட்டவர். தங்களுக்கு மேல் (அழகு, வீரம், செல்வம், பதவி, அதிகாரம் படைத்த) வேறு எவன் இருக்கிறான்? எதிரிகளின் தலைகளைக் கால்களால் அழுத்தி அடக்கிவிட்டு, சீதையுடன் இன்புற்றிருங்கள். (2,3)

மகாபலம் படைத்தவரே! பெட்டைக் கோழியைப் பிடிக்கும் தந்திரத்தைப் பின்பற்றுங்கள். மெல்ல மெல்ல சீதையிடம் சென்று, அவள் எதிர்பாராத நேரத்தில் கட்டிப்பிடித்து இன்பம் அனுபவியுங்கள். (4)

விருப்பம் நிறைவேறியபின், எதைக் கண்டும் பயப்பட வேண்டும்? எந்த ஆபத்தும் வராது. அப்படியே வந்தாலும், அப்போதைக்கேற்ற நிலையில், அதனை ஏற்று எதிர்கொள்வோம். (5)

கும்பகர்ணனும் பெரும்பலசாலியான இந்திரஜித்தும், எங்கள் ஒத்துழைப்புடன் வஜ்ராயுதம் தாங்கிய இந்திரனைக்கூடத் தடுத்து நிறுத்திவிடக் கூடியவர்கள். (6)

நீதிநூல் நிபுணர்களால் கூறப்பட்ட நால்வகை உபாயங்களில், சாம–பேத–தான உபாயங்களைக் காட்டிலும் தண்டம் என்ற போர் வழியே பலனை அளிக்கக் கூடியது என்று நிச்சயமாக நம்புங்கள். (7)

பேராற்றல் உடையவரே! இங்கே கூடியுள்ள நாங்கள் எல்லோரும், தங்கள் எதிரிகளையெல்லாம் சஸ்திரங்களைப் பொழிந்து அடக்கி விடுவோம் (சிறைப்படுத்தி விடுவோம்). இதில் சந்தேகமேயில்லை.'' (8)

இவ்வாறு மகாபார்சுவன் கூறியதைக் கேட்டு மனமகிழ்ந்த இராவணன், அவனைப் பாராட்டிவிட்டு, பின்னர் (பின்வருமாறு) சொன்னான்— (9)

''மகாபார்சுவனே! முன்னொரு காலத்தில், எனக்கு நிகழ்ந்த ஒரு ரகசிய சம்பவத்தை இப்போது சொல்கிறேன், கேள். (10)

முன்னொரு சமயம், புஞ்ஜிகஸ்தலை என்னும் அப்சர மங்கை, ஆகாயத்தில் ஜொலிக்கும் அக்னிப்பிழம்பு போன்ற பேரழகுடன், பிரும்மலோகத்தை நோக்கி, (நான், அவளைப் பார்த்து விடுவேனோ? என்ற) பயத்தால் பதுங்கி மறைந்து போய்க்கொண்டிருந்தாள். (11)

நான், அவளைக் கைப்பற்றி, துகிலுரித்து, பலாத்காரமாக அனுபவித்தேன். பின்னர், அவள் அந்த இடத்திலிருந்து (யானையால் துவம்சம் செய்யப்பட்ட) தாமரைக்கொடி போல் கசங்கித் தளர்ந்து, பிரும்மாவின் மாளிகையைச் சென்றடைந்தாள். (12)

அப்போது, மகாத்மாவான அவருக்கு நிகழ்ந்தனவெல்லாம் தெரிந்துவிட்டது என்று எண்ணுகிறேன். உடனே, அவர் மிக்க சினங்கொண்டு என்னைச் சபித்தார்— (13)

'இப்போது முதல் வேறு எந்தவொரு பெண்ணையும் பலாத்காரம் செய்யும் நோக்கத்துடன் நீ அணுகினால், அப்பொழுதே உன் தலை நூறு சுக்கலாகச் சிதறிப் போகும் என்பதில் ஐயமில்லை.' (14)

இத்யஹம் தஸ்ய ஶாபஸ்ய பீ$_4$த: ப்ரஸப$_4$மேவ தாம் ।
நாரோபயே ப$_3$லாத்ஸீதாம் வைதே$_3$ஹீம் ஶயநே ஸ்வகே ॥ (15)

ஸாக$_3$ரஸ்யேவ மே வேகோ$_3$ மாருதஸ்யேவ மே க$_3$தி: ।
நைதத்$_3$தா$_3$ஶரதி$_2$ர்வேத$_3$ ஹ்யாஸாத$_3$யதி தேந மாம் ॥ (16)

யஸ்து ஸிம்ஹமிவாஸீநம் ஸுப்தம் கி$_3$ரிகு$_3$ஹாஶயே ।
க்ருத்$_3$த$_4$ம் ம்ருத்யுமிவாஸீநம் ப்ரபோ$_3$த$_4$யிதுமிச்ச$_2$தி ॥ (17)

ந மத்தோ நிர்க$_3$தாந் பா$_3$ணாந் த்$_3$விஜிஹ்வாநிவ பந்நகா$_3$ந் ।
ராம: பஶ்யதி ஸங்க்$_3$ராமே தேந மாமபி$_4$க$_3$ச்ச$_2$தி ॥ (18)

க்ஷிப்ரம் வஜ்ரோபமைர்பா$_3$ணை: ஶததா$_4$ கார்முகச்யுதை: ।
ராமமாதீ$_3$பயிஷ்யாமி உல்காபி$_4$ரிவ குஞ்ஜரம் ॥ (19)

தச்சாஸ்ய ப$_3$லமாதா$_3$ஸ்யே ப$_3$லேந மஹதா வ்ருத: ।
உத$_3$யந் ஸவிதா காலே நக்ஷத்ராணாமிவ ப்ரபா$_4$ம் ॥ (20)

ந வாஸவேநாபி ஸஹஸ்ரசக்ஷுஷா
யுதா$_4$ஸ்மி ஶக்யோ வருணேந வா புந: ।
மயா த்வியம் பா$_3$ஹுப$_3$லேந நிர்ஜிதா
புரீ புரா வைஶ்ரவணேந பாலிதா ॥ (21)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகியே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரயோத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

சதுர்த$_3$ஶ: ஸர்க$_3$:

ப்ரஹஸ்தவிபீ$_4$ஷணவிவாத$_3$:

நிஶாசரேந்த்$_3$ரஸ்ய நிஶம்ய வாக்யம் ஸ கும்ப$_4$கர்ணஸ்ய ச க$_3$ர்ஜிதாநி ।
விபீ$_4$ஷணோ ராக்ஷஸராஜமுக்$_2$யமுவாச வாக்யம் ஹிதமர்த$_2$யுக்தம் ॥ (1)

வ்ருதோ ஹி பா$_3$ஹ்வந்தரபோ$_4$க$_3$ராஶிஶ்-
சிந்தாவிஷ: ஸுஸ்மிததீக்ஷ்ணத$_3$ம்ஷ்ட்ர: ।
பஞ்சாங்கு$_3$ளீபஞ்சஶிரோऽதிகாய:
ஸீதாமஹாஹிஸ்தவ கேந ராஜந் ॥ (2)

யாவந்ந லங்காம் ஸமபி$_4$த்$_3$ரவந்தி வலீமுகா$_2$: பர்வதகூடமாத்ரா: ।
த$_3$ம்ஷ்ட்ராயுதா$_4$ஶ்சைவ நகா$_2$யுதா$_4$ஶ்ச ப்ரதீ$_3$யதாம் தா$_3$ஶரதா$_2$ய மைதி$_2$லீ ॥ (3)

யாவந்ந க்$_3$ருஹ்ணந்தி ஶிராம்ஸி பா$_3$ணா ராமேரிதா ராக்ஷஸபுங்க$_3$வாநாம் ।
வஜ்ரோபமா வாயுஸமாநவேகா$_3$: ப்ரதீ$_3$யதாம் தா$_3$ஶரதா$_2$ய மைதி$_2$லீ ॥ (4)

பிரும்மாவின் இந்த சாபத்தினால், நான் மிகவும் அச்சத்தில் இருக்கிறேன். அதனால்தான், வைதேகியைக் கட்டாயப்படுத்தி, என் படுக்கையில் ஏற்றாமலிருக்கிறேன். (15)

பெருங்கடல் போல் கலங்காத பேராற்றல் உடையவன், நான்; செயல்படுவதில் வாயுவைப் போன்றவன், நான். இதை அறியாத தசரதகுமாரன், என்னை எதிர்ப்பதற்காக வந்து கொண்டிருக்கிறான்! (16)

மலைக்குகைக்குள் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் சிங்கத்தையும், கோபத்துடன் வீற்றிருக்கும் காலனையும் சீண்டுவதற்கு எவன்தான் துணிவான்? (17)

போர்க்களத்தில், இரு நாக்குகள் படைத்த பாம்புகளைப் போன்ற (விஷம் தோய்ந்த) பாணங்களை, நான் செலுத்துவதை இராமன் பார்த்ததில்லை. அதனால், என்னை எதிர்த்துப் போர்புரிய வருகிறான்! (18)

எதிர்த்துவரும் யானையை நோக்கி, நூற்றுக்கணக்கான கொள்ளிக்கட்டைகளை வீசியெறிந்து மக்கள் அதனை விரட்டியடிப்பதைப் போல, என்னுடைய வில்லிலிருந்து வேகமாகப் புறப்படும் வஜ்ராயுதம் போன்ற நூற்றுக்கணக்கான பாணங்களால் இராமனை எரித்துவிடப் போகிறேன். அதிகாலையில் உதிக்கும் சூரியன், நட்சத்திரங்களுடைய ஒளியை பறித்து விடுவதைப் போல, பெரும் வானரப்படையுடன் கூடிய இராமனுடைய பலத்தை அடக்கிவிடுவேன். (19,20)

ஆயிரம் கண் படைத்த இந்திரன் மற்றும் வருணனால்கூட என்னுடன் போர்புரிய முடியாது. முன்னர், குபேரனால் ஆட்சி செய்யப்பட்ட இந்த இலங்கைப் பட்டணம், என் தோள்வலியால் என்னால் வெற்றி கொள்ளப்பட்டது. (குபேரனால்கூட என்னை வெல்ல முடியவில்லை என்னும்போது, இராமன் எம்மாத்திரம்?)'' (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதிநான்கு

பிரஹஸ்தன்–விபீஷணன் விவாதம்

அரக்க மன்னரின் சொற்களையும், கும்பகர்ணனின் வீரவசனங்களையும் கேட்டு, அரக்கர்களின் மாபெரும் தலைவனான இராவணனைப் பார்த்து, யுக்தியோடு கூடியதும் நற்பயனை விளைவிக்கக் கூடியதுமான சொற்களை விபீஷணன் கூறினான்— (1)

''கொடிய விஷமுடைய பேருருவம் கொண்ட சர்ப்பம் போன்ற சீதை, எவரால் உங்கள் கழுத்தில் கட்டப்பட்டார்? அவருடைய தோள்களின் இடைப்பட்ட பாகமாகிய மார்புதான் (பாம்பின்) படம்; அவர் பட்டுக் கொண்டிருக்கும் கவலையே விஷம்; புன்சிரிப்பே கோரைப்பற்கள்; கையின் ஐந்து விரல்களே ஐந்து முகங்கள். (2)

மலைமுகட்டைப் போன்று பருமனும் உயரமும் உடையவர்களும், கோரைப்பற்களையும் நகங்களையும் ஆயுதங்களாக உடையவர்களுமான வானரர்கள், இலங்கையைத் தாக்குவதற்கு முன்பாகவே, மைதிலிதேவியை ஸ்ரீராமனிடம் சேர்ப்பித்துவிடுங்கள். (3)

ஸ்ரீராமனால் ஏவப்படும் வஜ்ராயுதம் போன்ற வலிமைமிக்க காற்றைப்போல் கடிந்து செல்கின்ற பாணங்கள், அரக்கவீரர்களின் தலையைக் கொய்வதற்கு முன்பாகவே, மைதிலிதேவியை ஸ்ரீராமனிடம் சேர்ப்பித்துவிடுங்கள். (4)

ந கும்ப4கர்ணேந்த்3ரஜிதௌ ச ராஜந்–
ஸ்ததா2 மஹாபார்ஸ்வமஹோத3ரௌ வா ।
நிகும்ப4கும்பௌ4 ச ததா2திகாய:
ஸ்தா2தும் ந ஶக்தா யுதி4 ராக4வஸ்ய ॥ (5)

ஜீவம்ஸ்து ராமஸ்ய ந மோக்ஷ்யஸே த்வம்
கு3ப்த: ஸவித்ராப்யத2 வா மருத்3பி4: ।
ந வாஸவஸ்யாங்கக3தோ ந ம்ருத்யோர்–
ந க2ம் ந பாதாலமநுப்ரவிஷ்ட: ॥ (6)

நிஶம்ய வாக்யம் து விபீ4ஷணஸ்ய
தத: ப்ரஹஸ்தோ வசநம் ப3பா4ஷே ।
ந நோ ப4யம் வித்3ம ந தை3வதேப்4யோ
ந தா3நவேப்4யோ ஹ்யத2வா குதஶ்சித் ॥ (7)

ந யக்ஷக3ந்த4ர்வமஹோரகே3ப்4யோ ப4யம் ந ஸங்க்2யே பதகோ3த்தமேப்4ய: ।
கத2ம் நு ராமாத்3ப4விதா ப4யம் நோ நரேந்த்3ரபுத்ராத்ஸமரே கதா3சித் ॥ (8)

ப்ரஹஸ்தவாக்யம் த்வஹிதம் நிஶம்ய விபீ4ஷணோ ராஜஹிதாநுகாங்க்ஷீ ।
ததோ மஹார்த2ம் வசநம் ப3பா4ஷே த4ர்மார்த2காமேஷு நிவிஷ்டபு3த்3தி4: ॥ (9)

ப்ரஹஸ்த ராஜா ச மஹோத3ரஶ்ச த்வம் கும்ப4கர்ணஶ்ச யதா3ர்த2ஜாதம் ।
ப்3ரவீத2 ராமம் ப்ரதி தந்ந சக்யம் யதா2 க3தி: ஸ்வர்க3மத4ர்மபு4த்3தே4: ॥ (10)

வத4ஸ்து ராமஸ்ய மயா த்வயா வா ப்ரஹஸ்த ஸர்வைரபி ராக்ஷஸைர்வா ।
கத2ம் ப4வேத3ர்த2விசாரத3ஸ்ய மஹார்ணவம் தர்துமிவாப்லவஸ்ய ॥ (11)

த4ர்மப்ரதா4நஸ்ய மஹாரத2ஸ்ய
இக்ஷ்வாகுவம்ஶப்ரப4வஸ்ய ராக்ஞ: ।
ப்ரஹஸ்த தே3வாஶ்ச ததா2வித4ஸ்ய
க்ருத்யேஷு ஶக்தஸ்ய ப4வந்தி மூடா4: ॥ (12)

தீக்ஷ்ணா ந தாவத்தவ கங்கபத்ரா
து3ராஸதா3 ராக4வவிப்ரமுக்தா: ।
பி4த்த்வா ஶரீரம் ப்ரவிஶந்தி பா3ணா:
ப்ரஹஸ்த தேநைவ விகத்த2ஸே த்வம் ॥ (13)

ந ராவணோ நாதிப3லஸ்த்ரிஶீர்ஷோ
ந கும்ப4கர்ணோऽஸ்ய ஸுதோ நிகும்ப4: ।
ந சேந்த்3ரஜித்3தா3ஶரதி2ம் ப்ரஸோடு4ம்
த்வம் வா ரணே ஶக்ரஸமம் ஸமர்தா2: ॥ (14)

மன்னரே! கும்பகர்ணன், இந்திரஜித், மகாபார்சுவன், மகோதரன், நிகும்பன், கும்பன், அதிகாயன் ஆகிய எவராலும் போர்க்களத்தில், ஸ்ரீராமன் எதிரே நிற்கக்கூட முடியாது. (5)

சூரியன் அல்லது மற்ற தேவதைகளால் நீ பாதுகாக்கப்பட்டாலும், ஸ்ரீராமனிடமிருந்து உன்னால் உயிருடன் தப்பி வரமுடியாது. இந்திரன் அல்லது யமன் மடியில் அமர்ந்து (தம் குழந்தை போல் கவனமாகக்) காப்பாற்றப்பட்டாலும், உயிருடன் திரும்ப முடியாது. ஆகாயம் அல்லது பாதாளத்தில் போய் ஒளிந்து கொண்டாலும் ஸ்ரீராமனிடமிருந்து தப்ப முடியாது.'' (6)

விபீஷணனுடைய யுக்திபூர்வமான சொற்களைக் கேட்டவுடன், பிரஹஸ்தன் பதில் கூறினான்— ''தேவர்களிடமிருந்தோ, அசுரர்களிடமிருந்தோ அல்லது வேறு எவரிடத்திலிருந்தும் நாம் பயத்தைக் கண்டதில்லை. (7)

நாம், போரில் யட்ச–கந்தர்வ–பெரியசர்ப்பம்–பறவை–நாகங்களிடமிருந்தும் அஞ்சியதில்லை. (அவர்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றிருக்கிறோம் என்னும்போது) மானுடகுலத்தில் தோன்றிய மன்னரின் புதல்வனாகிய இராமனிடமிருந்து எப்போதாவது ஆபத்து ஏற்படக்கூடுமா, என்ன?'' (8)

அப்போது, தரும–அர்த்த–காமங்கள் என்னும் புருஷார்த்தங்களில் நன்றாகத் தேர்ச்சி பெற்றிருந்தவனும், அரசனின் நன்மையில் நாட்டமுடையவனுமான விபீஷணன், பிரஹஸ்தனின் சொற்களைக் கேட்டு, பொருள் பொதிந்த வார்த்தைகளைக் கூறினான்— (9)

''பிரஹஸ்தனே! மகாபாவியான ஒருவன் சுவர்க்கத்தை அடைய முடியாது. அதுபோல மன்னர் இராவணன், மகோதரன், நீ மற்றும் கும்பகர்ணன் ஆகியோர் ஸ்ரீராமனைப் பற்றி (அவரை எதிர்த்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்வது பற்றி) எவ்வாறெல்லாம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறீர்களோ, அவை எதுவும் நடைபெறக் கூடியனவல்ல. (10)

பிரஹஸ்தனே! ஸ்ரீராமன், எல்லாக் காரியங்களையும் திறமையாகச் செய்வதற்கு சாமர்த்தியம் உடையவர். அப்படிப்பட்டவரைக் கொல்வது என்பது, கப்பல் இல்லாதவன் பெருங்கடலைக் கடக்க முடியாததைப் போல, உன்னாலோ, என்னாலோ, அரக்கர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்தோ, செய்யக்கூடிய காரியம் இல்லை. (இராமனிடமுள்ள அந்தத் தனித்திறமை (கப்பல்) நம்மிடம் இல்லை.) (11)

பிரஹஸ்தனே! நால்வகை புருஷார்த்தங்களில் தருமம் ஒன்றையே மிகவும் முக்கியமாகக் கொண்டவரும், மாவீரரும், (பெருமைமிக்க) இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றியவரும், எல்லாச் செயல்களையும் நிறைவேற்றும் திறன் படைத்தவருமான அரசனின் (இராமனின்) எதிரே நிற்கும்போது, தேவர்கள்கூட அறிவு மழுங்கிப் போகிறார்கள். (அதாவது செயலற்றுப் போகிறார்கள் என்னும்போது, அவர் எதிரில் நீயும் நானும் எம்மாத்திரம்?) (12)

பிரஹஸ்தனே! ஸ்ரீராமனால் ஏவப்பட்ட, பறவை இறகுகள் இணைக்கப்பட்ட, கூர்மையான, எதிர்க்க முடியாத பாணங்கள் உன் மார்பைப் பிளந்து கொண்டு, இதுவரை உள்ளே புகவில்லை என்ற காரணத்தால், நீ பெருமை பேசிக் கொண்டிருக்கிறாய். (13)

இராவணன், பேராற்றல் படைத்த திரிசீர்ஷன், கும்பகர்ணன், அவருடைய புதல்வன் நிகும்பன், இந்திரஜித் மற்றும் நீ ஆகிய எவரும், போர்க்களத்தில் இந்திரனுக்கு நிகரான இராமனின் மகாவேகத்தைத் தாங்கும் சக்தி படைத்தவர்கள் அல்லர். (14)

தே$_3$வாந்தகோ வாபி நராந்தகோ வா தத$_2$ாதிகாயோऽதிரதே$_2$ா மஹாத்மா ।
அகம்பநஶ்சாத்$_3$ரிஸமாநஸாரா: ஸ்த$_2$ாதும் ந ஶக்தா யுதி$_4$ ராக$_4$வஸ்ய ॥ (15)

அயம் ஹி ராஜா வ்யஸநாபி$_4$பூ$_4$தோ
மித்ரைரமித்ரப்ரதிமைர்ப$_4$வத்$_3$பி$_4$: ।
அந்வாஸ்யதே ராக்ஷஸநாஶநாய
தீக்ஷ்ண: ப்ரக்ருத்யா ஹ்யஸமீக்ஷ்யகாரீ ॥ (16)

அநந்தபே$_4$ாகே$_3$ந ஸஹஸ்ரமூர்த்$_4$நா நாகே$_3$ந பீ$_4$மேந மஹாப$_3$லேந ।
ப$_3$லாத்பரிக்ஷிப்தமிமம் ப$_4$வந்தோ ராஜாநமுத்க்ஷிப்ய விமோசயந்து ॥ (17)

யாவத்$_3$தி$_4$ கேசக்$_3$ரஹணாத் ஸுஹ்ருத்$_3$பி$_4$:
ஸமேத்ய ஸர்வை: பரிபூர்ணகாமை: ।
நிக்$_3$ருஹ்ய ராஜா பரிரக்ஷிதவ்யோ
பூ$_4$தைர்யத$_2$ா பீ$_4$மப$_3$லைர்க்$_3$ருஹீத: ॥ (18)

ஸுவாரிணா ராக$_4$வஸாக$_3$ரேண
ப்ரச்ச$_2$ாத்$_3$யமாநஸ்தரஸா ப$_4$வத்$_3$பி$_4$: ।
யுக்தஸ்த்வயம் தாரயிதும் ஸமேத்ய
காகுத்ஸ்த$_2$பாதாலமுகே$_2$ பதந் ஸ: ॥ (19)

இத$_3$ம் புரஸ்யாஸ்ய ஸராக்ஷஸஸ்ய
ராஜ்ஞஶ்ச பத்$_2$யம் ஸஸுஹ்ருஜ்ஜநஸ்ய ।
ஸம்யக்$_3$ஹி வாக்யம் ஸததம் ப்$_3$ரவீமி
நரேந்த்$_3$ரபுத்ராய த$_3$தா$_3$ம பத்நீம் ॥ (20)

பரஸ்ய வீர்யம் ஸ்வப$_3$லம் ச பு$_3$த்$_3$த்$_4$வா
ஸ்த$_2$ாநம் க்ஷயம் சைவ ததை$_2$வ வ்ருத்$_3$தி$_4$ம் ।
தத$_2$ா ஸ்வபக்ஷேऽப்யநும்ருஶ்ய பு$_3$த்$_3$த்$_4$யா
வதே$_3$த்க்ஷமம் ஸ்வாமிஹிதம் ச மந்த்ரீ ॥ (21)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ சதுர்த$_3$ஶ: ஸர்க$_3$: ॥

பஞ்சத$_3$ஶ: ஸர்க$_3$:

இந்த்$_3$ரஜித்$_3$விபீ$_4$ஷணவிவாத$_3$:

ப்$_3$ருஹஸ்பதேஸ்துல்யமதேர்வசஸ்தந்நிஶம்ய யத்நேந விபீ$_4$ஷணஸ்ய ।
ததோ மஹாத்மா வசநம் ப$_3$ப$_4$ாஷே தத்ரேந்த்$_3$ரஜிந்நைர்ருதயோத$_4$முக்$_2$ய: ॥ (1)

தேவாந்தகன், நராந்தகன், அதிகாயன், மகத்தான ஆற்றலுடைய அதிரதன், மலை போன்ற நிலைகுலையாத அகம்பனன் ஆகிய எவரும் போர்க்களத்தில் ஸ்ரீராமன் எதிரே நிற்க முடியாது. (15)

இதோ, அரியணையில் வீற்றிருக்கும் மன்னர், பிறவியிலேயே கொடியவர்; ஆலோசனை செய்யாது காரியம் செய்பவர்; நீதிக்குப் புறம்பானவைகளைச் செய்துவிட்டுப் பின்னர் வருத்தம் கொள்பவர்; எதிரியைப் போன்று (உண்மையில் மன்னனுடைய நலனை விரும்பாமல், முகஸ்துதி செய்து, தீயனவாயினும் அவருக்கு உடன்பாடான) தவறான ஆலோசனை அளித்து, நண்பரைப் போல் காட்டிக்கொள்ளும் உங்களால், அரக்கர்களின் அழிவை முன்னிட்டு, உங்கள் சொற்களை ஆமோதிக்கிறவர். (16)

பெரிய உடல் கொண்டதும், ஆயிரம் தலைகளுடையதும், பயங்கரமானதும், மிகவும் வலிமையுடையதுமான பாம்பினால் சுற்றிக்கொள்ளப்பட்டிருக்கும் நம்முடைய மன்னரை, நீங்கள் அனைவரும் பாம்பின் கோரப் பிடியிலிருந்து பலவந்தமாக விடுவித்துக் காப்பாற்றுங்கள். (17)

நீங்கள் எல்லோரும் (மன்னரால்) அவரவர் விருப்பங்கள் நிறைவேறப்பட்டவர்கள். ஆகவே, பயங்கரமான பலங்கொண்ட பூத–பிசாசங்களால் ஆட்கொள்ளப்பட்டு பெருந்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவனை, அவனது உற்றார்–உறவினர்கள் முரட்டுத்தனமாக, அவன் தலைக்கேசத்தைப் பற்றியிழுத்தேனும் காப்பாற்றுவதைப் போல, (மன்னரிடம் காட்டும் பணிவான முறைகளைக் கைவிட்டு விட்டும்கூட) நீங்களெல்லோரும் ஒன்று சேர்ந்து மன்னரைக் காப்பாற்ற வேண்டும். (18)

லட்சுமணன் என்ற மகாசமுத்திரம், இவரை மூடிக் கொண்டிருக்கிறது. அதன் வேகத்தினால் இழுத்துச் செல்லப்பட்டு, இராமன் என்ற வடவாக்னியில் இவர் விழுவதற்கு (விழுந்து சாம்பலாவதற்கு) முன்னால், உடனேயே நீங்களெல்லோரும் சேர்ந்து காப்பாற்றப்பட வேண்டும். (19)

அரக்கர்கள் நிறைந்த இந்த நகரம் மற்றும் நண்பர்கள் புடைசூழ்ந்து நிற்கும் மன்னர் ஆகியன காப்பாற்றப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, எப்போதும் என் மனத்தில் இருக்கும் கருத்தைத் தெளிவாக இப்போது கூறுகிறேன்— மன்னர் திருக்குமாரரிடம் அவருடைய பத்தினியை திருப்பிக் கொடுத்து விடுவோம். (20)

உண்மையைக் கூறப்போனால், எந்த ஒரு அமைச்சன், தங்கள் பலத்தையும் எதிரிகளின் படைபலம், பேராற்றல் ஆகியவைகளையும் தெளிவாகத் தெரிந்துகொண்டு, இரண்டு பக்கங்களின் நிலைப்பாடு, குறை–நிறைகளைத் தன் அறிவினால் நன்றாக ஆலோசித்து, தலைவனுக்கு நன்மை தரத்தக்கதும், சக்திக்கு ஏற்றதாகவும் இருக்கும் ஆலோசனைகளைக் கூறுகிறானோ, அவன்தான் அமைச்சன் எனத் தக்கவன்.'' (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பதிநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினைந்து

இந்திரஜித்–விபீஷணன் விவாதம்

அரக்கப் போர்வீரர்களில் முக்கியமானவனும், அளவில்லாத ஆற்றலுடையவனுமான இந்திரஜித், பிருஹஸ்பதிக்கு நிகரான அறிவுபடைத்த விபீஷணனுடைய சொற்களை உன்னிப்பாகக் கேட்ட பிறகு, பின்வருமாறு கூறினான்— (1)

கிம் நாம தே தாத கநிஷ்ட$_2$ வாக்ய–
மநர்த$_2$கம் சைவ ஸுபீ$_4$தவச்ச ।
அஸ்மிந் குலே யோऽபி ப$_4$வேந்ந ஜாத:
ஸோऽபீத்$_3$ருஶம் நைவ வதே$_3$ந்ந குர்யாத் ॥ (2)

ஸத்த்வேந வீர்யேண பராக்ரமேண
ஶௌர்யேண தை$_4$ர்யேண ச தேஜஸா ச ।
ஏக: குலேऽஸ்மிந் புருஷோ விமுக்தோ
விபீ$_4$ஷணஸ்தாத கநிஷ்ட$_2$ ஏஷ: ॥ (3)

கிம் நாம தௌ ராக்ஷஸ ராஜபுத்ரா–
வஸ்மாகமேகேந ஹி ராக்ஷஸேந ।
ஸுப்ராக்ருதேநாபி ரணே நிஹந்தும்
ஶக்யௌ குதோ பீ$_4$ஷயஸே ஸ்ம பீ$_4$ரோ ॥ (4)

த்ரிலோகநாதோ$_2$ நநு தே$_3$வராஜ: ஶக்ரோ மயா பூ$_4$மிதலே நிவிஷ்ட: ।
ப$_4$யார்தி$_3$தாஶ்சாபி தி$_3$ஶ: ப்ரபந்நா: ஸர்வே ததா$_2$ தே$_3$வக$_3$ணா: ஸமக்$_3$ரா: ॥ (5)

ஐராவதோ விஸ்வரமுந்நத$_3$ந் ஸ
நிபாதிதோ பூ$_4$மிதலே மயா து ।
விக்ருஷ்ய த$_3$ந்தௌ து மயா ப்ரஸஹ்ய
வித்ராஸிதா தே$_3$வக$_3$ணா: ஸமக்$_3$ரா: ॥ (6)

ஸோऽஹம் ஸுராணாமபி த$_3$ர்பஹந்தா
தை$_3$த்யோத்தமாநாமபி ஶோகதா$_3$தா ।
கத$_2$ம் நரேந்த்$_3$ராத்மஜயோர்ந ஶக்தோ
மநுஷ்யயோ: ப்ராக்ருதயோ: ஸுவீர்ய: ॥ (7)

அதே$_2$ந்த்$_3$ரகல்பஸ்ய து$_3$ராஸத$_3$ஸ்ய மஹௌஜஸஸ்தத்$_3$வசநம் நிஶம்ய ।
ததோ மஹார்த$_2$ம் வசநம் ப$_3$பா$_4$ஷே விபீ$_4$ஷண: ஶஸ்த்ரப்$_4$ருதாம் வரிஷ்ட$_2$: ॥ (8)

ந தாத மந்த்ரே தவ நிஶ்சயோऽஸ்தி பா$_3$லஸ்த்வமத்$_3$யாப்யவிபக்வபு$_3$த்$_3$தி$_4$: ।
தஸ்மாத்த்வயா ஹ்யாத்மவிநாஶநாய வசோऽர்த$_2$ஹீநம் ப$_3$ஹு விப்ரலப்தம் ॥ (9)

புத்ரப்ரவாதே$_3$ந து ராவணஸ்ய த்வமிந்த்$_3$ரஜிந்மித்ரமுகோ$_2$ऽஸி ஶத்ரு: ।
யஸ்யேத்$_3$ருஶம் ராக$_4$வதோ விநாஶம் நிஶம்ய மோஹாத$_3$நுமந்யஸே த்வம் ॥ (10)

த்வமேவ வத்$_4$யஶ்ச ஸுது$_3$ர்மதிஶ்ச
ஸ சாபி வத்$_4$யோ ய இஹாநயத்த்வாம் ।
பா$_3$லம் த்$_3$ருட$_4$ம் ஸாஹஸிகம் ச யோऽத்$_3$ய
ப்ராவேஶயந்மந்த்ரக்ருதாம் ஸமீபம் ॥ (11)

''என் சிற்றப்பனே! மிகவும் அச்சங்கொண்ட ஒருவனுடைய பேச்சைப் போல, உங்கள் பேச்சு பயனற்றதாக இருக்கிறது. நம்முடைய குலத்தில் பிறக்காத ஒருவன்கூட (ஏதோவொரு கீழ்க்குலத்தில் பிறந்தவன்கூட) ஒருபோதும் இப்படிப்பட்ட பேச்சைப் பேச மாட்டான்; இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய மாட்டான். (2)

தந்தையே! மேன்மை பொருந்திய நம்முடைய குலத்தில் பிறவிக்குணம், பெருமை, ஆண்மை, ஆற்றல், ஆபத்துக் காலத்திலும் மனம் கலங்காதிருத்தல், அவமானம் நேரும்போது பொங்கியெழுவது போன்ற நற்குணங்கள் அணுகாதிருக்கும் ஒரே நபர், உங்கள் கடைசித் தம்பி (கனிஷ்ட: – கடைநிலைப் பட்டவர்) விபீஷணன் மட்டும்தான். (3)

பயத்தால் நடுங்கிக் கொண்டிருக்கும் என் சிற்றப்பனே! மானுடர்களான அவ்விரு அரசகுமாரர்களும் எம்மாத்திரம்? நம்மிடமுள்ள பாமரனான ஓர் அரக்கன்கூட அவர்களைக் கொன்றுவிடுவான். வீணாக எங்களை ஏன் பயமுறுத்துகிறீர்கள்? (4)

மூன்று உலகங்களுக்கும் தலைவனும் அமரர் வேந்தனுமான இந்திரன், என்னால் தேவலோகத்திலிருந்து மண்ணுலகத்திற்கு இழுத்து வரப்பட்டான். அப்போது, மிகவும் அச்சமடைந்த தேவர்களனைவரும் திசைக்கொருவராக ஓடி ஒளிந்தார்கள், இல்லையா? (5)

நான், ஐராவதத்தின் (இந்திரனுடைய யானையின்) தந்தங்களைப் பிடுங்கி, தேவலோகத்திலிருந்து கீழே பூலோகத்திற்குத் தள்ளிவிட்டேன். அதன் பரிதாபமான அலறலைக் கேட்டு, தேவர்கள் எல்லோரும் மிகவும் பயந்துபோனார்கள். (6)

நான், தேவர்களுடையவும் செருக்கை அழித்தவன்; அசுரவீரர்களுக்கு (அவர்கள் கொழுப்பை அடக்கி) துயரத்தைக் கொடுத்தவன்; பேராற்றல் மிக்கவன். அப்படிப்பட்ட நான், அற்பப் பிராணியான மனித குலத்தில் தோன்றிய அரசகுமாரர்கள் இருவரையும் வெற்றிகொள்ளும் திறன் இல்லாதவனா, என்ன?'' (7)

இந்திரனுக்கு நிகரானவனும், அளவில்லாத ஆற்றலுடையவனும், எவராலும் எதிர்த்து நிற்க முடியாதவனுமான இந்திரஜித்தின் வீரமொழிகளைக் கேட்டபின், ஆயுதம் ஏந்தியவர்களுள் தலையாயவனான விபீஷணன், நற்பயன் விளைவிக்கும் பின்வரும் சொற்களைக் கூறினான்— (8)

''செல்வனே! நீ, இன்னும் சிறுவனாக இருக்கிறாய். உன்னுடைய அறிவு முதிர்ச்சி அடையவில்லை. செய்யத்தக்கது எது? செய்யத்தகாதது எது? என்பது பற்றி நிச்சயிக்கக்கூடிய பக்குவம் ஏற்படவில்லை. அதனால்தான், உன் அழிவையும் தேடிக்கொள்ளும் பொருட்டு பொருளில்லாத பல சொற்களைப் படபடத்துப் பேசுகிறாய். (9)

இந்திரஜித்! நீ, இராவணனுடைய புதல்வன் என்பது வெளித்தோற்றத்தில்தான்; உள்ளுக்குள்ளே நீ அவருக்குப் பகைவனாக இருக்கிறாய். அதனால்தான், (இராமன் கையால்) இவருக்கு அழிவு ஏற்படும் என்று காரண விளக்கங்களோடு நான் எடுத்துக் கூறிய பின்னரும், அவர் சொல்வதையே (சீதையைக் கொடுக்க மாட்டேன்; இராமனை அழிப்பேன் என்பதையே) ஆமோதித்துப் பேசுகிறாய். (10)

நீ, தீய அறிவுடையவன். ஆகவே, கொல்லத்தக்கவன். உன்னை இங்கே கொண்டு வந்தாரே, அவரும் கொல்லத்தக்கவர்! சிறுவன், கொடியவன், துணிவுள்ளவன் – எல்லாம் சரி. ஆனால், மந்திராலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள உனக்கு அனுமதி கொடுத்தாரே, அவரும் கொல்லத்தக்கவரே! (11)

மூடோ$_4$ऽப்ரக$_3$ல்போ$_4$ऽவிநயோபபந்நஸ்–
தீக்ஷ்ணஸ்வபா$_4$வோऽல்பமதிர்து$_3$ராத்மா ।
மூர்க$_2$ஸ்த்வமத்யந்தஸுது$_3$ர்மதிஶ்ச
த்வமிந்த்$_3$ரஜித்$_3$பா$_3$லதயா ப்$_3$ரவீஷி ॥ (12)

கோ ப்$_3$ரஹ்மத$_3$ண்ட$_3$ப்ரதிமப்ரகாஶா–
நர்சிஷ்மத: காலநிகாஶரூபாந் ।
ஸஹேத பா$_3$ணாந் யமத$_3$ண்ட$_3$கல்பாந்
ஸமீக்ஷ்ய முக்தாந் யுதி$_4$ ராக$_4$வேண ॥ (13)

த$_4$நாதி ரத்நாநி விபூ$_4$ஷணாநி
வாஸாம்ஸி தி$_3$வ்யாநி மணீம்ஶ்ச சித்ராந் ।
ஸீதாம் ச ராமாய நிவேத்$_3$ய தே$_3$வீம்
வஸேம ராஜந்நிஹ வீதஶோகா: ॥ (14)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

ஷோட$_3$ஶ: ஸர்க$_3$:

விபீ$_4$ஷணாக்ரோஶ:

ஸுநிவிஷ்டம் ஹிதம் வாக்யமுக்தவந்தம் விபீ$_4$ஷணம் ।
அப்$_3$ரவீத்பருஷம் வாக்யம் ராவண: காலசோதி$_3$த: ॥ (1)

வஸேத்ஸஹ ஸபத்நேந க்ருத்$_3$தே$_4$நாஶீவிஷேண வா ।
ந து மித்ரப்ரவாதே$_3$ந ஸம்வஸேச்ச$_2$த்ருஸேவிநா ॥ (2)

ஜாநாமி ஶீலம் க்ஞாதீநாம் ஸர்வலோகேஷு ராக்ஷஸ ।
ஹ்ருஷ்யந்தி வ்யஸநேஷ்வேதே க்ஞாதீநாம் க்ஞாதய: ஸதா$_3$ ॥ (3)

ப்ரதா$_4$நம் ஸாத$_4$கம் வைத்$_3$யம் த$_4$ர்மஶீலம் ச ராக்ஷஸ ।
க்ஞாதயோ ஹ்யவமந்யந்தே ஶூரம் பரிப$_4$வந்தி ச ॥ (4)

நித்யமந்யோந்யஸம்ஹ்ருஷ்டா வ்யஸநேஷ்வாததாயிந: ।
ப்ரச்ச$_2$ந்நஹ்ருத$_3$யா கோ$_4$ரா க்ஞாதயஸ்து ப$_4$யாவஹா: ॥ (5)

ஶ்ரூயந்தே ஹஸ்திபி$_4$ர்கீ$_3$தா: ஶ்லோகா: பத்$_3$மவநே க்வசித் ।
பாஶஹஸ்தாந்நராந் த்$_3$ருஷ்ட்வா ஶ்ருணு தாந் க$_3$த$_3$தோ மம ॥ (6)

நாக்$_3$நிர்நாந்யாநி ஶஸ்த்ராணி ந ந: பாஶா ப$_4$யாவஹா: ।
கோ$_4$ரா: ஸ்வார்த$_2$ப்ரயுக்தாஸ்து க்ஞாதயோ நோ ப$_4$யாவஹா: ॥ (7)

இந்திரஜித்! நீ தெளிந்த அறிவில்லாதவன்; உன் அறிவு இன்னும் முதிர்ச்சியை அடையவில்லை; பணிவு என்பதை அறியாதவன்; கொடிய இயல்புடையவன்; புத்திகூர்மை இல்லாதவன்; சொற்ப அறிவு, துஷ்டத்தனம், அவிவேகம் உடையவன். அதனால்தான் தலை–கால் புரியாமல் குழந்தைத்தனமாகப் பேசுகிறாய். (12)

போர்க்களத்தில் ஸ்ரீராமனால் குறி தப்பாமல் விடப்பட்ட பிரும்மதண்டம் போல் பிரகாசிப்பவைகளும், உயிரை வாங்கும் காலனைப் போன்ற தோற்றமுடையவைகளும், (தன் காரியத்தைச் செய்யாமல் விடாததான) யமதண்டம் போல் செயல்படுபவைகளுமான பாணங்களைக் கண்ணால் பார்த்த எவனால்தான் அவைகளைத் தாங்கிக் கொள்ள முடியும்? (13)

மன்னரே! நம்மிடமுள்ள ஐசுவர்யங்கள், இரத்தினங்கள், அணிகலன்கள், மிக உயர்ந்த ஆடைகள், பல்வகை நவரத்தினங்களோடு சீதாப்பிராட்டியாரை ஸ்ரீராமனிடம் இப்போதே சமர்ப்பித்துவிட்டு கவலை நீங்கியவர்களாக வாழ்வோமாக.'' (14)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினாறு

விபீஷணனை நிந்தித்தல்!

இராவணனின் தலைமேல் காலன் (சரியான நேரத்தை எதிர்பார்த்து) உட்கார்ந்திருந்தபடியால், பொருள் பொதிந்ததும் நன்மை தரத்தக்கதுமான சொற்களைக் கூறிய விபீஷணனைப் பார்த்து, (இராவணன்) கடுமையான சொற்களைக் கூறினான்— (1)

''தம்பீ! பகைவனோடும் சரி, விஷங்கொண்ட பாம்புடனாயினும் சரி கூடவே இருந்து வசிக்கலாம். ஆனால், நண்பன் என்று சொல்லிக் கொண்டு, எதிரிகளுக்குப் பரிந்து பேசுபவனுடன் ஒருபோதும் கூடி வாழக்கூடாது. (2)

அரக்கனே! எல்லா உலகங்களிலும் தாயாதிகளின் நடவடிக்கை எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும். தன்னுடைய அண்ணன்–தம்பிகளுக்கு ஆபத்து என்றால், இந்த தாயாதிகள் தமக்குள் மகிழ்ச்சி அடைவார்கள். (3)

அரக்கனே! குடும்பத்தில் மூத்தவன் என்ற காரணத்தால், தான் செய்யவேண்டிய கடமைகளை குறைவறச் செய்து முடிப்பவனாகவும், சிறந்த அறிவாளியாகவும், அறம் வழுவாதவனாகவும், மகாசூரனாகவுமுள்ள ஒருவனை, அவனுடைய தாயாதிகள் அவமதிக்கிறார்கள். ஏன், கீழே தள்ளிவிடவும் செய்கிறார்கள். (4)

தாயாதிகள் எப்போதும் (வெளித்தோற்றத்திற்கு) தோழமையுடன் குலாவுவார்கள். ஆனால், சமயம் கிடைக்கும்போது, நெருப்பு வைத்துக் கொளுத்தவும் தயங்கமாட்டார்கள். தங்கள் அந்தரங்க எண்ணங்களை மறைத்து வைத்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே, தாயாதிகள் பயங்கரமானவர்கள். (5)

முன்னொரு காலத்தில் பத்மவனம் என்னும் காட்டில், சில மனிதர்கள் கைகளில் கயிறுகளுடன் சுற்றி வருவதைப் பார்த்து, அங்கிருந்த யானைகள் பேசிக் கொண்டதாக, இன்றைக்கும் வழங்கப்படும் சொற்களைக் கூறுகிறேன், கேள். (6)

நமக்கு நெருப்பு, ஆயுதங்கள் மற்றும் கயிறுகள் ஆபத்தை விளைவிப்பதில்லை. ஆனால், நம் இனத்தைச் சேர்ந்தவர்களே, சுயநலத்தில் நாட்டங்கொண்டவர்களாகப் பயங்கரமான கெடுதிகளை நமக்குச் செய்கிறார்கள். (7)

உபாயமேதே வக்ஷ்யந்தி க்$_3$ரஹணே நாத்ர ஸம்ஶய: ।
க்ருத்ஸ்நாத்$_3$ப$_4$யாஜ்க்ஞாதிப$_4$யம் ஸுகஷ்டம் விதி$_3$தம் ச ந: ॥ (8)

வித்$_3$யதே கோ$_3$ஷு ஸம்பந்நம் வித்$_3$யதே ப்$_3$ராஹ்மணே த$_3$ம: ।
வித்$_3$யதே ஸ்த்ரீஷு சாபல்யம் வித்$_3$யதே க்ஞாதிதோ ப$_4$யம் ॥ (9)

ததோ நேஷ்டமித$_3$ம் ஸௌம்ய யத$_3$ஹம் லோகஸத்க்ருத: ।
ஐஶ்வர்யேணாபி$_4$ஜாதஸ்ச ரிபூணாம் மூர்த்$_4$ந்யவஸ்தி$_2$த: ॥ (10)

யதா$_2$ புஷ்கரபர்ணேஷு பதிதாஸ்தோயபி$_3$ந்த$_3$வ: ।
ந ஶ்லேஷமுபக$_3$ச்ச$_2$ந்தி ததா$_2$நார்யேஷு ஸௌஹ்ருத$_3$ம் ॥ (11)

யதா$_2$ மது$_4$கரஸ்தர்ஷாத்$_3$ரஸம் விந்த$_3$ந்ந வித்$_3$யதே ।
ததா$_2$ த்வமபி தத்ரைவ ததா$_2$நார்யேஷு ஸௌஹ்ருத$_3$ம் ॥ (12)

யதா$_2$ பூர்வம் க$_3$ஜ: ஸ்நாத்வா க்$_3$ருஹ்ய ஹஸ்தேந வை ரஜ: ।
தூ$_3$ஷயத்யாத்மநோ தே$_3$ஹம் ததா$_2$நார்யேஷு ஸௌஹ்ருத$_3$ம் ॥ (13)

யதா$_2$ ஶரதி$_3$ மேகா$_4$நாம் ஸிஞ்சதாமபி க$_3$ர்ஜதாம் ।
ந ப$_4$வத்யம்பு$_3$ஸங்க்லேத$_3$ஸ்ததா$_2$நார்யேஷு ஸௌஹ்ருத$_3$ம் ॥ (14)

அந்யஸ்த்வேவம்வித$_4$ம் ப்$_3$ரூயாத்$_3$வாக்யமேதந்நிஶாசர ।
அஸ்மிந் முஹூர்தே ந ப$_4$வேத்த்வாம் து தி$_4$க்குலபாம்ஸநம் ॥ (15)

இத்யுக்த: பருஷம் வாக்யம் ந்யாயவாதீ$_3$ விபீ$_4$ஷண: ।
உத்பபாத க$_3$தா$_3$பாணிஶ்சதுர்பி$_4$: ஸஹ ராக்ஷஸை: ॥ (16)

அப்$_3$ரவீச்ச ததா$_3$ வாக்யம் ஜாதக்ரோதோ$_4$ விபீ$_4$ஷண: ।
அந்தரிக்ஷக$_3$த: ஸ்ரீமாந் ப்$_4$ராதரம் ராக்ஷஸாதி$_4$பம் ॥ (17)

ஸ த்வம் ப்$_4$ராதாஸி மே ராஜந் ப்$_3$ரூஹி மாம் யத்$_3$யதி$_3$ச்ச$_2$ஸி ।
ஜ்யேஷ்டோ$_2$ மாந்ய: பித்ருஸமோ ந ச த$_4$ர்மபதே$_2$ ஸ்தி$_2$த: ॥
இத$_3$ம் து பருஷம் வாக்யம் ந க்ஷமாம்யந்ருதம் தவ ॥ (18)

ஸுநீதம் ஹிதகாமேந வாக்யமுக்தம் த$_3$ஶாநந ॥
ந க்$_3$ருஹ்ணந்த்யக்ருதாத்மாந: காலஸ்ய வஶமாக$_3$தா: ॥ (19)

ஸுலபா$_4$: புருஷா ராஜந் ஸததம் ப்ரியவாதி$_3$ந: ।
அப்ரியஸ்ய து பத்$_2$யஸ்ய வக்தா ஶ்ரோதா ச து$_3$ர்லப$_4$: ॥ (20)

ப$_3$த்$_3$த$_4$ம் காலஸ்ய பாஶேந ஸர்வபூ$_4$தாபஹாரிணா ।
ந நஶ்யந்தமுபேக்ஷேயம் ப்ரதீ$_3$ப்தம் ஶரணம் யதா$_2$ ॥ (21)

இவர்கள்தான், மனிதர்கள் நம்மைப் பிடிப்பதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகவே, நமக்கு ஏற்படும் ஆபத்துக்கள் எல்லாவற்றிலும் மிகப்பெரிய ஆபத்து, நமது உறவினர்களால் ஏற்படுவதுதான். (8)

பசுக்களிடம், வேள்விகளுக்கும் குடும்பத்திற்கும் தேவையான பால் நிறைய உள்ளது. அந்தணர்களிடத்தில் புலனடக்கம் உள்ளது. பெண்களிடம் சபலபுத்தி இருக்கிறது. அவ்வாறே, தாயாதிகளிடமிருந்து பயம் ஏற்படவே செய்கிறது. (9)

இளவலே! நான், உலக மக்களால் போற்றப்படுகிறேன்; எல்லா செல்வச் செழிப்பும் பெற்று வளமாக இருக்கிறேன்; எதிரிகளின் தலைமேல் காலை வைத்து, அவர்கள் தலைதூக்க முடியாமல் அடக்கி வைத்திருக்கிறேன். தாமரை இலையில் நீர்த்துளிகள் ஒட்டிக்கொள்வதில்லை. அதுபோலவே, கீழ்மக்களிடம் நட்புறவு ஒட்டிக் கொள்வதில்லை. (10,11)

தேன் உண்ணும் வண்டு, ஆசையுடன் மகரந்த ரஸத்தைப் பருகிவிட்டு, உடனே அவ்விடத்தை விட்டுச் சென்று விடுகிறது. கீழ்மக்களிடம் அன்பு என்பது அப்படித்தான். (தனக்கு சுகம் கிடைக்கும் வரையில் தாயாதிகளுடன் இருந்துவிட்டு, அவர்களுக்குக் கஷ்டம் வந்தவுடன் ஓடிப் போய்விடுவார்கள்.) அவ்வாறுதான் நீயும் இருக்கிறாய். (12)

முதலில் நீராடி (உடலை சுத்தம் செய்துகொண்டுவிட்டு) பின், தன் துதிக்கையாலேயே மண்ணை வாரித் தன் தலை மேலே யானை போட்டுக் கொள்கிறதோ, அப்படிப்பட்டதுதான் அற்பர்களிடம் காட்டப்படும் அன்பு. (அற்பர்கள், அன்பைத் தக்க வைத்துக் கொள்ள மாட்டார்கள்.) (13)

சரத் காலத்தில், நீருண்ட மேகங்கள் இடியோசை எழுப்பினாலும் (மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும்) மழையைப் பொழிவதில்லை. கீழோர்களிடம் காட்டப்படும் நட்பும் அப்படிப்பட்டதுதான். (14)

குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக்காம்பான அரக்கனே! உன்னைத் தவிர வேறொருவன் மேற்கண்டவாறு கூறியிருந்தால், அவன் இந்த விநாடியிலேயே உயிரை இழந்திருப்பான்.'' (15)

அறநெறியில் நிற்கும் விபீஷணன், (இராவணனால்) இவ்வாறு கடுமையாகக் கூறப்பட்டவுடன், நான்கு அரக்கர்களோடுகூட கையில் கதையுடன் உயரக் குதித்து ஆகாயத்தை அடைந்தான். கைங்கரியச் செல்வனான விபீஷணன், சினத்துடன் ஆகாயத்தில் நின்று, சகோதரனான அரக்க மன்னனை நோக்கிப் பின்வரும் சொற்களைக் கூறினான்— (16,17)

''மன்னரே! தாங்கள் எனக்கு சகோதரர். எனவே, நீங்கள் விரும்பியபடியெல்லாம் சொல்லலாம். மூத்த சகோதரன் தந்தைக்குச் சமமானவன். ஆனால், நீங்கள் அறநெறியைக் கடைப்பிடிக்கவில்லை. (18)

எனவே, என்னை இகழ்ந்து கூறும் தருமத்திற்குப் புறம்பான சொற்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமலிருக்கிறேன். பத்துத் தலையரே! புலனடக்கமில்லாதவனும் காலன் வசப்பட்டிருப்பவனுமான ஒருவன், அவன் நலனைக் கருதி பணிவுடன் கூறப்பட்ட நல்லுரைகளை ஏற்கமாட்டான். (19)

மன்னரே! (நற்பயன் தராவிட்டாலும்) செவிக்கினிய சொற்களைக் கூறுபவர் அநேகர் உண்டு. ஆனால், தன் மனத்திற்குப் பிடிக்காத, நீதிநெறிப்படியான சொற்களைக் கேட்பவர்களும் சொல்கிறவர்களும் சொற்பம். (20)

எல்லாப் பிராணிகளின் உயிரையும் கவர்ந்து செல்லும் யமனுடைய பாசத்தால் கட்டுண்டு கிடக்கிறீர்கள். நெருப்புப் பற்றி எரிந்துகொண்டிருக்கும் வீட்டைப் போல், நீங்கள் அழிந்து கொண்டிருப்பதைப் பார்த்தும், நான் வாளாவிருக்க முடியாமல் நல்லுரைகள் கூறினேன். (21)

தீ$_3$ப்தபாவகஸங்காஸை: ஸிதை: காஞ்சநபூ$_4$ஷணை: ।
ந த்வாமிச்ச$_2$ாம்யஹம் த்$_3$ரஷ்டும் ராமேண நிஹதம் ஸரை: ॥ (22)

ஸூராஸ்ச ப$_3$லவந்தஸ்ச க்ருதாஸ்த்ராஸ்ச ரணாஜிரே ।
காலாபி$_4$பந்நா: ஸீத$_3$ந்தி யத$_2$ா வாலுகஸேதவ: ॥ (23)

தந்மர்ஷயது யச்சோக்தம் கு$_3$ருத்வாத்$_3$தி$_4$தமிச்ச$_2$தா ।
ஆத்மாநம் ஸர்வத$_2$ா ரக்ஷ புரீம் சேமாம் ஸராக்ஷஸாம் ॥
ஸ்வஸ்தி தேऽஸ்து க$_3$மிஷ்யாமி ஸுகீ$_2$ ப$_4$வ மயா விநா ॥ (24)

நிவார்யமாணஸ்ய மயா ஹிதைஷிணா
ந ரோசதே தே வசநம் நிஸாசர ।
பரீதகாலா ஹி க$_3$தாயுஷோ நரா
ஹிதம் ந க்$_3$ருஹ்ணந்தி ஸுஹ்ருத்$_3$பி$_4$ரீரிதம் ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷோட$_3$ஸ: ஸர்க$_3$: ॥

ஸப்தத$_3$ஸ: ஸர்க$_3$:

விபீ$_4$ஷணஸரணாக$_3$திநிவேத$_3$நம்

இத்யுக்த்வா பருஷம் வாக்யம் ராவணம் ராவணாநுஜ: ।
ஆஜக$_3$ாம முஹூர்தேந யத்ர ராம: ஸலக்ஷ்மண: ॥ (1)

தம் மேருஸிக$_2$ராகாரம் தீ$_3$ப்தாமிவ ஸதஹ்ரத$_3$ாம் ।
க$_3$க$_3$நஸ்த$_2$ம் மஹீஸ்த$_2$ாஸ்தே த$_3$த்$_3$ருஸுர்வாநராதி$_4$பா: ॥ (2)

ஸ ஹி மேக$_4$ாசலப்ரக்$_2$யோ வஜ்ராயுத$_4$ஸமப்ரப$_4$: ।
வராயுத$_4$த$_4$ரோ வீரோ தி$_3$வ்யாப$_4$ரணபூ$_4$ஷித: ॥ (3)

யே சாப்யநுசராஸ்தஸ்ய சத்வாரோ பீ$_4$மவிக்ரமா:
தேऽபி வர்மாயுதே$_4$ாபேதா பூ$_4$ஷணைஸ்ச விபூ$_4$ஷிதா: ॥ (4)

தமாத்மபஞ்சமம் த்$_3$ருஷ்ட்வா ஸுக்$_3$ரீவோ வாநராதி$_4$ப: ।
வாநரை: ஸஹ து$_3$ர்த$_4$ர்ஷஸ்சிந்தயாமாஸ பு$_3$த்$_3$தி$_4$மாந் ॥ (5)

சிந்தயித்வா முஹூர்தம் து வாநராந்ஸ்தாநுவாச ஹ ।
ஹநுமத்ப்ரமுக$_2$ாந் ஸர்வாநித$_3$ம் வசநமுத்தமம் ॥ (6)

ஏஷ ஸர்வாயுதே$_4$ாபேதஸ்சதுர்பி$_4$: ஸஹ ராக்ஷஸை: ।
ராக்ஷஸோऽப்$_4$யேதி பஸ்யத்$_4$வமஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஸய: ॥ (7)

கொழுந்துவிட்டெரியும் தீயைப் போல் பிரகாசிப்பவைகளும் கூரானவைகளும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான இராம பாணங்களால் தாங்கள் தாக்கப்படப் போவதைக் காண விரும்பவில்லை. (அதனால், சில நீதிகளை எடுத்துக் கூறினேன்.) (22)

ஆயுதப் பயிற்சியில் நன்கு தேறியவர்களும் வீர சூரர்களுமானவர்கள்கூட, மிருத்யுவின் கைப்பிடியில் சிக்கிக் கொண்டிருந்தால், மணலால் கட்டப்பட்ட அணைகள் (தாமாகவே, வெள்ள வேகத்தில் கரைந்து போவதைப்) போல, போர்க்களத்தில் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறார்கள். (23)

உங்கள் நன்மைக்காக நான் சொல்லியவற்றை ஏற்காவிட்டால், (அவைகள் உங்களுக்குப் பிடிக்காமலிருந்தால்,) என்னை மன்னித்தருள வேண்டும். ஏனென்றால், தாங்கள் எனக்கு மூத்தவர். எப்படியாவது, இந்த நகரத்தையும் அரக்கர்களையும் தங்களையும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நான், இந்தப் பட்டணத்தை விட்டுப் போய்க்கொண்டிருக்கிறேன். தங்களுக்கு நலமே உண்டாக வேண்டும். நான் இல்லாமல் தாங்கள் சௌக்கியமாக இருப்பீர்களாக. (24)

அரக்க மன்னரே! நான் தங்கள் நலனை விரும்பி, தவறான பாதையில் செல்லும் தங்களைத் தடுக்க விரும்பினேன். தங்களுக்கு என் சொற்கள் ஏற்புடையனவாக இல்லை. எவர்களுக்குக் கடைசிக் காலம் வந்துவிட்டதோ, அவர்கள் இறுதி நேரத்தில் நண்பர்களால் கூறப்படும் நலம் தரும் சொல்லை ஏற்றுக்கொள்வதில்லை.'' (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினேழு

விபீஷண சரணாகதி

இராவணனுடைய தம்பியாகிய விபீஷணன், மேற்கண்டவாறு உறுதியாகச் சொல்லிவிட்டு, வெகுவிரைவில் இராம–லட்சுமணர்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். (1)

பூமியில் நின்று கொண்டிருந்த வானரத் தலைவர்கள், மேருமலை போல் பெருமைமிக்க உருவம் படைத்தவனும் பளிச்சென்று ஒளிவீசும் மின்னல்போல் இருப்பவனும் வானத்தில் நின்று கொண்டிருந்தவனுமான அவனை (விபீஷணனை)க் கண்டார்கள். (2)

அவன் மேகம் போல் (கருத்த திருமேனியுடனும்) மலை போல் (வலிமையான உடல்வாகுடனும்) காணப்பட்டான். வஜ்ராயுதம் போல் பேரொளி வீசிக் கொண்டிருந்தான். சக்தி மிகுந்த ஆயுதங்களையும், திவ்யமான அணிகலன்களையும் அணிந்த வீரனாகத் தோன்றினான். (3)

அவனைத் தொடர்ந்து வந்த நால்வரும், மிகவும் பராக்கிரமம் உடையவர்கள். அவர்களும் கவசங்கள், அஸ்திர–சஸ்திரங்கள், அழகான அணிகலன்கள் அணிந்திருந்தார்கள். வானரத் தலைவனும் வெல்ல முடியாதவனும் அறிவுமிக்கவனுமான சுக்ரீவன், விபீஷணனைச் சேர்த்து ஐவராக வந்த அவர்களைப் பார்த்ததும், வானரர்களோடுகூட ஆலோசனை நடத்தினான். (4,5)

தனக்குள் சிறிதுநேரம் ஆலோசனை செய்துவிட்டு, பின்னர் அனுமான் முதலிய எல்லா வானரர்களையும் நோக்கி, பின்வரும் சிறப்பான சொற்களைக் கூறினான்— (6)

''நீங்கள் எல்லோரும் பாருங்கள். எல்லாவித அஸ்திர–சஸ்திரங்களையும் தரித்துக் கொண்டு, நான்கு அரக்கர்களோடுகூட, நம்மைக் கொல்வதற்காக இந்த அரக்கன் வந்திருக்கிறான் என்பதில் ஐயமில்லை.'' (நான்கு அரக்கர்களின் பெயர்கள்:– அனலன், சரபன், ஸம்பாதி, பிரகஸன்.) (7)

ஸுக்3ரீவஸ்ய வச: ஶ்ருத்வா ஸர்வே தே வாநரோத்தமா: ।
ஸாலாநுத்3யம்ய ஶைலாம்ஶ்ச இத3ம் வசநமப்3ருவந் ॥ (8)

ஶீக்4ரம் வ்யாதி3ஶ நோ ராஜந் வத4ாயைஷாம் து3ராத்மநாம் ।
நிபதந்தி ஹதா யாவத்3த4ரண்யாமல்பதேஜஸ: ॥ (9)

தேஷாம் ஸம்ப4ாஷமாணாநாமந்யோந்யம் ஸ விபீ4ஷண: ।
உத்தரம் தீரமாஸாத்3ய க2ஸ்த2 ஏவ வ்யதிஷ்ட2த ॥ (10)

உவாச ச மஹாப்ராக்ஞ: ஸ்வரேண மஹதா மஹாந் ।
ஸுக்3ரீவம் தாம்ஶ்ச ஸம்ப்ரேக்ஷ்ய ஸர்வாந் வாநரயூத2பாந் ॥ (11)

ராவணோ நாம து3ர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர: ।
தஸ்யாஹமநுஜோ ப்4ராதா விபீ4ஷண இதி ஶ்ருத: ॥ (12)

தேந ஸீதா ஜநஸ்த2ாநாத்3த்4ருதா ஹத்வா ஜடாயுஷம் ।
ருத்3த4ா ச விவஶா தீ3நா ராக்ஷஸீபி4: ஸுரக்ஷிதா ॥ (13)

தமஹம் ஹேதுபி4ர்வாக்யைர்விவிதை4ஶ்ச ந்யத3ர்ஶயம் ।
ஸாது4 நிர்யாத்யதாம் ஸீதா ராமாயேதி புந: புந: ॥ (14)

ஸ ச ந ப்ரதிஜக்3ராஹ ராவண: காலசோதி3த: ।
உச்யமாநம் ஹிதம் வாக்யம் விபரீத இவௌஷத4ம் ॥ (15)

ஸோऽஹம் பருஷிதஸ்தேந த3ாஸவச்சாவமாநித: ।
த்யக்த்வா புத்ராம்ஶ்ச த3ாராம்ஶ்ச ராக4வம் ஶரணம் க3த: ॥ (16)

ஸர்வலோகஶரண்யாய ராக4வாய மஹாத்மநே ।
நிவேத3யத மாம் க்ஷிப்ரம் விபீ4ஷணமுபஸ்தி2தம் ॥ (17)

ஏதத்து வசநம் ஶ்ருத்வா ஸுக்3ரீவோ லகு4விக்ரம: ।
லக்ஷ்மணஸ்யாக்3ரதோ ராமம் ஸம்ரப்3த4மித3மப்3ரவீத் ॥ (18)

ராவணஸ்யாநுஜோ ப்4ராதா விபீ4ஷண இதி ஶ்ருத: ।
சதுர்பி4: ஸஹ ரக்ஷோபி4ர்ப4வந்தம் ஶரணம் க3த: ॥ (19)

மந்த்ரே வ்யூஹே நயே சாரே யுக்தோ ப4விதுமர்ஹஸி ।
வாநராணாம் ச ப4த்3ரம் தே பரேஷாம் ச பரந்தப ॥ (20)

அந்தர்த4ாநக3தா ஹ்யேதே ராக்ஷஸா: காமரூபிண: ।
ஶூராஶ்ச நிக்ருதிக்ஞாஶ்ச தேஷு ஜாது ந விஶ்வஸேத் ॥ (21)

ப்ரணிதீ4 ராக்ஷஸேந்த்3ரஸ்ய ராவணஸ்ய ப4வேத3யம் ।
அநுப்ரவிஶ்ய ஸோऽஸ்மாஸு பே4த3ம் குர்யாந்ந ஸம்ஶய: ॥ (22)

சுக்ரீவன் கூறியதைக் கேட்ட, அந்த வானரோத்தமர்கள் எல்லோரும் ஆச்சா மரங்களையும் கற்பாறைகளையும் கையில் எடுத்துக் கொண்டு, பின்வருமாறு கூறினார்கள்— (8)

''அரசரே! தீய எண்ணத்துடன் வந்திருக்கும் இவர்களைக் கொல்வதற்கு, உடனே ஆணை தாருங்கள். அற்பமான ஆற்றலுடைய இவர்கள் (வானத்திலேயே) கொல்லப்பட்டு, தரையில் வீழ்ந்து போகட்டும்.'' (9)

அவர்கள் தங்களுக்குள் இவ்வாறெல்லாம் பேசிக் கொண்டிருக்கும்போதே, விபீஷணன் பெருங்கடலின் வடகரைக்கு வந்து, வானத்திலேயே காத்து நின்றான். (10)

பேரறிவாளனும் உன்னத இயல்புகள் கொண்டவனுமான அவன், சுக்ரீவனையும் மற்றுமுள்ள எல்லா வானர தலைவர்களையும் பார்த்து பெருங்குரலில் கூறினான்— (11)

''தீய வழியைப் பின்பற்றும் இராவணன் என்ற அரக்கன், அரக்கர்களுக்குத் தலைவன்; நான், அவருடைய இளைய சகோதரன். விபீஷணன் என்று என்னைக் கூறுவார்கள். (12)

அவர் ஜடாயுவைக் கொன்று, ஜனஸ்தானத்திலிருந்து சீதையைக் கவர்ந்து வந்தார். சிறை வைக்கப்பட்டு எதுவும் செய்ய முடியாமல் பரிதவிக்கும் சீதை, அரக்கிகளால் காவல் காக்கப்படுகிறார். (13)

நான், பல முறைகளில் காரண–காரிய விளக்கங்களுடன், 'இராமபிரானிடம் சீதாதேவியை ஒப்படைத்துவிடுங்கள்; அதுதான் நியாயம்' என்று பல தடவைகள் எடுத்துக் கூறினேன். (14)

சாகத் துணிந்துவிட்டவன் உயிர் காக்கும் எந்த மருந்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டான். அதுபோல, காலனின் பிடியில் சிக்கியிருக்கும் இராவணன், அவருக்கு நலனைத் தரும் சொற்களை நான் கூறியபோதும், அவர் அதை ஏற்கவில்லை. (15)

அவரால் இகழ்ந்து பேசப்பட்ட ஓர் அடிமைபோல் அவமானப்படுத்தப்பட்ட நான், என் புதல்வர்களையும் மனைவிகளையும் துறந்துவிட்டு, ஸ்ரீராமனையே புகலிடமாக வந்தடைந்திருக்கிறேன். (16)

வானரர்களே! எல்லா உலகுக்கும் புகலிடமாக விளங்குபவரும் மகாத்மாவுமான ஸ்ரீராமனிடம் உடனே சென்று, விபீஷணனாகிய அடியேன் வந்திருக்கிறேன் என்று விண்ணப்பம் செய்யுங்கள்.'' (17)

இந்தச் சொற்களைக் கேட்ட சுக்ரீவன், வெகுவேகமாகச் சென்று, இலக்குவன் கூட இருக்கும்போதே, பரபரப்புடன் இராமனிடம் பின்வருமாறு கூறினான்— (18)

''இராவணனுடைய இளவலான விபீஷணன் என்பவன், நான்கு அரக்கர்களோடுகூட தங்களைச் சரணடைந்திருக்கிறான். (19)

எதிரிகளை வாட்டி வதைக்கும் ரகுநந்தனரே! வானரப்படையைக் காப்பாற்ற வேண்டும்; எதிரிப்படையை அழிக்கவேண்டும் என்றால், அது தொடர்பாக செய்ய வேண்டிய காரியங்கள் பற்றிய ஆலோசனை; வானரப்படையை வியூகம் வகுத்து நிறுத்தல்; யுத்த நீதிப்படியான வழிகளைக் கடைப்பிடித்தல் மற்றும் ஒற்றர்களைக் கொண்டு வேவு பார்த்தல் ஆகிய விஷயங்களில் மிகவும் துடிப்புடன் இருக்கவேண்டும். வாழ்க, மன்னரே! (20)

இந்த அரக்கர்கள், தம் விருப்பம் போல் உருவம் எடுக்கக் கூடியவர்கள்; அதேபோல், கண்ணில்படாமல் மறைந்து போகும் சக்தியும் படைத்தவர்கள்; சூரர்கள்; வஞ்சனை செய்பவர்கள். அதனால், அவர்களிடம் ஒருபோதும் நம்பிக்கை வைக்கலாகாது. (21)

இவன் அரக்க மன்னன் இராவணனுடைய ஒற்றனாக இருக்கலாம். நம்மிடையே புகுந்து நன்றாகப் பழகினாற்போலிருந்து கலகத்தை விளைவிப்பான் என்பதில் சந்தேகமில்லை. (22)

அத$_2$வா ஸ்வயமேவைஷ சி$_2$த்$_3$ரமாஸாத்$_3$ய பு$_3$த்$_3$தி$_4$மாந் ।
அநுப்ரவிஶ்ய விஶ்வஸ்தே கதா$_3$சித்ப்ரஹரேத$_3$பி ॥ (23)

மித்ராடவிப$_3$லம் சைவ மௌலம் ப்$_4$ருத்யப$_3$லம் தத$_2$ா ।
ஸர்வமேதத்$_3$ப$_3$லம் க்$_3$ராஹ்யம் வர்ஜயித்வா த்$_3$விஷத்$_3$ப$_3$லம் ॥ (24)

ப்ரக்ருத்யா ராக்ஷஸோ ஹ்யேஷ ப்$_4$ராதாமித்ரஸ்ய வை ப்ரபே$_4$ா ।
ஆக$_3$தஶ்ச ரிபோ: பக்ஷாத்கத$_2$மஸ்மிந் ஹி விஶ்வஸேத் ॥ (25)

ராவணேந ப்ரணிஹிதம் தமவேஹி விபீ$_4$ஷணம் ।
தஸ்யாஹம் நிக்$_3$ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம் வர ॥ (26)

ராக்ஷஸோ ஜிஹ்மயா பு$_3$த்$_3$த்$_4$யா ஸந்தி$_3$ஷ்டோऽயமுபஸ்தி$_2$த: ।
ப்ரஹர்தும் மாயயா ச$_2$ந்நோ விஶ்வஸ்தே த்வயி ராக$_4$வ ॥ (27)

ப்ரவிஷ்ட: ஶத்ருஸைந்யம் ஹி ப்ராக்ஞ: ஶத்ருரதர்கித: ।
நிஹந்யாத$_3$ந்தரம் லப்$_3$த்$_4$வா உலூக இவ வாயஸாந் ॥ (28)

வத்$_4$யதாமேஷ த$_3$ண்டே$_3$ந தீவ்ரேண ஸசிவை: ஸஹ ।
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்$_4$ராதா ஹ்யேஷ விபீ$_4$ஷண: ॥ (29)

ஏவமுக்த்வா து தம் ராமம் ஸம்ரப்$_3$தே$_4$ா வாஹிநீபதி: ।
வாக்யக்ஞோ வாக்யகுஶலம் ததோ மௌநமுபாக$_3$மத் ॥ (30)

ஸுக்$_3$ரீவஸ்ய து தத்$_3$வாக்யம் ஶ்ருத்வா ராமோ மஹாயஶா: ।
ஸமீபஸ்த$_2$ாநுவாசேத$_3$ம் ஹநுமத்ப்ரமுக$_2$ாந் ஹரீந் ॥ (31)

யது$_3$க்தம் கபிராஜேந ராவணாவரஜம் ப்ரதி ।
வாக்யம் ஹேதுமத$_3$ர்த்$_2$யம் ச ப$_4$வத்$_3$பி$_4$ரபி தச்ச்$_2$ருதம் ॥ (32)

ஸுஹ்ருத$_3$ா ஹ்யர்த$_2$க்ருச்ச்$_2$ரேஷு யுக்தம் பு$_3$த்$_3$தி$_4$மதா ஸதா ।
ஸமர்தே$_2$நாபி ஸந்தே$_3$ஷ்டும் ஶாஶ்வதீம் பூ$_4$திமிச்ச$_2$தா ॥ (33)

இத்யேவம் பரிப்ருஷ்டாஸ்தே ஸ்வம் ஸ்வம் மதமதந்த்$_3$ரிதா: ।
ஸோபசாரம் தத$_3$ா ராமமூசுர்ஹிதசிகீர்ஷவ: ॥ (34)

அக்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித்த்ரிஷு லோகேஷு ராக$_4$வ ।
ஆத்மாநம் ஸூசயந் ராம ப்ருச்ச$_2$ஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா ॥ (35)

த்வம் ஹி ஸத்யவ்ரத: ஶூரோ த$_4$ார்மிகோ த்$_3$ருட$_4$விக்ரம: ।
பரீக்ஷ்யகாரீ ஸ்ம்ருதிமாந்நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச ॥ (36)

தஸ்மாதேகைகஶஸ்தாவத்$_3$ப்$_3$ருவந்து ஸசிவாஸ்தவ ।
ஹேதுதோ மதிஸம்பந்நா: ஸமர்த$_2$ாஶ்ச புந: புந: ॥ (37)

அல்லது, தந்திரசாலியான இவன், தங்கள் நம்பிக்கையை முதலில் பெற்றுவிட்டு, பின்னர், தக்கதொரு சமயம் கிடைத்ததும், நம் மேலேயே இவன் தாக்குதல் நடத்தினாலும் நடத்துவான். நண்பர்கள், காட்டில் வாழும் மக்கள், பரம்பரையாக அரசசேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் – இவர்களது படைகள் ஏற்கத்தக்கன. ஆனால், எதிரியின் பக்கத்திலிருந்து வந்திருக்கும் வீரர்களை ஒருபோதும் நாம் சேர்த்துக் கொள்ளக்கூடாது. (23,24)

அண்ணலே! இவன் அரக்கர் குலத்தவன்; நம் எதிரியினுடைய தம்பி. அதாவது, நம் எதிரியே நேரில் வந்திருப்பதாகக் கொள்ளவேண்டும். ஆகவே, எவ்வாறு இவனிடம் நம்பிக்கை வைக்கமுடியும்? (25)

செயல்திறனுடையவர்களில் முதன்மையானவரே! இந்த விபீஷணன், இராவணனால் அனுப்பப்பட்டு வந்திருக்கிறான். அதனால், இவனைக் கைது செய்வதுதான் உரிய தண்டனை என்று நான் கருதுகிறேன். (26)

மாசற்றவரே! தங்களுடைய பரிபூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகிய பின்னர், மாயையால் தன்னை ஒளித்துக் கொண்டு, சண்டை போடும் கபட எண்ணத்துடன் இவன் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறான். (27)

எதிரிப்படையைச் சேர்ந்த இவன், அறிவாளி. நாம், இவனைப் பற்றி எதுவும் ஆராய்ந்ததில்லை. சமயம் கிடைத்தவுடன் காக்கைக் கூட்டத்திற்குள் புகுந்த கோட்டானைப் போல, இவன் நமது படையை நாசம் செய்து விடுவான். மிகவும் கொடூரனான இராவணனின் சகோதரன், இவன். அதனால், மிகவும் கடுமையான தண்டனை கொடுத்து, உடன் வந்திருக்கும் அமைச்சர்களோடுகூட கொல்லப்பட வேண்டும்.'' (28,29)

சொல்வன்மை உடையவனும் படைத்தலைவனுமான சுக்ரீவன், பேச்சுக்கலை நிபுணரான இராமனிடம் படபடப்புடன் மேற்கண்டவாறு கூறிவிட்டுப் பேச்சை நிறுத்திக் கொண்டான். (30)

பெரும்புகழ் கொண்ட இராமன், சுக்ரீவனுடைய சொற்களைக் கேட்டுவிட்டு, அருகிலிருந்த அனுமான் முதலிய முக்கிய வீரர்களைப் பார்த்துக் கூறினார்— (31)

''வானரமன்னன் சுக்ரீவன், இராவணனுடைய தம்பி விஷயமாக, காரண–காரியங்களோடு பொருந்திய, பொருள் பொதிந்த சொற்களைக் கூறியதை நீங்களெல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். (32)

நண்பனின் நிரந்தரமான நன்மையை விரும்பும் புத்திமானும் சான்றோனுமான ஒருவன், ஒரு செயலை நிச்சயிக்க முடியாத நேரங்களில், தன்னுடைய ஆலோசனையைக் கூறவேண்டும் என்பது நியாயமானதே.'' (33)

இராமனுக்கு நன்மையைச் செய்வதில் பிரியம் கொண்ட அவர்கள், இவ்வாறு கேட்கப்பட்டவுடன், தங்களிடம் ஒரு சிலிர்ப்பை உண்டாக்கிக் கொண்டு, தத்தம் ஆலோசனையை மிக்க வணக்கத்தோடு இராமனிடம் தெரிவித்துக் கொண்டார்கள். (34)

''இராமப்பிரபுவே! மூன்று உலகிலும் தங்களுக்குத் தெரியாத ஒரு விஷயமும் இல்லை. தங்களுடைய இயல்பான எல்லையற்ற நட்பைக் காட்டும் வகையில், தாங்கள் எங்கள் ஆலோசனையைக் கேட்கிறீர்கள். (35)

தாங்கள் சத்தியத்தை நோன்பாகக் கொண்டவர்; தன்னிகரில்லாத வீரர்; அறம் தவறாதவர்; அசைக்க முடியாத பராக்கிரமம் உடையவர்; எந்தவொரு காரியத்தையும் ஆழமாக சிந்தித்துப் பார்த்து செயல்படுபவர்; நினைவாற்றல் மிக்கவர்; ஆப்த நண்பர்களிடம் தன்னையே ஒப்புவித்தவர். (36)

ஆகவே, அறிவும் செயல்திறனும் கொண்ட தங்கள் ஆலோசகர்கள், ஒவ்வொருவராக யுக்தி வாதங்களோடு கூடிய தத்தம் ஆலோசனையை எடுத்துக் கூறட்டும்.'' (37)

இத்யுக்தோ ராக$_4$வாயாத$_2$ மதிமாநங்க$_3$தோ$_3$ऽக்$_3$ரத: ।
விபீ$_4$ஷணபரீக்ஷார்த$_2$முவாச வசநம் ஹரி: ॥ (38)

ஶத்ரோ: ஸகாஶாத்ஸம்ப்ராப்த: ஸர்வதா$_2$ ஶங்க்ய ஏவ ஹி ।
விஶ்வாஸயோக்$_3$ய: ஸஹஸா ந கர்தவ்யோ விபீ$_4$ஷண: ॥ (39)

ச$_2$ாத$_3$யித்வாத்மபா$_4$வம் ஹி சரந்தி ஶட$_2$பு$_3$த்$_3$த$_4$ய: ।
ப்ரஹரந்தி ச ரந்த்$_4$ரேஷு ஸோऽநர்த: ஸுமஹாந் ப$_4$வேத் ॥ (40)

அர்தா$_2$நர்தௌ$_2$ விநிஶ்சித்ய வ்யவஸாயம் ப$_4$ஜேத ஹ ।
கு$_3$ணத: ஸங்க்$_3$ரஹம் குர்யாத்$_3$தோ$_3$ஷதஸ்து விஸர்ஜயேத் ॥ (41)

யதி$_3$ தோ$_3$ஷோ மஹாந்ஸ்தஸ்மிந்ஸ்த்யஜ்யதாமவிஶங்கிதம் ।
குணாந் வாபி ப$_3$ஹூஞ்ஜ்ஞாத்வா ஸங்க்$_3$ரஹ: க்ரியதாம் ந்ருப ॥ (42)

ஶரப$_4$ஸ்த்வத$_2$ நிஶ்சித்ய ஸாத்$_4$யம் வசநமப்$_3$ரவீத் ।
க்ஷிப்ரமஸ்மிந்நரவ்யாக்$_4$ர சார: ப்ரதிவிதீ$_4$யதாம் ॥ (43)

ப்ரணிதா$_4$ய ஹி சாரேண யதா$_2$வத்ஸூக்ஷ்மபு$_3$த்$_3$தி$_4$நா ।
பரீக்ஷ்ய ச தத: கார்யோ யதா$_2$ந்யாயம் பரிக்$_3$ரஹ: ॥ (44)

ஜாம்ப$_3$வாந்ஸ்த்வத$_2$ ஸம்ப்ரேக்ஷ்ய ஶாஸ்த்ரபு$_3$த்$_3$த்$_4$யா விசக்ஷண: ।
வாக்யம் விஜ்ஞாபயாமாஸ கு$_3$ணவத்$_3$தோ$_3$ஷவர்ஜிதம் ॥ (45)

ப$_3$த்$_3$த$_4$வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்$_3$ராத்$_3$விபீ$_4$ஷண: ।
அதே$_3$ஶகாலே ஸம்ப்ராப்த: ஸர்வதா$_2$ ஶங்க்யதாமயம் ॥ (46)

ததோ மைந்த$_3$ஸ்து ஸம்ப்ரேக்ஷ்ய நயாபநயகோவித$_3$: ।
வாக்யம் வசநஸம்பந்நோ ப$_3$பா$_4$ஷே ஹேதுமத்தரம் ॥ (47)

வசநம் நாம தஸ்யைஷ ராவணஸ்ய விபீ$_4$ஷண: ।
ப்ருச்ச்$_2$யதாம் மது$_4$ரேணாயம் ஶநைர்நரவரேஶ்வர ॥ (48)

பா$_4$வமஸ்ய து விஜ்ஞாய ததஸ்தத்த்வம் கரிஷ்யஸி ।
யதி$_3$ து$_3$ஷ்டோ ந து$_3$ஷ்டோ வா பு$_3$த்$_3$தி$_4$பூர்வம் நரர்ஷப$_4$ ॥ (49)

அத$_2$ ஸம்ஸ்காரஸம்பந்நோ ஹநுமாந் ஸசிவோத்தம: ।
உவாச வசநம் ஶ்லக்ஷ்ணமர்த$_2$வந்மது$_4$ரம் லகு$_4$ ॥ (50)

ந ப$_4$வந்தம் மதிஶ்ரேஷ்ட$_2$ம் ஸமர்த$_2$ம் வத$_3$தாம் வரம் ।
அதிஶாயயிதும் ஶக்தோ ப்$_3$ருஹஸ்பதிரபி ப்ருவந் ॥ (51)

ந வாதா$_3$ந்நாபி ஸங்க$_4$ர்ஷாந்நாதி$_4$க்யாந்ந ச காமத: ।
வக்ஷ்யாமி வசநம் ராஜந் யதா$_2$ர்த$_2$ம் ராம கௌ$_3$ரவாத் ॥ (52)

இவ்வாறு வானரர்கள் கூறியதும், அறிவுமிக்க வானரனான அங்கதன், எல்லோருக்கும் முதலாவதாக, வீபீஷணனை ஆராய்ந்து பார்க்கும் ஆலோசனையை, இராமனிடம் தெரிவிக்கும்வண்ணம் பின்வருமாறு கூறினான்— (38)

''இராமனே! வீபீஷணன் நம் எதிரியின் பக்கத்திலிருந்து வந்திருக்கிறான். எல்லாவிதத்தாலும் சந்தேகிக்கப்பட வேண்டியவனே. அதனால், அவனை உடனே நம்பிவிடக் கூடாது. வஞ்சனை நெஞ்சமுடைய பல பேர்கள், தங்கள் அந்தரங்க எண்ணத்தை மூடி மறைத்துக் கொண்டு உலாவி வருவார்கள். சரியான தருணம் கிடைத்ததும் தாக்குதல் நடத்துவார்கள். அதன் விளைவாக பெரும் கேடு உண்டாகிவிடும். (39,40)

ஒரு விஷயத்தின் நன்மை–தீமைகளை நன்றாக ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒரு முடிவை எடுக்க வேண்டும். இவனை நம்முடன் சேர்த்துக் கொள்வதால் நன்மை ஏற்படும் என்றால் சேர்த்துக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் விட்டுவிடலாம். மன்னரே! இவனிடம் பெரும் குறை இருக்கிறது என்றால், சிறிதும் தயங்காமல், இவனை உதறித் தள்ளிவிடுவோம். இவனிடம் பல நல்ல குணங்கள் கண்டறியப்பட்டால் சேர்த்துக் கொள்வோம்.'' (41,42)

பின்னர், தனக்குள் நன்றாக ஆலோசனை செய்து ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்த சரபன், பொருள் நிறைந்த பின்வரும் சொற்களைக் கூறினான்— ''மானுடச் சிங்கமே! ஓர் ஒற்றனைத் தேர்ந்தெடுத்து விபீஷணனிடம் அனுப்பி வைப்போம். (43)

நுண்ணறிவுடைய ஒற்றனை அனுப்புவோம். அவன், அங்குள்ள உண்மை நிலவரத்தைக் கண்டறிந்து வருவான். அவன் கொடுக்கும் தகவல்களை நன்றாகப் பரிசீலித்து, லாப–நஷ்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, அதற்கேற்றபடி ஏற்றுக்கொள்வோம்.'' (44)

அடுத்ததாக, சாமர்த்தியசாலியான ஜாம்பவான், ஆட்சிக்கலை அறிவுடன் ஆராய்ந்து பார்த்து, யுக்திக்கு உகந்ததும் குறை இல்லாததுமான சொற்களை விண்ணப்பித்துக் கொண்டார்— (45)

''மகாபாவியும் பரமவிரோதியுமான இராவணனின் பக்கத்திலிருந்து வந்திருக்கிறான். தங்களைச் சந்திப்பதற்காக அவன் வந்திருக்கும் இந்த இடமும், காலமும் ஏற்றனவல்ல. (அனுமான் இலங்கையை அழித்துவிட்டு வந்தபோதே, அவன் சகோதரனைக் கைவிட்டு, கிஷ்கிந்தைக்கு வந்திருக்க வேண்டும். உரிய நேரத்தையும் இடத்தையும் தவற விட்டுவிட்டான்.) எனவே, எல்லா வகையாலும் அவன் சந்தேகத்திற்குரியவனே.'' (46)

அடுத்ததாக, நீதி–அநீதிகளை அறிந்தவனும் பேசுவதில் வல்லவனுமான மைந்தன் (என்ற வானரன்), தனக்குள் நெடிது ஆலோசித்த பின், யுக்திகளோடு கூடிய சிறந்த ஆலோசனையை வெளியிட்டான்— (47)

''மன்னரே! இராவணனைப் பற்றி விபீஷணன் சொல்லியவற்றைக் குறித்து, அவனிடமே இனிமையாகவும் தெளிவாகவும் கேட்கவேண்டும். வேந்தரே! அவன் கொடுக்கும் பதில்களிலிருந்து, அவனுடைய வருகையின் உட்கருத்தை அறிந்துகொண்டு, அவன் நல்லவனா, கெட்டவனா? என்று அறிவுபூர்வமாக ஆராய்ந்து, அதற்கேற்றபடி தாங்கள் செய்வீர்களாக.'' (48,49)

அதன் பின்னர், எல்லா நீதிநூல்களையும் கற்றறிந்ததனால் மெய்ஞ்ஞானம் பெற்றவரும் அமைச்சர்களில் சிறந்தவருமான அனுமான், செவிக்கினியதும் பொருள் நிறைந்ததுமான இனிய சொற்களைச் சுருக்கமாகக் கூறினார்— (50)

''பிரபுவே! அறிவாளிகளில் உத்தமரும் செயல்திறன் உடையவரும் வாதத்திறமை மிக்கவருமான தங்களுடன் பிருஹஸ்பதிகூட வாதம் செய்து வெல்ல முடியாது. மாமன்னரே! தங்களிடம் நான் வைத்துள்ள மரியாதையால் சில சொற்களைக் கூறப் போகிறேனே தவிர, மற்றவர்கள் கூறிய வாதங்களை எதிர்ப்பதற்காகவோ, போட்டி மனப்பான்மையாலோ, என் மேன்மையைக் காட்டுவதற்காகவோ, ஒரு விருப்பத்தை அடைய விரும்பியோ அல்ல. (51,52)

அர்த$_2$ாநர்த$_2$நிமித்தம் ஹி யது$_3$க்தம் ஸசிவைஸ்தவ ।
தத்ர தோ$_3$ஷம் ப்ரபஶ்யாமி க்ரியா ந ஹ்யுபபத்$_3$யதே ॥ (53)

ருதே நியோகா$_3$த்ஸாமர்த்$_2$யமவபோ$_3$த்$_3$து$_4$ம் ந ஶக்யதே ।
ஸஹஸா விநியோகோ$_3$ ஹி தோ$_3$ஷவாந் ப்ரதிபா$_4$தி மா ॥ (54)

சாரப்ரணிஹிதம் யுக்தம் யது$_3$க்தம் ஸசிவைஸ்தவ ।
அர்த$_2$ஸ்யாஸம்ப$_4$வாத்தத்ர காரணம் நோபபத்$_3$யதே ॥ (55)

அதே$_3$ஶகாலே ஸம்ப்ராப்த இத்யயம் யத்$_3$விபீ$_4$ஷண: ।
விவக்ஷா தத்ர மேऽஸ்தீயம் தாம் நிபோ$_3$த$_4$ யதா$_2$மதி ॥ (56)

ஸ ஏஷ தே$_3$ஶ: காலஶ்ச ப$_4$வதீதி யதா$_2$ ததா$_2$ ।
புருஷாத்புருஷம் ப்ராப்ய ததா$_2$ தோ$_3$ஷகு$_3$ணாவபி ॥ (57)

தௌ$_3$ராத்ம்யம் ராவணே த்$_3$ருஷ்ட்வா விக்ரமம் ச ததா$_2$ த்வயி ।
யுக்தமாக$_3$மநம் தஸ்ய ஸத்$_3$ருஶம் தஸ்ய பு$_3$த்$_3$தி$_4$த: ॥ (58)

அக்ஞாதரூபை: புருஷை: ஸ ராஜந் ப்ருச்ச$_2$யதாமிதி ।
யது$_3$க்தமத்ர மே ப்ரேக்ஷா காசித$_3$ஸ்தி ஸமீக்ஷிதா ॥ (59)

ப்ருச்ச$_2$யமாநோ விஶங்கேத ஸஹஸா பு$_3$த்$_3$தி$_4$மாந் வச: ।
தத்ர மித்ரம் ப்ரது$_3$ஷ்யேத மித்$_2$யா ப்ருஷ்டம் ஸுகா$_2$க$_3$தம் ॥ (60)

அஶக்ய: ஸஹஸா ராஜந் பா$_4$வோ வேத்தும் பரஸ்ய வை ।
அந்த: ஸ்வபா$_4$வைர்கீ$_3$தைஸ்தைர்நைபுண்யம் பஶ்யதா ப்$_4$ருஶம் ॥ (61)

ந த்வஸ்ய ப்$_3$ருவதோ ஜாது லக்ஷ்யதே து$_3$ஷ்டபா$_4$வதா ।
ப்ரஸந்நம் வத$_3$நம் சாபி தஸ்மாந்மே நாஸ்தி ஸம்ஶய: ॥ (62)

அஶங்கிதமதி: ஸ்வஸ்தோ$_2$ ந ஶட$_2$: பரிஸர்பதி ।
ந சாஸ்ய து$_3$ஷ்டா வாக் சாபி தஸ்மாந்நாஸ்தீஹ ஸம்ஶய: ॥ (63)

ஆகாரஶ்சா$_2$த்$_3$யமாநோऽபி ந ஶக்யோ விநிகூ$_3$ஹிதும் ।
ப$_3$லாத்$_3$தி$_4$ விவ்ருணோத்யேவ பா$_4$வமந்தர்க$_3$தம் ந்ருணாம் ॥ (64)

தே$_3$ஶகாலோபபந்நம் ச கார்யம் கார்யவிதா$_3$ம் வர ।
ஸப$_2$லம் குருதே க்ஷிப்ரம் ப்ரயோகே$_3$ணாபி$_4$ஸம்ஹிதம் ॥ (65)

தங்களுடைய ஆலோசகர்கள், (விபீஷணனை அங்கீகரிப்பதால் ஏற்படக்கூடிய) லாப–நஷ்டங்களைக் கண்டறிவதற்காகக் கூறிய உபாயத்தில் குறை காண்கிறேன். ஏனென்றால், அந்த மாதிரியாகப் பரீட்சை செய்வது தற்சமயம் சாத்தியமானதல்ல. விபீஷணனுக்கு அடைக்கலம் கொடுக்கலாமா, கூடாதா? என்ற இந்த விஷயத்தில், அவருக்கு ஒரு வேலை கொடுத்து, அவர் எப்படிச் செய்கிறார்? என்று பார்க்காமல் ஒரு தீர்மானத்துக்கும் வரமுடியாது. அவரை, ஒரு காரியத்தில் ஏவுவது தவறு என்றும் எனக்குத் தோன்றுகிறது. (53,54)

தங்களுடைய அமைச்சர்கள், 'ஒற்றனை அனுப்பி வைக்கலாம்' என்ற ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள். (கண்ணுக்குத் தெரியாத தொலைதூரத்தில் இருப்பவனைப் பற்றிய உண்மைகளை அறிவதற்காக ஒற்றனை அனுப்பலாம். ஆனால், வீடணன் நம் கண்ணெதிரே நின்றுகொண்டு, தன்னைப் பற்றிய விபரங்களைச் சொல்லிவிட்டாரே?) ஆகவே, அதுவும் நல்ல உபாயமாகப் படவில்லை. அத்துடன், 'சரியான இடம்–காலம் இல்லாதபொழுதில் விபீஷணன் வந்திருக்கிறார்' என்று ஒரு காரணமும் சொல்லப்பட்டது. அதைப் பற்றி, என் சிற்றறிவுக்கு எட்டியபடி நான் சொல்லப் போவதைத் தாங்கள் கேட்டருள வேண்டும். (55,56)

முன்–பின் நடந்தவைகளை ஆராய்ந்து பார்த்தால், அவர் வருவதற்கு ஏற்ற இடமும் காலமும் இதுதான் என்பது விளங்கும். விபீஷணன், தாங்கள் இருவரிடமுள்ள (இராம–இராவணர்களிடமுள்ள) குண–தோஷங்களை நன்றாக சிந்தித்துப் பார்த்து, ஓர் அற்பனிடமிருந்து, மேன்மை பொருந்திய ஒருவரிடம்தான் வந்திருக்கிறார். இராவணனிடம் கொடிய இயல்பைக் கண்டார்; தங்களிடம் பேராற்றலைக் கண்டார். அவர் தன்னுடைய பேரறிவுக்கு ஏற்றபடியே (உரிய இடமும், உகந்த காலமும் இதுவே என்று மனதார உணர்ந்து, தங்களிடம் அடைக்கலம் கோரி) செயல்பட்டு, இவ்விடம் வந்திருக்கிறார். (57,58)

மன்னரே! முன்னர் அவருடன் பரிச்சயமில்லாத ஒற்றர்களை அனுப்பி, முழு விபரங்களையும் கேட்டறிய வேண்டும் என்று, ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி நான் நன்றாக ஆலோசித்து, ஒரு கருத்தைக் கொண்டுள்ளேன். (59)

தான் எல்லாவற்றையும் கூறிய பின்னரும், ஒருவன் திடீரென்று வந்து விபரம் கேட்கத் தொடங்கினால், அறிவாளியான புதியவன் சந்தேகப்படுவான். நான் உண்மையை உரக்கக் கூறிய பிறகும், என்மேல் சந்தேகம் கொண்டு வேவுகாரனை அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடன் உறவே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து, நல்ல எண்ணத்தோடு வந்தவன் திரும்பிப் போய்விட்டால், நாம் ஒரு நல்ல நண்பரை இழந்தவர்களாவோம். (60)

மன்னரே! சடாரென்று ஒருவரின் மன இயல்பைப் புரிந்துகொள்ள முடியாது. பிறருடைய மனவோட்டத்தைத் தெரிந்து கொள்வதில் வல்லவர் கூட, மனத்தில் ஒன்றை வைத்து, வெளியில் வேறுவிதமாகக் கபடமாகப் பேசுகிறார் என்பதை உணர்ந்து கொள்ளும் புதியவன், வஞ்சனையாகப் பதில் சொல்வான். தன் அந்தரங்கத்தை வெளியிடமாட்டான். இவர் (விபீஷணன்) பேசும்போது, கொஞ்சங்கூட தீய எண்ணம் காணப்படவில்லை. அவருடைய முகமும் மலர்ச்சியுடன் இருக்கிறது. (தங்களிடம் வந்து சேர்ந்ததால், உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்.) ஆகவே, இவரை நான் சந்தேகிக்கவில்லை. (61,62)

வஞ்சக எண்ணங்கொண்டவன், தயக்கமில்லாமலும் மனத்தெளிவுடனும் எதிரில் வரத் துணியமாட்டான். இவருடைய பேச்சில் குறையேதும் காணப்படவில்லை. ஆகவே, இவரிடம் எனக்கு சந்தேகம் தோன்றவில்லை. மனத்திற்குள் உள்ள அந்தரங்க எண்ணத்திற்கு மாறாக, முகத்தில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றாலும், உள் அந்தரங்கம் எப்படியாவது வெளிப்பட்டே தீரும். செயல்வீரர்களில் தலையாயவரே! இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற முறையில் கூடி வந்திருக்கும் ஒரு வாய்ப்பை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டால், அந்தக் காரியம் விரைவில் பயனைத் தரும். (63–65)

உத்3யோக3ம் தவ ஸம்ப்ரேக்ஷ்ய மித்2யாவ்ருத்தம் ச ராவணம் ।
வாலிநஶ்ச வத4ம் ஶ்ருத்வா ஸுக்3ரீவம் சாபி4ஷேசிதம் ॥ (66)

ராஜ்யம் ப்ரார்த2யமாநஶ்ச பு3த்3தி4பூர்வமிஹாக3த: ।
ஏதாவத்து புரஸ்க்ருத்ய யுஜ்யதே த்வஸ்ய ஸங்க்3ரஹ: ॥ (67)

யதா2ஶக்தி மயோக்தம் து ராக்ஷஸஸ்யார்ஜவம் ப்ரதி ।
த்வம் ப்ரமாணம் து ஶேஷஸ்ய ஶ்ருத்வா பு3த்3தி4மதாம் வர ॥ (68)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஸப்தத3ஶ: ஸர்க3: ॥

அஷ்டாத3ஶ: ஸர்க3:

விபீ4ஷணஸங்க்3ரஹ நிர்ணய:

அத2 ராம: ப்ரஸந்நாத்மா ஶ்ருத்வா வாயுஸுதஸ்ய ஹ ।
ப்ரத்யபா4ஷத து3ர்த4ர்ஷ: ஶ்ருதவாநாத்மநி ஸ்தி2தம் ॥ (1)

மமாபி து விவக்ஷாஸ்தி காசித்ப்ரதி விபீ4ஷணம் ।
ஶ்ருதமிச்சா2மி தத்ஸர்வம் ப4வத்3பி4: ஶ்ரேயஸி ஸ்தி2தை: ॥ (2)

மித்ரபா4வேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கத2ஞ்சந ।
தோ3ஷோ யத்3யபி தஸ்ய ஸ்யாத்ஸதாமேதத3க3ர்ஹிதம் ॥ (3)

ஸுக்3ரீவஸ்த்வத2 தத்3வாக்யமாபா4ஷ்ய ச விம்ருஶ்ய ச ।
தத: ஶுப4தரம் வாக்யமுவாச ஹரிபுங்க3வ: ॥ (4)

ஸுது3ஷ்டோ வாப்யது3ஷ்டோ வா கிமேஷ ரஜநீசர: ।
ஈத்3ருஶம் வ்யஸநம் ப்ராப்தம் ப்4ராதரம் ய: பரித்யஜேத் ॥
கோ நாம ஸ ப4வேத்தஸ்ய யமேஷ ந பரித்யஜேத் ॥ (5)

வாநராதி4பதேர்வாக்யம் ஶ்ருத்வா ஸர்வாநுதீ3க்ஷ்ய ச ।
ஈஷது3த்ஸ்மயமாநஸ்து லக்ஷ்மணம் புண்யலக்ஷணம் ॥
இதி ஹோவாச காகுத்ஸ்தோ2 வாக்யம் ஸத்யபராக்ரம: ॥ (6)

அநதீ4த்ய ச ஶாஸ்த்ராணி வ்ருத்3தா4நநுபஸேவ்ய ச ।
ந ஶக்யமீத்3ருஶம் வக்தும் யது3வாச ஹரீஶ்வர: ॥ (7)

அஸ்தி ஸூக்ஷ்மதரம் கிஞ்சித்3யதத்ர ப்ரதிபா4தி மே ।
ப்ரத்யக்ஷம் லௌகிகம் வாபி வித்3யதே ஸர்வராஜஸு ॥ (8)

அமித்ராஸ்தத்குலீநாஶ்ச ப்ராதிதே3ஶ்யாஶ்ச கீர்திதா: ।
வ்யஸநேஷு ப்ரஹர்தாரஸ்தஸ்மாத3யமிஹாக3த: ॥ (9)

தளர்வடையாத தங்கள் முயற்சி, இராவணனின் தீய ஒழுக்கம், வாலியின் வதம், சுக்ரீவ பட்டாபிஷேகம் ஆகியவற்றை அறிந்து, தனக்கு அரசு கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன், மனத்தில் நம்பிக்கையோடு இங்கே வந்திருக்கிறார். இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும் போது, இவரை நம்முடன் சேர்த்துக் கொள்வது உசிதம் என்றே எண்ணுகிறேன். (66,67)

புத்திமான்களில் சிறந்தவரே! நான் அறிந்தவரையில், இந்த அரக்கர் நேர்மையானவர் என்பதைச் சொல்லிவிட்டேன். இனி, மேற்கொண்டு செய்ய வேண்டியதைத் தீர்மானிக்க வேண்டியது தாங்கள்தான்.'' (68)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினெட்டு

விபீஷணனை ஏற்றுக்கொள்ள முடிவு செய்வது

பின்னர், வாயுகுமாரனுடைய பேச்சைக் கேட்டு மனமகிழ்ச்சியடைந்தவரும் பிறரால் வெல்லமுடியாதவரும், பல நூல்கள் கற்றுத் தேர்ந்தவருமான இராமன், தன் மனத்திலிருக்கும் கருத்தை வெளியிடத் தொடங்கினார்— (1)

''நண்பர்களே! விபீஷணனைப் பற்றி எனக்கும் ஒரு கருத்து இருக்கிறது. நீங்கள் எல்லோரும் என் நலனில் அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பதால், நீங்களும் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். நட்புறவு கொண்டு என்னிடம் வந்திருப்பவனை ஒருக்காலும் நான் கைவிட மாட்டேன். அவனிடம் சில குறைகள் இருக்கலாம். இருந்தாலும், (அப்படிப்பட்டவனையும் ஏற்றுக்கொள்வது என்பதை) சான்றோர்கள் தூற்ற மாட்டார்கள்.'' (2,3)

அப்போது வானரோத்தமனான சுக்ரீவன், அவருடைய பேச்சைக் கேட்டு, அதைப்பற்றி சிறிது சிந்தித்துவிட்டு, மிக்க இனிமையான பின்வரும் சொற்களைக் கூறினான்— (4)

''அண்ணலே! இவனோ பிறப்பில் அரக்கன். இவன் நல்லவனாகவோ, கெட்டவனாகவோ இருந்து விட்டுப் போகட்டும். (அரக்கர் குலத்துக்கே ஆபத்து என்ற மகத்தான சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கும் அண்ணனை உதறிவிட்டு வந்திருப்பவன். பின்னால், வேறு யாரைத்தான் கைவிடமாட்டான்?'' (நம்மையும் உதறிவிட்டுப் போகத் தயங்கமாட்டான்.) (5)

வீண்போகாத பராக்கிரமத்தைக் கொண்ட இராமன், வானரமன்னனின் சொற்களைக் கேட்டு, எல்லோரையும் ஒரு முறை பார்த்துவிட்டு, சற்றே புன்னகை புரிந்தவராக, மங்களமான அமைப்புக் கொண்ட இலக்குவனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்— ''நீதிநூல்களைக் கற்றறியாதவனும், அறவழி நின்று கர்மாக்களைச் செய்து முதிர்ச்சி அடைந்தவர்களுக்குப் பணிவிடை புரியாதவனுமான ஒருவனால், வானரமன்னன் பேசியமாதிரி பேசியிருக்க முடியாது. (6,7)

ஆனால், (வீடணன், அண்ணனை உதறிவிட்டு வந்தவன் என்ற) இந்த விஷயத்தில், எனக்கு ஒரு நுட்பமான கருத்து இருக்கிறது. (நான் சொல்லப்போவது ஒன்றும் புதிதல்ல.) இந்த இயல்பு எல்லா மன்னர்களிடத்திலும் இருக்கிறது; மக்களுக்கும் இது தெரியும். (8)

ஞாதிகளும் (சகோதரர்களும்), அண்டை நாட்டார்களும்தான் (ஆட்சி புரியும் ஓர் அரசனை) எதிர்த்துப் போராடுபவர்கள் என்பது தெரிந்த விஷயம். அரசனுக்கு ஒரு துன்பம் நேரும்போது எதிராளியான மன்னன், தன் விரோதியான அரசரின் உற்றார்–உறவினரைக் கொல்லத் துணிகிறான். (அல்லது, ஆட்சிபுரியும் மன்னன், தன் உறவினர்களிடம் சந்தேகம் கொண்டு, அவர்களை அழிக்கப் பார்க்கிறான்.) (9)

அபாபாஸ்தத்குலீநாஶ்ச மாநயந்தி ஸ்வகாந் ஹிதாந் ।
ஏஷ ப்ராயோ நரேந்த்3ராணாம் ஶங்கநீயஸ்து ஶோப4ந: ॥ (10)

யஸ்து தோ3ஷஸ்த்வயா ப்ரோக்தோ ஹ்யாதா3நேऽரிப3லஸ்ய ச ।
தத்ர தே கீர்தயிஷ்யாமி யதா2ஶாஸ்த்ரமித3ம் ஶ்ருணு ॥ (11)

ந வயம் தத்குலீநாஶ்ச ராஜ்யகாங்க்ஷீ ச ராக்ஷஸ: ।
பண்டி3தா ஹி ப4விஷ்யந்தி தஸ்மாத்3க்3ராஹ்யோ விபீ4ஷண: ॥ (12)

அவ்யக்3ராஶ்ச ப்ரஹ்ருஷ்டாஶ்ச ந ப4விஷ்யந்தி ஸங்க3தா: ।
ப்ரணாத3ஶ்ச மஹாநேஷ ததோऽஸ்ய ப4யமாக3தம் ॥
இதி பே4த3ம் க3மிஷ்யந்தி தஸ்மாத்3க்3ராஹ்யோ விபீ4ஷண: ॥ (13)

ந ஸர்வே ப்4ராதரஸ்தாத ப4வந்தி ப4ரதோபமா: ।
மத்3விதா4 வா பிது: புத்ரா: ஸுஹ்ருதோ3 வா ப4வத்3விதா4: ॥ (14)

ஏவமுக்தஸ்து ராமேண ஸுக்3ரீவ: ஸஹலக்ஷ்மண: ।
உத்தா2யேத3ம் மஹாப்ராக்ஞ: ப்ரணதோ வாக்யமப்3ரவீத் ॥ (15)

ராவணேந ப்ரணிஹிதம் தமவேஹி விபீ4ஷணம் ।
தஸ்யாஹம் நிக்3ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம் வர ॥ (16)

ராக்ஷஸோ ஜிஹ்மயா பு3த்3த்4யா ஸந்தி3ஷ்டோऽயமிஹாக3த: ।
ப்ரஹர்தும் த்வயி விஶ்வஸ்தே ப்ரச்ச2ந்நோ மயி வாநக4 ॥ (17)

லக்ஷ்மணே வா மஹாபா3ஹோ ஸ வத்4ய: ஸசிவை: ஸஹ ।
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்4ராதா ஹ்யேஷ விபீ4ஷண: ॥ (18)

ஏவமுக்த்வா ரகு4ஶ்ரேஷ்ட2ம் ஸுக்3ரீவோ வாஹிநீபதி: ।
வாக்யக்ஞோ வாக்யகுஶலம் ததோ மௌநமுபாக3மத் ॥ (19)

ஸுக்3ரீவஸ்ய து தத்3வாக்யம் ஶ்ருத்வா ராமோ விம்ருஶ்ய ச ।
தத: ஶுப4தரம் வாக்யமுவாச ஹரிபுங்க3வம் ॥ (20)

ஸுது3ஷ்டோ வாப்யது3ஷ்டோ வா கிமேஷ ரஜநீசர: ।
ஸூக்ஷ்மமப்யஹிதம் கர்தும் மமாஶக்த: கத2ஞ்சந ॥ (21)

பிஶாசாந் தா3நவாந் யக்ஷாந் ப்ருதி2வ்யாம் சைவ ராக்ஷஸாந் ।
அங்கு3ல்யக்3ரேண தாந் ஹந்யாமிச்ச2ந் ஹரிக3ணேஶ்வர ॥ (22)

ஶ்ரூயதே ஹி கபோதேந ஶத்ரு: ஶரணமாக3த: ।
அர்சிதஶ்ச யதா2ந்யாயம் ஸ்வைஶ்ச மாம்ஸைர்நிமந்த்ரித: ॥ (23)

குற்றமற்ற தாயாதிகள், தம் இனத்தவரின் நன்மையை விரும்புவார்கள். ஆனால், இப்படிப்பட்டவர்களையும் (நல்லெண்ணம் கொண்டவர்களையும்) அநேகமாக எல்லா மன்னர்களும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள். (10)

(சுக்ரீவனே!) எதிரிப்படையைச் சேர்ந்தவனை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் குற்றமாக நீ எதைக் கூறினாயோ, அது சம்பந்தமாக நீதிநூல்களில் கூறப்பட்டிருக்கும் கருத்தை விளக்கிச் சொல்கிறேன், கேள். (11)

நாம், அவர்கள் குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். (அதனால், தன் சுயநலத்திற்குக் கெடுதி வந்துவிடுமோ? என்று, இவன் பயப்பட்டிருக்க மாட்டான்.) அத்துடன் இந்த அரக்கன், அரசாட்சியை விரும்பி நம்மிடம் வந்திருக்கிறான். (ஆகவே, நம்மை உதறிவிட்டுப் போக மாட்டான்.) அரக்கர்களிலும் நல்லறிவு படைத்தவர்கள் இருப்பார்களல்லவா? (இவன், நல்லறிவு உடையவன்.) ஆகவே, விபீஷணன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவன். (12)

அரக்கர்களான இவர்கள் ஒற்றுமையுடனும், சண்டை–சச்சரவு இல்லாதவர்களாகவும், மனமகிழ்ச்சி உடையவர்களாகவும் இருக்கமாட்டார்கள். இப்படித்தான் இவர்களிடையே பிளவு உண்டாகிறது. (இராவணனிடமிருந்து) இவனுக்குப் பயம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், (அவனை உதறிவிட்டு) மனப்பூர்வமாக நம்மிடம் வந்து உருக்கமாகப் பிரார்த்திக்கிறான். இந்தக் காரணத்தாலும் விபீஷணன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவன். (13)

அன்பனே! உலகில், பரதனுக்கு நிகரான சகோதரர்கள் கிடைக்க மாட்டார்கள்; ஒரு தந்தைக்கு என் போன்ற புதல்வனும், எனக்கு, உன்னைப் போன்ற ஒரு நண்பனும் கிடைக்க மாட்டார்கள்.'' (14)

இராமன் இவ்வாறு கூறியவுடன், இலக்குவனோடிருந்த மகாபுத்திமானான சுக்ரீவன், உடனே எழுந்து வணங்கிப் பின்வருமாறு கூறினான்— (15)

''பொறுமை மிக்க பெரியோய்! இராவணனால் அனுப்பப்பட்டு, விபீஷணன் இங்கு வந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அவனுக்குத் தண்டனை கொடுப்பதுதான் (சிறைப்படுத்துவதுதான்) சரி என்று நான் எண்ணுகிறேன். (16)

மாசற்றவரே! இந்த அரக்கன், (இராவணனால்) ஒரு குறிப்பிட்ட ரகசியம் செய்து முடிப்பதற்காக நியமிக்கப்பட்டு, கபடமான எண்ணத்துடன் இங்கே வந்திருக்கிறான். நாம், இவனை முற்றிலும் தூயவனாக நம்பி, கவலையற்று இருக்கும் சமயத்தில், நாம் சற்று அயர்ந்த சமயத்தில், தங்களுடனோ, என்னுடனோ, இலக்குவனுடமோ சண்டை போடுவான். தோள்வலி மிக்கவரே! இழிகுணம் கொண்ட இராவணனுடைய சகோதரனான இந்த விபீஷணன், உடன் வந்திருக்கும் அமைச்சர்களோடு கொல்லத்தக்கவன்.'' (17,18)

சொற்றிறன் படைத்த இராமனிடம், படைத்தலைவனும் பேச்சில் வல்லவனுமான சுக்ரீவன், இவ்வாறு கூறிவிட்டு வாயை மூடிக்கொண்டான். (19)

சுக்ரீவனுடைய சொற்களைக் கேட்ட இராமன், சற்று ஆலோசனை செய்தபின், சுக்ரீவனை நோக்கி பெருமைமிக்க சொற்களைக் கூறினார்— (20)

''அரக்கனான இவன் நல்லவனோ, கெட்டவனோ? இவன் எனக்கு எம்மாத்திரம்? இவனால், எந்த வழியிலும் கடுகளவு தீங்கைக்கூட எனக்குச் செய்ய முடியாது. வானரர் தலைவனே! நான் (அழிப்பது என்று) விருப்பம் கொண்டால், மண்ணுலகிலுள்ள எல்லாப் பைசாசங்களையும், அசுர–யக்ஷ–அரக்கர்களையும் என் விரல் நுனியால் அழிக்க முடியும். (21,22)

ஒரு புறா, தன் இடத்திற்கு வந்து புகலிடம் கொண்ட, தனது பகைவனான ஒரு வேடனுக்கு, தன்னால் இயன்றளவு உபசாரம் செய்து, அவன் பசியைப் போக்குவதற்காக, தன்னையே நெருப்பில் வீழ்த்திக் கொண்டது என்று, ஒரு வரலாற்றைக் கேட்டிருக்கிறோம்! (23)

ஸ ஹி தம் ப்ரதிஜக்$_3$ராஹ ப$_4$ார்யாஹர்தாரமாக$_3$தம் ।
கபோதோ வாநரஶ்ரேஷ்ட$_2$ கிம் புநர்மத்$_3$விதே$_4$ா ஜந: ॥ (24)

ருஷே: கண்வஸ்ய புத்ரேண கண்டு$_3$நா பரமர்ஷிணா ।
ஶ்ருணு க$_3$ாத$_2$ாம் புரா கீ$_3$தாம் த$_4$ர்மிஷ்ட$_2$ாம் ஸத்யவாதி$_3$நா ॥ (25)

ப$_3$த்$_3$த$_4$ாஞ்ஜலிபுடம் தீ$_3$நம் யாசந்தம் ஶரணாக$_3$தம் ।
ந ஹந்யாத$_3$ாந்ருஶம்ஸ்யார்த$_2$மபி ஶத்ரும் பரந்தப ॥ (26)

ஆர்தோ வா யதி$_3$ வா த்$_3$ருப்த: பரேஷாம் ஶரணாக$_3$த: ।
அபி ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா ॥ (27)

தம் சேத்$_3$ப$_4$யாத்$_3$வா மோஹாத்$_3$வா காமாத்$_3$வாபி ந ரக்ஷதி ।
ஸ்வயா ஶக்த்யா யத$_2$ாந்யாயம் தத்பாபம் லோகக$_3$ர்ஹிதம் ॥ (28)

விநஷ்ட: பஶ்யதோ யஸ்யாரக்ஷிது: ஶரணாக$_3$த: ।
ஆத$_3$ாய ஸுக்ருதம் தஸ்ய ஸர்வம் க$_3$ச்சே$_2$த$_3$ரக்ஷித: ॥ (29)

ஏவம் தோ$_3$ஷோ மஹாநத்ர ப்ரபந்நாநாமரக்ஷணே ।
அஸ்வர்க்$_3$யம் சாயஶஸ்யம் ச ப$_3$லவீர்யவிநாஶநம் ॥ (30)

கரிஷ்யாமி யத$_2$ார்த$_2$ம் து கண்டோ$_3$ர்வசநமுத்தமம் ।
த$_4$ர்மிஷ்ட$_2$ம் ச யஶஸ்யம் ச ஸ்வர்க்$_3$யம் ஸ்யாத்து ப$_2$லோத$_3$யம் ॥ (31)

ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அப$_4$யம் ஸர்வபூ$_4$தேப்$_4$யோ த$_3$தா$_3$ம்யேதத்$_3$வ்ரதம் மம ॥ (32)

ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட$_2$ த$_3$த்தமஸ்யாப$_4$யம் மயா ।
விபீ$_4$ஷணோ வா ஸுக்$_3$ரீவ யதி$_3$ வா ராவண: ஸ்வயம் ॥ (33)

ராமஸ்ய து வச: ஶ்ருத்வா ஸுக்$_3$ரீவ: ப்லவகே$_3$ஶ்வர: ।
ப்ரத்யப$_4$ாஷத காகுத்ஸ்த$_2$ம் ஸௌஹார்தே$_3$நாபி$_4$சோதி$_3$த: ॥ (34)

கிமத்ர சித்ரம் த$_4$ர்மஜ்ஞ லோகநாத$_2$ ஸுக$_2$ாவஹ ।
யத்த்வமார்யம் ப்ரப$_4$ாஷேத$_2$ா: ஸத்த்வவாந் ஸத்பதே$_2$ ஸ்தி$_2$த: ॥ (35)

மம சாப்யந்தராத்மாயம் ஶுத்$_3$த$_4$ம் வேத்தி விபீ$_4$ஷணம் ।
அநுமாநாச்ச ப$_4$ாவாச்ச ஸர்வத: ஸுபரீக்ஷித: ॥ (36)

தஸ்மாத்க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபி$_4$ஸ்துல்யோ ப$_4$வது ராக$_4$வ ॥
விபீ$_4$ஷணோ மஹாப்ராஜ்ஞ: ஸகி$_2$த்வம் சாப்$_4$யுபைது ந: ॥ (37)

வானரோத்தமனே! அந்த வேடன், அந்த ஆண்புறாவின் துணையான பெண்புறாவைக் கைப்பற்றியிருந்தான். அப்படியிருந்தும், தன் இருப்பிடத்திற்கு (மரத்தின் அடியில்) வந்து ஒதுங்கி நின்ற வேடனுக்கு, உரிய வரவேற்பு அளித்தது என்னும்போது, மனித குலத்தில் பிறந்துள்ள என் போன்றவனைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? (24)

முன்னொரு காலத்தில், கண்வ முனிவரின் புதல்வரும், சத்தியம் தவறாதவருமான 'கண்டு' என்ற மாமுனிவர், தருமத்தைப் பற்றிய சில விதிகளைக் கூறியுள்ளார். சொல்கிறேன், கேள். (25)

எதிரிகளை மாய்ப்பவனே! கைகளைக் கூப்பிக் கொண்டு, நொந்து துவண்டு, அடைக்கலம் கோரிப் பிரார்த்திப்பவனிடம் அவன் எதிரியாகவே இருந்தாலும் சரி, அறநெறிகளின் அடித்தளமாக விளங்கும் கருணையைக் காட்ட வேண்டுமே தவிர, அவனைக் கைவிடலாகாது. (26)

ஒரு விரோதி துன்பத்தில் ஆழ்ந்திருந்தாலும் சரி, அகந்தையுடையவனாக இருந்தாலும் சரி, தன் எதிரியிடமே அடைக்கலம் தேடி வந்துவிட்டானாயின், அறம் தவறாத சான்றோன், தன் உயிரைக் கொடுத்தேனும் அவனைக் காப்பாற்ற வேண்டும். (27)

அவன் (சான்றோன்) அச்சத்தாலோ, மதிமயக்கத்தாலோ அல்லது வேறு ஆசையாலோ, நியாயமான முறையில், தன் சக்திக்கு ஏற்றபடி பாதுகாப்புக் கொடுக்காவிட்டால், அந்தப் பாவச்செயலை உலக மக்கள் நிந்திப்பார்கள். (28)

அடைக்கலம் கோரி வந்தவனை, ஒருவன் ஏற்றுக்கொள்ளாமல் புறந்தள்ளினால், அவன் எதிரிலேயே உயிரை விடும்போது, பாதுகாப்பு கொடுக்கத் தவறியவனின் எல்லாப் புண்ணியங்களையும் எடுத்துச் சென்று விடுகிறான். (29)

அடைக்கலம் தேடி வந்தவனை அலட்சியம் செய்வது, மாபெரும் குற்றம். சரணாகதி அடைந்தவனை ஏற்றுக் கொள்ளாமற்போவது என்ற செயல் சுவர்க்கத்தைத் தராதது; புகழைக் கொடுக்காதது; உடல் வலிமை மற்றும் ஆண்மையை அழிக்கக் கூடியது. ஆகவே, கண்டு முனிவரின் உன்னதமான உபதேசத்தை நடத்திக் காட்டப் போகிறேன். ஏனென்றால், இறுதிப் பயனான தருமம், புகழ், சுவர்க்கம் ஆகியவைகளைத் தரக்கூடியது, அது. (30,31)

ஒருவன், ஒரே ஒரு தடவை என்னைச் சரணடைந்து, 'நான், உன்னுடையவன்' என்று சொல்லி, தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டானாயின், நான் அவனுக்கு எல்லாப் பிராணிகளிடமிருந்தும் அபயம் கொடுக்கிறேன். இது, என் சங்கல்பம். (32)

ஆகவே, வானரோத்தமனே! அவனுக்கு நான் (அவன் பிரார்த்தித்த விநாடியிலேயே) அபயம் கொடுத்துவிட்டேன். சுக்ரீவனே! வந்திருப்பவன் விபீஷணனோ அல்லது அந்த இராவணனாகவே இருந்தாலும் சரி, அவனை (அடைக்கலம் கேட்டு வந்து காத்துக் கொண்டிருப்பவனை) நீயே சென்று அழைத்து வருவாயாக.'' (33)

ஸ்ரீராமனுடைய சொற்களைக் கேட்ட வானரத் தலைவன் சுக்ரீவன், எல்லை காணமுடியாத நட்பு உணர்ச்சியால் மனமுருகி, காகுத்தனை நோக்கிப் பதில் கூறினான்— (34)

''அறம் தவறாதவரே! உலகத் தலைவரே! எல்லோருக்கும் ஆனந்தம் அளிப்பவரே! தாங்கள், மகோன்னதமான தருமத்தைக் கடைப்பிடிக்கும் உறுதியில், சில முன்னுதாரணங்களை எடுத்து இயம்பினீர்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? (35)

என்னுடைய அந்தராத்மாவும் விபீஷணன் தூயவன் என்றே கருதுகிறது. இவருடைய முந்தைய நடவடிக்கைகளைச் சிந்தித்துப் பார்த்தும், இப்போது வெளிப்படையாகத் தெரியும் உணர்ச்சிகளை இணைத்தும் பார்த்தால், இவர் உள்ளும் புறமும் ஒன்றாக இருப்பவர் என்று நன்றாக ஆராய்ந்த பின் அனுமான் சொல்லியிருக்கிறான். (36)

ஆகவே! இராமப்பிரபுவே! இப்போதே விபீஷணன் எங்களுடன் வந்து சேரட்டும். (தங்கள் பணியில் ஈடுபடட்டும்.) பேரறிவாளரான அவர், எங்கள் நண்பராக ஆகட்டும்.'' (37)

ததஸ்து ஸுக்₃ரீவவசோ நிஶம்ய தத்–
த₄ரீஸ்வரேணாபி₄ஹிதம் நரேஸ்வர: ।
விபீ₄ஷணேநாஶு ஜகா₃ம ஸங்க₃மம்
பதத்ரிராஜநே யதா₂ புரந்த₃ர: ॥ (38)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ அஷ்டாத₃ஶ: ஸர்க₃: ॥

ஏகோநவிம்ஶ: ஸர்க₃:

ஶரதல்பஸம்வேஶ:

ராக₄வேணாப₄யே த₃த்தே ஸந்நதோ ராவணாநுஜ: ।
விபீ₄ஷணோ மஹாப்ராக்ஞோ பூ₄மிம் ஸமவலோகயந் ॥ (1)

கா₂த்பபாதாவநீம் ஹ்ருஷ்டோ ப₄க்தைரநுசரை: ஸஹ ।
ஸ து ராமஸ்ய த₄ர்மாத்மா நிபபாத விபீ₄ஷண: ॥
பாத₃யோ: ஶரணாந்வேஷீ சதுர்பி₄: ஸஹ ராக்ஷஸை: ॥ (2)

அப்₃ரவீச்ச ததா₂ ராமம் வாக்யம் தத்ர விபீ₄ஷண: ।
த₄ர்மயுக்தம் ச யுக்தம் ச மநஸ: ஸம்ப்ரஹர்ஷணம் ॥ (3)

அநுஜோ ராவணஸ்யாஹம் தேந சாஸ்ம்யவமாநித: ।
ப₄வந்தம் ஸர்வபூ₄தாநாம் ஶரண்யம் ஶரணம் க₃த: ॥ (4)

பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த₄நாநி ச ।
ப₄வத்₃க₃தம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகா₂நி ச ॥ (5)

தஸ்ய தத்₃வசநம் ஶ்ருத்வா ராமோ வசநமப்₃ரவீத் ।
வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்₄யாம் பிப₃ந்நிவ ॥ (6)

ஆக்₂யாஹி மம தத்த்வேந ராக்ஷஸாநாம் ப₃லாப₃லம் ।
ஏவமுக்தம் தத₃ா ரக்ஷோ ராமேணாக்லிஷ்டகர்மணா ॥
ராவணஸ்ய ப₃லம் ஸர்வமாக்₂யாதுமுபசக்ரமே ॥ (7)

அவத்₄ய: ஸர்வபூ₄தாநாம் தே₃வதா₃நவரக்ஷஸாம் ।
ராஜபுத்ர த₃ஶக்₃ரீவோ வரதா₃நாத்ஸ்வயம்பு₄வ: ॥ (8)

ராவணாநந்தரோ ப்₄ராதா மம ஜ்யேஷ்ட₂ஶ்ச வீர்யவாந் ।
கும்ப₄கர்ணோ மஹாதேஜா: ஶக்ரப்ரதிப₃லோ யுதி₄ ॥ (9)

ராம ஸேநாபதிஸ்தஸ்ய ப்ரஹஸ்தோ யதி₃ வா ஶ்ருத: ।
கைலாஸே யேந ஸங்க்₃ராமே மாணிப₄த்₃ர: பராஜித: ॥ (10)

வானரமன்னன் சுக்ரீவனால் கூறப்பட்ட சொற்களைக் கேட்ட, மன்னராகிய இராமன் விரைவாகத் தானே முன்சென்று விபீஷணனைச் சந்தித்தார். தேவராஜன், பக்ஷிராஜனைச் சந்திப்பது போலிருந்தது, அந்தக் காட்சி! (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்தொன்பது

தருப்பைப் பாயில்...

இவ்வாறு இராமன் அபயம் அளித்தவுடன், மகா அறிவாளியும் இராவணனின் தம்பியுமான விபீஷணன் மிகுந்த வணக்கத்துடன் (கீழே இறங்குவதற்காகத்) தரையை நோக்கினான். (1)

மனமகிழ்ச்சி கொண்ட அவன், தன் ஆதரவாளர்களான நான்கு பக்தர்களுடனும், ஆகாயத்திலிருந்து பூமியில் இறங்கினான். அடைக்கலம் தேடி வந்த தருமாத்மாவான விபீஷணன், நான்கு அரக்கர்களோடும்கூட இராமபிரானுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். (2)

அப்போது, வீடணன், இராமனை நோக்கி அறநெறிப்பட்டதும், தர்க்கவாதங்களுக்கு ஏற்றதும், எல்லோருக்கும் மனமகிழ்ச்சியைக் கொடுப்பதுமான பேச்சைப் பேசினான்— (3)

''ஐயனே! நான், இராவணனுடைய தம்பி. அவனால் அவமதிக்கப்பட்டேன். தாங்கள், எல்லாப் பிராணிகளுக்கும் புகலிடம் என்பதை உணர்ந்து, தங்களைச் சரண் அடைந்துள்ளேன். என்னுடைய நண்பர்கள், செல்வங்கள் மற்றும் இலங்கைப் பட்டணம் ஆகியவற்றைத் துறந்துவிட்டு இங்கு வந்திருக்கிறேன். இனி, என்னுடைய நாடு, வாழ்க்கை, சௌக்கியம் எல்லாம் தங்கள் வசத்தில் இருக்கின்றன.'' (மோட்ச சாம்ராஜ்யம், கைங்கரிய வாழ்க்கை, ஆத்மானந்தம் ஆகியவைகளைத் தாங்கள்தான் அருளவேண்டும்.) (4,5)

வீடணனுடைய சொற்களைக் கேட்ட இராமன் இனிய சொற்களால் அவனுக்கு ஆறுதல் கூறி, அன்பு கெழுமிய பார்வையால் அவனைப் பருகிவிடுவதைப் போல உன்னிப்பாகப் பார்த்து, பின்வருமாறு கூறினார்— (6)

''அரக்கர்களுடைய பலம்–பலஹீனம் இரண்டையும் உள்ளபடி நீ எனக்குக் கூறு.'' மாபெரும் செயல்களையும் எளிதாக முடிக்கவல்ல இராமன் இவ்வாறு கேட்டவுடன், அரக்கனான வீடணன் இராவணனுடைய படைபலம் மற்றும் எல்லா ஆற்றல்களையும் பற்றிச் சொல்லத் தொடங்கினான்— (7)

''மாமன்னரின் மைந்தரே! பிரும்மாவிடமிருந்து பெற்ற வரத்தினால், தேவ–அசுர–அரக்கர்கள் எவராலும், வேறு உயிர்ப் பிராணிகளாலும் இராவணன் கொல்லப்பட முடியாதவன். (8)

இராவணனுக்குத் தம்பியும் எனக்குத் தமையனுமாகிய கும்பகர்ணன் மிகவும் பராக்கிரமம் படைத்தவன்; போரில் இந்திரனையும் எதிர்த்து நிற்கும் பேராற்றலுடையவன். இராமப்பிரபு! அவனுடைய படைத்தலைவன் பெயர் பிரஹஸ்தன். கைலாசபர்வதத்தில் (குபேரனோடு இராவணன் போர் புரிந்தபோது) குபேரனுடைய சேனைத் தலைவனான மணிபத்ரனைத் தோற்கடித்தான் என்ற செய்தியைத் தாங்கள் ஒருவேளை கேட்டிருக்கக்கூடும். (9,10)

ப$_3$த்$_3$த$_4$கோ$_3$தா$_4$ங்கு$_3$லித்ராணஸ்த்வவத்$_4$யகவசோ யுதி$_4$ ।
த$_4$நுராதா$_3$ய திஷ்ட$_2$ந் ஸ த்வத்$_3$ருஶ்யோ ப$_4$வதீந்த்$_3$ரஜித் ॥ (11)

ஸங்க்$_3$ராமே ஸ மஹாவ்யூஹே தர்பயித்வா ஹுதாஶநம் ।
அந்தர்தா$_4$நக$_3$த: ஶத்ரூநிந்த்$_3$ரஜித்$_3$த$_4$ந்தி ராக$_4$வ ॥ (12)

மஹோத$_3$ரமஹாபார்ஶ்வௌ ராக்ஷஸஶ்சாப்யகம்பந: ।
அநீகபாஸ்து தஸ்யைதே லோகபாலஸமா யுதி$_4$ ॥ (13)

த$_3$ஶகோடிஸஹஸ்ராணி ரக்ஷஸாம் காமரூபிணாம் ।
மாம்ஸஶோணிதப$_4$க்ஷாணாம் லங்காபுரநிவாஸிநாம் ॥ (14)

ஸ தை: பரிவ்ருதோ ராஜா லோகபாலாநயோத$_4$யத் ।
ஸஹ தே$_3$வைஸ்து தே ப$_4$க்நா ராவணேந மஹாத்மநா ॥ (15)

விபீ$_4$ஷணவச: ஶ்ருத்வா ராமோ த்$_3$ருட$_4$பராக்ரம: ।
அந்வீக்ஷ்ய மநஸா ஸர்வமித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (16)

யாநி கர்மாபதா$_3$நாநி ராவணஸ்ய விபீ$_4$ஷண ।
ஆக்$_2$யாதாநி ச தத்த்வேந ஹ்யவக$_3$ச்ச$_2$ாமி தாந்யஹம் ॥ (17)

அஹம் ஹத்வா த$_3$ஶக்$_3$ரீவம் ஸப்ரஹஸ்தம் ஸஹாநுஜம் ।
ராஜாநம் த்வாம் கரிஷ்யாமி ஸத்யமேதத்$_3$ப்$_3$ரவீமி தே ॥ (18)

ரஸாதலம் வா ப்ரவிஶேத்பாதாலம் வாபி ராவண: ।
பிதாமஹஸகாஶம் வா ந மே ஜீவந் விமோக்ஷ்யதே ॥ (19)

அஹத்வா ராவணம் ஸங்க்$_2$யே ஸபுத்ரப$_3$லபா$_3$ந்த$_4$வம் ।
அயோத்$_4$யாம் ந ப்ரவேக்ஷ்யாமி த்ரிபி$_4$ஸ்தைர்ப்$_4$ராத்ருபி$_4$: ஶபே ॥ (20)

ஶ்ருத்வா து வசநம் தஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
ஶிரஸா வந்த்$_3$ய த$_4$ர்மாத்மா வக்துமேவோபசக்ரமே ॥ (21)

ராக்ஷஸாநாம் வதே$_4$ ஸாஹ்யம் லங்காயாஶ்ச ப்ரத$_4$ர்ஷணே ।
கரிஷ்யாமி யத$_2$ாப்ராணம் ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம் ॥ (22)

இதி ப்$_3$ருவாணம் ராமஸ்து பரிஷ்வஜ்ய விபீ$_4$ஷணம் ।
அப்$_3$ரவீல்லக்ஷ்மணம் ப்ரீத: ஸமுத்$_3$ராஜ்ஜலமாநய ॥ (23)

தேந சைநம் மஹாப்ராக்ஞமபி$_4$ஷிஞ்ச விபீ$_4$ஷணம் ।
ராஜாநம் ரக்ஷஸாம் க்ஷிப்ரம் ப்ரஸந்நே மயி மாநத$_3$ ॥ (24)

ஏவமுக்தஸ்து ஸௌமித்ரிரப்$_4$யஷிஞ்சத்$_3$விபீ$_4$ஷணம் ।
மத்$_4$யே வாநரமுக்$_2$யாநாம் ராஜாநம் ராமஶாஸநாத் ॥ (25)

இந்திரஜித் என்பவன் உடும்புத் தோலாலான கையுறைகளையும், பிளக்க முடியாத கவசத்தையும் அணிந்துகொண்டு, கையில் வில்லேந்தி, போர்க்களத்தில் கண்ணுக்குப் புலப்படாமல் (மாயையால்) மறைந்து போய்விடுகிறான். (11)

இராமப் பெருந்தகையே! வீரலட்சுமி பொருந்திய இந்திரஜித், (பல வேள்விகளைச் செய்து, அதன் மூலம்) அக்னி பகவானைத் திருப்தியுறச் செய்து, ஓர் அற்புத சக்தியைப் பெற்றிருக்கிறான். போர்க்களத்தில், சேனை அணிவகுத்து நிற்கும்போது, இவன் மட்டும் கண்ணுக்குப் புலப்படாமல் நின்று எதிரிகளைத் தாக்குவான். (12)

அவனுடைய (இராவணனுடைய) படைத்தலைவர்களான மகோதரன், மகாபார்சுவன், அகம்பனன் ஆகிய அரக்கர்கள், போரில் லோகபாலர்களுக்கு நிகரானவர்கள். (13)

இலங்கையில் ஊன்–உதிரத்தை உணவாகக் கொண்டவர்களும், நினைத்த உருவம் எடுக்க வல்லவர்களுமான பதினாயிரம் கோடி அரக்கர்கள் வசிக்கிறார்கள். அரக்க மன்னன், அவர்களுடைய துணையோடு லோகபாலர்களுடன் போர் செய்தான். தீய ஒழுக்கமுடைய இராவணனால், லோகபாலர்களும், அவர்களுக்கு உதவி செய்ய வந்த தேவர்களும் முறியடிக்கப்பட்டார்கள்.'' (14,15)

அசைக்க முடியாத பேராண்மை கொண்ட இராமன், விபீஷணனுடைய சொற்களைச் செவியாரக் கேட்டு, அவன் கூறிய செய்திகளைத் தன் மனத்துள்ளே ஆராய்ந்து பதில் கூறினார்— (16)

''விபீஷணா! போர்த்துறையில் இராவணனுடைய பலம் பற்றி, நீ சொன்ன உண்மையான தகவல்களை நான் அறிவேன். (17)

பிரஹஸ்தனோடும், தம்பி கும்பகர்ணனோடும்கூட இராவணனைக் கொன்று, மன்னனாக உனக்கு நான் முடிசூட்டுகிறேன். இதை உனக்குச் சத்தியமாகச் சொல்கிறேன். (18)

இராவணன், ரஸாதலத்திற்கோ பாதாளத்திற்கோ போய் ஒளிந்துகொண்டாலும் சரி, பிரும்மாவினுடைய சத்தியலோகத்திற்குச் சென்று, அவருடைய பாதுகாப்பில் இருந்தாலும் சரி, என்னிடமிருந்து உயிருடன் திரும்ப மாட்டான். (19)

போர்க்களத்தில், புதல்வர்–நண்பர்–உறவினர்களோடு இராவணனைக் கொல்லாமல், நான் அயோத்திக்குள் நுழையமாட்டேன். என் மூன்று சகோதரர்கள் மீதும் ஆணையிட்டுச் சொல்கிறேன்.'' (20)

அரிய செயல்களையும் எளிதில் செய்து முடிக்கும் இராமபிரானுடைய அந்தச் சொற்களைக் கேட்ட விபீஷணன், அறத்தின் நாயகனைத் தலைதாழ்த்தி வணங்கி, பின்வருமாறு கூறத் தொடங்கினான்— (21)

''அண்ணலே! அரக்கர்களை அழிப்பதிலும் இலங்கையைக் கைப்பற்றுவதிலும், நான் என் உயிருள்ள மட்டும் தங்களுக்கு உதவி செய்வேன்; தங்கள் படையில் சேர்ந்து சேவை செய்வேன்.'' (22)

இவ்வாறு கூறிய வீடணனை, இராமன் மார்புறத் தழுவிக்கொண்டு, உள்ளப்பூரிப்புடன் இலக்குவனைப் பார்த்து, ''சமுத்திரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வா'' என்று கூறினார். ''பெரியோர்களை மதிக்கும் லட்சுமணா! நான் இப்போது மனம் நெகிழ்ந்து போயிருக்கிறேன். அதனால் இந்தப் பொழுதிலேயே, கடல்நீரைக் கொண்டு அரக்கர் மன்னனாக, பேரறிவாளன் விபீஷணனுக்கு அபிஷேகம் செய்து வைப்பாயாக.'' (23,24)

இவ்வாறு சொல்லப்பட்டவுடன், சுமித்திரையின் தவப் புதல்வனாகிய இலக்குவன், வானரத்தலைவர்கள் எதிரில் (அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே) இராம மாமன்னரின் கட்டளைப்படி, விபீஷணனுக்கு அரசு பட்டம் அளித்து அபிஷேகம் செய்தான். (25)

தம் ப்ரஸாத$_3$ம் து ராமஸ்ய த்$_3$ருஷ்ட்வா ஸத்$_3$ய: ப்லவங்க$_3$மா: ।
ப்ரசுக்ருஶுர்மஹாத்மாநம் ஸாது$_4$ ஸாத்$_4$விதி சாப்$_3$ருவந் ॥ (26)

அப்$_3$ரவீச்ச ஹநூமாம்ஸ்தம் ஸுக்$_3$ரீவஶ்ச விபீ$_4$ஷணம் ।
கத$_2$ம் ஸாக$_3$ரமக்ஷோப்$_4$யம் தராம வருணாலயம் ॥
ஸைந்யை: பரிவ்ருதா: ஸர்வே வாநராணாம் மஹௌஜஸாம் ॥ (27)

உபாயம் நாதி$_4$க$_3$ச்சா$_2$மோ யதா$_2$ நத$_3$நீ$_3$பதிம் ।
தராம தரஸா ஸர்வே ஸஸைந்யா வருணாலயம் ॥ (28)

ஏவமுக்தஸ்து த$_4$ர்மஜ்ஞ: ப்ரத்யுவாச விபீ$_4$ஷண: ।
ஸமுத்$_3$ரம் ராக$_4$வோ ராஜா ஶரணம் க$_3$ந்துமர்ஹதி ॥ (29)

கா$_2$நித: ஸக$_3$ரேணாயமப்ரமேயோ மஹோத$_3$தி$_4$: ।
கர்துமர்ஹதி ராமஸ்ய ஜ்ஞாதே: கார்யம் மஹோத$_3$தி$_4$: ॥ (30)

ஏவம் விபீ$_4$ஷணேநோக்தோ ராக்ஷஸேந விபஶ்சிதா ।
ஆஜகா$_3$மாத$_2$ ஸுக்$_3$ரீவோ யத்ர ராம: ஸலக்ஷ்மண: ॥ (31)

ததஶ்சாக்$_2$யாதுமாரேபே$_4$ விபீ$_4$ஷணவச: ஶுப$_4$ம் ।
ஸுக்$_3$ரீவோ விபுலக்$_3$ரீவ: ஸாக$_3$ரஸ்யோபவேஶநம் ॥ (32)

ப்ரக்ருத்யா த$_4$ர்மஶீலஸ்ய ராக$_4$வஸ்யாப்யரோசத ।
ஸ லக்ஷ்மணம் மஹாதேஜா: ஸுக்$_3$ரீவம் ச ஹரீஸ்வரம் ॥
ஸத்க்ரியார்த$_2$ம் க்ரியாத$_3$க்ஷ: ஸ்மிதபூர்வமபா$_4$ஷத ॥ (33)

விபீ$_4$ஷணஸ்ய மந்த்ரோऽயம் மம லக்ஷ்மண ரோசதே ।
ப்$_3$ரூஹி த்வம் ஸஹஸுக்$_3$ரீவஸ்தவாபி யதி$_3$ ரோசதே ॥ (34)

ஸுக்$_3$ரீவ: பண்டி$_3$தோ நித்யம் ப$_4$வாந் மந்த்ரவிசக்ஷண: ।
உபா$_4$ப்$_4$யாம் ஸம்ப்ரதா$_4$ர்யார்த$_2$ம் ரோசதே யத்ததுச்யதாம் ॥ (35)

ஏவமுக்தௌ து தௌ வீராவுபௌ$_4$ ஸுக்$_3$ரீவலக்ஷ்மணௌ ।
ஸமுதா$_3$சாரஸம்யுக்தமிதம் வசநமூசது: ॥ (36)

கிமர்த$_2$ம் நௌ நரவ்யாக்$_4$ர ந ரோசிஷ்யதி ராக$_4$வ ।
விபீ$_4$ஷணேந யச்சோக்தமஸ்மிந் காலே ஸுகா$_2$வஹம் ॥ (37)

அப$_3$த்$_4$வா ஸாக$_3$ரே ஸேதும் கோ$_4$ரேऽஸ்மிந் வருணாலயே ।
லங்கா நாஸாதி$_3$தும் ஶக்யா ஸேந்த்$_3$ரைரபி ஸுராஸுரை: ॥ (38)

விபீ$_4$ஷணஸ்ய ஶூரஸ்ய யதா$_2$ர்த$_2$ம் க்ரியதாம் வச: ।
அலம் காலாத்யயம் க்ருத்வா ஸமுத்$_3$ரோऽயம் நியுஜ்யதாம் ॥
யதா$_2$ ஸைந்யேந க$_3$ச்சே$_2$ம புரீம் ராவணபாலிதாம் ॥ (39)

அப்போது, இராமபிரான் நொடிப்பொழுதில் வீடணனுக்குச் செய்த பேரருளைக் கண்டு, வானரர்கள் குதித்துக் கும்மாளமிட்டார்கள். மகாத்மாவான இராமனைப் பார்த்து, 'நல்லது, நல்லது' என்று கூச்சலிட்டார்கள். (26)

பின்னர், அனுமானும் சுக்ரீவனும், விபீஷணனைத் தனியே அழைத்துச் சென்று, ''வருணனுக்கு இருப்பிடமானதும் கொஞ்சமும் அசைக்க முடியாததுமான மாபெருங்கடலை, மகாபலம் பொருந்திய வானரர்களின் பெரும்படையுடன் இருக்கும் நாம், எவ்வாறு கடந்து செல்வோம்?'' என்று வினவினார்கள். (27)

ஆறுகள் சங்கமிக்கும் வருணனின் இருப்பிடமான பெருங்கடலை, படைகளோடு கூடியிருக்கும் நாம் எல்லோரும் விரைவாகக் கடந்து செல்லும் உபாயத்தை அறியாமலிருக்கிறோம். (28)

இவ்வாறு வினவப்பட்ட அறநெறியாளர் விபீஷணன், ''ரகு வம்ச மன்னராகிய இராமன், கடலரசனைச் சரண்புக வேண்டும்'' என்று பதில் கூறினான். (29)

''ஆழங்காண முடியாத இந்தப் பெருங்கடலை, ஸகர மன்னர் வெட்டித் தோண்டி உண்டாக்கினார். (இராமன், ஸகர குலத்தில் உதித்தவர்.) அதனால், இவருக்கு உதவி செய்வது (கைம்மாறு செய்வது) ஸாகரத்தின் கடமையாகும்.'' (30)

தெள்ளறிவு படைத்த அரக்கன் விபீஷணன் இவ்வாறு கூறியதைக் கேட்ட பின், இராமனும் லட்சுமணனும் இருந்த இடத்திற்கு சுக்ரீவன் வந்தான். (31)

பெரிய கழுத்தையுடைய சுக்ரீவன், 'கடலரசனை வணங்கிக் கேட்பது' என்ற விபீஷணனின் சாத்விக ஆலோசனையை, இராமனிடம் விண்ணப்பித்துக் கொண்டான். ஸ்ரீராமன், இயல்பாகவே அறநெறிகளைக் கடைப்பிடிப்பவர். அதனால், (விபீஷணனுடைய) அந்த ஆலோசனை ஏற்கத்தக்கதாக இருந்தது. வினைத்திட்பமுடையவரும் பெரும் பராக்கிரமசாலியுமான அவர், இலக்குவனையும் வானரத் தலைவனுமான சுக்ரீவனையும் சிறுநகையுடன் நோக்கி, விபீஷணன் கூறிய உபாயத்தை அங்கீகரித்துப் பதில் சொன்னார்— (32,33)

''லட்சுமணா! விபீஷணனுடைய இந்த ஆலோசனை எனக்குப் பிடித்திருக்கிறது. சுக்ரீவனுடன் கலந்தாலோசித்து, உனக்கும் இதில் சம்மதமென்றால், அதைச் சொல். (34)

சுக்ரீவன், அரசநீதியை நன்றாக அறிந்தவன்; நீயோ, சூழ்நிலைக்கேற்றபடி ஆலோசனை வழங்குவதில் வல்லவன். அதனால், இப்போது நாம் செய்யப் போகிற காரியம் பற்றி நன்றாக ஆலோசனை செய்து, உங்கள் இருவருக்கும் எது நல்லது? என்று தோன்றுகிறதோ, அதைச் சொல்.'' (35)

இவ்வாறு கூறப்பட்ட மாவீரர்களான சுக்ரீவ–லட்சுமணனாகிய அவ்விருவரும், மிக்க வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டார்கள்— (36)

''மானுடச் சிங்கமே! இந்தத் தருணத்தில் நமக்கு நன்மை தரக்கூடிய எந்தவொரு ஆலோசனையானது விபீஷணனால் கூறப்பட்டதோ, அது எங்களுக்கு எப்படிப் பிடிக்காமற்போகும்? (37)

வருணனுக்கு இருப்பிடமானதும் பயங்கரமானதுமான இந்தப் பெருங்கடலில் அணை கட்டாமல், இந்திரன் உள்ளிட்ட தேவர்களாலும் அசுரர்களாலும்கூட இலங்கையைச் சென்றடைய முடியாது. (38)

மகாசூரரான விபீஷணன் கூறிய யோசனையை, அவ்வாறே செயல்படுத்தப்படலாம். இதுவரை காலதாமதம் செய்தது போதும். நாம் நம்முடைய பெரும் படையுடன் இராவணனால் பரிபாலிக்கப்படும் பட்டணத்தை அடைவதற்கு, சமுத்திரராஜனிடமிருந்து எத்தகைய உதவி தேவையோ, அதைப் பிரார்த்திப்போம்.'' (39)

ஏவமுக்த: குஶாஸ்தீர்ணே தீரே நத$_3$நதீ$_3$பதே: ।
ஸம்விவேஶ ததா$_3$ ராமோ வேத்$_3$யாமிவ ஹுதாஶந: ॥ (40)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகோநவிம்ஶ: ஸர்க$_3$: ॥

விம்ஶ: ஸர்க$_3$:

ஸுக்$_3$ரீவபேத$_3$நோபாய:

ததோ நிவிஷ்டாம் த்$_4$வஜிநீம் ஸுக்$_3$ரீவேணாபி$_4$பாலிதாம் ।
த$_3$த$_3$ர்ஶ ராக்ஷஸோஃப்$_4$யேத்ய ஶார்தூ$_3$லோ நாம வீர்யவாந் ॥ (1)

சாரோ ராக்ஷஸராஜஸ்ய ராவணஸ்ய து$_3$ராத்மந: ।
தாம் த்$_3$ருஷ்ட்வா ஸர்வமவ்யக்$_3$ரம் ப்ரதிக$_3$ம்ய ஸ ராக்ஷஸ: ॥
ப்ரவிஶ்ய லங்காம் வேகே$_3$ந ராவணம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (2)

ஏஷ வாநரருக்ஷௌகோ$_4$ லங்காம் ஸமபி$_4$வர்ததே ।
அகா$_3$த$_4$ஶ்சாப்ரமேயஶ்ச த்$_3$விதீய இவ ஸாக$_3$ர: ॥ (3)

புத்ரௌ த$_3$ஶரத$_2$ஸ்யேமௌ ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
உத்தாமாயுத$_4$ஸம்பந்நௌ ஸீதாயா: பத$_3$மாக$_3$தௌ ॥
ஏதௌ ஸாக$_3$ரமாஸாத்$_3$ய ஸம்நிவிஷ்டௌ மஹாத்$_3$யுதீ ॥ (4)

ப$_3$லமாகாஶமாவ்ருத்ய ஸர்வதோ த$_3$ஶயோஜநம் ।
தத்த்வபூ$_4$தம் மஹாராஜ க்ஷிப்ரம் வேதி$_3$துமர்ஹஸி ॥ (5)

தவ தூ$_3$தா மஹாராஜ க்ஷிப்ரமர்ஹந்த்யவேக்ஷிதும் ।
உபப்ரதா$_3$நம் ஸாந்த்வம் வா பே$_4$தோ$_3$ வாத்ர ப்ரயுஜ்யதாம் ॥ (6)

ஶார்தூ$_3$லஸ்ய வச: ஶ்ருத்வா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
உவாச ஸஹஸா வ்யக்$_3$ர: ஸம்ப்ரதா$_4$ர்யார்த$_2$மாத்மந: ॥
ஶுகம் நாம ததா$_3$ ரக்ஷோ வாக்யமர்த$_2$விதா$_3$ம் வரம் ॥ (7)

ஸுக்$_3$ரீவம் ப்$_3$ரூஹி க$_3$த்வா த்வம் ராஜாநம் வசநாந்மம ॥
யதா$_2$ஸந்தே$_3$ஶமக்லீப$_3$ம் ஶ்லக்ஷ்ணயா பரயா கி$_3$ரா ॥ (8)

த்வம் வை மஹாராஜகுலப்ரஸூதோ மஹாப$_3$லஶ்சர்க்ஷரஜ:ஸுதஶ்ச ।
ந கஶ்சித$_3$ர்த$_2$ஸ்தவ நாஸ்த்யநர்த$_2$ஸ்ததா$_2$ ஹி மே ப்$_4$ராத்ருஸமோ ஹரீஶ ॥ (9)

அஹம் யத்$_3$யஹரம் பா$_4$ர்யாம் ராஜபுத்ரஸ்ய தீ$_4$மத: ।
கிம் தத்ர தவ ஸுக்$_3$ரீவ கிஷ்கிந்தா$_4$ம் ப்ரதி க$_3$ம்யதாம் ॥ (10)

அவ்விருவரும் இவ்வாறு சொல்லியதைக் கேட்ட இராமன், வேள்விக் குண்டத்தில் ஜொலிக்கும் அக்னி பகவானைப் போல, தரையில் தருப்பைகளைப் பரப்பி, அதன்மேல் அமர்ந்து கொண்டார். (40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபது

சுக்ரீவனைக் கலைக்கும் முயற்சி

அந்த இடத்தில் முகாமிட்டிருந்ததும், சுக்ரீவனால் பாதுகாக்கப்பட்டதுமான மாபெரும் படையை, மிகுந்த பராக்கிரமம் கொண்ட சார்தூலன் என்ற அரக்கன் அருகில் வந்து பார்த்தான். தீய ஒழுக்கமுடைய, அரக்க மன்னன் இராவணனுடைய ஒற்றனான அவன், நிலைகுலையாது நிற்கும் படையைப் பார்த்துவிட்டு, வேகமாக இலங்கைக்குத் திரும்பி வந்து, இராவணனை நோக்கித் தெரிவித்துக் கொண்டான்— (1,2)

''மன்னரே! இலங்கையை நோக்கி கணக்கிடமுடியாத வானர–கரடிகளின் மாபெரும் படை பெருந்திரளாக வந்து கொண்டிருக்கிறது. அது பார்ப்பதற்கு இன்னொரு சமுத்திரம் போல், உட்புக முடியாததாகவும் அளவிட முடியாததாகவும் இருக்கிறது. (3)

இராம–லட்சுமணர் என்று பெயர் கொண்ட இவர்கள் சகோதரர்கள்; தசரதரின் புதல்வர்கள்; வலிமைமிக்க ஆயுதங்களைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள்; சீதை இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு வந்திருக்கிறார்கள்; மகாபராக்கிரமசாலிகளான அவ்விருவரும் கடற்கரைக்கு வந்து தங்கியிருக்கிறார்கள். (4)

மாமன்னரே! வானரப்படை, பத்து யோஜனை விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. (நான், மேலெழுந்தவாரியாகப் பார்த்ததைச் சொன்னேன்.) விரைவில், இந்த விஷயத்தில் உண்மையைக் கண்டறிய தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். (5)

பார்வேந்தே! தங்களுடைய தூதர்களை உடனே அனுப்பி உண்மையான நிலவரத்தை அறிந்துகொள்ள வேண்டும். பின்னர், (சீதையைத்) திருப்பிக் கொடுத்தல்; இனிய வார்த்தைகள் பேசி சமாதானமாகப் போவது; அல்லது அவர்களுக்குள் கருத்து வேற்றுமையை உண்டாக்குவது – இதில் ஏதேனும் ஓர் உபாயத்தை மேற்கொள்ளலாம்.'' (6)

சார்தூலனுடைய சொற்களைக் கேட்ட அரக்க மன்னன் இராவணன் மிகவும் மனக்கலக்கம் அடைந்தான். தனக்குள் அதுபற்றித் தீவிரமாக சிந்தித்து, செயல்திறனில் சிறந்தவனான சுகன் என்ற அரக்கனைப் பார்த்துக் கூறினான்— (7)

''என்னுடைய ஆணைப்படி சுக்ரீவ மன்னனிடம் நீ சென்று, கொஞ்சமும் அச்சப்படாமல், இனிய, உயர்ந்த சொற்களால் (பின்வரும்) செய்தியைக் கூறு. (8)

'வானரமன்னரே! நீங்கள் வானர அரச பரம்பரையில் பிறந்தவர்; ரிக்ஷரஜஸின் மைந்தர்; மிகவும் ஆற்றலுடையவர். எனக்கு சகோதரர் போன்றவர். என்னால் உங்களுக்கு நன்மையும் இல்லை; தீமையும் இல்லை. (நமக்குள் பரஸ்பரம் ஆழ்ந்த நட்பும் இல்லை; தீவிரமான பகையும் இல்லை.) (9)

சுக்ரீவனே! பேரறிவாளரான அரசகுமாரர் இராமனுடைய மனைவியை நான் அபகரித்துக் கொண்டு வந்ததில், உங்களுக்கு என்ன தொல்லை? (உங்களுக்கு சம்பந்தமே இல்லாத நிகழ்ச்சி, இது.) ஆகவே, நீங்கள் கிஷ்கிந்தைக்குத் திரும்பிப் போய்விடுங்கள்.' (10)

ந ஹியம் ஹரிபி$_4$ர்லங்கா ஶக்யா ப்ராப்தும் கத$_2$ஞ்சந ।
தே$_3$வைரபி ஸக$_3$ந்த$_4$ர்வை: கிம் புநர்நரவாநரை: ॥ (11)

ஸ தத$_2$ா ராக்ஷஸேந்த்$_3$ரேண ஸந்தி$_3$ஷ்டோ ரஜநீசர: ।
ஶுகோ விஹங்க$_3$மோ பூ$_4$த்வா தூர்ணமாப்லுத்ய சாம்ப$_3$ரம் ॥
ஸ க$_3$த்வா தூ$_3$ரமத்$_4$வாநமுபர்யுபரி ஸாக$_3$ரம் ॥ (12)

ஸம்ஸ்தி$_2$தோ ஹ்யம்ப$_3$ரே வாக்யம் ஸுக்$_3$ரீவமித$_3$மப்$_3$ரவீத் ।
ஸர்வமுக்தம் யத$_2$ாதி$_3$ஷ்டம் ராவணேந து$_3$ராத்மநா ॥ (13)

தம் ப்ராபயந்தம் வசநம் தூர்ணமாப்லுத்ய வாநரா: ।
ப்ராபத்$_3$யந்த தி$_3$வம் க்ஷிப்ரம் லோப்தும் ஹந்தும் ச முஷ்டிபி$_4$: ॥ (14)

ஸ தை: ப்லவங்கை$_3$: ப்ரஸப$_4$ம் நிக்$_3$ருஹீதோ நிஶாசர: ।
க$_3$க$_3$நாத்$_3$பூ$_4$தலே சாஶு பரிக்$_3$ருஹ்ய நிபாதித: ॥ (15)

வாநரை: பீட்$_3$யமாநஸ்து ஶுகோ வசநமப்$_3$ரவீத் ।
ந தூ$_3$தாந் க்$_4$நந்தி காகுத்ஸ்த$_2$ வார்யந்தாம் ஸாது$_4$ வாநரா: ॥ (16)

யஸ்து ஹித்வா மதம் ப$_4$ர்து: ஸ்வமதம் ஸம்ப்ரப$_4$ாஷதே ।
அநுக்தவாதீ$_3$ தூ$_3$த: ஸந் ஸ தூ$_3$தோ வத$_4$மர்ஹதி ॥ (17)

ஶுகஸ்ய வசநம் ஶ்ருத்வா ராமஸ்து பரிதே$_3$விதம் ।
உவாச மா வதி$_4$ஷ்டேதி க்$_4$நத: ஶாக$_2$ாம்ருக$_3$ர்ஷப$_4$ாந் ॥ (18)

ஸ ச பத்ரலகு$_4$ர்பூ$_4$த்வா ஹரிபி$_4$ர்த$_3$ர்ஶிதே ப$_4$யே ।
அந்தரிக்ஷஸ்தி$_2$தோ பூ$_4$த்வா புநர்வசநமப்$_3$ரவீத் ॥ (19)

ஸுக்$_3$ரீவ ஸத்த்வஸம்பந்ந மஹாப$_3$லபராக்ரம ।
கிம் மயா க$_2$லு வக்தவ்யோ ராவணோ லோகராவண: ॥ (20)

ஸ ஏவமுக்த: ப்லவகா$_3$தி$_4$பஸ்தத$_3$ா ப்லவங்க$_3$மாநாம்ருஷபே$_4$ா மஹாப$_3$ல: ।
உவாச வாக்யம் ரஜநீசரஸ்ய சாரம் ஶுகம் தீ$_3$நமதீ$_3$நஸத்த்வ: ॥ (21)

ந மேऽஸி மித்ரம் ந தத$_2$ாநுகம்ப்யோ
ந சோபகர்தாஸி ந மே ப்ரியோऽஸி ।
அரிஶ்ச ராமஸ்ய ஸஹாநுப$_3$ந்த$_4$:
ஸ மேऽஸி வாலீவ வத$_4$ார்ஹ வத்$_4$ய: ॥ (22)

நிஹந்ம்யஹம் த்வாம் ஸஸுதம் ஸப$_3$ந்து$_4$ம்
ஸக்ஞாதிவர்க$_3$ம் ரஜநீசரேஶ ।
லங்காம் ச ஸர்வாம் மஹதா ப$_3$லேந
க்ஷிப்ரம் கரிஷ்யாமி ஸமேத்ய ப$_4$ஸ்ம ॥ (23)

இந்த இலங்கைப் பட்டணத்தை வானரர்கள் ஒருக்காலும் அடைய முடியாது. தேவர்களும் கந்தர்வர்களும்கூட இங்கே வரமுடியாது என்னும்போது, நர–வானரர்களான (அற்பப் பிராணிகளான) இவர்களால் முடியுமா என்ன?'' (11)

இவ்வாறு அரக்க மன்னனால் ஆணையிடப்பட்ட சுகன், உடனே ஒரு பறவையின் உருவத்தை ஏற்றுக்கொண்டு, ஆகாயத்தில் பாய்ந்து, சமுத்திரத்தின் மேலே வெகு உயரத்தில் வெகுதூரம் பறந்து சென்று, ஆகாயத்திலிருந்தபடியே, தீய ஒழுக்கமுடைய இராவணனால் சொல்லப்பட்ட செய்தி முழுவதையும் சுக்ரீவனுக்குத் தெரிவித்தான். (12,13)

உடனே, வானத்திற்குப் பாய்ந்த வானரர்கள், செய்தியைக் கொண்டு வந்திருந்த அவனை, கைமுட்டியால் அடித்துப் புடைத்து உயிரை வாங்குவதற்காக நெருங்கிச் சென்றார்கள். (14)

வானரர்களால் பலாத்காரமாகப் பிடித்துக் கட்டப்பட்ட அந்த அரக்கன், வானத்திலிருந்து தரையில் தள்ளப்பட்டான். (15)

வானரர்களால் வெகுவாகத் தாக்கப்பட்ட சுகன் கூறினான்— ''காகுத்தரே! (ஒரு மன்னரிடமிருந்து) செய்தி கொண்டு வரும் தூதர்களைக் கொல்வது என்பது பழக்கத்தில் இல்லை. அருள்கூர்ந்து, (என்னை வதைத்தெடுக்கும்) இந்த வானரர்களைத் தடுத்து நிறுத்துங்கள். (16)

தூதனாக வந்தவன் தன்னுடைய தலைவன் கூறியனுப்பிய செய்தியைக் கூறாமல் மறைத்து, தன் கருத்தை வெளியிட்டால், அவன் கொல்லத்தக்கவன்.'' (17)

சுகனுடைய சொற்களையும் பரிதாபமாகக் கெஞ்சுவதையும் கேட்ட இராமன், அவனை அடித்துத் துன்புறுத்தும் வானர வீரர்களைப் பார்த்து, 'இவனைக் கொல்லாதீர்கள்' என்று கூறினார். (18)

வானரர்களால் அச்சுறுத்தப்பட்டிருந்த அவன், (இராமன் ஆணைக்குப் பின் வானரர் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு,) இறக்கைகளை வேகமாக இயக்கி, ஆகாயத்திற்குப் பறந்து சென்று, அங்கிருந்தபடியே பின்வருமாறு கூறினான்— (19)

''உடலாற்றலும் போராற்றலும் மிக்க சுக்ரீவரே! உலகத்தையே கதற வைக்கும் (எங்கள் தலைவன்) இராவணனுக்குத் தங்கள் பதில்தான் என்ன?'' (20)

அவன் இவ்வாறு கேட்டவுடன், வானரர்களுள் காளை போன்றவனும் மகாபலம் பொருந்தியவனும் விசாலமனம் படைத்தவனுமான வானரமன்னன் சுக்ரீவன், அந்த அரக்கனுடைய (இராவணனுடைய) தூதனான நொந்து போயிருக்கும் சுகனிடம் கூறினான்— (21)

''(தூதனே! இராவணனிடம் சொல்வாய்.) நீ, என்னால் கொலை செய்யத்தக்கவன்; நீ, எனக்கு நண்பனில்லை; என் கருணைக்கு உரியவனும் அல்லன்; எனக்கு எவ்வித உதவியையும் செய்தவனல்லன்; என் அன்புக்குப் பாத்திரமானவனும் அல்லன். ஸ்ரீராமனுடைய பகைவன் நீ. எனவே, அந்த வாலியைப் போலவே, உற்றார்–உறவினர்களோடு கொல்லப்பட வேண்டியவன். (22)

அரக்கர் மன்னா! நான், உன்னை உன் புதல்வர்கள்–உறவினர்கள்–தாயாதிகளோடு வெகுவிரைவில் கொல்லப் போகிறேன். பெரும் படையுடன் வந்து இலங்கை முழுவதையும் சாம்பலாக்கப் போகிறேன். (23)

ந மோக்ஷ்யஸே ராவண ராக$_4$வஸ்ய
ஸுரை: ஸஹேந்த்$_3$ரைரபி மூட$_4$ கு$_3$ப்த: ।
அந்தர்ஹித: ஸூர்யபத$_2$ம் க$_3$தோ வா
நபோ$_4$ ந பாதாலமநுப்ரவிஷ்ட: ॥
கி$_3$ரீஶபாதா$_3$ம்பு$_3$ஜஸங்க$_3$தோ வா
ஹதோऽஸி ராமேண ஸஹாநுஜஸ்த்வம் ॥ (24)

தஸ்ய தே த்ரிஷு லோகேஷு ந பிஶாசம் ந ராக்ஷஸம் ।
த்ராதாரமநுபஶ்யாமி ந க$_3$ந்த$_4$ர்வம் ந சாஸுரம் ॥ (25)

அவதீ$_4$ர்ய ஜராவ்ருத்$_3$த$_4$ம் க்$_3$ருத்$_4$ரராஜம் ஜடாயுஷம் ।
கிம் நு தே ராமஸாந்நித்$_4$யே ஸகாஶே லக்ஷ்மணஸ்ய வா ॥ (26)

ஹ்ருதா ஸீதா விஶாலாக்ஷீ யாம் த்வம் க்$_3$ருஹ்ய ந பு$_3$த்$_4$யஸே ।
மஹாப$_3$லம் மஹாப்ராஜ்ஞம் து$_3$ர்த$_4$ர்ஷமமரைரபி ॥ (27)

ந பு$_3$த்$_4$யஸே ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ம் யஸ்தே ப்ராணாந் ஹரிஷ்யதி ।
ததோऽப்$_3$ரவீத்$_3$வாலிஸுதஸ்த்வங்க$_3$தோ$_3$ ஹரிஸத்தம: ॥ (28)

நாயம் தூ$_3$தோ மஹாராஜ சாரிக: ப்ரதிபா$_4$தி மா ।
துலிதம் ஹி ப$_3$லம் ஸர்வமநேநாத்ரைவ திஷ்ட$_2$தா ॥ (29)

க்$_3$ருஹ்யதாம் மா க$_3$மல்லங்காமேதத்$_3$தி$_4$ மம ரோசதே ।
ததோ ராஜ்ஞா ஸமாதி$_3$ஷ்டா: ஸமுத்ப்லுத்ய வலீமுகா$_2$: ॥
ஜக்$_3$ருஹுஸ்தம் ப$_3$ப$_3$ந்து$_4$ஶ்ச விலபந்தமநாத$_2$வத் ॥ (30)

ஶுகஸ்து வாநரைஶ்சண்டை$_3$ஸ்தத்ர தை: ஸம்ப்ரபீடி$_3$த: ।
வ்யாக்ரோஶத மஹாத்மாநம் ராமம் த$_3$ஶரதா$_2$த்மஜம் ॥ (31)

லுப்யேதே மே ப$_3$லாத்பக்ஷௌ பி$_4$த்$_3$யேதே ச ததா$_2$க்ஷிணீ ।
யாம் ச ராத்ரிம் மரிஷ்யாமி ஜாயே ராத்ரிம் ச யாமஹம் ॥ (32)

ஏதஸ்மிந்நந்தரே காலே யந்மயா ஹ்யஶுப$_4$ம் க்ருதம் ।
ஸர்வம் தது$_3$பபத்$_3$யேதா$_2$ ஜஹ்யாம் சேத்$_3$யதி$_3$ ஜீவிதம் ॥ (33)

நாகா$_4$தயத்ததா$_3$ ராம: ஶ்ருத்வா தத்பரிதே$_3$வநம் ॥
வாநராநப்$_3$ரவீத்$_3$ராமோ முச்யதாம் தூ$_3$த ஆக$_3$த: ॥ (34)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ விம்ஶ: ஸர்க$_3$: ॥

அறிவில்லாத இராவணனே! இந்திரன் முதலான தேவர்களால் பாதுகாக்கப்பட்டாலும், சூரியன் சஞ்சரிக்கும் ஆகாயத்தில் மறைந்து கொண்டாலும், பாதாளத்திற்குள் புகுந்து கொண்டாலும், இராமனுடைய பார்வையிலிருந்து (பாணங்களிலிருந்து) நீ தப்ப முடியாது. (உனக்கு ஏராளமான வரம் கொடுத்திருக்கும்) கைலாசபதியின் சரண கமலங்களில் அடைக்கலம் புகுந்து கொண்டாலும், தம்பியோடு கூடிய நீ இராமனால் நிச்சயம் கொல்லப்படுவாய். (24)

('தேவர்களாலும் பரமேசுவரனாலும் என்னைக் காப்பாற்ற முடியாது' என்று சொல்கிறாய் சுக்ரீவனே. ஆனால், உலகில் இவர்களைக் காட்டிலும் வீரம் மிக்கவர்கள் இருக்கிறார்களே? அவர்களை நான் அடைக்கலம் அடைந்தால், உன்னால் என்னை எதுவும் செய்யமுடியாது! – என்பாயேயானால்) உன்னைக் காப்பாற்றக்கூடிய பிசாசர்கள், அரக்கர்கள், கந்தர்வர்கள், அசுரர்கள் ஆகிய எவரையும் மூன்று உலகங்களிலும் நான் காணவில்லை. (25)

முதுமையினால் வலிமை இழந்திருந்த ஜடாயுவைக் கொன்றாய். (எவ்வளவு கேவலம்!) இராமன் எதிரிலோ, இலக்குவன் அருகில் இருக்கும்போதோ, நெடுந்தடங்கண்ணாள் சீதாப்பிராட்டியாரை நீ அபகரித்தாயா, என்ன? நீ கவர்ந்து சென்ற அவரால் உனக்கு பேராபத்து வரும் என்பதை இன்னமும் நீ அறியாதிருக்கிறாயே? (26)

பேராற்றலுடையவரும், பேரறிஞரும், தேவர்களாலும் அணுகமுடியாதவருமான ரகுகுல திலகம் ஸ்ரீராமன், உன் உயிரைப் பறிக்கப் போகிறார் என்பதையும் நீ அறியவில்லை.'' (27)

அப்போது, வானரோத்தமனும் வாலியின் மைந்தனுமான அங்கதன், ''மாமன்னரே! இவன் தூதன் என்று எனக்குப் படவில்லை; ஒற்றன் என்றே கருதுகிறேன். (28)

இவன் இங்கேயே சுற்றிப் பார்த்து, நம்முடைய படை முழுவதையும் கணக்கெடுத்திருக்கிறான். அதனால், இவனை இலங்கைக்குப் போக அனுமதிக்கக் கூடாது. (இலங்கைக்குத் திரும்பிச் சென்றால், நமது படைபலத்தை இராவணனிடம் தெரிவித்து விடுவான்.) இவனை இங்கேயே கட்டிப்போடுவதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது'' என்று சொன்னான். (29)

உடனே, மன்னன் சுக்ரீவனால் ஆணையிடப்பட்ட வானரர்கள், வானத்திற்குப் பாய்ந்து சென்று, காப்பாற்றுவார் எவரும் இல்லாதவனும் புலம்பிக் கொண்டிருந்தவனுமான அவனைப் பிடித்துக் கட்டிப் போட்டார்கள். (30)

கோபத்திலிருந்த அந்த வானரர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்ட சுகன், தசரத மைந்தனும் மகாத்மாவுமான இராமனை நோக்கி அலறினான்— (31)

''இவர்கள், மீதமுள்ள என் சிறகுகளைப் பலவந்தமாகப் பிடுங்குகிறார்கள்; கண்களைத் தோண்டுகிறார்கள். (32)

நான், (இவர்களால் தாக்கப்பட்டு) உயிரை விட்டேனேயானால், நான் பிறந்த நாளிலிருந்து இறக்கும் நாள்வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் (என் வாழ்நாள் முழுவதும்) நான் செய்த பாவங்கள் எல்லாம் உங்களையே வந்தடையும்.'' (33)

அவன் புலம்பலைக் கேட்ட இராமன், அவனைக் கொல்லாமல் விடுவித்தார். மேலும், வானரர்களைப் பார்த்து, ''இவன் தூதனாக வந்திருக்கிறான். அதனால், விட்டுவிடுங்கள்'' என்று இராமன் கூறினார். (34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஏகவிம்ஶ: ஸர்க$_3$:

ஸமுத்$_3$ரஸம்க்ஷோப$_4$:

தத: ஸாக$_3$ரவேலாயாம் த$_3$ர்பாநாஸ்தீர்ய ராக$_4$வ: ।
அஞ்ஜலிம் ப்ராங்முக$_2$: க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோத$_3$தி$_4$ம் ॥ (1)

பா$_3$ஹும் பு$_4$ஜக$_3$போ$_4$கா$_3$ப$_4$முபத$_4$யாரிஸூத$_3$ந: ।
ஜாதரூபமயைஶ்சைவ பூ$_4$ஷணைர்பூ$_4$ஷிதம் புரா ॥ (2)

வரகாஞ்சநகேயூரமுக்தாப்ரவரபூ$_4$ஷணை: ।
பு$_4$ஜை: பரமநாரீணாமபி$_4$ம்ருஷ்டமநேகதா$_4$ ॥ (3)

சந்த$_3$நாக$_3$ருபி$_4$ஶ்சைவ புரஸ்தாத$_3$தி$_4$வாஸிதம் ।
பா$_3$லஸூர்யப்ரதீகாஶைஶ்சந்த$_3$நைருபஶோபி$_4$தம் ॥ (4)

ஶயநே சோத்தமாங்கே$_3$ந ஸீதாயா: ஶோபி$_4$தம் புரா ।
தக்ஷகஸ்யேவ ஸம்போ$_4$க$_3$ம் க$_3$ங்கா$_3$ஜலநிஷேவிதம் ॥ (5)

ஸம்யுகே$_3$ யுக$_3$ஸங்காஶம் ஶத்ரூணாம் ஶோகவர்த$_4$நம் ।
ஸுஹ்ருதா$_3$நந்த$_3$நம் தீ$_3$ர்க$_4$ம் ஸாக$_3$ராந்தவ்யபாஶ்ரயம் ॥ (6)

அஸ்யதா ச புந: ஸவ்யம் ஜ்யாகா$_4$தவிக$_3$தத்வசம் ।
த$_3$க்ஷிணோ த$_3$க்ஷிணம் பா$_3$ஹும் மஹாபரிக$_4$ஸந்நிப$_4$ம் ॥ (7)

கோ$_3$ஸஹஸ்ரப்ரதா$_3$தாரமுபத$_4$ாய மஹத்$_3$பு$_4$ஜம் ।
அத்$_3$ய மே மரணம் வாத$_2$ தரணம் ஸாக$_3$ரஸ்ய வா ॥ (8)

இதி ராமோ மதிம் க்ருத்வா மஹாபா$_3$ஹுர்மஹோத$_3$தி$_4$ம் ।
அதி$_4$ஶிஶ்யே ச விதி$_4$வத் ப்ரயதோ நியதோ முநி: ॥ (9)

தஸ்ய ராமஸ்ய ஸுப்தஸ்ய குஶாஸ்தீர்ணே மஹீதலே ।
நியமாத$_3$ப்ரமத்தஸ்ய நிஶாஸ்திஸ்ரோऽதிசக்ரமு: ॥ (10)

ஸ த்ரிராத்ரோஷிதஸ்தத்ர நயஜ்ஞோ த$_4$ர்மவத்ஸல: ।
உபாஸத ததா$_3$ ராம: ஸாக$_3$ரம் ஸரிதாம் பதிம் ॥ (11)

ந ச த$_3$ர்ஶயதே மந்த$_3$ஸ்ததா$_3$ ராமஸ்ய ஸாக$_3$ர: ।
ப்ரயதேநாபி ராமேண யதா$_2$ர்ஹமபி$_4$பூஜித: ॥ (12)

ஸமுத்$_3$ரஸ்ய தத: க்ருத்$_3$தே$_4$ா ராமோ ரக்தாந்தலோசந: ।
ஸமீபஸ்த$_2$முவாசேத$_3$ம் லக்ஷ்மணம் ஶுப$_4$லக்ஷணம் ॥ (13)

அவலேப: ஸமுத்$_3$ரஸ்ய ந த$_3$ர்ஶயதி யத் ஸ்வயம் ।
ப்ரஶமஶ்ச க்ஷமா சைவ ஆர்ஜவம் ப்ரியவாதி$_3$தா ॥
அஸாமர்த்$_2$யப$_2$லா ஹ்யேதே நிர்கு$_3$ணேஷு ஸதாம் கு$_3$ணா: ॥ (14)

ஸர்க்கம் : இருபத்தொன்று

கடலரசன் மீது சீற்றம்

பின்னர், கடற்கரையில் தருப்பைகளைப் பரப்பி, பெருங்கடலின் எதிரில் இராகவன் கைகூப்பி வணக்கம் தெரிவித்துக் கிழக்கு முகமாகப் படுத்துக் கொண்டார். (1)

எதிரிகளை அடக்கும் இராமன், சர்ப்பத்தின் உடல் போல் மிருதுவான (வலது) புஜத்தைத் தலையணையாகக் கொண்டார். (வனவாசத்திற்கு) முன்னர், அந்தக் கை, பொன்னாலான அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (2)

(அயோத்தியில் இருந்தபோது) உயர்ந்த பொன்வளையல்களும் முத்து–பவளங்களாலான அணிகலன்களும் அணிந்த உத்தமப் பணிப்பெண்டிர்களால் குளிப்பாட்டி, சீராட்டும் காலத்தில் பல தடவைகள் மென்மையாகப் பிடித்துவிடப்பட்ட கை; (3)

முன்னர், சந்தனம், அகரு போன்ற நறுமணப் புகை காட்டப்பட்டது; அருணோதய காலத்தில் செவ்வொளி வீசும் இளஞ்சூரியனின் வண்ணம் கொண்ட செஞ்சந்தனத்தால் பூசப்பட்டது; (4)

முன்பு, சீதையின் சிரத்தால் மிகவும் சோபையுடன் விளங்கியது; கங்கையில் வாழும் தக்ஷகனின் உடலைப் போன்று செம்மை படர்ந்தது; (5)

போர்க்களத்தில், கோட்டையின் தாழ்ப்பாளைப் போல் எதிரிகளை உள்ளே வராமல் தடுத்து, அதனால் அவர்கள் துயரத்தை வளர்த்தது; நண்பர்களுக்கு நீண்ட நெடுங்காலம் ஆனந்தத்தைக் கொடுப்பது; சமுத்திரத்தை எல்லையாகவுடைய பூமண்டலம் முழுவதையும் பாதுகாப்பது; (6)

இடது கையால், அடிக்கடி பாணங்களை வீசுவதால் நாண்கயிற்றின் உரசலால் ஏற்பட்ட தழும்பை உடையது; மிகப்பெரிய சுழல்தடி போன்று உறுதியாக இருக்கும் வலது கை; (7)

எந்தக் கையினால் ஆயிரக்கணக்கான பசுக்களைத் தானம் செய்தாரோ, அந்தக் கையைத் தலையணையாகக் கொண்டு, 'நான் இப்போது மரணத்தை அடைய வேண்டும் அல்லது சமுத்திரத்தைக் கடக்க வேண்டும்' என்று பேராற்றலுடைய இராமன் சங்கல்பம் செய்து கொண்டு, முறைப்படி மனம்–மொழி–மெய்களால் வணங்கி, சமுத்திரராஜனை நெஞ்சிலிருத்தி படுத்துக் கொண்டார். (8,9)

தரையில் பரப்பப்பட்டிருந்த தருப்பைப் படுக்கையில், மனக்கட்டுப்பாட்டுடனும் கவனம் சிதறாமலும், இராமன் படுத்திருக்கையில் மூன்று இரவுகள் கழிந்தன. (10)

அரசியல் நீதி அறிந்தவரும் அறப்பற்றுள்ளவருமான இராமன், ஆறுகளின் பதியாகிய சமுத்திரத்தை மூன்று இரவுகள் உபாசித்தார். (11)

நோன்புமுறை தவறாமல், இராமனால் முறைப்படி பிரார்த்திக்கப்பட்ட பின்னரும், அறிவில்லாத சமுத்திரராஜன் இராமனுக்கு முன்னால் வந்து நிற்கவில்லை. (12)

அப்போது கடலரசன் மீது சினங்கொண்ட இராமன், கடைக்கண் சிவக்க, அருகில் நின்று கொண்டிருந்த நற்குணங்கள் நிரம்பிய இலக்குவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (13)

''சமுத்திரராஜனுடைய அகங்காரத்தைப் பார்! அவன் இன்னும் தானே என் எதிரில் தோன்றவில்லை. சாந்தம், பொறுமை, கபடமின்மை, இனிய பேச்சு முதலிய நற்குணங்களை உடையவர்களை, எதுவும் செய்ய இயலாதவர்கள் என்று குணம் குன்றியவர்கள் நினைக்கிறார்கள். (14)

ஆத்மப்ரஶம்ஸிநம் து$_3$ஷ்டம் த்$_4$ருஷ்டம் விபரித$_4$ாவகம் ।
ஸர்வத்ரோத்ஸ்ருஷ்டத$_3$ண்ட$_3$ம் ச லோக: ஸத்குருதே நரம் ॥ (15)

ந ஸாம்நா ஶக்யதே கீர்திர்ந ஸாம்நா ஶக்யதே யஶ: ।
ப்ராப்தும் லக்ஷ்மண லோகே஽ஸ்மிஞ்ஜயோ வா ரணமூர்த$_4$நி ॥ (16)

அத்$_3$ய மத்$_3$ப$_3$ாணநிர்பி$_4$ந்நைர்மகரைர்மகராலயம் ।
நிருத்$_3$த$_4$தோயம் ஸௌமித்ரே ப்லவத்$_3$பி$_4$: பஶ்ய ஸர்வத: ॥ (17)

பே$_4$ாகி$_3$நாம் பஶ்ய பே$_4$ாக$_3$ாநி மயா சிந்நாநி லக்ஷ்மண ।
மஹாபே$_4$ாக$_3$ாநி மத்ஸ்யாநாம் கரிணாம் ச கராநிஹ ॥ (18)

ஸஶங்க$_2$ஶுக்திகாஜாலம் ஸமீநமகரம் ஶரை: ।
அத்$_3$ய யுத்$_3$தே$_4$ந மஹதா ஸமுத்$_3$ரம் பரிஶோஷயே ॥ (19)

க்ஷமயா ஹி ஸமாயுக்தம் மாமயம் மகராலய: ।
அஸமர்த$_2$ம் விஜாநாதி தி$_4$க் க்ஷமாமீத்$_3$ருஶே ஜநே ॥ (20)

ந த$_3$ர்ஶயதி ஸாம்நா மே ஸாக$_3$ரோ ரூபமாத்மந: ।
சாபமாநய ஸௌமித்ரே ஶராந்ஸ்சாஶீவிஷோபமாந் ॥
ஸமுத்$_3$ரம் ஶோஷயிஷ்யாமி பத்$_3$ப்$_4$யாம் யாந்து ப்லவங்க$_3$மா: ॥ (21)

அத்$_3$யாக்ஷோப்$_4$யமபி க்ருத்$_3$த$_4$: க்ஷோப$_4$யிஷ்யாமி ஸாக$_3$ரம் ।
வேலாஸு க்ருதமர்யாத$_3$ம் ஸஹஸ்ரோர்மிஸமாகுலம் ॥ (22)

நிர்மர்யாத$_3$ம் கரிஷ்யாமி ஸாயகைர்வருணாலயம் ।
மஹார்ணவம் க்ஷோப$_4$யிஷ்யே மஹாநக்ரஸமாகுலம் ॥ (23)

ஏவமுக்த்வா த$_4$நுஷ்பாணி: க்ரோத$_4$விஸ்ப$_2$ாரிதேக்ஷண: ।
ப$_3$பூ$_4$வ ராமோ து$_3$ர்த$_4$ர்ஷோ யுக$_3$ாந்தாக்$_3$நிரிவ ஜ்வலந் ॥ (24)

ஸம்பீட்$_3$ய ச த$_4$நுர்கே$_4$ாரம் கம்பயித்வா ஶரைர்ஜக$_3$த் ।
முமோச விஶிக$_2$ாநுக்$_3$ராந் வஜ்ராநிவ ஶதக்ரது: ॥ (25)

தே ஜ்வலந்தோ மஹாவேக$_3$ாஸ்தேஜஸா ஸாயகோத்தமா: ।
ப்ரவிஶந்தி ஸமுத்$_3$ரஸ்ய ஸலிலம் த்ரஸ்தபந்நக$_3$ம் ॥ (26)

தோயவேக$_3$: ஸமுத்$_3$ரஸ்ய ஸநக்ரமகரோ மஹாந் ।
ஸம்ப$_3$பூ$_4$வ மஹாகே$_4$ார: ஸமாருதரவஸ்ததா$_3$ ॥ (27)

மஹோர்மிமாலாவிதத: ஶங்க$_2$ஶுக்திஸமாவ்ருத: ।
ஸதூ$_4$ம: பரிவ்ருத்தோர்மி: ஸஹஸாஸீந்மஹோதத$_3$தி$_4$: ॥ (28)

தற்புகழ்ச்சி செய்து கொள்பவன், துஷ்டன், முரடன், எல்லோரையும் வம்புக்கிழுப்பவன், (நல்லவர்–தீயவர் என்ற பாகுபாடில்லாமல்) எல்லோருக்கும் தண்டனை கொடுப்பவன் – இப்படிப்பட்ட மனிதனைத்தான் உலகம் போற்றுகிறது. (15)

லட்சுமணா! (நால்வகை அரசநீதிகளில் முதலாவதான) சாமம் (பொறுமையைக் கடைப்பிடித்தல்) என்ற நீதியால் (இவ்வுலகில் எல்லையில்லாத தானம் செய்வதால் ஏற்படும்) புகழ் அடையப்படுவதில்லை; நற்குணங்களால் கீர்த்தியும் அடையப்படுவதில்லை; போர்க்களத்தில் சாமம் என்ற நீதியால் வெற்றியும் அடையப்படுவதில்லை. லட்சுமணா! என்னுடைய பாணங்களால் துகள்துகளாக்கப்பட்டு, கடற்பரப்பை இடைவெளியில்லாமல் மூடிக் கொண்டு, உயிரிழந்த மகரமீன்கள் மிதக்கப் போவதை இப்போது பார். (16,17)

லட்சுமணா! இதையும் பார். கடற்பாம்புகளின் உடல்களையும், பேருருவம் படைத்த மீன்களையும், கடல்யானைகளின் துதிக்கைகளையும் துண்டம் துண்டமாக வெட்டப் போகிறேன். லட்சுமணா! சங்குகளையும் முத்துச்சிப்பிகளையும் உடையதும், மீன்–முதலைகளோடு கூடியதுமான பெருங்கடலை, என் பாணங்களைக் கொண்டு பெருந்தாக்குதல் செய்து வற்றிப் போகச் செய்கிறேன். (18,19)

முதலைகள் வசிக்கும் இந்தக் கடல், நான் பொறுமையாக இருப்பதைக் கண்டு, நான் கையாலாகாதவன் என்று நினைக்கிறது போலும். இப்படிப்பட்ட சாமான்யர்களிடம் பொறுமையைக் காட்டுவது தகாத செயல். (20)

சுமித்திரையின் புதல்வனே! நான் இப்போது சாமோபாயத்தை (அமைதி வழியை)க் கைக்கொண்டிருப்பதால், சமுத்திரன் என் முன் வந்து தன் உருவத்தைக் காட்டாதிருக்கிறான். இனி இவனிடம் பொறுமை காட்டலாகாது. வில்லையும், விஷ சர்ப்பங்களை நிகர்த்த பாணங்களையும் கொண்டு வா. சமுத்திரத்தை வற்றிப் போகச் செய்து விடுகிறேன். அதன் பின் வானரர்கள் நடந்து செல்லட்டும். (21)

சமுத்திரம் யாராலும் கலக்கப்பட முடியாதது என்பது உண்மையேயானாலும், எனக்கு இப்போது ஏற்பட்டுள்ள கோபத்தால், அதனைக் கலக்கி விடுகிறேன். ஆயிரக்கணக்கான பேரலைகள் உயரமாக எழும்பி தொடர்ந்து கொந்தளித்தாலும், கடல் தன் கரையைக் கடப்பதில்லை என்ற நியதியை மாற்றி, என் பாணங்களால் தாக்கி எல்லை மீறி புரண்டோடும்படி செய்யப் போகிறேன். பெரிய பெரிய தானவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் பெருங்கடலைக் கலக்கிவிடப் போகிறேன்.'' (22,23)

இவ்வாறு கூறிவிட்டு, எவராலும் எதிர்கொள்ள முடியாத பராக்கிரமமுடைய இராமன், கையில் வில்லை ஏந்தி, கோபத்தால் கண்கள் விரிய, ஊழித்தீயைப் போல் அனற்பிழம்பாய் நின்றார். அவர் தன்னுடைய வில்லை வளைத்து, விர்ரென்று பாயும் பாணங்களால் உலகை நடுங்கச் செய்து, இந்திரன் பற்பல வஜ்ராயுதங்களை வீசுவதைப் போல, பயங்கரமான பாணங்களை விடுத்தார். (24,25)

பேராற்றல் கொண்ட அந்த பாணங்கள் ஒளித்திரள்போல் பிரகாசித்துக் கொண்டு, கடலின் ஆழத்தில் வசிக்கும் சர்ப்பங்கள் நடுநடுங்கும்படியாக உள்ளே போய் விழுந்தன. (26)

அப்போது, சமுத்திரத்தில் ஏற்பட்ட வேகமான நீரோட்டத்தினால் முதலைகளும் மீன்களும் நிலைதடுமாறிப் புரண்டலைந்தன. அது பேரொலியுடன் கூடிய பெரும்புயல் போல் மிகப் பயங்கரமாகக் காட்சி தந்தது. (27)

கடலில் பேரலைகள் வரிசைவரிசையாக எழுந்தன; சங்குகளும் சிற்பிகளும் இடம் பெயர்ந்து மேலே மிதந்தன; கடல் நொடிப்பொழுதில் நுண்ணிய நீர்த்திவலைகளால் புகைமூடினாற்போன்ற அலைகள் வீசுவதாக ஆயிற்று. (28)

வ்யதி$_2$தா: பந்நக$_3$ாஸ்சாஸந் தீ$_3$ப்தாஸ்யா தீ$_3$ப்தலோசநா: ।
த$_3$ாநவாஸ்ச மஹாவீர்யா: பாதாளதலவாஸிந: ॥ (29)

ஊர்மய: ஸிந்து$_4$ராஜஸ்ய ஸநக்ரமகராஸ்ததத$_2$ா ।
விந்த்$_4$யமந்த்$_3$ரஸங்காஶா: ஸமுத்பேது: ஸஹஸ்ரஶ: ॥ (30)

ஆகூ$_4$ர்ணிததரங்கௌ$_3$க$_4$: ஸம்ப்$_4$ராந்தோரக$_3$ராக்ஷஸ: ।
உத்$_3$வர்திதமஹாக்$_3$ராஹ: ஸம்வ்ருத்த: ஸலிலாஶய: ॥ (31)

ததஸ்து தம் ராக$_4$வமுக்$_3$ரவேக$_3$ம்
ப்ரகர்ஷமாணம் த$_4$நுரப்ரமேயம் ।
ஸௌமித்ரிருத்பத்ய ஸமுச்ச$_2$வஸந்தம்
மா மேதி சோக்த்வா த$_4$நுராலலம்பே$_3$ ॥ (32)

ஏதத்$_3$விநாபி ஹ்யுத$_3$தே$_4$ஸ்தவாத்$_3$ய
ஸம்பத்ஸ்யதே வீரதமஸ்ய கார்யம் ।
ப$_4$வத்$_3$வித$_4$ா: கோபவஶம் ந யாந்தி
தீ$_3$ர்க$_4$ம் ப$_4$வாந் பஶ்யது ஸாது$_4$வ்ருத்தம் ॥ (33)

அந்தர்ஹிதைஶ்சைவ தத$_2$ந்தரிக்ஷே
ப்$_3$ரஹ்மர்ஷிபி$_4$ஶ்சைவ ஸுரர்ஷிபி$_4$ஶ்ச ।
ஶப்$_3$த$_3$: க்ருத: கஷ்டமிதி ப்$_3$ருவத்$_3$பி$_4$ர்–
மா மேதி சோக்த்வா மஹதா ஸ்வரேண ॥ (34)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகவிம்ஶ: ஸர்க: ॥

த்$_3$வாவிம்ஶ: ஸர்க$_3$:

ஸேதுப$_3$ந்த$_4$:

அதே$_2$ாவாச ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$: ஸாக$_3$ரம் த$_3$ாருணம் வச: ।
அத்$_3$ய த்வாம் ஶோஷயிஷ்யாமி ஸபாதாலம் மஹார்ணவ ॥ (1)

ஶரநிர்த$_3$க்$_3$த$_4$தோயஸ்ய பரிஶுஷ்கஸ்ய ஸாக$_3$ர ।
மயா ஶோஷிதஸத்த்வஸ்ய பாம்ஸுருத்பத்$_3$யதே மஹாந் ॥ (2)

மத்கார்முகவிஸ்ருஷ்டேந ஶரவர்ஷேண ஸாக$_3$ர ।
பாரம் தே$_3$த்$_3$ய க$_3$மிஷ்யந்தி பத்$_3$பி$_4$ரேவ ப்லவங்க$_3$மா: ॥ (3)

விசிந்வந்நாபி$_4$ஜாநாஸி பௌருஷம் வாபி விக்ரமம் ।
த$_3$ாநவாலய ஸந்தாபம் மத்தோ நாம க$_3$மிஷ்யஸி ॥ (4)

கனல்போல் விளங்கும் முகம் உடையவைகளான சர்ப்பங்கள் மிகவும் துன்பத்திற்குள்ளாயின. அவ்வாறே பாதாளத்தில் வசிக்கும் மாவீரர்களான தானவர்களும் (இராமபாணங்களின் தாக்குதலால்) துன்பமடைந்தார்கள். (29)

விந்திய–மந்தர மலைகளைப் போல் விசாலமாகவும், நீளமாகவும், மிக உயரமாகவும் எழும்பிய அலைகளில், ஆயிரக்கணக்கான முதலைகளும் மகரமீன்களும் வெளிப் போந்தன. கடலின் அலைவரிசைகள் உயரக் கிளம்பி சுழலத் தொடங்கின; அதில் வசித்துக் கொண்டிருந்த நாகங்களும் அரக்கர்களும் மிரண்டு போனார்கள். பெரிய முதலைகள் (பயந்து போய்) உயரே தாவிக் குதித்தன. (30,31)

அப்போது, இராமன் கோபத்தால் பெருமூச்சு விட்டுக் கொண்டு ஈடு–இணையில்லாத வில்லில், மிகவும் வேகமாகச் செல்லும் அம்புகளைக் கோர்த்து, நாண் கயிற்றை மீண்டும் இழுப்பதைக் கண்ட லட்சுமணன் விருட்டென்று எழுந்து, 'வேண்டாம், வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டே, இராமனுடைய கையிலிருந்த வில்லைத் தன் கையால் பற்றிக் கொண்டான். (32)

(தமையனாரைப் பார்த்து இலக்குவன் கூறினான்—) ''தாங்கள் எல்லையில்லாத வீரம் படைத்தவர். (இப்போது செய்து கொண்டிருப்பது போன்ற இயற்கையைப் பாதிக்கும் காரியங்களைச் செய்யாமலேயே) சமுத்திரத்தைக் கஷ்டப்படுத்தாமலேயே தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். தங்களைப் போன்ற மேன்மக்கள், கோபத்திற்கு இடங்கொடுக்க மாட்டார்கள். தாங்கள் தொலைநோக்குடன் பிற நல்ல உபாயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.'' (சமுத்திரராஜனிடம் ஏற்பட்டுள்ள கோபத்தால் குறுகிய நோக்கத்துடன் செயல்பட்டு, கடலை வற்றிப் போகச் செய்தால், பஞ்சபூதங்களின் இயற்கை நியதி கெட்டுப் போகுமே!) (33)

அதே சமயத்தில் வானத்தில் மறைந்து நின்ற தேவரிஷிகளும் பிரும்மரிஷிகளும், 'அடடா! இது என்ன கஷ்டம்!' என்று அதிர்ச்சியடைந்து, ஒரே குரலாக 'வேண்டாம், வேண்டாம்' என்று கலவரத்தோடு மொழிந்தார்கள். (34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்திரண்டு

அணை கட்டுதல்!

பின்னர், ரகுகுல திலகமான இராமன் சமுத்திரத்தை நோக்கி, ''பெருங்கடலே! இப்போது உன்னைப் பாதாளம் வரையிலும் வற்றச் செய்யப் போகிறேன்'' என்று கடுமையாகக் கூறினார். (1)

''சாகரமே! என்னுடைய பாணங்களால் கடல் நீர் கொதிப்படைந்து ஆவியாகப் போய்விடும்; உன்னுள்ளே வாழும் உயிர்ப் பிராணிகள் மாண்டு போகும். தண்ணீர் முற்றிலுமாக அற்றுப் போனால் எல்லாவிடத்திலும் மணற்புழுதி தோன்றிவிடும். சாகரமே! எனது கோதண்டத்திலிருந்து புறப்படும் பாணப் பெருக்கினால், வானரர்கள் உனது எதிர்க்கரையை நடந்தே சென்றடைவார்கள். (2,3)

தானவர்கள் வாழ்விடமே! (நதிகளின் நீரை சேமித்து வைத்துக் கொள்ளும் தன்மை மட்டுமே உன்னிடம் இருக்கிறது.) என்னுடைய ஆண்மையையும் மகாபராக்கிரமத்தையும் நீ அறியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். என்னிடமிருந்து உனக்குப் பேராபத்து உண்டாகப் போகிறது.'' (4)

ப்$_3$ரஹ்மேணாஸ்த்ரேண ஸம்யோஜ்ய ப்$_3$ரஹ்மத$_3$ண்ட$_3$நிப$_4$ம் ஶரம் ।
ஸம்யோஜ்ய த$_4$நுஷி ஶ்ரேஷ்டே$_2$ விசகர்ஷ மஹாப$_3$ல: ॥ (5)

தஸ்மிந் விக்ருஷ்டே ஸஹஸா ராக$_4$வேண ஶராஸநே ।
ரோத$_3$ஸீ ஸம்பப$_2$ாலேவ பர்வதாஶ்ச சகம்பிரே ॥ (6)

தமஶ்ச லோகமாவவ்ரே தி$_3$ஶச்ச ந சகாஶிரே ।
பரிசுக்ஷுபி$_4$ரே சாஶு ஸராம்ஸி ஸரிதஸ்தத$_2$ா ॥ (7)

திர்யக் ச ஸஹ நக்ஷத்ரை: ஸங்க$_3$தௌ சந்த்$_3$ரப$_4$ாஸ்கரௌ ।
ப$_4$ாஸ்கராம்ஶுபி$_4$ராதீ$_3$ப்தம் தமஸா ச ஸமாவ்ருதம் ॥ (8)

ப்ரசகாஶே தத$_3$ாகாஶமுல்காஶதவிதீ$_3$பிதம் ।
அந்தரிக்ஷாச்ச நிர்க$_4$ாதா நிர்ஜக்$_3$முரதுலஸ்வநா: ॥ (9)

புஸ்பு$_2$ருஶ்ச க$_4$நா தி$_3$வ்யா தி$_3$வி மாருதபங்க்தய: ॥ (10)

ப$_3$ப$_4$ஞ்ஜ ச தத$_3$ா வ்ருக்ஷாஞ்ஜலத$_3$ாநுத்$_3$வஹந்நபி ।
ஆருஜம்ஶ்சைவ ஶைலாக்$_3$ராஞ்ஶிக$_2$ராணி ப்ரப$_4$ஞ்ஜந: ॥ (11)

தி$_3$விஸ்ப்ருஶோ மஹாமேக$_4$ா: ஸங்க$_3$தா: ஸமஹாஸ்வநா: ।
முமுசுர்வைத்$_3$யுதாநக்$_3$நீந்ஸ்தே மஹாஶநயஸ்தத$_3$ா ॥ (12)

யாநி பூ$_4$தாநி த்$_3$ருஶ்யாநி சுக்ருஶுஶ்சாஶநே: ஸமம் ।
அத்$_3$ருஶ்யாநி ச பூ$_4$தாநி முமுசுர்பை$_4$ரவஸ்வநம் ॥ (13)

ஶிஶ்யிரே சாபி பூ$_4$தாநி ஸந்த்ரஸ்தாந்யுத்$_3$விஜந்தி ச ।
ஸம்ப்ரவிவ்யதி$_2$ரே சாபி ந ச பஸ்பந்தி$_3$ரே ப$_4$யாத் ॥ (14)

ஸஹபூ$_4$தை: ஸதோயோர்மி: ஸநாக$_3$: ஸஹராக்ஷஸ: ।
ஸஹஸாபூ$_4$த்ததோ வேக$_3$ாத்$_3$பீ$_4$மவேக$_3$ோ மஹோத$_3$தி$_4$: ॥
யோஜநம் வ்யதிசக்ராம வேலாமந்யத்ர ஸம்ப்லவாத் ॥ (15)

தம் தத$_3$ா ஸமதிக்ராந்தம் நாதிசக்ராம ராக$_4$வ: ।
ஸமுத்$_3$த$_4$மமித்ரக்$_4$நோ ராமோ நத$_3$நதீ$_3$பதிம் ॥ (16)

ததோ மத்$_4$யாத் ஸமுத்$_3$ரஸ்ய ஸாக$_3$ர: ஸ்வயமுத்தி$_2$த: ।
உத$_3$யந் ஹி மஹாஶைலாந்மேரோரிவ தி$_3$வாகர: ॥ (17)

பந்நகை$_3$: ஸஹ தீ$_3$ப்தாஸ்யை: ஸமுத்$_3$ர: ப்ரத்யத்$_3$ருஶ்யத ।
ஸ்நிக்$_3$த$_4$வைடூ$_3$ர்யஸங்காஶோ ஜாம்பூ$_3$நத$_3$விபூ$_4$ஷித: ॥ (18)

ரக்தமால்யாம்ப$_3$ரத$_4$ர: பத்$_3$மபத்ரநிபே$_4$க்ஷண: ।
ஸர்வபுஷ்பமயீம் தி$_3$வ்யாம் ஶிரஸா த$_4$ாரயந் ஸ்ரஜம் ॥ (19)

பேராற்றல் படைத்த இராமன், பிரும்மதண்டம் போன்றதான ஓர் அம்பில் பிரும்மாஸ்திர மந்திரத்தை ஓதி, அதற்கு அபாரமான சக்தியைக் கொடுத்து, சிறந்த வில்லில் கோர்த்து நாண்கயிற்றை இழுத்தார். (5)

இராகவன் சடாரென்று வில்லின் நாண்கயிற்றைப் பிடித்து இழுத்தவுடன், வானமும் தரையும் பிளந்துவிட்டவை போல் ஆகிவிட்டன; மலைகள் ஆட்டம் கண்டன. (6)

உலகெங்கும் இருள் சூழ்ந்து கொண்டது; திக்குத் திசைகள் புலப்படாமறபோய்விட்டன; பொய்கைகளும் ஆறுகளும் அந்த விநாடியிலேயே கொந்தளிக்கத் தொடங்கின. (7)

சூரிய–சந்திரர்கள் நட்சத்திரங்களோடு, (இயற்கைக்கு மாறாக) வக்ரகதியில் சேர்ந்து கொண்டன. ஆகாயத்தில் சூரியன் விளங்கினாலும் வான்வெளியில் இருள் படர்ந்தது. (8)

(சூரிய ஒளி இல்லாமறபோனாலும்) நூற்றுக்கணக்கான கொள்ளிக் கட்டைகளால் வானம் ஒளிபெற்றது; வானத்திலிருந்து காதைச் செவிடாக்கும் பேரொலியுடன் இடிகள் முழக்கமிட்டன. (9)

வானத்தில் பெரிய பெரிய மேகங்கள் தோன்றின; வரிசை வரிசையாகப் புயற்காற்று வீசியது. (10)

அப்போது, புயற்காற்று கனத்த மேகங்களையும் தூக்கிச் சென்றது; மரங்களை முறித்துத் தள்ளிற்று; மலைமுகடுகளையும் குன்றுகளையும் பெயர்த்துத் தள்ளிற்று. (11)

ஆகாயத்தைத் தொடும் அளவுக்குத் திரண்டிருந்த பெருமேகங்கள் ஒன்றோடொன்று உரசி பேரொலி எழுப்பி, மின்னல்களாகிய நெருப்பை உண்டாக்கின. (12)

கண்ணுக்குப் புலப்படும் உயிர்ப் பிராணிகளும், புலப்படாத பிராணிகளும் இடிகளைப் போன்று பயங்கரமாக ஒலிகளை எழுப்பின. (13)

எத்தனையோ பிராணிகள் அச்சமடைந்தவையாகத் தரையில் படுத்துவிட்டன; மனம் பதறி, அச்சத்தால் அசைவற்றுப் போயின; பல பிராணிகள் பயத்தால் மனக்கலக்கம் அடைந்தன. (14)

அந்த மாபெருங்கடல், அப்போது ஏற்பட்ட பயங்கர நிகழ்வுகளால், அதிலுள்ள உயிர்ப்பிராணிகளோடும் நீரலைகளோடும் நாகங்களோடும் அரக்கர்களோடும் மிகவும் கொந்தளிப்பை அடைந்தது. (பிரளய காலம் இல்லாத போதிலும்) கரையைக் கடந்து ஒரு யோஜனை தூரம் நீர் பெருக்கெடுத்து ஓடிற்று. (15)

எதிரிகளை அழிப்பவரான இராமன், செருக்குடன் கரையைக் கடந்து சென்ற சமுத்திரத்தைத் துன்புறுத்தாதிருந்தார். (16)

அப்போது, கடலின் நடுவிலிருந்து சமுத்திரம் ஓர் உருவம் ஏற்று, மாமலையாகிய மேருபர்வதத்திலிருந்து உதயமாகும் சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டு, தானே வெளிப்பட்டது. (17)

கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போன்ற முகங்களுடைய சர்ப்பங்களோடு கடலரசன் தென்பட்டான். வழவழப்பான வைடூர்யத்தைப் போன்ற பேரொளி; ஜாம்பூநதம் என்ற பொன்னாலான அணிகலன்கள்; (18)

சிவந்த மலர்களாலான மாலை; தாமரை இதழ் போன்ற கண்கள்; எல்லா வகையான மலர்களும் சேர்த்துக் கட்டப்பட்ட மாலையுடன் விளங்கும் தலை; (19)

Koviloor Digital Library

ஜாதரூபமயைஶ்சைவ தபநீயவிபூ$_4$ஷிதை: ।
ஆத்மஜாநாம் ச ரத்நாநாம் பூ$_4$ஷிதோ பூ$_4$ஷணோத்தமை: ॥ (20)

த$_4$ாதுபி$_4$ர்மண்டி$_3$த: ஶைலோ விவிதை$_4$ர்ஹிமவாநிவ ।
ஏகாவலீமத்$_4$யக$_3$தம் தரளம் பாடலப்ரப$_4$ம் ॥
விபுலேநோரஸா பி$_3$ப்$_4$ரத்கௌஸ்துப$_4$ஸ்ய ஸஹோத$_3$ரம் ॥ (21)

ஆகூ$_4$ர்ணிததரங்கௌ$_3$க$_4$: காளிகாநிலஸங்குல: ।
உத்$_3$வர்திதமஹாக்$_3$ராஹ: ஸம்ப்$_4$ராந்தோரக$_3$ராக்ஷஸ: ॥ (22)

தே$_3$வதாநாம் ஸரூபாபி$_4$: நாநாரூபாபி$_4$ரீஶ்வர: ।
க$_3$ங்கா$_3$ஸிந்து$_4$ப்ரத$_4$ாநாபி$_4$ராபகா$_3$பி$_4$: ஸமாவ்ருத: ॥ (23)

ஸாக$_3$ர: ஸமுபக்ரம்ய பூர்வமாமந்த்ர்ய வீர்யவாந் ।
அப்$_3$ரவீத்ப்ராஞ்ஜலிர்வாக்யம் ராக$_4$வம் ஶரபாணிநம் ॥ (24)

ப்ருதி$_2$வீ வாயுராகாஶமாபோ ஜ்யோதிஶ்ச ராக$_4$வ ।
ஸ்வபா$_4$வே ஸௌம்ய திஷ்ட$_2$ந்தி ஶாஶ்வதம் மார்க$_3$மாஶ்ரிதா: ॥ (25)

தத்ஸ்வபா$_4$வோ மமாப்யேஷ யத$_3$கா$_3$தே$_4$ா஽ஹமப்லவ: ।
விகாரஸ்து ப$_4$வேத்$_3$கா$_3$த$_4$ ஏதத்தே வேத$_3$யாம்யஹம் ॥ (26)

ந காமாந்ந ச லோபா$_4$த்$_3$வா ந ப$_4$யாத் பார்தி$_2$வாத்மஜ ।
க்$_3$ராஹநக்ராகுலஜலம் ஸ்தம்ப$_4$யேயம் கத$_2$ஞ்சந ॥
வித$_4$ாஸ்யே யேந க$_3$ந்தாஸி விஷஹிஷ்யே ஹ்யஹம் தத$_2$ா ॥ (27)

க்$_3$ராஹா ந ப்ரஹரிஷ்யந்தி யாவத்ஸேநா தரிஷ்யதி ।
ஹரீணாம் தரணே ராம கரிஷ்யாமி யத$_2$ா ஸ்த$_2$லம் ॥ (28)

தமப்$_3$ரவீத்தத$_3$ா ராம உத்$_3$யதோ ஹி நதீ$_3$பதே ।
அமோகே$_4$ா஽யம் மஹாபா$_3$ண: கஸ்மிந் தே$_3$ஶே நிபாத்யதாம் ॥ (29)

ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா தம் ச த்$_3$ருஷ்ட்வா மஹாஶரம் ।
மஹோத$_3$தி$_4$ர்மஹாதேஜா ராக$_4$வம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (30)

உத்தரேணாவகாஶோ஽ஸ்தி கஶ்சித்புண்யதமோ மம ।
த்$_3$ருமகுல்ய இதி க்$_2$யாதோ லோகே க்$_2$யாதோ யத$_2$ா ப$_4$வாந் ॥ (31)

உக்$_3$ரத$_3$ர்ஶநகர்மாணோ ப$_3$ஹவஸ்தத்ர த$_3$ஸ்யவ: ।
ஆபீ$_4$ரப்ரமுகா$_2$: பாபா: பிப$_3$ந்தி ஸலிலம் மம ॥ (32)

தைஸ்து ஸம்ஸ்பர்ஶநம் ப்ராப்தைர்ந ஸஹே பாபகர்மபி$_4$: ।
அமோக$_4$: க்ரியதாம் ராம தத்ர தேஷு ஶரோத்தம: ॥ (33)

பளீரென்று ஒளிவீசும் பொன் ஆபரணங்கள்; தன்னிடமே உற்பத்தியாகும் இரத்தினங்களாலான உத்தம அணிகலன்கள்; பலவகையான தாதுக்களால் அலங்கரிக்கப்பட்ட இமயபர்வதம் போன்ற கம்பீரம்; விசாலமான மார்பில் கௌஸ்துபமணிக்கு நிகரானதும் வெண்மையாக ஒளிவீசுவதுமான நடுநாயக மணியைக் கொண்ட முத்துமாலை அணிந்திருந்தான். (20,21)

அடங்கி நிற்காமல் எப்போதும் சலித்துக் கொண்டிருக்கும் அலைக்கூட்டங்கள்; உள்ளே, மனம் கலங்கிய பெரிய முதலைகள்; பயந்து நடுங்கும் நாகர்கள், அரக்கர்கள்; (22)

தன்னைப் போன்ற உருவமுடையவர்களுக்கும் பலவித உருவமுடைய தேவதைகளுக்கும் தலைவன்; கங்கை, சிந்து முதலிய ஆறுகளால் எல்லாப் பக்கங்களிலிருந்தும் சூழப்பட்டவன் – இப்படிப்பட்ட சமுத்திரராஜன், பாணமும் கையுமாக நிற்கும் இராமனைப் பார்த்து, முன்னதாகவே அழைத்து, கைகளைக் கூப்பிக் கொண்டு பேசத் தொடங்கினான்— (23,24)

''சாந்தத் திருவுடைய இராகவா! பூமி, வாயு, ஆகாயம், நீர், அக்னி – இவைகள் எப்போதும் தத்தம் இயற்கை குணத்துடனேயே நிலைத்து நிற்கின்றன. தத்தம் இயல்பிலிருந்து மாறுவதில்லை. (25)

நான், ஒரே எம்பில் தாண்ட முடியாதவன்; ஆழங்காண முடியாதவன். இதுதான் என் இயற்கையான தன்மை. இதற்குமாறாக (என்னை வற்ற வைத்து) தரை காணப்படுமேயானால், அது என் இயற்கையை மீறிய செயலாகப் போய்விடும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (26)

மாமன்னர் திருக்குமாரரே! ஏதோ ஒரு நன்மையை முன்னிட்டோ, இருக்கும் பொருளை இழந்து விடாமலிருப்பதற்காகவோ, தங்களால் தண்டிக்கப்படுவேன் என்ற அச்சத்தாலோ (காமம், லோபம், பயம்) மீன்–முதலைகள் முதலியன வசிக்கும் இந்தக் கடல் நீரை அலைபுரளாமல் நிலையாக நிறுத்தி வைக்க மாட்டேன். ஆனால், என்னை (அதாவது, எனது இயற்கை தன்மை மாறாமல்) கடந்து செல்லும் ஓர் உபாயத்தை, நான் தங்களுக்குச் சொல்கிறேன். (27)

வானரப்படை (சாகரத்தைக்) கடந்து செல்லும் வரை முதலைகள் தாக்காமல் பார்த்துக் கொள்கிறேன். இராமப்பிரபோ! வானரர்கள் அனைவரும் என்னைக் கடந்து செல்லும்வரை அதற்கு இடம் தருவேன்.'' (28)

அப்போது இராமன், ''நதிகளின் தலைவனே! வில்லில் தொடுக்கப்பட்டுவிட்ட இந்த வலிமை மிக்க அம்பு வீண்போகாதது. எனவே, இதை எந்த இடத்தைக் குறி வைத்து செலுத்தலாம் என்று சொல்.'' (29)

வலிமை மிக்க அந்த பாணத்தைப் பார்த்தும், இராமபிரானின் சொற்களைக் கேட்டும் பேராற்றல் படைத்த கடலரசன், இராகவனை நோக்கி இவ்வாறு கூறினான்— (30)

''எனக்குச் சொந்தமான மிகவும் புண்ணியப் பிரதேசம் ஒன்று வடதிசையில் இருக்கிறது. 'துருமகுல்யம்' என்ற பெயருடைய அந்தத் தலம், தங்களைப் போன்றே மிகவும் பிரசித்தி பெற்றது. (31)

ஆபீரம் முதலான கீழான கலப்பு ஜாதியைச் சேர்ந்தவர்கள், அங்கே ஏராளமாக இருக்கிறார்கள்; அவர்கள் மகாபாவிகள்; தோற்றத்திலும் செயலிலும் கொடூரமானவர்கள்; என் எதிரிகள்; என் தண்ணீரைக் குடிக்கிறார்கள். (32)

பாவச் செயல்கள் புரியும் அந்தப் பாவிகள் என்னைத் தொடுவதைக்கூட என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. (அவர்களது பாவம் என்னையும் பற்றிக் கொள்கிறது.) ஸ்ரீராமா! இந்த உத்தமமான பாணத்தை அவ்விடம் செலுத்தி, இதனைப் பயனுள்ளதாகச் செய்யுங்கள்.'' (33)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ஸாக$_3$ரஸ்ய மஹாத்மந: ।
முமோச தம் ஶரம் தீ$_3$ப்தம் வீர: ஸாக$_3$ரத$_3$ர்ஶநாத் ॥ (34)

தேந தந்மருகாந்தாரம் ப்ருதி$_2$வ்யாம் க$_2$லு விஶ்ருதம் ।
நிபாதித: ஶரோ யத்ர தீ$_3$ப்தாஶநிஸமப்ரப$_4$: ॥ (35)

நநாத$_3$ ச தத$_3$ா தத்ர வஸுத$_4$ா ஶல்யபீடி$_3$தா ।
தஸ்மாத்$_3$வ்ரணமுக$_2$ாத்தோயமுத்பபாத ரஸாதலாத் ॥ (36)

ஸ ப$_3$பூ$_4$வ தத$_3$ா கூபோ வ்ரண இத்யபி$_4$விஶ்ருத: ।
ஸததம் சோத்தி$_2$தம் தோயம் ஸமுத்$_3$ரஸ்யேவ த்$_3$ருஶ்யதே ॥ (37)

அவத$_3$ாரணஶப்$_3$த$_3$ஶ்ச த$_3$ாருண: ஸமபத்$_3$யத ।
தஸ்மாத்தத்$_3$ப$_3$ாணபாதேந த்வப: குக்ஷிஷ்வஶோஷயத் ॥ (38)

விக்$_2$யாதம் த்ரிஷு லோகேஷு மருகாந்தாரமேவ தத் ।
ஶோஷயித்வா தத: குக்ஷிம் ராமோ த$_3$ஶரத$_2$ாத்மஜ: ॥
வரம் தஸ்மை த$_3$தெ$_3$ள வித்$_3$வாந் மரவேऽமரவிக்ரம: ॥ (39)

பஶவ்யஶ்சால்பரோக$_3$ஶ்ச ப$_2$லமூலரஸாயுத: ।
ப$_3$ஹுஸ்நேஹோ ப$_3$ஹுக்ஷீர: ஸுக$_3$ந்தி$_4$ர்விவிதெ$_4$ளஷத$_4$: ॥ (40)

ஏவமேதைர்கு$_3$ணைர்யுக்தோ ப$_3$ஹுபி$_4$: ஸததம் மரு: ।
ராமஸ்ய வரத$_3$ாநாச்ச ஶிவ: பந்த$_2$ா ப$_3$பூ$_4$வ ஹ ॥ (41)

தஸ்மிந் த$_3$க்$_3$தே$_4$ தத$_3$ா குக்ஷெள ஸமுத்$_3$ர: ஸரிதாம் பதி: ।
ராக$_4$வம் ஸர்வஶாஸ்த்ரக்ஞமித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (42)

அயம் ஸெளம்ய நளோ நாம தநுஜோ விஶ்வகர்மண: ।
பித்ரா த$_3$த்தவர: ஶ்ரீமாந் ப்ரதிமோ விஶ்வகர்மணா ॥ (43)

ஏஷ ஸேதும் மஹோத்ஸாஹ: கரோது மயி வாநர: ।
தமஹம் த$_4$ாரயிஷ்யாமி தத$_2$ா ஹ்யேஷ யத$_2$ா பிதா ॥ (44)

ஏவமுக்த்வோத$_3$தி$_4$ர்நஷ்ட: ஸமுத்த$_2$ாய நளஸ்தத$_3$ா ।
அப்$_3$ரவீத்$_3$வாநரஶ்ரேஷ்டே$_2$ா வாக்யம் ராமம் மஹாப$_3$ல: ॥ (45)

அஹம் ஸேதும் கரிஷ்யாமி விஸ்தீர்ணே வருணாலயே ।
பிது: ஸாமர்த்$_2$யமாஸ்த$_2$ாய தத்த்வமாஹ மஹோத$_3$தி$_4$: ॥ (46)

த$_3$ண்ட$_3$ ஏவ வரோ லோகே புருஷஸ்யேதி மே மதி: ।
தி$_4$க் க்ஷமாமக்ருதக்ஞேஷு ஸாந்த்வம் த$_3$ாநமத$_2$ாபி வா ॥ (47)

அயம் ஹி ஸாக$_3$ரோ பீ$_4$ம: ஸேதுகர்மதி$_3$த்$_3$ருக்ஷயா ।
த$_3$தெ$_3$ள த$_3$ண்ட$_3$ப$_4$யாத்$_3$க$_3$ாத$_4$ம் ராக$_4$வாய மஹோத$_3$தி$_4$: ॥ (48)

மகாமனஸ்வியான கடலரசனின் சொற்களைக் கேட்டு, சாகரம் காட்டிய தலத்தைக் குறி வைத்து, மிகவும் பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டிருந்த அந்த பாணத்தை இராமன் செலுத்தினார். பேரொளியுடன் கூடிய இடிக்குச் சமமான ஒலி கொண்ட அந்த பாணம், எந்த இடத்தில் விழும்படி செலுத்தப்பட்டதோ, அந்த இடம் மருகாந்தாரம் என்ற பெயருடன் உலகில் விளங்கலாயிற்று. (34,35)

பாணத்தினால் தாக்கப்பட்ட அந்த நிலப்பகுதி பெருஞ்சத்தத்துடன் பிளந்தது. அந்தப் பிளவின் வழியாக பாதாளத்திலிருந்து தண்ணீர் பெருகி வந்தது. (36)

அந்தப் பிளவு (தண்ணீர் நிரம்பியதால்) ஒரு கிணறு போல் ஆகிவிட்டது. விரணம் என்று பெயர் பெற்ற அந்தக் கிணற்றிலிருந்து எப்போதும் தண்ணீர் பெருகிக் கொண்டிருப்பதால், கடல் போலவே காணப்பட்டது. (37)

அப்போது (பாணம் பூமியில் வீழ்ந்தபோது) பூமி வெடித்ததால் பயங்கரமான ஓசை உண்டாயிற்று. அந்த வெடிப்பில், அருகிலிருந்த (கடல் பொங்கும்போது, கடல்நீர் வந்து தங்கும்) ஏரி–குளங்களின் நீர் வந்து சேர்ந்ததால், அவைகள் வற்றிப் போயின. (38)

பின்னர், அந்தப் பிரதேசம் மூன்று உலகிலும் 'மருகாந்தாரம்' என்ற பெயரால் புகழடைந்தது. கடல்நீர் வந்து தங்கும் ஏரி–குளங்களை வற்றடித்துவிட்ட தசரதகுமாரரும், ஆழ்ந்தகன்ற கல்வி கற்றவரும், தேவர்களுக்கு ஒப்பான வீரம் படைத்தவருமான இராமன், அந்த மரு (நீர் அற்ற) பூமிக்கு ஒரு வரம் கொடுத்தார். (39)

இராமனது வரத்தின்படி அந்தப் பிரதேசம் பசுக்கள் வசிப்பதற்கு ஏற்ற இடமாயிற்று; நோய்–நொடிகள் மிகவும் குறைந்தன; சாறு நிறைந்த பழங்கள்–கிழங்குகள் உண்டாயின; பசுக்கள் அளவில்லாமல் பாலைக் கொடுத்தன; அதனால், நெய் தாராளமாகக் கிடைத்தது; நறுமணம் எப்போதும் வீசிக் கொண்டிருந்தது; பலவித செடி–கொடிகள் செழிப்பாக வளர்ந்தன. இவ்வாறு, இராமனுடைய வரத்தின் விளைவாக செழிப்புடனும் வாழத் தகுந்த இடமாகவும் ஆனபடியால், எல்லோருக்கும் நலம் தரும் பிரதேசமாக ஆயிற்று. (40,41)

நீர் நிறைந்திருந்த பள்ளத்தாக்குகள் வற்றிப் போனவுடன் நதிகளின் நாயகனான கடலரசன், அனைத்து நீதிகளையும் அறிந்த இராமனை நோக்கி (பின்வருமாறு) விண்ணப்பித்துக் கொண்டான்— (42)

''சாந்தமூர்த்தியே! நளன் என்ற இந்த வானரன் விசுவகர்மாவின் புதல்வன். கட்டடக்கலை நிபுணனான இவனுக்கு இவன் தந்தை வரம் கொடுத்திருக்கிறார். இவன் விசுவகர்மாவுக்கு இணையானவன். இவன் மிக்க கவனத்துடன் என் மேல் பாலம் கட்டுவானாக! இவன் தன் தந்தையைப் போலவே கட்டுமானக் கலையில் வல்லவன். இவன் கட்டும் அந்தப் பாலத்தை நான் (இங்குமங்கும் அலைக்கழிக்காது உறுதியாக) தாங்கிக் கொள்வேன்.'' (43,44)

இவ்வாறு கூறிவிட்டு சமுத்திரராஜன் மறைந்து போனான். உடனே, வானரோத்தமனான நளன் எழுந்து மகாபலம் பொருந்திய இராமனிடம் (பின்வருமாறு) கூறினான்— (45)

''சமுத்திரன் உண்மையைத்தான் கூறினான். நான், என் தந்தையால் அருளப்பட்ட கட்டுமான கலைத்திறனைக் கொண்டு, விஸ்தாரமான மேற்பரப்பையுடைய பெருங்கடல்மீது பாலம் அமைப்பேன். உலகத்தில் நன்றி கெட்டவர்கள் விஷயத்தில், தண்டனை கொடுப்பது என்ற நீதிதான் சிறந்தது என்பது என் கருத்து. அவர்களிடம் பொறுமை, சமாதானம், கொடை முதலிய உபாயங்கள் எடுபட மாட்டா. (46,47)

பயங்கரமான இந்த சாகரன், தாங்கள் பாலம் கட்டுவதைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையாலும், இன்னும் கடுமையான தண்டனை கொடுத்து விடுவார் என்ற பயத்தாலும் அணை கட்டுவதற்குகந்த மேடான இடத்தை இராகவனுக்குக் கொடுத்திருக்கிறான். (48)

மம மாதுர்வரோ த$_3$த்தோ மந்த்$_3$ரே விஶ்வகர்மணா ।
மயா து ஸத்$_3$ருஶ: புத்ரஸ்தவ தே$_3$வி ப$_4$விஷ்யதி ॥ (49)

ஔரஸஸ்தஸ்ய புத்ரோऽஹம் ஸத்$_3$ருஶோ விஶ்வகர்மணா ॥ (50)

ஸ்மாரிதோऽஸ்ம்யஹமேதேந தத்த்வமாஹ மஹோத$_3$தி$_4$: ।
ந சாப்யஹமநுக்தோ வை ப்ரப்$_3$ரூயாமாத்மநோ கு$_3$ணாந் ॥ (51)

ஸமர்த$_2$ஶ்சாப்யஹம் ஸேதும் கர்தும் வை வருணாலயே ।
காமமத்$_3$யைவ ப$_3$த்$_4$நந்து ஸேதும் வாநரபுங்க$_3$வா: ॥ (52)

ததோऽதிஸ்ருஷ்டா ராமேண ஸர்வதோ ஹரியூத$_2$பா: ।
அபி$_4$பேதுர்மஹாரண்யம் ஹ்ருஷ்டா: ஶதஸஹஸ்ரஶ: ॥ (53)

தே நக$_3$ந்நக$_3$ஸங்காஶா: ஶாக$_2$ம்ருக$_3$க$_3$ணர்ஷப$_4$: ।
ப$_3$ப$_4$ஞ்ஜுர்வாநராஸ்தத்ர ப்ரசகர்ஷுஶ்ச ஸாக$_3$ரம் ॥ (54)

தே ஸாலைஶ்சாஶ்வகர்ணைஶ்ச த$_4$வைர்வம்ஶைஶ்ச வாநரா: ।
குடஜைரர்ஜுநைஸ்தாலைஸ்திலகைஸ்திநிஶைரபி ॥ (55)

பி$_3$ல்வைஶ்ச ஸப்தபர்ணைஶ்ச கர்ணிகாரைஶ்ச புஷ்பிதை: ।
சூதைஶ்சாஶோகவ்ருக்ஷைஶ்ச ஸாக$_3$ரம் ஸமபூரயந் ॥ (56)

ஸமூலாம்ஶ்ச விமூலாம்ஶ்ச பாத$_3$பாந் ஹரிஸத்தமா: ।
இந்த்$_3$ரகேதூநிவோத்$_3$யம்ய ப்ரஜஹ்ருர்ஹரயஸ்தரூந் ॥ (57)

தாலாந் தா$_3$டி$_3$மகு$_3$ல்மாம்ஶ்ச நாரிகேலாந் விபீ$_4$தகாந் ।
ப$_3$குலாந் க$_2$தி$_3$ராந்நிம்பா$_3$ந் ஸமாஜஹ்ரு: ஸமந்தத: ॥ (58)

ஹஸ்திமாத்ராந் மஹாகாயா: பாஷாணாம்ஶ்ச மஹாப$_3$லா: ।
பர்வதாம்ஶ்ச ஸமுத்பாட்ய யந்த்ரை: பரிவஹந்தி ச ॥ (59)

ப்ரக்ஷிப்யமாணைரசலை: ஸஹஸா ஜலமுத்$_3$த$_4$தம் ।
ஸமுத்பதிதமாகாஶமுபாஸர்பத்ததஸ்தத: ॥ (60)

ஸமுத்$_3$ரம் க்ஷோப$_4$யாமாஸுர்வாநராஶ்ச ஸமந்தத: ।
ஸூத்ராண்யந்யே ப்ரக்$_3$ருஹ்ணந்தி வ்யாயதம் ஶதயோஜநம் ॥ (61)

த$_3$ஶயோஜநவிஸ்தாரம் ஶதயோஜநமாயதம் ।
நளஶ்சக்ரே மஹாஸேதும் மத்$_4$யே நத$_3$நதீ$_3$பதே: ॥ (62)

ஸ தத$_2$ா க்ரியதே ஸேதுர்வாநரைர்கோ$_4$ரகர்மபி$_4$: ।
த$_3$ண்டா$_3$நந்யே ப்ரக்$_3$ருஹ்ணந்தி விசிந்வந்தி தத$_2$ா பரே ॥ (63)

வாநரா: ஶதஶஸ்தத்ர ராமஸ்யாக்ஞாபுர:ஸரா: ।
மேகா$_4$பை$_4$: பர்வதாக்$_3$ரைஶ்ச த்ருணை: காஷ்டை$_2$ர்ப$_3$ப$_3$ந்தி$_4$ரே ॥ (64)

மந்தரபர்வதத்தில் விசுவகர்மா என் தாயாருக்கு, 'எனக்கு இணையான சக்தியுடைய புதல்வன் உன் வயிற்றில் பிறப்பான்' என்று வரம் கொடுத்தார். (49)

நான், அவருடைய சொந்தக் குழந்தை; விசுவகர்மாவுக்கு நிகரான கட்டுமானத் திறன் உடையவன். (50)

சமுத்திரன் உண்மையைத்தான் கூறினான். அவன் சொன்னவுடன்தான் எனக்கும் நினைவுக்கு வந்தது. மேலும் மற்றவர்கள் என் சக்தியை எடுத்துக் கூறலாமே தவிர, நானாக என் பெருமைகளை விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. (51)

மாபெருங்கடலில் அணை கட்டுவதற்கு என்னால் முடியும். ஆகவே, எல்லா வானரர்களும் அணை கட்டும் பணியில் இப்போதிலிருந்தே எனக்கு உதவி செய்யத் தொடங்குவார்களாக.'' (52)

பிறகு, இராமனால் விடைகொடுக்கப்பட்ட நூறாயிரக்கணக்கான வானரவீரர்கள், மனமகிழ்ந்தவர்களாகப் பெருங்கானகத்தை நோக்கித் தாவிச் சென்றார்கள். (53)

மலைகளைப் போன்ற வானரக் கூட்டத்தலைவர்கள் மற்றும் வானரர்கள், மரங்களை அடியோடு பெயர்த்து, கடற்கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தார்கள். (54)

வானரர்கள் ஆச்சா, அசுவகர்ணம், தவம், மூங்கில், வெட்பாலை, மருது, பனை, திலகம், தினிசம், பில்வம், ஏழிலைப்பாலை போன்ற மரங்களாலும், மலர்கள் நிறைந்த கர்ணிகார மரங்களாலும், மா மற்றும் அசோக மரங்களாலும் சமுத்திரத்தை நிரப்பினார்கள். (55,56)

வானரோத்தமர்கள் சில மரங்களை வேருடனும், சிலவற்றை அடித்தண்டுக்கு மேலும் பிடுங்கி, இந்திரத்துவஜம் போல் மிக நீண்டதான சில மரங்களையும் இழுத்துக் கொண்டு வந்தார்கள். (57)

எல்லா இடங்களிலிருந்தும் பனை, செழிப்பான மாதுளை, தென்னை, தான்றி, மகிழம், கருங்காலி, வேம்பு முதலான மரங்களையும் கொண்டு வந்தார்கள். (58)

பேருடலும் மகாபலமும் கொண்ட வானரர்கள், யானை அளவான பாறைகளையும் மலைக்குன்றுகளையும் பெயர்த்தெடுத்து, பெருமுயற்சியுடன் (கடற்கரை வரை) சுமந்து வந்தார்கள். (59)

சடார் சடாரென்று தூக்கியெறியப்பட்ட பாறைகளால் கடல்நீர் ஆகாயம் வரை எழும்பிச் சென்று, பின் நாலாபுறங்களிலும் சிதறி விழுந்தது. (60)

எல்லாப் பக்கங்களிலிருந்தும் வானரர்கள் சமுத்திரத்தை கலங்கடித்தார்கள். சில வானரர்கள் நூறு யோஜனை தூரத்திற்கு நூலைக் கொண்டு அளந்து எல்லை வகுத்தார்கள். (61)

பத்து யோஜனை அகலமும், நூறு யோஜனை நீளமும் கொண்ட நெடிய பாலத்தை கடல் மத்தியில் நளன் கட்டி முடித்தான் (கட்ட தீர்மானித்தான்). (62)

சிலர் அளவுகோல்களைப் பிடித்து அளந்து கொண்டிருந்தார்கள்; வேறு சிலர் பொருட்களைச் சேகரித்துக் குவித்துக் கொண்டிருந்தார்கள். (63)

இராமபிரானுடைய ஆணையை சிரமேற்கொண்ட நூற்றுக்கணக்கான வானரர்கள், மேகங்களை நிகர்த்த மலைமுகடுகளாலும், (நடைபாதையின் மென்மையைக் கருதி) உயரமாக வளர்ந்திருந்த நாணற்புற்களையும் கட்டைகளையும் பரப்பி அணையைக் கட்டினார்கள். (64)

புஷ்பிதாக்3ரைஶ்ச தருபி4: ஸேதும் ப3த்4நந்தி வாநரா: ।
பாஷாணாம்ஶ்ச கி3ரிப்ரக்2யாந் கி3ரீணாம் ஶிக2ராணி ச ॥
த்3ருஶ்யந்தே பரித4வந்தோ க்3ருஹ்ய வாரணஸந்நிப4ா: ॥ (65)

ஶிலாநாம் க்ஷிப்யமாணாநாம் ஶைலாநாம் ச நிபாத்யதாம் ।
ப3பூ4வ துமுல: ஶப்3த3ஸ்தத3ா தஸ்மிந் மஹோத3தௌ4 ॥ (66)

க்ருதாநி ப்ரத2மேநாஹ்நா யோஜநாநி சதுர்த3ஶ ।
ப்ரஹ்ருஷ்டைர்க3ஜஸங்காஶைஸ்த்வரமாணை: ப்லவங்க3மை: ॥ (67)

த்3விதீயேந தத2ா சாஹ்நா யோஜநாநி து விம்ஶதி: ।
க்ருதாநி ப்லவகை3ஸ்தூர்ணம் பீ4மகாயைர்மஹாப3லை: ॥ (68)

அஹ்நா த்ருதீயேந தத2ா யோஜநாநி க்ருதாநி து ।
த்வரமாணைர்மஹாகாயைரேகவிம்ஶதிரேவ ச ॥ (69)

சதுர்தே2ந தத2ா சாஹ்நா த்3வாவிம்ஶதிரத2ாபி ச ।
யோஜநாநி மஹாவேகை3: க்ருதாநி த்வரிதைஸ்து தை: ॥ (70)

பஞ்சமேந தத2ா சாஹ்நா ப்லவகை3: க்ஷிப்ரகாரிபி4: ।
யோஜநாநி த்ரயோவிம்ஶத்ஸுவேலமதி4க்ருத்ய வை ॥ (71)

ஸ வாநரவர: ஸ்ரீமாந் விஶ்வகர்மாத்மஜோ ப3லீ ।
ப3ப3ந்த4 ஸாக3ரே ஸேதும் யத2ா சாஸ்ய பிதா தத2ா ॥ (72)

ஸ நளேந க்ருத: ஸேது: ஸாக3ரே மகராலயே ।
ஶுஶுபே4 ஸுப4க3: ஸ்ரீமாந் ஸ்வாதீபத2 இவாம்ப3ரே ॥ (73)

ததோ தே3வா: ஸக3ந்த4ர்வா: ஸித்த4ாஶ்ச பரமர்ஷய: ।
ஆக3ம்ய க3க3நே தஸ்து2ர்த்3ரஷ்டுகாமாஸ்தத3த்3பு4தம் ॥ (74)

த3ஶயோஜநவிஸ்தீர்ணம் ஶதயோஜநமாயதம் ।
த3த்3ருஶுர்தே3வக3ந்த4ர்வா நளஸேதும் ஸுது3ஷ்கரம் ॥ (75)

ஆப்லவந்த: ப்லவந்தஶ்ச க3ர்ஜந்தஶ்ச ப்லவங்க3மா: ।
தத3சிந்த்யமஸஹ்யம் ச அத்3பு4தம் ரோமஹர்ஷணம் ॥
த3த்3ருஶு: ஸர்வபூ4தாநி ஸாக3ரே ஸேதுப3ந்த4நம் ॥ (76)

தாநி கோடிஸஹஸ்ராணி வாநராணாம் மஹௌஜஸாம் ।
ப3த்4நந்த: ஸாக3ரே ஸேதும் ஜக்3மு: பாரம் மஹோத3தே4: ॥ (77)

விஶால: ஸுக்ருத: ஸ்ரீமாந் ஸுபூ4மி: ஸுஸமாஹித: ।
அஶோப4த மஹாஸேது: ஸீமந்த இவ ஸாக3ரே ॥ (78)

யானை நிகர் வானரர்கள், மலர்ந்த பூக்களைக் கொண்ட மரங்களாலும், குன்றுகளைப் போன்ற பெரிய பாறைகளாலும், பெயர்த்துக் கொண்டு வந்த மலைச்சிகரங்களாலும் வேகமாக ஓடோடி வந்து அணையைப் பிணைத்துக் கட்டினார்கள். அப்போது அந்தக் கடற்பகுதியில், தூக்கி எறியப்படும் பாறைகளாலும் மலைச்சிகரங்களாலும் பயங்கரமான சப்தம் எழுந்தது. (65,66)

யானையைப் போன்று பேருடல் படைத்தவர்களும் மனவிருப்பத்துடன் வேகமாக செயல்படுபவர்களுமான வானரர்கள், முதல் நாளன்று பதிநான்கு யோஜனை தூரம் அணையைக் கட்டினார்கள். (67)

இரண்டாவது நாள், பயங்கரமான உடலமைப்புக் கொண்டவர்களும் மிகவும் பலம் பொருந்தியவர்களுமான வானரர்கள் சுறுசுறுப்புடன் வேலை செய்து, இருபது யோஜனை தூரம் அணையைக் கட்டி முடித்தார்கள். (68)

மூன்றாவது நாள், மிக வேகமாக செயல்படும் வானரர்கள் இருபத்தோரு யோஜனை தூரத்திற்கு அணையைக் கட்டினார்கள். (69)

நான்காவது நாள், தளர்ச்சியில்லாமலும் விரைவாகவும் வேலை செய்யும் வானரர்கள், இருபத்திரண்டு யோஜனை தூரத்திற்கு அணையைக் கட்டினார்கள். (70)

துரிதமாக வேலை செய்யும் வானரர்கள் (எதிர்க்கரையில் இருந்து) சுவேலமலை வரையில், இருபத்து மூன்று யோஜனை தூரத்திற்கு அணையைக் கட்டி முடித்தார்கள். (71)

இவ்வாறாக, தன் தந்தைக்கு நிகரான வேலைத்திறனுடைய விசுவகர்மாவின் புதல்வனும், தனிச்சிறப்புப் பெற்று ஒளி வீசுபவனும், பலம் படைத்தவனும், வானர சிரேஷ்டனுமான நளன், கடல் மீது அணையைக் கட்டி முடித்தான். (72)

நீர்வாழ் பிராணிகள் வசிக்குமிடமாகிய கடல்மீது நளனால் அமைக்கப்பட்ட அந்த அணை, விண்வெளியில் சுவாதி நட்சத்திரம் செல்லும் பாதை போலவே மேன்மையும் அழகும் பொருந்தியதாக இருந்தது. (73)

அப்போது, தேவர்–கந்தர்வர்–சித்தர்–மாமுனிவர் ஆகியோர் கடலில் கட்டப்பட்ட அந்த அணையை மிகவும் ஆச்சரியத்துடன் வான்வெளியில் நின்றபடியே பார்த்தார்கள். (74)

பத்து யோஜனை அகலமும் நூறு யோஜனை நீளமும் கொண்ட, நளனால் கட்டி முடிக்கப்பட்ட செயற்கரிய செயலான அந்த அணையை, தேவ–கந்தர்வர்கள் கண்டு வியந்தார்கள். (75)

வானரர்கள் ஆடிப் பாடிக் கொண்டும், குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டும், சிந்தித்துப் பார்க்க முடியாததும் எவராலும் முயற்சி செய்ய முடியாததும் உரோமச் சிலிர்ப்பை உண்டாக்குவதுமான அந்த அற்புதமான அணையைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். கடலில் அணை கட்டப்பட்டிருப்பதை சர்வ பிராணிகளும் தத்தம் கண்களால் கண்டார்கள். (76)

பேராற்றல் படைத்தவர்களும் ஆயிரங்கோடிக்கணக்கானவர்களுமான வானரர்கள், இவ்வாறு அணையைக் கட்டிக் கொண்டே சென்று, சமுத்திரத்தின் எதிர்க்கரையை அடைந்துவிட்டார்கள். (77)

அந்த அணை விசாலமாக, உறுதியாக, அழகாக, சமதரையுடன் கூடியதாக, இறுகப் பிணைக்கப்பட்டதாக, கடல் அன்னையின் தலைக்கூந்தலின் நேர்வகிடு போல் விளங்கிற்று! (78)

தத: பாரே ஸமுத்₃ரஸ்ய க₃தா₃பாணிர்விபீ₄ஷண: ।
பரேஷாமபி₄க₄ாதார்த₂மதிஷ்ட₂த் ஸசிவை: ஸஹ ॥ (79)

ஸு₃க்₃ரீவஸ்து தத: ப்ராஹ ராமம் ஸத்யபராக்ரமம் ।
ஹநுமந்தம் த்வமாரோஹ அங்க₃த₃ம் சாபி லக்ஷ்மண: ॥ (80)

அயம் ஹி விபுலோ வீர ஸாக₃ரோ மகராலய: ।
வைஹாயஸௌ யுவாமேதௌ வாநரௌ தாரயிஷ்யத: ॥ (81)

அக்₃ரதஸ்தஸ்ய ஸைந்யஸ்ய ஸ்ரீமாந் ராம: ஸலக்ஷ்மண: ।
ஜக₃ாம த₄ந்வீ த₄ர்மாத்மா ஸு₃க்₃ரீவேண ஸமந்வித: ॥ (82)

அந்யே மத்₄யேந க₃ச்ச₂ந்தி பார்ஶ்வதோऽந்யே ப்லவங்க₃மா: ।
ஸலிலே பரபதந்த்யந்யே மார்க₃மந்யே ந லேபி₄ரே ॥
கேசித்₃வைஹாயஸக₃தா: ஸு₃பர்ணா இவ புப்லுவு: ॥ (83)

கோ₄ஷேண மஹதா தஸ்ய ஸிந்தோ₄ர்கோ₄ஷம் ஸமுச்ச்₂ரிதம் ।
பீமமந்தர்த₄தே பீமா தரந்தீ ஹரி வாஹிநீ ॥ (84)

வாநராணாம் ஹி ஸா தீர்ணா வாஹிநீ நளஸேதுநா ।
தீரே நிவிவிஶே ராஜ்ஞோ ப₃ஹுமூலப₂லோத₃கே ॥ (85)

தத₃த்₃பு₄தம் ராக₄வகர்ம து₃ஷ்கரம்
ஸமீக்ஷ்ய தே₃வா: ஸஹ ஸித்₃த₄சாரணை: ।
உபேத்ய ராமம் ஸஹஸா மஹர்ஷிபி₄:
ஸமப்₄யஷிஞ்சந் ஸு₂ஶுபை₄ர்ஜலை: ப்ருத₂க் ॥ (86)

ஜயஸ்வ ஶத்ரூந்நரதே₃வ மேதி₃நீம்
ஸஸாக₃ராம் பாலய ஶாஶ்வதீ: ஸமா: ।
இதீவ ராமம் நரதே₃வஸத்க்ருதம்
ஶுபை₄ர்வசோபி₄ர்விவிதை₄ரபூஜயந் ॥ (87)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ த்₃வாவிம்ஶ: ஸர்க₃: ॥

த்₃ரயோவிம்ஶ: ஸர்க₃:

லங்காபி₄ஷேணநம்

நிமித்தாநி நிமித்தஜ்ஞோ த்₃ருஷ்ட்வா லக்ஷ்மணபூர்வஜ: ।
ஸௌமித்ரிம் ஸம்பரிஷ்வஜ்ய இத₃ம் வசநமப்₃ரவீத் ॥ (1)

பரிக்₃ருஹ்யோத₃கம் ஶீதம் வநாநி ப₂லவந்தி ச ।
ப₃லௌக₄ம் ஸம்விப₄ஜ்யேமம் வ்யூஹ்ய திஷ்டே₂ம லக்ஷ்மண ॥ (2)

அப்போது, கடலின் அக்கரையில் அமைச்சர்களோடுகூட கதையைக் தாங்கிய விபீஷணன், எதிரிகள் வந்தால், அவர்களைத் தாக்குவதற்காக நின்று கொண்டார். (79)

சத்தியமான பராக்கிரமத்தைக் கொண்ட இராமனைப் பார்த்து, சுக்ரீவன் அப்போது சொன்னான்— ''நீங்களோ அனுமான் தோளில் ஏறிக் கொள்ளுங்கள்; லட்சுமணனோ அங்கதன் மேல் ஏறிக் கொள்ளட்டும். (80)

மாவீரரே! முதலைகளுக்கு இருப்பிடமான இந்தக் கடல் மிகவும் விசாலமானது. (நடந்து சென்றால் பல நாட்கள் ஆகும்.) இவ்விரு வானரர்களும் உங்கள் இருவரையும் வான்வழியே சுமந்து சென்று தாண்டுவிப்பார்கள்.'' (81)

கையில் வில்லேந்தியவரும் தருமாத்மாவுமான இராமன், லட்சுமணனும் சுக்ரீவனும் பின்தொடர, அந்தப் படையின் முன்னதாகச் சென்றார். (82)

சில வானரர்கள் அணையின் நடுவழியாகச் சென்றார்கள்; சிலர் இருபுறங்களிலும் சென்றார்கள்; சிலர் தண்ணீரில் குதித்து நீந்திச் சென்றார்கள்; வேறு வழியின்றிச் சிலர் ஆகாயத்திற்கு எம்பிச் சென்று, கருடனைப்போல் பறந்து சென்றார்கள். (83)

அணையின் வழியாக அக்கரைக்குச் சென்று கொண்டிருந்த அந்த வானரப்படை எழுப்பிய பெருங்கூச்சலால், கடலின் இடி முழக்கம் போன்ற பேரிரைச்சல் அடங்கிப் போயிற்று. (84)

நளன் கட்டிய அணை வழியாக கடலின் எதிர்க்கரையை அடைந்த வானரப்படை, ஏராளமான கனி–கிழங்கு–தண்ணீர் வசதிகளோடு கூடிய கடற்கரையிலேயே தங்க வைக்கப்பட்டது. (85)

பகவான் ஸ்ரீராமனுடைய பேராச்சரியத்தை விளைவிப்பதும் செயற்கரியதுமான அந்த செயலைக் கண்டு, ஸித்த–சாரண–முனிவர்களோடு வந்த தேவர்கள், புனிதமான நீரைக் கொண்டு தனித்தனியே அவருக்கு அபிஷேகம் செய்து வைத்தார்கள். (86)

''மானுடப் பெருந்தகையே! நீங்கள் எதிரிகளை வென்று, சமுத்திரத்தை எல்லையாகக் கொண்ட இந்த மண்ணுலகைப் பல்லாண்டு பல்லாண்டு காலம் பரிபாலனம் செய்ய வேண்டும்'' என்பன போன்ற ஆசிச் சொற்களால், மன்னர்கள் போற்றும் அவரை வாயார வாழ்த்தினார்கள். (87)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து மூன்று

இலங்கை முற்றுகை

சகுன சாஸ்திர நிபுணரும் லட்சுமணனின் தமையனாருமான இராமன், அப்போதிருந்த சகுனங்களைப் பார்த்து, லட்சுமணனை அன்புபொங்க மார்புறத் தழுவிக் கொண்டு, பின்வருமாறு கூறினார்— (1)

''லட்சுமணா! குளிர்ச்சியான தண்ணீரும் பழங்களும் நிறைந்த வனங்களைக் கண்டுபிடித்து, நம்முடைய பெரும்படையைப் பல அணிகளாகப் பிரித்து, (அவர்களை அங்கே தங்க வைத்து,) நாம் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்போம். (2)

லோகக்ஷயகரம் பீ$_4$மம் ப$_4$யம் பஶ்யாம்யுபஸ்தி$_2$தம் ।
நிப$_3$ர்ஹணம் ப்ரவீராணாம்ருக்ஷவாநரரக்ஷஸாம் ॥ (3)

வாதாஶ்ச கலுஷா வாந்தி கம்பதே ச வஸுந்த$_4$ரா ।
பர்வதாக்$_3$ராணி வேபந்தே பதந்தி ச மஹீருஹா: ॥ (4)

மேக$_4$ா: க்ரவ்யாத$_3$ஸங்காஶா: பருஷா: பருஷஸ்வநா: ।
க்ரூரா: க்ரூரம் ப்ரவர்ஷந்தி மிஶ்ரம் ஶோணிதபி$_3$ந்து$_3$பி$_4$: ॥ (5)

ரக்தசந்த$_3$நஸங்காஶா ஸந்த்$_4$யா பரமதா$_3$ருணா ।
ஜ்வலத: ப்ரபதத்யேதத$_3$ாதி$_3$த்யாத$_3$க்$_3$நிமண்ட$_3$லம் ॥ (6)

தீ$_3$நா தீ$_3$நஸ்வரா: க்ரூரா: ஸர்வதோ ம்ருக$_3$பக்ஷிண: ।
ப்ரத்யாதி$_3$த்யம் விநர்த$_3$ந்தி ஜநயந்தோ மஹத்$_3$ப$_4$யம் ॥ (7)

ரஜந்யாமப்ரகாஶஸ்து ஸந்தாபயதி சந்த்$_3$ரமா: ।
க்ருஷ்ணரக்தாம்ஶுபர்யந்தோ லோகக்ஷய இவோதி$_3$த: ॥ (8)

ஹ்ரஸ்வோ ரூக்ஷோऽப்ரஶஸ்தஶ்ச பரிவேஷ: ஸுலோஹித: ।
ஆதி$_3$த்யே விமலே நீலம் லக்ஷ்ம லக்ஷ்மண த்$_3$ருஶ்யதே ॥ (9)

ரஜஸா மஹதா சாபி நக்ஷத்ராணி ஹதாநி ச ।
யுகா$_3$ந்தமிவ லோகாநாம் பஶ்ய ஶம்ஸந்தி லக்ஷ்மண ॥ (10)

காகா: ஶ்யேநாஸ்ததா$_2$ க்$_3$ருத்$_4$ரா நீசை: பரிபதந்தி ச ।
ஶிவாஶ்சாப்யஶிவாந்நாதா$_3$ந்நத$_3$ந்தி ஸுமஹாப$_4$யாந் ॥ (11)

ஶைலை: ஶூலைஶ்ச க$_2$ட்$_3$கை$_3$ஶ்ச விஸ்ருஷ்டை: கபிராக்ஷஸை: ।
ப$_4$விஷ்யத்யாவ்ருதா பூ$_4$மிர்மாம்ஸஶோணிதகர்த$_3$மா ॥ (12)

க்ஷிப்ரமத்$_3$யைவ து$_3$ர்த$_4$ர்ஷாம் புரீம் ராவணபாலிதாம் ।
அபி$_4$யாம ஜவேநைவ ஸர்வதோ ஹரிபி$_4$ர்வ்ருதா: ॥ (13)

இத்யேவமுக்த்$_3$வா த$_4$ர்மாத்மா த$_4$ந்வீ ஸங்க்$_3$ராமஹர்ஷண: ।
ப்ரதஸ்தே$_2$ புரதோ ராமோ லங்காமபி$_4$முகே$_2$ா விபு$_4$: ॥ (14)

ஸவிபீ$_4$ஷணஸுக்$_3$ரீவாஸ்ததஸ்தே வாநரர்ஷப$_4$ா: ।
ப்ரதஸ்தி$_2$ரே விநர்த$_3$ந்தோ நிஶ்சிதா த்$_3$விஷதாம் வதே$_4$ ॥ (15)

ராக$_4$வஸ்ய ப்ரியார்த$_2$ம் து த்$_4$ருதாநாம் வீர்யசாலிநாம் ।
ஹரீணாம் கர்மசேஷ்டாபி$_4$ஸ்துதோஷ ரகு$_4$நந்த$_3$ந: ॥ (16)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரயோவிம்ஶ: ஸர்க$_3$: ॥

மக்களுக்குப் பேராபத்தை விளைவிக்கக் கூடியதும், சூரர்களான கரடி–வானரர்–அரக்கர்களுக்கு அழிவை விளைவிப்பதுமான பயங்கரமான ஆபத்து உண்டாகியிருப்பதை நான் காண்கிறேன். புழுதிகளைச் சுமந்து கொண்டு காற்று வீசுகிறது; பூமியும் கிடுகிடுக்கிறது; மலைமுகடுகள் சாய்ந்தாடுகின்றன; மரங்கள் முறிந்து விழுகின்றன. (3,4)

புலால் உண்ணும் அரக்கர்களைப்போல் தோற்றமளிக்கும் மேகங்கள், கண்ணால் பார்க்க முடியாதவைகளாக, கொடூரமாக கர்ஜித்துக் கொண்டு, சகிக்கமுடியாத ரத்தத் துளிகள் கலந்ததான மழையை பயங்கரமாகப் பொழிகின்றன. (5)

சந்தியாகாலம் செஞ்சந்தனம் போல் சிவந்து பயங்கரமாகக் காட்சியளிக்கிறது; ஒளி வீசும் சூரியனிடமிருந்து நெருப்புத் துண்டங்கள் கீழே விழுகின்றன. கொடிய இயல்புடைய விலங்குகளும் பறவைகளும், மிகவும் ஏக்கத்துடன் சூரியனையே பார்த்துக் கொண்டு, நலிவுற்ற குரலில் அலறி, எல்லாப் பக்கங்களிலும் பேரச்சத்தை உண்டுபண்ணுகின்றன. (6,7)

இரவில், சந்திரன் முழுமையாக ஒளியைத் தராததுடன், (குளிர்ச்சிக்குப் பதிலாக) வெம்மையை வெளியிடுகிறது. 'உலகத்திற்கு அழிவு ஏற்படப் போகிறதோ?' என்னும்படியாக வெண்மையும் செம்மையும் கலந்த கதிர்களைப் பரப்புகிறது. (8)

லட்சுமணா! மாசில்லாத சூரியனிடத்தில் நீலமான களங்கம் காணப்படுகிறது; சூரியனைச் சுற்றிலும் உள்ள பரிவேஷம் எனப்படும் வட்டம், மிகவும் குறுகியதாகவும் காணச் சகியாததாகவும் அமங்களமாகவும் செக்கச் சிவந்ததாகவும் காணப்படுகிறது. (9)

லட்சுமணா! ஏராளமான புழுதித் தூசிகளால் நட்சத்திரங்கள் மூடப்பட்டு, ஒளியிழந்து காணப்படுவதைப் பார். அது உலகுக்கெல்லாம் ஏற்படவிருக்கும் பெரும் நாசத்தை முன்கூட்டியே அறிவிப்பது போலிருக்கிறது. (10)

காக்கை, பருந்து, கழுகு முதலான வேகமும் உடல்பலமும் மிக்க பறவைகள், பலம் குறைந்த சிறு பறவைகளால் தாக்கப்பட்டு கீழே விழுகின்றன; அத்துடன் நரிகளும் அமங்களமான, மிகமிக பயங்கரமான ஓலங்களை எழுப்புகின்றன. (11)

வானரர்களாலும் அரக்கர்களாலும் தூக்கி எறியப்பட்ட பாறைகள்–சூலங்கள்–போர்வாள்களால் நிரம்பியதாகவும், மாமிசம் மற்றும் ரத்தத்தால் சேறாக்கப்பட்ட தரையை உடையதாகவும் பூமி ஆகப் போகிறது. நான்கு பக்கங்களிலும் வானரர்கள் புடைசூழ, இதுவரை எவராலும் வெல்லப்படாததும் இராவணனால் பரிபாலிக்கப்படுவதுமான நகரத்தை நோக்கி வேகமாகப் புறப்பட்டுச் செல்வோம்.'' (12,13)

இவ்வாறு சொல்லிவிட்டு, அறநெறி தவறாதவரும் சிறந்த வில்லாளரும் போரில் உற்சாகமுடையவரும் சர்வ சக்தியுடையவருமான இராமன், எல்லோருக்கும் முன்னதாக இலங்கையை நோக்கிப் பயணமானார். உடனே, அந்த வானரோத்தமர்கள் அனைவரும் விபீஷணன்–சுக்ரீவனுடன் கூட போரில் எதிரிகளை மாய்ப்பதில் உறுதி பெற்றவர்களாக, கூச்சல்–கும்மாளமிட்டுக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். (14,15)

'ஸ்ரீராமனுக்குப் பிரியமான சேவை' என்பதால், (இலங்கை நோக்கிச் சென்ற) மிகவும் உற்சாகமுடைய, வீரம் மிகுந்த வானரர்களின் (இயல்பான) நடவடிக்கைகளாலும் செயல்களாலும் ரகுநந்தனர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். (16)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

சதுர்விம்ஶ: ஸர்க$_3$:

ராவணப்ரதிக்ஞா

ஸா வீரஸமிதீ ராக்ஞா விரராஜ வ்யவஸ்தி$_2$தா ।
ஶஶிநா ஶுப$_4$க்ஷத்ரா பௌர்ணமாஸீவ ஶாரதீ$_3$ ॥ (1)

ப்ரசசால ச வேகே$_3$ந த்ரஸ்தா சைவ வஸுந்த$_4$ரா ।
பீட்$_3$யமாநா ப$_3$லௌகே$_4$ந தேந ஸாக$_3$ரவர்சஸா ॥ (2)

தத: ஶுஶ்ருவுராக்ருஷ்டம் லங்காயாம் காநநௌகஸ: ।
பே$_4$ரீம்ருத$_3$ங்க$_3$ஸங்கு$_4$ஷ்டம் துமுலம் ரோமஹர்ஷணம் ॥ (3)

ப$_3$பூ$_4$வுஸ்தேந கோ$_4$ஷேண ஸம்ஹ்ருஷ்டா ஹரியூத$_2$பா: ।
அம்ருஷ்யமாணாஸ்தம் கோ$_4$ஷம் விநேது$_3$ர்கோ$_4$ஷவத்தரம் ॥ (4)

ராக்ஷஸாஸ்து ப்லவங்கா$_3$நாம் ஶுஶ்ருவுஶ்சாபி க$_3$ர்ஜிதம் ।
நர்த$_3$தாமிவ த்$_3$ருப்தாநாம் மேக$_4$நாமம்ப$_3$ரே ஸ்வநம் ॥ (5)

த்$_3$ருஷ்ட்வா தா$_3$ஶரதி$_2$ர்லங்காம் சித்ரத்$_4$வஜபதாகிநீம் ।
ஜகா$_3$ம மநஸா ஸீதாம் தூ$_3$யமாநேந சேதஸா ॥ (6)

அத்ர ஸா ம்ருக$_3$ஶாபா$_3$க்ஷீ ராவணேநோபருத்$_4$யதே ।
அபி$_4$பூ$_4$தா க்$_3$ரஹேணேவ லோஹிதாங்கே$_3$ந ரோஹிணீ ॥ (7)

தீ$_3$ர்க$_4$முஷ்ணம் ச நி:ஶ்வஸ்ய ஸமுத்$_3$வீக்ஷ்ய ச லக்ஷ்மணம் ।
உவாச வசநம் வீரஸ்தத்காலஹிதமாத்மந: ॥ (8)

ஆலிக$_2$ந்தீமிவாகாஶமுத்தி$_2$தாம் பஶ்ய லக்ஷ்மண ।
மநஸேவ க்ருதாம் லங்காம் நகா$_3$க்$_3$ரே விஶ்வகர்மணா ॥ (9)

விமாநைர்ப$_3$ஹுபி$_4$ர்லங்கா ஸங்கீர்ணா பு$_4$வி ராஜதே ।
விஷ்ணோ: பத$_3$மிவாகாஶம் சா$_2$தி$_3$தம் பாண்டு$_3$ரைர்க$_4$நை: ॥ (10)

புஷ்பிதை: ஶோபி$_4$தா லங்கா வநைஶ்சைத்ரரதோ$_2$பமை: ।
நாநாபதங்க$_3$ஸங்கு$_4$ஷ்டை: ப$_2$லபுஷ்போபகை$_3$: ஶுபை$_4$: ॥ (11)

பஶ்ய மத்தவிஹங்கா$_3$நி ப்ரலீநப்$_4$ரமராணி ச ।
கோகிலாகுலஷண்டா$_3$நி தோ$_3$த$_4$வீதி ஶிவோऽநில: ॥ (12)

இதி தா$_3$ஶரதீ$_2$ ராமோ லக்ஷ்மணம் ஸமபா$_4$ஷத ।
ப$_3$லம் ச தத்$_3$வை விப$_4$ஜஞ்ஶாஸ்த்ரத்$_3$ருஷ்டேந கர்மணா ॥ (13)

ஶஶாஸ கபிஸேநாயா ப$_3$லமாதா$_3$ய வீர்யவாந் ।
அங்கத$_3$: ஸஹ நீலேந திஷ்டே$_2$து$_3$ரஸி துர்ஜய: ॥ (14)

ஸர்க்கம் : இருபத்து நான்கு

இராவணன் சபதம்

வானர வீரர்களின் அந்த மாபெரும் படை, போதுமான சௌகரியங்களோடு, இராமனால் அணிவகுக்கப்பட்டிருந்ததால், நிலாக் கதிர்களோடும் சுப நட்சத்திரங்களோடும் விளங்கும் சரத்கால பௌர்ணமி போல் வனப்புடன் விளங்கியது. (1)

அந்தப் பெரும்படை பெருங்கடல் போல் அளவிட முடியாததாக இருந்தது. வீரர்களின் ஆட்டபாட்டங்களினால் பீடிக்கப்பட்ட பூமி மிகவும் பயந்து அசைந்தாடிற்று. (2)

அப்போது வானரர்கள், இலங்கையில் உரோமத்தை குத்திட்டு நிற்கச் செய்யும் பேரிரைச்சலையும், பேரிகை–மிருதங்கங்களின் முழக்கத்தையும் கேட்டார்கள். (3)

அந்தப் பெருஞ்சத்தத்தைக் கேட்டு, வானர வீரர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். அதனைப் பொறுக்க மாட்டாமல், அதற்கும் மேலான சப்தத்துடன் கூச்சலிட்டார்கள். (4)

அரக்கர்கள் அகங்காரத்துடன் கர்ஜிக்கும் வானரர்களின் கூச்சலைக் கேட்டார்கள். அந்தக் கூச்சல் வானத்தில் உண்டாகும் மேகங்களின் இடியோசையை ஒத்ததாக இருந்தது. (5)

தசரதகுமாரரான இராமன் பல்வகையான கொடிகளாலும், பதாகைகளாலும் கவினுற விளங்கும் இலங்கையைக் கண்டதும், நொந்து கிடந்த மனத்தால் சீதையை நினைத்துக் கொண்டார். (6)

'அங்காரக கிரகத்தால் கைப்பற்றப்பட்ட ரோகிணி நட்சத்திரம் போல், மானையொத்த கண்களையுடைய அவள் (சீதை) இராவணனால் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறாள்.' (7)

மாவீரராகிய அவர் (இவ்வாறு மனத்தில் நினைத்து வருந்தி) வெம்மையான நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு, லட்சுமணனைப் பார்த்து, அந்த நேரத்தில் தனக்கு அனுசரணையான சொற்களைக் கூறினார்— (8)

''லட்சுமணா! மலையின் உச்சியில் விசுவகர்மாவினால் மனத்தால் நிர்மாணிக்கப்பட்டதைப் போல் விளங்கும் இந்த இலங்கைப் பட்டணத்தைப் பார்! உயரமான கட்டடங்களால் வானத்தையே உராய்வதைப் போல் இருக்கிறது. (9)

அநேக அடுக்குகளையுடைய பெரிய மாளிகைகள் நிறைந்ததாய், இப்பூவுலகில் இலங்கை விளங்குகிறது. வெண்முகில்களால் மறைக்கப்பட்டு, பகவான் விஷ்ணுவால் (திரிவிக்ரம அவதார காலத்தில்) ஆக்கிரமிக்கப்பட்டதைப் போலவே ஆகாயம் காணப்படுகிறது. (10)

நன்றாக மலர்ந்த செடி–கொடிகள் நிறைந்த சோலைகள்; பலவகையான பறவைகளின் கூச்சல்; சுவையான கனி–மலர்கள் நிறைந்த இலங்கைப் பட்டணம், (குபேரனுடைய) சைத்ரரதம் என்னும் பூஞ்சோலை போன்று மிக்க அழகுடன் விளங்குகிறது. (11)

மகரந்தத் தேன் பருகி மதங்கொண்டு திரியும் பறவைகளையும், மலரினுள் மயங்கிக் கிடக்கும் வண்டுகளையும், மனம் போனபடி திரியும் குயில்களின் கூட்டத்தையும், மெல்ல வீசும் காற்று அழகாக அசைவதையும் பார்.'' (12)

இவ்வாறு, தசரதகுமாரரான இராமன், லட்சுமணனிடம் பேசிக் கொண்டே, யுத்த நீதிப்படி அந்தப் படையை அணிவகுக்கும்படி கூறினார்— (13)

''எவராலும் வெல்ல முடியாத மாவீரனான அங்கதன் மற்றும் நீலன், தங்கள் அணி வீரர்களுடன் கூட வானரப் படையின் மார்புப் பகுதியில் இருக்கட்டும். (14)

திஷ்டே$_2$த்$_3$வாநரவாஹிந்யா வாநரௌக$_4$ஸமாவ்ருத: ।
ஆஶ்ரித்ய த$_3$க்ஷிணம் பார்ஶ்வம்ருஷபே$_4$ா வாநரர்ஷப$_4$: ॥ (15)

க$_3$ந்த$_4$ஹஸ்தீவ து$_3$ர்த$_4$ர்ஷஸ்தரஸ்வீ க$_3$ந்த$_4$மாத$_3$ந: ।
திஷ்டே$_2$த்$_3$வாநரவாஹிந்யா: ஸவ்யம் பார்ஶ்வம் ஸமாஶ்ரித: ॥ (16)

மூர்த்$_4$நி ஸ்த$_2$ாஸ்யாம்யஹம் யுக்தோ லக்ஷ்மணேந ஸமந்வித: ॥ (17)

ஜாம்ப$_3$வாம்ஶ்ச ஸுஷேணஶ்ச வேக$_3$த$_3$ர்ஶீ ச வாநர: ।
ருக்ஷமுக்$_2$யா மஹாத்மாந: குக்ஷிம் ரக்ஷந்து தே த்ரய: ॥ (18)

ஜக$_4$நம் கபிஸேநாயா: கபிராஜோऽபி$_4$ரக்ஷது ।
பஶ்சார்த$_4$மிவ லோகஸ்ய ப்ரசேதாஸ்தேஜஸா வ்ருத: ॥ (19)

ஸுவிப$_4$க்தமஹாவ்யூஹா மஹாவாநரரக்ஷிதா ।
அநீகிநீ ஸா விப$_3$பௌ$_4$ யதா$_2$ த்$_3$யௌ: ஸாப்$_4$ரஸம்ப்லவா ॥ (20)

ப்ரக்$_3$ருஹ்ய கி$_3$ரிஶ்ருங்கா$_3$ணி மஹதஶ்ச மஹீருஹாந் ।
ஆஸேது$_3$ர்வாநரா லங்காம் மிமர்த$_3$யிஷவோ ரணே ॥ (21)

ஶிக$_2$ரைர்விகிராமைநாம் லங்காம் முஷ்டிபி$_4$ரேவ வா ।
இதி ஸ்ம த$_3$தி$_4$ரே ஸர்வே மநாம்ஸி ஹரிஸத்தமா: ॥ (22)

ததோ ராமோ மஹாதேஜா: ஸுக்$_3$ரீவமித$_3$மப்$_3$ரவீத் ।
ஸுவிப$_4$க்தாநி ஸைந்யாநி ஶுக ஏஷ விமுச்யதாம் ॥ (23)

ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா வாநரேந்த்$_3$ரோ மஹாப$_3$ல: ।
மோசயாமாஸ தம் தூ$_3$தம் ஶுகம் ராமஸ்ய ஶாஸநாத் ॥ (24)

மோசிதோ ராமவாக்யேந வாநரைஶ்சாபி$_4$பீடி$_3$த: ।
ஶுக: பரமஸந்த்ரஸ்தோ ரக்ஷோऽதி$_4$பமுபாக$_3$மத் ॥ (25)

ராவண: ப்ரஹஸந்நேவ ஶுகம் வாக்யமபா$_4$ஷத ।
கிமிமௌ தே ஸிதௌ பக்ஷௌ லூநபக்ஷஶ்ச த்ருஶ்யஸே ॥
கச்சிந்நாநேக சித்தாநாம் தேஷாம் த்வம் வஶமாக$_3$த: ॥ (26)

தத: ஸ ப$_4$யஸம்விக்$_3$நஸ்தத$_2$ா ராக்ஞாபி$_4$சோதி$_3$த: ।
வசநம் ப்ரத்யுவாசேத$_3$ம் ராக்ஷஸாதி$_4$பமுத்தமம் ॥ (27)

ஸாக$_3$ரஸ்யோத்தரே தீரேऽப்$_3$ரவம் தே வசநம் தத$_2$ா ।
யத$_2$ாஸந்தே$_3$ஶமக்லிஷ்டம் ஸாந்த்வயஞ்ஶ்லக்ஷ்ணயா கி$_3$ரா ॥ (28)

க்ருத்$_3$தை$_4$ஸ்தைரஹமுத்ப்லுத்ய த்$_3$ருஷ்டமாத்ரை: ப்லவங்க$_3$மை: ।
க்$_3$ருஹீதோऽஸ்ம்யபி சாரப்$_3$தே$_4$ா ஹந்தும் லோப்தும் ச முஷ்டிபி$_4$: ॥ (29)

நைவ ஸம்ப$_4$ாஷிதும் ஶக்யா: ஸம்ப்ரஶ்நோऽத்ர ந லப்$_4$யதே ।
ப்ரக்ருத்யா கோபநாஸ்தீக்ஷ்ணா வாநரா ராக்ஷஸாதி$_4$ப ॥ (30)

வானரக் காளையான ரிஷபன், வானரக் கூட்டங்களால் புடைசூழப்பட்டவனாக வானரப் படையின் வலது பக்கத்தில் நிற்கட்டும். (15)

மதங்கொண்ட யானையைப் போன்றவனும், எவரும் அடக்க முடியாதவனும், விரைந்து செயலாற்றுபவனுமான படைத்தலைவன் கந்தமாதனன் வானரப் படையின் இடது புறத்தில் நிற்கட்டும். (16)

நானும் லட்சுமணனும், மிக்க கவனத்துடன் (படையின்) தலைப்பகுதியில் நிற்கிறோம். (17)

ஜாம்பவான், சுஷேணன், வேகதர்சீ என்ற வானரன் ஆகியவர்கள் கரடிக் கூட்டங்களின் தலைவர்கள்; இவர்கள் மூவரும் (சேனையின்) வயிற்றுப் பாகத்தைப் பாதுகாக்கட்டும். (18)

ஒளி பொருந்திய வருண பகவான், இந்த உலகின் மேற்குப் பகுதியைக் காப்பாற்றி வருவதைப் போல, வானர மன்னன் சுக்ரீவன், வானரப் படையின் பின்பாகத்தைப் பாதுகாத்து வரட்டும்.'' (19)

கட்டுப்பாடான முறையில் வகுக்கப்பட்டு, சிறந்த வியூகமாக அமைக்கப்பட்ட வானரப் பெரும்படை ஆற்றல் மிக்க பேருடல் கொண்ட வானரத் தலைவர்களால் பாதுகாக்கப்பட்டதாய், மேகக்கூட்டங்களுடன் கூடிய எல்லையற்ற ஆகாயத்திற்கு நிகராகத் தோற்றமளித்தது. (20)

மலைச்சிகரங்களையும் பெரிய மரங்களையும் கைகளில் தாங்கிக் கொண்ட வானரவீரர்கள், போர் செய்து இலங்கையை அழித்துவிட விரும்பியவர்களாய், அதனை நோக்கி ஏறத் தொடங்கினார்கள். (21)

இலங்கையின் மேல் மலைச்சிகரங்களை எறிந்தும், (அதன் கோட்டை–கொத்தளங்களை நாசம் செய்தும்,) (அங்குள்ள அரக்கர்களை) முஷ்டிகளால் தாக்கியும், வெற்றி பெற்றுவிட முடியும் என்று வானரத் தலைவர்கள் மனத்திற்குள் கணித்துக் கொண்டார்கள். அப்போது மகாவலிமை கொண்ட இராமன், சுக்ரீவனைப் பார்த்து, ''நமது படைகள் ஒழுங்காக அணி வகுக்கப்பட்டுவிட்டன. இனி, சுகனை விட்டுவிடலாமே?'' என்று கூறினார். (22,23)

இராமனுடைய ஆணையைக் கேட்ட மகாபலசாலியான வானரத் தலைவன், தூதனாக வந்த சுகனை விடுவித்தான். வானரர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டவனும், அதனால் (தன் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ? என்று) மிகவும் பயத்துடன் இருந்தவனுமான சுகன், இராமனுடைய சொற்படி விடுவிக்கப்பட்டவுடன், (நேராக) அரக்க மன்னனிடம் (இராவணனிடம்) வந்து சேர்ந்தான். (24,25)

இராவணன், பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே சுகனைப் பார்த்து, ''உன்னுடைய இரண்டு இறக்கைகளும் ஏன் வெட்டப்பட்டிருக்கின்றன? மற்ற சிறகுகளுடம் காயப்படுத்தப்பட்டுள்ளன. சஞ்சலமான சித்தமுடைய அவர்கள் பிடியில் நீ சிக்கிக் கொண்டு விட்டாயா?'' என்று கேட்டான். (26)

மன்னன் இராவணன் இவ்வாறு கேட்டவுடன், பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்த சுகன், தலைசிறந்த அரக்கர் தலைவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (27)

''பேரரசரே! சமுத்திரத்தின் வடகரையை அடைந்ததும், தங்கள் செய்தியைத் தெளிவான இனிய குரலில் அமைதிப்படுத்தும் முறையில் கூறினேன். ஆனால், அவர்கள் பார்வை என்மேல் பட்டவுடனேயே மிகக் கோபங்கொண்ட அவர்கள் எம்பிக் குதித்து, என்னைக் கட்டிப்பிடித்து, முஷ்டிகளால் என்னை அடித்துத் துன்புறுத்தத் தொடங்கினார்கள். (28,29)

அரக்க மன்னரே! வானரர்கள் இயற்கையிலேயே கோபம் கொண்டவர்களாகவும், கொடூரமானவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடன் பேசுவதற்கே முடியவில்லை என்னும்போது கேள்வி கேட்பதற்கு எப்படி இடம் கிடைக்கும்? (30)

ஸ ச ஹந்தா விராத$_4$ஸ்ய கப$_3$ந்த$_4$ஸ்ய க$_2$ரஸ்ய ச ।
ஸுக்$_3$ரீவஸஹிதோ ராம: ஸீதாயா: பத$_3$மாக$_3$த: ॥ (31)

ஸ க்ருத்வா ஸாக$_3$ரே ஸேதும் தீர்த்வா ச லவணோத$_3$தி$_4$ம் ।
ஏஷ ரக்ஷாம்ஸி நிர்தூ$_4$ய த$_4$ந்வீ திஷ்ட$_2$தி ராக$_4$வ: ॥ (32)

ருக்ஷவாநரமுக்$_2$யாநாமநீகாநி ஸஹஸ்ரஶ: ।
கி$_3$ரிமேக$_4$நிகாஶாநாம் சா$_2$த$_3$யந்தி வஸுந்த$_4$ராம் ॥ (33)

ராக்ஷஸாநாம் ப$_3$லௌக$_4$ஸ்ய வாநரேந்த்$_3$ரப$_3$லஸ்ய ச ।
நைதயோர்வித்$_3$யதே ஸந்தி$_4$ர்தே$_3$வதா$_3$நவயோரிவ ॥ (34)

புரா ப்ராகாரமாயாந்தி க்ஷிப்ரமேகதரம் குரு ।
ஸீதாம் வாஸ்மை ப்ரயச்சா$_2$ஶு யுத்$_3$த$_4$ம் வாபி ப்ரதீ$_3$யதாம் ॥ (35)

ஶுகஸ்ய வசநம் ஶ்ருத்வா ராவணோ வாக்யமப்$_3$ரவீத் ।
ரோஷஸம்ரக்தநயநோ நிர்த$_3$ஹந்நிவ சக்ஷுஷா ॥ (36)

யதி$_3$ மாம் ப்ரதி யுத்$_4$யேரந் தே$_3$வக$_3$ந்த$_4$ர்வதா$_3$நவா: ।
நைவ ஸீதாம் ப்ரயச்சா$_2$மி ஸர்வலோகப$_4$யாத$_3$பி ॥ (37)

கதா$_3$ நாமாபி$_4$தா$_4$வந்தி ராக$_4$வம் மாமகா: ஶரா: ।
வஸந்தே புஷ்பிதம் மத்தா ப்$_4$ரமரா இவ பாத$_3$பம் ॥ (38)

கதா$_3$ தூணீஶயைர்தீ$_3$ப்தைர்க$_3$ணஶ: கார்முகச்யுதை: ।
ஶரைராதீ$_3$பயாம்யேநமுல்காபி$_4$ரிவ குஞ்ஜரம் ॥ (39)

தச்சாஸ்ய ப$_3$லமாதா$_3$ஸ்யே ப$_3$லேந மஹதா வ்ருத: ।
ஜ்யோதிஷாமிவ ஸர்வேஷாம் ப்ரபா$_4$முத்$_3$யந் தி$_3$வாகர: ॥ (40)

ஸாக$_3$ரஸ்யேவ மே வேகோ$_3$ மாருதஸ்யேவ மே க$_3$தி: ।
ந ஹி தா$_3$ஶரதி$_2$ர்வேத$_3$ தேந மாம் யோத்$_3$து$_4$மிச்ச$_2$தி ॥ (41)

ந மே தூணீஶயாந் பா$_3$ணாந் ஸவிஷாநிவ பந்நகா$_3$ந் ।
ராம: பஶ்யதி ஸங்க்$_3$ராமே தேந மாம் யோத்$_3$து$_4$மிச்ச$_2$தி ॥ (42)

ந ஜாநாதி புரா வீர்யம் மம யுத்$_3$தே$_4$ ஸ ராக$_4$வ: ॥ (43)

மம சாபமயீம் வீணாம் ஶரகோணை: ப்ரவாதி$_3$தாம் ।
ஜ்யாஶப்$_3$த$_3$துமுலாம் கோ$_4$ராமார்தபீ$_4$தமஹாஸ்வநாம் ॥ (44)

நாராசதலஸந்நாதா$_3$ம் தாம் மமாஹிதவாஹிநீம் ॥
அவகா$_3$ஹ்ய மஹாரங்க$_3$ம் வாத$_3$யிஷ்யாம்யஹம் ரணே ॥ (45)

விராதன், கபந்தன், கரன் முதலான மாபெரும் வீரர்களை வெட்டித் தள்ளிய ஸ்ரீராமன், சுக்ரீவனுடன் சேர்ந்து, சீதை இருக்குமிடத்தை அறிந்து கொண்டு, அவரை மீட்டுச் செல்ல வந்திருக்கிறார். மாவீரரான அந்த இராமன், கடலில் அணை கட்டி, உவர்க்கடலைக் கடந்து, அரக்கர்களை வெறும் புல்லாக மதித்து, இதோ (நம் நாட்டுக்கு அருகேயே வந்து) கையில் வில்லை ஏந்திக் கொண்டு நிற்கிறார். (போருக்கு ஆயத்தமாக நிற்கிறார்.) (31,32)

மலைகளையும் மேகங்களையும் போன்றிருக்கும் கரடி–வானரர்களின் பல்லாயிரக்கணக்கான படைவீரர்களின் கூட்டங்கள், பூமியையே மூடிக் கொண்டிருக்கின்றன. தேவர்களுடைய சேனைக்கும், (அவர்களுடைய எதிரிகளான) தானவர்களுடைய படைகளுக்குமிடையே, (எவ்வளவுதான் முயன்றாலும்) எப்படி இணக்கம் ஏற்படாதோ, அப்படியேதான் அரக்கர் படையினருக்கும் சுக்ரீவன் படையினருக்குமிடையே சுமுகமான உறவு ஏற்படுவது சாத்தியமல்ல. (33,34)

நமது பட்டணத்தின் கோட்டைச் சுவருக்கு அவர்கள் வந்து சேருவதற்கு முன்னதாகவே, பின்வரும் இரண்டில் ஒரு வழியை உடனடியாக கைக்கொள்ளுங்கள். அவரிடம் சீதையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; அல்லது போரிட வேண்டும்.'' (35)

சுகனுடைய பேச்சைக் கேட்டதும், இராவணனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன. அவனைச் சுட்டெரித்து விடுவதைப் போல் கண்களால் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— ''தேவர், தானவர், கந்தர்வர் ஆகிய முக்குலத்தோரும் ஒன்று சேர்ந்து, என்னை எதிர்த்து வந்தாலும் சரி, 'எல்லா உலகத்து மக்களும் என்னைத் தூற்றுவார்களே!' என்ற அச்சத்தினாலானாலும் சரி, நான் சீதையைத் திருப்பிக் கொடுக்கவே மாட்டேன். (36,37)

வசந்த காலத்தில் ஏராளமாகப் பூத்திருக்கும் மரத்திலுள்ள பூக்களை நோக்கி மதங்கொண்ட வண்டுகள் சாரிசாரியாகச் சென்று மொய்ப்பதைப்போல, என்னால் இடைவிடாது விடப்படும் பாணங்கள் இராமன் மேல் விழுந்து காயப்படுத்தும் காலம் எப்போது வருமோ? (38)

எப்படி கொழுந்துவிட்டெரியும் கொள்ளிக்கட்டைகள் யானையின் மேல் வீசப்பட்டு, அதன் உடலைப் புண்ணாக்கி எரிக்குமோ, அதைப்போல என்னுடைய வில்லிலிருந்து செலுத்தப்படும் தீப்பந்தமெனத் தகும் பாணங்களால் இராமனுடைய சரீரம் புண்ணாகி, ரத்தக்களறியாகி வாட்டி வதைக்கும் சந்தர்ப்பம் எப்போது வாய்க்கப் போகிறதோ? (39)

சூரியன் உதயமானவுடன் நட்சத்திரம் முதலான வானில் ஒளிரும் கோள்கள் எவ்வாறு ஒளி மங்கிப் போகுமோ, அவ்வாறே மிகப்பெரும் படைகள் சூழ போர்க்களத்தில் நான் நின்று, இவனுடைய (இராமனுடைய) படைகளின் பலத்தை அழித்து விடுவேன். (40)

என்னுடைய ஆற்றல் சமுத்திரத்திற்கு நிகரானது (யாராலும் கலக்க முடியாதது); என்னுடைய போக்கு (தடை செய்ய முடியாத) வாயுவைப் போன்றது. தசரத குமாரனுக்கு இவைகளைப் பற்றித் தெரியாததால், என்னுடன் போர் புரிய விரும்புகிறான். (41)

என்னுடைய அம்புறாத்தூணியிலிருக்கும் அம்புகள் கொடிய விஷப்பாம்புகள் போன்றவை. போர்க்களத்தில் விஷப்பாம்புகள் போன்ற அந்த அம்புகளைத்தான் செலுத்துவேன். இராமன் அதைப் பார்த்ததில்லை. அதனால், என்னுடன் போர் புரிய வந்திருக்கிறான். (42)

இராமன் இதற்கு முன்னர் போர்க்களத்தில் என் பராக்கிரமத்தைக் கண்டதில்லை. என்னுடைய வில் ஓர் அற்புதமான வீணை என்று வைத்துக் கொள். அது பாணங்களால் மீட்டப்படுவது; வில்லின் நாணொலியாக பேரொலியை உடையது; பாணாஸ்திரங்களால் பீடிக்கப்பட்டு, ஒப்பாரி வைத்து அலறும் கூச்சல்களே ஸ்வரத்தோடு இசைக்கப்படும் பாட்டு; நாராசங்களை (பாணங்களை) ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக விடும்போது எழும்பும் 'சர், சர்' என்ற ஒலிகளே தப்பாத தாளங்கள்; பகைவர்களின் விஸ்தாரமான படைத்தளமே நாடகமேடை. அந்தப் பெரு மேடையில் புகுந்து வில்லாகிய வீணையை மீட்டப் போகிறேன். (நானும் போருக்கு ஆயத்தமாக இருக்கிறேன்.) (43–45)

ந வாஸவேநாபி ஸஹஸ்ரசக்ஷுஷா
யத$_{2}$ாஸ்மி ஶக்யோ வருணேந வா ஸ்வயம் ।
யமேந வா த$_{4}$ர்ஷயிதும் ஶராக்$_{3}$நிநா
மஹாஹவே வைஶ்ரவணேந வா புந: ॥ (46)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_{3}$ராமாயணே வால்மீகீயே ஆதி$_{3}$காவ்யே
யுத்$_{3}$த$_{4}$காண்டே$_{3}$ சதுர்விம்ஶ: ஸர்க$_{3}$: ॥

பஞ்சவிம்ஶ: ஸர்க$_{3}$:

ஶுகஸாரணப்ரேஷணாதி$_{3}$

ஸப$_{3}$லே ஸாக$_{3}$ரம் தீர்ணே ராமே த$_{3}$ஶரத$_{2}$ாத்மஜே ।
அமாத்யௌ ராவண: ஸ்ரீமாநப்$_{3}$ரவீச்சு$_{2}$கஸாரணௌ ॥ (1)
ஸமக்$_{3}$ரம் ஸாக$_{3}$ரம் தீர்ணம் து$_{3}$ஸ்தரம் வாநரம் ப$_{3}$லம் ।
அபூ$_{4}$தபூர்வம் ராமேண ஸாக$_{3}$ரே ஸேதுப$_{3}$ந்த$_{4}$நம் ॥ (2)
ஸாக$_{3}$ரே ஸேதுப$_{3}$ந்த$_{4}$ம் து ந ஶ்ரத்$_{3}$த$_{3}$த்$_{4}$யாம் கத$_{2}$ஞ்சந ।
அவஶ்யம் சாபி ஸங்க்$_{2}$யேயம் தந்மயா வாநரம் ப$_{3}$லம் ॥ (3)
ப$_{4}$வந்தௌ வாநரம் ஸைந்யம் ப்ரவிஶ்யாநுபலக்ஷிதௌ ।
பரிமாணம் ச வீர்யம் ச யே ச முக்$_{2}$யா: ப்லவங்க$_{3}$மா: ॥ (4)
மந்த்ரிணோ யே ச ராமஸ்ய ஸுக்$_{3}$ரீவஸ்ய ச ஸம்மதா: ।
யே பூர்வமபி$_{4}$வர்தந்தே யே ச ஶூரா: ப்லவங்க$_{3}$மா: ॥ (5)
ஸ ச ஸேதுர்யத$_{2}$ா ப$_{3}$த்$_{3}$த$_{4}$: ஸாக$_{3}$ரே ஸலிலாஶயே ।
நிவேஶம் ச யத$_{2}$ா தேஷாம் வாநராணாம் மஹாத்மநாம் ॥ (6)
ராமஸ்ய வ்யவஸாயம் ச வீர்யம் ப்ரஹரணாநி ச ।
லக்ஷ்மணஸ்ய ச வீரஸ்ய தத்த்வதோ க்ஞாதுமர்ஹத$_{2}$: ॥ (7)
கஶ்ச ஸேநாபதிஸ்தேஷாம் வாநராணாம் மஹௌஜஸாம் ।
ஏதஜ்க்ஞாத்வா யத$_{2}$ாதத்த்வம் ஶீக்$_{4}$ரமாக$_{3}$ந்துமர்ஹத$_{2}$: ॥ (8)
இதி ப்ரதிஸமாதி$_{3}$ஷ்டௌ ராக்ஷஸௌ ஶுகஸாரணௌ ।
ஹரிரூபத$_{4}$ரௌ வீரௌ ப்ரவிஷ்டௌ வாநரம் ப$_{3}$லம் ॥ (9)
ததஸ்தத்$_{3}$வாநரம் ஸைந்யமசிந்த்யம் ரோமஹர்ஷணம் ।
ஸங்க்$_{2}$யாதும் நாத்$_{4}$யக$_{3}$ச்சே$_{2}$தாம் ததத$_{3}$ா தௌ ஶுகஸாரணௌ ॥ (10)
ஸம்ஸ்தி$_{2}$தம் பர்வதாக்$_{3}$ரேஷு நிர்ஜ்ஜரேஷு கு$_{3}$ஹாஸு ச ।
ஸமுத்$_{3}$ரஸ்ய ச தீரேஷு வநேஷூபவநேஷு ச ॥
தரமாணம் ச தீர்ணம் ச தர்துகாமம் ச ஸர்வஶ: ॥ (11)

ஆயிரம் கண் படைத்த இந்திரன், சாட்சாத் வருணன், யமன், குபேரன் (ஆகிய முக்கியமான நான்கு திக்பாலகர்கள் ஒன்று சேர்ந்து நாற்புறத்திலிருந்தும்) பெரும் போர் செய்து, தீப்பொறி பறக்கும் கணைகளை என் மேல் செலுத்தினாலும், என்னை அடக்க முடியாது!'' (ஒரு மனிதன் என்னோடு யுத்தம் செய்து வெற்றி காண்பது என்பது நடக்கக்கூடிய செயலே அல்ல.) (46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தைந்து

சுக–ஸாரணர்கள் வேவு பார்த்தல்!

தசரதரின் மைந்தன் இராமன் வானரப் படையுடன் பெருங்கடலைக் கடந்து வந்துவிட்டதை அறிந்து கொண்டதும், அனைத்துச் செழிப்புகளும் வாய்க்கப் பெற்ற இராவணன், சுகன்–ஸாரணன் என்ற தன்னுடைய இரு அமைச்சர்களை அழைத்துக் கூறினான்— (இந்த சுகன் முன்னர் அனுப்பப்பட்ட தூதன் அல்லன்.) (1)

''வானரப்படை முழுவதும் எவராலும் தாண்டி வரமுடியாத மாபெருங்கடலைத் தாண்டி வந்துவிட்டது. பெருங்கடலில் அணை கட்டியிருக்கிறானே இராமன், அந்த செயற்கரிய செயல், இதுவரையில் எவராலும் செய்யப்பட்டதில்லை. (2)

கடலில் அணை கட்டப்பட்டிருக்கிறது என்று யாராவது சொன்னால், நான் அதை நம்பமாட்டேன். (ஆனால், அது இப்போது ஐயத்திற்கு இடமில்லாத உண்மையாகிவிட்டது! ஏனென்றால், அந்த அணையின் மூலமாக வானரர்கள், இந்தப் பக்கம் வந்து சேர்ந்து விட்டார்கள்.) வானரர்களின் படையில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் கட்டாயமாகக் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். (3)

நீங்கள் இருவரும் வானர சேனைக்குள் பிறரால் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி புகுந்து கொள்ளவேண்டும். அவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? வீரம் எத்தகையது? அவர்களில் முக்கியமானவர்கள் யார், யார்? இராமனுக்கும் சுக்ரீவனுக்கும் அனுசரணையான அமைச்சர்கள் எவர்கள்? வானர சைன்யத்தின் முன்னணியில் நின்று, அவர்களை நடத்திச் செல்பவர்கள் எவர், எவர்? ஆழங்காண முடியாத பெருங்கடலில், அணை எவ்வாறு கட்டப்பட்டது? பேராற்றலுடைய வானரர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள்? இராம–லட்சுமணர்களுடைய நோக்கம், வீரம், ஆயுதங்கள் ஆகியவை பற்றியும், நீங்கள் உள்ளபடி அறிந்து கொள்ள வேண்டும். (4–7)

மகா ஆற்றலுடைய அந்த வானரர்களுக்குத் தலைவன் யார்? இந்தத் தகவலையும் உள்ளபடி அறிந்து கொண்டு, விரைவில் நீங்கள் திரும்பி வர வேண்டும்.'' (8)

இவ்வாறு ஆணையிடப்பட்ட அரக்கர்களான சுக–ஸாரணர்கள் ஆகிய இருவரும், உடனே வானர உருவத்தை ஏற்று வானரப்படையினுள் புகுந்தார்கள். (9)

அந்த இடத்தில் வானரப்படை சிந்தித்துப் பார்க்க முடியாததாகவும், (எல்லை காண முடியாத தன்மையால்) மயிர்க்கூச்சலை உண்டாக்குவதாகவும் இருந்தது. அதனால், சுக–ஸாரணர்கள் வானரப் படையின் அளவற்ற கூட்டத்தைக் கணக்கிட்டுப் பார்க்க முடியவில்லை. (10)

மலைச்சிகரங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் குகைகளிலும் கடலின் கரைப்பகுதியிலும், காடுகளிலும் பூஞ்சோலைகளிலும் அவர்கள் தங்கியிருந்தார்கள். பல வானரர்கள் அணை வழியாக கடலைக் கடந்து வந்து விட்டார்கள்; பலர் வந்து கொண்டிருந்தார்கள்; மற்றும் பலர் எவ்வகையிலேனும் கடலைக் கடந்து வருவதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். (11)

நிவிஷ்டம் நிவிஶச்சைவ பீ$_4$மநாத$_3$ம் மஹாப$_3$லம் ।
தத்$_3$ப$_3$லார்ணவமக்ஷோப்$_4$யம் த$_3$த்$_3$ருஶாதே நிஶாசரௌ ॥ (12)

தௌ த$_3$த$_3$ர்ஶ மஹாதேஜா: ப்ரதிச்ச$_2$ந்நௌ விபீ$_4$ஷண: ।
ஆசசக்ஷே:த$_2$ ராமாய க்$_3$ருஹீத்வா ஶுகஸாரணௌ ॥ (13)

தஸ்யேமௌ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய மந்த்ரிணௌ ஶுகஸாரணௌ: ।
லங்காயா: ஸமநுப்ராப்தௌ சாரௌ பரபுரஞ்ஜய ॥ (14)

தௌ க்$_3$ருஹீத்வாவ்யதி$_2$தௌ ராமம் நிராஶௌ ஜீவிதே தத$_3$ா ।
க்ருதாஞ்ஜலிபுடௌ பீ$_4$தௌ வசநம் சேத$_3$மூசது: ॥ (15)

ஆவாமிஹாக$_3$தௌ ஸௌம்ய ராவணப்ரஹிதாவுபௌ$_4$ ।
பரிக்ஞாதும் ப$_3$லம் க்ருத்ஸ்நம் தவேத$_3$ம் ரகு$_4$நந்த$_3$ந ॥ (16)

தயோஸ்தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராமோ த$_3$ஶரத$_2$ாத்மஜ: ।
அப்$_3$ரவீத்ப்ரஹஸந் வாக்யம் ஸர்வபூ$_4$தஹிதே ரத: ॥ (17)

யதி$_3$ த்$_3$ருஷ்டம் ப$_3$லம் க்ருத்ஸ்நம் வயம் வா ஸுபரீக்ஷிதா: ।
யதே$_2$ாக்தம் வா க்ருதம் கார்யம் ச$_2$ந்த$_3$த: ப்ரதிக$_3$ம்யதாம் ॥ (18)

அத$_2$ கிஞ்சித$_3$த்$_3$ருஷ்டம் வா பூ$_4$யஸ்தத்$_3$த்$_3$ரஷ்டுமர்ஹத$_2$: ।
விபீ$_4$ஷணோ வா கார்த்ஸ்யேந பூ$_4$ய: ஸந்த$_3$ர்ஶயிஷ்யதி ॥ (19)

ந சேத$_3$ம் க்$_3$ரஹணம் ப்ராப்ய பே$_4$தவ்யம் ஜீவிதம் ப்ரதி ।
ந்யஸ்தஶஸ்த்ரௌ க்$_3$ருஹீதௌ வா ந தூ$_3$தௌ வத$_4$மர்ஹத$_2$: ॥ (20)

ப்ரச்ச$_2$ந்நௌ ச விமுஞ்சைதௌ சாரௌ ராத்ரிஞ்சராவுபௌ$_4$ ।
ஶத்ருபக்ஷஸ்ய ஸததம் விபீ$_4$ஷண விகர்ஷிணௌ ॥ (21)

ப்ரவிஶ்ய நக$_3$ரீம் லங்காம் ப$_4$வத்$_3$ப்$_4$யாம் த$_4$நத$_3$ாநுஜ: ।
வக்தவ்யோ ரக்ஷஸாம் ராஜா யதே$_2$ாக்தம் வசநம் மம ॥ (22)

யத்$_3$ப$_3$லம் ச ஸமாஶ்ரித்ய ஸீதாம் மே ஹ்ருதவாநஸி ।
தத்$_3$த$_3$ர்ஶய யத$_2$ாகாமம் ஸஸைந்ய: ஸஹபா$_3$ந்த$_4$வ: ॥ (23)

ஶ்வ: கல்யே நக$_3$ரீம் லங்காம் ஸப்ராகாராம் ஸதோரணாம் ।
ரக்ஷஸாம் ச ப$_3$லம் பஶ்ய ஶரைர்வித்$_4$வம்ஸிதம் மயா ॥ (24)

க்ரோத$_4$ம் பீ$_4$மமஹம் மோக்ஷ்யே ஸஸைந்யே த்வயி ராவண ।
ஶ்வ: கல்யே வஜ்ரவாந் வஜ்ரம் த$_3$ாநவேஷ்விவ வாஸவ: ॥ (25)

பயங்கரமான பேரொலியை எழுப்பிய அந்த வானரப்படையில் ஒரு பகுதி, சில இடங்களில் சௌகரியமாகத் தங்க வைக்கப்பட்டிருந்தது; ஒரு பகுதி தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது. (12)

மகாதேஜஸ்வியான விபீஷணன், மாற்றுருவம் கொண்டு தம்மை மறைத்துக் கொண்டிருக்கும் அவ்விருவரையும் பார்த்துவிட்டார். உடனே, சுக–ஸாரணர்களைப் பிடித்துக் கொண்டுவந்து, இராமன் முன்னிலையில் நிறுத்தினார். (13)

''பகைவர் பட்டணங்களை வெல்பவரே! சுக–ஸாரணர்களாகிய இவ்விருவரும் அரக்க மன்னரின் அமைச்சர்கள்; இலங்கையிலிருந்து இங்கு வந்திருக்கும் ஒற்றர்கள்.'' (14)

இராமனைப் பார்த்ததும் அவ்விருவரும் மிகவும் மனக்கலக்கம் அடைந்தார்கள்; உயிர்மேல் ஆசையை ஒழித்தார்கள்; அச்சம் கொண்டார்கள்; இரு கைகளையும் கூப்பிக் கொண்டு (பின்வருமாறு) தெரிவித்துக் கொண்டார்கள்— (15)

''சாந்தமூர்த்தியே! ரகுகுல மாமணியே! நாங்கள் இருவரும் இராவணனால் அனுப்பப்பட்டவர்கள். தங்கள் சேனையைப் பற்றிய எல்லா விவரங்களையும் நேரில் பார்த்து அறிவதற்காக இங்கு வந்திருக்கிறோம்.'' (16)

தசரதரின் திருக்குமாரரும், அனைத்து உயிர்களின் நன்மையில் அக்கறை உடையவருமான இராமன், அவர்களுடைய பேச்சைக் கேட்டதும், (இராவணனுடைய மந்த புத்தியை நினைத்து இளக்காரமாக) சற்றே நகைத்து, பின்வருமாறு கூறினார்— (17)

''படை முழுவதையும் (எண்ணிப்) பார்த்து விட்டீர்களா? எங்களைப் பற்றியும் விசாரித்து அறிந்து கொண்டு விட்டீர்களா? (உங்கள் மன்னனால் கூறப்பட்டபடி) எல்லாக் காரியங்களையும் நன்றாக முடித்துக் கொண்டீர்களா? அப்படியானால் மகிழ்ச்சியுடன் நீங்கள் திரும்பிப் போகலாம்! இன்னும் காணப்பட வேண்டியது ஏதேனும் பாக்கி இருந்தால், அதையும் பார்த்துவிட்டுச் செல்லலாம். விபீஷணன், எதையும் விடாமல் பூரணமாக மறுபடியும் உங்களுக்குக் காட்டுவார். (18,19)

இவர்கள் கையில் சிக்கிக் கொண்டு விட்டோமே? என்று உயிருக்கு அஞ்ச வேண்டாம். கையில் ஆயுதமில்லாமல் பிடிபட்டிருக்கும் தூதர்களாகிய நீங்கள் இருவரும் கொல்லத்தக்கவர்கள் அல்லர். விபீஷணா! அரக்க மன்னனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள், இவர்கள். தங்களை மறைத்து (வானர உருவம்) கொண்டு, எதிரிகளின் (நமது) படையில் கலகத்தை உண்டாக்க முனைந்து தோற்றுப் போய்விட்டவர்கள். போனால் போகட்டும் இவர்களை விட்டுவிடு. (20,21)

சுக–ஸாரணர்களே! நீங்கள் இலங்கைக்குத் திரும்பிச் சென்றதும், குபேரனின் தம்பியும் அரக்க மன்னனுமான அவனிடம் (இராவணனிடம்) நான் கூறப்போகும் செய்தியை அப்படியே கூறுங்கள். (22)

'எந்த பலத்தின் மேல் நம்பிக்கை வைத்து என்னுடைய சீதையைக் கவர்ந்து வந்தாயோ, அந்த பலத்தை, இப்போது உன் படையுடனும் உற்றார்–உறவினருடனும் வந்து, உன்னால் முடிந்தவரை பிரயோகித்துக் காட்டு. (23)

நாளைக் காலையில் மதிற்சுவர்களோடும் தோரணவாயில்களோடும் கூடிய இலங்கைப் பட்டணத்தையும் அரக்கர் படையையும் என் பாணங்கள் அழிக்கப் போகின்றன. அதை உன் கண்களால் பார்ப்பாய். (24)

வஜ்ராயுதம் தரித்த இந்திரன், தானவர்கள் மீது வஜ்ராயுதத்தை ஏவியதைப் போல, நாளைக் காலையில் சேனையுடன் கூடிய உன்னிடத்தில், எனது கட்டுக்கடங்காத கோபத்தை, நான் கட்டவிழ்த்துவிடப் போகிறேன்' (என்று இராமன் கூறினார்.)'' (25)

இதி ப்ரதிஸமாதி₃ஷ்டௌ ராக்ஷஸௌ ஶுகஸாரணௌ ।
ஜயேதி ப்ரதிநந்த்₃யைதௌ ராக₄வம் த₄ர்மவத்ஸலம் ॥
ஆக₃ம்ய நக₃ரீம் லங்காமப்₃ருதாம் ராக்ஷஸாதி₄பம் ॥ (26)

விபீ₄ஷணக்₃ருஹீதௌ து வதா₄ர்ஹௌ ராக்ஷஸேஶ்வர ।
த்₃ருஷ்ட்வா த₄ர்மாத்மநா முக்தௌ ராமேணாமிததேஜஸா ॥ (27)

ஏகஸ்த₂ாநக₃தா யத்ர சத்வார: புருஷர்ஷபா₄: ।
லோகபாலோபமா: ஶூரா: க்ருதாஸ்த்ரா: த்₃ருட₄விக்ரமா: ॥ (28)

ராமோ தா₃ஶரதி₂: ஶ்ரீமாந்(ல்)லக்ஷ்மணஶ்ச விபீ₄ஷண: ।
ஸுக்₃ரீவஶ்ச மஹாதேஜா மஹேந்த்₃ரஸமவிக்ரம: ॥ (29)

ஏதே ஶக்தா: புரீம் லங்காம் ஸப்ராகாராம் ஸதோரணாம் ।
உத்பாட்ய ஸங்க்ராமயிதும் ஸர்வே திஷ்ட₂ந்து வாநரா: ॥ (30)

யாத்₃ருஶம் தஸ்ய ராமஸ்ய ரூபம் ப்ரஹரணாநி ச ।
வதி₄ஷ்யதி புரீம் லங்காமேகஸ்திஷ்ட₂ந்து தே த்ரய: ॥ (31)

ராமலக்ஷ்மணகு₃ப்தா ஸா ஸுக்₃ரீவேண ச வாஹிநீ ।
ப₃பூ₄வ து₃ர்த₄ர்ஷதரா ஸேந்த்₃ரைரபி ஸுராஸுரை: ॥ (32)

வ்யக்த: ஸேதுஸ்தத₂ா ப₃த்₃தே₄ா த₃ஶயோஜநவிஸ்த்ருத: ।
ஶதயோஜநமாயாமஸ்தீர்ணா ஸேநா ச ஸாக₃ரம் ॥ (33)

நிவிஷ்டோ த₃க்ஷிணே தீரே ராம: ஸ ச நதீ₃பதே: ।
தீர்ணஸ்ய தரமாணஸ்ய ப₃லஸ்யாந்தோ ந வித்₃யதே ॥ (34)

ப்ரஹ்ருஷ்டரூபா த்₄வஜிநீ வநௌகஸாம்
மஹாத்மநாம் ஸம்ப்ரதி யோத்₃து₄மிச்ச₂தாம் ।
அலம் விரோதே₄ந ஶமோ விதீ₄யதாம்
ப்ரதீ₃யதாம் தா₃ஶரத₂ாய மைதி₂லீ ॥ (35)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ பஞ்சவிம்ஶ: ஸர்க₃: ॥

ஷட்₃விம்ஶ: ஸர்க₃:

கபிப₃லாவேக்ஷணம்

தத்₃வச: பத்₂யமக்லீப₃ம் ஸாரணேநாபி₄பா₄ஷிதம் ।
நிஶம்ய ராவணோ ராஜா ப்ரத்யபா₄ஷத ஸாரணம் ॥ (1)

யதி₃ மாமபி₄யுஞ்ஜீரந் தே₃வக₃ந்த₄ர்வதா₃நவா: ।
நைவ ஸீதாம் ப்ரதா₃ஸ்யாமி ஸர்வலோகப₄யாத₃பி ॥ (2)

இவ்வாறு பதில் செய்தியைப் பெற்றுக் கொண்ட சுக–ஸாரணர்களான இரு அரக்கர்களும், அறம் தவறாத இராமனுக்கு வெற்றி வாழ்த்துக் கூறிவிட்டு, இலங்கை நகருக்குத் திரும்பி வந்து, அரக்கர் கோமானிடம் நடந்த நிகழ்ச்சிகளைத் தெரிவித்தார்கள்— (26)

''அரக்க மன்னனே! விபீஷணரால் கைப்பற்றப்பட்ட நாங்கள் இருவரும் (பகை மன்னனின் ஒற்றர்களாதலால்) கொலைத் தண்டனைக்கு உரியவர்கள். (உயிர் போய்விட்டது என்றே எண்ணினோம்.) ஆனால், அளவில்லாத ஆற்றல் படைத்தவரும் தருமாத்மாவுமான இராமன் எங்களைப் பார்த்ததால் (அவர் எங்களிடம் காட்டிய இரக்கத்தால்) விடுவிக்கப்பட்டோம். (27)

புருஷோத்தமர்களும் லோகபாலர்களுக்கு நிகரானவர்களும் அஸ்திரக் கலையில் நல்ல தேர்ச்சி உடையவர்களும் சலியாத ஆண்மையுடையவர்களுமான நால்வர், அதாவது தசரத மைந்தனான இராமன், அனைத்துச் சிறப்புக்களுமுடைய லட்சுமணன், விபீஷணன் மற்றும் தேவேந்திரனுக்கு இணையான பராக்கிரமமுடைய சுக்ரீவன் ஆகியோர் ஒரே நோக்கத்துடன் ஒன்று கூடி இருக்கிறார்கள். மதிற்சுவர்கள், தோரணவாயில்களுடன் கூடிய இலங்கை நகரைப் பெயர்த்தெடுத்து, வேறோர் இடத்தில் நிலைநாட்டுவதற்கு இவர்களே போதும்! மற்ற வானரர்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்கலாம். (28–30)

இராமபிரானுடைய வலிமைமிக்க உடல் வனப்பும், அவரிடமுள்ள ஆயுதங்களும் எப்படிப்பட்டவை என்றால், அவர் ஒருவரே இலங்கை நகரை எரித்து விடுவார். மற்ற மூவரும் வெறுமே நின்று கொண்டிருந்தால் போதும்! (31)

இராம–லட்சுமணர்களாலும் சுக்ரீவனாலும் பாதுகாக்கப்படும் அந்த வானரப்படையை, எல்லா தேவர்களும் அசுரர்களும் ஒன்று சேர்ந்து வந்தாலும்கூட எப்பாடுபட்டாலும் கொஞ்சமும் அடக்க முடியாது. (32)

பத்து யோஜனை அகலமும் நூறு யோஜனை நீளமும் உடைய அணை கட்டப்பட்டு, வானரப் படைகள் கடலைக் கடந்து வந்துவிட்டன. கடலின் தெற்குக் கரையில் இராமன் வந்து பாசறையில் தங்கியுள்ளார். அணை வழியாகக் கடந்து வந்தவர்கள், வந்து கொண்டிருப்பவர்களின் இறுதி எல்லை காணப்படவேயில்லை! (33,34)

இப்போதே போரைத் துவக்க துடித்துக் கொண்டிருக்கும் பேராற்றலுடைய வானரப்படை உற்சாகத்தோடிருக்கிறது. இதுவரையில் (இராமனிடம்) விரோதம் பாராட்டியது போதும்; இனி, சமாதான வழிகளைப் பின்பற்றலாம். (அருள்கூர்ந்து) இராமனிடம் சீதையைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்.'' (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தியாறு

வானர சேனையைக் காணுதல்!

நலன் பயப்பதும், உற்சாகத்தைப் பெருக்குவதுமான (சுகன் உடனிருக்க) ஸாரணனின் சொற்களைக் கேட்ட மன்னன் இராவணன், ஸாரணனைப் பார்த்துக் கூறினான்— (1)

''தேவ–கந்தர்வ–அசுரர்கள் ஒன்று சேர்ந்து என்னுடன் யுத்தம் புரிய வந்தார்களானாலோ, உலக மக்கள் தூற்றுவார்களே! என்ற பயத்தினாலோ, நான் சீதையைத் திருப்பிக் கொடுக்கவே மாட்டேன். (2)

த்வம் து ஸௌம்ய பரித்ரஸ்தோ ஹரிபி$_4$: பீடி$_3$தோ ப்$_4$ருஶம் ।
ப்ரதிப்ரத$_3$ாநமத்$_3$யைவ ஸீதாயா: ஸாது$_4$ மந்யஸே ॥ (3)

கோ ஹி நாம ஸபத்நோ மாம் ஸமரே ஜேதுமர்ஹதி ।
இத்யுக்த்வா பருஷம் வாக்யம் ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ॥ (4)

ஆருரோஹ தத: ஶ்ரீமாந் ப்ராஸாத$_3$ம் ஹிமபாண்ட$_3$ரம் ।
ப$_3$ஹுதாலஸமுத்ஸேத$_4$ம் ராவணோऽத$_2$ தி$_3$த்$_3$ருக்ஷயா ॥ (5)

தாப்$_4$யாம் சராப்$_4$யாம் ஸஹிதோ ராவண: க்ரோத$_4$மூர்சி$_2$த: ।
பஶ்யமாந: ஸமுத்$_3$ரம் ச பர்வதாம்ஶ்ச வநாநி ச ॥
த$_3$த$_3$ர்ஶ ப்ருதி$_2$வீதே$_3$ஶம் ஸுஸம்பூர்ணம் ப்லவங்க$_3$மை: ॥ (6)

தத$_3$பாரமஸங்க்$_2$யேயம் வாநராணாம் மஹத்$_3$ப$_3$லம் ।
ஆலோக்ய ராவணோ ராஜா பரிபப்ரச்ச$_2$ ஸாரணம் ॥ (7)

ஏஷாம் வாநரமுக்$_2$யாநாம் கே ஶூரா: கே மஹாப$_3$லா: ।
கே பூர்வமபி$_4$வர்தந்தே மஹோத்ஸாஹா: ஸமந்தத: ॥ (8)

கேஷாம் ஶ்ருணோதி ஸுக்$_3$ரீவ: கே வா யூத$_2$பயூத$_2$பா: ।
ஸாரணாசக்ஷ்வ தத்த்வேந கிம்ப்ரப$_4$ாவா: ப்லவங்க$_3$மா: ॥ (9)

ஸாரணோ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய வசநம் பரிப்ருச்ச$_2$த: ।
ஆசசக்ஷேऽத$_2$ முக்$_2$யக்ஞோ முக்$_2$யாம்ஸ்தத்ர வநௌகஸ: ॥ (10)

ஏஷ யோऽபி$_4$முகே$_2$ா லங்காம் நர்த$_3$ந்ஸ்திஷ்ட$_2$தி வாநர: ।
யூத$_2$பாநாம் ஸஹஸ்ராணாம் ஶதேந பரிவாரித: ॥ (11)

யஸ்ய கே$_4$ாஷேண மஹதா ஸப்ராகாரா ஸதோரணா ।
லங்கா ப்ரவேபதே ஸர்வா ஸஶைலவநகாநநா ॥ (12)

ஸர்வஶாக$_2$ாம்ருகே$_3$ந்த்$_3$ரஸ்ய ஸுக்$_3$ரீவஸ்ய மஹாத்மந: ।
ப$_3$லாக்$_3$ரே திஷ்ட$_2$தே வீரோ நீலோ நாமைஷ யூத$_2$ப: ॥ (13)

பா$_3$ஹூ ப்ரக்$_3$ருஹ்ய ய: பத்$_3$ப்$_4$யாம் மஹீம் க$_3$ச்ச$_2$தி வீர்யவாந் ।
லங்காமபி$_4$முக$_2$: க்ரோத$_4$ாத$_3$பீ$_4$க்ஷ்ணம் ச விஜ்ரும்ப$_4$தே ॥ (14)

கி$_3$ரிஶ்ருங்க$_3$ப்ரதீகாஶ: பத்$_3$மகிஞ்ஜல்கஸந்நிப$_4$: ।
ஸ்பே$_2$ாடயத்யபி$_4$ஸம்ரப்$_3$தே$_4$ா லாங்கூ$_3$லம் ச புந: புந: ॥ (15)

யஸ்ய லாங்கூ$_3$லஶப்$_3$தே$_3$ந ஸ்வநந்தி ப்ரதி$_3$ஶோ த$_3$ஶ ।
ஏஷ வாநரராஜேந ஸுக்$_3$ரீவேணாபி$_4$ஷேசித: ॥
யௌவராஜ்யேऽங்க$_3$தே$_3$ா நாம த்வாமாஹ்வயதி ஸம்யுகே$_3$ ॥ (16)

வாலிந: ஸத்$_3$ருஶ: புத்ர: ஸுக்$_3$ரீவஸ்ய ஸதா$_3$ ப்ரிய: ।
ராக$_4$வார்தே$_2$ பராக்ராந்த: ஶக்ரார்தே$_2$ வருணோ யதா$_2$ ॥ (17)

தைரியமற்றவனே! வானரர்கள் உன்னைப் பிடித்துத் துன்புறுத்தியதால், அச்சத்தால் நீ நடுங்கிக் கொண்டிருக்கிறாய். அதனால்தான் இப்போதே சீதையைத் திருப்பிக் கொடுத்துவிடுவது நல்லது என்று எண்ணுகிறாய்! அட! போர்க்களத்தில் என்னை வெல்லக்கூடிய பகைவனும் இருக்கிறானா என்ன?'' என்று கடுமையான வார்த்தைகளை அரக்க மன்னன் இராவணன் மொழிந்துவிட்டு, வானரப் படையைத் தன் கண்களால் பார்க்க விருப்பம் கொண்டான். திருபொருந்திய இராவணன் பல பனைமரங்கள் உயரமுடையதும் பனிப்பாறை போல் வெண்ணிறமானதுமான மாளிகையின் உப்பரிகைக்கு ஏறிச் சென்றான். (3–5)

கோபம் தலைக்கேறிய இராவணன் அவ்விரு ஒற்றர்களுடன்கூட, கடல்–மலைகள்–காடுகளைப் பார்த்துவிட்டு, அந்த பூப்பிரதேசம் வானரர்களால் நிரம்பி வழிவதையும் கண்டான். (6)

இராவண மன்னன், எல்லை காண முடியாததும் கணக்கிட்டுப் பார்க்க முடியாததுமான மாபெரும் (வானரப்) படையைப் பார்த்துவிட்டு, ஸாரணனை நோக்கிக் கேட்டான்— (7)

''இந்த வானரப் பிரமுகர்களில் எவர்கள் சூரர்கள்? எவர்கள் மகாபலசாலிகள்? எப்போதும் உற்சாகத்துடன் படையின் முன்னணியில் இருப்பவர்கள் எவர்கள்? (8)

சுக்ரீவன், எவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு நடக்கிறான்? சேனைத் தலைவர்களுக்கெல்லாம் தலைவர்களாக இருப்பவர் யார், யார்?'' (9)

இவ்வாறு அரக்க மன்னன் கேட்டவுடன், வானரப் படையின் பிரதானமான தலைவர்களைப் பற்றி அறிந்திருந்த ஸாரணன், அங்கிருந்த வானரர்களில் முக்கியமானவர்களைப் பற்றிக் கூற ஆரம்பித்தான்— (10)

''எந்த வானரன், இலங்கையை நோக்கி கர்ஜித்துக் கொண்டு நிற்கிறானோ, நூறாயிரக்கணக்கான படைவீரர்களால் சூழப்பட்டிருக்கிறானோ, எல்லா வானரர்களுக்கும் மன்னனும் மகாபராக்கிரமமுமுடைய சுக்ரீவனுடைய படை அணியின் தலைப்பகுதியில் நிற்கிறானோ, எவனுடைய சகிக்க முடியாத பேரிரைச்சலால் மதிற்சுவர்–தோரணவாயில்கள்–மலைகள்–வனங்கள்–சோலைகளோடு இலங்கைப் பட்டணம் நடுநடுங்குகிறதோ, அவன் பெயர் நீலன். இவன் சேனைத்தலைவன்; சூரன். (11–13)

எவன், தன் இரு கைகளையும் ஒன்றோடொன்று பிணைத்துக் கொண்டு, கால்களால் (பூமி அதிரும்படியாக) நடந்து கொண்டிருக்கிறானோ, இலங்கையை நிமிர்ந்து பார்த்துக் கோபாவேசத்தால் அடிக்கடி துள்ளுகிறானோ, மீண்டும் தரையில் துடிக்கிறானோ, எவனுடைய வாலின் ஓசையால் பத்துத் திசைகளும் எதிரொலிக்கின்றனவோ, அவன் பெயர் அங்கதன். வானர மன்னனான சுக்ரீவனால் இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டவன். யுத்தம் செய்ய வரும்படி, தங்களுக்கு ஆசை காட்டி அழைத்துக் கொண்டிருக்கிறான். (14–16)

(தங்களைத் தோற்கடித்த) வாலிக்கு ஏற்ற புதல்வன். சுக்ரீவனுடைய அன்புக்கு எப்போதும் பாத்திரமானவன். இந்திரனுக்காக, வருணன் தன் பராக்கிரமத்தை வெளிக்காட்டுவது போல, இராமபிரானின் சேவைக்காக, இவன் தனது சகல திறமைகளையும் வெளிக்காட்டுபவன். (17)

ஏதஸ்ய ஸா மதி: ஸர்வா யத்$_3$த்$_3$ருஷ்டா ஜநகாத்மஜா ।
ஹநூமதா வேக$_3$வதா ராக$_4$வஸ்ய ஹிதைஷிணா ॥ (18)

ப$_3$ஹூநி வாநரேந்த்$_3$ராணாமேஷ யூதா$_2$நி வீர்யவாந் ।
பரிக்$_3$ருஹ்யாபி$_4$யாதி த்வாம் ஸ்வேநாநீகேந து$_3$ர்ஜய: ॥ (19)

அநு வாலிஸுதஸ்யாபி ப$_3$லேந மஹதாவ்ருத: ।
வீரஸ்திஷ்ட$_2$தி ஸங்க்$_3$ராமே ஸேதுஹேதுரயம் நள: ॥ (20)

யே து விஷ்டப்$_4$ய கா$_3$த்ராணி க்ஷ்வேலயந்தி நத$_3$ந்தி ச ।
உத்தா$_2$ய ச விஜ்ரும்ப$_4$ந்தே க்ரோதே$_4$ந ஹரிபுங்க$_3$வா: ॥ (21)

ஏதே து$_3$ஷ்ப்ரஸஹா கோ$_4$ராஶ்சண்டா$_3$ஶ்சண்ட$_3$பராக்ரமா: ।
அஷ்டௌ ஶதஸஹஸ்ராணி த$_3$ஶகோடிஶதாநி ச ॥ (22)

ய ஏநமநுக$_3$ச்ச$_2$ந்தி வீராஶ்சந்த$_3$நவாஸிந: ।
ஏஷைவாஶம்ஸதே லங்காம் ஸ்வேநாநீகேந மர்தி$_3$தும் ॥ (23)

ஶ்வேதோ ரஜதஸங்காஶஶ்சபலோ பீ$_4$மவிக்ரம: ।
பு$_3$த்$_3$தி$_4$மாந் வாநரோ வீரஸ்த்ரிஷு லோகேஷு விஶ்ருத: ॥ (24)

தூர்ணம் ஸுக்$_3$ரீவமாக$_3$ம்ய புநர்க$_3$ச்ச$_2$தி ஸத்வர: ।
விப$_4$ஜந் வாநரீம் ஸேநாமநீகாநி ப்ரஹர்ஷயந் ॥ (25)

ய: புரா கோ$_3$மதீதீரே ரம்யம் பர்யேதி பர்வதம் ।
நாம்நா ஸங்கோசநோ நாம நாநாநக$_3$யுதோ கி$_3$ரி: ॥ (26)

தத்ர ராஜ்யம் ப்ரஶாஸ்த்யேஷ குமுதோ$_3$ நாம யூத$_2$ப: ।
யோऽஸௌ ஶதஸஹஸ்ராணாம் ஸஹர்ஷம் பரிகர்ஷதி ॥ (27)

யஸ்ய வாலா ப$_3$ஹுவ்யாமா தீ$_3$ர்கா$_4$ லாங்கூ$_3$லமாஶ்ரிதா: ।
தாம்ரா: பீதா: ஸிதா: ஶ்வேதா: ப்ரகீர்ணா கோ$_4$ரகர்மண: ॥ (28)

அதீ$_3$நோ ரோஷணஶ்சண்ட$_3$: ஸங்க்$_3$ராமமபி$_4$காங்க்ஷதி ।
ஏஷோऽப்யாஶம்ஸதே லங்காம் ஸ்வேநாநீகேந மர்தி$_3$தும் ॥ (29)

யஸ்த்வேஷ ஸிம்ஹஸங்காஶ: கபிலோ தீ$_3$ர்க$_4$கேஸர: ।
நிப்$_4$ருத: ப்ரேக்ஷதே லங்காம் தி$_3$த$_4$க்ஷந்நிவ சக்ஷுஷா ॥ (30)

விந்த்$_4$யம் க்ருஷ்ணகி$_3$ரிம் ஸஹ்யம் பர்வதம் ச ஸுத$_3$ர்ஶநம் ।
ராஜந் ஸததமத்$_4$யாஸ்தே ரம்போ$_4$ நாமைஷ யூத$_2$ப: ॥ (31)

ஶதம் ஶதஸஹஸ்ராணாம் த்ரிம்ஶச்ச ஹரிபுங்க$_3$வ: ।
யமேதே வாநரா: ஶூராஶ்சண்டா$_3$ஶ்சண்ட$_3$பராக்ரமா: ॥
பரிவார்யாநுக$_3$ச்ச$_2$ந்தி லங்காம் மர்தி$_3$துமோஜஸா ॥ (32)

இராமபிரானின் நலனை விரும்புகிறவனும், துரிதமாக செயல்படுபவனுமான அனுமான், இவ்விடம் வந்து ஜனககுமாரியைப் பார்த்துப் பேசிவிட்டுப் போனானே, அச்செயல் இவனது புத்தி தீட்டிய திட்டத்தால் நடந்தேறியதுதான். (18)

மிகவும் பராக்கிரமம் படைத்த அங்கதன், வானரோத்தமர்களின் ஏராளமான கூட்டங்களைத் தன் படையில் சேர்த்துக் கொண்டு, பிறரால் வெல்ல முடியாதவனாக நிற்கிறான். (19)

அங்கதனையொட்டி பெரும்படையுடன் ஸேதுவைக் கட்டிய நளன் போரிடத் தயாராகவுள்ளான். எவர்கள் உடல் அவயவங்களை நெட்டி முறித்துக் கொண்டு சிங்கநாதம் செய்து ஆரவாரிக்கிறார்களோ, ஆசனத்திலிருந்து எழுந்து கோபத்துடன் சிலிர்க்கிறார்களோ; எவர்கள் மிகவும் பயங்கரமானவர்களோ, பயங்கரமான ஆற்றல் படைத்தவர்களோ; எவர்களுடைய வேகத்தைத் தடுத்து நிறுத்த முடியாதோ, அவர்கள் ஆயிரம் கோடி எட்டு லட்சம் வீரர்கள்; சந்தனக் காடுகளில் வசிக்கும் இவர்கள், இவனை (நளனை)ப் பின்தொடர்கிறார்கள். இவன், தன் சேனையைக் கொண்டு இலங்கையை அழிக்க எண்ணிக் கொண்டிருக்கிறான். (20–23)

அடுத்ததாக, வெள்ளியைப் போன்று பிரகாசிக்கும் சுவேதன் நிற்கிறான். யுத்தம் செய்வதற்குத் துடித்துக் கொண்டிருப்பவன்; பயங்கரமான ஆற்றலுடையவன்; புத்தி கூர்மையுள்ளவன்; மூன்று உலகங்களிலும் புகழ் பெற்ற வீரன். வேகமாக சுக்ரீவனிடம் வந்து இப்போதே போரைத் துவக்கலாமா? என்று கேட்டு, அவன் 'சற்றுப் பொறு' என்று பதில் சொல்லியதும், வானர வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டும், அணிகளின் கட்டுப்பாட்டை மேற்பார்வையிட்டுக் கொண்டும் மீண்டும் வேகமாகத் திரும்பிச் செல்கிறான். (24,25)

கோமதி நதிக்கரையில் பல குன்றுகளையுடைய சங்கோசனம் என்ற பெயர் பெற்ற மலை இருக்கிறது. முன்னர், அழகான இந்த மலையில் சஞ்சாரம் செய்து கொண்டு, எவன் ஆட்சி புரிந்து வந்தானோ, அவன் குமுதன் என்ற பெயர் கொண்ட படைத்தலைவன்; இவன் மனமகிழ்ச்சியுடன் ஆயிரலட்சம் வானரர்களைத் தன்னுடன் அழைத்து வந்திருக்கிறான். (26,27)

எவனுடைய வாலில் இருக்கும் உரோமங்கள் பல வியாமங்கள் (இரண்டு கைகளின் நீளம் கொண்டது ஒரு வியாமம்) நீண்டிருக்கின்றனவோ; சிவந்தும் மஞ்சளாகவும் வெளுத்தும் கறுத்தும் அடர்ந்தும் வளர்ந்தும் இருக்கின்றனவோ; எவன் பயங்கரமான செயல்களைப் புரிபவனோ; எப்போதும் அடங்கிப் போகாத ரோஷமுடைய வானரனோ; போரை இப்போதே துவக்க விரும்புகிறானோ; அவன் சண்டன் என்ற பெயர் கொண்டவன்; தன் படைவீரர்களைக் கொண்டே இலங்கையை அழித்து நாசமாக்க விரும்புகிறான். (28,29)

வேந்தரே! சிங்கத்தை நிகர்த்தவன்; கபில நிறமுடையவன்; நீண்ட கேசமுடையவன்; ஒரே நோக்கமுடையவன்; தன் கண்களாலேயே இலங்கையை எரித்து விடுவதைப் போல் பார்த்துக் கொண்டிருப்பவன்; இவன் விந்திய மலையிலும், கிருஷ்ணகிரியிலும், மிகவும் அழகான ஸஹ்ய பர்வதத்திலும் எப்போதும் வசித்து வருபவன்; இவன் ரம்பன் என்ற பெயருடைய படைத்தலைவன். (30,31)

வானரோத்தமர்களும் சூரர்களும் கொடியவர்களும் மகாபராக்கிரமசாலிகளுமான மூவாயிர லட்சம் வானரர்கள், தம் பேராற்றலால் இலங்கையை அழிப்பதற்காக இவனுடன் வந்திருக்கிறார்கள். (32)

யஸ்து கர்ணௌ விவ்ருணுதே ஜ்ரும்ப$_4$தே ச புந: புந: ।
ந ச ஸம்விஜதே ம்ருத்யோர்ந ச யுத்$_3$த$_4$த்$_3$வித$_4$வதி ॥ (33)

ப்ரகம்பதே ச ரோஷேண திர்யக் ச புநரீக்ஷதே ।
பஶ்யந்(ல்)லாங்கூ$_3$லமபி ச க்ஷ்வேலதே ச மஹாப$_3$ல: ॥ (34)

மஹாஜவோ வீதப$_4$யோ ரம்யம் ஸால்வேயபர்வதம் ।
ராஜந் ஸததமத்$_4$யாஸ்தே ஶரபே$_4$ா நாம யூத$_2$ப: ॥ (35)

ஏதஸ்ய ப$_3$லிந: ஸர்வே விஹாரா நாம யூத$_2$பா: ।
ராஜஞ்ஶதஸஹஸ்ராணி சத்வாரிம்ஶத்ததை$_2$வ ச ॥ (36)

யஸ்து மேக$_4$ இவாகாஶம் மஹாநாவ்ருத்ய திஷ்ட$_2$தி ।
மத்$_4$யே வாநரவீராணாம் ஸுராணாமிவ வாஸவ: ॥ (37)

பே$_4$ரீணாமிவ ஸந்நாதே$_3$ா யஸ்யைஷ ஶ்ரூயதே மஹாந் ।
கோ$_4$ஷ: ஶாக$_2$ாம்ருகே$_3$ந்த்$_3$ராணாம் ஸங்க்$_3$ராமமபி$_4$காங்க்ஷதாம் ॥ (38)

ஏஷ பர்வதமத்$_4$யாஸ்தே பாரியாத்ரமநுத்தமம் ।
யுத்$_3$தே$_4$ துஷ்ப்ரஸஹோ நித்யம் பநஸோ நாம யூத$_2$ப: ॥ (39)

ஏநம் ஶதஸஹஸ்ராணாம் ஶதார்த$_4$ம் பர்யுபாஸதே ।
யூத$_2$பா யூத$_2$பஶ்ரேஷ்ட$_2$ம் யேஷாம் யூத$_2$ாநி ப$_4$ாக$_3$ஶ: ॥
யஸ்து பீ$_4$மாம் ப்ரவல்க$_3$ந்தீம் சமூம் திஷ்ட$_2$தி ஶோப$_4$யந் ॥ (40)

ஸ்தி$_2$தாம் தீரே ஸமுத்$_3$ரஸ்ய த்$_3$விதீய இவ ப$_4$ாஸ்கர: ।
ஏஷ த$_3$ர்து$_3$ரஸங்காஶோ விநதோ நாம யூத$_2$ப: ॥ (41)

பிப$_3$ம்ஶ்சரதி பர்ணாஸாம் நதீ$_3$நாமுத்தமாம் நதீ$_3$ம் ।
ஷஷ்டி: ஶதஸஹஸ்ரா்ணி ப$_3$லமஸ்ய ப்லவங்க$_3$மா: ॥ (42)

த்வாமாஹ்வயதி யுத்$_3$தா$_3$ய க்ரோத$_4$நோ நாம யூத$_2$ப: ।
விக்ராந்தா ப$_3$லவந்தஶ்ச யத$_2$ா யூத$_2$ாநி ப$_4$ாக$_3$ஶ: ॥ (43)

யஸ்து கை$_3$ரிகவர்ணாப$_4$ம் வபு: புஷ்யதி வாநர: ।
அவமத்ய ஸத$_3$ா ஸர்வாந் வாநராந் ப$_3$லதர்பிதாந் ॥ (44)

க$_3$வயோ நாம தேஜஸ்வீ த்வாம் க்ரோத$_4$ாதப$_3$ி$_4$வர்ததே ।
ஏநம் ஶதஸஹஸ்ராணி ஸப்ததி: பர்யுபாஸதே ॥ (45)

ஏஷைவாஶம்ஸதே லங்காம் ஸ்வேநாநீகேந மர்தி$_3$தும் ।
ஏஷே துஷ்ப்ரஸஹா கோ$_4$ரா ப$_3$லிந: காமரூபிண: ॥
யூத$_2$பா யூத$_2$பஶ்ரேஷ்ட$_2$ா ஏஷாம் யூத$_2$ாநி ப$_4$ாக$_3$ஶ: ॥ (46)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷட்$_3$விம்ஶ: ஸர்க$_3$: ॥

மன்னரே! எவன் பெரும் பலம் பொருந்தியவனோ; வேகமாக செயல்படுபவனோ; அச்சத்தை முற்றிலுமாக ஒழித்தவனோ; தன் செவிகள் இரண்டையும் நெறித்துக் கொண்டிருக்கிறானோ; அடிக்கடி கொட்டாவி விடுகிறானோ; யமனுக்கும் அஞ்சாதவனோ; போர்க்களத்திலிருந்து புறங்காட்டி ஓடாதவனோ; கோபத்தால் துடித்துக் கொண்டிருக்கிறானோ; எவன் தன் கடைக்கண்களால் அடிக்கடி இங்குமங்கும் பார்க்கிறானோ; வாலை உற்று நோக்கிப் பார்த்து சிங்கநாதம் செய்கிறானோ; எப்போதும் அழகியதான சால்வேய பர்வதத்தில் வசிக்கிறானோ, அவன்தான் சரபன் என்ற பெயர் கொண்ட படைத்தலைவன். (33–35)

விஹாரர்கள் என்ற பெயர் பெற்ற படைத்தலைவர்கள் இவனிடம் இருக்கிறார்கள். எல்லோரும் மிக்க பலம் கொண்டவர்கள்; நாற்பது லட்சம் பேர்கள் இவனுடன் வந்திருக்கிறார்கள். (36)

எவன், மாபெரும் மேகம் ஆகாயத்தை மறைத்துக் கொண்டு நிற்பதைப் போலவே, வானரவீரர்களின் நடுவில் மிடுக்குடன் நிற்பவனோ; தேவர்களுள் சிறந்த தலைவனான இந்திரன் போன்றவனோ; போர் புரியத் துடித்துக் கொண்டு நிற்கும் வானரர்களின் நடுவில், ஏராளமான யுத்த பேரிகைகளின் முழக்கம் போல, கம்பீர கர்ஜனை ஒலி எழுப்புகிறவனோ; போரில் எதிர்கொள்ள முடியாதவனோ; பாரியாத்ரம் என்ற மலையில் வசிப்பவனோ, அந்த அவன்தான் பனஸன் என்ற பெயர் கொண்ட படைத்தலைவன். (37–39)

சேனைத் தலைவர்களில் சிறந்தவர்களான ஐம்பது லட்சம் சேனாபதிகள், தனித்தனியே தத்தம் படைகளை அணிவகுத்து வைத்துக் கொண்டு, இவன் உத்தரவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். (40)

தர்தர மலை போன்றவனும், இரண்டாவது சூரியன் போல் பிரகாசிக்கிறவனும், கடற்கரையில் பாசறை அமைத்து பயங்கரமாகக் குதித்துக் கும்மாளமடிக்கும் படையை விளங்கச் செய்பவனும், சிறந்த நதியான பர்ணாசம் என்ற பெயர் கொண்ட நதியின் நீரைப் பருகி வருகிறவனுமான, அவன்தான் வினதன் என்ற இந்த சேனைத் தலைவன். இவனுடைய படையில் அறுபது லட்சம் வானரர்கள் இருக்கிறார்கள். (41,42)

க்ரோதனன் என்ற பெயருடைய படைத்தலைவன், பராக்கிரமசாலிகளும் உடல் பலம் பெற்றவர்களுமான அணித் தலைவர்களைக் கொண்ட தத்தம் வீரர்களை அணிவகுத்து வைத்துக் கொண்டு, போருக்கு வரும்படி தங்களை அழைக்கிறான். (43)

எந்த வானரன், காவிக்கல் போன்ற நிறமுடைய தன் உடலை நன்கு போஷித்து வருகிறானோ; எவன் பலத்தால் செருக்கு கொண்ட வானரர்களை எப்போதும் இடித்துரைத்து வருகிறானோ; அவன்தான் பேராற்றலுடைய கவயன் என்ற பெயர் பெற்றவன். எழுபது லட்சம் பேர்கள் இவனிடம் பணி செய்கிறார்கள். இவன் தனது சேனையைக் கொண்டே, இலங்கையை அழித்துத் தரைமட்டமாக்க எண்ணம் கொண்டுள்ளான். (44,45)

இந்த வானரர்கள் எல்லோரும் எவராலும் எதிர்க்க முடியாதவர்கள்; கொடூரமானவர்கள்; விருப்பப்படி உருவம் எடுக்கக் கூடியவர்கள். மிகச்சிறந்த படைத்தலைவர்களான இவர்களுடைய படைகள் தனித்தனியே அணிவகுத்து நிற்கின்றன.'' (46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்தியாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸப்தவிம்ஶ: ஸர்க$_3$:

ஹராதி$_3$வாநரபராக்ரமாக்$_2$யாநம்

தாம்ஸ்து தே஽ஹம் ப்ரவக்ஷ்யாமி ப்ரேக்ஷமாணஸ்ய யூத$_2$பாந் ।
ராக$_4$வார்தே$_2$ பராக்ராந்தா யே ந ரக்ஷந்தி ஜீவிதம் ॥ (1)

ஸ்நிக்$_3$த$_4$ா யஸ்ய ப$_3$ஹுவ்யாமா வாலா லாங்கூ$_3$லமாஶ்ரிதா: ।
தாம்ரா: பீதா: ஸிதா: ஶ்வேதா: ப்ரகீர்ணா கே$_4$ாரகர்மண: ॥ (2)

ப்ரக்$_3$ருஹீதா: ப்ரகாஶந்தே ஸூர்யஸ்யேவ மரீசய: ।
ப்ருதி$_2$வ்யாம் சாநுக்ருஷ்யந்தே ஹரோ நாமைஷ யூத$_2$ப: ॥ (3)

யம் ப்ருஷ்ட$_2$தோ஽நுக$_3$ச்ச$_2$ந்தி ஶதஶோ஽த$_2$ ஸஹஸ்ரஶ: ।
த்$_3$ருமாநுத்$_3$யம்ய ஸஹஸா லங்காரோஹணதத்பரா: ॥ (4)

ஏஷ கோடிஸஹஸ்ரேண வாநராணாம் மஹௌஜஸாம் ।
ஆகாங்க்ஷதே த்வாம் ஸங்க்$_3$ராமே ஜேதும் பரபுரஞ்ஜய ॥
யூத$_2$பா ஹரிராஜஸ்ய கிங்கரா: ஸமுபஸ்தி$_2$தா: ॥ (5)

நீலாநிவ மஹாமேக$_4$ாந்ஸ்திஷ்ட$_2$தோ யாம்ஸ்து பஶ்யஸி ।
அஸிதாஞ்ஜநஸங்காஶாந் யுத்$_3$தே$_4$ ஸத்யபராக்ரமாந் ॥ (6)

அஸங்க்$_2$யேயாநநிர்தே$_3$ஶ்யாந் பரம் பாரமிவோத$_3$தே$_4$: ।
பர்வதேஷு ச யே கேசித்$_3$விஷமேஷு நதீ$_3$ஷு ச ॥
ஏதே த்வாமபி$_4$வர்தந்தே ராஜந்ந்ருக்ஷா: ஸுதூ$_3$ாருணா: ॥ (7)

ஏஷாம் மத்$_4$யே ஸ்தி$_2$தோ ராஜந் பீ$_4$மாக்ஷோ பீ$_4$மத$_3$ர்ஶந: ।
பர்ஜந்ய இவ ஜீமூதை: ஸமந்தாத்பரிவாரித: ॥ (8)

ருக்ஷவந்தம் கி$_3$ரிஶ்ரேஷ்ட$_2$மத்$_4$யாஸ்தே நர்மதா$_3$ம் பிப$_3$ந் ।
ஸர்வர்க்ஷாணாமதி$_4$பதிர்தூ$_4$ம்ரோ நாமைஷ யூத$_2$ப: ॥ (9)

யவீயாநஸ்ய து ப்$_4$ராதா பஶ்யைநம் பர்வதோபமம் ।
ப்$_4$ராத்ரா ஸமாநோ ரூபேண விஶிஷ்டஸ்து பராக்ரமை: ॥ (10)

ஸ ஏஷ ஜாம்ப$_3$வாந்நாம மஹாயூத$_2$பயூத$_2$ப: ।
ப்ரக்ராந்தோ கு$_3$ருவர்தீ ச ஸம்ப்ரஹாரேஷ்வமர்ஷண: ॥ (11)

ஏதேந ஸாஹ்யம் ஸுமஹத்க்ருதம் ஶக்ரஸ்ய தீ$_4$மதா ।
தை$_3$வாஸுரே ஜாம்ப$_3$வதா லப்$_3$த$_4$ாஶ்ச ப$_3$ஹவோ வரா: ॥ (12)

ஆருஹ்ய பர்வதாக்$_3$ரேப்$_4$யோ மஹாப்$_4$ரவிபுலா: ஶிலா: ।
முஞ்சந்தி விபுலாகாரா ந ம்ருத்யோருத்$_3$விஜந்தி ச ॥ (13)

ராக்ஷஸாநாம் ச ஸத்$_3$ருஶா: பிஶாசாநாம் ச லோமஶா: ।
ஏதஸ்ய ஸைந்யா ப$_3$ஹவோ விசரந்த்யக்$_3$நிதேஜஸ: ॥ (14)

ஸர்க்கம் : இருபத்தியேழு

வானரர்களின் போராற்றல் பற்றிக் கூறுதல்!

(ஸாரணன் தொடர்ந்து கூறுகிறான்—) ''(மன்னரே!) தாங்கள் இப்போது வானரப் படையை மிகவும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனால், இராமபிரானுக்காகத் தங்கள் அபாரத் திறமையைக் காட்டத் துடித்துக் கொண்டிருப்பவர்களும் மற்றும் தங்கள் உயிரின்மேல் பற்றில்லாமல் இருப்பவர்களுமான வானரத் தலைவர்களைத் தங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். (1)

இதோ நிற்கிறானே, அந்த வானரனின் பெயர், ஹரன். பயங்கரமான செயல்களைச் செய்யக்கூடிய இவனுடைய மிக நீளமான வாலில், சிவப்பு, மஞ்சள், பழுப்பு, வெளுப்பு போன்ற நிறங்களில் மிகமிக நீண்ட உரோமங்கள் சூரியனுடைய கிரணங்களைப் போல் பளிச்சென்று ஒளி வீசுகின்றன. அத்துடன் அவன் நடக்கும்போது தரையில் புரண்டு கொண்டும் இருக்கின்றன. இவனுக்குப் பின்னால் வானர மன்னனின் கிங்கரர்கள் எனப்படும் வீரர்கள், நூறு–ஆயிரக்கணக்கில், கையில் மரங்களை எடுத்துக் கொண்டு, தற்சமயத்திலேயே இலங்கை மீது படையெடுத்துக் கைப்பற்றத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். பகை மன்னர் தலைநகரை வெற்றி கொள்பவரே! இவன் மகாபலசாலிகளான ஆயிரங்கோடி வானரர்களுடன் போரில் தங்களை வெற்றி கொள்ள ஆவலுடன் இருக்கிறான். (2–5)

அங்கே பாருங்கள்! நீருண்டமேகம் போலும், கண்ணுக்குத் தீட்டும் மை போலும் காணப்படும் கறுத்த கரடிகள், போர்க்களத்தில் வீண்போகாத பேராற்றலுடையவர்கள். பெருங்கடலின் எதிர்க்கரையைக் காண முடியாததைப் போலவே, இவர்களின் எல்லையையும் காண முடியாது; எண்ணிக் கணக்கிடவும் முடியாது. சிலர் மலைகளில் நிற்கிறார்கள்; மற்றும் சிலர் பள்ளத்தாக்குகளிலும், நதிக்கரைகளிலும் தங்கியிருக்கிறார்கள். வேந்தரே! மகாகொடியவர்களான இந்தக் கரடிகள், தங்களை எதிர்த்துப் போரிட வந்திருக்கிறார்கள். (6,7)

மன்னரே! இவர்களுக்கு இடையில், கறுத்த மேகங்களால் நாற்புறமும் சூழப்பட்டு விளங்கும் மழைக்கடவுள் பர்ஜன்யன் (இந்திரன்) போல, இவர்களுடைய அரசன் நிற்பதைப் பாருங்கள். பயங்கரமான கண்கள்; பயங்கரமான உருவ அமைப்பு. இவன் பெயர் தூம்ரன். எல்லாக் கரடிகளுக்கும் தலைவன்; நர்மதை நதியின் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கிறான். (அதாவது, நர்மதை நதிக்கரையில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறான்.) பெருமைமிக்க மலையான ரிக்ஷவானில் வசித்துக் கொண்டிருக்கிறான். (8,9)

மலைநிகர் உருவமுடைய இவனுடைய தம்பியைப் பாருங்கள். தோற்றத்தில் சகோதரனைப் போன்றவர். ஆனால், பராக்கிரமத்தில் அவனை மிஞ்சியவர். சேனைத் தலைவர்களுக்கெல்லாம் தலைவரான இவருடைய பெயர், ஜாம்பவான். பராக்கிரமசாலி; பெரியோர்களின் ஆணையை ஏற்று நடப்பவர். ஆனால், போர்க்களத்தில் இவருடைய கோபத்தைச் சகித்துக் கொள்ளவே முடியாது. அறிவாற்றல் மிக்க ஜாம்பவான், தேவாசுர யுத்தத்தில் இந்திரனுக்கு மகத்தான உதவிகள் செய்தார். (அவன் வெற்றிக்கு அடிகோலினார்.) அதனால், இவர் பற்பல வரங்களையும் பெற்றுள்ளார். (10–12)

இவருடைய வீரர்கள் பெரிய உருவம் படைத்தவர்கள்; அக்னியைப் போல் வெம்மையான ஒளி வீசுபவர்கள். உரோமங்கள் அடர்ந்த உடலைப் பெற்றுள்ள இவர்கள், அரக்கர்களையும் பிசாசர்களையும் போல் கொடூரமானவர்கள்; யமனுக்கும் அஞ்சாதவர்கள்; மலைகளின் உச்சிவரை ஏறிச் சென்று பெரிய மேகம் போன்ற பாறைகளை, அங்கிருந்தபடியே (எதிரிகளின் மேல்) வீசி எறிவார்கள். இவ்வாறு, பலவகையான கரடிப்படையினர் ஆங்காங்கே திரிந்து கொண்டிருக்கிறார்கள். (13,14)

யம் த்வேநமபி$_4$ஸம்ரப்$_3$த$_4$ம் ப்லவமாநமிவ ஸ்தி$_2$தம் ।
ப்ரேக்ஷந்தே வாநரா: ஸர்வே ஸ்தி$_2$தா யூத$_2$பயூத$_2$பம் ॥ (15)

ஏஷ ராஜந் ஸஹஸ்ராக்ஷம் பர்யுபாஸ்தே ஹரீஸ்வர: ।
ப$_3$லேந ப$_3$லஸம்பந்நோ த$_3$ம்போ$_4$ நாமைஷ யூத$_2$ப: ॥ (16)

ய: ஸ்தி$_2$தம் யோஜநே ஶைலம் க$_3$ச்ச$_2$ந் பார்ஶ்வேந ஸேவதே ।
ஊர்த்$_4$வம் ததை$_2$வ காயேந க$_3$த: ப்ராப்நோதி யோஜநம் ॥ (17)

யஸ்மாந்ந பரமம் ரூபம் சதுஷ்பாதே$_3$ஷு வித்$_3$யதே ।
ஶ்ருத: ஸந்நாத$_3$நோ நாம வாநராணாம் பிதாமஹ: ॥ (18)

யேந யுத்$_3$த$_4$ம் புரா த$_3$த்தம் ரணே ஶக்ரஸ்ய தீ$_4$மதா ।
பராஜயஶ்ச ந ப்ராப்த: ஸோऽயம் யூத$_2$பயூத$_2$ப: ॥ (19)

யஸ்ய விக்ரமமாணஸ்ய ஶக்ரஸ்யேவ பராக்ரம: ।
ஏஷ க$_3$ந்த$_4$ர்வகந்யாயாமுத்பந்ந: க்ருஷ்ணவர்த்மந: ॥ (20)

ததா$_2$ தை$_3$வாஸுரே யுத்$_3$தே$_4$ ஸாஹ்யார்த$_2$ம் த்ரிதி$_3$வௌகஸாம் ।
யஸ்ய வைஶ்ரவணோ ராஜா ஜம்பூ$_3$முபநிஷேவதே ॥ (21)

யோ ராஜா பர்வதேந்த்$_3$ராணாம் ப$_3$ஹுகிந்நரஸேவிநாம் ।
விஹாரஸுக$_2$தோ$_3$ நித்யம் ப்$_4$ராதுஸ்தே ராக்ஷஸாதி$_4$ப ॥ (22)

தத்ரைஷ வஸதி ஸ்ரீமாந் ப$_3$லவாந் வாநரர்ஷப$_4$: ।
யுத்$_3$தே$_4$ஷ்வகத்த$_2$நோ நித்யம் க்ரத$_2$நோ நாம யூத$_2$ப: ॥ (23)

வ்ருத: கோடிஸஹஸ்ரேண ஹரீணாம் ஸமுபஸ்தி$_2$த: ।
ஏஷைவாஶம்ஸதே லங்காம் ஸ்வேநாநீகேந மர்தி$_3$தும் ॥ (24)

யோ க$_3$ங்கா$_3$மநு பர்யேதி த்ராஸயந் ஹஸ்தியூத$_2$பாந் ।
ஹஸ்திநாம் வாநராணாம் ச பூர்வவைரமநுஸ்மரந் ॥ (25)

ஏஷ யூத$_2$பதிர்நேதா க$_3$ச்ச$_2$ந் கி$_3$ரிகு$_3$ஹாஶய: ।
க$_3$ஜாந் யோத$_4$யதே வந்யாந் கி$_3$ரீம்ஶ்சைவ மஹீருஹாந் ॥ (26)

ஹரீணாம் வாஹிநீமுக்$_2$யோ நதீ$_3$ம் ஹைமவதீமநு ।
உஶீரபீ$_3$ஜமாஶ்ரித்ய பர்வதம் மந்த$_3$ரோபமம் ॥ (27)

ரமதே வாநரஶ்ரேஷ்டோ$_2$ தி$_3$வி ஶக்ர இவ ஸ்வயம் ।
ஏநம் ஶதஸஹஸ்ராணாம் ஸஹஸ்ரமநுவர்ததே ॥ (28)

வீர்யவிக்ரமத்$_3$ருப்தாநாம் நர்த$_3$தாம் பா$_3$ஹுஶாலிநாம் ।
ஸ ஏஷ நேதா சைதேஷாம் வாநராணாம் மஹாத்மநாம் ॥ (29)

ஸ ஏஷ து$_3$ர்த$_4$ரோ ராஜந் ப்ரமாதீ$_2$ நாம யூத$_2$ப: ।
வாதேநேவோத்$_3$த$_4$தம் மேக$_4$ம் யமேநமநுபஶ்யஸி ॥ (30)

அநீகமபி ஸம்ரப்$_3$த$_4$ம் வாநராணாம் தரஸ்விநாம் ।
உத்$_3$தூ$_4$தமருணாபா$_4$ஸம் பவநேந ஸமந்தத: ॥
விவர்தமாநம் ப$_3$ஹுதா$_4$ யத்ரைதத்$_3$ப$_3$ஹுலம் ரஜ: ॥ (31)

எவன், கோபத்தை அடக்க முடியாமல் எப்போதும் துள்ளிக் குதிக்கின்றானோ, சேனாபதிகளுக்கும் தலைவனாக விளங்கும் எவனை, எல்லா வானரர்களும் (எப்போது என்ன உத்தரவு கொடுப்பானோ? என்ற எதிர்பார்ப்புடன்) பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, எவனை ஆயிரங்கண்ணுடைய இந்திரனும் போற்றிப் பாராட்டுகின்றானோ, எவன் சுயமாகத் தானே பலசாலியோ, எவன் பெரும்படையினால் சூழப்பட்டிருக்கிறானோ, அவன்தான் தம்பன் என்ற பெயர் கொண்ட படைத்தலைவன். (15,16)

எவன், ஒரு யோஜனை தூரத்தில் இருக்கும் மலையைத் தன் ஓர் அடிவைப்பினால் எட்டிப் பிடித்து விடுவானோ, எவன் ஒரு யோஜனை உயரம் உள்ள உடலைக் கொண்டவனோ, நாற்கால் பிராணிகளில் எவனைக் காட்டிலும் பெரிய உருவமுடைய பிராணி காணப்படவில்லையோ, அவன் பெயர் ஸன்னாதனன்; வானரர்களுக்கெல்லாம் பாட்டனார் (மூலகாரணம்) என்று சொல்லப்படுபவன். பேரறிஞரான இவன் முன்னர் ஒரு சமயம் தன்னோடு யுத்தம் செய்ய இந்திரனுக்கு வாய்ப்புக் கொடுத்தான். ஆனால், இவன் தோல்வியடையவில்லை. அப்படிப்பட்ட மாவீரனான இவன், படைத்தலைவர்கள் அனைவருக்கும் தலைவன். (17–19)

அரக்கர் வேந்தே! போர்க்களத்தில், இந்திரனுக்கு நிகரான பராக்கிரமமுடையவன்; முன்னர் நிகழ்ந்த தேவாசுர யுத்தத்தில், அமரர்களுக்கு உதவி செய்வதற்காக, ஒரு கந்தர்வ நங்கையிடம் அக்னிதேவனால் உற்பத்தி செய்யப்பட்டவன்; க்ரதனன் என்ற பெயர் பெற்ற இந்தப் படைத்தலைவனை, ஏராளமான கின்னரர்கள் அடிபணிந்து நிற்கிறார்கள். தங்கள் சகோதரர் குபேரன் உல்லாசமாகத் திரியும் எந்த மாபெரும் மலைகளில் நாவல் மரங்கள் நிரம்ப உள்ளனவோ, அங்கேதான் சீரும்–சிறப்புமுடைய வானரோத்தமனும் பலவானுமான இவன் வசிக்கிறான். போர்முனையில், தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொள்ள மாட்டான்; ஆயிரங்கோடி வானரர்கள் புடைசூழ வந்திருக்கிறான். தன் படைகளைக் கொண்டே இலங்கையை அழிக்கத் திட்டமிட்டிருக்கிறான், இவன். (20–24)

எவன், யானைகளுக்கும் வானரர்களுக்குமிடையே நிலவும் மிகத்தொன்மையான விரோதத்தை நினைவில் கொண்டு, கங்கைப் பிரதேசங்களிலுள்ள யானைத் தலைவர்களைப் பயப்படுத்திக் கொண்டிருக்கிறானோ, (சம்பஸாதனன் என்ற அரக்கன், யானை வடிவம் கொண்டு அனுமானின் தந்தையான கேஸரியுடன் சண்டை செய்ய வந்து கொல்லப்பட்டான். அது முதல், யானைகளுக்கும் வானரர்களுக்குமிடையே விரோதம் தோன்றி நிலைத்துவிட்டது.) எந்த படைத்தலைவன், மலைக்குகைகளில் வசித்துக் கொண்டிருக்கிறானோ, எவன் மலைகளையும் மரங்களையும் பெயர்த்தெறிந்து யானைகளைத் தடுத்து நிறுத்துகிறானோ, எவன் வானரர் தலைவர்களுக்கெல்லாம் மேலான தலைவனோ, எவன் கங்கைப் பிரதேசத்திலுள்ளதும் மந்தர மலைக்கு நிகரானதுமான உசீரபீஜம் என்ற மலையை இருப்பிடமாகக் கொண்டு திரிந்து வருகிறானோ, அமரருலகில் இந்திரன் போல், வானரர்களின் தலைவன் எவனோ, அவன்தான் வெற்றி கொள்ள முடியாத பிரமாதி என்ற இந்தப் படைத்தலைவன். தங்களின் உடலாற்றலிலும் போராற்றலிலும் மிகவும் கர்வம் கொண்டுள்ள பத்துக்கோடி வானரர்கள் அட்டகாசமாக கர்ஜனை செய்து கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய தலைவன் இவன். காற்றினால் வேகமாக எழுப்பப்பட்ட மேகக்கூட்டங்களைப் போன்ற எந்தப் படைகளைத் தாங்கள் அடிக்கடி பார்க்கிறீர்களோ, எந்தப் படைகளின் போக்குவரத்தினால் எழும்பிய செம்புழுதி எல்லாப் பக்கங்களிலும் பரவி, எவனைச் சூழ்ந்து கொண்டிருக்கிறதோ, அவன்தான் பிரமாதி. (25–31)

ஏதே ஸிதமுக$_2$ா கே$_4$ாரா கே$_3$ாலாங்கூ$_3$லா மஹாப$_3$லா: ।
ஶதம் ஶதஸஹஸ்ராணி த்$_3$ருஷ்ட்வா வை ஸேதுப$_3$ந்த$_4$நம் ॥ (32)

கே$_3$ாலாங்கூ$_3$லம் மஹாவேக$_3$ம் க$_3$வாக்ஷம் நாம யூத$_2$பம் ।
பரிவார்யாபி$_4$வர்தந்தே லங்காம் மர்தி$_3$துமோஜஸா ॥ (33)

ப்$_4$ரமராசரிதா யத்ர ஸர்வகாலப$_2$லத்$_3$ருமா: ।
யம் ஸூர்யஸ்துல்யவர்ணாப$_4$மநு பர்யேதி பர்வதம் ॥ (34)

யஸ்ய ப$_4$ாஸா ஸத$_3$ா ப$_4$ாந்தி தத்$_3$வர்ணா ம்ருக$_3$பக்ஷிண: ।
யஸ்ய ப்ரஸ்த$_2$ம் மஹாத்மாநோ ந த்யஜந்தி மஹர்ஷய: ॥ (35)

ஸர்வகாமப$_2$லா வ்ருக்ஷா: ஸத$_3$ா ப$_2$லஸமந்விதா: ।
மதூ$_4$நி ச மஹார்ஹாணி யஸ்மிந் பர்வதஸத்தமே ॥ (36)

தத்ரைஷ ரமதே ராஜந் ரம்யே காஞ்சநபர்வதே ।
முக்$_2$யோ வாநரமுக்$_2$யாநாம் கேஸரீ நாம யூத$_2$ப: ॥ (37)

ஷஷ்டிர்கி$_3$ரிஸஹஸ்ராணாம் ரம்யா: காஞ்சநபர்வதா: ।
தேஷாம் மத்$_4$யே கி$_3$ரிவரஸ்த்வமிவாநக$_4$ ரக்ஷஸாம் ॥ (38)

தத்ரைதே கபிலா: ஶ்வேதாஸ்தாம்ராஸ்யா மது$_4$பிங்க$_3$லா: ।
நிவஸந்த்யுத்தமகி$_3$ரௌ தீக்ஷ்ணத$_3$ம்ஷ்ட்ரா நக$_2$ாயுத$_4$ா: ॥ (39)

ஸிம்ஹா இவ சதுர்த$_3$ம்ஷ்ட்ரா வ்யாக்$_4$ரா இவ து$_3$ராஸத$_3$ா: ।
ஸர்வே வைஶ்வாநரஸமா ஜ்வலிதாஶீவிஷோபமா: ॥ (40)

ஸுதீ$_3$ர்க$_4$ாஞ்சிதலாங்கூ$_3$லா மத்தமாதங்க$_3$ஸந்நிப$_4$ா: ।
மஹாபர்வதஸங்காஶா மஹாஜீமூதநி:ஸ்வநா: ॥ (41)

வ்ருத்தபிங்க$_3$லரக்தாக்ஷா பீ$_4$மபீ$_4$மக$_3$திஸ்வரா: ।
மர்த$_3$யந்தீவ தே ஸர்வே தஸ்து$_2$ர்லங்காம் ஸமீக்ஷ்ய தே ॥ (42)

ஏஷ சைஷாமதி$_4$பதிர்மத்$_4$யே திஷ்ட$_2$தி வீர்யவாந் ।
ஜயார்தீ$_2$ நித்யமாதி$_3$த்யமுபதிஷ்ட$_2$தி பு$_3$த்தி$_4$மாந் ॥ (43)

நாம்நா ப்ருதி$_2$வ்யாம் விக்$_2$யாதோ ராஜஞ்ஶதப$_3$லீதி ய: ।
ஏஷைவாஶம்ஸதே லங்காம் ஸ்வேநாநீகேந மர்தி$_3$தும் ॥ (44)

விக்ராந்தோ ப$_3$லவாஞ்ஶூர: பௌருஷே ஸ்வே வ்யவஸ்தி$_2$த: ।
ராமப்ரியார்த$_2$ம் ப்ராணாநாம் த$_3$யாம் ந குருதே ஹரி: ॥ (45)

க$_3$ஜோ க$_3$வாக்ஷோ க$_3$வயோ நளோ நீலஶ்ச வாநர: ।
ஏகைக ஏவ யூத$_2$நாம் கோடிபி$_4$ர்த$_3$ஶபி$_4$ர்வ்ருத: ॥ (46)

வெண்மையான முகமுடையவர்களும் பயங்கரமானவர்களும் மிக்க பலம் பொருந்தியவர்களுமான கோலாங்கூலமென்ற இனத்தைச் சேர்ந்த ஒருகோடி வானரர்கள், ஸேது அணையைக் கண்களால் பார்த்து, (மிக்க வியப்புற்றவர்களாக) விரைந்து செயலாற்றுபவனும் படைத்தலைவனுமான கோலாங்கூல கவாக்ஷன் என்பவனைச் சூழ்ந்து நின்று, தம் ஆற்றலால் இலங்கையை நாசம் செய்ய (தக்க தருணத்தை) எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். (32,33)

மன்னரே! எந்த மலையில், தேன்குடித்து மதங்கொண்ட வண்டுகள் மொய்க்கும் மலர்களையும் விரும்பிய பழங்களையும் எக்காலத்திலும் அளிக்கும் மரங்கள் உள்ளனவோ, தனக்கு நிகராக ஒளி வீசும் எந்த மலையை சூரியன் நாள்தோறும் சுற்றி வருகிறானோ, எதனுடைய ஒளியினால் அங்குள்ள விலங்குகளும் பறவைகளும் பொன்னிறமாக எப்போதும் பிரகாசிக்கின்றனவோ, மகாத்மாக்களான மாமுனிவர்கள் எந்த மலையின் சிகரத்தை விட்டு அகலாதிருக்கின்றார்களோ, விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கக் கூடியனவும் பழங்கள் நிறைந்ததுமான மரங்கள் எந்த மலையில் இருக்கின்றனவோ, மிகப்பெரிய தேன்கூடுகள் எங்கே உள்ளனவோ, அத்தகைய மனத்தைக் கவரும் காஞ்சனமலையில் வானரத் தலைவர்களுக்குத் தலைவனான கேஸரி என்ற இந்தத் தலைவன் இன்பமாக வாழ்ந்து வருகிறான். (34–37)

குற்றமற்றவரே! அறுபதினாயிரம் சிகரங்களை உடைய ஸ்வர்ணமயமான பர்வதங்களின் நடுவில், அரக்கர்களுள் சிறந்தவரான தங்களைப் போலவே, ஸாவர்ணி மேரு என்ற உத்தமமான மலை இருக்கிறது. (38)

அந்த உத்தமமான மலையில், கபிலம்–வெண்மை–சிவந்த வாய் உடையவர்களும், தேன் போன்ற பிங்கள நிறமுடையவர்களும், கூர்மையான கோரைப் பற்களையும் நகங்களை ஆயுதமாகவும் உடையவர்களுமான (வானரர்கள்) வசிக்கிறார்கள். (39)

எல்லோரும் சிங்கத்தைப் போல் நான்கு கோரைப் பற்கள் உடையவர்கள்; வேங்கைகள் போல அணுக முடியாதவர்கள்; அக்னியைப் போல் (நெருங்கி வரும் பகைவனைச்) சுட்டெரித்து விடுபவர்கள்; சீறிப்பாயும் விஷப்பாம்புகள் போன்றவர்கள். (40)

மிக நீண்ட அழகிய வால்களை உடையவர்கள்; மதங்கொண்ட யானைக்கு ஒப்பானவர்கள்; மாபெரும் மலைகளை நிகர்த்தவர்கள்; பெரிய மேகங்களைப் போல் கர்ஜிப்பவர்கள். (41)

வட்டமான பிங்கள நிறமுடைய கண்கள் (இப்போது கோபத்தால்) சிவந்து காணப்படுகின்றன; மிகக்கொடூரமான செயலும் பயங்கரமான குரலுமுடைய அவர்கள் எல்லோரும், தங்கள் இலங்கை நகரைப் பார்வையாலேயே அழித்துவிடுவதைப் போல உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மன்னரே! இவர்களின் நடுவில் நாயகனாய் நிற்பவன், சதபலி என்ற பெயரால் மண்ணுலகில் புகழ் பெற்றவன்; வீரம் மிகுந்தவன்; வெற்றியை விரும்புபவன்; (அதன் பொருட்டு) எப்போதும் சூரிய பகவானை உபாசித்து வருகிறான்; சிறந்த அறிவாளி. இவன், தன் படையைக் கொண்டே இலங்கையை நிர்மூலமாக்க எண்ணிக் கொண்டிருக்கிறான். (42–44)

எல்லையற்ற ஆண்மையுடையவன்; உடல்பலம் மிக்கவன்; சூரன்; தனது பேராற்றலில் நம்பிக்கை வைத்துள்ள இந்த வானரன், இராமபிரானுக்குச் சேவை செய்வதில் கருத்துடையவனாய், தன் உயிரையும் பொருட்படுத்தாதிருக்கிறான். (45)

கஜன், கவாக்ஷன், கவயன், நளன், நீலன் முதலிய ஒவ்வொரு வானரத் தலைவனும், பத்துக் கோடி சேனா வீரர்களால் சூழப்பட்டிருக்கிறார்கள். (46)

தத$_2$ாந்யே வாநரஶ்ரேஷ்ட$_2$ா விந்த்$_4$யபர்வதவாஸிந: ॥
ந ஶக்யம் தே ப$_3$ஹுத்வாத்து ஸங்க்$_2$யாதும் லகு$_4$விக்ரமா: ॥ (47)

ஸர்வே மஹாராஜ மஹாப்ரப$_4$ாவா:
ஸர்வே மஹாஶைலநிகாஶகாயா: ।
ஸர்வே ஸமர்த$_2$ா: ப்ருதி$_2$வீம் க்ஷணேந
கர்தும் ப்ரவித்$_4$வஸ்தவிகீர்ணஶைலாம் ॥ (48)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஸப்தவிம்ஶ: ஸர்க$_3$: ॥

அஷ்டாவிம்ஶ: ஸர்க$_3$:

மைந்த$_3$ரதி$_3$பராக்ரமாக்$_2$யாநம்

ஸாரணஸ்ய வச: ஶ்ருத்வா ராவணம் ராக்ஷஸாதி$_4$பம் ।
ப$_3$லமாதி$_3$ஶ்ய தத்ஸர்வம் ஶுகோ வாக்யமத$_2$ாப்$_3$ரவீத் । (1)

ஸ்தி$_2$தாந் பஶ்யஸி யாநேதாந் மத்தாநிவ மஹாத்$_3$விபாந் ।
ந்யக்$_3$ரோத$_4$ாநிவ க$_3$ாங்கே$_3$யாந் ஸாலாந் ஹைமவதாநிவ ॥ (2)

ஏதே து$_3$ஷ்ப்ரஸஹா ராஜந் ப$_3$லிந: காமரூபிண: ।
தை$_3$த்யதா$_3$நவஸங்காஶா யுத்$_3$தே$_4$ தே$_3$வபராக்ரமா: ॥ (3)

ஏஷாம் கோடிஸஹஸ்ராணி நவ பஞ்ச ச ஸப்த ச ।
தத$_2$ா ஶங்க$_2$ஸஹஸ்ராணி தத$_2$ா ப்$_3$ருந்த$_3$ஶதாநி ச ॥ (4)

ஏதே ஸுக்$_3$ரீவஸசிவா: கிஷ்கிந்த$_4$ாநிலயா: ஸதா$_3$ா ।
ஹரயோ தே$_3$வக$_3$ந்த$_4$ர்வைருத்பந்நா: காமரூபிண: ॥ (5)

யௌ தௌ பஶ்யஸி திஷ்ட$_2$ந்தௌ குமாரௌ தே$_3$வரூபிணௌ ।
மைந்த$_3$ஶ்ச த்$_3$விவித$_3$ஶ்சோபௌ$_4$ தாப்$_4$யாம் நாஸ்தி ஸமோ யுதி$_4$ ॥ (6)

ப்$_3$ரஹ்மணா ஸமநுக்ஞாதாவம்ருதப்ராஶிநாவுபௌ$_4$ ।
ஆஶம்ஸேதே யுத$_4$ா லங்காமேதௌ மர்தி$_3$துமோஜஸா ॥ (7)

யம் து பஶ்யஸி திஷ்ட$_2$ந்தம் ப்ரபி$_4$ந்நமிவ குஞ்ஜரம் ।
யோ ப$_3$லாத்க்ஷோப$_4$யேத்க்ருத்$_3$த$_4$: ஸமுத்$_3$ரமபி வாநர: ॥ (8)

ஏஷோऽபி$_4$க$_3$ந்தா லங்காயா வைதே$_3$ஹ்யாஸ்தவ ச ப்ரபே$_4$ா ।
ஏநம் பஶ்ய புரா த்$_3$ருஷ்டம் வாநரம் புநராக$_3$தம் ॥ (9)

ஜ்யேஷ்ட$_2$: கேஸரிண: புத்ரோ வாதாத்மஜ இதி ஶ்ருத: ।
ஹநுமாநிதி விக்$_2$யாதோ லங்கி$_4$தோ யேந ஸாக$_3$ர: ॥ (10)

இவர்களைத் தவிர, விந்திய மலையில் வசிப்பவர்களும், அரிய செயலையும் எளிதில் முடிக்க வல்லவர்களுமானவர்கள் கணக்கிலடங்காமல் இருப்பதால், அவர்களை எண்ணுவது சாத்தியமில்லை. (47)

மாமன்னரே! (இங்கு வந்து குழுமியுள்ள) எல்லோருமே பெரும் சக்தி படைத்தவர்கள்; பெரிய மலை போன்ற உடலை உடையவர்கள்; நொடிப்பொழுதில் மண்ணுலகிலுள்ள எல்லா மலைகளையும் தூள்தூளாக்கி, எல்லாப் பக்கங்களிலும் வீசியெறிய வல்லவர்கள்.'' (48)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்தியேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தெட்டு

வானரப் படையின் மொத்த எண்ணிக்கை

ஸாரணன் கூறியதைக் கேட்ட பின்னர், சுகன் அரக்கர் மன்னனான இராவணனுக்கு, அந்த (வானர)ப் படை முழுவதையும் சுட்டிக்காட்டிக் கூறினான்— (1)

''மன்னரே! மதங்கொண்ட பெரிய யானைகளைப் போலவும், கங்கைக் கரையில் வளரும் ஆலமரங்களைப் போலவும், இமயமலையிலுள்ள ஆச்சா மரங்களைப் போலவும் ஓங்கி நிற்கும் வானரர்களைப் பாருங்கள். இவர்கள், போரில் எவராலும் சகித்துக் கொள்ள முடியாதவர்கள்; விரும்பும் உருவங்களை எடுக்கக் கூடியவர்கள்; தைத்தியர்களுக்கும் தானவர்களுக்கும் நிகரான வல்லமை படைத்தவர்கள்; போர்க்களத்தில் தேவர்களுக்கு இணையான பராக்கிரமத்தைக் காட்டுபவர்கள். (2,3)

இவர்கள் எண்ணிக்கை இருபத்தோரு கோடிகள்; அநேக ஆயிரம் சங்கங்கள்; அநேக நூறு பிருந்தங்கள் ஆகும். (சங்கம், பிருந்தம் என்பன எண்ணிக்கைகள்.) (4)

இவர்கள், சுக்ரீவனுக்கு உதவி செய்பவர்கள்; எப்போதும் கிஷ்கிந்தையில் வாசம் செய்பவர்கள்; தேவ–கந்தர்வர்களின் அம்சங்களைக் கொண்டு பிறந்தவர்கள்; நினைத்த உருவம் எடுப்பவர்கள். (5)

தேவர்களைப் போன்ற அழகான உடலமைப்புக் கொண்ட, வாலிபர்களான இருவரை எதிரில் நிற்கக் காண்கிறீர்களே, அவர்கள்தான் மைந்தன், த்விவிதன் என்பவர்கள். போரில், அவ்விருவருக்கு இணையான வேறு எவரும் இல்லை. (6)

இவ்விருவரும் பிரும்மதேவர் அனுமதியுடன் அமுதம் பருகியவர்கள்; இவ்விருவரும், தாங்களே போர் செய்து, இலங்கையை அழிப்பதற்குக் திட்டமிட்டுள்ளார்கள். (7)

பிரபு! எதிரில் மதங்கொண்ட யானை போல் நிற்கிறானே, அவன் கோபங்கொண்டால் கடலையும் கலக்கி விடுவான்; இலங்கைக்கு வந்து தங்களையும் சீதையையும் பார்த்துப் பேசிவிட்டுச் சென்றானே, முன்னர் தாங்கள் பார்த்த அதே வானரன் திரும்ப வந்திருப்பதை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். (8,9)

இவன், கேஸரியின் மூத்த புதல்வன்; வாயுகுமாரன் என்று புகழ் பெற்றவன்; அனுமான் என்ற பெயரால் போற்றப்படுபவன். இவன்தான் பெருங்கடலைத் தாண்டி வந்தவன். (10)

காமரூபீ ஹரிஸ்ரேஷ்டே$_{2}$ா ப$_{3}$லரூபஸமந்வித: ।
அநிவார்யக$_{3}$திஸ்சைவ யத$_{2}$ா ஸததக$_{3}$: ப்ரபு$_{4}$: ॥ (11)

உத்$_{3}$யந்தம் ப$_{4}$ாஸ்கரம் த்$_{3}$ருஷ்ட்வா ப$_{3}$ால: கில பிபாஸித: ।
த்ரியோஜநஸஹஸ்ரம் து அத்$_{4}$வாநமவதீர்ய ஹி ॥ (12)

ஆதி$_{3}$த்யமாஹரிஷ்யாமி ந மே க்ஷுத்ப்ரதியாஸ்யதி ।
இதி ஸஞ்சிந்த்ய மநஸா புரைஷ ப$_{3}$லத$_{3}$ர்பித: ॥ (13)

அநாத்$_{4}$ருஷ்யதமம் தே$_{3}$வமபி தே$_{3}$வர்ஷித$_{3}$ாநவை: ।
அநாஸாத்$_{3}$யைவ பதிதோ ப$_{4}$ாஸ்கரோத$_{3}$யநே கி$_{3}$ரௌ ॥ (14)

பதிதஸ்ய கபேரஸ்ய ஹநுரேகா ஶிலாதலே ।
கிஞ்சித்$_{3}$பி$_{4}$ந்நா த்$_{3}$ருட$_{4}$ஹநோர்ஹநுமாநேஷ தேந வை ॥ (15)

ஸத்யமாக$_{3}$மயோகே$_{3}$ந மமைஷ விதி$_{3}$தோ ஹரி: ।
நாஸ்ய ஶக்யம் ப$_{3}$லம் ரூபம் ப்ரப$_{4}$ாவோ வாபி ப$_{4}$ாஷிதும் ॥
ஏஷ ஆஶம்ஸதே லங்காமேகோ மர்தி$_{3}$துமோஜஸா ॥ (16)

யேந ஜாஜ்வல்யதே ஸௌம்ய தூ$_{4}$மகேதுஸ்தவாத்$_{3}$ய வை ।
லங்காயாம் நிஹிதஶ்சாபி கத$_{2}$ம் ந ஸ்மரஸே கபிம் ॥ (17)

யஶ்சைஷோऽநந்தர: ஶூர: ஶ்யாம: பத்$_{3}$மநிபே$_{4}$க்ஷண: ।
இக்ஷ்வாகூணாமதிரதே$_{2}$ா லோகே விக்$_{2}$யாதபௌருஷ: ॥ (18)

யஸ்மிந்ந சலதே த$_{4}$ர்மோ யோ த$_{4}$ர்மாந்நாதிவர்ததே ।
யோ ப்$_{3}$ராஹ்மமஸ்த்ரம் வேத$_{3}$ாம்ஶ்ச வேத$_{3}$ வேத$_{3}$வித$_{3}$ாம் வர: ॥ (19)

யோ பி$_{4}$ந்த்$_{3}$யாத்$_{3}$க$_{3}$க$_{3}$நம் ப$_{3}$ாணை: பர்வதாநபி த$_{3}$ாரயேத் ।
யஸ்ய ம்ருத்யோரிவ க்ரோத$_{4}$: ஶக்ரஸ்யேவ பராக்ரம: ॥ (20)

யஸ்ய ப$_{4}$ார்யா ஜநஸ்த$_{2}$ாநாத்ஸீதா சாபஹ்ருதா த்வயா ।
ஸ ஏஷ ராமஸ்த்வாம் யோத்$_{3}$து$_{4}$ம் ராஜந் ஸமபி$_{4}$வர்ததே ॥ (21)

யஸ்யைஷ த$_{3}$க்ஷிணே பார்ஶ்வே ஶுத்$_{3}$த$_{4}$ஜாம்பூ$_{3}$நத$_{3}$ப்ரப$_{4}$: ।
விஶாலவக்ஷாஸ்தாம்ராக்ஷோ நீலகுஞ்சிதமூர்த$_{4}$ஜ: ॥ (22)

ஏஷோऽஸ்ய லக்ஷ்மணோ நாம ப்$_{4}$ராதா ப்ராணஸம: ப்ரிய: ।
நயே யுத்$_{3}$தே$_{4}$ ச குஶல: ஸர்வஶாஸ்த்ரவிஶாரத$_{3}$: ॥ (23)

அமர்ஷீ து$_{3}$ர்ஜயோ ஜேதா விக்ராந்தோ பு$_{3}$த்$_{3}$தி$_{4}$மாந் ப$_{3}$லீ ।
ராமஸ்ய த$_{3}$க்ஷிணோ ப$_{3}$ாஹுர்நித்யம் ப்ராணோ ப$_{3}$ஹிஶ்சர: ॥ (24)

ந ஹ்யேஷ ராக$_{4}$வஸ்யார்தே$_{2}$ ஜீவிதம் பரிரக்ஷதி ।
ஏஷைவாஶம்ஸதே யுத்$_{3}$தே$_{4}$ நிஹந்தும் ஸர்வராக்ஷஸாந் ॥ (25)

யஸ்து ஸவ்யமஸௌ பக்ஷம் ராமஸ்யாஶ்ரித்ய திஷ்ட$_{2}$தி ।
ரக்ஷோக$_{3}$ணபரிக்ஷிப்தோ ராஜா ஹ்யேஷ விபீ$_{4}$ஷண: ॥ (26)

உடலாற்றலும் அழகிய உடலமைப்பும் அமையப் பெற்றவன்; விரும்பும் உருவம் எடுக்கக் கூடியவன்; பகவானாகிய வாயுவைப் போலவே, எங்கும் தடைபடாமல் செல்லக்கூடியவன். (11)

முன்னொரு காலத்தில், இவன் சிறு குழந்தையாக இருந்தபோது (பசி ஏற்பட்டு) பால் பருக விரும்பினான். (பால் இல்லாததால், பழமாவது கிடைக்குமா? என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, கீழ்வானில், செக்கச் சிவந்த கனியைப் போல் விளங்கிய) உதயசூரியனைப் பார்த்து, 'நான் சூரியனை (செம்பழத்தை)ப் பறித்து வருகிறேன்; இதை உண்டால், என் பசி போய்விடும்' என்று நினைத்து, பலத்தினால் செருக்கடைந்து, வான்வெளியில் மூவாயிரம் யோஜனை உயரம் பாய்ந்து சென்றான். (12,13)

தேவ–ரிஷி–தானவர்களாலும் சிறிதளவுகூட நெருங்க முடியாத சூரியதேவனை அடையாமலேயே (சூரியன் உதயமாகும்) உதயகிரியில் விழுந்தான். உறுதியான கன்னங்களைக் கொண்ட இந்த வானரன், ஒரு பாறையின் மேல் விழுந்ததால், ஒரு கன்னம் சற்று முறிந்தது. அது முதற்கொண்டு இவன் அனுமான் என்ற பெயர் பெற்றான். (14,15)

நம்பத் தகுந்த பெரியோர்களுடன் எனக்கு ஏற்பட்ட பரிச்சயத்தால், இந்த வானரனைப் பற்றிய உண்மைகளை அறிய முடிந்தது. இவனுடைய பலம், உடலமைப்பு, மகிமை ஆகியவற்றைப் பற்றி யாராலும் முழுமையாகக் கூற முடியாது. சீர்மதியாளரே! எந்த வானரனின் வாலில், தங்களால் நெருப்பு வைக்கும்படி ஆணையிடப்பட்டதோ, எந்த வானரன், தன் வாலில் வைக்கப்பட்ட தீயைக் கொண்டு இலங்கையை, இப்போதும்கூட எரிந்து கொண்டிருக்கும்படியாகக் கொளுத்தி நாசம் செய்ததோ, அந்த வானரத்தைத் தங்களால் மறக்க முடியுமா என்ன? (16,17)

அந்த வானரனுக்கு அருகில் வீற்றிருக்கும் அந்தக் கமலக்கண்ணன்; சியாமள வண்ணம் கொண்டவர்; சூரர்; இக்ஷ்வாகு குலத்தில் தோன்றியுள்ள அதிரதர் (பராக்கிரமம் மிக்கவர்); உலகம் முழுவதும் கொண்டாடும் ஆண்மையாளர். (18)

எவரை விட்டு அறம் ஒருபோதும் அகன்றதில்லையோ; எவர் ஒருபோதும் தருமம் தவறி நடந்ததில்லையோ; எவர் பிரும்மாஸ்திரம் (முதலான போர்ப்படைகளையும்), (அறிவுப் பெட்டகமான) வேதங்கள் அறிந்தவரோ; எவர் வேதவித்தகர்களில் முதலிடத்தை வகிக்கிறாரோ; எவர், தன்னுடைய பாணங்களால் ஆகாயத்தைத் துளைத்தும், மலைகளைப் பிளந்தும் விடுவாரோ; எவருடைய கோபம் யமனுக்கு நிகரானதோ; எவருடைய பராக்கிரமம் இந்திரனுக்கு இணையானதோ; மன்னரே! எவருடைய மனைவி சீதையைத் தாங்கள் ஜனஸ்தானத்திலிருந்து திருடிக் கொண்டு வந்தீர்களோ, இவர்தான் அந்த இராமன். தங்களுடன் போர் புரிவதற்காக வந்திருக்கிறார். (19–21)

இவருடைய வலது புறத்தில், பத்தரை மாற்றுத் தங்கம் போல் ஒளி வீசுபவனும், விசாலமான மார்பை உடையவனும், செவ்வரி படர்ந்த கண்களுடையவனும், கருத்துச் சுருள் சுருளான கேசத்துடனும் நிற்கிறானே, அவன்தான் லட்சுமணன். இராமனுக்கு (இளைய) சகோதரன்; உயிர் போன்றவன்; குறையாத அன்புடையவன்; நீதி நூல் மற்றும் போர்க்கலையிலும் வல்லவன்; எல்லா சாத்திரங்களிலும் தேர்ச்சி பெற்றவன். (22,23)

இவன், எதிரிகளைப் பூண்டோடு அழிப்பவன்; எவராலும் வெல்ல முடியாதவன்; எப்போதும் வெற்றி கொள்பவன்; பேராண்மை உடையவன்; அறிவாளன்; உடல் பலம் மிக்கவன்; எந்த நிலையிலும் இராமனுக்கு வலது கை போன்றவன்; (இராமனின் உடலுக்கு) வெளியில் உலவும் உயிர். இவன் இராமனின் பொருட்டு, தன் உயிரையும் பொருட்படுத்தாதவன். இவன் (தனியாகவே) அரக்கர் எல்லோரையும் போரில் கொல்வதற்குத் திட்டமிட்டிருக்கிறான். (24,25)

இராமனின் இடது புறத்தில் நிற்பவர் அரக்கர்களால் (தங்களால்) கைவிடப்பட்டவர்; விபீஷண மன்னர் என்பது தங்களால் கண்டு கொள்ள முடியும்தானே? (26)

ஸ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபி4ஷேசித: ।
த்வாமேவ ப்ரதிஸம்ரப்3தோ4 யுத்3தா4யைஷோऽபி4வர்ததே ॥ (27)

யம் து பஶ்யஸி திஷ்ட2ந்தம் மத்4யே கி3ரிமிவாசலம் ।
ஸர்வஶாகா2ம்ருகே3ந்த்3ராணாம் ப4ர்தாரமபராஜிதம் ॥ (28)

தேஜஸா யஶஸா பு3த்3த்4யா க்ஞாநேநாபி4ஜநேந ச ।
ய: கபீநதிபு3ப்4ராஜ ஹிமவாநிவ பர்வதாந் ॥ (29)

கிஷ்கிந்தா4ம் ய: ஸமத்4யாஸ்தே கு3ஹாம் ஸக3ஹநத்3ருமாம் ।
து3ர்கா3ம் பர்வதது3ர்க3ஸ்தா2ம் ப்ரதா4நை: ஸஹ யூத2பை: ॥ (30)

யஸ்யைஷா காஞ்சநீ மாலா ஶோப4தே ஶதபுஷ்கரா ।
காந்தா தே3வமநுஷ்யாணாம் யஸ்யாம் லக்ஷ்மீ: ப்ரதிஷ்டி2தா ॥ (31)

ஏதாம் ச மாலாம் தாராம் ச கபிராஜ்யம் ச ஶாஶ்வதம் ।
ஸுக்3ரீவோ வாலிநம் ஹத்வா ராமேண ப்ரதிபாதி3த: ॥ (32)

ஶதம் ஶதஸஹஸ்ராணாம் கோடிமாஹுர்மநீஷிண: ।
ஶதம் கோடிஸஹஸ்ராணாம் ஶங்க2 இத்யபி4தீ4யதே ॥ (33)

ஶதம் ஶங்க2ஸஹஸ்ராணாம் மஹாஶங்க2 இதி ஸ்ம்ருதம் ।
மஹாஶங்க2ஸஹஸ்ராணாம் ஶதம் ப்3ருந்த3மிதி ஸ்ம்ருதம் ॥ (34)

ஶதம் ப்3ருந்த3ஸஹஸ்ராணாம் மஹாப்3ருந்த3மிதி ஸ்ம்ருதம் ।
மஹாப்3ருந்த3ஸஹஸ்ராணாம் ஶதம் பத்3மமிதி ஸ்ம்ருதம் ॥ (35)

ஶதம் பத்3மஸஹஸ்ராணாம் மஹாபத்3மமிதி ஸ்ம்ருதம் ।
மஹாபத்3மஸஹஸ்ராணாம் ஶதம் க2ர்வமிஹோச்யதே ॥ (36)

ஶதம் க2ர்வஸஹஸ்ராணாம் மஹாக2ர்வமிதி ஸ்ம்ருதம் ।
மஹாக2ர்வஸஹஸ்ராணாம் ஸமுத்3ரமபி4தீ4யதே ॥ (37)

ஶதம் ஸமுத்3ரஸாஹஸ்ரமோக4 இத்யபி4தீ4யதே ।
ஶதமோக4ஸஹஸ்ராணாம் மஹௌக4 இதி விஶ்ருத: ॥ (38)

ஏவம் கோடிஸஹஸ்ரேண ஶங்கா2நாம் ச ஶதேந ச ।
மஹாஶங்க2ஸஹஸ்ரேண ததா2 ப்3ருந்த3ஶதேந ச ॥ (39)

மஹாப்3ருந்த3ஸஹஸ்ரேண ததா2 பத்3மஶதேந ச ।
மஹாபத்3மஸஹஸ்ரேண ததா2 க2ர்வஶதேந ச ॥ (40)

ஸமுத்3ரேண ஶதேநைவ மஹௌகே4ந ததை2வ ச ।
ஏஷ கோடிமஹௌகே4ந ஸமுத்3ரஸத்3ருஶேந ச ॥ (41)

விபீ4ஷணேந ஸசிவை ராக்ஷஸை: பரிவாரித: ।
ஸுக்3ரீவோ வாநரேந்த்3ரஸ்த்வாம் யுத்3தா4ர்த2மபி4வர்ததே ॥
மஹாப3லவ்ருதோ நித்யம் மஹாப3லபராக்ரம: ॥ (42)

மகாமகிமை பொருந்திய பேரரசரான இராமனால், இலங்கை மன்னனாக பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டவர்; மிகவும் கோபத்தோடுகூட, இவரும் தங்களுடன் போர் புரிய வந்திருக்கிறார். (27)

எல்லா வானரர்களுக்கும் நடுவே பெருமலை போல் உறுதியாக நிற்கும் யாரைப் பார்க்கிறீர்களோ, அவன்தான், அனைத்து வானரர்களுக்கும் தனிப் பெருந்தலைவன்; எவராலும் வெல்ல முடியாதவன். (28)

மலைகளுக்குள் எவ்வாறு இமயமலை உன்னதமானதோ, அவ்வாறே, எவன் தன்னுடைய ஆற்றல், புகழ், உலகாயத நுண்ணறிவு, சாஸ்திர ஞானம், சிறப்பான குடிப்பிறப்பு ஆகியவற்றால் எல்லா வானரர்களையும் மிஞ்சி நிற்கிறானோ; (29)

எவன், அடர்ந்த மரங்கள் சூழ்ந்ததும் உட்புக முடியாததும் மலையரண் உடையதுமான கிஷ்கிந்தை என்னும் குகையில் முக்கியமான படைத்தலைவர்களுடன் வசிக்கிறானோ; (30)

எவனுடைய கழுத்தில் பெரும்பேற்றை நிச்சயமாக அருள்வதும் நூறு பொற்றாமரைகளால் ஆனதுமான மாலை அழகு சேர்த்துக் கொண்டிருக்கிறதோ; எதனை அடைவதற்குத் தேவர்களும் மனுஷ்யர்களும் பேராவலுடன் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ; (31)

அப்படிப்பட்ட அந்த மாலையும், (வாலியின் மனைவியான) தாரையும், நித்யமான வானரப் பேரரசும், வாலியைக் கொன்று, இராமனால் எவனுக்குக் கொடுக்கப்பட்டதோ, அந்த சுக்ரீவன் (அதோ, நிற்கிறான்!) (32)

கணித அறிஞர்கள், நூறு லட்சத்தை ஒரு கோடி என்று சொல்கிறார்கள். நூறாயிரம் கோடிகள், ஒரு சங்கம் என்று சொல்லப்படுகிறது. (33)

நூறாயிரம் சங்கங்கள், ஒரு மகாசங்கம்; நூறாயிரம் மகாசங்கங்கள், ஒரு பிருந்தம் எனப்படும். (34)

நூறாயிரம் பிருந்தங்கள் சேர்ந்தது, ஒரு மகாபிருந்தம்; நூறாயிரம் மகாபிருந்தங்களின் கூட்டு, ஒரு பத்மம் ஆகும். (35)

நூறாயிரம் பத்மங்களின் கூட்டம், ஒரு மகாபத்மம்; நூறாயிரம் மகாபத்மங்கள் சேர்ந்தது, ஒரு கர்வம். (36)

நூறாயிரம் கர்வங்கள் கொண்டது, ஒரு மகாகர்வம்; நூறாயிரம் மகாகர்வம், ஒரு சமுத்ரம் எனப்படுகிறது. (37)

நூறாயிரம் சமுத்ரம், ஓர் ஓகம்; நூறாயிரம் ஓகங்கள் ஒரு மகா ஓகம். (38)

எப்போதும் பெரும் படையால் சூழப்பட்டிருக்கும் வானர மன்னன், பேராற்றலும் போராற்றலும் கொண்ட சுக்ரீவன், சங்கங்களின் நூறு ஆயிரங்கோடி, ஆயிரம் மகாசங்கம், நூறு பிருந்தம், ஆயிரம் மகாபிருந்தம், நூறு பத்மம், ஆயிரம் மகாபத்மம், நூறு கர்வம், நூறு சமுத்ரம், நூறு மகா ஓகம், சமுத்ரம் என்ற எண்ணிக்கையின்படி, நூறு கோடி மகா ஓகம் – இந்த எல்லை காண முடியாத மாபெரும் படைவீரர்களுடனும், அரக்க ஆலோசகர்கள் புடைசூழ நிற்கும் விபீஷணனுடனும், தங்களைப் போருக்கு அழைக்கிறான். (39–42)

இமாம் மஹாராஜ ஸமீக்ஷ்ய வாஹிநீ–
முபஸ்தி$_2$தாம் ப்ரஜ்வலிதக்$_3$ரஹோபமாம் ।
தத: ப்ரயத்ந: பரமோ விதீ$_4$யதாம்
யதா$_2$ ஜய: ஸ்யாந்ந பரை: பராஜய: ॥ (43)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டாவிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஏகோநத்ரிம்ஶ: ஸர்க$_3$:

ஶார்தூ$_3$லாதி$_3$சாரப்ரேஷணம்

ஶுகேந து ஸமாக்$_2$யாதாம்ஸ்தாந் த்$_3$ருஷ்ட்வா ஹரியூத$_2$பாந் ।
லக்ஷ்மணம் ச மஹாவீர்யம் பு$_4$ஜம் ராமஸ்ய த$_3$க்ஷிணம் ॥ (1)

ஸமீபஸ்த$_2$ம் ச ராமஸ்ய ப்$_4$ராதரம் ஸ்வம் விபீ$_4$ஷணம் ।
ஸர்வவாநரராஜம் ச ஸுக்$_3$ரீவம் பீ$_4$மவிக்ரமம் ॥ (2)

க$_3$ஜம் க$_3$வாக்ஷம் க$_3$வயம் மைந்த$_3$ம் த்$_3$விவித$_3$மேவ ச ।
அங்க$_3$த$_3$ம் சைவ ப$_3$லிநம் வஜ்ரஹஸ்தாத்மஜாத்மஜம் ॥ (3)

ஹநூமந்தம் ச விக்ராந்தம் ஜாம்ப$_3$வந்தம் ச து$_3$ர்ஜயம் ।
ஸுஷேணம் குமுத$_3$ம் நீலம் நளம் ச ப்லவக$_3$ர்ஷப$_4$ம் ॥ (4)

கிஞ்சித$_3$ாவிக்$_3$நஹ்ருத$_3$யோ ஜாதக்ரோத$_4$ஶ்ச ராவண: ।
ப$_4$ர்த்ஸயாமாஸ தௌ வீரௌ கதா$_2$ந்தே ஶுகஸாரணௌ ॥ (5)

அதோ$_4$முகௌ$_2$ தௌ ப்ரணதாவப்$_3$ரவீச்சு$_2$கஸாரணௌ ।
ரோஷக$_3$த்$_3$க$_3$த$_3$யா வாசா ஸம்ரப்$_3$த$_4$: பருஷம் வச: ॥ (6)

ந தாவத்ஸத்$_3$ருஶம் நாம ஸசிவைருபஜீவிபி$_4$: ।
விப்ரியம் ந்ருபதேர்வக்தும் நிக்$_3$ரஹப்ரக்$_3$ரஹே ப்ரபோ$_4$: ॥ (7)

ரிபூணாம் ப்ரதிகூலாநாம் யுத்$_3$தா$_4$ர்த$_2$மபி$_4$வர்ததாம் ।
உபா$_4$ப்$_4$யாம் ஸத்$_3$ருஶம் நாம வக்துமப்ரஸ்தவே ஸ்தவம் ॥ (8)

ஆசார்யா கு$_3$ரவோ வ்ருத்$_3$தா$_4$ வ்ருதா$_2$ வாம் பர்யுபாஸிதா: ।
ஸாரம் யத்$_3$ராஜஶாஸ்த்ராணாமநுஜீவ்யம் ந க்$_3$ருஹ்யதே ॥ (9)

க்$_3$ருஹீதோ வா ந விக்ஞாதோ பா$_4$ரோ க்ஞாநஸ்ய வோஹ்யதே ।
ஈத்$_3$ருஶை: ஸசிவைர்யுக்தோ மூர்கை$_2$ர்தி$_3$ஷ்ட்யா த$_4$ராம்யஹம் ॥ (10)

கிம் நு ம்ருத்யோர்ப$_4$யம் நாஸ்தி வக்தும் மாம் பருஷம் வச: ।
யஸ்ய மே ஶாஸதோ ஜிஹ்வா ப்ரயச்ச$_2$தி ஶுபா$_4$ஶுப$_4$ம் ॥ (11)

மாமன்னரே! கோபத் தீயினால் கொழுந்துவிட்டெரியும் துஷ்டக் கிரகத்தைப் போல் வந்து எதிரே நிற்கும் பெரும் படையைப் பாருங்கள். பின்னர், எந்த வழியைப் பின்பற்றினால் தங்களுக்கு வெற்றி கிடைக்குமோ, எதிரிகளால் தோற்கடிக்கப்பட மாட்டீர்களோ, அத்தகைய முயற்சியை மேற்கொள்வீர்களாக.'' (43)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்பது

ஒற்றர்களை அனுப்புதல்!

சுகன் குறிப்பிட்டுச் சொன்ன அந்த வானரப் படைத் தலைவர்களையும், இராமபிரானுடைய வலது கையாகிய மகாவீரம் படைத்த லட்சுமணனையும், இராமனுக்கு அருகில் நிற்கும் தன்னுடைய சொந்த சகோதரன் விபீஷணனையும், பயங்கர ஆற்றலுடையவனும் எல்லா வானரர்களுக்கும் மன்னனுமான சுக்ரீவனையும், கஜன், கவாக்ஷன், கவயன், மைந்தன், த்விவிதன், இந்திரனின் பேரனும் பலசாலியுமான அங்கதன், பேராண்மை கொண்ட அனுமான், வெல்லவே முடியாத ஜாம்பவான், சுஷேணன், குமுதன், நீலன், வானரோத்தமனான நளன் ஆகியோரைக் கண்டதும், இராவணன் சற்றே நெஞ்சம் கலங்கியவனாக, கோபம் கொண்டு, அவர்கள் (சுக–ஸாரணர்கள்) சொல்லி முடித்ததும் வீரர்களான சுக–ஸாரணர்களை அச்சுறுத்தினான். (1–5)

(உள்ளூர நடுங்கிக் கொண்டு) தலைகுனிந்து, பணிவுடன் நிற்கும் சுக–ஸாரணர்களைப் பார்த்து, கோபத்தால் சொற்கள் குழற, கடுமையான (பின்வரும்) சொற்களைக் கூறினான், இராவணன். (6)

''ஒரு மன்னன், ஒருவனைத் தண்டிப்பதற்கும் பரிசு கொடுத்துப் பாராட்டுவதற்கும் உரிமை உடையவன். அவனை அண்டிப் பிழைக்கும் ஆலோசகர்கள், அவனுக்குப் பிடிக்காத விஷயத்தைக் கூறுவது முற்றிலும் பொருந்தாத செயல். (7)

(நமக்கு) எதிராக செயல்படுபவர்களும், போர் தொடுப்பதற்காக வந்திருப்பவர்களுமான எதிரிகளின் புகழைத் தேவையில்லாத இந்த நேரத்தில், நீங்கள் இருவரும் கூறுவது பொருத்தமாகவே இல்லை. (8)

ஆசார்யர்கள், மகான்கள், வயது–ஞானம்–அனுபவங்களால் முதிர்ந்தவர்கள் ஆகியோரை நீங்கள் வழிபட்டுக் கற்றுக் கொண்டதெல்லாம் வீணாகப் போய்விட்டன. 'தன் தலைவனின் மனங்கோணாது நடந்து கொள்வது' என்ற அரசநீதியின் சாரமான கொள்கை உங்களால் கற்றுக் கொள்ளப்படவில்லை. (9)

நீங்கள் செவிகளால் கேட்ட கல்வியை, மனத்தில் பதிவு செய்து கொள்ளவில்லை போலும்! 'ஏராளமாகப் படித்திருக்கிறேன்!' என்ற வெற்றுச் சுமையை மட்டும் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட அறிவிலிகளான அமைச்சர்களை வைத்துக் கொண்டு, நான் அரசு பரிபாலனம் செய்து வருவது, ஏதோ அதிர்ஷ்டவசத்தால்தான். (10)

என் நாவிலிருந்து வெளிப்படும் சொல், ஒருவனுக்கு நன்மையை அல்லது தீமையைத் தரவல்லது. அப்படிப்பட்ட என்னிடமே கடுமையான சொற்களைக் கூறுகிறீர்களே? உங்களுக்கு யமனிடம் பயமில்லையா? ('கொல்லுங்கள்' என்று நான் சொன்னால் போதும்! நீங்கள் கொல்லப்படுவீர்களே?) (11)

அப்யேவ த$_3$ஹநம் ஸ்ப்ருஷ்ட்வா வநே திஷ்ட$_2$ந்தி பாத$_3$பா: ।
ராஜதே$_3$ாஷபராம்ருஷ்டாஸ்திஷ்ட$_2$ந்தே நாபராதி$_4$ந: ॥ (12)

ஹந்யாமஹம் த்விமௌ பாபௌ ஶத்ருபக்ஷப்ரஶம்ஸகௌ ।
யதி$_3$ பூர்வோபகாரைர்மே ந க்ரோதே$_4$ா ம்ருது$_3$தாம் வ்ரஜேத் ॥ (13)

அபத்$_4$வம்ஸத க$_3$ச்ச$_2$த்$_4$வம் ஸந்நிகர்ஷாதி$_3$தோ மம ।
ந ஹி வாம் ஹந்துமிச்ச$_2$ாமி ஸ்ராம்யுபக்ருதாநி வாம் ॥
ஹதாவேவ க்ருதக்$_4$நௌ தௌ மயி ஸ்நேஹபராங்முகெ$_2$ள ॥ (14)

ஏவமுக்தௌ து ஸவ்ரீடெ$_3$ள தாவுபெ$_4$ள ஶுகஸாரணௌ ।
ராவணம் ஜயஶப்$_3$தேந ப்ரதிநந்த்$_3$யாபி$_4$நி:ஸ்ருதௌ ॥ (15)

அப்$_3$ரவீச்ச த$_3$ஶக்$_3$ரீவ: ஸமீபஸ்த$_2$ம் மஹோத$_3$ரம் ।
உபஸ்த$_2$ாபய மே ஶீக்$_4$ரம் சாராந்நீதிவிஶாரத$_3$ாந் ॥
மஹோத$_3$ரஸ்ததே$_2$ாக்தஸ்து ஶீக்$_4$ரமாஜ்ஞாபயச்சராந் ॥ (16)

ததஶ்சாரா: ஸந்த்வரிதா: ப்ராப்தா: பார்தி$_2$வஶாஸநாத் ।
உபஸ்தி$_2$தா: ப்ராஞ்ஜலயோ வர்த$_4$யித்வா ஜயாஶிஷா ॥ (17)

தாநப்$_3$ரவீத்ததோ வாக்யம் ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
சாராந் ப்ரத்யாயிதாந் ஶூராந் ப$_4$க்தாந் விக$_3$தஸாத்$_4$வஸாந் ॥ (18)

இதோ க$_3$ச்ச$_2$த ராமஸ்ய வ்யவஸாயம் பரீக்ஷத$_2$ ।
மந்த்ரேஷ்வப்$_4$யந்தரா யேऽஸ்ய ப்ரீத்யா தேந ஸமாக$_3$தா: ॥ (19)

கத$_2$ம் ஸ்வபிதி ஜாக$_3$ர்தி கிமந்யச்ச கரிஷ்யதி ।
விஜ்ஞாய நிபுணம் ஸர்வமாக$_3$ந்தவ்யமஶேஷத: ॥ (20)

சாரேண விதி$_3$த: ஶத்ரு: பண்டி$_3$தைர்வஸுத$_4$ாதி$_4$பை: ।
யுத்$_3$தே$_4$ ஸ்வல்பேந யத்நேந ஸமாஸாத்$_3$ய நிரஸ்யதே ॥ (21)

சாராஸ்து தே ததே$_2$த்யுக்த்வா ப்ரஹ்ருஷ்டா ராக்ஷஸேஶ்வரம் ।
ஶார்தூ$_3$லமக்$_3$ரத: க்ருத்வா ததஶ்சக்ரு: ப்ரத$_3$க்ஷிணம் ॥ (22)

ததஸ்தே தம் மஹாத்மாநம் சாரா ராக்ஷஸஸத்தமம் ।
க்ருத்வா ப்ரத$_3$க்ஷிணம் ஜக்$_3$முர்யத்ர ராம: ஸலக்ஷ்மண: ॥ (23)

தே ஸுவேலஸ்ய ஶைலஸ்ய ஸமீபே ராமலக்ஷ்மணௌ ।
ப்ரச்ச$_2$ந்நா த$_3$த்$_3$ருஶுர்க$_3$த்வா ஸஸுக்$_3$ரீவவிபீ$_4$ஷணௌ ॥ (24)

ப்ரேக்ஷமாணாஶ்சமூம் தாம் ச ப$_3$பூ$_4$வுர்ப$_4$யவிக்லவா: ।
தே து த$_4$ர்மாத்மநா த்$_3$ருஷ்டா ராக்ஷஸேந்த்$_3$ரேண ராக்ஷஸா: ॥ (25)

காட்டுத் தீயால் ஓரளவு எரிக்கப்பட்ட மரங்கள்கூட காட்டில் உயிரோடு இருக்கின்றன. ஆனால், அரசனுக்கு வஞ்சகம் செய்த குற்றவாளிகள் எப்படியும் உயிருடன் இருக்க முடியாது. முன்னர் நீங்கள் செய்திருக்கும் சேவைகளை நினைவுகூர்ந்ததால், என் சினம் அடங்கத் தொடங்கியது. இல்லாவிட்டால், எதிரிகளின் கூட்டத்தைப் புகழும் பாவிகளான உங்கள் இருவரையும், இப்போதே நான் கொன்றிருப்பேன். (12,13)

நீங்கள் செய்த சேவைகளை நினைவில் வைத்திருப்பதால் உங்களைக் கொல்ல விரும்பவில்லை. இங்கிருந்து, என் எதிரில் நில்லாமல் எங்கேனும் சென்று கெட்டொழியுங்கள். என்னிடம் செய்நன்றி கொன்ற நீங்கள் அன்பை மறந்து விட்டீர்கள். அதனால், என்னைப் பொறுத்தவரையில் (நீங்கள்) மரித்துப் போனவர்களே. (14)

இவ்வாறு இராவணன் கூறியவுடன், சுக–ஸாரணர்களாகிய அவ்விருவரும் மிகவும் வெட்கமடைந்து, 'மன்னர் வாழ்க!' என்று வாழ்த்திவிட்டு, அவ்விடத்திலிருந்து வெளியேறினார்கள். (15)

இராவணன், அப்போது அவன் அருகிலிருந்த மகோதரனைப் பார்த்து, 'நீதி சாஸ்திரத்தில் வல்லுநர்களான ஒற்றர்களை உடனே வரச் செய்வாயாக!' என்று ஆணையிட்டான். மகோதரனும், அவ்வாறே, அப்போதே ஒற்றர்களைக் கொண்டுவரச் செய்தான். (16)

அரசர் உத்தரவு என்பதால், மிக விரைவில் வந்து சேர்ந்த ஒற்றர்கள், கைகளைக் கூப்பிக் கொண்டு, 'மன்னர் வெல்க!' என்று வாழ்த்துக் கூறிவிட்டு, அடுத்த ஆணையை எதிர்பார்த்து நின்றார்கள். (17)

நம்பத் தகுந்தவர்களும், சூரர்களும், தலைவரிடம் நிறைந்த அன்புடையவர்களும், எதைக் கண்டும் அஞ்சாதவர்களுமான அந்த ஒற்றர்களை நோக்கி, அரக்க மன்னன் (இராவணன்) பின்வருமாறு கூறினான்— (18)

''இங்கிருந்து சென்று, இராமனுடைய முயற்சிகளையும், அமைச்சர்களில் அவனோடு இணக்கமாக இருந்து அந்தரங்க ஆலோசனைகளில் பங்கு கொள்பவர்களையும் கண்காணியுங்கள். (19)

இராமன் எப்படித் தூங்குகிறான்? எப்போது விழித்துக் கொள்கிறான்? வேறு என்ன காரியங்கள் செய்கிறான்? – ஆகிய எல்லாவற்றையும் நுட்பமாக அறிந்து கொண்டு திரும்பி வர வேண்டும். (20)

ஒற்றர்கள் மூலம் எதிரியின் நடவடிக்கைகளையும் திட்டங்களையும் அறிந்து கொள்ளும் அறிவாளியான மன்னன், போர் நேரிடும்போது, குறைந்த அளவு முயற்சியினாலேயே எதிரியைத் தோற்கடித்து விடுகிறான்.'' (21)

பெருமகிழ்ச்சியடைந்த அந்த ஒற்றர்கள், 'அவ்வாறே செய்கிறோம்' என்று அரக்க மன்னனிடம் கூறிவிட்டு, சார்தூலன் முன்னதாகச் செல்ல, (இராவணனை) வலம் வந்து மரியாதை காட்டினார்கள். (22)

அரக்கர் தலைவனும் பேராற்றல் உடையவனுமான அரசனை வலம் வந்து, பின்னர், இராம–லட்சுமணர்கள் இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். (23)

தங்களை மறைத்துக் கொண்டிருந்த (மாறுவேஷம் போட்டுக் கொண்டிருந்த) அவர்கள், சுவேல மலையின் அருகிலிருந்தபடி சுக்ரீவ–விபீஷணர்களோடு கூடிய இராம–லட்சுமணர்களைக் கண்டார்கள். (24)

எல்லை காணமுடியாத அந்த வானரப்படையைக் கண்டு, அச்சத்தால் கலங்கி நின்றார்கள். அப்போது, அரக்கர்களான அவர்களை, அறநெஞ்சம் கொண்ட சிறந்த அரக்கனால் (விபீஷணனால்) பார்க்கப்பட்டார்கள். (25)

விபீ4ஷணேந தத்ரஸ்த2ா நிக்3ருஹீதா யத்3ருச்ச2யா ।
ஶார்தூ3லோ க்3ராஹிதஸ்த்வேக: பாபோऽயமிதி ராக்ஷஸ: ॥ (26)

மோசித: ஸோऽபி ராமேண வத்4யமாந: ப்லவங்க3மை: ।
ஆந்ருஶம்ஸ்யேந ராமஸ்ய மோசிதா ராக்ஷஸா: பரே ॥ (27)

வாநரைரர்தி3தாஸ்தே து விக்ராந்தைர்லகு4விக்ரமை: ।
புநர்லங்காமநுப்ராப்தா: ஶ்வஸந்தோ நஷ்டசேதஸ: ॥ (28)

ததோ த3ஶக்3ரீவமுபஸ்தி2தாஸ்து தே
சாரா ப3ஹிர்நித்யசரா நிஶாசரா: ।
கி3ரே: ஸுவேலஸ்ய ஸமீபவாஸிநம்
ந்யவேத3யந் ராமப3லம் மஹாப3லா: ॥ (29)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகோநத்ரிம்ஶ: ஸர்க3: ॥

த்ரிம்ஶ: ஸர்க3:

வாநரப3லஸங்க்2யாநம்

ததஸ்தமக்ஷோப்4யப3லம் லங்காதி4பதயே சரா: ।
ஸுவேலே ராக4வம் ஶைலே நிவிஷ்டம் ப்ரத்யவேத3யந் ॥ (1)

சாராணாம் ராவண: ஶ்ருத்வா ப்ராப்தம் ராமம் மஹாப3லம் ।
ஜாதோத்3வேகோ3ऽப4வத்கிஞ்சிச்ச2ார்தூ3லம் வாக்யமப்3ரவீத் ॥ (2)

அயத2ாவச்ச தே வர்ணோ தீ3நஶ்சாஸி நிஶாசர ।
நாஸி கச்சித3மித்ராணாம் க்ருத்3த4ாநாம் வஶமாக3த: ॥ (3)

இதி தேநாநுஶிஷ்டஸ்து வாசம் மந்த3முதீ3ரயத் ।
தத3ா ராக்ஷஸஶார்தூ3லம் ஶார்தூ3லோ ப4யவிஹ்வல: ॥ (4)

ந தே சாரயிதும் ஶக்யா ராஜந் வாநரபுங்க3வா: ।
விக்ராந்தா ப3லவந்தஶ்ச ராக4வேண ச ரக்ஷிதா: ॥ (5)

நாபி ஸம்ப4ாஷிதும் ஶக்யா: ஸம்ப்ரஶ்நோऽத்ர ந லப்4யதே ।
ஸர்வதோ ரக்ஷ்யதே பந்த2ா வாநரை: பர்வதோபமை: ॥ (6)

ப்ரவிஷ்டமாத்ரே க்ஞாதோऽஹம் ப3லே தஸ்மிந்நசாரிதே ।
ப3லாத்3க்3ருஹீதோ ரக்ஷோபி4ர்ப3ஹுதா4ऽஸ்மி விசாலித: ॥ (7)

ஜாநுபி4ர்முஷ்டிபி4ர்த3ந்தைஸ்தலைஶ்சாபி4ஹதோ ப்4ருஶம் ।
பரிணீதோऽஸ்மி ஹரிபி4ர்ப3லவத்3பி4ரமர்ஷணை: ॥ (8)

அங்கு வந்திருந்த ஒற்றர்கள் தற்செயலாக விபீஷணனால் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்களில் சார்தூலன் என்ற ஓர் அரக்கனை மட்டும், 'இவன் பாவி' என்று சொல்லி, வானரர்கள் துன்புறுத்தினார்கள். அவன் (வணங்கி வேண்டிக் கொண்டதற்கிணங்க) இராமனால் விடுவிக்கப்பட்டான். மற்றுமுள்ள அரக்கர்களும் இராமனின் கருணையால் விடுவிக்கப்பட்டார்கள். (26,27)

பராக்கிரமும் வீரமும் கொண்ட வானரர்களால் துன்புறுத்தப்பட்ட அவர்கள், பெருமூச்சுவிட்டுக் கொண்டு, உணர்விழந்து, மீண்டும் இலங்கையை வந்தடைந்தார்கள். (28)

எப்போதும் வெளிநாடுகளில் சுற்றித் திரியும் மகாபலசாலிகளான அந்த அரக்க ஒற்றர்கள், இராவணனிடம் சென்று, சுவேல மலையின் அடிவாரத்தில், இராம சைன்யம் வந்து தங்கியிருப்பதாகத் தெரிவித்தார்கள். (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பது

வானரர் படை

சுவேல மலை அடிவாரத்தில் இராமனால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளதும், கலக்க முடியாததுமான அந்த மாபெரும் படையைப் பற்றி விவரமாகத் தெரிவித்தார்கள். (1)

'மகாபலசாலியான இராமன் வந்து விட்டார்' என்பதை ஒற்றர்களிடமிருந்து தெரிந்து கொண்ட இராவணன் கொஞ்சம் திகிலடைந்து, சார்தூலனைப் பார்த்து (பின்வருமாறு) சொன்னான்— (2)

''அரக்கனே! உன்னுடைய தேககாந்தி முன்பு போல் இல்லை; நொந்த மனத்துடன் இருப்பதாகவும் காணப்படுகிறாய். (எதிரிகளின் படையை வேவு பார்க்கச் சென்றாயே, அங்கு உன்னைக் கண்டுகொண்ட) சினங்கொண்ட பகைவர்களின் கையில் சிக்கிக் கொள்ளவில்லை அல்லவா?'' (3)

அப்போது, இவ்வாறு வினவப்பட்ட சார்தூலன் அச்சத்தால் மனங்கலங்கி, அரக்கப்புலியான இராவணனைப் பார்த்து தழுதழுத்த குரலில் சொன்னான்— (4)

''மன்னரே! வானரோத்தமர்களான அவர்களை யாரும் வேவு பார்க்க முடியாது. கலங்காத மனத்தினர்; உடலாற்றலுடையவர்கள்; இராமபிரானால் பாதுகாக்கப்படுகிறவர்கள். (5)

அவர்களுடன் வாய்திறந்து பேசக்கூட முடியவில்லை. (நீ யார்? என்ன பெயர்? என்பது போன்ற) விசாரணைக் கேள்விகளைக் கேட்பதற்கு வாய்ப்பு ஏது? மலை போன்ற வானரர்கள் எல்லாப் பாதைகளையும் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். (6)

உள்ளே புகுந்து வேவு பார்க்கத் தொடங்கும் முன்னரே, நாங்கள் நுழைந்தவுடனேயே, 'இவன் ஒற்றன்' என்று அறிந்து கொண்டு விட்டார்கள். மற்ற அரக்கர்களுடன்கூட நானும் பலாத்காரமாய் பிடிக்கப்பட்டேன். பின்னர், என்னை இங்குமங்குமாக அலைக்கழித்து கொடுமைப்படுத்தினார்கள். (7)

அடங்காத சினம் கொண்ட வானரர்கள், முஷ்டி, முழங்கால்கள், பற்கள், உள்ளங்கைகள் ஆகியவற்றால் மிகவும் தாக்கினார்கள்; படைகளின் நடுவே என்னை இழுத்துச் சென்றார்கள். (8)

பரிணீய ச ஸர்வத்ர நீதோऽஹம் ராமஸம்ஸத$_3$ம் ।
ருதி$_4$ராதி$_3$க்$_3$த$_4$ஸர்வாங்கோ$_3$ விஹ்வலச்சலிதேந்த்$_3$ரிய: ॥ (9)

ஹரிபி$_4$ர்வத்$_4$யமாநஶ்ச யாசமாந: க்ருதாஞ்ஜலி: ।
ராக$_4$வேண பரித்ராதோ மா மேதி ச யத்$_3$ருச்ச$_2$யா ॥ (10)

ஏஷ சைலை: ஶிலாபி$_4$ஶ்ச பூரயித்வா மஹார்ணவம் ।
த்$_3$வாரமாஶ்ரித்ய லங்காயா ராமஸ்திஷ்ட$_2$தி ஸாயுத$_4$: ॥ (11)

க$_3$ாருட$_3$ம் வ்யூஹமாஸ்த$_2$ாய ஸர்வதோ ஹரிபி$_4$ர்வ்ருத: ।
மாம் விஸ்ருஜ்ய மஹாதேஜா லங்காமேவாபி$_4$வர்ததே ॥ (12)

புரா ப்ராகாரமாயாதி க்ஷிப்ரமேகதரம் குரு ।
ஸீதாம் வாஸ்மை ப்ரயச்ச$_2$ாஶு ஸுயுத்$_3$த$_4$ம் வா ப்ரதீ$_3$யதாம் ॥ (13)

மநஸா தம் தத$_3$ா ப்ரேக்ஷ்ய தச்ச்$_2$ருத்வா ராக்ஷஸாதி$_4$ப: ।
ஶார்தூ$_3$லம் ஸுமஹத்$_3$வாக்யமதே$_2$ாவாச ஸ ராவண: ॥ (14)

யதி$_3$ மாம் ப்ரதி யுத்$_4$யேரந் தே$_3$வக$_3$ந்த$_4$ர்வத$_3$ாநவா: ।
நைவ ஸீதாம் ப்ரத$_3$ாஸ்யாமி ஸர்வலோகப$_4$யாத$_3$பி ॥ (15)

ஏவமுக்த்வா மஹாதேஜா ராவண: புநரப்$_3$ரவீத் ।
சாரிதா ப$_4$வதா ஸேநா கேऽத்ர ஶூரா: ப்லவங்க$_3$மா: ॥ (16)

கீத்$_3$ருஶா: கிம்ப்ரப$_4$ா: ஸௌம்யா வாநரா யே து$_3$ராஸத$_3$ா: ।
கஸ்ய புத்ராஶ்ச பௌத்ராஶ்ச தத்த்வமாக்$_2$யாஹி ராக்ஷஸ ॥ (17)

தத$_2$ாத்ர ப்ரதிபத்ஸ்யாமி க்ஞாத்வா தேஷாம் ப$_3$லாப$_3$லம் ।
அவஶ்யம் ப$_3$லஸங்க்$_2$யாநம் கர்தவ்யம் யுத்$_3$த$_4$மிச்ச$_2$தாம் ॥ (18)

அதை$_2$வமுக்த: ஶார்தூ$_3$லோ ராவணேநோத்தமஶ்சர: ।
இத$_3$ம் வசநமாரேபே$_4$ வக்தும் ராவணஸந்நிதௌ$_4$ ॥ (19)

அத$_2$ர்க்ஷரஜஸ: புத்ரோ யுதி$_4$ ராஜா ஸுது$_3$ர்ஜய: ।
க$_3$த்$_3$க$_3$த$_3$ஸ்யாத$_2$ புத்ரோऽத்ர ஜாம்ப$_3$வாநிதி விஶ்ருத: ॥ (20)

க$_3$த்$_3$க$_3$த$_3$ஸ்யைவ புத்ரோऽந்யோ கு$_3$ருபுத்ர: ஶதக்ரதோ: ।
கத$_3$நம் யஸ்ய புத்ரேண க்ருதமேகேந ரக்ஷஸாம் ॥ (21)

ஸுஷேணஶ்சாபி த$_4$ர்மாத்மா புத்ரோ த$_4$ர்மஸ்ய வீர்யவாந் ।
ஸௌம்ய: ஸோமாத்ஜஶ்சாத்ர ராஜந் த$_3$தி$_4$முக$_2$: கபி: ॥ (22)

ஸுமுகே$_2$ா து$_3$ர்முக$_2$ஶ்சாத்ர வேக$_3$த$_3$ர்ஶீ ச வாநர: ।
ம்ருத்யுர்வாநரரூபேண நூநம் ஸ்ருஷ்ட: ஸ்வயம்பு$_4$வா ॥ (23)

எல்லா இடங்களுக்கும் இழுத்துச் சென்றுவிட்டு, இராமன் திருமுன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். என் உடல் முழுவதும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது; நான் மனம் குழம்பியிருந்தேன்; புலன்கள் துடித்துக் கொண்டிருந்தன. (9)

வானரங்கள், என்னை அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். நான், இராமபிரானைப் பார்த்து உயிருக்கு மன்றாடி நின்றேன். 'போதும் நிறுத்துங்கள்' என்று இராமன் ஆணையிடவே, அதிருஷ்டவசமாக நான் காப்பாற்றப்பட்டேன். (10)

குன்றுகளாலும் பாறைகளாலும் பெருங்கடலைத் தூர்த்து, (கடலைக் கடந்து வந்து) ஆயுதங்களோடு (படைகளோடு) கூட, இலங்கையின் நுழைவாயில் வரை இதோ அருகே நிற்கிறார், இராமன். (11)

கருடவியூகம் அமைத்து நாற்புறமும் வானரர்களால் சூழ்ந்து நிற்கும் இராமன், என்னை விடுதலை செய்துவிட்டு, இலங்கையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். (12)

அவர் (இலங்கையின்) மதிற்சுவரை அடைவதற்குள்ளாகவே, மிக விரைவில் இரண்டில் ஒன்றைச் செய்யுங்கள்; உடனே சீதையைத் திருப்பிக் கொடுத்தல், அல்லது மகாயுத்தத்திற்கு ஆயத்தம் செய்வது.'' (13)

இதைக் கேட்ட அரக்க மன்னன் இராவணன், அவன் கூறியதைப் பற்றி மனத்திற்குள் ஆலோசித்து, சார்தூலனை நோக்கிக் கம்பீரமான சொற்களைக் கூறினான்— (14)

''தேவ–கந்தர்வ–தானவர்கள் ஒன்று சேர்ந்து என்னுடன் போர் புரிய வந்தாலும், எல்லா மக்களும் என்னைத் தூற்றுவார்கள் என்றாலும்கூட, நான் சீதையைத் திருப்பிக் கொடுக்கவே மாட்டேன்.'' (15)

பேராற்றல் கொண்ட இராவணன் இவ்வாறு கூறிவிட்டு, ''நீதான் (வானரப்) படை முழுவதையும் சுற்றிப் பார்த்திருக்கிறாயே? (அவர்கள் உன்னை இழுத்துக் கொண்டு போய், ஒவ்வொருவரிடமும் காட்டியிருக்கிறார்களே!) அந்த வானரங்களில் சிறந்த சூரர்கள் எவர்கள்?'' என்று கேட்டான். (16)

''கோழை நெஞ்சமுடைய அரக்கனே! எவராலும் அணுக முடியாத வானரர்கள் யார், யார்? அவர்கள் எம்மாதிரியானவர்கள்? என்ன சக்தி படைத்தவர்கள்? யாருடைய புதல்வர்கள், பேரன்மார்கள்? – இவர்களைப் பற்றி நீ அறிந்தவற்றை உள்ளபடி கூறு! (17)

அவர்களுடைய சிறப்பம்சம், தொய்வு ஆகியவற்றை அறிந்து கொண்டு, பின்னர், இவ்விஷயத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்று நிச்சயிக்கிறேன். போர் தொடுக்க விரும்புபவன், முதலில் எதிரிகளின் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ளவேண்டும்.'' (18)

இவ்வாறு இராவணனால் கேட்கப்பட்ட, தலைசிறந்த ஒற்றனான சார்தூலன், இராவணன் முன்பாக, பின்வரும் பதிலைச் சொல்ல ஆரம்பித்தான்— (19)

''போரில் எவராலும் வெல்ல முடியாத அரசன் சுக்ரீவன், ருக்ஷரஜஸ் என்பவரின் புதல்வன். புகழ்பெற்ற ஜாம்பவான் கத்கதன் என்பவருடைய புதல்வன். (20)

கத்கதனுக்கு இன்னொரு மைந்தன் உண்டு. (அவன் பெயர் தூம்ரன்.) இந்திரனுடைய குருவான பிருகஸ்பதியின் புதல்வன் கேஸரி. அவனுடைய மைந்தன் (அனுமான்)தான் தனி ஓர் ஆளாக வந்து, அரக்கர்களை நாசம் செய்துவிட்டுப் போனவன். (21)

அறநெறியாளனும் ஆற்றலுடையவனுமான சுஷேணன் என்பவன் தருமராஜனுடைய புதல்வன். மன்னரே! அழகு படைத்த ததிமுகன் என்ற வானரன், சந்திரனுடைய மைந்தன். (22)

சுமுகன், துர்முகன், வேகதர்சி ஆகியவர்கள் சாட்சாத் காலனே! பிரும்மாவினால், வானர வடிவத்தில் படைக்கப்பட்டிருக்கிறார்கள். (23)

புத்ரோ ஹுதவஹஸ்யாத2 நீல: ஸேநாபதி: ஸ்வயம் ।
அநிலஸ்ய ச புத்ரோऽத்ர ஹநுமாநிதி விஸ்ருத: ॥ (24)

நப்தா ஶக்ரஸ்ய து3ர்த4ர்ஷோ ப3லவாநங்க3தோ3 யுவா ।
மைந்த3ஶ்ச த்3விவித3ஶ்சோபௌ4 ப3லிநாவஶ்விஸம்ப4வௌ ॥ (25)

புத்ரா வைவஸ்தஸ்யாத்ர பஞ்ச காலாந்தகோபமா: ।
க3ஜோ க3வாக்ஷோ க3வய: ஶரபோ4 க3ந்த4மாத3ந: ॥ (26)

த3ஶ வாநரகோட்யஶ்ச ஶூராணாம் யுத்3த4காங்க்ஷிணாம் ।
ஸ்ரீமதாம் தே3வபுத்ராணாம் ஶேஷம் நாக்2யாதுமுத்ஸஹே ॥ (27)

புத்ரோ த3ஶரத2ஸ்யைஷ ஸிம்ஹஸம்ஹநநோ யுவா ।
தூ3ஷணோ நிஹதோ யேந க2ரஶ்ச த்ரிஶிராஸ்தத2ா ॥ (28)

நாஸ்தி ராமஸ்ய ஸத்3ருஶோ விக்ரமே பு4வி கஶ்சந ।
விராதோ4 நிஹதோ யேந கப3ந்த4ஶ்சாந்தகோபம: ॥ (29)

வக்தும் ந ஶக்தோ ராமஸ்ய நர: கஶ்சித்3கு3ணாந் க்ஷிதௌ ।
ஜநஸ்த2ாநக3தா யேந யாவந்தோ ராக்ஷஸா ஹதா: ॥ (30)

லக்ஷ்மணஶ்சாத்ர த4ர்மாத்மா மாதங்க3ாநாமிவர்ஷப4: ।
யஸ்ய ப3ாணபத2ம் ப்ராப்ய ந ஜீவேத3பி வாஸவ: ॥ (31)

ஶ்வேதோ ஜ்யோதிர்முக2ஶ்சாத்ர ப4ாஸ்கரஸ்யாத்மஸம்ப4வௌ ।
வருணஸ்ய ச புத்ரோऽந்யோ ஹேமகூட: ப்லவங்க3ம: ॥ (32)

விஶ்வகர்மஸுதோ வீரோ நல: ப்லவக3ஸத்தம: ।
விக்ராந்தோ ப3லவாநத்ர வஸுபுத்ர: ஸுது3ர்த4ர: ॥ (33)

ராக்ஷஸாநாம் வரிஷ்ட2ஶ்ச தவ ப்4ராதா விபீ4ஷண: ।
பரிக்3ருஹ்ய புரீம் லங்காம் ராக4வஸ்ய ஹிதே ரத: ॥ (34)

இதி ஸர்வம் ஸமாக்2யாதம் தவேத3ம் வாநரம் ப3லம் ।
ஸுவேலேऽதி4ஷ்டி2தம் ஶைலே ஶேஷகார்யே ப4வாந் க3தி: ॥ (35)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 த்ரிம்ஶ: ஸர்க3: ॥

ஏகத்ரிம்ஶ: ஸர்க3:

வித்3யுஜ்ஜிஹ்வமாயாப்ரயோக3:

ததஸ்தமக்ஷோப்4யப3லம் லங்காதி4பதயே சரா: ।
ஸுவேலே ராக4வம் ஶைலே நிவிஷ்டம் ப்ரத்யவேத3யந் ॥ (1)

சேனாபதி நீலன் என்பவன் அக்னியின் சொந்தப் புதல்வன். வாயுவின் மைந்தன்தான், பெரும் புகழ் படைத்த அனுமான். (24)

எவராலும் எதிர்கொள்ள முடியாதவனும் வாலிபனுமான அங்கதன், இந்திரனுடைய பேரன். மைந்தன், த்விவிதன் ஆகிய இருவரும் அசுவினி தேவதையின் குமாரர்கள். (25)

கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன் ஆகிய ஐவரும் யமதருமனுடைய புதல்வர்கள்; ஊழிக்கால யமனுக்கு ஒப்பானவர்கள். (26)

இவ்வாறாக, தேவதைகளின் அம்சமாகத் தோன்றியவர்களும் போரில் விருப்பம் கொண்டவர்களும், வெற்றித்திரு பொருந்தியவர்களுமான வீர வானரர்கள் பத்துக் கோடிப் பேர்கள். மற்ற வானரர்களைப் பற்றி என்னால் ஒன்றும் சொல்ல முடியாது. ஏனென்றால், அவர்களைக் கணக்கெடுப்பது சாத்தியமே இல்லை. (27)

வாலிப முறுக்குடனும் சிங்கத்தின் ஆண்மை அழகுடனும் விளங்கும் இவர் (இராமன்) தசரத குமாரர். தூஷணன், கரன், திரிசிரஸ் ஆகியோர் இவரால் கொல்லப்பட்டார்கள். (28)

எவரால் விராதனும், யமனை நிகர்த்த கபந்தனும் கொல்லப்பட்டார்களோ, அந்த இராமனுக்கு நிகரான பராக்கிரமம் படைத்தவன் உலகில் யாருமில்லை. (29)

ஜனஸ்தானத்திலிருந்த அத்தனை அரக்கர்களையும் கொன்று குவித்த இராமபிரானுடைய குணாதிசயங்கள், இவ்வுலகில் எந்த மனிதனாலும் வருணிக்க முடியாது. (30)

தருமாத்மாவான லட்சுமணன், யானைக் கூட்டத்தில் காளை போன்றவன்; அவனால் குறி வைக்கப்பட்டவன், இந்திரனாக இருந்தாலும் சரி, உயிருடன் இருக்க முடியாது. (31)

அந்தப் படையிலுள்ள சுவேதன், ஜோதிர்முகன் என்பவர்கள் சூரிய குமாரர்கள். ஹேமகூடன் என்ற வானரன், வருணனுடைய புதல்வன். வானரோத்தமனும் மாவீரனுமான நளன் என்பவன் விசுவகர்மாவின் புதல்வன். பேராண்மையுடையவனும் பேராற்றலுடையவனுமான சுதுர்தரன் என்பவன் வசு தேவதையின் குமாரன். (32,33)

தங்கள் சகோதரரும் தலைசிறந்த அரக்கருமான விபீஷணன், இலங்கை அரசைப் பெற்றுக் கொண்டு, இராமபிரானுக்கு உதவி செய்வதில் கருத்துடையவராக இருக்கிறார். (34)

சுவேலமலையின் அடிவாரத்தில் தங்கியிருக்கும் வானரப்படையின் முழுத் தகவல்களையும் கூறிவிட்டேன். இனி, மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி, தாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.'' (35)

(இந்த ஸர்க்கத்தில் வானரர் பிறப்பு பற்றிய வருணனைக்கும், பாலகாண்டம் பதினேழாவது ஸர்க்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுக்குமிடையே வேற்றுமை இருக்கிறது. எனவே, இந்த ஸர்க்கம், ஓர் இடைச்செருகல் என்ற கருத்தும் இருக்கிறது.)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பதொன்று

மாயா இராமனைக் காட்டி, சீதையை வருத்துதல்!

சுவேலமலைச் சாரலில் பிறரால் நெருங்க முடியாத ஆற்றல் மிக்க படையுடன் மகாபலசாலியான இராகவன் வந்து தங்கியிருப்பதை (மற்ற) ஒற்றர்கள் இராவணனிடம் தெரிவித்தார்கள். (1)

சாராணாம் ராவண: ஸ்ருத்வா ப்ராப்தம் ராமம் மஹாப3லம் ।
ஜாதோத்3வேகோ3ऽப4வத்கிஞ்சித்ஸசிவாநித3மப்3ரவீத் ॥ (2)

மந்த்ரிண: ஶீக்4ரமாயாந்து ஸர்வே வை ஸுஸமாஹிதா: ।
அயம் நோ மந்த்ரகாலோ ஹி ஸம்ப்ராப்த இதி ராக்ஷஸா: ॥ (3)

தஸ்ய தச்ச2ாஸநம் ஸ்ருத்வா மந்த்ரிணோऽப்4யாக3மந் த்3ருதம் ।
தத: ஸ மந்த்ரயாமாஸ ஸசிவை ராக்ஷஸை: ஸஹ ॥ (4)

மந்த்ரயித்வா ஸ து3ர்த4ர்ஷ: க்ஷமம் யத்ஸமநந்தரம் ।
விஸர்ஜயித்வா ஸசிவாந் ப்ரவிவேஶ ஸ்வமாலயம் ॥ (5)

ததோ ராக்ஷஸமாஹூய வித்3யுஜ்ஜிஹ்வம் மஹாப3லம் ।
மாயாவிநம் மஹாமாய: ப்ராவிஶத்3யத்ர மைதி2லீ ॥ (6)

வித்3யுஜ்ஜிஹ்வம் ச மாயாஜ்ஞமப்3ரவீத்3ராக்ஷஸாதி4ப: ।
மோஹயிஷ்யாவஹே ஸீதாம் மாயயா ஜநகாத்மஜாம் ॥ (7)

ஶிரோ மாயாமயம் க்3ருஹ்ய ராக4வஸ்ய நிஶாசர ।
த்வம் மாம் ஸமுபதிஷ்ட2ஸ்வ மஹச்ச ஸஶரம் த4நு: ॥ (8)

ஏவமுக்தஸ்ததே2த்யாஹ வித்3யுஜ்ஜிஹ்வோ நிஶாசர: ।
த3ர்ஶயாமாஸ தாம் மாயாம் ஸுப்ரயுக்தாம் ஸ ராவணே ॥
தஸ்ய துஷ்டோऽப4வத்3ராஜா ப்ரத3தௌ3 ச விபூ4ஷணம் ॥ (9)

அஶோகவநிகாயாம் து ஸீதாத3ர்ஶநலாலஸ: ।
நைர்ருதாநாமதி4பதி: ஸம்விவேஶ மஹாப3ல: ॥ (10)

ததோ தீ3நாமதை3ந்யார்ஹாம் த3த3ர்ஶ த4நத3ாநுஜ: ।
அதோ4முகீ2ம் ஶோகபராமுபவிஷ்டாம் மஹீதலே ॥ (11)

ப4ர்தாரமேவ த்4யாயந்தீமஶோகவநிகாம் க3தாம் ।
உபாஸ்யமாநாம் கோ4ராபி4 ராக்ஷஸீபி4ரதூ3ரத: ॥ (12)

உபஸ்ருத்ய தத: ஸீதாம் ப்ரஹர்ஷம் நாம கீர்தயந் ।
இத3ம் ச வசநம் த்4ருஷ்டமுவாச ஜநகாத்மஜாம் ॥ (13)

ஸாந்த்வ்யமாநா மயா ப4த்3ரே யமுபாஶ்ரித்ய வல்க3ஸே ।
க2ரஹந்தா ஸ தே ப4ர்தா ராக4வ: ஸமரே ஹத: ॥ (14)

சி2ந்நம் தே ஸர்வதோ மூலம் த3ர்பஸ்தே விஹதோ மயா ।
வ்யஸநேநாத்மந: ஸீதே மம பா4ர்யா ப4விஷ்யஸி ॥ (15)

விஸ்ருஜேமாம் மதிம் மூடே4 கிம் ம்ருதேந கரிஷ்யஸி ।
ப4வஸ்வ ப4த்3ரே பா4ர்யாணாம் ஸர்வாஸாமீஶ்வரீ மம ॥ (16)

இராமனுடைய பெரும்படை வந்துவிட்டதை, ஒற்றர்கள் கூறக் கேட்ட இராவணன், சற்றே திகைத்துப் போய், அமைச்சர்களிடம் இவ்வாறு கூறினான்— (2)

''அரக்கர்களே! நம்முடைய அரசவை ஆலோசகர்கள் அனைவரும் சஞ்சலமில்லாத மனத்துடன் விரைவில் இங்கே வந்து சேரட்டும். நாம் ரகசியமாக மந்திராலோசனை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது.'' (3)

அவனுடைய உத்தரவைக் கேட்ட அமைச்சர்கள் விரைவாக வந்து சேர்ந்தார்கள். ஆலோசகர்களான அந்த அரக்கர்களுடன் அவன் மந்திராலோசனை செய்தான். (4)

எவருக்கும் அடங்காத அவன், அந்தத் தருணத்தில் செய்யக்கூடிய காரியம் பற்றி ஆலோசனை செய்துவிட்டு, அமைச்சர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினான். பின், தன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். (5)

மகாமாயாவியான இராவணன், மகாபலசாலியும் மாயக்கலை அறிந்தவனுமான வித்யுஜ்ஜிஹ்வன் என்ற அரக்கனை அழைத்துக் கொண்டு, சீதை இருக்குமிடத்தைச் சென்றடைந்தான். (6)

அரக்க மன்னன், மாயையில் நிபுணனான வித்யுஜ்ஜிஹ்வனைப் பார்த்து, ''ஜனககுமாரி சீதையை மாயையால் மனம் தடுமாறச் செய்வோம். அரக்கனே! (நீ இப்போது அப்பால் சென்று) மாயையால் உருவாக்கப்பட்ட இராமனுடைய தலையையும், அம்புடன்கூட பெரிய வில்லையும் எடுத்துக் கொண்டு என்னிடம் வந்து சேர்'' என்றான். (7,8)

இவ்வாறு சொல்லப்பட்ட வித்யுஜ்ஜிஹ்வன், 'அப்படியே செய்கிறேன்' என்று கூறிவிட்டு அகன்றான். (பின், சற்று நேரத்திற்குப்பின் திரும்பி வந்து,) தன் மாயக்கலையால் திறம்பட செய்யப்பட்ட, அதை(இராமனுடைய தலையை)க் காட்டினான். அதனால் மகிழ்ச்சியடைந்த மன்னன் அணிகலனைப் பரிசாக அளித்தான். (9)

பேராற்றல் கொண்ட அரக்க மன்னன், அசோகவனத்திலிருக்கும் சீதையைக் காணும் துடிப்போடுகூட அதனுள்ளே பிரவேசித்தான். (10)

குபேரனுடைய தம்பியாகிய அவன், மிகவும் இரங்கத்தக்க நிலையில் இருப்பவளும், அவ்விதமான தரக்குறைவான சூழ்நிலையில் இருக்கத் தகாதவளும், கீழ்நோக்கிய முகத்தை உடையவளும், சோகத்தில் மூழ்கியிருப்பவளும், வெறுந்தரையில் உட்கார்ந்திருப்பவளும், (எவராலும் கண்டுபிடிக்க முடியாத) அசோகவனத்தில் இருந்து கொண்டு, கணவனையே நினைத்து உருகிக் கொண்டிருப்பவளும், அருகில் கோரமான உருவம் படைத்த அரக்கிகளால் சூழப்பட்டவளுமான அவளை, 'ஹே சீதே!' என்று மனமகிழ்ச்சியுடன் பெயர் சொல்லி அழைத்துக் கொண்டு, ஜனககுமாரியைப் பார்த்து, மனத்தைக் கசக்கிப் பிழியும் (பின்வரும்) சொற்களைக் கூறினான்— (11–13)

''நங்காய்! நான், பல தடவைகள் இனிய வார்த்தைகள் கூறி (என்னை ஏற்றுக்கொள்ளும்படி) வேண்டிக் கொண்டேன். (நீ இசையவில்லை.) எவனுடைய அன்பைப் பெரிதாகப் பாராட்டினாயோ, எவன் கரனைக் கொன்றானோ, உன் கணவனாகிய அந்த இராமன் போரில் கொல்லப்பட்டுவிட்டான்! (14)

உன் ஆதாரம் (இராமன்) முற்றிலுமாக சிதைக்கப்பட்டுவிட்டது; உன்னுடைய அகந்தை என்னால் அழிக்கப்பட்டுவிட்டது; உனக்கு ஏற்பட்டுள்ள இந்த நிர்க்கதியான நிலையில், சீதே! நீயாகவே எனக்கு மனைவி ஆகிவிடுவாய்! (15)

பேதைப் பெண்ணே! (இராமன் வந்து காப்பாற்றுவான் என்ற) உன் எண்ணத்தை ஒழித்துவிடு. இறந்து போனவனை நினைத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? பெண்ணரசியே! என்னுடைய மனைவிமார்கள் எல்லோருக்கும் தலைவியாக ஆகிவிடு! (16)

அல்பபுண்யே நிவ்ருத்தார்தே$_2$ மூடே$_4$ பண்டி$_3$தமாநிநி ।
ஶ்ருணு ப$_4$ர்த்ருவத$_4$ம் ஸீதே கோ$_4$ரம் வ்ருத்ரவத$_4$ம் யதா$_2$ ॥ (17)

ஸமாயாத: ஸமுத்$_3$ராந்தம் மாம் ஹந்தும் கில ராக$_4$வ: ।
வாநரேந்த்$_3$ரப்ரணீதேந ப$_3$லேந மஹதா வ்ருத: ॥ (18)

ஸம்நிவிஷ்ட: ஸமுத்$_3$ரஸ்ய பீட்$_3$ய தீரமதோ$_2$த்தரம் ।
ப$_3$லேந மஹதா ராமோ வ்ரஜத்யஸ்தம் தி$_3$வாகரே ॥ (19)

அதா$_2$த்$_4$வநி பரிஶ்ராந்தமர்த$_4$ராத்ரே ஸ்தி$_2$தம் ப$_3$லம் ।
ஸுக$_2$ஸம்ஸுப்தமாஸாத்$_3$ய சாரிதம் ப்ரத$_2$மம் சரை: ॥ (20)

தத்ப்ரஹஸ்தப்ரணீதேந ப$_3$லேந மஹதா மம ।
ப$_3$லமஸ்ய ஹதம் ராத்ரௌ யத்ர ராம: ஸலக்ஷ்மண: ॥ (21)

பட்டஸாந்பரிகா$_4$ம்ஶ்சக்ராந்த$_3$ண்டா$_3$ந் க$_2$ட்$_3$கா$_3$ந் மஹாயஸாந் ।
பா$_3$ணஜாலாநி ஶூலாநி பா$_4$ஸ்வராந்கூடமுத்$_3$க$_3$ராந் ॥ (22)

யஷ்டீஶ்ச தோமராஞ்ஶக்தீஶ்சக்ராணி முஸலாநி ச ।
உத்$_3$யம்யோத்$_3$யம்ய ரக்ஷோபி$_4$ர்வாநரேஷு நிபாதிதா: ॥ (23)

அத$_2$ ஸுப்தஸ்ய ராமஸ்ய ப்ரஹஸ்தேந ப்ரமாதி$_2$நா ।
அஸக்தம் க்ருதஹஸ்தேந ஶிரஶ்சி$_2$ந்நம் மஹாஸிநா ॥ (24)

விபீ$_4$ஷண: ஸமுத்பத்ய நிக்$_3$ருஹீதோ யத்$_3$ருச்ச$_2$யா ।
தி$_3$ஶ: ப்ரவ்ராஜித: ஸர்வைர்லக்ஷ்மண: ப்லவகை$_3$: ஸஹ ॥ (25)

ஸுக்$_3$ரீவோ க்$_3$ரீவயா ஶேதே ப$_4$க்$_3$நயா ப்லவகா$_3$தி$_4$ப: ।
நிரஸ்தஹநுக: ஶேதே ஹநுமாந் ராக்ஷஸைர்ஹத: ॥ (26)

ஜாம்ப$_3$வாநத$_2$ ஜாநுப்$_4$யாமுத்பதந்நிஹதோ யுதி$_4$ ।
பட்டஸைர்ப$_3$ஹுபி$_4$ஶ்சி$_2$ந்நோ நிக்ருத்த: பாத$_3$போ யதா$_2$ ॥ (27)

மைந்த$_3$ஶ்ச த்$_3$விவித$_3$ஶ்சோபௌ$_4$ நிஹதௌ வாநரர்ஷபௌ$_4$ ।
நிஶ்வஸந்தௌ ருத$_3$ந்தௌ ச ருதி$_4$ரேண பரிப்லுதௌ ॥
அஸிநா வ்யாயதௌ சி$_2$ந்நௌ மத்$_4$யே ஹ்யரிநிஷூத$_3$நௌ ॥ (28)

அநுதிஷ்ட$_2$தி மேதி$_3$ந்யாம் பநஸ: பநஸோ யதா$_2$ ।
நாராசைர்ப$_3$ஹுபி$_4$ஶ்சி$_2$ந்ந: ஶேதே த$_3$ர்யாம் த$_3$ரீமுக$_2$: ॥ (29)

குமுத$_3$ஸ்து மஹாதேஜா நிஷ்கூஜ: ஸாயகை: க்ருத: ।
அங்க$_3$தோ$_3$ ப$_3$ஹுபி$_4$ஶ்சி$_2$ந்ந: ஶரைராஸாத்$_3$ய ராக்ஷஸை: ॥
பரிதோ ருதி$_4$ரோத்$_3$கா$_3$ரீ க்ஷிதௌ நிபதிதாங்க$_3$த$_3$: ॥ (30)

பாக்கியம் குறைந்து போனவளே! எண்ணம் கைகூடப் பெறாதவளே! பேதாய்! உன்னை அறிவாளியாக நினைத்துக் கொண்டிருப்பவளே! சீதே! விருத்திராசுர வதம் எப்படி நிகழ்ந்ததோ, அவ்வாறே நிகழ்ந்த உன் கணவனுடைய வதம் பற்றியும் கேள். (17)

இராமன், என்னைக் கொல்வதற்காக, சுக்ரீவனால் நடத்தி வரப்பட்ட பெரும்படையுடன், கடலின் கரைக்கு வந்து சேர்ந்தான், அன்றோ! (18)

சமுத்திரத்தின் வடக்குக் கரை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு, பெரும்படையுடன் இராமன் தங்கியிருந்தான். அப்போது சூரியன் மறையும் வேளை. (19)

வழி நடந்த களைப்பால் வானரங்கள் சுகமாக உறங்கிக் கொண்டிருந்த நட்டநடு நிசியில், என் வேவுகாரர்கள் முதலில் சென்று நோட்டம் விட்டார்கள். (20)

பின்னர், பிரஹஸ்தனுடைய தலைமையில் அங்கு சென்ற என்னுடைய மாபெரும் சைன்யம், இரவில் இராம–லட்சுமணர்கள் இருந்த இடத்திற்குச் சென்று, அவர்களுடைய வானரப்படையை அழித்து ஒழித்து விட்டார்கள். (21)

பட்டாக்கத்திகள், இரும்புத் தடிகள், சிறிய சக்கரங்கள், தடிகள், கத்திகள், பெரிய இரும்புத் தடிகள், இடைவிடாது செலுத்தப்பட்ட பாணங்கள், சூலங்கள், பிரகாசமான கூடம்–முத்கரங்கள், கழிகள், தோமரங்கள், வேலாயுதங்கள், பெரிய சக்கரங்கள், உலக்கைகள் ஆகியவற்றைத் தூக்கித் தூக்கி வானரர்கள் மீது வீசினார்கள், அரக்கர்கள். (22,23)

பயங்கரமாகத் தாக்குபவனும், நன்கு பயிற்சி பெற்ற கைத்திறன் உடையவனுமான பிரஹஸ்தன், இராமன் உறங்கிக் கொண்டிருந்தபோது நீண்ட கத்தியினால் எவ்வித எதிர்ப்புமின்றி, அவனுடைய தலையைத் துண்டித்துவிட்டான். (24)

பின்னர், தற்செயலாய் விபீஷணன் மேல் விழுந்து, அவனைக் கட்டிப் போட்டான். லட்சுமணன், வானரப் படையுடன் நானாதிக்குகளிலும் விரட்டப்பட்டான். (25)

சீதே! வானர மன்னன் (அழகிய கழுத்தையுடைய) சுக்ரீவன், முறிக்கப்பட்ட கழுத்துடன் நெடுந்துயில் கொண்டுவிட்டான். (நீண்ட தாடையை உடைய) அனுமான், அரக்கர்களால் கன்னம் சிதறடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். (26)

ஜாம்பவான், போர்க்களத்தில் மேலே எழும்பி குதித்துக் கொண்டிருந்த சமயத்தில், அரக்கர்கள் பற்பல பட்டாக்கத்திகளைக் கொண்டு இரண்டு முழங்கால்களையும் வெட்டி வீழ்த்தியதும், அடித்தண்டில் வெட்டப்பட்ட மரம்போல கீழே விழுந்து உயிரைவிட்டான். பேராற்றல் படைத்தவர்களும் எதிரிகளை அடக்குபவர்களும் வானரோத்தமர்களுமான மைந்தன்–த்விவிதன் ஆகிய இருவரும் நடு உடலில் வெட்டப்பட்டு, இரத்தக்களறியாகி பெருமூச்சுவிட்டு அழுது கொண்டே உயிரைத் துறந்தார்கள். (27,28)

பனஸன், (மரத்திலிருந்து விழுந்த) பலாப்பழத்தைப் போல் தரையில் கிடக்கிறான். அநேக நாராச பாணங்களால் தாக்குண்ட தரீமுகன், தரையில் விழுந்து கிடக்கிறான். (29)

பேராற்றல் கொண்ட குமுதன், பாணங்களால் அடிக்கப்பட்டு பேச்சு–மூச்சற்றவனாகி விட்டான். அரக்கர்கள், அங்கதனை நெருங்கி பற்பல அம்புகளால் துளைத்தெடுத்தார்கள். தோள்வளைகள் சிதற, சுற்றிலும் இரத்தத்தைப் பெருகவிட்டுக் கொண்டு, அவன் பூமியில் விழுந்தான். (30)

ஹரயோ மதி$_2$தா நாகை$_3$ ரத$_2$ஜாதைஸ்தத$_2$ாபரே ।
ஶாயிதா ம்ருதி$_3$தாஶ்சாஶ்வைர்வாயுவேகை$_3$ரிவாம்பு$_3$தா$_3$: ॥ (31)

ப்ரஸ்ருதாஶ்சாபரே த்ரஸ்தா ஹந்யமாநா ஜக$_4$ந்யத: ।
அபி$_4$த்$_3$ருதாஸ்து ரக்ஷோபி$_4$: ஸிம்ஹைரிவ மஹாத்$_3$விபா: ॥ (32)

ஸாக$_3$ரே பதிதா: கேசித்கேசித்$_3$க$_3$க$_3$நமாஶ்ரிதா: ।
ருக்ஷா வ்ருக்ஷாநுபாரூட$_4$ா வாநரீம் வ்ருத்திமாஶ்ரிதா: ॥ (33)

ஸாக$_3$ரஸ்ய ச தீரேஷு ஶைலேஷு ச வநேஷு ச ।
பிங்க$_3$ளாஸ்தே விரூபாக்ஷைர்ப$_3$ஹுபி$_4$ர்ப$_3$ஹவோ ஹதா: ॥ (34)

ஏவம் தவ ஹதோ ப$_4$ர்தா ஸஸைந்யோ மம ஸேநயா ।
க்ஷதஜார்த்$_3$ரம் ரஜோத்$_4$வஸ்தமித$_3$ம் சாஸ்யாஹ்ருதம் ஶிர: ॥ (35)

தத: பரமது$_3$ர்த$_4$ர்ஷோ ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
ஸீதாயாமுபஶ்ருண்வந்த்யாம் ராக்ஷஸீமித$_3$மப்$_3$ரவீத் ॥ (36)

ராக்ஷஸம் க்ரூரகர்மாணம் வித்$_3$யுஜ்ஜிஹ்வம் த்வமாநய ।
யேந தத்$_3$ராக$_4$வஶிர: ஸங்க்$_3$ராமாத்ஸ்வயமாஹ்ருதம் ॥ (37)

வித்$_3$யுஜ்ஜிஹ்வஸ்ததோ க்$_3$ருஹ்ய ஶிரஸ்தத்ஸஶராஸநம் ।
ப்ரணாமம் ஶிரஸா க்ருத்வா ராவணஸ்யாக்$_3$ரத: ஸ்தி$_2$த: ॥ (38)

தமப்$_3$ரவீத்ததோ ராஜா ராவணோ ராக்ஷஸம் ஸ்தி$_2$தம் ।
வித்$_3$யுஜ்ஜிஹ்வம் மஹாஜிஹ்வம் ஸமீபபரிவர்திநம் ॥ (39)

அக்$_3$ரத: குரு ஸீதாயா: ஶீக்$_4$ரம் த$_3$ாஶரதே$_2$: ஶிர: ।
அவஸ்த$_2$ாம் பஶ்சிமாம் ப$_4$ர்து: க்ருபணா ஸாது$_4$ பஶ்யது ॥ (40)

ஏவமுக்தம் து தத்$_3$ரக்ஷ: ஶிரஸ்தத்ப்ரியத$_3$ர்ஶநம் ।
உபநிக்ஷிப்ய ஸீதாயா: க்ஷிப்ரமந்தரதீ$_4$யத ॥ (41)

ராவணஶ்சாபி சிக்ஷேப ப$_4$ாஸ்வரம் கார்முகம் மஹத் ।
த்ரிஷு லோகேஷு விக்$_2$யாதம் ஸீதாமித$_3$முவாச ச ॥ (42)

இத$_3$ம் தத்தவ ராமஸ்ய கார்முகம் ஜ்யாஸமாயுதம் ॥
இஹ ப்ரஹஸ்தேநாநீதம் ஹத்வா தம் நிஶி மாநுஷம் ॥ (43)

ஸ வித்$_3$யுஜ்ஜிஹ்வேந ஸஹைவ தச்சி$_2$ரோ
த$_4$நுஶ்ச பூ$_4$மௌ விநிகீர்ய ராவண: ।
விதே$_3$ஹராஜஸ்ய ஸுதாம் யஶஸ்விநீம்
ததோऽப்$_3$ரவீத்தாம் ப$_4$வ மே வஶாநுக$_3$ா ॥ (44)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

காற்றின் வேகத்தினால் மேகங்கள் சிதறடிக்கப்படுவதைப் போல, மற்றுமிருந்த வானரர்கள், யானைகளாலும் தேர்க்கூட்டங்களாலும் நசுக்கப்பட்டு தரையில் வீழ்த்தப்பட்டார்கள். (31)

சிங்கங்களால் துரத்தப்படும் யானைகள் வேகமாக ஓடிப் போவதைப் போல, அரக்கர்களால் பின்புறம் தாக்கப்பட்ட ஏராளமான வானரர்கள் தப்பியோடிப் போனார்கள். (32)

சில வானரர்கள் கடலில் விழுந்தார்கள்; சிலர் எம்பிக் குதித்து ஆகாயத்தை அடைந்தார்கள்; கரடிகள் எல்லாம், வானரர்கள் செய்வதை அனுசரித்து, மரங்களில் ஏறிக் கொண்டார்கள். (33)

சமுத்திரக் கரைகளிலும் குன்றுகளிலும் வனங்களிலும் (மறைந்திருந்த) ஏராளமான வானரர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, கணக்கில்லாத அரக்கர்களால் அடித்துக் கொல்லப்பட்டார்கள். (34)

இவ்வாறு, என் படையினரால் பெரும்படையுடன் வந்திருந்த உன் கணவன் கொல்லப்பட்டான். இரத்தம் சொட்டச் சொட்ட, புழுதி படிந்த அவனுடைய தலை, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.'' (35)

பின்னர், மகாபயங்கரமான இராவணன், ஓர் அரக்கியை அழைத்து, சீதையின் செவிகளில் விழும்படியாகப் பின்வருமாறு கூறினான்— (36)

''கொடுஞ்செயல் புரியும் அரக்கனான வித்யுஜ்ஜிஹ்வனை இங்கே அழைத்து வா. அவன் போர்க்களத்திலிருந்து இராமனுடைய தலையைத் தானே கொண்டு வந்திருக்கிறான்.'' (37)

வித்யுஜ்ஜிஹ்வன் வில்லுடன் கூட, அந்தத் தலையை எடுத்துக் கொண்டு, இராவணனுக்குத் தலைவணங்கி எதிரில் வந்து நின்றான். (38)

எதிரில் நிற்கும், நீண்ட நாக்கையுடைய அரக்கன் வித்யுஜ்ஜிஹ்வனைப் பார்த்து, மன்னன் இராவணன் (பின்வருமாறு) கட்டளையிட்டான்— (39)

''தசரத குமாரனின் தலையை, உடனே சீதையின் எதிரில் வைப்பாய். கணவனின் இறுதிநிலையைக் கண்ணால் பார்த்து, 'இனி, தன்னால் செய்யக் கூடியது எதுவுமில்லை' என்ற அவலத்தை (அவள்) உணர்ந்து கொள்ளட்டும்!'' (40)

இவ்வாறு, இராவணன் கூறியவுடன், அழகுமிக்க அந்தத் தலையை சீதையின் அருகில் வைத்துவிட்டு, உடனே மறைந்து போனான், அந்த அரக்கன். (41)

மூவுலகங்களிலும் புகழ் பெற்றதும், உறுதி படைத்ததும், ஒளி பொருந்தியதுமான வில்லை (மாயாமயமான கோதண்டத்தை)த் தன் கையில் எடுத்துக்கொண்டு, சீதையைப் பார்த்துக் கூறினான்— (42)

''நாண்கயிற்றுடன் கூடிய இந்த வில், உன்னுடைய இராமனுடையது. மானிடனான அவனை, பிரஹஸ்தன் இரவு வேளையில் கொன்று, தலையை இங்கே கொண்டு வந்திருக்கிறான்.'' (43)

இராவணன், வித்யுஜ்ஜிஹ்வனால் கொண்டு வரப்பட்ட தலையையும், வில்லையும் தரையில் வீசியெறிந்துவிட்டு, விதேக மன்னரின் புகழ் பெற்ற புதல்வியான அவளைப் பார்த்து, ''இப்போதாவது நீ என் விருப்பத்திற்கு இணங்கிவிடு'' என்று கூறினான். (44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

த்3வாத்ரிம்ஶ: ஸர்க3:

ஸீதாவிலாப:

ஸா ஸீதா தச்சி2ரோ த்3ருஷ்ட்வா தச்ச கார்முகமுத்தமம் ।
ஸுக்3ரீவப்ரதிஸம்ஸர்க3மாக்2யாதம் ச ஹநூமதா ॥ (1)

நயநே முக3வர்ணம் ச ப4ர்துஸ்தத்ஸத்3ருஶம் முக2ம் ।
கேஶாந் கேஶாந்ததே3ஶம் ச தம் ச சூடா3மணிம் ஶுப4ம் ॥ (2)

ஏதை: ஸர்வைரபி4ஜ்ஞாநைரபி4ஜ்ஞாய ஸுது3:கி2தா ।
விஜக3ர்ஹேऽத்ர கைகேயீம் க்ரோஶந்தீ குரரீ யதா2 ॥ (3)

ஸகாமா ப4வ கைகேயி ஹதோऽயம் குலநந்த3ந: ।
குலமுத்ஸாதி3தம் ஸர்வம் த்வயா கலஹஶீலயா ॥ (4)

ஆர்யேண கிம் தே கைகேயி க்ருதம் ராமேண விப்ரியம் ।
யத்3க்3ருஹாச்சீரவஸநம் த3த்த்வா ப்ரவ்ராஜிதோ வநம் ॥ (5)

ஏவமுக்த்வா து வைதே3ஹீ வேபமாநா தபஸ்விநீ ।
ஜகா3ம ஜக3தீம் பா3லா சி2ந்நா து கத3லீ யதா2 ॥ (6)

ஸா முஹூர்தாத்ஸமாஶ்வஸ்ய ப்ரதிலப்4ய ச சேதநாம் ।
தச்சி2ர: ஸமுபாக்3ராய விலலாபாயதேக்ஷணா ॥ (7)

ஹா ஹதாஸ்மி மஹாபா3ஹோ வீரவ்ரதமநுவ்ரத ।
இமாம் தே பஶ்சிமாவஸ்தா2ம் க3தாஸ்மி வித4வா க்ருதா ॥ (8)

ப்ரத2மம் மரணம் நார்யோ ப4ர்துர்வைகு3ண்யமுச்யதே ।
ஸுவ்ருத்த ஸாது4வ்ருத்தாயா: ஸம்வ்ருத்தஸ்த்வம் மமாக்3ரத: ॥ (9)

து3:கா2த்து3:க2ம் ப்ரபந்நாயா மக்3நாயா: ஶோகஸாக3ரே ।
யோ ஹி மாமுத்3யதஸ்த்ராதும் ஸோऽபி த்வம் விநிபாதித: ॥ (10)

ஸா ஶ்வஶ்ரூர்மம கௌஸல்யா த்வயா புத்ரேண ராக4வ ।
வத்ஸேநேவ யதா2 தே4நுர்விவத்ஸா வத்ஸலா க்ருதா ॥ (11)

ஆதி3ஷ்டம் தீர்க4மாயுஸ்தே தை3வக்ஞைரபி ராக4வ ।
அந்ருதம் வசநம் தேஷாமல்பாயுரஸி ராக4வ ॥ (12)

அத2வா நஶ்யதி ப்ரக்ஞா ப்ராக்ஞஸ்யாபி ஸதஸ்தவ ।
பசத்யேநம் யதா2 காலோ பூ4தாநாம் ப்ரப4வோ ஹ்யயம் ॥ (13)

அத்3ருஷ்டம் ம்ருத்யுமாபந்ந: கஸ்மாத்த்வம் நயஶாஸ்த்ரவித் ।
வ்யஸநாநாமுபாயக்ஞ: குஶலோ ஹ்யஸி வர்ஜநே ॥ (14)

ஸர்க்கம் : முப்பத்திரண்டு

சீதை வருந்துதல்!

சீதை, அந்தத் தலையையும், உத்தமமான வில்லையும், அனுமான் விவரமாகக் கூறிய சுக்ரீவன் நட்பையும், கணவனுடையதைப் போன்றே இருக்கும் முகத்தையும், அதன் இரு கண்களையும், முகத்தின் காந்தியையும், கேசத்தையும், நெற்றிப் பகுதியையும், மங்களமான சூடாமணியையும் பார்த்து, இவை எல்லா அடையாளங்களாலும் ('இது இராமனுடைய சிரம்தான்' என்று நம்பி,) மிகவும் பெருந்துயரத்தை அடைந்து, நாயகனைப் பிரிந்த அன்றில் பறவை போலப் புலம்பிக் கொண்டு, கைகேயியை இகழத் தலைப்பட்டாள். (1–3)

''கைகேயியே! உன் ஆசை நிறைவேறிவிட்டது அல்லவா? ரகு குலத் திலகமான இவர் (இராமன்) கொல்லப்பட்டு விட்டார். கலகம் செய்வதையே இயல்பாகக் கொண்ட உங்களால், (இக்ஷ்வாகு) குலமே வேருடன் அழிக்கப்பட்டுவிட்டது. (4)

கைகேயி! மேன்மையான குணங்கள் படைத்த இராமனால், உங்களுக்கு விரோதமான எந்தச் செயல் செய்யப்பட்டது? எதன் காரணமாக மரவுரி கொடுக்கப்பட்டு, வீட்டிலிருந்து காட்டுக்கு அனுப்பப்பட்டார்?'' (5)

இவ்வாறு சொல்லிவிட்டு, துக்கம் தாங்காமல் உடல் நடுங்குபவளும், தூயவளும் அறியாப் பெண்ணுமான சீதை, வெட்டப்பட்ட வாழை மரம் போல் தரையில் சாய்ந்தாள். (6)

நெடுந்தடங்கண்ணாளாகிய அவள், சிறிது நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து, உணர்வுபெற்று, அந்தத் தலையை எடுத்து அருகில் வைத்துக் கொண்டு (பின்வருமாறு) புலம்பினாள்— (7)

''பெருந்தோளரே! போரில் புறங்காட்டாது எதிர்த்து நிற்பதையே விரதமாகக் கொண்டவரே! தங்களின் இந்த இறுதிநிலையைப் பார்த்து, நான் கைம்பெண்ணாக்கப்பட்டு விட்டதை உணர்ந்து கொள்கிறேன். (8)

மனைவிக்கு முன்னதாகக் கணவன் இறப்பது என்பது, பெண்களின் புண்ணியக் குறைவினால்தான் என்று சொல்லப்படுகிறது. பெரும் புண்ணியங்களைச் செய்தவரே! நல்ல அனுஷ்டானங்களைச் செய்து வந்த எனக்கு முன்பாகவே தாங்கள் போய்விட்டீர்கள். (இதற்குக் காரணம், என்னுடைய புண்ணியக் குறைவுதான்.) (9)

ஒன்றின் மேல் ஒன்றாகத் துக்கத்தை அடைந்து சோகக் கடலில் மூழ்கியிருக்கும் என்னைக் காப்பாற்றிக் கைதூக்கிவிட முனைந்த தாங்களும் வீழ்த்தப்பட்டு விட்டீர்கள். (10)

இராமா! (என் துக்கம் ஒருபுறம் இருக்கட்டும்.) என்னுடைய மாமியார் கௌசல்யா தேவியார், புதல்வராகிய தங்களிடம் எல்லையற்ற பாசம் வைத்திருந்தார். ஆனால், இப்போது கன்றை இழந்த பசுவைப்போல், தன் (ஒரே) மகனை இழந்தவராகி விட்டார். (11)

இராகவனே! தாங்கள் நீண்ட காலம் வாழ்வீர்கள் என்று ஜோதிடர்கள் கூறிய சொல் பொய்யாக்கப்பட்டு விட்டது. தங்களுக்குக் குறைந்த ஆயுளே இருந்திருக்கிறது. (12)

(ஒருக்கால், 'அவர்கள் பொய் சொன்னார்கள் என்பது கூடத் தவறாக இருக்கலாம்.) தாங்கள் மிக்க அறிவுடையவர். (தங்கள் கர்மபலனுக்கு ஏற்றபடி) அவர்கள் சிந்தனையும் மாறிப் போயிருக்குமோ? (படையுடன் வந்த தாங்கள், மெய் மறந்து தூங்கிக் கொண்டிருந்தீர்கள் – என்பது, தங்கள் வீரத்திற்கு ஒவ்வாத விஷயம்.) அதனால், காலம்தான் எல்லாப் பிராணிகளையும் (அதனதன் கர்மவினைக்கேற்றபடி) சுக–துக்கங்களோடு சேர்த்து வைக்கிறது என்பது உறுதி. (13)

அரச நீதிநூல் வல்லவர், தாங்கள்; பின்னர் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தடுத்து நிறுத்தும் உபாயங்களை அறிந்தவர்; செயல்திறன் உடையவர். இப்படிப்பட்ட தங்களுக்கு எவ்வாறு மரணம் நேர்ந்தது? (14)

தத$_2$ா த்வம் ஸம்பரிஷ்வஜ்ய ரௌத்$_3$ரயாதிந்ருஶம்ஸயா ।
காலராத்ர்யா மயாச்சி$_2$த்$_3$ய ஹ்ருத: கமலலோசந ॥ (15)

உபஶேஷே மஹாப$_3$ாஹோ மாம் விஹாய தபஸ்விநீம் ।
ப்ரியாமிவ ஸமாஶ்லிஷ்ய ப்ருதி$_2$வீம் புருஷர்ஷப$_4$ ॥ (16)

அர்சிதம் ஸததம் யத்தத்$_3$க$_3$ந்த$_4$மால்யைர்மயா தவ ।
இத$_3$ம் தே மத்ப்ரியம் வீர த$_4$நு: காஞ்சநபூ$_4$ஷணம் ॥ (17)

பித்ரா த$_3$ஶரதே$_2$ந த்வம் ஶ்வஶுரேண மமாநக$_4$ ।
ஸர்வைஶ்ச பித்ருபி$_4$: ஸார்த$_4$ம் நூநம் ஸ்வர்கே$_3$ ஸமாக$_3$த: ॥ (18)

தி$_3$வி நக்ஷத்ரபூ$_4$தஸ்த்வம் மஹத்கர்மக்ருதாம் ப்ரியம் ।
புண்யம் ராஜர்ஷிவம்ஶம் த்வமாத்மந: ஸமுபேக்ஷஸே ॥ (19)

கிம் மாம் ந ப்ரேக்ஷஸே ராஜந் கிம் மாம் ந ப்ரதிப$_4$ாஷஸே ।
ப$_3$ாலாம் ப$_3$ால்யேந ஸம்ப்ராப்தாம் ப$_4$ார்யாம் மாம் ஸஹசாரிணீம் ॥ (20)

ஸம்ஶ்ருதம் க்$_3$ருஹ்ணதா பாணிம் சரிஷ்யாமீதி யத்த்வயா ।
ஸ்மர தந்மம காகுத்ஸ்த$_2$ நய மாமபி து$_3$:கி$_2$தாம் ॥ (21)

கஸ்மாந்மாமபஹாய த்வம் க$_3$தோ க$_3$திமதாம் வர ।
அஸ்மால்லோகாத$_3$மும் லோகம் த்யக்த்வா மாமபி து$_3$:கி$_2$தாம் ॥ (22)

கல்யாணைருசிதம் யத்தத்பரிஷ்வக்தம் மயைவ து ।
க்ரவ்யாதை$_3$ஸ்தச்ச$_2$ரீரம் தே நூநம் விபரிக்ருஷ்யதே ॥ (23)

அக்$_3$நிஷ்டோமாதி$_3$பி$_4$ர்யக்ஞைரிஷ்டவாநாப்தத$_3$க்ஷிணை: ।
அக்$_3$நிஹோத்ரேண ஸம்ஸ்காரம் கேந த்வம் து ந லப்ஸ்யஸே ॥ (24)

ப்ரவ்ரஜ்யாமுபபந்நாநாம் த்ரயாணாமேகமாக$_3$தம் ।
பரிப்ரக்ஷ்யதி கௌஸல்யா லக்ஷ்மணம் ஶோகலாலஸா ॥ (25)

ஸ தஸ்யா: பரிப்ருச்ச$_2$ந்த்யா வத$_4$ம் மித்ரப$_3$லஸ்ய தே ।
தவ சாக்$_2$யாஸ்யதே நூநம் நிஶாயாம் ராக்ஷஸைர்வத$_4$ம் ॥ (26)

ஸா த்வாம் ஸுப்தம் ஹதம் ஶ்ருத்வா மாம் ச ரக்ஷோக்$_3$ருஹம் க$_3$தாம் ।
ஹ்ருத$_3$யேநாவதீ$_3$ர்ணேந ந ப$_4$விஷ்யதி ராக$_4$வ ॥ (27)

தாமரைக் கண்ணரே! (தங்களுக்கு நிகரான பேரழகுடையவரைக் காணவே முடியாது. அதனால்,) மிகவும் கொடுமைக்காரியான காளராத்திரி (தங்களிடம் மிகவும் மோகம் கொண்டு), என்னிடமிருந்து தங்களைப் பிரித்து, நன்றாக தழுவிக் கொண்டு அபகரித்துச் சென்றுவிட்டாள். புருஷோத்தமரே! மாவீரரே! தங்களையே நினைத்துக் கொண்டு விரதம் அனுஷ்டிக்கும் என்னை உதறிவிட்டு, மிகவும் அன்புக்குரியவள் என்று பூமிதேவியை தழுவிக் கொண்டு படுத்துக் கிடக்கிறீர்கள். (15,16)

வீரரே! நான் தினந்தோறும் பக்தி–சிரத்தையுடன் சந்தனம், மலர்கள் தூவி வழிபட்டதும், தங்களுக்கு மிகவும் பிரியமானதும், பொன்னால் அலங்கரிக்கப்பட்டதுமான தங்களுடைய வில், இதோ இங்கே கிடக்கிறது. குற்றமற்றவரே! என்னுடைய மாமனாரும், தங்கள் தந்தையுமான தசரதரையும் மற்றும் எல்லா முன்னோர்களையும் தேவலோகத்தில் சந்தித்திருப்பீர்கள் என்பது நிச்சயம். (17,18)

புனிதமான ராஜரிஷி பரம்பரையில் தோன்றிய தாங்கள், அந்தப் பரம்பரையின் தருமத்தை அலட்சியம் செய்துவிட்டீர்களே! (வயது முதிர்ந்து, புதல்வர்களிடம் அரசை ஒப்படைத்துவிட்டு, காட்டுக்குச் சென்று, வானப்பிரஸ்த நிலைக்கு உரிய கர்மாக்களைச் செய்து, பின் தவமுதிர்ச்சியினால் உடலைத் துறப்பது – என்பதுதான் பரம்பரையான பழக்கம். தாங்கள் இந்தக் கடமைகளை அசட்டை செய்து,) தந்தையின் ஆணைப்படி நடப்பது என்ற உன்னதமான செயலைச் செய்து (இடையிலேயே) வானத்துத் தாரகையாகி விட்டீர்கள். (19)

மன்னரே! தாங்கள் இளம் பருவத்திலிருந்தபோது, நான் சிறியவளாக இருந்தேன். அப்போது தங்கள் அடியொற்றிச் செல்லும் பத்தினியாக என்னை ஏற்றுக் கொண்டீர்கள். அப்படிப்பட்ட தாங்கள், இப்போது ஏன் என்னைப் பார்க்காமலிருக்கிறீர்கள்? ஏன், என் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் இருக்கிறீர்கள்? (20)

விவாகத்தில், ‘பாணிக்ரஹணம்’ (கையைப் பிடித்துக் கொடுத்தல்) என்ற சடங்கு நடந்தபோது, ‘நான் உன்னுடன் கூட அறச்செயல்களைச் செய்வேன்’ என்று (மந்திரரூபமாக) உறுதி கூறினீர்களே, அதை எண்ணிப் பாருங்கள். துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். (நான் இல்லாமல் தாங்கள் எவ்வாறு அறச்செயல்கள் செய்ய முடியும்?) (21)

நன்னெறியாளர்களுள் சிறந்தவரே! தங்களிடம் எல்லையில்லா அன்பு கொண்ட என்னைத் தவிக்க விட்டுவிட்டு, துக்கத்தில் வெந்து கொண்டிருக்கும் என்னைத் துறந்து, இந்த உலகத்திலிருந்து பரலோகத்திற்கு எந்தக் காரணத்தால் சென்றீர்கள்? (இது, தாங்கள் பின்பற்றிய அறவழிக்கு உகந்ததா?) உத்தம லட்சணங்கள் பொருந்தியதும், பார்க்கப் பார்க்கத் திகட்டாததும், என்னால் மட்டுமே தழுவப்பட்டதுமான தங்களது திருமேனி, புலால் உண்ணும் பிராணிகளால் இங்குமங்கும் இழுத்துச் செல்லப்படுமே! (22,23)

தாங்கள், ஏராளமான தட்சிணை கொடுத்து அக்னிஷ்டோமம் முதலான வேள்விகளைச் செய்து முடித்திருக்கிறீர்கள். (இப்படிப்பட்டவர்களுக்கு, அவர்கள் பூசித்த அக்னியினாலேயே தான் இறுதிச் சடங்குகள் செய்யப்பட வேண்டும் என்பது விதி. ஆனால், தங்கள் விஷயத்தில் அப்படி நடக்கவில்லையே!) தங்கள் அக்னிஹோத்ர அக்னியினால், ஏன் தங்கள் இறுதிச் சடங்குகளைப் பெறாமல் போனீர்கள்? (24)

நாம், மூன்று பேர்களாக வனத்திற்கு அனுப்பப்பட்டோம். (நானும் நீங்களும் இல்லாமல்) தான் ஒருவனாகத் திரும்பி வந்திருக்கும் லட்சுமணனைப் பார்த்து, (ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறது என்று ஊகித்து திடுக்கிட்டு,) சோகத்தில் மூழ்கிய கோசலை அன்னை, ‘என்ன நடந்தது?’ என்று கேட்பார். (25)

தேவியார் அப்படிக் கேட்கும்போது, தங்களுடைய நட்புப் படையினரின் அழிவையும், இரவில் அரக்கர்களால் தாங்கள் கொல்லப்பட்டதையும் நிச்சயமாக அவர் எடுத்துக் கூறுவார். இராகவனே! உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் தாங்கள் கொல்லப்பட்டதையும், அரக்கர் வீட்டுக்கு நான் திருடி வரப்பட்டதையும் கேட்டு, அவர் இதயம் வெடித்து, உயிரைத் துறப்பார். (26,27)

மம ஹேதோரநார்யாயா அநக$_4$: பார்தி$_2$வாத்மஜ: ।
ராம: ஸாக$_3$ரமுத்தீர்ய ஸத்த்வவாந் கோ$_3$ஷ்பதே$_3$ ஹத: ॥ (28)

அஹம் த$_3$ாஶரதே$_2$நோட$_4$ா மோஹாத்ஸ்வகுலபாம்ஸநீ ।
ஆர்யபுத்ரஸ்ய ராமஸ்ய ப$_4$ார்யா ம்ருத்யுரஜாயத ॥ (29)

நூநமந்யாம் மயா ஜாதிம் வாரிதம் த$_3$ாநமுத்தமம் ।
யாஹமத்$_3$யேஹ ஶோசாமி ப$_4$ார்யா ஸர்வாதிதே$_2$ரபி ॥ (30)

ஸாது$_4$ பாதய மாம் க்ஷிப்ரம் ராமஸ்யோபரி ராவண ।
ஸமாநய பதிம் பத்ந்யா குரு கல்யாணமுத்தமம் ॥ (31)

ஶிரஸா மே ஶிரஶ்சாஸ்ய காயம் காயேந யோஜய ।
ராவணாநுக$_3$மிஷ்யாமி க$_3$திம் ப$_4$ர்துர்மஹாத்மந: ॥ (32)

இதி ஸா து$_3$:க$_2$ஸந்தப்தா விலலாபாயதேக்ஷணா ।
ப$_4$ர்து: ஶிரோ த$_4$நுஸ்தத்ர ஸமீக்ஷ்ய ச புந: புந: ॥ (33)

ஏவம் லாலப்யமாநாயாம் ஸீதாயாம் தத்ர ராக்ஷஸ: ।
அபி$_4$சக்ராம ப$_4$ர்தாரமநீகஸ்த$_2$: க்ருதாஞ்ஜலி: ॥ (34)

விஜயஸ்வார்யபுத்ரேதி ஸோऽபி$_4$வாத்$_3$ய ப்ரஸாத்$_3$ய ச ।
ந்யவேத$_3$யத$_3$நுப்ராப்தம் ப்ரஹஸ்தம் வாஹிநீபதிம் ॥ (35)

அமாத்யை: ஸஹிதை: ஸர்வை: ப்ரஹஸ்த: ஸமுபஸ்தி$_2$த: ।
தேந த$_3$ர்ஶநகாமேந வயம் ப்ரஸ்த$_2$ாபிதா: ப்ரபே$_4$ா ॥ (36)

நூநமஸ்தி மஹாராஜ ராஜப$_4$ாவாத்க்ஷமாந்விதம் ।
கிஞ்சித$_3$ாத்யயிகம் கார்யம் தேஷாம் த்வம் த$_3$ர்ஶநம் குரு ॥ (37)

ஏதச்ச்$_2$ருத்வா த$_3$ஶக்$_3$ரீவோ ராக்ஷஸப்ரதிவேதி$_3$தம் ।
அஶோகவநிகாம் த்யக்த்வா மந்த்ரிணாம் த$_3$ர்ஶநம் யயௌ ॥ (38)

ஸ து ஸர்வம் ஸமர்த்$_2$யைவ மந்த்ரிபி$_4$: க்ருத்யமாத்மந: ।
ஸப$_4$ாம் ப்ரவிஶ்ய வித$_3$தே$_4$ விதி$_3$த்வா ராமவிக்ரமம் ॥ (39)

அந்தர்த$_4$ாநம் து தச்சீ$_2$ர்ஷம் தச்ச கார்முகமுத்தமம் ।
ஜக$_3$ாம ராவணஸ்யைவ நிர்யாணஸமநந்தரம் ॥ (40)

ராக்ஷஸேந்த்$_3$ரஸ்து தை: ஸார்த$_4$ம் மந்த்ரிபி$_4$ர்பீ$_4$மவிக்ரமை: ।
ஸமர்த$_2$யாமாஸ தத$_3$ா ராமகார்யவிநிஶ்சயம் ॥ (41)

அவிதூ$_3$ரஸ்தி$_2$தாந் ஸர்வாந் ப$_3$லாத்$_4$யக்ஷாந் ஹிதைஷிண: ।
அப்$_3$ரவீத்காலஸத்$_3$ருஶம் ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ॥ (42)

குணக்குறையுடைய என் பொருட்டு பேராற்றல் உடையவரும், எவ்விதக் குற்றமும் இல்லாதவரும், அரசகுமாரருமான இராமன், எவராலும் கடக்க முடியாத பெருங்கடலைக் கடந்து வந்தார். மகத்தான அவ்வளவு வீரம் படைத்த அவர், ஒரு பசுவின் குளம்படித் தண்ணீரில் மூழ்கிப் போனார். (யுத்தமே இல்லாமல், தூங்கும்போது கொல்லப்பட்டார்) என்பது, அந்தோ! பரிதாபம். (28)

அட! பிறந்த குலத்திற்கே இழிவைத் தேடித் தரும் என்னை, விவரம் புரியாமல் இராமன் விவாகம் செய்து கொண்டார். நற்குணக் கடலாகிய இராமனுடைய மனைவி (நான்), அவருக்கே யமனாகி விட்டாள். (29)

நான், முந்தைய பிறவியில் யாருக்கோ தானம் செய்யப்பட்டதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறேன். (அந்தப் பாவம், இப்போது பலனைக் கொடுக்கத் தொடங்கியிருக்கிறது.) எல்லா விருந்தினரையும் உள்ளன்புடன் உபசரிக்கும் நல்லியல்புடையவருக்கு மனைவியாகி, இப்போது (இராமனுடைய மரணத்தினால்) நொந்து தவிக்கிறேன். (30)

இராவணா! உடனே, இராமனுடைய உடலின்மேல் என் உடலையும் கிடத்து. (என்னையும் கொன்றுவிடு. கணவனை, மனைவியோடு சேர்த்துவிடு.) இது (கணவன்–மனைவியைச் சேர்த்து வைப்பது) மிகவும் புண்ணியமான செயல். (31)

இராவணா! என்னுடைய தலையை அவருடைய தலையுடனும், என் உடலை அவர் உடலுடனும் சேர்த்து வை. மகாத்மாவான என் கணவரின் கதியை (அவர் சென்றடையும் புண்ணிய லோகங்களை) நானும் அடைகிறேன்.'' (32)

கணவருடைய தலையையும் வில்லையும், அவ்விடத்தில் பார்த்துப் பார்த்து, துக்கத்தினால் வெந்து கொண்டிருந்த நெடுங்கண்ணாளாகிய அவள், மேற்கண்டவாறு புலம்பி அழுதாள். (33)

இவ்வாறு, சீதை அழுது புலம்பிக் கொண்டிருந்தபோது, படைவீரனான ஓர் அரக்கன் கைகளைக் கூப்பிக் கொண்டு, தன் யஜமானரான இராவணனிடம் வந்தான். 'நற்குடியில் பிறந்த மாமன்னர் வாழ்க!' என்று வாழ்த்துக் கூறி வணங்கி, அவனை உள்ளங்குளிரச் செய்து, சேனைத் தலைவன் பிரஹஸ்தன் அவ்விடம் வந்திருப்பதாகத் தெரிவித்தான். (34,35)

''பிரபு! தங்களைக் காண்பதற்காக, எல்லா அமைச்சர்களோடும்கூட பிரஹஸ்தன் வந்து காத்துக் கொண்டிருக்கிறார். அதைத் தெரிவிப்பதற்காக நாங்கள் இவ்விடத்திற்கு அனுப்பப்பட்டோம். (நான் அனுப்பப்பட்டேன் என்று கொள்ளலாகும்.) (36)

மாமன்னரே! அரசராகிய தங்கள் உத்தரவைப் பெற்று, உடனே செய்ய வேண்டிய ஏதோ ஒரு காரியம் இருப்பதாகத் தோன்றுகிறது. தாங்கள், அவர்களுக்குத் தரிசனம் கொடுக்க வேண்டும் (என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்).'' (37)

அரக்கன் சொன்னதைக் கேட்டவுடன், இராவணன் அசோகவனத்தை விட்டு அமைச்சர்களைப் பார்ப்பதற்காகச் சென்றான். அவன் சபையை அடைந்து, தான் செய்த காரியங்களையெல்லாம் நியாயப்படுத்திப் பேசிவிட்டு, இராமனுடைய அளவற்ற வீரத்தையும் அறிந்து கொண்டுவிட்டு, நடைபெற வேண்டிய செயல்களைப் பற்றித் தீர்மானித்தான். (38,39)

இராவணன், அங்கிருந்து (அசோகவனத்திலிருந்து) வெளியே சென்றவுடனேயே, அந்தத் தலையும் வில்லும் மறைந்து போயின. அரக்க மன்னன் இராவணன், பயங்கரமான ஆற்றல் படைத்த அமைச்சர்களோடுகூட ஆலோசனை நடத்தி, இராமன் விஷயமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நிச்சயித்தான். (40,41)

பின்னர், அரக்கர் தலைவனான இராவணன், தன் அருகில் இருந்தவர்களும், தன் நலன் விரும்பிகளுமான படைத்தலைவர்கள் அனைவரையும் பார்த்து, அப்போதைய காலத்திற்குகந்த சொற்களைக் கூறினான்— (42)

ஶீக்₄ரம் பே₄ரீநிநாதே₃ந ஸ்பு₂டகோணாஹதேந மே ।
ஸமாநயத்₄வம் ஸைந்யாநி வக்தவ்யம் ச ந காரணம் ॥ (43)

ததஸ்ததே₂தி ப்ரதிக்₃ருஹ்ய தத்₃வசோ
ப₃லாதி₄பாஸ்தே மஹதா₃த்மநோ ப₃லம் ।
ஸமாநயம்ஶ்சைவ ஸமாக₃மம் ச தே
ந்யவேத₃யந் ப₄ர்தரி யுத்₃த₄காங்க்ஷிணி ॥ (44)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகியே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ த்₃வாம்த்ரிம்ஶ: ஸர்க₃: ॥

த்ரயஸ்த்ரிம்ஶ: ஸர்க₃:

ஸரமாஸமாஶ்வாஸவசநம்

ஸீதாம் து மோஹிதாம் த்₃ருஷ்ட்வா ஸரமா நாம ராக்ஷஸீ ।
ஆஸஸாத₃ாத₂ வைதே₃ஹீம் ப்ரியாம் ப்ரணயிநீம் ஸகீ₂ம் ॥ (1)

மோஹிதாம் ராக்ஷஸேந்த்₃ரேண ஸீதாம் பரமது₃:கி₂தாம் ।
ஆஶ்வாஸயாமாஸ தத₃ா ஸரமா ம்ருது₃ப₄ாஷிணீ ॥ (2)

ஸா ஹி தத்ர க்ருதா மித்ரம் ஸீதயா ரக்ஷ்யமாணயா ।
ரக்ஷந்தீ ராவணாதி₃ஷ்டா ஸாநுக்ரோஶா த்₃ருட₄வ்ரதா ॥ (3)

ஸா த₃த₃ர்ஶ தத: ஸீதாம் ஸரமா நஷ்டசேதநாம் ।
உபாவ்ருத்யோத்தி₂தாம் த்₄வஸ்தாம் வட₃வாமிவ பாம்ஸுலாம் ॥ (4)

தாம் ஸமாஶ்வாஸயாமாஸ ஸகீ₂ ஸ்நேஹேந ஸுவ்ரதா ।
ஸமாஶ்வஸிஹி வைதே₃ஹி மா பூ₄த்தே மநஸோ வ்யத₂ா ॥ (5)

உக்தா யத்₃ராவணேந த்வம் ப்ரத்யுக்தம் ச ஸ்வயம் த்வயா ।
ஸகீ₂ஸ்நேஹேந தத்₃பீ₄ரு மயா ஸர்வம் ப்ரதிஶ்ருதம் ॥ (6)

லீநயா க₃க₃நே ஶூந்யே ப₄யமுத்ஸ்ருஜ்ய ராவணாத் ।
தவ ஹேதோர்விஶாலாக்ஷி ந ஹி மே ஜீவிதம் ப்ரியம் ॥ (7)

ஸ ஸம்ப்₄ராந்தஶ்ச நிஷ்க்ராந்தோ யத்க்ருதே ராக்ஷஸாதி₄ப: ।
தச்ச மே விதி₃தம் ஸர்வமபி₄நிஷ்க்ரம்ய மைதி₂லி ॥ (8)

ந ஶக்யம் ஸௌப்திகம் கர்தும் ராமஸ்ய விதி₃தாத்மந: ।
வத₄ஶ்ச புருஷவ்யாக்₄ரே தஸ்மிந்நைவோபபத்₃யதே ॥ (9)

ந த்வேவ வாநரா ஹந்தும் ஶக்யா: பாத₃பயோதி₄ந: ।
ஸுரா தே₃வர்ஷபே₄ணேவ ராமேண ஹி ஸுரக்ஷிதா: ॥ (10)

''உறுதியான கோல்களால் பேரிகைகளைத் தட்டி, பேரொலி எழுப்பி, என் படைகளையெல்லாம் உடனே ஒன்று திரட்டுங்கள். (ஆனால், அவர்களை அழைத்ததற்கான) காரணத்தைச் சொல்ல வேண்டாம்.'' (43)

பின்னர், அந்த படைத்தலைவர்கள், 'அவ்வாறே செய்கிறோம்' என்று கூறி, தத்தம் பெரும்படைகளை ஒன்று திரட்டினார்கள். போரில் விருப்பமுள்ள தலைவரிடம் படைகள் வந்து சேர்ந்துவிட்டதைத் தெரிவித்தார்கள். (44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து மூன்று

ஸரமை ஆறுதல் கூறுதல்!

பின்னர், ஸரமை என்ற அரக்கி, (இராமனுடைய தலையைக் கண்டு அது உண்மை என்று நம்பி,) மனமயக்கத்திலிருப்பவளும், உற்ற தோழியும், எல்லோருக்கும் நன்மை செய்ய விரும்புகிறவளும், விதேக மன்னன் புதல்வியுமான சீதையின் அருகில் வந்தாள். (1)

இனிமையாகப் பேசும் ஸரமை, அரக்க மன்னனால் மதிமயக்கப்பட்டு பெருந்துயரில் ஆழ்ந்திருக்கும் சீதையைச் சமாதானப்படுத்தினாள். (2)

இராவணனுடைய கட்டளைப்படி, சீதைக்குக் காவலாக நியமிக்கப்பட்டவள், அவள். கருணையும் உறுதியான நெஞ்சமும் கொண்ட அவள், சீதையோடு நட்புடன் பழகி வந்தாள். (3)

ஸரமை, களைப்பினால் மணலில் விழுந்து புரண்டுவிட்டுப் பின் எழுந்து நிற்கும் பெண்குதிரையைப் போல், உடல் முழுவதும் தூசி படர்ந்தும் உணர்விழந்தும் கிடந்த சீதையைப் பார்த்தாள். (4)

தோழமையை நன்கு பரிபாலிக்கும் தோழியான அவள், சீதைக்குத் தைரியம் கொடுத்துப் பேசினாள்— ''வைதேகி! மனக்கவலை கொள்ளாதே; மன நிம்மதியுடன் இரு. (5)

கோழை மனம் உடையவளே! இராவணன் கூறியதையும், அதற்கு நீயாகவே கொடுத்த பதிலையும் ஒரு தோழிக்குக் காட்ட வேண்டிய பரிவுடன் முழுமையாக நானும் கேட்டேன். (6)

விசாலமான கண்களை உடையவளே! இராவணன் கண்ணில் பட்டுவிட்டால் ஆபத்து – என்பதைப் பொருட்படுத்தாமல் பாழ்வெளியான ஆகாயத்தில் மறைந்திருந்து கேட்டேன். உன்னைக் காட்டிலும் என் உயிர் எனக்குப் பிரியமானது அல்ல. (7)

மைதிலி! அரக்கர் மன்னனாகிய அவன் மனக்குழப்பத்துடன் எந்தக் காரணத்தால் இங்கிருந்து வெளியே போனானோ, அதன் முழு விவரமும் எனக்குத் தெரியும். (8)

பேராண்மையுடைய இராமனை, அவர் உறங்கும்போது கொல்வது என்பது நடக்கக் கூடியதே அல்ல; ஆண்புலியான அவரைக் (கண்விழித்திருக்கும்போதும் கூடக்) கொல்வது என்பது சாத்தியமே அல்ல. (9)

இந்திரனால் பாதுகாக்கப்படும் தேவர்களைப் போல, இராமனால் நல்லமுறையில் காப்பாற்றப்படுவதால், மரங்களைப் பெயர்த்துப் போரிடும் வானரர்கள், எவராலும் கொல்லப்பட முடியாதவர்கள். (10)

தீ$_3$ர்க$_4$வ்ருத்தபு$_4$ஜ: ஸ்ரீமாந் மஹோரஸ்க: ப்ரதாபவாந் ।
த$_4$ந்வீ ஸம்ஹநநோபேதோ த$_4$ர்மாத்மா பு$_4$வி விஶ்ருத: ॥ (11)

விக்ராந்தோ ரக்ஷிதா நித்யமாத்மநஶ்ச பரஸ்ய ச ।
லக்ஷ்மணேந ஸஹ ப்$_4$ராத்ரா குஶலீ நயஶாஸ்த்ரவித் ॥ (12)

ஹந்தா பரப$_3$லௌக$_4$நாமசிந்த்யப$_3$லபௌருஷ: ।
ந ஹதோ ராக$_4$வ: ஸ்ரீமாந் ஸீதே ஶத்ருநிப$_3$ர்ஹண: ॥ (13)

அயுக்தபு$_3$த்$_3$தி$_4$க்ருத்யேந ஸர்வபூ$_4$தவிரோதி$_4$நா ।
இயம் ப்ரயுக்தா ரௌத்$_3$ரேண மாயா மாயாவித$_3$ா த்வயி ॥ (14)

ஶோகஸ்தே விக$_3$த: ஸர்வ: கல்யாணம் த்வாமுபஸ்தி$_2$தம் ।
த்$_4$ருவம் த்வாம் ப$_4$ஜதே லக்ஷ்மீ: ப்ரியம் ப்ரீதிகரம் ஶ்ருணு ॥ (15)

உத்தீர்ய ஸாக$_3$ரம் ராம: ஸஹ வாநரஸேநயா ।
ஸந்நிவிஷ்ட: ஸமுத்$_3$ரஸ்ய தீரமாஸாத்$_3$ய த$_3$க்ஷிணம் ॥ (16)

த்$_3$ருஷ்டோ மே பரிபூர்ணார்த$_2$: காகுத்ஸ்த$_2$: ஸஹலக்ஷ்மண: ।
ஸ ஹி தை: ஸாக$_3$ராந்த:ஸ்தைர்ப$_3$லைஸ்திஷ்ட$_2$தி ரக்ஷித: ॥ (17)

அநேந ப்ரேஷிதா யே ச ராக்ஷஸா லகு$_4$விக்ரமா: ।
ராக$_4$வஸ்தீர்ண இத்யேவ ப்ரவ்ருத்திஸ்தைரிஹாஹ்ருதா ॥ (18)

ஸ தாம் ஶ்ருத்வா விஶாலாக்ஷி ப்ரவ்ருத்திம் ராக்ஷஸாதி$_4$ப: ।
ஏஷ மந்த்ரயதே ஸர்வை: ஸசிவை: ஸஹ ராவண: ॥ (19)

இதி ப்$_3$ருவாணா ஸரமா ராக்ஷஸீ ஸீதயா ஸஹ ।
ஸர்வோத்$_3$யோகே$_3$ந ஸைந்யாநாம் ஶப்$_3$த$_3$ம் ஶுஶ்ராவ பை$_4$ரவம் ॥ (20)

த$_3$ண்ட$_3$நிர்க$_4$தவாதி$_3$ந்யா: ஶ்ருத்வா பே$_4$ர்யா மஹாஸ்வநம் ।
உவாச ஸரமா ஸீதாமித$_3$ம் மது$_4$ரபா$_4$ஷிணீ ॥ (21)

ஸந்நாஹஜநநீ ஹ்யேஷா பை$_4$ரவா பீ$_4$ரு பே$_4$ரிகா ।
பே$_4$ரீநாத$_3$ம் ச க$_3$ம்பீ$_4$ரம் ஶ்ருணு தோயத$_3$நி:ஸ்வநம் ॥ (22)

கல்ப்யந்தே மத்தமாதங்க$_3$ா யுஜ்யந்தே ரத$_2$வாஜிந: ।
ஹ்ருஷ்யந்தே துரக$_3$ாரூட$_4$ா: ப்ராஸஹஸ்தா: ஸஹஸ்ரஶ: ॥ (23)

தத்ர தத்ர ச ஸந்நத்$_3$த$_4$ா: ஸம்பதந்தி பத$_3$ாதய: ।
ஆபூர்யந்தே ராஜமார்க$_3$ா: ஸைந்யைரத்$_3$பு$_4$தத$_3$ர்ஶநை: ॥ (24)

சீதே! இராமன், நீண்டு திரண்ட கரங்களை உடையவர்; அனைத்துப் பெருமைகளுக்கும் இருப்பிடமானவர்; அகன்ற மார்பும் வீரச்செறிவும் உடையவர்; வில்லாளர்; கவர்ச்சிமிக்க திருமேனி; அறநெறியாளர் என்று உலகம் முழுவதிலும் புகழ் பெற்றவர்; எவராலும் மீறிச் செல்ல முடியாதவர்; எல்லாக் காலங்களிலும் தன்னையும் பிறரையும் காப்பாற்றும் திறன் உடையவர்; அரசநீதி அறிந்தவர்; எதிரியின் படை அணிகளை வெட்டிச் சாய்ப்பவர்; எண்ணிப் பார்க்க முடியாத ஆற்றலும் ஆண்மையும் உடையவர்; பகைவரை அழித்து ஒழிப்பவர்; வெற்றித்திரு பொருந்தியவர். எனவே, இராகவன் கொல்லப்பட்டார் என்பது சரியன்று; தம்பியாகிய லட்சுமணனோடு சௌக்கியமாக இருக்கிறார். (11–13)

இராவணனுடைய அறிவு, செயல் ஆகிய இரண்டுமே தவறானவை. அவன் எல்லாப் பிராணிகளுக்கும் பகைவன். கொடுமைக்காரனும் மாயாவியுமான அவன், தன் மாயையால் உன்னை மயக்கியிருக்கிறான். (அந்தத் தலை, வில் ஆகியவை மாயையால் தோற்றுவிக்கப்பட்டவை.) (14)

இப்போது உன் துக்கங்களுக்கெல்லாம் முடிவு வந்துவிட்டது; நல்ல காலம் உன்னை நெருங்கி வந்திருக்கிறது. நிச்சயமாக, திருமகள் உன்னைச் சேவித்துக் கொண்டிருக்கிறாள். உனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய செய்தியைக் கூறுகிறேன், கேள். (15)

இராமன், வானரப்படையோடுகூட பெருங்கடலைத் தாண்டி, சமுத்திரத்தின் தென்கரைக்கு வந்து தங்கியிருக்கிறார். (16)

எக்காலத்திலும் எவ்வித மனக்குறையும் இல்லாத இராமனையும் லட்சுமணனையும், என் கண்களால் பார்த்தேன். கடற்கரைப் பகுதியில், நன்றாக வியூகம் அமைக்கப்பட்ட படையினரால் அவர் பாதுகாக்கப்படுகிறார். (17)

இவனால் (இராவணனால்) அனுப்பப்பட்ட மாவீரர்களான ஒற்றர்கள், 'இராமன் கடலைக் கடந்து இக்கரை வந்து சேர்ந்து விட்டார்' என்ற செய்தியைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். (18)

தடங்கண்ணாளே! அரக்க மன்னன் இராவணன் அந்தச் செய்தியைக் கேட்டு, எல்லா அமைச்சர்களுடன்கூட மந்திராலோசனை செய்து கொண்டிருக்கிறான்.'' (19)

அரக்கியான ஸரமை, இவ்வாறு சொல்லிக் கொண்டிக்கும்போதே, போர் புரிவதற்கான முழு ஆயத்தங்களுடன் அணிவகுத்த படையினரின் கோரமான சிம்மநாதம் கேட்டது. (20)

இனிமையாகப் பேசும் இயல்புடைய ஸரமை, கோல்களால் அடிக்கப்பட்டு சப்திக்கின்ற பேரிகையின் பயங்கரமான முழக்கத்தைக் கேட்டு, சீதையைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள்— (21)

''பேதைப் பெண்ணே! பயங்கரமான இந்தப் பேரிகை முழக்கம், போருக்கு ஆயத்தம் என்பதைக் குறிக்கிறது. மேக கர்ஜனைக்கு ஒப்பான யுத்த பேரிகைகளின் முழக்கத்தை நீயும் கேள். மதங்கொண்ட (போர்) யானைகள் அலங்கரிக்கப்படுகின்றன. தேர்க்குதிரைகள் தேர்களுடன் இணைக்கப்படுகின்றன; கையில் ஈட்டியைத் தாங்கிய ஆயிரக்கணக்கான குதிரை வீரர்கள் (போர் வந்ததே! என்று) மகிழ்ச்சி அடைகிறார்கள். (22,23)

காலாட்படையினர் ஆங்காங்கே போருக்கு ஆயத்தமாக வந்து கூடுகிறார்கள். வெகுவேகமான ஓட்டத்துடனும் பெருஞ்சத்தத்துடனும், கடலில் அலைகள் வரிசை வரிசையாக எழும்பிக் கொண்டேயிருப்பதைப் போல, அரசபாட்டைகளில் பல்வகை சீருடை அணிந்த வீரர்கள் கணக்கில்லாமல் நிரம்பியிருக்கிறார்கள். (24)

வேக$_3$வத்$_3$பி$_4$ர்நத$_3$த்$_3$பி$_4$ஶ்ச தோயௌகை$_4$ரிவ ஸாக$_3$ர: ।
ஶஸ்த்ராணாம் ச ப்ரஸந்நாநாம் சர்மணாம் வர்மணாம் தத$_2$ா ॥ (25)

ரத$_2$வாஜிக$_3$ஜாநாம் ச பூ$_4$ஷிதாநாம் ச ரக்ஷஸாம் ।
ஸம்ப்$_4$ரமோ ரக்ஷஸாமேஷ ஹ்ருஷிதாநாம் தரஸ்விநாம் ॥ (26)

ப்ரப$_4$ாம் விஸ்ருஜதாம் பஶ்ய நாநாவர்ணாம் ஸமுத்தி$_2$தாம் ।
வநம் நிர்த$_3$ஹதோ க$_4$ர்மே யத$_2$ா ரூபம் விப$_4$ாவஸோ: ॥ (27)

க$_4$ண்டாநாம் ஶ்ருணு நிர்கே$_4$ாஷம் ரத$_2$ாநாம் ஶ்ருணு நி:ஸ்வநம் ।
ஹயாநாம் ஹேஷமாணாநாம் ஶ்ருணு தூர்யத்$_4$வநிம் யத$_2$ா ॥ (28)

உத்$_3$யதாயுத$_4$ஹஸ்தாநாம் ராக்ஷஸேந்த்$_3$ராநுயாயிநாம் ।
ஸம்ப்$_4$ரமோ ரக்ஷஸாமேஷ துமுலோ ரோமஹர்ஷண: ॥ (29)

ஶ்ரீஸ்த்வாம் ப$_4$ஜதி ஶோகக்$_4$நீ ரக்ஷஸாம் ப$_4$யமாக$_3$தம் ।
ராம: கமலபத்ராக்ஷோ தை$_3$த்யாநாமிவ வாஸவ: ॥ (30)

விநிர்ஜித்ய ஜிதக்ரோத$_4$ஸ்த்வாமசிந்த்யபராக்ரம: ।
ராவணம் ஸமரே ஹத்வா ப$_4$ர்தா த்வாதி$_4$க$_3$மிஷ்யதி ॥ (31)

விக்ரமிஷ்யதி ரக்ஷ:ஸு ப$_4$ர்தா தே ஸஹலக்ஷ்மண: ।
யத$_2$ா ஶத்ருஷு ஶத்ருக்$_4$நோ விஷ்ணுநா ஸஹ வாஸவ: ॥ (32)

ஆக$_3$தஸ்ய ஹி ராமஸ்ய க்ஷிப்ரமங்கக$_3$தாம் ஸதீம் ।
அஹம் த்$_3$ரக்ஷ்யாமி ஸித்$_3$த$_4$ார்த$_2$ாம் த்வாம் ஶத்ரௌ விநிபாதிதே ॥ (33)

அஶ்ருண்யாநந்த$_3$ஜாநி த்வம் வர்தயிஷ்யஸி ஶோப$_4$நே ।
ஸமாக$_3$ம்ய பரிஷ்வஜ்ய தஸ்யோரஸி மஹோரஸ: ॥ (34)

அசிராந்மோக்ஷ்யதே ஸீதே தே$_3$வி தே ஜக$_4$நம் க$_3$தாம் ।
த்$_4$ருதாமேதாம் ப$_3$ஹூந் மாஸாந் வேணீம் ராமோ மஹாப$_3$ல: ॥ (35)

தஸ்ய த்$_3$ருஷ்ட்வா முக$_2$ம் தே$_3$வி பூர்ணசந்த்$_3$ரமிவோதி$_3$தம் ।
மோக்ஷ்யஸே ஶோகஜம் வாரி நிர்மோகமிவ பந்நகீ$_3$ ॥ (36)

ராவணம் ஸமரே ஹத்வா நசிராதே$_3$வ மைதி$_2$லி ।
த்வயா ஸமக்$_3$ர: ப்ரியயா ஸுக$_2$ார்ஹோ லப்ஸ்யதே ஸுக$_2$ம் ॥ (37)

ஸமாக$_3$தா த்வம் வீரேண மோதி$_3$ஷ்யஸி மஹாத்மநா ।
ஸுவர்ஷேண ஸமாயுக்தா யத$_2$ா ஸஸ்யேந மேதி$_3$நீ ॥ (38)

பளபளக்கும் ஆயுதங்கள், கேடயங்கள், கவசங்கள், (அவ்வவற்றுக்கு உரியபடி அலங்கரிக்கப்பட்ட) தேர்–யானை–குதிரைகள், நன்கு அலங்கரித்துக் கொண்டிருக்கும் அரக்கர்கள், மனமகிழ்ச்சி கொண்டவர்களும் வேகமாக செயல்படுபவர்களுமான இந்த அரக்கப் படையினரின் பரபரப்பு – இவைகளிலிருந்து புறப்படும் ஒளி, கோடை காலத்தில் காட்டை எரிக்கும் பெருந்தீயைப் போல பல வண்ணங்களோடு பிரகாசிப்பதைப் பார். (25–27)

யானைகளின் கழுத்தில் கட்டியிருக்கும் மணிகளின் ஓசையைக் கேள்; தேர்ச்சக்கரங்களின் ஒலியைக் கேள்; தூர்யம் முதலான போர்க்கள பேரிகைகளின் முழக்கத்தைப் போன்ற குதிரைகளின் கனைப்பைக் கேள். (28)

கையில் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு அரக்க மன்னனின் கட்டளைப்படி நடக்கும் இந்த அரக்கர்களின் மனக்கலவரமும் பேரிரைச்சலும் உரோமச்சிலிர்ப்பை ஏற்படுத்துகின்றன. (29)

சோகத்தைப் பொசுக்கி அழிக்கும் சந்தோஷ லட்சுமி, உனக்குப் பணி செய்யக் காத்திருக்கிறாள். அரக்கர்களுக்குப் பேராபத்து வந்திருக்கிறது. தாமரைக் கண்ணரும், எண்ணிப் பார்க்க முடியாத ஆற்றல் கொண்டவருமான உன் கணவர் இராமன், தேவேந்திரன் போர்க்களத்தில் அசுரர்களைக் கொன்றழித்ததைப் போலவே, அரக்கர்களை வென்று, இராவணனைக் கொன்று, வெற்றியின் அடையாளமாக உன்னைத் திரும்பப் பெறப் போகிறார். (இதுவரை ஏன் போரிட முற்படவில்லை? என்று கேட்டால், அவர் இதுவரை இராவணனை நேரில் பார்த்ததில்லை, அதனால்) கோபத்தை அடக்கிக் கொண்டிருக்கிறார். (ஒரு முறை பார்த்தால் போதும் கோபம் பொங்கிக் கொண்டு வரும்.) (30,31)

எதிரிகளை அழிக்கும் இந்திரன், திருமாலுடன் சேர்ந்து எவ்வாறு எதிரிகளை ஒழித்துக் கட்டினாரோ, அவ்வாறே உன்னுடைய கணவர் லட்சுமணனுடன் சேர்ந்து அரக்கர்களிடம் தன் பராக்கிரமத்தைக் காட்டப் போகிறார். (32)

இவ்விடம் வந்திருக்கும் இராமன் பகைவனைக் கொன்று வீழ்த்தியபின், மனோரதம் கைகூடப் பெற்றவளும் கற்புக்கரசியுமான நீ, அவர் மடியில் அமர்ந்திருப்பதை என் கண்களால் பார்க்கப் போகிறேன். (33)

செல்வப் பெண்ணே! அவரை அடைந்ததும், விசாலமான மார்பைத் தழுவிக் கொண்டு, ஆனந்தக் கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கப் போகிறாய். (34)

சீதைப் பிராட்டியே! பல மாதங்களாக உன் கூந்தல் சீவி வாரப்படாததால், சடை போட்டு, முழங்கால் வரை நீண்டு தொங்கிக் கொண்டிருக்கிறது. மகாபலசாலியான இராமன், மிக விரைவில், (தன் அன்புக்கரங்களால்) கோதிவிட்டு முடிச்சுகளை நீக்கப் போகிறார். (35)

தேவி! உதித்தெழுந்த முழு நிலா போன்ற அவருடைய திருமுகத்தைப் பார்த்ததும், ஒரு பாம்பு (எவ்வித முயற்சியுமின்றி இயல்பாகத்) தன் சட்டையை உறிப்பதைப் போல துக்கத்தால் உண்டான கண்ணீரைத் துடைத்தெறியப் போகிறாய். (36)

மைதிலி! இராமன் சுகத்தை அனுபவிக்கப் பிறந்தவர். வெகுவிரைவில், போரில் இராவணனைக் கொன்று, அன்புக்குரியவளான உன்னோடு சேர்ந்து உயரிய சுகங்களை அடையப் போகிறார். (37)

அதிக அளவில் மழை பெய்தவுடன் விளைநிலத்திலுள்ள பயிர்கள் ஆனந்தமாக அசைந்தாடுவதைப் போல, பராக்கிரமத்தினால் அடையப்பட்ட நீ, பேருளாளரான அவரால் மகிழ்வுறப்படுத்தப்படுவாய். (38)

கி$_3$ரிவரமபி$_4$தோऽநுவர்தமாநோ
ஹய இவ மண்ட$_3$லமாஶு ய: கரோதி ।
தமிஹ ஶரணமப்$_4$யுபேஹி தே$_3$வம்
தி$_3$வஸகரம் ப்ரப$_4$வோ ஹ்யயம் ப்ரஜாநாம் ॥ (39)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரயஸ்த்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

சதுஸ்த்ரிம்ஶ: ஸர்க$_3$:

ராவணநிஶ்சயகத$_2$நம்

அத$_2$ தாம் ஜாதஸந்தாபாம் தேந வாக்யேந மோஹிதாம் ।
ஸரமா ஹ்லாத$_3$யாமாஸ ப்ருதி$_2$வீம் த்$_3$யௌரிவாம்ப$_4$ஸா ॥ (1)

ததஸ்தஸ்யா ஹிதம் ஸக்$_2$யாஶ்சிகீர்ஷந்தீ ஸகீ$_2$ வச: ।
உவாச காலே காலஜ்ஞா ஸ்மிதபூர்வாபி$_4$பா$_4$ஷிணீ ॥ (2)

உத்ஸஹேயமஹம் க$_3$த்வா த்வத்$_3$வாக்யமஸிதேக்ஷணே ।
நிவேத்$_3$ய குஶலம் ராமே ப்ரதிச்ச$_2$ந்நா நிவர்திதும் ॥ (3)

ந ஹி மே க்ரமமாணாயா நிராலம்பே$_3$ விஹாயஸி ।
ஸமர்தோ$_2$ க$_3$திமந்வேதும் பவநோ க$_3$ருடோ$_3$ऽபி வா ॥ (4)

ஏவம் ப்$_3$ருவாணாம் தாம் ஸீதா ஸரமாம் புநரப்$_3$ரவீத் ।
மது$_4$ரம் ஶ்லக்ஷ்ணயா வாசா பூர்வம் ஶோகாபி$_4$பந்நயா ॥ (5)

ஸமர்தா$_2$ க$_3$க$_3$நம் க$_3$ந்துமபி வா த்வம் ரஸாதலம் ।
அவக$_3$ச்சா$_2$ம்யகர்தவ்யம் கர்தவ்யம் தே மத$_3$ந்தரே ॥ (6)

மத்ப்ரியம் யதி$_3$ கர்தவ்யம் யதி$_3$ பு$_3$த்$_3$தி$_4$: ஸ்தி$_2$ரா தவ ।
ஜ்ஞாதுமிச்சா$_2$மி தம் க$_3$த்வா கிம் கரோதீதி ராவண: ॥ (7)

ஸ ஹி மாயாப$_3$ல: க்ரூரோ ராவண: ஶத்ருராவண: ।
மாம் மோஹயதி து$_3$ஷ்டாத்மா பீதமாத்ரேவ வாருணீ ॥ (8)

தர்ஜாபயதி மாம் நித்யம் ப$_4$ர்த்ஸாபயதி சாஸக்ருத் ।
ராக்ஷஸீபி$_4$: ஸுகோ$_4$ராபி$_4$ர்யா மாம் ரக்ஷந்தி நித்யஶ: ॥ (9)

உத்$_3$விக்$_3$நா ஶங்கிதா சாஸ்மி ந ஸ்வஸ்த$_2$ம் ச மநோ மம ।
தத்$_3$ப$_4$யாச்சாஹமுத்$_3$விக்$_3$நா அஶோகவநிகாம் க$_3$தா ॥ (10)

யா ஹி நாம கதா$_2$ தஸ்ய நிஶ்சிதம் வாபி யத்$_3$ப$_4$வேத் ।
நிவேத$_3$யேதா$_2$: ஸர்வம் தத் பரோ மே ஸ்யாத$_3$நுக்$_3$ரஹ: ॥ (11)

மேருமலையை நான்கு புறமும், குதிரை போல வேகமாக வலம் வருகிறாரே, அந்த சூரிய பகவானை, நீ இப்போதே அடைக்கலம் அடைவாய். ஏனென்றால், அவர்தான் அனைத்துப் பிராணிகளையும் செயலாற்றத் தூண்டுபவர். (எல்லோருக்கும் சுக–துக்கங்களைத் தரக்கூடியவர்.)'' (39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து நான்கு

இராவணனின் உள்நோக்கம்

(இராவணன் கூறிய சொற்களால்) சிந்தை கலங்கி மனம் தவித்துக் கொண்டிருந்த சீதையை, ஆகாயம் மழை பொழிந்து, வறண்டு கிடந்த பூமிக்கு எவ்வாறு ஆறுதல் கொடுக்குமோ, அவ்வாறே தன் இனிய சொற்களால் உள்ளம் குளிரச் செய்தாள், ஸரமை. (1)

புன்னகையுடன் இனிமையாகப் பேசுபவளும் காலத்திற்கேற்றவாறு நடக்கத் தெரிந்தவளுமான ஸரமை, தன்னுடைய தோழிக்கு (சீதைக்கு) நலம் செய்ய விரும்பி, அந்தச் சமயத்திற்கு ஏற்றதான (தைரியமூட்டும்) சொற்களைக் கூறினாள்— (2)

''கருங்கண்ணாளே! எவர் கண்ணிலும் படாமல், நான் இராமனிடம் சென்று, நீ சௌக்கியமாக இருப்பதையும், நீ கூறும் செய்திகளையும் கூறிவிட்டுத் திரும்பி வரும் ஆற்றலுடையவள். பிடிப்பு ஏதுமற்ற ஆகாயத்தில் நான் வேகமாகச் செல்லும்போது, கருடனும் வாயுதேவனும்கூட என்னைப் பின்தொடர்ந்து வர முடியாது.'' (3,4)

இவ்வாறு பேசிய ஸரமையைப் பார்த்து, முன்பு துக்கத்தோடு பேசிய சீதை, இப்போது மனம் திறந்து இனிமையான சொற்களால் பதிலுரைத்தாள்— (5)

''மேலேயுள்ள ஆகாயம் மட்டுமல்ல; கீழேயுள்ள பாதாளத்திற்கும் சென்று வரும் திறமை படைத்தவள் நீ. பிறரால் செய்ய முடியாத காரியத்தையும், என் பொருட்டு நீ செய்வாய் என்பதையும் அறிவேன். (6)

நீ, எனக்குப் பிரியமான காரியத்தைச் செய்ய விரும்பினால், அந்த விஷயத்தில் உனக்கு மனவுறுதி இருந்தால், இராவணன் (இங்கிருந்து சென்ற பின்) என்ன செய்து கொண்டிருக்கிறான்? என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (எனக்குப் பிரியமான இந்த உதவியைச் செய்.) (7)

மாயையில் வல்லவனும், எதிரிகளை அலறச் செய்பவனும், கொடுங்கோலனும், கொடிய எண்ணங்கொண்டவனுமான இராவணன், வாருணி (ஒரு வகை மது) என்ற பானத்தை அருந்தியவுடனே, அருந்தியவனின் மதியைக் கெடுத்து விடுவதைப் போல, என் மனத்தைக் கலங்கச் செய்கிறான். எக்காலத்திலும் என்னைக் கண்காணித்து வரும் பயங்கரத் தோற்றமுடைய அரக்கிகளைக் கொண்டு அடிக்கடி என்னை பயமுறுத்தச் சொல்கிறான்; வாயில் வந்தபடி ஏசச் சொல்கிறான். (8,9)

நான் எப்போதும் மனத் துடிப்புடனும் சந்தேகத்துடனும் இருந்து கொண்டிருக்கிறேன்; என் மனத்திற்கு நிம்மதி இல்லை. அசோகவனத்தில் இருக்கும் நான், அவனிடமுள்ள அச்சத்தினால் உள்ளம் துடித்தவளாகவே இருந்து கொண்டிருக்கிறேன். (10)

அவனுடைய மந்திராலோசனை எம்மாதிரி இருந்தது? முடிவாகத் தீர்மானிக்கப்பட்டது எது? ஆகிய எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு வந்து எனக்குச் சொன்னால், அதுவே நீ எனக்குச் செய்யும் பேருபகாரமாகும்.'' (11)

ஸா த்வேவம் ப்$_3$ருவதீம் ஸீதாம் ஸரமா வல்கு$_3$பா$_4$ஷிணீ ।
உவாச வத$_3$நம் தஸ்யா: ஸ்ப்ருஶந்தீ பா$_3$ஷ்பவிக்லவம் ॥ (12)

ஏஷ தே யத்$_3$யபி$_4$ப்ராயஸ்ததா$_3$ கச்சா$_2$மி ஜாநகி ।
க்$_3$ருஹ்ய ஶத்ரோரபி$_4$ப்ராயமுபாவ்ருத்தாம் ச பஶ்ய மாம் ॥ (13)

ஏவமுக்த்வா ததோ க$_3$த்வா ஸமீபம் தஸ்ய ரக்ஷஸ: ।
ஶுஶ்ராவ கதி$_2$தம் தஸ்ய ராவணஸ்ய ஸமந்த்ரிண: ॥ (14)

ஸா ஶ்ருத்வா நிஶ்சயம் தஸ்ய நிஶ்சயஜ்ஞா து$_3$ராத்மந: ।
புநரேவாக$_3$மத்க்ஷிப்ரமஶோகவநிகாம் ததா$_3$ ॥ (15)

ஸா ப்ரவிஷ்டா புநஸ்தத்ர த$_3$த$_3$ர்ஶ ஜநகாத்மஜாம் ।
ப்ரதீக்ஷமாணாம் ஸ்வாமேவ ப்$_4$ரஷ்டபத்$_3$மாமிவ ஶ்ரியம் ॥ (16)

தாம் து ஸீதா புந: ப்ராப்தாம் ஸரமாம் வல்கு$_3$பா$_4$ஷிணீம் ।
பரிஷ்வஜ்ய ச ஸுஸ்நிக்$_3$த$_4$ம் த$_3$தௌ$_3$ ச ஸ்வயமாஸநம் ॥ (17)

இஹாஸீநா ஸுக$_2$ம் ஸர்வமாக்$_2$யாஹி மம தத்த்வத: ।
க்ரூரஸ்ய நிஶ்சயம் தஸ்ய ராவணஸ்ய து$_3$ராத்மந: ॥ (18)

ஏவமுக்த்வா து ஸரமா ஸீதயா வேபமாநயா ।
கதி$_2$தம் ஸர்வமாசஷ்ட ராவணஸ்ய ஸமந்த்ரிண: ॥ (19)

ஜநந்யா ராக்ஷஸேந்த்$_3$ரோ வை த்வந்மோக்ஷார்த$_2$ம் ப்$_3$ருஹத்$_3$வச: ।
அவித்$_3$தே$_4$ந ச வைதே$_3$ஹி மந்த்ரிவ்ருத்$_3$தே$_4$ந போ$_3$தி$_4$த: ॥ (20)

தீ$_3$யதாமபி$_4$ஸத்க்ருத்ய மநுஜேந்த்$_3$ராய மைதி$_2$லீ ।
நித$_3$ர்ஶநம் தே பர்யாப்தம் ஜநஸ்தா$_2$நே யத$_3$த்$_3$பு$_4$தம் ॥ (21)

லங்க$_4$நம் ச ஸமுத்$_3$ரஸ்ய த$_3$ர்ஶநம் ச ஹநூமத: ।
வத$_4$ம் ச ரக்ஷஸாம் யுத்$_3$தே$_4$ க: குர்யாந்மாநுஷோ பு$_4$வி ॥ (22)

ஏவம் ஸ மந்த்ரிவ்ருத்$_3$தே$_4$ந மாத்ரா ச ப$_3$ஹு பா$_4$ஷித: ।
ந த்வாமுத்ஸஹதே மோக்துமர்த$_2$மர்த$_2$பரோ யதா$_2$ ॥ (23)

நோத்ஸஹத்யம்ருதோ மோக்தும் யுத்$_3$தே$_4$ த்வாமிதி மைதி$_2$லி ।
ஸாமாத்யஸ்ய ந்ருஶம்ஸஸ்ய நிஶ்சயோ ஹ்யேஷ வர்ததே ॥ (24)

ததே$_3$ஷா நிஶ்சிதா பு$_3$த்$_3$தி$_4$ர்ம்ருத்யுலோபா$_4$து$_3$பஸ்தி$_2$தா ।
ப$_4$யாந்ந ஶக்தஸ்த்வாம் மோக்துமநிரஸ்தஸ்து ஸம்யுகே$_3$ ॥
ராக்ஷஸாநாம் ச ஸர்வேஷாமாத்மநஶ்ச வதே$_4$ந ஹி ॥ (25)

நிஹத்ய ராவணம் ஸங்க்$_2$யே ஸர்வதா$_2$ நிஶிதை: ஶரை: ।
ப்ரதிநேஷ்யதி ராமஸ்த்வாமயோத்$_4$யாமஸிதேக்ஷணே ॥ (26)

இனிமையாகப் பேசும் ஸரமை, மேற்கண்டவாறு பேசிய சீதையின் முகத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறே கூறினாள்— (12)

''ஜனககுமாரி! இதுதான் உனது விருப்பம் என்றால், நான் அவ்வாறே (இராணவணனிடம்) செல்கிறேன். எதிரியின் நோக்கத்தை அறிந்து கொண்டு (எவ்வித ஆபத்துமில்லாமல்) நான் திரும்பி வருவதை நீ பார்க்கப் போகிறாய்.'' (13)

இவ்வாறு கூறிவிட்டு, அந்த அரக்கனின் அண்மையை அடைந்து அமைச்சர்களோடுகூட இராவணன் விவாதித்தவைகளைச் செவிமடுத்தாள். (14)

துஷ்டனான அவனுடைய தீர்மானத்தை ஒற்றுக் கேட்டு அறிந்து கொண்ட அவள், உடனே அசோகவனத்திற்குத் திரும்பி வந்து சேர்ந்தாள். அவள் திரும்பவும் அசோகவனத்திற்குள் புகுந்து, தன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவளும், தாமரை மலரைத் துறந்துவிட்டு வந்த செல்வத் திருமகள் போன்றவளுமான ஜனககுமாரியைக் கண்டாள். (15,16)

தேனொழுகப் பேசும் ஸரமை திரும்பி வந்ததைப் பார்த்த சீதை, அவளைப் பாசத்துடன் கட்டித் தழுவிய பின்னர், அவள் உட்காருவதற்காக, தானே ஓர் இருக்கையைக் காட்டினாள். (17)

''ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு கொடிய செயலும் கொடிய எண்ணமும் கொண்ட தீயவனான இராவணனுடைய சபையில் நடந்தவற்றையெல்லாம் நடந்தவாறே எனக்குக் கூறு.'' (18)

உடல் நடுங்க இவ்வாறு சொன்ன சீதையை பார்த்து, இராவணனுடைய சபையில் அமைச்சர்களோடு நிகழ்ந்த ஆலோசனை முழுவதையும் ஸரமை கூறினாள்— (19)

''வைதேகி! தாயாரான கைகஸியும், வயது முதிர்ந்த அமைச்சரான அவித்தர் என்பவரும், உன்னை விட்டுவிடும்படி மிகத் தெளிவாக இராவணனிடம் எடுத்துக் கூறினார்கள். (20)

மானுடர்களில் சிறந்தவரான இராமனிடம் சீதையைத் திரும்ப ஒப்படைத்துவிடு. (ஏனென்றால், அவர் நம்மால் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு வீரம் படைத்தவர். 'அது எப்படித் தெரியும்?' என்றால்) ஜனஸ்தானத்தில் நம்ப முடியாத ஓர் அருஞ்செயலைச் செய்து காட்டினாரே, அதுவே போதுமான சான்றாகும். (21)

(அவரிடம் மட்டுமல்ல; அவருடைய பணியாளர்களிடம் கூட அற்புத சக்தி இருக்கிறது.) அனுமான் மாபெருங்கடலைத் தாண்டி வந்து, சீதையைப் பார்த்துப் பேசி, பின்னர் போரில் பல அரக்கர்களைக் கொன்றானே? இவ்வாறு செய்யக்கூடிய இன்னொரு மனிதன் உலகில் இருக்கிறானா? (22)

இவ்வாறு, மூத்த அமைச்சராலும் பெற்றெடுத்த அன்னையாலும் ஆணித்தரமாக எடுத்துரைக்கப்பட்ட பின்னரும், செல்வம் சேர்ப்பதில் பேராசை உள்ளவன் பொருளை எவ்வாறு கட்டிக் காப்பானோ, அதுபோல உன்னை விட்டுவிடுவதற்கு அவன் இணங்கவில்லை. (23)

மைதிலி! 'போர் செய்து மரணமடைந்தாலும் சரி, என் உயிருள்ள வரையில் அவளைத் திருப்பிக் கொடுக்க மாட்டேன்!' என்பதுதான், அமைச்சர்கள் புடைசூழ வீற்றிருந்த அந்தக் கொடியவனின் தீர்மானமாக இருக்கிறது. (24)

மரணத்தை எதிர்கொண்டழைக்கும் அவன், இந்தத் தீர்மானத்தில் உறுதியாக இருக்கிறான். போரில் எல்லா அரக்கர்களும் அவனும் வீழ்த்தப்பட்டாலன்றி, வெறும் பயமுறுத்தல்களால் உன்னை அவன் விடுவிக்க மாட்டான். (25)

கருங்கண்ணாளே! போரில், கூர்மையான பாணங்களால் இராவணனை (அவன் படையுடன்கூட) முற்றிலுமாக அழித்து ஒழித்துவிட்டு, இராமன் உன்னை அயோத்திக்குத் திரும்ப அழைத்துச் செல்லப் போகிறார். (26)

ஏதஸ்மிந்நந்தரே ஶப்$_3$தே$_3$ா பே$_4$ரீஶங்க$_2$ஸமாகுல: ।
ஶ்ருதோ வாநரஸைந்யாநாம் கம்பயந் த$_4$ரணீதலம் ॥ (27)

ஶ்ருத்வா து தத்$_3$வாநரஸைந்யஶப்$_3$த$_3$ம்
லங்காக$_3$தா ராக்ஷஸராஜஶ்ருத்யா: ।
நஷ்டௌஜஸோ தை$_3$ந்யபரீதசேஷ்டா:
ஶ்ரேயோ ந பஶ்யந்தி ந்ருபஸ்ய தோ$_3$ஷை: ॥ (28)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகியே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ சதுஸ்த்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

பஞ்சத்ரிம்ஶ: ஸர்க$_3$:

மால்யவது$_3$பதே$_3$ஶ:

தேந ஶங்க$_2$விமிஶ்ரேண பே$_4$ரீஶப்$_3$தே$_3$ந நாதி$_3$நா ।
உபயாதி மஹாபா$_3$ஹூ ராம: பரபுரஞ்ஜய: ॥ (1)

தம் நிநாத$_3$ம் நிஶம்யாத$_2$ ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
முஹூர்தம் த்$_4$யாநமாஸ்த$_2$ாய ஸசிவாநப்$_4$யுதை$_3$க்ஷத ॥ (2)

அத$_2$ தாந் ஸசிவாம்ஸ்தத்ர ஸர்வாநாப$_4$ாஷ்ய ராவண: ।
ஸப$_4$ாம் ஸந்நாத$_3$யந் ஸர்வாமித்யுவாச மஹாப$_3$ல: ॥
ஜக$_3$த்ஸந்தாபந: க்ரூரோऽக$_3$ர்ஹயந் ராக்ஷஸேஶ்வர: ॥ (3)

தரணம் ஸாக$_3$ரஸ்யாபி விக்ரமம் ப$_3$லஸஞ்சயம் ।
யது$_3$க்தவந்தோ ராமஸ்ய ப$_4$வந்தஸ்தந்மயா ஶ்ருதம் ॥ (4)

ப$_4$வதஶ்சாப்யஹம் வேத்$_3$மி யுத்$_3$தே$_4$ ஸத்யபராக்ரமாந் ।
தூஷ்ணீகாநீக்ஷதோऽந்யோந்யம் விதி$_3$த்வா ராமவிக்ரமம் ॥ (5)

ததஸ்து ஸுமஹாப்ராஜ்ஞோ மால்யவாந்நாம ராக்ஷஸ: ।
ராவணஸ்ய வச: ஶ்ருத்வா இதி மாதாமஹோऽப்$_3$ரவீத் ॥ (6)

வித்$_3$யாஸ்வபி$_4$விநீதோ யோ ராஜா ராஜந்நயாநுக$_3$: ।
ஸ ஶாஸ்தி சிரமைஶ்வர்யமரீம்ஶ்ச குருதே வஶே ॥ (7)

ஸந்த$_3$த$_4$ாநோ ஹி காலேந விக்$_3$ருஹ்ணம்ஶ்சாரிபி$_4$: ஸஹ ।
ஸ்வபக்ஷவர்த$_4$நம் குர்வந் மஹதை$_3$ஶ்வர்யமஶ்நுதே ॥ (8)

ஹீயமாநேந கர்தவ்யோ ராஜ்ஞா ஸந்தி$_4$: ஸமேந ச ।
ந ஶத்ருமவமந்யேத ஜ்யாயாந் குர்வீத விக்$_3$ரஹம் ॥ (9)

இதனிடையில், வானரப்படையிலிருந்து பூமியை கிடுகிடுக்கச் செய்யும் பேரிகை–சங்கங்களின் பேரொலி கேட்டது. (27)

வானரப் படையின் சிம்மநாதத்தைக் கேட்ட இலங்கையிலிருந்த அரக்க மன்னனின் பணியாளர்கள், தைரியமிழந்து மனம் பேதலித்துத் தத்தம் பணிகளைச் செய்தார்கள். மன்னனின் குற்றத்தினால், (சீதையைத் திருடிக் கொண்டு வந்ததால்,) தங்களுக்கு நலன் விளையப் போவதில்லை என்பதை உணர்ந்து கொண்டார்கள். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தைந்து

மால்யவான் உபதேசம்

எதிரியின் நகரத்தைக் கைப்பற்றுபவரும் தோள்வலி மிக்கவருமான இராமன், சங்கின் ஒலியோடுகூட யுத்த பேரிகைகளின் முழக்கத்துடன் (இலங்கையை நோக்கி) வந்து கொண்டிருந்தார். (1)

அந்தப் பேரிரைச்சலைக் கேட்டு சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டு, அரக்கர் தலைவனான இராவணன் அமைச்சர்களை உற்றுநோக்கினான். (2)

பின்னர், அங்கிருந்த அமைச்சர்கள் எல்லோரையும் அழைத்து, உலகத்தைத் தவிக்கச் செய்கிறவனும் மகாபலசாலியும் கொடுமைக்காரனுமான இராவணன், எவரையும் குறை கூறாமல், பெருங்குரலில் சபையை அதிரச் செய்து கொண்டு, பின்வருமாறு கூறினான்— (3)

''இராமனுடைய போராண்மை, அவன் படை திரட்டியிருப்பது, கடலைக் கடந்து வந்திருப்பது ஆகியவற்றைப் பற்றி நீங்களெல்லோரும் அவ்வப்போது கூறியதை நான் மனமூன்றிக் கேட்டேன். (4)

நீங்கள், போர்க்களத்தில் உண்மையான பராக்கிரமத்தை வெளிப்படுத்துவீர்கள் என்பதையும் நான் அறிவேன். ஆனால், இராமனுடைய அளவற்ற வீரத்தை அறிந்துள்ள நீங்கள், இப்போது ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு வாய் திறவாமல் இருக்கிறீர்கள்.'' (5)

இதைக் கேட்ட பின்னர், இராவணனுடைய தாய்வழிப் பாட்டனாரும், மகாபுத்திசாலியுமான மால்யவான் என்னும் அரக்கன், இவ்வாறு கூறினார்— (6)

''மன்னரே! எந்த அரசன் எல்லாக் கலைகளையும் நன்றாகப் பயின்று நியாயப்படி நடக்கிறானோ, அவன் வெகு நீண்ட காலம் நல்லாட்சி செலுத்துகிறான். எதிரிகளையும் தன் கட்டுப்பாட்டில் (தனக்கு அடங்கியவர்களாக) வைத்துக் கொள்கிறான். (7)

காலத்திற்கு (சூழ்நிலைக்கு)த் தக்கபடி, தன் நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு எதிரிகளோடு சமாதானம் அல்லது போர் செய்து கொண்டு இருக்கிறானோ, தன் பக்கத்திலுள்ளவரை வலிவு பெறச் செய்து, அவன் அழிவில்லாத செல்வச் செழிப்பை அனுபவிக்கிறான். (8)

வளம் குறைந்து கொண்டிருக்கிற மற்றும் எதிரிக்கு சமமான நிலையிலுள்ள மன்னன், பகைவர்களோடு (படையெடுத்து வருபவர்களோடு) சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அவன், எந்த எதிரியையும் அவமானப்படுத்தக் கூடாது (இகழ்ந்துரைக்கக் கூடாது). தான் மேல்நிலையில் இருந்தால், (பலம் குறைந்த எதிரியுடன்) போர் புரிய வேண்டும். (வெற்றி பெற்று, அவனை அடக்கி வைத்திருக்க வேண்டும்.) (9)

தந்மஹ்யம் ரோசதே ஸந்தி$_4$: ஸஹ ராமேண ராவண ।
யத$_3$ர்த$_2$மபி$_4$யுக்தா: ஸ்ம ஸீதா தஸ்மை ப்ரதீ$_3$யதாம் ॥ (10)

யஸ்ய தே$_3$வர்ஷய: ஸர்வே க$_3$ந்த$_4$ர்வாஶ்ச ஜயைஷிண: ।
விரோத$_4$ம் மா க$_3$மஸ்தேந ஸந்தி$_4$ஸ்தே தேந ரோசதாம் ॥ (11)

அஸ்ருஜத்$_3$ப$_4$க$_3$வாந் பக்ஷௌ த்$_3$வாவேவ ஹி பிதாமஹ: ।
ஸுராணாமஸுராணாம் ச த$_4$ர்மாத$_4$ர்மௌ ததா$_3$ஶ்ரயௌ ॥ (12)

த$_4$ர்மோ ஹி ஶ்ரூயதே பக்ஷோ ஹ்யமராணாம் மஹாத்மநாம் ।
அத$_4$ர்மோ ரக்ஷஸாம் பக்ஷோ ஹ்யஸுராணாம் ச ராவண ॥ (13)

த$_4$ர்மோ வை க்$_3$ரஸதேऽத$_4$ர்மம் தத: க்ருதமபூ$_4$த்$_3$யுக$_3$ம் ।
அத$_4$ர்மோ க்$_3$ரஸதே த$_4$ர்மம் ததஸ்திஷ்ய: ப்ரவர்ததே ॥ (14)

தத்த்வயா சரதா லோகாந் த$_4$ர்மோ விநிஹதோ மஹாந் ।
அத$_4$ர்ம: ப்ரக்$_3$ருஹீதஶ்ச தேநாஸ்மத்$_3$ப$_3$லிந: பரே ॥ (15)

ஸ ப்ரமாதா$_3$த்$_3$விவ்ருத்$_3$த$_4$ஸ்தேऽத$_4$ர்மோऽஹிர்க்$_3$ரஸதே ஹி ந: ।
விவர்த$_4$யதி பக்ஷம் ச ஸுராணாம் ஸுரபா$_4$வந: ॥ (16)

விஷயேஷு ப்ரஸக்தேந யத்கிஞ்சித்காரிணா த்வயா ।
ருஷீணாமக்$_3$நிகல்பாநாமுத்$_3$வேகோ$_3$ ஜநிதோ மஹாந் ॥ (17)

தேஷாம் ப்ரபா$_4$வோ து$_3$ர்த$_4$ர்ஷ: ப்ரதீ$_3$ப்த இவ பாவக: ।
தபஸா பா$_4$விதாத்மாநோ த$_4$ர்மஸ்யாநுக்$_3$ரஹே ரதா: ॥ (18)

முக்$_2$யைர்யக்ஞைர்யஜந்த்யேதே நித்யம் தைஸ்தைர்த்$_3$விஜாதய: ।
ஜுஹ்வத்யக்$_3$நீம்ஶ்ச விதி$_4$வத்$_3$வேதா$_3$ம்ஶ்சோச்சைரதீ$_4$யதே ॥ (19)

அபி$_4$பூ$_4$ய ச ரக்ஷாம்ஸி ப்$_3$ரஹ்மகோ$_4$ஷாநுதை$_3$ரயந் ।
தி$_3$ஶோऽபி வித்$_3$ருதா: ஸர்வா: ஸ்தநயித்நுரிவோஷ்ணகே$_3$ ॥ (20)

ருஷீணாமக்$_3$நிகல்பாநாமக்$_3$நிஹோத்ரஸமுத்தி$_2$த: ।
ஆத$_3$த்தே ரக்ஷஸாம் தேஜோ தூ$_4$மோ வ்யாப்ய தி$_3$ஶோ த$_3$ஶ ॥ (21)

தேஷு தேஷு ச தே$_3$ஶேஷு புண்யேஷ்வேவ த்$_3$ருட$_4$வ்ரதை: ।
சர்யமாணம் தபஸ்தீவ்ரம் ஸந்தாபயதி ராக்ஷஸாந் ॥ (22)

தே$_3$வதா$_3$நவயக்ஷேப்$_4$யோ க்$_3$ருஹீதஶ்ச வரஸ்த்வயா ।
மாநுஷா வாநரா ருக்ஷா கோ$_3$லாங்கூ$_3$லா மஹாப$_3$லா: ॥
ப$_3$லவந்த இஹாக$_3$ம்ய க$_3$ர்ஜந்தி த்$_3$ருட$_4$விக்ரமா: ॥ (23)

உத்பாதாந் விவிதா$_4$ந் த்$_3$ருஷ்ட்வா கோ$_4$ராந் ப$_3$ஹுவிதா$_4$ம்ஸ்ததா$_2$ ।
விநாஶமநுபஶ்யாமி ஸர்வேஷாம் ரக்ஷஸாமஹம் ॥ (24)

ஆகையால், இராவணா! இராமனுடன் சமாதானமாகப் போவதே சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. எவள் காரணமாகப் பகை தோன்றியதோ, அந்த சீதையை அவரிடம் திரும்பக் கொடுத்துவிடு. (10)

தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள் ஆகிய அனைவரும், எவருடைய வெற்றியை விரும்புகிறார்களோ, அவருடன் நீ பகைமை பாராட்டாதே. நீ அவரோடு சமாதானமாகப் போவதில் மனத்தைச் செலுத்து. (11)

பிரும்மதேவர், தேவர்–அசுரர் என்ற இரண்டு வகுப்பினரையும், முறையே தருமம்–அதருமத்திற்கு நிலைக்களனாகப் படைத்தார். இராவணா! மகாத்மாக்களான தேவர்கள் பக்கத்தில் தருமமும், அசுரர்–அரக்கர் பக்கத்தில் அதருமமும் இருப்பதாகக் கூறப்படுகிறது. (12,13)

எப்போது அதருமத்தை, தருமம் அடக்கி வைத்திருக்கிறதோ, அப்போது கிருதயுகம் நடைபெறுகிறது. எப்போது தருமத்தை அதருமம் அடக்கி வைக்கிறதோ, அப்போது கலியுகம் பிறந்துவிட்டதெனக் கொள்ளலாம். (14)

முன்பு, நீ திக்விஜயம் செய்த காலத்தில் தருமத்திற்குப் பேரழிவு ஏற்படுத்தினாய்; அதருமத்தைக் கைக்கொண்டாய். அதனால், மற்றவர்கள் (எதிரிகள்) நம்மைக் காட்டிலும் பலம் மிகுந்தவர்களாக ஆகியிருக்கிறார்கள். (15)

நீ செய்த தவற்றினால், அதருமம் என்ற மலைப்பாம்பு வேகமாக வளர்ந்து நம்மைப் விழுங்கிக் கொண்டிருக்கிறது. தேவர்களால் பரிபாலிக்கப்பட்ட தருமம், அவர்கள் வளத்தைப் பெருக்குகிறது. (16)

சிற்றின்பங்களில் ஈடுபட்ட நீ, மனம் போனபடியெல்லாம் (தவறாக) நடந்து கொண்டதால், அக்னிக்கு ஒப்பான ஆன்ம ஒளி படைத்த முனிவர்களுக்கு (இப்போது) மிகவும் மனஉளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. (17)

அவர்களுடைய (தவ) ஆற்றல் கொழுந்து விட்டெரியும் நெருப்பைப்போல் எதிர்கொள்ள முடியாதது. தவத்தால் தூய மனத்தினராகி பிரும்மஞானிகளாகிவிட்ட அவர்கள், தருமத்தையே கடைப்பிடிப்பவர்கள். (18)

இந்த இருபிறப்பாளர்கள் எப்போதும் (அந்தந்தக் காலத்திற்குரிய) முக்கியமான வேள்விகளைச் செய்கிறார்கள்; முறைப்படி அக்னியில் அவி அளிக்கிறார்கள்; வேதங்களைச் சரியான உச்சரிப்புடன் ஓதுகிறார்கள். அவர்கள் அரக்கர்களை அலட்சியம் செய்து, (அவர்களைத் துரத்துவதற்கான) வேத மந்திரங்களை ஓதினார்கள். அதனால், அச்சமடைந்த அரக்கர்கள் கோடைகால மேகங்களைப்போல எல்லாத் திசைகளிலும் ஓடி மறைந்தார்கள். (19,20)

அக்னிதேவதைக்கு நிகரான சக்தி படைத்த முனிவர்களின் அக்னிஹோத்ர குண்டங்களிலிருந்து எழுந்த புகை, பத்துத் திசைகளிலும் பரவி, அரக்கர்களின் ஆற்றலைக் கவர்கிறது. (21)

ஆங்காங்கே உள்ள புண்ணியத்தலங்களில் முனிவர்கள் உறுதியோடு உத்தம விரதங்களை அனுஷ்டித்து, தீவிரமாகச் செய்யும் தவம் அரக்கர்களை வறுத்தெடுக்கிறது. (22)

'தேவ–தானவ–யட்சர்களால் மரணம் ஏற்படக் கூடாது' என்ற வரத்தை நீ பெற்றிருக்கிறாய். (மனிதர்கள், வானரர்கள் போன்றவர்களால் மரணம் ஏற்படக்கூடாது என்ற வரத்தைப் பெறவில்லை. ஆனால்,) இங்கு மனிதர்கள், வானரர்கள், கரடிகள், கோலாங்கூலம் என்ற வானர இனத்தினர் வந்து கர்ஜித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் மகாபலசாலிகள்; உறுதியான ஆண்மை உடையவர்கள்; அணியாகத் திரண்டு வந்திருக்கிறார்கள். (23)

பலவகையான, பல தடவைகளான, கோரமான உற்பாதங்களைக் காண்கிறேன். அதனால், எல்லா அரக்கர்களுக்கும் பேரழிவு நெருங்கிவிட்டதாக நம்புகிறேன். (24)

க2ராபி4ஸ்தநிதா கே4ாரா மேக4ா: ப்ரதிப4யங்கரா: ।
ஶோணிதேநாபி4வர்ஷந்தி லங்காமுஷ்ணேந ஸர்வத: ॥ (25)

ருத3தாம் வாஹநாநாம் ச ப்ரபதந்த்யஸ்த்ரபி3ந்த3வ: ।
த்4வஜா த்4வஸ்தா விவர்ணாஶ்ச ந ப்ரப4ாந்தி யத2ா புரா ॥ (26)

வ்யாளா கோ3மாயவோ க்3ருத்4வா வாஶ்யந்தி ச ஸுபை4ரவம் ।
ப்ரவிஶ்ய லங்காமநிஶம் ஸமவாயாம்ஶ்ச குர்வதே ॥ (27)

காலிகா: பாண்டு3ரைர்த3ந்தை: ப்ரஹஸந்த்யக்3ரத: ஸ்தி2தா: ।
ஸ்த்ரிய: ஸ்வப்நேஷு முஷ்ணத்யோ க்3ருஹாணி ப்ரதிப4ாஷ்ய ச ॥ (28)

க்3ருஹாணாம் ப3லிகர்மாணி ஶ்வாந: பர்யுபபு4ஞ்ஜதே ।
க2ரா கோ3ஷு ப்ரஜாயந்தே மூஷிகா நகுலேஷு ச ॥ (29)

மார்ஜாரா த்3வீபிபி4: ஸார்த4ம் ஸூகரா: ஶுநகை: ஸஹ ।
கிந்நரா ராக்ஷஸைஶ்சாபி ஸமீயுர்மாநுஷை: ஸஹ ॥ (30)

பாண்டு3ரா ரக்தபாதா3ஶ்ச விஹங்கா3: காலசோதி3தா: ।
ராக்ஷஸாநாம் விநாஶாய கபோதா விசரந்தி ச ॥ (31)

வீசீகூசீதி வாஶ்யந்த்ய: ஶாரிகா வேஶ்மஸு ஸ்தி2தா: ।
பதந்தி க்3ரதி2தாஶ்சாபி நிர்ஜிதா: கலஹைஷிண: ॥ (32)

பக்ஷிணஶ்ச ம்ருக3ா: ஸர்வே ப்ரத்யாதி3த்யம் ருத3ந்தி ச ।
கராலோ விகடோ முண்ட3: புருஷ: க்ருஷ்ணபிங்க3ள: ॥ (33)

காலோ க்3ருஹாணி ஸர்வேஷாம் காலே காலேऽந்வவேக்ஷதே ।
ஏதாந்யந்யாநி து3ஷ்டாநி நிமித்தாந்யுத்பதந்தி ச ॥ (34)

விஷ்ணும் மந்யாமஹே ராமம் மாநுஷம் தே3ஹமாஸ்தி2தம் ।
ந ஹி மாநுஷமாத்ரோऽஸௌ ராக4வோ த்3ருட4விக்ரம: ॥
யேந ப3த்3த4: ஸமுத்3ரஸ்ய ஸ ஸேது: பரமாத்3பு4த: ॥ (35)

குருஷ்வ நரராஜேந ஸந்தி4ம் ராமேண ராவண ॥
க்ஞாத்வா ப்ரத4ார்ய கார்யாணி க்ரியதாமாயதிக்ஷமம் ॥ (36)

இத3ம் வசஸ்தத்ர நிக3த்3ய மால்யவாந்
பரீக்ஷ்ய ரக்ஷோऽதி4பதேர்மந: புந: ।
அநுத்தமேஷூத்தமபௌருஷோ ப3லீ
ப3பூ4வ தூஷ்ணீம் ஸமவேக்ஷ்ய ராவணம் ॥ (37)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 பஞ்சத்ரிம்ஶ: ஸர்க3: ॥

பார்க்க சகிக்காத, மிகவும் அச்சத்தை விளைவிக்கின்ற, பெருமுழக்கமாக இடிக்கின்ற மேகங்கள், இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் கொதிக்கின்ற இரத்தத்தைப் பொழிகின்றன. (25)

யானை–குதிரை முதலிய வாகன விலங்குகள் அழுதுகொண்டு பெருக்கும் கண்ணீர்த்துளிகள் தரையில் விழுகின்றன. (அலங்காரமாக நிறுவப்பட்டுள்ள அரச சின்னமாகிய) கொடிகள், அழுக்கடைந்து நிறம் மங்கி முந்தைய ஒளியை இழந்து காணப்படுகின்றன. (26)

கொடிய மிருகங்களும் குள்ளநரிகளும் கழுகுகளும் மிகவும் பயங்கரமாக சப்திக்கின்றன. அவைகள், இலங்கை நகருக்குள் எல்லா வேளைகளிலும் புகுந்து கூட்டம் கூடுகின்றன. (27)

கருநிறமுள்ள பெண்கள், வெண்மையான பற்களைக் காட்டிக் கொண்டு எதிரே வந்து அமங்களமான வார்த்தைகளைக் கூறி, வீட்டுப் பொருள்களைத் திருடிக் கொண்டு ஆரவாரித்துச் சிரிப்பதைக் கனவுகளில் காண்கிறோம். (28)

வீடுகளில் (தேவதைகளுக்காக அளிக்கப்படும்) அன்ன பலியை, தெரு நாய்கள் வந்து உண்டுவிட்டுச் செல்கின்றன. பசுக்களிடம் கழுதைகளும், எலிகள் கீரிப்பிள்ளையிடமிருந்தும் பிறக்கின்றன. (29)

பூனைகள் புலிகளோடும், பன்றிகள் நாய்களோடும், கின்னரர்கள் அரக்கர்களுடனும் மானுடர்களுடனும் உறவு கொள்கிறார்கள். (30)

வெண்மையான இறகுகளையும் சிவந்த கால்களையும் உடைய புறாக்கள் காலதேவனால் தூண்டப்பட்டு, நிகழப் போகிற அரக்கர்களின் அழிவை முன்கூட்டியே அறிவிப்பதைப் போல எங்கும் பறந்து திரிகின்றன. (31)

வீட்டுப் பறவைகளான நாகணவாய்ப் புட்கள் காச்சு–மூச்சென்று கத்துகின்றன; தமக்குள் சண்டையிட்டுக் கொண்டு காயமடைந்து தோற்றுப் போய் கீழே விழுகின்றன. (32)

எல்லாப் பறவைகளும் விலங்குகளும் தலைதூக்கிச் சூரியனைப் பார்த்து அழுகின்றன. பயங்கரமான, அகந்தை கொண்ட, கேசமில்லாத மொட்டைத் தலையனான, கறுப்பும் மஞ்சள் நிறமும் கலந்த வண்ணமுடைய காலபுருஷன், அவ்வப்போது நம் எல்லோருடைய வீடுகளையும் நோட்டம்விட்டுக் கொண்டிருக்கிறான். இவைகளும் வேறு பல தீய சகுனங்களும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. (33,34)

இராமனை மானுட உடலை ஏற்றுக் கொண்டு வந்துள்ள விஷ்ணுவாகவே கருதுகிறோம். மிகவும் ஆச்சரியமான ஸேது அணையைக் கடலில் கட்டியிருப்பவனும், எதற்கும் அசைந்து கொடுக்காதவனுமான இராமன், சாதாரண மனிதன் இல்லை. (35)

எதிர்காலத்தில் நன்மை பயக்கக்கூடிய செயல்களைச் சிந்தித்துப் பார்த்து, உறுதியான ஒரு முடிவை எடு, இராவணா! மனித குலத்தின் மன்னரான இராமனுடன் சமாதானம் செய்து கொள்.'' (36)

இவ்வாறு சொல்லிவிட்டு, அரக்க மன்னனின் (இராவணனின்) மாற்றம் அடையாத உள்ளுணர்வுகளைப் புரிந்து கொண்டு, சிறந்த அமைச்சர்களில் தலையாயவரான மகாபலம் பொருந்திய மால்யவான், இராவணனை நோக்கியவண்ணம் மௌனத்தை அடைந்தார். (37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஷட்த்ரிம்ஶ: ஸர்க$_3$:

புரத்$_3$வாரரக்ஷா

தத்து மால்யவதோ வாக்யம் ஹிதமுக்தம் த$_3$ஶாநந: ।
ந மர்ஷயதி து$_3$ஷ்டாத்மா காலஸ்ய வஶமாக$_3$த: ॥ (1)

ஸ ப$_3$த்$_3$த்$_4$வா ப்$_4$ருகுடிம் வக்த்ரே க்ரோத$_4$ஸ்ய வஶமாக$_3$த: ।
அமர்ஷாத்பரிவ்ருத்தாக்ஷோ மால்யவந்தமத$_2$ாப்$_3$ரவீத் ॥ (2)

ஹிதபு$_3$த்$_3$த்$_4$யா யத$_3$ஹிதம் வச: பருஷமுச்யதே ।
பரபக்ஷம் ப்ரவிஶ்யைவ நைதச்ச்$_2$ரோத்ரம் க$_3$தம் மம ॥ (3)

மாநுஷம் க்ருபணம் ராமமேகம் ஶாக$_2$ாம்ருக$_3$ாஶ்ரயம் ।
ஸமர்தம் மந்யஸே கேந த்யக்தம் பித்ரா வநாலயம் ॥ (4)

ரக்ஷஸாமீஶ்வரம் மாம் ச தே$_3$வதாநாம் ப$_4$யங்கரம் ।
ஹீநம் மாம் மந்யஸே கேந ஹ்யஹீநம் ஸர்வவிக்ரமை: ॥ (5)

வீரத்$_3$வேஷேண வா ஶங்கே பக்ஷபாதேந வா ரிபோ: ।
த்வயாஹம் பருஷாண்யுக்த: பரப்ரோத்ஸாஹநேந வா ॥ (6)

ப்ரப$_4$வந்தம் பத$_3$ஸ்த$_2$ம் ஹி பருஷம் கோऽபி$_4$த$_4$ாஸ்யதி ।
பண்டி$_3$த: ஶாஸ்த்ரதத்த்வஜ்ஞோ விநா ப்ரோத்ஸாஹநாத்$_3$ரிபோ: ॥ (7)

ஆநீய ச வநாத்ஸீதாம் பத்$_3$மஹீநாமிவ ஶ்ரியம் ।
கிமர்த$_2$ம் ப்ரதித$_3$ாஸ்யாமி ராக$_4$வஸ்ய ப$_4$யாத$_3$ஹம் ॥ (8)

வ்ருதம் வாநரகோடீபி$_4$: ஸஸுக்$_3$ரீவம் ஸலக்ஷ்மணம் ।
பஶ்ய கைஶ்சித$_3$ஹோபி$_4$ஸ்த்வம் ராக$_4$வம் நிஹதம் மயா ॥ (9)

த்$_3$வந்த்$_3$வே யஸ்ய ந திஷ்ட$_2$ந்தி தை$_3$வதாந்யபி ஸம்யுகே$_3$ ।
ஸ கஸ்மாத்$_3$ராவணோ யுத்$_3$தே$_4$ ப$_4$யமாஹாரயிஷ்யதி ॥ (10)

த்$_3$வித$_4$ா ப$_4$ஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித் ।
ஏஷ மே ஸஹஜோ தோ$_3$ஷ: ஸ்வப$_4$ாவோ து$_3$ரதிக்ரம: ॥ (11)

யதி$_3$ தாவத்ஸமுத்$_3$ரே து ஸேதுர்ப$_3$த்$_3$தோ$_4$ யத்$_3$ருச்ச$_2$யா ।
ராமேண விஸ்மய: கோऽத்ர யேந தே ப$_4$யமாக$_3$தம் ॥ (12)

ஸ து தீர்த்வார்ணவம் ராம: ஸஹ வாநரஸேநயா ।
ப்ரதிஜாநாமி தே ஸத்யம் ந ஜீவந் ப்ரதியாஸ்யதி ॥ (13)

ஸர்க்கம் : முப்பத்தாறு
இலங்கை பாதுகாப்பு

தீய குணம் படைத்தவனும் காலதேவனின் வசத்தில் வீழ்ந்து விட்டவனுமான இராவணனால், மால்யவானால் கூறப்பட்ட நலந்தரும் சொற்களைப் பொறுக்க முடியவில்லை. (1)

கடுங்கோபமடைந்து, புருவங்களைப் பயங்கரமாக நெறித்து கண்களை உருட்டி விழித்து, மால்யவானைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (2)

''நீங்கள் எதிரியின் கட்சியில் சேர்ந்துவிட்டீர்கள். எனக்கு நன்மை தரும் என எண்ணி, எனக்கு நன்மை விளைவிக்காத, கேட்கத்தகாத வார்த்தைகளைக் கூறினீர்களே, அவைகளை நான் செவியில் ஏற்றுக் கொள்ளவில்லை. (3)

இராமன், ஒரு சாதாரண மானுடன்; ஆதரவற்றவன்; தனி ஆள்; கிளைக்குக் கிளை தாவும் வானரங்களை நம்பிக் கொண்டிருப்பவன்; பெற்ற தகப்பனாரால் கைவிடப்பட்டு வனத்தில் சரண் புகுந்திருப்பவன். எந்தக் காரணத்தைக் கொண்டு அவனைப் பெரும் திறமைசாலியாக நீங்கள் கருதுகிறீர்கள்? (4)

அரக்கர்களின் மன்னன்; தேவர்களை நடுங்கச் செய்கிறவன்; எல்லாவிதமான பராக்கிரமங்களும் குறையில்லாமல் பெற்றிருப்பவன்! – இப்படிப்பட்ட என்னை எந்தக் காரணத்தால் குறைவாக மதிப்பிடுகிறீர்கள்? (5)

என்னுடைய மகாவீரத்தைக் கண்டு என்னிடம் பொறாமை; பகைவனிடம் உள்ள பரிவு; எதிரிகள் கொடுத்த தைரியம் – இவற்றில் ஏதோ ஒரு காரணத்தால்தான், தகாத வார்த்தைகளை என்னிடம் பேசியிருக்கிறீர்கள். (6)

வலிமை உள்ள உயர் பதவியிலிருக்கும் ஒருவனைப் பார்த்து, கல்வி–கேள்விகளில் சிறந்தவனும் நீதிநூல் நுட்பங்களை அறிந்தவனுமான எவன்தான், எதிராளியின் தூண்டுதல் இல்லாமல் இத்தகைய கேட்கத்தகாத கொடுஞ்சொற்களைக் கூறத் துணிவான்? (7)

தாமரையைத் துறந்து வந்த திருமகள் போன்ற சீதையைக் காட்டிலிருந்து கொண்டு வந்தேன். (அவ்வளவு பெரிய சாகசச் செயலைப் புரிந்திருக்கிறேன்! இப்போது) இராமனிடம் அச்சங்கொண்டு, அவளைத் திருப்பிக் கொடுத்து விடுவேனா, என்ன? (8)

இன்னும் சில நாட்களுக்குள்ளாகவே கோடிக்கணக்கான வானர வீரர்களுடனும், சுக்ரீவ–லட்சுமணர்களோடும் கூடியிருக்கும் இராமனை, நான் கொல்லப் போவதைப் பார்க்கப் போகிறீர்கள். போர்க்களத்தில் ஒருவருக்கு ஒருவர் என்ற துவந்துவ யுத்தத்தில் என்னுடன் மோதுவதற்கு தேவர்கள்கூடத் துணிய மாட்டார்கள். அப்படிப்பட்ட இராவணனாகிய நான், எந்தக் காரணத்தினால் போரைக் கண்டு அஞ்சுவேன். (9,10)

நான் (போரில்) இரண்டு துண்டுகளாக பிளவு படுத்தப்பட்டாலும் சரி, எவனொருவன் முன்பும் தலைகுனிந்து நிற்க மாட்டேன். இது என் பிறவி முதற்கொண்டே உள்ள குறை. பிறவிக் குணக்குறையை யாராலும் மாற்ற முடியாது. (11)

பெருங்கடலில் ஸேது அணை ஏதோ ஒருவிதமாகக் கட்டப்பட்டிருக்கிறது. (இதற்குக் காரணம் இராமனுடைய ஆற்றல் அல்ல; தற்செயலாக நிகழ்ந்த ஒரு சம்பவம்.) இதில் வியப்படைந்து பாராட்டுவதற்கு என்ன இருக்கிறது? அணை கட்டியதைச் செயற்கரிய செயலாக நீங்கள் நினைப்பதால், உங்களுக்குப் பயம் ஏற்பட்டிருக்கிறது. (12)

வானரப் படையுடன் கூடக் கடலைக் கடந்து வந்திருக்கிறான், இராமன். ஆனால், அவன் உயிரோடு திரும்பிப் போகமாட்டான் என்று ஆணையிட்டுச் சொல்கிறேன்.'' (13)

ஏவம் ப்3ருவாணம் ஸம்ரப்3த4ம் ருஷ்டம் விஜ்ஞாய ராவணம் ।
வ்ரீடி3தோ மால்யவாந் வாக்யம் நோத்தரம் ப்ரத்யபத்3யத ॥ (14)

சிந்தயந் மநஸா தஸ்ய து3ஷ்கர்மபரிபாகஜம் ।
பாபம் நாஶயதி ஹ்யேநம் ஸ்வஸ்ய ராஷ்ட்ரஸ்ய ராக்ஷஸை: ॥ (15)

ஜயாஶிஷா ச ராஜாநம் வர்த4யித்வா யதோ2சிதம் ।
மால்யாவநப்4யநுஜ்ஞாதோ ஜகா3ம ஸ்வம் நிவேஶநம் ॥ (16)

ராவணஸ்து ஸஹாமாத்யோ மந்த்ரயித்வா விம்ருஶ்ய ச ।
லங்காயாமதுலாம் கு3ப்திம் காரயாமாஸ ராக்ஷஸ: ॥ (17)

ஸ வ்யாதி3தே3ஶ பூர்வஸ்யாம் ப்ரஹஸ்தம் த்3வாரி ராக்ஷஸம் ।
த3க்ஷிணஸ்யாம் மஹாவீர்யௌ மஹாபார்ஶ்வமஹோத3ரௌ ॥
வ்யாதி3தே3ஶ மஹாகாயௌ ராக்ஷஸைர்ப3ஹுபி4ர்வ்ருதௌ ॥ (18)

பஶ்சிமாயாமதோ2 த்3வாரி புத்ரமிந்த்3ரஜிதம் தத2ா ।
வ்யாதி3தே3ஶ மஹாமாயம் ப3ஹுபீ4 ராக்ஷஸைர்வ்ருதம் ॥ (19)

உத்தரஸ்யாம் புரத்3வாரி வ்யாதி3ஶ்ய ஶுகஸாரணௌ ।
ஸ்வயம் சாத்ர ப4விஷ்யாமி மந்த்ரிணஸ்தாநுவாச ஹ ॥ (20)

ராக்ஷஸம் து விரூபாக்ஷம் மஹாவீர்யபராக்ரமம் ।
மத்4யமேऽஸ்தா2பயத்3கு3ல்மே ப3ஹுபி4: ஸஹ ராக்ஷஸை: ॥ (21)

ஏவம் விதா4நம் லங்காயா: க்ருத்வா ராக்ஷஸபுங்க3வ: ।
க்ருதக்ருத்யமிவாத்மாநம் மந்யதே காலசோதி3த: ॥ (22)

விஸர்ஜயாமாஸ தத: ஸ மந்த்ரிணோ
விதா4நமாஜ்ஞாப்ய புரஸ்ய புஷ்கலம் ।
ஜயாஶிஷா மந்த்ரிக3ணேந பூஜிதோ
விவேஶ சாந்த:புரம்ருத்3தி4மந்மஹத் ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஷட்த்ரிம்ஶ: ஸர்க3: ॥

ஸப்தத்ரிம்ஶ: ஸர்க3:

ராமகு3ல்மவிப4ாக3:

நரவாநரராஜௌ தௌ ஸ ச வாயுஸுத: கபி: ।
ஜாம்ப3வாந்ருக்ஷராஜஶ்ச ராக்ஷஸஶ்ச விபீ4ஷண: ॥ (1)

அங்க3தோ3 வாலிபுத்ரஶ்ச ஸௌமித்ரி: ஶரப4: கபி: ।
ஸுஷேண: ஸஹதா3யாதோ3 மைந்தோ3 த்3விவித3 ஏவ ச ॥ (2)

க3ஜோ க3வாக்ஷோ க3வயோ நளோऽத2 பநஸஸ்தத2ா ।
அமித்ரவிஷயம் ப்ராப்தா: ஸமவேதா: ஸமர்த2யந் ॥ (3)

இவ்வாறு, அகந்தையுடனும் அடங்காச் சினத்துடனும் இராவணன் கூறியதைக் கேட்ட மால்யவான் மனம் புழுங்கி பதில் ஏதும் சொல்லாதிருந்தார். (14)

'அவனுடையவும் மற்ற அரக்கர்களுடையவும் நெறி தவறிய நடவடிக்கைகளின் விளைவாக உண்டாகியுள்ள பாவம், அவனையும் அவனுடைய நாட்டையும் அழிக்கப் போகிறது' என்று மனத்திற்குள் எண்ணியவராய், உரிய முறையில் ஆசிமொழிகளைக் கூறிவிட்டு, அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு, தன் மாளிகைக்குள் மால்யவான் புகுந்தார். (15,16)

அரக்கனான இராவணன் அமைச்சர்களுடன் கூட ஆலோசித்து, ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாக இலங்கையின் பாதுகாப்புக்காக மிகப்பெரிய அளவில் ஏற்பாடுகளைச் செய்வித்தான். (17)

பிரஹஸ்தனை கிழக்கு வாயிலிலும், பெருவீரர்களான மகாபார்சுவன், மகோதரன் ஆகிய இருவருடன் பேருடல் கொண்ட அளவிட முடியாத அரக்கர்களைத் தெற்குத் திக்கிலும் (கோட்டை வாயிலிலும்) நியமித்தான். (18)

அவ்வாறே மேற்கு வாயிலில், பல அரக்கர்களால் சூழப்பட்டவனும், தன் புதல்வனும், மகாமாயாவியுமான இந்திரஜித்தை நியமித்தான். (19)

நகரத்தின் வடக்கு வாயிலில் சுக–ஸாரணர்களை நியமித்து, 'நான் இங்கேயே இருக்கப் போகிறேன்' என்று அமைச்சர்களிடம் கூறினான். (20)

எல்லையற்ற வீரமும் பராக்கிரமமுமுடைய விரூபாட்சன் என்ற அரக்கனை, ஏராளமான அரக்க வீரர்களோடு கோட்டையின் மையப் பகுதியில் இருக்கச் செய்தான். (21)

அரக்கர் தலைவனான இராவணன், இவ்வாறு இலங்கையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, காலதேவனின் வசப்பட்டிருந்த அவன், 'நான் எல்லாவற்றையும் சரியாகச் செய்துவிட்டேன்!' என்ற திருப்தியில் இருந்தான். (22)

இவ்வாறு நகரத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டிய எற்பாடுகளை நல்ல முறையில் செய்யுமாறு ஆணையிட்டுவிட்டு, அமைச்சர்களின் வாழ்த்துரைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, செல்வச் செழிப்புடனும் விசாலமாகவும் விளங்கும் தன் அந்தப்புரத்தை அடைந்தான். (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தேழு

இராமன் வியூகம் அமைத்தல்!

மானுட மன்னர் (இராமன்), வானர மன்னன் (சுக்ரீவன்), வாயுகுமாரன் அனுமான், கரடிகளின் தலைவர் ஜாம்பவான், அரக்கனான விபீஷணன், வாலி மைந்தனான அங்கதன், லட்சுமணன், அவனுடனிருந்த சரபன் என்ற வானரன், சுஷேணன், அவனுடனிருந்த சுற்றத்தார்கள், மைந்தன், த்விவிதன், கஜன், கவாக்ஷன், கவயன், நளன், பனஸன் ஆகியோர்கள், பகைவனின் பிரதேசத்தை அடைந்துவிட்டபடியால், எல்லோருமாக ஒன்றுகூடி மந்திராலோசனையில் ஈடுபட்டார்கள். (1–3)

இயம் ஸா லக்ஷ்யதே லங்கா புரீ ராவணபாலிதா ।
ஸாஸுரோரக$_3$க$_3$ந்த$_4$ர்வைரமரைரபி து$_3$ர்ஜயா ॥ (4)

கார்யஸித்$_3$தி$_4$ம் புரஸ்க்ருத்ய மந்த்ரயத்$_4$வம் விநிர்ணயே ।
நித்யம் ஸந்நிஹிதோ ஹ்யத்ர ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ॥ (5)

தத$_2$ா தேஷு ப்$_3$ருவாணேஷு ராவணாவரஜோऽப்$_3$ரவீத் ।
வாக்யமக்$_3$ராம்யபத$_3$வத்புஷ்கலார்த$_2$ம் விபீ$_4$ஷண: ॥ (6)

அநல: ஶரப$_4$ஶ்சைவ ஸம்பாதி: ப்ரக$_4$ஸஸ்தத$_2$ா ।
க$_3$த்வா லங்காம் மமாமாத்யா: புரீம் புநரிஹாக$_3$தா: ॥ (7)

பூ$_4$த்வா ஶகுநய: ஸர்வே ப்ரவிஷ்டாஶ்ச ரிபோர்ப$_3$லம் ।
வித$_4$ாநம் விஹிதம் யச்ச தத்$_3$த்$_3$ருஷ்ட்வா ஸமுபஸ்தி$_2$தா: ॥ (8)

ஸம்வித$_4$ாநம் யத$_2$ாஹுஸ்தே ராவணஸ்ய து$_3$ராத்மந: ।
ராம தத்$_3$ப்$_3$ருவத: ஸர்வம் யாத$_2$ாதத்$_2$யேந மே ஶ்ருணு ॥ (9)

பூர்வம் ப்ரஹஸ்த: ஸப$_3$லோ த்$_3$வாரமாஸாத்$_3$ய திஷ்ட$_2$தி ।
த$_3$க்ஷிணம் ச மஹாவீர்யௌ மஹாபார்ஶ்வமஹோத$_3$ரௌ ॥ (10)

இந்த்$_3$ரஜித்பஶ்சிமத்$_3$வாரம் ராக்ஷஸைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ।
பட்டஸாஸித$_4$நுஷ்மத்$_3$பி$_4$: ஶூலமுத்$_3$க$_3$ரபாணிபி$_4$: ॥
நாநாப்ரஹரணை: ஶூரைராவ்ருதோ ராவணாத்மஜ: ॥ (11)

ராக்ஷஸாநாம் ஸஹஸ்ரைஸ்து ப$_3$ஹுபி$_4$: ஶஸ்த்ரபாணிபி$_4$: ।
யுக்த: பரமஸம்விக்$_3$நோ ராக்ஷஸைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ॥
உத்தரம் நக$_3$ரத்$_3$வாரம் ராவண: ஸ்வயமாஸ்தி$_2$த: ॥ (12)

விருபாக்ஷஸ்து மஹதா ஶூலக$_2$ட்$_3$க$_3$த$_4$நுஷ்மதா ।
ப$_3$லேந ராக்ஷஸை: ஸார்த$_4$ம் மத்$_4$யமம் கு$_3$ல்மமாஸ்தி$_2$த: ॥ (13)

ஏதாநேவம்வித$_4$ாந் கு$_3$ல்மாந்(ல்)லங்காயாம் ஸமுதீ$_3$க்ஷ்ய தே ।
மாமகா: ஸசிவா: ஸர்வே புந: ஶீக்$_4$ரமிஹாக$_3$தா: ॥ (14)

க$_3$ஜாநாம் ச ஸஹஸ்ரம் ச ரத$_2$ாநாமயுதம் புரே ।
ஹயாநாமயுதே த்$_3$வே ச ஸாக்$_3$ரகோடிஶ்ச ரக்ஷஸாம் ॥ (15)

விக்ராந்தா ப$_3$லவந்தஶ்ச ஸம்யுகே$_3$ஷ்வாததாயிந: ।
இஷ்டா ராக்ஷஸராஜஸ்ய நித்யமேதே நிஶாசரா: ॥ (16)

ஏகைகஸ்யாத்ர யுத்$_3$த$_4$ார்தே$_2$ ராக்ஷஸஸ்ய விஶாம்பதே ।
பரிவார: ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ரமுபதிஷ்ட$_2$தே ॥ (17)

ஏதாம் ப்ரவ்ருத்திம் லங்காயாம் மந்த்ரிப்ரோக்தாம் விபீ$_4$ஷண: ।
ஏவமுக்த்வா மஹாப$_3$ாஹூ ராக்ஷஸாம்ஸ்தாநத$_3$ர்ஶயத் ॥
லங்காயாம் ஸசிவை: ஸர்வம் ராமாய ப்ரத்யவேத$_3$யத் ॥ (18)

இதோ காணப்படுகிற இதுதான் இராவணனால் பாதுகாக்கப்படும் வளம் கொழிக்கும் இலங்கைப் பட்டணம். தேவர்கள், நாகர்கள், கந்தர்வர்கள், அசுரர்கள் ஆகிய எவராலும் வெல்லப்பட முடியாதது. (4)

அரக்க மன்னனாகிய இராவணன் எப்போதும் இங்கேதான் வசிக்கிறான். (இதை மனத்தில் கொண்டு) நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்கான முன்னேற்பாடுகள் பற்றி ஆலோசியுங்கள். அவர்கள் இவ்வாறு பேசி முடித்ததும், இராவணனுடைய தம்பியான விபீஷணன், அனைவருக்கும் புரியும்படியான மொழியில் கருத்துச்செறிவுள்ள சொற்களைக் கூறினான்— (5,6)

''அநலன், சரபன், ஸம்பாதி, பிரகஸன் ஆகிய என்னுடைய நான்கு அமைச்சர்களும் இலங்கை நகருக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறார்கள். (7)

அந்த நால்வரும் பறவை வடிவம் கொண்டு எதிரியின் படைக்குள் சென்று, (இலங்கையைப் பாதுகாப்பதற்காக) அங்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கண்ணால் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். (8)

இராமப்பிரபோ! தீயவனான இராவணன் நகரப் பாதுகாப்புக்காகச் செய்துள்ள ஏற்பாடுகள் பற்றி, என்னிடம் விரிவாகக் கூறியதை, நான் அவ்வாறே தங்களிடம் சொல்கிறேன். அருள்கூர்ந்து செவி கொடுத்துக் கேளுங்கள். (9)

நகரத்தின் கிழக்கு வாயிலில் சேனையோடுகூட பிரஹஸ்தன் நிற்கிறான்; தெற்கில் மகாவீரர்களான மகாபார்சுவனும், மகோதரனும் நிற்கிறார்கள். (10)

பட்டயம், கத்தி, வில் மற்றும் சூலம், முத்கரம் போன்ற மேலும் பலவகையான ஆயுதங்களை ஏந்திய மகாவீரர்களான ஆயிரக்கணக்கான அரக்கர்களால் சூழப்பட்டவனாக இராவணனுடைய புதல்வன் இந்திரஜித், மேற்கு வாயிலில் காவல் புரிகிறான். (11)

பல்வகை ஆயுதங்களைத் தாங்கிய பல்லாயிரக்கணக்கான அரக்கர்களோடுகூட இராவணன், கொந்தளிக்கும் உள்ளத்துடன் வடபுறத்திலுள்ள நகரவாயிலில் தானே நின்று கொண்டிருக்கிறான். (12)

விருபாட்சன், சூலம்–கத்தி–வில் ஏந்திய மாபெரும் அரக்கர் படையுடன் கூட கோட்டையின் மையப் பகுதியில் நிற்கிறான். (13)

இவ்வாறு, இலங்கையின் பாதுகாப்பை முன்னிட்டு செய்யப்பட்டுள்ள படை அணிகளைப் பார்த்துவிட்டு, என் அமைச்சர்கள் விரைவாக இங்கு திரும்பி வந்துவிட்டார்கள். (14)

நகரத்தில் ஆயிரக்கணக்கான யானைகளும், பதினாயிரக்கணக்கான தேர்ப்படையினரும், இருபதினாயிரம் குதிரைப் படையினரும், கோடிக்கணக்கான காலாட்படையினரும் (போருக்கு ஆயத்தமாக) நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். (15)

இந்த அரக்கர்கள் எல்லோரும் எதிர்த்து நிற்க முடியாத போராற்றலுடையவர்கள்; உடல் வலிமை உடையவர்கள்; போர்க்களத்தில் மிகவும் கொடுமையாக எதிரிகளை அழிப்பவர்கள். இவர்கள் எல்லோரும், எக்காலத்திலும் இராவணனை விட்டுப் பிரியாதவர்கள். (16)

புவியாளும் வேந்தரே! இந்த அரக்கத் தலைவர்கள் ஒவ்வொருவரிடமும் போர் புரிவதற்கென்றே பத்து லட்சம் வீரர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள்.'' (17)

அமைச்சர்களால் கூறப்பட்ட, இலங்கை பற்றிய மேற்கண்ட செய்திகளைத் தெரிவித்துவிட்டு, விபீஷணன் அந்த அரக்க அமைச்சர்களை நேரில் அழைத்து வந்து காட்டினான். இலங்கைச் செய்திகளை இராமனிடம் அவர்களே தெரிவிக்கும்படி செய்தான். (18)

ராமம் கமலபத்ராக்ஷமித$_3$முத்தரமப்$_3$ரவீத் ।
ராவணாவரஜ: ஶ்ரீமாந் ராமப்ரியசிகீர்ஷயா ॥ (19)

குபே$_3$ரம் து யதா$_2$ ராம ராவண: ப்ரத்யயுத்$_4$யத ।
ஷஷ்டி: ஶதஸஹஸ்ராணி ததா$_2$ நிர்யாந்தி ராக்ஷஸா: ॥ (20)

பராக்ரமேண வீர்யேண தேஜஸா ஸத்த்வகௌ$_3$ரவாத் ।
ஶத்$_3$ருஶா யேऽத்ர த$_3$ர்பேண ராவணஸ்ய து$_3$ராத்மந: ॥ (21)

அத்ர மந்யுர்ந கர்தவ்யோ ரோஷயே த்வாம் ந பீ$_4$ஷயே ।
ஸமர்தோ$_2$ ஹ்யஸி வீர்யேண ஸுராணாமபி நிக்$_3$ரஹே ॥ (22)

தத்$_3$ப$_4$வாந்ஶ்சதுரங்கே$_3$ண ப$_3$லேந மஹதா வ்ருத: ।
வ்யூஹ்யேத$_3$ம் வாநராநீகம் நிர்மதி$_2$ஷ்யஸி ராவணம் ॥ (23)

ராவணாவரஜே வாக்யமேவம் ப்$_3$ருவதி ராக$_4$வ: ।
ஶத்ரூணாம் ப்ரதிகா$_4$தார்த$_2$மித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (24)

பூர்வத்$_3$வாரே து லங்காயா நீலோ வாநரபுங்க$_3$வ: ।
ப்ரஹஸ்தப்ரதியோத்$_3$தா$_4$ ஸ்யாத்$_3$வாநரைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ॥ (25)

அங்க$_3$தோ$_3$ வாலிபுத்ரஸ்து ப$_3$லேந மஹதா வ்ருத: ।
த$_3$க்ஷிணே பா$_3$த$_4$தாம் த்$_3$வாரே மஹாபார்ஶ்வமஹோத$_3$ரௌ ॥ (26)

ஹநுமாந் பஶ்சிமத்$_3$வாரம் நிபீட்$_3$ய பவநாத்மஜ: ।
ப்ரவிஶத்வப்ரமேயாத்மா ப$_3$ஹுபி$_4$: கபிபி$_4$ர்வ்ருத: ॥ (27)

தை$_3$த்யதா$_3$நவஸங்கா$_4$நாம்ருஷீணாம் ச மஹாத்மநாம் ।
விப்ரகாரப்ரிய: க்ஷுத்$_3$ரோ வரதா$_3$நப$_3$லாந்வித: ॥ (28)

பரிக்ராமதி ய: ஸர்வாந்(ல்)லோகாந் ஸந்தாபயந் ப்ரஜா: ।
தஸ்யாஹம் ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ஸ்வயமேவ வதே$_4$ த்$_4$ருத: ॥ (29)

உத்தரம் நக$_3$ரத்$_3$வாரமஹம் ஸௌமித்ரிணா ஸஹ ।
நிபீட்$_3$யாபி$_4$ப்ரவேக்ஷ்யாமி ஸப$_3$லோ யத்ர ராவண: ॥ (30)

வாநரேந்த்$_3$ரஶ்ச ப$_3$லவாந்ருக்ஷராஜஶ்ச வீர்யவாந் ।
ராக்ஷஸேந்த்$_3$ராநுஜஶ்சைவ கு$_3$ல்மே ப$_4$வது மத்$_4$யமே ॥ (31)

ந சைவ மாநுஷம் ரூபம் கார்யம் ஹரிபி$_4$ராஹவே ।
ஏஷா ப$_4$வது ஸம்ஜ்ஞா நோ யுத்$_3$தே$_4$ऽஸ்மிந் வாநரே ப$_3$லே ॥ (32)

வாநரா ஏவ நஶ்சிஹ்நம் ஸ்வஜநேऽஸ்மிந் ப$_4$விஷ்யதி ।
வயம் து மாநுஷேணைவ ஸப்த யோத்ஸ்யாமஹே பராந் ॥ (33)

அஹமேஷ ஸஹ ப்$_4$ராத்ரா லக்ஷ்மணேந மஹௌஜஸா ।
ஆத்மநா பஞ்சமஶ்சாயம் ஸகா$_2$ மம விபீ$_4$ஷண: ॥ (34)

இராவணனுடைய இளவலும் கைங்கரியத் திருபொருந்தியவனுமான விபீஷணன், இராமனுக்கு உதவி புரியும் எண்ணத்துடன், தாமரைக்கண்ணரான இராமனைப் பார்த்து மேலும் சொன்னான்— (19)

''இராமச்சந்திரா! குபேரனுடன் போர் புரிவதற்காக இராவணன் புறப்பட்டுச் சென்றபோது, அவனுடன் அறுபது லட்சம் அரக்கர்கள் சென்றார்கள். (20)

இவர்கள் எல்லோரும் எதிர்க்க முடியாத ஆற்றல், வீரம், தேஜஸ், அசைக்க முடியாத தைரியம், அகந்தை ஆகியவற்றில், பொல்லாங்கு உடைய இராவணனுக்கு நிகரானவர்கள். (21)

இப்படி (இராவணனுடைய எல்லையற்ற படை பலத்தை) எடுத்துரைத்ததால், நீங்கள் என்மீது கோபம் கொள்ளக்கூடாது. போர் செய்ய உங்களைத் தூண்டி விடுகிறேனே தவிர பயமுறுத்தவில்லை. (ஏனென்றால்,) நீங்கள் உங்களது பேராற்றலால் தேவர்களையும் அடக்க வல்லவர் (என்பதை நான் அறிவேன்). (22)

மாபெரும் வானரப் படையை நான்கு பாகங்களாகப் பகுத்து, தாங்கள் இராவணனை அழிக்கப் போகிறீர்கள்.'' (23)

இராவணனுடைய இளவல் இவ்வாறு கூறி முடித்ததும், எதிரிகளை அழிக்கும் விஷயத்தில், பின்வருமாறு கூறினார், இராமன். (24)

''பல வானரர்களோடுகூட வானரோத்தமனான நீலன், இலங்கையின் கிழக்கு வாயிலில் பிரஹஸ்தனை எதிர்த்து நிற்கட்டும். (25)

வாலி மைந்தனான அங்கதன், ஏராளமான படைவீரர்கள் சூழ தெற்கு வாயிலில் மகாபார்சுவன், மகோதரன் ஆகியவர்களுக்கு எதிராக நிற்கட்டும். (26)

வாயுதேவனின் புதல்வனான ஈடு இணையில்லாத வீரமுடைய அனுமான், பல வானரர்களோடுகூட மேற்கு வாயிலைத் தாக்கி (நகரத்திற்குள்) நுழைய முயலட்டும். (27)

தைத்யர்கள், தானவர்கள், மகாத்மாக்களான முனிவர்கள் ஆகியவர்களுக்குத் தொல்லை கொடுப்பதில் விருப்பம் உள்ளவனும், அற்பனும், தேவதைகளால் கொடுக்கப்பட்ட வரங்களின் காரணமாக செருக்கித் திரிபவனும், மக்களை தவிக்கச் செய்து கொண்டு எல்லா உலகங்களிலும் சுற்றிக் கொண்டிருப்பவனுமான இந்த அரக்க மன்னனை (இராவணனை) நானே கொல்வதாக முடிவு செய்திருக்கிறேன். (28,29)

படைவீரர்கள் புடைசூழ இராவணன் காவல் புரியும் வடக்கு வாயிலில், நானும் லட்சுமணனுமாகச் சேர்ந்து தாக்கி உள்ளே புகப்போகிறேன். (30)

வலிமை மிக்க சுக்ரீவன், பராக்கிரமம் மிக்க கரடித் தலைவன் ஜாம்பவான், அரக்க மன்னனின் தம்பி ஆகியோர், நமது படையின் மையப் பகுதியில் இருப்பார்களாக. (31)

யுத்தகளத்தில் வானரர்கள் மானுட வடிவம் ஏற்றுக் கொள்ளக்கூடாது. (வானரர்களாகவே இருக்க வேண்டும்.) போர்க்களத்தில் வானரப் படையை அடையாளம் கண்டு கொள்ள, இந்தத் தோற்றம் உதவியாக இருக்கும். (32)

'நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்' என்று கண்டு கொள்வதில் வானரர் தோற்றம்தான் அடையாளமாக இருக்கும். நாங்கள் ஏழு பேர்கள் மட்டும் மானுட வடிவம் ஏற்று, எதிரிகளுடன் போர் புரிவோம். (33)

நான், பேராற்றல் கொண்ட சகோதரன் லட்சுமணன், நான்கு அமைச்சர்களோடு ஐந்தாவதாக என்னுடைய நண்பன் விபீஷணன் ஆகிய எழுவர்.'' (34)

ஸ ராம: க்ருத்யஸித்$_3$த்$_4$யர்த$_2$மேவமுக்த்வா விபீ$_4$ஷணம் ।
ஸுவேலாரோஹணே பு$_3$த்$_3$தி$_4$ம் சகார மதிமாந் மதிம் ॥
ரமணீயதரம் த்$_3$ருஷ்ட்வா ஸுவேலஸ்ய கி$_3$ரேஸ்தடம் ॥ (35)

ததஸ்து ராமோ மஹதா ப$_3$லேந
ப்ரச்ச$_2$ாத்$_3$ய ஸர்வாம் ப்ருதி$_2$வீம் மஹாத்மா ।
ப்ரஹ்ருஷ்டரூபோऽபி$_4$ஜக$_3$ாம லங்காம்
க்ருத்வா மதிம் ஸோऽரிவதே$_4$ மஹாத்மா ॥ (36)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஸப்தத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

அஷ்டத்ரிம்ஶ: ஸர்க$_3$:

ஸுவேலாரோஹணம்

ஸ து க்ருத்வா ஸுவேலஸ்ய மதிமாரோஹணம் ப்ரதி ।
லக்ஷ்மணாநுக$_3$தோ ராம: ஸுக்$_3$ரீவமித$_3$மப்$_3$ரவீத் ॥ (1)

விபீ$_4$ஷணம் ச த$_4$ர்மஜ்ஞமநுரக்தம் நிஶாசரம் ।
மந்த்ரஜ்ஞம் ச விதி$_4$ஜ்ஞம் ச ஶ்லக்ஷ்ணயா பரயா கி$_3$ரா ॥ (2)

ஸுவேலம் ஸாது$_4$ ஶைலேந்த்$_3$ரமிமம் த$_4$ாதுஶதைஶ்சிதம் ।
அத்$_4$யாரோஹாமஹே ஸர்வே வத்ஸ்யாமோऽத்ர நிஶாமிமாம் ॥ (3)
லங்காம் சாலோகயிஷ்யாமோ நிலயே தஸ்ய ரக்ஷஸ: ।
யேந மே மரணாந்தாய ஹ்ருதா ப$_4$ார்யா து$_3$ராத்மநா ॥ (4)
யேந த$_4$ர்மோ ந விஜ்ஞாதோ ந தத்$_3$வ்ருத்தம் குலம் தத$_2$ா ।
ராக்ஷஸ்யா நீசயா பு$_3$த்$_3$த்$_4$யா யேந தத்$_3$க$_3$ர்ஹிதம் க்ருதம் ॥ (5)

தஸ்மிந் மே வர்ததே ரோஷ: கீர்திதே ராக்ஷஸாத$_4$மே ।
யஸ்யாபரத$_4$ாந்நீசஸ்ய வத$_4$ம் த்$_3$ரக்ஷ்யாமி ரக்ஷஸாம் ॥ (6)

ஏகோ ஹி குருதே பாபம் காலபாஶவஶம் க$_3$த: ।
நீசேநாத்மாபசாரேண குலம் தேந விநஶ்யதி ॥ (7)

ஏவம் ஸம்மந்த்ரயந்நேவ ஸக்ரோதே$_4$ா ராவணம் ப்ரதி ।
ராம: ஸுவேலம் வாஸாய சித்ரஸாநுமுபாருஹத் ॥ (8)

ப்ருஷ்ட$_2$தோ லக்ஷ்மணஶ்சைநமந்வக$_3$ச்ச$_2$த்ஸமாஹித: ।
ஸஶரம் சாபமுத்$_3$யம்ய ஸுமஹத்$_3$விக்ரமே ரத: ॥
தமந்வரோஹத்ஸுக்$_3$ரீவ: ஸாமாத்ய: ஸவிபீ$_4$ஷண: ॥ (9)

தன் நோக்கம் நிறைவேறும் பொருட்டு விபீஷணனைப் பார்த்து இவ்வாறு கூறிவிட்டு, சுவேலமலையின் தாழ்வரையின் கண்கவர் காட்சியைக் கண்டு மகிழ்ந்து, அதன் மேல் ஏறி (இலங்கையை அடைவதில்) பேரறிவாளரான இராமன் மனத்தைச் செலுத்தினார். (35)

பின்னர், பேராற்றலுடைய இராமன் தன்னுடைய மிகப்பெரும் படையினால் பூமியை மறைத்துக் கொண்டு, எதிரியைக் கொல்வதில் உறுதிபூண்டு, உவகையும் ஆர்வமும் கொண்டு, மகாத்மாவான அவர் இலங்கையை நோக்கிப் பயணப்பட்டார். (36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தெட்டு

சுவேலமலையில் ஏறுதல்!

சுவேலமலையில் ஏறுவது என்று நிச்சயித்த அவர் (இராமன்), லட்சுமணன் பின்தொடர சுக்ரீவனையும், அறநெறி அறிந்தவனும் தன்னிடம் அளவற்ற பக்தி கொண்டவனும் மந்திரலோசனையில் வல்லவனும் செயல் திறனுடையவனும் அரக்கனுமான விபீஷணனையும் நோக்கி மிக இனிமையான குரலில் சொன்னார்— (1,2)

''பலவகை தாதுப்பொருள்கள் நிறைந்ததும் கண்கவர் அழகுடைய மலையான சுவேலமலையின் மீது நாம் எல்லோரும் ஏறுவோம். இன்றைய இரவை அங்கேயே கழிப்போம். (சுவேலம் என்பது வானத்தில் தொங்குவதுபோல் அற்புதமாக அமைக்கப்பட்ட, இலங்கை நகரம் விளங்கும் திரிகூட மலைக்கு நிகரான மலை; அதன் அருகில் உள்ளது.) (3)

எந்தத் தீயவன் தன் மரணத்தின், பொருட்டு என் மனைவியைக் கவர்ந்து சென்றானோ, அந்த அரக்கன் வாழுமிடமான இலங்கையையும் அங்கிருந்து பார்ப்போம். (4)

அறநெறியை அறியாதவன்; நல்லொழுக்கத்தை அறியாதவன்; குலப்பெருமையை அறியாதவன் – இப்படிப்பட்ட அரக்கர்களின் மட்டமான குணங்களோடு பிறந்த அவனால், வெறுக்கத்தக்க அந்த செயல் (சீதையைக் கவர்வது) செய்யப்பட்டது. அந்த அரக்கப்பதரின் பெயரைச் சொன்னமாத்திரத்திலேயே என்னுள் ஆத்திரம் பொங்குகிறது. இழிகுணம் கொண்ட அவன் ஒருவனின் செய்கையால், அரக்கர் குலம் முழுவதும் அழிவதை நான் பார்க்கப் போகிறேன். (5,6)

காலபாசத்தில் சிக்கிக் கொண்ட யாரோ ஒருவன் பாவத்தைச் செய்கிறான். அந்த அற்பன் செய்த பாவத்தால், அவனுடைய குலமே அழிந்து விடுகிறது.'' (7)

இராவணனிடம் மிகுந்த கோபத்தை அடைந்து, மேற்கண்டபடி பேசிக் கொண்டே, அழகிய சிகரங்களையுடைய சுலேவமலையில் அந்த இரவைக் கழிப்பதற்காக, இராமன் மேலே ஏறிச் சென்றார். (8)

எதிர்கொள்ள முடியாத பேராற்றல் பெற்றவர் என்ற புகழுக்குரிய லட்சுமணன், வில்லும் அம்பும் தாங்கியவராக மனத்தைச் சிதறவிடாமல் அவரைத் தொடர்ந்து மலைமேல் ஏறினார். சுக்ரீவனும் அமைச்சர்களோடுகூட விபீஷணனும் அவரைப் பின்பற்றி மேலே ஏறிச் சென்றார்கள். (9)

ஹநுமாநங்க$_3$தோ$_3$ நீலோ மைந்தோ$_3$ த்$_3$விவித$_3$ ஏவ ச ।
க$_3$ஜோ க$_3$வாக்ஷோ க$_3$வய: ஶரபோ$_4$ க$_3$ந்த$_4$மாத$_3$ந: ॥ (10)

பநஸ: குமுத$_3$ஶ்சைவ ஹரோ ரம்ப$_4$ஶ்ச யூத$_2$ப: ।
ஜாம்ப$_3$வாம்ஶ்ச ஸுஷேணஶ்ச ருஷப$_4$ஶ்ச மஹாமதி: ॥ (11)

து$_3$ர்முக$_2$ஶ்ச மஹாதேஜாஸ்ததா$_2$ ஶதபலி: கபி: ।
ஏதே சாந்யே ச ப$_3$ஹவோ வாநரா: ஶீக்$_4$ரகா$_3$மிந: ॥ (12)

தே வாயுவேக$_3$ப்ரவணாஸ்தம் கி$_3$ரிம் கி$_3$ரிசாரிண: ।
அத்$_4$யாரோஹந்த ஶதஶ: ஸுவேலம் யத்ர ராக$_4$வ: ॥ (13)

தே த்வதீ$_3$ர்கே$_4$ண காலேந கி$_3$ரிமாருஹ்ய ஸர்வத: ।
த$_3$த்$_3$ருஶு: ஶிக$_2$ரே தஸ்ய விஷக்தாமிவ கே$_2$ புரீம் ॥ (14)

தாம் ஶுபா$_4$ம் ப்ரவரத்$_3$வாராம் ப்ராகாரபரிஶோபி$_4$தாம் ।
லங்காம் ராக்ஷஸஸம்பூர்ணாம் த$_3$த்$_3$ருஶுர்ஹரியூத$_2$பா: ॥ (15)

ப்ராகாரசயஸம்ஸ்தை$_2$ஶ்ச ததா$_3$ நீலைர்நிஶாசரை: ।
த$_3$த்$_3$ருஶுஸ்தே ஹரிஶ்ரேஷ்டா$_2$: ப்ராகாரமபரம் க்ருதம் ॥ (16)

தே த்$_3$ருஷ்ட்வா வாநரா: ஸர்வே ராக்ஷஸாந் யுத்$_3$த$_4$காங்க்ஷிண: ।
முமுசுர்விவிதா$_4$ந்நாதா$_3$ந்ஸ்தத்ர ராமஸ்ய பஶ்யத: ॥ (17)

ததோऽஸ்தமக$_3$மத்ஸூர்ய: ஸந்த்$_4$யயா ப்ரதிரஞ்ஜித: ।
பூர்ணசந்த்$_3$ரப்ரதீ$_3$ப்தா ச க்ஷபா ஸமபி$_4$வர்ததே ॥ (18)

தத: ஸ ராமோ ஹரிவாஹிநீபதிர்–
விபீ$_4$ஷணேந ப்ரதிநந்த்$_3$ய ஸத்க்ருத: ।
ஸலக்ஷ்மணோ யூத$_2$பயூத$_2$ஸம்வ்ருத:
ஸுவேலப்ருஷ்டே$_2$ ந்யவஸத்$_3$யதா$_2$ஸுக$_2$ம் ॥ (19)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டாத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஏகோநசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

லங்காத$_3$ர்ஶநம்

தாம் ராத்ரிமுஷிதாஸ்தத்ர ஸுவேலே ஹரிபுங்க$_3$வா: ।
லங்காயாம் த$_3$த்$_3$ருஶுர்வீரா வநாந்யுபவநாநி ச ॥ (1)

ஸமஸௌம்யாநி ரம்யாணி விஶாலாந்யாயதாநி ச ।
த்$_3$ருஷ்டிரம்யாணி தே த்$_3$ருஷ்ட்வா ப$_3$பூ$_4$வுர்ஜாதவிஸ்மயா: ॥ (2)

அனுமான், அங்கதன், நீலன், மைந்தன், த்விவிதன், கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், பனஸன், குமுதன், ஹரன், படைத்தலைவனான ரம்பன், ஜாம்பவான், சுஷேணன், பேரறிவாளனான ரிஷபன், பேராற்றல் படைத்த துர்முகன், சதபலி என்ற வானரன் ஆகிய இவர்களும், விரைவாக செல்லக்கூடிய வானரர்களும், வாயு போல் வேகம் படைத்தவர்களும், மலைகளில் சுற்றிப் பழக்கமுடையவர்களுமான நூற்றுக்கணக்கான வானரர்கள், சுவேலமலையில் ஏறி, இராமன் தங்கியிருந்த இடத்தை அடைந்தார்கள். (10–13)

அவர்கள் மிக விரைவில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் மலையில் ஏறி, அந்த (இலங்கை) நகரம் ஆகாயத்தில் கட்டப்படிருப்பதைப் போல் (ஆச்சரியப்படும் வகையில் விஸ்தாரமாகவும் தெய்விகப் பொலிவுடனும்) விளங்குவதைக் கண்டார்கள். (14)

வனப்பு மிகுந்ததும், உயர்ந்த நுழைவாயில்களை உடையதும், மதிற்சுவர்களால் அழகாக விளங்குவதும், அரக்கர்கள் நிரம்பி வழிவதுமான இலங்கையை வானரப்படைத் தலைவர்கள் கண்டார்கள். (15)

மதிற்சுவர்களின் மேல் (போர் புரிவதற்கு ஆயத்தமாக வரிசையாக அணிவகுத்து நிற்கும்) கருவண்ண அரக்கர்களைப் பார்த்து, 'மதிற்சுவர்மேல் இன்னொரு மதிற்சுவர் கட்டப்பட்டிருக்கிறதா என்ன?' என்று வியப்புடன் பார்த்தார்கள். (16)

போர் செய்வதில் துடிப்புடனிருந்த வானரர்கள் எல்லோரும் அந்த அரக்கர்களைப் பார்த்ததும், (ஆவேசமடைந்து) இராமன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, (அவர் எதிரிலேயே) (போருக்கு அழைக்கும்) பலவித ஒலிகளை எழுப்பினார்கள். (17)

அப்போது, அந்திப்போதின் செம்மையை ஏற்ற சூரியன் மறைந்து போனான்; முழுநிலவினால் பிரகாசிக்கும் இரவும் வந்தது. (18)

அவ்வமயம், வானரப் படையின் தலைவரான இராமனை, விபீஷணன் வணங்கி, போற்றிப் பாராட்டினான். அவர், தம்பி லட்சுமணனும் வானரப்படைத் தலைவர்களும் சுற்றியிருக்க, சுவேலமலைச் சிகரத்தில் சௌக்கியமாகத் தங்கினார். (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்பது

இலங்கைக் காட்சிகள்

வீரர்களான வானரோத்தமர்கள் அன்றிரவை சுவேலமலையில் கழித்தார்கள். (பொழுது விடிந்ததும்) இலங்கையின் சிறுகாடுகளையும், பூஞ்சோலைகளையும் கண்டார்கள். (1)

அவைகள் எல்லாம் (தோப்புகளும் பூஞ்சோலைகளும்) ஒரே மாதிரியாக அழகுடனும் மனத்திற்கு அமைதியைக் கொடுப்பனவாகவும், கண்ணுக்கு இனிமையானவையாகவும், விசாலமாகவும் இருப்பதைக் கண்டு எல்லா வானரர்களும் பெரும் வியப்படைந்தார்கள். (2)

சம்பகாஶோகபுந்நாக$_{3}$ஸாலதாலஸமாகுலா ।
தமாலவநஸஞ்ச$_{2}$ந்நா நாக$_{3}$மாலாஸமாவ்ருதா ॥ (3)

ஹிந்தாலைரர்ஜுநைர்நீபை: ஸப்தபர்ணைஶ்ச புஷ்பிதை: ।
திலகை: கர்ணிகாரைஶ்ச பாடலைஶ்ச ஸமந்தத: ॥ (4)

ஶுஶுபே$_{4}$ புஷ்பிதாக்$_{3}$ரைஶ்ச லதாபரிக$_{3}$தைர்த்$_{3}$ருமை: ।
லங்கா ப$_{3}$ஹுவிதை$_{4}$ர்தி$_{3}$வ்யைர்யதே$_{2}$ந்த்$_{3}$ரஸ்யாமராவதீ ॥ (5)

விசித்ரகுஸுமோபேதை ரக்தகோமலபல்லவை: ।
ஶாத்$_{3}$வலைஶ்ச ததா$_{2}$ நீலைஶ்சித்ராபி$_{4}$ர்வநராஜிபி$_{4}$: ॥ (6)

க$_{3}$ந்தா$_{4}$ட்$_{4}$யாந்யபி$_{4}$ரம்யாணி புஷ்பாணி ச ப$_{2}$லாநி ச ।
தா$_{4}$ரயந்த்யக$_{3}$மாஸ்தத்ர பூ$_{4}$ஷணாநீவ மாநவா: ॥ (7)

தச்சைத்ரரத$_{2}$ஸங்காஶம் மநோக்ஞம் நந்த$_{3}$நோபமம் ।
வநம் ஸர்வர்துகம் ரம்யம் ஶுஶுபே$_{4}$ ஷட்பதா$_{3}$யுதம் ॥ (8)

நத்யூஹகோயஷ்டிப$_{3}$கைர்ந்ருத்யமாநைஶ்ச ப$_{3}$ர்ஹிபி$_{4}$: ।
ருதம் பரப்$_{4}$ருதாநாம் ச ஶுஶ்ருவுர்வநநிர்ஜரே ॥ (9)

நித்யமத்தவிஹங்கா$_{3}$நி ப்$_{4}$ரமராசரிதாநி ச ।
கோகிலாகுலஷண்டா$_{3}$நி விஹங்கா$_{3}$பி$_{4}$ருதாநி ச ॥ (10)

ப்$_{4}$ருங்க$_{3}$ராஜாபி$_{4}$கீ$_{3}$தாநி ப்$_{4}$ரமரை: ஸேவிதாநி ச ।
கோணாலகவிகு$_{4}$ஷ்டாநி ஸாரஸாபி$_{4}$ருதாநி ச ॥ (11)

விவிஶுஸ்தே ததஸ்தாநி வநாந்யுபவநாநி ச ।
ஹ்ருஷ்டா: ப்ரமுதி$_{3}$தா வீரா ஹரய: காமரூபிண: ॥ (12)

தேஷாம் ப்ரவிஶதாம் தத்ர வாநராணாம் மஹௌஜஸாம் ।
புஷ்பஸம்ஸர்க$_{3}$ஸுரபி$_{4}$ர்வவௌ க்$_{4}$ராணஸுகோ$_{2}$ऽநில: ॥ (13)

அந்யே து ஹரிவீராணாம் யூதா$_{2}$ந்நிஷ்க்ரம்ய யூத$_{2}$பா: ।
ஸுக்$_{3}$ரீவேணாப்$_{4}$யநுக்ஞாதா லங்காம் ஜக்$_{3}$மு: பதாகிநீம் ॥ (14)

வித்ராஸயிந்தோ விஹகா$_{3}$ந்ஸ்த்ராஸயந்தோ ம்ருக$_{3}$த்$_{3}$விபாந் ।
கம்பயந்தஶ்ச தாம் லங்காம் நாதை$_{3}$ஸ்தே நத$_{3}$தாம் வரா: ॥ (15)

குர்வந்தஸ்தே மஹாவேகா$_{3}$ மஹீம் சரணபீடி$_{3}$தாம் ।
ரஜஶ்ச ஸஹஸைவோர்த்$_{4}$வம் ஜகா$_{3}$ம சரணோத்தி$_{2}$தம் ॥ (16)

ருக்ஷா: ஸிம்ஹா வராஹாஶ்ச மஹிஷா வாரணா ம்ருகா$_{3}$: ।
தேந ஶப்$_{3}$தே$_{3}$ந வித்ரஸ்தா ஜக்$_{3}$முர்பீ$_{4}$தா தி$_{3}$ஶோ த$_{3}$ஶ ॥ (17)

ஶிக$_{2}$ரம் தத்த்ரிகூடஸ்ய ப்ராம்ஶு சைகம் தி$_{3}$விஸ்ப்ருஶம் ।
ஸமந்தாத்புஷ்பஸஞ்ச$_{2}$ந்நம் மஹாரஜதஸந்நிப$_{4}$ம் ॥ (18)

சண்பகம், அசோகம், புன்னை, ஆச்சா, பனை முதலிய மரங்கள் நிறைந்ததும்; தமால மரக் கூட்டங்களால் செறிவுற்றதும்; நாககேஸரம், ஹிந்தாலம், மருது, கடம்பம், நன்கு மலர்ந்த ஏழிலைப்பாலை, திலகம், சரக்கொன்றை, பாதிரி ஆகிய மரங்களில் கிளை நுனிகளில் பூத்தும், கொடிகள் படர்ந்தும் மிக ரமணீயமாகக் காணப்பட்ட இலங்கை, தேவேந்திரனின் அமராவதிப் பட்டணம் போலவே இருந்தது. (3–5)

பல்வகையான மலர்களாலும், செம்மையான இளந்தளிர்களாலும், பச்சைப்பசேலென்ற புற்றரைகளாலும், மனத்தைக் கவரும் ஏராளமான தோப்புக்களாலும், அந்த நகரம் பொலிவுடன் விளங்கிற்று. மனிதர்கள் அணிகலன்களை அணிந்து கொண்டு அழகுடன் விளங்குவதைப்போல, அவ்விடத்திலிருந்த மரங்கள், மணமிக்க மலர்களையும் கனிகளையும் தாங்கிக் கொண்டிருந்தன. (6,7)

அந்தத் தோப்புத்துரவுகள் (குபேரனுடைய) சைத்ரரதம் போலவும், (இந்திரனுடைய) நந்தனவனம் போலவும், எல்லாப் பருவ காலங்களிலும் வண்டுகள் மொய்க்கப் பெற்றதாய், மனத்தைக் கவரும்வண்ணம் பொலிவுடன் விளங்கின. (எல்லாக் காலத்திலும் எல்லா மரங்களிலும் மொட்டுகள் மலர்ந்து மகரந்தத்துடன் விளங்கின.) (8)

நீர்க்காக்கை, நாரை முதலியனவற்றாலும் நடனமாடும் மயில்களாலும் தோப்புகள் யாவும் எழிலுடன் தென்பட்டன; காட்டாற்றின் அருகே கூவும் குயில்களின் குரலையும் அவர்கள் கேட்டார்கள். (9)

நினைத்த உருவம் எடுக்க வல்லவர்களான வானர வீரர்கள், தோப்புத்துரவுகளிலும் பூஞ்சோலைகளிலும் மனமகிழ்ச்சியுடன் ஆனந்தம் மேலிட்டவர்களாய் புகுந்து திரிந்தார்கள். அந்த இடங்களில், எப்போதும் மதங்கொண்டு அலையும் பறவைகள், மொய்க்கும் வண்டுகள், குரல் கொடுக்கும் குயில்கள், கீச்சுக்கீச்சென்று சப்திக்கின்ற பறவைகள், தேன் வண்டுகளின் ரீங்காரம், எப்போதும் வசிக்கும் வண்டுகள், குரலொலி எழுப்பும் கோணாலகம் என்ற நீர்ப்பறவைகள், சப்தமிடும் ஸாரஸப் பட்சிகள் ஆகியவைக் காணப்பட்டன. (10–12)

பேராற்றலுடைய வானரர்கள் அவ்விடங்களில் புகுந்தவுடனேயே, மலர்களைத் தழுவி வருவதால் உண்டாகும் நறுமணத்துடன், மணம் நுகரும் நாசிகளுக்கு இனிய சுகத்தை அளிக்கும் மென்காற்று வீசத் தொடங்கியது. (13)

அந்த வானரப் படையிலிருந்து விலகி, வேறு பல படைத்தலைவர்கள், சுக்ரீவனின் அனுமதியைப் பெற்று, கொடிகள் அசைந்தாடும் இலங்கைக்குச் சென்றார்கள். (14)

கர்ஜிக்கின்றவர்களில் சிறந்தவர்களான அவர்கள், போகும் வழியில், பறவைகளை வெருண்டோடச் செய்துகொண்டும், மான்களையும் யானைகளையும் மிரட்சி அடையச் செய்துகொண்டும், அழுத்தமான கால் வைப்புகளால் இலங்கையை நடுங்கச் செய்துகொண்டும் சென்றார்கள். (15)

வெகுவேகமாகச் செல்கின்ற அவர்கள் பூமியில் அழுத்தமாகக் காலைப் பதித்தார்கள். அவர்கள் பாதம் பட்ட இடத்திலிருந்து உடனே தூசி எழுந்து மேலே படர்ந்தது. (16)

அவர்களின் காலோசையினால் அச்சமடைந்து கரடிகள், சிங்கங்கள், எருமைகள், யானைகள், மான்கள், பட்சிகள் எல்லாம் மிரண்டு போய் பத்துத் திசைகளிலும் ஓடி மறைந்தன. (17)

(திரிகூடம் என்பது மூன்று மலைகளைக் கொண்டது. முதலாவது, இராமன் முதலியோர் தங்கியிருந்த சுவேலமலை. அடுத்தது, திரிகூடம்.) திரிகூட மலையின் ஒரு முகடு, தேவலோகத்தைத் தொடும் அளவுக்கு உயரமாக இருந்தது. அந்த மலையின் எல்லாப் பக்கங்களிலும் தங்கத்தை நிகர்த்த மஞ்சள் ஒளி வீசும் மலர்கள் பூத்திருந்தன. (18)

ஶதயோஜநவிஸ்தீர்ணாம் விமலம் சாருத$_3$ர்ஶநம் ।
ஶ்லக்ஷ்ணம் ஸ்ரீமந்மஹச்சைவ து$_3$ஷ்ப்ராபம் ஶகுநைரபி ॥
மநஸாபி து$_3$ராரோஹம் கிம் புந: கர்மணா ஜநை: ॥ (19)

நிவிஷ்டா தத்ர ஶிக$_2$ரே லங்கா ராவணபாலிதா ।
ஶதயோஜநவிஸ்தீர்ணா த்ரிம்ஶத்$_3$யோஜநமாயதா ॥ (20)

ஸா புரீ கோ$_3$புரைருச்சை: பாண்ட$_3$ராம்பு$_3$த$_3$ஸந்நிபை$_4$: ।
காஞ்சநேந ச ஸாலேந ராஜதேந ச ஶோபி$_4$தா ॥ (21)

ப்ராஸாதை$_3$ஶ்ச விமாநைஶ்ச லங்கா பரமபூ$_4$ஷிதா ।
க$_4$நைரிவாதபாபாயே மத்$_4$யமம் வைஷ்ணவம் பத$_3$ம் ॥ (22)

யஸ்யாம் ஸ்தம்ப$_4$ஸஹஸ்ரேண ப்ராஸாத$_3$: ஸமலங்க்ருத: ।
கைலாஸஶிக$_2$ராகாரோ த்$_3$ருஶ்யதே க$_2$மிவோல்லிக$_2$ந் ॥ (23)

சைத்ய: ஸ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ப$_3$பூ$_4$வ புரபூ$_4$ஷணம் ।
ஶதேந ரக்ஷஸாம் நித்யம் ய: ஸமக்$_3$ரேண ரக்ஷ்யதே ॥ (24)

மநோக்ஞாம் காநநவதீம் பர்வதைருபஶோபி$_4$தாம் ।
நாநாதா$_4$துவிசித்ரைஶ்ச உத்$_3$யாநைருபஶோபி$_4$தாம் ॥ (25)

நாநாவிஹக$_3$ஸங்கு$_4$ஷ்டாம் நாநாம்ருக$_3$நிஷேவிதாம் ।
நாநாகுஸுமஸஞ்ச$_2$ந்நாம் நாநாராக்ஷஸஸேவிதாம் ॥ (26)

தாம் ஸம்ருத்$_3$தா$_4$ம் ஸம்ருத்$_3$தா$_4$ர்தா$_2$ம் லக்ஷ்மீவாந்(ல்)லக்ஷ்மணாக்$_3$ரஜ: ।
ராவணஸ்ய புரீம் ராமோ த$_3$த$_3$ர்ஶ ஸஹ வாநரை: ॥ (27)

தாம் மஹாக்$_3$ருஹஸம்பா$_3$தா$_4$ம் த்$_3$ருஷ்ட்வா லக்ஷ்மணபூர்வஜ: ॥
நக$_3$ரீமமரப்ரக்$_2$யோ விஸ்மயம் ப்ராப வீர்யவாந் ॥ (28)

தாம் ரத்நபூர்ணாம் ப$_3$ஹுஸம்விதா$_4$நாம்
ப்ராஸாத$_3$மாலாபி$_4$ரலங்க்ருதாம் ச ।
புரீம் மஹாயந்த்ரகவாடமுக்$_2$யாம்
த$_3$த$_3$ர்ஶ ராமோ மஹதா ப$_3$லேந ॥ (29)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகோநசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

அந்த சிகரம், நூறு யோஜனை அகலமுடையது. மாசுமருவில்லாமல் கண்களுக்கு விருந்தாக, தூயதாக, மனங்கவரும் ஒளிவீசுவதாகவும், உயரப் பறக்கும் பறவைகளாலும்கூட அதன் உச்சியை அடைய முடியாததாகவும் இருந்தது. 'ஏறிச் சென்று அதன் முகட்டை அடைந்து விடலாம்' என்று எண்ணிப் பார்க்கக்கூட முடியாதென்றால், மனிதர்களால் அதைச் செயல்படுத்திக் காட்ட முடியுமா என்ன? (19)

அந்த சிகரத்தில், நூறு யோஜனை நீளமும் முப்பது யோஜனை அகலம் உடையதும், இராணவணனால் பரிபாலிக்கப்பட்டதுமான இலங்கைப் பட்டணம் அமைக்கப்பட்டிருந்தது. (20)

அந்த நகரம், வெண்மேகங்கள் போன்று ஒளிவீசுவதும் உயரமானவைகளுமான கோபுரங்களாலும், பொன்–வெள்ளியாலான மதிற்சுவராலும் பேரழகுடன் விளங்கிற்று. (21)

கோடைக்காலம் முடிந்து, மழைக்காலத்தின் ஆரம்பத்தில் (திரிவிக்கிரம அவதாரத்தில் மகாவிஷ்ணுவின் இரண்டாவது அடியாகிய) வானம், மேகக் கூட்டங்களால் அழகாகக் காட்சி தருவதைப்போல, பல உப்பரிகைகளையுடைய மாளிகைகளாலும் ஏழடுக்கு மாடி வீடுகளாலும் மிக்க அழகுடன் விளங்கிற்று. (22)

அந்தப் பட்டணத்தில், ஓர் அரண்மனை ஆயிரக்கணக்கான தூண்களால் அலங்கரிக்கப்பட்டு, கைலாச மலை கவினுறு பேருருவம் கொண்டு, வானத்தை முட்டிக் கொண்டிருப்பது போல் காணப்பட்டது. அரக்க மன்னனுடைய அந்தத் திருமாளிகை, அந்த நகருக்கே ஓர் அணிகலன் போல் விளங்கிற்று. நூற்றுக்கணக்கான அரக்கர்கள் மிகவும் கவனமாக எப்போதும் காவல் காத்து வருகிறார்கள். (23,24)

(அந்த நகரம்) மனத்தைக் கொள்ளை கொள்வதாகவும், பொன்மயமானதாகவும், பல குன்றுகளால் அழகு செய்யப்பட்டதாகவும், பலவகையான பல வண்ண தாதுக்கள் விளங்குவதாகவும், பற்பல பூங்காக்களால் பொலிவு பெற்றதாகவும், (25)

வகைவகையான பட்சிகள் ஒலித்துக் கொண்டிருந்ததாகவும், பலவகையான விலங்குகள் வசிப்பதாகவும், பலவகையான மலர்கள் நிறைந்ததாகவும், பல்வகைத் தோற்றமுடைய அரக்கர்கள் வசிப்பதாகவும், (26)

இராவணனுடைய அந்தப் பட்டணம் மிக்க வளம் பொருந்தியதாகவும், விரும்பும் எல்லாப் பொருள்களையும் தருவதாகவும் இருப்பதை, எல்லா ஐசுவரியங்களும் நிரம்பப் பெற்ற லட்சுமணனின் மூத்த சகோதரரான இராமன், வானரர்களுடன் சேர்ந்து பார்த்தார். (27)

தேவர்களுக்கு நிகரானவரும் மகாவீரருமான லட்சுமணனின் தமையன் இராமன், பெரிய பெரிய மாளிகைகள் நெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் அந்த நகரத்தைக் கண்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தார். ('வளம் மிக்க இவ்வளவு பெரிய நகரமும் மற்றும் எல்லா அரக்கர்களும், இராவணனின் தீவினையால் அழியப் போகின்றன!' என்பதால் ஆச்சரியம். செல்வச் செழிப்பு மிக்க கோசல நாட்டின் தலைநகரான அயோத்தியில், மாமன்னரின் தலைமகனாகப் பிறந்து வளர்ந்தவருக்கு, இலங்கைப் பட்டணம் ஒரு பொருட்டே அல்ல.) (28)

இவ்வாறு, தன்னுடைய மிகப்பெரிய சேனையோடுகூட பலவகையான இரத்தினங்கள் இழைக்கப் பெற்றதும், பலவித வடிவங்களில் அமைக்கப்பட்டதும், பெரிய மாளிகைகளின் வரிசையால் அழகாகக் காட்சி தருவதும், பெரிய இயந்திரக் கருவிகள் பொருத்தப்பட்ட முக்கிய கோட்டை வாயிற்கதவுகளை உடையதுமான அந்தப் பெருநகரை, இராமன் தன் கண்களால் கண்டார். (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

சத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ராவணஸுக்$_3$ரீவநியுத்$_3$த$_4$ம்

ததோ ராம: ஸுவேலாக்$_3$ரம் யோஜநத்$_3$வயமண்ட$_3$லம் ।
ஆருரோஹ ஸஸுக்$_3$ரீவோ ஹரியூத$_2$பஸம்வ்ருத: ॥ (1)

ஸ்தி$_2$த்வா முஹூர்தம் தத்ரைவ தி$_3$ஶோ த$_3$ஶ விலோகயந் ।
த்ரிகூடஶிக$_2$ரே ரம்யே நிர்மிதாம் விஶ்வகர்மணா ॥
த$_3$த$_3$ர்ஶ லங்காம் ஸுந்யஸ்தாம் ரம்யகாநநஶோபி$_4$தாம் ॥ (2)

தஸ்யாம் கோ$_3$புரஶ்ருங்க$_3$ஸ்த$_2$ம் ராக்ஷஸேந்த்$_3$ரம் து$_3$ராஸத$_3$ம் ।
ஶ்வேதசாமரபர்யந்தம் விஜயச்ச$_2$த்ரஶோபி$_4$தம் ॥
ரக்தசந்த$_3$நஸம்லிப்தம் ரத்நாப$_4$ரணபூ$_4$ஷிதம் ॥ (3)

நீலஜீமூதஸங்காஶம் ஹேமஸஞ்சா$_2$தி$_3$தாம்ப$_3$ரம் ।
ஐராவதவிஷாணாக்$_3$ரைருத்க்ருஷ்டகிணவக்ஷஸம் ॥ (4)

ஶஶலோஹிதராகே$_3$ண ஸம்வீதம் ரக்தவாஸஸா ।
ஸந்த்$_4$யாதபேந ஸம்வீதம் மேக$_4$ராஶிமிவாம்ப$_3$ரே ॥ (5)

பஶ்யதாம் வாநரேந்த்$_3$ராணாம் ராக$_4$வஸ்யாபி பஶ்யத: ।
த$_3$ர்ஶநாத்$_3$ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ஸுக்$_3$ரீவ: ஸஹஸோத்தி$_2$த: ॥ (6)

க்ரோத$_4$வேகே$_3$ந ஸம்யுக்த: ஸத்த்வேந ச ப$_3$லேந ச ।
அசலாக்$_3$ராத$_3$தோ$_2$த்தா$_2$ய புப்லுவே கோ$_3$புரஸ்த$_2$லே ॥ (7)

ஸ்தி$_2$த்வா முஹூர்தம் ஸம்ப்ரேக்ஷ்ய நிர்ப$_4$யேநாந்தராத்மநா ।
த்ருணீக்ருத்ய ச தத்$_3$ரக்ஷ: ஸோऽப்$_3$ரவீத்பருஷம் வச: ॥ (8)

லோகநாத$_2$ஸ்ய ராமஸ்ய ஸகா$_2$ தா$_3$ஸோऽஸ்மி ராக்ஷஸ ।
ந மயா மோக்ஷ்யஸேऽத்$_3$ய த்வம் பார்தி$_2$வேந்த்$_3$ரஸ்ய தேஜஸா ॥ (9)

இத்யுக்த்வா ஸஹஸோத்பத்ய புப்லுவே தஸ்ய சோபரி ।
ஆக்ருஷ்ய மகுடம் சித்ரம் பாதயாமாஸ தத்$_3$பு$_4$வி ॥ (10)

ஸமீக்ஷ்ய தூர்ணமாயாந்தமாப$_3$பா$_4$ஷே நிஶாசர: ।
ஸுக்$_3$ரீவஸ்த்வம் பரோக்ஷம் மே ஹீநக்$_3$ரீவோ ப$_4$விஷ்யஸி ॥ (11)

இத்யுக்த்வோத்தா$_2$ய தம் க்ஷிப்ரம் பா$_3$ஹுப்$_4$யாமாக்ஷிபத்தலே ।
கந்து$_3$வத்தம் ஸமுத்தா$_2$ய பா$_3$ஹுப்$_4$யாமாக்ஷிபத்$_3$த$_4$ரி: ॥ (12)

ஸர்க்கம் : நாற்பது

இராவணன்–சுக்ரீவன் தனிப்போர்

பின்னர், இரண்டு யோஜனை பரப்பளவுள்ள சுவேலமலையின் சிகரத்தின் மேல் சுக்ரீவனுடனும் வானரப்படைத் தலைவர்களுடனும் கூட இராமன் ஏறினார். (1)

அங்கே சிறிது நேரம் நின்று பத்துத் திக்குகளிலும் பார்வையைச் செலுத்தினார். திரிகூட மலையின் அழகிய முகட்டில் விசுவகர்மாவினால் எழிலுடன் அமைக்கப்பட்டதும், சிறந்த நகரமைப்புக் கொண்டதும், மனங்கவரும் சிறுவனங்கள் விளங்குவதுமான இலங்கையை கண்ணிமைக்காமல் பார்த்தார். (2)

அந்த நகரத்தின் நடுநாயகமான கோபுரத்தின் உச்சியில், எவராலும் வெற்றி கொள்ள முடியாதவனும், இரு புறங்களிலும் வெண்சாமரம் வீசப்படுபவனும், (தலைமேல்) வெற்றிச் சின்னமான வெண்கொற்றக்குடையின் நிழலில் அமர்ந்திருப்பவனும், உடலெங்கும் செஞ்சந்தனம் பூசப் பெற்றவனும், இரத்தினங்களாலான ஆபரணங்கள் அணிந்தவனும், (3)

கருத்த முகில் வண்ணங்கொண்டவனும், பொன்னிழைகளால் நெய்யப்பட்ட ஆடைகளை அணிந்தவனும், ஐராவதத்தின் தந்தங்களின் நுனியால் உண்டாக்கப்பட்ட வடுக்களோடு கூடிய மார்பு உடையவனும், (4)

முயல் இரத்தம் போல் செந்நிறமுடைய செவ்வாடையால், ஆகாயத்தில் சந்தியாகால சூரிய ஒளியால் மூடப்பட்ட மேகக் கூட்டத்தைப் போல் விளங்கும் அரக்கர் மன்னனைப் பார்த்தார். (5)

இராவணனை, (கோபுரத்தின் உச்சியில்) பார்த்தவுடனேயே, வானரத் தலைவர்களும் இராமனும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சுக்ரீவன் சடாரென்று எழுந்தான். (6)

அடக்கமுடியாத கோபாவேசத்தினாலும் உடல் வலிமை–மனவலிமையினாலும் உந்தப்பட்டு, சுவேலமலைச் சிகரத்திலிருந்து ஒரே தாவலாகத் தாவி, அந்தக் கோபுரத்தை அடைந்தான். (7)

அந்த இடத்தை அடைந்ததும், சிறிது நேரம் அச்சமில்லாத சித்தத்துடன் அவனையே பார்த்துக் கொண்டு நின்றான். அந்த அரக்கனை ஒரு புல்லாகக் கருதி, கடுமையான வார்த்தைகளைக் கூறினான்— (8)

''நான், உலகநாயகராகிய இராமபிரானுடைய தோழன்; அடிமை. (அவர், என்னைத் தோழனாக மதித்துக் கௌரவிக்கிறார். ஆனால், நான் அவருக்குத் தொண்டு செய்யும் பணியாளனாகவே, என்னைக் கருதுகிறேன்.) இப்போது நீ என் கண்ணில் பட்டுவிட்டாயல்லவா? மன்னர்களுக்கெல்லாம் மன்னரான அவருடைய எல்லையற்ற ஆற்றல் எனக்குத் துணை நிற்கிறது. நீ என்னிடமிருந்து தப்ப மாட்டாய். (உன்னைக் கொன்றுவிட்டே செல்வேன்.)'' (9)

இவ்வாறு கூறிவிட்டு, படாரென்று எழுந்து, தாவிச் சென்று அவன்மேல் விழுந்தான். அழகிய கிரீடத்தைப் பிடுங்கி தரையில் எறிந்தான். (10)

இவ்வாறு தன்மீது வெகுவிரைவாகத் தாக்குதல் நடத்திய அவனைப் பார்த்து, ''அடே! நீ இதற்கு முன் என் பார்வையில் பட்டதில்லை. அதனால், சுக்ரீவனாக (அழகிய கழுத்து உடையவனாக) இருக்கிறாய்! (இப்போது என் கண்ணில் பட்டுவிட்டாய் அல்லவா!) இனி, நீ ஹீனக்ரீவன் (கழுத்து இல்லாதவன்) ஆகப்போகிறாய்!'' (11)

இவ்வாறு கூறிவிட்டு விருட்டென்று துள்ளியெழுந்து, இரு கைகளாலும் அவனைக் கட்டிப் பிடித்துத் தரையில் வீழ்த்தினான். உடனே, வானர மன்னன் எழுந்து, கைகளால் இராவணனைப் பிடித்துக்கட்டி, ஒரு பந்தைப் போல் வீசி எறிந்தான். (12)

பரஸ்பரம் ஸ்வேத$_3$விதி$_3$க்$_3$த$_4$கா$_3$த்ரௌ
பரஸ்பரம் ஶோணிததி$_3$க்$_3$த$_4$தே$_3$ஹௌ ।
பரஸ்பரம் ஶ்லிஷ்டநிருத்$_3$த$_4$சேஷ்டௌ
பரஸ்பரம் ஶால்மலிகிம்ஶுகௌ யதா$_2$ ॥ (13)

முஷ்டிப்ரஹாரைஶ்ச தலப்ரஹாரைரரத்நிகா$_4$தைஶ்ச கராக்$_3$ரகா$_4$தை: ।
தௌ சக்ரதுர்யுத்$_3$த$_4$மஸஹ்யரூபம் மஹாப$_3$லௌ வாநரராக்ஷஸேந்த்$_3$ரௌ ॥ (14)

க்ருத்வா நியுத்$_3$த$_4$ம் ப்$_4$ருஶமுக்$_3$ரவேகௌ$_3$
காலம் சிரம் கோ$_3$புரவேதி$_3$மத்$_4$யே ।
உத்க்ஷிப்ய சாக்ஷிப்ய விநம்ய தே$_3$ஹௌ
பாத$_3$க்ரமாத்$_3$கோ$_3$புரவேதி$_3$லக்$_3$நௌ ॥
அந்யோந்யமாவித்$_4$ய விலக்$_3$நதே$_3$ஹௌ
தௌ பேதது: ஸாலநிகா$_2$தமத்$_4$யே ॥ (15)

உத்பேததுர்பூ$_4$தலமஸ்ப்ருஶந்தௌ
ஸ்தி$_2$த்வா முஹூர்தம் த்வபி$_4$நிஶ்வஸந்தௌ ।
ஆலிங்க்$_3$ய சாவல்க்$_3$ய ச பா$_3$ஹுயோக்த்ரை:
ஸம்யோஜயாமாஸதுராஹவே தௌ ॥ (16)

ஸம்ரம்ப$_4$ஶிக்ஷாப$_3$லஸம்ப்ரயுக்தௌ
ஸஞ்சேரது: ஸம்ப்ரதி யுத்$_3$த$_4$மார்கை$_3$: ।
ஶார்தூ$_3$லஸிம்ஹாவிவ ஜாதத$_3$ர்பௌ
க$_3$ஜேந்த்$_3$ரபோதாவிவ ஸம்ப்ரயுக்தௌ ॥ (17)

ஸம்ஹத்ய சாபீட்$_3$ய ச தாவுரோப்$_4$யாம்
நிபேததுர்வை யுக$_3$பத்$_3$த$_4$ரண்யாம் ।
உத்$_3$யம்ய சாந்யோந்யமதி$_4$க்ஷிபந்தௌ
ஸஞ்சக்ரமாதே ப$_3$ஹுயுத்$_3$த$_4$மார்கை$_3$: ॥
வ்யாயாமஶிக்ஷாப$_3$லஸம்ப்ரயுக்தௌ
க்லமம் ந தௌ ஜக்$_3$மதுராஶு வீரௌ ॥ (18)

பா$_3$ஹூத்தமைர்வாரணவாரணாபை$_4$ர்–
நிவாரயந்தௌ வரவாரணாபௌ$_4$ ।
சிரேண காலேந து ஸம்ப்ரயுக்தௌ
ஸஞ்சேரதுர்மண்ட$_3$லமார்க$_3$மாஶு ॥ (19)

தௌ பரஸ்பரமாஸாத்$_3$ய யத்தாவந்யோந்யஸூத$_3$நே ।
மார்ஜாராவிவ ப$_4$க்ஷார்தே$_2$ விதஸ்தா$_2$தே முஹுர்முஹு: ॥ (20)

இருவர் உடல்களிலிருந்தும் வியர்வை பெருகி ஓடியது; இருவர் உடல்களிலும் இரத்தக்களரிகள் உண்டாயின; ஒருவரோடொருவர் மோதிக் கொண்டதால், அவ்வப்போது உணர்விழந்து போனார்கள். சில விநாடிகள் செயல்படாமல் நின்றபோது, இருவரும் பூத்துக் குலுங்கும் இலவ மரமும் பூவரச மரமும் போல் காணப்பட்டார்கள். (13)

மகாபலம் பொருந்திய அரக்க மன்னனும், வானர மன்னனும் ஒருவரையொருவர் முஷ்டியினால் குத்தினார்கள்; உள்ளங்கைகளால் அறைந்தார்கள்; விரல் நுனிகளால் துளைத்தார்கள்; சுண்டுவிரலை விட்டுவிட்டு மற்ற விரல்களை மடக்கிக் குத்தினார்கள். (14)

அவர்கள், கோபுரமேடையின் நடுவில் மிகவும் ஆத்திரத்துடனும் துரிதமாகவும் நீண்டநேரம் போர் செய்தார்கள்; ஒருவரையொருவர் உயரத் தூக்கி எறிந்தார்கள்; உதறித் தள்ளினார்கள்; உடலை வளைத்து கோபுரக் கொடுங்கைகளில் காலை வைத்துத் தொங்கிக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள்; ஒருவர் உடலை ஒருவர் அழுத்திப் பிடித்தார்கள். இவ்வாறு மல்யுத்தம் செய்து மதிற்சுவருக்கும் அகழிக்கும் இடைப்பட்ட பகுதியில் விழுந்தார்கள். (15)

அவ்விருவரும் சற்றுத் தயங்கி நின்று பெருமூச்சு விட்டார்கள். பின், தரையை விட்டு உயரக் கிளம்பி, தத்தம் கைகளையே கயிறுகளாகக் கொண்டு, தனிப் போரில் உடலை இறுக்கிப் பிடித்தும், அசைத்து இழுத்தும், பிணைந்தும் உருண்டார்கள். (16)

இருவரிடமும் கோபம் கனன்று கொண்டிருந்தது. இருவரும் மல்யுத்தப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்; உடல் வலிமை பெற்றிருந்தார்கள். அதனால், செருக்குடனிருந்த அவ்விருவரும் வேங்கை–புலி போலவும், சண்டையிட்டுக் கொண்டிருக்கும் இரு யானைக்குட்டிகள் போலவும், பலவகையான போர்முறைகளையும் வெளிப்படுத்திச் சுற்றித் திரிந்தார்கள். (17)

அவ்விருவரும் மார்புகளால் மோதி அடித்துக் கொண்டு, ஒரே நேரத்தில் தரையில் விழுந்தார்கள். உடனே எழுந்து ஒருவரையொருவர் தூக்கி எறிந்து பலவிதமான போர்வழிகளைக் கடைப்பிடித்துப் போர் புரிந்தார்கள். உடற்பயிற்சி, போர்ப்பயிற்சி, உடல் வலிமை பெற்றிருந்த வீரர்களான அவ்விருவரும், இவ்வாறு சண்டையிட்டும் களைப்படையவில்லை. (18)

சிறந்த யானைகளைப் போன்றவர்களான அவ்விருவரும், யானையின் துதிக்கையை நிகர்த்த, பலம் வாய்ந்த கைகளால் ஒருவரையொருவர் எதிர்த்து நின்றார்கள். வெகுநேரம் போர்புரிந்த அவர்கள் சட்டென்று வட்டமாகச் சுழன்றார்கள். (19)

'ஒரு தின்பண்டம் முழுவதையும் தானே கவர்ந்துவிட வேண்டும்' என்ற பேராசையுடன் இரு பூனைகள் எவ்வாறு தந்திரமாகக் காத்திருக்குமோ, அவ்வாறே, அவ்விருவரும் ஒருவரையொருவர் கொல்வதற்குத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டு, ஒருவரையொருவர் அடிக்கடி நெருங்கியும் விலகியும் நின்றார்கள். (20)

மண்ட3லாநி விசித்ராணி ஸ்த2நாநி விவித4நி ச ।
கோ3மூத்ரிகாணி சித்ராணி க3தப்ரத்யாக3தாநி ச ॥ (21)

திரஶ்சீநக3தாந்யேவ தத2ா வக்ரக3தாநி ச ।
பரிமோக்ஷம் ப்ரஹாராணாம் வர்ஜநம் பரித4ாவநம் ॥ (22)

அபி4த்3ரவணமாப்லாவமாஸ்த2நம் ச ஸவிக்3ரஹம் ।
பராவ்ருத்தமபாவ்ருத்தமவத்3ருதமவப்லுதம் ॥ (23)

உபந்யஸ்தமபந்யஸ்தம் யுத்3த4மார்க3விஶாரதௌ3 ।
தௌ ஸஞ்சேதுரந்யோந்யம் வாநரேந்த்3ரஶ்ச ராவண: ॥ (24)

ஏதஸ்மிந்நந்தரே ரக்ஷோ மாயாப3லமத2த்மந: ।
ஆரப்3து4முபஸம்பேதே3 க்ஞாத்வா தம் வாநராதி4ப: ॥ (25)

உத்பபாத தத3காஶம் ஜிதகாஶீ ஜிதக்லம: ।
ராவண: ஸ்தி2த ஏவாத்ர ஹரிராஜேந வஞ்சித: ॥ (26)

அத2 ஹரிவரநாத2: ப்ராப்ய ஸங்க்3ராமகீர்திம்
நிஶிசரபதிமாஜௌ யோஜயித்வா ஶ்ரமேண ।
க3க3நமதிவிஶாலம் லங்க4யித்வார்கஸூநுர்–
ஹரிவரக3ணமத்4யே ராமபார்ஶ்வம் ஜக3ாம ॥ (27)

இதி ஸ ஸவித்ருஸூநுஸ்தத்ர தத்கர்ம க்ருத்வா
பவநக3திரநீகம் ப்ராவிஶத்ஸம்ப்ரஹ்ருஷ்ட: ।
ரகு4வரந்ருபஸூநோர்வர்த4யந் யுத்3த4ஹர்ஷம்
தரும்ருக3க3ணமுக்2யை: பூஜ்யமாநோ ஹரீந்த்3ர: ॥ (28)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 சத்வாரிம்ஶ: ஸர்க3: ॥

ஏகசத்வாரிம்ஶ: ஸர்க3:

அங்க3த3தூ3த்யம்

அத2 தஸ்மிந்நிமித்தாநி த்3ருஷ்ட்வா லக்ஷ்மணபூர்வஜ: ।
ஸுக்3ரீவம் ஸம்பரிஷ்வஜ்ய தத2ா வசநமப்3ரவீத் ॥ (1)

அஸம்மந்த்ர்ய மயா ஸார்த4ம் ததி3த3ம் ஸாஹஸம் க்ருதம் ।
ஏவம் ஸாஹஸகர்மாணி ந குர்வந்தி ஜநேஶ்வரா: ॥ (2)

ஸம்ஶயே ஸ்த2ாப்ய மாம் சேத3ம் ப3லம் ச ஸவிபீ4ஷணம் ।
கஷ்டம் க்ருதமித3ம் வீர ஸாஹஸம் ஸாஹஸப்ரிய ॥ (3)

போர்க்கலையில் நிபுணர்களான வானர மன்னனும் இராவணனும், பலவகையான போர் நுட்பங்களைக் கையாண்டார்கள். ஒருவரையொருவர் வட்டமாகச் சுற்றி வருதல்; அசையாமல் நிற்றல்; பதுங்கிப் பதுங்கி வளைந்து வளைந்து செல்லும் நடை; நெருங்குவது, உடனே பின்வாங்குவது; குறுக்குப் பாய்ச்சல்; கைகளில் அகப்பட்டு விட்டவன் போல் அடங்கியிருந்து ஏமாற்றிவிடும் பாய்ச்சல்; அடி–உதைகளுக்குத் தப்பிவிடுதல்; சற்று விலகியிருத்தல்; எதிராளியை நோக்கி விரைந்து ஓடுதல்; நெருங்கி வருதல்; ஏறித் தாவுதல்; விழிப்புடன் எதிராளியின் நுணுக்கங்களை அறிந்து கொள்ளுதல்; பகைவனை அணுகி நெருங்கிவிட்டு, ஓடி மறுபடியும் அணுகி வருதல்; ஒரே பாய்ச்சலாய் பாய்தல்; அச்சமின்றி நெருங்கி நிலையாக நிற்பது; சற்றுத் தொலைவில் விலகி நின்று குறி பார்த்தல்; ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துப் புரள்வது போன்ற பல வழிகளையும் பின்பற்றிச் சண்டையிட்டார்கள். (21–24)

இதனிடையில், (போர் செய்து சுக்ரீவனைத் தோற்கடிக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்ட) அரக்கன், தன் மாயாஜாலத்தை வெளிக்காட்ட முயன்றான். வெற்றி வீரனாகத் திகழ்ந்த வானரத்தலைவன் (அவ்வளவு நேரம் மற்போர் புரிந்தும்) களைப்படையாமலிருந்தான். இராவணன் மாயாசக்தியை உபயோகிப்பதைத் தெரிந்துகொண்டு, ஆகாயத்தை நோக்கித் தாவினான் (சுக்ரீவன்). (மாயாசக்தியின் எல்லைக்கு அப்பால் போய்விட்டான்.) அந்த இடத்திலேயே (பிரமிப்புடன்) நின்று கொண்டிருந்த இராவணன், தான் சுக்ரீவனால் ஏமாற்றப்பட்டு விட்டதை எண்ணி கலங்கிப் போனான். (25,26)

போரில் வெற்றிமாலை சூடிய வானரமன்னனும் சூரியமைந்தனுமான சுக்ரீவன், அரக்கர்வேந்தனை போரில் பாடாய்ப் படுத்திவிட்டு, மிகப் பரந்த ஆகாயவீதியைக் கடந்து, வானரப்படை புடைசூழ வீற்றிருந்த இராமன் அருகில் வந்து நின்றான். (27)

சூரியதேவனின் புதல்வனும் வாயுதேவனின் வேகங்கொண்டவனுமான சுக்ரீவன், மேற்சொன்னபடி போர்ச் செயலில் வெற்றி பெற்று, இராமபிரானுக்கு (நடக்கவிருக்கும்) போரில் நம்பிக்கையைப் பெருக்கி மிகவும் மகிழ்ச்சியுடன் வானரப்படையினூடே சென்றான். அப்போது, வானரத் தலைவர்கள் அவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்று

அங்கதன் தூது

அப்போது, சுக்ரீவன் உடலில் (இராவணனின் தாக்குதலால் ஏற்பட்ட) குறிகளை (இரத்தக் கசிவுகளையும் காயங்களையும்) கண்டு, இராமன் அவனைக் கட்டித் தழுவி, பின்வருமாறு கூறினார்— (1)

''என்னுடன்கூட ஆலோசனை செய்யாமல், இந்தத் துணிச்சலான செயலைச் செய்து விட்டாய். ஆலோசனை செய்யாமல் இப்படிப்பட்ட திடீர்ச் செயல்களில் மன்னர்கள் ஈடுபடுவதில்லை. (2)

துணிச்சலான செயல்களைச் செய்வதில் பெருவிருப்பம் உடைய வீரனே! என்னையும் இந்தப் படையினரையும் விபீஷணனையும் பெருங்கவலையில் ஆழ்த்திவிட்டு, அபாயகரமான இந்த வீரச்செயலைச் செய்திருக்கிறாய். (3)

இத$_3$ாநீம் மா க்ருத$_2$ா வீர ஏவம்வித$_4$மசிந்திதம் ।
த்வயி கிஞ்சித்ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம ॥ (4)

ப$_4$ரதேந மஹாபா$_3$ஹோ லக்ஷ்மணேந யவீயஸா ।
ஶத்ருக்$_4$நேந ச ஶத்ருக்$_4$ந ஸ்வஶரீரேண வா புந: ॥ (5)

த்வயி சாநாக$_3$தே பூர்வமிதி மே நிஶ்சிதா மதி: ।
ஜாநதஶ்சாபி தே வீர்யம் மஹேந்த்$_3$ரவருணோபம ॥ (6)

ஹத்வாஹம் ராவணம் யுத்$_3$தே$_4$ ஸபுத்ரப$_3$லவாஹநம் ।
அபி$_4$ஷிச்ய ச லங்காயாம் விபீ$_4$ஷணமத$_2$ாபி ச ॥
ப$_4$ரதே ராஜ்யமாவேஶ்ய த்யக்ஷ்யே தே$_3$ஹம் மஹாப$_3$ல ॥ (7)

தமேவம்வாதி$_3$நம் ராமம் ஸுக்$_3$ரீவ: ப்ரத்யப$_4$ாஷத ।
தவ ப$_4$ார்யாபஹர்தாரம் த்$_3$ருஷ்ட்வா ராக$_4$வ ராவணம் ॥
மர்ஷயாமி கத$_2$ம் வீர ஜாநந் பௌருஷமாத்மந: ॥ (8)

இத்யேவம்வாதி$_3$நம் வீரமபி$_4$நந்த்$_3$ய ஸ ராக$_4$வ: ।
லக்ஷ்மணம் லக்ஷ்மிஸம்பந்நமித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (9)

பரிக்$_3$ருஹ்யோத$_3$கம் ஶீதம் வநாநி ப$_2$லவந்தி ச ।
ப$_3$லௌக$_4$ம் ஸம்விப$_4$ஜ்யேமம் வ்யூஹ்ய திஷ்டே$_2$ம லக்ஷ்மண ॥ (10)

லோகக்ஷயகரம் பீ$_4$மம் ப$_4$யம் பஶ்யாம்யுபஸ்தி$_2$தம் ।
நிப$_3$ர்ஹணம் ப்ரவீராணாம்ருக்ஷவாநரரக்ஷஸாம் ॥ (11)

வாதாஶ்ச பருஷா வாந்தி கம்பதே ச வஸுந்த$_4$ரா ।
பர்வதாக்$_3$ராணி வேபந்தே பதந்தி த$_4$ரணீருஹா: ॥ (12)

மேக$_4$ா: க்ரவ்யாத$_3$ஸங்காஶா: பருஷா: பருஷஸ்வநா: ।
க்ரூரா: க்ரூரம் ப்ரவர்ஷந்தி மிஶ்ரம் ஶோணிதபி$_3$ந்து$_3$பி$_4$: ॥ (13)

ரக்தசந்த$_3$நஸங்காஶா ஸந்த்$_4$யா பரமத$_3$ாருணா ।
ஜ்வலச்ச நிபதத்யேதத$_3$ாதி$_3$த்யாத$_3$க்$_3$நிமண்ட$_3$லம் ॥ (14)

ஆதி$_3$த்யமபி$_4$வாஶ்யந்தி ஜநயந்தோ மஹத்$_3$ப$_4$யம் ।
தீ$_3$நா தீ$_3$நஸ்வரா கோ$_4$ரா அப்ரஶஸ்தா ம்ருகத்$_3$விஜா: ॥ (15)

ரஜந்யாமப்ரகாஶஶ்ச ஸந்தாபயதி சந்த்$_3$ரமா: ।
க்ருஷ்ணரக்தாம்ஶுபர்யந்தோ யத$_2$ா லோகஸ்ய ஸம்க்ஷயே ॥ (16)

ஹ்ரஸ்வோ ரூக்ஷோऽப்ரஶஸ்தஶ்ச பரிவேஷ: ஸுலோஹித: ।
ஆதி$_3$த்யமண்ட$_3$லே நீலம் லக்ஷ்ம லக்ஷ்மண த்$_3$ருஶ்யதே ॥ (17)

இனிமேல் முன்பின் ஆலோசிக்காமல் இப்படிப்பட்ட செயல்களைச் செய்யாதே. உனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருந்தால் (நீ மரணமடைந்திருந்தால்), சீதையைத் திரும்பப் பெறுவதால் எனக்கு என்ன லாபம்? தோள்வலியுடையவனே! இளவலான லட்சுமணனாலோ, பரதனாலோ ஆகவேண்டியது என்ன? எதிரிகளை மாய்ப்பவனே! சத்ருக்னனாலோ, ஏன், என் சரீரத்தை வைத்துக் கொண்டிருப்பதாலோ என்ன பயன்? (4,5)

நீ, தேவேந்திரனுக்கும் வருணனுக்கும் நிகரான ஆற்றல் படைத்தவன் என்பது எனக்குத் தெரியும்தான். ஆனால், (இராவணன் இருந்த கோபுரத்திலிருந்து வெகுநேரம் வரை) நீ வராமலிருந்தபோது, அந்த நேரத்திலேயே நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். (6)

மகாபலசாலியே! இராவணனை, உற்றார்–உறவினர்–மக்கள்–வாகனங்களோடு போரில் வீழ்த்திவிட்டு, பின்னர் இலங்கை மன்னனாக விபீஷணனுக்கு முடிசூட்டி விட்டு, (அயோத்தியில்) பரதனை அரசனாக நிலைநிறுத்திவிட்டு உடலைத் துறப்பேன் (என்று முடிவெடுத்திருந்தேன்).'' (7)

இவ்வாறு பேசிய இராமனுக்கு, சுக்ரீவன் (பின்வருமாறு) பதில் கூறினான்— ''இராகவனே! வீரரே! தங்கள் மனைவியைக் கவர்ந்து சென்ற இராவணனை என் கண்களால் கண்டும், என்னுடைய ஆண்மையை அறிந்திருந்த நான், எவ்வாறு சகித்துக் கொண்டிருப்பேன்?'' (8)

இவ்வாறு மொழிந்த சுக்ரீவனைப் பாராட்டிய பின்னர், எப்போதும் வெற்றித் திருமகளுடன் விளங்கும் லட்சுமணனைப் பார்த்து இராமன் கூறினார்— (9)

''லட்சுமணா! குளிர்ந்த தண்ணீரையுடைய நீர்நிலைகளும் கனிகள் நிறைந்த சோலைகளும் உள்ள பிரதேசத்தைக் கண்டுபிடித்து, பெரும் படையைப் பல பாகங்களாகப் பிரித்து, வியூகம் வகுத்து, நாம் போருக்குத் தயாராக இங்கே இருப்போம். (10)

உலகுக்கு நாசத்தை விளைவிக்கும், முக்கியமாக கரடிகள், வானரர்கள், அரக்கர்கள் ஆகியோருக்கு அழிவை உண்டாக்கும் மிகப்பெரிய ஆபத்து நெருங்கிவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது. (11)

பல திசைகளிலிருந்தும் வீசும் காற்றுகள் கடுமையாக வீசுகின்றன; பூமி நடுங்குகிறது; மலைச்சிகரங்கள் குலுங்குகின்றன; மரங்கள் வீழ்கின்றன. (12)

மேகங்கள், பைசாசங்களைப் போல் கண்களால் காணத்தகாதவையாக, கொடூரமாக கர்ஜிக்கின்றவையாக, கொடுஞ்செயலைச் செய்கின்றவையாக இரத்தத்துளிகள் கலந்த மழையைப் பொழிகின்றன. (13)

காணச் சகிக்காத சந்தியாகாலம் செஞ்சந்தனத்தைப் போலிருந்தது; சூரியனிடமிருந்து கொழுந்துவிட்டெரியும் இந்த நெருப்புக் கட்டி கீழே விழுகிறது. (14)

தாழ்ந்த இன விலங்குகளும் பறவைகளும் மிகவும் மனம் பதைத்து, சூரியனைப் பார்த்து பரிதாபமாக அலறுவது பேரச்சத்தை உண்டாக்குகிறது. (15)

இரவில் சந்திரன் பிரகாசமாக இருப்பதில்லை; (குளிர்ச்சிக்குப் பதிலாக) வெம்மையை வெளியிடுகிறான்; மகாபிரளய காலத்தில் உலகங்கள் அழியும்போது காணப்படுவதைப் போல, நடுவில் சிவந்தும் ஓரத்தில் கருமையான மண்டலங்களால் சூழப்பட்டும் இருக்கிறான். (16)

அதைச் சுற்றிலுமுள்ள வளையம் சுருங்கியும் அமங்களகரமாயும் மிகச்சிவந்தும் காணப்படுகிறது. லட்சுமணா! சூரிய மண்டலத்தில் கரும்புள்ளிகள் காணப்படுகின்றது. (17)

த்$_3$ருஶ்யந்தே ந யதா$_2$வச்ச நக்ஷத்ராண்யபி$_4$வர்ததே ।
யுகா$_3$ந்தமிவ லோகஸ்ய பஶ்ய லக்ஷ்மண ஶம்ஸதி ॥ (18)

காகா: ஶ்யேநாஸ்ததா$_2$ க்$_3$ருத்$_4$ரா நீசை: பரிபதந்தி ச ।
ஶிவாஶ்சாப்யஶிவா வாச: ப்ரவத$_3$ந்தி மஹாஸ்வநா: ॥ (19)

ஶைலை: ஶூலைஶ்ச க$_2$ட்$_3$கை$_3$ஶ்ச விமுக்தை: கபிராக்ஷஸை: ।
ப$_4$விஷ்யத்யாவ்ருதா பூ$_4$மிர்மாம்ஸஶோணிதகர்த$_3$மா ॥ (20)

க்ஷிப்ரமத்$_3$ய து$_3$ராத$_4$ர்ஷாம் லங்காம் ராவணபாலிதாம் ।
அபி$_4$யாம ஜவேநைவ ஸர்வதோ ஹரிபி$_4$ர்வ்ருதா: ॥ (21)

இத்யேவம் ஸம்வத$_3$ந் வீரோ லக்ஷ்மணம் லக்ஷ்மணாக்$_3$ரஜ: ।
தஸ்மாத$_3$வாதரச்சீ$_2$க்$_4$ரம் பர்வதாக்$_3$ராந்மஹாப$_3$ல: ॥ (22)

அவதீர்ய ச த$_4$ர்மாத்மா தஸ்மாச்சைலாத்ஸ ராக$_4$வ: ।
பரை: பரமது$_3$ர்த$_4$ர்ஷம் த$_3$த$_3$ர்ஶ ப$_3$லமாத்மந: ॥ (23)

ஸந்நஹ்ய து ஸஸுக்$_3$ரீவ: கபிராஜப$_3$லம் மஹத் ।
காலஜ்ஞோ ராக$_4$வ: காலே ஸம்யுகா$_3$யாப்$_4$யசோத$_3$யத் ॥ (24)

தத: காலே மஹாபா$_3$ஹுர்ப$_3$லேந மஹதா வ்ருத: ।
ப்ரஸ்தி$_2$த: புரதோ த$_4$ந்வீ லங்காமபி$_4$முக$_2$: புரீம் ॥ (25)

தம் விபீ$_4$ஷணஸுக்$_3$ரீவௌ ஹநுமாஞ்ஜாம்ப$_3$வாந்நள: ।
ருக்ஷராஜஸ்ததா$_2$ நீலோ லக்ஷ்மணஶ்சாந்வயுஸ்ததா$_3$ ॥ (26)

தத: பஶ்சாத்ஸுமஹதீ ப்ருதநர்க்ஷவநௌகஸாம் ।
ப்ரச்சா$_2$த்$_3$ய மஹதீம் பூ$_4$மிமநுயாதி ஸ்ம ராக$_4$வம் ॥ (27)

ஶைலஶ்ருங்கா$_3$ணி ஶதஶ: ப்ரவ்ருத்$_3$தா$_4$ம்ஶ்ச மஹீருஹாந் ।
ஜக்$_3$ருஹு: குஞ்ஜரப்ரக்$_2$யா வாநரா: பரவாரணா: ॥ (28)

தௌ த்வதீ$_3$ர்கே$_4$ண காலேந ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
ராவணஸ்ய புரீம் லங்காமாஸேத$_3$துரரிந்த$_3$மௌ ॥ (29)

பதாகாமாலிநீம் ரம்யாமுத்$_3$யாநவநஶோபி$_4$தாம் ।
சித்ரவப்ராம் ஸுது$_3$ஷ்ப்ராபாமுச்சை:ப்ராகாரதோரணாம் ॥ (30)

தாம் ஸுரைரபி து$_3$ர்த$_4$ர்ஷாம் ராமவாக்யப்ரசோதி$_3$தா: ।
யதா$_2$நிவேஶம் ஸம்பீட்$_3$ய ந்யவிஶந்த வநௌகஸ: ॥ (31)

லங்காயாஸ்தூத்தரத்$_3$வாரம் ஶைலஶ்ருங்க$_3$மிவோந்நதம் ।
ராம: ஸஹாநுஜோ த$_4$ந்வீ ஜுகோ$_3$ப ச ருரோத$_4$ ச ॥ (32)

நட்சத்திரங்கள் முன்னைப் போல் பிரகாசமாக இல்லை. உலகத்திற்கு யுக முடிவு வந்திருக்கிறது என்பதற்கு இவைகள் அறிகுறிகளாகத் தென்படுகின்றன. நீயும் கவனித்துப் பார். (18)

(ஆகாயத்தில் பறந்து, மரங்களில் தங்கவேண்டிய) காக்கை–பருந்து–கழுகுகள் கீழே தரையை நோக்கி வேகமாக வருகின்றன. மேலும், நரிகள் கேட்டினைக் குறிக்கும் பெருங்குரலில் சத்தமாக ஊளையிடுகின்றன. (19)

வானரர்களும் அரக்கர்களும் (ஒருவரை நோக்கி மற்றவர்) எறியும் மலை–சூலம்–கத்திகளால் நிரம்பி, இந்தப் பூமி, மாமிசம் மற்றும் இரத்தத்தினால் சேறாகப் போகிறது. (20)

வானரர்கள் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துவர, எவராலும் வெல்லப்படாததும் இராவணனால் பரிபாலிக்கப்படுவதுமான இலங்கைக்குள், இனி கால தாமதம் செய்யாமல், வெகுவேகமாக உடனே செல்வோம்.'' (21)

இலக்குவனின் அண்ணனும் வீரருமான இராமன், அவனிடம் இவ்வாறு சொல்லிவிட்டு, மகாபலம் பொருந்திய அவர், அந்த மலைச்சிகரத்திலிருந்து விரைவாகக் கீழே இறங்கினார். அறம் வளர் நாயகரான இராமன், அந்த மலையிலிருந்து இறங்கி, எவராலும் எப்பாடுபட்டும் வெல்ல முடியாத தன்னுடைய பெரும்படையை, கண்ணால் அளவெடுப்பவர் போல் பார்த்தார். (22,23)

சுக்ரீவன் கூடவே வர, இராமன் மாபெரும் வானரப் படையைப் போருக்கு ஆயத்தமாக இருக்கும்படி கூறி, நற்கோள் நிலை அறிந்த அவர், நல்ல நேரத்தில், ஆவேசமாகப் போர் செய்யும்படி தூண்டினார். (24)

பின்னர், நல்ல நேரம் வந்ததும், தோளாண்மை மிக்க அவர், மாபெரும் படை புடைசூழ, கையில் வில்லேந்தி, எல்லோருக்கும் முன்னதாக, இலங்கைப் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டார். (25)

விபீஷணன், சுக்ரீவன், அனுமான், கரடிகளின் தலைவர் ஜாம்பவான், நளன், நீலன், லட்சுமணன் முதலியோர் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (26)

இவர்களுக்கு அடுத்ததாக, கரடி–வானரர்களின் மாபெரும் படை, விசாலமான பூமியை மறைத்துக் கொண்டு, இராமனைப் பின்பற்றிச் சென்றது. (27)

முன்னேறி வரும் பகைவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடியவர்களும், யானை போன்ற உருவம் படைத்தவர்களுமான வானரர்கள், நூற்றுக்கணக்கான மலைச்சிகரங்களையும், மிகப்பெரிய மரங்களையும் பிடுங்கி, கையில் எடுத்துக் கொண்டார்கள். (28)

எதிரிகளை அடக்குபவர்களான இராம–லட்சுமண சகோதரர்கள், இலங்கைப் பட்டணத்தை விரைவிலேயே சென்றடைந்தார்கள். (29)

வரிசை வரிசையாகக் கொடிகளை உடையதும், மனங்கவர்வதும், பூஞ்சோலைகளால் அழகாக விளங்குவதும், வேலைப்பாடுகள் நிறைந்த வாயிற்கதவுகளை உடையதும், எவராலும் உள்ளே நுழைய முடியாததும், உயரமான மதில்களையும் தோரண வாயில்களையும் உடையதும், தேவர்களாலும் வெல்லற்கரியதுமான அந்த நகரத்தை, இராமனது கட்டளையை ஏற்று, தத்தமக்கு நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் இருந்தவாறு, முற்றுகையிட்டுக் கொண்டு வானரர்கள் தங்கிவிட்டார்கள். (30,31)

வில்லேந்திய இராமன், தம்பியோடுகூட, அளவில் உயரமான மலைமுகடு போன்று இருந்த, இலங்கையின் வடக்கு வாயிலை அடைத்துக் கொண்டு நின்றார். தன் சேனைகளுக்கு ஆபத்து ஏற்படாதபடி பாதுகாத்தார். (32)

லங்காமுபநிவிஷ்டஶ்ச ராமோ த$_3$ஶரத$_2$ாத்மஜ: ।
லக்ஷ்மணாநுசரோ வீர: புரீம் ராவணபாலிதாம் ॥ (33)

உத்தரத்$_3$வாரமாஸாத்$_3$ய யத்ர திஷ்ட$_2$தி ராவண: ।
நாந்யோ ராமாத்$_3$தி$_4$ தத்$_3$த்$_3$வாரம் ஸமர்த$_2$: பரிரக்ஷிதும் ॥ (34)

ராவணாதி$_4$ஷ்டி$_2$தம் பீ$_4$மம் வருணேநேவ ஸாக$_3$ரம் ।
ஸாயுதை$_4$ ராக்ஷஸைர்பீ$_4$மைரபி$_4$குப்தம் ஸமந்தத: ॥
லகூ$_4$நாம் த்ராஸஜநநம் பாதாலமிவ தா$_3$நவை: ॥ (35)

விந்யஸ்தாநி ச யோத$_4$நாம் ப$_3$ஹூநி விவித$_4$ாநி ச ।
த$_3$த$_3$ர்ஶாயுத$_4$ஜாலாநி தத்ரைவ கவசாநி ச ॥ (36)

பூர்வம் து த்$_3$வாரமாஸாத்$_3$ய நீலோ ஹரிசமூபதி: ।
அதிஷ்ட$_2$த்ஸஹ மைந்தே$_3$ந த்$_3$விவிதே$_3$ந ச வீர்யவாந் ॥ (37)

அங்க$_3$தோ$_3$ த$_3$க்ஷிணத்$_3$வாரம் ஜக்$_3$ராஹ ஸுமஹாப$_3$ல: ।
ருஷபே$_4$ண க$_3$வாக்ஷேண க$_3$ஜேந க$_3$வயேந ச ॥ (38)

ஹநுமாந் பஶ்சிமத்$_3$வாரம் ரரக்ஷ ப$_3$லவாந் கபி: ।
ப்ரமாதி$_2$ப்ரக$_4$ஸாப்$_4$யாம் ச வீரைரந்யைஶ்ச ஸங்க$_3$த: ॥ (39)

மத்$_4$யமே ச ஸ்வயம் கு$_3$ல்மே ஸுக்$_3$ரீவ: ஸமதிஷ்ட$_2$த ।
ஸஹ ஸர்வைர்ஹரிஶ்ரேஷ்டை$_2$: ஸுபர்ணஶ்வஸநோபமை: ॥ (40)

வாநராணாம் து ஷட்த்ரிம்ஶத்கோட்ய: ப்ரக$_2$யாதயூத$_2$பா: ।
நிபீட்$_3$யோபநிவிஷ்டாஶ்ச ஸுக்$_3$ரீவோ யத்ர வாநர: ॥ (41)

ஶாஸநேந து ராமஸ்ய லக்ஷ்மண: ஸவிபீ$_4$ஷண: ।
த்$_3$வாரே த்$_3$வாரே ஹரீணாம் து கோடிம் கோடிம் ந்யவேஶயத் ॥ (42)

பஶ்சிமேந து ராமஸ்ய ஸுக்$_3$ரீவ: ஸஹஜாம்ப$_3$வாந் ।
அதூ$_3$ராந்மத்$_4$யமே கு$_3$ல்மே தஸ்தௌ$_2$ ப$_3$ஹுப$_3$லாநுக$_3$: ॥ (43)

தே து வாநரஶார்தூ$_3$லா: ஶார்தூ$_3$லா இவ த$_3$ம்ஷ்ட்ரிண: ।
க்$_3$ருஹீத்வா த்$_3$ருமஶைலாக்$_3$ராந் ஹ்ருஷ்டா யுத்$_3$த$_4$ாய தஸ்தி$_2$ரே ॥ (44)

ஸர்வே விக்ருதலாங்கூ$_3$லா: ஸர்வே த$_3$ம்ஷ்ட்ராநக$_2$ாயுத$_4$ா: ।
ஸர்வே விக்ருதசித்ராங்கா$_3$: ஸர்வே ச விக்ருதாநநா: ॥ (45)

த$_3$ஶநாக$_3$ப$_3$லா: கேசித்கேசித்$_3$த$_3$ஶகு$_3$ணோத்தரா: ।
கேசிந்நாக$_3$ஸஹஸ்ரஸ்ய ப$_3$பூ$_4$வுஸ்துல்யவிக்ரமா: ॥ (46)

ஸந்தி சௌக$_4$ப$_3$லா: கேசித்கேசிச்ச$_2$தகு$_3$ணோத்தரா: ।
அப்ரமேயப$_3$லாஶ்சாந்யே தத்ராஸந் ஹரியூத$_2$பா: ॥ (47)

மாவீரரும், தசரதன் மைந்தரும், எப்போதும் ஏவலுக்குக் காத்திருக்கும் இலக்குவனோடு கூடியவருமான இராமன், இராவணனால் பரிபாலிக்கப்படும் இலங்கை நகரை நெருங்கி, இராவணன் காவல் புரியும் வடக்குக் கோட்டை வாயிலில் முனைப்புடன் நின்றார். (ஏனென்றால்,) அந்த வடக்கு வாயிலைப் போர் செய்து கைப்பற்றி, உள்ளே நுழையும் சாமர்த்தியம், இராமனைத் தவிர வேறு யாருக்கும் இல்லை! (33,34)

அஸ்திர–சஸ்திரங்கள் தரித்த, பயங்கரமான அரக்கர்களால் நாற்புறமும் பாதுகாக்கப்பட்ட அந்த மாபெரும் வாயிலைக் காப்பாற்றும் பொறுப்பை, பெருங்கடலின் மேல் அதிகாரம் செலுத்தும் வருணனைப் போல, இராவணன் தானே ஏற்றிருந்தான். தானவர்களால் பரிபாலிக்கப்படும் பாதாளம், கோழை மனத்தினருக்கு எவ்வாறு அச்சம் தருமோ, அதேபோல அந்த வடக்குக் கோபுர வாயில் மனத்திண்மை இல்லாதவர்களுக்குப் பயத்தைத் தோற்றுவித்தது. (35)

அந்த வாயிலின் உட்புறத்தில் போர்வீரர்களுக்குப் பயன்படும் வகைவகையான அஸ்திர–சஸ்திரங்களும் கவசங்களும் சேமித்து வைக்கப்பட்டிருந்ததை இராமன் பார்த்தறிந்தார். (36)

படைத்தலைவனான வீரம்மிக்க நீலன், மைந்தனுடனும் த்விவிதனுடனும் கிழக்கு வாயிலை அடைந்து, தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். (37)

வலிமை மிக்கவனான அங்கதன், ரிஷபன்–கவாக்ஷன்–கஜன்–கவயன் ஆகியவர்களோடு கூட, தெற்கு வாயிலுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டான். (38)

பலம் பொருந்திய வானரரான அனுமான், பிரமாதி–பிரகஸன் ஆகியவர்களோடும் மற்றும் பல சூரர்களோடும் சேர்ந்து மேற்கு வாயிலைக் காத்து நின்றார். (39)

வானரர்கள் தங்கியிருந்த வடக்கு–மேற்கு திசைகளின் இடைப்பட்ட (வாயுகோணப்) பகுதியில், கருடனுக்கும் வாயுவுக்கும் நிகரான வேகங்கொண்ட சுக்ரீவன், உத்தம வானரர்களோடுகூட முற்றுகையிட்டு நின்று கொண்டிருந்தான். (40)

புகழ்பெற்ற படைத்தலைவர்களான முப்பத்தாறு கோடி வானரர்கள், சுக்ரீவன் இருந்த இடத்திலிருந்து கொண்டு, அரக்கர்களைப் பயமுறுத்திக் கொண்டு தங்கியிருந்தார்கள். (41)

இராமனுடைய ஆணைப்படி, லட்சுமணனும் விபீஷணனும், ஒவ்வொரு வாயிலிலும் ஒவ்வொரு கோடி சேனைகளை நிறுத்தினார்கள். (42)

சுக்ரீவனும் ஜாம்பவானும், ஏராளமான படைவீரர்களுடன், இராமனுக்கு அருகில் மேலண்டைப் புறத்தில், படைக்கூட்டத்தின் மையப் பகுதியில் ஆயத்தமாக நின்றார்கள். (43)

வேங்கைகள் போல் கோரைப் பற்களை உடையவர்களும் வானரப்புலிகளுமான அவர்கள், எந்த விநாடியிலும் போர் செய்வதற்கு ஆயத்தமாக, கையில் மரங்களையும் மலைமுகடுகளையும் ஏந்திக்கொண்டு நின்றார்கள். (44)

வானரர்கள், அடக்கமுடியாத கோபத்தால் வாலைத் தூக்கிச் சுழற்றினார்கள்; எல்லோரும் கோரைப்பற்களையும் நகங்களையும் ஆயுதங்களாகக் கொண்டவர்கள்; எல்லோரும் அங்கங்களை விகாரமாக வைத்துக் கொண்டார்கள்; எல்லோரும் பார்க்கச் சகிக்காதபடி முகத்தை வைத்துக் கொண்டார்கள். (45)

சிலர், பத்து யானை வலிமை கொண்டவர்கள்; சிலர், அதைப் போல் பத்து மடங்கு வலிமை பெற்றவர்கள்; சிலர், ஆயிரம் யானை பலமுடையவர்களாக இருந்தார்கள். (46)

அங்கே, சிலர் பல கோடி யானையின் பலம் பெற்றிருந்தார்கள்; சிலர் அதைப் போல் நூறு மடங்கு வலிமையுடன் விளங்கினார்கள்; இதைத் தவிர, வேறு பல படைத்தலைவர்கள், ஈடு–இணையில்லாத வலிமை பெற்றவர்களாக இருந்தார்கள். (47)

அத்3பு4தஶ்ச விசித்ரஶ்ச தேஷாமாஸீத்ஸமாக3ம: ।
தத்ர வாநரஸைந்யாநாம் ஶலப4ாநாமிவோத்3யம: ॥ (48)

பரிபூர்ணமிவாகாஶம் ஸஞ்ச2ந்நேவ ச மேதி3நீ ।
லங்காமுபநிவிஷ்டைஶ்ச ஸம்பதத்3பி4ஶ்ச வாநரை: ॥ (49)

ஶதம் ஶதஸஹஸ்ராணாம் ப்ருத2க்3ருக்ஷவநௌகஸாம் ।
லங்காத்3வாராண்யுபாஜக்3முரந்யே யோத்3து4ம் ஸமந்தத: ॥ (50)

ஆவ்ருத: ஸ கி3ரி: ஸர்வைஸ்தை: ஸமந்தாத்ப்லவங்க3மை: ।
அயுதாநாம் ஸஹஸ்ரம் ச புரீம் தாமப்4யவர்தத ॥ (51)

வாநரைர்ப3லவத்3பி4ஶ்ச ப3பூ4வ த்3ருமபாணிபி4: ।
ஸம்வ்ருதா ஸர்வதோ லங்கா து3ஷ்ப்ரவேஶாபி வாயுநா ॥ (52)

ராக்ஷஸா விஸ்மயம் ஜக்3மு: ஸஹஸாபி4நிபீடி3தா: ।
வாநரைர்மேக4ஸங்காஶை: ஶக்ரதுல்யபராக்ரமை: ॥ (53)

மஹாஞ்ஶப்3தோ3ऽப4வத்தத்ர ப3லௌக4ஸ்யாபி4வர்தத: ।
ஸாக3ரஸ்யேவ பி4ந்நஸ்ய யதா2 ஸ்யாத்ஸலிலஸ்வந: ॥ (54)

தேந ஶப்3தே3ந மஹதா ஸப்ரகாரா ஸதோரணா ।
லங்கா ப்ரசலிதா ஸர்வா ஸஶைலவநகாநநா ॥ (55)

ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்3ரீவேண ச வாஹிநீ ।
ப3பூ4வ து3ர்த4ர்ஷதரா ஸர்வைரபி ஸுராஸுரை: ॥ (56)

ராக4வ: ஸந்நிவேஶ்யைவ ஸைந்யம் ஸ்வம் ரக்ஷஸாம் வதே4 ।
ஸம்மந்த்ரய மந்த்ரிபி4: ஸார்த4ம் நிஶ்சித்ய ச புந: புந: ॥
ஆநந்தர்யமபி4ப்ரேப்ஸு: க்ரமயோக3ார்த2தத்த்வவித் ॥ (57)

விபீ4ஷணஸ்யாநுமதே ராஜத4ர்மமநுஸ்மரந் ।
அங்க3த3ம் வாலிதநயம் ஸமாஹூயேத3மப்3ரவீத் ॥ (58)

க3த்வா ஸௌம்ய த3ஶக்3ரீவம் ப்3ரூஹி மத்3வசநாத்கபே ।
லங்க4யித்வா புரீம் லங்காம் ப4யம் த்யக்த்வா க3தவ்யத2: ॥ (59)

ப்4ரஷ்டஶ்ரீக க3தைஶ்வர்ய முமூர்ஷோ நஷ்டசேதந ।
ருஷீணாம் தே3வதாநாம் ச க3ந்த4ர்வாப்ஸரஸாம் ததா2 ॥ (60)

நாக3ாநாமத2 யக்ஷாணாம் ராக்ஞாம் ச ரஜநீசர ।
யச்ச பாபம் க்ருதம் மோஹாத3வலிப்தேந ராக்ஷஸ ॥ (61)

தஸ்ய பாபஸ்ய ஸம்ப்ராப்தா வ்யுஷ்டிரத்3ய து3ராஸத3ா ।
நூநமத்3ய க3தோ த3ர்ப: ஸ்வயம்பூ4வரத3ாநஜ: ॥ (62)

வெட்டுக்கிளிகள் ஒரே இடத்தில், ஒரே சமயத்தில் வந்து கூடினாற்போல், வானரக் கூட்டங்களின் அந்தச் சங்கமம், காணத் திகட்டாததாகவும் கண்கவர்வதாகவும் இருந்தது. (48)

இலங்கையில், நொடிதோறும் தாவித் தாவி வந்து சேர்ந்து கொண்டிருந்த வானரர்களால் ஆகாயம் நிரம்பி வழிந்தது; கீழே இறங்கி நின்று கொண்டிருந்த வானரக் கூட்டங்களால் தரை முழுவதும் மூடப்பட்டதாயிற்று. (49)

இதைத் தவிர, ஒரு கோடி கரடி–வானரப் படைவீரர்கள் இலங்கைப் பட்டணத்தின் கோபுரவாயிலை அடைந்து, எந்தத் திசையில் வேண்டுமானாலும் சென்று போர்புரிவதற்கு தயாராக வந்து சேர்ந்தார்கள். (50)

திரிகூட பர்வதத்தின் எல்லாப் பக்கங்களிலும் வானரர்கள் சூழ்ந்து நின்றார்கள்; கோடிக்கணக்கானோர் நகரத்தைச் சுற்றி நின்றார்கள். (51)

கைகளில் மாபெரும் மரங்களைத் தாங்கிக் கொண்டு, எல்லாப் பக்கங்களிலும் வானரர்கள் இடைவெளி இல்லாமல் அணிவகுத்து நின்றதால் (சுதந்திரமாகத் திரியும்) வாயுதேவனால்கூட, அந்தப் பட்டணத்திற்குள் செல்ல முடியாதிருந்தது! (52)

மேகம் போன்ற கருவண்ணம் கொண்டவர்களும், இந்திரனுக்கு இணையான பராக்கிரமம் உடையவர்களுமான வானரர்கள் திடீரென்று வந்து முற்றுகை இட்டதால், அரக்கர்கள் பிரமித்துப் போனார்கள். (53)

கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு, கரையைக் கடந்து பேரலைகள் செல்லும்போது ஏற்படும் பேரொலியைப் போல, அங்கு முற்றுகையிட்ட வானரப் படையினரின் அட்டகாசமான சப்தம் இருந்தது. (54)

செவிப்பறையைக் கிழிக்கும் அந்த சப்தத்தால் மதிற்சுவர்கள், கோட்டை வாயில்கள், மலைகள், காடுகள், பூஞ்சோலைகள் போன்றவைகளோடுகூடிய இலங்கை நகரம் முழுவதுமே அதிர்ந்தது. (55)

இராம–லட்சுமணர்களாலும் சுக்ரீவனாலும் பாதுகாக்கப்பட்ட அந்த (வானர)ப் படை, எல்லா தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து வந்தாலும், மிகுந்த ஆவேசத்தோடு போர்புரிந்தாலும் வெல்லற்கரியதாக இருந்தது. (56)

இவ்வாறாக, அரக்கர்களை அழிக்கும் பொருட்டு, தன்னுடைய படைகளை, அவ்வவற்றுக்கான இடங்களில் நிறுத்தி வைத்துவிட்டு, அடுத்ததாக செய்யப்பட வேண்டிய காரியம் குறித்து அமைச்சர்களுடன் நீண்ட நேரம் விவாதித்து, முறைப்படி செய்யும் காரியங்கள் எளிதாகக் கைகூடும் என்ற தத்துவத்தை உணர்ந்த இராமன், அரசநீதியை நினைவிற்கொண்டு, (இலங்கை மன்னனாக முடிசூட்டப்பட்டிருந்த) விபீஷணனின் அனுமதியைப் பெற்று, வாலியின் மைந்தனான அங்கதனை அழைத்துப் பின்வருமாறு கூறினார்— (57,58)

''என் கண்ணா! வானரனே! இலங்கை நகருக்குள் தாண்டிக் குதித்து, இராவணனைப் பார்த்து, பயமில்லாமலும் மனச்சஞ்சலம் இல்லாமலும் நான் கூறியதாக (பின்வருமாறு) கூறுவாய். (59)

'களை இழந்தவனே! சகல செல்வ போகங்களைப் பறிகொடுத்தவனே! முடிவு காலம் நெருங்கிவிட்டவனே! இரவில் திரியும் அரக்கனே! முனிவர்–தேவர்–கந்தர்வர்–அப்சரஸ்–நாகர்–யக்ஷர்–மன்னர் ஆகியவர்களுக்கு மதிமயக்கத்தினாலும் அகந்தையாலும் எந்தப் பாவம் உன்னால் செய்யப்பட்டதோ, அந்தப் பாவங்களின் பயன் உன்னை நெருங்கி வந்துவிட்டது. அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. நான்முகன் கொடுத்த வரத்தினால் உண்டான உன் செருக்கு, இப்போதே ஒழிந்து போய்விட்டது! (60–62)

யஸ்ய த$_3$ண்ட$_3$த$_4$ரஸ்தேऽஹம் த$_3$ாராஹரணகர்ஶித: ।
த$_3$ண்ட$_3$ம் த$_4$ாரயமாணஸ்து லங்காத்$_3$வாரே வ்யவஸ்தி$_2$த: ॥ (63)

பத$_3$வீம் தே$_3$வதாநாம் ச மஹர்ஷீணாம் ச ராக்ஷஸ ।
ராஜர்ஷீணாம் ச ஸர்வேஷாம் க$_3$மிஷ்யஸி மயா ஹத: ॥ (64)

ப$_3$லேந யேந வை ஸீதாம் மாயயா ராக்ஷஸாத$_4$ம ।
மாமதிக்ராமயித்வா த்வம் ஹ்ருதவாம்ஸ்தத்$_3$வித$_3$ர்ஶய ॥ (65)

அராக்ஷஸமிமம் லோகம் கர்தாஸ்மி நிஶிதை: ஶரை: ।
ந சேச்ச$_2$ரணமப்$_4$யேஷி மாமுபாத$_3$ாய மைதி$_2$லீம் ॥ (66)

த$_4$ர்மாத்மா ரக்ஷஸாம் ஶ்ரேஷ்ட$_2$: ஸம்ப்ராப்தோऽயம் விபீ$_4$ஷண: ।
லங்கைஶ்வர்யம் த்$_4$ருவம் ஸ்ரீமாநயம் ப்ராப்நோத்யகண்டகம் ॥ (67)

ந ஹி ராஜ்யமத$_4$ர்மேண பே$_4$ாக்தும் க்ஷணமபி த்வயா ।
ஶக்யம் மூர்க$_2$ஸஹாயேந பாபேநாவிதி$_3$தாத்மநா ॥ (68)

யுத்$_4$யஸ்வ வா த்$_4$ருதிம் க்ருத்வா ஶௌர்யமாலம்ப்$_3$ய ராக்ஷஸ ।
மச்ச$_2$ரைஸ்த்வம் ரணே ஶாந்தஸ்தத: பூதோ ப$_4$விஷ்யஸி ॥ (69)

யத்$_3$வா விஶஸி லோகாம்ஸ்த்ரீந் பக்ஷீ பூ$_4$த்வா மநோஜவ: ।
மம சக்ஷுஷ்பத$_2$ம் ப்ராப்ய ந ஜீவந் ப்ரதியாஸ்யஸி ॥ (70)

ப்$_3$ரவீமி த்வாம் ஹிதம் வாக்யம் க்ரியதாமௌர்த்$_4$வதை$_3$ஹிகம் ।
ஸுத்$_3$ருஷ்டா க்ரியதாம் லங்கா ஜீவிதம் தே மயி ஸ்தி$_2$தம் ॥ (71)

இத்யுக்த: ஸ து தாரேயோ ராமேணாக்லிஷ்டகர்மணா ।
ஜக$_3$ாமாகாஶமாவிஶ்ய மூர்திமாநிவ ஹவ்யவாட் ॥ (72)

ஸோऽதிபத்ய முஹூர்தேந ஸ்ரீமாந் ராவணமந்தி$_3$ரம் ।
த$_3$த$_3$ர்ஶாஸீநமவ்யக்$_3$ரம் ராவணம் ஸசிவை: ஸஹ ॥ (73)

ததஸ்தஸ்யாவிதூ$_3$ரே ஸ நிபத்ய ஹரிபுங்க$_3$வ: ।
தீ$_3$ப்தாக்$_3$நிஸத்$_3$ருஶஸ்தஸ்த$_2$ாவங்க$_3$த$_3$: கநகாங்க$_3$த$_3$: ॥ (74)

தத்$_3$ராமவசநம் ஸர்வமந்யூநாதி$_4$கமுத்தமம் ।
ஸாமாத்யம் ஶ்ராவயாமாஸ நிவேத்$_3$யாத்மாநமாத்மநா ॥ (75)

தூ$_3$தோऽஹம் கோஸலேந்த்$_3$ரஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
வாலிபுத்ரோऽங்க$_3$தே$_3$ா நாம யதி$_3$ தே ஶ்ரோத்ரமாக$_3$த: ॥ (76)

மனைவி திருடப்பட்டதால் மனம் நொந்து போயிருக்கும் நானே, உனக்குத் தண்டனை கொடுப்பதற்காக, இலங்கையின் நுழைவாயிலில் வந்து நிற்கிறேன். குற்றம் புரிபவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் மன்னன், நான். அரக்கனே! போர்க்களத்தில் நீ உறுதியாக நின்று போர்புரிந்து கொல்லப்பட்டவுடன், தேவதைகள், மாமுனிவர்கள், ராஜரிஷிகள் ஆகியோர் அடைந்த உன்னத கதியை அடைவாய். (போரில் புறமுதுகிட்டு ஓடாமல் யுத்தம் செய்து மாள்பவன், வீர சுவர்க்கம் அடைவான் என்பது அறநூல் கூற்று.) (63,64)

அரக்கப்பதரே! மாயை வழியைக் கடைப்பிடித்து, (பஞ்சவடியில்) என்னை குடிலிலிருந்து அப்பால் போகச் செய்து, எந்த வீரத்தைக் கொண்டு சீதையைத் திருடிக்கொண்டு வந்தாயோ, அந்த வீரத்தை இப்போது என் கண்முன் காட்டுவாயாக. என்னிடம் மைதிலியைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, மன்னிப்புக் கோராவிட்டால், என் கூரிய பாணங்களால், (எல்லா அரக்கர்களையும் கொன்று) இவ்வுலகையே அரக்கர் அற்றதாய்ச் செய்து விடுவேன். (65,66)

அறம் தவறாதவனும் அரக்கர்களுள் சிறந்தவனுமான விபீஷணன் என்னை அடைக்கலம் அடைந்துள்ளான். சலசலப்பு எதுவுமில்லாமல் (எதிர்ப்பவர் எவரும் இல்லாமல்) செல்வம் கொழிக்கும் இலங்கை அரசை சீரும் சிறப்புமுடைய அவன் அடையப் போகிறான். அறிவிலிகளின் துணைகொண்டு தன்னுடைய சக்தியின் எல்லையறியாத பாவியான நீ, அறநெறி பிறழ்ந்து, ஒரு விநாடி காலம்கூட ஆட்சியை அனுபவிக்க முடியாது. (67,68)

அரக்கனே! (சீதையைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, என்னைச் சரண் அடை. அல்லது,) உடல் பலத்தோடு மனோபலத்தையும் மேற்கொண்டு என்னுடன் போர் செய். (போர்க்களத்தில்,) என் பாணங்களால் நீ பேரமைதி (உயிர் இழைப்பை) அடைவாய்; அதனால், (என் சரத்தினால் மாண்டுபோனதால்) உன் பாவங்கள் அழிந்து தூயவன் ஆவாய். பறவை உரு எடுத்துக் கொண்டு, மிக வேகமாகப் பறந்து மூன்று உலகங்களிலும் புகுந்து திரிந்து மறைந்து கொண்டாலும், என் பார்வையில் பட்டுவிட்ட நீ, உயிருடன் திரும்பிப் போக மாட்டாய். (69,70)

உன் நன்மையைக் கருதி ஒரு விஷயம் சொல்கிறேன், கேள்: இறந்தபின்னால் மேலுலகில் சௌக்கியம் பெறுவதற்காக, விதிக்கப்பட்டுள்ள தான–தருமங்கள் மற்றும் இறுதிச் சடங்குகளை, நீ இப்போது உயிருடன் இருக்கும்போதே செய்துவிடு. (உன் ஈமச்சடங்குகளைச் செய்வதற்கு புதல்வனோ, உறவினர்களோ இருக்க மாட்டார்கள்!) செழிப்பான இலங்கைப் பட்டணத்தை ஆசைதீரப் பார்த்து விடு. (இனி இத்தகைய வாய்ப்பு, உனக்கு கிடைக்காது. ஏனென்றால்,) உன் உயிர் என் வசத்தில் இருக்கிறது.'' (71)

கடினமான காரியங்களையும் எளிதில் செய்துமுடிக்கும் இராமன், இவ்வாறு ஆணையிட்டதும், அக்னி பகவானே வானர வடிவம் ஏற்று வந்தாற்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் தாரையின் புதல்வனான அங்கதன், குதித்தெழுந்து ஆகாயத்தை அடைந்தான். சகல மேன்மைகளுக்கும் புகலிடமான அவன், சிறிது நேரத்திலேயே, கோட்டைச் சுவரைத் தாண்டி, இராவணன் மாளிகைகளை அடைந்து, கொஞ்சமும் மனங்கலங்காமல் அமைச்சர்களோடு வீற்றிருக்கும் இராவணனைக் கண்டான். (72,73)

தங்கத் தோள்வளை அணிந்தவனும், கொழுந்து விட்டெரியும் அனல் போன்றவனும், வானரோத்தமனுமான அங்கதன், அவனுடைய (இராவணனுடைய) அருகில் குதித்து கம்பீரமாக நின்றான். தான் யார்? என்பதைத் தானே அறிவித்துவிட்டு, அமைச்சர் குழாத்துடன் இருந்த அவனிடம், இராமபிரான் கூறிய செய்திகள் எல்லாவற்றையும் கூட்டாமலும் குறைக்காமலும் எடுத்துக் கூறினான். (74,75)

(மன்னனே!) செயற்கரிய செயல்களையும் எளிதாகச் செய்து முடிக்கும் கோசலநாட்டு மன்னன் இராமபிரானுடைய தூதன், நான்; வாலியின் குமாரன்; பெயர் அங்கதன். ஒருக்கால் என் பெயரை நீ முன்னரே கூட கேள்விப்பட்டிருக்கலாம். (76)

ஆஹ த்வாம் ராக$_4$வோ ராம: கௌஸல்யாநந்த$_3$வர்த$_4$ந: ।
நிஷ்பத்ய ப்ரதியுத்$_4$யஸ்வ ந்ருஶம்ஸ புருஷோ ப$_4$வ ॥ (77)

ஹந்தாஸ்மி த்வாம் ஸஹாமாத்யம் ஸபுத்ரக்ஞாதிப$_3$ாந்த$_4$வம் ।
நிருத்$_3$விக்$_3$நாஸ்த்ரயோ லோகா ப$_4$விஷ்யந்தி ஹதே த்வயி ॥ (78)

தே$_3$வத$_3$ாநவயக்ஷணாம் க$_3$ந்த$_4$ர்வோரக$_3$ரக்ஷஸாம் ।
ஶத்ருமத்$_3$யோத்$_3$த$_4$ரிஷ்யாமி த்வாம்ருஷீணாம் ச கண்டகம் ॥ (79)

விபீ$_4$ஷணஸ்ய சைஶ்வர்யம் ப$_4$விஷ்யதி ஹதே த்வயி ।
ந சேத்ஸத்க்ருத்ய வைதே$_3$ஹீம் ப்ரணிபத்ய ப்ரத$_3$ாஸ்யஸி ॥ (80)

இத்யேவம் பருஷம் வாக்யம் ப்$_3$ருவாணே ஹரிபுங்க$_3$வே ।
அமர்ஷவஶமாபந்நோ நிஶாசரக$_3$ணேஶ்வர: ॥ (81)

தத: ஸ ரோஷதாம்ராக்ஷ: ஶஶாஸ ஸசிவாம்ஸ்தத$_3$ா ।
க்$_3$ருஹ்யதாமேஷ து$_3$ர்மேத$_4$ா வத்$_4$யதாமிதி சாஸக்ருத் ॥ (82)

ராவணஸ்ய வச: ஶ்ருத்வா தீ$_3$ப்தாக்$_3$நிஸமதேஜஸ: ।
ஜக்$_3$ருஹுஸ்தம் ததோ கே$_4$ாராஶ்சத்வாரோ ரஜநீசரா: ॥ (83)

க்$_3$ராஹயாமாஸ தாரேய: ஸ்வயமாத்மாநமாத்மவாந் ।
ப$_3$லம் த$_3$ர்ஶயிதும் வீரோ யாதுத$_4$ாநக$_3$ணே தத$_3$ா ॥ (84)

ஸ தாந் ப$_3$ாஹுத்$_3$வயே ஸக்தாநாத$_3$ாய பதக$_3$ாநிவ ।
ப்ராஸாத$_3$ம் ஶைலஸங்காஶமுத்பபாதாங்க$_3$த$_3$ஸ்தத$_3$ா ॥ (85)

தேऽந்தரிக்ஷாத்$_3$விநிர்தூ$_4$தாஸ்தஸ்ய வேகே$_3$ந ராக்ஷஸா: ।
பூ$_4$மௌ நிபதிதா: ஸர்வே ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய பஶ்யத: ॥ (86)

தத: ப்ராஸாத$_3$ஶிக$_2$ரம் ஶைலஶ்ருங்க$_3$மிவோந்நதம் ।
த$_3$த$_3$ர்ஶ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய வாலிபுத்ர: ப்ரதாபவாந் ॥ (87)

தத்பப$_2$ால பத$_3$ாக்ராந்தம் த$_3$ஶக்$_3$ரீவஸ்ய பஶ்யத: ।
புரா ஹிமவத: ஶ்ருங்க$_3$ம் வஜ்ரிணேவ வித$_3$ாரிதம் ॥ (88)

ப$_4$ங்க்த்வா ப்ராஸாத$_3$ஶிக$_2$ரம் நாம விஶ்ராவ்ய சாத்மந: ।
விநத்$_3$ய ஸுமஹாநாத$_3$முத்பபாத விஹாயஸம் ॥ (89)

வ்யத$_2$யந் ராக்ஷஸாந் ஸர்வாந் ஹர்ஷயம்ஶ்சாபி வாநராந் ।
ஸ வாநராணாம் மத்$_4$யே து ராமபார்ஶ்வமுபாக$_3$த: ॥ (90)

ராவணஸ்து பரம் சக்ரே க்ரோத$_4$ம் ப்ராஸாத$_3$த$_4$ர்ஷணாத் ।
விநாஶம் சாத்மந: பஶ்யந்நிஶ்வாஸபரமோऽப$_4$வத் ॥ (91)

ரகு குலத் தோன்றலும் கௌஸல்யையின் ஆனந்தத்தை வளர்ப்பவருமான ஸ்ரீராமன், உன்னிடம் சொல்லச் சொல்லி அனுப்பியிருக்கிறார். 'வெறுக்கத்தக்கவனே! நீ ஓர் ஆண்மகனாக இருந்தால், (கோட்டைக்கு வெளியே வந்து) என்னுடன் போர் புரிவாய். (77)

உன்னுடைய புதல்வர்கள், பங்காளிகள், உறவினர்கள், அமைச்சர்களோடுகூட, உன்னைக் கொல்லப் போகிறேன். வேருடன் நீ அழிந்ததும், மூன்று உலகங்களும் கவலை ஒழிந்தவைகளாக ஆகப் போகின்றன. (78)

தேவர்–தானவர்–யக்ஷர்–கந்தர்வர்–நாகர்–அரக்கர்களுக்குப் பகைவன், நீ. முனிவர்களை முள்ளாகக் குத்துகிறவன், நீ. எனவே, இப்போது உன்னை அடியோடு பிடுங்கி எறியப் போகிறேன்! (79)

ஆகவே, நீ என் பாதங்களில் அடிபணிந்து, மிக்க மரியாதையுடன் சீதையை என்னிடம் திருப்பித் தராமற்போனால், என் கைகளால் நீ மரணம் அடைவாய். பின்னர், செல்வச் செழிப்புடைய இலங்கை அரசு, விபீஷணனுக்குச் சொந்தமாகிவிடும்.' (80)

இவ்வாறு, வானரோத்தமனான அங்கதன் கடுமையான சொற்களைக் கூறியவுடன், அரக்கர் கூட்டத் தலைவனான இராவணன் கோபத்தின் வசப்பட்டான். (81)

உடனே, சினத்தால் கண்கள் சிவக்க, அமைச்சர்களைப் பார்த்து, ''தீயமதியுடைய இவனைக் கட்டிப் போடுங்கள்; இவனைக் கொல்லுங்கள்!'' என்று பல தடவைகள் கூச்சலிட்டான். (82)

கொழுந்து விட்டெரியும் அக்னிக்கு நிகரான தேசு படைத்த நான்கு அரக்கர்கள், இராவணனுடைய ஆணையைக் கேட்டு, அவனைக் கட்டிப்பிடித்தார்கள். (83)

தன்னுடைய வலிமையையும் வீரத்தையும், அரக்கர்கள் தங்கள் கண்களால் காணும்படி காட்ட விரும்பிய தாரையின் மைந்தன், தானாகவே அவர்கள் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டான். (பின்பு, அவர்களைத் தன் கைகளின் பிடியில் சிக்க வைத்தான்.) (84)

உடனே, அங்கதன் தன் இரண்டு கைகளுக்குள்ளும் சிக்கித் தவிக்கும் அவர்களை, வெறும் பறவைகளைப் போல் தூக்கிக் கொண்டு, மலைபோல் உயர்ந்த மாளிகையின் மேல்மாடத்திற்குத் தாவிச் சென்றான். (85)

அவன் மேலே எம்பிக் குதித்த வேகத்தினால் தூக்கி எறியப்பட்ட அவர்கள் எல்லோரும், இராவணன் தன் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தரையில் விழுந்தார்கள். (86)

அப்போது மலைமுகட்டைப் போல் உயரமாக இருந்த, இராவணனுடைய மாளிகையின் மேல் மாடத்தை வாலி மைந்தன் (அங்கதன்) பார்த்தான். (87)

முன்னொரு காலத்தில், இந்திரனால் பிளக்கப்பட்ட இமயமலைச் சிகரம் போலவே, இராவணன் கண்முன்னாலேயே, அவனது (அங்கதனின்) கால்களால் அழுத்தப் பெற்ற அந்த மேல்மாடம் தகர்ந்து விழுந்து சிதறியது. (88)

மாளிகையின் மேல்தளத்தைத் தகர்த்துவிட்டு, தன் பெயரைக் கூறி, உரத்தகுரலில் சிங்கநாதம் செய்துகொண்டே ஆகாயவீதியில் பறந்து சென்றான். (89)

அரக்கர்கள் எல்லோருக்கும் அச்சத்தை உண்டு பண்ணிவிட்டு, வானரர்களை மகிழ்ச்சியில் மூழ்கச் செய்து கொண்டு, வானரர்கள் புடைசூழ வீற்றிருந்த இராமனின் அருகே வந்து சேர்ந்தான். (90)

தன்னுடைய மாளிகை தகர்க்கப்பட்டதால் இராவணன் அளவுகடந்த கோபத்தை அடைந்தான். அத்துடன் தன் அழிவுக் காலம் நெருங்கிவிட்டதையும் உணர்ந்து, நீண்ட பெருமூச்சுவிட்டான். (91)

ராமஸ்து ப$_4$ஹுபி$_4$ர்ஹ்ருஷ்டைர்நிநதத்$_3$பி$_4$: ப்லவங்க$_3$மை: ।
வ்ருதோ ரிபுவத$_4$காங்க்ஷீ யுத்$_3$த$_4$யைவாப்$_4$யவர்தத ॥ (92)

ஸுஷேணஸ்து மஹாவீர்யோ கி$_3$ரிகூடோபமோ ஹரி: ।
ப$_4$ஹுபி$_4$: ஸம்வ்ருதஸ்தத்ர வாநரை: காமரூபிபி$_4$: ॥ (93)

சதுர்த்$_3$வாராணி ஸர்வாணி ஸுக்$_3$ரீவவசநாத்கபி: ।
பர்யக்ராமத து$_3$ர்த$_4$ர்ஷோ நக்ஷத்ராணீவ சந்த்$_3$ரமா: ॥ (94)

தேஷாமக்ஷௌஹிணிஶதம் ஸமவேக்ஷ்ய வநௌகஸாம் ।
லங்காமுபநிவிஷ்டாநாம் ஸாக$_3$ரம் சாபி$_4$வர்ததாம் ॥ (95)

ராக்ஷஸா விஸ்மயம் ஜக்$_3$முஸ்த்ராஸம் ஜக்$_3$முஸ்தத$_2$பரே ।
அபரே ஸமரோத்$_3$த$_4$ர்ஷாத்$_3$த$_4$ர்ஷமேவ ப்ரபேதி$_3$ரே ॥ (96)

க்ருத்ஸ்நம் ஹி கபிபி$_4$ர்வ்யாப்தம் ப்ராகாரபரிக$_2$ந்தரம் ।
த$_3$த்$_3$ருஶூ ராக்ஷஸா: தீ$_3$நா: ப்ராகாரம் வாநரீக்ருதம் ॥
ஹாஹாகாரம் ப்ரகுர்வந்தி ராக்ஷஸா ப$_4$யமோஹிதா: ॥ (97)

தஸ்மிந் மஹாபீ$_4$ஷணகே ப்ரவ்ருத்தே கோலாஹலே ராக்ஷஸராஜத$_4$ந்யாம் ।
ப்ரக்$_3$ருஹ்ய ரக்ஷாம்ஸி மஹாயுத$_4$நி யுக$_3$ந்தவாதா இவ ஸம்விசேரு: ॥ (98)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்$_3$விசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

யுத்$_3$த$_4$ரம்ப$_4$:

ததஸ்தே ராக்ஷஸாஸ்தத்ர க$_3$த்வா ராவணமந்தி$_3$ரம் ।
ந்யவேத$_3$யந் புரீம் ருத்$_3$த$_4$ம் ராமேண ஸஹ வாநரை: ॥ (1)

ருத்$_3$த$_4$ம் து நக$_3$ரீம் ஶ்ருத்வா ஜாதக்ரோதே$_4$ நிஶாசர: ।
வித$_4$நம் த்$_3$விகு$_3$ணம் க்ருத்வா ப்ராஸாத$_3$ம் ஸோऽத்$_4$யரோஹத ॥ (2)

ஸ த$_3$த$_3$ர்ஶாவ்ருதாம் லங்காம் ஸஶைலவநகாநநாம் ।
அஸங்க்$_2$யேயைர்ஹரிக$_3$ணை: ஸர்வதோ யுத்$_3$த$_4$காங்க்ஷிபி$_4$: ॥ (3)

ஸ த்$_3$ருஷ்ட்வா வாநரை: ஸர்வாம் வஸுத$_4$ம் கபிலீக்ருதாம் ।
கத$_2$ம் க்ஷபயிதவ்யா: ஸ்யுரிதி சிந்தாபரோऽப$_4$வத் ॥ (4)

ஸ சிந்தயித்வா ஸுசிரம் தை$_4$ர்யமாலம்ப்$_3$ய ராவண: ।
ராக$_4$வம் ஹரியூத$_2$ம்ஶ்ச த$_3$த$_3$ர்ஶாயதலோசந: ॥ (5)

ராக$_4$வ: ஸஹ ஸைந்யேந முதி$_3$தோ நாம புப்லுவே ।
லங்காம் த$_3$த$_3$ர்ஶ கு$_3$ப்தாம் வை ஸர்வதோ ராக்ஷஸைர்வ்ருதாம் ॥ (6)

மனம் மகிழ்ந்து, பெருங்குரலில் வாழ்த்தொலி எழுப்பும் கணக்கில்லாத வானரர்களால் சூழப்பட்ட இராமன், எதிரியை ஒழித்துக்கட்டுவதை நிச்சயித்து, யுத்தம் புரிவதில் உறுதியாக நின்றார். (92)

அப்போது, மலைமுகட்டைப் போல் பேருருவம் கொண்டவனும், எவராலும் வெல்ல முடியாதவனும், மிக்க பராக்கிரமமுடைய வானரோத்தமனுமான சுஷேணன், விருப்பப்படி உருவம் எடுக்கவல்ல ஏராளமான வானரர்கள் உடன்வர, சுக்ரீவனின் ஆணைப்படி, சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரங்களையும் வரிசையாகக் கடந்து சென்று கொண்டிருப்பதைப் போல, நகரத்தின் நான்கு நுழைவாயில்களையும் வரிசையாகச் சுற்றி வந்தான். (செய்திப் பரிமாற்றம், உடனடித் தேவைகளைத் தெரிந்து கொள்வதற்காக இந்த ஏற்பாடு.) (93,94)

இலங்கையைச் சூழ்ந்து கொண்டு கடற்கரை வரை பரவிநின்ற நூற்றுக்கணக்கான அக்ஷௌஹிணி வானரப்படைகளைக் கண்டு, அரக்கர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்; சிலர் அச்சமடைந்தார்கள்; மற்றும், சிலர், போர் விருப்பத்தால் மகிழ்ச்சியை அடைந்தார்கள். (95,96)

மனமுடைந்து போன அரக்கர்கள், மதிற்சுவருக்கும் அகழிக்குமிடையேயுள்ள இடம் முழுவதும் வானரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, வானரர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மற்றொரு மதிற்சுவர் என்றே எண்ணினார்கள். பயத்தால் கதிகலங்கிய அரக்கர்கள் 'ஹா! ஹா!' என்று கூக்குரலிட்டார்கள். அரக்கர்களின் தலைநகரத்தில், இவ்வாறு சகிக்க முடியாத பேரொலி எழுந்ததும், பெரிய பெரிய ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, பிரளய கால காற்றைப் போல் எல்லா இடங்களிலும் திரியத் தொடங்கினார்கள். (97,98)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்திரண்டு

போர் துவங்கியது!

அப்போது, அங்கிருந்த அரக்கர்கள் இராவணனின் மாளிகைக்குச் சென்று, இராமன் வானரப்படையுடன் கூட இலங்கைப் பட்டணத்தை நான்கு புறங்களிலும் சூழ்ந்து நிற்பதாகத் தெரிவித்தார்கள். 'நகரம் முற்றுகை இடப்பட்டுள்ளது' என்று கேட்டவுடனேயே இராவணன், மிகுந்த கோபம் கொண்டு, நகரப் பாதுகாப்பு ஏற்பாட்டை இரு மடங்காகச் செய்துவிட்டு, தன் மாளிகையின் உப்பரிகை மீது ஏறினான். (1,2)

அவன் அங்கிருந்தவாறே குன்றுகளும் இளங்காடுகளும் சோலைகளும் நிறைந்த இலங்கை முழுவதும், எல்லாப் பக்கங்களிலும் போர் செய்யத் துடித்துக் கொண்டிருப்பவர்களும் கணக்கிட முடியாதவர்களுமான (எண்ணிலடங்கா) வானரர்களால் சூழப்பட்டிருப்பதைப் பார்த்தான். (3)

செந்நிறம் கொண்ட வானரர்கள், இடைவெளி இல்லாமல் நெருக்கமாக நின்றுகொண்டு இருந்ததால், அந்தப் பிரதேசமே செம்மை நிறம் பரவிக்கிடந்தாற்போல் இருப்பதைக் கண்டு, 'இவர்களை எவ்வாறு நாசம் செய்வது?' என்ற கவலையில் ஆழ்ந்தான். (4)

நீண்ட நேரம் சிந்தனையில் இருந்துவிட்டு, ஒருவாறாக மனத்தைத் தேற்றிக் கொண்டு, இராமனையும் வானரத் தலைவர்களையும் கண்கொட்டாமல் விழித்துப் பார்த்தான். (5)

படைகளோடுகூட மிகவும் மகிழ்ச்சியில் இருந்த இராமன், கோட்டை வாயிலை நோக்கி முன்னேறினார். இலங்கை முழுவதும் அரக்கர்களால் சூழப்பட்டு, நன்றாகப் பாதுகாக்கப்பட்டு இருப்பதைக் கண்டார். (6)

த்$_3$ருஷ்ட்வா த$_3$ாஶரதி$_2$ர்லங்காம் சித்ரத்$_4$வஜபதாகிநீம் ।
ஜக$_3$ாம ஸஹஸா ஸீதாம் தூ$_3$யமாநேந சேதஸா ॥ (7)

அத்ர ஸா ம்ருக$_3$ஶாப$_3$ாக்ஷீ மத்க்ருதே ஜநகாத்மஜா ।
பீட்$_3$யதே ஶோகஸந்தப்தா க்ருஶா ஸ்த$_2$ண்டி$_3$லஶாயிநீ ॥ (8)

பீட்$_4$யமாநாம் ஸ த$_4$ர்மாத்மா வைதே$_3$ஹீமநுசிந்தயந் ।
க்ஷிப்ரமாக்ஞாபயாமாஸ வாநராந் த்$_3$விஷதாம் வதே$_4$ ॥ (9)

ஏவமுக்தே து வசநே ராமேணாக்லிஷ்டகர்மணா ।
ஸங்க$_4$ர்ஷமாணா: ப்லவக$_3$ா: ஸிம்ஹநாதை$_3$ரநாத$_3$யந் ॥ (10)

ஶிக$_2$ரைர்விகிராமைநாம் லங்காம் முஷ்டிபி$_4$ரேவ வா ।
இதி ஸ்ம த$_3$தி$_4$ரே ஸர்வே மநாம்ஸி ஹரியூத$_2$பா: ॥ (11)

உத்$_3$யம்ய கி$_3$ரிஶ்ருங்க$_3$ாணி ஶிக$_2$ராணி மஹாந்தி ச ।
தரூம்ஶ்சோத்பாட்ய விவித$_4$ாம்ஸ்திஷ்ட$_2$ந்தி ஹரியூத$_2$பா: ॥ (12)

ப்ரேக்ஷதோ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய தாந்யநீகாநி ப$_4$ாக$_3$ஶ: ।
ராக$_4$வப்ரியகாமார்த$_2$ம் லங்காமாருருஹுஸ்தத$_3$ா ॥ (13)

தே தாம்ரவக்த்ரா ஹேமாப$_4$ா ராமார்தே$_2$ த்யக்தஜீவிதா: ।
லங்காமேவாப்$_4$யவர்தந்த ஸாலதாலஶிலாயுத$_4$ா: ॥ (14)

தே த்$_3$ருமை: பர்வதாக்$_3$ரைஶ்ச முஷ்டிபி$_4$ஶ்ச ப்லவங்க$_3$மா: ।
ப்ராகாராக்$_3$ராண்யரண்யாநி மமந்து$_2$ஸ்தோரணாநி ச ॥ (15)

பரிக$_2$ா: பூரயந்தி ஸ்ம ப்ரஸந்நஸலிலாயுதா: ।
பாம்ஸுபி$_4$: பர்வதாக்$_3$ரைஶ்ச த்ருணை: காஷ்டை$_2$ஶ்ச வாநரா: ॥ (16)

தத: ஸஹஸ்ரயூத$_2$ாஶ்ச கோடியூத$_2$ாஶ்ச வாநரா: ।
கோடீஶதயுதாஶ்சாந்யே லங்காமாருருஹுஸ்தத$_3$ா ॥ (17)

காஞ்சநாநி ப்ரம்ருத்$_2$நந்தஸ்தோரணாநி ப்லவங்க$_3$மா: ।
கைலாஸஶிக$_2$ராப$_4$ாநி கோ$_3$புராணி ப்ரமத்$_2$ய ச ॥ (18)

ஆப்லவந்த: ப்லவந்தஶ்ச க$_3$ர்ஜந்தஶ்ச ப்லவங்க$_3$மா: ।
லங்காம் தாமபி$_4$த$_4$ாவந்தி மஹாவாரணஸந்நிப$_4$ா: ॥ (19)

ஜயத்யதிப$_3$லோ ராமோ லக்ஷ்மணஶ்ச மஹாப$_3$ல: ।
ராஜா ஜயதி ஸுக்$_3$ரீவோ ராக$_4$வேணாபி$_4$பாலித: ॥ (20)

இத்யேவம் கோ$_4$ஷயந்தஶ்ச க$_3$ர்ஜந்தஶ்ச ப்லவங்க$_3$மா: ।
அப்$_4$யத$_4$ாவந்த லங்காயா: ப்ராகாரம் காமரூபிண: ॥ (21)

கண்கவர் கொடி–பதாகைகளோடு விளங்கும் இலங்கையைக் கண்டதும், தசரதகுமாரர் இராமன் பதைபதைக்கும் உள்ளத்தோடு, சீதையைப் பற்றிச் சிந்திக்கலானார். (7)

'பெண்மானின் கண்களைப் போன்ற கண்களை உடையவளும், ஜனக குமாரியுமான அவள், என் பொருட்டு சோகத்தால் தவித்து, உடல் இளைத்து, தரையில் படுத்துக் கொண்டு கஷ்டங்களை அனுபவிக்கிறாள்.' (8)

அறநெறியாளரான அவர், சீதை அனுபவிக்கும் துன்பங்களை நினைவிற்கொண்டு, எதிரிகளைக் கொல்வதற்கு, வானரப்படையை உடனே ஏவினார். (9)

கடினமான செயல்களையும் எளிதில் செய்து முடிக்கும் இராமன் ஆணையிட்டதும், வானரர்கள் அலைமோதிக் கொண்டு முன்னேறி, சிங்கநாதம் செய்து பூமியையும் ஆகாயத்தையும் எதிரொலிக்கச் செய்தார்கள். (10)

'இலங்கையிலுள்ள மாளிகைகளை, மலைமுகடுகளால் தாக்கி அழிப்போம்; அல்லது முஷ்டியினால் இடித்துத் தூள் தூளாக்குவோம்!' என்று வானரத் தலைவர்கள் தமக்குள் முடிவு செய்து கொண்டார்கள். (11)

வானரப் படைத் தலைவர்கள் மலைமுகடுகளையும் பெரிய பாறைகளையும் வேருடன் பிடுங்கப்பட்ட பற்பல மரங்களையும் கைகளில் ஏந்திக் கொண்டு, தாக்குதலுக்கு ஆயத்தமாக இருந்தார்கள். (12)

இராவணன் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அணி அணியாக வகுக்கப்பட்டிருந்த வானரப்படைகள், இராமனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஊக்கங்கொண்டவர்களாக, இலங்கையின் மதிற்சுவர்மேல் ஏறினார்கள். (13)

சிவந்த முகமும் பொன்னிற மேனியும் உடைய அவர்கள், இராமனுக்காக தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்யத் தயங்காதவர்கள். கையில் ஆச்சா, பனை மற்றும் கற்பாறைகளையே ஆயுதங்களாகக் கொண்டு, இலங்கையைக் குறிவைத்துச் சென்றார்கள். (14)

வானரர்கள், மரங்களாலும் மலைச்சிகரங்களாலும் முஷ்டிகளாலும், மதில் அரண்களின் மேற்பகுதிகளையும் காட்டரண்களையும் நுழைவாயில்களையும் சிதைத்தார்கள். (15)

நன்னீர் நிரம்பிய அகழிகளை, மண்ணைக் கொண்டும், மலைமுகடு–நாணற்புல்–மரக்கட்டைகளைக் கொட்டியும் வானரர்கள் தூர்த்துவிட்டார்கள். (16)

அப்போது, மற்றும் பல படைத்தலைவர்கள், ஆயிரம்–கோடி–நூறு கோடி வீரர்களுடன்கூட, இலங்கைக் கோட்டையின்மேல் ஏறினார்கள். (17)

வானரர்கள் (வாயிலின்) பொற்கதவுகளை உடைத்தெறிந்தார்கள்; கைலாசமலைபோல் ஒளிவீசும் கோபுரங்களைத் தகர்த்தார்கள். பெரிய யானை போல் உருவம் படைத்த வானரர்கள், கர்ஜனை செய்துகொண்டே இலங்கை நகருக்குள் தாவிக்கொண்டும் குதித்துக்கொண்டும் சுற்றித் திரிந்தார்கள். (18,19)

'மகாபலசாலியான இராமன் வெல்க! பேராற்றல் கொண்ட லட்சுமணன் வெல்க! இராமபிரானால் பாதுகாக்கப்படும் மன்னர் சுக்ரீவன் வெல்க!' என்றிவ்வாறு கூச்சலிட்டுக் கொண்டும் முழங்கிக் கொண்டும், நினைத்த உருவம் எடுக்கவல்ல வானரர்கள், இலங்கையின் மதிற்சுவரைத் தாக்கினார்கள். (20,21)

வீரபா$_3$ஹு: ஸுபா$_3$ஹுஸ்ச நளஸ்ச வநகோ$_3$சர: ।
நிபீட்$_3$யோபநிவிஷ்டாஸ்தே ப்ராகாரம் ஹரியூத$_2$பா: ॥
ஏதஸ்மிந்நந்தரே சக்ரு: ஸ்கந்த$_4$வாரநிவேஶநம் ॥ (22)

பூர்வத்$_3$வாரம் து குமுத$_3$: கோடீபி$_4$ர்த$_3$ஶபி$_4$ர்வ்ருத: ।
ஆவ்ருத்ய ப$_3$லவாம்ஸ்தஸ்தௌ$_2$ ஹரிபி$_4$ர்ஜிதகாஶிபி$_4$: ॥ (23)

ஸாஹாய்யார்த$_2$ம் து தஸ்யைவ நிவிஷ்ட: ப்ரக$_4$ஸோ ஹரி: ।
பநஸஶ்ச மஹாபா$_3$ஹுர்வாநரைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ॥ (24)

த$_3$க்ஷிணம் த்$_3$வாரமாக$_3$ம்ய வீர: ஶதவலி: கபி: ।
ஆவ்ருத்ய ப$_3$லவாம்ஸ்தஸ்தௌ$_2$ விம்ஶத்யா கோடிபி$_4$ர்வ்ருத: ॥ (25)

ஸுஷேண: பஶ்சிமத்$_3$வாரம் க$_3$தஸ்தாராபிதா ஹரி: ।
ஆவ்ருத்ய ப$_3$லவாம்ஸ்தஸ்தௌ$_2$ ஷஷ்டிகோடிபி$_4$ராவ்ருத: ॥ (26)

உத்தரம் த்$_3$வாரமாஸாத்$_3$ய ராம: ஸௌமித்ரிணா ஸஹ ।
ஆவ்ருத்ய ப$_3$லவாம்ஸ்தஸ்தௌ$_2$ ஸுக்$_3$ரீவஶ்ச ஹரீஶ்வர: ॥ (27)

கோ$_3$லாங்கூ$_3$லோ மஹாகாயோ க$_3$வாக்ஷோ பீ$_4$மத$_3$ர்ஶந: ।
வ்ருத: கோட்யா மஹாவீர்யஸ்தஸ்தௌ$_2$ ராமஸ்ய பார்ஶ்வத: ॥ (28)

ருக்ஷாணாம் பீ$_4$மவேகா$_3$நாம் தூ$_4$ம்ர: ஶத்ருநிப$_3$ர்ஹண: ।
வ்ருத: கோட்யா மஹாவீர்யஸ்தஸ்தௌ$_2$ ராமஸ்ய பார்ஶ்வத: ॥ (29)

ஸந்நத்$_3$த$_4$ஸ்து மஹாவீர்யோ க$_3$தா$_3$பாணிர்விபீ$_4$ஷண: ।
வ்ருதோ யத்தைஸ்து ஸசிவைஸ்தஸ்தௌ$_2$ தத்ர மஹாப$_3$ல: ॥ (30)

க$_3$ஜோ க$_3$வாக்ஷோ க$_3$வய: ஶரபோ$_4$ க$_3$ந்த$_4$மாத$_3$ந: ।
ஸமந்தாத்பரிதா$_4$வந்தோ ரரக்ஷுர்ஹரிவாஹிநீம் ॥ (31)

தத: கோபபரீதாத்மா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
நிர்யாணம் ஸர்வஸைந்யாநாம் த்$_3$ருதமாஜ்ஞாபயத்ததா$_3$ ॥ (32)

ஏதச்ச்$_2$ருத்வா ததோ வாக்யம் ராவணஸ்ய முகோ$_2$த்$_3$க$_3$தம் ।
ஸஹஸா பீ$_4$மநிர்கோ$_4$ஷமுத்$_3$கு$_4$ஷ்டம் ரஜநீசரை: ॥ (33)

தத: ப்ரசோதி$_3$தா பே$_4$ர்யஶ்சந்த்$_3$ரபாண்டு$_3$ரபுஷ்கரா: ।
ஹேமகோணாஹதா பீ$_4$மா ராக்ஷஸாநாம் ஸமந்தத: ॥ (34)

விநேது$_3$ஶ்ச மஹாகோ$_4$ஷா: ஶங்கா$_2$: ஶதஸஹஸ்ரஶ: ।
ராக்ஷஸாநாம் ஸுகோ$_4$ராணாம் முக$_2$மாருதபூரிதா: ॥ (35)

வீரபாகு, சுபாகு, காட்டில் திரியும் நளன் ஆகிய வானரப்படைத் தலைவர்கள் மதிற்சுவரைத் தாக்கி, அதன் மேல் இடம் பிடித்து, தம் படையின் ஒரு பிரிவினர் தங்குவதற்குப் போதிய இடைவெளி வகுத்துக் கொடுத்தார்கள். (22)

ஆற்றல் மிக்க குமுதன், எப்போதும் வெற்றிச்செல்வியுடன் விளங்கும் பத்துக்கோடி வானரர்கள் புடைசூழ, கிழக்கு வாயிலில் அணிவகுத்து நின்றான். (நாற்பத்தோராவது ஸர்க்கத்தில், கிழக்கு முதலான திசைகளில் யார் யார் நிறுத்தப்பட்டார்கள் என்று சொல்லிவிட்டபடியால், இந்த ஸர்க்கத்தில் சொல்லப்படும் கிழக்கு முதலானவைகளை முறையே வடமேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது சான்றோர் கருத்து.) (23)

அவனுக்கு (குமுதனுக்கு) உதவியாக, பிரகஸன் என்ற வானரனும், தோள்வலிமிக்க பனஸன் என்பவனும் ஏராளமான வானரர்கள்கூட நிறுத்தப்பட்டார்கள். (24)

உடல்பலமும் வீரத்தன்மையும் பொருந்திய சதபலி என்ற வானரன், இருபது கோடி வானரர்களால் சூழப்பட்டு, தெற்கு வாயிலை நெருங்கி நின்றான். (25)

தாரையின் தந்தையான, வலிமைமிக்க சுஷேணன், ஆறு கோடி வானரர்களால் சூழப்பெற்று, மேற்கு வாயிலை அடைந்து, அதை அடைத்துக் கொண்டு நின்றான். (26)

இராமனும் லட்சுமணனும், பலம் வாய்ந்த வானர மன்னன் சுக்ரீவனுடன்கூட வடக்கு வாயிலில் நின்றார்கள். (27)

கோலாங்கூலம் என்ற வானர இனத்தைச் சேர்ந்தவனும் பயங்கரமான தோற்றமுடையவனும் மாவீரனும் பேருடல் கொண்டவனுமான கவாக்ஷன், ஒரு கோடி வீரர்களுடன் இராமனின் அண்மையில் நின்றான். (28)

எதிரிகளை அழிப்பவனும் பெருவீரனுமான தூம்ரன், எல்லையற்ற ஆற்றலுடைய ஒரு கோடி கரடிகளுடன் இராமனின் இன்னொரு பக்கத்தில் நின்றான். (29)

மகாவீரனான விபீஷணன், கையில் கதையை ஏந்திக் கொண்டு, மிகுந்த கவனத்துடனிருக்கும் அமைச்சர்களுடன் கூட, யுத்தத்திற்கு ஆயத்தமாக, இராமன் இருந்த அந்த இடத்திலேயே நின்றான். (30)

கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன் ஆகியோர், எல்லாப் பக்கங்களிலும் சுற்றிச் சுற்றி வந்து வானரப் படையைப் பாதுகாத்தார்கள். (31)

அப்போது கோபத்தால் ஆட்கொள்ளப்பட்ட அரக்க மன்னன் இராவணன், தன்னுடைய எல்லாப் படைகளும் உடனே போருக்குப் புறப்படும்படிக் கட்டளையிட்டான். (32)

இராவணனிடமிருந்து இந்த உத்திரவு வெளிப்பட்டவுடனேயே, இராச்சுற்றிகளான அரக்கர்கள் உடனே பயங்கரமாக சிம்மகர்ஜனை செய்தார்கள். (33)

அப்போது, சந்திரன் போல் வெளுப்பான தோலாலான மேற்புறங்களைக் கொண்ட யுத்தபேரிகைகள் தங்கக்கோல்களால் தட்டப்பட்டு, நாற்புறமும் பயங்கரமாக ஒலித்து, அரக்கர்களைப் போருக்கு அழைத்தன. (34)

மிகவும் பயங்கரமான அரக்கர்களின் வாய்க்காற்றினால் நிரப்பப்பட்ட (ஊதப்பட்ட) நூறாயிரக்கணக்கான சங்குகள் மிகப்பெரிய ஒலியை எழுப்பின. (35)

தே ப$_3$பு$_4$: ஶுகநீலாங்கா$_3$: ஸஶங்கா$_2$ ரஜநீசரா: ।
வித்$_3$யுந்மண்ட$_3$லஸந்நத்$_3$தா$_4$: ஸப$_3$லாகா இவாம்பு$_3$தா$_3$: ॥ (36)

நிஷ்பதந்தி தத: ஸைந்யா ஹ்ருஷ்டா ராவணசோதி$_3$தா: ।
ஸமயே பூர்யமாணஸ்ய வேகா$_3$ இவ மஹோத$_3$தே$_4$: ॥ (37)

ததோ வாநரஸைந்யேந முக்தோ நாத$_3$: ஸமந்தத: ।
மலய: பூரிதோ யேந ஸஸாநுப்ரஸ்த$_2$கந்த$_3$ர: ॥ (38)

ஶங்க$_2$து$_3$ந்து$_3$பி$_4$ஸங்குஷ்ட: ஸிம்ஹநாத$_3$ஸ்தரஸ்விநாம் ।
ப்ருதி$_2$வீம் சாந்தரிக்ஷம் ச ஸாக$_3$ரம் சைவ நாத$_3$யந் ॥ (39)

க$_3$ஜாநாம் ப்$_3$ரும்ஹிதை: ஸார்த$_4$ம் ஹயாநாம் ஹேஷிதைரபி ।
ரத$_2$ாநாம் நேமிகே$_4$ாஷைஶ்ச ரக்ஷஸாம் பாத$_3$நிஸ்வநை: ॥ (40)

ஏதஸ்மிந்நந்தரே கோ$_4$ர: ஸங்க்$_3$ராம: ஸமவர்தத ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச யதா$_2$ தே$_3$வாஸுரே புரா ॥ (41)

தே க$_3$தா$_3$பி$_4$: ப்ரதீ$_3$ப்தாபி$_4$: ஶக்திஶூலபரஶ்வதை$_4$: ।
நிஜக்$_4$நுர்வாநராந் கோ$_4$ரா: கத$_2$யந்த: ஸ்வவிக்ரமாந் ॥ (42)

வாநராஶ்ச மஹாவீர்யா ராக்ஷஸாஞ்ஜக்$_4$நுராஹவே ।
ஜயத்யதிப$_3$லோ ராமோ லக்ஷ்மணஶ்ச மஹாப$_3$ல: ॥
ராஜா ஜயதி ஸுக்$_3$ரீவ இதி ஶப்$_3$தோ$_3$ மஹாநபூ$_4$த் ॥ (43)

ராஜஞ்ஜய ஜயேத்யுக்த்வா ஸ்வஸ்வநாமகதா$_2$ந்தத: ।
நிஜக்$_4$நுஸ்தாநி ரக்ஷாம்ஸி நகை$_2$ர்த$_3$ந்தைஶ்ச வேகி$_3$தா: ॥ (44)

ராக்ஷஸாஸ்த்வபரே பீ$_4$மா: ப்ராகாரஸ்தா$_2$ மஹீக$_3$தாந் ।
பி$_4$ண்டி$_3$பாலைஶ்ச க$_2$ட்$_3$கை$_3$ஶ்ச ஶூலைஶ்சைவ வ்யதா$_3$ரயந் ॥ (45)

வாநராஶ்சாபி ஸம்க்ருத்$_3$தா$_4$: ப்ராகாரஸ்தா$_2$ந் மஹீக$_3$தா: ।
ராக்ஷஸாந் பாதயாமாஸு: ஸமாப்லுத்ய ப்லவங்க$_3$மா: ॥ (46)

ஸ ஸம்ப்ரஹாரஸ்துமுலோ மாம்ஸஶோணிதகர்த$_3$ம: ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச ஸம்ப$_3$பூ$_4$வாத்$_3$பு$_4$தோபம: ॥ (47)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$விசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்ரிசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

த்$_3$வந்த்$_3$வயுத்$_3$த$_4$ம்

யுத்$_4$யதாம் து ததஸ்தேஷாம் வாநராணாம் மஹாத்மநாம் ।
ரக்ஷஸாம் ஸம்ப$_3$பூ$_4$வாத$_2$ ப$_3$லகோப: ஸுதா$_3$ருண: ॥ (1)

அரக்கர்கள் கருத்த உடை தரித்த மேனியுடையவர்கள். அவர்கள் கையில் வெண்மையான சங்கு. இதைப் பார்த்தபோது, கார்மேகங்கள் மின்னற்கொடிகளோடும் கொக்குகளோடும் இருப்பதைப் போல் தோன்றியது. (36)

அப்போது, இராவணனால் கட்டளையிடப்பட்ட அரக்கர்கள், முழுநிலவின் உதயகாலத்தில் கடல்நீர் பொங்கிப் பேரலைகள் எழுவதைப் போல், மிக்க மகிழ்ச்சியுடன் போருக்குப் புறப்பட்டார்கள். (37)

பின்னர், வானரப்படையினர் எல்லாப் பக்கங்களிலிருந்தும் சிம்மநாதம் செய்தார்கள். அதனால், மலயபர்வதத்தின் பெரும் முகடுகள், குகைகள் எல்லாம் பேரொலியால் நிறைந்ததாயின. (38)

சங்குகள், துந்துபிகள் ஆகியவற்றின் பேரொலி, வேகமாக செயல்படும் (அரக்கர்களின்) சிம்மகர்ஜனை, யானைகளின் பிளிறல், குதிரைகளின் கனைப்பு, தேர்ச்சக்கரங்களின் ஒலி, அரக்கர்களின் அழுத்தமான காலடிச் சத்தங்கள் ஆகியன, விண்ணையும் மண்ணையும் பெருங்கடலையும் எதிரொலிக்கச் செய்தன. (39,40)

இதனிடையில், முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே நடந்ததைப் போல், வானரர்–அரக்கர்களிடையே பயங்கரமான போர் மூண்டது. (41)

கொடூரமான அரக்கர்கள், தங்கள் வீரத்தைப் பறைசாற்றிக் கொண்டே, ஒளிவீசும் கதாயுதங்களாலும் வேல்–சூலம்–கோடாலிகளாலும் வானரர்களை நையப் புடைத்தார்கள். (42)

போரில், மகாவீரர்களான வானரர்கள் அரக்கர்களைக் கொன்றார்கள். 'பேராற்றல் படைத்த இராமன் வெல்க! மிக்க வலிமை கொண்ட லட்சுமணன் வெல்க! சுக்ரீவ மன்னன் வெல்க!' – என்ற பேரொலி எழும்பியது. (43)

'அரசரே! வெல்க! வாழ்க!' என்று வாழ்த்தி, தம் பெயரையும் கடைசியில் சொல்லி, எதிர்த்து வந்த அரக்கர்களை நகங்களாலும் பற்களாலும் ஆத்திரத்துடன் பிடுங்கிப் புடைத்தார்கள். (44)

மதிற்சுவரின் மேலிருந்த கொடிய அரக்கர்கள், தரையில் நின்ற வானரர்களை, பிண்டிபாலம் என்ற ஆயுதத்தாலும் பட்டாக்கத்திகளாலும் சூலங்களாலும் வெட்டித் தள்ளினார்கள். (45)

தரையில் நின்று கொண்டிருந்த வானரர்கள் மிகவும் கோபம் கொண்டு, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, மதிற்சுவர்களிலிருந்த அரக்கர்களைக் கீழே தள்ளினார்கள். (46)

இவ்வாறு, அரக்கர்களுக்கும் வானரர்களுக்குமிடையே உவமை கூற முடியாத பெரும் போர் நடந்தது. அதனால், அந்த இடம் முழுவதும் இரத்தம்–மாமிசங்களின் சேறு–சகதியாக ஆகிவிட்டது. (47)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து மூன்று

ஒருவரோடொருவர் போர்

போர் செய்து கொண்டிருந்த, பேராற்றல் படைத்த வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் யுத்த ஆவேசம் உண்டாயிற்று. (1)

தே ஹயை: காஞ்சநாபீடை3ர்த்4வஜைஸ்சாக்3நிஸிகே2ாபமை: ।
ரதை2ஸ்சாதி3த்யஸங்காஸை: கவசைஸ்ச மநோரமை: ॥ (2)

நிர்யயூ ராக்ஷஸவ்யாக்4ரா நாத3யந்தோ தி3ஸோ த3ஸ ।
ராக்ஷஸா பீ4மகர்மாணோ ராவணஸ்ய ஜயைஷிண: ॥ (3)

வாநராணாமபி சமூர்ப்3ருஹதீ ஜயமிச்ச2தாம் ।
அப்4யத4ாவத தாம் ஸேநாம் ரக்ஷஸாம் காமரூபிணாம் ॥ (4)

ஏதஸ்மிந்நந்தரே தேஷாமந்யோந்யமபி4த4ாவதாம் ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச த்3வந்த்3வயுத்3த4மவர்தத ॥ (5)

அங்க3தே3நேந்த்3ரஜித்ஸார்த4ம் வாலிபுத்ரேண ராக்ஷஸ: ।
அயுத்4யத மஹாதேஜாஸ்த்ரயம்ப3கேண யத2ாந்த4க: ॥ (6)

ப்ரஜங்கே4ந ச ஸம்பாதிர்நித்யம் து3ர்மர்ஷணோ ரணே ।
ஜம்பு3மாலிநமாரப்3தே4ா ஹநுமாநபி வாநர: ॥ (7)

ஸங்க3த: ஸுமஹாக்ரோதே4ா ராக்ஷஸோ ராவணாநுஜ: ।
ஸமரே தீக்ஷ்ணவேகே3ந மித்ரக்4நேந விபீ4ஷண: ॥ (8)

தபநேந க3ஜ: ஸார்த4ம் ராக்ஷஸேந மஹாப3ல: ।
நிகும்பே4ந மஹாதேஜா நீலோऽபி ஸமயுத்4யத ॥ (9)

வாநரேந்த்3ரஸ்து ஸுக்3ரீவ: ப்ரக4ஸேந ஸமாக3த: ।
ஸங்க3த: ஸமரே ஸ்ரீமாந் விரூபாக்ஷேண லக்ஷ்மண: ॥ (10)

அக்3நிகேதுஸ்ச து3ர்த4ர்ஷோ ரஸ்மிகேதுஸ்ச ராக்ஷஸ: ।
ஸுப்தக்4நோ யக்ஞகோபஸ்ச ராமேண ஸஹ ஸங்க3தா: ॥ (11)

வஜ்ரமுஷ்டிஸ்து மைந்தே3ந த்3விவிதே3நாஸநிப்ரப4: ।
ராஜஸாப்4யாம் ஸுகே4ராப்4யாம் கபிமுக்2யௌ ஸமாக3தௌ ॥ (12)

வீர: ப்ரதபநோ கே4ாரோ ராக்ஷஸோ ரணது3ர்த4ர: ।
ஸமரே தீக்ஷ்ணவேகே3ந நளேந ஸமயுத்4யத ॥ (13)

த4ர்மஸ்ய புத்ரோ ப3லவாந் ஸுஷேண இதி விஸ்ருத: ।
ஸ வித்3யுந்மாலிநா ஸார்த4மயுத்4யத மஹாகபி: ॥ (14)

வாநராஸ்சாபரே பீ4மா ராக்ஷஸைரபரை: ஸஹ ।
த்3வந்த்3வம் ஸமீயுர்ப3ஹுதா4 யுத்3த4ாய ப3ஹுபி4: ஸஹ ॥ (15)

தத்ராஸீத்ஸுமஹத்3யுத்3த4ம் துமுலம் ரோமஹர்ஷணம் ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச வீராணாம் ஜயமிச்ச2தாம் ॥ (16)

இராவணனுக்கு வெற்றியை விரும்பியவர்களும் பயங்கரமாக செயலாற்றுபவர்களுமான அரக்கர்கள், பொற்தவிசு அமைக்கப்பட்ட குதிரைகளின் மீதும், கொழுந்துவிட்டெரியும் நெருப்புப் போல் ஒளிரும் கொடிகளுடனும், சூரியனுக்கொப்பான தேர்களுடனும், அழகிய கவசங்களுடனும், பத்துத் திசைகளையும் எதிரொலிக்கச் செய்துகொண்டு வெளியே புறப்பட்டார்கள். (2,3)

வெற்றியை விரும்பிய வானரப் பெரும்படையும், இஷ்டப்படி உருவம் எடுக்கவல்ல அந்த அரக்கர் படையை எதிர்த்துத் தாக்கியது. (4)

இது இவ்வாறிருக்கையில், அவர்கள் எதிரெதிரே நின்று தாக்கிக் கொண்டிருக்கும்போது, அரக்கர்களுக்கும் வானரர்களுக்குமிடையே துவந்துவயுத்தம் (ஒரு படையோடு எதிரிப் படை என்றில்லாமல் ஒரு தனி வீரரோடு எதிரியான தனி வீரர் போர் செய்வது) தொடங்கியது. (5)

முக்கண்ணரான பரமேசுவரனுடன் (காசியபருக்கும் திதிக்கும் பிறந்த) அந்தகாசுரன் சண்டையிட்டதைப் போல, வாலி மைந்தனான அங்கதனுடன் பேராற்றல் கொண்ட அரக்கன் இந்திரஜித் போரிட்டான். (6)

போரில் வெற்றி கொள்ள முடியாதவனான வீரன் சம்பாதியுடன் (விபீஷணனின் அமைச்சனுடன்) பிரஜங்கன் என்ற அரக்கனும், அனுமானுடன் ஜம்புமாலி என்பவனும் போரிட்டார்கள். (7)

இராவணனுடைய தம்பி அரக்கனாகிய விபீஷணன், அளவுகடந்த கோபம் கொண்டு மிகவும் ஆக்ரோஷத்தோடு மித்ரக்னன் என்ற பகை அரக்கனுடன் சண்டை செய்தான். (8)

மிக பலசாலியான கஜன், தபனன் என்ற அரக்கனோடும், பேராற்றலுடைய நீலன், நிகும்பன் என்ற அரக்கனோடும் போர் புரிந்தார்கள். (9)

வானர மன்னன் சுக்ரீவன், பிரகஸனோடும், வெற்றிப் பொலிவுடன் விளங்கும் இலக்குவன், விருபாக்ஷனோடும் சண்டை செய்தார்கள். (10)

போரில் வெல்லப்பட முடியாத அரக்கர்களான அக்னிகேது, ரச்மிகேது, சுப்தக்நன், யக்ஞகோபன் ஆகியோர் இராமபிரானுடன் போர் செய்தார்கள். (11)

மைந்தன், த்விவிதன் என்ற வானரத் தலைவர்கள், முறையே, வஜ்ரமுஷ்டி, அசனிப்ரபன் என்ற பயங்கரமான அரக்கர்களோடு பொருதினார்கள். (12)

போரில் வெற்றி கொள்ள முடியாத அளவுக்குப் பயங்கரமான அரக்கன் பிரதபனன், மிகவும் ஆவேசத்துடனிருந்த நளனுடன் போரில் எதிர்த்து நின்றான். (13)

தருமராஜனுடைய புதல்வனும் பலசாலியுமான சுஷேணன் என்ற வானரோத்தமன், வித்யுன்மாலியுடன் போர் புரிந்தான். (14)

இவ்வாறு, பயங்கரமான மற்ற வானரர்கள் அநேக அரக்கர்களுடன் போர் செய்துவிட்டு, மற்ற அரக்கர்களுடன் 'ஒருவருக்கு ஒருவர்' என்ற முறையில் சமர் செய்யத் தொடங்கினார்கள். (15)

அங்கு வானரர்களும் அரக்கர்களும் தத்தம் வெற்றியை விரும்பினார்கள். அவர்களிடையே மிகவும் கோரமான, காண்போரைத் திகிலடையச் செய்யும் போர் நிகழ்ந்தது. (16)

ஹரிராக்ஷஸதே3ஹேப்4ய: ப்ரபூ4தா: கேஶஶாத்3வலா: ।
ஶரீரஸங்கா4டவஹா: ப்ரஸுஸ்ரு: ஶோணிதாபகா3: ॥ (17)

ஆஜகா4நேந்த்3ரஜித்க்ருத்3தோ4 வஜ்ரேணேவ ஶதக்ரது: ।
அங்க3த3ம் க3த3யா வீரம் ஶத்ருஸைந்யவிதா3ரணம் ॥ (18)

தஸ்ய காஞ்சநசித்ராங்க3ம் ரத2ம் ஸாஶ்வம் ஸஸாரதி2ம் ।
ஜகா4ந ஸமரே ஶ்ரீமாநங்க3தோ3 வேக3வாந் கபி: ॥ (19)

ஸம்பாதிஸ்து த்ரிபி4ர்பா3ணை: ப்ரஜங்கே4ந ஸமாஹத: ।
நிஜகா4நாஶ்வகர்ணேந ப்ரஜங்கம் ரணமூர்த4நி ॥ (20)

ஜம்பு3மாலீ ரத2ஸ்த2ஸ்து ரத2ஶக்த்யா மஹாப3ல: ।
பி3பே4த3 ஸமரே க்ருத்3தோ4 ஹநூமந்தம் ஸ்தநாந்தரே ॥ (21)

தஸ்ய தம் ரத2மாஸ்தா2ய ஹநூமாந் மாருதாத்மஜ: ।
ப்ரமமாத2 தலேநாஶு ஸஹ தேநைவ ரக்ஷஸா ॥ (22)

நத3ந் ப்ரதபநோ கோ4ரோ நளம் ஸோऽப்யந்வதா4வத ।
நள: ப்ரதபநஸ்யாஶு பாதயாமாஸ சக்ஷுஷீ ॥ (23)

பி4ந்நகா3த்ர: ஶரைஸ்தீக்ஷ்ணை: க்ஷிப்ரஹஸ்தேந ரக்ஷஸா ।
ப்ரஜகா4நாத்3ரி ஶ்ருங்கே3ண தபநம் முஷ்டிநா க3ஜ: ॥ (24)

பி4ந்நகா3த்ரை: ஶரைஸ்தீக்ஷ்ணைர்மித்ரக்4நேந விபீ4ஷண: ।
மித்ரக்4நம் க3த3யா க்ருத்3தோ4 நிஜகா4ந விபீ4ஷண: ॥ (25)

க்3ரஸந்தமிவ ஸைந்யாநி ப்ரக4ஸம் வாநராதி4ப: ।
ஸுக்3ரீவ: ஸப்தபர்ணேந நிர்பி3பே4த3 ஜகா4ந ச ॥ (26)

ப்ரபீட்3ய ஶரவர்ஷேண ராக்ஷஸம் பீ4மத3ர்ஶநம் ।
நிஜகா4ந விரூபாக்ஷம் ஶரேணைகேந லக்ஷ்மண: ॥ (27)

அக்3நிகேதுஶ்ச து3ர்த4ர்ஷோ ரஶ்மிகேதுஶ்ச ராக்ஷஸ: ।
ஸுப்தக்4நோ யஜ்ஞகோபஶ்ச ராமம் நிர்பி3பி4து3: ஶரை: ॥ (28)

தேஷாம் சதுர்ணாம் ராமஸ்து ஶிராம்ஸி நிஶிதை: ஶரை: ।
க்ருத்3த4ஶ்சதுர்பி4ஶ்சிச்சே2த3 கோ4ரைரக்3நிஶிகோ2பமை: ॥ (29)

வஜ்ரமுஷ்டிஸ்து மைந்தே3ந முஷ்டிநா நிஹதோ ரணே ।
பபாத ஸரத2: ஸாஶ்வ: புராட்ட இவ பூ4தலே ॥ (30)

நிகும்ப4ஸ்து ரணே நீலம் நீலாஞ்ஜநசயப்ரப4ம் ।
நிர்பி3பே4த3 ஶரைஸ்தீக்ஷ்ணை: கரைர்மேக4மிவாம்ஶுமாந் ॥ (31)

கொல்லப்பட்ட வானரர்–அரக்கர்கள் உடலிலிருந்து பெருகிய இரத்தம் பேராறாக ஓடியது; அவர்களுடைய தலைக்கேசங்களே நதியில் மிதக்கும் புற்கற்றைகள்; சடலங்களே இழுத்துச் செல்லப்படும் மரக்கட்டைகள். (17)

இந்திரன் வஜ்ராயுதத்தால் தாக்குவதைப் போல, பகைப் படையை சிதறடித்துக் கொண்டிருந்த வீரன் அங்கதனைக் கதையால் தாக்கினான், இந்திரஜித். (18)

வெற்றித் திரு பொருந்திய, பேராற்றல் கொண்ட வானரன் அங்கதன், பொன் வேலைப்பாடுடைய சக்கரங்களைக் கொண்ட அவனுடைய (இந்திரஜித்தினுடைய) தேரையும், குதிரைகளையும் தேரோட்டியையும் ஒழித்துக் கட்டினான். (19)

அரக்கன் பிரஜங்கன், மூன்று பாணங்களால் சம்பாதியைக் காயப்படுத்தினான். உடனே, (சம்பாதி) அசுவகர்ணம் என்ற மரத்தைக் கொண்டு தாக்கி, பிரஜங்கனைக் கொன்றொழித்தான். (20)

தேரிலிருந்து போர் செய்துகொண்டிருந்த பேராற்றல் படைத்த ஜம்புமாலி மிகவும் கோபம் கொண்டு, தேரில் எப்போதும் வைக்கப்பட்டிருக்கும் சக்தி ஆயுதத்தால், அனுமானின் மார்புப் பகுதியைத் தகர்த்தான். (21)

வாயுமைந்தனான அனுமான், அவனுடைய (ஜம்புமாலியினுடைய) தேரில் ஏறிக் குதித்து, அந்த அரக்கனையும் தேரையும் விரைவில் தூள் தூளாக்கினார். (22)

பயங்கரமான அரக்கன் பிரதபனன், இரைச்சலிட்டுக் கொண்டே நளனை நோக்கி ஓடினான். நளன், வெகு எளிதாக பிரதபனனின் இரு கண்களையும் பிடுங்கி எறிந்தான். (23)

கஜன் (என்ற வானரத் தலைவன்), தபனன் என்ற அரக்கனின் கூர்மையான அம்புகளால் உடல் துளைக்கப்பட்டு, (அதனால் கோபம் கொண்டு) மலைச்சிகரங்களைப் பெயர்த்தெடுத்து, கையினால் வீசிக் கொன்றான். (24)

அரக்கன் மித்ரக்னனின் கூரிய பாணங்களால் தாக்கப்பட்ட விபீஷணன், கோபம் கொண்டு மித்ரக்னனைக் கதாயுதத்தால் கொன்றான். (25)

வானரப் படையினரின் உயிரைக் குடித்துக் கொண்டிருக்கும் பிரகஸனை (என்ற அரக்கனை) வானரத் தலைவனான சுக்ரீவன் ஏழிலைப்பாலை மரத்தால் தாக்கிக் கொன்றான். (26)

பயங்கரத் தோற்றமுடைய விருபாக்ஷன் என்ற அரக்கனை, தொடர்ந்து பாணப் பொழிவினால் தளர்ச்சியுறச் செய்து, பின் ஒரே பாணத்தால் இலக்குவன் அவனைக் கொன்றான். (27)

எதிர்கொள்ள முடியாதவனான அக்னிகேது, ரச்மிகேது என்ற அரக்கன் மற்றும் சுப்தக்னன், யக்ஞகோபன் ஆகிய அரக்கர்கள், இராமனை அம்புகளால் தாக்கினார்கள். (28)

இராமன் மிகவும் சினங்கொண்டு, கொழுந்துவிட்டெரியும் அக்னியைப் போன்றவைகளும் பயங்கரமானவைகளும் கூரியவைகளுமான நான்கு பாணங்களால் அந்த நால்வர்களுடைய தலைகளையும் வெட்டித் தள்ளினார். (29)

போர்க்களத்தில், மைந்தன் (என்ற வானரத் தலைவனின்) கைமுஷ்டியினால் தாக்கப்பட்ட வஜ்ரமுஷ்டி (என்ற அரக்கனின்) தேர்–குதிரைகள் அழிக்கப்பட்டு, மதிற்சுவரின்மீது கட்டப்பட்ட கோபுரம் அடியோடு சாய்ந்து வீழ்வதைப் போல் தரையில் சாய்ந்தான். (30)

கருமையான மை போன்ற வண்ணங்கொண்ட நிகும்பனை (அரக்கனை), சூரியன் சுடர்விடும் தன் வெம்மைக் கதிர்களால் மேகத்தை ஊடுருவிச் செல்வதைப் போல, தன்னுடைய கூர்மையான பாணங்களால் நீலன் பிளந்து வீழ்த்தினான். (31)

புந: ஶரஶதேநாத2 க்ஷிப்ரஹஸ்தோ நிஶாசர: ।
பி3பே4த3 ஸமரே நீலம் நிகும்ப4: ப்ரஜஹாஸ ச ॥ (32)

தஸ்யைவ ரத2சக்ரேண நீலோ விஷ்ணுரிவாஹவே ।
ஶிரஶ்சிச்சே2த3 ஸமரே நிகும்ப4ஸ்ய ச ஸாரதே2: ॥ (33)

வஜ்ராஶநிஸமஸ்பர்ஶோ த்3விவிதே3ாऽப்யஶநிப்ரப4ம் ।
ஜக4ந கி3ரிஶ்ருங்கே3ண மிஷதாம் ஸர்வரக்ஷஸாம் ॥ (34)

த்3விவித3ம் வாநரேந்த்3ரம் து நக3யோதி4நமாஹவே ।
ஶரைரஶநிஸங்காஶை: ஸ விவ்யாத4ாஶநிப்ரப4: ॥ (35)

ஸ ஶரைரதிவித்3த4ாங்கே3ா த்3விவித3: க்ரோத4மூர்சி2த: ।
ஸாலேந ஸரத2ம் ஸாஶ்வம் நிஜக4ாநாஶநிப்ரப4ம் ॥ (36)

வித்3யுந்மாலீ ரத2ஸ்த2ஸ்து ஶரை: காஞ்சநபூ4ஷணை: ।
ஸுஷேணம் தாட3யாமாஸ நநாத3 ச முஹுர்முஹு: ॥ (37)

தம் ரத2ஸ்த2மதே2ா த்3ருஷ்ட்வா ஸுஷேணோ வாநரோத்தம: ।
கி3ரிஶ்ருங்கே3ண மஹதா ரத2மாஶு ந்யபாதயத் ॥ (38)

லாக4வேந து ஸம்யுக்தோ வித்3யுந்மாலீ நிஶாசர: ।
அபக்ரம்ய ரத2ாத்தூர்ணம் க3த3ாபாணி: க்ஷிதௌ ஸ்தி2த: ॥ (39)

தத: க்ரோத4ஸமாவிஷ்ட: ஸுஷேணோ ஹரிபுங்க3வ: ।
ஶிலாம் ஸுமஹதீம் க்3ருஹ்ய நிஶாசரமபி4த்3ரவத் ॥ (40)

தமாபதந்தம் க3த3யா வித்3யுந்மாலீ நிஶாசர: ।
வக்ஷஸ்யபி4ஜக4நாஶு ஸுஷேணம் ஹரிஸத்தமம் ॥ (41)

க3த3ாப்ரஹாரம் தம் கே4ாரமசிந்த்ய ப்லவகே3ாத்தம: ।
தாம் ஶிலாம் பாதயாமாஸ தஸ்யோரஸி மஹாம்ருதே4 ॥ (42)

ஶிலாப்ரஹாராபி4ஹதோ வித்3யுந்மாலீ நிஶாசர: ।
நிஷ்பிஷ்டஹ்ருத3யோ பூ4மௌ க3தாஸுர்நிபபாத ஹ ॥ (43)

ஏவம் தைர்வாநரை: ஶூரை: ஶூராஸ்தே ரஜநீசரா: ।
த்3வந்த்3வே விம்ருதி3தாஸ்தத்ர தைத்3யா இவ தி3வௌகஸை: ॥ (44)

ப4க்3நை: க2ட்கைர்க3த3ாபி4ஶ்ச ஶக்திதோமரபட்டஸை: ।
அபவித்3தை4ஶ்ச பி4ந்நைஶ்ச ரதை2: ஸாங்க்3ராமிகைர்ஹயை: ॥ (45)

நிஹதை: குஞ்ஜரைர்மத்தைஸ்தத2ா வாநரராக்ஷஸை: ।
சக்ராக்ஷயுக3த3ண்டை3ஶ்ச ப4க்3நைர்த4ரணிஸம்ஶ்ரிதை: ॥
ப3பூ4வாயோத4நம் கே4ாரம் கோ3மாயுக3ணஸங்குலம் ॥ (46)

ஆனால், வேகமாக செயல்படும் அரக்கனான நிகும்பன், போர்க்களத்தில் எழுந்து நின்று, நூற்றுக்கணக்கான பாணங்களால் நீலனைத் தாக்கி ஏளனமாகச் சிரித்தான். (32)

பகவான் விஷ்ணு, தன் சக்கராயுதத்தால் போர்க்களத்தில் எதிரிகளின் தலைகளை வெட்டி வீழ்த்துவதைப் போல, நிகும்பனுடைய தலையையும் தேர்ப்பாகனின் தலையையும், தேரின் சக்கரத்தைக் கொண்டே நீலன் வெட்டித் தள்ளினான். (33)

வஜ்ராயுதத்தையும் இடியையும் போன்று தாக்கும் சக்தி படைத்த த்விவிதன், அரக்கர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அசனிப்ரபனை (அரக்கனை) மலைமுகட்டினால் தாக்கினான். (34)

மலைகளைப் பெயர்த்துப் போர் புரியும் வானரவீரனான த்விவிதனை, இடிகளைப் போன்று அழிவை உண்டாக்கும் பாணங்களால் அசனிப்ரபன் துளைத்தெடுத்தான். உடலெங்கும் அம்புகளின் தாக்குதலால் காயப்படுத்தப்பட்ட த்விவிதன், கோபம் தலைக்கேறி, ஓர் ஆச்சா மரத்தைக் கொண்டு, தேர்–குதிரைகளுடன் அசனிப்ரபனைக் கொன்றான். (35,36)

அரக்கன் வித்யுன்மாலி தேரிலிருந்தபடியே, தங்கவேலைப்பாடுகள் கொண்ட அம்புகளால் சுஷேணனைத் தாக்கினான். அத்துடன், வெற்றிக்களிப்புடன் அடிக்கடி பெருமுழக்கமும் செய்தான். (37)

வானரோத்தமனான சுஷேணன், அவன் தேரில் இருப்பதைக் கவனத்தில் கொண்டு, ஒரு பெரிய மலைச்சிகரத்தைப் பெயர்த்துத் தேரின்மேல் வீசினான். (38)

(மலைச்சிகரம் தேரின்மீது வந்து வீழ்வதைக் கண்ட) வித்யுன்மாலி வெகு சாமர்த்தியமாக, அதே விநாடியில் தேரிலிருந்து வெளியே குதித்து, கையில் கதாயுதத்துடன் தரையில் நின்றான். (39)

அவன் தப்பித்துக் கொண்டதால் தாங்க முடியாத கோபம் கொண்ட வானரசிரோமணியான சுஷேணன், மிகப்பெரிய கற்பாறையை எடுத்துக் கொண்டு, அந்த அரக்கனை நோக்கி ஓடினான். (40)

அரக்கனான வித்யுன்மாலி, துரத்திக் கொண்டு வரும் வானரத்தலைவனான சுஷேணனைக் கதையால் மார்பில் வேகமாகத் தாக்கினான். (41)

அந்தப் போரில், வானரவீரனான அவன், தாங்க முடியாத கதையின் அடியைப் பொருட்படுத்தாமல், தன் கையிலிருந்த கற்பாறையை அவனுடைய மார்பை நோக்கி வீசி எறிந்தான். (42)

கற்பாறையின் தாக்குதலால், வித்யுன்மாலி தூள்தூளாகிப் போன இதயத்துடன் உயிர் நீங்கித் தரையில் சாய்ந்தான். (43)

(தேவாசுர யுத்தத்தில்) தேவர்களால் அசுரர்கள் வீழ்த்தப்பட்டதைப் போலவே, வீரர்களான அரக்கர்களுக்கும் ஆற்றல்மிக்க வானரத்தலைவர்களுக்குமிடையே நடந்த துவந்துவப் போரில், அரக்கர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். (44)

அப்போது போர்க்களத்தில், முறிந்து போன கத்திகள், கதைகள், சக்திகள், தோமரங்கள், பட்டிசங்கள் ஆகியவை சிதறிக் கிடந்தன; நொறுங்கிப் போன ரதங்கள், கொல்லப்பட்ட போர்க்குதிரைகள் மற்றும் மதயானைகள், உயிரிழந்த வானர–அரக்கர்கள், தரையில் சிதறிக் கிடந்த தேர்ச்சக்கரங்கள், அச்சுக்கள், நுகத்தடிகள், ஏர்க்கால்கள் ஆகியவற்றால் போர்க்களம் பயங்கரமாகக் காட்சி தந்தது; அங்கு நரிக்கூட்டங்கள் ஏராளமாக சுற்றிக் கொண்டிருந்தன. (45,46)

கப$_3$ந்த$_4$ாநி ஸமுத்பேதுர்தி$_3$க்ஷு வாநரரக்ஷஸாம் ।
விமர்தே$_3$ துமுலே தஸ்மிந் தே$_3$வாஸுரரணோபமே ॥ (47)

வித$_3$ார்யமாணா ஹரிபுங்க$_3$வைஸ்தத$_3$ா
நிஶாசரா: ஶோணிததி$_3$க்$_3$த$_4$க$_3$ாத்ரா: ।
புந: ஸுயுத்$_3$த$_4$ம் தரஸா ஸமாஸ்தி$_2$தா
தி$_3$வாகரஸ்யாஸ்தமயாபி$_4$காங்க்ஷிண: ॥ (48)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரிசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

சதுஶ்சத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

நிஶாயுத்$_3$த$_4$ம்

யுத்$_4$யதாமேவ தேஷாம் து தத$_3$ா வாநரரக்ஷஸாம் ।
ரவிரஸ்தம் க$_3$தோ ராத்ரி: ப்ரவ்ருத்தா ப்ராணஹாரிணீ ॥ (1)

அந்யோந்யம் ப$_3$த்$_3$த$_4$வைராணாம் கோ$_4$ராணாம் ஜயமிச்ச$_2$தாம் ।
ஸம்ப்ரவ்ருத்தம் நிஶாயுத்$_3$த$_4$ம் தத$_3$ா வாநரரக்ஷஸாம் ॥ (2)

ராக்ஷஸோ஽ஸீதி ஹரயோ ஹரிஶ்சாஸீதி ராக்ஷஸா: ।
அந்யோந்யம் ஸமரே ஜக்$_4$நுஸ்தஸ்மிந்ஸ்தமஸி தா$_3$ருணே ॥ (3)

ஜஹி தா$_3$ரய சைஹீதி கத$_2$ம் வித்$_3$ரவஸீதி ச ।
ஏவம் ஸுதுமல: ஶப்$_3$த$_3$ஸ்தஸ்மிந்ஸ்தமஸி ஶுஶ்ருவே ॥ (4)

காலா: காஞ்சநஸந்நாஹாஸ்தஸ்மிந்ஸ்தமஸி ராக்ஷஸா: ।
ஸம்ப்ராத்$_3$ருஶ்யந்த ஶைலேந்த்$_3$ரா தீ$_3$ப்தௌஷதி$_4$வநா இவ ॥ (5)

தஸ்மிந்ஸ்தமஸி து$_3$ஷ்பாரே ராக்ஷஸா: க்ரோத$_4$மூர்சி$_2$தா: ।
பரிபேதுர்மஹாவேகா$_3$ ப$_4$க்ஷயந்த: ப்லவங்க$_3$மாந் ॥ (6)

தே ஹயாந் காஞ்சநாபீடா$_3$ந் த்$_4$வஜாந்ஶ்சாக்$_3$நிஶிகோ$_2$பமாந் ।
ஆப்லுத்ய த$_3$ஶநைஸ்தீக்ஷ்ணைர்பீ$_4$மகோபா வ்யதா$_3$ரயந் ॥ (7)

வாநரா ப$_3$லிநோ யுத்$_3$தே$_4$ऽக்ஷோப$_4$யந் ராக்ஷஸீம் சமூம் ।
குஞ்ஜராந்குஞ்ஜராரோஹாந்பதாகாத்$_4$வஜிநோ ரத$_2$ாந் ॥
சகர்ஷுஶ்ச த$_3$த$_3$ம்ஶுஶ்ச த$_3$ஶநை: க்ரோத$_4$மூர்சி$_2$தா: ॥ (8)

லக்ஷ்மணஶ்சாபி ராமஶ்ச ஶரைராஶீவிஷோபமை: ।
த்$_3$ருஶ்யாத்$_3$ருஶ்யாநி ரக்ஷாம்ஸி ப்ரவராணி நிஜக்$_4$நது: ॥ (9)

தேவாசுரப் போருக்கு நிகராக நடந்த அந்தப் பெரும் போரில், வானர–அரக்கர்களின் தலையில்லாத சடலங்கள், எல்லாத் திசைகளிலும் பரவிக் கிடந்தன. (47)

வானரவீரத் தலைவர்களால் தாக்கப்பட்டு, உடல் முழுவதும் இரத்தக்களறியாக நின்ற அரக்கர்கள், இன்னும் அதிக பலத்துடன் போர் செய்வதற்காக, சூரியன் மறையும் வேளையை ஆக்ரோஷத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். (48)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து நான்கு

இரவுப் போர்

வானரர்களும் அரக்கர்களும் போர் செய்து கொண்டிருக்கும்போதே சூரியன் மறைந்தான்; உயிர்களைப் பறிக்கும் இரவும் வந்தது. (1)

ஒருவர்மீது ஒருவர் பகைமை பாராட்டியவர்களும், (தனக்கே) வெற்றியை விரும்புவர்களும், பயங்கரமானவர்களுமான வானர–அரக்கர்களிடையே அப்போது இரவிலும் போர் தொடர்ந்தது. (2)

(இருளில் இவர்–இன்னார் என்று தெளிவாக விளங்காததால்,) 'இதோ, அரக்கன்!', 'இதோ, வானரன்!' என்று கூவிக்கொண்டு, (தங்கள் பக்கத்தைச் சார்ந்தவர்களையே) பயங்கரமான அந்த இரவில், ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள். (3)

'கொல்லு; வெட்டு; வா; ஏன் ஓடுகிறாய்?' என்பன போன்ற மிகக் கலவரமான சப்தங்கள் இருட்டில் கேட்கப்பட்டன. (4)

கருமை வண்ணம் கொண்ட அரக்கர்கள், பொற்கவசங்களை அணிந்திருந்ததால், பிரகாசிக்கும் மூலிகைகள் நிறைந்த பெரிய மலைகள் போலவே காணப்பட்டார்கள். (5)

அடத்தியான அந்த இருளில், அரக்கர்களின் கோபம் எல்லையைக் கடந்தது; மிகவும் ஆத்திரத்துடன் வானரர்களை விழுங்கிக் கொண்டு நாற்புறமும் திரிந்தார்கள். (6)

வானரர்களும் மிகவும் கோபம் கொண்டு, எம்பிக் குதித்து, தங்கச் சேணங்களையுடைய குதிரைகளையும், நெருப்புக்கொழுந்துபோல் விளங்கும் கொடிகளையும் கூர்மையான பற்களால் சிதைத்துத் தள்ளினார்கள். (7)

பலசாலிகளான வானரர்கள் (வானரப் படையினர்), போரில் அரக்கர்களுடைய படையில் புகுந்து குழப்பத்தை உண்டாக்கினார்கள். கோபவெறி கொண்ட அவர்கள், யானைகளையும் யானையின் மீதமர்ந்து போர் செய்யும் வீரர்களையும் கொடி–பதாகைகளையும் தேர்களையும் இழுத்துத் தள்ளி, பற்களால் கடித்துக் குதறி நாசம் செய்தார்கள். (8)

இராம–லட்சுமணர்கள், விஷம் கக்கும் சர்ப்பங்களைப் போன்ற பாணங்களால் கண்ணில் பட்ட அரக்கர்களையும், கண்ணில் தென்படாமல் போர்புரியும் முக்கிய அரக்கர்களையும் கொன்று தள்ளினார்கள். (9)

துரங்க$_{3}$கு$_{2}$ரவித்$_{4}$வஸ்தம் ரத$_{2}$நேமிஸமுத்தி$_{2}$தம் ।
ருரோத$_{4}$ கர்ணநேத்ராணி யுத்$_{4}$யதாம் த$_{4}$ரணீரஜ: ॥ (10)

வர்தமாநே மஹாகே$_{4}$ாரே ஸங்க்$_{3}$ராமே ரோமஹர்ஷணே ।
ருதி$_{4}$ரோத$_{3}$ா மஹாகே$_{4}$ாரா நத்$_{3}$யஸ்தத்ர ப்ரஸுஸ்ருவு: ॥ (11)

ததோ பே$_{4}$ரீம்ருத$_{3}$ங்க$_{3}$ாநாம் பணவாநாம் ச நி:ஸ்வந: ।
ஶங்க$_{2}$வேணுஸ்வநோந்மிஶ்ர: ஸம்ப$_{3}$பூ$_{4}$வாத்$_{3}$பு$_{4}$தோபம: ॥ (12)

ஹதாநாம் ஸ்தநமாநாநாம் ராக்ஷஸாநாம் ச நி:ஸ்வந: ।
ஶஸ்தாநாம் வாநராணாம் ச ஸம்ப$_{3}$பூ$_{4}$வாதித$_{3}$ாருண: ॥ (13)

ஹதைர்வாநரவீரைஶ்ச ஶக்திஶூலபரஶ்வதை$_{4}$: ।
நிஹதை: பர்வதாக்$_{3}$ரைஶ்ச ராக்ஷஸை: காமரூபிபி$_{4}$: ॥ (14)

ஶஸ்த்ரபுஷ்போபஹாரா ச தத்ராஸீத்$_{3}$யுத்$_{3}$த$_{4}$மேதி$_{3}$நீ ।
து$_{3}$ர்க்ஞேயா து$_{3}$ர்நிவேஶா ச ஶோணிதாஸ்ராவகர்த$_{3}$மா ॥ (15)

ஸா ப$_{3}$பூ$_{4}$வ நிஶா கே$_{4}$ாரா ஹரிராக்ஷஸஹாரிணீ ।
காலராத்ரீவ பூ$_{4}$தாநாம் ஸர்வேஷாம் து$_{3}$ரதிக்ரமா ॥ (16)

ததஸ்தே ராக்ஷஸாஸ்தத்ர தஸ்மிந்ஸ்தமஸி த$_{3}$ாருணே ।
ராமமேவாப்$_{4}$யவர்தந்த ஸம்ஸ்ப்ருஷ்டா: ஶரவ்ருஷ்டிபி$_{4}$: ॥ (17)

தேஷாமாபததாம் ஶப்$_{3}$த$_{3}$: க்ருத்$_{3}$த$_{4}$ாநாமபி க$_{3}$ர்ஜதாம் ।
உத்$_{3}$வர்த இவ ஸப்தாநாம் ஸமுத்$_{3}$ராணாம் ப்ரஶுஶ்ருவே ॥ (18)

தேஷாம் ராம: ஶரை: ஷட்$_{3}$பி$_{4}$: ஷட்$_{3}$ஜக$_{4}$ாந நிஶாசராந் ।
நிமேஷாந்தரமாத்ரேண ஶிதைரக்$_{3}$நிஶிகோ$_{2}$பமை: ॥ (19)

யக்ஞஶத்ருஶ்ச து$_{3}$ர்த$_{4}$ர்ஷோ மஹாபார்ஶ்வமஹோத$_{3}$ரௌ ।
வஜ்ரத$_{3}$ம்ஷ்ட்ரோ மஹாகாயஸ்தௌ சோபௌ$_{4}$ ஶுகஸாரணௌ ॥ (20)

தே து ராமேண ப$_{3}$ாணௌகை$_{4}$: ஸர்வே மர்மஸு தாடி$_{3}$தா: ।
யுத்$_{3}$த$_{4}$ாத$_{3}$பஸ்ருதாஸ்தத்ர ஸாவஶேஷாயுஷோऽப$_{4}$வந் ॥ (21)

தத்ர காஞ்சநசித்ராங்கை$_{3}$: ஶரைரக்$_{3}$நிஶிகோ$_{2}$பமை: ।
தி$_{3}$ஶஶ்சகார விமலா: ப்ரதி$_{3}$ஶஶ்ச மஹாப$_{3}$ல: ॥ (22)

ராமநாமாங்கிதைர்ப$_{3}$ாணைர்வ்யாப்தம் தத்$_{3}$ரணமண்ட$_{3}$லம் ।
யே த்வந்யே ராக்ஷஸா பீ$_{4}$மா ராமஸ்யாபி$_{4}$முகே$_{2}$ ஸ்தி$_{2}$தா: ॥
தேऽபி நஷ்டா: ஸமாஸாத்$_{3}$ய பதங்க$_{3}$ா இவ பாவகம் ॥ (23)

ஸுவர்ணபுங்கைர்விஶிகை$_{2}$: ஸம்பதத்$_{3}$பி$_{4}$: ஸஹஸ்ரஶ: ।
ப$_{3}$பூ$_{4}$வ ரஜநீ சித்ரா க$_{2}$த்$_{3}$யோதைரிவ ஶாரதீ$_{3}$ ॥ (24)

குதிரைக் குளம்புகளின் அடிவைப்பினால் பொடியாக்கப்பட்டு, தேர்ச் சக்கரங்களின் வேகமான ஓட்டத்தால் மேலெழும்பிய புழுதித் துகள்கள், போர்புரிபவர்களின் செவிகளையும் கண்களையும் மறைத்தன. (10)

பார்ப்பவர்களுக்கு உரோமச் சிலிர்ப்பை ஏற்படுத்தும் மிக பயங்கரமான அந்தப் போர்க்களத்தில், இரத்த ஆறுகள் பெருகி ஓடின. (11)

அப்போது, பேரி–மிருதங்கம்–பணவம் ஆகிய இசைக்கருவிகளின் ஒலியும், சங்கு–புல்லாங்குழல் ஆகியவற்றின் ஓசையும் கலந்து, மிகவும் ஆச்சரியமான நாதம் எழுந்தது. (12)

கடுமையாகத் தாக்கப்பட்டதால் கதறிக் கொண்டிருந்த அரக்கர்களுடைய குரலும், காயப்படுத்தப்பட்ட வானரர்களின் வேதனைக் குரலும், கேட்பதற்கு மிகவும் பயங்கரத்தை விளைவிப்பதாக இருந்தது. (13)

சக்தி–சூலம்–கோடாலிகளால் கொல்லப்பட்ட வானரவீரர்கள்; மலை முகட்டையொத்த பாறைகளால் கொல்லப்பட்ட, விரும்பிய உருவம் எடுக்கவல்ல அரக்கர்கள் – இவர்கள் உடலிலிருந்து பெருகிய இரத்தப் பெருக்கினால், அந்தப் போர்க்களம் சேறும்–சகதியுமாகி, உள்ளே புகமுடியாததாகவும் காணச் சகிக்காததாகவும் ஆகி, (சிதறிக் கிடந்த) சஸ்திரங்களாகிற பூமாலையைச் சூடியதைப் போலவும் காணப்பட்டது. (14,15)

வானரர்–அரக்கர்களின் உயிர்களைப் பறித்துக் கொண்டு சென்ற பயங்கரமான அந்த இரவு, பிரளயகால இரவைப் போல, எல்லா உயிர்ப்பிராணிகளாலும் கடத்தற்கரியதாக இருந்தது. (பேரழிவிலிருந்து எந்தப் பிராணியும் தப்பிக்கவே முடியாது.) (16)

பயங்கரமான அந்த இருளில், (மிகுந்திருந்த) அரக்கர்கள் இராமனையே குறிவைத்து, அம்புமழை பொழிந்து, அவரை (அம்பினால்) மறைத்தார்கள். (17)

மிகவும் கோபம் கொண்டு, பேரிரைச்சலிட்டுக் கொண்டு (இராமனை நோக்கி) எதிர்த்தோடி வரும் அரக்கர்களின் பெருங்குரல், பிரளய காலத்தில் ஏற்படும் ஏழு கடல்களின் பேரோசையைப் போன்றதாக இருந்தது. (18)

நெருப்புச் சுவாலை போன்று ஜொலிக்கின்றவைகளும், கூர்மையானவைகளுமான ஆறு பாணங்களால், (பின்வரும்) ஆறு அரக்கர்களைக் கண்ணிமைக்கும் பொழுதிற்குள் இராமன் கொன்றொழித்தார். அவர்கள் பெயர்கள்:– எதிர்த்து நிற்க முடியாதவனான யக்ஞசத்ரு, மகாபார்சுவன், மகோதரன், பேருடல் கொண்ட வஜ்ரதம்ஷ்ட்ரன், (வடக்கு வாசல் காவல் பொறுப்பிலிருந்த) சுக–ஸாரணர்கள். (19,20)

அவர்கள் எல்லோரும், இராமனால் ஏவப்பட்ட அம்புவரிசைகளால் உயிர்நிலைகளில் தாக்கப்பட்டு, போர்க்களத்திலிருந்து ஓடிப்போய் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார்கள். (21)

பெரும் பலம் கொண்ட இராமன், பொன்னால் அழகாக அலங்கரிக்கப்பட்டவைகளும் நெருப்புச் சுவாலை போன்றவைகளுமான அம்புகளால், திசைகளையும் திசை மூலைகளையும் இருள் ஒழிந்ததாகச் செய்தார். (பாணங்களின் பேரொளியினால் எல்லாத் திசைகளும் பிரகாசமாக விளங்கின.) (22)

அந்தப் போர்க்களம், ஸ்ரீராமன் பெயர் பொறித்த பாணங்களால் நிரம்பியிருந்தது. (முன் கூறப்பட்டவர்களைத் தவிர) வேறு சில கொடிய அரக்கர்கள், இராமன் எதிரே வந்து எதிர்த்து நின்று, நெருப்பில் வீழ்ந்த விட்டிற்பூச்சிகளைப் போல உயிரைத் துறந்தார்கள். (23)

அந்தப் போர்க்களம், இராமனால் விடப்பட்ட பொன்வேலைப்பாடு அமைந்த ஆயிரக்கணக்கான அம்புகளால், சரத் கால இரவு மின்மினிப் பூச்சிகளால் எப்படி அழகாக விளங்குமோ, அவ்வாறே மனங்கவர்வதாய் விளங்கிற்று. (24)

ராக்ஷஸாநாம் ச நிநதை$_3$ர்ஹரீணாம் சாபி நி:ஸ்வநை: ।
ஸா ப$_3$பூ$_4$வ நிஶா கே$_4$ரா பூ$_4$யோ கே$_4$ரதரா தத$_3$ா ॥ (25)

தேந ஶப்$_3$தே$_4$ந மஹதா: ப்ரவ்ருத்$_3$தே$_4$ந ஸமந்தத: ।
த்ரிகூட: கந்த$_3$ராகீர்ண: ப்ரவ்யாஹரதி$_3$வாசல: ॥ (26)

கே$_3$ாலாங்கூலா மஹாகாயாஸ்தமஸா துல்யவர்சஸ: ।
ஸம்பரிஷ்வஜ்ய ப$_3$ாஹுப்$_4$யாம் ப$_4$க்ஷயந் ரஜநீசராந் ॥ (27)

அங்க$_3$த$_3$ஸ்து ரணே ஶத்ரும் நிஹந்தும் ஸமுபஸ்தி$_2$த: ।
ராவணிம் நிஜக$_4$நாஶு ஸாரதி$_2$ம் ச ஹயாநபி ॥ (28)

வர்தமாநே தத$_3$ா கே$_4$ாரே ஸங்க்$_3$ராமே ப்$_4$ருஶத$_3$ாருணே ।
இந்த்$_3$ரஜித்து ரத$_2$ம் த்யக்த்வா ஹதாஶ்வோ ஹதஸாரதி$_2$: ॥
அங்க$_3$தே$_3$ந மஹாகாயஸ்தத்ரைவாந்தரதீ$_4$யத ॥ (29)

தத்கர்ம வாலிபுத்ரஸ்ய ஸர்வே தே$_3$வா: ஸஹர்ஷிபி$_4$: ।
துஷ்டுவு: பூஜநார்ஹஸ்ய தௌ சோபௌ$_4$ ராமலக்ஷ்மணௌ ॥ (30)

ப்ரப$_4$ாவம் ஸர்வபூ$_4$தாநி விது$_3$ரிந்த்$_3$ரஜிதோ யுதி$_4$ ।
அத்$_3$ருஶ்ய: ஸர்வபூ$_4$தாநாம் யோऽப$_4$வத்$_3$யுதி$_4$ து$_3$ர்ஜய: ॥ (31)

தேந தே தம் மஹாத்மாநம் துஷ்டா த்$_3$ருஷ்ட்வா ப்ரத$_4$ர்ஷிதம் ।
தத: ப்ரஹ்ருஷ்டா: கபய: ஸஸுக்$_3$ரீவவிபீ$_4$ஷணா: ॥
ஸாது$_4$ ஸாத்$_4$விதி நேது$_3$ஶ்ச த்$_3$ருஷ்ட்வா ஶத்ரும் ப்ரத$_4$ர்ஷிதம் ॥ (32)

இந்த்$_3$ரஜித்து தத$_3$ா தேந நிர்ஜிதோ பீ$_4$மகர்மணா ।
ஸம்யுகே$_3$ வாலிபுத்ரேண க்ரோத$_4$ம் சக்ரே ஸுத$_3$ாருணம் ॥ (33)

ஸோऽந்தர்த$_4$ாநக$_3$த: பாபோ ராவணீ ரணகர்ஶித: ।
ப்$_3$ரஹ்மத$_3$த்தவரோ வீரோ ராவணி: க்ரோத$_4$மூர்சி$_2$த: ॥
அத்$_3$ருஶ்யோ நிஶிதாந் ப$_3$ாணாந் முமோசாஶநிவர்சஸ: ॥ (34)

ஸ ராமம் லக்ஷ்மணம் சைவ கோ$_4$ரைர்நாக$_3$மயை: ஶரை: ।
பி$_3$பே$_4$த$_3$ ஸமரே க்ருத்$_3$த$_4$: ஸர்வகா$_3$த்ரேஷு ராக்ஷஸ: ॥ (35)

மாயயா ஸம்வ்ருதஸ்தத்ர மோஹயந் ராக$_4$வௌ யுதி$_4$ ।
அத்$_3$ருஶ்ய: ஸர்வபூ$_4$தாநாம் கூடயோதீ$_4$ நிஶாசர: ॥
ப$_3$ப$_3$ந்த$_4$ ஶரப$_3$ந்தே$_4$ந ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ॥ (36)

தௌ தேந புருஷவ்யாக்$_4$ரௌ க்ருத்$_3$தே$_4$நாஶீவிஷை: ஶரை: ।
ஸஹஸா நிஹதௌ வீரௌ தத$_3$ா ப்ரேக்ஷந்த வாநரா: ॥ (37)

பயங்கரமான அந்த இரவு, அரக்கர்கள் எழுப்பிய கோஷங்களாலும் வானரர்களின் பேரிரைச்சலாலும், இன்னும் அதிக பயங்கரமாக ஆயிற்று. (25)

எல்லாப் பக்கங்களிலும் எழும்பிய அந்தப் பேரொலியால், குகைகள் நிறைந்த திரிகூடமலை, யாரோ ஒருவருடைய கேள்விக்குப் பதில் கூறுவதைப் போலிருந்தது. (அதாவது, வானர–அரக்கர்கள் எழுப்பிய ஒலி, குகைகளில் புகுந்து எதிரொலித்தது.) (26)

பேருடல் படைத்தவர்களும் இருள் போன்று கருமையானவர்களுமான கோலாங்கூலம் என்ற இனத்தைச் சேர்ந்த வானரர்கள், அரக்கர்களைத் தம் கைகளால் கட்டிப் பிடித்து, உயிரைப் பறித்து, போர்க்களத்தில் சடலங்களைத் தின்றனர். (27)

பகைவனான இந்திரஜித்தைப் போரில் கொல்வதற்குப் பெருமுனைப்புடனிருந்த அங்கதன், விரைவில், அவனுடைய தேரோட்டியையும் குதிரைகளையும் கொன்றான். (28)

நடந்து கொண்டிருந்த பயங்கரமான போரில், தன் தேரோட்டியும் குதிரைகளும் அங்கதனால் கொல்லப்பட்டதும், பேருடல் படைத்த இந்திரஜித், அவ்விடத்திலேயே ரதத்தை விட்டுவிட்டுக் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து போனான். (29)

வாலி மைந்தனின் மெச்சத் தகுந்த அந்த வீரச்செயலைக் கண்ட தேவர்களும் முனிவர்களும், ஏன் இராம–லட்சுமணர்களாகிய அவ்விருவரும்கூட மிகவும் பாராட்டினார்கள். (30)

எல்லாப் பிராணிகளும் இந்திரஜித்தின் போர்த்திறமையை நன்கு அறிவார்கள். (இப்போது,) எல்லாப் பிராணிகளின் பார்வைக்கும் புலப்படாமற்போய்விட்ட அவன், போரில் வெல்ல முடியாதவனாக ஆகிவிட்டான். (31)

அப்போது, சுக்ரீவனும் விபீஷணனும் மற்ற எல்லா வானரர்களும், பலவானான பகைவன் (இந்திரஜித்) துரத்தப்பட்டதைக் கண்டு பேரானந்தம் அடைந்தவர்களாக, 'நன்று, நன்று' என்று உற்சாகத்துடன் கூவினார்கள். (32)

அப்போது இந்திரஜித், போரில் அருஞ்செயல் ஆற்றவல்ல வாலியின் புதல்வனால் வெற்றி கொள்ளப்பட்டதால், பொறுக்க முடியாத சினத்தை அடைந்தான். (33)

போரில் முறியடிக்கப்பட்ட, பாவியான இந்திரஜித் எவர் கண்ணிலும் புலப்படாத மாயையை மேற்கொண்டான். சகிக்க முடியாத கோபத்தால் தன்னிலை இழந்திருந்த வீரனான இந்திரஜித், பிரும்மாவினால் கொடுக்கப்பட்டிருந்த வரத்தின்படி பிறர் கண்ணுக்குப் புலப்படாமலிருந்த நிலையிலேயே, வஜ்ராயுதம் போன்ற கூர்மையான பாணங்களைச் செலுத்தினான். (34)

கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்த அந்த அரக்கன், சர்ப்பவடிவம் கொண்ட பயங்கரமான பாணங்களால் இராம–லட்சுமணர்களின் ஒவ்வோர் அங்கத்தையும் துளைத்தெடுத்தான். (35)

மாயையால் சூழப்பட்டிருந்த அவன், அந்தப் போர்க்களத்தில் இராம–லட்சுமணர்களை மதிமயங்கச் செய்தான். எந்தப் பிராணியாலும் பார்க்க முடியாத அவன், கபட யுத்தத்தில் ஈடுபட்டு, வெகுவேகமாக செலுத்தப்பட்ட பாணங்களாகிற கயிற்றால் இராம–லட்சுமணர்களைக் கட்டிவிட்டான். (36)

கோபம் கொண்ட அவனால் (இந்திரஜித்தால்), அவ்விரு ஆண்புலிகளும் விஷம் கக்கும் அம்புகளால் திடீரென்று தாக்கப்பட்டு கட்டுண்டு நிற்பதை வானரர்கள் பார்த்தார்கள். (37)

ப்ரகாஶரூபஸ்து யதா₂ ந ஶக்தஸ்—
தௌ பா₃தி₄தும் ராக்ஷஸராஜபுத்ர: ।
மாயாம் ப்ரயோக்தும் ஸமுபாஜகா₃ம
ப₃ப₃ந்த₄ தௌ ராஜஸுதௌ து₃ராத்மா ॥ (38)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ சதுஶ்சத்வாரிம்ஶ: ஸர்க₃: ॥

பஞ்சசத்வாரிம்ஶ: ஸர்க₃:

நாக₃பாஶப₃ந்த₄:

ஸ தஸ்ய க₃திமந்விச்ச₂ந் ராஜபுத்ர: ப்ரதாபவாந் ।
தி₃தே₃ஶாதிப₃லோ ராமோ த₃ஶ வாநரயூத₂பாந் ॥ (1)

த்₃வௌ ஸுஷேணஸ்ய தா₃யாதௌ₃ நீலம் ச ப்லவக₃ர்ஷப₄ம் ।
அங்க₃த₃ம் வாலிபுத்ரம் ச ஶரப₄ம் ச தரஸ்விநம் ॥ (2)

விநதம் ஜாம்ப₃வந்தம் ச ஸாநுப்ரஸ்த₂ம் மஹாப₃லம் ।
ருஷப₄ம் சர்ஷப₄ஸ்கந்த₄மாதி₃தே₃ஶ பரந்தப: ॥ (3)

தே ஸம்ப்ரஹ்ருஷ்டா ஹரயோ பீ₄மாநுத்₃யம்ய பாத₃பாந் ।
ஆகாஶம் விவிஶு: ஸர்வே மார்க₃மாணா தி₃ஶோ த₃ஶ ॥ (4)

தேஷாம் வேக₃வதாம் வேக₃மிஷுபி₄ர்வேக₃வத்தரை: ।
அஸ்த்ரவித் பரமாஸ்த்ரைஸ்து வாரயாமாஸ ராவணி: ॥ (5)

தே பீ₄மவேகா₃ ஹரயோ நாராசை: க்ஷதவிக்₃ரஹா: ।
அந்த₄காரே ந த₃த்₃ருஶுர்மேகை₄: ஸூர்ய மிவாவ்ருதம் ॥ (6)

ராமலக்ஷ்மணயோரேவ ஸர்வதே₃ஹபி₄த₃: ஶராந் ।
ப்₄ருஶமாவேஶயாமாஸ ராவணி: ஸமிதிஞ்ஜய: ॥ (7)

நிரந்தரஶரீரௌ தௌ ப்₄ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
க்ருத்₃தே₄நேந்த்₃ரஜிதா வீரௌ பந்நகை₃: ஶரதாம் க₃தை: ॥ (8)

தயோ: க்ஷதஜமார்கே₃ண ஸுஸ்ராவ ருதி₄ரம் ப₃ஹு ।
தாவுபௌ₄ ச ப்ரகாஶேதே புஷ்பிதாவிவ கிம்ஶுகௌ ॥ (9)

தத: பர்யந்தரக்தாக்ஷோ பி₄ந்நாஞ்ஜநசயோபம: ।
ராவணிர்ப்₄ராதரௌ வாக்யமந்தர்த₄ாநக₃தோऽப்₃ரவீத் ॥ (10)

யுத்₄யமாநமநாலக்ஷ்யம் ஶக்ரோऽபி த்ரித₃ஶேஶ்வர: ।
த்₃ரஷ்டுமாஸாதி₃தும் வாபி ந ஶக்த: கிம் புநர்யுவாம் ॥ (11)

அரக்கமன்னனின் புதல்வனாகிய அவன், வெளிப்படையாக எதிரில் நின்று அவர்களைத் தாக்க முடியாமற்போகவே, துணிச்சல் பெற்ற அவன் மாயையைப் பிரயோகிக்க முற்பட்டான். மாமன்னரின் திருக்குமாரர்களாகிய அவ்விருவரையும் கட்டிப் போட்டான். (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தைந்து

நாகப்பாசத்தால் கட்டப்படுதல்!

பராக்கிரமம் மிக்கவரும் உடல் பலமுடையவரும் மாமன்னரின் திருக்குமாரனுமான இராமன், அவனுடைய (இந்திரஜித்தினுடைய) இடத்தைத் தேடிக்கண்டுபிடித்து வரும்படி பத்து வானரத் தலைவர்களுக்கு உத்தரவிட்டார். (1)

எதிரிகளை வாட்டியெடுக்கும் அவர் (இராமன்), சுஷேணனுடைய இரு புதல்வர்கள், வானரோத்தமனான நீலன், வாலியின் மைந்தனான அங்கதன், மிக்க வேகம் படைத்த சரபன், வினதன், ஜாம்பவான், மிகவும் ஆற்றலுடைய ஸானுப்ரஸ்தன், ரிஷபன், ரிஷபஸ்கந்தன் ஆகிய பதின்மரை, இந்தச் செயலில் ஏவினார். (2,3)

அந்த வானரர்கள் எல்லோரும், மிகவும் மகிழ்ச்சியுற்றவர்களாக பெரிய மரங்களைப் பிடுங்கிக் கையிலேந்திக் கொண்டு, ஆகாயத்தில் பத்துத் திசைகளிலும் புகுந்தார்கள். (4)

மிகவும் விரைவாக செயல்படத் தொடங்கிய அவர்களை, அவர்கள் வேகத்தைக் காட்டிலும் வேகமாகச் செல்லும் பாணங்களால், அஸ்திரங்களை அறிந்த இந்திரஜித் தடுத்து நிறுத்தினான். (5)

மகாவேகசாலிகளான வானரர்கள், நாராசம் என்ற பாணங்களால் தாக்கப்பட்டு உடல் புண்பட்டுப் போனார்கள். ஆகவே, மேகக் கூட்டங்களால் இருளாக்கப்பட்ட ஆகாயத்தில் சூரியனைக் காணமுடியாதது போல, இந்திரஜித்தைக் காண முடியவில்லை. (6)

போரில் வெற்றி பெற்றவனான இந்திரஜித், இராம–லட்சுமணர்களையே லட்சியமாகக் கொண்டு, உடலின் அங்கங்களைத் துளைக்கும் பாணங்களைத் தொடர்ந்து செலுத்திக் கொண்டிருந்தான். (7)

போர் ஆவேசத்திலிருந்த இந்திரஜித்தினால், அம்பு உருவத்தில் தோன்றிய சர்ப்பங்களால், வீரர்களும் சகோதர்களுமான இராம–இலட்சுமணர்கள், இடைவெளியற்ற உடலினர் ஆயினர். (உடலின் எல்லா அவயவங்களிலும் நாகபாசம் தாக்கியிருந்தது.) (8)

அவ்விருவருடைய சரீரங்களிலிருந்தும், புண்பட்ட இடங்களிலிருந்து இரத்தம் பெருகி ஓடிற்று. அப்போது, அவர்களிருவரும் சிவந்த மலர்கள் பூத்த இரண்டு பலாச மரங்களைப் போல் விளங்கினார்கள். (9)

அப்போது, கருமையான மலையைப் பிளந்தாற்போல் இருந்தவனும், சிவந்த கடைக்கண்களைக் கொண்டவனுமான இந்திரஜித், மறைவிலிருந்தபடியே அவ்விரு சகோதரர்களையும் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— (10)

''கண்களுக்குப் புலனாகாமல் போர்புரியும் என்னை, அமரர்கோனாகிய இந்திரன்கூட நெருங்குவதற்கும் பார்ப்பதற்கும் திறமையற்றவன் – என்னும்போது, (வெறும் மானுடர்களாகிய) உங்கள் இருவரையும் பற்றி என்ன சொல்ல! (11)

ப்ராவ்ருதாவிஷுஜாலேந ராக$_4$வெள கங்கபத்ரிணா ।
ஏஷ ரோஷபரீதாத்மா நயாமி யமஸாத$_3$நம் ॥ (12)

ஏவமுக்த்வா து த$_4$ர்மக்ஞெள ப்$_4$ராதரெள ராமலக்ஷ்மணெள ।
நிர்பி$_3$பே$_4$த$_3$ ஶிதைர்பா$_3$ணை: ப்ரஜஹர்ஷ நநாத$_3$ ச ॥ (13)

பிந்நாஞ்ஜநசயஶ்யாமோ விஸ்பா$_2$ர்ய விபுலம் த$_4$நு: ।
பூ$_4$யோபூ$_4$ய: ஶராந் கோ$_4$ராந் விஸஸர்ஜ மஹாம்ருதே$_4$ ॥ (14)

ததோ மர்மஸு மர்மக்ஞோ மஜ்ஜயந்நிஶிதாஞ்ஶராந் ।
ராமலக்ஷ்மணயோர்வீரோ நநாத$_3$ ச முஹுர்முஹு: ॥ (15)

ப$_3$த்$_3$தெ$_4$ள து ஶரப$_3$ந்தே$_4$ந தாவுபெ$_4$ள ரணமூர்த$_4$நி ।
நிமேஷாந்தரமாத்ரேண ந ஶேகதுருதீ$_3$க்ஷிதும் ॥ (16)

ததோ விபி$_4$ந்நஸர்வாங்கெ$_3$ள ஶரஶல்யாசிதாவுபெ$_4$ள ।
த்$_4$வஜாவிவ மஹேந்த்$_3$ரஸ்ய ரஜ்ஜுமுக்தெள ப்ரகம்பிதெள ॥ (17)

தெள ஸம்ப்ரசலிதெள வீரெள மர்மபே$_4$தே$_3$ந கர்ஶிதெள ।
நிபேததுர்மஹேஷ்வாஸெள ஜக$_3$த்யாம் ஜக$_3$தீபதீ ॥ (18)

தெள வீரஶயநே வீரெள ஶயாநெள ருதி$_4$ரோக்ஷிதெள ।
ஶரவேஷ்டிதஸர்வாங்கா$_3$வார்தெள பரமபீடி$_3$தெள ॥ (19)

ந ஹ்யவித்$_3$த$_4$ம் தயோர்கா$_3$த்ரே ப$_3$பூ$_4$வாங்கு$_3$லமந்தரம் ।
நாநிர்பி$_4$ந்நம் ந சாஸ்தப்$_3$த$_4$மாகராக்$_3$ராத$_3$ஜிஹ்மகை$_3$: ॥ (20)

தெள து க்ரூரேண நிஹதெள ரக்ஷஸா காமரூபிணா ।
அஸ்ருக் ஸுஸ்ருவதுஸ்தீவ்ரம் ஜலம் ப்ரஸ்ரவணாவிவ ॥ (21)

பபாத ப்ரத$_2$மம் ராமோ வித்$_3$தோ$_4$ மர்மஸு மார்க$_3$ணை: ।
க்ரோதா$_4$தி$_3$ந்த்$_3$ரஜிதா யேந புரா ஶக்ரோ விநிர்ஜித: ॥ (22)

ருக்மபுங்கை$_2$: ப்ரஸந்நாக்$_3$ரைரதோ$_4$க$_3$திபி$_4$ராஶுகை$_3$: ।
நாராசைரர்த$_4$நாராசைர்ப$_4$ல்லைரஞ்ஜலிகைரபி ॥
விவ்யாத$_4$ வத்ஸத$_3$ந்தைஶ்ச ஸிம்ஹத$_3$ம்ஷ்ட்ரை: க்ஷுரைஸ்ததா$_2$ ॥ (23)

ஸ வீரஶயநே ஶிஶ்யே விஜ்யமாதா$_3$ய கார்முகம் ।
பி$_4$ந்நமுஷ்டிபரீணாஹம் த்ரிநதம் ரத்நபூ$_4$ஷிதம் ॥ (24)

பா$_3$ணபாதாந்தரே ராமம் பதிதம் புருஷர்ஷப$_4$ம் ।
ஸ தத்ர லக்ஷ்மணோ த்$_3$ருஷ்ட்வா நிராஶோ ஜீவிதேऽப$_4$வத் ॥ (25)

ராமம் கமலபத்ராக்ஷம் ஶரப$_3$ந்த$_4$பரிக்ஷதம் ।
ஶுஶோச ப்$_4$ராதரம் த்$_3$ருஷ்ட்வா பதிதம் த$_4$ரணீதலே ॥ (26)

ரகு குலத்தைச் சேர்ந்த உங்கள் இருவரையும் சிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட பாணக் கூட்டத்தில் சிக்க வைத்துள்ளேன். பொங்கியெழும் சினத்தோடிருக்கும் நான், உங்களை யமனுடைய வீட்டுக்கு அனுப்பப் போகிறேன்!'' (12)

இவ்வாறு சொல்லிவிட்டு, அறப்பற்றுடைய சகோதரர்களான இராம–லட்சுமணர்களைக் கூர்மையான பாணங்களால் துளைத்தான்; (வெற்றிக் களிப்பினால்) கர்ஜித்தான்; ஆனந்தத்தில் மூழ்கினான். (13)

பிளவுண்ட அஞ்சனமலையைப் போன்றிருந்த அவன், அந்தப் பெரும் போரில் உறுதியான தன் வில்லை வளைத்து, பயங்கரமான அம்புகளை மீண்டும் மீண்டும் செலுத்தினான். (14)

உயிர்நிலைகளைப் பற்றி நன்றாக அறிந்திருந்த அவன், இராம–லட்சுமணர்களுடைய உயிர்நிலைகளில் கூரிய அம்புகளைப் பாய்ச்சி, (அவர்கள் படும் வேதனையைக் கண்டு,) தன் வெற்றியினால் மனம் களித்து மேன்மேலும் ஆரவாரம் செய்தான். (15)

போர்க்களத்தில், அம்புக் கயிற்றினால் கட்டப்பட்ட அவ்விருவரும், (அனைத்து ஆற்றலையும் இழந்தவர்களாய்) இமைகளை உயர்த்தி, கண்விழித்துப் பார்க்கவும் இயலாதவரானார்கள். (16)

இவ்வாறு, அவர்களுடைய எல்லா அவயவங்களும் கூர்மையான பாணங்களால் தாக்கப்பட்டு, காயம் அடைந்து விழுந்து கிடந்ததைப் பார்த்தால், கயிற்றிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட இந்திரனுடைய இரண்டு கொடிகள் போல், நடுங்கிக் கொண்டிருந்தார்கள். நாடாளும் மன்னர்களும், சிறந்த வில்லாளிகளும், மாவீரர்களுமான அவ்விருவரும், உயிர்நிலையில் தாக்கப்பட்டதால், மிகவும் தளர்ந்து, உடல் நடுங்கித் தரையில் சாய்ந்தார்கள். (17,18)

போர்க்களத்தில், வீரப்படுக்கையில் படுத்து, உடல்களில் இரத்தம் தோய்ந்து, முற்றிலும் அம்புகளால் தைக்கப்பட்டிருந்த அவ்விருவரும், மிகவும் வேதனையால் பீடிக்கப்பட்டனர். (19)

நேராகப் பாய்ந்த அம்புகளால், அவ்விருவரது உடலிலும் கைவிரல் நுனி முதற்கொண்டு, ஓர் அங்குல இடைவெளிகூட அடிபடாததாக இல்லை; துளைக்கப்படாமலும், புண்ணாகாமலும் இல்லை. (20)

கொடியவனும் விரும்பும் வடிவத்தை ஏற்க வல்லவனுமான அரக்கனால், வீழ்த்தப்பட்ட அவ்விருவரும், இரண்டு அருவிகள் நீரைப் பொழிவதைப் போல, புண்பட்ட இடங்களிலிருந்து வேகமாக இரத்தத்தைப் பெருக்கினார்கள். (21)

முன்னொரு காலத்தில், இந்திரனையே வென்ற இந்திரஜித்தினால், போர் ஆவேசத்துடன் உயிர்நிலைகளில் அம்புகளால் தாக்கப்பட்டட இராமன் முதலில் தரையில் வீழ்ந்தார். (22)

பொன்னாலான பூண்களை உடையனவும், மினுமினுக்கும் முனைகளை உடையனவும், ஆழமாகப் பாய்கின்றவைகளுமான நாராசம், அர்தநாராசம், பல்லம், அஞ்ஜலிகம், வத்ஸதந்தம், ஸிம்மதம்ஷ்ட்ரம், க்ஷுரம் என்ற பல்வகையான பாணங்களால் (இந்திரஜித்) தாக்கினான். (23)

பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும், மூன்று இடங்களில் வளைந்திருந்ததும், கையால் பிடிக்கும் இடத்தில் தளர்ந்திருந்ததும், நாண் அவிழ்ந்ததுமான வில்லை கையில் பற்றியபடியே வீரப்படுக்கையில் இராமன் படுத்துவிட்டார். (24)

புருஷோத்தமரான இராமன் அம்புப்படுக்கையில் (உணர்விழந்து) படுத்துக் கிடப்பதைக் கண்ட இலக்குவன், தன் உயிர்மீது வைத்திருந்த ஆசையை இழந்தவனாக ஆனான். (25)

தாமரைக்கண்ணரும் மூத்த சகோதரருமான இராமன், அம்புக் கூட்டங்களால் கட்டப்பட்டு, செயலிழந்து, தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்து, (இலக்குவன்) மிகவும் மனம் வருந்தினான். (26)

ஹரயஶ்சாபி தம் த்$_3$ருஷ்ட்வா ஸந்தாபம் பரமம் க$_3$தா: ।
ஶோகார்தாஶ்சுக்ருஶுர்கோ$_4$ரமஶ்ருபூரிதலோசநா: ॥ (27)

ப$_3$த்$_3$தௌ$_4$ து வீரௌ பதிதௌ ஶயாநௌ
தௌ வாநரா: ஸம்பரிவார்ய தஸ்து$_2$: ।
ஸமாக$_3$தா வாயுஸுதப்ரமுக்$_2$யா
விஷாத$_3$மார்தா: பரமம் ச ஜக்$_3$மு: ॥ (28)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஷட்சத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ஸுக்$_3$ரீவாத்$_3$யநுஶோக:

ததோ த்$_3$யாம் ப்ருதி$_2$வீம் சைவ வீக்ஷமாணா வநௌகஸ: ।
த$_3$த்$_3$ருஶு: ஸந்ததௌ பா$_3$ணைர்ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ॥ (1)

வ்ருஷ்ட்வேவோபரதே தே$_3$வே க்ருதகர்மணி ராக்ஷஸே ।
ஆஜகா$_3$மாத$_2$ தம் தே$_3$ஶம் ஸஸுக்$_3$ரீவோ விபீ$_4$ஷண: ॥ (2)

நீலத்$_3$விவித$_3$மைந்தா$_3$ஶ்ச ஸுஷேணகுமுதா$_3$ங்க$_3$தா$_3$: ।
தூர்ணம் ஹநுமதா ஸார்த$_4$மந்வஶோசந்த ராக$_4$வௌ ॥ (3)

அசேஷ்டௌ மந்த$_3$நி:ஶ்வாஸௌ ஶோணிதௌக$_4$பரிப்லுதௌ ।
ஶரஜாலாசிதௌ ஸ்தப்$_3$தௌ$_4$ ஶயாநௌ ஶரதல்பயோ: ॥ (4)

நி:ஶ்வஸந்தௌ யதா$_2$ ஸர்பௌ நிஶ்சேஷ்டௌ மந்த$_3$விக்ரமௌ ।
ருதி$_4$ரஸ்ராவதி$_3$க்$_3$தா$_4$ங்கௌ$_3$ தாபநீயாவிவ த்$_4$வஜௌ ॥ (5)

தௌ வீரஶயநே வீரௌ ஶயாநௌ மந்த$_3$சேஷ்டிதௌ ।
யூத$_2$பைஸ்தை: பரிவ்ருதௌ பா$_3$ஷ்பவ்யாகுலலோசநை: ॥ (6)

ராக$_4$வௌ பதிதௌ த்$_3$ருஷ்ட்வா ஶரஜாலஸமாவ்ருதௌ ।
ப$_3$பூ$_4$வுர்வ்யதி$_2$தா: ஸர்வே வாநரா: ஸவிபீ$_4$ஷணா: ॥ (7)

அந்தரிக்ஷம் நிரீக்ஷந்தோ தி$_3$ஶ: ஸர்வாஶ்ச வாநரா: ।
ந சைநம் மாயயா ச$_2$ந்நம் த$_3$த்$_3$ருஶூ ராவணிம் ரணே ॥ (8)

தம் து மாயாப்ரதிச்ச$_2$ந்நம் மாயயைவ விபீ$_4$ஷண: ।
வீக்ஷமாணோ த$_3$த$_3$ர்ஶாத$_2$ ப்$_4$ராது: புத்ரமவஸ்தி$_2$தம் ॥ (9)

தமப்ரதிகர்மாணமப்ரதித்$_3$வந்த்$_3$வமாஹவே ।
த$_3$த$_3$ர்ஶாந்தர்ஹிதம் வீரம் வரதா$_3$நாத்$_3$விபீ$_4$ஷண: ॥
தேஜஸா யஶஸா சைவ விக்ரமேண ச ஸம்யுதம் ॥ (10)

வானரர்களும் அவரைப் பார்த்து மிகுந்த துயரத்தை அடைந்தார்கள். சோகத்தில் மூழ்கி நீர் நிரம்பிய கண்களுடன், கேட்கச் சகிக்கமுடியாதபடி கதறினார்கள். (27)

நாகாஸ்திரத்தால் கட்டப்பட்டு தரையில் படுத்துக் கிடக்கும் அவ்விரு வீரர்களையும், வானரர்கள் சூழ்ந்து நின்றார்கள். அனுமான் முதலியோர் அவ்விடம் வந்து சேர்ந்ததும் மிகவும் சோகத்தில் மூழ்கி செய்வதறியாது துயரத்தை அடைந்தார்கள். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தாறு

சுக்ரீவன் முதலியோர் துயரம்

பின்னர், முன்பு கூறப்பட்ட பத்து வானரத் தலைவர்களும் ஆகாயத்திலும் பூமியிலும் (இந்திரஜித்தைத்) தேடிப் பார்த்துவிட்டு, (அவனைக் கண்டுபிடிக்க முடியாமல்) திரும்பி வந்து, இராம–லட்சுமணர்களின் உடல் முழுவதும் பாணங்களால் வியாபிக்கப்பட்டிப்பதைக் கண்டார்கள். (1)

நன்றாக மழையைப் பொழிந்துவிட்டு, மழைக்கடவுளான இந்திரன் ஓய்ந்திருந்ததைப் போல, அரக்கனான இந்திரஜித், அம்புமழை பொழிந்து ஓய்ந்திருந்த காலத்தில், சுக்ரீவனும் விபீஷணனும் (இராம–லட்சுமணர்கள் இருந்த) அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். (2)

நீலன், த்விவிதன், மைந்தன், சுஷேணன், குமுதன், அங்கதன் ஆகியோர் அனுமானுடன் விரைவாக வந்து, இராம–லட்சுமணர்களின் (பரிதாபமான நிலையைப் பார்த்து) மனம் வருந்தினார்கள். (3)

அவர்கள் இருவரும் அசைவில்லாமல் அம்புப் படுக்கையில் படுத்துக் கிடந்தார்கள்; மிகவும் மெலிதாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தார்கள்; உடல் முழுவதும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது; உடலெங்கும் அம்புகள் தைத்திருந்தன; காயங்கள் காணப்பட்டன; (4)

சர்ப்பங்களைப் போல் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தார்கள்; அசைவில்லாமல் பலம் குன்றியவர்களாகக் கிடந்தார்கள்; அம்புகள் தாக்கிய இடங்களிலிருந்து இரத்தம் பெருகி உடல் முழுவதும் பூசியிருந்தது; தங்கத்தாலான இரண்டு கொடிமரங்கள் முறிந்து விழுந்து கிடந்ததைப் போல் காணப்பட்டார்கள். (5)

அவருடைய சேனைத்தலைவர்கள் துயரம் தாங்காமல் கண்களில் கண்ணீர் பெருகவிட்டுக் கொண்டு சூழ்ந்து நிற்க, உடலின் செயல்பாடுகளை இழந்து, வீரப்படுக்கையில் அவ்விரு வீரர்களும் படுத்துக் கிடந்தார்கள். பாணக் கூட்டங்களால் மறைக்கப்பட்டு, தரையில் விழுந்து கிடக்கும் இராம–லட்சுமணர்களைக் கண்டு, விபீஷணனும் மற்ற எல்லா வானரர்களும் சொல்லொணா வேதனை அடைந்தார்கள். (6,7)

எல்லாத் திசைகளையும் ஆகாயத்தையும் உற்றுப் பார்த்த வானரர்கள், மாயையால் தன்னை மறைத்துக் கொண்டிருக்கும் இராவண குமாரனைப் போர்க்களத்திலும் காணவில்லை. (8)

சகோதரனின் மைந்தனான அவன், மாயையால் மூடப்பட்டிருப்பதை நாலாபக்கமும் கூர்ந்துபார்த்த விபீஷணன், மாயையினாலேயே (இந்திரஜித்தைக்) கண்டுவிட்டான். ஒப்பற்ற செயல்களைப் புரிபவனும், போரில் எதிர்கொள்ள முடியாதவனும், (தேவர்களிடமிருந்து) வரம் பெற்றதால் ஆண்மை–புகழ்–வீரம் படைத்த வீரனுமான அவன், (எவர் கண்ணிலும் புலப்படாமல்) மறைந்திருப்பதைப் பார்த்தான். (9,10)

இந்த்$_3$ரஜித்த்வாத்மந: கர்ம தௌ ஶயாநௌ ஸமீக்ஷ்ய ச ।
உவாச பரமப்ரீதோ ஹர்ஷயந் ஸர்வநைர்ருதாந் ॥ (11)

தூ$_3$ஷணஸ்ய ச ஹந்தாரௌ க$_2$ரஸ்ய ச மஹாப$_3$லௌ ।
ஸாதி$_3$தௌ மாமகைர்பா$_3$ணைர்ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ॥ (12)

நேமௌ மோக்ஷயிதும் ஶக்யாவேதஸ்மாதி$_3$ஷுப$_3$ந்த$_4$நாத் ।
ஸர்வைரபி ஸமாக$_3$ம்ய ஸர்ஷிஸங்கை$_4$: ஸுராஸுரை: ॥ (13)

யத்க்ருதே சிந்தயாநஸ்ய ஶோகார்தஸ்ய பிதுர்மம ।
அஸ்ப்ருஷ்ட்வா ஶயநம் கா$_3$த்ரைஸ்த்ரியாமா யாதி ஶர்வரீ ॥ (14)

க்ருத்ஸ்நேயம் யத்க்ருதே லங்கா நதீ$_3$ வர்ஷாஸ்விவாகுலா ।
ஸோऽயம் மூலஹரோऽநர்த$_2$: ஸர்வேஷாம் நிஹதோ மயா ॥ (15)

ராமஸ்ய லக்ஷ்மணஸ்யாபி ஸர்வேஷாம் ச வநௌகஸாம் ।
விக்ரமா நிஷ்ப$_2$லா: ஸர்வே யதா$_2$ ஶரதி$_3$ தோயதா$_3$: ॥ (16)

ஏவமுக்த்வா து தாந் ஸர்வாந் ராக்ஷஸாந் பரிபார்ஶ்வத: ।
யூத$_2$பாநபி தாந் ஸர்வாந்ஸ்தாட$_3$யாமாஸ ராவணி: ॥ (17)

நீலம் நவபி$_4$ராஹத்ய மைந்த$_3$ம் ச த்$_3$விவித$_3$ம் ததா$_2$ ।
த்ரிபி$_4$ஸ்த்ரிபி$_4$ரமித்ரக்$_4$நஸ்ததாப ப்ரவரேஷுபி$_4$: ॥ (18)

ஜாம்ப$_3$வந்தம் மஹேஷ்வாஸோ வித்$_3$த்$_4$வா பா$_3$ணேந வக்ஷஸி ।
ஹநூமதோ வேக$_3$வதோ விஸஸர்ஜ ஶராந் த$_3$ஶ ॥ (19)

க$_3$வாக்ஷம் ஶரப$_4$ம் சைவ த்$_3$வாவப்யமிததேஜஸௌ ।
த்$_3$வாப்$_4$யாம் த்$_3$வாப்$_4$யாம் மஹாவேகோ$_3$ விவ்யாத$_4$ யுதி$_4$ ராவணி: ॥ (20)

கோ$_3$லாங்கூ$_3$லேஶ்வரம் சைவ வாலிபுத்ரமதா$_2$ங்க$_3$த$_3$ம் ।
விவ்யாத$_4$ ப$_3$ஹுபி$_4$ர்பா$_3$ணைஸ்த்வரமாணோऽத$_2$ ராவணி: ॥ (21)

தாந் வாநரவராந் பி$_4$த்த்வா ஶரைரக்$_3$நிஶிகோ$_2$பமை: ।
நநாத$_3$ ப$_3$லவாந்ஸ்தத்ர மஹாஸத்த்வ: ஸ ராவணி: ॥ (22)

தாநர்த$_3$யித்வா பா$_3$ணௌகை$_4$ஸ்த்ராஸயித்வா ச வாநராந் ।
ப்ரஜஹாஸ மஹாபா$_3$ஹுர்வசநம் சேத$_3$மப்$_3$ரவீத் ॥ (23)

ஶரப$_3$ந்தே$_4$ந கோ$_4$ரேண மயா ப$_3$த்$_3$தௌ$_4$ சமூமுகே$_2$ ।
ஸஹிதௌ ப்$_4$ராதராவேதௌ நிஶாமயத ராக்ஷஸா: ॥ (24)

ஏவமுக்தாஸ்து தே ஸர்வே ராக்ஷஸா: கூடயோதி$_4$ந: ।
பரம் விஸ்மயமாஜக்$_3$மு: கர்மணா தேந ஹர்ஷிதா: ॥ (25)

விநேது$_3$ஶ்ச மஹாநாதா$_3$ந் ஸர்வதோ ஜலதோ$_3$பமா: ।
ஹதோ ராம இதி க்ஞாத்வா ராவணிம் ஸமபூஜயந் ॥ (26)

தன்னுடைய சமயோசிதச் செயலையும், அதன் விளைவாக (செயல்திறன் இழந்து) படுத்துக் கிடக்கும் அவ்விருவர்களையும் நன்றாகப் பார்த்து, மிகவும் மனமகிழ்ச்சியடைந்து, எல்லா அரக்கர்களையும் உற்சாகப்படுத்தும்வண்ணம் (பின்வருமாறு) கூறினான்— (11)

''தூஷணனையும் கரனையும் கொன்றவர்களும் பேராற்றல் படைத்த சகோதரர்களுமான இராம–லட்சுமணர்கள், என்னுடைய பாணங்களால் கொல்லப்பட்டார்கள்! (12)

தேவ–அசுரர்களும் (தவவலிமை பெற்ற) முனிவர்களும் ஒரு கூட்டமாகக் கூடி இங்கே வந்தாலும், என் அம்புகளால் கட்டுண்டு கிடக்கும் இவ்விருவரையும் விடுவிக்க முடியாது. (13)

எவன் காரணமாக, கவலையிலும் சோகத்திலும் ஆழ்ந்து, (மூன்று யாமங்களைக் கொண்ட) இரவு முழுவதும் என் தந்தை படுக்கையில் உடலைக் கிடத்தாமலே கழிக்க நேர்ந்ததோ, எவன் காரணமாக, இலங்கை முழுவதும் மாரிக்கால நதியைப் போலக் கலங்கித் தவித்ததோ, எவன் நம் எல்லோருக்கும் தீங்கு விளைவித்து, நம் ஆணிவேரையே வெட்ட முயன்றானோ, அவனை நான் இன்று கொன்றுவிட்டேன்! (14,15)

எவ்வாறு சரத் கால மேகங்கள் மழை பொழிய இயலாமல் பயனற்றுப் போகின்றனவோ, அதைப் போலவே, இராம–லட்சுமணர் மற்றும் வானரர்களின் பல–பராக்கிரமம் பயனற்றுப் போய்விட்டது.'' (16)

இவ்வாறு, தன்னைச் சுற்றியிருந்த அரக்கர்களிடம் கூறிய இந்திரஜித், அங்கே கூடியிருந்த வானரத் தலைவர்களைத் தாக்கத் தொடங்கினான். (17)

எதிரிகளை மாய்க்கும் அவன், சிறந்தவையான ஒன்பது பாணங்களால் நீலனை அடித்துவிட்டு, மும்மூன்று பாணங்களால் மைந்தனையும் த்விவிதனையும் தவிக்கச் செய்தான். (18)

சிறந்த வில்லாளியான அவன், ஒரு பாணத்தை ஜாம்பவானின் மார்பில் ஆழமாகப் பாய்ச்சினான். மிக வேகமாகச் செல்லும் பத்து பாணங்களை அனுமானைக் குறிவைத்துச் செலுத்தினான். (19)

போர்க்களத்தில் இந்திரஜித்தின் திறமை மிகவும் ஓங்கியிருந்தது. அதனால், அளவுகடந்த ஆற்றல் கொண்ட கவாக்ஷனையும், சரபனையும் இரண்டிரண்டு பாணங்களால் தாக்கினான். (20)

பின்னர், மிகவும் விரைவாக செயல்பட்டு, கோலாங்கூலம் என்ற வானர இனத்தின் தலைவனையும், வாலியின் புதல்வனான அங்கதனையும் அநேக பாணங்களால் துன்புறுத்தினான். (21)

மகாபலசாலியும் பராக்கிரமம் மிக்கவனுமான இந்திரஜித், நெருப்புக் கொழுந்துகளைப் போன்ற பாணங்களால் வானரோத்தமர்களை அடித்துத் துரத்தி அட்டகாசம் செய்தான். (22)

தோளாற்றல் பெற்ற இந்திரஜித், அங்கிருந்த வானரர்களையெல்லாம் சரமாரிகளால் துன்புறுத்திவிட்டு, அவர்களைப் பயமுறுத்தி, ஏளனமாகச் சிரித்து, பின்வருமாறு பேசினான்— ''அரக்கர்களே! இணைபிரியாத சகோதரர்களான இவ்விருவரும், போர்க்களத்தில் பயங்கரமான பாணங்களால் என்னால் கட்டப்பட்டுக் கிடப்பதைப் பாருங்கள்!'' (23,24)

வஞ்சகமாகப் போர்புரிவதில் நிபுணர்களான அரக்கர்கள் எல்லோரும், அவன் கூறியதைக் கேட்டு, செயற்கரிய அந்தச் செயலால் களிப்படைந்து பேராச்சரியத்தை அடைந்தார்கள். (25)

அவர்கள், 'இராமன் கொல்லப்பட்டார்' என்பதை அறிந்து, எல்லாப் பக்கங்களிலும் மேககர்ஜனை போன்ற பேரொலிகளை எழுப்பினார்கள்; இந்திரஜித்தையும் வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்கள். (26)

நிஷ்பந்தௌ து ததா த்ருஷ்ட்வா தாவுபௌ ராமலக்ஷ்மணௌ ।
வஸுதாயாம் நிருச்ச்வாஸௌ ஹதாவித்யந்வமந்யத ॥ (27)

ஹர்ஷேண து ஸமாவிஷ்ட இந்த்ரஜித்ஸமிதிஞ்ஜய: ।
ப்ரவிவேஶ புரீம் லங்காம் ஹர்ஷயந் ஸர்வராக்ஷஸாந் ॥ (28)

ராமலக்ஷ்மணயோர்த்ருஷ்ட்வா ஶரீரே ஸாயகைஶ்சிதே ।
ஸர்வாணி சாங்கோபாங்காநி ஸுக்ரீவம் பயமாவிஶத் ॥ (29)

தமுவாச பரித்ரஸ்தம் வாநரேந்த்ரம் விபீஷண: ।
ஸபாஷ்பவதநம் தீநம் ஶோகவ்யாகுலலோசநம் ॥ (30)

அலம் த்ராஸேந ஸுக்ரீவ பாஷ்பவேகோ நிக்ருஹ்யதாம் ।
ஏவம்ப்ராயாணி யுத்தாநி விஜயோ நாஸ்தி நைஷ்டிக: ॥ (31)

ஸஶேஷபாக்யதாஸ்மாகம் யதி வீர பவிஷ்யதி ।
மோஹமேதௌ ப்ரஹாஸ்யேதே மஹாத்மாநௌ மஹாபலௌ ॥ (32)

பர்யவஸ்தாபயாத்மாநமநாதம் மாம் ச வாநர ।
ஸத்யதர்மாபிரக்தாநாம் நாஸ்தி ம்ருத்யுக்ருதம் பயம் ॥ (33)

ஏவமுக்த்வா ததஸ்தஸ்ய ஜலக்லிந்நேந பாணிநா ।
ஸுக்ரீவஸ்ய ஶுபே நேத்ரே ப்ரமமார்ஜ விபீஷண: ॥ (34)

தத: ஸலிலமாதாய வித்யயா பரிஜப்ய ச ।
ஸுக்ரீவநேத்ரே தர்மாத்மா ஸ மமார்ஜ விபீஷண: ॥ (35)

ப்ரம்ருஜ்ய வதநம் தஸ்ய கபிராஜஸ்ய தீமத: ।
அப்ரவீத்காலஸம்ப்ராப்தமஸம்ப்ரமமிதம் வச: ॥ (36)

ந கால: கபிராஜேந்த்ர வைக்லவ்யமவலம்பிதும் ।
அதிஸ்நேஹோऽப்யகாலேऽஸ்மிந் மரணாயோபகல்பதே ॥ (37)

தஸ்மாதுத்ஸ்ருஜ்ய வைக்லவ்யம் ஸர்வகார்யவிநாஶநம் ।
ஹிதம் ராமபுரோகாணாம் ஸைந்யாநாமநுசிந்த்யதாம் ॥ (38)

அதவா ரக்ஷ்யதாம் ராமோ யாவத்ஸம்க்ஞாவிபர்யய: ।
லப்தஸம்க்ஞௌ ஹி காகுத்ஸ்தௌ பயம் நோ வ்யபநேஷ்யத: ॥ (39)

நைதத்கிஞ்சந ராமஸ்ய ந ச ராமோ முமூர்ஷதி ।
ந ஹ்யேநம் ஹாஸ்யதே லக்ஷ்மீர்துர்லபா யா கதாயுஷாம் ॥ (40)

தஸ்மாதாஶ்வாஸயாத்மாநம் பலம் சாஶ்வாஸய ஸ்வகம் ।
யாவத்கார்யாணி ஸர்வாணி புந: ஸம்ஸ்தாபயாம்யஹம் ॥ (41)

அப்போது, தரையில் கிடந்த அவர்களின் உடல்கள் சலனமற்றும் மூச்சில்லாமலும் இருப்பதைக் கண்ட இந்திரஜித், இராம–லட்சுமணர்களாகிய அவ்விருவரும் மாண்டுவிட்டார்கள் என்றே நினைத்துவிட்டான். (27)

போரில் வெற்றி பெற்ற இந்திரஜித்திற்கு அளவுகடந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. மற்ற எல்லா அரக்கர்களையும் பெருமகிழ்வுறச் செய்துகொண்டு, இலங்கை நகருக்குள் புகுந்தான். (28)

இராம–லட்சுமணர்களின் உடலின் ஒவ்வொரு உறுப்பிலும் பாணங்கள் தைக்கப்பட்டிருந்ததைக் கண்ட சுக்ரீவனின் மனத்தில் பயம் குடிபுகுந்தது. (29)

துயரத்தால் கலங்கிய கண்களுடனும், இரங்கத்தக்க நிலையில் கண்ணீர் வழியும் முகத்துடன் உள்ளவனும், (ஏமாற்றத்தின் வெளிப்பாடான) பேரச்சத்துடன் இருந்தவனுமான வானர மன்னனைப் பார்த்து, விபீஷணன் (பின்வருமாறு) கூறினான்— (30)

''சுக்ரீவனே! நீ அஞ்சியது போதும்! கண்ணீர்ப் பெருக்கை நிறுத்து. போர்கள் எல்லாம் இப்படிப்பட்டனவே. யாருக்கு வெற்றி கிடைக்கும்? என்று உறுதியாகச் சொல்ல முடியாது. (31)

மாவீரனே! நமக்குப் புண்ணியப் பயன் இன்னும் மிச்சமிருந்தால், பேராற்றல் கொண்ட மகாத்மாக்களான இவ்விருவரும் மூர்ச்சை நீங்கி உணர்வு பெறுவார்கள். (32)

வானரனே! உன்னை நீயே தேற்றிக்கொள். வேறு ரட்சகன் இல்லாமல் தனித்து நிற்கும் எனக்கும் ஆறுதல் கூறு. சத்தியம், தருமம் – இவைகளில் எல்லையற்ற நம்பிக்கை கொண்டவர்களுக்கு யமனிடமிருந்து பயம் வராது.'' (33)

இவ்வாறு கூறிவிட்டு, கையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு, சுக்ரீவனுடைய அழகான இரு கண்களையும் துடைத்தான், விபீஷணன். (34)

மறுபடியும் தண்ணீர் எடுத்து, (அரக்கர்களின் மாயையை முறிக்கக் கூடிய சாத்த) மந்திரங்களால் புனிதப்படுத்தி, சுக்ரீவனுடைய கண்களை மீண்டும் விபீஷணன் துடைத்தான். புத்திமானாகிய வானரமன்னனின் முகத்தை நன்றாகத் துடைத்துவிட்டு, எவ்விதப் பரபரப்பும் இல்லாமல், அந்த சமயத்திற்கேற்ற பின்வரும் சொற்களைக் கூறினான்— (35,36)

''வானரப் பேரரசனே! மனக்கலக்கம் அடைவதற்கு உரிய தருணம் அல்ல, இது. இம்மாதிரியான நெருக்கடியான நேரத்தில் அதிக சிநேகத்தை வெளிக்காட்டுவதுகூட, மரணத்திற்குக் காரணமாக அமையும். (37)

அதனால், எல்லா செயல்பாடுகளையும் அழித்துவிடக் கூடிய மனத்தளர்ச்சியை விட்டொழித்து, இராமபிரானுக்கும் அவருடைய படையினருக்கும் நலன் பயக்கக்கூடிய செயல்கள் பற்றிச் சிந்திப்போம். (38)

அல்லது, ('நம்மால் என்ன செய்யமுடியும்?' என்று நீ கருதினால்,) உணர்விழந்து இருக்கும் காலம் வரை, ஸ்ரீராமனை நாம் கவனமாகக் காப்பாற்ற வேண்டும். காகுத்தர்களான அவ்விருவரும் மூர்ச்சை தெளிந்துவிட்டால், நமது அச்சத்தைப் போக்கிவிடுவார்கள். (39)

இராமபிரானுக்கு இது ஒன்றும் பெரிய ஆபத்து இல்லை; அவர் மாண்டு போகவும் மாட்டார். (உயிர் போய்க்கொண்டிருக்கும் நிலையிலுள்ள ஒருவரிடம் இயல்பாக வந்துசேரும் முகவாட்டம் இவரிடம் காணப்படவில்லை. மாறாக,) உயிர் போய்க்கொண்டிருப்பவர்களிடம் காணமுடியாத ஒளிவீசும் முகமலர்ச்சி, இவரை விட்டுப் போகவில்லை. (40)

ஆகையால், நீயே உன்னைத் தேற்றிக் கொள்; உன்னுடைய படைவீரர்களையும் தேற்று. இந்த நேரத்தில் நாம் இனி மேற்கொண்டு செய்யவேண்டிய ஏற்பாடுகளை, நான் மீண்டும் கவனிக்கிறேன். (41)

ஏதே ஹி பு₂ல்லநயநாஸ்த்ராஸாத₃ாக₃தஸாத்₄வஸா: ।
கர்ணே கர்ணே ப்ரகதி₂தா ஹரயோ ஹரிஸத்தம ॥ (42)

மாம் து த்₃ருஷ்ட்வா ப்ரத₄ாவந்தமநீகம் ஸம்ப்ரஹர்ஷிதும் ।
த்யஜந்து ஹரயஸ்த்ராஸம் பு₄க்தபூர்வாமிவ ஸ்ரஜம் ॥ (43)

ஸமாஶ்வாஸ்ய து ஸுக்₃ரீவம் ராக்ஷஸேந்த்₃ரோ விபீ₄ஷண: ।
வித்₃ருதம் வாநராநீகம் தத்ஸமாஶ்வாஸயத்புந: ॥ (44)

இந்த்₃ரஜித்து மஹாமாய: ஸர்வஸைந்யஸமாவ்ருத: ।
விவேஶ நக₃ரீம் லங்காம் பிதரம் சாப்₄யுபாக₃மத் ॥ (45)

தத்ர ராவணமாஸீநமபி₄வாத்₃ய க்ருதாஞ்ஜலி: ।
ஆசசக்ஷே ப்ரியம் பித்ரே நிஹதௌ ராமலக்ஷ்மணௌ ॥ (46)

உத்பபாத ததோ ஹ்ருஷ்ட: புத்ரம் ச பரிஷஸ்வஜே ।
ராவணோ ரக்ஷஸாம் மத்₄யே ஶ்ருத்வா ஶத்ரூ நிபாதிதௌ ॥ (47)

உபாக்₄ராய ஸ மூர்த்₄ந்யேநம் பப்ரச்ச₂ ப்ரீதமாநஸ: ।
ப்ருச்ச₂தே ச யத₂ாவ்ருத்தம் பித்ரே ஸர்வம் ந்யவேத₃யத் ॥
யத₂ா தௌ ஶரப₃ந்தே₄ந நிஶ்சேஷ்டௌ நிஷ்ப்ரபௌ₄ க்ருதௌ ॥ (48)

ஸ ஹர்ஷவேக₃ாநுக₃தாந்தராத்மா
ஶ்ருத்வா வசஸ்தஸ்ய மஹாரத₂ஸ்ய ।
ஜஹௌ ஜ்வரம் த₃ாஶரதே₂: ஸமுத்தி₂தம்
ப்ரஹ்ருஷ்ய வாசாபி₄நநந்த₃ புத்ரம் ॥ (49)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ ஷட்சத்வாரிம்ஶ: ஸர்க₃: ॥

ஸப்தசத்வாரிம்ஶ: ஸர்க₃:

நாக₃ப₃த்₃த₄ராமலக்ஷ்மணப்ரத₃ர்ஶநம்

ப்ரதிப்ரவிஷ்டே லங்காம் து க்ருதார்தே₂ ராவணாத்மஜே ।
ராக₄வம் பரிவார்யார்தா ரரக்ஷுர்வாநரர்ஷப₄ா: ॥ (1)

ஹநூமாநங்க₃தே₃ா நீல: ஸுஷேண: குமுதே₃ா நல: ।
க₃ஜோ க₃வாக்ஷோ க₃வய: ஶரபே₄ா க₃ந்த₄மாத₃ந: ॥ (2)

ஜாம்ப₃வாந்ருஷப₄: ஸ்கந்தே₄ா ரம்ப₄: ஶதப₃லி: ப்ருது₂: ।
வ்யூட₄ாநீகாஶ்ச யத்தாஶ்ச த்₃ருமாநாத₃ாய ஸர்வத: ॥ (3)

வீக்ஷமாணா தி₃ஶ: ஸர்வாஸ்திர்யகூ₃ர்த்₄வம் ச வாநரா: ।
த்ருணேஷ்வபி ச சேஷ்டத்ஸு ராக்ஷஸா இதி மேநிரே ॥ (4)

வானரோத்தமனே! வானரர்கள் மிகவும் அச்சங்கொண்டு கலக்கம் அடைந்திருக்கிறார்கள். கண்களை விழித்துப் பார்த்து, ஒருவருக்கொருவர் காதும் காதும் வைத்தாற்போல் பேசிக் கொள்கிறார்கள். (அதனால், இவர்களுக்குத் தைரியம் கூறுவதற்காக நான் போகிறேன்.) படையினரை உற்சாகப்படுத்துவதற்காக மலர்ந்த முகத்துடன் இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் என்னைப் பார்த்து, ஒரு தடவை உபயோகிக்கப்பட்டுவிட்ட மலர்மாலையைத் தூக்கி எறிவதைப் போல, அவர்கள் அச்சத்தைத் துறப்பார்கள்.'' (42,43)

உத்தம அரக்கனாகிய விபீஷணன், சுக்ரீவனுக்கு ஆறுதல் கூறிய பின்னர், நாலாபுறமும் சிதறிக் கிடந்த வானரப்படையினருக்கும், அவ்வாறே தைரியம் ஊட்டினார். (இனிவரும் சுலோகங்கள் இலங்கையில் நிகழ்ந்ததை விளக்குகின்றன.) (44)

எல்லாப் படைவீரர்களாலும் சூழப்பட்ட மகாமாயாவியான இந்திரஜித் இலங்கை நகருக்குள் நுழைந்தான். தந்தையின் இருப்பிடத்திற்குச் சென்று அவரையும் பார்த்தான். (45)

அங்கே அரியணையில் வீற்றிருந்த இராவணனைத் தரையில் வீழ்ந்து வணங்கி, கைகளைக் கூப்பிக்கொண்டு 'இராம–லட்சுமணர்கள் கொல்லப்பட்டார்கள்' என்ற பிரியமான செய்தியைத் தந்தையிடம் தெரிவித்தான். 'எதிரிகள் இருவரும் கொல்லப்பட்டார்கள்' என்ற செய்தியை, அரக்கர்கள் சூழ நிற்கும் இராவணன் அப்போது கேட்டு, மிகவும் மகிழ்ச்சியடைந்து, உடனே ஆசனத்திலிருந்து துள்ளிக் குதித்துப் புதல்வனை மார்புறத் தழுவிக் கொண்டான். (46,47)

இராவணன், தன் மகனை(ப் பாசத்துடன்) உச்சிமுகர்ந்து, உள்ளக்களிப்புடன் நடந்தவை அனைத்தையும் கேட்டான். தந்தை கேட்டதும், (இராம–லட்சுமணர்களாகிய) அவ்விருவரும் பாணக் கூட்டங்களால் கட்டப்பட்டு, அசைக்க முடியாமலும் ஒளி இழந்தவர்களாகவும் செய்யப்பட்டதை, எவ்வாறு நிகழ்ந்ததோ அவ்வாறே விண்ணப்பித்துக் கொண்டான். (48)

மகாரதனான இந்திரஜித்தால் கூறப்பட்ட சொற்களைக் கேட்டு, மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய நெஞ்சத்தினனாகி, இராமபிரானிடமிருந்து ஏற்பட்ட அச்சத்தையும் மனக்கவலையையும் விட்டொழித்தான்; மனக்களிப்புடன் புதல்வனை வாயாரப் புகழ்ந்து கொண்டாடினான். (49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தேழு

நாகபாசத்தில் கட்டுண்டு கிடக்கும் இராம–இலட்சுமணர்களை, சீதைக்குக் காட்டுவது

இராவணனுடைய புதல்வன், தான் நினைத்த காரியம் நிறைவேறப் பெற்று, இலங்கைக்குத் திரும்பிச் சென்றதும், மனத்துயரத்துடனிருந்த வானரோத்தமர்கள் (தரையில் படுத்துக்கிடந்த) இராமனைச் சூழ்ந்து கொண்டு, அவரைப் பாதுகாத்தார்கள். (1)

அனுமான், அங்கதன், நீலன், சுஷேணன், குமுதன், நளன், கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், ஜாம்பவான், ரிஷபன், ஸ்கந்தன், ரம்பன், சதபலி, ப்ருது ஆகிய வானரத்தலைவர்கள் அணிவகுத்து நின்று, கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தார்கள். எல்லா இடங்களிலிருந்தும் மரங்களைப் பெயர்த்துக் கொண்டு வந்து, கைகளில் தாங்கியவண்ணம் நின்றார்கள். நாற்புறங்களிலும் மேலேயும் மூலைகளிலும் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். புற்செடிகள் அசைந்தால்கூட (மாயையில் வல்லவர்களான) 'அரக்கர்கள் வந்துவிட்டார்களோ?' என்று எண்ணினார்கள். (2–4)

ராவணஶ்சாபி ஸம்ஹ்ருஷ்டோ விஸ்ருஜ்யேந்த்$_3$ரஜிதம் ஸுதம் ।
ஆஜுஹாவ தத: ஸீதாரக்ஷிணீ ராக்ஷஸீஸ்ததா$_3$ ॥ (5)

ராக்ஷஸ்யஸ்த்ரிஜடா சைவ ஶாஸநாத்ஸமுபஸ்தி$_2$தா: ।
தா உவாச ததோ ஹ்ருஷ்டோ ராக்ஷஸீ ராக்ஷஸாதி$_4$ப: ॥ (6)

ஹதாவிந்த்$_3$ரஜிதாக்$_2$யாத வைதே$_3$ஹ்யா ராமலக்ஷ்மணௌ ।
புஷ்பகம் ச ஸமாரோப்ய த$_3$ர்ஶயத்$_4$வம் ஹதௌ ரணே ॥ (7)

யதா$_3$ஶ்ரயாத$_3$வஷ்டப்$_3$தா$_4$ நேயம் மாமுபதிஷ்ட$_2$தி ।
ஸோ஽ஸ்யா ப$_4$ர்தா ஸஹ ப்$_4$ராத்ரா நிரஸ்தோ ரணமூர்த$_4$நி ॥ (8)

நிர்விஶங்கா நிருத்$_3$விக்$_3$நா நிரபேக்ஷா ச மைதி$_2$லீ ।
மாமுபஸ்தா$_2$ஸ்யதே ஸீதா ஸர்வாப$_4$ரணபூ$_4$ஷிதா ॥ (9)

அத்$_3$ய காலவஶம் ப்ராப்தம் ரணே ராமம் ஸலக்ஷ்மணம் ।
ஸ்வவேக்ஷ்ய விநிவ்ருத்தாஶா சாந்யாம் க$_3$திமபஶ்யதீ ॥
நிரபேக்ஷா விஶாலாக்ஷீ மாமுபஸ்தா$_2$ஸ்யதே ஸ்வயம் ॥ (10)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராவணஸ்ய து$_3$ராத்மந: ।
ராக்ஷஸ்யஸ்தாஸ்ததே$_2$த்யுக்த்வா ஜக்$_3$முர்வை யத்ர புஷ்பகம் ॥ (11)

தத: புஷ்பகமாதா$_3$ய ராக்ஷஸ்யோ ராவணாக்ஞயா ।
அஶோகவநிகாஸ்தா$_2$ம் தாம் மைதி$_2$லீம் ஸமுபாநயந் ॥ (12)

தாமாதா$_3$ய து ராக்ஷஸ்யோ ப$_4$ர்த்ருஶோகபராஜிதாம் ।
ஸீதாமாரோபயாமாஸுர்விமாநம் புஷ்பகம் ததா$_3$ ॥ (13)

தத: புஷ்பகமாரோப்ய ஸீதாம் த்ரிஜடயா ஸஹ ।
ஜக்$_3$முர்த$_3$ர்ஶயிதும் தஸ்யை ராக்ஷஸ்யோ ராமலக்ஷ்மணௌ ॥ (14)

ராவணோऽகாரயல்லங்காம் பதாகாத்$_4$வஜமாலிநீம் ।
ப்ராகோ$_4$ஷயத ஹ்ருஷ்டஶ்ச லங்காயாம் ராக்ஷஸேஶ்வர: ॥
ராக$_4$வோ லக்ஷ்மணஶ்சைவ ஹதாவிந்த்$_3$ரஜிதா ரணே ॥ (15)

விமாநேநாபி ஸீதா து க$_3$த்வா த்ரிஜடயா ஸஹ ।
த$_3$த$_3$ர்ஶ வாநராணாம் து ஸர்வம் ஸைந்யம் நிபாதிதம் ॥ (16)

ப்ரஹ்ருஷ்டமநஸஶ்சாபி த$_3$த$_3$ர்ஶ பிஶிதாஶநாந் ।
வாநராம்ஶ்சாபி து$_3$:கா$_2$ர்தாந் ராமலக்ஷ்மணபார்ஶ்வத: ॥ (17)

தத: ஸீதா த$_3$த$_3$ர்ஶோபௌ$_4$ ஶயாநௌ ஶரதல்பயோ: ।
லக்ஷ்மணம் சாபி ராமம் விஸம்க்ஞௌ ஶரபீடி$_3$தௌ ॥ (18)

வித்$_4$வஸ்தகவசௌ வீரௌ விப்ரவித்$_3$த$_4$ஶராஸநௌ ।
ஸாயகைஶ்சி$_2$ந்நஸர்வாங்கௌ$_3$ ஶரஸ்தம்ப$_3$மயௌ க்ஷிதௌ ॥ (19)

மனப்பூரிப்புடனிருந்த இராவணன், புதல்வனான இந்திரஜித்திற்கு விடைகொடுத்து அனுப்பியபின், அப்போது சீதைக்குக் காவலாக நிறுத்தப்பட்டிருந்த அரக்கிகளை (தான் இருந்த இடத்திற்கு) அழைப்பித்தான். (5)

ஆணை கிடைத்தவுடனே, திரிஜடையும் மற்ற அரக்கிகளும் அவனிடம் வந்து சேர்ந்தார்கள். மனமகிழ்ச்சியுடனிருந்த அரக்க மன்னன், அந்த அரக்கிகளைப் பார்த்துக் கூறினான்— (6)

''நீங்கள் வைதேகியிடம் சென்று, இராம–லட்சுமணர்கள் இந்திரஜித்தால் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று சொல்லுங்கள். (அவளுக்கு உங்கள் மீது நம்பிக்கை ஏற்படாது. அதனால்,) அவளை புஷ்பக விமானத்தில் ஏற்றி, போர்க்களம் சென்று, கொல்லப்பட்டு(த் தரையில்) கிடக்கும் அவர்களை நேரில் காணச் செய்யுங்கள். (7)

இவள், ('இவன் என்னைக் காப்பாற்றுவான்' என்று) எவனிடம் நம்பிக்கை வைத்து, திமிர்பிடித்து, என்னை அலட்சியப்படுத்தினாளோ, இவளுடைய கணவனாகிய அவன், தன் தம்பியோடுகூட போர்க்களத்தில் கொல்லப்பட்டான்! (8)

இனிமேலும், மிதிலைமன்னனின் மகளான சீதை, அவனை (இராமன் வந்து தன்னை மீட்டுப் போவதை) எதிர்பார்த்துக் கொண்டிருக்க மாட்டாள். அவனை மறந்து, கவலை ஒழிந்து (தயக்கமில்லாமல்) எல்லா அணிகலன்களும் அணிந்துகொண்டு, (மனப்பூர்வமாக) என்னிடம் வருவாள். (9)

இப்போது, இராம–லட்சுமணர்கள் போரில் யமன் வசப்பட்டுவிட்டதைத் தன் கண்களாலேயே கண்டதும், அவனிடம் வைத்திருந்த நம்பிக்கையைக் கைவிடுவாள். விசாலமான கண்களையுடைய அவள், வேறு பற்றுக்கோட்டையும் காணாமல், எல்லாவற்றிலும் ஆசை நீங்கியவளாய், தானாகவே என்னை நாடி வருவாள்.'' (10)

தீயவனான இராவணனின் அந்தச் சொற்களைக் கேட்ட அரக்கிகள், ''அப்படியே செய்கிறோம்'' என்று கூறிவிட்டு, புஷ்பக விமானம் இருந்த இடத்தை நோக்கிச் சென்றார்கள். இராவணனுடைய கட்டளைப்படி, புஷ்பக விமானத்தை எடுத்துக் கொண்டு, அசோகவனத்தில் சீதாப் பிராட்டியார் இருந்த இடத்திற்கு, அந்த அரக்கிகள் போனார்கள். (11,12)

பின்னர், கணவரைப் பற்றிய நினைவினால் சோக வசப்பட்டிருந்த சீதையை, அந்த அரக்கிகளே தூக்கி புஷ்பக விமானத்தில் ஏற்றி அமர வைத்தார்கள். (13)

திரிஜடையும் மற்ற அரக்கிகளும், சீதாதேவியை புஷ்பக விமானத்தில் அமர வைத்து, அவளுக்கு இராம–லட்சுமணர்களைக் காட்டுவதற்காக (போர்க்களம் நோக்கி)ச் சென்றார்கள். அரக்க மன்னனான இராவணன் உள்ளம் பூரித்து, இலங்கைப் பட்டணத்தைத் தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கச் செய்தான். 'போர்க்களத்தில் இராம–லட்சுமணர்கள் இந்திரஜித்தால் கொல்லப்பட்டார்கள்' என்றும் அறிவிக்கச் செய்தான். (14,15)

சீதாதேவி, விமானத்தில் திரிஜடையோடு கூடவே சென்று, வானரப்படை முழுவதும் தோல்வியுற்றுக் கிடப்பதைப் பார்த்தாள். (16)

மேலும், அரக்கர்கள் உற்சாகத்தோடு இருப்பதையும், வானரர்கள் இராம–லட்சுமணர்களின் அருகில் மிகுந்த துயரத்துடன் நிற்பதையும் கண்டாள். (17)

அப்போது, பாணங்களாலான படுக்கையில், இராமனும் லட்சுமணனும் பிரக்ஞை இழந்து, அம்புகளால் தைக்கப்பட்டவர்களாகப் படுத்துக் கிடப்பதையும் பார்த்தாள். (18)

அவ்விருவருடைய கவசங்களும் உடைந்து போயிருந்தன; வீரர்களான அவர்களுடைய விற்களும் பாணங்களும் தனியே கிடந்தன; உடல் அங்கங்களெல்லாம் பாணங்களால் துளைக்கப்பட்டிருந்தன; அம்புகளாலான குவியல் போல் தரையில் கிடந்தார்கள். (19)

தௌ த்₃ருஷ்ட்வா ப்₄ராதரௌ தத்ர வீரௌ ஸா புருஷர்ஷபௌ₄ ।
ஶயானௌ புண்ட₃ரீகாக்ஷௌ குமாரவிவ பாவகீ ॥ (20)

ஶரதல்பக₃தௌ வீரௌ தத₂ாபூ₄தௌ நரர்ஷபௌ₄ ।
து₃:க₂ார்தா ஸுப்₄ருஶம் ஸீதா ஸுசிரம் விலலாப ஹ ॥ (21)

ப₄ர்தாரமநவத்₃யாங்கீ₃ லக்ஷ்மணம் சாஸிதேக்ஷணா ।
ப்ரேக்ஷ்ய பாம்ஸுஷு வேஷ்டந்தௌ ருரோத₃ ஜநகாத்மஜா ॥ (22)

ஸா ப₃ாஷ்பஶோகாபி₄ஹதா ஸமீக்ஷ்ய
தௌ ப்₄ராதரௌ தே₃வஸமப்ரப₄ாவௌ ।
விதர்கயந்தீ நித₄நம் தயோ: ஸா
து₃:க₂ாந்விதா வாக்யமித₃ம் ஜக₃ாத₃ ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ ஸப்தசத்வாரிம்ஶ: ஸர்க₃: ॥

அஷ்டசத்வாரிம்ஶ: ஸர்க₃:

ஸீதாஶ்வாஸநம்

ப₄ர்தாரம் நிஹதம் த்₃ருஷ்ட்வா லக்ஷ்மணம் ச மஹாப₃லம் ।
விலலாப ப்₄ருஶம் ஸீதா கருணம் ஶோககர்ஶிதா ॥ (1)

ஊசுர்லக்ஷணிநோ யே மாம் புத்ரிண்யவித₄வேதி ச ।
தேऽத்₃ய ஸர்வே ஹதே ராமே ஜ்ஞாநிநோऽந்ருதவாதி₃ந: ॥ (2)

யஜ்வநோ மஹிஷீம் யே மாமூசு: பத்நீம் ச ஸத்ரிண: ।
தேऽத்₃ய ஸர்வே ஹதே ராமே ஜ்ஞாநிநோऽந்ருதவாதி₃ந: ॥ (3)

ஊசு: ஸம்ஶ்ரவணே யே மாம் த்₃விஜா: கார்தாந்திகா: ஶுப₄ாம் ।
தேऽத்₃ய ஸர்வே ஹதே ராமே ஜ்ஞாநிநோऽந்ருதவாதி₃ந: ॥ (4)

வீரபார்தி₂வபத்நீ த்வம் யே த₄ந்யேதி ச மாம் விது₃: ।
தேऽத்₃ய ஸர்வே ஹதே ராமே ஜ்ஞாநிநோऽந்ருதவாதி₃ந: ॥ (5)

இமாநி க₂லு பத்₃மாநி பாத₃யோர்யை: கில ஸ்த்ரிய: ।
ஆதி₄ராஜ்யேऽபி₄ஷிச்யந்தே நரேந்த்₃ரை: பதிபி₄: ஸஹ ॥ (6)

வைத₄வ்யம் யாந்தி யைர்நார்யோऽலக்ஷணைர்ப₄ாக்₃யது₃ர்லப₄ா: ।
நாத்மநஸ்தாநி பஶ்யாமி பஶ்யந்தீ ஹதலக்ஷணா ॥ (7)

தாமரையிதழ் போன்ற கண்கள்; தோல்வியைக் கண்டிராத மாவீரர்கள்; மானுடக் காளைகள்; அக்னி பகவானின் இரு புதல்வர்களான ஸ்கந்தன், விசாகனைப் போன்றவர்கள்; புருஷோத்தமர்களான சகோதரர்கள் – இவ்வளவு மேன்மை பொருந்திய அவ்விருவரும் அம்புப்படுக்கையில் (உணர்விழந்து) படுத்துக் கிடப்பதைப் பார்த்து, மிகவும் துயரத்தில் மூழ்கிய சீதாதேவி நீண்டநேரம் கண்ணீர் உகுத்தாள். ஐயகோ!.... (20,21)

கருணை படந்த கண்களையும் குற்றமில்லாத அங்கங்களையுமுடைய ஜனககுமாரி, தன் கணவர் மற்றும் லட்சுமணன் புழுதித் தரையில் சுருண்டு கிடப்பதைக் கண்டு, வாய்விட்டுக் கதறினாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது; இதயத்தில் சோகம் சூழ்ந்திருந்தது. தேவர்களுக்கு நிகரான பேராற்றலுடைய அவர்களை, அந்த நிலையில் பார்த்ததும், அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்றே சந்தேகித்து, சொல்லொணாத் துயரத்திலும் கவலையிலும் மூழ்கி, தனக்குள் (பின்வருமாறு) பேசிக் கொண்டாள். (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தெட்டு

திரிஜடை ஆறுதல் கூறுதல்!

மகாபலசாலியான இலக்குவனும், தன் கணவரும் இறந்து கிடந்ததைக் கண்களால் கண்டதும், சோகத்தால் பரிதவித்த சீதை மிகவும் பரிதாபமாகப் புலம்பினாள்— (1)

''உடல் அங்க இலக்கணம் அறிந்தவர்கள், என்னைப் புதல்வர்களைப் பெறுபவள் (புத்திர பாக்கியம் உள்ளவள்) என்றும், என்றைக்கும் கணவனோடு இருப்பவள் (தீர்க்க சுமங்கலி) என்றும் சொன்னார்கள். இப்போது, இராமப்பிரபு கொல்லப்பட்டமையால், அந்தச் சான்றோர்களின் வாக்கு பொய்யாகப் போய்விட்டதே! எந்த மகான்கள், 'மகா யாகங்களையும், (நீண்ட காலம் செய்யும்) ஸத்ரங்களையும் செய்யும் மாமன்னரின் தருமபத்தினியாக விளங்கப் போகிறாய்' என்று என்னைப் பார்த்து கூறினார்களோ, அவர்கள் எல்லோரும், இராமன் இறந்துவிட்டபடியால், பொய்யர்களாகப் போய் விட்டார்களே! (2,3)

ஜோதிடக்கலை வல்லுநர்களான அந்தணர்கள், என் எதிரிலேயே (நான் கேட்டுக் கொண்டிருக்கும்போதே) 'நீ எப்போதும் சுமங்கலியாக இருப்பாய்' என்று சொன்னார்கள். இப்போது, இராமன் இறந்துவிட்டபடியால், அவர்கள் பொய்யர்களாகி விட்டார்கள். என்னைப் பார்த்து, 'வீரம் மிகுந்த மன்னனின் மனைவியாகும் பேறு பெற்றவள் நீ' என்று மகான்கள் கூறினார்களே. இப்போது, இராமன் கொல்லப்பட்டு விட்டபடியால், அவர்கள் பொய் பேசியவர்களாக ஆகிவிட்டார்கள். (4,5)

நற்குடியில் பிறந்த எந்தப் பெண்ணின் பாதங்களில் பத்மரேகை காணப்படுகிறதோ, அப்படிப்பட்ட அவள், அரசர்களுக்கெல்லாம் பேரரசனானவனை மணந்து பட்டத்தரசியாக விளங்குவாள் (என்று சொல்லப்படுகிறது). என் கால்களின் அடிப்பகுதியில் அத்தகைய ரேகைகள் இன்னும் காணப்படுகின்றன. (ஆனால், என் கணவரே உயிரைத் துறந்தபின், பட்டத்தரசியாக முடிசூட்டுதல் எவ்வாறு நடக்கமுடியும்?) (6)

அமங்களமான எந்த குறிகள் காரணமாக பெண்கள் தம் பாக்கியத்தை இழக்கின்றார்களோ, எதனால் கணவனை இழக்கிறார்களோ, அத்தகைய தீய குறிகளை, நான் என் உடல் முழுவதும் கவனமாகத் தேடிப் பார்த்தும் காணவில்லையே! என்னிடம் காணப்படும் நற்குறிகள், அதற்குரிய நற்பலனை அளிக்காமல் போய்விட்டனவே? (7)

ஸத்யநாமாநி பத்3மாநி ஸ்த்ரீணாமுக்தாநி லக்ஷணை: ।
தாந்யத்3ய நிஹதே ராமே விததா2நி ப4வந்தி மே ॥ (8)

கேஶா: ஸூக்ஷ்மா: ஸமா நீலா ப்4ருவௌ சாஸங்க3தே மம ।
வ்ருத்தே சாரோமஶே ஜங்கே4 த3ந்தாஶ்சாவிரலா மம ॥ (9)

ஶங்கே2 நேத்ரே கரௌ பாதௌ3 கு3ல்பா2வூரூ ச மே சிதௌ ।
அநுவ்ருத்தநகா2: ஸ்நிக்3தா4: ஸமாஶ்சாங்கு3லயோ மம ॥ (10)

ஸ்தநௌ சாவிரலௌ பீநௌ மமேமௌ மக்3நசூசுகௌ ।
மக்3நா சோத்ஸங்கி3நீ நாபி4: பார்ஶ்வோரஸ்காஶ்ச மே சிதா: ॥ (11)

மம வர்ணோ மணிநிபோ4 ம்ருதூ3ந்யங்க3ருஹாணி ச ।
ப்ரதிஷ்டி2தாம் த்3வாத3ஶபி4ர்மாமூசு: ஶுப4லக்ஷணாம் ॥ (12)

ஸமக்3ரயவமச்சி2த்3ரம் பாணிபாத3ம் ச வர்ணவத் ।
மந்த3ஸ்மிதேத்யேவ ச மாம் கந்யாலக்ஷணிநோ விது3: ॥ (13)

ஆதி4ராஜ்யேऽபி4ஷேகோ மே ப்3ராஹ்மணை: பதிநா ஸஹ ।
க்ருதாந்தகுஶலைருக்தம் தத்ஸர்வம் விததீ2க்ருதம் ॥ (14)

ஶோத4யித்வா ஜநஸ்தா2நம் ப்ரவ்ருத்திமுபலப்4ய ச ।
தீர்த்வா ஸாக3ரமக்ஷோப்4யம் ப்4ராதரௌ கோ3ஷ்பதே3 ஹதௌ ॥ (15)

நநு வாருணமாக்3நேயமைந்த்3ரம் வாயவ்யமேவ ச ।
அஸ்த்ரம் ப்3ரஹ்மஶிரஶ்சைவ ராக4வௌ ப்ரத்யபத்3யதாம் ॥ (16)

அத்3ருஶ்யமாநேந ரணே மாயயா வாஸவோபமௌ ।
மம நாதா2வநாதா2யா நிஹதௌ ராமலக்ஷ்மணௌ ॥ (17)

ந ஹி த்3ருஷ்டிபத2ம் ப்ராப்ய ராக4வஸ்ய ரணே ரிபு: ।
ஜீவந் ப்ரதிநிவர்தேத யத்3யபி ஸ்யாந்மநோஜவ: ॥ (18)

ந காலஸ்யாதிபா4ரோऽஸ்தி க்ருதாந்தஶ்ச ஸுது3ர்ஜய: ।
யத்ர ராம: ஸஹ ப்4ராத்ரா ஶேதே யுதி4 நிபாதித: ॥ (19)

ந ஶோசாமி ததா2 ராமம் லக்ஷ்மணம் ச மஹாப3லம் ।
நாத்மாநம் ஜநநீம் வாபி யதா2 ஶ்வஶ்ரூம் தபஸ்விநீம் ॥ (20)

எந்தப் பெண்களின் கைகால்களில் பத்மரேகைகள் காணப்படுகின்றனவோ, அவைகள் நற்பயன்களை அவர்களுக்கு நிச்சயமாகக் கொடுக்கும் என்று, அங்கலட்சண விற்பன்னர்கள் கூறுகிறார்கள். ஆனால், இப்போது என்ன ஆகியிருக்கிறது? இராமன் கொல்லப்பட்டுக் கிடக்கிறார். உடலில் காணப்படும் சுபலட்சணங்கள் எல்லாம், என் விஷயத்தில் வீணாகப் போய்விட்டன. (8)

என்னுடைய தலையிலுள்ள கூந்தல் மெல்லியதாகவும் கருமையாகவும் சமமாகவும், என் புருவங்கள் இணையாமல் தனித்தனியேயும், என் முழங்கால்கள் உருண்டு திரண்டு ரோமங்கள் இல்லாமலும், என் பற்கள் இடைவெளியில்லாமல் சேர்ந்தும் இருக்கின்றன. (9)

என்னுடைய நெற்றியின் இருபுறங்களும் கண்களும் கைகளும் கால்களும் கணுக்கால்களும் தொடைகளும் சதைப்பற்றுடன் இருக்கின்றன. என் விரல்கள், பளபளக்கும் வட்டமான நகங்களுடனும் சரியான அளவுப்படியும் அமைந்திருக்கின்றன. (10)

என்னுடைய மார்பகங்கள் இடைவெளியில்லாமல் இணைந்தும் பருத்தும் உள்ளடங்கிய காம்புகளுடனும் இருக்கின்றன. என் தொப்புள் ஆழமாக, மேல்வரம்பு தடித்தும் இருக்கிறது; என் விலாப்புறங்களும் மார்பின் மேற்புறமும் சதைப்பற்றுள்ளவைகளாக இருக்கின்றன. (11)

என் உடல் வண்ணம் பட்டை தீட்டிய மாணிக்கம் போல் பிரகாசிக்கிறது. உடலில் உரோமங்கள் மென்மையாக இருக்கின்றன. (இரண்டு கால்களின்) பத்து விரல்கள், இரு உள்ளங்கால்கள் ஆகிய பன்னிரண்டும் பூமியில் அழுத்தமாகப் பதிகின்றன. இவைகளையெல்லாம் பார்த்துவிட்டு அங்கலட்சணம் அறிந்தவர்கள், 'நல்ல உடற்குறிகள் அமையப் பெற்றவள்' என்றும் சொன்னார்கள். (12)

என்னுடைய உள்ளங்கைகள், உள்ளங்கால்கள் செவ்வொளி வீசுகின்றன; யவ தானியத்தின் ரேகைகள் காணப்படுகின்றன; என் கைவிரல்களை இணைத்துப் பார்க்கும்போது இடைவெளி காணப்படுவதில்லை. கன்னிகைகளின் அங்க இலக்கணம் அறிந்தவர்கள், மேற்சொன்ன குறிகளைப் பார்த்து, என்னை (உள்மனமகிழ்ச்சியின் புறத்தோற்றமான) 'எப்போதும் இளநகையுடன் விளங்குபவள்' என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஜோதிட நூல் வல்லுநர்களான பிராமணர்கள், எனக்கு என் கணவருடன்கூட, 'பட்டத்தரசியாக முடிசூட்டல் நடைபெறும்' என்றும் சொன்னார்கள். இப்போது, அந்தச் சொற்கள் பொருளற்றுப் போய்விட்டனவே. (13,14)

சகோதரர்கள் இருவரும், ஜனஸ்தானத்தைத் தூய்மையாக்கிவிட்டு (அங்கிருந்த பயங்கரமான அரக்கர்களையெல்லாம் கொன்றுவிட்டு), நான் இருக்குமிடத்தை அறிந்துகொண்டு, கலக்கமுடியாத பெருங்கடலை (அணைகட்டி)க் கடந்து வந்து, கடைசியில் என்ன கஷ்டம்! குளம்படி நீரில் மூழ்கி இறப்பதைப் போல, ஒரு சிறிய அரக்கப்படையினரால் கொல்லப்பட்டார்களே! (15)

ஆனால், ரகுகுல திலகங்களான இவ்விருவரும் வாருணம்–ஆக்னேயம்–ஐந்த்ரம்–வாயவ்யம்–பிரம்மசிரஸ் என்ற அஸ்திரங்களையெல்லாம் நன்கு அறிந்தவர்களாயிற்றே! (முன்பு பல தடவைகள் செய்ததுபோல, இப்போது ஏன் அந்த அஸ்திரங்களை உபயோகித்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை?) (16)

வேறு புகலிடமில்லாத என்னை, இந்திரனுக்கு நிகரான பேராற்றல் படைத்த இராம–லட்சுமணர்கள் பாதுகாத்து வந்தார்கள். ஆனால், மாயவித்தையை மேற்கொண்டு போர்க்களத்தில் கண்ணுக்குப் புலப்படாமலிருந்த அவனால் (இந்திரஜித்தால்) கொல்லப்பட்டுவிட்டார்கள். (17)

போர்க்களத்தில், இராமனுடைய பார்வையில் பட்டுவிட்ட எதிரி, அவன் மனோவேகம் போல் ஓட வல்லவனாக இருந்தாலும்கூட, உயிருடன் திரும்பிப் போகவே மாட்டான். (18)

ஈடில்லாத பராக்கிரமசாலியான இராமன், தம்பியுடன்கூட, போரில் வீழ்த்தப்பட்டுத் தரையில் கிடக்கிறார்! என்றால், 'காலத்திற்கு எதுவும் கஷ்டமான காரியம் இல்லை!' என்பது சத்தியமன்றோ? யமனும்கூட எவராலும் வெல்லமுடியாதவன் என்பதும் நிதர்சனமான உண்மை. (19)

நான், இராமனைப் பற்றியோ, பலசாலியான இலக்குவனைப் பற்றியோ, என்னைப் பற்றியோ, என் தாயாரைப் பற்றியோ கவலைப்படவில்லை. ஆனால், தவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் என் மாமியாரைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். (20)

ஸாநுசிந்தயதே நித்யம் ஸமாப்தவ்ரதமாக$_3$தம் ।
கத$_3$ா த்$_3$ரக்ஷ்யாமி ஸீதாம் ச லக்ஷ்மணம் ச ஸராக$_4$வம் ॥ (21)

பரிதே$_3$வயமாநாம் தாம் ராக்ஷஸீ த்ரிஜடாப்$_3$ரவீத் ।
மா விஷாத$_3$ம் க்ருத$_2$ா தே$_3$வி ப$_4$ர்தாயம் தவ ஜீவதி ॥ (22)

காரணாநி ச வக்ஷ்யாமி மஹாந்தி ஸத்$_3$ருஶாநி ச ।
யதே$_2$மௌ ஜீவதோ தே$_3$வீ ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ॥ (23)

ந ஹி கோபபரீதாநி ஹர்ஷபர்யுத்ஸுகாநி ச ।
ப$_4$வந்தி யுதி$_4$ யோத$_4$ாநாம் முக$_2$ாநி நிஹதே பதௌ ॥ (24)

இத$_3$ம் விமாநம் வைதே$_3$ஹி புஷ்பகம் நாம நாமத: ।
தி$_3$வ்யம் த்வாம் த$_4$ாரயேந்நைவம் யத்$_3$யேதௌ க$_3$தஜீவிதௌ ॥ (25)

ஹதவீரப்ரத$_4$ாநா ஹி ஹதோத்ஸாஹா நிருத்$_3$யமா ।
ஸேநா ப்$_4$ரமதி ஸங்க்$_2$யேஷு ஹதகர்ணேவ நௌர்ஜலே ॥ (26)

இயம் புநரஸம்ப்$_4$ராந்தா நிருத்$_3$விக்$_3$நா தரஸ்விநீ ।
ஸேநா ரக்ஷதி காகுத்ஸ்தௌ$_2$ மயா ப்ரீத்யா நிவேதி$_3$தௌ ॥ (27)

ஸா த்வம் ப$_4$வ ஸுவிஸ்ரப்$_3$த$_4$ா அநுமாநை: ஸுகோ$_2$த$_3$யை: ।
அஹதௌ பஶ்ய காகுத்ஸ்தௌ$_2$ ஸ்நேஹாதே$_3$தத்$_3$ப்$_3$ரவீமி தே ॥ (28)

அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கத$_3$ாசந ।
சாரித்ரஸுக$_2$ஶீலத்வாத்ப்ரவிஷ்டாஸி மநோ மம ॥ (29)

நேமௌ ஶக்யௌ ரணே ஜேதும் ஸேந்த்$_3$ரைரபி ஸுராஸுரை: ।
தாத்$_3$ருஶம் த$_3$ர்ஶநம் த்$_3$ருஷ்ட்வா மயா சாவேதி$_3$தம் தவ ॥ (30)

இத$_3$ம் ச ஸுமஹச்சிஹ்நம் ஶநை: பஶ்யஸ்வ மைதி$_2$லி ।
நி:ஸம்க்ஞாவப்யுப$_4$ாவேதௌ நைவ லக்ஷ்மீர்விமுஞ்சதி ॥ (31)

ப்ராயேண க$_3$தஸத்த்வாநாம் புருஷாணாம் க$_3$தாயுஷாம் ।
த்$_3$ருஶ்யமாநேஷு வக்த்ரேஷு பரம் ப$_4$வதி வைக்ருதம் ॥ (32)

த்யஜ ஶோகம் ச மோஹம் ச து$_3$:க$_2$ம் ச ஜநகாத்மஜே ।
ராமலக்ஷ்மணயோரர்தே$_2$ நாத்$_3$ய ஶக்யமஜீவிதும் ॥ (33)

ஶ்ருத்வா து வசநம் தஸ்யா: ஸீதா ஸுரஸுதோபமா ।
க்ருதாஞ்ஜலிருவாசேத$_3$மேவமஸ்த்விதி மைதி$_2$லீ ॥ (34)

விமாநம் புஷ்பகம் தத்து ஸந்நிவர்த்ய மநோஜவம் ।
தீ$_3$நா த்ரிஜடயா ஸீதா லங்காமேவ ப்ரவேஶிதா ॥ (35)

'வனவாசத்திற்காக விதிக்கப்பட்ட காலக்கெடு முடிந்து, இராமன், லட்சுமணன், சீதை ஆகியோர் திரும்பி வருவதை, நான் எப்போது காண்பேன்?' என்று, நாள்தோறும் அவர் சிந்தனையில் இருக்கிறார்.'' (21)

இவ்வாறு புலம்பிக் கொண்டிருந்த சீதையிடம் அரக்கியான திரிஜடை, 'அம்மணி! நீங்கள் துயரப்பட வேண்டாம். உங்களுடைய கணவர் உயிருடன் இருக்கிறார்' என்று கூறினாள். (22)

''தேவி! சகோதரர்களான இராம–லட்சுணமர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதற்கு, அசைக்க முடியாத பொருத்தமான காரணங்களைக் கூறுகிறேன். (23)

போரில் படைத்தலைவன் கொல்லப்பட்டிருந்தால் மற்ற போர்வீரர்களுடைய முகங்களில் (எதிரியிடம்) கோபமும், (நம் தலைவர் எழுந்து வருவார் என்ற) மலர்ச்சியும் இருக்கமாட்டா. வைதேகி! புஷ்பகம் என்ற பெயர் கொண்ட இந்த விமானம் தெய்விகமானது. இவர்கள் இருவருடைய உயிர் போயிருந்தால், (கணவனை இழந்த) உங்களை இந்த விமானம் சுமக்காது. (24,25)

படைத்தலைவனைப் பறிகொடுத்த ஒரு சேனை உற்சாகமிழந்து, முயற்சியைக் கைவிட்டு, மாலுமியில்லாத ஓடம் தண்ணீரில் தத்தளிப்பதைப் போல போர்க்களத்தில் சிதறி ஓடும். (26)

ஆனால், இந்த (வானர) படை மனக்கலக்கமும் அச்சமும் இல்லாமல் காகுத்தர் இருவரையும் தைரியமாகப் பாதுகாத்து வருகிறது. உங்களிடமுள்ள அன்பினால் இந்த விஷயங்களைப் பேசினேன். (27)

எதிர்காலத்தில் வரவிருக்கும் நன்மைகளை சூசிப்பிக்கும் ஆதாரபூர்வமான அனுமானங்களை எண்ணிப் பார்த்து, துயரத்தைக் கைவிடுங்கள். காகுத்தர்கள் இருவரும் கொல்லப்படவில்லை (முகவாட்டம் ஏற்படாததால், அவர்கள் மரணம் அடையவில்லை) என்பதைக் கண்ணாரப் பாருங்கள். உங்களிடமுள்ள நெருக்கத்தால் இவ்வாறு கூறுகிறேன். (28)

நான், இதுவரையில் பொய் சொன்னதில்லை. இனி ஒருபோதும் சொல்ல மாட்டேன். உங்களுடைய கற்புநெறி இனிய குணங்களால் நீங்கள் என் மனத்தில் குடிகொண்டு விட்டீர்கள். போர்முனையில் இந்திரன் உள்ளிட்ட தேவ–அசுரர்களாலும் இவ்விருவரையும் வெல்ல முடியாது. அப்படிப்பட்ட லட்சணங்கள் இவர்களிடம் காணப்படுவதால், நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். (29,30)

மைதிலி! இந்த முக்கியமான அடையாளத்தையும் இப்போது கவனித்துப் பாருங்கள்; உணர்விழந்தவர்களாக இருந்தபோதிலும், இவர்களுடைய முகம் களையிழக்கவில்லை. (31)

ஆயுள் முடிந்து உயிரிழந்த மனிதர்களின் முகங்களைப் பார்த்தால் பெரும்பாலும், மிகவும் (அச்சந்தரும்) மாற்றங்கள் காணப்படும். (32)

ஜானகி! இராம–லட்சுமணர்களைப் பற்றிய துயரத்தையும் மனமயக்கத்தையும், கவலையையும் விட்டு விடுங்கள். (நாம் காணும் நற்குறிகளின் ஆதாரத்தில் சொல்கிறேன்.) இப்போது, இவர்கள் உயிரற்றவர்களாக இருக்க முடியாது.'' (33)

அவளுடைய (திரிஜடையினுடைய தைரியமூட்டும்) சொற்களைக் கேட்ட தேவநங்கை போன்ற மைதிலி, (ஆறுதல் கூறிய அவளுக்கு நன்றி தெரிவிப்பது போல) இரு கைகளையும் குவித்து, 'அவ்வாறே இருக்கட்டும்' என்று பதில் சொன்னாள். (34)

பின்னர், மனோவேகம் கொண்ட புஷ்பக விமானத்தைத் திருப்பி, துயரத்தில் ஆழ்ந்திருந்த சீதையை மறுபடியும் இலங்கைக்கே கொண்டு போய்ச் சேர்த்தாள், திரிஜடை. (35)

ததஸ்த்ரிஜடயா ஸார்த$_4$ம் புஷ்பகாத$_3$வருஹ்ய ஸா ।
அஶோகவநிகாமேவ ராக்ஷஸீபி$_4$: ப்ரவேஶிதா ॥ (36)

ப்ரவிஶ்ய ஸீதா ப$_3$ஹுவ்ருக்ஷஷண்டா$_3$ம்
தாம் ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய விஹாரபூ$_4$மிம் ।
ஸம்ப்ரேக்ஷ்ய ஸஞ்சிந்த்ய ச ராஜபுத்ரௌ
பரம் விஷாத$_3$ம் ஸமுபாஜகா$_3$ம ॥ (37)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஏகோநபஞ்சாஶ: ஸர்க$_3$:

ராமநிர்வேத:

கோ$_4$ரேண ஶரப$_3$ந்தே$_4$ந ப$_3$த்$_3$தௌ$_4$ த$_3$ஶரதா$_2$த்மஜௌ ।
நி:ஶ்வஸந்தௌ யதா$_2$ நாகௌ$_3$ ஶயாநௌ ருதி$_4$ரோக்ஷிதௌ ॥ (1)

ஸர்வே தே வாநரஶ்ரேஷ்டா$_2$: ஸஸுக்$_3$ரீவா மஹாப$_3$லா: ।
பரிவார்ய மஹாத்மாநௌ தஸ்து$_2$: ஶோகபரிப்லுதா: ॥ (2)

ஏதஸ்மிந்நந்தரே ராம: ப்ரத்யபு$_3$த்$_4$யத வீர்யவாந் ।
ஸ்தி$_2$ரத்வாத்ஸத்த்வயோகா$_3$ச்ச ஶரை: ஸந்தா$_3$நிதோऽபி ஸந் ॥ (3)

ததோ த்$_3$ருஷ்ட்வா ஸருதி$_4$ரம் விஷண்ணம் கா$_3$ட$_4$மர்பிதம் ।
ப்$_4$ராதரம் தீ$_3$நவத$_3$நம் பர்யதே$_3$வயதா$_3$துர: ॥ (4)

கிம் நு மே ஸீதயா கார்யம் கிம் கார்யம் ஜீவிதேந வா ।
ஶயாநம் யோऽத்$_3$ய பஶ்யாமி ப்$_4$ராதரம் யுதி$_4$ நிர்ஜிதம் ॥ (5)

ஶக்யா ஸீதாஸமா நாரீ மர்த்யலோகே விசிந்வதா ।
ந லக்ஷ்மணஸமோ ப்$_4$ராதா ஸசிவ: ஸாம்பராயிக: ॥ (6)

பரித்யக்ஷ்யாம்யஹம் ப்ராணாந் வாநராணாம் து பஶ்யதாம் ।
யதி$_3$ பஞ்சத்வமாபந்ந: ஸுமித்ராநந்த$_3$வர்த$_4$ந: ॥ (7)

கிம் நு வக்ஷ்யாமி கௌஸல்யாம் மாதரம் கிம் நு கைகயீம் ।
கத$_2$மம்பா$_3$ம் ஸுமித்ராம் ச புத்ரத$_3$ர்ஶநலாலஸாம் ॥ (8)

விவத்ஸாம் வேபமாநாம் ச க்ரோஶந்தீம் குரரீமிவ ।
கத$_2$மாஶ்வாஸயிஷ்யாமி யதி$_3$ யாஸ்யாமி தம் விநா ॥ (9)

கத$_2$ம் வக்ஷ்யாமி ஶத்ருக்$_4$நம் ப$_4$ரதம் ச யஶஸ்விநம் ।
மயா ஸஹ வநம் யாதோ விநா தேந க$_3$த: புந: ॥ (10)

இலங்கையை அடைந்ததும் திரிஜடையுடன்கூட புஷ்பக விமானத்திலிருந்து இறங்கிய அவளை, மற்ற அரக்கிகள் அசோகவனத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். (36)

பற்பல மரங்கள் அடர்ந்ததும், அரக்கமன்னன் உல்லாசமாகத் திரிவதுமான அந்த இடத்தை அடைந்ததும் ('மீண்டும் இங்கே தானா?' என்பது போல்) மிரட்சியுடன் பார்த்து, அரசகுமாரர்கள் இருவரையும் நினைத்துப் பார்த்து, சீதை மிகவும் துயரத்தை அடைந்தாள். (37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்பது

இராமன் உணர்வு பெற்று நெஞ்சம் தளர்தல்!

இராம–லட்சுமணர்கள், விலக்க முடியாத அம்புக் கூட்டத்தால் கட்டப்பட்டு, உடலெங்கும் இரத்தம் வழிந்தோட, பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் இரு சர்ப்பங்கள் போல் படுத்துக் கிடந்தார்கள். (1)

சுக்ரீவன் முதலான மகாபலசாலிகளான வானரோத்தமர்கள் எல்லோரும், துயரத்தில் மூழ்கியவர்களாக, அவ்விரு மகாத்மாக்களையும் சூழ்ந்து நின்றார்கள். (2)

இவ்வாறிருக்கையில், பராக்கிரமசாலியான இராமன், நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்த போதிலும், சரீரத்தின் (அழியாத் தன்மை பெற்ற) உறுதியாலும், தெய்விகத்தன்மை பெற்றிருந்த காரணத்தாலும், மூர்ச்சை தெளிந்து உணர்வு பெற்றார். (3)

உணர்வு பெற்றவுடன், (அம்புகளால்) மிகவும் புண்படுத்தப்பட்டு, ரத்தம் பெருகி ஓட, பரிதாபமான முகத்துடன் இருக்கும் தம்பியைப் பார்த்தார். உடனே, அவர் மிகவும் கவலையுடன் சோகம் மேலிட்டுப் புலம்பத் தொடங்கினார்— (4)

"போரில் தோல்வியுற்று (உயிரற்றவன் போல்) படுத்துக் கிடக்கும் தம்பியை இப்போது பார்க்கிறேன். (குறைக்கச் செய்ய முடியாத துயரத்தில் தவிக்கும்) எனக்கு, இனி சீதை கிடைத்தால்தான் என்ன? என் உயிர் இருந்தால்தான் என்ன? (5)

இந்த மண்ணுலகில், எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தால் சீதையைப் போன்ற ஒரு பெண்மணி கிடைக்கக்கூடும். ஆனால், லட்சுமணனைப் போன்ற ஒரு சகோதரன், நல்ல ஆலோசகன், போர் வீரன் கிடைக்கமாட்டான். (6)

சுமித்திரையின் ஆனந்தத்தை வளர்க்கும் லட்சுமணன், இயற்கை எய்திவிட்டான் என்றால், வானரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, என் உயிரை விட்டுவிடப் போகிறேன். (யார் தடுத்தாலும் கேட்கப் போவதில்லை.) (7)

நான், திரும்பி அயோத்திக்குச் சென்றால், 'லட்சுமணன் எங்கே?' என்று கேட்கும் அன்னை கோசலைக்கு என்ன பதில் சொல்வேன்? கைகேயி தேவியாருக்கு என்ன சொல்வேன்? பெற்ற மகனைக் காணத் தவித்துக் கொண்டிருக்கும் அன்னை சுமித்திரைக்கு என்ன பதில் சொல்வேன்? அவன் இல்லாமல் நான் திரும்பிச் செல்வேனாகில், கன்றை இழந்த பசுவைப்போல் துடிதுடிப்பவரும், குரரி பறவையைப் போல் தீனமாக அலறுபவருமான அவரை எவ்வாறு சமாதானப்படுத்துவேன்? (8,9)

புகழ்பெற்ற பரதனிடமும் சத்ருக்னனிடமும் எவ்வாறு வார்த்தையாடுவேன்?... என்னுடன் கூட அவன் காட்டுக்கு வந்தான். ஆனால், அவன் இல்லாமல் நான் மட்டும் எவ்வாறு திரும்பிச் செல்வது? (10)

உபாலம்ப4ம் ந ஶக்ஷ்யாமி ஸோடு4ம் ப3த ஸுமித்ரயா ।
இஹைவ தே3ஹம் த்யக்ஷ்யாமி ந ஹி ஜீவிதுமுத்ஸஹே ॥ (11)

தி4ங்மாம் து3ஷ்க்ருதகர்மாணமநார்யம் யத்க்ருதே ஹ்யஸௌ ।
லக்ஷ்மண: பதித: ஶேதே ஶரதல்பே க3தாஸுவத் ॥ (12)

த்வம் நித்யம் ஸுவிஷண்ணம் மாமாஶ்வாஸயஸி லக்ஷ்மண ।
க3தாஸுர்நாத்3ய ஶக்நோஷி மாமார்தமபி4பா4ஷிதும் ॥ (13)

யேநாத்3ய நிஹதா யுத்3தே4 ராக்ஷஸா விநிபாதிதா: ।
தஸ்யாமேவ க்ஷிதௌ வீர: ஸ ஶேதே நிஹத: பரை: ॥ (14)

ஶயாந: ஶரதல்பேऽஸ்மிந் ஸ்வஶோணிதபரிப்லுத: ।
ஶரஜாலைஶ்சிதோ பா4தி பா4ஸ்கரோऽஸ்தமிவ வ்ரஜந் ॥ (15)

பா3ணாபி4ஹதமர்மத்வாந்ந ஶக்நோத்யபி4பா4ஷிதும் ।
ருஜா சாப்3ருவதோऽப்யஸ்ய த்3ருஷ்டிராகே3ண ஸூச்யதே ॥ (16)

யதை2வ மாம் வநம் யாந்தமநுயாதோ மஹாத்3யுதி: ।
அஹமப்யநுயாஸ்யாமி ததை2வைநம் யமக்ஷயம் ॥ (17)

இஷ்டப3ந்து4ஜநோ நித்யம் மாம் ச நித்யமநுவ்ரத: ।
இமாமத்3ய க3தோऽவஸ்தா2ம் மமாநார்யஸ்ய து3ர்நயை: ॥ (18)

ஸுருஷ்டேநாபி வீரேண லக்ஷ்மணேந ந ஸம்ஸ்மரே ।
பருஷம் விப்ரியம் வாபி ஶ்ராவிதம் து கதா3சந ॥ (19)

விஸஸர்ஜைகவேகே3ந பஞ்ச பா3ணஶதாநி ய: ।
இஷ்வஸ்த்ரேஷ்வதி4கஸ்தஸ்மாத்கார்தவீர்யாச்ச லக்ஷ்மண: ॥ (20)

அஸ்த்ரைரஸ்த்ராணி யோ ஹந்யாச்ச2க்ரஸ்யாபி மஹாத்மந: ।
ஸோऽயமுர்வ்யாம் ஹத: ஶேதே மஹார்ஹஶயநோசித: ॥ (21)

தச்ச மித்2யாப்ரலப்தம் மாம் ப்ரவக்ஷ்யதி ந ஸம்ஶய: ।
யந்மயா ந க்ருதோ ராஜா ராக்ஷஸாநாம் விபீ4ஷண: ॥ (22)

அஸ்மிந் முஹூர்தே ஸுக்3ரீவ ப்ரதியாதுமிதோऽர்ஹஸி ।
மத்வா ஹீநம் மயா ராஜந் ராவணோऽபி4த்3ரவேத்3ப3லீ ॥ (23)

அங்க3த3ம் து புரஸ்க்ருத்ய ஸஸைந்ய: ஸஸுஹ்ருஜ்ஜந: ।
ஸாக3ரம் தர ஸுக்3ரீவ நீலேந ச நளேந ச ॥ (24)

க்ருதம் ஹநுமதா கார்யம் யத3ந்யைர்து3ஷ்கரம் ரணே ।
ருக்ஷராஜேந துஷ்யாமி கோ3லாங்கூ3லாதி4பேந ச ॥ (25)

சுமித்திரையின் கடுஞ்சொற்களை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. அந்தோ! (அதனால்,) இனி, நான் உயிருடன் இருக்க விரும்பவில்லை. இவ்விடத்திலேயே உடலை உகுத்து விடுகிறேன். (11)

என்னைப் போன்று பாவம் செய்தவனும் பண்பில்லாதவனுமான ஒருவனுக்காக, பாணங்களாலான படுக்கையில் உயிரற்றவன் போல் படுத்துக் கிடக்கிறானே, லட்சுமணன்? – அப்படிப்பட்ட நான் எவ்வளவு இழிந்தவன்? (12)

லட்சுமணா! நான் துக்கத்தில் ஆழ்ந்த போதெல்லாம் என்னைத் தேற்றுவாய். இப்போது, நீ உயிரிழந்தவனாகிவிட்டதால் புலம்பித் தவிக்கும் என்னிடம் பேச முடியாமல் இருக்கிறாய். (13)

தம்பி! போர்க்களத்தில் இன்றைய தினம் ஏராளமான அரக்கர்களைக் கொன்று தரையில் விழச் செய்தாய். அப்படிப்பட்ட வீரனான நீயே, அதே தரையில் பகைவர்களால் வீழ்த்தப்பட்டுக் கிடக்கிறாய். அம்புப் படுக்கையில் உடல் முழுவதும் ரத்தம் பூசப்பட்டு பாணங்களால் வியாபிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், மேற்கு மலையில் சென்று கொண்டிருக்கும் சூரியனைப் போல் விளங்குகிறாய்.'' (14,15)

(வானரர்களை நோக்கிக் கூறியது—) ''உயிர் நிலையில் பாணங்களால் அடியுண்டிருப்பதால் இவனால் பேசக்கூட முடியவில்லை. ஆனால், வாய் திறந்து பேசாவிட்டாலும், இவனுடைய பார்வை பரிதாபமாக இருப்பதால், பொறுக்கமுடியாத வலி இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. மகாதேஜஸ்வியான இவன், நான் காட்டுக்குப் புறப்பட்டபோது என்னைப் பின்தொடர்ந்து வந்தான். அதுபோலவே, யமலோகத்திற்குச் சென்று கொண்டிருக்கும் இவனைப் பின்தொடர்ந்து நானும் செல்வேன். (16,17)

இவன் எப்போதும் எனக்குப் பிரியமான உடன்பிறப்பு; எப்போதும் என்னையே பின்பற்றி நடப்பவன். (என் சொல்லுக்கு அடங்கி நடப்பவன்.) என்னுடைய நெடுநோக்கில்லாத, கீழ்த்தரமான செயல்களால், லட்சுமணன் இந்த துர்க்கதியை அடைந்துவிட்டிருக்கிறான். (18)

மாவீரனான லட்சுமணன், மிகவும் கோபம் கொண்டிருந்த காலத்திலும் என்னிடம் கடுமையாகவோ, பிரியமில்லாமலோ பேசியதாக எனக்கு நினைவேயில்லை. (19)

(வில்லில் அம்பைப் பூட்டி, எதிரியை நோக்கி செலுத்தத் தொடங்கினால்) ஒரே நேரத்தில் (சற்றுக்கூட இடைவெளி இல்லாமல்) ஐந்நூறு பாணங்களைச் செலுத்தும் திறன் படைத்த லட்சுமணன், கார்த்தவீர்யனைக் காட்டிலும் அம்பு எய்வதிலும் அஸ்திரப் பிரயோகத்திலும் மேம்பட்டவன். (20)

பேராற்றலுடைய இந்திரனுடைய அஸ்திரங்களை எதிர்த்து, இவன் அஸ்திரங்களை விடுத்து அழிக்க வல்லவனும், மிக உயர்ந்த படுக்கையில் படுக்க வேண்டியவனுமான இவன், கொல்லப்பட்டுத் தரையில் கிடக்கிறான். (21)

(நான் வாக்குக் கொடுத்தபடி) விபீஷணனை அரக்கர்கோனாக நான் ஆக்கவில்லை; என்னுடைய சொல் பொய்யாயிற்று – என்று மக்கள் சொல்வார்கள் என்பதில் ஐயமில்லை. (22)

சுக்ரீவனே! நீ இப்போதே இங்கிருந்து திரும்பிச் சென்றுவிடு. (இல்லையென்றால்,) வானர மன்னனே! மகாபலம் படைத்த இராவணன், நான் இல்லாமல் தனித்து இருக்கும் உன்னைத் துன்புறுத்துவான். (அரக்கர் படையோடு வந்து, வானரப் படையை அழித்துவிட முற்படுவான்.) சுக்ரீவனே! அங்கதனை முன்னிட்டுக் கொண்டு, படைகளோடும் நண்பர்களோடும் நீல–நளர்களோடும் கடலைக் கடந்து சென்றுவிடு. (23,24)

போரில், அனுமான் மற்றும் கரடி மன்னன் ஜாம்பவான், கோலாங்கூல வானரத் தலைவன் கவாக்ஷன் ஆகியோர், வேறு எவராலும் செய்ய முடியாத துணிச்சலான அருஞ்செயல்களை ஆற்றியுள்ளதைக் கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். (25)

அங்க3தே3ந க்ருதம் கர்ம மைந்தே3ந த்3விவிதே3ந ச ।
யுத்3த4ம் கேஸரிணா ஸங்க்2யே கோ4ரம் ஸம்பாதிநா க்ருதம் ॥ (26)

க3வயேந க3வாக்ஷேண ஶரபே4ண க3ஜேந ச ।
அந்யைஶ்ச ஹரிபி4ர்யுத்3த4ம் மத3ர்தே2 த்யக்தஜீவிதை: ॥ (27)

ந சாதிக்ரமிதும் ஶக்யம் தை3வம் ஸுக்3ரீவ மாநுஷை: ॥ (28)

யத்து ஶக்யம் வயஸ்யேந ஸுஹ்ருதா3 ச பரந்தப ।
க்ருதம் ஸுக்3ரீவ தத்ஸர்வம் ப4வதா த4ர்மபீ4ருணா ॥ (29)

மித்ரகார்யம் க்ருதமித3ம் ப4வத்3பி4ர்வாநரர்ஷப4ா: ।
அநுக்ஞாதா மயா ஸர்வே யதே2ஷ்டம் க3ந்துமர்ஹத2 ॥ (30)

ஶுஶ்ருவுஸ்தஸ்ய தே ஸர்வே வாநரா: பரிதே3வநம் ।
வர்தயாஞ்சக்ருரஶ்ரூணி நேத்ரை: க்ருஷ்ணேதரேக்ஷணா: ॥ (31)

தத: ஸர்வாண்யநீகாநி ஸ்த2ாபயித்வா விபீ4ஷண: ।
ஆஜக3ாம க3த3ாபாணிஸ்த்வரிதோ யத்ர ராக4வ: ॥ (32)

தம் த்3ருஷ்ட்வா த்வரிதம் யாந்தம் நீலாஞ்ஜநசயோபமம் ।
வாநரா து3த்3ருவ: ஸர்வே மந்யமாநாஸ்து ராவணிம் ॥ (33)

நிஶ்சேஷ்டௌ விக3தக்ஞாநௌ ரணரேணுஸமுக்ஷிதௌ ।
ஶயாநௌ ஶரதல்பஸ்தௌ2 த்3ரஷ்டுமாயாத்3விபீ4ஷண: ॥ (34)

தம் ராக்ஷஸேந்த்3ராத்மஜஶங்கயா தே
நிபாதிதௌ ராஜஸுதௌ ச த்3ருஷ்ட்வா ।
விபீ4ஷணம் விவ்யதி2ரே ச த்3ருஷ்ட்வா
மேக4ா யத2ா வாயுஹதா: ப்லவங்க3ா: ॥ (35)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகோநபஞ்சாஶ: ஸர்க3: ॥

பஞ்சாஶ: ஸர்க3:

நாக3பாஶவிமோக்ஷணம்

அதோ2வாச மஹாதேஜா ஹரிராஜோ மஹாப3ல: ।
கிமியம் வ்யதி2தா ஸேநா மூட4வாதேவ நௌர்ஜலே ॥ (1)

ஸுக்3ரீவஸ்ய வச: ஶ்ருத்வா வாலிபுத்ரோऽங்க3தோ3ऽப்3ரவீத் ।
ந த்வம் பஶ்யஸி ராமம் ச லக்ஷ்மணம் ச மஹாப3லம் ॥ (2)

ஶரஜாலாசிதௌ வீராவுபௌ4 த3ஶரத2ாத்மஜௌ ।
ஶரதல்பே மஹாத்மாநௌ ஶயாநௌ ருதி4ரோக்ஷிதௌ ॥ (3)

அங்கதன், மைந்தன், த்விவிதன், சம்பாதி, கேஸரி ஆகியோரும் மறக்களத்தில் செயற்கரிய வீரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். (26)

கவயன், கவாக்ஷன், சரபன், கஜன் மற்றும் ஏனைய வானரர்களும், தம் உயிரைப் பொருட்படுத்தாமல், என் பொருட்டு போர் புரிந்திருக்கிறார்கள். ஆனால், சுக்ரீவனே! தெய்வ சங்கல்பம் ஒருபோதும் மானுடர்களால் மாற்றி அமைக்க முடியாதது. (27,28)

எதிரிகளை மாய்ப்பவனே! அன்பு மிகுந்த ஒரு நண்பனால் எவ்வளவு பேருபகாரம் செய்ய முடியுமோ, அது அனைத்தும் தருமத்தின்பால் அசையாத பற்றுடைய உன்னால் எனக்குச் செய்யப்பட்டது. (29)

வானரோத்தமர்களே! ஒரு நண்பனுக்குச் செய்ய வேண்டிய கடமையை நீங்களெல்லோரும் செய்துவிட்டீர்கள். (இலக்குவன் உயிர் நீங்கிய பின், எனக்கு வேறு வேலை எதிலும் நாட்டமில்லை.) அதனால், உங்களுக்கெல்லாம் விடைகொடுக்கிறேன். இனி, உங்கள் இஷ்டப்படி செல்லுங்கள்.'' (30)

துயரம் தாங்காமல் அவர் பேசிய பேச்சுக்களை வானரர்கள் எல்லோரும் கேட்டு, மனவேதனையால் செக்கச் சிவந்த கண்களிலிருந்து கண்ணீரைச் சொரிந்தார்கள். (31)

அப்போது, படைவீரர்களை அணிவகுத்து நிறுத்திவிட்டு, கதையும் கையுமாக, இராமன் இருந்த இடத்திற்கு விபீஷணன் வேகமாக வந்து சேர்ந்தான். (32)

கறுத்த அஞ்சனமலை போல் உடல்வண்ணம் கொண்ட அவன், வேகமாக வந்து கொண்டிருந்ததைப் பார்த்த வானரர்கள், 'மறுபடியும் இந்திரஜித் வருகிறான்' என்று அஞ்சி, நாற்புறமும் சிதறி ஓடினார்கள். (33)

அசைவில்லாமல், உணர்விழந்தவர்களாய், போர்க்களப் புழுதி படிந்தவர்களாய், அம்புப்படுக்கையில் படுத்துக் கிடக்கும் அவர்களைக் (இராம–லட்சுமணர்களைக்) காண விபீஷணன் வந்தான். (34)

அரசகுமாரர்கள் இருவரும் தரையில் வீழ்த்தப்பட்டுக் கிடப்பதையும், விபீஷணனைப் பார்த்து, 'இவன்தான் இந்திரஜித்தோ?' என்றும் சந்தேகம் கொண்ட வானரர்கள், மழைபொழியக் குவிந்திருக்கும் நீர்குடித்த மேகங்களை, வாயுவீச்சானது எவ்வாறு சிதறச் செய்யுமோ, அவ்வாறு அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பது

நாகபாசத்திலிருந்து விடுதலை

பேராண்மையும் பேராற்றலுமுடைய வானரமன்னன், ''என்ன இது? நடுக்கடலில் புயலில் அகப்பட்ட படகைப்போல வானரப்படை தத்தளிக்கிறதே, ஏன்?'' என்று கேட்டான். (1)

சுக்ரீவனுடைய சொற்களைக் கேட்ட வாலியின் மைந்தன் அங்கதன், ''நீங்கள், இராமனும் மகாபலசாலியான லட்சுமணனும் இருக்கும் நிலையைப் பார்க்கவில்லையா?'' என்று கேட்டான். (2)

''மகாத்மாக்களும் தசரத குமாரர்களுமான அவ்விரு வீரர்களும் உடல் முழுவதும் பாணங்கள் தைக்கப்பட்டு, இரத்தம் சொட்டச் சொட்ட, அம்புப் படுக்கையில் படுத்துக் கிடக்கிறார்களே?'' (3)

அத$_2$ாப்$_3$ரவித்$_3$வாநரேந்த்$_3$ர: ஸுக்$_3$ரீவ: புத்ரமங்க$_3$த$_3$ம் ।
நாநிமித்தமித$_3$ம் மந்யே ப$_4$விதவ்யம் ப$_4$யேந து ॥ (4)

விஷண்ணவத$_3$நா ஹ்யேதே த்யக்தப்ரஹரணா தி$_3$ஶ: ।
ப்ரபலாயந்தி ஹரயஸ்த்ராஸாது$_3$த்பு$_2$ல்லலோசநா: ॥ (5)

அந்யோந்யஸ்ய ந லஜ்ஜந்தே ந நிரீக்ஷந்தி ப்ருஷ்ட$_2$த: ।
விப்ரகர்ஷந்தி சாந்யோந்யம் பதிதம் லங்க$_4$யந்தி ச ॥ (6)

ஏதஸ்மிந்நந்தரே வீரோ க$_3$த$_3$ாபாணிர்விபீ$_4$ஷண: ।
ஸுக்$_3$ரீவம் வர்த$_4$யாமாஸ ராக$_4$வம் ச ஜயாஶிஷா ॥ (7)

விபீ$_4$ஷணம் தம் ஸுக்$_3$ரீவோ த்$_3$ருஷ்ட்வா வாநரபீ$_4$ஷணம் ।
ருக்ஷராஜம் ஸமீபஸ்த$_2$ம் ஜாம்ப$_3$வந்தமுவாச ஹ ॥ (8)

விபீ$_4$ஷணோऽயம் ஸம்ப்ராப்தோ யம் த்$_3$ருஷ்ட்வா வாநரர்ஷப$_4$ா: ।
வித்$_3$ரவந்தி பரித்ரஸ்தா ராவணாத்மஜஶங்கயா ॥ (9)

ஶீக்$_4$ரமேதாந் ஸுஸந்த்ரஸ்தாந் ப$_3$ஹுத$_4$ா விப்ரத$_4$ாவிதாந் ।
பர்யவஸ்த$_2$ாபயாக்$_2$யாஹி விபீ$_4$ஷணமுபஸ்தி$_2$தம் ॥ (10)

ஸுக்$_3$ரீவேணைவமுக்தஸ்து ஜாம்ப$_3$வாந்ருக்ஷபார்தி$_2$வ: ।
வாநராந் ஸாந்த்வயாமாஸ ஸம்நிருத்$_4$ய ப்ரத$_4$ாவத: ॥ (11)

தே நிவ்ருத்தா: புந: ஸர்வே வாநராஸ்த்யக்தஸம்ப்$_4$ரமா: ।
ருக்ஷராஜவச: ஶ்ருத்வா தம் ச த்$_3$ருஷ்ட்வா விபீ$_4$ஷணம் ॥ (12)

விபீ$_4$ஷணஸ்து ராமஸ்ய த்$_3$ருஷ்ட்வா கா$_3$த்ரம் ஶரைஶ்சிதம் ।
லக்ஷ்மணஸ்ய ச த$_4$ர்மாத்மா ப$_3$பூ$_4$வ வ்யதி$_2$தேந்த்$_3$ரிய: ॥ (13)

ஜலக்லிந்நேந ஹஸ்தேந தயோர்நேத்ரே ப்ரம்ருஜ்ய ச ।
ஶோகஸம்பீடி$_3$தமநா ருரோத$_3$ விலலாப ச ॥ (14)

இமௌ தௌ ஸத்த்வஸம்பந்நௌ விக்ராந்தௌ ப்ரியஸம்யுகெ$_3$ள ।
இமாமவஸ்த$_2$ாம் க$_3$மிதௌ ராக்ஷஸை: கூடயோதி$_4$பி$_4$: ॥ (15)

ப்$_4$ராது: புத்ரேண மே தேந து$_3$ஷ்புத்ரேண து$_3$ராத்மநா ।
ராக்ஷஸ்யா ஜிஹ்மயா பு$_3$த்$_3$த்$_4$யா சாலிதாவ்ருஜுவிக்ரமௌ ॥ (16)

ஶரைரிமாவலம் வித்$_3$தெ$_4$ள ருதி$_4$ரேண ஸமுக்ஷிதௌ ।
வஸுத$_4$ாயாமிமௌ ஸுப்தௌ த்$_3$ருஶ்யேதே ஶல்யகாவிவ ॥ (17)

யயோர்வீர்யமுபாஶ்ரித்ய ப்ரதிஷ்ட$_2$ா காங்க்ஷிதா மயா ।
தாவுபெ$_4$ள தே$_3$ஹநாஶாய ப்ரஸுப்தௌ புருஷர்ஷபெ$_4$ள ॥ (18)

வானரமன்னன் சுக்ரீவன், புதல்வன் அங்கதனைப் பார்த்து, ''இது எதிர்பாராத ஒரு காரணத்தால் ஏற்பட்டது என்று நான் நினைக்கவில்லை. (இந்திரஜித்தின் ஏதோ ஒரு மாயை காரணமாக,) இவர்கள் அச்சமடைந்து இவ்வாறு தவிக்கிறார்கள்'' என்றே எண்ணுகிறேன். (4)

வானரர்கள் எல்லோரும் கவலை தோய்ந்த முகத்துடன், கண்களை விரித்து மிரளமிரளப் பார்த்துக் கொண்டு, தத்தம் ஆயுதங்களை எறிந்துவிட்டு திக்குத் திசை தெரியாமல் ஓடுகிறார்கள்; ('தோற்றுப் போய் ஓடுகிறோமே!' என்று) யாரும் யாரைக் கண்டும் வெட்கப்படவில்லை; பின்னால் (யாரேனும் துரத்திக் கொண்டு வருகிறார்களா? என்று) திரும்பிப் பார்க்கவும் இல்லை; ஒருவரையொருவர் இழுத்துக் கொண்டு போகிறார்கள்; கீழே விழுந்தவனைத் தாண்டிச் செல்கிறார்கள். (அவனைத் தூக்கி நிறுத்தும் நேரத்தைக்கூட வீணாக்க விரும்பவில்லை.) (5,6)

இதனிடையில், கதையும் கையுமாக வீரனான விபீஷணன், சுக்ரீவனுக்கும் இராமபிரானுக்கும் வாழ்த்துக் கூறியவண்ணம் அவ்விடம் வந்து சேர்ந்தான். (7)

வானரர்களின் அச்சத்துக்குக் காரணம் விபீஷணன்தான் என்பதைப் புரிந்துகொண்ட சுக்ரீவன், தன் அருகில் நின்றுகொண்டிருந்த கரடிமன்னன் ஜாம்பவானிடம் கூறினான்— (8)

''இவன் (மாயைப் போர் செய்யவல்ல) இராவண மைந்தன் இந்திரஜித் என்று எண்ணிக் கொண்டு வானரவீரர்கள் ஓடுகிறார்களே, அந்த விபீஷணன் வந்திருக்கிறார். (9)

நீங்கள் வேகமாகச் சென்று, 'இங்கே வந்திருப்பது (இந்திரஜித் அல்லன்,) விபீஷணன்' என்று கூறி சமாதானப்படுத்தி, மிகவும் அச்சத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் அவர்களைத் தடுத்து நிறுத்துங்கள்.'' (10)

இவ்வாறு, சுக்ரீவன் கூறியதைக் கேட்ட கரடிகள் மன்னரான ஜாம்பவான், சிதறியோடும் வானரர்களைத் தடுத்து நிறுத்தி அமைதிப்படுத்தினார். (11)

வானரர்கள் எல்லோரும் ஜாம்பவானின் சொல்லைக் கேட்டும், விபீஷணனை நன்றாகப் பார்த்தும் மனக்கலக்கம் நீங்கியவர்களாக மறுபடியும் திரும்பி வந்தார்கள். (12)

தருமாத்மாவான விபீஷணன், இராம–லட்சுமணர்களுடைய உடல்கள் பாணங்களால் வியாபிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தவுடனேயே துடிதுடித்துப் போனான். (13)

சோகத்தால் பீடிக்கப்பட்ட விபீஷணன், அவர்களுடைய கண்களை ஈரக்கைகளால் துடைத்து, அழுது புலம்பினான். (14)

''இவர்கள் இருவரும் போராற்றலுடையவர்கள்; எதிர்கொள்ள முடியாத துணிச்சல் உடையவர்கள்; போரில் விருப்பமுடையவர்கள். அப்படிப்பட்ட இவர்கள், கபடமாகப் போர்புரியும் அரக்கர்களால் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்களே! ஐயகோ! (15)

போர்நெறி தவறாமல் போர்புரியும் இவ்விருவரும், என் சகோதரனின் புதல்வனால், தீய எண்ணங்கொண்டவனால், அரக்கர்களுக்குரிய கோணல் புத்தியினால் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள். (16)

இவ்விருவரும் முற்றிலுமாக அம்புகளால் தைக்கப்பட்டிருக்கிறார்கள்; இரத்தத்தால் மெழுகப்பட்டிருக்கிறார்கள்; தரையில் படுத்துக் கிடக்கும் இவ்விருவரும் இரண்டு முள்ளம்பன்றிகள் போல் காட்சி தருகிறார்கள். (17)

எந்த இருவருடைய அளவற்ற பராக்கிரமத்தை ஆதாரமாகக் கொண்டு, (இலங்கையின் மன்னனாக) நிலைநிறுத்தப்படும் பேராவலைக் கொண்டிருந்தேனோ, மாமனிதர்களாகிய அந்த இருவருமே, உடல் அழியும்வண்ணமாகப் படுத்துக் கிடக்கிறார்கள்! (பாணங்களால் துளைக்கப்பட்டு, நாகபாசத்தால் பிணைக்கப்பட்டுக் கிடக்கும் இவர்களை, யாரால்தான் காப்பாற்ற முடியும்?) (18)

ஜீவந்நத்3ய விபந்நோऽஸ்மி நஷ்டராஜ்யமநோரத2: ।
ப்ராப்தப்ரதிக்ஞஶ்ச ரிபு: ஸகாமோ ராவண: க்ருத: ॥ (19)

ஏவம் விலபமாநம் தம் பரிஷ்வஜ்ய விபீ4ஷணம் ।
ஸுக்3ரீவ: ஸத்த்வஸம்பந்நோ ஹரிராஜோऽப்3ரவீதி3த3ம் ॥ (20)

ராஜ்யம் ப்ராப்ஸ்யஸி த4ர்மக்ஞ லங்காயாம் நாத்ர ஸம்ஶய: ।
ராவண: ஸஹ புத்ரேண ஸ்வகாமம் நேஹ லப்ஸ்யதே ॥ (21)

ந ருஜா பீடி3தாவேதாவுபௌ4 ராக4வலக்ஷ்மணௌ ।
த்யக்த்வா மோஹம் வதி4ஷ்யேதே ஸக3ணம் ராவணம் ரணே ॥ (22)

தமேநம் ஸாந்த்வயித்வா து ஸமாஶ்வாஸ்ய ச ராக்ஷஸம் ।
ஸுஷேணம் ஶ்வஶுரம் பார்ஶ்வே ஸுக்3ரீவஸ்தமுவாச ஹ ॥ (23)

ஸஹ ஶூரைர்ஹரிக3ணைர்லப்3த4ஸம்க்ஞாவரிந்த3மௌ ।
க3ச்ச2 த்வம் ப்4ராதரௌ க்3ருஹ்ய கிஷ்கிந்த4ாம் ராமலக்ஷ்மணௌ ॥ (24)

அஹம் து ராவணம் ஹத்வா ஸபுத்ரம் ஸஹபா3ந்த4வம் ।
மைதி2லீமாநயிஷ்யாமி ஶக்ரோ நஷ்டாமிவ ஶ்ரியம் ॥ (25)

ஶ்ருத்வைதத்3வாநரேந்த்3ரஸ்ய ஸுஷேணோ வாக்யமப்3ரவீத் ।
தை3வாஸுரம் மஹத்3யுத்3த4மநுபூ4தம் ஸுதா3ருணம் ॥ (26)

ததா3 ஸ்ம தா3நவா தே3வாஞ்ஶரஸம்ஸ்பர்ஶகோவிதா3: ।
நிஜக்4நு: ஶஸ்த்ரவிது3ஷஶ்சா2த3யந்தோ முஹுர்முஹு: ॥ (27)

தாநார்தாந்நஷ்டஸம்க்ஞாம்ஶ்ச பராஸூம்ஶ்ச ப்3ருஹஸ்பதி: ।
வித்3யாபி4ர்மந்த்ரயுக்தாபி4ரோஷதீ4பி4ஶ்சிகித்ஸதி ॥ (28)

தாந்யௌஷத4ாந்யாநயிதும் க்ஷீரோத3ம் யாந்து ஸாக3ரம் ।
ஜவேந வாநரா: ஶீக்4ரம் ஸம்பாதிபநஸாத3ய: ॥ (29)

ஹரயஸ்து விஜாநந்தி பார்வதீஸ்தா மஹௌஷதீ4: ।
ஸஞ்ஜீவகரணீம் தி3வ்யாம் விஶல்யாம் தே3வநிர்மிதாம் ॥ (30)

சந்த்ர3ஶ்ச நாம த்3ரோணஶ்ச க்ஷீரோதே3 ஸாக3ரோத்தமே ।
அம்ருதம் யத்ர மதி2தம் தத்ர தே பரமௌஷதீ4 ॥ (31)

தே தத்ர நிஹிதே தே3வை: பர்வதே பரமௌஷதீ4 ।
அயம் வாயுஸுதோ ராஜந் ஹநுமாந்ஸ்தத்ர க3ச்ச2து ॥ (32)

ஏதஸ்மிந்நந்தரே வாயுர்மேக4ாம்ஶ்சாபி ஸவித்3யுத: ।
பர்யஸ்யந் ஸாக3ரே தோயம் கம்பயந்நிவ மேதி3நீம் ॥ (33)

இப்போது, நான் உயிருடன் இருந்தாலும் இறந்தவன் போன்றவனே; இலங்கை ஆட்சியை அடைய முடியும் என்ற என் ஆசையை இழந்தேன்; எதிரியான இராவணன், (ஒருபோதும் சீதையைத் திருப்பிக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னானே?) தன் சபதம் நிறைவேறியவனாகி விட்டான்; தன் விருப்பம் கைகூடப் பெற்றவனாகி விட்டான்!'' (19)

மிக்க ஆண்மையுடைய வானரமன்னன் சுக்ரீவன், மேற்கண்டவாறு புலம்பித் தவிக்கும் விபீஷணனைக் கட்டித் தழுவிப் பின்வருமாறு கூறினான்— (20)

''அறம் அறிந்தவனே! நீ, இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை அடைவாய் என்பதில் ஐயமில்லை. (எந்த இந்திரஜித்தின் அளவற்ற ஆண்மையில் நம்பிக்கை வைத்து செருக்கித் திரிந்தானோ, அந்தப்) புதல்வனோடு கூடிய இராவணன், இவ்வுலகில் தன் ஆசையை அடையப் போவதில்லை. இராம–லட்சுமணர்கள், உயிரைக் கவர்ந்து செல்லும் நோயினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கவில்லை; எனவே, மூர்ச்சை நீங்கியதும் தெளிந்த உணர்வு பெற்று, இராவணனையும் அவன் கூட்டத்தாரையும் போர் செய்து மாய்க்கப் போகிறார்கள்.'' (21,22)

இவ்வாறு ஆறுதல் கூறி, அரக்கனான விபீஷணனை சமாதானப்படுத்திவிட்டு, தன் அருகில் நின்று கொண்டிருந்த மாமனார் சுஷேணனைப் பார்த்துக் கூறினான்— (23)

''எதிரிகளை மாய்க்க வல்ல சகோதரர்களான இராம–லட்சுமணர்கள் மூர்ச்சை தெளிந்தவுடன், அவர்களை அழைத்துக் கொண்டு, சூரர்களான வானரக் கூட்டங்களுடன் நீங்கள் கிஷ்கிந்தைக்குச் செல்லுங்கள். நான், மகன்–உறவினர்களோடுகூட இராவணனைக் கொன்று, தன் கையை விட்டுப் போன சுவர்க்கலோக ஆட்சி என்னும் திருமகளை, இந்திரன் எவ்வாறு திரும்பப் பெற்றானோ, அவ்வாறே (மிக எளிதாக) சீதாதேவியைத் திரும்பக் கொண்டு வருவேன்.'' (24,25)

வானர மன்னனின் சொற்களைக் கேட்ட சுஷேணன், பதில் கூறினான்— ''தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த மகாபயங்கரமான அந்தப் போரை, நான் பார்த்திருக்கிறேன். (26)

அஸ்திர–சஸ்திரப் பிரயோகங்களிலும், குறிதவறாது அம்பு செலுத்துவதிலும் நிபுணர்களான தேவர்களை, அநேக தடவை, பாணங்களால் தொடர்ந்து தாக்கி, உடலையே மறைக்குமாப் போலே செய்து, அசுரர்கள் படுகாயப்படுத்தினார்கள். (27)

அப்போது, குலகுரு பிருஹஸ்பதி காயங்களால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தவர்களையும் உணர்வு இழந்திருந்தவர்களையும் உயிரிழந்தவர்களையும், மிருதசஞ்ஜீவினீ போன்ற மந்திரங்களாலும், மந்திரிக்கப்பட்ட மூலிகைகளாலும் சிகிச்சை செய்தார். (28)

(அந்த வழியையே நாம் இப்போது பின்பற்ற வேண்டும்.) எனவே, சம்பாதி–பனஸன் முதலான வானரர்கள், அந்த மூலிகைகளைக் கொண்டு வருவதற்காக, உடனே வேகமாகப் பாற்கடலுக்குச் செல்ல வேண்டும். (29)

சம்பாதி முதலிய வானரர்கள், அங்கு மலைகளில் பயிராகும் தெய்விக சக்தி படைத்த சஞ்ஜீவகரணி என்ற மூலிகையையும், தேவர்களால் உண்டாக்கப்பட்ட விசல்யகரணி என்ற மூலிகையையும் நன்கு அறிவார்கள். கடல்களுள் சிறந்ததான எந்தப் பாற்கடலில் முன்னர் அமிர்தம் கடைந்தெடுக்கப்பட்டதோ, அந்தக் கடலின் கரையில், சந்திரன், துரோணன் என்ற பெயர்கொண்ட இரண்டு மலைகள் இருக்கின்றன. (30,31)

மன்னரே! மிகவும் சக்தி வாய்ந்த அந்த மூலிகைகள் இரண்டும், தேவர்களால் அவ்விரு மலைகளில் பயிர் செய்யப்படுகின்றன. வாயுகுமாரனான அனுமான் அங்கே (மூலிகைகளைக் கொண்டு வருவதற்காகச்) செல்லட்டும்.'' (32)

இவ்வாறு ஆலோசனை நடந்து கொண்டிருந்தபோது, ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து மின்னலடிக்க, கடல்நீரைக் கொந்தளிக்கச் செய்து கொண்டும், மலைகளை குலுங்கச் செய்து கொண்டும் ஒரு மாபெருங்காற்று வீசியது. (33)

மஹதா பக்ஷவாதேந ஸர்வத்₃வீபமஹாத்₃ருமா: ।
நிபேதுர்ப₄க்₃நவிடபா: ஸமூலா லவணாம்ப₄ஸி ॥ (34)

அப₄வந் பந்நகா₃ஸ்த்ரஸ்தா போ₄கி₃நஸ்தத்ரவாஸிந: ।
ஶீக்₄ரம் ஸர்வாணி யாத₃ாம்ஸி ஜக்₃முஶ்ச லவணார்ணவம் ॥ (35)

ததோ முஹூர்தாத்₃க₃ருட₃ம் வைநதேயம் மஹாப₃லம் ।
வாநரா த₃த்₃ருஶு: ஸர்வே ஜ்வலந்தமிவ பாவகம் ॥ (36)

தமாக₃தமபி₄ப்ரேக்ஷ்ய நாகா₃ஸ்தே விப்ரது₃த்₃ருவு: ।
யைஸ்தௌ ஸத்புருஷௌ ப₃த்₃தௌ₄ ஶரபூ₄தைர்மஹாப₃லௌ ॥ (37)

தத: ஸுபர்ண: காகுத்ஸ்தௌ₂ த்₃ருஷ்ட்வா ப்ரத்யபி₄நந்தி₃த: ।
விமமர்ஶ ச பாணிப்₄யாம் முகே₂ சந்த்₃ரஸமப்ரபே₄ ॥ (38)

வைநதேயேந ஸம்ஸ்ப்ருஷ்டாஸ்தயோ: ஸம்ருருஹுர்வ்ரணா: ।
ஸுவர்ணே ச தநூ ஸ்நிக்₃தே₄ தயோராஶு ப₃பூ₄வது: ॥ (39)

தேஜோ வீர்யம் ப₃லம் ஶௌஜ உத்ஸாஹஶ்ச மஹாகு₃ண: ।
ப்ரத₃ர்ஶநம் ச பு₃த்₃தி₄ஶ்ச ஸ்ம்ருதிஶ்ச த்₃விகு₃ணா தயோ: ॥ (40)

தாவுத்தா₂ப்ய மஹாவீர்யௌ க₃ருடோ₃ வாஸவோபமௌ ।
உபௌ₄ தௌ ஸஸ்வஜே ஹ்ருஷ்டௌ ராமஶ்சைநமுவாச ஹ ॥ (41)

ப₄வத்ப்ரஸாதா₃த்₃வ்யஸநம் ராவணிப்ரப₄வம் மஹத் ।
ஆவாமிஹ வ்யதிக்ராந்தௌ பூர்வவத்₃ப₃லிநௌ க்ருதௌ ॥ (42)

யதா₂ தாதம் த₃ஶரத₂ம் யதா₂ஜம் ச பிதாமஹம் ।
ததா₂ ப₄வந்தமாஸாத்₃ய ஹ்ருத₃யம் மே ப்ரஸீத₃தி ॥ (43)

கோ ப₄வாந் ரூபஸம்பந்நோ தி₃வ்யஸ்ரக₃நுலேபந: ।
வஸாநோ விரஜே வஸ்த்ரே தி₃வ்யாப₄ரணபூ₄ஷித: ॥ (44)

தமுவாச மஹாதேஜா வைநதேயோ மஹாப₃ல: ।
பதத்ரிராஜ: ப்ரீதாத்மா ஹர்ஷபர்யாகுலேக்ஷண: ॥ (45)

அஹம் ஸகா₂ தே காகுத்ஸ்த₂ ப்ரிய: ப்ராணோ ப₃ஹிஶ்சர: ।
க₃ருத்மாநிஹ ஸம்ப்ராப்தோ யுவயோ: ஸாஹ்யகாரணாத் ॥ (46)

அஸுரா வா மஹாவீர்யா தா₃நவா வா மஹாப₃லா: ।
ஸுராஶ்சாபி ஸக₃ந்த₄ர்வா: புரஸ்க்ருத்ய ஶதக்ரதும் ॥ (47)

நேமம் மோக்ஷயிதும் ஶக்தா: ஶரப₃ந்த₄ம் ஸுதா₃ருணம் ।
மாயாப₃லாதி₃ந்த்₃ரஜிதா நிர்மிதம் க்ரூரகர்மணா ॥ (48)

(கருடனின்) சிறகுகளால் உண்டான பெருங்காற்றுக் காரணமாக, இலங்கைத் தீவிலிருந்த எல்லா மரங்களும் கிளைகள் முறிந்து வேருடன் பெயர்ந்து உப்புக்கடலில் விழுந்தன. (34)

அங்கு வாழ்ந்து கொண்டிருந்த பேருடல் கொண்ட சர்ப்பங்கள் பயத்தால் மிகவும் நடுங்கிப் போயின; நீர்வாழ்ப் பிராணிகள் எல்லாம் அவசரமாக உவர்க்கடலைச் சென்றடைந்தன. (கடலுக்குள் பதுங்கிக் கொண்டன.) (35)

பின்னர், வெகுவிரைவிலேயே பேராற்றல் உடையவரும் வினதையின் புதல்வரும் கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல் பிரகாசிப்பவருமான கருட பகவான், (அவ்விடம் நோக்கி வருவதை) வானரர்கள் எல்லோரும் கண்ணால் பார்த்தார்கள். (36)

அம்பு உருவங்கொண்ட எந்தப் பாம்புகளால், மிக்க பலசாலிகளும் நல்லோர்களுமாகிய அவ்விருவரும் கட்டப்பட்டிருந்தார்களோ, அவைகளெல்லாம் அவர் (கருடன்) வந்து சேர்ந்ததைக் கண்டவுடன் பயந்து ஓடிவிட்டன. (37)

பிறகு, கருடபகவான் இராம–லட்சுமணர்களைப் பார்த்து, பணிவுடன் வணங்கி, தன் இருகரங்களாலும், சந்திரன் போல் பிரகாசிக்கும் அவ்விருவர் திருமுகங்களையும் தடவிக் கொடுத்தார். (38)

கருடனால் தடவிக் கொடுக்கப்பட்டவுடனேயே அவ்விருவர் உடல்களிலிருந்த காயங்களும் மறைந்து போயின. உடனே, அவர்களுடைய திருமேனி மனங்கவர் நிறம் கொண்டவையாகவும் பளபளப்பாகவும் ஆகிவிட்டன. (39)

அவ்விருவருக்கும், (கருடனின் கைப்பட்டவுடன்) உள்ளொளி, வீரம், பலம், உடல்திண்மை, செயல்திறன், நுண்ணறிவு, விவேகம், நினைவாற்றல் ஆகிய அரிய குணங்கள் இரு மடங்காக வளர்ந்தன. (40)

பின்னர், மகாதேஜஸ்வியான கருட பகவான், தேவராஜனுக்கு இணையான அவ்விரு சகோதரர்களையும் தூக்கி நிறுத்தி, மகிழ்ச்சியோடிருந்த அவர்களை மார்புறத் தழுவிக் கொண்டார். இராமன், கருடனைப் பார்த்துக் கூறினார்— (41)

''தங்களுடைய கருணையால் நாங்கள் இருவரும் இந்திரஜித்தினால் உண்டாக்கப்பட்ட பெரிய சங்கடத்தைக் கடந்து, இப்போது முன்போலவே பலமுடையவர்களாகச் செய்யப்பட்டோம். (42)

தந்தை தசரதர், பாட்டனார் அஜன் ஆகியோரைக் காணும்போது, எவ்வாறு என் மனம் மகிழ்ச்சி அடையுமோ, அவ்வாறே, இப்போது தங்களைக் காணும்போது உவகை உண்டாகிறது. தங்கள் திருமேனி அழகாக இருக்கிறது; தெய்விகமான மலர்மாலை சூடியிருக்கிறீர்கள்; தெய்விக நறுமணப்பூச்சு பூசியிருக்கிறீர்கள்; தூய்மையான இரண்டு வஸ்திரங்களை அணிந்திருக்கிறீர்கள்; திவ்யமான அணிகலன்களால் அழகு செய்யப்படும் தாங்கள் யார்?'' (43,44)

மகாதேஜஸ்வியும் மிக்க பலம் படைத்தவரும் பறவைகளின் மன்னனுமான கருடன், உள்ளம் மகிழ்ந்தார். ஆனந்தப் பெருக்கினால் கலங்கியிருந்த கண்களோடிருந்த இராமனைப் பார்த்துக் கூறினார்— (45)

''காகுத்தரே! நான் தங்களுக்குப் பிரியமான நண்பன், கருடன். தங்கள் உடலுக்கு வெளியே சஞ்சரிக்கும் பிராணன் போன்றவன். உங்கள் இருவருக்கும் உதவி செய்வதன் பொருட்டு இவ்விடம் வந்தேன். (46)

மகாவீரம் படைத்த அசுரர்கள், மிக்க பலசாலிகளான தானவர்கள், இந்திரனை முன்னிட்டுக் கொண்டு வரும் தேவ–கந்தர்வர்கள் ஆகிய எவராலும், கொடிய செயல்புரியும் இந்திரஜித்தின் மாயசக்தியால் செய்யப்பட்ட இந்த நாகபாசக்கட்டை அவிழ்ப்பதற்கு இயலவே இயலாது. (47,48)

ஏதே நாக3ா: காத்3ரவேயாஸ்தீக்ஷ்ணத3ம்ஷ்ட்ரா விஷோல்ப3ணா: ।
ரக்ஷோமாயாப்ரப4ாவேந ஶரா பூ4த்வா த்வதா3ஶ்ரிதா: ॥ (49)

ஸப4ாக்3யஶ்சாஸி த4ர்மஜ்ஞ ராம ஸத்யபராக்ரம ।
லக்ஷ்மணேந ஸஹ ப்4ராத்ரா ஸமரே ரிபுக4ாதிநா ॥ (50)

இமம் ஶ்ருத்வா து வ்ருத்தாந்தம் த்வரமாணோऽஹமாக3த: ।
ஸஹஸா யுவயோ: ஸ்நேஹாத்ஸகி2த்வமநுபாலயந் ॥ (51)

மோக்ஷிதௌ ச மஹாகே4ாராத3ஸ்மாத்ஸாயகப3ந்த4நாத் ।
அப்ரமாத3ஶ்ச கர்தவ்யோ யுவாப்4யாம் நித்யமேவ ஹி ॥ (52)

ப்ரக்ருத்யா ராக்ஷஸா: ஸர்வே ஸங்க்3ராமே கூடயோதி4ந: ।
ஶூராணாம் ஶுத்3த4ப4ாவாநாம் ப4வதாமார்ஜவம் ப3லம் ॥ (53)

தந்ந விஶ்வஸிதவ்யம் வோ ராக்ஷஸாநாம் ரணாஜிரே ।
ஏதேநைவோபமாநேந நித்யம் ஜிஹ்மா ஹி ராக்ஷஸா: ॥ (54)

ஏவமுக்த்வா ததோ ராமம் ஸுபர்ண: ஸுமஹாப3ல: ।
பரிஷ்வஜ்ய ஸுஹ்ருத்ஸ்நிக்3த4மாப்ரஷ்டுமுபசக்ரமே ॥ (55)

ஸகே2 ராக4வ த4ர்மஜ்ஞ ரிபூணாமபி வத்ஸல ।
அப்4யநுஜ்ஞாதுமிச்ச2ாமி க3மிஷ்யாமி யதா2க3தம் ॥ (56)

ந ச கௌதூஹலம் கார்யம் ஸகி2த்வம் ப்ரதி ராக4வ ।
க்ருதகர்மா ரணே வீர: ஸகி2த்வமநுவேத்ஸ்யஸி ॥ (57)

ப3ாலவ்ருத்3த4ாவஶேஷாம் து லங்காம் க்ருத்வா ஶரோர்மிபி4: ।
ராவணம் ச ரிபும் ஹத்வா ஸீதாம் ஸமுபலப்ஸ்யஸே ॥ (58)

இத்யேவமுக்த்வா வசநம் ஸுபர்ண: ஶீக்4ரவிக்ரம: ।
ராமம் ச விருஜம் க்ருத்வா மத்4யே தேஷாம் வநௌகஸாம் ॥ (59)

ப்ரத3க்ஷிணம் தத: க்ருத்வா பரிஷ்வஜ்ய ச வீர்யவாந் ।
ஜக3ாமாகாஶமாவிஶ்ய ஸுபர்ண: பவநோ யதா2 ॥ (60)

விருஜௌ ராக4வௌ த்3ருஷ்ட்வா ததோ வாநரயூத2பா: ।
ஸிம்ஹநாத3ாந்ஸ்தத3ா நேது3ர்லாங்கூ3லாந் து3து4வுஸ்தத3ா ॥ (61)

ததோ பே4ரீ: ஸமாஜக்4நுர்ம்ருத3ங்க3ாந்ஶ்சாப்யநாத3யந் ।
த3த்4மு: ஶங்க2ாந் ஸம்ப்ரஹ்ருஷ்டா: க்ஷ்வேலந்த்யபி யதா2புரம் ॥ (62)

ஆஸ்பே2ாட்யாஸ்பே2ாட்ய விக்ராந்தா வாநரா நக3யோதி4ந: ।
த்3ருமாநுத்பாட்ய விவித4ாந்ஸ்தஸ்து2: ஶதஸஹஸ்ரஶ: ॥ (63)

இந்த சர்ப்பங்கள் கத்ருவின் புதல்வர்கள்; கூரிய கோரைப் பற்களை உடையவைகள்; கொடிய விஷத்தைக் கொண்டவைகள். அரக்கனின் (இந்திரஜித்தின்) மாய சக்தியால், அம்பு வடிவங்கொண்டு உங்கள்மேல் படிந்திருக்கின்றன. (49)

இராமபிரானே! அறநெறி வழுவாதவரே! சத்தியமான பராக்கிரமத்தை உடையவரே! எதிரிகளை மாய்க்கும் சகோதரன் இலக்குவனோடுகூட துன்பத்திலிருந்து விரைவில் விடுபட்டு, நல்ல நிலைமையை மீண்டும் அடையும் பேறு பெற்றிருக்கிறீர்கள். (50)

(தாங்கள் இருவரும் நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கிறீர்கள் என்ற) செய்தியைக் கேட்ட நான், உங்கள் மேலுள்ள அன்புப்பெருக்கினால், சினேகிதத்தை வெளிப்படுத்தும் பொறுப்புணர்வுடன், பரபரப்புடன் வேகமாக இவ்விடம் வந்து சேர்ந்தேன். (51)

மிகக்கொடிய இந்தப் பாணக்கட்டிலிருந்து, இப்போது நீங்கள் (ஒருவாறாக) விடுவிக்கப்பட்டு விட்டீர்கள். என்றாலும், நீங்கள் இருவரும் எப்போதும் கவனத்துடன் இருக்கவேண்டும். (52)

அரக்கர்கள் எல்லோரும் இயல்பாகவே கபடப்போர் புரிபவர்கள். ஆனால், தூய உள்ளங்கொண்ட சூரர்களாகிய உங்களுக்குப் போர்முனையில் நேர்மைதான் பலம். (53)

எனவே, இப்போது சொன்ன சொற்களைக் (உபமானத்தைக்) கொண்டும், போர்க்களத்தில் அரக்கர்கள் எப்போதும் கபடநெறியில் நிற்பவர்கள் என்பது நிச்சயமாகத் தெரிந்துவிட்டபடியாலும், ஒருபோதும் நீங்கள் அரக்கர்களை நம்பக்கூடாது.'' (54)

பின்னர், எல்லையில்லாத ஆற்றல் படைத்த கருடன், மேற்கண்டவாறு சொல்லிவிட்டு, தோழர்களிடம் பேரன்பு கொண்ட இராமபிரானை மார்புறத் தழுவி, திரும்பிச் செல்ல விடையளிக்கும்படி கேட்கத் தொடங்கினார். (55)

''நண்பரே! அறத்தின் நாயகரே! பகைவர்களிடமும் அன்பைப் பொழிபவரே! இராகவனே! நான் வந்தவாறே திரும்பிச் செல்வதற்கு விடையளிக்கக் கோருகிறேன். (56)

இராமப்பிரபு! நான் தங்களை, தோழன் என்று அழைத்தேனே? அது எப்படி? என்று, தற்போது தாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கத் தேவையில்லை. வீரரான தாங்கள், போர்க்களத்தில் செய்ய வேண்டியதைச் செய்து முடித்து, (வெற்றி பெற்று,) அதன் பின்னர் நம் தோழமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள். (57)

இலங்கையில் குழந்தைகளும் வயோதிகர்களும் மட்டுமே எஞ்சியிருக்க, பகைவன் இராவணனை (மற்ற அரக்கர்களோடுகூட)க் கொன்று, சீதாப் பிராட்டியாரை அடையப் போகிறீர்கள்.'' (58)

மிக விரைவாகச் செல்லும் ஆற்றல் படைத்த கருடன் இவ்வாறு சொல்லிவிட்டு, வானரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, இராமனை எவ்வித உடல் உபாதையும் இல்லாதவராகச் செய்துவிட்டு, அவரை வலம் வந்து, மீண்டும் மார்புறத் தழுவிய பின்னர், மேலே ஆகாயத்தை அடைந்து, காற்றைப் போல் கடிதில் சென்றார். (59,60)

உடனே, வானரப் படைத்தலைவர்கள், இராம–லட்சுமணர்கள் உடல் நலத்துடன் விளங்குவதைக் கண்டு மகிழ்ந்து சிங்கநாதம் செய்தார்கள்; வால்களைச் சுழற்றி அடித்தார்கள். அப்போது, முன்பு போலவே பேரிகைகளைக் கொட்டினார்கள்; மத்தளங்களைத் தட்டினார்கள்; சங்குகளை ஊதினார்கள்; மிகவும் மனமகிழ்ந்தவர்களாய் துள்ளிக் குதித்தார்கள். (61,62)

மலைகளைப் பெயர்த்துப் போர்புரிய வல்லவர்களான வானர மாவீரர்கள், பல்வகை மரங்களை வேருடன் பிடுங்கி, (உற்சாகம் ததும்ப) ஓயாமல் தோள்களைத் தட்டிக்கொண்டு, நூறாயிரக்கணக்கில் ஆயத்தமாக நின்றார்கள். (63)

விஸ்ருஜந்தோ மஹாநாதா$_3$ந்ஸ்த்ராஸயந்தோ நிஶாசராந் ।
லங்காத்$_3$வாராண்யுபாஜக்$_3$முர்யோத்$_3$து$_4$காமா: ப்லவங்க$_3$மா: ॥ (64)

ததஸ்து பீ$_4$மஸ்துமுலோ நிநாதோ$_3$
ப$_3$பூ$_4$வ ஶாகா$_2$ம்ருக$_3$யூத$_2$பாநாம் ।
க்ஷயே நிதா$_3$க$_4$ஸ்ய யதா$_2$ க$_4$நாநாம்
நாத$_3$: ஸுபீ$_4$மோ நத$_3$தாம் நிஶீதே$_2$ ॥ (65)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

ஏகபஞ்சாஶ: ஸர்க$_3$:

தூ$_4$ம்ராக்ஷாபி$_4$ஷேணநம்

தேஷாம் ஸுதுமுலம் ஶப்$_3$த$_3$ம் வாநராணாம் தரஸ்விநாம் ।
நர்த$_3$தாம் ராக்ஷஸை: ஸார்த$_4$ம் ததா$_3$ ஶுஶ்ராவ ராவண: ॥ (1)

ஸ்நிக்$_3$த$_4$க$_3$ம்பீ$_4$ரநிர்கோ$_4$ஷம் ஶ்ருத்வா ஸ நிநத$_3$ம் ப்$_4$ருஶம் ।
ஸசிவாநாம் ததஸ்தேஷாம் மத்$_4$யே வசநமப்$_3$ரவீத் ॥ (2)

யதா$_2$ஸௌ ஸம்ப்ரஹ்ருஷ்டாநாம் வாநராணாம் ஸமுத்தி$_2$த: ।
ப$_3$ஹூநாம் ஸுமஹாந்நாதோ$_3$ மேக$_4$நாமிவ க$_3$ர்ஜதாம் ॥ (3)

வ்யக்தம் ஸுமஹதீ ப்ரீதிரேதேஷாம் நாத்ர ஸம்ஶய: ।
ததா$_2$ ஹி விபுலைர்நாதை$_3$ஶ்சுக்ஷுபே$_4$ வருணாலய: ॥ (4)

தௌ து ப$_3$த்$_3$தௌ$_4$ ஶரைஸ்தீக்ஷ்ணைர்ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
அயம் ச ஸுமஹாந்நாத$_3$: ஶங்காம் ஜநயதீவ மே ॥ (5)

ஏதத்து வசநம் சோக்த்வா மந்த்ரிணோ ராக்ஷஸேஶ்வர: ।
உவாச நைர்ருதாம்ஸ்தத்ர ஸமீபபரிவர்திந: ॥ (6)

ஜ்ஞாயதாம் தூர்ணமேதேஷாம் ஸர்வேஷாம் வநசாரிணாம் ।
ஶோககாலே ஸமுத்பந்நே ஹர்ஷகாரணமுத்தி$_2$தம் ॥ (7)

ததோ$_2$க்தாஸ்தேந ஸம்ப்$_4$ராந்தா: ப்ராகாரமதி$_4$ருஹ்ய தே ।
த$_3$த்$_3$ருஶு: பாலிதாம் ஸேநாம் ஸுக்$_3$ரீவேண மஹாத்மநா ॥ (8)

தௌ ச முக்தௌ ஸுகோ$_4$ரேண ஶரப$_3$ந்தே$_4$ந ராக$_4$வௌ ।
ஸமுத்தி$_2$தௌ மஹாவேகௌ$_3$ விஷேது$_3$: ப்ரேக்ஷ்ய ராக்ஷஸா: ॥ (9)

ஸந்த்ரஸ்தஹ்ருத$_3$யா: ஸர்வே ப்ராகாராத$_3$வருஹ்ய தே ।
விஷண்ணவத$_3$நா கோ$_4$ரா ராக்ஷஸேந்த்$_3$ரமுபஸ்தி$_2$தா: ॥ (10)

போர்புரியத் துணிந்துவிட்ட வானரர்கள், பேரிரைச்சலிட்டு அரக்கர்களைப் பயமுறுத்திக் கொண்டு, இலங்கையின் நுழைவாயிலை அடைந்தார்கள். (64)

அப்போது, வானரப் படைத்தலைவர்கள் எழுப்பிய பேரிரைச்சல், கோடை முடிந்து மாரிக்காலம் வந்ததும் நள்ளிரவில் கர்ஜிக்கும் மேகக் கூட்டங்களின் மிகவும் பயங்கரமான பேரிடிகளைப் போல், பயங்கரமாக சத்தமிட்டுக் கொண்டு முழங்கிற்று. (65)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம்: ஐம்பத்தொன்று

தூம்ராட்சன் போர் செய்ய வருதல்!

அப்போது, பயங்கரமாக சப்தத்தை எழுப்புகின்றவர்களும், பேராற்றல் படைத்தவர்களுமான அந்த வானரர்களுடைய மாபெரும் கூச்சலை, அரக்கர்களோடிருந்த இராவணன் கேட்டான். (1)

அமைச்சர் குழுவினரிடையே அமர்ந்திருந்த இராவணன், மிக்க மகிழ்ச்சியுடன், கம்பீரமாக, செவிப்பறையைத் தாக்கும்வண்ணம் எழுப்பப்பட்ட பேரொலியைக் கேட்டவுடன், அவன் பின்வருமாறு கூறினான்— (2)

''இப்போது மேகங்களுடைய இடியோசைக்கு நிகராகக் கேட்கப்படும் பெருஞ்சத்தம், பேரானந்தத்தில் மூழ்கி பெருமளவில் கூடியுள்ள வானரர்களிடமிருந்து கிளம்பியிருக்கிறது. (3)

இவ்வளவு கோலாகல வெளியீட்டுக்குத் தகுந்த காரணம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், அவர்களுடைய பெரும் சப்தத்தால் கடல்கூட கலங்கிவிட்டாற்போலிருக்கிறதே! ஆனால், சகோதரர்களான இராம–லட்சுமணர்கள் கூர்மையான பாணங்களால் கட்டப்பட்டிருக்கிறார்கள். (அதனால், வானரர்கள் வருத்தத்தில் அல்லவா மூழ்கியிருக்க வேண்டும்? அதற்குமாறாக,) மகிழ்ச்சியோடு மிகப்பெரிய சப்தத்தை இங்கே உண்டாக்குகிறார்கள்! இந்த விஷயத்தில் என் மனத்தில் (இராம–லட்சுமணர்கள், நாகபாசத்திலிருந்து விடுதலை பெற்று விட்டார்களோ? – என்ற) சந்தேகம் தோன்றியிருக்கிறது.'' (4,5)

அமைச்சர்களிடம் இவ்வாறு கூறிய பின்னர், அருகிலிருந்த அரக்கர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான், அரக்க மன்னன். (6)

''நீங்கள் விரைவாகச் சென்று, வானரர்கள் மிகவும் துயரப்பட வேண்டிய இந்தத் தருணத்தில் பெருமகிழ்ச்சியோடு பேரொலி எழுப்புவதற்கு என்ன காரணம்? என்று அறிந்து வாருங்கள்.'' (7)

இராவணனால் இவ்வாறு உத்தரவிடப்பட்ட அவர்கள், மிகவும் கலவரமடைந்து, மதிற்சுவர் மீது ஏறி நின்று, மகாத்மாவான சுக்ரீவனால் பாதுகாக்கப்படும் (அவன் தலைமையில் அணிவகுத்து நிற்கும்) வானரப்படையைக் கண்டார்கள். (8)

இராகவர்கள் இருவரும், மிகவும் பயங்கரமான அம்புக்கட்டிலிருந்து விடுபட்டு, உணர்வுபெற்று எழுந்து வீராவேசத்துடன் நிற்பதைப் பார்த்து, அந்த அரக்கர்கள் துக்கமடைந்தார்கள். (9)

கொடியவர்களான அவர்கள், அஞ்சிய நெஞ்சத்துடன் மதிற்சுவரிலிருந்து இறங்கி, வாடிய முகத்துடன் அரக்க மன்னனிடம் வந்து சேர்ந்தார்கள். (10)

தத$_3$ப்ரியம் தீ$_3$நமுகா$_2$ ராவணஸ்ய நிஶாசரா: ।
க்ருத்ஸ்நம் நிவேத$_3$யாமாஸுர்யதா$_2$வத்$_3$வாக்யகோவிதா$_3$: ॥ (11)

யௌ தாவிந்த்$_3$ரஜிதா யுத்$_3$தே$_4$ ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
நிப$_3$த்$_3$தௌ$_4$ ஶரப$_3$ந்தே$_4$ந நிஷ்ப்ரகம்பபு$_4$ஜௌ க்ருதௌ ॥ (12)

விமுக்தௌ ஶரப$_3$ந்தே$_4$ந தௌ த்$_3$ருஶ்யேதே ரணாஜிரே ।
பாஶாநிவ க$_3$ஜௌ சி$_2$த்த்வா க$_3$ஜேந்த்$_3$ரஸமவிக்ரமௌ ॥ (13)

தச்ச்$_2$ருத்வா வசநம் தேஷாம் ராக்ஷஸேந்த்$_3$ரோ மஹாப$_3$ல: ।
சிந்தாஶோகஸமாக்ராந்தோ விஷண்ணவத$_3$நோऽப்$_3$ரவீத் ॥ (14)

கோ$_4$ரைர்த$_3$த்தவரைர்ப$_3$த்$_3$தௌ$_4$ ஶரைராஶீவிஷோபமை: ।
அமோகை$_4$: ஸூர்யஸங்காஶை: ப்ரமத்$_2$யேந்த்$_3$ரஜிதா யுதி$_4$ ॥ (15)

தத$_3$ஸ்த்ரப$_3$ந்த$_4$மாஸாத்$_3$ய யதி$_3$ முக்தௌ ரிபூ மம ।
ஸம்ஶயஸ்த$_2$மித$_3$ம் ஸர்வமநுபஶ்யாம்யஹம் ப$_3$லம் ॥ (16)

நிஷ்ப$_2$லா: க$_2$லு ஸம்வ்ருத்தா: ஶரா வாஸுகிதேஜஸ: ।
ஆத$_3$த்தம் யைஸ்து ஸங்க்$_3$ராமே ரிபூணாம் மம ஜீவிதம் ॥ (17)

ஏவமுக்த்வா து ஸம்க்ருத்$_3$தோ$_4$ நி:ஶ்வஸந்நுரகோ$_3$ யதா$_2$ ।
அப்$_3$ரவீத்$_3$ரக்ஷஸாம் மத்$_4$யே தூ$_4$ம்ராக்ஷம் நாம ராக்ஷஸம் ॥ (18)

ப$_3$லேந மஹதா யுக்தோ ரக்ஷஸாம் பீ$_4$மவிக்ரம ।
த்வம் வதா$_4$யாபி$_4$நிர்யாஹி ராமஸ்ய ஸஹ வாநரை: ॥ (19)

ஏவமுக்தஸ்து தூ$_4$ம்ராக்ஷோ ராக்ஷஸேந்த்$_3$ரேண தீ$_4$மதா ।
க்ருத்வா ப்ரணாமம் ஸம்ஹ்ருஷ்டோ நிர்ஜகா$_3$ம ந்ருபாலயாத் ॥ (20)

அபி$_4$நிஷ்க்ரம்ய தத்$_3$த்$_3$வாரம் ப$_3$லாத்$_4$யக்ஷமுவாச ஹ ।
த்வரயஸ்வ ப$_3$லம் தூர்ணம் கிம் சிரேண யுயுத்ஸத: ॥ (21)

தூ$_4$ம்ராக்ஷவசநம் ஶ்ருத்வா ப$_3$லாத்$_4$யக்ஷோ ப$_3$லாநுக$_3$: ।
ப$_3$லமுத்$_3$யோஜயாமாஸ ராவணஸ்யாக்ஞயா த்$_3$ருதம் ॥ (22)

தே ப$_3$த்$_3$த$_4$க$_4$ண்டா ப$_3$லிநோ கோ$_4$ரரூபா நிஶாசரா: ।
விக$_3$ர்ஜமாநா: ஸம்ஹ்ருஷ்டா தூ$_4$ம்ராக்ஷம் பர்யவாரயந் ॥ (23)

விவிதா$_4$யுத$_4$ஹஸ்தாஶ்ச ஶூலமுத்$_3$க$_3$ரபாணய: ।
க$_3$தா$_3$பி$_4$: பட்டஸைர்த$_3$ண்டை$_3$ராயஸைர்முஸலைர்ப்$_4$ருஶம் ॥ (24)

பரிகை$_4$ர்பி$_4$ண்டி$_3$பாலைஶ்ச ப$_4$ல்லை: ப்ராஸை: பரஶ்வதை$_4$: ।
நிர்யயூ ராக்ஷஸா தி$_3$க்$_3$ப்$_4$யோ நர்த$_3$ந்தோ ஜலதா$_3$ யதா$_2$ ॥ (25)

பேச்சுத்திறனுடைய அந்த அரக்கர்கள், வாடிய முகத்துடன், (இராவணன்) மனத்துக்கு மகிழ்ச்சியைத் தராத அந்தச் செய்தியை, தாங்கள் நேரில் பார்த்தபடி, முழுமையாக இராவணனுக்குத் தெரிவிக்கத் தொடங்கினார்கள்— (11)

''மன்னர் பெருமானே! தங்கள் குமாரன் இந்திரஜித், சகோதரர்களான இராம–லட்சுமணர்களைப் போர்க்களத்தில் சர்ப்பங்களையே அம்புகளாகச் செய்து கட்டிப்போட்டு, கைகளைக்கூட அசைக்க முடியாதபடி செய்து விட்டிருந்தாரோ, யானைக்கு நிகரான வீரம் படைத்த அவ்விருவரும், கால்களைப் பிணைத்திருந்த கயிற்றை அறுத்துக் கொண்டு யானைகள் சுதந்திரமாகத் திரிவதைப் போல, நாகபாசத்திலிருந்து விடுபட்டுப் போர்முனையில் காணப்படுகிறார்கள்.'' (12,13)

பலம் மிக்கவனான அரக்க மன்னன் (இராவணன்), அவர்கள் கூறியதைக் கேட்டதும் கவலையாலும் துயரத்தாலும் பீடிக்கப்பட்டவனாய் வாடிய முகத்துடன் (பின்வருமாறு) கூறினான்— (14)

''கொடிய விஷங்கொண்ட சர்ப்பங்களுக்கு இணையான பயங்கர பாணங்களான எந்த பாணங்கள் தேவதைகளிடமிருந்து வரமாகப் பெறப்பட்டனவோ, வீண் போகாதவைகளோ, சூரியனுக்கு நிகரான தேஜஸ் படைத்தவைகளோ, அந்தப் பாணங்களால் போர்க்களத்தில் இந்திரஜித் எவர்களைக் கட்டிப் போட்டிருந்தானோ, அவ்விரு பகைவர்களும் அந்த அம்புக்கட்டிலிருந்து விடுபட்டு வெளியே வந்துவிட்டார்கள் என்றால், என்னிடமுள்ள சிறப்பு ஆற்றல்கள் எல்லாவற்றையும் சந்தேகத்தோடு பார்க்கிறேன். (இவைகளும் சில சமயங்களில் நம்மை ஏமாற்றிவிடும் என்ற சந்தேகம்.) (15,16)

முன்னர் நிகழ்த்திய பெரும் போர்களில், வாசுகியின் ஆற்றலை நிகர்த்த எந்த பாணங்கள் என் பகைவர்களின் உயிரைக் கவர்ந்தனவோ, அவைகள் இப்போது (இராம–லட்சுமணர்கள் விஷயத்தில்) பயனற்றவைகளாகப் போய்விட்டனவே!'' (17)

(இராவணன்) இவ்வாறு கூறிவிட்டு, கோபம் கொண்ட பாம்பைப் போல பெருமூச்செறிந்து, தூம்ராட்சன் என்ற அரக்கனைப் பார்த்துப் பின்வருமாறு கட்டளையிட்டான்— (18)

''எல்லையில்லாத பராக்கிரமம் படைத்த வீரனே! இராமனையும் வானரர்களையும் ஒழித்துக் கட்டுவதற்காக மிகப்பெரும் அரக்கர் படையோடு உடனே புறப்படுவாயாக!'' (19)

பேரறிவு படைத்த அரக்கமன்னனால் இவ்வாறு ஆணையிடப்பட்ட தூம்ராட்சன், மனத்தில் மகிழ்ச்சியுடன் (அரசனை) வணங்கிவிட்டு, மன்னன் மாளிகையிலிருந்து உடனே வெளியே வந்தான். (20)

அரச மாளிகையின் நுழைவாயிலைக் கடந்து வெளியே வந்ததும், அரக்கர் படைத்தலைவனைப் பார்த்து, ''நமது சேனையை உடனே ஆயத்தப்படுத்துவாய். போர்புரிவதற்காகக் கிளம்பிவிட்டேன். இனி காலதாமதம் வேண்டாம்.'' (21)

ஏராளமான படைவீரர்கள் சூழ நிற்கும் தளபதி, தூம்ராட்சனுடைய சொற்களைக் கேட்டதும், 'இராவணனுடைய ஆணை' என்பதால் உடனடியாகப் படையினரை ஆயத்தப்படுத்தினான். (22)

பயங்கரமான உருவம் கொண்டவர்களும் பலசாலிகளுமான அரக்கவீரர்கள், (வீரத்திற்கு அடையாளமாக) இடுப்பில் மணிகளை கட்டிக் கொண்டு, மகிழ்ச்சியுடன் இடிமுழக்கம் செய்தபடியே, தூம்ராட்சனைச் சூழ்ந்து கொண்டார்கள். (23)

அவர்கள் கைகளில் சூலம், இரும்புத்தடி போன்ற பலவிதமான ஆயுதங்கள். கதாயுதம், பட்டிசம், தண்டம், இரும்பு உலக்கைகள், குண்டாந்தடிகள், பிந்திபாலம், பல்லம், ஈட்டி, கோடாலிகள் முதலிய ஆயுதங்களோடு, எல்லாத் திசைகளிலிருந்தும் மேகம் போல் கர்ஜித்துக் கொண்டு புறப்பட்டார்கள். (24,25)

ரதை$_2$: கவசிநஸ்த்வந்யே த்$_4$வஜைஶ்ச ஸமலங்க்ருதை: ।
ஸுவர்ணஜாலவிஹிதை: க$_2$ரைஶ்ச விவித$_4$ாநநை: ॥ (26)

ஹயை: பரமஶீக்$_4$ரைஶ்ச க$_3$ஜேந்த்$_3$ரைஶ்ச மதோ$_3$த்கடை: ।
நிர்யயூ ராக்ஷஸவ்யாக்$_4$ரா வ்யாக்$_4$ரா இவ து$_3$ராஸதா$_3$: ॥ (27)

வ்ருகஸிம்ஹமுகை$_2$ர்யுக்தம் க$_2$ரை: கநகபூ$_4$ஷணை: ।
ஆருரோஹ ரத$_2$ம் தி$_3$வ்யம் தூ$_4$ம்ராக்ஷ: க$_2$ரநி:ஸ்வந: ॥ (28)

ஸ நிர்யாதோ மஹாவீர்யோ தூ$_4$ம்ராக்ஷோ ராக்ஷஸைர்வ்ருத: ।
ப்ரஹஸந் பஶ்சிமத்$_3$வாரம் ஹநூமாந் யத்ர யூத$_2$ப: ॥ (29)

ரத$_2$ப்ரவரமாஸ்தா$_2$ய ஸ்வரயுக்தம் க$_2$ரஸ்வநம் ।
ப்ரயாந்தம் து மஹாகோ$_4$ரம் ராக்ஷஸம் பீ$_4$மவிக்ரமம் ॥
அந்தரிக்ஷக$_3$தா கோ$_4$ரா: ஶகுநா: ப்ரத்யவாரயந் ॥ (30)

ரத$_2$ஶீர்ஷே மஹாந் பீ$_4$மோ க்$_3$ருத்$_4$ரஶ்ச நிபபாத ஹ ।
த்$_4$வஜாக்$_3$ரே க்$_3$ரதி$_2$தாஶ்சைவ நிபேது: குணபாஶநா: ॥ (31)

ருதி$_4$ரார்த்$_3$ரோ மஹாஞ்ஶ்வேத: கப$_3$ந்த$_4$: பதிதோ பு$_4$வி ।
விஸ்வரம் சோத்ஸ்ருஜந்நாத$_3$ம் தூ$_4$ம்ராக்ஷஸ்ய ஸமீபத: ॥ (32)

வவர்ஷ ருதி$_4$ரம் தே$_3$வ: ஸஞ்சசால ச மேதி$_3$நீ ।
ப்ரதிலோமம் வவௌ வாயுர்நிர்கா$_4$தஸமநி:ஸ்வந: ॥ (33)

திமிரௌகா$_4$வ்ருதாஸ்தத்ர தி$_3$ஶஶ்ச ந சகாஶிரே ।
ஸ தூத்பாதாந்ஸ்ததா$_3$ த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸாநாம் ப$_4$யாவஹாந் ॥ (34)

ப்ராது$_3$ர்பூ$_4$தாந் ஸுகோ$_4$ராம்ஶ்ச தூ$_4$ம்ராக்ஷோ வ்யதி$_2$தோऽப$_4$வத் ।
முமுஹூ ராக்ஷஸா: ஸர்வே தூ$_4$ம்ராக்ஷஸ்ய புர:ஸரா: ॥ (35)

தத: ஸுபீ$_4$மோ ப$_3$ஹுபி$_4$ர்நிஶாசரைர்–
வ்ருதோऽபி$_4$நிஷ்க்ரம்ய ரணோத்ஸுகோ ப$_3$லீ ।
த$_3$த$_3$ர்ஶ தாம் ராக$_4$வபா$_3$ஹுபாலிதாம்
மஹௌக$_4$கல்பாம் ப$_3$ஹு வாநரீம் சமூம் ॥ (36)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

த்$_3$விபஞ்சாஶ: ஸர்க$_3$:

தூ$_4$ம்ராக்ஷவத$_4$:

தூ$_4$ம்ராக்ஷம் ப்ரேக்ஷ்ய நிர்யாந்தம் ராக்ஷஸம் பீ$_4$மவிக்ரமம் ।
விநேது$_3$ர்வாநரா: ஸர்வே ப்ரஹ்ருஷ்டா யுத்$_3$த$_4$காங்க்ஷிண: ॥ (1)

அருகில் நெருங்க முடியாத புலிகள் போன்ற அரக்கப்புலிகள் சிலர் கவசம் அணிந்துகொண்டு, நன்றாக அலங்கரிக்கப்பட்டவைகளும் பொற்சாளரங்கள் அமைக்கப்பட்டவைகளுமான தேர்களில் ஏறிச் சென்றார்கள். சிலர் பலவகையான முகங்களைக் கொண்ட கோவேறு கழுதைகளில் ஏறிக் கொண்டும், சிலர் வேகமாகச் செல்லும் குதிரைகளில் ஏறிக் கொண்டும்; சிலர் மதம் பிடித்த யானைகள்மீது ஏறிக் கொண்டும் பட்டணத்திலிருந்து வெளியே புறப்பட்டார்கள். (26,27)

பொன்னாலான அணிகலன்கள் பூண்டவைகளும் ஓநாய்–சிங்கம் போன்ற முகம் கொண்டவைகளுமான கோவேறு கழுதைகளால் பூட்டப்பட்ட அற்புதமான தேரில், கழுதையின் குரல் கொண்ட தூம்ராட்சன் ஏறிக் கொண்டான். (28)

இவ்வாறு, ஏராளமான அரக்கர்கள் சூழ்ந்துவர ('அட! இந்த வானரப்பதர்கள் எனக்கு எம்மாத்திரம்!' என்ற ஏளனப்) புன்னகையுடன் பேராற்றல் படைத்த தூம்ராட்சன், எந்த வாயிலில் பகைவர்களை எதிர்கொள்ளும் தலைமைப் பொறுப்பில் அனுமான் நியமிக்கப்பட்டிருந்தாரோ, அதே மேற்கு வாயில் வழியாக வெளியே வந்தான். (29)

கழுதைகள் பூட்டப்பெற்றதும், கழுதைபோல் ஒலிக்கின்றதுமான உத்தம ரதத்தில் ஏறிக்கொண்டு செல்லும், அளவுகடந்த பராக்கிரமம் உடையவனும் பயங்கரமான தோற்றமுடையவனுமான அரக்கனை, வானத்தில் பறந்து கொண்டிருந்த கொடிய பறவைகள் (அமங்களமான ஒலி எழுப்பி) தடுத்து நிறுத்தின. (30)

தேரின் உச்சியில் மிகப்பெரிய கழுகு வீழ்ந்தது; தேர்க்கொடியின் முனைகளில் பிணந்தின்னும் பறவைகள் வரிசையாக உட்கார்ந்து கொண்டன. வெண்ணிறம் வாய்ந்த மிகப்பெரிய தலையற்ற முண்டம் ஒன்று, இரத்தத்தால் நனையப் பெற்றதாய், சகிக்கவொண்ணாத ஒலியை எழுப்பிக் கொண்டு, தூம்ராட்சனுக்கு அருகில் வந்து விழுந்தது. (31,32)

மழைக்கடவுள் (பர்ஜன்யன்) ரத்தமாரி பொழிந்தான்; பூமியும் ஆடி அசைந்தது; எதிர்த்திசையிலிருந்து இடியைப் போன்ற பேரொலியுடன் கூடிய காற்று வீசியது. (33)

அப்போது, அடர்த்தியான இருள் சூழ்ந்ததால் திக்குத் திசைகள் புலப்படாமற்போயின. அரக்கர்களுக்கு அச்சத்தைத் தரக்கூடிய, மிக பயங்கரமாகத் தோன்றிய உற்பாதங்களைக் கண்டு தூம்ராட்சன் மிகவும் மனங்கலங்கினான். தூம்ராட்சனுடன் சென்ற எல்லா அரக்கர்களும் மதிமயங்கினார்கள். (34,35)

அவன் மிகவும் பயங்கரமானவன்; போர் செய்யத் துடித்துக் கொண்டிருப்பவன்; பலம் மிக்கவன்; ஏராளமான அரக்கர்கள் சூழ அவ்விடத்திலிருந்து (மேற்கு வாயில் வழியாக) வெளியில் புறப்பட்டான். அங்கே, இராமபிரானின் தோள்வலியால் பாதுகாக்கப்படுவதும் பெருங்கடல் போல் அக்கரை காண முடியாததும் எண்ணிலடங்காததுமான வானரப் படையைக் கண்டான். (36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்திரண்டு

தூம்ராட்சன் மாண்டான்!

போர் துவங்குவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வானரர்கள் எல்லோரும், பயங்கரமான பராக்கிரமம் கொண்ட அரக்கத் தலைவன் தூம்ராட்சன் வெளியே வருவதைப் பார்த்ததும் உள்ளம் பூரித்தவர்களாக பேராரவாரம் செய்தார்கள். (1)

தேஷாம் ஸுதுமுலம் யுத்3த4ம் ஸஞ்ஜஜ்ஞே ஹரிரக்ஷஸாம் ।
அந்யோந்யம் பாத3பைர்கோ4ரம் நிக்4நதாம் ஶூலமுத்3க3ரை: ॥ (2)

கோ4ரைஶ்ச பரிகை4ஶ்சித்ரைஸ்த்ரிஶூலைஶ்சாபி ஸம்ஹதை: ।
ராக்ஷஸைர்வாநரா கோ4ரைர்விநிக்ருத்தா: ஸமந்தத: ॥ (3)

வாநரை ராக்ஷஸாஶ்சாபி த்3ருமைர்பூ4மௌ ஸமீக்ருதா: ।
ராக்ஷஸாஶ்சாபி ஸம்க்ருத்3த4ா வாநராந்நிஶிதை: ஶரை: ॥
விவ்யது4ர்கோ4ரஸங்காஶை: கங்கபத்ரைரஜிஹ்மகை3: ॥ (4)

தே க3தா3பி4ஶ்ச பீ4மாபி4: பட்டஸை: கூடமுத்3க3ரை: ।
கோ4ரைஶ்ச பரிகை4ஶ்சித்ரைஸ்த்ரிஶூலைச்சாபி ஸம்ஶிதை: ॥ (5)

வித3ார்யமாணா ரக்ஷோபி4ர்வாநராஸ்தே மஹாப3லா: ।
அமர்ஷாஜ்ஜநிதோத்3த4ர்ஷாஶ்சக்ரு: கர்மாண்யபீ4தவத் ॥ (6)

ஶரநிர்பி4ந்நகா3த்ராஸ்தே ஶூலநிர்பி4ந்நதே3ஹிந: ।
ஜக்3ருஹுஸ்தே த்3ருமாந்ஸ்தத்ர ஶிலாஶ்ச ஹரியூத2பா: ॥ (7)

தே பீ4மவேகா3 ஹரயோ நர்த3மாநாஸ்ததஸ்தத: ।
மமந்தூ2 ராக்ஷஸாந் பீ4மாந்நாமாநி ச ப3ப4ாஷிரே ॥ (8)

தத்3ப3பூ4வாத்3பு4தம் கோ4ரம் யுத்3த4ம் வாநரரக்ஷஸாம் ।
ஶிலாபி4ர்விவித4ாபி4ஶ்ச ப3ஹுபி4ஶ்சைவ பாத3பை: ॥ (9)

ராக்ஷஸா மதி2தா: கேசித்3வாநரைர்ஜிதகாஶிபி4: ।
வவமு ருதி4ரம் கேசிந்முகை2: ருதி4ரபோ4ஜநா: ॥ (10)

பார்ஶ்வேஷு தா3ரிதா: கேசித்கேசித்3ராஶீக்ருதா த்3ருமை: ।
ஶிலாபி4ஶ்சூர்ணிதா: கேசித்கேசித்3த3ந்தைர்விதா3ரிதா: ॥ (11)

த்4வஜைர்விமதி2தைர்ப4க்3நை: க2ரைஶ்ச விநிபாதிதை: ।
ரதை2ர்வித்4வம்ஸிதைஶ்சாபி பதிதை ரஜநீசரை: ॥ (12)

க3ஜேந்த்3ரை: பர்வதாகாரை: பர்வதாக்3ரைர்வநௌகஸாம் ।
மதி2தைர்வாஜிபி4: கீர்ணம் ஸாரோஹைர்வஸுத4ாதலம் ॥ (13)

வாநரைர்பீ4மவிக்ராந்தைராப்லுத்யாப்லுத்ய வேகி3தை: ।
ராக்ஷஸா: கரஜைஸ்தீக்ஷ்ணைர்முகே2ஷு விநிகர்திதா: ॥ (14)

விவர்ணவத3நா பூ4யோ விப்ரகீர்ணஶிரோருஹா: ।
மூட4ா: ஶோணிதக3ந்தே4ந நிபேதுர்த4ரணீதலே ॥ (15)

அந்யே பரமஸம்க்ருத்3த4ா ராக்ஷஸா பீ4மநி:ஸ்வநா: ।
தலைரேவாபி4த4ாவந்தி வஜ்ரஸ்பர்ஶஸமைர்ஹரீந் ॥ (16)

அரக்கர்களும் வானரர்களும் ஒருவரையொருவர், மரங்கள்–சூலங்கள்–முத்கரங்கள் (இரும்பாலான கதைகள்) முதலியவைகளால் தாக்கிக் கொண்டதால், பரபரப்பு மிக்கப் பயங்கரமான போர் துவங்கியது. (2)

ஒரே கூட்டமாக வந்த படுபாதகர்களான அரக்கர்களால் பயங்கரமான, பலவகையான இரும்புத்தடிகளாலும், மூன்று முனைகொண்ட சூலங்களாலும், எல்லாப்புறங்களிலும் வானரர்கள் வெட்டித் தள்ளப்பட்டார்கள். (3)

வானரர்கள், மரங்களைக் கொண்டு தாக்கி, அரக்கர்களைத் தரையில் வீழ்த்தினார்கள். மிகவும் கோபம் கொண்ட அரக்கர்களும், கழுகின் இறகுகள் பொருத்தப்பட்டவைகளும் குறிதப்பாது தாக்க வல்லவைகளுமான கூரான பாணங்களால் வானரர்களைத் துளைத்தெடுத்தார்கள். (4)

கடுமையாகத் தாக்கக்கூடிய கதைகள், பட்டயம், மறைத்து வைக்கப்பட்ட இரும்புத்தடிகள் முதலியவைகளால் ஈவு–இரக்கமற்ற அரக்கர்களால் சிதறடிக்கப்பட்ட பலசாலிகளான வானரர்கள், அந்த அவமானத்தைத் தாங்க மாட்டாமல், மேலும் வீறுகொண்டு அச்சத்தை ஒழித்துவிட்டவர்கள்போல் வீரசாகசங்களைப் புரிந்தார்கள். (5,6)

பாணங்களால் துளைக்கப்பட்டு, சூலங்களால் குத்தப்பட்ட உடல்களோடிருந்த வானரப்படைத் தலைவர்கள், மரங்களையும் பெரும் பாறைகளையும் கையில் பற்றிக் கொண்டார்கள். (7)

பேராற்றல் படைத்த வானரர்கள், ஆங்காங்கே இருந்தபடி பேரிரைச்சல் போட்டுக் கொண்டு, தத்தம் பெயர்களைக் கூவிக் கொண்டு, படுபாதகர்களான அரக்கர்களைக் கடைந்தெடுத்தார்கள். (8)

பலவகையான கற்பாறைகளாலும் அநேகவித மரங்களாலும், அரக்கர்களும் வானரர்களும் தாக்கிக் கொண்ட பயங்கரமான அந்தப் போர், திகைப்பை உண்டாக்குவதாக இருந்தது. (9)

வெற்றிப் பெருமிதத்துடன் விளங்கிய வானரர்களால் எத்தனை அரக்கர்கள் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டார்கள்! இரத்தத்தையே பருகும் எத்தனை அரக்கர்கள் இரத்தத்தைக் கக்கினார்கள். (10)

சில அரக்கர்கள் விலாப்பக்கங்களில் துண்டிக்கப்பட்டார்கள்; சிலர் மரங்களால் அடித்து நொறுக்கப்பட்டுப் பெருங்குவியலாகக் குவிக்கப்பட்டார்கள்; மற்றும் சிலர் கற்பாறைகளால் தாக்கப்பட்டு பொடிப் பொடியாக்கப்பட்டார்கள்; வேறு சிலர் (வானரர்களின்) பற்களால் கிழிக்கப்பட்டார்கள். (11)

ஒடித்து வீழ்த்தப்பட்ட கொடிகள்; தரையில் தள்ளப்பட்ட கோவேறு கழுதைகள்; நொறுக்கப்பட்ட தேர்கள்; சடலங்களாகக் கிடந்த அரக்கர்கள்; மலைபோல் பேருடல் கொண்ட மடிந்து கிடந்த யானைகள்; சாரதியுடன் கூடவே வீழ்ந்து கிடந்த குதிரைகள்; வானரர்களால் தூக்கி வீசப்பட்ட மலைச்சிகரங்கள் ஆகியவற்றால் அந்தப் போர்க்களம் நிரம்பியிருந்தது. (12,13)

எல்லையில்லாத ஆற்றல் படைத்தவர்களும், வெற்றிக்களிப்பினால் மேலும் உற்சாகம் கொண்டவர்களுமான வானரர்கள், தாவித் தாவிச் சென்று, தங்களுடைய கூர்மையான (கை–கால்) நகங்களால் அரக்கர்களின் முகங்களைப் பிறாண்டினார்கள். (14)

மிகவும் வாடிய முகத்தினராய் தலைக்கேசம் கலைந்து தொங்க, இரத்த நாற்றத்தினால் மூச்சு வாங்கிய அரக்கர்கள் தரையில் விழுந்தார்கள். (15)

ஆனால், வேறு சில அரக்கர்கள் மிகவும் ஆத்திரம் கொண்டு, கொடூரமான குரலெழுப்பிக் கொண்டு, வஜ்ராயுதம் போன்ற தம் கைகளாலேயே வானரர்களைத் தாக்கினார்கள். (16)

வாநரைராபதந்தஸ்தே வேகி$_3$தா வேக$_3$வத்தரை: ।
முஷ்டிபி$_4$ஸ்சரணைர்த$_3$ந்தை: பாத$_3$பைஸ்சாவபோதி$_2$தா: ॥
வாநரைர்ஹந்யமாநாஸ்தே ராக்ஷஸா விப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (17)

ஸைந்யம் து வித்$_3$ருதம் த்$_3$ருஷ்ட்வா தூ$_4$ம்ராக்ஷோ ராக்ஷஸர்ஷப$_4$: ।
க்ரோதே$_4$ந கத$_3$நம் சக்ரே வாநராணாம் யுயுத்ஸதாம் ॥ (18)

ப்ராஸை: ப்ரமதி$_2$தா: கேசித்$_3$வாநரா: ஶோணிதஸ்ரவா: ।
முத்$_3$க$_3$ரைராஹதா: கேசித்பதிதா த$_4$ரணீதலே ॥ (19)

பரிகை$_4$ர்மதி$_2$தா: கேசித்$_3$பி$_4$ண்டி$_3$பாலைர்வித$_3$ாரிதா: ।
பட்டஸைராஹதா கேசித்$_3$விஹ்வலந்தோ க$_3$தாஸவ: ॥ (20)

கேசித்$_3$விநிஹதா: ஶூலை ருதி$_4$ரார்த்$_3$ரா வநௌகஸ: ।
கேசித்$_3$வித்$_3$ராவிதா நஷ்டா: ஸப$_3$லை ராக்ஷஸைர்யுதி$_4$ ॥ (21)

விபி$_4$ந்நஹ்ருத$_3$யா: கேசிதே$_3$கபார்ஸ்வேந த$_3$ாரிதா: ।
வித$_3$ாரிதாஸ்த்ரிஶூலைஸ்ச கேசித$_3$ாந்த்ரைர்விநி:ஸ்ருதா: ॥ (22)

தத்ஸுபீ$_4$மம் மஹாயுத்$_3$த$_4$ம் ஹரிராக்ஷஸஸங்குலம் ।
ப்ரப$_3$பௌ$_4$ ஶப்$_3$த$_3$ப$_3$ஹுளம் ஶிலாபாத$_3$பஸங்குலம் ॥ (23)

த$_4$நுர்ஜ்யாதந்த்ரிமது$_4$ரம் ஹிக்காதாலஸமந்விதம் ।
மந்த$_3$ஸ்தநிதஸங்கீ$_3$தம் யுத்$_3$த$_4$க$_3$ாந்த$_4$ர்வமாப$_3$பௌ$_4$ ॥ (24)

தூ$_4$ம்ராக்ஷஸ்து த$_4$நுஷ்பாணிர்வாநராந் ரணமூர்த$_4$நி ।
ஹஸந் வித்$_3$ராவயாமாஸ தி$_3$ஶஸ்து ஶரவ்ருஷ்டிபி$_4$: ॥ (25)

தூ$_4$ம்ராக்ஷேணார்தி$_3$தம் ஸைந்யம் வ்யதி$_2$தம் வீக்ஷ்ய மாருதி: ।
அப்$_4$யவர்தத ஸங்க்ருத்$_3$த$_4$: ப்ரக்$_3$ருஹ்ய விபுலாம் ஶிலாம் ॥ (26)

க்ரோத$_4$ாத்$_3$த்$_3$விகு$_3$ணதாம்ராக்ஷ: பித்ருதுல்யபராக்ரம: ।
ஶிலாம் தாம் பாதயாமாஸ தூ$_4$ம்ராக்ஷஸ்ய ரத$_2$ம் ப்ரதி ॥ (27)

ஆபதந்தீம் ஶிலாம் த்ருஷ்ட்வா க$_3$த$_3$ாமுத்$_3$யம்ய ஸம்ப்$_4$ரமாத் ।
ரத$_2$ாத$_3$ாப்லுத்ய வேகே$_3$ந வஸுத$_4$ாயாம் வ்யதிஷ்ட$_2$த ॥ (28)

ஸா ப்ரமத்$_2$ய ரத$_2$ம் தஸ்ய நிபபாத ஶிலா பு$_4$வி ।
ஸசக்ரகூப$_3$ரம் ஸாஶ்வம் ஸத்$_4$வஜம் ஸஶராஸநம் ॥ (29)

ஸ ப$_4$ங்க்த்வா து ரத$_2$ம் தஸ்ய ஹநூமாந் மாருதாத்மஜ: ।
ரக்ஷஸாம் கத$_3$நம் சக்ரே ஸஸ்கந்த$_4$விடபைர்த்$_3$ருமை: ॥ (30)

விபி$_4$ந்நஶிரஸோ பூ$_4$த்வா ராக்ஷஸா: ஶோணிதோக்ஷிதா: ।
த்$_3$ருமை: ப்ரவ்யதி$_2$தாஸ்சாந்யே நிபேதுர்த$_4$ரணீதலே ॥ (31)

வேகமாக எதிர்த்து வந்த அவர்களை, அவர்களைக் காட்டிலும் வேகமாக செயல்படும் வானரர்கள், தம் முஷ்டி, கால்கள், பற்கள், மரங்கள் போன்றவற்றால் தாக்கித் துன்புறுத்தினார்கள். அந்தத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அரக்கர்கள் (போர்க்களத்தை விட்டு) வேகமாக ஓடிச் சென்றார்கள். (17)

தன்னுடைய படைவீரர்கள் புறங்காட்டி ஓடுவதைக் கண்டு வெகுண்டெழுந்த அரக்கர் காளையான தூம்ராட்சன், தொடர்ந்து போர்புரியும் ஆவலுடனிருந்த வானரர்களை அழிக்கத் தொடங்கினான். (18)

சில வானரர்கள் ஈட்டிகளால் தாக்கப்பட்டு இரத்தத்தைப் பொழியவிட்டார்கள்; மற்றும் சிலர் இரும்பு உலக்கைகளால் அடிபட்டுத் தரையில் சாய்ந்தார்கள். (19)

சில வானரர்கள் இரும்புத்தடிகளால் தாக்கப்பட்டு உடல் சிதறிப் போனார்கள்; சிலர் பிந்திபாலம் என்னும் ஆயுதத்தால் கிழிக்கப்பட்டார்கள்; சிலர் பட்டாக்கத்திகளால் குத்தப்பட்டார்கள். எல்லோரும் மதிகலங்கி உயிரைத் துறந்தார்கள். (20)

சில வானரர்கள் சூலங்களால் குத்தப்பட்டார்கள்; போர்க்களத்தில் ஏராளமாகவிருந்த அரக்கப் படையினரால் சிலர் துரத்தியடிக்கப்பட்டார்கள்; சிலர் தலைமறைவாகிப் போனார்கள். ஒரு சிலர், ஒரு விலாப்பக்கம் நொறுக்கப்பட்டவர்களாக, இருதயம் சேதப்படுத்தப்பட்டார்கள்; சிலர் மும்முனைச் சூலங்களால் குத்தப்பட்டு குடல் பிதுங்கியவரானார்கள். (21,22)

அந்தப் பெரும்போரில் வானரர்களும் அரக்கர்களும் வீசிய கற்பாறைகளும் மரங்களும் குவியல் குவியலாகக் கிடந்தன; குற்றுங்குலையுயிருமாகக் கிடந்தவர்களின் உரத்த வேதனைக் குரல்கள் – அந்த இடத்தைக் காணச் சகிக்காதபடி ஆக்கியிருந்தன. (23)

அந்தப் போர் அரங்கத்தில் ஓர் இசைவிழாவே நடப்பதைப் போலிருந்தது! விற்களின் நாணொலியே தந்திக் கருவிகளின் நாதம்; (பூமியில் கிடந்த வீரர்களின்) விக்கல்களே தாளங்கள்; அவர்களின் முனகல்களே மெல்லிசை! (24)

போர்முனையில், கைகளில் வில்லைப் பிடித்து நின்ற தூம்ராட்சன், வெற்றிக்களிப்புடன் சிரித்துக் கொண்டே, அம்புமழை பொழிந்து, எல்லாப் பக்கங்களிலும் வானரர்களைத் துரத்தியடித்தான். (25)

வானரப்படை, தூம்ராட்சனால் தாக்கப்பட்டு சிதறி ஓடுவதைக் கண்ட அனுமான், மிகவும் சினங்கொண்டு, மிகப்பெரிய பாறை ஒன்றை எடுத்துக் கொண்டு எதிர்நோக்கிச் சென்றார். (26)

தந்தைக்கு நிகரான ஆற்றல்கொண்ட அவர், கோபம் தாங்காமல் முன்னைவிட இருமடங்கு சிவந்த கண்களுடன் தூம்ராட்சனுடைய தேரைக் குறிவைத்து, அந்தப் பாறையை வீசி எறிந்தார். (27)

தூம்ராட்சன், கற்பாறை தன் மேல் விழுவதற்கு வருவதைக் கவனித்தவுடன், கலவரமடைந்து கதையைக் கையில் பற்றிக் கொண்டு, தேரிலிருந்து சட்டென்று குதித்துத் தரையில் வந்து நின்றான். (28)

(அனுமானால் வீசப்பட்ட) அந்தக் கற்பாறை, அந்த ரதம், சக்கரங்கள், ஏர்க்கால்கள், குதிரைகள், கொடிகள், விற்கள் ஆகியவற்றை நொறுக்கித் தள்ளிவிட்டுத் தரையில் விழுந்தது. வாயுகுமாரராகிய அனுமான், அவனுடைய தேரைச் சிதறடித்துவிட்டு, தண்டு–கிளைகளோடு கூடிய மரங்களால், அரக்கர்களை அழிக்க முற்பட்டார். (29,30)

சில அரக்கர்கள் தலை துண்டிக்கப்பட்டு இரத்தத்தைப் பெருக்கினார்கள்; மற்றும் சிலர் மரங்களால் தாக்கப்பட்டுத் தரையில் வீழ்ந்தார்கள். (31)

வித்3ராவ்ய ராக்ஷஸம் ஸைந்யம் ஹநூமாந் மாருதாத்மஜ: ।
கி3ரே: ஶிக2ரமாத3ாய தூ4ம்ராக்ஷமபி4து3த்3ருவே ॥ (32)

தமாபதந்தம் தூ4ம்ராக்ஷோ க3த3ாமுத்3யம்ய வீர்யவாந் ।
விநர்த3மாந: ஸஹஸா ஹநூமந்தமபி4த்3ரவத் ॥ (33)

தஸ்ய க்ருத்3த4ஸ்ய ரோஷேண க3த3ாம் தாம் ப3ஹுகண்டகாம் ।
பாதயாமாஸ தூ4ம்ராக்ஷோ மஸ்தகே து ஹநூமத: ॥ (34)

தாடி3த: ஸ தயா தத்ர க3த3யா பீ4மரூபயா ।
ஸ கபிர்மாருதப3லஸ்தம் ப்ரஹாரமசிந்தயந் ॥
தூ4ம்ராக்ஷஸ்ய ஶிரோமத்4யே கி3ரிஶ்ருங்க3மபாதயத் ॥ (35)

ஸ விஹ்வலிதஸர்வாங்கோ3 கி3ரிஶ்ருங்கே3ண தாடி3த: ।
பபாத ஸஹஸா பூ4மௌ விகீர்ண இவ பர்வத: ॥ (36)

தூ4ம்ராக்ஷம் நிஹதம் த்3ருஷ்ட்வா ஹதஶேஷா நிஶாசரா: ।
த்ரஸ்தா: ப்ரவிவிஶுர்லங்காம் வத்4யமாநா: ப்லவங்க3மை: ॥ (37)

ஸ து பவநஸுதோ நிஹத்ய ஶத்ரும் க்ஷதஜவஹா: ஸரிதஶ்ச ஸந்நிகீர்ய ।
ரிபுவத4ஜநிதஶ்ரமோ மஹாத்மா முத3மக3மத்கபி4ஶ்ச பூஜ்யமாந: ॥ (38)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 த்3விபஞ்சாஶ: ஸர்க3: ॥

த்ரிபஞ்சாஶ: ஸர்க3:

வஜ்ரத3ம்ஷ்ட்ரயுத்3த4ம்

தூ4ம்ராக்ஷம் நிஹதம் ஶ்ருத்வா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
க்ரோதே4ந மஹதாவிஷ்டோ நி:ஶ்வஸந்நுரகோ3 யதா2 ॥ (1)

தீ3ர்க4முஷ்ணம் விநி:ஶ்வஸ்ய க்ரோதே4ந கலுஷீக்ருத: ।
அப்3ரவீத்3ராக்ஷஸம் ஶூரம் வஜ்ரத3ம்ஷ்ட்ரம் மஹாப3லம் ॥ (2)

க3ச்ச2 த்வம் வீர நிர்யாஹி ராக்ஷஸை: பரிவாரித: ।
ஜஹி தா3ஶரதி2ம் ராமம் ஸுக்3ரீவம் வாநரை: ஸஹ ॥ (3)

ததே2த்யுக்த்வா த்3ருததரம் மாயாவீ ராக்ஷஸேஶ்வர: ।
நிர்ஜகா3ம ப3லை: ஸார்த4ம் ப3ஹுபி4: பரிவாரித: ॥ (4)

நாகை3ரஶ்வை: க2ரைருஷ்ட்ரை: ஸம்யுக்த: ஸுஸமாஹித: ।
பதாகாத்4வஜசித்ரைஶ்ச ரதை2ஶ்ச ஸமலங்க்ருத: ॥ (5)

ததோ விசித்ரகேயூரமுகுடைஶ்ச விபூ4ஷித: ।
தநுத்ராணி ச ஸம்ருத்4ய ஸத4நுர்நிர்யயௌ த்3ருதம் ॥ (6)

வாயுகுமாரரான அனுமான், அரக்கர் படையை அடித்துத் துரத்திவிட்டு, மலைமுகடு ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு தூம்ராட்சனைத் தாக்க முனைந்தார். (32)

வீரம் மிகுந்த தூம்ராட்சன், கதையை உயரே தூக்கிப் பிடித்துக் கொண்டு இரைச்சலிட்டவண்ணம், தன்னை எதிர்த்து வரும் அனுமானை வேகமாக எதிர்த்துத் தாக்கினான். (33)

ஆத்திரமும் அகந்தையும் கொண்ட தூம்ராட்சன், முட்கள் நிறைந்த கதையை அனுமானின் தலைமேல் ஓங்கி அடித்தான். (34)

பயங்கரமான அந்தக் கதையினால் கடுமையாகத் தாக்கப்பட்ட, வாயுவுக்கு நிகரான ஆற்றல் கொண்ட அனுமான், அதைப் பொருட்படுத்தாமல் தூம்ராட்சனுடைய உச்சந்தலையில், அந்த மலைமுகட்டை விழச்செய்தார். (35)

மலைமுகட்டினால் தாக்கப்பட்ட அவன், உடல் அங்கங்களெல்லாம் சிதைக்கப்பட்டு, அடித்து நொறுக்கப்பட்ட ஒரு மலை போல் உடனே தரையில் விழுந்தான். (36)

தூம்ராட்சன் கொல்லப்பட்டதைப் பார்த்த, உயிரோடு எஞ்சியிருந்த அரக்கர்கள் மிகவும் பயமடைந்தார்கள்; வானரர்கள் அவர்களைத் துரத்திக் கொண்டு வந்து தாக்கும் நிலையிலேயே, இலங்கைக்குத் திரும்பிச் சென்றார்கள். (37)

இவ்வாறாக எதிரிகளைக் கொன்று, இரத்த ஆறுகளை ஓடச் செய்த மகாத்மாவான வாயுகுமாரர், எதிரிகளுடன் கடுமையாகப் போரிட்டுக் களைத்திருந்தாலும், ஏனைய வானரர்களால் கொண்டாடப்பட்டு உவகை அடைந்தார். (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து மூன்று

வஜ்ரதம்ஷ்ட்ரன் போரிடுதல்!

'தூம்ராட்சன் கொல்லப்பட்டு விட்டான்' என்ற செய்தியைக் கேட்ட அரக்க மன்னன் இராவணன், சர்ப்பத்தைப் போல் நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு கட்டுக்கடங்காத கோபத்தால் ஆட்கொள்ளப்பட்டான். (1)

வெம்மையான நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு, பெருஞ்சினத்தால் மனம் கலங்கிய அவன், மிக்க பலசாலியும் வீரனுமான வஜ்ரதம்ஷ்ட்ரன் என்ற அரக்கனைப் பார்த்துக் கட்டளையிட்டான்— (2)

''வீரனே! தேவைப்பட்ட அளவு அரக்கப் படையினரை அழைத்துக் கொண்டு பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்வாயாக. தசரத மைந்தன் இராமன் மற்றும் சுக்ரீவனையும் வானரர்களையும் கொல்வாயாக.'' (3)

மாயாவியும் அரக்கத் தலைவனுமான அவன், 'அவ்வாறே செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு, ஏராளமான படைகள் சூழ வெகுவிரைவில் வெளியே புறப்பட்டான். (4)

யானைகள், குதிரைகள், கோவேறு கழுதைகள், ஒட்டகங்கள் ஆகியவை உடன்வர, கவர்ச்சிகரமான கொடிகளையுடைய தேர்கள், தோள்வளைகள், கிரீடம் முதலியவற்றால் அழகாக அணிசெய்யப்பட்டு, கவசம் அணிந்து, வில்லேந்தி, போர் செய்வதில் ஒருமுகப்பட்ட மனத்துடனிருந்த அவன், சடுதியில் வெளியே (போர்முனைக்குக்) கிளம்பினான். (5,6)

பதாகாலங்க்ருதம் தீ3ப்தம் தப்தகாஞ்சநபூ4ஷணம் ।
ரத2ம் ப்ரத3க்ஷிணம் க்ருத்வா ஸமாரோஹச்சமூபதி: ॥ (7)

யஷ்டிபி4ஸ்தோமரைஶ்சித்ரை: ஶூலைஶ்ச முஸலைரபி ।
பி4ண்டி3பாலைஶ்ச பாஶைஶ்ச ஶக்திபி4: பட்டஸைரபி ॥ (8)

க2ட்3கைஶ்சக்ரைர்க3தா3பி4ஶ்ச நிஶிதைஶ்ச பரஶ்வதை4: ।
பதா3தயஶ்ச நிர்யாந்தி விவிதா4: ஶஸ்த்ரபாணய: ॥ (9)

விசித்ரவாஸஸ: ஸர்வே தீ3ப்தா ராக்ஷஸபுங்க3வா: ।
க3ஜா மதோ3த்கடா: ஶூராஶ்சலந்த இவ பர்வதா: ॥ (10)

தே யுத்3த4குசலை ரூடா4ஸ்தோமராங்குஶபாணிபி4: ।
அந்யே லக்ஷணஸம்யுக்தா: ஶூரா ரூடா4 மஹாப3லா: ॥ (11)

தத்3ராக்ஷஸப3லம் கோ4ரம் விப்ரஸ்தி2தமஶோப4த ।
ப்ராவ்ருட்காலே யதா2 மேகா4 நர்த3மாநா: ஸவித்3யுத: ॥ (12)

நி:ஸ்ருதா த3க்ஷிணத்3வாராத3ங்க3தோ3 யத்ர யூத2ப: ।
தேஷாம் நிஷ்க்ரமமாணாநாமஶுப4ம் ஸமஜாயத ॥ (13)

ஆகாஶாத்3விக4நாத்தீவ்ரா உல்காஶ்சாப்4யபதந்ஸ்தத3ா ।
வமந்த்ய: பாவகஜ்வாலா: ஶிவா கோ4ரம் வவாஶிரே ॥ (14)

வ்யாஹரந்தி ம்ருக3ா கோ4ரா ரக்ஷஸாம் நித4நம் தத3ா ।
ஸமாபதந்தோ யோத4ாஸ்து ப்ராஸ்க2லந் ப4யமோஹிதா: ॥ (15)

ஏதாநௌத்பாதிகாந் த்3ருஷ்ட்வா வஜ்ரத3ம்ஷ்ட்ரோ மஹாப3ல: ।
தை4ர்யமாலம்ப்3ய தேஜஸ்வீ நிர்ஜகா3ம ரணோத்ஸுக: ॥ (16)

தாந்ஸ்து வித்3ரவதோ த்3ருஷ்ட்வா வாநரா ஜிதகாஶிந: ।
ப்ரணேது3: ஸுமஹாநாத3ாந் பூரயம்ஶ்ச தி3ஶோ த3ஶ ॥ (17)

தத: ப்ரவ்ருத்தம் துமுலம் ஹரீணாம் ராக்ஷஸை: ஸஹ ।
கோ4ராணாம் பீ4மரூபாணாமந்யோந்யவத4காங்க்ஷிணாம் ॥ (18)

நிஷ்பதந்தோ மஹோத்ஸாஹா பி4ந்நதே3ஹஶிரோத4ரா: ।
ருதி4ரோக்ஷிதஸர்வாங்க3ா ந்யபதஞ்ஜக3தீதலே ॥ (19)

கேசித3ந்யோந்யமாஸாத்3ய ஶூரா: பரிக4பாணய: ।
சிக்ஷிபுர்விவித4ம் ஶஸ்த்ரம் ஸமரேஷ்வநிவர்திந: ॥ (20)

த்3ருமாணாம் ச ஶிலாநாம் ச ஶஸ்த்ராணாம் சாபி நி:ஸ்வந: ।
ஶ்ரூயதே ஸுமஹாந்ஸ்தத்ர கோ4ரோ ஹ்ருத3யபே4த3ந: ॥ (21)

பாவட்டாக்களால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவீசுகின்றதும் சொக்கத்தங்கத்தால் அழகுற விளங்குவதுமான ரதத்தை வலம் வந்து, படைத்தலைவனான அவன் அதில் ஏறிக் கொண்டான். (7)

தடிகள், தோமரங்கள், பலவகையான சூலங்கள், உலக்கைகள், பிந்திபாலங்கள், பாசக்கயிறுகள், சக்தி என்னும் வேல், பட்டாக்கத்திகள், வாள்கள், சக்கரங்கள், கதைகள், கூரான கோடாலிகள் முதலிய ஆயுதங்களைத் தரித்துக் கொண்டும், பலவகையான அஸ்திர–சஸ்திரங்களை ஏந்திக் கொண்டும் காலாட்படையினர் அவனுடன் புறப்பட்டார்கள். (8,9)

விசித்திரமான ஆடைகளை அணிந்து கொண்டிருந்த அரக்கவீரர்கள், தம்முடைய வீரத்தினால் பிரகாசித்தார்கள். வீரம் மிகுந்த மதங்கொண்ட யானைகள், நடைபயிலும் குன்றுகளைப் போல் இருந்தன. (10)

அவைகளின் மேல் தோமரங்களையும் அங்குசங்களையும் கையில் பிடித்த போர்த்திறன் படைத்த வீரர்கள் ஏறிக்கொண்டிருந்தார்கள்; மங்களமான லட்சணங்கள் பொருந்திய வேறு சில யானைகள் மீது பேராற்றலுடைய வீரர்கள் ஆரோகணித்திருந்தார்கள். (11)

போர் புரிவதற்காக வெளியே புறப்பட்ட பயங்கரமான அந்த அரக்கர்படை, மழைக்காலத்தில் மின்னலுடன் இடி இடிக்கும் மேகங்கள் போல் விளங்கிற்று. (12)

வானரப்படைத் தலைவனான அங்கதன் பொறுப்பிலிருந்த தெற்குவாயில் வழியாக அவர்கள் வெளியே புறப்பட்டார்கள். அவர்கள் புறப்படும்போதே அபசகுனம் உண்டாயிற்று. (13)

அப்போது, முகிற்கூட்டம் இல்லாதிருந்த வானத்திலிருந்து நெருப்புக் கங்குகளுடன் கொள்ளிக்கட்டைகள் விழுந்தன; அக்னிச் சுவாலைகளைக் கக்கிக்கொண்டு நரிகள் பயங்கரமாக ஊளையிட்டன. (14)

கொடிய விலங்குகள், அரக்கர்களின் அழிவைக் குறிக்கும் வகையில் ஓலமிட்டன; கால்நடையாகச் சென்று கொண்டிருந்த படைவீரர்கள் அச்சத்தால் மனம் தடுமாறி, கால் இடறி விழுந்தார்கள். (15)

உடலாற்றலும், போராற்றலும் மிக்க வஜ்ரதம்ஷ்ட்ரன், இவ்வித அபசகுனங்களைக் கண்ணாரக் கண்டு, தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டு, போர் செய்வதில் தீவிர எண்ணமுடையவனாக வெளியே புறப்பட்டான். (16)

மிக வேகமாக வெளியே வருகின்ற அவர்களைப் பார்த்ததும், வெற்றித்திருவுடன் விளங்கிய வானரர்கள், பேரொலிகளை எழுப்பி பத்துத் திசைகளையும் நிரப்பினார்கள். (17)

பின்னர், பயங்கரமானவர்களும் பேருருவம் படைத்தவர்களுமான வானரர்களுக்கும் அரக்கர்களுக்குமிடையே கடுமையான போர் தொடங்கிற்று. ஒரு படையினர் எதிர்ப்படையினரை வீழ்த்துவதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். (18)

பேரார்வத்துடன் வெளியில் வந்தவர்கள் (அரக்கர்கள்), (கழுத்தில் வெட்டப்படவே,) உடல்களும் தலைகளும் வேறுபடுத்தப்பட்டவர்களாய், இரத்தம் தோய்ந்த அங்கங்களுடன் பூமியில் விழுந்தார்கள். (19)

இரும்புத் தடிகளைத் தாங்கியிருந்தவர்களும், போர்க்களத்திலிருந்து புறங்காட்டி ஓடாதவர்களுமான சில வீரர்கள், பலவித சஸ்திரங்களை ஒருவர்மேல் ஒருவர் எறிந்து தாக்கினார்கள். (20)

அப்போது, மரங்கள்–பாறைகள்–ஆயுதங்கள் முதலியவற்றை எறியும், நெஞ்சைப் பிளக்கும் மகத்தான பேரொலி உண்டாயிற்று. (21)

ரத$_2$நேமிஸ்வநஸ்தத்ர த$_4$நுஷஶ்சாபி நி:ஸ்வந: ।
ஶங்க$_2$பே$_4$ரீம்ருத$_3$ங்கா$_3$நாம் ப$_3$பூ$_4$வ துமுல: ஸ்வந: ॥ (22)

கேசித$_3$ஸ்த்ராணி ஸந்த்யஜ்ய பா$_3$ஹுயுத்$_3$த$_4$மகுர்வத ।
தலைஶ்ச சரணைஶ்சாபி முஷ்டிபி$_4$ஶ்ச த்$_3$ருமைரபி ॥ (23)

ஜாநுபி$_4$ஶ்ச ஹதா: கேசித்$_3$பி$_4$ந்நதே$_3$ஹாஶ்ச ராக்ஷஸா: ।
ஶிலாபி$_4$ஶ்சூர்ணிதா: கேசித்$_3$வாநரைர்யுத்$_3$த$_4$து$_3$ர்மதை$_3$: ॥ (24)

வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரோ ப்$_4$ருஶம் பா$_3$ணை ரணே வித்ராஸயந் ஹரீந் ।
சசார லோகஸம்ஹரே பாஶஹஸ்த இவாந்தக: ॥ (25)

ப$_2$லவந்தோऽஸ்த்ரவிது$_3$ஷோ நாநாப்ரஹரணா ரணே ।
ஜக்$_4$நுர்வாநரஸைந்யாநி ராக்ஷஸா: க்ரோத$_4$மூர்சி$_2$தா: ॥ (26)

நிக்$_4$நதோ ராக்ஷஸாந் த்$_3$ருஷ்ட்வா ஸர்வாந் வாலிஸுதோ ரணே ।
க்ரோதே$_4$ந த்$_3$விகு$_3$ணாவிஷ்ட: ஸம்வர்தக இவாநல: ॥ (27)

தாந் ராக்ஷஸக$_3$ணாந் ஸர்வாந் வ்ருக்ஷமுத்$_3$யம்ய வீர்யவாந் ।
அங்கத$_3$த$_3$: க்ரோத$_4$தாம்ராக்ஷ: ஸிம்ஹ: க்ஷுத்$_3$ரம்ருகா$_3$நிவ ॥
சகார கத$_3$நம் கோ$_4$ரம் ஶக்ரதுல்யபராக்ரம: ॥ (28)

அங்க$_3$தா$_3$பி$_4$ஹதாஸ்தத்ர ராக்ஷஸா பீ$_4$மவிக்ரமா: ।
விபி$_4$ந்நஶிரஸ: பேதுர்விக்ருத்தா இவ பாத$_3$பா: ॥ (29)

ரதை$_2$ரஶ்வைர்த்$_4$வஜைஶ்சித்ரை: ஶரீரைர்ஹரிரக்ஷஸாம் ।
ருதி$_4$ரேண ச ஸஞ்ச$_2$ந்நா பூ$_4$மிர்ப$_4$யகரீ ததா$_3$ ॥ (30)

ஹாரகேயூரவஸ்த்ரைஶ்ச ஶஸ்த்ரைஶ்ச ஸமலங்க்ருதா ।
பூ$_4$மிர்பா$_4$தி ரணே தத்ர ஶாரதீ$_3$வ யதா$_2$ நிஶா ॥ (31)

அங்க$_3$த$_3$ஸ்ய ச வேகே$_3$ந தத்$_3$ராக்ஷஸப$_3$லம் மஹத் ।
ப்ராகம்பத ததா$_3$ தத்ர பவநேநாம்பு$_3$தோ$_3$ யதா$_2$ ॥ (32)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரிபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

சது:பஞ்சாஶ: ஸர்க$_3$:

வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரவத$_4$:

ப$_3$லஸ்ய ச நிகா$_4$தேந அங்க$_3$த$_3$ஸ்ய ஜயேந ச ।
ராக்ஷஸ: க்ரோத$_4$மாவிஷ்டோ வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரோ மஹாப$_3$ல: ॥ (1)

ஸ விஸ்பா$_2$ர்ய த$_4$நுர்கோ$_4$ரம் ஶக்ராஶநிஸமஸ்வநம் ।
வாநராணாமநீகாநி ப்ராகிரச்ச$_2$ரவ்ருஷ்டிபி$_4$: ॥ (2)

அந்த வேளையில், தேர்ச்சக்கரங்களின் ஒலியும், விற்களின் நாணொலியும், சங்கு–பேரி–மிருதங்கம் ஆகியவைகளின் ஒலியும் சேர்ந்து குழப்பமாக இருந்தது. (22)

சிலர் அஸ்திரங்களை ஒதுக்கிவிட்டு கைகளால் சண்டை செய்தார்கள்; சில அரக்கர்கள் (வானரர்களின்) உள்ளங்கைகளாலும் கால்களாலும் முஷ்டிகளாலும் முழந்தாள்களாலும் மரங்களாலும் தாக்கப்பட்டு, உடல் சிதறியவர்களாகக் கொல்லப்பட்டார்கள். போரிலேயே மனத்தைச் செலுத்தியிருந்த வானரர்களால், சில அரக்கர்கள் கற்பாறை வீச்சினால் பொடிப் பொடியாக்கப்பட்டார்கள். (23,24)

உலகின் அழிவுக் காலத்தில் கையில் பாசக்கயிறுடன் திரியும் யமன் போல, பாணத் தாக்குதலால் வானரர்களை மிகவும் அச்சுறுத்திக் கொண்டு, வஜ்ரதம்ஷ்ட்ரன் போர் முனையில் திரிந்து கொண்டிருந்தான். (25)

பலவகையான ஆயுதங்களைக் கையில் தாங்கியவர்களும் அஸ்திர வித்தை வல்லுநர்களும் பலம் மிக்கவர்களுமான அரக்கர்கள், கோபாவேசத்துடன் வானரப் படையைத் தாக்கினார்கள். (26)

அரக்கர்கள், வானரர்களைத் தாக்கிக் கொல்வதைக் கண்ட வாலியின் புதல்வன் ஆத்திரம் தாங்காமல் பிரளயகால அக்னி போல, முன்னைக் காட்டிலும் இருமடங்கு ஆவேசத்துடன் விளங்கினான். (27)

இந்திரனுக்கு ஒப்பான ஆண்மையும் பெருவீரமும் கொண்ட அங்கதன், கோபத்தால் கண்கள் சிவக்க ஒரு மரத்தைப் பிடுங்கிக் கொண்டு, ஒரு சிங்கம் அற்பமான காட்டு விலங்குகளை எவ்வளவு எளிதாகத் தாக்கி அழிக்குமோ, அவ்வாறே அரக்கர்படை அனைத்தையும் கொடூரமாக அழித்தான். (28)

அப்போது, அங்கதனால் தாக்கப்பட்ட பேராற்றலுடைய அரக்கர்கள் தலைகள் உடைந்து, வேருடன் கெல்லி எறியப்பட்ட மரங்கள் போலக் கீழே விழுந்தார்கள். (29)

அந்தச் சமயத்தில், அந்த மறக்களம், தேர்கள்–குதிரைகள்–பல்வகைக் கொடிகளாலும், வானரர் மற்றும் அரக்கர்களின் உடல்களாலும், இரத்தத்தாலும் மூடப்பட்டதாய் அச்சத்தை விளைவிப்பதாகக் காணப்பட்டது (30)

அப்போது, அந்தப் போர்க்களம், படைவீரர்களின் மாலைகள், தோள்வளைகள் மற்றும் ஆடைகளாலும் ஆயுதங்களாலும் நிரம்பி, சரத்கால இரவு போல் விளங்கிற்று. (31)

அங்கே, அங்கதனுடைய பேராற்றலால், பெருங்காற்று வீச்சினால் மேகங்கள் சிதறி விரைந்தோடுவதைப் போல, அந்த மாபெரும் அரக்கர்படை சிதறி ஓடியது. (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து நான்கு

வஜ்ரதம்ஷ்ட்ரன் வதம்

தன்னுடைய படைவீரர்களின் அழிவையும் அங்கதனுடைய பேராற்றலையும் கண்ட மகாபலம் பொருந்திய வஜ்ரதம்ஷ்ட்ரன் மிகவும் கோபம் கொண்டான். (1)

பயங்கரமான தனது வில்லை வளைத்து, இந்திரனின் வசத்திலுள்ள மேகங்கள் போல் பேரொலியுடன் நாணொலி எழுப்பி, வானரப் படைகளின் மேல் சரமாரி பொழிந்தான். (2)

ராக்ஷஸாஶ்சாபி முக்$_2$யாஸ்தே ரதே$_2$ஷு ஸமவஸ்தி$_2$தா: ।
நாநாப்ரஹரணா: ஶூரா: ப்ராயுத்$_4$யந்த தத$_3$ா ரணே ॥ (3)

வாநராணாம் து ஶூரா யே ஸர்வே தே ப்லவக$_3$ர்ஷப$_4$ா: ।
அயுத்$_4$யந்த ஶிலாஹஸ்தா: ஸமவேதா: ஸமந்தத: ॥ (4)

தத்ராயுத$_4$ஸஹஸ்ராணி தஸ்மிந்நாயோத$_4$நே ப்$_4$ருஶம் ।
ராக்ஷஸா: கபிமுக்$_2$யேஷு பாதயாம்சக்ரிரே தத$_3$ா ॥ (5)

வாநராஶ்சாபி ரக்ஷ:ஸு கி$_3$ரீந் வ்ருக்ஷாந் மஹாஶிலா: ।
ப்ரவீரா: பாதயாமாஸுர்மத்தவாரணஸந்நிப$_4$ா: ॥ (6)

ஶூராணாம் யுத்$_4$யமாநாநாம் ஸமரேஷ்வநிவர்திநாம் ।
தத்$_3$ராக்ஷஸக$_3$ணாநாம் ச ஸுயுத்$_3$த$_4$ம் ஸமவர்தத ॥ (7)

ப்ரபி$_4$ந்நஶிரஸ: கேசித்$_3$பி$_4$ந்நை: பாதைஶ்ச ப$_3$ாஹுபி$_4$: ।
ஶஸ்த்ரைரர்பிததே$_3$ஹாஸ்து ருதி$_4$ரேண ஸமுக்ஷிதா: ॥ (8)

ஹரயோ ராக்ஷஸாஶ்சைவ ஶேரதே க$_3$ாம் ஸமாஶ்ரிதா: ।
கங்கக்$_3$ருத்$_4$ரப$_3$லாட்$_4$யாஶ்ச கோ$_3$மாயுக$_3$ணஸங்குலா: ॥ (9)

கப$_3$ந்த$_4$ாநி ஸமுத்பேதுர்பீ$_4$ரூணாம் பீ$_4$ஷணாநி வை ।
பு$_4$ஜபாணிஶிரஶ்சி$_2$ந்நாஶ்சி$_2$ந்நகாயாஶ்ச பூ$_4$தலே ॥
வாநரா ராக்ஷஸாஶ்சாபி நிபேதுஸ்தத்ர வை ரணே ॥ (10)

ததோ வாநரஸைந்யேந ஹந்யமாநம் நிஶாசரம் ।
ப்ராப$_4$ஜ்யத ப$_3$லம் ஸர்வம் வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரஸ்ய பஶ்யத: ॥ (11)

ராக்ஷஸாந் ப$_4$யவித்ரஸ்தாந் ஹந்யமாநாந் ப்லவங்க$_3$மை: ।
த்$_3$ருஷ்ட்வா ஸ ரோஷதாம்ராக்ஷோ வஜ்ரத$_3$ம்ஷ்ட்ர: ப்ரதாபவாந் ॥ (12)

ப்ரவிவேஶ த$_4$நுஷ்பாணிஸ்த்ராஸயந் ஹரிவாஹிநீம் ।
ஶரைர்வித$_3$ாரயாமாஸ கங்கபத்ரைரஜிஹ்மகை$_3$: ॥ (13)

பி$_3$பே$_4$த$_3$ வாநராந்ஸ்தத்ர ஸப்தாஷ்டௌ நவ பஞ்ச ச ।
விவ்யாத$_4$ பரமக்ருத்$_3$தே$_4$ா வஜ்ரத$_3$ம்ஷ்ட்ர: ப்ரதாபவாந் ॥ (14)

த்ரஸ்தா: ஸர்வே ஹரிக$_3$ணா: ஶரை: ஸம்க்ருத்தகந்த$_4$ரா: ।
அங்க$_3$த$_3$ம் ஸம்ப்ரத$_4$ாவந்தி ப்ரஜாபதிமிவ ப்ரஜா: ॥ (15)

ததோ ஹரிக$_3$ணாந் ப$_4$க்$_3$நாந் த்$_3$ருஷ்ட்வா வாலிஸுதஸ்தத$_3$ா ।
க்ரோதே$_4$ந வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரம் தமுதீ$_3$க்ஷந்தமுதை$_3$க்ஷத ॥ (16)

வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரோऽங்க$_3$த$_3$ஶ்சோபெ$_4$ள ஸங்க$_3$தெள ஹரிராக்ஷஸெள ।
சேரது: பரமக்ருத்$_3$தெ$_4$ள ஹரிமத்தக$_3$ஜாவிவ ॥ (17)

அவனுடன் சேர்ந்து முக்கியமான சில அரக்கர்கள், தேர்களில் இருந்தவண்ணமே கைகளில் பலவகையான ஆயுதங்களைத் தாங்கி போர்புரிய முற்பட்டார்கள். (3)

(சாமானிய வானரர்களைத் தவிர்த்து,) சூரர்களான வானரர்கள் எல்லோரும், எல்லாப் பக்கங்களிலும் ஒன்று திரண்டு, கைகளில் கற்பாறைகளை ஏந்தி யுத்தத்தில் ஈடுபட்டார்கள். (4)

அப்போது, அந்தப் போர்முனையில், அரக்கர்கள் கணக்கிலடங்காத ஆயுதங்களை வானரத் தலைவர்கள் மீது மிக வேகமாக வீசி எறிந்தார்கள். (5)

மதங்கொண்ட யானைகளைப் போன்றவர்களும், சிறந்த வீரர்களுமான வானரர்கள், (அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில்) அரக்கர்கள் மீது மலைகளையும் மரங்களையும் பெரும் பாறைகளையும் தூக்கி வீசினார்கள். (6)

போர்க்களத்தில் புறங்காட்டி ஓடாமலும் அச்சமில்லாமலும் போர் புரிகின்ற சூரர்களான வானரர்களுக்கும் அரக்கர் கூட்டங்களுக்குமிடையே கடும்போர் தொடர்ந்து நடைபெற்றது. (7)

சிலருடைய தலை உடைந்தது; சிலருடைய கை–கால்கள் துண்டிக்கப்பட்டன; பல வீரர்களின் உடல் சஸ்திரங்களால் தாக்கப்பட்டு குருதியில் தோய்ந்து கிடந்தன. (8)

பல வானரர்களும் அரக்கர்களும் உயிர் துறந்து தரையில் விழுந்து கிடந்தார்கள். கழுகு–பருந்து–காக்கை–நரிக் கூட்டங்கள் அவர்களைச் சுற்றித் திரிந்தன. (9)

தலை வெட்டப்பட்ட முண்டங்கள் பயந்த சுபாவமுடையவர்களை, மேலும் அச்சுறுத்திக் கொண்டு துடித்துக் கொண்டிருந்தன. படைவீரர்களின் வெட்டப்பட்ட தோள்கள், கைகள், தலைகள், உடல்கள் தரையில் விழுந்து கிடந்தன. வானரர்–அரக்கர் ஆகிய இரு தரப்பினரும் போர்க்களத்தில் தரையில் சாய்ந்து கிடந்தார்கள். (10)

பின்னர், சிறிது நேரம் கழித்து, வஜ்ரதம்ஷ்ட்ரன் கண்முன்னாலேயே, வானரப்படையினால் கொலை வெறியுடன் தாக்கப்பட்ட அரக்கர்படை முழுவதும் சிதறி ஓடத் தொடங்கியது. (11)

வானரர்களால் அரக்கர்கள் தாக்கப்படுவதையும் அஞ்சி ஓடுவதையும் கண்ட பராக்கிரமம் மிக்க வஜ்ரதம்ஷ்ட்ரன், கோபத்தால் கண்கள் சிவக்க, கையில் வில்லேந்தியவனாக, வானரப்படையை அச்சுறுத்திக் கொண்டு போர்க்களத்தில் புகுந்தான். கழுகின் இறகுகள் கட்டப்பட்டவையும் குறிதப்பாமல் தாக்க வல்லவைகளுமான பாணங்களால் (வானரர்களைப்) பிளந்து தள்ளினான். (12,13)

பேராற்றல் படைத்த வஜ்ரதம்ஷ்ட்ரன், மிக்க சினங்கொண்டு, ஒவ்வொரு பாணத்தால், ஐந்து–ஏழு–எட்டு–ஒன்பது வானரர்களைத் தாக்கிச் சிதைத்து வீழ்த்தினான். (14)

பாணங்களால் கழுத்தில் வெட்டுப்பட்ட வானரக் கூட்டங்கள் யாவும், ஆபத்துக் காலங்களில் மக்கள் பிரும்மதேவனை நோக்கி (அடைக்கலம் கோரி) ஓடுவதைப் போல, மிகுந்த அச்சத்துடன் அங்கதனை நோக்கி ஓடின. (15)

வாலி மைந்தனான அங்கதன், வானரக் கூட்டங்கள் சிதறி ஓடுவதைப் பார்த்து, தன்னையே நோக்கிக் கொண்டிருக்கும் வஜ்ரதம்ஷ்ட்ரனைக் கோபம் ததும்பும் விழிகளுடன் உற்றுநோக்கினான். (16)

வானர–அரக்கரான அங்கதன், வஜ்ரதம்ஷ்ட்ரன் ஆகிய இருவரும் மிகுந்த கோபம் கொண்டு, ஒரு சிங்கமும் மதங்கொண்ட யானையும் ஒன்றோடொன்று சண்டை போடுவதைப் போல, ஆக்ரோஷமாகச் சண்டையிட்டார்கள். (17)

தத: ஶரஸஹஸ்ரேண வாலிபுத்ரம் மஹாப$_3$ல: ।
ஜக$_4$ாந மர்மதே$_3$ஶேஷு மாதங்க$_3$மிவ தோமரை: ॥ (18)

ருதி$_4$ரோக்ஷிதஸர்வாங்கே$_3$ா வாலிஸூநுர்மஹாப$_3$ல: ।
சிக்ஷேப வஜ்ரத$_3$ம்ஷ்ட்ராய வ்ருக்ஷம் பீ$_4$மபராக்ரம: ॥ (19)

த்$_3$ருஷ்ட்வாபதந்தம் தம் வ்ருக்ஷமஸம்ப்$_4$ராந்தஶ்ச ராக்ஷஸ: ।
சிச்சே$_2$த$_3$ ப$_3$ஹூத$_4$ா ஸோऽபி நிக்ருத்த: பதிதோ பு$_4$வி ॥ (20)

தம் த்$_3$ருஷ்ட்வா வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரஸ்ய விக்ரமம் ப்லவக$_3$ர்ஷப$_4$: ।
ப்ரக்$_3$ருஹ்ய விபுலம் ஶைலம் சிக்ஷேப ச நநாத$_3$ ச ॥ (21)

ஸமாபதந்தம் தம் த்$_3$ருஷ்ட்வா ரத$_2$ாத$_3$ாப்லுத்ய வீர்யவாந் ।
க$_3$த$_3$ாபாணிரஸம்ப்$_4$ராந்த: ப்ருதி$_2$வ்யாம் ஸமதிஷ்ட$_2$த ॥ (22)

அங்க$_3$தே$_3$ந ஶிலா க்ஷிப்தா க$_3$த்வா து ரணமூர்த$_4$நி ।
ஸசக்ரகூப$_3$ரம் ஸாஶ்வம் ப்ரமமாத$_2$ ரத$_2$ம் தத$_3$ா ॥ (23)

ததோऽந்யம் கி$_3$ரிமாக்ஷிப்ய விபுலம் த்$_3$ருமபூ$_4$ஷிதம் ।
வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரஸ்ய ஶிரஸி பாதயாமாஸ ஸோऽங்க$_3$த$_3$: ॥ (24)

அப$_4$வச்சே$_2$ாணிதோத்$_3$கா$_3$ரீ வஜ்ரத$_3$ம்ஷ்ட்ர: ஸ மூர்சி$_2$த: ।
முஹூர்தமப$_4$வந்மூடே$_4$ா க$_3$த$_3$ாமாலிங்க்$_3$ய நி:ஶ்வஸந் ॥ (25)

ஸ லப்$_3$த$_4$ஸம்ஜ்ஞோ க$_3$த$_3$யா வாலிபுத்ரமவஸ்தி$_2$தம் ।
ஜக$_4$ாந பரமக்ருத்$_3$தே$_4$ா வக்ஷோதே$_3$ஶே நிஶாசர: ॥ (26)

க$_3$த$_3$ாம் த்யக்த்வா ததஸ்தத்ர முஷ்டியுத்$_3$த$_4$மவர்தத ।
அந்யோந்யம் ஜக்$_4$நதுஸ்தத்ர தாவுபெ$_4$ள ஹரிராக்ஷஸெள ॥ (27)

ருதி$_4$ரோத்$_3$கா$_3$ரிணெள தெள து ப்ரஹாரைர்ஜநிதஶ்ரமெள ।
ப$_3$பூ$_4$வது: ஸுவிக்ராந்தாவங்கா$_3$ரகபு$_3$த$_4$ாவிவ ॥ (28)

தத: பரமதேஜஸ்வீ அங்க$_3$த$_3$: கபிகுஞ்ஜர: ।
உத்பாட்ய வ்ருக்ஷம் ஸ்தி$_2$தவாந் ப$_3$ஹுபுஷ்பப$_2$லாந்விதம் ॥ (29)

ஜக்$_3$ராஹ சார்ஷப$_4$ம் சர்ம க$_2$ட்$_3$க$_3$ம் ச விபுலம் ஶுப$_4$ம் ।
கிங்கிணீஜாலஸஞ்ச$_2$ந்நம் சர்மணா ச பரிஷ்க்ருதம் ॥ (30)

விசித்ராம்ஶ்சேரதுர்மார்கா$_3$ந் ருஷிதெள கபிராக்ஷஸெள ।
ஜக்$_4$நதுஶ்ச தத$_3$ாந்யோந்யம் நிர்த$_3$யம் ஜயகாங்க்ஷிணெள ॥ (31)

வ்ரணை: ஸாஸ்ரைரஶோபே$_4$தாம் புஷ்பிதாவிவ கிம்ஶுகெள ।
யுத்$_4$யமாநெள பரிஶ்ராந்தெள ஜாநுப்$_4$யாமவநீம் க$_3$தெள ॥ (32)

அப்போது மகாபலசாலியான வஜ்ரதம்ஷ்ட்ரன், யானையை அங்குசத்தால் குத்தி அடக்குவதைப் போல, நூறு பாணங்களால் அங்கதனின் உயிர்நிலைகளைத் தாக்கினான். (18)

உடல் முழுவதும் இரத்தம் சொட்டச் சொட்ட நின்ற மகாபலசாலியான அங்கதன், வஜ்ரதம்ஷ்ட்ரனைக் குறிவைத்து ஒரு பெரிய மரத்தை வீசி எறிந்தான். (19)

அந்த மரம் தன்மேல் விழவிருப்பதைக் கண்ட அரக்கன், சிறிதும் மனம் பதறாமல் (அம்பைச் செலுத்தித்) துண்டு துண்டாக்கினான்; அந்த மரமும் பற்பல துண்டுகளாகித் தரையில் விழுந்தது. (20)

வஜ்ரதம்ஷ்ட்ரனின் எல்லையற்ற ஆற்றலைக் கண்ட வானரோத்தமன், மிகப்பெரிய மலையொன்றைப் பெயர்த்து, அவன் மேல் வீசி அட்டகாசமாகக் குரலெழுப்பினான். (21)

மகாவீரனான வஜ்ரதம்ஷ்ட்ரன், அந்த மலைமுகடு தன்மேல் விழவிருப்பதைக் கண்டும் பதட்டமடையாமல், கையில் கதை ஏந்தியவனாகத் தேரிலிருந்து குதித்துக் கீழே தரையில் நின்றான். (22)

போர்முனையில், அங்கதனால் வீசி எறியப்பட்ட பெரிய பாறை, சக்கரம்–ஏர்க்கால்கள்–குதிரையோடுகூட அந்த (வஜ்ரதம்ஷ்ட்ரனின்) தேரைப் பொடிப் பொடியாக்கிற்று. (23)

உடனே, ஏராளமான மரங்கள் நிறைந்த வேறொரு குன்றினை எடுத்து, வஜ்ரதம்ஷ்ட்ரனுடைய தலைமேல் அங்கதன் எறிந்தான். (24)

அந்த அடியைத் தாங்கமாட்டாமல் வஜ்ரதம்ஷ்ட்ரன் நினைவிழந்து இரத்தத்தைக் கக்கினான். தன் கதாயுதத்தை மார்பில் சார்த்தி, அதைத் தழுவிக் கொண்டு ஒரு முகூர்த்த காலம் வரை இருந்தான். அவனுடைய மூச்சு மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. (25)

அந்த அரக்கன் மூர்ச்சை தெளிந்ததும், எதிரில் நின்றுகொண்டிருந்த வாலி புதல்வனின் மார்பில் கதையால் தாக்கினான். (26)

பின்னர், கதையை எறிந்துவிட்டு கைமுஷ்டியால் சண்டை நிகழ்ந்தது. வானர–அரக்கரான அவ்விருவரும் ஒருவரையொருவர் முஷ்டியினால் தாக்கிக் கொண்டார்கள். (27)

எல்லையற்ற ஆற்றல் படைத்த அவ்விருவரும், செவ்வாயும் புதனும் போல் போர் செய்து, தம் மேல் விழுந்த அடிகளால் (தாக்குதல்களால்) களைத்துப் போய், வாய் வழியே இரத்தத்தைக் கக்கினார்கள். (28)

சிறிது நேரத்துக்குப் பின்னர், அளவுகடந்த ஆற்றலுடைய வானர யானையாகிய அங்கதன், ஏராளமான மலர்களும் கனிகளும் நிறைந்த ஒரு மரத்தை வேருடன் பிடுங்கி (அரக்கனை) எதிர்த்து நின்றான். (29)

காளையின் தோலினால் செய்யப்பட்ட கேடயத்தையும், சிறிய மணிகளால் வரிசையாக பிணைக்கப் பெற்றதும் தோலால் ஆன உறையில் வைக்கப்பட்டிருந்ததும் அழகியதும் பெரியதுமான வாளையும் எடுத்து கொண்டான். (30)

அப்போது, வானரனும் அரக்கனும் சினம் பொங்கியவர்களாக பலவகையான போர்முறைகளைக் காட்டி, ஒருவரையொருவர் வெற்றி கொள்ள விரும்பியவர்களாக நெஞ்சில் ஈரமில்லாமல் தாக்கிக் கொண்டார்கள். (31)

உடலில் ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் வழிந்த காட்சி, மலர்ந்த (சிவந்த) பூக்களைக் கொண்ட இரு மரங்கள் போலிருந்தது. (ஆத்திரத்துடன்) போர் செய்கின்ற அவ்விருவரும் சற்றே களைப்படைந்து, முழங்கால்களைத் தரையில் ஊன்றி சிறிது ஓய்வெடுத்தார்கள். (32)

நிமேஷாந்தரமாத்ரேண அங்க$_3$த$_3$: கபிகுஞ்ஜர: ।
உத$_3$திஷ்ட$_2$த தீ$_3$ப்தாக்ஷோ த$_3$ண்ட$_3$ாஹத இவோரக$_3$: ॥ (33)

நிர்மலேந ஸுதெ$_4$ளதேந க$_2$ட்$_3$கே$_3$நாஸ்ய மஹச்சி$_2$ர: ।
ஜக$_4$ாந வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரஸ்ய வாலிஸூநுர்மஹாப$_3$ல: ॥ (34)

ருதி$_4$ரோக்ஷிதகா$_3$த்ரஸ்ய ப$_3$பூ$_4$வ பதிதம் த்$_3$விதா$_4$ ।
ஸ ரோஷபரிவ்ருத்தாக்ஷம் ஶுப$_4$ம் க$_2$ட்$_3$க$_3$ஹதம் ஶிர: ॥ (35)

வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரம் ஹதம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸா ப$_4$யமோஹிதா: ।
த்ரஸ்தா: ப்ரத்யபதல்லங்காம் வத்$_4$யமாநா: ப்லவங்க$_3$மை: ॥
விஷண்ணவத$_3$நா தீ$_3$நா ஹ்ரியா கிஞ்சித$_3$வாங்முகா$_2$: ॥ (36)

நிஹத்ய தம் வஜ்ரத$_4$ரப்ரபா$_4$வ:
ஸ வாலிஸூநு: கபிஸைந்யமத்$_4$யே ।
ஜகா$_3$ம ஹர்ஷம் மஹிதோ மஹாப$_3$ல:
ஸஹஸ்ரநேத்ரஸ்த்ரித$_3$ஶைரிவாவ்ருத: ॥ (37)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ சது:பஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

பஞ்சபஞ்சாஶ: ஸர்க$_3$:

அகம்பந யுத்$_3$த$_4$ம்

வஜ்ரத$_3$ம்ஷ்ட்ரம் ஹதம் ஶ்ருத்வா வாலிபுத்ரேண ராவண: ।
ப$_3$லாத்$_4$யக்ஷமுவாசேத$_3$ம் க்ருதாஞ்ஜலிமவஸ்தி$_2$தம் ॥ (1)

ஶீக்$_4$ரம் நிர்யாந்து து$_3$ர்த$_4$ர்ஷா ராக்ஷஸா பீ$_4$மவிக்ரமா: ।
அகம்பநம் புரஸ்க்ருத்ய ஸர்வஶஸ்த்ராஸ்த்ரகோவித$_3$ம் ॥ (2)

ஏஷ ஶாஸ்தா ச கோ$_3$ப்தா நேதா ச யுதி$_4$ ஸம்மத: ।
பூ$_4$திகாமஶ்ச மே நித்யம் நித்யம் ச ஸமரப்ரிய: ॥ (3)

ஏஷ ஜேஷ்யதி காகுத்ஸ்தெ$_2$ள ஸுக்$_3$ரீவம் ச மஹாப$_3$லம் ।
வாநராம்ஶ்சாபராந் கோ$_4$ராந் ஹநிஷ்யதி பரந்தப: ॥ (4)

பரிக்$_2$ருஹ்ய ஸ தாமாக்ஞாம் ராவணஸ்ய மஹாப$_3$ல: ।
ப$_3$லம் ஸந்த்வரயாமாஸ ததா$_3$ லகு$_4$பராக்ரம: ॥ (5)

ததோ நாநாப்ரஹரணா பீ$_4$மாக்ஷா பீ$_4$மத$_3$ர்ஶநா: ।
நிஷ்பேது ரக்ஷஸாம் முக்$_2$யா ப$_3$லாத்$_4$யக்ஷப்ரசோதி$_3$தா: ॥ (6)

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பலசாலியான அங்கதன், அனல்பொறி கக்கும் கண்களுடன் தடியால் அடிபட்ட பாம்பைப் போல சீறி எழுந்தான். (33)

பேராற்றலுடைய வாலிமைந்தன், (இரத்தக்கறை இல்லாமல்) தூயதாகவும் கூர்மையாகவும் இருந்த வாளினால், வஜ்ரதம்ஷ்ட்ரனின் மாபெரும் தலையை வெட்டித் தள்ளினான். (34)

கோபத்தால் சுழலும் கண்களுடன் ஒளிவீசிக் கொண்டிருந்த அவனுடைய தலை, இரத்தம் சொட்டிக் கொண்டிருக்கும் அவன் உடல் – என இரண்டு துண்டுகளாகப் பிளக்கப்பட்டுத் தரையில் விழுந்தது. (35)

மிகுந்திருந்த அரக்கர்கள், வஜ்ரதம்ஷ்ட்ரன் கொல்லப்பட்டு விட்டதைப் பார்த்ததும், அச்சத்தால் மதிகலங்கி, முகம் வாடி, (தோற்றுப் போனதால்) வெட்கத்துடன் சிறிது குனிந்த தலையுடன், வானரர்களால் மேலும் தாக்கப்பட்டவர்களாக, பரிதாபமான நிலையில் பயத்தோடு இலங்கைக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தார்கள். (36)

பேராற்றலும் இந்திரனுக்கு நிகரான வல்லமையும் கொண்ட வாலிமைந்தனான அங்கதன், வஜ்ரதம்ஷ்ட்ரனைக் கொன்றதனால், (அசுரர்களை வென்றவுடன்) தேவர்கள் சூழ பெருமிதத்தோடு நின்ற தேவேந்திரன் போல, வானரப்படையினரால் புகழ்ந்து கொண்டாடப்பட்டு மகிழ்ச்சியை அடைந்தான். (37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தைந்து

அகம்பனன் போர்புரிதல்!

வாலியின் புதல்வனால் வஜ்ரதம்ஷ்ட்ரன் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டதும், கூப்பிய கைகளுடன் அருகில் நின்று கொண்டிருந்த படைத்தலைவனைப் பார்த்து இராவணன் கூறினான்— (1)

''எல்லாவித அஸ்திர–சஸ்திரப் பிரயோகங்களில் வல்லவனான அகம்பனனை முன்னிறுத்தி, பேராண்மை படைத்தவர்களும் வெல்ல முடியாதவர்களுமான அரக்கர்கள், உடனே புறப்பட்டுச் செல்ல வேண்டும். (2)

இவன் (அகம்பனன்) போர்க்கள நிர்வாகத்தில் சிறந்தவன்; தன் படைகளைக் காப்பவன்; சிறந்த போர்த்தலைவன் என்று பெயர் பெற்றவன்; எப்போதும் என் மேன்மையை நாடுபவன்; எப்போதும் போர் செய்வதில் விருப்பமுள்ளவன். (3)

எதிரிகளை வாட்டியெடுக்கும் இவன், இராம–லட்சுமணர்களையும், மிக்க பலம் பொருந்திய சுக்ரீவனையும் (நிச்சயமாக) வெற்றி கொள்வான். மற்றுமுள்ள கொடிய வானரர்களையும் கொல்வான்.'' (4)

மகாபலம் பொருந்தியவனும், கடினமான வேலைகளையும் எளிதில் செய்து முடிக்கும் திறன் படைத்தவனுமான அவன், இராவணனுடைய ஆணையை ஏற்று படையினரைத் துரிதப்படுத்தினான். (5)

பயங்கரமான கண்களையும் தோற்றத்தையுமுடைய முக்கிய அரக்கர்கள், படைத்தலைவனின் ஆணைப்படி பலவகையான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நகரத்திலிருந்து வெளியே புறப்பட்டார்கள். (6)

ரத$_{2}$மாஸ்தா$_{2}$ய விபுலம் தப்தகாஞ்சந குண்டல: ।
மேகாபோ மேகவர்ணஶ்ச மேகஸ்வந மஹாஸ்வந: ॥
ராக்ஷஸை: ஸம்வ்ருதோ பீமைஸ் ததா நிர்யாத்யகம்பந: ॥ (7)

ந ஹி கம்பயிதும் ஶக்ய: ஸுரைரபி மஹாம்ருதே$_{4}$ ।
அகம்பநஸ்ததஸ்தேஷாமாதி$_{3}$த்ய இவ தேஜஸா ॥ (8)

தஸ்ய நிர்த$_{4}$ாவமாநஸ்ய ஸம்ரப்$_{3}$த$_{4}$ஸ்ய யுயுத்ஸயா ।
அகஸ்மாத்$_{3}$தை$_{3}$ந்யமாக$_{3}$ச்ச$_{2}$த்$_{3}$த$_{4}$யாநாம் ரத$_{2}$வாஹிநாம் ॥ (9)

வ்யஸ்பு$_{2}$ரந்நயநம் சாஸ்ய ஸவ்யம் யுத்$_{3}$த$_{4}$ாபி$_{4}$நந்தி$_{3}$ந: ।
விவர்ணோ முக$_{2}$வர்ணஶ்ச க$_{3}$த்$_{3}$க$_{3}$த$_{3}$ஶ்சாப$_{4}$வத்ஸ்வந: ॥ (10)

அப$_{4}$வத்ஸுதி$_{3}$நே சாபி து$_{3}$ர்தி$_{3}$நம் ரூக்ஷமாருதம் ।
ஊசு: க$_{2}$க$_{3}$ா: ம்ருக$_{3}$ா: ஸர்வே வாச: க்ரூரா ப$_{4}$யாவஹா: ॥ (11)

ஸ ஸிம்ஹோபசிதஸ்கந்த$_{4}$: ஶார்தூ$_{3}$லஸமவிக்ரம: ।
தாநுத்பாதாநசிந்த்யைவ நிர்ஜக$_{3}$ாம ரணாஜிரம் ॥ (12)

தத$_{3}$ா நிர்க$_{3}$ச்ச$_{2}$தஸ்தஸ்ய ரக்ஷஸ: ஸஹ ராக்ஷஸை: ।
ப$_{3}$பூ$_{4}$வ ஸுமஹாந்நாத$_{3}$: க்ஷோப$_{4}$யந்நிவ ஸாக$_{3}$ரம் ॥ (13)

தேந ஶப்$_{3}$தே$_{3}$ந வித்ரஸ்தா வாநராணாம் மஹாசமூ: ।
த்$_{3}$ருமஶைலப்ரஹரணா யோத்$_{3}$து$_{4}$ம் ஸமவதிஷ்ட$_{2}$த ॥ (14)

தேஷாம் யுத்$_{3}$த$_{4}$ம் மஹாரௌத்$_{3}$ரம் ஸஞ்ஜஜ்ஞே ஹரிரக்ஷஸாம் ।
ராமராவணயோரர்தே$_{2}$ ஸமபி$_{4}$த்யக்தஜீவிநாம் ॥ (15)

ஸர்வே ஹ்யதிப$_{3}$லா: ஶூரா: ஸர்வே பர்வதஸந்நிப$_{4}$ா: ।
ஹரயோ ராக்ஷஸாஶ்சைவ பரஸ்பரஜிக$_{4}$ாம்ஸவ: ॥ (16)

தேஷாம் விநிர்த$_{3}$தாம் ஶப்$_{3}$த$_{3}$: ஸம்யுகே$_{3}$ऽதிதரஸ்விநாம் ।
ஶுஶ்ருவே ஸுமஹாந் க்ரோத$_{4}$ாத$_{3}$ந்யோந்யமபி$_{4}$க$_{3}$ர்ஜதாம் ॥ (17)

ரஜஶ்சாருணவர்ணாப$_{4}$ம் ஸுபீ$_{4}$மமப$_{4}$வத்$_{3}$ப்$_{4}$ருஶம் ।
உத்$_{3}$பூ$_{4}$தம் ஹரிரக்ஷோபி$_{4}$: ஸம்ருரோத$_{4}$ தி$_{3}$ஶோ த$_{3}$ஶ ॥ (18)

அந்யோந்யம் ரஜஸா தேந கௌஶேயோத்$_{3}$தூ$_{4}$தபாண்டு$_{3}$நா ।
ஸம்வ்ருதாநி ச பூ$_{4}$தாநி த$_{3}$த்$_{3}$ருஶுர்ந ரணாஜிரே ॥ (19)

ந த்$_{4}$வஜா ந பதாகா வா வர்ம வா துரகோ$_{3}$ऽபி வா ।
ஆயுத$_{4}$ம் ஸ்யந்த$_{3}$நம் வாபி த$_{3}$த்$_{3}$ருஶே தேந ரேணுநா ॥ (20)

ஶப்$_{3}$த$_{3}$ஶ்ச ஸுமஹாம்ஸ்தேஷாம் நர்த$_{3}$தாமபி$_{4}$த$_{4}$ாவதாம் ।
ஶ்ருயதே துமுலே யுத்$_{3}$தே$_{4}$ ந ரூபாணி சகாஶிரே ॥ (21)

ஹரீநேவ ஸுஸம்க்ருத்$_{3}$த$_{4}$ா ஹரயோ ஜக்$_{4}$நுராஹவே ।
ராக்ஷஸாஶ்சாபி ரக்ஷாம்ஸி நிஜக்$_{4}$நுஸ்திமிரே தத$_{3}$ா ॥ (22)

அப்போது, மாசற்ற தங்கத்தாலான குண்டலங்களை அணிந்தவனும், மேகம்போல் ஒளிவீசுபவனும், மேகம் போன்ற வண்ணமுடையவனும், மேகங்கள் மோதும்போது எழுகின்ற இடியோசை போன்ற பெருமுழக்கம் செய்பவனுமான அகம்பனன், பெரிய தேரில் ஏறிக் கொண்டு, பேருடல் படைத்த அரக்கர்கள் புடைசூழ வெளிக் கிளம்பினான். (7)

சமர்க்களத்தில் தேவர்களாலும்கூட அவனை அசைக்க முடியாது. அவர்களுள் (அரக்கர்களுள்) அவன் சூரியன்போல் பிரகாசிப்பவன். போர் செய்யும் துடிப்புடன் அவன் வெகு ஆர்வத்துடன் வெளியே புறப்பட்டுச் செல்கையில், தேரை இழுத்துச் செல்லும் குதிரைகளுக்கு ஒரு காரணமுமில்லாமல் தளர்ச்சி ஏற்பட்டது. (8,9)

போர் செய்யும் விருப்புடன் சென்று கொண்டிருந்த அவனுடைய இடது கண் துடித்தது; முகத்தோற்றமும் ஒளி மங்கியது; குரலும் தழுதழுத்ததாக ஆயிற்று. (10)

அன்றைய தினம் பிரகாசமான நல்ல நாளாக இருந்தாலும், பயங்கரமான புயற்காற்றுடன் கூடிய மேகக்கூட்டத்தால் இருள் சூழ்ந்த தீய நாளாக ஆயிற்று. எல்லாப் பறவைகளும் விலங்குகளும், அச்சத்தை உண்டாக்கும் கடூரமான ஒலிகளை எழுப்பின. (11)

சிங்கத்தைப் போல் திரண்ட தோள்களை உடையவனும், புலிநிகர் ஆற்றலுடையவனுமான அவன், அந்த அபசகுனங்களைப் பொருட்படுத்தாமலேயே போர்க்களத்தை நோக்கிச் சென்றான். அரக்கர்களோடு அவன் புறப்பட்டபோது, (அவர்களுடைய உற்சாகமிகுதியால்) பெருங்கடலையும் கலங்கச் செய்யும் மகத்தான பேரொலி உண்டாயிற்று. (12,13)

அந்தப் பேரொலியைக் கேட்டு அஞ்சி நடுங்கிய மாபெரும் வானரப் படை, மரங்களையும் பாறைகளையும் படைக்கலன்களாகக் கொண்டு போர் புரிவதற்கு ஆயத்தமாக நின்றது. (14)

இராம–இராவணர்களுக்காக உயிரைக் கொடுக்கவும் துணிந்திருந்த வானர–அரக்கர்களிடையே மிகவும் கடுமையான போர் நிகழ்ந்தது. (15)

வானர–அரக்கர்களாகிய அவர்கள் அனைவருமே மிகவும் பலசாலிகள்; சூரர்கள்; மலை போன்ற பேருடல் படைத்தவர்கள்; ஒருவரையொருவர் வெற்றி கொள்வதில் பெருவிருப்பம் கொண்டவர்கள். பேராற்றல் கொண்ட அவர்கள், போர்க்களத்தில் மிகவும் சினங்கொண்டு ஒருவரையொருவர் அதட்டி–மிரட்டி–உருட்டும் பேரொலி எங்கும் கேட்டது. (16,17)

வானரர்களாலும் அரக்கர்களாலும் (அவர்கள் ஓடித் தாவிக் குதித்து சண்டையிட்டதால்) உண்டாக்கப்பட்ட (இரத்தத்தைத் தொட்டுக் கொண்டு வந்ததால்) செவ்வண்ணத் தூசி, மிகப்பெரிய அளவில் எழுந்ததால், பத்துத் திசைகளையும் மறைத்துவிட்டது. (18)

பட்டுத் துணியினால் மூடப்பட்டது போல் சிறிது வெளுத்திருந்த அந்தத் தூசியினால், போர்க்களத்தில் உள்ள எல்லாப் பிராணிகளும் மூடப்பட்டதால், வானர–அரக்கர்கள் ஒருவரையொருவர் பார்க்க முடியவில்லை. (19)

பெருமளவில் எழும்பிய தூசிப்படலத்தால், தேர், கொடி, பாவட்டா, கவசம், குதிரை, படைக்கலன் ஆகிய எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை. (20)

குழப்பமான அந்தச் சூழ்நிலையில், சிம்மநாதம் செய்து கொண்டு எதிர்த்தோடி வரும் அவர்களுடைய சத்தம் மட்டும் போர்முனையில் பெரிதாகக் கேட்கப்பட்டது; உருவங்கள் கண்ணில் படவில்லை. (21)

அந்தப் போர்க்களத்தில் (எழும்பிய கனமான தூசுப்படலத்தால்) இருள் சூழ்ந்து கொண்டதால், (யார், எவர் என்ற அடையாளம் காண முடியாமற்போகவே,) கோபம் கொண்ட வானரர்கள், வானரர்களையே தாக்கினார்கள்; (அதேபோல,) அரக்கர்களும் அரக்கர்களையே கொன்று போட்டார்கள். (22)

பராம்ஶ்சைவ விநிக்$_4$நந்த: ஸ்வாம்ஶ்ச வாநரராக்ஷஸா: ।
ருதி$_4$ரார்த்$_3$ராம் தத$_3$ா சக்ருர்மஹீம் பங்காநுலேபநாம் ॥ (23)

ததஸ்து ருதி$_4$ரௌகே$_4$ண ஸிக்தம் வ்யபக$_3$தம் ரஜ: ।
ஶரீரஶவஸங்கீர்ணா ப$_3$பூ$_4$வ ச வஸுந்த$_4$ரா ॥ (24)

த்$_3$ருமஶக்திஶிலாப்ராஸைர்க$_3$தா$_3$பரிக$_4$தோ$_3$மரை: ।
ஹரயோ ராக்ஷஸாஶ்சைவ ஜக்$_4$நுரந்யோந்யமோஜஸா ॥ (25)

ப$_3$ாஹுபி$_4$: பரிக$_4$ாகாரைர்யுத்$_4$யந்த: பர்வதோபமா: ।
ஹரயோ பீ$_4$மகர்மாணோ ராக்ஷஸாஞ்ஜக்$_4$நுராஹவே ॥ (26)

ராக்ஷஸாஸ்த்வபி ஸம்க்ருத்$_3$த$_4$ா: ப்ராஸதோமரபாணய: ।
கபீந்நிஜக்$_4$நிரே தத்ர ஶஸ்த்ரை: பரமத$_3$ாருணை: ॥ (27)

அகம்பந: ஸுஸம்க்ருத்$_3$தே$_4$ா ராக்ஷஸாநாம் சமூபதி: ।
ஸம்ஹர்ஷயதி தாந் ஸர்வாந் ராக்ஷஸாந் பீ$_4$மவிக்ரமாந் ॥ (28)

ஹரயஸ்த்வபி ரக்ஷாம்ஸி மஹாத்$_3$ருமமஹாஶ்மபி$_4$: ।
வித$_3$ாரயந்த்யபி$_4$க்ரம்ய ஶஸ்த்ராண்யாச்சி$_2$த்$_3$ய வீர்யத: ॥ (29)

ஏதஸ்மிந்நந்தரே வீரா ஹரய: குமுதே$_3$ா நள: ।
மைந்த$_3$ஶ்ச த்$_3$விவித$_3$: க்ருத்$_3$த$_4$ாஶ்சக்ருர்வேக$_3$மநுத்தமம் ॥ (30)

தே து வ்ருக்ஷைர்மஹாவேக$_3$ா ராக்ஷஸாநாம் சமூமுகே$_2$ ।
கத$_3$நம் ஸுமஹச்சக்ருர்லீலயா ஹரியூத$_2$பா: ॥
மமந்து$_2$ ராக்ஷஸாந் ஸர்வே வாநரா க$_3$ணஶோ ப்$_4$ருஶம் ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

ஷட்பஞ்சாஶ: ஸர்க$_3$:

அகம்பநவத$_4$:

தத்$_3$ருஷ்ட்வா ஸுமஹத்கர்ம க்ருதம் வாநரஸத்தமை: ।
க்ரோத$_4$மாஹாரயாமாஸ யுதி$_4$ தீவ்ரமகம்பந: ॥ (1)

க்ரோத$_4$மூர்சி$_2$தரூபஸ்து தூ$_4$ந்வந் பரமகார்முகம் ।
த்$_3$ருஷ்ட்வா து கர்ம ஶத்ரூணாம் ஸாரதி$_2$ம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (2)

தத்ரைவ தாவத்த்வரிதம் ரத$_2$ம் ப்ராபய ஸாரதே$_2$ ।
யத்ரைதே ப$_3$ஹவோ க்$_4$நந்தி ஸுப$_3$ஹூந் ராக்ஷஸாந் ரணே ॥ (3)

ஏதே(அ)த்ர ப$_3$லவந்தோ ஹி பீ$_4$மகாயாஶ்ச வாநரா: ।
த்$_3$ருமஶைலப்ரஹரணாஸ்திஷ்ட$_2$ந்தி ப்ரமுகே$_2$ மம ॥ (4)

வானரர்களும் அரக்கர்களும் தம் கூட்டத்தாரையும் பகைவர்களையும் (கண்மூடித்தனமாக) கொன்றார்கள். அதனால், அந்த பூமி இரத்தத்தால் நனைந்து, சேறும் சகதியாகவும் ஆயிற்று. மேலெழும்பிய தூசுப்படலம் பெருகி ஓடிய இரத்தத்தில் படிந்து அடங்கிப் போயிற்று; களமும் சடலங்களால் நிறைந்ததாயிற்று. (23,24)

வானரர்களும் அரக்கர்களும் மரம், வேல், பாறை, ஈட்டி, கதை, இரும்புத்தடி, தோமரம் முதலிய ஆயுதங்களால் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிக் கொண்டார்கள். (25)

எதற்கும் அஞ்சாமல் செயல்படுபவர்களும், மலை போன்ற பேருருவம் படைத்தவர்களுமான வானரர்கள், இரும்புத்தடிகளைப் போல் வலிமையுடன் விளங்கும் கைகளால், போர்முனையில் அரக்கர்களை அடித்தார்கள். (26)

அப்போது, கத்தி, தோமரம் (வல்லயம்) முதலியவைகளைக் கையில் ஏந்திய அரக்கர்களும், மிகவும் சினங்கொண்டு, மிகக் கொடூரமான ஆயுதங்களால் வானரர்களை எதிர்த்துத் தாக்கி அழித்தார்கள். (27)

அரக்கர் படைத்தலைவனான அகம்பனன் (வானரர்களின் அட்டகாசத்தைக் கண்டு) மிகவும் கோபம் கொண்டான். பேராண்மை கொண்ட அந்த அரக்கர்கள் எல்லோரையும் வீரவசனங்களால் உற்சாகப்படுத்தினான். (28)

வானரர்களும் அஞ்சா நெஞ்சத்துடன் அரக்கர்களை ஆக்கிரமித்து, மாபெரும் மரங்களாலும் மாபெரும் பாறைகளாலும் தாக்கி, அவர்களிடமிருந்த படைக்கலன்களைப் பறித்து, அவர்களை ஓட ஓடத் துரத்தினார்கள். (29)

இதனிடையில் (சமர்க்களத்தின் வெறொரு பகுதியில்) வானர வீரர்களான குமுதன், நளன், மைந்தன், த்விவிதன் ஆகியோர் ஒப்புயர்வில்லாத தத்தம் பேராற்றலைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். (30)

பேராண்மை கொண்ட அந்த வானரப் படைத் தலைவர்கள், அரக்கர்களை ஒரு விளையாட்டுப் போலவே எளிதாகத் தாக்கி, பேரழிவைச் செய்தார்கள். வானரர்கள் எல்லோரும் அரக்கர்களைக் கடுமையாக எதிர்த்துக் கடைந்தெடுத்தார்கள். (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தாறு

அகம்பனன் மாண்டான்!

போர்க்களத்தில் அந்த வானர மாவீரர்கள் நிகழ்த்திய செயற்கரிய செயலைப் பார்த்த அகம்பனன், அடங்காக் கோபம் கொண்டான். (1)

எதிரிகளின் அரிய வீரச்செயலைப் பார்த்ததும் சினத்தால் கலங்கித் தள்ளாடினான். உத்தமமான தன்னுடைய வில்லை எடுத்து நிமிர்த்தி வைத்துக் கொண்டு, தேர்பாகனிடம் (பின்வருமாறு) சொன்னான்— (2)

''சாரதியே! எந்த இடத்தில் வானரத் தலைவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஏராளமான அரக்கர்களைக் கொல்கிறார்களோ, அந்த இடத்திற்கு வேகமாக ரதத்தைச் செலுத்து. (3)

இப்போது, என் எதிரிலேயே மகாபலசாலிகளும் பேருருவம் கொண்டவர்களுமான வானரர்கள், மரங்களையும் பாறைகளையும் ஆயுதங்களாகக் கொண்டு நிற்கிறார்கள். (4)

ஏதாந்நிஹந்துமிச்ச$_2$ாமி ஸமரஶ்லாகி$_4$நோ ஹ்யஹம் ।
ஏதை: ப்ரமதி$_2$தம் ஸர்வம் த்$_3$ருஶ்யதே ராக்ஷஸம் ப$_3$லம் ॥ (5)

தத: ப்ரஜவநாஶ்வேந ரதே$_2$ந ரதி$_2$நாம் வர: ।
ஹரீநப்$_4$யஹநத்க்ரோத$_4$ாச்ச$_2$ரஜாலைரகம்பந: ॥ (6)

ந ஸ்த$_2$ாதும் வாநரா: ஶேகு: கிம் புநர்யோத்$_3$து$_4$மாஹவே ।
அகம்பநஶரைர்ப$_4$க்$_3$நா: ஸர்வ ஏவ விது$_3$த்$_3$ருவு: ॥ (7)

தாந் ம்ருத்யுவஶமாபந்நாநகம்பநவஶம் க$_3$தாந் ।
ஸமீக்ஷ்ய ஹநுமாஞ்க்ஞாதீநுபதஸ்தே$_2$ மஹாப$_3$ல: ॥ (8)

தம் மஹாப்லவக$_3$ம் த்$_3$ருஷ்ட்வா ஸர்வே ப்லவக$_3$யூத$_2$பா: ।
ஸமேத்ய ஸமரே வீரா: ஸம்ஹ்ருஷ்டா: பர்யவாரயந் ॥ (9)

அவஸ்தி$_2$தம் ஹநூமந்தம் தே த்$_3$ருஷ்ட்வா ஹரியூத$_2$பா: ।
ப$_3$பூ$_4$வுர்ப$_3$லவந்தோ ஹி ப$_3$லவந்தம் ஸமாஶ்ரிதா: ॥ (10)

அகம்பநஸ்து ஶைலாப$_4$ம் ஹநூமந்தமவஸ்தி$_2$தம் ।
மஹேந்த்$_3$ர இவ த$_4$ாராபி$_4$: ஶரைரபி$_4$வவர்ஷ ஹ ॥ (11)

அசிந்தயித்வா ப$_3$ாணௌக$_4$ாஞ்ஶரீரே பதிதாஞ்ஶிதாந் ।
அகம்பநவத$_4$ார்த$_2$ாய மநோ த$_3$த்$_4$ரே மஹாப$_3$ல: ॥ (12)

ஸ ப்ரஸஹ்ய மஹாதேஜா ஹநூமாந் மாருதாத்மஜ: ।
அபி$_4$து$_3$த்$_3$ராவ தத்$_3$ரக்ஷ: கம்பயந்நிவ மேதி$_3$நீம் ॥ (13)

தஸ்யாபி$_4$நர்த$_3$மாநஸ்ய தீ$_3$ப்யமாநஸ்ய தேஜஸா ।
ப$_3$பூ$_4$வ ரூபம் து$_3$ர்த$_4$ர்ஷம் தீ$_3$ப்தஸ்யேவ விப$_4$ாவஸோ: ॥ (14)

ஆத்மாநமப்ரஹரணம் க்ஞாத்வா க்ரோத$_4$ஸமந்வித: ।
ஶைலமுத்பாடயாமாஸ வேகே$_3$ந ஹரிபுங்க$_3$வ: ॥ (15)

தம் க்$_3$ருஹீத்வா மஹாஶைலம் பாணிநைகேந மாருதி: ।
ஸ விநத்$_3$ய மஹாநாத$_3$ம் ப்$_4$ராமயாமாஸ வீர்யவாந் ॥ (16)

ததஸ்தமபி$_4$து$_3$த்$_3$ராவ ராக்ஷஸேந்த்$_3$ரமகம்பநம் ।
புரா ஹி நமுசிம் ஸங்க்$_2$யே வஜ்ரேணேவ புரந்த$_3$ர: ॥ (17)

அகம்பநஸ்து தத்த்$_3$ருஷ்ட்வா கி$_3$ரிஶ்ருங்க$_3$ம் ஸமுத்$_3$யதம் ।
தூ$_3$ராதே$_3$வ மஹாப$_3$ாணைரர்த$_4$சந்த்$_3$ரைர்வ்யத$_3$ாரயத் ॥ (18)

தத்பர்வதாக்$_3$ரமாகாஶே ரக்ஷோப$_3$ாணவித$_3$ாரிதம் ।
விஶீர்ணம் பதிதம் த்$_3$ருஷ்ட்வா ஹநுமாந் க்ரோத$_4$மூர்சி$_2$த: ॥ (19)

மேலும், போர்புரியும் விருப்பத்துடன் இவர்கள் நிற்கிறார்கள். இவர்கள், அரக்கர் படையை முற்றிலுமாக அழித்துவிட்டார்கள். அதனால், இவர்களைக் கொல்ல விரும்புகிறேன். (5)

தேர்ப்படையினரில் சிறந்தவனான அகம்பனன், வேகமாகச் செல்லும் தேரிலிருந்தபடியே, மிக்க கோபத்துடன் சரமாரிகளைப் பொழிந்து, வானரர்களை வாட்டியெடுத்தான். (6)

போர்முனையில் வானரர்களால் அகம்பனனை எதிர்த்து நிற்கக்கூட முடியவில்லை என்றால், அவனோடு சண்டை போடுவது எங்ஙனம்? அகம்பனன் செலுத்திய அம்புகளால் தாக்கப்பட்ட அவர்களனைவரும் நிலைகுலைந்து நாற்றிசைகளிலும் சிதறி ஓடினார்கள். (7)

மகாபலசாலியான அனுமான், தன் இனத்தார்கள் அகம்பனனிடம் சிக்கிக் கொண்டு, யமலோகம் சென்றடைவதைப் பார்த்து, உடனே அவ்விடம் வந்து சேர்ந்தார். (8)

அந்தப் போர்முனையில், மேன்மைமிக்க வானரரான அவரைக் கண்டதும், உற்சாகம் கொண்ட வானரத் தலைவர்கள் எல்லோரும் அருகில் வந்து சூழ்ந்து கொண்டார்கள். (9)

வானரப் படைத்தலைவர்கள், அனுமான் தங்கள் அருகே வந்து நிற்பதைக் கண்டு, பேராற்றல் படைத்த அவரை அண்டி நின்று, தாங்களும் ஆற்றல் மிகுந்தவரானார்கள். (10)

மலைநிகர் அனுமான் வந்திருப்பதைக் கண்டு, மகேந்திரன் இடைவிடாது மாரியைப் பொழிவதைப் போல, அகம்பனன் அவர் மேல் சரமாரியைப் பொழிந்து தள்ளினான். (மகேந்திர மலையின்மேல் நீர்த்தாரை பொழிவதைப்போல் சரமாரி பொழிந்தான் என்றும் கொள்ளலாம்.) (11)

தன் உடலில் தைத்த கூரிய பாணக் கூட்டத்தைப் பொருட்படுத்தாமல், அகம்பனனைக் கொல்வதில் பெரும்பலசாலியான அவர் மனத்தைச் செலுத்தினார். (12)

வாயுதேவனின் புதல்வரும் பேராற்றலுடையவருமான அனுமான், பூமியை நடுங்கச் செய்யும் வேகத்துடன் அரக்கர்களை எதிர்நோக்கி வேகமாக ஓடினார். (13)

ஒளியால் ஜொலித்துக் கொண்டிருப்பவரும், சிம்மநாதம் எழுப்பிக் கொண்டிருந்தவருமான அவருடைய உருவம், கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப்போல் அருகில் நெருங்க முடியாததாக இருந்தது. (14)

தன்னிடம் ஆயுதம் எதுவும் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட அவர், மிகவும் கோபத்தோடு ஒரு குன்றத்தைப் பெயர்த்து எடுத்துக் கொண்டார். (15)

காற்றுக் கடவுளின் புதல்வரும் மகாவீரருமான அவர் பேரொலி எழுப்பிக் கொண்டு, அந்தப் பெரிய மலையை ஒரே கையில் தாங்கிக் கொண்டு சுழற்றினார். (16)

முன்னொரு காலத்தில், போர்க்களத்தில் நமுசியை வஜ்ராயுதத்தால் இந்திரன் தாக்கியதைப் போலவே, அரக்க வீரனான அகம்பனனை அவர் தாக்கினார். (17)

தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த மலைமுகட்டை, அர்தசந்த்ரம் என்ற பெரும் பாணங்களால் தூரத்திலிருந்தபடியே அகம்பனன் பிளந்தெறிந்தான். (18)

அந்த மலைமுகடு அரக்கனது பாணங்களால் தூளாக்கப்பட்டு, ஆகாயத்திலிருந்து கீழே சிதறி விழுந்ததைப் பார்த்த அனுமான், எல்லையில்லாக் கோபம் கொண்டார். (19)

ஸோऽஶ்வகர்ணம் ஸமாஸாத்$_3$ய ரோஷத$_3$ர்பாந்விதோ ஹரி: ।
தூர்ணமுத்பாடயாமாஸ மஹாகி$_3$ரிமிவோச்ச்$_2$ரிதம் ॥ (20)

தம் க்$_3$ருஹீத்வா மஹாஸ்கந்த$_4$ம் ஸோऽஶ்வகர்ணம் மஹாத்$_3$யுதி: ।
ப்ரஹஸ்ய பரயா ப்ரீத்யா ப்$_4$ராமயாமாஸ ஸம்யுகே$_3$ ॥ (21)

ப்ரத$_4$ாவந்நுருவேகே$_3$ந ப்ரப$_4$ஞ்ஜம்ஸ்தரஸா த்$_3$ருமாந் ।
ஹநுமாந் பரமக்ருத்$_3$த$_4$ஶ்சரணைர்த$_3$ாரயந் க்ஷிதிம் ॥ (22)

க$_3$ஜாம்ஶ்ச ஸக$_3$ஜாரோஹாந் ஸரத$_2$ாந் ரதி$_2$நஸ்தத$_2$ா ।
ஜக$_4$ாந ஹநுமாந் தீ$_4$மாந் ராக்ஷஸாம்ஶ்ச பத$_3$ாதிக$_3$ாந் ॥ (23)

தமந்தகமிவ க்ருத்$_3$த$_4$ம் ஸமரே ப்ராணஹாரிணம் ।
ஹநுமந்தமபி$_4$ப்ரேக்ஷ்ய ராக்ஷஸா விப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (24)

தமாபதந்தம் ஸங்க்ருத்$_3$த$_4$ம் ராக்ஷஸாநாம் ப$_4$யாவஹம் ।
த$_3$த$_3$ர்ஶாகம்பநோ வீரஶ்சுக்ரோத$_4$ ச நநாத$_3$ ச ॥ (25)

ஸ சதுர்த$_3$ஶபி$_4$ர்ப$_3$ாணை: ஶிதைர்தே$_3$ஹவித$_3$ாரணை: ।
நிர்பி$_3$பே$_4$த$_3$ ஹநூமந்தம் மஹாவீர்யமகம்பந: ॥ (26)

ஸ தத$_3$ா ப்ரதிவித்$_3$த$_4$ஸ்து ப$_3$ஹ்வீபி$_4$: ஶரவ்ருஷ்டிபி$_4$: ।
ஹநுமாந் த$_3$த்$_3$ருஶே வீர: ப்ரரூட$_4$ இவ ஸாநுமாந் ॥ (27)

விரராஜ மஹாகாயோ மஹாவீர்யோ மஹாமநா: ।
புஷ்பிதாஶோகஸங்காஶோ விதூ$_4$ம இவ பாவக: ॥ (28)

ததோऽந்யம் வ்ருக்ஷமுத்பாட்ய க்ருத்வா வேக$_3$மநுத்தமம் ।
ஶிரஸ்யபி$_4$ஜக$_4$ாநாஶு ராக்ஷஸேந்த்$_3$ரமகம்பநம் ॥ (29)

ஸ வ்ருக்ஷேண ஹதஸ்தேந ஸக்ரோதே$_4$ந மஹாத்மநா ।
ராக்ஷஸோ வாநரேந்த்$_3$ரேண பபாத ச மமார ச ॥ (30)

தம் த்$_3$ருஷ்ட்வா நிஹதம் பூ$_4$மௌ ராக்ஷஸேந்த்$_3$ரமகம்பநம் ।
வ்யதி$_2$தா ராக்ஷஸா: ஸர்வே க்ஷிதிகம்ப இவ த்$_3$ருமா: ॥ (31)

த்யக்தப்ரஹரணா: ஸர்வே ராக்ஷஸாஸ்தே பராஜிதா: ।
லங்காமபி$_4$யயுஸ்த்ரஸ்தா வாநரைஸ்தைரபி$_4$த்$_3$ருதா: ॥ (32)

தே முக்தகேஶா: ஸம்ப்$_4$ராந்தா ப$_4$க்$_3$நமாநா: பராஜிதா: ।
ஸ்ரவச்ச்$_2$ரமஜலைரங்கை$_3$: ஶ்வஸந்தோ விப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (33)

அந்யோந்யம் ப்ரமமந்து$_2$ஸ்தே விவிஶுர்நக$_3$ரம் ப$_4$யாத் ।
ப்ருஷ்ட$_2$தஸ்தே ஹநூமந்தம் ப்ரேக்ஷமாணா முஹுர்முஹு: ॥ (34)

சினமும் செருக்கும் மீதூரப் பெற்ற அந்த வானரர், பெரிய மலைபோல் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மருதமரத்தை நெருங்கி, சடக்கென்று வேருடன் பெயர்த்தெடுத்தார். (20)

அந்தப் போர் முனையில், பேரொளி வீசும் அவர், மிகுந்த உற்சாகத்துடன் மிகப்பெரிய தண்டுடன் இருந்த அந்த அசுவகர்ணம் என்ற மருதமரத்தைக் கையில் தாங்கியபடியே ஏளனமாக நகைத்துக் கொண்டே சுழற்றினார். (21)

மிகவும் சினங்கொண்ட அனுமான், வேகமாகப் பாய்ந்து தொடைகளின் பலத்தால் நொடிப்பொழுதில் மரங்களை முறித்துத் தள்ளினார்; (அழுத்தமான) காலடி வைப்புகளால் பூமியைப் பிளந்தார். மகாமேதாவியான அனுமான், யானைகளையும் யானையின்மீது இருந்தவர்களையும், தேர்களையும் தேரிலிருந்தவர்களையும், அரக்கர் காலாட்படையினரையும் கொன்றொழித்தார். (22,23)

கோபம் கொண்ட யமனைப்போல், போர்க்களத்தில் உயிரைப் பறிக்கும் அனுமானைப் பார்த்து, அரக்கர்கள் (தலைகால் புரியாமல்) அந்தப் போர்க்களத்திலிருந்து வெளியே ஓடினார்கள். (24)

வீரனான அகம்பனன், அரக்கர்களை மிரளச் செய்து கொண்டு, மிகவும் கோபத்துடன் தன்னை எதிர்த்து வரும் அவரை நேருக்கு நேர் பார்த்தான். உடனே, கோபத்துடன் சிங்கநாதம் செய்தான். (25)

கூரானவைகளும் உடலைப் பிளக்க வல்லவைகளுமான பதிநான்கு பாணங்களால், மகாவீரரான அனுமானை அகம்பனன் துளைத்தான். (26)

அம்புப் பொழிவினால் உடலெங்கும் தைக்கப்பட்ட அனுமான், மரங்கள் அடர்ந்த உயரமான மலைபோல் காணப்பட்டார். (27)

பேருடலும் பெருவீரமும் பேராண்மையும் படைத்த அவர், செம்மலர் பூத்த அசோகமரம் போலவும், புகையின்றி செம்மையான சுவாலை வீசும் நெருப்புப் போலவும் விளங்கினார். (28)

பின்னர், கட்டுக்கடங்காத கோபத்துடன், வேறொரு மரத்தைச் சட்டென்று பெயர்த்து, அரக்க வீரனான அகம்பனன் தலைமேல் அடித்தார். (29)

கொந்தளிக்கும் கோபத்துடன் இருப்பவரும், எல்லையற்ற ஆற்றல் படைத்தவருமான வானரோத்தமரால், மரத்தால் அடிக்கப்பட்ட அந்த அரக்கன் தரையில் விழுந்தான்; உயிரையும் துறந்தான். (30)

அரக்கர் தலைவனான அகம்பனன் உயிர் பிரிந்து பூமியில் கிடப்பதைக் கண்ட அரக்கர்கள் எல்லோரும், நிலநடுக்கத்தின்போது மரங்கள் நிலைகுலைந்து ஆடுவதைப்போல் கவலையுடன் நடுங்கினார்கள். (31)

தோல்வியடைந்த அந்த அரக்கர்கள் எல்லோரும் அச்சத்தால் கலங்கி, படைக்கலன்களைத் துறந்து, வானரர்களால் துரத்தியடிக்கப்பட்டவர்களாக இலங்கையை நோக்கி ஓடினார்கள். (32)

தோல்வியடைந்த அவர்கள், தலைக்கேசம் அவிழ்ந்து தொங்க, மனம் கலங்கி, அவமானமடைந்தவர்களாக, களைப்பினால் உடலெங்கும் வியர்வை பெருக, பெருமூச்சுவிட்டுக் கொண்டு ஓடினார்கள். (33)

'பின்னால் அனுமான் துரத்திக் கொண்டு வருகிறாரா?' என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு, அச்சம் காரணமாக ஒருவரையொருவர் கட்டிப் பிணைத்துக் கொண்டு, இலங்கைப் பட்டணத்திற்குள் புகுந்தார்கள். (34)

தேஷு லங்காம் ப்ரவிஷ்டேஷு ராக்ஷஸேஷு மஹாப$_3$லா: ।
ஸமேத்ய ஹரய: ஸர்வே ஹநுமந்தமபூஜயந் ॥ (35)

ஸோऽபி ப்ரஹ்ருஷ்டஸ்தாந் ஸர்வாந் ஹரீந் ப்ரத்யப்$_4$யபூஜயத் ।
ஹநுமாந் ஸத்த்வஸம்பந்நோ யத$_2$ார்ஹமநுகூலத: ॥ (36)

விநேது$_3$ஶ்ச யத$_2$ாப்ராணம் ஹரயோ ஜிதகாஶிந: ।
சக்ருஷுஶ்ச புநஸ்தத்ர ஸப்ராணாநபி ராக்ஷஸாந் ॥ (37)

ஸ வீரஶோப$_4$ாமப$_4$ஜந்மஹாகபி: ஸமேத்ய ரக்ஷாம்ஸி நிஹத்ய மாருதி: ।
மஹாஸுரம் பீ$_4$மமமித்ரநாஶநம் யதை$_2$வ விஷ்ணுர்ப$_3$லிநம் சமூமுகே$_2$ ॥ (38)

அபூஜயந் தே$_3$வக$_3$ணாஸ்தத$_3$ா கபிம்
ஸ்வயம் ச ராமோऽதிப$_3$லஶ்ச லக்ஷ்மண: ।
ததை$_2$வ ஸுக்$_3$ரீவமுக$_2$ா: ப்லவங்க$_3$மா
வீபீ$_4$ஷணஶ்சைவ மஹாப$_3$லஸ்தத$_2$ா ॥ (39)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷட்பஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

ஸப்தபஞ்சாஶ: ஸர்க$_3$:

ப்ரஹஸ்தயுத்$_3$த$_4$ம்

அகம்பநவத$_4$ம் ஶ்ருத்வா க்ருத்$_3$தே$_4$ா வை ராக்ஷஸேஶ்வர: ।
கிஞ்சித்$_3$தீ$_3$நமுக$_2$ஶ்சாபி ஸசிவாந்ஸ்தாநுதை$_3$க்ஷத ॥ (1)

ஸ து த்$_4$யாத்வா முஹூர்தம் து மந்த்ரிபி$_4$: ஸம்விசார்ய ச ।
ததஸ்து ராவண: பூர்வதி$_3$வஸே ராக்ஷஸாதி$_4$ப: ॥
புரீம் பரியயௌ லங்காம் ஸர்வாந் கு$_3$ல்மாநவேக்ஷிதும் ॥ (2)

தாம் ராக்ஷஸக$_3$ணைர்கு$_3$ப்தாம் கு$_3$ல்மைர்ப$_3$ஹுபி$_4$ராவ்ருதாம் ।
த$_3$த$_3$ர்ஶ நக$_3$ரீம் லங்காம் பதாகாத்$_4$வஜமாலிநீம் ॥ (3)

ருத்$_3$த$_4$ாம் து நக$_3$ரீம் த்$_3$ருஷ்ட்வா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
உவாசாமர்ஷத: காலே ப்ரஹஸ்தம் யுத்$_3$த$_4$கோவித$_3$ம் ॥ (4)

புரஸ்யோபநிவிஷ்டஸ்ய ஸஹஸா பீடி$_3$தஸ்ய ச ।
நாந்யம் யுத்$_3$த$_4$ாத்ப்ரபஶ்யாமி மோக்ஷம் யுத்$_3$த$_4$விஶாரத$_3$ ॥ (5)

அஹம் வா கும்ப$_4$கர்ணோ வா த்வம் வா ஸேநாபதிர்மம ।
இந்த்$_3$ரஜித்$_3$வா நிகும்பே$_4$ா வா வஹேயுர்ப$_4$ாரமீத்$_3$ருஶம் ॥ (6)

ஸ த்வம் ப$_3$லமத: ஶீக்$_4$ரமாத$_3$ாய பரிக்$_3$ருஹ்ய ச ।
விஜயாயாபி$_4$நிர்யாஹி யத்ர ஸர்வே வநௌகஸ: ॥ (7)

அரக்கர்கள் இலங்கையில் புகுந்தவுடன் மகாவீரர்களான வானரர்கள் ஒன்று திரண்டு அனுமானைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். (35)

பேராற்றல் கொண்ட அவரும் உள்ளம் மகிழ்ந்து, எல்லா வானரர்களையும் அவரவர் தகுதிக்கு ஏற்றபடி, நன்றியுடன் கௌரவித்தார். (36)

வெற்றி மாலை சூடிய வானரர்கள், தங்களால் முடிந்த மட்டும் மிக உயர்ந்த குரலில் ஆரவார ஒலி எழுப்பினார்கள். அங்கே குற்றுயிரும் குலையுயிருமாக விழுந்து கிடந்த அரக்கர்களைத் தரதரவென்று இழுத்துத் துன்புறுத்தினார்கள். (37)

முன்னொரு காலத்தில், பலி என்ற அசுரனை மகாவிஷ்ணு வெற்றி கொண்டதைப்போல, மாண்புமிகு வானரரும் வாயு மைந்தருமான அனுமான், பயங்கரமானவனும் எதிரிகளை மாய்ப்பவனுமான பெருமைமிக்க அரக்கனையும் (அகம்பனனையும்) மற்ற அரக்கர்களையும் ஒட்டுமொத்தமாகக் கொன்று வெற்றித் திருவுடன் பிரகாசித்தார். (38)

அப்போது, அவரை தேவகணங்களும், மகாபலம் பொருந்திய இராமபிரான் தானே நேரில் வந்தும், இலக்குவனும், சுக்ரீவன் முதலான வானரர்களும், பெரும் பலசாலியான விபீஷணனும் பாராட்டிப் போற்றினார்கள். (39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தேழு

பிரஹஸ்தன் போரிடுதல்!

அகம்பனன் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேட்ட இராவணன் மிகவும் கோபமடைந்தான். (தோல்வி உணர்வினால்) கொஞ்சம் வாடிய முகத்துடன் அவையிலிருந்த அமைச்சர்களைப் பார்த்தான். (1)

அவன் தனக்குள்ளேயே சிறிதுநேரம் சிந்தித்தான். பின்னர், அமைச்சர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு, இலங்கையின் பாதுகாவலுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சேனைக் கூட்டங்களைப் பார்ப்பதற்காக, காலை வேளையில் நகரத்தைச் சுற்றி வந்தான். (2)

அரக்கர் கூட்டங்களால் நன்கு பாதுகாக்கப்பட்டதும், பற்பல படை அணிகளால் சூழப்பட்டதும், கொடிகள்–பாவட்டாக்களால் அழகு பெற்று விளங்குவதுமான பட்டணத்தை மன்னன் பார்வையிட்டான். (3)

இலங்கை, நாற்புறமும் எதிரிகளால் முற்றுகை இடப்பட்டிருப்பதைக் கண்ட இராவணன், பொங்கியெழும் சினத்துடன், போர்க்கலையில் வல்லவனான பிரஹஸ்தனைப் பார்த்து, அந்த சமயத்துக்குகந்த சொற்களைக் கூறினான்— (4)

"போர்க்கலையை முற்றுமுணர்ந்தவனே! பட்டணத்திற்கு வெகு அருகிலேயே வந்து தங்கி, எதிர்பாராதவிதமாகத் தாக்கும் இவர்களிடமிருந்து நகரத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், நாமும் போரைத் தொடங்குவதைத் தவிர வேறு ஒரு வழியையும் காண்கிலேன். (5)

நான், கும்பகர்ணன், என்னுடைய படைத்தலைவனான நீ, இந்திரஜித், நிகும்பன் ஆகியவர்களால்தான் இந்தப் பெரும் சுமையைத் தாங்க முடியும். (6)

ஆதலால், மகாபராக்கிரமம் பொருந்திய நீ, வெற்றியை குறிக்கோளாகக் கொண்டு, உடனே படையைத் திரட்டி அழைத்துக் கொண்டு, வானரர்கள் இருக்கும் இடத்திற்குப் போவாயாக. (7)

நிர்யாணாதே$_3$வ தே நூநம் சபலா ஹரிவாஹிநீ ।
நர்த$_3$தாம் ராக்ஷஸேந்த்$_3$ராணாம் ஶ்ருத்வா நாத$_3$ம் த்$_3$ரவிஷ்யதி ॥ (8)

சபலா ஹ்யவிநீதாஶ்ச சலசித்தாஶ்ச வாநரா: ।
ந ஸஹிஷ்யந்தி தே நாத$_3$ம் ஸிம்ஹநாத$_3$மிவ த்$_3$விபா: ॥ (9)

வித்$_3$ருதே ச ப$_3$லே தஸ்மிந் ராம: ஸௌமித்ரிணா ஸஹ ।
அவஶஸ்தே நிராலம்ப$_3$: ப்ரஹஸ்த வஶமேஷ்யதி ॥ (10)

ஆபத்ஸம்ஶயிதா ஶ்ரேயோ ந து நி:ஸம்ஶயீக்ருதா ।
ப்ரதிலோமாநுலோமம் வா யத்$_3$வா நோ மந்யஸே ஹிதம் ॥ (11)

ராவணேநைவமுக்தஸ்து ப்ரஹஸ்தோ வாஹிநீபதி: ।
ராக்ஷஸேந்த்$_3$ரமுவாசேத$_3$மஸுரேந்த்$_3$ரமிவோஶநா ॥ (12)

ராஜந் மந்த்ரிதபூர்வம் ந: குஶலை: ஸஹ மந்த்ரிபி$_4$: ।
விவாத$_3$ஶ்சாபி நோ வ்ருத்த: ஸமவேக்ஷ்ய பரஸ்பரம் ॥ (13)

ப்ரதா$_3$நேந து ஸீதாயா: ஶ்ரேயோ வ்யவஸிதம் மயா ।
அப்ரதா$_3$நே புநர்யுத்$_3$த$_4$ம் த்$_3$ருஷ்டமேதத்ததை$_2$வ ந: ॥ (14)

ஸோऽஹம் தா$_3$நைஶ்ச மாநைஶ்ச ஸததம் பூஜிதஸ்த்வயா ।
ஸாந்த்வைஶ்ச விவிதை$_4$: காலே கிம் ந குர்யாம் ப்ரியம் தவ ॥ (15)

ந ஹி மே ஜீவிதம் ரக்ஷ்யம் புத்ரதா$_3$ரத$_4$நாநி வா ।
த்வம் பஶ்ய மாம் ஜுஹூஷந்தம் த்வத$_3$ர்த$_2$ம் ஜீவிதம் யுதி$_4$ ॥ (16)

ஏவமுக்த்வா து ப$_4$ர்தாரம் ராவணம் வாஹிநீபதி: ।
உவாசேத$_3$ம் ப$_3$லாத்$_4$யக்ஷாந் ப்ரஹஸ்த: புரத: ஸ்தி$_2$தாந் ॥ (17)

ஸமாநயத மே ஶீக்$_4$ரம் ராக்ஷஸாநாம் மஹத்$_3$ப$_3$லம் ।
மத்$_3$பா$_3$ணாஶநிவேகே$_3$ந ஹதாநாம் ச ரணாஜிரே ॥
அத்$_3$ய த்ருப்யந்து மாம்ஸாதா$_3$: பக்ஷிண: காநநௌகஸாம் ॥ (18)

இத்யுக்தாஸ்தே ப்ரஹஸ்தேந ப$_3$லாத்$_4$யக்ஷா: க்ருதத்வரா: ।
ப$_3$லமுத்$_3$யோஜயாமாஸுஸ்தஸ்மிந் ராக்ஷஸமந்தி$_3$ரே ॥ (19)

ஸா ப$_3$பூ$_4$வ முஹூர்தேந திக்$_3$மநாநாவிதா$_4$யுதை$_4$: ।
லங்கா ராக்ஷஸவீரைஸ்தைர்க$_3$ஜைரிவ ஸமாகுலா ॥ (20)

ஹுதாஶநம் தர்பயதாம் ப்$_3$ராஹ்மணாம்ஶ்ச நமஸ்யதாம் ।
ஆஜ்யக$_3$ந்த$_4$ப்ரதிவஹ: ஸுரபி$_4$ர்மாருதோ வவௌ ॥ (21)

நீ புறம்படும்போது எழுப்பும் சிங்கநாதத்தையும் அரக்கவீரர்களின் வீராவேசக் கூச்சல்களையும் கேட்டமாத்திரத்திலேயே, சஞ்சல சித்தம் கொண்ட வானரப்படை நிச்சயமாக ஓடிப் போய்விடும். (8)

வானரர்கள் மனவுறுதி இல்லாதவர்கள்; கட்டுப்பாடு இல்லாதவர்கள்; அலைபாயும் மனத்தினர். எனவே, சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டவுடனேயே, யானைகள் எப்படிப் பயந்து ஓடுமோ, அதுபோல வானரர்கள் உன் வீர முழக்கத்தைக் கேட்டதும் அலறிக்கொண்டு ஓடிப் போய் விடுவார்கள். (வீர முழக்கத்தைக் கேட்டும், பொறுத்துக் கொண்டு தங்கியிருக்க மாட்டார்கள்.) (9)

பிரஹஸ்தனே! வானரப்படை முழுவதும் ஓடிப் போய்விட்ட பின், இராமன் வேறு பிடிப்பின்றி, எதையும் செய்ய முடியாதவனாய், இலக்குவனோடுகூட உன்னிடம் பணிந்துவிடுவான். (10)

போர்க்களமும் அதில் மரணமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருப்பவை. போரில் மரணமடையலாம்; அல்லது உயிர் பிழைத்தும் திரும்பலாம். ஆனால், புறங்காட்டாமல் போரிட்டு மடிவது என்பது போற்றத்தக்கது. இதற்கு எதிராக நடந்தால், அதாவது, போர்வீரன் ஒருவன் போர் செய்யாமலிருக்கும்போதும் இயற்கையாக ஒரு நாள் மரணமடைந்தே தீருவான். இத்தகைய மரணம் சிறப்புடையதல்ல என்று நான் கருதுகிறேன். அதனால், இந்த என் எண்ணத்திற்கு மாறாக, நமக்கு நன்மை விளைவிக்கக் கூடியதாக உன் கருத்து ஏதேனும் இருந்தால், அதைச் சொல்வாயாக.'' (11)

இராவணன் இவ்வாறு கூறியதைக் கேட்ட படைத்தலைவன் பிரஹஸ்தன், அசுர மன்னன் பலிச் சக்கரவர்த்திக்கு அசுரகுல ஆசார்யர் சுக்ராசார்யார் ஆலோசனை கூறுவதை ஒத்தாற்போல, அரக்க மன்னனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (12)

''மாமன்னரே! நாம் இது பற்றி அறிஞர்களான அமைச்சர்களுடன் வெகு ஆழமாக விவாதித்திருக்கிறோம். அப்படியும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு முடிவை எட்டவில்லை. (அதனால்தானே, விபீஷணன் அவையிலிருந்து வெளியேறினான்?) (13)

தொடக்கத்திலிருந்தே, சீதையைத் திருப்பிக் கொடுப்பதுதான் நமக்கு நன்மையைத் தருவது என்ற கருத்தில் உறுதியாக இருக்கிறேன். திருப்பிக் கொடுக்காவிட்டால், போர் நடந்தே தீரும் என்றும் சொல்லியிருக்கிறேன். அதற்கேற்றபடியே இப்போது போர் வந்திருக்கிறது. (14)

தாங்கள் எப்போதும் பரிசுகளாலும், மரியாதைகளாலும், இனிய சொற்களாலும் என்னைக் கௌரவித்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட நான், தங்களுக்கு விருப்பமான எந்த வேலையைத்தான் செய்யாதிருப்பேன்? என் உயிர், என் மனைவி–மக்கள், செல்வம் ஆகியவை ஒரு பொருட்டல்ல. போர் என்னும் வேள்வியில், தங்கள் பொருட்டு, என் உயிரையும் ஆகுதியாகக் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன் என்பதை மனத்தில் கொள்வீர்களாக.'' (15,16)

சேனாபதி பிரஹஸ்தன், தலைவனான இராவணனிடம் இவ்வாறு கூறிவிட்டு, எதிரில் நின்று கொண்டிருந்த அணித்தலைவர்களைப் பார்த்துக் கட்டளையிட்டான்— ''அரக்கப் பெரும்படையை உடனே திரட்டிக் கொண்டு வாருங்கள். போர்க்களத்தில் நூற்றுக்கணக்கான எனது பாணங்களால் தாக்கப்பட்டுக் கொன்று வீழ்த்தப்படும் காட்டுப் பிராணிகளான வானரர்களின் சடலங்களைப் பறவைகள் கொத்தித் தின்று மனநிறைவு அடையட்டும்.'' (17,18)

பிரஹஸ்தன் கூறியதைக் கேட்ட அணித்தலைவர்கள் மிகவும் சுறுசுறுப்புடன், மன்னர் மாளிகைக்குப் பக்கத்திலேயே படையைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். (19)

சிறிது நேரத்திற்குள்ளாகவே, யானைகளைப் போன்று பேருருவம் படைத்தவர்களும், பலவகையான கொடிய படைக்கலன்களைத் தாங்கியவர்களுமான அரக்க வீரர்களால் இலங்கைப் பட்டணம் நிறைந்ததாயிற்று. வேள்விக் குண்டத்தில் சாந்தி ஹோமம் செய்தார்கள். பிராமணர்களை வணங்கி நமஸ்கரித்தார்கள். ஆகுதி கொடுக்கப்பட்ட நெய்யின் நறுமணத்தைத் தாங்கிக் கொண்டு காற்று சுகமாக வீசியது. (20,21)

ஸ்ரஜஸ்ச விவித$_4$ாகாரா ஜக்$_3$ருஹுஸ்த்வபி$_4$மந்த்ரிதா: ।
ஸங்க்$_3$ராமஸஜ்ஜா: ஸம்ஹ்ருஷ்டா த$_4$ாரயந் ராக்ஷஸாஸ்தத$_3$ா ॥ (22)

ஸத$_4$நுஷ்கா: கவசிநோ வேக$_3$ாத$_3$ாப்லுத்ய ராக்ஷஸா: ।
ராவணம் ப்ரேக்ஷ்ய ராஜாநம் ப்ரஹஸ்தம் பர்யவாரயந் ॥ (23)

அத$_2$ாமந்த்ர்ய ச ராஜாநம் பே$_4$ரீமாஹத்ய பை$_4$ரவாம் ।
ஆருரோஹ ரத$_2$ம் தி$_3$வ்யம் ப்ரஹஸ்த: ஸஜ்ஜகல்பிதம் ॥ (24)

ஹயைர்மஹாஜவைர்யுக்தம் ஸம்யக்ஸூதஸுஸம்யதம் ।
மஹாஜலத$_3$நிர்கோ$_4$ஷம் ஸாக்ஷாச்சந்த்$_3$ரார்கபா$_4$ஸ்வரம் ॥ (25)

உரக$_3$த்$_4$வஜது$_3$ர்த$_4$ர்ஷம் ஸுவரூத$_2$ம் ஸ்வவஸ்கரம் ।
ஸுவர்ணஜாலஸம்யுக்தம் ப்ரஹஸந்தமிவ ஶ்ரியா ॥ (26)

ததஸ்தம் ரத$_2$மாஸ்த$_2$ாய ராவணார்பிதஶாஸந: ।
லங்காயா நிர்யயௌ தூர்ணம் ப$_3$லேந மஹதா வ்ருத: ॥ (27)

ததோ து$_3$ந்து$_3$பி$_4$நிர்கோ$_4$ஷ: பர்ஜந்யநிநதோ$_3$பம: ।
வாதி$_3$த்ராணாம் ச நிநத$_3$: பூரயந்நிவ ஸாக$_3$ரம் ॥
ஶுஶ்ருவே ஶங்க$_2$ஶப்$_3$த$_3$ஶ்ச ப்ரயாதே வாஹிநீபதௌ ॥ (28)

நிநத$_3$ந்த: ஸ்வராந் கோ$_4$ராந் ராக்ஷஸா ஜக்$_3$முரக்$_3$ரத: ।
பீ$_4$மரூபா மஹாகாயா: ப்ரஹஸ்தஸ்ய புர:ஸரா: ॥ (29)

நராந்தக: கும்ப$_4$ஹநுர்மஹாநாத$_3$: ஸமுந்நத: ।
ப்ரஹஸ்தஸசிவா ஹ்யேதே நிர்யயு: பரிவார்ய தம் ॥ (30)

வ்யூடே$_4$நைவ ஸுகோ$_4$ரேண பூர்வத்$_3$வாராத் ஸ நிர்யயௌ ।
க$_3$ஜயூத$_2$நிகாஶேந ப$_3$லேந மஹதா வ்ருத: ॥ (31)

ஸாக$_3$ரப்ரதிமௌகே$_4$ந வ்ருதஸ்தேந ப$_3$லேந ஸ: ।
ப்ரஹஸ்தோ நிர்யயௌ தூர்ணம் காலாந்தகயமோபம: ॥ (32)

தஸ்ய நிர்யாணகோ$_4$ஷேண ராக்ஷஸாநாம் ச நர்த$_3$தாம் ।
லங்காயாம் ஸர்வபூ$_4$தாநி விநேது$_3$ர்விக்ருதை: ஸ்வரை: ॥ (33)

வ்யப்$_4$ரமாகாஶமாவிஶ்ய மாம்ஸஶோணிதபோ$_4$ஜநா: ।
மண்ட$_3$லாந்யபஸவ்யாநி க$_2$க$_3$ாஶ்சக்ரு ரத$_2$ம் ப்ரதி ॥ (34)

வமந்த்ய: பாவகஜ்வாலா: ஶிவா கோ$_4$ரா வவாஶிரே ।
அந்தரிக்ஷாத்பபாதோல்கா வாயுஶ்ச பருஷோ வவௌ ॥ (35)

அந்யோந்யமபி$_4$ஸம்ரப்$_3$தா$_4$ க்$_3$ரஹாஶ்ச ந சகாஶிரே ।
மேகா$_4$ஶ்ச க$_2$ரநிர்கோ$_4$ஷா ரத$_2$ஸ்யோபரி ரக்ஷஸ: ॥
வவ்ருஷு ருதி$_4$ரம் சாஸ்ய ஸிஷிசுஶ்ச புர:ஸராந் ॥ (36)

(அரக்கர்கள்) மந்திர உச்சாரணத்தால் உயர்வான சக்திகளைப் பெற்ற மாலைகளைப் பெற்று அணிந்து கொண்டார்கள். போர்க்கால சீருடையை மகிழ்ச்சியுடன் தரித்துக் கொண்டார்கள். (22)

வில்–கவசம் அணிந்த வீரர்கள் வேகமாகத் துள்ளிக் குதித்து முன்னேறிச் சென்று, மன்னன் இராவணனைத் தரிசித்த பின், நாற்புறத்திலும் பிரஹஸ்தனைச் சூழ்ந்து நின்றார்கள். (23)

பிரஹஸ்தன், மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு, பயங்கரமான ஒலியெழுப்பும் போர் முரசை அடித்து முழக்கிக் கொண்டு, ஆயத்தமாகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்த ஒப்பற்ற ரதத்தில் ஏறினான். (24)

அவனுடைய தேரில் மிக வேகமாக செல்லக்கூடிய குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன. அனுபவமிக்க தேரோட்டி சாரதியாக இருந்தான். தேர், செல்லும்போது மேக கர்ஜனை போல் பேரொலி எழுப்பக்கூடியது; சந்திர–சூரியர்கள் போல் பிரகாசிப்பது; அரவக்கொடி கட்டப்பட்டு எவராலும் நெருங்கக்கூட முடியாதபடி இருந்தது; நன்கு அமைக்கப்பட்ட தேர்க்கால்கள், சக்கரங்கள், பொற்சாளரங்கள் பொருத்தப்பட்டு, தன் பிரகாசத்தினால், பிற வஸ்துக்களை இகழ்ச்சியோடு பார்ப்பதைப் போலிருந்தது. அந்த ரதத்தில் ஏறிக்கொண்டு, இராவணனின் உத்தரவுப்படி, பெரும்படையால் சூழப்பட்டவனாக இலங்கையிலிருந்து விரைவில் வெளியே சென்றான். (25–27)

படைத்தலைவனான அவன் புறப்பட்டபோது, இடி முழக்கம்போல் பேரிகையின் முழக்கமும், கடலைக் கொந்தளிக்கச் செய்வதுபோல இசைக் கருவிகளின் பேரொலியும், சங்கின் ஒலியும் எழுந்தன. (28)

பயங்கரமான தோற்றம் கொண்டவர்களும் பேருடல் படைத்தவர்களுமான பிரஹஸ்தனது அணுக்கப் பாதுகாவலர்களான அரக்கர்கள், பயங்கரமான சப்தங்களை எழுப்பிக் கொண்டு, அவனுக்கு முன்னால் சென்றார்கள். (29)

பிரஹஸ்தனுடைய ஆலோசகர்களான நராந்தகன், கும்பஹனு, மகாநாதன், ஸமுன்னதன் ஆகிய நால்வரும், அவனை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு சென்றார்கள். (30)

யானைக் கூட்டங்களின் தலைவர்களான யானைகளைப் போன்றதும் கணக்கிட முடியாததும் மிகவும் பயங்கரமானதும் அணிவகுத்து நின்றதுமான படையோடுகூட கிழக்கு வாயில் வழியாக வெளியே புறப்பட்டான். (31)

பிரளய காலத்து யமனைப் போன்று எதிர்கொள்ள முடியாத ஆற்றல் கொண்ட பிரஹஸ்தன், பெருங்கடல் போல் அளவிட முடியாத பெரும்படையினால் சூழப்பட்டவனாக, வேகமாக சென்றான். (32)

அவன் புறப்பட்டபோது எழுப்பப்பட்ட பேரிகை முதலியவற்றின் முழக்கத்தாலும், அரக்கர்களின் சிம்மநாதத்தைக் கேட்டும், இலங்கையிலிருந்த அனைத்துப் பிராணிகளும் மிரண்டு போய் விகாரமான குரலில் கூச்சலிட்டன. (33)

மேகங்கள் இல்லாமல் பளிச்சென்றிருந்த வானத்தில் பறந்த, மாமிசத்தையும் இரத்தத்தையும் உண்ணும் பறவைகள், பிரஹஸ்தனுடைய ரதத்தை இடதுபுறமாக வட்டமிட்டன. (34)

நரிகள் அனல்கங்குகளைக் கக்கிக் கொண்டு பயங்கரமாக ஊளையிட்டன; வானத்திலிருந்து வால் நட்சத்திரம் விழுந்தது; காற்று சூறாவளியாக வீசிற்று. (35)

கோள்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டதால் ஒளி வீசவில்லை; அந்த அரக்கனுடைய ரதத்திற்கு மேலே கழுதை போன்று முழங்கிய மேகங்கள் இரத்தத்தைப் பொழிந்தன; அவனுக்கு முன்னோடிகளாகச் சென்றவர்களையும் (இரத்தத்தால்) நனைத்தன. (36)

கேதுமூர்த4நி க்3ருத்4ரோऽஸ்ய நிலீநோ த3க்ஷிணாமுக2: ।
துத3ந்நுப4யத: பார்ஶ்வம் ஸமக்3ராமஹரத்ப்ரப4ாம் ॥ (37)

ஸாரதே2ர்ப3ஹுஶஶ்சாஸ்ய ஸங்க்3ராமமவக3ாஹத: ।
ப்ரதோதே3ா ந்யபதத்3த4ஸ்தாத்ஸூதஸ்ய ஹயஸாதி3ந: ॥ (38)

நிர்யாணஶ்ரீஶ்ச யாஸ்யாஸீத்3ப4ாஸ்வரா வஸுது3ர்லப4ா ।
ஸா நநாஶ முஹூர்த்தேந ஸமே ச ஸ்க2லிதா ஹயா: ॥ (39)

ப்ரஹஸ்தம் த்வபி4நிர்யாந்தம் ப்ரக்2யாதப3லபௌருஷம் ।
யுதி4 நாநாப்ரஹரணா கபிஸேநாப்4யவர்தத ॥ (40)

அத2 கோ4ஷ: ஸுதுமுலோ ஹரீணாம் ஸமஜாயத ।
வ்ருக்ஷாநாருஜதாம் சைவ கு3ர்வீராக்3ருஹ்ணதாம் ஶிலா: ॥ (41)

நத3தாம் ராக்ஷஸாநாம் ச வாநராணாம் ச க3ர்ஜதாம் ।
உபே4 ப்ரமுதி3தே ஸைந்யே ரக்ஷோக3ணவநௌகஸாம் ॥ (42)

வேகி3தாநாம் ஸமர்த2நாமந்யோந்யவத4காங்க்ஷிணாம் ।
பரஸ்பரம் சாஹ்வயதாம் நிநாத3: ஶ்ரூயதே மஹாந் ॥ (43)

தத: ப்ரஹஸ்த: கபிராஜவாஹிநீ–
மபி4ப்ரதஸ்தே2 விஜயாயா து3ர்மதி: ।
விவ்ருத்3த4வேக3ாம் ச விவேஶ தாம் சமூம்
யத2ா முமூர்ஷு: ஶலபே4ா விப4ாவஸும் ॥ (44)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகியே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஸப்தபஞ்சாஶ: ஸர்க3: ॥

அஷ்டபஞ்சாஶ: ஸர்க3:

ப்ரஹஸ்தவத4:

தத: ப்ரஹஸ்தம் நிர்யாந்தம் த்3ருஷ்ட்வா பீ4மபராக்ரமம் ।
உவாச ஸஸ்மிதம் ராமோ விபீ4ஷணமரிந்த3ம: ॥ (1)

க ஏஷ ஸுமஹாகாயோ ப3லேந மஹதா வ்ருத: ।
ஆசக்ஷ்வ மே மஹாபா3ஹோ வீர்யவந்தம் நிஶாசரம் ॥ (2)

ராக4வஸ்ய வச: ஶ்ருத்வா ப்ரத்யுவாச விபீ4ஷண: ।
ஏஷ ஸேநாபதிஸ்தஸ்ய ப்ரஹஸ்தோ நாம ராக்ஷஸ: ॥ (3)

லங்காயாம் ராக்ஷஸேந்த்3ரஸ்ய த்ரிப4ாக3ப3லஸம்வ்ருத: ।
வீர்யவாநஸ்த்ரவிச்சூ2ர: ப்ரக்2யாதஶ்ச பராக்ரமே ॥ (4)

அவனுடைய தேர்க்கொடியின் உச்சியில் ஒரு கழுகு தெற்கு நோக்கி அமர்ந்து, கொடியின் இரு பக்கங்களையும் தன் அலகினால் கொத்தி, (இத்தகைய அமங்களமான செய்கைகளால்) அவனுடைய சிறப்புக்கள் அனைத்தையும் மொத்தமாக அழித்தது. (37)

போர்க்களத்திற்குள் நுழையும்போது குதிரையைச் செலுத்துவதில் வல்லவனும், சாரதி குலத்தில் பிறந்தவனுமான அவனுடைய தேரோட்டியின் கையிலிருந்து சவுக்கு, பல தடவை கை நழுவிக் கீழே விழுந்தது. (38)

அவன் போர் புரிவதற்காகப் புறப்பட்டபோது, அவனைச் சூழ்ந்திருந்த தேவதைகளுக்கும் கிடைத்தற்கரியதான பிரகாசமும் பொலிவும் சிறிதுநேரத்திற்குள்ளாகவே அழிந்து போயின; தேர்க் குதிரைகள் சமதரையிலும் இடறி விழுந்தன. (39)

அனைவராலும் அறியப்பட்ட உடல் வலிமையும் ஆண்மையும் பெற்ற பிரஹஸ்தன், தங்களை நோக்கி வருவதைக் கண்ட வானரப்படை, பலவிதமான போர்க் கருவிகளைக் கொண்டு, அவனுடன் போரிட முனைந்தது. (40)

அப்போது, சில வானரர்கள் மரங்களைப் பெயர்த்தெடுத்தார்கள்; சிலர் பெரும் பாறைகளைக் கையில் ஏந்திக் கொண்டார்கள். அதனால், மிகவும் களேபரமான சப்தம் உண்டாயிற்று. (41)

ஒரு பக்கத்தில் அரக்கர்கள் சிம்மநாதம் செய்தார்கள்; மறுபுறத்தில் வானரர்கள் இடிமுழக்கம் எழுப்பினார்கள். (இரு அணிகளுக்கும் சரியான தலைமை கிடைத்து விட்டதால்) வானர–அரக்க அணிகள் இரண்டுமே உற்சாகம் அடைந்தன. (42)

போரைத் தொடங்குவதற்கு அவசரத்துடன் இருந்தவர்களும், போர்க்கலையில் வல்லவர்களும், ஒருவரையொருவர் (ஓர் அணியினரை எதிர் அணியினர்) அழிப்பதில் விருப்பம் கொண்டவர்களுமான அவர்கள், ஓர் அணியினரை எதிர் அணியினர் போருக்கு அழைத்ததனாலும் மிகப்பெரிய சத்தம் எழும்பிற்று. (43)

அப்போது, மதிகெட்டுப் போன பிரஹஸ்தன், சுக்ரீவனுடைய படையை வெற்றி கொள்ளும் எண்ணத்துடன் எதிர்த்துச் சென்றான். உயிரை விடத் துணிந்துவிட்ட விட்டில்பூச்சி, எரியும் நெருப்பில் வந்து விழுவதைப் போல, மேன்மேலும் உற்சாகம் அதிகரித்து விளங்கும் அந்த வானரப் படைக்குள் பிரவேசித்தான். (44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்தகாண்டத்தில்
ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தெட்டு

பிரஹஸ்தன் மாண்டான்!

(இதற்கு முன்னதாக) எதிரிகளை அடக்கும் இராமன், எல்லையில்லா ஆற்றல் படைத்த பிரஹஸ்தன், போருக்கு ஆயத்தமாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்து, விபீஷணனை நோக்கி, இளநகையுடன் பேசத் தொடங்கினார்— ''தோள்வலிமை கொண்டவனே! பெரும் படையுடன் வருபவனும் மிகப்பெரிய உடல் படைத்தவனுமான இவன் யார்? பெருவீரனாகத் தோற்றமளிக்கும் இந்த அரக்கனைப் பற்றி விரிவாகக் கூறு.'' (1,2)

இராமபிரானுடைய கேள்வியைக் கேட்டு, விபீஷணன் பதில் கூறினான்— ''இவன் இராவணனுடைய படைத்தலைவன்; பிரஹஸ்தன் என்ற பெயர் கொண்ட அரக்கன். (3)

இலங்கையில் அரக்க மன்னனுடைய படையில் மூன்றில் ஒரு பாகம் சூழ வந்திருக்கிறான். மகாவீரம் உடையவன்; அஸ்திரங்களை நன்றாக அறிந்தவன்; மகாசூரன்; 'எல்லையற்ற ஆண்மை படைத்தவன்' என்று புகழ் பெற்றவன்.'' (4)

தத: ப்ரஹஸ்தம் நிர்யாந்தம் பீ$_4$மம் பீ$_4$மபராக்ரமம் ।
க$_3$ர்ஜந்தம் ஸுமஹாகாயம் ராக்ஷஸைரபி$_4$ஸம்வ்ருதம் ॥ (5)

த$_3$த$_3$ர்ஶ மஹதீ ஸேநா வாநராணாம் ப$_3$லீயஸாம் ।
அதிஸஞ்ஜாதரோஷாணாம் ப்ரஹஸ்தமபி$_4$க$_3$ர்ஜதாம் ॥ (6)

க$_2$ட்$_3$க$_3$ஶக்த்ய்ருஷ்டிபா$_3$ணாஶ்ச ஶூலாநி முஸலாநி ச ।
க$_3$தா$_3$ஶ்ச பரிகா$_4$: ப்ராஸா விவிதா$_4$ஶ்ச பரஶ்வதா$_4$: ॥ (7)

த$_4$நூம்ஷி ச விசித்ராணி ராக்ஷஸாநாம் ஜயைஷிணாம் ।
ப்ரக்$_3$ருஹீதாந்யஶோப$_4$ந்த வாநராநபி$_4$தா$_4$வதாம் ॥ (8)

ஜக்$_3$ருஹு: பாத$_3$பாந்ஶ்சாபி புஷ்பிதாந் வாநரர்ஷபா$_4$: ।
ஶிலாஶ்ச விபுலா தீ$_3$ர்கா$_4$ யோத்$_3$து$_4$காமா: ப்லவங்க$_3$மா: ॥ (9)

தேஷாமந்யோந்யமாஸாத்$_3$ய ஸங்க்$_3$ராம: ஸுமஹாநபூ$_4$த் ।
ப$_3$ஹூநாமஶ்மவ்ருஷ்டிம் ச ஶரவ்ருஷ்டிம் ச வர்ஷதாம் ॥ (10)

ப$_3$ஹவோ ராக்ஷஸா யுத்$_3$தே$_4$ ப$_3$ஹூந் வாநரயூத$_2$பாந் ।
வாநரா ராக்ஷஸாந்ஶ்சாபி நிஜக்$_4$நுர்ப$_3$ஹவோ ப$_3$ஹூந் ॥ (11)

ஶூலை: ப்ரமதி$_2$தா: கேசித்கேசிச்ச பரமாயுதை$_4$: ।
பரிகை$_4$ராஹதா: கேசித்கேசிச்சி$_2$ந்நா: பரஶ்வதை$_4$: ॥ (12)

நிருச்ச்$_2$வாஸா: க்ருதா: கேசித்பதிதா த$_4$ரணீதலே ।
விபி$_4$ந்நஹ்ருத$_3$யா: கேசிதி$_3$ஷுஸந்தா$_4$நஸந்தி$_3$தா: ॥ (13)

கேசித்$_3$த்$_3$விதா$_4$ க்ருதா: க$_2$ட்$_3$கை$_3$: ஸ்பு$_2$ரந்த: பதிதா பு$_4$வி ।
வாநரா ராக்ஷஸை: ஶூலை: பார்ஶ்வதஶ்ச விதா$_3$ரிதா: ॥ (14)

வாநரைஶ்சாபி ஸம்க்ருத்$_3$தை$_4$ ராக்ஷஸௌகா$_4$: ஸமந்தத: ।
பாத$_3$பைர்கி$_3$ரிஶ்ருங்கை$_3$ஶ்ச ஸம்பிஷ்டா வஸுதா$_4$தலே ॥ (15)

வஜ்ரஸ்பர்ஶதலைர்ஹஸ்தைர்முஷ்டிபி$_4$ஶ்ச ஹதா ப்$_4$ருஶம் ।
வேமு: ஶோணிதமாஸ்யேப்$_4$யோ விஶீர்ணத$_3$ஶநேக்ஷணா: ॥ (16)

ஆர்தஸ்வநம் ச ஸ்வநதாம் ஸிம்ஹநாத$_3$ம் ச நர்த$_3$தாம் ।
ப$_3$பூ$_4$வ துமுல: ஶப்$_3$தோ$_3$ ஹரீணாம் ரக்ஷஸாம் யுதி$_4$ ॥ (17)

வாநரா ராக்ஷஸா: க்ருத்$_3$தா$_4$ வீரமார்க$_3$மநுவ்ரதா: ।
விவ்ருத்தநயநா: க்ரூராஶ்சக்ரு: கர்மாண்யபீ$_4$தவத் ॥ (18)

நராந்தக: கும்ப$_4$ஹநுர்மஹாநாத$_3$: ஸமுந்நத: ।
ஏதே ப்ரஹஸ்தஸசிவா: ஸர்வே ஜக்$_4$நுர்வநௌகஸ: ॥ (19)

அப்போது, வலிமை மிக்கவர்களும், ஆரவாரம் செய்பவர்களும், வேகமாக வளர்ந்துவிட்ட போர்த்துடிப்புடன் இருந்தவர்களுமான வானரப் படையினர், பயங்கரமான தோற்றம் உடையவனும், கட்டுக்கடங்காத ஆற்றல் படைத்தவனும், மிகப்பெரிய உடல் உடையவனும், அரக்கர்களால் சூழப்பட்டிருந்தவனுமான பிரஹஸ்தன் இடிமுழக்கம் செய்தவாறே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். (5,6)

'வெற்றி பெற்றுவிட வேண்டும்' என துடிப்புடன் வானரர்களை எதிர்த்து வந்த அரக்கர்களின் கைகளில், கத்திகள், வேல்கள், இருபக்கமும் கூரான கத்திகள், பாணங்கள், உலக்கைகள், இரும்புத் தடிகள், ஈட்டிகள், பலவகையான கோடாலிகள், வித்தியான விற்கள் முதலிய ஆயுதங்கள் விளங்கின. (7,8)

அப்போது வானரக் காளைகள், மலர் கொழித்து விளங்கும் பெரிய மரங்களைக் கைகளில் ஏந்திக் கொண்டார்கள். போரைத் துவக்குவதற்குப் பேராவலுடன் இருந்த வானரர்கள், நீண்டும் விசாலமாகவும் இருந்த பாறைகளை எடுத்துக் கொண்டார்கள். (9)

ஏராளமாகக் கூடியிருந்த இரு கட்சியினரும் ஒருவர்மேல் ஒருவர் கல்மாரி, சரமாரி பொழிந்து தாக்கி, மிகப்பெரிய யுத்தத்தைத் தொடங்கினார்கள். (10)

போரில், பல அரக்கர்கள் பல வானரப் படைத்தலைவர்களையும், பல வானரர்கள் அநேக அரக்கர்களையும் கொன்றார்கள். (11)

சிலர் சூலங்களாலும், மற்றும் சிலர் சக்கராயுதங்களாலும், வேறு சிலர் இரும்புத் தடிகளாலும் தாக்கப்பட்டு உயிர் துறந்தார்கள்; இன்னும் சிலர் கோடாலிகளால் வெட்டித் தள்ளப்பட்டார்கள். (12)

மேலும் பலர், மூச்சு இழந்தவர்களாகச் செய்யப்பட்டார்கள்; சிலர் அம்புத் தாக்குதலுக்கு இலக்காகி மார்பு பிளந்தவர்களாய் தரையில் விழுந்தார்கள். (13)

எத்தனையோ வானரர்கள், அரக்கர்களின் கத்திகளால் இரண்டு துண்டாக்கப்பட்டார்கள். சிலர் விலாப்புறங்களில் சூலங்களால் குத்தப்பட்டார்கள். எல்லோரும் துடித்துக் கொண்டு பூமியில் விழுந்தார்கள். (14)

மிகவும் சினங்கொண்ட வானரர்கள், அரக்கர் கூட்டங்களை மரங்களாலும் மலைச்சிகரங்களாலும் எல்லாப் பக்கங்களிலும் தாக்கி, அவர்களை உருக்குலைத்துத் தரையில் தள்ளினார்கள். (15)

வஜ்ராயுதத்திற்கு நிகரான வானரர்களின் உள்ளங்கை மற்றும் முஷ்டிகளால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்ட அவர்களின் (அரக்கர்களின்) வாயிலிருந்து இரத்தம் பெருகி ஓடிற்று; பற்களும் கண்களும் சிதறிப்போய் விழுந்தன. (16)

போர் முனையில், அடிபட்டுக் கீழே விழுந்தவர்கள் பரிதாபமாகக் குரல் எழுப்பினார்கள்; போரில் ஈடுபட்டவர்கள் சிங்கநாதம் செய்தார்கள். இவ்வாறு வானர–அரக்கர்களின் கட்சியினர் எழுப்பிய ஒலிகளால் குழப்பமான சப்தம் உண்டாயிற்று. (17)

வீரர்களுக்குரிய பண்பாடுகளை அனுசரிக்கும் வானரர்களும் அரக்கர்களும் மிகவும் கோபம் கொண்டவர்களாக, கண்கள் சுழல, எதற்கும் அச்சப்படாதவர்களைப்போல் குரூரமான போராட்டங்களைச் செய்தார்கள். (18)

நராந்தகன், கும்பஹனு, மகாநாதன், ஸமுன்னதன் என்ற பிரஹஸ்தனின் அமைச்சர்கள், ஒட்டுமொத்தமாக வானரர்களைத் தாக்கிக் கொன்றொழித்தார்கள். (19)

தேஷாமாபததாம் ஶீக்$_4$ரம் நிக்$_4$நதாம் சாபி வாநராந் ।
த்$_3$விவிதே$_3$ா கி$_3$ரிஸ்ருங்கே$_3$ண ஜக$_4$ாநைகம் நராந்தகம் ॥ (20)

து$_3$ர்முக$_2$: புநருத்பாட்ய கபி: ஸ விபுலத்$_3$ருமம் ।
ராக்ஷஸம் க்ஷிப்ரஹஸ்தஸ்து ஸமுந்நதமபோத$_2$யத் ॥ (21)

ஜாம்ப$_3$வாந்ஸ்து ஸுஸம்க்ருத்$_3$த$_4$: ப்ரக்$_3$ருஹ்ய மஹதீம் ஶிலாம் ।
பாதயாமாஸ தேஜஸ்வீ மஹாநாத$_3$ஸ்ய வக்ஷஸி ॥ (22)

அத$_2$ கும்ப$_4$ஹநுஸ்தத்ர தாரேணாஸாத்$_3$ய வீர்யவாந் ।
வ்ருக்ஷேணாபி$_4$ஹதோ மூர்த்$_4$நி ப்ராணாந் ஸந்த்யாஜயத்$_3$ரணே ॥ (23)

அம்ருஷ்யமாணஸ்தத்கர்ம ப்ரஹஸ்தோ ரத$_2$மாஸ்தி$_2$த: ।
சகார கத$_3$நம் கோ$_4$ரம் த$_4$நுஷ்பாணிர்வநௌகஸாம் ॥ (24)

ஆவர்த இவ ஸஞ்ஜஜ்ஞே உப$_4$யோ: ஸேநயோஸ்தத$_3$ா ।
க்ஷுபி$_4$தஸ்யாப்ரமேயஸ்ய ஸாக$_3$ரஸ்யேவ நி:ஸ்வந: ॥ (25)

மஹதா ஹி ஶரௌகே$_4$ண ப்ரஹஸ்தோ யுத்$_3$த$_4$கோவித$_3$: ।
அர்த$_3$யாமாஸ ஸம்க்ருத்$_3$தோ$_4$ வாநராந் பரமாஹவே ॥ (26)

வாநராணாம் ஶரீரைஶ்ச ராக்ஷஸாநாம் ச மேதி$_3$நீ ।
ப$_3$பூ$_4$வ நிசிதா கோ$_4$ரா பதிதைரிவ பர்வதை: ॥ (27)

ஸா மஹீ ருதி$_4$ரௌகே$_4$ண ப்ரச்ச$_2$ந்நா ஸம்ப்ரகாஶதே ।
ஸஞ்ச$_2$ந்நா மாத$_4$வே மாஸி பலாஶைரிவ புஷ்பிதை: ॥ (28)

ஹதவீரௌக$_4$வப்ராம் து ப$_4$க்$_3$நாயுத$_4$மஹாத்$_3$ருமாம் ।
ஶோணிதௌக$_4$மஹாதோயாம் யமஸாக$_3$ரக$_3$ாமிநீம் ॥ (29)

யக்ருத்ப்லீஹமஹாபங்காம் விநிகீர்ணாந்த்ரஶைவலாம் ।
பி$_4$ந்நகாயஶிரோமீநாமங்க$_3$ாவயவஶாத்$_3$வலாம் ॥ (30)

க்$_3$ருத்$_4$ரஹம்ஸக$_3$ணாகீர்ணாம் கங்கஸாரஸஸேவிதாம் ।
மேத$_3$:பே$_2$நஸமாகீர்ணாமார்தஸ்தநிதநி:ஸ்வநாம் ॥ (31)

தாம் காபுருஷது$_3$ஸ்தாராம் யுத்$_3$த$_4$பூ$_4$மிமயீம் நதீ$_3$ம் ।
நதீ$_3$மிவ க$_4$நாபாயே ஹம்ஸஸாரஸஸேவிதாம் ॥ (32)

ராக்ஷஸா: கபிமுக்$_2$யாஶ்ச தேருஸ்தாம் து$_3$ஸ்தராம் நதீ$_3$ம் ।
யத$_2$ா பத்$_3$மரஜோத்$_4$வஸ்தாம் நளிநீம் க$_3$ஜயூத$_2$பா: ॥ (33)

தத: ஸ்ருஜந்தம் ப$_3$ாணௌக$_4$ாந் ப்ரஹஸ்தம் ஸ்யந்த$_3$நே ஸ்தி$_2$தம் ।
த$_3$த$_3$ர்ஶ தரஸா நீலோ விநிக்$_4$நந்தம் ப்லவங்க$_3$மாந் ॥ (34)

அவர்களுள், வானரர்களை எதிர்த்து வந்து தாக்கி வெகு எளிதாகக் கொன்று கொண்டிருந்த (அரக்கன்) நராந்தகனை, (வானரனான) த்விவிதன் ஒரு மலைச்சிகரத்தைக் கொண்டு தாக்கிக் கொன்றான். (20)

சடுதியில் செயலாற்றவல்ல துர்முகன் என்ற வானரன் பெரிய மரத்தைப் பெயர்த்தெடுத்து வந்து, ஸமுன்னதன் என்ற அரக்கனைக் கொன்றான். (21)

மகாபராக்கிரமசாலியான ஜாம்பவான், மிகவும் ஆத்திரமடைந்து ஒரு பெரும் பாறையைத் தூக்கி, மகாநாதன் (என்ற அரக்கன்) மார்பில் வீசியெறிந்தார். (22)

பின்னர், (நால்வரில் மிகுந்திருந்த) மாவீரனான கும்பஹனுவை, தாரன் என்ற வானரன் ஒரு மரத்தினால் தலையில் தாக்கினான். அப்போதே அவன் உயிரைத் துறந்தான். (23)

தேரில் இருந்தபடியே இந்தத் தாக்குதல்களைப் பார்த்துக் கொண்டிருந்த பிரஹஸ்தன், அதைக் காணச் சகிக்காமல் கைகளில் வில்லேந்தி, வானரர்களுக்கு மிக அதிகமான சேதத்தை உண்டாக்கினான். (24)

அப்போது, இரு சேனையினரும் நீர்ச்சுழல் போல் சுழன்று சுழன்று போர் செய்தார்கள். ஒப்புமையில்லாத பெருங்கடல் கலங்குவதைப் போல், அப்போது சப்தம் உண்டாயிற்று. (25)

போர்க்கலையில் வல்லவனான பிரஹஸ்தன், மிகவும் சினங்கொண்டு, அந்தப் பெரும் போரில் இடைவிடாது சரமாரியைப் பொழிந்து, வானரர்களைத் துன்புறுத்தினான். (26)

அந்தப் போர்க்களம், வீழ்ந்து கிடந்த மலைகளைப் போன்ற வானரர் மற்றும் அரக்கர்களின் உடல்களால் நிரம்பியதாய் கோரமாகக் காட்சியளித்தது. (27)

வைகாசி மாதத்தில் நன்றாக மலர்ந்த சிவப்பு மலர்களால் பலாசமரம் மூடப்படுவதைப் போல, (செக்கச்சிவந்த) இரத்த வெள்ளத்தினால் அந்த ரணகளம் முற்றிலும் மூடியதாக ஆயிற்று. (28)

(பின்வரும் ஐந்து சுலோகங்களில், போர்க்களம் ஒரு நதியோடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. ஆறு என்றால் கரைகள், மரங்கள், நீர்ப்பெருக்கு, கடலில் சங்கமம், சேறு, பாசிகள், மீன்கள், புற்கள், அன்னப்பறவைகள், அன்றில்கள், நுரைகள், பேரொலி, கடத்தற்கரிய தன்மை போன்றவையனைத்தும் இருக்க வேண்டுமே? சமர்க்களத்தில் இவைகளைக் காணமுடியுமா? – என்றால்,) மாண்டு கிடந்த வீரர்களின் குவியல்களே, கரைகள்; முறிந்து கிடந்த எண்ணற்ற படைக்கலன்களே, மரங்கள்; வெள்ளமெனப் பாய்ந்த இரத்தமே, நீர்ப்பெருக்கு; ஓர் ஆறு பெருங்கடலில் வீழ்ந்து, தன்னையே இழப்பது போல, எதிரிகளின் தாக்குதலில் உயிரை விடுவதுதான், யமன் எனத் தகும் சங்கமத்தலம்; இருதயத்தின் இரு பக்கங்களிலும் உள்ள கல்லீரல்–மண்ணீரல் என்ற தசைகளே, சேறு; சிதறிக் கிடக்கும் நரம்புகளே, பாசிகள்; துண்டித்துக் கிடக்கும் உடல்–தலைகளே, மீன்கள்; உடலின் சிறிய உறுப்புக்களே, புற்கள்; கழுகுகளே, அன்னப்பறவைகளின் கூட்டம்; பருந்துகளே, அன்றில்கள்; உடலிலிருந்து பிதுங்கிய கொழுப்புகளே, நுரைகள்; குற்றுயிராகக் கிடப்பவர்களின் பரிதாபக் குரலே, (கடலின்) பேரோசை; கோழைகளால் கடக்க முடியாததுமான அந்த யுத்த பூமி என்னும் நதியில், மழைக்கால முடிவில் அன்னங்களும் அன்றில்களும் விளையாட்டாக ஆற்றைக் கடந்து செல்வதைப் போல, அரக்கர்கள் நீந்திச் சென்றார்கள்; தாமரைக் கூட்டங்களின் பூந்தாதுக்கள் நிரம்பிய ஓடையில் வலிமைமிக்க யானைகள், விளையாட்டாகப் புகுந்து கலக்குவதைப் போலவே, வானரத் தலைவர்கள் ரணகளம் என்ற நதியில் புகுந்து விளையாடினார்கள். (29–33)

பிரஹஸ்தன், தேரில் இருந்துகொண்டே மிக வேகமாக அம்புமாரி பொழிந்து, வானரர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருப்பதை, நீலன் என்ற வானரத் தலைவன் அப்போது பார்த்தான். (34)

உத்3தூ4த இவ வாயு: கே2 மஹத3ப்4ரப3லம் ப3லாத் ।
ஸமீக்ஷ்யாபி4த்3ருதம் யுத்3தே4 ப்ரஹஸ்தோ வாஹிநீபதி: ॥
ரதே2நாதி3த்யவர்ணேந நீலமேவாபி4து3த்3ருவே ॥ (35)

ஸ த4நுர்த4ந்விநாம் ஶ்ரேஷ்டே2ா விக்ருஷ்ய பரமாஹவே ।
நீலாய வ்யஸ்ருஜத்3பா3ணாந் ப்ரஹஸ்தோ வாஹிநீபதி: ॥ (36)

தே ப்ராப்ய விஶிகா2 நீலம் விநிர்பி4த்3ய ஸமாஹிதா: ।
மஹீம் ஜக்3முர்மஹாவேகா3 ருஷிதா இவ பந்நகா3: ॥ (37)

நீல: ஶரைரபி4ஹதோ நிஶிதைர்ஜ்வலநோபமை: ।
ஸ தம் பரமது3ர்த4ர்ஷமாபதந்தம் மஹாகபி: ॥
ப்ரஹஸ்தம் தாட3யாமாஸ வ்ருக்ஷமுத்பாட்ய வீர்யவாந் ॥ (38)

ஸ தேநாபி4ஹத: க்ருத்3தே4ா நத3ந் ராக்ஷஸபுங்க3வ: ।
வவர்ஷ ஶரவர்ஷாணி ப்லவங்கா3நாம் சமூபதௌ ॥ (39)

தஸ்ய பா3ணக3ணாந் கோ4ராந் ராக்ஷஸஸ்ய மஹாப3ல: ।
அபாரயந் வாரயிதும் ப்ரத்யக்3ருஹ்ணாந்நிமீலித: ॥ (40)

யதை2வ கோ3வ்ருஷோ வர்ஷம் ஶாரத3ம் ஶீக்4ரமாக3தம் ।
ஏவமேவ ப்ரஹஸ்தஸ்ய ஶரவர்ஷம் து3ராஸத3ம் ॥
நிமீலிதாக்ஷ: ஸஹஸா: நீல: ஸேஹே ஸுது3ாருணம் ॥ (41)

ரோஷித: ஶரவர்ஷேண ஸாலேந மஹதா மஹாந் ।
ப்ரஜக4ாந ஹயாந்நீல: ப்ரஹஸ்தஸ்ய மநோஜவாந் ॥ (42)

தத: ஸ சாபமுத்3க்3ருஹ்ய ப்ரஹஸ்தஸ்ய மஹாப3ல: ।
ப3ப4ஞ்ஜ தரஸா நீலோ நநாத3 ச புந: புந: ॥ (43)

வித4நுஸ்து க்ருதஸ்தேந ப்ரஹஸ்தோ வாஹிநீபதி: ।
ப்ரக்3ருஹ்ய முஸலம் கோ4ரம் ஸ்யந்த3நாத3வபுப்லுவே ॥ (44)

தாவுபௌ4 வாஹிநீமுக்2யௌ ஜாதவைரௌ தரஸ்விநௌ ।
ஸ்தி2தௌ க்ஷதஜதி3க்3த4ாங்கௌ ப்ரபி4ந்நாவிவ குஞ்ஜரௌ ॥ (45)

உல்லிக2ந்தௌ ஸுதீக்ஷ்ணாபி4ர்த3ம்ஷ்ட்ராபி4ரிதரேதரம் ।
ஸிம்ஹஶார்தூ3லஸத்3ருஶௌ ஸிம்ஹஶார்தூ3லசேஷ்டிதௌ ॥ (46)

விக்ராந்தவிஜயௌ வீரௌ ஸமரேஷ்வநிவர்திநௌ ।
காங்க்ஷமாணௌ யஶ: ப் ராப்தும் வ்ருத்ரவாஸவயோ: ஸமௌ ॥ (47)

ஆஜக4ாந தத3ா நீலம் லலாடே முஸலேந ஸ: ।
ப்ரஹஸ்த: பரமாயத்தஸ்தஸ்ய ஸுஸ்ராவ ஶோணிதம் ॥ (48)

சூரியனைப் போல் பிரகாசமான ரதத்திலிருந்தபடியே, ஆகாயத்திலுள்ள பலமான மேக மண்டலத்தை புயற்காற்றுத் தாக்கிச் சிதறடிப்பதைப்போல, பேராற்றலுடன் எதிர்த்து வரும் நீலனையே இலக்காகக் கொண்டு, படைத்தலைவனான பிரஹஸ்தன் எதிர்த்தோடி வந்தான். (35)

வில்லாளிகளில் தலைசிறந்தவனும் அரக்கர் படைத்தலைவனுமான பிரஹஸ்தன், அப்போது தொடங்கிய பெரும் போரில், தன் வில்லை வளைத்து, நீலனைக் குறிவைத்துக் கணைகளைத் தொடுத்தான். (36)

அந்த பாணங்கள் எல்லாம் கோபம் கொண்ட சர்ப்பங்கள் போலவே மிக வேகமாகச் சென்று நீலனைத் தாக்கி (மார்பை) ஊடுருவிக் கொண்டு பூமியை அடைந்தன. (37)

பெருமையும் வீரமும் மிக்க வானரனான நீலன், கூரானவைகளும் அக்னியைப்போல் சுட்டெரிக்கும் தன்மை படைத்தவைகளுமான பாணங்களால் தாக்கப்பட்டு, எவராலும் வெல்லவே முடியாத பராக்கிரமம் படைத்தவனும் தன்னை எதிர்கின்றவனுமான பிரஹஸ்தனை, ஒரு மரத்தைப் பிடுங்கிப் புடைத்தான். (38)

பலமாக அடிபட்ட அரக்க வீரன் மிகவும் கோபம் கொண்டு, சிம்மநாதம் செய்தபடியே, வானரப் படைத்தலைவன் மீது சரமாரிகளைப் பொழிந்தான். (39)

மகாபலம் பொருந்திய அந்த அரக்கனின் பயங்கரமான அம்புமாரியைத் தடுப்பதற்கு முடியாமற்போகவே, (நீலன் வெறெதுவும் செய்யத் தோன்றாமல்) கண்களை மூடி ஏற்றுக் கொண்டான். (40)

உரிய பருவ நாளுக்கு முன்னதாகவே எதிர்பாராமல் வந்து விட்ட சரத்கால மழையை ஒரு காளை எவ்வாறு பொறுத்துக் கொள்ளுமோ, அவ்வாறே தடுக்க முடியாததும் மிகக்கடுமையாக வந்து வீழ்கின்றவைகளுமான பிரஹஸ்தனின் சரமாரியை வேறு வழி புலப்படாததால், கண்களை மூடிக் கொண்டு சகித்துக் கொண்டான். (41)

பாணப் பொழிவினால் கோபமூட்டப்பட்ட மாவீரனான நீலன், ஒரு பெரிய ஆச்சாமரத்தைப் பிடுங்கி, மிக வேகமாகச் செல்லும் தன்மையுடைய பிரஹஸ்தனுடைய (தேர்க்) குதிரைகளைக் கொன்றான். (42)

பின்னர், பேராற்றல் படைத்த நீலன், பிரஹஸ்தனுடைய வில்லை நொடிப்பொழுதில் பிடுங்கி முறித்தெறிந்தான். தொடர்ந்து வெற்றிக் களிப்புடன் பலமுறை சப்தமிட்டான். (43)

வில்லை இழந்த அரக்கர் படைத்தலைவனான பிரஹஸ்தன், மகா வலிமை பொருந்திய இரும்பு உலக்கையை எடுத்துக் கொண்டு, தேரிலிருந்து கீழே குதித்தான். (44)

இரு கட்சிகளின் தலைவர்களுமான அவர்கள், ஒருவருக்கொருவர் பகைமை கொண்டவர்கள்; வேகமாக செயல்படுபவர்கள்; மதநீரால் உடல் நனைந்திருக்கும் இரு யானைகள் போன்று, இரத்தத்தால் நனைந்திருக்கும் உடல்களைக் கொண்டவர்கள். (45)

இருவரும், தங்கள் கோரைப் பற்களால் ஒருவரையொருவர் கடித்துக் குதப்பிக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் சிங்கம்–புலிக்கு நிகரான வீரமும், சிங்கம்–புலி போன்ற செயல்பாடுகளும் உடையவர்கள்; (46)

இருவரும் பராக்கிரமம் மிக்கவர்கள்; எப்போதும் வெற்றி அடைபவர்கள்; போரில் புறங்காட்டாதவர்கள்; விருத்திராசுரனுக்கும் இந்திரனுக்குமிடையே நடந்த போரில், புகழைப் பெற விரும்பிய அவ்விருவர்களையும் போன்றவர்கள். ('நானே வெற்றி பெறவேண்டும்' என்ற பேராவல் கொண்டிருந்தவர்கள்.) (47)

அப்போது மிகவும் முனைப்போடு வந்த பிரஹஸ்தன், நீலனின் நெற்றியில் உலக்கையால் தாக்கினான். அதனால், இரத்தப் பெருக்கு உண்டாயிற்று. (48)

தத: ஶோணிததி$_3$க்$_3$தா$_4$ங்க$_3$: ப்ரக்$_3$ருஹ்ய ஸுமஹாதரும் ।
ப்ரஹஸ்தஸ்யோரஸி க்ருத்$_3$தோ$_4$ விஸஸர்ஜ மஹாகபி: ॥ (49)

தமசிந்த்ய ப்ரஹாரம் ஸ ப்ரக்$_3$ருஹ்ய முஸலம் மஹத் ।
அபி$_4$து$_3$த்$_3$ராவ ப$_3$லிநம் ப$_3$லாந்நீலம் ப்லவங்க$_3$மம் ॥ (50)

தமுக்$_3$ரவேக$_3$ம் ஸம்ரப்$_3$த$_4$மாபதந்தம் மஹாகபி: ।
தத: ஸம்ப்ரேக்ஷ்ய ஜக்$_3$ராஹ மஹாவேகோ$_3$ மஹாஶிலாம் ॥ (51)

தஸ்ய யுத்$_3$தா$_4$பி$_4$காமஸ்ய ம்ருதே$_4$ முஸலயோதி$_4$ந: ।
ப்ரஹஸ்தஸ்ய ஶிலாம் நீலோ மூர்த்$_4$நி தூர்ணமபாதயத் ॥ (52)

ஸா தேந கபிமுக்$_2$யேந விமுக்தா மஹதீ ஶிலா ।
பி$_3$பே$_4$த$_3$ ப$_3$ஹுதா$_4$ கோ$_4$ரா ப்ரஹஸ்தஸ்ய ஶிரஸ்ததா$_3$ ॥ (53)

ஸ க$_3$தாஸுர்க$_3$தஶ்ரீகோ க$_3$தஸத்த்வோ க$_3$தேந்த்$_3$ரிய: ।
பபாத ஸஹஸா பூ$_4$மௌ சி$_2$ந்நமூல இவ த்$_3$ரும: ॥ (54)

ப்ரபி$_4$ந்நஶிரஸஸ்தஸ்ய ப$_3$ஹு ஸுஸ்ராவ ஶோணிதம் ।
ஶரீராத$_3$பி ஸுஸ்ராவ கி$_3$ரே: ப்ரஸ்ரவணம் யதா$_2$ ॥ (55)

ஹதே ப்ரஹஸ்தே நீலேந தத$_3$கம்ப்யம் மஹத்$_3$ப$_3$லம் ।
ரக்ஷஸாமப்ரஹ்ருஷ்டாநாம் லங்காமபி$_4$ஜகா$_3$ம ஹ ॥ (56)

ந ஶேகு: ஸமரே ஸ்தா$_2$தும் நிஹதே வாஹிநீபதௌ ।
ஸேதுப$_3$ந்த$_4$ம் ஸமாஸாத்$_3$ய விகீர்ணம் ஸலிலம் யதா$_2$ ॥ (57)

ஹதே தஸ்மிந்ச்சமூமுக்$_2$யே ராக்ஷஸாஸ்தே நிருத்$_3$யமா: ।
ரக்ஷ:பதிக்$_3$ருஹம் க$_3$த்வா த்$_4$யாநமூகத்வமாஸ்தி$_2$தா: ॥
ப்ராப்தா: ஶோகார்ணவம் தீவ்ரம் நி:ஸம்ஜ்ஞா இவ தேऽப$_4$வந் ॥ (58)

ததஸ்து நீலோ விஜயீ மஹாப$_3$ல:
ப்ரஶஸ்யமாந: ஸ்வக்ருதேந கர்மணா ।
ஸமேத்ய ராமேண ஸலக்ஷ்மணேந ச
ப்ரஹ்ருஷ்டரூபஸ்து ப$_3$பூ$_4$வ யூத$_2$ப: ॥ (59)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

ஏகோநஷஷ்டிதம: ஸர்க$_3$:

ராவணாபி$_4$ஷேணநம்

தஸ்மிந் ஹதே ராக்ஷஸஸைந்யபாலே ப்லவங்க$_3$மாநாம்ருஷபே$_4$ண யுத்$_3$தே$_4$ ।
பீ$_4$மாயுத$_4$ம் ஸாக$_3$ரதுல்யவேக$_3$ம் விது$_3$த்$_3$ருவே ராக்ஷஸராஜஸைந்யம் ॥ (1)

இரத்தம் வழிந்து கொண்டிருந்த உடலுடன் வானரோத்தமனான நீலன் மிகவும் ஆத்திரம் கொண்டவனாகி, மிகப்பெரிய ஒரு மரத்தை எடுத்து பிரஹஸ்தனுடைய மார்பில் அடித்தான். (49)

அவன் அந்த அடியைப் பொருட்படுத்தாமல், பெரிய ஓர் உலக்கையைக் கையில் எடுத்துக் கொண்டு, வலிமைமிக்க வானரன் நீலனை நோக்கி வெகுவேகமாக ஓடினான். (50)

மிக்க சினங்கொண்டவனும் பயங்கரமான வேகத்துடன் எதிர்த்தோடி வருபவனுமான அவனைப் பார்த்து, அதிவேகமாக செயல்படும் பெருவானரனான நீலன், ஒரு பெரும் பாறையைக் கையில் எடுத்துக் கொண்டான். (51)

போர்க்களத்தில், உலக்கை கொண்டு போர் செய்யும் விருப்பமுடைய பிரஹஸ்தனின் தலையின் மீது சடாரென்று பாறையைப் போட்டான், நீலன். (52)

வானரத் தலைவனால் எறியப்பட்ட பயங்கரமான அந்தப் பெரும் பாறை, பிரஹஸ்தனுடைய தலையைப் பல துண்டுகளாகச் சிதறடித்தது. (53)

அவன் உயிரிழந்து, ஒளியிழந்து, வீரம் இழந்து, புலன் இயக்கம் இழந்து, வேருடன் பிடுங்கப்பட்ட மரம்போல, அப்போதே தடாலென்று தரையில் சாய்ந்தான். (54)

உடைக்கப்பட்ட அவன் தலையிலிருந்து இரத்தம் வெகுவாகப் பெருகியது. உடம்பிலிருந்தும், மலையிலிருந்து கொட்டும் நீர்வீழ்ச்சியைப் போல, இரத்த அருவி பெருகி ஓடிற்று. (55)

நீலன், பிரஹஸ்தனைக் கொன்றதும், அதுவரை அச்சமில்லாதிருந்த அரக்கர் படை மிகவும் துயரத்துடன் இலங்கையைத் திரும்பவும் சென்றடைந்தது. (56)

நீரோட்டத்தைத் தடுப்பதற்காகக் கட்டப்பட்ட அணை உடைந்துவிட்டால், நீரோட்டத்தைத் தடுக்க முடியாததைப் போல, படைத்தலைவன் கொல்லப்பட்டதும் அரக்கர் படையினரால் போர்க்களத்தில் நிற்க முடியவில்லை. (57)

தங்கள் படைத்தலைவன் மாண்டு போனதும், போரில் ஆர்வமிழந்த அரக்கப் படையினர், இலங்கையில் அரக்க மன்னன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்து, தியானத்தில் ஆழ்ந்து மௌனவிரதம் பூண்டவர்கள்போல் ஊமைகளாய் நின்றார்கள். ஆழங்காண முடியாத சோகக் கடலில் மூழ்கி, தன்னுணர்வு இழந்தவர்களாக ஆனார்கள். (58)

இப்பால், வெற்றி பெற்ற படைத்தலைவனான நீலன், அவனுடைய செயற்கரிய செயலை மெச்சியதைக் கேட்டுக் கொண்டு, இராம–லட்சுமணர்கள் இருந்த இடத்திற்கு வந்து, சந்தித்து, பேரானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். (59)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்பது

இராவணன் வருகை

வானரர்களுள் காளை போன்ற நீலனால், அரக்கர் படைக்காவலன் ரணகளத்தில் கொல்லப்பட்டதும், பெருங்கடல் போல் கலக்க முடியாததும் பயங்கரமான படைக்கலன்களைக் கொண்டதுமான அரக்க மன்னனின் படை (நகரத்தை நோக்கி) ஓடிற்று. (1)

க3த்வாத2 ரக்ஷோऽதி4பதே: ஶஶம்ஸு:
ஸேநாபதிம் பாவகஸூநுஶஸ்தம் ।
தச்சாபி தேஷாம் வசநம் நிஶம்ய
ரக்ஷோऽதி4ப: க்ரோத4வஶம் ஜகா3ம ॥ (2)

ஸங்க்2யே ப்ரஹஸ்தம் நிஹதம் நிஶம்ய
ஶோகார்தி3த: க்ரோத4பரீதசேதா: ।
உவாச தாந்நைர்ருதயோத4முக்2யா–
நிந்த்3ரோ யதா2 சாமரயோத4முக்2யாந் ॥ (3)

நாவஜ்ஞா ரிபவே கார்யா யைரிந்த்3ரப3லஸூத3ந: ।
ஸூதி3த: ஸைந்யபாலோ மே ஸாநுயாத்ர: ஸகுஞ்ஜர: ॥ (4)

ஸோऽஹம் ரிபுவிநாஶாய விஜயாயாவிசாரயந் ।
ஸ்வயமேவ க3மிஷ்யாமி ரணஶீர்ஷம் தத3த்3பு4தம் ॥ (5)

அத்3ய தத்3வாநராநீகம் ராமம் ச ஸஹலக்ஷ்மணம் ।
நிர்த3ஹிஷ்யாமி பா3ணௌகை4ர்வநம் தீ3ப்தைரிவாக்3நிபி4: ॥
அத்3ய ஸந்தர்பயிஷ்யாமி ப்ருதி2வீம் கபிஶோணிதை: ॥ (6)

ஸ ஏவமுக்த்வா ஜ்வலநப்ரகாஶம் ரத2ம் துரங்கோ3த்தமராஜயுக்தம் ।
ப்ரகாஶமாநம் வபுஷா ஜ்வலந்தம் ஸமாருரோஹாமரராஜஶத்ரு: ॥ (7)

ஸ ஶங்க2பே4ரீபணவப்ரணாதை3–
ராஸ்போடித க்ஷ்வேலித ஸிம்ஹநாதை: ।
புண்யை: ஸ்தவைஶ்சாப்யபிபூஜ்யமாநஸ்
ததா யயௌ ராக்ஷஸராஜமுக்ய: ॥ (8)

ஸ ஶைலஜீமூதநிகாஶரூபை–
மாம்ஸாத3நை: பாவகதீ3ப்தநேத்ரை: ।
ப3பௌ4 வ்ருதோ ராக்ஷஸராஜமுக்2யோ
பூ4தைர்வ்ருதோ ருத்3ர இவாமரேஶ: ॥ (9)

ததோ நக3ர்யா: ஸஹஸா மஹௌஜஸா
நிஷ்க்ரம்ய தத்3 வாநரஸைந்யமுக்3ரம் ।
மஹார்ணவாப்4ரஸ்தநிதம் த3த3ர்ஶ
ஸமுத்3யதம் பாத3பஶைலஹஸ்தம் ॥ (10)

தத்3ராக்ஷஸாநீகமதிப்ரசண்ட3மாலோக்ய ராமோ பு4ஜகே3ந்த்3ரப3ாஹு: ।
விபீ4ஷணம் ஶஸ்த்ரப்4ருதாம் வரிஷ்ட2முவாச ஸேநாநுக3த: ப்ருது2ஸ்ரீ: ॥ (11)

நாநாபதாகாத்4வஜஶஸ்த்ரஜுஷ்டம் ப்ராஸாஸிஶூலாயுத4ஶஸ்த்ரஜுஷ்டம் ।
ஸைந்யம் க3ஜேந்த்3ரோபமநாக3ஜுஷ்டம் கஸ்யேத3மக்ஷோப்4யமபீ4ருஜுஷ்டம் ॥ (12)

பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடன் அரக்க மன்னனிடம், தங்கள் படைத்தலைவன் அக்னிகுமாரனான நீலனால் கொல்லப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்கள். அதைக் கேட்டதும் அரக்க மன்னன் மிகவும் கோபம் அடைந்தான். (2)

போரில் பிரஹஸ்தன் கொல்லப்பட்டுவிட்டதை அறிந்து, சோகத்தால் பீடிக்கப்பட்டு, சித்தத்தை ஆத்திரம் பற்றிக் கொள்ள, தேவர்களின் படைத்தலைவர்களைப் பார்த்து, இந்திரன் கூறுவதைப் போல, அரக்கப் போர்வீரர்களைப் பார்த்துக் கூறினான்— (3)

''தேவேந்திரனுடைய படைகளையே அழித்த என் படைத்தலைவன், (இப்போரில்) அவனுடன் சென்ற காலாட்படையினர் மற்றும் யானைகளுடன் எவர்களால் அழிக்கப்பட்டானோ, அந்தப் பகைவர்களைப் பொருட்படுத்தாதிருக்கக் கூடாது. (4)

இதுபற்றி மேலும் ஆலோசித்துக் கொண்டிராமல், எதிரிகளை அழிப்பதற்காகவும் நம்முடைய வெற்றிக்காகவும், அற்புதமான அந்தப் போர்முனைக்கு நானே நேரில் செல்லப் போகிறேன். (வலிமை குன்றிய வானரர்களால், மகாபராக்கிரமசாலியான படைத்தலைவன் கொல்லப்பட்டிருக்கிறானே! – அதுதான் ஆச்சரியம்!) (5)

இப்போதே, இராம–லட்சுமணர்களையும் வானரப் படையையும், கொழுந்து விட்டெரியும் நெருப்பு, காட்டைப் பொசுக்கித் தள்ளுவதைப்போல, அம்புக் கூட்டங்களால் எரித்துவிடப் போகிறேன். (அம்பினால் தாக்கப்பட்டு உயிர் துறந்து கீழே விழுந்த) வானரர்களின் இரத்தத்தால் பூமியைத் திருப்திப்படுத்துவேன்.'' (6)

அமரர்கோன் இந்திரனின் பகைவனான அவன் இவ்வாறு கூறிவிட்டு, மிகவும் உத்தம ஜாதிக் குதிரைகள் பூட்டப் பெற்றதும், நெருப்பைப்போல் ஒளி வீசுவதும், அலங்காரம் செய்யப்பட்டதும், தன் அமைப்பினாலேயே மனத்தைக் கவர்வதுமான ரதத்தில் ஏறினான். (7)

மேன்மை பொருந்திய அந்த அரக்க மன்னன் போருக்காகப் புறப்பட்டபோது, சங்கு–பேரிகை–முரசு முதலியவை முழங்கின; படைவீரர்கள் தோள் தட்டினார்கள்; குதித்தார்கள்; சிம்மநாதம் செய்தார்கள். துதி பாடகர்கள் வெற்றிப் பாடல்களைப் பாடிப் போற்றினார்கள். (8)

மலையைப் போல் பெரிய உடலையும் மேகங்களைப்போல் கருமை வண்ணமும் உடையவர்களும், மாமிசம் உண்பவர்களும், நெருப்புப் போல் அனல் தெறிக்கும் கண்களை உடையவர்களுமான படைவீரர்களால் சூழப்பட்டு, தேவதைகளுக்கெல்லாம் தலைவனான ருத்ரன் பூதகணங்களால் சூழப்பட்டிருப்பதைப் போல, அந்த அரக்க மாமன்னன் விளங்கினான். (9)

அளவு கடந்த ஆற்றல் படைத்த அவன், நகரிலிருந்து வெகுவிரைவாக வெளியே வந்து, மரங்களையும் பாறைகளையும் கையில் ஏந்திக் கொண்டு போருக்கு ஆயத்தமாக நிற்பதும், பெருங்கடலையும் மேகத்தையும் போல் கடூரமாகக் கூச்சலிட்டுக் கொண்டிருந்ததுமான வானரப் படையைக் கண்டான். (10)

போர் நிகழப் போகிறது என்ற மகிழ்ச்சியால் வெற்றிப்பொலிவுடன் விளங்குபவரும் படைகளால் சூழப்பட்டவரும் சர்ப்பம் போல் நீண்ட கைகள் கொண்டவருமான இராமன், எதிர்நோக்கி வரும் மிகவும் பயங்கரமான அரக்கர் படையைப் பார்த்து, ஆயுதம் தரித்தவர்களில் முதன்மையானவனான விபீஷணனை நோக்கிக் கேட்டார்— (11)

''இதோ எதிர்த்து வரும்படையில் பலவிதமான கொடிகள், பாவட்டாக்கள், படைக்கலன்கள் காணப்படுகின்றன; ஈட்டி, வாள், சூலம் முதலிய ஆயுதங்கள் தெரிகின்றன; கஜேந்திரனுக்கு நிகரான யானைகள் வருகின்றன; சிறிதளவுகூட கலக்க முடியாததும் அச்சத்தையே அறியாதவர்களுமான படைவீரர்களைக் கொண்ட இந்தப் படை எவருடையது?'' (12)

ததஸ்து ராமஸ்ய நிஶம்ய வாக்யம் விபீ$_4$ஷண: ஶக்ரஸமாநவீர்ய: ।
ஶஶம்ஸ ராமஸ்ய ப$_3$லப்ரவேகம் மஹாத்மநாம் ராக்ஷஸபுங்க$_3$வாநாம் ॥ (13)

யோऽஸௌ க$_3$ஜஸ்கந்த$_4$க$_3$தோ மஹாத்மா நவோதி$_3$தார்கோபமதாம்ரவக்த்ர: ।
ப்ரகம்பயந்நாக$_3$ஶிரோऽப்$_4$யுபைதி ஹ்யகம்பநம் த்வேநமவேஹி ராஜந் ॥ (14)

யோऽஸௌ ரத$_2$ஸ்தே$_2$ா ம்ருக$_3$ராஜகேதுர்–
தூ$_4$ந்வந் த$_4$நு: ஶக்ரத$_4$நு:ப்ரகாஶம் ।
கரீவ ப$_4$ாத்யுக்$_3$ரவிவ்ருத்தத$_3$ம்ஷ்ட்ர:
ஸ இந்த்$_3$ரஜிந்நாம வரப்ரத$_4$ாந: ॥ (15)

யஶ்சைஷ விந்த்$_4$யாஸ்தமஹேந்த்$_3$ரகல்போ த$_4$ந்வீ ரத$_2$ஸ்தே$_2$ாऽதிரதே$_2$ாऽதிவீர: ।
விஸ்ப$_2$ாரயம்ஶ்சாபமதுல்யமாநம் நாம்நாதிகாயோऽதிவிவ்ருத்$_3$த$_4$காய: ॥ (16)

யோऽஸௌ நவார்கோதி$_3$ததாம்ரசக்ஷு–
ராருஹ்ய க$_4$ண்டாநிநத$_3$ப்ரணாத$_3$ம் ।
க$_3$ஜம் க$_2$ரம் க$_3$ர்ஜதி வை மஹாத்மா
மஹோத$_3$ரோ நாம ஸ ஏஷ வீர: ॥ (17)

யோऽஸௌ ஹயம் காஞ்சநசித்ரப$_4$ாண்ட$_3$–
மாருஹ்ய ஸந்த்$_4$யாப்$_4$ரகி$_3$ரிப்ரகாஶம் ।
ப்ராஸம் ஸமுத்$_3$யம்ய மரீசிநத்$_3$த$_4$ம்
பிஶாச ஏஷோऽஶநிதுல்யவேக$_3$: ॥ (18)

யஶ்சைஷ ஶூலம் நிஶிதம் ப்ரக்$_3$ருஹ்ய
வித்$_3$யுத்ப்ரப$_4$ம் கிங்கரவஜ்ரவேக$_3$ம் ।
வ்ருஷேந்த்$_3$ரமாஸ்த$_2$ாய கி$_3$ரிப்ரகாஶ–
மாயாதி யோऽஸௌ த்ரிஶிரா யஶஸ்வீ ॥ (19)

அஸௌ ச ஜீமூதநிகாஶரூப: கும்ப$_4$: ப்ருது$_2$வ்யூட$_4$ஸுஜாதவக்ஷா: ।
ஸமாஹித: பந்நக$_3$ராஜகேதுர்–விஸ்ப$_2$ாரயந் ப$_4$ாதி த$_4$நுர்விதூ$_4$ந்வந் ॥ (20)

யஶ்சைஷ ஜாம்பூ$_3$நத$_3$வஜ்ரஜுஷ்டம் தீ$_3$ப்தம் ஸதூ$_4$மம் பரிக$_4$ம் ப்ரக்$_3$ருஹ்ய ।
ஆயாதி ரக்ஷோப$_3$லகேதுபூ$_4$தஸ்த்வஸௌ நிகும்பே$_4$ாऽத்$_3$பு$_4$தகோ$_3$ரகர்மா ॥ (21)

யஶ்சைஷ சாபாஸிஶரௌக$_4$ஜுஷ்டம்
பதாகிநம் பாவகதீ$_3$ப்தரூபம் ।
ரத$_2$ம் ஸமாஸ்த$_2$ாய விப$_4$ாத்யுத$_3$க்$_3$ரோ
நராந்தகோऽஸௌ நக$_3$ஶ்ருங்க$_3$யோதீ$_4$ ॥ (22)

யஶ்சைஷ நாநாவித$_4$கோ$_4$ரரூபைர்–
வ்யாக்$_4$ரோஷ்ட்ரநாகே$_3$ந்த்$_3$ரம்ருக$_3$ாஶ்வவக்த்ரை: ।
பூ$_4$தைர்வ்ருதோ ப$_4$ாதி விவ்ருத்தநேத்ரை:
ஸோऽஸௌ ஸுராணாமபி த$_3$ர்பஹந்தா ॥ (23)

இந்திரனுக்கு நிகரான வீரம் படைத்த விபீஷணன், இராமனுடைய சொற்களைக் கேட்டு, மனோபலம் மிக்கவர்களான அரக்கத் தலைவர்களுடைய படையினரின் எல்லையற்ற சக்தியைப் பற்றிக் கூறத் தொடங்கினான்— (13)

''மன்னரே! உதயகால சூரியனைப்போல சிவந்த முகத்துடன், யானைமேல் ஏறி வருகின்ற மாவீரனைத் தாங்க மாட்டாமல் யானையின் தலைப்பகுதி ஆட்டம் காண்கிறதோ, அவன்தான் அகம்பனன். (அனுமானால் கொல்லப்பட்டவன் அல்லன்; இவன் வேறொரு அகம்பனன்.) (14)

சிங்கச் சின்னம் பொறித்த கொடியுடன் கூடிய தேரில் ஏறி வருபவன்; பற்கள், யானையினுடைய தந்தத்தைப் போல் பயங்கரமாக வெளியே நீட்டிக் கொண்டிருக்கின்றன; வானவில்லைப் போன்று விளங்கும் வில்லை அசைத்துக் கொண்டு வரும் இவன்தான் இந்திரஜித். இவன் தேவர்கள் வழங்கிய வரங்களால் மிகவும் பெருமை பெற்றவன். (15)

விந்த்யாசலம், அஸ்தாசலம், மகேந்திரம் போன்ற மலைகளுக்கு நிகரான பேருடல் படைத்தவன்; அதிரதன்; மகாவீரன்; கையில் வில்லுடன் ரதத்தில் வீற்றிருப்பவன்; ஒப்பில்லாத வலிமை வாய்ந்த தன்னுடைய வில்லில் அடிக்கடி நாணொலி எழுப்பிக் கொண்டிருப்பவன் – இவன் பெயர் அதிகாயன்; பெயருக்கேற்றபடி பேருருவம் கொண்டவன். (16)

இளஞ்சூரியனைப் போன்ற சிவந்த கண்களை உடையவன்; இனிமையாக ஒலிக்கும் மணிகள் கட்டப் பெற்ற யானைமீது ஏறிக் கொண்டு, மிகவும் கரகரத்த குரலில் கர்ஜிக்கின்ற இவன், பேராற்றல் கொண்ட மகோதரன். (17)

சாயங்கால மேகம் தங்கிய மலை போன்று ஒளி வீசிக் கொண்டு, பொன் அணிகலன்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட குதிரை மேல் அமர்ந்து, ஒளிவீசும் சூலத்தைக் கையிலேந்தியபடி இங்கே வந்து கொண்டிருக்கிறானே, அவனுடைய பெயர், பிசாசன்; வஜ்ராயுதத்திற்கு நிகரான வேகம் கொண்ட வீரன். (18)

கூரானதும் மின்னல்போல் பிரகாசிப்பதும் வஜ்ராயுதத்தின் வேகத்தை விஞ்சியதுமான சூலத்தை ஏந்திக் கொண்டு, மலை போல் விளங்கும் காளைமீது அமர்ந்து வருகின்ற இவன்தான், மிகவும் புகழ் பெற்ற திரிசிரஸ். (ஜனஸ்தானத்தில் மாண்டு போனவன் வேறொரு திரிசிரஸ். இவன், இராவணனுடைய புதல்வர்களில் ஒருவன். அவன், இராவணனுடைய தம்பி.) (19)

மேகம் போன்ற கரிய நிறமுடையவன்; விம்மிப் புடைத்து விசாலமாக விளங்கும் மார்பை உடையவன்; அரவக்கொடியோன்; மனத்தை ஒருநிலைப்படுத்தி வில்லில் நாணேற்றி டங்காரம் செய்து கொண்டு கம்பீரமாக வருகிறவன் பெயர், கும்பன். (20)

பொன்னும் வைரமும் வைத்து இழைத்ததால் பிரகாசிப்பதும், இந்திரநீலமணி இழைக்கப்பட்டிருப்பதால் புகையோடு கூடிய நெருப்புப் போன்று மங்கிய ஒளியுடன் கூடியதுமான இரும்புத்தடியைக் கையில் ஏந்திக் கொண்டு, அரக்கர் படையின் முன்னதாகச் செல்லும் போர்க்கொடி போல் வீராப்புடன் வருகிறவன் பெயர் நிகும்பன்; செயற்கரிய பயங்கரமான செயல்களைச் செய்யக்கூடியவன். (21)

ஏராளமான வில்–கத்தி–அம்புகள் நிரம்பியதும், கொடி–தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டதும், அக்னியைப் போல் ஜொலிக்கின்றதுமான தேரில் இருந்துகொண்டு அற்புதமான சோபையுடன் விளங்கும் இவன், மாவீரர்கள் நிலையிலுள்ள நராந்தகன்; இவன் மலைச்சிகரங்களைக் கொண்டு போர் புரிபவன். (இந்த நராந்தகனும், இராவணனுடைய மைந்தனே.) (22)

எவன், பலவிதமான பயங்கர உருவம் கொண்டவைகளும், புலி–ஒட்டகம்–யானை–மான்–குதிரை போல் முகம் கொண்டவைகளும், சுழலும் கண்களைக் கொண்ட பூதங்களும் சூழ விளங்குபவனோ, எவன், தேவர்களுடைய செருக்கை அடக்கியவனோ, (23)

யத்ரைததி$_3$ந்த்$_3$ரப்ரதிமம் விப$_4$ாதி
ச்ச$_2$த்ரம் ஸிதம் ஸூக்ஷ்மஶலாகமக்$_3$ர்யம் ।
அத்ரைஷ ரக்ஷோऽதி$_4$பதிர்மஹாத்மா
பூ$_4$தைர்வ்ருதோ ருத்$_3$ர இவாவப$_4$ாதி ॥ (24)

அஸௌ கிரீடீ சலகுண்ட$_3$லாஸ்யோ நகே$_3$ந்த்$_3$ரவிந்த்$_4$யோபமபீ$_4$மகாய: ।
மஹேந்த்$_3$ரவைவஸ்வதத$_3$ர்பஹந்தா ரக்ஷோऽதி$_4$ப: ஸூர்ய இவாவப$_4$ாதி ॥ (25)

ப்ரத்யுவாச ததோ ராமோ விபீ$_4$ஷணமரிந்த$_3$மம் ।
அஹோ தீ$_3$ப்தோ மஹாதேஜா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ॥ (26)

ஆதி$_3$த்ய இவ து$_3$ஷ்ப்ரேக்ஷோ ரஶ்மிபி$_4$ர்ப$_4$ாதி ராவண: ।
ஸுவ்யக்தம் லக்ஷயே ஹ்யஸ்ய ரூபம் தேஜ:ஸமாவ்ருதம் ॥ (27)

தே$_3$வத$_3$ாநவவீராணாம் வபுர்நைவம்வித$_4$ம் ப$_4$வேத் ।
யாத்$_3$ருஶம் ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய வபுரேதத்ப்ரகாஶதே ॥ (28)

ஸர்வே பர்வதஸங்காஶா: ஸர்வே பர்வதயோதி$_4$ந: ।
ஸர்வே தீ$_3$ப்தாயுத$_4$த$_4$ரா யோத$_4$ாஶ்சாஸ்ய மஹௌஜஸ: ॥ (29)

ப$_4$ாதி ராக்ஷஸராஜோऽஸௌ ப்ரதீ$_3$ப்தைர்பீ$_4$மவிக்ரமை: ।
பூ$_4$தை: பரிவ்ருதஸ்தீக்ஷ்ணைர்தே$_3$ஹவத்$_3$பி$_4$ரிவாந்தக: ॥ (30)

தி$_3$ஷ்ட்யாயமத்$_3$ய பாபாத்மா மம த்$_3$ருஷ்டிபத$_2$ம் க$_3$த: ।
அத்$_3$ய க்ரோத$_4$ம் விமோக்ஷ்யாமி ஸீதாஹரணஸம்ப$_4$வம் ॥ (31)

ஏவமுக்த்வா ததோ ராமோ த$_4$நுராத$_3$ாய வீர்யவாந் ।
லக்ஷ்மணாநுசரஸ்தஸ்தௌ$_2$ ஸமுத்$_3$த்$_4$ருத்ய ஶரோத்தமம் ॥ (32)

தத: ஸ ரக்ஷோऽதி$_4$பதிர்மஹாத்மா
ரக்ஷாம்ஸி தாந்யாஹ மஹாப$_3$லாநி ।
த்$_3$வாரேஷு சர்யாக்$_3$ருஹகோ$_3$புரேஷு
ஸுநிர்வ்ருதாஸ்திஷ்ட$_2$த நிர்விஶங்கா: ॥ (33)

இஹாக$_3$தம் மாம் ஸஹிதம் ப$_4$வத்$_3$பி$_4$ர்–
வநௌகஸஶ்சி$_2$த்$_3$ரமித$_3$ம் விதி$_3$த்வா ।
ஶூந்யாம் புரீம் து$_3$ஷ்ப்ரஸஹாம் ப்ரமத்$_2$ய
ப்ரத$_4$ர்ஷயேயு: ஸஹஸா ஸமேதா: ॥ (34)

விஸர்ஜயித்வா ஸஹிதாந்ஸ்ததஸ்தாந் க$_3$தேஷு ரக்ஷ:ஸு யத$_2$நியோக$_3$ம் ।
வ்யத$_3$ாரயத்$_3$வாநரஸாக$_3$ரௌக$_4$ம் மஹாஜ்ஜஷ: பூர்ணமிவார்ணவௌக$_4$ம் ॥ (35)

தமாபதந்தம் ஸஹஸா ஸமீக்ஷ்ய தீ$_3$ப்தேஷுசாபம் யுதி$_4$ ராக்ஷஸேந்த்$_3$ரம் ।
மஹத்ஸமுத்பாட்ய மஹீத$_4$ராக்$_3$ரம் து$_3$த்$_3$ராவ ரக்ஷோऽதி$_4$பதிம் ஹரீஶ: ॥ (36)

எவனுடைய தலைமேல் பூர்ணசந்திரன் போன்று வெண்மையானதும் மெல்லிய கம்பிகளைக் கொண்டதுமான குடை காணப்படுகிறதோ, எவன், பூதகணங்களால் சூழப்பட்ட ருத்ரன் போல் விளங்குகிறானோ, அவன்தான் மகாபராக்கிரமசாலியான அரக்க மன்னன், இராவணன். (24)

தலையில் கிரீடம் அணிந்து, செவிகளில் அசைந்தாடும் குண்டலங்கள் விளங்க, இமயமலை மற்றும் விந்தியமலைக்கு நிகரான பேருடல் கொண்டுள்ளவனும், இந்திரன்–யமன் ஆகியவர்களின் செருக்கை அடக்கியவனுமான இந்த அரக்க மன்னன், சூரியன்போல் பிரகாசிப்பதைக் காணுங்கள்.'' (25)

எதிரிகளை வெற்றி கொள்ளும் விபீஷணனிடம், ''ஆகா! அரக்கர் வேந்தனான இராவணனுக்குத்தான் எவ்வளவு ஆற்றல்! எவ்வளவு பிரகாசம்!'' என்று இராமன் கூறினார். (26)

(மேலும் இராமன் கூறினார்—) ''வெம்மைக் கதிர்வீசும் நண்பகல் சூரியனைக் கண்கொண்டு பார்க்க முடியாததைப்போல, ஒளி சூழ்ந்து விளங்கும் இவனது உருவத்தையும் தெளிவாகக் காண முடியாதென்றே எண்ணுகிறேன். (27)

அரக்க மன்னனின் இந்தத் தோற்றம், (கண்ணால் காண முடியாதபடி) எப்படிப் பிரகாசிக்கிறதோ, அப்படிப்பட்ட உருவம் தேவாசுரர்களிடம் காண முடியாது. (28)

மகத்தான ஆற்றலோடு விளங்கும் இவனுடன் வந்துள்ள படைவீரர்கள் எல்லோரும் மலைகளைப் போன்றவர்கள்; மலைகளோடும் பொருத வல்லவர்கள்; ஒளிவீசும் அஸ்திர–சஸ்திரங்களைத் தாங்கியுள்ளார்கள். (29)

ஒளி வீசுபவர்களும், காண்பதற்குப் பயங்கரமான தோற்றமுடையவர்களும், கொடூர இயல்பு கொண்டவர்களுமான அரக்கர்களால் சூழப்பட்டிருக்கும் இராவணன், (அரக்க) உருவம் கொண்ட பூதங்களால் சூழப்பட்டிருக்கும் யமன் போலவே தோற்றமளிக்கிறான். (30)

மகாபாவியான இவன், அதிருஷ்டவசமாக இப்போது என் கண்களில் படும்படியாக எதிரில் வந்து நிற்கிறான். இவன், சீதையைக் கவர்ந்து சென்றதால், எனக்கு உண்டான கோபத்தை இப்போது வெளிப்படுத்தப் போகிறேன்.'' (31)

இவ்வாறு கூறிவிட்டு மகாவீரரான இராமன், இலக்குவன் அருகில் நிற்க, வில்லை எடுத்து நிறுத்தி, இலக்குத் தவறாத ஓர் அம்பை வைத்துக் கொண்டு ஆயத்தமாக இருந்தார். (32)

அதே சமயத்தில், பேராற்றல் படைத்த அரக்க வேந்தன் (இராவணன்) பலம் மிக்க அரக்க வீரர்களைப் பார்த்து, ''தோரணவாயில்களிலும் பாதுகாப்பு அறைகளிலும் கோபுரங்களிலும், மனக்கவலையும் அச்சமும் இல்லாதவர்களாகத் தங்கியிருங்கள். (33)

(ஏனென்றால், இலங்கைப் பட்டணத்தில் தலைவர்கள் யாரும் இப்போது இல்லை.) நானும் மற்ற தலைவர்களும் உங்களுடன் இங்கே வந்துவிட்டோம். நகரத்தைக் காப்பதற்கு எந்த வீரனும் இல்லாததை அறிந்து கொண்டு, வானரர் கூட்டம் திடீரென்று உள்ளே புகுந்து பட்டணத்தைச் சின்னாபின்னமாக்கி விடுவார்கள்.'' (34)

இவ்வாறு கூறி, அவர்களை அனுப்பிவிட்டு, அரக்கர்கள் எல்லோரும் தத்தமக்குரிய இடங்களை அடைந்ததும், எதற்கும் கலங்காத பெருங்கடலை ஒரு பெரிய திமிங்கலம் கலக்கிக் கொந்தளிக்கச் செய்வதைப்போல, வானரப் படை என்ற பெருங்கடலைக் கலக்கத் தொடங்கினான். (35)

எதிர்பாராதவிதமாக, பேரொளி வீசும் அம்பு தொடுத்த வில்லுடன் எதிர்த்து நிற்கும் அரக்க மன்னனை (இராவணனை)ப் பார்த்ததும், வானரவேந்தன் சுக்ரீவன் பெரிய மலைமுகட்டைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு எதிர்த்தோடினான். (36)

தச்சை$_2$லஶ்ருங்க$_3$ம் ப$_3$ஹுவ்ருக்ஷஸாநும்
ப்ரக்$_3$ருஹ்ய சிக்ஷேப நிஶாசராய ।
தமாபதந்தம் ஸஹஸா ஸமீக்ஷ்ய
பி$_3$பே$_4$த$_3$ பா$_3$ணைஸ்தபநீயபுங்கை$_2$: ॥ (37)

தஸ்மிந் ப்ரவ்ருத்$_3$தே$_4$த்தமஸாநுவ்ருக்ஷே
ஶ்ருங்கே$_3$ விகீர்ணே பதிதே ப்ருதி$_2$வ்யாம் ।
மஹாஹிகல்பம் ஶரமந்தகாப$_4$ம்
ஸமாத$_3$தே$_3$ ராக்ஷஸலோகநாத$_2$: ॥ (38)

ஸ தம் க்$_3$ருஹீத்வாநிலதுல்யவேக$_3$ம் ஸவிஸ்பு$_2$லிங்க$_3$ஜ்வலநப்ரகாஶம் ।
பா$_3$ணம் மஹேந்த்$_3$ராஶநிதுல்யவேக$_3$ம் சிக்ஷேப ஸுக்$_3$ரீவவதா$_4$ய ருஷ்ட: ॥ (39)

ஸ ஸாயகோ ராவணபா$_3$ஹுமுக்த:
ஶக்ராஶநிப்ரக்$_2$யவபு: ஶிதாக்$_3$ர: ।
ஸுக்$_3$ரீவமாஸாத்$_3$ய பி$_3$பே$_4$த$_3$ வேகா$_3$த்$_3$–
கு$_3$ஹேரிதா க்ரௌஞ்சமிவோக்$_3$ரஶக்தி: ॥ (40)

ஸ ஸாயகார்தோ விபரீதசேதா:
கூஜந் ப்ருதி$_2$வ்யாம் நிபபாத வீர: ।
தம் ப்ரேக்ஷ்ய பூ$_4$மௌ பதிதம் விஸஞ்ஜ்ஞம்
நேது$_3$: ப்ரஹ்ருஷ்டா யுதி$_4$ யாதுதா$_4$நா: ॥ (41)

ததோ க$_3$வாக்ஷோ க$_3$வய: ஸுத$_3$ம்ஷ்ட்ரஸ்–
தத$_2$ர்ஷபோ$_4$ ஜ்யோதிமுகோ$_2$ நப$_4$ஶ்ச ।
ஶைலாந் ஸமுத்$_3$யம்ய விவ்ருத்$_3$த$_4$காயா:
ப்ரது$_3$த்$_3$ருவுஸ்தம் ப்ரதி ராக்ஷஸேந்த்$_3$ரம் ॥ (42)

தேஷாம் ப்ரஹாராந் ஸ சகார மோகா$_4$ந்
ரக்ஷோऽதி$_4$போ பா$_3$ணக$_3$ணை: ஶிதாக்$_3$ரை: ।
தாந் வாநரேந்த்$_3$ராநபி பா$_3$ணஜாலைர்–
பி$_3$பே$_4$த$_3$ ஜாம்பூ$_3$நத$_3$சித்ரபுங்கை$_2$: ॥ (43)

தே வாநரேந்த்$_3$ராஸ்த்ரித$_3$ஶாரிபா$_3$ணைர்பி$_4$ந்நா நிபேதுர்பு$_4$வி பீ$_4$மகாயா: ।
ததஸ்து தத்$_3$வாநரஸைந்யமுக்$_3$ரம் ப்ரச்சா$_2$த$_3$யாமாஸ ஸ பா$_3$ணஜாலை: ॥ (44)

தே வத்$_4$யமாநா: பதிதா: ப்ரவீரா நாநத்$_3$யமாநா ப$_4$யஶல்யவித்$_3$தா$_4$: ।
ஶாகா$_2$ம்ருகா$_3$ ராவணஸாயகார்தா ஜக்$_3$மு: ஶரண்யம் ஶரணம் ஸ்ம ராமம் ॥ (45)

ததோ மஹாத்மா ஸ த$_4$நுர்த$_4$நுஷ்மாநாதா$_3$ய ராம: ஸஹஸா ஜகா$_3$ம ।
தம் லக்ஷ்மண: ப்ராஞ்ஜலிரப்$_4$யுபேத்ய உவாச வாக்யம் பரமார்த$_2$யுக்தம் ॥ (46)

காமமார்ய: ஸுபர்யாப்தோ வதா$_4$யாஸ்ய து$_3$ராத்மந: ।
வித$_4$மிஷ்யாம்யஹம் நீசமநுஜாநீஹி மாம் ப்ரபோ$_4$ ॥ (47)

பலப்பல மரங்களையும் சிகரங்களையுமுடைய அந்தப் பெரிய மலையை உயரத் தூக்கி, அரக்கன் மீது வீசி எறிந்தான். தன்மேல் விழுவதற்கு வரும் அதைப் பார்த்ததும், பொன் இறகுகள் கட்டப்பட்ட பாணங்களால், அந்த நொடியிலேயே அதைத் தூள்தூளாக்கினான், இராவணன். (37)

உயரமான மரங்களையும் முகடுகளையும் கொண்ட அந்த மாபெரும் மலை தகர்க்கப்பட்டுத் தரையில் விழுந்தபின், அரக்கர் குலத் தலைவனான இராவணன், நீண்ட சர்ப்பம் போன்றதும், (உயிரைக் கட்டாயமாகப் பறித்துவிடும்) யமனைப் போன்றதுமான ஓர் அம்பினைக் கையில் எடுத்துக் கொண்டான். (38)

ஆத்திரம் கொண்ட அவன், வாயுவுக்கு நிகரான வேகங்கோண்டதும், தீப்பொறிகளைக் கக்கும் அக்னியைப்போல் பிரகாசிப்பதும், தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு இணையான ஆற்றல் கொண்டதுமான பாணத்தை எடுத்து, சுக்ரீவனைக் கொல்லும்பொருட்டு, அவனை நோக்கிச் செலுத்தினான். (39)

இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு நிகரான தேஜோமயமானதும், கூர்மையான முனையுள்ளதும், இராவணன் கையிலிருந்து விடுபட்டதுமான அந்த பாணம், முருகப்பெருமானால் போடப்பட்டதும், அளவிலடங்காத ஆற்றல் பெற்றதுமான வேலாயுதம் கிரௌஞ்சமலையை எவ்வாறு துளைத்ததோ, அவ்வாறே சுக்ரீவனைத் தாக்கித் துளைத்தது. (40)

அந்த பாணத்தின் வலிமையான தாக்குதலால் துன்பப்பட்டு, உணர்விழந்து, அலறிக் கொண்டு தரையில் வீழ்ந்தான், வீரனான சுக்ரீவன். உணர்விழந்து பூமியில் கிடக்கும் அவனைப் பார்த்து, அரக்கர்கள் மனமகிழ்ந்து ஆர்ப்பரித்தார்கள். (41)

அப்போது, பேருடல் படைத்த கவாக்ஷன், கவயன், ஸுதம்ஷ்ட்ரன், ரிஷபன், ஜ்யோதிமுகன், நபன் ஆகியோர், மலைகளைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, அரக்க மன்னனை எதிர்த்துத் தாக்கினார்கள். (42)

அரக்க வேந்தன், அவர்களுடைய ஆயுதங்களை (மலைகளை)க் கூர்மையான முனைகள் கொண்ட பாணப்பொழிவினால் பயனற்றதாகச் செய்துவிட்டான். மேலும், பொன் இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட பாணக்கூட்டங்களால், அந்த வானரோத்தமர்களைத் துளைத்தெடுத்தான். (43)

பெரிய உடல் படைத்த அந்த வானரவீரர்கள், தேவர்களின் பகைவனான இராவணனின் பாணங்களால் துளைக்கப்பட்டவர்களாய் தரையில் விழுந்து விட்டார்கள். பின்னர், அவன் அம்புமாரி பொழிந்து, பயங்கரமான அந்த வானரப் படையை மறைத்துவிட்டான். (44)

(இராவணனுடைய) அம்புகளால் தாக்கப்பட்டு, மிகவும் காயமும் அச்சமுமடைந்த வானரவீரர்கள், தரையில் விழுந்து அலறிப் புடைத்துக் கொண்டு, இராவணனுடைய கணைகளால் துன்புறுத்தப்பட்டவர்களாய், எல்லோருக்கும் தஞ்சம் அளிக்கும் இராமபிரானையே புகலாக அடைந்தார்கள். (45)

உடனே, மகா வில்லாளியும் பேராற்றல் கொண்டவருமான இராமன், வில்லைக் கையிலேந்தி (எதிரியை நோக்கி) முன்னேறினார். அப்போது, இலக்குவன் கைகளைக் கூப்பிக் கொண்டு, அவர் எதிரில் வந்து நின்று, பொருள் பொதிந்த சொற்களைக் கூறினான்— (46)

''பிரபு! இந்தத் தீயவனைக் கொல்வதற்கு மகோன்னத நிலையில் இருக்கும் மிகவும் பெரியவரான தாங்கள் தேவையா? (கொசுவைக் கொல்வதற்கு குண்டாந்தடியா!) அல்பனான இவனை நானே நசுக்கி விடுவேன். தாங்கள் எனக்கு அனுமதி அளிக்கவேண்டும்.'' (47)

தமப்$_3$ரவீந்மஹாதேஜா ராம: ஸத்யபராக்ரம: ।
க$_3$ச்ச$_2$ யத்நபரஸ்சாபி ப$_4$வ லக்ஷ்மண ஸம்யுகே$_3$ ॥ (48)

ராவணோ ஹி மஹாவீர்யோ ரணேऽத்$_3$பு$_4$தபராக்ரம: ।
த்ரைலோக்யேநாபி ஸம்க்ருத்$_3$தோ$_4$ து$_3$ஷ்ப்ரஸஹ்யோ ந ஸம்ஶய: ॥ (49)

தஸ்ய ச்சி$_2$த்$_3$ராணி மார்க$_3$ஸ்வ ஸ்வச்சி$_2$த்$_3$ராணி ச லக்ஷய ।
சக்ஷுஷா த$_4$நுஷா யத்நாத்$_3$ரக்ஷாத்மாநம் ஸமாஹித: ॥ (50)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா பரிஷ்வஜ்யாபி$_4$பூஜ்ய ச ।
அபி$_4$வாத்$_3$ய ததோ ராமம் யயௌ ஸௌமித்ரிராஹவம் ॥ (51)

ஸ ராவணம் வாரணஹஸ்தபா$_3$ஹுர்–
த$_3$த$_3$ர்ஶ தீ$_3$ப்தோத்$_3$யதபீ$_4$மசாபம் ।
ப்ரச்சா$_2$த$_3$யந்தம் ஶரவ்ருஷ்டிஜாலைஸ்–
தாந் வாநராந் பி$_4$ந்நவிகீர்ணதே$_3$ஹாந் ॥ (52)

தமாலோக்ய மஹாதேஜா ஹநுமாந் மாருதாத்மஜ: ।
நிவார்ய ஶரஜாலாநி ப்ரது$_3$த்$_3$ராவ ஸ ராவணம் ॥ (53)

ரத$_2$ம் தஸ்ய ஸமாஸாத்$_3$ய பு$_4$ஜமுத்$_3$யம்ய த$_3$க்ஷிணம் ।
த்ராஸயந் ராவணம் தீ$_4$மாந் ஹநுமாந் வாக்யமப்$_3$ரவீத் ॥ (54)

தே$_3$வதா$_3$நவக$_3$ந்த$_4$ர்வைர்யக்ஷைஶ்ச ஸஹ ராக்ஷஸை: ।
அவத்$_4$யத்வம் த்வயா ப்ராப்தம் வாநரேப்$_4$யஸ்து தே ப$_4$யம் ॥ (55)

ஏஷ மே த$_3$க்ஷிணோ பா$_3$ஹு: பஞ்சஶாக$_2$: ஸமுத்$_3$யத: ।
வித$_4$மிஷ்யதி தே தே$_3$ஹாத்$_3$பூ$_4$தாத்மாநம் சிரோஷிதம் ॥ (56)

ஶ்ருத்வா ஹநுமதோ வாக்யம் ராவணோ பீ$_4$மவிக்ரம: ।
ஸம்ரக்தநயந: க்ரோதா$_4$தி$_3$த$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (57)

க்ஷிப்ரம் ப்ரஹர நி:ஶங்கம் ஸ்தி$_2$ராம் கீர்திமவாப்நுஹி ।
ததஸ்த்வாம் க்ஞாதவிக்ராந்தம் நாஶயிஷ்யாமி வாநர ॥ (58)

ராவணஸ்ய வச: ஶ்ருத்வா வாயுஸூநுர்வசோऽப்$_3$ரவீத் ।
ப்ரஹ்ருதம் ஹி மயா பூர்வமக்ஷம் ஸ்மர ஸுதம் தவ ॥ (59)

ஏவமுக்தோ மஹாதேஜா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
ஆஜகா$_4$நாநிலஸுதம் தலேநோரஸி வீர்யவாந் ॥ (60)

ஸ தலாபி$_4$ஹதஸ்தேந சசால ச முஹுர்முஹு: ।
ஸ்தி$_2$த்வா முஹூர்தம் தேஜஸ்வீ ஸ்தை$_2$ர்யம் க்ருத்வா மஹாமதி: ॥
ஆஜகா$_4$நாபி$_4$ஸம்க்ருத்$_3$த$_4$ஸ்தலேநைவாமரத்$_3$விஷம் ॥ (61)

பேராற்றலுடையவரும் சத்தியபராக்கிரமருமான இராமன், ''லட்சுமணா! நீயே செல்வாயாக. போர் செய்யும்போது மிகவும் கவனமான இரு'' என்று கூறி அனுமதி அளித்தார். (48)

ஏனென்றால், இராவணன் மகாவீரன்; போரில் காண்பதற்கரிய வியப்பூட்டும் செயல்களைச் செய்ய வல்லவன்; அவனுக்குக் கோபம் வந்தால், மூன்று உலகங்களாலும் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. (எல்லோரையும் பொசுக்கித் தள்ளிவிடுவான்!) இதில் சந்தேகமில்லை. (49)

போர்க்கலையில் அவனிடமுள்ள குறைகளைக் கவனித்துப் பார்; உன் குறைகளையும் நினைவில் கொள். (அவைகளை அவனுக்குக் காட்டிக் கொடுத்து விடாதே.) ஒருநிலைப்பட்ட மனத்துடன், சூழ்நிலையை நன்றாகப் பார்த்து, வில்லால் (உன் வீரத்தால்) உன்னைக் காப்பாற்றிக் கொள். இலக்குவன் இராமனுடைய சொற்களைக் கேட்டுவிட்டு, அவரைக் கட்டித் தழுவி திருவடிகளில் விழுந்து வணங்கினான். பின்னர், சுமித்திரையின் மைந்தன் இராமனின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டு, போருக்குப் புறப்பட்டான். (50,51)

அப்போது இராவணன், உயரத் தூக்கி நிறுத்தப்பட்ட, பிரகாசிக்கின்ற, பயங்கரமான ஒரு வில்லைக் கையில் தாங்கியிருந்தான்; வரிசையாக அம்பைப் பொழிந்து வானரர்களைக் காயப்படுத்தி, உடல் உறுப்புக்கள் தனித்தனியே கழன்று நிற்க, அவர்களைப் பாணங்களால் மூடிக் கொண்டிருந்தான். யானையின் துதிக்கை போன்று நீண்ட, வலுவான கரங்களைக் கொண்ட லட்சுமணன், அந்த நிலையில் அவனைக் கண்டான். (52)

பேராற்றல் படைத்தவரும் வாயுவின் மைந்தருமான அனுமான், இராவணன் சரமாரி பொழிவதைப் பார்த்து, அதை விலக்கிக் கொண்டே அவனை நோக்கி ஓடினார். (53)

பேரறிவாளரான அனுமான், இராவணனுடைய ரதத்தை நெருங்கி, தன் வலது கையை ஓங்கியபடியே, அவனைப் பயமுறுத்திக் கொண்டு பின்வருமாறு சொன்னார்— (54)

''தேவர், தானவர், கந்தர்வர், அரக்கர், யக்ஷர்களால் உனக்கு மரணம் ஏற்படாது என்ற வரம் பெற்றிருக்கிறாய். (ஆனால், வானரர்கள் மூலம் உனக்கு மரணம் ஏற்படாது – என்று, எந்த தேவதையும் உனக்கு வரம் கொடுக்கவில்லை.) எனவே, உனக்கு வானரர்களைக் கண்டுதான் பயம். (55)

உயரே தூக்கப்பட்ட என்னுடைய வலது கையிலுள்ள (ஒரு பெரிய மரத்தின் நீண்ட கிளைகளைப் போலிருக்கிற) ஐந்து விரல்கள், உன் உடலில் வெகுகாலமாக இருந்து வரும் பிராணனை வெளியேற்றப் போகின்றன!'' (56)

எல்லை காண முடியாத ஆற்றல் கொண்ட இராவணன், அனுமானின் அச்சுறுத்தலைக் கேட்டு, கோபத்தால் கண்கள் சிவக்க, பின்வரும் பதிலைக் கூறினான்— (57)

''வானரமே! தயக்கமில்லாமல் இப்போதே என்னைத் தாக்கு. (என் போன்ற மாவீரனைத் தாக்கியதால்) நிலையான புகழை அடைவாய்; உன் ஆற்றல் இவ்வளவுதான் என்பதைத் தெரிந்து கொண்டபின், உன்னோடு போர் புரிந்து உன்னை ஒழித்துக் கட்டுவேன்!'' (58)

காற்றின் மைந்தர், இராவணனுடைய (குத்தலானப்) பேச்சைக் கேட்டு, ''உன் புதல்வன் அட்சகுமாரன், முன்பு என்னால் தாக்கப்பட்டு மடிந்து போனானே? அதை இப்போது நினைவுபடுத்திக் கொள்!'' என்று கூறினார். (மகாவீரனான அட்சகுமாரனையே கொன்றுவிட்டேன் என்றால், என் ஆற்றலின் எல்லை உனக்குப் புரிந்திருக்குமே!) (59)

இவ்வாறு, அனுமான் கூறியதைக் கேட்ட பேராற்றல் படைத்த அரக்க மன்னன் இராவணன், தன் உள்ளங்கையால் அவர் மார்பில் ஓங்கிக் குத்தினான். அவனுடைய உள்ளங்கையால் அடிபட்ட அவர் பல தடவை ஆடிப்போனார். சிறிதுநேரம் திகைத்து நின்ற பேரறிவாளரான அவர், மிகவும் கோபம் கொண்டவராகி, தன்னை ஒருநிலைப்படுத்திக் கொண்டு, அமரர்களின் பகைவனான அவனைத் தன் உள்ளங்கையினால் தாக்கினார். (60,61)

ததஸ்தலேநாபி$_4$ஹதோ வாநரேண மஹாத்மநா ।
த$_3$ஶக்$_3$ரீவ: ஸமாதூ$_4$தோ யத$_2$ா பூ$_4$மிசலே'சல: ॥ (62)

ஸங்க்$_3$ராமே தம் தத$_2$ா த்$_3$ருஷ்ட்வா ராவணம் தலதாடி$_3$தம் ।
ருஷயோ வாநரா: ஸித்$_3$த$_4$ா நேது$_3$ர்தே$_3$வா: ஸஹாஸுரை: ॥ (63)

அத$_2$ாஶ்வாஸ்ய மஹாதேஜா ராவணோ வாக்யமப்$_3$ரவீத் ।
ஸாது$_4$ வாநர வீர்யேண ஶ்லாக$_4$நீயோ'ஸி மே ரிபு: ॥ (64)

ராவணேநைவமுக்தஸ்து மாருதிர்வாக்யமப்$_3$ரவீத் ।
தி$_4$க$_3$ஸ்து மம வீர்யேண யஸ்த்வம் ஜீவஸி ராவண ॥ (65)

ஸக்ருத்து ப்ரஹரேத$_3$ாநீம் து$_3$ர்பு$_3$த்$_3$தே$_4$ கிம் விகத்த$_2$ஸே ।
ததஸ்த்வாம் மாமிகா முஷ்டிர்நயிஷ்யதி யமக்ஷயம் ॥ (66)

ததோ மாருதிவாக்யேந க்ரோத$_4$ஸ்தஸ்ய தத$_3$ாஜ்வலத் ।
ஸம்ரக்தநயநோ யத்நாந்முஷ்டிமுத்$_3$யம்ய த$_3$க்ஷிணம் ॥
பாதயாமாஸ வேகே$_3$ந வாநரோரஸி வீர்யவாந் ॥ (67)

ஹநுமாந் வக்ஷஸி வ்யூடே$_4$ ஸஞ்சசால ஹத: புந: ।
விஹ்வலம் து தத$_3$ா த்$_3$ருஷ்ட்வா ஹநுமந்தம் மஹாப$_3$லம் ॥
ரதே$_2$நாதிரத$_2$: ஶீக்$_4$ரம் நீலம் ப்ரதி ஸமப்$_4$யக$_3$ாத் ॥ (68)

ராக்ஷஸாநாமதி$_4$பதிர்த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரதாபவாந் ।
பந்நக$_3$ப்ரதிமைர்பீ$_4$மை: பரமர்மாதிபே$_4$தி$_3$பி$_4$: ॥
ஶரைராதீ$_3$பயாமாஸ நீலம் ஹரிசமூபதிம் ॥ (69)

ஸ ஶரௌக$_4$ஸமாயஸ்தோ நீல: கபிசமூபதி: ।
கரேணைகேந ஶைலாக்$_3$ரம் ரக்ஷோ'தி$_4$பதயே'ஸ்ருஜத் ॥ (70)

ஹநுமாநபி தேஜஸ்வீ ஸமாஶ்வஸ்தோ மஹாமநா: ।
விப்ரேக்ஷமாணோ யுத்$_3$தே$_4$ப்ஸு: ஸரோஷமித$_3$மப்$_3$ரவீத் ॥ (71)

நீலேந ஸஹ ஸம்யுக்தம் ராவணம் ராக்ஷஸேஶ்வரம் ।
அந்யேந யுத்$_4$யமாநஸ்ய ந யுக்தமபி$_4$த$_4$ாவநம் ॥ (72)

ராவணோ'பி மஹாதேஜாஸ்தச்ச்$_2$ருங்க$_3$ம் ஸப்தபி$_4$: ஶரை: ।
ஆஜக$_4$ாந ஸுதீக்ஷ்ணாக்$_3$ரைஸ்தத்$_3$விகீர்ணம் பபாத ஹ ॥ (73)

தத்விகீர்ணம் கி$_3$ரே: ஶ்ருங்க$_3$ம் த்$_3$ருஷ்ட்வா ஹரிசமூபதி: ।
காலாக்$_3$நிரிவ ஜஜ்வால க்ரோதே$_4$ந பரவீரஹா ॥ (74)

ஸோ'ஶ்வகர்ணாந் த$_4$வாந் ஸாலாந்ஶ்சூதாம்ஶ்சாபி ஸுபுஷ்பிதாந் ।
அந்யாம்ஶ்ச விவித$_4$ாந் வ்ருக்ஷாந்நீலஶ்சிக்ஷேப ஸம்யுகே$_3$ ॥ (75)

மகாத்மாவான வானரரின் உள்ளங்கையால் தாக்கப்பட்ட இராவணன் நிலைகுலைந்து, நிலநடுக்கம் ஏற்படுங்கால் மலைகள் ஆட்டம் காண்பதைப் போல, வெகுவாக ஆடிப் போனான். (62)

போர்க்களத்தில், அனுமானின் உள்ளங்கையால் தாக்கப்பட்டு நிலைகுலைந்து தவிக்கும் இராவணனைப் பார்த்து, முனிவர்கள், வானரர்கள், சித்தர்கள் மற்றும் அசுரர்கள் மகிழ்ச்சி பொங்க ஆரவாரம் செய்தார்கள். (63)

பேராற்றலுடைய இராவணன் சிறிது நேரத்தில் சுயநிலை அடைந்து, ''வானரனே! நீ என் எதிரியாக இருந்தாலும், உன் வீரத்தைப் பாராட்டுகிறேன்!'' என்றான். (64)

இவ்வாறு, இராவணன் கூறியதைக் கேட்டதும், ''இராவணா! என் கையால் அடிபட்ட நீ, இன்னமும் உயிருடன் இருக்கிறாய். அந்தோ, என் பராக்கிரமம்!'' என்று (நொந்த உள்ளத்துடன்) கூறினார். (65)

''கெடுமதியாளனே! ஏன் வாய்கிழியப் பேசுகிறாய். இன்னும் ஒரு தடவை என்னைத் தாக்கு. பின்னர், எனது முஷ்டி உன்னை யமனுடைய வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்!'' (66)

அனுமானின் சொற்களைக் கேட்டதும், அவனுடைய கோபக்கனல் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. மாவீரனாகிய அவன் கண்கள் சிவக்க, தன் வலது முஷ்டியை ஓங்கி வானரரின் மார்பில் மிகவும் வலிமையாகத் தாக்கினான். (67)

அகன்ற மார்பில் தாக்குண்ட அனுமான் மறுபடியும் நிலைகுலைந்து நின்றார். மகாபலசாலியான அனுமான் கலங்கி நிற்பதைக் கண்ட அதிரதனான இராவணன், (அத்துடன் அவரை விட்டுவிட்டு,) தேரிலிருந்தபடியே (தேரை ஓட்டிக்கொண்டே) நீலனை நோக்கிச் சென்றான். (68)

அளவு கடந்த ஆற்றல் படைத்தவனும், அரக்கர் வேந்தனுமாகிய இராவணன், எதிரிகளின் உயிர்நிலைகளைப் பிளந்து தள்ளுகின்றவைகளும் நீண்ட சர்ப்பம் போன்றவைகளுமான பாணங்களால், வானரப் படைத்தலைவன் நீலனை வதைக்கத் தொடங்கினான். (69)

அவனுடைய பாண வரிசைகளால் தாக்கப்பட்ட வானரப் படைத்தலைவன் நீலன், ஒரு கையால் ஒரு மலைமுகட்டைப் பெயர்த்து, அரக்கர்கோனை நோக்கி வீசி எறிந்தான். (70)

பேராற்றல் படைத்தவரும் மேன்மை தங்கியவருமான அனுமான், களைப்பு நீங்கி, மீண்டும் போர் செய்யும் விருப்பத்துடன், அரக்க மன்னன் இராவணன் நீலனுடன் போர் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து மிகுந்த கோபத்துடன், 'நீ வேறொருவருடன் போர் புரிந்து கொண்டிருக்கிறாய். இப்போது நான், உன்னைத் தாக்குவது முறையல்ல' என்று கூறினார். (71,72)

அளவு கடந்த ஆற்றல் கொண்ட இராவணனும், மிகக் கூர்மையான ஏழு பாணங்களால் (நீலனால் எறியப்பட்ட) சிகரத்தைப் பிளந்தான். அது தூள்தூளாகித் தரையில் விழுந்தது. (73)

எதிரிகளை மாய்க்கும் வல்லமை கொண்டவனும் வானரப்படைத் தலைவனுமான அவன் (நீலன்), (தான் எறிந்த) மலைமுகடு சிதறடிக்கப்பட்டதைக் கண்டு, ஊழிக்கால பெருந்தீயைப் போல் கோபத்தால் கொதித்தான். (74)

உடனே, அசுவகர்ணம், தவம், ஆச்சா, பூக்கள் கொண்ட மா போன்ற மரங்களையும், வேறு பலவகையான மரங்களையும் (பிடுங்கி, இராவணன் மீது) வீசி எறிந்தான். (75)

ஸ தாந் வ்ருக்ஷாந் ஸமாஸாத்$_3$ய ப்ரதிசிச்சே$_2$த$_3$ ராவண: ।
அப்$_4$யவர்ஷத்ஸுகே$_4$ரேண ஶரவர்ஷேண பாவகிம் ॥ (76)

அபி$_4$வ்ருஷ்ட: ஶரௌகே$_4$ண மேகே$_4$நேவ மஹாசல: ।
ஹ்ரஸ்வம் க்ருத்வா தத$_3$ா ரூபம் த்$_4$வஜாக்$_3$ரே நிபபாத ஹ ॥ (77)

பாவகாத்மஜமாலோக்ய த்$_4$வஜாக்$_3$ரே ஸமுபஸ்தி$_2$தம் ।
ஜஜ்வால ராவண: க்ரோத$_4$த்ததோ நீலோ நநாத$_3$ ச ॥ (78)

த்$_4$வஜாக்$_3$ரே த$_4$நுஷஶ்சாக்$_3$ரே கிரீடாக்$_3$ரே ச தம் ஹரிம் ।
லக்ஷ்மணோ஽த$_2$ ஹநூமாம்ஶ்ச த்$_3$ருஷ்ட்வா ராமஶ்ச விஸ்மிதா: ॥ (79)

ராவணோ஽பி மஹாதேஜா: கபிலாக$_4$வவிஸ்மித: ।
அஸ்த்ரமாஹாரயாமாஸ தீ$_3$ப்தமாக்$_3$நேயமத்$_3$பு$_4$தம் ॥ (80)

ததஸ்தே சுக்ருஶுர்ஹ்ருஷ்டா லப்$_3$த$_4$லக்ஷா: ப்லவங்க$_3$மா: ।
நீலலாக$_4$வஸம்ப்$_4$ராந்தம் த்$_3$ருஷ்ட்வா ராவணமாஹவே ॥ (81)

வாநராணாம் ச நாதே$_3$ந ஸம்ரப்$_3$தே$_4$ா ராவணஸ்தத$_3$ா ।
ஸம்ப்$_4$ரமாவிஷ்டஹ்ருத$_3$யோ ந கிஞ்சித் ப்ரத்யபத்$_3$யத ॥ (82)

ஆக்$_3$நேயேநாத$_2$ ஸம்யுக்தம் க்$_3$ருஹீத்வா ராவண: ஶரம் ।
த்$_4$வஜஶீர்ஷஸ்தி$_2$தம் நீலமுதை$_3$க்ஷத நிஶாசர: ॥ (83)

ததோ஽ப்$_3$ரவீந்மஹாதேஜா ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
கபே லாக$_4$வயுக்தோ஽ஸி மாயயா பரயாநயா ॥ (84)

ஜீவிதம் க$_2$லு ரக்ஷஸ்வ யதி$_3$ ஶக்தோ஽ஸி வாநர ।
தாநி தாந்யாத்மரூபாணி ஸ்ருஜஸி த்வமநேகஶ: ॥ (85)

தத$_2$ாபி த்வாம் மயா முக்த: ஸாயகோ஽ஸ்த்ரப்ரயோஜித: ।
ஜீவிதம் பரிரக்ஷந்தம் ஜீவிதாத்$_3$ப்$_4$ரம்ஶயிஷ்யதி ॥ (86)

ஏவமுக்த்வா மஹாபா$_3$ஹூ ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
ஸந்த$_4$ாய பா$_3$ணமஸ்த்ரேண சமூபதிமதாட$_3$யத் ॥ (87)

ஸோ஽ஸ்த்ரயுக்தேந பா$_3$ணேந நீலோ வக்ஷஸி தாடி$_3$த: ।
நிர்த$_3$ஹ்யமாந: ஸஹஸா நிபபாத மஹீதலே ॥ (88)

பித்ருமாஹாத்ம்யஸம்யோகா$_3$த$_3$ாத்மநஶ்சாபி தேஜஸா ।
ஜாநுப்$_4$யாமபதத்$_3$பூ$_4$மௌ ந ச ப்ராணைர்வ்யயுஜ்யத ॥ (89)

விஸம்ஜ்ஞம் வாநரம் த்$_3$ருஷ்ட்வா த$_3$ஶக்$_3$ரீவோ ரணோத்ஸுக: ।
ரதே$_2$நாம்பு$_3$த$_3$நாதே$_3$ந ஸௌமித்ரிமபி$_4$துத்$_3$ருவே ॥ (90)

அந்த மரங்களெல்லாம் அவன் அருகே வந்ததும், அவைகளை வெட்டித் தள்ளிவிட்டு, அக்னியின் புதல்வனான நீலன் மீது மிகக்கொடூரமான சரமாரியைப் பொழிந்தான். (76)

ஒரு மாமலையின் மீது மேகங்கள் உக்கிரமாய் மழை பொழிவதைப் போல, (இராவணனால்) சரமாரி பொழியப்பட்ட அவன், தன் உருவத்தை மிகச் சிறியதாகச் செய்து கொண்டு, (இராவணனுடைய) கொடியின் நுனியில் போய் உட்கார்ந்துவிட்டான்! ஆகா! (77)

தன் கொடியின் நுனியில் நீலன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, இராவணன் கோபத்தால் கொதித்தெழுந்தான். ஆனால், நீலனோ அவனை எள்ளி நகையாடுதல் போல ஆனந்தமாகக் கூச்சலிட்டான். (78)

நீலன், இராவணனுடைய கொடியின் நுனியிலும் வில்லின் முனையிலும் தலைக்கிரீடத்தின் உச்சியிலும் மாறி மாறி உல்லாசமாக உட்காருவதை, அனுமான், லட்சுமணன், இராமன் ஆகியோர் பார்த்து மிகவும் வியப்படைந்தார்கள். (79)

பேராற்றல் படைத்த இராவணன், நீலனுடைய சாமர்த்தியமான செய்கைகளால் ஆச்சரியமடைந்து, தனிப்பெருமை பெற்றதும் அனல் கக்குவதுமான ஆக்னேயம் என்ற அஸ்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். (80)

அந்தப் போரில், நீலனுடைய சமயோஜித நடவடிக்கையால், இராவணன் மனத்தடுமாற்றம் அடைந்ததைக் கண்டு, மகிழ்வதற்கான ஒரு வாய்ப்பினைப் பெற்று, வானரர்கள் மனப்பூரிப்புடன் கலகலவென்று குரல் எழுப்பினார்கள். (81)

வானரர்கள் மகிழ்ச்சியுடன் கூக்குரலிடுவதைக் கேட்டதும், இராவணனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. அத்துடன் நெஞ்சில் சிறிது நடுக்கமும் ஏற்பட்டதால், 'என்ன செய்வது?' என்று தெரியாமல் திகைத்து நின்றான். (82)

அப்போது, ஆக்னேயாஸ்திர மந்திரத்தால் சக்தி ஊட்டப்பட்ட பாணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, தன் தேர்க்கொடியில் உட்கார்ந்திருக்கும் நீலனைப் பார்த்தான், அரக்கனாகிய இராவணன். (83)

மகாபராக்கிரமசாலியான அரக்க மன்னன் இராவணன், ''வானரமே! உன்னுடைய அளவு கடந்த மாயாசக்தியினால், நீ மிகுந்த திறமையோடு செயல்படுகிறாய்!'' என்று கூறினான். (84)

''வானரமே! உண்மையாகவே உனக்குத் திறமை இருக்கிறது என்றால், இப்போது உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்! நீ அவ்வப்போதைய நிலைமைக்கேற்றபடி பலவாறாக, உன் உருவங்களை மாற்றிக் கொள்கிறாய். (85)

(அதனால், தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணாதே!) ஏனென்றால், அஸ்திர மந்திரங்களால் தெய்விக ஆற்றல் கொடுக்கப்பட்ட என்னுடைய அம்பு, ஒருவாறு உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் உன்னிடமிருந்து பிராணனைப் பிரித்துவிடப் போகிறது!'' (86)

இவ்வாறு, தோள்வலி மிக்கவனும் அரக்கர் வேந்தனுமான இராவணன் சொல்லிவிட்டு, அஸ்திர மந்திரம் ஜபித்து, (வில்லில்) அம்பைத் தொடுத்து, வானரப் படைத்தலைவனைத் தாக்கினான். ஆக்னேய பாணத்தால் மார்பில் தாக்குண்ட நீலன், அதன் வெம்மையைத் தாங்க முடியாமல் உடல் வெந்து, உடனே தரையில் விழுந்தான். (87,88)

தந்தையின் ஆசீர்வாத மகிமையாலும் உள்ளார்ந்த தன் ஆற்றலின் விளைவாகவும், அவன் முழங்கால்கள் தரையில் முட்டியபடி விழுந்தானே தவிர, உயிர் அவனை விட்டுப் பிரியவில்லை. (89)

வானரன் நீலனை அடக்கி பிரக்ஞையற்றவனாகச் செய்துவிட்டு, இதனால் போரில் முனைப்பு மேலும் பெருகிய இராவணன், மேககர்ஜனை போல் ஒலி எழுப்பும் தேரிலேயே இலக்குவனை நோக்கிப் போரிட விரைந்து சென்றான். (90)

ஆஸாத்3ய ரணமத்4யே து வாரயித்வா ஸ்தி2தோ ஜ்வலந் ।
த4நுர்விஸ்ப2ாரயாமாஸ கம்பயந்நிவ மேதி3நீம் ॥ (91)

தமாஹ ஸௌமித்ரிரதீ3நஸத்த்வோ
விஸ்ப2ாரயந்தம் த4நுரப்ரமேயம் ।
அப்4யேஹி மாமேவ நிஶாசரேந்த்3ர
ந வாநராந்ஸ்த்வம் ப்ரதியோத்3து4மர்ஹ: ॥ (92)

ஸ தஸ்ய வாக்யம் ப்ரதிபூர்ணகே4ாஷம்
ஜ்யாஶப்3த3முக்3ரம் ச நிஶம்ய ராஜா ।
ஆஸாத்3ய ஸௌமித்ரிமவஸ்தி2தம் தம்
கோபாந்விதோ வாக்யமுவாச ரக்ஷ: ॥ (93)

தி3ஷ்ட்யாஸி மே ராக4வ த்3ருஷ்டிமார்க3ம்
ப்ராப்தோऽந்தகா3மீ விபரீதபு3த்3தி4: ।
அஸ்மிந் க்ஷணே யாஸ்யஸி ம்ருத்யுதே3ஶம்
ஸம்ஸாத்3யமாநோ மம பா3ணஜாலை: ॥ (94)

தமாஹ ஸௌமித்ரிரவிஸ்மயாநோ க3ர்ஜந்தமுத்3வ்ருத்தஶிதாக்3ரத3ம்ஷ்ட்ரம் ।
ராஜந்ந க3ர்ஜந்தி மஹாப்ரப4ாவா விகத்த2ஸே பாபக்ருதாம் வரிஷ்ட2 ॥ (95)

ஜாநாமி வீர்யம் தவ ராக்ஷஸேந்த்3ர ப3லம் ப்ரதாபம் ச பராக்ரமம் ச ।
அவஸ்தி2தோऽஹம் ஶரசாபபாணிராக3ச்ச2 கிம் மோக4விகத்த2நேந ॥ (96)

ஸ ஏவமுக்த: குபித: ஸஸர்ஜ
ரக்ஷோऽதி4ப: ஸப்த ஶராந் ஸுபுங்க2ாந் ।
தாந்(ல்)லக்ஷ்மண: காஞ்சநசித்ரபுங்கை2ஶ்–
சிச்சே2த பா3ணைர்நிஶிதாக்3ரதா4ரை: ॥ (97)

தாந் ப்ரேக்ஷமாண: ஸஹஸா நிக்ருத்தாந்–
நிக்ருத்தபே4ாகா3நிவ பந்நகே3ந்த்3ராந் ।
லங்கேஶ்வர: க்ரோத4வஶம் ஜகா3ம
ஸஸர்ஜ சாந்யாந்நிஶிதாந் ப்ருஷத்காந் ॥ (98)

ஸ பா3ணவர்ஷம் து வவர்ஷ தீவ்ரம் ராமாநுஜ: கார்முகஸம்ப்ரயுக்தம் ।
க்ஷுரார்த4சந்த்3ரோத்தமகர்ணிப4ல்லை:ஶராம்ஶ்ச சிச்சே2த3 ந சுக்ஷுபே4 ச ॥ (99)

ஸ பா3ணஜாலாந்யத2 தாநி தாநி மோக4ாநி பஶ்யம்ஸ்த்ரித3ஶாரிராஜ: ।
விஸிஷ்மியே லக்ஷ்மணலாக4வேந புநஶ்ச பா3ணாந்நிஶிதாந் முமோச ॥ (100)

ஸ லக்ஷ்மணஶ்சாஶு ஶராஞ்ஶிதாக்3ராந்
மஹேந்த்3ரவஜ்ராஶநிதுல்யவேகா3ந் ।
ஸந்த4ாய சாபே ஜ்வலநப்ரகாஶாந்
ஸஸர்ஜ ரக்ஷோऽதி4பதேர்வத4ாய ॥ (101)

போர்க்களத்தின் நடுவில் முன்னேறிக் கொண்டிருந்த சுக்ரீவன் முதலான வானரர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல் எதிரில் நின்று கொண்டு, பூமியையே நடுங்கச் செய்யும் வில்லில் நாணொலி எழுப்பினான். (91)

அப்போது, உவமையில்லாத பெருமை கொண்ட தன் வில்லை வளைத்துக் கொண்டிருந்த அவனை (இராவணனை)ப் பார்த்து, குறைவில்லாத வீரம் படைத்த இலக்குவன், ''இதோ, நான் வந்துவிட்டேன்! அரக்க மன்னனே! இனி, நீ வானரர்களுடன் போர் செய்யத்தகாது.'' (92)

உரத்த குரலில் சொல்லப்பட்ட அந்தச் சொற்களையும், பயங்கரமான நாணொலியும் கேட்டுக் கோபம் கொண்ட அரக்க மன்னன், எதிரே வந்த நிற்கும் லட்சுமணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (93)

''ரகுகுலத் தோன்றலே! தெய்வாதீனமாக நீ இப்போது என் கண்ணில் பட்டுவிட்டாய்! (என்னை வெற்றி கொண்டுவிடலாம் என்ற) தவறான எண்ணம் கொண்டுள்ள நீ, விரைவில் உயிரை இழக்கப் போகிறாய்! பாணக் கூட்டங்களால் உன்னைத் துளைத்தெடுத்து, நொடிப்பொழுதில் யமலோகத்தை அடையச் செய்யப் போகிறேன்.'' (94)

உரத்த குரலில் பேசிக் கொண்டிருப்பவனும், நீண்டதும் கூர்மையானதுமான கோரைப்பற்களைக் கொண்டவனுமான அவனுடைய சொற்களைக் கேட்டு, இலக்குவன் வியப்படையவில்லை. மாறாக அவனை நோக்கி, ''மன்னனே! உண்மையிலேயே பேராண்மை படைத்தவர்கள் தொண்டை கிழியப் பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள்! (தங்கள் ஆண்மையைக் காட்டுவார்கள்.) பாவிகளின் கூட்டத்தின் தலைவனான நீ, ஏன் வீணாகப் பிதற்றிக் கொண்டிருக்கிறாய்? (95)

அரக்க மன்னனே! (தனித்திருந்த ஒரு பெண்ணை பலவந்தமாகத் திருடிக் கொண்டு வந்தாயே! அதிலிருந்தே,) உன் ஆற்றல், ஆண்மை, எதிரிகளை எதிர்த்து நிற்கும் திறன், பெருமை ஆகிய அனைத்தையும் நான் நன்றாக அறிந்துள்ளேன்! வீண் சொற்களால் என்ன பயன்? இதோ, வில்–அம்புடன் வந்து நிற்கிறேன். வா போரிடலாம்.'' (96)

இதைக் கேட்ட அரக்க வேந்தன், மிகவும் கோபம் கொண்டு, அழகிய சிறகுகள் கட்டப்பெற்ற ஏழு பாணங்களை இலக்குவன் மேல் செலுத்தினான். இலக்குவன், பொன்மயமானதும் கண்கவர் சிறகுகள் இணைக்கப் பெற்றதுமான கூரிய அம்புகளால் அவைகளை முறித்தெறிந்தான். (97)

பெரிய பெரிய சர்ப்பங்களின் உடல்கள், ஒரே சமயத்தில் துண்டு துண்டாக்கப்படுவதைப் போல, தன்னுடைய அம்புகள் அனைத்தும் உடனே தூள்தூளாக்கப் பட்டதைக் கண்ட இலங்கை மன்னன், கோபவசப்பட்டுக் கூர்மையான வேறு சில பாணங்களை விடுத்தான். (98)

இராமனுடைய இளவல், வில்லிலிருந்து அம்புகளை அடுக்கடுக்காகப் பொழிந்து தள்ளினான். க்ஷுரம், அர்தசந்த்ரம், உத்தமகர்ணி, பல்லம் முதலான வகைகளைச் சேர்ந்த அம்புகளால், இராவணனால் செலுத்தப்பட அம்புகளை வெட்டி வீழ்த்தினான். (99)

தேவர்களின் பகைவர்களான அரக்கர்களின் மன்னன், தன்னுடைய பாணப் பொழிவுகள் எல்லாம் வீணானதைப் பார்த்து, இலக்குவனுடைய போர்த்திறனைக் கண்டு ஆச்சரியமடைந்தான். பின்னர், மறுபடியும் கூரான பாணங்களைச் செலுத்தினான். (100)

லட்சுமணன், கூரான முனைகள் கொண்டவைகளும் இந்திரனுடைய வஜ்ராயுதம் மற்றும் இடி போன்று மிக வேகமாகச் செல்பவைகளும், நெருப்பைப் போல் ஒளி வீசுகின்றவைகளுமான அம்புகளை உடனே வில்லில் தொடுத்து, அரக்க மன்னனைக் கொன்றுவிடும் பொருட்டுச் செலுத்தினான். (101)

ஸ தாந் ப்ரசிச்சே$_2$த$_3$ ஹி ராக்ஷஸேந்த்$_3$ர–
ஶ்சி$_2$த்த்வா ச தாந்(ல்)லக்ஷ்மணமாஜக$_4$ாந ।
ஶரேண காலாக்$_3$நிஸமப்ரபே$_4$ண
ஸ்வயம்பு$_4$த$_3$த்தேந லலாடதே$_3$ஶே ॥ (102)

ஸ லக்ஷ்மணோ ராவணஸாயகார்த–
ஶ்சசால சாபம் ஶிதி$_2$லம் ப்ரக்$_3$ருஹ்ய ।
புநஶ்ச ஸம்க்ஞாம் ப்ரதிலப்$_4$ய க்ருச்ச்$_2$ரா–
ச்சிச்சே$_2$த$_3$ சாபம் த்ரித$_3$ஶேந்த்$_3$ரஶத்ரோ: ॥ (103)

நிக்ருத்தசாபம் த்ரிபி$_4$ராஜக$_4$ாந ப$_3$ாணைஸ்தத$_3$ா த$_3$ாஶரதி$_2$: ஶிதாக்$_3$ரை: ।
ஸ ஸாயகார்தோ விசசால ராஜா க்ருச்ச்$_2$ராச்ச ஸம்க்ஞாம் புநராஸஸாத$_3$ ॥ (104)

ஸ க்ருத்தசாப: ஶரதாடி$_3$தஶ்ச மேத$_3$ார்த்$_3$ரகா$_3$த்ரோ ருதி$_4$ராவஸிக்த: ।
ஜக்$_3$ராஹ ஶக்திம் ஸமுத$_3$க்$_3$ரஶக்தி: ஸ்வயம்பு$_4$த$_3$த்தாம் யுதி$_4$ தே$_3$வஶத்ரு: ॥ (105)

ஸ தாம் விதூ$_4$மாநலஸந்நிகாஶாம் வித்ராஸிநீம் வாநரவாஹிநீநாம் ।
சிக்ஷேப ஶக்திம் தரஸா ஜ்வலந்தீம் ஸௌமித்ரயே ராக்ஷஸராஷ்ட்ரநாத$_2$: ॥ (106)

தாமாபதந்தீம் ப$_4$ரதாநுஜோऽஸ்த்ரைர்–
ஜக$_4$ாந ப$_3$ாணைஶ்ச ஹூதாக்$_3$நிகல்பை: ।
தத$_2$ாபி ஸா தஸ்ய விவேஶ ஶக்திர்–
ப$_3$ாஹ்வந்தரம் த$_3$ாஶரதே$_2$ர்விஶாலம் ॥ (107)

ஸ ஶக்திமாஞ்ஶக்திஸமாஹத: ஸந்
முஹு: ப்ரஜஜ்வால ரகு$_4$ப்ரவீர: ।
தம் விஹ்வலந்தம் ஸஹஸாப்$_4$யுபேத்ய
ஜக்$_3$ராஹ ராஜா தரஸா பு$_4$ஜாப்$_4$யாம் ॥ (108)

ஹிமவாந் மந்த$_3$ரோ மேருஸ்த்ரைலோக்யம் வா ஸஹாமரை: ।
ஶக்யம் பு$_4$ஜாப்$_4$யாமுத்$_3$த$_4$ர்தும் ந ஸங்க்$_2$யே ப$_4$ரதாநுஜ: ॥ (109)

ஶக்த்யா ப்$_3$ராஹ்ம்யாபி ஸௌமித்ரிஸ்தாடி$_3$தஸ்து ஸ்தநாந்தரே ।
விஷ்ணோரசிந்த்யம் ஸ்வம் ப$_4$ாக$_3$மாத்மாநம் ப்ரத்யநுஸ்மரந் ॥ (110)

ததோ த$_3$ாநவத$_3$ர்பக்$_4$நம் ஸௌமித்ரிம் தே$_3$வகண்டக: ।
தம் பீட$_3$யித்வா ப$_3$ாஹூப்$_4$யாமப்ரபு$_4$ர்லங்க$_4$நேऽப$_4$வத் ॥ (111)

அத$_2$ வாயுஸூத: க்ருத்$_3$தே$_4$ா ராவணம் ஸமபி$_4$த்$_3$ரவத் ।
ஆஜக$_4$ாநோரஸி க்ருத்$_3$தே$_4$ா வஜ்ரகல்பேந முஷ்டிநா ॥ (112)

தேந முஷ்டிப்ரஹாரேண ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
ஜாநுப்$_4$யாமபதத்$_3$பூ$_4$மௌ சசால ச பபாத ச ॥ (113)

அரக்க மன்னன் அவைகளை முறித்துத் தள்ளினான். அவைகளை முறித்த பின்னர், ஊழிக்கால நெருப்புப் போல் ஒளி வீசுவதும், பிரும்மாவினால் கொடுக்கப்பட்டதுமான ஒரு பாணத்தால், லட்சுமணனுடைய நெற்றிப் பகுதியில் தாக்கினான். (102)

இராவணனுடைய அம்பினால் தாக்கப்பட்ட லட்சுமணன் ஆடிப் போனான். அவன் கையிலிருந்து வில் நழுவிப் போயிற்று. ஆனால், உடனே சுயஉணர்வைப் பெற்ற லட்சுமணன், வில்லை உறுதியாகப் பற்றிக் கொண்டு, (இந்திரனின் பகைவனான) இராவணனுடைய வில்லை முறித்துத் தள்ளினான். (103)

முறிபட்ட வில்லுடன் நிற்கும் அவனை, கூர்மையான மூன்று அம்புகளால் இலக்குவன் தாக்கினான். அந்த மன்னன், பாணங்களால் காயப்பட்டு துடித்துப் போனான். மிகவும் சமாளித்துக் கொண்டு தன்னுணர்வை அடைந்தான். (104)

முறிபட்ட வில், பாணத்தால் அடி, உடம்பெல்லாம் கொழுப்பு (ரத்தக் களறி) – இந்த நிலையிலிருந்த அமரர் பகைவனும் பேராற்றல் பெற்றவனுமான அவன், பிரும்மதேவனால் கொடுக்கப்பட்ட சக்தி என்னும் ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டான் (இராவணன்). (105)

புகையில்லாத அக்னி போன்றதும் கொழுந்துவிட்டுப் பிரகாசிப்பதும் வானரப் படைகளைப் பயந்தோடச் செய்வதுமான அந்த சக்தியை, அரக்கர்குலத் தலைவன் இலக்குவனைப் குறி வைத்து சடுதியில் விடுத்தான். (106)

தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த சக்தியாயுதத்தை, நெய் ஆகுதி கொடுக்கப்பட்ட அக்னியைப் போன்ற உயர்ந்த பாணங்களால், பரதனின் தம்பி தடுக்க முயன்றான். அப்படியிருந்தும் அந்த சக்தி, லட்சுமணனுடைய மார்பில் புகுந்துவிட்டது. (107)

ரகு வம்ச திலகமும் ஆற்றலுடையவனுமான அவன் சக்தியால் அடிபட்டு, நெருப்பினால் வெந்து உணர்விழந்தான். இராவண மன்னன், அவன் மயங்கிக் கிடப்பதைப் பார்த்து, உடனே அவனை நெருங்கி, தன் இரு கைகளாலும் அவசரமாகத் தூக்கினான். (108)

(தேவர்கள் சஞ்சாரம் செய்யும்) இமயமலை, மந்தரமலை, மேருமலை மற்றும் மூவுலகங்களையும் அவற்றிலுள்ள தேவர்களுடன்கூட, அவன் தன் இரு கைகளினால் பெயர்த்தெடுக்க முடியும். ஆனால், போர்க்களத்தில் (வீழ்ந்து கிடந்த, இராமனுடைய இளவல்) பரதனுக்குத் தம்பியான இலக்குவனை அவனால் தூக்க முடியவில்லை. (109)

சுமித்திரையின் மைந்தன், பிரும்மாவினால் கொடுக்கப்பட்ட சக்தி ஆயுதத்தால் தாக்கப்பட்டவனாக இருந்தும், சிந்தித்துப் பார்க்க முடியாத பெருமை வாய்ந்ததுமான மகாவிஷ்ணுவின் அம்சமாகிய தன்னுடைய இயல்பை நினைவுக்குக் கொண்டு வந்தான். (110)

அப்போது, தேவர்களுக்குத் தொல்லை கொடுப்பவனான இராவணன், அசுரர்களுடைய கொட்டத்தை அடக்குபவனும் சுமித்திரையின் மைந்தனுமான இலக்குவனை இரு கைகளால் அசைத்துப் பார்த்தும் தோல்வியடைந்தான். (111)

அதைப் பார்த்துக் கோபம் கொண்ட அனுமான், இராவணனைத் தாக்குவதற்காக, அவனை நோக்கி ஓடினார். சினத்தால் பொங்கிக் கொண்டிருந்த அவர், வஜ்ராயுதம் போன்ற தன் முஷ்டியால் அவன் மார்பில் குத்தினார். (112)

அந்த முஷ்டியின் தாக்குதலால் அரக்க மன்னன் நிலைகுலைந்து போனான். முழங்கால்கள் தரையில் தேய கீழே விழவும் செய்தான். (113)

ஆஸ்யை: ஸநேத்ரஶ்ரவணைர்வவாம ருதி$_4$ரம் ப$_3$ஹு ।
விகூ$_4$ர்ணமாநோ நிஶ்சேஷ்டோ ரதே$_2$ாபஸ்த$_2$ உபாவிஶத் ॥
விஸம்க்ஞோ மூர்சி$_2$தஶ்சாஸீந்ந ச ஸ்த$_2$ாநம் ஸமாலப$_4$த் ॥ (114)

விஸம்க்ஞம் ராவணம் த்$_3$ருஷ்ட்வா ஸமரே பீ$_4$மவிக்ரமம் ।
ருஷயோ வாநரா: ஸர்வே நேது$_3$ர்தே$_3$வா: ஸவாஸவா: ॥ (115)

ஹநுமாநபி தேஜஸ்வீ லக்ஷ்மணம் ராவணார்தி$_3$தம் ।
அநயத்$_3$ராக$_4$வாப்$_4$யாஶம் ப$_3$ாஹுப்$_4$யாம் பரிக்$_3$ருஹ்ய தம் ॥ (116)

வாயுஸூநோ: ஸுஹ்ருத்த்வேந ப$_4$க்த்யா பரமயா ச ஸ: ।
ஶத்ரூணாமப்ரகம்ப்யோऽபி லகு$_4$த்வமக$_3$மத்கபே: ॥ (117)

தம் ஸமுத்ஸ்ருஜ்ய ஸா ஶக்தி: ஸௌமித்ரிம் யுதி$_4$ து$_3$ர்ஜயம் ।
ராவணஸ்ய ரதே$_2$ தஸ்மிந் ஸ்த$_2$ாநம் புநருபாக$_3$தா ॥ (118)

ஆஶ்வஸ்தஶ்ச விஶல்யஶ்ச லக்ஷ்மண: ஶத்ருஸூத$_3$ந: ।
விஷ்ணோர்ப$_4$ாக$_3$மமீமாம்ஸ்யமாத்மாநம் ப்ரத்யநுஸ்மரந் ॥ (119)

ராவணோऽபி மஹாதேஜா: ப்ராப்ய ஸம்க்ஞாம் மஹாஹவே ।
ஆத$_3$தே$_3$ நிஶிதாந் ப$_3$ாணாஞ்ஜக்$_3$ராஹ ச மஹத்$_3$த$_4$நு: ॥ (120)

நிபாதிதமஹாவீராம் த்$_3$ரவந்தீம் வாநரீம் சமூம் ।
ராக$_4$வஸ்து ரணே த்$_3$ருஷ்ட்வா ராவணம் ஸமபி$_4$த்$_3$ரவத் ॥ (121)

அதை$_2$நமுபஸங்க$_3$ம்ய ஹநுமாந் வாக்யமப்$_3$ரவீத் ।
மம ப்ருஷ்ட$_2$ம் ஸமாருஹ்ய ராக்ஷஸம் ஶாஸ்துமர்ஹஸி ॥
விஷ்ணுர்யத$_2$ா க$_3$ருத்மந்தம் ப$_3$லவந்தம் ஸமாஹித: ॥ (122)

தச்ச்$_2$ருத்வா ராக$_4$வோ வாக்யம் வாயுபுத்ரேண ப$_4$ாஷிதம் ।
ஆருரோஹ மஹாஶூரோ ப$_3$லவந்தம் மஹாகபிம் ॥ (123)

ரத$_2$ஸ்த$_2$ம் ராவணம் ஸங்க்$_2$யே த$_3$த$_3$ர்ஶ மநுஜாதி$_4$ப: ।
தமாலோக்ய மஹாதேஜா: ப்ரது$_3$த்$_3$ராவ ஸ ராக$_4$வ: ॥
வைரோசநிமிவ க்ருத்$_3$தே$_4$ா விஷ்ணுரப்$_4$யுத்$_3$யதாயுத$_4$: ॥ (124)

ஜ்யாஶப்$_3$த$_3$மகரோத்தீவ்ரம் வஜ்ரநிஷ்பேஷநி:ஸ்வநம் ।
கி$_3$ரா க$_3$ம்பீ$_4$ரயா ராமோ ராக்ஷஸேந்த்$_3$ரமுவாச ஹ ॥ (125)

திஷ்ட$_2$ திஷ்ட$_2$ மம த்வம் ஹி க்ருத்வா விப்ரியமீத்$_3$ருஶம் ।
க்வ நு ராக்ஷஸஶார்தூ$_3$ல க$_3$தோ மோக்ஷமவாப்ஸ்யஸி ॥ (126)

யதீ$_3$ந்த்$_3$ரவைவஸ்வதப$_4$ாஸ்கராந் வா
ஸ்வயம்பு$_4$வைஶ்வாநரஶங்கராந் வா ।
க$_3$மிஷ்யஸி த்வம் த$_3$ஶ வா தி$_3$ஶோऽத$_2$வா
தத$_2$ாபி மே நாத்$_3$ய க$_3$தோ விமோக்ஷ்யஸே ॥ (127)

அவன் வாய்கள், செவிகள், கண்கள் ஆகியவற்றிலிருந்து இரத்தம் வெள்ளமாகப் பெருகியது. எதுவும் செய்ய இயலாதவனாகி, மதி கலங்கி தேர்த்தட்டில் உட்கார்ந்துவிட்டான். அவன் உணர்விழந்து, உறுதியாக எதுவும் செய்ய முடியாமல் வெறுமே அரற்றிக் கொண்டிருந்தான். (114)

எல்லையில்லாத ஆற்றல் படைத்த இராவணன், போர்க்களத்தில் உணர்விழந்து கிடப்பதைக் கண்டு, முனிவர்களும் வானரர்களும் இந்திரன் முதலான வானவர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்து வாழ்த்தொலி எழுப்பினார்கள். (115)

ஆண்மை மிக்க அனுமான், இராவணனால் தாக்கப்பட்டுக் கிடந்த லட்சுமணனை, இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு, இராமனுக்கு எதிரே கொண்டு வந்தார். (116)

வாயு மைந்தரான அனுமானின் அளவிட முடியாத நட்புணர்வினாலும் மிகவும் ஆழமான பக்தி உணர்வினாலும், எதிரிகளால் (இராவணனால்) சிறிதளவும் அசைக்க முடியாதிருந்த அவன் (இலக்குவன்), வானரனுக்கு இலேசாக இருக்கும் தன்மையை அடைந்தான். (117)

அந்த சக்தி ஆயுதம், போரில் வெல்லுதற்கரிய இலக்குவனை (தாக்கிய பின்) விட்டுவிட்டு, இராவணனுடைய தேரில் தனக்குரிய இருப்பிடத்திற்கு மீண்டும் போய்ச் சேர்ந்தது. (118)

பகைவர்களை அடக்கும் இலக்குவனும், ஆராய்ச்சியால் அறிய முடியாத பகவான் விஷ்ணுவின் அம்சமான தன் மூல வடிவத்தை எண்ணிப் பார்த்து, சுய உணர்வு பெற்றான். காயங்கள் இல்லாதவனாகவும் ஆனான். (119)

பேராற்றலுடைய இராவணனும், அந்தப் போர்க்களத்தில் மூர்ச்சை தெளிந்து, உறுதியான ஒரு வில்லை எடுத்து, கூரான அம்புகளைத் தொடுத்தான். (120)

வானரப் படையின் முக்கியத் தலைவர்கள் வீழ்ந்து கிடப்பதையும், வானரப் படையினர் தாக்கப் படுவதையும் பார்த்த இராமன், போர்க்களத்தில் இராவணன் மீது தாக்குதல் நடத்தினார். (121)

அப்போது அனுமான், இராமனிடம் வந்து, ''மகாபலம் பொருந்திய கருடன்மீது மனஒருமைப்பாட்டுடன் அமர்ந்திருக்கும் பகவான் விஷ்ணுவைப் போல, தாங்கள் அடியேன் முதுகின்மீது ஏறி அமர்ந்து, அரக்கனைக் கொல்லத் திருவுள்ளம் கொள்வீராக'' என்று கூறினார். (122)

அனுமானின் வேண்டுகோளைக் கேட்ட மாவீரரான இராமன், மிக்க பலம் பொருந்திய வானரோத்தமர் மீது ஏறி அமர்ந்து கொண்டார். (123)

போர்க்களத்தில் ரதத்தில் வீற்றிருக்கும் இராவணனை இராமன் நேரில் கண்டார். கோபம் கொண்ட பகவான் விஷ்ணு, விரோசனன் குலத் தோன்றல் பலிச்சக்கரவர்த்தியை நோக்கி, கையில் சக்கராயுதத்தைத் தாங்கிச் சென்றதைப் போல, மகாபராக்கிரமசாலியான இராமன், அவனைப் பார்த்து எதிர்த்துச் சென்றார். (124)

பயங்கரமான இடியோசை போல் நாணொலி எழுப்பினார். பின்னர், மிகவும் கம்பீரமான குரலில் இராமன், அரக்க மன்னனைப் பார்த்துக் கூறினார்— (125)

''அரக்கப்புலியே! நில், நில். எனக்கு இவ்வளவு கடுமையான (சீதையைக் கவர்ந்து சென்றது; இலக்குவனை சக்தியால் தாக்கியது என்ற) அபசாரத்தைச் செய்துவிட்டு, எங்கே ஓடி ஒளிந்து, அந்தக் குற்றத்திற்கான தண்டனையிலிருந்து தப்பிக்கப் போகிறாய்? (126)

இப்போது, என் கண்ணில் பட்டுவிட்டாய். இனி இந்திரன், யமன், சூரியன், பிரும்மா, அக்னி, சிவபெருமான் ஆகியோரைச் சரணடைந்தாலும், பத்துத் திசைகளில் எந்தத் திசையிலேனும் ஓடி ஒளிந்து கொண்டாலும், நீ தண்டனையிலிருந்து தப்ப முடியாது. (127)

யஶ்சைவ ஶக்த்யாபி$_4$ஹதஸ்த்வயாத்$_3$ய
இச்ச$_2$ந் விவாத$_3$ம் ஸஹஸாப்$_4$யுபேத: ।
ஸ ஏவ ரக்ஷோக$_3$ணராஜ ம்ருத்யு:
ஸபுத்ரதா$_3$ரஸ்ய தவாத்$_3$ய யுத்$_3$தே$_4$ ॥ (128)

ஏதேந சாத்யத்$_3$பு$_4$தத$_3$ர்ஶநாநி ஶரைர்ஜநஸ்தா$_2$நக்ருதாலயாநி ।
சதுர்த$_3$ஶாந்யாத்தவராயுதா$_4$நி ரக்ஷ:ஸஹஸ்ராணி நிஷூதி$_3$தாநி ॥ (129)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா ராக்ஷஸேந்த்$_3$ரோ மஹாகபிம் ।
வாயுபுத்ரம் மஹாவீர்யம் வஹந்தம் ராக$_4$வம் ரணே ॥ (130)

ரோஷேண மஹதாவிஷ்ட: பூர்வவைரமநுஸ்மரந் ।
ஆஜகா$_4$ந ஶரைஸ்தீக்ஷ்ணை: காலாநலஶிகோ$_2$பமை: ॥ (131)

ராக்ஷஸேநாஹவே தஸ்ய தாடி$_3$தஸ்யாபி ஸாயகை: ।
ஸ்வபா$_4$வதேஜோயுக்தஸ்ய பூ$_4$யஸ்தேஜோऽப்$_4$யவர்த$_4$த ॥ (132)

ததோ ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம் ।
த்$_3$ருஷ்ட்வா ப்லவக$_3$ஶார்தூ$_3$லம் க்ரோத$_4$ஸ்ய வஶமேயிவாந் ॥ (133)

தஸ்யாபி$_4$சங்க்ரம்ய ரத$_2$ம் ஸசக்ரம்
ஸாஶ்வத்$_4$வஜச்ச$_2$த்ரமஹாபதாகம் ।
ஸஸாரதி$_2$ம் ஸாஶநிஶூலக$_2$ட்$_3$க$_3$ம்
ராம: ப்ரசிச்சே$_2$த$_3$ ஶரை: ஸுபுங்கை$_2$: ॥ (134)

அதே$_2$ந்த்$_3$ரஶத்ரும் தரஸா ஜகா$_4$ந பா$_3$ணேந வஜ்ராஶநிஸந்நிபே$_4$ந ।
பு$_4$ஜாந்தரே வ்யூட$_4$ஸுஜாதரூபே வஜ்ரேண மேரும் ப$_4$க$_3$வாநிவேந்த்$_3$ர: ॥ (135)

யோ வஜ்ரபாதாஶநிஸந்நிபாதாந்ந சுக்ஷுபே$_4$ நாபி சசால ராஜா ।
ஸ ராமபா$_3$ணாபி$_4$ஹதோ ப்$_4$ருஶார்தஶ்சசால சாபம் ச முமோச வீர: ॥ (136)

தம் விஹ்வலந்தம் ப்ரஸமீக்ஷ்ய ராம:
ஸமாத$_3$தே$_3$ தீ$_3$ப்தமதா$_2$ர்த$_4$சந்த்$_3$ரம் ।
தேநார்கவர்ணம் ஸஹஸா கிரீடம்
சிச்சே$_2$த$_3$ ரக்ஷோऽதி$_4$பதேர்மஹாத்மா ॥ (137)

தம் நிர்விஷாஶீவிஷஸந்நிகாஶம் ஶாந்தார்சிஷம் ஸூர்யமிவாப்ரகாஶம் ।
க$_3$தஶ்ரியம் க்ருத்தகிரீடகூடமுவாச ராமோ யுதி$_4$ ராக்ஷஸேந்த்$_3$ரம் ॥ (138)

க்ருதம் த்வயா கர்ம மஹத் ஸுபீ$_4$மம்
ஹதப்ரவீரஶ்ச க்ருதஸ்த்வயாஹம் ।
தஸ்மாத் பரிஶ்ராந்த இதி வ்யவஸ்யந்–
ந த்வாம் ஶரைர்ம்ருத்யுவஶம் நயாமி ॥ (139)

அரக்கர் வேந்தே! உன்னால் இப்போது சக்தி ஆயுதத்தால் தாக்கப்பட்ட இவன், தான் விரும்பியே இந்தத் துக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறான்; விரைவிலேயே உணர்வு பெற்றுத் திரும்பவும் வருவான். (அவன் விரும்பியிருந்தால் சக்தியின் தாக்குதலைத் தவிர்த்திருக்க முடியும்.) போரில், மனைவி–மக்களோடு கூடிய உனக்கு யமனாக, அவனே அமையப் போகிறான்! (அல்லது, என் சகோதரனும் நானும் ஒருவரே என்ற நோக்கில், நானே உனக்குக் காலனாக வரப் போகிறேன்.) (128)

('அனுமான், இலக்குவன் ஆகியோரால்கூட என்னை வீழ்த்த முடியவில்லை. உன்னால் முடியுமா, என்ன!' என்று கர்வம் கொள்ளாதே.) மிகவும் வியக்கத்தக்க உருவம் கொண்டவர்களும், கொடூரமான படைக்கலன்களைத் தாங்கியவர்களும், ஜனஸ்தானத்தில் வசித்துக் கொண்டிருந்தவர்களுமான பதிநான்காயிரம் அரக்கர்கள், இதோ உன் எதிரில் நின்று கொண்டிருக்கும் என்னால் கொல்லப்பட்டார்கள் (என்பதை நினைத்துப் பார்).'' (129)

மகாபலசாலியான இராவணன், இராமனுடைய சொற்களைக் கேட்டான். ரணகளத்தில், மகாவீரரான வாயுமைந்தர் இராமனைச் சுமந்து கொண்டிருப்பதைக் கண்டதும், கடந்தகால பகைமை நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன. அதனால், மிகவும் கோபம் கொண்டு, ஊழிக்கால தீயைப் போன்று கொழுந்துவிட்டெரியும் பாணங்களால் அவரை (அனுமானை)க் கடுமையாகக் காயப்படுத்தினான். (130,131)

போரில், அரக்கனால் அம்புகளால் அடிக்கப்பட்டாலும், இயல்பாகவே வீரம் உடைய அவருக்கு (காயம் ஏற்பட்டாலும், பலம் குன்றாமல்) முன்னைக் காட்டிலும் அதிகமாய் பராக்கிரமம் வளர்ந்தது. அளவிட முடியாத ஆற்றல் படைத்த இராமன், வானரோத்தமனுக்குக் காயம் ஏற்பட்டதைக் கண்டு, அதனால் கோபவசப்பட்டார். (132,133)

உடனே இராமன், இராவணனை எதிர்த்துத் தாக்கி, அவனுடைய தேர், தேர்ச்சக்கரம், குதிரைகள், கொடிகள், குடை, பாவட்டாக்கள், தேர்ப்பாகன், அசனி–சூலம்–வாள் முதலிய ஆயுதங்கள் ஆகியவற்றை சிறந்த சிறகுகள் பிணைக்கப்பட்ட அம்புகளால் தாக்கிப் பொடிப் பொடியாக்கினார். (134)

இந்திரன், தன் வஜ்ராயுதத்தால் மேருமலையைத் தாக்கியது போல, வஜ்ராயுதத்திற்கும் இடிக்கும் நிகரான வலிமை படைத்த பாணங்களால், இந்திரனுடைய பகைவனின் (இராவணனின்) அழகான, விசாலமான மார்பில் பலமாகத் தாக்கினார் (இராமன்). (135)

எந்த மன்னன், வஜ்ராயுதத்தின் அடியாலும் இடியின் வீழ்ச்சியினாலும், கலங்காமலும் நடுங்காமலும் இருந்தானோ, அதே வீரன், இராமனுடைய பாணத்தால் அடிபட்டு, மிகவும் துன்பத்திற்காளாகி நிலைகுலைந்தான்; வில்லையும் நழுவவிட்டான். (136)

அப்போது, செய்வதறியாது தத்தளிக்கும் நிலையில் அவனைப் பார்த்து, மகாத்மாவான இராமன், சுடர்விடும் அர்தசந்த்ரம் என்ற பாணத்தை வில்லில் தொடுத்து, சூரியனைப் போல் ஒளிவீசும் அரக்க மன்னனின் மகுடத்தை நோக்கிச் செலுத்தி, அப்போதே அதை உடைத்தெறிந்தார். (137)

விஷம் இல்லாத பாம்பு போன்றவனும் ஒளிக்கிரணங்கள் இல்லாத கதிரவன் போல் இருப்பவனும் மகுடம் முறிபட்டுப் போனதால் அரசப்பொலிவை இழந்து நிற்பவனுமான அரக்க மன்னனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார், இராமன். (138)

''இராவணா! இன்று நீ மிகவும் பயங்கரமாகப் போர் புரிந்திருக்கிறாய்; உன்னுடைய முக்கிய படைத்தலைவர்களைக் கொன்று போட்டிருக்கிறேன்; என் மீதும் சரமாரி பொழிந்திருக்கிறாய். அதனால், நீ களைத்திருக்கிறாய் என்று தோன்றுவதால், என் பாணங்களால் உன்னை யமனிடம் ஒப்படைக்காமல் விட்டிருக்கிறேன். (139)

க$_3$ச்ச$_2$ாநுஜாநாமி ரணார்தி$_3$தஸ்த்வம்
ப்ரவிஶ்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம் ।
ஆஶ்வாஸ்ய நிர்யாஹி ரதீ$_2$ ச த$_4$ந்வீ
தத$_3$ா ப$_3$லம் த்$_3$ரக்ஷ்யஸி மே ரத$_2$ஸ்த$_2$: ॥ (140)

ஸ ஏவமுக்தோ ஹதத$_3$ர்பஹர்ஷோ நிக்ருத்தசாப: ஸ ஹதாஶ்வஸூத: ।
ஶரார்தி$_3$த: க்ருத்தமஹாகிரீடோ விவேஶ லங்காம் ஸஹஸா ஸ ராஜா ॥ (141)

தஸ்மிந் ப்ரவிஷ்டே ரஜநீசரேந்த்$_3$ரே மஹாப$_3$லே த$_3$ாநவதே$_3$வஶத்ரௌ ।
ஹரீந் விஶல்யாந் ஸஹ லக்ஷ்மணேந சகார ராம: பரமாஹவாக்$_3$ரே ॥ (142)

தஸ்மிந் ப்ரபி$_4$ந்நே த்ரித$_3$ஶேந்த்$_3$ரஶத்ரௌ
ஸுராஸுரா பூ$_4$தக$_3$ணா தி$_3$ஶஶ்ச ।
ஸஸாக$_3$ரா: ஸர்ஷிமஹோரக$_3$ாஶ்ச
ததை$_2$வ பூ$_4$ம்யம்பு$_3$சராஶ்ச ஹ்ருஷ்டா: ॥ (143)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகோநஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஷஷ்டிதம: ஸர்க$_3$:

கும்ப$_4$கர்ணப்ரபோ$_3$த$_4$:

ஸ ப்ரவிஶ்ய புரீம் லங்காம் ராமப$_3$ாணப$_4$யார்தி$_3$த: ।
ப$_4$க்$_3$நத$_3$ர்பஸ்தத$_3$ா ராஜா ப$_3$பூ$_4$வ வ்யதி$_2$தேந்த்$_3$ரிய: ॥ (1)

மாதங்க$_3$ இவ ஸிம்ஹேந க$_3$ருடே$_3$நேவ பந்நக$_3$: ।
அபி$_4$பூ$_4$தோऽப$_4$வத்$_3$ராஜா ராக$_4$வேண மஹாத்மநா ॥ (2)

ப்$_3$ரஹ்மத$_3$ண்ட$_3$ப்ரகாஶாநாம் வித்$_3$யுத்ஸத்$_3$ருஶவர்சஸாம் ।
ஸ்மரந் ராக$_4$வப$_3$ாணாநாம் விவ்யதே$_2$ ராக்ஷஸேஶ்வர: ॥ (3)

ஸ காஞ்சநமயம் தி$_3$வ்யமாஶ்ரித்ய பரமாஸநம் ।
விப்ரேக்ஷமாணோ ரக்ஷாம்ஸி ராவணோ வாக்யமப்$_3$ரவீத் ॥ (4)

ஸர்வம் தத்க$_2$லு மே மோக$_4$ம் யத்தப்தம் பரமம் தப: ।
யத்ஸமாநோ மஹேந்த்$_3$ரேண மாநுஷேணாஸ்மி நிர்ஜித: ॥ (5)

இத$_3$ம் தத்$_3$ப்$_3$ரஹ்மணோ கோ$_4$ரம் வாக்யம் மாமப்$_4$யுபஸ்தி$_2$தம் ।
மாநுஷேப்$_4$யோ விஜாநீஹி ப$_4$யம்த்வமிதி தத்தத$_2$ா ॥ (6)

தே$_3$வத$_3$ாநவக$_3$ந்த$_4$ர்வைர்யக்ஷராக்ஷஸபந்நகை$_3$: ।
அவத்$_4$யத்வம் மயா ப்ராப்தம் மாநுஷேப்$_4$யோ ந யாசிதம் ॥ (7)

இராச்சுற்றிகளின் மன்னனே! நீ போரில் மிகவும் துன்பப்பட்டிருக்கிறாய். நீ இலங்கைக்குத் திரும்பிச் சென்று, இளைப்பாறிக் கொண்டு வருவதற்கு அனுமதி கொடுக்கிறேன். வில்லேந்தியவனாக ரதத்தில் வா. (இப்போது உன்னிடம் தேரும் இல்லை; வில்லும் இல்லை!) திரும்பி வந்ததும், தேரிலிருந்து போர் புரியும் நீ, (தரையில் நின்று போர் புரியும்) என் ஆற்றலைக் காண்பாய்!'' (140)

இராமன் இவ்வாறு கூறியதும், வில் உடைந்து, குதிரைகளும் தேர்ப்பாகனும் கொல்லப்பட்டு, பெருமை பொருந்திய மகுடம் உடைக்கப்பட்டு, பாணங்களால் அடிபட்டு, செருக்கும் உற்சாகமும் இழந்தவனான அந்த மன்னன், உடனேயே இலங்கைக்குப் போய்ச் சேர்ந்தான். (141)

மிக்க ஆண்மை படைத்தவனும் தேவர்களுக்கு எதிரியுமான அந்த அரக்க மன்னன், நகரத்திற்குள் புகுந்துவிட்ட பின்னர், போர் முனையில் வானரர்களின் உடல்களில் பாய்ந்திருந்த அம்புகளை லட்சுமணனுடன் சேர்ந்து பிடுங்கி எறிந்தார், இராமன். (அம்புகளை உடலிலிருந்து நீக்கிய பிறகுதான், பாதுகாப்பான வேறு ஓர் இடத்திற்கு அவர்களை எடுத்துச் செல்ல முடியும் என்பதால் முதலில் கவனமாக அம்புகளை எடுத்தெறிந்தார்.) (142)

தேவர் தலைவன் இந்திரனின் விரோதியான இராவணன் தோற்றுப் போனவுடன், தேவர்கள், அசுரர்கள், பூதகணங்கள், திசைக்காவலர்கள், கடல்கள், மாமுனிவர்கள், நாகர்கள் மற்றும் மண்ணிலும் தண்ணீரிலும் வாழும் உயிர்ப்பிராணிகள் ஆகியவையனைத்தும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தன. (143)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபது

கும்பகர்ணனை எழுப்புதல்!

இராவண வேந்தன், இலங்கை நகருக்குள் புகுந்து, இராமபாணத்தை நினைத்து அச்சத்தினால் மனம் துன்பப்பட, செருக்கு முற்றிலுமாக அழிந்து போய்விட, புலன்கள் கலங்கியவனானான். ஒரு சிங்கம் யானையையும், கருடன் பெரிய சர்ப்பம் ஒன்றையும் தாக்கி வெற்றி கொள்வதைப் போல, பேராற்றல் படைத்த ரகுவீரனால் வெற்றி கொள்ளப்பட்டு அவமானத்திற்கு ஆளானான், இராவணன். (1,2)

மின்னலைப் போல் ஒளி வீசுகின்றவைகளும் பிரும்மதண்டம் போன்றவைகளுமான இராம பாணங்களை எண்ணி எண்ணி, அரக்க மன்னன் மிகவும் கவலைக்கு உள்ளானான். (3)

பொன்னால் செய்யப்பட்ட, திவ்யமான சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்ட இராவணன், அங்கே கூடியிருந்த அரக்கர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (4)

''நான் முன்னர் செய்த தீவிரமான தவங்கள் எல்லாம் பயனற்றுப் போய்விட்டன போலும்! இந்திரனுக்கு நிகரான வலிமை படைத்த நான், ஓர் அற்ப மானுடனால் வெல்லப்பட்டேன். மனிதர்களிடமிருந்துதான் உனக்கு அபாயம்; இதை நினைவில் வைத்துக் கொள் – என்று, பிரும்மா கூறிய அந்தத் தருணம், இப்போது என்னை எதிர்நோக்கி வந்திருக்கிறது. (5,6)

தேவர்கள், அசுரர்கள், கந்தர்வர்கள், யட்சர்கள், அரக்கர்கள், பன்னகர்கள் ஆகியோரால் கொல்லப்பட முடியாமை என்ற வரம் என்னால் பெறப்பட்டுள்ளது. (இவர்களால் எந்த அஸ்திர–சஸ்திரத்தைக் கொண்டும் என்னை மாய்க்க முடியாது.) ஆனால், மனிதர்களிடமிருந்து எனக்கு அச்சம் ஏற்படக்கூடாது – என்ற வரம், என்னால் கோரப்படவில்லை. (7)

விதி$_3$தம் மாநுஷம் மந்யே ராமம் த$_3$ஶரத$_2$த்மஜம் ।
இக்ஷ்வாகுகுலநாதே$_2$ந அநரண்யேந யத்புரா ॥ (8)

உத்பத்ஸ்யதே ஹி மத்$_3$வம்ஶே புருஷோ ராக்ஷஸாத$_4$ம ।
யஸ்த்வாம் ஸபுத்ரம் ஸாமாத்யம் ஸப$_3$லம் ஸாஶ்வஸாரதி$_2$ம் ॥
நிஹநிஷ்யதி ஸங்க்$_3$ராமே த்வாம் குலாத$_4$ம து$_3$ர்மதே ॥ (9)

ஶப்தோऽஹம் வேத$_3$வத்யா ச யத$_3$ா ஸா த$_4$ர்ஷிதா புரா ।
ஸேயம் ஸீதா மஹாபா$_4$க$_3$ா ஜாதா ஜநகநந்தி$_3$நீ ॥ (10)

உமா நந்தீ$_3$ஶ்வரஶ்சாபி ரம்பா$_4$ வருணகந்யகா ।
யதோ$_2$க்தாஸ்தந்மயா ப்ராப்தம் ந மித்$_2$யா ருஷிபா$_4$ஷிதம் ॥ (11)

ஏததே$_3$வாப்$_4$யுபாக$_3$ம்ய யத்நம் கர்துமிஹார்ஹத$_2$ ।
ராக்ஷஸாஶ்சாபி திஷ்ட$_2$ந்து சர்யாகோ$_3$புரமூர்த$_4$ஸு ॥ (12)

ஸ சாப்ரதிமக$_3$ம்பீ$_4$ரோ தே$_3$வத$_3$ாநவத$_3$ர்பஹா ।
ப்$_3$ரஹ்மஶாபாபி$_4$பூ$_4$தஸ்து கும்ப$_4$கர்ணோ விபோ$_3$த்$_4$யதாம் ॥ (13)

ஸ பராஜிதமாத்மாநம் ப்ரஹஸ்தம் ச நிஷூதி$_3$தம் ।
க்ஞாத்வா ரக்ஷோப$_3$லம் பீ$_4$மமாதி$_3$தே$_3$ஶ மஹாப$_3$ல: ॥ (14)

த்$_3$வாரேஷு யத்ந: க்ரியதாம் ப்ராகாரஶ்சாதி$_4$ருஹ்யதாம் ।
நித்$_3$ராவஶஸமாவிஷ்ட: கும்ப$_4$கர்ணோ விபோ$_3$த்$_4$யதாம் ॥ (15)

ஸுக$_2$ம் ஸ்வபிதி நிஶ்சிந்த: காலோபஹதசேதந: ।
நவ ஷட் ஸப்த சாஷ்டௌ ச மாஸாந் ஸ்வபிதி ராக்ஷஸ: ॥ (16)

மந்த்ரயித்வா ப்ரஸுப்தோऽயமிதஸ்து நவமேऽஹநி ।
தம் து போ$_3$த$_4$யத க்ஷிப்ரம் கும்ப$_4$கர்ணம் மஹாப$_3$லம் ॥ (17)

ஸ து ஸங்க்$_2$யே மஹாபா$_3$ஹு: ககுத$_3$: ஸர்வரக்ஷஸாம் ।
வாநராந் ராஜபுத்ரௌ ச க்ஷிப்ரமேவ வதி$_4$ஷ்யதி ॥ (18)

ஏஷ கேது: பர: ஸங்க்$_2$யே முக்$_2$யோ வை ஸர்வரக்ஷஸாம் ।
கும்ப$_4$கர்ண: ஸத$_3$ா ஶேதே மூடோ$_4$ க்$_3$ராம்யஸுகே$_2$ ரத: ॥ (19)

ராமேண ஹி நிரஸ்தஸ்ய ஸங்க்$_3$ராமேऽஸ்மிந் ஸுதா$_3$ருணே ।
ப$_4$விஷ்யதி ந மே ஶோக: கும்ப$_4$கர்ணே விபோ$_3$தி$_4$தே ॥ (20)

கிம் கரிஷ்யாம்யஹம் தேந ஶக்ரதுல்யப$_3$லேந ஹி ।
ஈத்$_3$ருஶே வ்யஸநே ப்ராப்தே யோ ந ஸாஹ்யாய கல்பதே ॥ (21)

தே து தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ராக்ஷஸா: ।
ஜக்$_3$மு: பரமஸம்ப்$_4$ராந்தா: கும்ப$_4$கர்ணநிவேஶநம் ॥ (22)

முன்பொரு சமயம், இக்ஷ்வாகு குலத்தில் தோன்றிய மன்னன் அநரண்யன் என்பவன், 'அரக்கப்பதரே! தீய எண்ணமுடையவனே! என்னுடைய குலத்தில் ஒரு மாவீரன் தோன்றப் போகிறான். அவன், உன்னையும் உன் மக்களையும் படைவீரர்களையும், குதிரை–சாரதிகளையும் யுத்த களத்தில் கொன்றொழிப்பான்' என்று எனக்கு சாபம் கொடுத்தான். தசரத குமாரனான இராமன்தான், அவனால் குறிப்பிடப்பட்ட மனிதன் என்று எண்ணுகிறேன். (8,9)

மேலும், முன்னொரு காலத்தில், வேதவதி என்பவளை நான் பலாத்காரம் செய்ய முயன்றபோது, அவள் ஒரு சாபம் கொடுத்தாள். அதுவே, ஜனககுமாரியாக, பெரும்பேறு பெற்ற சீதையாக உருவெடுத்து வந்திருக்கிறது. (10)

முன்னர், பார்வதி, நந்தீஸ்வரர், ரம்பை, வருணனின் மகள் (புஞ்ஜிகஸ்தலை) ஆகியோர் கொடுத்த வாக்கு (சாபம்), இப்போது என்னை வந்தடைந்திருக்கிறது. முனிவர்களின் வாக்கு ஒருபோதும் பொய்யானதில்லை. (மேலே சொல்லப்பட்ட நால்வரும் முனிவர்களுக்கு நிகரான தவ ஆற்றல் பெற்றவர்கள்.) (11)

இது இப்படித்தான் இருக்கும் என்பதை உணர்ந்து, (ஆபத்தை எதிர்கொள்வதற்கான) முயற்சிகளை மேற்கொள்வீர்களாக. அரக்க வீரர்கள், அரசபாட்டைகளிலும் கோபுரங்களின் உச்சியிலும் நின்று காவல் காப்பார்களாக. (12)

இணையில்லாத திறமை பெற்றவனும், தேவ–தானவர்களின் செருக்கை ஒழித்துக் கட்டியவனும், பிரும்மாவின் சாபம் காரணமாக அடங்கிக் கிடக்கிறவனுமான கும்பகர்ணனை எழுப்புங்கள். (13)

பேராண்மை மிக்க அவன் (இராவணன், இராமனால்) வெற்றி கொள்ளப்பட்டான்; பிரகஸ்தனும் கொல்லப்பட்டுவிட்டான். இவைகளை எண்ணிப் பார்த்து, அரக்கர் படைக்குப் பின்வருமாறு ஆணையிட்டான்— (14)

''நகரத்தின் நுழைவாயில்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்; மதிற்சுவரின் மேல் ஏறி நிற்க வேண்டும்; உறக்கத்தின் வசப்பட்டு மூழ்கிக் கிடக்கும் கும்பகர்ணனை எழுப்பி விடுங்கள். (15)

(நானோ, கவலையால் தூக்கம் வராமல் தவிக்கிறேன். ஆனால், என் தம்பியான இந்த) அரக்கன் காலத்தால் உணர்விழந்து, ஒன்பது–ஆறு–ஏழு–எட்டு மாதங்கள் தொடர்ந்து சௌக்கியமாகத் தூங்குகிறான்! (16)

ஒன்பது நாட்களுக்கு முன் நடந்த மந்திராலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டுத் தூங்கத் தொடங்கினான். மிக்க பலசாலியான அந்த கும்பகர்ணனை உடனே எழுப்புங்கள். (17)

அரக்கர் எல்லோரிலும் மிகவும் முக்கியமானவனும் தோள்வலி மிக்கவனுமான அவன், போரில் வானரர்களையும் இரு அரசகுமாரர்களையும் நொடிப்பொழுதில் வதைத்து விடுவான். அரக்கர் எல்லோரிலும் முக்கியமானவனான இவன், சமர்க்களத்தில் வெற்றிக்கொடி நாட்டுபவன். அறிவு மழுங்கிய கும்பகர்ணன், புலனின்பங்களில் மூழ்கி எப்போதும் உறக்கத்தில் இருக்கிறான். (18,19)

கும்பகர்ணன் தூக்கத்திலிருந்து எழுந்துவிட்டானாகில், (நிச்சயமாக எல்லா எதிரிகளையும் மாய்த்துவிடுவான்!) இந்தப் பயங்கரமான போரில் இராமனிடம் நான் தோல்வியடைந்து, துயரப்பட வேண்டியிருக்காது. இவ்வளவு கடுமையான துயர காலத்திலும், இந்திரனுக்கு நிகரான ஆற்றல் படைத்த இவனால் எனக்கு உதவி கிடைக்கவில்லையென்றால், இவனை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்?'' (20,21)

அரக்க வேந்தன் இராவணனுடைய ஆணையைக் கேட்ட அவர்கள், மிகவும் பரபரப்படைந்தவர்களாக கும்பகர்ணன் இருப்பிடத்தைச் சென்றடைந்தார்கள். (22)

தே ராவணஸமாதி3ஷ்டா மாம்ஸஶோணிதபே4ாஜநா: ।
க3ந்த4மால்யாம்ஸ்தத2ா ப4க்ஷ்யாநாதா3ய ஸஹஸா யயு: ॥ (23)

தாம் ப்ரவிஶ்ய மஹாத்3வாராம் ஸர்வதோ யோஜநாயதாம் ।
கும்ப4கர்ணகு3ஹாம் ரம்யாம் ஸர்வக3ந்த4ப்ரவாஹிநீம் ॥ (24)

கும்ப4கர்ணஸ்ய நி:ஶ்வாஸாத3வதூ4தா மஹாப3லா: ।
ப்ரதிஷ்ட2மாநா: க்ருச்ச்2ரேண யத்நாத்ப்ரவிவிஶுர்கு3ஹாம் ॥ (25)

தாம் ப்ரவிஶ்ய கு3ஹாம் ரம்யாம் ஶுப4ாம் காஞ்சநகுட்டிமாம் ।
த3த்3ருஶுர்நைர்ருதவ்யாக்4ரம் ஶயாநம் பீ4மத3ர்ஶநம் ॥ (26)

தே து தம் விக்ருதம் ஸுப்தம் விகீர்ணமிவ பர்வதம் ।
கும்ப4கர்ணம் மஹாநித்3ரம் ஸஹிதா: ப்ரத்யபே3ாத4யந் ॥ (27)

ஊர்த்4வரோமாஞ்சிததநும் ஶ்வஸந்தமிவ பந்நக3ம் ।
த்ராஸயந்தம் மஹாஶ்வாஸை: ஶயாநம் பீ4மத3ர்ஶநம் ॥ (28)

பீ4மநாஸாபுடம் தம் து பாதாலவிபுலாநநம் ।
ஶய்யாயாம் ந்யஸ்தஸர்வாங்க3ம் மேதே3ாருதி4ரக3ந்தி4நம் ॥ (29)

காஞ்சநாங்க3த3நத்3த4ாங்க3ம் கிரீடிநமரிந்த3மம் ।
த3த்3ருஶுர்நைர்ருதவ்யாக்4ரம் கும்ப4கர்ணம் மஹாப3லம் ॥ (30)

ததஶ்சக்ருர்மஹாத்மாந: கும்ப4கர்ணாக்3ரதஸ்தத2ா ।
மாம்ஸாநாம் மேருஸங்காஶம் ராஶிம் பரமதர்பணம் ॥ (31)

ம்ருக3ாணாம் மஹிஷாணாம் ச வராஹாணாம் ச ஸஞ்சயாந் ।
சக்ருர்நைர்ருதஶார்தூ3லா ராஶிமந்நஸ்ய சாத்3பு4தம் ॥ (32)

தத: ஶோணிதகும்ப4ாம்ஶ்ச மத்3யாநி விவித4ாநி ச ।
புரஸ்தாத் கும்ப4கர்ணஸ்ய சக்ருஸ்த்ரித3ஶஶத்ரவ: ॥ (33)

லிலிபுஶ்ச பரார்த்4யேந சந்த3நேந பரந்தபம் ।
தி3வ்யைராச்ச2ாத3யாமாஸுர்மால்யைர்க3ந்தை4: ஸுக3ந்தி4பி4: ॥ (34)

தூ4பம் ஸுக3ந்த4ம் ஸஸ்ருஜுஸ்துஷ்டுவுஶ்ச பரந்தபம் ।
ஜலதா3 இவ சோந்நேது3ர்யாதுதா4நாஸ்ததஸ்தத: ॥ (35)

ஶங்க2நாபூரயாமாஸு: ஶஶாங்கஸத்3ருஶப்ரப4ாந் ।
துமுலம் யுக3பச்சாபி விநேது3ஶ்சாப்யமர்ஷிதா: ॥ (36)

நேது3ராஸ்பே2ாடயாமாஸுஶ்சிக்ஷிபுஸ்தே நிஶாசரா: ।
கும்ப4கர்ணவிபே3ாத4ார்த2ம் சக்ருஸ்தே விபுலம் ஸ்வநம் ॥ (37)

மாமிசத்தையும் இரத்தத்தையும் உணவாகக் கொண்ட அந்த அரக்கர்கள், இராவணனுடைய கட்டளையை ஏற்று, நறுமணப் பொருள்கள், மாலைகள், ஏராளமான உணவுப் பண்டங்களை எடுத்துக் கொண்டு, உடனே சென்றார்கள். (23)

கும்பகர்ணன் உறங்கிக் கொண்டிருந்த அந்த மண்டபம் அமைந்திருந்த மாளிகையின் பெரிய நுழைவாயில்கள் வழியே உள்ளே சென்றார்கள். அந்த மாளிகையின் நீளம், ஒரு யோஜனை; அகலம், ஒரு யோஜனை தூரம். அந்த மண்டபம் அழகாகவும் மலர் மணம் மிகுந்ததாகவும் இருந்தது. கும்பகர்ணனுடைய (புயற்காற்றுப் போன்ற) மூச்சுக்காற்றால், பலம் பொருந்திய அவர்கள், நிலைத்து நிற்க முடியாமல் ஆடி அலைக்கழிக்கப்பட்டார்கள். ஒருவாறு சமாளித்துக் கொண்டு, வெகுவாக முயற்சி செய்து மண்டபத்தினுள் (குகைக்குள்) போய்ச் சேர்ந்தார்கள். (24,25)

அழகானதும் பொன்னும் மணியும் இழைக்கப்பட்ட மேடைகளைக் கொண்டதுமான அந்த குகைக்குள் நுழைந்த புலிநிகர் அரக்கர்களான அவர்கள், பயங்கரமான பராக்கிரமமுடைய அவன் படுத்துக் கிடப்பதைக் கண்டார்கள். அவயவங்கள் அலங்கோலமான நிலையில் கிடக்க, ஒரு மலை சிதறிக் கிடந்தது போல் தனித்து உறங்கிக் கொண்டிருந்த அவனை, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து எழுப்ப முயன்றார்கள். (26,27)

எதிரிகளை அடக்க வல்ல கும்பகர்ணனின் உடலில் கேசங்கள் குத்திட்டு வளர்ந்திருந்தன; பாம்பைப் போல் நீளமான மூச்சுவிட்டுக் கொண்டிருந்தான்; வெளிவிடும் மூச்சொலியால் எல்லோரையும் நடுங்கச் செய்து கொண்டிருந்தான்; பயங்கரமான தோற்றம் படைத்த அவன் படுத்துக் கொண்டிருந்தான். நாசித் துவாரங்கள் பயங்கரமாக இருந்தன; பாதாளம் போல் ஆழ்ந்தகன்ற வாய்; படுக்கையில் எல்லா அங்கங்களும் படிந்திருந்தன; மாமிசம், ரத்தம் ஆகியவற்றின் துர்நாற்றம் அவனிடமிருந்து வெளிவந்து கொண்டிருந்தது; பொன்னாலான தோள்வளைகள் பூண்டிருந்தான்; தலையில் மகுடம் தரித்திருந்தான். புலிநிகர் அரக்கனை இந்த நிலையில் அவர்கள் பார்த்தார்கள். (28–30)

அப்போது, முன்யோசனையுடைய அவர்கள், கும்பகர்ணன் (கண்விழித்ததும் பரபரப்புடன் தின்று) மிகவும் திருப்தியடையும்வண்ணம், மேருமலை போல் மாமிசக் குவியலை, அவன் எதிரில் வைத்தார்கள். (31)

மான்கள், எருமைகள், பன்றிகள் ஆகியவற்றின் கூட்டங்களையும் அளவில்லாத சோற்றுக் குவியல்களையும், அவன் முன் வைத்தார்கள். (32)

தேவர்களின் பகைவர்களாகிய அவர்கள், கும்பகர்ணன் எதிரில் இரத்தம் நிறைந்த குடங்களையும், பற்பல மது வகைகளையும் வைத்தார்கள். (33)

எதிரிகளை வாட்டியெடுக்கும் அவன் மேல், உயர்ரக சந்தனத்தைப் பூசினார்கள்; நறுமணப் பொருள்களாலும் மணங்கமழும் திவ்ய மாலைகளாலும், அவனை மூடி அலங்கரித்தார்கள். அரக்கர்கள், மணம் மிகுந்த தூபத்தைக் காட்டினார்கள்; எதிரிகளை விரட்டியடிக்கும் அவனைத் தோத்திரம் செய்தார்கள்; நாற்புறமும் சூழ்ந்து நின்று மேகங்கள் போல் இடிமுழக்கம் செய்தார்கள். (34,35)

சந்திரனைப் போன்று பட்டொளி வீசும் சங்குகளை ஊதி முழக்கினார்கள். மேலும், (இவ்வளவு அமளியிலும் கும்பர்கர்ணன் கண் விழிக்காததால்) கோபம் கொண்ட அவர்கள், ஒரே நேரத்தில் மிகவும் உரத்த குரலில் கத்தினார்கள். (36)

அந்த அரக்கர்கள், கும்பகர்ணன் விழிப்பதற்காகக் கைகளைத் தட்டினார்கள்; சிங்கநாதம் செய்தார்கள்; (கும்பகர்ணனின் உடலில்) அடித்தார்கள்; பெருங்கூச்சலிட்டார்கள். (37)

ஸஶங்க2பே4ரீபணவப்ரணாத3மா–
ஸ்பே2ாடிதக்ஷ்வேலிதஸிம்ஹநாத3ம் ।
தி3ஶோ த்3ரவந்தஸ்த்ரிதி3வம் கிரந்த:
ஶ்ருத்வா விஹங்கா3: ஸஹஸா நிபேது: ॥ (38)

யதா3 ப்4ருஶம் தைர்நிநதை3ர்மஹாத்மா
ந கும்பக4ர்ணோ பு3பு3தே4 ப்ரஸுப்த: ।
ததோ பு4ஶுண்டீ3ர்முஸலாநி ஸர்வே
ரக்ஷோக3ணாஸ்தே ஜக்3ருஹுர்க3தா3ாஶ்ச ॥ (39)

தம் ஶைலஶ்ருங்கை3ர்முஸலைர்க3தா3பி4ர்–
வ்ருக்ஷைஸ்தலைர்முத்3க3ரமுஷ்டிபி4ஶ்ச ।
ஸுக2ப்ரஸுப்தம் பு4வி கும்பக4ர்ணம்
ரக்ஷாம்ஸ்யுத3க்3ராணி தத3ா நிஜக்4நு: ॥ (40)

தஸ்ய நி:ஶ்வாஸவாதேந கும்பக4ர்ணஸ்ய ரக்ஷஸ: ।
ராக்ஷஸா ப3லவந்தோऽபி ஸ்த2ாதும் நாஶக்நுவந் புர: ॥ (41)

தத: பரிஹிதா கா3ட4ம் ராக்ஷஸா பீ4மவிக்ரமா: ।
ம்ருத3ங்க3பணவாந் பே4ரீ: ஶங்க2கும்ப4க3ணாம்ஸ்தத3ா ॥
த3ஶராக்ஷஸஸாஹஸ்ரா யுக3பத் பர்யவாத3யந் ॥ (42)

நீலாஞ்ஜநசயாகாராஸ்தே து தம் ப்ரத்யபோ3த4யந் ।
அபி4க்4நந்தோ நத3ந்தஶ்ச நைவ ஸம்விவிதே3 து ஸ: ॥ (43)

யதா3 சைநம் ந ஶேகுஸ்தே ப்ரதிபோ3த4யிதும் தத3ா ।
ததோ கு3ருதரம் யத்நம் தா3ருணம் ஸமுபாக்ரமந் ॥ (44)

அஶ்வாநுஷ்ட்ராந் க2ராந்நாகா3ஞ்ஜக்4நுர்த3ண்ட3கஶாங்குஶை: ।
பே4ரீஶங்க2ம்ருத3ங்கா3ம்ஶ்ச ஸர்வப்ராணைரவாத3யந் ॥ (45)

நிஜக்4நுஶ்சாஸ்ய கா3த்ராணி மஹாகாஷ்ட2கடங்கரை: ।
முத்3க3ரைர்முஸலைஶ்சைவ ஸர்வப்ராணஸமுத்3யதை: ॥ (46)

தேந ஶப்3தே3ந மஹதா லங்கா ஸமபி4பூரிதா ।
ஸபர்வதவநா ஸர்வா ஸோऽபி நைவ ப்ரபு3த்4யதே ॥ (47)

தத: ஸஹஸ்ரம் பே4ரீணாம் யுக3பந் ஸமஹந்யத ।
ம்ருஷ்டகாஞ்சநகோணாநாமஸக்தாநாம் ஸமந்தத: ॥ (48)

ஏவமப்யதிநித்3ரஸ்து யதா3 நைவ ப்ரபு3த்4யதே ।
ஶாபஸ்ய வஶமாபந்நஸ்தத: க்ருத்3தா4 நிஶாசரா: ॥ (49)

மஹாக்ரோத4ஸமாவிஷ்டா: ஸர்வே பீ4மபராக்ரமா: ।
தத்3ரக்ஷோ போ3த4யிஷ்யந்தஶ்சக்ருரந்யே பராக்ரமம் ॥ (50)

சங்கு, பேரிகை, தம்பட்டம் முதலியவைகளை முழக்கினார்கள்; தத்தம் தோள்களைத் தட்டி, ஆடிக் குதித்து கர்ஜித்தார்கள்; இந்தக் களேபர சப்தத்தைக் கேட்ட பறவைகள், எல்லாத் திசைகளிலும் பறந்து சென்றும் வானத்தில் பறந்து சென்றும், அச்சம் நீங்காததால் பொத்தென்று பூமியில் விழுந்தன. (38)

இவ்வளவு பயங்கரமான சப்தங்கள் எழுப்பியும், பேருடல் படைத்த கும்பகர்ணன் கண் விழிக்காததால், அங்கிருந்த எல்லா அரக்கர்களும் புசுண்டி (என்ற ஆயுதத்தையும்), இரும்பு உலக்கைகள், கதைகள் ஆகியவற்றைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். (39)

தரையில் படுத்து நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த கும்பகர்ணனை, பயங்கரமான அந்த அரக்கர்கள், மலைமுகடுகளாலும் உலக்கைகளாலும் கதைகளாலும் தத்தம் உள்ளங்கைகளாலும் இரும்புத் தடிகளாலும் முஷ்டிகளாலும் நன்றாகப் புடைத்தார்கள். (40)

அந்த அரக்கர்கள் பலமிக்கவர்கள்தான் என்றாலும், கும்பகர்ணனுடைய மூச்சுக் காற்றின் வேகத்தைத் தாங்க முடியாமல், அவன் எதிரில் நிலைத்து நிற்க முடியாமல் தடுமாறிப் போனார்கள். (41)

அப்போது, பேராற்றல் கொண்ட அந்த அரக்கர்கள் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு, அவனைச் சூழ்ந்து நின்றார்கள். மிருதங்கம், தம்பட்டம், பேரிகை, சங்குகள், கடங்கள் முதலியவைகளை பத்தாயிரம் அரக்கர்கள் ஒரே சமயத்தில் முழக்கினார்கள். (42)

மை வண்ண மலை போன்ற நிறமும் உடலும் கொண்ட அவர்கள், அவனை எழுப்புவதற்காக இவ்வாறெல்லாம் பேரொலி எழுப்பியும் கர்ஜனைகள் செய்தும்கூட அவன் அவற்றை உணரவில்லை. (43)

இத்தனை முயற்சி செய்தும் அவனை எழுப்ப முடியாமற்போகவே, முன்னைக் காட்டிலும் பயங்கரமான முயற்சியைச் செய்யத் தொடங்கினார்கள். (44)

குதிரைகள், ஒட்டகங்கள், கழுதைகள், யானைகள் ஆகியவற்றை, தடி, சாட்டை, அங்குசம் போன்றவைகள் கொண்டு அடித்து (அவன் மேல்) ஓட்டினார்கள். பேரிகைகள், சங்குகள், மிருதங்கங்கள் முதலியவைகளையும் தங்கள் பலங்கொண்ட மட்டும் வேகமாக முழக்கினார்கள். (45)

அவனுடைய உடல் உறுப்புக்களைத் தங்கள் முழு பலத்தையும் கொண்டு, பெரிய பெரிய கட்டைகளலும் இரும்புத் தடிகளாலும் உலக்கைகளாலும் தாக்கினார்கள். (46)

அப்போது ஏற்பட்ட சகிக்க முடியாத பேரொலியால் மலைகளும் காடுகளும் அடங்கிய இலங்கைப் பட்டணம் எதிரொலித்தது. அப்படியும் அவன் எழுந்திருக்கவே இல்லை! (47)

அப்போது, பொன்னாலான தடிகளைக் கொண்டு ஆயிரம் பேரிகைகளை ஒரே காலத்தில், எல்லாப் பக்கங்களிலிருந்தும் தொடர்ந்து அடித்தார்கள். (48)

இவ்வளவு முயற்சி செய்தும், சாபத்தின் வசப்பட்டிருந்த அவன் கண்விழிக்காததால், அரக்கர்கள் மிகவும் ஆத்திரம் அடைந்தார்கள். (49)

பயங்கரமான ஆற்றல் படைத்த அவர்கள் எல்லோரும் மிகவும் கோபம் கொண்டவர்களாய், அவனை எழுப்புவதற்குப் பலவந்தமான வேறு வழிகளைப் பின்பற்றத் தொடங்கினார்கள். (50)

அந்யே பே4ரீ: ஸமாஜக்4நுரந்யே சக்ருர்மஹாஸ்வநம் ।
கேஶாநந்யே ப்ரலுலுபு: கர்ணாவந்யே த3ஶந்தி ச ॥ (51)

உத3கும்ப4ஶதாந்யந்யே ஸமஸிஞ்சந்த கர்ணயோ: ।
ந கும்ப4கர்ண: பஸ்பந்தே3 மஹாநித்3ராவஶம் க3த: ॥ (52)

அந்யே ச ப3லிநஸ்தஸ்ய கூடமுத்3க3ரபாணய: ।
மூர்த்4நி வக்ஷஸி கா3த்ரேஷு பாதயந் கூடமுத்3க3ராந் ॥ (53)

ரஜ்ஜுப3ந்த4நப3த்3தா4பி4: ஶதக்4நீபி4ஶ்ச ஸர்வத: ।
வத்4யமாநோ மஹாகாயோ ந ப்ராபு3த்4யத ராக்ஷஸ: ॥ (54)

வாரணாநாம் ஸஹஸ்ரம் து ஶரீரேऽஸ்ய ப்ரதா4விதம் ।
கும்ப4கர்ணஸ்ததோ பு3த்3த4: ஸ்பர்ஶம் பரமபு3த்4யத ॥ (55)

ஸ பாத்யமாநைர்கி3ரிஶ்ருங்க3வ்ருக்ஷை–
ரசிந்தயம்ஸ்தாந் விபுலாந் ப்ரஹாராந் ।
நித்3ராக்ஷயாத் க்ஷுத்3ப4யபீடி3தஶ்ச
விஜ்ரும்ப4மாண: ஸஹஸோத்பபாத ॥ (56)

ஸ நாக3போ4கா3சலஶ்ருங்க3கல்பௌ
விக்ஷிப்ய பா3ஹூ கி3ரிஶ்ருங்க3ஸாரௌ ।
விவ்ருத்ய வக்த்ரம் ப3ட3பா3முகா2ப4ம்
நிஶாசரோऽஸௌ விக்ருதம் ஜஜ்ரும்பே4 ॥ (57)

தஸ்ய ஜாஜ்ரும்ப4மாணஸ்ய வக்த்ரம் பாதாலஸந்நிப4ம் ।
த3த்3ருஶே மேருஶ்ருங்கா3க்3ரே தி3வாகர இவோதி3த: ॥ (58)

ஸ ஜ்ரும்ப4மாணோऽதிப3ல: ப்ரதிபு3த்3தோ4 நிஶாசர: ।
நி:ஶ்வாஸஶ்சாஸ்ய ஸம்ஜக்ஞே பர்வதாதி3வ மாருத: ॥ (59)

ரூபமுத்திஷ்ட2தஸ்தஸ்ய கும்ப4கர்ணஸ்ய தத்3ப3பௌ4 ।
தபாந்தே ஸப3லாகஸ்ய மேக4ஸ்யேவ விவர்ஷத: ॥ (60)

தஸ்ய தீ3ப்தாக்3நிஸத்3ருஶே வித்3யுத்ஸத்3ருஶவர்சஸீ ।
த3த்3ருஶாதே மஹாநேத்ரே தீ3ப்தாவிவ மஹாக்3ரஹௌ ॥ (61)

ததஸ்த்வத3ர்ஶயந் ஸர்வாந் ப4க்ஷ்யாம்ஶ்ச விவிதா4ந் ப3ஹூந் ।
வராஹாந் மஹிஷாம்ஶ்சைவ ஸ ப3ப4க்ஷ மஹாப3ல: ॥ (62)

அத3ந் பு3பு4க்ஷிதோ மாம்ஸம் ஶோணிதம் த்ருஷித: பிப3ந் ।
மேத3:கும்பா4ம்ஶ்ச மத்3யம் ச பபௌ ஶக்ரரிபுஸ்ததா3 ॥ (63)

ததஸ்த்ருப்த இதி க்ஞாத்வா ஸமுத்பேதுர்நிஶாசரா: ।
ஶிரோபி4ஶ்ச ப்ரணம்யைநம் ஸர்வத: பர்யவாரயந் ॥ (64)

சிலர் பேரிகைகளை முழக்கினார்கள்; சிலர் உச்சஸ்வரத்தில் குரலெழுப்பினார்கள்; மற்றும் சிலர், அவன் தலைமுடியைப் பிடித்திழுத்தார்கள்; வேறு சிலர், அவன் செவிகளைக் கடித்தார்கள். (51)

மற்றும் சிலர், அவனுடைய செவிகளில் நூறு குடம் தண்ணீர் ஊற்றினார்கள். அப்படியும், ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருந்த கும்பகர்ணன் அசைந்து கொடுக்கவேயில்லை. (52)

பலம் மிகுந்த சிலர், முட்கள் நிறைந்த இரும்பு உலக்கைகளால் அவனுடைய தலை–மார்பு–மற்ற அங்கங்களிலும் வேகமாகத் தாக்கினார்கள். பின்னர், கயிறுகளால் கட்டி இழுத்துக் கொண்டு வரப்பட்ட சதக்நீ என்னும் ஆயுதங்களால் அவனை அடித்துத் துன்புறுத்தியும்கூட பேருடல் கொண்ட அரக்கன் விழித்துக் கொள்ளவில்லை. (சதக்நீ என்பது, மதிற்சுவர்களைக் காப்பதற்காக விசேஷமாக வடிவமைக்கப்பட்ட இயந்திரம்.) (53,54)

ஆயிரம் யானைகளை அவன் மேல் ஓட விட்டார்கள். அப்போது சற்றே கண்விழித்த அவன், யாரோ தன்னைத் தடவிக் கொடுப்பதைப்போல் உணர்ந்தான். (55)

மலைச்சிகரங்களாலும், மரங்களாலும் பலமாகத் தாக்கப்பட்டதை அவன் உணரவேயில்லை. (யானைகள் தன் மேலே ஓடியதும்) ஒருவழியாகக் கண்விழித்த அவனுக்கு அகோரமான பசி உண்டாகவே, உடனே கொட்டாவிவிட்டுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். (56)

படம் எடுக்கும் பாம்பைப்போல் நீண்டவைகளும், மலைமுகட்டைப்போல் கடினமானவைகளும், மலைச்சிகரத்தின் வலிமை பெற்றவைகளுமான தன் இரு கைகளையும், வடவையின் முகம் போன்ற வாயையும் அகலமாக விரித்து அவலட்சணமாகக் கொட்டாவி விட்டான். (வடவை என்பது, சமுத்திரத்தின் அடியிலுள்ள ஒரு மாபெரும் பெண் குதிரையின் வடிவில் எப்போதும் கொழுந்துவிட்டெரியும் மிகவும் அகலமான நெருப்புக் குழி.) (57)

கொட்டாவி விடும்போது, பாதாளக் குகை போலிருந்த அவன் வாய், மேருமலையின் உச்சியில் தோன்றும் சூரியனைப்போல் பளபளவென்று பிரகாசமாகத் தோன்றியது. (58)

மகாபலசாலியான அவன், கொட்டாவிவிட்டுக் கொண்டே கண் விழித்தான். அப்போது அவனுடைய மூச்சுக் காற்று மலையிலிருந்து வீசும் பேய்க்காற்றுப் போல் வீசியது. (59)

அவன் எழுந்து உட்கார்ந்ததும், கோடை முடிந்து மழைக்காலம் வந்ததும் (அவன் அணிந்திருந்த அணிகலன்களால்) கொக்குகள் சூழப் பெற்று, மழை பொழியும் கருத்த மேகம் போல், அவனுடைய சரீரம் தோற்றமளித்தது. (60)

கொழுந்துவிட்டெரியும் அக்னியைப் போன்றும், (அப்போதுதான் விழித்துக் கொண்டதால், சஞ்சலமான இயல்புடைய) மின்னலைப் போல் ஒளி வீசிக் கொண்டும், இரண்டு பெரும் கோள்களைப் போன்றும் (சனி, அங்காரகன் போன்றும்), அவனுடைய பெரிய கண்கள் தோன்றின. (61)

பின்னர், பலவகைப்பட்ட ஏராளமான உணவுப் பண்டங்களை அரக்கர்கள் அவனுக்குக் காட்டினார்கள். அவைகளையும் மற்றும் பன்றி–எருமைகளையும் பெரும் பலசாலியான அவன் தின்று தீர்த்தான். (62)

இந்திரனின் பகைவனான அவன், மிகவும் பசியோடிருந்ததால் ஏராளமான மாமிசங்களை உண்ட பின், தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக இரத்தத்தையும் குடித்தான். பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்த கொழுப்பு, மதுவகை ஆகியவைகளையும் குடித்து முடித்தான். (63)

பசி நீங்கி, அவன் மனநிறைவுடன் இருப்பதைக் கண்டு, அரக்கர்கள் அவனருகில் வந்து தலைவணங்கி, சுற்றிலும் சூழ்ந்து நின்றார்கள். (64)

நித்$_3$ராவிஶத$_3$நேத்ரஸ்து கலுஷீக்ருதலோசந: ।
சாரயந் ஸர்வதோ த்$_3$ருஷ்டிம் தாந் த$_3$த$_3$ர்ஶ நிஶாசராந் ॥ (65)

ஸ ஸர்வாந் ஸாந்த்வயாமாஸ நைர்ருதாந்நைர்ருதர்ஷப$_4$: ।
போ$_3$த$_4$நாத்$_3$விஸ்மிதஶ்சாபி ராக்ஷஸாநித$_3$மப்$_3$ரவீத் ॥ (66)

கிமர்த$_2$மஹமாத்$_3$ருத்ய ப$_4$வத்$_3$பி$_4$: ப்ரதிபோ$_3$தி$_4$த: ।
கச்சித் ஸுகுஶலம் ராஜ்ஞோ ப$_4$யம் வா நேஹ கிஞ்சந ॥ (67)

அத$_2$வா த்$_4$ருவமந்யேப்$_4$யோ ப$_4$யம் பரமுபஸ்தி$_2$தம் ।
யதா$_3$ர்த$_2$மேவம் த்வரிதைர்ப$_4$வத்$_3$பி$_4$: ப்ரதிபோ$_3$தி$_4$த: ॥ (68)

அத்$_3$ய ராக்ஷஸராஜஸ்ய ப$_4$யமுத்பாடயாம்யஹம் ।
பாதயிஷ்யே மஹேந்த்$_3$ரம் வா ஶீதயிஷ்யே ததா$_2$நலம் ॥ (69)

ந ஹ்யல்பகாரணே ஸுப்தம் போ$_3$த$_4$யிஷ்யதி மாம் கு$_3$ரு: ।
ததா$_3$க்$_2$யாதார்த$_2$தத்த்வேந மத்ப்ரபோ$_3$த$_4$நகாரணம் ॥ (70)

ஏவம் ப்$_3$ருவாணம் ஸம்ரப்$_3$த$_4$ம் கும்ப$_4$கர்ணம் மஹாப$_3$லம் ।
யூபாக்ஷ: ஸசிவோ ராஜ்ஞ: க்ருதாஞ்சலிருவாச ஹ ॥ (71)

ந நோ தை$_3$வக்ருதம் கிஞ்சித்$_3$ப$_4$யமஸ்தி கதா$_3$சந ।
மாநுஷாந்நோ ப$_4$யம் ராஜந்ஸ்துமுலம் ஸம்ப்ரபா$_3$த$_4$தே ॥ (72)

ந தை$_3$த்யதா$_3$நவேப்$_4$யோ வா ப$_4$யமஸ்தி ஹி தாத்$_3$ருஶம் ।
யாத்$_3$ருஶம் மாநுஷம் ராஜந் ப$_4$யமஸ்மாநுபஸ்தி$_2$தம் ॥ (73)

வாநரை: பர்வதாகாரைர்லங்கேயம் பரிவாரிதா ।
ஸீதாஹரணஸந்தப்தாத்$_3$ராமாந்நஸ்துமுலம் ப$_4$யம் ॥ (74)

ஏகேந வாநரேணேயம் பூர்வம் த$_3$க்$_3$தா$_4$ மஹாபுரீ ।
குமாரோ நிஹதஶ்சாக்ஷ: ஸாநுயாத்ர: ஸகுஞ்ஜர: ॥ (75)

ஸ்வயம் ரக்ஷோऽதி$_4$பஶ்சாபி பௌலஸ்த்யோ தே$_3$வகண்டக: ।
வ்ரஜேதி ஸம்யுகே$_3$ முக்தோ ராமேணாதி$_3$த்யதேஜஸா ॥ (76)

யந்ந தே$_3$வை: க்ருதோ ராஜா நாபி தை$_3$த்யைர்ந தா$_3$நவை: ।
க்ருத: ஸ இஹ ராமேண விமுக்த: ப்ராணஸம்ஶயாத் ॥ (77)

ஸ யூபாக்ஷவச: ஶ்ருத்வா ப்$_4$ராதுர்யுதி$_4$ பராஜயம் ।
கும்ப$_4$கர்ணோ விவ்ருத்தாக்ஷோ யூபாக்ஷமித$_3$ப்$_3$ரவீத் ॥ (78)

தூக்கம் முற்றிலுமாகத் கலையாததால், அவனுடைய கண்கள் அரைகுறையாய் திறக்கப்பட்டு, கலக்கத்துடன் இருந்த நிலையில், தன்னைச் சுற்றிலும் அரக்கர்கள் நிற்பதைக் கண்டான். அரக்கக் காளையான அவன், (தூக்கத்தைக் கலைத்ததால் என்ன தண்டனை கொடுப்பானோ? என்று பயந்து கொண்டிருந்த,) அந்த அரக்கர்களை அமைதிப்படுத்தினான். தன்னை அகாலத்தில் எழுப்பியதால் ஆச்சரியமடைந்த அவன், அரக்கர்களைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டான்— (65,66)

''என்னை ஏன் இவ்வளவு சிரமப்பட்டு எழுப்பினீர்கள்? மன்னர் நலமுடன் இருக்கிறாரா? இப்போது எவ்வித அபாயமும் உண்டாகிவிடவில்லை அல்லவா? (இராவணனை எதிர்த்து நம்மவர்களில் எவரும் போர்க் கொடி உயர்த்தியிருக்க முடியாது. அவருக்கு உடல் நலமில்லை என்றால் இத்தனை நேரம் தயங்காமல் அதைக் கூறியிருப்பீர்கள். எனவே,) பிறர் யாரிடமிருந்தோ ஆபத்துத் தோன்றியிருக்கிறது என்பது திண்ணம். (அந்த ஆபத்தை ஒழிப்பதற்காகவே,) இவ்வளவு களேபரம் செய்து என்னை எழுப்பியிருக்கிறீர்கள். (67,68)

அரக்க மன்னனுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை உடனே, வேரோடு பிடுங்கி எறிந்துவிடுவேன். (அச்சத்திற்குக் காரணமாக இருப்பவன் யாராக இருந்தாலும் சரி.) இந்திரன் என்றால், அவனை வீழ்த்திவிடுவேன்; அல்லது அக்னி என்றால் அவனைச் சில்லிடச் செய்வேன். (இப்படிப்பட்ட தேவர்களைத் தவிர, சிற்றுயிர்களான மனிதர் முதலிய பிராணிகளால் பேராபத்து உண்டாகக்கூடும் என்பதை கும்பகர்ணனும் எதிர்பார்க்கவில்லை.) (69)

என்னுடைய தமையனார், அற்ப–சொற்ப காரணங்களுக்காக என்னை எழுப்பியிருக்க மாட்டார். என்னை எழுப்பியதற்கானக் காரணத்தைத் தெள்ளத்தெளிவாகக் கூறுங்கள்.'' (70)

இவ்வாறு எதிரிகளை மாய்ப்பவனும் தற்போது கலவரத்துடன் இருப்பவனுமான கும்பகர்ணன் கூறியதைக் கேட்டு, மன்னனின் அமைச்சனான யூபாக்ஷன் என்பவன் பணிவுடன் கைகளைக் கூப்பிக் கொண்டு, பின்வருமாறு கூறினான்— (71)

''மன்னரே! நமக்கு தேவதைகளிடமிருந்து ஒருபோதும் சிறிதளவும் ஆபத்து என்பதே இல்லை. (நாம்தான் அவர்களையெல்லாம் அடங்கி வைத்திருக்கிறோமே!) இப்போது, ஒரு மனிதனிடமிருந்து நமக்குப் பேராபத்து ஏற்பட்டுத் துன்புறுத்துகிறது. வேந்தரே! இப்போது ஒரு மனிதனிடமிருந்து எவ்வளவு பயங்கரமான தொல்லை ஏற்பட்டிருக்கிறதோ, அவ்வளவு பயங்கரமான ஆபத்து தேவ–அசுரர்களிடமிருந்துகூட உண்டானதில்லை. (72,73)

மலை போன்று பேருடல் கொண்ட வானரர்கள் இலங்கை நகரைச் சூழ்ந்து நிற்கிறார்கள். ('அட! வெறும் காட்டுப் பிராணிகள் தானே!' என்று அலட்சியப்படுத்திவிட வேண்டாம்.) (இராவணன்) சீதையைக் கவர்ந்து வந்த காரணத்தால், மிகவும் கொதித்துக் கொண்டிருக்கும் இராமனிடமிருந்து எதிர்கொள்ள முடியாத பேராபத்து நமக்கு வந்திருக்கிறது. (74)

முன்பு, ஒரே ஒரு வானரம் இங்கு வந்தது. மாபெரும் பட்டணத்தைத் தீயால் பொசுக்கிவிட்டுச் சென்றது. அப்போது, அதனுடன் போர் புரியச் சென்ற அட்சகுமாரனை, அவனது பரிவாரங்களுடனும் யானைகளுடனும் கொன்றுவிட்டுச் சென்றது. இராமன், சூரியனுக்கு நிகரான தேசு கொண்டவர். புலஸ்திய வம்சத் தோன்றலும் அமரர் எதிரியுமான அரக்க மன்னரை போரில் கொல்லாமல் விடுத்து, 'இலங்கைக்குப் போய் ஓய்வெடுத்துக் கொண்டு வா' என்று விடைகொடுத்து அனுப்பினார். (75,76)

தேவர்களாலோ அசுரர்களாலோ தானவர்களாலோ, இப்படிப்பட்ட பரிதாபமான நிலை நம்முடைய மன்னருக்கு ஏற்பட்டதில்லை. அந்த மன்னர் போர்க்களத்தில் உயிர் ஊசலாடும் நிலையில் இராமனால் விடைகொடுத்து அனுப்பி வைக்கப்பட்டார்.'' (77)

போரில் தமையன் தோல்வியடைந்தார் என்ற செய்தியை யூபாக்ஷனிடமிருந்து தெரிந்து கொண்ட கும்பகர்ணன், தன் கண்களை உருட்டிச் சுழற்றி, யூபாக்ஷனைப் பார்த்துச் சொன்னான்— (78)

ஸர்வமத்$_3$யைவ யூபாக்ஷ ஹரிஸைந்யம் ஸலக்ஷ்மணம் ।
ராக$_4$வம் ச ரணே ஹத்வா பஶ்சாத்$_3$த்$_3$ரக்ஷ்யாமி ராவணம் ॥ (79)

ராக்ஷஸாம்ஸ்தர்பயிஷ்யாமி ஹரீணாம் மாம்ஸஶோணிதை: ।
ராமலக்ஷ்மணயோஶ்சாபி ஸ்வயம் பாஸ்யாமி ஶோணிதம் ॥ (80)

தத்தஸ்ய வாக்யம் ப்$_3$ருவதோ நிஶம்ய
ஸக$_3$ர்விதம் ரோஷவிவ்ருத்$_3$த$_4$தோ$_3$ஷம் ।
மஹோத$_3$ரோ நைர்ருதயோத$_4$முக்$_2$ய:
க்ருதாஞ்ஜலிர்வாக்யமித$_3$ம் ப$_3$பா$_4$ஷே ॥ (81)

ராவணஸ்ய வச: ஶ்ருத்வா கு$_3$ணதோ$_3$ஷௌ விம்ருஶ்ய ச ।
பஶ்சாத$_3$பி மஹாபா$_3$ஹோ ஶத்ரூந் யுதி$_4$ விஜேஷ்யஸி ॥ (82)

மஹோத$_3$ரவச: ஶ்ருத்வா ராக்ஷஸை: பரிவாரித: ।
கும்ப$_4$கர்ணோ மஹாதேஜா: ஸம்ப்ரதஸ்தே$_2$ மஹாப$_3$ல: ॥ (83)

தம் ஸமுத்தா$_2$ப்ய பீ$_4$மாக்ஷம் பீ$_4$மரூபபராக்ரமம் ।
ராக்ஷஸாஸ்த்வரிதா ஜக்$_3$முர்த$_3$ஶக்$_3$ரீவநிவேஶநம் ॥ (84)

ததோ க$_3$த்வா த$_3$ஶக்$_3$ரீவமாஸீநம் பரமாஸநே ।
ஊசுர்ப$_3$த்$_3$தா$_4$ஞ்ஜலிபுடா: ஸர்வ ஏவ நிஶாசரா: ॥ (85)

ப்ரபு$_3$த்$_3$த$_4$: கும்ப$_4$கர்ணோऽயம் ப்$_4$ராதா தே ராக்ஷஸர்ஷப$_4$ ।
கத$_2$ம் தத்ரைவ நிர்யாது த்$_3$ரக்ஷ்யஸ்யேநமிஹாக$_3$தம் ॥ (86)

ராவணஸ்த்வப்$_3$ரவீத்த்$_4$ருஷ்டோ ராக்ஷஸாம்ஸ்தாநுபஸ்தி$_2$தாந் ।
த்$_3$ரஷ்டுமேநமிஹேச்சா$_2$மி யதா$_2$ந்யாயம் ச பூஜ்யதாம் ॥ (87)

ததே$_2$த்யுக்த்வா து தே ஸர்வே புநராக$_3$ம்ய ராக்ஷஸா: ।
கும்ப$_4$கர்ணமித$_3$ம் வாக்யமூசூ ராவணசோதி$_3$தா: ॥ (88)

த்$_3$ரஷ்டும் த்வாம் காங்க்ஷதே ராஜா ஸர்வராக்ஷஸபுங்க$_3$வ: ।
க$_3$மநே க்ரியதாம் பு$_3$த்$_3$தி$_4$ர்ப்$_4$ராதரம் ஸம்ப்ரஹர்ஷய ॥ (89)

கும்ப$_4$கர்ணஸ்து து$_3$ர்த$_4$ர்ஷோ ப்$_4$ராதுராஜ்ஞாய ஶாஸநம் ।
ததே$_2$த்யுக்த்வா மஹாபா$_3$ஹு: ஶயநாது$_3$த்பபாத ஹ ॥ (90)

ப்ரக்ஷால்ய வத$_3$நம் ஹ்ருஷ்ட: ஸ்நாத: பரமபூ$_4$ஷித: ।
பிபாஸுஸ்த்வரயாமாஸ பாநம் ப$_3$லஸமீரணம் ॥ (91)

ததஸ்தே த்வரிதாஸ்தஸ்ய ராக்ஷஸா ராவணாஜ்ஞயா ।
மத்$_3$யகும்பா$_4$ம்ஶ்ச விவிதா$_4$ந் க்ஷிப்ரமேவோபஹாரயந் ॥ (92)

பீத்வா க$_4$டஸஹஸ்ரே த்$_3$வே க$_3$மநாயோபசக்ரமே ।
ஈஷத்ஸமுத்கடோ மத்தஸ்தேஜோப$_3$லஸமந்வித: ॥ (93)

''யூபாக்ஷனே! நான் இப்போதே (இங்கிருந்தே) சென்று, எல்லா வானரப்படைகளையும் இராம–லட்சுமணர்களையும் போரில் கொன்றுவிட்டு, பின்னர் இராவணனைப் பார்க்கிறேன். (79)

வானரர்களுடைய உடல் மாமிசத்தாலும் இரத்தத்தாலும் அரக்கர்களைத் திருப்தி செய்விப்பேன். (அவர்கள் வேண்டிய மட்டும் மாமிசத்தைப் புசித்து, இரத்தத்தைக் குடித்து மனநிறைவடைவார்கள்.) இராம–லட்சுமணர்களுடைய இரத்தத்தை நானே குடிப்பேன்!'' (80)

அரக்கர் படைத்தலைவனான மகோதரன் என்பவன், செருக்கோடும் கோபத்தால் தடுமாறும் உள்ளத்தில் தோன்றிய தவறான முடிவுடனும் அவன் பேசியதைக் கேட்டு, வணக்கத்துடன் கைகளைக் கூப்பிட்டுக் கொண்டு, பின்வருமாறு சொன்னான்— (81)

''தோள்வலி மிக்கவரே! முதலில், இராவணனைப் பார்த்து, குறை–நிறைகளை அலசி ஆராய்ந்து, அவர் உத்தரவைக் கேட்டு, பின்னர், எதிரிகளைப் போரில் வெற்றி கொள்வீராக.'' (82)

மகோதரனுடைய சொல்லைக் கேட்டதும், (அவன் சொன்னது சரி என்று மனத்தில் படவே,) உடல் வலிமையும் போராற்றலும் படைத்த கும்பகர்ணன், அரக்கர்கள் புடைசூழ, இராவணனைச் சந்திக்கச் செல்வதற்கு ஆயத்தமானான். (83)

பயங்கரமான கண்களும் உருவமும் கொண்ட ஆண்மைமிக்க கும்பகர்ணனை, ஒருவாறாக கண்விழிக்கச் செய்து, அங்கிருந்த அரக்கர்கள், வெகுவிரைவாக இராவணனுடைய இருப்பிடத்திற்குச் சென்றார்கள். அவர்கள் சென்று, அரியணையில் வீற்றிருந்த இராவணனை நோக்கி, வணக்கத்துடன் கைகூப்பியவர்களாக, (கும்பகர்ணன் மாளிகையில் நடந்த) எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார்கள். (அந்தச் சமயத்தில், கும்பகர்ணன் அவர்களுடன் இல்லை என்பதை உய்துணர்க.) (84,85)

''அரக்கர்களின் மாபெரும் தலைவரே! தங்கள் சகோதரர் கும்பகர்ணன் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டுவிட்டார். அவர் அங்கிருந்து போர்க்களத்திற்குச் செல்லட்டுமா? அல்லது அவரை இங்கே வரச்செய்து ஆணையிடப் போகிறீர்களா? தங்கள் திருவுள்ளம் எப்படியோ?'' (86)

(கும்பகர்ணன் விழித்துக் கொண்டுவிட்டான் என்ற நற்செய்தியைக் கேட்ட அளவில்,) மனக்களிப்புற்ற இராவணன், அங்கு கூடியிருந்த அரக்கர்களைப் பார்த்து, ''அவனை இங்கே காண விரும்புகிறேன். தக்கபடி அவனை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறினான். (87)

இராவணன் கூறியதைக் கேட்ட அந்த அரக்கர்கள் எல்லோரும், ''அவ்வாறே செய்கிறோம்'' என்று கூறிவிட்டு, கும்பகர்ணனிடம் வந்து பின்வருமாறு கூறினார்கள்— (88)

''அரக்கர் அனைவரிலும் தலைசிறந்தவரான மன்னர், தங்களை நேரில் காண விரும்புகிறார். அவ்விடம் போவதற்கு நிச்சயம் செய்வீர்களாக. (தங்களைக் கண்டால்) தங்கள் சகோதரர் மிகவும் மகிழ்ச்சி அடைவார்.'' (89)

எவராலும் வெற்றி கொள்ள முடியாத வீரனான கும்பகர்ணன், சகோதரனின் ஆணையை ஏற்று, ''அவ்வாறே ஆகட்டும்'' என்று கூறி, விருட்டென்று படுக்கையைவிட்டு எழுந்து நின்றான். உற்சாகம் கொண்ட அவன், நீரால் வாயை சுத்தம் செய்து கொண்டான்; நீராடினான்; அணிகலன்களை அணிந்து கொண்டான். நீர்வேட்கை கொண்ட அவன், உடல் வலிமையை அதிகரிக்கச் செய்யும் பானங்களைக் கொண்டு வரும்படி (வேலைக்காரர்களைத்) துரிதப்படுத்தினான். (90,91)

இராவணனுடைய ஆணை(யின்படி கும்பகர்ணன் செல்கிறான்) என்பதால் பரபரப்படைந்த அரக்கர்கள், பலவகையான மதுக்கள் நிறைந்த குடங்களை விரைவாகக் கொண்டு வந்து கொடுத்தார்கள். (92)

இரண்டாயிரம் குடங்கள் மதுவைக் குடித்ததும், திமிர்த்து, சிறிது ஆணவம் கொண்டு, பேராற்றலும் உடல்பலமும் மிக்க அவன், புறப்படுவதற்குச் சித்தமானான். (93)

கும்ப$_4$கர்ணோ ப$_3$பெ$_4$ள ஹ்ருஷ்ட: காலாந்தகயமோபம: ।
ப்$_4$ராது: ஸ ப$_4$வநம் க$_3$ச்ச$_2$ந் ரக்ஷோக$_3$ணஸமந்வித: ॥
கும்ப$_4$கர்ண: பத$_3$ந்யாஸைரகம்பயத மேதி$_3$நீம் ॥ (94)

ஸ ராஜமார்க$_3$ம் வபுஷா ப்ரகாஶயந் ஸஹஸ்ரரஶ்மிர்த$_4$ரணீமிவாம்ஶுபி$_4$: ।
ஜக$_3$ாம தத்ராஞ்ஜலிமாலயா வ்ருத: ஶதக்ரதுர்கே$_3$ஹமிவ ஸ்வயம்பு$_4$வ: ॥ (95)

தம் ராஜமார்க$_3$ஸ்த$_2$மமித்ரக$_4$ாதிநம்
வநௌகஸஸ்தே ஸஹஸா ப$_3$ஹி: ஸ்தி$_2$தா: ।
த்$_3$ருஷ்ட்வாப்ரமேயம் கி$_3$ரிஶ்ருங்க$_3$கல்பம்
விதத்ரஸுஸ்தே ஹரியூத$_2$பாலா: ॥ (96)

கேசிச்ச$_2$ரண்யம் ஶரணம் ஸ்ம ராமம்
வ்ரஜந்தி கேசித்$_3$வ்யதி$_2$தா: பதந்தி ।
கேசித்$_3$தி$_3$ஶ: ஸ்ம வ்யதி$_2$தா: ப்ரயாந்தி
கேசித்$_3$ப$_4$யார்தா பு$_4$வி ஶேரதே ஸ்ம ॥ (97)

தமத்$_3$ரிஶ்ருங்க$_3$ப்ரதிமம் கிரீடிநம்
ஸ்ப்ருஶந்தமாதி$_3$த்யமிவாத்மதேஜஸா ।
வநௌகஸ: ப்ரேக்ஷ்ய விவ்ருத்$_3$த$_4$மத்$_3$பு$_4$தம்
ப$_4$யார்தி$_3$தா து$_3$த்$_3$ருவிரே ததஸ்தத: ॥ (98)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஏகஷஷ்டிதம: ஸர்க$_3$:

கும்ப$_4$கர்ணவ்ருத்தகத$_2$நம்

ததோ ராமோ மஹாதேஜா த$_4$நுராதா$_3$ய வீர்யவாந் ।
கிரீடிநம் மஹாகாயம் கும்ப$_4$கர்ணம் த$_3$த$_3$ர்ஶ ஹ ॥ (1)

தம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$ம் பர்வதாகாரத$_3$ர்ஶநம் ।
க்ரமமாணமிவாகாஶம் புரா நாராயணம் ப்ரபு$_4$ம் ॥ (2)

ஸதோயாம்பு$_3$த$_3$ஸங்காஶம் காஞ்சநாங்க$_3$த$_3$பூ$_4$ஷணம் ।
த்$_3$ருஷ்ட்வா புந: ப்ரது$_3$த்$_3$ராவ வாநராணாம் மஹாசமூ: ॥ (3)

வித்$_3$ருதாம் வாஹிநீம் த்$_3$ருஷ்ட்வா வர்த$_4$மாநம் ச ராக்ஷஸம் ।
ஸவிஸ்மயமித$_3$ம் ராமோ விபீ$_4$ஷணமுவாச ஹ ॥ (4)

கோऽஸௌ பர்வதஸங்காஶ: கிரீடீ ஹரிலோசந: ।
லங்காயாம் த்$_3$ருஶ்யதே வீர ஸவித்$_3$யுதி$_3$வ தோயத$_3$: ॥ (5)

ஊழிக்கால யமனைப் போன்ற கும்பகர்ணன், அரக்கர்கள் புடைசூழ சகோதரனின் மாளிகை நோக்கிச் செல்லும்போது (யுத்தம் வரப்போகிறது என்பதால்) மனமகிழ்ந்தான். கும்பகர்ணன் கால்களை வைத்த அழுத்தத்தைத் தாங்காமல் பூமி நடுங்கிற்று. (94)

ஆயிரக்கணக்கான கிரணங்களைக் கொண்ட சூரியன், தன் கிரணங்களால் பூதலத்தைப் பிரகாசப்படுத்துவதைப் போல், தன் உடல் எழிலால் அரசபாட்டையை ஒளி பெறச் செய்து கொண்டு, தெருவோரங்களில் நீள் வரிசையாக நின்று கொண்டிருந்த நகர மக்களின் கைகுவிப்பு, நீண்ட மாலை போல் விளங்க, தேவேந்திரன் நான்முகக் கடவுளின் முன் செல்வதைப்போல, பக்தியும் பணிவும் இணைந்து தோன்றியதுபோல (கும்பகர்ணன்) சென்றான். (95)

இணையில்லாத ஆற்றலுடையவனும், பகைவரை ஒழித்துக் கட்டுபவனும், மலைமுகட்டைப் போல் பேருருவம் கொண்டவனும், அரசபாட்டையில் சென்று கொண்டிருந்தவனுமான அவனைப் பார்த்து, நகரத்தின் வெளிப்புறத்தில் திரிந்து கொண்டிருந்த வானரர்களும் வானரத் தலைவர்களும் பயந்தோடினார்கள். (96)

சில வாரனரர்கள், புகல் அடையத்தக்க இராமனைச் சரணடைந்தார்கள்; சிலர், மனம் கலங்கிக் கீழே விழுந்தார்கள்; சிலர், செய்வதறியாமல் எல்லாத் திசைகளிலும் ஓடினார்கள்; சிலர், பயந்து நடுங்கித் தரையில் சாய்ந்தார்கள். (97)

மலையின் கொடுமுடியைப் போன்றவன்; கிரீடம் புனைந்தவன்; தன் ஆத்ம ஒளியால் சூரிய மண்டலத்தைத் தொடுவது போன்றவன்; ஆச்சரியமான பேருடல் படைத்தவன் – இப்படிப்பட்ட அவனை (கும்பகர்ணனை)க் கண்டு உதறலெடுத்த வானரர்கள் இங்குமங்குமாக ஓடிச் சென்றார்கள். (98)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்று

வீடணன், கும்பகர்ணனைப் பற்றி இராமனிடம் விளக்குதல்!

அப்போது, மகாதேஜஸ்வியான இராமன் கையில் வில்லை எடுத்துக் கொண்டு, தலையில் மகுடம் அணிந்தவனும் பேருடல் கொண்டவனுமான கும்பகர்ணனைப் பார்த்தார். (1)

மலையைப் போல் தோற்றமுடையவனும், முன்னர் (திரிவிக்ரம அவதார காலத்தில்) ஆகாயத்தை ஓரடியால் அளந்த பகவான் நாராயணனைப் போன்றிருப்பவனும் (பயங்கரமாக அடியெடுத்து நடந்து வருபவனும்), நீருண்ட மேகம்போல் கருவண்ணத்துடன் ஒளிவீசுபவனும், பொன்னாலான தோள்வளைகள் அணிந்தவனுமான அந்த அரக்கப் பெருந்தகையைப் பார்த்துப் பார்த்து, வானரப் பெரும்படை நாலாபக்கங்களிலும் சிதறியோடிற்று. (2,3)

வானரப் படை மிரண்டோடுவதையும், அரக்கன் (கும்பகர்ணன்) முன்னேறி வருவதையும் கண்டு ஆச்சரியமடைந்த இராமன், விபீஷணனைப் பார்த்துக் கேட்டார்— (4)

''வீரனே! மலை போன்ற உருவம்; தலையில் கிரீடம்; கபிலநிறக் கண்கள்; மின்னல்களுடன் கூடிய மேகம் போன்ற தோற்றமுடைய ஒருவன் இலங்கையில் காணப்படுகிறானே, அவன் யார்? (5)

ப்ருதி₂வ்யா: கேதுபூ₄தோऽஸௌ மஹாநேகோऽத்ர த்₃ருஶ்யதே ।
யம் த்₃ருஷ்ட்வா வாநரா: ஸர்வே வித்₃ரவந்தி ததஸ்தத: ॥ (6)

ஆசக்ஷ்வ மே மஹாந் கோऽஸௌ ரக்ஷோ வா யதி₃ வாஸுர: ।
ந மயைவம்வித₄ம் பூ₄தம் த்₃ருஷ்டபூர்வம் கதா₃சந ॥ (7)

ஸ ப்ருஷ்டோ ராஜபுத்ரேண ராமேணாக்லிஷ்டகர்மணா ।
விபீ₄ஷணோ மஹாப்ராக்ஞ: காகுத்ஸ்த₂மித₃மப்₃ரவீத் ॥ (8)

யேந வைவஸ்வதோ யுத்₃தே₄ வாஸவஶ்ச பராஜித: ।
ஸைஷ விஶ்ரவஸ: புத்ர: கும்ப₄கர்ண: ப்ரதாபவாந் ॥
அஸ்ய ப்ரமாணாத்ஸத்₃ருஶோ ராக்ஷஸோऽந்யோ ந வித்₃யதே ॥ (9)

ஏதேந தே₃வா யுதி₄ தா₃நவாஶ்ச யக்ஷா பு₄ஜங்கா₃: பிஶிதாஶநாஶ்ச ।
க₃ந்த₄ர்வவித்₃யாத₄ரகிந்நராஶ்ச ஸஹஸ்ரஶோ ராக₄வ ஸம்ப்ரப₄க்₃நா: ॥ (10)

ஶூலபாணிம் விரூபாக்ஷம் கும்ப₄கர்ணம் மஹாப₃லம் ।
ஹந்தும் ந ஶேகுஸ்த்ரித₃ஶா: காலோऽயமிதி மோஹிதா: ॥ (11)

ப்ரக்ருத்யா ஹ்யேஷ தேஜஸ்வீ கும்ப₄கர்ணோ மஹாப₃ல: ।
அந்யேஷாம் ராக்ஷஸேந்த்₃ராணாம் வரதா₃நக்ருதம் ப₃லம் ॥ (12)

ஏதேந ஜாதமாத்ரேண க்ஷுதா₄ர்தேந மஹாத்மநா ।
ப₄க்ஷிதாநி ஸஹஸ்ராணி ஸத்த்வாநாம் ஸுப₃ஹூந்யபி ॥ (13)

தேஷு ஸம்ப₄க்ஷ்யமாணேஷு ப்ரஜா ப₄யநீபீடி₃தா: ।
யாந்தி ஸ்ம ஶரணம் ஶக்ரம் தமப்யர்த₂ம் ந்யவேத₃யந் ॥ (14)

ஸ கும்ப₄கர்ணம் குபிதோ மஹேந்த்₃ரோ ஜகா₄ந வஜ்ரேண ஶிதேந வஜ்ரீ ।
ஸ ஶக்ரவஜ்ராபி₄ஹதோ மஹாத்மா சசால கோபாச்ச ப்₄ருஶம் நநாத₃ ॥ (15)

தஸ்ய நாநத்₃யமாநஸ்ய கும்ப₄கர்ணஸ்ய தீ₄மத: ।
ஶ்ருத்வாதிநாத₃ம் வித்ரஸ்தா பூ₄யோ பூ₄மிர்விதத்ரஸே ॥ (16)

தத்ர கோபாந்மஹேந்த்₃ரஸ்ய கும்பகர்ணோ மஹாப₃ல: ।
விக்ருஷ்யைராவதாத்₃த₃ந்தம் ஜகா₄நோரஸி வாஸவம் ॥ (17)

கும்ப₄கர்ணப்ரஹாரார்தோ விஜஜ்வால ஸ வாஸவ: ।
ததோ விஷேது₃: ஸஹஸா தே₃வப்₃ரஹ்மர்ஷிதா₃நவா: ॥ (18)

ப்ரஜாபி₄: ஸஹ ஶக்ரஶ்ச யயௌ ஸ்தா₂நம் ஸ்வயம்பு₄வ: ।
கும்ப₄கர்ணஸ்ய தௌ₃ராத்ம்யம் ஶஶம்ஸுஸ்தே ப்ரஜாபதே: ॥ (19)

ப்ரஜாநாம் ப₄க்ஷணம் சாபி தே₃வாநாம் சாபி த₄ர்ஷணம் ।
ஆஶ்ரமத்₄வம்ஸநம் சாபி பரஸ்த்ரீஹரணம் ப்₄ருஶம் ॥ (20)

இம்மண்ணுலகில் தனிப்பெரும் பெருமை படைத்தவனாய், உயர்ந்து நிற்கும் கொடி மரத்தைப் போல் விளங்கும் ஒருவன் காணப்படுகிறான். அவனைக் கண்டு வானரர்கள் இங்குமங்கும் பதறி ஓடுகிறார்கள். (6)

விபீஷணா! தனிச்சிறப்புடன் தோன்றும் இவன் அரக்கனா? அல்லது அசுரனா? என்பதை எனக்குக் கூறு. இப்படிப்பட்ட ஒரு பிராணியை நான் இதற்கு முன்னர் பார்த்ததேயில்லை!'' (7)

கடினமான செயல்களையும் எளிதில் செய்து முடிக்கும் திறன் படைத்தவரும், அரச குமாரருமான அவர் இவ்வாறு கேட்டதும், பேரறிவாளனான வீடணன் பதில் கூறினான்— (8)

''யமதருமனும் இந்திரனும் எவனால் போரில் முறியடிக்கப்பட்டார்களோ, அந்தப் பராக்கிரமசாலியான கும்பகர்ணன், இவன்; விச்ரவஸின் புதல்வன். இவன் உடல் பரிமாணத்தோடு ஒப்பிடக்கூடிய இன்னொரு அரக்கன் இல்லவேயில்லை. (9)

ரகுநாயகரே! தேவர்கள், தானவர்கள், யக்ஷர்கள், நாகர்கள், (இராவணனுக்கு அடிபணியாத வேறு பல) அரக்கர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், கின்னரர்கள் போன்றவர்களை இவன் ஆயிரக்கணக்கில் தோற்கடித்திருக்கிறான். (10)

கும்பகர்ணன் மகாபலம் பொருந்தியவன்; விகாரமான கண்களை உடையவன்; கையில் சூலத்தை ஏந்தி வருவதைப் பார்த்ததுமே, 'இவன் காலகாலனான ருத்ரன் (யமன்)' என்று மனமயங்கிய தேவர்கள், இவனைக் கொல்ல முடியாமற்போனார்கள். (11)

இந்த கும்பகர்ணன் பிறவியிலேயே பேராண்மை படைத்தவன்; மிக்க பலம் கொண்டவன். மற்ற அரக்கத் தலைவர்கள் எல்லாம் (இராவணன் உட்பட) பெற்றிருக்கும் ஆற்றல், தெய்வங்கள் கொடுத்த வரங்களால் பெறப்பட்டது. (12)

பேருடல் படைத்த இவனுக்கு பிறந்தவுடனேயே பெரும் பசி உண்டாயிற்று. அப்போது, பல்லாயிரக்கணக்கான பிராணிகளைத் தின்று பசி தீர்த்துக் கொண்டான். (13)

பிராணிகளையெல்லாம் விரைவாகப் புசிப்பதைக் கண்ட மக்கள் எல்லோரும் (அடுத்ததாக நம்மையும் தின்று விடுவானோ? என்று) பேரச்சம் கொண்டவர்களாக இந்திரனைச் சரண் புகுந்து, நடந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தார்கள். (14)

அதைக் கேட்டதும் மிகவும் கோபம் கொண்ட தேவேந்திரன், தனது கூர்மையான வஜ்ராயுதத்தால் அவனைத் தாக்கினான். இந்திரனுடைய வஜ்ரப்படையால் கடுமையாகத் தாக்கப்பட்ட பேருடல் கொண்ட அவன் ஆடிப்போனான். கோபம் கொண்டு பெருங்குரலில் சிங்கநாதம் செய்தான். (15)

அறிவாளியான கும்பகர்ணனுடைய பெருங்கூச்சலைக் கேட்டு, முன்னரே நடுங்கிக் கொண்டிந்த பூமி, மேலும் அதிகமாக நடுங்கிற்று. (16)

அப்போது, மகாபலசாலியான கும்பகர்ணன் மிகவும் கோபத்துடன் இந்திரவாகனமான ஐராவதத்திடமிருந்து ஒரு தந்தத்தைப் பிடுங்கி, அதைக் கொண்டு இந்திரனின் மார்பில் தாக்கினான். (17)

கும்பகர்ணனின் தாக்குதலால் இந்திரனின் மார்பில் காயமும் எரிச்சலும் ஏற்பட்டன. இந்திரன் தவிப்பதைப் பார்த்து, தேவர்களும் பிரும்மரிஷிகளும் தானவர்களும் வேதனைப்பட்டார்கள். (18)

மக்களோடுகூட பிரும்மலோகம் சென்றான், இந்திரன். கும்பகர்ணனுடைய அடாத செயல்களானப் பிராணிகளைத் தின்பது, தேவர்களை மிரட்டுவது, முனிவர் குடில்களை நாசப்படுத்துவது, பிற பெண்களைக் கவர்வது ஆகிய எல்லாவற்றையும், பிரும்மாவிடம் அவர்கள் தெரிவித்தார்கள். (19,20)

ஏவம் ப்ரஜா யதி$_3$ த்வேஷ ப$_4$க்ஷயிஷ்யதி நித்யஶ: ।
அசிரேணைவ காலேந ஶூந்யோ லோகோ ப$_4$விஷ்யதி ॥ (21)

வாஸவஸ்ய வச: ஶ்ருத்வா ஸர்வலோகபிதாமஹ: ।
ரக்ஷாம்ஸ்யாவாஹயாமாஸ கும்ப$_4$கர்ணம் த$_3$த$_3$ர்ஶ ஹ ॥ (22)

கும்ப$_4$கர்ணம் ஸமீக்ஷ்யைவ விதத்ராஸ ப்ரஜாபதி: ।
த்$_3$ருஷ்ட்வா விஶ்வாஸ்ய சைவேத$_3$ம் ஸ்வயம்பூ$_4$ரித$_3$மப்$_3$ரவீத் ॥ (23)

த்$_4$ருவம் லோகவிநாஶாய பௌலஸ்த்யேநாஸி நிர்மித: ।
தஸ்மாத்த்வமத்$_3$யப்ரப்$_4$ருதி ம்ருதகல்ப: ஶயிஷ்யஸே ॥ (24)

ப்$_3$ரஹ்மஶாபாபி$_4$பூ$_4$தோऽத$_2$ நிபபாதாக்$_3$ரத: ப்ரபோ$_4$: ।
தத: பரமஸம்ப்$_4$ராந்தோ ராவணோ வாக்யமப்$_3$ரவீத் ॥ (25)

விவ்ருத்$_3$த$_4$: காஞ்சநோ வ்ருக்ஷ: ப$_2$லகாலே நிக்ருத்யதே ।
ந நப்தாரம் ஸ்வகம் ந்யாய்யம் ஶப்துமேவம் ப்ரஜாபதே ॥ (26)

ந மித்$_2$யாவசநஶ்ச த்வம் ஸ்வப்ஸ்யத்யேஷ ந ஸம்ஶய: ।
காலஸ்து க்ரியதாமஸ்ய ஶயநே ஜாக$_3$ரே தத$_2$ா ॥ (27)

ராவணஸ்ய வச: ஶ்ருத்வா ஸ்வயம்பூ$_4$ரித$_3$மப்$_3$ரவீத் ।
ஶயிதா ஹ்யேஷ ஷண்மாஸாநேகாஹம் ஜாக$_3$ரிஷ்யதி ॥ (28)

ஏகேநாஹ்நா த்வஸௌ வீரஶ்சரந் பூ$_4$மிம் பு$_3$பு$_4$க்ஷித: ।
வ்யாத்தாஸ்யோ ப$_4$க்ஷயேல்லோகாந் ஸங்க்ருத்$_3$த$_4$ இவ பாவக: ॥ (29)

ஸோऽஸௌ வ்யஸநமாபந்ந: கும்ப$_4$கர்ணமபோ$_3$த$_4$யத் ।
த்வத்பராக்ரமபீ$_4$தஶ்ச ராஜா ஸம்ப்ரதி ராவண: ॥ (30)

ஸ ஏஷ நிர்க$_3$தோ வீர: ஶிபி$_3$ராத்$_3$பீ$_4$மவிக்ரம: ।
வாநராந் ப்$_4$ருஶஸங்க்ருத்$_3$தோ$_4$ ப$_4$க்ஷயந் பரித$_4$ாவதி ॥ (31)

கும்ப$_4$கர்ணம் ஸமீக்ஷ்யைவ ஹரயோऽத்$_3$ய ப்ரவித்$_3$ருதா: ।
கத$_2$மேநம் ரணே க்ருத்$_3$த$_4$ம் வாரயிஷ்யந்தி வாநரா: ॥ (32)

உச்யந்தாம் வாநரா: ஸர்வே யந்த்ரமேதத்ஸமுச்ச்$_2$ரிதம் ।
இதி விக்ஞாய ஹரயோ ப$_4$விஷ்யந்தீஹ நிர்ப$_4$யா: ॥ (33)

விபீ$_4$ஷணவச: ஶ்ருத்வா ஹேதுமத்ஸுமுகே$_2$ரிதம் ।
உவாச ராக$_4$வோ வாக்யம் நீலம் ஸேநாபதிம் தத$_3$ா ॥ (34)

க$_3$ச்ச$_2$ ஸைந்யாநி ஸர்வாணி வ்யூஹ்ய திஷ்ட$_2$ஸ்வ பாவகே ।
த்$_3$வாராண்யாத$_3$ாய லங்காயாஶ்சர்யாஶ்சாப்யத$_2$ ஸங்க்ரமாந் ॥ (35)

இவ்வாறு, அவன் தினந்தோறும் உயிர்ப்பிராணிகளை (அதாவது மக்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றைத்) தின்று வருவானேயானால், சிறிது காலத்திற்குள்ளாகவே உலகம் உயிர்ப்பிராணிகள் அற்றதாகப் போய்விடும். (21)

இவ்வாறு, இந்திரன் கூறியதைக் கேட்டதும், எல்லா உலகங்களையும் படைக்கும் படைப்புக் கடவுளாகிய (உலகங்களுக்குப் பாட்டனார் போல், மிக மூத்தவரான) அவர், எல்லா அரக்கர்களையும் அழைப்பித்தார். அங்கே வந்த கும்பகர்ணனையும் பார்த்தார். (22)

உயிர்க்களுக்கெல்லாம் தலைவராகிய அவர், கும்பகர்ணனைப் பார்த்ததுமே விக்கித்துப் போனார். அந்த அரக்கனைப் பார்த்ததும், அருகில் அழைத்து பின்வருமாறு கூறினார்— (23)

'(கும்பகர்ணனே!) புலஸ்தியரின் மகனான விச்ரவஸ் (உன் தந்தை), உலகத்தை அழிப்பதற்காகவே உன்னைப் பெற்றிருக்கிறார் போலும்! (நான், இப்போது உனக்கு சாபம் கொடுக்கிறேன்.) இப்போது முதல் உயிரற்ற உடல்போல நீ உறங்கிக் கிடப்பாய்.' (24)

பிரும்மாவின் சாபத்தினால் பற்றிக் கொள்ளப்பட்ட அவன், அவர் எதிரிலேயே (உணர்விழந்து) கீழே விழுந்தான். அப்போது, இராவணன் மிகவும் கலவரமடைந்து (பிரும்மாவை நோக்கிக்) கூறினான்— (25)

'பிரும்மதேவரே! நன்றாக வளர்க்கப்பட்ட ஒரு மரம், பொன்னெனத் தகும் கனிகளைக் கொடுக்கும் சமயத்தில் வெட்டப்பட்டால் எப்படியோ, அப்படியே தங்கள் கொள்ளுப்பேரனுக்கு இவ்வளவு கடுமையான சாபம் கொடுப்பது நியாயமல்ல. தங்களுடைய சொல் ஒருபோதும் வீண்போகாது. இவன் நிச்சயமாகத் தூங்கத்தான் போகிறான் என்றாலும், இவனுடைய தூக்கம்–விழிப்புக்கு ஒரு காலவரையறை விதிக்கப்பட வேண்டும்.' (26,27)

இராவணனுடைய விண்ணப்பத்தைக் கேட்ட தான்தோன்றியான பிரும்மா, 'இவன் ஆறு மாதங்கள் உறங்கிக் கொண்டிருப்பான்; பின் ஒரு நாள் விழித்திருப்பான். அந்த ஒரு நாளில், பெரும் பசி கொண்டவனாக, வாயை அகலமாகத் திறந்து வைத்துக் கொண்டு பயங்கரத் தீயைப் போல், எதிரே வரும் எல்லாப் பிராணிகளையும், வீரனான இவன் தின்று வருவான்.' (28,29)

(இனி, இராமனை நோக்கி வீடணன் கூறியது.) தங்களுடைய அளவற்ற பராக்கிரமத்தைக் கண்டு மிகவும் கவலை கொண்ட மன்னன் இராவணன், பேராபத்தை எதிர்கொண்டிருக்கும் இவ்வேளையில் கும்பகர்ணனை எழுப்பியிருக்கிறான். (30)

பேராண்மை கொண்ட வீரனான கும்பகர்ணன், நித்திரை அரங்கத்திலிருந்து வெளியே புறப்பட்டு வந்திருக்கிறான். மிகவும் கோபத்துடன் இருக்கும் அவன், வானரர்களைப் பிடித்துப் புசிப்பதற்காக விரைவாகச் சென்று கொண்டிருக்கிறான். (31)

இப்போது, (வெளியே வந்து கொண்டிருக்கும்) கும்பகர்ணனைப் பார்த்தமாத்திரத்திலேயே வானரர்கள் ஓட்டம் பிடித்துவிட்டார்கள். போர்க்களத்தில் மிக்க சினத்துடன் போர்புரியும் இவனை, வானரர்கள் எப்படித்தான் எதிர்த்து நிற்கப் போகிறார்களோ? (32)

இப்போது, 'இது, (அரக்கன் அல்ல.) உடல் வடிவத்தில் உயரமாக அமைக்கப்பட்ட ஓர் இயந்திரம்தான்' என்று அறிவித்துவிட்டால், அவர்கள், அவ்வாறே அதை அறிந்துகொண்டு அச்சம் நீங்குவார்கள்.'' (33)

இராமன், காரண–காரியத்திற்கு ஒத்து வருவதும் பணிவாகச் சொல்லப்பட்டதுமான விபீஷணனின் ஆலோசனையை ஏற்று, படைத்தலைவன் நீலனைப் பார்த்துப் பின்வருமாறு ஆணையிட்டார்— (34)

''அக்னி மைந்தனே! உடனே சென்று, நமது எல்லாப் படைகளையும் அணிவகுத்துக் கொண்டு, இலங்கையின் கோட்டை வாயில்களையும், அரசபாட்டைகளையும் சூழ்ந்து கொண்டு நிற்பீர்களாக. (35)

ஶைலஶ்ருங்க3ாணி வ்ருக்ஷாம்ஶ்ச ஶிலாஶ்சாப்யுபஸம்ஹர ।
திஷ்ட2ந்து வாநரா: ஸர்வே ஸாயுத4ா: ஶைலபாணய: ॥ (36)

ராக4வேண ஸமாதி3ஷ்டோ நீலோ ஹரிசமூபதி: ।
ஶஶாஸ வாநராநீகம் யத2ாவத்கபிகுஞ்ஜர: ॥ (37)

ததோ க3வாக்ஷ: ஶரபே4ா ஹநுமாநங்க3த3ஸ்தத3ா ।
ஶைலஶ்ருங்க3ாணி ஶைலாப4ா க்3ருஹீத்வா த்3வாரமப்4யயு: ॥ (38)

ராமவாக்யமுபஶ்ருத்ய ஹரயோ ஜிதகாஶிந: ।
பாத3பைரர்த3யந் வீரா வாநரா: பரவாஹிநீம் ॥ (39)

ததோ ஹரீணாம் தத3நீகமுக்3ரம் ரராஜ ஶைலோத்3யததீ3ப்தஹஸ்தம் ।
கி3ரே: ஸமீபாநுக3தம் யதை2வ மஹந்மஹாம்பே4ாத4ரஜாலமுக்3ரம் ॥ (40)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகஷஷ்டிதம: ஸர்க3: ॥

த்3விஷஷ்டிதம: ஸர்க3:

ராவணாப்4யர்த2நா

ஸ து ராக்ஷஸஶார்தூ3லோ நித்3ராமத3ஸமாகுல: ।
ராஜமார்க3ம் ஶ்ரியா ஜுஷ்டம் யயௌ விபுலவிக்ரம: ॥ (1)

ராக்ஷஸாநாம் ஸஹஸ்ரைஶ்ச வ்ருத: பரமது3ர்நய: ।
க்3ருஹேப்4ய: புஷ்பவர்ஷேண கீர்யமாணஸ்தத3ா யயௌ ॥ (2)

ஸ ஹேமஜாலவிததம் ப4ாநுப4ாஸ்வரத3ர்ஶநம் ।
த3த3ர்ஶ விபுலம் ரம்யம் ராக்ஷஸேந்த்3ரநிவேஶநம் ॥ (3)

ஸ தத்தத3ா ஸூர்ய இவாப்4ரஜாலம்
ப்ரவிஶ்ய ரக்ஷோऽதி4பதேர்நிவேஶம் ।
த3த3ர்ஶ தூ3ரேऽக்3ரஜமாஸநஸ்த2ம்
ஸ்வயம்பு4வம் ஶக்ர இவாஸநஸ்த2ம் ॥ (4)

ப்4ராது: ஸ ப4வநம் க3ச்ச2ந் ரக்ஷோக3ணஸமந்விதம் ।
கும்ப4கர்ண: பத3ந்யாஸைரகம்பயத மேதி3நீம் ॥ (5)

ஸோऽபி4க3ம்ய க்3ருஹம் ப்4ராது: கக்ஷ்யாமபி4விக3ாஹ்ய ச ।
த3த3ர்ஶோத்3விக்3நமாஸீநம் விமாநே புஷ்பகே கு3ரும் ॥ (6)

அத2 த்3ருஷ்ட்வா த3ஶக்3ரீவ: கும்ப4கர்ணமுபஸ்தி2தம் ।
தூர்ணமுத்த2ாய ஸம்ஹ்ருஷ்ட: ஸந்நிகர்ஷமுபாநயத் ॥ (7)

மலைச்சிகரங்களையும் மரங்களையும் பாறைகளையும் சேகரித்து வைப்பாய். வானரர்கள் எல்லோரும் படைக்கலன்களையும் மலைகளையும் கையில் ஏந்திக்கொண்டு நிற்பார்களாக.'' (36)

இராமபிரானால் ஆணையிடப்பட்ட வானர படைத்தலைவனும் வானரோத்தமனுமான நீலன், (இராமன் கூறியவாறே) வானரப்படைக்குத் தக்கபடி உத்தரவுகளைப் பிறப்பித்தான். (37)

உடனே, பேருருவம் கொண்ட வானரர்களான கவாக்ஷன், சரபன், அனுமான், அங்கதன் முதலியோர் மலைமுகடுகளைக் கையில் ஏந்திக் கொண்டு, கோட்டை வாயிலை வந்தடைந்தார்கள். (38)

இராமனுடைய ஆணையைக் கேட்ட வானரர்கள், வெற்றி நிச்சயம் என்ற உறுதி கொண்டவர்களாக, வெளியே சுற்றிக் கொண்டிருந்த அரக்கவீரர்களை, மரங்களால் அடித்துத் தாக்கினார்கள். (39)

பயங்கரமான வானரப்படையின் கைகளில் மலைமுகடுகளையும் மரங்களையும் தாங்கிக் கொண்டு நின்ற அந்தக் காட்சி, ஒரு பெரிய மலையின் தாழ்வரையில் பெரிய பெரிய மேகக்கூட்டங்கள் சூழ்ந்து நிற்பதைப் போல் மிக்க வனப்புடன் விளங்கிற்று. (40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்திரண்டு

கும்பகர்ணனைச் சமாதானம் செய்தல்!

அரக்கர்களில் புலி போன்றவனும் அளவு கடந்த போராற்றல் கொண்டவனும் உறக்கம் தெளியாமை–மதுமயக்கத்தால் கலக்கமுற்றிருந்தவனுமான அவன் (கும்பகர்ணன்), செல்வப் பொலிவுடன் திகழும் அரசபாட்டையில் நடந்து சென்றான். (1)

எவராலும் வெற்றி கொள்ள முடியாத அவன், ஏராளமான அரக்கர்கள் புடைசூழச் சென்றபோது, தெருவின் இருபுறங்களிலும் இருந்த வீடுகளிலிருந்து மலர்மாரி பொழிந்தது; அதில் நனைந்து கொண்டே அவன் சென்றான். (2)

அவன், விசாலமான, எழில் பொருந்திய, பொற்சாளரங்கள் பொருத்தப்பட்ட, சூரியன்போல் ஒளி வீசும் அரக்க மன்னனின் மாளிகையை (சற்று தூரத்தில் இருந்தபடியே) பார்த்தான். (3)

மேகமண்டலத்திற்குள் சூரியன் நுழைவதைப் போல, அரக்கமன்னனின் மாளிகைக்குள் நுழைந்து, சிறிது தூரத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தமையனை, கமலாசனத்தில் வீற்றிருக்கும் பிரும்மதேவனைத் தேவேந்திரன் சென்று சந்திப்பதைப் போலப் பார்த்தான். (4)

அரக்கர்கள் புடைசூழ, சகோதரனுடைய மாளிகைக்குச் செல்லும்போது, கும்பகர்ணன் ஒவ்வோர் அடிவைப்பிலும் பூமியை அதிரச் செய்தான். (5)

சகோதரனின் மாபெரும் மாளிகையில் பல கட்டுகளையும் கடந்து சென்று, புஷ்பக விமானத்தில் கவலைதோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருக்கும் மூத்த சகோதரனைக் கண்டான். (6)

பத்துத் தலையனான இராவணன், கும்பகர்ணன் வந்துவிட்டதைப் பார்த்ததும், மனமகிழ்ந்து உடனே இருக்கையிலிருந்து எழுந்து, அவனைத் தன் அருகில் அழைத்துக் கொண்டான். (7)

அத2ாஸிநஸ்ய பர்யங்கே கும்ப4கர்ணோ மஹாப3ல: ।
ப்4ராதுர்வவந்தே3 சரணௌ கிம் க்ருத்யமிதி சாப்3ரவீத் ॥ (8)

உத்பத்ய சைநம் முதி3தோ ராவண: பரிஷஸ்வஜே ।
ஸ ப்4ராத்ரா ஸம்பரிஷ்வக்தோ யத2ாவச்சாபி4நந்தி3த: ॥ (9)

கும்ப4கர்ண: ஶுப4ம் தி3வ்யம் ப்ரதிபேதே3 வராஸநம் ।
ஸ தத3ாஸநமாஸ்ரித்ய கும்ப4கர்ணோ மஹாப3ல: ॥
ஸம்ரக்தநயந: கோபாத்3ராவணம் வாக்யமப்3ரவீத் ॥ (10)

கிமர்த2மஹமாத்3ருத்ய த்வயா ராஜந் விபோ3தி4த: ।
ஶம்ஸ கஸ்மாத்3ப4யம் தே஽ஸ்தி கோ஽த்3ய ப்ரேதோ ப4விஷ்யதி ॥ (11)

ப்4ராதரம் ராவண: க்ருத்3த4ம் கும்ப4கர்ணமவஸ்தி2தம் ।
ஈஷத்து பரிவ்ருத்தாப்4யாம் நேத்ராப்4யாம் வாக்யமப்3ரவீத் ॥ (12)

அத்3ய தே ஸுமஹாந் கால: ஶயாநஸ்ய மஹாப3ல ।
ஸுகி2தஸ்த்வம் ந ஜாநீஷே மம ராமக்ருதம் ப4யம் ॥ (13)

ஏஷ த3ாஶரதீ2 ராம: ஸுக்3ரீவஸஹிதோ ப3லீ ।
ஸமுத்3ரம் ஸப3லஸ்தீர்த்வா மூலம் ந: பரிக்ருந்ததி ॥ (14)

ஹந்த பஶ்யஸ்வ லங்காயாம் வநாந்யுபவநாநி ச ।
ஸேதுநா ஸுக2மாக3ம்ய வாநரைகார்ணவம் க்ருதம் ॥ (15)

யே ரக்ஷஸாம் முக்2யதமா ஹதாஸ்தே வாநரைர்யுதி4 ।
வாநராணாம் க்ஷயம் யுத்3தே4 ந பஶ்யாமி கத3ாசந ॥
ந சாபி வாநரா யுத்3தே4 ஜிதபூர்வா: கத3ாசந ॥ (16)

தத3தத்3ப4யமுத்பந்நம் த்ராயஸ்வேஹ மஹாப3ல ।
நாஶய த்வமிமாநத்3ய தத3ர்த2ம் போ3தி4தோ ப4வாந் ॥ (17)

ஸர்வக்ஷபிதகோஶம் ச ஸ த்வமப்4யவபத்3ய மாம் ।
த்ராயஸ்வேமாம் புரீம் லங்காம் ப3ாலவ்ருத்3த4ாவஶேஷிதாம் ॥ (18)

ப்4ராதுரர்தே2 மஹாப3ாஹோ குரு கர்ம ஸுது3ஷ்கரம் ।
மயைவம் நோக்தபூர்வோ ஹி கச்சித்3ப்4ராத: பரந்தப ॥ (19)

த்வய்யஸ்தி து மம ஸ்நேஹ: பரா ஸம்ப4ாவநா ச மே ।
தை3வாஸுரேஷு யுத்3தே4ஷு ப3ஹுஶோ ராக்ஷஸர்ஷப4 ॥
த்வயா தே3வா: ப்ரதிவ்யூஹ்ய நிர்ஜிதாஸ்சாஸுரா யுதி4 ॥ (20)

அப்போது, அரியணையில் வீற்றிருக்கும் சகோதரனின் பாதங்களில் வணங்கி, ''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான். (8)

உள்ளக்களிப்புடனிருந்த இராவணன், துள்ளிக் குதித்து அவனை மார்புறத் தழுவிக் கொண்டான். இவ்வாறு தழுவிக் கொண்டதன் மூலம், அவன் அவனுக்குத் தக்க முறையில் கௌரவப்படுத்தப்பட்டவன் ஆனான். (9)

அழகான, ஒளி வீசும் ஒரு சிங்காதனத்தில் கும்பகர்ணன் அமர்ந்து கொண்டான். இருக்கையில் அமர்ந்து கொண்டதும், மகாபலம் பொருந்திய கும்பகர்ணன், கோபத்தால் சிவந்த கண்களுடன், இராவணனை நோக்கிக் கேட்டான். (10)

''மன்னரே! என்னையும் ஒருபொருட்டாக மதித்து, தூக்கத்திலிருந்து எழுப்பியதற்குக் காரணம் என்ன? உங்களுக்கு, எவனைக் கண்டு அச்சம் தோன்றியிருக்கிறது? இப்போது, எவன் உயிரற்ற சடலமாக ஆகப் போகிறான்? (நான் யாரைக் கொல்ல வேண்டும்? என்றபடி.) (11)

சகோதரன் கும்பகர்ணன் கோபத்தோடு இருப்பதைப் பார்த்து, பொங்கும் சினத்தால் சுழலும் கண்களுடன் இராவணன் கூறினான்— (12)

''வலிமை மிக்கவனே! நீ நீண்ட காலமாகத் தூங்கிக் கொண்டிருந்துவிட்டாய். அதனால், எனக்கு இராமனிடமிருந்து ஆபத்து வந்திருக்கிறது என்பதை நீ அறியவில்லை. (13)

பலசாலியும் தசரதன் மைந்தனுமான இராமன், சுக்ரீவனுடனும் அவனுடைய வானரப் படையுடனும் கடலைக் கடந்து வந்து, நமது மூல பலத்தை அழித்துக் கொண்டிருக்கிறான். (மகாவீரர்களான அரக்கர்ளை அழித்து விட்டான் – என்றபடி.) (14)

பார், தம்பீ! வானரர்கள் (பெருங்கடலில்) அணை கட்டி, சுகமாகக் கடந்து வந்து, இலங்கையின் காடுகளையும் பூஞ்சோலைகளையும் (அழித்து), வானர சமுத்திரமாக்கி விட்டிருக்கிறார்கள். (15)

போரில் முக்கியமான அரக்கர்கள் எல்லோரும் வானரர்களால் கொல்லப்பட்டு விட்டார்கள். ஆனால், போர்க்களத்தில் வானரப்படை குறையவே இல்லை. அத்துடன், இதற்கு முன்னர் போரில் வானரர்கள் வெற்றி கொள்ளப்பட்டதேயில்லை. (16)

பேராற்றல் படைத்தவனே! இப்போது உண்டாகியிருக்கும் இந்தப் பேராபத்திலிருந்து (இலங்கையைக்) காப்பாற்றுவாய். நீ, இப்போதே அவர்களை ஒழித்துவிடு. அதன் பொருட்டே நீ எழுப்பப்பட்டிருக்கிறாய். (17)

அரசுக் கருவூலம் முற்றிலும் காலியாகிவிட்டது! இந்த நிலையில் நான் இருப்பதை நீ அறிந்து கொள். சிறுவர்களும் முதியவர்களும் மட்டும் மிகுந்திருக்கும் இலங்கைப் பட்டணத்தைக் காப்பாற்றுவாயாக. (18)

தோள்வலி மிக்கவனே! சகோதரனான எனக்காக செயற்கரிய இந்தக் காரியத்தை, நீ செய்து முடிக்க வேண்டும். எதிரிகளை வதைப்பவனே! சகோதரனே! இதற்கு முன்னர், உன்னை நான் இவ்வாறு கேட்டுக் கொண்டதில்லை. (19)

எனக்கு உன்னிடம் மனப்பூர்வமான சிநேகமும் பெருமதிப்பும் இருக்கின்றன. அரக்கர் காளையே! தேவர்களுடனும் அசுரர்களுடனும் நடக்கும் போர்களில், நீ பல தடவைகள் தேவர்களை எதிர்த்து வெற்றி பெற்றிருக்கிறாய். அவ்வாறே, அசுரர்களும் போரில் வெல்லப்பட்டிருக்கிறார்கள். (20)

ததே$_3$தத்ஸர்வமாதிஷ்ட$_2$ வீர்யம் பீ$_4$மபராக்ரம ।
ந ஹி தே ஸர்வபூ$_4$தேஷு த்$_3$ருஶ்யதே ஸத்$_3$ருஶோ ப$_3$லீ ॥ (21)

குருஷ்வ மே ப்ரியஹிதமேதது$_3$த்தமம்
யதா$_2$ப்ரியம் ப்ரியரண பா$_3$ந்த$_4$வப்ரிய ।
ஸ்வதேஜஸா வித$_4$ம ஸபத்நவாஹிநீம்
ஶரத்$_3$க$_4$நம் பவந இவோத்$_3$யதோ மஹாந் ॥ (22)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$விஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

த்ரிஷஷ்டிதம: ஸர்க$_3$:

கும்ப$_4$கர்ணாநுஶோக:

தஸ்ய ராக்ஷஸராஜஸ்ய நிஶம்ய பரிதே$_3$விதம் ।
கும்ப$_4$கர்ணோ ப$_3$பா$_4$ஷேऽத$_2$ வசநம் ப்ரஜஹாஸ ச ॥ (1)

த்$_3$ருஷ்டோ தோ$_3$ஷோ ஹி யோऽஸ்மாபி$_4$: புரா மந்த்ரவிநிர்ணயே ।
ஹிதேஷ்வநபி$_4$ரக்தேந ஸோऽயமாஸாதி$_3$தஸ்த்வயா ॥ (2)

ஶீக்$_4$ரம் க$_2$ல்வப்$_4$யுபேதம் த்வாம் ப$_2$லம் பாபஸ்ய கர்மண: ।
நிரயேஷ்வேவ பதநம் யதா$_2$ து$_3$ஷ்க்ருதகர்மண: ॥ (3)

ப்ரத$_2$மம் வை மஹாராஜ க்ருத்யமேதத$_3$சிந்திதம் ।
கேவலம் வீர்யத$_3$ர்பேண நாநுப$_3$ந்தோ$_4$ விசாரித: ॥ (4)

ய: பஶ்சாத்பூர்வகார்யாணி குர்யாதை$_3$ஶ்வர்யமாஸ்தி$_2$த: ।
பூர்வம் சோத்தரகார்யாணி ந ஸ வேத$_3$ நயாநயௌ ॥ (5)

தே$_3$ஶகாலவிஹீநாநி கர்மாணி விபரீதவத் ।
க்ரியமாணாநி து$_3$ஷ்யந்தி ஹவீம்ஷ்யப்ரயதேஷ்விவ ॥ (6)

த்ரயாணாம் பஞ்சதா$_4$ யோக$_3$ம் கர்மணாம் ய: ப்ரபஶ்யதி ।
ஸசிவை: ஸமயம் க்ருத்வா ஸ ஸப்$_4$யே வர்ததே பதி$_2$ ॥ (7)

எதிர்கொள்ள முடியாத பராக்கிரமம் உடையவனே! உன்னுடைய பெரு வீரத்தை ஒன்றாகத் திரட்டி வெளிப்படுத்து. உயிர்ப் பிராணிகள் எல்லாவற்றிலும் உனக்கு நிகரான பலசாலி காணப்படவேயில்லை. போரார்வம் கொண்டவனே! உற்றார்–உறவினர்களிடம் அன்புள்ளவனே! இப்போது எனக்குப் பிரியமான நன்மை பயப்பதும் உடனடித் தேவையானதுமான இந்த உத்தமப் பணியை (வானரர் அழிவை) செய்து முடிப்பாயாக. சரத்கால மேகக்கூட்டத்தை சுழன்று வீசும் சூறாவளிக் காற்று சிதறடிப்பதைப் போல, உன்னுடைய அளப்பரிய ஆற்றலால் பகைவர் படையை சிதறி ஓடச் செய்வாயாக.'' (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து மூன்று

கும்பகர்ணன் வருந்துதல்!

அந்த அரக்க மன்னனுடைய மனவேதனைச் சொற்களைக் கேட்டு, கும்பகர்ணன் சற்றே இகழ்ச்சியாக நகைத்தவண்ணம் பதில் சொன்னான்— (1)

''முன்பு (விபீஷணன் முதலான எங்களுடன்) மந்திராலோசனை செய்தபோது, (உங்கள் அடாத செய்கையால்) எத்தகைய விபரீத விளைவுகள் ஏற்படும் என்று கூறினோமோ, அவைகளே இப்போது உங்களால் அனுபவிக்கப்படுகின்றன. உங்கள் நலனில் அக்கறை கொண்டுள்ளவர்கள் சொன்ன நல்லுரைகளில் உங்கள் மனம் பற்றுக் கொள்ளவில்லை. உங்களுடைய பாவச் செயல்களின் (தீய) பலன்கள் இவ்வளவு விரைவில் உங்களுக்குக் கிடைத்துவிட்டன. மகாபாதகங்கள் செய்தவன் நரகங்களில் விழுந்து, துன்பங்களை அனுபவிப்பதுபோல. (2,3)

மன்னரே! ('இந்தச் செயலின் விளைவு, இப்படித்தான் இருக்கும்' என்று) முதலில் இந்தச் செயலைப் பற்றி ஆழமாக சிந்திக்கவில்லை. (தெய்வங்கள் கொடுத்த வரங்களின் பலம் மற்றும்) வீரம் என்ற பலம் இருக்கிறது என்ற செருக்கினால், பின்விளைவுகளைப் பற்றி நீங்கள் எண்ணிப் பார்க்கவே இல்லை. எவனொருவன் தனது மகிமையின் அகந்தையால், பின்னால் செய்ய வேண்டிய செயலை முதலிலும், முதலாவதாகச் செய்ய வேண்டிய செயலைப் பின்னாலும் செய்கிறானோ, அவன் நீதி–அநீதி இரண்டையும் அறியாதவன். (4,5)

உரிய இடம், உகந்த காலம் இவைகளைக் கருத்தில் கொள்ளாமல் இடம்–காலம் தவறி செய்யப்படும் காரியங்கள், வேள்வியில் முறைப்படி நிலைநிறுத்தப் பெறாத அக்னியில் சொரியப்படும் ஆகுதிகள் போல் பயனற்றுப் போகின்றன. (உரிய மந்திரங்களைக் கூறாமல் வளர்க்கப்பட்ட நெருப்பில் இடப்படும் ஆகுதிகள், கோரிய பலனைத் தரமாட்டா.) (6)

எந்த மன்னன், அமைச்சர்களோடு ஆலோசனை செய்து, தன்னுடைய குறை–நிறைகள் மற்றும் சமநிலைக்கேற்ப, சாம–தான–தண்டங்களாகிய உபாயத்தை ஐந்து வகையாகக் கூறப்பட்ட முறைகளில் செயல்படுத்துகிறானோ, அவன்தான் நன்னெறியில் நிற்பவன் என்று கொள்ளத்தக்கவன். (செயல் திட்டத்தின் ஐந்து பிரிவுகள்:– **(1) ஆரம்போபாயம்** – ஒரு செயலை எவ்வாறு, எப்போது துவங்குவது என்று முடிவு செய்வது; **(2) புருஷ–த்ரவ்ய சம்பத்** – அந்தச் செயலை முழுமையாக நிறைவேற்றுவதற்குப் போதுமான ஆள்பலம், பொருள்பலம் உள்ளனவா? என்று சிந்தித்தல்; **(3) தேச–கால விபாக:** – தான் தொடங்கும் செயல், இடத்திற்கும் காலத்திற்கும் ஒத்திருக்கிறதா? என்று ஆராய்தல்; **(4) விபத்தேஸ்ச்ச ப்ரதீகார:** – திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட செயலில், இடையில் இடையூறு (எதிர்விளைவுகள்) எற்பட்டால், அவைகளை எவ்வாறு சமாளிப்பது? என்று முன்கூட்டியே முடிவு செய்தல்; **(5) கார்யஸித்தி** – முன்னர் கூறப்பட்ட நான்கு நெறிகளும் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டால், தொடங்கிய செயலின் குறிக்கோள் அடையப்படும்.) (7)

யதா2க3மம் ச யோ ராஜா ஸமயம் விசிகீர்ஷதி ।
பு3த்4யதே ஸசிவாந் பு3த்3த்4யா ஸுஹ்ருத3ஶ்சாநுபஶ்யதி ॥ (8)

த4ர்மமர்த2ம் ச காமம் ச ஸர்வாந் வா ரக்ஷஸாம் பதே ।
ப4ஜதே புருஷ: காலே த்ரீணி த்3வந்த்3வாநி வா புந: ॥ (9)

த்ரிஷு சைதேஷு யச்ச்2ரேஷ்ட2ம் ஶ்ருத்வா தந்நாவபு3த்4யதே ।
ராஜா வா ராஜமாத்ரோ வா வ்யர்த2ம் தஸ்ய ப3ஹு ஶ்ருதம் ॥ (10)

உபப்ரதா3நம் ஸாந்த்வம் வா பே4த3ம் காலே ச விக்ரமம் ।
யோக3ம் ச ரக்ஷஸாம் ஶ்ரேஷ்ட2 தாவுபௌ4 ச நயாநயௌ ॥ (11)

காலே த4ர்மார்த2காமாந் ய: ஸம்மந்த்ரய ஸசிவை: ஸஹ ।
நிஷேவேதாத்மவாந்(ல்)லோகே ந ஸ வ்யஸநமாப்நுயாத் ॥ (12)

ஹிதாநுப3ந்த4மாலோச்ய கார்யாகார்யமிஹாத்மந: ।
ராஜா ஸஹார்த2தத்த்வக்ஞை: ஸசிவை: ஸ ஹி ஜீவதி ॥ (13)

அநபி4க்ஞாய ஶாஸ்த்ரார்தா2ந் புருஷா: பஶுபு3த்3த4ய: ।
ப்ராக3ல்ப்4யாத்3வக்துமிச்ச2ந்தி மந்த்ரேஷ்வப்4யந்தரீக்ருதா: ॥ (14)

அஶாஸ்த்ரவிது3ஷாம் தேஷாம் ந கார்யமஹிதம் வச: ।
அர்த2சாஸ்த்ராநபி4க்ஞாநாம் விபுலாம் ஶ்ரியமிச்ச2தாம் ॥ (15)

அஹிதம் ச ஹிதாகாரம் தா4ர்ஷ்ட்யாஜ்ஜல்பந்தி யே நரா: ।
அவேக்ஷ்ய மந்த்ரபா3ஹ்யாஸ்தே கர்தவ்யா: க்ருத்யதூ3ஷணா: ॥ (16)

விநாஶயந்தோ ப4ர்தாரம் ஸஹிதா: ஶத்ருபி4ர்பு3தை4: ।
விபரீதாநி க்ருத்யாநி காரயந்தீஹ மந்த்ரிண: ॥ (17)

தாந் ப4ர்தா மித்ரஸங்காஶாநமித்ராந் மந்த்ரநிர்ணயே ।
வ்யவஹாரேண ஜாநீயாத்ஸசிவாநுபஸம்ஹிதாந் ॥ (18)

சபலஸ்யேஹ க்ருத்யாநி ஸஹஸாநுப்ரதா4வத: ।
சி2த்3ரமந்யே ப்ரபத்3யந்தே க்ரௌஞ்சஸ்ய க2மிவ த்3விஜா: ॥ (19)

யோ ஹி ஶத்ருமபி4க்ஞாய நாத்மாநமபி4ரக்ஷதி ।
அவாப்நோதி ஹி ஸோऽநர்தா2ந் ஸ்தா2நாச்ச வ்யவரோப்யதே ॥ (20)

யது3க்தமிஹ தே பூர்வம் க்ரியதாமநுஜேந ச ।
ததே3வ நோ ஹிதம் கார்யம் யதி3ச்ச2ஸி ச தத்குரு ॥ (21)

அரக்கர் தலைவரே! அறநூல்படி ஆலோசனை செய்யும்போது, எந்த மன்னன் நல்வழியைக் கூறும் அமைச்சர்களைத் தன் அறிவால் அடையாளம் கண்டு கொள்கிறானோ, அவன்தான் தரும–அர்த்த–காமங்களாகிற மூன்றையுமோ, தருமம்–அர்த்தம், அர்த்தம்–காமம், காமம்–தருமம் ஆகிய இரட்டைகளையோ, ஓர் இரட்டையை மட்டுமோ, அவ்வவற்றிற்கான நேரங்களில் அடைகிறான். (அல்லது, காலை–மாலை–இரவு வேளைகளில் செய்யத்தக்கனவாக விதிக்கப்பட்ட தரும–அர்த்த–காமங்களை, அந்தந்த காலங்களில் கவலையில்லாமல் அனுபவிக்கிறான்.) (8,9)

'தரும–அர்த்த–காமங்களாகிய மூன்றில் எது சிறந்தது?' என்பதை சான்றோர்களிடமிருந்து கேட்டறிந்து, அதன்படி நடக்க வேண்டும். அவ்வாறு நடக்காதவன் பெற்ற பல்துறைக் கல்வி–கேள்விகள் எல்லாம் வீண். (10)

அரக்கர் மாணிக்கமே! உலகில், எந்த ஓர் அரசன், (முன்–பின் என்ற தவறு ஏற்படாமல்) உரிய காலத்தில் சாம–தான–பேத–தண்டம் என்ற நால்வகை முறைகளையும், ஐந்து வகையான பிரிவுகளுடன் இணைத்து, சரியான காலத்தில் அமைச்சர்களுடன்கூட நன்னெறி–தீநெறி, தரும–அர்த்த–காமம் ஆகியவைகளைப் பற்றி ஆலோசித்து, அப்போது எடுக்கப்படும் முடிவுகளைக் கடைப்பிடிக்கிறானோ, அறிவாளியான அந்த மன்னன் துயரத்தை அடைய மாட்டான். (11,12)

தனக்கு தொடர்ந்து மேன்மேலும் நன்மை தரக்கூடியவைகளைப் பற்றி ஆலோசித்து, செய்யத்தக்கது–செய்யத்தகாதது என்பவைகளை, ஆட்சிநெறித் தத்துவங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ள அமைச்சர்களுடன் கலந்தாலோசித்துச் செயல்படுபவன் எவனோ, அவனே நிம்மதியாக வாழ்கிறான். விலங்குகளைப் போல் அறிவு படைத்தவர்கள் (அதாவது, பகுத்துணரும் இயல்பினைப் பெறாதவர்கள்), நீதி நூல்களின் உட்கருத்துக்களை உணராதவர்கள், ஆலோசனைக் கூட்டங்களில் எவ்வாறோ இடம் பெற்று, படாடோபமாக தங்கள் கருத்தை வலிந்து பேச விரும்புவார்கள். (13,14)

மிகுதியான செல்வச் செழுமையை விரும்புகின்ற மன்னன் நன்னெறி விளக்க நூல்களைக் கற்றுத் தேராதவர்களான அவர்களுடைய (அமைச்சர்களுடைய) தீமை விளைவிக்கும் சொற்களை ஏற்று நடக்கக்கூடாது. நன்மை என்று தோன்றும் வகையில் அமைந்து, தீமையைப் பயக்கும் ஆலோசனைகளைத் தம் செருக்கினால் எவர்கள் பேசிப் பிதற்றுகிறார்களோ, செயலைப் பாழ்படுத்திவிடும் அவர்களை இனங்கண்டு, ஆலோசனைக் கூட்டங்களில் நுழையவிடக்கூடாது. (15,16)

சில அமைச்சர்கள், (தந்திர உபாயங்களைக் கற்றுத் தேர்ந்த) அறிவாளிகளான பகைவர்களோடு கூட்டுச் சேர்ந்து, தம்முடைய தலைவனுக்கே அழிவு ஏற்படும் விதத்தில், அவனுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய செயல்களைச் செய்கின்றார்கள். (17)

நண்பர்கள்போல் கூடவே இருந்து கொண்டு, மனப்பூர்வமாக நண்பர்களாக இல்லாதவர்களை உறுதியான முடிவுகள் எடுக்கும் ஆலோசனைக் கூட்டங்களில், அவர்களது நடவடிக்கைகளால், ஆள்பவன் (அரசன்) தெரிந்து கொள்ள வேண்டும். (18)

சபல சித்தமுடைய (ஏதோ ஒரு பலவீனமுடைய) மன்னன், நெஞ்சார்ந்த நட்பில்லாத அமைச்சர்களின் சொற்களால் கவரப்பட்டு, அவர்கள் சொற்படி நடக்கத் தொடங்கினால், அந்தப் பலவீனத்தையே அவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். (ஒரு மலைக்குள் துளை போட்டுக் கொண்டு பறவைகள் உள்ளே சென்று வர முடியாது. ஆனால், கந்தப்பெருமானால் பிளக்கப்பட்ட, அதாவது பலவீனப்படுத்தப்பட்ட) கிரௌஞ்ச மலையின் பிளவுகளில் பறவைகள் எளிதாகச் சென்று உலாவுவதைப் போல. (19)

'தன் பகைவன் இவன்' என்று தெரிந்து கொண்டிருந்தும், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாமல் இருப்பவன் கஷ்டங்களை அடைகிறான்; பதவியிலிருந்தும் இறக்கப்படுகிறான். முன்பு, (அமைச்சர் என்ற பதவியில் இருப்பவர்களால் மட்டுமல்லாமல், உடன்பிறந்த) தம்பியாலும் இது பற்றி என்ன ஆலோசனைக் கூறப்பட்டதோ, அதையேதான் செய்ய வேண்டும். நீங்கள் நமக்கு நன்மை பயக்கும் செயலைச் செய்ய விரும்பினால், அவ்வாறே (தம்பி வீடணன் கூறியபடியே) செய்யுங்கள்.'' (20,21)

தத்து ஶ்ருத்வா த$_3$ஶக்$_3$ரீவ: கும்ப$_4$கர்ணஸ்ய ப$_4$ாஷிதம் ।
ப்$_4$ருகுடிம் சைவ ஸஞ்சக்ரே க்ருத்$_3$த$_4$ஶ்சைநமப$_4$ாஷத ॥ (22)

மாந்யோ கு$_3$ருரிவாசார்ய: கிம் மாம் த்வமநுஶாஸஸி ।
கிமேவம் வாக்ச்$_2$ரமம் க்ருத்வா காலே யுக்தம் விதீ$_4$யதாம் ॥ (23)

விப்$_4$ரமாச்சித்தமோஹாத்$_3$வா ப$_3$லவீர்யாஶ்ரயேண வா ।
நாபி$_4$பந்நமித$_3$ாநீம் யத்$_3$வ்யர்த$_2$ாஸ்தஸ்ய புந: கத$_2$ா: ॥ (24)

அஸ்மிந் காலே து யத்$_3$யுக்தம் ததி$_3$த$_3$ாநீம் விதீ$_4$யதாம் ।
க$_3$தம் நு நாநுஶோசந்தி க$_3$தம் நு க$_3$தமேவ ஹி ॥ (25)

மமாபநயஜம் தே$_3$ாஷம் விக்ரமேண ஸமீகுரு ।
யதி$_3$ க$_2$ல்வஸ்தி மே ஸ்நேஹோ விக்ரமம் வாவக$_3$ச்ச$_2$ஸி ॥
யதி$_3$ வா கார்யமேதத்தே ஹ்ருதி$_3$ கார்யதமம் மதம் ॥ (26)

ஸ ஸுஹ்ருத்$_3$யோ விபந்நார்த$_2$ம் தீ$_3$நமப்$_4$யவபத்$_3$யதே ।
ஸ ப$_3$ந்து$_4$ர்யோऽபநீதேஷு ஸாஹாய்யாயோபகல்பதே ॥ (27)

தமதை$_2$வம் ப்$_3$ருவாணம் து வசநம் தீ$_4$ரத$_3$ாருணம் ।
ருஷ்டோऽயமிதி விஜ்ஞாய ஶநை: ஶ்லக்ஷ்ணமுவாச ஹ ॥ (28)

அதீவ ஹி ஸமாலக்ஷ்ய ப்$_4$ராதரம் க்ஷுபி$_4$தேந்த்$_3$ரியம் ।
கும்ப$_4$கர்ண: ஶநைர்வாக்யம் ப$_3$ப$_4$ாஷே பரிஸாந்த்வயந் ॥ (29)

அலம் ராக்ஷஸராஜேந்த்$_3$ர ஸந்தாபமுபபத்$_3$ய தே ।
ரோஷம் ச ஸம்பரித்யஜ்ய ஸ்வஸ்தே$_2$ா ப$_4$விதுமர்ஹஸி ॥ (30)

நைதந்மநஸி கர்தவ்யம் மயி ஜீவதி பார்தி$_2$வ ।
தமஹம் நாஶயிஷ்யாமி யத்க்ருதே பரிதப்யஸே ॥ (31)

அவஶ்யம் து ஹிதம் வாச்யம் ஸர்வாவஸ்த$_2$ம் மயா தவ ।
ப$_3$ந்து$_4$ப$_4$ாவாத$_3$பி$_4$ஹிதம் ப்$_4$ராத்ருஸ்நேஹாச்ச பார்தி$_2$வ ॥ (32)

ஸத்$_3$ருஶம் யத்து காலேऽஸ்மிந் கர்தும் ஸ்நிக்$_3$தே$_4$ந ப$_3$ந்து$_4$நா ।
ஶத்ரூணாம் கத$_3$நம் பஶ்ய க்ரியமாணம் மயா ரணே ॥ (33)

அத்$_3$ய பஶ்ய மஹாப$_3$ாஹோ மயா ஸமரமூர்த$_4$நி ।
ஹதே ராமே ஸஹ ப்$_4$ராத்ரா த்$_3$ரவந்தீம் ஹரிவாஹிநீம் ॥ (34)

அத்$_3$ய ராமஸ்ய தத்$_3$த்$_3$ருஷ்ட்வா மயாநீதம் ரணாச்சி$_2$ர: ।
ஸுகீ$_2$ ப$_4$வ மஹாப$_3$ாஹோ ஸீதா ப$_4$வது து$_3$:கி$_2$தா ॥ (35)

இராவணன், கும்பகர்ணனுடைய சொற்களைக் கேட்டதும், மிகவும் சினங்கொண்டு புருவங்களை நெறித்து, அவனை நோக்கிக் கூறினான்— (22)

''மூத்த சகோதரர், ஆசார்யனைப்போல் மதிக்கத்தக்கவர். (ஆசார்யரை எதிர்த்துப் பேசக்கூடாது என்பது அடிப்படை விதி.) (தம்பியான) நீயா, எனக்கு உபதேசம் செய்கின்றாய்? இவ்வளவு நேரம் வாய் நோகப் பேசி என்ன பயன்? (எனக்கு, உன் அறிவுரை தேவையில்லை; உன் வீரம்தான் தேவை.) இப்போதுள்ள சூழ்நிலையில் செய்யத்தக்கது எதுவோ, அதைச் செய்வாயாக. (23)

மனத்தடுமாற்றத்தாலோ, மனமயக்கத்தாலோ, நிகரில்லாத பலமும் ஆண்மையும் கொண்டிருப்பதாலோ, முன்னால் நீங்கள் கூறிய நல்லுரைகள் என்னால் ஏற்கப்படவில்லை. ஆனால், நடந்து முடிந்துவிட்ட அந்தச் செயல்களைப் பற்றி, இப்போது மறுபடியும் பேசி என்ன பயன்? நடந்தது நடந்து போய்விட்டதுதான். (அதை மாற்றி அமைக்க முடியாது). அதனால்தான், நடந்து முடிந்துவிட்டவைகளைக் குறித்து, பெரியோர்கள் வருத்தப்பட மாட்டார்கள். இப்போதைய நிலைமைக்கு ஏற்ற செயல் எதுவோ, அதைச் செய்வாயாக. (24,25)

என்னிடம் உனக்குப் பாசம் இருக்குமேயானால், நீ உன்னுடைய மகாவீரத்தை உள்ளபடி உணர்ந்திருந்தாயேயானால், (எதிரிகளின் மேல் படையெடுத்துச் செல்வது என்ற) இந்தச் செயல் உடனடியாக செய்யப்பட வேண்டிய காரியங்களில் மிகவும் முக்கியமானது என்று உனக்குத் தோன்றினால், நான் அநீதியாகச் செய்துவிட்ட செயலை, உன் பேராற்றலால் சரிப்படுத்து. (உபதேசம் செய்துகொண்டு நிற்காமல், உடனே சென்று எதிரிகளை அழித்துவிட்டு வா.) (26)

தன்னுடைய செயலால் எதிர்மாறான விளைவுகள் ஏற்பட்டு, அதனால் கலங்கித் தவிப்பவனை ஆதரித்து அனுகூலமாக எவன் செயல்படுகிறானோ, அவன்தான் உற்ற நண்பன்; தவறான செயலைச் செய்துவிட்டுக் கீழே விழுந்து தாழ்நிலைக்குச் சென்று தவித்துக் கொண்டிருப்பவனுக்கு உதவி செய்கிறவன்தான் உறவினன் – என்று கொள்ளத்தக்கவன்.'' (27)

இவ்வாறு தைரியமாகவும் கடுமையாகவும் பேசும் அவன், கோபம் கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட கும்பகர்ணன், அடங்கிய குரலில் இனிமையாகப் பேசத் தொடங்கினான். மூத்த சகோதரனின் புலன்கள் எல்லாம் மிகவும் பதற்றத்துடன் இருப்பதைக் கவனித்த கும்பகர்ணன், அவனுக்கு ஆறுதல் அளிக்கும் நோக்கத்துடன் மென்மையாகப் பேசினான்— (28,29)

''அரக்கர் கோமானே! நீங்கள் மனவேதனைப்பட்டது போதும். கோபத்தை முற்றிலுமாக ஒழித்துவிட்டு மனநிம்மதியுடன் இருக்க வேண்டும். பார்வேந்தே! நான் உயிருடன் இருக்கும்போதே நீங்கள் இவ்வாறு மனத்தளர்ச்சி அடையலாகாது. எவன் காரணமாக, நீங்கள் கவலை கொண்டிருக்கிறீர்களோ, அவனை நான் மாய்த்து விடுகிறேன். (30,31)

மாமன்னரே! (இன்ப–துன்பமாகிய) எந்த நிலையிலும், நான் உங்களுக்கு நன்மை பயக்கும் ஆலோசனைகளைக் கூறக் கடமைப்பட்டவன். உறவுப் பிணைப்பினாலும் சகோதர வாஞ்சையாலும்தான் இவ்வாறு (சற்றுக் கடுமையான வார்த்தை) சொன்னேன். பாசம் மிகுந்த தம்பியால் இப்போதைய சூழ்நிலையில் எது செய்யப்பட வேண்டுமோ (அதாவது, பகைவர்களின் அழிவு), அதைப் போர்க்களத்தில் நான் செய்வதை நீங்கள் கண்கொண்டு பார்க்கப் போகிறீர்கள். (32,33)

பேராற்றல் உடையவரே! வெகுவிரைவில் இராமனும் அவன் சகோதரனும் போர்க்களத்தில் என்னால் கொல்லப்பட்டதும், வானரப்படை சிதறி ஓடுவதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். தோள்வலி மிக்கவரே! போர் முனையிலிருந்து இராமனின் தலையை வெகுவிரைவில் நான் கொண்டுவரப் போகிறேன். அதைப் பார்த்து, நீங்கள் மனநிம்மதி அடைவீர்கள்; சீதையோ பெருந்துயரத்தை அடைவாள்! (34,35)

அத்$_3$ய ராமஸ்ய பஶ்யந்து நித$_4$நம் ஸுமஹத்ப்ரியம் ।
லங்காயாம் ராக்ஷஸா: ஸர்வே யே தே நிஹதபா$_3$ந்த$_4$வா: ॥ (36)

அத்$_3$ய ஶோகபரீதாநாம் ஸ்வப$_3$ந்து$_4$வத$_4$காரணாத் ।
ஶத்ரோர்யுதி$_4$ விநாஶேந கரோம்யஸ்ரப்ரமார்ஜநம் ॥ (37)

அத்$_3$ய பர்வதஸங்காஶம் ஸஸூர்யமிவ தோயத$_3$ம் ।
விகீர்ணம் பஶ்ய ஸமரே ஸுக்$_3$ரீவம் ப்லவகோ$_3$த்தமம் ॥ (38)

கத$_2$ம் த்வம் ராக்ஷஸைரேபி$_4$ர்மயா ச பரிரக்ஷித: ।
ஜிகா$_4$ம்ஸுபி$_4$ர்தா$_3$ஶரதி$_2$ம் வத்$_4$யஸே த்வமிஹாநக$_4$ ॥ (39)

அத$_2$ பூர்வம் ஹதே தேந மயி த்வாம் ஹந்தி ராக$_4$வ: ।
நாஹமாத்மநி ஸந்தாபம் க$_3$ச்சே$_2$யம் ராக்ஷஸாதி$_4$ப ॥ (40)

காமம் த்விதா$_3$நீமபி மாம் வ்யாதி$_3$ஶ த்வம் பரந்தப ।
ந பர: ப்ரேஷணீயஸ்தே யுத்$_3$தா$_4$யாதுலவிக்ரம ॥ (41)

அஹமுத்ஸாத$_3$யிஷ்யாமி ஶத்ரூந்ஸ்தவ மஹாப$_3$ல ।
யதி$_3$ ஶக்ரோ யதி$_3$ யமோ யதி$_3$ பாவகமாருதௌ ॥
தாநஹம் யோத$_4$யிஷ்யாமி குபே$_3$ரவருணாவபி ॥ (42)

கி$_3$ரிமாத்ரஶரீரஸ்ய ஶிதஶூலத$_4$ரஸ்ய மே ।
நர்த$_3$தஸ்தீக்ஷ்ணத$_3$ம்ஷ்ட்ரஸ்ய பி$_3$பீ$_4$யாச்ச புரந்த$_3$ர: ॥ (43)

அத$_2$வா த்யக்தஶஸ்த்ரஸ்ய ம்ருத்$_3$நதஸ்தரஸா ரிபூந் ।
ந மே ப்ரதிமுகே$_2$ ஸ்தா$_2$தும் கஶ்சிச்ச$_2$க்தோ ஜிஜீவிஷு: ॥ (44)

நைவ ஶக்த்யா ந க$_3$த$_3$யா நாஸிநா நேஷுபி$_4$: ஶிதை: ।
ஹஸ்தாப்$_4$யாமேவ ஸம்ரப்$_3$தோ$_4$ ஹநிஷ்யாம்யபி வஜ்ரிணம் ॥ (45)

யதி$_3$ மே முஷ்டிவேக$_3$ம் ஸ ராக$_4$வோऽத்$_3$ய ஸஹிஷ்யதே ।
தத: பாஸ்யந்தி பா$_3$ணௌகா$_4$ ருதி$_4$ரம் ராக$_4$வஸ்ய து ॥ (46)

சிந்தயா பா$_3$த்$_4$யஸே ராஜந் கிமர்த$_2$ம் மயி திஷ்ட$_2$தி ।
ஸோऽஹம் ஶத்ருவிநாஶாய தவ நிர்யாதுமுத்$_3$யத: ॥ (47)

முஞ்ச ராமாத்$_3$ப$_4$யம் ராஜந் ஹநிஷ்யாமீஹ ஸம்யுகே$_3$ ।
ராக$_4$வம் லக்ஷ்மணம் சைவ ஸுக்$_3$ரீவம் ச மஹாப$_3$லம் ॥
ஹநுமந்தம் ச ரக்ஷோக்$_4$நம் லங்கா யேந ப்ரதீ$_3$பிதா ॥ (48)

ஹரீம்ஶ்சாபி ஹநிஷ்யாமி ஸம்யுகே$_3$ ஸமவஸ்தி$_2$தாந் ।
அஸாதா$_4$ரணமிச்சா$_2$மி தவ தா$_3$தும் மஹத்$_3$யஶ: ॥ (49)

இலங்கையில் (அனுமானாலும் மற்ற வானரப் படையினராலும் கொல்லப்பட்ட) உற்றார்–உறவினரை இழந்து தவிக்கும் அரக்கர்கள் எல்லோரும், அவர்களுடைய இழப்புக்கு மூலகாரணமான இராமனின் வீழ்ச்சியைக் கண்டு மிகவும் ஆனந்தமடையப் போகிறார்கள். (36)

இன்றைய தினம், போரில் எதிரியை அழிப்பேன். அதன் மூலம், உற்றார்–உறவினர் மாய்க்கப்பட்டதால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அரக்கர்களின் கண்ணீரைத் துடைப்பேன். (37)

மலையைப் போன்றவனும் வானரோத்தமனுமான சுக்ரீவன், என்னால் போரில் கொல்லப்பட்டு, இரத்தம் சொட்டச் சொட்ட, சூரியகாந்தியால் செம்மை படர்ந்த மேகம்போல் வீழ்ந்து கிடப்பதைக் காணப் போகிறீர்கள். (38)

குற்றமற்றவரே! தசரத புதல்வனைக் கொல்வதில், நானும் மற்ற அரக்கர்களும் மிகவும் முனைப்புடன் இருந்து, உங்களைப் பாதுகாத்து வருகிறோம். அப்படியிருக்கும்போது, அவனால் உங்களை எப்படிக் கொல்ல முடியும்? (39)

அரக்கர் தலைவரே! (உங்களுக்குத் தைரியம் கொடுக்கும் இன்னொரு வார்த்தையையும் சொல்கிறேன்.) இராமன், முதலில் என்னைக் கொன்ற பிறகுதானே, உங்களைக் கொல்லமுடியும்? (அப்படி நேர்ந்தால்) இந்த விஷயத்தில் நான் வருத்தம் அடைய மாட்டேன். (உங்களுக்கு முன்னதாக நான் பகைவர்களால் கொல்லப்பட்டுவிட்டால், 'நாம் ஏன் வீணாக மாட்டிக் கொண்டோம்? யுத்தத்தைத் தவிர்த்திருக்கலாமே?' என்று எண்ணி வருந்தமாட்டேன்.) (40)

ஒப்பற்ற பராக்கிரமம் உடையவரே! எதிரிகளை வாட்டி வதைப்பவரே! பேச்செல்லாம் இத்துடன் போதும். இந்த விநாடியே, நான் போர்க்களத்திற்குச் செல்ல, எனக்கு ஆணை கொடுங்கள். வேறு எவரையும் நீங்கள் அனுப்பத் தேவையில்லை. மகாபலம் கொண்டவரே! நான் உங்களுடைய பகைவர்களை – இந்திரன், யமன், அக்னி, வாயு, குபேரன், வருணன் ஆகிய எவராக இருந்தாலும் சரி எதிர்த்துப் போரிடுவேன். (தேவர்களையே என்னால் எதிர்க்க முடியும் என்னும்போது, கேவலம் மானுடனான இராமன் எம்மாத்திரம்!) (41,42)

ஒரு மலையைப் போன்று பெருத்த உடலையும் கூர்மையான கோரைப் பற்களையும் உடைய நான், கையில் கூர்மையான சூலாயுதத்தைத் தாங்கி (போர்க்களத்தில்) சிம்மநாதம் செய்தால், தேவேந்திரனும் அஞ்சி ஓடுவான்! (43)

அல்லது, நான் ஆயுதங்களே இல்லாமல் எதிரிப்படையில் புகுந்து வெகுவேகமாகச் சென்று, பகைவர்களை அடித்து நொறுக்குவேன் என்னும்போது, தன் உயிர்மேல் ஆசை கொண்ட எவன்தான், என் எதிரில் வருவதற்குத் துணிவான்? எனக்கு வேல்–கதை–வாள்–கூர்மையான பாணங்கள் முதலிய எவ்விதப் படைக்கலனும் தேவையில்லை. எனக்குக் கோபம் ஏற்பட்டால் என் இரு கைகளாலேயே, வஜ்ராயுதபாணியான இந்திரனையும் கொன்று வீழ்த்துவேன். (44,45)

ஒருக்கால், அந்த இராமன் என் முஷ்டித் தாக்குதலுக்குத் தப்பிப் பிழைத்து விட்டானேயானால், பின்னர், என்னுடைய அம்புக்கூட்டங்கள் இராமனின் இரத்தத்தைக் குடிக்கும். (அவனை அம்பு எய்து கொன்று விடுவேன் – என்றபடி.) மன்னனே! நான் இங்கே (உங்கள் ஆணைப்படி நடப்பதற்காக) நின்று கொண்டிருக்கும்போது, நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? நான், உங்கள் பகைவர்களை அழிப்பதற்காகப் போர்க்களம் செல்வதற்கு ஆயத்தமாகிவிட்டேன். (46,47)

வேந்தனே! இராமனிடத்திலிருந்து பேராபத்து வரும் என்ற அச்சத்தை விட்டுவிடுங்கள். வெகுவிரைவில் போர்க்களத்தில், இராமன், லட்சுமணன், பேராற்றல் படைத்த சுக்ரீவன், அரக்கர்களைக் கொன்று இலங்கைக்குத் தீ வைத்த அனுமான் ஆகிய அனைவரையும் கொன்றுவிடுவேன். (அது மட்டுமா?) போரில் என்னை எதிர்த்து வரும் மற்ற வானரர்களையும் மாய்த்து விடுவேன். (இவ்வாறு செய்து) மற்ற எவருக்கும் கிட்டாத பெரும்புகழை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். (48,49)

யதி$_3$ சேந்த்$_3$ராத்$_3$ப$_4$யம் ராஜந் யதி$_3$ வாபி ஸ்வயம்பு$_4$வ: ।
அபி தே$_3$வா: ஶயிஷ்யந்தே க்ருத்$_3$தே$_4$ மயி மஹீதலே ॥ (50)

யமம் ச ஶமயிஷ்யாமி ப$_4$க்ஷயிஷ்யாமி பாவகம் ।
ஆதி$_3$த்யம் பாதயிஷ்யாமி ஸநக்ஷத்ரம் மஹீதலே ॥ (51)

ஶதக்ரதும் வதி$_4$ஷ்யாமி பாஸ்யாமி வருணாலயம் ।
பர்வதாம்ஶ்சூர்ணயிஷ்யாமி தா$_3$ரயிஷ்யாமி மேதி$_3$நீம் ॥ (52)

தீ$_3$ர்க$_4$காலம் ப்ரஸுப்தஸ்ய கும்ப$_4$கர்ணஸ்ய விக்ரமம் ।
அத்$_3$ய பஶ்யந்து பூ$_4$தாநி ப$_4$க்ஷ்யமாணாநி ஸர்வஶ: ॥
நந்வித$_3$ம் த்ரிதி$_3$வம் ஸர்வமாஹாரஸ்ய ந பூர்யதே ॥ (53)

வதே$_4$ந தே தா$_3$ஶரதே$_2$: ஸுகா$_2$ர்ஹம்
ஸுக$_2$ம் ஸமாஹர்துமஹம் வ்ரஜாமி ।
நிக்ருத்ய ராமம் ஸஹ லக்ஷ்மணேந
கா$_2$தா$_3$மி ஸர்வாந் ஹரியூத$_2$முக்$_2$யாந் ॥ (54)

ரமஸ்வ காமம் பிப$_3$ சாக்$_3$ர்யவாருணீம்
குருஷ்வ க்ருத்யாநி விநீயதாம் ஜ்வர: ।
மயாத்$_3$ய ராமே க$_3$மிதே யமக்ஷயம்
சிராய ஸீதா வஶகா$_3$ ப$_4$விஷ்யதி ॥ (55)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரிஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

சது:ஷஷ்டிதம: ஸர்க$_3$:

ஸீதாப்ரலோப$_4$நோபாய:

தது$_3$க்தமதிகாயஸ்ய ப$_3$லிநோ பா$_3$ஹுஶாலிந: ।
கும்ப$_4$கர்ணஸ்ய வசநம் ஶ்ருத்வோவாச மஹோத$_3$ர: ॥ (1)

கும்ப$_4$கர்ண குலே ஜாதோ த்$_4$ருஷ்ட: ப்ராக்ருதத$_3$ர்ஶந: ।
அவலிப்தோ ந ஶக்நோஷி க்ருத்யம் ஸர்வத்ர வேதி$_3$தும் ॥ (2)

ந ஹி ராஜா ந ஜாநீதே கும்ப$_4$கர்ண நயாநயௌ ।
த்வம் து கைஶோரகாத்$_3$த்$_4$ருஷ்ட: கேவலம் வக்துமிச்ச$_2$ஸி ॥ (3)

ஸ்தா$_2$நம் வ்ருத்$_3$தி$_4$ம் ச ஹாநிம் ச தே$_3$ஶகாலவிபா$_4$க$_3$வித் ।
ஆத்மநஶ்ச பரேஷாம் ச பு$_3$த்$_4$யதே ராக்ஷஸர்ஷப$_4$: ॥ (4)

யத்த்வஶக்யம் ப$_3$லவதா கர்தும் ப்ராக்ருதபு$_3$த்$_3$தி$_4$நா ।
அநுபாஸிதவ்ருத்$_3$தே$_4$ந க: குர்யாத்தாத்$_3$ருஶம் பு$_3$த$_4$: ॥ (5)

அரசனே! உங்களுக்கு இந்திரனிடமிருந்தோ, பிரும்மாவிடமிருந்தோ ஆபத்து வரும் என்ற அச்சம் இருந்தால், அதை விட்டுவிடுங்கள். நான் கோபம் கொண்டு போர் புரியத் தொடங்கினால், எதிர்ப்பவர் எவ்வளவு பெரிய தேவதையாக இருந்தாலும், அவர் தரையில் வீழ்த்தப்படுவார் என்பது திண்ணம். (50)

நான், மகா வல்லமை கொண்ட யமனையும் அடக்கி விடுவேன்; அக்னிதேவனை விழுங்கி விடுவேன்; நட்சத்திர மண்டலத்தோடுகூட சூரியனையும் பூமியில் வீழ்த்துவேன்! (51)

இந்திரனை மாய்த்து விடுவேன்; கடலைக் குடித்து விடுவேன்; மலைகளைப் பொடிப் பொடியாக்குவேன்; பூமியைப் பிளந்து விடுவேன்! (52)

நீண்ட காலம் உறங்கிக் கிடந்த கும்பகர்ணனாகிய என்னுடைய அளவிறந்த ஆற்றலை, என்னால் இப்போது விழுங்கப்படும் உயிர்கள் பார்க்கட்டும். (நான், எல்லாப் பிராணிகளையும் அனாயாசமாக விழுங்குவதை, உயிர் தப்பிய பிராணிகள் பார்க்கப் போகிறார்கள் – என்றபடி.) இந்த மூன்று உலகங்களும் எனக்கு உணவானாலும், என் வயிறு நிரம்பாது! (53)

நீங்கள் சுக–போகங்களை அனுபவிக்க வேண்டியவர். தசரத மைந்தனைக் கொன்று, உங்களுக்கு சுகத்தைத் தருவதற்காக (நான் போர்க்களம்) செல்கிறேன். இராம–லட்சுமணர்களைக் கொன்று, வானரப்படைத் தலைவர்கள் எல்லோரையும் மென்று விழுங்குவேன். (54)

(மன்னனே!) உங்கள் விருப்பப்படியெல்லாம் சுகத்தை அனுபவியுங்கள்; சிறந்த மதுபானங்களைப் பருகுங்கள்; மனக்கவலையை விட்டொழித்து, உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். இப்போது, நான் இராமனை யமன் வீட்டிற்கு அனுப்பப் போகிறேன். பின்னர், எப்போதும் சீதை உங்கள் கைப்பிடியில் இருப்பாள்!'' (55)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து நான்கு

சீதையை வசப்படுத்துவதற்கான உபாயம்

பேருடல் கொண்டவனும் பேராற்றல் படைத்தவனும் தோள்வலிமை மிக்கவனுமான கும்பகர்ணன் கூறிய சொற்களைக் கேட்ட மகோதரன், பின்வருமாறு கூறினான்— (1)

''கும்பகர்ணனே! நீ உத்தம குலத்தில் பிறந்தவன்; (என்றாலும், நீதி நூல்களைக் கற்றறிந்தவன் அல்லன்.) வாய்ப்பேச்சு வீரன்; கீழ்மக்களைப் போன்ற சிந்தனை உடையவன்; செருக்கு மிக்கவன். அதனால், எல்லாத் துறைகளிலும் செய்யத் தக்கவைகளை அறிய வல்லவன் அல்லன். (உன் அறிவு எல்லை கடந்தது அல்ல.) (2)

கும்பகர்ணனே! நமது மன்னர், நீதி–அநீதி அறியாதவர் அல்லர். ஆனால், நீயோ சிறுபிள்ளைத்தனமாக ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறாய். (3)

அரக்க மன்னர், இடம்–காலம் பற்றி நன்கு தெரிந்து கொண்டிருப்பவர்; தம்முடையவும் பகைவர்களுடையவும் பலம்–பலவீனம்–சமநிலை பற்றி அறிந்துள்ளவர். (4)

பேராற்றல் மிக்கவனாக இருந்தாலும், சான்றோர்களிடம் கல்வி பயிலாதவனும் அற்ப அறிவு கொண்டவனும்கூட செய்யத்தகாத ஒரு செயலை, அறிவாளியான ஒருவன் செய்யத் துணிவானா? (5)

யாம்ஸ்து த$_4$ர்மார்த$_2$காமாம்ஸ்த்வம் ப்$_3$ரவீஷி ப்ருத$_2$க$_3$ாஶ்ரயாந் ।
அநுபே$_3$ாத்$_3$து$_4$ம் ஸ்வப$_4$ாவே தாந்ந ஹி லக்ஷணமஸ்தி தே ॥ (6)

கர்ம சைவ ஹி ஸர்வேஷாம் காரணாநாம் ப்ரயோஜகம் ।
ஶ்ரேய: பாபீயஸாம் சாத்ர ப$_2$லம் ப$_4$வதி கர்மணாம் ॥ (7)

நி:ஶ்ரேயஸப$_2$லாவேவ த$_4$ர்மார்த$_2$ாவிதராவபி ।
அத$_4$ர்மாநர்த$_2$யோ: ப்ராப்தி: ப$_2$லம் ச ப்ரத்யவாயிகம் ॥ (8)

ஐஹலௌகிகபாரத்ரம் கர்ம பும்பி$_4$ர்நிஷேவ்யதே ।
கர்மாண்யபி து கல்யாநி லப$_4$தே காமமாஸ்தி$_2$த: ॥ (9)

தத்ர க்லுப்தமித$_3$ம் ராக்ஞா ஹ்ருதி$_3$ கார்யம் மதம் ச ந: ।
ஶத்ரௌ ஹி ஸாஹஸம் யத்ஸ்யாத்கிமிவாத்ராபநீயதே ॥ (10)

ஏகஸ்யைவாபி$_4$யாநே து ஹேதுர்ய: கதி$_2$தஸ்த்வயா ।
தத்ராப்யநுபபந்நம் தே வக்ஷ்யாமி யத$_3$ஸாது$_4$ ச ॥ (11)

யேந பூர்வம் ஜநஸ்த$_2$ாநே ப$_3$ஹவோऽதிப$_3$லா ஹதா: ।
ராக்ஷஸா ராக$_4$வம் தம் த்வம் கத$_2$மேகோ ஜயிஷ்யஸி ॥ (12)

யே புரா நிர்ஜிதாஸ்தேந ஜநஸ்த$_2$ாநே மஹௌஜஸ: ।
ராக்ஷஸாந்ஸ்தாந் புரே ஸர்வாந் பீ$_4$தாநத்$_3$யாபி பஶ்யஸி ॥ (13)

தம் ஸிம்ஹமிவ ஸம்க்ருத்$_3$த$_4$ம் ராமம் த$_3$ஶரத$_2$ாத்மஜம் ।
ஸர்பம் ஸுப்தமிவாபு$_3$த்$_4$ய ப்ரபே$_3$ாத$_4$யிதுமிச்ச$_2$ஸி ॥ (14)

ஜ்வலந்தம் தேஜஸா நித்யம் க்ரோதே$_4$ந ச து$_3$ராஸத$_3$ம் ।
கஸ்தம் ம்ருத்யுமிவாஸஹ்யமாஸாத$_3$யிதுமர்ஹதி ॥ (15)

ஸம்ஶயஸ்த$_2$மித$_3$ம் ஸர்வம் ஶத்ரோ: ப்ரதிஸமாஸநே ।
ஏகஸ்ய க$_3$மநம் தத்ர ந ஹி மே ரோசதே ப்$_4$ருஶம் ॥ (16)

ஹீநார்த$_2$: ஸுஸம்ருத்$_3$த$_4$ார்த$_2$ம் கோ ரிபும் ப்ராக்ருதம் யத$_2$ா ।
நிஶ்சித்ய ஜீவிதத்யாகே$_3$ வஶமாநேதுமிச்ச$_2$தி ॥ (17)

யஸ்ய நாஸ்தி மநுஷ்யேஷு ஸத்$_3$ருஶோ ராக்ஷஸோத்தம ।
கத$_2$மாஶம்ஸஸே யோத்$_3$து$_4$ம் துல்யேநேந்த்$_3$ரவிவஸ்வதோ: ॥ (18)

தரும–அர்த்த–காமங்கள், வெவ்வேறு காலங்களில் செய்யத்தக்கவை என்று நீ கூறினாய். ஆனால், அவைகளை உள்ளபடி அறிவதற்கான அறிவாற்றல் உன்னிடம் இல்லையே! (6)

கர்மாக்கள்தான், எல்லாப் பலன்களுக்கும் காரணமாக அமைகின்றன. (எனவே, தருமம்–அர்த்தம்–காமம் என்று பிரித்துப் பிரித்துப் பேசுவதில் பயனில்லை.) வேள்வி போன்ற சில கர்மாக்களைச் செய்யும்போது துன்பம் அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்றாலும், செயல் முடிவில் நல்ல பலன்களே (ஸ்வர்க்கவாசம்) கிடைக்கின்றன. பிறர் பொருளைத் திருடுதல் போன்ற தீய செயல்களால், அப்போது சுகபோகம் கிடைத்தாலும், அதன் பலனாக (நரக வாசம் முதலான) துன்பங்களையே அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், இன்ன கர்மாவுக்கு இன்ன பலன் என்று உறுதியாகக் கூற முடியாது. (7)

நல்ல கால–தேச–பாத்திரத்தில் செய்யப்படும் தருமங்கள் – அர்த்த விநியோகங்கள் (பலனை எதிர்பாராது செய்யப்படும் ஜபம், தியானம், பூஜை முதலிய தருமங்கள்; வேள்வி, தானம் முதலானவை பொருள்களை நல்வழியில் பயன்படுத்துதல்.) மோட்ச பலனைத் தருவதோடுகூட, பல நற்பலன்களையும் தருகின்றன. இவ்விதம் நல்வழியில் அல்லாமல் அதருமமாகவும் அனர்த்தமாகவும் செய்யப்படும் கர்மாக்கள் தீய பயனையும் கொடுக்கின்றன. (8)

உயிர்கள் நல்வினை–தீவினையின் பலன்களை இம்மையிலும் மறுமையிலும் அனுபவிக்கின்றன. ஆனால், குறிப்பிட்ட விருப்பத்தோடு செய்யப்படும் கர்மாக்கள் இந்த உலகிலேயே பலனைத் தந்து விடுகின்றன. (எந்தப் பயனை உத்தேசித்து ஒரு கர்மாவைச் செய்தானோ, அந்த விருப்பத்தை இங்கேயே பெற்று விடுகிறான். கர்மாக்களின் பயனைப் பெறுவதற்காக, அவன் இடம்–காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.) (9)

எனவே, (இப்போது நாம் விவாதித்துக் கொண்டிருக்கும்) இந்த விஷயத்தில் மன்னர் மனத்தில் என்ன முடிவு எடுக்கிறாரோ, அது எங்களுக்கும் சம்மதமே. பகைவன் விஷயத்தில் ஓர் அடாத செயல் செய்யப்பட்டால், அது எப்படித் தவறாகும்? (பகைவனுக்கு எதிராக மன்னர் எடுத்த நடவடிக்கைகள் சரியானவையே. நீதி–அநீதி என்ற விசாரணைக்கே இங்கு இடமில்லை.) (10)

நீ ஒருவனாகவே அவர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு, உன் பேராற்றலையே காரணமாகக் கூறினாய். ஆற்றல் என்ற அந்த விஷயத்திலும் உன் வாதம் பொருந்தாது; ஏற்கத்தக்கதல்ல என்பதை இப்போது சொல்கிறேன். அளவுகடந்த ஆற்றல் கொண்ட ஏராளமான அரக்கர்கள், முன்பு ஜனஸ்தானத்தில் இராமனால் கொல்லப்பட்டார்கள். (அவ்வளவு மகத்தான வீரம் உடையவன், இராமன்.) அப்படிப்பட்ட இராமனை, நீ ஒருவனாகவே எவ்வாறு வெற்றி கொள்வாய்? (11,12)

மகாபலசாலிகளான பல அரக்கர்கள், ஜனஸ்தானப் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடி வந்து இங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மனத்திலிருந்து அச்சம் இன்னும் நீங்கவில்லை என்பதை நீ கண்ணால் பார்க்கவில்லையா? தசரதன் மைந்தனான இராமன், சினங்கொண்ட சிங்கத்தைப் போல் பராக்கிரமும் பயங்கரமும் உடையவன். (அவன் இப்போது சற்று அடங்கியே இருக்கிறான்.) தூங்கிக் கொண்டிருக்கும் நாகத்தை (அது விழித்துக் கொண்டால் ஆபத்து என்பதைத் தெரிந்து கொண்டும்) எழுப்பிவிட விரும்புகிறாய் போலும்! (13,14)

இராமன், எப்போதும் தன் ஆத்மசக்தியால் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குக் கோபம் வந்தால், யாரும் அவனை எதிர்த்து நிற்க முடியாது. காலனைப் போல் பொறுக்க முடியாதவன். (தான் நினைத்ததை சாதித்தே முடிப்பவன்.) அவனை எதிர்த்துப் போரிட யாரால்தான் முடியும்? நம்முடைய படையினர் எல்லோரும் சேர்ந்து சென்றாலே, அவர்கள் எல்லோரும் உயிருடன் திரும்புவார்களா என்பதும் சந்தேகம்தான். ஆகவே, தனியாக நீ மட்டும் அங்கே போவது நல்லது என்று நான் கொஞ்சமும் கருதவில்லை. (15,16)

பாமரத்தனமான நீ, உன் உயிரைவிட நிச்சயித்து, ஒரு வரம்புக்கு உட்பட்ட ஆற்றலுடைய ஒருவன், வரம்பு கடந்த பேராற்றல் படைத்தவனை எதிர்ப்பது போல், எதிரியை வசப்படுத்த விரும்புகிறாய். அரக்கர் திலகமே! மனிதர்களில் அவனுக்கு இணையானவர் எவருமில்லை. இந்திரன்–சூரியனுக்கு நிகரான அவனோடு போர் புரிய, நீ எவ்வாறு துணிச்சல் பெற்றாய்?'' (17,18)

ஏவமுக்த்வா து ஸம்ரப்3த4ம் கும்ப4கர்ணம் மஹோத3ர: ।
உவாச ரக்ஷஸாம் மத்4யே ராவணம் லோகராவணம் ॥ (19)

லப்3த்4வா புநஸ்த்வம் வைதே3ஹீம் கிமர்த2ம் ஸம்ப்ரஜல்பஸி ।
யதீ3ச்ச2ஸி ததா3 ஸீதா வஶகா3 தே ப4விஷ்யதி ॥ (20)

த்3ருஷ்ட: கஶ்சிது3பாயோ மே ஸீதோபஸ்தா2நகாரக: ।
ருசிரஶ்சேத்ஸ்வயா பு3த்3த4யா ராக்ஷஸேஶ்வர தம் ஶ்ருணு ॥ (21)

அஹம் த்3விஜிஹ்வ: ஸம்ஹ்ராதீ3 கும்ப4கர்ணோ விதர்த3ந: ।
பஞ்ச ராமவதா4யைதே நிர்யாந்த்வித்யவகோ4ஷய ॥ (22)

ததோ க3த்வா வயம் யுத்3த4ம் தா3ஸ்யாமஸ்தஸ்ய யத்நத: ।
ஜேஷ்யாமோ யதி3 தே ஶத்ரூந்நோபாயை: க்ருத்யமஸ்தி ந: ॥ (23)

அத2 ஜீவதி ந: ஶத்ருர்வயம் ச க்ருதஸம்யுகா3: ।
ததஸ்தத3பி4பத்ஸ்யாமோ மநஸா யத்ஸமீக்ஷிதம் ॥ (24)

வயம் யுத்3தா4தி3ஹேஷ்யாமோ ருதி4ரேண ஸமுக்ஷிதா: ।
விதா3ர்ய ஸ்வதநும் பா3ணை ராமநாமாங்கிதை: ஶிதை: ॥ (25)

ப4க்ஷிதோ ராக4வோऽஸ்மாபி4ர்லக்ஷ்மணஶ்சேதி வாதி3ந: ।
தவ பாதௌ3 க்3ரஹீஷ்யாமஸ்த்வம் ந: காமம் ப்ரபூரய ॥ (26)

ததோऽவகோ4ஷய புரே க3ஜஸ்கந்தே4ந பார்தி2வ ।
ஹதோ ராம: ஸஹ ப்4ராத்ரா ஸஸைந்ய இதி ஸர்வத: ॥ (27)

ப்ரீதோ நாம ததோ பூ4த்வா ப்4ருத்யாநாம் த்வமரிந்த3ம ।
போ4கா3ம்ஶ்ச பரிவாராம்ஶ்ச காமாம்ஶ்ச வஸு தா3பய ॥ (28)

ததோ மால்யாநி வாஸாம்ஸி வீராணாமநுலேபநம் ।
பேயம் ச ப3ஹு யோதே4ப்4ய: ஸ்வயம் ச முதி3த: பிப3 ॥ (29)

ததோऽஸ்மிந் ப3ஹுலீபூதே கௌலீநே ஸர்வதோ க3தே ।
ப4க்ஷித: ஸஸுஹ்ருத்3ராமோ ராக்ஷஸைரிதி விஶ்ருதே ॥ (30)

ப்ரவிஶ்யாஶ்வாஸ்ய சாபி த்வம் ஸீதாம் ரஹஸி ஸாந்த்வய ।
த4நதா4ந்யைஶ்ச காமைஶ்ச ரத்நைஶ்சைநாம் ப்ரலோப4ய ॥ (31)

அநயோபத4யா ராஜந் ப4யஶோகாநுப3ந்த4யா ।
அகாமா த்வத்3வஶம் ஸீதா நஷ்டநாதா2 க3மிஷ்யதி ॥ (32)

ரஞ்ஜநீயம் ஹி ப4ர்தாரம் விநஷ்டமவக3ம்ய ஸா ।
நைராஶ்யாத் ஸ்த்ரீலகு4த்வாச்ச த்வத்3வஶம் ப்ரதிபத்ஸ்யதே ॥ (33)

கோபவசப்பட்டிருந்த கும்பகர்ணனைப் பார்த்து இவ்வாறு கூறிவிட்டு, அரக்கர் நிரம்பியிருந்த அந்த அவையில், உலகத்தைக் கதறச் செய்யும் இராவணனைப் பார்த்து மகோதரன் கூறினான்— (19)

''தாங்கள் சீதையை இங்கேயே கொண்டு வந்து விட்டீர்கள். இனிமேல் பேச்சு எதற்கு? தங்களுக்கு எப்போது விருப்பம் ஏற்படுகிறதோ, அப்போதே சீதை தங்கள் வசப்படுவாள். (20)

அரக்கர் தலைவரே! சீதையை வசப்படுத்துவதற்கான ஓர் உபாயம் என் புத்தியில் தோன்றியிருக்கிறது. தாங்கள் விரும்பினால், அந்த உபாயத்தைக் கேட்கலாம். (21)

(நானாகிய) மகோதரன், த்விஜிஹ்வன், ஸம்ஹ்ராதீ, கும்பகர்ணன், விதர்தனன் ஆகிய ஐவரும், இராமனைக் கொல்வதற்காகப் புறப்பட்டுவிட்டார்கள் – என்று நகரத்தில் அறிவிப்புச் செய்யுங்கள். (22)

நாங்கள் அவ்விடம் சென்று அவனைப் போருக்கு அழைப்போம்; கடுமையாகப் போரிடுவோம். தங்கள் எதிரிகளை வென்று விடுவோமானால், (சீதையைத் தங்கள் விருப்பத்திற்கு இணங்கச் செய்வதற்கு) வேறு உபாயங்கள் தேவைப்பட மாட்டா! (23)

நம்முடைய எதிரி, கடுமையாகப் போரிட்ட பின்னரும் உயிரோடு இருக்கிறான் என்றால், அப்போது செய்ய வேண்டிய ஒரு தந்திர உபாயத்தை மனத்தில் வைத்துள்ளேன். (24)

போர்க்களத்திலிருந்து நாங்கள், இராமன் பெயர் பொறிக்கப்பட்ட கூரிய பாணங்களால், எங்களது உடலை கீறிக் கொண்டு இரத்தம் சொட்டச் சொட்ட இவ்விடம் வருகின்றோம். (25)

'நாங்கள் இராம–லட்சுமணர்களை விழுங்கி விட்டோம்!' என்று கூறிக் கொண்டே, தங்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்குவோம். (தாங்கள், உடனே மகிழ்ந்து) எங்களுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொடுங்கள். (26)

மன்னரே! உடனே, நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும், 'படைவீரர்களோடும் தம்பியோடும்கூட இராமன் கொல்லப்பட்டான்' என்று, யானையின் மேல் ஒருவனை அமர்த்தி உரத்த குரலில் அறிவிப்பு செய்யச் சொல்லுங்கள். (27)

எதிரிகளை மாய்ப்பவரே! அப்போது தாங்களும் நமது பகைவர்களின் அழிவினால் பெருமகிழ்ச்சி கொண்டவர்போல், அரண்மனைப் பணியாளர்களுக்கு போகப்பொருள்களையும் வாகனங்களையும் விரும்பிய அளவு செல்வத்தையும் கொடுக்கச் செய்யுங்கள்; போரில் சண்டையிட்ட வீரர்களுக்கு உடைகள், மலர் மாலைகள், மேனிப்பூச்சுகள் மற்றும் பல்வகையான மதுக்கள் ஆகியவற்றையும் தாராளமாக வழங்குங்கள்; நீங்களும் உள்ளக்களிப்பை அடைந்தது போல் மதுபானம் செய்யுங்கள். (28,29)

'இராமன், நண்பர்களோடுகூட அரக்கர்களால் விழுங்கப்பட்டான்' என்ற (ஆதாரமற்ற) செய்தி, எங்கும் பரவியதும், அது சீதையின் செவிகளையும் சென்றடையும். அப்போது, தாங்கள் தனிமையில் சீதையைச் சந்தித்து ஆறுதல் கூறி, (அவள் மனம் குளிரும்வண்ணம்) பல்வகைச் செல்வங்களையும், அவள் விரும்பி ஏற்கத் தக்கவைகளையும் நவரத்தினங்களையும் காட்டி, அவளை மயங்கச் செய்யுங்கள். (அவள் மனத்தைத் தங்களிடம் திருப்புங்கள்.) (30,31)

வேந்தரே! இவ்வாறு வஞ்சனையாக நாம் நாடகம் போட்டால், அச்சமும் சோகமும் குடிகொள்ள, கணவனை இழந்து ஆதரவு இல்லாமல் போய்விட்டதாகக் கருதி, அவள் விரும்பாவிட்டாலும்கூட வேறு வழியில்லாமல் தங்கள் வசப்பட்டுவிடுவாள். (32)

மனத்திற்குகந்த கணவன் மாண்டு போனதால், 'தான் காப்பாற்றப்படுவோம்' என்ற எண்ணத்தைக் கைவிட்டு, பெண்களின் இயல்பான சபலத்தினால் தங்கள் விருப்பத்திற்கு உடன்படுவாள். (33)

ஸா புரா ஸுக$_{2}$ஸம்வ்ருத்$_{3}$தா ஸுக$_{2}$ார்ஹா து$_{3}$:க$_{2}$கர்ஶிதா ।
த்வய்யதீ$_{4}$நம் ஸுக$_{2}$ம் க்ஞாத்வா ஸர்வதோ$_{2}$பக$_{3}$மிஷ்யதி ॥ (34)

ஏதத் ஸுநீதம் மம த$_{3}$ர்ஶநேந
ராமம் ஹி த்$_{3}$ருஷ்ட்வைவ ப$_{4}$வேத$_{3}$நர்த$_{2}$: ।
இஹைவ தே ஸேத்ஸ்யதி மோத்ஸுகோ பூர்–
மஹாநயுத்$_{3}$தே$_{4}$ந ஸுக$_{2}$ஸ்ய லாப$_{4}$: ॥ (35)

அநஷ்டஸைந்யோ ஹ்யநவாப்தஸம்ஶயோ
ரிபூநயுத்$_{3}$தே$_{4}$ந ஜயந்நராதி$_{4}$ப: ।
யஶஶ்ச புண்யம் ச மஹந்மஹீபதே
ஶ்ரியம் ச கீர்திம் ச சிரம் ஸமஶ்நுதே ॥ (36)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_{3}$ராமாயணே வால்மீகீயே ஆதி$_{3}$காவ்யே
யுத்$_{3}$த$_{4}$காண்டே$_{3}$ சது:ஷஷ்டிதம: ஸர்க$_{3}$: ॥

பஞ்சஷஷ்டிதம: ஸர்க$_{3}$:

கும்ப$_{4}$கர்ணாபி$_{4}$ஷேணநம்

ஸ ததோ$_{2}$க்தஸ்து நிர்ப$_{4}$ர்த்ஸ்ய கும்ப$_{4}$கர்ணோ மஹோத$_{3}$ரம் ।
அப்$_{3}$ரவீத்$_{3}$ராக்ஷஸஶ்ரேஷ்ட$_{2}$ம் ப்$_{4}$ராதரம் ராவணம் தத: ॥ (1)

ஸோ஽ஹம் தவ ப$_{4}$யம் கோ$_{4}$ரம் வதா$_{4}$த்தஸ்ய து$_{3}$ராத்மந: ।
ராமஸ்யாத்$_{3}$ய ப்ரமார்ஜாமி நிர்வைரோ ஹி ஸுகீ$_{2}$ ப$_{4}$வ ॥ (2)

க$_{3}$ர்ஜந்தி ந வ்ருதா$_{2}$ ஶூரா நிர்ஜலா இவ தோயதா$_{3}$: ।
பஶ்ய ஸம்பத்$_{3}$யமாநம் து க$_{3}$ர்ஜிதம் யுதி$_{4}$ கர்மணா ॥ (3)

ந மர்ஷயதி சாத்மாநம் ஸம்பா$_{4}$வயதி நாத்மநா ।
அத$_{3}$ர்ஶயித்வா ஶூராஸ்து கர்ம குர்வந்தி து$_{3}$ஷ்கரம் ॥ (4)

விக்லவாநாமபு$_{3}$த்$_{3}$தீ$_{4}$நாம் ராக்ஞாம் பண்டி$_{3}$தமாநிநாம் ।
ஶ்ருண்வதா ஸாதி$_{3}$தமித$_{3}$ம் த்வத்$_{3}$விதா$_{4}$நாம் மஹோத$_{3}$ர ॥ (5)

யுத்$_{3}$தே$_{4}$ காபுருஷைர்நித்யம் ப$_{4}$வத்$_{3}$பி$_{4}$: ப்ரியவாதி$_{3}$பி$_{4}$: ।
ராஜாநமநுக$_{3}$ச்ச$_{2}$த்$_{3}$பி$_{4}$: க்ருத்யமேதத்$_{3}$தி$_{4}$ ஸாதி$_{3}$தம் ॥ (6)

ராஜஶேஷா க்ருதா லங்கா க்ஷீண: கோஶோ ப$_{3}$லம் ஹதம் ।
ராஜாநமிமமாஸாத்$_{3}$ய ஸுஹ்ருச்சிஹ்நமமித்ரகம் ॥ (7)

அவள், முன்பு பலவகையான சுக–சௌக்கியங்களை அனுபவித்தவள்; சுகமாக இருப்பதற்குத் தகுதி உடையவள்; இப்போது, துக்கத்தினால் கசக்கிப் பிழியப்பட்டிருக்கிறாள். (இந்த நிலையில்) தங்கள் வசத்தில் இருந்தால் சுகமாக வாழலாம் என்றுணர்ந்து, தங்களை வந்தடைவாள். (34)

என்னுடைய மனத்தில், இதுதான் மிகச்சிறந்த உபாயம் என்று தோன்றுகிறது. போர்க்களத்தில் இராமனை எதிர்த்துப் போராடினால், (அவனை நேருக்குநேர் சந்தித்தால்,) நமக்கு ஆபத்து உண்டாகலாம். (ஏனெனில், போரில் வெற்றி–தோல்வியை உறுதியாகக் கூற முடியாது.) தாங்கள் சஞ்சலத்துடன் இருக்க வேண்டாம். (என் உபாயத்தின்படி நடந்தால்,) போர் எதுவும் நிகழாமலே, தாங்கள் விரும்பும் மகத்தான சுகம், இவ்விடத்திலேயே தங்களுக்குக் கிடைக்கும். (35)

பாராளும் மாமன்னரே! எந்தவொரு மன்னன், தன் படைவீரர்களைப் பலி கொடுக்காமலும், 'வெற்றியா? தோல்வியா?' என்ற ஐயப்பாடு இல்லாமலும் போர் புரியாமலே எதிரிகளை வெற்றி கொள்கிறானோ, அவன், நிலைத்த புகழையும், புண்ணியத்தையும், நீண்ட நாட்களுக்கு செல்வச்செழிப்பையும் மற்றும் நற்பெயரையும் அனுபவிக்கிறான்.'' (36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தைந்து

கும்பகர்ணன் புறப்பாடு

மகோதரன் இவ்வாறு கூறியவுடன், கும்பகர்ணன் அவனை எரிச்சலுடன் அதட்டிவிட்டு, அரக்க மன்னனும் மூத்த சகோதரனுமான இராவணனைப் பார்த்துக் கூறினான்— (1)

''(மன்னனே!) தீய இயல்புடைய இராமனை நான் இன்றே கொன்று வீழ்த்தி, உங்கள் பயத்தைத் துடைத்துவிடுகிறேன். பின்னர், எதிரிகள் எவரும் இல்லாததால், நீங்கள் சௌக்கியமாக இருக்கலாம். சூரர்கள், நீரில்லாத வெற்று மேகங்கள் போல, பயன் தராத வீரவசனங்களைப் பேச மாட்டார்கள். (மகோதரன் நீரில்லாத மேகம்; நானோ நீருண்ட மேகம்.) நான் போர்க்களத்தில், என்னுடைய வீரத்தைக் காட்டிப் போர் புரிந்து சிம்மநாதம் செய்வதை நீங்கள் காணப் போகிறீர்கள். (கருமேகத்தின் இடி முழக்கத்தைப் போன்று, என் இடி முழக்கமும் வீண் போகாதது. அது, மழை பெய்வித்தே தீரும்; நான் எதிரிகளை வாட்டி வதைக்கவே செய்வேன்!) (2,3)

சூரர்கள், தங்களுக்கு ஏற்படும் அவமானத்தைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ள மாட்டார்கள். வாய்ப்பேச்சுப் பேசாமல் செயற்கரிய வீரச்செயல்களைச் செய்து காட்டுவார்கள்.'' (4)

(இனி, மகோதரனைப் பார்த்துக் கூறுகிறான்—) ''மகோதரா! அச்சங்கொண்ட, அறிவில்லாத, மெத்தப் படித்தவர்களாகத் தங்களைப் பறைசாற்றிக் கொள்கிற உன்னைப் போன்றவர்களின் சொற்களைச் செவிமடுத்துக் கேட்டதால்தான், மன்னனுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. (5)

உன்னைப் போன்று போர்முனையில் நிற்க முடியாமல் அஞ்சி ஓடுபவர்களும், (அநீதியான ஆலோசனையானாலும்) இனிமை சொட்டப் பேசுகிறவர்களும், மன்னனின் பேச்சுக்கு, 'ஆம், ஐயா!' என்று, (வம்பில் மாட்டிக் கொள்ளாமலிருப்பதற்காக) ஒத்துப் போகிறவர்களும்தான். (பேரழிவுக்கு முதல் கட்டமான) இந்த நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். (6)

இப்போது, இலங்கையில் மன்னன் மட்டுமே மிஞ்சியிருக்கிறார். (மிகவும் ஏராளமான அரக்கத் தலைவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள்.) கருவூலம் வெற்றிடமாகிவிட்டது. சேனை அழிக்கப்பட்டுவிட்டது. நண்பன் என்ற உருவில் வந்து, உங்களைப் போஷிக்கும் இந்த மன்னனுக்கு எதிரான செயல்களைச் செய்திருக்கிறீர்கள். (7)

ஏஷ நிர்யாம்யஹம் யுத்$_3$த$_4$முத்$_3$யத: ஶத்ருநிர்ஜயே ।
து$_3$ர்நயம் ப$_4$வதாமத்$_3$ய ஸமீகர்துமிஹாஹவே ॥ (8)

ஏவமுக்தவதோ வாக்யம் கும்ப$_4$கர்ணஸ்ய தீ$_4$மத: ।
ப்ரத்யுவாச ததோ வாக்யம் ப்ரஹஸந் ராக்ஷஸாதி$_4$ப: ॥ (9)

மஹோத$_3$ரோऽயம் ராமாத்து பரித்ரஸ்தோ ந ஸம்ஶய: ।
ந ஹி ரோசயதே தாத யுத்$_3$த$_4$ம் யுத்$_3$த$_4$விஶாரத$_3$ ॥ (10)

கஶ்சிந்மே த்வத்ஸமோ நாஸ்தி ஸௌஹ்ருதே$_3$ந ப$_3$லேந ச ।
க$_3$ச்ச$_2$ ஶத்ருவதா$_4$ய த்வம் கும்ப$_4$கர்ண ஜயாய ச ॥ (11)

தஸ்மாத்து ப$_4$யநாஶார்த$_2$ம் ப$_4$வாந் ஸம்போ$_3$தி$_4$தோ மயா ।
அயம் ஹி கால: ஸுஹ்ருதா$_3$ம் ராக்ஷஸாநாமரிந்த$_3$ம ॥ (12)

தத்$_3$க$_3$ச்ச$_2$ ஶூலமாதா$_3$ய பாஶஹஸ்த இவாந்தக: ।
வாநராந் ராஜபுத்ரௌ ச ப$_4$க்ஷயாதி$_3$த்யதேஜஸௌ ॥ (13)

ஸமாலோக்ய து தே ரூபம் வித்$_3$ரவிஷ்யந்தி வாநரா: ।
ராமலக்ஷ்மணயோஶ்சாபி ஹ்ருத$_3$யே ப்ரஸ்பு$_2$டிஷ்யத: ॥ (14)

ஏவமுக்த்வா மஹாராஜ: கும்ப$_4$கர்ணம் மஹாப$_3$லம் ।
புநர்ஜாதமிவாத்மாநம் மேநே ராக்ஷஸபுங்க$_3$வ: ॥ (15)

கும்ப$_4$கர்ணப$_3$லாபி$_4$க்ஞோ ஜாநந்ஸ்தஸ்ய பராக்ரமம் ।
ப$_3$பூ$_4$வ முதி$_3$தோ ராஜா ஶஶாங்க இவ நிர்மல: ॥ (16)

இத்யேவமுக்த: ஸம்ஹ்ருஷ்டோ நிர்ஜகா$_3$ம மஹாப$_3$ல: ।
ராக்ஞஸ்து வசநம் ஶ்ருத்வா கும்ப$_4$கர்ண: ஸமுத்$_3$யத: ॥ (17)

ஆத$_3$தே$_3$ நிஶிதம் ஶூலம் வேகா$_3$ச்ச$_2$த்ருநிப$_3$ர்ஹணம் ।
ஸர்வகாலாயஸம் தீ$_3$ப்தம் தப்தகாஞ்சநபூ$_4$ஷணம் ॥
இந்த்$_3$ராஶநிஸமம் பீ$_4$மம் வஜ்ரப்ரதிமகௌ$_3$ரவம் ॥ (18)

தே$_3$வதா$_3$நவக$_3$ந்த$_4$ர்வயக்ஷகிந்நரஸூத$_3$நம் ।
ரக்தமால்யம் மஹாதா$_4$ம ஸ்வதஶ்சோத்$_3$க$_3$தபாவகம் ॥ (19)

ஆதா$_3$ய நிஶிதம் ஶூலம் ஶத்ருஶோணிதரஞ்ஜிதம் ।
கும்ப$_4$கர்ணோ மஹாதேஜா ராவணம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (20)

க$_3$மிஷ்யாம்யஹமேகாகீ திஷ்ட$_2$த்விஹ ப$_3$லம் மஹத் ।
அத்$_3$ய தாந் க்ஷுபி$_4$தாந் க்ருத்$_3$தோ$_4$ ப$_4$க்ஷயிஷ்யாமி வாநராந் ॥ (21)

கும்ப$_4$கர்ணவச: ஶ்ருத்வா ராவணோ வாக்யமப்$_3$ரவீத் ।
ஸைந்யை: பரிவ்ருதோ க$_3$ச்ச$_2$ ஶூலமுத்$_3$க$_3$ரபாணிபி$_4$: ॥
வாநரா ஹி மஹாத்மாந: ஶீக்$_4$ரா: ஸுவ்யவஸாயிந: ॥ (22)

நீங்களெல்லோரும் செய்த அநியாயத்தை ஈடுகட்டுவதற்காக, எதிரியை வெல்லும் முனைப்புடன், நான் இப்போது போருக்குச் செல்கிறேன்.'' (8)

பேரறிஞனான கும்பகர்ணன் இவ்வாறு பேசி முடித்தவுடன், அரக்க மன்னன் (பாராட்டும் வகையில்) மெல்ல நகைத்து, பின்வருமாறு பதில் கூறினான்— (9)

''அன்புச் சகோதரனே! போர்க்கலையில் நிபுணனே! மகோதரன், இராமனைக் கண்டு அஞ்சுகிறான் என்பதில் ஐயமில்லை. அதனால்தான், போர் செய்வதையே அவன் விரும்பவில்லை. என் நலனில் அக்கறையும், என் சொற்களுக்கு ஆதரவும் கொடுப்பவர்களில் உனக்கு நிகரானவர் எவருமிலர். கும்பகர்ணா! சென்று வா; எதிரிகளை வென்று வா; வெற்றியுடன் வா! (10,11)

என் அச்சத்தைப் போக்குவதற்காகவே, உறங்கிக் கொண்டிருந்த உன்னை எழுப்பினேன். எதிரிகளை மாய்ப்பவனே! என் நலனில் அக்கறை கொண்ட அரக்கர்களுக்கு, தங்கள் ஆதரவை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற காலம் இதுதான். (12)

பாசக்கயிற்றைக் கையிலேந்திய காலன் போல், சூலாயுதத்தை எடுத்துக் கொண்டு செல்வாய். வானரர்களையும், சூரியன்போல் ஒளிவீசுபவர்களான அரசகுமாரர்கள் இருவரையும் கொன்று, புசித்துவிட்டு வா. வானரர்கள், உன்னுடைய (பயங்கரமான) உருவத்தைக் கண்டவுடனேயே தலைதெறிக்க ஓடிப் போய்விடுவார்கள்; இராம–லட்சுமணர்களுடைய இதயங்களும் நடுங்கப் போகின்றன.'' (13,14)

மாமன்னனும், அரக்கர்களில் சிறந்தவனுமான இராவணன், பேராற்றல் கொண்ட கும்பகர்ணனைப் பார்த்து, இவ்வாறு கூறினான். (கும்பகர்ணன் வெற்றி பெற்று விடுவான் என்ற நம்பிக்கையால்,) தான் மீண்டும் உயிர்பெற்று விட்டதாகவே எண்ணிக் கொண்டான். (15)

கும்பகர்ணனுடைய உடல் வலிமையையும் போராற்றலையும் அறிந்தவனான இராவணன், (கும்பகர்ணன் போர் செய்ய இணங்கியதால்) மனமகிழ்ந்து, மாசுமருவற்ற சந்திரன் போல் விளங்கினான். (16)

மன்னனின் சொற்களைக் கேட்டு, மகிழ்ச்சியடைந்தவனும் வலிமை மிக்கவனுமான கும்பகர்ணன், போர் செய்யும் துடிப்புடன் அங்கிருந்து வெளியேறினான். (17)

அவன் எதிரிகளை அழிக்கும் கூரான சூலத்தை வேகத்துடன் கையில் எடுத்துக் கொண்டான். அந்த சூலம் முற்றிலும் இரும்பால் ஆனது; ஒளி வீசிக் கொண்டிருப்பது; தூய தங்கத்தாலான அணிகலன்கள் பூண்டது; இந்திரனின் வஜ்ராயுதத்தைப் போன்றது; பயங்கரமானது; இடியைப் போன்று இலக்கினைத் தாக்கி அழிப்பது; தேவர்கள், அசுரர்கள், கந்தர்வர்கள், யட்சர்கள், கின்னரர்கள் ஆகியவர்களைச் சிதைத்தது; சிவந்த மலர்மாலை புனையப்பட்டது; மிகவும் ஆற்றலுடையது; தானாகவே நெருப்பைக் கக்கிக் கொண்டிருப்பது. (18,19)

பகைவர்களின் இரத்தத்தால் சிவந்திருந்த கூர்மையான சூலத்தைக் கையிலேந்திக் கொண்டு, அளவு கடந்த வீரம் கொண்ட கும்பகர்ணன், இராவணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (20)

''நமது மாபெரும் சேனை இங்கேயே இருக்கட்டும்; நான் மட்டும் தனியாகவே செல்கிறேன். சென்றவுடன், மனக்கலக்கத்தில் தவித்துக் கொண்டிருக்கும் வானரர்களை, கோபத்துடன் இருக்கும் நான் புசித்துவிடப் போகிறேன்.'' (21)

கும்பகர்ணனுடைய பேச்சைக் கேட்டுவிட்டு, ''சூலங்களையும் இரும்புத் தடிகளையும் தாங்கிய படைவீரர்களுடன் செல்வாயாக. ஏனென்றால், வானரர்கள் மிகவும் ஆற்றல் படைத்தவர்கள்; விரைந்து செயல்படுபவர்கள்; மிகவும் முயற்சி உடையவர்கள்'' என்று இராவணன் கூறினான். (22)

ஏகாகிநம் ப்ரமத்தம் வா நயேயுர்த3ஶநை: க்ஷயம் ।
தஸ்மாத் பரமது3ர்த4ர்ஷை: ஸைந்யை: பரிவ்ருதோ வ்ரஜ ॥
ரக்ஷஸாமஹிதம் ஸர்வம் ஶத்ருபக்ஷம் நிஷூத3ய ॥ (23)

அத2ாஸநாத் ஸமுத்பத்ய ஸ்ரஜம் மணிக்ருதாந்தராம் ।
ஆப3ப3ந்த4 மஹாதேஜா: கும்ப4கர்ணஸ்ய ராவண: ॥ (24)

அங்க3தா3ந்யங்கு3ளீவேஷ்டாந் வராண்யாப4ரணாநி ச ।
ஹாரம் ச ஶஶிஸங்காஶமாப3ப3ந்த4 மஹாத்மந: ॥ (25)

தி3வ்யாநி ச ஸுக3ந்தீ4நி மால்யதா3மாநி ராவண: ।
ஶ்ரோத்ரே சாஸஞ்ஜயாமாஸ ஶ்ரீமதீ சாஸ்ய குண்ட3லே ॥ (26)

காஞ்சநாங்க3த3கேயூரநிஷ்காப4ரணபூ4ஷித: ।
கும்ப4கர்ணோ ப்3ருஹத்கர்ண: ஸுஹுதோऽக்3நிரிவாப3பௌ4 ॥ (27)

ஶ்ரோணீஸூத்ரேண மஹதா மேசகேந வ்யராஜத ।
அம்ருதோத்பாத3நே நத்3தே4ா பு4ஜங்கே3நேவ மந்த3ர: ॥ (28)

ஸ காஞ்சநம் பா4ரஸஹம் நிவாதம் வித்3யுத்ப்ரப4ம் தீ3ப்தமிவாத்மபா4ஸா ।
ஆப3த்4யமாந: கவசம் ரராஜ ஸந்த்4யாப்4ரஸம்வீத இவாத்3ரிராஜ: ॥ (29)

ஸர்வாப4ரணநத்3தா4ங்க3: ஶூலபாணி: ஸ ராக்ஷஸ: ।
த்ரிவிக்ரமக்ருதோத்ஸாஹோ நாராயண இவாப3பௌ4 ॥ (30)

ப்4ராதரம் ஸம்பரிஷ்வஜ்ய க்ருத்வா சாபி4ப்ரத3க்ஷிணம் ।
ப்ரணம்ய ஶிரஸா தஸ்மை ஸம்ப்ரதஸ்தே2 மஹாப3ல: ॥ (31)

நிஷ்பதந்தம் மஹாகாயம் மஹாநாத3ம் மஹாப3லம் ।
தமாஶீர்பி4: ப்ரஶஸ்தாபி4: ப்ரேஷயாமாஸ ராவண: ॥ (32)

ஶங்க2து3ந்து3பி4நிர்கோ4ஷை: ஸைந்யைஶ்சாபி வராயுதை4: ।
தம் க3ஜைஶ்ச துரங்கை3ஶ்ச ஸ்யந்த3நைஶ்சாம்பு3த3ஸ்வநை: ॥
அநுஜக்3முர்மஹாத்மாநம் ரதி2நோ ரதி2நாம் வரம் ॥ (33)

ஸர்பைருஷ்ட்ரை: க2ரைரஶ்வை: ஸிம்ஹத்3விபம்ருக3த்3விஜை: ॥
அநுஜக்3முஶ்ச தம் கோ4ரம் கும்ப4கர்ணம் மஹாப3லம் ॥ (34)

ஸ புஷ்பவர்ஷைரவகீர்யமாணோ த்4ருதாதபத்ர: ஶிதஶூலபாணி: ।
மதோ3த்கட: ஶோணிதக3ந்த4மத்தோ விநிர்யயௌ தா3நவதே3வஶத்ரு: ॥ (35)

பதா3தயஶ்ச ப3ஹவோ மஹாநாதா3 மஹாப3லா: ।
அந்வயு ராக்ஷஸா பீ4மா பீ4மாக்ஷா: ஶஸ்த்ரபாணய: ॥ (36)

"தனியாக இருக்கின்றவனையும் கவனக்குறைவாக இருக்கின்றவனையும் பற்களால் கடித்தே குலைத்து விடுவார்கள். ஆகையால், எதிர்த்து நிற்க முடியாத நமது படையுடன் செல்வாயாக. அரக்கர்களுக்குத் தீங்கு செய்த எதிரிகளின் ஆண்மையைக் களைந்தெறிவாயாக!" (23)

பேராற்றல் படைத்த இராவணன், உடனே இருக்கையிலிருந்து எழுந்து, இடையிடையே நவரத்தினங்கள் கோர்க்கப்பட்ட மாலையை கும்கர்ணனுக்கு அணிவித்தான். (24)

பேராற்றல் படைத்த கும்பகர்ணனுக்கு, தோள்வளைகளையும் மோதிரங்களையும் சிறந்த அணிகலன்களையும் நிலாவைப் போல் குளிரப் பிரகாசிக்கும் முத்துமாலையையும் சூட்டினான். இராவணன், தெய்வீக மணங்கமழும் மலர்மாலைகளை அவன் கழுத்திலும், பேரொளி வீசும் இரு குண்டலங்களை அவன் செவிகளிலும் அணிவித்தான். (25,26)

விசாலமான செவிகளைக் கொண்ட கும்பகர்ணன், பொன்னாலான கைவளை, தோள்வளை முதலான அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டு, நன்கு ஆகுதி செய்யப்பட்ட அக்னியைப் போல் செவ்வொளியுடன் விளங்கினான். (27)

அவனுடைய இடையில் பெரியதும் கரியதுமான அரைஞாண் சுற்றப்பட்டிருந்தது. அதனால், அமுதம் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்தபோது, வாசுகியால் சுற்றப்பட்ட மந்தரமலை போல் காணப்பட்டான். (28)

அவன், பொன்னாலானதும் (கதை போன்ற ஆயுதங்களின்) தாக்குதலைத் தாங்கக் கூடியதும் சஸ்திரங்களால் பிளக்க முடியாததும் தன் சுய ஒளியினால் மின்னல்போல் விளங்குவதுமான கவசத்தை அணிந்து, மாலைநேர மேகங்களால் சூழப்பட்ட மலையரசன்போல் காட்சி தந்தான். (29)

எல்லா அவயவங்களிலும் உரிய அணிகலன்களை அணிந்திருந்த அவன், சூலத்தைக் கையிலேந்தி நடந்தபோது, திரிவிக்ரம அவதார காலத்தில் மிகவும் கம்பீரமாகத் திகழ்ந்த ஸ்ரீமந்நாராயணன் போல் விளங்கினான். (30)

மகா வல்லமை படைத்த அவன், சகோதரனை மார்புறத் தழுவி, வலம் வந்து, அவனுக்குத் தலைவணங்கிப் பணிந்துவிட்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டான். (31)

மாபெரும் பலவானும் சிம்மநாதம் செய்பவனும் பேருடல் கொண்டவனுமான அவன் காலில் விழந்து வணங்கியதை ஏற்று, மிகச்சிறந்த ஆசிகளைக் கூறி, இராவணன் விடைகொடுத்து அனுப்பி வைத்தான். (32)

யானைகள், குதிரைகள், மேகம் போல் பேரொலி எழுப்புகின்ற தேர்கள், கொடுஞ்செயல் புரியும் ஆயுதங்கள் தாங்கிய படைகள், தேரிலிருந்து போர் செய்யும் வீரர்கள் முதலானோர், பேராற்றல் கொண்டவனும் தேரிலிருந்தபடியே போர் செய்பவர்களில் தலையாயவனுமான அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அப்போது சங்கு–துந்துபிகளின் முழக்கமும் எழுப்பப்பட்டது. (33)

அரக்கர்களில் பலர், பாம்புகள், ஒட்டகங்கள், குதிரைகள், கழுதைகள், சிங்கங்கள், யானைகள், மான்கள், பறவைகள் முதலிய வாகனங்களில் ஏறிக் கொண்டு, பயங்கரமானவனும் மிகவும் பராக்கிரமம் படைத்தவனுமான கும்பகர்ணனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (34)

கூர்மையான சூலத்தைக் கையில் ஏந்தியவனும் திமிர் பிடித்தவனும் இரத்த நாற்றத்தினால் வெறி கொண்டவனும் தேவ–அசுரர்களுக்குப் பகைவனுமான அவன்மேல் மலர்மாரி பொழியப்பட்டது; தலைக்கு மேலே வெண்கொற்றக் குடை நிழல் தந்து கொண்டிருந்தது. (35)

அவனுடன்கூட, மகாபலம் பொருந்தியவர்களும் பேரிரைச்சல் எழுப்புவர்களும் பயங்கரமானவர்களும் அஞ்சத்தக்க கண்களை உடையவர்களும் படைக்கலன்கள் தாங்கியவர்களுமான ஏராளமான காலாட்படையினர் சென்றார்கள். (36)

ரக்தாக்ஷா: ஸுமஹாகாயா நீலாஞ்ஜநசயோபமா: ।
ஶூலாநுத்3யம்ய க2ட்3கா3ம்ஶ்ச நிஶிதாம்ஶ்ச பரஶ்வதா4ந் ॥ (37)

ப3ஹுவ்யாமாம்ஶ்ச பரிகா4ந் க3தா3ஶ்ச முஸலாநி ச ।
தாலஸ்கந்தா4ம்ஶ்ச விபுலாந் க்ஷேபணீயாந் து3ராஸதா3ந் ॥ (38)

அத2ாந்யத்3வபுராதா3ய தா3ருணம் ரோமஹர்ஷணம் ।
நிஷ்பபாத மஹாதேஜா: கும்ப4கர்ணோ மஹாப3ல: ॥ (39)

த4நு:ஶதபரீணாஹ: ஸ ஷட்ஶதஸமுச்ச்2ரித: ।
ரௌத்3ர: ஶகடசக்ராக்ஷோ மஹாபர்வதஸந்நிப4: ॥ (40)

ஸம்நிவர்த்ய ச ரக்ஷாம்ஸி த3க்3த4ஶைலோபமோ மஹாந் ।
கும்ப4கர்ணோ மஹாவக்த்ர: ப்ரஹஸந்நித3மப்3ரவீத் ॥ (41)

அத்3ய வாநரமுக்2யாநாம் தாநி யூத2ாநி பா4க3ஶ: ।
நிர்த3ஹிஷ்யாமி ஸங்க்ருத்3த4: ஶலபா4நிவ பாவக: ॥ (42)

நாபராத்4யந்தி மே காமம் வாநரா வநசாரிண: ।
ஜாதிரஸ்மத்3விதா4நாம் ஸா புரோத்3யாநவிபூ4ஷணம் ॥ (43)

புரரோத4ஸ்ய மூலம் து ராக4வ: ஸஹலக்ஷ்மண: ।
ஹதே தஸ்மிந் ஹதம் ஸர்வம் வதி4ஷ்யாமி ஸம்யுகே3 ॥ (44)

ஏவம் தஸ்ய ப்3ருவாணஸ்ய கும்ப4கர்ணஸ்ய ராக்ஷஸா: ।
நாத3ம் சக்ருர்மஹாகோ4ரம் கம்பயந்த இவார்ணவம் ॥ (45)

தஸ்ய நிஷ்பததஸ்தூர்ணம் கும்ப4கர்ணஸ்ய தீ4மத: ।
ப3பூ4வுர்கோ4ரரூபாணி நிமித்தாநி ஸமந்தத: ॥ (46)

உல்காஶநியுதா மேகா4 ப3பூ4வுர்க3ர்த3பா4ருணா: ।
ஸஸாக3ரவநா சைவ வஸுதா4 ஸமகம்பத ॥ (47)

கோ4ரரூபா: ஶிவா நேது3: ஸஜ்வாலகப3லைர்முகை2: ।
மண்ட3லாந்யபஸவ்யாநி ப3ப3ந்து4ஶ்ச விஹங்க3மா: ॥ (48)

நிஷ்பபாத ச மாலேவ க்3ருத்4ரோऽஸ்ய பதி2 க3ச்ச2த: ।
ப்ராஸ்பு2ரந்நயநம் சாஸ்ய ஸவ்யோ பா3ஹுரகம்பத ॥ (49)

நிபபாத தத3ா ஸோல்கா ஜ்வலந்தீ பீ4மநி:ஸ்வநா ।
ஆதி3த்யோ நிஷ்ப்ரப4ஶ்சாஸீந்ந ப்ரவாதி ஸுகோ2ऽநில: ॥ (50)

அசிந்தயந் மஹோத்பாதாநுத்தி2தாந் ரோமஹர்ஷணாந் ।
நிர்யயௌ கும்ப4கர்ணஸ்து க்ருதாந்தப3லசோதி3த: ॥ (51)

அவர்கள் எல்லோரும் சிவந்த கண்களை உடையவர்கள்; மிகப்பெரிய உடற்கட்டு அமைந்தவர்கள்; கரிய மலை போன்றவர்கள்; சூலங்கள், வாள்கள், கூர்மையான கோடரிகள், மிக நீண்ட இரும்புத் தடிகள், கதைகள், உலக்கைகள், நீண்ட பனைமரத் தண்டுகள், எதிர்க்க முடியாத வேல்கள் ஆகியவைகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். (37,38)

அளவு கடந்த ஆண்மையும் எல்லையில்லாத உடல் பலமும் படைத்த கும்பகர்ணன், அப்போது கோரமானதும் காணச் சகியாததுமான வேறோர் உருவத்தை எடுத்துக் கொண்டான். அவ்வுருவம் நூறு வில்லளவு விசாலமுடையதாகவும், அறுநூறு வில்லளவு உயரமுடையதாகவும், வண்டிச் சக்கரங்களைப் போன்ற கண்களை உடையதாகவும் இருந்தது. இவ்வாறு, பெரிய மலையைப் போன்ற உருவத்துடன் பயங்கரமாக அவன் சென்றான். (39,40)

காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டுக் கருவண்ணம் பூண்ட மாமலையைப் போன்ற அவன், அரக்கர்களைப் பார்த்து, தன்னுடைய பெரிய வாயைத் திறந்து அட்டகாசமாகச் சிரித்தவண்ணம் பின்வருமாறு கூறினான்— (41)

''விட்டிற்பூச்சிகளை நெருப்பு எரித்துப் பொசுக்கிவிடுவதைப் போல, கோபத்துடன் இருக்கும் நான், வானர வீரர்களின் அணிகளை ஒவ்வொன்றாகக் கொளுத்தி அழித்துவிடப் போகிறேன். (42)

காட்டு விலங்குகளான வானரர்கள் நேரடியாக எனக்கு எந்தக் குற்றமும் செய்யவில்லை. எனவே, அவர்களைக் கொல்லக் கூடாதுதான். மேலும், வானர இனம் நம் போன்றவர்களின் நகரப் பூஞ்சோலைகளில் (வாழ்ந்து கொண்டு, தம் செயல்களால் பார்ப்போரை மகிழச் செய்து,) அணிகலன் போல் உள்ளது. (43)

இலங்கை நகரம் முற்றுகையிடப்பட்டிருப்பதற்கு, இலக்குவனோடு கூடிய இராமனே முதற்காரணம். அவன் மாய்க்கப்பட்டுவிட்டால், மற்ற எல்லோருமே மாய்க்கப்பட்ட மாதிரிதான். அதனால், முதலாவதாகப் போரில் அவனைக் கொல்லப் போகிறேன்.'' (44)

இவ்வாறு, கும்பகர்ணன் சொல்லி முடித்ததும், உடன் சென்ற அரக்கர்கள் பெருங்கடலையும் அதிரடிப்பவர்கள் போல மிகவும் பயங்கரமாகப் பேரொலி எழுப்பினார்கள். (45)

பேரறிஞனான கும்பகர்ணன் வேகமாகச் சென்று கொண்டிருந்தபோது, நாற்றிசையிலும் மிகவும் பயங்கரமான தீயநிமித்தங்கள் தோன்றின. (46)

கருமுகில் கழுதை போல் சாம்பல் நிறமாக மாறியது; எரிகொள்ளி இடிகளுடன் விளங்கிற்று. கடல்–காடுகள் நிறைந்த பூமியும் நடுநடுங்கி ஆடியது. (47)

பயங்கரத் தோற்றம் கொண்ட நரிகள், நெருப்புப் பொறிகளை வாயினால் கக்கிக் கொண்டு ஊளையிட்டன; பறவைகள் இடதுபுறமாக வட்டமடித்தன. (48)

அவன் சென்று கொண்டிருந்த பாதையில், ஒரு மாலையைப் போல் கழுகுகள் விழுந்தன; அவனுடைய இடது கண்ணும் இடது கையும் துடித்தன. (49)

அப்போது, தீவண்ணம் கொண்ட வால் நட்சத்திரம் பேரிரைச்சலுடன் கீழே விழுந்தது; சூரியன் ஒளியிழந்தான்; காற்று இதமாக வீசவில்லை. (50)

காலனின் வசப்பட்ட கும்பகர்ணன், கண்ணெதிரில் தோன்றிய மயிர்க்கூச்சலை உண்டாக்கும் பெரிய துர்நிமித்தங்களைப் பற்றிக் கவலைப்படாமல் வெளியேறிக் கொண்டிருந்தான். (51)

ஸ லங்க$_4$யித்வா ப்ராகாரம் பத்$_3$ப்$_4$யாம் பர்வதஸந்நிப$_4$: ।
த$_3$த$_3$ர்ஶாப்$_4$ரக$_4$நப்ரக்$_2$யம் வாநராநீகமத்$_3$பு$_4$தம் ॥ (52)

தே த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$ம் வாநரா: பர்வதோபமம் ।
வாயுநுந்நா இவ க$_4$நா யயு: ஸர்வா தி$_3$ஶஸ்தத$_3$ா ॥ (53)

தத்$_3$வாநராநீகமதிப்ரசண்ட$_3$ம் தி$_3$ஶோ த்$_3$ரவத்$_3$பி$_4$ந்நமிவாப்$_4$ரஜாலம் ।
ஸ கும்ப$_4$கர்ண: ஸமவேக்ஷ்ய ஹர்ஷாந்நநாத$_3$ பூ$_4$யோ க$_4$நவத்$_3$க$_4$நாப$_4$: ॥ (54)

தே தஸ்ய கோ$_4$ரம் நிநத$_3$ம் நிஶம்ய
யதா$_2$ நிநாத$_3$ம் தி$_3$வி வாரித$_3$ஸ்ய ।
பேதுர்த$_4$ரண்யாம் ப$_3$ஹவ: ப்லவங்க$_3$ா
நிக்ருத்தமூலா இவ ஸாலவ்ருக்ஷா: ॥ (55)

விபுலபரிக$_4$வாந் ஸ கும்ப$_4$கர்ணோ
ரிபுநித$_4$நாய விநி:ஸ்ருதோ மஹாத்மா ।
கபிக$_3$ணப$_4$யமாத$_3$த$_3$த் ஸுபீ$_4$மம்
ப்ரபு$_4$ரிவ கிங்கரத$_3$ண்ட$_3$வாந் யுகா$_3$ந்தே ॥ (56)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகியே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஷட்ஷஷ்டிதம: ஸர்க$_3$:

வாநரபர்யவஸ்தா$_2$பநம்

ஸ லங்க$_4$யித்வா ப்ராகாரம் கி$_3$ரிகூடோபமோ மஹாந் ।
நிர்யயௌ நக$_3$ராத்தூர்ணம் கும்ப$_4$கர்ணோ மஹாப$_3$ல: ॥ (1)

ஸ நநாத$_3$ மஹாநாத$_3$ம் ஸமுத்$_3$ரமபி$_4$நாத$_3$யந் ।
ஜநயந்நிவ நிர்கா$_4$தாந் வித$_4$மந்நிவ பர்வதாந் ॥ (2)

தமவத்$_4$யம் மக$_4$வதா யமேந வருணேந வா ।
ப்ரேக்ஷ்ய பீ$_4$மாக்ஷமாயாந்தம் வாநரா விப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (3)

தாம்ஸ்து விப்ரத்$_3$ருதாந் த்$_3$ருஷ்ட்வா வாலிபுத்ரோऽங்க$_3$தோ$_3$ऽப்$_3$ரவீத் ।
நளம் நீலம் க$_3$வாக்ஷம் ச குமுத$_3$ம் ச மஹாப$_3$லம் ॥ (4)

ஆத்மாநமத்ர விஸ்ம்ருத்ய வீர்யாண்யபி$_4$ஜநாநி ச ।
க்வ க$_3$ச்ச$_2$த ப$_4$யத்ரஸ்தா: ப்ராக்ருதா ஹரயோ யதா$_2$ ॥ (5)

ஸாது$_4$ ஸௌம்யா நிவர்தத்$_4$வம் கிம் ப்ராணாந் பரிரக்ஷத$_2$ ।
நாலம் யுத்$_3$தா$_4$ய வை ரக்ஷோ மஹதீயம் விபீ$_4$ஷிகா ॥ (6)

மஹதீமுத்தி$_2$தாமேநாம் ராக்ஷஸாநாம் விபீ$_4$ஷிகாம் ।
விக்ரமாத்$_3$வித$_4$மிஷ்யாமோ நிவர்தத்$_4$வம் ப்லவங்க$_3$மா: ॥ (7)

மாமலை போன்றிருந்த அவன், காலால் நடந்து சென்றே பட்டணத்தின் மதிற்சுவரைக் கடந்து, நீருண்ட மேகம் போல் விண்ணில் பரந்து விளங்கும் மிக அற்புதமான வானரப் படையைக் கண்டான். (52)

மாமலை போன்ற வடிவுடைய அரக்கர் தலைவனைப் பார்த்த வானரர்கள், ('இவனிடமிருந்து தப்பிக்க முடியாது' என்று மிகவும் அச்சம் கொண்டு) பெருங்காற்றினால் சிதறடிக்கப்பட்ட மேகக்கூட்டம் போல், எண்டிசைகளிலும் ஓடத் தொடங்கினார்கள். (53)

கருமேகவண்ணத்தானான கும்பகர்ணன், பேராற்றலுடையதாகக் கூறப்பட்ட வானரப்படை, தன்னைக் கண்டதுமே சிதறியோடும் மேகக்கூட்டத்தைப் போல் எல்லாத் திசைகளிலும் ஓடுவதைப் பார்த்து, மகிழ்ச்சி பொங்க, மேகம் போல் மீளவும் கர்ஜித்தான். (54)

வானத்தில் மேகம் இடிப்பதைப் போன்று, அவனுடைய பயங்கரமான கர்ஜனையைக் கேட்டு, ஏராளமான வானரர்கள், வேருடன் வெட்டி வீழ்த்தப்பட்ட ஆச்சா மரங்கள் போல் தரையில் சாய்ந்தார்கள். (55)

பகைவர்களை மாய்க்கும் நோக்கத்துடன் வெளியே வந்தவனும் பேராற்றல் படைத்தவனும் உறுதியான இரும்புத் தடியைப் பற்றியிருந்தவனுமான கும்பகர்ணன், யுகத்தின் முடிவில் (ஊழிக்காலத்தில்) கையில் தண்டம் ஏந்திக் கொண்டு வரும் காலனைப் போல், வானரக் கூட்டத்திற்கு மிகவும் பேரச்சத்தை விளைவித்தான். (56)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தாறு

வானரப்படையை நிலைகொள்ளச் செய்தல்

மகாபலவானான கும்பகர்ணன், ஒரு மலைமுகட்டைப் போல் உயரமாகவும் விசாலமாகவும் இருந்தான். அவன் நகரவாயிலைக் கடந்து வேகமாக வெளியேறினான். (1)

அவன், பெருங்கடலை எதிரொலிக்கச் செய்து கொண்டும், மலைகளை ஊதி உருட்டிவிடுவது போலவும், இடிமுழக்கம் போலவும் பெருங்குரலில் கர்ஜனை செய்து முழக்கினான். (2)

இந்திரன், யமன், வருணன் முதலிய எவராலும் கொல்ல முடியாதவனும் பயங்கரமான கண்களை உடையவனுமான அரக்கன் வேகமாக வருவதைக் கண்டு வானரர்கள் அச்சங்கொண்டு நாற்றிசையிலும் ஓடினார்கள். (3)

அவர்கள் தலைதெறிக்க ஓடுவதைப் பார்த்த வாலிமைந்தன் அங்கதன், நளன்–நீலன்–கவாக்ஷன்–மகாபலம் பொருந்திய குமுதனையும் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (4)

"உங்களுடைய வீரப்பிரதாபங்களையும் உத்தம குலப் பெருமைகளையும், ஏன், தன்னையுமே மறந்து, பாமரக் குரங்குகளைப் போல இப்போது எங்கே ஓடிச் செல்கிறீர்கள்? (5)

உங்கள் செயல் வெகு நன்று! நல்லோர்களே! திரும்பி வாருங்கள். இப்படி ஓடிச்சென்று உயிரைத் தக்க வைத்துக் கொள்ளப் போகின்றீர்களோ? இந்த அரக்கனிடம், நம்முடன் போர் செய்யும் ஆற்றல் கிடையாது. இவன் பயமுறுத்தும் ஒரு பெரிய பொம்மை! அவ்வளவுதான்! (6)

எதிரே காணப்படும் அரக்கர்களின் இந்த மாபெரும் பொம்மையை, நம்முடைய பராக்கிரமத்தால் வெகு எளிதில் அழித்து விடுவோம். வானரர்களே! திரும்பி வாருங்கள்." (7)

க்ருச்ச்$_2$ரேண து ஸமாஶ்வஸ்ய ஸங்க$_3$ம்ய ச ததஸ்தத: ।
வ்ருக்ஷாத்$_3$ரிஹஸ்தா ஹரய: ஸம்ப்ரதஸ்தூ$_2$ ரணாஜிரம் ॥ (8)

தே நிவ்ருத்ய து ஸங்க்ருத்$_3$த$_4$ா: கும்ப$_4$கர்ணம் வநௌகஸ: ।
நிஜக்$_4$நு: பரமக்ருத்$_3$த$_4$ா: ஸமத$_3$ா இவ குஞ்ஜரா: ॥ (9)

ப்ராம்ஶுபி$_4$ர்கி$_3$ரிஶ்ருங்கை$_3$ஶ்ச ஶிலாபி$_4$ஶ்ச மஹாப$_3$ல: ।
பாத$_3$பை: புஷ்பிதாக்$_3$ரைஶ்ச ஹந்யமாநோ ந கம்பதே ॥ (10)

தஸ்ய க$_3$ாத்ரேஷு பதிதா பி$_4$த்$_3$யந்தே ஶதஶ: ஶிலா: ।
பாத$_3$பா: புஷ்பிதாக்$_3$ராஶ்ச ப$_4$க்$_3$நா: பேதுர்மஹீதலே ॥ (11)

ஸோऽபி ஸைந்யாநி ஸங்க்ருத்$_3$தே$_4$ா வாநராணாம் மஹௌஜஸாம் ।
மமந்த$_2$ பரமாயத்தோ வநாந்யக்$_3$நிரிவோத்தி$_2$த: ॥ (12)

லோஹிதார்த்$_3$ராஸ்து ப$_3$ஹவ: ஶேரதே வாநரர்ஷப$_4$ா: ।
நிரஸ்தா: பதிதா பூ$_4$மௌ தாம்ரபுஷ்பா இவ த்$_3$ருமா: ॥ (13)

லங்க$_4$யந்த: ப்ரத$_4$ாவந்தோ வாநரா நாவலோகயந் ।
கேசித் ஸமுத்$_3$ரே பதிதா: கேசித்$_3$க$_3$நமாஶ்ரிதா: ॥ (14)

வத்$_4$யமாநாஸ்து தே வீரா ராக்ஷஸேந ப$_3$லீயஸா ।
ஸாக$_3$ரம் யேந தே தீர்ணா: பத$_2$ா தேந ப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (15)

தே ஸ்த$_2$லாநி தத$_2$ா நிம்நம் விஷண்ணவத$_3$நா ப$_4$யாத் ।
ருக்ஷா வ்ருக்ஷாந் ஸமாரூட$_4$ா: கேசித் பர்வதமாஶ்ரிதா: ॥ (16)

மமஜ்ஜுரர்ணவே கேசித்$_3$கு$_3$ஹா: கேசித் ஸமாஶ்ரிதா: ।
நிபேது: ப்லவக$_3$ா: கேசித் கேசிந்நைவாவதஸ்தி$_2$ரே ॥
கேசித்$_3$பூ$_4$மௌ நிபதிதா: கேசித் ஸுப்தா ம்ருதா இவ ॥ (17)

தாந் ஸமீக்ஷ்யாங்க$_3$தே$_3$ா ப$_4$க்$_3$நாந் வாநராநித$_3$மப்$_3$ரவீத் ।
அவதிஷ்ட$_2$த யுத்$_4$யாமோ நிவர்தத்$_4$வம் ப்லவங்க$_3$மா: ॥ (18)

ப$_4$க்$_3$நாநாம் வோ ந பஶ்யாமி பரிக$_3$ம்ய மஹீமிமாம் ।
ஸ்த$_2$ாநம் ஸர்வே நிவர்தத்$_4$வம் கிம் ப்ராணாந் பரிரக்ஷத$_2$ ॥ (19)

நிராயுத$_4$ாநாம் த்$_3$ரவதாமஸங்க$_3$க$_3$திபௌருஷா: ।
த$_3$ாரா ஹ்யபஹஸிஷ்யந்தி ஸ வை க$_4$ாதஸ்து ஜீவிநாம் ॥ (20)

குலேஷு ஜாதா: ஸர்வே ஸ்ம விஸ்தீர்ணேஷு மஹத்ஸு ச ।
க்வ க$_3$ச்ச$_2$த$_2$ ப$_4$யத்ரஸ்தா ஹரய: ப்ராக்ருதா யத$_2$ா ॥
அநார்யா: க$_2$லு யத்$_3$பீ$_4$தாஸ்த்யக்த்வா வீர்யம் ப்ரத$_4$ாவத ॥ (21)

விகத்த$_2$நாநி வோ யாநி தத$_3$ா வை ஜநஸம்ஸதி$_3$ ।
தாநி வ: க்வநு யாதாநி ஸோத$_3$க்$_3$ராணி மஹாந்தி ச ॥ (22)

ஆங்காங்கிருந்த வானரர்கள், மிகவும் சிரமப்பட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, கைகளில் மரங்களையும் பாறைகளையும் ஏந்திக்கொண்டு, போர்க்களத்தை நோக்கி வந்தார்கள். (8)

அவ்விடம் வந்து சேர்ந்தவுடன் ஆத்திரங்கொண்டிருந்த வானரர்கள், மேலும் சினம் பொங்கியவர்களாய் மதங்கொண்ட யானைகள் போல் கும்பகர்ணனைத் தாக்கினார்கள். (9)

உயரமான மலைச்சிகரங்களாலும் பாறைகளாலும் மலர் பூத்த மரங்களாலும் அடிக்கப்பட்டும்கூட மகாபலசாலியான அவன் அசையாமல் நின்றான். (10)

அவன் உடலைத் தாக்கிய கற்பாறைகள் எண்ணற்ற துண்டுகளாகச் சிதறி விழுந்தன; கிளைகளின் நுனியில் பூத்த மலர்களைக் கொண்ட மரங்கள் முறிந்து போய் பூமியில் விழுந்தன. (11)

காட்டுத்தீ பெருங்காடுகளை எரித்து அழிப்பதைப் போல, அவனும் மிகவும் கோபம் கொண்டு, பேராற்றல் படைத்த வானரப் படையினரை அழித்து நாசமாக்கினான். (12)

ஏராளமான வானரர்கள், ரத்தம் சொட்டச் சொட்ட தரையில் சாய்ந்தார்கள்; பூமியில் விழுந்து கிடந்த அவர்கள் செந்நிற மலர்கொண்ட மரங்கள் போல் காணப்பட்டார்கள். (13)

அக்கம்–பக்கம், மேடு–பள்ளம் பாராமல் பல வானரர்கள் தாவிக் குதித்து ஓடினார்கள்; சிலர் கடலில் விழுந்தார்கள்; மற்றும் சிலர் வானத்தில் பறந்து சென்றார்கள். (14)

மிகவும் பலங்கொண்ட அரக்கனால் தாக்கப்பட்ட அந்த வானர வீரர்கள், எந்த வழியாகப் பெருங்கடலைக் கடந்து வந்தார்களோ, அதே வழியாக ஓடிப்போனார்கள். அச்சத்தால் முகம் வாடிய கரடிகள், மேட்டுப் பிரதேசங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் மரங்களிலும் ஏறி ஒளிந்து கொண்டார்கள். மற்றும் சிலர் மலைச்சிகரத்தைத் தஞ்சமடைந்தார்கள். (15,16)

சிலர் (வானரர்கள்) கடலில் மூழ்கினார்கள்; சிலர் குகைக்குள் ஒளிந்து கொண்டார்கள்; சிலர் கீழே உட்கார்ந்து விட்டார்கள்; சிலர் எவ்விடத்திலும் நிலைகொள்ளாமல் அலைந்தார்கள்; சிலர் பூமியில் விழுந்தார்கள்; சிலர் மூச்சைப் பிடித்துக் கொண்டு உயிரற்ற சடலம் போல் கிடந்தார்கள். (17)

கும்பகர்ணனால் தாக்கப்பட்டு தவித்துக் கொண்டிருந்த வானரர்களைப் பார்த்து அங்கதன் கூறினான்— "நில்லுங்கள், வானரர்களே! திரும்பி வாருங்கள். நாமெல்லோரும் ஒன்றாகக் கூடி மறுபடியும் (அவனுடன்) போர் செய்வோம். (18)

போரில் அடிபட்ட நீங்கள் இந்த மண்ணுலகத்தையே வலம் வந்தாலும் (எங்கு சென்றாலும்) உங்களுக்குப் பாதுகாப்புத் தரக்கூடிய ஓர் இடமும் கிடையாது. அதனால், உயிரைக் காத்துக் கொள்வதற்காக இப்போது ஓடிப் பயனில்லை. எல்லோரும் திரும்பி வாருங்கள். (19)

எவராலும் தடுக்க முடியாத வேகமும் பராக்கிரமமும் படைத்தவர்களே! கையிலுள்ள படைக்கலன்களைப் போர்க்களத்தில் போட்டுவிட்டு, 'உயிர் பிழைத்தால் போதும்!' என்று ஓடிச் செல்பவர்களின் மனைவிகள்கூட இகழ்ச்சியாகச் சிரிப்பார்கள். அந்த அவமானத்தைப் பொறுத்துக் கொண்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும், உயிரை விடுவதே மேல்! (20)

நீங்கள் எல்லோரும் பல பகுதிகளில் விரிந்து பரவியிருக்கும் உயர்குலத்தில் பிறந்தவர்கள். பாமரக் குரங்குகளைப் போல, (அரக்கனைக் கண்டு) அஞ்சி எங்கே ஓடுகிறீர்கள்? அச்சம் காரணமாக வீரத்தைத் துறந்து ஓடுகிறவர்கள் இழிகுலத்தவர்களே. (21)

முன்பு, மக்கட்கூட்டத்தில் உங்கள் வீரதீரப் பிரதாபங்களைப் பற்றி வானளாவ தற்பெருமை அடித்துக் கொண்டீர்களே? வெகுநீளமான அந்த வீரவசனங்கள் இப்போது எங்கே போயின? (22)

பீ$_4$ருப்ரவாதா$_3$: ஶ்ரூயந்தே யஸ்து ஜீவதி தி$_4$க்க்ருத: ।
மார்க$_3$: ஸத்புருஷைர்ஜுஷ்ட: ஸேவ்யதாம் த்யஜ்யதாம் ப$_4$யம் ॥ (23)

ஶயாமஹேऽத$_2$ நிஹதா: ப்ருதி$_2$வ்யாமல்பஜீவிதா: ।
து$_3$ஷ்ப்ராபம் ப்$_3$ரஹ்மலோகம் வா ப்ராப்நுமோ யுதி$_4$ ஸூதி$_3$தா: ॥ (24)

ஸம்ப்ராப்நுயாம: கீர்திம் வா நிஹத்வா ஶத்ருமாஹவே ।
ஜீவிதம் வீரலோகஸ்ய போ$_4$க்ஷ்யாமோ வஸு வாநரா: ॥ (25)

ந கும்ப$_4$கர்ண: காகுத்ஸ்த$_2$ம் த்$_3$ருஷ்ட்வா ஜீவந் க$_3$மிஷ்யதி ।
தீ$_3$ப்யமாநமிவாஸாத்$_3$ய பதங்கோ$_3$ ஜ்வலநம் யதா$_2$ ॥ (26)

பலாயநேந சோத்$_3$தி$_3$ஷ்டா: ப்ராணாந் ரக்ஷாமஹே வயம் ।
ஏகேந ப$_3$ஹவோ ப$_4$க்$_3$நா யஶோ நாஶம் க$_3$மிஷ்யதி ॥ (27)

ஏவம் ப்$_3$ருவாணம் தம் ஶூரமங்க$_3$த$_3$ம் கநகாங்க$_3$த$_3$ம் ।
த்$_3$ரவமாணாஸ்ததோ வாக்யமூசு: ஶூரவிக$_3$ர்ஹிதம் ॥ (28)

க்ருதம் ந: கத$_3$நம் கோ$_4$ரம் கும்ப$_4$கர்ணேந ரக்ஷஸா ।
ந ஸ்தா$_2$நகாலோ க$_3$ச்சா$_2$மோ த$_3$யிதம் ஜீவிதம் ஹி ந: ॥ (29)

ஏதாவது$_3$க்த்வா வசநம் ஸர்வே தே பே$_4$ஜிரே தி$_3$ஶ: ।
பீ$_4$மம் பீ$_4$மாக்ஷமாயந்தம் த்$_3$ருஷ்ட்வா வாநரயூத$_2$பா: ॥ (30)

த்$_3$ரவமாணாஸ்து தே வீரா அங்க$_3$தே$_3$ந வலீமுகா$_2$: ।
ஸாந்த்வைஶ்சைவாநுமாநைஶ்ச தத: ஸர்வே நிவர்திதா: ॥ (31)

ப்ரஹர்ஷமுபநீதாஶ்ச வாலிபுத்ரேண தீ$_4$மதா ।
ஆஜ்ஞாப்ரதீக்ஷாஸ்தஸ்து$_2$ஶ்ச ஸர்வே வாநரயூத$_2$பா: ॥ (32)

ருஷப$_4$ஶரப$_4$மைந்த$_3$தூ$_4$ம்ரநீலா: குமுத$_3$ஸுஷேணக$_3$வாக்ஷரம்ப$_4$தாரா: ।
த்$_3$விவித$_3$பநஸவாயுபுத்ரமுக்$_2$யாஸ்த்வரிததராபி$_4$முகா$_2$ம் ரணம் ப்ரயாதா: ॥ (33)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷட்ஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஸப்தஷஷ்டிதம: ஸர்க$_3$:

கும்ப$_4$கர்ணவத$_4$:

தே நிவ்ருத்தா மஹாகாயா: ஶ்ருத்வாங்க$_3$த$_3$வசஸ்ததா$_3$ ।
நைஷ்டி$_2$கீம் பு$_3$த்$_3$தி$_4$மாஸாத்$_3$ய ஸர்வே ஸங்க்$_3$ராமகாங்க்ஷிண: ॥ (1)

ஸமுதீ$_3$ரிதவீர்யாஶ்ச ஸமாரோபிதவிக்ரமா: ।
பர்யவஸ்தா$_2$பிதா வாக்யைரங்க$_3$தே$_3$ந வலீமுகா$_2$: ॥ (2)

எவன், பிறரால் இகழப்பட்ட பின்னரும் உயிரை வைத்திருக்கிறானோ, அப்போதே அவன் பயந்தாங்கொள்ளி என்று பெயர் சூட்டப்படுகிறான். (நீங்கள் அப்படிப்பட்ட பேச்சுக்கு இடம் கொடுத்துவிடாதீர்கள்.) சான்றோர்கள் பின்பற்றிய வழியை நாம் பின்பற்றுவோம். அச்சத்தை விட்டொழித்து விட்டுத் திரும்பி வாருங்கள். நமக்குக் குறைந்த ஆயுள்தான் என்றால், போரில் கொல்லப்பட்டு களத்தில் உடலைக் கிடத்துவோம். (அதனால் என்ன லாபம்? – என்று கேட்பீர்களேயானால்) போரில் மாய்க்கப்பட்டவர்களாக, பிறரால் அடைய முடியாத பிரும்மலோகத்தை (வேறு முயற்சியின்றியே) சென்றடைவோம். (23,24)

வானரர்களே! போரில், எதிரிகளை நாம் வீழ்த்திவிட்டால் நமக்குப் பெரும் புகழ் கிடைக்கும். (போரில் வென்று) உயிருடன் இருந்தால், வீரமக்களுக்குரிய செல்வ போகங்களை அனுபவிப்போம். கொழுந்து விட்டெரியும் நெருப்பின் அருகில் செல்லும் விட்டிற்பூச்சி பொசுங்கியே போகும்; அதுபோல, இராமனுடைய பார்வையில் பட்டபின் கும்பகர்ணன் உயிருடன் திரும்ப முடியாது. (25,26)

பலராகிய நாம், ஒரே ஒருவனான கும்பகர்ணனால் குறிவைத்து தாக்கப்பட்டு ஓடிச்சென்று உயிரைக் காப்பாற்றிக் கொண்டோமேயானால், இத்தனை காலமாக நமக்கு இருந்த புகழ் முற்றிலுமாக அழிந்துவிடும்.'' (27)

பொன்னாலான தோள்வளை பூண்ட சூரன் அங்கதன் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஓடிப் போய்க்கொண்டிருந்த அவர்கள், வீரர்களுக்கு இழிவைத் தரும் சொற்களைக் கூறினார்கள்— ''அரக்கன் கும்பகர்ணன் எங்களைப் படாதபாடு படுத்திவிட்டான். உன்னுடன் நின்று பேசுவதற்கு இப்போது நேரமில்லை. எங்களுக்கு உயிர்மேல்தான் ஆசை. நாங்கள் போகிறோம்.'' (28,29)

வானரத் தலைவர்கள் எல்லோரும் இவ்வாறு கூறிவிட்டு, பயங்கரமான கண்களுடனும் பெரிய உடலுடனும் வந்துகொண்டிருந்த அவனைப் பார்த்துவிட்டு, மூலைமுடுக்குகளை நோக்கி ஓடினார்கள். அங்கதன், ஓடிக்கொண்டிருந்த அந்த வானரவீரர்களை நிறுத்தி, ஆறுதல் மொழிகள் கூறியும் தைரியமூட்டும் காரணங்களைக் கூறியும் திருப்பி அழைத்து வந்தான். (30,31)

வானரத் தலைவர்கள் எல்லோரும் அங்கதனால் உற்சாகம் ஊட்டப்பட்டவர்களாய், அவனுடைய அடுத்த ஆணையை எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள். (32)

பின்னர், ரிஷபன், சரபன், மைந்தன், தூம்ரன், நீலன், குமுதன், சுஷேணன், கவாக்ஷன், ரம்பன், தாரன், த்விவிதன், பனஸன், வாயுவின் புதல்வரான அனுமான் முதலிய அனைவரும் மிக வேகமாக மறக்களத்தை நோக்கிச் சென்றார்கள். (33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தேழு

கும்பகர்ண வதம்

பேருடல் கொண்ட அவர்கள் (வானரர்கள்) எல்லோரும் அங்கதன் சொற்களைக் கேட்டுத் திரும்பி வந்து, தங்கள் இயல்பான புத்தித்தெளிவைப் பெற்று போர் செய்வதில் பேராவல் கொண்டார்கள். மகாபலம் பொருந்திய அங்கதன், அவர்களுடைய வீரதீரச் செயல்களை எடுத்துக் கூறி, அவர்களைத் தைரியம் அடையச் செய்து, போர் செய்வதில் உறுதியுடன் நிற்கச் செய்தான். (1,2)

ப்ரயாதாஸ்ச க3தா ஹர்ஷம் மரணே க்ருதநிஸ்சயா: ।
சக்ரு: ஸுதுமுலம் யுத்3த4ம் வானராஸ்த்யக்தஜீவிதா: ॥ (3)

அத2 வ்ருக்ஷாந் மஹாகாயா: ஸாநூநி ஸுமஹாந்தி ச ।
வானராஸ்தூர்ணமுத்3யம்ய கும்ப4கர்ணமபி4த்3ருதா: ॥ (4)

ஸ கும்ப4கர்ண: ஸம்க்ருத்3தே4ா க3தா3முத்3யம்ய வீர்யவாந் ।
அர்த3யந் ஸுமஹாகாய: ஸமந்தாத்3வ்யாக்ஷிபத்3ரிபூந் ॥ (5)

ஶதாநி ஸப்த சாஷ்டௌ ச ஸஹஸ்ராணி ச வானரா: ।
ப்ரகீர்ணா: ஶேரதே பூ4மௌ கும்ப4கர்ணேந போதி2தா: ॥ (6)

ஷோட3ஶாஷ்டௌ ச த3ஶ ச விம்ஶத் த்ரிம்ஶத்ததை2வ ச ।
பரிக்ஷிப்ய ச பா3ஹுப்4யாம் கா2த3ந் விபரித4ாவதி ॥
ப4க்ஷயந் ப்4ருஶஸம்க்ருத்3தே4ா க3ருட3: பந்நகா3நிவ ॥ (7)

க்ருச்ச்2ரேண ச ஸமாஸ்வஸ்தா: ஸங்க3ம்ய ச ததஸ்தத: ।
வ்ருக்ஷாத்3ரிஹஸ்தா ஹரயஸ்தஸ்து2: ஸங்க்3ராமமூர்த4நி ॥ (8)

தத: பர்வதமுத்பாட்ய த்3விவித3: ப்லவகர்ஷப4: ।
துத்3ராவ கி3ரிஸ்ருங்கா3ப4ம் விலம்ப3 இவ தோயத3: ॥ (9)

தம் ஸமுத்பத்ய சிக்ஷேப கும்ப4கர்ணஸ்ய வானர: ।
தமப்ராப்தோ மஹாகாயம் தஸ்ய ஸைந்யேபதத்தத3ா ॥ (10)

மமர்த3ாஸ்வாந் க3ஜாம்ஸ்சாபி ரத2ாம்ஸ்சைவ நகோ3த்தம: ।
தாநி சாந்யாநி ரக்ஷாம்ஸி புநஸ்சாந்யத்3கி3ரே: ஶிர: ॥ (11)

தச்சை2லஸ்ருங்கா3பி4ஹதம் ஹதாஸ்வம் ஹதஸாரதி2 ।
ரக்ஷஸாம் ருதி4ரக்லிந்நம் ப3பூ4வாயோத4நம் மஹத் ॥ (12)

ரதி2நோ வானரேந்த்3ராணாம் ஶரை: காலாந்தகோபமை: ।
ஶிராம்ஸி நத3தாம் ஜஹ்ரு: ஸஹஸா பீ4மநி:ஸ்வநா: ॥ (13)

வானராஸ்ச மஹாத்மாந: ஸமுத்பாட்ய மஹாத்3ருமாந் ।
ரத2ாநஸ்வாந் க3ஜாநுஷ்ட்ராந் ராக்ஷஸாநப்4யஸூத3யந் ॥ (14)

ஹநுமாஞ்சைலஸ்ருங்கா3ணி வ்ருக்ஷாம்ஸ்ச விவித4ாந் ப3ஹூந் ।
வவர்ஷ கும்ப4கர்ணஸ்ய ஶிரஸ்யம்ப3ரமாஸ்தி2த: ॥ (15)

தாநி பர்வதஸ்ருங்கா3ணி ஶூலேந ஸ பி3பே4த3 ஹ ।
ப3ப4ஞ்ஜ வ்ருக்ஷவர்ஷம் ச கும்ப4கர்ணோ மஹாப3ல: ॥ (16)

முன்னர், கும்பகர்ணனைக் கண்டு அஞ்சி ஓடி, பின்னர் திரும்பி வந்த வானரர்கள், 'உயிர் போனாலும் போகட்டும்' என்று உயிரைத் துறக்கத் துணிந்து, மனமகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்துகொண்டு போர் செய்யத் தொடங்கினார்கள். (3)

பின்னர், பேருடல் கொண்ட வானரர்கள் மரங்களையும் மிகப்பெரிய குன்றுகளையும் பெயர்த்து உயரப் பிடித்துக் கொண்டு விரைந்து வந்து கும்பகர்ணனைத் தாக்கினார்கள். (4)

மாவீரனும் பெருத்த சரீரம் கொண்டவனுமான கும்பகர்ணன், மிகவும் கோபங்கொண்டு, கதையினால் எதிரிகளைத் தாக்கித் துன்புறுத்தி, எல்லாப் பக்கங்களிலும் சிதறி ஓடும்படிச் செய்தான். (5)

எழுநூறு, எண்ணூறு, ஆயிரக்கணக்காக வானரர்கள், கும்பகர்ணனால் தாக்கப்பட்டவர்களாய் தரையில் சிதறி விழுந்தார்கள். (6)

மிகவும் ஆத்திரங்கொண்ட அவன், எட்டு–பத்து–பதினாறு–இருபது–முப்பது என்று கூட்டங்கூட்டமாக வானரர்களைப் பற்றியெடுத்து, கருடன் சர்ப்பங்களை விழுங்குவதைப் போல் அநாயாசமாக மென்று தின்றுகொண்டு சுற்றித் திரிந்தான். (7)

மிக்க முயற்சி செய்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஆங்காங்கு நின்று கொண்டிருந்த வானரர்கள், கையில் மரங்களையும் மலைச்சிகரங்களையும் தாங்கியவர்களாக, ஓர் அணியாக வந்தார்கள். (8)

அப்போது வானரோத்தமனான த்விவிதன், ஒரு மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு, மலைச்சிகரத்தைப் போன்றிருந்த அவனை (கும்பகர்ணனை) நோக்கி, விசாலமான மேகம் போல் ஓடினான். (நீருண்ட மேகம், அபரிமிதமான தன் நீர்த்தாரைகளால் மலைமுகட்டைச் சிதற அடித்து விடுவதைப் போல, கும்பகர்ணனை நிலைகுலையச் செய்யும்வண்ணம் த்விவிதன் ஓடினான் – என்றபடி.) (9)

வானரன் (த்விவிதன்), மலைமுகட்டை உயரே தூக்கி கும்பகர்ணன் மேல் வீசியெறிந்தான். ஆனால், அந்த மலை பேருடல் கொண்ட அவன் வரை செல்லாமல், முன்னால் இருந்த படையினர் மீது விழுந்தது. (10)

அந்தப் பெரிய மலை, குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் நாசப்படுத்தியது. உடனே, அவன் (த்விவிதன்) வேறொரு மலையின் சிகரத்தைப் பிடுங்கி வீசி எறிந்தான். அம்மலைச்சிகரம் மேற்சொன்னவற்றுடன், பல்வேறு அரக்கர்களையும் நசுக்கி அழித்தது. (11)

மலைச் சிகரத்தால் தாக்கப்பட்ட அரக்கர்களின் பெரும்படை, குதிரைகளையும் தேர்ப்பாகன்களையும் இழந்து இரத்தவெள்ளமாக ஆயிற்று. (12)

(அரக்கர் படையிலிருந்த) தேர்ப் படையினர், சிம்மநாதம் எழுப்பிக் கொண்டு, ஊழிக்கால காலனைப் போன்ற பாணங்களால், பேரொலி எழுப்பும் வானரத் தலைவர்களின் தலைகளை வேகமாக அறுத்துத் தள்ளினார்கள். (13)

பேராற்றல் படைத்த வானரர்கள், பெரிய மரங்களை அடியோடு பெயர்த்தெடுத்து, ரதங்கள்–குதிரைகள்–யானைகள்–ஒட்டகங்கள்–அரக்கர்களையும் நாசம் செய்தார்கள். (14)

அனுமான், ஆகாயத்தில் இருந்துகொண்டு மலைச்சிகரங்களையும் பலவகையான ஏராளமான மரங்களையும் கும்பகர்ணனின் தலையின்மேல் இடைவிடாது பொழிந்தார். பெரும் பலசாலியான கும்பகர்ணன், அவன்மேல் விழுவதற்காக வந்த மலைச்சிகரங்களைச் சூலத்தால் பிளந்தான்; மழைத்தாரை போல் வந்த மரக்கூட்டங்களையும் துண்டுதுண்டாக்கினான். (15,16)

ததோ ஹரீணாம் தத3நீகமுக்3ரம்
துத்3ராவ ஶைலம் நிஶிதம் ப்ரக்3ருஹ்ய ।
தஸ்தௌ2 ததோ஽ஸ்யாபதத: புரஸ்தாந்–
மஹீத4ராக்3ரம் ஹநுமாந் ப்ரக்3ருஹ்ய ॥ (17)

ஸ கும்ப4கர்ணம் குபிதோ ஜக4ாந வேகே3ந ஶைலோத்தமபீ4மகாயம் ।
ஸ சுக்ஷுபே4 தேந தத3ாபி4பூ4தோ மேத3ார்த்3ரகா3த்ரோ ருதி4ராவஸிக்த: ॥ (18)

ஸ ஶூலமாவித்4ய தடி3த்ப்ரகாஶம் கி3ரிம் யதா2 ப்ரஜ்வலிதாக்3ரஶ்ருங்க3ம் ।
பா3ஹ்வந்தரே மாருதிமாஜக4ாந கு3ஹோ஽சலம் க்ரௌஞ்சமிவோக்3ரஶக்த்யா ॥ (19)

ஸ ஶூலநிர்பி4ந்நமஹாபு4ஜாந்தர: ப்ரவிஹ்வல: ஶோணிதமுத்3வமந் முகா2த் ।
நநாத3 பீ4மம் ஹநுமாந் மஹாஹவே யுக3ாந்தமேக4ஸ்தநிதஸ்வநோபமம் ॥ (20)

ததோ விநேது3: ஸஹஸா ப்ரஹ்ருஷ்டா
ரக்ஷோக3ணாஸ்தம் வ்யதி2தம் ஸமீக்ஷ்ய ।
ப்லவங்க3மாஸ்து வ்யதி2தா ப4யார்தா:
ப்ரது3த்3ருவு: ஸம்யதி கும்ப4கர்ணாத் ॥ (21)

ததஸ்து நீலோ ப3லவாந் பர்யவஸ்த2ாபயந் ப3லம் ।
ப்ரவிசிக்ஷேப ஶைலாக்3ரம் கும்ப4கர்ணாய தீ4மதே ॥ (22)

தமாபதந்தம் ஸம்ப்ரேக்ஷ்ய முஷ்டிநாபி4ஜக4ாந ஹ ।
முஷ்டிப்ரஹாராபி4ஹதம் தச்சை2லாக்3ரம் வ்யஶீர்யத ॥
ஸவிஸ்பு2லிங்க3ம் ஸஜ்வாலம் நிபபாத மஹீதலே ॥ (23)

ருஷப4: ஶரபே4ா நீலோ க3வாக்ஷோ க3ந்த4மாத3ந: ।
பஞ்ச வாநரஶார்தூ3லா: கும்ப4கர்ணமுபாத்3ரவந் ॥ (24)

ஶைலைர்வ்ருக்ஷைஸ்தலை: பாதை3ர்முஷ்டிபி4ஶ்ச மஹாப3லா: ।
கும்ப4கர்ணம் மஹாகாயம் ஸர்வதோ஽பி4ப்ரது3த்3ருவு: ॥ (25)

ஸ்பர்ஶாநிவ ப்ரஹாராந்ஸ்தாந் வேத3யாநோ ந விவ்யதே2 ।
ருஷப4ம் து மஹாவேக3ம் பா3ஹுப்4யாம் பரிஷஸ்வஜே ॥ (26)

கும்ப4கர்ணபு4ஜாப்4யாம் து பீடி3தோ வாநர்ஷப4: ।
நிபபாதர்ஷபே4ா பீ4ம: ப்ரமுகா2த்3வாந்தஶோணித: ॥ (27)

முஷ்டிநா ஶரப4ம் ஹத்வா ஜாநுநா நீலமாஹவே ।
ஆஜக4ாந க3வாக்ஷம் து தலேநேந்த்3ரரிபுஸ்ததா3 ॥
பாதே3நாப்4யஹநத் க்ருத்3த4ஸ்தரஸா க3ந்த4மாத3நம் ॥ (28)

த3த்தப்ரஹாரவ்யதி2தா முமுஹு: ஶோணிதோக்ஷிதா: ।
நிபேதுஸ்தே து மேதி3ந்யாம் நிக்ருத்தா இவ கிம்ஶுகா: ॥ (29)

கூர்மையான சூலாயுதத்தைக் கைக்கொண்டிருந்த கும்பகர்ணன், பயங்கரமான வானரப் படையை அடித்துத் துரத்தினான். அச்சமயம், அனுமான் ஒரு மலைமுகட்டைக் கையில் தாங்கிக் கொண்டு, வானரர்களை அழித்து வரும் அவன் எதிரில் வந்து நின்றார். (17)

கோபம் கொண்ட அவர் (அனுமான்), ஒரு மாமலைக்கு நிகராக உருவம் படைத்த கும்பகர்ணனை (கையிலிருந்த மலைச்சிகரத்தைக் கொண்டு) பலமாகத் தாக்கினார். அதனால், அவன் நிலைகுலைந்தான். (மேலும் அடியினால் காயப்பட்ட பகுதியிலிருந்து) சதைகள் வெளிப்பட, இரத்தம் தோய்ந்தவனாக அவன் துடியாய்த் துடித்தான். (18)

மின்னல் போல் ஒளி வீசுவதும், அனல் வீசும் கொடுமுடிகளையுடைய மலை போன்றதுமான சூலாயுதத்தைச் சுழற்றி, முருகப்பெருமான் கூர்மையான வேலாயுதத்தால் கிரௌஞ்ச மலையைக் குத்தியது போல், அனுமானின் மார்பில் குத்தினான். (19)

சூலத்தால் பிளவுபடுத்தப்பட்ட அகலமான மார்புடன், மிகவும் நிலைகுலைந்து, வாயிலிருந்து இரத்தத்தைக் கக்கிக் கொண்டு நின்ற அனுமான், போர்முனையில், ஊழிக்காலப் பேரிடியைப் போல் கர்ஜனை செய்தார். (20)

அனுமான் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து, அரக்கர் கூட்டங்கள் ஆனந்தக் களிப்பினால் உடனே ஆரவாரம் செய்தனர். வானரர்களோ மனக்கவலை அடைந்தவர்களாய், போரில் கும்பகர்ணனிடம் ஏற்பட்ட அச்சத்தால் ஓட்டம் பிடித்தார்கள். (21)

அப்போது, பலசாலியான நீலன் (என்ற வானரத்தலைவன்) ஓடிச் சென்று கொண்டிருந்த வானரர்களைத் தடுத்து நிறுத்தினான். அறிவாளியான கும்பகர்ணன் மீது ஒரு மலைமுகட்டை வீசியெறிந்தான். (22)

மலைமுகடு தன்னை நோக்கி வருவதைக் கண்ட கும்பகர்ணன், அதைத் தன் முஷ்டியினால் எதிர்த்துத் தாக்கினான். முஷ்டித் தாக்குதலால் அந்த மலைச்சிகரம் தூள்தூளாயிற்று! உடனே அது, நெருப்புப் பொறிகளோடும் அனற்பிழம்புகளோடும் தரையில் விழுந்தது. என்ன அற்புதம்! (23)

இந்த நிலையில், வானரப்புலிகளான ரிஷபன், சரபன், நீலன், கவாக்ஷன், கந்தமாதனன் ஆகிய ஐவரும் கும்பகர்ணன் மேல் பாய்ந்தார்கள். (24)

மகாபலசாலிகளான அவர்கள், மலைகளாலும் மரங்களாலும் உள்ளங்கைகளாலும் கால்களாலும் முஷ்டிகளாலும், பேருடல் கொண்ட கும்பகர்ணனை எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்கினார்கள். (25)

அந்தப் பேரிடித் தாக்குதல்களை அவன் ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை! மேலே, யாரோ தடவிக் கொடுப்பது போல் உணர்ந்தான். மேலும், மிகவும் வேகம் படைத்த ரிஷபனைத் தன் இரு கைகளாலும் கட்டி அணைத்தான். (26)

கொடூரமான வீரம் படைத்த வானரோத்தமன் ரிஷபன், கும்பகர்ணனின் இரு கைகளுக்கிடையே மாட்டிக் கொண்டு நசுக்கப் பெற்று, வாயிலிருந்து இரத்தத்தைக் கக்கிக் கொண்டு கீழே விழுந்தான். (27)

இந்திரனின் பகைவனான அவன், அந்தப் போரில் முஷ்டியினால் சரபனையும், முழங்கால்களால் நீலனையும் புடைத்து, உள்ளங்கையால் கவாக்ஷனையும் அறைந்தான். கோபங்கொண்ட அவன், காலால் கந்தமாதனனை வேகமாகத் தாக்கினான். (28)

அடிகளைப் பெற்றுக் கொண்டு உடலும் உள்ளமும் நொந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்த அவர்கள், இரத்தம் தோய்ந்தவர்களாய் சுயநினைவு இழந்தார்கள். வெட்டித் தள்ளப்பட்ட பலாசமரம் போல் அவர்கள் எல்லோரும் தரையில் சாய்ந்தார்கள். (29)

தேஷு வாநரமுக்2யேஷு பதிதேஷு மஹாத்மஸு ।
வாநராணாம் ஸஹஸ்ராணி கும்ப4கர்ணம் ப்ரது3த்3ருவு: ॥ (30)

தம் ஶைலமிவ ஶைலாபா4: ஸர்வே தே ப்லவக3ர்ஷபா4: ।
ஸமாருஹ்ய ஸமுத்பத்ய த3த3ம்ஶுஶ்ச மஹாப3லா: ॥ (31)

தம் நகை2ர்த3ஶநைஶ்சாபி முஷ்டிபி4ர்ஜாநுபி4ஸ்ததா2 ।
கும்ப4கர்ணம் மஹாகாயம் தே ஜக்4நு: ப்லவக3ர்ஷபா4: ॥ (32)

ஸ வாநரஸஹஸ்ரைஸ்தைராசித: பர்வதோபம: ।
ரராஜ ராக்ஷஸவ்யாக்4ரோ கி3ரிராத்மருஹைரிவ ॥ (33)

பா3ஹுப்4யாம் வாநராந் ஸர்வாந் ப்ரக்3ருஹ்ய ஸுமஹாப3ல: ।
ப4க்ஷயாமாஸ ஸங்க்ருத்3தோ4 க3ருட3: பந்நகா3நிவ ॥ (34)

ப்ரக்ஷிப்தா: கும்ப4கர்ணேந வக்த்ரே பாதாளஸந்நிபே4 ।
நாஸாபுடாப்4யாம் நிர்ஜக்3மு: கர்ணாப்4யாம் சைவ வாநரா: ॥ (35)

ப4க்ஷயந் ப்4ருஶஸங்க்ருத்3தோ4 ஹரீந் பர்வதஸந்நிப4: ।
ப3ப4ஞ்ஜ வாநராந் ஸர்வாந் ஸங்க்ருத்3தோ4 ராக்ஷஸோத்தம: ॥ (36)

மாம்ஸஶோணிதஸங்க்லேதா3ம் பூ4மிம் குர்வந் ஸ ராக்ஷஸ: ।
சசார ஹரிஸைந்யேஷு காலாக்3நிரிவ மூர்சி2த: ॥ (37)

வஜ்ரஹஸ்தோ யதா2 ஶக்ர: பாஶஹஸ்த இவாந்தக: ।
ஶூலஹஸ்தோ ப3பௌ4 ஸங்க்2யே கும்ப4கர்ணோ மஹாப3ல: ॥ (38)

யதா2 ஶுஷ்காந்யரண்யாநி க்3ரீஷ்மே த3ஹதி பாவக: ।
ததா2 வாநரஸைந்யாநி கும்ப4கர்ணோ விநிர்த3ஹத் ॥ (39)

ததஸ்தே வத்4யமாநாஸ்து ஹதயூதா2 விநாயகா: ।
வாநரா ப4யஸம்விக்3நா விநேது3ர்விஸ்வரம் ப்4ருஶம் ॥ (40)

அநேகஶோ வத்4யமாநா: கும்ப4கர்ணேந வாநரா: ।
ராக4வம் ஶரணம் ஜக்3முர்வ்யதி2தா: கி2ந்நசேதஸ: ॥ (41)

ப்ரப4க்3நாந் வாநராந் த்3ருஷ்ட்வா வஜ்ரஹஸ்தஸுதாத்மஜ: ।
அப்4யதா4வத வேகே3ந கும்ப4கர்ணம் மஹாஹவே ॥ (42)

ஶைலஶ்ருங்க3ம் மஹத்3க்3ருஹ்ய விநத3ம்ஶ்ச முஹுர்முஹு: ।
த்ராஸயந் ராக்ஷஸாந் ஸர்வாந் கும்ப4கர்ணபதா3நுகா3ந் ॥
சிக்ஷேப ஶைலஶிக2ரம் கும்ப4கர்ணஸ்ய மூர்த4நி ॥ (43)

ஸ தேநாபி4ஹதோऽத்யர்த2ம் கி3ரிஶ்ருங்கே3ண மூர்த4நி ।
கும்ப4கர்ண: ப்ரஜஜ்வால கோபேந மஹதா ததா3 ॥ (44)

பேராற்றல் கொண்ட வானரத் தலைவர்கள் கீழே விழுந்தவுடன், ஆயிரக்கணக்கான வானரர்கள் (ஒன்றுசேர்ந்து) கும்பகர்ணனை எதிர்த்துத் தாக்கினார்கள். (30)

மலைபோல் பேருடல் கொண்டவர்களும், பேராற்றல் உடையவர்களுமான அந்த வானரக் காளைகள், மலைபோல் பெருத்த சரீரம் கொண்ட அவன்மேல் தாவி ஏறிக் குதித்தார்கள்; பற்களால் கடித்தார்கள். (31)

வானரக் காளைகள், நகங்களாலும் பற்களாலும் கைமுட்டிகளாலும் முழந்தாள்களாலும் பேருடல் கொண்ட கும்பகர்ணனைத் தாக்கினார்கள். (32)

மலைபோல் பேருருவம் கொண்ட அந்த அரக்கப்புலி, ஆயிரக்கணக்கான வானரர்களால் மொய்க்கப் பெற்று, ஏராளமான மரங்களைக் கொண்ட மலை போல் விளங்கினான். (33)

எல்லையில்லாத பலங்கொண்ட அவன், மிகவும் ஆத்திரங்கொண்டு எல்லா வானரர்களையும் கைகளால் பற்றி இழுத்து, பாம்புகளைக் கருடன் விழுங்குவதைப் போல விழுங்கினான். (34)

பாதாளம் போல் வெகு ஆழத்திலிருந்த வாய்க்குள் தள்ளப்பட்ட வானரர்கள், இரு நாசித் துவாரங்கள் வழியாகவும் இரு காதுகளின் வழியாகவும் வெளியே வந்துவிட்டார்கள். (35)

மலைநிகர் உடல் கொண்ட அரக்கப் பெருந்தகையான அவன், மிகவும் கோபம் கொண்டு வானரர்களைப் புசித்தபடியே, மற்ற வானரர்களின் உடலை நொறுக்கித் தள்ளினான். (36)

அந்த அரக்கன், போர்க்களத்தை மாமிசமும் இரத்தமும் நிறைந்ததாகச் செய்துகொண்டு, வானரப்படையினரிடையே மூட்டிவிடப்பட்ட பிரளயகால அக்னியைப் போல் (எதிர்ப்படும் எல்லாவற்றையும் பொசுக்கித் தள்ளியபடியே) சுற்றிச் சுற்றி வந்தான். (37)

பேராற்றல் கொண்டவனும் சூலாயுதத்தைக் கையிலேந்தியவனுமான கும்பகர்ணன், போர்க்களத்தில் வஜ்ராயுதத்தைக் கையிலேந்திய இந்திரன் போலவும், பாசக்கயிற்றை கையிலேந்திய யமன் போலவும் காணப்பட்டான். (38)

கோடை காலத்தில், காய்ந்து போன மரங்களையுடைய காடுகளைக் காட்டுத் தீ மளமளவென்று எரிப்பதைப் போல, வானரப் படையினரை கும்பகர்ணன் எரித்துத் தள்ளினான். (39)

அப்போது, மிகவும் தாக்கப்பட்டு அணி சிதறிப்போன வானரர்கள், தலைவர்களை இழந்து, மிகவும் அச்சம் கொண்டு, விகாரமாக ஓலமிடத் தொடங்கினார்கள். (40)

கும்பகர்ணனால் அடித்து நொறுக்கப்பட்ட அநேக வானரர்கள், மனங்குலைந்தவர்களாக, அறிவு குழம்பியவர்களாக இராமனிடம் சரண் புகுந்தார்கள். (41)

இந்திரனுடைய பேரனான அங்கதன், அங்கு நடக்கும் பெரும் போரில் வானரர்கள் முறியடிக்கப்பட்டு விரைந்தோடுவதைக் கண்டு சீற்றம் கொண்டு, கும்பகர்ணனை எதிர்த்து ஓடிவந்தான். (42)

மிகப்பெரிய மலைமுகட்டைக் கையில் தாங்கி, அடிக்கடி சிங்கநாதம் செய்துகொண்டு, கும்பகர்ணனுடன் வந்த அரக்கப் படையினர் அனைவரையும் அச்சமடையச் செய்துகொண்டு, கும்பகர்ணனின் தலைமேல் அந்த மலைச்சிகரத்தை வீசிப் போட்டான் (அங்கதன்). (43)

மலைச்சிகரத்தால் தலையில் மிகவும் தாக்கப்பட்ட கும்பகர்ணன், அப்போது மிகவும் கோபத்தால் அனற்பிழம்பாய் விளங்கினான். (44)

ஸோऽப்4யதா4வத வேகே3ந வாலிபுத்ரமமர்ஷண: ।
கும்ப4கர்ணோ மஹாநாத3ஸ்த்ராஸயந் ஸர்வவாநராந் ॥ (45)

ஶூலம் ஸஸர்ஜ வை ரோஷாத3ங்க3தே3 ஸ மஹாப3ல: ।
தமாபதந்தம் பு3த்3த்4வா து யுத்3த4மார்க3விஶாரத3: ॥
லாக4வாந்மோசயாமாஸ ப3லவாந் வாநரர்ஷப4: ॥ (46)

உத்பத்ய சைநம் ஸஹஸா தலேநோரஸ்யதாட3யத் ।
ஸ தேநாபி4ஹத: கோபாத் ப்ரமுமோஹாசலோபம: ॥ (47)

ஸ லப்3த4ஸம்க்ஞோ ப3லவாந் முஷ்டிமாவர்த்ய ராக்ஷஸ: ।
அபஹஸ்தேந சிக்ஷேப விஸம்க்ஞ: ஸ பபாத ஹ ॥ (48)

தஸ்மிந் ப்லவக3ஶார்தூ3லே விஸம்க்ஞே பதிதே பு4வி ।
தச்சூ2லம் ஸமுபாதா3ய ஸுக்3ரீவமபி4து3த்3ருவே ॥ (49)

தமாபதந்தம் ஸம்ப்ரேக்ஷ்ய கும்ப4கர்ணம் மஹாப3லம் ।
உத்பபாத ததா3 வீர: ஸுக்3ரீவோ வாநராதி4ப: ॥ (50)

பர்வதாக்3ரம் ஸமுத்க்ஷிப்ய ஸமாவித்4ய மஹாகபி: ।
அபி4து3த்3ராவ வேகே3ந கும்ப4கர்ணம் மஹாப3லம் ॥ (51)

தமாபதந்தம் ஸம்ப்ரேக்ஷ்ய கும்ப4கர்ண: ப்லவங்க3மம் ।
தஸ்தௌ2 விக்ருதஸர்வாங்கோ3 வாநரேந்த்3ரஸமுந்முக2: ॥ (52)

கபிஶோணிததி3க்3தா4ங்க3ம் ப4க்ஷயந்தம் ப்லவங்க3மாந் ।
கும்ப4கர்ணம் ஸ்தி2தம் த்3ருஷ்ட்வா ஸுக்3ரீவோ வாக்யமப்3ரவீத் ॥ (53)

பாதிதாஶ்ச த்வயா வீரா: க்ருதம் கர்ம ஸுது3ஷ்கரம் ।
ப4க்ஷிதாநி ச ஸைந்யாநி ப்ராப்தம் தே பரமம் யஶ: ॥ (54)

த்யஜ தத்3வாநராநீகம் ப்ராக்ருதை: கிம் கரிஷ்யஸி ।
ஸஹஸ்வைகநிபாதம் மே பர்வதஸ்யாஸ்ய ராக்ஷஸ ॥ (55)

தத்3வாக்யம் ஹரிராஜஸ்ய ஸத்த்வதை4ர்யஸமந்விதம் ।
ஶ்ருத்வா ராக்ஷஸஶார்தூ3ல: கும்ப4கர்ணோऽப்3ரவீத்3வச: ॥ (56)

ப்ரஜாபதேஸ்து பௌத்ரஸ்த்வம் ததை2வர்க்ஷரஜ:ஸுத: ।
ஶ்ருதபௌருஷஸம்பந்ந: தஸ்மாத்3க3ர்ஜஸி வாநர ॥ (57)

ஸ கும்ப4கர்ணஸ்ய வசோ நிஶம்ய
வ்யாவித்4ய ஶைலம் ஸஹஸா முமோச ।
தேநாஜகா4நோரஸி கும்ப4கர்ணம்
ஶைலேந வஜ்ராஶநிஸம்நிபே4ந ॥ (58)

(மலைச்சிகரத்தால் அடிபட்ட) அவமானத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், பெரிதாக கர்ஜனை செய்து, எல்லா வானரர்களையும் மிரளச் செய்து, விரைவாக வாலிமைந்தனை எதிர்த்து ஓடினான். (45)

பேராற்றல் கொண்ட அவன், அங்கதன் மேல் சூலாயுதத்தை எறிந்தான். போர்க்கலையில் வல்லவனும் பலசாலியுமான வானரோத்தமன் (அங்கதன்), சூலம் தன்னை நோக்கி வருவதை உணர்ந்து வெகுதிறமையாகத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டான். (46)

விரைந்து தாவிக் குதித்து அரக்கன் மார்பில் சீற்றத்துடன் உள்ளங்கையால் அறைந்தான். மலைநிகர் அரக்கன், மார்பில் அங்கதன் அடித்ததைத் தாங்கமாட்டாமல் மூர்ச்சை அடைந்தான். (47)

ஆற்றல் மிகுந்த அரக்கன், சிறிது நேரத்தில் சுயஉணர்வு பெற்று, இடது கைவிரல்களை மடக்கிச் சுழற்றி அவனைக் குத்தினான். அவன் நினைவிழந்து கீழே விழுந்தான். அம்மம்மா! என்ன கோரம்! (48)

வானரோத்தமனான அங்கதன் உணர்விழந்து தரையில் விழுந்ததும், கும்பகர்ணன் சூலத்தை எடுத்துக் கொண்டு சுக்ரீவனை நோக்கி ஓடினான். (49)

அப்போது, மாவீரனான வானர மன்னன் சுக்ரீவன், பெரும் பலசாலியான கும்பகர்ணன் எதிர்த்து வருவதைக் கண்டு துள்ளி எழுந்தான். (50)

மேன்மை பொருந்திய வானரனான அவன், மலைச்சிகரம் ஒன்றைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு சுழற்றியபடியே பெரும் பலசாலியான கும்பகர்ணனை ஆக்ரோஷத்துடன் தாக்கினான். (51)

அந்த வானரன் எதிர்த்து வருவதைக் கண்டுகொண்ட கும்பகர்ணன், வானரத் தலைவனுக்கு எதிரில், உடலின் எல்லா உறுப்புக்களையும் வளரச் செய்து கொண்டு நின்றான். (52)

வானரர்களின் இரத்தத்தால் நனைக்கப் பெற்ற உடலுடனும், வானரர்களைத் தின்றுகொண்டும் இருக்கும் கும்பகர்ணன், தன் எதிரே வந்து நிற்பதைப் பார்த்து, சுக்ரீவன் பின்வருமாறு கூறினான்— (53)

''அரக்கனே! உன்னால் ஏராளமான வானர வீரர்கள் வீழ்த்தப்பட்டார்கள். எவராலும் செய்யமுடியாத அரிய செயலைச் செய்திருக்கிறாய்! வானரப்படையினரை புசித்திருக்கிறாய். இத்தகைய சாகசச் செயல்களைப் புரிந்து பெரும் கீர்த்தியை அடைந்திருக்கிறாய். (54)

வானரப்படையை விட்டுவிடு; சாமானியர்களான அவர்களைக் கொன்று என்ன லாபம் அடையப் போகிறாய்? அரக்கனே! முடிந்தால், (என் கையிலுள்ள) இந்த மலையின் ஓர் அறையைத் தாங்கிக் கொள்! (வீரனான என்னுடைய ஓர் அறையைப் பெற்ற பின்னரும் நீ உயிரோடிந்தால், அது உன் வலிமைக்கு அழகு.)'' (55)

வானர மன்னனின் ஆற்றலும் ஆண்மையும் நிறைந்த அந்தச் சொற்களைக் கேட்ட அரக்கப்புலியான கும்பகர்ணன் பதில் சொன்னான்— (56)

''வானரனே! நீ பிரும்மதேவனின் பேரன்! ரிக்ஷரஜஸின் புதல்வன்; உலகமக்கள் அறிந்த பேராண்மையாளன். அதனால்தான் இவ்வாறு கர்ஜிக்கிறாய்!'' (57)

சுக்ரீவன், கும்பகர்ணனுடைய சொற்களைக் கேட்டுவிட்டு, ஒரு மலையை வேகமாகச் சுழற்றி வீசினான். வஜ்ராயுதத்திற்கும் இடிக்கும் நிகரான வலிமைகொண்ட அந்த மலையால் கும்பகர்ணனின் மார்பில் தாக்கினான். (58)

தச்சை2லஶ்ருங்க3ம் ஸஹஸா விகீர்ணம்
புஜாந்தரே தஸ்ய தத3ா விஶாலே ।
ததோ விஷேது3: ஸஹஸா ப்லவங்க3ா
ரக்ஷோக3ணாஶ்சாபி முத3ா விநேது3: ॥ (59)

ஸ ஶைலஶ்ருங்க3ாபி4ஹதஶ்சுகோப
நநாத3 கோபாச்ச வித்ருத்ய வக்த்ரம் ।
வ்யாவித்4ய ஶூலம் ச தடி3த்ப்ரகாஶம்
சிக்ஷேப ஹர்யுக்ஷபதேர்வத4ாய ॥ (60)

தத் கும்ப4கர்ணஸ்ய பு4ஜப்ரவித்3த4ம்
ஶூலம் ஶிதம் காஞ்சநத3ாமஜுஷ்டம் ।
க்ஷிப்ரம் ஸமுத்பத்ய நிக்3ருஹ்ய தோ3ர்ப்4யாம்
ப3ப4ஞ்ஜ வேகே3ந ஸுதோऽநிலஸ்ய ॥ (61)

க்ருதம் ப4ாரஸஹஸ்ரஸ்ய ஶூலம் காலாயஸம் மஹத் ।
ப3ப4ஞ்ஜ ஜாநுந்யாரோப்ய ப்ரஹ்ருஷ்ட: ப்லவக3ர்ஷப4: ॥ (62)

ஶூலம் ப4க்3நம் ஹநுமதா த்3ருஷ்ட்வா வாநரவாஹிநீ ।
ஹ்ருஷ்டா நநாத3 ப3ஹுஶ: ஸர்வதஶ்சாபி து3த்3ருவே ॥ (63)

ப3பூ4வாத2 பரித்ரஸ்தோ ராக்ஷஸோ விமுகோ2ऽப4வத் ।
ஸிம்ஹநாத3ம் ச தே சக்ரு: ப்ரஹ்ருஷ்டா வநகோ3சரா: ॥
மாருதிம் பூஜயாம்சக்ருர்த்3ருஷ்ட்வா ஶூலம் தத2ாக3தம் ॥ (64)

ஸ தத்தத3ா ப4க்3நமவேக்ஷ்ய ஶூலம்
சுகோப ரக்ஷோऽதி4பதிர்மஹாத்மா ।
உத்பாட்ய லங்காமலயாத் ஸ ஶ்ருங்க3ம்
ஜகா4ந ஸுக்3ரீவமுபேத்ய தேந ॥ (65)

ஸ ஶைலஶ்ருங்க3ாபி4ஹதோ விஸம்ஜ்ஞ: ।
பபாத பூ4மௌ யுதி4 வாநரேந்த்3ர: ।
தம் ப்ரேக்ஷ்ய பூ4மௌ பதிதம் விஸம்ஜ்ஞம்
நேது3: ப்ரஹ்ருஷ்டாஸ்த்வத2 யாதுத4ாநா: ॥ (66)

தமப்4யுபேத்யாத்3பு4தகோ4ரவீர்யம் ஸ கும்ப4கர்ணோ யுதி4 வாநரேந்த்3ரம் ।
ஜஹார ஸுக்3ரீவமபி4ப்ரக்3ருஹ்ய யத2ாநிலோ மேக4மதிப்ரசண்ட3: ॥ (67)

ஸ தம் மஹாமேக4நிகாஶரூபமுத்பாட்ய க3ச்ச2ந் யுதி4 கும்ப4கர்ண: ।
ரராஜ மேருப்ரதிமாநரூபோ மேருர்யத2ாப்4யுச்ச்2ரிதகோ4ரஶ்ருங்க3: ॥ (68)

ததஸ்தமுத்பாட்ய ஜகா3ம வீர: ஸம்ஸ்தூயமாநோ யுதி4 ராக்ஷஸேந்த்3ரை: ।
ஶ்ருண்வந்நிநாத3ம் த்ரித3ஶாலயாநாம் ப்லவங்க3ராஜக்3ரஹவிஸ்மிதாநாம் ॥ (69)

அவனுடைய விசாலமான மார்பில் விழுந்த அந்த மலைமுகடு, அந்த நொடியிலேயே பொடிப்பொடியானது. அதைக் கண்டவுடனேயே வானரர்கள் பதைபதைத்தார்கள்; அரக்கர்கள் மகிழ்ச்சி மிகுதியால் ஆரவாரம் செய்தார்கள். (59)

மலைமுகட்டினால் தாக்கப்பட்ட கும்பகர்ணன் மிகவும் கோபம் கொண்டான்; ஆத்திரம் தாங்காமல் வாயை அகலமாகத் திறந்து கர்ஜனை செய்தான். மின்னல் போல் ஒளிவீசும் சூலத்தை, வானரர்–கரடிகளின் தலைவனான சுக்ரீவனைக் கொல்லும் நோக்கத்துடன் அவனை நோக்கிச் செலுத்தினான். (60)

கும்பகர்ணனுடைய கரங்களிலிருந்து செலுத்தப்பட்டதும் பொன்வேலைப்பாடுகளோடு கூடியதுமான அந்த சூலத்தை, (தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த) அனுமான் விரைவாகத் தாவி வந்து, இருகைகளால் பிடித்து நிறுத்தி தன் பலத்தைக் கொண்டு முறித்துப் போட்டார். (61)

ஆயிரம் பாரம் எடை கொண்டதும், கருமையான இரும்பால் ஆனதுமான பெரிய சூலாயுதத்தை வெகு எளிதாக முழங்காலில் இடித்து முறித்துப் போட்டார். (62)

சூலம் அனுமானால் முறிக்கப்பட்டதைப் பார்த்ததும், வானரப்படை பேரானந்தம் அடைந்து பலவகையாகக் கூச்சலிட்டுக் கொண்டு எல்லாப் புறங்களிலும் ஓடிக் களித்தது. (63)

இவ்வாறு நிகழ்ந்ததைக் கண்ட அரக்கன் கும்பகர்ணன், அச்சம் கொண்டு நடுங்கினான்; முகத்தில் கவலை படர்ந்தது. சூலம் அவ்வாறு முறிக்கப்பட்டதைக் கண்ட வானரர்கள் மிகவும் மகிழ்ந்து சிம்மநாதம் செய்தார்கள்; அனுமானையும் பாராட்டினார்கள். (64)

பேராண்மை கொண்ட அரக்கத் தலைவன், சூலம் முறிக்கப்பட்டு விட்டதைக் கண்டு மிகவும் வெகுண்டான். உடனே, இலங்கை அருகிலிருந்த மலயமலையிலிருந்து ஒரு சிகரத்தைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு, சுக்ரீவனின் அருகில் வந்து அவன்மேல் வீசியெறிந்தான். (65)

போரில் மலைமுகட்டினால் தாக்கப்பட்ட வானர மன்னன் நினைவிழந்து தரையில் சாய்ந்துவிட்டான். அவன் சுயநினைவிழந்து பூமியில் விழுந்துவிட்டதைப் பார்த்ததும் அரக்கர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தார்கள். (66)

அப்போது, போர்க்களத்தில் ஆச்சரியமாகவும் பயங்கரமாகவும் ஆண்மையைக் காட்டும் வானரர் தலைவனான சுக்ரீவனின் அருகில் சென்று, அவனைத் தூக்கிக் கொண்டு, பெரும் புயற்காற்று (எவ்விதத் தடையும் இல்லாமல்) மேகத்தை இழுத்துச் செல்வதைப் போல கும்பகர்ணன் சுமந்து சென்றான். (67)

மேருமலை போன்ற பேருடல் கொண்ட கும்பகர்ணன், கருமுகிலைப் போன்ற தோற்றமுடைய சுக்ரீவனை, போர்க்களத்திலிருந்து வாரி எடுத்துக் கொண்டு செல்லும்போது, உயரமும் பயங்கரமுமான கொடுமுடிகளைக் கொண்ட மேருமலையைப் போலவே விளங்கினான். (68)

அப்போது, வீரனான கும்பகர்ணன், சுக்ரீவனைத் தூக்கிக் கொண்டு இலங்கையை நோக்கிச் சென்றான். போர்க்களத்தில் இருந்த அரக்கர்கள் அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். வானரமன்னன் எதிரியிடம் அகப்பட்டுக் கொண்டதால் திடுக்கிட்டுப் போன விண்ணுலகத்தாரின் துயரம் நிறைந்த சொற்களைக் கேட்டுக் கொண்டே சென்றான். (69)

ததஸ்தமாத$_3$ாய தத$_3$ா ஸ மேநே
ஹரீந்த்$_3$ரமிந்த்$_3$ரோபமமிந்த்$_3$ரவீர்ய: ।
அஸ்மிந் ஹ்ருதே ஸர்வமித$_3$ம் ஹ்ருதம் ஸ்யாத்
ஸராக$_4$வம் ஸைந்யமிதீந்த்$_3$ரஶத்ரு: ॥ (70)

வித்$_3$ருதாம் வாஹிநீம் த்ருஷ்ட்வா வாநராணாம் ததஸ்தத: ।
கும்ப$_4$கர்ணேந ஸுக்$_3$ரீவம் க்$_3$ருஹீதம் சாபி வாநரம் ॥ (71)

ஹநுமாந்ஶ்சிந்தயாமாஸ மதிமாந் மாருதாத்மஜ: ।
ஏவம் க்$_3$ருஹீதே ஸுக்$_3$ரீவே கிம் கர்தவ்யம் மயா ப$_4$வேத் ॥ (72)

யத்$_3$வை ந்யாய்யம் மயா கர்தும் தத் கரிஷ்யாமி ஸர்வத$_2$ா ।
பூ$_4$த்வா பர்வதஸங்காஶோ நாஶயிஷ்யாமி ராக்ஷஸம் ॥ (73)

மயா ஹதே ஸம்யதி கும்ப$_4$கர்ணே மஹாப$_3$லே முஷ்டிவிகீர்ணதே$_3$ஹே ।
விமோசிதே வாநரபார்தி$_2$வே ச ப$_4$வந்து ஹ்ருஷ்டா: ப்லவக$_3$ா: ஸமஸ்தா: ॥ (74)

அத$_2$வா ஸ்வயமப்யேஷ மோக்ஷம் ப்ராப்ஸ்யதி பார்தி$_2$வ: ।
க்$_3$ருஹீதோऽயம் யதி$_3$ ப$_4$வேத் த்ரித$_3$ஶை: ஸாஸுரோரகை$_3$: ॥ (75)

மந்யே ந தாவத$_3$ாத்மாநம் பு$_3$த்$_4$யதே வாநராதி$_4$ப: ।
ஶைலப்ரஹாராபி$_4$ஹத: கும்ப$_4$கர்ணேந ஸம்யுகே$_3$ ॥ (76)

அயம் முஹூர்தாத் ஸுக்$_3$ரீவோ லப்$_3$த$_4$ஸம்க்ஞோ மஹாஹவே ।
ஆத்மநோ வாநராணாம் ச யத்பத்$_2$யம் தத்கரிஷ்யதி ॥ (77)

மயா து மோக்ஷிதஸ்யாஸ்ய ஸுக்$_3$ரீவஸ்ய மஹாத்மந: ।
அப்ரீதிஶ்ச ப$_4$வேத் கஷ்டா கீர்திநாஶஶ்ச ஶாஶ்வத: ॥ (78)

தஸ்மாந்முஹூர்தம் காங்க்ஷிஷ்யே விக்ரமம் பார்தி$_2$வஸ்ய ந: ।
பி$_4$ந்நம் ச வாநராநீகம் தாவத$_3$ாஶ்வாஸயாம்யஹம் ॥ (79)

இத்யேவம் சிந்தயித்வா து ஹநுமாந் மாருதாத்மஜ: ।
பூ$_4$ய: ஸம்ஸ்தம்ப$_4$யாமாஸ வாநராணாம் மஹாசமூம் ॥ (80)

ஸ கும்ப$_4$கர்ணோऽத$_2$ விவேஶ லங்காம் ஸ்பு$_2$ரந்தமாத$_3$ாய மஹாகபிம் தம் ।
விமாநசர்யாக்$_3$ருஹகோ$_3$புரஸ்தை$_2$: புஷ்பாக்$_3$ர்யவர்ஷைரவகீர்யமாண: ॥ (81)

லாஜக$_3$ந்தோ$_4$த$_3$வர்ஷைஸ்து ஸிச்யமாந: ஶநை: ஶநை: ।
ராஜமார்க$_3$ஸ்ய ஶீதத்வாத் ஸம்க்ஞாமாப மஹாப$_3$ல: ॥ (82)

தத: ஸ ஸம்க்ஞாமுபலப்$_4$ய க்ருச்$_2$ராத்$_3$ப$_3$லீயஸஸ்தஸ்ய பு$_4$ஜாந்தரஸ்த$_2$: ।
அவேக்ஷமாண: புரராஜமார்க$_3$ம் விசிந்தயாமாஸ முஹுர்மஹாத்மா ॥ (83)

ஏவம் க்$_3$ருஹீதேந கத$_2$ம் நு நாம ஶக்யம் மயா ஸம்ப்ரதிகர்துமத்$_3$ய ।
தத$_2$ா கரிஷ்யாமி யத$_2$ா ஹரீணாம் ப$_4$விஷ்யதீஷ்டம் ச ஹிதம் ச கார்யம் ॥ (84)

இந்திரனுக்கு நிகரான ஆற்றல் கொண்டவனும் இந்திரனின் பகைவனுமான அவன், தேவேந்திரனுக்குச் சமமான வானரேந்திரனைக் கைப்பற்றி எடுத்துச் செல்லும்போது, 'இவன் அகப்பட்டுவிட்டான் அல்லவா? இது, இராமனும் மற்றும் எல்லா வானரப் படையினரும் அகப்பட்டுக் கொண்ட மாதிரிதான்!' என்று எண்ணிக் கொண்டான். (70)

வானரப்படை இங்குமங்கும் பறந்தோடுவதையும், கும்பகர்ணன் சுக்ரீவனைத் தூக்கிக் கொண்டு செல்வதையும் பார்த்த, வாயுமைந்தரும் சிறந்த அறிவாளியுமான அனுமான், 'சுக்ரீவன் கைப்பற்றப்பட்டு இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் இந்தத் தருணத்தில், நான் என்ன செய்யவேண்டும்?' என்று சிந்திக்கத் தொடங்கினார். (71,72)

நான் என்ன செய்யவேண்டுமோ, அதை எப்பாடு பட்டாகிலும் (இப்போதே) செய்துவிடுவேன். ஒரு பெரிய மலையைப் போல் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டு அரக்கனைக் கொன்றுவிடட்டுமா? போர்க்களத்தில் நான் முஷ்டியினால் கும்பகர்ணனைத் தாக்கி, அவனைத் தளரச் செய்தேனேயானால், அவன் பிடியிலிருந்து வானரமன்னர் விடுபடுவார். அதைக் கண்டு வானரர் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைவார்கள், அல்லவா? (73,74)

அல்லது, (இப்படியும் நேரலாம்) தேவ–அசுர–உரகர்களால் பிடிக்கப்பட்டாலும், தன்னைத்தானே விடுவித்துக் கொள்ளும் திறன் படைத்த மன்னர், இப்போது இவனிடமிருந்து விடுவித்துக் கொள்ளமாட்டாரா, என்ன? போர்முனையில், கும்பகர்ணனுடைய பாறைத் தாக்குதலால் அதிகமாகக் காயமடைந்துள்ள வானரமன்னர் இன்னும் சுயஉணர்வு பெறவில்லை என்று எண்ணுகிறேன். (75,76)

இன்னும் சிறிதுநேரத்தில் சுக்ரீவன் தன்னுணர்வு பெற்றுவிடுவார். பின்னர், தனக்கும் வானரர்களுக்கும் நன்மை தரக்கூடிய செயலைச் செய்வார். பேராற்றல் கொண்ட சுக்ரீவனை நான் விடுவித்தால், அவர் அதிருப்தி அடையலாம்; மனத்தில் துக்கம் ஏற்படலாம்; (அல்லது எனக்கு) நிலையான அபகீர்த்தியும் ஏற்படும். (அனுமான் மட்டும் சரியான சமயத்தில் அவனை விடுவித்திருக்காவிட்டால், சுக்ரீவன் இறந்தே போயிருப்பான்! – என்ற அவப்பெயர் ஏற்பட்டிருக்கும்.) (77,78)

ஆகையால், இன்னும் சற்று நேரம் மன்னருடைய பராக்கிரமத்தை (தன்னைத்தானே விடுவித்துக் கொள்வதை) எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். இந்த இடைவேளையில், நான், நாற்புறமும் சிதறியோடும் வானரப் படையினரை ஒன்றுகூட்டி சமாதானம் செய்கிறேன். (79)

இவ்வாறு பல்வேறுவிதமாக யோசனை செய்த வாயுமைந்தர் அனுமான், வானரர்களின் மிகப்பெரிய படையை மறுபடியும் ஓர் இடத்திலேயே நிலைகொள்ளச் செய்தார். (80)

(இங்கே இவ்வாறிருக்க, இன்னொரு பக்கத்தில்) கைகால்களை உதைத்துக் கொண்டிருக்கும் வானரோத்தமனை எடுத்துக் கொண்டு, உப்பரிகைகளிலும் படைவீரர் காவல் விடுதிகளிலும் கோபுரங்களிலும் நின்றுகொண்டிருந்த அரக்கர்கள் பொழிந்த மலர்மாரியால் நனைந்த கும்பகர்ணன், இலங்கை நகருக்குள் புகுந்தான். (81)

பொறி–பன்னீர் ஆகியவற்றின் பொழிவினாலும், அரசபாட்டையின் குளிர்ச்சியினாலும், மகாபலம் கொண்ட சுக்ரீவன் கொஞ்சம் கொஞ்சமாக சுய உணர்வை அடைந்தான். (கும்பகர்ணனை வரவேற்பதற்காக, அரசபாட்டையில் மணமிக்க தண்ணீரை அரக்கர்கள் தெளித்திருந்தார்கள். அதனால், ராஜவீதி குளிர்ச்சியாக இருந்தது.) (82)

பேராற்றலுடைய கும்பகர்ணனின் கைகளுக்கிடையே அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்த சுக்ரீவன் மிகவும் சிரமப்பட்டு சுயநினைவு அடைந்தான். அப்போது, பட்டணத்தையும் அரசபாட்டையையும் பார்த்த அவன், பின்வருமாறு சிந்திக்கத் தொடங்கினான். (83)

'இவனிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கும் நான் எவ்வாறு பழிதீர்த்துக் கொள்ள முடியும்? (அட, என்ன செய்வேன்?) எதைச் செய்தால், வானரர்களுக்குத் திருப்தியும் நன்மையும் உண்டாகுமோ, அவ்விதமான செயலைச் செய்யப் போகிறேன்.' (84)

தத: கராக்3ரை: ஸஹஸா ஸமேத்ய
ராஜா ஹரீணாமமரேந்த்3ரஶத்ரும் ।
க2ரைஶ்ச கர்ணௌ த3ஶநைஶ்ச நாஸாம்
த3த3ம்ஶ பார்ஶ்வேஷு ச கும்ப4கர்ணம் ॥ (85)

ஸ கும்ப4கர்ணோ ஹ்ருதகர்ணநாஸோ விதா3ரிதஸ்தேந விமர்தி3தஶ்ச ।
ரோஷாபி4பூ4த: க்ஷதஜார்த்3ரகா3த்ர: ஸுக்3ரீவமாவித்4ய பிபேஷ பூ4மௌ ॥ (86)

ஸ பூ4தலே பீ4மப3லாபி4பிஷ்ட: ஸுராரிபி4ஸ்தைரபி4ஹந்யமாந: ।
ஜகா3ம க2ம் வேக3வத3ப்4யுபேத்ய புநஶ்ச ராமேண ஸமாஜகா3ம ॥ (87)

கர்ணநாஸாவிஹீநஸ்து கும்ப4கர்ணோ மஹாப3ல: ।
ரராஜ ஶோணிதை: ஸிக்தோ கி3ரி: ப்ரஸ்ரவணைரிவ ॥ (88)

ஶோணிதார்த்3ரோ மஹாகாயோ ராக்ஷஸோ பீ4மவிக்ரம: ।
யுத்3தா4யாபி4முகோ2 பூ4யோ மநஶ்சக்ரே மஹாப3ல: ॥ (89)

அமர்ஷாச்சோ2ணிதோத்3கா3ரீ ஶுஶுபே4 ராவணாநுஜ: ।
நீலாஞ்ஜநசயப்ரக்2ய: ஸஸந்த்4ய இவ தோயத3: ॥ (90)

க3தே து தஸ்மிந் ஸுரராஜஶத்ரு: க்ரோதா4த் ப்ரது3த்3ராவ ரணாய பூ4ய: ।
அநாயுதோ4ऽஸ்மீதி விசிந்த்ய ரௌத்3ரோ கோ4ரம் ததா3 முத்3க3ரமாஸஸாத3 ॥ (91)

தத: ஸ புர்யா: ஸஹஸா மஹௌஜா
நிஷ்க்ரம்ய தத்3வாநரஸைந்யமுக்3ரம் ।
தேநைவ ரூபேண ப3ப4ஞ்ஜ ருஷ்ட:
ப்ரஹாரமுஷ்ட்யா ச பதே3ந ஸத்3ய: ॥ (92)

ப3ப4க்ஷ ரக்ஷோ யுதி4 கும்ப4கர்ண: ப்ரஜா யுகா3ந்தாக்3நிரிவ ப்ரதீ3ப்த: ।
பு3பு4க்ஷித: ஶோணிதமாம்ஸக்3ருத்4நு: ப்ரவிஶ்ய தத்3வாநரஸைந்யமுக்3ரம் ॥ (93)

சகா2த3 ரக்ஷாம்ஸி ஹரீந் பிஶாசாந்–
ருக்ஷாம்ஶ்ச மோஹாத்3யுதி4 கும்ப4கர்ண: ।
யதை2வ ம்ருத்யுர்ஹரதே யுகா3ந்தே
ஸ ப4க்ஷயாமாஸ ஹரீம்ஶ்ச முக்2யாந் ॥ (94)

ஏகம் த்3வௌ த்ரீந் ப3ஹூந் க்ருத்3தோ4 வாநராந் ஸஹ ராக்ஷஸை: ।
ஸமாதா3யைகஹஸ்தேந ப்ரசிக்ஷேப த்வரந் முகே2 ॥ (95)

ஸம்ப்ரஸ்ரவம்ஸ்ததா3 மேத3: ஶோணிதம் ச மஹாப3ல: ।
வத்4யமாநோ நகே3ந்த்3ராக்3ரைர்ப4க்ஷயாமாஸ வாநராந் ॥ (96)

தே ப4க்ஷ்யமாணா ஹரயோ ராமம் ஜக்3முஸ்ததா3 க3திம் ।
கும்ப4கர்ணோ ப்4ருஶம் க்ருத்3த4: கபீந் கா2த3ந் ப்ரதா4வதி ॥ (97)

இவ்வாறு நிச்சயம் செய்துகொண்ட வானர மன்னன், உடனே கூரான கைநகங்களால் இந்திரனின் பகைவனான கும்பகர்ணனின் காதுகளைப் பிறாண்டினான்; பற்களால் மூக்கைக் கடித்தான்; கால்நகங்களால் அவனுடைய விலாப்புறங்களைக் கிழித்தான். (85)

கும்பகர்ணன், சுக்ரீவனால் பிறாண்டப்பட்டும் துன்புறுத்தப்பட்டும், மூக்கு–காதுகளை இழந்து, சரீரத்தில் இரத்தம் சொட்டச் சொட்ட வெகுண்டெழுந்து, சுக்ரீவனைச் சுழற்றித் தரையில் போட்டுத் தேய்த்தான். (86)

பெரும் பலசாலியான அவனால் பூமியில் வீழ்த்தித் தேய்க்கப்பட்ட அவன் (சுக்ரீவன்), தேவர்களின் பகைவர்களான அரக்கனால் நன்றாகத் தாக்கப்பட்டதும், சடாரென்று ஆகாயத்தைச் சென்றடைந்தான். உடனே, இராமன் இருக்குமிடம் சென்றடைந்தான். (87)

மகாபலசாலியான கும்பகர்ணன் மூக்கையும் செவிகளையும் இழந்து நின்றான். அங்கிருந்து இரத்தம் வழிந்தோடியது. அப்போது அவன், மலையருவிகள் பெருகும் பெரிய மலை போல் விளங்கினான். (88)

அளவுகடந்த பராக்கிரமமும் இரத்தம் ஒழுகும் பேருடலும் கொண்ட அரக்கன், மீண்டும் போர்க்களத்திற்குச் செல்வதற்கு மனம் கொண்டான். (89)

மிகுந்த சீற்றத்துடனிருந்த இராவணனுடைய தம்பி, இரத்தத்தைக் கக்கிக் கொண்டிருந்தான். கரிய மலை போன்றிருந்த அவன், (செந்நீர் வழிந்தோடும் சரீரத்துடன்) செம்மை படர்ந்த மாலை வெய்யிலினிடையே தோன்றும் கரியமேகம் போல் விளங்கினான். (90)

பயங்கரமானவனும் அமரர்கோன் பகைவனுமான அவன், சுக்ரீவன் சென்றவுடன் மிகவும் கோபம் கொண்டு போரிடுவதற்காக மறுபடியும் ஓடினான். 'கையில் ஆயுதம் ஏதும் இல்லையே?' என்று எண்ணி, பயங்கரமான ஓர் உலக்கையைக் கையில் எடுத்துக் கொண்டான். (91)

மாவீரனான அவன், உடனே பட்டணத்திலிருந்து வெளியே வந்து, பயங்கரமான வானரப்படையை அதே தோற்றத்துடனேயே (இரத்தம் வழியும் சரீரத்துடனேயே) மிகவும் கோபத்துடன் நொடிப்பொழுதில் முஷ்டியால் தாக்கினான்; கால்களால் தேய்த்து நொறுக்கினான். (92)

இரத்தம்–மாமிசத்தில் பிரியமுடைய அவன், உக்கிரமான வானரப்படைக்குள் நுழைந்து, பசி மிகுந்தவனாய், ஊழிக்காலத் தீ மக்களைச் சுட்டெரித்து அழிப்பதைப் போல சமர்க்களத்தில் எல்லாவற்றையும் மென்று தின்றான். (93)

போர் வெறியில் மயங்கியிருந்த கும்பகர்ணன், களத்தில் வானரர்களை மட்டுமல்லாமல் அரக்கர்–பிசாசர்களையும் புசிக்கத் தொடங்கினான். ஊழிக்காலத்தில் காலன் உயிர்களை அழிப்பதைப் போல, அவனும் (தடையில்லாமல்) வானரத் தலைவர்களை விழுங்கினான். (94)

கோபம் கொண்டிருந்த அவன், வானரர்களையும் அரக்கர்களையும் ஒன்று–இரண்டு–மூன்று–பல என்ற கணக்கில் ஒரே கையால் பற்றியிழுத்து மிக வேகமாக வாயில் போட்டுக் கொண்டான். (95)

அப்போது மகாவலிமை கொண்ட அவன், வானரர்களால் மலைமுகடுகளினால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும், வானரர்களின் இரத்தத்தையும் கொழுப்பையும் வாய் வழியே புசித்துக் கொண்டிருந்தான். (96)

வானரர்கள் கொத்துக் கொத்தாக விழுங்கப்படுவதைக் கண்டு, எஞ்சியிருந்தவர்கள் இராமபிரானைப் புகலடைந்தார்கள். கும்பகர்ணன் மிகவும் சினத்துடன் வானரர்களைத் தின்று கொண்டே ஓடித் திரிந்தான். (97)

ஶதாநி ஸப்த சாஷ்டௌ ச விம்ஶத் த்ரிம்ஶத்ததை$_2$வ ச ।
ஸம்பரிஷ்வஜ்ய பா$_3$ஹுப்$_4$யாம் கா$_2$த$_3$ந் விபரிதா$_4$வதி ॥ (98)

மேதோ$_3$வஸாஶோணிததி$_3$க்$_3$த$_4$கா$_3$த்ர:
கர்ணாவஸக்தக்$_3$ரதி$_2$தாந்த்ரமால: ।
வவர்ஷ ஶூலாநி ஸுதீக்ஷ்ணத$_3$ம்ஷ்ட்ர:
காலோ யுகா$_3$ந்தாக்$_3$நிரிவ ப்ரவ்ருத்$_3$த$_4$: ॥ (99)

தஸ்மிந் காலே ஸுமித்ராயா: புத்ர: பரப$_3$லார்த$_3$ந: ।
சகார லக்ஷ்மண: க்ருத்$_3$தோ$_4$ யுத்$_3$த$_4$ம் பரபுரஞ்ஜய: ॥ (100)

ஸ கும்ப$_4$கர்ணஸ்ய ஶராஞ்ஶரீரே ஸப்த வீர்யவாந் ।
நிசகா$_2$நாத$_3$தே$_3$ பா$_3$ணாந் விஸஸர்ஜ ச லக்ஷ்மண: ॥ (101)

பி$_4$த்$_3$யமாநஸ்ததா$_3$ தைஸ்து விஷேஹே தத் ஸ ராக்ஷஸ: ।
ததஶ்சுகோப ப$_3$லவாந் ஸுமித்ராநந்த$_3$வர்த$_4$ந: ॥ (102)

அதா$_2$ஸ்ய கவசம் ஶுப்$_4$ரம் ஜாம்பூ$_3$நத$_3$மயம் ஶுப$_4$ம் ।
ப்ரச்சா$_2$த$_3$யாமாஸ ஶரை: ஸந்த்$_4$யாப்$_4$ரைரிவ மாருத: ॥ (103)

நீலாஞ்ஜநசயப்ரக்$_2$யை: ஶரை: காஞ்சநபூ$_4$ஷணை: ।
ஆச்சா$_2$த்$_3$யமாந: ஶுஶுபே$_4$ மேகை$_4$: ஸூர்ய இவாம்ஶுமாந் ॥ (104)

தத: ஸ ராக்ஷஸோ பீ$_4$ம: ஸுமித்ராநந்த$_3$வர்த$_4$நம் ।
ஸாவஜ்ஞமேவம் ப்ரோவாச வாக்யம் மேகௌ$_4$க$_4$நி:ஸ்வநம் ॥ (105)

அந்தகஸ்யாபி க்ருத்$_3$த$_4$ஸ்ய ப$_4$யதா$_3$தாரமாஹவே ।
யுத்$_4$யதா மாமபீ$_4$தேந க்$_2$யாபிதா வீரதா த்வயா ॥ (106)

ப்ரக்$_3$ருஹீதாயுத$_4$ஸ்யேவ ம்ருத்யோரிவ மஹாம்ருதே$_4$ ।
திஷ்ட$_2$ந்நப்யக்$_3$ரத: பூஜ்ய: கிமு யுத்$_3$த$_4$ப்ரதா$_3$யக: ॥ (107)

ஐராவதக$_3$ஜாரூடோ$_4$ வ்ருத: ஸர்வாமரை: ப்ரபு$_4$: ।
நைவ ஶக்ரோऽபி ஸமரே ஸ்தி$_2$தபூர்வ: கதா$_3$சந ॥ (108)

ஶ்ருணு மே வீர ஸம்க்ஷோப$_4$ம் ஶ்லாக$_4$நீயோऽஸி மே ரிபு: ।
அத்$_3$ய த்வயாஹம் ஸௌமித்ரே பா$_3$லேநாபி பராக்ரமை: ॥
தோஷிதோ க$_3$ந்துமிச்சா$_2$மி த்வாமநுஜ்ஞாப்ய ராக$_4$வம் ॥ (109)

ஸத்த்வதை$_4$ர்யப$_3$லோத்ஸாஹைஸ்தோஷிதோऽஹம் ரணே த்வயா ।
ராமமேவைகமிச்சா$_2$மி ஹந்தும் யஸ்மிந் ஹதே ஹதம் ॥ (110)

ராமே மயா சேந்நிஹதே யேऽந்யே ஸ்தா$_2$ஸ்யந்தி ஸம்யுகே$_3$ ।
தாநஹம் யோத$_4$யிஷ்யாமி ஸ்வப$_3$லேந ப்ரமாதி$_2$நா ॥ (111)

ஏழு–எட்டு–இருபது–முப்பது–நூறு என்ற கணக்கில், கூட்டமாக இருகைகளாலும் சேர்த்து எடுத்துத் தின்றுகொண்டு போர்க்களத்தில் ஓடித்திரிந்து கொண்டிருந்தான். (98)

மிகக் கூர்மையான கோரைப்பற்களைக் கொண்ட கும்பகர்ணன், கொழுப்பு–ஊன்–இரத்தத்தால் பூசப்பட்ட உடலுடனும், செவிகளில் தொங்கும் நரம்பு மாலைகளுடனும் காலனைப் போன்று, ஊழிக்காலத்தில் பெருந்தீபோல் விநாசம் (அழிவுகளை) விளைவிக்கும் சூலங்களை எதிரிகள்மேல் பொழிந்தான். (99)

அந்தச் சமயத்தில், சுமித்திரையின் புதல்வனும் எதிரிகளின் பலத்தை அழிப்பவனும் பகைவர்களின் தலைநகரை வெல்பவனுமான லட்சுமணன், சினத்துடன் வந்து போர்புரியத் தொடங்கினான். (100)

மாவீரனான அவன், கும்பகர்ணன் உடலின்மேல் ஏழு அம்புகளைச் சொருகினான். மேலும், பல பாணங்களை அவன்மேல் செலுத்தினான். (101)

அவைகளால் துளைத்தெடுக்கப்பட்ட அந்த அரக்கன், அந்த வேதனையைப் பொறுத்துக் கொண்டான். அதைக் கண்டு பலம் மிக்கவனான இலக்குவன் வெகுண்டான். (102)

அவன் அணிந்திருந்த தங்கமயமான ஒளி பொருந்திய அழகான கவசத்தை, (வானத்தில் எங்கெங்கோ இருக்கும்) மேகங்களைக் காற்றானது ஒன்று திரட்டி வந்து ஆகாயத்தையே மறைத்துவிடுவதைப் போல, பாணங்களைப் பொழிந்து மறைத்துவிட்டான், லட்சுமணன். (103)

கரிய மை போன்ற உடல்வண்ணம் படைத்த கும்பகர்ணன், பொன் அணிகளால் அலங்கரிக்கப்பட்ட இலக்குவனின் பாணங்களால் மறைக்கப்பட்டு, மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியன் போல் விளங்கினான். (104)

அப்போது பயங்கரமான அந்த அரக்கன், சுமித்திரையின் ஆனந்தத்தை வளர்க்கும் இலக்குவனைப் பார்த்து, மேகக்கூட்டங்களின் இடி போன்ற குரலில் ஏளனமாகக் கூறினான்— (105)

''போர்க்களத்தில் சீற்றத்துடன் சீறிவரும் யமனுக்கும்கூட அச்சத்தைக் கொடுக்கும் என்னுடன் அச்சமில்லாமல் போர் செய்து, உன் வீரத்தைக் காட்டிவிட்டாய்! (106)

இந்தப் பெரும் போரில் படைக்கலன்களைக் கைக்கொண்டு, யமன் போன்று நிற்கும் என் எதிரில் நின்று கொண்டிருக்கிறாயே! அதுவே பாராட்டத்தக்கதுதான்! அத்துடன் என்னோடு போர் புரியவும் செய்கிறாய்! பலே! (107)

ஐராவதத்தின் மீது ஏறிக்கொண்டு, தேவர்கள் எல்லோரும் புடைசூழ வரும் மாபெரும் தலைவன் இந்திரன்கூட, ஒருபோதும் போரில் என்முன் வந்ததேயில்லை! (108)

வீரனே, கேள்! எதிரியான நீ, உன் துணிச்சலுக்காகப் பாராட்டத்தக்கவனே. லட்சுமணா! நீ சிறுபிள்ளையாக இருந்தாலும், உன் பராக்கிரமத்தைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். உனக்கு விடைகொடுத்து விட்டு இராமனிடம் செல்ல விரும்புகிறேன். (109)

போர் செய்வதில் உனக்குள்ள ஆற்றல், தைரியம், பலம், உற்சாகம் ஆகியவைகளைப் பார்த்து நான் மகிழ்கிறேன் என்றாலும், எவன் ஒருவனைக் கொன்றால் எல்லோருமே கொல்லப்பட்டதாக ஆகுமோ, அந்த இராமனை மட்டுமே நான் கொல்ல விரும்புகிறேன். (110)

இராமன் என்னால் கொல்லப்பட்டால், (கொல்லப்பட்ட பின்) போர்க்களத்தில் மிஞ்சியிருக்கும் மற்றவர்களை, அழிக்கும் ஆற்றல் கொண்ட என் படையினரைக் கொண்டு கொல்விப்பேன்!'' (111)

இத்யுக்தவாக்யம் தத்3ரக்ஷ: ப்ரோவாச ஸ்துதிஸம்ஹிதம் ।
ம்ருதே4 கோ4ரதரம் வாக்யம் ஸௌமித்ரி: ப்ரஹஸந்நிவ ॥ (112)

யத்த்வம் ஶக்ராதி3பி4ர்தே3வைரஸஹ்ய: ப்ராப்ய பௌருஷம் ।
தத் ஸத்யம் நாந்யதா2 வீர த்3ருஷ்டஸ்தேऽத்3ய பராக்ரம: ॥ (113)

ஏஷ தா3ஶரதீ2 ராமஸ்திஷ்டத்2யத்3ரிவாபர: ।
மநோரதோ2 ராத்ரிசர தத்ஸமீபே ப4விஷ்யதி ॥ (114)

இதி ஶ்ருத்வா ஹ்யநாத்3ருத்ய லக்ஷ்மணம் ஸ நிஶாசர: ।
அதிக்ரம்ய ச ஸௌமித்ரிம் கும்ப4கர்ணோ மஹாப3ல: ॥
ராமமேவாபி4து3த்3ராவ தா3ரயந்நிவ மேதி3நீம் ॥ (115)

அத2 தா3ஶரதீ2 ராமோ ரௌத்3ரமஸ்த்ரம் ப்ரயோஜயந் ।
கும்ப4கர்ணஸ்ய ஹ்ருத3யே ஸஸர்ஜ நிஶிதாஞ்ஶராந் ॥ (116)

தஸ்ய ராமேண வித்3த4ஸ்ய ஸஹஸாபி4ப்ரதா4வத: ।
அங்கா3ரமிஶ்ரா: க்ருத்3த4ஸ்ய முகா2ந்நிஶ்சேருரர்சிஷ: ॥ (117)

ராமாஸ்த்ரவித்3தோ4 கோ4ரம் வை நத3ந் ராக்ஷஸபுங்க3வ: ।
அப்4யதா4வத ஸங்க்ருத்3தோ4 ஹரீந் வித்3ராவயந் ரணே ॥ (118)

தஸ்யோரஸி நிமக்3நாஶ்ச ஶரா ப3ர்ஹிணவாஸஸ: ।
ஹஸ்தாச்சாபி பரிப்4ரஷ்டா பபாதோர்வ்யாம் மஹாக3தா3 ॥
ஆயுதா4நி ச ஸர்வாணி விப்ராகீர்யந்த பூ4தலே ॥ (119)

ஸ நிராயுத4மாத்மாநம் யதா3 மேநே மஹாப3ல: ।
முஷ்டிப்4யாம் சரணாப்4யாம் ச சகார கத3நம் மஹத் ॥ (120)

ஸ பா3ணைரதிவித்3த4ாங்க3: க்ஷதஜேந ஸமுக்ஷித: ।
ருதி4ரம் ப்ரதிஸுஸ்ராவ கி3ரி: ப்ரஸ்ரவணம் யதா2 ॥ (121)

ஸ தீவ்ரேண ச கோபேந ருதி4ரேண ச மூர்சி2த: ।
வாநராந் ராக்ஷஸாந்ருக்ஷாந் கா2த3ந் விபரிதா4வதி ॥ (122)

அத2 ஶ்ருங்க3ம் ஸமாவித்4ய பீ4மம் பீ4மபராக்ரம: ।
சிக்ஷேப ராமமுத்3தி3ஶ்ய ப3லவாநந்தகோபம: ॥ (123)

அப்ராப்தமந்தரா ராம: ஸப்தபி4ஸ்தைரஜிஹ்மகை3: ।
ஶரை: காஞ்சநசித்ராங்கைஶ்சிச்சே2த3 புருஷர்ஷப4: ॥ (124)

தந்மேருஶிக2ராகாரம் த்3யோதமாநமிவ ஶ்ரியா ।
த்3வே ஶதே வாநரேந்த்3ராணாம் பதமாநமபாதயத் ॥ (125)

தஸ்மிந் காலே ஸ த4ர்மாத்மா லக்ஷ்மணோ வாக்யமப்3ரவீத் ।
கும்ப4கர்ணவதே4 யுக்தோ யோகா3ந் பரிம்ருஶந் ப3ஹூந் ॥ (126)

இவ்வாறு, அந்தப் போர்க்களத்தில் தற்புகழ்ச்சியுடன் கூடிய கொடிய சொற்களைக் கூறிய கும்பகர்ணனைப் பார்த்து, இளநகை புரிந்தவாறு, இலக்குவன் பதில் சொன்னான்— (112)

"இந்திரன் முதலான தேவர்களாலும் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குப் பேராண்மை பெற்றிருப்பதற்காக நீ கூறியது முற்றிலும் உண்மை; பொய் அல்ல என்பதை நான் என் கண்களாலேயே பார்த்துத் தெரிந்து கொண்டுவிட்டேன்! (113)

தசரத குமாரரான இராமன், இன்னொரு மலைபோல் உறுதியாக இங்கே நிற்கிறார். இராச்சுற்றியே! ஒருக்கால், உன் எண்ணம் அவரிடத்தில் பலிக்கலாம்! (இது பரிகாச மொழி. பாவம் இராமன்! இந்திரனாலேயே வெற்றி கொள்ள முடியாத உன்னுடன் போர் செய்ய வந்து நிற்கிறாரே? அவருடன் போர் செய்து, உன் வீரத்திற்கு மேலும் புகழ் சேர்த்துக் கொள்! – என்ற, இகழ் உணர்வுடன் கூறிய சொற்கள்.) (114)

இலக்குவன் இவ்வாறு சொன்னதைக் கேட்ட அரக்கன், அவனை அலட்சியப்படுத்தி, மீறிச் சென்று, பூமியைப் பிளக்கின்றவன் போல் அடிவைத்து இராமனையே குறியாகக் கொண்டு ஓடினான். (115)

அப்போது இராமன், கூர்மையான பாணங்களை (ருத்ரனை தேவதையாகக் கொண்ட மந்திரங்களால்) ரௌத்ராஸ்திரமாகச் செய்து, கும்பகர்ணனுடைய மார்பை நோக்கிச் செலுத்தினார். இராமனுடைய பாணங்களால் காயப்படுத்தப்பட்ட அவன், அவரை எதிர்த்து ஓடினான். அப்போது கோபத்துடனிருந்த அவன் வாயிலிருந்து பொறி பறக்கும் அனற்கங்குகள் வெளியே வந்து கொண்டிருந்தன. (116,117)

இராமனுடைய அஸ்திரத்தால் தாக்கப்பட்ட அரக்கப் பெருந்தகை, பயங்கரமாக ஓலமிட்டுக் கொண்டு கோபத்துடன், போர்க்களத்தில் வானரர்களை வெருண்டோடச் செய்துகொண்டு (இராமனை) எதிர்த்து வந்தான். (118)

மயிலிறகு பொருத்தப்பட்ட அம்புகள் அவன் மார்பில் புகுந்துகொண்டன. அதனால், கைகளிலிருந்து ஆயுதங்கள் நழுவி விழ, வலிமைமிக்க அவன் பூமியில் சாய்ந்தான். எல்லா படைக்கலன்களும் தரையில் சிதறி விழுந்தன. (119)

மகாபலசாலியான அவன் ஆயுதம் ஏதும் இல்லாமற்போகவே, கைமுஷ்டியாலும், கால்களாலும் வானரர்களைத் தாக்கி பெருநாசம் விளைவித்தான். (120)

அவன், (இராம) பாணங்களால் வலுவாகத் தாக்கப்பட்டு இரத்தத்தால் நனைந்தான். (மலை போன்ற உடல் பெற்றிருந்த) அவனது அங்கங்களிலிருந்து மலையிலிருந்து கொட்டும் நீர்வீழ்ச்சியை போல இரத்த அருவி ஓடிற்று. (121)

அவன், கடுஞ்சீற்றத்தாலும் இரத்த வெறியாலும் மதிகலங்கி, வானரர்களையும் அரக்கர்களையும் கரடிகளையும் தின்றுகொண்டு (யுத்த பூமியில்) திரியத் தொடங்கினான். காலனைப் போன்றவனும், பயங்கரமான பராக்கிரமம் உடையவனும், பேருடல் கொண்டவனுமான அவன், ஒரு மலைமுகட்டைப் பெயர்த்து இராமனைக் குறிவைத்து வீசி எறிந்தான். (122,123)

புருஷோத்தமனான இராமன், அந்த மலைமுகடு தன்னை நெருங்கி வருவதற்குள்ளாகவே, பொற்சித்திரங்களால் கவினுற விளங்கும் ஏழு அம்புகளால் அதைத் தகர்த்தெறிந்தார். (124)

மேருவின் சிகரத்தைப் போல பருமனும் பிரகாசமும் உடைய அந்த மலைமுகடு (இராம பாணங்களால் தகர்க்கப்பட்டு,) கீழே விழுந்தபோது இருநூறு வானரர்களைத் தரையில் சாய்த்துவிட்டது. (125)

அப்போது, கும்பகர்ணனை மாய்ப்பதில் குறியாக இருந்த தருமாத்மா லட்சுமணன், பல உபாயங்களைச் சிந்தித்துக் கொண்டு பின்வருமாறு கூறினான்— (126)

நைவாயம் வாநராந் ராஜந்நாபி ஜாநாதி ராக்ஷஸாந் ।
மத்த: ஶோணிதக$_3$ந்தே$_4$ந ஸ்வாந் பராம்ஶ்சைவ க$_2$ாத$_3$தி ॥ (127)

ஸாத்$_4$வேநமதி$_4$ரோஹந்து ஸர்வே தே வாநரர்ஷப$_4$ா: ।
யூத$_2$பாஶ்ச யத$_2$ா முக்$_2$யாஸ்திஷ்ட$_2$ந்த்வஸ்ய ஸமந்தத: ॥ (128)

அப்யயம் து$_3$ர்மதி: காலே கு$_3$ருப$_4$ாரப்ரபீடி$_3$த: ।
ப்ரபதந் ராக்ஷஸோ பூ$_4$மௌ நாந்யாந் ஹந்யாத் ப்லவங்க$_3$மாந் ॥ (129)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராஜபுத்ரஸ்ய தீ$_4$மத: ।
தே ஸமாருருஹுர்ஹ்ருஷ்டா: கும்ப$_4$கர்ணம் ப்லவங்க$_3$மா: ॥ (130)

கும்ப$_4$கர்ணஸ்து ஸங்க்ருத்$_3$த$_4$: ஸமாரூட$_4$: ப்லவங்க$_3$மை: ।
வ்யதூ$_4$நயத்தாந் வேகே$_3$ந து$_3$ஷ்டஹஸ்தீவ ஹஸ்திபாந் ॥ (131)

தாந் த்$_3$ருஷ்ட்வா நிர்து$_4$தாந் ராமோ து$_3$ஷ்டோऽயமிதி ராக்ஷஸ: ।
ஸமுத்பபாத வேகே$_3$ந த$_4$நுருத்தமமாத$_3$தே$_3$ ॥ (132)

க்ரோத$_4$தாம்ரேக்ஷணோ வீரோ நிர்த$_3$ஹந்நிவ சக்ஷுஷா ।
ராக$_4$வோ ராக்ஷஸம் ரோஷாத$_3$பி$_4$து$_3$த்$_3$ராவ வேகி$_3$த: ॥
யூத$_2$பாந் ஹர்ஷயந் ஸர்வாந் கும்ப$_4$கர்ணப$_4$யார்தி$_3$தாந் ॥ (133)

ஸ சாபமாத$_3$ாய பு$_4$ஜங்க$_3$கல்பம் த்$_3$ருட$_4$ஜ்யமுக்$_3$ரம் தபநீயசித்ரம் ।
ஹரீந் ஸமாஶ்வாஸ்ய ஸமுத்பபாத ராமோ நிப$_3$த்$_3$தே$_4$ாத்தமதூணப$_3$ாண: ॥ (134)

ஸ வாநரக$_3$ணைஸ்தைஸ்து வ்ருத: பரமது$_3$ர்ஜய: ।
லக்ஷ்மணாநுசரோ ராம: ஸம்ப்ரதஸ்தே$_2$ மஹாப$_3$ல: ॥ (135)

ஸ த$_3$த$_3$ர்ஶ மஹாத்மாநம் கிரீடிநமரிந்த$_3$மம் ।
ஶோணிதாப்லுதஸர்வாங்க$_3$ம் கும்ப$_4$கர்ணம் மஹாப$_3$லம் ॥ (136)

ஸர்வாந் ஸமபி$_4$த$_4$ாவந்தம் யத$_2$ா ருஷ்டம் தி$_3$ஶாக$_3$ஜம் ।
மார்க$_3$மாணம் ஹரீந் க்ருத்$_3$த$_4$ம் ராக்ஷஸை: பரிவாரிதம் ॥ (137)

விந்த்$_4$யமந்த$_3$ரஸங்காஶம் காஞ்சநாங்க$_3$த$_3$பூ$_4$ஷணம் ।
ஸ்ரவந்தம் ருதி$_4$ரம் வக்த்ராத்$_3$வர்ஷமேக$_4$மிவோத்தி$_2$தம் ॥ (138)

ஜிஹ்வயா பரிலிஹ்யந்தம் ஶோணிதம் ஶோணிதேக்ஷணம் ।
ம்ருத்$_3$நந்தம் வாநராநீகம் காலாந்தகயமோபமம் ॥ (139)

தம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$ம் ப்ரதீ$_3$ப்தாநலவர்சஸம் ।
விஸ்ப$_2$ாரயாமாஸ தத$_3$ா கார்முகம் புருஷர்ஷப$_4$: ॥ (140)

ஸ தஸ்ய சாபநிர்கே$_4$ாஷாத் குபிதோ ராக்ஷஸர்ஷப$_4$: ।
அம்ருஷ்யமாணஸ்தம் கே$_4$ாஷமபி$_4$து$_3$த்$_3$ராவ ராக$_4$வம் ॥ (141)

''மன்னரே! இவன் வானரர்களை இனம் கண்டு கொள்ளவில்லை; அரக்கர்களையும் அறியவேயில்லை. இரத்த நாற்றத்தால் வெறிகொண்டு, தன்னவர்களையும் மற்றவர்களையும் பிடித்துச் சாப்பிடுகிறான். (127)

வானரவீரர்கள் அனைவரும் இவன்மீது ஏறி நிற்க வேண்டும்; வானரத் தலைவர்கள், நாற்புறத்திலும் தத்தமக்கு உரிய இடத்தில் நின்று கொள்ளட்டும். (128)

தீய மதி கொண்ட இவன், (மேலே ஏறி நிற்கும் ஆயிரக்கணக்கான வானரர்களின்) சுமையைத் தாங்க முடியாமல் தரையில் விழுந்து விடுவான். அப்படி விழுந்துவிட்டானாகில், மற்ற வானரர்களைக் கொல்லாமலிருப்பான்.'' (129)

மதிநுட்பம் மிக்க அரசகுமாரனின் சொற்களைக் கேட்டு மனக்களிப்படைந்த வானரர்கள், கும்பகர்ணனின் மேல் ஏறினார்கள். (130)

வானரர்கள் தன்மீது ஏறியவுடன் கும்பகர்ணன் மிகவும் கோபங்கொண்டு, மதம்பிடித்த ஒரு யானை தன்மேல் அமர்ந்திருக்கும் பாகனைத் தூக்கி எறிவதைப் போல, (உடலைச் சிலிர்த்து) வானரர்களை வேகமாக உதறி எறிந்தான். (131)

உதறித் தள்ளப்பட்ட அவர்களைப் பார்த்ததும், 'இந்த அரக்கன் மிகவும் பொல்லாதவன்' என்று புரிந்து கொண்ட இராமன், உத்தமமான வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு (கும்பகர்ணனை நோக்கி) வேகமாகத் துள்ளிச் சென்றார். (132)

வீர இராகவன், சினத்தால் கண்கள் சிவக்க, கண்களாலேயே எரிப்பவரைப் போல ஆத்திரங்கொண்டு அரக்கனை வெகு கடுமையாகத் தாக்கினார். கும்பகர்ணனைக் கண்டு பயந்த வானரப்படைத் தலைவர்கள், இதைக் கண்டு உளமகிழ்ந்தார்கள். (133)

உறுதியான நாண்கயிற்றோடு கூடியதும், பாம்பைப் போல் அச்சந்தருவதும், கண்ணால் காணும் போதே பயத்தைத் தருவதுமான வில்லைக் கையில் ஏந்திக்கொண்டு, உத்தமமான அம்புறாத்தூணிகளையும் பாணங்களையும் (தோளில்) கட்டிக்கொண்டு, வானரர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, கும்பகர்ணன் மேல் மிகுந்த வேகத்துடன் தாக்குதல் நடத்தினார், இராமன். (134)

வெல்வதற்கு அரிய, பலம் மிக்க இராமன் வானரக் கூட்டங்களால் சூழப்பட்டு, இலக்குவன் பின்தொடர்ந்துவர கும்பகர்ணனை நோக்கி முன்னேறினார். (135)

அவர், பேராற்றல் கொண்டவனும், மகுடம் புனைந்தவனும், எதிரிகளை அடக்குபவனும், உடலெங்கும் இரத்தத்தால் நனைந்திருப்பவனும், வலிமைமிக்கவனுமான கும்பகர்ணனை நேரில் (அதாவது அருகில்) பார்த்தார். (136)

அவன், கோபங்கொண்ட திசைக்களிற்றைப் போல் எல்லோரையும் எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருந்தான். சினம் கொண்டு வானரர்களைத் தேடிக் கொண்டிருந்தான். அரக்கர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். விந்திய–மந்தர மலைகள் போன்றவனும், பொன் தோள்வளைகள் பூண்டவனும், நீருண்ட கார்மேகம் மேலெழும்பி மழையைப் பொழிவதைப் போல, தன் வாயிலிருந்து இரத்தத்தைப் பொழிந்து கொண்டிருந்தவனும், இரத்தத்தை நாக்கினால் நக்குபவனும், இரத்தம் போன்ற கண்களை உடையவனும், ஊழிக்கால யமனைப் போல் வானரப் படையை அழிப்பவனும், கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல் ஒளிவீசுபவனும், அரக்கர்களில் முதன்மையானவனுமான அவனை (கும்பகர்ணனை)ப் பார்த்ததும், பேராண்மைமிக்க அவர் வில்லில் நாண் ஏற்றி வளைத்தார். (137–140)

அவன், இராமனது வில்லின் நாணொலியைப் பொறுக்க மாட்டாதவனாய் ஆத்திரத்துடன் இராமனை நோக்கி ஓடினான். (141)

புரஸ்தாத்$_3$ராக$_4$வஸ்யார்தே$_2$ க$_3$தா$_3$யுக்தோ விபீ$_4$ஷண: ।
அபி$_4$து$_3$த்$_3$ராவ வேகே$_3$ந ப்$_4$ராதா ப்$_4$ராதரமாஹவே ॥ (142)

விபீ$_4$ஷணம் புரோ த்$_3$ருஷ்ட்வா கும்ப$_4$கர்ணோऽப்$_3$ரவீதி$_3$த$_3$ம் ।
ப்ரஹரஸ்வ ரணே ஶீக்$_4$ரம் க்ஷத்ரத$_4$ர்மே ஸ்தி$_2$ரோ ப$_4$வ ॥ (143)

ப்$_4$ராத்ருஸ்நேஹம் பரித்யஜ்ய ராக$_4$வஸ்ய ப்ரியம் குரு ।
அஸ்மத்கார்யம் க்ருதம் வத்ஸ யஸ்த்வம் ராமமுபாக$_3$த: ॥ (144)

த்வமேகோ ரக்ஷஸாம் லோகே ஸத்யத$_4$ர்மாபி$_4$ரக்ஷித: ।
நாஸ்தி த$_4$ர்மாபி$_4$ரக்தாநாம் வ்யஸநம் து கதா$_3$சந ॥ (145)

ஸந்தாநார்த$_2$ம் த்வமேவைக: குலஸ்யாஸ்ய ப$_4$விஷ்யஸி ।
ராக$_4$வஸ்ய ப்ரஸாதா$_3$த்த்வம் ரக்ஷஸாம் ராஜ்யமாப்ஸ்யஸி ॥ (146)

ப்ரக்ருத்யா மம து$_3$ர்த$_4$ர்ஷ ஶீக்$_4$ரம் மார்கா$_3$த$_3$பக்ரம ।
ந ஸ்தா$_2$தவ்யம் புரஸ்தாந்மே ஸம்ப்$_4$ரமாந்நஷ்டசேதஸ: ॥ (147)

ந வேத்$_3$மி ஸம்யுகே$_3$ ஶக்த: ஸ்வாந் பராந் வா நிஶாசர ।
ரக்ஷணீயோऽஸி மே வத்ஸ ஸத்யமேதத்$_3$ப்$_3$ரவீமி தே ॥ (148)

ஏவமுக்தோ வசஸ்தேந கும்ப$_4$கர்ணேந தீ$_4$மதா ।
விபீ$_4$ஷணோ மஹாபா$_3$ஹு: கும்ப$_4$கர்ணமுவாச ஹ ॥ (149)

க$_3$தி$_3$தம் மே குலஸ்யாஸ்ய ரக்ஷணார்த$_2$மரிந்த$_3$ம ।
ந ஶ்ருதம் ஸர்வரக்ஷோபி$_4$ஸ்ததோऽஹம் ராமமாக$_3$த: ॥ (150)

ஏவமுக்த்வாஶ்ருபூர்ணாக்ஷோ க$_3$தா$_3$பாணிர்விபீ$_4$ஷண: ।
ஏகாந்தமாஶ்ரிதோ பூ$_4$த்வா சிந்தயாமாஸ ஸம்ஸ்தி$_2$த: ॥ (151)

ததஸ்து வாதோத்$_3$த$_4$தமேக$_4$கல்பம் பு$_4$ஜங்க$_3$ராஜோத்தமபோ$_4$க$_3$பா$_3$ஹும் ।
தமாபதந்தம் த$_4$ரணீத$_4$ராப$_4$முவாச ராமோ யுதி$_4$ கும்ப$_4$கர்ணம் ॥ (152)

ஆக$_3$ச்ச$_2$ ரக்ஷோऽதி$_4$ப மா விஷாத$_3$–
மவஸ்தி$_2$தோऽஹம் ப்ரக்$_3$ருஹீதசாப: ।
அவேஹி மாம் ஶக்ரஸபத்ந
ராமம் மயா முஹூர்தாத்$_3$ப$_4$விதா விசேதா: ॥ (153)

ராமோऽயமிதி விக்ஞாய ஜஹாஸ விக்ருதஸ்வநம் ।
அப்$_4$யதா$_4$வத ஸங்க்ருத்$_3$தோ$_4$ ஹரீந் வித்$_3$ராவயந் ரணே ॥
பாதயந்நிவ ஸர்வேஷாம் ஹ்ருத$_3$யாநி வநௌகஸாம் ॥ (154)

ப்ரஹஸ்ய விக்ருதம் பீ$_4$மம் ஸ மேக$_4$ஸ்தநிதோபமம் ।
கும்ப$_4$கர்ணோ மஹாதேஜா ராக$_4$வம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (155)

போர்க்களத்தில் பெரிய சகோதரனான கும்பகர்ணனை நோக்கி, இராமனுக்குப் பக்கபலமாக கதையுடன் இருந்த இளைய சகோதரன் விபீஷணன் எதிர்த்து வந்தான். (142)

எதிரில் விபீஷணனைப் பார்த்ததும் கும்பகர்ணன், ''உடனே என்மேல் கதையை வீசிப் போர்புரிவாய்! அதுதான் க்ஷத்திரிய தருமம்!'' என்று கூறினான். (போர்க்களத்தில் எதிரெதிர் அணியில் இருக்கும்போது, உறவுப் பாசங்களை உதறிவிட வேண்டும். அதுவே மன்னர்குல தருமம்.) (143)

(கும்பகர்ணன் தொடர்ந்து கூறுகிறான்—) ''தம்பி! சகோதரப் பிணைப்பை விட்டுவிட்டு, இராமபிரானுக்கு உகந்த செயலைச் செய். நீ, இராமனை புகல் அடைந்ததன் மூலம் நம்முடைய கடமையை நிறைவேற்றி விட்டாய். (144)

அரக்கர் இனத்தில் நீ ஒருவன்தான், சத்தியத்தையும் அறத்தையும் காப்பாற்றுபவன். அறத்தில் பற்றுடையவர்களுக்கு ஒருபோதும் துன்பம் ஏற்படாது. (145)

நம் குலத்தின் தொடர்ச்சி விட்டுப் போகாமலிருக்க, நீ ஒருவன்தான் எஞ்சியிருக்கப் போகிறாய். இராமனுடைய பேரருளால், அரக்கர் அரசை நீ அடையப் போகிறாய். (146)

வெற்றி கொள்ள முடியாத வீரனே! என் இயல்பு உனக்குத் தெரியும். (என்னுடன் போருக்கு வருபவனை, இரக்கம் காட்டாமல் கொடுமையாகத் தாக்கி வெருண்டோடச் செய்வேன்! அதனால்,) என் வழியிலிருந்து விலகிப் போய்விடு. கோபாவேசத்தால் மதியிழந்து நிற்கும் என் முன்னால் நீ நிற்கக் கூடாது. (தம்பி என்று தயவுகாட்டாமல் கடுமையாகத் தாக்கிவிடுவேன்.) (147)

அரக்கனே! போர்க்களத்தில், 'இவன் நம்முடையவன்; இவன் வேற்றாள்' என்றறிய மாட்டேன். தம்பி! சத்தியமாகச் சொல்கிறேன், நீ காப்பாற்றப்பட வேண்டியவன். (நான், உன்னை வதம் செய்ய மாட்டேன்.)'' (148)

இவ்வாறு நுண்மதி கொண்ட கும்பகர்ணன் கூறியவுடன், தோள்வலி மிக்க விபீஷணன் பதில் சொன்னான்— ''எதிரிகளை அடக்குபவரே! நம்முடைய குலத்தைக் காப்பாற்றுவதற்காக நான் பலவாறு எடுத்துக் கூறினேன். அரக்கர்கள் எல்லோரும் என் பேச்சை ஏற்கவில்லை. வேறு வழியில்லாமல் (அறத்தைக் காப்பாற்றுவதற்கு வேறு வழி தெரியாமல்) நான் இராமபிரானைச் சரணடைந்தேன்.'' (149,150)

இவ்வாறு கூறிவிட்டு, கண்களில் நீர் நிரம்பியவனும் கையில் கதையைத் தாங்கிக் கொண்டிருந்தவனுமான வீடணன், தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று ஆலோசிக்கத் தொடங்கினான். அப்போது, காற்றினால் எழுப்பப்பட்ட மேகத்தைப் போன்றவனும், சர்ப்பராஜனைப் போன்று நீண்ட கைகள் அமைந்தவனும், பெரிய மலையைப்போல் உடலைப் பெற்றவனும், தன்னை எதிர்த்து வருபவனுமான கும்பகர்ணனைப் போர்க்களத்தில் பார்த்து, இராமன் கூறினார்— (151,152)

''அரக்கர் தலைவனே! கவலைப்படாதே! வா! (உயிர் பிழைத்திருக்க வேண்டுமானால் திரும்பிச் செல் – என்பது மறைபொருள்.) கையில் வில்லைப் பிடித்துக் கொண்டு போருக்குத் தயாராக நிற்கிறேன். இந்திரன் பகைவனே! நான்தான் இராமன். என்னைப் பார். (பார்த்த பின்னர்,) சிறிது நேரத்திலேயே நான் உன்னை உணர்விழக்கச் செய்வேன்.'' (153)

'ஓ! இவன்தான் இராமனா?' என்று மனத்தால் அறிந்து தடுமாறிய குரலுடன் நகைத்தான். போர்க்களத்தில் இருந்த எல்லா வானரர்களின் இருதயங்களையும் பிளக்கச் செய்பவன் போல், வானரர்களை வெருண்டோடச் செய்துகொண்டு எதிர்த்து ஓடினான் (கும்பகர்ணன்). (154)

மகாதேஜஸ்வியான கும்பகர்ணன், மேகத்தின் இடிபோன்ற பயங்கரமானதும் விகாரமானதுமான குரலுடன் நகைத்து, இராமனை நோக்கிக் கூறினான்— (155)

நாஹம் விராதோ4 விக்ஞேயோ ந கப3ந்த4: க2ரோ ந ச ।
ந வாலீ ந ச மாரீச: கும்ப4கர்ணோऽஹமாக3த: ॥ (156)

பஶ்ய மே முத்3க3ரம் கோ4ரம் ஸர்வகாலாயஸம் மஹத் ।
அநேந நிர்ஜிதா தே3வா தா3நவாஶ்ச புரா மயா ॥ (157)

விகர்ணநாஸ இதி மாம் நாவக்ஞாதும் த்வமர்ஹஸி ।
ஸ்வல்பாபி ஹி ந மே பீடா3 கர்ணநாஸாவிநாஶநாத் ॥ (158)

த3ர்ஶயேக்ஷ்வாகுஶார்தூ3ல வீர்யம் கா3த்ரேஷு மே லகு4 ।
ததஸ்த்வாம் ப4க்ஷயிஷ்யாமி த்3ருஷ்டபௌருஷவிக்ரமம் ॥ (159)

ஸ கும்ப4கர்ணஸ்ய வசோ நிஶம்ய
ராம: ஸுபுங்கா2ந் விஸஸர்ஜ பா3ணாந் ।
தைராஹதோ வஜ்ரஸமப்ரவேகை3ர்–
ந சுக்ஷுபே4 ந வ்யத2தே ஸுராரி: ॥ (160)

யை: ஸாயகை: ஸாலவரா நிக்ருத்தா
வாலீ ஹதோ வாநரபுங்க3வஶ்ச ।
தே கும்ப4கர்ணஸ்ய ததா3 ஶரீரே
வஜ்ரோபமா ந வ்யத2யாம்ப3பூ4வு: ॥ (161)

ஸ வாரிதா4ரா இவ ஸாயகாம்ஸ்தாந் பிப3ஞ்ஶரீரேண மஹேந்த்3ரஶத்ரு: ।
ஜகா4ந ராமஸ்ய ஶரப்ரவேக3ம் வ்யாவித்4ய தம் முத்3க3ரமுக்3ரவேக3ம் ॥ (162)

ததஸ்து ரக்ஷ: க்ஷதஜாநுலிப்தம் வித்ராஸநம் தே3வமஹாசமூநாம் ।
விவ்யாத4 தம் முத்3க3ரமுக்3ரவேக3ம் வித்3ராவயாமாஸ சமூம் ஹரீணாம் ॥ (163)

வாயவ்யமாதா3ய ததோ வராஸ்த்ரம் ராம: ப்ரசிக்ஷேப நிஶாசராய ।
ஸமுத்3க3ரம் தேந ஜகா4ந பா3ஹும் ஸ க்ருத்தபா3ஹுஸ்துமுலம் நநாத3 ॥ (164)

ஸ தஸ்ய பா3ஹுர்கி3ரிஶ்ருங்க3கல்ப: ஸமுத்3க3ரோ ராக4வபா3ணக்ருத்த: ।
பபாத தஸ்மிந் ஹரிராஜஸைந்யே ஜகா4ந தாம் வாநரவாஹிநீம் ச ॥ (165)

தே வாநரா ப4க்3நஹதாவஶேஷா:
பர்யந்தமாஶ்ரித்ய ததா3 விஷண்ணா: ।
ப்ரவேபிதாங்க3ம் த3த்3ருஶு: ஸுகோ4ரம்
நரேந்த்3ரரக்ஷோऽதி4பஸந்நிபாதம் ॥ (166)

ஸ கும்ப4கர்ணோऽஸ்த்ரநிக்ருத்தபா3ஹுர்–
மஹேந்த்3ரக்ருத்தாக்3ர இவாசலேந்த்3ர: ।
உத்பாடயாமாஸ கரேண வ்ருக்ஷம்
ததோऽபி4து3த்3ராவ ரணே நரேந்த்3ரம் ॥ (167)

''தெரிந்து கொள். நான் விராதன் இல்லை; கபந்தனோ கரனோ அல்லன்; வாலி, மாரீசர்களும் அல்லன்! நான் கும்பகர்ணன் வந்திருக்கிறேன்! (156)

என் கையிலிருக்கும் மிகப்பெரியதும் முற்றிலும் இரும்பால் ஆனதும் பயங்கரமானதுமான உலக்கையைப் பார்! இதைக் கொண்டுதான், முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் என்னால் வெல்லப்பட்டார்கள். (157)

'காதுகளையும் நாசியையும் இழந்தவன் இவன்' என்று நீ என்னைக் குறைவாக மதிப்பிடக் கூடாது. காதுகளும் மூக்கும் போனதால் எனக்குக் கொஞ்சம்கூடக் குறை இல்லை. (158)

இக்ஷ்வாகு வம்சப் புலியே! என் உடல்மேல் உன் வீரத்தைக் காட்டுவாயாக. உன் வீர தீரப் பராக்கிரமம் இவ்வளவுதான் என்று அறிந்த பிறகு, (என்னுடன் போர் செய்யும் தகுதி உனக்கு இல்லை என்பது நிச்சயமாகத் தெரிந்துவிடும் என்பதால்,) உன்னை விழுங்கப் போகிறேன்!'' (159)

இராமன், கும்பகர்ணனுடைய சொற்களைக் கேட்டு, கூர்மையான நுனிகளைக் கொண்ட பாணங்களை விடுத்தார். வஜ்ராயுதத்திற்கு நிகரான வேகம் படைத்த அவைகளால் தாக்கப்பட்டும்கூட தேவர் பகைவனான கும்பகர்ணன் மனச்சலனமடையவோ வேதனைப்படவோ இல்லை. (160)

எந்தப் பாணங்களால் (சுக்ரீவனுடன் நட்புபூண்ட காலத்தில்) சிறந்த ஆச்சாமரங்கள் வெட்டித் தள்ளப்பட்டனவோ, வானரோத்தமனான வாலி மாய்க்கப்பட்டானோ, (இராமனால் எய்தப்பட்ட) வஜ்ராயுதம் நிகர் அதே கணைகள், இப்போது கும்பகர்ணனின் உடலில் வேதனையை உண்டாக்கவில்லை. (161)

அமரவேந்தனின் பகைவனான கும்பகர்ணன், நீர்ப் பொழிவை வாயினால் பருகிவிடுவதைப் போல, இராமனின் அம்புமழையை சரீரத்தால் பருகிவிட்டான். (வெகு எளிதாகச் சரீரத்தில் ஏற்றுக்கொண்டான்.) வேகமாக வந்த இராமனுடைய அம்புகளை, தன்னுடைய உலக்கையைச் சுழற்றிச் சுழற்றித் தடுத்து நிறுத்தி வீழ்த்தினான். (162)

பின்னர், (பற்பல போர்களில், கணக்கில்லாத வீரர்களை அடித்து வீழ்த்தியதால்) இரத்தம் தோய்ந்ததும், தேவர்களின் மாபெரும் படைகளை அடித்து நொறுக்கியதுமான அந்த உலக்கையை, அரக்கனான கும்பகர்ணன் வெகுவேகமாகச் சுழற்றி, வானரப் படையை அலறி ஓடச் செய்தான். (163)

இதைப் பார்த்த இராமன், வாயவ்யம் என்ற சிறந்த அஸ்திரத்தை அரக்கன்மேல் விடுத்தார். அது உலக்கையை வைத்திருந்த கையை வெட்டித் தள்ளியது. கையை இழந்த அவன் உரக்கக் கதறினான். (164)

மலைச் சிகரம் போல் பெரிய அளவினதாக இருந்த அவனுடைய கை, உலக்கையோடுகூட இராமனால் வெட்டப்பட்டு, வானரமன்னன் படையின்மீது விழுந்து, அடியில் அகப்பட்டுக் கொண்டவர்களை நசுக்கிச் சாகடித்தது. (165)

இந்தப் பேரழிவிலிருந்து தப்பிப் பிழைத்த வானரர்கள், மிகவும் வருத்தத்துடன், போர்க்களத்தின் எல்லைக்கு ஓடிச்சென்று உடல் நடுங்கியவர்களாய், இராமனுக்கும் அரக்கனுக்கும் இடையே நிகழ்ந்த பெரும்போரைக் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தார்கள். (166)

இராமனுடைய பாணத்தால் ஒரு கையை இழந்த கும்பகர்ணன், சிகரத்தை இழந்த மலையரசனான மகேந்திர பர்வதம் போல் காணப்பட்டான். ஒரு கையால் ஒரு பெரிய மரத்தைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு போர்க்களத்தில், மனிதருள் மாணிக்கமான இராமனை எதிர்த்து வந்தான். (167)

ஸ தஸ்ய ப$_3$ாஹும் ஸஹஸாலவ்ருக்ஷம்
ஸமுத்$_3$யதம் பந்நக$_3$பே$_4$ாக$_3$கல்பம் ।
ஐந்த்$_3$ராஸ்த்ரயுக்தேந ஜக$_4$ாந ராமோ
ப$_3$ாணேந ஜாம்பூ$_3$நத$_3$சித்ரிதேந ॥ (168)

ஸ கும்ப$_4$கர்ணஸ்ய பு$_4$ஜோ நிக்ருத்த:
பபாத பூ$_4$மௌ கி$_3$ரிஸந்நிகாஶ: ।
விவேஷ்டமாநோऽபி$_4$ஜக$_4$ாந வ்ருக்ஷாஞ்–
ஶைலாஞ்ஶிலா வாநரராக்ஷஸாம்ஶ்ச ॥ (169)

தம் சி$_2$ந்நப$_3$ாஹும் ஸமவேக்ஷ்ய ராம:
ஸமாபதந்தம் ஸஹஸா நத$_3$ந்தம் ।
த்$_3$வாவர்த$_4$சந்த்$_3$ரௌ நிஶிதௌ ப்ரக்$_3$ருஹ்ய
சிச்சே$_2$த$_3$ பாதௌ$_3$ யுதி$_4$ ராக்ஷஸஸ்ய ॥ (170)

தௌ தஸ்ய பாதௌ$_3$ ப்ரதி$_3$ஶோ தி$_3$ஶஶ்ச
கி$_3$ரீந் கு$_3$ஹாஶ்சைவ மஹார்ணவம் ச ।
லங்காம் ச ஸேநாம் கபிராக்ஷஸாநாம்
விநாத$_3$யந்தௌ விநிபேததுஶ்ச ॥ (171)

நிக்ருத்தப$_3$ாஹுர்விநிக்ருத்தபாதோ$_3$ா விதா$_3$ர்ய வக்த்ரம் ப$_3$டப$_3$ாமுக$_2$ாப$_4$ம் ।
து$_3$த்$_3$ராவ ராமம் ஸஹஸாபி$_4$க$_3$ர்ஜந் ராஹுர்யதா$_2$ா சந்த்$_3$ரமிவாந்தரிக்ஷே ॥ (172)

அபூரயத்தஸ்ய முக$_2$ம் ஶிதாக்$_3$ரை
ராம: ஶரைர்ஹேமபிநத்$_3$த$_4$புங்கை$_2$: ।
ஸ பூர்ணவக்த்ரோ ந ஶஶாக வக்தும்
சுகூஜ க்ருச்ச்$_2$ரேண முமோஹ சாபி ॥ (173)

அதா$_2$த$_3$தே$_3$ ஸூர்யமரீசிகல்பம் ஸ ப்$_3$ரஹ்மத$_3$ண்டா$_3$ந்தககாலகல்பம் ।
அரிஷ்டமைந்த்$_3$ரம் நிஶிதம் ஸுபுங்க$_2$ம் ராம: ஶரம் மாருததுல்யவேக$_3$ம் ॥ (174)

தம் வஜ்ரஜாம்பூ$_3$நத$_3$சாருபுங்க$_2$ம் ப்ரதீ$_3$ப்தஸூர்யஜ்வலநப்ரகாஶம் ।
மஹேந்த்$_3$ரவஜ்ராஶநிதுல்யவேக$_3$ம் ராம: ப்ரசிக்ஷேப நிஶாசராய ॥ (175)

ஸ ஸாயகோ ராக$_4$வப$_3$ாஹுசோதி$_3$தோ
தி$_3$ஶ: ஸ்வப$_4$ாஸா த$_3$ஶ ஸம்ப்ரகாஶயந் ।
விதூ$_4$மவைஶ்வாநரதீ$_3$ப்தத$_3$ர்ஶநோ
ஜக$_3$ாம ஶக்ராஶநிவீர்யவிக்ரம: ॥ (176)

ஸ தந்மஹாபர்வதகூடஸந்நிப$_4$ம் நிவ்ருத்தத$_3$ம்ஷ்ட்ரம் சலசாருகுண்ட$_3$லம் ।
சகர்த ரக்ஷோऽதி$_4$பதே: ஶிரஸ்ததா$_2$ா யதை$_2$வ வ்ருத்ரஸ்ய புரா புரந்த$_3$ர: ॥ (177)

அப்போது இராமன், பொன் வேலைப்பாடுகள் கொண்ட ஒரு பாணத்தை எடுத்து, இந்திரனைக் குறித்த மந்திரங்களை ஓதி (பாணத்தை, ஐந்த்ராஸ்திரமாகச் செய்து), படம் விரித்த சர்ப்பத்தைப் போன்றதும், உயரத் தூக்கப்பட்டதும், ஆச்சா மரத்தைப் பற்றியிருந்ததுமான அவனுடைய இன்னொரு கையை வெட்டி வீழ்த்தினார். (168)

கும்பகர்ணனுடைய வெட்டி வீழ்த்தப்பட்ட அந்தக் கை, ஒரு பெரிய மலையைப் போல் பூமியில் விழுந்து துடித்தது. இங்குமங்கும் ஆடித் துடித்ததில் ஏராளமான மரங்கள், மலைகள், பாறைகள் ஆகியவை நாசமடைந்தது மட்டுமல்லாமல் வானரர்களும் அரக்கர்களும் சிக்கிக் கொண்டு நாசமடைந்தனர். (169)

கைகள் அறுந்து விழுந்த நிலையிலும், அவன் கதறிக்கொண்டு வேகமாகத் தன்னைத் தாக்க வருவதைப் பார்த்து, கூர்மையான இரண்டு அர்தசந்திர பாணங்களைத் தொடுத்து, அரக்கனின் இருகால்களையும் அறுத்துத் தள்ளினார். (170)

அவனுடைய இரு கால்களும், திக்கு–மூலைகளையும் மலைக்குகைகளையும் பெருங்கடலையும் இலங்கையையும் வானர–அரக்கப் படைகளையும் எதிரொலிக்கச் செய்துகொண்டு தரையில் விழுந்தன. (171)

இரு கால்களும் கைகளும் வெட்டப்பட்டவுடன், வடவாக்னி இருக்கும் இடத்தைப் போல், தன்னுடைய வாயை விசாலமாக விரித்துக் கொண்டு, ஆகாயத்தில் சந்திரனை ராகு விழுங்க வருவதைப் போல, கர்ஜனை செய்து கொண்டு, இராமன்மேல் பாய்ந்தான். (172)

அப்போது, இராமன் பொன் வேலைப்பாடமைந்த சிறகுகளைக் கொண்ட பாணங்களால் அவன் வாயை நிரப்பினார். வாய் முழுவதும் அம்புகளால் நிரப்பப்பட்டதால் அவனால் பேச முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு கீச்சென்று கத்தினான். மயக்கமும் அடைந்தான். (173)

இராமன், பிரும்மதண்டத்தைப் போன்றதும் பேரழிவை உண்டாக்கும் காலனைப் போல் பயங்கரமானதும் எதிரிகளுக்குத் துயரத்தைத் தருவதும் வாயுவுக்கு நிகரான வேகமுடையதும் பொற்சிறகுகளைக் கொண்டதும் சூரியகிரணங்களைப் போல் சுடரொளி வீசுவதுமான கூரிய பாணத்தை ஐந்த்ராஸ்திரமாகச் செய்து கையில் எடுத்தார். (174)

வைரமும் தங்கமும் இழைக்கப்பட்ட சிறகுகளை உடையதும், சுட்டெரிக்கும் சூரியன் மற்றும் அக்னியைப் போல் பேரொளி வீசுவதும், மகேந்திரனுடைய வஜ்ராயுதம் போன்றும் இடியைப் போன்றும் அழிவுச் சக்தி படைத்ததுமான அந்த அஸ்திரத்தை, அரக்கன் மீது செலுத்தினார். (175)

இராமனுடைய கையால் விடப்பட்ட அந்த பாணம், தன் சுயஒளியால் பத்துத் திசைகளையும் ஒளிரச் செய்துகொண்டும், புகையில்லாத அக்னியைப் போல் நெருப்பை கக்கிக்கொண்டும், இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு நிகரான வீர பராக்கிரமத்துடனும் கும்பகர்ணனை நோக்கிச் சென்றது. (176)

முன்னொரு காலத்தில், விருத்திராசுரனுடைய தலையை இந்திரன் வெட்டித் தள்ளினான். அதுபோல, இராமன் எய்த பாணம், பெரிய மலைச்சிகரத்தைப் போல் பேருருவம் கொண்டதும், கோரைப் பற்கள் அற்றதும், ஆடுகின்ற அழகிய குண்டலங்களைக் கொண்டதுமான அவன் தலையை அறுத்துத் தள்ளிற்று. (முன்னரே சுக்ரீவன், கும்பகர்ணனின் செவிகளைக் கடித்துத் துண்டித்து விட்டான் என்பதால், இங்கே குண்டலம் அணியப்படும் செவிகளின் அடிப்பகுதி மட்டும் துண்டிக்கப்படவில்லை என்று கொள்வது பொருத்தமாக இருக்கும்.) (177)

கும்ப4கர்ணஶிரோ ப்4ராதி குண்ட3லாலங்க்ருதம் மஹத் ।
ஆதி3த்யேऽப்4யுதி3தே ராத்ரௌ மத்4யஸ்த2 இவ சந்த்3ரமா: ॥ (178)

தத்3ராமபா3ணாபி4ஹதம் பபாத ரக்ஷ:ஶிர: பர்வதஸந்நிகாஶம் ।
ப3ப4ஞ்ஜ சர்யாக்3ருஹகோ3புராணி ப்ராகாரமுச்சம் தமபாதயச்ச ॥ (179)

ந்யபதத் கும்ப4கர்ணோऽத2 ஸ்வகாயேந நிபாதயந் ।
ப்லவங்க3மாநாம் கோட்யஶ்ச பரித: ஸம்ப்ரதாவதாம் ॥ (180)

தச்சாதிகாயம் ஹிமவத் ப்ரகாஶம் ரக்ஷஸ்ததஸ்தோயநிதௌ4 பபாத ।
க்3ராஹாந் வராந் மீநவராந் பு4ஜங்க3ாந் மமர்த3 பூ4மிம் ச ததா2 விவேஶ ॥ (181)

தஸ்மிந் ஹதே ப்3ராஹ்மணதே3வஶத்ரௌ
மஹாப3லே ஸம்யதி கும்ப4கர்ணே ।
சசால பூ4ர்பூ4மித4ராஶ்ச ஸர்வே
ஹர்ஷாச்ச தே3வாஸ்துமுலம் ப்ரணேது3: ॥ (182)

ததஸ்து தே3வர்ஷிமஹர்ஷிபந்நகா3:
ஸுராஶ்ச பூ4தாநி ஸுபர்ணகு3ஹ்யகா: ।
ஸயக்ஷக3ந்த4ர்வக3ணா நபே4ாக3தா:
ப்ரஹர்ஷிதா ராமபராக்ரமேண ॥ (183)

ததஸ்து தே தஸ்ய வதே4ந பூ4ரிணா
மநஸ்விநோ நைர்ருதராஜபா3ந்த4வா: ।
விநேது3ருச்சைர்வ்யதி2தா ரகூ4த்தமம்
ஹரிம் ஸமீக்ஷ்யைவ யதா2 ஸுரார்தி3தா: ॥ (184)

ஸ தே3வலோகஸ்ய தமோ நிஹத்ய
ஸூர்யோ யதா2 ராஹுமுகா2த்3விமுக்த: ।
ததா2 வ்யபா4ஸீத்3பு4வி வாநரௌகே4
நிஹத்ய ராமோ யுதி4 கும்ப4கர்ணம் ॥ (185)

ப்ரஹர்ஷமீயுர்ப3ஹவஸ்து வாநரா: ப்ரபு3த்3த4பத்3மப்ரதிமைரிவாநநை: ।
அபூஜயந் ராக4வமிஷ்டபா4கி3நம் ஹதே ரிபௌ பீ4மப3லே து3ராஸதே3 ॥ (186)

ஸ கும்ப4கர்ணம் ஸுரஸங்க4மர்த3நம்
மஹத்ஸு யுத்3தே4ஷு பராஜிதஶ்ரமம் ।
நநந்த3 ஹத்வா ப4ரதாக்3ரஜோ ரணே
மஹாஸுரம் வ்ருத்ரமிவாமராதி4ப: ॥ (187)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஸப்தஷஷ்டிதம: ஸர்க3: ॥

குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட கும்பகர்ணனுடைய தலை அறுபட்ட வேகத்தால், வானத்தைச் சென்றடைந்து, அதிதியை தேவதையாகவுடைய புனர்வசுத் தாரகைகள் இரண்டுக்கும் நடுவில் ஒளிவீசும் சந்திரனைப் போல் விளங்கிற்று. (178)

இராமபாணத்தால் அறுபட்டு அரக்கனுடைய மலை நிகர் தலை, நகரவாயிலை ஒட்டியிருந்த காவலர் விடுதிகளையும் கோபுரங்களையும் இடித்துத் தள்ளிக்கொண்டு விழுந்தது. அந்த நகரத்தின் உயரமான மதிற்சுவரையும் தரைமட்டமாக்கியது. (179)

தன் பெரும் சரீரத்தால் கோடிக்கணக்கில் சுற்றிலும் ஓடிக்கொண்டிருந்த வானரர்களைக் கீழே விழச்செய்து, ஒருவாறாக கும்பகர்ணன் வீழ்ந்தான். (180)

பெரிய உடல் கொண்டவனும், இமயமலையை நிகர்த்தவனுமான அந்த அரக்கன், பெருங்கடலில் விழுந்தான். அங்கிருந்த பெரிய முதலைகளையும் பெரிய மீன்களையும் பாம்புகளையும் மோதித் தள்ளிவிட்டுப் பூமிக்குள் புகுந்தான். (181)

மகாபலசாலியும், அந்தணர்களுக்கும் தேவர்களுக்கும் பகைவனுமான கும்பகர்ணன் போரில் கொல்லப்பட்டதும், பூமியும் எல்லாப் பிராணிகளும் மலைகளும் (பாவச்சுமை குறைந்ததால்) ஆடிக்களித்தன; பெருமகிழ்ச்சி அடைந்த தேவர்கள் ஆரவாரம் செய்தார்கள். (182)

அப்போது, தேவரிஷிகள், மாமுனிவர்கள், பன்னகர்கள், தேவதைகள், பூதங்கள், சுபர்ணர்கள், குஹ்யகர்கள், யக்ஷ–கந்தர்வ கூட்டத்தினர் ஆகியோர் ஆகாயத்திலிருந்து இராமனது பராக்கிரமத்தைப் பார்த்து (கும்பகர்ணன் மாண்டதால்) மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். (183)

செயற்கரிய செயலான கும்பகர்ணன் வதத்தினால் அரக்க மன்னனின் நெருங்கிய உறவினர்கள், மகாவிஷ்ணுவான இராமனைப் பார்த்துப் பார்த்து தேவர்களால் துன்புறுத்தப்பட்டதைப் போல, மிகவும் மனத்துயரம் கொண்டு உரத்த குரலில் வேதனைக் கூச்சலிட்டார்கள். (184)

(ராகுவினால் சூரியன் பீடிக்கப்பட்டால், பிரகாசமான உலகில் இருள் சூழ்ந்துவிடும்.) ராகுவிடமிருந்து விடுபட்ட சூரியன், அந்த இருளை ஒழித்து, உலகைப் பிரகாசப்படுத்தி, தானும் தேஜோமயமாய் வானில் விளங்குவதைப் போல, போரில் தேவலோகத்தில் இருள் (அச்சம்) சூழச் செய்திருந்த கும்பகர்ணனைக் கொன்ற இராமன், இந்த உலகில் வானரக் கூட்டத்தினரிடையே ஒளியெனத் திகழ்ந்தார். (185)

பயங்கரமான ஆற்றல் பெற்றவனும் வெல்லுதற்கரியவனுமான எதிரி கொல்லப்பட்டவுடன், அநேக வானரர்கள், மிகவும் மகிழ்ந்து மலர்ந்த தாமரை போன்ற முகத்துடன், தன் விருப்பம் நிறைவேறப் பெற்ற இராமனைப் போற்றிக் கொண்டாடினார்கள். (186)

முன்னர், எல்லா உலகங்களையும் துன்புறுத்திக் கொண்டிருந்த விருத்திராசுரனைக் கொன்றபோது, தேவேந்திரன் மகிழ்ந்ததைப் போல, தேவர் கூட்டங்களைப் போரில் பலதடவை முறியடித்தவனும், போர்க்களத்தில் தளர்ச்சியையே கண்டறியாதவனுமான கும்பகர்ணனைக் கொன்றவுடன், பரதனின் மூத்த சகோதரர் மிகவும் ஆனந்தம் அடைந்தார். (187)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஷ்டஷஷ்டிதம: ஸர்க$_3$:

ராவணாநுஶோக:

கும்ப$_4$கர்ணம் ஹதம் த்$_3$ருஷ்ட்வா ராக$_4$வேண மஹாத்மநா ।
ராக்ஷஸா ராக்ஷஸேந்த்$_3$ராய ராவணாய ந்யவேத$_3$யந் ॥ (1)

ராஜந் ஸ காலஸங்காஶ: ஸம்யுக்த: காலத$_4$ர்மணா ।
வித்$_3$ராவ்ய வாநரீம் ஸேநாம் ப$_4$க்ஷயித்வா ச வாநராந் ॥ (2)

ப்ரதபித்வா முஹூர்தம் ச ப்ரஶாந்தோ ராமதேஜஸா ।
காயேநார்த$_4$ப்ரவிஷ்டேந ஸமுத்$_3$ரம் பீ$_4$மத$_3$ர்ஶநம் ॥ (3)

நிக்ருத்தகண்டோ$_2$ருபு$_4$ஜோ விக்ஷரந் ருதி$_4$ரம் ப$_3$ஹு ।
ருத்$_3$த்$_4$வா த்$_3$வாரம் ஶரீரேண லங்காயா: பர்வதோபம: ॥ (4)

கும்ப$_4$கர்ணஸ்தவ ப்$_4$ராதா காகுத்ஸ்த$_2$ஶரபீடி$_3$த: ।
அக$_3$ண்ட$_3$பூ$_4$தோ விக்ருதோ த$_3$ாவத$_3$க்$_3$த$_4$ இவ த்$_3$ரும: ॥
மமார ராக்ஷஸோ கே$_4$ார: கும்ப$_4$கர்ணோ மஹாத்$_3$யுதி: ॥ (5)

தம் ஶ்ருத்வா நிஹதம் ஸங்க்$_2$யே கும்ப$_4$கர்ணம் மஹாப$_3$லம் ॥
ராவண: ஶோகஸந்தப்தோ முமோஹ ச பபாத ச ॥ (6)

பித்ருவ்யம் நிஹதம் ஶ்ருத்வா தே$_3$வாந்தகநராந்தகௌ ।
த்ரிஶிராஶ்சதிகாயஶ்ச ருருது$_3$: ஶோகபீடி$_3$தா: ॥ (7)

ப்$_4$ராதரம் நிஹதம் ஶ்ருத்வா ராமேணாக்லிஷ்டகர்மணா ।
மஹோத$_3$ரமஹாபார்ஶ்வௌ ஶோகாக்ராந்தௌ ப$_3$பூ$_4$வது: ॥ (8)

தத: க்ருச்ச்$_2$ராத் ஸமாஸாத்$_3$ய ஸம்க்ஞாம் ராக்ஷஸ புங்க$_3$வ: ।
கும்ப$_4$கர்ணவத$_4$ாத்$_3$தீ$_3$நோ விலலாப ஸ ராவண: ॥ (9)

ஹா வீர ரிபுத$_3$ர்பக்$_4$ந கும்ப$_4$கர்ண மஹாப$_3$ல ।
த்வம் மாம் விஹாய வை தை$_3$வாத்$_3$யாதோऽஸி யமஸாத$_3$நம் ॥ (10)

மம ஶல்யமநுத்$_3$த்$_4$ருத்ய ப$_3$ாந்த$_4$வாநாம் மஹாப$_3$ல ।
ஶத்ருஸைந்யம் ப்ரதாப்யைக: க்வ மாம் ஸந்த்யஜ்ய க$_3$ச்ச$_2$ஸி ॥ (11)

இத$_3$ாநீம் க$_2$ல்வஹம் நாஸ்மி யஸ்ய மே த$_3$க்ஷிணோ பு$_4$ஜ: ।
பதிதோ யம் ஸமாஶ்ரித்ய ந பி$_3$பே$_4$மி ஸுராஸுராத் ॥ (12)

கத$_2$மேவம்விதே$_4$ா வீரோ தே$_3$வத$_3$ாநவத$_3$ர்பஹா ।
காலாக்$_3$நிருத்$_3$ரப்ரதிமோ ராக$_4$வணே ரணே ஹத: ॥ (13)

யஸ்ய தே வஜ்ரநிஷ்பேஷோ ந குர்யாத்$_3$வ்யஸநம் ஸத$_3$ா ।
ஸ கத$_2$ம் ராமப$_3$ாணார்த: ப்ரஸுப்தோऽஸி மஹீதலே ॥ (14)

ஸர்க்கம் : அறுபத்தெட்டு

இராவணன் புலம்பினான்!

அளவுகடந்த வீரம் படைத்த இராமனால், கும்பகர்ணன் கொல்லப்பட்டதைப் பார்த்த அரக்கர்கள், அரக்க மன்னன் இராவணனிடம் சென்று தெரிவித்தார்கள்— (1)

''மன்னரே! யமனைப் போன்றவரும், காலநியதிக்கு உட்பட்டவரும், தங்கள் சகோதரருமான கும்பகர்ணன், வானரப் படையைச் சிதறடித்தார்; வானரர்களைப் பிடித்துத் தின்றார்; பின்னர், இராமனுடைய அம்பினால் தாக்கப்பட்டு, கழுத்து, கால்கள், கைகள் அறுபட்டு, இரத்த வெள்ளம் பெருக்கிக் கொண்டு, கைகள்–கால்கள் இல்லாத மலை போல் ஆனார். காட்டுத் தீயால் எரிக்கப்பட்ட மரம் போல் உருக்குலைந்து, (தன் பாதி சரீரத்தால்) இலங்கையின் நுழைவாயிலை அடைத்துக் கொண்டு கிடக்கிறார்; பயங்கரமான பெருங்கடலில் ஒரு பாதி சரீரம் மூழ்கிக் கிடக்கிறது. சிறிது நேரம் எதிரியுடன் கடுமையாகப் போர் செய்து, இராமனது பேராற்றலால் பரமசாந்தியை அடைந்துவிட்டார். பேரொளி வீசுபவரும் பயங்கரமான ஆற்றல் உடையவருமான அரக்கர் கும்பகர்ணன் மாண்டுவிட்டார்.'' (2–5)

'வலிமைமிக்க கும்பகர்ணன் போரில் கொல்லப்பட்டான்' என்ற செய்தியைக் கேட்டவுடனேயே துயரத்தால் வெந்து, மூர்ச்சை அடைந்து இராவணன் (சிம்மாசனத்திலிருந்து) கீழே விழுந்தான். (6)

தேவாந்தகன், நராந்தகன், திரிசிரஸ், அதிகாயன் ஆகியோர் தம் சிறிய தந்தையார் கொல்லப்பட்டார் என்பதைக் கேட்டு சோகம் தாங்காமல் கதறி அழுதார்கள். (7)

எவ்வளவு கடினமான வேலையையும் மிகவும் எளிதாகச் செய்யவல்ல இராமனால், தம் சகோதரர் கொல்லப்பட்டார் என்பதைக் கேட்டதும், மகோதரனும் மகாபார்சுவனும் சோகத்தில் மூழ்கினார்கள். (8)

பின்னர், ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொண்டு, தன்னுணர்வடைந்த அரக்கவேந்தன் இராவணன், கும்பகர்ணன் கொல்லப்பட்டதால் மனவலிமை குன்றி, பரிதாபமாக அழுது புலம்பினான்— (9)

''அச்சோ! வீரனே! எதிரிகளின் செருக்கை ஒழிப்பவனே! பேராற்றல் பெற்றவனே! கும்பகர்ணா! நீ என்னை விட்டுவிட்டு விதிவசத்தால் யமன் இருப்பிடத்திற்குப் போய்விட்டாயே! மகாபலம் உடையவனே! எதிரிப்படையை வெகுவாக வாட்டி எடுத்தாய். ஆனால், என் மற்றும் உறவினர்கள் மனத்தில் தைத்திருக்கும் வேதனை முள்ளை எடுத்தெறியாமல், நீ என்னைத் தனியாக விட்டுவிட்டு எங்கே செல்கிறாய்? (10,11)

எவனுடைய பேராற்றலை நம்பி, தேவர்–அசுரர்களைக் கண்டு அச்சமடையாமல் இருந்தேனோ, எவன் என் வலது கையாக இருந்தானோ, அவன் வீழ்ந்து விட்டான். இனி, நானும் உயிருடன் இருக்கமாட்டேன். (12)

தேவ–அசுரர்களின் ஆணவத்தை அடக்கியவன்; காலன்–அக்னி–ருத்ரன் ஆகியோரைப் போல், தடுக்க முடியாத பேரழிவைச் செய்பவன்; மாவீரன் – இப்படிப்பட்டவன் போர்க்களத்தில், இராமனால் எப்படித்தான் கொல்லப்பட்டானோ? (13)

வஜ்ராயுதம் உன்னைத் தாக்கினாலும், எந்தக் காலத்திலும் உனக்குத் துன்பத்தைத் தந்ததில்லை. (அது உன்னிடம் மழுங்கிப் போய்விடும்!) அவ்வளவு பராக்கிரமம் கொண்ட நீ, இராமனுடைய அம்பினால் (தேவராஜனுடைய வஜ்ராயுதத்தால் அல்ல! ஒரு மனிதனின் வெற்றுப் பாணத்தால் தாக்கப்பட்டு,) மண்ணில் வீழ்ந்து நெடுந்துயில் கொண்டாயே! (14)

ஏதே தே$_3$வக$_3$ணா: ஸார்த$_4$ம்ருஷிபி$_4$ர்க$_3$க$_3$நே ஸ்தி$_2$தா: ।
நிஹதம் த்வாம் ரணே த்$_3$ருஷ்ட்வா நிநத$_3$ந்தி ப்ரஹர்ஷிதா: ॥ (15)

த்$_4$ருவமத்$_3$யைவ ஸம்ஹ்ருஷ்டா லப்$_3$த$_4$லக்ஷா: ப்லவங்க$_3$மா: ।
ஆரோக்ஷ்யந்தி ஹி து$_3$ர்கா$_3$ணி லங்காத்$_3$வாராணி ஸர்வஶ: ॥ (16)

ராஜ்யேந நாஸ்தி மே கார்யம் கிம் கரிஷ்யாமி ஸீதயா ।
கும்ப$_4$கர்ணவிஹீநஸ்ய ஜீவிதே நாஸ்தி மே ரதி: ॥ (17)

யத்$_3$யஹம் ப்$_4$ராத்ருஹந்தாரம் ந ஹந்மி யுதி$_4$ ராக$_4$வம் ।
நநு மே மரணம் ஶ்ரேயோ ந சேத$_3$ம் வ்யர்த$_2$ஜீவிதம் ॥ (18)

அத்$_3$யைவ தம் க$_3$மிஷ்யாமி தே$_3$ஶம் யத்ராநுஜோ மம ।
ந ஹி ப்$_4$ராத்ரூந் ஸமுத்ஸ்ருஜ்ய க்ஷணம் ஜீவிதுமுத்ஸஹே ॥ (19)

தே$_3$வா ஹி மாம் ஹஸிஷ்யந்தி த்$_3$ருஷ்ட்வா பூர்வாபகாரிணம் ।
கத$_2$மிந்த்$_3$ரம் ஜயிஷ்யாமி கும்ப$_4$கர்ண ஹதே த்வயி ॥ (20)

ததி$_3$த$_3$ம் மாமநுப்ராப்தம் விபீ$_4$ஷணவச: ஶுப$_4$ம் ।
யத$_3$ஜ்ஞாநாந்மயா தஸ்ய ந க்$_3$ருஹீதம் மஹாத்மந: ॥ (21)

விபீ$_4$ஷணவசோ யாவத் கும்ப$_4$கர்ணப்ரஹஸ்தயோ: ।
விநாஶோऽயம் ஸமுத்பந்நோ மாம் வ்ரீட$_3$யதி தா$_3$ருண: ॥ (22)

தஸ்யாயம் கர்மண: ப்ராப்தோ விபாகோ மம ஶோகத$_3$: ।
யந்மயா தா$_4$ர்மிக: ஶ்ரீமாந் ஸ நிரஸ்தோ விபீ$_4$ஷண: ॥ (23)

இதி ப$_3$ஹுவித$_4$மாகுலாந்தராத்மா
க்ருபணமதீவ விலப்ய கும்ப$_4$கர்ணம் ।
ந்யபதத$_3$த$_2$ த$_3$ஶாநநோ ப்$_4$ருஶார்த–
ஸ்தமநுஜமிந்த்$_3$ரரிபும் ஹதம் விதி$_3$த்வா ॥ (24)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஏகோநஸப்ததிதம: ஸர்க$_3$:

நராந்தகவத$_4$:

ஏவம் விலபமாநஸ்ய ராவணஸ்ய து$_3$ராத்மந: ।
ஶ்ருத்வா ஶோகாபி$_4$தப்தஸ்ய த்ரிஶிரா வாக்யமப்$_3$ரவீத் ॥ (1)

ஏவமேவ மஹாவீர்யோ ஹதோ நஸ்தாதமத்$_4$யம: ।
ந து ஸத்புருஷா ராஜந் விலபந்தி யதா$_2$ ப$_4$வாந் ॥ (2)

தேவகணங்களும் முனிவர்களும் வானத்தில் இருந்துகொண்டு, போரில் நீ கொல்லப்பட்டதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து ஆரவாரிக்கின்றார்கள். (15)

வெற்றிக்களிப்பில் மிதக்கும் வானரர்களுக்கு இப்போது நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இப்போதே இலங்கையின் நுழைவாயில்களின் மேலும், கோட்டைச் சுவர்களின் மேலும் மற்றும் எல்லா இடங்களிலும் ஏறிக் கூத்தாடுவார்கள் என்பதில் ஐயமில்லை. (16)

கும்பகர்ணன் இல்லாமல் நான் உயிர் வாழ்வதில் எனக்கு விருப்பமில்லை. இந்த நாட்டை இனியும் ஆள்வதால் நான் என்ன சுகங்களை அனுபவிக்கப் போகிறேன்? (சீதையை அடைந்தால்கூட கும்பகர்ணனை இழந்த சோகத்தைவிட மேலான இன்பம் எனக்குக் கிடைக்கப் போவதில்லை. எனவே,) சீதையால்தான் எனக்கு ஆகவேண்டியதென்ன? (17)

என்னுடைய உடன்பிறப்பைப் கொன்ற இராமனைப் போரில் நான் கொல்லாவிட்டால் (பழிக்குப் பழி தீர்க்காமல் போனால்), மரணமடைவதே எனக்கு உயர்வைத் தரக்கூடியது. அப்படிப் பழி வாங்காவிட்டால், நான் உயிர்வாழ்வது வீணானதே. (18)

இப்பொழுதே நான், என் தம்பி கும்பகர்ணன் சென்ற இடத்திற்குச் செல்லப் போகிறேன். சகோதரர்களை விட்டுவிட்டு நான் ஒரு நொடிப்பொழுதுகூட உயிர்வாழ மாட்டேன். (19)

தேவர்கள், முன்பு அவர்களைப் படாதபாடுபடுத்திய என்னைப் பார்த்து, இப்போது இகழ்ச்சியாக சிரிக்கப் போகிறார்கள். கும்பகர்ணா! நீ மாண்ட பிறகு, இந்திரனை எவ்வாறு நான் வெற்றி கொள்ளப் போகிறேன்? (20)

மகாத்மாவான விபீஷணனால் சொல்லப்பட்ட நல்லுரைகளை அறிவின்மையால், நான் அப்போது ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவன் கூறியவைகள் (பாவப்பயன்கள்) இப்போது என்னை வந்தடைந்து கொண்டிருக்கின்றன. (21)

கும்பகர்ணனுக்கும் பிரஹஸ்தனுக்கும் கோரமான அழிவு நேர்ந்துவிட்டதிலிருந்து, விபீஷணனின் சொல் என் நினைவுக்கு வந்து என்னை வெட்கமுறச் செய்கிறது. (22)

அறவழி நடப்பவனும், நற்குணப் பெருந்தகையுமான விபீஷணனை, நான் வெளியேற்றினேன். அந்த இழிச்செயலின் பயனான சோகத்தை, இப்போது நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.'' (23)

இவ்வாறு மனம் கலங்கி, பலவகையாகப் புலம்பிய பத்துத் தலையன், தம்பியும் இந்திரனின் பகைவனுமான கும்பகர்ணன் மாய்க்கப்பட்டதை நினைத்து, மிகவும் துயரத்துடன் வேதனைப்பட்டு, மறுபடியும் தரையில் விழுந்தான். (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்பது

நராந்தகன் மாண்டான்!

சோகத் தீயினால் வறுத்தெடுக்கப்பட்ட தீய இராவணன், இவ்வாறு புலம்புவதைக் கேட்டு, திரிசிரஸ் பின்வருமாறு புகன்றான்— (1)

''மன்னரே! மாவீரரான எங்களது நடுத்தந்தையார் கொல்லப்பட்டுவிட்டார் – என்பது என்னவோ உண்மைதான். ஆனால் சான்றோர்கள், தாங்கள் அழுது புலம்புவதைப் போல் செய்யமாட்டார்கள். (2)

நூநம் த்ரிபு4வநஸ்யாபி பர்யாப்தஸ்த்வமஸி ப்ரபோ4 ।
ஸ கஸ்மாத் ப்ராக்ருத இவ ஶோசஸ்யாத்மாநமீத்3ருஶம் ॥ (3)

ப்3ரஹ்மத3த்தாஸ்தி தே ஶக்தி: கவச: ஸாயகோ த4நு: ।
ஸஹஸ்ரக2ரஸம்யுக்தோ ரதோ2 மேக4ஸ்வநோ மஹாந் ॥ (4)

த்வயாஸக்ருத்3விஶஸ்த்ரேண விஶஸ்தா தே3வதா3நவா: ।
ஸ ஸர்வாயுத4ஸம்பந்நோ ராக4வம் ஶாஸ்துமர்ஹஸி ॥ (5)

காமம் திஷ்ட2 மஹாராஜ நிர்க3மிஷ்யாம்யஹம் ரணம் ।
உத்3த4ரிஷ்யாமி தே ஶத்ரூந் க3ருட3: பந்நகா3நிவ ॥ (6)

ஶம்ப3ரோ தே3வராஜேந நரகோ விஷ்ணுநா யதா2 ।
ததா2த்3ய ஶயிதா ராமோ மயா யுதி4 நிபாதித: ॥ (7)

ஶ்ருத்வா த்ரிஶிரஸோ வாக்யம் ராவணோ ராக்ஷஸாதி4ப: ।
புநர்ஜாதமிவாத்மாநம் மந்யதே காலசோதி3த: ॥ (8)

ஶ்ருத்வா த்ரிஶிரஸோ வாக்யம் தே3வாந்தகநராந்தகௌ ।
அதிகாயஶ்ச தேஜஸ்வீ ப3பூ4வுர்யுத்3த4ஹர்ஷிதா: ॥ (9)

ததோऽஹமஹமித்யேவ க3ர்ஜந்தோ நைர்ருதர்ஷபா4: ।
ராவணஸ்ய ஸுதா வீரா: ஶக்ரதுல்யபராக்ரமா: ॥ (10)

அந்தரிக்ஷக3தா: ஸர்வே ஸர்வே மாயாவிஶாரதா3: ।
ஸர்வே த்ரித3ஶத3ர்பக்4நா: ஸர்வே ச ரணது3ர்ஜயா: ॥ (11)

ஸர்வே ஸுப3லஸம்பந்நா: ஸர்வே விஸ்தீர்ணகீர்தய: ।
ஸர்வே ஸமரமாஸாத்3ய ந ஶ்ரூயந்தே பராஜிதா: ॥ (12)

தே3வைரபி ஸக3ந்த4ர்வை: ஸகிந்நரமஹோரகை3: ।
ஸர்வேऽஸ்த்ரவிது3ஷோ வீரா: ஸர்வே யுத்3த4விஶாரதா3: ॥
ஸர்வே ப்ரவரவிஜ்ஞாநா: ஸர்வே லப்3த4வராஸ்ததா2 ॥ (13)

ஸ தைஸ்தத3ா பா4ஸ்கரதுல்யவர்சஸை:
ஸுதைர்வ்ருத: ஶத்ருப3லப்ரமர்த3நை: ।
ரராஜ ராஜா மக4வாந் யதா2மரைர்–
வ்ருதோ மஹாதா3நவத3ர்பநாஶநை: ॥ (14)

ஸ புத்ராந் ஸம்பரிஷ்வஜ்ய பூ4ஷயித்வா ச பூ4ஷணை: ।
ஆஶீர்பி4ஶ்ச ப்ரஶஸ்தாபி4: ப்ரேஷயாமாஸ ஸம்யுகே3 ॥ (15)

யுத்3தே4ாந்மத்தம் ச மத்தம் ச ப்4ராதரௌ சாபி ராவண: ।
மஹாபார்ஶ்வம் ப்ரமத்தம் ச ப்4ராதரம் ச மஹோத3ரம் ॥
ரக்ஷணார்த2ம் குமாராணாம் ப்ரேஷயாமாஸ ஸம்யுகே3 ॥ (16)

ஐயனே! மூன்று உலகங்களையும் காப்பாற்றவும் அழிக்கவும் தங்களால் முடியும் என்னும்போது, ஒரு பாமரனைப் போல் ஏன் இவ்வாறு தங்களைத் தாங்களே நொந்து கொள்கிறீர்கள்? (3)

தங்களிடம், பிரும்மதேவனால் கொடுக்கப்பட்ட சக்தி ஆயுதம், கவசம், பாணம், வில் முதலியன இருக்கின்றன. அத்துடன், ஆயிரக்கணக்கான கோவேறு கழுதைகளால் இழுக்கப்படும் தேரும் இருக்கிறது. (4)

தாங்கள் படைக்கலன் ஏதும் இல்லாமலே, பல தடவைகள் தேவ–தானவர்களை வென்றிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தாங்கள், எல்லாப் படைக்கலன்களையும் கொண்டு சென்றால், இராமனை அடக்கி விடுவீர்கள் (என்பதில் சந்தேகமில்லை). (5)

ரொம்ப சரி! தாங்கள் இங்கேயே இருங்கள். நான் போர்க்களத்திற்குப் புறப்பட்டுச் செல்கிறேன். கருடன், பாம்புகளைத் தூக்கிச் செல்வதைப் போல, தங்கள் எதிரிகளை அடியோடு களைந்து விடுகிறேன். (6)

தேவேந்திரன் சம்பராசுரனையும், மகாவிஷ்ணு நரகாசுரனையும் கொன்று வீழ்த்தியதைப் போல, இப்போது நடைபெறப்போகும் போரில், இராமன் என்னால் கொல்லப்பட்டுத் தரையில் சாய்ந்து விடுவான்.'' (ஸ்ரீகிருஷ்ணனால் கொல்லப்பட்ட நரகாசுரன் வேறொருவன்.) (7)

திரிசிரஸின் வீரமொழிகளைக் கேட்ட இராவணன், இறக்கும் காலம் நெருங்கிவிட்டதால், தான் மறுபிறவி எடுத்துவிட்டதாகவே எண்ணினான். (8)

திரிசிரஸின் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த தேவாந்தகன், நராந்தகன், பேராற்றல் கொண்ட அதிகாயன் ஆகிய மூவரும், 'போர் வரப் போகிறது!' என்று களிப்புற்றார்கள். (9)

அரக்கக் காளைகளும் வீரர்களும் இந்திரனுக்கு நிகரான பராக்கிரமம் படைத்தவர்களுமான, இராவணனின் அந்த மூன்று புதல்வர்களும், 'நான் செல்கிறேன், நான் செல்கிறேன்' என்று கூறி கர்ஜித்தார்கள். (10)

அவர்கள் எல்லோரும் (மூவரும்) வானத்தில் சஞ்சரிக்க வல்லவர்கள்; எல்லோரும் மாயக்கலை நிபுணர்கள்; எல்லோரும் தேவர்களின் செருக்கை அடக்கியவர்கள்; எல்லோரும் போரில் வெல்லுதற்கரியவர்கள். (11)

எல்லோரும் உறுதியான வலிமை பெற்றவர்கள்; எல்லோரும் நெடுந்தூரம் புகழ் பரப்பியவர்கள்; எல்லோரும் போர்க்களத்தில் கந்தர்வர்கள், கின்னரர்கள், வீரம் மிக்க நாகர்கள், ஏன், தேவர்களாலும்கூட வெல்லப்பட்டதாக தகவல் கேட்கப்பட்டதே இல்லை. எல்லோரும் அஸ்திர வித்தை கற்றுணர்ந்தவர்கள்; எல்லோரும் போர்க்கலையில் வல்லவர்கள்; எல்லோரும் சிறந்த அறிவு கொண்டவர்கள்; எல்லோரும் வரங்கள் பெற்றவர்கள். (12,13)

அப்போது, சூரியனுக்கு ஒப்பான தேசு படைத்தவர்களும் பகைவர்களின் படையை அழிப்பவர்களுமான புதல்வர்களால் சூழப்பட்டவனாக இருந்த இராவணன், அசுரத் தலைவர்களின் செருக்கைக் குலைக்கும் தேவர்கள் சூழ நின்ற இந்திரனைப் போல் ஒளிர்ந்தான். (14)

அவன், தன் புதல்வர்களைக் கட்டித் தழுவி, அணிகலன்கள் அணிவித்து, உயர்வான ஆசிமொழிகள் கூறிப் போருக்கு அனுப்பி வைத்தான். (15)

இராவணன், தன் சகோதர்களான போர்வெறி கொண்ட மகாபார்சுவனையும் (யுத்தோன்மத்தனையும்), போர்த் துடிப்புடன் கூடிய மகோதரனையும் (மத்தனையும்), புதல்வர்களின் பாதுகாப்புக்காகப் போருக்கு அனுப்பி வைத்தான். (16)

தேऽபி$_{4}$வாத்$_{3}$ய மஹாத்மாநம் ராவணம் ரிபுராவணம் ।
க்ருத்வா ப்ரத$_{3}$க்ஷிணம் சைவ மஹாகாயா: ப்ரதஸ்தி$_{2}$ரே ॥ (17)

ஸர்வௌஷதீ$_{4}$பி$_{4}$ர்க$_{3}$ந்தை$_{4}$ஶ்ச ஸமாலப்$_{4}$ய மஹாப$_{3}$லா: ।
நிர்ஜக்$_{3}$முர்நைர்ருதஶ்ரேஷ்ட$_{2}$ா: ஷடே$_{3}$தே யுத்$_{3}$த$_{4}$காங்க்ஷிண: ॥ (18)

த்ரிஶிராஶ்சாதிகாயஶ்ச தே$_{3}$வாந்தகநராந்தகௌ ।
மஹோத$_{3}$ரமஹாபார்ஶ்வௌ நிர்ஜக்$_{3}$மு: காலசோதி$_{3}$தா: ॥ (19)

தத: ஸுத$_{3}$ர்ஶநம் நாக$_{3}$ம் நீலஜீமூதஸந்நிப$_{4}$ம் ।
ஐராவதகுலே ஜாதமாருரோஹ மஹோத$_{3}$ர: ॥ (20)

ஸர்வாயுத$_{4}$ஸமாயுக்த: தூணீபி$_{4}$ஶ்ச ஸ்வலங்க்ருத: ।
ரராஜ க$_{3}$ஜமாஸ்த$_{2}$ாய ஸவிதேவாஸ்தமூர்த$_{4}$நி ॥ (21)

ஹயோத்தமஸமாயுக்தம் ஸர்வாயுத$_{4}$ஸமாகுலம் ।
ஆருரோஹ ரத$_{2}$ஶ்ரேஷ்ட$_{2}$ம் த்ரிஶிரா ராவணாத்மஜ: ॥ (22)

த்ரிஶிரா ரத$_{2}$மாஸ்த$_{2}$ாய விரராஜ த$_{4}$நுர்த$_{4}$ர: ।
ஸவித்$_{3}$யுது$_{3}$ல்க: ஶைலாக்$_{3}$ரே ஸேந்த்$_{3}$ரசாப இவாம்பு$_{3}$த$_{3}$: ॥ (23)

த்ரிபி$_{4}$: கிரீடை: ஶுஶுபே$_{4}$ த்ரிஶிரா: ஸ ரதே$_{2}$ாத்தமே ।
ஹிமவாநிவ ஶைலேந்த்$_{3}$ரஸ்த்ரிபி$_{4}$: காஞ்சநபர்வதை: ॥ (24)

அதிகாயோऽபி தேஜஸ்வீ ராக்ஷஸேந்த்$_{3}$ரஸுதஸ்தத$_{2}$ா ।
ஆருரோஹ ரத$_{2}$ஶ்ரேஷ்ட$_{2}$ம் ஶ்ரேஷ்ட$_{2}$: ஸர்வத$_{4}$நுஷ்மதாம் ॥ (25)

ஸுசக்ராக்ஷம் ஸுஸம்யுக்தம் ஸ்வநுகர்ஷம் ஸுகூப$_{3}$ரம் ।
தூணீப$_{3}$ாணாஸநைர்தீ$_{3}$ப்தம் ப்ராஸாஸிபரிக$_{4}$ாகுலம் ॥ (26)

ஸ காஞ்சநவிசித்ரேண மகுடேந விராஜதா ।
பூ$_{4}$ஷணைஶ்ச ப$_{3}$பௌ$_{4}$ மேரு: கிரணைரிவ ப$_{4}$ாஸ்வத: ॥
ஸ ரராஜ ரதே$_{2}$ தஸ்மிந் ராஜஸூநுர்மஹாப$_{3}$ல: ॥ (27)

வ்ருதோ நைர்ருதஶார்தூ$_{3}$லைர்வஜ்ரபாணிரிவாமரை: ।
ஹயமுச்சை:ஶ்ரவ:ப்ரக்$_{2}$யம் ஶ்வேதம் கநகபூ$_{4}$ஷணம் ॥
மநோஜவம் மஹாகாயமாருரோஹ நராந்தக: ॥ (28)

க்$_{3}$ருஹீத்வா ப்ராஸமுல்காப$_{4}$ம் விரராஜ நராந்தக: ।
ஶக்திமாத$_{3}$ாய தேஜஸ்வீ கு$_{3}$ஹ: ஶிகி$_{2}$க$_{3}$தோ யத$_{2}$ா ॥ (29)

தே$_{3}$வாந்தக: ஸமாத$_{3}$ாய பரிக$_{4}$ம் வஜ்ரபூ$_{4}$ஷணம் ।
பரிக்$_{3}$ருஹ்ய கி$_{3}$ரிம் தே$_{3}$ார்ப்$_{4}$யாம் வபுர்விஷ்ணோர்விட$_{3}$ம்ப$_{3}$யந் ॥ (30)

மஹாபார்ஶ்வோ மஹாகாயோ க$_{3}$த$_{3}$ாமாத$_{3}$ாய வீர்யவாந் ।
விரராஜ க$_{3}$த$_{3}$ாபாணி: குபே$_{3}$ர இவ ஸம்யுகே$_{3}$ ॥ (31)

பேருடல் அமையப் பெற்ற அவர்கள், எதிரிகளைக் கதறச் செய்பவனும் மகத்தான ஆற்றல் பெற்றவனுமான இராவணனை வலம் வந்து, கீழே விழுந்து வணங்கிவிட்டுப் (போருக்குப்) புறப்பட்டார்கள். (17)

எல்லாவித மூலிகைகளையும் நறுமணப் பூச்சுகளையும் பூசிக்கொண்டு, போர் செய்வதில் பெருவிருப்பம் கொண்டிருந்த அரக்கத் தலைவர்கள் அறுவரும் புறப்பட்டுச் சென்றார்கள். (18)

முடிவுக்காலம் நெருங்கிவிட்ட திரிசிரஸ், அதிகாயன், தேவாந்தகன், நராந்தகன், மகோதரன், மகாபார்சுவன் ஆகியோர் பட்டணத்திற்கு வெளியே வந்தார்கள். (19)

அப்போது, ஐராவத குலத்தில் தோன்றியதும், கரிய மேகம் போன்ற வண்ணம் கொண்டதுமான 'சுதர்சனம்' என்ற பெயருடைய யானையின் மேல் மகோதரன் ஏறிக் கொண்டான். (20)

எல்லாவித படைக்கலன்களையும் உடன் எடுத்துக் கொண்டு, அம்புறாத்தூணிகளால் அலங்காரமாகத் தோற்றமளித்த அவன் யானைமேல் ஏறிக் கொண்டதும், அஸ்தகிரி சிகரத்தில் விளங்கும் சூரியன் போல் திகழ்ந்தான். (21)

இராவணன் புதல்வனான திரிசிரஸ், எல்லாப் படைக்கலன்களும் வைக்கப்பட்டதும், உத்தமக் குதிரைகள் பூட்டப் பெற்றதுமான மங்களமான தேரில் ஏறிக் கொண்டான். (22)

வில்லைத் தாங்கிக் கொண்டு, தேரில் அமர்ந்த திரிசிரஸ், மின்னல்–எரிகொள்ளி–நெருப்பு–வானவில்லோடு கூடிய மேகம் போல் விளங்கினான். (23)

மலையரசனான இமயமலை, மூன்று பொற்சிகரங்களால் எழில்மிகு தோற்றத்துடன் விளங்குவதைப் போல, அந்த உத்தமத் தேரில் வீற்றிருந்த திரிசிரசும் மூன்று மகுடங்கள் அணிந்து ஒளியுறத் திகழ்ந்தான். (24)

அனைத்து வில்லாளிகளிலும் தலையாயவனும், அரக்கர் மன்னனின் புதல்வனும், பராக்கிரமம் மிக்கவனுமான அதிகாயனும் சிறந்த ரதத்தில் ஏறிக் கொண்டான். (25)

அந்தத் தேரின் சக்கரங்களும் அச்சும் அழகாகவும் உறுதியாகவும் இருந்தன; நல்ல நுகத்தடி; அழகிய ஏற்கால்; அம்புறாத்தூணிகளாலும் விற்களாலும் ஒளி வீசிக்கொண்டும், ஈட்டி–வாள்–இரும்புத் தடிகளால் நிரம்பியதாகவும் இருந்தது. (26)

அந்த ரதத்தில் வீற்றிருந்த அரசகுமாரனும் மகாபலசாலியுமான அவன், பொன் வேலைப்பாடுகள் நிறைந்த மகுடத்தாலும் அணிகலன்களாலும் அழகு பெற்று, சூரியனின் கதிர்களால் ஒளிவீசும் மேருவைப் போல் விளங்கினான். (27)

வஜ்ராயுதத்தைக் கையில் தாங்கிக் கொண்டிருந்த தேவர்களைப் போன்ற அரக்கப் புலிகளால் சூழப்பட்டு, உச்சைசிரவஸ் என்ற (இந்திரனுடைய) குதிரைக்கு ஒப்பானதும் வெண்மையானதும் பொன் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டதும் மனோவேகம் போல் ஓடக்கூடியதும் பெரிய உருவம் படைத்ததுமான ஒரு குதிரைமேல் நராந்தகன் ஏறிக் கொண்டான். (28)

எரிகொள்ளியைப் போலிருந்த ஓர் ஈட்டியைக் கைக்கொண்டிருந்த நராந்தகன், வேலாயுதத்தைத் தாங்கி, மயில்மீது வீற்றிருக்கும் ஒப்பற்ற வீரம் கொண்ட முருகப் பெருமான் போல் விளங்கினான். (29)

வைரக்கற்கள் இழைக்கப்பட்ட குண்டாந்தடி ஒன்றைக் கையில் ஏந்திக்கொண்டு நின்ற தேவாந்தகன், மந்தரமலையைக் கையால் தூக்கிக் கொண்டு நின்ற மகாவிஷ்ணுவைப் போல் போலித் தோற்றமளித்தான். (30)

பேருடல் படைத்தவனும் மாவீரனுமான மகாபார்சுவன் கையில் கதாயுதத்தைத் தாங்கிக் கொண்டு, போர்க்களத்தில் குபேரன் போல் விளங்கினான். (குபேரனின் ஆயுதம் கதை.) (31)

ப்ரதஸ்தி2ரே மஹாத்மானோ ப3லைரப்ரதிமைர்வ்ருதா: ।
ஸுரா இவாமராவத்யா ப3லைரப்ரதிமைர்வ்ருதா: ॥ (32)

தாந் க3ஜைஸ்ச துரங்கை3ஸ்ச ரதை2ஸ்சாம்பு3த3நிஸ்வநை: ।
அநுஜக்3முர்மஹாத்மானோ ராக்ஷஸா: ப்ரவராயுதா4: ॥ (33)

தே விரேஜுர்மஹாத்மாந: குமாரா: ஸூர்யவர்சஸ: ।
கிரீடிந: ஸ்ரியா ஜுஷ்டா க்3ரஹா தீ3ப்தா இவாம்ப3ரே ॥ (34)

ப்ரக்3ருஹீதா ப3பௌ4 தேஷாம் ச2த்ராணாமாவலி: ஸிதா ।
ஸாரதா3ப்4ரப்ரதீகாஸா ஹம்ஸாவலிரிவாம்ப3ரே ॥ (35)

மரணம் வாபி நிஸ்சித்ய ஸத்ரூணாம் வா பராஜயம் ।
இதி க்ருத்வா மதிம் வீரா நிர்ஜக்3மு: ஸம்யுகா3ர்தி2ந: ॥ (36)

ஜக3ர்ஜுஸ்ச ப்ரணேது3ஸ்ச சிக்ஷிபுஸ்சாபி ஸாயகாந் ।
ஜக்3ருஹுஸ்சாபி தே வீரா நிர்யாந்தோ யுத்3த4து3ர்மதா3: ॥ (37)

க்ஷ்வேலிதாஸ்போ2டநிநதை3ஸ்சசால ச வஸுந்த4ரா ।
ரக்ஷஸாம் ஸிம்ஹநாதை3ஸ்ச புஸ்போ2டேவ ததா3ம்ப3ரம் ॥ (38)

தேऽபி4நிஷ்க்ரம்ய முதி3தா ராக்ஷஸேந்த்3ரா மஹாப3லா: ।
த3த்3ருஸுர்வாநராநீகம் ஸமுத்3யதஸிலாநக3ம் ॥ (39)

ஹரயோऽபி மஹாத்மானோ த3த்3ருஸுர்நைர்ருதம் ப3லம் ।
ஹஸ்த்யஸ்வரத2ஸம்பா3த4ம் கிங்கிணீஸதநாதி3தம் ॥ (40)

நீலஜீமூதஸங்காஸம் ஸமுத்3யதமஹாயுத4ம் ।
தீ3ப்தாநலரவிப்ரக்2யை: ஸர்வதோ நைர்ருதைர்வ்ருதம் ॥ (41)

தத்3 த்3ருஷ்ட்வா ப3லமாயாந்தம் லப்3த4லக்ஷா: ப்லவங்க3மா: ।
ஸமுத்3யதமஹாஸைலா: ஸம்ப்ரணேது3ர்மஹாப3லா: ॥
அம்ருஷ்யமாணா ரக்ஷாம்ஸி ப்ரதிநர்த3ந்தி வாநரா: ॥ (42)

தத: ஸமுத்3கு4ஷ்டரவம் நிஸம்ய ரக்ஷோக3ணா வாநரயூத2பாநாம் ।
அம்ருஷ்யமாணா: பரஹர்ஷமுக்3ரம் மஹாப3லா பீ4மதரம் விநேது3: ॥ (43)

தே ராக்ஷஸப3லம் கோ4ரம் ப்ரவிஸ்ய ஹரியூத2பா: ।
விசேருருத்3யதை: ஸைலைர்நகா3: ஸிக2ரிணோ யதா2 ॥ (44)

கேசிதா3காஸமாவிஸ்ய கேசிது3ர்வ்யாம் ப்லவங்க3மா: ।
ரக்ஷ:ஸைந்யேஷு ஸங்க்ருத்3தா4ஸ்சேருர்த்3ருமஸிலாயுதா4: ॥ (45)

த்3ருமாம்ஸ்ச விபுலஸ்கந்தா4ந் க்3ருஹ்ய வாநரபுங்க3வா: ।
தத்3 யுத்3த4மப4வத்3 கோ4ரம் ரக்ஷோவாநரஸங்குலம் ॥ (46)

பேராற்றல் கொண்ட அவர்கள் ஒப்பில்லாத படைவீரர்களால் சூழப்பட்டவர்களாக, அமராவதிப் பட்டணத்திலிருந்து ஒப்பற்ற படைவீரர்களால் சூழப்பட்ட தேவர்களின் தலைவர்கள் போல், இலங்கைப் பட்டணத்திலிருந்து புறப்பட்டார்கள். (32)

பேராற்றல் கொண்டவர்களும், சிறந்த படைக்கலன்களைக் கைக்கொண்டவர்களுமான அரக்கர்கள், யானை–குதிரை–மேகத்தைப் போல் இடியொலி எழுப்பிக் கொண்டு செல்லும் தேர்களில் ஏறிக்கொண்டு, அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (33)

மிக்க பலங்கொண்டவர்களும், சூரியனைப் போல் ஒளி வீசுபவர்களும், மகுடம் புனைந்தவர்களும், செல்வச் செருக்குடன் விளங்கியவர்களுமான (இராவணனுடைய) அந்தப் புதல்வர்கள், வானத்தில் ஒளிவீசும் கோள்களைப் போல் விளங்கினார்கள். (34)

அவர்கள் தம் கைகளில் பிடித்திருந்த சரத்கால வெண்முகிலைப் போன்று வெண்மையாக இருந்த வெண்குடைகளின் வரிசை, ஆகாயத்தில் அன்னப்பறவைகளின் வரிசைபோல் கவர்ச்சியாக இருந்தது. (35)

போர் செய்யத் துடித்துக் கொண்டிருந்த அந்த வீரர்கள், 'இன்றைக்கு நமக்கு மரணம்; அல்லது வெற்றி! இரண்டில் ஒன்று நிச்சயம்!' என்ற தீர்மானத்துடன் வெளியே புறப்பட்டார்கள். போர்வெறி தலைக்கேறிய அந்த வீரர்கள் போய்க்கொண்டிருக்கும் போதே இடியோசை எழுப்பினார்கள்; சிங்கநாதம் செய்தார்கள்; பாணங்களை எடுத்து வானில் வீசிக் கைகளால் பிடித்தார்கள். (36,37)

அரக்கர்களின் வரம்புகடந்த ஆட்டபாட்டங்களாலும் சிங்கநாதங்களாலும் பூமி அதிர்ந்தது; ஆகாயமும் வெடித்து விடும் போலிருந்தது. பேராற்றல் கொண்ட அரக்கத் தலைவர்களான அவர்கள், இலங்கை நகரின் எல்லையைக் கடந்து வெளியே வந்ததும், மலைச்சிகரங்களையும் பெரிய மரங்களையும் கையில் பிடித்து உயரத் தூக்கிக் கொண்டு போருக்கு ஆயத்தமாக நிற்கும் வானரர்களின் படையைக் கண்டார்கள். (38,39)

மகாபலம் பொருந்திய வானரர்கள், யானை–குதிரை–தேர்களால் நிரம்பியதும்; கணக்கில்லாத பாதசலங்கைகள் ஒலிப்பதும் (வீரர்களின் வீரக்கழல் ஓசையுடையதும்); கருமுகில் கூட்டம் போல் விளங்குவதும்; சிறந்த படைக்கலன்களை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருப்பதும்; கொழுந்து விட்டெரியும் அக்னியையும் சூரியனையும் போல் கோபக்கனல் வீசும் அரக்கர்களால் நாற்புறமும் பாதுகாக்கப்பட்டுள்ளதுமான அரக்கர்களின் படையைப் பார்த்தார்கள். (40,41)

மகாபலசாலிகளான வானரர்கள், எதிரே வந்து கொண்டிருந்த அரக்கர் படையைப் பார்த்ததும் எதிர்த்துத் தாக்குவதற்கு வாய்ப்புக் கிடைக்கவே, மலைகளை உயரத் தூக்கிக் கொண்டு பேரொலி எழுப்பினார்கள். அத்துடன் அரக்கர்களின் சிங்கநாதத்தைக் கேட்கப் பொறாமல் எதிர்முழக்கம் செய்தார்கள். (42)

வானரப் படைத் தலைவர்களின் பெருங்கூச்சலைக் கேட்டு பலம் மிகுந்த அரக்கர்கள், பகைவர்களின் மகிழ்ச்சியை சகித்துக் கொள்ள முடியாமல் தாங்களும் அதைவிடப் பயங்கரமாக சிங்கநாதம் செய்தார்கள். (43)

அப்போது வானரப் படைத் தலைவர்கள், கையில் தூக்கி உயர்த்தப்பட்ட மலைகளுடன் பயங்கரமான அரக்கப் படைக்குள் புகுந்து, மலைமுகடுகளைக் கொண்ட மலைகள் போல் உலாவத் தொடங்கினார்கள். (44)

மரங்களையும் மலைகளையும் படைக்கலன்களாகக் கொண்ட சில வானரர்கள் எம்பிக் குதித்து ஆகாயத்தில் புகுந்து கொண்டார்கள்; மற்றும் சிலர் மிகவும் கோபத்துடன் பெரிய கிளைகளையுடைய மரங்களைக் கையில் தாங்கிக் கொண்டு பூமியில் (போர்க்களத்தில்) சஞ்சரித்தார்கள். அப்போது, வானர–அரக்கர்களிடையே நிகழ்ந்த போர் பயங்கரமாக இருந்தது. (45,46)

தே பாத$_3$பஶிலாஶைலைஶ்சக்ருர்வ்ருஷ்டிமநூபமாம் ।
பா$_3$ணௌகை$_4$ர்வார்யமாணாஶ்ச ஹரயோ பீ$_4$மவிக்ரமா: ॥ (47)

ஸிம்ஹநாதா$_3$ந் விநேது$_3$ஶ்ச ரணே வாநரராக்ஷஸா: ।
ஶிலாபி$_4$ஶ்சூர்ணயாமாஸுர்யாதுதா$_4$நாந் ப்லவங்க$_3$மா: ॥ (48)

நிஜக்$_4$நு: ஸம்யுகே$_3$ க்ருத்$_3$தா$_4$: கவசாப$_4$ரணாவ்ருதாந் ।
கேசித்$_3$ரத$_2$க$_3$தாந் வீராந் க$_3$ஜவாஜிக$_3$தாநபி ॥ (49)

நிஜக்$_4$நு: ஸஹஸாப்லுத்ய யாதுதா$_4$நாந் ப்லவங்க$_3$மா: ।
ஶைலஶ்ருங்கா$_3$சிதாங்கா$_3$ஶ்ச முஷ்டிபி$_4$ர்வாந்தலோசநா: ॥ (50)

சேலு: பேதுஶ்ச நேது$_3$ஶ்ச தத்ர ராக்ஷஸபுங்க$_3$வா: ।
ராக்ஷஸாஶ்ச ஶரைஸ்தீக்ஷ்ணைர்பி$_3$பி$_4$து$_3$: கபிகுஞ்ஜராந் ॥ (51)

ஶூலமுத்$_3$க$_3$ரக$_2$ட்$_3$கை$_3$ஶ்ச ஜக்$_4$நு: ப்ராஸைஶ்ச ஶக்திபி$_4$: ।
அந்யோந்யம் பாதயாமாஸு: பரஸ்பரஜயைஷிண: ॥ (52)

ரிபுஶோணிததி$_3$க்$_3$தா$_4$ங்கா$_3$ஸ்தத்ர வாநரராக்ஷஸா: ।
தத: ஶைலைஶ்ச க$_2$ட்$_3$கை$_3$ஶ்ச விஸ்ருஷ்டைர்ஹரிராக்ஷஸை: ॥
முஹூர்தேநாவ்ருதா பூ$_4$மிரப$_4$வச்சோ$_2$ணிதாப்லுதா ॥ (53)

விகீர்ணபர்வதாகாரை ரக்ஷோபி$_4$ரரிமர்த$_3$நை: ।
ஆஸீத்$_3$வஸுமதீ பூர்ணா ததா$_3$ யுத்$_3$த$_4$மதா$_3$ந்விதை: ॥ (54)

ஆக்ஷிப்தா: க்ஷிப்யமாணாஶ்ச ப$_4$க்$_3$நஶூலாஶ்ச வாநரை: ।
புநரங்கை$_3$ஸ்ததா$_2$ சக்ருராஸந்நா யுத்$_3$த$_4$மத்$_3$பு$_4$தம் ॥ (55)

வாநராந் வாநரைரேவ ஜக்$_4$நுஸ்தே ரஜநீசரா: ।
ராக்ஷஸாந் ராக்ஷஸைரேவ ஜக்$_4$நுஸ்தே வாநரா அபி ॥ (56)

ஆக்ஷிப்ய ச ஶிலாஸ்தேஷாம் நிஜக்$_4$நூ ராக்ஷஸா ஹரீந் ।
தேஷாம் சாச்சி$_2$த்$_3$ய ஶஸ்த்ராணி ஜக்$_4$நூ ரக்ஷாம்ஸி வாநரா: ॥ (57)

நிஜக்$_4$நு: ஶைலஶூலாஸ்த்ரைர்பி$_3$பி$_4$து$_3$ஶ்ச பரஸ்பரம் ।
ஸிம்ஹநாதா$_3$ந் விநேது$_3$ஶ்ச ரணே வாநரராக்ஷஸா: ॥ (58)

சி$_2$ந்நவர்மதநுத்ராணா ராக்ஷஸா வாநரைர்ஹதா: ।
ருதி$_4$ரம் ப்ரஸ்ருதாஸ்தத்ர ரஸஸாரமிவ த்$_3$ருமா: ॥ (59)

ரதே$_2$ந ச ரத$_2$ம் சாபி வாரணேநைவ வாரணம் ।
ஹயேந ச ஹயம் கேசிந்நிஜக்$_4$நுர்வாநரா ரணே ॥ (60)

ப்ரஹ்ருஷ்டமநஸ: ஸர்வே ப்ரக்$_3$ருஹீதமஹாஶிலா: ।
ஹரயோ ராக்ஷஸாஞ்ஜக்$_4$நுர்த்$_3$ருமைஶ்ச ப$_3$ஹுஶாகி$_2$பி$_4$: ॥ (61)

அம்புமாரியைப் பொழிந்து வானரர்கள் முன்னேறி வருவதை அரக்கர்கள் தடுத்தபோது, எல்லையில்லாத பராக்கிரமம் படைத்த வானரர்கள், மரங்களையும் பாறைகளையும் மலைகளையும் மழைபோல் இடைவிடாது வீசியெறிந்தார்கள். (47)

போர்க்களத்தில் வானரர்களும் அரக்கர்களும் சிங்கநாதம் செய்தார்கள். வானரர்கள், பாறைகளால் தாக்கி அரக்கர்களைப் பொடிப்பொடியாக்கினார்கள். (48)

ஆத்திரங்கொண்ட வானரர்கள், கவசமும் அணிகலன்களும் அணிந்திருந்த வீரர்களைத் தாக்கி அழித்தார்கள்; மற்றும் சிலர், தேர்–குதிரை–யானை மீது ஆரோகணித்திருந்தவர்களையும் தாக்கினார்கள். வானரர்கள், மலைச்சிகரங்களால் தாக்கி அரக்கர்களின் அங்கங்களைச் சிதைத்தார்கள். வேகமாகத் தாவிச் சென்று விரல் மடக்கி, கைகளால் அறைந்து விழிபிதுங்கச் செய்தார்கள். (49,50)

அவ்விடத்தில், அரக்கவீரர்கள் ஓடிச் சென்றார்கள்; கீழே விழுந்தார்கள்; ஆரவாரம் செய்தார்கள். அரக்கர்கள், யானை போன்ற (யானை பலம் கொண்ட) வானரர்களை கூர்மையான பாணங்களால் பிளந்து தள்ளினார்கள். (51)

தாங்களே வெற்றிபெற வேண்டும் என்று விரும்பிய அவ்விரு படையினரும் சூலம், இரும்பாலான கதாயுதம், பட்டாக்கத்தி, ஈட்டி, வேல் முதலியவற்றால் ஒருவரையொருவர் தாக்கி வீழ்த்தினார்கள். (52)

வானர–அரக்கர்களின் உடல்கள் எதிரிகளின் இரத்தத்தால் பூசப்பட்டிருந்தன. சிறிது நேரத்திலேயே அந்தப் போர்க்களம், அரக்கர்கள் மற்றும் வானரர்கள் வீசி எறியப்பட்ட மலைகளாலும் வாள்களாலும் அடிபட்டு வீழ்ந்தவர்களின் இரத்த வெள்ளத்தால் மெழுகப்பட்டதாயிற்று. (53)

எதிரிகளால் வீழ்த்தப்பட்ட, போர் வெறி கொண்ட, மலை போன்ற பேருருவம் கொண்ட அரக்கர்களால் அந்த பூமி நிறைந்ததாக ஆயிற்று. (54)

வானரர்களால் இழுக்கப்பட்டவர்களும் தூக்கி எறியப்பட்டவர்களும் சூலங்கள் முறிக்கப்பட்டவர்களுமான அரக்கர்கள், போர்ச் சாதனங்கள் எதுவுமின்றி, தம் கை–கால்களாலேயே வியக்கத்தக்க போர் செய்தார்கள். (55)

அரக்கர்கள், வானரர்களைக் கைப்பற்றி அவர்களாலேயே பிற வானரர்களை அடித்து நொறுக்கினார்கள். அதேபோல வானரர்களும், தாம் கைப்பற்றிய அரக்கர்களாலேயே பிற அரக்கர்களை அடித்து நொறுக்கினார்கள். (56)

அரக்கர்கள், வானரர்களுடைய கைகளிலிருந்து மலைகளைப் பிடுங்கி, அவற்றினாலேயே அவர்களைக் கொன்றார்கள். வானரர்கள், அரக்கர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து, அவற்றினாலேயே அவர்களைக் கொன்றார்கள். (57)

மலைகளாலும் சூலங்களாலும் அஸ்திரங்களாலும் ஒருவரையொருவர் தாக்கி அழித்தார்கள். வானரர்களும் அரக்கர்களும் போர்க்களத்தில் சிங்கநாதம் எழுப்பினார்கள். (58)

அப்போது, வானரர்களால் தாக்கப்பட்டு, உடலைக் காக்கும் கவசங்களை இழந்த அரக்கர்களின் உடலிலிருந்து, (தண்டுப் பகுதியில்) வெட்டப்பட்ட மரங்களிலிருந்து பால் பெருகுவதைப் போல இரத்தம் பெருகி வழிந்தது. (59)

வானரர்களில் சிலர், ஒரு தேரால் மற்றொரு தேரையும், ஒரு யானையால் வேறொரு யானையையும், ஒரு குதிரையால் வேறொரு குதிரையையும் மோதிக் கொன்றார்கள். (60)

உற்சாகத்துடன் இருந்த வானரர்கள், மாபெரும் பாறைகளாலும் பல கிளைகளைக் கொண்ட பெரிய மரங்களாலும், அரக்கர்களைப் புடைத்துக் கொன்றார்கள். (61)

தத்$_3$யுத்$_3$த$_4$மப$_4$வத்$_3$கோ$_4$ரம் ரக்ஷோவாநரஸங்குலம் ।
க்ஷுரப்ரைரர்த$_4$சந்த்$_3$ரைஶ்ச ப$_4$ல்லைஶ்ச நிஶிதை: ஶரை: ॥
ராக்ஷஸா வாநரேந்த்$_3$ராணாம் சிச்சி$_2$து$_3$: பாத$_3$பாஞ்ஶிலா: ॥ (62)

விகீர்ணை: பர்வதாக்$_3$ரைஶ்ச த்$_3$ருமைஶ்சி$_2$ந்நைஶ்ச ஸம்யுகே$_3$ ।
ஹதைஶ்ச கபிரக்ஷோபி$_4$ர்து$_3$ர்க$_3$மா வஸுத$_4$ாப$_4$வத் ॥ (63)

தே வாநரா க$_3$ர்விதஹ்ருஷ்டசேஷ்டா:
ஸங்க்$_3$ராமமாஸாத்$_3$ய ப$_4$யம் விமுச்ய ।
யுத்$_3$த$_4$ம் து ஸர்வே ஸஹ ராக்ஷஸைஸ்தைர்–
நாநாயுத$_4$ாஶ்சக்ருரதீ$_3$நஸத்த்வா: ॥ (64)

தஸ்மிந் ப்ரவ்ருத்தே துமுலே விமர்தே$_3$
ப்ரஹ்ருஷ்யமாணேஷு வலீமுகே$_2$ஷு ।
நிபாத்யமாநேஷு ச ராக்ஷஸேஷு
மஹர்ஷயோ தே$_3$வக$_3$ணாஶ்ச நேது$_3$: ॥ (65)

ததோ ஹயம் மாருததுல்யவேக$_3$
மாருஹ்ய ஶக்திம் நிஶிதாம் ப்ரக்$_3$ருஹ்ய ।
நராந்தகோ வாநரராஜஸைந்யம்
மஹார்ணவம் மீந இவாவிவேஶ ॥ (66)

ஸ வாநராந் ஸப்தஶதாநி வீர: ப்ராஸேந தீ$_3$ப்தேந விநிர்பி$_3$பே$_4$த$_3$ ।
ஏகக்ஷணேநேந்த்$_3$ரரிபுர்மஹாத்மா ஜக$_4$ாந ஸைந்யம் ஹரிபுங்க$_3$வாநாம் ॥ (67)

த$_3$த்$_3$ருஶுஶ்ச மஹாத்மாநம் ஹயப்ருஷ்டே$_2$ ப்ரதிஷ்டி$_2$தம் ।
சரந்தம் ஹரிஸைந்யேஷு வித்$_3$யாத$_4$ரமஹர்ஷய: ॥ (68)

ஸ தஸ்ய த$_3$த்$_3$ருஶே மார்கோ$_3$ மாம்ஸஶோணிதகர்த$_3$ம: ।
பதிதை: பர்வதாகாரைர்வாநரைரபி$_4$ஸம்வ்ருத: ॥ (69)

யாவத்$_3$விக்ரமிதும் பு$_3$த்$_3$தி$_4$ம் சக்ரு: ப்லவக$_3$புங்க$_3$வா: ।
தாவதே$_3$தாநதிக்ரம்ய நிர்பி$_3$பே$_4$த$_3$ நராந்தக: ॥ (70)

ஜ்வலந்தம் ப்ராஸமுத்$_3$யம்ய ஸங்க்$_3$ராமாக்$_3$ரே நராந்தக: ।
த$_3$தா$_3$ஹ ஹரிஸைந்யாநி வநாநீவ விப$_4$ாவஸு: ॥ (71)

யாவது$_3$த்பாடயாமாஸுர்வ்ருக்ஷாஞ்ஶைலாந் வநௌகஸ: ।
தாவத் ப்ராஸஹதா: பேதுர்வஜ்ரக்ருத்தா இவாசலா: ॥ (72)

தி$_3$க்ஷு ஸர்வாஸு ப$_3$லவாந் விசசார நராந்தக: ।
ப்ரம்ருத்$_3$நந் ஸர்வதோ யுத்$_3$தே$_4$ ப்ராவ்ருட்காலே யத$_2$ாநில: ॥ (73)

ந ஶேகுர்த$_4$ாவிதும் வீரா ந ஸ்த$_2$ாதும் ஸ்பந்தி$_3$தும் ப$_4$யாத் ।
உத்பதந்தம் ஸ்தி$_2$தம் யாந்தம் ஸர்வாந் விவ்யாத$_4$ வீர்யவாந் ॥ (74)

அப்போது, அரக்கர்–வானரரிடையே பயங்கரமான போர் நிகழ்ந்தது. வானரத்தலைவர்களால் வீசி எறியப்பட்ட மரங்களையும் பாறைகளையும், அரக்கர்கள் 'க்ஷுரப்ர–அர்தசந்திர–பல்ல' என்ற பெயர் கொண்ட கூர்மையான பாணங்களால் தாக்கித் துண்டித்தார்கள். (62)

அந்தப் போரில் நொறுங்கி விழுந்த மலைச்சிகரங்களாலும் முறிந்து கிடந்த மரங்களாலும் கொல்லப்பட்டுக் கிடந்த அரக்கர்–வானரர் உடல்களாலும் அந்தப் பூமியானது, எவராலும் புகமுடியாததாக இருந்தது. (63)

குறைவுபடாத ஆற்றல் கொண்ட வானரர்கள் எல்லோரும் செருக்கும் உற்சாகமும் கொண்டு, (அரக்கர்களிடமிருந்து) பல போர்க்கருவிகளைக் கைப்பற்றி, அவர்கள்மேல் இருந்த அச்சத்தை விட்டொழித்து, அவர்களோடு போர் புரிந்தார்கள். (64)

செவியைத் துளைக்கும் சத்தத்துடன் போர் நடந்துகொண்டிருந்தபொழுது, வானரர்களால் அரக்கர்கள் மாய்க்கப்பட்டு வீழ்த்தப்பட்டபோதும், வானரர்கள் வெற்றிக் கூச்சலிடும்போதும், மாமுனிவர்களும் தேவகணங்களும் மகிழ்ந்து வாழ்த்தொலி எழுப்பினார்கள். (65)

அப்போது காற்றினும் கடிய வேகத்தில் செல்லும் குதிரைமேல் ஏறிக்கொண்டு, கூர்மையான சக்தி ஆயுதத்தைப் பிடித்துக் கொண்டு, பெருங்கடலுக்குள் மீன் நுழைவதைப் போல (அவ்வளவு எளிதாக) வானர மன்னனின் படைக்குள் நராந்தகன் புகுந்தான். (66)

பேருடல் படைத்த மாவீரனும் இந்திரனின் பகைவனுமான அவன், எழுநூறு வானரர்களைப் பொறிபறக்கும் ஈட்டியால் குத்திக் கொன்றான். வானரோத்தமர்களின் படையை ஒரு நொடிப்பொழுதில் நாசப்படுத்தினான். (67)

(ஆகாயத்திலிருந்த) வித்யாதரர்களும் மாமுனிவர்களும், மாவீரனான அவன் குதிரைமீது அமர்ந்து வானரப்படைக்குள் புகுந்து அலைவதைப் பார்த்தார்கள். (68)

அவன், திரிந்து கொண்டிருந்த பாதை, மாமிசத்தாலும் இரத்தத்தினாலும் சேறாகியும், வீழ்ந்து கிடந்த மலைநிகர் வானரர்களின் உடல்களால் மூடப்பட்டும் இருப்பதைக் கண்டான். (69)

நராந்தகன், தங்களைத் தாக்க வருவதைக் கண்ட வானரர்கள், அவனை எதிர்த்துப் போரிடத் தீர்மானிப்பதற்குள்ளாகவே, அவன் அவர்களைச் சுற்றி வளைத்துப் பிளந்து தள்ளினான். (70)

நராந்தகன், உலர்ந்து போன காடுகளை நெருப்பு பொசுக்கிச் சாம்பலாக்கி விடுவதைப் போல, தீப்பொறி பறக்கும் ஈட்டியை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, போர்முனையில் வானரப் படைகளைக் கொளுத்தினான். (71)

மரங்களையும் மலைகளையும் பெயர்க்க முனைந்திருந்த வானரர்கள், ஈட்டியால் தாக்கப்பட்டு, வஜ்ராயுதத்தால் பிளக்கப்பட்ட மலைகள் போல கீழே விழுந்தார்கள். (72)

மழைக் காலத்தில் வீசும் பெருங்காற்று, மரங்களைப் பெயர்த்தும் முறித்தும் எல்லாப் பக்கங்களிலும் தூக்கியெறிவதைப் போல, பலசாலியான நராந்தகன் எல்லாப் பக்கங்களிலும் சுற்றித் திரிந்து அழித்துக் கொண்டிருந்தான். (73)

வானரவீரர்கள் (நராந்தகன் நிகழ்த்திக் கொண்டிருந்த பயங்கரமான அழிவைக் கண்டு) அச்சத்தால் ஓடிப்போக முடியவில்லை; ஓரிடத்தில் நிற்கவோ அசையவோகூட முடியவில்லை. வீரனான நராந்தகன், தாவிச் சென்றவர்களையும் நின்றுகொண்டிருந்தவர்களையும் நடந்து போய்க் கொண்டிருந்தவர்களையும் தாக்கினான். (74)

ஏகேநாந்தககல்பேந ப்ராஸேநாதி₃த்யதேஜஸா ।
பி₄ந்நாநி ஹரிஸைந்யாநி நிபேதுர்த₄ரணீதலே ॥ (75)

வஜ்ரநிஷ்பேஷஸத்₃ருஶம் ப்ராஸஸ்யாபி₄நிபாதநம் ।
ந ஶேகுர்வாநரா: ஸோடு₄ம் தே விநேது₃ர்மஹாஸ்வநம் ॥ (76)

பததாம் ஹரிவீராணாம் ரூபாணி ப்ரசகாஶிரே ।
வஜ்ரபி₄ந்நாக்₃ரகூடாநாம் ஶைலாநாம் பததாமிவ ॥ (77)

யே து பூர்வம் மஹாத்மாந: கும்ப₄கர்ணேந பாதிதா: ।
தே ஸ்வஸ்தா₂ வாநரஶ்ரேஷ்டா₂: ஸுக்₃ரீவமுபதஸ்தி₂ரே ॥ (78)

விப்ரேக்ஷமாண: ஸுக்₃ரீவோ த₃த₃ர்ஶ ஹரிவாஹிநீம் ।
நராந்தகப₄யத்ரஸ்தாம் வித்₃ரவந்தீமிதஸ்தத: ॥ (79)

வித்₃ருதாம் வாஹிநீம் த்₃ருஷ்ட்வா ஸ த₃த₃ர்ஶ நராந்தகம் ।
க்₃ருஹீதப்ராஸமாயாந்தம் ஹயப்ருஷ்டே₂ ப்ரதிஷ்டி₂தம் ॥ (80)

அதோ₂வாச மஹாதேஜா: ஸுக்₃ரீவோ வாநராதி₄ப: ।
குமாரமங்க₃த₃ம் வீரம் ஶக்ரதுல்யபராக்ரமம் ॥ (81)

க₃ச்ச₂ த்வம் ராக்ஷஸம் வீரம் யோऽஸௌ துரக₃மாஸ்தி₂த: ।
க்ஷோப₄யந்தம் ஹரிப₃லம் க்ஷிப்ரம் ப்ராணைர்வியோஜய ॥ (82)

ஸ ப₄ர்துர்வசநம் ஶ்ருத்வா நிஷ்பபாதாங்க₃த₃ஸ்தத: ।
அநீகாந்மேக₄ஸங்காஶாந்மேக₄நீகாதி₃வாம்ஶுமாந் ॥ (83)

ஶைலஸங்க₄ாதஸங்காஶோ ஹரீணாமுத்தமோऽங்க₃த₃: ।
ரராஜாங்க₃த₃ஸந்நத்₃த₄: ஸதா₄துரிவ பர்வத: ॥ (84)

நிராயுதோ₄ மஹாதேஜா: கேவலம் நக₂த₃ம்ஷ்ட்ரவாந் ।
நராந்தகமபி₄க்ரம்ய வாலிபுத்ரோऽப்₃ரவீத்₃வச: ॥ (85)

திஷ்ட₂ கிம் ப்ராக்ருதைரேபி₄ர்ஹரிபி₄ஸ்த்வம் கரிஷ்யஸி ।
அஸ்மிந் வஜ்ரஸமஸ்பர்ஶம் ப்ராஸம் க்ஷிப மமோரஸி ॥ (86)

அங்க₃த₃ஸ்ய வச: ஶ்ருத்வா ப்ரசுக்ரோத₄ நராந்தக: ।
ஸந்த₃ஶ்ய த₃ஶநைரோஷ்ட₂ம் விநி:ஶ்வஸ்ய பு₄ஜங்க₃வத் ॥
அபி₄க₃ம்யாங்க₃த₃ம் க்ருத்₃தோ₄ வாலிபுத்ரம் நராந்தக: ॥ (87)

ப்ராஸம் ஸமாவித்₄ய தத₃ாங்க₃த₃ாய ஸமுஜ்ஜ்வலந்தம் ஸஹஸோத்ஸஸர்ஜ ।
ஸ வாலிபுத்ரோரஸி வஜ்ரகல்பே ப₃பூ₄வ ப₄க்₃நோ ந்யபதச்ச பூ₄மௌ ॥ (88)

தம் ப்ராஸமாலோக்ய தத₃ா விப₄க்₃நம் ஸுபர்ணக்ருத்தோரக₃போ₄க₃கல்பம் ।
தலம் ஸமுத்₃யம்ய ஸ வாலிபுத்ரஸ்துரங்க₃மம் தஸ்ய ஜகா₄ந மூர்த்₄நி ॥ (89)

ஊழிக்கால அந்தகனைப் போல விளங்கும் தனி ஒருவனால், சூரியனைப் போல் ஒளிவீசும் எறியீட்டியினால் தாக்கப்பட்டு, வானரப்படையினர் தரையில் விழுந்தார்கள். (75)

வஜ்ராயுதத்தின் தாக்குதல் போலிருந்த எறியீட்டியின் வலிமையான அடியைப் பொறுக்க முடியாத வானரர்கள் பெருங்குரலில் ஓலமிட்டார்கள். (76)

வஜ்ராயுதத்தால் பிளக்கப்பட்ட மலைகளின் சிகரங்கள் கீழே விழுந்து கிடப்பது போல, கீழே விழுந்து கிடந்த வானரர்களின் உடல்கள் காணப்பட்டன. (77)

பேராற்றல் கொண்ட எந்த வானர வீரர்கள் முன்பு கும்பகர்ணனால் வீழ்த்தப்பட்டார்களோ, அவர்கள் மயக்கம் தெளிந்து இயல்புநிலைக்கு வந்து, சுக்ரீவனிடம் வந்தார்கள். (78)

சுக்ரீவன், நராந்தகனிடம் அச்சம் கொண்டு நடுங்கிய வானரப்படை திக்குத் திசை புரியாமல் இங்குமங்கும் ஓடுவதைப் பார்த்தான். (79)

ஓடிக்கொண்டிருந்த வானரப்படையைப் பார்த்த அவன் கண்கள், குதிரைமேல் ஏறி கையில் ஈட்டியைப் பிடித்துக் கொண்டு வரும் நராந்தகனையும் பார்த்தன. (80)

அப்போது, பேராற்றல் கொண்டவனும் வானர மன்னனுமான சுக்ரீவன், இந்திரனுக்கு நிகரான பராக்கிரமம் கொண்ட வீரப் புதல்வன் அங்கதனைப் பார்த்துக் கூறினான்— (81)

''வானரப்படையை சிதறடித்துக் கொண்டு, குதிரை மேல் ஏறி இங்கே வந்து கொண்டிருக்கும் அரக்க வீரனோடு போர்புரிவதற்காக, நீ உடனே செல். விரைவில் உயிரைப் பறித்து விடுவாயாக.'' (82)

தலைவரின் உத்தரவைக் கேட்ட அங்கதன், மேகக்கூட்டம் போல் பரவியிருந்த வானரப்படையின் மையப் பகுதியிலிருந்து, மேகப்படலத்திலிருந்து சூரியபகவான் வெளிப்படுவதைப் போல வெளியே புறப்பட்டு வந்தான். (83)

வானரோத்தமனும் மலைக்கூட்டத்தையொத்த சரீரம் கொண்டவனுமான அங்கதன், பொன் தோள்வளைகள் அணிந்தவனாய், தாதுக்களோடு கூடிய மலைபோல் விளங்கினான். (84)

மிக்க வலிமை படைத்த வாலிமைந்தனிடம் போர்க்கருவிகள் ஏதுமில்லை; நகங்களும் பற்களும் மட்டுமே இருந்தன. அப்படியும் துணிச்சலுடன் அவன், நராந்தகன் எதிரே சென்று சொன்னான்— (85)

''நில், நில். இந்தப் பாமரர்களான வானரர்களிடம் என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உன்னிடமிருக்கும் வஜ்ராயுதம் போன்ற ஈட்டியை என் மார்பில் எறிவாய்.'' (86)

அங்கதனுடைய சொற்களைக் கேட்டதும் நராந்தகனுக்கு மிகவும் கோபம் வந்தது. பற்களால் உதட்டைக் கடித்து, சர்ப்பம் போல் பெருமூச்செறிந்து, வாலிபுத்திரனான அங்கதன் எதிரில் வந்து நின்றான். (87)

உடனே, நெருப்பைக் கக்கும் ஈட்டியைச் சுழற்றி, அங்கதனைக் குறிவைத்து செலுத்தினான். அது வஜ்ரம் போல் கடினமாக இருந்த அங்கதனின் மார்பில் மோதி, உடைந்து தரையில் விழுந்தது. (88)

கருட பகவானால் கடித்துத் துண்டாக்கப்பட்ட சர்ப்பம் போல், தரையில் விழுந்து கிடந்த ஈட்டியைப் பார்த்த வாலிமைந்தன், (மேலும் தாக்க விரும்பி,) தனது உள்ளங்கையை ஓங்கி அவனுடைய குதிரையின் தலையில் அறைந்தான். (89)

நிமக்3நதாலு: ஸ்பு2டிதாக்ஷிதாரோ நிஷ்க்ராந்தஜிஹ்வோऽசலஸந்நிகாஶ: ।
ஸ தஸ்ய வாஜீ நிபபாத பூ4மௌ தலப்ரஹாரேண விஶீர்ணமூர்தா4 ॥ (90)

நராந்தக: க்ரோத4வஶம் ஜகா3ம ஹதம் துரங்க3ம் பதிதம் நிரீக்ஷ்ய ।
ஸ முஷ்டிமுத்3யம்ய மஹாப்ரபா4வோ ஜகா4ந ஶீர்ஷே யுதி4 வாலிபுத்ரம் ॥ (91)

அதா2ங்க3தோ3 முஷ்டிவிபி4ந்நமூர்தா4
ஸுஸ்ராவ தீவ்ரம் ருதி4ரம் ப்4ருஶோஷ்ணம் ।
முஹுர்விஜஜ்வால முமோஹ சாபி
ஸம்ஜ்ஞாம் ஸமாஸாத்3ய விஸிஷ்மயே ச ॥ (92)

அதா2ங்க3தோ3 வஜ்ரஸமாநவேக3ம் ஸம்வர்த்ய முஷ்டிம் கி3ரிஶ்ருங்க3கல்பம் ।
நிபாதயாமாஸ ததா3 மஹாத்மா நராந்தகஸ்யோரஸி வாலிபுத்ர: ॥ (93)

ஸ முஷ்டிநிஷ்பிஷ்டவிபி4ந்நவக்ஷா ஜ்வாலாவமச்சோ2ணிததி3க்3த4கா3த்ர: ।
நராந்தகோ பூ4மிதலே பபாத யதா2சலோ வஜ்ரநிபாதப4க்3ந: ॥ (94)

அதா2ந்தரிக்ஷே த்ரித3ஶோத்தமாநாம் வநௌகஸாம் சைவ மஹாப்ரணாத3: ।
ப3பூ4வ தஸ்மிந்நிஹதேऽக்3ர்யவீரே நராந்தகே வாலிஸுதேந ஸங்க்2யே ॥ (95)

அதா2ங்க3தோ3 ராமமந:ப்ரஹர்ஷணம்
ஸுது3ஷ்கரம் தத் க்ருதவாந் ஹி விக்ரமம் ।
விஸிஷ்மியே ஸோऽப்யதிவீர்யவிக்ரம:
புநஶ்ச யுத்3தே4 ஸ ப3பூ4வ ஹர்ஷித: ॥ (96)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகோநஸப்ததிதம: ஸர்க3: ॥

ஸப்ததிதம: ஸர்க3:

தே3வாந்தகாதி3வத4:

நராந்தகம் ஹதம் த்3ருஷ்ட்வா சுக்ருஶுர்நைர்ருதர்ஷபா4: ।
தே3வாந்தகஸ்த்ரிமூர்தா4 ச பௌலஸ்த்யஶ்ச மஹோத3ர: ॥ (1)

ஆரூடோ4 மேக4ஸங்காஶம் வாரேணந்த்3ரம் மஹோத3ர: ।
வாலிபுத்ரம் மஹாவீர்யமபி4து3த்3ராவ வீர்யவாந் ॥ (2)

ப்4ராத்ருவ்யஸநஸந்தப்தஸ்ததா2 தே3வாந்தகோ ப3லீ ।
ஆதா3ய பரிக4ம் தீ3ப்தமங்க3த3ம் ஸமபி4த்3ரவத் ॥ (3)

ரதா2மாதி3த்யஸங்காஶம் யுக்தம் பரமவாஜிபி4: ।
ஆஸ்தா2ய த்ரிஶிரா வீரோ வாலிபுத்ரமதா2ப்4யயாத் ॥ (4)

மலையைப் போன்ற அந்தக் குதிரை, அங்கதனின் உள்ளங்கை அறையைத் தாங்கமாட்டாமல் மண்டை உடைந்து, கன்னங்கள் நசுங்கி, விழிகள் தெறித்து, நாக்குப் பிதுங்கி பூமியில் சாய்ந்தது. (90)

தன் குதிரை, உயிரை விட்டுத் தரையில் வீழ்ந்து கிடந்ததைப் பார்த்து, நராந்தகன் பெருங்கோபத்திற்கு ஆளானான். பராக்கிரமசாலியான அவன், முஷ்டியைத் தூக்கி வாலி மைந்தனின் தலையில் குத்தினான். (91)

முஷ்டியினால் தாக்கப்பட்டு உடைந்துபோன அங்கதனின் தலையிலிருந்து உஷ்ணமான இரத்தம் வெள்ளமாகப் பெருகியது. அவனுடைய நெற்றியில் வெம்மை உண்டாகித் தவிக்கச் செய்தது. அவன், உடனே மூர்ச்சை அடைந்தான். பிறகு உணர்வு பெற்றதும், (நராந்தகனின் மகாபராக்கிரமத்தை எண்ணி) வியப்படைந்தான். (92)

பிறகு, வாலிமைந்தனும் மிக்க வலிமை உடையவனுமான அங்கதன், மலைச்சிகரம் போன்ற தன் முஷ்டியை, வஜ்ராயுதத்திற்கு நிகரான வேகத்துடன் நராந்தகனுடைய மார்பில் குத்தினான். (93)

முஷ்டியின் தாக்குதலால் அவனுடைய மார்பு பிளந்தது; முகத்திலிருந்து நெருப்புச் சுவாலைகள் வெளிவந்தன; உடல் முழுவதும் இரத்தத்தால் நனைந்தது. அவன், வஜ்ராயுதத்தால் அடியுண்ட மலைபோல் தரையில் விழுந்தான். (94)

அப்போது, போரில் சிறந்த வீரனான நராந்தகன் வாலி மைந்தனால் வீழ்த்தப்பட்டதும், ஆகாயத்தில் தேவர்களுடையதும் வானரர்களுடையதும் (பேரானந்தத்தின் விளைவாக) பேரொலி எழுந்தது. (95)

அங்கதன், இராமபிரானுக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய செயற்கரிய செயலைச் செய்து முடித்தான். இராமனுக்கும்கூட இந்தச் செயல் பெரும் வியப்பை அளித்தது. பின்னர், பயங்கரமான செயல்களைச் செய்யும் ஆற்றல் கொண்ட அங்கதன், மறுபடியும் போர் செய்வதற்கு மனமகிழ்ச்சியும் உற்சாகமும் கொண்டான். (96)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபது

தேவாந்தகன் முதலியோர் வதம்

நராந்தகன் கொலை செய்யப்பட்டதைக் கண்டு, அரக்கக் காளைகளான தேவாந்தகனும் புலஸ்திய வம்சத்தில் தோன்றிய திரிசிரஸ் மற்றும் மகோதரனும் விம்மி அழுதார்கள். (1)

வீரம் மிகுந்த மகோதரன், மேகம் போல் கருவண்ணமும் பேருடலும் கொண்ட யானைமீது ஏறிக் கொண்டு, மகாவீரனான வாலிகுமாரன் அங்கதனை எதிர்த்து வந்தான். (2)

சகோதரனின் மரணத்தால் மனம் வெந்து கொண்டிருந்த மகாபலசாலியான தேவாந்தகன், பயங்கரமான இரும்புத்தடியுடன் அங்கதனை எதிர்த்தான். (3)

மிகச்சிறந்த குதிரைகள் பூட்டப் பெற்றதும் கதிரவனைப் போன்று ஒளிவீசுவதுமான தேரில் ஏறிக்கொண்ட வீரனான திரிசிரஸ், அங்கதனை எதிர்த்தான். (4)

ஸ த்ரிபி4ர்தே3வத3ர்பக்4நைர்நைர்ருதேந்த்3ரைரபி4த்3ருத: ।
வ்ருக்ஷமுத்பாடயாமாஸ மஹாவிடபமங்க3த3: ॥ (5)

தே3வாந்தகாய தம் வீரஸ்சிக்ஷேப ஸஹஸாங்க3த3: ।
மஹாவ்ருக்ஷம் மஹாஶாக2ம் ஶக்ரோ தீ3ப்தமிவாஶநிம் ॥ (6)

த்ரிஶிராஸ்தம் ப்ரசிச்சே2த3 ஶரைராஶீவிஷோபமை: ।
ஸ வ்ருக்ஷம் க்ருத்தமாலோக்ய உத்பபாத தத3ாங்க3த3: ॥ (7)

ஸ வவர்ஷ ததோ வ்ருக்ஷாஞ்ஶைலாம்ஸ்ச கபிகுஞ்ஜர: ।
தாந் ப்ரசிச்சே2த3 ஸங்க்ருத்3த4ஸ்த்ரிஶிரா நிஶிதை: ஶரை: ॥ (8)

பரிகா4க்3ரேண தாந் வ்ருக்ஷாந் ப3ப4ஞ்ஜ ச ஸுராந்தக: ।
த்ரிஶிராஸ்சாங்க3த3ம் வீரமபி4து3த்3ராவ ஸாயகை: ॥ (9)

க3ஜேந ஸமபி4த்3ருத்ய வாலிபுத்ரம் மஹோத3ர: ।
ஜகா4நோரஸி ஸங்க்ருத்3த4ஸ்தோமரைர்வஜ்ரஸந்நிபை4: ॥ (10)

தே3வாந்தகஸ்ச ஸங்க்ருத்3த4: பரிகே4ண தத3ாங்க3த3ம் ।
உபக3ம்யாபி4ஹத்யாஶு வ்யபசக்ராம வேக3வாந் ॥ (11)

ஸ த்ரிபி4ர்நைர்ருதஸ்ரேஷ்டை2ர்யுக3பத் ஸமபி4த்3ருத: ।
ந விவ்யதே2 மஹாதேஜா வாலிபுத்ர: ப்ரதாபவாந் ॥ (12)

ஸ வேக3வாந் மஹாவேக3ம் க்ருத்வா பரமது3ர்ஜய: ।
தலேந ப்4ருஶமுத்பத்ய ஜகா4நாஸ்ய மஹாக3ஜம் ॥ (13)

தஸ்ய தேந ப்ரஹாரேண நாக3ராஜஸ்ய ஸம்யுகே3 ।
பேததுர்லோசநே தஸ்ய விநநாத3 ஸ வாரண: ॥ (14)

விஷாணம் சாஸ்ய நிஷ்க்ருஷ்ய வாலிபுத்ரோ மஹாப3ல: ।
தே3வாந்தகமபி4ப்லுத்ய தாட3யாமாஸ ஸம்யுகே3 ॥ (15)

ஸ விஹ்வலிதஸர்வாங்கோ3 வாதோத்3தூ4த இவ த்3ரும: ।
லாக்ஷாரஸஸவர்ணம் ச ஸுஸ்ராவ ருதி4ரம் முகா2த் ॥ (16)

அதா2ஸ்வஸ்ய மஹாதேஜா: க்ருச்ச்2ராத்3தே3வாந்தகோ ப3லீ ।
ஆவித்4ய பரிக4ம் கோ4ரமாஜகா4ந தத3ாங்க3த3ம் ॥ (17)

பரிகா4பி4ஹதஸ்சாபி வாநரேந்த்3ராத்மஜஸ்ததா3 ।
ஜாநுப்4யாம் பதிதோ பூ4மௌ புநரேவோத்பபாத ஹ ॥ (18)

தமுத்பதந்தம் த்ரிஶிராஸ்த்ரிபி4ர்பா3ணைரஜிஹ்மகை3: ।
கோ4ரைர்ஹரிபதே: புத்ரம் லலாடேऽபி4ஜகா4ந ஹ ॥ (19)

ததோऽங்க3த3ம் பரிக்ஷிப்தம் த்ரிபி4ர்நைர்ருதபுங்க3வை: ।
ஹநுமாநபி விக்ஞாய நீலஸ்சாபி ப்ரதஸ்த2து: ॥ (20)

தேவர்களின் செருக்கை அடக்கிய அரக்கத் தலைவர்களான மூவர்களால் எதிர்க்கப்பட்ட அங்கதன், பல கிளைகளோடிருந்த பெரிய மரம் ஒன்றைப் பெயர்த்தெடுத்தான். (5)

பொறி பறக்கும் வஜ்ராயுதத்தை இந்திரன் (எதிரிகள் மேல்) வீசுவதைப் போல, பெரிய பெரிய கிளைகளையுடைய அந்த மாபெரும் மரத்தை வீரனான அங்கதன், தேவாந்தகன் மீது சடாரென்று எறிந்தான். (6)

விஷப் பாம்புகளைப் போன்ற பாணங்களால் திரிசிரஸ் அதைத் துண்டித்தெறிந்தான். மரம் துண்டிக்கப்பட்டதைக் கண்டதும் அங்கதன் துள்ளியெழுந்தான். (7)

வானரவீரனான அங்கதன், உடனே மரங்களையும் மலைகளையும் பெயர்த்து மாரியெனப் பொழிந்தான். கோபங்கொண்ட திரிசிரஸ், கூர்மையான பாணங்களால் அவைகளை நொறுக்கித் தள்ளினான். (8)

தேவாந்தகன், (அங்கதன் வீசியெறிந்த) மரங்களை இரும்பு உலக்கையின் நுனியால் முறித்தெறிந்தான். திரிசிரஸ், மாவீரனான அங்கதனை அம்புகளால் தாக்கினான். (9)

கூடவே மகோதரன் யானையை அருகில் செலுத்தி, மிகவும் கோபத்துடன், வஜ்ராயுதம் போன்ற வல்லயங்களால் அங்கதன் மார்பில் தாக்கினான். (10)

அப்போது கோபம்கொண்ட தேவாந்தகனும், அங்கதனை நெருங்கி வந்து, உலக்கையால் 'படீரென்று' தாக்கிவிட்டு, உடனேயே வேகமாகத் திரும்பிச் சென்றான். (11)

ஒரே சமயத்தில் மூன்று அரக்கத் தலைவர்களால் தாக்கப்பட்ட போதிலும், வாலி மைந்தனும் மகாபராக்கிரமமுடையவனும் ஆற்றல் படைத்தவனுமான அங்கதன் மனக்கலக்கம் அடையவில்லை. (12)

வெல்லுதற்கரியவனும் விரைந்து செயல்படுபவனுமான அவன், மிகவும் துடிப்புக் கொண்டு, உள்ளங்கையை வெகு உயரம் தூக்கி, அவனுடைய (மகோதரனுடைய) பெரிய யானையைத் தாக்கினான். (13)

போர்க்களத்தில், அவனுடைய அறையினால் அந்த யானைத் தலைவனுடைய இரு கண்களும் பிதுங்கி விழுந்தன; அந்த யானை மிகவும் அலறிக் கூச்சலிட்டது. (14)

மகாபலசாலியான அங்கதன், யானையின் தந்தத்தைப் பிடுங்கி எடுத்து உயரே தாவிச் சென்று, தேவாந்தகனைப் புடைத்தான். (15)

பெருங்காற்றினால் அலைப்புண்ட மரம் போல, உடலின் எல்லா அங்கங்களும் தளர்ந்து போய், தேவாந்தகன் செம்பஞ்சுக் குழம்பு போன்ற இரத்தத்தை வாயிலிருந்து கக்கினான். (16)

பின்னர், பேராண்மையும் மகாபலமும் கொண்ட தேவாந்தகன், மிகுந்த சிரமத்துடன் களைப்பை நீக்கிக் கொண்டு, பயங்கரமான இரும்பு உலக்கையைச் சுழற்றி, அங்கதனைத் தாக்கினான். (17)

உலக்கையால் அடிக்கப்பட்ட அங்கதன், இரு முழந்தாள்களும் பூமியில்படும்படி கீழே விழுந்தான். அடடா! உடனே மீளவும் எழுந்தான்! (18)

திரிசிரஸ், தரையிலிருந்து எழுந்து கொண்டிருக்கும் வாலியின் புதல்வன் நெற்றியை, குறியை நோக்கித் தடையின்றி செல்லக்கூடிய மூன்று பாணங்களால் தாக்கினான். (19)

அப்போது, மூன்று அரக்க வீரர்களால் அங்கதன் சூழப்பட்டிருப்பதைக் கண்டு, அனுமானும் நீலனும் அவனுடைய உதவிக்கு வந்தார்கள். (20)

ததஶ்சிக்ஷேப ஶைலாக்$_3$ரம் நீலஸ்த்ரிஶிரஸே ததா$_3$ ।
தத்$_3$ராவணஸுதோ தீ$_4$மாந் பி$_3$பே$_4$த$_3$ நிஶிதை: ஶரை: ॥ (21)

தத்$_3$பா$_3$ணஶதநிர்பி$_4$ந்நம் விதா$_3$ரிதஶிலாதலம் ।
ஸவிஸ்பு$_2$லிங்க$_3$ம் ஸஜ்வாலம் நிபபாத கி$_3$ரே: ஶிர: ॥ (22)

ததோ ஜ்ரும்பி$_4$தமாலோக்ய ஹர்ஷாத்$_3$தே$_3$வாந்தகஸ்ததா$_3$ ।
பரிகே$_4$ணாபி$_4$து$_3$த்$_3$ராவ மாருதாத்மஜமாஹவே ॥ (23)

தமாபதந்தமுத்ப்லுத்ய ஹநுமாந் மாருதாத்மஜ: ।
ஆஜகா$_4$ந ததா$_3$ மூர்த்$_4$நி வஜ்ரகல்பேந முஷ்டிநா ॥ (24)

ஶிரஸி ப்ரஹரந் வீரஸ்ததா$_3$ வாயுஸுதோ ப$_3$லீ ।
நாதே$_3$நாகம்பயச்சைவ ராக்ஷஸாந் ஸ மஹாகபி: ॥ (25)

ஸ முஷ்டிநிஷ்பிஷ்டவிகீர்ணமூர்தா$_4$ நிர்வாந்தத$_3$ந்தாக்ஷிவிலம்பி$_3$ஜிஹ்வ: ।
தே$_3$வாந்தகோ ராக்ஷஸராஜஸூநுர்க$_3$தாஸுருர்வ்யாம் ஸஹஸா பபாத ॥ (26)

தஸ்மிந் ஹதே ராக்ஷஸயோத$_4$முக்$_2$யே மஹாப$_3$லே ஸம்யதி தே$_3$வஶத்ரௌ ।
க்ருத்$_3$த$_4$ஸ்த்ரிமூர்தா$_4$ நிஶிதாக்$_3$ரமுக்$_3$ரம் வவர்ஷ நீலோரஸி பா$_3$ணவர்ஷம் ॥ (27)

மஹோத$_3$ரஸ்து ஸங்க்ருத்$_3$த$_4$: குஞ்ஜரம் பர்வதோபமம் ।
பூ$_4$ய: ஸமதி$_4$ருஹ்யாஶு மந்த$_3$ரம் ரஶ்மிமாநிவ ॥ (28)

ததோ பா$_3$ணமயம் வர்ஷம் நீலஸ்யோரஸ்யபாதயத் ।
கி$_3$ரௌ வர்ஷம் தடி$_3$ச்சக்ரசாபவாநிவ தோயத$_3$: ॥ (29)

தத: ஶரௌகை$_4$ரபி$_4$வர்ஷ்யமாணோ விபி$_4$ந்நகா$_3$த்ர: கபிஸைந்யபால: ।
நீலோ ப$_3$பூ$_4$வாத$_2$ நிஸ்ருஷ்டகா$_3$த்ரோ விஷ்டம்பி$_4$தஸ்தேந மஹாப$_3$லேந ॥ (30)

ததஸ்து நீல: ப்ரதிலப்$_4$ய ஸம்க்ஞாம்
ஶைலம் ஸமுத்பாட்ய ஸவ்ருக்ஷஷண்ட$_3$ம் ।
தத: ஸமுத்பத்ய ப்$_4$ருஶோக்$_3$ரவேகோ$_3$
மஹோத$_3$ரம் தேந ஜகா$_4$ந மூர்த்$_4$நி ॥ (31)

தத: ஸ ஶைலேந்த்$_3$ரநிபாதப$_4$க்$_3$நோ மஹோத$_3$ரஸ்தேந மஹாத்$_3$விபேந ।
விபோதி$_2$தோ பூ$_4$மிதலே க$_3$தாஸு: பபாத வஜ்ராபி$_4$ஹதோ யதா$_2$த்$_3$ரி: ॥ (32)

பித்ருவ்யம் நிஹதம் த்$_3$ருஷ்ட்வா த்ரிஶிராஶ்சாபமாத$_3$தே$_3$ ।
ஹநுமந்தம் ச ஸங்க்ருத்$_3$தோ$_4$ விவ்யாத$_4$ நிஶிதை: ஶரை: ॥ (33)

ஸ வாயுஸூநு: குபிதஶ்சிக்ஷேப ஶிக$_2$ரம் கி$_3$ரே: ।
த்ரிஶிராஸ்தச்ச$_2$ரைஸ்தீக்ஷ்ணைர்பி$_3$பே$_4$த$_3$ ப$_3$ஹுதா$_4$ ப$_3$லீ ॥ (34)

தத்$_3$வ்யர்த$_2$ம் ஶிக$_2$ரம் த்$_3$ருஷ்ட்வா த்$_3$ருமவர்ஷம் மஹாகபி: ।
விஸஸர்ஜ ரணே தஸ்மிந் ராவணஸ்ய ஸுதம் ப்ரதி ॥ (35)

நீலன், திரிசிரஸின் மீது ஒரு மலைச்சிகரத்தை வீசினான். அறிவாளியான இராவணன் மைந்தன், கூரிய பாணங்களால் அதைத் தகர்த்தெறிந்தான். (21)

அவனுடைய கணக்கில்லாத பாணங்களால் தாக்கப்பட்டு பிளவுபட்ட பெரும் பாறைகளுடன் அந்த மலைமுகடு, கொழுந்து விட்டெரியும் சுவாலைகளுடனும் அனற்பொறிகளுடனும் கீழே விழுந்தது. (22)

தன்னுடைய சகோதரனின் வெற்றிகரமான எதிர்ப்பினால் மனமகிழ்ந்த தேவாந்தகன், ஓர் உலக்கையைக் கையில் எடுத்துக் கொண்டு, போர்க்களத்தில் வாயுகுமாரனை எதிர்த்தோடினான். (23)

வாயுமைந்தரான அனுமான், தன்னை எதிர்த்து ஓடிவரும் அவனை நோக்கித் தாவி, வஜ்ராயுதம் போன்ற தன் முஷ்டியினால் தாக்கினார். (24)

வீரரும் பலசாலியும் வாயுமைந்தருமான வானரோத்தமர், அவன் தலையில் தாக்கிக் கொண்டே, பெருங்கர்ஜனை எழுப்பி அரக்கர்கள் எல்லோரையும் நடுநடுங்கச் செய்தார். (25)

இராவண மைந்தனான தேவாந்தகன், (அனுமானின்) முஷ்டித் தாக்குதலால் மண்டை சிதறி, பற்களும் கண்களும் பிதுங்கி, தொங்கிய நாக்குடன் உயிர் துறந்து, மடாரென்று தரையில் சாய்ந்தான். (26)

அரக்கப் போர்வீரர்களில் தலைசிறந்தவனும் மகாபலசாலியும் தேவர்களின் விரோதியுமான தேவாந்தகன் போரில் மாய்க்கப்பட்டதும், கோபங்கொண்ட திரிசிரஸ் கூர்மையான முனைகளை உடைய, பயங்கரமான அம்புமாரியை நீலன் மார்பின்மீது பொழிந்து தள்ளினான். (27)

அளவுகடந்த சினம் கொண்ட மகோதரன், மீண்டும் மலை நிகர் யானைமீது ஆரோகணித்து, மந்தர மலையில் சூரியன் ஏறிவருவதைப் போல், போர்க்களத்தில் புகுந்தான். (28)

மின்னற்கூட்டங்களையும் வானவில்லையும் பளிச்சிடச் செய்யும் நீருண்ட மேகம், மலைமேல் பெருமழையைப் பொழிவது போல், நீலனுடைய மார்பில் அம்புகளாலான மாரியைப் பொழிந்தான். (29)

வானரப் படைத் தலைவன் நீலனின் எல்லா அங்கங்களும் (மகோதரனின்) இடைவிடாத அம்புமாரியால் துளைக்கப்பட்டு காயமடைந்தன; அவனுடைய உடல் தளர்ச்சியடைந்தது. இவ்வாறு, மகாபலசாலியான மகோதரன் தாக்குதல் நடத்தி, அவனுடைய பேராற்றலைச் சிதைத்து அடக்கினான். (30)

சிறிது நேரத்தில், சுயநினைவு பெற்ற நீலன், மரக்கூட்டங்கள் நிறைந்த ஒரு மலையை வேருடன் பெயர்த்தெடுத்து, துள்ளியெழுந்து மிகுந்த வேகத்துடன் மகோதரன் தலையில் தாக்கினான். (31)

அந்த மாமலையின் தாக்குதலால் நிலைகுலைந்த மகோதரன், அவன் அமர்ந்திருந்த யானையுடன் கூட அடிபட்டு, வஜ்ராயுதத்தால் பிளக்கப்பட்ட மலையைப் போல, உயிர் நீங்கியவனாகத் தரையில் விழுந்தான். (32)

தன்னுடைய சிற்றப்பன் மாண்டுவிட்டதைக் கண்ட திரிசிரஸ், மிகவும் சினத்துடன் ஒரு வில்லைக் கையிலெடுத்து, அனுமானையும் கூர்மையான பாணங்களால் துன்பப்படுத்தினான். கோபங்கொண்ட அனுமான், மலைச்சிகரம் ஒன்றை எடுத்து வீசினார். ஆனால், பலசாலியான திரிசிரஸ் கூர்மையான கணைகளால் அதைத் தூள்தூளாகப் பிளந்து தள்ளினான். (33,34)

அந்த மலை வீணாகிப் போனதைக் கண்டு, போர்க்களத்தில் இராவணனுடைய புதல்வனைக் குறிவைத்து, இடைவிடாது பெய்யும் மழையைப் போல் மரங்களை வீசினார், வானரோத்தமரான அனுமான். (35)

தமாபதந்தமாகாஶே த்$_3$ருமவர்ஷம் ப்ரதாபவாந் ।
த்ரிஶிரா நிஶிதைர்பா$_3$ணைஶ்சிச்சே$_2$த$_3$ ச நநாத$_3$ ச ॥ (36)

ததோ ஹநூமாநுத்ப்லுத்ய ஹயாஞ்ஸ்த்ரிஶிரஸஸ்தத$_3$ா ।
வித$_3$த$_3$ார நகை$_2$: க்ருத்$_3$தே$_4$ா க$_3$ஜேந்த்$_3$ரம் ம்ருக$_3$ராடி$_3$வ ॥ (37)

அத$_2$ ஶக்திம் ஸமாத$_3$ாய காலராத்ரிமிவாந்தக: ।
சிக்ஷேபாநிலபுத்ராய த்ரிஶிரா ராவணாத்மஜ: ॥ (38)

தி$_3$வ: க்ஷிப்தாமிவோல்காம் தாம் ஶக்திம் க்ஷிப்தாமஸங்க$_3$தாம் ।
க்$_3$ருஹீத்வா ஹரிஶார்தூ$_3$லோ ப$_3$ப$_4$ஞ்ஜ ச நநாத$_3$ ச ॥ (39)

தாம் த்$_3$ருஷ்ட்வா கே$_4$ாரஸங்காஶாம் ஶக்திம் ப$_4$க்$_3$நாம் ஹநூமதா ।
ப்ரஹ்ருஷ்டா வாநரக$_3$ணா விநேது$_3$ர்ஜலத$_3$ா இவ ॥ (40)

தத: க$_2$ட்$_3$க$_3$ம் ஸமுத்$_3$யம்ய த்ரிஶிரா ராஸக்ஷோத்தம: ।
நிஜக$_4$ாந தத$_3$ா வ்யூடே$_4$ வாயுபுத்ரஸ்ய வக்ஷஸி ॥ (41)

க$_2$ட்$_3$க$_3$ப்ரஹாரபி$_4$ஹதோ ஹநூமாந் மாருதாத்மஜ: ।
ஆஜக$_4$ாந த்ரிஶிரஸம் தலேநோரஸி வீர்யவாந் ॥ (42)

ஸ தலாபி$_4$ஹதஸ்தேந ஸ்ரஸ்தஹஸ்தாயுதே$_4$ா பு$_4$வி ।
நிபபாத மஹாதேஜாஸ்த்ரிஶிராஸ்த்யக்தசேதந: ॥ (43)

ஸ தஸ்ய பதத: க$_2$ட்$_3$க$_3$ம் ஸமாச்சி$_2$த்$_3$ய மஹாகபி: ।
நநாத$_3$ கி$_3$ரிஸங்காஶஸ்த்ராஸயந் ஸர்வநைர்ருதாந் ॥ (44)

அம்ருஷ்யமாணஸ்தம் கே$_4$ாஷமுத்பபாத நிஶாசர: ।
உத்பத்ய ச ஹநூமந்தம் தாட$_3$யாமாஸ முஷ்டிநா ॥ (45)

தேந முஷ்டிப்ரஹாரேண ஸஞ்சுகோப மஹாகபி: ।
குபிதஶ்ச நிஜக்$_3$ராஹ கிரீடே ராக்ஷஸர்ஷப$_4$ம் ॥
ஹநூமாந் ரோஷதாம்ராக்ஷோ ராக்ஷஸம் பரவீரஹா ॥ (46)

ஸ தஸ்ய ஶீர்ஷாண்யஸிநா ஶிதேந
கிரீடஜுஷ்டாநி ஸகுண்ட$_3$லாநி ।
க்ருத்$_3$த$_4$: ப்ரசிச்சே$_2$த$_3$ ஸுதோऽநிலஸ்ய
த்வஷ்டு: ஸுதஸ்யேவ ஶிராம்ஸி ஶக்ர: ॥ (47)

தாந்யாயதாக்ஷாண்யக$_3$ஸந்நிப$_4$ாநி
ப்ரதீ$_3$ப்தவைஶ்வாநரலோசநாநி ।
பேது: ஶிராம்ஸீந்த்$_3$ரரிபோர்த$_4$ரண்யாம்
ஜ்யோதீம்ஷி முக்தாநி யத$_2$ார்கமார்க$_3$ாத் ॥ (48)

தஸ்மிந் ஹதே தே$_3$வரிபௌ த்ரிஶீர்ஷே ஹநூமதா ஶக்ரபராக்ரமேண ।
நேது$_3$: ப்லவங்க$_3$ா: ப்ரசசால பூ$_4$மீ ரக்ஷாம்ஸ்யதே$_2$ா துத்$_3$ருவிரே ஸமந்தாத் ॥ (49)

ஆற்றல் மிக்க திரிசிரஸ், ஆகாயத்தில் தன்னை நோக்கிக் கூட்டமாக வந்துகொண்டிருந்த மரங்களைக் கூர்மையான பாணங்களால் முறித்துத் தள்ளிவிட்டு சிம்மகர்ஜனை செய்தான். (36)

ஆத்திரங்கொண்ட அனுமான், உடனே உயரே தாவிக் குதித்து, தன் நகங்களால் திரிசிரஸின் குதிரைகளை, ஒரு சிங்கம் யானையைக் கிழிப்பதைப் போலக் கிழித்து விட்டார். (37)

அதைக் கண்ட இராவண குமாரன் (திரிசிரஸ்), யமதருமன் (அழிவுச்சக்தியான) காளராத்திரியுடன் வருவதைப் போல, சக்தியாயுதத்தைக் கையில் எடுத்து, வாயுமைந்தரின் மீது வீசியெறிந்தான். (38)

வானரப்புலியான அனுமான், ஆகாயத்திலிருந்து எறியப்பட்ட எரிகொள்ளியைப் போன்று, தடைபடாமல் வந்துகொண்டிருந்த சக்தியாயுதத்தைக் கைப்பற்றி முறித்தெறிந்தார். பின், சிங்கநாதமும் செய்தார். (39)

கோரமான ஒளிபடைத்த சக்தி ஆயுதம், அனுமானால் பிடித்து முறிக்கப்பட்டதைக் கண்ட வானரர்கள், ஆனந்தமடைந்து மேககர்ஜனை போல் பேராரவாரம் செய்தார்கள். (40)

அவ்வமயம், பேரரக்கனான திரிசிரஸ், நீண்ட வாளை எடுத்து, அனுமானுடைய விசாலமான மார்பில் குத்தினான். (41)

காற்றின் மைந்தரும் வீரருமான அனுமான் கத்தியினால் தாக்கப்பட்டதும், திரிசிரஸின் மார்பில் தன் உள்ளங்கையால் தாக்கினார். (42)

பேராண்மை கொண்ட திரிசிரஸ், அவருடைய உள்ளங்கையால் தாக்கப்பட்டு, படைக்கலன்கள் கையிலிருந்து நழுவி விழ உணர்விழந்தவனாகத் தரையில் வீழ்ந்தான். (43)

அவன் விழுந்து கொண்டிருந்தபோது, அவன் வாளைக் கைப்பற்றி மலைநிகர் அனுமான், எல்லா அரக்கர்களும் அஞ்சிப் பதறும்படியாக உரத்த குரலில் கர்ஜனை செய்தார். (44)

அரக்கன் (திரிசிரஸ்) அந்த கர்ஜனையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், துள்ளியெழுந்தான்; எழுந்து அனுமானை முஷ்டியால் குத்தவும் செய்தான். (45)

முஷ்டித் தாக்குதலால், பெருவானரராகிய அவர் மிகவும் ஆத்திரமடைந்தார். எதிரிகளை அடக்குபவரான அனுமான், கோபத்தால் சிவந்த கண்களுடன் அரக்கக் காளையின் மகுடம் தாங்கிய தலைகளைப் பற்றினார். (46)

பின்னர், (முன்னொரு காலத்தில்) த்வஷ்டாவின் புதல்வன் விசுவரூபனின் மூன்று தலைகளையும் இந்திரன் வஜ்ராயுதத்தால் வெட்டித் தள்ளியதைப் போல, சீற்றங்கொண்ட வாயுகுமாரரான அனுமான், இராவண மைந்தன் திரிசிரஸின் குண்டலங்களும் கிரீடங்களும் தாங்கிய மூன்று தலைகளையும் கூரான கத்தியினால் வெட்டித் தள்ளினார். (47)

விசாலமான கண்களை உடையவைகளும், மலையை நிகர்த்தவைகளும், சுவாலை விட்டெரியும் அக்னியைப் போன்ற கண்களை உடையவைகளுமான அந்தத் தலைகள், சூரியன் செல்லும் வான்வீதியிலிருந்து தெறித்து விழுந்த ஒளிக்கோளங்கள் போல் பூமியில் விழுந்தன. (48)

தேவர்களின் பகைவனான திரிசிரஸ், இந்திரனுக்கு நிகரான பேராற்றல் கொண்ட அனுமானால் கொல்லப்பட்டவுடன், வானரர்கள் பெரும் ஆரவாரம் செய்தார்கள்; அதனால், பூமி ஆடியது. உடனே, அரக்கர்கள் திக்குத் திசை தெரியாமல் ஓடிப் போனார்கள். (49)

ஹதம் த்ரிஶிரஸம் த்3ருஷ்ட்வா ததை2வ ச மஹோத3ரம் ।
ஹதௌ ப்ரேக்ஷ்ய து3ராத4ர்ஷௌ தே3வாந்தகநராந்தகௌ ॥ (50)

சுகோப பரமாமர்ஷீ மத்தோ ராக்ஷஸபுங்க3வ: ।
ஜக்3ராஹார்சிஷ்மதீம் கோ4ராம் க3தா3ம் ஸர்வாயஸீம் ஶுபா4ம் ॥ (51)

ஹேமபட்டபரிக்ஷிப்தாம் மாம்ஸஶோணிதபே2நிலாம் ।
விராஜமாநாம் வபுஷா ஶத்ருஶோணிதரஞ்ஜிதாம் ॥ (52)

தேஜஸா ஸம்ப்ரதீ3ப்தாக்3ராம் ரக்தமால்யவிபூ4ஷிதாம் ।
ஐராவதமஹாபத்3மஸார்வபௌ4மப4யாவஹாம் ॥ (53)

க3தா3மாதா3ய ஸங்க்ருத்3தோ4 மத்தோ ராக்ஷஸபுங்க3வ: ।
ஹரீந் ஸமபி4து3த்3ராவ யுகா3ந்தாக்3நிரிவ ஜ்வலந் ॥ (54)

அத2ர்ஷப4: ஸமுத்பத்ய வாநரோ ராவணாநுஜம் ।
மத்தாநீகமுபாக3ம்ய தஸ்தௌ2 தஸ்யாக்3ரதோ ப3லீ ॥ (55)

தம் புரஸ்தாத் ஸ்தி2தம் த்3ருஷ்ட்வா வாநரம் பர்வதோபமம் ।
ஆஜகா4நோரஸி க்ருத்3தோ4 க3த3யா வஜ்ரகல்பயா ॥ (56)

ஸ தயாபி4ஹதஸ்தேந க3த3யா வாநரர்ஷப4: ।
பி4ந்நவக்ஷா: ஸமாதூ4த: ஸுஸ்ராவ ருதி4ரம் ப3ஹு ॥ (57)

ஸ ஸம்ப்ராப்ய சிராத் ஸம்ஜ்ஞாம்ருஷபோ4 வாநரர்ஷப4: ।
க்ருத்3தோ4 விஸ்பு2ரமாணோஷ்டோ2 மஹாபார்ஶ்வமுதை3க்ஷத ॥ (58)

ஸ வேக3வாந் வேக3வத3ப்4யுபேத்ய தம் ராக்ஷஸம் வாநரயூத2முக்2ய: ।
ஸம்வர்த்ய முஷ்டிம் ஸஹஸா ஜகா4ந பா3ஹ்வந்தரே ஶைலநிகாஶரூப: ॥ (59)

ஸ க்ருத்தமூல: ஸஹஸேவ வ்ருக்ஷ:
பபாத பூ4மௌ க்ஷதஜோக்ஷிதாங்க3: ।
தாம் சாஸ்ய கோ4ராம் யமத3ண்ட3கல்பாம்
க3தா3ம் ப்ரக்3ருஹ்யாஶு ததா3 ஸஹர்ஷ: ॥ (60)

முஹூர்தமாஸீத் ஸ க3தாஸுகல்ப: ப்ரத்யாக3தாத்மா ஸஹஸா ஸுராரி: ।
உபேத்ய ஸந்த்4யாப்4ரஸமாநவர்ணஸ்தம் வாரிராஜாத்மஜமாஜகா4ந ॥ (61)

அபி4ஜக்3ராஹ வேகே3ந க3தா3ம் தஸ்ய மஹாத்மந: ।
க்3ருஹீத்வா தாம் க3தா3ம் பீ4மாமாவித்4ய ச புந: புந: ॥
மத்தாநீகம் மஹாத்மாநம் ஜகா4ந ரணமூர்த4நி ॥ (62)

ஸ ஸ்வயா க3த3யா ப4க்3நோ விஶீர்ணத3ஶநேக்ஷண: ।
நிபபாத ததோ மத்தோ வஜ்ராஹத இவாசல: ॥ (63)

விஶீர்ணநயநே பூ4மௌ க3தஸத்த்வே க3தாயுஷி ।
பதிதே ராக்ஷஸே தஸ்மிந் வித்3ருதம் ராக்ஷஸம் ப3லம் ॥ (64)

திரிசிரசும் மகோதரனும் கொல்லப்பட்டதைக் கண்டும், எளிதில் வெல்ல முடியாத தேவாந்தகனும் நராந்தகனும் மாய்க்கப்பட்டதைக் கண்டும், அரக்கர் தலைவனான மகாபார்சுவன் மிகவும் கோபமும் வெறியும் கொண்டு, முற்றிலும் இரும்பினால் செய்யப்பட்டதும் ஒளிவீசுவதுமான ஒரு கதாயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். (50,51)

அந்தக் கதையில் பொற்தகடுகள் பிணைக்கப்பட்டிருந்தன; அது (போரில் உபயோகிக்கப்படும் போது) மாமிசம்–இரத்தத்தின் பூச்சுகளைப் பெறுவது; அழகான அமைப்பைப் பெற்றது; எதிரிகளின் இரத்தத்தினால் பேரழகு பெற்றுத் திகழ்வது; பளபளக்கும் முனையை உடையது; சிவந்த மலர்மாலை சூட்டப்பெற்றது; ஐராவதம், மகாபத்மம், சார்வபௌமம் என்னும் திசைக்களிறுகளுக்கும் அச்சத்தைத் தரவல்லது. இப்படிப்பட்ட அந்தக் கதையை அவன் கையில் எடுத்துக் கொண்டான். (52,53)

கோபத்தால் வெறிபிடித்த அரக்கத்தலைவன், கையில் கதையைப் பற்றிக் கொண்டு, ஊழிக்கால அக்னியைப் போல் ஒளிவீசிக் கொண்டு, வானரர்களைக் கடுமையாகத் தாக்கினான். (54)

அப்போது, பேராண்மை பொருந்திய வானரன் ரிஷபன் என்பவன் தாவியெழுந்து, இராவணன் தம்பியான மத்தானீகனை (மகாபார்சுவனின் இன்னொரு பெயர், இது) நெருங்கி, அவன் எதிரில் வந்து நின்றான். (55)

எதிரே வந்து நிற்கும் மலைபோல் பேருடல் கொண்ட வானரனை, கோபங்கொண்ட அவன் (அரக்கன்) வஜ்ராயுதத்தைப் போன்ற கதாயுதத்தால் மார்பில் தாக்கினான். (56)

வானரோத்தமனான ரிஷபன், கதையின் தாக்குதலால் மார்பு பிளந்து உடல் நடுங்க, ஏராளமான இரத்தத்தைப் பெருகவிட்டான். (57)

வெகுநேரம் சென்று உணர்வு பெற்ற வானரக் காளையான ரிஷபன், கோபத்தால் உதடுகள் துடிக்க, மகாபார்சுவனைப் பார்த்தான். (58)

விரைந்து செயல்படுபவனும் வானரவீரர்களில் முக்கியமானவனுமான ரிஷபன், வெகுவேகமாகச் சென்று அரக்கனை நெருங்கி, முஷ்டியைச் சுழற்றி, அவன் மார்பில் வலுவாகத் தாக்கினான். (59)

ஆணிவேர் அறுக்கப்பட்ட மரத்தைப் போல, உடல் உறுப்புக்கள் எல்லாம் இரத்தத்தால் நனைக்கப் பெற்றவனாய், மடாரென்று அவன் தரையில் விழுந்தான். வெற்றிக்களிப்பில் மிதந்த ரிஷபன், பயங்கரமான யமதண்டம் போன்ற கதையை, அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டான். (60)

சிறிது நேரம் உயிரற்றவன் போல் கிடந்த, செவ்வொளி சூழ்ந்த சந்தியாகால மேகம் போல், இரத்தச் சிவப்புக் கலந்த கார்மேக வண்ணம் கொண்டவனும் அமரர் பகைவனுமான அவன், திடீரென்று உணர்வு பெற்றுத் துள்ளியெழுந்து, வருணனின் மைந்தனான ரிஷபனைத் தாக்கினான். (61)

அந்தப் பெருவீரனுடைய கதையை ரிஷபன் சடாரென்று கைப்பற்றினான். பயங்கரமான அந்தக் கதையைப் பற்றிக் கொண்டு, பலதடவைகள் சுழற்றி, மாவீரனான மகாபார்சுவனைப் போர்க்களத்தில் தாக்கினான். (62)

தன்னுடைய கதையினாலேயே தாக்கப்பட்டு பற்களும் கண்களும் சிதறிப்போக, வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட மலைபோல் மகாபார்சுவன் கீழே விழுந்தான். (63)

கண்கள் தரையில் சிதறி விழ, வீரமும் ஆயுளும் ஒழிந்து போக, அந்த அரக்கன் தரையில் விழுந்ததும் அரக்கர்படை தலைதெறிக்க ஓடிப் போயிற்று. (64)

உந்மத்தஸ்து தத3ா த்3ருஷ்ட்வா க3தாஸூம் ப்4ராதரம் ரணே ।
சுகோப பரமக்ருத்3த4: ப்ரளயாக்3நிஸமத்3யுதி: ॥ (65)

தத: ஸமாத3ாய க3த3ாம் ஸ வீரோ வித்ராஸயந் வாநரஸைந்யமுக்3ரம் ।
து3த்3ராவ வேகே3ந து ஸைந்யமத்4யே த3ஹந் யத2ா வஹ்நிரதிப்ரசண்ட3: ॥ (66)

ஆபதந்தம் தத3ா த்3ருஷ்ட்வா ராக்ஷஸம் பீ4மவிக்ரமம் ।
ஶைலமாத3ாய து3த்3ராவ க3வாக்ஷ: பர்வதோபம: ॥ (67)

ஜிக4ாம்ஸு ராக்ஷஸம் பீ4மம் தம் ஶைலேந மஹாப3ல: ।
ஆபதந்தம் தத3ா த்3ருஷ்ட்வா உந்மத்தோऽபி மஹாகி3ரிம் ॥
சிச்சே2த3 க3த3யா வீர: ஶதத4ா தத்ர ஸம்யுகே3 ॥ (68)

சூர்ணீக்ருதம் கி3ரிம் த்3ருஷ்ட்வா ரக்ஷஸா கபிகுஞ்ஜர: ।
விஸ்மிதோऽபூ4ந்மஹாபா3ஹுர்ஜக3ர்ஜ ச முஹுர்முஹு: ॥ (69)

உந்மத்தஸ்து ஸுஸங்க்ருத்3தே4ா ஜ்வலந்தீம் ராக்ஷஸோத்தம: ।
க3த3ாமாத3ாய வேகே3ந கபேர்வக்ஷஸ்யதாட3யத் ॥ (70)

ஸ தயா க3த3யா வீரஸ்தாடி3த: கபிகுஞ்ஜர: ।
பபாத பூ4மௌ நி:ஸம்க்ஞ: ஸுஸ்ராவ ருதி4ரம் ப3ஹு ॥ (71)

புந: ஸம்க்ஞாமத2ாஸ்த2ாய வாநர: ஸ ஸமுத்தி2த: ।
தலேந தாட3யாமாஸ ததஸ்தஸ்ய ஶிர: கபி: ॥ (72)

தேந ப்ரதாடி3தோ வீரோ ராக்ஷஸ: பர்வதோபம: ।
விஸ்ரஸ்தத3ந்தநயநோ நிபபாத மஹீதலே ॥
ஸுஸ்ராவ ருதி4ரம் ஶோஷ்ணம் க3தாஸுஶ்ச ததோऽப4வத் ॥ (73)

தஸ்மிந் ஹதே ப்4ராதரி ராவணஸ்ய தந்நைர்ருதாநாம் ப3லமர்ணவாப4ம் ।
த்யக்தாயுத4ம் கேவலஜீவிதார்த2ம் து3த்3ராவ பி4ந்நார்ணவஸந்நிகாஶம் ॥ (74)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஸப்ததிதம: ஸர்க3: ॥

ஏகஸப்ததிதம: ஸர்க3:

அதிகாயவத4:

ஸ்வப3லம் வ்யதி2தம் த்3ருஷ்ட்வா துமுலம் ரோமஹர்ஷணம் ।
ப்4ராத்ரூம்ஶ்ச விஹதாந் த்3ருஷ்ட்வா ஶக்ரதுல்யபராக்ரமாந் ॥ (1)

பித்ருவ்யௌ சாபி ஸந்த்3ருஶ்ய ஸமரே ஸந்நிஷூதி3தௌ ।
யுத்3தே4ாந்மத்தம் ச மத்தம் ச ப்4ராதரௌ ராக்ஷஸர்ஷபௌ4 ॥ (2)

சுகோப ச மஹாதேஜா ப்3ரஹ்மத3த்தவரோ யுதி4 ।
அதிகாயோऽத்3ரிஸங்காஶோ தே3வத3ாநவத3ர்பஹா ॥ (3)

ஊழிக்காலத் தீ போன்று சுட்டெரிக்க வல்ல உன்மத்தன், தன் சகோதரன் (மகாபார்சுவன்) போரில் உயிர் இழந்ததைக் கண்டு மிகவும் வெறிபிடித்துக் கோபம் கொண்டான். (65)

பின்னர், அந்த வீரன் கையில் கதையை எடுத்துக் கொண்டு, பேராற்றல் மிக்க வானரப் படையை அலறச் செய்து கொண்டு, மிகவும் உக்கிரமாகக் கொழுந்து விட்டெரியும் அக்னியைப் போல் எதிரிகளை எரித்துக் கொண்டு, வானரப்படையினூடே வேகமாக ஓடினான். (66)

பயங்கரமான ஆற்றல்கொண்ட அந்த அரக்கன் தாக்க வருவதைக் கண்டு, மலைபோன்ற உருவம் படைத்த கவாக்ஷன், ஒரு மலையை ஏந்திக் கொண்டு எதிர்த்தோடினான். (67)

மகாபலம் கொண்ட கவாக்ஷன், அந்த மலையைக் கொண்டு பயங்கரமான அந்த அரக்கனைக் கொல்ல விரும்பினான். உன்மத்தன், தன்னை நோக்கி எறியப்பட்ட மலையை, தன் கதாயுதத்தால் சுக்குநூறாகப் பொடியச் செய்தான். (68)

அந்த அரக்கனால், மலை தூள்தூளாக்கப்பட்டதைக் கண்ட வானரவீரன் மிகவும் வியப்படைந்தான். தோள்வலி மிக்க அவன் பலமுறை கர்ஜனை செய்தான். (69)

மிகவும் கோபம் கொண்ட அரக்கர் மாணிக்கமான உன்மத்தன், நெருப்புக் கக்கும் கதையை எடுத்து, வானரனுடைய மார்பில் பலங்கொண்ட மட்டும் தாக்கினான். (70)

கதையினால் தாக்கப்பட்ட வானரவீரன் உணர்விழந்து தரையில் விழுந்தான். ஏராளமான இரத்தத்தைப் பெருக்கினான். (71)

பின்னர், தன்னுணர்வு பெற்று எழுந்த வானர வீரன் (கவாக்ஷன்), அவனுடைய (உன்மத்தனுடைய) தலையில் தன் உள்ளங்கையால் அறைந்தான். (72)

நிலைகுலையாத மலை நிகர் வீரனான அரக்கன், அந்த அடியினால் பற்களும் கண்களும் சிதறிவிழ தரையில் சாய்ந்தான்; வெம்மையான இரத்தத்தைப் பெருகவிட்டான்; உயிர் அற்றவனாகவும் ஆனான். (73)

இராவணனுடைய சகோதரன் மகாபார்சுவன் மாய்க்கப்பட்டதும், கடல்போல் எல்லை காண முடியாதிருந்த அரக்கர் படை, படைக்கலன்களை எறிந்துவிட்டு, உயிர்பிழைத்தால் போதும் என்று கரை உடைந்த பெருங்கடல்போல் நாற்புறமும் சிதறி ஓடத் தொடங்கிற்று. (74)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தொன்று

அதிகாயன் மாண்டான்!

மலைக்கு ஒப்பானவனும், தேவ–அசுரர்களின் அகந்தையை அடக்குபவனும், போர்க்களத்தில் பேராண்மையைக் காட்டுபவனும், பிரும்மதேவரிடமிருந்து வரங்கள் பெற்றவனுமான அதிகாயன், தனது பக்கப் படை, அச்சத்தால் உரோமங்கள் குத்திட்டு நிற்க, குழப்பமான மனக்கலக்கத்துடன் கூச்சலிட்டுக் கொண்டு இருப்பதையும், போரில் இந்திரனுக்கு நிகரான வல்லமை கொண்ட தன் சகோதரர்களும் தன் சிற்றப்பன்களும் (மகோதரனும் மகாபார்சுவனும்) மாய்க்கப்பட்டதையும் கண்டு கோபம் கொண்டான். (1–3)

ஸ பா4ஸ்கரஸஹஸ்ரஸ்ய ஸங்கா4தமிவ பா4ஸ்வரம் ।
ரத2மாஸ்தா2ய ஶக்ராரிரபி4து3த்3ராவ வாநராந் ॥ (4)

ஸ விஸ்பா2ர்ய மஹச்சாபம் கிரீடீ ம்ருஷ்டகுண்ட3ல: ।
நாம விஶ்ராவயாமாஸ நநாத3 ச மஹாஸ்வநம் ॥ (5)

தேந ஸிம்ஹ ப்ரணாதே3ந நாமவிஶ்ராவணேந ச ।
ஜ்யாஶப்3தே3ந ச பீ4மேந த்ராஸயாமாஸ வாநராந் ॥ (6)

தே த்3ருஷ்ட்வா தே3ஹமாஹாத்ம்யம் கும்ப4கர்ணோऽயமுத்தி2த: ।
ப4யார்தா வாநரா: ஸர்வே ஸம்ஶ்ரயந்தே பரஸ்பரம் ॥ (7)

தே தஸ்ய ரூபமாலோக்ய யதா2 விஷ்ணோஸ்த்ரிவிக்ரமே ।
ப4யாத்3வாநரயூதா2ஸ்தே வித்3ரவந்தி ததஸ்தத: ॥ (8)

தேऽதிகாயம் ஸமாஸாத்3ய வாநரா மூட4சேதஸ: ।
ஶரண்யம் ஶரணம் ஜக்3முர்லக்ஷ்மணாக்3ரஜமாஹவே ॥ (9)

ததோऽதிகாயம் காகுத்ஸ்தோ2 ரத2ஸ்த2ம் பர்வதோபமம் ।
த3த3ர்ஶ த4ந்விநம் தூ3ராத்3க3ர்ஜந்தம் காலமேக4வத் ॥ (10)

ஸ தம் த்3ருஷ்ட்வா மஹாகாயம் ராக4வஸ்து விஸிஷ்மியே ।
வாநராந் ஸாந்த்வயித்வாத2 விபீ4ஷணமுவாச ஹ ॥ (11)

கோऽஸௌ பர்வதஸங்காஶோ த4நுஷ்மாந் ஹரிலோசந: ।
யுக்தே ஹயஸஹஸ்ரேண விஶாலே ஸ்யந்த3நே ஸ்தி2த: ॥ (12)

ய ஏஷ நிஶிதை: ஶூலை: ஸுதீக்ஷ்ணை: ப்ராஸதோமரை: ।
அர்சிஷ்மத்3பி4ர்வ்ருதோ பா4தி பூ4தைரிவ மஹேஶ்வர: ॥ (13)

காலஜிஹ்வாப்ரகாஶாபி4ர்ய ஏஷோऽதிவிராஜதே ।
ஆவ்ருதோ ரத2ஶக்தீபி4ர்வித்3யுத்3பி4ரிவ தோயத3: ॥ (14)

த4நூம்ஷி சாஸ்ய ஸஜ்யாநி ஹேமப்ருஷ்டா2நி ஸர்வஶ: ।
ஶோப4யந்தி ரத2ஶ்ரேஷ்ட2ம் ஶக்ரசாப இவாம்ப3ரம் ॥ (15)

க ஏஷ ரக்ஷ:ஶார்தூ3லோ ரணபூ4மிம் விராஜயந் ।
அப்4யேதி ரதி2நாம் ஶ்ரேஷ்டோ2 ரதே2நாதி3த்யதேஜஸா ॥ (16)

த்4வஜஶ்ருங்க3ப்ரதிஷ்டே2ந ராஹுணாபி4விராஜதே ।
ஸூர்யரஶ்மிநிபை4ர்பா3ணைர்தி3ஶோ த3ஶ விராஜயந் ॥ (17)

த்ரிணதம் மேக4நிர்ஹ்ராத3ம் ஹேமப்ருஷ்ட2மலங்க்ருதம் ।
ஶதக்ரதுத4நு:ப்ரக்2யம் த4நுஶ்சாஸ்ய விராஜதே ॥ (18)

இந்திரனின் பகைவனான அவன், ஆயிரக்கணக்கான சூரியன்கள் ஒன்று கூடியதைப் போல் மகா பிரகாசத்துடன் தேரில் ஏறிக்கொண்டு, வானரர்களைத் துரத்தியடித்தான். (4)

மகுடம் புனைந்தவனும், ஜொலிக்கும் குண்டலங்களை அணிந்திருந்தவனுமான அவன், ஒரு மாபெரும் வில்லில் நாணேற்றி டங்காரம் செய்து, தன் பெயரைச் சொல்லி அறிவித்துக் கொண்டான். (இவ்வாறு செய்வது அக்காலத்திய பழக்கம்) பின், பெருங்குரலில் சிம்மநாதம் செய்தான். சிங்கநாதத்தாலும் தன் பெயரை உரக்க அறிவித்துக் கொள்வதாலும் பயங்கரமான நாணொலியாலும், வானரர்களை நடுநடுங்கச் செய்தான். (5,6)

அவனுடைய மாபெரும் உருவத்தைக் கண்ட வானரர்கள், 'இதோ, கும்பகர்ணன் மறுபடியும் எழுந்து வந்து விட்டான்!' என்று பேரச்சம் கொண்டு, ஒருவரையொருவர் (பயத்தால்) கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். (7)

திரிவிக்ரம அவதாரத்தின்போது, மிகப்பெரிய உருவத்தை எடுத்துக் கொண்ட மகாவிஷ்ணுவைப் போன்று மிகப்பெரிய வடிவம் கொண்ட அவனைப் பார்த்து, பயந்துபோன வானரவீரர்கள் இங்குமங்கும் தலைதெறிக்க ஓடிச் சென்றார்கள். (8)

அதிகாயனை அருகில் சென்று பார்த்ததுமே மனம் கலங்கிய வானரர்கள், அந்தப் போர்முனையில் அடைக்கலம் தரத்தக்கவரான இலக்குவனின் மூத்த சகோதரனை (இராமபிரானை)ப் புகலடைந்தார்கள். (9)

அப்போது, மலை போன்ற பெரிய தேரில் அமர்ந்து கையில் வில்லைப் பிடித்துக் கொண்டு, ஊழிக்கால மேகம் போல் கர்ஜனை செய்து கொண்டிருக்கும் அவனை, இராமபிரான் தொலைவில் இருந்தவாறே நோக்கினார். (10)

பெரிய உடலுடன் விளங்கிய அவனை (அதிகாயனை)க் கண்டு அவர் ஆச்சரியமடைந்தார். வானரர்களைச் சமாதானப்படுத்திவிட்டு, விபீஷணனைப் பார்த்துக் கேட்டார்— (11)

''ஆயிரம் குதிரைகள் பூட்டிய விசாலமான ரதத்தில் கையில் வில்லைப் பிடித்துக் கொண்டு, சிங்கத்தின் பார்வையுடனும், மலை போல் பெரிய வடிவத்துடனும் நின்று கொண்டிருக்கும் இவன், யார்? இவன் கூர்மையான சூலங்கள், பட்டை தீட்டப்பட்டுப் பளபளக்கும் வல்லயங்கள், எறியீட்டிகள் போன்றவைகளால் சூழப்பட்டு, பூதகணங்களால் சூழப்பட்ட பரமேசுவரன் போல் விளங்குகிறானே! (12,13)

இது மட்டுமா? காலதேவதையின் நாக்கைப் போல் பிரகாசிக்கும் ரதசக்தி தேவதைகளால் சூழப்பெற்று, இந்த வீர அரக்கன், மின்னற்கூட்டங்களால் சூழப்பட்ட கருமுகில் போல் விளங்குகிறான். (காலதேவதையின் தொங்கும் நாக்கு, நிச்சயமான அழிவைக் கோடிட்டுக் காட்டுகிறது.) (14)

நாணேற்றப்பட்டவைகளும், பின்புறம் பொற்பட்டை கொண்டவைகளுமான விற்கள், வானவில் ஆகாயத்தை அழகுபடுத்துவது போல, மேலான ரதத்தின் எல்லாப் பக்கங்களையும் அழகுறச் செய்கின்றன. கதிரவன் போல் ஒளிவீசும் ரதத்தில் இருந்துகொண்டு, போர்க்களத்தையே ஒளிபெறச் செய்துகொண்டு எதிர்த்து வரும் தேர்வீரர்களில் சிறந்தவனும் அரக்கர்களில் புலி போன்றவனுமான இவன் யார்? (15,16)

கொடிமரத்தின் மேல் பகுதியில் ராகுவின் சித்திரம் தீட்டிய கொடி விளங்குகிறது. சூரியனின் செங்கதிர்களுக்கொப்பான பாணங்களால் பத்துத் திசைகளும் ஒளி பெறுகின்றன. (17)

மூன்று இடங்களில் வளைந்ததும், மேகம் போல் ஒலி எழுப்புவதும், பின்புறம் பொற்பட்டையால் அலங்கரிக்கப்பட்டதும், இந்திரனுடைய வில்லுக்கு ஒப்பானதுமான ஒரு வில், இவன் கையில் விளங்குகிறது. (18)

ஸத்$_4$வஜ: ஸபதாகஸ்ச ஸாநுகர்ஷோ மஹாரத$_2$: ।
சது:ஸாதி$_3$ஸமாயுக்தோ மேக$_4$ஸ்தநிதநி:ஸ்வந: ॥ (19)

விம்ஶதிர்த$_3$ஶ சாஷ்டௌ ச தூண்யோ஽ஸ்ய ரத$_2$மாஸ்தி$_2$தா: ।
கார்முகாணி ச பீ$_4$மாநி ஜ்யாஶ்ச காஞ்சநபிங்க$_3$ளா: ॥ (20)

த்$_3$வௌ ச க$_2$ட்$_3$கௌ$_3$ ரத$_2$க$_3$தௌ பார்ஸ்வஸ்தௌ$_2$ பார்ஸ்வஶோபி$_4$தௌ ।
சதுர்ஹஸ்தத்ஸ்ருயுதௌ வ்யக்தஹஸ்தத$_3$ஶாயதௌ ॥ (21)

ரக்தகண்ட$_2$கு$_3$ணோ தீ$_4$ரோ மஹாபர்வதஸந்நிப$_4$: ।
கால: காலமஹாவக்த்ரோ மேக$_4$ஸ்த$_2$ இவ பா$_4$ஸ்கர: ॥ (22)

காஞ்சநாங்க$_3$த$_3$நத்$_3$தா$_4$ப்$_4$யாம் பு$_4$ஜாப்$_4$யாமேஷ ஶோப$_4$தே ।
ஶ்ருங்கா$_3$ப்$_4$யாமிவ துங்கா$_3$ப்$_4$யாம் ஹிமவாந் பர்வதோத்தம: ॥ (23)

குண்ட$_3$லாப்$_4$யாம் து யஸ்யைதத்$_3$பா$_4$தி வக்த்ரம் ஶுபே$_4$க்ஷணம் ।
புநர்வஸ்வந்தரக$_3$தம் பூர்ணபி$_3$ம்ப$_3$மிவைந்த$_3$வம் ॥ (24)

ஆசக்ஷ்வ மே மஹாபா$_3$ஹோ த்வமேநம் ராக்ஷஸோத்தமம் ।
யம் த்$_3$ருஷ்ட்வா வாநரா: ஸர்வே ப$_4$யார்தா வித்$_3$ருதா தி$_3$ஶ: ॥ (25)

ஸ ப்ருஷ்டோ ராஜபுத்ரேண ராமேணாமிததேஜஸா ।
ஆசசக்ஷே மஹாதேஜா ராக$_4$வாய விபீ$_4$ஷண: ॥ (26)

த$_3$ஶக்$_3$ரீவோ மஹாதேஜா ராஜா வைஶ்ரவணாநுஜ: ।
பீ$_4$மகர்மா மஹோத்ஸாஹோ ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ॥ (27)

தஸ்யாஸீத்$_3$வீர்யவாந் புத்ரோ ராவணப்ரதிமோ ரணே ।
வ்ருத்$_3$த$_4$ஸேவீ ஶ்ருதித$_4$ர: ஸர்வாஸ்த்ரவிது$_3$ஷாம் வர: ॥ (28)

அஶ்வப்ருஷ்டே$_2$ ரதே$_2$ நாகே$_3$ க$_2$ட்$_3$கே$_3$ த$_4$நுஷி கர்ஷணே ।
பே$_4$தே$_3$ ஸாந்த்வே ச தா$_3$நே ச நயே மந்த்ரே ச ஸம்மத: ॥ (29)

யஸ்ய பா$_3$ஹூ ஸமாஶ்ரித்ய லங்கா வஸதி நிர்ப$_4$யா ।
தநயம் தா$_4$ந்யமாலிந்யா அதிகாயமிமம் விது$_3$: ॥ (30)

ஏதேநாராதி$_4$தோ ப்$_3$ரஹ்மா தபஸா பா$_4$விதாத்மநா ।
அஸ்த்ராணி சாப்யவாப்தாநி ரிபவஶ்ச பராஜிதா: ॥ (31)

ஸுராஸுரைரவத்$_4$யத்வம் த$_3$த்தமஸ்மை ஸ்வயம்பு$_4$வா ।
ஏதச்ச கவசம் தி$_3$வ்யம் ரத$_2$ஶ்சைஷோ஽ர்கபா$_4$ஸ்வர: ॥ (32)

ஏதேந ஶதஶோ தே$_3$வா தா$_3$நவாஶ்ச பராஜிதா: ।
ரக்ஷிதாநி ச ரக்ஷாம்ஸி யக்ஷாஶ்சாபி நிஷூதி$_3$தா: ॥ (33)

இவனுடைய விசாலமான தேரில், தோரணங்கள், கொடிகள், (தேரின் அடிப்புறத்தில் அதற்கு ஆதாரமாக இணைக்கப்படும் மரக்கட்டையாலான) நுகத்தடி ஆகியவையும் காணப்படுகின்றன. நான்கு தேர்ப்பாகன்கள் இருக்கிறார்கள். மேக கர்ஜனைக்கு நிகரான ஒலி எழுப்புகிறது. (19)

இவனுடைய தேரில் இருபது அம்புறாத்தூணிகள், பயங்கரமான பத்து கார்முகங்கள் (வில்லில் ஒருவகை), பொன்னிறமும் வெளிர்மஞ்சள் நிறமுமான பத்து நாண்கயிறுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. (20)

தேரின் இரு பக்கங்களிலும் இரண்டு கத்திகள் அழகுடன் விளங்குகின்றன. அவற்றின் கைப்பிடி நான்கு முழ அளவும், நீளம் பத்து முழ அளவும் உள்ளன. (21)

கழுத்தில் செந்நிற மாலை அணிந்தவன்; தீரன்; மாமலையைப் போன்ற வடிவு கொண்டவன்; கருவண்ணத்தன்; காலதேவதையைப் போன்று பெரும் வாயை உடையவன்; மேகத்தின் நடுவிலிருக்கும் சூரியன் போன்றவன். மலைகளில் மிகச்சிறந்ததான இமயமலை உயரமான இரு சிகரங்களால் கம்பீரமாக நிற்பதைப் போல, பொன்னாலான தோள்வளைகள் புனைந்த கைகளால் இவன் பிரகாசிக்கிறான். (22,23)

அழகான கண்களைக் கொண்ட இவனுடைய முகம் இருபுறத்துச் செவிகளிலும் விளங்கும் குண்டலங்களால், 'புனர்வசு' என்னும் இரு தாரகைகளுக்கிடையே விளங்கும் முழுநிலா போல் ஒளிவீசுகிறது. (24)

தோள்வலிமை கொண்டவனே! அரக்கர்களில் மணியைப் போன்ற எவனைக் கண்டு, எல்லா வானரர்களும் மிகவும் அச்சமடைந்து எல்லாத் திசைகளிலும் ஓடிச் செல்கிறார்களோ, அப்படிப்பட்ட இந்த அரக்கன் யார்? என்பதைச் சொல்.'' (25)

அரசகுமாரரும் ஒப்பற்ற பராக்கிரமசாலியுமான இராமபிரானால் இவ்வாறு கேட்கப்பட்ட மாவீரனான விபீஷணன், அவருக்குப் (பின்வருமாறு) பதில் கூறினான்— (26)

''குபேரனின் தம்பியும், அரக்க மன்னனும், பத்துத் தலையனும், பேராண்மை கொண்டவனுமான இராவணன் கொடுஞ்செயல்களைச் செய்பவன்; மிகவும் ஊக்கம் கொண்டவன். ஆற்றலில் இராவணனைப் போன்றவனும் மாவீரனுமான ஒரு புதல்வன் அவனுக்குப் பிறந்தான். அவன் (புதல்வன்) முதியோர்களிடம் பணிந்து நடப்பவன்; மறைகளைக் கற்றறிந்தவன்; அஸ்திரக் கலையில் வல்லுநர்கள் அனைவரைக் காட்டிலும் மேலானவன். (27,28)

குதிரையேற்றம், தேரேற்றம், யானையேற்றம் முதலியவைகளிலும், கத்திச் சண்டையிலும், வில்வித்தையிலும், நாணேற்றுவதிலும், சாம–தான–பேத உபாயங்களிலும், அரசநீதியிலும், மந்திராலோசனையிலும் தலைசிறந்தவன். (29)

இவனுடைய தோள்வலிமையை நம்பி, இலங்கை அச்சமில்லாமல் இருக்கிறது. இராவணனுடைய (இன்னொரு மனைவியான) தான்யமாலினியின் மைந்தனான இவன் அதிகாயன் என்று எல்லோராலும் அறியப்பட்டவன். (30)

தூய உள்ளத்துடன் தவம் செய்து பிரும்மாவை வழிபட்டான். அதனால், பலவகையான அஸ்திரங்களைப் பெற்றான்; எதிரிகளையும் தோல்வியுறச் செய்தான். (31)

'தேவர்களாலும் அசுரர்களாலும் நீ கொல்லப்படமாட்டாய்' என்ற வரத்தை, நான்முகன் இவனுக்கு அளித்தார். அத்துடன் திவ்யமான (எந்த ஆயுதத்தாலும் பிளக்க முடியாத) கவசமும், சூரியன் போல் ஒளிவீசும் தேரும் அளிக்கப்பட்டன. இவன் தேவர்களையும் தானவர்களையும் நூற்றுக்கணக்கான தடவைகள் வெற்றி கொண்டிருக்கிறான். அரக்கர்களைக் காப்பாற்றி இருக்கிறான். யக்ஷர்களை அடித்துத் துரத்தியிருக்கிறான். (32,33)

வஜ்ரம் விஷ்டம்பி$_4$தம் யேந ப$_3$ாணைரிந்த்$_3$ரஸ்ய தீ$_4$மத: ।
பாஶ: ஸலிலராஜஸ்ய ரணே ப்ரதிஹதஸ்தத$_2$ா ॥ (34)

ஏஷோऽதிகாயோ ப$_3$லவாந் ராக்ஷஸாநாமத$_2$ர்ஷப$_4$: ।
ராவணஸ்ய ஸுதோ தீ$_4$மாந் தே$_3$வதா$_3$நவத$_3$ர்பஹா ॥ (35)

தத$_3$ஸ்மிந் க்ரியதாம் யத்ந: க்ஷிப்ரம் புருஷபுங்க$_3$வ ।
புரா வாநரஸைந்யாநி க்ஷயம் நயதி ஸாயகை: ॥ (36)

ததோऽதிகாயோ ப$_3$லவாந் ப்ரவிஶ்ய ஹரிவாஹிநீம் ।
விஸ்ப$_2$ாரயமாஸ த$_4$நுர்நநாத$_3$ ச புந: புந: ॥ (37)

தம் பீ$_4$மவபுஷம் த்$_3$ருஷ்ட்வா ரத$_2$ஸ்த$_2$ம் ரதி$_2$நாம் வரம் ।
அபி$_4$பேதுர்மஹாத்மாநோ யே ப்ரதா$_4$நா வநௌகஸ: ॥ (38)

குமுதோ$_3$ த்$_3$விவிதோ$_3$ மைந்தோ$_3$ நீல: ஶரப$_4$ ஏவ ச ।
பாத$_3$பைர்கி$_3$ரிஶ்ருங்கை$_3$ஶ்ச யுக$_3$பத் ஸமபி$_4$த்$_3$ரவந் ॥ (39)

தேஷாம் வ்ருக்ஷாம்ஶ்ச ஶைலாம்ஶ்ச ஶரை: காஞ்சநபூ$_4$ஷணை: ।
அதிகாயோ மஹாதேஜாஶ்சிச்சே$_2$தா$_3$ஸ்த்ரவிதா$_3$ம் வர: ॥ (40)

தாம்ஶ்சைவ ஸர்வாந் ஸ ஹரீஞ்ஶரை: ஸர்வாயஸைர்ப$_3$லீ ।
வ்யதா$_4$பி$_4$முக$_2$ாந் ஸங்க்$_2$யே பீ$_4$மகாயோ நிஶாசர: ॥ (41)

தேऽர்தி$_3$தா ப$_3$ாணவர்ஷேண ப$_4$க்$_3$நகா$_3$த்ரா: ப்லவங்க$_3$மா: ।
ந ஶேகுரதிகாயஸ்ய ப்ரதிகர்தும் மஹாரணே ॥ (42)

தத் ஸைந்யம் ஹரிவீராணாம் த்ராஸயாமாஸ ராக்ஷஸ: ।
ம்ருக$_3$யூத$_2$மிவ க்ருத்$_3$தோ$_4$ ஹரிர்யௌவநத$_3$ர்பித: ॥ (43)

ஸ ராக்ஷஸேந்த்$_3$ரோ ஹரிஸைந்யமத்$_4$யே நாயுத்$_4$யமாநம் நிஜகா$_4$ந கஞ்சித் ।
உபேத்ய ராமம் ஸ த$_4$நு:கலாபீ ஸக$_3$ர்விதம் வாக்யமித$_3$ம் ப$_3$ப$_4$ாஷே ॥ (44)

ரதே$_2$ ஸ்தி$_2$தோऽஹம் ஶரசாபபாணிர்–
ந ப்ராக்ருதம் கஞ்சந யோத$_4$யாமி ।
யஶ்சாஸ்தி கஶ்சித்$_3$வ்யவஸாயயுக்தோ
த$_3$தா$_3$து மே க்ஷிப்ரமிஹாத்$_3$ய யுத்$_3$த$_4$ம் ॥ (45)

தத்தஸ்ய வாக்யம் ப்$_3$ருவதோ நிஶம்ய சுகோப ஸௌமித்ரிரமித்ரஹந்தா ।
அம்ருஷ்யமாணஶ்ச ஸமுத்பபாத ஜக்$_3$ராஹ சாபம் ச தத: ஸ்மயித்வா ॥ (46)

க்ருத்$_3$த$_4$: ஸௌமித்ரிருத்பத்ய தூணாதா$_3$க்ஷிப்ய ஸாயகம் ।
புரஸ்தாத$_3$திகாயஸ்ய விசகர்ஷ மஹத்$_3$த$_4$நு: ॥ (47)

பூரயந் ஸ மஹீம் ஶைலாநாகாஶம் ஸாக$_3$ரம் தி$_3$ஶ: ।
ஜ்யாஶப்$_3$தோ$_3$ லக்ஷ்மணஸ்யோக்$_3$ரஸ்த்ராஸயந் ரஜநீசராந் ॥ (48)

நுண்ணறிவு கொண்ட இவன், இந்திரனுடைய வஜ்ராயுதத்தைத் தன் பாணங்களால் அடக்கியிருக்கிறான். போரில், வருணதேவனுடைய ஆயுதமான பாசமும் செயலிழந்ததாகச் செய்யப்பட்டது. (34)

மேலும், இராவணனின் புதல்வனான இந்த அதிகாயன் பலம் மிகுந்தவன்; அரக்கர்களில் காளை போன்றவன்; நுண்ணறிவு கொண்டவன்; தேவ–தானவர்களின் கொட்டத்தை அடக்கியவன். (35)

இவன், வானரப் படைகளை அம்பினால் ஒழித்துக் கட்டுவதற்கு முன், புருஷோத்தமரே! இவனை அடக்குவதற்கான முயற்சி உடனே செய்யப்பட வேண்டும்.'' (36)

இதனிடையில் பலம் மிகுந்த அதிகாயன் வானரப் படையினுள் புகுந்து, வில்லில் நாணேற்றி டங்காரம் செய்ததுடன், மீண்டும் மீண்டும் சிம்மநாதம் எழுப்பினான். (37)

பேராற்றல் கொண்ட வானரத் தலைவர்கள், தேரில் வீற்றிருந்தவனும் தேர்வீரர்களில் சிறந்தவனும் பயங்கரமான உடலமைப்புக் கொண்டவனுமான அவனைக் கண்டதும், எதிர்த்துச் சென்றார்கள். (38)

குமுதன், த்விவிதன், மைந்தன், நீலன், சரபன் முதலானவர்கள் மரங்களாலும் மலைமுகடுகளாலும் ஒரே சமயத்தில் அவனைத் தாக்கினார்கள். (39)

அஸ்திரக்கலையில் நிபுணனும் பராக்கிரமம் மிக்கவனுமான அதிகாயன், பொன்வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட பாணங்களால் அந்த மரங்களையும் மலைச்சிகரங்களையும் வெட்டித் தள்ளினான். மேலும், பலம் பொருந்தியவனும் பேருடல் கொண்டவனுமான அந்த அரக்கன், சமர்க்களத்தில் எதிரே வந்த எல்லா வானரர்களையும் இரும்பாலான பாணங்களால் தாக்கினான். (40,41)

போர்முனையில், சரமாரியால் உடல் பிளக்கப்பட்டு வலி தாங்க முடியாமல் தவித்த அந்த வானரர்கள், அதிகாயனைத் திருப்பித் தாக்க இயலாதவர்களாக இருந்தார்கள். (42)

வாலிப மிடுக்குள்ள ஒரு சிங்கம், கோபம் கொண்டு மான்கூட்டத்தை பயந்தோடச் செய்வதைப் போல, அந்த அரக்கன் வானரவீரர்களின் படைக்கு அச்சத்தை விளைவித்தான். (43)

அந்த அரக்கத் தலைவன், வானரப்படையில் தன்னை எதிர்த்துப் போரிடாத எவரையும் தாக்கவில்லை. (இவ்வாறு, போர் அறத்தைப் பேணிக் காத்தான்.) வில்–அம்புறாத்தூணி ஏந்திய அவன், இராமனை அணுகி வந்து அகந்தையை விளக்கிக் காட்டும் பின்வரும் சொற்களைக் கூறினான்— (44)

''(போர் செய்வதற்கு ஆயத்தமாக) கையில் வில்லும் அம்பும் தாங்கிக் கொண்டு, தேரில் நான் நின்று கொண்டிருக்கிறேன். பாமரன் எவனுடனும் நான் போர் செய்ய மாட்டேன். (மாவீரனுடன்தான் போர் புரிவேன். அதனால்,) எவனொருவன் போர் செய்யும் துணிச்சலுடன் இருக்கிறானோ, அவன் இப்போதே, இங்கேயே என்னுடன் போர்புரிய வருவானாக!'' (45)

இவ்வாறு அவன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு, எதிரிகளை மாய்க்கும் இலக்குவன் மிகவும் கோபம் கொண்டான். பொறுமையிழந்து, துள்ளியெழுந்து, (அலட்சியமாகப்) புன்சிரிப்பு சிரித்துவிட்டு வில்லில் கையை வைத்தான். (46)

ஆத்திரங்கொண்ட சுமித்திரை மைந்தன் சட்டென்று எழுந்து, அதிகாயனின் கண்முன்னே தன் அம்புறாத்தூணியிலிருந்து ஓர் அம்பை எடுத்து, மாபெரும் வில்லில் பூட்டி வளைத்தான். இலக்குவன் எழுப்பிய பயங்கரமான அந்த நாணொலி, பூமி–மலைகள்–ஆகாயம்–கடல்–திசைகளில் எதிரொலித்து, அரக்கர்களை நடுநடுங்கச் செய்தது. (47,48)

ஸௌமித்ரேஸ்சாபநிர்கே₄ஷம் ஶ்ருத்வா ப்ரதிப₄யம் தத₃ா ।
விஸிஷ்மியே மஹாதேஜா ராக்ஷஸேந்த்₃ராத்மஜோ ப₃லீ ॥ (49)

அத₂ாதிகாய: குபிதோ த்₃ருஷ்ட்வா லக்ஷ்மணமுத்தி₂தம் ।
ஆத₃ாய நிஶிதம் ப₃ாணமித₃ம் வசநமப்₃ரவீத் ॥ (50)

ப₃ாலஸ்த்வமஸி ஸௌமித்ரே விக்ரமேஷ்வவிசக்ஷண: ।
க₃ச்ச₂ கிம் காலஸத்₃ருஶம் மாம் யோத₄யிதுமிச்ச₂ஸி ॥ (51)

ந ஹி மத்₃ப₃ாஹுஸ்ருஷ்டாநாமஸ்த்ராணாம் ஹிமவாநபி ।
ஸோடு₄முத்ஸஹதே வேக₃மந்தரிக்ஷமதோ₂ா மஹீ ॥ (52)

ஸுக₂ப்ரஸுப்தம் காலாக்₃நிம் நிபே₃ாத₄யிதுமிச்ச₂ஸி ।
ந்யஸ்ய சாபம் நிவர்தஸ்வ மா ப்ராணாஞ்ஜஹி மத்₃க₃த: ॥ (53)

அத₂வா த்வம் ப்ரதிஷ்டப்₃தே₄ா ந நிவர்திதுமிச்ச₂ஸி ।
திஷ்ட₂ ப்ராணாந் பரித்யஜ்ய க₃மிஷ்யஸி யமக்ஷயம் ॥ (54)

பஶ்ய மே நிஶிதாந் ப₃ாணாநரித₃ர்பநிஷூத₃நாந் ।
ஈஶ்வராயுத₄ஸங்காஶாந்ஸ்தப்தகாஞ்சநபூ₄ஷணாந் ॥ (55)

ஏஷ தே ஸர்பஸங்காஶோ ப₃ாண: பாஸ்யதி ஶோணிதம் ।
ம்ருக₃ராஜ இவ க்ருத்₃தே₄ா நாக₃ராஜஸ்ய ஶோணிதம் ॥
இத்யேவமுக்த்வா ஸங்க்ருத்₃த₄: ஶரம் த₄நுஷி ஸந்த₃தே₄ ॥ (56)

ஶ்ருத்வாதிகாயஸ்ய வச: ஸரோஷம் ஸக₃ர்விதம் ஸம்யதி ராஜபுத்ர: ।
ஸ ஸஞ்சுகோபாதிப₃லோ மநஸ்வீ உவாச வாக்யம் ச ததோ மஹார்த₂ம் ॥ (57)

ந வாக்யமாத்ரேண ப₄வாந் ப்ரத₄ாநோ
ந கத்த₂நாத் ஸத்புருஷா ப₄வந்தி ।
மயி ஸ்தி₂தே த₄ந்விநி ப₃ாணபாணௌ
நித₃ர்ஶயஸ்வாத்மப₃லம் து₃ராத்மந் ॥ (58)

கர்மணா ஸூசயாத்மாநம் ந விகத்தி₂துமர்ஹஸி ।
பௌருஷேண து யோ யுக்த: ஸ து ஶூர இதி ஸ்ம்ருத: ॥ (59)

ஸர்வாயுத₄ஸமாயுக்தோ த₄ந்வீ த்வம் ரத₂மாஸ்தி₂த: ।
ஶரைர்வா யதி₃ வாப்யஸ்த்ரைர்த₃ர்ஶயஸ்வ பராக்ரமம் ॥ (60)

தத: ஶிரஸ்தே நிஶிதை: பாதயிஷ்யாம்யஹம் ஶரை: ।
மாருத: காலஸம்பக்வம் வ்ருந்தாத்தாலப₂லம் யத₂ா ॥ (61)

அத்₃ய தே மாமகா ப₃ாணாஸ்தப்தகாஞ்சநபூ₄ஷணா: ।
பாஸ்யந்தி ருதி₄ரம் க₃ாத்ராத்₃ப₃ாணஶல்யாந்தரோத்தி₂தம் ॥ (62)

ஆண்மைமிக்கவனும் ஆற்றல் படைத்தவனுமான அரக்க மன்னனின் புதல்வன் (அதிகாயன்), லட்சுமணனுடைய பயங்கரமான வில்லோசையைக் கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தான். (49)

அப்போது அதிகாயன், தன்னுடன் சண்டை போடுவதற்கு இலக்குவன் கிளம்பி விட்டதைக் கண்டு கோபம் கொண்டான். கூர்மையான ஒரு பாணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பின்வருமாறு கூறினான்— (50)

''லட்சுமணா! நீயோ, சிறுவன்! போரில் பராக்கிரமம் காட்டும் விஷயத்தில் பயிற்சி இல்லாதவன். போய்விடு. யமன் போன்ற என்னுடன் சண்டை போட விரும்புகின்றாயா? (51)

என் கையிலிருந்து விடப் பெற்ற அஸ்திரங்களின் வேகத்தை, இமவான்–ஆகாயம்–பூமி ஆகிய எதுவும் பொறுத்துக் கொள்ள வல்லன ஆகமாட்டா. நன்றாகத் தணிந்திருக்கும் ஊழிக்கால அக்னியைத் தூண்டிவிட விரும்புகிறாய்! வில்லை எறிந்துவிட்டு திரும்பிப் போய்விடு. என் பார்வையில் பட்டுவிட்ட நீ (போர் செய்தால், நிச்சயம் உயிருடன் திரும்பமாட்டாய். எனவே), உன் உயிரைத் துறந்துவிடாதே. (காப்பாற்றிக் கொள்.) (52,53)

அகந்தை கொண்ட நீ திரும்பிப் போக விரும்பவில்லையென்றால், அப்படியே நில். (உன்னால் தடுத்து நிறுத்த முடியாத அஸ்திரத்தைச் செலுத்துவேன்.) உன் உயிரைத் துறந்து யமலோகம் போய்ச் சேருவாய்! (54)

என்னுடைய பாணங்களைப் பார்! இவைகள் கூர்மையானவை; எதிரிகளின் செருக்கை அழிக்க வல்லவை; பரமேசுவரனுடைய ஆயுதமாகிய திரிசூலத்திற்கு ஒப்பானவை; உருக்கிவிட்ட தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டவை. (55)

சினங்கொண்ட சிங்கம், யானைத் தலைவனைத் தாக்கி, அதன் இரத்தத்தைக் குடிப்பதைப் போல, சர்ப்பம் போன்ற இந்த பாணம் உன் இரத்தத்தைக் குடிக்கப் போகிறது.'' இவ்வாறு கூறி மிகுந்த கோபம் கொண்ட அதிகாயன் அம்பை வில்லில் பூட்டினான். (56)

போர்க்களத்தில், அதிகாயனுடைய கோபத்தையும் செருக்கையும் விளக்கிக் காட்டும் அந்தச் சொற்களைக் கேட்டு, பேராற்றலும் மன உறுதியும் கொண்ட லட்சுமணன் மிகவும் கோபம் கொண்டான். அப்போது, பொருட்செறிவுள்ள பதிலைக் கூறினான்— (57)

''துஷ்டப்பதரே! வெறும் வார்த்தைகளால் மட்டும் நீ உயர்ந்தவனாகிவிட மாட்டாய். வெறும் தற்புகழ்ச்சியால் யாரும் சான்றோராகிவிட முடியாது. கைகளில் வில்லையும் பாணத்தையும் வைத்துக் கொண்டு (போருக்கு ஆயத்தமாக) நிற்கும் என்னிடம் உன் பலத்தைக் காட்டு. (58)

உன் திறமையை (போர் என்னும்) செயலில் காட்டுவாயாக; வெற்று வாய்ப்பந்தல் போட வேண்டாம். ஆண்மையுடன் கூடியவனே சூரன் என்று கருதப்படுகிறான். (தற்புகழ்ச்சிக்காரன் சூரனாக மதிக்கப்பட மாட்டான்.) (59)

எல்லாப் படைக்கலன்களையும் வில்லையும் தாங்கியுள்ள நீ, தேரில் நின்று கொண்டிருக்கிறாய். (உன்னிடம் பாணங்களும் பலவகையான அஸ்திரங்களும்தான் இருக்கின்றனவே? எனவே,) உன் பராக்கிரமத்தை பாணங்கள் மூலமோ, அஸ்திரங்கள் மூலமோ காட்டுவாயாக. (60)

அப்போது, பருவகாலத்தில் பழுத்த பனம்பழத்தைப் பெருங்காற்று காம்பினின்று உதறித் தள்ளுவதைப்போல, நான் கூர்மையான பாணங்களால் உன் தலையை வீழ்த்திவிடுகிறேன். (61)

இப்போது உருக்கிவிடப்பட்ட தங்கத்தாலான அணிகள் பொருந்திய என் பாணங்கள், உன் உடலிலிருந்து பாணங்களின் தாக்குதலால் ஏற்பட்ட புண்களிலிருந்து வழிந்தோடும் இரத்தத்தைப் பருகப் போகின்றன. (62)

ப$_3$ாலோऽயமிதி விக்ஞாய ந மாவக்ஞாதுமர்ஹஸி ।
ப$_3$ாலோ வா யதி$_3$ வா வ்ருத்$_3$தே$_4$ா ம்ருத்யும் ஜாநீஹி ஸம்யுகே$_3$ ॥ (63)

ப$_3$ாலேந விஷ்ணுநா லோகாஸ்த்ரய: க்ராந்தாஸ்த்ரிபி$_4$: க்ரமை: ।
இத்யேவமுக்த்வா ஸங்க்ருத்$_3$த$_4$: ஶராந் த$_4$நுஷி ஸந்த$_3$தே$_4$ ॥ (64)

லக்ஷ்மணஸ்ய வச: ஶ்ருத்வா ஹேதுமத் பரமார்த$_2$வத் ।
அதிகாய: ப்ரசுக்ரோத$_4$ ப$_3$ாணம் சோத்தமமாத$_3$தே$_3$ ॥ (65)

ததோ வித்$_3$யாத$_4$ரா பூ$_4$தா தே$_3$வா தை$_3$த்யா மஹர்ஷய: ।
குஹ்யகாஶ்ச மஹாத்மாநஸ்தத்$_3$யுத்$_3$த$_4$ம் த்$_3$ரஷ்டுமாக$_3$மந் ॥ (66)

ததோऽதிகாய: குபிதஶ்சாபமாரோப்ய ஸாயகம் ।
லக்ஷ்மணாய ப்ரசிக்ஷேப ஸம்க்ஷிபந்நிவ சாம்ப$_3$ரம் ॥ (67)

தமாபதந்தம் நிஶிதம் ஶரமாஶீவிஷோபமம் ।
அர்த$_4$சந்த்$_3$ரேண சிச்சே$_2$த$_3$ லக்ஷ்மண: பரவீரஹா ॥ (68)

தம் நிக்ருத்தம் ஶரம் த்$_3$ருஷ்ட்வா க்ருத்தபே$_4$ாக$_3$மிவோரக$_3$ம் ।
அதிகாயோ ப்$_4$ருஶம் க்ருத்$_3$த$_4$: பஞ்ச ப$_3$ாணாந் ஸமாத$_3$தே$_3$ ॥ (69)

தாஞ்ஶராந் ஸம்ப்ரசிக்ஷேப லக்ஷ்மணாய நிஶாசர: ।
தாநப்ராப்தாஞ்ஶரைஸ்தீக்ஷ்ணைஶ்சிச்சே$_2$த$_3$ ப$_4$ரதாநுஜ: ॥ (70)

ஸ தாஞ்சி$_2$த்த்வா ஶரைஸ்தீக்ஷ்ணைர்லக்ஷ்மண: பரவீரஹா ।
ஆத$_3$தே$_3$ நிஶிதம் ப$_3$ாணம் ஜ்வலந்தமிவ தேஜஸா ॥ (71)

தமாத$_3$ாய த$_4$நு:ஶ்ரேஷ்டே$_2$ யோஜயாமாஸ லக்ஷ்மண: ।
விசகர்ஷ ச வேகே$_3$ந விஸஸர்ஜ ச வீர்யவாந் ॥ (72)

பூர்ணாயதவிஸ்ருஷ்டேந ஶரேண நதபர்வணா ।
லலாடே ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$மாஜக$_4$ாந ஸ வீர்யவாந் ॥ (73)

ஸ லலாடே ஶரோ மக்$_3$நஸ்தஸ்ய பீ$_4$மஸ்ய ரக்ஷஸ: ।
த$_3$த்$_3$ருஶே ஶோணிதேநாக்த: பந்நகே$_3$ந்த்$_3$ர இவாசலே ॥ (74)

ராக்ஷஸ: ப்ரசகம்பே ச லக்ஷ்மணேஷுப்ரபீடி$_3$த: ।
ருத்$_3$ரப$_3$ாணஹதம் கே$_4$ாரம் யத$_2$ா த்ரிபுரகே$_3$ாபுரம் ॥ (75)

சிந்தயாமாஸ சாஶ்வஸ்ய விம்ருஶ்ய ச மஹாப$_3$ல: ।
ஸாது$_4$ ப$_3$ாணநிபாதேந ஶ்லாக$_4$நீயோऽஸி மே ரிபு: ॥ (76)

வித$_4$ாயைவம் விநம்யாஸ்யம் நியம்ய ச பு$_4$ஜாவுபௌ$_4$ ।
ஸ ரதே$_2$ாபஸ்த$_2$மாஸ்த$_2$ாய ரதே$_2$ந ப்ரசசார ஹ ॥ (77)

'இவன் சிறுவன்!' என்று என்னை அலட்சியப்படுத்த வேண்டாம். நான் சிறுவனோ, முதியவனோ! – எப்படியோ இருந்துவிட்டுப் போகிறேன். ஆனால், போரில் நான் உனக்கு யமன் என்பதை அறிந்துகொள். (63)

திரிவிக்கிரம அவதாரத்தின்போது, சிறுவனாக (வாமனனாக) வந்த விஷ்ணுவால், மூன்று அடிவைப்புகளில் மூன்று உலகங்களும் அளக்கப்பட்டன. (என்பது எல்லோருக்கும் தெரிந்த கதைதானே?)'' இவ்வாறு (லட்சுமணன்) கூறிவிட்டு, மிகுந்த கோபத்துடன் பாணங்களை வில்லில் பூட்டினான். (64)

யுக்திக்கு உகந்ததும் ஆழ்பொருள் கொண்டதுமான லட்சுமணனுடைய சொற்களைக் கேட்டதும், அதிகாயனுக்கு எல்லையற்ற கோபம் உண்டாயிற்று. உடனே, உத்தமமான ஒரு பாணத்தை வில்லில் தொடுத்தான். (65)

அப்போது, வித்யாதரர்கள், பூதங்கள், தேவர்கள், அசுரர்கள், மாமுனிவர்கள், மகாத்மாக்களான குஹ்யகர்கள் ஆகியோர், அந்த யுத்தத்தைக் காண்பதற்காக (வான்வெளியில்) வந்து கூடினார்கள். (66)

பெருங்கோபத்துடனிருந்த அதிகாயன், வில்லில் பாணத்தைத் தொடுத்து முற்றிலுமாக வானத்தையே மறைத்து விடுபவன் போல், இலக்குவன் மீது செலுத்தினான். (பாணத்தின் வேகத்தினால் இடையிலுள்ள வான்வெளியை விழுங்கிவிடுவதைப் போல – என்று பொருள்.) எதிரியை மாய்க்கும் இலக்குவன், நஞ்சுடைய சர்ப்பத்தைப் போன்றதும், கூர்மையானதும், தன் மேல் விழுவதற்கு வருவதுமான அந்த பாணத்தை, அர்த்தசந்திர பாணத்தால் முறித்துத் தள்ளினான். (67,68)

படம் (தலைப் பகுதி) வெட்டப்பட்ட பாம்பைப் போல் துண்டிக்கப்பட்ட அந்த பாணத்தைப் பார்த்து மிகவும் கோபம் கொண்ட அதிகாயன், ஐந்து பாணங்களை ஒருசேரத் தொடுத்தான். அரக்கன், அந்த பாணங்களை இலக்குவன்மீது செலுத்தினான். பரதனின் தம்பியான இலக்குவன், அந்த அம்புகள் தன்னை நெருங்கி வருவதற்கு முன்னதாகவே கூரிய பாணங்களால் துண்டித்துவிட்டான். (69,70)

எதிரிகளை மாய்ப்பவனான லட்சுமணன், கூர்மையான பாணங்களால் (அதிகாயனால் விடப்பட்ட) பாணங்களைத் துண்டித்தபின், கூர்மையானதும் பளபளப்பாக ஒளிவீசுவதுமான ஒரு பாணத்தைக் கையில் எடுத்தான். (71)

வீரனான இலக்குவன், உத்தமமான வில்லில் அதைப் பூட்டி, (நாண்கயிற்றை) வேகமாக இழுத்து (அதிகாயனை நோக்கிச்) செலுத்தினான். (72)

வீரனான அவன், மிகவும் இழுத்து விடப்பட்டதும் வளைந்த கணுக்களை உடையதுமான பாணத்தால், ஆற்றல் மிக்க அரக்கனை நெற்றியில் தாக்கினான். அந்த பாணம், பயங்கரனான அரக்கனுடைய நெற்றியில் ஆழமாகப் பதிந்து, செந்நீரால் பூசப்பட்டதாய், மலைஇடுக்கில் நுழைந்து கொண்டிருக்கும் மகாசர்ப்பம் போல் காணப்பட்டது. (73,74)

திரிபுராசுரனின் கோட்டைவாயில், ருத்ரனுடைய பாணத்தால் தாக்கப்பட்டு நிலைகுலைந்ததைப் போல, இலக்குவனுடைய அம்பினால் தாக்கப்பட்ட அரக்கன் நிலைகுலைந்து நடுங்கினான். (75)

பேராற்றல் கொண்ட அவன் சிறிது நேரத்தில் தெளிவடைந்து, ஆலோசனை செய்து, 'அட! பாணப்பிரயோக சாமர்த்தியத்தில் என்னால் புகழத்தக்க விரோதியாக இருக்கிறானே இவன்!' என்று தனக்குள் எண்ணிக் கொண்டான். (76)

அவன் இவ்வாறு தீர்மானித்து, (தான் தாக்கப்பட்ட அவமானத்தால்) முகம் சுளித்து, இருகைகளையும் உதறிக் கொண்டு, ரதத்தின் முன் தட்டில் இருந்தவாறே, ரதத்துடனேயே முன்னேறிச் சென்றான். (77)

ஏகம் த்ரீந் பஞ்ச ஸப்தேதி ஸாயகாந் ராக்ஷஸர்ஷப$_4$: ।
ஆத$_3$தே$_3$ ஸந்த$_3$தே$_4$ சாபி விசகர்ஷோத்ஸஸர்ஜ ச ॥ (78)

தே ப$_3$ாணா: காலஸங்காஶா ராக்ஷஸேந்த்$_3$ரத$_4$நுஶ்ச்யுதா: ।
ஹேமபுங்க$_2$ா ரவிப்ரக்$_2$யாஶ்சக்ருர்தீ$_3$ப்தமிவாம்ப$_3$ரம் ॥ (79)

ததஸ்தாந் ராக்ஷஸோத்ஸ்ருஷ்டாஞ்ஶரௌக$_4$ாந் ராக$_4$வாநுஜ: ।
அஸம்ப்$_4$ராந்த: ப்ரசிச்சே$_2$த$_3$ நிஶிதைர்ப$_3$ஹுபி$_4$: ஶரை: ॥ (80)

தாஞ்ஶராந் யுதி$_4$ ஸம்ப்ரேக்ஷ்ய நிக்ருத்தாந் ராவணாத்மஜ: ।
சுகோப த்ரித$_3$ஶேந்த்$_3$ராரிர்ஜக்$_3$ராஹ நிஶிதம் ஶரம் ॥ (81)

ஸ ஸந்த$_4$ாய மஹாதேஜாஸ்தம் ப$_3$ாணம் ஸஹஸோத்ஸ்ருஜத் ।
தத: ஸௌமித்ரிமாயாந்தமாஜக$_4$ாந ஸ்தநாந்தரே ॥ (82)

அதிகாயேந ஸௌமித்ரிஸ்தாடி$_3$தோ யுதி$_4$ வக்ஷஸி ।
ஸுஸ்ராவ ருதி$_4$ரம் தீவ்ரம் மத$_3$ம் மத்த இவ த்$_3$விப: ॥ (83)

ஸ சகார தத$_3$ாத்மாநம் விஶல்யம் ஸஹஸா விபு$_4$: ।
ஜக்$_3$ராஹ ச ஶரம் தீக்ஷ்ணமஸ்த்ரேணாபி ச ஸந்த$_3$தே$_4$ ॥ (84)

ஆக்$_3$நேயேந தத$_3$ாஸ்த்ரேண யோஜயாமாஸ ஸாயகம் ।
ஸ ஜஜ்வால தத$_3$ா ப$_3$ாணோ த$_4$நுஷ்யஸ்ய மஹாத்மந: ॥ (85)

அதிகாயோऽபி தேஜஸ்வீ ஸௌரமஸ்த்ரம் ஸமாத$_3$தே$_4$ ।
தேந ப$_3$ாணம் பு$_4$ஜங்க$_3$ாப$_4$ம் ஹேமபுங்க$_2$மயோஜயத் ॥ (86)

தத$_3$ஸ்த்ரம் ஜ்வலிதம் கே$_4$ாரம் லக்ஷ்மண: ஶரமாஹிதம் ।
அதிகாயாய சிக்ஷேப காலத$_3$ண்ட$_3$மிவாந்தக: ॥ (87)

ஆக்$_3$நேயேநாபி$_4$ஸம்யுக்தம் த்$_3$ருஷ்ட்வா ப$_3$ாணம் நிஶாசர: ।
உத்ஸஸர்ஜ தத$_3$ா ப$_3$ாணம் தீ$_3$ப்தம் ஸூர்யாஸ்த்ரயோஜிதம் ॥ (88)

தாவுப$_4$ாவம்ப$_3$ரே ப$_3$ாணாவந்யோந்யமபி$_4$ஜக்$_4$நது: ।
தேஜஸா ஸம்ப்ரதீ$_3$ப்தாக்$_3$ரௌ க்ருத்$_3$த$_4$ாவிவ பு$_4$ஜங்க$_3$மௌ ॥ (89)

தாவந்யோந்யம் விநிர்த$_3$ஹ்ய பேதது: ப்ருதி$_2$வீதலே ।
நிரர்சிஷௌ ப$_4$ஸ்மக்ருதௌ ந ப்$_4$ராஜேதே ஶரோத்தமௌ ॥ (90)

ததோऽதிகாய: ஸங்க்ருத்$_3$த$_4$ஸ்த்வஸ்த்ரமைஷீகமுத்ஸ்ருஜத் ।
தத் ப்ரசிச்சே$_2$த$_3$ ஸௌமித்ரிரஸ்த்ரேணைந்த்$_3$ரேண வீர்யவாந் ॥ (91)

ஐஷீகம் நிஹதம் த்$_3$ருஷ்ட்வா ருஷிதோ ராவணாத்மஜ: ।
யாம்யேநாஸ்த்ரேண ஸங்க்ருத்$_3$தே$_4$ா யோஜயாமாஸ ஸாயகம் ॥ (92)

அந்த வீரனான அரக்க சிரோமணி, வரிசையாக, ஒன்று–மூன்று–ஐந்து–ஏழு பாணங்களை வில்லில் கோர்த்து, வேகமாக நாண்கயிற்றை இழுத்துச் செலுத்தினான். (78)

சிறந்த அரக்கனான அவனுடைய வில்லிலிருந்து புறப்பட்ட, பொன் அலங்காரம் செய்யப்பட்ட, சூரியனுக்கு இணையான ஒளிபடைத்த, காலனைப் போல் உயிரைப் பறிக்கும் பாணங்கள் வானத்தைப் பேரொளியால் நிரப்பின. (79)

ஆனால், இராமனின் தம்பியாகிய இலக்குவன் சிறிதும் மனங்கலங்காமல், அரக்கனால் விடப்பட்ட அந்த அம்புக் கூட்டங்களைக் கூர்மையான அநேக பாணங்களால் துண்டித்துத் தள்ளினார். (80)

இராவண மைந்தன், அந்தப் போரில் தன்னால் செலுத்தப்பட்ட அம்புகள் முறிக்கப்பட்டதைக் கண்டு, இந்திரனின் பகைவனான அவன் கோபம் கொண்டு கூர்மையான ஒரு பாணத்தை எடுத்தான். (81)

ஆற்றல் மிகுந்த அவன், வில்லில் பாணத்தைக் கோர்த்து வேகமாகச் செலுத்தினான். அது, எதிர்த்து வந்து கொண்டிருந்த இலக்குவனின் மார்பைத் தாக்கியது. (82)

அதிகாயனால் மார்பில் தாக்கப்பட்ட லட்சுமணன், மதங்கொண்ட ஒரு யானை மதநீரைப் பெருக விடுவதைப் போல ஏராளமான இரத்தத்தைப் பெருகவிட்டான். பல்வகைத் திறன் கொண்ட லட்சுமணன், உடனே மார்பிலிருந்து அந்த பாணத்தைப் பிடுங்கி எறிந்தான். (அம்புத் தாக்குதலின் காயத்தையும் வலியையும் போக்கிக் கொண்டான்.) கொடுமையான ஒரு பாணத்தை எடுத்து உரிய மந்திரங்கள் கூறி, அதை அஸ்திரமாகச் செய்தான். (83,84)

அந்த பாணத்தை ஆக்னேய மந்திரங்களால் அபிமந்திரித்து ஆக்னேயாஸ்திரமாகச் செய்தான். மகாத்மாவான இலக்குவனின் வில்லில், (ஆக்னேயாஸ்திரமாகச் செய்யப்பட்ட) அந்த பாணம் பேரொளியுடன் பிரகாசித்தது. (85)

பேராற்றல் படைத்த அதிகாயன், சர்ப்பத்தைப் போன்றதும் பொற்பிடி கொண்டதுமான ஒரு பாணத்தை எடுத்து, சூரியபகவானுடைய மந்திரங்களைக் கூறி, அதை சூரியாஸ்திரமாகச் செய்தான். (86)

இதனிடையில், மந்திரத்தின் ஆற்றலைப் பெற்றுப் பயங்கரமாக ஒளிவீசும் அந்த (ஆக்னேய) அஸ்திரத்தை, காலதேவன் காலதண்டத்தைப் பிரயோகிப்பதைப் போல, அதிகாயன் மீது இலக்குவன் செலுத்தினான். (87)

ஆக்னேயாஸ்திரமாக செய்யப்பட்ட அந்த பாணம், தன்னை நோக்கி வருவதைக் கண்ட அரக்கன், உடனே பயங்கரமான சூரியாஸ்திரமாக செய்யப்பட்ட பாணத்தை விடுத்தான். (88)

ரோஷங்கொண்ட இரண்டு சர்ப்பங்கள் ஒன்றையொன்று தாக்கிக்கொள்வதைப் போல, பிரகாசமான முனைகளைக் கொண்ட அவ்விரு பாணங்களும், வானத்திலேயே ஒன்றையொன்று எதிர்த்துத் தாக்கிக் கொண்டன. (89)

அந்த உத்தமமான பாணங்கள் இரண்டும் ஒன்றையொன்று எரித்துக் கொண்டன. அனல் அடங்கிப் போனதால் ஒளிவீசவில்லை. வெறும் சாம்பலாகப் போய் பூமியில் விழுந்தன. (90)

அப்போது, மிகவும் சினங்கொண்ட அதிகாயன், இஷீகாஸ்திரத்தைச் செலுத்தினான். வீரனான லட்சுமணன் இந்திராஸ்திரத்தால் அதைத் தூள்தூளாக்கினான். (91)

கொதித்துக் கொண்டிருந்த இராவண மைந்தன் இஷீகாஸ்திரம் அழிக்கப்பட்டதைக் கண்டு, மேலும் சினங்கொண்டவனாக ஒரு பாணத்தை எடுத்து, யமராஜ மந்திரங்களை ஜபித்து, அதை யமாஸ்திரமாகச் செய்தான். (92)

ததஸ்தத$_3$ஸ்த்ரம் சிக்ஷேப லக்ஷ்மணாய நிஶாசர: ।
வாயவ்யேந தத$_3$ஸ்த்ரேண நிஜக$_4$ாந ஸ லக்ஷ்மண: ॥ (93)

அதை$_2$நம் ஶரத$_4$ாராபி$_4$ர்த$_4$ாராபி$_4$ரிவ தோயத$_3$: ।
அப்$_4$யவர்ஷத் ஸுஸங்க்ருத்$_3$தே$_4$ா லக்ஷ்மணோ ராவணாத்மஜம் ॥ (94)

தேऽதிகாயம் ஸமாஸாத்$_3$ய கவசே வஜ்ரபூ$_4$ஷிதே ।
ப$_4$க்$_3$நாக்$_3$ரஶல்யா: ஸஹஸா பேதுர்ப$_3$ாணா மஹீதலே ॥ (95)

தாந் மோக$_4$ாநபி$_4$ஸம்ப்ரேக்ஷ்ய லக்ஷ்மண: பரவீரஹா ।
அப்$_4$யவர்ஷந்மஹேஷூணாம் ஸஹஸ்ரேண மஹாயஶா: ॥ (96)

ஸ வ்ருஷ்யமாணோ ப$_3$ாணௌகை$_4$ரதிகாயோ மஹாப$_3$ல: ।
அவத்$_4$யகவச: ஸங்க்$_2$யே ராக்ஷஸோ நைவ விவ்யதே$_2$ ॥ (97)

ஶரம் சாஶீவிஷாகாரம் லக்ஷ்மணாய வ்யபாஸ்ருஜத் ।
ஸ தேந வித்$_3$த$_4$: ஸௌமித்ரிர்மர்மதே$_3$ஶே ஶரேண ஹ ॥
முஹூர்தமாத்ரம் நி:ஸம்க்ஞ: அப$_4$வச்ச$_2$த்ருதாபந: ॥ (98)

தத: ஸம்க்ஞாமுபாலப்$_4$ய சதுர்பி$_4$: ஸாயகோத்தமை: ।
நிஜக$_4$ாந ஹயாந் ஸங்க்$_2$யே ஸாரதி$_2$ம் ச மஹாப$_3$ல: ॥ (99)

த்$_4$வஜஸ்யோந்மத$_2$நம் க்ருத்வா ஶரவர்ஷைரரிந்த$_3$ம: ।
அஸம்ப்$_4$ராந்த: ஸ ஸௌமித்ரி: தாஞ்ஶராநபி$_4$லக்ஷிதாந் ॥ (100)

முமோச லக்ஷ்மணோ ப$_3$ாணாந் வத$_4$ார்த$_2$ம் தஸ்ய ரக்ஷஸ: ।
ந ஶஶாக ருஜம் கர்தும் யுதி$_4$ தஸ்ய நரோத்தம: ॥ (101)

அதை$_2$நமப்$_4$யுபாக$_3$ம்ய வாயுர்வாக்யமுவாச ஹ ।
ப்$_3$ரஹ்மத$_3$த்தவரோ ஹ்யேஷ அவத்$_4$யகவசாவ்ருத: ॥ (102)

ப்$_3$ராஹ்மேணாஸ்த்ரேண பி$_4$ந்த்$_4$யேநமேஷ வத்$_4$யோ ஹி நாந்யதா$_2$ ।
அவத்$_4$ய ஏஷ ஹ்யந்யேஷாமஸ்த்ராணாம் கவசீ ப$_3$லீ ॥ (103)

ததஸ்து வாயோர்வசநம் நிஶம்ய ஸௌமித்ரிரிந்த்$_3$ரப்ரதிமாநவீர்ய: ।
ஸமாத$_3$தே$_3$ ப$_3$ாணமோக$_4$வேக$_3$ம் தத்$_3$ப்$_3$ராஹ்மமஸ்த்ரம் ஸஹஸா நியோஜ்ய ॥ (104)

தஸ்மிந் மஹாஸ்த்ரே து நியுஜ்யமாநே
ஸௌமித்ரிணா ப$_3$ாணவரே ஶிதாக்$_3$ரே ।
தி$_3$ஶஶ்ச சந்த்$_3$ரார்கமஹாக்$_3$ரஹாஶ்ச
நப$_4$ஶ்ச தத்ராஸ சசால சோர்வீ ॥ (105)

தம் ப்$_3$ரஹ்மணோऽஸ்த்ரேண நியோஜ்ய சாபே
ஶரம் ஸுபுங்க$_2$ம் யமதூ$_3$தகல்பம் ।
ஸௌமித்ரிரிந்த்$_3$ராரிஸுதஸ்ய தஸ்ய
ஸஸர்ஜ ப$_3$ாணம் யுதி$_4$ வஜ்ரகல்பம் ॥ (106)

அரக்கன், அந்த அஸ்திரத்தை லட்சுமணன் மேல் விடுத்தான். லட்சுமணன், வாயவ்யாஸ்திரத்தினால் அதை வீழ்த்தித் தள்ளினான். (93)

பின்னர், மிகவும் கோபம் கொண்ட லட்சுமணன், மேகம் இடைவிடாது மழையைப் பொழிவதைப் போல் இராவண மைந்தன் மீது சரமழையைப் பொழிந்தான். (94)

அந்த பாணங்கள், அதிகாயனின் வைரங்கள் பதிக்கப் பெற்ற கவசத்தில் மோதி, நுனிக்கூர் மழுங்கி, உடனே தரையில் விழுந்தன. (95)

எதிரிகளை மாய்ப்பவனும் பெரும் புகழ் படைத்தவனுமான லட்சுமணன், தன்னால் செலுத்தப்பட்ட பாணங்கள் வீணாகிப் போனதைக் கண்டு, மறுபடியும் ஆயிரக்கணக்கான பாணங்களைப் பொழிந்தான். (96)

மகாபலம் கொண்ட அரக்கன் அதிகாயன் பிளக்க முடியாத கவசம் அணிந்திருந்ததால், கணக்கில்லாத பாணங்களால் தாக்கப்பட்டாலும் கொஞ்சமும் வேதனைப்படவேயில்லை. (97)

நஞ்சுடைய சர்ப்பம் போன்ற ஒரு பாணத்தை லட்சுமணன் மீது செலுத்தினான். அதனால், உயிர்ப்பகுதியில் தாக்கப்பட்டு, எதிரிகளின் மனத்தைச் தவிக்கச் செய்யும் லட்சுமணன் சிறிதுநேரம் உணர்விழந்தவனானான். (98)

பின்னர், மகாபலசாலியான அவன் உணர்வு பெற்று, உத்தமமான நான்கு பாணங்களால், போர்க்களத்தில் (அதிகாயனுடைய தேரின்) குதிரைகளையும் தேரோட்டியையும் கொன்றான். (99)

பகைவர்களை அடக்கும் இலக்குவன், சரமாரியால் (அதிகாயனின் தேர்க்) கொடியை வீழ்த்திவிட்டு, சிறிதும் பரபரப்படையாமல் அந்த அரக்கனைக் கொல்லும்பொருட்டு, தனிச்சிறப்புடைய வீண்போகாத பல பாணங்களைச் செலுத்தினான். அவனுடைய தனித்திறமை கொண்ட அம்புகள் போர்க்களத்தில் அதிகாயனைக் காயப்படுத்த முடியவில்லை. (100,101)

அப்போது வாயுபகவான், லட்சுமணன் அருகில் வந்து, ''இவன் பிரும்மதேவனிடம் வரம் பெற்றவன்; எவராலும் சிதைக்க முடியாத கவசம் அணிந்தவன்'' என்று சொன்னார். (102)

''இவனை பிரும்மாஸ்திரத்தால் பிளந்து தள்ளுவாய். வேறு எந்த வழியாலும் இவனைக் கொல்ல முடியாது. பிளக்க முடியாத கவசம் புனைந்தவனும் பலசாலியுமான இவன், வேறு அஸ்திரங்களால் கொல்லப்பட முடியாதவன்.'' (103)

வாயுவின் சொற்களைக் கேட்டதும், இந்திரனுக்கு நிகரான பராக்கிரமமுடைய லட்சுமணன், ஒரு பாணத்தை எடுத்து வீண்போகாத ஆற்றலையுடைய பிரும்மாஸ்திரமாகச் செய்து, உடனே வில்லில் பூட்டினான். (104)

லட்சுமணன் கூர்மையான முனை கொண்ட பாணத்தை மந்திரங்கள் கூறி, மிக உயர்ந்த பிரும்மாஸ்திரமாகச் செய்து வில்லில் கோர்த்ததும், திசைகள், சந்திரன், சூரியன், பெருங்கோள்கள், ஆகாயம், பூமி ஆகியனவெல்லாம் அஞ்சித் தத்தளித்தன. (105)

போர்முனையில், யமதூதனைப் போன்றதும் (எதிரியின் உயிரை வாங்காமல் செல்லாததும்), வஜ்ராயுதம் போன்றதும், கூர்மையான நுனியுடையதுமான பிரும்மாஸ்திர பாணத்தை வில்லில் கோர்த்து, இந்திரனின் பகைவனான இராவண புதல்வன் மீது இலக்குவன் விடுத்தான். (106)

தம் லக்ஷ்மணோத்ஸ்ருஷ்டமமோக4வேக3ம் ஸமாபதந்தம் ஜ்வலநப்ரகாஶம் ।
ஸுவர்ணவஜ்ரோத்தமசித்ரபுங்க2ம் ததா3திகாய: ஸமரே த3த3ர்ஶ ॥ (107)

தம் ப்ரேக்ஷமாண: ஸஹஸாதிகாயோ ஜகா4ந பா3ணைர்நிஶிதைரநேகை: ।
ஸ ஸாயகஸ்தஸ்ய ஸுபர்ணவேக3ஸ்ததா3திகாயஸ்ய ஜகா3ம பார்ஶ்வம் ॥ (108)

தமாக3தம் ப்ரேக்ஷ்ய ததா3திகாயோ பா3ணம் ப்ரதீ3ப்தாந்தககாலகல்பம் ।
ஜகா4ந ஶக்த்ய்ருஷ்டிக3தா3குடா2ரை: ஶூலைர்ஹலைஶ்சாப்யவிபந்நசேதா: ॥ (109)

தாந்யாயுதா4ந்யத்3பு4தவிக்3ரஹாணி
மோகா4நி க்ருத்வா ஸ ஶரோऽக்3நிதீ3ப்த: ।
ப்ரக்3ருஹ்ய தஸ்யைவ கிரீடஜுஷ்டம்
ததோऽதிகாயஸ்ய ஶிரோ ஜஹார ॥ (110)

தச்சி2ர: ஸஶிரஸ்த்ராணம் லக்ஷ்மணேஷுப்ரபீடி3தம் ।
பபாத ஸஹஸா பூ4மௌ ஶ்ருங்க3ம் ஹிமவதோ யதா2 ॥ (111)

தம் து பூ4மௌ நிபதிதம் த்3ருஷ்ட்வா விக்ஷிப்தபூ4ஷணம் ।
ப3பூ4வுர்வ்யதி2தா: ஸர்வே ஹதஶேஷா நிஶாசரா: ॥ (112)

தே விஷண்ணமுகா2 தீ3நா: ப்ரஹாரஜநிதஶ்ரமா: ।
விநேது3ருச்சைர்ப3ஹவ: ஸஹஸா விஸ்வரை: ஸ்வரை: ॥ (113)

ததஸ்தே த்வரிதம் யாதா நிரபேக்ஷா நிஶாசரா: ।
புரீமபி4முகா2 பீ4தா த்3ரவந்தோ நாயகே ஹதே ॥ (114)

ப்ரஹர்ஷயுக்தா ப3ஹவஸ்து வாநரா:
ப்ரபுத்3த4பத்3மப்ரதிமாநநாஸ்ததா3 ।
ஆபூஜயந்(ல்)லக்ஷ்மணமிஷ்டபா4கி3நம்
ஹதே ரிபௌ பீ4மப3லே து3ராஸதே3 ॥ (115)

அதிப3லமதிகாயமப்4ரகல்பம்
யுதி4 விநிபாத்ய ஸ லக்ஷ்மண: ப்ரஹ்ருஷ்ட: ।
த்வரிதமத2 ததா3 ஸ ராமபார்ஶ்வம்
கபிநிவஹைஶ்ச ஸுபூஜிதோ ஜகா3ம ॥ (116)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகஸப்ததிதம: ஸர்க3: ॥

த்3விஸப்ததிதம: ஸர்க3:

ராவணமந்யுஶல்யாவிஷ்கார:

அதிகாயம் ஹதம் ஶ்ருத்வா லக்ஷ்மணேந மஹௌஜஸா ।
உத்3வேக3மக3மத்3ராஜா வசநம் சேத3மப்3ரவீத் ॥ (1)

தங்கம்–வைரங்களால் சிறந்த வேலைப்பாடுகள் செய்யப்பட்டதும், நெருப்பைப் போல் பிரகாசிப்பதும், தடைபடாத வேகத்தையுடையதும், லட்சுமணனால் செலுத்தப்பட்டதுமான அந்த அஸ்திரத்தை, யுத்தகளத்தில் அதிகாயன் தன் கண்களால் பார்த்தான். (107)

அதைக் கண்டவுடனே, கூர்மையான அநேக பாணங்களை அதன்மேல் அதிகாயன் செலுத்தினான் என்றாலும், கருடனுக்கு நிகரான வேகத்தைக் கொண்ட அந்த அம்பு (அஸ்திரம்) அவனை நெருங்கி வந்துவிட்டது. (108)

கனல் வீசும் யமனையும், காலமூர்த்தியையும் போன்ற அந்த அஸ்திரம், தன்னை நோக்கி வருவதைக் கண்ட அதிகாயன் சற்றும் மனங்கலங்காமல் வேல், ஈட்டி, கதை, கோடரி, சூலம் மற்றும் கலப்பை போன்ற ஆயுதங்களால் அதைத் தாக்கினான். (109)

நெருப்புச் சுவாலை போல் பிரகாசிக்கும் அந்த பாணம், விந்தையான வடிவங்களைக் கொண்ட அந்தப் படைக்கலன்களின் ஆற்றலை அழித்து வீணாக்கி, கிரீடம் புனைந்த அதிகாயனுடைய தலையையும் அறுத்துப் போட்டது. (110)

இலக்குவனுடைய பாணத்தால் துண்டிக்கப்பட்ட, பாதுகாப்புக் கவசம் (கிரீடம்) பூண்டிருந்த அந்தத் தலை, இமயமலையின் ஒரு சிகரம் வீழ்வதைப் போல், படுவேகமாய் தரையில் விழுந்தது. (111)

அணிகலன்கள் சிதறி பூமியில் விழுந்து கிடந்த அந்தத் தலையை, கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியிருந்த அரக்கர்கள் பார்த்து மனங்கலங்கினார்கள். (112)

தாக்குதல்களால் களைத்துப் போயிருந்த அவர்கள் எல்லோரும் முகம் வாடி, இரங்கத்தக்க நிலையடைந்து, அந்த விநாடியே பரிதாபமான குரலில் ஓவென்று ஓலமிட்டார்கள். (113)

படைத்தலைவன் கொல்லப்பட்டதால் மிகவும் கலகலத்துப் போன அரக்கர்கள், ‘மேற்கொண்டு என்ன செய்வது?’ என்று தெரியாமல், இலங்கைப் பட்டணத்தை நோக்கி வேகமாக ஓடினார்கள். (114)

பயங்கரமான பலசாலியும் எவராலும் எதிர்க்க முடியாதவனுமான எதிரி (அதிகாயன்) கொல்லப்பட்டவுடன், வானரர்கள் எல்லோரும் பேரானந்தம் கொண்டு, மலர்ந்த தாமரை போல் முகத்தை உடையவர்களாக, தாங்கள் விரும்பிய வெற்றியைப் பெற்றுத் தந்த இலக்குவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். (115)

பேராற்றல் கொண்டவனும், முகில் போன்றவனுமான அதிகாயனுடன் போரிட்டு, அவனைத் தரையில் சாய்த்ததால் மிகவும் மனமகிழ்ந்த இலக்குவன், வானரக் கூட்டங்களால் போற்றப்பட்டு வெகு விரைவாக இராமனை நண்ணினான். (116)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்திரண்டு

சினந்து எழுந்தான், இராவணன்!

மிக்க பராக்கிரமசாலியான இலக்குவனால் அதிகாயன் கொல்லப்பட்டான் என்ற செய்தியைக் கேட்ட மன்னன் (இராவணன்) மிகவும் மனம் வெதும்பி, பின்வருமாறு கூறினான்— (1)

தூ4ம்ராக்ஷ: பரமாமர்ஷீ த4ந்வீ ஶஸ்த்ரப்4ருதாம் வர: ।
அகம்பந: ப்ரஹஸ்தஶ்ச கும்ப4கர்ணஸ்ததை2வ ச ॥ (2)

ஏதே மஹாப3லா வீரா ராக்ஷஸா யுத்3த4காங்க்ஷிண: ।
ஜேதார: பரஸைந்யாநாம் பரைர்நித்யாபராஜிதா: ॥ (3)

நிஹதாஸ்தே மஹாவீர்யா ராமேணாக்லிஷ்டகர்மணா ।
ராக்ஷஸா: ஸுமஹாகாயா நாநாஶஸ்த்ரவிஶாரத3ா: ॥
அந்யே ச ப3ஹவ: ஶூரா மஹாத்மாநோ நிபாதிதா: ॥ (4)

ப்ரக்2யாதப3லவீர்யேண புத்ரேணேந்த்3ரஜிதா மம ।
யௌ ஹி தௌ ப்4ராதரௌ வீரௌ ப3த்3தௌ4 த3த்தவரை: ஶரை: ॥ (5)

யந்ந ஶக்யம் ஸுரை: ஸர்வைரஸுரைர்வா மஹாப3லை: ।
மோக்தும் தத்3ப3ந்த4நம் கோ4ரம் யக்ஷக3ந்த4ர்வகிந்நரை: ॥ (6)

தந்ந ஜாநே ப்ரப4ாவைர்வா மாயயா மோஹநேந வா ।
ஶரப3ந்த4ாத்3விமுக்தௌ தௌ ப்4ராதரௌ ராமலக்ஷ்மணௌ ॥ (7)

யே யோத4ா நிர்க3தா: ஶூரா ராக்ஷஸா மம ஶாஸநாத் ।
தே ஸர்வே நிஹதா யுத்3தே4 வாநரை: ஸுமஹாப3லை: ॥ (8)

தம் ந பஶ்யாம்யஹம் யுத்3தே4 யோऽத்3ய ராமம் ஸலக்ஷ்மணம் ।
ஶாஸயேத் ஸப3லம் வீரம் ஸஸுக்3ரீவவிபீ4ஷணம் ॥ (9)

அஹோ நு ப3லவாந் ராமோ மஹத3ஸ்த்ரப3லம் ச வை ।
யஸ்ய விக்ரமமாஸாத்3ய ராக்ஷஸா நித4நம் க3தா: ॥
தம் மந்யே ராக4வம் வீரம் நாராயணமநாமயம் ॥ (10)

தத்3ப4யாத்3தி4 புரீ லங்கா பிஹிதத்3வாரதோரணா ।
அப்ரமத்தைஶ்ச ஸர்வத்ர கு3ப்தை ரக்ஷ்யா புரீ த்வியம் ॥ (11)

அஶோகவநிகாயாம் ச யத்ர ஸீதாபி4ரக்ஷ்யதே ।
நிஷ்க்ராமோ வா ப்ரவேஶோ வா க்ஞாதவ்ய: ஸர்வதை2வ ந: ॥ (12)

யத்ர யத்ர ப4வேத்3கு3ல்மஸ்தத்ரதத்ர புந: புந: ।
ஸர்வதஶ்சாபி திஷ்ட2த்4வம் ஸ்வை: ஸ்வை: பரிவ்ருதா ப3லை: ॥ (13)

த்3ரஷ்டவ்யம் ச பத3ம் தேஷாம் வாநராணாம் நிஶாசரா: ।
ப்ரதே3ாஷே வார்த4ராத்ரே வா ப்ரத்யூஷே வாபி ஸர்வத: ॥ (14)

நாவக்ஞா தத்ர கர்தவ்யா வாநரேஷு கத3ாசந ।
த்3விஷதாம் ப3லமுத்3யுக்தமாபதத் கிம் ஸ்தி2தம் ஸத3ா ॥ (15)

ததஸ்தே ராக்ஷஸா: ஸர்வே ஶ்ருத்வா லங்காதி4பஸ்ய தத் ।
வசநம் ஸர்வமாதிஷ்ட2ந் யத2ாவத்து மஹாப3லா: ॥ (16)

''மிகவும் கோபத்தன்மை உடையவனும், வில்லாளியும், ஆயுதம் தாங்கியவர்களில் முதன்மையானவனுமாகிய தூம்ராக்ஷன், அகம்பனன், பிரஹஸ்தன் மற்றும் கும்பகர்ணன் ஆகிய அரக்க வீரர்கள் மகாபலசாலிகள்; போர் புரிவதற்காகத் துடித்துக் கொண்டிருப்பவர்கள்; பகைப் படையை வெற்றி கொள்பவர்கள்; பிறரால் எப்போதும் வெல்ல முடியாதவர்கள். (2,3)

மகாவீரமும் பேருடல் கொண்டவர்களும் பல்வகையான சஸ்திரங்களைச் செலுத்துவதில் நிபுணர்களுமான அந்த அரக்கர்கள் எல்லோரும், அருஞ்செயல்களையும் எளிதாக செய்யக்கூடிய இராமனால் (இராமனுடைய படைத்தலைவர்களால்) மாய்க்கப்பட்டார்கள். சூரர்களான மற்றும் பல அரக்கர்களும் வீழ்த்தப்பட்டு விட்டார்கள். (4)

பார் புகழும் உடலாற்றலும் வீரமும் உடைய என் புதல்வன் இந்திரஜித்தினால் (பிரும்மதேவரிடமிருந்து) வரமாகப் பெறப்பட்ட அம்புகளால், வீரர்களான அவ்விரு சகோதரர்களும் கட்டப்பட்டார்கள். அந்தக் கோரமான கட்டை, எல்லா தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடி வந்தாலும்கூட, யக்ஷ–கந்தர்வ–கின்னரர்களாலும்கூட விடுவிக்கவே முடியாது. (5,6)

(ஆனால்,) இராம–லட்சுமணர்களாகிய அவ்விரு சகோதரர்களும் எவ்வாறு – அதாவது சாமர்த்தியத்தினாலா? விசித்திரமான மாய சக்தியாலா? அல்லது மூலிகைகளாலா? – விடுவித்துக் கொண்டார்கள் என்பதை நான் அறிய முடியவில்லை. (7)

என் ஆணைப்படி போர்க்களத்திற்குப் புறப்பட்டுச் சென்ற சூரர்களான அரக்கர்கள் எல்லோரும், எல்லை காணமுடியாத ஆற்றலுடைய வானரர்களால் கொல்லப்பட்டார்கள். (8)

இப்போது வீரனான இராமனை, லட்சுமணனோடும், படைவீரர்களோடும், சுக்ரீவ–விபீஷணர்களோடும் அடக்கக்கூடிய எவனையும் நான் காண்கிலேன். (9)

ஆகா! இராமன்தான் எவ்வளவு ஆற்றல் உடையவன்! அவனுடைய அஸ்திர சக்திதான் எவ்வளவு மகத்தானது! அவனுடைய வீரத்தை எதிர்த்துச் சென்ற எத்தனை அரக்கர்கள் உயிரை விட்டார்கள்! வீரனான அந்த இராகவன், அழிவற்ற பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணன் என்றே எண்ணுகிறேன். (10)

அவனிடத்திலுள்ள அச்சத்தினால்தானே, இலங்கைப் பட்டணத்தின் நுழைவாயில்கள் மூடப்பட்டிருக்கின்றன! அரக்கர்களே! இந்த நகரம், மிகவும் கவனமுடையவர்களால் எல்லா இடங்களிலும் மறைந்திருந்து பாதுகாக்கப்பட வேண்டும். (11)

சீதை காவல் வைக்கப்பட்டிருக்கும் அசோகவனத்திற்குள் போகிறவர்கள், வெளியே வருபவர்கள் பற்றிய தகவல் நமக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட வேண்டும். (12)

படைவீரர் தங்கும் மறைவிடங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அங்கங்கெல்லாம் வீரர்களை மாற்றிக் கண்காணிப்புடன் இருக்கச் செய்யுங்கள். படைத் தலைவர்கள் தங்கள் அணி வீரர்களுடன் எல்லா இடங்களிலும் காவல் புரிந்து நிற்கவேண்டும். (13)

அரக்கர்களே! மாலை, நள்ளிரவு, விடியற்காலம் ஆகிய எல்லா நேரங்களிலும் வானரர்களின் நடவடிக்கை கண்காணிக்கப்பட வேண்டும். (14)

வானரர்கள் விஷயத்தில் ஒருபோதும் அலட்சியம் காட்டக்கூடாது. எதிரிகளின் சேனை, போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறதா? படையெடுத்து வருகிறதா? அல்லது, அவ்வவ்விடங்களிலேயே நிற்கிறதா? (என்பதைக் கவனிக்க வேண்டும்)'' (15)

பின்னர், அரக்கமன்னனுடைய ஆணையைக் கேட்ட வீரர்களான அந்த அரக்கர்கள் எல்லோரும் அவன் சொற்படியே நடந்தார்கள். (16)

ஸ தாந் ஸர்வாந் ஸமாதி$_3$ஶ்ய ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
மந்யுஶல்யம் ஸஹந் தீ$_3$ந: ப்ரவிவேஶ ஸ்வமாலயம் ॥ (17)

தத: ஸ ஸந்தீ$_3$பிதகோபவஹ்நிர்–
நிஶாசராணாமதி$_4$போ மஹாப$_3$ல: ।
ததே$_3$வ புத்ரவ்யஸநம் விசிந்தயந்
முஹுர்முஹுஶ்சைவ ததா$_3$ வ்யநிஶ்வஸத் ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$விஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

த்ரிஸப்ததிதம: ஸர்க$_3$:

இந்த்$_3$ரஜிந்மாயாயுத்$_3$த$_4$ம்

ததோ ஹதாந் ராக்ஷஸபுங்க$_3$வாந்ஸ்தாந் தே$_3$வாந்தகாதி$_3$த்ரிஶிரோऽதிகாயாந் ।
ரக்ஷோக$_3$ணாஸ்தத்ர ஹதாவஶிஷ்டாஸ்தே ராவணாய த்வரிதம் ஶஶம்ஸு: ॥ (1)

ததோ ஹதாம்ஸ்தாந் ஸஹஸா நிஶம்ய
ராஜா முமோஹாஶ்ருபரிப்லுதாக்ஷ: ।
புத்ரக்ஷயம் ப்$_4$ராத்ருவத$_4$ம் ச கோ$_4$ரம்
விசிந்த்ய ராஜா விபுலம் ப்ரத$_3$த்$_4$யௌ ॥ (2)

ததஸ்து ராஜாநமுதீ$_3$க்ஷ்ய தீ$_3$நம் ஶோகார்ணவே ஸம்பரிபுப்லுவாநம் ।
ரத$_2$ர்ஷபோ$_4$ ராக்ஷஸராஜஸூநுஸ்தமிந்த்$_3$ரஜித்$_3$வாக்யமித$_3$ம் ப$_3$பா$_4$ஷே ॥ (3)

ந தாத மோஹம் ப்ரதிக$_3$ந்துமர்ஹஸி யத்ரேந்த்$_3$ரஜிஜ்ஜீவதி ராக்ஷஸேந்த்$_3$ர ।
மத்$_3$பா$_3$ணநிர்பி$_4$ந்நவிகீர்ணதே$_3$ஹா: ப்ராணைர்வியுக்தா: ஸமரே பதந்தி ॥ (4)

நேந்த்$_3$ராரிபா$_3$ணாபி$_4$ஹதோ ஹி கஶ்சித் ப்ராணாந் ஸமர்த$_2$: ஸமரேऽபி$_4$பாதும் ।
பஶ்யாத்$_3$ய ராமம் ஸஹ லக்ஷ்மணேந மத்$_3$பா$_3$ணநிர்பி$_4$ந்நவிகீர்ணதே$_3$ஹம் ॥ (5)

க$_3$தாயுஷம் பூ$_4$மிதலே ஶயாநம்
ஶிதை: ஶரைராசிதஸர்வகா$_3$த்ரம் ।
இமாம் ப்ரதிஜ்ஞாம் ஶ்ருணு ஶக்ரஶத்ரோ:
ஸுநிஶ்சிதாம் பௌருஷதை$_3$வயுக்தாம் ॥ (6)

அத்$_3$யைவ ராமம் ஸஹ ஸக்ஷ்மணேந ஸந்தர்பயிஷ்யாமி ஶரைரமோகை$_4$: ।
அத்$_3$யேந்த்$_3$ரவைவஸ்வதவிஷ்ணுமித்ரஸாத்$_4$யாஶ்விவைஶ்வாநரசந்த்$_3$ரஸூர்யா: ॥
த்$_3$ரக்ஷ்யந்து மே விக்ரமமப்ரமேயம் விஷ்ணோரிவோக்$_3$ரம் ப$_3$லியஜ்ஞவாடே ॥ (7)

ஸ ஏவமுக்த்வா த்ரித$_3$ஶேந்த்$_3$ரஶத்ருராப்ருச்$_2$ய ராஜாநமதீ$_3$நஸத்த்வ: ।
ஸமாருரோஹாநிலதுல்யவேக$_3$ம் ரத$_2$ம் க$_2$ரஶ்ரேஷ்ட$_2$ஸமாதி$_4$யுக்தம் ॥ (8)

அரக்கத் தலைவனான இராவணன், அவர்களுக்கு உத்தரவு கொடுத்து அனுப்பிவிட்டு, துக்கத்தால் ஏற்பட்ட பெரும் மனவேதனையைத் தாங்கிக் கொண்டு, பரிதாபமான நிலையில் தன் இருப்பிடத்திற்கேகினான். (17)

பேராற்றல் கொண்ட அரக்க மன்னன் இராவணனுடைய கோபத்தீ கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. அவன் தன் புதல்வனுடைய மரணத்தை நினைத்து நினைத்து, அடிக்கடி நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து மூன்று

இந்திரஜித்தின் மாயப்போர்

கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியிருந்த அரக்கர் கூட்டம், அரக்கத் தலைவர்களான தேவாந்தகன், திரிசிரஸ், அதிகாயன் ஆகியோர் கொல்லப்பட்டு விட்டதை விரைந்து சென்று இராவணனிடம் தெரிவித்தார்கள். அவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டதைக் கேட்டதும், மனம் பதறிய மன்னனின் கண்களிலிருந்து நீர் பெருகியது. தாங்கிக்கொள்ள முடியாத புதல்வர் அழிவையும், சகோதரர் மரணத்தையும் எண்ணி மன்னன் மிகவும் உருகிப் போனான். (இந்த இரண்டு சுலோகங்களும் முன்னர் நடந்த நிகழ்ச்சியை மீண்டும் தெரிவிக்கின்றன.) (1,2)

அப்போது அரக்கமன்னன் புதல்வனும் தலைசிறந்த தேராளியுமான இந்திரஜித், மன்னன் சோகக் கடலில் மூழ்கித் தத்தளித்துப் பரிதாபநிலையில் இருப்பதைக் கவனித்து, பின்வருமாறு கூறினான்— (3)

''அரக்கர் வேந்தே! தந்தையே! நான் உயிருடன் இருக்கும்போது, தாங்கள் மனவேதனையும் மதிமயக்கமும் அடையக்கூடாது. (ஏனென்றால்,) போர்க்களத்தில், எதிரிகள் என்னால் செலுத்தப்பட்ட பாணங்களால் உடல் சிதறி, உயிர் துறந்து கீழே விழுகிறார்கள். (இது, தாங்கள் அறிந்ததுதானே?) (4)

இந்திரனை வென்ற என்னால் தாக்கப்பட்ட எவரும், தன் உயிரை காத்துக்கொள்ளும் சக்தி படைத்தவர்கள் அல்லர். என் பாணங்களால் பிளக்கப்பட்டு, அங்கங்கள் சிதறி, உயிரைத் துறந்து, உடல் முழுவதும் கூர்மையான பாணங்கள் நிரம்பியதாய் தரையில் விழுந்து கிடக்கும் இராம–லட்சுமணர்களை இப்போது பார்க்கத்தான் போகிறீர்கள். ஆண்மையையும், தெய்வ (பிரும்மாவின் வரம் என்ற) பலத்தையும் கொண்டு இந்திரஜித்தான என்னால் செய்யப்படும் இந்தச் சபதத்தைக் கேளுங்கள். (5,6)

வீண்போகாத என் பாணங்களை (இரத்தம் குடிப்பதற்காகத் தவித்துக் கொண்டிருக்கும் அவைகளை) இப்போதே இராம–லட்சுமணர்களைக் கொண்டு திருப்தி செய்விப்பேன்! பலிச்சக்கரவர்த்தியின் வேள்விச்சாலையில் மகாவிஷ்ணுவின் எல்லையற்ற பராக்கிரமம் வெளிப்பட்டதைப் போல, இப்போது கட்டுக்கடங்காத என் பேராற்றலையும் இந்திரன், யமன், விஷ்ணு, மித்ராவருணன், ஸாத்யர்கள், அசுவினிதேவர்கள், அக்னி, சந்திரன், சூரியன் ஆகியோர் பார்க்கட்டும்!'' (7)

குறைவுபடாத ஆற்றலுள்ள இந்திரன் விரோதியான அவன், இவ்வாறு சொல்லியபின், மன்னனிடம் (தந்தையிடம்) விடைபெற்று, காற்றினும் கடிது செல்வதும், கோவேறு கழுதைகள் பூட்டப்பெற்றதுமான தேரில் ஏறிக்கொண்டான். (8)

தமாஸ்த2ாய மஹாதேஜா ரத2ம் ஹரிரதே2ாபமம் ।
ஜக3ாம ஸஹஸா தத்ர யத்ர யுத்3த4மரிந்த3ம: ॥ (9)

தம் ப்ரஸ்தி2தம் மஹாத்மாநமநுஜக்3முர்மஹாப3லா: ।
ஸம்ஹர்ஷமாணா ப3ஹவோ த4நு:ப்ரவரபாணய: ॥ (10)

க3ஜஸ்கந்த4க3தா: கேசித் கேசித் ப்ரவரவாஜிபி4: ।
வ்யாக்4ரவ்ருஸ்சிகமார்ஜாரை: க2ரோஷ்ட்ரைஸ்ச பு4ஜங்க3மை: ॥ (11)

வராஹை: ஸ்வாபதை3: ஸிம்ஹை: ஜம்பு3கை: பர்வதோபமை: ।
ஶஶஹம்ஸமயூரைஸ்ச ராக்ஷஸா பீ4மவிக்ரமா: ॥ (12)

ப்ராஸமுத்3க3ரநிஸ்த்ரிம்ஶபரஸ்வத2க3த3ாத4ரா: ।
ஸஶங்க2நிநதை3: பூர்ணைர்பே4ரீணாம் சாபி நி:ஸ்வநை: ॥
ஜக3ாம த்ரித3ஶேந்த்3ராரி: ஸ்தூயமாநோ நிஶாசரை: ॥ (13)

ஸஶங்க2ஶஶிவர்ணேந ச்ச2த்ரேண ரிபுஸூத3ந: ।
ரராஜ ப்ரதிபூர்ணேந நப4ஸ்சந்த்3ரமஸா யத2ா ॥ (14)

அவீஜ்யத ததோ வீரோ ஹைமைர்ஹேமவிபூ4ஷிதை: ।
சாருசாமரமுக்2யைஸ்ச முக்2ய: ஸர்வத4நுஷ்மதாம் ॥ (15)

ஸ து த்3ருஷ்ட்வா விநிர்யாந்தம் ப3லேந மஹதா வ்ருதம் ।
ராக்ஷஸாதி4பதி: ஸ்ரீமாந் ராவண: புத்ரமப்3ரவீத் ॥ (16)

த்வமப்ரதிரத2: புத்ர த்வயா வை வாஸவோ ஜித: ।
கிம் புநர்மாநுஷம் த்4ருஷ்யம் விஹநிஷ்யஸி ராக4வம் ॥ (17)

ததே2ாக்தோ ராக்ஷஸேந்த்3ரேண ப்ரத்யக்3ருஹ்ணாந்மஹாஶிஷ: ।
ததஸ்த்விந்த்3ரஜிதா லங்கா ஸூர்யப்ரதிமதேஜஸா ॥
ரராஜாப்ரதிவீரேண த்3யௌரிவார்கேண ப4ாஸ்வதா ॥ (18)

ஸ ஸம்ப்ராப்ய மஹாதேஜா யுத்3த4பூ4மிமரிந்த3ம: ।
ஸ்த2ாபயாமாஸ ரக்ஷாம்ஸி ரத2ம் ப்ரதி ஸமந்தத: ॥ (19)

ததஸ்து ஹுதபே4ாக்தாரம் ஹுதபு4க்ஸத்3ருஶப்ரப4: ।
ஜுஹாவ ராக்ஷஸஶ்ரேஷ்டே2ா மந்த்ரவத்3விதி4வத்தத3ா ॥ (20)

ஸ ஹவிர்லாஜஸம்ஸ்காரை: மால்யக3ந்த4புரஸ்க்ருதை: ।
ஜுஹுவே பாவகம் தீ3ப்தம் ராக்ஷஸேந்த்3ர: ப்ரதாபவாந் ॥ (21)

ஶஸ்த்ராணி ஶரபத்ராணி ஸமிதே4ாऽத2 விபீ4தகா: ।
லோஹிதாநி ச வாஸாம்ஸி ஸ்ருவம் கார்ஷ்ணாயஸம் தத2ா ॥ (22)

ஸ தத்ராக்3நிம் ஸமாஸ்தீர்ய ஶரபத்ரை: ஸதோமரை: ।
ச2ாக3ஸ்ய க்ருஷ்ணவர்ணஸ்ய க3லம் ஜக்3ராஹ ஜீவத: ॥ (23)

பேராற்றல் கொண்டவனும் எதிரிகளை அடக்குபவனுமான அவன், சூரியனின் தேருக்கு ஒப்பான அந்தத் தேரில் ஏறியமர்ந்து, போர் நடைபெறும் இடத்திற்கு உடனே சென்றான். (9)

மிக்க ஆற்றல் கொண்ட அவன் வெளியே செல்லப் புறப்பட்டதும், மகாபலம் பொருந்தியவர்களும், சிறந்த வில்லைக் கையில் ஏந்தியவர்களுமான அரக்கர் பலர் உற்சாகத்துடன் அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (10)

சிலர், யானையில் உட்கார்ந்தும், சிலர் உத்தமமான குதிரைகளில் அமர்ந்தும் சென்றார்கள். மற்றும் பயங்கரமான ஆற்றல் கொண்ட அரக்கர்கள் சிலர் புலி, தேள், பூனை, கழுதை, ஒட்டகம், சர்ப்பம், பன்றி, நாய், சிங்கம், மலை போன்ற நரி, முயல், ஹம்ஸம், மயில் ஆகிய வாகனங்களில் ஏறிக்கொண்டும் சென்றார்கள். (11,12)

ஈட்டி, இரும்பாலான கதை, பட்டாக்கத்தி, கோடரி, கதை ஆகிய படைக்கலன்களைத் தாங்கிக் கொண்டு, சங்குகளின் ஒலி, பேரிகைகளின் முழக்கம் ஆகியவைகளோடு, உடன் வந்த அரக்கர்களால் வாழ்த்துக் கூறப்பட்ட இந்திரசத்ருவான இந்திரஜித் (போர்க்களம் நோக்கிச்) சென்றான். (13)

எதிரிகளை மாய்ப்பவனான அவன், சங்கையும் நிலவையும் போன்ற வெண்ணிறமான குடைகீழ் அமர்ந்து, இரவு நேரத்தில் முழுநிலாவில் வானம் பிரகாசிப்பதைப் போல பொலிவுடன் விளங்கினான். (14)

வில்லாளிகள் எல்லோரிலும் மிகச்சிறந்தவனும் சூரனுமான அவன் மீது, பொன்னால் ஆனவைகளும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கவின்மிகு சாமரங்களை வீசினார்கள். (15)

ஏராளமான போர்வீரர்களால் சூழப்பட்டு, வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்த தன் மகனான அவனைப் பார்த்து, செல்வச் செழிப்புற்ற அரக்க மன்னன் இராவணன் கூறினான்— (16)

''பிள்ளாய்! உனக்கு நிகரான தேராளி இல்லவேயில்லை. நீ இந்திரனைத் தோற்கடித்திருக்கிறாய். அப்படியிருக்கும்போது கையாலாகாத மனிதன் ரகு குலத் தோன்றல் இராமனைக் கொல்வது எம்மாத்திரம்?'' (17)

அரக்க மன்னன் இவ்வாறு சொல்லி முடித்ததும், இந்திரஜித் அவனைத் தலைவணங்கி ஆசிகள் பெற்றான். பேரொளி வீசும் சூரியனால் ஆகாயம் முழுவதும் ஒளி பெறுவதைப் போல, ஈடில்லாத பராக்கிரமம் கொண்ட இந்திரஜித்தினால் இலங்கை நகரமே பிரகாசித்தது. (18)

பிரதாபம் மிக்கவனும் எதிரிகளை அடக்குபவனுமான அவன் சமர்க்களத்தை அடைந்து, தன் தேரைச் சுற்றி நான்குபுறத்திலும் அரக்கர்களை நிறுத்தினான். (19)

பின்னர், நெருப்புப் போல் ஒளிவீசுபவனும் அரக்கர்களின் அன்புக்கு உரியவனுமான அவன், அறநூல் விதிகளின்படி உரிய மந்திரங்களைக் கூறி, அக்னியில் அவி சொரிந்தான். (20)

மலர்கள், சந்தனம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட வேள்விக் குண்டத்தில் மந்திரங்களால் புனிதப்படுத்தப்பட்ட ஹவிஸ் (கஞ்சி வடிக்காத அன்னம்), நெற்பொறி ஆகியவற்றை கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில், மாவீரனான அரக்கத் தலைவன் ஹோமம் செய்தான். (21)

ஹோமகுண்டத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் பரப்பப்படும் தர்பைகளாக, படைக்கலன்கள் தோமரங்கள் வைக்கப்பட்டன. விபீதக (தான்றி) மரத்தின் குச்சிகள் சமித்துக்களாயின. செவ்வண்ண ஆடை உடுத்தியிருந்தான்; ஹோமக் கரண்டிகள், கருமையான இரும்பினால் செய்யப்பட்டிருந்தன. வல்லயம் முதலான ஆயுதங்களின் நடுவில் அக்னியை வளர்த்தான். உயிருடன் இருக்கும், முற்றிலும் கருநிறங்கொண்ட ஓர் ஆட்டின் கழுத்தைப் பிடித்தான். (22,23)

ஸக்ருதே$_3$வ ஸமித்$_3$த$_4$ஸ்ய விதூ$_4$மஸ்ய மஹார்சிஷ: ।
ப$_3$பூ$_4$வுஸ்தாநி லிங்கா$_3$நி விஜயம் யாந்யத$_3$ர்ஶயந் ॥ (24)

ப்ரத$_3$க்ஷிணாவர்தஶிக$_2$ஸ்தப்தகாஞ்சநபூ$_4$ஷண: ।
ஹவிஸ்தத் ப்ரதிஜக்$_3$ராஹ பாவக: ஸ்வயமுத்தி$_2$த: ॥ (25)

ஸோऽஸ்த்ரமாஹாரயாமாஸ ப்$_3$ராஹ்மமிந்த்$_3$ராரிபுஸ்ததா$_3$ ।
த$_4$நுஶ்சாத்மரத$_2$ம் சைவ ஸர்வம் தத்ராப்$_4$யமந்த்ரயத் ॥ (26)

தஸ்மிந்நாஹூயமாநேऽஸ்த்ரே ஹூயமாநே ச பாவகே ।
ஸார்கக்$_3$ரஹேந்து$_3$நக்ஷத்ரம் விதத்ராஸ நப:ஸ்த$_2$லம் ॥ (27)

ஸ பாவகம் பாவகதீ$_3$ப்ததேஜா ஹுத்வா மஹேந்த்$_3$ரப்ரதிமப்ரபா$_4$வ: ।
ஸசாபபா$_3$ணாஸிரதா$_2$ஶ்வஸூத: கே$_2$ऽந்தர்த$_3$தே$_4$ऽத்மாநமசிந்த்யரூப: ॥ (28)

ததோ ஹயரதா$_2$கீர்ணம் பதாகாத்$_4$வஜஶோபி$_4$தம் ।
நிர்யயௌ ராக்ஷஸப$_3$லம் நர்த$_3$மாநம் யுயுத்ஸயா ॥ (29)

தே ஶரைர்ப$_3$ஹுபி$_4$: ஶஸ்த்ரைஸ்தீக்ஷ்ணவேகை$_3$ரலங்க்ருதை: ।
தோமரைரங்குஶைஶ்சாபி வாநராஞ்ஜக்$_4$நுராஹவே ॥ (30)

ராவணிஸ்து தத: க்ருத்$_3$த$_4$ஸ்தாந்நிரீக்ஷ்ய நிஶாசராந் ।
ஹ்ருஷ்டா ப$_4$வந்தோ யுத்$_4$யந்து வாநராணாம் ஜிகா$_4$ம்ஸயா ॥ (31)

ததஸ்தே ராக்ஷஸா: ஸர்வே நர்த$_3$ந்தோ ஜயகாங்க்ஷிண: ।
அப்$_4$யவர்ஷந்ஸ்ததோ கோ$_4$ராந் வாநராஞ்ஶரவ்ருஷ்டிபி$_4$: ॥ (32)

ஸ து நாலீகநாராசைர்க$_3$தா$_3$பி$_4$ர்முஸலைரபி ।
ரக்ஷோபி$_4$: ஸம்வ்ருத: ஸங்க்$_2$யே வாநராந் விசகர்த ஹ ॥ (33)

தே வத்$_4$யமாநா: ஸமரே வாநரா: பாத$_3$பாயுதா$_4$: ।
அப்$_4$யத்$_3$ரவந்த ஸஹிதா ராவணிம் ரணகர்கஶம் ॥ (34)

இந்த்$_3$ரஜித்து தத: க்ருத்$_3$தோ$_4$ மஹாதேஜா மஹாப$_3$ல: ।
வாநராணாம் ஶரீராணி வ்யத$_4$மத்$_3$ராவணாத்மஜ: ॥ (35)

ஶரேணைகேந ச ஹரீந்நவ பஞ்ச ச ஸப்த ச ।
சிச்சே$_2$த$_3$ ஸமரே க்ருத்$_3$தோ$_4$ ராக்ஷஸாந் ஸம்ப்ரஹர்ஷயந் ॥ (36)

ஸ ஶரை: ஸூர்யஸங்காஶை: ஶாதகும்ப$_4$விபூ$_4$ஷிதை: ।
வாநராந் ஸமரே வீர: ப்ரமமாத$_2$ ஸுது$_3$ர்ஜய: ॥ (37)

தே பி$_4$ந்நகா$_3$த்ரா: ஸமரே வாநரா: ஶரபீடி$_3$தா: ।
பேதுர்மதி$_2$தஸங்கல்பா: ஸுரைரிவ மஹாஸுரா: ॥ (38)

ஒரு தடவை போடப்பட்ட சமித்துக்களால், புகையில்லாமல் நெருப்புச் சுவாலையுடன் விளங்கிய அக்னியில் வெற்றியை சூசிப்பிக்கும் சின்னங்கள் தோன்றின. (24)

நெருப்புச் சுவாலைகள் வலமாகச் சுழன்று வீசின; சுவாலைகள் உருக்கிவிட்ட தங்கம் போல் பிரகாசித்தன. அக்னிதேவன், தானே (வேள்விக் குண்டத்திலிருந்து) மனித வடிவில் எழுந்து வந்து ஆகுதியைப் பெற்றுக் கொண்டார். (25)

பின்னர், அஸ்திரவித்தை நிபுணனான அவன் பிரும்மாஸ்திரத்தையும், தன்னுடைய வில், தேர் ஆகிய எல்லாவற்றையும் மந்திர உச்சாரணம் செய்து அக்னியில் சமர்ப்பித்தான். (26)

அவன் பிரும்மாஸ்திரத்தை (மந்திரம் கூறி) அழைத்து, நெருப்பில் ஹோமம் செய்தபோது, சூரியன்–கோள்கள்–தாரகைகளோடு கூடிய வானமண்டலம் நடுங்கிற்று. (27)

அக்னியைப் போல் ஒளி வீசுபவனும், தேவேந்திரனுக்கு நிகரான அளவற்ற பராக்கிரமம் படைத்தவனும், எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குப் பேராற்றல் கொண்டவனுமான அவன், அக்னிக்கு ஆகுதிகளைக் கொடுத்து முடித்த பின், வில், அம்பு, தேர், கத்தி, குதிரைகள், தேர்ப்பாகன் ஆகியவற்றோடு வானத்தில் தன்னை மறைத்துக் கொண்டான். ('வில், தேர் முதலியவைகளை அக்னியில் சமர்ப்பித்தான்' என்று முன்னர் கூறியபடியால், இப்போது அவனோடு மறைந்தவை, வேறு வில், தேர், தேர்ப்பாகன் எனலாம். அல்லது அக்னியில் அர்ப்பணம் செய்யப்பட்டவையே தெய்வபலம் பெற்று வெளிவந்தன என்பதுமுண்டு.) (28)

அப்போது, குதிரைகள்–தேர்கள் நிறைந்ததும் பதாகைகள்–கொடிகள் விளங்குவதுமான அரக்கர்படை, போர்புரியும் பேராவலுடன் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டு (பட்டணத்திலிருந்து வெளியே) புறப்பட்டுச் சென்றது. அவர்கள், ஏராளமான அம்புகளாலும், மிகவும் வேகங்கொண்டவைகளும் அலங்கரிக்கப்பட்டவைகளுமான சஸ்திரங்களாலும், வல்லயம்–அங்குசம் முதலியவற்றாலும் யுத்தகளத்தில் வானரர்களைத் தாக்கினார்கள். (29,30)

அப்போது (வானத்தில் மறைந்திருந்த) இந்திரஜித், அரக்கர்களைப் பார்த்து, மிகவும் கோபத்துடன், ''வானரர்களைக் கொல்லும் விருப்பமுடைய நீங்கள் மனவுறுதியோடு போர் புரியுங்கள்'' என்று உற்சாகப்படுத்தினான். வெற்றி பெறத் துடித்துக் கொண்டிருந்த அரக்கர்கள் எல்லோரும் அவனால் தூண்டப்பட்டவுடன் பெருங்கூச்சலிட்டுக் கொண்டு, பயங்கரமான வானரர்கள் மேல் சரமாரியைப் பொழிந்தார்கள். (31,32)

அவனும் (இந்திரஜித்தும்), கீழே தரையில் நின்று போராடிக் கொண்டிருந்த அரக்கர்களுக்கு மேலே மறைந்து நின்றபடியே, இரும்பாலான பாணங்களாலும் அகலமான முனையைக் கொண்ட பாணங்களாலும் கதைகளாலும் உலக்கைகளாலும் வானரர்களைத் தாக்கினான். (33)

போர்முனையில் மிகவும் அடிபட்ட வானரர்கள் மரங்களையே ஆயுதமாகக் கொண்டு, போர்த்திறன் மிக்க இந்திரஜித்தை ஒரே கூட்டமாகச் சென்று எதிர்த்தார்கள். (34)

அப்போது, அந்த எதிர்ப்பினால் கோபங்கொண்ட மகாபலசாலியும் பேராற்றலுடையவனுமான இராவணனின் புதல்வன், வானரர்களின் உடல்களை சின்னபின்னமாக்கினான். (35)

ரணகளத்தில் மிகவும் கோபத்துடன் போரிட்டுக் கொண்டிருந்த இந்திரஜித், ஒவ்வொரு பாணத்தாலும் ஐந்தைந்து, எவ்வேழு, ஒன்பது–ஒன்பது என்ற கணக்கில் வானரர்களைக் கொன்று, அரக்கர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினான். (36)

போரில் வெல்வதற்கரிய வீரனான அவன், சூரியனைப் போல் ஒளிவீசுகின்றவைகளும், பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான பாணங்களால் வானரர்களைக் கடைந்தெடுத்தான். போர்க்களத்தில் அம்புகளால் தாக்கப்பட்ட வானரர்கள் உடல் அங்கங்கள் சிதறி, வெற்றி பெறுவோம் என்ற ஆசையை இழந்து, (தேவாசுர யுத்தத்தில்) தேவர்களால் நசுக்கப்பட்ட அசுரர்கள் போல் தரையில் வீழ்ந்தார்கள். (37,38)

தம் தபந்தமிவாதி$_3$த்யம் கே$_4$ாரைர்ப$_3$ாணக$_3$ப$_4$ஸ்திபி$_4$: ।
அப்$_4$யத$_4$ாவந்த ஸங்க்ருத்$_3$த$_4$ா: ஸம்யுகே$_3$ வாநரர்ஷப$_4$ா: ॥ (39)

ததஸ்து வாநரா: ஸர்வே பி$_4$ந்நதே$_3$ஹா விசேதஸ: ।
வ்யதி$_2$தா வித்$_3$ரவந்தி ஸ்ம ருதி$_4$ரேண ஸமுக்ஷிதா: ॥ (40)

ராமஸ்யார்தே$_2$ பராக்ரம்ய வாநராஸ்த்யக்தஜீவிதா: ।
நர்த$_3$ந்தஸ்தேऽபி$_4$வ்ருத்தாஸ்து ஸமரே ஸஶிலாயுத$_4$ா: ॥ (41)

தே த்$_3$ருமை: பர்வதாக்$_3$ரைஶ்ச ஶிலாபி$_4$ஶ்ச ப்லவங்க$_3$மா: ।
அப்$_4$யவர்ஷந்த ஸமரே ராவணிம் பர்யவஸ்தி$_2$தா: ॥ (42)

தத்$_3$த்$_3$ருமாணாம் ஶிலாநாம் ச வர்ஷம் ப்ராணஹரம் மஹத் ।
வ்யபோஹத மஹாதேஜா ராவணி: ஸமிதிஞ்ஜய: ॥ (43)

தத: பாவகஸங்காஶை: ஶரைராஶீவிஷோபமை: ।
வாநராணாமநீகாநி பி$_3$பே$_4$த$_3$ ஸமரே ப்ரபு$_4$: ॥ (44)

அஷ்டாத$_3$ஶஶரைஸ்தீக்ஷ்ணை: ஸ வித்$_3$த்$_4$வா க$_3$ந்த$_4$மாத$_3$நம் ।
விவ்யாத$_4$ நவபி$_4$ஶ்சைவ நலம் தூ$_3$ராத$_3$வஸ்தி$_2$தம் ॥ (45)

ஸப்தபி$_4$ஸ்து மஹாவீர்யோ மைந்த$_3$ம் மர்மவிதா$_3$ரணை: ।
பஞ்சபி$_4$ர்விஶிகை$_2$ஶ்சைவ க$_3$ஜம் விவ்யாத$_4$ ஸம்யுகே$_3$ ॥ (46)

ஜாம்ப$_3$வந்தம் து த$_3$ஶபி$_4$: நீலம் த்ரிம்ஶத்$_3$பி$_4$ரேவ ச ।
ஸுக்$_3$ரீவம்ருஷப$_4$ம் சைவ ஸோऽங்க$_3$த$_3$ம் த்$_3$விவித$_3$ம் தத$_2$ா ॥
கே$_4$ாரைர்த$_3$த்தவரைஸ்தீக்ஷ்ணை: நிஷ்ப்ராணாநகரோத்ததா ॥ (47)

அந்யாநபி தத$_2$ா முக்$_2$யாந் வாநராந் ப$_3$ஹுபி$_4$: ஶரை: ।
அர்த$_3$யாமாஸ ஸங்க்ருத்$_3$த$_4$: காலாக்$_3$நிரிவ மூர்சி$_2$த: ॥ (48)

ஸ ஶரை: ஸூர்யஸங்காஶை: ஸுமுக்தை: ஶீக்$_4$ரகா$_3$மிபி$_4$: ।
வாநராணாமநீகாநி நிர்மமந்த$_2$ மஹாரணே ॥ (49)

ஆகுலாம் வாநரீம் ஸேநாம் ஶரஜாலேந மோஹிதாம் ।
ஹ்ருஷ்ட: ஸ பரயா ப்ரீத்யா த$_3$த$_3$ர்ஶ க்ஷதஜோக்ஷிதாம் ॥ (50)

புநரேவ மஹாதேஜா ராக்ஷஸேந்த்$_3$ராத்மஜோ ப$_3$லீ ।
ஸம்ஸ்ருஜ்ய ப$_3$ாணவர்ஷம் ச ஶஸ்த்ரவர்ஷம் ச தா$_3$ருணம் ॥
மமர்த$_3$ வாநராநீகம் இந்த்$_3$ரஜித்த்வரிதோ ப$_3$லீ ॥ (51)

ஸ்வஸைந்யமுத்ஸ்ருஜ்ய ஸமேத்ய தூர்ணம்
மஹாரணே வாநரவாஹிநீஷு ।
அத்$_3$ருஶ்யமாந: ஶரஜாலமுக்$_3$ரம்
வவர்ஷ நீலாம்பு$_3$த$_4$ரோ யதா$_2$ம்பு$_3$ ॥ (52)

பயங்கரமான பாணங்களாகிற கிரணங்களால் சூரியனைப் போல் சுட்டெரிக்கும் அவனை, வானரப்படைத் தலைவர்கள் மிகவும் கோபத்துடன், போர்க்களத்தில் எதிர்த்துத் தாக்கினார்கள். (39)

ஆனால், அவனுடைய பாணங்களால் உடலில் ஏற்பட்ட பற்பல காயங்களால், வானரர்கள் எல்லோரும் சுயநினைவு இழந்தவர்கள் போலாகி, இரத்தம் சொட்டச் சொட்ட மனக்குழப்பத்துடன் இங்குமங்கும் ஓடத் தலைப்பட்டார்கள். (40)

இராமனுக்காக உயிரைவிடத் துணிந்திருந்த சில வானரர்கள், வெற்றிக்குரல் எழுப்பிக் கொண்டு பாறைகளையே ஆயுதங்களாகக் கொண்டு, போர்க்களத்தில் முன்னேறிச் சென்று எதிரிகளை எதிர்த்தார்கள். உறுதியாக நின்ற வானரர்கள், போர்க்களத்தில் இந்திரஜித்தை நெருங்கி, மலைமுகடுகளாலும் மரங்களாலும் பாறைகளாலும் மழைபோல் இடைவிடாது தாக்கினார்கள். (41,42)

அந்த மரங்களும் பாறைகளும் அவன்மேல் விழுந்தால், அவன் உயிரையே மாய்த்துவிடக் கூடியவை. ஆனால், பேராண்மை பெற்றவனும் போரில் எப்போதும் வெற்றி பெறுபவனுமான இந்திரஜித், பெருமழை எனத் தாக்க வந்த அவைகளை, தன்னை நெருங்க விடாமல் தடுத்துவிட்டான். (43)

போர் செய்வதில் தலைசிறந்தவனான அவன், அக்னியைப் போல் ஜொலிப்பவைகளும், விஷப்பாம்புகளைப் போன்றவைகளுமான பாணங்களால் வானரப் படைகளைத் துளைத்தெடுத்தான். (44)

அவன், கூர்மையான பதினெட்டு பாணங்களால் (வானரப்படைத் தலைவர்களுள் ஒருவனான) கந்தமாதனனைக் காயப்படுத்திவிட்டு, தொலைவில் நின்றுகொண்டிருந்த நளன்மீது ஒன்பது பாணங்களைச் செலுத்தினான். (45)

போர் முனையில், உயிர்நிலைகளைப் பிளக்கக் கூடிய ஏழு பாணங்களால் மாவீரனான மைந்தனையும், ஐந்து அம்புகளால் கஜன் என்னும் படைத்தலைவனையும் காயப்படுத்தினான். பின்னர், பத்து பாணங்களால் ஜாம்பவானையும், முப்பது பாணங்களால் நீலனையும், வரமாகப் பெறப்பட்ட கூர்மையான அநேக பாணங்களால் சுக்ரீவன், ரிஷபன், அங்கதன், த்விவிதன் முதலியோரையும் குற்றுயிராகச் செய்தான். (46,47)

வேகமாகப் பரவி அழிக்கும் ஊழித்தீயைப் போல் கோபங்கொண்ட அவன், முக்கியமான மற்ற வானரர்களையும் கணக்கில்லாத பாணங்களால் அடித்துத் துன்புறுத்தினான். (48)

அந்தப் பெரும் போரில், வேகமாகச் செல்லக்கூடியவைகளும், குறிபார்த்து விடப்பட்டவைகளும், சூரியன் போல் ஒளிவீசுகின்றவைகளுமான பாணங்களால் வானரப் படைகளைக் கலக்கினான். (49)

அவனுடைய பாணப் பொழிவினால், வானரப்படை கலங்கிப் போயிருந்தது; இரத்தப் பெருக்கில் குளித்துக் கொண்டிருந்தது. எதிரிகளின் இந்தப் பரிதாப நிலையைப் பார்த்து, அவன் மிகவும் மனத்திருப்தியுடன் சந்தோஷப்பட்டான். (50)

பேராற்றலுடையவனும் மிகவும் உடல்பலம் கொண்டவனும் அரக்க மன்னனின் புதல்வனுமான இந்திரஜித், பயங்கரமான சரமாரியினாலும் சஸ்திரமாரியினாலும் வானரப் படையை நசுக்கி ஒழித்தான். (51)

பின்னர், தன்னுடைய படையின் மேலேயிருந்த அவன், அதை விட்டுவிட்டு வேகமாகச் சென்று, வானரப்படையின் மேலே மறைந்து நின்று, நீருண்ட கருமேகம் மழையைப் பொழிவதைப் போல, பயங்கரமான அம்புகளைக் கூட்டங்கூட்டமாகப் பொழிந்தான். (52)

தே ஶக்ரஜித்₃பா₃ணவிஶீர்ணதே₃ஹா மாயாஹதா விஸ்வரமுந்நத₃ந்த: ।
ரணே நிபேதுர்ஹரயோऽத்₃ரிகல்பா யதே₂ந்த்₃ரவஜ்ராபி₄ஹதா நகே₃ந்த்₃ரா: ॥ (53)

தே கேவலம் ஸந்த₃த்₃ருஶு: ஶிதாக்₃ராந்
பா₃ணாந் ரணே வாநரவாஹிநீஷு ।
மாயாநிகூ₃ட₄ம் து ஸுரேந்த்₃ரஶத்ரும்
ந சாவ்ருதம் ராக்ஷஸமப்₄யபஶ்யந் ॥ (54)

தத: ஸ ரக்ஷோऽதி₄பதிர்மஹாத்மா
ஸர்வா தி₃ஶோ பா₃ணக₃ணை: ஶிதாக்₃ரை: ।
ப்ரச்ச₂ாத₃யாமாஸ ரவிப்ரகாஶைர்–
விஷாத₃யாமாஸ ச வாநரேந்த்₃ராந் ॥ (55)

ஸ ஶூலநிஸ்த்ரிம்ஶபரஶ்வதாநி
வ்யாவித்₄ய தீ₃ப்தாநலஸந்நிபா₄நி ।
ஸுவிஸ்பு₂லிங்கோ₃ஜ்ஜ்வலபாவகாநி
வவர்ஷ தீவ்ரம் ப்லவகே₃ந்த்₃ரஸைந்யே ॥ (56)

ததோ ஜ்வலநஸங்காஶை: ஶிதைர்வாநரயூத₂பா: ।
தாடி₃தா: ஶக்ரஜித்₃பா₃ணை: ப்ரபுல்லா இவ கிம்ஶுகா: ॥ (57)

தேऽந்யோந்யமபி₄ஸர்பந்தோ நிநத₃ந்தஶ்ச விஸ்வரம் ।
ராக்ஷஸேந்த்₃ராஸ்த்ரநிர்பி₄ந்நா நிபேதுர்வாநரர்ஷபா₄: ॥ (58)

உதீ₃க்ஷமாணா க₃க₃நம் கேசிந்நேத்ரேஷு தாடி₃தா: ।
ஶரைர்விவிஶுரந்யோந்யம் பேதுஶ்ச ஜக₃தீதலே ॥ (59)

ஹநூமந்தம் ச ஸுக்₃ரீவமங்க₃த₃ம் க₃ந்த₄மாத₃நம் ।
ஜாம்ப₃வந்தம் ஸுஷேணம் ச வேக₃த₃ர்ஶிநமேவ ச ॥ (60)

மைந்த₃ம் ச த்₃விவித₃ம் நீலம் க₃வாக்ஷம் க₃ஜகோ₃முகௌ₂ள ।
கேஸரிம் ஹரிலோமாநம் வித்₃யுத்₃த₃ம்ஷ்ட்ரம் ச வாநரம் ॥ (61)

ஸூர்யாநநம் ஜ்யோதிமுக₂ம் தத₂ா த₃தி₄முக₂ம் ஹரிம் ।
பாவகாக்ஷம் நலம் சைவ குமுத₃ம் சைவ வாநரம் ॥ (62)

ப்ராஸை: ஶூலை: ஶிதைர்பா₃ணைரிந்த்₃ரஜிந்மந்த்ரஸம்ஹிதை: ।
விவ்யாத₄ ஹரிஶார்தூ₃லாந் ஸர்வாந்ஸ்தாந் ராக்ஷஸோத்தம: ॥ (63)

ஸ வை க₃தா₃பி₄ர்ஹரியூத₂முக்₂யாந்–நிர்பி₄த்₃ய பா₃ணைஸ்தபநீயபுங்கை₂: ।
வவர்ஷ ராமம் ஶரவ்ருஷ்டிஜாலை: ஸலக்ஷ்மணம் பா₄ஸ்கரரஶ்மிகல்பை: ॥ (64)

ஸ பா₃ணவர்ஷைரபி₄வர்ஷ்யமாணோ தா₄ராநிபாதாநிவ தாநசிந்த்ய ।
ஸமீக்ஷமாண: பரமாத்₃பு₄தஶ்ரீ ராமஸ்தத₃ா லக்ஷ்மணமித்யுவாச ॥ (65)

மலைபோல் பேருருவம் கொண்ட வானரர்கள் போர்க்களத்தில், இந்திரஜித்தினால் மாயமாக எய்யப்பட்ட பாணங்களால் தாக்கப்பட்டு, உடலில் பலமான காயங்கள் ஏற்பட்டதால் மிகவும் தளர்ந்து, ஈனஸ்வரத்தில் புலம்பி அலறிக் கொண்டு, இந்திரனுடைய வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட பெரிய மலைகள் போல் தரையில் சாய்ந்தார்கள். (53)

போர்க்களத்தில், வானரப்படை வீரர்கள்மேல் குத்திக் கொண்டிருந்த கூர்மையான பாணங்களை மட்டுமே வானரர்கள் பார்த்தார்கள். மறைந்திருந்து அவைகளைச் செலுத்திய இந்திரனின் விரோதியான அரக்கன் அவர்கள் கண்களில் படவேயில்லை. (54)

அப்போது, பேராற்றலுடைய அரக்கத் தலைவன், கூர்மையான முனையை உடைய, சூரியனுக்கு ஒப்பாக ஒளிவீசும் பாணக் கூட்டங்களால் எல்லாத் திசைகளையும் மூடி மறைத்தான். வானரத் தலைவர்களையும் துன்புறச் செய்தான். (55)

அவன், கொழுந்து விட்டெரியும் நெருப்புப் போன்றவைகளும், கனல் பொறி தெறிக்கும் அக்னியைப் போன்றவைகளுமான சூலம், வாள், கோடரி முதலிய ஆயுதங்களைச் சுழற்றி, பெருமழையைப் போல் வானரமன்னனின் படைகள்மீது பொழிந்தான். (56)

இந்திரஜித்தினால் செலுத்தப்பட்ட, நெருப்பைப் போல் ஒளியும் அழிக்கும் சக்தியும் கொண்ட பாணங்களால் காயப்படுத்தப்பட்டு இரத்தம் வழிந்தோட நின்ற வானரப்படைத் தலைவர்கள், மலர்ந்த மலர்களைக் கொண்ட புரச மரங்களைப் போல் காணப்பட்டார்கள். (57)

அந்த வானரோத்தமர்கள், அரக்கத் தலைவனுடைய பாணங்களால் உடல் சிதறுண்டு, ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டு, அவலமான குரலில் அலறிக் கொண்டு தரையில் விழுந்தார்கள். (58)

(வானத்தில் மறைந்து கொண்டிருக்கும் இந்திரஜித்தைப் பார்க்கும் நோக்கத்துடன்) ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சில வானரர்கள், கண்களில் தாக்கப்பட்டு, ஒருவர்மேல் ஒருவர் முட்டி மோதிக் கொண்டு தரையில் விழுந்தார்கள். (59)

அரக்கத் தலைவனான இந்திரஜித், மந்திரங்களால் உரு ஏற்றப்பட்ட கூரிய பாணங்கள், ஈட்டிகள், சூலங்கள் ஆகியவற்றால் அனுமான், சுக்ரீவன், அங்கதன், கந்தமாதனன், ஜாம்பவான், சுஷேணன், வேகதர்சி, மைந்தன், த்விவிதன், நீலன், கவாக்ஷன், கஜமுகன், கோமுகன், ஹரிலோமன், வானரனான வித்யுத்தம்ஷ்ட்ரன், சூரியன் போல் ஒளிவீசும் ஜோதிமுகன், வானரனான ததிமுகன், பாவகாக்ஷன், நளன், வானரனான குமுதன் முதலான வானரோத்தமர்கள் எல்லோரையும் தாக்கினான். (60–63)

அவன், கதைகளாலும் பொற்சிறகுகளால் அணி செய்யப்பட்ட பாணங்களாலும் வானரப்படையின் முக்கியத் தலைவர்களைத் தாக்கிய பின்னர், சூரியக் கதிர்களுக்கொப்பான அம்புக்கூட்டங்களை இராம–லட்சுமணர்கள் மேல் பொழிந்தான். (64)

(மிகவும் ஆச்சரியப்படத்தக்க தைரியம் உடைய) அவர் (இராமன்) அம்புக்கூட்டங்களால் மழைபோல் பொழியப்பட்ட அந்தத் தாக்குதலைப் பொருட்படுத்தாது, வெறும் மழைப்பொழிவைப் போல் தாங்கிக் கொண்டு, (எதிர்த்து தாக்குதல் நடத்துவதற்காகப் பிரும்மாஸ்திரத்தை எடுக்க முனைந்து கொண்டிருந்த) லட்சுமணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (65)

அஸௌ புநர்லக்ஷ்மண ராக்ஷஸேந்த்$_3$ரோ
ப்$_3$ரஹ்மாஸ்த்ரமாஶ்ரித்ய ஸுரேந்த்$_3$ரஶத்ரு: ।
நிபாதயித்வா ஹரிஸைந்யமுக்$_3$ர–
மஸ்மாஞ்ஶரைரர்த$_3$யதி ப்ரஸக்த: ॥ (66)

ஸ்வயம்பு$_4$வா த$_3$த்தவரோ மஹாத்மா
க$_2$மாஸ்தி$_2$தோऽந்தர்ஹிதபீ$_4$மகாய: ।
கத$_2$ம் நு ஶக்யோ யுதி$_4$ நஷ்டதே$_3$ஹோ
நிஹந்துமத்$_3$யேந்த்$_3$ரஜிதுத்$_3$த்$_3$யதாஸ்த்ர: ॥ (67)

மந்யே ஸ்வயம்பூ$_4$ர்ப$_4$க$_3$வாநசிந்த்யோ
யஸ்யைதத$_3$ஸ்த்ரம் ப்ரப$_4$வஶ்ச யோऽஸ்ய ।
பா$_3$ணாவபாதாந்ஸ்த்வமிஹாத்$_3$ய தீ$_4$மந்
மயா ஸஹாவ்யக்$_3$ரமநா: ஸஹஸ்வ ॥ (68)

ப்ரச்சா$_2$த$_3$யத்யேஷ ஹி ராக்ஷஸேந்த்$_3$ர: ஸர்வா தி$_3$ஶ: ஸாயகவ்ருஷ்டிஜாலை: ।
ஏதச்ச ஸர்வம் பதிதாக்$_3$ர்யஶூரம் ந ப்$_4$ராஜதே வாநரராஜஸைந்யம் ॥ (69)

ஆவாம் து த்$_3$ருஷ்ட்வா பதிதௌ விஸம்க்ஞௌ
நிவ்ருத்தயுத்$_3$தௌ$_4$ க$_3$தரோஷஹர்ஷௌ ।
த்$_4$ருவம் ப்ரவேக்ஷ்யத்யமராரிவாஸ–
மஸௌ ஸமாதா$_3$ய ரணாக்$_3$ரலக்ஷ்மீம் ॥ (70)

ததஸ்து தாவிந்த்$_3$ரஜித$_3$ஸ்த்ரஜாலைர்–ப$_3$பூ$_4$வதுஸ்தத்ர ததா$_2$ விஶஸ்தௌ ।
ஸ சாபி தௌ தத்ர விஷாத$_3$யித்வா நநாத$_3$ ஹர்ஷாத்$_3$யுதி$_4$ ராக்ஷஸேந்த்$_3$ர: ॥ (71)

ஸ தத்ததா$_2$ வாநரஸைந்யமேவம் ராமம் ச ஸங்க்$_2$யே ஸஹ லக்ஷ்மணேந ।
விஷாத$_3$யித்வா ஸஹஸா விவேஶ புரீம் த$_3$ஶக்$_3$ரீவபு$_4$ஜாபி$_4$கு$_3$ப்தாம் ॥ (72)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரிஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

சது:ஸப்ததிதம: ஸர்க$_3$:

ஓஷதி$_4$பர்வதாநயநம்

தயோஸ்ததா$_2$ ஸாதி$_3$தயோ ரணாக்$_3$ரே முமோஹ ஸைந்யம் ஹரிபுங்க$_3$வாநாம் ।
ஸுக்$_3$ரீவநீலாங்க$_3$த$_3$ஜாம்ப$_3$வந்தோ ந சாபி கிஞ்சித் ப்ரதிபேதி$_3$ரே தே ॥ (1)

ததோ விஷண்ணம் ஸமவேக்ஷ்ய ஸைந்யம்
விபீ$_4$ஷணோ பு$_3$த்$_3$தி$_4$மதாம் வரிஷ்ட$_2$: ।
உவாச ஶாகா$_2$ம்ருக$_3$ராஜவீரா–
நாஶ்வாஸயந்நப்ரதிமைர்வசோபி$_4$: ॥ (2)

''லட்சுமணா! தேவராஜன் எதிரியான இந்த அரக்க மன்னன் (மன்னர் மைந்தன்) பிரும்மாஸ்திரத்தினால் பயங்கரமான வானரப் படையை வீழ்த்திவிட்டு, நம்மையும் எதிர்த்துப் பாணங்களால் துன்புறுத்துகிறான். (66)

இவன் பிரும்மதேவனால் வரம் கொடுக்கப்பட்டவன்; ஆண்மை மிக்கவன்; தன்னுடைய பெரிய சரீரத்தை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறான். கையில் அஸ்திரங்களை வைத்துக் கொண்டு, கண்ணுக்குப் புலனாகாத உடலுடன் போர்புரியும் அவனை எதிர்த்துத் தாக்கி எவ்வாறு கொல்லமுடியும்? (67)

ஆழ்ந்தகன்ற அறிவுள்ளவனே! இவனுடைய மகிமையும் அஸ்திரமும், நினைவுக்கெட்டாத தான்தோன்றியான பகவான் பிரும்மாவிடமிருந்து பெற்ற வரங்களின் பயன். இப்போது, நான் சொல்வதைக் கேள். (இப்போது, இவனுடைய அஸ்திரங்களை எதிர்த்து அழித்தால், அது பிரும்மசக்தியை அவமதிப்பதாகும். எனவே,) மனம் கலக்கமடையாமல் என்னைப் போலவே பாணப்பொழிவுகளைப் பொறுத்துக் கொண்டிரு. (68)

அரக்கத் தலைவன், கணக்கிலடங்காத அம்புகளைப் பொழிந்து, எல்லாத் திசைகளையும் மறைத்துவிட்டான். வானரப் படையின் முக்கியமான வீரர்கள் வீழ்த்தப் பெற்றதால் (நமது படை) ஒளி இழந்திருக்கிறது. (69)

நாம் இருவரும் கோபத்தையும் போர் புரியும் எண்ணத்தையும் துறந்து, போரிலிருந்து விலகி, உணர்விழந்தவர்கள்போல் இருக்கும் நிலையில், நம்மைப் பார்த்தபிறகு, போர்முனையில் வெற்றிச்செல்வியைக் கைப்பற்றி, தேவவிரோதிகளான அரக்கர்கள் இருக்கும் இலங்கைக்குத் திரும்பிச் செல்லப் போகிறான் என்பது நிச்சயம்.'' (70)

அப்போது, அவ்விருவரும் இந்திரஜித்தின் இடைவிடாத அஸ்திரத் தாக்குதலால் கீழே விழுந்தார்கள். போர்க்களத்தில் அவ்விருவரையும் அவ்விதம் விழுந்து கிடப்பவர்களாகப் பார்த்து இந்திரஜித் மகிழ்ச்சியுடன் ஆனந்தக் கூச்சலிட்டான். (71)

இவ்வாறு, வானரப்படையையும் இராம–லட்சுமணர்களையும் சமர்க்களத்தில் துன்புறுத்திவிட்டு, உடனேயே இராவணனுடைய பராக்கிரமத்தால் பாதுகாக்கப்படும் இலங்கைப் பட்டணத்திற்குள் புகுந்தான். (72)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து நான்கு

மூலிகை மலையைக் கொண்டு வருவது

போர்முனையில் அவர்கள் இருவரும் (இராம–லட்சுமணர்கள்) வீழ்த்தப்பட்டவுடன் (பிரும்மாஸ்திரத்தை எதிர்க்காமல் அடங்கி ஏற்றுக் கொண்டு செயலற்றுப் போனவுடன்) வானரத் தலைவர்களின் படை என்ன செய்வது? என்றறியாது திகைத்து நின்றது. சுக்ரீவன், நீலன், அங்கதன், ஜாம்பவான் முதலியோருக்கும் எந்த வழியும் தோன்றவில்லை. (1)

அப்போது, பேரறிவாளர்களில் தலைசிறந்தவனான விபீஷணன், வானரப் படை மனவருத்தத்துடன் இருப்பதைப் பார்த்து, சுக்ரீவனுடைய படையினரைப் பார்த்து ஆறுதல் கூறி, மிகச்சிறந்த சொற்களைக் கூறினான்— (2)

மா பை₄ஷ்ட நாஸ்த்யத்ர விஷாத₃காலோ
யதா₃ர்யபுத்ரௌ ஹ்யவஶௌ விஷண்ணௌ ।
ஸ்வயம்பு₄வோ வாக்யமதோ₂த்₃வஹந்தௌ
யத் ஸாதி₃தாவிந்த்₃ரஜித₃ஸ்த்ரஜாலை: ॥ (3)

தஸ்மை து த₃த்தம் பரமாஸ்த்ரமேதத் ஸ்வயம்பு₄வா ப்₃ராஹ்மமமோக₄வேக₃ம் ।
தந்மாநயந்தௌ யுதி₄ ராஜபுத்ரௌ நிபாதிதௌ கோऽத்ர விஷாத₃கால: ॥ (4)

ப்₃ராஹ்மமஸ்த்ரம் ததோ தீ₄மாந் மாநயித்வா து மாருதி: ।
விபீ₄ஷணவச: ஶ்ருத்வா ஹநுமாந்ஸ்தமதா₂ப்₃ரவீத் ॥ (5)

ஏதஸ்மிந்நிஹதே ஸைந்யே வாநராணாம் தரஸ்விநாம் ।
யோ யோ தா₄ரயதே ப்ராணாந்ஸ்தம் தமாஶ்வாஸயாவஹை ॥ (6)

தாவுபௌ₄ யுக₃பத்₃வீரௌ ஹநுமத்₃ராக்ஷஸோத்தமௌ ।
உல்காஹஸ்தௌ ததா₃ ராத்ரௌ ரணஶீர்ஷே விசேரது: ॥ (7)

பி₄ந்நலாங்கூ₃லஹஸ்தோருபாதா₂ங்கு₃லிஶிரோத₄ரை: ।
ஸ்ரவத்₃பி₄: க்ஷதஜம் கா₃த்ரை: ப்ரஸ்ரவத்₃பி₄ஸ்ததஸ்தத: ॥ (8)

பதிதை: பர்வதாகாரைர்வாநரைரபி₄ஸங்குலாம் ।
ஶஸ்த்ரைஶ்ச பதிதைர்தீ₃ப்தைர்த₃த்₃ருஶாதே வஸுந்த₄ராம் ॥ (9)

ஸுக்₃ரீவமங்க₃த₃ம் நீலம் ஶரப₄ம் க₃ந்த₄மாத₃நம் ।
க₃வாக்ஷம் ச ஸுஷேணம் ச வேக₃த₃ர்ஶிநமாஹுகம் ॥ (10)

மைந்த₃ம் நளம் ஜ்யோதிமுக₂ம் த்₃விவித₃ம் பநஸம் ததா₂ ।
ஏதாம்ஶ்சாந்யாந்ஸ்ததோ வீரௌ த₃த்₃ருஶாதே ஹதாந் ரணே ॥ (11)

ஸப்தஷஷ்டிர்ஹதா: கோட்யோ வாநராணாம் தரஸ்விநாம் ।
அஹ்ந: பஞ்சமஶேஷேண வல்லபே₄ந ஸ்வயம்பு₄வ: ॥ (12)

ஸாக₃ரௌக₄நிப₄ம் பீ₄மம் த்₃ருஷ்ட்வா பா₃ணார்தி₃தம் ப₃லம் ।
மார்க₃தே ஜாம்ப₃வந்தம் ஸ்ம ஹநுமாந் ஸவிபீ₄ஷண: ॥ (13)

ஸ்வபா₄வஜரயா யுக்தம் வ்ருத்₃த₄ம் ஶரஶதைஶ்சிதம் ।
ப்ரஜாபதிஸுதம் வீரம் ஶாம்யந்தமிவ பாவகம் ॥ (14)

த்₃ருஷ்ட்வா தமுபஸங்க₃ம்ய பௌலஸ்த்யோ வாக்யமப்₃ரவீத் ।
கச்சிதா₃ர்ய ஶரைஸ்தீக்ஷ்ணை: ப்ராணா ந த்₄வம்ஸிதாஸ்தவ ॥ (15)

விபீ₄ஷணவச: ஶ்ருத்வா ஜாம்ப₃வாந்ருக்ஷபுங்க₃வ: ।
க்ருச்ச்₂ராத₃ப்₄யுத்₃கி₃ரந் வாக்யமித₃ம் வசநமப்₃ரவீத் ॥ (16)

நைர்ருதேந்த்₃ர மஹாவீர்ய ஸ்வரேண த்வாபி₄லக்ஷயே ।
பீட்₃யமாந: ஶிதைர்பா₃ணைர்ந த்வாம் பஶ்யாமி சக்ஷுஷா ॥ (17)

''வானரர்களே! அச்சம் அடையாதீர்கள். இது துக்கப்படுவதற்கான காலம் அல்ல. (இராம–லட்சுமணர்களுக்குத் தீங்கு ஏற்பட்டுவிட்டதோ? என்று எண்ணி கலக்கம் அடைந்திருக்கிறீர்கள்.) சக்கரவர்த்தி திருமகனார் இருவரும், இந்திரஜித் பிரும்மாஸ்திர மந்திரங்களை உச்சரித்து அஸ்திரங்களைச் செலுத்தியதால், மந்திர தேவதையான பிரும்மதேவருக்கு மதிப்புக் கொடுப்பதற்காகவே உணர்விழந்து விட்டவர்கள் போல் காணப்படுகிறார்கள். (3)

வீண்போகாத (எவராலும் எதிர்த்துத் தாக்க முடியாத) பேராற்றல் கொண்ட இந்த உத்தமமான பிரும்மாஸ்திரம், அவனுக்குப் பிரும்மாவினாலேயே கொடுக்கப்பட்டது. போர்க்களத்தில், அதன் பெருமைக்குத் தலைவணங்கி, அதன் சக்திக்குக் கட்டுப்பட்டு வீழ்ந்து கிடக்கிறார்கள். ஆகவே, வருத்தப்படும்படியாக இப்போது என்ன நேர்ந்துவிட்டது?'' (4)

பேரறிஞரான வாயு புதல்வர் அனுமான், விபீஷணனுடைய சொற்களைக் கேட்டு, பிரும்மாஸ்திரத்திற்குக் கௌரவம் அளிப்பதற்காகச் சிறிது நேரம் அடங்கியிருந்துவிட்டு, அவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (5)

''பலம் வாய்ந்த இந்த வானரப் படையில், பிரும்மாஸ்திரத்தினால் தாக்கப்பட்ட பின்னர், யார் யார் பிழைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு ஆறுதல் கூறுவோம்.'' (6)

அனுமான், விபீஷணன் ஆகிய இருவரும் சேர்ந்து, அந்த இரவு வேளையில் கையில் தீப்பந்தங்களை எடுத்துக் கொண்டு போர்க்களத்தில் எல்லா இடங்களிலும் சுற்றி வந்தார்கள். (7)

மலை போன்ற பெரு வானரர்கள், வால்–கை–தொடை–கால்–விரல்–கழுத்து அறுபட்டு, இரத்தம் பெருக்கிக் கொண்டு, உடல்கள் புரளத் தரையில் கிடந்தார்கள்; படைக்கலன்களும் கீழே விழுந்து கிடந்தன. இந்த நிலையில் யுத்தபூமி இருப்பதைக் கண்டார்கள். (8,9)

சுக்ரீவன், அங்கதன், நீலன், சரபன், கந்தமாதனன், ஜாம்பவான், சுஷேணன், வேகதர்சி, ஆஹுகன், மைந்தன், நளன், ஜோதிமுகன், பனஸன், த்விவிதன் ஆகியோர் போர்க்களத்தில் தாக்கப்பட்டு விழுந்து கிடப்பதை, விபீஷணனும் அனுமானும் பார்த்தார்கள். (10,11)

(ஒரு நாளின் பகற்பொழுது ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது:– பிராதக்காலம், சங்கவகாலம், மத்யான்னகாலம், பரான்னகாலம், சாயங்காலம்.) ஐந்தாவது பகுதியான காலம் மிகுந்திருக்கும்போது (முதல் நான்கு காலத்திற்குள்ளேயே) மாவீரர்களான அறுபத்தேழு கோடி வானரர்கள், பிரும்மதேவனுக்குப் பிரியமானவனால் (இந்திரஜித்தால்) வீழ்த்தப்பட்டார்கள். (12)

பெருங்கடல் போல் விஸ்தாரமாகவும் பயங்கரமாகவும் இருந்த வானரப்படை, அஸ்திரத்தினால் தாக்கப்பட்டு வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, விபீஷணனும் அனுமானும் ஜாம்பவானைத் தேடினார்கள். (13)

பிரும்மாவின் புதல்வரான ஜாம்பவான், மிக நீண்ட காலம் வாழ்ந்து முதுமை அடைந்தவர். அத்துடன், அவருடைய சரீரத்தில் நூற்றுக்கணக்கான பாணங்கள் சொருகிக் கொண்டிருந்தன. தணிந்து கொண்டிருக்கும் நெருப்பைப் போன்ற அவரை அணுகி, புலஸ்திய வம்சத் தோன்றல் விபீஷணன், ''பெரியவரே! கூரிய பாணங்களின் தாக்குதலால் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏதும் ஏற்படவில்லையே?'' என்று கேட்டான். (14,15)

விபீஷணனுடைய சொற்களைக் கேட்ட கரடித்தலைவர் ஜாம்பவான், மிகவும் கஷ்டத்துடன் சொற்களை உச்சரித்து பின்வருமாறு கூறினார்— (16)

''பேராற்றல் கொண்டவனே! அரக்கப்பெருந்தகையே! உன் குரலால் உன்னைத் தெரிந்து கொண்டேன். கூர்மையான பாணங்களால் தாக்கப்பட்டு (குற்றுயிருடன் கிடக்கும் நான்), உன்னைக் கண்களால் பார்க்க முடியவில்லை. (17)

அஞ்ஜநா ஸுப்ரஜா யேந மாதரிஸ்வா ச நைர்ருத ।
ஹநுமாந் வாநரஶ்ரேஷ்ட$_2$: ப்ராணாந் த$_4$ாரயதே க்வசித் ॥ (18)

ஶ்ருத்வா ஜாம்ப$_3$வதோ வாக்யமுவாசேத$_3$ம் விபீ$_4$ஷண: ।
ஆர்யபுத்ராவதிக்ரம்ய கஸ்மாத் ப்ருச்ச$_2$ஸி மாருதிம் ॥ (19)

நைவ ராஜநி ஸுக்$_3$ரீவே நாங்க$_3$தே$_3$ நாபி ராக$_4$வே ।
ஆர்ய ஸந்த$_3$ர்ஶித: ஸ்நேஹ: யத$_2$ா வாயுஸுதே பர: ॥ (20)

விபீ$_4$ஷணவச: ஶ்ருத்வா ஜாம்ப$_3$வாந் வாக்யமப்$_3$ரவீத் ।
ஶ்ருணு நைர்ருதஶார்தூ$_3$ல யஸ்மாத் ப்ருச்ச$_2$ாமி மாருதிம் ॥ (21)

தஸ்மிஞ்ஜீவதி வீரே து ஹதமப்யஹதம் ப$_3$லம் ।
ஹநுமத்யுஜ்ஜிதப்ராணே ஜீவந்தோऽபி வயம் ஹதா: ॥ (22)

த$_4$ரதே மாருதிஸ்தாத மாருதப்ரதிமோ யதி$_3$ ।
வைஶ்வாநரஸமோ வீர்யே ஜீவிதாஶா ததோ ப$_4$வேத் ॥ (23)

ததோ வ்ருத்$_3$த$_4$முபாக$_3$ம்ய நியமேநாப்$_4$யவாத$_3$யத் ।
க்$_3$ருஹ்ய ஜாம்ப$_3$வத: பாதௌ$_3$ ஹநுமாந் மாருதாத்மஜ: ॥ (24)

ஶ்ருத்வா ஹநுமதோ வாக்யம் தத$_2$ாபி வ்யதி$_2$தேந்த்$_3$ரிய: ।
புநர்ஜாதமிவாத்மாநம் மந்யதே ஸ்மர்க்ஷபுங்க$_3$வ: ॥ (25)

ததோऽப்$_3$ரவீந்மஹாதேஜா ஹநுமந்தம் ஸ ஜாம்ப$_3$வாந் ।
ஆக$_3$ச்ச$_2$ ஹரிஶார்தூ$_3$ல வாநராந்ஸ்த்ராதுமர்ஹஸி ॥ (26)

நாந்யோ விக்ரமபர்யாப்தஸ்த்வமேஷாம் பரம: ஸக$_2$ா ।
த்வத்பராக்ரமகாலோऽயம் நாந்யம் பஶ்யாமி கஞ்சந ॥ (27)

ருக்ஷவாநரவீராணாமநீகாநி ப்ரஹர்ஷய ।
விஶல்யௌ குரு சாப்யேதௌ ஸாதி$_3$தௌ ராமலக்ஷ்மணௌ ॥ (28)

க$_3$த்வா பரமமத்$_4$வாநமுபர்யுபரி ஸாக$_3$ரம் ।
ஹிமவந்தம் நக$_3$ஶ்ரேஷ்ட$_2$ம் ஹநுமந் க$_3$ந்துமர்ஹஸி ॥ (29)

தத: காஞ்சநமத்யுச்சம்ருஷப$_4$ம் பர்வத்தோத்தமம் ।
கைலாஸஶிக$_2$ரம் சாபி த்$_3$ரக்ஷ்யஸ்யரிநிஷூத$_3$ந ॥ (30)

தயோ: ஶிக$_2$ரயோர்மத்$_4$யே ப்ரதீ$_3$ப்தமதுலப்ரப$_4$ம் ।
ஸர்வௌஷதி$_4$யுதம் வீர த்$_3$ரக்ஷ்யஸ்யோஷதி$_4$பர்வதம் ॥ (31)

தஸ்ய வாநரஶார்தூ$_3$ல சதஸ்ரோ மூர்த்$_4$நி ஸம்ப$_4$வா: ।
த்$_3$ரக்ஷ்யஸ்யோஷத$_4$யோ தீ$_3$ப்தா தீ$_3$பயந்த்யோ தி$_3$ஶோ த$_3$ஶ ॥ (32)

அரக்கனே! எவனைப் பெற்றதால் அஞ்ஜனா தேவி, 'நன்மகவைப் பெற்றவள்' என்ற கீர்த்தியை அடைந்தாளோ, அவ்வாறே வாயுபகவானும் புகழ் பெற்றாரோ, அத்தகைய வானரோத்தமனான அனுமான் உயிருடன் இருக்கிறானா?'' (18)

ஜாம்பவானுடைய சொற்களைக் கேட்ட விபீஷணன், (மனத்திற்குள் மிகவும் வியப்படைந்து) ''மாமன்னனின் திருக்குமாரர்களைப் பற்றிக் கேட்காமல், வாயுபுதல்வனைப் பற்றி (ஆவலுடன்) கேட்கிறீர்களே!'' என்று கேட்டான். (19)

''பெருந்தகையீர்! அனுமானிடம் தாங்கள் எவ்வளவு ஆழமான அன்பு வைத்திருக்கிறீர்களோ, அவ்வளவு பாசம் மன்னன் சுக்ரீவனிடத்திலோ, அங்கதனிடத்திலோ, ஏன் சாட்சாத் இராமபிரானிடத்திலோ கூட வைக்கவில்லையே?'' (20)

விபீஷணனுடைய பதிலைக் கேட்ட ஜாம்பவான், ''அரக்கப் புலியே! நான் ஏன் மாருதியைப் பற்றி அக்கறையுடன் கேட்கிறேன்? என்பதைக் கேள். அந்த வீரன் மட்டும் உயிருடன் இருந்தால், நசுக்கப்பட்ட வானரப்படை முற்றிலும் அழிந்ததாகாது. ஆனால், அனுமான் உயிர்விட்டிருந்தால், நாம் உயிரோடிருந்தாலும் உயிரற்றவர்கள்தான். (21,22)

பிள்ளாய்! வாயுவுக்கு நிகரான வேகமுடையவனும், அக்னிக்கு இணையான (அழிக்கும்) ஆற்றலுடையவனுமான அனுமான் உயிரோடிருந்தால், நாம் எல்லோரும் பிழைத்து எழுந்து விடுவோம் என்ற நம்பிக்கை ஏற்படும்.'' (23)

அப்போது வாயுகுமாரரான அனுமான், வயோதிகரான அவரை நெருங்கிச் சென்று, ஜாம்பவானுடைய இரு பாதங்களையும் கையினால் பற்றிக் கொண்டு முறைப்படி வணக்கம் செலுத்தினார். (24)

('இதோ நான் வந்திருக்கிறேன்' என்ற) அனுமானின் சொற்களைக் கேட்ட கரடித்தலைவர் ஜாம்பவான், அங்கங்கள் எல்லாம் காயமடைந்து துன்பம் கொடுத்துக் கொண்டிருந்தாலும், மீண்டும் உயிர் பெற்றுவிட்டதாகவே எண்ணிக் கொண்டார். (25)

அப்போது எல்லையில்லா பராக்கிரமம் கொண்ட ஜாம்பவான், அனுமானைப் பார்த்து, ''வாராய், வானரோத்தமனே! வானரர்களை உன்னால்தான் காப்பாற்ற முடியும். (26)

உன்னைத் தவிர, சகலவித ஆற்றலலையும் கொண்ட இன்னொருவனை நான் காணவில்லை. நீ இவர்களுடைய நல்வாழ்வில் அக்கறையுடைய நண்பன்; அளவுகடந்த உன் பராக்கிரமத்தைக் காட்ட வேண்டிய தருணம் இதுவே. (வானரப் படையைக் காப்பாற்றுவது என்ற அருஞ்செயலைச் செய்யக்கூடிய) வேறு எந்த ஒரு வீரனையும் நான் காணவில்லை. (27)

கரடி–வானரப் படைகளை உயிர்ப்பித்து, அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடு. பாணங்களால் காயப்பட்டுக் கிடக்கும் இராம–லட்சுமணர்களின் உடல்களிலிருந்து அம்புகளை நீக்கி, அவர்களுக்கு ஆறுதலைக் கொடு. (28)

அனுமானே! பெருங்கடலுக்கு மேலே மேலே வான்வழியாகச் சென்று, மலையரசனான இமயமலையை அடைவாயாக. எதிரிகளை மாய்ப்பவனே! அவ்விடத்தில், மிக உயரமானதும் பொன்மயமானதுமான ரிஷபம் என்ற பர்வதத்தையும் கைலாச மலையையும் காண்பாய். (29,30)

வீரனே! அந்தச் சிகரங்களிடையில், மூலிகைகள் நிறைந்த பிரகாசமாக விளங்கும் மலையைக் காண்பாய். அந்த மலை ஒப்பற்ற ஒளிவீசிக் கொண்டிருப்பது; எல்லாவித மருந்து மூலிகைகளும் அங்கே இருக்கின்றன. (31)

வானரோத்தமனே! அந்த மலையின் உச்சியில் வளர்ந்துள்ள நான்கு வகையான மருத்துவ குணம் கொண்ட மூலிகைகள், தம் பிரகாசத்தால் பத்துத் திசைகளையும் ஒளிபெறச் செய்து கொண்டிருப்பதைக் காண்பாய். (32)

ம்ருதஸஞ்ஜீவநீம் சைவ விஶல்யகரணீமபி ।
ஸாவர்ண்யகரணீம் சைவ ஸந்த$_4$ாநகரணீம் தத$_2$ா ॥ (33)

தா: ஸர்வா ஹநுமந் க்$_3$ருஹ்ய க்ஷிப்ரமாக$_3$ந்துமர்ஹஸி ।
ஆஶ்வாஸய ஹரீந் ப்ராணைர்யோஜ்ய க$_3$ந்த$_4$வஹாத்மஜ ॥ (34)

ஶ்ருத்வா ஜாம்ப$_3$வதோ வாக்யம் ஹநுமாந் ஹரிபுங்க$_3$வ: ।
ஆபூர்யத ப$_3$லோத்$_3$த$_4$ர்ஷைஸ்தோயவேகை$_3$ரிவார்ணவ: ॥ (35)

ஸ பர்வததடாக்$_3$ரஸ்த$_2$: பீட$_3$யந் பர்வதோத்தமம் ।
ஹநுமாந் த்$_3$ருஶ்யதே வீரோ த்$_3$விதீய இவ பர்வத: ॥ (36)

ஹரிபாத$_3$விநிர்ப$_4$க்$_3$நோ நிஷஸாத$_3$ ஸ பர்வத: ।
ந ஶஶாக தத$_3$ாத்மாநம் ஸோடு$_4$ம் ப்$_4$ருஶநிபீடி$_3$த: ॥ (37)

தஸ்ய பேதுர்நக$_3$ா பூ$_4$மௌ ஹரிவேக$_3$ாச்ச ஜஜ்வலு: ।
ஶ்ருங்க$_3$ாணி ச வ்யஶீர்யந்த பீடி$_3$தஸ்ய ஹநூமதா ॥ (38)

தஸ்மிந் ஸம்பீட்$_3$யமாநே து ப$_4$க்$_3$நத்$_3$ருமஶிலாதலே ।
ந ஶேகுர்வாநரா: ஸ்த$_2$ாதும் கூ$_4$ர்ணமாநே நகே$_3$ாத்தமே ॥ (39)

ஸா கூ$_4$ர்ணிதமஹாத்$_3$வாரா ப்ரப$_4$க்$_3$நக்$_3$ருஹகோ$_3$புரா ।
லங்கா த்ராஸாகுலா ராத்ரௌ ப்ரந்ருத்தேவாப$_4$வத்தத$_3$ா ॥ (40)

ப்ருதி$_2$வீத$_4$ரஸங்காஶோ நிபீட்$_3$ய த$_4$ரணீத$_4$ரம் ।
ப்ருதி$_2$வீம் க்ஷோப$_4$யாமாஸ ஸார்ணவாம் மாருதாத்மஜ: ॥ (41)

ஆருரோஹ தத$_3$ா தஸ்மாத்$_3$த$_4$ரிம்மலயபர்வதம் ।
மேருமந்த$_3$ரஸங்காஶம் நாநாப்ரஸ்ரவணாகுலம் ॥ (42)

நாநாத்$_3$ருமலதாகீர்ணம் விகாஸிகமலோத்பலம் ।
ஸேவிதம் தே$_3$வக$_3$ந்த$_4$ர்வை: ஷஷ்டியோஜநமுச்ச்$_2$ரிதம் ॥ (43)

வித்$_3$யாத$_4$ரைர்முநிக$_3$ணைரப்ஸரோபி$_4$ர்நிஷேவிதம் ।
நாநாம்ருக$_3$க$_3$ணாகீர்ணம் ப$_3$ஹுகந்த$_3$ரஶோபி$_4$தம் ॥ (44)

ஸர்வாநாகுலயந்ஸ்தத்ர யக்ஷக$_3$ந்த$_4$ர்வகிந்நராந் ।
ஹநுமாந் மேக$_4$ஸங்காஶோ வவ்ருதே$_4$ மாருதாத்மஜ: ॥ (45)

பத்$_3$ப்$_4$யாம் து ஶைலமாபீட்$_3$ய ப$_3$ட$_3$ப$_3$ாமுக$_2$வந்முக$_2$ம் ।
விவ்ருத்யோக்$_3$ரம் நநாதே$_3$ாச்சைஸ்த்ராஸயந்நிவ ராக்ஷஸாந் ॥ (46)

தஸ்ய நாநத்$_3$யமாநஸ்ய ஶ்ருத்வா நிநத$_3$மத்$_3$பு$_4$தம் ।
லங்காஸ்த$_2$ா ராக்ஷஸா: ஸர்வே ந ஶேகு: ஸ்பந்தி$_3$தும் ப$_4$யாத் ॥ (47)

அவைகளின் பெயர்கள்: ம்ருதஸஞ்ஜீவனீ (உயிர் நீங்கியவரையும் உயிர்ப்பிக்கும் பச்சிலை), விசல்யகரணி (காயங்களை ஆற்றும் பச்சிலை), ஸாவர்ண்யகரணி (காயத்தால் உண்டான வண்ண மாற்றத்தை நீக்கி, உடலின் இயல்பான வண்ணத்தைக் கொடுப்பது), ஸந்தானகரணி (தைத்து நிற்கும் பாணங்களைப் பிடுங்கி எடுத்ததும், பிளக்கப்பட்ட இரண்டு பகுதிகளையும் முன்போல் ஒட்ட வைப்பது). (33)

அனுமானே! அந்த நான்கு பச்சிலைகளையும் எடுத்துக் கொண்டு, வெகுவிரைவில் திரும்பி வா. மணம் சுமக்கும் காற்றின் மைந்தனே! குற்றுயிராகக் கிடக்கும் வானரர்களுக்கு உயிர் கொடுத்து ஆறுதல் பெறச் செய்வாய்.'' (34)

வானரோத்தமரான அனுமான், ஜாம்பவானுடைய பேச்சைக் கேட்டதும், வேகமாக நீர்வரத்தினால் கடல் நிரம்புவதைப் போல, வீரக்களிப்பினால் நிரம்பியவரானார். (35)

அனுமான், ஒரு மலைச்சிகரத்தின்மேல் இன்னொரு மலைபோல் நின்று கொண்டு, தன் கால்களால் அதை அழுத்தினார். (36)

வானரரின் பாதங்களால் அமுக்கப்பட்ட அந்த மலை, தரையினுள்ளே அமிழ்ந்தது. அனுமானுடைய சுமையைத் தாங்க முடியாமல் துன்புற்ற அந்த மலை, தன்னையே கூட தாங்கிக் கொள்ள முடியாதிருந்தது. (37)

அனுமானுடைய சுமையைத் தாங்க முடியாது தவித்த அந்த மலையின் மரங்கள், அவருடைய பலத்தினால் பெயர்ந்து விழுந்தன. சில மரங்கள் ஒன்றோடொன்று உரசி எரிந்து போயின. அதனுடைய முகடுகளும் தெறித்துச் சிதறின. (38)

அந்த மலை அழுத்தப்பட்டு, மரங்களும் பாறைகளும் சிதறி, அதிர்ந்து ஆடும்போது, அந்தப் பிரதேசத்தில் வானரர்கள் நிற்கமுடியாமல் ஆடிக் கொண்டிருந்தார்கள். (39)

இலங்கையின் மாபெரும் நுழைவாயில் ஆட்டம் கண்டது. வீடுகளும் கோபுரங்களும் இடிந்து விழுந்தன. அந்த இரவில் இலங்கை நகரம் (நகர மக்கள்) அச்சத்தால் குழப்பமடைந்து, அதிர்ச்சியுற்று ஆடுவதைப் போலாயிற்று. (40)

மலைக்கு நிகரான பெருந்தோற்றமுடைய வாயுகுமாரர், அந்த மலையைக் கால்களால் அழுத்தி பூமியையும் கடலையும் சுழற்றி நிலையிழக்கச் செய்தார். (41)

பின்னர், அங்கிருந்து புறப்பட்டு மேரு–மந்தர மலைகளுக்கு இணையான உயரம் கொண்ட மலயபர்வதத்தின்மேல் ஏறினார். அந்த மலையில் ஏராளமான நீர்வீழ்ச்சிகள் இருந்தன. (42)

அந்த மலையில் பலவகையான மரங்களும் கொடிகளும் இருந்தன; தாமரை–நீலோத்பலங்கள் மலர்ந்திருந்தன; தேவர்களும் கந்தர்வர்களும் அவ்விடம் வந்து தங்கியிருந்தார்கள். அதன் உயரம் அறுபது யோஜனை. (43)

வித்யாதரர்கள், முனிவர் கூட்டங்கள், அப்சரசுகள் அங்கே குடியிருந்தார்கள். பலவகையான விலங்குகள் வாழ்ந்து கொண்டிருந்தன; அநேக குகைகள் இருந்தன. (44)

மேகத்தைப் போன்றவரும் வாயுகுமாரருமான அனுமான், அங்கு வசித்துக் கொண்டிருந்த யக்ஷ–கந்தர்வ–கின்னரர்களுக்கு மனக்கலக்கத்தை உண்டுபண்ணிக் கொண்டு, தன் உருவத்தை வளர்த்துக் கொண்டார். (45)

கால்களால் மலையை அழுத்தி, வடவாக்னியின் முகத்துவாரம் போல் வாயை பயங்கரமாக அகலமாக்கிக் கொண்டு, அரக்கர்களை மிரளச் செய்து கொண்டு, உரத்த குரலில் ஒலி எழுப்பினார். (46)

இலங்கையிலிருந்த அரக்கர்கள் எல்லோரும், மிகவும் புதுமையான (இதுவரை கேட்டிராத) அவருடைய சிம்மநாதத்தைக் கேட்டு மனம் பதறி அசையக்கூட முடியாமல் போனார்கள். (47)

நமஸ்க்ருத்வாத$_2$ ராமாய மாருதிர்பீ$_4$மவிக்ரம: ।
ராக$_4$வார்தே$_2$ பரம் கர்ம ஸமீஹத பரந்தப: ॥ (48)

ஸ புச்ச$_2$முத்$_3$யம்ய பு$_4$ஜங்க$_3$கல்பம்
விநம்ய ப்ருஷ்ட$_2$ம் ஶ்ரவணே நிகுஞ்ச்ய ।
விவ்ருத்ய வக்த்ரம் ப$_3$ட$_3$ப$_3$ாமுக$_2$ாப$_4$–
மாபுப்லுவே வ்யோமநி சண்ட$_3$வேக$_3$: ॥ (49)

ஸ வ்ருக்ஷஷண்ட$_3$ாந்ஸ்தரஸா ஜஹார
ஶைலாஞ்ஶிலா: ப்ராக்ருதவாநராம்ஶ்ச ।
ப$_3$ாஹூருவேகே$_3$ாத்$_3$த$_4$தஸம்ப்ரணுந்நா–
ஸ்தே க்ஷீணவேக$_3$ா: ஸலிலே நிபேது: ॥ (50)

ஸ தௌ ப்ரஸார்யோரக$_3$பே$_4$ாக$_3$கல்பௌ பு$_4$ஜௌ பு$_4$ஜங்க$_3$ாரிநிகாஶவீர்ய: ।
ஜக$_3$ாம மேரும் நக$_3$ராஜமக்$_3$ர்யம் தி$_3$ஶ: ப்ரகர்ஷந்நிவ வாயுஸூநு: ॥ (51)

ஸ ஸாக$_3$ரம் கூ$_4$ர்ணிதவீசிமாலம் தத$_3$ா ப்$_4$ருஶம் ப்$_4$ராமிதஸர்வஸத்த்வம் ।
ஸமீக்ஷமாண: ஸஹஸா ஜக$_3$ாம சக்ரம் யத$_2$ா விஷ்ணுகராக்$_3$ரமுக்தம் ॥ (52)

ஸ பர்வதாந் வ்ருக்ஷக$_3$ணாந் ஸராம்ஸி நதீ$_3$ஸ்தடாகாநி புரோத்தமாநி ।
ஸ்பீ$_2$தாஞ்ஜநாந்தாநபி ஸம்ப்ரவீக்ஷ்ய ஜக$_3$ாம வேக$_3$ாத் பித்ருதுல்யவேக$_3$: ॥ (53)

ஆதி$_3$த்யபத$_2$மாஶ்ரித்ய ஜக$_3$ாம ஸ க$_3$தக்லம: ।
ஹநுமாந்ஸ்த்வரிதோ வீர: பித்ருதுல்யபராக்ரம: ॥ (54)

ஜவேந மஹதா யுக்தோ மாருதிர்மாருதோ யத$_2$ா ।
ஜக$_3$ாம ஹரிஶார்தூ$_3$லோ தி$_3$ஶ: ஶப்$_3$தே$_3$ந பூரயந் ॥ (55)

ஸ்மரஞ்ஜாம்ப$_3$வதோ வாக்யம் மாருதிர்வாதரம்ஹஸா ।
த$_3$த$_3$ர்ஶ ஸஹஸா சாபி ஹிமவந்தம் மஹாகபி: ॥ (56)

நாநாப்ரஸ்ரவணோபேதம் ப$_3$ஹுகந்த$_3$ரநிர்ஜரம் ।
ஶ்வேதாப்$_4$ரசயஸங்காஶை: ஶிக$_2$ரைஶ்சாருத$_3$ர்ஶநை: ॥ (57)

ஸ தம் ஸமாஸாத்$_3$ய மஹாநகே$_3$ந்த்$_3$ர–
மதிப்ரவ்ருத்$_3$தே$_4$ாத்தமஹேமஶ்ருங்க$_3$ம் ।
த$_3$த$_3$ர்ஶ புண்யாநி மஹாஶ்ரமாணி
ஸுரர்ஷிஸங்கே$_4$ாத்தமஸேவிதாநி ॥ (58)

ஸ ப்ரஹ்மகோஶம் ரஜதாலயம் ச ஶக்ராலயம் ருத்$_3$ரஶரப்ரமோக்ஷம் ।
ஹயாநநம் ப்$_3$ரஹ்மஶிரஶ்ச தீ$_3$ப்தம் த$_3$த$_3$ர்ஶ வைவஸ்வதகிங்கராம்ஶ்ச ॥ (59)

வஜ்ராலயம் வைஶ்ரவணாலயம் ச ஸூர்யப்ரப$_4$ம் ஸூர்யநிப$_3$ந்த$_4$நம் ச ।
ப்$_3$ரஹ்மாஸநம் ஶங்கரகார்முகம் ச த$_3$த$_3$ர்ஶ நாபி$_4$ம் ச வஸுந்த$_4$ராயா: ॥ (60)

எதிரிகளை அழிப்பவரும் எல்லையற்ற பராக்கிரமம் உடையவருமான அனுமான், அப்போது இராமபிரானை (மனத்தால்) நமஸ்கரித்துவிட்டு, இராமனுக்காக ஓர் அருஞ்செயல் செய்ய முற்பட்டார். (48)

அவர், நீண்ட சர்ப்பம் போன்ற தன் வாலை உயர்த்தி, பின்பக்கத்தைத் தாழ்த்தி, செவிகளை மடக்கி, வடவாக்னியைப் போல் வாயை விரித்துக் கொண்டு வான்வெளியில் மிகவும் வேகமாகப் பாய்ந்தார். (49)

அனுமான் தன்னுடைய வேகத்தால், மரக்கூட்டங்களையும் மலைகளையும் பாறைகளையும் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்து கொண்டிருந்த வானரர்களையும் கட்டி இழுத்தார். அவருடைய புஜவேகத்தாலும் தொடை வேகத்தாலும் இழுத்துச் செல்லப்பட்ட அவைகள், சிறிதுதூரம் சென்றதும் வேகத்தை இழந்து கடலில் விழுந்தன. (50)

கருடனுக்கு நிகரான வேகம் கொண்ட வாயுகுமாரர், எல்லாத் திசைகளையுமே இழுத்துச் செல்பவர்போல பாம்புகளின் படங்களைப் போன்ற விஸ்தாரமான கைகளை விரித்துக் கொண்டு, மலைகளுள் முதன்மையான மேருமலையை நோக்கிச் சென்றார். (51)

அவர், மாலைகள் போல் காட்சிதரும் அலைவரிசைகளை உடையதும், நீர்வாழ்ப் பிராணிகள் நீரினுள் இங்குமங்கும் திரிந்து கொண்டிருப்பதுமான கடலைப் பார்த்துக் கொண்டே, மகாவிஷ்ணுவின் திருக்கரங்களிலிருந்து விடுக்கப் பெற்ற சக்கராயுதம் தங்குதடையின்றி இலக்கினை நோக்கிச் செல்வதைப் போல, தடைபடாத வேகத்துடன் சென்றார். (52)

தந்தைக்கு இணையான வேகங்கொண்ட அவர், மலைகள், மரக்கூட்டங்கள், பொய்கைகள், ஆறுகள், குளங்கள், சிறந்த நகரங்கள், வளமான நாடுகள் ஆகியவைகளைப் பார்த்துக் கொண்டே வேகமாகச் சென்றார். தந்தைக்கு நிகரான வேகமும் ஆற்றலுமுடைய சூரரான அனுமான், சூரியன் செல்லும் ஆகாய வழியில் களைப்பில்லாமல் வேகமாகச் சென்றார். (53,54)

வானரோத்தமரான அனுமான், வாயுவைப் போன்ற வேகத்துடன், (மிக வேகமாகக் காற்றைப் பிளந்து கொண்டு சென்றதால் ஏற்பட்ட) பேரொலியினால் திசைகளை நிரப்பிக் கொண்டு முன்னேறினார். (55)

ஜாம்பவானின் சொற்களை நினைவில் வைத்துக் கொண்டே வாயுவேகத்துடன் சென்ற வானரோத்தமரான அனுமான், விரைவில் இமயமலையைக் கண்டார். (56)

பல அருவிகள் நிறைந்ததும், பல குகைகளும் நீர்வீழ்ச்சிகளும் உடையதும், வெண்முகிற்கூட்டம் போல் அழகிய முகடுகளாலும் பலவகை மரங்களாலும் விளங்குவதுமான மாமலையை அடைந்தார். மிகவும் உயரமானதும் உத்தமமான பொன்முகட்டை உடையதுமான மிகப்பெரிய மலை அரசை வந்தடைந்து, மகான்களான தேவரிஷிக்கூட்டங்கள் வசிக்கும் புனிதமான ஆசிரமங்களைக் கண்டார். (57,58)

அந்த மலையில், உலகப் படைப்பாளர் பிரும்மாவுக்கு உரிய இடம்; கைலாயம்; இந்திரன் வந்து தங்குவதற்கான மாளிகை; திரிபுராசுரர்களை அழிப்பதற்காக எந்த இடத்தில் நின்றுகொண்டு ருத்ரமூர்த்தி பாணங்களை விட்டாரோ, அந்த இடம்; ஹயக்ரீவர் கோயில் கொண்டுள்ள இடம்; ருத்ரனால் கிள்ளி எறியப்பட்ட பிரும்மாவின் தலைவிழுந்த இடம் ஆகியவற்றையும், ஓய்வெடுப்பதற்காக வந்திருந்த யமராஜ ஊழியர்களையும் பார்த்தார். (59)

பிரும்மா, இந்திரனுக்கு வஜ்ராயுதம் கொடுத்த இடம்; சூரியனைப் போல் ஒளிவீசும் குபேரமாளிகை; கதிரவன், சாயாதேவியுடன் கூட இருப்பதற்காக நெருப்பினால் பொசுங்காத விதமாக விசுவகர்மாவால் கட்டப்பட்ட இல்லம்; முனிவர்கள் வாழும் இடம்; பரமேசுவரனின் பிநாகம் என்ற வில் இருந்த இடம்; பூமியின் தொப்புள் எனப்படும் பாதாளத்திற்குச் செல்லும் ஆழ்துளை ஆகியவற்றையும் கண்டார். (60)

கைலாஸமக்3ர்யம் ஹிமவச்சி2லாம் ச
ததர்ஷப4ம் காஞ்சநஶைலமக்3ர்யம் ।
ஸந்தீ3ப்தஸர்வௌஷதி4ஸம்ப்ரதீ3ப்தம்
த3த3ர்ஶ ஸர்வௌஷதி4பர்வதேந்த்3ரம் ॥ (61)

ஸ தம் ஸமீக்ஷ்யாநலரஶ்மிதீ3ப்தம் விஸிஷ்மியே வாஸவதூ3தஸூநு: ।
ஆவ்ருத்ய தம் சௌஷதி4பர்வதேந்த்3ரம் தத்ரௌஷதீ4நாம் விசயம் சகார ॥ (62)

ஸ யோஜநஸஹஸ்ராணி ஸமதீத்ய மஹாகபி: ।
தி3வ்யௌஷதி4த4ரம் ஶைலம் வ்யசரந்மாருதாத்மஜ: ॥ (63)

மஹௌஷத்யஸ்தத: ஸர்வாஸ்தஸ்மிந் பர்வதஸத்தமே ।
விஜ்ஞாயார்தி2நமாயாந்தம் ததோ ஜக்3முரத3ர்ஶநம் ॥ (64)

ஸ தா மஹாத்மா ஹநுமாநபஶ்யந்ஶுகோப கோபாச்ச ப்4ருஶம் நநாத3 ।
அம்ருஷ்யமாணோऽக்3நிநிகாஶசக்ஷுர்மஹீத4ரேந்த்3ரம் தமுவாச வாக்யம் ॥ (65)

கிமேததே3வம் ஸுவிநிஶ்சிதம் தே
யத்3ராக4வே நாஸி க்ருதாநுகம்ப: ।
பஶ்யாத்3ய மத்3பா3ஹுப3லாபி4பூ4தோ
விஶீர்ணமாத்மாநமதோ2 நகே3ந்த்3ர ॥ (66)

ஸ தஸ்ய ஶ்ருங்க3ம் ஸநக3ம் ஸநாக3ம்
ஸகாஞ்சநம் தா4துஸஹஸ்ரஜுஷ்டம் ।
விகீர்ணகூடஜ்வலிதாக்3ரஸாநும்
ப்ரக்3ருஹ்ய வேகா3த் ஸஹஸோந்மமாத2 ॥ (67)

ஸ தம் ஸமுத்பாட்ய க2முத்பபாத
வித்ராஸ்ய லோகாந் ஸஸுராஸுரேந்த்3ராந் ।
ஸம்ஸ்தூயமாந: க2சரைரநேகை–
ஜகா3ம வேகா3த்3க3ருடோ3க்3ரவேக3: ॥ (68)

ஸ பா4ஸ்கராத்4வாநமநுப்ரபந்நஸ்தம் பா4ஸ்கராப4ம் ஶிக2ரம் ப்ரக்3ருஹ்ய ।
ப3பௌ4 தத3ா பா4ஸ்கரஸந்நிகாஶோ ரவே: ஸமீபே ப்ரதிபா4ஸ்கராப4: ॥ (69)

ஸ தேந ஶைலேந ப்4ருஶம் ரராஜ ஶைலோபமோ க3ந்த4வாஹாத்மஜஸ்து ।
ஸஹஸ்ரதா4ரேண ஸபாவகேந சக்ரேண கே2 விஷ்ணுரிவார்பிதேந ॥ (70)

தம் வாநரா: ப்ரேக்ஷ்ய விநேது3ருச்சை: ஸ தாநாபி ப்ரேக்ஷ்ய முதா3 நநாத3 ।
தேஷாம் ஸமுத்3கு4ஷ்டரவம் நிஶம்ய லங்காலயா பீ4மதரம் விநேது3: ॥ (71)

ததோ மஹாத்மா நிபபாத தஸ்மிஞ்ஶைலோத்தமே வாநரஸைந்யமத்4யே ।
ஹர்யுத்தமேப்4ய: ஶிரஸாபி4வாத்3ய விபீ4ஷணம் தத்ர ஸ ஸஸ்வஜே ச ॥ (72)

உத்தமமான கயிலையங்கிரியையும், கைலாசபர்வதத்தை ஒட்டினாற்போலிருந்த ஹிமவத்பாறை என்ற பாறையையும், ரிஷபம் என்ற மூலிகை மலையையும், மேருவையும், இரவு நேரங்களிலும் ஒளியுடன் விளங்கும் பச்சிலைச் செடி–கொடிகளுக்கு இருப்பிடமானதும் ம்ருதஸஞ்ஜீவனீ முதலிய மூலிகைகளைக் கொண்டதுமான மலையையும் கண்டார். (61)

வாயு புதல்வரான அவர், அந்த மூலிகைச் செடிகளெல்லாம் அக்னியைப் போல் பிரகாசிப்பதைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். அந்த மூலிகை மலையில் அனுமான் சுற்றித் திரிந்து, ஜாம்பவான் சொன்ன மூலிகை வகைகளைத் தேடினார். (62)

அந்தப் பெருவானரர் ஆயிரம் யோஜனை தூரம் தாண்டித் திவ்ய ஓஷதிகளைக் (மூலிகைகளைக்) கொண்ட மலையைச் சுற்றி வந்தார். அந்த மலையிருந்த மூலிகைகள் எல்லாம், தங்களைப் பறித்துக் கொண்டு செல்ல விரும்பும் ஒருவன் வந்திருப்பதை அறிந்து, அப்போது அவர் கண்களுக்குப் புலப்படாமல் போயின. (63,64)

பேராண்மையுடைய அனுமான், அந்த மூலிகைகள் எல்லாம் மறைந்து கொண்டதைத் தெரிந்து கொண்டு மிகவும் கோபம் கொண்டு உரக்கக் கூச்சலிட்டார். தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதவராக, சினத்தால் சிவந்து அக்னியைப் போன்ற கண்களுடன், சிறந்ததான அந்த மலையை நோக்கிப் பின்வருமாறு புகன்றார்— (65)

''மலையரசனே! உனக்கு இராமபிரானிடத்தில் தயவு இல்லாமல் போய்விட்டதா? எந்த தைரியத்தில் நீ இந்த முடிவை மேற்கொண்டாய்? என்னுடைய தோள்வலிமையால் நீ சிதறி அடிக்கப்படுவதை, நீயே இப்போது காணப் போகிறாய்.'' (66)

அவர், பலவகையான தாதுக்கள் நிறைந்த சிகரத்தை, மரங்கள்–யானைகள் கொண்ட பொன்மயமான முகடுகளுடன், உச்சிப்பகுதி சிதறி தீப்பொறி தெறிக்கும் அந்த மலையை பலமாக ஆட்டி அசைத்து நொடிப்பொழுதில் பெயர்த்து எடுத்துவிட்டார். (67)

அதைப் பெயர்த்துக் கையில் எடுத்துக் கொண்ட அனுமான், தேவர்கள் தலைவனையும் அசுரர்கள் தலைவனையும் மற்ற மக்கள் எல்லோரையும் அச்சத்தால் நடுங்கச் செய்துகொண்டு, கருடனுக்கு நிகரான பயங்கர வேகத்துடன் ஆகாயத்தில் பறந்தார். அப்போது, ஆகாயத்தில் உலாவிக் கொண்டிருந்த (கந்தர்வர்–வித்யாதரர்–கின்னரர் போன்ற)வர்களால் மிகவும் போற்றப்பட்டார். (68)

அப்போது, சூரியனை நிகர்த்த அவர், சூரிய ஒளி கொண்ட சிகரத்தைக் கையில் தாங்கிக் கொண்டு, சூரியனின் பாதையை (ஆகாயத்தை) அடைந்து, சூரியனுக்கு அருகில் இன்னொரு சூரியனைப் போல் விளங்கினார். வாயுவின் மைந்தரான அனுமான், வானவெளியில் கையில் மலைச்சிகரத்தைத் தாங்கிக்கொண்டு செல்லும் மாபெரும் மலை போல் தோற்றமளித்தார். ஆயிரக்கணக்கான முனைகளுடையதும் நெருப்புக்கொழுந்து வீசுவதுமான சக்கராயுதத்தோடு விளங்கும் பகவான் விஷ்ணுவைப் போல் தெய்வீக சோபையுடன் காட்சி தந்தார். (69,70)

(அனுமான் திரிகூடமலையை நெருங்கி வந்ததும்) வானரர்கள் அவரைப் பார்த்து உரத்தகுரலில் சப்தமிட்டார்கள். (தொலைவிலிருந்து மூலிகைகளின் காற்றுப்பட்டதுமே பல வானரர்கள் மூர்ச்சை தெளிந்துவிட்டார்கள் – எனக் கொள்க.) தான் எடுத்துக் கொண்ட பணி நிறைவேறிவிட்டதால், அனுமானும் மகிழ்ச்சியுடன் பதில் குரல் கொடுத்தார். ஆனால், இலங்கைவாசிகள், அவர்களுடைய பேரொலியைக் கேட்டு மிகவும் அச்சத்துடன் பயங்கரமாகக் கதறினார்கள். (71)

உடனே, மிகச்சிறந்த திரிகூடமலையில் வானரப் படைகளின் நடுவே மாவீரரான அவர் இறங்கினார். வானரப் பெரியோர்களுக்குத் தலைவணங்கிவிட்டு, விபீஷணனை மார்புறத் தழுவிக் கொண்டார். (72)

தாவப்யுபௌ$_4$ மாநுஷராஜபுத்ரௌ தம் க$_3$ந்த$_4$மாக்$_4$ராய மஹௌஷதீ$_4$நாம் ।
ப$_3$பூ$_4$வதுஸ்தத்ர ததா$_3$ விஶல்யாவுத்தஸ்து$_2$ரந்யே ச ஹரிப்ரவீரா: ॥ (73)

ஸர்வே விஶல்யா விருஜ: க்ஷணேந
ஹரிப்ரவீரா நிஹதாஶ்ச யே ஸ்யு: ।
க$_3$ந்தே$_4$ந தாஸாம் ப்ரவரௌஷதீ$_4$நாம்
ஸுப்தா நிஶாந்தேஷ்விவ ஸம்ப்ரபு$_3$த்$_3$தா$_4$: ॥ (74)

யதா$_3$ப்ரப்$_4$ருதி லங்காயாம் யுத்$_4$யந்தே கபிராக்ஷஸா: ।
ததா$_3$ப்ரப்$_4$ருதி மாநார்த$_2$மாஜ்ஞயா ராவணஸ்ய ச ॥ (75)

யே ஹந்யந்தே ரணே தத்ர ராக்ஷஸா: கபிகுஞ்ஜரை: ।
ஹதாஹதாஸ்து க்ஷிப்யந்தே ஸர்வ ஏவ து ஸாக$_3$ரே ॥ (76)

ததோ ஹரிர்க$_3$ந்த$_4$வஹாத்மஜஸ்து தமோஷதீ$_4$ஶைலமுத$_3$க்$_3$ரவீர்ய: ।
நிநாய வேகா$_3$த்$_3$தி$_4$மவந்தமேவ புநஶ்ச ராமேண ஸமாஜகா$_3$ம ॥ (77)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ சது:ஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

பஞ்சஸப்ததிதம: ஸர்க$_3$:

லங்காதா$_3$ஹ:

ததோऽப்$_3$ரவீந்மஹாதேஜா: ஸுக்$_3$ரீவோ வாநராதி$_4$ப: ।
அர்த்$_2$யம் விஜ்ஞாபயம்ஶ்சாபி ஹநுமந்தமித$_3$ம் வச: ॥ (1)

யதோ ஹத: கும்ப$_4$கர்ண: குமாராஶ்ச நிஷூதி$_3$தா: ।
நேதா$_3$நீமுபநிர்ஹாரம் ராவணோ தா$_3$துமர்ஹதி ॥ (2)

யே யே மஹாப$_3$லா: ஸந்தி லகு$_4$வஶ்ச ப்லவங்க$_3$மா: ।
லங்காமப்$_4$யுத்பதந்த்வாஶு க்$_3$ருஹ்யோல்கா: ப்லவக$_3$ர்ஷபா$_4$: ॥ (3)

ததோऽஸ்தம் க$_3$த ஆதித்யே ரௌத்$_3$ரே தஸ்மிந்நிஶாமுகே$_2$ ।
லங்காமபி$_4$முகா$_2$: ஸோல்கா ஜக்$_3$முஸ்தே ப்லவக$_3$ர்ஷபா$_4$: ॥ (4)

உல்காஹஸ்தைர்ஹரிக$_3$ணை: ஸர்வத: ஸமபி$_4$த்$_3$ருதா: ।
ஆரக்ஷஸ்தா$_2$ விரூபாக்ஷா: ஸஹஸா விப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (5)

கோ$_3$புராட்டப்ரதோலீஷு சர்யாஸு விவிதா$_4$ஸு ச ।
ப்ராஸாதே$_3$ஷு ச ஸங்ஹ்ருஷ்டா: ஸஸ்ருஜுஸ்தே ஹுதாஶநம் ॥ (6)

தேஷாம் க்$_3$ருஹஸஹஸ்ராணி த$_3$தா$_3$ஹ ஹுதபு$_4$க்ததா$_3$ ।
ப்ராஸாதா$_3$: பர்வதாகாரா: பதந்தி த$_4$ரணீதலே ॥ (7)

அப்போது, மாமன்னர் திருக்குமாரர்களான அவ்விருவரும் மூலிகைகளின் மணத்தை நுகர்ந்து உடற்காயங்கள் மறைந்தவர்கள் ஆனார்கள். மற்ற வானர வீரர்களும் முழுஉணர்வு பெற்று எழுந்தார்கள். (73)

மாண்டு கிடந்த வானரவீரர்கள் எல்லோரும் சக்தி மிகுந்த மூலிகைகளின் மணத்தால், இரவில் தூங்கியவர்கள் வைகறைப் போதில் விழித்துக் கொள்வதைப் போல விழித்துக் கொண்டார்கள். நொடி நேரத்தில் அவர்களுடைய உடற்புண்கள் ஆறிப்போயின. அவர்கள் உடல் வேதனையற்றவர்களாக ஆனார்கள். (74)

இலங்கையில் வானரர்களுக்கும் அரக்கர்களுக்குமிடையே போர் தொடங்கிய நாள் முதல், வானரோத்தமர்களால் வீழ்த்தப்பட்டு மாண்டு போனவர்களும் குற்றுயிராகக் கிடந்தவர்களுமான அரக்கர்கள், (இவ்வளவு அரக்கர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற தகவல் பரவினால் அவமானம் என்று கருதி,) கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இராவணனுடைய உத்தரவுப்படி, கடலில் அப்போதைக்கப்போதே தள்ளப்பட்டிருந்தார்கள். (75,76)

பின்னர், மகாவீரரான அனுமான், அந்த மூலிகை மலையை (அதைக் கொண்டு வந்ததன் பயன் முழுமையாகக் கிடைத்துவிட்டபடியால்), வெகு விரைவாகச் சென்று, இமயமலையில் அதன் இடத்தில் கொண்டு போய் வைத்தார். பின், திரும்பவும் இராமபிரானிடம் வந்து சேர்ந்தார். (77)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தைந்து

இலங்கையைக் கொளுத்துதல்!

மகாவீரனும் வானர மன்னுமான சுக்ரீவன், இராமபிரானிடம் இங்கிதமாக அனுமதி பெற்று, மேலே செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி அனுமானிடம் பின்வருமாறு கூறினான்— (1)

''கும்பகர்ணன் கொல்லப்பட்டுவிட்டான்; புதல்வர்களும் மாய்க்கப்பட்டார்கள். அதனால், (வருத்தத்தில் மூழ்கியிருக்கும்) இராவணன் தற்சமயம் பட்டணத்தைவிட்டு (போர் செய்வதற்காக) வெளியே வரமாட்டான். (2)

அதனால், நமது படையில் மகாபலம் பொருந்தியவர்களாகவும் வேகமாகச் செல்லக் கூடியவர்களுமாக இருப்பவர்கள் எல்லோரும் கையில் தீப்பந்தத்துடன், இலங்கையை நோக்கி இப்போதே பாய்ந்து செல்வார்களாக.'' (3)

பின்னர், சூரியன் மேற்றிசையில் மறைந்தவுடன், பயங்கரமான அந்த முன்னிரவு வேளையில், வானரோத்தமர்கள் கையில் தீப்பந்தத்தைத் தாங்கிக் கொண்டு இலங்கையை நோக்கிச் சென்றார்கள். (4)

காவற்பணியிலிருந்த விகாரமான கண்களைக் கொண்ட அரக்கர்கள், எல்லாப் பக்கங்களிலும் தீவட்டிகளைக் கொண்டு வானரக் கூட்டங்களால் அடித்துத் துரத்தப்பட்டவர்களாக, உடனே வேகமாக மிரண்டு ஓடிச் சென்றார்கள். (5)

தோரணவாயில்கள், உப்பரிகைகள், பலவகையான வீதிகள், மதிற்சுவர்கள் முதலிய இடங்களை மன மகிழ்ச்சியுடன் தீ வைத்துக் கொளுத்தினார்கள். (6)

அப்போது, அரக்கர்களின் ஆயிரக்கணக்கான வீடுகளை நெருப்பு எரித்துச் சாம்பலாக்கியது. மலை போன்ற பெருமாளிகைகள் தரையில் சாய்ந்தன. (7)

அக$_3$ருர்த$_3$ஹ்யதே தத்ர வரம் ச ஹரிசந்த$_3$நம் ।
மௌக்திகா மணய: ஸ்நிக்$_3$த$_4$ா வஜ்ரம் சாபி ப்ரவாலகம் ॥ (8)

க்ஷௌமம் ச த$_3$ஹ்யதே தத்ர கௌஶேயம் சாபி ஶோப$_4$நம் ।
ஆவிகம் விவித$_4$ம் சௌர்ணம் காஞ்சநம் ப$_4$ாண்ட$_3$மாயுத$_4$ம் ॥ (9)

நாநாவிக்ருதஸம்ஸ்த$_2$ாநம் வாஜிப$_4$ாண்ட$_3$பரிச்ச$_2$தௌ$_3$ ।
க$_3$ஜக்$_3$ரைவேயகக்ஷ்யாஶ்ச ரத$_2$ப$_4$ாண்ட$_3$ாஶ்ச ஸம்ஸ்க்ருதா: ॥ (10)

தநுத்ராணி ச யோத$_4$ாநாம் ஹஸ்த்யஶ்வாநாம் ச வர்ம ச ।
க$_2$ட்$_3$க$_3$ா த$_4$நூம்ஷி ஜ்யாப$_3$ாணாஸ்தோமராங்குஶஶக்தய: ॥ (11)

ரோமஜம் வாலஜம் சர்ம வ்யாக்$_4$ரஜம் சாண்ட$_3$ஜம் ப$_3$ஹு ।
முக்தாமணிவிசித்ராம்ஶ்ச ப்ராஸாத$_3$ாம்ஶ்ச ஸமந்தத: ॥ (12)

விவித$_4$ாநஸ்த்ரஸம்யோக$_3$ாநக்$_3$நிர்த$_3$ஹதி தத்ர வை ।
நாநாவித$_4$ாந் க்$_3$ருஹச்ச$_2$ந்த$_3$ாந் த$_3$த$_3$ாஹ ஹுதபு$_4$க்தத$_3$ா ॥ (13)

ஆவாஸாந் ராக்ஷஸாநாம் ச ஸர்வேஷாம் க்$_3$ருஹக$_3$ர்தி$_4$நாம் ।
ஹேமசித்ரதநுத்ராணாம் ஸ்ரக்$_3$த$_3$ாமாம்ப$_3$ரத$_4$ாரிணாம் ॥ (14)

ஶீது$_4$பாநசலாக்ஷாணாம் மத$_3$விஹ்வலக$_3$ாமிநாம் ।
காந்தாலம்பி$_3$தவஸ்த்ராணாம் ஶத்ருஸஞ்ஜாதமந்யுநாம் ॥ (15)

க$_3$த$_3$ாஶூலாஸிஹஸ்தாநாம் க$_2$ாத$_3$தாம் பிப$_3$தாமபி ।
ஶயநேஷு மஹார்ஹேஷு ப்ரஸுப்தாநாம் ப்ரியை: ஸஹ ॥ (16)

த்ரஸ்தாநாம் க$_3$ச்ச$_2$தாம் தூர்ணம் புத்ராநாத$_3$ாய ஸர்வத: ।
தேஷாம் ஶதஸஹஸ்ராணி தத$_3$ா லங்காநிவாஸிநாம் ॥
அத$_3$ஹத் பாவகஸ்தத்ர ஜஜ்வால ச புந: புந: ॥ (17)

ஸாரவந்தி மஹார்ஹாணி க$_3$ம்பீ$_4$ரகு$_3$ணவந்தி ச ।
ஹேமசந்த்$_3$ரார்த$_4$சந்த்$_3$ராணி சந்த்$_3$ரஶாலோத்தமாநி ச ॥ (18)

ரத்நசித்ரக$_3$வாக்ஷாணி ஸாதி$_4$ஷ்ட$_2$ாநாநி ஸர்வஶ: ।
மணிவித்$_3$ருமசித்ராணி ஸ்ப்ருஶந்தீவ தி$_3$வாகரம் ॥ (19)

க்ரௌஞ்சப$_3$ர்ஹிணவீணாநாம் பூ$_4$ஷணாநாம் ச நி:ஸ்வநை: ।
நாதி$_3$தாந்யசலாப$_4$ாநி வேஶ்மாந்யக்$_3$நிர்த$_3$த$_3$ாஹ ஸ: ॥ (20)

ஜ்வலநேந பரீதாநி தோரணாநி சகாஶிரே ।
வித்$_3$யுத்$_3$பி$_4$ரிவ நத்$_3$த$_4$ாநி மேக$_4$ஜாலாநி க$_4$ர்மகே$_3$ ॥ (21)

ஜ்வலநேந பரீதாநி நிபேதுர்ப$_4$வநாந்யத$_2$ ।
வஜ்ரிவஜ்ரஹதாநீவ ஶிக$_2$ராணி மஹாகி$_3$ரே: ॥ (22)

சில வீடுகளில் அகிற்கட்டை எரிந்தது; தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த ஹரிசந்தனம் என்ற மரக்கட்டைகள் எரிந்தன; முத்துக்கள், மனங்கவரும் இரத்தினங்கள், வைரம் மற்றும் பவழங்கள் எரிந்து போயின. (8)

பருத்தி ஆடைகள், அழகிய பட்டாடைகள், ஆட்டு ரோமத்தாலான கம்பளம், பலவகையான மெல்லிய இழைகளாலான கம்பளங்கள், பொற்பாத்திரங்கள், ஆயுதங்கள், பல வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்த குதிரை அணிவகைகள், யானையின் கழுத்தணிகள்–அம்பாரிகள், பாங்குற செய்யப்பட்டிருந்த தேர் அலங்காரங்கள், போர்வீரர்களின் கவசங்கள், யானை–குதிரைகளின் உடலைக் காக்கும் கவசங்கள், கத்திகள், விற்கள், நாண்கயிறுகள், பாணங்கள், வல்லயம்–அங்குசம்–வேல்கள், விலங்குகளின் ரோமத்தாலான கம்பளிகள், சாமரங்கள், கேடயங்கள், புலித்தோல்கள், புனுகு–கஸ்தூரி முதலிய வாசனைப் பொருள்கள், முத்து–இரத்தினங்கள் இழைக்கப்பட்ட அரண்மனைகள், எல்லாப் பக்கங்களிலுமிருந்த சுற்றுச் சுவர்கள், பலவகையான அஸ்திரக் குவியல்கள், பலவிதமான வீட்டுப் பொருள்களையும் அக்னி எரித்து நாசமாக்கியது. (9–13)

மிக்க செழிப்புடன் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த அரக்கர்களின் இருப்பிடங்கள், பொன்னால் செய்யப்பட்ட அழகிய கவசம் பூண்டவர்கள், மலர்மாலை–உயர்தர ஆடை அணிந்தவர்கள், மதுபானத்தால் சுழலும் கண்களைக் கொண்டவர்கள், போதை வெறியால் தளர்ந்து நடப்பவர்கள், மேலாடையைப் பிடித்துக் கொண்டு வரும் மனைவிகளால் தொடரப்பட்டவர்கள், எதிரிகளான வானரர்களிடம் கோபங்கொண்டு கதை–சூலம்–வாள்களைக் கைக்கொண்டவர்கள், ஏதோ தின்பண்டங்களைச் சுவைத்துத் தின்று கொண்டிருப்பவர்கள், குடித்துக் கொண்டிருப்பவர்கள், மிக நேர்த்தியான கட்டில்களில் காதலிகளோடு உறங்கிக் கொண்டிருந்தவர்கள், அச்சத்துடன் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு எல்லாப் பக்கங்களிலும் ஓடுகிறவர்கள் – இவ்விதமான நூறாயிரக்கணக்கான இலங்கை மக்களை, நெருப்பு தடைபடாமல் எரித்து மேன்மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது. (14–17)

மிக வேகமாகப் பரவிக் கொண்டிருந்த நெருப்பு, உறுதியாகவும் விலையுயர்ந்த பொருள்களாலும் பிரமிக்க வைக்கும் வகையில் பல சிறப்புக்களுடன் கட்டப்பட்டவைகளும், பொன்னால் செய்யப்பட்ட பிறைநிலா, முழுநிலா போன்ற வடிவில் அமைக்கப்பட்டிருந்தவைகளும், மேன்மாடங்களால் மிக உயரமாக இருந்தவைகளும், இரத்தினங்களால் இழைக்கப் பெற்ற பலகணிகள் கொண்டவைகளும், உட்காருவதற்கான மேடைகள் உடையனவும், எல்லா இடங்களிலும் இரத்தினங்கள்–பவழங்கள் இழைக்கப் பெற்றவைகளும், சூரியனைத் தொட்டுவிடுவதைப் போல் மிக உயரமானவைகளும், அன்றில்–மயில்–வீணை முதலியவற்றினுடையவும், மகளிர் அணிந்திருந்த பல்வகை அணிகலன்களுடையவும், ஓசை ஒலிக்கப் பெற்றவைகளும், பெரிய மலை போன்ற வானளாவி விளங்கியவைகளுமான மாளிகைகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது. (18–20)

நெருப்பினால் சூழப்பட்ட இலங்கையின் நுழைவாயில்கள், மாரிக்காலத்தில் மின்னல்களால் சூழப்பட்ட மேக மண்டலங்கள் போல் விளங்கின. (நெருப்புச் சுவாலை மின்னற்கொடிகளாகவும், கனத்த புகைக் கூட்டங்கள் மேகத் திரள்களாகவும் காணப்பட்டன.) (21)

அப்போது, இந்திரனின் வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட மாபெரும் மலையிலிருந்து மலைச்சிகரங்கள் விழுவதைப் போல அக்னியால் சூழப்பட்ட பெருமாளிகைகள் தகர்ந்து விழுந்தன. (22)

விமாநேஷு ப்ரஸுப்தாஸ்ச த$_3$ஹ்யமாநா வராங்க$_3$நா: ।
த்யக்தாப$_4$ரணஸர்வாங்க$_3$ா ஹா ஹேத்யுச்சைர்விசுக்ருஶு: ॥ (23)

தாநி நிர்த$_3$ஹ்யமாநாநி தூ$_3$ரத: ப்ரசகாஶிரே ।
ஹிமவச்சி$_2$க$_2$ராணீவ தீ$_3$ப்தௌஷதி$_4$வநாநி ச ॥ (24)

ஹர்ம்யாக்$_3$ரைர்த$_3$ஹ்யமாநைஶ்ச ஜ்வாலாப்ரஜ்வலிதைரபி ।
ராத்ரௌ ஸா த்$_3$ருஶ்யதே லங்கா புஷ்பிதைரிவ கிம்ஶுகை: ॥ (25)

ஹஸ்த்யத்$_4$யக்ஷைர்க$_3$ஜைர்முக்தைர்முக்தைஶ்ச துரகை$_3$ரபி ।
ப$_3$பூ$_4$வ லங்கா லோகாந்தே ப்$_4$ராந்தக்$_3$ராஹ இவார்ணவ: ॥ (26)

அஶ்வம் முக்தம் க$_3$ஜோ த்$_3$ருஷ்ட்வா க்வசித்$_3$பீ$_4$தோऽபஸர்பதி ।
பீ$_4$தோ பீ$_4$தம் க$_3$ஜம் த்$_3$ருஷ்ட்வா க்வசித$_3$ஶ்வோ நிவர்ததே ॥ (27)

லங்காயாம் த$_3$ஹ்யமாநாயாம் ஶுஶுபே$_4$ ஸ மஹார்ணவ: ।
ச$_2$ாயாஸம்ஸக்தஸலிலோ லோஹிதோத$_3$ இவார்ணவ: ॥ (28)

ஸா ப$_3$பூ$_4$வ முஹூர்தேந ஹரிபி$_4$ர்தீ$_3$பிதா புரீ ।
லோகஸ்யாஸ்ய க்ஷயே கோ$_4$ரே ப்ரதீ$_3$ப்தேவ வஸுந்த$_4$ரா ॥ (29)

நாரீஜநஸ்ய தூ$_4$மேந வ்யாப்தஸ்யோச்சைர்விநேது$_3$ஷ: ।
ஸ்வநோ ஜ்வலநதப்தஸ்ய ஶுஶ்ருவே த$_3$ஶயோஜநம் ॥ (30)

ப்ரத$_3$க்$_3$த$_4$காயாநபராந் ராக்ஷஸாந்நிர்க$_3$தாந் ப$_3$ஹி: ।
ஸஹஸாப்$_4$யுத்பதந்தி ஸ்ம ஹரயோऽத$_2$ யுயுத்ஸவ: ॥ (31)

உத்$_3$குஷ்$_4$டம் வாநராணாம் ச ராக்ஷஸாநாம் ச நிஸ்வந: ।
தி$_3$ஶோ த$_3$ஶ ஸமுத்$_3$ரம் ச ப்ருதி$_2$வீம் சாந்வநாத$_3$யத் ॥ (32)

விஶல்யௌ து மஹாத்மாநௌ தாவுபௌ$_4$ ராமலக்ஷ்மணௌ ।
அஸம்ப்$_4$ராந்தௌ ஜக்$_3$ருஹதுஸ்ததோ$_3$பே$_4$ த$_4$நுஷீ வரே ॥ (33)

ததோ விஸ்ப$_2$ாரயாநஸ்ய ராமஸ்ய த$_4$நுருத்தமம் ।
ப$_3$பூ$_4$வ துமுல: ஶப்$_3$தோ$_3$ ராக்ஷஸாநாம் ப$_4$யாவஹ: ॥ (34)

அஶோப$_4$த தத$_3$ா ராமோ த$_4$நுர்விஸ்ப$_2$ாரயந் மஹத் ।
ப$_4$க$_3$வாநிவ ஸங்க்ருத்$_3$தோ$_4$ ப$_4$வோ வேத$_3$மயம் த$_4$நு: ॥ (35)

உத்$_3$குஷ்$_4$டம் வாநராணாம் ச ராக்ஷஸாநாம் ச நிஸ்வந: ।
ஜ்யாஶப்$_3$த$_3$ஸ்தாவுபௌ$_4$ ஶப்$_3$த$_3$ாவதி ராமஸ்ய ஶுஶ்ருவே ॥ (36)

வாநரோத்$_3$குஷ்$_4$டகோ$_4$ஷஶ்ச ராக்ஷஸாநாம் ச நிஸ்வந: ।
ஜ்யாஶப்$_3$த$_3$ஶ்சாபி ராமஸ்ய த்ரயம் வ்யாப்தம் தி$_3$ஶோ த$_3$ஶ ॥ (37)

மேன்மாடங்களில் உறங்கிக் கொண்டிருந்த நாரீமணிகளை நெருப்பு பற்றிக் கொண்டதால், எல்லா அணிகலன்களையும் கழற்றிப் போட்டுவிட்டு, 'ஹா, ஹா' என்று உரத்த குரலில் கதறினார்கள். (23)

தொலைவிலிருந்து பார்க்கும்போது, எரிந்து கொண்டிருந்த உயரமான மாளிகைகள், சுயம்பிரகாசமான மருந்து–மூலிகைகளைக் கொண்ட இமயமலைச் சிகரங்கள் தீப்பற்றி எரிவது போல் காணப்பட்டன. (24)

இரவு நேரத்தில் தீப்பற்றி எரியும் மாளிகைகளின் மேன்மாடங்கள், செவ்வண்ணப் பூக்கள் மலர்ந்த பலாச மரங்கள்போல் தோற்றமளித்தன. (25)

யானைப் பாகர்களாலும் குதிரைப் பாகர்களாலும் கட்டவிழ்த்து விடப்பட்ட யானைகளும் குதிரைகளும் தறிகெட்டு ஓடியதால், பிரளய காலத்தில் வெருண்டு அலையும் முதலைகளைக் கொண்ட பெருங்கடல் போல், இலங்கை தத்தளித்தது. (26)

அவிழ்த்து விடப்பட்டதால் பாய்ந்து வரும் குதிரையைக் கண்டு மருட்சியடைந்த யானை திக்குத் திசை தெரியாமல் ஓடிற்று; கட்டுக்கடங்காமல் ஓடிவரும் யானையைப் பார்த்த குதிரை மிரண்டு போய் வெறொரு பக்கத்தில் திரும்பி ஓடிற்று. (27)

இலங்கைப் பட்டணம் எரிந்து கொண்டிருந்தபோது, நெருப்புச் சுவாலைகளின் பிரதிபிம்பங்கள் கடலில் தென்பட்டன. அதனால், அந்தப் பெருங்கடல் செந்நீர்க்கடல் போல் தோன்றியது. (28)

வானரர்களால் எரிக்கப்பட்ட அந்த நகரம் ஒரு முகூர்த்த காலத்திற்குள்ளாகவே, உலகத்தை அழிக்கும் ஊழிக்காலத்தில் ஊழித்தீயினால் எரிக்கப்பட்ட பூமியைப் போல் கட்டாந்தரையாக ஆயிற்று. (29)

நெருப்பினால் எரிக்கப்பட்டு, புகையினால் சூழப்பட்டுத் தவித்த பெண்கள் எழுப்பிய பெருங்கூக்குரல் பத்து யோஜனை தொலைவு வரை கேட்டது. (30)

வீடுகளிலிருந்து தீக்காயங்களுடன் தப்பியோடி வந்த சில அரக்கர்களை, வெற்றிக் களிப்பில் மிதந்து கொண்டிருந்த வானரர்கள் எதிர்த்துச் சென்று வலுவாகத் தாக்கினார்கள். (31)

வானரர்களின் உற்சாகக் குரலும் அரக்கர்களின் பரிதாபக் குரலும் சேர்ந்து, பத்துத் திசைகளிலும் கடலிலும் பூமியிலும் எதிரொலித்தது. (32)

அப்போது மகாத்மாக்களான இராம–இலட்சுமணர்கள், பாணத் தாக்குதலால் ஏற்பட்ட காயங்கள் மறைந்து, மனப்பதற்றமில்லாமல் சிறந்ததான இரண்டு விற்களைக் கையில் பற்றிக் கொண்டார்கள். (33)

அப்போது இராமன், உத்தமமான வில்லை வளைத்து நாணொலி எழுப்பியதால் உண்டான பயங்கரமான ஓசை, அரக்கர்களுக்குப் பேரச்சத்தை விளைவித்தது. (34)

திரிபுராசுரர்கள் மேல் கடுங்கோபம் கொண்ட பகவான் பரமேசுவரன் வேதமயமான தனது வில்லை டங்காரம் செய்தபோது இருந்ததைப் போலவே, இராமன் உறுதி வாய்ந்த தன் வில்லை டங்காரம் செய்தபோது கம்பீரமாகத் தோற்றமளித்தார். (வேதமயமான வில் – வேதங்களால் துதிக்கப்பட்ட பினாகம் என்ற வில்.) (35)

வானரர்களின் ஆனந்த கோஷம், அரக்கர்களின் கூக்குரல் ஆகிய இரண்டுக்கும் மேலாக, இராமனுடைய நாணோசை கேட்டது. (36)

வானரர்களின் உற்சாக கோஷம், அரக்கர்களின் ஒப்பாரி ஒலி, இராமபிரானுடைய டங்காரம் ஆகிய மூன்று சப்தங்களும் பத்துத் திசைகளிலும் பரவிச் சென்றன. (37)

தஸ்ய கார்முகமுக்தைஶ்ச ஶரைஸ்தத் புரகோ$_3$புரம் ।
கைலாஸஶ்ருங்க$_3$ப்ரதிமம் விகீர்ணமபதத்$_3$பு$_4$வி ॥ (38)

ததோ ராமஶராந் த்$_3$ருஷ்ட்வா விமாநேஷு க்$_3$ருஹேஷு ச ।
ஸந்நாஹோ ராக்ஷஸேந்த்$_3$ராணாம் துமுல: ஸமபத்$_3$யத ॥ (39)

தேஷாம் ஸந்நஹ்யமாநாநாம் ஸிம்ஹநாத$_3$ம் ச குர்வதாம் ।
ஶர்வரீ ராக்ஷஸேந்த்$_3$ராணாம் ரௌத்$_3$ரீவ ஸமபத்$_3$யத ॥ (40)

ஆதி$_3$ஷ்டா வாநரேந்த்$_3$ராஸ்து ஸுக்$_3$ரீவேண மஹாத்மநா ।
ஆஸந்நத்$_3$வாரமாஸாத்$_3$ய யுத்$_4$யத்$_4$வம் ப்லவக$_3$ர்ஷபா$_4$: ॥ (41)

யஶ்ச வோ விதத$_2$ம் குர்யாத்தத்ர தத்ர ஹ்யுபஸ்தி$_2$த: ।
ஸ ஹந்தவ்யோ ஹி ஸம்ப்லுத்ய ராஜஶாஸநதூ$_3$ஷக: ॥ (42)

தேஷு வாநரமுக்$_2$யேஷு தீ$_3$ப்தோல்கோஜ்ஜ்வலபாணிஷு ।
ஸ்தி$_2$தேஷு த்$_3$வாரமாஸாத்$_3$ய ராவணம் மந்யுராவிஶத் ॥ (43)

தஸ்ய ஜ்ரும்பி$_4$தவிக்ஷேபா$_4$த்$_3$வ்யாமிஶ்ரா—வை தி$_3$ஶோ த$_3$ஶ ।
ரூபவாநிவ ருத்$_3$ரஸ்ய மந்யுர்கா$_3$த்ரேஷ்வத்$_3$ருஶ்யத ॥ (44)

ஸ நிகும்ப$_4$ம் ச கும்ப$_4$ம் ச கும்ப$_4$கர்ணாத்மஜாவுபௌ$_4$ ।
ப்ரேஷயாமாஸ ஸங்க்ருத்$_3$தோ$_4$ ராக்ஷஸைர்ப$_3$ஹுபி$_4$: ஸஹ ॥ (45)

யூபாக்ஷ: ஶோணிதாக்ஷஶ்ச ப்ரஜங்க$_4$: கம்பநஸ்ததா$_2$ ।
நிர்யயு: கௌம்ப$_4$கர்ணிப்$_4$யாம் ஸஹ ராவணஶாஸநாத் ॥ (46)

ஶஶாஸ சைவ தாந் ஸர்வாந் ராக்ஷஸாந் ஸுமஹாப$_3$லாந் ।
நாத$_3$யந் க$_3$ச்சதாத்ரைவ ஜயத்$_4$வம் ஶீக்$_4$ரமேவ ச ॥ (47)

ததஸ்து சோதி$_3$தாஸ்தேந ராக்ஷஸா ஜ்வலிதாயுதா$_4$: ।
லங்காயா நிர்யயுர்வீரா: ப்ரணத$_3$ந்த: புந: புந: ॥ (48)

ரக்ஷஸாம் பூ$_4$ஷணஸ்தா$_2$பி$_4$ர்பா$_4$பி$_4$: ஸ்வாபி$_4$ஶ்ச ஸர்வஶ: ।
சக்ருஸ்தே ஸப்ரப$_4$ம் வ்யோம ஹரயஶ்சாக்$_3$நிபி$_4$: ஸஹ ॥ (49)

தத்ர தாராதி$_4$பஸ்யாபா$_4$ தாராணாம் ச ததை$_2$வ ச ।
தயோராப$_4$ரணஸ்தா$_2$ ச ப$_3$லயோர்த்$_3$யாமபா$_4$ஸயந் ॥ (50)

சந்த்$_3$ராபா$_4$ பூ$_4$ஷணாபா$_4$ ச க்$_3$ருஹாணாம் ஜ்வலதாம் ச பா$_4$: ।
ஹரிராக்ஷஸஸைந்யாநி ப்$_4$ராஜயாமாஸ ஸர்வத: ॥ (51)

தத்ர சோர்த்$_4$வம் ப்ரதீ$_3$ப்தாநாம் க்$_3$ருஹாணாம் ஸாக$_3$ர: புந: ।
பா$_4$பி$_4$: ஸம்ஸக்தபாதாலஶ்சலோர்மி: ஶுஶுபே$_4$ऽதி$_4$கம் ॥ (52)

இராமபிரானுடைய வில்லிலிருந்து எய்யப்பட்ட பாணங்களால், கயிலாய மலையின் சிகரத்தைப் போல் பெருமையுடன் நின்று கொண்டிருந்த தோரணவாயில் இடிந்து நொறுங்கித் தரையில் சிதறி விழுந்தது. (38)

மாளிகைகளிலும் வீடுகளிலும் விழுந்த இராமபாணங்களைப் பார்த்ததும், எதிர்த்துப் போரிடுவதற்கான முன்னேற்பாடுகளை, அரக்கர்கள் பரபரப்புடன் வேகமாகச் செய்தார்கள். (39)

போருக்கு ஆயத்தமாகக் கவசம் முதலியன அணிந்து, சிம்மநாதம் செய்த அரக்கப் படைத்தலைவர்களுக்கு, அந்த இரவு பயங்கரமான காளராத்திரியைப் போலாயிற்று. (40)

''வானர வீரர்களே! நகரத்தின் நுழைவாயிலை நெருங்கிப் போரிடுங்கள். எவனாவது இதற்குமாறாக போரிடுவதற்கு அஞ்சிப் பின்வாங்கினால், அரச கட்டளைக்குக் கீழ்ப்படியாத அவனைக் கொல்ல வேண்டும்'' என்று, மன்னன் சுக்ரீவன் அப்போது ஆணையிட்டான். (41,42)

வானரத்தலைவர்கள், கையில் தீப்பந்தத்தைப் பிடித்துக் கொண்டு நகரத்தின் நுழைவாயிலில் நிற்பதைக் கண்டதும், இராவணனுக்கு எல்லையில்லாத கோபம் உண்டாயிற்று. (43)

அவன், உடல் அங்கங்களில் புத்துணர்ச்சியை உண்டாக்குவதற்காகக் கொட்டாவி விட்டபோது, அந்தப் பேரொலியினால் பத்துத் திசைகளும் பயந்து நடுங்கின. ஊழிக்கால சம்ஹார தேவதையான ருத்ரமூர்த்தியின் உடலெங்கும் வியாபித்து விளங்கும் பெருங்கோபமே உருவெடுத்து வந்தாற்போல் தோற்றமளித்தான் (இராவணன்). (44)

மிகவும் சினங்கொண்ட அவன், கும்பகர்ணனின் புதல்வர்களான நிகும்பனையும் கும்பனையும் ஏராளமான அரக்கர்களோடு போர்முனைக்கு அனுப்பி வைத்தான். (45)

கும்பகர்ணனின் இரு புதல்வர்களோடு, யூபாக்ஷன், சோணிதாக்ஷன், பிரஜங்கன், கம்பனன் ஆகியோரும் இராவணனின் உத்தரவால் புறப்பட்டுச் சென்றார்கள். (46)

அப்போது சிம்மநாதம் எழுப்பிக் கொண்டு மகாபலசாலிகளான அவர்கள் எல்லோரையும் பார்த்து, ''அரக்கர்களே! இப்போதே (இந்த இரவு வேளையிலேயே) புறப்பட்டுச் சென்று விரைவில் வெற்றி முழக்கத்துடன் திரும்பி வாருங்கள்!'' என்று இராவணன் கட்டளையிட்டான். (47)

உடனே, அவனால் முடுக்கி விடப்பட்ட அரக்க வீரர்கள், ஒளிவீசும் படைக்கலன்களை எடுத்துக் கொண்டு தொடர்ச்சியாக வீர முழக்கம் செய்து கொண்டே, இலங்கையிலிருந்து வெளியே புறப்பட்டுப் போனார்கள். (48)

அரக்கர்களின் அணிகலன்களின் பேரொளியாலும், அவர்களுடைய உடலின் இயல்பான ஒளியினாலும், வானரர்களின் கையிலிருந்த தீப்பந்தங்களின் ஒளியினாலும் அவ்விடத்திய வானம் முற்றிலும் பிரகாசமாக ஒளிர்ந்தது. (49)

சந்திரனின் ஒளி, தாரகைகளின் ஒளி மற்றும் இரு சேனைத் தலைவர்கள் அணிந்திருந்த அணிகலன்களின் ஒளி ஆகியவற்றால் ஆகாயம் ஒளிமயமாக விளங்கிற்று. (50)

நிலவின் ஒளி, அணிகலன்களின் ஒளி, எரிந்து கொண்டிருக்கும் வீடுகளின் ஒளி எல்லாம் சேர்ந்து, எல்லாப் புறங்களிலும் வானர–அரக்கப் படையினரை இனங்காட்டிற்று. (51)

அப்போது, மோதி முட்டும் அலைகளைக் கொண்ட கடலோவெனில், மேலே (தரையில்) பற்றியெரியும் வீடுகளின் தீப்பிழம்பின் ஒளியால் பாதாளம் வரை (கடலின் அடித்தளம் வரை) ஒளி பெற்றதாய் காணப்பட்டது. (52)

பதாகாத்$_4$வஜஸம்ஸக்தமுத்தமாஸிபரஸ்வத$_4$ம் ।
பீ$_4$மாஸ்வரத$_2$மாதங்க$_3$ம் நாநாபத்திஸமாகுலம் ॥ (53)

தீ$_3$ப்தஶூலக$_3$தா$_3$க$_2$ட்$_3$க$_3$ ப்ராஸதோமரகார்முகம் ।
தத்$_3$ராக்ஷஸப$_3$லம் கோ$_4$ரம் பீ$_4$மவிக்ரமபௌருஷம் ॥ (54)

த$_3$த்$_3$ருஶே ஜ்வலிதப்ராஸம் கிங்கிணீஶதநாதி$_3$தம் ।
ஹேமஜாலாசிதபு$_4$ஜம் வ்யாவேஷ்டிதபரஸ்வத$_4$ம் ॥ (55)

வ்யாகூ$_4$ர்ணிதமஹாஶஸ்த்ரம் பா$_3$ணஸம்ஸக்தகார்முகம் ।
க$_3$ந்த$_4$மால்யமதூ$_4$த்ஸேகஸம்மோதி$_3$தமஹாநிலம் ॥
கோ$_4$ரம் ஶூரஜநாகீர்ணம் மஹாம்பு$_3$த$_4$ரநிஸ்வநம் ॥ (56)

தத்$_3$த்$_3$ருஷ்ட்வா ப$_3$லமாயாந்தம் ராக்ஷஸாநாம் ஸுதா$_3$ருணம் ।
ஸஞ்சசால ப்லவங்கா$_3$நாம் ப$_3$லமுச்சைர்நநாத$_3$ ச ॥ (57)

ஜவேநாப்லுத்ய ச புநஸ்தத்ப$_3$லம் ரக்ஷஸாம் மஹத் ।
அப்$_4$யயாத் ப்ரத்யரிப$_3$லம் பதங்கா$_3$ இவ பாவகம் ॥ (58)

தேஷாம் பு$_4$ஜபராமர்ஶவ்யாம்ருஷ்டபரிகா$_4$ஶநி ।
ராக்ஷஸாநாம் ப$_3$லம் ஶ்ரேஷ்ட$_2$ம் பூ$_4$யஸ்தரமஶோப$_4$த ॥ (59)

தத்ரோந்மத்தா இவோத்பேதுர்ஹரயோऽத$_2$ யுயுத்ஸவ: ।
தருஶைலைரபி$_4$க்$_4$நந்தோ முஷ்டிபி$_4$ஶ்ச நிஶாசராந் ॥ (60)
ததை$_2$வாபததாம் தேஷாம் கபீநாமஸிபி$_4$: ஶிதை: ।
ஶிராம்ஸி ஸஹஸா ஜஹ்ரு ராக்ஷஸா பீ$_4$மத$_3$ர்ஶநா: ॥ (61)

த$_3$ஶநைர்ஹ்ருதகர்ணாஶ்ச முஷ்டிநிஷ்கீர்ணமஸ்தகா: ।
ஶிலாப்ரஹாரப$_4$க்$_3$நாங்கா$_3$ விசேருஸ்தத்ர ராக்ஷஸா: ॥ (62)

ததை$_2$வாப்யபரே தேஷாம் கபீநாமபி$_4$லக்ஷிதா: ।
ப்ரவீராநபி$_4$தோ ஜக்$_4$நூ ராக்ஷஸாநாம் தரஸ்விநாம் ॥ (63)

ததை$_2$வாப்யபரே தேஷாம் கபீநாமஸிபி$_4$: ஶிதை: ।
ஹரிவீராந்நிஜக்$_4$நுஶ்ச கோ$_4$ரரூபா நிஶாசரா: ॥ (64)

க்$_4$நந்தமந்யம் ஜகா$_4$நாந்ய: பாதயந்தமபாதயத் ।
க$_3$ர்ஹமாணம் ஜக$_3$ர்ஹேऽந்யோ த$_3$ஶந்தமபரோऽத$_3$ஶத் ॥ (65)

தே$_3$ஹீத்யந்யோ த$_3$தா$_3$த்யந்யோ த$_3$தா$_3$மீத்யபர: புந: ।
கிம் க்லேஶயஸி திஷ்டே$_2$தி தத்ராந்யோந்யம் ப$_3$பா$_4$ஷிரே ॥ (66)

அரக்கர்களின் சேனை, கொடிகள்–தோரணங்களால் கவினுற விளங்கிற்று. படைவீரர்களின் கைகளில் கருக்கு வாளும் கோடரியும் இருந்தன; பயங்கரமான வீரமுடைய குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை, காலாட்படை ஆகியவை இருந்தன; ஒளிவீசும் சூலம், கதை, போர்வாள், ஈட்டி, வல்லயம், வில் முதலிய ஆயுதங்களைக் கொண்ட அரக்கர் சேனை பயங்கரமான பராக்கிரமத்தையும் ஆண்மையையும் வெளிப்படுத்துவதாக இருந்தது; ஒளி வீசும் ஈட்டிகள் காணப்பட்டன; நூற்றுக்கணக்கான சதங்கைகள் ஒலித்தன; போர்வீரர்களின் புஜங்களில் பொற்சரங்கள் விளங்கின; வீரர்கள், கோடரியையும் பெரிய பெரிய ஆயுதங்களையும் சுழற்றிக் கொண்டிருந்தார்கள்; வில்லில் அம்பு தொடுக்கப்பட்டிருந்தது; சந்தனம், மலர்மாலைகள், மதுபானங்கள் ஆகியவை பெருமளவில் இருந்ததால், சுற்றுப்புறக் காற்றில் சிறப்பான மணங்கமழும் தனித்தன்மை இருந்தது. அரக்கர் படையில், மேக கர்ஜனைக்கு நிகரான பயங்கரமான பேரொலி எழுப்பிய சூர–வீரர்கள் இருந்தார்கள். (53–56)

எதிர்க்க முடியாத அரக்கர்படை, தங்களை நோக்கி வருவதைக் கண்ட வானர சேனையும் முன்னோக்கிச் சென்றது; உரத்த குரலில் சிம்மநாதம் செய்தது. (57)

அரக்கர்களின் மாபெரும் படை, விட்டிற்பூச்சிகள் அக்னியை நோக்கிப் பாய்ந்து செல்வது போல, எதிரிகளின் (வானரர்களின்) படையை நோக்கி வெகுவேகமாகச் சென்று எதிர்த்தது. (நெருப்பில் விழுந்த விட்டில்கள் போல் பொசுங்கிப் போயின.) (58)

அரக்கப் படைவீரர்கள், பல தடவைகள் உலக்கை, வஜ்ரம் முதலிய படைக்கலன்களை இடைவிடாமல் சுழற்றியதால், அந்தப் பளபளப்பினால் அதிகமாய் ஒளி வீசியது. (59)

போர் செய்வதில் துடிப்புடனிருந்த வானரர்கள், ரணகளத்தில் மரங்கள்–மலைகளாலும் முஷ்டிகளாலும் அரக்கர்களைத் தாக்கி, வெறிபிடித்தவர்கள் போல் அவர்கள் மேல் விழுந்தார்கள். (60)

அப்போது, பயங்கரமான தோற்றமுடைய அரக்கர்கள், எதிர்த்துத் தாக்கிய வானரர்களின் தலையை கருக்கான வாள்களால் சீவித் தள்ளினார்கள். வானரர்களின் பற்கடிகளால் செவிகள் இழந்து, முஷ்டியால் மண்டை உடைந்து, பாறைகளால் தாக்கப்பட்டு அங்கங்கள் முறிந்த அரக்கர்கள் போர்க்களத்தில் காணப்பட்டார்கள். (61,62)

(தலைவெட்டி எறியப்பட்டவர்களைத் தவிர, மிகுந்திருந்தவர்களில்) புகழ்பெற்ற வானரத் தலைவர்கள், பலசாலிகளான அரக்க வீரர்களை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு, அவ்வாறே கொன்று குவித்தார்கள். (63)

பயங்கரத் தோற்றங்கொண்ட சில அரக்கர்கள், கூர்மையான வாள்களால் வானரப்படையின் சிறந்த தலைவர்களை வெட்டி வீழ்த்தினார்கள். (64)

ஒரு வீரன் எதிரிப்படை வீரனை அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தபோது, இன்னொரு வீரன் ஓடிவந்து இவனை அடித்தான். அதேபோல ஒருவனைக் கீழே தள்ளி சாய்த்துக் கொண்டிருந்தபோது, இன்னொருவன் வந்து இவனைச் சாய்த்தான். அவ்வாறே, இழிந்து பேசியவனை, வேறொருவன் இழிந்து பேசினான். எதிரியைக் கடித்துக் கொண்டிருக்கும் ஒருவனை, எதிரிப்படையின் வெறொரு வீரன் வந்து கடித்தான். (65)

'என்னுடன் போர் செய்' என்று ஒருவன் சொல்ல, எதிராளி அவனுடன் போரிட்டான். 'நானும் உன்னுடன் போர் செய்கிறேன்' என்று வெறொருவன் கூறினான். ஒரு வீரனைப் பார்த்து, 'நீ உடம்பை அலட்டிக் கொள்கிறாய்! (என்னுடன் சண்டை செய்தால் நிச்சயம் உயிர் துறப்பாய்! அதனால்,) சும்மா இரு' என்று எதிராளி கூறினான். இவ்வாறாக, அங்கே உரையாடல்கள் நிகழ்ந்தன. (66)

விப்ரலம்பி$_3$தவஸ்த்ரம் ச விமுக்தகவசாயுத$_4$ம் ।
ஸமுத்$_3$யதமஹாப்ராஸம் யஷ்டிஶூலாஸிஸங்குலம் ॥
ப்ராவர்தத மஹாரௌத்$_3$ரம் யுத்$_3$த$_4$ம் வாநரரக்ஷஸாம் ॥ (67)

வாநராந் த$_3$ஶ ஸப்ததி ராக்ஷஸா ஜக்$_4$நூராஹவே ।
ராக்ஷஸாந் த$_3$ஶ ஸப்ததி வாநராஶ்சாப்$_4$யபாதயந் ॥ (68)

விஸ்ரஸ்தகேஶவஸநம் வித்$_4$வஸ்தகவசத்$_4$வஜம் ।
ப$_3$லம் ராக்ஷஸமாலம்ப்$_3$ய வாநரா: பர்யவாரயந் ॥
வவ்ருதே$_4$ துமுலம் யுத்$_3$த$_4$ம் ரக்ஷஸாம் வாநரை: ஸஹ ॥ (69)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

ஷட்ஸப்ததிதம: ஸர்க$_3$:

கம்பநாதி$_3$வத$_4$:

ப்ரவ்ருத்தே ஸங்குலே தஸ்மிந் கோ$_4$ரே வீரஜநக்ஷயே ।
அங்க$_3$த$_3$: கம்பநம் வீரமாஸஸாத$_3$ ரணோத்ஸுக: ॥ (1)

ஆஹூய ஸோऽங்க$_3$த$_3$ம் கோபாத்தாட$_3$யாமாஸ வேகி$_3$த: ।
க$_3$த$_3$யா கம்பந: பூர்வம் ஸ சசால ப்$_4$ருஶாஹத: ॥ (2)

ஸ ஸம்ஜ்ஞாம் ப்ராப்ய தேஜஸ்வீ சிக்ஷேப ஶிக$_2$ரம் கி$_3$ரே: ।
அர்தி$_3$தஶ்ச ப்ரஹாரேண கம்பந: பதிதோ பு$_4$வி: ॥ (3)

ததஸ்து கம்பநம் த்$_3$ருஷ்ட்வா ஶோணிதாக்ஷோ ஹதம் ரணே ।
ரதே$_2$நாப்$_4$யபதத் க்ஷிப்ரம் தத்ராங்க$_3$த$_3$மபீ$_4$தவத் ॥ (4)

ஸோऽங்க$_3$த$_3$ம் நிஶிதைர்பா$_3$ணைஸ்ததா$_3$ விவ்யாத$_4$ வேகி$_3$த: ।
ஶரீரதா$_3$ரணைஸ்தீக்ஷ்ணை: காலாக்$_3$நிஸமவிக்$_3$ரஹை: ॥ (5)

க்ஷுரக்ஷுரப்ரைர்நாராசைர்வத்ஸத$_3$ந்தை: ஶிலீமுகை$_2$: ।
கர்ணிஶல்யவிபாடை$_2$ஶ்ச ப$_3$ஹுபி$_4$ர்நிஶிதை: ஶரை: ॥ (6)

அங்க$_3$த$_3$: ப்ரதிவித்$_3$தா$_4$ங்கோ$_3$ வாலிபுத்ர: ப்ரதாபவாந் ।
த$_4$நுரக்$_3$ர்யம் ரத$_2$ம் பா$_3$ணாந் மமர்த$_3$ தரஸா ப$_3$லீ ॥ (7)

ஶோணிதாக்ஷஸ்தத: க்ஷிப்ரமஸிசர்ம ஸமாத$_3$தே$_3$ ।
உத்பபாத தி$_3$வம் க்ருத்$_3$தோ$_4$ வேக$_3$வாநவிசாரயந் ॥ (8)

தம் க்ஷிப்ரதரமாப்லுத்ய பராம்ருஶ்யாங்க$_3$தோ$_3$ ப$_3$லீ ।
கரேண தஸ்ய தம் க$_2$ட்$_3$க$_3$ம் ஸமாச்சி$_2$த்$_3$ய நநாத$_3$ ச ॥ (9)

சில வீரர்களின் ஆடை அவிழ்ந்து விழுந்தது; கவசங்களும் படைக்கலன்களும் பிடுங்கி எறியப்பட்டன; ஈட்டிகள் உயரத் தூக்கப்பட்டன; தடி–சூலம்–போர்வாள் ஆகியவை ஒன்றோடொன்று மோதி எதிரிகளை மாய்த்தன. இவ்வாறாக, அரக்க–வானரர் படைகளிடையே மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது. (67)

போரில் அரக்கர்கள், வானரர்களை எழுவர் எழுவராகவும் பதின்மர் பதின்மர்களாகவும் கொன்றார்கள்; அவ்வாறே, வானரர்களும் ஏழும் பத்துமாக அரக்கர்களைக் கொன்றார்கள். (68)

தலைக்கேசம் களைந்தும், இடுப்பு ஆடை அவிழ்ந்தும் தொங்க, கவசங்களும் கொடிகளும் நாசம் செய்யப்பட்ட அரக்கப் படையை, வானரர்கள் நாற்புறமும் தடுத்து நிறுத்தி சூழ்ந்து கொண்டார்கள். அரக்கர்களுக்கும் வானரர்களுக்குமிடையே பரபரப்பான மாபெரும் யுத்தம் தொடர்ந்து நடந்தது. (69)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தாறு

கம்பனன் முதலியோர் வதம்

பயங்கரமானதும், வீரர்களுக்கு அழிவை உண்டாக்குவதுமான கடும் போர் நடந்து கொண்டிருந்தபோது, போர் செய்யத் துடித்துக் கொண்டிருந்த கம்பனன், வீரனான அங்கதனை எதிர்ப்பதற்காக நெருங்கி வந்தான். (1)

கம்பனன் மிக்க வேகத்துடனும் கோபத்துடனும் அறைகூவி அழைத்து, அங்கதனைக் கதையால் தாக்கினான். பலமாகத் தாக்கப்பட்ட அவன் (அங்கதன்) நிலைதடுமாறிப் போனான். வீரம் மிக்க அவன் (சிறிதுநேரம் சென்றதும்) உணர்வைப் பெற்று, மலைச்சிகரம் ஒன்றைப் பெயர்த்து வீசி எறிந்தான். அந்தத் தாக்குதலால் மாண்டு போன கம்பனன் தரையில் சாய்ந்தான். (2,3)

கம்பனன் போரில் மாண்டுவிட்டதைக் கண்ட சோணிதாக்ஷன், தான் அச்சப்படாதது போலவே விரைவாகத் தேரில் வந்து அங்கதனை எதிர்த்தான். (4)

அப்போது, உடலைப் பிளக்கக் கூடியவைகளும், ஊழிக்கால அக்னியைப் போன்ற உருவம் கொண்டவைகளும் கூர்மையானவைகளும் கொடியவைகளுமான பாணங்களால், முழு வீச்சுடன் தாக்கி, அங்கதனைக் காயப்படுத்தினான். (5)

க்ஷுரம், க்ஷுரப்ரம், நாராசம், வத்ஸதந்தம், சிலீமுகம், கர்ணிசல்யம், விபாடகம் என்ற பலவகையான கூரிய பாணங்களால் உடல் அவயவங்கள் தாக்கப்பட்டவனாய் வீரனான வாலிமைந்தன் (அவைகளுக்குப் பதிலடி கொடுப்பது போல) மிகுந்த வேகத்துடன் (சோணிதாக்ஷனின்) வில்–தேர்–பாணங்களை உடைத்தெறிந்தான். (6,7)

(எல்லாவற்றையும் இழந்துவிட்ட) சோணிதாக்ஷன் சிறிதும் தாமதிக்காமல், உடனே தேரிலிருந்து கீழே குதித்தான். மிகவும் கோபத்திலிருந்த அவன் வேகமாகக் கத்தியையும் கேடயத்தையும் கையில் எடுத்துக் கொண்டான். (8)

உடல்பலம் மிக்க அங்கதன் மிக விரைவாகப் பாய்ந்து சென்று, அவனை ஒரு கையால் பற்றிக் கொண்டு, அவனுடைய வாளைப் பிடுங்கிக் கொண்டு வெற்றி முழக்கம் செய்தான். (9)

தஸ்யாம்ஸப$_2$லகே க$_2$ட்$_3$க$_3$ம் நிஜக$_4$ாந ததோऽங்க$_3$த$_3$: ।
யக்ஞோபவீதவச்சைநம் சிச்சே$_2$த$_3$ கபிகுஞ்ஜர: ॥ (10)

தம் ப்ரக்$_3$ருஹ்ய மஹாக$_2$ட்$_3$க$_3$ம் விநத்$_3$ய ச புந: புந: ।
வாலிபுத்ரோऽபி$_4$து$_3$த்$_3$ராவ ரணஶீர்ஷே பராநரீந் ॥ (11)

ஆயஸீம் து க$_3$த$_3$ாம் வீர: ப்ரக்$_3$ருஹ்ய கநகாங்க$_3$த$_3$: ।
ஶோணிதாக்ஷ: ஸமாவித்$_4$ய தமேவாநுபபாத ஹ ॥ (12)

ப்ரஜங்க$_4$ஸஹிதோ வீரோ யூபாக்ஷஸ்து ததோ ப$_3$லீ ।
ரதே$_2$நாபி$_4$யயௌ க்ருத்$_3$தே$_4$ா வாலிபுத்ரம் மஹாப$_3$லம் ॥ (13)

தயோர்மத்$_4$யே கபிஶ்ரேஷ்ட$_2$: ஶோணிதாக்ஷப்ரஜங்க$_4$யோ: ।
விஶாக$_2$யோர்மத்$_4$யக$_3$த: பூர்ணசந்த்$_3$ர இவாப$_4$வத் ॥ (14)

அங்க$_3$த$_3$ம் பரிரக்ஷந்தௌ மைந்தே$_3$ா த்$_3$விவித$_3$ ஏவ ச ।
தஸ்ய தஸ்த$_2$துரப்$_4$யாஶே பரஸ்பரதி$_3$த்$_3$ருக்ஷயா ॥ (15)

அபி$_4$பேதுர்மஹாகாயா: ப்ரதியத்தா மஹாப$_3$லா: ।
ராக்ஷஸா வாநராந் ரோஷாத$_3$ஸிசர்மக$_3$த$_3$ாத$_4$ரா: ॥ (16)

த்ரயாணாம் வாநரேந்த்$_3$ராணாம் த்ரிபீ$_4$ ராக்ஷஸபுங்க$_3$வை: ।
ஸம்ஸக்தாநாம் மஹத்$_3$யுத்$_3$த$_4$மப$_4$வத்$_3$ரோமஹர்ஷணம் ॥ (17)

தே து வ்ருக்ஷாந் ஸமாத$_3$ாய ஸம்ப்ரசிக்ஷிபுராஹவே ।
க$_2$ட்$_3$கே$_3$ந ப்ரதிசிச்சே$_2$த$_3$ தாந் ப்ரஜங்கே$_4$ா மஹாப$_3$ல: ॥ (18)

ரத$_2$ாநஶ்வாந் த்$_3$ருமை: ஶைலைஸ்தே ப்ரசிக்ஷிபுராஹவே ।
ஶரௌகை$_4$: ப்ரதிசிச்சே$_2$த$_3$ தாந் யூபாக்ஷோ நிஶாசர: ॥ (19)

ஸ்ருஷ்டாந் த்$_3$விவித$_3$மைந்த$_3$ாப்$_4$யாம் த்$_3$ருமாநுத்பாட்ய வீர்யவாந் ।
ப$_3$ப$_4$ஞ்ஜ க$_3$த$_3$யா மத்$_4$யே ஶோணிதாக்ஷ: ப்ரதாபவாந் ॥ (20)

உத்$_3$யம்ய விபுலம் க$_2$ட்$_3$க$_3$ம் பரமர்மநிக்ருந்தநம் ।
ப்ரஜங்கே$_4$ா வாலிபுத்ராய அபி$_4$து$_3$த்$_3$ராவ வேகி$_3$த: ॥ (21)

தமப்$_4$யாஶக$_3$தம் த்$_3$ருஷ்ட்வா வாநரேந்த்$_3$ரோ மஹாப$_3$ல: ।
ஆஜக$_4$நாஶ்வகர்ணேந த்$_3$ருமேணாதிப$_3$லஸ்தத$_3$ா ॥ (22)

ப$_3$ாஹும் சாஸ்ய ஸநிஸ்த்ரிம்ஶமாஜக$_4$ந ஸ முஷ்டிநா ।
வாலிபுத்ரஸ்ய க$_4$ாதேந ஸ பபாத க்ஷிதாவஸி: ॥ (23)

தம் த்$_3$ருஷ்ட்வா பதிதம் பூ$_4$மௌ க$_2$ட்$_3$க$_3$முத்பலஸந்நிப$_4$ம் ।
முஷ்டிம் ஸம்வர்தயாமாஸ வஜ்ரகல்பம் மஹாப$_3$ல: ॥ (24)

பின்னர், வானரோத்தமனான அங்கதன், அவன் தோளில் வாளை நாட்டி, பூணூல் போட்டுக் கொள்ளும் முறையில் (இடது தோளிலிருந்து வலது இடுப்பு வரை) வெட்டித் தள்ளினான். (10)

வாலி மைந்தன், சோணிதாக்ஷனுடைய நீண்ட கத்தியை உருவி எடுத்து மறுபடியும் பேரொலி எழுப்பி, அந்தப் போர்முனையிலிருந்த மற்ற பகைவர்களையும் எதிர்த்தான். (11)

தங்கத் தோள்வளைபூண்ட வீரனான சோணிதாக்ஷன், சமாளித்துக் கொண்டு எழுந்து இரும்பாலான கதாயுதத்தைக் கையில் ஏந்தி, அவனை (அங்கதனை) எதிர்த்து வந்தான். (12)

அப்போது பலமும் வீரமும் மிகுந்த யூபாக்ஷன் (என்ற அரக்க சேனாபதி) கோபங்கொண்டு, பிரஜங்கனோடுகூட தேரில் ஏறிவந்து, மகாபலசாலியான அங்கதனை எதிர்கொண்டான். சோணிதாக்ஷன், பிரஜங்கன் ஆகிய இருவர் மத்தியிலிருந்த வானரோத்தமன், விசாகம் என்ற இரு தாரகைகளிடையே தோன்றும் முழு நிலவைப் போன்றே பொலிவுற்று விளங்கினான்! (13,14)

மைந்தனும் த்விவிதனும் (மாமன்கள் என்ற உறவுப்பிணைப்பால்) அங்கதனின் அருகில் நின்று அவனைப் பாதுகாத்தவண்ணம், தங்கள் வீரத்திற்கேற்ற எதிராளியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். (15)

இதனிடையில் பேருடல் படைத்த மகாபலசாலிகளான அரக்கர்கள், கத்தி–கேடயம்–கதை முதலியவற்றை எடுத்துக் கொண்டு ஆவேசத்துடன் முன்னே வந்து வானரர்களைத் தாக்கினார்கள். (16)

அரக்கர் தலைவர்கள் மூவருடனும், வானரத் தலைவர்கள் மூவரும் போர் புரிந்த காட்சி மெய்சிலிர்ப்பை உண்டாக்குவதாக இருந்தது. (17)

அவர்கள் (வானரத் தலைவர்கள்) மரங்களைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்து போர்க்களத்தில் (எதிரிகளின் மேல்) வீசியெறிந்தார்கள். மகாபலசாலியான பிரஜங்கன், அவைகளை வாளால் வெட்டி வீழ்த்தினான். (18)

போரில், அவர்கள் (வானரர்கள்) எதிரிகளின் தேர்களையும் குதிரைகளையும் குறி வைத்து, மரங்களையும் மலைகளையும் எறிந்தார்கள். அரக்கன் யூபாக்ஷன் அவைகளை பல அம்புகளை எய்துத் தகர்த்துவிட்டான். (19)

த்விவிதன்–மைந்தன் ஆகிய இருவராலும் பிடுங்கிப் பிடுங்கி எறியப்பட்ட மரங்களை, ஆண்மை மிக்கவனும் பேராற்றல் படைத்தவனுமான சோணிதாக்ஷன் நடுவிலேயே (அவைகள் இலக்கை வந்து அடைவதற்கு முன்பே) கதையால் சிதறச் செய்துவிட்டான். (20)

அப்போது ஆத்திரங்கொண்ட பிரஜங்கன், பெரியதும் எதிரிகளின் உயிர்நிலைகளைப் பிளப்பதுமான பட்டாக்கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு, அங்கதனை எதிர்த்துப் பாய்ந்தான். (21)

அப்போது, மகாபலசாலியான வானரத் தலைவன் அங்கதன், அவன் தன்னருகில் வருவதைப் பார்த்து, அசுவகர்ண மரத்தைப் பிடுங்கி மிக வேகமாகத் தாக்கினான். (22)

அங்கதன், பிரஜங்கனுடைய வாளேந்திய கையை முஷ்டியால் தாக்கினான். வாலிமைந்தனின் அடியினால் அந்த வாள் (கை நழுவி) பூமியில் விழுந்தது. (23)

பேராற்றல் கொண்ட பிரஜங்கன், உலக்கையைப் போன்ற தன்னுடைய வாள் தரையில் விழுந்துவிட்டதும், (வேறொரு படைக்கலன் உடனே கிடைக்காததால்) வஜ்ராயுதத்திற்கு நிகரான தன் முஷ்டியைச் சுழற்றினான். (24)

லலாடே ஸ மஹாவீர்யமங்க3த3ம் வாநரர்ஷப4ம் ।
ஆஜக4ாந மஹாதேஜா: ஸ முஹூர்தம் சசால ஹ ॥ (25)

ஸ ஸம்க்ஞாம் ப்ராப்ய தேஜஸ்வீ வாலிபுத்ர: ப்ரதாபவாந் ।
ப்ரஜங்க4ஸ்ய ஶிர: காயாத் க2ட்3கே3நாபாதயத் க்ஷிதௌ ॥ (26)

ஸ யூபாக்ஷோऽஶ்ருபூர்ணாக்ஷ: பித்ருவ்யே நிஹதே ரணே ।
அவருஹ்ய ரத2ாத் க்ஷிப்ரம் க்ஷீணேஷு: க2ட்3க3மாத3தே3 ॥ (27)

தமாபதந்தம் ஸம்ப்ரேக்ஷ்ய யூபாக்ஷம் த்3விவித3ஸ்த்வரந் ।
ஆஜக4ாநோரஸி க்ருத்3தே4ா ஜக்3ராஹ ச ப3லாத்3ப3லீ ॥ (28)

க்3ருஹீதம் ப்4ராதரம் த்3ருஷ்ட்வா ஶோணிதாக்ஷோ மஹாப3ல: ।
ஆஜக4ாந க3த3ாக்3ரேண வக்ஷஸி த்3விவித3ம் தத: ॥ (29)

ஸ க3த3ாபி4ஹதஸ்தேந சசால ச மஹாப3ல: ।
உத்3யதாம் ச புநஸ்தஸ்ய ஜஹார த்3விவிதே3ா க3த3ாம் ॥ (30)

ஏதஸ்மிந்நந்தரே வீரோ மைந்தே3ா வாநரயூத2ப: ।
யூபாக்ஷம் தாட3யாமாஸ தலேநோரஸி வீர்யவாந் ॥ (31)

தௌ ஶோணிதாக்ஷயூபாக்ஷௌ ப்லவங்க3ாப்4யாம் தரஸ்விநௌ ।
சக்ரது: ஸமரே தீவ்ரமாகர்ஷோத்பாடநம் ப்4ருஶம் ॥ (32)

த்3விவித3: ஶோணிதாக்ஷம் து வித3த3ார நகை2ர்முகே2 ।
நிஷ்பிபேஷ ச வேகே3ந க்ஷிதாவாவித்4ய வீர்யவாந் ॥ (33)

யூபாக்ஷமபி ஸங்க்ருத்3தே4ா மைந்தே3ா வாநரயூத2ப: ।
பீட3யாமாஸ ப3ாஹுப்4யாம் ஸ பபாத ஹத: க்ஷிதௌ ॥ (34)

ஹதப்ரவீரா வ்யதி2தா ராக்ஷஸேந்த்3ரசமூஸ்தத3ா ।
ஜக3ாமாபி4முகீ2 ஸா து கும்ப4கர்ணஸுதோ யத: ॥ (35)

ஆபதந்தீம் ச வேகே3ந கும்ப4ஸ்தாம் ஸாந்த்வயச்சமூம் ।
அதே2ாத்க்ருஷ்டம் மஹாவீர்யைர்லப்3த4லக்ஷை: ப்லவங்க3மை: ॥ (36)

நிபாதிதமஹாவீராம் த்3ருஷ்ட்வா ரக்ஷஶ்சமூம் தத: ।
கும்ப4: ப்ரசக்ரே தேஜஸ்வீ ரணே கர்ம ஸுது3ஷ்கரம் ॥ (37)

ஸத4நுர்த4ந்விநாம் ஶ்ரேஷ்ட2: ப்ரக்3ருஹ்ய ஸுஸமாஹித: ।
முமோசாஶீவிஷப்ரக்2யாஞ்ஶராந் தே3ஹவித3ாரணாந் ॥ (38)

தஸ்ய தச்சு2ஶுபே4 பூ4ய: ஸஶரம் த4நுருத்தமம் ।
வித்3யுதை3ராவதார்சிஷ்மத்3த்3விதீயேந்த்3ரத4நுர்யத2ா ॥ (39)

ஆகர்ணாக்ருஷ்டமுக்தேந ஜக4ாந த்3விவித3ம் தத3ா ।
தேந ஹாடகபுங்கே2ந பத்ரிணா பத்ரவாஸஸா ॥ (40)

அவன், மாவீரனும் வானரோத்தமனுமான அங்கதன் நெற்றியில் முஷ்டியால் குத்தினான். அடியின் வேகத்தைத் தாங்க முடியாத அவன் (அங்கதன்), பேராற்றல் கொண்டவனாக இருந்தும்கூட சிறிது நேரம் கலகலத்துப் போனான். (25)

ஆண்மையும் ஆற்றலும் மிக்கவனான வாலிமைந்தன் சிறிது நேரத்திற்குப் பின்னர் சுய உணர்வடைந்து, பிரஜங்கனுடைய தலையைக் கத்தியால் வெட்டி, உடலிலிருந்து தரையில் வீழ்த்தினான். (26)

போர்க்களத்தில் தன் சிற்றப்பன் கொல்லப்பட்டதைக் கண்டு மனம் வருந்திய யூபாக்ஷனின் கண்களில் நீர் நிரம்பியது. அவனுடைய அம்பறையில் பாணங்கள் தீர்ந்து போய்விட்டதால், உடனே தேரிலிருந்து இறங்கி கையில் வாளை எடுத்துக் கொண்டான். (27)

யூபாக்ஷன் எதிர்த்து வருவதைக் கண்டு சினங்கொண்ட பலசாலியான த்விவிதன், மிக வேகமாக அவன் மார்பில் அறைந்தான். அத்துடன் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். (28)

மகாபலசாலியான சோணிதாக்ஷன், தன் சகோதரன் எதிரியிடம் சிக்கிக் கொண்டதைப் பார்த்ததும், கதையின் முனையால் த்விவிதனின் மார்பில் தாக்கினான். (29)

கதையால் அடிபட்ட த்விவிதன் சிறிது நேரம் துடிதுடித்துப் போனான். பின்னர், உயரத் தூக்கிப் பிடிக்கப்பட்ட கதையை (சோணிதாக்ஷனின்) கையிலிருந்து பிடுங்கிக் கொண்டான். இதனிடையில், மாவீரனும் பேராற்றல் கொண்ட வானரப் படைத்தலைவனுமான மைந்தன், உள்ளங்கையால் யூபாக்ஷனின் மார்பில் அறைந்தான். (30,31)

விரைவில் செயல்படும் சோணிதாக்ஷனும், யூபாக்ஷனும் (மைந்தன், த்விவிதன் என்ற) இரு வானரர்களையும் வலியப் பிடித்திழுத்து அடித்துத் தள்ளி நொறுக்கினார்கள். (32)

மாவீரனான த்விவதன், முழுவீச்சில் சோணிதாக்ஷனின் முகத்தை நகங்களால் பிராண்டி, அவனைக் கீழே தள்ளிக் கால்களால் தேய்த்தான். (33)

கோபங்கொண்ட வானரப் படைத்தலைவன் மைந்தன், யூபாக்ஷனை இரு கைகளாலும் இறுகக் கட்டிப்பிடித்தான். அவன் உயிரைத் துறந்து தரையில் வீழ்ந்தான். (அதைக் கண்ட) அரக்க மன்னன் படையினர், முக்கியமான வீரர்கள் மாய்க்கப்பட்டதால் மிகவும் மனம் நொந்து, கும்பகர்ணனுடைய புதல்வன் இருந்த இடத்தை நோக்கி ஓடினார்கள். (34,35)

வேகமாக ஓடிவரும் படையினரைக் கண்டு, கும்பன் (யூபாக்ஷன் மாய்க்கப்பட்டதை ஊகித்தறிந்து), அவர்களுக்குத் தைரியமூட்டினான். எதிர்கொள்ள முடியாதவர்களும், எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பவர்களும், மகாபராக்கிரமம் கொண்டவர்களுமான வானரர்களால் (அரக்கர் பக்கத்தின்) தலைசிறந்த வீரர்கள் மாய்க்கப்பட்டு விட்டதைக் கண்டு, பேராற்றல் படைத்த அரக்கன் கும்பன், போர்க்களத்தில் வேறு எவராலும் செய்ய முடியாத அரிய செயலைச் செய்ய முற்பட்டான். (36,37)

வில்லாளிகளுள் தலையாயவனும், போரில் ஊன்றிய மனம் உடையவனுமான கும்பன், ஒரு வில்லைக் கைப்பற்றி, விஷப்பாம்புகளை நிகர்த்தவைகளும் உடலைப் பிளக்க வல்லவைகளுமான பாணங்களை (எதிரிகளின் மேல்) செலுத்தினான். (38)

பாணம் பூட்டப்பட்ட அவனுடைய மிகச்சிறந்த வில்லானது, மின்னலைப் போலும் ஐராவதத்தைப் போலும் பேரொளி பெற்று, தேவேந்திரனுடைய இன்னொரு வில்லைப் போல கவினுற விளங்கிற்று. (39)

அப்போது, செவிவரை இழுத்துவிடப் பெற்றதும், தங்கமுனை கொண்டதும் சிறகுகள் கட்டப்பட்டதுமான அந்த பாணத்தால் த்விவிதனைத் தாக்கினான். (40)

ஸஹஸாபி$_4$ஹதஸ்தேந விப்ரமுக்தபத$_3$: ஸ்பு$_2$ரந் ।
நிபபாதாத்$_3$ரிகூடாபோ$_4$ விஹ்வல: ப்லவகோ$_3$த்தம: ॥ (41)

மைந்த$_3$ஸ்து ப்$_4$ராதரம் த்$_3$ருஷ்ட்வா ப$_4$க்$_3$நம் தத்ர மஹாஹவே ।
அபி$_4$து$_3$த்$_3$ராவ வேகே$_3$ந ப்ரக்$_3$ருஹ்ய மஹதீம் ஶிலாம் ॥ (42)

தாம் ஶிலாம் து ப்ரசிக்ஷேப ராக்ஷஸாய மஹாப$_3$ல: ।
பி$_3$பே$_4$த$_3$ தாம் ஶிலாம் கும்ப$_4$: ப்ரஸந்நை: பஞ்சபி$_4$: ஶரை: ॥ (43)

ஸந்தா$_4$ய சாந்யம் ஸுமுக$_2$ம் ஶரமாஶீவிஷோபமம் ।
ஆஜகா$_4$ந மஹாதேஜா வக்ஷஸி த்$_3$விவிதா$_3$க்$_3$ரஜம் ॥ (44)

ஸ து தேந ப்ரஹாரேண மைந்தோ$_3$ வாநரயூத$_2$ப: ।
மர்மண்யபி$_4$ஹதஸ்தேந பபாத பு$_4$வி மூர்சி$_2$த: ॥ (45)

அங்க$_3$தோ$_3$ மாதுலௌ த்$_3$ருஷ்ட்வா பதிதௌ து மஹாப$_3$லௌ ।
அபி$_4$து$_3$த்$_3$ராவ வேகே$_3$ந கும்ப$_4$முத்$_3$யதகார்முகம் ॥ (46)

தமாபதந்தம் விவ்யாத$_4$ கும்ப$_4$: பஞ்சபி$_4$ராயஸை: ।
த்ரிபி$_4$ஶ்சாந்யை: ஶிதைர்பா$_3$ணைர்மாதங்க$_3$மிவ தோமரை: ॥ (47)

ஸோऽங்க$_3$த$_3$ம் விவிதை$_4$ர்பா$_3$ணை: கும்போ$_4$ விவ்யாத$_4$ வீர்யவாந் ।
அகுண்ட$_2$தா$_4$ரைர்நிஶிதைஸ்தீக்ஷ்ணை: கநகபூஷணை: ॥ (48)

அங்க$_3$த$_3$: ப்ரதிவித்$_3$தா$_4$ங்கோ$_3$ வாலிபுத்ரோ ந கம்பதே ।
ஶிலாபாத$_3$பவர்ஷாணி தஸ்ய மூர்த்$_4$நி வவர்ஷ ஹ ॥ (49)

ஸ ப்ரசிச்சே$_2$த$_3$ தாந் ஸர்வாந் பி$_3$பே$_4$த$_3$ ச புந: ஶிலா: ।
கும்ப$_4$கர்ணாத்மஜ: ஶ்ரீமாந் வாலிபுத்ரஸமீரிதாந் ॥ (50)

ஆபதந்தம் ச ஸம்ப்ரேக்ஷ்ய கும்போ$_4$ வாநரயூத$_2$பம் ।
ப்$_4$ருவோர்விவ்யாத$_4$ பா$_3$ணாப்$_4$யாமுல்காப்$_4$யாமிவ குஞ்ஜரம் ॥ (51)

தஸ்ய ஸுஸ்ராவ ருதி$_4$ரம் பிஹிதே சாஸ்ய லோசநே ।
அங்க$_3$த$_3$: பாணிநா நேத்ரே பிதா$_4$ய ருதி$_4$ரோக்ஷிதே ॥ (52)

ஸாலமாஸந்நமேகேந பரிஜக்$_3$ராஹ பாணிநா ।
ஸம்பீட்$_3$ய சோரஸி ஸ்கந்த$_4$ம் கரேணாபி$_4$நிவேஶ்ய ச ॥ (53)

கிஞ்சித$_3$ப்$_4$யவநம்யைநமுந்மமாத$_2$ யதா$_2$ க$_3$ஜ: ।
தமிந்த்$_3$ரகேதுப்ரதிமம் வ்ருக்ஷம் மந்த$_3$ரஸந்நிப$_4$ம் ॥ (54)

ஸமுத்ஸ்ருஜந்தம் வேகே$_3$ந பஶ்யதாம் ஸர்வரக்ஷஸாம் ।
ஸ பி$_3$பே$_4$த$_3$ ஶிதைர்பா$_3$ணை: ஸப்தபி$_4$: காயபே$_4$த$_3$நை: ॥ (55)

கடுகி வந்த அந்த பாணத்தின் தாக்குதலால், மலைச்சிகரம்போல் பேருடல் கொண்ட வானரோத்தமனான த்விவிதன், கால்கள் நிலைதடுமாறி மேனி துவண்டு தள்ளாடியபடியே கீழே விழுந்தான். (41)

அப்போது நடந்த கடுமையான சண்டையில், தன் சகோதரன் தோல்வியுற்றதைக் கண்ட மைந்தன், மிகவும் கோபங்கொண்டு, ஒரு பெரிய பாறையை கையில் ஏந்திக் கொண்டு எதிர்த்தோடி வந்தான். (42)

மகாபலம் கொண்ட அவன், அந்தப் பாறையை அரக்கன் (கும்பன்) மீது வீசியெறிந்தான். ஆனால், கும்பன், பளபளவென்று மின்னும் ஐந்து பாணங்களால் அந்தப் பாறையை நொறுக்கித் தள்ளினான். (43)

பேராற்றலுடைய கும்பன், கூரிய முனையை உடையதும் விஷசர்ப்பத்தைப் போன்றதுமான இன்னொரு பாணத்தைத் தொடுத்து, த்விவிதனின் மூத்த சகோதரன் (மைந்தன்) மார்பை நோக்கிச் செலுத்தினான். (44)

வானரப் படைத்தலைவனான மைந்தன், (கும்பனின்) அந்த அடியால் உயிர்நிலையில் தாக்கப்பட்டு, அதைத் தாங்க முடியாமல் உணர்விழந்து தரையில் விழுந்தான். (45)

மகாபலசாலிகளான மாமன்கள் இருவரும் கீழே விழுந்துவிட்டதைப் பார்த்த அங்கதன், வில்லை உயர்த்திப் பிடித்து, யுத்தத்திற்கு ஆயத்தமாக நின்ற கும்பனை, கொந்தளிக்கும் கோபத்துடன் எதிர்த்தான். (46)

எதிர்த்து வந்து அங்கதன் மேல் இரும்பாலான ஐந்து பாணங்களைச் செலுத்தினான், கும்பன். பின்னர், அங்குசத்தால் யானையை மாவுத்தன் அடக்குவதைப் போல, கூர்மையான மூன்று பாணங்களால் அவனைத் துளைத்தெடுத்தான். (47)

மாவீரனான கும்பன், முனை மழுங்காத, கூர்மையான, கொடிய, பொன்னணிகளால் அலங்கரிக்கப்பட்ட பலவகையான பாணங்களால் அங்கதனை அடித்துத் துன்புறுத்தினான். (48)

வாலியின் புதல்வனான அங்கதன், உடல் முழுவதும் காயப்படுத்தப்பட்டும்கூட, நெஞ்சம் கலங்கவில்லை. அது மட்டுமா! பகைவனின் தலையில் மலைகளையும் மரங்களையும் பொழிந்தான், அன்றோ! (49)

மேன்மை பொருந்திய கும்பகர்ணனின் புதல்வன், வாலிமைந்தனால் எறியப்பட்ட எல்லா மரங்களையும் துண்டித்துவிட்டான்; பாறைகளையும் பிளந்து தூளாக்கினான். (50)

பின்னர், வானரப் படைத்தலைவன் அங்கதன், தன்னை நோக்கி வருவதைக் கண்ட கும்பன், இரு கொள்ளிக் கட்டைகளால் யானையை வீழ்த்துவதைப்போல, அவனுடைய புருவங்களுக்கு நடுவில் இரண்டு பாணங்களைச் செலுத்தினான். (51)

அவ்விடத்திலிருந்து இரத்தம் பெருகி இரு கண்களையும் மூடிவிட்டது. அப்போது அங்கதன், இரத்தம் தோய்ந்த இரு கண்களையும் ஒரு கையால் மூடிக் கொண்டு, மற்றொரு கையால் அருகிலிருந்த ஆச்சா மரத்தைப் பற்றினான். (52)

அந்த மரத்தின் நடுத்தண்டை மார்பினால் அணைத்துக் கொண்டு, அதைச் சிறிது வளைத்து, யானை (தன் துதிக்கையால்) மிக எளிதாக ஒரு மரத்தைப் பிடுங்குவது போலவே பெயர்த்தெடுத்தான். (53)

அந்த மரம் இந்திரத்வஜம் போல் உயரமானதாகவும், மந்தரமலை போல் பேருருவத்துடனும் இருந்தது. எல்லா அரக்கர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அந்த மரத்தை எறிந்த அங்கதனை, கூரியவையும் உடலைச் சிதைக்க வல்லவைகளுமான ஏழு பாணங்களால் கும்பன் பிளந்து தள்ளினான். (54,55)

அங்க3தே3ா விவ்யதே2஽பீ4க்ஷ்ணம் நநாத3 ச முமோஹ ச ।
அங்க3த3ம் வ்யதி2தம் த்3ருஷ்ட்வா ஸீத3ந்தமிவ ஸாக3ரே ॥
து3ராஸத3ம் ஹரிஶ்ரேஷ்ட2ம் ராமாயாந்யே ந்யவேத3யந் ॥ (56)

ராமஸ்து வ்யதி2தம் ஶ்ருத்வா வாலிபுத்ரம் ரணாஜிரே ।
வ்யாதி3தே3ஶ ஹரிஶ்ரேஷ்ட2ாஞ்ஜாம்ப3வத்ப்ரமுக2ாந்ஸ்தத: ॥ (57)

தே து வாநரஶார்தூ3லா: ஶ்ருத்வா ராமஸ்ய ஶாஸநம் ।
அபி4பேது: ஸுஸங்க்ருத்3த4ா: கும்ப4முத்3யதகார்முகம் ॥ (58)

ததோ த்3ருமஶிலாஹஸ்தா: கோபஸம்ரக்தலோசநா: ।
ரிரக்ஷிஷந்தோ஽ப்4யபதந்நங்க3த3ம் வாநரர்ஷப4ா: ॥ (59)

ஜாம்ப3வாம்ஶ்ச ஸுஷேணஶ்ச வேக3த3ர்ஶீ ச வாநர: ।
கும்ப4கர்ணாத்மஜம் வீரம் க்ருத்3த4ா: ஸமபி4து3த்3ருவு: ॥ (60)

ஸமீக்ஷ்யாபததஸ்தாம்ஸ்து வாநரேந்த்3ராந் மஹாப3லாந் ।
ஆவவார ஶரௌகே4ண நகே3நேவ ஜலாஶயம் ॥ (61)

தஸ்ய ப3ாணபத2ம் ப்ராப்ய ந ஶேகுரதிவர்திதும் ।
வாநரேந்த்3ரா மஹாத்மாநோ வேலாமிவ மஹோத3தி4: ॥ (62)

தாம்ஸ்து த்3ருஷ்ட்வா ஹரிக3ணாஞ்ஶரவ்ருஷ்டிபி4ரர்தி3தாந் ।
அங்க3த3ம் ப்ருஷ்ட2த: க்ருத்வா ப்4ராத்ருஜம் ப்லவகேஶ்வர: ॥ (63)

அபி4து3த்3ராவ வேகேந ஸுக்3ரீவ: கும்ப4மாஹவே ।
ஶைலஸாநுசரம் நாக3ம் வேக3வாநிவ கேஸரீ ॥ (64)

உத்பாட்ய ச மஹாஶைலாநஶ்வகர்ணாந் த4வாந் ப3ஹூந் ।
அந்யாம்ஶ்ச விவித4ாந் வ்ருக்ஷாந்ஶ்சிக்ஷேப ச மஹாப3ல: ॥ (65)

தாம் ச2ாத3யந்தீமாகாஶம் வ்ருக்ஷவ்ருஷ்டிம் து3ராஸத3ாம் ।
கும்ப4கர்ணாத்மஜ: ஶீக்4ரம் சிச்சே2த3 நிஶிதை: ஶரை: ॥ (66)

அபி4லக்ஷேண தீவ்ரேண கும்பே4ந நிஶிதை: ஶரை: ।
ஆசிதாஸ்தே த்3ருமா ரேஜுர்யத2ா கே4ாரா: ஶதக்4நய: ॥ (67)

த்3ருமவர்ஷம் து தச்சி2ந்நம் த்3ருஷ்ட்வா கும்பே4ந வீர்யவாந் ।
வாநராதி4பதி: ஶ்ரீமாந் மஹாஸத்த்வோ ந விவ்யதே2 ॥ (68)

நிர்பி4த்3யமாந: ஸஹஸா ஸஹமாநஶ்ச தாஞ்ஶராந் ।
கும்ப4ஸ்ய த4நுராக்ஷிப்ய ப3ப4ஞ்ஜேந்த்3ரத4நுஷ்ப்ரப4ம் ॥ (69)

அவப்லுத்ய தத: ஶீக்4ரம் க்ருத்வா கர்ம ஸுது3ஷ்கரம் ।
அப்3ரவீத் குபித: கும்ப4ம் ப4க்3நஶ்ருங்க3மிவ த்3விபம் ॥ (70)

இதனால் மிகவும் வேதனையடைந்த அங்கதன், மனங்கலங்கி உடல் சோர்ந்து மூர்ச்சையடைந்தான். எவராலும் எதிர்க்க முடியாத வானரத் தலைவனான அங்கதன், கடலில் மூழ்கித் தத்தளிப்பவன் போல் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு மற்ற வானரர்கள், இது குறித்து இராமபிரானுக்குத் தெரியப்படுத்தினார்கள். (56)

போர்க்களத்தில், வாலி புத்திரனான அங்கதன் தாக்கப்பட்டுத் துன்பத்தில் இருப்பதைக் கேட்ட இராமன், ஜாம்பவான் முதலிய படைத்தலைவர்களை (அங்கதனுக்கு உதவி செய்யும் பொருட்டு அவனிடம் செல்லும்படி) ஆணையிட்டார். (57)

இராமனுடைய ஆணையைக் கேட்ட அந்த வானரப் புலிகள், போரை எதிர்பார்த்துக் கையில் வில்லுடன் நிற்கும் கும்பனை நோக்கி மிகவும் கோபத்துடன் சென்றார்கள். (58)

அங்கதனைக் காப்பாற்றுவதில் பேராவல் கொண்ட வானரோத்தமர்கள், கைகளில் மரங்களையும் பாறைகளையும் எடுத்துக் கொண்டு, கோபத்தால் கண்கள் சிவக்க எதிர்த்துச் சென்றார்கள். (59)

ஜாம்பவான், சுஷேணன், வேகதர்சி என்ற வானரன் ஆகியோர், கும்பகர்ணனின் வீரப்புதல்வனை மிகுந்த கோபத்துடன் எதிர்த்துப் போரிட்டார்கள். (60)

பெரும் பலசாலிகளான வானரோத்தமர்கள் எதிர்த்து வருவதைக் கண்ட கும்பன், வேகமாக ஓடிவரும் நீர்ப்பெருக்கை மரக்கூட்டங்கள் தடுத்து நிறுத்துவதைப் போல, பாணங்களைச் சரமாரியாகப் பொழிந்து, அவர்களைத் தடைப்படுத்தினான். (61)

பேராற்றல் படைத்த வானரத் தலைவர்கள் தங்களை இடைவிடாது எதிர்த்துத் தாக்கும் பாணக்கூட்டத்தை மீறிக் கொண்டு முன்னேற முடியாதவர்களாக இருந்தார்கள் – கரையைக் கடந்து செல்ல முடியாத கடலைப் போல. (62)

போர்க்களத்தில், வானரக் கூட்டங்கள் பாணமாரியால் துன்புறுத்தப்படுவதைக் கண்ட வானர மன்னன் சுக்ரீவன், (காயம்பட்ட) அங்கதனைப் பின்னால் இருக்கச் செய்து, தான் முன்னே சென்று, மலைச்சிகரத்தில் சஞ்சரிக்கும் யானையை ஒரு சிங்கம் தாக்குவதைப் போல, கும்பனைத் தாக்கினான். (63,64)

மகாபலசாலியான அவன், பெரிய பாறைகளையும் அசுவகர்ணம், தவம் மற்றும் பலவகையான மரங்களையும் பெயர்த்தெடுத்து வீசியெறிந்தான். (65)

ஆகாயத்தையே மறைத்துக் கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்த மரக்கூட்டங்களை, கும்பன் கூரிய பாணங்களால் நொடிப்பொழுதில் முறித்துத் தள்ளினான். (66)

இலக்கினை நோக்கி மிக வேகமாகச் செலுத்தப்பட்ட கும்பனுடைய பாணங்களால் வியாபிக்கப்பட்ட மரக்கூட்டம், பயங்கரங்கமான முட்கள் நிறைந்த சதக்னி என்னும் ஆயுதம் போல் விளங்கின. (67)

ஆண்மை–ஆற்றல்–புகழ் முதலியன ஒருங்கே திகழப் பெற்ற வானர மன்னன் சுக்ரீவன், அவனால் எறியப்பட்ட பெரு மரக்கூட்டம், கும்பனால் துகள்துகளாகச் சிதைக்கப்பட்டதைப் பார்த்தும்கூட மனக்கலக்கம் அடையவில்லை. (68)

உடலின்மேல் விழுந்து தாக்கும் பாணங்களின் வலியைப் பொறுத்துக் கொண்டு, சடுதியில் சென்று கும்பனுடைய கையிலிருந்த இந்திரனுடைய வில்லைப் போன்று விளங்கிய வில்லைப் பிடுங்கி முறித்தெறிந்தான். (69)

செயற்கரிய செயலைச் செய்து முடித்த அவன் (சுக்ரீவன்), கும்பனுடைய தேரிலிருந்து சட்டென்று கீழே குதித்து மிகுந்த கோபத்துடன், தந்தத்தைப் பறிகொடுத்த யானை போல் (அவனமானத்துடன்) நிற்கும் கும்பனைப் பார்த்து பின்வருமாறு கூறினான்— (70)

நிகும்ப$_4$ாக்$_3$ரஜ வீர்யம் தே ப$_3$ாணவேக$_3$வத$_3$த்$_3$பு$_4$தம் ।
ஸந்நதிஸ்ச ப்ரப$_4$ாவஸ்ச தவ வா ராவணஸ்ய வா ॥ (71)

ப்ரஹ்லாத$_3$ப$_3$லிவ்ருத்ரக்$_4$நகுபே$_3$ரவருணோபம ॥ (72)

ஏகஸ்த்வமநுஜாதோऽஸி பிதரம் ப$_3$லவ்ருத்தத: ।
த்வாமேவைகம் மஹாபா$_3$ஹும் சாபஹஸ்தமரிந்த$_3$மம் ॥ (73)

த்ரித$_3$ஶா நாதிவர்தந்தே ஜிதேந்த்$_3$ரியமிவாத$_4$ய: ।
விக்ரமஸ்ய மஹாபு$_3$த்$_3$தே$_4$ கர்மாணி மம பஶ்யத: ॥ (74)

வரதா$_3$நாத் பித்ருவ்யஸ்தே ஸஹதே தே$_3$வதா$_3$நவாந் ।
கும்ப$_4$கர்ணஸ்து வீர்யேண ஸஹதே ச ஸுராஸுராந் ॥ (75)

த$_4$நுஷீந்த்$_3$ரஜிதஸ்துல்ய: ப்ரதாபே ராவணஸ்ய ச ।
த்வமத்$_3$ய ரக்ஷஸாம் லோகே ஶ்ரேஷ்டோ$_2$ऽஸி ப$_3$லவீர்யத: ॥ (76)

மஹாவிமர்த$_3$ம் ஸமரே மயா ஸஹ தவாத்$_3$பு$_4$தம் ।
அத்$_3$ய பூ$_4$தாநி பஶ்யந்து ஶக்ரஶம்ப$_3$ரயோரிவ ॥ (77)

க்ருதமப்ரதிமம் கர்ம த$_3$ர்ஶிதம் சாஸ்த்ரகௌஶலம் ।
பாதிதா ஹரிவீராஶ்ச த்வயா வை பீ$_4$மவிக்ரமா: ॥ (78)

உபாலம்ப$_4$ப$_4$யாச்சாபி நாஸி வீர மயா ஹத: ।
க்ருதகர்மாபரிஶ்ராந்தோ விஶ்ராந்த: பஶ்ய மே ப$_3$லம் ॥ (79)

தேந ஸுக்$_3$ரீவவாக்யேந ஸாவமாநேந மாநித: ।
அக்$_3$நேராஜ்யாஹுதஸ்யேவ தேஜஸ்தஸ்யாப்$_4$யவர்த$_4$த ॥ (80)

தத: கும்ப$_4$ஸ்து ஸுக்$_3$ரீவம் பா$_3$ஹுப்$_4$யாம் ஜக்$_3$ருஹே ததா$_3$ ।
க$_3$ஜாவிவாஹிதமதௌ$_3$ நி:ஶ்வஸந்தௌ முஹுர்முஹு: ॥ (81)

அந்யோந்யகா$_3$த்ரக்$_3$ரதி$_2$தௌ கர்ஷந்தாவிதரேதரம் ।
விதூ$_4$மாம் முகா$_2$தோ ஜ்வாலாம் விஸ்ருஜந்தௌ பரிஶ்ரமாத் ॥ (82)

தயோ: பாதா$_3$பி$_4$கா$_4$தாச்ச நிமக்$_3$நா சாப$_4$வந்மஹீ ।
வ்யாகூ$_4$ர்ணிததரங்க$_3$ஶ்ச சுக்ஷுபே$_4$ வருணாலய: ॥ (83)

தத: கும்ப$_4$ம் ஸமுத்க்ஷிப்ய ஸுக்$_3$ரீவோ லவணாம்ப$_4$ஸி ।
பாதயாமாஸ வேகே$_3$ந த$_3$ர்ஶயந்நுத$_3$தே$_4$ஸ்தலம் ॥ (84)

தத: கும்ப$_4$நிபாதேந ஜலராஶி: ஸமுத்தி$_2$த: ।
விந்த்$_4$யமந்த$_3$ரஸங்காஶோ விஸஸர்ப ஸமந்தத: ॥ (85)

''நிகும்பனுக்குத் தமையனே! உன்னுடைய ஆண்மையும் பாண வேகமும் வியப்படையச் செய்கின்றன! (அரக்கர்களுள்) வினயமும் பேராற்றலும் உன்னிடமும் இராவணனிடமும்தான் இருக்கின்றன. (71)

பிரகலாதன், பலிச்சக்கரவர்த்தி, விருத்திராசுரனைக் கொன்ற இந்திரன், குபேரன், வருணன் ஆகியோருக்கு நிகரானவனே! பலத்தாலும் நடத்தையாலும் நீ ஒருவன் மட்டுமே உன் தந்தையை ஒத்துப் பிறந்திருக்கிறாய். புலன்களை அடக்கிய மகாத்மாக்களை மனக்கவலைகள் தாக்க முடியாதது போல, எதிரிகளை அடக்குபவனும் கையில் வில்லை ஏந்திக் கொண்டிருப்பவனும் தனியொருவனாக நிற்பவனுமான உன்னை தேவர்களாலும் அடக்க முடியாது! பேரறிவாளனே! இப்போது என் கண் முன்பாக உன் வீரதீர பராக்கிரமச் செயல்களைக் காட்டுவாய்! (72–74)

உன்னுடைய பெரிய தகப்பனார் (இராவணன்), தேவதைகளிடமிருந்து பெற்ற ஏராளமான வரங்களின் பலத்தினால் தேவாசுரர்களை எதிர்க்கும் துணிவுள்ளவனானான்; உன்னுடைய தந்தை கும்பகர்ணனோ, தன் உடல் பலத்தால் தேவாசுரர்களை அடக்கி வென்று கொண்டிருந்தான். (ஆனால், உன்னிடம் வரம்–வீரம் என்ற இரண்டு பலங்களும் இருக்கின்றன.) (75)

வில் இயக்கத்தில் இந்திரஜித்திற்கும், பேராண்மையை வெளிப்படுத்துவதில் இராவணனுக்கும் நிகராக, (மாவீரர்களான அரக்கத் தலைவர்கள் மாய்க்கப்பட்டுவிட்ட இன்றைய நிலையில்,) அரக்கர் கூட்டத்தில், உடலாற்றலும் ஆண்மையும் உடையவனாக நீ மட்டும் சிறந்து விளங்குகிறாய். (76)

முன்னர், இந்திரனுக்கும் சம்பராசுரனுக்குமிடையே நடந்த மாபெரும் போர் போல, இப்போது எனக்கும் உனக்குமிடையே நடக்கப் போகும் அற்புதமான யுத்தத்தை, உயிர்ப்பிராணிகள் கண்களால் காணப் போகிறார்கள். (77)

நீ, ஈடு–இணையில்லாத வீரச்செயல்களைச் செய்திருக்கிறாய்; அஸ்திரங்களைச் செலுத்துவதில் உன் அளப்பரிய திறமையையும் காட்டியிருக்கிறாய். பயங்கரமான ஆற்றல் படைத்த வானர வீரர்களை வீழ்த்தியிருக்கிறாய். (78)

(கும்பன், பல வானர வீரர்களோடு மூர்க்கத்தனமாகப் போர் புரிந்து, மிகவும் களைத்திருந்த வேளையில், சுக்ரீவன் அவனை எதிர்த்துக் கொன்றுவிட்டான். இதுதான் வீர லட்சணமா? என்று,) மக்கள் பழிப்பார்கள் என்ற அச்சத்தினாலேயே, வீரனே! நான் உன்னை இதுவரைக் கொல்லாமல் இருந்தேன். அரிய செயல்களைப் புரிந்து களைப்படைந்திருக்கும் நீ, சற்றே இளைப்பாறிய பின் சண்டைக்கு வந்து, என் ஆற்றலைக் காண்பாய்!'' (79)

சுக்ரீவனுடைய இத்தகைய (மரியாதை செய்வது போன்ற) இகழ்ச்சிச் சொற்களால் (அ)கௌரவிக்கப்பட்ட கும்பன், நெய்ச்சொரிவினால் வளர்ந்தோங்கும் அக்னியைப் போல் தேசு மிகப் பெற்றான். (80)

பின்னர் கும்பன், சுக்ரீவனை இரு கைகளாலும் இறுகக் கட்டிக் கொண்டான். அப்போது, மதங்கொண்ட இரு யானைகள் போல் அடிக்கடி பெருமூச்சுவிட்டுக் கொண்டு, ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து, அமுக்கி, திக்கமுக்காடச் செய்து, கடுமையான உடற்பிரயாசையால், புகையில்லாத நெருப்புச் சுவாலையை தத்தம் வாயிலிருந்து வெளியிட்டார்கள். (81,82)

அவ்விருவர்களுடைய அழுத்தமான கால்வைப்பினால், பூமி கீழே அமுங்கிப் போயிற்று. பெருங்கடலில், அலைகள் தாறுமாறாகச் சுழன்றன. (83)

பின்னர் சுக்ரீவன், கும்பனைக் கட்டித் தூக்கி மிக வேகமாகக் கடலில் வீசினான். அவன் வீசப்பட்ட வேகத்தால், ஆழ்கடலின் அடித்தளத்தையே காண நேரிட்டது! (84)

அவன் விழுந்த வேகத்தினால், கடல்நீர் விந்திய–மந்தர மலைகள் உயரத்திற்குக் கொந்தளித்து, நாற்புறமும் பரவி விழுந்தது. (85)

தத: கும்ப$_4$: ஸமுத்பத்ய ஸுக்$_3$ரீவமபி$_4$பத்ய ச ।
ஆஜகா$_4$நோரஸி க்ருத்$_3$தோ$_4$ வஜ்ரவேகே$_3$ந முஷ்டிநா ॥ (86)

தஸ்ய சர்ம ச புஸ்போ$_2$ட ப$_3$ஹு ஸுஸ்ராவ ஶோணிதம் ।
ஸ ச முஷ்டிர்மஹாவேக$_3$: ப்ரதிஜக்$_4$நேऽஸ்தி$_2$மண்ட$_3$லே ॥ (87)

ததா$_3$ வேகே$_3$ந தத்ராஸீத்தேஜ: ப்ரஜ்வலிதம் முஹு: ।
வஜ்ரநிஷ்பேஷஸஞ்ஜாதா ஜ்வாலா மேரௌ யதா$_2$ கி$_3$ரௌ ॥ (88)

ஸ தத்ராபி$_4$ஹதஸ்தேந ஸுக்$_3$ரீவோ வாநரர்ஷப$_4$: ।
முஷ்டிம் ஸம்வர்தயாமாஸ வஜ்ரகல்பம் மஹாப$_3$ல: ॥ (89)

அர்சி:ஸஹஸ்ரவிகசம் ரவிமண்ட$_3$லஸப்ரப$_4$ம் ।
ஸ முஷ்டிம் பாதயாமாஸ கும்ப$_4$ஸ்யோரஸி வீர்யவாந் ॥ (90)

ஸ து தேந ப்ரஹாரேண விஹ்வலோ ப்$_4$ருஶதாடி$_3$த: ।
நிபபாத ததா$_3$ கும்போ$_4$ க$_3$தார்சிரிவ பாவக: ॥ (91)

முஷ்டிநாபி$_4$ஹதஸ்தேந நிபபாதாஶு ராக்ஷஸ: ।
லோஹிதாங்க$_3$ இவாகாஶாத்$_3$தீ$_3$ப்தரஶ்மிர்யத்$_3$ருச்ச$_2$யா ॥ (92)

கும்ப$_4$ஸ்ய பததோ ரூபம் ப$_4$க்$_3$நஸ்யோரஸி முஷ்டிநா ।
ப$_3$பௌ$_4$ ருத்$_3$ராபி$_4$பந்நஸ்ய யதா$_2$ ரூபம் க$_3$வாம்பதே: ॥ (93)

தஸ்மிந் ஹதே பீ$_4$மபராக்ரமேண ப்லவங்க$_3$மாநாம்ருஷபே$_4$ண யுத்$_3$தே$_4$ ।
மஹீ ஸஶைலா ஸவநா சசால ப$_4$யம் ச ரக்ஷாம்ஸ்யதி$_4$கம் விவேஶ ॥ (94)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷட்ஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

ஸப்தஸப்ததிதம: ஸர்க$_3$:

நிகும்ப$_4$வத$_4$:

நிகும்போ$_4$ ப்$_4$ராதரம் த்$_3$ருஷ்ட்வா ஸுக்$_3$ரீவேண நிபாதிதம் ।
ப்ரத$_3$ஹந்நிவ கோபேந வாநரேந்த்$_3$ரமவைக்ஷத ॥ (1)

தத: ஸ்ரக்$_3$தா$_3$மஸந்நத்$_3$த$_4$ம் த$_3$த்தபஞ்சாங்கு$_3$லம் ஶுப$_4$ம் ।
ஆத$_3$தே$_3$ பரிக$_4$ம் வீரோ நகே$_3$ந்த்$_3$ரஶிக$_2$ரோபமம் ॥ (2)

ஹேமபட்டபரிக்ஷிப்தம் வஜ்ரவித்$_3$ருமபூ$_4$ஷிதம் ।
யமத$_3$ண்டோ$_3$பமம் பீ$_4$மம் ரக்ஷஸாம் ப$_4$யநாஶநம் ॥ (3)

தமாவித்$_4$ய மஹாதேஜா: ஶக்ரத்$_4$வஜஸமம் ததா$_3$ ।
விநநாத$_3$ விவ்ருத்தாஸ்யோ நிகும்போ$_4$ பீ$_4$மவிக்ரம: ॥ (4)

ஆனால், கடலிலிருந்து கும்பன் மேலெழுந்து வந்து, மிகுந்த கோபத்துடன் சுக்ரீவனை நெருங்கி முஷ்டியால், வஜ்ராயுதத்திற்கு நிகரான வேகத்துடன் அவன் மார்பில் தாக்கினான். (86)

அவனுடைய தோல் கிழிந்தது; இரத்தம் பெருகி வந்தது; சக்திமிக்க முஷ்டித் தாக்குதல் அவன் மார்பு எலும்புக்கூட்டையும் உடைத்தது. (87)

அப்போது, வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட மேருமலையில் நெருப்புச் சுவாலை உண்டாவதைப் போல, முஷ்டி வேகத்தால் சுக்ரீவனிடம் பெருங்கனல் வீசியது. (88)

கும்பனால் தாக்கப்பட்டவனும் மகாபலசாலியும் வானர மன்னனுமான சுக்ரீவன், வஜ்ராயுதத்திற்கொப்பான தன் முஷ்டியைச் சுழற்றினான். (89)

மாவீரனான அவன், பல்லாயிரம் கதிர்கள் வீசும் சூரியமண்டலம் போன்ற ஒளியும், தடைபடாத தன்மையும் கொண்ட தன் முஷ்டியைக் கொண்டு, கும்பனுடைய மார்பில் ஓங்கி அறைந்தான். (90)

உடனே, சக்தி மிகுந்த அந்தத் தாக்குதலால் அங்கங்கள் சிதறடிக்கப்பட்ட கும்பன், சுவாலைகள் அடங்கிப் போன நெருப்பைப்போல (வெறும் சாம்பலாகி) கீழே சாய்ந்தான். (91)

சுக்ரீவனுடைய வலிமைமிக்க முஷ்டித் தாக்குதலால் அடிபட்ட கும்பன், ஆகாயத்திலிருந்து ஒளிவீசும் செவ்வாய் கிரகம் எதிர்பாராதவிதமாகப் பூமியில் சடக்கென விழுவதைப்போல தரையில் வீழ்ந்தான்! (92)

முஷ்டித் தாக்குதலால் தூள்தூளாக்கப்பட்ட மார்புடனிருந்த கும்பன் கீழே விழுந்தபோது, ருத்ரதேவனால் வீழ்த்தப்பட்ட சூரியன் போல் விளங்கினான். (சூரியனை ஒரு குற்றத்திற்காக, பரமேசுவரன் தாக்கிக் கீழே தள்ளினார் என்பது ஒரு புராண வரலாறு). (93)

பயங்கரமான ஆற்றலுடைய சுக்ரீவனால் கும்பன் மாய்க்கப்பட்டவுடன், மலைகள், காடுகளோடுகூட பூமி நடுநடுங்கிற்று. அரக்கர்கள் மனத்தில் பேரச்சம் புகுந்து கொண்டது. (94)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தேழு

நிகும்பன் மாண்டான்!

நிகும்பன், தன்னுடைய சகோதரன் கும்பன், வானர மன்னனாகிய சுக்ரீவனால் கொல்லப்பட்டதைக் கண்டு, தன் சினத்தீயினாலேயே அவனை எரித்து விடுபவன் போல் பார்த்தான். (1)

அப்போது வீரனான அவன் (நிகும்பன்), மலர்மாலைகள் சூட்டப் பெற்றதும், சந்தனம்–குங்குமம் முதலான நறுமணப் பொருள்களால் ஐந்து அங்குல நீளத்திற்குப் பூசப்பட்டதும், அழகியதும், ஒரு மாமலையின் சிகரத்தை நிகர்த்ததும், பொற்பட்டையால் கட்டப்பட்டதும், வைரம்–பவழங்களால் அலங்கரிக்கப்பட்டதும், காலதேவனின் தண்டத்தைப்போல் மிக பயங்கரமானதும், அரக்கர்களின் அச்சத்தை ஒழிக்கவல்லதுமான ஓர் உலக்கையைக் கையில் எடுத்துக் கொண்டான். (2,3)

அப்போது மாவீரத்தன்மை கொண்டவனும், பயங்கரமான ஆற்றலுடையவனுமான நிகும்பன், இந்திரனுடைய துவஜத்திற்கு ஒப்பான அந்தத் தடியைச் சுழற்றி, தன் வாயை அகலமாக்கிக் கொண்டு பெருங்கூச்சலை எழுப்பினான். (4)

உரோக3தேந நிஷ்கேண பு4ஜஸ்தை2ரங்க3தை3ரபி ।
குண்ட3லாப்4யாம் ச சித்ராப்4யாம் மாலயா ச விசித்ரயா ॥ (5)

நிகும்போ4 பூ4ஷணைர்பா4தி தேந ஸ்ம பரிகே4ண ச ।
யதே2ந்த்3ரத4நுஷா மேக4: ஸவித்3யுத்ஸ்தநயித்நுமாந் ॥ (6)

பரிகா4க்3ரேண புஸ்போ2ட வாதக்3ரந்தி2ர்மஹாத்மந: ।
ப்ரஜஜ்வால ஸகோ4ஷஶ்ச விதூ4ம இவ பாவக: ॥ (7)

நக3ர்யா விடபாவத்யா க3ந்த4ர்வப4வநோத்தமை: ।
ஸஹ சைவாமராவத்யா ஸர்வைஶ்ச ப4வநை: ஸஹ ॥ (8)

ஸதாரக்3ரஹநக்ஷத்ரம் ஸசந்த்3ரம் ஸமஹாக்3ரஹம் ।
நிகும்ப4பரிகா4கூ4ர்ணம் ப்4ரமதீவ நப4:ஸ்த2லம் ॥ (9)

து3ராஸத3ஶ்ச ஸஞ்ஜஜ்ஞே பரிகா4பா4ரணப்ரப4: ।
கபீநாம் ஸ நிகும்பா4க்3நிர்யுகா3ந்தாக்3நிரிவோத்தி2த: ॥ (10)

ராக்ஷஸா வாநராஶ்சாபி ந ஶேகு: ஸ்பந்தி3தும் ப4யாத் ।
ஹநுமாம்ஸ்து விவ்ருத்யோரஸ்தஸ்தௌ2 தஸ்யாக்3ரதோ ப3லீ ॥ (11)

பரிகோ4பமபா3ஹுஸ்து பரிக4ம் பா4ஸ்கரப்ரப4ம் ।
ப3லீ ப3லவதஸ்தஸ்ய பாதயாமாஸ வக்ஷஸி ॥ (12)

ஸ்தி2ரே தஸ்யோரஸி வ்யூடே4 பரிக4: ஶததா4 க்ருத: ।
விஶீர்யமாண: ஸஹஸா உல்காஶதமிவாம்ப3ரே ॥ (13)

ஸ து தேந ப்ரஹாரேண விசசால மஹாகபி: ।
பரிகே4ண ஸமாதூ4தோ யதா2 பூ4மிதலேऽசல: ॥ (14)

ஸ ததா3பி4ஹதஸ்தேந ஹநுமாந் ப்லவகோ3த்தம: ।
முஷ்டிம் ஸம்வர்தயாமாஸ ப3லேநாதிமஹாப3ல: ॥ (15)

தமுத்3யம்ய மஹாதேஜா நிகும்போ4ரஸி வீர்யவாந் ।
அபி4சிக்ஷேப வேகே3ந வேக3வாந் வாயுவிக்ரம: ॥ (16)

தத: புஸ்போ2ட சர்மாஸ்ய ப்ரஸுஸ்ராவ ச ஶோணிதம் ।
முஷ்டிநா தேந ஸஞ்ஜஜ்ஞே ஜ்வாலா வித்3யுதி3வோத்தி2தா ॥ (17)

ஸ து தேந ப்ரஹாரேண நிகும்போ4 விசசால ஹ ।
ஸ்வஸ்த2ஶ்சாபி நிஜக்3ராஹ ஹநுமந்தம் மஹாப3லம் ॥ (18)

விசுக்ருஶுஸ்ததா3 ஸங்க்2யே பீ4மம் லங்காநிவாஸிந: ।
நிகும்பே4நோத்3யதம் த்3ருஷ்ட்வா ஹநுமந்தம் மஹாப3லம் ॥ (19)

ஸ ததா3 ஹ்ரியமாணோऽபி கும்ப4கர்ணாத்மஜேந ஹ ।
ஆஜகா4நாநிலஸுதோ வஜ்ரகல்பேந முஷ்டிநா ॥ (20)

நிகும்பனின் மார்பில் பதக்கம் ஒளி வீசிற்று; கைகளில் தோள்வளைகள்; அழகிய குண்டலங்கள்; கண்கவர்மாலை, அணிகலன்கள் மற்றும் கையில் உலக்கைத் தடி; இந்தத் தோற்றத்தில், வானவில்லினால் சூழப்பெற்ற மின்னல்–இடிகளுடன் கூடிய மேகம் போல் ஒளி வீசினான். (5,6)

பேருடல் கொண்ட அரக்கனின் உலக்கைத் தடியின் சுழற்சியினால், வாயு மண்டலம் சிதறிப் போயிற்று; பேரொலியுடன் சுழன்ற அது, புகையில்லாத அக்னியைப் போல் ஜொலித்தது. (7)

நிகும்பனுடைய உலக்கைத் தடியின் சுழற்சியால், (வானுலகிலிருந்த) கந்தர்வர்களின் உன்னத மாளிகைகள், (குபேரனின்) அளகாபுரிப் பட்டணம், எல்லா வீடுகளுடன் கூடிய அமராவதி நகரம், சந்திரன், சுக்கிரன் போன்ற பெருங்கோள்கள், அசுவினி முதலிய தாரகைகள், புதன் முதலிய கோள்கள், மற்றும் (பெயரிடப்படாத) நட்சத்திரங்கள் ஆகியவற்றோடு கூடிய வானமண்டலமே சுழல்வது போலிருந்தது. (8,9)

உலக்கையாலும் அணிகலன்களாலும் பேரொளி வீசிக் கொண்டிருந்த நிகும்பன் என்ற அக்னி, கொழுந்துவிட்டெரியும் ஊழிக்காலத் தீயைப்போல, வானரர்களால் நெருங்க முடியாதவனாக இருந்தான். (10)

(அவனுடைய பயங்கரமான தோற்றத்தைக் கண்டு,) அங்கிருந்த அரக்கர்களும் வானரர்களும் அசையக்கூட முடியாமற்போனார்கள். ஆனால், மகாபலசாலியான அனுமான் தன் மார்பைக் காட்டிக் கொண்டு, அவன் எதிரில் வந்து நின்றார். (11)

உலக்கைத் தடி போன்ற (நீண்ட வலுவான) கைகளையுடைய அவன் (நிகும்பன்), சூரியனைப் போல் அனல் ஒளி வீசும் உலக்கையை, அவருடைய (அனுமானுடைய) மார்பில் முழுபலத்துடன் அடித்தான். (12)

உறுதி பெற்றதும் அகன்றதுமான அவருடைய மார்பில் தாக்கிய உலக்கை, உடனே நூற்றுக்கணக்கான துகள்களாகி, ஆகாயத்திலிருந்து விழும் நெருப்புக் கொள்ளிகள்போல் சிதறிப் போய்விட்டது. (13)

இரும்பு உலக்கையால் தாக்கப்பட்ட அந்த வானரோத்தமர், நிலநடுக்கத்தின்போது மலை ஆடுவதைப்போல சற்றே ஆடிப் போனார். (14)

அப்போது அவனால் தாக்கப்பட்ட வானரோத்தமரும், நிகரில்லாத பராக்கிரமம் பெற்றவருமான அனுமான், தன் முழுபலத்தையும் திரட்டி, தன் முஷ்டியைச் சுழற்றினார். (15)

பேராண்மை, வீரம், அளவு கடந்த சக்தி படைத்தவரும், வாயுவுக்கு நிகரான பராக்கிரமம் கொண்டவருமான அவர், அந்த முஷ்டியை உயரத் தூக்கி, மிகுந்த பலத்துடன் நிகும்பனுடைய மார்பில் குத்தினார். (16)

முஷ்டி, அவன் மார்பிலிருந்த கவசத்தைத் தாக்கித் தகர்த்தபோது மின்னொளி வீசியது; இரத்தம் பெருகி ஓடத் தொடங்கியது. (17)

அந்த அடியைத் தாங்க முடியாமல், நிகும்பன் துடியாய்த் துடித்தான். பின்னர், தன்னுணர்வு பெற்றதும் மகாபலசாலியான அனுமானைக் கட்டிப்பிடித்தான். (18)

அப்போது போர்க்களத்தில் மகாபலசாலியான அனுமானை, நிகும்பன் தன் கைகளால் கட்டி அடக்கிவிட்டான் என்பதை அறிந்து கொண்ட இலங்கை நகர மக்கள் (குதூகலத்துடன்) கூக்குரலிட்டார்கள். (19)

வாயு புதல்வரான அவர், கும்பகர்ணன் புதல்வனின் கைப்பிடியில் அகப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும், வஜ்ராயுதம் போன்ற தன் முஷ்டியினால் அவனைத் தாக்கினார். (20)

ஆத்மாநம் மோசயித்வாத$_2$ க்ஷிதாவப்$_4$யவபத்$_3$யத ।
ஹநுமாநுந்மமாத$_2$ாஶு நிகும்ப$_4$ம் மாருதாத்மஜ: ॥ (21)

நிக்ஷிப்ய பரமாயத்தோ நிகும்ப$_4$ம் நிஷ்பிபேஷ ஹ ।
உத்பத்ய சாஸ்ய வேகே$_3$ந பபாதோரஸி வீர்யவாந் ॥ (22)

பரிக்$_3$ருஹ்ய ச ப$_3$ாஹுப்$_4$யாம் பரிவ்ருத்ய ஶிரோத$_4$ராம் ।
உத்பாடயாமாஸ ஶிரோ பை$_4$ரவம் நத$_3$தோ மஹத் ॥ (23)

அத$_2$ விநத$_3$தி ஸாதி$_3$தே நிகும்பே$_4$ பவநஸூதேந ரணே ப$_3$பூ$_4$வ யுத்$_3$த$_4$ம் ।
த$_3$ஶரத$_2$ஸுதராக்ஷஸேந்த்$_3$ரஸூந்வோர் ப்$_4$ருஶதரமாக$_3$தரோஷயோ: ஸுபீ$_4$மம் ॥ (24)

வ்யபேதே து ஜீவே நிகும்ப$_4$ஸ்ய ஹ்ருஷ்டா
நிநேது$_3$: ப்லவங்கா$_3$ தி$_3$ஶ: ஸஸ்வநுஶ்ச ।
சசாலேவ சோர்வீ பபா$_2$லேவ ச த்$_3$யௌர்–
ப$_4$யம் ராக்ஷஸாநாம் ப$_3$லம் சாவிவேஶ ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஸப்தஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

அஷ்டஸப்ததிதம: ஸர்க$_3$:

மகராக்ஷாபி$_4$ஷேணநம்

நிகும்ப$_4$ம் ச ஹதம் ஶ்ருத்வா கும்ப$_4$ம் ச விநிபாதிதம் ।
ராவண: பரமாமர்ஷீ ப்ரஜஜ்வாலாநலோ யதா$_2$ ॥ (1)

நைர்ருத: க்ரோத$_4$ஶோகாப்$_4$யாம் த்$_3$வாப்$_4$யாம் து பரிமூர்சி$_2$த: ।
க$_2$ரபுத்ரம் விஶாலாக்ஷம் மகராக்ஷமசோத$_3$யத் ॥ (2)

க$_3$ச்ச$_2$ புத்ர மயாக்ஞப்தோ ப$_3$லேநாபி$_4$ஸமந்வித: ।
ராக$_4$வம் லக்ஷ்மணம் சைவ ஜஹி தாம்ஶ்ச வநௌகஸ: ॥ (3)

ராவணஸ்ய வச: ஶ்ருத்வா ஶூரமாநீ க$_2$ராத்மஜ: ।
ப$_3$ாட$_4$மித்யப்$_3$ரவீத்$_3$த்$_4$ருஷ்டோ மகராக்ஷோ நிஶாசர: ॥ (4)

ஸோऽபி$_4$வாத்$_3$ய த$_3$ஶக்$_3$ரீவம் க்ருத்வா சாபி ப்ரத$_3$க்ஷிணம் ।
நிர்ஜக$_3$ாம க்$_3$ருஹாச்சு$_2$ப்$_4$ராத்$_3$ராவணஸ்யாக்ஞயா ப$_3$லீ ॥ (5)

ஸமீபஸ்த$_2$ம் ப$_3$லாத்$_4$யக்ஷம் க$_2$ரபுத்ரோऽப்$_3$ரவீதி$_3$த$_3$ம் ।
ரத$_2$ஶ்சாநீயதாம் ஶீக்$_4$ரம் ஸைந்யம் சாஹூயதாம் த்வராத் ॥ (6)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ப$_3$லாத்$_4$யக்ஷோ நிஶாசர: ।
ஸ்யந்த$_3$நம் ச ப$_3$லம் சைவ ஸமீபம் ப்ரத்யபாத$_3$யத் ॥ (7)

வாயுமைந்தரான அனுமான், நொடிப்பொழுதில் தன்னை விடுவித்துக் கொண்டு தரையில் குதித்துவிட்டார். காலதாமதமில்லாமல் நிகும்பனை அடியோடு எடுத்துத் தூக்கித் தரையில் வைத்துத் தேய்த்தார். (21)

மாவீரரும் மனந்தளராதவருமான அனுமான், நிகும்பனைக் கீழே போட்டுத் துவைத்தெடுத்தார். அவனது மார்பின்மேல் குதித்து ஏறி உட்கார்ந்து கொண்டார். (22)

இருகைகளாலும் அவனுடைய கழுத்தை இறுக்கிப் பிடித்துத் திருப்பி, பயங்கரமாகப் பெருங்கூச்சலிடும் அவன் தலையைத் துண்டித்து விட்டார். (23)

போர்க்களத்தில் சிங்கநாதம் செய்த நிகும்பன், அனுமானால் கொல்லப்பட்ட பின்னர், இருபுறத்திலும் சினம் பொங்கியெழுந்தது. அச்சமயத்தில், தசரதன் புதல்வனாகிய இராமனுக்கும், இராவணன் மைந்தனாகிய மகராக்ஷனுக்குமிடையே பெரும்போர் துவங்கியது. (24)

நிகும்பன் உடலிலிருந்து உயிர் நீங்கியவுடன் வானரர்கள் பேரானந்தத்துடன் ஆரவாரம் செய்தார்கள். திசைகள் மங்கள ஒலிகளை எழுப்பின; பூமியும் (மகிழ்ச்சியுடன்) அசைந்தது; ஆகாயம் அதிர்ந்தது; அரக்கப் படையினர் நெஞ்சில் அச்சம் புகுந்து கொண்டது. (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தெட்டு

மகராக்ஷன் போர்க்களம் வருதல்!

நிகும்பன் கொல்லப்பட்டான்; கும்பன் வீழ்த்தப்பட்டான் – என்பதைக் கேட்டு மிகவும் சீற்றங்கொண்ட இராவணன், அக்னியைப்போல் கொழுந்துவிட்டு ஒளிர்ந்தான். (1)

அரக்கனாகிய இராவணன், கோபம், துக்கம் ஆகிய இரண்டாலும் மிகவும் மதியிழந்து, கரனின் புதல்வனும் விசாலமான கண்களையுடைவனுமான மகராக்ஷனை நோக்கிக் கட்டளையிட்டான்— (2)

''செல்வனே! நான் உனக்கு ஆணையிட்டு அனுப்பி வைக்கிறேன்; நமது படையுடன்கூடப் போர்க்களத்திற்குப் போ. இராமனையும் லட்சுமணனையும் வானரர்களையும் கொன்றுவிடு!'' (3)

தன்னை, ஒரு மகாசூரன் என்று நினைத்து செருக்குடன் இருந்தவனும், கரனின் புதல்வனும், அரக்கனுமான மகராக்ஷன், இராவணனுடைய சொற்களைக் கேட்டதும், 'உத்தரவுப்படி செய்கிறேன்' என்று பதிலுரைத்தான். (4)

பலசாலியான அவன், இராவணனை வலம் வந்து வணங்கிவிட்டு, கவின்மிகு மாளிகையிலிருந்து, இராவணனின் உத்தரவை நிறைவேற்றுவதற்காக வெளியே வந்தான். (5)

கரனின் புதல்வனான மகராக்ஷன், அருகிலிருந்த ஒரு படைத்தலைவனைப் பார்த்து, ''என்னுடைய தேரை விரைவில் இவ்விடம் கொண்டு வா; காலதாமதமில்லாமல் படையைத் திரட்டுவாய்'' என்றான். (6)

படைத்தலைவனான அரக்கன், அவனுடைய உத்தரவைச் சிரமேற்கொண்டு, நொடிப்பொழுதில் தேரையும் சேனையையும் அருகில் கொண்டு வந்து நிறுத்தினான். (7)

ப்ரத$_3$க்ஷிணம் ரத$_2$ம் க்ருத்வா ஆருரோஹ நிஶாசர: ।
ஸூதம் ஸஞ்சோத$_3$யாமாஸ ஶீக்$_4$ரம் மே ரத$_2$மாவஹ ॥ (8)

அத$_2$ தாந்ராக்ஷஸாந் ஸர்வாந் மகராக்ஷோऽப்$_3$ரவீதி$_3$த$_3$ம் ।
யூயம் ஸர்வே ப்ரயுத்$_4$யத்$_4$வம் புரஸ்தாந்மம ராக்ஷஸா: ॥ (9)

அஹம் ராக்ஷஸராஜேந ராவணேந மஹாத்மநா ।
ஆக்ஞப்த: ஸமரே ஹந்தும் தாவுபௌ$_4$ ராமலக்ஷ்மணௌ ॥ (10)

அத்$_3$ய ராமம் வதி$_4$ஷ்யாமி லக்ஷ்மணம் ச நிஶாசரா: ।
ஶாக$_2$ம்ருக$_3$ம் ச ஸுக்$_3$ரீவம் வாநராம்ஶ்ச ஶரோத்தமை: ॥ (11)

அத்$_3$ய ஶூலநிபாதைஶ்ச வாநராணாம் மஹாசமூம் ।
ப்ரத$_3$ஹிஷ்யாமி ஸம்ப்ராப்த: ஶுஷ்கேந்த$_4$நமிவாநல: ॥ (12)

மகராக்ஷஸ்ய தச்ச்$_2$ருத்வா வசநம் தே நிஶாசரா: ।
ஸர்வே நாநாயுதே$_4$ாபதா ப$_3$லவந்த: ஸமாக$_3$தா: ॥ (13)

தே காமரூபிண: ஸர்வே த$_3$ம்ஷ்ட்ரிண: பிங்க$_3$லேக்ஷணா: ।
மாதங்க$_3$ா இவ நர்த$_3$ந்தோ த்$_4$வஸ்தகேஶா ப$_4$யாநகா: ॥ (14)

பரிவார்ய மஹாகாயா மஹாகாயம் க$_2$ராத்மஜம் ।
அபி$_4$ஜக்$_3$முஸ்ததோ ஹ்ருஷ்டாஶ்சாலயந்தோ வஸுந்த$_4$ராம் ॥ (15)

ஶங்க$_2$பே$_4$ரீஸஹஸ்ராணாமாஹதாநாம் ஸமந்தத: ।
க்ஷ்வேலிதாஸ்பே$_2$ாடிதாநாம் ச தத: ஶப்$_3$தே$_3$ா மஹாநபூ$_4$த் ॥ (16)

ப்ரப்$_4$ரஷ்டோऽத$_2$ கராத்தஸ்ய ப்ரதோத$_3$: ஸாரதே$_2$ஸ்தத$_3$ா ।
பபாத ஸஹஸா சைவ த்$_4$வஜஸ்தஸ்ய ச ரக்ஷஸ: ॥ (17)

தஸ்ய தே ரத$_2$யுக்தாஶ்ச ஹயா விக்ரமவர்ஜிதா: ।
சரணைராகுலைர்க$_3$த்வா தீ$_3$நா: ஸாஸ்ரமுக$_2$ா யயு: ॥ (18)

ப்ரவாதி பவநஸ்தஸ்மிந் ஸபாம்ஸு: க$_2$ரத$_3$ாருண: ।
நிர்யாணே தஸ்ய ரௌத்$_3$ரஸ்ய மகராக்ஷஸ்ய து$_3$ர்மதே: ॥ (19)

தாநி த்$_3$ருஷ்ட்வா நிமித்தாநி ராக்ஷஸா வீர்யவத்தமா: ।
அசிந்த்ய நிர்க$_3$தா: ஸர்வே யத்ர தௌ ராமலக்ஷ்மணௌ ॥ (20)

க$_4$நக$_3$ஜமஹிஷாங்க$_3$துல்யவர்ணா: ஸமரமுகே$_2$ஷ்வஸக்ருத்$_3$க$_3$த$_3$ாஸிபி$_4$ந்நா: ।
அஹமஹமிதி யுத்$_3$த$_4$கௌஶலாஸ்தே ரஜநிசரா: பரிப$_3$ப்$_4$ரமுர்வத$_3$ந்த: ॥ (21)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

அரக்கனான மகராக்ஷன், தேரை வலம் வந்து பின் அதில் ஏறிக்கொண்டான். தேரோட்டியைப் பார்த்து, ''என்னுடைய தேரை வேகமாகச் செலுத்து'' என்று கட்டளையிட்டான். அப்போது அந்த அரக்கப் படையினரைப் பார்த்து, ''அரக்கர்களே! நீங்கள் எல்லோரும் எனக்கு முன்னதாகவே (போர்க்களம்) சென்று போர் செய்யத் துவங்குங்கள்'' என்று சொன்னான். (8,9)

''பேராற்றல் படைத்த அரக்க மன்னன் இராவணன், இராமன்–லட்சுமணன் ஆகிய இருவரையும் போரிட்டுக் கொல்லும்படி ஆணையிட்டிருக்கிறார். (10)

அரக்கர்களே! இராமனையும் இலக்குவனையும் வானரனான சுக்ரீவனையும் மற்றக் குரங்குகளையும், எனது சக்தி மிகுந்த பாணங்களால் இப்போது கொல்லப் போகிறேன். (11)

காய்ந்து போன கட்டைகளை, வெகு எளிதாக நெருப்பு எரித்து (சாம்பலாக்கி) விடுவதைப் போல, மாபெரும் வானரப்படையை சூலத்தால் தாக்கி எரித்துவிடப் போகிறேன்.'' (12)

பலம் மிக்கவர்களான அரக்கர்கள் எல்லோரும் மகராக்ஷனுடைய சொற்களைக் கேட்டவுடன், பற்பல படைக்கலன்களைக் கையில் எடுத்துக் கொண்டு அணிவகுத்து நின்றார்கள். (13)

அவர்கள் எல்லோரும் விருப்பப்படி உருவம் எடுக்க வல்லவர்கள்; கோரைப் பற்களும் மஞ்சள் நிறக் கண்களும் விரித்த முடியும் உடையவர்கள்; யானைகள் போல் பிளிறிக்கொண்டு பயங்கரமான உருவத்தோடு காணப்பட்டார்கள். (14)

பெரிய உடல் கொண்ட அவர்கள் மனமகிழ்ச்சியுடன், பெருத்த சரீரமுடைய கரனின் புதல்வனைச் சூழ்ந்து கொண்டு, பூமியை அதிரச் செய்தபடி நடந்து சென்றார்கள். (15)

அப்போது, எல்லாப் பக்கங்களிலும் ஆயிரக்கணக்கான சங்குகளும் பேரிகைகளும் முழங்கின. போர் வீரர்களின் ஆட்டபாட்டங்கள், போர்ப்பண்களின் வீரமூட்டும் ஒலி எல்லாம் சேர்ந்து, மிகப்பெரிய சப்தம் உண்டாயிற்று. (16)

அந்த நேரத்தில், தேர்ப்பாகனின் கையிலிருந்த சவுக்கு நழுவி விழுந்தது; அந்த அரக்கனுடைய தேர்க்கொடியும் எதிர்பாராதவிதமாகக் கீழே விழுந்தது. (17)

அவனுடைய தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் சக்தி இழந்து, ஏக்கத்துடன், கண்களில் நீர் வழிய, தடுமாறும் கால்களுடன் அடிவைத்துச் சென்றன. (18)

கெடுமதியாளனும் பயங்கரமான இயல்புடையவனுமான மகராக்ஷன் போர்க்களம் நோக்கிப் பயணப்பட்டுச் சென்றபோது புழுதி படிந்த காற்று சூறாவளியாக வீசிற்று. (19)

எல்லை காண முடியாத வீரம் படைத்த அந்த அரக்கர்கள் எல்லோரும், அந்த துர்நிமித்தங்களைப் பார்த்தும்கூட அதைப் பொருட்படுத்தாமல், இராம–லட்சுமணர்கள் இருந்த இடம் நோக்கிச் சென்றார்கள். (20)

மேகம், யானை, எருமை போல் உடல் நிறங்கொண்டவர்களும், போர் முனைகளில் பல தடவைகள் வாள்களாலும் கதைகளாலும் தாக்கப்பட்டவர்களும், (பற்பல போர்களில் பங்கு கொண்டு அனுபவம் பெற்றவர்களும்) போர்த் திறனுடையவர்களுமான அந்த அரக்கர்கள், 'நான் முன்னால் செல்கிறேன்; நான் முன்னால் செல்கிறேன்' என்று (உற்சாகத்துடன்) கூவிக் கொண்டு, எல்லாப் பக்கங்களையும் அடைத்துக் கொண்டு சென்றார்கள். (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஏகோநாஶீதிதம: ஸர்க$_3$:

மகராக்ஷவத$_4$:

நிர்க$_3$தம் மகராக்ஷம் தே த்$_3$ருஷ்ட்வா வாநரயூத$_2$பா: ।
ஆப்லுத்ய ஸஹஸா ஸர்வே யோத்$_3$து$_4$காமா வ்யவஸ்தி$_2$தா: ॥ (1)

தத: ப்ரவ்ருத்தம் ஸுமஹத்தத்$_3$யுத்$_3$தம் ரோமஹர்ஷணம் ।
நிஶாசரை: ப்லவங்கா$_3$நாம் தே$_3$வாநாம் தா$_3$நவைரிவ ॥ (2)

வ்ருக்ஷஶூலநிபாதைஶ்ச ஶிலாபரிக$_4$பாதநை: ।
அந்யோந்யம் மர்த$_3$யந்தி ஸ்ம ததா$_3$ கபிநிஶாசரா: ॥ (3)

ஶக்திக$_2$ட்$_3$க$_3$கா$_3$குந்தைஸ்தோமரைஶ்ச நிஶாசரா: ।
பட்டிஸைர்பி$_4$ண்டி$_3$பாலைஶ்ச நிர்கா$_4$தைஶ்ச ஸமந்தத: ॥ (4)

பாஶமுத்$_3$க$_3$ரத$_3$ண்டை$_3$ஶ்ச நிகா$_2$தைஶ்சாபரே ததா$_3$ ।
கத$_3$நம் கபிவீராணாம் சக்ருஸ்தே ரஜநீசரா: ॥ (5)

பா$_3$ணௌகை$_4$ரர்தி$_3$தாஶ்சாபி க$_2$ரபுத்ரேண வாநரா: ।
ஸம்ப்$_4$ராந்தமநஸ: ஸர்வே துத்$_3$ருவுர்ப$_4$யபீடி$_3$தா: ॥ (6)

தாந் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸா: ஸர்வே த்$_3$ரவமாணாந் வலீமுகா$_2$ந் ।
நேது$_3$ஸ்தே ஸிம்ஹவத்$_3$த்$_4$ருஷ்டா ராக்ஷஸா ஜிதகாஶிந: ॥ (7)

வித்$_3$ரவத்ஸு ததா$_3$ தேஷு வாநரேஷு ஸமந்தத: ।
ராமஸ்தாந் வாரயாமாஸ ஶரவர்ஷேண ராக்ஷஸாந் ॥ (8)

வாரிதாந் ராக்ஷஸாந் த்ருஷ்ட்வா மகராக்ஷோ நிஶாசர: ।
க்ரோதா$_4$நலஸமாவிஷ்டோ வசநம் சேத$_3$மப்$_3$ரவீத் ॥ (9)

க்வாஸௌ ராம: ஸுது$_3$ர்பு$_3$த்$_3$தி$_4$ர்யேந மே நிஹத: பிதா ।
ஜநஸ்தா$_2$நக$_3$த: பூர்வம் ஸாநுக$_3$: ஸபரிச்ச$_2$த$_3$: ॥ (10)

அத்$_3$ய க$_3$ந்தாஸ்மி வைரஸ்ய பாரம் வை ரஜநீசரா: ।
ஸுஹ்ருதா$_3$ம் சைவ ஸர்வேஷாம் நிஹதாநாம் ரணாஜிரே ॥ (11)

ஹத்வா ராமம் ஸுது$_3$ர்பு$_3$த்$_3$தி$_4$ம் லக்ஷ்மணம் ச ஸவாநரம் ।
தேஷாம் ஶோணிதநிஷ்யந்தை$_3$: கரிஷ்யே ஸலிலக்ரியாம் ॥ (12)

ஏவமுக்த்வா மஹாபா$_3$ஹுர்யுத்$_3$தே$_4$ ஸ ரஜநீசர: ।
வ்யலோகயத தத் ஸர்வம் ப$_3$லம் ராமதி$_3$த்$_3$ருக்ஷயா ॥ (13)

ஆஹூயமாந: கபிபி$_4$ர்பா$_3$ஹுபி$_4$ர்ப$_3$லஶாலிபி$_4$: ।
யுத்$_3$தா$_4$ய ஸ மஹாதேஜா ராமாத$_3$ந்யம் ந சேச்ச$_2$தி ॥ (14)

ஸர்க்கம் : எழுபத்தொன்பது

மாண்டான், மகராக்ஷன்!

மகராக்ஷன் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டு வந்து கொண்டிருப்பதை அறிந்த வானரத் தலைவர்கள் எல்லோரும் சடக்கென்று குதித்தெழுந்து போர் செய்ய ஆயத்தமானார்கள். (1)

பின்னர், (முன்னொரு காலத்தில்) தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே நடந்ததைப் போன்ற உரோமச் சிலிர்ப்பை உண்டாக்கும் பயங்கரமான போர், வானரர்களுக்கும்–அரக்கர்களுக்குமிடையே நிகழ்ந்தது. (2)

அந்தப் போரில், வானரர்களும் அரக்கர்களும், மரங்கள், சூலங்கள், பாறைகள், உலக்கைகள் ஆகியவற்றைக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். (3)

அப்போது சில அரக்கர்கள், வேல், வாள், கதை, ஈட்டி, வல்லயம், பட்டயம் (கத்தியில் ஒரு வகை), பிண்டிபாலம், நிர்காதம் (வஜ்ரம் நிகர் படைக்கலன்) ஆகியவைகளாலும், வேறு சில அரக்கர்கள் பாசம், இரும்பாலான கதை, தடிகள் மற்றும் வெட்டித் தள்ளும் பல்வகை ஆயுதங்களாலும் வானர வீரர்களை எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்கி அழித்தார்கள். (4,5)

கரன் புதல்வனின் சரமாரியால் தாக்கப்பட்ட வானரர்கள் எல்லோரும் மிகவும் அச்சம் கொண்டு, என்ன செய்வதென்று தெரியாமல் மனக்குழப்பத்துடன் சிதறி ஓடிப் போனார்கள். (6)

வெற்றிக் களிப்பில் மிதந்த அரக்கர்கள் எல்லோரும், வானரப் படையினர் சிதறி ஓடுவதைக் கண்டு மனமகிழ்ச்சியுடன் சிங்கத்தைப் போல் கர்ஜித்தார்கள். (7)

(அரக்கர்களின் தாக்குதலைத் தாங்க முடியாமல்) நாற்புறமும் வானரர்கள் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கையில், இராமன், அரக்கர்களை முன்னேற விடாமல் பாணப் பொழிவினால் தடுத்து நிறுத்தினார். (8)

அரக்கர்கள் தடுக்கப்பட்டு நிற்பதைக் கண்ட அரக்கன் மகராக்ஷன், கோபக்கனல் வீச, பின்வருமாறு சொன்னான்— (9)

''முன்னர் ஜனஸ்தானத்தில், உற்றார்–உறவினர்களோடும் பணியாளர்களோடும் என் தந்தையைக் கொன்ற துர்புத்தியுடைய இராமன் எங்குள்ளான்? (10)

அரக்கர்களே! (பயப்படாதீர்கள்.) இப்போது நான், போர்க்களத்தில் கொல்லப்பட்ட நண்பர்கள் மற்றும் அனைவருக்குமாக வஞ்சம் தீர்த்துக் கொள்ளுவதற்காக, பகைமையின் எல்லைக் கோட்டுக்கு வந்திருக்கிறேன். (11)

இராமனையும், தீயமதி படைத்த இலக்குவனையும் வானரர்களையும் கொன்று, அவர்களிடமிருந்து பெருகி வரும் இரத்தத்தினால் (மாண்டு போன தந்தை, உறவினர், பணியாளர்களுக்குத்) தர்ப்பணம் செய்யப் போகிறேன்.'' (12)

இவ்வாறு போர்க்களத்திலிருந்த அரக்கர்களிடம் கூறிவிட்டு, தோள்வலி மிக்க அந்த அரக்கன், இராமனைப் பார்க்கும் விருப்பத்துடன் வானரப் படைமேல் பார்வையைச் செலுத்தினான். ஆற்றல் மிகுந்த வானரர்கள் பலரால் போருக்கு வரும்படி அழைக்கப்பட்ட போதிலும், மாவீரனான மகராக்ஷன், இராமனைத் தவிர வேறு எவருடனும் போர் செய்ய விரும்பவில்லை. (13,14)

மார்க$_3$மாணஸ்தத$_3$ா ராமம் ப$_3$லவாந் ரஜநீசர: ।
ரதே$_2$நாம்பு$_3$த$_3$கே$_4$ாஷேண வ்யசரத்தாமநீகிநீம் ॥ (15)

த்$_3$ருஷ்ட்வா ராமமதூ$_3$ரஸ்த$_2$ம் லக்ஷ்மணம் ச மஹாரத$_2$ம் ।
ஸகே$_4$ாஷம் பாணிநாஹூய ததோ வசநமப்$_3$ரவீத் ॥ (16)

திஷ்ட$_2$ ராம மயா ஸார்த$_4$ம் த்$_3$வந்த்$_3$வயுத்$_3$த$_4$ம் த$_3$த$_3$ாமி தே ।
த்யாஜயிஷ்யாமி தே ப்ராணாந் த$_4$நுர்முக்தை: ஶிதை: ஶரை: ॥ (17)

யத்தத$_3$ா த$_3$ண்ட$_3$காரண்யே பிதரம் ஹதவாந் மம ।
மத$_3$க்$_3$ரத: ஸ்வகர்மஸ்த$_2$ம் த்$_3$ருஷ்ட்வா ரோஷோऽபி$_4$வர்த$_4$தே ॥ (18)

த$_3$ஹ்யந்தே ப்$_4$ருஶமங்க$_3$ாநி து$_3$ராத்மந் மம ராக$_4$வ ।
யந்மயாஸி ந த்$_3$ருஷ்டஸ்த்வம் தஸ்மிந் காலே மஹாஹவே ॥ (19)

தி$_3$ஷ்ட்யாஸி த$_3$ர்ஶநம் ராம மம த்வம் ப்ராப்தவாநிஹ ।
காங்க்ஷிதோऽஸி க்ஷுத$_4$ார்தஸ்ய ஸிம்ஹஸ்யேவேதரோ ம்ருக$_3$: ॥ (20)

அத்$_3$ய மத்$_3$ப$_3$ாணவேகே$_3$ந ப்ரேதராட்$_3$விஷயம் க$_3$த: ।
யே த்வயா நிஹதா வீரா: ஸஹ தைஶ்ச ஸமேஷ்யஸி ॥ (21)

ப$_3$ஹுநாத்ர கிமுக்தேந ஶ்ருணு ராம வசோ மம ।
பஶ்யந்து ஸகலா லோகாஸ்த்வாம் மாம் சைவ ரணாஜிரே ॥ (22)

அஸ்த்ரைர்வா க$_3$த$_3$யா வாபி ப$_3$ாஹுப்$_4$யாம் வா மஹாஹவே ।
அப்$_4$யஸ்தம் யேந வா ராம தேநைவ யுதி$_4$ வர்ததாம் ॥ (23)

மகராக்ஷவச: ஶ்ருத்வா ராமோ த$_3$ஶரத$_2$ாத்மஜ: ।
அப்$_3$ரவீத் ப்ரஹஸந் வாக்யமுத்தரோத்தரவாதி$_3$நம் ॥ (24)

கத்த$_2$ஸே கிம் வ்ருத$_2$ா ரக்ஷோ ப$_3$ஹூந்யஸத்$_3$ருஶாநி து ।
ந ரணே ஶக்யதே ஜேதும் விநா யுத்$_3$தே$_4$ந வாக்$_3$ப$_3$லாத் ॥ (25)

சதுர்த$_3$ஶ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் த்வத்பிதா ச ய: ।
த்ரிஶிரா தூ$_3$ஷணஶ்சைவ த$_3$ண்ட$_3$கே நிஹதா மயா ॥ (26)

ஸ்வாஶிதாஸ்தவ மாம்ஸேந க்$_3$ருத்$_4$ரகோ$_3$மாயுவாயஸா: ।
ப$_4$விஷ்யந்த்யத்$_3$ய வை பாப தீக்ஷ்ணதுண்ட$_3$நக$_2$ாங்குரா: ॥ (27)

ருதி$_4$ரார்த்$_3$ரமுக$_2$ா ஹ்ருஷ்டா ரக்தபக்ஷா: க$_2$க$_3$ாஶ்ச யே ।
கே$_2$ தத$_2$ா வஸுத$_4$ாயாம் ச ப்$_4$ரமிஷ்யந்தி ஸமந்தத: ॥ (28)

ராக$_4$வேணைவமுக்தஸ்து க$_2$ரபுத்ரோ நிஶாசர: ।
ப$_3$ாணௌக$_4$ாநமுசத்தஸ்மை ராக$_4$வாய ரணாஜிரே ॥ (29)

பலவானாகிய அரக்கன், மேகம் போல் பேரொலி எழுப்பும் ரதத்திலிருந்தபடியே, இராமனைத் தேடிக் கொண்டு வானரப் படையினூடே சுற்றி வந்தான். (15)

இராமனும், தேராளியான இலக்குவனும் அருகில் இருப்பதைக் கண்டு, கையை வேகமாகத் தட்டி ஓசையெழுப்பி, அவர்களை அழைத்துப் பின்வருமாறு கூறினான்— (16)

''இராமா! நில், நில். நான் இப்போது உன்னுடன் துவந்துவ யுத்தம் செய்யப் போகிறேன். என் வில்லிலிருந்து புறப்படும் கூர்மையான பாணங்களால், உன் உயிரைப் பறிக்கப் போகிறேன். (17)

முன்பு, தண்டகாரண்யத்தில் என் தந்தையைக் கொன்றாய். அது முதற்கொண்டு (அரக்கர்களைக் கொல்வது என்ற) உன் தொழிலையே செய்து வருகிறாய். அதைக் கண்டு எனக்கு ஆத்திரம் பொங்குகிறது. (18)

துஷ்டனே! இராமனே! (இப்போது, உன்னை நேரில் என் கண்களால் பார்க்கும்போது) என் அங்கங்கள் எல்லாம் பற்றி எரிகின்றன. தண்டகாரண்யத்தில் போர் நடந்த காலத்தில் நீ என் கண்ணில் படவில்லை. (அதனால்தான் தப்பிப் பிழைத்தாய்!) (19)

இராமனே! இப்போது, நீ என் பார்வையில் பட்டுவிட்டாய். ஆகா! என்ன பேறு எனக்கு! மிக்க பசியுடனிருக்கும் ஒரு சிங்கத்திற்கு (உணவாக) ஏதோ ஒரு (சிறிய) விலங்கு கிடைத்தாற்போல, நான் உன்னையே கொல்ல விரும்பி தவித்துக் கொண்டிருக்கிறேன். (20)

இப்போது, என் பாணங்களின் அபார சக்தியினால் (கொல்லப்பட்டு) யமன் உலகை அடையப் போகும் நீ, அங்கே உன்னால் கொல்லப்பட்டவர்களுடன் சேர்ந்து விடுவாய்! (21)

இப்போது வெறுமே பேசிக் கொண்டிருப்பதால் ஆகப் போவது என்ன? இராமா, நான் கூறப் போவதைக் கேள்! போர்க்களத்தில் ஒருவரையொருவர் எதிர்த்துப் போர் செய்பவர்களாக உன்னையும் என்னையும் எல்லா உலகங்களும் பார்க்கட்டும். (22)

இராமா! போர்க்களத்தில், அஸ்திரம்–கதை–கைத்தாக்குதல் ஆகிய எந்தக் கலையில், நீ பயிற்சி பெற்றுள்ளாயோ, அதேவிதமாக என்னிடம் போரிடலாம்!'' (நான் எல்லாப் போர் முறைகளையும் கற்ற நிபுணன்; பாவம் நீ! – என்ற செருக்கு.) (23)

தசரத குமாரரான இராமன், மகராக்ஷனுடைய சொற்களைக் கேட்டு, இளநகை புரிந்து, இடைவிடாது தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த அவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (24)

''அரக்கனே! பொருத்தமில்லாத பல வார்த்தைகளை ஏன் பிதற்றுகிறாய்? போர்க்களத்தில், போர் புரியாமல் சொற்களைக் கொட்டி அளப்பதாலேயே வெற்றி பெற முடியாது. (25)

உன் தந்தையும், திரிசிரஸ்–தூஷணர்களும், பதினாலாயிரம் அரக்கர்களும் தண்டகாரண்யத்தில் என்னால் மாய்க்கப்பட்டார்கள். (26)

மாபாவியே! கூரிய அலகுகளையும் நகங்களையும் உடைய கழுகுகள், நரிகள், காகங்கள் எல்லாவற்றுக்கும் இப்போது உன் உடல் மாமிசத்தால் நல்ல உணவு கிடைக்கப் போகிறது. (27)

சிவந்த இறகுகளையுடைய பறவைகள், (உன்) இரத்தத்தால் நனைந்த முகத்தோடு, வானவெளியிலும் பூமியிலும் எல்லாப் பக்கங்களிலும் வட்டமிடப் போகின்றன. (28)

இவ்வாறு இராமன் கூறிமுடித்தவுடன், கரன் புதல்வனான மகராக்ஷன், போர்க்களத்தில் இராமன் மீது அம்புகளைக் கூட்டங்கூட்டமாகப் பொழிந்தான். (29)

தாஞ்ஶராஞ்ஶரவர்ஷேண ராமஶ்சிச்சே$_2$த$_3$ நைகத$_4$ா ।
நிபேதுர்பு$_4$வி தே சி$_2$ந்நா ருக்மபுங்க$_2$ா: ஸஹஸ்ரஶ: ॥ (30)

தத்$_3$யுத்$_3$த$_4$மப$_4$வத்தத்ர ஸமேத்யாந்யோந்யமோஜஸா ।
ரக்ஷஸ: க$_2$ரபுத்ரஸ்ய ஸௌநோர்த$_3$ஶரத$_2$ஸ்ய ச ॥ (31)

ஜீமூதயோரிவாகாஶே ஶப்$_3$தே$_3$ா ஜ்யாதலயோஸ்தத$_3$ா ।
த$_4$நுர்முக்த: ஸ்வநோத்க்ருஷ்ட: ஶ்ரூயதே ச ரணாஜிரே ॥ (32)

தே$_3$வத$_3$ாநவக$_3$ந்த$_4$ர்வா: கிந்நராஶ்ச மஹோரக$_3$ா: ।
அந்தரிக்ஷக$_3$தா: ஸர்வே த்$_3$ரஷ்டுகாமாஸ்தத$_3$த்$_3$பு$_4$தம் ॥ (33)

வித்$_3$த$_4$மந்யோந்யக$_3$ாத்ரேஷு த்$_3$விகு$_3$ணம் வர்த$_4$தே பரம் ।
க்ருதப்ரதிக்ருதாந்யோந்யம் குருதாம் தௌ ரணாஜிரே ॥ (34)

ராமமுக்தாந்ஸ்து ப$_3$ாணௌக$_4$ாந் ராக்ஷஸஸ்த்வச்சி$_2$நத்$_3$ரணே ।
ரக்ஷோமுக்தாம்ஸ்து ராமோ வை நைகத$_4$ா ப்ராச்சி$_2$நச்ச$_2$ரை: ॥ (35)

ப$_3$ாணௌகை$_4$ர்விததா: ஸர்வா தி$_3$ஶஶ்ச ப்ரதி$_3$ஶஸ்தத$_2$ா ।
ஸஞ்ச$_2$ந்நா வஸுத$_4$ா த்$_3$யௌஶ்ச ஸமந்தாந்ந ப்ரகாஶதே ॥ (36)

தத: க்ருத்$_3$தே$_4$ா மஹாப$_3$ாஹுர்த$_4$நுஶ்சிச்சே$_2$த$_3$ ரக்ஷஸ: ।
அஷ்டாபி$_4$ரத$_2$ நாராசை: ஸூதம் விவ்யாத$_4$ ராக$_4$வ: ॥ (37)

பி$_4$த்த்வா ஶரை ரத$_2$ம் ராமோ ரத$_2$ாஶ்வாந் ஸமபாதயத் ।
விரதே$_2$ா வஸுத$_4$ாம் திஷ்ட$_2$ந் மகராக்ஷோ நிஶாசர: ॥ (38)

தத்திஷ்ட$_2$த்$_3$வஸுத$_4$ாம் ரக்ஷ: ஶூலம் ஜக்$_3$ராஹ பாணிநா ।
த்ராஸநம் ஸர்வபூ$_4$தாநாம் யுக$_3$ாந்தாக்$_3$நிஸமப்ரப$_4$ம் ॥ (39)

விப்$_4$ராம்ய து மஹச்சூ$_2$லம் ப்ரஜ்வலந்தம் நிஶாசர: ।
ஸ க்ரோத$_4$ாத் ப்ராஹிணோத்தஸ்மை ராக$_4$வாய மஹாஹவே ॥ (40)

தமாபதந்தம் ஜ்வலிதம் க$_2$ரபுத்ரகராச்ச்யுதம் ।
ப$_3$ாணைஸ்து த்ரிபி$_4$ராகாஶே ஶூலம் சிச்சே$_2$த$_3$ ராக$_4$வ: ॥ (41)

ஸ ச்சி$_2$ந்நோ நைகத$_4$ா ஶூலோ தி$_3$வ்யஹாடகமண்டி$_3$த: ।
வ்யஶீர்யத மஹோல்கேவ ராமப$_3$ாணார்தி$_3$தா பு$_4$வி ॥ (42)

தச்சூ$_2$லம் நிஹதம் த்$_3$ருஷ்ட்வா ராமேணாக்லிஷ்டகர்மணா ।
ஸாது$_4$ ஸாத்$_4$விதி பூ$_4$தாநி வ்யாஹரந்தி நபே$_4$ாக$_3$தா: ॥ (43)

தம் த்$_3$ருஷ்ட்வா நிஹதம் ஶூலம் மகராக்ஷோ நிஶாசர: ।
முஷ்டிமுத்$_3$யம்ய காகுத்ஸ்த$_2$ம் திஷ்ட$_2$ திஷ்டே$_2$தி சாப்$_3$ரவீத் ॥ (44)

இராமன், அவனால் விடப்பட்ட அம்புகளைத் தன்னுடைய பாணங்களால் சின்னாபின்னமாக்கினார். பொன்னாலான முனைகளைக் கொண்ட அவனுடைய பாணங்கள் ஆயிரக்கணக்காய் நொறுங்கிப் பூமியில் விழுந்தன. (30)

கரனின் புத்திரனான மகராக்ஷனுக்கும், தசரத மைந்தனான இராமனுக்கும் இடையே, பேராற்றலுடன் ஒருவரையொருவர் எதிர்த்துத் தாக்கும் பெரும் சண்டை நிகழ்ந்தது. (31)

போர்க்களத்தில், நாணொலி, வில்லொலி, கை தட்டல் ஆகிய எல்லாம் சேர்ந்து ஆகாயத்தில் இரண்டு மேகங்கள் மோதிக் கொள்ளும் போது எழும் மகாசப்தத்தைப் போன்று, பேரொலி உண்டாயிற்று. (32)

தேவர்கள், அசுரர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள், மகாநாகர்கள் ஆகிய எல்லோரும் காண்பதற்கரிய அந்தப் போர் நிகழ்வதைக் காண்பதற்காக வானத்தில் வந்து கூடினார்கள். (33)

இருவருடைய சரீரங்களிலும் பாணத் தாக்குதலால் ரணங்கள் ஏற்பட்டன. (அதனால், உடல்பலம் குறைந்துதானே போக வேண்டும்? அதற்குமாறாக,) அவர்களுடைய உடல் பலம் மேன்மேலும் அதிகமாயிற்று. ஒருவர் எய்த அஸ்திரத்திற்கு எதிராக மற்றவர் மாற்று அஸ்திரம் செலுத்தி யுத்தம் புரிந்தார். (34)

இராமனால் செலுத்தப்பட்ட அம்புக் கூட்டங்களை, அரக்கன் முறித்துத் தள்ளினான். அவ்வாறே, அரக்கனால் விடப்பட்ட பாணங்களை, இராமன் தன் அம்புத் தாக்குதலால் தூள்தூளாக்கினார். (35)

எல்லா திசைகளும் மூலைகளும் பாணக் கூட்டங்களால் மூடி மறைக்கப்பட்டன. வானமும் பூமியும் எல்லாப் புறங்களிலும் மறைக்கப்பட்டு ஒளியை இழந்தன. (36)

அப்போது சீற்றம் கொண்ட மாவீரரான இராமன், அரக்கனுடைய வில்லை முறித்துத் தள்ளினார். மேலும், எட்டு நாராசங்களால் தேர்ப்பாகனையும் காயப்படுத்தினார். (37)

இராமன், பாணங்களால் ரதத்தைச் சிதைத்து, தேர்க் குதிரைகளையும் கீழே வீழ்த்தினார். அரக்கன் மகராக்ஷன் தேர் இல்லாமல் தரையில் நின்றான். (38)

அரக்கன், (சிறிது நேரம்) பூமியில் திகைத்து நின்றான். பின்னர், எல்லாப் பிராணிகளுக்கும் பேரச்சத்தைக் கொடுப்பதும், ஊழித்தீயைப் போல் ஒளிவிடுவதுமான ஒரு சூலத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். (39)

தீப்பொறி பறக்கும் அந்த மாபெரும் சூலத்தைக் கோபத்துடன் வேகமாகச் சுழற்றி, இராமனை நோக்கி வீசினான், அரக்கன். (40)

கரனுடைய மைந்தனால் செலுத்தப்பட்டதும், ஒளியுடன் கூடியதும், தன்னை நோக்கி வந்து கொண்டிருந்ததுமான அந்தச் சூலத்தை, இராமன் மூன்று பாணங்களால் வான்வெளியிலேயே துண்டாக்கி விட்டார். (41)

உயர்ந்த பொன்னால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தச் சூலம், இராம பாணத்தால் தாக்கப்பட்டு, தூள்தூளாகச் சிதைந்து, பெருங்கொள்ளியைப்போல் தரையில் சிதறி விழுந்தது. எவ்விதமான கஷ்ட வேலைகளையும் இலகுவில் செய்யும் திறன் கொண்ட இராமனால், (மகராக்ஷனால் விடப்பட்ட) அந்தச் சூலம் தூளாக்கப்பட்டதைக் கண்டு ஆகாயத்திலிருந்த அனைத்துப் பிராணிகளும் (தேவர்கள் முதலானோர்), ‘ஆகா! அற்புதம்!’ என்று பாராட்டினார்கள். (42,43)

தன்னால் ஏவப்பட்ட சூலம் முறிக்கப்பட்டதைக் கண்ட அரக்கனான மகராக்ஷன், தன் முஷ்டியை உயரத் தூக்கிக் கொண்டு, இராமனை நோக்கி, ‘நில்... நில்’ என்று கத்தினான். (44)

ஸ தம் த்$_3$ருஷ்ட்வாபதந்தம் வை ப்ரஹஸ்ய ரகு$_4$நந்த$_3$ந: ।
பாவகாஸ்த்ரம் ததோ ராம: ஸந்த$_3$தே$_4$ து ஶராஸநே ॥ (45)

தேநாஸ்த்ரேண ஹதம் ரக்ஷ: காகுத்ஸ்தே$_2$ந தத$_3$ா ரணே ।
ஸஞ்சி$_2$ந்நஹ்ருத$_3$யம் தத்ர பபாத ச மமார ச ॥ (46)

த்$_3$ருஷ்ட்வா தே ராக்ஷஸா: ஸர்வே மகராக்ஷஸ்ய பாதநம் ।
லங்காமேவாப்$_4$யத$_4$ாவந்த ராமப$_3$ாணார்தி$_3$தாஸ்தத$_3$ா ॥ (47)

த$_3$ஶரத$_2$ந்ருபபுத்ரப$_3$ாணவேகை$_3$
ரஜநிசரம் நிஹதம் க$_2$ராத்மஜம் தம் ।
த$_3$த்$_3$ருஶுரத$_2$ ஸுரா ப்$_4$ருஶம் ப்ரஹ்ருஷ்டா
கி$_3$ரிமிவ வஜ்ரஹதம் யத$_2$ா விகீர்ணம் ॥ (48)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகோநாஶீதிதம: ஸர்க$_3$: ॥

அஶீதிதம: ஸர்க$_3$:

திரோஹிதராவணியுத்$_3$த$_4$ம்

மகராக்ஷம் ஹதம் ஶ்ருத்வா ராவண: ஸமிதிஞ்ஜய: ।
க்ரோதே$_4$ந மஹதாவிஷ்டோ த$_3$ந்தாந் கடகடாபயந் ॥ (1)

குபிதஶ்ச தத$_3$ா தத்ர கிம் கார்யமிதி சிந்தயந் ।
ஆதி$_3$தே$_3$ஶாத$_2$ ஸங்க்ருத்$_3$தே$_4$ா ரணாயேந்த்$_3$ரஜிதம் ஸுதம் ॥ (2)

ஜஹி வீர மஹாவீர்யௌ ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
அத்$_3$ருஶ்யோ த்$_3$ருஶ்யமாநோ வா ஸர்வத$_2$ா த்வம் ப$_3$லாதி$_4$க: ॥ (3)

த்வமப்ரதிமகர்மாணமிந்த்$_3$ரம் ஜயஸி ஸம்யுகே$_3$ ।
கிம் புநர்மாநுஷௌ த்$_3$ருஷ்ட்வா ந வதி$_4$ஷ்யஸி ஸம்யுகே$_3$ ॥ (4)

ததோ$_2$க்தோ ராக்ஷஸேந்த்$_3$ரேண ப்ரதிக்$_3$ருஹ்ய பிதுர்வச: ।
யஜ்ஞபூ$_4$மௌ ஸ விதி$_4$வத் பாவகம் ஜுஹுவேந்த்$_3$ரஜித் ॥ (5)

ஜுஹ்வதஶ்சாபி தத்ராக்$_3$நிம் ரக்தோஷ்ணீஷத$_4$ரா: ஸ்த்ரிய: ।
ஆஜக்$_3$முஸ்தத்ர ஸம்ப்$_4$ராந்தா ராக்ஷஸ்யோ யத்ர ராவணி: ॥ (6)

ஶஸ்த்ராணி ஶரபத்ராணி ஸமிதோ$_4$ऽத$_2$ விபீ$_4$தகா: ।
லோஹிதாநி ச வாஸாம்ஸி ஸ்ருவம் கார்ஷ்ணாயஸம் தத$_2$ா ॥ (7)

ஸர்வதோऽக்$_3$நிம் ஸமாஸ்தீர்ய ஶரபத்ரை: ஸதோமரை: ।
ச்ச$_2$ாக$_3$ஸ்ய க்ருஷ்ணவர்ணஸ்ய க$_3$லம் ஜக்$_3$ராஹ ஜீவத: ॥ (8)

ரகு குலத்திற்கு ஆனந்தத்தைக் கொடுப்பவரான இராமன், அவன் தன்னைத் தாக்க வருவதைப் பார்த்து சற்றே புன்னகை புரிந்து, தன்னுடைய வில்லில் ஆக்னேயாஸ்திரத்தைப் பூட்டினார். (45)

(இருவரிடையேயான) அந்தப் போரில், காகுத்தரால் ஏவப்பட்ட அந்த அஸ்திரத்தினால் தாக்கப்பட்டவுடனே அரக்கனின் இருதயம் பிளவுபட்டு கீழே விழுந்தான்; உயிரையும் துறந்தான். (46)

அப்போது, மகராக்ஷன் (உயிர் நீங்கி) தரையில் வீழ்ந்து விட்டதைக் கண்ட அரக்கர்கள் எல்லோரும், இராமபாணத்திற்கு அஞ்சியவர்களாக இலங்கையை நோக்கி ஓடிச் சென்றார்கள். (47)

வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட ஒரு மலை தூள்தூளாகச் சிதறிக் கிடப்பதைப் போல, மாமன்னர் தசரத மைந்தனின் பாண வேகத்தினால், கரனுடைய புதல்வனான அந்த அரக்கன் மாய்க்கப்பட்டுக் கிடப்பதை, தேவர்கள் எல்லோரும் மிகுந்த மனமகிழ்ச்சியுடன் கண்டு களித்தார்கள். (48)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எழுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பது

இந்திரஜித், மறைந்திருந்து போர் புரிதல்!

போர் முனையில் எப்போதும் வெற்றி பெறும் இராவணன், மகராக்ஷன் கொல்லப்பட்டான் என்பதைக் கேட்டதும் எல்லையற்ற கோபத்தால் நறநறவென்று பற்களைக் கடித்தான். (1)

சீற்றங்கொண்ட அவன், 'அடுத்ததாக என்ன செய்யலாம்?' என்று சிந்தனை செய்து, புதல்வனான இந்திரஜித்திற்கு உத்தரவிட்டான். (2)

''வீரனே! எந்த வகையில் பார்த்தாலும் நீ பலம் மிகுந்தவன். மகாவீரர்களான இராம–லட்சுமண சகோதரர்களை நேருக்குநேர் நின்று அல்லது மறைந்திருந்து போரிட்டு, அவர்களை வீழ்த்துவாயாக. (3)

நிகரற்ற பராக்கிரமமுடைய இந்திரனையே நீ வென்றிருக்கிறாய் என்னும்போது, சிறப்பான ஆற்றல் ஏதுமில்லாத மானுடர்கள் இருவரையும் கண்ணால் பார்த்தபின் விட்டு விடுவாயா, என்ன?'' (4)

இவ்வாறு, தந்தை இராவணன் கூறியதை ஏற்றுக் கொண்ட இந்திரஜித், வேள்விக் களத்தில், தன் நோக்கம் நிறைவேறுவதற்கு உரிய முறையில் நெருப்பில் அவி சொரிந்தான். (5)

அக்னி வளர்த்து, வேள்வி தொடங்கும் நேரத்தில், இந்திரஜித் இருந்த இடத்திற்கு, அரக்கப் பெண்டிர் சிவப்புத் தலைப்பாகைகளை விரைவாக எடுத்து வந்தார்கள். (வேள்வி செய்யும் வித்தகர்கள், செவ்வண்ண தலைப்பாகை அணிய வேண்டும் என்பது மறை விதி.) (6)

ஹோமகுண்டத்தின் நாற்புறமும் கைவேல் போன்ற படைக்கலன்களே தருப்பைகள்; விபீதக (தான்றி வகை) மரத்தின் குச்சிகளே, சமித்துக்கள்; ரித்விக்குகளுக்கு, செவ்வாடை; ஸ்ருவம் என்னும் ஹோமக் கரண்டி கருமையான இரும்பினால் ஆனது. வேள்விக் குண்டத்தின் நான்கு புறங்களிலும் தோமரங்கள் (வீசி எறியும் கைவேல்கள்) தருப்பை வகையைச் சேர்ந்த நாணல்களாகப் பரப்பி வைக்கப்பட்டன. கருநிறங்கொண்ட உயிரோடு கூடிய ஓர் ஆட்டின் கழுத்தைப் பற்றினான். (கழுத்தை வெட்டி ஆகுதி செய்தார்கள்.) (7,8)

ஶரஹோமஸமித்$_3$த$_4$ஸ்ய விதூ$_4$மஸ்ய மஹார்சிஷ: ।
ப$_3$பூ$_4$வுஸ்தாநி லிங்கா$_3$நி விஜயம் த$_3$ர்ஶயந்தி ச ॥ (9)

ப்ரத$_3$க்ஷிணாவர்தஶிக$_2$ஸ்தப்தஹாடகஸந்நிப$_4$: ।
ஹவிஸ்தத் ப்ரதிஜக்$_3$ராஹ பாவக: ஸ்வயமுத்தி$_2$த: ॥ (10)

ஹுத்வாக்$_3$நிம் தர்பயித்வா ச தே$_3$வதா$_3$நவராக்ஷஸாந் ।
ஆருரோஹ ரத$_2$ஶ்ரேஷ்ட$_2$மந்தர்தா$_4$நக$_3$தம் ஶுப$_4$ம் ॥ (11)

ஸ வாஜிபி$_4$ஶ்சதுர்பி$_4$ஶ்ச பா$_3$ணைஶ்ச நிஶிதைர்யுத: ।
ஆரோபிதமஹாசாப: ஶுஶுபே$_4$ ஸ்யந்த$_3$நோத்தம: ॥ (12)

ஜாஜ்வல்யமாநோ வபுஷா தபநீயபரிச்ச$_2$த$_3$: ।
ம்ருகை$_3$ஶ்சந்த்$_3$ரார்த$_4$சந்த்$_3$ரைஶ்ச ஸ ரத$_2$: ஸமலங்க்ருத: ॥ (13)

ஜாம்பூ$_3$நத$_3$மஹாகம்பு$_3$ர்தீ$_3$ப்தபாவகஸந்நிப$_4$: ।
ப$_3$பூ$_4$வேந்த்$_3$ரஜித: கேதுர்வைடூ$_3$ர்யஸமலங்க்ருத: ॥ (14)

தேந சாதி$_3$த்யகல்பேந ப்$_3$ரஹ்மாஸ்த்ரேண ச பாலித: ।
ஸ ப$_3$பூ$_4$வ து$_3$ராத$_4$ர்ஷோ ராவணி: ஸுமஹாப$_3$ல: ॥ (15)

ஸோऽபி$_4$நிர்யாய நக$_3$ராதி$_3$ந்த்$_3$ரஜித் ஸமிதிஞ்ஜய: ।
ஹுத்வாக்$_3$நிம் ராக்ஷஸைர்மந்த்ரைரந்தர்தா$_4$நக$_3$தோऽப்$_3$ரவீத் ॥ (16)

அத்$_3$ய ஹத்வா ரணே யௌ தௌ மித்$_2$யாப்ரவ்ராஜிதௌ வநே ।
ஜயம் பித்ரே ப்ரதா$_3$ஸ்யாமி ராவணாய ரணார்ஜிதம் ॥ (17)

அத்$_3$ய நிர்வாநராமுர்வீம் ஹத்த்வா ராமம் ஸலக்ஷ்மணம் ।
கரிஷ்யே பரமப்ரீதிமித்யுக்த்வாऽந்தரதீ$_4$யத ॥ (18)

ஆபபாதாத$_2$ ஸங்க்ருத்$_3$தோ$_4$ த$_3$ஶக்$_3$ரீவேண சோதி$_3$த: ।
தீக்ஷ்ணகார்முகநாராசைஸ்தீக்ஷ்ணைஸ்த்விந்த்$_3$ரரிபூ ரணே ॥ (19)

ஸ த$_3$த$_3$ர்ஶ மஹாவீர்யௌ நாகௌ$_3$ த்ரிஶிரஸாவிவ ।
ஸ்ருஜந்தாவிஷுஜாலாநி வீரௌ வாநரமத்$_4$யகௌ$_3$ ॥ (20)

இமௌ தாவிதி ஸஞ்சிந்த்ய ஸஜ்யம் க்ருத்வா ச கார்முகம் ।
ஸந்ததாநேஷுதா$_4$ராபி$_4$: பர்ஜந்ய இவ வ்ருஷ்டிமாந் ॥ (21)

ஸ து வைஹாயஸம் ப்ராப்ய ஸரதோ$_2$ ராமலக்ஷ்மணௌ ।
அசக்ஷுர்விஷயே திஷ்ட$_2$ந் விவ்யாத$_4$ நிஶிதை: ஶரை: ॥ (22)

தௌ தஸ்ய ஶரவேகே$_3$ந பரீதௌ ராமலக்ஷ்மணௌ ।
த$_4$நுஷீ ஸஶரே க்ருத்வா தி$_3$வ்யமஸ்த்ரம் ப்ரசக்ரது: ॥ (23)

சர சமித்துக்களால் ஹோமம் செய்யப்பட்டவுடன் புகையில்லாமல் அக்னி சுவாலையுடன் எழுந்து, நற்குறிகளைக் காட்டியது. (அக்னி வலதுபுறமாகச் சுழன்று மேல்நோக்கிச் செல்வது போன்ற குறிகள்) வெற்றி கிடைக்கப் போவதையும் முன்கூட்டியே அறிவித்தன. (9)

உருக்கி வார்த்த பொன்னைப் போன்ற அக்னி பகவான், குண்டத்திலிருந்து எழுந்து வந்து, வலமாகச் சுழன்று வரும் சுவாலையின் மேல்நுனியால், அந்த அவிப்பொருளைத் தானே நேரில் பெற்றுக் கொண்டார். அக்னியில் அவி அளித்து, (தீய இயல்புடைய) தேவதைகள், தானவர்கள், அரக்கர்கள் ஆகியோரைத் திருப்தியுறச் செய்துவிட்டு, பிறர் கண்களுக்குப் புலனாகாத தனித்தன்மை பெற்ற அழகான உத்தம ரதத்தில் (இந்திரஜித்) ஏறி அமர்ந்தான். (10,11)

பெருமைமிக்க அந்த ரதத்தில், நான்கு குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன. கூர்மையான பாணங்களும் வலிமைமிக்கப் பெரிய வில்லும் வைக்கப்பட்டிருந்தன. அதனால், தேர் பேரழகுடன் விளங்கியது. அந்தத் தேரின் எல்லாப் பகுதிகளும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன. மான், சந்திரன், பிறைநிலா போன்ற பொம்மைகள் அதில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன. (12,13)

இந்திரஜித்தினுடைய தேர்துவஜம், பொற்பட்டயங்களாலும் வைடூரியக் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல ஒளி வீசியது. (14)

நிகரற்ற பலங்கொண்ட இந்திரஜித், (யாராலும் காண முடியாத) அந்தத் தேரினாலும், சூரியனைப் போன்றதான பிரும்மாஸ்திரத்தாலும் பாதுகாக்கப்பட்டதால், எவராலும் எதிர்கொள்ள முடியாதவனாக இருந்தான். (15)

போரில் வெற்றிக்கொடி நாட்டுபவனான இந்திரஜித், அக்னியில் எதிரிகளைத் தாக்கும் கொடிய அரக்க மந்திரங்களைக் கூறி ஹோமம் செய்துவிட்டு, பட்டணத்திற்கு வெளியே வந்து, எவர் கண்ணிலும் புலப்படாதவனாகி, (தனக்குள்) பேசிக் கொண்டான். (16)

'தவசிகளைப்போல் பொய்யான வேடம் புனைந்து, காட்டில் திரியும் அவ்விருவரையும் போரில் கொன்று, போர் செய்து பெறப்பட்ட (என் போர்த்திறனால் பெறப்பட்ட) வெற்றியை, என் தந்தை இராவணனுக்குக் காணிக்கையாக அளிக்கப் போகிறேன். (17)

இன்று, பூமியில் வானரப்பூண்டே இல்லாமல் செய்து, இராம–லட்சுமணர்களைக் கொன்று, என் தந்தைக்குப் பேரானந்தத்தை அளிக்கப் போகிறேன்!' இவ்வாறு பேசிக் கொண்டே கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து ஒளிந்தான். (18)

இராவணனால் உத்தரவிடப்பட்ட இந்திரஜித் பயங்கரமான வில், நாராச பாணங்களைக் கைக்கொண்டு, அச்சமூட்டும் தோற்றத்துடன் போர்க்களத்திற்கு வந்தான். (19)

அவன், வானரர்களுக்கிடையில் இருப்பவர்களும், மாவீரர்களும், மூன்று தலையுடைய நாகம் போன்றவர்களும், அம்புகளைப் பொழிகின்றவர்களுமான இரு வீரர்களை (இராம–லட்சுமணர்களை)ப் பார்த்தான். (பருத்து உயர்ந்த இரு தோள்கள், உன்னதமான தலை – இவ்வாறு இராம–லட்சுமணர்கள், மகாபுருஷ லட்சணங்களோடு விளங்கினார்கள் என்பது குறிப்பு.) (20)

'இவர்களே அவர்கள்' (இராம–லட்சுமணர்கள்) என்பதைப் புரிந்து கொண்டு வில்லில் நாணேற்றி, பெருமழை பொழியும் மேகம்போல் பாணங்களைச் செலுத்தினான். (21)

அப்போது, அவன் (இந்திரஜித்) கண்ணுக்குப் புலப்படாத தேரில், ஆகாயத்தில் இருந்தபடியே இராம–லட்சுமணர்களைக் கூரிய பாணங்களால் வருத்தினான். (22)

அவனால் செலுத்தப்பட்ட அம்புப் பொழிவினால் சூழப்பட்ட இராம–இலட்சுமணர்கள், (தத்தம்) விற்களில் பாணத்தைத் தொடுத்து, தெய்விக சக்தியைக் கொடுக்கும் மந்திரங்களை ஜபித்து, அதிமானுட படைக்கலன்களாக (அஸ்திரங்களாக) அவைகளை வலுப்படுத்தினார்கள். (23)

ப்ரச்ச$_2$ாத$_3$யந்தௌ க$_3$க$_3$நம் ஶரஜாலைர்மஹாப$_3$லௌ ।
தமஸ்த்ரை: ஸூர்யஸங்காஶைர்நைவ பஸ்ப்ருஶது: ஶரை: ॥ (24)

ஸ ஹி தூ$_4$மாந்த$_4$காரம் ச சக்ரே ப்ரச்ச$_2$ாத$_3$யந்நப$_4$: ।
தி$_3$ஶஶ்சாந்தர்த$_3$தே$_4$ ஸ்ரீமாந்நீஹாரதமஸாவ்ருதா: ॥ (25)

நைவ ஜ்யாதலநிர்கே$_4$ாஷோ ந ச நேமிகு$_2$ரஸ்வந: ।
ஶுஶ்ருவே சரதஸ்தஸ்ய ந ச ரூபம் ப்ரகாஶதே ॥ (26)

க$_4$நாந்த$_4$காரே திமிரே ஶிலாவர்ஷமிவாத்$_3$பு$_4$தம் ।
ஸ வவர்ஷ மஹாப$_3$ாஹுர்நாராசஶரவ்ருஷ்டிபி$_4$: ॥ (27)

ஸ ராமம் ஸூர்யஸங்காஶை: ஶரைர்த$_3$த்தவரோ ப்$_4$ருஶம் ।
விவ்யாத$_4$ ஸமரே க்ருத்$_3$த$_4$: ஸர்வகா$_3$த்ரேஷு ராவணி: ॥ (28)

தௌ ஹந்யமாநௌ நாராசைர்த$_4$ாராபி$_4$ரிவ பர்வதௌ ।
ஹேமபுங்க$_2$ாந்நரவ்யாக்$_4$ரௌ திக்$_3$மாந் முமுசது: ஶராந் ॥ (29)

அந்தரிக்ஷே ஸமாஸாத்$_3$ய ராவணிம் கங்கபத்ரிண: ।
நிக்ருத்ய பதக$_3$ா பூ$_4$மௌ பேதுஸ்தே ஶோணிதோக்ஷிதா: ॥ (30)

அதிமாத்ரம் ஶரௌகே$_4$ண பீட்$_3$யமாநௌ நரோத்தமௌ ।
தாநிஷூந் பததோ ப$_4$ல்லைரநேகைர்நிசக்ருந்தது: ॥ (31)

யதோ ஹி த$_3$த்$_3$ருஶாதே தௌ ஶராந்நிபதத: ஶிதாந் ।
ததஸ்து தௌ த$_3$ாஶரதீ$_2$ ஸஸ்ருஜாதேऽஸ்த்ரமுத்தமம் ॥ (32)

ராவணிஸ்து தி$_3$ஶ: ஸர்வா ரதே$_2$நாதிரத$_2$: பதந் ।
விவ்யாத$_4$ தௌ த$_3$ாஶரதீ$_2$ லக்$_4$வஸ்த்ரோ நிஶிதை: ஶரை: ॥ (33)

தேநாதிவித்$_3$தௌ$_4$ தௌ வீரௌ ருக்மபுங்கை$_2$: ஸுஸம்ஹிதை: ।
ப$_3$பூ$_4$வதுர்த$_3$ாஶரதீ$_2$ புஷ்பிதாவிவ கிம்ஶுகௌ ॥ (34)

நாஸ்ய வேத$_3$ க$_3$திம் கஶ்சிந்ந ச ரூபம் த$_4$நு: ஶராந் ।
ந சாந்யத்$_3$விதி$_3$தம் கிஞ்சித் ஸூர்யஸ்யேவாப்$_4$ரஸம்ப்லவே ॥ (35)

தேந வித்$_3$த$_4$ாஶ்ச ஹரயோ நிஹதாஶ்ச க$_3$தாஸவ: ।
ப$_3$பூ$_4$வு: ஶதஶஸ்தத்ர பதிதா த$_4$ரணீதலே ॥ (36)

லக்ஷ்மணஸ்து ஸுஸங்க்ருத்$_3$தே$_4$ா ப்$_4$ராதரம் வாக்யமப்$_3$ரவீத் ।
ப்$_3$ராஹ்மமஸ்த்ரம் ப்ரயோக்ஷ்யாமி வத$_4$ார்த$_2$ம் ஸர்வரக்ஷஸாம் ॥ (37)

தமுவாச ததோ ராமோ லக்ஷ்மணம் ஶுப$_4$லக்ஷணம் ।
நைகஸ்ய ஹேதோ ரக்ஷாம்ஸி ப்ருதி$_2$வ்யாம் ஹந்துமர்ஹஸி ॥ (38)

பெரும் பலசாலிகளான அவர்கள், பாணப் பொழிவினால் ஆகாயத்தை மறைத்தார்கள்; சூரியனைப் போல் பேரொளி வீசும் அஸ்திரங்களையும் கணைகளையும் செலுத்தினார்கள். (ஆனால், தான் இருக்குமிடம் தெரியாத தன்மை படைத்த தேரில் அவன் இருந்ததால்,) அவைகளால் அவனைத் தொடக்கூட முடியவில்லை. (24)

புகழ்மிக்க அவன், கரும்புகையால் ஆகாயத்தை இருளடர்ந்ததாகச் செய்து மூடினான். மேலும், பனிமூட்டத்தால் திசைகளையும் மறைத்தான். (வானம், பூமி – இரண்டிலும் இருளைப் பரப்பி, எதுவுமே கண்ணுக்குப் புலப்படாமல் போகச் செய்தான்.) (25)

ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவனுடைய உருவம் கண்ணில் படவில்லை; தேர்ச் சக்கரங்கள், குதிரைகளின் குளம்படி ஆகியவற்றின் ஓசைகள் கேட்கப்படவில்லை; நாண் ஒலியும் கேட்கப்படவில்லை. மாவீரனான இந்திரஜித், கண்களுக்கு எந்தப் பொருளும் புலப்படாத கனத்த இருளில், மேலேயிருந்து பாறைகளைப் பொழிவதைப்போல, நாராசம் என்ற பாணங்களை அற்புதமாகப் பொழிந்து தாக்கினான். (26,27)

இராவணன் புதல்வனாகிய பல வரங்கள் பெற்ற அவன், போர்க்களத்தில் கோபம் பொங்கியெழ, சூரியனுக்கு ஒப்பான பாணங்களால் இராமனின் உடல் முழுவதையும் மிகவும் தாக்கினான். இரண்டு மாமலைகள் மீது பெருமழை பொழிவதைப்போல, புருஷோத்தமர்களான அவர்கள் இருவர் மேலும் நாராசங்கள் விழுந்து தாக்கின. அந்நிலையில், அவ்விருவரும் தங்கப்பூண்கள் இழைக்கப்பட்ட கொடிய பாணங்களைச் செலுத்தினார்கள். (28,29)

கழுகுச் சிறகுகள் கட்டப்பட்ட பாணங்கள் பட்சிகளைப் போல் மிக வேகமாக வானத்தை அடைந்து, இந்திரஜித்தைக் காயப்படுத்திவிட்டு, இரத்தம் தோய்ந்தவைகளாகத் தரையில் விழுந்தன. அவ்விரு புருஷோத்தமர்களும், அம்புகளின் இடைவிடாத தாக்குதலால் மிகவும் புண்பட்டுப் போனார்கள். மேலே விழுந்த பாணங்களை, பல்லம் என்ற வகையைச் சேர்ந்த அம்புகளால் துண்டித்தெறிந்தார்கள். (30,31)

இராம–லட்சுமணர்கள், கூரான பாணங்கள் (ஆகாயத்தில்) எந்த இடத்திலிருந்து விழுகின்றன என்பதைக் கண்டுபிடித்து, அந்த இடத்தை இலக்காகக் கொண்டு சக்தி மிகுந்த அஸ்திரங்களை விடுத்தார்கள். அதிரதன் என்ற பெருமைக்கு உரியவனும், அஸ்திரக்கலை நிபுணனுமான இந்திரஜித், தன் ரதத்திலிருந்து கொண்டு, எல்லாத் திசைகளுக்கும் சென்று கூரிய பாணங்களால் இராம–லட்சுமணர்களை வருத்தினான். (32,33)

பொற்சிறகுகள் இணைக்கப் பெற்றவைகளும் உறுதியானவைகளுமான அவனுடைய பாணங்களால் மிகவும் புண்படுத்தப்பட்ட தசரதகுமாரர்கள் இருவரும், உடல் முழுவதும் செந்நிற இரத்தம் பெருகியதால், செம்மலர் பூத்த புரசமரங்கள் போல் காணப்பட்டார்கள். (34)

அவன் (இந்திரஜித்) எங்கே சஞ்சரிக்கிறான்? என்பதை யாரும் அறியவும் முடியவில்லை. அவனுடைய உருவம், வில், பாணங்கள் ஆகியவற்றைப் பார்க்கவும் முடியவில்லை. மேகத்திரளால் மறைக்கப்பட்ட சூரியனைப் போல், அவனைப் பற்றிய எதுவுமே கண்ணுக்குப் புலனாகவில்லை. (35)

அங்கு, நூற்றுக்கணக்கான வானரர்கள் அவனால் புண்படுத்தப்பட்டும், அம்புத்தாக்குதலால் உயிரை இழந்தும் தரையில் சாய்ந்து விட்டார்கள். மிகவும் கோபங்கொண்ட இலக்குவன் சகோதரரைப் பார்த்து, ''எல்லா அரக்கர்களின் உயிரைப் பறிக்கும் பொருட்டு, பிரும்மாஸ்திரத்தைச் செலுத்தப் போகிறேன்'' என்று கூறினான். (36,37)

அப்போது, இராமன் நல்லியல்புகளுடைய இலக்குவனைப் பார்த்து, ''ஒரே ஒருவனுக்காக (ஒருவன் செய்த குற்றத்திற்காக), மண்ணுலகில் உள்ள அரக்கர்கள் அனைவரையும் கொல்வது முறையல்ல. (38)

அயுத்$_4$யமாநம் ப்ரச்ச$_2$ந்நம் ப்ராஞ்ஜலிம் ஶரணாக$_3$தம் ।
பலாயந்தம் ப்ரமத்தம் வா ந த்வம் ஹந்துமிஹார்ஹஸி ॥ (39)

அஸ்யைவ து வதே$_4$ யத்நம் கரிஷ்யாவோ மஹாப$_3$ல ।
ஆதே$_3$க்ஷ்யாவோ மஹாவேகா$_3$நஸ்த்ராநாஶீவிஷோபமாந் ॥ (40)

தமேநம் மாயிநம் க்ஷுத்$_3$ரமந்தர்ஹிதரத$_2$ம் ப$_3$லாத் ।
ராக்ஷஸம் நிஹநிஷ்யந்தி த்$_3$ருஷ்ட்வா வாநரயூத$_2$பா: ॥ (41)

யத்$_3$யேஷ பூ$_4$மிம் விஶதே தி$_3$வம் வா
ரஸாதலம் வாபி நப$_4$:ஸ்த$_2$லம் வா ।
ஏவம் நிகூ$_3$டோ$_4$ऽபி மமாஸ்த்ரத$_3$க்$_3$த$_4$:
பதிஷ்யதே பூ$_4$மிதலே க$_3$தாஸு: ॥ (42)

இத்யேவமுக்த்வா வசநம் மஹாத்மா
ரகு$_4$ப்ரவீர: ப்லவக$_3$ர்ஷபை$_4$ர்வ்ருத: ।
வதா$_4$ய ரௌத்$_3$ரஸ்ய ந்ருஶம்ஸகர்மண–
ஸ்ததா$_3$ மஹாத்மா த்வரிதம் நிரீக்ஷதே ॥ (43)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஶீதிதம: ஸர்க$_3$: ॥

ஏகாஶீதிதம: ஸர்க$_3$:

மாயாஸீதாவத$_4$:

விஜ்ஞாய து மநஸ்தஸ்ய ராக$_4$வஸ்ய மஹாத்மந: ।
ஸந்நிவ்ருத்யாஹவாத்தஸ்மாத் ஸம்விவேஶ புரம் தத: ॥ (1)

ஸோऽநுஸ்ம்ருத்ய வத$_4$ம் தேஷாம் ராக்ஷஸாநாம் தரஸ்விநாம் ।
க்ரோத$_4$தாம்ரேக்ஷண: ஶூரோ நிர்ஜகா$_3$ம மஹாத்$_3$யுதி: ॥ (2)

ஸ பஶ்சிமேந த்$_3$வாரேண நிர்யயௌ ராக்ஷஸைர்வ்ருத: ।
இந்த்$_3$ரஜித்து மஹாவீர்ய: பௌலஸ்த்யோ தே$_3$வகண்டக: ॥ (3)

இந்த்$_3$ரஜித்து ததோ த்$_3$ருஷ்ட்வா ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
ரணாயாப்$_4$யுத்$_3$யதௌ வீரௌ மாயாம் ப்ராது$_3$ஷ்கரோத்ததா$_3$ ॥ (4)

இந்த்$_3$ரஜித்து ரதே$_2$ ஸ்தா$_2$ப்ய ஸீதாம் மாயாமயீம் தத: ।
ப$_3$லேந மஹதாவ்ருத்ய தஸ்யா வத$_4$மரோசயத் ॥ (5)

போர்முனையில், (பார்வையாளனைப்போல் கைகட்டி நின்று கொண்டு) போரிடாதவனையும், (தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக) மறைவிடத்தில் ஒளிந்து கொண்டிருப்பவனையும், ('என்னை எதுவும் செய்யாதே' என்று கெஞ்சுவதுபோல்) கைகூப்பி நிற்பவனையும், அடைக்கலம் புகுந்துவிட்டவனையும், அச்சங்கொண்டு ஓடுகின்றவனையும், மதிகலங்கியவனையும் நீ கொல்லக் கூடாது. (39)

பேராற்றல் கொண்டவனே! இப்போது (மற்ற அரக்கர்களைப் பற்றிச் சிந்திக்காமல்), இவனை (இந்திரஜித்தை)க் கொல்வதிலேயே கவனம் செலுத்துவோம். சக்தி மிக்கவைகளும், விஷப்பாம்புகளைப் போன்றவைகளுமான அஸ்திரங்களைப் பிரயோகிப்போம். (40)

மாயாவியான இந்த அரக்கன் மட்டரகமானவன்; பிறர் கண்களுக்குப் புலப்படாமல் மறைத்துக் கொள்ளும் தனித்தன்மையால், மறைக்கப்பட்ட தேரில் இருந்து கொண்டிருக்கிறான். (இவனை) இந்த அரக்கனை, வானரத் தலைவர்கள் கண்ணால் பார்த்துவிட்டால் போதும், உயிரை வாங்காமல் விடமாட்டார்கள்! இவன் பூமி, வானுலகம், பாதாளம், ஆகாயம் ஆகிய எந்த இடத்திற்குள் புகுந்து மறைந்து கொண்டாலும் சரி, என்னுடைய அஸ்திரத்தினால் எரிக்கப்பட்டு மண்தரையில் விழுந்து விடுவான்.'' (41,42)

வானரத் தலைவர்களால் சூழப்பட்ட ரகுகுல திலகமான இராமபிரான், இவ்வாறு மிகச்சிறந்த உயரிய நோக்கங்களோடு கூடிய சொற்களைக் கூறிவிட்டு, கொடுஞ்செயல் புரிபவனும், பயங்கரமானவனுமான அந்த அரக்கனை (இந்திரஜித்தை)க் கொல்வதற்கான உத்தியைப் பற்றி, அப்போதே சிந்திக்கத் தொடங்கினார். (43)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தொன்று

மாயா சீதையைக் கொன்றது!

அப்போது, (இந்திரஜித்) பெருந்தகையாளர் இராமனின் சிந்தனையோட்டத்தைப் புரிந்து கொண்டு, போர்க்களத்திலிருந்து திரும்பி இலங்கைப் பட்டணத்தைச் சென்றடைந்தான். (1)

(பட்டணத்தை அடைந்ததும்) வீரத்திருவொளி மிக்கவனும் சூரனுமான அவன், மகாபலம் பொருந்திய கும்பகர்ணன் முதலான அரக்கப் படைவீரர்களின் அழிவை நினைத்து நினைத்து, கோபத்தால் கண்கள் சிவக்க, மறுபடியும் (போர்க்களத்தை நோக்கி) வெளியே புறப்பட்டு வந்தான். புலஸ்திய வம்சத்தில் தோன்றியவனும், பேராற்றல் படைத்தவனும், தேவர்களை (நிம்மதியாக இருக்க விடாமல்) முள்ளாகக் குத்திக் கொண்டிருப்பவனும், பகைவனுமாகிய இந்திரஜித், ஏராளமான அரக்கப் படையினர் புடைசூழ, நகரத்தின் மேற்கு வாயில் வழியாக வெளியே புறப்பட்டுச் சென்றான். (2,3)

அப்போது, மாவீரர்களான இராம–லட்சுமணர்கள் போருக்கு ஆயத்தமாக நிற்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்து, (அவர்களை அஸ்திர–சஸ்திரங்களால் வெல்ல முடியாது என்பதை உணர்ந்துவிட்டபடியால்,) தன் மாயாபலத்தை வெளிப்படுத்தினான். (அவன், அவர்கள் கண்களில் படாமலே சென்றான்.) (4)

மாயையால் உண்டாக்கப்பட்ட ஒரு சீதையைத் தோற்றுவித்து, அவளைத் தேரில் நிறுத்தி வைத்து, அளவு கடந்த படைவீரர்களை (அவளைச் சுற்றி அரண் போல) சூழ வைத்து, அவளைக் கொன்றுவிடுவது என்று திட்டம் தீட்டினான், இந்திரஜித். (5)

மோஹநார்த$_2$ம் து ஸர்வேஷாம் பு$_3$த்$_3$தி$_4$ம் க்ருத்வா ஸுது$_3$ர்மதி: ।
ஹந்தும் ஸீதாம் வ்யவஸிதோ வாநராபி$_4$முகோ$_2$ யயௌ ॥ (6)

தம் த்$_3$ருஷ்ட்வா த்வபி$_4$நிர்யாந்தம் நக$_3$ர்யா: காநநௌகஸ: ।
உத்பேதுரபி$_4$ஸங்க்ருத்$_3$தா$_4$: ஶிலாஹஸ்தா யுயுத்ஸவ: ॥ (7)

ஹநுமாந் புரதஸ்தேஷாம் ஜகா$_3$ம கபிகுஞ்ஜர: ।
ப்ரக்$_3$ருஹ்ய ஸுமஹச்ச்$_2$ருங்க$_3$ம் பர்வதஸ்ய து$_3$ராஸத$_3$ம் ॥ (8)

ஸ த$_3$த$_3$ர்ஶ ஹதாநந்தா$_3$ம் ஸீதாமிந்த்$_3$ரஜிதோ ரதே$_2$ ।
ஏகவேணீத$_4$ராம் தீ$_3$நாமுபவாஸக்ருஶாநநாம் ॥ (9)

பரிக்லிஷ்டைகவஸநாமம்ருஜாம் ராக$_4$வப்ரியாம் ।
ரஜோமலாப்$_4$யாமாலிப்தை: ஸர்வகா$_3$த்ரைர்வரஸ்த்ரியம் ॥ (10)

தாம் நிரீக்ஷ்ய முஹூர்தம் து மைதி$_2$லீத்யத்$_4$யவஸ்ய து ।
ப$_3$பூ$_4$வாஶ்ரத்$_3$ருஷ்டா ஹி தேந ஸா ஜநகாத்மஜா ॥ (11)

தாம் தீ$_3$நாம் மலதி$_3$க்$_3$தா$_4$ங்கீ$_3$ம் ரத$_2$ஸ்தா$_2$ம் த்$_3$ருஶ்ய மைதி$_2$லீம் ।
பா$_3$ஷ்பபர்யாகுலமுகோ$_2$ ஹநுமாந் வ்யதி$_2$தோऽப$_4$வத் ॥ (12)

அப்$_3$ரவீத்தாம் து ஶோகார்தாம் நிராநந்தா$_3$ம் தபஸ்விநீம் ।
ஸீதாம் ரத$_2$ஸ்தி$_2$தாம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸேந்த்$_3$ரஸுதாஶ்ரிதாம் ॥ (13)

கிம் ஸமர்தி$_2$தமஸ்யேதி சிந்தயந் ஸ மஹாகபி: ।
ஸஹ தைர்வாநரஶ்ரேஷ்டை$_2$ரப்$_4$யதா$_4$வத ராவணிம் ॥ (14)

தத்$_3$வாநரப$_3$லம் த்$_3$ருஷ்ட்வா ராவணி: க்ரோத$_4$மூர்சி$_2$த: ।
க்ருத்வா விகோஶம் நிஸ்த்ரிம்ஶம் மூர்த்$_4$நி ஸீதாம் பராம்ருஶத் ॥ (15)

தாம் ஸ்த்ரியம் பஶ்யதாம் தேஷாம் தாட$_3$யாமாஸ ராவணி: ।
க்ரோஶந்தீம் ராம ராமேதி மாயயா யோஜிதாம் ரதே$_2$ ॥ (16)

க்$_3$ருஹீதமூர்த$_4$ஜாம் த்$_3$ருஷ்ட்வா ஹநுமாந் தை$_3$ந்யமாக$_3$த: ।
ஶோகஜம் வாரி நேத்ராப்$_4$யாமஸ்ருஜந்மாருதாத்மஜ: ॥ (17)

தாம் த்$_3$ருஷ்ட்வா சாருஸர்வாங்கீ$_3$ம் ராமஸ்ய மஹிஷீம் ப்ரியாம் ।
அப்$_3$ரவீத்பருஷம் வாக்யம் க்ரோதா$_4$த்$_3$ரக்ஷோऽதி$_4$பாத்மஜம் ॥ (18)

து$_3$ராத்மந்நாத்மநாஶாய கேஶபக்ஷே பராம்ருஶ: ।
ப்$_3$ரஹ்மர்ஷீணாம் குலே ஜாதோ ராக்ஷஸீம் யோநிமாஶ்ரித: ॥ (19)

தீய எண்ணமுடைய அவன், எல்லோரையும் (எல்லா வானரர்களையும்) மதிமயங்கச் செய்யும் கருத்துடன் (மாயா) சீதையை, (அவர்கள் கண்ணெதிரே) கொல்ல விரும்பியவனாய், வானரர்கள் எதிராகச் சென்றான். அவன் (இந்திரஜித்), பட்டணத்திலிருந்து திரும்பி வருவதைக் கண்ட வானரர்கள், போரில் ஆவலுடன் மிகவும் சீற்றம் கொண்டவர்களாக, பாறைகளைக் கைகளில் எடுத்துக் கொண்டு, அவனை எதிர்த்துத் தாக்கினார்கள். (6,7)

வானரோத்தமனான அனுமான், வேறு எவராலும் தூக்க முடியாத ஒரு மலைமுகட்டைக் கையில் ஏந்திக் கொண்டு, அவர்கள் எல்லோருக்கும் முன்னதாகச் சென்றார். (அனுமானைத் தவிர, வேறு வானரர் எவரும் சீதையை நேரில் பார்த்ததில்லை. விபீஷணனும் பார்த்ததில்லை என்றாலும், அவனும் அரக்கனாதலால், இந்திரஜித்தின் மாயை அவனை அணுகாது. நிகும்பிலையில் வேள்வி செய்து, எதிரிகளால் வெல்ல முடியாத அரிய படைக்கலன்களைப் பெறும் வரையில், இராம–லட்சுமணர்களுடன் போர் செய்வதைத் தவிர்க்க விரும்பினான், இந்திரஜித். அனுமானின் கண்ணில் படவேண்டும் என்பதற்காக, அவர் பாதுகாப்பிலிருந்த மேற்கு வாயில் வழியாக வெளியே வந்தான்.) (8)

இராமபிரானின் அன்புக்குரிய மனைவி; மகிழ்ச்சி பறிக்கப்பட்டவள்; ஒற்றைப் பின்னல்; பரிதாபத்திற்குரிய நிலை; உணவு உண்ணாததால் இளைத்துப் போன உடல்; அழுக்கடைந்த ஒரே ஆடை; ஆச்சாரத் தூய்மையும் அணிகலன்களும் இல்லாதவள்; தூசியும் அழுக்கும் படிந்த உடல் அங்கங்கள்; உத்தம மங்கை – இப்படிப்பட்ட சீதையை, இந்திரஜித்தின் தேரில் பார்த்தார், அனுமான். (9,10)

அவர், அவளை சிறிதுநேரம் கூர்ந்து பார்த்தார். சிறிது காலத்திற்கு முன்புதான் அவளைப் பார்த்திருந்ததால், அவள் ஜனககுமாரி சீதைதான் என்று அடையாளம் கண்டு கொண்டார். (11)

தேரில் ஏங்கிய முகத்துடன், அழுக்கடைந்த மேனியுடன் இருக்கும் சீதையைப் பார்த்து, கண்ணீர் நிறைந்த முகங்கொண்டவராய் துயரம் தாங்காதவர் ஆனார். (12)

அரக்க மன்னனுடைய புதல்வனின் வசத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பவளும், தேரில் இருப்பவளும், துயரத்துடன் இருப்பவளும், ஆனந்தம் இழந்தவளும், கற்புக்கரசியுமான அவளைப் பார்த்ததும், அனுமான் தனக்குள்ளே (பின்வருமாறு) பேசிக் கொண்டார். (13)

(தேரில் வைத்து சீதையைப் போர்க்களத்திற்குக் கொண்டு வந்ததன் மூலம்,) ‘இவன் என்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறான்?’ என்று எண்ணியபடியே, அங்கிருந்த வானர வீரர்கள் புடைசூழ, இந்திரஜித்தை எதிர்த்துத் தாக்கினார். (14)

எதிர்த்துத் தாக்கும் வானரப் படையைக் கண்டதும், கோபத்தில் மூழ்கிய இந்திரஜித், உரையிலிருந்து கத்தியை உருவி, அவளுடைய (மாயா சீதையின்) தலைக்கூந்தலைப் பற்றினான். மாயையால் தேரில் வைக்கப்பட்டிருந்தவளும், ‘இராமா, இராமா...’ என்று புலம்பிக் கொண்டிருப்பவளும், பெண் உருவில் இருந்தவளுமான அவளை, அவர்கள் (வானரர்கள்) பார்த்துக் கொண்டிருக்கும்போதே நையப் புடைத்தான், இராவண மைந்தன். (15,16)

வாயுவின் புதல்வரான அனுமான், சீதையின் கூந்தலைப் பற்றி இழுப்பதைப் பார்த்ததும், மிகவும் மனம் நொந்து, துயரம் தாங்காமல் இரு கண்களிலிருந்தும் நீரைப் பெருக்கினார். (17)

இராமபிரானுடைய பேரன்புக்குரியவளும், பட்டத்தரசியும், எழிலார்ந்த திருமேனியளுமான அவளை, (அந்த நிலையில் பார்த்த அனுமான்) சீற்றத்தை அடக்க மாட்டாமல், அரக்கர் தலைவனின் குமாரனைப் பார்த்துக் கடுமையான சொற்களைக் கூறினார்— (18)

“மகாபாவியே! பிரும்மரிஷிகளின் பரம்பரையைச் சேர்ந்தவன் நீ; அரக்கர் குலத்தில் பிறந்து அந்த இயல்பைப் பெற்றுள்ளாய். (சீதையின்) கூந்தலில் கை வைத்துப் பற்றியிழுக்கிறாயே? – இச்செயல் உன் அழிவின் பொருட்டாகவே. (19)

தி$_4$க் த்வாம் பாபஸமாசாரம் யஸ்ய தே மதிரீத்$_3$ருஶீ ।
நருஶம்ஸாநார்ய து$_3$ர்வ்ருத்த க்ஷுத்$_3$ர பாபபராக்ரம ॥ (20)

அநார்யஸ்யேத்$_3$ருஶம் கர்ம க்$_4$ருணா தே நாஸ்தி நிர்க்$_4$ருண ।
ச்யுதா க்$_3$ருஹாச்ச ராஜ்யாச்ச ராமஹஸ்தாச்ச மைதி$_2$லீ ॥ (21)

கிம் தவைஷாபராத்$_3$த$_4$ா ஹி யதே$_3$நாம் ஹந்துமிச்ச$_2$ஸி ।
ஸீதாம் ச ஹத்வா ந சிரம் ஜீவிஷ்யஸி கத$_2$ஞ்சந ॥ (22)

வத$_4$ார்ஹகர்மணாநேந மம ஹஸ்தக$_3$தோ ஹ்யஸி ।
யே ச ஸ்த்ரீக$_4$ாதிநாம் லோகா லோகவத்$_4$யைஶ்ச குத்ஸிதா: ॥
இஹ ஜீவிதமுத்ஸ்ருஜ்ய ப்ரேத்ய தாந் ப்ரதிபத்ஸ்யஸே ॥ (23)

இதி ப்$_3$ருவாணோ ஹநுமாந் ஸாயுதை$_4$ர்ஹரிபி$_4$ர்வ்ருத: ।
அப்$_4$யத$_4$ாவத ஸங்க்ருத்$_3$தே$_4$ா ராக்ஷஸேந்த்$_3$ரஸுதம் ப்ரதி ॥ (24)

ஆபதந்தம் மஹாவீர்யம் தத$_3$நீகம் வநௌகஸாம் ।
ரக்ஷஸாம் பீ$_4$மவேக$_3$ாநாமநீகம் து ந்யவாரயத் ॥ (25)

ஸ தாம் ப$_3$ாணஸஹஸ்ரேண விக்ஷோப்$_4$ய ஹரிவாஹிநீம் ।
ஹரிஶ்ரேஷ்ட$_2$ம் ஹநுமந்தமிந்த்$_3$ரஜித் ப்ரத்யுவாச ஹ ॥ (26)

ஸுக்$_3$ரீவஸ்த்வம் ச ராமஶ்ச யந்நிமித்தமிஹாக$_3$தா: ।
தாம் ஹநிஷ்யாமி வைதே$_3$ஹீமத்$_3$யைவ தவ பஶ்யத: ॥ (27)

இமாம் ஹத்வா ததோ ராமம் லக்ஷ்மணம் த்வாம் ச வாநர ।
ஸுக்$_3$ரீவம் ச வதி$_4$ஷ்யாமி தம் சாநார்யம் விபீ$_4$ஷணம் ॥ (28)

ந ஹந்தவ்யா: ஸ்த்ரியஶ்சேதி யத்$_3$ப்$_3$ரவீஷி ப்லவங்க$_3$ம ।
பீட$_3$ாகரமமித்ராணாம் யத் ஸ்யாத் கர்தவ்யமேவ தத் ॥ (29)

தமேவமுக்த்வா ருத$_3$தீம் ஸீதாம் மாயாமயீம் தத$_3$ா ।
ஶிதத$_4$ாரேண க$_2$ட்$_3$கே$_3$ந நிஜக$_4$ாநேந்த்$_3$ரஜித் ஸ்வயம் ॥ (30)

யக்ஞோபவீதமாதூ$_4$ய பி$_4$ந்நா தேந தபஸ்விநீ ।
ஸா ப்ருதி$_2$வ்யாம் ப்ருது$_2$ஶ்ரோணீ பபாத ப்ரியத$_3$ர்ஶநா ॥ (31)

தாமிந்த்$_3$ரஜித் ஸ்வயம் ஹத்வா ஹநுமந்தமுவாச ஹ ।
மயா ராமஸ்ய பஶ்யேமாம் கோபேந ச நிஷூதி$_3$தாம் ॥
ஏஷா விஶஸ்தா வைதே$_3$ஹீ விப$_2$லோ வ: பரிஶ்ரம: ॥ (32)

தத: க$_2$ட்$_3$கே$_3$ந மஹதா ஹத்வா தாமிந்த்$_3$ரஜித் ஸ்வயம் ।
ஹ்ருஷ்ட: ஸ ரத$_2$மாஸ்த$_2$ாய விநநாத$_3$ மஹாஸ்வநம் ॥ (33)

பாவச் செயல்களையே உன் நித்திய கடமையாகக் கொண்டிருப்பதால், உனக்கு இத்தகைய நீச புத்தி தோன்றியிருக்கிறது. நீ கொடுங்கோலன்; இழி குணங்கள் கொண்டவன்; கெட்ட இயல்புடையவன்; அற்பன்; பாவத்தையே பராக்கிரமமாக உடையவன். நீ ஒருபோதும் உருப்படப் போவதில்லை. (20)

இரக்கமற்றவனே! மேலோர்களால் செய்யத்தகாத இப்படிப்பட்ட செயலைச் செய்துவிட்டும், நீ பச்சாதாபப்படவில்லையே? வீட்டிலிருந்தும், நாட்டிலிருந்தும், இராமபிரானின் கைகளிலிருந்தும் சீதை நழுவிச் சென்றார். நீ இவரைக் கொல்லும் அளவுக்கு, அவர் உனக்கு என்ன பிழை செய்தார்? சீதையை மட்டும் கொன்றுவிட்டாயானால், பின்னர் நீ எவ்வளவு தந்திரங்கள் செய்தாலும், வெகுகாலம் உயிருடன் இருக்க மாட்டாய். கொலைத் தண்டனைக்குரிய பாவச்செயலைச் செய்யத் துணிந்துவிட்ட நீ, இப்போது என் கைகளில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய். (21,22)

குற்றம் செய்து, அதன் விளைவாக மரண தண்டனை அடையப் பெற்றவர்கள் வெறுக்கத்தக்க கொடூரமான கீழ் உலகங்களை அடைவார்கள்; பெண்கொலை புரிந்தவர்கள் அவற்றினும் கொடிய உலகங்களை அடைவார்கள். இப்போது, நீ உயிரைத் துறந்து, அந்த நரகங்களையே அடையப் போகிறாய்!'' (23)

இவ்வாறு கூறிவிட்டு, படைக்கலன்கள் தாங்கிய வானரர்கள் புடைசூழ, மிகவும் சீற்றங்கொண்டு, இராவண மைந்தனை எதிர்த்துத் தாக்கினார், அனுமான். (24)

பேராற்றல் படைத்த அந்த வானரப் படை தாக்க வருவதைக் கண்ட பயங்கரமான அரக்கர் படை, அவர்களைத் தடுத்து நிறுத்தியது. (25)

ஆயிரக்கணக்கான பாணங்களால் வானரப் படையைக் கலக்கிவிட்டு, வானரோத்தமரான அனுமானைப் பார்த்து, இந்திரஜித் பதில் கூறினான்— (26)

''சுக்ரீவனும் நீயும் இராமனும் எவள் காரணமாக (கடல் கடந்து) இவ்விடம் வந்திருக்கிறீர்களோ, அந்த வைதேகியை உன் கண்முன்னாலேயே கொல்லப் போகிறேன்! (27)

இவளைக் கொன்ற பின்னர், (வரிசையாக) இராமனையும் இலட்சுமணனையும், வானரனே! உன்னையும் சுக்ரீவனையும் இழிந்த இயல்பு படைத்த விபீஷணனையும் கொல்லப் போகிறேன். (28)

வானரனே! பெண்களைக் கொல்லக் கூடாது – என்று சொல்கிறாயே? அது சரிதான். ஆனால், (போர்க்கள நெறிகளின்படி) பகைவர்களுக்கு எது பெருந்துன்பத்தைத் தருமோ, அந்தக் காரியம் செய்யத் தக்கதே.'' (29)

அவரிடம் (அனுமானிடம்) மேற்கண்டவாறு கூறிவிட்டு, அழுது கொண்டிருக்கும் மாயா சீதையை, கூர்மையான முனை கொண்ட வாளினால் இந்திரஜித், தானே வெட்டினான். (30)

மனங்கவர் தோற்றமுடையவளும், இடுப்பின் பின்புற கீழ்ப்பகுதி பெருத்திருப்பவளும், கற்புக்கடம் பூண்டவளுமான அவளை, மார்பில் முப்புரி அணியும் விதத்தில் (கத்தியினால்) இரண்டு துண்டுகளாக்கினான், அவன். வெட்டப்பட்ட அவள் தரையில் சாய்ந்தாள். (31)

இந்திரஜித், தானே அவளைக் கொன்றுவிட்டு அனுமானைப் பார்த்து, ''என் கோபத்தின் விளைவாக இராமபத்தினி கொல்லப்பட்டதைப் பார்! வைதேகி வெட்டப்பட்டாள்! ஆகா! நீங்கள் பட்ட சிரமங்கள் எல்லாம் வீணாகப் போய்விட்டன!'' (32)

இவ்வாறு, நீண்ட பட்டாக்கத்தியினால் இந்திரஜித், தானே (மாயா) சீதையைக் கொன்றுவிட்டு, மனக்களிப்புடன் தேரில் அமர்ந்து கொண்டு, பெருங்குரல் எழுப்பி ஆனந்தத்தைப் பிரகடனப்படுத்தினான். (33)

வாநரா: ஶுஶ்ருவு: ஶப்த3மதூ3ரே ப்ரத்யவஸ்தி2தா: ।
வ்யாதி3தாஸ்யஸ்ய நத3தஸ்தத்3துு3ர்க3ம் ஸம்ஶ்ரிதஸ்ய ச ॥ (34)

தத2ா து ஸீதாம் விநிஹத்ய து3ர்மதி:
ப்ரஹ்ருஷ்டசேதா: ஸ ப3பூ4வ ராவணி: ।
தம் ஹ்ருஷ்டரூபம் ஸமுதீ3க்ஷ்ய வாநரா
விஷண்ணரூபா: ஸஹஸா ப்ரது3த்3ருவு: ॥ (35)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகாஶீதிதம: ஸர்க3: ॥

த்3வ்யஶீதிதம: ஸர்க3:

ஹநூமத3தி3நிர்வேத3:

ஶ்ருத்வா து பீ4மநிர்ஹ்ராத3ம் ஶக்ராஶநிஸமஸ்வநம் ।
வீக்ஷமாணா தி3ஶ: ஸர்வா து3த்3ருவுர்வாநரர்ஷப4ா: ॥ (1)

தாநுவாச தத: ஸர்வாந் ஹநுமாந் மாருதாத்மஜ: ।
விஷண்ணவத3நாந் தீ3நாந்ஸ்த்ரஸ்தாந் வித்3ரவத: ப்ருத2க் ॥ (2)

கஸ்மாத்3விஷண்ணவத3நா வித்3ரவத்4வம் ப்லவங்க3மா: ।
த்யக்தயுத்3த4ஸமுத்ஸாஹா: ஶௌர்யம் க்வ நு வோ க3தம் ॥ (3)

ப்ருஷ்ட2தோऽநுவ்ரஜத்4வம் மாமக்3ரதோ யாந்தமாஹவே ।
ஶூரைரபி4ஜநோபேதைரயுக்தம் ஹி நிவர்திதும் ॥ (4)

ஏவமுக்தா: ஸுஸம்ஹ்ருஷ்டா வாயுபுத்ரேண வாநரா: ।
ஶைலஶ்ருங்க3ாண்யக3ாம்ஶ்சைவ ஜக்3ருஹுர்ஹ்ருஷ்டமாநஸா: ॥ (5)

அபி4பேதுஶ்ச க3ர்ஜந்தோ ராக்ஷஸாந் வாநரர்ஷப4ா: ।
பரிவார்ய ஹநூமந்தமந்வயுஶ்ச மஹாஹவே ॥ (6)

ஸ தைர்வாநரமுக்2யைஶ்ச ஹநுமாந் ஸர்வதோ வ்ருத: ।
ஹுதாஶந இவார்சிஷ்மாநத3ஹச்ச2த்ருவாஹிநீம் ॥ (7)

ஸ ராக்ஷஸாநாம் கத3நம் சகார ஸுமஹாகபி: ।
வ்ருதோ வாநரஸைந்யேந காலாந்தகயமோபம: ॥ (8)

ஸ து கோபேந சாவிஷ்ட: ஶோகேந ச மஹாகபி: ।
ஹநுமாந் ராவணிரதே2ऽபாதயந்மஹதீம் ஶிலாம் ॥ (9)

தாமாபதந்தீம் த்3ருஷ்ட்வைவ ரத2: ஸாரதி2நா தத3ா ।
விதே4யாஶ்வஸமாயுக்த: ஸுதூ3ரமபவாஹித: ॥ (10)

அப்போது அருகிலிருந்த வானரர்கள், எவராலும் நெருங்க முடியாத தேரில் அமர்ந்து கொண்டு, அவன் வாயை அகலமாகத் திறந்து கொண்டு அட்டகாசமாகச் சிரிப்பதைக் கேட்டார்கள். (34)

தீய எண்ணங்கொண்ட இந்திரஜித், (மாயா) சீதையைக் கொன்றுவிட்டு, உள்ளம் களிப்புற்றவனானான். அவன் மகிழ்ச்சியோடிருப்பதைக் கண்ட வானரர்கள், மிகவும் துயரமடைந்து, உடனே நாற்றிசையிலும் ஓடத் தொடங்கினார்கள். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்திரண்டு

நிகும்பிலையில் வேள்வி

வானரவீரர்கள், இந்திரனின் வஜ்ராயுதத்திற்கு ஒப்பான கோலாகல சிம்மநாதத்தைக் கேட்டதும், எல்லாப் பக்கங்களிலும் பார்வையைச் செலுத்தியவர்களாக (பாதுகாப்பான இடத்தை நோக்கி) ஓடத் தொடங்கினார்கள். (1)

வாயு புதல்வரான அனுமான், வருத்தம் தோய்ந்த முகத்துடன் இரங்கத்தக்க நிலையில், அச்சங்கொண்டு, தனித்தனியே தலைதெறிக்க ஓடுகின்ற அவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (2)

"வானரங்களே! போர் செய்வதில் உற்சாகத்தை விட்டொழித்து, முகம் வாடியவர்களாக ஏன் ஓடிப் போகிறீர்கள்? உங்களுடைய வீரத்தன்மை எங்கே போயிற்று? (3)

போர்க்களத்தில் நான் முன்னே செல்கிறேன்; நீங்கள் எல்லோரும் என் பின்னே தொடர்ந்து வாருங்கள். நற்குலத்தில் தோன்றிய வீரர்களுக்குப் போரில் புறங்காட்டி ஓடிச் செல்வது தகாத செயல்." (4)

அனுமான் இவ்வாறு கூறியதும், மிகவும் களிப்படைந்த வானரர்கள் உற்சாகம் பெற்றவர்களாக மலைச்சிகரங்களையும் மரங்களையும் கையில் பற்றி எடுத்துக் கொண்டார்கள். (5)

போர்க்களத்தில், அனுமானைச் சூழ்ந்து கொண்டு வானரவீரர்கள் பின்தொடர்ந்து சென்றார்கள். பேரொலி எழுப்பிக் கொண்டு அரக்கர்கள் மேல் பாய்ந்தார்கள். (6)

எல்லாப் பக்கங்களிலும் வானர வீரர்களால் சூழப்பட்ட அனுமான், நெருப்புச் சுவாலைகளுடன் (புகையில்லாமல்) எரியும் அக்னியைப் போல், எதிரிகளின் படையை எரித்துத் தள்ளினார். (7)

நிகரில்லாத மகிமை வாய்ந்த அவர், வானரப் படையினர் புடைசூழ நின்று கொண்டு, ஊழிக்கால யமனைப்போல் அரக்கர்களுக்குப் பேரழிவை உண்டாக்கினார். (8)

வானரப் பெருந்தகையான அனுமான், (சீதை கொல்லப்பட்டுவிட்டாரே? என்ற) கோபத்தாலும் சோகத்தாலும் பொங்கி எழுந்தவராக, இந்திரஜித்தின் தேரைக் குறிவைத்து பெரும் பாறை ஒன்றை வீசினார். (9)

மாபெரும் பாறை தேரின் மேல் விழுவதற்காக வந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் தன் ஆணைக்கிணங்க செயல்படும் குதிரைகள் பூட்டப் பெற்ற தேரின் பாகன், தேரை வெகுதூரத்திற்குச் செலுத்திக் கொண்டு போய் விட்டான். (10)

தமிந்த்3ரஜிதமப்ராப்ய ரத2ஸ்த2ம் ஸஹஸாரதி2ம் ।
விவேஶ த4ரணீம் பி4த்த்வா ஸா ஶிலா வ்யர்த2முத்3யதா ॥ (11)

பாதிதாயாம் ஶிலாயாம் து ரக்ஷஸாம் வ்யதி2தா சமூ: ।
நிபதந்த்யா ச ஶிலயா ராக்ஷஸா மதி2தா ப்4ருஶம் ॥ (12)

தமப்4யத4ாவஞ்ச2தஶோ நத3ந்த: கானநௌகஸ: ।
தே த்3ருமாம்ஶ்ச மஹாவீர்யா கி3ரிஶ்ருங்க3ாணி சோத்3யதா: ॥ (13)

க்ஷிபந்தீந்த்3ரஜிதம் ஸங்க்2யே வானரா பீ4மவிக்ரமா: ।
வ்ருக்ஷஶைலமஹாவர்ஷம் விஸ்ருஜந்த: ப்லவங்க3மா: ॥ (14)

ஶத்ரூணாம் கத3நம் சக்ருர்நேது3ஶ்ச விவிதை4: ஸ்வரை: ।
வானரைஸ்தைர்மஹாவீர்யைர்கோ4ரரூபா நிஶாசரா: ॥ (15)

வீர்யாத3பி4ஹதா வ்ருக்ஷைர்வ்யவேஷ்டந்த ரணாஜிரே ।
ஸ்வஸைந்யமபி4வீக்ஷ்யாத2 வானரார்தி3தமிந்த்3ரஜித் ॥ (16)

ப்ரக்3ருஹீதாயுத4: க்ருத்3த4: பரானபி4முகோ2 யயௌ ।
ஸ ஶரௌக4ானவஸ்ருஜந் ஸ்வஸைந்யேனாபி4ஸம்வ்ருத: ॥ (17)

ஜக4ான கபிஶார்தூ3லாந் ஸுப3ஹூந் த்3ருஷ்டவிக்ரம: ।
ஶூலைரஶநிபி4: க2ட்3கை3: பட்டஸை: கூடமுத்3க3ரை: ॥
தே சாப்யநுசராஸ்தஸ்ய வானராஞ்ஜக்4நுரோஜஸா ॥ (18)

ஸஸ்கந்த4விடபை: ஸாலை: ஶிலாபி4ஶ்ச மஹாப3ல: ॥
ஹனுமாந் கத3நம் சக்ரே ரக்ஷஸாம் பீ4மகர்மணாம் ॥ (19)

ஸ நிவார்ய பரானீகமப்3ரவீத்தாந் வனௌகஸ: ।
ஹனுமாந் ஸம்நிவர்தத்4வம் ந ந: ஸாத்4யமித3ம் ப3லம் ॥ (20)

த்யக்த்வா ப்ராணாந் விவேஷ்டந்தோ ராமப்ரியசிகீர்ஷவ: ।
யந்நிமித்தம் ஹி யுத்4யாமோ ஹதா ஸா ஜனகாத்மஜா ॥ (21)

இமமர்த2ம் ஹி விஜ்ஞாப்ய ராமம் ஸுக்3ரீவமேவ ச ।
தௌ யத் ப்ரதிவித4ாஸ்யேதே தத் கரிஷ்யாமஹே வயம் ॥ (22)

இத்யுக்த்வா வானரஶ்ரேஷ்டோ2 வாரயந் ஸர்வவானராந் ।
ஶனை: ஶனைரஸந்த்ரஸ்த: ஸப3ல: ஸந்ந்யவர்தத ॥ (23)

தத: ப்ரேக்ஷ்ய ஹனூமந்தம் வ்ரஜந்தம் யத்ர ராக4வ: ।
ஸ ஹோதுகாமோ து3ஷ்டாத்மா க3தஶ்சைத்யநிகும்பி4லாம் ॥
நிகும்பி4லாமதி4ஷ்டா2ய பாவகம் ஜுஹவேந்த்3ரஜித் ॥ (24)

யஜ்ஞபூ4ம்யாம் து விதி4வத் பாவகஸ்தேந ரக்ஷஸா ।
ஹூயமான: ப்ரஜஜ்வால மாம்ஸஶோணிதபு4க் தத3ா ॥ (25)

அந்தப் பெரும் பாறை (குறிவைத்த இடத்திலிருந்து அவர்கள் நகர்ந்து போய் விட்டதால்) தேரைச் செலுத்தும் தேரோட்டி, அதிலிருந்த இந்திரஜித் ஆகியோரைத் தாக்காமல், வீணாகப் போய் பூமியில் விழுந்து, பிளந்து கொண்டு உள்ளே புகுந்து மறைந்தது. (11)

அந்தப் பாறை பூமியில் விழுந்தபோது, அதனடியில் பல அரக்கர்கள் சிக்கிக் கொண்டார்கள். அதன் வீழ்ச்சியினால் தாக்கப்பட்ட ஏராளமானோர் நசுங்கிச் செத்தார்கள். (12)

நூற்றுக்கணக்கான வானர வீரர்கள், வெற்றி முழக்கம் எழுப்பிக் கொண்டு இந்திரஜித்தை எதிர்த்து ஓடினார்கள். பயங்கரமான ஆற்றலுடையவர்களும் ஆண்மை மிக்கவர்களுமான அவர்கள், மரங்களையும் மலைமுகடுகளையும் கையில் ஏந்திக் கொண்டு, இந்திரஜித்தை நோக்கி வீசி எறிந்தார்கள். மரங்களையும் பாறைகளையும் மழைத் தாரையைப்போல் பொழிந்து எதிரிப் படைக்கு நாசம் விளைவித்தார்கள். (அதனால், உற்சாகம் கொண்டு) பற்பல குரலில் மகிழ்வொலி எழுப்பினார்கள். மாவீரம் படைத்த வானரர்களால், பயங்கரத் தோற்றமுடைய அரக்கர்கள், வீரத்தாக்குதலால் அழிக்கப்பட்டுத் தரையில் விழுந்து புரண்டார்கள். வானர வீரர்களால் தன்னுடைய படை மிகவும் துன்புறுத்தப்படுவதைக் கண்ட இந்திரஜித், கோபத்துடன் படைக்கலன்களைக் கையில் எடுத்துக் கொண்டு எதிரிகளை நோக்கிச் சென்றான். (13–16)

தன் படையினரால் சூழப்பட்ட அவன், பாணக்கூட்டங்களை இடைவிடாது செலுத்தினான். எல்லோருமறிந்த பேராண்மை கொண்ட அவன், மிகப்பல வானர வீரர்களைக் கொன்றொழித்தான். அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த அரக்கர்கள், சூலங்கள், பட்டாக்கத்திகள், வஜ்ராயுதங்கள், வாள்கள், இரும்பாலான கதை போன்று தோற்றமளிக்கும் படைக்கலன் ஆகியவைகளால் பேராண்மையுடன் வானரர்களைத் தாக்கி அழித்தார்கள். (17,18)

பயங்கரமாகச் செயல்புரியும் அரக்கர்களை, பெரிய கிளைகள்–தண்டுடன் கூடிய ஆச்சா மரங்களாலும் பாறைகளாலும் தாக்கிப் பெரும் சேதத்தை விளைவித்தார், அனுமான். எதிரிப்படையைத் தடுத்து நிறுத்திவிட்டு, அனுமான் வானரர்களைப் பார்த்துக் கூறினார்— ''திரும்பிச் சென்று விடலாம். இனி, அரக்கர் படையை அழிக்க வேண்டிய அவசியம் இல்லை. (சீதையே போய்விட்டபின், இவர்களை அழிப்பதால் நமக்கு என்ன பயன்? – என்றபடி.) (19,20)

இராமபிரானுக்குப் பிரியமானதைச் செய்ய ஆவல் கொண்ட நாம், எதன் நிமித்தமாக உயிரையும் பொருட்படுத்தாது, அயர்வு–களைப்பு பாராமல் ஓடியாடிப் போரிட்டோமோ, அந்த ஜானகிதேவி கொல்லப்பட்டுவிட்டார். (21)

இந்தச் செய்தியை இராமபிரானிடமும் சுக்ரீவனிடமும் தெரிவித்து, அவர்கள் இருவரும் என்ன கட்டளையிடுகிறார்களோ, அவ்வாறே செய்வோம்.'' (22)

இவ்வாறு கூறிய பின்னர், வானரர்கள் எல்லோரையும் போர் செய்வதைத் தடுத்து, படைகள் புடைசூழ, அச்சமில்லாமல், மெல்ல மெல்ல திரும்பிச் சென்றார், அனுமான். (23)

கயவனான இந்திரஜித், இராமன் இருக்குமிடம் நோக்கி அனுமான் (படைவீரர்களுடன்) செல்வதைக் கண்டு, (அவர்கள் அடுத்து நடவடிக்கையைப் பற்றித் தீர்மானிக்கும் வரையில், சிறிது ஓய்வு நேரம் கிடைத்ததால்) நிகும்பிலை என்னும் தேவியின் கோவிலில் வேள்வி செய்ய விரும்பியவனாக அவ்விடம் நோக்கிச் சென்றான். நிகும்பிலைக்கு வந்து சேர்ந்த இந்திரஜித், அக்னியில் ஆகுதி கொடுத்தான். (24)

வேள்விக்குண்டத்தில், அந்த அரக்கனால் விதிமுறைப்படி ஆகுதி செய்யப்பட்ட புலாலையும் இரத்தத்தையும் (களிப்புடன்) ஏற்றுக் கொண்ட அக்னி, நன்றாகச் சுடர்விட்டு ஒளிர்ந்தது. (25)

ஸோऽர்சி:பிநத்₃தே₄ா த₃த்₃ருஶே ஹோமஶோணிததர்பித: ।
ஸந்த்₄யாக₃த இவாதி₃த்ய: ஸுதீவ்ரோऽக்₃நி: ஸமுத்தி₂த: ॥ (26)

அதே₂ந்த்₃ரஜித்₃ராக்ஷஸபூ₄தயே து
ஜுஹாவ ஹவ்யம் விதி₄நா வித₄ாநவித் ।
த்₃ருஷ்ட்வா வ்யதிஷ்ட₂ந்த ச ராக்ஷஸாஸ்தே
மஹாஸமூஹேஷு நயாநயக்ஞா: ॥ (27)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ த்₃வ்யஶீதிதம: ஸர்க₃: ॥

த்ர்யஶீதிதம: ஸர்க₃:

ராமாஶ்வாஸநம்

ராக₄வஶ்சாபி விபுலம் தம் ராக்ஷஸவநௌகஸாம் ।
ஶ்ருத்வா ஸங்க்₃ராமநிர்கோ₄ஷம் ஜாம்ப₃வந்தமுவாச ஹ ॥ (1)

ஸௌம்ய நூநம் ஹநுமதா க்ரியதே கர்ம து₃ஷ்கரம் ।
ஶ்ரூயதே ஹி யத₂ா பீ₄ம: ஸுமஹாநாயுத₄ஸ்வந: ॥ (2)

தத்₃க₃ச்ச₂ குரு ஸாஹாய்யம் ஸ்வப₃லேநாபி₄ஸம்வ்ருத: ।
க்ஷிப்ரம்ருக்ஷபதே தஸ்ய கபிஶ்ரேஷ்ட₂ஸ்ய யுத்₄யத: ॥ (3)

ருக்ஷராஜஸ்ததே₂ாக்தஸ்து ஸ்வேநாநீகேந ஸம்வ்ருத: ।
ஆக₃ச்ச₂த் பஶ்சிமம் த்₃வாரம் ஹநுமாந் யத்ர வாநர: ॥ (4)

அத₂ாயாந்தம் ஹநூமந்தம் த₃த₃ர்ஶர்க்ஷபதி: பதி₂ ।
வாநரை: க்ருதஸங்க்₃ராமை: ஶ்வஸத்₃பி₄ரபி₄ஸம்வ்ருதம் ॥ (5)

த்₃ருஷ்ட்வா பதி₂ ஹநூமாம்ஶ்ச தத்₃ருக்ஷப₃லமுத்₃யதம் ।
நீலமேக₄நிப₄ம் பீ₄மம் ஸந்நிவார்ய ந்யவர்தத ॥ (6)

ஸ தேந ஹரிஸைந்யேந ஸந்நிகர்ஷம் மஹாயஶா: ।
ஶீக்₄ரமாக₃ம்ய ராமாய து₃:கி₂தோ வாக்யமப்₃ரவீத் ॥ (7)

ஸமரே யுத்₄யமாநாநாமஸ்மாகம் ப்ரேக்ஷதாம் புர: ।
ஜக₄ாந ருத₃தீம் ஸீதாமிந்த்₃ரஜித்₃ராவணாத்மஜ: ॥ (8)

உத்₃ப்₄ராந்தசித்தஸ்தாம் த்₃ருஷ்ட்வா விஷண்ணோऽஹமரிந்த₃ம ।
தத₃ஹம் ப₄வதோ வ்ருத்தம் விக்ஞாபயிதுமாக₃த: ॥ (9)

தஸ்ய தத்₃வசநம் ஶ்ருத்வா ராக₄வ: ஶோகமூர்சி₂த: ।
நிபபாத தத₃ா பூ₄மௌ சி₂ந்நமூல இவ த்₃ரும: ॥ (10)

இரத்தத்தால் ஆகுதி செய்யப்பட்ட அந்த அக்னி, திருப்தி அடைந்து, மிக நன்றாக ஜொலித்துக் கொண்டு எழுந்து, சாயங்கால சூரியனைப் போல் செக்கச்செவேலென்று விளங்கியது. (26)

இந்திரஜித் வேள்வி முறைகளை நன்றாக அறிந்தவன்; எல்லா அரக்கர்களுக்கும் நல்வாழ்வு கிட்ட வேண்டும் என்பதற்காக, முறைப்படி அவியைச் சொரிந்தான். போர்க்காலங்களில் செய்யத்தக்கன–செய்யத்தகாதன என்னென்ன என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டிருந்த அந்த அரக்க வீரர்கள், வேள்வியைப் பார்த்துக் கொண்டு, அதற்கு அரண் போல் நின்றார்கள். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து மூன்று

இராமனைத் தேற்றுதல்!

இராமபிரான், அரக்கர்களும் வானரர்களும் எழுப்பிய செவியைத் துளைக்கும் போர் முழக்கத்தைக் கேட்டு, அருகிலிருந்த ஜாம்பவானைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (1)

(அனுமான் படைவீரர்களுடன் திரும்பி வருவதற்கு முன் நடந்த நிகழ்ச்சி, இப்போது சொல்லப்படுகிறது.) ''சான்றோரே! பிறரால் செயற்கரிய செயலை, அனுமான் செய்து கொண்டிருக்கிறான் என்று எண்ணுகிறேன். ஏனென்றால், பற்பல ஆயுதங்களின் பல்வகையான பெருஞ்சத்தம் செவியில் விழுகிறது. (2)

கரடி மன்னரே! உங்கள் சேனையுடன் சென்று சண்டை செய்து கொண்டிருக்கும் வானரோத்தமனுக்கு உதவி செய்யுங்கள்.'' (3)

இவ்வாறு ஆணையிடப்பட்ட கரடி மன்னர், தனது படையினர் புடைசூழ, அனுமான் போர் புரிந்து கொண்டிருந்த மேற்கு வாயிலை நோக்கி வந்தார். (4)

போரை முடித்துக் கொண்டு, (நோக்கம் கைகூடாத சோகத்தினால்) பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் வானரர்களால் சூழப் பெற்ற அனுமான் எதிரே வந்து கொண்டிருப்பதை, கரடி மன்னர் பார்த்து விட்டார். (5)

கருமுகிலைப் போன்ற வண்ணங்கொண்ட பயங்கரமான கரடிப்படை எதிரே வருவதைப் பார்த்த அனுமான், அதைத் தடுத்து நிறுத்தி (செய்தியைக் கூறி)த் திரும்பச் செய்தார். (6)

பெரும் புகழ் படைத்த அவர், வானரப்படையுடன் விரைவாக இராமபிரான் அருகில் வந்து மிகுந்த மனவருத்தத்துடன் செய்தியைக் கூறினார்— (7)

''அண்ணலே! நாங்கள் போர்க்களத்தில் போர் செய்து கொண்டிருந்தோம். அப்போது, இராவணன் புதல்வனான இந்திரஜித், நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, எங்கள் எதிரிலேயே அழுது கொண்டிருந்த சீதாப்பிராட்டியாரைக் கொன்றுவிட்டான். எதிரிகளை அடக்குபவரே! அந்த நிலையில் பிராட்டியைப் பார்த்த நான் மனங்கலங்கினேன். அந்தத் தகவலைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காக, நான் இங்கு வந்தேன்.'' (8,9)

இராமன், அவருடைய அந்த வார்த்தைகளைக் கேட்டதும் துயரத்தால் உணர்விழந்து, வேர் வெட்டப்பட்ட மரம் போல, தடாலென்று பூமியில் விழுந்தார். (10)

தம் பூ$_4$மௌ தே$_3$வஸங்காஶம் பதிதம் ப்ரேக்ஷ்ய ராக$_4$வம் ।
அபி$_4$பேது: ஸமுத்பத்ய ஸர்வத: கபிஸத்தமா: ॥ (11)

அஸிஞ்சந் ஸலிலைஶ்சைநம் பத்$_3$மோத்பலஸுக$_3$ந்தி$_4$பி$_4$: ।
ப்ரத$_3$ஹந்தமநாஸாத்$_3$யம் ஸஹஸாக்$_3$நிமிவோச்சி$_2$க$_2$ம் ॥ (12)

தம் லக்ஷ்மணோऽத$_2$ பா$_3$ஹுப்$_4$யாம் பரிஷ்வஜ்ய ஸுது$_3$:கி$_2$த: ।
உவாச ராமமஸ்வஸ்த$_2$ம் வாக்யம் ஹேத்வர்த$_2$ஸம்யுதம் ॥ (13)

ஶுபே$_4$ வர்த்மநி திஷ்ட$_2$ந்தம் த்வாமார்ய விஜிதேந்த்$_3$ரியம் ।
அநர்தே$_2$ப்$_4$யோ ந ஶக்நோதி த்ராதும் த$_4$ர்மோ நிரர்த$_2$க: ॥ (14)

பூ$_4$தாநாம் ஸ்தா$_2$வராணாம் ச ஜங்க$_3$மாநாம் ச த$_3$ர்ஶநம் ।
யதா$_2$ஸ்தி ந ததா$_2$ த$_4$ர்மஸ்தேந நாஸ்தீதி மே மதி: ॥ (15)

யதை$_2$வ ஸ்தா$_2$வரம் வ்யக்தம் ஜங்க$_3$மம் ச ததா$_2$வித$_4$ம் ।
நாயமர்த$_2$ஸ்ததா$_2$ யுக்தஸ்த்வத்$_3$விதோ$_4$ ந விபத்$_3$யதே ॥ (16)

யத்$_3$யத$_4$ர்மோ ப$_4$வேத்$_3$பூ$_4$தோ ராவணோ நரகம் வ்ரஜேத் ।
ப$_4$வாம்ஶ்ச த$_4$ர்மயுக்தோ வை நைவம் வ்யஸநமாப்நுயாத் ॥ (17)

தஸ்ய ச வ்யஸநாபா$_4$வாத்$_3$வ்யஸநம் ச க$_3$தே த்வயி ।
த$_4$ர்மோ ப$_4$வத்யத$_4$ர்மஶ்ச பரஸ்பரவிரோதி$_4$நௌ ॥ (18)

த$_4$ர்மேணோபலபே$_4$த்$_3$த$_4$ர்மமத$_4$ர்மம் சாப்யத$_4$ர்மத: ।
யத்$_3$யத$_4$ர்மேண யுஜ்யேயுர்யேஷ்வத$_4$ர்ம: ப்ரதிஷ்டி$_2$த: ॥ (19)

யதி$_3$ த$_4$ர்மேண யுஜ்யேரந்நாத$_4$ர்மருசயோ ஜநா: ।
த$_4$ர்மேண சரதாம் த$_4$ர்மஸ்ததா$_2$ சைஷாம் ப$_2$லம் ப$_4$வேத் ॥ (20)

யஸ்மாத$_3$ர்தா$_2$ விவர்த$_4$ந்தே யேஷ்வத$_4$ர்ம: ப்ரதிஷ்டி$_2$த: ।
க்லிஶ்யந்தே த$_4$ர்மஶீலாஶ்ச தஸ்மாதே$_3$தௌ நிரர்த$_2$கௌ ॥ (21)

வத்$_4$யந்தே பாபகர்மாணோ யத்$_3$யத$_4$ர்மேண ராக$_4$வ ।
வத$_4$கர்மஹதோऽத$_4$ர்ம: ஸ ஹத: கம் வதி$_4$ஷ்யதி ॥ (22)

அத$_2$வா விஹிதேநாயம் ஹந்யதே ஹந்தி வா பரம் ।
விதி$_4$ராலிப்யதே தேந ந ஸ பாபேந கர்மணா ॥ (23)

தேவர்களுக்கு நிகரான வீரம் படைத்த இராமன் தரையில் விழுந்து விட்டதைப் பார்த்ததும், வானர வீரர்கள் நாற்புறத்திலிருந்தும் பாய்ந்து வந்தார்கள். அவர்கள், தாமரை–நீலோத்பலம் முதலிய மலர்களால் வாசனையூட்டப்பட்ட நீரைக் கொண்டு வந்து அவர் மேல் தெளித்தார்கள். (அப்படியும் அவர் மூர்ச்சை தெளியவில்லை.) எவ்விதத்திலும் அணைக்க முடியாத திடீரென்று சுடர்விடும் சுவாலையுடன் எழும் நெருப்புப் போல் அவர் விளங்கினார். (11,12)

அப்போது, மிகவும் துயர வசப்பட்டிருந்த இலக்குவன், நிலைகுலைந்திருக்கும் இராமனை இரு கைகளாலும் தூக்கி அணைத்துக் கொண்டு, காரண–காரியங்களுக்கு இசைவான சொற்களைக் கூறினான்— ''அண்ணலே! தாங்கள் அறநெறியில் நடப்பவர்; புலன்களை வென்றவர். அவ்வாறிருந்தும், துயரங்களிலிருந்து தருமம் தங்களைக் காப்பாற்ற முடியவில்லை. அதனால், தருமம் பயனற்றது. (13,14)

(விலங்கு முதலிய) பிராணிகளுக்கும், அசையாப் பொருள்களான தாவரங்களுக்குங்கூட சுகம் ஏற்படுகிறது என்பதைக் காண்கிறோம். ஆனால், அந்த சுகத்திற்குக் காரணம் தருமம் இல்லை. ஏனெனில், அறநெறிப்படி நடத்தல் என்பது, அவைகளுக்கு இல்லை. எனவே, சுக அனுபவத்திற்கான வழி தருமானுஷ்டானம் இல்லை என்று நான் நம்புகிறேன். (அசையும் பொருள், அசையாப்பொருள், விலங்கு ஆகியவைகளைக் கண்களால் பார்க்க முடிவதால், அவைகள் இருக்கின்றன – என்று நம்புகிறோம். ஆனால், தருமமோ அதருமமோ கண்ணுக்குப் புலனாவதில்லை. எனவே, அவைகள் இல்லை என்பதே என் கருத்து – 'ராமாயண பூஷண' விளக்கம்.) (15)

அசையாப் பொருள்களான தாவரங்களும், அசையும் பிராணிகளான விலங்குகளும் (எவ்வித அறச்செய்களையும் செய்யாவிட்டாலும்கூட) சுகத்தை அனுபவிக்கின்றன என்பது கண்கூடு. 'தருமம்தான் சுகத்திற்குக் காரணம்' என்பதை ஏற்றுக் கொண்டால், தங்களைப் போன்றவர்களுக்குக் கஷ்டங்களே வரக்கூடாதுதானே? (16)

'அறம் தவறி நடந்தால், துன்பம் உண்டாகும்' என்பது உண்மையானால், இராவணன் நரகத்திற்குப் போயிருக்க வேண்டும். அறநெறியிலேயே தவறாது செல்லும் தங்களுக்குத் துயரம் வந்திருக்கக் கூடாது. அறநெறியாளர்களுக்குத் துன்பம் ஏற்படாது என்பது கொள்கை. ஆனால், தங்களுக்கு துன்பம் நேர்ந்திருக்கிறது. எனவே, தருமமும் அதருமமும் தத்தம் இயல்பிலிருந்து நேர்மாறாகச் சென்றுவிட்டன என்று முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. (17,18)

அறநெறிப்படி நடப்பதால் சுகத்தையும், அறம் பிறழ்ந்து நடப்பதால் துன்பத்தையும் அடைவார்கள் என்ற அறநூல் கொள்கை ஏற்கப்பட்டால், எவர்களிடம் அதருமம் குடி கொண்டிருக்கிறதோ, அவர்கள்தானே துன்பத்தைப் பெற வேண்டும்? மக்கள் அறநெறிப்படி ஒழுகுவார்களேயானால், அதருமத்தின் பயனான துன்பத்தை அடைய மாட்டார்கள். அறநெறியில் செல்லும் அவர்களுக்கு அறத்தின் பயனான சௌக்கியமே உண்டாக வேண்டும். (19,20)

ஆனால், எவரிடம் அதருமம் குடி கொண்டிருக்கிறதோ, அவர்கள் செழுமையாக வாழ்கிறார்கள்; எவர்கள் அறத்திலேயே ஈடுபட்டிருக்கிறார்களோ, அவர்கள் துயரத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். அதனால், தருமம்–அதருமம் என்ற இரண்டுமே பொருளற்றவை (தமக்குரியனவாகக் கூறப்படும் பலனைக் கொடுக்கக்கூடியவை அல்ல) என்பது நிச்சயமாகிறது. இராகவனே! பாவம் செய்கிறவர்கள் துன்பத்தை அடைவார்கள், சரி. பாவச்செயல்களால் துன்பப்படும் ஒருவனைத் தருமம் எவ்வாறு காப்பாற்றும்? (அவன்தான், தான் செய்த பாவத்தினால் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறானே?) (21,22)

ஒருவன், அனாதிகாலமாகத் தொடர்ந்து வரும் பாவ–புண்ணியங்களின் விளைவாக இன்ப–துன்பங்களைப் பெறுகிறான் – என்றால், இப்போது, பாவத்தின் பயனான துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவன், தொடர்ந்து பாவங்களையே செய்து, பிறவிதோறும் துன்பப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதேபோலத்தான் புண்ணிய பலனும். ஆனால், உலகத்தில் அப்படி காணப்படவில்லையே? (அதாவது, அறநெறிப் பயனான இன்பம், தீநெறிப் பயனான துன்பத்துடன் எப்போதும் சேராமல் இருக்க வேண்டும்.) (23)

அத்ருஷ்டப்ரதிகாரேண த்வவ்யக்தேநாஸதா ஸதா ।
கத$_2$ம் ஶக்யம் பரம் ப்ராப்தும் த$_4$ர்மேணாரிவிகர்ஶந ॥ (24)

யதி$_3$ ஸத் ஸ்யாத் ஸதாம் முக்$_2$ய நாஸத் ஸ்யாத்தவ கிஞ்சந ।
த்வயா யதீ$_3$த்$_3$ருஶம் ப்ராப்தம் தஸ்மாத் ஸந்நோபபத்$_3$யதே ॥ (25)

அத$_2$வா து$_3$ர்ப$_3$ல: க்லீபே$_3$ா ப$_3$லம் த$_4$ர்மோऽநுவர்ததே ।
து$_3$ர்ப$_3$லோ ஹ்ருதமர்யாதே$_3$ா ந ஸேவ்ய இதி மே மதி: ॥ (26)

ப$_3$லஸ்ய யதி$_3$ சேத்$_3$த$_4$ர்மோ கு$_3$ணபூ$_4$த: பராக்ரமே ।
த$_4$ர்மமுத்ஸ்ருஜ்ய வர்தஸ்வ யத$_2$ா த$_4$ர்மே தத$_2$ா ப$_3$லே ॥ (27)

அத$_2$ சேத் ஸத்யவசநம் த$_4$ர்ம: கில பரந்தப ।
அந்ருதஸ்த்வய்யகருணே: கிம் ந ப$_3$த்$_3$த$_4$ஸ்த்வயா பிதா ॥ (28)

யதி$_3$ த$_4$ர்மோ ப$_4$வேத்$_3$பூ$_4$த: அத$_4$ர்மோ வா பரந்தப ।
ந ஸ்ம ஹத்வா முநிம் வஜ்ரீ குர்யாதி$_3$ஜ்யாம் ஶதக்ரது: ॥ (29)

அத$_4$ர்மஸம்ஶ்ரிதோ த$_4$ர்மோ விநாஶயதி ராக$_4$வ ।
ஸர்வமேதத்$_3$யத$_2$ாகாமம் காகுத்ஸ்த$_2$ குருதே நர: ॥ (30)

மம சேத$_3$ம் மதம் தாத த$_4$ர்மோऽயமிதி ராக$_4$வ ।
த$_4$ர்மமூலம் த்வயா சி$_2$ந்நம் ராஜ்யமுத்ஸ்ருஜதா தத$_3$ா ॥ (31)

அர்தே$_2$ப்$_4$யோ ஹி விவ்ருத்$_3$தேப்$_4$ய: ஸம்வ்ருத்தேப்$_4$யஸ்ததஸ்தத: ।
க்ரியா: ஸர்வா: ப்ரவர்தந்தே பர்வதேப்$_4$ய இவாபக$_3$ா: ॥ (32)

அர்தே$_2$ந ஹி வியுக்தஸ்ய புருஷஸ்யால்பதேஜஸ: ।
வ்யுச்சி$_2$த்$_3$யந்தே க்ரியா: ஸர்வா க்$_3$ரீஷ்மே குஸரிதோ யத$_2$ா ॥ (33)

ஸோऽயமர்த$_2$ம் பரித்யஜ்ய ஸுக$_2$காம: ஸுகை$_2$தி$_4$த: ।
பாபமாரப$_4$தே கர்தும் ததோ தே$_3$ாஷ: ப்ரவர்ததே ॥ (34)

யஸ்யார்த$_2$ாஸ்தஸ்ய மித்ராணி யஸ்யார்த$_2$ாஸ்தஸ்ய பா$_3$ந்த$_4$வா: ।
யஸ்யார்த$_2$ா: ஸ புமாந்(ல்)லோகே யஸ்யார்த$_2$ா: ஸ ச பண்டி$_3$த: ॥ (35)

யஸ்யார்த$_2$ா:ஸ ச விக்ராந்தோ யஸ்யார்த$_2$ா:ஸ ச பு$_3$த்$_3$தி$_4$மாந் ।
யஸ்யார்த$_2$ா:ஸ மஹாப$_4$ாகே$_3$ா யஸ்யார்த$_2$ா:ஸ கு$_3$ணாதி$_4$க: ॥ (36)

எதிரிகளை மாய்ப்பவரே! தருமம் என்பதை யாரும் கண்ணால் பார்த்ததில்லை; தெளிவாகக் கூறப்படவும் இல்லை; உண்மையில் இருக்கிறதா? என்பதும் தெரியவில்லை. (தருமம் இருக்கிறது என்பது உண்மையானால்,) தங்களைப் போன்ற அறநெறியாளர்களுக்குத் துன்பம் ஏற்படலாமா? சான்றோர்களில் தலையாயவரே! 'அறச்செயல் அதன் பயனான சுகத்தை அளிக்காமல் போகாது' என்பதை ஏற்றுக் கொண்டால், தங்களுக்குத் துன்பத்தின்மேல் துன்பம் வருவது ஏன்? முற்சொன்ன கொள்கையுடன் இது ஒத்துப் போகவில்லையே? (24,25)

அல்லது தருமம் என்பது பலவீனமானது; ஆண்மையற்றது – என்பதையும், வீர தீரமுள்ளவனுக்கே அது ஆதரவாக இருக்கிறது – என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, இப்படிப்பட்ட, பலவீனமான, வரம்புக்கு (விதிக்கு) உட்படாத தருமம் கைக்கொள்ளப்படத் தக்கதல்ல என்பது என் எண்ணம். 'தருமம் என்பது ஆண்மைக்குத் துணை போவது' என்பதை ஏற்றுக் கொண்டால், தருமம்தான் மிகவும் முக்கியமானது என்ற தங்கள் கொள்கையைத் தளர்த்தி, ஆண்மைக்கு முதலிடம் கொடுங்கள். (26,27)

பகைவர்களை மாய்ப்பவரே! சத்தியத்தைக் காப்பதுதான் உயர்வான தருமம். இதுதானே, தங்கள் நம்பிக்கை? சரி. (நம்முடைய தந்தையார், தங்களுக்குப் பட்டம் சூட்டுவதாக சபையில் அறிவித்தாரே? அதைச் செய்து காட்டினாரா? அப்போது, சத்தியம் எங்கே போயிற்று?) தங்களிடம் கருணை காட்டாதவரும், சொன்ன சொல் தவறியவருமான தந்தையைத் தாங்கள் ஏன் எதிர்த்து அடக்கவில்லை? (28)

(ஒரு மன்னன், எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் தருமத்தையோ, அதருமத்தையோ மட்டும் செய்து கொண்டிருக்கக் கூடாது. காலம், சூழ்நிலை, பயன் கருதி, தருமாதருமங்களை மேற்கொள்ள வேண்டும்.) எதிரிகளைப் பொசுக்குபவரே! தருமம் அல்லது அதருமம் மட்டுமே ஒருவனால் செய்யத்தக்கது என்ற வாதத்தில் பொருளில்லை. சான்று கூறுகிறேன்— நூறு வேள்விகள் செய்து இந்திரப் பதவி பெற்றவன், ஒரு முனிவரை (விருத்திரனை)க் கொன்றான். (அதாவது, அறம் அல்லாததைச் செய்தான்.) அத்துடன் நின்று விடவில்லை. தொடர்ந்து அறச்செயலான வேள்வியையும் செய்தான். (29)

இராகவனே! தருமமும் அதருமமும் அவைகளைப் பின்பற்றுகிறவனை அழிக்கவே செய்கின்றன. (அறம் தவறாத தாங்களும் துன்பப்படுகிறீர்கள்; அறம் தவறிய இராவணனும் – நெருங்கிய உறவினர்களை இழந்து – துன்பப்படுகிறான்.) ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய விருப்பம்–தேவைகளுக்கு ஏற்றபடி செயல்களைச் செய்கிறான். இராகவனே! அப்போது (தங்களுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட வேண்டிய நிலையில்), தாங்கள் அரசாட்சியைப் புறக்கணித்தீர்களே. அப்போதே அறத்தின் ஆணிவேர் தங்களால் தகர்க்கப்பட்டுவிட்டது! அண்ணலே! ஆண்மை, செல்வச் செழிப்பு ஆகியவைதான் தருமம் என்று இன்றைக்கும் நான் எண்ணுகிறேன். (30,31)

மலையில், சிறு சிறு வாய்க்கால்கள் தோன்றி ஒன்றாகச் சேர்ந்து பெரிய ஆறாகப் பெருகுவதைப் போல, பலவிடங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய செல்வங்களை ஒன்று திரட்டிக் குவித்தால்தான், தேவைப்படும் காலங்களில் உபயோகப்படுத்த முடியும். சொற்ப அறிவுடைய ஒரு மனிதன், பொருள் இல்லாமையால், தான் எடுத்துக் கொண்ட ஒரு காரியத்தை இடையில் நிறுத்தி அழிந்துபோகிறான் – கோடை காலத்தில், சின்னஞ்சிறு நதிகள் முற்றிலுமாக வற்றி விடுவதைப்போல. (32,33)

பிறந்தது முதல் சுகத்தையே அனுபவித்து வந்தவன், அதன் ஸாதனமான செல்வத்தைத் துறந்து, சுகம் அனுபவிக்க விரும்பினால், அறம் அல்லாத பாவ வழிகளில் பொருளைத் தேட நேரிடும். அவன் (அந்தக்) குற்றத்திற்கு ஆளாகிறான். நான்கு வகையான புருஷார்த்தங்களில், இரண்டாவதான செல்வச் செழுமை எவனிடம் இருக்கிறதோ, அவனைச் சுற்றியே நண்பர்கள் கூடுவார்கள்; உறவினர்கள் மதிப்பார்கள்; அவனே சிறந்த மனிதனாகப் போற்றப்படுவான்; அவனே பேரறிஞனாகக் கருதப்படுவான். (34,35)

எவனிடம் செல்வச் செழிப்பு இருக்கிறதோ, அவனே பராக்கிரமசாலி; அவனே, சிந்தனைத் திறனுடைய அறிவாளி; அவனே, பெரும் பேறு பெற்றவன்; அவனே, நற்குணங்கள் அனைத்தும் அமையப் பெற்றவனாகக் கருதப்படுவான். (36)

அர்த$_2$ஸ்யைதே பரித்யாகே$_3$ தே$_3$ாஷா: ப்ரவ்யாஹ்ருதா மயா ।
ராஜ்யமுத்ஸ்ருஜதா வீர யேந பு$_3$த்$_3$தி$_4$ஸ்த்வயா க்ருதா ॥ (37)

யஸ்யார்த$_2$ா த$_4$ர்மகாமார்த$_2$ாஸ்தஸ்ய ஸர்வம் ப்ரத$_3$க்ஷிணம் ।
அத$_4$நேநார்த$_2$காமேந நார்த$_2$: ஶக்யோ விசிந்வதா ॥ (38)

ஹர்ஷ: காமஶ்ச த$_3$ர்பஶ்ச த$_4$ர்ம: க்ரோத$_4$: ஶமோ த$_3$ம: ।
அர்த$_2$ாதே$_3$தாநி ஸர்வாணி ப்ரவர்தந்தே நராதி$_4$ப ॥ (39)

யேஷாம் நஶ்யத்யயம் லோகஶ்சரதாம் த$_4$ர்மசாரிணாம் ।
தேऽர்த$_2$ாஸ்த்வயி ந த்$_3$ருஶ்யந்தே து$_3$ர்தி$_3$நேஷு யத$_2$ா க்$_3$ரஹா: ॥ (40)

த்வயி ப்ரவ்ராஜிதே வீர கு$_3$ரோஶ்ச வசநே ஸ்தி$_2$தே ।
ரக்ஷஸாபஹ்ருதா ப$_4$ார்யா ப்ராணை: ப்ரியதரா தவ ॥ (41)

தத$_3$த்$_3$ய விபுலம் வீர து$_3$:க$_2$மிந்த்$_3$ரஜிதா க்ருதம் ।
கர்மணா வ்யபநேஷ்யாமி தஸ்மாது$_3$த்திஷ்ட$_2$ ராக$_4$வ ॥ (42)

உத்திஷ்ட$_2$ நரஶார்தூ$_3$ல தீ$_3$ர்க$_4$ப$_3$ாஹோ த்$_3$ருட$_4$வ்ரத ।
கிமாத்மாநம் மஹாத்மாநமாத்மாநம் நாவபு$_3$த்$_4$யஸே ॥ (43)

அயமநக$_4$ தவோதி$_3$த: ப்ரியார்த$_2$ம்
ஜநகஸுதாநித$_4$நம் நிரீக்ஷ்ய ருஷ்ட: ।
ஸஹயக$_3$ஜரத$_2$ாம் ஸராக்ஷஸேந்த்$_3$ராம்
ப்$_4$ருஶமிஷுபி$_4$ர்விநிபாதயாமி லங்காம் ॥ (44)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரயஶீதிதம: ஸர்க$_3$: ॥

சதுரஶீதிதம: ஸர்க$_3$:

இந்த்$_3$ரஜிந்மாயாவிவரணம்

ராமமாஶ்வஸயாநே து லக்ஷ்மணே ப்$_4$ராத்ருவத்ஸலே ।
நிக்ஷிப்ய கு$_3$ல்மாந் ஸ்வஸ்த$_2$ாநே தத்ராக$_3$ச்ச$_2$த்$_3$விபீ$_4$ஷண: ॥ (1)

நாநாப்ரஹரணைர்வீரைஶ்சதுர்பி$_4$: ஸசிவைர்வ்ருத: ।
நீலாஞ்ஜநசயாகாரைர்மாதங்கை$_3$ரிவ யூத$_2$ப: ॥ (2)

வீரரே! பொருள் கிடைக்கும்போது, அதை உதறிவிடுவதால், என்னென்ன குறைகள் ஏற்படும் என்பதை விளக்கிச் சொன்னேன். இளவரசுப் பட்டத்தைத் துறந்து விடும் முடிவுக்குத் தாங்கள் வந்த காரணம் எனக்கு விளங்கவில்லை. எவனிடம் செல்வச் செழிப்பு இருக்கிறதோ, அவனுடைய அறக்கடமைகளும் நல்விருப்பங்களும் நிறைவேறுகின்றன. அவனுக்கு, பிற எல்லாம் அனுகூலமாக செயல்படுகின்றன. எவனிடம் செல்வம் இல்லையோ, அவன் செல்வத்தைப் பெறுவதற்காக எவ்வளவுதான் முயன்றாலும், அவன் அதை அடைய முடிவதில்லை. (37,38)

மாமன்னரே! (தருமம், காமம் என்ற இரண்டை மட்டும்தான் அர்த்தம் (செல்வச் செழிப்பு) கொடுக்கும் என்பதில்லை.) மகிழ்ச்சி, அக நாட்டம், அகந்தை, தருமம், சினம், மனக்கட்டுப்பாடு, புலனடக்கம் – இவையெல்லாமும், கையில் பொருள் இருந்தால்தான், நற்பயனை விளைவிக்கும். (அவனுக்குப் பெருமையைக் கொடுக்கும்.) (39)

அறநெறியில் நடப்பவர்களுக்கு இவ்வுலக இன்பங்கள் கிடைக்காமல் போகின்றன. (பொருளை அலட்சியம் செய்பவர்களுக்கு மண்ணுலக இன்பங்கள் கிடைப்பதில்லை.) கிடைத்த செல்வத்தைப் பெற்றுக் கையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற குணம், மேகமூட்டம் நிறைந்த நகரில் வானத்துக் கோள்கள் கண்ணுக்குப் புலப்படாததைப்போல, தங்களிடம் காண முடியாதிருக்கின்றது. (40)

அறநெறியில் உறுதியாக நிற்பவரே! தந்தையின் சொற்களை ஏற்று, நாட்டைத் துறந்து வந்தீர்கள். (அறநெறிப்படி நடந்த தங்களை, அந்த அறம் காப்பாற்றியதா? இல்லையே!) உயிரைக் காட்டிலும் பிரியமான மனைவி, தங்களிடமிருந்து அரக்கனால் திருடிச் செல்லப்பட்டாள்! (என்ன கொடுமை!) (41)

வீரரே! இராமனே! எழுந்திருங்கள். முந்தைய துயரம் போதாதென்று இப்போது இந்திரஜித்தினாலும் மகத்தான துன்பம் வந்திருக்கிறது. எனது வீரத்தால், அந்தத் துன்பத்தைத் துடைத்தெறிவேன். நெடுங்தோளாய்! நெஞ்சுறுதி கொண்டவரே! மானுட வேங்கையே! எழுந்திருங்கள். தாங்கள் எல்லா உயிர்களிலும் விளங்கும் 'பரமாத்மா' என்பதை ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? (42,43)

மாசற்றவரே! நான் இதுவரை கூறியதெல்லாம் தங்களுக்கு ஆறுதலையும் மனவெழுச்சியையும் தர வேண்டும் என்பதற்காகவே. பிராட்டியார் கொல்லப்பட்டார் என்பதைக் கேட்டதும் என் நெஞ்சம் பதறுகிறது. வலிமைமிக்க என்னுடைய பாணங்களால், குதிரைகள், யானைகள், தேர்கள், அரக்க வீரர்கள் ஆகியவற்றோடு இந்த இலங்கையை அழித்து மண்ணோடு மண்ணாக்குகிறேன்.'' (44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து நான்கு

இந்திரஜித்தின் மாயையை விளக்குதல்

தமையனாரிடம் அளவு கடந்த பாசம் கொண்டிருந்த இலக்குவன், இராமனை (மேற்கண்டவாறு கூறி)ச் சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும்போது, படைப்பிரிவுகளை அணிவகுத்து அவ்வவற்றுக்குரிய இடங்களில் நிறுத்திவிட்டு, பல்வகை அணிகலன்களைக் கொண்ட வீரர்களும், கரிய மையினால் ஆன மலை போன்றவர்களுமான நான்கு அமைச்சர்கள் புடைசூழ, யானைகள் சூழ வரும் யானைக்கூட்டத்தின் தலைமை யானையைப்போல, விபீஷணன் அவ்விடம் வந்து சேர்ந்தான். (1,2)

ஸோऽபி$_4$க$_3$ம்ய மஹாத்மாநம் ராக$_4$வம் ஶோகலாலஸம் ।
வாநராம்ஶ்சைவ த$_3$த்$_3$ருஶே பா$_3$ஷ்பபர்யாகுலேக்ஷணாந் ॥ (3)

ராக$_4$வம் ச மஹாத்மாநமிக்ஷ்வாகுகுலநந்த$_3$நம் ।
த$_3$த$_3$ர்ஶ மோஹமாபந்நம் லக்ஷ்மணஸ்யாங்கமாஶ்ரிதம் ॥ (4)

வ்ரீடி$_3$தம் ஶோகஸந்தப்தம் த்$_3$ருஷ்ட்வா ராமம் விபீ$_4$ஷண: ।
அந்தர்து$_3$:கே$_2$ந தீ$_3$நாத்மா கிமேததி$_3$தி ஸோऽப்$_3$ரவீத் ॥ (5)

விபீ$_4$ஷணமுக$_2$ம் த்$_3$ருஷ்ட்வா ஸுக்$_3$ரீவம் தாம்ஶ்ச வாநராந் ।
லக்ஷ்மணோவாச மந்தா$_3$ர்த$_2$மித$_3$ம் பா$_3$ஷ்பபரிப்லுத: ॥ (6)

ஹதாமிந்த்$_3$ரஜிதா ஸீதாமிஹ ஶ்ருத்வைவ ராக$_4$வ: ।
ஹநுமத்$_3$வசநாத் ஸௌம்ய ததோ மோஹமுபாக$_3$த: ॥ (7)

கத$_2$யந்தம் து ஸௌமித்ரிம் ஸந்நிவார்ய விபீ$_4$ஷண: ।
புஷ்கலார்த$_2$மித$_3$ம் வாக்யம் விஸம்ஜ்ஞம் ராமமப்$_3$ரவீத் ॥ (8)

மநுஜேந்த்$_3$ரார்தரூபேண யது$_3$க்தம் ச ஹநூமதா ।
தத$_3$யுக்தமஹம் மந்யே ஸாக$_3$ரஸ்யேவ ஶோஷணம் ॥ (9)

அபி$_4$ப்ராயம் து ஜாநாமி ராவணஸ்ய து$_3$ராத்மந: ।
ஸீதாம் ப்ரதி மஹாபா$_3$ஹோ ந ச கா$_4$தம் கரிஷ்யதி ॥ (10)

யாச்யமாநஸ்து ப$_3$ஹுஶோ மயா ஹிதசிகீர்ஷுணா ।
வைதே$_3$ஹீமுத்ஸ்ருஜஸ்வேதி ந ச தத் க்ருதவாந் வச: ॥ (11)

நைவ ஸாம்நா ந தா$_3$நேந ந பே$_4$தே$_3$ந குதோ யுதா$_4$ ।
ஸா த்$_3$ரஷ்டுமபி ஶக்யேத நைவ சாந்யேந கேநசித் ॥ (12)

வாநராந் மோஹயித்வா து ப்ரதியாத: ஸ ராக்ஷஸ: ।
சைத்யம் நிகும்பி$_4$லாம் நாம யத்ர ஹோமம் கரிஷ்யதி ॥ (13)

ஹுதவாநுபயாதோ ஹி தே$_3$வைரபி ஸவாஸவை: ।
து$_3$ராத$_4$ர்ஷோ ப$_4$வத்யேவ ஸங்க்$_3$ராமே ராவணாத்மஜ: ॥ (14)

தேந மோஹயதா நூநமேஷா மாயா ப்ரயோஜிதா ।
விக்$_4$நமந்விச்ச$_2$தாம் தத்ர வாநராணாம் பராக்ரமே ॥ (15)

ஸஸைந்யாஸ்தத்ர க$_3$ச்சா$_2$மோ யாவத்தந்ந ஸமாப்யதே ।
த்யஜேமம் நரஶார்தூ$_3$ல மித்$_2$யாஸந்தாபமாக$_3$தம் ॥ (16)

ஸீத$_3$தே ஹி ப$_3$லம் ஸர்வம் த்$_3$ருஷ்ட்வா த்வாம் ஶோககர்ஶிதம் ।
இஹ த்வம் ஸ்வஸ்த$_2$ஹ்ருத$_3$யஸ்திஷ்ட$_2$ ஸத்த்வஸமுச்ச்$_2$ரித: ॥
லக்ஷ்மணம் ப்ரேஷயாஸ்மாபி$_4$: ஸஹ ஸைந்யாநுகர்ஷிபி$_4$: ॥ (17)

அவன், (இராம–லட்சுமணர்களை) நெருங்கி வந்ததும், மாவீரரான இலக்குவன் சோகத்தில் மூழ்கியிருப்பதையும், வானரர்கள் கண்ணீரால் கலங்கிய கண்களை உடையவர்களாகவும் இருப்பதைக் கண்டான். (3)

மேலும், மகாத்மாவும் இக்ஷ்வாகு குல நந்தனருமான இராமன், உணர்விழந்து, இலக்குவனுடைய மடியில் தலைவைத்துப் படுத்திருப்பதையும் பார்த்தான். (4)

(தான் இருக்கும்போது, சீதைக்குப் பேராபத்து வந்துவிட்டதே? என்பதால்) வெட்கத்துடனும் சோகத்துடனும் தவித்துக் கொண்டிருக்கும் இராமனைப் பார்த்ததும், நெஞ்சில் ஏற்பட்ட துக்கத்தால் உருகிப்போய், 'என்ன ஆயிற்று?' என்று கேட்டான். இலக்குவன், விபீஷணனது முகத்தை நோக்கி, சுக்ரீவனிடமும் மற்ற வானரர்களிடமும் பார்வையைச் செலுத்தி, கண்ணீர் விட்டுக் கொண்டு மெல்லிய குரலில் பின்வருமாறு கூறினான்— (5,6)

''நண்பனே! 'சீதாப் பிராட்டியார் இந்திரஜித்தால் கொல்லப்பட்டார்' என்று அனுமான், இங்கே வந்து சொன்னதைக் கேட்டதுமே, இராமன் மூர்ச்சை அடைந்துவிட்டார்.'' (7)

இவ்வாறு சொல்லிக் கொண்டிருந்த இலக்குவனை (உடனே)த் தடுத்து, உணர்விழந்து கிடக்கும் இராமனைப் பார்த்து, நற்பொருள் நிறைந்த சொற்களை, விபீஷணன் சொன்னான்— ''மாமன்னரே! துயரத்தில் மூழ்கியிருக்கும் அனுமானால் சொல்லப்பட்ட செய்தி, 'பெருங்கடல் வற்றிப் போய்விட்டது' என்று கூறுவதைப்போல, நடக்கவே முடியாத ஒரு நிகழ்ச்சி என்று எண்ணுகிறேன். (8,9)

தோள்வலிமை கொண்டவரே! தீய எண்ணங்கொண்ட இராவணன், சீதையைப் பற்றி என்ன திட்டம் வைத்திருக்கிறான்? என்பதை நான் அறிவேன். அவன், சீதையை ஒருபோதும் கொல்லவே மாட்டான். அவனுடைய நன்மையைக் கருத்தில் கொண்டு, 'சீதாப் பிராட்டியாரை விட்டுவிடு' என்று பல தடவைகள் மன்றாடி வேண்டிக் கொண்டேன். ஆனால், அவன் என் சொற்களை ஏற்றுக் கொள்ளவில்லை. (10,11)

பிராட்டியாரை சாம–தான–பேத உபாயங்களால் அடைய முடியாது என்னும்போது (இந்த உபாயங்களை உபயோகித்து, அவன் தோற்றுப் போய்விட்டான் – என்பது எல்லோருக்கும் தெரிந்த நிலையில்,) போர் செய்தா, அவரை அடையப் போகிறான்? (தண்ட உபாயத்தினாலும் அவரை அடைய முடியாது.) அல்லது, மாயை போன்ற வேறு வழிகளாலும் அவரை வசப்படுத்த முடியாது (என்பது இராவணனுக்குத் தெரியும்). (12)

அரக்கனான இந்திரஜித், வானரர்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டு, நிகும்பிலையிலுள்ள கோவிலுக்குச் சென்றுள்ளான். அங்கே, வேள்வி செய்யப் போகிறான். இராவணனின் புதல்வன், வேள்வியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பி வந்தானாகில், இந்திரன் உள்ளிட்ட எந்த தேவதைகளாலும் எதிர்த்துத் தாக்க முடியாதவன் ஆகிவிடுவான் என்பது நிச்சயம். (13,14)

வேள்வி நடப்பது தெரிந்துவிட்டால், வானரர்கள் அங்கே வந்து, தங்கள் வீரத்தைக் காட்டி, இடையூறு செய்வார்கள் – என்பதால், அவர்களை மயக்கி, திசை திருப்பும் நோக்கத்துடன் இந்த மாயையைப் பிரயோகித்திருக்கிறான் என்பது திண்ணம். (15)

புருஷோத்தமரே! மாயையால் ஏற்பட்டுள்ள இந்தத் துயரத்தை விட்டுவிடுங்கள். நிகும்பிலையில் வேள்வி முடிவதற்கு முன், படைகளுடன் நாம் அங்கு செல்வோம். (16)

துயரத்தில் மூழ்கியிருக்கும் தங்களைப் பார்த்துப் படைவீரர்கள் எல்லோரும் துன்பத்தில் ஆழ்ந்துள்ளார்கள். தாங்கள் மனச்சஞ்சலம் நீங்கியவராக, தைரியத்தை மேற்கொண்டு இங்கேயே இருங்கள். படைகளை நடத்திச் செல்லும் எங்களுடன், லட்சுமணனை அனுப்பி வையுங்கள். (17)

ஏஷ தம் நரஶார்தூ3லோ ராவணிம் நிஶிதை: ஶரை: ।
த்யாஜயிஷ்யதி தத் கர்ம ததோ வத்4யோ ப4விஷ்யதி ॥ (18)

தஸ்யைதே நிஶிதாஸ்தீக்ஷ்ணா: பத்ரிபத்ராங்க3வாஜிந: ।
பதத்ரிண இவாஸௌம்யா: ஶரா: பாஸ்யந்தி ஶோணிதம் ॥ (19)

தம் ஸந்தி3ஶ மஹாபா3ஹோ லக்ஷ்மணம் ஶுப4லக்ஷணம் ।
ராக்ஷஸஸ்ய விநாஶாய வஜ்ரம் வஜ்ரத4ரோ யதா2 ॥ (20)

மநுஜவர ந காலவிப்ரகர்ஷோ
ரிபுநித4நம் ப்ரதி யத் க்ஷமோऽத்3ய கர்தும் ।
த்வமதிஸ்ருஜ ரிபோர்வதா4ய வாணீ–
மமரரிபோர்மதா2நே யதா2 மஹேந்த்3ர: ॥ (21)

ஸமாப்தகர்மா ஹி ஸ ராக்ஷஸாதி4போ
ப4வத்யத்3ருஶ்ய: ஸமரே ஸுராஸுரை: ।
யுயுத்ஸதா தேந ஸமாப்தகர்மணா
ப4வேத் ஸுராணாமபி ஸம்ஶயோ மஹாந் ॥ (22)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 சதுரஶீதிதம: ஸர்க3: ॥

பஞ்சாஶீதிதம: ஸர்க3:

நிகும்பி4லாபி4யாநம்

தஸ்ய தத்3வசநம் ஶ்ருத்வா ராக4வ: ஶோககர்ஶித: ।
நோபதா4ரயதே வ்யக்தம் யது3க்தம் தேந ரக்ஷஸா ॥ (1)

ததோ தை4ர்யமவஷ்டப்4ய ராம: பரபுரஞ்ஜய: ।
விபீ4ஷணமுபாஸீநமுவாச கபிஸந்நிதௌ4 ॥ (2)

நைர்ருதாதி4பதே வாக்யம் யது3க்தம் தே விபீ4ஷண ।
பூ4யஸ்தச்ச்2ரோதுமிச்சா2மி ப்3ரூஹி யத்தே விவக்ஷிதம் ॥ (3)

ராக4வஸ்ய வச: ஶ்ருத்வா வாக்யம் வாக்யவிஶாரத3: ।
யத்தத் புநரித3ம் வாக்யம் ப3பா4ஷே ஸ விபீ4ஷண: ॥ (4)

யதா2க்ஞப்தம் மஹாபா3ஹோ த்வயா கு3ல்மநிவேஶநம் ।
தத்ததா2நுஷ்டி2தம் வீர த்வத்3வாக்யஸமநந்தரம் ॥ (5)

தாந்யநீகாநி ஸர்வாணி விப4க்தாநி ஸமந்தத: ।
விந்யஸ்தா யூத2பாஶ்சைவ யதா2ந்யாயம் விபா4க3ஶ: ॥ (6)

இந்த மாவீரர், தன் கூரிய பாணங்களால் இந்திரஜித்தை எதிர்த்து வென்று, வேள்வியை நிறைவு செய்யாமல் ஓடச் செய்வார். (வேள்வி முடிவு பெற்றால்தான், எவராலும் எதிர்கொள்ள முடியாத பல அஸ்திரங்களை, அவனால் பெற முடியும்.) வேள்வி நிறைவடையாமல் போனால்தான், அவனைக் கொல்ல முடியும். (18)

கழுகின் இறகுகள் பூண்ட இவருடைய (இலக்குவனின்) கொடிய, கூர்மையான அம்புகள், அவனுடைய இரத்தத்தைக் குடிக்கப் போகின்றன. (19)

பெருந்தோளரே! தேவேந்திரன், அசுரர்களைக் கொல்வதற்காக வஜ்ராயுதத்தைப் பிரயோகிப்பதைப் போல, அந்த அரக்கனை (இந்திரஜித்தை) அழிப்பதற்காக, வீர இயல்புடைய லட்சுமணனை அனுப்பி வையுங்கள். (20)

மனிதருள் மாணிக்கமே! எதிரியை மாய்க்கும் விஷயத்தில் இப்போது காலதாமதம் செய்யக்கூடாது. (அவன், வேள்வியை முடிப்பதற்குள் நாம் நிகும்பிலையைச் சென்றடைய வேண்டும்.) தேவர்களின் பகைவர்களை அழிப்பதற்கு, தேவேந்திரன் உடனே உத்தரவு பிறப்பிப்பதைப் போல, நம் எதிரியை அழிப்பதற்கு இந்த விநாடியே கட்டளையிடுங்கள். (21)

அரக்கத் தலைவன் (இந்திரஜித்) வேள்வியை நிறைவேற்றிவிட்டான் என்றால், போர்க்களத்தில், தேவாசுரர்களாலும் பார்க்க முடியாதவனாக ஆகிவிடுவான். வேள்வியை முடித்துக் கொண்டு போர் செய்யும் உற்சாகத்துடன் அவன் போர்க்களத்திற்கு வந்து விட்டானானால், தேவர்களுக்கும்கூட தமது உயிரைப் பற்றி சந்தேகம் வந்துவிடும். (உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமற்போகும்.) (22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து ஐந்து

நிகும்பிலை நோக்கிச் செல்லுதல்!

சோகத்தால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த இராமன், அந்த அரக்கனால் (விபீஷணனால்) கூறப்பட்டதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. (1)

எதிரியின் பட்டணத்தை வெற்றி கொள்பவரான இராமன், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அருகில் வீற்றிருந்த விபீஷணனைப் பார்த்து, வானரர்கள் (சுக்ரீவன், அனுமான் முதலியோர்) எதிரில் பின்வருமாறு கேட்டார்— (2)

''அரக்க மன்னன் விபீஷணனே! இப்போது நீ சொன்னவைகளை மறுபடியும் கேட்க விரும்புகிறேன், உன் ஆலோசனை என்ன என்பதைக் கூறுவாயாக.'' (3)

இராமனுடைய இந்தச் சொற்களைக் கேட்டதும், பேச்சில் வல்லவனான விபீஷணன், முன்னர் கூறிய சொற்களை மீண்டும் கூறினான்— (4)

''பெருந்தோளரே! மாவீரரே! நமது படைகளை எங்கெங்கே அணிவகுத்து நிறுத்தவேண்டும் என்று தாங்கள் ஆணையிட்டீர்களோ, அவ்வண்ணமே செய்து முடித்துவிட்டேன். (5)

படைகள், நாற்புறமும் இருக்கும்படியாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணிக்கும் தனித்தனியே அணித் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (6)

பூ$_4$யஸ்து மம விக்ஞாப்யம் தச்ச்$_2$ருணுஷ்வ மஹாயஶ: ।
த்வய்யகாரணஸந்தப்தே ஸந்தப்தஹ்ருத$_3$யா வயம் ॥ (7)

த்யஜ ராஜந்நிமம் ஶோகம் மித்$_2$யாஸந்தாபமாக$_3$தம் ।
ததி$_3$யம் த்யஜ்யதாம் சிந்தா ஶத்ருஹர்ஷவிவர்த்தி$_4$நீ ॥ (8)

உத்$_3$யம: க்ரியதாம் வீர ஹர்ஷ: ஸமுபஸேவ்யதாம் ।
ப்ராப்தவ்யா யதி$_3$ தே ஸீதா ஹந்தவ்யாஶ்ச நிஶாசரா: ॥ (9)

ரகு$_4$நந்த$_3$ந வக்ஷ்யாமி ஶ்ரூயதாம் மே ஹிதம் வச: ।
ஸாத்$_4$வயம் யாது ஸௌமித்ரிர்ப$_3$லேந மஹதா வ்ருத: ॥
நிகும்பி$_4$லாயாம் ஸம்ப்ராப்ய ஹந்தும் ராவணிமாஹவே ॥ (10)

த$_4$நுர்மண்ட$_3$லநிர்முக்தைராஶீவிஷவிஷோபமை: ।
ஶரைர்ஹந்தும் மஹேஷ்வாஸோ ராவணிம் ஸமிதிஞ்ஜய: ॥ (11)

தேந வீரேண தபஸா வரதா$_3$நாத் ஸ்வயம்பு$_4$வ: ।
அஸ்த்ரம் ப்$_3$ரஹ்மஶிர: ப்ராப்தம் காமகா$_3$ஶ்ச துரங்க$_3$மா: ॥ (12)

ஸ ஏஷ ஸஹ ஸைந்யேந ப்ராப்த: கில நிகும்பி$_4$லாம் ।
யத்$_3$யுத்திஷ்டே$_2$த் க்ருதம் கர்ம ஹதாந் ஸர்வாம்ஶ்ச வித்$_3$தி$_4$ ந: ॥ (13)

நிகும்பி$_4$லாமஸம்ப்ராப்தமஹுதாக்$_3$நிம் ச யோ ரிபு: ।
த்வாமாததாயிநம் ஹந்யாதி$_3$ந்த்$_3$ரஶத்ரோ: ஸ தே வத$_4$: ॥ (14)

வரோ த$_3$த்தோ மஹாபா$_3$ஹோ ஸர்வலோகேஶ்வரேண வை ।
இத்யேவம் விஹிதோ ராஜந் வத$_4$ஸ்தஸ்யைஷ தீ$_4$மத: ॥ (15)

வதா$_4$யேந்த்$_3$ரஜிதோ ராம ஸந்தி$_3$ஶஸ்வ மஹாப$_3$ல ।
ஹதே தஸ்மிந் ஹதம் வித்$_3$தி$_4$ ராவணம் ஸஸுஹ்ருஜ்ஜநம் ॥ (16)

விபீ$_4$ஷணவச: ஶ்ருத்வா ராக$_4$வோ வாக்யமப்$_3$ரவீத் ।
ஜாநாமி தஸ்ய ரௌத்$_3$ரஸ்ய மாயாம் ஸத்யபராக்ரம ॥ (17)
ஸ ஹி ப்$_3$ரஹ்மாஸ்த்ரவித் ப்ராக்ஞோ மஹாமாயோ மஹாப$_3$ல: ।
கரோத்யஸம்க்ஞாந் ஸங்க்$_3$ராமே தே$_3$வாந் ஸவருணாநபி ॥ (18)

தஸ்யாந்தரிக்ஷே சரதோ ரத$_2$ஸ்த$_2$ஸ்ய மஹாயஶ: ।
ந க$_3$திர்க்ஞாயதே தஸ்ய ஸூர்யஸ்யேவாப்$_4$ரஸம்ப்லவே ॥ (19)

ராக$_4$வஸ்து ரிபோர்க்ஞாத்வா மாயாவீர்யம் து$_3$ராத்மந: ।
லக்ஷ்மணம் கீர்திஸம்பந்நமித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (20)

புகழ் மிக்கவரே! நான் வேறு சில செய்திகளையும் கூறுவதற்கு அனுமதிக்க வேண்டும். காரணமில்லாமல் தாங்கள் மனம் வெதும்பியிருப்பதைப் பார்த்து, எங்கள் உள்ளமும் வேதனைப்படுகிறது. (7)

அரசே! மாயையால் ஏற்பட்டிருக்கும் மனத்துயரை விட்டொழியுங்கள். தாங்கள் கவலையுடன் சோர்ந்திருப்பது, எதிரிகளுக்கு மகிழ்ச்சியை வளரச் செய்யும். (8)

வீரரே! சீதாப் பிராட்டியாரை நீங்கள் மறுபடியும் பெற வேண்டுமானால், அரக்கர்கள் கொல்லப்பட வேண்டும். எனவே, அதற்கான முயற்சி செய்யத் தொடங்குங்கள்; மன எழுச்சியை உண்டாக்கிக் கொள்ளுங்கள். (9)

ரகுநந்தனரே! நமக்கு நன்மை பயக்கும் சில சொற்களை, நான் கூறப் போவதைத் தாங்கள் கேட்டருள வேண்டும். மிகவும் ஏராளமான படையுடன்கூட, நிகும்பிலையை அடைந்து, அங்கு போர் செய்து, இராவண குமாரனைக் கொல்வதற்காக, லட்சுமணன் புறப்பட்டுச் செல்ல வேண்டும். இது ஒரு நல்ல திட்டம். (10)

போரில் வெற்றி காண்பவரும், மகத்தான வில்லேந்தியவருமான லட்சுமணன், தன்னுடைய வில்லை வளைத்து, விஷத்தோடு கூடிய சர்ப்பங்களுக்கு ஒப்பான பயங்கரமான பாணங்களை விடுத்து, இராவணன் புதல்வனைக் கொல்லும் திறன் படைத்தவர். (11)

அந்த வீரன், நீண்டகாலம் தவம் புரிந்து, (வேள்வி இயற்றி) பிரும்மசிரஸ் என்ற அஸ்திரத்தையும், விருப்பப்படி செல்லும் (ரதத்தையும்) குதிரைகளையும் பிரும்மதேவரிடமிருந்து வரமாகப் பெற்றிருக்கிறான். அவன், இதற்குள் படைகளுடன்கூட நிகும்பிலையை அடைந்திருப்பான். (வேள்வியையும் தொடங்கியருப்பான்.) அவன், வேள்வியை முடித்துக் கொண்டு எழுந்து, போர்க்களத்திற்கு வருவானேயாகில், 'நாம் எல்லோரும் கொல்லப்படுவோம்' என்பதை அறிந்து கொள்ளுங்கள். (12,13)

பெருந்தோளரே! அனைத்து உலகங்களுக்கும் தலைவரான பிரும்மதேவன், அவனுக்கு வரம் கொடுக்கும்போது, 'தேவேந்திரன் பகைவனே! நீ நிகும்பிலையை அடைவதற்கு முன்பாக அல்லது வேள்வியை முற்றிலும் முடிப்பதற்கு முன்பாக, எந்த ஒரு எதிரி உன்னைக் கொல்வதற்காக எதிர்த்து வருவானோ, அவனால்தான் நீ மாய்க்கப்படுவாய்' என்று, மன்னரே! அறிவாளியான அவனுடைய கொலைக்கான விதியைக் கூறியிருக்கிறார். (14,15)

மகாபலம் பொருந்திய இராமனே! இந்திரஜித்தைக் கொன்று வரும்படி (லட்சுமணனுக்கு) ஆணையிடுங்கள். அவன் (இந்திரஜித்) கொல்லப்பட்டால், உற்றார்–உறவினரோடு இராவணன் மாண்டான் என்றே கொள்ளத்தகும்.'' (16)

இராமன், விபீஷணனுடைய கருத்தைக் கேட்டுவிட்டு பதில் கூறினார்— ''வீண்போகாத பராக்கிரமம் உடையவனே! அந்தக் கொடியவனுடைய மாயையை (மாயக்கலை வல்லமையை) நான் அறிவேன். (17)

அவன் பிரும்மாஸ்திரம் அறிந்தவன்; பேரறிவாளி; பெரும் மாயச்செயல்களைச் செய்யக் கூடியவன்; வலிமை மிக்கவன். வருணன் உள்ளிட்ட எல்லாத் தேவர்களையும் போரில் சுயநினைவை இழக்கச் செய்தவன். (18)

பெரும் புகழ் படைத்தவனே! அவன், தேரில் அமர்ந்து கொண்டு வான்வெளியில் சஞ்சரிக்கும்போது, மேகக்கூட்டத்தால் மறைக்கப்பட்ட சூரியன்போல (மாயை காரணமாக), அவன் போக்கு எவராலும் அறியப்பட முடிவதில்லை.'' (19)

(இவ்வாறு விபீஷணனிடம் கூறிவிட்டு,) கொடுமைக்காரனான பகைவனின் மாயசக்தியை அறிந்திருந்த இராமன், புகழ் நிறைந்தவனான இலக்குவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (20)

யத்$_3$வாநரேந்த்$_3$ரஸ்ய ப$_3$லம் தேந ஸர்வேண ஸம்வ்ருத: ।
ஹநுமத்ப்ரமுகை$_2$ஶ்சைவ யூத$_2$பை: ஸஹ லக்ஷ்மண ॥ (21)

ஜாம்ப$_3$வேநர்க்ஷபதிநா ஸஹ ஸைந்யேந ஸம்வ்ருத: ।
ஜஹி தம் ராக்ஷஸஸுதம் மாயாப$_3$லவிஶாரத$_3$ம் ॥ (22)

அயம் த்வாம் ஸசிவை: ஸார்த$_4$ம் மஹாத்மா ரஜநீசர: ।
அபி$_4$க்ஞஸ்தஸ்ய தே$_3$ஶஸ்ய ப்ருஷ்ட$_2$தோऽநுக$_3$மிஷ்யதி ॥ (23)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா லக்ஷ்மண: ஸவிபீ$_4$ஷண: ।
ஜக்$_3$ராஹ கார்முகஶ்ரேஷ்ட$_2$மத்யத்$_3$பு$_4$தபராக்ரம: ॥ (24)

ஸந்நத்$_3$த$_4$: கவசீ க$_2$ட்$_3$கீ$_3$ ஸஶரோ ஹேமசாபத்$_4$ருத் ।
ராமபாதா$_3$வுபஸ்ப்ருஶ்ய ஹ்ருஷ்ட: ஸௌமித்ரிரப்$_3$ரவீத் ॥ (25)

அத்$_3$ய மத்கார்முகோந்முக்தா: ஶரா நிர்பி$_4$த்$_3$ய ராவணிம் ।
லங்காமபி$_4$பதிஷ்யந்தி ஹம்ஸா: புஷ்கரிணீமிவ ॥ (26)

அத்$_3$யைவ தஸ்ய ரௌத்$_3$ரஸ்ய ஶரீரம் மாமகா: ஶரா: ।
வித$_4$மிஷ்யந்தி பி$_4$த்த்வா தம் மஹாசாபகு$_3$ணச்யுதா: ॥ (27)

ஸ ஏவமுக்த்வா த்$_3$யுதிமாந் வசநம் ப்$_4$ராதுரக்$_3$ரத: ।
ஸ ராவணிவதா$_4$காங்க்ஷீ லக்ஷ்மணஸ்த்வரிதோ யயௌ ॥ (28)

ஸோऽபி$_4$வாத்$_3$ய கு$_3$ரோ: பாதௌ$_3$ க்ருத்வா சாபி ப்ரத$_3$க்ஷிணம் ।
நிகும்பி$_4$லாமபி$_4$யயௌ சைத்யம் ராவணிபாலிதம் ॥ (29)

விபீ$_4$ஷணேந ஸஹிதோ ராஜபுத்ர: ப்ரதாபவாந் ।
க்ருதஸ்வஸ்த்யயநோ ப்$_4$ராத்ரா லக்ஷ்மணஸ்த்வரிதோ யயௌ ॥ (30)

வாநராணாம் ஸஹஸ்ரைஸ்து ஹநுமாந் ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ।
விபீ$_4$ஷணஶ்ச ஸாமாத்யஸ்ததா$_3$ லக்ஷ்மணமந்வகா$_3$த் ॥ (31)

மஹதா ஹரிஸைந்யேந ஸவேக$_3$மபி$_4$ஸம்வ்ருத: ।
ருக்ஷராஜப$_3$லம் சைவ த$_3$த$_3$ர்ஶ பதி$_2$ விஷ்டி$_2$தம் ॥ (32)

ஸ க$_3$த்வா தூ$_3$ரமத்$_4$வாநம் ஸௌமித்ரிர்மித்ரநந்த$_3$ந: ।
ராக்ஷஸேந்த்$_3$ரப$_3$லம் தூ$_3$ராத$_3$பஶ்யத்$_3$வ்யூஹமாஸ்தி$_2$தம் ॥ (33)

ஸ தம் ப்ராப்ய த$_4$நுஷ்பாணிர்மாயாயோக$_3$மரிந்த$_3$ம: ।
தஸ்தௌ$_2$ ப்$_3$ரஹ்மவிதா$_4$நேந விஜேதும் ரகு$_4$நந்த$_3$ந: ॥ (34)

விபீ$_4$ஷணேந ஸஹிதோ ராஜபுத்ர: ப்ரதாபவாந் ।
அங்க$_3$தே$_3$ந ச வீரேண ததா$_2$நிலஸுதேந ச ॥ (35)

''லட்சுமணா! வானர மன்னனின் படைகள் அனைத்தையும், அனுமான் முதலான வானரத் தலைவர்களையும் உடன் அழைத்துச் செல். கரடி மன்னர் ஜாம்பவானுடைய படையையும் உடன் அழைத்துக் கொண்டு சென்று, மாயப்போரில் வல்லவனான அரக்க அரசனின் புதல்வனைக் கொன்றுவிட்டு வா. (21,22)

நல்லிதயம் கொண்ட இந்த அரக்கன் (விபீஷணன்), அந்தப் பிரதேசத்தைப் பற்றி (நிகும்பிலை இருக்கும் இடத்தைப் பற்றி) நன்கு அறிந்தவன்; தன் அமைச்சர்களோடுகூட உன்னைப் பின்தொடர்ந்து வருவான்.'' (23)

இராமனின் கட்டளையை, விபீஷணனோடு கூடக் கேட்டுக் கொண்டிருந்த, கற்பனைக்கு எட்டாத பேராற்றல் கொண்ட இலக்குவன், ஒரு சிறந்த வில்லைக் கையில் எடுத்துக் கொண்டான். (24)

லட்சுமணன் போர் செய்யச் செல்வதற்கு ஆயத்தமாகி, கவசம் பூண்டு, வாளேந்தி பாணங்களைச் சுமந்து கொண்டு, பொன்மயமான வில்லினைக் கையில் எடுத்துக் கொண்டு, இராமபிரானுடைய திருவடிகளில் விழுந்து வணங்கி பின்வருமாறு கூறினான்— (25)

''இன்றே என் வில்லிலிருந்து செலுத்தப்பட்ட பாணங்கள், இந்திரஜித்தின் உடலைப் பிளந்து சென்று, தாமரைப் பொய்கையில் அன்னங்கள் இறங்குவதைப்போல, இலங்கைப் பட்டணத்தில் போய் விழப் போகின்றன! (26)

பெருவில்லின் நாணிலிருந்து விடுபட்ட என்னுடைய பாணங்கள், இன்றைக்கு அந்தக் கொடியவனின் உடலைத் துளைத்து அழித்துவிடப் போகின்றன.'' (27)

ஒளிமிக்க இலக்குவன், இவ்வாறு தமையனாரிடம் கூறிவிட்டு, இராவண மைந்தனைக் கொல்லும் விருப்பத்துடன் விரைவாகச் சென்றான். (28)

அவன், மூத்த சகோதரரின் சரண கமலங்களில் விழுந்து வணங்கிவிட்டு, வலம் வந்து, இராவண மைந்தனின் காவலில் இருக்கும் நிகும்பிலைக் கோவிலை நோக்கிச் சென்றான். (29)

சகோதரரால் நல்லாசிகள் வழங்கப்பட்ட பேராற்றலுடைய அரசகுமாரனான லட்சுமணன், விபீஷணனோடுகூட வேகமாகச் சென்றான். (30)

பல்லாயிரக்கணக்கான வானரர்களுடன் அனுமானும், அமைச்சர்களோடுகூட விபீஷணனும் இலக்குவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (31)

அளவிட முடியாத வானரப் படையுடன் சென்ற இலக்குவன், வேகமாக முன்னேறிச் செல்லும் போது, ஜாம்பவானுடைய கரடிப் படையை வழியில் கண்டான் (32)

நண்பர்களை மகிழ்விக்கும் இலக்குவன், வெகுதூரம் நடந்து சென்று, அரக்க மன்னனின் படை தொலைவில் அணி வகுத்து நிற்பதைப் பார்த்தான். (33)

பராக்கிரமம் மிக்கவனும், அரச குமாரனும், எதிரிகளை மாய்ப்பவனும், ரகு குலத்தில் உதித்தவனுமான அவன், மாயக்கலையில் நிபுணனான அவனை (இந்திரஜித்தை) நெருங்கி, பிரும்மாவினால் முன்பு கூறப்பட்டதற்கிணங்க, அவனை வெற்றி கொள்வதற்காக, விபீஷணன், வீரனான அங்கதன், அனுமான் ஆகியோர் புடைசூழ, வில்லைக் கையில் ஏந்திக் கொண்டு தக்கதோர் இடத்தில் நின்று கொண்டான். (34,35)

விவித4மமலஶஸ்த்ரபா4ஸ்வரம் தத்3த்4வஜக3ஹநம் விபுலம் மஹாரதை2ஶ்ச ।
ப்ரதிப4யதமமப்ரமேயவேக3ம் திமிரமிவ த்3விஷதாம் ப3லம் விவேஶ ॥ (36)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 பஞ்சாஶீதிதம: ஸர்க3: ॥

ஷட3ஶீதிதம: ஸர்க3:

ராவணிப3லகத3நம்

அத2 தஸ்யாமவஸ்தா2யாம் லக்ஷ்மணம் ராவணாநுஜ: ।
பரேஷாமஹிதம் வாக்யமர்த2ஸாத4கமப்3ரவீத் ॥ (1)

யதே3தத்3ராக்ஷஸாநீகம் மேக4ஶ்யாமம் விலோக்யதே ।
ஏததா3யோத்4யதாம் ஶீக்4ரம் கபிபி4: பாத3பாயுதை4: ॥ (2)

அஸ்யாநீகஸ்ய மஹதோ பே4த3நே யத லக்ஷ்மண ।
ராக்ஷஸேந்த்3ரஸுதோऽப்யத்ர பி4ந்நே த்3ருஶ்யோ ப4விஷ்யதி ॥ (3)

ஸ த்வமிந்த்3ராஶநிப்ரக்2யை: ஶரைரவகிரந் பராந் ।
அபி4த்3ரவாஶு யாவத்3வை நைதத் கர்ம ஸமாப்யதே ॥ (4)

ஜஹி வீர து3ராத்மாநம் மாயாபரமதா4ர்மிகம் ।
ராவணிம் க்ரூரகர்மாணம் ஸர்வலோகப4யாவஹம் ॥ (5)

விபீ4ஷணவச: ஶ்ருத்வா லக்ஷ்மண: ஶுப4லக்ஷண: ।
வவர்ஷ ஶரவர்ஷாணி ராக்ஷஸேந்த்3ரஸுதம் ப்ரதி ॥ (6)

ருக்ஷா: ஶாகா2ம்ருகா3ஶ்சாபி த்3ருமாத்3ரிநக2யோதி4ந: ।
அப்4யதா4வந்த ஸஹிதாஸ்தத3நீகமவஸ்தி2தம் ॥ (7)

ராக்ஷஸாஶ்ச ஶிதைர்பா3ணைரஸிபி4: ஶக்திதோமரை: ।
உத்3யதை: ஸமவர்தந்த கபிஸைந்யஜிகா4ம்ஸவ: ॥ (8)

ஸ ஸம்ப்ரஹாரஸ்துமுல: ஸஞ்ஜக்ஞே கபிரக்ஷஸாம் ।
ஶப்3தே3ந மஹதா லங்காம் நாத3யந் வை ஸமந்தத: ॥ (9)

ஶஸ்த்ரைஶ்ச விவிதா4காரை: ஶிதைர்பா3ணைஶ்ச பாத3பை: ।
உத்3யதைர்கி3ரிஶ்ருங்கை3ஶ்ச கோ4ரைராகாஶமாவ்ருதம் ॥ (10)

தே ராக்ஷஸா வாநரேஷு விக்ருதாநநபா3ஹவ: ।
நிவேஶயந்த: ஶஸ்த்ராணி சக்ருஸ்தே ஸுமஹத்3ப4யம் ॥ (11)

ததை2வ ஸகலைர்வ்ருக்ஷைர்கி3ரிஶ்ருங்கை3ஶ்ச வாநரா: ।
அபி4ஜக்4நுர்நிஜக்4நுஶ்ச ஸமரே ராக்ஷஸர்ஷபா4ந் ॥ (12)

ஒளிவீசும் படைக்கலன்களால் பிரகாசிப்பதும், பதாகைகள் நிறைந்ததும், மகாரதர்கள் கூடியிடிருப்பதும், மிகவும் பயங்கரமானதும், ஒப்பில்லாத செயல்திறன் உடையதும், இருட்டைப்போல் கருமை படர்ந்திருந்ததுமான அந்த எதிரிப் படைக்குள் லட்சுமணன் புகுந்தான். (36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தியாறு

இந்திரஜித்துடன் போர் துவக்கம்

இந்த நிலையில், இராவணனின் தம்பியாகிய விபீஷணன், இலக்குவனை நோக்கி, அவன் மேற்கொண்டுள்ள முயற்சியில் வெற்றியைக் கொடுப்பதும், எதிரிகளுக்குப் பாதகத்தை விளைவிப்பதுமான ஆலோசனையைக் கூறினான்— (1)

''கறுத்த மேகக்கூட்டம் போன்று அரக்கர் சேனை எதிரே காணப்படுகிறதல்லவா, உடனே, அதை நோக்கி, மரங்களை ஆயுதமாகக் கொண்ட வானரர்கள் போரைத் தொடங்கட்டும். (2)

லட்சுமணா! இந்த மாபெரும் படையைத் தகர்ப்பதற்கு நீங்களும் முயற்சி செய்யவேண்டும். அரக்கர் படை சிதறிப் போனால், அரக்க மன்னனுடைய புதல்வன் (அதைப் பொறுக்க மாட்டாமல், தானே போர் புரிவதற்காக வெளியே வந்து) கண்ணில் படுவான். (3)

ஆகவே, வேள்விச் சடங்கு முடிவதற்குள்ளாகவே, இந்திரனின் வஜ்ராயுதத்தைப் போன்ற உங்கள் பாணங்களைப் பொழிந்து, விரைவில் எதிரிகளைத் தாக்குவீராக. (4)

வீரரே! தீயவனும், மாயக்கலை வல்லவனும், அறம் வழுவி நடப்பவனும், கொடுஞ்செயல் புரிபவனும், எல்லா உலக மக்களுக்கும் அச்சத்தைத் தருபவனுமான இராவணனின் புதல்வனை (தயக்கமில்லாமல்) கொல்வீர். (5)

நல்லியல்புகள் கொண்ட லட்சுமணன், விபீஷணனுடைய சொற்களைக் கேட்டதும், அரக்க மன்னனின் மைந்தனைக் குறிவைத்து பாணங்களைப் பொழிந்தான். (6)

மரங்கள்–மலைகள்–நகங்களைக் கொண்டு போர்புரியும் கரடிகளும் வானரர்களும் ஒன்று திரண்டு, எதிரே நிற்கும் அரக்கப் படை மீது தாக்குதல் நடத்தினார்கள். (7)

அரக்கர்களும், வானரப் படையைக் கொல்லும் முனைப்புடன் உயர்த்திப் பிடித்த வாள்கள், வேல்கள், எறிவேல்கள் மற்றும் கூர்மையான பாணங்களால் எதிர்த்தார்கள். (8)

வானர–இராக்கதர்களிடையே ஏற்பட்ட போரினால், பேரொலி எழுந்து, இலங்கைப் பட்டணம் முழுவதிலும் எதிரொலித்து பெருங்குழப்பத்தை உண்டாக்கிற்று. (9)

பலவகையான உருவங்கொண்ட படைக்கலன்கள், கூர்மையான பாணங்கள், பெயர்த்துக் கொண்டு வரப்பட்ட மரங்கள், மலைமுகடுகள் ஆகியவைகளால் அந்தப் பகுதியில் வான்வெளி மறைக்கப்பட்டாதாயிற்று. கோணல்மாணலான (அவலட்சமான) முகமும் கைகளும் கொண்ட அரக்கர்கள், வானரர்கள் மீது பலவகையான படைக்கலன்களைச் செலுத்தி, அவர்களுக்கும் பேரச்சத்தை விளைவித்தார்கள். (10,11)

அவ்வாறே, வானரர்களும் எல்லா வகையான மரங்களாலும், மலைச்சிகரங்களாலும் போர்க்களத்தில் இராக்கதர்களைத் தாக்கினார்கள்; கொன்றும் வீழ்த்தினார்கள். (12)

ருக்ஷவாநரமுக்$_2$யைஸ்ச மஹாகாயைர்மஹாப$_3$லை: ।
ரக்ஷஸாம் வத்$_4$யமாநாநாம் மஹத்$_3$ப$_4$யமஜாயத ॥ (13)

ஸ்வமநீகம் விஷண்ணம் து ஶ்ருத்வா ஶத்ருபி$_4$ரர்தி$_3$தம் ।
உத$_3$திஷ்ட$_2$த து$_3$ர்த$_4$ர்ஷஸ்தத்கர்மண்யநநுஷ்டி$_2$தே ॥ (14)

வ்ருக்ஷாந்த$_4$காராந்நிர்க$_3$த்ய ஜாதக்ரோத$_4$: ஸ ராவணி: ।
ஆருரோஹ ரத$_2$ம் ஸஜ்ஜம் பூர்வயுக்தம் ஸ ராக்ஷஸ: ॥ (15)

ஸ பீ$_4$மகார்முகத$_4$ர: காலமேக$_4$ஸமப்ரப$_4$: ।
ரக்தாஸ்யநயந: க்ருத்$_3$தே$_4$ா ப$_3$பெ$_4$ள ம்ருத்யுரிவாந்தக: ॥ (16)

த்$_3$ருஷ்ட்வைவ து ரத$_2$ஸ்த$_2$ம் தம் பர்யவர்தத தத்$_3$ப$_3$லம் ।
ரக்ஷஸாம் பீ$_4$மவேக$_3$ாநாம் லக்ஷ்மணேந யுயுத்ஸதாம் ॥ (17)

தஸ்மிந் காலே து ஹநுமாநுத்$_3$யம்ய ஸுது$_3$ராஸத$_3$ம் ।
த$_4$ரணீத$_4$ரஸங்காஶோ மஹாவ்ருக்ஷமரிந்த$_3$ம: ॥ (18)

ஸ ராக்ஷஸாநாம் தத் ஸைந்யம் காலாக்$_3$நிரிவ நிர்த$_3$ஹந் ।
சகார ப$_3$ஹுபி$_4$ர்வ்ருக்ஷைர்நி:ஸம்க்ஞம் யுதி$_4$ வாநர: ॥ (19)

வித்$_4$வம்ஸயந்தம் தரஸா த்$_3$ருஷ்ட்வைவ பவநாத்மஜம் ।
ராக்ஷஸாநாம் ஸஹஸ்ராணி ஹநுமந்தமவாகிரந் ॥ (20)

ஶிதஶூலத$_4$ரா: ஶூலைரஸிபி$_4$ஶ்சாஸிபாணய: ।
ஶக்திபி$_4$: ஶக்திஹஸ்தாஶ்ச பட்டஸை: பட்டஸாயுத$_4$ா: ॥ (21)

பரிகை$_4$ஶ்ச க$_3$த$_3$ாபி$_4$ஶ்ச சக்ரைஶ்ச ஶுப$_4$த$_3$ர்ஶநை: ।
ஶதஶஶ்ச ஶதக்$_4$நீபி$_4$ராயஸைரபி முத்$_3$க$_3$ரை: ॥ (22)

கே$_4$ாரை: பரஶ்வதை$_4$ஶ்சைவ பி$_4$ண்டி$_3$பாலைஶ்ச ராக்ஷஸா: ।
முஷ்டிபி$_4$ர்வஜ்ரகல்பைஶ்ச தலைரஶநிஸந்நிபை$_4$: ॥ (23)

அபி$_4$ஜக்$_4$நு: ஸமாஸாத்$_3$ய ஸமந்தாத் பர்வதோபமம் ।
தேஷாமபி ச ஸங்க்ருத்$_3$த$_4$ஶ்சகார கத$_3$நம் மஹத் ॥ (24)

ஸ த$_3$த$_3$ர்ஶ கபிஶ்ரேஷ்ட$_2$மசலோபமமிந்த்$_3$ரஜித் ।
ஸூத$_3$யந்தமமித்ரக்$_4$நமமித்ராந் பவநாத்மஜம் ॥ (25)

ஸ ஸாரதி$_2$முவாசேத$_3$ம் யாஹி யத்ரைஷ வாநர: ।
க்ஷயமேஷ ஹி ந: குர்யாத்$_3$ராக்ஷஸாநாமுபேக்ஷித: ॥ (26)

இத்யுக்த: ஸாரதி$_2$ஸ்தேந யயௌ யத்ர ஸ மாருதி: ।
வஹந் பரமது$_3$ர்த$_4$ர்ஷம் ஸ்தி$_2$தமிந்த்$_3$ரஜிதம் ரதே$_2$ ॥ (27)

பேருடல் கொண்டவர்களும், பெரும் பலசாலிகளுமான கரடி–வானரத் தலைவர்களால் தாக்கப்படும் அரக்கர்களுக்கும் மிகவும் அச்சம் ஏற்பட்டது. (13)

எவராலும் வெற்றி கொள்ள முடியாத இந்திரஜித், தன்னுடைய படை எதிரிகளால் தாக்கப்பட்டு (ஈடு கொடுக்க முடியாமல்) கலக்கத்தோடு இருப்பதை (பணியாளர்கள் மூலம்) கேட்டு, (திகைப்படைந்து) வேள்விச் சடங்கு முடிவதற்குள்ளாகவே எழுந்துவிட்டான். (14)

மரங்களின் அடர்த்தியால் இருள் கவ்வியிருந்த அந்த இடத்திலிருந்து வெளியே வந்த அரக்கன் இந்திரஜித், கோபம் பொங்கியெழ, (குதிரைகள் பூட்டப்பட்டு) முன்னரே ஆயத்தமாக நிறுத்தப்பட்டிருந்த தேரில் ஏறினான். (15)

மிகப்பெரிய வில்லை கைக் கொண்டவனும், கருமுகில் போன்ற வண்ணமுடையவனும், (கோபத்தால்) சிவந்த வாயும் கண்களும் கொண்டவனுமான அவன், நாசகாரியான காலன் போன்றே தோற்றமளித்தான். (16)

இந்திரஜித் தேரில் ஏறி அமர்ந்ததைப் பார்த்ததும், லட்சுமணனுடன் போர் செய்யத் துடித்துக் கொண்டிருந்த பயங்கரமான ஆற்றல் கொண்ட இராக்கதர் படை, அவனைச் சூழ்ந்து கொண்டது. (17)

மலையைப் போன்றவரும், எதிரிகளை அடக்குபவருமான அனுமான், அந்தச் சமயத்தில், எவராலும் பெயர்க்க முடியாத ஒரு பெரிய மரத்தை உயர்த்திப் பிடித்து (எதிரிப் படை மீது) வீசி எறிந்தார். (18)

அவர், இராக்கதப் படையை ஊழிக்காலத் தீ போல எரித்துக் கொண்டு, பல மரங்களால் அவர்களைத் தாக்கி மூர்ச்சையடையச் செய்தார். (19)

வாயுகுமாரர், மிக விரைவாக அரக்கப் படையை நாசம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்ததும், ஆயிரக்கணக்கான இராக்கதர்கள் அவரைத் தாக்கினார்கள். (20)

கூர்மையான சூலங்களைக் கொண்ட அரக்கர்கள் சூலங்களாலும், கையில் வேலாயுதம் பிடித்திருந்தவர்கள் வேல்களாலும், பட்டிசம் என்ற (கத்தியில் ஒரு வகை) ஆயுதத்தைப் பிடித்திருந்தவர்கள் பட்டிசங்களாலும், குண்டாந்தடிகளாலும், கதைகளாலும், அழகிய சக்கராயுதங்களாலும், நூற்றுக்கணக்கான சதக்னிகளாலும், இரும்பாலான உலக்கைகளாலும், பயங்கரமான கோடரிகளாலும், பிண்டிபாலங்களாலும், (கையால் வீசி எறியப்படும்) வேல்களாலும், வஜ்ரம் போன்ற முஷ்டிகளாலும், இடியைப் போன்ற உள்ளங்கைகளாலும் மலை போல் உறுதியாக நின்ற அவரை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள். கோபங்கொண்ட அவரும் (அனுமானும்), அவர்களுக்கு அளவில்லாத சேதத்தை விளைவித்தார். (21–24)

மலையைப் போன்ற பேருடலுடன் விளங்குபவரும் எதிரிகளை மாய்ப்பவரும் வானரோத்தமருமான அனுமான், பகைவர்களான இராக்கதர்களை அழித்துக் கொண்டிருப்பதை இந்திரஜித் பார்த்தான். (25)

அவன் (இந்திரஜித்), தன் தேரோட்டியைப் பார்த்து, ''அந்த வானரன் (அனுமான்) இருக்குமிடத்திற்குப் போ. அவனை அலட்சியமாக விட்டுவிட்டால், அவன் நம்மை அழித்தே விடுவான்'' என்று சொன்னான். (26)

இவ்வாறு கூறப்பட்ட தேரோட்டி, எவராலும் வெல்ல முடியாத இந்திரஜித் வீற்றிருந்த தேரை, அனுமான் இருந்த இடத்தை நோக்கிச் செலுத்தினான். (27)

ஸோऽப்$_4$யுபேத்ய ஶராந் க$_2$ட்$_3$கா$_3$ந் பட்டஸாம்ஶ்ச பரஸ்வதா$_4$ந் ।
அப்$_4$யவர்ஷத து$_3$ர்த$_4$ர்ஷ: கபிமூர்த்$_4$நி ஸ ராக்ஷஸ: ॥ (28)

தாநி ஶஸ்த்ராணி கோ$_4$ராணி ப்ரதிக்$_3$ருஹ்ய ஸ மாருதி: ।
ரோஷேண மஹதாவிஷ்டோ வாக்யம் சேத$_3$முவாச ஹ ॥ (29)

யுத்$_4$யஸ்வ யதி$_3$ ஶூரோऽஸி ராவணாத்மஜ து$_3$ர்மதே ।
வாயுபுத்ரம் ஸமாஸாத்$_3$ய ஜீவந்ந ப்ரதியாஸ்யஸி ॥ (30)

பா$_3$ஹுப்$_4$யாம் ப்ரதியுத்$_4$யஸ்வ யதி$_3$ மே த்$_3$வந்த்$_3$வமாஹவே ।
வேக$_3$ம் ஸஹஸ்வ து$_3$ர்பு$_3$த்$_3$தே$_4$ ததஸ்த்வம் ரக்ஷஸாம் வர: ॥ (31)

ஹநுமந்தம் ஜிகா$_4$ம்ஸந்தம் ஸமுத்$_3$யதஶராஸநம் ।
ராவணாத்மஜமாசஷ்டே லக்ஷ்மணாய விபீ$_4$ஷண: ॥ (32)

ய: ஸ வாஸவநிர்ஜேதா ராவணஸ்யாத்மஸம்ப$_4$வ: ।
ஸ ஏஷ ரத$_2$மாஸ்தா$_2$ய ஹநுமந்தம் ஜிகா$_4$ம்ஸதி ॥ (33)

தமப்ரதிமஸம்ஸ்தா$_2$நை: ஶரை: ஶத்ருவிதா$_3$ரணை: ।
ஜீவிதாந்தகரைர்கோ$_4$ரை: ஸௌமித்ரே ராவணிம் ஜஹி ॥ (34)

இத்யேவமுக்தஸ்து ததா$_3$ மஹாத்மா
விபீ$_4$ஷணேநாரிவிபீ$_4$ஷணேந ।
த$_3$த$_3$ர்ஶ தம் பர்வதஸந்நிகாஶம்
ரணே ஸ்தி$_2$தம் பீ$_4$மப$_3$லம் நத$_3$ந்தம் ॥ (35)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷட$_3$ஶீதிதம: ஸர்க$_3$: ॥

ஸப்தாஶீதிதம: ஸர்க$_3$:

விபீ$_4$ஷணராவணிபரஸ்பரநிந்தா$_3$

ஏவமுக்த்வா து ஸௌமித்ரிம் ஜாதஹர்ஷோ விபீ$_4$ஷண: ।
த$_4$நுஷ்பாணிநமாதா$_3$ய த்வரமாணோ ஜகா$_3$ம ஹ ॥ (1)

அவிதூ$_3$ரம் ததோ க$_3$த்வா ப்ரவிஶ்ய ச மஹத்$_3$வநம் ।
த$_3$ர்ஶயாமாஸ தத்கர்ம லக்ஷ்மணாய விபீ$_4$ஷண: ॥ (2)

நீலஜீமூதஸங்காஶம் ந்யக்$_3$ரோத$_4$ம் பீ$_4$மத$_3$ர்ஶநம் ।
தேஜஸ்வீ ராவணப்$_4$ராதா லக்ஷ்மணாய ந்யவேத$_3$யத் ॥ (3)

இஹோபஹாரம் பூ$_4$தாநாம் ப$_3$லவாந் ராவணாத்மஜ: ।
உபஹ்ருத்ய தத: பஶ்சாத் ஸங்க்$_3$ராமமபி$_4$வர்ததே ॥ (4)

வெல்வதற்குரிய அந்த அரக்கன், அனுமான் அருகில் சென்று, வானரரின் தலையைக் குறிவைத்து பாணங்களையும் கத்திகளையும் பட்டாக்கத்திகளையும் வாள்களையும் கோடரிகளையும் மாரியெனப் பொழிந்தான். (28)

அனுமான், பயங்கரமான அந்த ஆயுதத் தாக்குதலைத் தாங்கிக் கொண்டு, மிகவும் கோபமூட்டப் பெற்றவராகப் பின்வருமாறு கூறினார்— (29)

''கெடுமதி படைத்தவனே! இராவணன் புதல்வனே! நீ, (உண்மையில்) சூரனாக இருந்தால் (தொடர்ந்து) என்னுடன் போர் செய். வாயு மைந்தனை (என்னை) எதிர்த்து வந்துள்ள நீ உயிருடன் திரும்பிச் செல்லப் போவதில்லை! (30)

புத்தி கெட்டவனே! (என்னை ஆயுதங்களால் தாக்கியும் அடக்க முடியவில்லை என்பதை உணர்ந்து கொண்டிருப்பாயே?) சண்டையைத் தொடர விரும்பினால் கைகளால் மல்யுத்தம் செய். அப்போது, என் அடிகளைத் தாங்கிக் கொண்டால், நீ சிறந்த அரக்கன் ஆவாய்!'' (31)

(இந்தச் சொற்களைப் பொருட்படுத்தாமல்,) அனுமானைக் கொல்வதில் முனைப்புக் கொண்டு வில்லை நிமிர்த்திய இராவணனின் புதல்வனைப் பற்றி, விபீஷணன், லட்சுமணனிடம் கூறினான்— (32)

''இந்திரனையும் வெற்றிகொண்டவனான இந்த இராவண மைந்தன், தேரில் இருந்து கொண்டு, அனுமானைக் கொல்ல விரும்புகிறான். (33)

லட்சுமணரே! (மாவீரனான) அந்த இந்திரஜித்தை, ஒப்பிலா உறுதி படைத்த, எதிரிகளைப் பிளந்து தள்ளுகிற, உயிரை பறிக்கின்ற பயங்கரமான பாணங்களால் கொல்வீராக.'' (34)

எதிரிகளை நடுங்கச் செய்யும் விபீஷணன் இவ்வாறு கூறியதும், பேராற்றல் கொண்ட இலக்குவன், தேரில் வீற்றிருந்தவனும் மலையைப்போல் பேருருவம் கொண்டவனும் பயங்கரமான பலம் பெற்றவனும் வெல்ல முடியாதவனுமான அவனை (இந்திரஜித்தை), நேரில் கண்களால் பார்த்தான். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தேழு

விபீஷணன்–இந்திரஜித் இகழ் உரை

மேற்கண்டவாறு இலக்குவனைப் பார்த்துக் கூறிவிட்டு, (வேள்வியை முடிக்காமலே இந்திரஜித் வெளியே வரப் போகிறான் என்ற எண்ணத்தால்) மகிழ்ச்சி கொண்ட விபீஷணன் கையில் வில்லேந்திய அவனை அழைத்துக் கொண்டு (இந்திரஜித் இருந்த இடம் நோக்கி) வேகமாகச் சென்றான். (1)

சிறிதுதூரம் சென்றதும், அடர்த்தியான மரத்தோப்புக்குள் புகுந்து, வேள்விச் சடங்கு நடைபெறுவதை விபீஷணன், லட்சுமணனுக்குக் காட்டினான். (2)

அறிவாற்றல் கொண்ட இராவணன் தம்பி (விபீஷணன்), நீருண்ட மேகம் போல் கருமையாக இருந்ததும், பயங்கரத் தோற்றமுடையதுமான ஓர் ஆலமரத்தை லட்சுமணனுக்குக் காட்டி பின்வருமாறு விளக்கினான்— (3)

''பெரும்பலசாலியான இராவண குமாரன், (அனுஷ்டான முறைப்படி) இந்த மரத்தடியில் சிறுதேவதைகளுக்குப் பலி அளித்துவிட்டுப் பின்னர் போருக்குப் புறப்படுவான். (4)

அத்$_3$ருஶ்ய: ஸர்வபூ$_4$தாநாம் ததோ ப$_4$வதி ராக்ஷஸ: ।
நிஹந்தி ஸமரே ஶத்ரூந் ப$_3$த்$_4$நாதி ச ஶரோத்தமை: ॥ (5)

தமப்ரவிஷ்டந்யக்$_3$ரோத$_4$ம் ப$_3$லிநம் ராவணாத்மஜம் ।
வித்$_4$வம்ஸய ஶரைஸ்தீக்ஷ்ணை: ஸரத$_2$ம் ஸாஶ்வஸாரதி$_2$ம் ॥ (6)

ததே$_2$த்யுக்த்வா மஹாதேஜா: ஸௌமித்ரிர்மித்ரநந்த$_3$ந: ।
ப$_3$பூ$_4$வாவஸ்தி$_2$தஸ்தத்ர சித்ரம் விஸ்ப$_2$ாரயந் த$_4$நு: ॥ (7)

ஸ ரதே$_2$நாக்$_3$நிவர்ணேந ப$_3$லவாந் ராவணாத்மஜ: ।
இந்த்$_3$ரஜித் கவசீ த$_4$ந்வீ ஸத்$_4$வஜ: ப்ரத்யத்$_3$ருஶ்யத ॥ (8)

தமுவாச மஹாதேஜா: பௌலஸ்த்யமபராஜிதம் ।
ஸமாஹ்வயே த்வாம் ஸமரே ஸம்யக்$_3$யுத்$_3$த$_4$ம் ப்ரயச்ச$_2$ மே ॥ (9)

ஏவமுக்தோ மஹாதேஜா மநஸ்வீ ராவணாத்மஜ: ।
அப்$_3$ரவீத் பருஷம் வாக்யம் தத்ர த்$_3$ருஷ்ட்வா விபீ$_4$ஷணம் ॥ (10)

இஹ த்வம் ஜாதஸம்வ்ருத்$_3$த$_4$: ஸாக்ஷாத்$_3$ப்$_4$ராதா பிதுர்மம ।
கத$_2$ம் த்$_3$ருஹ்யஸி புத்ரஸ்ய பித்ருவ்யோ மம ராக்ஷஸ ॥ (11)

ந க்ஞாதித்வம் ந ஸௌஹார்த$_3$ம் ந ஜாதிஸ்தவ து$_3$ர்மதே ।
ப்ரமாணம் ந ச ஸோத$_3$ர்யம் ந த$_4$ர்மோ த$_4$ர்மதூ$_3$ஷண ॥ (12)

ஶோச்யஸ்த்வமஸி து$_3$ர்பு$_3$த்$_3$தே$_4$ நிந்த$_3$நீயஶ்ச ஸாது$_4$பி$_4$: ।
யஸ்த்வம் ஸ்வஜநமுத்ஸ்ருஜ்ய பரப்$_4$ருத்யத்வமாக$_3$த: ॥ (13)

நைதச்சி$_2$தி$_2$லயா பு$_3$த்$_3$த்$_4$யா த்வம் வேத்ஸி மஹத$_3$ந்தரம் ।
க்வ ச ஸ்வஜநஸம்வாஸ: க்வ ச நீசபராஶ்ரய: ॥ (14)

கு$_3$ணவாந் வா பரஜந: ஸ்வஜநோ நிர்கு$_3$ணோऽபி வா ।
நிர்கு$_3$ண: ஸ்வஜந: ஶ்ரேயாந் ய: பர: பர ஏவ ஸ: ॥ (15)

ய: ஸ்வபக்ஷம் பரித்யஜ்ய பரபக்ஷம் நிஷேவதே ।
ஸ ஸ்வபக்ஷே க்ஷயம் ப்ராப்தே பஶ்சாத்தைரேவ ஹந்யதே ॥ (16)

நிரநுக்ரோஶதா சேயம் யாத்$_3$ருஶீ தே நிஶாசர ।
ஸ்வஜநேந த்வயா ஶக்யம் பருஷம் ராவணாநுஜ ॥ (17)

இத்யுக்தோ ப்$_4$ராத்ருபுத்ரேண ப்ரத்யுவாச விபீ$_4$ஷண: ।
அஜாநந்நிவ மச்சீ$_2$லம் கிம் ராக்ஷஸ விகத்த$_2$ஸே ॥ (18)

(பரிவார தேவதைகளுக்குப் பலி கொடுத்துவிட்டால், வேள்வி நிறைவேறியதாகிவிடும்.) அந்த அரக்கன், எந்தப் பிராணிகளின் கண்ணிலும் புலனாகாதவனாக ஆகிவிடுவான்; போரில் எதிரிகளைக் கொல்வான்; உத்தமமான பாணங்களால் அவர்களைக் கட்டிப் போடுவான். (5)

(கோவிலுக்கு உள்ளேயிருந்து வெளியே வரப்போகும்) இராவணனின் புதல்வன், ஆலமரத்தடிக்குப் போய்ச் சேருவதற்கு முன், கூரிய அம்புகளால் தேர்–குதிரை–தேர்ப்பாகனோடு கூட அவனைக் கொன்றுவிட வேண்டும்.'' (6)

எல்லையில்லா ஆற்றல் கொண்டவனும், நண்பர்களை மகிழ்விப்பவனுமான லட்சுமணன், 'அவ்வாறே செய்கிறேன்' என்று பதில் சொல்லிவிட்டு, அதிசயமான தன் வில்லில் நாணொலி எழுப்பி, (இந்திரஜித்தை எதிர்கொள்வதற்கு) ஆயத்தமாக நின்றான். இந்தச் சமயத்தில், பலம் பொருந்திய இந்திரஜித், அக்னியைப் போல் பேரொளி வீசும் தேரில், கவசம் அணிந்து, கையில் கத்தியைத் தாங்கி, கொடியுடன் கூட வருபவனாகக் கண்களில் பட்டான். (7,8)

அளவில்லா ஆற்றல் கொண்ட லட்சுமணன், போரில் வெல்ல முடியாதவனும் புலஸ்திய குலத் தோன்றலுமான அவனைப் பார்த்து, ''என்னுடன் போருக்கு வரும்படி உன்னை அழைக்கின்றேன்; மாயை இல்லாத நேரான முறையில் என்னுடன் சண்டையிடு!'' (9)

அளவு கடந்த வீரம் படைத்தவனும் மன உறுதி கொண்டவனுமான இராவண மைந்தன், (லட்சுமணனின் அருகில்) விபீஷணன் நிற்பதைப் பார்த்ததும், கடுமையான சொற்களால் சாடினான்— (10)

''அரக்கனே! நீ இங்குதான் (இலங்கையில்) பிறந்து வளர்ந்து பெரியவன் ஆனாய். சந்தேகத்திற்கிடமில்லாமல் என்னுடைய தந்தையின் சகோதரர்; என்னுடைய சிற்றப்பன். (அதாவது, நான் உனக்கு மகன் முறை.) மகனுக்கே துரோகம் செய்ய எவ்வாறு துணிந்தாய்? (நீ காட்டிக் கொடுத்திராவிட்டால், லட்சுமணனுக்கு நிகும்பிலை எப்படித் தெரியும்?) (11)

குலமுறைப் பண்புகளை கைவிட்டவனே! கெடுமதி கொண்டவனே! உனக்குப் பங்காளி என்ற ஒட்டுதல் கிடையாது; உறவுப் பாசம் இல்லை; இனப்பற்று இல்லை; உடன் பிறந்தவன் என்ற நேசம் இல்லை. (12)

கெடுமதி கொண்டவனே! நீ அனுதாபத்திற்குரியவன்; சான்றோர்களால் இழிந்துரைக்கத் தக்கவன். தன் இனத்தாரை விட்டு, பிறனுக்கு அடிமையாகப் போயிருக்கிறாயே! (13)

தன் குலத்தாரோடு கூடி மகிழ்ந்திருத்தல், அற்பனான வேற்றானுடன் சேர்ந்து சேவகம் செய்தல் ஆகிய இவை இரண்டுக்குமிடையேயுள்ள பெரிய வித்தியாசத்தை, புத்தி தடுமாறிய உன்னால் அறிய முடியவில்லை. (14)

வேற்றான் குணசாலியாக இருந்தாலும், தன் மக்கள் குணமற்றவர்களாக இருந்தாலும், தன் இனத்தாரோடு இருப்பதே சிறந்தது; வேற்றான் எப்போதும் வேற்றானே. (ஒருபோதும் தன்னவன் ஆக மாட்டான்.) (15)

தன் இன மக்களை விட்டுவிட்டு, வேறொரு இனத்தாருடன் சேர்ந்து அவர்களுக்குத் தொண்டு செய்கிறானோ, (ஆபத்துக் காலங்களில்) தன் மக்களைக் காட்டிக் கொடுக்கிறானோ, அவன் தன் குலத்தினர் எதிரிகளால் அழிக்கப்பட்ட பின்னர், அவர்களாலேயே (வேற்றானாலேயே) மாய்க்கப்படுகிறான். அரக்கனே! இராவணனின் தம்பியே! (மகன் முறையான என்னையே காட்டிக் கொடுக்கும்) உன் இரக்கமில்லாத கொடுமையான கல் நெஞ்சம், நம் இனத்தவரில் உன் ஒருவனிடமே இருக்க முடியும்!'' (16,17)

அண்ணனின் புதல்வன் இவ்வாறு கூறி முடித்ததும், விபீஷணன் பதில் சொன்னான்— ''அரக்கனே! என் குண இயல்பை அறியாதவன்போல் ஏன் இப்படிப் பிதற்றுகிறாய்? (18)

ராக்ஷஸேந்த்$_3$ரஸுதாஸாதே$_4$ா பாருஷ்யம் த்யஜ கெ$_3$ளரவாத் ।
குலே யத்$_3$யப்யஹம் ஜாதோ ரக்ஷஸாம் க்ரூரகர்மணாம் ॥
கு$_3$ணோऽயம் ப்ரத$_2$மோ ந்ருணாம் தந்மே ஶீலமராக்ஷஸம் ॥ (19)

ந ரமே தா$_3$ருணேநாஹம் ந சாத$_4$ர்மேண வை ரமே ।
ப்$_4$ராத்ரா விஷமஶீலேந கத$_2$ம் ப்$_4$ராதா நிரஸ்யதே ॥ (20)

த$_4$ர்மாத் ப்ரச்யுதஶீலம் ஹி புருஷம் பாபநிஶ்சயம் ।
த்யக்த்வா ஸுக$_2$மவாப்நோதி ஹஸ்தாதா$_3$ஶீவிஷம் யத$_2$ா ॥ (21)

ஹிம்ஸாபரஸ்வஹரணே பரதா$_3$ராபி$_4$மர்ஶநம் ।
த்யாஜ்யமாஹுர்து$_3$ராசாரம் வேஶ்ம ப்ரஜ்வலிதம் யத$_2$ா ॥ (22)

பரஸ்வாநாம் ச ஹரணம் பரதா$_3$ராபி$_4$மர்ஶநம் ।
ஸுஹ்ருதா$_3$மதிஶங்கா ச த்ரயோ தோ$_3$ஷா: க்ஷயாவஹா: ॥ (23)

மஹர்ஷீணாம் வதே$_4$ா கோ$_4$ர: ஸர்வதே$_3$வைஶ்ச விக்$_3$ரஹ: ।
அபி$_4$மாநஶ்ச கோபஶ்ச வைரித்வம் ப்ரதிகூலதா ॥ (24)

ஏதே தோ$_3$ஷா மம ப்$_4$ராதுர்ஜீவிதைஶ்வர்யநாஶநா: ।
கு$_3$ணாந் ப்ரச்சா$_2$த$_3$யாமாஸு: பர்வதாநிவ தோயதா$_3$: ॥ (25)

தோ$_3$ஷைரேதை: பரித்யக்தோ மயா ப்$_4$ராதா பிதா தவ ।
நேயமஸ்தி புரீ லங்கா ந ச த்வம் ந ச தே பிதா ॥ (26)

அதிமாநீ ச பா$_3$லஶ்ச து$_3$ர்விநீதஶ்ச ராக்ஷஸ ।
ப$_3$த்$_3$த$_4$ஸ்த்வம் காலபாஶேந ப்$_3$ரூஹி மாம் யத்$_3$யதி$_3$ச்ச$_2$ஸி ॥ (27)

அத்$_3$ய தே வ்யஸநம் ப்ராப்தம் கிம் மாம் த்வமிஹ வக்ஷ்யஸி ।
ப்ரவேஷ்டும் ந த்வயா ஶக்யோ ந்யக்$_3$ரோதே$_4$ா ராக்ஷஸாத$_4$ம ॥ (28)

த$_4$ர்ஷயித்வா ச காகுத்ஸ்தெ$_2$ள ந ஶக்யம் ஜீவிதும் த்வயா ।
யுத்$_4$யஸ்வ நரதே$_3$வேந லக்ஷ்மணேந ரணே ஸஹ ॥
ஹதஸ்த்வம் தே$_3$வதாகார்யம் கரிஷ்யஸி யமக்ஷயே ॥ (29)

நித$_3$ர்ஶய ஸ்வாத்மப$_3$லம் ஸமுத்$_3$யதம்
குருஷ்வ ஸர்வாயுத$_4$ஸாயகவ்யயம் ।
ந லக்ஷ்மணஸ்யைத்ய ஹி பா$_3$ணகோ$_3$சரம்
த்வமத்$_3$ய ஜீவந் ஸப$_3$லோ க$_3$மிஷ்யஸி ॥ (30)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஸப்தாஶீதிதம: ஸர்க$_3$: ॥

அற்பனே! அரக்க மன்னன் புதல்வனே! சிற்றப்பனாகிய என் மீது கடுமையான சொற்களை வீசுவதை நிறுத்திக் கொள். கொடூரமான செயல்களைச் செய்யும் இராக்கதர் குலத்தில் நான் பிறந்தேனாயினும், என்னுடைய இயல்பு அரக்கத் தன்மையது அல்ல. மானுடர்களின் முக்கிய குணமான சத்துவ குணத்தை நான் கைக்கொண்டு, அதன்படி ஒழுகி வருகிறேன். (19)

கொடுஞ்செயல்களில் என் மனம் களிப்படைவதில்லை; அறம் பிறழ்ந்த செயல்களில் நான் ஈடுபட்டதில்லை. அப்படியிருந்தும், முறை தவறிய ஒழுக்கம் கொண்ட (பெரிய) சகோதரனால், (சிறிய) சகோதரன் வெளியேற்றப்பட்டதில் என்ன நியாயம் இருக்கிறது? மன அமைதியைப் பெற விரும்புகிறவன், கையைச் சுற்றியுள்ள விஷப்பாம்பை உதறித் தள்ளி விடுவதைப் போல, அறநெறியிலிருந்து வழுவிய ஒழுக்கமுடையவனும், பாவம் செய்வதிலேயே உறுதியாக இருப்பவனுமான ஒருவனைத் துறந்து வெளியேறுபவன் சுகத்தை அடைகிறான். (20,21)

தீப்பற்றி எரியும் வீட்டைத் துறந்து வெளியேறுவதைப்போல பிறரைத் துன்புறுத்துதல், பிறர் செல்வத்தைக் கவருதல், பிறர் மனைவியை விரும்புதல் ஆகிய தீய நடத்தையை மேற்கொண்டுள்ள ஒருவனைக் கைவிட்டுவிட வேண்டும் என்று திருநெறியாளர்கள் கூறுகிறார்கள். பிறர் பொருளைக் கையாடுதல், பிறர் மனைவியை விரும்புதல், நல்ல நண்பர்களை மிகவும் சந்தேகித்தல் ஆகிய மூன்று குற்றங்களும் நாசத்தை விளைவிப்பன. (22,23)

மாமுனிவர்களைக் கொடூரமாகக் கொலை செய்வது, எல்லா தேவர்களுடனும் சச்சரவு, இறுமாப்பு, சினம், பகைமை, அறநெறி தவறி நடப்பது – இந்தக் குற்றங்கள் என் சகோதரனின் உயிரையும் செல்வச் செழிப்பையும் அழிக்க வல்லன. மேகங்கள், மலைகளை மறைப்பதைப் போல (என் அண்ணனிடம் விளங்கும் நற்குணங்களை, இந்தக் குறைகள்) மறைத்துவிட்டன. (24,25)

என் தமையனாரும் உன் தந்தையுமான அவரிடம் (இராவணன்) மேற்சொன்ன குற்றங்கள் இருந்ததால், அவரை நான் துறந்தேன். (இப்போதுள்ள நிலையை சிந்தித்துப் பார். இலங்கையைத் தீயிட்டுக் கொளுத்திய அனுமானும், ஜனஸ்தானத்தில் பதினான்காயிரம் இராக்கதர்களைத் தனி ஒருவராக நின்று எதிர்த்து நிர்மூலமாக்கிய இராமபிரானும், லட்சுமண–சுக்ரீவர்களும் வந்திருக்கிறார்கள்) இனி, இந்த இலங்கைப் பட்டணம் இருக்கப் போவதில்லை; நீயும் இருக்க மாட்டாய்; உன் தந்தையும் இருக்க மாட்டார்! (26)

அரக்கனே! நீ மிகவும் அகந்தை கொண்டவன்; வாழ்வியல் அறியாத சிறுவன்; மூர்க்கன்; காலபாசத்தால் கட்டுண்டவன்! நீ, என்னை என்னென்னவெல்லாம் சொல்லி ஏச விரும்புகிறாயோ, அவ்வாறெல்லாம் சொல்லிவிடு. அரக்கப்பதரே! உன் உயிருக்கு இப்போது பேராபத்து வந்திருக்கிறது. அதனால், என்னைப் பார்த்து எதை வேண்டுமானாலும் பேசுவாய்! இப்போது, நீ ஆல மரத்தை அடையப் போவதில்லை. (அதற்குள் நீ அழிந்து விடுவாய்!) (27,28)

காகுத்த குலத் தோன்றல்களான இருவரையும் எதிர்த்துப் போரிட்டு, உன்னால் உயிர் தப்ப முடியாது! இப்போது, புருஷோத்தமரான லட்சுமணனுடன் போர் புரிந்து பார். நீ மாய்க்கப்பட்டு, யமலோகம் சென்று, யமதூதனாகப் பணி செய்யப் போகிறாய். (29)

முழுமையாகப் பெருகி நிற்கும் உன்னுடைய பலத்தை வெளிப்படுத்து; உன்னிடமுள்ள எல்லாப் படைக்கலன்களையும் பாணங்களையும் செலுத்து. (அப்படியும் நீ வெற்றியடைய மாட்டாய்!) லட்சுமணன் உன்னைக் குறி வைத்து, பாணத்தை விட்டால் போதும்! இன்று, நீயும் உன் படையும் உயிருடன் திரும்பிப் போகப் போவதில்லை!'' (30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஷ்டாஶீதிதம: ஸர்க$_3$:

ஸௌமித்ரிராவணியுத்$_3$த$_4$ம்

விபீ$_4$ஷணவச: ஶ்ருத்வா ராவணி: க்ரோத$_4$மூர்சி$_2$த: ।
அப்$_3$ரவீத் பருஷம் வாக்யம் வேகே$_3$நாப்$_4$யுத்பபாத ஹ ॥ (1)

உத்$_3$யதாயுத$_4$நிஸ்த்ரிம்ஶோ ரதே$_2$ ஸுஸமலங்க்ருதே ।
காலாஶ்வயுக்தே மஹதி ஸ்தி$_2$த: காலாந்தகோபம: ॥ (2)

மஹாப்ரமாணமுத்$_3$யம்ய விபுலம் வேக$_3$வத்$_3$த்$_3$ருட$_4$ம் ।
த$_4$நுர்பீ$_4$மம் பராம்ருஶ்ய ஶராம்ஶ்சாமித்ரஶாதநாந் ॥ (3)

தம் த$_3$த$_3$ர்ஶ மஹேஷ்வாஸோ ரதே$_2$ ஸுஸமலங்க்ருத: ।
அலங்க்ருதமமித்ரக்$_4$நம் ராக$_4$வஸ்யாநுஜம் ப$_3$லீ ॥
ஹநுமத்ப்ருஷ்ட$_2$மாஸீநமுத$_3$யஸ்த$_2$ரவிப்ரப$_4$ம் ॥ (4)

உவாசைநம் ஸமாரப்$_3$த$_4$: ஸௌமித்ரிம் ஸவிபீ$_4$ஷணம் ।
தாந்ஶ்ச வாநரஶார்தூ$_3$லாந் பஶ்யத்$_4$வம் மே பராக்ரமம் ॥ (5)

அத்$_3$ய மத்கார்முகோத்ஸ்ருஷ்டம் ஶரவர்ஷம் து$_3$ராஸத$_3$ம் ।
முக்தம் வர்ஷமிவாகாஶே வாரயிஷ்யத$_2$ ஸம்யுகே$_3$ ॥ (6)

அத்$_3$ய வோ மாமகா பா$_3$ணா மஹாகார்முகநி:ஸ்ருதா: ।
வித$_4$மிஷ்யந்தி கா$_3$த்ராணி தூலராஶிமிவாநல: ॥ (7)

தீக்ஷ்ணஸாயகநிர்பி$_4$ந்நாஞ்ஶூலஶக்த்ய்ருஷ்டிதோமரை: ।
அத்$_3$ய வோ க$_3$மயிஷ்யாமி ஸர்வாநேவ யமக்ஷயம் ॥ (8)

க்ஷிபத: ஶரவர்ஷாணி க்ஷிப்ரஹஸ்தஸ்ய மே யுதி$_4$ ।
ஜீமூதஸ்யேவ நத$_3$த: க: ஸ்தா$_2$ஸ்யதி மமாக்$_3$ரத: ॥ (9)

ராத்ரியுத்$_3$தே$_4$ மயா பூர்வம் வஜ்ராஶநிஸமை: ஶரை: ।
ஶாயிதௌ ஸ்தோ$_2$ மயா பூ$_4$மௌ விஸம்க்ஞௌ ஸபுர:ஸரௌ ॥ (10)

ஸ்ம்ருதிர்ந தேऽஸ்தி வா மந்யே வ்யக்தம் வா யமஸாத$_3$நம் ।
ஆஶீவிஷமிவ க்ருத்$_3$த$_4$ம் யந்மாம் யோத்$_3$து$_4$ம் வ்யவஸ்தி$_2$த: ॥ (11)

தச்ச்$_2$ருத்வா ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய க$_3$ர்ஜிதம் லக்ஷ்மணஸ்ததா$_3$ ।
அபீ$_4$தவத$_3$ந: க்ருத்$_3$தோ$_4$ ராவணிம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (12)

உக்தஶ்ச து$_3$ர்க$_3$ம: பார: கார்யாணாம் ராக்ஷஸ த்வயா ।
கார்யாணாம் கர்மணா பாரம் யோ க$_3$ச்ச$_2$தி ஸ புத்$_3$தி$_4$மாந் ॥ (13)

ஸர்க்கம் : எண்பத்தெட்டு

இந்திரஜித்தும் லட்சுமணனும் போரிடுதல்!

விபீஷணனின் சொற்களைக் கேட்ட இந்திரஜித், கோபம் பொங்கியெழ, கடுமையான வார்த்தைகளைக் கூறினான். ஆவேசத்துடன் துள்ளிக் குதித்து எதிரே வந்து நின்றான். (1)

கருநிறம் கொண்ட குதிரைகள் பூட்டப்பட்ட, மிகச்சிறந்த, நன்றாக அலங்கரிக்கப்பட்ட தேரில், வாள் முதலான பல ஆயுதங்களை வைத்துக் கொண்டு ஊழிக்கால யமன்போல் வீற்றிருந்தான். (2)

பயங்கரமான ஆற்றல் கொண்ட அவன், பேருருவம் கொண்டதும், நீளமானதும், உறுதியானதும், சக்தியுடையதுமான வில்லையும், எதிரிகளைக் கொல்ல வல்லவையான பாணங்களையும் வைத்துக் கொண்டு, போருக்குத் தயாராக இருந்தான். (3)

ஆடை—அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டவனும், வில்லாளியுமான இராவண குமாரன், ஆண்மை மிக்கவனும் வீரத்திருவினால் பொலிவுற்றவனும் எதிரிகளை மாய்ப்பவனுமான இராமனின் தம்பி இலக்குவன், அனுமானின் அருகில், உதயகிரியில் பிரகாசிக்கும் சூரியனைப்போல் விளங்குவதைத் தேரிலிருந்தபடியே பார்த்தான். (4)

(லட்சுமணனைப் பார்த்ததுமே) ஆவேசம் கொண்ட அவன், விபீஷணனுடன் இருக்கும் இலக்குவனையும் வானரர்களையும் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''இப்போது, எல்லையற்ற என் போராற்றலைக் கண்கூடாகக் காணுங்கள். (5)

இப்போது, வானத்திலிருந்து பொழியும் மழையைப்போல் என் வில்லிலிருந்து செலுத்தப்படும் பொறுத்துக் கொள்ள முடியாத அம்புப் பொழிவைத் தடுப்பீர்! பஞ்சுப்பொதியை நெருப்பு எரித்துப் பொசுக்குவது போல, இப்போது என்னுடைய மிகச்சிறந்த வில்லிருந்து புறப்படும் என்னுடைய பாணங்கள், உங்கள் உடல்களை அழிக்கப் போகின்றன. (6,7)

இப்போது, சூலம், வேல், ரிஷ்டி (இருபுறமும் கூரான வாள்), தோமரம் (எறிவேல்) முதலியவைகளாலும் கூரிய பாணங்களாலும், உங்கள் எல்லோருடைய உடல்களையும் துளைத்தெடுத்து, யமன் உலகுக்கு அனுப்பப் போகிறேன். (8)

போரிடும்போது, வெகுவேமாக எனது கைகள் செயல்பட்டு அம்புமாரியைச் செலுத்தும். வீராவேசத்துடன் மேகம் போல் கர்ஜனை செய்வேன்! அப்போது, எவன்தான் என் எதிரில் தைரியமாக நிற்க முடியும்? (9)

முன்பு, இரவு நேரத்தில் போர் நடந்தபோது வஜ்ராயுதத்தையும் இடியையும் போல் பேரழிவு நிகழ்த்தும் திறமை படைத்த, என் பாணங்களால் தாக்கப்பட்டு, (லட்சுமணா!) பரிவாரங்களும் மற்றும் நீங்கள் இருவரும் உணர்விழந்து தரையில் சாய்க்கப்பட்டீர்கள்! (10)

அது, உனக்கு நினைவில்லை போலும்! (அதனால்,) விஷப்பாம்பு போல் சீறிக் கொண்டிருக்கும் என்னுடன் சண்டை போட வந்திருக்கிறாய்! யமனுலகுக்குப் போவது என்று தீர்மானித்து விட்டாயோ?'' (11)

அப்போது, அரக்கத் தலைவனின் அந்த முழக்கத்தைக் கேட்டதும், கோபம் கொண்ட லட்சுமணன் கலக்கமடையாத முகத்துடன் இந்திரஜித்தைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''அரக்கனே! செய்ய முடியாத செயல்களின் முடிவைத்தான், வெற்றுச் சொற்களால் நீ கூறியிருக்கிறாய். காரியத்தை நடத்திக் காட்டுபவன்தான் புத்திசாலி. (வெறும் வாய்ப்பந்தல் போடுபவன் ஒருபோதும் அறிவாளியாக மாட்டான்.) (12,13)

ஸ த்வமர்த$_2$ஸ்ய ஹீநார்தே$_2$ா து$_3$ரவாபஸ்ய கேநசித் ।
வசோ வ்யாஹ்ருத்ய ஜாநீஷே க்ருதார்தே$_2$ாऽஸ்மீதி து$_3$ர்மதே ॥ (14)

அந்தர்த$_4$ாநக$_3$தேநாஜௌ யஸ்த்வயாசரிதஸ்தத$_3$ா ।
தஸ்கராசரிதோ மார்கே$_3$ா நைஷ வீரநிஷேவித: ॥ (15)

யத$_2$ா ப$_3$ாணபத$_2$ம் ப்ராப்ய ஸ்தி$_2$தோऽஹம் தவ ராக்ஷஸ ।
த$_3$ர்ஶயஸ்வாத்$_3$ய தத்தேஜோ வாசா த்வம் கிம் விகத்த$_2$ஸே ॥ (16)

ஏவமுக்தோ த$_4$நுர்பீ$_4$மம் பராம்ருஶ்ய மஹாப$_3$ல: ।
ஸஸர்ஜ நிஶிதாந் ப$_3$ாணாநிந்த்$_3$ரஜித் ஸமிதிஞ்ஜய: ॥ (17)

தே நிஸ்ருஷ்டா மஹாவேக$_3$ா: ஶரா: ஸர்பவிஷோபமா: ।
ஸம்ப்ராப்ய லக்ஷ்மணம் பேது: ஶ்வஸந்த இவ பந்நக$_3$ா: ॥ (18)

ஶரைரதிமஹாவேகை$_3$ர்வேக$_3$வாந் ராவணாத்மஜ: ।
ஸௌமித்ரிமிந்த்$_3$ரஜித்$_3$யுத்$_3$தே$_4$ விவ்யாத$_4$ ஶுப$_4$லக்ஷணம் ॥ (19)

ஸ ஶரைரதிவித்$_3$த$_4$ாங்கே$_3$ா ருதி$_4$ரேண ஸமுக்ஷித: ।
ஶுஶுபே$_4$ லக்ஷ்மண: ஶ்ரீமாந் விதூ$_4$ம இவ பாவக: ॥ (20)

இந்த்$_3$ரஜித்த்வாத்மந: கர்ம ப்ரஸமீக்ஷ்யாதி$_4$க$_3$ம்ய ச ।
விநத்$_3$ய ஸுமஹாநாத$_3$மித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (21)

பத்ரிண: ஶிதத$_4$ாராஸ்தே ஶரா மத்கார்முகச்யுதா: ।
ஆத$_3$ாஸ்யந்தேऽத்$_3$ய ஸௌமித்ரே ஜீவிதம் ஜீவிதாந்தக$_3$ா: ॥ (22)

அத்$_3$ய கே$_3$ாமாயுஸங்க$_4$ாஶ்ச ஶ்யேநஸங்க$_4$ாஶ்ச லக்ஷ்மண ।
க்$_3$ருத்$_4$ராஶ்ச நிபதந்து த்வாம் க$_3$தாஸும் நிஹதம் மயா ॥ (23)

அத்$_3$ய யாஸ்யதி ஸௌமித்ரே கர்ணகே$_3$ாசரதாம் தவ ।
தர்ஜநம் யமதூ$_3$தாநாம் ஸர்வபூ$_4$தப$_4$யாவஹம் ॥ (24)

க்ஷத்ரப$_3$ந்து$_4$: ஸத$_3$ாநார்யோ ராம: பரமது$_3$ர்மதி: ।
ப$_4$க்தம் ப்$_4$ராதரமத்$_3$யைவ த்வாம் த்$_3$ரக்ஷ்யதி மயா ஹதம் ॥ (25)

விஶஸ்தகவசம் பூ$_4$மௌ வ்யபவித்$_3$த$_4$ஶராஸநம் ।
ஹ்ருதோத்தமாங்க$_3$ம் ஸௌமித்ரே த்வாமத்$_3$ய நிஹதம் மயா ॥ (26)

இதி ப்$_3$ருவாணம் ஸம்ரப்$_3$த$_4$ம் பருஷம் ராவணாத்மஜம் ।
ஹேதுமத்$_3$வாக்யமத்யர்த$_2$ம் லக்ஷ்மண: ப்ரத்யுவாச ஹ ॥ (27)

வாக்$_3$ப$_3$லம் த்யஜ து$_3$ர்பு$_3$த்$_3$தே$_4$ க்ரூரகர்மாஸி ராக்ஷஸ ।
அத$_2$ கஸ்மாத்$_3$வத$_3$ஸ்யேதத் ஸம்பாத$_3$ய ஸுகர்மணா ॥ (28)

கெடுமதி கொண்டவனே! நீ காரியத்தைச் செய்யத் தொடங்கவேயில்லை! அதற்குள், 'எவராலும் செய்ய முடியாத காரியத்தை (எதிரிகளை அழிப்பதை)ச் செய்து விட்டேன்!' என்று வீரவசனம் பேசி, எல்லாக் காரியங்களையும் முடித்துவிட்டதாக நினைத்துக் கொண்டுவிட்டாய். (14)

முன்னர் நடந்த போரில், நீ திடீரென்று கண்பார்வையிலிருந்து மறைந்து விட்டாய். இது, திருடர்கள் பின்பற்றும் வழி. வீரர்கள் இம்மாதிரி செய்யமாட்டார்கள். (15)

அரக்கனே! நீ, அம்பைச் செலுத்துவதற்கு வசதியாக, உன் எதிரில் வந்து நிற்கிறேன். இப்போது, உன் ஆற்றலைக் காட்டு. வீண் வார்த்தைகளை ஏன் பிதற்றுகிறாய்?'' (16)

இவ்வாறு, லட்சுமணன் சொல்லி முடித்ததும், போரில் எப்போதும் வெற்றி காண்பவனும் மிகவும் பலசாலியுமான இந்திரஜித், பயங்கரமான தனது வில்லை உறுதியாகப் பற்றி கூர்மையான பாணங்களை விடுத்தான். (17)

அவனால் செலுத்தப்பட்ட, மிக வேகங்கொண்ட, பாம்பின் விஷத்தன்மைக்கு நிகரான பாணங்கள், சீறிப் பாயும் பாம்புகளைப்போல இலக்குவன் மேல் விழுந்தன. (18)

போர்த் துடிப்புடன் இருந்த இராவண மைந்தன் இந்திரஜித், மிகமிக ஆற்றல் படைத்த பாணங்களால் அந்தப் போரில், நல்லியல்பு கொண்ட இலக்குவனைப் பாடாய்ப்படுத்தினான். (19)

பாணங்களால் மிகவும் தாக்கப்பட்டு, புண்ணாகிப்போன உடலிலிருந்து இரத்தம் பெருக நின்ற, வீரத்திரு பொருந்திய லட்சுமணன், புகையில்லாமல் சுவாலை விட்டு எரியும் அக்னியைப் போல் செவ்வண்ணமாய் விளங்கினான். (20)

வெற்றிகரமான அந்த தாக்குதலால் களிப்படைந்த இந்திரஜித், முன்னே சென்று பேரொலி எழுப்பி, பின்வருமாறு கூறினான்— (21)

''லட்சுமணா! எனது வில்லிலிருந்து செலுத்தப்பட்டவைகளும், கூர்மையானவைகளும், இறகுகள் கட்டப்பட்டவைகளும், உயிரைப் பறிக்க வல்லவைகளுமான பாணங்கள், இப்போது உன் உயிரை வாங்கப் போகின்றன. (22)

லட்சுமணா! என்னால் தாக்கப்பட்டு, உயிர் துறந்து கீழே விழப் போகும் உன் உடலை, நரி–பருந்து–கழுகுக் கூட்டங்கள் கொத்தித் தின்னப் போகின்றன! (23)

லட்சுமணா! எல்லாப் பிராணிகளுக்கும் பயத்தை உண்டாக்கக் கூடிய யமதூதர்கள் அதட்டி மிரட்டுவது, இப்போது உன் செவிகளில் விழப் போகிறது! (24)

இராமன், ஒரு க்ஷத்திரியப் பதர்; மேன்மைக் குணங்கள் இல்லாதவன்; மிகவும் தீய எண்ணங்கொண்டவன். அவனது சகோதரனும், அவன்மீது எல்லையில்லா அன்பு கொண்டவனுமான நீ, என்னால் கொல்லப்பட்டுக் கிடப்பதைக் காணப் போகிறான். (25)

உன் கவசம் முறிந்து தரையில் விழப் போகிறது; கையிலுள்ள வில் தொலைவில் தூக்கி எறியப்படப் போகிறது; தலை துண்டிக்கப்படப் போகிறது. லட்சுமணா! இப்போதே நீ என்னால் கொல்லப்படப் போகிறாய்.'' (26)

இவ்வாறு, இராவணன் புதல்வன் கோபாவேசத்துடன் கடுமையாகப் பேசுவதைக் கேட்டு, ஆழ்ந்த பொருள் கொண்டதும் காரண–காரியத்திற்கு இசைவானதுமான சொற்களைக் கொண்டு, லட்சுமணன் பதில் கூறினான்— (27)

''கெடுமதி கொண்டவனே! அரக்கனே! வெறும் சொற்சிலம்பத்தை நிறுத்து. கொடுந்தொழில் புரிபவன் நீ. பின், ஏன் இன்னமும் பேசிக் கொண்டிக்கிறாய்? நீ பேசியபடி, அருஞ்செயலைச் செய்து காட்டு. (28)

அக்ருத்வா கத்த$_2$ஸே கர்ம கிமர்த$_2$மிஹ ராக்ஷஸ ।
குரு தத் கர்ம யேநாஹம் ஶ்ரத்$_3$த$_3$த்$_4$யாம் தவ கத்த$_2$நம் ॥ (29)

அநுக்த்வா பருஷம் வாக்யம் கிஞ்சித$_3$ப்யநவக்ஷிபந் ।
அவிகத்த$_2$ந் வதி$_4$ஷ்யாமி த்வாம் பஶ்ய புருஷாத$_4$ம ॥ (30)

இத்யுக்த்வா பஞ்ச நாராசாநாகர்ணாபூரிதாஞ்ஶிதாந் ।
நிஜக$_4$ாந மஹாவேக$_3$ாந்(ல்)லக்ஷ்மணோ ராக்ஷஸோரஸி ॥ (31)

ஸுபத்ரவாஜிதா ப$_3$ாணா ஜ்வலிதா இவ பந்நக$_3$ா: ।
நைர்ருதோரஸ்யப$_4$ாஸந்த ஸவிதூ ரஶ்மயோ யத$_2$ா ॥ (32)

ஸ ஶரைராஹதஸ்தேந ஸரோஷோ ராவணாத்மஜ: ।
ஸுப்ரயுக்தைஸ்த்ரிபி$_4$ர்ப$_3$ாணை: ப்ரதிவிவ்யாத$_4$ லக்ஷ்மணம் ॥ (33)

ஸ ப$_3$பூ$_4$வ தத$_3$ா பீ$_4$மோ நரராக்ஷஸஸிம்ஹயோ: ।
விமர்த$_3$ஸ்துமுலோ யுத்$_3$தே$_4$ பரஸ்பரஜயைஷிணோ: ॥ (34)

உபெ$_4$ள ஹி ப$_3$லஸம்பந்நாவுபெ$_4$ள விக்ரமஶாலிநெள ।
உப$_4$ாவபி ஸுவிக்ராந்தெள ஸர்வஶஸ்த்ராஸ்த்ரகோவிதெ$_3$ள ॥ (35)

உபெ$_4$ள பரமது$_3$ர்ஜேயாவதுல்யப$_3$லதேஜஸெள ।
யுயுத$_4$ாதே தத$_3$ா வீரேள க்$_3$ரஹாவிவ நபே$_4$ாக$_3$தெள ॥ (36)

ப$_3$லவ்ருத்ராவிவாபீ$_4$தெள யுதி$_4$ தெள து$_3$ஷ்ப்ரத$_4$ர்ஷணெள ।
யுயுத$_4$ாதே மஹாத்மாநெள தத$_3$ா கேஸரிணாவிவ ॥ (37)

ப$_3$ஹூநவஸ்ருஜந்தெள ஹி மார்க$_3$ணெளக$_4$ாநவஸ்தி$_2$தெள ।
நரராக்ஷஸஸிம்ஹெள தெள ப்ரஹ்ருஷ்டாவப்$_4$யயுத்$_4$யதாம் ॥ (38)

ஸுஸம்ப்ரஹ்ருஷ்டெள நரராக்ஷஸோத்தமெள
ஜயைஷிணெள மார்க$_3$ணசாபத$_4$ாரிணெள ।
பரஸ்பரம் தெள ப்ரவவர்ஷதுர்ப்$_4$ருஶம்
ஶரௌக$_4$வர்ஷேண ப$_3$லாஹகாவிவ ॥ (39)

அபி$_4$ப்ரவ்ருத்$_3$தெ$_4$ள யுதி$_4$ யுத்$_3$த$_4$கோவிதெ$_3$ள
ஶராஸிசண்டெ$_3$ள ஶிதஶஸ்த்ரத$_4$ாரிணெள ।
அபீ$_4$க்ஷ்ணமாவிவ்யத$_4$துர்மஹாப$_3$லெள
மஹாஹவே ஶம்ப$_3$ரவாஸவாவிவ ॥ (40)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டாஶீதிதம: ஸர்க$_3$: ॥

அரக்கனே! நீ இதுவரை இங்கு, செய்து காட்டாத காரியத்தைப் பற்றி, தன்னைத்தானே புகழ்ந்து கொள்கிறாய்! வீரப் பிரதாபமாக நீ பேசினாயே, அதைச் செய்து காட்டினால், உன் பேச்சில் எனக்கு நம்பிக்கை ஏற்படும். (29)

மனிதரில் கடையவனே! கடுமையான ஒரு வார்த்தைகூடப் பேசாமல், உன் மேல் குற்றம் சுமத்தாமல், தற்புகழ்ச்சி செய்து கொள்ளாமல், உன்னை மாய்க்கப் போகிறேன்! நீ பார்க்கத்தான் போகிறாய்.'' (30)

லட்சுமணன் இவ்வாறு கூறிவிட்டு, செவிவரை இழுத்து விடப்பட்டவைகளும் கூர்மையானவைகளும் திறன் மிக்கவைகளுமான நாராச பாணங்கள் ஐந்தினை, அரக்கன் மேல் செலுத்தித் தாக்கினான். (31)

அழகிய இறகுகள் கட்டப்பட்ட, மிகவும் வேகமாக செல்லக்கூடிய, பளபளவென்று ஒளிரும் சர்ப்பங்களைப் போன்ற அந்தப் பாணங்கள், அரக்கனின் மார்பில் குத்தி நின்று, சூரிய கிரணங்கள் போல் பிரகாசித்தன. (32)

இலக்குவனின் பாணங்களால் தாக்கப்பட்ட இராவண மைந்தன் கோபம் கொண்டு நன்றாக முடுக்கி விடப்பட்ட மூன்று பாணங்களால், அவனைத் திருப்பித் தாக்கினான். (33)

போரில் ஒருவரையொருவர் வெல்ல விரும்பிய மானுடச் சிங்கத்திற்கும் அரக்கச் சிங்கத்திற்குமிடையே நடந்த அந்தப் போர், பயங்கரமாகவும் குழப்பமாகவும் இருந்தது. (34)

இருவரும் ஆற்றல் நிறைந்தவர்கள்; இருவரும் ஆண்மை மிக்கவர்கள்; இருவரும் சிறந்த போர் வீரர்கள்; எல்லா ஆயுத–அஸ்திரப் பிரயோகத்திலும் நிபுணர்கள். (35)

இருவரும் எவ்விதத்திலும் எவராலும் போரில் வெல்ல முடியாதவர்கள்; இணையற்ற வலிவும் ஆற்றலும் மிக்கவர். வீரர்கள் இருவரும், வானத்தில் இரு கோள்கள் மோதிக் கொள்வதைப் போல் போரிட்டார்கள். (36)

போரில் எதிர்கொள்ள முடியாதவர்களும், இந்திரனையும் விருத்திராசுரனையும் போன்று சிறிதும் அச்சமில்லாதவர்களும், எல்லையற்ற ஆற்றல் படைத்தவர்களுமான அவ்விருவரும் இரண்டு சிங்கங்களைப் போல் தாக்கிக் கொண்டார்கள். (37)

அந்த மாமனிதனும், சிறந்த இராக்கதனும் பலவகையான அம்புமாரியைப் பொழிந்து கொண்டு, உற்சாகமாகப் போர் புரிந்தார்கள். (38)

வில்–அம்புகளைக் கைக் கொண்டவர்களும், போரிடுவதில் மிகவும் உற்சாகம் கொண்டவர்களும், தத்தமக்கே வெற்றியை விரும்பியவர்களுமான, மனித மாமணியும் இராக்கத மாமணியும், இரு மேகங்கள் மோதிப் பெருமழையைப் பொழிவதைப் போல, ஒருவர் மீது ஒருவர் பாணப்பொழிவுகளைப் பொழிந்து கொண்டார்கள். (39)

போரில் முழுமுச்சுடன் ஈடுபட்டவர்களும், போர்க்கலை நிபுணர்களும், அம்பு–வாட்போர்களில் பயங்கரமானவர்களும், கூர்மையான ஆயுதங்களைக் கொண்டவர்களும், மிகவும் பலசாலிகளுமான அவ்விருவரும், சம்பராசுரனும் இந்திரனும் பெரும்போரில் மோதிக் கொள்வதைப்போல இடைவிடாமல் தாக்கிக் கொண்டார்கள். (40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஏகோநநவதிதம: ஸர்க$_3$:

ஸௌமித்ரிஸந்து$_4$க்ஷணம்

தத: ஶரம் த$_3$ாஶரதி$_2$: ஸந்த$_4$ாயாமித்ரகர்ஶந: ।
ஸஸர்ஜ ராக்ஷஸேந்த்$_3$ராய க்ருத்$_3$த$_4$: ஸர்ப இவ ஶ்வஸந் ॥ (1)

தஸ்ய ஜ்யாதலநிர்கே$_4$ாஷம் ஸ ஶ்ருத்வா ராவணாத்மஜ: ।
விவர்ணவத$_3$நோ பூ$_4$த்வா லக்ஷ்மணம் ஸமுதை$_3$க்ஷத ॥ (2)

தம் விவர்ணமுக$_2$ம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸம் ராவணாத்மஜம் ।
ஸௌமித்ரிம் யுத்$_3$த$_4$ஸம்யுக்தம் ப்ரத்யுவாச விபீ$_4$ஷண: ॥ (3)

நிமித்தாந்யநுபஶ்யாமி யாந்யஸ்மிந் ராவணாத்மஜே ।
த்வர தேந மஹாப$_3$ாஹோ ப$_4$க்$_3$ந ஏஷ ந ஸம்ஶய: ॥ (4)

தத: ஸந்த$_4$ாய ஸௌமித்ரிர்ப$_3$ாணாநக்$_3$நிஶிகே$_2$ாபமாந் ।
முமோச நிஶிதாந்ஸ்தஸ்மிந் ஸர்பாநிவ மஹாவிஷாந் ॥ (5)

ஶக்ராஶநிமஸ்பர்ஶைர்லக்ஷ்மணேநாஹத: ஶரை: ।
முஹூர்தமப$_4$வந்மூட$_4$: ஸர்வஸம்க்ஷுபி$_4$தேந்த்$_3$ரிய: ॥ (6)

உபலப்$_4$ய முஹூர்தேந ஸம்ஜ்ஞாம் ப்ரத்யாக$_3$தேந்த்$_3$ரிய: ।
த$_3$த$_3$ர்ஶாவஸ்தி$_2$தம் வீரம் வீரோ த$_3$ஶரத$_2$ாத்மஜம் ॥ (7)

ஸோऽபி$_4$சக்ராம ஸௌமித்ரிம் ரோஷாத் ஸம்ரக்தலோசந: ।
அப்$_3$ரவீச்சைநமாஸாத்$_3$ய புந: ஸ பருஷம் வச: ॥ (8)

கிம் ந ஸ்மரஸி தத்$_3$யுத்$_3$தே$_4$ ப்ரத$_2$மே மத்பராக்ரமம் ।
நிப$_3$த்$_3$த$_4$ஸ்த்வம் ஸஹ ப்$_4$ராத்ரா யத$_3$ா பு$_4$வி விவேஷ்டஸே ॥ (9)

யுவாம் க$_2$லு மஹாயுத்$_3$தே$_4$ ஶக்ராஶநிஸமை: ஶரை: ।
ஶாயிதௌ ப்ரத$_2$மம் பூ$_4$மௌ விஸம்ஜ்ஞௌ ஸபுர:ஸரௌ ॥ (10)

ஸ்ம்ருதிர்வா நாஸ்தி தே மந்யே வ்யக்தம் வா யமஸாத$_3$நம் ।
க$_3$ந்துமிச்ச$_2$ஸி யஸ்மாத்த்வம் மாம் த$_4$ர்ஷயிதுமிச்ச$_2$ஸி ॥ (11)

யதி$_3$ தே ப்ரத$_2$மே யுத்$_3$தே$_4$ ந த்$_3$ருஷ்டோ மத்பராக்ரம: ।
அத்$_3$ய தே த$_3$ர்ஶயிஷ்யாமி திஷ்டே$_2$த$_3$ாநீம் வ்யவஸ்தி$_2$த: ॥ (12)

இத்யுக்த்வா ஸப்தபி$_4$ர்ப$_3$ாணைரபி$_4$வ்யாத$_4$ லக்ஷ்மணம் ।
த$_3$ஶபி$_4$ஸ்து ஹநூமந்தம் தீக்ஷ்ணத$_4$ாரை: ஶரோத்தமை: ॥ (13)

தத: ஶரஶதேநைவ ஸுப்ரயுக்தேந வீர்யவாந் ।
க்ரோத$_4$ாத்$_3$த்$_3$விகு$_3$ணஸம்ரப்$_3$தே$_4$ா நிர்பி$_3$பே$_4$த$_3$ விபீ$_4$ஷணம் ॥ (14)

ஸர்க்கம் : எண்பத்தொன்பது

இந்திரஜித்–இலக்குவன் போர் தொடர்கிறது!

நண்பரல்லாதவரை வாட்டி வதைப்பவனான லட்சுமணன், வெகுண்டெழுந்த சர்ப்பம் போல் சீறிக் கொண்டு, வில்லில் ஒரு பாணத்தைத் தொடுத்து அரக்கத் தலைவன் மீது செலுத்தினான். (1)

லட்சுமணனுடைய வில்லின் நாணோசையைக் கேட்டதுமே, இராவணனின் புதல்வன் முகம் வெளிறி, லட்சுமணனை உற்றுநோக்கினான். (2)

இராவணன் புதல்வனான அந்த அரக்கன், களையிழந்த முகத்துடன் இருப்பதைப் பார்த்து, போரில் முழுக் கவனம் செலுத்தியிருக்கும் லட்சுமணனைப் பார்த்து, விபீஷணன் கூறினான்— (3)

''பெருந்தோளரே! இந்த இராவண மைந்தனிடம் நான் காணும் அடையாளங்களிலிருந்து, இவன் விரைவில் அழியப் போகிறவன் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெரிகிறது. அதனால் விரைந்து செயல்படுங்கள்.'' (4)

அப்போது, இலக்குவன், நெருப்புக் கொழுந்து போன்றவைகளும் கூர்மையானவைகளும் கொடிய விஷங்கொண்ட சர்ப்பங்கள் போன்றவைகளுமான பாணங்களைத் தொடுத்து, அவன் மீது செலுத்தினான். (5)

இலக்குவனால் விடப்பட்ட, இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு ஒப்பான பாணங்களால் தாக்குண்ட அவன், புலன்கள் சிதறி, சிறிது நேரம் எதுவும் செய்யத் தோன்றாதவனாக இருந்தான். (6)

வீரனான அவன் (இந்திரஜித்), சற்று நேரத்திற்குப் பின் சுயநினைவு பெற்று, புலன்கள் செயல்படத் தொடங்கியதும், தசரத மாமன்னரின் மைந்தனும் வீரனுமான அவன் (இலக்குவன்) எதிரே நிற்பதைக் கண்டான். (7)

கண்டதுமே, இவனுடைய கண்கள் கோபத்தால் சிவக்க, அவன் எதிரே போய் நின்றான். அவனை நெருங்கியதும், மறுபடியும் கடுமையான சொற்களைக் கூறத் தொடங்கினான்— (8)

''(லட்சுமணா!) முன்னர் நடந்த முதலாவது போரில், நான் காட்டிய பராக்கிரமத்தை மறந்துபோய் விட்டாயோ! அப்போதும், நீயும் உன் சகோதரனும் (என் அஸ்திரத்தால்) கட்டப்பட்டு தரையில் விழுந்து புரண்டீர்களே? (9)

அப்போது நடந்த கடுமையான போரில், இந்திரனின் வஜ்ராயுதம் போன்ற என் பாணங்களால் தாக்கப்பட்டு, படையின் முன்னணியில் செல்பவர்களுடன்கூட, உணர்விழந்து தரையில் சாய்க்கப்பட்டீர்களே! அந்தோ, பரிதாபம்! (10)

உனக்கு அந்தச் சம்பவம் நினைவில்லையோ? அதனால்தான் யமன் உலகுக்குச் செல்லும் விருப்பங்கொண்டு, என்னை எதிர்க்க வந்திருக்கிறாய் என்பது தெளிவாகத் தெரிகிறது. (11)

முதலில் நடந்த போரில், என் முழு பராக்கிரமத்தை நீ காணவில்லை. இப்போது, உன் கண்ணெதிரே காட்டுகிறேன். கலக்கமடையாமல், போர் செய்யும் உறுதியுடன் நின்று பார்!'' (12)

இவ்வாறு கூறிவிட்டு, ஏழு பாணங்களால் லட்சுமணனையும், (அவனைச் சுமந்து கொண்டிருந்த) அனுமானைக் கூர்மையான முனை கொண்ட, சிறப்பான பத்து பாணங்களாலும் காயப்படுத்தினான். (13)

வீரனான அவன் (இந்திரஜித்), இருமடங்கு கோபாவேசம் கொண்டு, நன்றாகக் குறிபார்த்து விடப்பட்ட நூற்றுக்கணக்கான பாணங்களால் விபீஷணனைத் துளைத்தெடுத்தான். (14)

தத்$_3$த்$_3$ருஷ்ட்வேந்த்$_3$ரஜிதா கர்ம க்ருதம் ராமாநுஜஸ்தத$_3$ா ।
அசிந்தயித்வா ப்ரஹஸந்நேதத் கிஞ்சிதி$_3$தி ப்$_3$ருவந் ॥ (15)

முமோச ஸ ஶராந் கே$_4$ாராந் ஸங்க்$_3$ருஹ்ய நரபுங்க$_3$வ: ।
அபீ$_4$தவத$_3$ந: க்ருத்$_3$தே$_4$ா ராவணிம் லக்ஷ்மணோ யுதி$_4$ ॥ (16)

நைவம் ரணக$_3$தா: ஶூரா: ப்ரஹரந்தே நிஶாசர ।
லக$_4$வஶ்சால்பவீர்யாஶ்ச ஸுக$_2$ா ஹீமே ஶராஸ்தவ ॥ (17)

நைவம் ஶூராஸ்து யுத்$_4$யந்தே ஸமரே ஜயகாங்க்ஷிண: ।
இத்யேவம் தம் ப்$_3$ருவாணஸ்து ஶரவர்ஷைரவாகிரத் ॥ (18)

தஸ்ய ப$_3$ாணை: ஸுவித்$_4$வஸ்தம் கவசம் ஹேமபூ$_4$ஷிதம் ।
வ்யஶீர்யத ரதோ$_2$பஸ்தே$_2$ தாராஜாலமிவாம்ப$_3$ராத் ॥ (19)

விதூ$_4$தவர்மா நாராசைர்ப$_3$பூ$_4$வ ஸ க்ருதவ்ரண: ।
இந்த்$_3$ரஜித் ஸமரே வீர: ப்ரரூட$_4$ இவ ஸாநுமாந் ॥ (20)

தத: ஶரஸஹஸ்ரேண ஸங்க்ருத்$_3$தே$_4$ா ராவணாத்மஜ: ।
பி$_3$பே$_4$த$_3$ ஸமரே வீரம் லக்ஷ்மணம் பீ$_4$மவிக்ரம: ॥ (21)

வ்யஶீர்யத மஹாதி$_3$வ்யம் கவசம் லக்ஷ்மணஸ்ய ச ।
க்ருதப்ரதிக்ருதாந்யோந்யம் ப$_3$பூ$_4$வதுரபி$_4$த்$_3$ருதௌ ॥ (22)

அபீ$_4$க்ஷ்ணம் நி:ஶ்வஸந்தௌ தௌ யுத்$_4$யேதாம் துமுலம் யுதி$_4$ ।
ஶரஸங்க்ருத்தஸர்வாங்கௌ$_3$ ஸர்வதோ ருதி$_4$ரோக்ஷிதௌ ॥ (23)

ஸுதீ$_3$ர்க$_4$காலம் தௌ வீராவந்யோந்யம் நிஶிதை: ஶரை: ।
ததக்ஷதுர்மஹாத்மாநௌ ரணகர்மவிஶாரதௌ$_3$ ॥
ப$_3$பூ$_4$வதுஶ்சாத்மஜயே யத்தௌ பீ$_4$மபராக்ரமௌ ॥ (24)

தௌ ஶரௌகை$_4$ஸ்தத$_3$ா கீர்ணௌ நிக்ருத்தகவசத்$_4$வஜௌ ।
ஸ்ரவந்தௌ ருதி$_4$ரம் சோஷ்ணம் ஜலம் ப்ரஸ்ரவணாவிவ ॥ (25)

ஶரவர்ஷம் ததோ கோ$_4$ரம் முஞ்சதோர்பீ$_4$மநி:ஸ்வநம் ।
ஸாஸாரயோரிவாகாஶே நீலயோ: காலமேக$_4$யோ: ॥ (26)

தயோரத$_2$ மஹாந் காலோ வ்யத்யயாத்$_3$யுத்$_4$யமாநயோ: ।
ந ச தௌ யுத்$_3$த$_4$வைமுக்$_2$யம் ஶ்ரமம் வாப்யுபஜக்$_3$மது: ॥ (27)

அஸ்த்ராண்யஸ்த்ரவித$_3$ாம் ஶ்ரேஷ்டௌ$_2$ த$_3$ர்ஶயந்தௌ புந: புந: ।
ஶராநுச்சாவசாகாராநந்தரிக்ஷே ப$_3$ப$_3$ந்த$_4$து: ॥ (28)

இந்திரஜித் வெளிப்படுத்திய இந்த வீரத்தைக் கண்டு, அதைப் பொருட்படுத்தாமல் இராமனின் தம்பி இகழ்ச்சியாக நகைத்து, 'இது என்ன, பெரிய வீரச்செயலோ?' என்றான். (15)

அத்துடன், புருஷோத்தமனான லட்சுமணன், முகத்தில் சிறிதும் அச்சம் காட்டாமல், கோபம் கொண்டு, அந்த சமர்க்களத்தில் பயங்கரமான பாணங்களைக் கையிலெடுத்து, இந்திரஜித்தைக் குறிவைத்துச் செலுத்தினான். (16)

பின்னர் கூறினான் (இலக்குவன்)— ''அரக்கனே! போர்க்களத்திற்கு வந்து நிற்கும் வீரர்கள், இம்மாதிரியான எளிய தாக்குதலை நடத்த மாட்டார்கள். உன்னுடைய பாணங்கள் மிகவும் இலேசாகவும் சக்தி இல்லாமலும் இருக்கின்றன. (உன் பாணத்தாக்குதலால்) உடலுக்கு சுகமே கிடைக்கிறது! (17)

போரில் வெற்றியை விரும்பும் வீரர்கள் இவ்வளவு இலேசாகப் போர் புரிய மாட்டார்கள்'' என்று சொல்லிவிட்டு, அம்பு மாரிகளால் அவனைத் தாக்கினான். (18)

பொன் வேலைப்பாடுகளால் அழகாக விளங்கிய அவனுடைய கவசம், இலக்குவனின் பாணங்களால் பொடியாக்கப்பட்டு, வானத்திலிருந்து நட்சத்திரக் கூட்டங்கள் விழுவதைப்போல தேர்த்தட்டில் விழுந்தன. (19)

கவசம் சிதைக்கப்பட்டு, நாராச பாணங்களால் உடல் முழுவதும் புண்படுத்தப்பட்ட வீரனான இந்திரஜித், பெருமரங்கள் அடர்ந்த மலைபோல் விளங்கினான். (நாராசங்கள் – மரங்கள்; அவனுடைய பேருடல் – மலை. நாராசங்கள் உடலில் குத்தி நின்றதால், மரங்கள் நிறைந்த மலை போன்ற தோற்றம்.) (20)

அப்போது, பயங்கரமான பிரதாபம் கொண்ட இந்திரஜித், மிகவும் சினங்கொண்டு, ஆயிரக்கணக்கான பாணங்களால் வீரனான இலக்குவனைத் தாக்கினான். (21)

தெய்வத்தன்மை கொண்ட இலக்குவனுடைய கவசம் சிதறி விழுந்தது. இவ்வாறு, ஒருவருக்கு மற்றவர் பதிலடி கொடுத்துத் தாக்கிக் கொண்டார்கள். (22)

அவ்விருவருடைய எல்லா அங்கங்களும் பாணங்களால் பிளவுண்டன; உடலெங்கும் ரத்தம் பெருகிற்று. (வீராவேசத்தால்) அடிக்கடி பெருமூச்சுவிட்டுக் கொண்டு போர்க்களத்தில் அவர்கள் மிகவும் கடுமையாக சண்டையிட்டுக் கொண்டார்கள். மாவீரர்களான அவ்விருவரும் மிக நீண்ட நேரம், கூரிய பாணங்களால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். அளவு கடந்த ஆற்றல் படைத்தவர்களும் போர்க்கலை வல்லுநர்களுமான அவ்விருவரும், தத்தம் பராக்கிரமத்தை வெளிப்படுத்தினார்கள். பயங்கரமான போராற்றல் கொண்ட அவ்விருவரும், தனக்கே வெற்றி கிடைக்கவேண்டும் என்று முனைந்து போரிட்டார்கள். (23,24)

அவர்களுடைய உடல்கள், பாணக்கூட்டங்களால் வியாபிக்கப்பட்டிருந்தன; இருவருடைய கவசங்களும் தேர்க்கொடிகளும் சிதைக்கப்பட்டிருந்தன. இரண்டு அருவிகளிலிருந்து நீர் வழிந்தோடுவதைப்போல, அவர்களுடைய சரீரங்களிலிருந்து வெம்மையான இரத்தம் பெருகி வழிந்தோடிக் கொண்டிருந்தது. (25)

ஊழிக்காலத்தில், நீருண்ட கரியதான இரண்டு மேகங்கள் பெருமழையைப் பொழிவதைப் போல, அவ்விருவரும் பயங்கரமாக இரைச்சலிட்டுக் கொண்டு, பயங்கரமான சரமாரியைப் பொழிந்தார்கள். இவ்வாறு, வெகு நீண்டகாலம் அவர்கள் போரிட்டார்கள். இருப்பினும் அவர்கள் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நினைக்கவுமில்லை; களைப்படையவும் இல்லை. (26,27)

இருவரும் அஸ்திரக் கலையில் மிகவும் கைதேர்ந்தவர்கள். ஆதலால், பலவகையான அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள். ஆகாயத்தில் சிறிய–பெரிய பாணங்களால் சரக்கூடு அமைத்தார்கள். (28)

வ்யபேததே3ாஷமஸ்யந்தௌ லகு4 சித்ரம் ச ஸுஷ்டு2 ச ।
உபெ4ள தௌ துமுலம் கே4ாரம் சக்ரதுர்நரராக்ஷஸௌ ॥ (29)

தயோ: ப்ருத2க் ப்ருத2க் பீ4ம: ஶுஶ்ருவே தலநிஸ்வந: ।
ப்ரகம்பயஞ்ஜநம் கே4ாரோ நிர்க4ாத இவ தா3ருண: ॥ (30)

ஸ தயோர்ப்4ராஜதே ஶப்3த3ஸ்ததா3 ஸமரஸக்தயோ: ।
ஸுகே4ாரயோர்நிஷ்டநதோர்க3க3நே மேக4யோர்யதா2 ॥ (31)

ஸுவர்ணபுங்கை2ர்நாராசைர்ப3லவந்தௌ க்ருதவ்ரணௌ ।
ப்ரஸுஸ்ருவாதே ருதி4ரம் கீர்திமந்தௌ ஜயே த்4ருதௌ ॥ (32)

தே க3ாத்ரயோர்நிபதிதா ருக்மபுங்க2ா: ஶரா யுதி4 ।
அஸ்ருங்நத்3த4ா விநிஷ்பத்ய விவிஶுர்த4ரணீதலம் ॥ (33)

அந்யே ஸுநிஶிதை: ஶஸ்த்ரைராகாஶே ஸஞ்ஜக4ட்டிரே ।
ப3ப4ஞ்ஜுஶ்சிச்சி2து3ஶ்சாந்யே தயோர்பா3ணா: ஸஹஸ்ரஶ: ॥ (34)

ஸ ப3பூ4வ ரணே கே4ாரஸ்தயோர்பா3ணமயஶ்சய: ।
அக்3நிப்4யாமிவ தீ3ப்தாப்4யாம் ஸத்ரே குஶமயஶ்சய: ॥ (35)

தயோ: க்ருதவ்ரணௌ தே3ஹௌ ஶுஶுப4ாதே மஹாத்மநோ: ।
ஸபுஷ்பாவிவ நிஷ்பத்ரௌ வநே ஶால்மலிகிம்ஶுகௌ ॥ (36)

சக்ரதுஸ்துமுலம் கே4ாரம் ஸந்நிபாதம் முஹுர்முஹு: ।
இந்த்3ரஜில்லக்ஷ்மணஶ்சைவ பரஸ்பரவதை4ஷிணௌ ॥ (37)

லக்ஷ்மணோ ராவணிம் யுத்3தே4 ராவணிஶ்சாபி லக்ஷ்மணம் ।
அந்யோந்யம் தாவபி4க்4நந்தௌ ந ஶ்ரமம் ப்ரத்யபத்3யதாம் ॥ (38)

பா3ணஜாலை: ஶரீரஸ்தை2ரவகா3டை4ஸ்தரஸ்விநௌ ।
ஶுஶுப4ாதே மஹாவீர்யௌ ப்ரரூட4ாவிவ பர்வதௌ ॥ (39)

தயோ ருதி4ரஸிக்தாநி ஸம்வ்ருதாநி ஶரைர்ப்4ருஶம் ।
ப3ப்4ராஜு: ஸர்வகா3த்ராணி ஜ்வலந்த இவ பாவகா: ॥ (40)

தயோரத2 மஹாந் காலோ வ்யத்யயாத்3யுத்4யமாநயோ: ।
ந ச தௌ யுத்3த4வைமுக்2யம் ஶ்ரமம் வாப்யுபஜக்3மது: ॥ (41)

அத2 ஸமரபரிஶ்ரமம் நிஹந்தும் ஸமரமுகே2ஷ்வஜிதஸ்ய லக்ஷ்மணஸ்ய ।
ப்ரியஹிதமுபபாத3யந்மஹௌஜா: ஸமரமுபேத்ய விபீ4ஷணோऽவதஸ்தே2 ॥ (42)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகோநநவதிதம: ஸர்க3: ॥

அந்த மானுடனும் அரக்கனும் பாணங்களை வெகுவேகமாகவும், அற்புதமாகவும், கை சளைக்காமல் அழகாகவும், எவ்விதக் குற்றமுமின்றி செலுத்தி, பயங்கரமும் குழப்பமுமான போரைச் செய்து கொண்டிருந்தார்கள். (29)

அவ்விருவருடைய விற்களின் பயங்கரமான நாணோசை, தனித்தனியே கேட்டது. ஆகாயத்திலிருந்து இடிகள் வீழ்வதைப்போல கேட்போருக்கு நடுக்கத்தை உண்டாக்கியது. (30)

போர்ப் போதை கொண்டிருந்த அவ்விருவரின் நாணோசை, ஆகாயத்தில் இரண்டு மேகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதைப் போல செவிகளைத் தாக்கியது. (31)

அவ்விருவரும் கீர்த்தி பெற்றவர்கள்; தத்தம் வெற்றிக்காகக் கடுமையாக செயல்படுபவர்கள். தங்கத்தாலான இறகுகள் பிணைக்கப்பட்ட நாராச பாணங்களால் காயப்படுத்தப்பட்டு, இரத்தத்தைப் பெருக விட்டுக் கொண்டிருந்தார்கள். (32)

போரில், அவர்களால் செலுத்தப்பட்ட பொன்மய இறகு பொருத்தப்பட்ட பாணங்கள், அவர்களது உடலைத் தாக்கி, ரத்தத்தால் நனைந்து வெளியே வந்து, பூமிக்குள் புகுந்து கொண்டன. (33)

அவர்களால் செலுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான பாணங்கள், முன்னரே ஆகாயத்திலிருந்த கூர்மையான படைக்கலன்களுடன் மோதி, அவைகளைப் பிளந்தெறிந்தன. (34)

பயங்கரமான அந்தப் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அவர்களால் விடப்பட்ட பாணங்களின் குவியல், வேள்வியில் கார்ஹபத்ய–ஆஹவனீய குண்டங்களில் கொழுந்து விட்டெரியும் அக்னிக்கு அருகில் வைக்கப்படும் தர்பைக் குவியல் போலிருந்தது. (35)

பேராற்றல் கொண்ட அவ்விருவரின் உடல்களும் வெகுவாகக் காயப்படுத்தப்பட்டிருந்தன. (காயங்களிலிந்து செந்நீர் ஒழுகிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியைப் பார்த்தபோது,) காட்டில் இலைகள் உதிர்ந்து, செந்நிற புஷ்பங்களோடு கூடிய இலவ மரமும் பூவரச மரமும் போன்று திகழ்ந்தன. (36)

ஒருவரையொருவர் வெற்றி கொள்ளத் துடித்துக் கொண்டிருந்த வீரர்களான இந்திரஜித்தும் லட்சுமணனும், பயங்கரமான தாக்குதலையும் குழப்பத்தையும் மீண்டும் மீண்டும் தொடர்ந்து செய்து வந்தார்கள். போரில், லட்சுமணன் இந்திரஜித்தையும், இந்திரஜித் லட்சுமணனையும் ஒருவரையொருவர் முரட்டுத்தனமாகத் தாக்கினார்கள். ஆனால், அவர்கள் இருவரும் களைப்படையவே இல்லை. (37,38)

அவர்கள் இருவருடைய உடல்களிலும் ஏராளமான பாணங்கள் குத்தி நின்றன. அதைப் பார்த்தபோது, பேராற்றல் படைத்த அவ்விருவரும், ஏராளமான மரங்கள் முளைத்தெழும் மலைகளைப்போல் தோற்றமளித்தார்கள். (39)

பாணங்களால் முழுவதும் தாக்கப்பட்ட, இரத்தம் தோய்ந்த அவ்விருவரது உடல் அங்கங்கள் எல்லாம் கொழுந்து விட்டெரியும் நெருப்புப் போல் திகழ்ந்தன. (40)

அவர்கள் இருவரும் வெகு நீண்ட காலம் போரிட்டார்கள். ஆனால், இருவரும் போரில் சலிப்பையோ, களைப்பையோ அடையவில்லை. (41)

அப்போது, போர்முனையில் வெல்லப்பட முடியாத லட்சுமணனுக்கு போர் செய்ததால் ஏற்பட்ட களைப்பைப் போக்கவும், நண்பனான அவனுக்கு நலன் புரிய விரும்பியும், போர்க்களத்திற்கு வந்து நின்றான், விபீஷணன். (42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
எண்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

நவதிதம: ஸர்க3:

ஸௌமித்ரிராவணியுத்3த4ம்

யுத்4யமாநௌ து தௌ த்3ருஷ்ட்வா ப்ரஸக்தௌ நரராக்ஷஸௌ ।
ப்ரபி4ந்நாவிவ மாதங்கௌ3 பரஸ்பரவதை4ஷிணௌ ॥ (1)

தௌ த்3ரஷ்டுகாம: ஸங்க்3ராமே பரஸ்பரக3தௌ ப3லீ ।
ஶூர: ஸ ராவணப்4ராதா தஸ்தௌ2 ஸங்க்3ராமமூர்த4நி ॥ (2)

ததோ விஸ்பா2ரயாமாஸ மஹத்3த4நுரவஸ்தி2த: ।
உத்ஸஸர்ஜ ச தீக்ஷ்ணாக்3ராந் ராக்ஷஸேஷு மஹாஶராந் ॥ (3)

தே ஶரா: ஶிகி2ஸங்காஶா நிபதந்த: ஸமாஹிதா: ।
ராக்ஷஸாந் தா3ரயாமாஸுர்வஜ்ராணீவ மஹாகி3ரீந் ॥ (4)

விபீ4ஷணஸ்யாநுசராஸ்தேऽபி ஶூலாஸிபட்டஸை: ।
சிச்சி2து3: ஸமரே வீராந் ராக்ஷஸாந் ராக்ஷஸோத்தமா: ॥ (5)

ராக்ஷஸைஸ்தை: பரிவ்ருத: ஸ ததா3 து விபீ4ஷண: ।
ப3பௌ4 மத்4யே ப்ரஹ்ருஷ்டாநாம் கலபா4நாமிவ த்3விப: ॥ (6)

தத: ஸஞ்சோத3யாநோ வை ஹரீந் ரக்ஷோரணப்ரியாந் ।
உவாச வசநம் காலே காலஜ்ஞோ ரக்ஷஸாம் வர: ॥ (7)

ஏகோऽயம் ராக்ஷஸேந்த்3ரஸ்ய பராயணமிவ ஸ்தி2த: ।
ஏதச்சே2ஷம் ப3லம் தஸ்ய கிம் திஷ்ட2த ஹரீஶ்வரா: ॥ (8)

அஸ்மிந் விநிஹதே பாபே ராக்ஷஸே ரணமூர்த4நி ।
ராவணம் வர்ஜயித்வா து ஶேஷமஸ்ய ஹதம் ப3லம் ॥ (9)

ப்ரஹஸ்தோ நிஹதோ வீரோ நிகும்ப4ஶ்ச மஹாப3ல: ।
கும்ப4கர்ணஶ்ச கும்ப4ஶ்ச தூ4ம்ராக்ஷஶ்ச நிஶாசர: ॥ (10)

ஜம்பு3மாலீ மஹாமாலீ தீக்ஷ்ணவேகோ3ऽஶநிப்ரப4: ।
ஸுப்தக்4நோ யஜ்ஞகோபஶ்ச வஜ்ரத3ம்ஷ்ட்ரஶ்ச ராக்ஷஸ: ॥ (11)

ஸம்ஹ்ராதீ3 விகடோ நிக்4நஸ்தபநோ த3ம ஏவ ச ।
ப்ரகா4ஸ: ப்ரக4ஸஶ்சைவ ப்ரஜங்கோ4 ஜங்க4 ஏவ ச ॥ (12)

அக்3நிகேதுஶ்ச து3ர்த4ர்ஷோ ரஶ்மிகேதுஶ்ச வீர்யவாந் ।
வித்3யுஜ்ஜிஹ்வோ த்3விஜிஹ்வஶ்ச ஸூர்யஶத்ருஶ்ச ராக்ஷஸ: ॥ (13)

அகம்பந: ஸுபார்ஶ்வஶ்ச சக்ரமாலீ ச ராக்ஷஸ: ।
கம்பந: ஸத்த்வவந்தௌ தௌ தே3வாந்தகநராந்தகௌ ॥ (14)

ஏதாந்நிஹத்யாதிப3லாந் ப3ஹூந் ராக்ஷஸஸத்தமாந் ।
பா3ஹுப்4யாம் ஸாக3ரம் தீர்த்வா லங்க்4யதாம் கோ3ஷ்பத3ம் லகு4 ॥ (15)

ஸர்க்கம் : தொண்ணூறு

இந்திரஜித்–இலக்குவன் போர் (தொடர்ச்சி)

மனிதனும் அரக்கனுமான (இலக்குவன்–இந்திரஜித்) அவ்விருவரும், மதங்கொண்ட இரு யானைகள்போல், தனக்கே வெற்றி என்ற துடிப்புடன் போரில் மூழ்கியிருந்தனர். இருவரும் போர் செய்வதைப் பார்க்க விரும்பியவனும் வீரனுமான விபீஷணன், உன்னதமான வில்லை ஏந்திக் கொண்டு, போர் முனையில் வந்து நின்றான். (1,2)

அங்கே நின்றபடியே, தன்னுடைய மாபெரும் வில்லை வளைத்து, கூர்மையான முனையுடைய சிறந்த பாணங்களை, அரக்கர்கள்மேல் செலுத்தினான். (3)

நெருப்பைப் போன்றவைகளும், குறிதவறாது பாய்ந்து செல்கின்றவைகளுமான அந்த பாணங்கள், வஜ்ராயுதங்கள் பெருமலைகளைத் தாக்கிப் பிளந்து தள்ளுவதைப் போல, அரக்கர்களைப் பிளந்து தள்ளின. (4)

விபீஷணனின் ஏவலர்களான (அவனுடன்கூட வந்திருந்த நான்கு) நல்அரக்கர்களும், சூலங்கள்–வாள்கள்–பட்டாக்கத்திகளால், போரில் (இந்திரஜித்தின் துணைவர்களான) இராக்கத வீரர்களைத் தாக்கி அழித்தார்கள். (5)

அப்போது, அரக்கர்களால் சூழப்பட்டிருந்த விபீஷணன், குட்டி யானைகளின் நடுவில் நிற்கும் ஒரு பெரிய யானையைப் போல் விளங்கினான். (6)

அரக்கர்களில் உத்தமனும் காலத்திற்கேற்ற செயலைச் செய்யும் வகை அறிந்தவனுமான அவன் (விபீஷணன்), (இந்திரஜித் படையிலிருந்த) அரக்கர்களைக் கொல்லத் துடித்துக் கொண்டிருந்த வானரர்களை முடுக்கி விடுவதைப்போல, பின்வருமாறு கூறினான்— (7)

''வானரர்களே! ஏன் வாளா நின்று பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? இப்போது, இவன் ஒருவன் மட்டுமே அரக்க மன்னனுக்கு உதவக் கூடியவனாக இருப்பவன். அத்துடன், (அரக்கப்படை முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டதால்,) இவனிடமுள்ள படை மட்டுமே எஞ்சியிருக்கிறது. (8)

இந்தப் போர்முனையில், பாவி அரக்கனான இவன் கொல்லப்பட்டுவிட்டால், அரக்கர் பக்கத்தில் இராவணனைத் தவிர, வேறு படைவீரர் எவருமே மிச்சம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். (9)

வீரனான பிரஹஸ்தன் கொல்லப்பட்டுவிட்டான்; மகாபலசாலியான நிகும்பன், கும்பகர்ணன், கும்பன், தூம்ராக்ஷன் என்ற இராக்கதன், ஜம்புமாலி, மகாமாலி, தீக்ஷ்ணவேகன், அசனிப்ரபன், ஸுப்தக்னன், யக்ஞகோபன், வஜ்ரதம்ஷ்ட்ரன் என்ற அரக்கன், ஸம்ஹ்ராதி, விகடன், நிக்னன், தபனன், தமன், ப்ரகாஸன், ப்ரகஸன், ப்ரஜங்கன், ஜங்கன், வெல்லுதற்கரிய அக்னிகேது, வீரம் மிகுந்த ரச்மிகேது, வித்யுஜ்ஜிஹ்வன், த்விஜிஹ்வன், அரக்கனான சூர்யசத்ரு, அகம்பனன், சுபார்ச்வன், சக்ரமாலி என்ற அரக்கன், கம்பனன், பலசாலிகளான தேவாந்தகன் மற்றும் நராந்தகன் ஆகியவர்களும் கொல்லப்பட்டு விட்டார்கள். (10–14)

ஏராளமான மகாபலசாலிகளான அரக்கப் படைத்தலைவர்களைக் கொன்றிருக்கிறீர்கள். இந்த அரிய செயல், பெருங்கடலை இரு கைகளால் நீந்தியே கடந்து விட்டதற்கு ஒப்பாகும்! இப்போது நீங்கள் தாண்ட வேண்டியது, பசுவின் குளம்படி நீருக்கு ஒப்பாகும். அவ்வளவு பெரிய சாகசத்தைச் செய்த உங்களுக்கு, இது ஒரு பொருட்டா? (15)

ஏதாவதே$_3$வ ஶேஷம் வோ ஜேதவ்யமிஹ வாநரா: ।
ஹதா: ஸர்வே ஸமாக$_3$ம்ய ராக்ஷஸா ப$_3$லத$_3$ர்பிதா: ॥ (16)

அயுக்தம் நித$_4$நம் கர்தும் புத்ரஸ்ய ஜநிதுர்மம ।
க்$_4$ருணாமபாஸ்ய ராமார்தே$_2$ நிஹந்யாம் ப்$_4$ராதுராத்மஜம் ॥ (17)

ஹந்துகாமஸ்ய மே பா$_3$ஷ்பம் சக்ஷுஶ்சைவ நிருத்$_4$யதி ।
தமேவைஷ மஹாபா$_3$ஹுர்லக்ஷ்மண: ஶமயிஷ்யதி ॥
வாநரா க்$_4$நத ஸம்பூ$_4$ய ப்$_4$ருத்யாநஸ்ய ஸமீபகா$_3$ந் ॥ (18)

இதி தேநாதியஶஸா ராக்ஷஸேநாபி$_4$சோதி$_3$தா: ।
வாநரேந்த்$_3$ரா ஜஹ்ருஷிரே லாங்கூ$_3$லாநி ச விவ்யது$_4$: ॥ (19)

ததஸ்தே கபிஶார்தூ$_3$லா: க்ஷ்வேலந்தஶ்ச முஹுர்முஹு: ।
முமுசுர்விவிதா$_4$ந்நாதா$_3$ந் மேகா$_4$ந் த்$_3$ருஷ்ட்வேவ பா$_3$ர்ஹிண: ॥ (20)

ஜாம்ப$_3$வாநபி தை: ஸர்வை: ஸ்வயூதை$_2$ரபி ஸம்வ்ருத: ।
அஶ்மபி$_4$ஸ்தாட$_3$யாமாஸ நகை$_2$ர்த$_3$ந்தைஶ்ச ராக்ஷஸாந் ॥ (21)

நிக்$_4$நந்தம்ருக்ஷாதி$_4$பதிம் ராக்ஷஸாஸ்தே மஹாப$_3$லா: ।
பரிவவ்ருர்ப$_4$யம் த்யக்த்வா தமநேகவிதா$_4$யுதா$_4$: ॥ (22)

ஶரை: பரஶுபி$_4$ஸ்தீக்ஷ்ணை: பட்டஸைர்யஷ்டிதோமரை: ।
ஜாம்ப$_3$வந்தம் ம்ருதே$_4$ ஜக்$_4$நுர்நிக்$_4$நந்தம் ராக்ஷஸீம் சமூம் ॥ (23)

ஸ ஸம்ப்ரஹாரஸ்துமுல: ஸம்ஜஜ்ஞே கபிரக்ஷஸாம் ।
தே$_3$வாஸுராணாம் க்ருத்$_3$தா$_4$நாம் யதா$_2$ பீ$_4$மோ மஹாஸ்வந: ॥ (24)

ஹநுமாநபி ஸங்க்ருத்$_3$த$_4$: ஸாலமுத்பாட்ய வீர்யவாந் ।
ஸ லக்ஷ்மணம் ஸ்வாம்ஸப்ருஷ்டா$_2$த$_3$வரோப்ய மஹாமநா: ॥
ரக்ஷஸாம் கத$_3$நம் சக்ரே ஸமாஸாத்$_3$ய ஸஹஸ்ரஶ: ॥ (25)

ஸ த$_3$த்த்வா துமுலம் யுத்$_3$த$_4$ம் பித்ருவ்யஸ்யேந்த்$_3$ரஜித்$_3$யுதி$_4$ ।
லக்ஷ்மணம் பரவீரக்$_4$நம் புநரேவாப்$_4$யதா$_4$வத ॥ (26)

தௌ ப்ரயுத்$_3$தௌ$_4$ ததா$_3$ வீரௌ ம்ருதே$_4$ லக்ஷ்மணராக்ஷஸௌ ।
ஶரௌகா$_4$நபி$_4$வர்ஷந்தௌ ஜக்$_4$நதுஸ்தௌ பரஸ்பரம் ॥ (27)

அபீ$_4$க்ஷ்ணமந்தர்த$_3$த$_4$து: ஶரஜாலைர்மஹாப$_3$லௌ ।
சந்த்$_3$ராதி$_3$த்யாவிவோஷ்ணாந்தே யதா$_2$ மேகை$_4$ஸ்தரஸ்விநௌ ॥ (28)

ந ஹ்யாதா$_3$நம் ந ஸந்தா$_4$நம் த$_4$நுஷோ வா பரிக்$_3$ரஹ: ।
ந விப்ரமோக்ஷோ பா$_3$ணாநாம் ந விகர்ஷோ ந விக்$_3$ரஹ: ॥ (29)

ந முஷ்டிப்ரதிஸந்தா$_4$நம் ந லக்ஷ்யப்ரதிபாத$_3$நம் ।
அத்$_3$ருஶ்யத தயோஸ்தத்ர யுத்$_4$யதோ: பாணிலாக$_4$வாத் ॥ (30)

வீரச்செருக்கோடு எதிர்த்து வந்த அரக்கர்கள் எல்லோரும் கொல்லப்பட்டு விட்டார்கள். வானரர்களே! இப்போது உங்களால் வெற்றி கொள்ளப்பட வேண்டியது, இந்தச் சின்னஞ்சிறு படை மட்டுமே. (16)

இவன் (இந்திரஜித்), என்னுடைய அண்ணனின் புதல்வன் என்பதால், எனக்கும் மகன் ஆகிறான். மகனைக் கொல்வது நியாயமில்லைதான். என்றாலும், இராமபிரானுக்காக மனத்திலிருந்து கருணையை விலக்கி வைத்துவிட்டு, சகோதரனின் புதல்வனைக் கொல்லப் போகிறேன். (17)

இவனைக் கொல்லும் நோக்கத்துடன் கையில் ஆயுதம் எடுக்கும்போது, கண்களிலிருந்து கண்ணீர் பெருகி பார்வையை மறைக்கிறது. அதனால், இவனை தோள்வலிமிக்க லட்சுமணரே கொல்வார். வானரர்களே! இவன் அருகிலிருக்கும் ஏவலர்களை, நீங்களனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொன்று போடுங்கள்.'' (18)

இவ்வாறு, பெரும் புகழ் கொண்ட அந்த அரக்கனால் (விபீஷணனால்) முடுக்கி விடப்பட்ட வானரோத்தமர்கள் மனக்களிப்படைந்தார்கள்; வால்களைச் சுழற்றி அடித்தார்கள். (19)

புலி நிகர் வீரர்களான வானரர்கள் கூடிக் கும்மாளம் செய்தார்கள்; மேகத்தைக் கண்ட மயில்கள்போல் ஆட்டம் ஆடினார்கள்; பலவகையான சப்தங்களை வெளியிட்டார்கள். (20)

ஜாம்பவானும் அவருடைய படைவீரர் அனைவருடன் கூடி நின்று, பாறைகளாலும் நகங்களாலும் பற்களாலும் இராக்கதர்களைத் தாக்கினார். (21)

மகாபலசாலிகளான அந்த அரக்கர்கள், கையில் பலவகையான படைக்கலன்களைத் தாங்கிக் கொண்டு, அச்சத்தை விட்டொழித்து, கோரமாகத் தாக்கும் கரடி மன்னனைச் சூழ்ந்து கொண்டார்கள். (22)

போரில், பாணங்கள், கோடரிகள், கூரிய பட்டாக்கத்திகள், கழிகள் மற்றும் தோமரங்கள் ஆகியவற்றால் அரக்கர் படையை நையப் புடைக்கும் ஜாம்பவானைத் தாக்கினார்கள். (23)

வானர–அரக்கர்களிடையே நிகழ்ந்த அந்தப் போர், கோபத்துடன் தேவ–அசுரர்கள் தாக்கிக் கொள்வதைப்போல், கடுமையாகவும் பயங்கரமாகவும் பேரிரைச்சலுடனும் நிகழ்ந்தது. (24)

மாவீரம் படைத்த அனுமான், தன் தோளிலிருந்து லட்சுமணனை இறக்கிவிட்டு, மிகவும் கோபத்துடன் ஒரு குன்றைப் பெயர்த்துக் கொண்டு வந்து எதிர்த்துத் தாக்கி, ஆயிரக்கணக்கான அரக்கர்களை நாசம் செய்தார். (25)

இந்திரஜித், சிற்றப்பன் விபீஷணனுடன் பயங்கரமாகப் போர் செய்துவிட்டு, பகைவர்களைக் கொல்பவனான இலக்குவனையே மறுபடியும் எதிர்த்தான். (26)

வீரர்களான லட்சுமணனும் அரக்கனும், போர்க்களத்தில் அம்புக் கூட்டங்களைப் பொழிந்து சண்டையிட்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். (27)

கோடைக்காலம் முடிந்து மாரிக்காலம் வந்தவுடன், மேகக்கூட்டங்கள் சூரிய–சந்திரர்களை மறைப்பதைப்போல், விரைந்து செயல்படும் அவ்விருவரும் அடிக்கடி ஒருவரையொருவர் பாணங்கூட்டங்களால் மறைத்து வைத்தார்கள். (28)

அங்கு சண்டையிட்டுக் கொண்டிருந்த அவ்விருவரின் கைகளும் அதிதுரிதமாக செயல்பட்டன. அவர்கள், அம்பறையிலிருந்து பாணத்தை எடுப்பதோ, வில்லில் கோர்ப்பதோ, வில்லை கைமாற்றிக் கொள்வதோ, கைப்பிடியால் உறுதியாகப் பற்றிக் கொள்வதோ, செவிவரை நாண்கயிற்றை இழுப்பதோ, பாணங்களைப் பிரித்தெடுப்பதோ, பாணங்களை விடுவதோ, குறிவைத்தலோ – எதுவுமே எவர் கண்ணுக்கும் புலப்படவில்லை! (29,30)

சாபவேக$_3$விநிர்முக்தப$_3$ாணஜாலை: ஸமந்தத: ।
அந்தரிக்ஷே ஹி ஸஞ்ச$_2$ந்நே ந ரூபாணி சகாஶிரே ॥ (31)

லக்ஷ்மணோ ராவணிம் ப்ராப்ய ராவணிஸ்சாபி லக்ஷ்மணம் ।
அவ்யவஸ்த$_2$ா ப$_4$வத்யுக்$_3$ரா தாப்$_4$யாமந்யோந்யவிக்$_3$ரஹே ॥ (32)

தாப்$_4$யாமுப$_4$ாப்$_4$யாம் தரஸா விஸ்ருஷ்டைர்விஶிகை$_2$: ஶிதை: ।
நிரந்தரமிவாகாஶம் ப$_3$பூ$_4$வ தமஸாவ்ருதம் ॥ (33)

தை: பதத்$_3$பி$_4$ஶ்ச ப$_3$ஹுபி$_4$ஸ்தயோ: ஶரஶதை: ஶிதை: ।
தி$_3$ஶஶ்ச ப்ரதி$_3$ஶஶ்சைவ ப$_3$பூ$_4$வு: ஶரஸங்குலா: ॥ (34)

தமஸா ஸம்வ்ருதம் ஸர்வமாஸீத்$_3$பீ$_4$மதரம் மஹத் ।
அஸ்தம் க$_3$தே ஸஹஸ்ராம்ஶௌ ஸம்வ்ருதம் தமஸேவ ஹி ॥ (35)

ருதி$_4$ரௌக$_4$மஹாநத்$_3$ய: ப்ராவர்தந்த ஸஹஸ்ரஶ: ।
க்ரவ்யாத$_3$ா தா$_3$ருணா வாக்$_3$பி$_4$ஶ்சிக்ஷிபுர்பீ$_4$மநி:ஸ்வநம் ॥ (36)

ந தத$_3$ாநீம் வவௌ வாயுர்ந ச ஜஜ்வால பாவக: ।
ஸ்வஸ்த்யஸ்து லோகேப்$_4$ய இதி ஜஜல்புஶ்ச மஹர்ஷய: ॥
ஸம்பேதுஶ்சாத்ர ஸம்ப்ராப்தா க$_3$ந்த$_4$ர்வா: ஸஹ சாரணை: ॥ (37)

அத$_2$ ராக்ஷஸஸிம்ஹஸ்ய க்ருஷ்ணாந் கநகபூ$_4$ஷணாந் ।
ஶரைஶ்சதுர்பி$_4$: ஸௌமித்ரிர்விவ்யாத$_4$ சதுரோ ஹயாந் ॥ (38)

ததோऽபரேண ப$_4$ல்லேந ஶிதேந நிஶிதேந ச ।
ஸம்பூர்ணாயதமுக்தேந ஸுபத்ரேண ஸுவர்சஸா ॥ (39)

மஹேந்த்$_3$ராஶநிகல்பேந ஸூதஸ்ய விசரிஷ்யத: ।
ஸ தேந ப$_3$ாணாஶநிநா தலஶப்$_3$த$_3$ாநுநாதி$_3$நா ॥
லாக$_4$வாத்$_3$ராக$_4$வ: ஸ்ரீமாஞ்ஶிர: காயாத$_3$பாஹரத் ॥ (40)

ஸ யந்தரி மஹாதேஜா ஹதே மந்தோ$_3$த$_3$ரீஸுத: ।
ஸ்வயம் ஸாரத்$_2$யமகரோத் புநஶ்ச த$_4$நுரஸ்ப்ருஶத் ॥
தத$_3$த்$_3$பு$_4$தமபூ$_4$த்தத்ர ஸாமர்த்$_2$யம் பஶ்யதாம் யுதி$_4$ ॥ (41)

ஹயேஷு வ்யக்$_3$ரஹஸ்தம் தம் விவ்யாத$_4$ நிஶிதை: ஶரை: ।
த$_4$நுஷ்யத$_2$ புநர்வ்யக்$_3$ரே ஹயேஷு முமுசே ஶராந் ॥ (42)

சி$_2$த்$_3$ரேஷு தேஷு ப$_3$ாணேஷு ஸௌமித்ரி: ஶீக்$_4$ரவிக்ரம: ।
அர்த$_3$யாமாஸ ப$_3$ாணௌகை$_4$ர்விசரந்தமபீ$_4$தவத் ॥ (43)

நிஹதம் ஸாரதி$_2$ம் த்$_3$ருஷ்ட்வா ஸமரே ராவணாத்மஜ: ।
ப்ரஜஹௌ ஸமரோத்$_3$த$_4$ர்ஷம் விஷண்ண: ஸ ப$_3$பூ$_4$வ ஹ ॥ (44)

விற்களிலிருந்து வெகுதுரிதமாக செலுத்தப்பட்ட அம்புக் கூட்டங்களால், ஆகாயம் எல்லாப் பக்கத்திலும் மறைக்கப்பட்டதால், அங்கு உருவத்தோடிருந்த பொருள்கள் எவையும் பார்வைக்கு விளங்காமற்போயின. (31)

லட்சுமணன் இந்திரஜித்தையும், இந்திரஜித் லட்சுமணனையும் அவ்வப்போது நெருங்கி, ஒருவரோடொருவர் உக்கிரமாகப் போரிட்டதால், யாருக்கு வெற்றி? என்று தீர்மானிக்க முடியாமல் இருந்தது. (32)

அவ்விருவரும், ஓய்வே இல்லாமல் கூரிய பாணங்களைச் செலுத்திக் கொண்டே இருந்ததால், ஆகாயம் இடைவெளி இல்லாது மறைக்கப்பட்டதால், முற்றிலும் இருளால் மூடப்பெற்றது. அவர்களால் செலுத்தப்பட்ட ஏராளமான, கூர்மையான பாணங்கள் விழுந்ததால், திக்குத்திசைகள் அம்புகளால் நிறைந்து போயின. (33,34)

சூரியன் மறைந்ததும் (உலகத்தை) இருள் மூடிக் கொள்வதைப் போல், (அம்புகளால் எல்லாப் பக்கங்களும் வியாபிக்கப்பட்டதால்,) இருளில் மூழ்கி, (அந்தப் போர்க்களம்) மிகவும் பயங்கரத்தை விளைவித்தது. இரத்த வெள்ளம் பாயும் பெருநதிகள் ஆயிரக்கணக்கில் பெருகி ஓடின; மாமிசபட்சிணிகளான பயங்கரமான விலங்குகள், (உற்சாகத்துடன்) பெரும் இரைச்சல் எழுப்பிக் கூக்குரலிட்டன. (35,36)

அப்போது, காற்று வீசவில்லை (ஸ்தம்பித்து நின்றுவிட்டது); நெருப்பு, சுடர்விட்டுப் பிரகாசிக்கவில்லை. (இந்த, இதற்கு முன் கண்டறியாத பயங்கரத்தைப் பார்த்த) மாமுனிவர்கள், 'எல்லா உலகங்கட்கும் நலன் உண்டாவதாகுக!' என்று வேண்டிக் கொண்டார்கள். அப்போது, அந்த இடத்திற்கு முன்னரே வந்திருந்த சாரணர்களும் கந்தர்வர்களும் அச்சமடைந்து வேறிடம் போய்ச் சேர்ந்தார்கள். (37)

அவ்வமயம், அரக்கத் தலைவனுடைய கருவண்ணம் படைத்தவைகளும் பொன் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான நான்கு குதிரைகளையும், லட்சுமணன் நான்கு பாணங்களால் தாக்கினான். (38)

வீரத்திரு பொருந்திய லட்சுமணன், கூரியதும், மஞ்சள் நிறமானதும், காதுவரை இழுத்து விடப்பட்டதும், சிறந்த இறகுகள் கட்டப்பட்டதும், பேரொளி வீசுவதும், தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு நிகரானதும், பாணங்களை விடும்போது இடியோசை போல் நாணொலி எழுப்புவதுமான பல்லம் என்ற வகையான பாணத்தை, போர்க்களத்தில் அங்குமிங்கும் தேரைச் செலுத்திக் கொண்டிருந்த தேர்ப்பாகனைக் குறி வைத்துச் செலுத்தினான். அது, அவனுடைய உடலிலிருந்து தலையைப் பறித்து அறுத்து வீழ்த்தியது. (39,40)

தேர்ப்பாகன் கொல்லப்பட்டவுடன், பேராற்றல் படைத்த மண்டோதரியின் புதல்வன் (இந்திரஜித்) தானே தேரை ஓட்டிக் கொண்டு, வில்லைக் கையிலேந்தி போர் செய்யத் தொடங்கினான். அப்போது, அந்தப் போரைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, அவனுடைய சிறப்பான தனித்திறமை மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. (41)

குதிரைகளைச் செலுத்துவதற்காக அவன் கைகளை உபயோகித்தபோது, அவன் மேல் கூரிய பாணங்களை, லட்சுமணன் எய்தினான். பின்னர், அவன் வில்லைப் பற்றிக் கொண்டவுடன், குதிரைகள் மேல் அம்புகளை விட்டான். (42)

அவன் பாணத்தை எடுத்து, தொடுத்து, விடுக்கும் இடைவெளிகளில், மிக விரைவாக அம்புகளைச் செலுத்துவதில் வல்லவனான லட்சுமணன், போர்க்களத்தில் சிறிதும் அச்சமின்றி சுற்றிக் கொண்டிருந்த அவனைத் தாக்கினான். (43)

தேர்ப்பாகன் மாய்க்கப்பட்டதும், இந்திரஜித் போர் செய்வதில் ஆர்வத்தை இழந்தான். அந்தோ! கவலை கொண்டவனாகவும் ஆனான். (44)

விஷண்ணவத$_3$நம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸம் ஹரியூத$_2$பா: ।
தத: பரமஸம்ஹ்ருஷ்டா லக்ஷ்மணம் சாப்$_4$யபூஜயந் ॥ (45)

தத: ப்ரமாதீ$_2$ ஶரபே$_4$ா ரப$_4$ஸோ க$_3$ந்த$_4$மாத$_3$ந: ।
அம்ருஷ்யமாணாஶ்சத்வாரஶ்சக்ருர்வேக$_3$ம் ஹரீஶ்வரா: ॥ (46)

தே சாஸ்ய ஹயமுக்$_2$யேஷு தூர்ணமுத்ப்லுத்ய வாநரா: ।
சதுர்ஷு ஸுமஹாவீர்யா நிபேதுர்பீ$_4$மவிக்ரமா: ॥ (47)

தேஷாமதி$_4$ஷ்டி$_2$தாநாம் தைர்வாநரை: பர்வதோபமை: ।
முகே$_2$ப்$_4$யோ ருதி$_4$ரம் ரக்தம் ஹயாநாம் ஸமவர்தத ॥
தே ஹயா மதி$_2$தா ப$_4$க்$_3$நா வ்யஸவோ த$_4$ரணீம் க$_3$தா: ॥ (48)

தே நிஹத்ய ஹயாந்ஸ்தஸ்ய ப்ரமத்$_2$ய ச மஹாரத$_2$ம் ।
புநருத்பத்ய வேகே$_3$ந தஸ்து$_2$ர்லக்ஷ்மணபார்ஶ்வத: ॥ (49)

ஸ ஹதாஶ்வாத$_3$வப்லுத்ய ரதா$_2$ந்மதி$_2$தஸாரதே$_2$: ।
ஶரவர்ஷேண ஸௌமித்ரிமப்$_4$யதா$_4$வத ராவணி: ॥ (50)

ததோ மஹேந்த்$_3$ரப்ரதிம: ஸ லக்ஷ்மண:
பதா$_3$திநம் தம் நிஶிதை: ஶரோத்தமை: ।
ஸ்ருஜந்தமாஜௌ நிஶிதாஞ்ஶரோத்தமாந்
ப்$_4$ருஶம் ததா$_3$ பா$_3$ணக$_3$ணைர்ந்யவாரயத் ॥ (51)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ நவதிதம: ஸர்க$_3$: ॥

ஏகநவதிதம: ஸர்க$_3$:

ராவணிவத$_4$:

ஸ ஹதாஶ்வோ மஹாதேஜா பூ$_4$மௌ திஷ்ட$_2$ந்நிஶாசர: ।
இந்த்$_3$ரஜித் பரமக்ருத்$_3$த$_4$: ஸம்ப்ரஜஜ்வால தேஜஸா ॥ (1)

தௌ த$_4$ந்விநௌ ஜிகா$_4$ம்ஸந்தாவந்யோந்யமிஷுபி$_4$ர்ப்$_4$ருஶம் ।
விஜயேநாபி$_4$நிஷ்க்ராந்தௌ வநே க$_3$ஜவ்ருஷாவிவ ॥ (2)

நிப$_3$ர்ஹயந்தஶ்சாந்யோந்யம் தே ராக்ஷஸவநௌகஸ: ।
ப$_4$ர்தாரம் ந ஜஹுர்யுத்$_3$தே$_4$ ஸம்பதந்தஸ்ததஸ்தத: ॥ (3)

ததஸ்தாந் ராக்ஷஸாந் ஸர்வாந் ஹர்ஷயந் ராவணாத்மஜ: ।
ஸ்துவாநோ ஹர்ஷமாணஶ்ச இத$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (4)

தமஸா ப$_3$ஹுலேநேமா: ஸம்ஸக்தா: ஸர்வதோ தி$_3$ஶ: ।
நேஹ விஜ்ஞாயதே ஸ்வோ வா பரோ வா ராக்ஷஸோத்தமா: ॥ (5)

அரக்கன் கவலைதோய்ந்த முகத்தோடு இருப்பதைப் பார்த்த வானரத் தலைவர்கள், மிகவும் களிப்படைந்து லட்சுமணனைப் போற்றினார்கள். (45)

அப்போது, பிரமாதி–சரபன்–ரபஸன்–கந்தமாதனன் ஆகிய நான்கு வானரோத்தமர்களும், கோபக்கனல் தெறிக்க, தங்கள் துணிச்சலை வெளிப்படுத்தினார்கள். (46)

பேராண்மை கொண்டவர்களும் எல்லையில்லா வீரம் படைத்தவர்களுமான அந்த வானரர்கள், அவனுடைய தேர்க் குதிரைகள் நான்கின் மீதும் வேகமாகப் பாய்ந்து ஏறி உட்கார்ந்தார்கள். (47)

மலை போன்ற பேருருவம் கொண்ட அந்த வானரர்கள் குதித்து உட்கார்ந்தவுடன், குதிரைகளின் வாயிலிருந்து இரத்தம் பெருகிற்று. அந்தக் குதிரைகள் தேய்க்கப்பட்டு, சிதைக்கப்பட்டு, உயிரை இழந்து தரையில் விழுந்தன. (48)

அந்த வானரர்கள், குதிரைகளைக் கொன்றுவிட்டு, பெருந்தேரையும் முறித்துவிட்டு, மீண்டும் வேகமாகத் தாவி, இலக்குவன் அருகில் வந்து நின்றார்கள். (49)

தேர்ப்பாகன் மாய்க்கப்பட்டு, குதிரைகளும் கொல்லப்பட்டிருந்த தேரிலிருந்து, இந்திரஜித் கீழே குதித்து, அம்புமாரியால் லட்சுமணனைத் தாக்கினான். (50)

தேவேந்திரனுக்கு நிகரான வீரம் படைத்த லட்சுமணன், தேர்க்குதிரைகள் கொல்லப்பட்டதால் கால்களால் நடந்து வந்து, போரில் சிறந்த பாணங்களை விட்டுக் கொண்டிருந்த அவனை (இந்திரஜித்), அம்புக்கூட்டங்களைச் செலுத்தித் தடுத்து நிறுத்தினான். (51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றொன்று

இந்திரஜித் மாண்டான்!

ஆற்றல் மிக்க இராக்கதன் இந்திரஜித், தேர்க்குதிரைகள் கொல்லப்பட்டு (தேரையும் இழந்து) தரையில் நின்றான். அந்த அவமானத்தைப் பொறுக்காமல், சினம் மேலிட்டு, செஞ்சுடராகப் பிரகாசித்தான். (1)

காட்டில் பலம் மிகுந்த இரு யானைகள் மோதிக் கொள்வதைப் போல, வில்லாளிகளான அவ்விருவர்களும், ஒருவரையொருவர் வெற்றி கொண்டு, எதிராளியைக் கொல்லும் துடிப்புடன், பாணங்களைப் பொழிந்து காயப்படுத்தித் தாக்கிக் கொண்டார்கள். [**'கஜவ்ருஷௌ இவ'** என்ற பதத்திற்கு, **'கஜ சிரேஷ்டௌ'** (உயர்குடியும் வீரமும் மிக்க இரு யானைகள்) என்பது சான்றோர் விளக்கவுரை.] (2)

அரக்க–வானரப்படையினர், ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு இங்குமங்கும் பாய்ந்து சென்றார்கள். ஆனால், தத்தம் தலைவர்களிடமிருந்து வெகுதூரம் விலகிப் போகாமலிருந்தார்கள். அப்போது, இந்திரஜித் அரக்கர்கள் எல்லோரையும் உற்சாகப்படுத்தி, புகழ்ந்துரைத்து, தானும் மகிழ்ச்சி கொண்டு பின்வருமாறு கூறினான்— (3,4)

''அரக்க மாமணிகளே! எட்டுத்திசைகளும் இப்போது (நமது சக்தியை அதிகரிக்கச் செய்யக்கூடிய இரவு நேரம் போன்ற) இருளால் சூழப்பட்டிருக்கிறது. போர் செய்பவன், தன் பக்கத்து வீரனா? அல்லது பகையாளியா? – என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. (5)

த்$_4$ருஷ்டம் ப$_4$வந்தோ யுத்$_4$யந்து ஹரீணாம் மோஹநாய வை ।
அஹம் து ரத$_2$மாஸ்த$_2$ாய ஆக$_3$மிஷ்யாமி ஸம்யுக$_3$ம் ॥ (6)

தத$_2$ா ப$_4$வந்த: குர்வந்து யதே$_2$மே காநநௌகஸ: ।
ந யுத்$_4$யேயுர்து$_3$ராத்மாந: ப்ரவிஷ்டே நக$_3$ரம் மயி ॥ (7)

இத்யுக்த்வா ராவணஸுதோ வஞ்சயித்வா வநௌகஸ: ।
ப்ரவிவேஶ புரீம் லங்காம் ரத$_2$ஹேதோரமித்ரஹா ॥ (8)

ஸ ரத$_2$ம் பூ$_4$ஷயித்வா து ருசிரம் ஹேமபூ$_4$ஷிதம் ।
ப்ராஸாஸிஶதஸம்பூர்ணம் யுக்தம் பரமவாஜிபி$_4$: ॥ (9)

அதி$_4$ஷ்டி$_2$தம் ஹயக்ஞேந ஸூதேநாப்தோபதே$_3$ஶிநா ।
ஆருரோஹ மஹாதேஜா ராவணி: ஸமிதிஞ்ஜய: ॥ (10)

ஸ ராக்ஷஸக$_3$ணைர்முக்$_2$யைர்வ்ருதோ மந்தே$_3$ாத$_3$ரீஸுத: ।
நிர்யயௌ நக$_3$ராத்தூர்ணம் க்ருதாந்தப$_3$லசோதி$_3$த: ॥ (11)

ஸோऽபி$_4$நிஷ்க்ரம்ய நக$_3$ராதி$_3$ந்த்$_3$ரஜித் பரவீரஹா ।
அப்$_4$யயாஜ்ஜவநைரஶ்வைர்லக்ஷ்மணம் ஸவிபீ$_4$ஷணம் ॥ (12)

ததோ ரத$_2$ஸ்த$_2$மாலோக்ய ஸௌமித்ரீ ராவணாத்மஜம் ।
வாநராஶ்ச மஹாவீர்யா ராக்ஷஸஶ்ச விபீ$_4$ஷண: ॥
விஸ்மயம் பரமம் ஜக்$_3$முர்லாக$_4$வாத்தஸ்ய தீ$_4$மத: ॥ (13)

ராவணிஶ்சாபி ஸங்க்ருத்$_3$தே$_4$ா ரணே வாநரயூத$_2$பாந் ।
பாதயாமாஸ ப$_3$ாணௌகை$_4$: ஶதஶோऽத$_2$ ஸஹஸ்ரஶ: ॥ (14)

ஸ மண்ட$_3$லீக்ருதத$_4$நூ ராவணி: ஸமிதிஞ்ஜய: ।
ஹரீநப்$_4$யஹநத் க்ருத்$_3$த$_4$: பரம் லாக$_4$வமாஸ்தி$_2$த: ॥ (15)

தே வத்$_4$யமாநா ஹரயோ நாராசைர்பீ$_4$மவிக்ரமா: ।
ஸௌமித்ரிம் ஶரணம் ப்ராப்தா: ப்ரஜாபதிமிவ ப்ரஜா: ॥ (16)

தத: ஸமரகோபேந ஜ்வலிதோ ரகு$_4$நந்த$_3$ந: ।
சிச்சே$_2$த$_3$ கார்முகம் தஸ்ய த$_3$ர்ஶயந் பாணிலாக$_4$வம் ॥ (17)

ஸோऽந்யத் கார்முகமாத$_3$ாய ஸஜ்யம் சக்ரே த்வரந்நிவ ।
தத$_3$ப்யஸ்ய த்ரிபி$_4$ர்ப$_3$ாணைர்லக்ஷ்மணோ நிரக்ருந்தத ॥ (18)

அதை$_2$நம் சி$_2$ந்நத$_4$ந்வாநமாஶீவிஷவிஷோபமை: ।
விவ்யாதோரஸி ஸௌமித்ரீ ராவணிம் பஞ்சபி$_4$: ஶரை: ॥ (19)

தே தஸ்ய காயம் நிர்பி$_4$த்$_3$ய மஹாகார்முகநி:ஸ்ருதா: ।
நிபேதுர்த$_4$ரணீம் ப$_3$ாணா ரக்தா இவ மஹோரக$_3$ா: ॥ (20)

நான், இங்கே இல்லாததை அவர்கள் அறியாதிருக்கும்படி (எதிரிகளின்) மனத்தை மயக்கும்வண்ணம் நீங்கள் தைரியமாகப் போரிட்டுக் கொண்டிருங்கள். நான் சென்று, வேறொரு தேரில் ஏறிக்கொண்டு போர்க்களத்திற்கு வந்து சேருகிறேன். (6)

துஷ்டர்களான இந்தக் காட்டுப் பிராணிகள், நான் பட்டணத்திற்குள் நுழையும்போது, என்னை எதிர்க்க வராமல் இருக்கும்வண்ணம் செயல்படுங்கள்.'' (7)

இவ்வாறு, எதிரிகளை வதைப்பவனான இராவண மைந்தன் கூறிவிட்டு, வானரர்களை ஏமாற்றி, ஒரு தேரைக் கொண்டு வருவதற்காக இலங்கைப் பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தான். (8)

பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும், காண்பதற்கு இனியதும், நூற்றுக்கணக்கான ஈட்டிகள் மற்றும் கத்திகள் வைக்கப்பட்டதும், உயர் ஜாதிக் குதிரைகள் பூட்டப் பெற்றதும், குதிரைகளிடம் நன்கு பழகியவனும் தேர்வீரனுக்கு நன்மையை எடுத்துச் சொல்பவனுமான தேர்ப்பாகன் வீற்றிருப்பதுமான தேரில், பெரும் புகழ் கொண்டவனும், போர்களில் வெற்றி பெறுபவனுமான இந்திரஜித், தன் வீரப் பொலிவினால் அதை மேலும் அழகுறச் செய்து கொண்டு ஏறி உட்கார்ந்து கொண்டான். (9,10)

மண்டோதரி மைந்தன், முக்கியமான அரக்கர்களின் கூட்டங்கள் புடைசூழ, காலனால் உந்தித் தள்ளப்பட்டவனாக, நகரத்திலிருந்து விரைவாக வெளியே புறப்பட்டான். (11)

பகைவீரர்களை அழிப்பவனான இந்திரஜித், வேகமாகச் செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில், பட்டணத்திலிருந்து வெளிக்கிளம்பி, (போர்க்களத்தில்) விபீஷணனும் லட்சுமணனும் இருந்த இடத்தை வந்தடைந்தான். (12)

இராவணன் புதல்வன், வேறொரு தேரில் வந்திருப்பதைப் பார்த்து, இலக்குவனும் மாவீரர்களான வானரர்களும் அரக்கன் விபீஷணனும், அறிவாளியான இந்திரஜித்தின் சமயோஜித நடவடிக்கையால் மிகவும் ஆச்சரியத்தை அடைந்தார்கள். (13)

மிகவும் கோபங்கொண்ட இந்திரஜித், நூறாயிரக்கணக்கான வானரப் படைத் தலைவர்களை இடைவிடாத அம்புப் பொழிவினால் போரில் வீழ்த்தினான். (14)

சமரில் வெற்றி காண்பவனான இந்திரஜித், வில்லை அரைவட்டமாக வளைத்து, மிகவும் சினங்கொண்டு மிக வேகமாக வானரர்களைத் தாக்கினான். (15)

அளவில்லாத பராக்கிரமம் படைத்த வானரர்கள், நாராச பாணங்களால் தாக்கப்பட்டவர்களாக (மிகவும் பயந்து), பிரஜைகள் பிரும்மதேவரை அடைக்கலம் புகுவதைப் போல லட்சுமணனிடம் சரணமடைந்தார்கள். (16)

அப்போது, லட்சுமணன் எதிரி நிகழ்த்திய பேரழிவினால் போர் வெறி கொண்டு தீப்பிழம்புபோல் ஒளியைப் பரப்பியவண்ணம், தன்னுடைய கைத்திறமையைக் காட்டி, அவனுடைய வில்லைத் துண்டித்தார். (17)

அவன், மிகவும் வேகமாக வேறொரு வில்லை எடுத்து நாணேற்றினான். லட்சுமணன் அந்த வில்லையும் மூன்று பாணங்களால் முறித்துவிட்டார். (18)

பின்னர், வில் ஒடிந்து (வேறு அஸ்திரம் எதுவும் இல்லாமல் திகைத்து நின்ற) இந்திரஜித்தின் மார்பில், விஷப்பாம்புகளைப் போன்ற ஐந்து பாணங்களைச் செலுத்தினான். (19)

சிறப்பான வில்லிலிருந்து விடப்பட்ட அந்த பாணங்கள், அவனுடைய உடலை ஊடுருவிச் சென்று, (இரத்தம் தோய்ந்ததனால்) செந்நிறங்கொண்ட பேரரவங்கள் போல் பூமியில் விழுந்தன. (20)

ஸ பி4ந்நவர்மா ருதி4ரம் வமந் வக்த்ரேண ராவணி: ।
ஜக்3ராஹ கார்முகஶ்ரேஷ்ட2ம் த்3ருட4ஜ்யம் ப3லவத்தரம் ॥ (21)

ஸ லக்ஷ்மணம் ஸமுத்3தி3ஶ்ய பரம் லாக4வமாஸ்தி2த: ।
வவர்ஷ ஶரவர்ஷாணி வர்ஷாணீவ புரந்த3ர: ॥ (22)

முக்தமிந்த்3ரஜிதா தத்து ஶரவர்ஷமரிந்த3ம: ।
அவாரயத3ஸம்ப்4ராந்தோ லக்ஷ்மண: ஸுது3ராஸத3ம் ॥ (23)

த3ர்ஶயாமாஸ ச ததா3 ராவணிம் ரகு4நந்த3ந: ।
அஸம்ப்4ராந்தோ மஹாதேஜாஸ்தத3த்3பு4தமிவாப4வத் ॥ (24)

ததஸ்தாந் ராக்ஷஸாந் ஸர்வாந்ஸ்த்ரிபி4ரேகைகமாஹவே ।
அவித்4யத் பரமக்ருத்3த4: ஶீக்4ராஸ்த்ரம் ஸம்ப்ரத3ர்ஶயந் ॥
ராக்ஷஸேந்த்3ரஸுதம் சாபி ப3ாணௌகை4: ஸமதாட3யத் ॥ (25)

ஸோऽதிவித்3தே4ா ப3லவதா ஶத்ருணா ஶத்ருகா4திநா ।
அஸக்தம் ப்ரேஷ்யாமாஸ லக்ஷ்மணாய ப3ஹூஞ்ஶராந் ॥ (26)

தாநப்ராப்தாஞ்ஶிதைர்ப3ாணைஶ்சிச்சே2த3 ரகு4நந்த3ந: ।
ஸாரதே2ரஸ்ய ச ரணே ரதி2நோ ரத2ஸத்தம: ॥
ஶிரோ ஜஹார த4ர்மாத்மா ப4ல்லேநாநதபர்வணா ॥ (27)

அஸூதாஸ்தே ஹயாஸ்தத்ர ரத2மூஹுரவிக்லவா: ।
மண்ட3லாந்யபி4த4ாவந்தஸ்தத3த்3பு4தமிவாப4வத் ॥ (28)

அமர்ஷவஶமாபந்ந: ஸௌமித்ரிர்த்3ருட4விக்ரம: ।
ப்ரத்யவித்4யத்3த4யாந்ஸ்தஸ்ய ஶரைர்வித்ராஸயந் ரணே ॥ (29)

அம்ருஷ்யமாணஸ்தத்கர்ம ராவணஸ்ய ஸுதோ ப3லீ ।
விவ்யாத4 த3ஶபி4ர்ப3ாணை: ஸௌமித்ரிம் தமமர்ஷணம் ॥ (30)

தே தஸ்ய வஜ்ரப்ரதிமா: ஶரா: ஸர்பவிஷோபமா: ।
விலயம் ஜக்3முராஹத்ய கவசம் காஞ்சநப்ரப4ம் ॥ (31)

அபே4த்3யகவசம் மத்வா லக்ஷ்மணம் ராவணாத்மஜ: ।
லலாடே லக்ஷ்மணம் ப3ாணை: ஸுபுங்கை2ஸ்த்ரிபி4ரிந்த்3ரஜித் ॥
அவித்4யத் பரமக்ருத்3த4: ஶீக்4ராஸ்த்ரம் ச ப்ரத3ர்ஶயந் ॥ (32)

தை: ப்ருஷத்கைர்லலாடஸ்தை2: ஶுஶுபே4 ரகு4நந்த3ந: ।
ரணாக்3ரே ஸமரஶ்லாகீ4 த்ரிஶ்ருங்க3 இவ பர்வத: ॥ (33)

(பாணத் தாக்குதலால்) இந்திரஜித்தின் கவசம் பிளக்கப்பட்டதும், வாயால் ரத்தத்தைக் கக்கினான். முன்னர் பிடித்திருந்த விற்களைக் காட்டிலும் அதிக வலிமை பெற்றதும், உறுதியான நாண்கயிற்றைக் கொண்டதுமான உத்தம வில் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். (21)

அவன், மிகவும் துரித வேகத்தை மேற்கொண்டு, லட்சுமணனைக் குறிவைத்து, (மேகங்களின் தலைவனான) இந்திரன், ஓயாது மழையைப் பொழிவிப்பதைப்போல, பாணங்களைச் செலுத்தினான். (22)

எதிரிகளை அடக்குபவனான இலக்குவன் மனப்பதற்றமடையாமல், இந்திரஜித்தால் விடப்பட்டதும் வெல்வதற்கரியதுமான பாணக்கூட்டங்களை, (அவைகள், தன் மீது வந்து விழும் முன்னரே) தடுத்து நிறுத்திவிட்டான். (23)

ரகுகுல திலகமான, பேராற்றல் கொண்ட லட்சுமணன், சிறிதுகூடக் கலவரமடையாமல், இந்திரஜித்தின் தாக்குதலை எளிதாக முறியடித்த அந்தச் செயல், மிகவும் வியப்பை அளிப்பதாக இருந்தது. (24)

மிகவும் கோபத்திலிருந்த லட்சுமணன், வெகுவிரைவாக அஸ்திரங்களைச் செலுத்தும் தன் தனித்தன்மையை வெளிப்படுத்தி, அந்த அரக்கர் எல்லோரையும் மும்மூன்று அஸ்திரங்களால் காயப்படுத்தினான்; அரக்க மன்னன் மைந்தனையும் சரமாரிகளால் தாக்கினான். (25)

எதிரிகளை மாய்ப்பவனும் வலிமை மிக்கவனுமான எதிரியால் (லட்சுமணனால்) மிகவும் சிதறடிக்கப்பட்ட இந்திரஜித், லட்சுமணன் மீது ஏராளமான பாணங்களை இடைவிடாது செலுத்தினான். (26)

ஆனால், பகைவீரர்களை மாய்க்கும் லட்சுமணன், அந்த அம்புகள் தன்னை நெருங்கித் தாக்குவதற்கு முன்னதாகவே, அவைகளை முறித்தெறிந்தான். போர்க்களத்தில், தேரிலிருந்தபடி போர் செய்து கொண்டிருந்த இந்திரஜித்தின் தேர்ப்பாகனின் தலையை, வளைந்த கணுக்கள் கொண்ட பல்லம் என்ற அம்புகளால் வெட்டித் தள்ளினான். (27)

வழிநடத்திச் செல்லும் பாகன் இல்லாத போதிலும், குதிரைகள் தறிகெட்டு ஓடாமல், மண்டலாகாரமாக ஓடியவண்ணம் தேரை நிலைகுலையாமல் இருக்கச் செய்தன. ஆகா! என்ன அற்புதம்! (28)

அசைக்க முடியாத பராக்கிரமமுடைய லட்சுமணன், கோபம் மேலிட்டவனாக, போர்க்களத்தில் அவனுடைய குதிரைகளை மருண்டோடச் செய்பவனாக பாணங்களைச் செலுத்தினான். (29)

வலிமைமிக்க இந்திரஜித், (குதிரைகள் மீது நடத்தப்பட்ட அந்தத்) தாக்குதலைப் பொறுக்க மாட்டாமல், கோபத்தோடிருந்த லட்சுமணன் மீது பத்து பாணங்களை எய்து துன்புறுத்தினான். வஜ்ராயுதம் போல் அளவுகடந்த ஆற்றல் பெற்றவைகளும் விஷப்பாம்பு போன்றவைகளுமான அந்த பாணங்கள், அவனுடைய (லட்சுமணனுடைய) பொன்னொளி வீசும் கவசத்தைத் தாக்கிக் குலைத்தன. (30,31)

இராவணன் புதல்வனான இந்திரஜித், லட்சுமணனின் கவசத்தை முற்றிலும் பிளக்க முடியாது என்பதை அறிந்து மிகவும் சினங்கொண்டு, நொடியில் அஸ்திரங்களை விடுக்கும் தன் தனித்திறமையை வெளிப்படுத்தும்வண்ணம், கூரிய முனைகொண்ட மூன்று பாணங்களை, லட்சுமணனின் நெற்றியை நோக்கிச் செலுத்தினான். (32)

போரை விரும்பும் லட்சுமணன், நெற்றியில் வந்து விழுந்து தைத்து நின்று கொண்டிருந்த பாணங்களால், மூன்று கொடுமுடிகளைக் கொண்ட ஒரு மாமலை போல் அந்தப் போர்க்களத்தில் விளங்கினான். (33)

ஸ தத$_{2}$ா ஹ்யர்தி$_{3}$தோ ப$_{3}$ாணை ராக்ஷஸேந மஹாம்ருதே$_{4}$ ।
தமாஶு ப்ரதிவிவ்யாத$_{4}$ லக்ஷ்மண: பஞ்சபி$_{4}$: ஶரை: ॥
விக்ருஷ்யேந்த்$_{3}$ரஜிதோ யுத்$_{3}$தே$_{4}$ வத$_{3}$நே ஶுப$_{4}$குண்ட$_{3}$லே ॥ (34)

லக்ஷ்மணேந்த்$_{3}$ரஜிதௌ வீரௌ மஹாப$_{3}$லஶராஸநௌ ।
அந்யோந்யம் ஜக்$_{4}$நதுர்ப$_{3}$ாணைர்விஶிகை$_{2}$ர்பீ$_{4}$மவிக்ரமௌ ॥ (35)

தத: ஶோணிததி$_{3}$க்$_{3}$த$_{4}$ாங்கௌ$_{3}$ லக்ஷ்மணேந்த்$_{3}$ரஜிதாவுபௌ$_{4}$ ।
ரணே தௌ ரேஜதுர்வீரௌ புஷ்பிதாவிவ கிம்ஶுகௌ ॥ (36)

தௌ பரஸ்பரமப்$_{4}$யேத்ய ஸர்வகா$_{3}$த்ரேஷு த$_{4}$ந்விநௌ ।
கே$_{4}$ாரைர்விவ்யத$_{4}$துர்ப$_{3}$ாணை: க்ருதப$_{4}$ாவாவுபௌ$_{4}$ ஜயே ॥ (37)

தத: ஸமரகோபேந ஸம்யுக்தோ ராவணாத்மஜ: ।
விபீ$_{4}$ஷணம் த்ரிபி$_{4}$ர்ப$_{3}$ாணைர்விவ்யாத$_{4}$ வத$_{3}$நே ஶுபே$_{4}$ ॥ (38)

அயோமுகை$_{2}$ஸ்த்ரிபி$_{4}$ர்வித்$_{4}$வா ராக்ஷஸேந்த்$_{3}$ரம் விபீ$_{4}$ஷணம் ।
ஏகைகேநாபி$_{4}$விவ்யாத$_{4}$ தாந் ஸர்வாந் ஹரியூத$_{2}$பாந் ॥ (39)

தஸ்மை த்$_{3}$ருட$_{4}$தரம் க்ருத்$_{3}$தே$_{4}$ா ஜக$_{4}$ாந க$_{3}$த$_{3}$யா ஹயாந் ।
விபீ$_{4}$ஷணோ மஹாதேஜா ராவணே: ஸ து$_{3}$ராத்மந: ॥ (40)

ஸ ஹதாஶ்வாத$_{3}$வப்லுத்ய ரத$_{2}$ாந்நிஹதஸாரதே$_{2}$: ।
ரத$_{2}$ஶக்திம் மஹாதேஜா: பித்ருவ்யாய முமோச ஹ ॥ (41)

தாமாபதந்தீம் ஸம்ப்ரேக்ஷ்ய ஸுமித்ராநந்த$_{3}$வர்த$_{4}$ந: ।
சிச்சே$_{2}$த$_{3}$ நிஶிதைர்ப$_{3}$ாணைர்த$_{3}$ஶத$_{4}$ா ஸாபதத்$_{3}$பு$_{4}$வி ॥ (42)

தஸ்மை த்$_{3}$ருட$_{4}$த$_{4}$நு: க்ருத்$_{3}$தே$_{4}$ா ஹதாஶ்வாய விபீ$_{4}$ஷண: ।
வஜ்ரஸ்பர்ஶஸமாந் பஞ்ச ஸஸர்ஜோரஸி மார்க$_{3}$ணாந் ॥ (43)

தே தஸ்ய காயம் நிர்பி$_{4}$த்$_{3}$ய ருக்மபுங்க$_{2}$ா நிமித்தக$_{3}$ா: ।
ப$_{3}$பூ$_{4}$வுர்லோஹிததி$_{3}$க்$_{3}$த$_{4}$ா ரக்தா இவ மஹோரக$_{3}$ா: ॥ (44)

ஸ பித்ருவ்யாய ஸங்க்ருத்$_{3}$த$_{4}$ இந்த்$_{3}$ரஜிச்ச$_{2}$ரமாத$_{3}$தே$_{3}$ ।
உத்தமம் ரக்ஷஸாம் மத்$_{4}$யே யமத$_{3}$த்தம் மஹாப$_{3}$ல: ॥ (45)

தம் ஸமீக்ஷ்ய மஹாதேஜா மஹேஷும் தேந ஸம்ஹிதம் ।
லக்ஷ்மணோऽப்யாத$_{3}$தே$_{3}$ ப$_{3}$ாணமந்யம் பீ$_{4}$மபராக்ரம: ॥ (46)

குபே$_{3}$ரேண ஸ்வயம் ஸ்வப்நே ஸ்வஸ்மை த$_{3}$த்தம் மஹாத்மநா ।
து$_{3}$ர்ஜயம் து$_{3}$ர்விஷஹ்யம் ச ஸேந்த்$_{3}$ரைரபி ஸுராஸுரை: ॥ (47)

தயோஸ்தே த$_{4}$நுஷீ ஶ்ரேஷ்டே$_{2}$ ப$_{3}$ாஹுபி$_{4}$: பரிகே$_{4}$ாபமை: ।
விக்ருஷ்யமாணே ப$_{3}$லவத் க்ரௌஞ்சாவிவ சுகூஜது: ॥ (48)

அந்தப் போரில், அவ்விதம் பாணங்களைக் கொண்டு அரக்கனால் துன்புறுத்தப்பட்ட லட்சுமணன், அழகிய குண்டலங்கள் விளங்கிய இந்திரஜித்தின் முகத்தைக் குறிவைத்து, வெகுவிரைவாக ஐந்து பாணங்களை எய்து பதிலடிக் கொடுத்தான். (34)

லட்சுமணனும் இந்திரஜித்தும் மகாசூரர்கள்; மிகவும் உறுதியான வில்லைத் தாங்கிக் கொண்டிருந்தவர்கள்; பயங்கரமான ஆண்மை உடையவர்கள் என்பதால், பலவகையான அஸ்திரங்களாலும் அம்புகளாலும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். (35)

அப்போது, வீரர்களான லட்சுமணனும் இந்திரஜித்தும், செந்நீர் பெருகி ஓடும் உடலை உடையவர்களாய், பூத்த செந்நிற மலர்களைக் கொண்ட இரண்டு புரச மரங்கள் போல் விளங்கினார்கள். (36)

வில்லாளிகளான அவ்விருவரும், தத்தம் வெற்றியில் மனம் செலுத்தியவராக, ஒருவரையொருவர் எதிர்த்து, உடலின் எல்லா அங்கங்களையும் கொடிய பாணங்களால் காயப்படுத்தினார்கள். (37)

அப்போது போர்வெறி கொண்ட இந்திரஜித், விபீஷணனின் அழகிய முகத்தில் மூன்று அம்புகளை எய்தான். இரும்புமுனை கொண்ட மூன்று பாணங்களால் உத்தம அரக்கனான விபீஷணனைத் தாக்கிவிட்டு, ஒவ்வொரு பாணத்தால் வானரப் படைத்தலைவர்கள் எல்லோரையும் அடித்தான். (38,39)

ஆற்றல் மிக்கவனான விபீஷணன், அவன் மீது சினங்கொண்டு, தீயவனான இந்திரஜித்தின் குதிரைகளைக் கதாயுதத்தால் புடைத்தான். பெருவீரனான இந்திரஜித், முன்னரே குதிரைகள் மாய்க்கப் பெற்றதும், இப்போது தேர்ப்பாகனும் மாய்க்கப்பட்டதும், தேரிலிருந்து கீழே குதித்து சிற்றப்பன் மீது ஒரு வேலாயுதத்தை எறிந்தான். (40,41)

விபீஷணனைத் தாக்க வரும் வேலாயுதத்தைப் பார்த்ததும், இலக்குவன் கூர்மையான அம்புகளால் அதைத் தகர்த்தெறிந்தார். அது, பல துண்டுகளாகித் தரையில் விழுந்தது. (42)

உறுதியான வில்லைக் கைக்கொண்டிருந்த விபீஷணன், குதிரைகளைப் பறிகொடுத்து, (தரையில் நின்று போர் செய்யும்) அவன் மார்பைக் குறிவைத்து, மிக்க சினத்துடன், வஜ்ராயுதத் தாக்குதலுக்கு நிகரான ஐந்து பாணங்களை விடுத்தான். (43)

தவறாமல் இலக்குகளைத் தாக்குபவைகளும் தங்கப்பூண் பூண்டவைகளுமான அந்த பாணங்கள், அவன் உடலைப் பிளந்து இரத்தம் தோய்ந்தவைகளாய், செந்நிறம் கொண்ட பெரிய நாகங்கள் போலாயின. (44)

மகாபலசாலியான இந்திரஜித், சிற்றப்பனின் மேலும் கோபம் மேலிட யமதருமராஜனால் கொடுக்கப்பட்ட ஒரு சிறந்த பாணத்தை, அரக்கர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, கையில் எடுத்துக் கொண்டான். (45)

அளவு கடந்த ஆற்றல் கொண்ட லட்சுமணனும், மகாபராக்கிரமம் படைத்த அவன் (இந்திரஜித்), ஓர் உத்தம பாணத்தை எடுத்துத் தொடுப்பதைக் கண்டு, (பின்னர் நிகழப் போவதை முன்கூட்டியே அறிந்திருந்த) பேரறிவாளனான குபேரன், தானே கனவில் தோன்றி கொடுத்துவிட்டுப் போன ஒரு பாணத்தைக் கையிலெடுத்துக் கொண்டான். அந்த பாணம், இந்திரன் உள்ளிட்ட தேவர்களாலும் அசுரர்களாலும் பொறுக்க முடியாதது; வெற்றி கொள்ள முடியாதது. (46,47)

உலக்கைத் தடி போன்று பருமனும் பலமும் கொண்ட புஜங்களால் வேகமாக இழுக்கப்பட்ட அவ்விருவருடைய விற்களிலிருந்தும், கிரௌஞ்சப் பறவையின் குரல் போன்ற நாதம் எழுந்தது. (48)

தாப்4யாம் தௌ த4நுஷீ ஸ்ரேஷ்டே2 ஸம்ஹிதௌ ஸாயகோத்தமௌ ।
விக்ருஷ்யமாணௌ வீராப்4யாம் ப்4ருஸம் ஜஜ்வலது: ஸ்ரியா ॥ (49)

தௌ ப4ாஸயந்தாவாகாஸம் த4நுர்ப்4யாம் விஸிகௌ2 ச்யுதௌ ।
முகே2ந முக2மாஹத்ய ஸந்நிபேததுரோஜஸா ॥ (50)

ஸந்நிபாதஸ்தயோராஸீச்ச2ரயோர்கோ4ரரூபயோ: ।
ஸதூ4மவிஸ்பு2லிங்க3ஸ்ச தஜ்ஜோऽக்3நிர்த3ாருணோऽப4வத் ॥ (51)

தௌ மஹாக்3ரஹஸங்காஸாவந்யோந்யம் ஸந்நிபத்ய ச ।
ஸங்க்3ராமே ஸததா4 யாந்தௌ மேதி3ந்யாம் விநிபேதது: ॥ (52)

ஸரௌ ப்ரதிஹதௌ த்3ருஷ்ட்வா தாவுபௌ4 ரணமூர்த4நி ।
வ்ரீடி3தௌ ஜாதரோஷௌ ச லக்ஷ்மணேந்த்3ரஜிதௌ ததா3 ॥ (53)

ஸுஸம்ரப்3த4ஸ்து ஸௌமித்ரிரஸ்த்ரம் வாருணமாத3தே3 ।
ரௌத்3ரம் மஹேந்த்3ரஜித்3யுத்3தே4 வ்யஸ்ருஜத்3யுதி4 நிஷ்டி2த: ॥
தேந தத்3விஹதம் த்வஸ்த்ரம் வாருணம் பரமாத்3பு4தம் ॥ (54)

தத: க்ருத்3தே4ா மஹாதேஜா இந்த்3ரஜித் ஸமிதிஞ்ஜய: ।
ஆக்3நேயம் ஸந்த3தே4 தீ3ப்தம் ஸ லோகம் ஸம்க்ஷிபந்நிவ ॥
ஸௌரேணாஸ்த்ரேண தத்3வீரோ லக்ஷ்மண: ப்ரத்யவாரயத் ॥ (55)

அஸ்த்ரம் நிவாரிதம் த்3ருஷ்ட்வா ராவணி: க்ரோத4மூர்சி2த: ।
ஆஸுரம் ஸத்ருநாஸாய கோ4ரமஸ்த்ரம் ஸமாத3தே3 ॥ (56)

தஸ்மாச்சாபாத்3விநிஷ்பேதுர்ப4ாஸ்வரா: கூடமுத்3க3ரா: ।
ஸூலாநி ச பு4ஸுண்ட்2யஸ்ச க3தா3: க2ட்3க3ா: பரஸ்வதா4: ॥ (57)

தத்3த்3ருஷ்ட்வா லக்ஷ்மண: ஸங்க்2யே கோ4ரமஸ்த்ரமதா2ஸுரம் ।
அவார்யம் ஸர்வபூ4தாநாம் ஸர்வஸத்ருவிநாஸநம் ॥
மாஹேஸ்வரேண த்3யுதிமாந்ஸ்தத3ஸ்த்ரம் ப்ரத்யவாரயத் ॥ (58)

தயோ: ஸுதுமுலம் யுத்3த4ம் ஸம்ப3பூ4வாத்3பு4தோபமம் ।
க3க3நஸ்தா2நி பூ4தாநி லக்ஷ்மணம் பர்யவாரயந் ॥ (59)

பை4ரவாபி4ருதே பீ4மே யுத்3தே4 வாநரராக்ஷஸாம் ।
பூ4தைர்ப3ஹுபி4ராகாஸம் விஸ்மிதைராவ்ருதம் ப3பௌ4 ॥ (60)

ருஷய: பிதரோ தே3வா க3ந்த4ர்வா க3ருடோ3ரக3ா: ।
ஸதக்ரதும் புரஸ்க்ருத்ய ரரக்ஷுர்லக்ஷ்மணம் ரணே ॥ (61)

அதாந்யம் மார்க3ணஸ்ரேஷ்ட2ம் ஸந்த3தே4 ராக4வாநுஜ: ।
ஹுதாஸநஸமஸ்பர்ஸம் ராவணாத்மஜதா3ரணம் ॥ (62)

இரு வீரர்களாலும், சிறந்த இரண்டு விற்களில் பூட்டப்பெற்ற உத்தமமான இரு பாணங்களாலும் (இந்திரஜித்திற்கு யமதருமனால் கொடுக்கப்பட்டது; லட்சுமணனுக்குக் குபேரனால் கொடுக்கப்பட்டது) பேரொளியுடன் திகழ்ந்தன. (49)

இரண்டு விற்களிலிருந்தும் வெளிப்போந்த அவ்விரு பாணங்களும், வானத்தை ஒளிரச் செய்துகொண்டவாறே சென்று, ஒன்றின் முனையை மற்றொன்றின் முனை வலிமையுடன் தாக்கி (திறன் இழந்து) கீழே விழுந்தன. (50)

பயங்கரமான உருவங்கொண்ட (பேரழிவுத்தொழிலைச் செய்யக்கூடிய) அவ்விரண்டு பாணங்களும் தரையில் விழுந்ததும், அவ்விடத்திலிருந்து புகையுடன் கூடிய நெருப்புப் பொறிகளும் நெருப்பும் பயங்கரமாக எழுந்தன. (51)

அவ்விரு பாணங்களும், (ஆகாயத்தில்) இரண்டு பெருங்கோள்கள் ஒன்றோடொன்று மோதித் துகள்துகளாகிக் கீழே விழுவதைப் போல, போர்க்களத்தில் விழுந்தன. அப்போது போர்முனையில், அவ்விரு பாணங்களும் ஒன்றையொன்று தாக்கி வீணாகிப் போனதைக் கண்ட லட்சுமணனும் இந்திரஜித்தும் (தெய்விக ஆற்றல் பெற்றிருந்த அவ்விரு பாணங்களும் பயனற்றுப் போனதால்) சற்றே நாணமடைந்தார்கள்; கோபத்தால் நிரம்பினார்கள். (52,53)

சுமித்திராநந்தனான லட்சுமணன், மிகவும் கோபத்துடன் வாருணாஸ்திரத்தைக் கையில் எடுத்தான். அப்போது போரில் வீராப்புடன் இருந்த இந்திரஜித், ருத்ராஸ்திரத்தைப் பதிலுக்குச் செலுத்தினான். அந்த ருத்ராஸ்திரத்தினால் அடிக்கப்பட்டு, மிகவும் ஆச்சரியமான வாருணாஸ்திரம் அடங்கிப் போயிற்று. (54)

பின்னர், போரில் வெற்றி கொள்பவனும் பேராற்றல் படைத்தவனுமான இந்திரஜித், கோபம் கொண்டு உலகத்தையே அழித்துவிடுபவன் போல, நெருப்பைக் கக்கும் ஆக்னேயாஸ்திரத்தைத் தொடுத்தான். மாவீரனான லட்சுமணன், சூரிய அஸ்திரத்தால் அதைத் தடுத்து செயலிழக்கச் செய்து விட்டான். (55)

ஆக்னேயாஸ்திரம் வீணாக்கப்பட்டதைக் கண்டு, சினத்தால் ஆட்கொள்ளப்பட்ட இந்திரஜித், எதிரியை அழிப்பதற்காக, கொடூரமான அழிவைச் செய்யும் ஆசுர அஸ்திரத்தை வில்லில் தொடுத்தான். (56)

அந்த வில்லிலிருந்து தேசுமிக்க கூடமுத்கரங்களும் சூலங்களும் புசுண்டிகளும் கதைகளும் வாள்களும் கோடரிகளும் வெளிப்போந்தன. (57)

மிகவும் பயங்கரமானதும், எந்தப் பிராணிகளாலும் தடுக்க முடியாததும், எதிரிகளை அடியோடு அழிக்க வல்லதுமான ஆசுர அஸ்திரம் போர்க்களத்தில் பாய்ந்து வருவதைக் கண்ட லட்சுமணன், அந்த (ஆசுர) அஸ்திரத்தை, மாஹேசுவராஸ்திரத்தைச் செலுத்திச் செயலிழக்கச் செய்துவிட்டான். (58)

அவர்களிடையே நடந்த போர் மிகவும் களேபரமாகவும் ஒப்பில்லாததாகவும் இருந்தது. அப்போது, வானத்திலிருந்த பிராணிகள் எல்லாம் இலக்குவனைச் சூழ்ந்து கொண்டன. (59)

வானர–அரக்கர்களிடையே நிகழ்ந்த பயங்கரமான அந்தப் போரில், நெஞ்சத்தை நடுங்க வைக்கும் கடூரமான சப்தங்கள் எழுந்தன. அதனால், ஆச்சரியமடைந்த பல பூதங்கள் ஆகாயத்தை வியாபித்துக் கொண்டன. (60)

முனிவர்கள், பிதிரர்கள், தேவர்கள், கந்தர்வர்கள், கருடன், நாகர்கள் ஆகியோர் இந்திரனை முன்னிட்டுக் கொண்டு வந்து, போர்க்களத்தில் இலக்குவனுக்குப் பாதுகாவலாக நின்றார்கள். அப்போது இலக்குவன், தொட்டவுடன் எரிக்கும் நெருப்பைப் போன்றதும், இராவண குமாரனைச் சிதறடிக்கக் கூடியதுமான இன்னொரு பாணத்தை வில்லில் தொடுத்தான். (61,62)

ஸுபத்ரமநுவ்ருத்தாங்க$_3$ம் ஸுபர்வாணம் ஸுஸம்ஸ்தி$_2$தம் ।
ஸுவர்ணவிக்ருதம் வீர: ஶரீராந்தகரம் ஶரம் ॥ (63)

து$_3$ராவாரம் து$_3$ர்விஷஹ்யம் ராக்ஷஸாநாம் ப$_4$யாவஹம் ।
ஆஶீவிஷவிஷப்ரக்$_2$யம் தே$_3$வஸங்கை$_4$: ஸமர்சிதம் ॥ (64)

யேந ஶக்ரோ மஹாதேஜா தா$_3$நவாநஜயத் ப்ரபு$_4$: ।
புரா தை$_3$வாஸுரே யுத்$_3$தே$_4$ வீர்யவாந் ஹரிவாஹந: ॥ (65)

ததை$_3$ந்த்$_3$ரமஸ்த்ரம் ஸௌமித்ரி: ஸம்யுகே$_3$ஷ்வபராஜிதம் ।
ஶரஶ்ரேஷ்ட$_2$ம் த$_4$நு:ஶ்ரேஷ்டே$_2$ நரஶ்ரேஷ்டே$_2$ாऽபி$_4$ஸந்த$_3$தே$_4$ ॥ (66)

ஸந்தா$_4$யாமித்ரத$_3$ளநம் விசகர்ஷ ஶராஸநம் ।
ஸஜ்யமாயம்ய து$_3$ர்த$_4$ர்ஷம் காலோ லோகக்ஷயோ யதா$_2$ ॥ (67)

ஸந்தா$_4$ய த$_4$நுஷி ஶ்ரேஷ்டே$_2$ விகர்ஷந்நித$_3$மப்$_3$ரவீத் ।
லக்ஷ்மீவாந்(ல்)லக்ஷ்மணோ வாக்யமர்த$_2$ஸாத$_4$கமாத்மந: ॥ (68)

த$_4$ர்மாத்மா ஸத்யஸந்த$_4$ஶ்ச ராமோ தா$_3$ஶரதி$_2$ர்யதி$_3$ ।
பௌருஷே சாப்ரதித்$_3$வந்த்$_3$வ: ஶரைநம் ஜஹி ராவணிம் ॥ (69)

இத்யுக்த்வா பா$_3$ணமாகர்ணம் விக்ருஷ்ய தமஜிஹ்மக$_3$ம் ।
லக்ஷ்மண: ஸமரே வீர: ஸஸர்ஜேந்த்$_3$ரஜிதம் ப்ரதி ॥
ஐந்த்$_3$ராஸ்த்ரேண ஸமாயோஜ்ய லக்ஷ்மண: பரவீரஹா ॥ (70)

ஸ ஶிர: ஸஶிரஸ்த்ராணம் ஶ்ரீமஜ்ஜ்வலிதகுண்ட$_3$லம் ।
ப்ரமத்$_2$யேந்த்$_3$ரஜித: காயாத் பாதயாமாஸ பூ$_4$தலே ॥ (71)

தத்$_3$ராக்ஷஸதநூஜஸ்ய ச்சி$_2$ந்நஸ்கந்த$_4$ம் ஶிரோ மஹத் ।
தபநீயநிப$_4$ம் பூ$_4$மௌ த$_3$த்$_3$ருஶே ருதி$_4$ரோக்ஷிதம் ॥ (72)

ஹதஸ்து நிபபாதாஶு த$_4$ரண்யாம் ராவணாத்மஜ: ।
கவசீ ஸஶிரஸ்த்ராணோ வித்$_4$வஸ்த: ஸஶராஸந: ॥ (73)

சுக்ருஶுஸ்தே தத: ஸர்வே வாநரா: ஸவிபீ$_4$ஷணா: ।
ஹ்ருஷ்யந்தோ நிஹதே தஸ்மிந் தே$_3$வா வ்ருத்ரவதே$_4$ யதா$_2$ ॥ (74)

அதா$_2$ந்தரிக்ஷே தே$_3$வாநாம்ருஷீணாம் ச மஹாத்மநாம் ।
அபி$_4$ஜக்ஞே ச ஸந்நாதோ$_3$ க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸாமபி ॥ (75)

பதிதம் தமபி$_4$க்ஞாய ராக்ஷஸீ ஸா மஹாசமூ: ।
வத்$_4$யமாநா தி$_3$ஶோ பே$_4$ஜே ஹரிபி$_4$ர்ஜிதகாஶிபி$_4$: ॥ (76)

வாநரைர்வத்$_4$யமாநாஸ்தே ஶஸ்த்ராண்யுத்ஸ்ருஜ்ய ராக்ஷஸா: ।
லங்காமபி$_4$முகா$_2$: ஸஸ்ருர்நஷ்டஸம்க்ஞா: ப்ரதா$_4$விதா: ॥ (77)

அழகிய இறகுகள் கட்டப்பட்டிருந்த அந்த பாணம், சீரான உருவ அமைப்புக் கொண்டிருந்தது; அழகிய கணுக்களோடு விளங்கியது; மிக உறுதியாகவும் பொன்னால் இழைக்கப்பட்டதாகவும், தாக்கும் உடலை அழிக்கக் கூடியதாகவும், எவராலும் தடுக்க முடியாததாகவும், சகித்துக் கொள்ள முடியாததாகவும், அரக்கர்களுக்கு அச்சத்தை ஊட்ட வல்லதாகவும் இருந்தது; சர்ப்பத்தின் விஷத்தைப் போன்றது; தேவகணங்களால் பூஜிக்கப்படுவது; போர்களில் எவராலும் வெற்றி கொள்ள முடியாதது. மிகுந்த பராக்கிரமமுடைய தலைவனும் பச்சை வண்ணக் குதிரையை வாகனமாகக் கொண்டவனும் வீரம் பொருந்தியவனுமான இந்திரன், முன்னொரு காலத்தில் நடந்த தேவ–அசுரப் போரில், எதைக் கொண்டு வெற்றி பெற்றானோ, அந்த உத்தம பாணத்தை ஐந்திராஸ்திரமாகச் செய்து, வீரனும் புருஷோத்தமனுமான லட்சுமணன், தன்னுடைய சிறந்த வில்லில் தொடுத்தான். (63–66)

(எவராலும் தடுக்க முடியாத) ஊழிக்கால காலன் போல் விளங்கிய இலக்குவன், எதிரிகளைச் சிதைக்க வல்லதும் எதிர்கொள்ள முடியாததுமான அந்த அஸ்திரத்தை, நாணேற்றப்பட்ட வில்லில் தொடுத்து, வளைத்து, இழுத்துவிட முற்பட்டான். (67)

வெற்றித்திரு பொருந்திய லட்சுமணன், உத்தமமான வில்லில் அஸ்திரத்தைத் தொடுத்து, நாணில் வைத்து இழுக்கும் தருணத்தில், தனக்கு வெற்றியைத் தரும், ஒப்பற்ற மாமந்திரச் சொற்களை உறுதியாகக் கூறினான். (68)

''தசரதனுக்குப் புதல்வனாகத் தோன்றிய இராமன், அறத்தின் நாயகன் என்பது உண்மையென்றால், ஆண்மையில் நிகரில்லாதவன் என்பது சத்தியமென்றால், இராமன் சத்தியம் தவறாதவர் என்பது நிஜமானால், ஓ பாணமே! (இந்திராஸ்திரமே!) என் எதிரில் நிற்கும் இராவண மைந்தனை அழிப்பாயாக!'' (69)

இவ்வாறு, எதிரிகளை மாய்ப்பவனும் வீரனும் சுமித்திரையின் புதல்வனுமான லட்சுமணன், போர்க்களத்தில் புகன்றருளிவிட்டு, குறி விலகாது செல்லக்கூடிய அந்த பாணத்தை, இந்திரனை அதிதேவதையாகக் கொண்ட மந்திரங்களால் அஸ்திரமாகச் செய்து, நாண்கயிற்றைக் காதுவரை இழுத்து, இந்திரஜித்தை நோக்கிச் செலுத்தினான். (70)

வில்லில் இருந்து விடுபட்ட அஸ்திரம், பேரொளி வீசிக்கொண்டிருந்த குண்டலங்களோடும் தலைப்பாகையோடும் விளங்கிக் கொண்டிருந்த தலையை, இந்திரஜித்தின் உடலிலிருந்து பிரித்தெடுத்துப் பூமியில் தள்ளியது. (71)

அரக்க மன்னன் புதல்வனுடைய கழுத்துக்கு மேலே வெட்டப்பட்ட பெரிய தலை, இரத்தத்தில் தோய்ந்து, பொன்னொளி வீசிக்கொண்டு தரையில் கிடந்தது. கவசம் அணிந்திருந்த இந்திரஜித், தலைப்பாகை, வில் ஆகியவற்றுடன் மாய்க்கப் பெற்று, உயிரிழந்து உடனே பூமியில் விழுந்துவிட்டான். (தலை வெட்டப்பட்டதும் உயிர் போனதால் உடலும் சாய்ந்தது.) (72,73)

விருத்திராசுரன் (இந்திரனால்) கொல்லப்பட்டதும் தேவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்ததைப் போலவே, அவன் (இந்திரஜித்) கொல்லப்பட்டதும் விபீஷணனும் எல்லா வானரர்களும் மனக்களிப்புடன் கூச்சலிட்டார்கள். அப்போது வானில், தேவர்கள், ஆத்ம தரிசனம் கிடைக்கப் பெற்ற முனிவர்கள், கந்தர்வர்கள், அப்சரசுகள் ஆகிய அனைவரும் கூடிக் குதூகலமாகப் பேரரவம் எழுப்பினார்கள். (74,75)

அரக்கப் பெரும்படை, அவன் (இந்திரஜித்) (உயிர் துறந்து) கீழே விழுந்துவிட்டதை அறிந்து கொண்டு, வெற்றிக்களிப்பில் மிதக்கும் வானரர்களால் தாக்கப்பட்டு நாற்றிசையிலும் சிதறி ஓடிற்று. வானரர்களால் தாக்கப்பட்ட அரக்கர்கள் படைக்கலன்களை எறிந்துவிட்டு, 'என்ன செய்கிறோம்?' என்ற உணர்வும் இல்லாமல், தலைதெறிக்க இலங்கையை நோக்கி ஓடிச் சென்றார்கள். (76,77)

து3த்3ருவுர்ப3ஹூத4ா பீ4தா ராக்ஷஸா: ஶதஶோ தி3ஶ: ।
த்யக்த்வா ப்ரஹரணாந் ஸர்வே பட்டஸாஸிபரஶ்வதா4ந் ॥ (78)

கேசில்லங்காம் பரித்ரஸ்தா: ப்ரவிஷ்டா வாநரார்தி3தா: ।
ஸமுத்3ரே பதிதா: கேசித் கேசித் பர்வதமாஶ்ரிதா: ॥ (79)

ஹதமிந்த்3ரஜிதம் த்3ருஷ்ட்வா ஶயாநம் ஸமரக்ஷிதௌ ।
ராக்ஷஸாநம் ஸஹஸ்ரேஷு ந கஶ்சித் ப்ரத்யத்3ருஶ்யத ॥ (80)

யத2ாஸ்தம் க3த ஆதி3த்யே நாவதிஷ்ட2ந்தி ரஶ்மய: ।
தத2ா தஸ்மிந்நிபதிதே ராக்ஷஸாஸ்தே க3தா தி3ஶ: ॥ (81)

ஶாந்தரஶ்மிரிவாதி3த்யோ நிர்வாண இவ பாவக: ।
ஸ ப3பூ4வ மஹாதேஜா வ்யபாஸ்தக3தஜீவித: ॥ (82)

ப்ரஶாந்தபீட3ாப3ஹுலோ நஷ்டாரிஷ்ட: ப்ரதாபவாந் ।
ப3பூ4வ லோக: பதிதே ராக்ஷஸேந்த்3ரஸுதே தத3ா ॥ (83)

ஹர்ஷம் ச ஶக்ரோ ப4க3வாந் ஸஹ ஸர்வை: ஸுரர்ஷபை4: ।
ஜக3ாம நிஹதே தஸ்மிந் ராக்ஷஸே பாபகர்மணி ॥ (84)

ஆகாஶே சாபி தே3வாநாம் ஶுஶ்ருவே து3ந்து3பி4ஸ்வந: ।
ந்ருத்யத்3பி4ரப்ஸரோபி4ஶ்ச க3ந்த4ர்வைஶ்ச மஹாத்மபி4: ॥ (85)

வவ்ருஷு: புஷ்பவர்ஷாணி தத3த்3பு4தமபூ4த்தத3ா ।
ப்ரஶஶம்ஸுர்ஹதே தஸ்மிந் ராக்ஷஸே க்ரூரகர்மணி ॥ (86)

ஶுத்3த4ா ஆபோ தி3ஶஶ்சைவ ஜஹ்ருஷுர்தைத்யத3ாநவா: ।
ஆஜக்3மு: பதிதே தஸ்மிந் ஸர்வலோகப4யாவஹே ॥ (87)

ஊசுஶ்ச ஸஹிதா: ஸர்வே தே3வக3ந்த4ர்வத3ாநவா: ।
விஜ்வரா: ஶாந்தகலுஷா ப்3ராஹ்மணா விசரந்த்விதி ॥ (88)

ததோऽப்4யநந்த3ந் ஸம்ஹ்ருஷ்டா: ஸமரே ஹரியூத2பா: ।
தமப்ரதிப3லம் த்3ருஷ்ட்வா ஹதம் நைர்ருதபுங்க3வம் ॥ (89)

விபீ4ஷணோ ஹநுமாந்ஶ்ச ஜாம்ப3வாந்ஶ்சர்க்ஷயூத2ப: ।
விஜயேநாபி4நந்த3ந்தஸ்துஷ்டுவுஶ்சாபி லக்ஷ்மணம் ॥ (90)

க்ஷ்வேலந்தஶ்ச நத3ந்தஶ்ச க3ர்ஜந்தஶ்ச ப்லவங்க3மா: ।
லப்3த4லக்ஷா ரகு4ஸுதம் பரிவார்யோபதஸ்தி2ரே ॥ (91)

லாங்கூ3லாநி ப்ரவித்4யந்த: ஸ்போ2டயந்தஶ்ச வாநரா: ।
லக்ஷ்மணோ ஜயதீத்யேவம் வாக்யம் விஶ்ராவயந்ஸ்தத3ா ॥ (92)

மிகவும் அச்சங்கொண்ட எல்லா அரக்கர்களும் பட்டிசம், வாள், கோடரி ஆகிய ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, நூற்றுக்கணக்காக பல பிரிவாகப் பிரிந்து எல்லாத் திசைகளிலும் ஓடினார்கள். (78)

வானரர்களால் புடைக்கப்பட்ட சிலர் மருட்சி அடைந்து இலங்கைக்குள் புகுந்தார்கள்; சிலர் கடலில் குதித்தார்கள்; சிலர் மலைமீது (உயிர் பிழைக்க) ஏறிக் கொண்டார்கள். (79)

இந்திரஜித் கொல்லப்பட்டு, போர்க்களத்தில் படுத்துக் கிடப்பதைப் பார்த்ததும், (முன்னர் இருந்த) ஆயிரக்கணக்கான அரக்கர்களில் ஒருவனைக்கூட அங்கே காணவில்லை! (எல்லோரும் ஓடிப்போய் விட்டார்கள்.) (80)

சூரியன் மேற்றிசையில் மறைந்ததும், உலகில் கிரணங்கள் இல்லாமற்போய்விடுவதைப் போல, அவன் (இந்திரஜித்) உயிர் நீங்கி சாய்ந்தவுடன், அவனுடன் வந்திருந்த அரக்கர்கள் எல்லோரும் எல்லாத் திசைகளிலும் ஓடிப் போய்விட்டார்கள். (81)

பேராற்றல் கொண்ட அவன், உயிர் நீங்கியவுடன் கிரணங்கள் அடங்கிப்போன சூரியன் போலவும், முற்றிலும் தணல் அடங்கிய அக்னி போலவும் காணப்பட்டான். (82)

(அவன் உயிரோடிருந்தபோது பயந்து கொண்டிருந்த) சூரியன் ஒளியுடன் பிரகாசித்தது. அரக்க மன்னனுடைய புதல்வன் தரையில் சாய்ந்ததும், உலகம் பலவகையான துன்பங்களும் நீங்கப் பெற்றதாக ஆயிற்று. (83)

மகாபாவியான அவன் மாண்டவுடன், எல்லா தேவர்களோடும்கூட மகேந்திரன் பேரானந்தம் அடைந்தான். (84)

வானத்தில், அப்சரப் பெண்டிர் நடனமாடிய ஒலியும், மேன்மை பொருந்திய கந்தர்வர்கள், தேவர்கள் முழக்கிய துந்துபியின் நாதமும் கேட்கப்பட்டன. (85)

தீச்செயல் புரியும் அந்த அரக்கன் மாய்க்கப்பட்டதும் (வானத்திலிருந்த தேவ–கந்தர்வர்கள்) இலக்குவனைப் போற்றி வாழ்த்தினார்கள். அவர்கள் பிரமிக்க வைக்கும் முறையில் (அவன்மீது) மலர்மாரியைப் பொழிந்தார்கள். (86)

நீர்நிலைகளும் திசைகளும் தெளிவை அடைந்தன; தேவர்களும் தானவர்களும் மகிழ்ச்சி கொண்டார்கள். எல்லா உலகங்களுக்கும் பயத்தை விளைவித்த அவன், உயிர் நீங்கித் தரையில் சாய்ந்தவுடன், தேவ–அசுர–கந்தர்வர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வந்து, 'பிராமணர்கள், ஆபத்துக்களும் மனக்கவலையும் இல்லாமல் எங்கும் சஞ்சரிப்பார்களாக!' என்று சொன்னார்கள். (87,88)

ஒப்பற்ற பலசாலியான அந்த அரக்கத் தலைவன் போரில் மாய்க்கப்பட்டதைக் கண்டு, வானரப் படைத்தலைவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து இலக்குவனைக் கொண்டாடினார்கள். (89)

விபீஷணன், அனுமான், கரடித் தலைவரான ஜாம்பவான் ஆகியோர், கிடைத்த வெற்றியினால் மிகவும் மகிழ்ச்சியடைந்து இலக்குவனைப் புகழ்ந்து கூறி இன்பமுறச் செய்தார்கள். (90)

வானரர்கள், லட்சியம் நிறைவேறிவிட்டதால் குதித்துக் கூச்சலிட்டுப் பேராரவாரம் செய்து கொண்டு, இலக்குவனை சூழ்ந்து கொண்டு, அவன் அருகிலேயே நின்றார்கள். (91)

வானரர்கள் வால்களைச் சுழற்றி அடித்து, கைகொட்டிக் கும்மாளமிட்டு, 'லட்சுமணன் வாழ்க!' என்று வாழ்த்தொலி எழுப்பினார்கள். (92)

அந்யோந்யம் ச ஸமாஶ்லிஷ்ய கபயோ ஹ்ருஷ்டமாநஸா: ।
சக்ருருச்சாவசகு3ணா ராக4வாஶ்ரயஜா: கதா2: ॥ (93)

தத3ஸுகரமதா2பி4வீக்ஷ்ய ஹ்ருஷ்டா
ப்ரியஸுஹ்ருதோ3 யுதி4 லக்ஷ்மணஸ்ய கர்ம ।
பரமமுபலப4ந் மந:ப்ரஹர்ஷம்
விநிஹதமிந்த்3ரரிபும் நிஶம்ய தே3வா: ॥ (94)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகநவதிதம: ஸர்க3: ॥

த்3விநவதிதம: ஸர்க3:

ராவணிஶஸ்த்ரஹதசிகித்ஸா

ருதி4ரக்லிந்நகா3த்ரஸ்து லக்ஷ்மண: ஶுப4லக்ஷண: ।
ப3பூ4வ ஹ்ருஷ்டஸ்தம் ஹத்வா ஶக்ரஜேதாரமாஹவே ॥ (1)

தத: ஸ ஜாம்ப3வந்தம் ச ஹநுமந்தம் ச வீர்யவாந் ।
ஸந்நிவர்த்ய மஹாதேஜாஸ்தாந்ஸ்ச ஸர்வாந் வநௌகஸ: ॥ (2)

ஆஜகா3ம ததஸ்தீவ்ரம் யத்ர ஸுக்3ரீவராக4வௌ ।
விபீ4ஷணமவஷ்டப்4ய ஹநூமந்தம் ச லக்ஷ்மண: ॥ (3)

ததோ ராமமபி4க்ரம்ய ஸௌமித்ரிரபி4வாத்3ய ச ।
தஸ்தௌ2 ப்4ராத்ருஸமீபஸ்த2: ஶக்ரஸ்யேந்த்3ராநுஜோ யதா2 ॥ (4)

நிஷ்டநந்நிவ சாக3ம்ய ராக4வாய மஹாத்மநே ।
ஆசசக்ஷே ததா3 வீரோ கோ4ரமிந்த்3ரஜிதோ வத4ம் ॥ (5)

ராவணேஸ்து ஶிரஶ்சி2ந்நம் லக்ஷ்மணேந மஹாத்மநா ।
ந்யவேத3யத ராமாய ததா3 ஹ்ருஷ்டோ விபீ4ஷண: ॥ (6)

ஶ்ருத்வைதத்து மஹாவீர்யோ லக்ஷ்மணேநேந்த்3ரஜித்3வத4ம் ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே4 ராமோ வாக்யமுவாச ஹ ॥ (7)

ஸாது4 லக்ஷ்மண துஷ்டோऽஸ்மி கர்மணா ஸுக்ருதம் க்ருதம் ।
ராவணேர்ஹி விநாஶேந ஜிதமித்யுபதா4ரய ॥ (8)

ஸ தம் ஶிரஸ்யுபாக்4ராய லக்ஷ்மணம் லக்ஷ்மிவர்த4நம் ।
லஜ்ஜமாநம் ப3லாத்ஸ்நேஹாத3ங்கமாரோப்ய வீர்யவாந் ॥ (9)

உபவேஶ்ய தமுத்ஸங்கே3 பரிஷ்வஜ்யாவபீடி3தம் ।
ப்4ராதரம் லக்ஷ்மணம் ஸ்நிக்3த4ம் புந: புநருதை3க்ஷத ॥ (10)

மனக்களிப்புடனிருந்த வானரர்கள், ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள்; இலக்குவனுடைய மேன்மையான வீரப்பிரதாபங்களைப் பற்றியும் விளக்கமாகப் பேசினார்கள். (93)

தேவர்களின் அன்புக்குரிய நண்பனான இலக்குவன், செயற்கரிய அந்தச் செயலை (இந்திரஜித் வதத்தை)ச் செய்து முடித்து விட்டதைக் கண்களால் கண்டு, (உண்மையிலேயே இந்திரஜித் கொல்லப்பட்டு விட்டான் – என்பதை ஐயத்திற்கு இடமில்லாமல் தெரிந்து கொண்டு) மிகவும் மனநிம்மதியை அடைந்தார்கள். (94)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்றோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம்: தொண்ணூற்றிரண்டு

இலக்குவனுக்கு மருத்துவம்

பிறவியிலேயே நற்குணங்கள் அமையப் பெற்ற இலக்குவன், போர்க்களத்தில் இந்திரஜித்தைக் கொன்று பேரானந்தம் அடைந்தான். (இந்திரஜித்தின் அஸ்திரத் தாக்குதலால்,) அவன் மேனியிலிருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது. (1)

பின்னர், வீரபராக்கிரமம் கொண்ட லட்சுமணன், வானரர்கள் எல்லோரையும் விலகி இருக்கச் செய்து, ஜாம்பவானையும் அனுமானையும் உடன் அழைத்துக் கொண்டு, (பெரும் போர் நடத்தியதால் களைப்படைந்தவர் போல்) அவர்களால் கைலாகு கொடுக்கப்பட்டு, சுக்ரீவனும் இராமபிரானும் இருந்த இடத்திற்கு வேகமாக வந்து சேர்ந்தான். (2,3)

வந்தவுடன், இராமபிரானை அணுகிச் சென்று, திருவடிகளில் விழுந்து வணங்கி, இந்திரனுக்கருகில் அவனுடைய தம்பி இருப்பதைப் போல, சகோதரரின் பக்கத்தில் பணிவுடன் நின்றான். (4)

மாவீரனான லட்சுமணன், மகாத்மாவான இராமபிரானிடம் பயங்கரமாகப் போர் செய்து, இந்திரஜித்தை மாய்த்த செய்தியை, (மிகவும் ஆயாசத்துடன் இருப்பவன் போல்) தடுமாறும் மெல்லிய குரலில் தெரிவித்தான். (5)

அப்போது மனமகிழ்ச்சியுடனிருந்த விபீஷணன், மகாபராக்கிரமம் படைத்த இலக்குவனால், இந்திரஜித்தின் சிரம் துண்டிக்கப்பட்டதை இராமனுக்குத் தெரிவித்தான். (6)

மாவீரரான இராமன், இலக்குவனால் இந்திரஜித் மாய்க்கப்பட்டதைக் கேட்டு அளவில்லாத ஆனந்தம் அடைந்தார். அப்போது, பின்வருமாறு கூறினார்— (7)

''லட்சுமணா! நன்று, நன்று! நீ, நல்ல காரியம் செய்திருக்கிறாய். உன் அரிய செயலால் நான் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். இந்திரஜித் அழிந்தான்! – என்பதாலேயே, நாம் வெற்றியடைந்து விட்டோம் என்று நிச்சயமாக அறிந்துகொள்.'' (8)

வெற்றித் திருவுடன் பொலிந்த தம்பி இலக்குவனை, மாவீரரான இராமன், மடிமீது ஏற்றிக்கொண்டு, புகழுரையால் நாணி நிற்கும் அவனைத் தன்பால் இழுத்து, மடியில் உட்கார வைத்து, அன்புடன் இறுகத் தழுவிக்கொண்டு, உச்சிமுகர்ந்து, அஸ்திரங்களின் அடியால் புண்பட்டிருக்கும் அவனை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டேயிருந்தார். (9,10)

ஶல்யஸம்பீடி$_3$தம் ஶஸ்தம் நி:ஶ்வஸந்தம் து லக்ஷ்மணம் ।
ராமஸ்து து:க$_2$ஸந்தப்தஸ்தத$_3$ா நி:ஶ்வஸிதோ ப்$_4$ருஶம் ॥ (11)

மூர்த்$_4$நி சைநமுபாக்$_4$ராய பூ$_4$ய: ஸம்ஸ்ப்ருஶ்ய ச த்வரந் ।
உவாச லக்ஷ்மணம் வாக்யமாஶ்வாஸ்ய புருஷர்ஷப$_4$: ॥ (12)

க்ருதம் பரமகல்யாணம் கர்ம து$_3$ஷ்கரகர்மணா ।
அத்$_3$ய மந்யே ஹதே புத்ரே ராவணம் நிஹதம் யுதி$_4$ ॥
அத்$_3$யாஹம் விஜயீ ஶத்ரௌ ஹதே தஸ்மிந் து$_3$ராத்மநி ॥ (13)

ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய தி$_3$ஷ்ட்யா வீர த்வயா ரணே ।
சி$_2$ந்நோ ஹி த$_3$க்ஷிணோ ப$_3$ாஹு: ஸ ஹி தஸ்ய வ்யபாஶ்ரய: ॥ (14)

விபீ$_4$ஷணஹநூமத்$_3$ப்$_4$யாம் க்ருதம் கர்ம மஹத்$_3$ரணே ।
அஹோராத்ரைஸ்த்ரிபி$_4$ர்வீர: கத$_2$ம்சித்$_3$விநிபாதித: ॥ (15)

நிரமித்ர: க்ருதோऽஸ்ம்யத்$_3$ய நிர்யாஸ்யதி ஹி ராவண: ।
ப$_3$லவ்யூஹேந மஹதா ஶ்ருத்வா புத்ரம் நிபாதிதம் ॥ (16)

தம் புத்ரவத$_4$ஸந்தப்தம் நிர்யாந்தம் ராக்ஷஸாதி$_4$பம் ।
ப$_3$லேநாவ்ருத்ய மஹதா நிஹநிஷ்யாமி து$_3$ர்ஜயம் ॥ (17)

த்வயா லக்ஷ்மண நாதே$_2$ந ஸீதா ச ப்ருதி$_2$வீ ச மே ।
ந து$_3$ஷ்ப்ராபா ஹதே த்வத்$_3$ய ஶக்ரஜேதரி சாஹவே ॥ (18)

ஸ தம் ப்$_4$ராதரமாஶ்வாஸ்ய பரிஷ்வஜ்ய ச ராக$_4$வ: ।
ராம: ஸுஷேணம் முதி$_3$த: ஸமாப$_4$ாஷ்யேத$_3$மப்$_3$ரவீத் ॥ (19)

ஸஶல்யோऽயம் மஹாப்ராக்ஞ ஸௌமித்ரிர்மித்ரவத்ஸல: ।
யத$_2$ா ப$_4$வதி ஸுஸ்வஸ்த$_2$ஸ்தத$_2$ா த்வம் ஸமுபாசர ॥ (20)

விஶல்ய: க்ரியதாம் க்ஷிப்ரம் ஸௌமித்ரி: ஸவிபீ$_4$ஷண: ।
ருக்ஷவாநரஸைந்யாநம் ஶூராணாம் த்$_3$ருமயோதி$_4$நாம் ॥ (21)

யே சாப்யந்யேऽத்ர யுத்$_4$யந்தி ஸஶல்யா வ்ரணிநஸ்தத$_2$ா ।
தேऽபி ஸர்வே ப்ரயத்நேந க்ரியந்தாம் ஸுகி$_2$நஸ்த்வயா ॥ (22)

ஏவமுக்தஸ்து ராமேண மஹாத்மா ஹரியூத$_2$ப: ।
லக்ஷ்மணாய த$_3$தெ$_3$ள நஸ்த: ஸுஷேண: பரமௌஷதி$_4$ம் ॥ (23)

ஸ தஸ்யா க$_3$ந்த$_4$மாக்$_4$ராய விஶல்ய: ஸமபத்$_3$யத ।
தத$_2$ா நிர்வேத$_3$நஶ்சைவ ஸம்ரூட$_4$வ்ரண ஏவ ச ॥ (24)

விபீ$_4$ஷணமுக$_2$ாநாம் ச ஸுஹ்ருத$_3$ாம் ராக$_4$வாக்ஞயா ।
ஸர்வவாநரமுக்$_2$யாநாம் சிகித்ஸாம் ஸ தத$_3$ாகரோத் ॥ (25)

அப்போது இராமன், அம்புத் தாக்குதலால் ஏற்பட்ட காயங்களால் துன்பப்பட்டு பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்த லட்சுமணன் நிலையைப் பார்த்து, துக்கம் தாங்காமல் தானும் பெருமூச்செறிந்தார். (11)

புருஷோத்தமராகிய இராமன், லட்சுமணனை உச்சிமுகர்ந்து, திரும்பத் திரும்ப விரைவாகக் கட்டித் தழுவி, ஆறுதல் அளித்துப் பின்வருமாறு கூறினார்— (12)

''எவராலும் செய்ய முடியாத அரியசெயலைச் செய்து, (உலகுக்கே) மங்களத்தைக் கொடுத்திருக்கிறாய்! இப்போது, போரில் மைந்தன் மாய்க்கப்பட்டு விட்டதால், இராவணனும் மாண்டதாகவே நான் நினைக்கிறேன். தீயவனான அந்தப் பகைவன் மாண்டு போய்விட்டதால், நான் வெற்றியடைந்து விட்டேன்! (13)

வீரனே! வெறுக்கத்தக்க இயல்புடைய இராவணனுடைய வலதுகரம், போரில் நல்வாழ்வு காரணமாக உன்னால் துண்டிக்கப்பட்டுவிட்டது! இந்திரஜித்தையே இராவணன் முற்றிலும் நம்பிக் கொண்டிருந்தான். ('அவன் இருக்கும்போது எனக்கு என்ன கவலை?' – என்று கலவரமடையாமல் இருந்தான்.) (14)

போர்க்களத்தில், விபீஷணனாலும் அனுமானாலும் அரிய செயல்கள் செய்யப்பட்டன. இராப்பகலாக (ஏகாதசி, துவாதசி, திரயோதசி) மூன்று நாட்கள் நடந்த போரில், ஒருவழியாக எதிரியான அவன் வீழ்த்தப்பட்டான். இப்போது பகைவர்கள் இல்லாதவனாக (உன்னால்) ஆக்கப்பட்டுவிட்டேன்! இப்போது (படையை நடத்திச் செல்லும் தலைவன் யாரும் இல்லாததால்) மகன் வீழ்த்தப்பட்டதை அறிந்தும், மிகப்பெரும் படையுடன்கூட இராவணனே வெளியே புறப்பட்டு வரப் போகிறான். (15,16)

புதல்வன் கொல்லப்பட்டதால் உள்ளம் கொதித்துக் கொண்டிருப்பவனும் வெல்வதற்கரியவனுமான அரக்கர் தலைவனை, பெரும் படையுடன் சென்று கொல்லப் போகிறேன். லட்சுமணா! இந்திரனை வென்ற இந்திரஜித்தையே போர்க்களத்தில் கொன்று விட்டாய்! உன்னைப் போன்ற ஒரு பாதுகாவலனும் துணைவனும் இருக்கும்போது, சீதையையும் ஏன், இந்த பூமண்டலத்தையும்கூட என்னால் எளிதாக அடைய முடியாதா, என்ன? (17,18)

ரகுகுல மாணிக்கமான இராமன், மனமகிழ்ச்சியுடன் சகோதரனுக்கு அன்பான சொற்களைக் கூறி அமைதியுறச் செய்து, கட்டியணைத்துக் கொண்டார். பின், சுஷேணனை (வானர மருத்துவனை) அழைத்துப் பின்வருமாறு ஆணையிட்டார்— (19)

''மருத்துவம் நன்கு அறிந்தவனே! நண்பர்களிடம் பேரன்பு கொண்ட லட்சுமணன் காயங்களால் வேதனை அடைந்திருக்கிறான். அவன் காயங்கள் மறைந்து, உடல் நல்ல நிலையை அடைவதற்குத் தேவையானபடி சிகிச்சை செய். (20)

விபீஷணனும் லட்சுமணனும் (அஸ்திரத் தாக்குதலால் காயப்படுத்தப்பட்டு) துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது உடல் வேதனையை நீக்குவாய். மரங்களைப் பெயர்த்துப் போரிட்ட வானர–கரடி வீரர்களும் மற்றும் போரில் பங்கு கொண்டு புண்பட்டு வேதனையோடிருக்கும் மற்ற எல்லோரும், உன்னால் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு சுகம் பெற ஆவன செய்வாயாக.'' (21,22)

இராமன் இவ்வாறு கூறியதும், பேராற்றல் கொண்டவனும் வானரப் படைத்தலைவனுமான சுஷேணன், சிறந்த பச்சிலை ஒன்றை லட்சுமணனின் மூக்கின் அருகே கொண்டு சென்றான். அவன், அதன் மணத்தை நுகர்ந்ததும் அம்புகளால் ஏற்பட்ட காயங்கள் மறைந்தன; வலி போயிற்று; வடுக்கள் மறைந்தன. (23,24)

இராமபிரானின் கட்டளைப்படி, விபீஷணனுக்கும் நண்பர்களான எல்லா வானரோத்தமர்களுக்கும் (சுஷேணன்) மருத்துவம் செய்தான். (25)

தத: ப்ரக்ருதிமாபந்நோ ஹ்ருதஶல்யோ க₃தவ்யத₂: ।
ஸௌமித்ரிர்முதி₃தஸ்தத்ர க்ஷணேந விக₃தஜ்வர: ॥ (26)

ததை₂வ ராம: ப்லவகா₃திப₄ஸ்தத₃ா
விபீ₄ஷணஶ்சர்க்ஷபதிஶ்ச ஜாம்ப₃வாந் ।
அவேக்ஷ்ய ஸௌமித்ரிமரோக₃முத்தி₂தம்
முத₃ா ஸஸைந்யா: ஸுசிரம் ஜஹர்ஷிரே ॥ (27)

அபூஜயந் கர்ம ஸ லக்ஷ்மணஸ்ய ஸுது₃ஷ்கரம் த₃ாஶரதி₂ர்மஹாத்மா ।
ஹ்ருஷ்டா ப₃பூ₄வுர்யுதி₄ யூத₂பேந்த்₃ரா நிபாதிதம் ஶக்ரஜிதம் நிஶம்ய ॥ (28)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ த்₃விநவதிதம: ஸர்க₃: ॥

த்ரிநவதிதம: ஸர்க₃:

ஸீதாஹநநோத்₃யமநிவ்ருத்தி:

தத: பௌலஸ்த்யஸசிவா: ஶ்ருத்வா சேந்த்₃ரஜிதம் ஹதம் ।
ஆசசக்ஷுரபி₄க்ஞாய த₃ஶக்₃ரீவாய ஸவ்யத₂ா: ॥ (1)

யுத்₃தே₄ ஹதோ மஹாராஜ லக்ஷ்மணேந தவாத்மஜ: ।
விபீ₄ஷணஸஹாயேந மிஷதாம் நோ மஹாத்₃யுதி: ॥ (2)

ஶூர: ஶூரேண ஸங்க₃ம்ய ஸம்யுகே₃ஷ்வபராஜித: ।
லக்ஷ்மணேந ஹத: ஶூர: புத்ரஸ்தே விபு₃தே₄ந்த்₃ரஜித் ॥
க₃த: ஸ பரமாந்(ல்)லோகாஞ்ஶரை: ஸந்தாப்ய லக்ஷ்மணம் ॥ (3)

ஸ தம் ப்ரதிப₄யம் ஶ்ருத்வா வத₄ம் புத்ரஸ்ய த₃ாருணம் ।
கே₄ாரமிந்த்₃ரஜித: ஸங்க்₂யே கஶ்மலம் சாவிஶந்மஹத் ॥ (4)

உபலப்₄ய சிராத் ஸம்க்ஞாம் ராஜா ராக்ஷஸபுங்க₃வ: ।
புத்ரஶோகார்தி₃தோ தீ₃நோ விலலாபாகுலேந்த்₃ரிய: ॥ (5)

ஹா ராக்ஷஸசமூமுக்₂ய மம வத்ஸ மஹாரத₂ ।
ஜித்வேந்த்₃ரம் கத₂மத்₃ய த்வம் லக்ஷ்மணஸ்ய வஶம் க₃த: ॥ (6)

நநு த்வமிஷுபி₄: க்ருத்₃தே₄ா பி₄ந்த்₃யா: காலாந்தகாவபி ।
மந்த₃ரஸ்யாபி ஶ்ருங்க₃ாணி கிம் புநர்லக்ஷ்மணம் யுதி₄ ॥ (7)

அத்₃ய வைவஸ்வதோ ராஜா பூ₄யோ ப₃ஹுமதோ மம ।
யேநாத்₃ய த்வம் மஹாபா₃ஹோ ஸம்யுக்த: காலத₄ர்மணா ॥ (8)

அப்போது, இலக்குவன் நொடிப்பொழுதில் புண்கள் ஆறி, வேதனை ஒழிந்து, மனத்துயர் நீங்கி, இயல்பான உற்சாகத்தை அடைந்தான். வானரப் படையினரும் இலக்குவனும் உடல் நலக்குறைவு நீங்கி சுகமாக இருப்பதைப் பார்த்து, இராமனும் சுக்ரீவனும் விபீஷணனும் கரடி மன்னரான ஜாம்பவானும் மனநிறைவடைந்து திருப்தி கொண்டார்கள். (26,27)

மகாத்மாவான இராமபிரான், செயற்கரிய செயல் செய்த லட்சுமணனை மிகவும் பாராட்டினார். (இந்திரஜித் வீழ்த்தப்பட்டபோது, அந்தப் பகுதியில் இல்லாததால், அதை நேரில் கண்டு மகிழ முடியாத) வானரப் படைத்தலைவர்கள், போரில் இந்திரஜித் வீழ்த்தப்பட்டதைக் கேட்டு பேரானந்தம் அடைந்தார்கள். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்றிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்று மூன்று

இராவணன் புலம்பல்!

இராவணனுடைய அமைச்சர்கள், இந்திரஜித் கொல்லப்பட்டான் என்ற செய்தியை (போர்க்களத்திலிருந்து ஓடிவந்த அரக்கர்களிடமிருந்து) தெரிந்து கொண்டார்கள். (ஆனாலும், அதை நம்பாமல்) அவர்களே நேரில் சென்று உறுதி செய்து கொண்டு, மிக்க வருத்தத்துடன் இராவணனிடம் கூறினார்கள்— (1)

''மாமன்னரே! போரில் தோல்வியைக் கண்டறியாத பெருமதியாளரான தங்கள் புதல்வர், விபீஷணனின் துணையைப் பெற்ற லட்சுமணனால் நம் படைவீரர்கள் கண்ணெதிரேயே கொல்லப்பட்டார். (2)

தேவேந்திரனை வென்றவரும், போர்களில் வெற்றிகொள்ள முடியாதவருமான தங்கள் குமாரர், வீரனான லட்சுமணனை எதிர்த்துப் போரிட்டபோது கொல்லப்பட்டார். சூரரான அவர், லட்சுமணனைப் பாணங்களால் மிகவும் துன்பப்படுத்திவிட்டு, (கடைசியில்) உத்தமமான மேலுலகங்களைச் சென்றடைந்து விட்டார்.'' (3)

அவன் (இராவணன்), போரில் புதல்வன் இந்திரஜித் மாய்க்கப்பட்டான் என்ற அச்சத்தை விளைவிக்கக் கூடியதும், மனவேதனையை அளிக்கக் கூடியதுமான கொடிய செய்தியைக் கேட்டதும் (உயிர் நடுங்கி) மூர்ச்சை அடைந்தான். இராக்கத மாமணியான மன்னன், வெகுநேரம் கழித்து சுயஉணர்வை அடைந்தான். புத்திரசோகத்தால் பீடிக்கப்பட்டு, ஏக்கங்கொண்டு, புலன்கள் கலங்கிப் புலம்பத் தொடங்கினான்— (4,5)

''ஆ! அரக்கர் படைத்தலைவனே! என் செல்வமே! ஒப்பற்ற தேராளியே! அந்த தேவேந்திரனையே வென்ற நீ, எங்ஙனம் (மானுடனான) லட்சுமணனிடம் அகப்பட்டுக் கொண்டு உயிரை இழந்தாய்? (6)

குழந்தாய்! நீ கோபங்கொண்டால், காலனையும் (அதன் அபிமானி தேவதையான) அந்தகனையும் துளைத்தெடுப்பாய்; மந்தரமலையின் முகடுகளையும் பிளந்து தள்ளுவாய். அப்படிப்பட்ட உனக்கு லட்சுமணன் எம்மாத்திரம்? (7)

பெருந்தோளனே! இப்போதுதான், நான் யமனை மதிக்கிறேன். (எவ்வளவு பராக்கிரமசாலியாக ஒருவன் இருந்தாலும்,) குறிக்கப்பட்ட காலத்தில் உயிரைப் பறிக்கும் கடமையை, அவன் உன் விஷயத்திலும் காட்டிவிட்டான். (8)

ஏஷ பந்தா$_2$: ஸுயோத$_4$நாம் ஸர்வாமரக$_3$ணேஷ்வபி ।
ய: க்ருதே ஹந்யதே ப$_4$ர்து: ஸ புமாந் ஸ்வர்க$_3$ம்ருச்ச$_2$தி ॥ (9)

அத்$_3$ய தே$_3$வக$_3$ணா: ஸர்வே லோகபாலாஸ்தத$_2$ர்ஷய: ।
ஹதமிந்த்$_3$ரஜிதம் ஶ்ருத்வா ஸுக$_2$ம் ஸ்வப்ஸ்யந்தி நிர்ப$_4$யா: ॥ (10)

அத்$_3$ய லோகாஸ்த்ரய: க்ருத்ஸ்நா ப்ருதி$_2$வீ ச ஸகாநநா ।
ஏகேநேந்த்$_3$ரஜிதா ஹீநா ஶூந்யேவ ப்ரதிபா$_4$தி மே ॥ (11)

அத்$_3$ய நைர்ருதகந்யாநாம் ஶ்ரோஷ்யாம்யந்த:புரே ரவம் ।
கரேணுஸங்க$_4$ஸ்ய யதா$_2$ நிநாத$_3$ம் கி$_3$ரிக$_3$ஹ்வரே ॥ (12)

யௌவராஜ்யம் ச லங்காம் ச ரக்ஷாம்ஸி ச பரந்தப ।
மாதரம் மாம் ச பா$_4$ர்யாம் ச க்வ க$_3$தோऽஸி விஹாய ந: ॥ (13)

மம நாம த்வயா வீர க$_3$தஸ்ய யமஸாத$_3$நம் ।
ப்ரேதகார்யாணி கார்யாணி விபரீதே ஹி வர்தஸே ॥ (14)

ஸ த்வம் ஜீவதி ஸுக்$_3$ரீவே லக்ஷ்மணே ச ஸராக$_4$வே ।
மம ஶல்யமநுத்$_3$த்$_4$ருத்ய க்வ க$_3$தோऽஸி விஹாய ந: ॥ (15)

ஏவமாதி$_3$விலாபார்தம் ராவணம் ராக்ஷஸாதி$_4$பம் ।
ஆவிவேஶ மஹாந் கோப: புத்ரவ்யஸநஸம்ப$_4$வ: ॥ (16)

ப்ரக்ருத்யா கோபநம் ஹ்யேநம் புத்ரஸ்ய புநராத$_4$ய: ।
தீ$_3$ப்தம் ஸந்தீ$_3$பயாமாஸுர்க$_4$ர்மேऽர்கமிவ ரஶ்மய: ॥ (17)

லலாடே ப்$_4$ருகுடீபி$_4$ஶ்ச ஸங்க$_3$தாபி$_4$ர்வ்யரோசத ।
யுகா$_3$ந்தே ஸஹ நக்ரைஸ்து மஹோர்மிபி$_4$ரிவோத$_3$தி$_4$: ॥ (18)

கோபாத்$_3$விஜ்ரும்ப$_4$மாணஸ்ய வக்த்ராத்$_3$வ்யக்தமபி$_4$ஜ்வலந் ।
உத்பபாத ஸதூ$_4$மோऽக்$_3$நிர்வ்ருத்ரஸ்ய வத$_3$நாதி$_3$வ ॥ (19)

ஸ புத்ரவத$_4$ஸந்தப்த: ஶூர: க்ரோத$_4$வஶம் க$_3$த: ।
ஸமீக்ஷ்ய ராவணோ பு$_3$த்$_3$த்$_4$யா வைதே$_3$ஹ்யா ரோசயத்$_3$வத$_4$ம் ॥ (20)

தஸ்ய ப்ரக்ருத்யா ரக்தே ச ரக்தே க்ரோதா$_4$க்$_3$நிநாபி ச ।
ராவணஸ்ய மஹாகோ$_4$ரே தீ$_3$ப்தே நேத்ரே ப$_3$பூ$_4$வது: ॥ (21)

கோ$_4$ரம் ப்ரக்ருத்யா ரூபம் தத்தஸ்ய க்ரோதா$_4$க்$_3$நிமூர்சி$_2$தம் ।
ப$_3$பூ$_4$வ ரூபம் க்ருத்$_3$த$_4$ஸ்ய ருத்$_3$ரஸ்யேவ து$_3$ராஸத$_3$ம் ॥ (22)

தஸ்ய க்ருத்$_3$த$_4$ஸ்ய நேத்ராப்$_4$யாம் ப்ராபதந்நஸ்ரபி$_3$ந்த$_3$வ: ।
தீ$_3$ப்தாப்$_4$யாமிவ தீ$_3$பாப்$_4$யாம் ஸார்சிஷ: ஸ்நேஹபி$_3$ந்த$_3$வ: ॥ (23)

எந்தப் படைவீரன் தன் தலைவன் ஆணைப்படி போரிட்டு போர்க்களத்தில் மாண்டு போகிறானோ, அவன் சுவர்க்கத்தை அடைகிறான் – என்பது அறநெறி. இவ்வித மரணம் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று தேவர்களும் விரும்புகிறார்கள். (புண்ணியம் தீர்ந்ததும் தேவர்கள், மண்ணுலகில் பிறக்கவேண்டும். ஆனால், வீர சுவர்க்கம் அடைந்தவன் மீண்டும் மண்ணைப் பார்க்கமாட்டான்.) (9)

இனி, எல்லா தேவகணங்களும் லோகபாலகர்களும் முனிவர்களும், இந்திரஜித் கொல்லப்பட்டதைக் கேட்டு அச்சம் நீங்கி நிம்மதியாக உறங்குவார்கள். இப்போது, மூன்று உலகங்களும் வனங்கள் நிறைந்த பூமண்டலமும், இந்திரஜித் என்ற ஒரே ஒருவன் இல்லாததால் சூன்யமாக எனக்குத் தெரிகின்றன. (10,11)

இப்போது, மலைக்குகையில், (ஆண் துணையை இழந்த) பெண்யானைக் கூட்டம் ஏக்கத்துடன் அலறுவதைப் போல, இந்த அரண்மனை அந்தப்புரத்தில் அரக்கப் பெண்டிரின் அழுகுரலைக் கேட்கப் போகிறேன். எதிரிகளை வறுத்தெடுப்பவனே! இளவரசுப் பதவி, இலங்கைப் பட்டணம், அரக்கர்கள், உன்னுடைய தாய் மற்றும் என்னையும் உன் மனைவிகளையும் மற்றும் எங்கள் எல்லோரையும் துறந்துவிட்டு எங்கே போய்விட்டாய், மகனே! (12,13)

வீரனே! நான் யமலோகம் சென்றுவிட்டதும், நீ எனக்கு ஈமச்சடங்கு செய்ய வேண்டியதுதான் சரியான முறை. ஆனால், இப்போது நேர் எதிரான நிலையில் அல்லவா நிற்கிறாய்? (நான், உனக்கு ஈமச்சடங்கு செய்ய வேண்டியிருக்கிறதே?) (14)

என் ஒப்பற்ற மகனாகத் திகழ்ந்த நீ, (நமது பகைவர்களான) சுக்ரீவன், இராமன், லட்சுமணன் ஆகியோர் இன்னமும் உயிரோடிருக்க, என் மனப்புண்ணை ஆற்றாமல், எங்களைத் தவிக்க விட்டுவிட்டு எங்கே சென்றாய், என் செல்வமே?'' (15)

இவ்வாறு புலம்பித் தவித்த இராவணனை, புத்திரசோகத்தால் உண்டான பெருங்கோபம் ஆட்கொண்டது. இயல்பாகவே கோபக்காரன் அவன். சூரியகிரணங்கள் கோடை காலத்தில் அதை மேலும் வெம்மையடையச் செய்வது போல, மகன் இழப்பு என்ற சோகம், அவன் கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. (16,17)

நெற்றிவரை புருவங்களை உயர்த்தி நெறித்த அவன், ஊழிக்காலத்தில் முதலைகளோடும் பெரிய அலைகளோடும் விளங்கும் பெருங்கடல் போல் (காண்போரைக்) கதிகலங்கச் செய்தான். தேவாசுரப் போர்க்காலத்தில் விருத்திராசுரனின் வாயிலிருந்து புகையும் நெருப்பும் சேர்ந்து வெளிப்பட்டன. அதுபோல, இப்போது கோபத்தால் கொட்டாவிவிடும் இராவணனுடைய வாயிலிருந்து, சுவாலையுடன் ஒளிவிடும் நெருப்பு மிகப் பிரகாசமாக வெளியே வந்தது. (18,19)

மைந்தன் மாய்க்கப்பட்டதால் உள்ளங்கொதித்துக் கொண்டிருந்த சூரனான இராவணன் சிந்தனை வயப்பட்டான். அப்போது, சீதாதேவியைக் கொன்றுவிடுவது என்று தீர்மானித்தான். இராவணனுடைய இரண்டு கண்களும் இயற்கையிலேயே செவ்வண்ணமாகத் திகழ்வன. இப்போது பெருஞ்சினமும் கூடிக்கொண்டதால், செந்நிறம் மேலும் அதிகமாகி, இரண்டு கண்களும் நெருப்பெனப் பிரகாசித்தன. (20,21)

அவன், இயற்கையிலேயே பயங்கரமான தோற்றமுடையவன். இப்போது கோபக்கனல் அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தது. இந்த நிலையில், கோபங்கொண்ட ருத்ரமூர்த்தியின் அணுகமுடியாத உருவத்தைப் போல, எவராலும் நெருங்க முடியாதவனாக ஆனான். (22)

இரு தீபங்களிலிருந்து நெருப்புச் சுடர்களுடன்கூட எண்ணெய்த் துளிகள் கீழே விழுவதைப் போல, கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்த அவனுடைய கனல் தெறிக்கும் கண்களிலிருந்து (வெம்மையான) கண்ணீர்த்துளிகள் கீழே விழுந்தன. (23)

த$_3$ந்தாந் வித$_3$ஶதஸ்தஸ்ய ஶ்ரூயதே த$_3$ஶநஸ்வந: ।
யந்த்ரஸ்யாவேஷ்ட்யமாநஸ்ய மஹதோ தா$_3$நவைரிவ ॥ (24)

காலாக்$_3$நிரிவ ஸங்க்ருத்$_3$தோ$_4$ யாம் யாம் தி$_3$ஶமவைக்ஷத ।
தஸ்யாம் தஸ்யாம் ப$_4$யத்ரஸ்தா ராக்ஷஸா: ஸம்விலில்யிரே ॥ (25)

தமந்தகமிவ க்ருத்$_3$த$_4$ம் சராசரசிகா$_2$தி$_3$ஷும் ।
வீக்ஷமாணம் தி$_3$ஶ: ஸர்வா ராக்ஷஸா நோபசக்ரமு: ॥ (26)

தத: பரமஸங்க்ருத்$_3$தோ$_4$ ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
அப்$_3$ரவீத்$_3$ரக்ஷஸாம் மத்$_4$யே ஸம்ஸ்தம்ப$_4$யிஷுராஹவே ॥ (27)

மயா வர்ஷஸஹஸ்ராணி சரித்வா து$_3$ஶ்சரம் தப: ।
தேஷு தேஷ்வகாஶேஷு ஸ்வயம்பூ$_4$: பரிதோஷித: ॥ (28)

தஸ்யைவ தபஸோ வ்யுஷ்ட்யா ப்ரஸாதா$_3$ச்ச ஸ்வயம்பு$_4$வ: ।
நாஸுரேப்$_4$யோ ந தே$_3$வேப்$_4$யோ ப$_4$யம் மம கதா$_3$சந ॥ (29)

கவசம் ப்$_3$ரஹ்மத$_3$த்தம் மே யதா$_3$தி$_3$த்யஸமப்ரப$_4$ம் ।
தே$_3$வாஸுரவிமர்தே$_3$ஷு ந பி$_4$ந்நம் வஜ்ரஶக்திபி$_4$: ॥ (30)

தேந மாமத்$_3$ய ஸம்யுக்தம் ரத$_2$ஸ்த$_2$மிஹ ஸம்யுகே$_3$ ।
ப்ரதீயாத் கோऽத்$_3$ய மாமாஜௌ ஸாக்ஷாத$_3$பி புரந்த$_3$ர: ॥ (31)

யத்ததா$_3$பி$_4$ப்ரஸந்நேந ஸஶரம் கார்முகம் மஹத் ।
தே$_3$வாஸுரவிமர்தே$_3$ஷு மம த$_3$த்தம் ஸ்வயம்புவா ॥ (32)

அத்$_3$ய தூர்யஶதைர்பீ$_4$மம் த$_4$நுருத்தா$_2$ப்யதாம் மம ।
ராமலக்ஷ்மணயோரேவ வதா$_4$ய பரமாஹவே ॥ (33)

ஸ புத்ரவத$_4$ஸந்தப்த: ஶூர: க்ரோத$_4$வஶம் க$_3$த: ।
ஸமீக்ஷ்ய ராவணோ பு$_3$த்$_3$த்$_4$யா ஸீதாம் ஹந்தும் வ்யவஸ்யத ॥ (34)

ப்ரத்யவேக்ஷ்ய து தாம்ராக்ஷ: ஸுகோ$_4$ரோ கோ$_4$ரத$_3$ர்ஶந: ।
தீ$_3$நோ தீ$_3$நஸ்வராந் ஸர்வாந்ஸ்தாநுவாச நிஶாசராந் ॥ (35)

மாயயா மம வத்ஸேந வஞ்சநார்த$_2$ம் வநௌகஸாம் ।
கிஞ்சிதே$_3$வ ஹதம் தத்ர ஸீதேயமிதி த$_3$ர்ஶிதம் ॥ (36)

ததி$_3$த$_3$ம் தத்$_2$யமேவாஹம் கரிஷ்யே ப்ரியமாத்மந: ।
வைதே$_3$ஹீம் நாஶயிஷ்யாமி க்ஷத்ரப$_3$ந்து$_4$மநுவ்ரதாம் ॥
இத்யேவமுக்த்வா ஸசிவாந் க$_2$ட்$_3$க$_3$மாஶு பராம்ருஶத் ॥ (37)

பற்களைக் கடகடவென்று கடித்தான். பயங்கரமான ஒரு மாபெரும் இயந்திரத்தை (அளவு கடந்த பலங்கொண்ட) அசுரர்கள் சுழற்றி இயக்குவது போல், பற்களின் நறநறவென்ற பேரொலி கேட்டது. அடக்க முடியாத ஊழித்தீயைப் போல் கனன்று கொண்டிருந்த அவன், கோபத்தால் பொங்கி எந்தப் பக்கம் பார்த்தானோ, அந்தப் பக்கத்தில் இருந்தவர்கள் பயந்து நடுங்கி மூலைக்கு மூலை சென்று மறைந்து கொண்டார்கள். (24,25)

அனைத்துச் சராசரங்களையும் மென்று தின்னவேண்டும் என்று விரும்பும் ஊழிக்கால அந்தகனைப் போன்று, எல்லாப் பக்கங்களிலும் பார்வையைச் செலுத்தும் அவனை, எவரும் நெருங்க முடியவில்லை. (26)

(அரக்கர்கள் எல்லோரும் பகைவனின் அபார திறமையைப் பார்த்து, போர்க்களம் செல்ல அஞ்சிக் கொண்டிருப்பதை, இராவணன் உணர்ந்து கொண்டான்.) எதிரியின்பால் மிகவும் சினங்கொண்ட இராக்கத மன்னன் இராவணன், அரக்கப் படைவீரர்களைப் போர்க்களத்தில் நிலைநிறுத்தும் நோக்கத்துடன், அரக்கர்களிடம் பின்வருமாறு கூறினான்— (27)

''அரக்கர்களே! நான் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடுமையான தவங்கள் செய்திருக்கிறேன். ஒவ்வொரு தவத்தையும் நிறைவேற்றி முடிக்கும் இடைக்காலங்களில் பிரும்மதேவரை மகிழ்வித்திருக்கிறேன். (28)

அவ்வாறு செய்யப்பட்ட தவத்தின் பலத்தாலும், தான்தோன்றியான பிரும்மதேவரது அருளினாலும், அசுரர்களிடமிருந்தோ தேவர்களிடமிருந்தோ எனக்கு ஒருபோதும் ஆபத்துக் கிடையாது. (29)

சூரியனுக்கு நிகராக ஒளிவீசுவதும், பிரும்மதேவரால் கொடுக்கப்பட்டதுமான கவசம் என்னிடம் இருக்கிறது. நான் தேவர்களோடும் அசுரர்களோடும் போரிட்ட காலத்தில், (அவர்களால் எய்தப்பட்ட) வஜ்ராயுதத்திற்கு ஒப்பான ஆற்றல்கொண்ட அஸ்திரங்களாலும்கூட அதைப் பிளக்க முடியவில்லை! (30)

அந்தக் கவசத்தை அணிந்துகொண்டு தேரில் வீற்றிருந்து, இப்போதே நான் போர் புரியும்போது, சாட்சாத் தேவேந்திரனே ஆனாலும் என்னை எதிர்த்து நிற்கமுடியுமா? (31)

(என் தவத்தின் பயனாக) மனமகிழ்ச்சியடைந்த பிரும்மதேவர், முன்பு அடிக்கடி நடந்த தேவ–அசுரர்களின் போரின்போது எந்த வில்லையும் அம்பையும் எனக்குக் கொடுத்தாரோ, அந்த பயங்கரமான வில்லை மங்கள இசை முழக்கத்துடன் இப்போதே எடுத்து வாருங்கள். நடைபெறப் போகும் மாபெரும் போரில், அவைகளாலேயே இராம–லட்சுமணர்களை மாய்க்கப் போகிறேன்.'' (32,33)

சூரனான இராவணன், புதல்வன் மாய்க்கப்பட்டதால் மனங்கொதித்து, கோபத்தின் வசப்பட்டு, சீதாப் பிராட்டியாரைக் கொல்லும் எண்ணத்தை உறுதி செய்து கொண்டான். (34)

சிவந்த கண்கள் உடையவனும், மிகக்கொடியவனும், பயங்கரத் தோற்றமுடையவனும் (புத்திர மரணத்தால்) மனவேதனைப்பட்டுக் கொண்டிருப்பவனுமான அவன், (துயரம் தாங்காமல்) குரல் தழுதழுக்க நின்ற அரக்கர்கள் எல்லோரையும் பார்த்து பின்வருமாறு கூறினான்— (35)

''என் புதல்வன், (போர்க்களத்தில்) வானரர்களை ஏமாற்றுவதற்காக மாயையால் ஓர் உருவம் செய்து, 'இவள்தான் சீதை' என்று கூறி, அதன் தலையை வெட்டியது பொய்யாகவே போய்விட்டது. அதனால், எனக்குப் பிரியமான அந்தக் காரியத்தை (சீதையின் தலையை வெட்டுவதை), இப்போது உண்மையாகவே செய்து முடிக்கப் போகிறேன். க்ஷத்திரியப் பதரான இராமனையே நம்பிக்கொண்டிருக்கும் வைதேகியை அழிக்கப் போகிறேன்.'' இவ்வாறு அமைச்சர்களைப் பார்த்துக் கூறிவிட்டு, உடனே போர்வாளைக் கையிலெடுத்தான். (36,37)

உத்3த்4ருத்ய கு3ணஸம்பந்நம் விமலாம்ப3ரவர்சஸம் ।
நிஷ்பபாத ஸ வேகே3ந ஸப4ார்ய: ஸசிவைர்வ்ருத: ॥ (38)

ராவண: புத்ரஶோகேந ப்4ருஶமாகுலசேதந: ।
ஸங்க்ருத்3த4: க2ட்3க3மாத3ாய ஸஹஸா யத்ர மைதி2லீ ॥ (39)

வ்ரஜந்தம் ராக்ஷஸம் ப்ரேக்ஷ்ய ஸிம்ஹநாத3ம் ப்ரசுக்ருஶு: ।
ஊசுஶ்சாந்யோந்யமாஶ்லிஷ்ய ஸங்க்ருத்3த4ம் ப்ரேக்ஷ்ய ராக்ஷஸா: ॥ (40)

அத்3யைநம் தாவுபௌ4 த்3ருஷ்ட்வா ப்4ராதரௌ ப்ரவ்யதி2ஷ்யத: ।
லோகபாலா ஹி சத்வார: க்ருத்3தே4நாநேந நிர்ஜிதா: ॥ (41)

ப3ஹவ: ஶத்ரவஶ்சாபி ஸம்யுகே3ஷு நிபாதிதா: ।
த்ரிஷு லோகேஷு ரத்நாநி பு4ங்க்தே சாஹ்ருத்ய ராவண: ॥
விக்ரமே ச ப3லே சைவ நாஸ்த்யஸ்ய ஸத்3ருஶோ பு4வி ॥ (42)

தேஷாம் ஸஞ்ஜல்பமாநாநாமஶோகவநிகாம் க3தாம் ।
அபி4து3த்3ராவ வைதே3ஹீம் ராவண: க்ரோத4மூர்சி2த: ॥ (43)

வார்யமாண: ஸுஸங்க்ருத்3த4: ஸுஹ்ருத்3பி4ர்ஹிதபு3த்3தி4பி4: ।
அப்4யத4ாவத ஸங்க்ருத்3த4: கே2 க்3ரஹோ ரோஹிணீமிவ ॥ (44)

மைதி2லீ ரக்ஷ்யமாணா து ராக்ஷஸீபி4ரநிந்தி3தா ।
த3த3ர்ஶ ராக்ஷஸம் க்ருத்3த4ம் நிஸ்த்ரிம்ஶவரத4ாரிணம் ॥ (45)

தம் நிஶாம்ய ஸநிஸ்திரிம்ஶம் வ்யதி2தா ஜநகாத்மஜா ।
நிவார்யமாணம் ப3ஹுஶ: ஸுஹ்ருத்3பி4ரநிவர்திநம் ॥ (46)

ஸீதா து3:க2ஸமாவிஷ்டா விலபந்தீத3மப்3ரவீத் ।
யத2ாயம் மாமபி4க்ருத்3த4: ஸமபி4த்3ரவதி ஸ்வயம் ॥
வதி4ஷ்யதி ஸநாத2ாம் மாமநாத2ாமிவ து3ர்மதி: ॥ (47)

ப3ஹுஶஶ்சோத3யாமாஸ ப4ர்தாரம் மாமநுவ்ரதாம் ।
ப4ார்யா ப4வ ரமஸ்வேதி ப்ரத்யாக்2யாதோ த்4ருவம் மயா ॥ (48)

ஸோऽயம் மமாநுபஸ்த2ாநே வ்யக்தம் நைராஶ்யமாக3த: ।
க்ரோத4மோஹஸமாவிஷ்டோ நிஹந்தும் மாம் ஸமுத்3யத: ॥ (49)

அத2வா தௌ நரவ்யாக்4ரௌ ப்4ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
மந்நிமித்தமநார்யேண ஸமரேऽத்3ய நிபாதிதௌ ॥ (50)

அஹோ தி4ங்மந்நிமித்தோऽயம் விநாஶோ ராஜபுத்ரயோ: ।
அத2வா புத்ரஶோகேந அஹத்வா ராமலக்ஷ்மணௌ ॥
வித4மிஷ்யதி மாம் ரௌத்3ரோ ராக்ஷஸ: பாபநிஶ்சய: ॥ (51)

அலங்கரிக்கப்பட்ட வாளுறையிலிருந்து தூய வானம் போல் ஒளிவீசும் வாளைக் கையில் எடுத்துக் கொண்டு, மனைவிகளும் அமைச்சர்களும் புடைசூழ, மைந்தன் மரணத்தால் உள்ளங்கலங்கிய இராவணன், மிக்க கோபத்துடன் சீதை இருந்த இடத்தை நோக்கி, உடனே புறப்பட்டுச் சென்றான். (38,39)

புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த அரக்கனை (இராவணனை)ப் பார்த்து, (அவனுக்கு வாழ்த்துக் கூறும் முறையில்) வழிநெடுகிலுமிருந்த அரக்கர்கள் சிங்கநாதம் செய்தார்கள். அவன் கோபத்தோடு இருப்பதைக் கண்டு (ரகசியம் பேசுவது போல்) ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு பின்வருமாறு பேசிக் கொண்டார்கள்— (40)

''அவ்விரு சகோதரர்களும் (பயங்கரமான கோபத்துடன் இருக்கும் இவரை) இப்போது கண்ணால் பார்த்ததுமே பெருந்துயரத்திற்கு ஆளாகப் போகிறார்கள். கோபங்கொண்ட இவரால், லோகபாலகர்கள் நால்வரும் வெற்றி கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான பகைவர்களும் போர்க்களத்தில் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள். மூன்று உலகங்களிலும் உள்ள உத்தமமான போகப் பொருள்களைக் கொண்டுவந்து அனுபவிக்கிறார். ஆண்மையிலும் ஆற்றலிலும் இவருக்கு நிகரான ஒருவர் உலகில் இல்லவேயில்லை!'' (41,42)

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போதே, கோபத்தால் நிரம்பி வழிந்த இராவணன், அசோகவனத்திலிருக்கும் சீதையை நோக்கி கடுகிச் சென்றான். (43)

கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்த அவனை, அவனுடைய நலனில் அக்கறை கொண்ட நண்பர்கள் தடுத்து நிறுத்த முயன்றார்கள். ஆனால், (புத்திரசோகத்தாலும் அவமானத்தாலும் அடக்க முடியாத) சினத்துடன் தவித்துக் கொண்டிருந்த அவன், வானத்தில் ஒரு கொடிய கோள், ரோகிணி என்னும் அழகிய தாரகையை நோக்கி வெறியுடன் செல்வதைப் போல விரைந்து சென்றான். (44)

அரக்கிகளால் பாதுகாக்கப்படும் மாசற்ற மைதிலிதேவி, உயர்வான ஒரு வாளைக் கையிலேந்திக் கொண்டு கோபத்தோடு அரக்கன் (இராவணன்) வருவதைப் பார்த்தாள். (45)

ஜனகரின் செல்வப்புதல்வியான சீதாதேவி, பலவாறாக நண்பர்களால் தடுக்கப்பட்டதை பொருட்படுத்தாமல், அவன் கையில் வாளுடன் வருவதைப் பார்த்து மனங்கலங்கினாள். (46)

துயரம் மேலிட்டுப் புலம்பத் தொடங்கிய சீதை, தனக்குத்தானே பின்வருமாறு சொல்லிக் கொண்டாள்— ''மிகவும் கோபத்துடன் இவனே என்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறான். என்னைக் காப்பாற்றுவதற்கு என் கணவர் இருக்கிறார். (மற்றவர்களும் இருக்கிறார்கள்.) ஆனால், உதவி செய்வதற்கு யாருமே இல்லாத அநாதை போல் என்னை எண்ணிக் கொண்டு, வெட்டி (கொன்று) விடப் போகிறான். (47)

கணவனே கண்கண்ட தெய்வம் என்று உறுதியாக இருக்கும் என்னை, 'என் மனைவியாகி இன்பங்களை அனுபவி' என்று இவன் சொன்னதை, நான் அழுத்தமாக நிராகரித்துவிட்டேன். (48)

என்னை அடைய முடியாமல் ஆசை தகர்க்கப்பட்ட இவன், கோபத்தாலும் மதிமயக்கத்தாலும் ஆட்கொள்ளப்பட்டு, என்னைக் கொலை செய்யும் முடிவுக்கு வந்துவிட்டான் என்பது நிச்சயம். அல்லது, புருஷோத்தமர்களான இராம–லட்சுமண சகோதரர்கள், இழிகுணம் படைத்த இவனால், என் காரணமாக, இப்போது போரில் வீழ்த்தப்பட்டிருப்பார்களோ? (49,50)

அடக்கஷ்டமே! என் பொருட்டு, அரசகுமாரர்கள் இருவருக்கும் அழிவு ஏற்பட்டுவிட்டதே! அல்லது, (இப்படி இருக்குமோ?) புதல்வனின் மரணத்தால் துயரத்தில் ஆழ்ந்து பாவச்செயலைச் செய்யத் துணிந்துவிட்ட கொடியவனான இந்த அரக்கன், இராம–லட்சுமணர்களைக் கொல்ல முடியாமல், என்னைக் கொன்றுவிடப் போகிறானோ? (51)

ஹநூமதோऽபி யத்$_3$வாக்யம் ந க்ருதம் க்ஷுத்$_3$ரயா மயா ।
யத்$_3$யஹம் தஸ்ய ப்ருஷ்டே$_2$ந தத$_2$ா யாயாமநிந்தி$_3$தா ॥
நாத்$_3$யைவமநுஶோசேயம் ப$_4$ர்துரங்கக$_3$தா ஸதீ ॥ (52)

மந்யே து ஹ்ருத$_3$யம் தஸ்யா: கௌஸல்யாயா: ப$_2$லிஷ்யதி ।
ஏகபுத்ரா யத$_3$ா புத்ரம் விநஷ்டம் ஶ்ரோஷ்யதே யுதி$_4$ ॥ (53)

ஸா ஹி ஜந்ம ச ப$_3$ால்யம் ச யௌவநம் ச மஹாத்மந: ।
த$_4$ர்மகார்யாநுரூபம் ச ருத$_3$தீ ஸம்ஸ்மரிஷ்யதி ॥ (54)

நிராஶா நிஹதே புத்ரே த$_3$த்த்வா ஶ்ராத்$_3$த$_4$மசேதநா ।
அக்$_3$நிமாரோக்ஷ்யதே நூநமபோ வாபி ப்ரவேக்ஷ்யதி ॥ (55)

தி$_4$க$_3$ஸ்து குப்$_3$ஜாமஸதீம் மந்த$_2$ராம் பாபநிஶ்சயாம் ।
யந்நிமித்தமித$_3$ம் து$_3$:க$_2$ம் கௌஸல்யா ப்ரதிபத்ஸ்யதே ॥ (56)

இத்யேவம் மைதி$_2$லீம் த்$_3$ருஷ்ட்வா விலபந்தீம் தபஸ்விநீம் ।
ரோஹிணீமிவ சந்த்$_3$ரேண விநா க்$_3$ரஹவஶம் க$_3$தாம் ॥ (57)

ஏதஸ்மிந்நந்தரே தஸ்ய அமாத்யோ பு$_3$த்$_3$தி$_4$மாஞ்ஶுசி: ।
ஸுபார்ஶ்வோ நாம மேத$_4$ாவீ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வரம் ॥
நிவார்யமாண: ஸசிவைரித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (58)

கத$_2$ம் நாம த$_3$ஶக்$_3$ரீவ ஸாக்ஷாத்$_3$வைஶ்ரவணாநுஜ ।
ஹந்துமிச்ச$_2$ஸி வைதே$_3$ஹீம் க்ரோத$_4$ாத்$_3$த$_4$ர்மமபாஸ்ய ஹி ॥ (59)

வேத$_3$வித்$_3$யாவ்ரதஸ்நாத: ஸ்வகர்மநிரத: ஸதா$_3$ ।
ஸ்த்ரியா: கஸ்மாத்$_3$வத$_4$ம் வீர மந்யஸே ராக்ஷஸேஶ்வர ॥ (60)

மைதி$_2$லீம் ரூபஸம்பந்நாம் ப்ரத்யவேக்ஷஸ்வ பார்தி$_2$வ ।
த்வமேவ து ஸஹாஸ்மாபி$_4$ ராக$_4$வே க்ரோத$_4$முத்ஸ்ருஜ ॥ (61)

அப்$_4$யுத்த$_2$ாநம் த்வமத்$_3$யைவ க்ருஷ்ணபக்ஷசதுர்த$_3$ஶீம் ।
க்ருத்வா நிர்யாஹ்யமாவாஸ்யாம் விஜயாய ப$_3$லைர்வ்ருத: ॥ (62)

ஶூரோ தீ$_4$மாந் ரதீ$_2$ க$_2$ட்$_3$கீ$_3$ ரத$_2$ப்ரவரமாஸ்தி$_2$த: ।
ஹத்வா த$_3$ாஶரதி$_2$ம் ராமம் ப$_4$வாந் ப்ராப்ஸ்யதி மைதி$_2$லீம் ॥ (63)

ஸ தத்$_3$து$_3$ராத்மா ஸுஹ்ருத$_3$ா நிவேதி$_3$ம்
வச: ஸுத$_4$ர்ம்யம் ப்ரதிக்$_3$ருஹ்ய ராவண: ।
க்$_3$ருஹம் ஜக$_3$ாமாத$_2$ ததஶ்ச வீர்யவாந்
புந: ஸப$_4$ாம் ச ப்ரயயௌ ஸுஹ்ருத்$_3$வ்ருத: ॥ (64)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரிநவதிதம: ஸர்க$_3$: ॥

அனுமான் கூறிய உபாயத்தைத் தீவிரமாக ஆலோசிக்காமல் நிராகரித்துவிட்டேன். நான், அப்போது அவர் முதுகில் அமர்ந்து சென்றிருந்தால், இப்போது என் கணவர் மடியில் அமர்ந்து கொண்டிருப்பேன்! இப்போது அனுபவிக்கும் துன்பங்களை அனுபவிக்காமல் இருந்திருப்பேன். (52)

என் மாமியார் கௌசல்யைக்கு என் கணவர் ஒரே புதல்வன். அந்தப் புதல்வன் 'போரில் மாய்க்கப்பட்டார்' என்ற செய்தியைக் கேட்டதும், அவருடைய இதயம் வெடித்துப் போகும் என்பதில் ஐயமில்லை. அவர் (கௌசல்யை), கதறிக் கொண்டே மகாத்மாவான இராமனுடைய பிறப்பு, இளமைக்காலம், வாலிபப் பருவம் ஆகியவற்றையும், அறம் தவறாத செயல்பாடுகளையும் எண்ணி உருகப் போகிறார். (53,54)

'புதல்வர் மாண்டார்' என்றதுமே, மதி மழுங்கி, உயிர் ஆசையைத் துறந்து, நீத்தார் கடனைச் செய்துவிட்டு, அவர் நெருப்பில் குதித்து விடுவார். அல்லது, ஆற்றில் மூழ்கிவிடுவார். இது உறுதி. எவள் காரணமாக கோசலாதேவி, புத்திர சோகத்தை அடையப் போகிறாரோ, அந்த பாவச் செயலில் உறுதி கொண்டவளும் தீயநெறியினளும் கூனியுமான மந்தரையை, உலகம் பழிக்கத்தான் போகிறது.'' (55,56)

தன் பிரியனான சந்திரன் அருகில் இல்லாமல் வேறொரு கொடிய கோளின் பிடியில் சிக்கிக் கொண்ட ரோகிணி நட்சத்திரம் போல், மேலே சொல்லப்பட்டபடி புலம்பிக் கொண்டிருப்பவளும் உண்ணாநோன்பில் இருப்பவளுமான ஜானகியை, இராவணனுடைய அமைச்சனும் நுண்ணறிவாளனும் தூயவனும் மெய்ஞானம் விளங்கப் பெற்றவனுமான சுபார்ச்வன் என்ற அரக்கன் பார்த்தான். (பார்த்ததும் அவனுடைய மெய்யறிவு சுறுசுறுப்படைந்தது.) மற்ற அமைச்சர்கள் (இராவணனிடம் இருந்த அச்சத்தால்) அவனைத் தடுத்தபோதிலும், அரக்க மன்னனைப் பார்த்து நல்லுரை வழங்கினான்— (57,58)

''இராவணனே! நீங்கள், குபேரனுடைய சொந்த தம்பி. (உயர்குலத்தில் தோன்றியவர், நீங்கள்.) கோபத்தால் அறநெறியைத் துறந்து, வைதேகியைக் கொல்ல விரும்புகிறீர்கள்? (59)

வீரரே! இராக்கத மன்னரே! வேதக் கல்வியை முழுமையாகப் பெற்று, ஆசிரியரின் அனுமதி பெற்று மாணவ நிலையைக் கடந்து வந்தீர்கள். பின்னர், எப்போதும் வேதநெறி வழுவாது தனக்குரிய கடமையைச் செய்து வருகிறீர்கள். அப்படியிருக்க, ஒரு பெண்ணைக் கொலை செய்ய எப்படித் துணிந்தீர்கள்? (இது, வேதநெறி இல்லையே?) (60)

மண்ணாளும் வேந்தே! எழிலரசியான ஜானகி காலப்போக்கில் மனம் மாறுவாள். அதுவரை காத்திருங்கள். இப்போது எங்களுடன்கூட போர்க்களத்திற்கு வந்து, இராமன்மீது உங்கள் கோபத்தைச் செலுத்துவீராக. இன்றைய தினம் தேய்பிறை சதுர்த்தசி திதி. அதனால், இன்று போர் ஏற்பாடுகளைச் செய்து முடித்து, நாளைய தினம் அமாவாசையில், போரில் வெற்றியடைவதற்காகப் படையுடன் புறப்படுங்கள். (61,62)

நீங்கள் சூரர்; பெருமதியாளர்; சிறந்த தேர்வீரர்; வாள்வீச்சுக்காரர். சிறந்த தேரில் அமர்ந்து கொள்ளுங்கள். தசரத குமாரனைப் போரில் கொன்றுவிட்டு, தாங்கள் மைதிலியை அடையப் போகிறீர்கள்.'' (63)

தீயவனான அவன் (இராவணன்), நண்பரால் கூறப்பட்ட அறச்சொற்களை ஏற்றுக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். பின்னர் மாவீரனான அவன், நண்பர்கள் புடைசூழ அரசவைக்குச் சென்றான். (64)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

சதுர்நவதிதம: ஸர்க$_3$:

க$_3$ாந்த$_4$ர்வாஸ்த்ரமோஹநம்

ஸ ப்ரவிஶ்ய ஸப$_4$ாம் ராஜா தீ$_3$ந: பரமது$_3$:கி$_2$த: ।
நிஷஸாத$_3$ாஸநே முக்$_2$யே ஸிம்ஹ: க்ருத்$_3$த$_4$ இவ ஶ்வஸந் ॥ (1)

அப்$_3$ரவீச்ச ஸ தாந் ஸர்வாந் ப$_3$லமுக்$_2$யாந் மஹாப$_3$ல: ।
ராவண: ப்ராஞ்ஜலிர்வாக்யம் புத்ரவ்யஸநகர்ஶித: ॥ (2)

ஸர்வே ப$_4$வந்த: ஸர்வேண ஹஸ்த்யஶ்வேந ஸமாவ்ருதா: ।
நிர்யாந்து ரத$_2$ஸங்கை$_4$ஶ்ச பாத$_3$ாதைஶ்சோபஶோபி$_4$தா: ॥ (3)

ஏகம் ராமம் பரிக்ஷிப்ய ஸமரே ஹந்துமர்ஹத$_2$ ।
வர்ஷந்த: ஶரவர்ஷேண ப்ராவ்ருட்கால இவாம்பு$_3$தா$_3$: ॥ (4)

அத$_2$வாஹம் ஶரைஸ்தீக்ஷ்ணைர்பி$_4$ந்நக$_3$ாத்ரம் மஹாரணே ।
ப$_4$வத்$_3$பி$_4$: ஶ்வோ நிஹந்தாஸ்மி ராமம் லோகஸ்ய பஶ்யத: ॥ (5)

இத்யேதத்$_3$ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய வாக்யமாத$_3$ாய ராக்ஷஸா: ।
நிர்யயுஸ்தே ரதை$_2$: ஶீக்$_4$ரைர்நாநாநீகை: ஸுஸம்வ்ருதா: ॥ (6)

பரிக$_4$ாந் பட்டஸாம்ஶ்சைவ ஶரக$_2$ட்$_3$க$_3$பரஶ்வத$_4$ாந் ।
ஶரீராந்தகராந் ஸர்வே சிக்ஷிபுர்வாநராந் ப்ரதி ॥
வாநராஶ்ச த்$_3$ருமாஞ்ஶைலாந் ராக்ஷஸாந் ப்ரதி சிக்ஷிபு: ॥ (7)

ஸ ஸங்க்$_3$ராமோ மஹாந் பீ$_4$ம: ஸூர்யஸ்யோத$_3$யநம் ப்ரதி ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச துமுல: ஸமபத்$_3$யத ॥ (8)

தே க$_3$த$_3$ாபி$_4$ர்விசித்ராபி$_4$: ப்ராஸை: க$_2$ட்$_3$கை$_3$: பரஶ்வதை$_4$: ।
அந்யோந்யம் ஸமரே ஜக்$_4$நுஸ்தத$_3$ா வாநரராக்ஷஸா: ॥ (9)

ஏவம் ப்ரவ்ருத்தே ஸங்க்$_3$ராமே ஹ்யுத்$_3$பூ$_4$தம் ஸுமஹத்$_3$ரஜ: ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச ஶாந்தம் ஶோணிதவிஸ்ரவை: ॥ (10)

மாதங்க$_3$ரத$_2$கூலாஶ்ச வாஜிமத்ஸ்யா த்$_4$வஜத்$_3$ருமா: ।
ஶரீரஸங்க$_4$ாடவஹா: ப்ரஸஸ்ரு: ஶோணிதாபக$_3$ா: ॥ (11)

ததஸ்தே வாநரா: ஸர்வே ஶோணிதௌக$_4$பரிப்லுதா: ।
த்$_4$வஜவர்மரத$_2$ாநஶ்வாந்நாநாப்ரஹரணாநி ச ॥
ஆப்லுத்யாப்லுத்ய ஸமரே ராக்ஷஸாநாம் ப$_3$ப$_4$ஞ்ஜிரே ॥ (12)

கேஶாந் கர்ணலலாடாந்ஶ்ச நாஸிகாஶ்ச ப்லவங்க$_3$மா: ।
ரக்ஷஸாம் த$_3$ஶநைஸ்தீக்ஷ்ணைர்நகை$_2$ஶ்சாபி ந்யகர்தயந் ॥ (13)

ஏகைகம் ராக்ஷஸம் ஸங்க்$_2$யே ஶதம் வாநரபுங்க$_3$வா: ।
அப்$_4$யத$_4$ாவந்த ப$_2$லிநம் வ்ருக்ஷம் ஶகுநயோ யத$_2$ா ॥ (14)

ஸர்க்கம் : தொண்ணூற்று நான்கு

காந்தர்வாஸ்திரத்தால் மயக்குதல்!

அந்த மன்னன் (இராவணன்) மிகுந்த துயரத்துடன் பரிதாபமான நிலையில் இருந்தான். கோபங்கொண்ட சிங்கம் போல பெருமூச்சுவிட்டபடியே அரசவைக்குச் சென்று, தலைமைப் பீடத்தில் அமர்ந்தான். (1)

மகாபலசாலியும் புத்திரசோகத்தினால் பீடிக்கப்பட்டவனுமான இராவணன், அங்கிருந்த படைத்தலைவர்களையெல்லாம் பார்த்து, (அவர்களைத் தன்வசப்படுத்தும் தந்திர நோக்கத்துடன்) கைகளைக் கூப்பிக்கொண்டு பின்வருமாறு கூறினான்— (2)

''நீங்கள் எல்லோரும் நம்மிடமுள்ள அனைத்து யானைகள், குதிரைகள், தேர்கள், காலாட்படையினர்கள் புடைசூழ புறப்பட்டுச் செல்லுங்கள். போர்க்களத்தில் இராமன் ஒருவனை மட்டுமே நாற்புறமும் சூழ்ந்துகொண்டு, மழைக்கால மேகங்கள் போல், இடைவிடாத பாணப் பொழிவினால் அவனைக் கொல்லக் கடவீர்களாக. (3,4)

அல்லது, (உங்களால் அவனைக் கொல்ல முடியாமற்போனால்,) நாளைய தினம் பெரும் போர் செய்து, உங்கள் பாணங்களால் துளைக்கப்பட்ட சரீரத்தைக் கொண்ட இராமனை, உலக மக்கள் எல்லோரும் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கூரிய பாணங்களால் நானே மாய்க்கப் போகிறேன்.'' (5)

அந்த அரக்கத் தலைவர்கள் மன்னனின் ஆணையை சிரமேற்கொண்டு, தேர்களோடும் பலவகையான துருப்பு அணிகளோடும்கூட வேகமாக வெளியே புறப்பட்டுச் சென்றார்கள். (6)

எல்லோரும் (போர்க்களத்தை அடைந்ததும்) உடலை அடித்து நொறுக்கும் உலக்கைகள், பட்டிசங்கள், பாணங்கள், வாள்கள், கோடரிகள் ஆகியவற்றை வானரர்கள் மீது வீசி எறிந்தார்கள். வானரர்களும் மரங்களையும் மலைச்சிகரங்களையும் அரக்கர்கள் மீது வீசி எறிந்தார்கள். (7)

சூரிய உதயம் முதற்கொண்டு, அரக்கர்–வானரரிடையே மிகவும் பயங்கரமாகவும் இரைச்சலோடும், அந்தப் போர் நிகழ்ந்தது. (8)

அப்போது வானர–அரக்கர்கள், பல்வேறு அமைப்புடைய கதைகள், ஈட்டிகள், வாள்கள், கோடரிகள் ஆகியவற்றால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். (வானரர்களிடம் ஆயுதங்கள் ஏதும் இருக்கவில்லை. அரக்கர்களிடமிருந்து பிடுங்கிய ஆயுதங்களைக் கொண்டே, அவர்களைத் தாக்கினார்கள்.) (9)

இவ்வாறு போர் நடந்தபோது பெருமளவில் புழுதி கிளம்பியது. (ஆனால்,) போரில் கொல்லப்பட்ட அரக்கர்–வானரர்களின் உதிரப்பெருக்கினால் அவை அடங்கிப் போய்விட்டன. போர்க்களத்தில் இரத்த ஆறுகள் பெருகின. மாய்ந்த யானைகளும் முறிக்கப்பட்ட தேர்களுமே, (ஆறுகளின் அடிப்பகுதியான) தரைகள்; மிதக்கும் குதிரைகளே, மீன்கள்; வீசி எறியப்பட்ட மரங்களே, கொடிகள்; மேலே மிதந்து செல்லும் உடல்களே, ஓடங்கள். (10,11)

அப்போது, இரத்த வெள்ளத்தில் நனைந்தவர்களான வானரர்கள் எல்லோரும் எம்பிக் குதித்துக் குதித்துச் சென்று, அரக்கர்களின் கொடிகள், கவசங்கள், தேர்கள், குதிரைகள் மற்றும் பலவிதமான ஆயுதங்கள் போன்றவற்றை முறித்து அழித்தார்கள். (12)

வானரர்கள், அரக்கர்களுடைய முடிகளையும், காதுகளையும், நெற்றிகளையும், நாசிகளையும், தங்களது கூர்மையான பற்களாலும் நகங்களாலும் பிய்த்து எறிந்தார்கள். பழங்கள் நிறைந்த மரத்தை நூற்றுக்கணக்கான பறவைகள் நாடிச் செல்வதைப் போல, போர்க்களத்தில் ஒவ்வோர் அரக்கனையும் நூறுநூறாக வானரர்கள் சூழ்ந்துகொண்டு தாக்கினார்கள். (13,14)

தத$_2$ா க$_3$த$_3$ாபி$_4$ர்கு$_3$ர்வீபி$_4$: ப்ராஸை: க$_2$ட்$_3$கை$_3$: பரஸ்வதை$_4$: ।
நிஜக்$_4$நுர்வாநராந் கே$_4$ாராந் ராக்ஷஸா: பர்வதோபமா: ॥ (15)

ராக்ஷஸைர்யுத்$_4$யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ: ।
ஶரண்யம் ஶரணம் யாதா ராமம் த$_3$ஶரத$_2$ாத்மஜம் ॥ (16)

ததோ ராமோ மஹாதேஜா த$_4$நுராத$_3$ாய வீர்யவாந் ।
ப்ரவிஶ்ய ராக்ஷஸம் ஸைந்யம் ஶரவர்ஷம் வவர்ஷ ஹ ॥ (17)

ப்ரவிஷ்டம் து தத$_3$ா ராமம் மேக$_4$ா: ஸூர்யமிவாம்ப$_3$ரே ।
நாபி$_4$ஜக்$_3$முர்மஹாகே$_4$ாரம் நிர்த$_3$ஹந்தம் ஶராக்$_3$நிநா ॥ (18)

க்ருதாந்யேவ ஸுகே$_4$ாராணி ராமேண ரஜநீசரா: ।
ரணே ராமஸ்ய த$_3$த்$_3$ருஶு: கர்மாண்யஸுகராணி ச ॥ (19)

சாலயந்தம் மஹாநீகம் வித$_4$மந்தம் மஹாரத$_2$ாந் ।
த$_3$த்$_3$ருஶுஸ்தே ந வை ராமம் வாதம் வநக$_3$தம் யத$_2$ா ॥ (20)

சி$_2$ந்நம் பி$_4$ந்நம் ஶரைர்த$_3$க்த$_4$ம் ப்ரப$_4$க்$_3$நம் ஶஸ்த்ரபீடி$_3$தம் ।
ப$_3$லம் ராமேண த$_3$த்$_3$ருஶுர்ந ராமம் ஶீக்$_4$ரகாரிணம் ॥ (21)

ப்ரஹரந்தம் ஶரீரேஷு ந தே பஶ்யந்தி ராக$_4$வம் ।
இந்த்$_3$ரியார்தே$_2$ஷு திஷ்ட$_2$ந்தம் பூ$_4$தாத்மாநமிவ ப்ரஜா: ॥ (22)

ஏஷ ஹந்தி க$_3$ஜாநீகமேஷ ஹந்தி மஹாரத$_2$ாந் ।
ஏஷ ஹந்தி ஶரைஸ்தீக்ஷ்ணை: பத$_3$ாதீந் வாஜிபி$_4$: ஸஹ ॥ (23)

இதி தே ராக்ஷஸா: ஸர்வே ராமஸ்ய ஸத்$_3$ருஶாந் ரணே ।
அந்யோந்யம் குபிதா ஜக்$_4$நு: ஸாத்$_3$ருஶ்யாத்$_3$ராக$_4$வஸ்ய தே ॥ (24)

ந தே த$_3$த்$_3$ருஶிரே ராமம் த$_3$ஹந்தமரிவாஹிநீம் ।
மோஹிதா: பரமாஸ்த்ரேண க$_3$ாந்த$_4$ர்வேண மஹாத்மநா ॥ (25)

தே து ராமஸஹஸ்ராணி ரணே பஶ்யந்தி ராக்ஷஸா: ।
புந: பஶ்யந்தி காகுத்ஸ்த$_2$மேகமேவ மஹாஹவே ॥ (26)

ப்$_4$ரமந்தீம் காஞ்சநீம் கோடிம் கார்முகஸ்ய மஹாத்மந: ।
அலாதசக்ரப்ரதிமாம் த$_3$த்$_3$ருஶுஸ்தே ந ராக$_4$வம் ॥ (27)

ஶரீரநாபி$_4$ ஸத்த்வார்சி: ஶராரம் நேமிகார்முகம் ।
ஜ்யாகே$_4$ாஷதலநிர்கே$_4$ாஷம் தேஜோபு$_3$த்$_3$தி$_4$கு$_3$ணப்ரப$_4$ம் ॥ (28)

தி$_3$வ்யாஸ்த்ரகு$_3$ணபர்யந்தம் நிக்$_4$நந்தம் யுதி$_4$ ராக்ஷஸாந் ।
த$_3$த்$_3$ருஶு ராமசக்ரம் தத் காலசக்ரமிவ ப்ரஜா: ॥ (29)

அவ்வாறே மலைபோன்று பேருடல் கொண்ட அரக்கர்கள், பெரிய கதைகள், ஈட்டிகள், வாள்கள், கோடரிகள் ஆகியவற்றால் பயங்கரமான வானரர்களைத் தாக்கினார்கள். (15)

இராக்கதர்களின் கடுமையான தாக்குதல்களைத் தாங்கமுடியாத வானரப் பெரும்படை, தசரத மாமன்னரின் திருக்குமாரரும், அண்டியவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவருமான இராமபிரானைச் சரண் புகுந்தது. உடனே, போராண்மை மிக்கவரும் மாவீரருமான இராமன், வில்லை எடுத்துக் கொண்டு சென்று, அரக்கர் படையில் புகுந்து அம்புமாரியைப் பொழியத் தொடங்கினார். (16,17)

வானத்தில் தகதகக்கும் சூரியனை மேகங்கள் மறைக்க முடியாததைப் போல, படைகளினிடையே ஊடுருவிச் சென்று, அம்பு என்னும் நெருப்பினால் அரக்கர் படையை எரித்துக் கொண்டிருந்த இராமனை, பயங்கரமான அரக்கர்கள் எதிர்க்க முடியாதிருந்தார்கள். இராமன், மிக பயங்கரமான அழிவுகளை நிகழ்த்திக் காட்டினார். அரக்கர்கள், அந்த அழிவுச் செயல்களைக் கண்டார்களே தவிர, அவைகளை நிகழ்த்தியவரைக் கண்டார்களில்லை. (18,19)

காட்டில் வீசும் பெருங்காற்று மரங்களை முறித்துத் தள்ளுவதைக் காணமுடிகிறது. ஆனால், முறிக்கும் காற்றைக் காண முடிவதில்லை. அதுபோல, இராமன் அரக்கர்களின் பெரும்படையைக் கலக்கி அழித்துக் கொண்டிருப்பதையும், தேராளிகளைத் துவைத்துக் கொண்டிருப்பதையும் பார்த்தார்களே தவிர, இராமபிரானைக் காணவில்லை. அவர்கள் (இராக்கதர்கள்), தங்கள் சேனை இராமபிரானுடைய பாணங்களால் எரிக்கப்பட்டு, துண்டிக்கப்பட்டு, பிளக்கப்பட்டு, ஆயுதங்களால் தாக்கப்பட்டு சிதறிப் போனதைக் கண்டார்கள்; வெகு விரைவாகச் செயல்படும் இராமனைக் கண்டார்களில்லை. (20,21)

புலனுகர் செயலில் ஈடுபட்டிருக்கும் ஜீவாத்மாவை மக்கள் பார்க்க முடிவதில்லை. (நுகர்பொருள்களில் புலன்கள் ஈடுபடுவதை மட்டும் காண்கிறார்கள்.) அதுபோல, அரக்கர்களின் உடல்களைத் தாக்கும் இராமனை, அவர்கள் பார்க்கவில்லை. (உடல்கள் வீழ்த்தப்படுவதை மட்டும் பார்த்தார்கள்.) (22)

அரக்கர்கள், இராமனுடைய அஸ்திர மகிமையால், ஒருவர் மற்றொருவரை இராமனாகவே கண்டார்கள். அதனால், 'இதோ, இராமன் யானைப் படையை மாய்க்கிறான்; இதோ, தேர்வீரர்களைக் கொல்கிறான்; இதோ, இங்கே குதிரைகளையும் காலாட்படையினரையும் கூரிய பாணங்களால் வதைக்கிறான்' என்று கூறிக்கொண்டு கோபத்துடன் போர்புரிந்து கொண்டிருந்த அவர்கள், தங்கள் படையினரையே உருவ ஒற்றுமையால் இராமனாகவே பார்த்துத் தாக்கிக் கொண்டார்கள். (23,24)

மகாத்மாவான இராமபிரானுடைய காந்தர்வம் என்ற சிறப்பான அஸ்திரத்தினால் மதிமயக்கம் கொண்ட அவர்கள், எதிரிகளின் படையை எரித்துப் பொசுக்கும் (உண்மையான) இராமனைக் காணவில்லை. அரக்கர்கள், போர்க்களத்தில் ஆயிரக்கணக்கான இராமனைப் பார்த்தார்கள். (ஆனால், அந்தக் காட்சி நிலைத்து நிற்கவும் இல்லை.) மறுபடியும் பார்வையை அந்தப் போர்க்களத்தில் செலுத்தியபோது, ஒரே ஒரு இராமனையே கண்டார்கள்! (25,26)

அவர்கள் மகாத்மாவான இராமனுடைய பொன்னாலான வில்லின் நுனி, கொள்ளிச் சக்கரத்தைப் போல் சுழல்வதைக் கண்டார்களே தவிர, இராமனுடைய திருவுருவத்தைக் காணவில்லை. (27)

போர்முனையில், அரக்கர்களை அழித்துக் கொண்டிருந்த இராமன் (தடுக்க முடியாத அழிவுச் சக்தி கொண்ட) காலசக்கரம் போலவே தோன்றினார். அதாவது, இராமனே சக்கராயுதம்; அவருடைய சீரமே, சக்கரத்தின் நடுப்பகுதியான குடம்; அவருடைய பராக்கிரமமே, அதிலிருந்து புறப்படும் நெருப்புப்பொறி; செலுத்தப்படும் பாணங்களே, ஆரங்கள்; வில்தான் சக்கரத்தின் வெளிவட்டம்; நாணோசையும், நாண் கயிறு கையில் அடிபடும்போது எழும் ஓசையே, சக்கரத்திலிருந்து சுவாலைகள் கிளம்பும்போது எழுகின்ற சடபடவென்ற ஓசைகள்; தேஜஸ், அறிவு, குணங்களே சக்கரத்தின் ஒளி; திவ்யாஸ்திரங்களின் சக்தியே, அதன் எல்லை! இவ்வாறு, இராமன் எனும் சக்கரத்தை மக்கள் கண்டார்கள்! (28,29)

அநீகம் த$_3$ஶஸாஹஸ்ரம் ரத$_2$நாம் வாதரம்ஹஸாம் ।
அஷ்டாத$_3$ஶ ஸஹஸ்ராணி குஞ்ஜராணாம் தரஸ்விநாம் ॥ (30)

சதுர்த$_3$ஶ ஸஹஸ்ராணி ஸாரோஹாணாம் ச வாஜிநாம் ।
பூர்ணே ஶதஸஹஸ்ரே த்$_3$வே ராக்ஷஸாநாம் பத$_3$ாதிநாம் ॥ (31)

தி$_3$வஸஸ்யாஷ்டமே ப$_4$ாகே$_3$ ஶரைரக்$_3$நிஶிகே$_2$ாபமை: ।
ஹதாந்யேகேந ராமேண ரக்ஷஸாம் காமரூபிணாம் ॥ (32)

தே ஹதாஶ்வா ஹதரத$_2$ா: ஶாந்தா விமதி$_2$தத்$_4$வஜா: ।
அபி$_4$பேது: புரீம் லங்காம் ஹதஶேஷா நிஶாசரா: ॥ (33)

ஹதைர்க$_3$ஜபத$_3$ாத்யஶ்வைஸ்தத்$_3$ப$_3$பூ$_4$வ ரணாஜிரம் ।
ஆக்ரீட$_3$மிவ ருத்$_3$ரஸ்ய க்ருத்$_3$த$_4$ஸ்ய ஸுமஹாத்மந: ॥ (34)

ததோ தே$_3$வா: ஸக$_3$ந்த$_4$ர்வா: ஸித்$_3$த$_4$ாஶ்ச பரமர்ஷய: ।
ஸாது$_4$ ஸாத்$_4$விதி ராமஸ்ய தத் கர்ம ஸமபூஜயந் ॥ (35)

அப்$_3$ரவீச்ச தத$_3$ா ராம: ஸுக்$_3$ரீவம் ப்ரத்யநந்தரம் ।
விபீ$_4$ஷணம் ச த$_4$ர்மாத்மா ஹநூமந்தம் ச வாநரம் ॥ (36)

ஜாம்ப$_3$வந்தம் ஹரிஶ்ரேஷ்ட$_2$ம் மைந்த$_3$ம் த்$_3$விவித$_3$மேவ ச ।
ஏதத$_3$ஸ்த்ரப$_3$லம் தி$_3$வ்யம் மம வா த்ர்யம்ப$_3$கஸ்ய வா ॥ (37)

நிஹத்ய தாம் ராக்ஷஸவாஹிநீம் து
ராமஸ்தத$_3$ா ஶக்ரஸமோ மஹாத்மா ।
அஸ்த்ரேஷு ஶஸ்த்ரேஷு ஜிதக்லமஶ்ச
ஸம்ஸ்தூயதே தே$_3$வக$_3$ணை: ப்ரஹ்ருஷ்டை: ॥ (38)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ சதுர்நவதிதம: ஸர்க$_3$: ॥

பஞ்சநவதிதம: ஸர்க$_3$:

ராக்ஷஸீவிலாப:

தாநி தாநி ஸஹஸ்ராணி ஸாரோஹாணாம் ச வாஜிநாம் ।
ரத$_2$ாநாம் த்வக்$_3$நிவர்ணாநாம் ஸத்$_4$வஜாநாம் ஸஹஸ்ரஶ: ॥ (1)

ராக்ஷஸாநாம் ஸஹஸ்ராணி க$_3$த$_3$ாபரிக$_4$யோதி$_4$நாம் ।
காஞ்சநத்$_4$வஜசித்ராணாம் ஶூராணாம் காமரூபிணாம் ॥ (2)

நிஹதாநி ஶரைஸ்தீக்ஷ்ணைஸ்தப்தகாஞ்சநபூ$_4$ஷணை: ।
ராவணேந ப்ரயுக்தாநி ராமேணாக்லிஷ்டகர்மணா ॥ (3)

த்$_3$ருஷ்ட்வா ஶ்ருத்வா ச ஸம்ப்$_4$ராந்தா ஹதஶேஷா நிஶாசரா: ।
ராக்ஷஸ்யஶ்ச ஸமாக$_3$ம்ய தீ$_3$நாஶ்சிந்தாபரிப்லுதா: ॥ (4)

வாயுவேகத்தில் செல்லக்கூடிய பதினாயிரம் தேர்கள்; மிகவும் பலங்கொண்ட பதினெட்டாயிரம் யானைகள்; பதினான்காயிரம் குதிரைப்படையினர்; இரண்டு லட்சம் அரக்கக் காலாட்படையினர் மற்றும் நினைத்த உருவம் எடுக்கவல்ல கணக்கில்லாத அரக்கர் படையும், இராமபிரான் ஒருவரால் நெருப்புக்கொழுந்து போன்ற பாணங்களால், பகலின் எட்டில் ஒரு பாகத்தில் (ஒரு முகூர்த்த காலத்தில்) அழிக்கப்பட்டன. (30–32)

குதிரைகள் மாய்க்கப்பட்டன; தேர்கள் நொறுக்கப்பட்டன; கொடிகள் முறிக்கப்பட்டன; ஆடைகள் குலைக்கப்பட்டன. இதனால் மனம் சோர்ந்து போன அரக்கர்கள், (பயந்து) இலங்கை நகரை நோக்கி திரும்பிச் சென்றார்கள். (33)

கொன்று வீழ்த்தப்பட்ட யானை–காலாட்படை–குதிரைகளால் குவிந்து கிடந்த அந்தப் போர்க்களம், சினங்கொண்டு (அழிவுத் தொழிலை முழுமையாக நடத்திய) ருத்ர மகாதேவரின் விளையாட்டுத் திடல் போன்று விளங்கியது. (34)

அப்போது கந்தர்வர்கள், தேவர்கள், சித்தர்கள், மாமுனிவர்கள் ஆகியோர், இராமபிரானின் ஒப்பில்லாத அந்தச் செயலை, 'ரொம்ப சரி' என்று போற்றிக் கொண்டாடினார்கள். (35)

அப்போது தன் அருகிலிருந்த சுக்ரீவன், அறப்பற்றுடைய விபீஷணன், வானரவீரர் அனுமான், கரடித் தலைவரான ஜாம்பவான், மைந்தன் மற்றும் த்விவிதன் ஆகியோரைப் பார்த்து, ''தனித்திறமையும் மகிமையும் உடைய இந்த அஸ்திர சக்தி, என்னிடமும் முக்கண்ணராகிய பரமேசுவரரிடமும் மட்டுமே உள்ளது'' என்று இராமன் கூறினார். (36,37)

இந்திரனுக்கு நிகரான அளவிட முடியாத ஆற்றல் கொண்ட இராமன், அரக்கப் பெரும்படையை அழித்து நாசம் செய்தார். பல்வகை அஸ்திர–சஸ்திரங்களைப் பிரயோகித்தும், அவர் களைப்படையவில்லை. தேவர் கூட்டங்கள் பேரானந்தத்துடன் அவரைப் புகழ்ந்து வாழ்த்தின. (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றைந்து

அரக்கிகள் புலம்பல்!

எல்லாவித அருஞ்செயல்களையும் வெகு எளிதாகச் செய்து முடிக்கக் கூடியவர், இராமன். அவரிடம் உருக்கிய தங்கத்தாலான அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட கூர்மையான பாணங்கள் இருந்தன. இராவணனால் அனுப்பப்பட்ட ஆயிரக்கணக்கான யானைகள், வீரர்கள் ஏறி அமர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான குதிரைகள், அக்னியைப் போல் ஒளி வீசுவனவும் கொடிகள் கட்டப்பட்டதுமான ஆயிரக்கணக்கான தேர்கள் மற்றும் நினைத்த உருவம் எடுக்க வல்லவர்களும் அழகிய பொற்பதாகைகளைக் கொண்டவர்களும், கதைகள்–உலக்கைத் தடிகளால் போர்புரியும் ஆயிரக்கணக்கான வீரர்களும், இராம பாணங்களால் மாய்க்கப்பட்டதைக் கண்டும் கேட்டும், உயிர் தப்பி எஞ்சியிருந்த அரக்கர்கள் மிகவும் மனங்கலங்கிப் போனார்கள். (இலங்கைக்கு ஓடிவந்து தத்தம் இல்லங்களில்) அரக்கிகளிடம் தஞ்சமடைந்து மிகவும் வருத்தமும் (எதிர்காலம் பற்றிய) கவலையும் கொண்டார்கள். (1–4)

வித$_{4}$வா ஹதபுத்ராஶ்ச க்ரோஶந்த்யோ ஹதபா$_{3}$ந்த$_{4}$வா: ।
ராக்ஷஸ்ய: ஸஹ ஸங்க$_{3}$ம்ய து$_{3}$:கா$_{2}$ர்தா: பர்யதே$_{3}$வயந் ॥ (5)

கத$_{2}$ம் ஶூர்பணகா$_{2}$ வ்ருத்$_{3}$தா$_{4}$ கராலா நிர்ணதோத$_{3}$ரீ ।
ஆஸஸாத$_{3}$ வநே ராமம் கந்த$_{3}$ர்பமிவ ரூபிணம் ॥ (6)

ஸுகுமாரம் மஹாஸத்த்வம் ஸர்வபூ$_{4}$தஹிதே ரதம் ।
தம் த்$_{3}$ருஷ்ட்வா லோகவத்$_{4}$யா ஸா ஹீநரூபா ப்ரகாமிதா ॥ (7)

கத$_{2}$ம் ஸர்வகு$_{3}$ணைர்ஹீநா கு$_{3}$ணவந்தம் மஹௌஜஸம் ।
ஸுமுக$_{2}$ம் து$_{3}$ர்முகீ$_{2}$ ராமம் காமயாமாஸ ராக்ஷஸீ ॥ (8)

ஜநஸ்யாஸ்யால்பபா$_{4}$க்$_{3}$யத்வாத்$_{3}$வலிநீ ஶ்வேதமூர்த$_{4}$ஜா ।
அகார்யமபஹாஸ்யம் ச ஸர்வலோகவிக$_{3}$ர்ஹிதம் ॥ (9)

ராக்ஷஸாநாம் விநாஶாய தூ$_{3}$ஷணஸ்ய க$_{2}$ரஸ்ய ச ।
சகாராப்ரதிரூபா ஸா ராக$_{4}$வஸ்ய ப்ரத$_{4}$ர்ஷணம் ॥ (10)

தந்நிமித்தமித$_{3}$ம் வைரம் ராவணேந க்ருதம் மஹத் ।
வதா$_{4}$ய ஸீதா ஸாநீதா த$_{3}$ஶக்$_{3}$ரீவேண ரக்ஷஸா ॥ (11)

ந ச ஸீதாம் த$_{3}$ஶக்$_{3}$ரீவ: ப்ராப்நோதி ஜநகாத்மஜாம் ।
ப$_{3}$த்$_{3}$த$_{4}$ம் ப$_{3}$லவதா வைரமக்ஷயம் ராக$_{4}$வேண ச ॥ (12)

வைதே$_{3}$ஹீம் ப்ரார்த$_{2}$யாநம் தம் விராத$_{4}$ம் ப்ரேக்ஷ்ய ராக்ஷஸம் ।
ஹதமேகேந ராமேண பர்யாப்தம் தந்நித$_{3}$ர்ஶநம் ॥ (13)

சதுர்த$_{3}$ஶ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீ$_{4}$மகர்மணாம் ।
நிஹதாநி ஜநஸ்தா$_{2}$நே ஶரைரக்$_{3}$நிஶிகோ$_{2}$பமை: ॥ (14)

க$_{2}$ரஶ்ச நிஹத: ஸங்க்$_{2}$யே தூ$_{3}$ஷணஸ்த்ரிஶிராஸ்ததா$_{2}$ ।
ஶரைராதி$_{3}$த்யஸங்காஶை: பர்யாப்தம் தந்நித$_{3}$ர்ஶநம் ॥ (15)

ஹதோ யோஜநபா$_{3}$ஹுஶ்ச கப$_{3}$ந்தோ$_{4}$ ருதி$_{4}$ராஶந: ।
க்ரோதா$_{4}$ந்நாத$_{3}$ம் நத$_{3}$ந் ஸோऽத$_{2}$ பர்யாப்தம் தந்நித$_{3}$ர்ஶநம் ॥ (16)

ஜகா$_{4}$ந ப$_{3}$லிநம் ராம: ஸஹஸ்ரநயநாத்மஜம் ।
வாலிநம் மேருஸங்காஶம் பர்யாப்தம் தந்நித$_{3}$ர்ஶநம் ॥ (17)

ருஶ்யமூகே வஸஞ்ஶைலே தீ$_{3}$நோ ப$_{4}$க்$_{3}$நமநோரத$_{2}$: ।
ஸுக்$_{3}$ரீவ: ஸ்தா$_{2}$பிதோ ராஜ்யே பர்யாப்தம் தந்நித$_{3}$ர்ஶநம் ॥ (18)

கணவனை இழந்தவர்கள், புதல்வர்களைப் பறிகொடுத்தவர்கள், உறவினர்கள் கொல்லப்பட்டதால் ஆதரவற்றுப் போனவர்கள் ஆகிய அரக்கிகள் துயரத்தால் பீடிக்கப்பட்டு, ஆங்காங்கே ஒன்றுகூடி பின்வருமாறு புலம்பிக் கதறினார்கள்— (5)

''கிழவியும் காணச் சகியாதவளும் வயிறு சரிந்தவளுமான சூர்ப்பணகை, மன்மதனுக்கு நிகரான தோற்றங்கொண்ட இராமபிரானைக் காட்டில் ஏன்தான் சந்தித்தாளோ? அவர், பேரழகு கொண்ட வாலிபர்; பேராற்றல் உடையவர்; எல்லாப் பிராணிகளின் நல்வாழ்விலும் அக்கறை கொண்டவர். அப்படிப்பட்டவரைப் பார்த்து, அழகற்றவளும் (இழிகுணங்களுக்கு இருப்பிடமாக இருந்ததால்) மக்களால் கொல்லத்தக்கவளுமான அவள், எப்படித்தான் காமவசப்பட்டாளோ? (6,7)

எல்லா நற்குணங்களும் பொருந்தியவரும் மகாபலசாலியும் அழகான முகம் உடையவருமான இராமன் எங்கே? நற்குணங்களே இல்லாதவளும் அசிங்கமான உருவமுடைய இந்த அரக்கி எங்கே? ஐயகோ! அவரைக் கண்டு காமம் கொள்வதற்கு இவளுக்கு என்ன தகுதி? (**குறிப்பு:–** மன்மதனுக்கு மன்மதனான இராமனிடம், தான் அடங்காத காமம் கொண்டதை சூர்ப்பணகை இராவணனிடம் தெரிவிக்கவில்லை. வேறு மாதிரியாக – சீதையை இராவணனிடம் கொண்டுவந்து சேர்க்க விரும்பியதாகக் கூறினாள். ஆனால், ஒற்றனான அகம்பனன் முதலியோர் மூலம், உண்மையான காரணம் இலங்கை மக்களிடம் பரவிவிட்டது.) (8)

இலங்கைவாசிகளான நம்முடைய துர்ப்பாக்கியத்தினால், முதியவளும், வெளுத்து நரைத்துப் போன கேசம் உடையவளும், அவருக்கு எந்த விதத்திலும் தகுதி இல்லாதவளுமான அவள் (சூர்ப்பணகை), தூஷணன், கரன் முதலான எல்லா அரக்கர்களுடைய அழிவின் பொருட்டு செய்யத்தகாததும் பரிகாசத்துக்குரியதும் மக்களால் வெறுக்கத்தக்கதுமான ஓர் இழிசெயலை, இராமபிரானுக்குச் செய்துவிட்டாள். (9,10)

அவள், இராமனுக்கு இழைத்த குற்றத்தின் காரணமாக, இராவணன் தீவிரமான பகைமையை மேற்கொண்டான். பத்துத்தலையனான ஓர் அரக்கனால், எல்லா அரக்கர்களின் அழிவின்பொருட்டு சீதை தூக்கிவரப்பட்டாள். பத்துத்தலையன், ஜனகன் புதல்வியான சீதையை ஒருநாளும் அடையப் போவதில்லை. அத்துடன், மகாபலசாலியான இராமபிரானிடம் குறைவில்லாத விரோதத்தையும் உறுதியாகக் கைக்கொண்டு விட்டான். (11,12)

சீதையை அடைய விரும்பிய (எல்லையற்ற பராக்கிரமமும் வரங்களும் பெற்ற) அந்த அரக்கன் விராதன், இராமபிரான் ஒருவராலேயே கொல்லப்பட்டான். (விராத வதம் கண்ணால் கண்ட சான்று.) இராமபிரானுடைய கற்பனைக்கெட்டாத பேராற்றலைத் தெரிந்து கொள்வதற்கு இது ஒன்றே போதுமே? (13)

பயங்கரமான போர்ச் செயல்களைச் செய்யக்கூடிய பதினான்காயிரம் அரக்கர்கள், ஜனஸ்தானத்தில் நெருப்புச் சுவாலைகள் போன்ற (இராம) பாணங்களால் கொல்லப்பட்டார்கள். போர்க்களத்தில் சூரியனைப் போல் ஒளிவீசும் பாணங்களால் கரன், தூஷணன், திரிசிரஸ் முதலியோர் கொல்லப்பட்டார்கள். (எவ்வளவு பாடுபட்டாலும் இராமனை வெற்றி கொள்ள முடியாது – என்பதற்கு) இது ஒரு தக்க சான்று, இல்லையா? (14,15)

உதிரத்தையே உணவாகக் கொள்பவனும், ஒரு யோஜனை தூரத்திற்குக் கைகள் நீண்டிருந்தவனுமான கபந்தன், கோபத்துடன் பேரிரைச்சல் போட்டுக் கொண்டு வந்தான்; அவனும் கொல்லப்பட்டான். இராமமூர்த்தியினுடைய பிரபாவத்தைக் காட்டுவதற்கு இந்த ஒரு நிகழ்ச்சி போதாதா? மேருமலை போல் பேருருவம் கொண்டவனும் மகாபலசாலியும் இந்திரகுமாரனுமான வாலியை, இராமன் கொன்று வீழ்த்தினார் என்ற சம்பவமே, இராமபிரானின் அளவில்லாத ஆற்றலைக் காட்டுவதற்குப் போதிய சான்றாகும். (16,17)

தன் நோக்கம் நிறைவேறப் பெறாமல் ஏக்கத்தோடு ரிஷ்யமூக பர்வதத்தில் வசித்துக் கொண்டிருந்தவனுமான சுக்ரீவனுக்கு ஆட்சியைக் கொடுத்தார். இது, இராமபிரானுடைய நீதி–நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு இல்லையா? (18)

ஏகோ வாயுஸுத: ப்ராப்ய லங்காம் ஹத்வா ச ராக்ஷஸாந் ।
த$_3$க்$_3$த்$_4$வா தாம் ச புநர்யாத: பர்யாப்தம் தந்நித$_3$ர்ஶநம் ॥ (19)

நிக்$_3$ருஹ்ய ஸாக$_3$ரம் தஸ்மிந் ஸேதும் ப$_3$த்$_3$த்$_4$வா ப்லவங்க$_3$மை: ।
வ்ருதோऽதரத்தம் யத்$_3$ராம: பர்யாப்தம் தந்நித$_3$ர்ஶநம் ॥ (20)

த$_4$ர்மார்த$_2$ஸஹிதம் வாக்யம் ஸர்வேஷாம் ரக்ஷஸாம் ஹிதம் ।
யுக்தம் விபீ$_4$ஷணேநோக்தம் மோஹாத்தஸ்ய ந ரோசதே ॥ (21)

விபீ$_4$ஷணவச: குர்யாத்$_3$யதி$_3$ ஸ்ம த$_4$நதா$_3$நுஜ: ।
ஶ்மஶாநபூ$_4$தா து$_3$:கா$_2$ர்தா நேயம் லங்காபுரீ ப$_4$வேத் ॥ (22)

கும்ப$_4$கர்ணம் ஹதம் ஶ்ருத்வா ராக$_4$வேண மஹாப$_3$லம் ।
அதிகாயம் ச து$_3$ர்த$_4$ர்ஷம் லக்ஷ்மணேந ஹதம் புந: ॥
ப்ரியம் சேந்த்$_3$ரஜிதம் புத்ரம் ராவணோ நாவபு$_3$த்$_4$யதே ॥ (23)

மம புத்ரோ மம ப்$_4$ராதா மம ப$_4$ர்தா ரணே ஹத: ।
இத்யேவம் ஶ்ரூயதே ஶப்$_3$தோ$_3$ ராக்ஷஸீநாம் குலே குலே ॥ (24)

ரதா$_2$ஶ்சாஶ்வாஶ்ச நாகா$_3$ஶ்ச ஹதா: ஶதஸஹஸ்ரஶ: ।
ரணே ராமேண ஶூரேண ராக்ஷஸாஶ்ச பதா$_3$தய: ॥ (25)

ருத்$_3$ரோ வா யதி$_3$ வா விஷ்ணுர்மஹேந்த்$_3$ரோ வா ஶதக்ரது: ।
ஹந்தி நோ ராமரூபேண யதி$_3$ வா ஸ்வயமந்தக: ॥ (26)

ஹதப்ரவீரா ராமேண நிராஶா ஜீவிதே வயம் ।
அபஶ்யந்தோ ப$_4$யஸ்யாந்தமநாதா$_2$ விலபாமஹே ॥ (27)

ராமஹஸ்தாத்$_3$த$_3$ஶக்$_3$ரீவ: ஶூரோ த$_3$த்தமஹாவர: ।
இத$_3$ம் ப$_4$யம் மஹாகோ$_4$ரமுத்பந்நம் நாவபு$_3$த்$_4$யதே ॥ (28)

ந தே$_3$வா ந ச க$_3$ந்த$_4$ர்வா ந பிஶாசா ந ராக்ஷஸா: ।
உபஸ்ருஷ்டம் பரித்ராதும் ஶக்தா ராமேண ஸம்யுகே$_3$ ॥ (29)

உத்பாதாஶ்சாபி த்$_3$ருஶ்யந்தே ராவணஸ்ய ரணே ரணே ।
கத$_2$யிஷ்யந்தி ராமேண ராவணஸ்ய நிப$_3$ர்ஹணம் ॥ (30)

பிதாமஹேந ப்ரீதேந தே$_3$வதா$_3$நவராக்ஷஸை: ।
ராவணஸ்யாப$_4$யம் த$_3$த்தம் மாநுஷேப்$_4$யோ ந யாசிதம் ॥ (31)

ததி$_3$த$_3$ம் மாநுஷம் மந்யே ப்ராப்தம் நி:ஸம்ஶயம் ப$_4$யம் ।
ஜீவிதாந்தகரம் கோ$_4$ரம் ரக்ஷஸாம் ராவணஸ்ய ச ॥ (32)

வாயுகுமாரன் தனி ஒருவனாக இலங்கைக்கு வந்து, அரக்கர்களைக் கொன்று, பட்டணத்தைக் கொளுத்திவிட்டுத் திரும்பிப் போனாரே, அது ஒன்றே எதிரியின் வலிமையை சுட்டிக்காட்டப் போதுமானது. அலைவீசிக் கொண்டேயிருக்கும் பெருங்கடலை அடக்கி, அதன்மீது, வானரர்களைக் கொண்டு பாலம் அமைத்து, அவர்களோடுகூட இராமன் இங்கே வந்து சேர்ந்தார். ஆகா! அவர் தன் வல்லமையை நமக்குக் காட்ட, இது போதுமே! (19,20)

விபீஷணன், எல்லா அரக்கர்களுக்கும் நன்மை விளைவிப்பதும் அறம்–பொருள் வழி நிற்பதுமான நல்லுரையைக் கூறினார். ஆனால், (காமத்தாலும் இறுமாப்பினாலும்) மதிமயக்கத்திலிருந்த இராவணனுக்கு அது பிடிக்கவில்லை. (21)

குபேரனின் தம்பி (இராவணன்), விபீஷணன் சொன்னபடி நடந்திருந்தால், இந்தப் பட்டணம் மயானக் காடாக மாறி, வருத்தத்தால் பீடிக்கப்பட்டதாக ஆகியிருக்காது. (22)

மகாபலசாலியான கும்பகர்ணன், இராமனால் கொல்லப்பட்டான்; போரில் எதிர்கொள்ள முடியாத அதிகாயன், இலக்குவனால் வீழ்த்தப்பட்டான்; அவ்வாறே, அன்புக்குரிய மகன் இந்திரஜித்தும் கொல்லப்பட்டான். இந்த அவலச் செய்திகளைக் கேட்ட பின்னரும், இராவணனுக்கு அறிவு வரவில்லையே? (23)

அரக்கியரின் வீடுகள்தோறும், 'என் மைந்தன், என் சகோதரன், என் கணவர் போரில் கொல்லப்பட்டார்' என்ற புலம்பல் பேரொலியாய் கேட்கப்படுகிறது. (24)

போரில், நூறாயிரக்கணக்கான தேர்கள், குதிரைகள், யானைகள் மற்றும் அரக்க காலாட்படையினர், மாவீரரான இராமனால் அழிக்கப்பட்டார்கள். (25)

முழு முதற்கடவுளர்களான ருத்ரன்; அல்லது விஷ்ணு; அல்லது நூறு வேள்விகளைச் செய்து அமரர்கோன் பதவி பெற்ற இந்திரன் ஆகியவர்களில் ஒருவர்; அல்லது கருணை காட்டாது உயிரைப் பறிக்கும் சாட்சாத் யமன்! – இராமனாக வடிவம் ஏற்று, நம்மை அழித்துக் கொண்டிருக்கிறார். (26)

நம்முடைய முக்கிய வீரர்கள் இராமனால் கொல்லப்பட்டு விட்டார்கள். இந்தப் பேராபத்திற்கு எப்போது முடிவு என்பதும் தெரியவில்லை. உயிரின் மேலிருந்த ஆசை போய்விட்டது. இனி, நம்மைக் காப்பாற்றப் போவது யார்? என்பது தெரியாமல் வெறுமே புலம்பிக் கொண்டிருக்கிறோம். (27)

இராவணன், மகாவீரன்; மிகச்சிறந்த வரங்களைப் (பிரும்மாவிடமிருந்து) பெற்றிருக்கிறான். (அந்த இருமாப்பினால்) இராமனுடைய திருக்கரத்திலிருந்து தனக்கு நேரப்போகும் பேராபத்தை உணராதிருக்கிறான். (28)

போர்க்களத்தில், 'கொன்றே தீருவது' என்று இராமனால் நிச்சயிக்கப்பட்ட ஒருவனை, தேவ–கந்தர்வ–பிசாச–அரக்கர்கள் யாருமே காப்பாற்றும் திறன் கொண்டவர்கள் அல்லர். (29)

இதுவரை இராவணனால் அனுப்பப்பட்ட படைத்தலைவர்கள் நிகழ்த்திய போர்கள் ஒவ்வொன்றிலும் தீய நிமித்தங்களே காணப்பட்டன. அந்த சகுனங்கள், இராமன் மூலமாக இராவணன் அழிவைத் தெரிவிக்கின்றன. (30)

கடுந்தவத்தினால் மனமகிழ்ந்த பிரும்மதேவன், 'தேவ–அசுர–அரக்கர்களால் அழிவு வராது' என்ற வரத்தைக் கொடுத்தார். 'மானுடர்களிடமிருந்தும் ஆபத்து வரக்கூடாது' என்று கோரிக்கை வைக்கப்படவில்லை. (மனிதர்கள் வெறும் அற்பப் பிராணிகள் – என்பது, இராவணனின் கணிப்பு.) (31)

ஆகவே, மனிதர்கள் மூலம் வந்திருக்கும் இந்தப் பேராபத்து, நிச்சயமாக அரக்கர்களுடைய மற்றும் இராவணனுடைய உயிரை முடிவுக்குக் கொண்டு வரப்போகிறது – என்று, நான் எண்ணுகிறேன். (32)

பீட்3யமாநாஸ்து ப3லிநா வரத3ாநேந ரக்ஷஸா ।
தீ3ப்தைஸ்தபோபி4ர்விபு3தா4: பிதாமஹமபூஜயந் ॥ (33)

தே3வதாநாம் ஹிதார்த2ாய மஹாத்மா வை பிதாமஹ: ।
உவாச தே3வதா: ஸர்வா இத3ம் துஷ்டோ மஹத்3வச: ॥ (34)

அத்3ய ப்ரப்4ருதி லோகாந்ஸ்த்ரீந் ஸர்வே த3ாநவராக்ஷஸா: ।
ப4யேந ப்ராவ்ருதா நித்யம் விசரிஷ்யந்தி ஶாஶ்வதம் ॥ (35)

தை3வதைஸ்து ஸமாக3ம்ய ஸர்வைஶ்சேந்த்3ரபுரோக3மை: ।
வ்ருஷத்4வஜஸ்த்ரிபுரஹா மஹாதே3வ: ப்ரஸாதி3த: ॥ (36)

ப்ரஸந்நஸ்து மஹாதே3வா தே3வாநேதத்3வசோऽப்3ரவீத் ।
உத்பத்ஸ்யதி ஹிதார்த2ம் வோ நாரீ ரக்ஷ:க்ஷயாவஹா ॥ (37)

ஏஷா தே3வை: ப்ரயுக்தா து க்ஷுத்3யத2ா த3ாநவாந் புரா ।
ப4க்ஷயிஷ்யதி ந: ஸீதா ராக்ஷஸக்4நீ ஸராவணாந் ॥ (38)

ராவணஸ்யாபநீதேந து3ர்விநீதஸ்ய து3ர்மதே: ।
அயம் நிஷ்ட2ாநகோ கே4ார: ஶோகேந ஸமபி4ப்லுத: ॥ (39)

தம் ந பஶ்யாமஹே லோகே யோ ந: ஶரணதே3ா ப4வேத் ।
ராக4வேணோபஸ்ருஷ்டாநாம் காலேநேவ யுக3க்ஷயே ॥ (40)

நாஸ்தி ந: ஶரணம் கஶ்சித்3ப4யே மஹதி திஷ்ட2தாம் ।
த3வாக்3நிவேஷ்டிதாநாம் ஹி கரேணூநாம் யத2ா வநே ॥ (41)

ப்ராப்தகாலம் க்ருதம் தேந பௌலஸ்த்யேந மஹாத்மநா ।
யத ஏவ ப4யம் த்3ருஷ்டம் தமேவ ஶரணம் க3த: ॥ (42)

இதீவ ஸர்வா ரஜநீசரஸ்த்ரிய: பரஸ்பரம் ஸம்பரிரப்4ய ப3ாஹுபி4: ।
விஷேது3ரார்தா ப4யப4ாரபீடி3தா விநேது3ருச்சைஶ்ச தத3ா ஸுதா3ருணம் ॥ (43)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 பஞ்சநவதிதம: ஸர்க3: ॥

ஷண்ணவதிதம: ஸர்க3:

ராவணாபி4ஷேணநம்

ஆர்தாநாம் ராக்ஷஸீநாம் து லங்காயாம் வை குலே குலே ।
ராவண: கருணம் ஶப்3த3ம் ஶுஶ்ராவ பரிதே3விதம் ॥ (1)

ஸ து தீ3ர்க4ம் விநி:ஶ்வஸ்ய முஹூர்தம் த்4யாநமாஸ்தி2த: ।
ப3பூ4வ பரமக்ருத்3தே4ா ராவணோ பீ4மத3ர்ஶந: ॥ (2)

மகாபலசாலியான இராவணன் வரங்கள் பெற்று துன்புறுத்தத் தொடங்கியதும், தேவர்கள் கடுமையான தவங்கள் செய்து பிரும்மதேவனை ஆராதித்தார்கள். (33)

மகாத்மாவான பிரும்மதேவன் மனமகிழ்ந்து, தேவர்களின் நல்வாழ்வுக்காக, அவர்கள் எல்லோரையும் பார்த்து மிகச்சிறப்பான ஆறுதல் மொழியைக் கூறினார்— (34)

'இப்போது முதற்கொண்டு, மூன்று உலகங்களிலும் உள்ள எல்லா அசுரர்களும் அரக்கர்களும், ஒருபோதும் தம்மைவிட்டு அகலாத அச்சத்துடன்தான் திரியப் போகிறார்கள்.' (35)

பின்னர், எல்லா தேவர்களும் இந்திரனை முன்னிட்டுக் கொண்டு, முப்புரங்களை எரித்தவரும் ரிஷபக்கொடி உடையவருமான பரமேசுவரனை வழிபட்டு, அவரை மகிழ்வித்தார்கள். (36)

அப்போது, மகாதேவன் நேரில் தோன்றி, 'உங்களுடைய நல்வாழ்வுக்காகவும் அரக்கர்களை நாசம் செய்யவும் ஒரு பெண்மணி தோன்றப் போகிறாள்' என்று திருவாய் மலர்ந்தருளினார். (37)

முன்பு, (பாற்கடலில் தோன்றிய அமுதத்தை, தேவர்கள் மட்டும் பகிர்ந்துகொண்ட பின்னர்,) தேவர்களால் தானவர்கள்மீது கோரப்பசி ஏவிவிடப்பட்டது. (அதைப் பொறுக்க முடியாமல் அவர்கள் அழிந்தார்கள்.) அதுபோல, இராவணன் உட்பட அரக்க–அரக்கியரைக் கொன்று புசிக்கப் போகிறார், சீதாப்பிராட்டியார். (38)

செருக்குக் கொண்டவனும் தீயமதி படைத்தவனுமான இராவணன் செய்த அநியாயத்தால், நமக்கு இந்தத் துயரமும் பயங்கரமான அழிவும் ஏற்பட்டிருக்கிறது. (39)

ஊழிக்காலத்தில் பேரழிவு உண்டாக்கும் காலனைப் போல, இப்போது இராமபிரானிடமிருந்து நமக்கு நேர்ந்திருக்கும் துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றக்கூடிய ஒருவனும், நம் கண்களில் படவேயில்லை. (40)

காட்டில், காட்டுத் தீயால் சூழப்பட்ட பெண்யானைகளைப் போல, மிகப்பெரிய சங்கடத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் நமக்குப் புகலிடம் எவரும் இல்லை. (41)

மகாத்மாவான புலஸ்திய வம்சத் தோன்றல் விபீஷணன், சமயத்திற்கேற்ற நடவடிக்கையை மேற்கொண்டார். எவரிடமிருந்து ஆபத்து வருமோ, அவரையே சரணமடைந்து விட்டார்!'' (42)

இவ்வாறாக, எல்லா அரக்கப் பெண்டிரும் கைகளால் ஒருவரையொருவர் கட்டிப் பிணைத்துக் கொண்டு, அச்சத்தின் சுமை தாங்காமல் மனம் வருந்தி பரிதவித்தார்கள்; மிக பயங்கரமான பெருங்குரலில் அலறித் தவித்தார்கள். (43)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றாறு

இராவணன் புறப்பட்டான்!

இலங்கையின் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் துயரம் தாங்காத அரக்கிகளின் பரிதாபமான அழுகை ஒலியை இராவணன் கேட்டான். (1)

பயங்கரமான தோற்றமுடைய இராவணன், மிகவும் கோபத்துடன் பெருமூச்சுவிட்டுக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான். (2)

ஸந்த$_3$ஶ்ய த$_3$ஶநைரோஷ்ட$_2$ம் க்ரோத$_4$ஸம்ரக்தலோசந: ।
ராக்ஷஸைரபி து$_3$ர்த$_3$ர்ஶ: காலாக்$_3$நிரிவ மூர்சி$_2$த: ॥ (3)

உவாச ச ஸமீபஸ்த$_2$ாந் ராக்ஷஸாந் ராக்ஷஸேஶ்வர: ।
ப$_4$யாவ்யக்தகத$_2$ஸ்தத்ர நிர்த$_3$ஹந்நிவ சக்ஷுஷா ॥ (4)

மஹோத$_3$ரமஹாபார்ஶ்வௌ விரூபாக்ஷம் ச ராக்ஷஸம் ।
ஶீக்$_4$ரம் வத$_3$த ஸைந்யாநி நிர்யாதேதி மமாக்ஞயா ॥ (5)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராக்ஷஸாஸ்தே ப$_4$யார்தி$_3$தா: ।
சோத$_3$யாமாஸுரவ்யக்$_3$ராந் ராக்ஷஸாந்ஸ்தாந்ந்ருபாக்ஞயா ॥ (6)

தே து ஸர்வே ததே$_2$த்யுக்த்வா ராக்ஷஸா கே$_4$ாரத$_3$ர்ஶநா: ।
க்ருதஸ்வஸ்த்யயநா: ஸர்வே ரணாயாபி$_4$முகா$_2$ யயு: ॥ (7)

ப்ரதிபூஜ்ய யத$_2$ாந்யாயம் ராவணம் தே நிஶாசரா: ।
தஸ்து$_2$: ப்ராஞ்ஜலய: ஸர்வே ப$_4$ர்துர்விஜயகாங்க்ஷிண: ॥ (8)

அதே$_2$ாவாச ப்ரஹஸ்யைதாந் ராவண: க்ரோத$_4$மூர்சி$_2$த: ।
மஹோத$_3$ரமஹாபார்ஶ்வௌ விரூபாக்ஷம் ச ராக்ஷஸம் ॥ (9)

அத்$_3$ய ப$_3$ாணைர்த$_4$நுர்முக்தைர்யுக$_3$ாந்தாதி$_3$த்யஸந்நிபை$_4$: ।
ராக$_4$வம் லக்ஷ்மணம் சைவ நேஷ்யாமி யமஸாத$_3$நம் ॥ (10)

க$_2$ரஸ்ய கும்ப$_4$கர்ணஸ்ய ப்ரஹஸ்தேந்த்$_3$ரஜிதோஸ்தத$_2$ா ।
கரிஷ்யாமி ப்ரதீகாரமத்$_3$ய ஶத்ருவத$_4$ாத$_3$ஹம் ॥ (11)

நைவாந்தரிக்ஷம் ந தி$_3$ஶோ ந நத்$_3$யோ நாபி ஸாக$_3$ரா: ।
ப்ரகாஶத்வம் க$_3$மிஷ்யந்தி மத்$_3$ப$_3$ாணஜலத$_3$ாவ்ருதா: ॥ (12)

அத்$_3$ய வாநரமுக்$_2$யாநாம் தாநி யூத$_2$ாநி ப$_4$ாக$_3$ஶ: ।
த$_4$நுஷா ஶரஜாலேந வித$_4$மிஷ்யாமி பத்ரிணா ॥ (13)

அத்$_3$ய வாநரஸைந்யாநி ரதே$_2$ந பவநௌஜஸா ।
த$_4$நு:ஸமுத்$_3$ராது$_3$த்$_3$பூ$_4$தைர்மதி$_2$ஷ்யாமி ஶரோர்மிபி$_4$: ॥ (14)

ஆகோஶபத்$_3$மவக்த்ராணி பத்$_3$மகேஸரவர்சஸாம் ।
அத்$_3$ய யூத$_2$தடாகாநி க$_3$ஜவத் ப்ரமத$_2$ாம்யஹம் ॥ (15)

ஸஶரைரத்$_3$ய வத$_3$நை: ஸங்க்$_2$யே வாநரயூத$_2$பா: ।
மண்ட$_3$யிஷ்யந்தி வஸுத$_4$ாம் ஸநாலைரிவ பங்கஜை: ॥ (16)

சினத்தால் அவன் கண்கள் சிவந்து போயிருந்தன; பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டான். ஊழித்தீ போல நெருப்பு மலையாக ஜொலித்து, அரக்கர்களாலும்கூட பார்க்க முடியாதவனானான். அப்போது, அரக்க மன்னன் அருகிலிருந்த அரக்கர்களைக் கண்ணால் எரித்து விடுபவன் போல் பார்த்து, (மனத்திற்குள் இராமனிடம் ஏற்பட்டிருந்த) அச்சத்தால் நாக்குழற பின்வருமாறு கூறினான்— (3,4)

''மகோதரனையும் மகாபார்சுவனையும் அரக்கனான விருபாட்சனையும் உடனே சந்தித்து, 'என் கட்டளைப்படி அரக்கர்படையை அணிவகுத்துக் கொண்டு வெளியே புறப்பட ஆயத்தமாகுங்கள்' என்று சொல்லுங்கள்.'' (**குறிப்பு:–** முன்னர், போரில் மாண்ட மகோதரனும் மகாபார்சுவனும் இராவணனின் சகோதரர்கள். இப்போது கூறப்படுபவர்கள் அமைச்சர்கள்.) (5)

அங்கிருந்த அரக்கர்கள், அந்தக் கட்டளையைக் கேட்டு, அச்சத்தால் நடுங்கியபடியே, போர் செய்வதில் விருப்பமில்லாதிருந்த அரக்கர்களை, அரசன் ஆணையைக் கூறித் தூண்டிவிட்டார்கள். (**குறிப்பு:–** போர்முனைக்குச் சென்றால் இராமபாணத்திடமிருந்து தப்ப முடியாதே? போருக்குப் போகாவிட்டால், இராவணன் வாளிலிருந்து தப்ப முடியாதே? அதனால் அச்சம்!) (6)

பயங்கர உருவங்கொண்ட அந்த அரக்கர்கள், 'அவ்விதமே செய்கிறோம்' என்று கூறிவிட்டு, தாங்கள் எல்லோரும் உயிர்பிழைத்துத் திரும்ப வேண்டும் என்பதற்கான, காப்பு மந்திரங்களை ஓதச் செய்து, போர் செய்வதற்காக வெளியே புறப்பட்டார்கள். தலைவனின் வெற்றியை விரும்பும் அந்த அரக்கர்கள் எல்லோரும், உரியமுறைப்படி இராவணனை வணங்கிவிட்டு, கைகூப்பிக் கொண்டு (அடுத்த உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டு) நின்றார்கள். (7,8)

அப்போது, கோபத்தால் ஆட்கொள்ளப்பட்டிருந்த இராவணன், மகோதரனையும் மகாபார்சுவனையும் அரக்கன் விருபாட்சனையும் பார்த்து, (அகந்தையால்) சிரித்துக் கொண்டு, பின்வருமாறு கூறினான்— (9)

''என் வில்லிலிருந்து விடுக்கப்பட்ட, ஊழிக்காலக் கதிரவனைப் போல் நெருப்பாகச் சுட்டெரிக்கும் பாணங்களால், இராமனையும் லட்சுமணனையும் யமன் உலகத்திற்கு அனுப்பப் போகிறேன்! (**குறிப்பு:–** 'இராமனையும் லட்சுமணனையும் யமன் உலகுக்கு அனுப்புவேன்' என்று சொற்கள் அமைந்திருந்தாலும், உண்மையில், 'இராமனையும் லட்சுமணனையும் தவிர, மற்றவர்களை யமன் உலகு அனுப்புவேன்' என்று சொன்னதாகக் கொள்ளத்தகும் – என்பது விளக்கவுரைக்காரர் கருத்து.) (10)

இப்போது, நான் எதிரிகளைக் கொன்று, கரன்–கும்பகர்ணன்–பிரஹஸ்தன்–இந்திரஜித் ஆகியோரின் கொலைக்குப் பழிவாங்கப் போகிறேன். என்னுடைய பாணங்கள், மேகத்தைப் போல எல்லாப் பக்கங்களையும் சூழ்ந்து கொள்ளப் போகின்றன. அதனால், வானம்–திசைகள்–நதிகள்–கடல்கள் யாவும் காணமுடியாமல் போகப் போகின்றன. (11,12)

என்னுடைய வில்லிலிருந்து, இறகுகள் கட்டப்பட்ட அம்புகளால் வலை விரித்து, வானரத் தலைவர்களின் படைகளை, அணி அணியாக அழித்துவிடப் போகிறேன். வாயுவேகம் கொண்ட தேரில் ஏறிச்சென்று, என்னுடைய வில்லாகிய பெருங்கடலிலிருந்து மேலெழுந்து வரும் பாணங்கள் என்னும் அலைகளால் வானரப்படைகளை இப்போதே கலக்கிவிடப் போகிறேன். (13,14)

தாமரையின் மகரந்தப்பொடியைப் போன்ற நிறமுள்ள வானரர்களுடைய முகங்களே சற்றே மலர்ந்த தாமரை மலர்கள்; வானரப்படையாகிற தடாகங்களில் இறங்கி (படைக்குள்ளே புகுந்து சென்று), ஒரு யானையைப் போல் இப்போது நான் கலக்கிவிடுகிறேன். (15)

இப்போது, போரில் வானரப் படைத்தலைவர்களின் முகங்களைப் பாணங்களால் தாக்கப் போகிறேன். அம்புகள் குத்திட்டு நிற்கும் முகங்கள், தண்டுகளுடன் கூடிய தாமரை மலர்களைப் போலவே, போர்க்களத்தை மெருகூட்டப் போகின்றன. (16)

அத்$_3$ய யுத்$_3$த$_4$ப்ரசண்ட$_3$ாநாம் ஹரீணாம் த்$_3$ருமயோதி$_4$நாம் ।
முக்தேஹைநகேஷுணா யுத்$_3$தே$_4$ பே$_4$த்ஸ்யாமி ச ஶதம் ஶதம் ॥ (17)

ஹதோ ப$_4$ர்தா ஹதோ ப்$_4$ராதா யாஸாம் ச தநயா ஹதா: ।
வதே$_4$நாத்$_3$ய ரிபோஸ்தாஸாம் கரோம்யஶ்ருப்ரமார்ஜநம் ॥ (18)

அத்$_3$ய மத்$_3$ப$_3$ாணநிர்பி$_4$ந்நை: ப்ரகீர்ணைர்க$_3$தசேதநை: ।
கரோமி வாநரைர்யுத்$_3$தே$_4$ யத்நாவேக்ஷ்யதலாம் மஹீம் ॥ (19)

அத்$_3$ய கோ$_3$மாயவோ க்$_3$ருத்$_4$ரா யே ச மாம்ஸாஶிநோऽபரே ।
ஸர்வாந்ஸ்தாந்ஸ்தர்பயிஷ்யாமி ஶத்ருமாம்ஸை: ஶரார்பிதை: ॥ (20)

கல்ப்யதாம் மே ரத$_2$: ஶீக்$_4$ரம் க்ஷிப்ரமாநீயதாம் த$_4$நு: ।
அநுப்ரயாந்து மாம் ஸர்வே யேऽவஶிஷ்டா நிஶாசரா: ॥ (21)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா மஹாபார்ஶ்வோऽப்$_3$ரவீத்$_3$வச: ।
ப$_3$லாத்$_4$யக்ஷாந் ஸ்தி$_2$தாந்ஸ்தத்ர ப$_3$லம் ஸந்த்வர்யதாமிதி ॥ (22)

ப$_3$லாத்$_4$யக்ஷாஸ்து ஸம்ரப்$_3$த$_4$ா ராக்ஷஸாந்ஸ்தாந் க்$_3$ருஹாத்$_3$க்$_3$ருஹாத் ।
சோத$_3$யந்த: பரியயுர்லங்காம் லகு$_4$பராக்ரமா: ॥ (23)

ததோ முஹூர்தாந்நிஷ்பேதூ ராக்ஷஸா பீ$_4$மத$_3$ர்ஶநா: ।
நர்த$_3$ந்தோ பீ$_4$மவத$_3$நா நாநாப்ரஹரணைர்பு$_4$ஜை: ॥ (24)

அஸிபி$_4$: பட்டஸை: ஶூலைர்க$_3$த$_3$ாபி$_4$ர்முஸலைர்ஹலை: ।
ஶக்திபி$_4$ஸ்தீக்ஷ்ணத$_4$ாராபி$_4$ர்மஹத்$_3$பி$_4$: கூடமுத்$_3$க$_3$ரை: ॥ (25)

யஷ்டிபி$_4$ர்விமலைஶ்சக்ரைர்நிஶிதைஶ்ச பரஶ்வதை$_4$: ।
பி$_4$ண்டி$_3$பாலை: ஶதக்$_4$நீபி$_4$ரந்யைஶ்சாபி வராயுதை$_4$: ॥ (26)

அத$_2$ாநயந் ப$_3$லாத்$_4$யக்ஷா: ஸத்வரோ ராவணாக்ஞயா ।
ரத$_2$ாநாம் நியுதம் ஸாக்$_3$ரம் நாக$_3$ாநாமயுதம் த்ரயம் ॥
அஶ்வாநாம் ஷஷ்டிகோட்யஸ்து க$_2$ரோஷ்ட்ராணாம் ததை$_2$வ ச ॥ (27)

பத$_3$ாதயஸ்த்வஸங்க்$_2$யாதா ஜக்$_3$முஸ்தே ராஜஶாஸநாத் ।
ப$_3$லாத்$_4$யக்ஷாஸ்து ஸம்ஸ்த$_2$ாப்ய ராக்ஞ: ஸேநாம் புர:ஸ்தி$_2$தா: ॥ (28)

ஏதஸ்மிந்நந்தரே ஸூத: ஸ்த$_2$ாபயாமாஸ தம் ரத$_2$ம் ॥ (29)

தி$_3$வ்யஸ்ரக்$_3$வஸ்த்ரஸம்பந்நம் நாநாலங்காரபூ$_4$ஷிதம் ।
தீ$_3$ர்க$_4$வாஜிஸமாயுக்தம் தி$_3$வ்யாலங்காரபூ$_4$ஷணம் ॥ (30)

நாநாயுத$_4$ஸமாகீர்ணம் கிங்கிணீஜாலமண்டி$_3$தம் ।
நாநாரத்நபரிக்ஷிப்தம் ரத்நஸ்தம்பை$_4$ர்விராஜிதம் ॥ (31)

ஜாம்பூ$_3$நத$_3$மயைஶ்சைவ ஸஹஸ்ரகலஶைர்யுதம் ।
தம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸா: ஸர்வே விஸ்மயம் பரமம் யயு: ॥ (32)

இப்போது, போர்க்களத்தில் மரங்களைக் கொண்டு போர்புரியும் வானரவீரர்களை, என்னால் செலுத்தப்படும் ஒவ்வொரு பாணத்தினாலும் நூறு நூறு என்ற கணக்கில் பிளந்து தள்ளப் போகிறேன். (17)

கணவர் கொல்லப்பட்டார்; சகோதரன் கொல்லப்பட்டான்; புதல்வர்கள் கொல்லப்பட்டார்கள் என்று யார் யார் அழுகிறார்களோ, அதற்குக் காரணமான அவர்களுடைய (நம்முடைய) எதிரிகளைக் கொன்று, (அந்த அரக்கப் பெண்டிரின்) கண்ணீரைத் துடைப்பேன். இப்போது, போரில் பாணங்களை விடுத்து, வானரர்களை மாய்த்துச் சிதறியடித்து, போர்க்களத்தின் தரையே தெரியாதபடி மறைத்து விடுகிறேன். (18,19)

நரிகள், கழுகுகள், புலாலுண்ணும் மற்றப் பிராணிகள் எல்லாவற்றையும், என்னுடைய பாணங்களால் அர்ப்பணம் செய்யப்படும் எதிரிகளின் சடலங்களால் திருப்தி செய்விக்கப் போகின்றேன். என்னுடைய தேரை உடனே கொண்டு வந்து நிறுத்துங்கள்; என்னுடைய வில்லைக் கொண்டு வாருங்கள்; (போரில் உயிர் துறந்தவர்கள் போக) எஞ்சியிருக்கும் அரக்கர்கள் எல்லோரும் என்னைத் தொடர்ந்து வாருங்கள்.'' (20,21)

அவனுடைய கட்டளைக் கேட்டவுடன், அவ்விடத்திலிருந்த படைத்தலைவர்களைப் பார்த்து, 'உடனே படையை அணிவகுத்து நிறுத்துங்கள்' என்று மகாபார்சுவன் கூறினான். (22)

இந்தக் கட்டளை கிடைத்தவுடன், விரைந்து செயல்படும் படைத்தலைவர்கள், ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, போருக்கு ஆயத்தமாகும்படி அரக்கர்களை முடுக்கிவிட்டபடியே, இலங்கை முழுவதும் சுற்றித் திரிந்தார்கள். (**குறிப்பு:–** போர் முரசறைந்து அழைத்தால், பேரச்சத்திலிருக்கும் அரக்கர்கள், வெளியே வரமாட்டார்கள் என்பதால், அணித்தலைவர்கள் ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்ட வேண்டியிருந்தது. அத்துடன், போர்ப்பயிற்சி இல்லாத அரக்கர்களையும் திரட்டிக் கொண்டு வந்து, 'இதோ பெரிய படை!' என்ற பிரமிப்பை உண்டாக்க வேண்டியிருந்தது – என்பர் பெரியோர்.) (23)

பின்னர், பயங்கரமான உருவம் படைத்தவர்களும் பயங்கரமான முகம் கொண்டவர்களுமான இராக்கதர்கள், வாள்கள், பட்டயங்கள், சூலங்கள், கதைகள், உலக்கைகள், கலப்பைகள், கூர்மையான முனையை உடைய வேல்கள், மாபெரும் கூடமுத்கரங்கள், தடிகள், தோல்வி என்னும் மாசு படியாத சக்ராயுதங்கள், கூரான கோடரிகள், பிண்டிபாலம் எனும் எறியீட்டிகள், சதக்னிகள் மற்றும் பேரழிவு நிகழ்த்தும் படைக்கலன்கள் ஆகியவற்றைக் கைகளில் ஏந்திக்கொண்டு, உற்சாகக் குரலெழுப்பியவர்களாக, வெகுவிரைவிலேயே வெளியே வந்து கூடினார்கள். (24–26)

படைத்தலைவர்கள், இராவணனுடைய கட்டளையை நிறைவேற்ற விரைந்து செயல்பட்டார்கள். ஒரு லட்சத்திற்குக் கூடுதலான தேர்கள், மூன்று லட்சம் யானைகள், அறுபது கோடி குதிரைகள், அறுபது கோடி கோவேறு கழுதை–ஒட்டகங்கள், எண்ணிலடங்காத காலாட்படையினர் ஆகியோரைத் திரட்டிக் கொண்டுவந்து, அரசன் முன் அணிவகுத்து நிறுத்தினார்கள். (27,28)

இதனிடையில் தேர்ப்பாகன், அவனுடைய (இராவணனுடைய) தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான். (29)

தேரில், தெய்வத்தன்மையுடைய மாலைகளும் ஆடைகளும் இருந்தன; அது பல்வகை அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டு, கம்பீரமான குதிரைகள் பூட்டப்பட்டிருந்தது; ஆயுதங்கள் பல அதில் இருந்தன; சதங்கைச் சரங்கள் கட்டப்பட்டிருந்தன; பலவகையான இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன; இரத்தினத் தூண்களால் அழகு கூடியிருந்தது; ஆயிரம் பொற்கலசங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அற்புதமான அந்த ரதத்தைக் கண்டு, எல்லா அரக்கர்களும் மிகவும் வியப்படைந்தார்கள். (**குறிப்பு:–** இவ்வளவு விமரிசையான ஏற்பாடுகளைக் கொண்ட அந்த ரதத்தை, இராவணன், இதற்கு முன் உபயோகிக்கவில்லை போலும். தேவாசுரப் போர்களுக்கு, ஒரு சாமானிய ரதமே போதும் என்று நினைத்திருப்பான் – என்பர் அறிஞர்.) (30–32)

தம் த்$_3$ருஷ்ட்வா ஸஹஸோத்த$_2$ாய ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
கோடிஸூர்யப்ரதீகாஶம் ஜ்வலந்தமிவ பாவகம் ॥ (33)

த்$_3$ருதம் ஸூதமஸமாயுக்தம் யுக்தாஷ்டதுரக$_3$ம் ரத$_2$ம் ।
ஆருரோஹ ரத$_2$ம் பீ$_4$மோ தீ$_3$ப்யமாநம் ஸ்வதேஜஸா ॥ (34)

தத: ப்ரயாத: ஸஹஸா ராக்ஷஸைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ।
ராவண: ஸத்த்வக$_3$ாம்பீ$_4$ர்யாத்$_3$த$_3$ாரயந்நிவ மேதி$_3$நீம் ॥ (35)

ராவணேநாப்$_4$யநுக்ஞாதௌ மஹாபார்ஶ்வமஹோத$_3$ரௌ ।
விரூபாக்ஷஶ்ச து$_3$ர்த$_4$ர்ஷோ ரத$_2$ாநாருருஹுஸ்தத$_3$ா ॥ (36)

தே து ஹ்ருஷ்டா விநர்த$_3$ந்தோ பி$_4$ந்த$_3$ந்த இவ மேதி$_3$நீம் ।
நாத$_3$ம் கோ$_4$ரம் விமுஞ்சந்தோ நிர்யயுர்ஜயகாங்க்ஷிண: ॥ (37)

ததோ யுத்$_3$த$_4$ாய தேஜஸ்வீ ரக்ஷோக$_3$ணப$_3$லைர்வ்ருத: ।
நிர்யயாவுத்$_3$யதத$_4$நு: காலாந்தகயமோபம: ॥ (38)

தத: ப்ரஜவநாஶ்வேந ரதே$_2$ந ஸ மஹாரத$_2$: ।
த்$_3$வாரேண நிர்யயௌ தேந யத்ர தௌ ராமலக்ஷ்மணௌ ॥ (39)

ததோ நஷ்டப்ரப$_4$: ஸூர்யோ தி$_3$ஶஶ்ச திமிராவ்ருதா: ।
த்$_3$விஜாஶ்ச நேது$_3$ர்கோ$_4$ராஶ்ச ஸஞ்சசாலேவ மேதி$_3$நீ ॥ (40)

வவர்ஷ ருதி$_4$ரம் தே$_3$வஶ்சஸ்க$_2$லுஸ்துரக$_3$ா: பதி$_2$ ।
த்$_4$வஜாக்$_3$ரே ந்யபதத்$_3$க்ருத்$_4$ரோ விநேது$_3$ஶ்சாஶிவம் ஶிவா: ॥ (41)

நயநம் சாஸ்பு$_2$ரத்$_3$வாமம் ஸவ்யோ ப$_3$ாஹுரகம்பத ।
விவர்ணம் வத$_3$நம் சாஸீத் கிஞ்சிதப்$_4$ரஶ்யத ஸ்வர: ॥ (42)

ததோ நிஷ்பததோ யுத்$_3$தே$_4$ த$_3$ஶக்$_3$ரீவஸ்ய ரக்ஷஸ: ।
ரணே நித$_4$நஶம்ஸீநி ரூபாண்யேதாநி ஜக்ஞிரே ॥ (43)

அந்தரிக்ஷாத் பபாதோல்கா நிர்க$_4$ாதஸமநி:ஸ்வநா ।
விநேது$_3$ரஶிவா க்$_3$ருத்$_4$ரா வாயஸைரநுநாதி$_3$தா: ॥ (44)

ஏதாநசிந்தயந் கோ$_4$ராநுத்பாதாந் ஸமுபஸ்தி$_2$தாந் ।
நிர்யயௌ ராவணோ மோஹாத்$_3$வத$_4$ார்தீ$_2$ காலசோதி$_3$த: ॥ (45)

தேஷாம் து ரத$_2$கோ$_4$ஷேண ராக்ஷஸாநாம் மஹாத்மநாம் ।
வாநராணாமபி சமூர்யுத்$_3$த$_4$ாயைவாப்$_4$யவர்தத ॥ (46)

தேஷாம் து துமுலம் யுத்$_3$த$_4$ம் ப$_3$பூ$_4$வ கபிரக்ஷஸாம் ।
அந்யோந்யமாஹ்வயாநாநாம் க்ருத்$_3$த$_4$ாநாம் ஜயமிச்ச$_2$தாம் ॥ (47)

அந்தத் தேரைக் கண்டதும் உடனே எழுந்தான், அரக்க மன்னனான இராவணன். கோடி சூரியப் பிரகாசத்துடனும் சுவாலை ஒளிவீசும் அக்னியைப் போன்றும் எட்டுக் குதிரைகள் இணைக்கப்பட்டும் சாரதியுடனும் விளங்கிய, வேகமாக செல்லக்கூடிய அந்தத் தேரில், தன்னுடைய வீரப்பொலிவினால் ஒளிவீசுபவனும் பயங்கரத் தோற்றமுடையவனுமான அவன் ஏறி அமர்ந்து கொண்டான். (33,34)

தன்னுடைய சக்திப் பெருமிதத்தினால், பூமியையே பிளப்பவன் போல முட்டி மோதிக் கொண்டு, ஏராளமான அரக்கர்கள் புடைசூழ இராவணன் (யுத்தபூமியை நோக்கிப்) புறப்பட்டான். (35)

அப்போது, இராவணனின் அனுமதியைப் பெற்று, மகாபார்சுவ–மகோதரர்களும், எதிர்கொள்ள முடியாத விரூபாட்சனும் தேர்களில் ஏறிக்கொண்டார்கள். (36)

வெற்றி வேட்கை மிகுந்த அவர்கள், மனக்களிப்புற்றவர்களாக, பூமியைப் பிளப்பது போல் படைகளைச் செலுத்திக் கொண்டும், ஜயகோஷம் எழுப்பிக் கொண்டும், பயங்கரமான கூச்சல் போட்டுக் கொண்டும் வெளியே புறப்பட்டார்கள். (37)

ஊழிக்கால காலனுக்கு ஒப்பானவனும் ஆற்றல் மிக்கவனும் அரக்கப்படை வீரர்களால் சூழப்பட்டவனுமான அவன், கையில் வில்லை ஏந்திக்கொண்டு போரிடுவதற்காக வெளியே புறப்பட்டுச் சென்றான். (38)

மிகச்சிறந்த தேராளியான அவன், மிகவும் வேகமாக ஓடக்கூடிய குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏறிக்கொண்டு, இராம–லட்சுமணர்கள் தண்டு இறங்கியிருந்த வடக்கு வாசல் வழியாக (இலங்கையிலிருந்து) வெளியே வந்தான். (39)

அப்பொழுது, சூரியன் ஒளி குன்றிப் போனான்; திசைகளில் இருள் படர்ந்தது; பறவைகள் கர்ணகடூரமாகக் கூச்சலிட்டன; பூமியே, அசைந்தாடினாற்போலிருந்தது. (40)

தேவேந்திரன் ஆணைக்குட்பட்ட மேகம், இரத்தத்தைப் பொழிந்தது; வழித் தடத்தில் குதிரைகள் இடறி விழுந்தன; (தேரின் உயரே கட்டப்பட்டிருந்த) கொடியின் முனையில் கழுகு வந்து உட்கார்ந்தது; நரிகளும் தீங்கை சூசிப்பிக்கும் விதமாக ஊளையிட்டன. (41)

(இராவணனுடைய) இடது கண்ணும் இடது கையும் துடித்தன; முகம் வெளிறிப் போயிற்று; குரலும் சிறிது தாழ்ந்து ஒலித்தது. (42)

அரக்க இராவணன் யுத்தகளத்தை நோக்கிப் புறப்பட்டுச் செல்லும்போது, போரில் தோல்வியைத் தெரிவிக்கும் இவ்விதமான அபசகுனங்கள் தோன்றின. (43)

ஆகாயத்திலிருந்து, இடி போன்ற ஓசையுடன் எரிகொள்ளிகள் கீழே விழுந்தன; கழுகுகள், தீய ஒலிகளை எழுப்பின; காகங்களும் அவைகளைப் பின்பற்றின. (அதாவது, தீய ஒலிகளை எழுப்பின.) (44)

காலதேவனால் வலுக்கட்டாயமாக நடத்திச் செல்லப்படுபவனும் மாய்க்கப்படுவதை விரும்பியவனுமான இராவணன், தன் கண் முன்னால் தோன்றிய பயங்கரமான தீய நிமித்தங்களை, அறிவு மயக்கத்தால் பொருட்படுத்தாமல் தொடர்ந்து சென்றான். (45)

பேருருவம் கொண்ட அரக்கப்படையினரின் தேர்களின் பேரொலியைக் கேட்ட வானரர் படையும் போர் செய்வதற்கு ஆயத்தமாக எதிரே வந்து நின்றது. தங்களுக்கே வெற்றியை விரும்பிய வானரர்களும், அரக்கர்களும் மிகவும் கோபத்துடன் ஒருவரையொருவர் சூளுரைத்துக் கொண்டு கடுமையாக போர் செய்யத் தொடங்கினார்கள். (46,47)

தத: க்ருத்$_3$தே$_4$ா த$_3$ஶக்$_3$ரீவ: ஶரை: காஞ்சநபூ$_4$ஷணை: ।
வாநராணாமநீகேஷு சகார கத$_3$நம் மஹத் ॥ (48)

நிக்ருத்தஶிரஸ: கேசித்$_3$ராவணேந வலீமுக$_2$ா: ।
கேசித்$_3$விச்சி$_2$ந்நஹ்ருத$_3$யா: கேசிச்ச்$_2$ரோத்ரவிவர்ஜிதா: ॥ (49)

நிருச்ச்$_2$வாஸா ஹதா: கேசித் கேசித் பார்ஶ்வேஷு தா$_3$ரிதா: ।
கேசித்$_3$விபி$_4$ந்நஶிரஸ: கேசிச்சக்ஷுர்விவர்ஜிதா: ॥ (50)

த$_3$ஶாநந: க்ரோத$_4$விவ்ருத்தநேத்ரோ யதோ யதோऽப்$_4$யேதி ரதே$_2$ந ஸங்க்$_2$யே ।
ததஸ்ததஸ்தஸ்ய ஶரப்ரவேக$_3$ம் ஸோடு$_4$ம் ந ஶேகுர்ஹரிபுங்க$_3$வாஸ்தே ॥ (51)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷண்ணவதிதம: ஸர்க$_3$: ॥

ஸப்தநவதிதம: ஸர்க$_3$:

விரூபாக்ஷவத$_4$:

தத$_2$ா தை: க்ருத்தகா$_3$த்ரைஸ்து த$_3$ஶக்$_3$ரீவேண மார்க$_3$ணை: ।
ப$_3$பூ$_4$வ வஸுதா$_4$ா தத்ர ப்ரகீர்ணா ஹரிபி$_4$ஸ்தத$_3$ா ॥ (1)

ராவணஸ்யாப்ரஸஹ்யம் தம் ஶரஸம்பாதமேகத: ।
ந ஶேகு: ஸஹிதும் தீ$_3$ப்தம் பதங்கா$_3$ ஜ்வலநம் யத$_2$ா ॥ (2)

தேऽர்தி$_3$தா நிஶிதைர்பா$_3$ணை: க்ரோஶந்தோ விப்ரது$_3$த்$_3$ருவு: ।
பாவகார்சி:ஸமாவிஷ்டா த$_3$ஹ்யமாநா யத$_2$ா க$_3$ஜா: ॥ (3)

ப்லவங்கா$_3$மாநாமநீகாநி மஹாப்$_4$ராணீவ மாருத: ।
ஸ யயௌ ஸமரே தஸ்மிந் வித$_4$மந் ராவண: ஶரை: ॥ (4)

கத$_3$நம் தரஸா க்ருத்வா ராக்ஷஸேந்த்$_3$ரோ வநௌகஸாம் ।
ஆஸஸாத$_3$ ததோ யுத்$_3$தே$_4$ ராக$_4$வம் த்வரிதஸ்தத$_3$ா ॥ (5)

ஸுக்$_3$ரீவஸ்தாந் கபீந் த்$_3$ருஷ்ட்வா ப$_4$க்$_3$நாந் வித்$_3$ரவதோ ரணே ।
கு$_3$ல்மே ஸுஷேணம் நிக்ஷிப்ய சக்ரே யுத்$_3$தே$_4$ऽத்$_3$பு$_4$தம் மந: ॥ (6)

ஆத்மந: ஸத்$_3$ருஶம் வீர: ஸ தம் நிக்ஷிப்ய வாநரம் ।
ஸுக்$_3$ரீவோऽபி$_4$முக$_2$: ஶத்ரும் ப்ரதஸ்தே$_2$ பாத$_3$பாயுத$_4$: ॥ (7)

பார்ஶ்வத: ப்ருஷ்ட$_2$தஶ்சாஸ்ய ஸர்வே யூத$_2$ாதி$_4$பா: ஸ்வயம் ।
அநுஜஹ்ருர்மஹாஶைலாந் விவித$_4$ாந்ஶ்ச மஹாத்$_3$ருமாந் ॥ (8)

ஸ நர்த$_3$ந் யுதி$_4$ ஸுக்$_3$ரீவ: ஸ்வரேண மஹதா மஹாந் ।
பாதயந் விவித$_4$ாந்ஶ்சாந்யாஞ்ஜக$_3$ாமோத்தமராக்ஷஸாந் ॥ (9)

அந்தச் சமயத்தில், (தன் அணியினரின் அழிவைப் பார்த்துக்) கோபங்கொண்ட இராவணன், எண்ணிறந்த பாணங்களைச் செலுத்தி, வானரப்படைகளுக்குப் பெருஞ்சேதத்தை விளைவித்தான். (48)

இராவணனால், சில வானரர்களின் தலை துண்டிக்கப்பட்டது; சிலரின் மார்பு பிளவடைந்தது; சிலர் செவிகளை இழந்தார்கள்; சிலர் மூச்சுத் திணறி மாண்டு போனார்கள்; சிலர் இடுப்புப் பகுதியில் பிளக்கப்பட்டார்கள்; சிலர் மண்டை உடைக்கப்பட்டார்கள்; சிலர் கண்களை இழந்தார்கள். (49,50)

கோபத்தால் கண்கள் சுழல, இராவணன் போர்க்களத்தில் எந்தெந்தப் பகுதிக்குச் சென்று எதிர்த்தானோ, அந்தந்தப் பகுதியிலிருந்த வானரவீரர்கள், அவனுடைய பாணத்தாக்குதலைத் தாங்க முடியாதவரானார்கள். (51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்றாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம்: தொண்ணூற்றேழு

மாண்டான், விரூபாக்ஷன்!

அப்போது, போர்க்களமானது இராவண பாணங்களால் நொறுக்கப்பட்ட வானரர்களின் உடல்கள் சிதறிக் கிடப்பதாக ஆயிற்று. (1)

கொழுந்து விட்டெரியும் நெருப்பை, விட்டிற்பூச்சிகள் நெருங்க முடியாதது போல, தனியனாக நின்று இராவணன் விடுத்த, எதிர்கொள்ள முடியாத பாணத் தாக்குதலை (வானரர்களால்) கொஞ்சங்கூடத் தாங்க முடியவில்லை. (2)

காட்டுத் தீயினால் சூழப்பட்டு பொசுக்கப்படும் யானைகள் போல், கூர்மையான பாணங்களால் துன்புறுத்தப்பட்ட அவர்கள், கதறிக்கொண்டு ஓடினார்கள். (3)

பெரும் மேகங்களைச் சூறாவளிக் காற்று சிதறடிப்பது போல, அந்தப் போரில், இராவணன் தன் பாணங்களால் வானரப் படைகளை அழித்துக் கொண்டு முன்னேறிச் சென்றான். (4)

அரக்க மன்னன், வெகு விரைவில் வானரர்களுக்குப் பேரழிவை உண்டாக்கிவிட்டு, பின்னர், விரைந்து சென்று இராமனை அடைந்தான். (5)

போரில், வானரர்கள் முறியடிக்கப்பட்டு ஓடுவதைப் பார்த்த சுக்ரீவன், தன் பொறுப்பிலிருந்த அணியின் பாதுகாப்புக்காக சுஷேணனை நிறுத்தி வைத்துவிட்டு, மகத்தான போர் செய்வதில் மனத்தைச் செலுத்தினான். (6)

மாவீரனான சுக்ரீவன், தனக்கு நிகரான அந்த வானரனிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, ஆயுதமாக மரத்தை எடுத்துக் கொண்டு எதிரியை நோக்கிச் சென்றான். (7)

அவனுடைய இரு பக்கங்களிலும் பின்புறத்திலும், அணித்தலைவர்கள் எல்லோரும் தாங்களே பெயர்த்தெடுத்த பெரிய மலைகளையும் பெரிய மரங்களையும் சுமந்துகொண்டு பின்தொடர்ந்து வந்தார்கள். (மன்னர்கள் போருக்குச் செல்லும்போது பணியாளர்கள் படைக்கலன்களை எடுத்துக் கொண்டு, உடனே செல்வது ஒரு வழக்கம்.) (8)

மாட்சிமை பொருந்திய சுக்ரீவன், போர்க்களத்தில், உரத்த குரலில் கர்ஜித்துக் கொண்டு, பல அரக்கத் தலைவர்களையும் மற்றவர்களையும் அடித்து வீழ்த்திக் கொண்டு சென்றான். (9)

மமந்த$_2$ ச மஹாகாயோ ராக்ஷஸாந் வாநரேஶ்வர: ।
யுக$_3$ாந்தஸமயே வாயு: ப்ரவ்ருத்$_3$த$_4$ாநக$_3$மாநிவ ॥ (10)

ராக்ஷஸாநாமநீகேஷு ஶைலவர்ஷம் வவர்ஷ ஹ ।
அஶ்மவர்ஷம் யத$_2$ா மேக$_4$: பக்ஷிஸங்கே$_4$ஷு காநநே ॥ (11)

கபிராஜவிமுக்தைஸ்தை: ஶைலவர்ஷைஸ்து ராக்ஷஸா: ।
விகீர்ணஶிரஸ: பேதுர்நிக்ருத்தா இவ பர்வதா: ॥ (12)

அத$_2$ ஸம்க்ஷீயமாணேஷு ராக்ஷஸேஷு ஸமந்தத: ।
ஸுக்$_3$ரீவேண ப்ரப$_4$க்$_3$நேஷு பதத்ஸு விநத$_3$த்ஸு ச ॥ (13)

விரூபாக்ஷ: ஸ்வகம் நாம த$_4$ந்வீ விஶ்ராவ்ய ராக்ஷஸ: ।
ரத$_2$ாத$_3$ாப்லுத்ய து$_3$ர்த$_4$ர்ஷோ க$_3$ஜஸ்கந்த$_4$முபாருஹத் ॥ (14)

ஸ தம் த்$_3$விரத$_3$மாருஹ்ய விரூபாக்ஷோ மஹாரத$_2$: ।
விநத$_3$ந் பீ$_4$மநிர்ஹ்ராத$_3$ம் வாநராநப்$_4$யத$_4$ாவத ॥ (15)

ஸுக்$_3$ரீவே ஸ ஶராந் கே$_4$ராந் விஸஸர்ஜ சமூமுகே$_2$ ।
ஸ்த$_2$ாபயாமாஸ சோத்$_3$விக்$_3$நாந் ராக்ஷஸாந் ஸம்ப்ரஹர்ஷயந் ॥ (16)

ஸ து வித்$_3$த$_4$: ஶிதைர்ப$_3$ாணை: கபீந்த்$_3$ரஸ்தேந ரக்ஷஸா ।
சுக்ரோத$_4$ ஸ மஹாக்ரோதே$_4$ா வதே$_4$ சாஸ்ய மநோ த$_3$தே$_4$ ॥ (17)

தத: பாத$_3$பமுத்$_3$த்$_4$ருத்ய ஶூர: ஸம்ப்ரத$_4$நோ ஹரி: ।
அபி$_4$பத்ய ஜக$_4$நாஸ்ய ப்ரமுகே$_2$ து மஹாக$_3$ஜம் ॥ (18)

ஸ து ப்ரஹாராபி$_4$ஹத: ஸுக்$_3$ரீவேண மஹாக$_3$ஜ: ।
அபாஸர்பத்$_3$த$_4$நுர்மாத்ரம் நிஷஸாத$_3$ நநாத$_3$ ச ॥ (19)

க$_3$ஜாத்து மதி$_2$தாத்தூர்ணமபக்ரம்ய ஸ வீர்யவாந் ।
ராக்ஷஸோऽபி$_4$முக$_2$: ஶத்ரும் ப்ரத்யுத்$_3$க$_3$ம்ய தத: கபிம் ॥ (20)

ஆர்ஷப$_4$ம் சர்ம க$_2$ட்$_3$க$_3$ம் ச ப்ரக்$_3$ருஹ்ய லகு$_4$விக்ரம: ।
ப$_4$ர்த்ஸயந்நிவ ஸுக்$_3$ரீவமாஸஸாத$_3$ வ்யவஸ்தி$_2$தம் ॥ (21)

ஸ ஹி தஸ்யாபி$_4$ஸங்க்ருத்$_3$த$_4$: ப்ரக்$_3$ருஹ்ய விபுலாம் ஶிலாம் ।
விரூபாக்ஷாய சிக்ஷேப ஸுக்$_3$ரீவோ ஜலதே$_3$ாபமாம் ॥ (22)

ஸ தாம் ஶிலாமாபதந்தீம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸபுங்க$_3$வ: ।
அபக்ரம்ய ஸுவிக்ராந்த: க$_2$ட்$_3$கே$_3$ந ப்ராஹரத்தத$_3$ா ॥ (23)

தேந க$_2$ட்$_3$க$_3$ப்ரஹாரேண ரக்ஷஸா ப$_3$லிநா ஹத: ।
முஹூர்தமப$_4$வத்$_3$வீரோ விஸம்ஜ்ஞ இவ வாநர: ॥ (24)

ஸ தத$_3$ா ஸஹஸோத்பத்ய ராக்ஷஸஸ்ய மஹாஹவே ।
முஷ்டிம் ஸம்வர்த்ய வேகே$_3$ந பாதயாமாஸ வக்ஷஸி ॥ (25)

ஊழிக் காலத்தில் புயற்காற்று, நீண்ட நாள்பட்ட வலுவான மரங்களையும் அடியோடு பெயர்த்து விடுவதைப் போல, பேருடல் படைத்த வானர மன்னன், அரக்கர்களைக் கலக்கி வீழ்த்தினான். (10)

காட்டில் பறவைக் கூட்டங்கள் மீது மேகம் கல்மாரியைப் பொழிந்தாற்போல, அரக்கர் படைமீது மலைமாரியைப் பொழிந்தான், சுக்ரீவன். (11)

வானர மன்னனால் செலுத்தப்பட்ட மலைமாரிகளால் அரக்கர்கள் தலைகள் சிதறி, வெட்டப்பட்ட மலைகள் போல் தரையில் விழுந்தார்கள். (12)

இவ்வாறு, சுக்ரீவனின் தாக்குதலால் எல்லாப் பக்கங்களிலும் அரக்கர்களுக்கு அழிவு ஏற்படவே, அவர்கள் அவலக்குரல் எழுப்பிக் கொண்டு ஓடினார்கள்; கீழே விழுந்தார்கள். அப்போது, எதிர்கொள்ள முடியாத மாவீரனான விரூபாட்சன் என்ற அரக்கன், கையில் வில்லை எடுத்துக் கொண்டு, தன்னுடைய பெயரைக் கூவிச் சொல்லியவாறே தேரிலிருந்து குதித்து, ஒரு யானையின் மேல் ஏறிக்கொண்டான். (13,14)

திறமைமிக்க தேராளியான விரூபாட்சன், யானைமீது ஏறிக் கொண்டு நடுநடுங்கும்படியாக பேரொலி எழுப்பியவாறே வானரர்களை எதிர்த்தான். (15)

அவன், போர்முனையில் சுக்ரீவன் மீது பயங்கரமான பாணங்களை விடுத்தான். (அதன் மூலம்) மனம் பதறிக் கொண்டிருந்த அரக்கர்களை உற்சாகப்படுத்தி, யுத்தகளத்தில் நிற்கச் செய்தான். (16)

வானர மன்னன், அரக்கனின் பாணங்களால் காயப்படுத்தப்பட்டதும், ஆத்திரம் அடைந்தான்; அளவுகடந்த கோபம் கொண்ட அவன், விரூபாட்சனை மாய்ப்பதில் மனம் செலுத்தினான். (17)

நன்றாகப் போர் புரிய வல்ல சூரனான சுக்ரீவன், ஒரு மரத்தைப் பெயர்த்தெடுத்து, அவனுடைய (விரூபாட்சனுடைய) மாபெரும் யானையின் முகத்தில் தாக்கினான். (18)

சுக்ரீவனால் அடிக்கப்பட்ட அந்தப் பெரிய யானை ஒரு வில் அளவு பின்னால் சென்று, காயங்களைப் பொறுக்க முடியாமல் வீறிட்டுக் கதறியது. (19)

மகாவீரனும் மகாபராக்கிரமசாலியுமான அந்த அரக்கன், காயப்படுத்தப்பட்ட யானை மீதிருந்து உடனே கீழே இறங்கி, மாட்டுத் தோலாலான கேடயத்தையும் போர்வாளையும் கையில் எடுத்துக் கொண்டு, ஆயத்தமாக நின்ற பகைவன் சுக்ரீவனை அதட்டி, மிரட்டியபடி நெருங்கிச் சென்றான். (20,21)

மிகவும் கோபங்கொண்ட சுக்ரீவன், மேகம் போல் கருமையான பெரிய பாறையை எடுத்து விரூபாட்சன் மீது வீசினான். (22)

பாறை தன்மேல் விழ வருவதைக் கண்டதும், மிகவும் பராக்கிரமசாலியான அரக்கப் பெருந்தகை, சற்றே விலகிச் சென்று உயிரைக் காப்பாற்றிக் கொண்டான்; உடனே, வாளை எடுத்து சுக்ரீவனைத் தாக்கினான். (23)

வீரனான வானரன், பலசாலியான அரக்கனின் வாளால் தாக்கப்பட்டு, சிறிதுநேரம் உணர்விழந்தவன் போல் ஆனான். (24)

(உணர்வு பெற்றதும்) சட்டென்று எழுந்து முஷ்டியை உயர்த்தி, அரக்கனுடைய மார்பில் (பலமாகத்) தாக்கினான். (25)

முஷ்டிப்ரஹாராபி4ஹதோ விரூபாக்ஷோ நிஶாசர: ।
தேந க2ட்3கே3ந ஸங்க்ருத்3த4: ஸுக்3ரீவஸ்ய சமூமுகே2 ॥
கவசம் பாதயாமாஸ பத்3ப்4யாமபி4ஹதோऽபதத் ॥ (26)

ஸ ஸமுத்தா2ய பதித: கபிஸ்தஸ்ய வ்யஸர்ஜயத் ।
தலப்ரஹாரமஶநே: ஸமாநம் பீ4மநி:ஸ்வநம் ॥ (27)

தலப்ரஹாரம் தத்3ரக்ஷ: ஸுக்3ரீவேண ஸமுத்3யதம் ।
நைபுண்யாந்மோசயித்வைநம் முஷ்டிநோரஸ்யதாட3யத் ॥ (28)

ததஸ்து ஸங்க்ருத்3த4தர: ஸுக்3ரீவோ வாநரேஸ்வர: ।
மோக்ஷிதம் சாத்மநோ த்3ருஷ்ட்வா ப்ரஹாரம் தேந ரக்ஷஸா ॥
ஸ த3த3ர்ஶாந்தரம் தஸ்ய விரூபாக்ஷஸ்ய வாநர: ॥ (29)

ததோ ந்யபாதயத் க்ரோத4ாச்ச2ங்க2தே3ஶே மஹத்தலம் ।
மஹேந்த்3ராஶநிகல்பேந தலேநாபி4ஹத: க்ஷிதௌ ॥ (30)

பபாத ருதி4ரக்லிந்ந: ஶோணிதம் ச ஸமுத்3வமந் ।
ஸ்ரோதோப்4யஸ்து விரூபாக்ஷோ ஜலம் ப்ரஸ்ரவணாதிவ ॥ (31)

விவ்ருத்தநயநம் க்ரோத4ாத் ஸபே2நம் ருதி4ராப்லுதம் ।
த3த்3ருஶுஸ்தே விரூபாக்ஷம் விரூபாக்ஷதரம் க்ருதம் ॥ (32)

ஸ்பு2ரந்தம் பரிவர்தந்தம் பார்ஸ்வேந ருதி4ரோக்ஷிதம் ।
கருணம் ச விநர்த3ந்தம் த3த்3ருஶு: கபயோ ரிபும் ॥ (33)

தத2ா து தௌ ஸம்யதி ஸம்ப்ரயுக்தௌ
தரஸ்விநௌ வாநரராக்ஷஸாநாம் ।
ப3லார்ணவௌ ஸஸ்வநது: ஸுபீ4மம்
மஹார்ணவௌ த்3வாவிவ பி4ந்நவேலௌ ॥ (34)

விநாஶிதம் ப்ரேக்ஷ்ய விரூபநேத்ரம் மஹாப3லம் தம் ஹரிபார்தி2வேந ।
ப3லம் ஸமஸ்தம் கபிராக்ஷஸாநாமுத்3வ்ருத்தக3ங்கா3ப்ரதிமம் ப3பூ4வ ॥ (35)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஸப்தநவதிதம: ஸர்க3: ॥

அஷ்டநவதிதம: ஸர்க3:

மஹோத3ரவத4:

ஹந்யமாநே ப3லே தூர்ணமந்யோந்யம் தே மஹாம்ருதே4 ।
ஸரஸீவ மஹாக4ர்மே ஸுபக்ஷீணே ப3பூ4வது: ॥ (1)

ஸ்வப3லஸ்ய விக4ாதேந விரூபாக்ஷவதே4ந ச ।
ப3பூ4வ த்3விகு3ணம் க்ருத்3தே4ா ராவணோ ராக்ஷஸாதி4ப: ॥ (2)

முஷ்டியால் தாக்கப்பட்ட அரக்கன் விரூபாட்சன் மிகவும் சினங்கொண்டு, அந்தப் போரில், தன் வாளால் சுக்ரீவனுடைய கவசத்தை வெட்டி வீழ்த்தினான்; அரக்கன் கால்களால் உதைப்பட்ட சுக்ரீவன் கீழே விழுந்தான். (26)

கீழே விழுந்த வானரன் எழுந்து நின்று, உள்ளங்கையால் அவனை அறைந்தான். அப்போது, இடியைப் போல் பயங்கரமான ஓசை எழுந்தது. (27)

சுக்ரீவனால் கொடுக்கப்பட்ட அறையிலிருந்து, தன்னுடைய போர்த் திறமையால் உயிர் பிழைத்து, அவன் மார்பில் முஷ்டியால் குத்தினான். (28)

தன்னுடைய தாக்குதலிலிருந்து அந்த அரக்கன் தப்பித்துக் கொண்டதைக் கண்டதும், வானர மன்னான சுக்ரீவனுக்கு எல்லையில்லாத கோபம் உண்டாயிற்று. விரூபாட்சனை மீண்டும் தாக்குவதற்கு ஏற்ற தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டு நின்றான். (29)

தேவேந்திரனின் வஜ்ராயுதத் தாக்குதலுக்கு நிகரான, சுக்ரீவனின் உள்ளங்கையின் பலமான அறையினால், மலையருவியிலிருந்து நீர் வழிந்தோடுவதைப் போல, ரத்த நாளங்களிலிருந்து செந்நீர் பெருகி ஓட, இரத்தம் தோய்ந்தவனாகத் தரையில் சாய்ந்துவிட்டான். (30,31)

அங்கு இருந்தவர்கள் (அரக்க–வானரர்கள்) கோபத்தால் கண்கள் சுழன்று கொண்டிருக்கும் விரூபாட்சனை, விகாரமான கண்களை உடையவனாக செய்யப்பட்டவனாகவும், நுரையுடன் வழிந்த ரத்தம் தோய்ந்தவனாகவும் இருப்பதைப் பார்த்தார்கள். (32)

பகைவனான அவன் தத்தளித்துப் புரண்டு கொண்டிருப்பதையும், இடுப்புப் பகுதியில் குருதி வழிந்து பரிதாபமாகக் குரலெழுப்புவதையும் பார்த்தார்கள். (33)

வானர–இராக்கதப் படைகள் பெருங்கடல் போல மிக விஸ்தாரமாக இருந்தன. கரையைக் கடந்து இரு கடல்கள் மோதிக் கொள்வதைப் போல, ஆற்றல் மிகுந்த இவ்விரு போர்வீரர் படையினரும் மிகப்பயங்கரமாகச் சண்டை செய்து ஆரவாரித்தார்கள். (34)

மகாபலம் பொருந்திய விரூபாட்சன் வானர மன்னனால் கொல்லப்பட்டதைக் கண்டதும், வானர–அரக்கப்படைகள் கரை கடந்த கங்கையைப் போல், ஒரு புறம் மகிழ்ச்சியாலும், இன்னொரு பக்கத்தினர் தோல்வி அவமானத்தாலும் கரை கடந்த உணர்ச்சி வெள்ளத்தை வெளிப்படுத்தினார்கள். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்றேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றெட்டு

மகோதரன் வீழ்ச்சி!

அந்த மகாயுத்தத்தில், இரண்டு பக்கத்துப் படைகளும் வேகமாகச் சண்டையிட்டு ஒன்றையொன்று அழித்துக் கொண்டதால், கடுமையான கோடை காலத்தில், இரண்டு நீர்நிலைகளில் தண்ணீர் குறைந்து போவதைப் போல, இரு படைகளும் சுருங்கிப் போயின. (1)

அரக்கமன்னன் இராவணன், தன்னுடைய சேனை அழிக்கப்பட்டதாலும், விரூபாட்சனின் மரணத்தாலும் இரண்டு மடங்கு கோபம் கொண்டவனாக ஆனான். (2)

ப்ரக்ஷீணம் து ப$_3$லம் த்$_3$ருஷ்ட்வா வத்$_4$யமாநம் வலீமுகை$_2$: ।
ப$_3$பூ$_4$வாஸ்ய வ்யதா$_2$ யுத்$_3$தே$_4$ ப்ரேக்ஷ்ய தை$_3$வவிபர்யயம் ॥ (3)

உவாச ச ஸமீபஸ்த$_2$ம் மஹோத$_3$ரமரிந்த$_3$மம் ।
அஸ்மிந் காலே மஹாபா$_3$ஹோ ஜயாஶா த்வயி மே ஸ்தி$_2$தா ॥ (4)

ஜஹி ஶத்ருசமூம் வீர த$_3$ர்ஶயாத்$_3$ய பராக்ரமம் ।
ப$_4$ர்த்ருபிண்ட$_3$ஸ்ய காலோऽயம் நிர்தே$_3$ஷ்டும் ஸாது$_4$ யுத்$_4$யதாம் ॥ (5)

ஏவமுக்தஸ்ததே$_2$த்யுக்த்வா ராக்ஷஸேந்த்$_3$ரோ மஹோத$_3$ர: ।
ப்ரவிவேஶாரிஸேநாம் தாம் பதங்க$_3$ இவ பாவகம் ॥ (6)

தத: ஸ கத$_3$நம் சக்ரே வாநராணாம் மஹாப$_3$ல: ।
ப$_4$ர்த்ருவாக்யேந தேஜஸ்வீ ஸ்வேந வீர்யேண சோதி$_3$த: ॥ (7)

வாநராஶ்ச மஹாஸத்த்வா: ப்ரக்$_3$ருஹ்ய விபுலா: ஶிலா: ।
ப்ரவிஶ்யாரிப$_3$லம் பீ$_4$மம் ஜக்$_4$நுஸ்தே ரஜநீசராந் ॥ (8)

மஹோத$_3$ரஸ்து ஸங்க்ருத்$_3$த$_4$: ஶரை: காஞ்சநபூ$_4$ஷணை: ।
சிச்சே$_2$த$_3$ பாணிபாதோ$_3$ரூந் வாநராணாம் மஹாஹவே ॥ (9)

ததஸ்தே வாநரா: ஸர்வே ராக்ஷஸைரர்தி$_3$தா ப்$_4$ருஶம் ।
தி$_3$ஶோ த$_3$ஶ த்$_3$ருதா: கேசித்கேசித்ஸுக்$_3$ரீவமாஶ்ரிதா: ॥ (10)

ப்ரப$_4$க்நாம் ஸமரே த்$_3$ருஷ்ட்வா வாநராணாம் மஹாசமூம் ।
அபி$_4$து$_3$த்$_3$ராவ ஸுக்$_3$ரீவோ மஹோத$_3$ரமநந்தரம் ॥ (11)

ப்ரக்$_3$ருஹ்ய விபுலாம் கோ$_4$ராம் மஹீத$_4$ரஸமாம் ஶிலாம் ।
சிக்ஷேப ச மஹாதேஜாஸ்தத்$_3$வத$_4$ாய ஹரீஸ்வர: ॥ (12)

தாமாபதந்தீம் ஸஹஸா ஶிலாம் த்$_3$ருஷ்ட்வா மஹோத$_3$ர: ।
அஸம்ப்$_4$ராந்தஸ்ததோ பா$_3$ணைர்நிர்பிபே$_4$த$_3$ து$_3$ராஸதா$_3$ம் ॥ (13)

ரக்ஷஸா தேந பா$_3$ணௌகை$_4$ர்நிக்ருத்தா ஸா ஸஹஸ்ரதா$_4$ ।
நிபபாத ஶிலா பூ$_4$மௌ க்$_3$ருத்$_4$ரசக்ரமிவாகுலம் ॥ (14)

தாம் து பி$_4$ந்நாம் ஶிலாம் த்$_3$ருஷ்ட்வா ஸுக்$_3$ரீவ: க்ரோத$_4$மூர்சி$_2$த: ।
ஸாலமுத்பாட்ய சிக்ஷேப ராக்ஷஸே ரணமூர்த$_4$நி ॥ (15)

ஶரைஶ்ச வித$_3$தா$_3$ரைநம் ஶூர: பரபுரஞ்ஜய: ।
ஸ த$_3$த$_3$ர்ஶ தத: க்ருத்$_3$த$_4$: பரிக$_4$ம் பதிதம் பு$_4$வி ॥ (16)

ஆவித்$_4$ய து ஸ தம் தீ$_3$ப்தம் பரிக$_4$ம் தஸ்ய த$_3$ர்ஶயந் ।
பரிக$_4$ாக்$_3$ரேண வேகே$_3$ந ஜக$_4$நாஸ்ய ஹயோத்தமாந் ॥ (17)

வானரர்களால் கொல்லப்பட்டு தன்னுடைய படை வேகமாகக் குறைந்து வருவதையும், போரில் தெய்வசகாயம் தனக்கு எதிராக இருப்பதையும் சிந்தித்துப் பார்த்ததும், அவனுக்குத் துயரம் உண்டாயிற்று. (3)

அப்போது, அருகிலிருந்த எதிரிகளை அடக்கும் மகோதரனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''பெருந்தோளனே! நடந்து வரும் போரில் நாம் வெற்றி பெறும் நம்பிக்கை, இப்போது உன் கையில்தான் உள்ளது. வீரனே! எதிரிப்படையைக் கொன்றொழிப்பாயாக; உன்னுடைய பராக்கிரமத்தை இப்போது வெளிக்காட்டுவாயாக; யஜமானனிடம் உண்ட சோற்றுக்குக் கைம்மாறு செய்வதற்கு உரிய காலம் இதுவே. அதனால், உன் முழுத் திறமையையும் காட்டிப் போரிடுவாயாக.'' (4,5)

'தங்கள் ஆணைப்படி செய்கிறேன்' என்று சொல்லிய அரக்கப் பெருந்தகை மகோதரன், நெருப்பில் வீழும் விட்டிற்பூச்சி போல, எதிரிகளின் படைக்குள் புகுந்தான். (6)

ஆண்மை மிக்கவனும் பலசாலியுமான அவன், தன் தலைவனின் கட்டளைப்படியும் தன் வீர இயல்பினாலும் தூண்டப்பட்டவனாக, வானரர்களுக்குப் பேரழிவை உண்டாக்கினான். (7)

ஆற்றல் மிக்கவர்களான வானரர்களும் பெரிய பாறைகளை எடுத்துக் கொண்டு, பயங்கரமான எதிரிப்படைக்குள் புகுந்து, இராக்கதர்களைத் தாக்கினார்கள். (8)

அப்போது நடந்த கடும்போரில், மகோதரன் மிகவும் கோபம் கொண்டு, தங்கக்கட்டுகளுடைய பாணங்களால் வானரர்களின் கைகள்–கால்கள்–தொடைகளை வெட்டித் தள்ளினான். (9)

அப்பொழுது, அரக்கர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்ட வானரர்களில் சிலர், பத்துத் திசைகளிலும் ஓடிப் போனார்கள்; சிலர் சுக்ரீவனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். (10)

போரில், வானரர்களின் பெரும்படை முறியடிக்கப்பட்டதைத் தெரிந்து கொண்ட சுக்ரீவன், உடனே மகோதரனை எதிர்த்தான். (11)

பேராற்றல் கொண்ட வானர மன்னன், ஒரு மலையைப் போல் பேருருவம் கொண்டதும் பயங்கரமானதுமான ஒரு பாறையை எடுத்து, அவனைக் கொல்வதற்காக வீசியெறிந்தான். (12)

தன்மேல் விழுவதற்காக வேகமாக வந்து கொண்டிருக்கும் அந்தப் பாறையைப் பார்த்த மகோதரன், சிறிதும் கலவரப்படாமல், தடுத்து நிறுத்த முடியாத அதை, பாணங்களால் பிளந்தெறிந்தான். (13)

அரக்கனால் செலுத்தப்பட்ட எண்ணிறந்த பாணங்களால் தூள்தூளாகிப் போன அந்தப் பாறை, சிதறியோடும் கழுகுக் கூட்டம் போல் பூமியில் விழுந்தது. (14)

அந்தப் பாறை பிளவுண்டதைக் கண்ணுற்ற சுக்ரீவன், கோபம் நிறைந்தவனாய், ஓர் ஆச்சா மரத்தைப் பெயர்த்தெடுத்து, அந்தப் போர் முனையில் அரக்கன் மீது வீசியெறிந்தான். (15)

பகைவரின் நகரத்தை வெற்றி கொள்ளும் சூரனான மகோதரன், பாணங்களைச் செலுத்தி அந்த மரத்தைப் பிளந்து தள்ளினான். தான் எறிந்த மரம் பிளக்கப்பட்டதால், கோபமடைந்த சுக்ரீவன், தரையில் கிடந்த ஒரு குண்டாந்தடியைப் பார்த்தான். (16)

அப்போது சுக்ரீவன், உறுதியான அந்தத் தடியை அவனுக்குக் காட்டியபடியே சுழற்றி, தடியின் முனையால் அவனுடைய சிறந்த குதிரைகளைப் பலமாகத் தாக்கினான். (17)

தஸ்மாத்3த4தஹயாத்3வீர: ஸோऽவப்லுத்ய மஹாரதா2த் ।
க3தா3ம் ஜக்3ராஹ ஸங்க்ருத்3தே4ா ராக்ஷஸோऽத2 மஹோதா3ர: ॥ (18)

கதா3பரிக4ஹஸ்தௌ தௌ யுதி4 வீரௌ ஸமீயது: ।
நர்த3ந்தௌ கோ3வ்ருஷப்ரக்2யௌ க4நாவிவ ஸவித்3யுதௌ ॥ (19)

தத: க்ருத்3தே4ா க3தா3ம் தஸ்மை சிக்ஷேப ரஜநீசர: ।
ஜ்வலந்தீம் பா4ஸ்கராபா4ஸாம் ஸுக்3ரீவாய மஹோதா3ர: ॥ (20)

க3தா3ம் தாம் ஸுமஹாகோ4ராமாபதந்தீம் மஹாப3ல: ।
ஸுக்3ரீவோ ரோஷதாம்ராக்ஷ: ஸமுத்3யம்ய மஹாஹவே ॥ (21)

ஆஜகா4ந க3தா3ம் தஸ்ய பரிகே4ண ஹரீஶ்வர: ।
பபாத ஸ க3தோ3த்3பி4ந்ந: பரிக4ஸ்தஸ்ய பூ4தலே ॥ (22)

ததோ ஜக்3ராஹ தேஜஸ்வீ ஸுக்3ரீவோ வஸுதா4தலாத் ।
ஆயஸம் முஸலம் கோ4ரம் ஸர்வதோ ஹேமபூ4ஷிதம் ॥ (23)

ஸ தமுத்3யம்ய சிக்ஷேப ஸோऽப்யந்யாம் வ்யாக்ஷிபத்3க3தா3ம் ।
பி4ந்நாவந்யோந்யமாஸாத்3ய பேததுர்த4ரணீதலே ॥ (24)

ததோ ப4க்3நப்ரஹரணௌ முஷ்டிப்4யாம் தௌ ஸமீயது: ।
தேஜோப3லஸமாவிஷ்டௌ தீ3ப்தாவிவ ஹுதாஶநௌ ॥ (25)

ஜக்4நதுஸ்தௌ ததா3ந்யோந்யம் நேதது3ஶ்ச புந: புந: ।
தலைஶ்சாந்யோந்யமாஹத்ய பேததுர்த4ரணீதலே ॥ (26)

உத்பேததுஸ்ததஸ்தூர்ணம் ஜக்4நதுஶ்ச பரஸ்பரம் ।
பு4ஜைஶ்சிக்ஷிபதுர்வீராவந்யோந்யமபராஜிதௌ ॥ (27)

ஜக்3மதுஸ்தௌ ஶ்ரமம் வீரௌ பா3ஹுயுத்3தே4 பரந்தபௌ ।
ஆஜஹார தத: க2ட்3க3மதூ3ரபரிவர்திநம் ॥
ராக்ஷஸஶ்சர்மணா ஸார்த4ம் மஹாவேகோ3 மஹோதா3ர: ॥ (28)

ததை2வ ச மஹாக2ட்3க3ம் சர்மணா பதிதம் ஸஹ ।
ஜக்3ராஹ வாநரஶ்ரேஷ்ட2: ஸுக்3ரீவோ வேக3வத்தர: ॥ (29)

தௌ து ரோஷபரீதாங்கௌ3 நர்த3ந்தாவப்4யதா4வதாம் ।
உத்3யதாஸீ ரணே ஹ்ருஷ்டௌ யுதி4 ஶஸ்த்ரவிஶாரதௌ3 ॥ (30)

த3க்ஷிணம் மண்ட3லம் சோபௌ4 ஸுதூர்ணம் ஸம்பரீயது: ।
அந்யோந்யமபி4ஸங்க்ருத்3தௌ4 ஜயே ப்ரணிஹிதாவுபௌ4 ॥ (31)

ஸ து ஶூரோ மஹாவேகோ3 வீர்யஶ்லாகீ4 மஹோதா3ர: ।
மஹாசர்மணி தம் க2ட்3க3ம் பாதயாமாஸ து3ர்மதி: ॥ (32)

குதிரைகள் கொல்லப்பட்டதும், வீரனான அரக்கன் மகோதரன், அந்தப் பெருந்தேரிலிருந்து கீழே குதித்தான்; சினம் பொங்கியது. உடனே, ஒரு கதாயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். ஒருவனுடைய கையில் குண்டாந்தடியும் மற்றொருவன் கையில் கதையும் இருந்தன. போர்க்களத்தில், அவ்விருவரும் இரண்டு காளைகள் போலவும், மின்னலுடன் கூடிய கனத்த இருமேகங்கள் போலும் கர்ஜித்துக் கொண்டு, ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். (18,19)

அப்போது, கோபங்கொண்ட அரக்கன் மகோதரன், சூரியனைப் போல் பேரொளி வீசும் கதையை, சுக்ரீவன் மீது வீசியெறிந்தான். (20)

கோபத்தால் கண்கள் சிவக்க, மகாபலசாலியும் வானரமன்னனுமான சுக்ரீவன், அந்தப் பெரும் போரில், தன் மேல் விழுவதற்காகப் பாய்ந்து வந்து கொண்டிருக்கும் மிகவும் பயங்கரமான கதையை, தன் குண்டாந்தடியால் எதிர்த்துத் தாக்கினான். ஆனால், அவனுடைய உழலைத்தடி, கதையின் தாக்குதலால் பிளவுபட்டுத் தரையில் விழுந்தது. (21,22)

உடனே, பராக்கிரமம் மிகுந்த சுக்ரீவன், தரையில் கிடந்த பயங்கரமான உலக்கை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். அது முற்றிலும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (23)

சுக்ரீவன் அதை எடுத்து வேகமாக வீசியெறிந்தான்; அவனும் (மகோதரனும்) வேறொரு கதையைச் சுழற்றியெறிந்தான். அவை ஒன்றொடொன்று மோதிக் கொண்டு சுக்கல்களாய் உடைந்து தரையில் விழுந்தன. (24)

பின்னர், ஆற்றலும் ஆண்மையும் மிக்கவர்களும், கொழுந்து விட்டெரியும் நெருப்புப் போன்றவர்களுமான அவ்விருவரும் ஆயுதங்கள் எதுவும் இல்லாத நிலையில் முஷ்டி யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். (25)

அப்போது, அவ்விருவரும் மேன்மேலும் வீரக்குரல் எழுப்பிக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள்; உள்ளங்கைகளால் ஒருவரையொருவர் அறைந்து, (அடியின் வேகத்தைத் தாங்க முடியாமல்) தரையில் விழுந்தார்கள். (26)

உடனே, அவர்கள் இருவரும் குதித்தெழுந்து பரஸ்பரம் தாக்கிக் கொண்டார்கள். ஒருவரையொருவர் வெற்றி கொள்ள முடியாத அவர்கள், கைகளால் சண்டை போடத் தொடங்கினார்கள். (27)

எதிரிகளை வாட்டியெடுக்கும் அவ்விரு வீரர்களும் மற்போரில் சலிப்பை அடைந்தார்கள். பேராற்றல் படைத்த அரக்கன் மகோதரன் அருகில் கிடந்த கேடயத்தையும் கத்தியையும் சட்டென்று கையில் எடுத்துக் கொண்டான். (28)

அவ்வாறே, வானரோத்தமனும் அளவுகாண முடியாத பலங்கொண்டவனுமான சுக்ரீவன், தரையில் விழுந்து கிடந்த போர்வாளையும் கேடயத்தையும் எடுத்துக் கொண்டான். (29)

ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் வல்லுநர்களும், கையில் கத்தியை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தவர்களும், போரில் பேரார்வம் கொண்டவர்களும், (பரஸ்பரம் ஏற்பட்ட தோல்வியினால்) உடல் முழுவதும் கோபத்தால் பற்றப்பட்டவர்களான அவ்விருவரும், போர்க்களத்தில், பெருங்குரல் எழுப்பியவாறே ஒருவரையொருவர் எதிர்த்துப் போராடினார்கள். ஒருவரையொருவர் வலதுசாரி–இடதுசாரியாகவும் மண்டலாகாரமாகவும் சுற்றி வந்தார்கள். இருவரும் தத்தம் வெற்றியில் மனத்தைச் செலுத்தி, சினத்தை வளர்த்துக் கொண்டார்கள். (30,31)

மகாபராக்கிரமம் படைத்தவனும் சூரனும் மெச்சத்தகுந்த வீரம் உடையவனும் தீயபுத்தி கொண்டவனுமான மகோதரன், தன் கையிலிருந்த கத்தியை சுக்ரீவனின் கேடயத்தின்மீது செலுத்தினான். (32)

லக்$_3$நமுத்கர்ஷத: க$_2$ட்$_3$க$_3$ம் க$_2$ட்$_3$கே$_3$ந கபிகுஞ்ஜர: ।
ஜஹார ஸஶிரஸ்த்ராணம் குண்ட$_3$லோபஹிதம் ஶிர: ॥ (33)

நிக்ருத்தஶிரஸஸ்தஸ்ய பதிதஸ்ய மஹீதலே ।
தத்$_3$ப$_3$லம் ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய த்$_3$ருஷ்ட்வா தத்ர ந திஷ்ட$_2$தே ॥ (34)

ஹத்வா தம் வாநரை: ஸார்த$_4$ம் நநாத$_3$ முதி$_3$தோ ஹரி: ।
சுக்ரோத$_4$ ச த$_3$ஶக்$_3$ரீவோ ப$_3$பௌ$_4$ ஹ்ருஷ்டஶ்ச ராக$_4$வ: ॥ (35)

விஷண்ணவத$_3$நா: ஸர்வே ராக்ஷஸா தீ$_3$நசேதஸ: ।
வித்$_3$ரவந்தி தத: ஸர்வே ப$_4$யவித்ரஸ்தசேதஸ: ॥ (36)

மஹோத$_3$ரம் தம் விநிபாத்ய பூ$_4$மௌ
மஹாகி$_3$ரே: கீர்ணமிவைகதே$_3$ஶம் ।
ஸூர்யாத்மஜஸ்தத்ர ரராஜ லக்ஷ்ம்யா
ஸூர்ய: ஸ்வதேஜோபி$_4$ரிவாப்ரத்$_4$ருஷ்ய: ॥ (37)

அத$_2$ விஜயமவாப்ய வாநரேந்த்$_3$ர:
ஸமரமுகே$_2$ ஸுரயக்ஷஸித்$_3$த$_4$ஸங்கை$_4$: ।
அவநிதலக$_3$தைஶ்ச பூ$_4$தஸங்கை$_4$ர்–
ஹருஷஸமாகுலிதை: ஸ்துதோ மஹாத்மா ॥ (38)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டநவதிதம: ஸர்க$_3$: ॥

ஏகோநஶததம: ஸர்க$_3$:

மஹாபார்ஶ்வவத$_4$:

மஹோத$_3$ரே து நிஹதே மஹாபார்ஶ்வோ மஹாப$_3$ல: ।
ஸுக்$_3$ரீவேண ஸமீக்ஷ்யாத$_2$ க்ரோத$_4$ாத் ஸம்ரக்தலோசந: ॥
அங்க$_3$த$_3$ஸ்ய சமூம் பீ$_4$மாம் க்ஷோப$_4$யாமாஸ ஸாயகை: ॥ (1)

ஸ வாநராணாம் முக்$_2$யாநாமுத்தமாங்க$_3$ாநி ஸர்வஶ: ।
பாதயாமாஸ காயேப்$_4$ய: ப$_2$லம் வ்ருந்தாதி$_3$வாநில: ॥ (2)

கேஷாம்சிதி$_3$ஷுபி$_4$ர்ப$_3$ாஹூந் ஸ்கந்த$_4$ாந்ஶ்சிச்சே$_2$த$_3$ ராக்ஷஸ: ।
வாநராணாம் ஸுஸங்க்ருத்$_3$த$_4$: பார்ஶ்வம் கேஷாம் வ்யதா$_3$ரயத் ॥ (3)

தேऽர்தி$_3$தா ப$_3$ாணவர்ஷேண மஹாபார்ஶ்வேந வாநரா: ।
விஷாத$_3$விமுக$_2$ா: ஸர்வே ப$_3$பூ$_4$வுர்க$_3$தசேதஸ: ॥ (4)

நிரீக்ஷ்ய ப$_3$லமுத்$_3$விக்$_3$நமங்க$_3$தே$_3$ா ராக்ஷஸார்தி$_3$தம் ।
வேக$_3$ம் சக்ரே மஹாப$_3$ாஹு: ஸமுத்$_3$ர இவ பர்வணி ॥ (5)

வானரோத்தமன், தன் கேடயத்தில் புகுந்து பதிந்திருந்த கத்தியைப் பிடித்திழுக்கும் மகோதரனுடைய தலையை தலைப்பாகை–குண்டலங்களுடன்கூட கத்தியால் வெட்டி வீழ்த்தினான். (33)

அவன் தலை வெட்டப்பட்டு தரையில் சாய்ந்ததைப் பார்த்த அரக்க மன்னனின் படை, அங்கே ஒரு விநாடிகூட நிற்கவில்லை. (34)

சுக்ரீவன், அவனை (மகோதரனை)க் கொன்ற பின், வானரர்களோடுகூட வெற்றி ஆரவாரம் செய்தான். இச்செய்தியைக் கேட்டதும், இலங்கையிலிருந்த இராவணன் அளவில்லாத கோபம் கொண்டான்; போர்க்களத்தின் வேறொரு பகுதியிலிருந்த இராமன் மனமகிழ்ந்தார். (35)

எல்லா அரக்கர்களும் வெளிறிப் போன முகத்தோடும் நொந்துபோன உள்ளத்துடனும் அச்சத்தால் உள்ளம் நடுங்கி தலைதெறிக்க ஓடிப் போனார்கள். (36)

மகோதரனின் பெரிய உடல், வெட்டித் தள்ளப்பட்ட மாபெரும் மலை ஒன்றின் முகடு போல் மண்ணில் விழுந்து கிடந்தது. அவனைத் தரையில் வீழ்த்திய சூரியகுமாரனான சுக்ரீவன், தன் ஒளிச் சுடர்களால் எவரும் அணுகமுடியாத சூரியனைப் போல் வெற்றித் திருவினால் பேரொளி வீசினான். (37)

அப்போது, மகாத்மாவான வானரமன்னன் போர்முனையில் வெற்றி அடைந்ததால், மிக்க மகிழ்ச்சி அடைந்த (வானத்திலிருந்த) தேவ–யக்ஷ–ஸித்தர் கூட்டங்களாலும் மண்ணுலகிலிருந்த உயிர்ப்பிராணிகளாலும் புகழப்பட்டான். (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்றெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம்: தொண்ணூற்றொன்பது

மகாபார்சுவன் மாண்டான்!

சுக்ரீவனால் மகோதரன் மாய்க்கப்பட்டதை, மகாபலசாலியான மகாபார்சுவன் கண்ணால் பார்த்ததும் கோபத்தினால் சிவந்த கண்களுடன், (மகோதரன் அழிவுக்குப் பழிதீர்த்துக் கொள்வதைப் போல,) அங்கதனுடைய பெரிய சேனையைப் பாணங்களால் கலக்கினான். (1)

வேகமாக வீசும் காற்று, காம்பிலிருந்து பழத்தை வெகு எளிதாக வீழ்த்துவதைப் போல, அவன், முக்கியமான வானரர்களின் தலைகளை உடலிலிருந்து பிரித்துத் தள்ளினான். (2)

மிகவும் சினங்கொண்ட இராக்கதன், சில வானரர்களின் கைகளையும் தோள்களையும் வெட்டி வீழ்த்தினான்; சிலருடைய இடுப்புப் பகுதியைப் பிளந்தான். (3)

மகாபார்சுவனுடைய பாணப்பொழிவினால் காயப்படுத்தப்பட்ட வானரர்கள் எல்லோரும் போர் செய்வதை வெறுத்து உணர்விழந்தவர்களானார்கள். (4)

அரக்கனால் தன் படையினர் துன்புறுத்தப்படுவதைக் கண்ட பெருந்தோளனான அங்கதன், பருவ காலங்களில் பொங்கும் பெருங்கடல் போல, தன் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டான். (5)

ஆயஸம் பரிக$_4$ம் க்$_3$ருஹ்ய ஸூர்யரஸ்மிஸமப்ரப$_4$ம் ।
ஸமரே வாநரஸ்ரேஷ்டோ$_2$ மஹாபார்ஸ்வே ந்யபாதயத் ॥ (6)

ஸ து தேந ப்ரஹாரேண மஹாபார்ஸ்வோ விசேதந: ।
ஸஸூத: ஸ்யந்த$_3$நாத்தஸ்மாத்$_3$விஸம்க்ஞ: ப்ராபதத்$_3$பு$_4$வி ॥ (7)

ஸர்க்ஷராஜஸ்து தேஜஸ்வீ நீலாஞ்ஜநசயோபம: ।
நிஷ்பத்ய ஸுமஹாவீர்ய: ஸ்வாத்$_3$வ்யூஹாந்மேக$_4$ஸந்நிபா$_4$த் ॥ (8)

ப்ரக்$_3$ருஹ்ய கி$_3$ரிஸ்ருங்கா$_3$பா$_4$ம் க்ருத்$_3$த$_4$: ஸுவிபுலாம் ஶிலாம் ।
அஸ்வாஞ்ஜகா$_4$ந தரஸா ஸ்யந்த$_3$நம் ச ப$_3$ப$_4$ஞ்ஜ தம் ॥ (9)

முஹூர்தால்லப்$_3$த$_4$ஸம்க்ஞஸ்து மஹாபார்ஸ்வோ மஹாப$_3$ல: ।
அங்க$_3$த$_3$ம் ப$_3$ஹுபி$_4$ர்பா$_3$ணைர்பூ$_4$யஸ்தம் ப்ரத்யவித்$_4$யத ॥ (10)

ஜாம்ப$_3$வந்தம் த்ரிபி$_4$ர்பா$_3$ணைராஜகா$_4$ந ஸ்தநாந்தரே ।
ருக்ஷராஜம் க$_3$வாக்ஷம் ச ஜகா$_4$ந ப$_3$ஹுபி$_4$: ஶரை: ॥ (11)

ஜாம்ப$_3$வந்தம் க$_3$வாக்ஷம் ச ஸ த்$_3$ருஷ்ட்வா ஶரபீடி$_3$தௌ ।
ஜக்$_3$ராஹ பரிக$_4$ம் கோ$_4$ரமங்க$_3$த$_3$: க்ரோத$_4$மூர்சி$_2$த: ॥ (12)

தஸ்யாங்க$_3$த$_3$: ப்ரகுபிதோ ராக்ஷஸஸ்ய தமாயஸம் ।
தூ$_3$ரஸ்தி$_2$தஸ்ய பரிக$_4$ம் ரவிரஸ்மிஸமப்ரப$_4$ம் ॥ (13)

த்$_3$வாப்$_4$யாம் பு$_4$ஜாப்$_4$யாம் ஸங்க்$_3$ருஹ்ய ப்$_4$ராமயித்வா ச வேக$_3$வாந் ।
மஹாபார்ஸ்வஸ்ய சிக்ஷேப வதா$_4$ர்த$_2$ம் வாலிந: ஸுத: ॥ (14)

ஸ து க்ஷிப்தோ ப$_3$லவதா பரிக$_4$ஸ்தஸ்ய ரக்ஷஸ: ।
த$_4$நுஸ்ச ஸஶரம் ஹஸ்தாச்சி$_2$ரஸ்த்ரம் சாப்யபாதயத் ॥ (15)

தம் ஸமாஸாத்$_3$ய வேகே$_3$ந வாலிபுத்ர: ப்ரதாபவாந் ।
தலேநாப்$_4$யஹநத் க்ருத்$_3$த$_4$: கர்ணமூலே ஸகுண்ட$_3$லே ॥ (16)

ஸ து க்ருத்$_3$தோ$_4$ மஹாவேகோ$_3$ மஹாபார்ஸ்வோ மஹாத்$_3$யுதி: ।
கரேணைகேந ஜக்$_3$ராஹ ஸுமஹாந்தம் பரஸ்வத$_4$ம் ॥ (17)

தம் தைலதௌ$_4$தம் விமலம் ஶைலஸாரமயம் த்$_3$ருட$_4$ம் ।
ராக்ஷஸ: பரமக்ருத்$_3$தோ$_4$ வாலிபுத்ரே ந்யபாதயத் ॥ (18)

தேந வாமாம்ஸப$_2$லகே ப்$_4$ருஶம் ப்ரத்யவபாதிதம் ।
அங்க$_3$தோ$_3$ மோக்ஷயாமாஸ ஸரோஷ: ஸ பரஸ்வத$_4$ம் ॥ (19)

ஸ வீரோ வஜ்ரஸங்காஶமங்க$_3$தோ$_3$ முஷ்டிமாத்மந: ।
ஸம்வர்தயத் ஸுஸங்க்ருத்$_3$த$_4$: பிதுஸ்துல்யபராக்ரம: ॥ (20)

ராக்ஷஸஸ்ய ஸ்தநாப்$_4$யாஶே மர்மக்ஞோ ஹ்ருத$_3$யம் ப்ரதி ।
இந்த்$_3$ராஶநிஸமஸ்பர்ஶம் ஸ முஷ்டிம் விந்யபாதயத் ॥ (21)

போர்க்களத்தில், சூரியகிரணம் போல் வெம்மை ஒளி வீசுவதும் இரும்பால் ஆனதுமான ஒரு குண்டாந்தடியை, மகாபார்சுவன் மீது வானரோத்தமனான அங்கதன் வீசியெறிந்தான். (6)

அந்த அடியினால் மகாபார்சுவன் நினைவிழந்து, தேர்ப்பாகனுடன்கூட தேரிலிருந்து தரையில் வீழ்ந்தான். (7)

பேராண்மையுடையவரும் அளவற்ற வீரம் படைத்தவரும் கருமையான மைமலையைப் போன்றவருமான கரடி மன்னர், கரிய மேகக்கூட்டம் போல் விளங்கும் தனது வியூகத்திலிருந்து வெளியே வந்தார். கோபத்துடன், மலைச்சிகரத்தைப் போன்ற மிகப்பெரிய பாறையொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு (மகாபார்சுவனின் தேர்க்குதிரைகள் மீது) வேகமாக வீசியெறிந்து குதிரைகளைக் கொன்றார்; அந்தத் தேரையும் உடைத்தெறிந்தார். (8,9)

மகாபலசாலியான மகாபார்சுவன், சிறிதுநேரம் சென்றதும் சுயநினைவைப் பெற்று, அங்கதனை மறுபடியும் ஏராளமான பாணங்களால் தாக்கினான். (10)

மேலும், மூன்று பாணங்களால் ஜாம்பவானின் மார்பைத் தாக்கினான்; கரடி மன்னனான கவாக்ஷனையும் அநேக பாணங்களால் தாக்கினான். (11)

ஜாம்பவானும் கவாக்ஷனும் பாணங்களால் துன்பப்படுவதைக் கண்ட அங்கதன், கோபம் மேலிட்டவனாகக் குண்டாந்தடியொன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். (12)

வாலியின் மைந்தனான அங்கதன், மிகவும் ஆத்திரங்கொண்டு இரும்பால் ஆனதும் சூரியக்கதிர் போல் ஒளிவீசுவதுமான அந்தத் தடியை இரு கைகளாலும் சேர்த்துப் பிடித்து, சுழற்றி, தொலைவிலிருந்த அரக்கன் மகாபார்சுவனைக் கொல்லும் நோக்கத்துடன் பலமாக வீசியெறிந்தான். (13,14)

பலம் பொருந்திய அவனால் (அங்கதனால்) வீசியெறியப்பட்ட அந்த உழலைத்தடி, அரக்கனுடைய கையிலிருந்த பாணத்தையும் வில்லையும் மற்றும் தலைப்பாகையையும் கீழே வீழ்த்தியது. (15)

உடனே, பேராண்மையுடைய அங்கதன் அவனை நெருங்கிச் சென்று, கோபத்துடன், குண்டலங்கள் தொங்கும் செவிகளின் அடிப்பகுதியில் உள்ளங்கையால் அறைந்தான். (16)

பேராற்றல் கொண்டவனும், விரைந்து செயல்படுபவனுமான மகாபார்சுவன், கோபங்கொண்டு ஒரு கையால் மிகப்பெரிய கோடரியொன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். (17)

எல்லையில்லா சினங்கொண்ட இராக்கதன், எண்ணெய் தடவப்பட்டுப் பளபளப்புடன் விளங்குவதும் மலைபோல் உறுதி வாய்ந்ததும் முறிக்க முடியாததுமான அதை அங்கதன் மேல் வீழ்த்தினான். (18)

இடது தோள்பட்டையைத் தாக்கிக் காயப்படுத்திப் பதிந்துகொண்ட அந்தக் கோடரியை, கோபத்துடன் அங்கதன் பிடுங்கியெறிந்தான். (19)

தந்தைக்கு (வாலிக்கு) இணையான பராக்கிரமமுடைய வீரனான அங்கதன், (கோடரி அடியினால்) மிகவும் சினங்கொண்டு, வஜ்ராயுதம் போல் மிக உறுதியான தனது முஷ்டியைச் சுழற்றினான். (20)

உயிர்நிலையை அறிந்திருந்த அவன், அரக்கனுடைய மார்புப் பகுதியை, இதயத்தைக் குறிவைத்து, வஜ்ராயுதம் போல் மிகவும் உறுதியான தன் முஷ்டியால் அறைந்தான். (21)

தேந தஸ்ய நிபாதேந ராக்ஷஸஸ்ய மஹாம்ருதே$_4$ ।
பப$_2$ால ஹ்ருத$_3$யம் சாஶு ஸ பபாத ஹதோ பு$_4$வி ॥ (22)

தஸ்மிந்நிபதிதே பூ$_4$மௌ தத்ஸைந்யம் ஸம்ப்ரசுக்ஷுபே$_4$ ।
அப$_4$வச்ச மஹாந் க்ரோத$_4$: ஸமரே ராவணஸ்ய து ॥ (23)

வாநராணாம் ச ஹ்ருஷ்டாநாம் ஸிம்ஹநாத$_3$ஶ்ச புஷ்கல: ।
ஸ்போ$_2$டயந்நிவ ஶப்$_3$தே$_3$ந லங்காம் ஸாட்டாலகோ$_3$புராம் ॥
மஹேந்த்$_3$ரேணேவ தே$_3$வாநாம் நாத$_3$: ஸமப$_4$வந்மஹாந் ॥ (24)

அதே$_2$ந்த்$_3$ரஶத்ருஸ்த்ரிதி$_3$வாலயாநாம்
வநௌகஸாம் சைவ மஹாப்ரணாத$_3$ம் ।
ஶ்ருத்வா ஸரோஷம் யுதி$_4$ ராக்ஷஸேந்த்$_3$ர:
புநஶ்ச யுத்$_3$தா$_4$பி$_4$முகோ$_2$ऽவதஸ்தே$_2$ ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகோநஶததம: ஸர்க$_3$: ॥

ஶததம: ஸர்க$_3$:

ராமராவணாஸ்த்ரபரம்பரா

மஹோத$_3$ரமஹாபார்ஶ்வௌ ஹதௌ த்$_3$ருஷ்ட்வா து ராக்ஷஸௌ ।
தஸ்மிந்ஶ்ச நிஹதே வீரே விரூபாக்ஷே மஹாப$_3$லே ॥ (1)

ஆவிவேஶ மஹாந் க்ரோதோ$_4$ ராவணம் தம் மஹாம்ருதே$_4$ ।
ஸூதம் ஸஞ்சோத$_3$யாமாஸ வாக்யம் சேத$_3$முவாச ஹ ॥ (2)

நிஹதாநாமமாத்யாநாம் ருத்$_3$த$_4$ஸ்ய நக$_3$ரஸ்ய ச ।
து$_3$:க$_2$மேஷோऽபநேஷ்யாமி ஹத்வா தௌ ராமலக்ஷ்மணௌ ॥ (3)

ராமவ்ருக்ஷம் ரணே ஹந்மி ஸீதாபுஷ்பப$_2$லப்ரத$_3$ம் ।
ப்ரஶாகா$_2$ யஸ்ய ஸுக்$_3$ரீவோ ஜாம்ப$_3$வாந் குமுதோ$_3$ நல: ॥ (4)

மைந்த$_3$ஶ்ச த்$_3$விவித$_3$ஶ்சைவ ஹ்யங்க$_3$தோ$_3$ க$_3$ந்த$_4$மாத$_3$ந: ।
ஹநுமாந்ஶ்ச ஸுஷேணஶ்ச ஸர்வே ச ஹரியூத$_2$பா: ॥ (5)

ஸ தி$_3$ஶோ த$_3$ஶ கோ$_4$ஷேண ரத$_2$ஸ்யாதிரதோ$_2$ மஹாந் ।
நாத$_3$யந் ப்ரயயௌ தூர்ணம் ராக$_4$வம் சாப்$_4$யவர்தத ॥ (6)

பூரிதா தேந ஶப்$_3$தே$_3$ந ஸநதீ$_3$கி$_3$ரிகாநநா ।
ஸஞ்சசால மஹீ ஸர்வா ஸவராஹம்ருக$_3$த்$_3$விபா ॥ (7)

தாமஸம் ஸ மஹாகோ$_4$ரம் சகாராஸ்த்ரம் ஸுதா$_3$ருணம் ।
நிர்த$_3$தா$_3$ஹ கபீந் ஸர்வாந்ஸ்தே ப்ரபேது: ஸமந்தத: ॥ (8)

அந்தச் சண்டையில், அவனுடைய வலிமையான அந்த முஷ்டித் தாக்குதலால், அரக்கனுடைய இதயம் பிளவுண்டது; உயிர் துறந்தவனாக அவன் மண்ணில் சாய்ந்தான். (22)

அவன் மண்ணில் சாய்ந்தவுடன், அவனுடைய படை மிகவும் திகைத்துத் தத்தளித்தது. போர்க்களத்துச் செய்தியைக் கேட்ட இராவணனுக்கும் அளவிலடங்காக் கோபம் மூண்டது. (23)

(அசுரர்களுடன் நடந்த மாபெரும் போரில், வெற்றியடைந்தவுடன்) தேவேந்திரனும் தேவர்களும் எழுப்பிய வெற்றி முழக்கம் போல, (மகாபார்சுவன் வீழ்ந்ததும்) வானரர்கள் எழுப்பிய சிம்மநாதமும் வெற்றிப் பேரொலியும், இலங்கையையும் அதன் கோட்டை–கொத்தளங்களையும் பிளந்து விடுவதுபோல் பெரிதாக எழுந்தது. (24)

அமரர்கோன் இந்திரனின் பகைவனான அரக்க மன்னன் இராவணன், போர்க்களத்தில், வானுலகத்தவர் மற்றும் வானரர்கள் ஆகியோரின் மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கேட்டு ஆத்திரம் கொண்டு, போரை மீண்டும் தொடங்குவதற்கு ஆயத்த நிலையில் இருந்தான். (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
தொண்ணூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூறு

இராம– இராவணன் போர்

இராக்கதர்களான மகோதரனும் மகாபார்சுவனும் மகாபலசாலியான விருபாட்சனும் போர்க்களத்தில் கொல்லப்பட்டதைப் பார்த்ததும், இராவணன் கட்டுக்கடங்காத கோபவசப்பட்டான். தேர்ப்பாகனைப் பார்த்து ரதத்தை வேகமாகச் செலுத்தக் கூறியதுடன், மேலும் சில சொற்களையும் கூறினான்— (1,2)

''சாரதியே! என்னுடைய அமைச்சர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள்; நகரம் நாற்புறமும் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம், அந்த இராம–லட்சுமணர்களைக் கொன்று, என் துக்கத்தைப் போக்கடிப்பேன். (3)

சீதை என்கிற மலரையும் பழத்தையும் உடையதும், சுக்ரீவன், ஜாம்பவான், குமுதன், நளன், மைந்தன், த்விவிதன், அங்கதன், கந்தமாதனன், அனுமான், சுஷேணன் ஆகிய படைத்தலைவர்களைக் கிளைகளாக உடையதுமான இராமன் என்னும் மா மரத்தை, போர் செய்து வெட்டிச் சாய்க்கப் போகின்றேன்.'' (4,5)

மிகச்சிறந்த அதிரதனான அவன், தேரின் மிக வேகமான ஓட்டத்தினால் பத்துத் திசைகளையும் ஒலிக்கச் செய்து கொண்டு, போர்க்களத்தில், இராமனை நோக்கி முன்னேறிச் சென்றான். (6)

தேரோட்டத்தின் பெருங்சத்தத்தால், நதிகள்–மலைகள்–காடுகள் கூடியதும், பன்றிகள்–மான்கள்–யானைகள் சஞ்சரிப்பதுமான பூவுலகம் முழுவதும் எதிரொலித்து அதிர்ந்தது. (7)

மகாபயங்கரமானதும் மிகக்கொடியதுமான தாமஸம் என்ற அஸ்திரத்தை இராவணன் செலுத்தினான். அதனால், வானரர்களில் ஏராளமானோர் எரிந்து போனார்கள்; மிகுந்திருந்தவர்கள் எல்லாப் புறங்களிலும் பாய்ந்து ஓடினார்கள். (8)

உத்பபாத ரஜோ கே4ாரம் தைர்ப4க்3நை: ஸம்ப்ரத4ாவிதை: ।
ந ஹி தத் ஸஹிதும் ஶேகுர்ப்3ரஹ்மணா நிர்மிதம் ஸ்வயம் ॥ (9)

தாந்யநீகாந்யநேகாநி ராவணஸ்ய ஶரோத்தமை: ।
த்3ருஷ்ட்வா ப4க்3நாநி ஶதஶோ ராக4வ: பர்யவஸ்தி2த: ॥ (10)

ததோ ராக்ஷஸஶார்தூ3லோ வித்3ராவ்ய ஹரிவாஹிநீம் ।
ஸ த3த3ர்ஶ ததோ ராமம் திஷ்ட2ந்தமபராஜிதம் ॥
லக்ஷ்மணேந ஸஹ ப்4ராத்ரா விஷ்ணுநா வாஸவம் யதா2 ॥ (11)

ஆலிக2ந்தமிவாகாஶமவஷ்டப்4ய மஹத்3த4நு: ।
பத்3மபத்ரவிஶாலாக்ஷம் தீ3ர்க4பா3ஹுமரிந்த3மம் ॥ (12)

ததோ ராமோ மஹாதேஜா: ஸௌமித்ரிஸஹிதோ ப3லீ ।
வாநராம்ஶ்ச ரணே ப4க்3நாநாபதந்தம் ச ராவணம் ॥
ஸமீக்ஷ்ய ராக4வோ ஹ்ருஷ்டோ மத்4யே ஜக்3ராஹ கார்முகம் ॥ (13)

விஸ்ப2ாரயிதுமாரேபே4 தத: ஸ த4நுருத்தமம் ।
மஹாவேக3ம் மஹாநாத3ம் நிர்பி4ந்த3ந்நிவ மேதி3நீம் ॥ (14)

ராவணஸ்ய ச பா3ணௌகை4 ராமவிஸ்பா2ரிதேந ச ।
ஶப்3தே3ந ராக்ஷஸாஸ்தே ச பேதுஶ்ச ஶதஶஸ்தத3ா ॥ (15)

தயோ: ஶரபத2ம் ப்ராப்தோ ராவணோ ராஜபுத்ரயோ: ।
ஸ ப3பௌ4 ச யதா2 ராஹு: ஸமீபே ஶஶிஸூர்யயோ: ॥ (16)

தமிச்ச2ந் ப்ரத2மம் யோத்3து4ம் லக்ஷ்மணோ நிஶிதை: ஶரை: ।
முமோச த4நுராயம்ய ஶராநக்3நிஶிகோ2பமாந் ॥ (17)

தாந் முக்தமாத்ராநாகாஶே லக்ஷ்மணேந த4நுஷ்மதா ।
பா3ணாந் பா3ணைர்மஹாதேஜா ராவண: ப்ரத்யவாரயத் ॥ (18)

ஏகமேகேந பா3ணேந த்ரிபி4ஸ்த்ரீந் த3ஶபி4ர்த3ஶ ।
லக்ஷ்மணஸ்ய ப்ரசிச்சே2த3 த3ர்ஶயந் பாணிலாக4வம் ॥ (19)

அப்4யதிக்ரம்ய ஸௌமித்ரிம் ராவண: ஸமிதிஞ்ஜய: ।
ஆஸஸாத3 ததோ ராமம் ஸ்தி2தம் ஶைலமிவாசலம் ॥ (20)

ஸ ஸங்க்2யே ராமமாஸாத்3ய க்ரோத4ஸம்ரக்தலோசந: ।
வ்யஸ்ருஜச்ச2ரவர்ஷாணி ராவணோ ராக4வோபரி ॥ (21)

ஶரத4ாராஸ்ததோ ராமோ ராவணஸ்ய த4நுஶ்ச்யுதா: ।
த்3ருஷ்ட்வைவாபதத: ஶீக்4ரம் ப4ல்லாஞ்ஜக்3ராஹ ஸத்வரம் ॥ (22)

தாஞ்ஶரௌக4ாந்ஸ்ததோ ப4ல்லைஸ்தீக்ஷ்ணைஶ்சிச்சே2த3 ராக4வ: ।
தீ3ப்யமாநாந் மஹாகே4ாராந் க்ருத்3த4ாநாஶீவிஷாநிவ ॥ (23)

அங்கங்கள் முறிபட்டு, விரட்டப்பட்ட அவர்கள் தலைதெறிக்க ஓடியதால், போர்க்களத்தில் தூசிப் படலம் எழுந்தது. சாட்சாத் பிரும்மாவினால் உண்டாக்கப்பட்ட அந்தத் தாமஸ அஸ்திரத்தின் தாக்குதலை, அவர்களால் தாங்க முடியவில்லை. எண்ணிலடங்காத வானரப் படையினர், இராவணனுடைய சக்திவாய்ந்த பாணங்களால், நூற்றுக்கணக்காக அழிக்கப்பட்டதைக் கண்டதும், தானே போர் செய்வதற்கு ஆயத்தமாக உறுதியுடன் நின்றார், இராமன். (9,10)

அரக்கப்புலியான இராவணன், வானரப்படையை அடித்துத் துரத்திவிட்டு, தேவேந்திரன் தன் தம்பியான உபேந்திரனுடன் நிற்பதைப் போன்று விளங்குபவரும் வானத்தைத் தொடுவது போல் உயர்ந்த வில்லை ஊன்றிக் கொண்டிருப்பவரும் தாமரை இதழ் போன்று செவ்வரியோடும் அகலமான கண்களைக் கொண்டவரும் நீண்ட கைகளை உடையவரும் எதிரிகளை அடக்குபவரும் எவராலும் வெல்ல முடியாதவருமான இராமனை, அப்போது அவன் நேரே பார்த்தான். (11,12)

அப்போது, இலக்குவனோடு இருந்தவரும் அளப்பரிய பராக்கிரமம் உடையவரும் பலசாலியுமான இராமன், போர்க்களத்திலிருந்து வானர வீரர்கள் பயந்தோடுவதையும், இராவணன் தன்னை எதிர்க்க வருவதையும் பார்த்து, (ஒருவழியாக எதிரியை நேருக்குநேர் சந்திக்க முடிந்ததால்) மனக்களிப்படைந்து, வில்லின் நடுப்பகுதியில் கையை வைத்து இறுகப் பற்றினார். (13)

எல்லையில்லா வலிமை கொண்ட மிகச்சிறந்த வில்லை, பூமியைப் பிளந்து விடுவது போல் பெருமுழக்கத்தை எழுப்பிக் கொண்டு, நாணேற்றத் தொடங்கினார். (14)

இராவணனுடைய சரமாரியாலும் இராமனுடைய வில்லின் டங்கார ஓசையாலும் கதிகலங்கிய நூற்றுக்கணக்கான வானரர்களும் அரக்கர்களும் தரையில் சாய்ந்தார்கள். (15)

(தசரத) மாமன்னரின் திருக்குமாரர்களான அவ்விருவருடைய பாணங்களுக்கு இலக்காகிய இராவணன், (அமாவாசையன்று) சந்திர–சூரியர்களுக்கு அருகே நிற்கும் இராகுவைப் போலிருந்தான். (16)

இலக்குவன், அவனோடு முதலில் தானே போரைத் தொடங்க விரும்பினான். வில்லை வளைத்து நெருப்புக் கொழுந்து போல் எரிக்கும் தன்மையும் ஒளியும் கொண்ட கூர்மையான பாணங்களை விடுத்தான். (17)

எல்லையற்ற பராக்கிரமம் கொண்ட இராவணன், வில்வீரனான இலக்குவனால் செலுத்தப்பட்ட பாணங்களை, வானவீதியில் அவை பாய்ந்து வந்து கொண்டிருக்கும்போதே, தன் பாணங்களால் தடுத்து நிறுத்தினான். இலக்குவன் செலுத்திய ஒரு பாணத்தை, தன் ஒரு பாணத்தாலும், மூன்றுகளை மூன்றுகளாலும், பத்துகளை பத்துகளாலும் துண்டித்துக் காட்டி, தன் கைத்திறமையை வெளிப்படுத்தினான். (18,19)

போரில் வெற்றியே சூடும் இராவணன், இலக்குவனுடனான போரை அவ்வளவில் நிறுத்தி, அவனை மீறிச் சென்று, உறுதிகுலையாத மலைபோல் கம்பீரமாக நிற்கும் இராமபிரானை நெருங்கினான். கோபத்தால் கண்கள் சிவந்த இராவணன், இராமனை எதிர்த்துப் போரிட முனைந்தவனாக, இராமன் மீது அம்புமாரியைப் பொழிந்தான். (20,21)

இராவணனுடைய வில்லிலிருந்து விடுபட்ட அம்புப் பொழிவு வேகமாகத் தன்னை நோக்கி வருவதைப் பார்த்த இராமன், உடனே பல்ல (கணுக்கள் வளைந்த அம்பு வகையைச் சேர்ந்த) பாணங்களைக் கையில் எடுத்துக் கொண்டார். நெருப்பைப் போல் ஒளிவீசுகின்றவைகளும் சினங்கொண்ட சர்ப்பங்கள் போல் மிகக்கொடியவைகளுமான அந்த சரக்கூட்டத்தைக் கூர்மையான பல்ல பாணங்களால் துண்டித்தெறிந்தார், இராகவன். (22,23)

ராக$_4$வோ ராவணம் தூர்ணம் ராவணோ ராக$_4$வம் தத$_3$ா ।
அந்யோந்யம் விவிதை$_4$ஸ்தீக்ஷ்ணை: ஶரைரபி$_4$வவர்ஷது: ॥ (24)

சேரதுஸ்ச சிரம் சித்ரம் மண்ட$_3$லம் ஸவ்யத$_3$க்ஷிணம் ।
ப$_3$ாணவேக$_3$ாத் ஸமுத்க்ஷிப்தாவந்யோந்யமபராஜிதௌ ॥ (25)

தயோர்பூ$_4$தாநி வித்ரேஸுர்யுக$_3$பத் ஸம்ப்ரயுத்$_4$யதோ: ।
ரௌத்$_3$ரயோ: ஸாயகமுசோர்யமாந்தகநிகாஶயோ: ॥ (26)

ஸந்ததம் விவிதை$_4$ர்ப$_3$ாணைர்ப$_3$பூ$_4$வ க$_3$க$_3$நம் தத$_3$ா ।
க$_4$நைரிவாதபாபாயே வித்$_3$யுந்மாலாஸமாகுலை: ॥ (27)

க$_3$வாக்ஷிதமிவாகாஶம் ப$_3$பூ$_4$வ ஶரவ்ருஷ்டிபி$_4$: ।
மஹாவேகை$_3$: ஸுதீக்ஷ்ணாக்$_3$ரைர்க்$_3$ருத்$_4$ரபத்ரை: ஸுவாஜிதை: ॥ (28)

ஶராந்த$_4$காரமாகாஶம் சக்ரது: பரமம் தத$_3$ா ।
க$_3$தேऽஸ்தம் தபநே சாபி மஹாமேக$_4$ாவிவோத்தி$_2$தௌ ॥ (29)

ப$_3$பூ$_4$வ துமுலம் யுத்$_3$த$_4$மந்யோந்யவத$_4$காங்க்ஷிணோ: ।
அநாஸாத்$_3$யமசிந்த்யம் ச வ்ருத்ரவாஸவயோரிவ ॥ (30)

உபௌ$_4$ ஹி பரமேஷ்வாஸாவுபௌ$_4$ ஶஸ்த்ரவிஶாரதௌ$_3$ ।
உப$_4$ாவஸ்த்ரவித$_3$ாம் முக்$_2$யாவுபௌ$_4$ யுத்$_3$தே$_4$ விசேரது: ॥ (31)

உபௌ$_4$ ஹி யேந வ்ரஜதஸ்தேந தேந ஶரோர்மய: ।
ஊர்மயோ வாயுநா வித்$_3$த$_4$ா ஜக்$_3$மு: ஸாக$_3$ரயோரிவ ॥ (32)

தத: ஸம்ஸக்தஹஸ்தஸ்து ராவணோ லோகராவண: ।
நாராசமாலாம் ராமஸ்ய லலாடே ப்ரத்யமுஞ்சத ॥ (33)

ரௌத்$_3$ரசாபப்ரயுக்தாம் தாம் நீலோத்பலத$_2$ளப்ரப$_4$ாம் ।
ஶிரஸா த$_4$ாரயந் ராமோ ந வ்யத$_2$ாம் ப்ரத்யபத்$_2$யத ॥ (34)

அத$_2$ மந்த்ராநபிஜபந் ரௌத்$_3$ரமஸ்த்ரமுதீ$_3$ரயந் ।
ஶராந் பூ$_4$ய: ஸமாத$_3$ாய ராம: க்ரோத$_4$ஸமந்வித: ॥
முமோச ச மஹாதேஜாஸ்சாபமாயம்ய வீர்யவாந் ॥ (35)

தே மஹாமேக$_4$ஸங்காஶே கவசே பதிதா: ஶரா: ।
அவத்$_4$யே ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ந வ்யத$_2$ாம் ஜநயந்ஸ்தத$_3$ா ॥ (36)

புநரேவாத$_2$ தம் ராமோ ரத$_2$ஸ்த$_2$ம் ராக்ஷஸாதி$_4$பம் ।
லலாடே பரமாஸ்த்ரேண ஸர்வாஸ்த்ரகுஶலோऽபி$_4$நத் ॥ (37)

தே பி$_4$த்த்வா ப$_3$ாணரூபாணி பஞ்சஶீர்ஷா இவோரக$_3$ா: ।
ஶ்வஸந்தோ விவிஶுர்பூ$_4$மிம் ராவணப்ரதிகூலிதா: ॥ (38)

அப்போது, இராமன் இராவணன் மீதும், இராவணன் இராமன் மீதும், ஒருவர்மேல் ஒருவர் வெகுவிரைவாக, பல்வகையான பாணங்களைப் பொழிந்து கொண்டார்கள். (24)

ஒருவரையொருவர் வெல்ல முடியாதவர்களாக, பாணவேகத்தால் தாக்கப்பட்டவர்களாக, இடதுசாரி, வலதுசாரி, மண்டலம் என்ற போர் நுட்பங்களைக் காட்டி வெகுநேரம் சண்டையிட்டார்கள். (25)

யமனையும் (அவனை வென்ற) சிவபிரானையும் போல, பயங்கரமாகப் பாணப் பிரயோகம் செய்து, அவர்கள் போரிட்டதைக் கண்டு எல்லா உயிர்ப் பிராணிகளும் நடுநடுங்கின. (26)

அப்போது, ஆகாயம் மழைக்காலத்தில் மின்னற்கொடிகள் ஒளிவீசும் மேகக்கூட்டத்தால் மூடப்பட்டிருப்பதைப் போல, (இராம–இராவணர்கள் செலுத்திய ஒளிவீசுகின்ற) பல்வகை பாணங்களால் நிரம்பியதாக ஆயிற்று. (27)

கழுகுச் சிறகுகள் கட்டப்பட்டு அழகுடன் விளங்குபவைகளும் மிகுந்த வேகம் கொண்டவைகளும் மிகவும் சக்தி படைத்தவைகளுமான பாணங்கள் இடைவிடாது செலுத்தப்பட்டதால், ஆகாயத்தில் சாளரங்கள் அமைக்கப்பட்டாற்போன்ற தோற்றம் ஏற்பட்டது. சூரியன் மறைந்தான். அதனால் இருள் பரவியது. கரிய மேகங்கள் திரண்டு எழுந்ததால் இருள் அதிகமாயிற்று. அதுபோல, அவ்விருவரும் அப்போது இடைவிடாத பாணப் பொழிவினால் ஆகாயத்தை இருள் கவ்வச் செய்தார்கள். (28,29)

ஒருவரையொருவர் கொல்ல விரும்பிய அவர்களிடையே, பயங்கரமானதும், இதற்குமுன் நிகழ்ந்திராததும், எண்ணிப் பார்க்க முடியாததும், விருத்திராசுரனுக்கும் இந்திரனுக்குமிடையே நிகழ்ந்தது போன்றதுமான மாபெரும் போர் நிகழ்ந்தது. (30)

அவ்விருவரும் சிறந்த வில்லாளிகள்; இருவரும் படைக்கலங்களைப் பிரயோகிப்பதில் நிபுணர்கள்; பல்வகை அஸ்திர(மந்திர)ங்களை அறிந்தவர்களுள் முதன்மையானவர்கள். எனவே, இருவரும் தத்தம் திறமையை காட்டிக்கொண்டு ரணகளத்தில் போர் தொடுத்தார்கள். (31)

பெருங்காற்று வீசுகையில், இரு பெருங்கடல்களில் உயரமான அலைவரிசைகள் எழுவதைப் போல, அவ்விருவரும் சென்ற இடங்களில் பாணங்களின் அலைவரிசைகள் எழுந்தன. (32)

உலக மக்களைக் கதறச் செய்யும் இராவணன், பாணங்களைச் செலுத்துவதிலேயே ஈடுபட்டிருந்த கைகளால், இராமனுடைய நெற்றியைக் குறிவைத்து, நாராசம் என்ற பாணங்களின் வரிசையை விடுத்தான். (33)

பயங்கரமான வில்லிலிருந்து செலுத்தப்பட்டவைகளும் கருநெய்தல் மலர் வண்ணம் கொண்டவைகளுமான நாராச பாணங்களை, இராமன் தன் தலையில் ஏற்றுக்கொண்டார். ஆனால், அந்தத் தாக்குதலால் எவ்விதத் துன்பத்தையும் அவர் அடையவில்லை. (34)

தேசு மிக்கவரும் மாவீரருமான இராமன், சினம் மிகுந்து, வில்லை வளைத்து, ருத்ராஸ்திர மந்திரங்களை ஜபித்து, பாணங்களை அஸ்திரங்களாகச் சீரமைத்து உடனே செலுத்தினார். (35)

அந்த பாணங்கள் (ருத்ராஸ்திரங்கள்), அரக்க வேந்தனின் கனத்த மேகங்களைப் போன்றதும் பிளக்க முடியாததுமான கவசத்தில் விழுந்து தாக்கின. ஆனால், அவனுக்கு எவ்வித துன்பத்தையும் கொடுக்கவில்லை. எல்லாவித அஸ்திரங்களையும் பிரயோகிப்பதில் வல்லவரான இராமன், தேரில் வீற்றிருக்கும் இராக்கத மன்னனின் நெற்றியை நோக்கி, தெய்விகமான அஸ்திரங்களை மறுபடியும் செலுத்திக் காயப்படுத்தினார். (36,37)

பெருமூச்சு விடும் ஐந்துதலை பாம்புகள் போல் சீறிக்கொண்டு சென்ற சிறந்த பாணங்கள், அவனால் (இராவணனால்) தடுக்கப்பட்ட போதிலும், அவனது கவசத்தைப் பிளந்து, உடலைக் காயப்படுத்திவிட்டு, அவைகள் பூமிக்குள் புகுந்து கொண்டன. (38)

நிஹத்ய ராக$_4$வஸ்யாஸ்த்ரம் ராவண: க்ரோத$_2$மூர்சி$_2$த: ।
ஆஸுரம் ஸுமஹாகோ$_4$ரமஸ்த்ரம் ப்ராது$_3$ஶ்சகார ஹ ॥ (39)

ஸிம்ஹவ்யாக்$_4$ரமுக$_2$ாந்ஶ்சாந்யாந் கங்ககாகமுக$_2$ாநபி ।
க்$_3$ருத்$_4$ரஶ்யேநமுக$_2$ாம்ஶ்சாபி ஶ்ருக$_3$ாலவத$_3$நாந்ஸ்தத$_2$ா ॥ (40)

ஈஹாம்ருக$_3$முக$_2$ாம்ஶ்சாந்யாந் வ்யாதி$_3$தாஸ்யாந் ப$_4$யாநகாந் ।
பஞ்சாஸ்யாந்(ல்)லேலிஹாநாம்ஶ்ச ஸஸர்ஜ நிஶிதாஞ்ஶராந் ॥ (41)

ஶராந் க$_2$ரமுக$_2$ாந்ஶ்சாந்யாந் வராஹமுக$_2$ஸம்ஸ்தி$_2$தாந் ।
ஶ்வாநகுக்குடவக்த்ராம்ஶ்ச மகராஶீவிஷாநநாந் ॥ (42)

ஏதாநந்யாந்ஶ்ச மாயாவீ ஸஸர்ஜ நிஶிதாஞ்ஶராந் ।
ராமம் ப்ரதி மஹாதேஜா: க்ருத்$_3$த$_4$: ஸர்ப இவ ஶ்வஸந் ॥ (43)

ஆஸுரேண ஸமாவிஷ்ட: ஸோऽஸ்த்ரேண ரகு$_4$நந்த$_3$ந: ।
ஸஸர்ஜாஸ்த்ரம் மஹோத்ஸாஹ: பாவகம் பாவகோபம: ॥ (44)

அக்$_3$நிதீ$_3$ப்தமுக$_2$ாந் பா$_3$ணாந்ஸ்தத$_2$ா ஸூர்யமுக$_2$ாநபி ।
சந்த்$_3$ரார்த$_4$சந்த்$_3$ரவக்த்ராந்ஶ்ச தூ$_4$மகேதுமுக$_2$ாநபி ॥ (45)

க்$_3$ரஹநக்ஷத்ரவக்த்ராந்ஶ்ச மஹோல்காமுக$_2$ஸம்ஸ்தி$_2$தாந் ।
வித்$_3$யுஜ்ஜிஹ்வோபமாந்ஶ்சாந்யாந் ஸஸர்ஜ நிஶிதாஞ்ஶராந் ॥ (46)

தே ராவணஶரா கோ$_4$ரா ராக$_4$வாஸ்த்ரஸமாஹதா: ।
விலயம் ஜக்$_3$முராகாஶே ஜக்$_3$முஶ்சைவ ஸஹஸ்ரஶ: ॥ (47)

தத$_3$ஸ்த்ரம் நிஹதம் த்$_3$ருஷ்ட்வா ராமேணாக்லிஷ்டகர்மணா ।
ஹ்ருஷ்டா நேது$_3$ஸ்தத: ஸர்வே கபய: காமரூபிண: ॥
ஸுக்$_3$ரீவப்ரமுக$_2$ா வீரா: பரிவார்ய து ராக$_4$வம் ॥ (48)

ததஸ்தத$_3$ஸ்த்ரம் விநிஹத்ய ராக$_4$வ:
ப்ரஸஹ்ய தத்$_3$ராவணபா$_3$ஹுநி:ஸ்ருதம் ।
முத$_3$ாந்விதோ தா$_3$ஶரதி$_2$ர்மஹாஹவே
விநேது$_3$ருச்சைர்முதி$_2$தா: கபீஶ்வரா: ॥ (49)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஶததம: ஸர்க$_3$: ॥

ஏகோத்தரஶததம: ஸர்க$_3$:

லக்ஷ்மணஶக்திக்ஷேப:

தஸ்மிந் ப்ரதிஹதேऽஸ்த்ரே து ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
க்ரோத$_4$ம் ச த்$_3$விகு$_3$ணம் சக்ரே க்ரோதா$_4$ச்சாஸ்த்ரமநந்தரம் ॥ (1)

கோபத்தால் ஆட்கொள்ளப்பட்ட இராவணன், இராமனுடைய அஸ்திரங்களை உதறித் தள்ளிவிட்டு, மிகவும் பயங்கரமான அசுர சம்பந்தமுடைய அஸ்திரத்தைச் செலுத்தினான். (39)

அந்த அஸ்திரத்திலிருந்து, சிங்கம், புலி, கழுகு, காக்கை, பருந்து, நரி, செந்நாய், ஓநாய், பயங்கரமாக வாயைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும் ஐந்து தலை நாகங்கள், பன்றி, நாய், கோழி, முதலை, சர்ப்பம், கழுதை போன்றவைகளின் முகங்கொண்ட பாணங்களையும், கூர்மையான முனையுடைய வேறு சில பாணங்களையும் அவன் விடுத்தான். (40–42)

பேராற்றல் கொண்டவனும் மாயாவியுமான அவன், வெகுண்டெழுந்த பாம்பு போல் சீறிக் கொண்டு, மேலே சொன்ன பாணங்களையும் மற்றும் பல கூரிய பாணங்களையும், இராமன் மீது செலுத்தினான். (43)

உற்சாகம் மேலிட்டவரும் அக்னியை நிகர்த்த தேஜஸ்வியுமான ரகுகுல மாணிக்கம் ஆசுர அஸ்திரத்தினால் தாக்கப்பட்டவராய், ஆக்னேய (அக்னியைக் கக்கும்) அஸ்திரத்தை விடுத்தார். (44)

அதன் மூலம், அக்னி, சூரியன், சந்திரன், பிறைச்சந்திரன், தூமகேது, கோள், தாரகை, எரிகொள்ளி, மின்னல் போன்றவைகளின் ஒளிக்கு நிகராக ஒளிவீசும் முகங்களையுடைய பலவகையான பாணங்களையும் மற்றும் பல கூர்மையான பாணங்களையும் செலுத்தினார். (45)

இராவணனால் செலுத்தப்பட்ட பயங்கரமான அந்த பாணங்கள், இராமபிரானுடைய அஸ்திரங்களால் தாக்கப்பட்டு சக்தியை இழந்தன; ஆகாயத்திலிலேயே ஆயிரம் சுக்கல்களாக நொறுங்கிப் போயின. (46)

எவ்வளவு கடினமான செயலையும் எளிதில் முடிக்க வல்லவரான இராமனால், (இராவணனால் விடப்பட்ட பயங்கரமான) அந்த அஸ்திரம் முறியடிக்கப்பட்டதைக் கண்டு, நினைத்த உருவம் எடுக்கக் கூடிய வானரர்களனைவரும் மற்றும் சுக்ரீவன் முதலான முக்கிய வீரர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்து, ரகுகுல நாயகரைச் சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தார்கள். (47,48)

அப்போது, தசரதன் மைந்தரான இராமன், அந்தப் பெரும் போரில் இராவணனால் விடப்பெற்ற அந்த அஸ்திரத்திற்கு எதிர் அஸ்திரம் விட்டு அழித்ததால் மனநிறைவு அடைந்தார். வானரத் தலைவர்கள் உள்ளக்களிப்புற்றவர்களாக உரத்த குரலில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். (49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றொன்று

சக்தி ஆயுதத்தால் லட்சுமணன் அடிபட்டான்!

அரக்க மன்னன் இராவணன், அவனது அந்த ஆசுர அஸ்திரம் சிதறடிக்கப்பட்டவுடன் இருமடங்கு கோபத்தை அடைந்தான்; உடனே, வேறொரு அஸ்திரத்தை (இராமனை நோக்கி)ச் செலுத்தினான். (1)

மயேந விஹிதம் ரௌத்$_3$ரமந்யத$_3$ஸ்த்ரம் மஹாத்$_3$யுதி: ।
உத்ஸ்ரஷ்டும் ராவணோ கோ$_4$ரம் ராக$_4$வாய ப்ரசக்ரமே ॥ (2)

தத: ஶூலாநி நிஶ்சேருர்க$_3$தா$_3$ஶ்ச முஸலாநி ச ।
கார்முகாத்$_3$தீ$_3$ப்யமாநாநி வஜ்ரஸாராணி ஸர்வஶ: ॥ (3)

முத்$_3$க$_3$ரா: கூடபாஶாஶ்ச தீ$_3$ப்தாஶ்சாஶநயஸ்ததா$_2$ ।
நிஷ்பேதுர்விவிதா$_4$ஸ்தீக்ஷ்ணா வாதா இவ யுக$_3$க்ஷயே ॥ (4)

தத$_3$ஸ்த்ரம் ராக$_4$வ: ஶ்ரீமாநுத்தமாஸ்த்ரவிதா$_3$ம் வர: ।
ஜகா$_4$ந பரமாஸ்த்ரேண கா$_3$ந்த$_4$ர்வேண மஹாத்$_3$யுதி: ॥ (5)

தஸ்மிந் ப்ரதிஹதேऽஸ்த்ரே து ராக$_4$வேண மஹாத்மநா ।
ராவண: க்ரோத$_4$தாம்ராக்ஷ: ஸௌரமஸ்த்ரமுதை$_3$ரயத் ॥ (6)

ததஶ்சக்ராணி நிஷ்பேதுர்பா$_4$ஸ்வராணி மஹாந்தி ச ।
கார்முகாத்$_3$பீ$_4$மவேக$_3$ஸ்ய த$_3$ஶக்$_3$ரீவஸ்ய தீ$_4$மத: ॥ (7)

தைராஸீத்$_3$க$_3$க$_3$நம் தீ$_3$ப்தம் ஸம்பதத்$_3$பி$_4$ரிதஸ்தத: ।
பதத்$_3$பி$_4$ஶ்ச தி$_3$ஶோ தீ$_3$ப்தாஶ்சந்த்$_3$ரஸூர்யக்$_3$ரஹைரிவ ॥ (8)

தாநி சிச்சே$_2$த$_3$ பா$_3$ணௌகை$_4$ஶ்சக்ராணி ஸ து ராக$_4$வ: ।
ஆயுதா$_4$நி ச சித்ராணி ராவணஸ்ய சமூமுகே$_2$ ॥ (9)

தத$_3$ஸ்த்ரம் து ஹதம் த்$_3$ருஷ்ட்வா ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
விவ்யாத$_4$ த$_3$ஶபி$_4$ர்பா$_3$ணை ராமம் ஸர்வேஷு மர்மஸு ॥ (10)

ஸ வித்$_3$தோ$_4$ த$_3$ஶபி$_4$ர்பா$_3$ணைர்மஹாகார்முகநி:ஸ்ருதை: ।
ராவணேந மஹாதேஜா ந ப்ராகம்பத ராக$_4$வ: ॥ (11)

ததோ விவ்யாத$_4$ கா$_3$த்ரேஷு ஸர்வேஷு ஸமிதிஞ்ஜய: ।
ராக$_4$வஸ்து ஸுஸங்க்ருத்$_3$தோ$_4$ ராவணம் ப$_3$ஹுபி$_4$: ஶரை: ॥ (12)

ஏதஸ்மிந்நந்தரே க்ருத்$_3$தோ$_4$ ராக$_4$வஸ்யாநுஜோ ப$_3$லீ ।
லக்ஷ்மண: ஸாயகாந் ஸப்த ஜக்$_3$ராஹ பரவீரஹா ॥ (13)

தை: ஸாயகைர்மஹாவேகை$_3$ ராவணஸ்ய மஹாத்$_3$யுதி: ।
த்$_4$வஜம் மநுஷ்யஶீர்ஷம் து தஸ்ய சிச்சே$_2$த$_3$ நைகதா$_4$ ॥ (14)

ஸாரதே$_2$ஶ்சாபி பா$_3$ணேந ஶிரோ ஜ்வலிதகுண்ட$_3$லம் ।
ஜஹார லக்ஷ்மண: ஶ்ரீமாந்நைர்ருதஸ்ய மஹாப$_3$ல: ॥ (15)

தஸ்ய பா$_3$ணைஶ்ச சிச்சே$_2$த$_3$ த$_4$நுர்க$_3$ஜகரோபமம் ।
லக்ஷ்மணோ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய பஞ்சபி$_4$ர்நிஶிதை: ஶரை: ॥ (16)

பேராற்றல் கொண்ட இராவணன், மயனால் உண்டாக்கப்பட்டதும் கொடுமையானதும் பயங்கரமானதுமான இன்னோர் அஸ்திரத்தை, இராமன்மீது செலுத்துவதற்கு முற்பட்டான். (2)

அவனுடைய வில்லிலிருந்து, ஒளிவீசுகின்றவைகளும் வஜ்ராயுதத்தைப் போன்று உறுதி கொண்டவைகளுமான சூலங்கள், கதைகள், உலக்கைகள் போன்றவை மிகப்பெரும் அளவில் வெளிப்பட்டன. (3)

(முற்றிலுமாக நாசம் விளைவிக்கும்) ஊழிக்கால சுழற்காற்றுப் போல, தாக்கும் பொருளை அழிக்கவல்ல முத்கரங்கள் (இரும்பாலான கதைகள்), கூடபாசங்கள், பிரகாசமான இடிகள் முதலியவைகளும் வெளியே வந்தன. (4)

அஸ்திரக் கலை அறிந்தவர்களுள் தலையாயவரும் வீரலட்சுமி பொருந்தியவரும் மிகவும் தேஜஸ்வியுமான இராமன், அந்த (இராவணனால் அனுப்பப்பட்ட) அஸ்திரத்தை, காந்தருவம் என்ற சிறந்த அஸ்திரத்தால் நாசம் செய்தார். (5)

மகாத்மாவான இராமனால் அந்த அஸ்திரம் அழிக்கப்பட்டதைக் கண்டு, கோபத்தால் கண்கள் சிவக்க, சூரியாஸ்திரத்தை விடுத்தான், இராவணன். (6)

அப்போது, பேராற்றலுடையவனும் அறிவுக்கூர்மை கொண்டவனுமான இராவணனுடைய வில்லிலிருந்து மிகப் பிரகாசமான, பேருருவம் கொண்ட சக்கராயுதங்கள் வெளிவந்தன. (7)

சந்திரன்–சூரியன் என்ற கோள்களைப் போல் ஜொலித்துக் கொண்டு எல்லாப் பக்கங்களிலும் பாய்ந்து சென்று விழும் அவைகளால் ஆகாயம் மிகுந்த ஒளியுடன் விளங்கியது; எல்லாத் திசைகளும் பிரகாசம் அடைந்தன. (8)

அப்போது இராமபிரான், அந்தப் போர்முனையில் இராவணன் செலுத்திய சக்கராயுதங்களையும் மற்றும் பலவகையான படைக்கலன்களையும் இடைவிடாது செலுத்திய பாணங்களால் வெட்டி வீழ்த்தினார். (9)

இராக்கத மன்னன் இராவணன் அந்த அஸ்திரமும் நாசம் செய்யப்பட்டதைப் பார்த்து, இராமனின் உயிர்நிலைகள் எல்லாவற்றையும் பத்து பாணங்களால் நோகடித்தான். (10)

மகாபராக்கிரமசாலியான இராமன், இராவணனுடைய மிகப்பெரிய வில்லிலிருந்து விடப்பட்ட பத்து பாணங்களால் காயப்படுத்தப்பட்டாலும், அதனால் மனந்தளரவில்லை. (11)

போரில் வெற்றி சூடும் இராமன், மிகவும் கோபங்கொண்டு, ஏராளமான பாணங்களால் இராவணனின் எல்லா அவயவங்களையும் துளைத்தெடுத்தார். (12)

இதனிடையில், (இராமன் தாக்கப்பட்டதால்) ஆத்திரமடைந்தவனும் பலசாலியும் பகைவீரர்களை அழிப்பவனும் இராமனுடைய தம்பியுமான இலக்குவன், ஏழு பாணங்களைக் கையில் எடுத்துக் கொண்டான். (13)

பேராற்றல் கொண்ட அவன், சக்தி மிகுந்த அந்த பாணங்களால், மனிதத்தலை சின்னம் பொறித்த இராவணனுடைய கொடியை, பல துண்டுகளாகக் கிழித்து வீழ்த்தினான். (14)

பின்னர், மகாபலசாலியும் வீரத்திரு படைத்தவனுமான இலக்குவன் ஒரு பாணத்தால், இராக்கதனுடைய (இராவணனுடைய) தேர்ப்பாகனின் பளபளக்கும் காதணிகளைத் தரித்திருந்த தலையையும் கொய்தான். (15)

இலக்குவன், அரக்க மன்னனின் கையிலிருந்த யானைத் துதிக்கை போன்ற பெரிய வில்லையும் பாணங்களையும் கூர்மையான ஐந்து அம்புகளால் துண்டித்தெறிந்தான். (16)

நீலமேக4நிப4ாந்ஶ்சாஸ்ய ஸத3ஶ்வாந் பர்வதோபமாந் ।
ஜக4ாநாப்லுத்ய க3த3யா ராவணஸ்ய விபீ4ஷண: ॥ (17)

ஹதாஶ்வாத்3வேக3வாந் வேக3ாத3வப்லுத்ய மஹாரத2ாந் ।
க்ரோத4மாஹாரயத்தீவ்ரம் ப்4ராதரம் ப்ரதி ராவண: ॥ (18)

தத: ஶக்திம் மஹாஶக்திதீ3ப்தம் தீ3ப்தாஶநீமிவ ।
விபீ4ஷணாய சிக்ஷேப ராக்ஷஸேந்த்3ர: ப்ரதாபவாந் ॥ (19)

அப்ராப்தாமேவ தாம் ப3ாணைஸ்த்ரிபி4ஶ்சிச்சே2த3 லக்ஷ்மண: ।
அதோ2த3திஷ்ட2த் ஸந்நாதோ3 வாநராணாம் தத3ா ரணே ॥ (20)

ஸா பபாத த்ரித4ா சி2ந்நா ஶக்தி: காஞ்சநமாலிநீ ।
ஸவிஸ்பு2லிங்க3ா ஜ்வலிதா மஹோல்கேவ தி3வஶ்ச்யுதா ॥ (21)

தத: ஸம்ப4ாவிததராம் காலேநாபி து3ராஸத3ாம் ।
ஜக்3ராஹ விபுலாம் ஶக்திம் தீ3ப்யமாநாம் ஸ்வதேஜஸா ॥ (22)

ஸா வேகி3தா ப3லவதா ராவணேந து3ராஸத3ா ।
ஜஜ்வால ஸுமஹாகோ4ரா ஶக்ராஶநிஸமப்ரப4ா ॥ (23)

ஏதஸ்மிந்நந்தரே வீரோ லக்ஷ்மணஸ்தம் விபீ4ஷணம் ।
ப்ராணஸம்ஶயமாபந்நம் தூர்ணமப்4யவபத்3யத ॥ (24)

தம் விமோக்ஷயிதும் வீரஶ்சாபமாயம்ய லக்ஷ்மண: ।
ராவணம் ஶக்திஹஸ்தம் வை ஶரவர்ஷைரவாகிரத் ॥ (25)

கீர்யமாண: ஶரௌகே4ண விஸ்ருஷ்டேந மஹாத்மநா ।
ந ப்ரஹர்தும் மநஶ்சக்ரே விமுகீ2க்ருதவிக்ரம: ॥ (26)

மோக்ஷிதம் ப்4ராதரம் த்3ருஷ்ட்வா லக்ஷ்மணேந ஸ ராவண: ।
லக்ஷ்மணாபி4முக2ஸ்திஷ்ட2ந்நித3ம் வசநமப்3ரவீத் ॥ (27)

மோக்ஷிதஸ்தே ப3லஶ்லாகி4ந் யஸ்மாதே3வம் விபீ4ஷண: ।
விமுச்ய ராக்ஷஸம் ஶக்திஸ்த்வயீயம் விநிபாத்யதே ॥ (28)

ஏஷா தே ஹ்ருத3யம் பி4த்த்வா ஶக்திர்லோஹிதலக்ஷணா ।
மத்3பா3ஹுபரிகோ4த்ஸ்ருஷ்டா ப்ராணாநாத3ாய யாஸ்யதி ॥ (29)

இத்யேவமுக்த்வா தாம் ஶக்திமஷ்டக4ண்டாம் மஹாஸ்வநாம் ।
மயேந மாயாவிஹிதாமமோக4ாம் ஶத்ருக4ாதிநீம் ॥ (30)

லக்ஷ்மணாய ஸமுத்3தி3ஶ்ய ஜ்வலந்தீமிவ தேஜஸா ।
ராவண: பரமக்ருத்3த4ஶ்சிக்ஷேப ச நநாத3 ச ॥ (31)

(இதனிடையில்,) கரிய மேகம் போன்ற நிறமுடைய, மலை போல் பேருருவம் கொண்ட, இராவணனுடைய தேர்க் குதிரைகளை, விபீஷணன் பாய்ந்து சென்று கதையால் கொன்றான். ஆற்றல் மிக்க இராவணன், குதிரைகள் கொல்லப்பட்டதும், பெருந்தேரிலிருந்து உடனே கீழே குதித்தான். தம்பியின் மீது தீவிரமான கோபத்தை அடைந்தான். (17,18)

அப்போது, பேராற்றல் உடையவனும் பராக்கிரமசாலியுமான அரக்கமன்னன் பேரொளி வீசும் வஜ்ராயுதம் போல் பிரகாசிக்கும் சக்தி என்னும் ஆயுதத்தை, விபீஷணனைக் கொல்லும் பொருட்டு விடுத்தான். (19)

அந்த ஆயுதம் வீடணனை நெருங்கு முன்பே, இலக்குவன் மூன்று பாணங்களால் முறித்துத் தள்ளினான். போர்க்களத்தில், (அதைக் கண்டுகளிப்பெய்திய) வானரர்கள் உற்சாகமாக ஆரவாரம் செய்தார்கள். (20)

பொன்மாலை பூண்ட அந்த சக்தி, மூன்றாக துண்டிக்கப்பட்டு, பிரகாசிக்கும் அனல்கங்குகளுடன், வானத்திலிருந்து நழுவி விழும் பெரும் எரிகொள்ளி போலத் தரையில் விழுந்தது. (21)

உடனே, (விபீஷணனைக் கொல்வதற்காக) சாட்சாத் காலதேவனால்கூட தாங்க முடியாததும், தன்னுடைய வீண்போகாத தன்மையால் தனிப்பெருமை பெற்றதும், தன் இயல்பான ஆற்றலால் ஒளிவீசுவதுமான ஒரு சக்தி ஆயுதத்தை, இராவணன் கையில் எடுத்துக் கொண்டான். (22)

அந்த ஆயுதம், பலம் மிகுந்த இராவணனால் சக்தி ஊட்டப் பெற்று, எவராலும் நெருங்க முடியாததாக, இந்திரனின் வஜ்ராயுதத்திற்கு இணையான ஒளிகொண்டதாக, மிகவும் அச்சத்தை உண்டாக்குவதாய் பேரொளி வீசியது. (23)

இதைக் கண்ட மாத்திரத்தில், வீடணன் உயிருக்குப் பேராபத்து நேரவிருப்பதை உணர்ந்த இலக்குவன், விரைந்து சென்று அவன் முன்பாக நின்று மறைத்துக் கொண்டான். (24)

வீரனாகிய இலக்குவன், (இராவணனுடைய சக்தித் தாக்குதலிலிருந்து) வீடணனைத் தப்புவிக்க விரும்பி, தன் வில்லை வளைத்து, கையில் சக்தியுடன் நிற்கும் இராவணன்மீது அம்புமாரியைப் பொழிந்தான். (25)

மகாத்மா இலக்குவனால் விடப்பட்ட அம்புமாரியால் நோகடிக்கப்பட்ட அவன், (தம்பியைக்) கொல்வதில் சக்தியை செலவழிக்க விரும்பாமல் மனம் குன்றிப் போனான். (26)

இலக்குவனால் தன் தம்பி காப்பாற்றப்பட்டதைக் கண்ட இராவணன், இலக்குவன் எதிரே வந்து நின்றுகொண்டு பின்வருமாறு கூறினான்— (27)

''பலத்தின் காரணமாகப் பெரும் புகழ் பெற்றுள்ளவனே! விபீஷணனுக்கு முன்னால் வந்து நின்று, அவனைக் காப்பாற்றிவிட்டாய். இப்போது, இந்த சக்தி ஆயுதம் அந்த அரக்கனுக்குப் பதிலாக உன்மேல் வீழ்த்தப்படப் போகிறது! (28)

குண்டாந்தடி போன்ற என் கைகளால் விடப்படும் இந்த சக்தியாயுதம், இயல்பாகவே எதிரியின் குருதியில் தோய்ந்து விளங்குவது. இப்போது உன் மார்பைப் பிளந்து, உயிரைப் பறித்துக் கொண்டு போகப் போகிறது.'' (29)

அளவில்லாத சினங்கொண்ட இராவணன் மேற்கண்டவாறு சொல்லிவிட்டு, மயனால் மாயையால் செய்யப்பட்டதும் வீண்போகாததும் எதிரியைக் கொன்று போடுவதும் எட்டுமணிகள் கட்டப்பட்டதும் பேரொலி எழுப்புவதும் அனற்பிழம்பாய் பிரகாசிப்பதுமான அந்தச் சக்தியை, இலக்குவனைக் குறிவைத்துச் செலுத்தினான்; அட்டகாசமாகக் குரலும் எழுப்பினான். (30,31)

ஸா க்ஷிப்தா பீ4மவேகே3ந ஶக்ராஶநிஸமஸ்வநா ।
ஶக்திரப்4யபதத்3வேகா3ல்லக்ஷ்மணம் ரணமூர்த4நி ॥ (32)

தாமநுவ்யாஹரச்ச2க்திமாபதந்தீம் ஸ ராக4வ: ।
ஸ்வஸ்த்யஸ்து லக்ஷ்மணாயேதி மோகா4 ப4வ ஹதோத்3யமா ॥ (33)

ராவணேந ரணே ஶக்தி: க்ருத்3தே4நாஶீவிஷோபமா ।
முக்தா ஶூரஸ்ய பீ4தஸ்ய லக்ஷ்மணஸ்ய மமஜ்ஜ ஸா ॥ (34)

ந்யபதத் ஸா மஹாவேகா3 லக்ஷ்மணஸ்ய மஹோரஸி ।
ஜிஹ்வேவோரக3ராஜஸ்ய தீ3ப்யமாநா மஹாத்3யுதி: ॥ (35)

ததோ ராவணவேகே3ந ஸுதூ3ரமவகா3ட4யா ।
ஶக்த்யா நிர்பி4ந்நஹ்ருத3ய: பபாத பு4வி லக்ஷ்மண: ॥ (36)

ததவஸ்த2ம் ஸமீபஸ்தோ3 லக்ஷ்மணம் ப்ரேக்ஷ்ய ராக4வ: ।
ப்4ராத்ருஸ்நேஹாந்மஹாதேஜா விஷண்ணஹ்ருத3யோऽப4வத் ॥ (37)

ஸ முஹூர்தமநுத்4யாய பா3ஷ்பவ்யாகுலலோசந: ।
ப3பூ4வ ஸம்ரப்3த4தரோ யுகா3ந்த இவ பாவக: ॥ (38)

ந விஷாத3ஸ்ய காலோऽயமிதி ஸஞ்சிந்த்ய ராக4வ: ।
சக்ரே ஸுதுமுலம் யுத்3த4ம் ராவணஸ்ய வதே4 த்4ருத: ॥
ஸர்வயத்நேந மஹதா லக்ஷ்மணம் ஸ்ந்நிரீக்ஷ்ய ச ॥ (39)

ஸ த3த3ர்ஶ ததோ ராம: ஶக்த்யா பி4ந்நம் மஹாஹவே ।
லக்ஷ்மணம் ருதி4ராதி3க்3த4ம் ஸபந்நக3மிவாசலம் ॥ (40)

தாமபி ப்ரஹிதாம் ஶக்திம் ராவணேந ப3லீயஸா ।
யத்நதஸ்தே ஹரிஶ்ரேஷ்டா2 ந ஶேகுரவமர்தி3தும் ॥ (41)

அர்தி3தாஶ்சைவ பா3ணௌகை4: க்ஷிப்ரஹஸ்தேந ரக்ஷஸா ।
ஸௌமித்ரிம் ஸா விநிர்பி4த்3ய ப்ரவிஷ்டா த4ரணீதலம் ॥ (42)

தாம் கராப்4யாம் பராம்ருஶ்ய ராம: ஶக்திம் ப4யாவஹாம் ।
ப3ப4ஞ்ஜ ஸமரே க்ருத்3தோ4 ப3லவாந் விசகர்ஷ ச ॥ (43)

தஸ்ய நிஷ்கர்ஷத: ஶக்திம் ராவணேந ப3லீயஸா ।
ஶரா: ஸர்வேஷு கா3த்ரேஷு பாதிதா மர்மபே4தி3ந: ॥ (44)

அசிந்தயித்வா தாந் பா3ணாந் ஸமாஶ்லிஷ்ய ச லக்ஷ்மணம் ।
அப்3ரவீச்ச ஹநூமந்தம் ஸுக்3ரீவம் சைவ ராக4வ: ॥ (45)

லக்ஷ்மணம் பரிவார்யேஹ திஷ்ட2த்4வம் வாநரோத்தமா: ॥ (46)

போர்முனையில் பயங்கரமான வேகத்துடன் விடப்பட்ட அந்த சக்தி, இந்திரனுடைய வஜ்ராயுதம் போல் ஒலி எழுப்பிக் கொண்டு, இலக்குவனை நோக்கி வெகுவேகமாகப் பறந்து வந்தது. (32)

இலக்குவனை நோக்கி வந்து கொண்டிருக்கும் அந்தச் சக்தியைப் பார்த்து, இராமன் கூறினார்— ''லட்சுமணனுக்கு மங்களம் உண்டாகுக. உயிரைப் பறிக்கும் உன் முயற்சி பயனற்றுப் போவதாகுக. கோரிய பயனைத் தராமல் நீ வீணாகப் போவதாகுக.'' (33)

கோபங்கொண்ட இராவணனால், கொடிய விஷமுடைய சர்ப்பம் போன்ற அந்த வேல் விரைந்து சென்று அஞ்சி நடுங்காமல் நின்ற இலக்குவன் மார்பில் பாய்ந்தது. (34)

பேராற்றல் கொண்டதும், மிக்க மகிமை வாய்ந்ததும் சர்ப்ப மன்னனின் நாக்குப் போல் ஒளிவீசுவதுமான அது (சக்தியாயுதம்), லட்சுமணனின் உரம் வாய்ந்த மார்பில் விழுந்தது. இராவணன் மிகவும் வேகத்துடன் செலுத்தியதால், சக்தியாயுதம் மிகவும் ஆழமாகப் பாய்ந்து உள்ளே சென்றதால் மார்பு பிளவுண்டது; அதனால், லட்சுமணன் பூமியில் சாய்ந்தான். (35,36)

மகாபராக்கிரமசாலியும் அருகில் இருந்தவருமான இராமன், (அடிபட்டுக் கீழே விழுந்து கிடக்கும்) அந்த நிலையில் இலக்குவனைப் பார்த்து, சகோதர வாஞ்சையால் மனவருத்தம் அடைந்தார். (37)

அவர் சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அவர் கண்களிலிருந்து சோகக்கண்ணீர் வழிந்தது. பின், ஊழிக்காலத்தில் எழும் பெருநெருப்பைப் போல, கட்டுக்கடங்காத கோபாவேசம் கொண்டார். (38)

'இது துக்கப்படுவதற்கு உரிய தருணம் அல்ல' என்று நிச்சயித்து, இராவணனைக் கொல்வதில் உறுதிபூண்டவராக, தன் ஆற்றல் முழுவதையும் ஒருமுகப்படுத்தி, இடையிடையே இலக்குவன் நிலையை கவனித்துக் கொண்டும், படுபயங்கரமாக போர் செய்யத் தொடங்கினார். அந்தப் பெரும் போரில், லட்சுமணன் சக்தியால் பிளக்கப்பட்டு குருதி தோய்ந்து, சர்ப்பத்துடன் கூடிய ஒரு மலையைப் போல் படுத்துக் கொண்டிருப்பதை இராமன் பார்த்தார். (சர்ப்பம், சக்தி ஆயுதத்திற்கு உவமை.) (39,40)

மிகவும் பலங்கொண்ட இராவணனால் செலுத்தப்பட்ட சக்தியாயுதத்தை, லட்சுமணனுடைய மார்பிலிருந்து பிடுங்கி எடுப்பதற்கு, வானரோத்தமர்கள் பலவாறு முயன்றும் வெற்றி பெற முடியாதிருந்தார்கள். (41)

அத்துடன், அந்த முயற்சியின்போது வெகுவேகமாகக் கைவினையாற்றும் அரக்கனால் (இராவணனால்) விடப்பட்ட சரக்கூட்டங்களால் நோகடிக்கப்பட்டார்கள். அந்த சக்தி இலக்குவனை ஊடுருவிப் பாய்ந்து (முதுகின் வழியே சென்று) பூமிக்குள் புகுந்து கொண்டது. (42)

(வானரர்களால் பிடுங்கக்கூட முடியாதிருந்த) அச்சம் விளைவிக்கும் அந்த சக்தியை போர்க்களத்தில், இலக்குவன் அடிபட்டுக் கிடந்ததால் மிகவும் சினமடைந்த இராமன், தன் கைகளால் பற்றி எடுத்து, தடவிக் கொடுத்து முறித்துப் போட்டார். (43)

இராமன், சக்தியைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தபோது, மகாபலசாலியான இராவணன், அவர் உடல் அங்கங்களின்மீது உயிரைப் பறிக்கவல்ல பாணங்களைப் பொழிந்து கொண்டிருந்தான். (44)

இராமன், தன்னைத் தாக்கிய பாணங்களைப் பொருட்படுத்தாமல், லட்சுமணனை இறுகக்கட்டித் தழுவிக் கொண்டார். அனுமானையும் சுக்ரீவனையும் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (45)

''வானரோத்தமர்களே! லட்சுமணனைச் சூழ்ந்து கொண்டு (அவனைப் பாதுகாத்துக் கொண்டு), இங்கேயே நில்லுங்கள். (46)

பராக்ரமஸ்ய காலோऽயம் ஸம்ப்ராப்தோ மே சிரேப்ஸித: ।
பாபாத்மாயம் த3ஶக்3ரீவோ வத்4யதாம் பாபநிஶ்சய: ॥
காங்க்ஷத: ஸ்தோககஸ்யேவ க4ர்மாந்தே மேக4த3ர்ஶநம் ॥ (47)

அஸ்மிந் முஹூர்தே ந சிராத் ஸத்யம் ப்ரதிஶ்ருணோமி வ: ।
அராவணமராமம் வா ஜக3த்3த்3ரக்ஷ்யத2 வாநரா: ॥ (48)

ராஜ்யநாஶம் வநே வாஸம் த3ண்ட3கே பரிதா4வநம் ।
வைதே3ஹ்யாஶ்ச பராமர்ஶம் ரக்ஷோபி4ஶ்ச ஸமாக3மம் ॥ (49)

ப்ராப்தம் து3:க2ம் மஹத்3கோ4ரம் க்லேஶம் ச நிரயோபமம் ।
அத்3ய ஸர்வமஹம் த்யக்ஷ்யே நிஹத்வா ராவணம் ரணே ॥ (50)

யத3ர்த2ம் வாநரம் ஸைந்யம் ஸமாநீதமித3ம் மயா ।
ஸுக்3ரீவஶ்ச க்ருதோ ராஜ்யே நிஹத்வா வாலிநம் ரணே ॥ (51)

யத3ர்த2ம் ஸாக3ர: க்ராந்த: ஸேதுர்ப3த்3த4ஶ்ச ஸாக3ரே ।
ஸோऽயமத்3ய ரணே பாபஶ்சக்ஷுர்விஷயமாக3த: ॥ (52)

சக்ஷுர்விஷயமாக3ம்ய நாயம் ஜீவிதுமர்ஹதி ।
த்3ருஷ்டிம் த்3ருஷ்டிவிஷஸ்யேவ ஸர்பஸ்ய மம ராவண: ॥ (53)

ஸ்வஸ்தா2: பஶ்யத து3ர்த4ர்ஷா யுத்3த4ம் வாநரபுங்க3வா: ।
ஆஸீநா: பர்வதாக்3ரேஷு மமேத3ம் ராவணஸ்ய ச ॥ (54)

அத்3ய ராமஸ்ய ராமத்வம் பஶ்யந்து மம ஸம்யுகே3 ।
த்ரயோ லோகா: ஸக3ந்த4ர்வா: ஸதே3வா: ஸர்ஷிசாரணா: ॥ (55)

அத்3ய கர்ம கரிஷ்யாமி யல்லோகா: ஸசராசரா: ।
ஸதே3வா: கத2யிஷ்யந்தி யாவத்3பூ4மிர்த4ரிஷ்யதி ॥
ஸமாக3ம்ய ஸதா3 லோகே யதா2 யுத்3த4ம் ப்ரவர்திதம் ॥ (56)

ஏவமுக்த்வா ஶிதைர்பா3ணைஸ்தப்தகாஞ்சநபூ4ஷணை: ।
ஆஜகா4ந த3ஶக்3ரீவம் ரணே ராம: ஸமாஹித: ॥ (57)

அத2 ப்ரதீ3ப்தைர்நாராசைர்முஸலைஶ்சாபி ராவண: ।
அப்4யவர்ஷத்ததா3 ராமம் தா4ராபி4ரிவ தோயத3: ॥ (58)

ராமராவணமுக்தாநாமந்யோந்யமபி4நிக்4நதாம் ।
ஶராணாம் ச ஶராணாம் ச ப3பூ4வ துமுல: ஸ்வந: ॥ (59)

தே பி4ந்நாஶ்ச விகீர்ணாஶ்ச ராமராவணயோ: ஶரா: ।
அந்தரிக்ஷாத் ப்ரதீ3ப்தாக்3ரா நிபேதுர்த4ரணீதலே ॥ (60)

தயோர்ஜ்யாதலநிர்கோ4ஷோ ராமராவணயோர்மஹாந் ।
த்ராஸந: ஸர்வபூ4தாநாம் ஸம்ப3பூ4வாத்3பு4தோபம: ॥ (61)

என்னுடைய பராக்கிரமத்தைக் காட்டவேண்டிய இந்தத் தருணத்திற்காக, நான் நீண்டகாலமாகக் காத்துக் கொண்டிருந்தேன். தீய எண்ணங்கள் உடையவனும் பாவமே உருவெடுத்து வந்தவனுமான இராவணன் கொல்லத்தக்கவன். 'கோடைக்காலம் எப்போது முடியும்? மாரிக்காலம் எப்போது துவங்கும்?' என்று ஏங்கிக் கொண்டிருக்கும் சாதகப் பறவைக்கு, ஆகாயத்தில் மேகம் காணப்பட்டாற்போல, நான் ஆசைப்பட்ட நேரம் வந்திருக்கிறது. (47)

வானரர்களே! இந்த வேளையில், நான் ஒரு சத்தியவாக்கை உறுதியாகக் கூறப் போகிறேன்:– வெகு விரைவில், இந்த உலகம், இராவணன் அற்றதாகவோ, இராமன் அற்றதாகவோ ஆகப் போவதை நீங்கள் காணப் போகிறீர்கள். (48)

எனக்குக் கிடைக்க வேண்டிய ஆட்சிப் பொறுப்பு கைநழுவிப் போனது; காட்டில், வாழ்க்கை; தண்டகாரண்யத்தில் இங்குமங்கும் அலைதல்; வைதேகியைத் தொட்டுத் தூக்கிக் கொண்டு போதல்; அரக்கர்களோடு சண்டை – இவ்வாறாக பொறுக்க முடியாத துக்கத்தையும் நரகவாசம் போன்ற கஷ்டங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இப்போது, போர்க்களத்தில் இராவணனைக் கொன்று, இந்த எல்லாத் துக்கங்களிலிருந்தும் விடுதலை பெறுவேன். (49,50)

எவன் காரணமாக, இந்த வானரப்படை என்னால் இங்கு அழைத்து வரப்பட்டதோ, போரில் வாலியைக் கொன்று சுக்ரீவன் அரியணையில் அமர்த்தப்பட்டானோ, எவன் காரணமாக, பெருங்கடலில் பாலம் கட்டப்பட்டு, கடல் கடந்து வரப்பட்டதோ, அந்தப் பாவி இப்போது என் கண்ணெதிரில் போர்க்களத்திற்கு வந்து நிற்கிறான். (51,52)

கண்களில் விஷத்தைக் கொண்டிருக்கும் ஒரு பாம்பின் பார்வையில் பட்டுவிட்டாற்போல என் பார்வையில் பட்டுவிட்ட இராவணன், இனி உயிரோடு இருக்கத்தக்கவன் அல்லன். (53)

வெல்லுதற்கரிய வானரோத்தமர்களே! மலையின் சிகரத்தில் சுகமாக உட்கார்ந்து கொண்டு, எனக்கும் இராவணனுக்குமிடையே இப்போது நடக்கப் போகும் சண்டையைப் பாருங்கள். (54)

கந்தர்வர்கள், தேவர்கள், முனிவர்கள், சாரணர்கள் உள்ளிட்ட மூன்றுலக மக்களும், இப்போது நான் நிகழ்த்தப் போகும் போரில், இராமனுடைய இராமத்தன்மையைக் கண்கூடாகக் காண்பார்களாக. (55)

அசையும்–அசையாப் பொருள்கள், தேவர்கள் மற்றும் உலக மக்கள் ஆகிய அனைவரும் ஒன்றுகூடி, இந்த மண்ணுலகம் நிலைத்திருக்கும்வரை எப்போதும் மக்கள் கூட்டத்தில் எதைச் சொல்லிச் சொல்லி வியந்து கொண்டிருப்பார்களோ, அத்தகைய அரிய போர்வினையை, இப்போது செய்யப் போகிறேன். (56)

இவ்வாறு கூறிவிட்டு, போரில் முழுக் கவனத்தைச் செலுத்திய இராமன், கூர்மையான, தரமான பொன் அணிகலன்கள் கொண்ட பாணங்களால் இராவணனைத் தாக்கினார். (57)

அப்போது, இராவணனும் அனற்கங்குகளெனத் தகிக்கும் நாராச பாணங்களாலும் உலக்கைகளாலும், மேகம் இடைவிடாது மழையைப் பொழிவது போல், இராமனை மூழ்கடித்தான். (58)

இராமனாலும் இராவணனாலும் செலுத்தப்பட்டு ஒன்றையொன்று தாக்கிக் கொண்ட மிக உயர்ந்த பாணங்களின் உரசலினால் பயங்கரமான ஓசை உண்டாயிற்று. (59)

இராம–இராவணர்களின் பொறி பறக்கும் முனைகளைக் கொண்ட பாணங்கள், முறிவடைந்து ஆகாயத்திலிருந்து சிதறியவைகளாகப் பூமியில் விழுந்தன. (60)

இராம–இராவணர்களின் நாணோசை வானை முட்டும் பேரொலியாக எழுந்து, எல்லா உயிர்ப் பிராணிகளுக்கும் அச்சமூட்டுவதாய், பிரமிக்க வைப்பதாக இருந்தது. (61)

ஸ கீர்யமாண: ஶரஜாலவ்ருஷ்டிபி4ர்–
மஹாத்மநா தீ3ப்தத4நுஷ்மதார்தி3த: ।
ப4யாத் ப்ரது3த்3ராவ ஸமேத்ய ராவணோ
யதா2நிலேநாபி4ஹதோ ப3லாஹக: ॥ (62)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகோநஶததம: ஸர்க3: ॥

த்3வ்யுத்தரஶததம: ஸர்க3:

லக்ஷ்மணஸஞ்ஜீவநம்

ஶக்த்யா விநிஹதம் த்3ருஷ்ட்வா ராவணேந ப3லீயஸா ।
லக்ஷ்மணம் ஸமரே ஶூரம் ருதி4ரௌக4பரிப்லுதம் ॥ (1)

ஸ த3த்த்வா துமுலம் யுத்3த4ம் ராவணஸ்ய து3ராத்மந: ।
விஸ்ருஜந்நேவ ப3ாணௌக4ாந் ஸுஷேணம் வாக்யமப்3ரவீத் ॥ (2)

ஏஷ ராவணவீர்யேண லக்ஷ்மண: பதித: க்ஷிதௌ ।
ஸர்பவத்3வேஷ்டதே வீரோ மம ஶோகமுதீ3ரயந் ॥ (3)

ஶோணிதார்த்3ரமிமம் வீரம் ப்ராணைரிஷ்டதமம் மம ।
பஶ்யதோ மம கா ஶக்திர்யோத்3து4ம் பர்யாகுலாத்மந: ॥ (4)

அயம் ஸ ஸமரஶ்லாகீ4 ப்4ராதா மே ஶுப4லக்ஷண: ।
யதி3 பஞ்சத்வமாபந்ந: ப்ராணைர்மே கிம் ஸுகே2ந ச ॥ (5)

லஜ்ஜதீவ ஹி மே வீர்யம் ப்4ரஶ்யதீவ கராத்3த4நு: ।
ஸாயகா வ்யவஸீத3ந்தி த்3ருஷ்டிர்ப3ாஷ்பவஶம் க3தா ॥ (6)

அவஸீத3ந்தி கா3த்ராணி ஸ்வப்நயாநே ந்ருணாமிவ ।
சிந்தா மே வர்த4தே தீவ்ரா முமூர்ஷா சோபஜாயதே ॥ (7)

ப்4ராதரம் நிஹதம் த்3ருஷ்ட்வா ராவணேந து3ராத்மநா ।
விநிஷ்டநந்தம் து3:கா2ர்தம் மர்மண்யபி4ஹதம் ப்4ருஶம் ॥ (8)

ராக4வோ ப்4ராதரம் த்3ருஷ்ட்வா ப்ரியம் ப்ராணம் ப3ஹிஸ்சரம் ।
து3:கே2ந மஹதாவிஷ்டோ த்4யாநஶோகபராயண: ॥
பரம் விஷாத3மாபந்நோ விலலாபாகுலேந்த்3ரிய: ॥ (9)

ந ஹி யுத்3தே4ந மே கார்யம் நைவ ப்ராணைர்ந ஸீதயா ।
ப்4ராதரம் நிஹதம் த்3ருஷ்ட்வா லக்ஷ்மணம் ரணபாம்ஸுஷு ॥ (10)

கிம் மே ராஜ்யேந கிம் ப்ராணைர்யுத்3தே4 கார்யம் ந வித்3யதே ।
யத்ராயம் நிஹத: ஶேதே ரணமூர்த4நி லக்ஷ்மண: ॥ (11)

பெருங்காற்றினால் தாக்கப்பட்ட மேகம் சிதறி ஓடுவதைப் போல, ஒளிவீசும் வில்லைக் கையிலேந்திய இராமபிரானின் அம்புமாரியைத் தாங்க முடியாத இராவணன், மிகவும் பயமடைந்து அங்கிருந்து ஓடிச் சென்றான். (62)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றிரண்டு

லட்சுமணனை உயிர்ப்பித்தல்!

மகாபலசாலியான இராவணன், சூரனான இலக்குவனைத் தன் சக்தியால் (வேலாயுதத்தால்) தாக்கித் தரையில் வீழ்த்திவிட்டான். இலக்குவன் ரத்த வெள்ளத்தில் கிடந்தான். இதைப் பார்த்த இராமன், தீயநெறியே உருக்கொண்டாற்போன்ற இராவணனுடன் அம்புமாரியைப் பொழிந்து கடுமையாகப் போர் புரிந்தார். அவ்வாறு போர் புரிந்துகொண்டிருக்கும் போதே சுஷேணனிடம் பின்வருமாறு கூறினார்— (1,2)

''வீரனான லட்சுமணன், இராவணனுடைய பராக்கிரமத்தால் பூமியில் வீழ்த்தப்பட்டு, (அடிபட்ட) சர்ப்பம் போல் துடிப்பதைக் கண்டு, என் துயரம் அதிகரிக்கிறது. (3)

என் உயிரினும் மிகப்பிரியமான இந்த வீரன் குருதி தோய்ந்து படுத்திருப்பதைக் கண்டு, என் உள்ளம் பதறுகிறது. இனிமேலும் போர் புரிவதற்கு என்னிடம் சக்தி ஏது? (4)

போரில் பேரார்வம் உடையவனும், பிறவியிலேயே நற்குணங்கள் அமையப் பெற்றவனுமான என்னுடைய இந்தத் தம்பி மரணமடைந்தானாகில், நான் உயிர் வாழ்வதாலோ சுகங்களைப் பெறுவதாலோ ஆகப்போவது என்ன? (எனக்கு உயிரும் தேவையில்லை; சுகங்களும் தேவையில்லை – என்றபடி.) இந்தச் சமயத்தில் என் வீரம் நாணமடைவது போலிருக்கிறது (என் வீரத்தால் லட்சுமணனைக் காப்பாற்ற முடியவில்லையே?); கையிலிருந்து வில் நழுவுகிறது; என்னுடைய பாணங்கள் சிதறி விழுகின்றன; என் கண்களில் கண்ணீர் பெருகுகிறது. (5,6)

கனவில் நடந்து செல்லும் ஒருவனுக்குக் கால்கள் தடுமாறுவதைப் போல என் அங்கங்கள் சோர்வடைகின்றன; என்னுடைய மனக்கவலையும் வளர்கிறது; தீயவனான இராவணனால் உயிர்நிலைகளில் தாக்கப்பட்டு, மூச்சுத் திணறிக் கொண்டிருப்பவனுமான சகோதரனைப் பார்க்கும்போது, எனக்கும் உயிரை விட்டுவிடும் எண்ணம் தோன்றுகிறது.'' (7,8)

(உடலுக்குள் கண்ணில் புலப்படாமல் இருக்கும் உயிரைப் போல்) உடலுக்கு வெளியே விளங்கும் உயிரைப் போல் பேரன்புக்குரிய சகோதரன் இலக்குவனை விசனிக்கத்தக்க இந்த நிலையில் பார்த்ததும், எல்லைகாண முடியாத துக்கத்தில் மூழ்கியவரும், சிந்தனையிலும் சோகத்திலும் ஆழ்ந்துவிட்டவருமான இராமன், மிகவும் வருத்தமடைந்து, புலன்கள் தடுமாற, புலம்பத் தொடங்கினார். (9)

போர்க்களப் புழுதியில் சகோதரன் லட்சுமணன் குற்றுயிராய்க் கிடப்பதைக் கண்ட பிறகு, இனிமேல் போர் செய்வதால் (போர் செய்து வெற்றி பெறுவதால்) எனக்கு ஆகவேண்டியது என்ன? உயிரோடு இருப்பதாலோ, சீதையைத் திரும்பப் பெறுவதாலோ, நான் என்ன சுகத்தை அடையப் போகிறேன்? லட்சுமணன் தாக்கப்பட்டு போர்க்களத்தில் சாய்ந்து கிடக்கிறான். இனியும் சண்டை போடுவதால் நான் அடையப் போவது எதுவும் இல்லை. (லட்சுமணன் இல்லாத வெற்றி, எனக்கு மகிழ்ச்சியைத் தராது.) இனி, ஆட்சியை அடைவதாலோ, உயிரை வைத்துக் கொண்டிருப்பதாலோ எனக்கு என்ன பயன்? (10,11)

தே3ஶே தே3ஶே கலத்ராணி தே3ஶே தே3ஶே ச பா3ந்த4வா: ।
தம் து தே3ஶம் ந பஶ்யாமி யத்ர ப்4ராதா ஸஹோத3ர: ॥ (12)

கிம் நு ராஜ்யேந து3ர்த4ர்ஷலக்ஷ்மணேந விநா மம ।
கத2ம் வக்ஷ்யாம்யஹம் த்வம்பா3ம் ஸுமித்ராம் புத்ரவத்ஸலாம் ॥ (13)

உபாலம்ப4ம் ந ஶக்ஷ்யாமி ஸோடு4ம் த3த்தம் ஸுமித்ரயா ।
கிம் நு வக்ஷ்யாமி கௌஸல்யாம் மாதரம் கிம் நு கைகயீம் ॥ (14)

ப4ரதம் கிம் நு வக்ஷ்யாமி ஶத்ருக்4நம் ச மஹாப3லம் ।
ஸஹ தேந வநம் யாதோ விநா தேநாக3த: கத2ம் ॥ (15)

இஹைவ மரணம் ஶ்ரேயோ ந து ப3ந்து4விக3ர்ஹணம் ।
கிம் மயா து3ஷ்க்ருதம் கர்ம க்ருதமந்யத்ர ஜந்மநி ॥
யேந மே த4ார்மிகோ ப்4ராதா நிஹதஶ்சாக்3ரத: ஸ்தி2த: ॥ (16)

ஹா ப்4ராதர்மநுஜஶ்ரேஷ்ட2 ஶூராணாம் ப்ரவர ப்ரபே4ா ।
ஏகாகீ கிம் து மாம் த்யக்த்வா பரலோகாய க3ச்ச2ஸி ॥ (17)

விலபந்தம் ச மாம் ப்4ராத: கிமர்த2ம் நாவபா4ஷஸே ।
உத்திஷ்ட2 பஶ்ய கிம் ஶேஷே தீ3நம் மாம் பஶ்ய சக்ஷுஷா ॥ (18)

ஶோகார்தஸ்ய ப்ரமத்தஸ்ய பர்வதேஷு வநேஷு ச ।
விஷண்ணஸ்ய மஹாபா3ஹோ ஸமாஶ்வாஸயிதா மம ॥ (19)

இத்யேவம் விலபந்தம் தம் ஶோகவிஹ்வலிதேந்த்3ரியம் ।
விவேஷ்டமாநம் கருணமுச்ச்2வஸந்தம் புந: புந: ॥
ராமமாஶ்வாஸயந் வீர: ஸுஷேணோ வாக்யமப்3ரவீத் ॥ (20)

ந ம்ருதோऽயம் மஹாபா3ஹோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த4ந: ।
ந சாஸ்ய விக்ருதம் வக்த்ரம் நாபி ஶ்யாவம் ந நிஷ்ப்ரப4ம் ॥ (21)

ஸுப்ரப4ம் ச ப்ரஸந்நம் ச முக2மஸ்யாபி4லக்ஷ்யதே ।
பத்3மரக்ததலௌ ஹஸ்தௌ ஸுப்ரஸந்நே ச லோசநே ॥ (22)

ஏவம் ந வித்3யதே ரூபம் க3தாஸூநாம் விஶாம்பதே ।
தீ3ர்கா4யுஷஸ்து யே மர்த்யாஸ்தேஷாம் து முக2மீத்3ருஶம் ॥ (23)

நாயம் ப்ரேதத்வமாபந்நோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த4ந: ।
மா விஷாத3ம் க்ருதா2 வீர ஸப்ராணோऽயமரிந்த3ம: ॥ (24)

ஆக்2யாஸ்யதே ப்ரஸுப்தஸ்ய ஸ்ரஸ்தகா3த்ரஸ்ய பூ4தலே ।
ஸோச்ச்2வாஸம் ஹ்ருத3யம் வீர கம்பமாநம் முஹுர்முஹு: ॥ (25)

எந்த நாட்டிலும் மனைவிகள் கிடைப்பார்கள்; எந்த நாட்டிலும் உற்றார்–உறவினர் கிடைப்பார்கள். ஆனால், எந்த ஆபத்திலும் கைவிடாத உற்ற துணையாக நிற்கும் உடன்பிறந்த சகோதரனை, நான் எந்த நாட்டிலும் கண்டிலேன். (12)

எதிர்கொள்ள முடியாத வீரம் படைத்த லட்சுமணன் இல்லாமல், நான் நாட்டை (அயோத்தியை) அடைந்து என்ன பயன்? புதல்வனிடம் பேரன்பு கொண்ட அன்னை சுமித்திரையிடம் நான் என்ன சொல்லுவேன்? (13)

சுமித்திரை என்மீது பொழியும் வசைமொழிகளை நான் எவ்வாறு தாங்கிக் கொள்வேன்? அன்னை கௌசல்யைக்கும் கைகேயிக்கும் நான் என்ன பதில் கூறுவேன்? (14)

பரதனும், மகாபலசாலியான சத்ருக்னனும், 'அவனுடன்கூட காட்டுக்குச் சென்ற நீங்கள் அவனில்லாமல் திரும்பி வந்தது எப்படி?' என்று கேட்டால், நான் என்ன பதில் சொல்லுவேன்? (15)

நான் மட்டும் திரும்பிச் சென்று உற்றார்–சுற்றாரின் ஏச்சுக்களைக் கேட்பதைக் காட்டிலும் இங்கேயே உயிரை விடுவதுதான் சாலச் சிறந்தது. அறநெறி தவறாத என் சகோதரன் என் கண்முன்னாலேயே கொல்லப்பட்டிருக்கிறான் – என்றால், நான் முற்பிறவிகளில் ஏதோ குற்றங்களைச் செய்திருக்க வேண்டும், அல்லவா? (16)

ஆ! சகோதரனே! ஆண் திலகமே! சூரர்களில் முதன்மையானவனே! ஐயனே! என்னை விட்டுவிட்டு நீ மட்டும் தனியாக மேலுலகம் செல்கிறாயே? (17)

புலம்பிக் கொண்டிருக்கும் சகோதரனான எனக்கு ஏன் பதில் சொல்லாமல் இருக்கிறாய்? ஏன் படுத்துக் கிடக்கிறாய்? எழுந்திரு; என்னுடன் பேசு; நொந்திருக்கும் என்னை, கண்களைத் திறந்து பார். (18)

சோகத்தால் பீடிக்கப்பட்டு, மனம் கலங்கி, துக்கம் தாங்காமல் மலைகளிலும் காடுகளிலும் நான் சுற்றித் திரிந்த காலத்தில், பெருந்தோளனே! எனக்குத் தைரியம் ஊட்டினாயே? இனி, எனக்கு யார் இருக்கிறார்? (19)

இவ்வாறு புலம்பி அரற்றிக் கொண்டிருப்பவரும், சோகத்தால் புலன்கள் கலங்கித் துடிப்பவரும், பரிதாப நிலையில் இருந்தவரும், தொடர்ச்சியாகப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தவருமான இராமனுக்கு ஆறுதல் கூற முற்பட்ட சுஷேணன் பின்வருமாறு கூறினான்— (20)

''தோள்வலி மிக்கவரே! திருமகள் அருளை வளர்க்கும் லட்சுமணன் மரணமடையவில்லை. இவருடைய முகத்தின் களை மாறவில்லை; நிறம் மாறவில்லை; ஒளியும் குன்றவில்லை. (21)

இவருடைய முகம் ஒளிவீசுவதாகவும் தெளிவுடனும் காணப்படுகிறது; தாமரை போல் செவ்வண்ண உள்ளங்கைகளுடன் இரு கரங்களும் விளங்குகின்றன; இரு கண்களும் தெளிவாக இருக்கின்றன. (22)

மாமன்னரே! உயிரை இழந்தவர்களின் தோற்றம் இவ்வாறு இருக்காது. நீண்ட ஆயுளைக் கொண்டவர்களின் முகம்தான் இப்படி இருக்கும். (23)

செந்திருவின் அருளைப் பொழியும் லட்சுமணன், உயிர் நீங்கிய நிலையை அடையவில்லை. வீரரே! எதிரிகளை அடக்குபவரான இவர் உயிரோடிருக்கிறார்; கவலை வேண்டாம். (24)

உடல் தாக்கப்பட்டு, தரையில் விழுந்து கிடக்கும் இவர், தூங்குவதைப் போல் மயங்கி இருக்கிறார் என்பதை, இதயத்திலிருந்து வெளிவரும் மூச்சுக்காற்றும், அடிக்கடி இதயம் அசைவதும் தெரிவிக்கின்றன.'' (25)

ஏவமுக்த்வா து வாக்யக்ஞ: ஸுஷேணோ ராக₄வம் வச: ।
ஸமீபஸ்த₂முவாசேத₃ம் ஹநுமந்தமபி₄த்வரந் ॥ (26)

ஸௌம்ய ஶீக்₄ரமிதோ க₃த்வா ஶைலமோஷதி₄பர்வதம் ।
பூர்வம் தே கதி₂தோ யோऽஸௌ வீர ஜாம்ப₃வதா ஶுப₄: ॥
த₃க்ஷிணே ஶிக₂ரே தஸ்ய ஜாதாமோஷதி₄மாநய ॥ (27)

விஶல்யகரணீம் நாம விஶல்யகரணீம் ஶுப₄ாம் ।
ஸவர்ணகரணீம் சாபி தத₂ா ஸஞ்ஜீவநீமபி ॥ (28)

ஸந்த₄ாநகரணீம் சாபி க₃த்வா ஶீக்₄ரமிஹாநய ।
ஸஞ்ஜீவநார்த₂ம் வீரஸ்ய லக்ஷ்மணஸ்ய மஹாத்மந: ॥ (29)

இத்யேவமுக்தோ ஹநுமாந் க₃த்வா ஔஷதி₄பர்வதம் ।
சிந்தாமப்₄யக₃மச்ச்₂ரீமாநஜாநம்ஸ்தாம் மஹௌஷதி₄ம் ॥ (30)

தஸ்ய பு₃த்₃தி₄: ஸமுத்பந்நா மாருதேரமிதௌஜஸ: ।
இத₃மேவ க₃மிஷ்யாமி க்₃ருஹீத்வா ஶிக₂ரம் கி₃ரே: ॥ (31)

அஸ்மிந் ஹி ஶிக₂ரே ஜாதாமோஷதீ₄ம் தாம் ஸுக₂ாவஹாம் ।
ப்ரதர்கேணாவக₃ச்ச₂ாமி ஸுஷேணோऽப்யேவமப்₃ரவீத் ॥ (32)

அக்₃ருஹ்ய யதி₃ க₃ச்ச₂ாமி விஶல்யகரணீமஹம் ।
காலாத்யயேந தோஷ: ஸ்யாத்₃வைக்லவ்யம் ச மஹத்₃ப₄வேத் ॥ (33)

இதி ஸஞ்சிந்த்ய ஹநுமாந் க₃த்வா க்ஷிப்ரம் மஹாப₃ல: ।
ஆஸாத்₃ய பர்வதஶ்ரேஷ்ட₂ம் த்ரி: ப்ரகம்ப்ய கி₃ரே: ஶிர: ॥ (34)

பு₂ல்லநாநாதருக₃ணம் ஸமுத்பாட்ய மஹாப₃ல: ।
க்₃ருஹீத்வா ஹரிஶார்தூ₃லோ ஹஸ்தாப்₄யாம் ஸமதோலயத் ॥ (35)

ஸ நீலமிவ ஜீமூதம் தோயபூர்ணம் நப₄:ஸ்த₂லாத் ।
ஆபபாத க்₃ருஹீத்வா து ஹநுமாஞ்ஶிக₂ரம் கி₃ரே: ॥ (36)

ஸமாக₃ம்ய மஹாவேக₃: ஸந்ந்யஸ்ய ஶிக₂ரம் கி₃ரே: ।
விஶ்ரம்ய கிஞ்சித்₃த₄நுமாந் ஸுஷேணமித₃மப்₃ரவீத் ॥ (37)

ஓஷதி₄ம் நாவக₃ச்ச₂ாமி தாமஹம் ஹரிபுங்க₃வ ।
தநி₃த₃ம் ஶிக₂ரம் க்ருத்ஸ்நம் கி₃ரேஸ்தஸ்யாஹ்ருதம் மயா ॥ (38)

ஏவம் கத₂யமாநம் தம் ப்ரஶஸ்ய பவநாத்மஜம் ।
ஸுஷேணோ வாநரஶ்ரேஷ்டோ₂ ஜக்₃ராஹோத்பாட்ய ஔஷதீ₄ம் ॥ (39)

விஸ்மிதாஸ்து ப₃பூ₄வுஸ்தே ரணே வாநரராக்ஷஸா: ।
த்₃ருஷ்ட்வா ஹநுமத: கர்ம ஸுரைரபி ஸுது₃ஷ்கரம் ॥ (40)

பேச்சுத் திறன் கொண்ட சுஷேணன், இவ்வாறு இராமனிடம் கூறிவிட்டு, சமீபத்திலிருந்த அனுமானைத் துரிதப்படுத்தும் விதமாகப் பின்வருமாறு கூறினான்— (26)

''ஐயனே! வீரனே! முன்னர் ஒரு சமயம், மங்களமான சஞ்சீவி பர்வதம் குறித்து உன்னிடம் விளக்கியிருக்கிறார். நீ இங்கிருந்து வெகுவிரைவாக அந்த மூலிகைகள் நிறைந்த மலைக்குச் சென்று, அதன் தென்புறச் சிகரத்தில் முளைத்திருக்கும் மூலிகையைக் கொண்டு வா. (27)

உடற்புண்களை ஆற்றி சுகத்தைத் தரும் விசல்யகரணி மற்றும் ஸவர்ணகரணி, சஞ்சீவனீ, ஸந்தானகரணீ ஆகிய மூலிகைகளை, வீரரும் மகாத்மாவுமான லட்சுமணனை உயிர்ப்பிப்பதற்காக, உடனே சென்று பறித்துக் கொண்டுவா.' (ஸவர்ணகரணி – தோலின் இயல்பான நிறத்தை திரும்பப் பெறச் செய்யும் மூலிகை; சஞ்ஜீவனி – மூர்ச்சையை நீக்கி சுயநினைவு அடைவிப்பது; ஸந்தானகரணீ – முறிந்து போன எலும்புகளை மூட்டுவது.) (28,29)

இவ்வாறு சொல்லப்பட்ட வீரத்திரு பொருந்திய அனுமான், பச்சிலை மருந்துச் செடிகளுள்ள (மகோதயகிரி) மருந்து மலைக்குச் சென்றார். ஆனால், நற்பயன் தரும் அந்தப் பச்சிலையை அடையாளம் காணமுடியாததால் கவலை கொண்டார். (அந்தப் பச்சிலை – என்று ஒருமையில் கூறப்பட்டிருப்பதால், சுஷேணன் கூறிய நால்வகைப் பச்சிலைகளில் ஒன்றைக்கூட அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை – என்று கொள்ளவேண்டும்.) (30)

அளவற்ற ஆற்றல் கொண்ட அவருக்கு, 'இந்த மலையின் (தென்பக்க) முகட்டையே கையில் எடுத்துக் கொண்டு சென்றால் என்ன?' என்ற எண்ணம் தோன்றியது. (31)

'சுகத்தைக் கொடுக்கக்கூடிய அந்தப் பச்சிலை, இந்தச் சிகரத்தில்தான் இருக்கவேண்டும் என்று அனுமானிக்கிறேன்; சுஷேணனும் அவ்வாறுதான் கூறினார். (32)

விசல்யகரணியை எடுத்துக் கொள்ளாமல் நான் சென்றால், காலம் கடந்த குற்றம் ஏற்படலாம். (நான் போர்க்களம் சென்று, சுஷேணனிடம் இன்னும் விளக்கமாகக் கேட்டுக் கொண்டு திரும்பி வந்து, விசல்யகரணியை எடுத்துக் கொண்டு, மீண்டும் திரும்பிச் செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும்?) காலதாமதத்தின் விளைவாகப் பேராபத்து ஏற்படலாம்.' (33)

இவ்வாறு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்த வானரோத்தமரும் மகாபலசாலியுமான அனுமான் மலர்ந்த மலர்களைக் கொண்ட பல்வகையான மரங்களையுடைய உத்தமமான அந்த மலையை வணங்கி, மலைச்சிகரத்தை (தலைப்பகுதியை) மூன்று தடவைகள் அசைத்து, இரு கைகளாலும் பெயர்த்தெடுத்து, புலிநிகர் வானரர் தூக்கிக் கொண்டார். (34,35)

நீருண்ட கார்மேகம் போல், அந்த மலையின் சிகரத்தைக் கையில் ஏந்திக்கொண்டு, அனுமான் ஆகாயமார்க்கமாகப் பறந்து சென்றார். (36)

ஆற்றல் மிக்கவரான அனுமான், இலங்கையை வந்தடைந்து, படைகளின் நடுவே மலைச்சிகரத்தை இறக்கி வைத்துவிட்டு, சிறிதுநேரம் இளைப்பாறிய பின், சுஷேணனைப் பார்த்துக் கூறினார்— (37)

''வானரோத்தமரே! (நீங்கள் சொன்ன) பச்சிலைகளை என்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால், மலையின் அந்தச் சிகரத்தையே முழுமையாகப் பெயர்த்துக் கொண்டு வந்து விட்டேன்!'' (38)

இவ்வாறு தெரிவித்த மாருதி மைந்தனைப் பாராட்டிவிட்டு, வானரோத்தமனான சுஷேணன், பச்சிலையைப் பறித்து எடுத்துக் கொண்டான். (39)

அப்போது போர்க்களத்திலிருந்த வானரர்களும் அரக்கர்களும், தேவர்களாலும் செய்ய இயலாத செயற்கரிய செயலை, அனுமான் செய்து முடித்ததைப் பார்த்து மிகவும் வியப்படைந்தார்கள். (40)

தத: ஸம்க்ஷோத$_3$யித்வா தாமோஷதீ$_4$ம் வாநரோத்தம: ।
லக்ஷ்மணஸ்ய த$_3$தௌ$_3$ நஸ்த: ஸுஷேண: ஸுமஹாத்$_3$யுதே: ॥ (41)

ஸஶல்யஸ்தாம் ஸமாக்$_4$ராய லக்ஷ்மண: பரவீரஹா ।
விஶல்யோ விருஜ: ஶீக்$_4$ரமுத$_3$திஷ்ட$_2$ந்மஹீதலாத் ॥ (42)

தமுத்தி$_2$தம் தே ஹரயோ பூ$_4$தலாத் ப்ரேக்ஷ்ய லக்ஷ்மணம் ।
ஸாது$_4$ ஸாத்$_4$விதி: ஸுப்ரீதா: ஸுஷேணம் ப்ரத்யபூஜயந் ॥ (43)

ஏஹ்யேஹீத்யப்$_3$ரவீத்$_3$ராமோ லக்ஷ்மணம் பரவீரஹா ।
ஸஸ்வஜே ஸ்நேஹகா$_3$ட$_4$ம் ச பா$_3$ஷ்பபர்யாகுலேக்ஷண: ॥ (44)

அப்$_3$ரவீச்ச பரிஷ்வஜ்ய ஸௌமித்ரிம் ராக$_4$வஸ்ததா$_3$ ।
தி$_3$ஷ்ட்யா த்வாம் வீர பஶ்யாமி மரணாத் புநராக$_3$தம் ॥ (45)

ந ஹி மே ஜீவிதேநார்த$_2$: ஸீதயா சாபி லக்ஷ்மண ।
கோ ஹி மே விஜயேநார்த$_2$ஸ்த்வயி பஞ்சத்வமாக$_3$தே ॥ (46)

இத்யேவம் வத$_3$தஸ்தஸ்ய ராக$_4$வஸ்ய மஹாத்மந: ।
கி$_2$ந்ந: ஶிதி$_2$லயா வாசா லக்ஷ்மணோ வாக்யமப்$_3$ரவீத் ॥ (47)

தாம் ப்ரதிக்ஞாம் ப்ரதிக்ஞாய புரா ஸத்யபராக்ரம ।
லகு$_4$: கஶ்சிதிவாஸத்த்வோ நைவம் வக்துமிஹார்ஹஸி ॥ (48)

ந ஹி ப்ரதிக்ஞாம் குர்வந்தி விததா$_2$ம் ஸாத$_4$வோऽநக$_4$ ।
லக்ஷணம் ஹி மஹத்த்வஸ்ய ப்ரதிக்ஞாபரிபாலநம் ॥ (49)

நைராஶ்யமுபக$_3$ந்தும் தே தத$_3$லம் மத்க்ருதேऽநக$_4$ ।
வதே$_4$ந ராவணஸ்யாத்$_3$ய ப்ரதிக்ஞாமநுபாலய ॥ (50)

ந ஜீவந் யாஸ்யதே ஶத்ருஸ்தவ பா$_3$ணபத$_2$ம் க$_3$த: ।
நர்த$_3$தஸ்தீக்ஷ்ணத$_3$ம்ஷ்ட்ரஸ்ய ஸிம்ஹஸ்யேவ மஹாக$_3$ஜ: ॥ (51)

அஹம் து வத$_4$மிச்சா$_2$மி ஶீக்$_3$ரமஸ்ய து$_3$ராத்மந: ।
யாவத$_3$ஸ்தம் ந யாத்யேஷ க்ருதகர்மா தி$_3$வாகர: ॥ (52)

யதி$_3$ வத$_4$மிச்ச$_2$ஸி ராவணஸ்ய ஸங்க்$_2$யே
யதி$_3$ ச க்ருதாம் த்வமிஹேச்ச$_2$ஸி ப்ரதிக்ஞாம் ।
யதி$_3$ தவ ராஜவராத்மஜாபி$_4$லாஷ:
குரு ச வசோ மம ஶீக்$_4$ரமத்$_3$ய வீர ॥ (53)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$வ்யுத்தரஶததம: ஸர்க$_3$: ॥

வானரப் பெருந்தகையான சுஷேணன், அந்தப் பச்சிலையைக் கசக்கி, அளவில்லாத பெருமை படைத்த இலக்குவனின் நாசியருகே காட்டினார். (41)

எதிரிகளை மாய்ப்பவனான இலக்குவனின் உடலில் அம்புகள் தைத்திருந்தன. பச்சிலையை நுகர்ந்தவுடன் அம்புகள் வெளியே விழுந்தன. அவன் புண்கள் இல்லாமலும் வேதனை இல்லாமலும் விரைவில் பூமியிலிருந்து எழுந்து நின்றான். (42)

தரையிலிருந்து லட்சுமணன் எழுந்து நின்றதைப் பார்த்த வானரர்கள், மிகவும் மனமகிழ்ச்சி அடைந்தவர்களாக, 'நன்று, நன்று' என்று சுஷேணனைப் பாராட்டினார்கள். (43)

எதிரியை மாய்ப்பவரான இராமன், இலக்குவனைப் பார்த்து, 'அருகில் வா' என்று அழைத்து, ஆனந்தக் கண்ணீர் கண்களில் வழிய அன்பு மிகுதியால், அவனை இறுகத் தழுவிக் கொண்டார். (44)

இலக்குவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, இராமன் கூறினார்— ''வீரனே! நற்பேற்றின் காரணமாக மரணத்தின் பிடியிலிருந்து திரும்பி வந்திருக்கும் உன்னை, நான் கண்ணால் காண்கிறேன். (45)

லட்சுமணா! நீ மட்டும் மரணத்தை அடைந்திருந்தாயேயானால், நான் உயிர் வாழ்வதில் என்ன பொருள் இருக்கிறது? சீதையை மீண்டும் பெற்றால்தான் என்ன? போரில் வெற்றி பெறுவதால்தான் என்ன பயன்?'' (46)

இவ்வாறு மகாத்மா இராமன் சொன்னவுடன், உடல் சோர்ந்திருந்த இலக்குவன் தடுமாறும் குரலில் பின்வருமாறு கூறினான்— (47)

''சத்தியத்தையே பராக்கிரமமாகக் கொண்டவரே! (இராவணனைக் கொன்று, இலங்கை அரசை வீடணனுக்குக் கொடுப்பதாக) முன்பு வாக்குறுதி அளித்துவிட்டு, சக்தியில்லாத ஒரு பாமரனைப் போல் தாங்கள் இவ்வாறு பேசக்கூடாது. (48)

மாசற்றவரே! சான்றோர்கள் தாங்கள் கொடுத்த உறுதிமொழியை வீண்போகச் செய்யமாட்டார்கள். உறுதிமொழியை நடத்திக் காட்டுவதே, மகான்களின் எல்லையற்ற பெருமைக்கு ஏற்ற இயல்பு. (49)

நற்குணசாலியே! என் காரணமாக விரக்தியை அடைந்தது போதும். இப்போது, இராவணனை வதம் செய்து வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்களாக. (50)

கூர்மையான பற்களையுடைய சிங்கத்தின் முன் ஒரு பெரிய யானை ஆரவாரமாகக் கர்ஜிப்பது (எவ்வாறு பயனற்றதோ, அதைப்) போல, தங்கள் பாணத்திற்கு இலக்காகிவிட்ட பகைவன் உயிருடன் திரும்பிப் போகமாட்டான். (51)

சூரியதேவன், பகல் முழுவதும் சுற்றித் திரியும் தன் பணியை முடித்துக் கொண்டு மேற்றிசையில் மறைவதற்குள், தீயவனான இராவணன் வதம் செய்யப்படுவதைக் காண விரும்புகிறேன். (52)

வீரரே! தாங்கள் போர் செய்து, இராவணனைக் கொல்ல விரும்பினால், (வீடணனுக்குக் கொடுக்கப்பட்ட) வாக்குறுதியை நிறைவேற்ற விரும்பினால், தங்களுக்கு ஜனககுமாரியிடம் அளவற்ற அன்பு இருக்குமானால், இப்போதே என் கோரிக்கையை ஏற்றருள்வீராக.'' (53)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

த்ர்யுத்தரஶததம: ஸர்க3:

ஐந்த்3ரரத2கேதுபாதநம்

லக்ஷ்மணேந து தத்3வாக்யமுக்தம் ஶ்ருத்வா ஸ ராக4வ: ।
ஸந்த3தே4 பரவீரக்4நோ த4நுராத3ாய வீர்யவாந் ॥
ராவணாய ஶராந் கோ4ராந் விஸஸர்ஜ சமூமுகே2 ॥ (1)

அத2ாந்யம் ரத2மாருஹ்ய ராவணோ ராக்ஷஸாதி4ப: ।
அப்4யத்3ரவத காகுத்ஸ்த2ம் ஸ்வர்ப4ாநுரிவ ப4ாஸ்கரம் ॥ (2)

த3ஶக்3ரீவோ ரத2ஸ்த2ஸ்து ராமம் வஜ்ரோபமை: ஶரை: ।
ஆஜக4ாந மஹாகோ4ரைர்த4ராபி4ரிவ தோயத3: ॥ (3)

தீ3ப்தபாவகஸங்காஶை: ஶரை: காஞ்சநபூ4ஷணை: ।
நிர்பி3பே4த3 ரணே ராமோ த3ஶக்3ரீவம் ஸமாஹிதம் ॥ (4)

பூ4மௌ ஸ்தி2தஸ்ய ராமஸ்ய ரத2ஸ்த2ஸ்ய ச ரக்ஷஸ: ।
ந ஸமம் யுத்3த4மித்யாஹுர்தே3வக3ந்த4ர்வத3ாநவா: ॥ (5)

ததோ தே3வவர: ஶ்ரீமாஞ்ஶ்ருத்வா தேஷாம் வசோऽம்ருதம் ।
ஆஹூய மாதலிம் ஶக்ரோ வசநம் சேத3மப்3ரவீத் ॥ (6)

ரதே2ந மம பூ4மிஷ்ட2ம் ஶீக்4ரம் யாஹி ரகூ4த்தமம் ।
மாதலே பூ4தலம் யாத: குரு தே3வஹிதம் மஹத் ॥ (7)

இத்யுக்தோ தே3வராஜேந மாதலிர்தே3வஸாரதி2: ।
ப்ரணம்ய ஶிரஸா தே3வம் ததோ வசநமப்3ரவீத் ॥ (8)

ஶீக்4ரம் யாஸ்யாமி தே3வேந்த்3ர ஸாரத்2யம் ச கரோம்யஹம் ।
ததோ ஹயைச்ச ஸம்யோஜ்ய ஹரிதை: ஸ்யந்த3நோத்தமம் ॥ (9)

தத: காஞ்சநசித்ராங்க3: கிங்கிணீஶதபூ4ஷித: ।
தருணாதி3த்யஸங்காஶோ வைடூ3ர்யமயகூப3ர: ॥ (10)

ஸத3ஶ்வை: காஞ்சநாபீடை3ர்யுக்த: ஶ்வேதப்ரகீர்ணகை: ।
ஹரிபி4: ஸூர்யஸங்காஶைர்ஹேமஜாலவிபூ4ஷிதை: ॥ (11)

ருக்மவேணுத்4வஜ: ஶ்ரீமாந் தே3வராஜரதோ2 வர: ।
தே3வராஜேந ஸந்தி3ஷ்டோ ரத2மாருஹ்ய மாதலி: ॥
அப்4யவர்தத காகுத்ஸ்த2மவதீர்ய த்ரிவிஷ்டபாத் ॥ (12)

அப்3ரவீச்ச தத3ா ராமம் ஸப்ரதோதோ3 ரதே2 ஸ்தி2த: ।
ப்ராஞ்ஜலிர்மாதலிர்வாக்யம் ஸஹஸ்ராக்ஷஸ்ய ஸாரதி2: ॥ (13)

ஸர்க்கம் : நூற்று மூன்று

இந்திரனுடைய தேர் வந்தது!

எதிரிகளை மாய்ப்பவரும் மாவீரருமான இராமன், லட்சுமணன் கூறிய சொற்களை ஏற்றுக்கொண்டு, வில்லைக் கையிலெடுத்து பாணங்களைத் தொடுத்தார். போர்முனையில், இராவணனைக் குறிவைத்துப் பயங்கரமான பாணங்களைச் செலுத்தினார். (1)

(முதலில் ஏறியிருந்த தேரின் பாகனும் குதிரைகளும் மாய்க்கப்பட்டதால்,) அரக்க மன்னான இராவணன், வேறொரு தேரில் ஏறிக்கொண்டு, சூரியனை விழுங்கப் போகும் ராகுவைப் போல, இராமனை எதிர்த்து வந்தான். (2)

தேரிலிருந்த பத்துத்தலை இராவணன், கரியமேகம் இடைவிடாது மழையைப் பொழிவது போல, வஜ்ராயுதத்திற்கு நிகரான அழிவுச் சக்தி படைத்த பாணங்களால் இராமனைத் தாக்கினான். (3)

போரில் முழு மனத்தைச் செலுத்தியிருந்த இராவணனை, பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளும் கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போன்றவைகளுமான பாணங்களால் துளைத்தெடுத்தார். (4)

'இராமன், தரையில் நின்றுகொண்டும், இராவணன் தேரில் இருந்துகொண்டும் போர் செய்வது பொருத்தமாக இல்லை' என்று, (வானத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த) தேவ–கந்தர்வ–அசுரர்கள் சொன்னார்கள். (5)

அமரர்களில் மிக உயர்ந்தவனும், சகல சுக போகங்களையும் அனுபவிப்பவனுமான இந்திரன், அவர்கள் கூறிய அமுதமொழியைக் கேட்டு, மாதலியை (தேரோட்டியை) அழைப்பித்து, பின்வருமாறு கூறினான்— (6)

''மாதலி! என்னுடைய தேருடன் விரைந்து சென்று, பூமியில் நின்று போர்செய்து கொண்டிருக்கும் இராமபிரானை அடைவாயாக. மண்ணுலகத்திற்குச் சென்று, தேவர்களுக்கு அளவற்ற நன்மையைச் செய்வாயாக.'' (7)

இவ்வாறு அமரர்வேந்தனால் சொல்லப்பட்ட தேவசாரதியான மாதலி, தலைகுனிந்து வணங்கி தேவர் மன்னனிடம் இவ்வாறு கூறினான்— ''(தங்கள் சொற்படி) விரைவில் போர்க்களம் செல்கிறேன். தேவேந்திரரே! (இராமனுக்குத்) தேரோட்டியாகவும் பணி செய்கிறேன்.'' உடனே, பச்சை வண்ணக் குதிரைகளை மிகச்சிறந்த ரதத்தில் பூட்டினான். (8,9)

தேவேந்திரனின் அந்தத் தேரின் பாகங்கள், பலவகையான பொன்வேலைப்பாடுகளால் பொலிவுற்று விளங்கின; நூற்றுக்கணக்கான சிறு மணிகள் பொருத்தப்பட்டிருந்தன; உதயசூரியனைப் போல் கண்ணுக்கினிய செவ்வொளியை வீசிக்கொண்டிருந்தது; ஏர்க்கால்களில் வைடூர்யம் இழைக்கப்பட்டிருந்தது; தேரில் பூட்டப்பட்ட சிறந்த குதிரைகள் பொன் தலையணி பூண்டு, வெள்ளைப் புள்ளிகள் விரவிய பச்சை வண்ணத்துடன், சூரியனைப் போல் ஒளிவீசுபவைகளாக பொன் அணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன; தேரின் கொடி தங்கக் கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது. தேவராஜனால் கட்டளையிடப்பட்ட மாதலி, உத்தமமான அந்தத் தேரில் ஏறிக்கொண்டு, வானுலகிலிருந்து இறங்கி காகுத்தனை வந்தடைந்தான். (10–12)

ஆயிரங்கண்களுடைய இந்திரனுடைய தேரோட்டியான மாதலி, சவுக்குடன் தேரில் நின்றவாறே கைகளைக் கூப்பிக் கொண்டு, இராமனை நோக்கி விண்ணப்பித்துக் கொண்டான்— (13)

ஸஹஸ்ராக்ஷேண காகுத்ஸ்த$_{2}$ ரதே$_{2}$ாऽயம் விஜயாய தே ।
த$_{3}$த்தஸ்தவ மஹாஸத்த்வ ஸ்ரீமஞ்ஶத்ருநிப$_{3}$ர்ஹண ॥ (14)

இத$_{3}$மைந்த்$_{3}$ரம் மஹச்சாபம் கவசம் சாக்$_{3}$நிஸந்நிப$_{4}$ம் ।
ஶராஶ்சாதி$_{3}$த்யஸங்காஶா: ஶக்திஶ்ச விமலா ஶிதா ॥ (15)

ஆருஹ்யேமம் ரத$_{2}$ம் வீர ராக்ஷஸம் ஜஹி ராவணம் ।
மயா ஸாரதி$_{2}$நா ராஜந் மஹேந்த்$_{3}$ர இவ த$_{3}$ாநவாந் ॥ (16)

இத்யுக்த: ஸம்பரிக்ரம்ய ரத$_{2}$ம் ஸமபி$_{4}$வாத்$_{3}$ய ச ।
ஆருரோஹ தத$_{3}$ா ராமோ லோகாந்(ல்)லக்ஷ்ம்யா விராஜயந் ॥ (17)

தத்$_{3}$ப$_{3}$பூ$_{4}$வாத்$_{3}$பு$_{4}$தம் யுத்$_{3}$த$_{4}$ம் துமுலம் ரோமஹர்ஷணம் ।
ராமஸ்ய ச மஹாப$_{3}$ாஹோ ராவணஸ்ய ச ரக்ஷஸ: ॥ (18)

ஸ க$_{3}$ாந்த$_{4}$ர்வேண க$_{3}$ாந்த$_{4}$ர்வம் தை$_{3}$வம் தை$_{3}$வேந ராக$_{4}$வ: ।
அஸ்த்ரம் ராக்ஷஸராஜஸ்ய ஜக$_{4}$ாந பரமாஸ்த்ரவித் ॥ (19)

அஸ்த்ரம் து பரமம் கே$_{4}$ாரம் ராக்ஷஸம் ராக்ஷஸாதி$_{4}$ப: ।
ஸஸர்ஜ பரமக்ருத்$_{3}$த$_{4}$: புநரேவ நிசாஶர: ॥ (20)

தே ராவணத$_{4}$நுர்முக்தா: ஶரா: காஞ்சநபூ$_{4}$ஷணா: ।
அப்$_{4}$யவர்தந்த காகுத்ஸ்த$_{2}$ம் ஸர்பா பூ$_{4}$த்வா மஹாவிஷா: ॥ (21)

தே தீ$_{3}$ப்தவத$_{3}$நா தீ$_{3}$ப்தம் வமந்தோ ஜ்வலநம் முகை$_{2}$: ।
ராமமேவாப்$_{4}$யவர்தந்த வ்யாதி$_{3}$தாஸ்யா ப$_{4}$யாநகா: ॥ (22)

தைர்வாஸுகிஸமஸ்பர்ஶைர்தீ$_{3}$ப்தபே$_{4}$ாகை$_{3}$ர்மஹாவிஷை: ।
தி$_{3}$ஶஶ்ச ஸந்ததா: ஸர்வா: ப்ரதி$_{3}$ஶஶ்ச ஸமாவ்ருதா: ॥ (23)

தாந் த்$_{3}$ருஷ்ட்வா பந்நக$_{3}$ாந் ராம: ஸமாபதத ஆஹவே ।
அஸ்த்ரம் க$_{3}$ாருத்மதம் கே$_{4}$ாரம் ப்ராது$_{3}$ஶ்சக்ரே ப$_{4}$யாவஹம் ॥ (24)

தே ராக$_{4}$வஶரா முக்தா ருக்மபுங்க$_{2}$ா: ஶிகி$_{2}$ப்ரப$_{4}$ா: ।
ஸுபர்ணா: காஞ்சநா பூ$_{4}$த்வா விசேரு: ஸர்பஶத்ரவ: ॥ (25)

தே தாந் ஸர்வாஞ்ஶராஞ்ஜக்$_{4}$நு: ஸர்பரூபாந் மஹாஜவாந் ।
ஸுபர்ணரூபா ராமஸ்ய விஶிக$_{2}$ா: காமரூபிண: ॥ (26)

அஸ்த்ரே ப்ரதிஹதே க்ருத்$_{3}$தே$_{4}$ா ராவணோ ராக்ஷஸாதி$_{4}$ப: ।
அப்$_{4}$யவர்ஷத்தத$_{3}$ா ராமம் கே$_{4}$ாராபி$_{4}$: ஶரவ்ருஷ்டிபி$_{4}$: ॥ (27)

தத: ஶரஸஹஸ்ரேண ராமமக்லிஷ்டகாரிணம் ।
அர்த$_{3}$யித்வா ஶரௌகே$_{4}$ண மாதலிம் ப்ரத்யவித்$_{4}$யத ॥ (28)

''காகுத்தரே! எதிரிகளை அடக்குபவரே! பேராற்றல் உடையவரே! எல்லா மகிமைகளும் பொருந்தியவரே! இந்த ரதம், தங்கள் வெற்றியைக் கோரும் தேவேந்திரனால் தங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. (14)

இந்திரனைத் தேவதையாகவுடைய பெருமை மிகுந்த இந்த வில்லும், அக்னியைப் போல் ஒளிவீசும் கவசமும், சூரியனைப் போல் தகிக்கும் பாணங்களும், தோல்வி என்ற மாசுபடியாததும் கூர்மையானதுமான இந்த சக்தியாயுதமும் தங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன. (15)

வீரரே! மன்னரே! இந்த ரதத்திற்கு நான்தான் சாரதி. என்னுடன் இந்தத் தேரில் ஏறி வீற்றிருந்து, தேவேந்திரன் அசுரர்களை வெற்றி கொண்டது போல, அரக்கன் இராவணனை மாய்ப்பீர்களாக.'' (16)

இவ்வாறு தெரிவிக்கப்பட்டவுடன், தன் ஆன்மப் பொலிவினால் உலகங்களைப் பிரகாசிக்கச் செய்யும் இராமன், அந்த ரதத்தைப் பக்தியுடன் வலம் வந்து, விழுந்து வணங்கியபின் அதில் ஏறிக்கொண்டார். (17)

பெருந்தோளரான இராமனுக்கும் அரக்கனான இராவணனுக்குமிடையே நடந்த இரு தேராளிகள் போர், உரோமச் சிலிர்ப்பை உண்டாக்குவதாகவும் இதற்கு முன்னர் நிகழ்ந்திராத வகையிலும் அமைந்தது. (18)

சிறந்த அஸ்திரங்களின் நுட்பங்களை அறிந்தவரான இராமன், இராக்கத மன்னன் செலுத்திய கந்தர்வாஸ்திரத்தைக் கந்தர்வாஸ்திரத்தாலும், தெய்விக அஸ்திரத்தைத் தெய்விக அஸ்திரத்தாலும் அழித்தொழித்தார். (19)

அதைக் கண்டு மிகவும் கோபங்கொண்ட அரக்கனான இராவணன் மிகக்கொடியதான ராக்ஷஸாஸ்திரத்தை மறுபடியும் பிரயோகித்தான். இராவணனுடைய வில்லிலிருந்து விடுக்கப்பட்ட பொன் வேலைப்பாடுகள் அமைந்த அந்த பாணங்கள், உயிரைப் பறிக்கும் விஷத்தையுடைய பாம்புகளாக மாறி, இராமனைத் தாக்கின. (20,21)

பயங்கரமாக வாயைப் பிளந்துகொண்டு, அனற்பிழம்பாய் ஜொலிக்கும் வாயிலிருந்து நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்த அவைகள் எல்லாம் இராமனையே சென்று தாக்கின. (22)

அந்த சர்ப்ப பாணங்களின் தீண்டுதல், வாசுகியினுடைய தீண்டுதலைப் போல் பொறுக்க முடியாததாக இருந்தது; அந்த சர்ப்பங்களின் படங்கள் கனன்று கொண்டிருந்தன; கொடூரமான விஷத்தையுடைய அந்த பாணங்களால் எல்லாத் திசைகளும் மூலைகளும் மூடப்பட்டன. (23)

சர்ப்ப பாணங்கள்,வெள்ளமென எதிர்த்து வருவதைக் கண்டு, இராமன் போர் செய்வதில் கவனம் செலுத்தி, பயங்கரமானதும் அச்சம் விளைவிப்பதுமான (கருடனை தேவதையாகக் கொண்ட மந்திரங்களால் தெய்விக சக்தி ஊட்டப்பட்ட) காருடாஸ்திரத்தைச் செலுத்தினார். (24)

இராமனுடைய வில்லிலிருந்து விடுக்கப்பட்ட, பொற்சிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட, அனலைப் போல் தகிக்கும் ஒளிகொண்ட பாணங்கள், பாம்புகளின் பகையாகிய பொன்வண்ணக் கருடர்களாகி எங்கும் சுற்றித் திரிந்தன. இராமன் விரும்பியபடி உருவம் எடுக்க வல்லனவும் கருட உருவம் கொண்டிருந்தவையுமான அந்த அம்புகள், இராவணனால் ஏவப்பட்ட மகாசக்தி கொண்ட சர்ப்ப உருவ பாணங்கள் அனைத்தையும் கொன்றொழித்துத் தீர்த்தன. (25,26)

அரக்க மன்னனான இராவணன், தான் செலுத்திய அஸ்திரம் அழிக்கப்பட்டதைக் கண்டதும் மிகவும் கோபங்கொண்டு, கொடிய அம்புமாரியை இராமன்மேல் பொழிந்தான். எவ்வளவு கடினமான வேலையையும் அநாயாசமாகச் செய்யவல்ல இராமனை, கணக்கிலடங்காத பாணங்களால் நோகச் செய்துவிட்டு, அம்புக்கூட்டத்தால் மாதலியைத் தாக்கினான். (27,28)

சிச்சே$_2$த$_3$ கேதுமுத்$_3$தி$_3$ஶ்ய ஶரேணைகேந ராவண: ।
பாதயித்வா ரதே$_2$ாபஸ்தே$_2$ ரத$_2$ாத் கேதும் ச காஞ்சநம் ॥
ஐந்த்$_3$ராநபி ஜக$_4$ாநாஸ்வாஞ்ஶரஜாலேந ராவண: ॥ (29)

தத்$_3$த்$_3$ருஷ்ட்வா ஸுமஹத் கர்ம ராவணஸ்ய து$_3$ராத்மந: ।
விஷேது$_3$ர்தே$_3$வக$_3$ந்த$_4$ர்வா த$_3$ாநவாஸ்சாரணை: ஸஹ ॥ (30)

ராமமார்தம் ததா$_3$ த்$_3$ருஷ்ட்வா ஸித்$_3$த$_4$ாஶ்ச பரமர்ஷய: ।
வ்யதி$_2$தா: வாநரேந்த்$_3$ராஶ்ச ப$_3$பூ$_4$வு: ஸவிபீ$_4$ஷணா: ॥ (31)

ராமசந்த்$_3$ரமஸம் த்$_3$ருஷ்ட்வா க்$_3$ரஸ்தம் ராவணராஹுணா ।
ப்ராஜாபத்யம் ச நக்ஷத்ரம் ரோஹிணீம் ஶஶிந: ப்ரியாம் ॥
ஸமாக்ரம்ய பு$_3$த$_4$ஸ்தஸ்தௌ$_2$ ப்ரஜாநாமஶுப$_4$ாவஹ: ॥ (32)

ஸதூ$_4$மபரிவ்ருத்தோர்மி: ப்ரஜ்வலந்நிவ ஸாக$_3$ர: ।
உத்பபாத ததா$_3$ க்ருத்$_3$த$_4$: ஸ்ப்ருஶந்நிவ தி$_3$வாகரம் ॥ (33)

ஶஸ்த்ரவர்ண: ஸுபருஷோ மந்த$_3$ரஶ்மிர்தி$_3$வாகர: ।
அத்$_3$ருஶ்யத கப$_3$ந்த$_4$ாங்க: ஸம்ஸக்தோ தூ$_4$மகேதுநா ॥ (34)

கோஸலாநாம் ச நக்ஷத்ரம் வ்யக்தமிந்த்$_3$ராக்$_3$நிதை$_3$வதம் ।
ஆக்ரம்யாங்க$_3$ாரகஸ்தஸ்தௌ$_2$ விஶாக$_2$ாமபி சாம்ப$_3$ரே ॥ (35)

த$_3$ஶாஸ்யோ விம்ஶதிபு$_4$ஜ: ப்ரக்$_3$ருஹீதஶராஸந: ।
அத்$_3$ருஶ்யத த$_3$ஶக்$_3$ரீவோ மைநாக இவ பர்வத: ॥ (36)

நிரஸ்யமாநோ ராமஸ்து த$_3$ஶக்$_3$ரீவேண ரக்ஷஸா ।
நாஶக்நோத$_3$பி$_4$ஸந்த$_4$ாதும் ஸாயகாந் ரணமூர்த$_4$நி ॥ (37)

ஸ க்ருத்வா ப்$_4$ருகுடிம் க்ருத்$_3$த$_4$: கிஞ்சித் ஸம்ரக்தலோசந: ।
ஜகா$_3$ம ஸுமஹாக்ரோத$_4$ம் நிர்த$_3$ஹந்நிவ சக்ஷுஷா ॥ (38)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரயுத்தரஶததம: ஸர்க$_3$: ॥

சதுருத்தரஶததம: ஸர்க$_3$:

ராவணஶூலப$_4$ங்க$_3$:

தஸ்ய க்ருத்$_3$த$_4$ஸ்ய வத$_3$நம் த்$_3$ருஷ்ட்வா ராமஸ்ய தீ$_4$மத: ।
ஸர்வபூ$_4$தாநி வித்ரேஸு: ப்ராகம்பத ச மேதி$_3$நீ ॥ (1)

(இந்திரனால் கொடுக்கப்பட்டிருந்த தேரின்) கொடியை ஒரே பாணத்தால் துண்டித்த இராவணன், துண்டிக்கப்பட்டதும் பொன்மயமானதுமான அந்தக் கொடியைத் தேர்த்தட்டில் வீழ்த்தி, இடைவிடாது அம்புகளைச் செலுத்தி, இந்திர ரதத்தின் குதிரைகளையும் காயப்படுத்தினான். (29)

தீயவனான இராவணன், செயற்கரிய அச்செயலைச் செய்ததைக் கண்டு, சாரணர்கள், தேவர்கள், கந்தர்வர்கள், அசுரர்கள் ஆகியோர் மிகவும் கவலை அடைந்தார்கள். (30)

அப்போது, இராமன் மிகவும் துன்பநிலையில் இருப்பதைப் பார்த்து, சித்தர்களும் மாமுனிவர்களும் வீடணனும் வானரோத்தமர்களும் மனக்கலக்கமடைந்தார்கள். (31)

இராமன் என்ற சந்திரனை, இராவணன் என்ற ராகு பீடித்திருப்பதைப் பார்த்த புதன் என்ற கோள், சந்திரனுக்குப் பிரியமான பிரஜாபதியை அதிதேவதையாகவுடைய ரோகிணி என்ற தாரகையைப் பலாத்காரமாகக் கைவசப்படுத்தி, மக்களுக்குத் தீயபயனை விளைவிப்பவனானான். (சந்திரன் சுதந்திரமாக இருந்தவரையில், புதனால், தான் விரும்பிய ரோகிணியை அடைய முடியவில்லை. ராகுவினால் பீடிக்கப்பட்ட சந்திரன், தன்னை எதிர்க்க முடியாததால், ரோகிணியைக் கைப்பற்றினான், புதன். இந்தக் கோள்நிலை மக்களுக்குத் தீயபயனைத் தரக்கூடியது.) (32)

பெருங்கடல் கொந்தளித்தது; அதனால் மிகவும் கொதிப்படைந்து அலையலையாய் புகைக்கூட்டத்தை வெளிப்படுத்தி, வானத்துக் கதிரவனையே தொட்டுவிடுவதுபோல மேலே பாய்ந்து சென்றது. (33)

ஆதித்யன், கத்தியைப் போல் கரியவண்ணம் ஏற்று ஒளி மழுங்கிப் போயிற்று; அதில், தலையில்லாத முண்டம் காணப்பட்டது; தூமகேது, சூரியனைப் பற்றிக் கொண்டது. (34)

இந்திரனையும் அக்னியையும் தேவதைகளாகக் கொண்ட விசாக நட்சத்திரம், கோசல தேசத்தவர்களுக்கு (இக்ஷ்வாகு பரம்பரையினருக்கு) உரியது. அந்த நட்சத்திரத்தை, ஆகாயத்தில் செவ்வாய் கிரகம் பற்றிக் கொண்டு நின்றது. (35)

பத்துத் தலைகளும் இருபது கைகளும் உடைய மாபெரும் கரிய மேனியைக் கொண்ட இராவணன், கைகளில் வில்லை ஏந்தி, மைநாக பர்வதம் போல் தோற்றமளித்தான். (36)

அரக்கனான இராவணன், போர்முனையில் நொடிப்பொழுதுகூட இடைவிடாது அம்புகளைப் பொழிந்ததால், இராமனால் (அம்புறாத்தூணியிலிருந்து) பாணங்களை எடுத்து வில்லில் தொடுக்கக்கூட முடியவில்லை. அப்போது, இராமனிடம் கோபக்குறிகள் தோன்றலாயின. புருவங்களை நெறித்தார்; கண்கள் சற்றே சிவந்தன. தன் பார்வையாலேயே எரித்து விடுபவர் போல எல்லை காண முடியாத கோபம் கொண்டார். (37,38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று நான்கு

இராவணனின் சூலத்தை அழித்தல்!

அளவுகடந்த கோபங்கொண்ட பேரறிவாளரான இராமனின் முகத்தைப் பார்த்து, எல்லா உயிர்ப் பிராணிகளும் நடுநடுங்கின; பூமியும் கிடுகிடுத்தது. (1)

ஸிம்ஹஶார்தூ$_3$லவாஞ்ஶைல: ஸஞ்சசால சலத்$_3$ரும: ।
ப$_3$பூ$_4$வ சாதிக்ஷுபி$_4$த: ஸமுத்$_3$ர: ஸரிதாம் பதி: ॥ (2)

க$_2$கா$_2$ஶ்ச க$_2$ரநிர்கே$_4$ஷா க$_3$க$_3$நே பருஷா க$_4$நா: ।
ஔத்பாதிகாநி நர்த$_3$ந்த: ஸமந்தாத் பரிசக்ரமு: ॥ (3)

ராமம் த்$_3$ருஷ்ட்வா ஸுஸங்க்ருத்$_3$த$_4$முத்பாதாம்ஶ்ச ஸுதா$_3$ருணாந் ।
வித்ரேஸு: ஸர்வபூ$_4$தாநி ராவணஸ்யாப$_4$வத்$_3$ப$_4$யம் ॥ (4)

விமாநஸ்தா$_2$ஸ்ததா$_3$ தே$_3$வா க$_3$ந்த$_4$ர்வாஶ்ச மஹோரகா$_3$: ।
ருஷிதா$_3$நவதை$_3$த்யாஶ்ச க$_3$ருத்மந்தஶ்ச கே$_2$சரா: ॥ (5)

த$_3$த்$_3$ருஶுஸ்தே மஹாயுத்$_3$த$_4$ம் லோகஸம்வர்தஸம்ஸ்தி$_2$தம் ।
நாநாப்ரஹரணைர்பீ$_4$மை: ஶூரயோ: ஸம்ப்ரயுத்$_4$யதோ: ॥ (6)

ஊசு: ஸுராஸுரா: ஸர்வே ததா$_3$ விக்$_3$ரஹமாக$_3$தா: ।
ப்ரேக்ஷமாணா மஹத்$_3$யுத்$_3$த$_4$ம் வாக்யம் ப$_4$க்த்யா ப்ரஹ்ருஷ்டவத் ॥ (7)

த$_3$ஶக்$_3$ரீவம் ஜயேத்யாஹுரஸுரா: ஸமவஸ்தி$_2$தா: ।
தே$_3$வா ராமமதோ$_2$சுஸ்தே த்வம் ஜயேதி புந: புந: ॥ (8)

ஏதஸ்மிந்நந்தரே க்ரோதா$_4$த்$_3$ராக$_4$வஸ்ய ஸ ராவண: ।
ப்ரஹர்துகாமோ து$_3$ஷ்டாத்மா ஸ்ப்ருஶந் ப்ரஹரணம் மஹத் ॥ (9)

வஜ்ரஸாரம் மஹாநாத$_3$ம் ஸர்வஶத்ருநிப$_3$ர்ஹணம் ।
ஶைலஶ்ருங்க$_3$நிபை$_4$: கூடைஶ்சிதம் த்$_3$ருஷ்டிப$_4$யாவஹம் ॥ (10)

ஸதூ$_4$மமிவ தீக்ஷ்ணாக்$_3$ரம் யுகா$_3$ந்தாக்$_3$நிசயோபமம் ।
அதிரௌத்$_3$ரமநாஸாத்$_3$யம் காலேநாபி து$_3$ராஸத$_3$ம் ॥ (11)

த்ராஸநம் ஸர்வபூ$_4$தாநாம் தா$_3$ரணம் பே$_4$த$_3$நம் ததா$_3$ ।
ப்ரதீ$_3$ப்தமிவ ரோஷேண ஶூலம் ஜக்$_3$ராஹ ராவண: ॥ (12)

தச்சூ$_2$லம் பரமக்ருத்$_3$தோ$_4$ மத்$_4$யே ஜக்$_3$ராஹ வீர்யவாந் ।
அநேகை: ஸமரே ஶூரை ராக்ஷஸை: பரிவாரித: ॥ (13)

ஸமுத்$_3$யம்ய மஹாகாயோ நநாத$_3$ யுதி$_4$ பை$_4$ரவம் ।
ஸம்ரக்தநயநோ ரோஷாத் ஸ்வஸைந்யமபி$_4$ஹர்ஷயந் ॥ (14)

ப்ருதி$_2$வீம் சாந்தரிக்ஷம் ச தி$_3$ஶஶ்ச ப்ரதி$_3$ஶஸ்ததா$_2$ ।
ப்ராகம்பயத்ததா$_3$ ஶப்$_3$தோ$_3$ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய தா$_3$ருண: ॥ (15)

அதிநாத$_3$ஸ்ய நாதே$_3$ந தேந தஸ்ய து$_3$ராத்மந: ।
ஸர்வபூ$_4$தாநி வித்ரேஸு: ஸாக$_3$ரஶ்ச ப்ரசுக்ஷுபே$_4$ ॥ (16)

சிங்கங்களும் புலிகளும் வசிக்கும் மலை அதிர்ந்தது; மரங்கள் அடியோடு அசைந்தாடின; ஆறுகளின் நாயகனான பெருங்கடல் மிகவும் கலக்கமடைந்தது. (2)

பறவைகள், கழுதைகளைப் போல் ஊளையிட்டன; ஆகாயத்தில் மேகங்கள் கடூரமாக சப்தித்துத் தீயநிமித்தங்களைக் காட்டுகின்றனவாக, எல்லாப் பக்கங்களிலும் அலைந்து திரிந்தன. (3)

அளவுகடந்த கோபங்கொண்ட இராமனையும் மிகக்கொடிய தீய நிமித்தங்களையும் பார்த்து, எல்லாப் பிராணிகளும் பயத்தால் நடுநடுங்கின; இராவணனுக்கும் அச்சம் உண்டாயிற்று. (4)

அப்போது, ஆகாயவெளியில் விமானத்திலிருந்த தேவர்கள், கந்தர்வர்கள், மகா உரகர்கள், முனிவர்கள், தானவர்கள், அசுரர்கள், வானில் பறக்கும் பறவைகள் ஆகிய அனைவரும் பயங்கரமான, பலவகையான ஆயுதங்களைக் கொண்டு போரிடும் அவ்விரு வீரர்களுடைய பிரளய காலத்திய அழிவை ஒத்திருக்கும் பெரும் போரைக் கண்ணால் கண்டார்கள். (5,6)

அப்போது, யுத்தத்தைப் பார்ப்பதற்காக வந்திருந்த எல்லா அசுரர்களும் தேவர்களும், நிகழ்ந்து கொண்டிருந்த பெரும் போரைப் பார்த்து, பக்தியுடனும் மனக்களிப்புடனும் பின்வருமாறு கூறினார்கள். (7)

அங்கிருந்த அசுரர்கள், 'இராவணன் வெற்றி பெறுவானாக!' என்றும், தேவர்கள் இராமனைப் பார்த்து, 'தாங்கள் வெற்றிபெறுவீராக!' என்றும் திரும்பத் திரும்ப வாழ்த்தினார்கள். (அசுரர்களுக்கும் இராவணனிடம் வெறுப்பு உண்டு. ஆனால், தேவர்கள் கை ஓங்கிவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்ததால், இராவணனின் வெற்றியைக் கோரினார்கள்.) (8)

இதனிடையில், கொடுங்கோலனும் எல்லோரையும் கதறடிப்பவனுமான இராவணன், இராமனிடம் ஏற்பட்ட கோபத்தால் அவரை ஆழமாகக் காயப்படுத்தும் எண்ணத்துடன், அனற்பிழம்பென ஜொலிக்கும் ஒரு சூலத்தைக் கையிலெடுத்துக் கொண்டான். அது, வஜ்ராயுதத்திற்கு நிகரான வலிமை கொண்டது; பெரும் சத்தத்தை எழுப்புவது; எல்லா எதிரிகளையும் ஒழிக்க வல்லது; மலைச்சிகரங்களைப் போன்ற இரும்பு முனைகள் அடிக்கப்பட்டது; கண்ணால் பார்த்தாலே குலைநடுங்கச் செய்வது; புகையோடு கூடிய அனற்பிழம்பு போன்ற முனையை உடையது; ஊழிக்கால நெருப்புக் குவியலுக்கு இணையானது; மிகக்கொடுமையானது; நெருங்க முடியாதது; காலனாலும் அடக்க முடியாதது; எல்லாப் பிராணிகளையும் நடுங்கச் செய்வது; எல்லாவற்றையும் பிளந்து சிதைக்கவல்லது. (9–12)

வரம்பு கடந்த கோபம் கொண்டிருந்தவனும், போர்க்களத்தில் ஏராளமான அரக்க வீரர்களால் சூழப்பட்டிருந்தவனுமான அவன், அதை நடுவில் பிடித்துக் கொண்டான். (13)

பேருடல் கொண்ட அவன், அதை (சூலத்தை) உயரத் தூக்கிப் பிடித்தான். அப்போது, அவன் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன. (பயங்கரமான ஆயுதத்தை அவன் கையில் எடுத்துக் கொண்டதைப் பார்த்ததும்,) அவன் படையினர் மனக்களிப்படைந்தார்கள். போர்க்களத்தில் பயங்கரமாகக் கர்ஜித்தான், இராக்கத மன்னன். (14)

அரக்க மன்னனுடைய கொடூரமான சத்தம், பூமி, ஆகாயம், திசைகள், மூலைகள் போன்றவற்றை நடுங்க வைத்தது. (15)

பெருங்கர்ஜனை புரியும் தீயவனான அவனுடைய அந்த சத்தத்தால் எல்லாப் பிராணிகளும் பயந்து நடுங்கின; பெருங்கடல்கூடக் கொந்தளித்தது. (16)

ஸ க்3ருஹீத்வா மஹாவீர்ய: ஶூலம் தத்3ராவணோ மஹத் ।
விநத்3ய ஸுமஹாநாத3ம் ராமம் பருஷமப்3ரவீத் ॥ (17)

ஶூலோऽயம் வஜ்ரஸாரஸ்தே ராம ரோஷாந்மயோத்3யத: ।
தவ ப்4ராத்ருஸஹாயஸ்ய ஸத்3ய: ப்ராணாந் ஹரிஷ்யதி ॥ (18)

ரக்ஷஸாமத்3ய ஶூராணாம் நிஹதாநாம் சமூமுகே2 ।
த்வாம் நிஹத்ய ரணஶ்லாகி4ந் கரோமி தரஸா ஸமம் ॥ (19)

திஷ்டே2தா3நீம் நிஹந்மி த்வாமேஷ ஶூலேந ராக4வ ।
ஏவமுக்த்வா ஸ சிக்ஷேப தச்சூ2லம் ராக்ஷஸாதி4ப: ॥ (20)

தத்3ராவணகராந்முக்தம் வித்3யுஜ்ஜ்வாலாஸமாகுலம் ।
அஷ்டக4ண்டம் மஹாநாத3ம் வியத்3க3தமஶோப4த ॥ (21)

தச்சூ2லம் ராக4வோ த்3ருஷ்ட்வா ஜ்வலந்தம் கோ4ரத3ர்ஶநம் ।
ஸஸர்ஜ விஶிக2ாந் ராமஶ்சாபமாயம்ய வீர்யவாந் ॥ (22)

ஆபதந்தம் ஶரௌகே4ண வாரயாமாஸ ராக4வ: ।
உத்பதந்தம் யுகா3ந்தாக்3நிம் ஜலௌகை4ரிவ வாஸவ: ॥ (23)

நிர்த3தா3ஹ ஸ தாந் பா3ணாந் ராமகார்முகநி:ஸ்ருதாந் ।
ராவணஸ்ய மஹாஶூல: பதங்கா3நிவ பாவக: ॥ (24)

தாந் த்3ருஷ்ட்வா ப4ஸ்மஸாத்3பூ4தாஞ்ஶூலஸம்ஸ்பர்ஶசூர்ணிதாந் ।
ஸாயகாநந்தரிக்ஷஸ்தா2ந் ராக4வ: க்ரோத4மாஹரத் ॥ (25)

ஸ தாம் மாதலிநாநீதாம் ஶக்திம் வாஸவநிர்மிதாம் ।
ஜக்3ராஹ பரமக்ருத்3தோ4 ராக4வோ ரகு4நந்த3ந: ॥ (26)

ஸா தோலிதா ப3லவதா ஶக்திர்க4ண்டாக்ருதஸ்வநா ।
நப4: ப்ரஜ்வாலயாமாஸ யுகா3ந்தோல்கேவ ஸப்ரபா4 ॥ (27)

ஸா க்ஷிப்தா ராக்ஷஸேந்த்3ரஸ்ய தஸ்மிஞ்ஶூலே பபாத ஹ ।
பி4ந்ந: ஶக்த்யா மஹாஞ்ஶூலோ நிபபாத ஹதத்3யுதி: ॥ (28)

நிர்பி3பே4த ததோ பா3ணைர்ஹயாநஸ்ய மஹாஜவாந் ।
ராமஸ்தீக்ஷ்ணைர்மஹாவேகை3ர்வஜ்ரகல்பை: ஶிதை: ஶரை: ॥ (29)

நிர்பி3பே4தோ3ரஸி ததோ ராவணம் நிஶிதை: ஶரை: ।
ராக4வ: பரமாயத்தோ லலாடே பத்ரிபி4ஸ்த்ரிபி4: ॥ (30)

ஸ ஶரைர்பி4ந்நஸர்வாங்கோ3 கா3த்ரப்ரஸ்ருதஶோணித: ।
ராக்ஷஸேந்த்3ர: ஸமூஹஸ்த2: பு2ல்லாஶோக இவாப3பௌ4 ॥ (31)

மகாவீரனான இராவணன், அந்தப் பெரும் சூலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, மிகவும் பலமாகக் கர்ஜித்து, இராமனைப் பார்த்துக் கடுமையான சொற்களைக் கூறினான்— (17)

''இராமனே! இந்த சூலம், வஜ்ராயுதத்திற்கு நிகரான வலிமை கொண்டது. நான் உன்மீது மிகவும் கோபத்தோடு கையில் எடுத்திருக்கிறேன். இது, உன்னையும் உனக்கு உதவியாக இருக்கும் உன் சகோதரன் உயிரையும் உடனே பறிக்கப் போகிறது. (18)

போர்ப்புகழ் கொண்டவனே! இப்போதே உன்னைக் கொன்று போர்முனையில் கொல்லப்பட்ட அரக்க வீரர்களுக்குச் சமமான நிலையில் உன்னை வைக்கப் போகிறேன். (அவர்கள் சென்றடைந்துள்ள வீர சுவர்க்கத்தை நீயும் அடையப் போகிறாய்.) (19)

இராமா! நில்லு... நில்லு. (பயந்து ஓடிப் போய் விடாதே!) இப்போது, இந்தச் சூலத்தால் உன்னைக் கொல்லப் போகிறேன்.'' இவ்வாறு சொல்லிவிட்டு, இராக்கத மன்னனான அவன் அந்தச் சூலத்தை விட்டெறிந்தான். (20)

இராவணனுடைய கையிலிருந்து செலுத்தப்பட்ட அது, மின்னல் போன்ற பேரொளியுடன் விளங்கிற்று. எட்டு மணிகள் கட்டப்பட்டு பேரொலி எழுப்பும் அது, ஆகாயத்தை அடைந்துப் பிரகாசித்தது. (21)

மாவீரரான ரகுகுலச் செம்மல், பேரொளியுடனும் பயங்கரத் தோற்றத்துடனும் வந்து கொண்டிருக்கும் சூலத்தைப் பார்த்ததும், வில்லை வளைத்து பாணங்களைச் செலுத்தினார். (22)

ஊழிக்கால பெருநெருப்பை மழைப்பொழிவினால் அழிக்க இந்திரன் விரும்புவது போல, தன்னைத் தாக்கவரும் அந்த சூலத்தை, சரமாரியால் இராமன் தடுத்து நிறுத்தினார். (23)

இராவணனுடைய பெருமைக்குரிய அந்தச் சூலம், இராமனுடைய வில்லிலிருந்து வெளிப்போந்த அந்தப் பாணங்களை, விட்டிற்பூச்சிகளை அக்னி எரிப்பதுபோல் எரித்துப் பொசுக்கிவிட்டது. (24)

ஆகாயத்தை அடைந்த தன்னுடைய பாணங்கள், சூலாயுதத்தால் தாக்கப்பட்டு சாம்பலாகிப் போனதைப் பார்த்து, இராமன் மிகவும் கோபம் கொண்டார். (25)

ரகுகுலப் பெருந்தகையான இராமன், மிகவும் சினங்கொண்டவராக, இந்திரனால் அனுப்பி வைக்கப்பட்டு மாதலியினால் கொண்டு வரப்பட்டதுமான சக்தி ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். (26)

பலசாலியான அவரால் ஏவப்பட்ட அந்தச் சக்தி, அதில் கட்டப்பட்டிருந்த மணிகளால் ஓசை எழுப்பிக் கொண்டு, ஊழிக் காலத்தில் வானத்திலிருந்து விழும் எரிகொள்ளிகள் போன்ற ஒளியுடன் ஆகாயத்தையே பிரகாசப்படுத்திக் கொண்டு விளங்கியது. (27)

(இராமனால்) செலுத்தப்பட்ட அது (சக்தி), இராக்கத மன்னனால் வீசப்பட்ட அந்தச் சூலத்தில் மோதியது. சக்தி ஆயுதத்தால் பிளக்கப்பட்ட அந்தப் பெருஞ்சூலம் ஒளியிழந்து தரையில் விழுந்தது. (28)

அப்போது இராமன், வேகத்திறன் கொண்ட அவனுடைய குதிரைகளை, வஜ்ரம் போன்றவைகளும் கொடியவைகளுமான அம்புகளாலும், மகாசக்தி படைத்த பாணங்களாலும் காயப்படுத்தினார். (29)

பின்னர், மிகுந்த கவனத்துடன் இராவணனுடைய மார்பை கூரிய பாணங்களாலும், நெற்றியை மூன்று பாணங்களாலும் நோகச் செய்தார். அரக்கர் படை சூழ நின்று கொண்டிருந்த அரக்க மன்னன், எல்லா அங்கங்களும் காயப்படுத்தப்பட்டவனாக, உடலெங்கும் குருதி வழிந்தோட, செம்மலர்கள் பூத்த அசோகமரம் போல் விளங்கினான். (30,31)

ஸ ராமபா3ணைரபி4வித்3த4கா3த்ரோ
நிஶாசரேந்த்3ர: க்ஷதஜார்த்3ரகா3த்ர: ।
ஜகா3ம கே2த3ம் ச ஸமாஜமத்4யே
க்ரோத4ம் ச சக்ரே ஸுப்4ருஶம் ததா3நீம் ॥ (32)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 சதுருத்தரஶததம: ஸர்க3: ॥

பஞ்சோத்தரஶததம: ஸர்க3:

த3ஶக்3ரீவவிகூ4ர்ணநம்

ஸ தேந து ததா2 க்ரோதா4த் காகுத்ஸ்தே2நார்தி3தோ ரணே ।
ராவண: ஸமரஶ்லாகீ4 மஹாக்ரோத4முபாக3மத் ॥ (1)

ஸ தீ3ப்தநயநோ ரோஷாச்சாபமாயம்ய வீர்யவாந் ।
அப்4யர்த3யத் ஸுஸங்க்ருத்3தோ4 ராக4வம் பரமாஹவே ॥ (2)

பா3ணதா4ராஸஹஸ்ரைஸ்தை: ஸ தோயத3 இவாம்பா3ராத் ।
ராக4வம் ராவணோ பா3ணைஸ்தடாகமிவ பூரயத் ॥ (3)

பூரித: ஶரஜாலேந த4நுர்முக்தேந ஸம்யுகே3 ।
மஹாகி3ரிரிவாகம்ப்ய: காகுத்ஸ்தோ2 ந ப்ரகம்பதே ॥ (4)

ஸ ஶரை: ஶரஜாலாநி வாரயந் ஸமரே ஸ்தி2த: ।
க3ப4ஸ்தீநிவ ஸூர்யஸ்ய ப்ரதிஜக்3ராஹ வீர்யவாந் ॥ (5)

தத: ஶரஸஹஸ்ராணி க்ஷிப்ரஹஸ்தோ நிஶாசர: ।
நிஜகா4நோரஸி க்ருத்3தோ4 ராக4வஸ்ய மஹாத்மந: ॥ (6)

ஸ ஶோணிதஸமாதி3க்3த4: ஸமரே லக்ஷ்மணாக்3ரஜ: ।
த்3ருஷ்ட: பு2ல்ல இவாரண்யே ஸுமஹாந் கிம்ஶுகத்3ரும: ॥ (7)

ஶராபி4கா4தஸம்ரப்3த4: ஸோऽபி ஜக்3ராஹ ஸாயகாந் ।
காகுத்ஸ்த2: ஸுமஹாதேஜா யுகா3ந்தாதி3த்யதேஜஸ: ॥ (8)

ததோऽந்யோந்யம் ஸுஸம்ரப்3தா4வுபௌ4 தௌ ராமராவணௌ ।
ஶராந்த4காரே ஸமரே நோபாலக்ஷயதாம் ததா3 ॥ (9)

தத: க்ரோத4ஸமாவிஷ்டோ ராமோ த3ஶரதா2த்மஜ: ।
உவாச ராவணம் வீர: ப்ரஹஸ்ய பருஷம் வச: ॥ (10)

மம பா4ர்யா ஜநஸ்தா2நாத3ஜ்ஞாநாத்3ராக்ஷஸாத4ம ।
ஹ்ருதா தே விவஶா யஸ்மாத்தஸ்மாத்த்வம் நாஸி வீர்யவாந் ॥ (11)

போர்க்களத்தில், இராமபாணங்களால் அவயவங்கள் தாக்கப்பட்டு, இரத்தத்தால் நனைந்த உடலுடன் நின்று கொண்டிருந்த இராக்கத மன்னன், அவமானம் தாங்காமல் மிகவும் வருத்தத்தில் ஆழ்ந்தான்; அத்துடன் பெருங்கோபத்தையும் ஏற்றுக்கொண்டான். (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றைந்து

தேரை அப்புறப்படுத்தினான், இராவண சாரதி

மிகவும் கோபங்கொண்ட இராமனால் கடுமையாக நோகடிக்கப்பட்டதும், போரானந்தமுடைய இராவணனுக்கு அளவு கடந்த சினம் உண்டாயிற்று. மாவீரனான அவன் எல்லையில்லா சினங்கொண்டு, கோபத்தால் அனல் பறக்கும் கண்களுடன் வில்லை வளைத்து, கடும்போர் செய்யும் நோக்கத்துடன் இராமனைத் தாக்கினான். (1,2)

ஆகாயத்திலுள்ள மேகம் போன்ற அவன், ஒரு நொடிகூட இடைவிடாது பாணங்களை மாரியாகப் பொழிந்து, இராமன் என்ற தடாகத்தை நிரப்பினான். (இராவணனுடைய அம்புகள், இராமன் உடல் முழுவதிலும் குத்திட்டு நின்றன.) (3)

போர்க்களத்தில், இராவணன் வில்லிலிருந்து விடுபட்ட எண்ணற்ற பாணங்களால் உடலெங்கும் குத்தப்பட்டிருந்தும், அசைக்கமுடியாத ஒரு மாமலை போல், இராமன் சிறிதளவும் உறுதி தளராமல் நின்றார். (4)

யுத்தகளத்தில், தனிப்பெரும் வீரராக நின்ற இராமன், இராவணனுடைய பாணங்களைத் தடுத்து நிறுத்தினார். சூரியனுடைய கதிர்களைப் போன்ற அவனுடைய பாணங்களை ஏற்றுக் கொண்டார். (அச்சங்கொண்டு பின்வாங்கி விடவில்லை.) (5)

வெகுவிரைவாகக் கைகளை இயக்கவல்ல அந்த அரக்கன், கோபங்கொண்டு ஆயிரக்கணக்கான அம்புகளை, மகாத்மாவான இராமனுடைய மார்பை நோக்கிச் செலுத்தினான். (6)

போரில், அம்புகளால் அடிபட்டு, குருதி பூசப்பட்டவராக நின்ற இராமன், காட்டில் செந்நிற மலர் பூத்துக் குலுங்கும் புரசமரம் போல் விளங்கினார். (7)

மகாபராக்கிரமசாலியான இராமன், இராக்கத மன்னனின் பாணங்களின் தாக்குதலால் ஆவேசங்கொண்டு, ஊழிக்கால சூரியனைப் போல் கண்களைக் கூசவைக்கும் ஒளி பொழியும் பாணங்களைக் கையிலெடுத்தார். (8)

அப்போது, மிகவும் கோபாவேசத்திலிருந்த இராம–இராவணர்களாகிய இருவரும், பாணங்களைப் பொழிந்ததால், போர்க்களத்தில் காரிருள் சூழ்ந்தது. அதனால், அவர்கள் ஒருவரையொருவர் பார்க்கக் கூட முடியவில்லை. (9)

அந்தச் சமயத்தில், வீரரும் தசரத மன்னரின் புதல்வருமான இராமன், கோபம் மேலிட்டவராக, இராவணனைப் பார்த்து இளக்காரமாக சற்றே நகைத்து, கடுமையான சொற்களைக் கூறினார்— (10)

''அரக்கப்பதரே! ஜனஸ்தானத்தில் துணை இல்லாமல் தனித்திருந்த என் பத்தினியை, உன் அறிவின்மையால் திருடிக் கொண்டு சென்றாய் – என்ற ஒரு காரணமே போதும், நீ வீரன் அல்லன் என்பதைக் காட்டுவதற்கு. (11)

மயா விரஹிதாம் தீ3நாம் வர்தமாநாம் மஹாவநே ।
வைதே3ஹீம் ப்ரஸப4ம் ஹ்ருத்வா ஶூரோऽஹமிதி மந்யஸே ॥ (12)

ஸ்த்ரீஷு ஶூர விநாதா2ஸு பரதா3ராபி4மர்ஶக ।
க்ருத்வா காபுருஷம் கர்ம ஶூரோऽஹமிதி மந்யஸே ॥ (13)

பி4ந்நமர்யாத3 நிர்லஜ்ஜ சாரித்ரேஷ்வநவஸ்தி2த ।
த3ர்பாந்ம்ருத்யுமுபாதா3ய ஶூரோऽஹமிதி மந்யஸே ॥ (14)

ஶூரேண த4நத3ப்4ராத்ரா ப3லை: ஸமுதி3தேந ச ।
ஶ்லாக4நீயம் யஶஸ்யம் ச க்ருதம் கர்ம மஹத்த்வயா ॥ (15)

உத்ஸேகேநாபி4பந்நஸ்ய க3ர்ஹிதஸ்யாஹிதஸ்ய ச ।
கர்மண: ப்ராப்நுஹீதா3நீம் தஸ்யாத்3ய ஸுமஹத் ப2லம் ॥ (16)

ஶூரோऽஹமிதி சாத்மாநமவக3ச்ச2ஸி து3ர்மதே ।
நைவ லஜ்ஜாஸ்தி தே ஸீதாம் சோரவத்3வ்யபகர்ஷத: । (17)

யதி3 மத்ஸந்நிதௌ4 ஸீதா த4ர்ஷிதா ஸ்யாத்த்வயா ப3லாத் ।
ப்4ராதரம் து க2ரம் பஶ்யேஸ்ததா3 மத்ஸாயகைர்ஹத: ॥ (18)

தி3ஷ்ட்யாஸி மம து3ஷ்டாத்மந்ஶ்சக்ஷுர்விஷயமாக3த: ।
அத்3ய த்வாம் ஸாயகைஸ்தீக்ஷ்ணைர்நயாமி யமஸாத3நம் ॥ (19)

அத்3ய தே மச்ச2ரைஶ்சி2ந்நம் ஶிரோ ஜ்வலிதகுண்ட3லம் ।
க்ரவ்யாதா3 வ்யபகர்ஷந்து விகீர்ணம் ரணபாம்ஸுஷு ॥ (20)

நிபத்யோரஸி க்ருத்4ராஸ்தே க்ஷிதௌ க்ஷிப்தஸ்ய ராவண ।
பிப3ந்து ருதி4ரம் தர்ஷாச்ச2ரஶல்யாந்தரோத்தி2தம் ॥ (21)

அத்3ய மத்3பா3ணபி4ந்நஸ்ய க3தாஸோ: பதிதஸ்ய தே ।
கர்ஷந்த்வாந்த்ராணி பதகா3 க3ருத்மந்த இவோரகா3ந் ॥ (22)

இத்யேவம் ஸம்வத3ந் வீரோ ராம: ஶத்ருநிப3ர்ஹண: ।
ராக்ஷஸேந்த்3ரம் ஸமீபஸ்த2ம் ஶரவர்ஷைரவாகிரத் ॥ (23)

ப3பூ4வ த்3விகு3ணம் வீர்யம் ப3லம் ஹர்ஷஶ்ச ஸம்யுகே3 ।
ராமஸ்யாஸ்த்ரப3லம் சைவ ஶத்ரோர்நித4நகாங்க்ஷிண: ॥ (24)

ப்ராது3ர்ப3பூ4வுரஸ்த்ராணி ஸர்வாணி விதி3தாத்மந: ।
ப்ரஹர்ஷாச்ச மஹாதேஜா: ஶீக்4ரஹஸ்ததரோऽப4வத் ॥ (25)

ஶுபா4ந்யேதாநி சிஹ்நாநி விஜ்ஞாயாத்மக3தாநி ஸ: ।
பூ4ய ஏவார்த3யத்3ராமோ ராவணம் ராக்ஷஸாந்தக்ருத் ॥ (26)

அந்தப் பெரிய காட்டில், என்னைப் பிரிந்து (இலக்குவனும் அருகில் இல்லாமல்) கவலைப்பட்டுக் கொண்டிருந்த வைதேகியைப் பலாத்காரமாகத் திருடிக்கொண்டு வந்த நீ, உன்னை மகாசூரன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்! (12)

காப்பாற்றுவார் யாரும் இல்லாத பெண்களிடம் வீரத்தைக் காட்டுபவனே! அயலார் மனைவியை அடைய விழைபவனே! நீசர்கள் செய்யும் இழிந்த செயலைச் செய்துவிட்டு, 'நான் மகாசூரன்!' என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்! (13)

நெறிகெட்டவனே! வெட்கமற்றவனே! நல்லொழுக்கம் இல்லாதவனே! உன் அகந்தை காரணமாக, (சீதை என்ற உருவில்) யமனைச் சுமந்து வந்து, 'நான் மகாசூரன்!' என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். (14)

நீ, குபேரனுடைய தம்பி; சூரன்; படைவீரர்கள் உடையவன். இவ்வளவு பெருமை வாய்ந்த உன்னால் கொண்டாடத்தக்கதும் புகழைத் தருவதுமான இந்த அரிய செயல் செய்யப்பட்டிருக்கிறது! (ஆகா! எவ்வளவு பெருமை உனக்கு!) (15)

செருக்கினால் நீ செய்துவிட்ட வெறுக்கத்தக்கதும் உனக்கு நன்மை செய்ய இயலாததுமான அந்தக் காரியத்தின் மாபெரும் பயனை, இன்றே, இப்போதே நீ அடையப் போகிறாய். (16)

கெடுமதி கொண்டவனே! ஒரு திருடன் போல் சீதையைத் திருடிக்கொண்டு சென்ற உனக்கு, நாணம் என்பது இல்லவேயில்லை. ஆனால், 'நான் மகாசூரன்!' என்று உன்னை நீயே எண்ணிக் கொண்டிருக்கிறாய். என் முன்னிலையில், சீதையைப் பலவந்தமாக அபகரித்துச் செல்ல, நீ முயன்றிருந்தாயேயானால், இதற்குள் நீ, என் அம்புகளால் மாய்க்கப்பட்டு சகோதரனான கரனை (மேலுலகில்) கண்களால் பார்த்திருப்பாய். (17,18)

கேடு கெட்டவனே! அதிருஷ்டவசமாக, நீ இப்போது என் கண்ணில் பட்டிருக்கிறாய்! கூர்மையான பாணங்களால், இப்போதே உன்னை யமன் உலகுக்கு அனுப்பிவைக்கிறேன். (19)

ஒளிவீசும் குண்டலங்களையுடைய உன் தலை, என்னுடைய அம்பினால் துண்டிக்கப்பட்டு, போர்க்களத்துப் புழுதியில், ஊன் உண்ணும் பிராணிகளால் இங்குமங்கும் இழுத்துச் செல்லப்படப் போகிறது. (20)

இராவணா! என் பாணங்களால் தரையில் வீழ்த்தப்பட்ட உன் மார்பில் கழுகுகள் உட்கார்ந்து, பாணத் தாக்குதலால் ஏற்பட்ட புண்களிலிருந்து பெருகி வரும் குருதியை வேட்கையுடன் பருகப் போகின்றன. (21)

என் பாணங்களால் பிளக்கப்பட்டு, உயிர் நீங்கிச் சாய்ந்த உன் சடலத்தின் நரம்புகளை, கருடன் பாம்புகளை இழுத்துச் செல்வதைப் போல, பறவைகள் குத்திக் கிளறி இழுத்துச் செல்லட்டும்.'' (22)

இவ்வாறு, பகைவரை அடக்குபவரும் வீரருமான இராமன் சொல்லிக் கொண்டே, அண்மையிலிருந்த இராக்கத மன்னன்மீது சரமாரி பொழிந்தார். (23)

அப்போது, போரில் எதிரியின் நாசத்தை விரும்பிய இராமனின் பலம், பராக்கிரமம், ஆர்வம், அஸ்திர சக்தி ஆகியன இரு மடங்காகப் பெருகின. (24)

எல்லாமறிந்த அவர் முன்னால், (முன்னர் உபதேசிக்கப்பட்டிருந்த) எல்லா அஸ்திரங்களும் தாங்களே வந்து நின்றன. போரில் ஊன்றிய கவனம் செலுத்திய மகாபராக்கிரமசாலியான அவர், மிகமிக வேகமாகக் கைகளை இயக்கத் தொடங்கினார். (25)

இராமன், தனக்குப் புலப்பட்ட நன்னிமித்தங்களை ஆராய்ந்து, அரக்கர்களுக்கு அழிவை ஏற்படுத்துவதற்காக, இராவணனை மறுபடியும் (பாணங்களால்) நோகடித்தார். (26)

ஹரீணாம் சாஸ்மநிகரை: ஶரவர்ஷைஸ்ச ராக$_4$வாத் ।
ஹந்யமாநோ த$_3$ஶக்$_3$ரீவோ விகூ$_4$ர்ணஹ்ருத$_3$யோऽப$_4$வத் ॥ (27)

யதா$_3$ ச ஶஸ்த்ரம் நாரேபே$_4$ ந வ்யகர்ஷச்ச$_2$ராஸநம் ।
நாஸ்ய ப்ரத்யகரோத்$_3$வீர்யம் விக்லவேநாந்தராத்மநா ॥ (28)

க்ஷிப்தாஸ்சாபி ஶராஸ்தேந ஶஸ்த்ராணி விவித$_4$ாநி ச ।
ந ரணார்த$_2$ாய வர்தந்தே ம்ருத்யுகாலேऽபி$_4$வர்தத: ॥ (29)

ஸூதஸ்து ரத$_2$நேதாஸ்ய தத$_3$வஸ்த$_2$ம் ஸமீக்ஷ்ய தம் ।
ஶநைர்யுத்$_3$த$_4$ாத$_3$ஸம்ப்$_4$ராந்தோ ரத$_2$ம் தஸ்யாபவாஹயத் ॥ (30)

ராம பாண விபிந்நாங்கோ ராவணோ ராக்ஷஸேஸ்வர: ।
நிரஸ்த விக்ரம: ஸங்க்யே ரணே ஶ்ராந்த: பபாத ஸ: ॥ (31)

ஸூதஸ்து வ்யதிதம் பாணை: ஸ்யந்தநஸ்தம் நிரீக்ஷ்ய தம் ।
தஸ்மாத்ரணாதபோவாஹ ராவணம் ஹதபௌருஷம் ॥ (32)

ரத$_2$ம் ச தஸ்யாத$_2$ ஜவேந ஸாரதிர்–
நிவார்ய பீ$_4$மம் ஜலத$_3$ஸ்வநம் ததா$_3$ ।
ஜகா$_3$ம பீ$_4$த்யா ஸமராந்மஹீபதிம்
நிரஸ்தவீர்யம் பதிதம் ஸமீக்ஷ்ய ॥ (33)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

ஷடு$_3$த்தரஶததம: ஸர்க$_3$:

ஸாரதி$_2$விக்ஞேயம்

ஸ து மோஹாத் ஸுஸம்க்ருத்$_3$த$_4$: க்ருதாந்தப$_3$லசோதி$_3$த: ।
க்ரோத$_4$ஸம்ரக்தநயநோ ராவண: ஸூதமப்$_3$ரவீத் ॥ (1)

ஹீநவீர்யமிவாஶக்தம் பௌருஷேண விவர்ஜிதம் ।
பீ$_4$ரும் லகு$_4$மிவாஸத்த்வம் விஹீநமிவ தேஜஸா ॥ (2)

விமுக்தமிவ மாயாபி$_4$ரஸ்த்ரைரிவ ப$_3$ஹிஷ்க்ருதம் ।
மாமவக்ஞாய து$_3$ர்பு$_3$த்$_3$தே$_4$ ஸ்வயா பு$_3$த்$_3$$_4$யா விசேஷ்டஸே ॥ (3)

கிமர்த$_2$ம் மாமவக்ஞாய மச்ச$_2$ந்த$_3$மநவேக்ஷ்ய ச ।
த்வயா ஶத்ரோ: ஸமக்ஷம் மே ரதோ$_2$ऽயமபவாஹித: ॥ (4)

த்வயாத்$_3$ய ஹி மமாநார்ய சிரகாலஸமார்ஜிதம் ।
யஶோ வீர்யம் ச தேஜஸ்ச ப்ரத்யயஸ்ச விநாஶித: ॥ (5)

வானரர்கள், இராவணன்மேல் கல்மாரி பொழிந்தார்கள்; இராமன், சரமாரி பொழிந்தார். அவைகளால் தாக்கப்பட்ட அவன் உள்ளம் கலங்கிப் போனான். (27)

இராவணனுடைய மனத்தில் கவலை புகுந்து கொண்டதால், படைக்கலங்களைக் கையில் எடுக்கவோ, வில்லை வளைக்கவோ, இராமனுடைய தாக்குதலை எதிர்த்துப் போரிடும் வல்லமையோ இல்லாமற்போயின. இராமன் வெகுவிரைவாகச் செலுத்திய பாணங்களும் வகைவகையான ஆயுதங்களும், அவன் அழிவுக்குத் துணைபுரிவதாக அமைந்து, காலனின் அருகில் அவனை அழைத்துச் சென்றன. இந்த நிலைமையைப் பார்த்த அவனுடைய தேரோட்டி, சிறிதும் கலவரம் அடையாமல், அந்தத் தேரைப் போர்க்களத்திலிருந்து வெகுதொலைவுக்கு ஓட்டிச் சென்றான். (28–30)

அரக்க மன்னனான இராவணன், இராம பாணங்களால் அங்கங்கள் புண்பட்டுப் போக, இயல்பான தன் பராக்கிரமத்தை இழந்து, போர் செய்ததால் களைப்படைந்தவனாய், கீழே விழுந்தான். (31)

பாணங்களால் நோகடிக்கப்பட்டு, ஆண்மை இழந்து, தேரில் விழுந்து தவித்துக் கொண்டிருக்கும் அவனை, யுத்தபூமியிலிருந்து அப்புறம் கொண்டு சென்றான், (தேரோட்டி). தனது மன்னன், சக்தியிழந்து ரதத்தில் சாய்ந்து கிடப்பதைக் கண்ட இராவணனின் சாரதி, மேக கர்ஜனை போல் பேரொலி எழுப்புகின்றதும் பயங்கரமான தோற்றம் உடையதுமான அந்தத் தேரைத் திருப்பி, அச்சமடைந்தவனாய், வேகமாக போர்க்களத்திலிருந்து வெளியேறினான். (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றாறு

இராவணன் போர்க்களத்திற்குத் திரும்பி வருதல்!

(சிறிதுநேரம் சென்றதும் தன்னுணர்வு பெற்ற இராவணன், தன்னுடைய தேர் யுத்தகளத்திற்கு வெளியே வந்து நிற்பதைப் புரிந்து கொண்டான்.) யமன் கையில் சிக்கியிருந்த இராவணனுக்கு மதிமயக்கம் ஏற்பட்டது. அளவுகடந்த கோபத்தால் கண்கள் சிவக்க, தேரோட்டியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (1)

"கெடுமதி கொண்டவனே! நான், 'பராக்கிரமம் அற்றவன்; செயல்திறன் இல்லாதவன்; ஆண்மையை இழந்தவன்; ஆற்றல் அற்றவன்; அச்சம் கொண்டவன்; அற்பன்; தேஜஸைத் தொலைத்தவன்; மாயவித்தைகளை மறந்தவன்; அஸ்திர தேவதைகளால் கைவிடப்பட்டவன்' என்று நினைத்து, என்னை அவமதிக்கும் விதமாக, (என் உத்தரவு இல்லாமலே) உன் விருப்பப்படி நடக்கிறாய். (2,3)

ஏன், என்னைப் பொருட்படுத்தாமலும், என் கருத்தை அறிந்து கொள்ளாமலும் எதிரி பார்த்துக் கொண்டிருக்கும் போதே, (அவன் என்னை ஏளனம் செய்யும்படியாக,) என்னுடைய தேரைப் போர்க்களத்திற்கு வெளியே கொண்டு வந்தாய்? (4)

தரங்கெட்டவனே! நான் வெகுகாலமாகச் சேர்த்து வைத்திருந்த புகழ், ஆற்றல், ஆண்மை, (போர்க்களத்திலிருந்து நான் பின்வாங்கமாட்டேன் என்று பிறர் என்மீது வைத்துள்ள) நம்பிக்கை ஆகிய எல்லாமும் உன்னால் அழிக்கப்பட்டுவிட்டன. (5)

ஶத்ரோ: ப்ரக்$_2$யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: ।
பஶ்யதோ யுத்$_3$த$_4$லுப்$_3$தே$_4$ऽஹம் க்ருத: காபுருஷஸ்த்வயா ॥ (6)

யஸ்த்வம் ரத$_2$மிமம் மோஹாந்ந ஸோத்$_3$வஹஸி து$_3$ர்மதே ।
ஸத்யோऽயம் ப்ரதிதர்கோ மே பரேண த்வமுபஸ்க்ருத: ॥ (7)

ந ஹி தத்$_3$வித்$_3$யதே கர்ம ஸுஹ்ருதோ$_3$ ஹிதகாங்க்ஷிண: ।
ரிபூணாம் ஸத்$_3$ருஶம் சைதந்ந த்வயைதத் ஸ்வநுஷ்டி$_2$தம் ॥ (8)

நிவர்தய ரத$_2$ம் ஶீக்$_4$ரம் யாவந்நாபைதி மே ரிபு: ।
யதி$_3$ வாத்$_4$யுஷிதோऽஸி த்வம் ஸ்மர்யந்தே யதி$_3$ வா கு$_3$ணா: ॥ (9)

ஏவம் பருஷமுக்தஸ்து ஹிதபு$_3$த்$_3$தி$_4$ரபு$_3$த்$_3$தி$_4$நா ।
அப்$_3$ரவீத்$_3$ராவணம் ஸூதோ ஹிதம் ஸாநுநயம் வச: ॥ (10)

ந பீ$_4$தோऽஸ்மி ந மூடோ$_4$ऽஸ்மி நோபஜப்தோऽஸ்மி ஶத்ருபி$_4$: ।
ந ப்ரமத்தோ ந நி:ஸ்நேஹோ விஸ்ம்ருதா ந ச ஸத்க்ரியா ॥ (11)

மயா து ஹிதகாமேந யஶஶ்ச பரிரக்ஷதா ।
ஸ்நேஹப்ரஸ்கந்நமநஸா ப்ரியமித்யப்ரியம் க்ருதம் ॥ (12)

நாஸ்மிந்நர்தே$_2$ மஹாராஜ த்வம் மாம் ப்ரியஹிதே ரதம் ।
கஶ்சில்லகு$_4$ரிவாநார்யோ தோ$_3$ஷதோ க$_3$ந்துமர்ஹஸி ॥ (13)

ஶ்ரூயதாம் த்வபி$_4$தா$_4$ஸ்யாமி யந்நிமித்தம் மயா ரத$_2$: ।
நதீ$_3$வேக$_3$ இவாம்போ$_4$பி$_4$: ஸம்யுகே$_3$ விநிவர்தித: ॥ (14)

ஶ்ரமம் தவாவக$_3$ச்சா$_2$மி மஹதா ரணகர்மணா ।
ந ஹி தே வீர ஸௌமுக்$_2$யம் ப்ரஹர்ஷம் வோபதா$_4$ரயே ॥ (15)

ரதோ$_2$த்$_3$வஹநகி$_2$ந்நாஶ்ச த இமே ரத$_2$வாஜிந: ।
தீ$_3$நா க$_4$ர்மபரிஶ்ராந்தா கா$_3$வோ வர்ஷஹதா இவ ॥ (16)

நிமித்தாநி ச பூ$_4$யிஷ்ட$_2$ம் யாநி ப்ராது$_3$ர்ப$_4$வந்தி ந: ।
தேஷு தேஷ்வபிபந்நேஷு லக்ஷயாம்யப்ரத$_3$க்ஷிணம் ॥ (17)

தே$_3$ஶகாலௌ ச விக்ஞேயௌ லக்ஷணாநீங்கி$_3$தாநி ச ।
தை$_3$ந்யம் கே$_2$த$_3$ஶ்ச ஹர்ஷஶ்ச ரதி$_2$நஶ்ச ப$_3$லாப$_3$லம் ॥ (18)

ஸ்த$_2$லநிம்நாநி பூ$_4$மேஶ்ச ஸமாநி விஷமாணி ச ।
யுத்$_3$த$_4$காலஶ்ச விக்ஞேய: பரஸ்யாந்தரத$_3$ர்ஶநம் ॥ (19)

உபயாநாபயாநே ச ஸ்தா$_2$நம் ப்ரத்யபஸர்பணம் ।
ஸர்வமேதத்$_3$ரத$_2$ஸ்தே$_2$ந க்ஞேயம் ரத$_2$குடும்பி$_3$நா ॥ (20)

என்னுடைய எதிரியின் (இராமனின்) பராக்கிரமம், உலகெங்கும் பிரசித்தமானது; எல்லையற்ற வீரம் அவன்பால் கவர்ந்து களிப்பை உண்டாக்குவது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, போர் செய்வதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்த என்னை, ஒரு கோழையாக (இராமன் முன்) காட்டிவிட்டாய். கெடுமதியனே! நீ மதிகலங்கி, இன்னும் இந்த ரதத்தைப் போர்க்களத்திற்கு ஓட்டிச் செல்லாமல் இருக்கிறாயோ, அதனால், 'நீ, எதிரியால் விலைக்கு வாங்கப்பட்டவன்' என்ற என்னுடைய அனுமானம் உண்மையாகிறது. (6,7)

தலைவனுக்கு நன்மை செய்ய விரும்பும் நல்லிதயம் கொண்ட நண்பன், இந்தக் காரியத்தைச் செய்யமாட்டான். நீ செய்துள்ள காரியம், எதிரிகள் செய்யக்கூடிய செயல். (8)

நீ வெகுகாலமாக என்னை அண்டிப் பிழைக்கிறாய் என்ற நினைவும், என்னுடைய நற்குணங்களின் நினைவும் (அதனால், நீ அடைந்த பயன்களின் நினைவும்) உனக்கு இருக்குமேயானால், உடனே ரதத்தைத் திருப்பி, ரணகளத்திற்கு – என்னுடைய பகைவன் ஓடித் தப்பித்துக் கொள்வதற்கு முன்னால் – ஓட்டிச் செல்.'' (9)

இவ்வாறு, விவேகமில்லாத இராவணன், நல்லெண்ணம் கொண்ட சாரதியைப் பார்த்துக் கடுமையான சொற்களைக் கூறியவுடன், மிக்க வணக்கத்துடன் அவன் பதில் கூறினான்— (10)

''மன்னரே! நான் பயந்துபோய் விடவில்லை; அறிவிலியும் அல்லன்; எதிரிகளின் வசப்பட்டவனும் அல்லன்; மதிமழுங்கியவன் அல்லன்; தங்களிடம் அன்பில்லாதவனும் அல்லன்; தாங்கள், எனக்குச் செய்துள்ள பேருதவிகளை மறந்து விடவுமில்லை. (11)

நான், தங்கள் நன்மையை விரும்புகிறவன்; தங்கள் புகழைக் காப்பாற்ற விழைபவன்; என் நெஞ்சத்தில், தங்களிடம் அன்பு ததும்பிக் கொண்டிருக்கிறது. நான், தங்களுக்கு நன்மை பயக்கக் கூடிய செயல் என்று எண்ணியே இவ்வாறு செய்தேன். (தாங்கள் மயக்கமடைந்த நிலையில் தேரை ஓட்டிக்கொண்டு வந்தேன்.) ஆனால், அதே செயல் தங்களுக்குச் சம்மதமில்லாததாகி விட்டது. (12)

மாமன்னரே! நான், தங்களுக்குப் பிரியமானதிலும் நன்மை தரக் கூடியதிலும் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கிறேன். அதனால், இப்போது செய்யப்பட்ட இந்தச் செயலை முன்னிட்டு, பண்பில்லாத ஒரு பாமரனாக என்னை எண்ணிவிடக்கூடாது. பருவகாலங்களில் சமுத்திரம் பொங்கியெழும்போது, அதில் சங்கமிக்கும் ஆற்றின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தி, திருப்பி விடுவதைப் போல, நான் எதன் காரணமாக ரதத்தை யுத்தகளத்திலிருந்து திருப்பி ஓட்டி வந்தேன் என்பதைக் கூறுகிறேன். அருள்கூர்ந்து கேளுங்கள். (13,14)

அப்போது, தாங்கள் நீண்டநேரம் மிகக்கடுமையாகப் போரிட்டதால் களைப்படைந்து இருக்கிறீர்கள் என்று எனக்குத் தோன்றிற்று. சூரரே! அத்துடன், தங்கள் முகத்தில் தெளிவையும் உற்சாகத்தையும் நான் காணவில்லை. பெருமழையினால் துன்பப்பட்ட பசுக்கள் போல, நம்முடைய தேர்க்குதிரைகள், வெய்யிலில் காய்ந்து, களைத்து, சோர்ந்து தேரை இழுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தன. (15,16)

மேலும், அப்போது நம் கண்ணில்படும்படியாகத் தோன்றிய பலவகையான துர்நிமித்தங்கள் ஒவ்வொன்றிலும் நமக்கு அமங்களத்தையே கண்டேன். (17)

தேரில் அமர்ந்து, அதை ஓட்டும் சாரதிக்குப் பல விஷயங்களில் கவனம் இருக்கவேண்டும். இடம்–காலம்; சுப–அசுப நிமித்த லட்சணங்கள்; தேர்வீரனின் அங்க–அசைவுகளின் பொருள்; நலிவு–துக்கம்–உற்சாகம்; பலம்–பலமின்மை; செல்லும் பாதையின் மேடு–பள்ளங்கள் மற்றும் சமமான தரை; எதிரியின் தந்திரம்; எப்போது எதிரியை நெருங்கிச் செல்வது; விலகிச் செல்வது; நிலையாக நிற்பது; போர்க்களத்திலிருந்து எட்டிப் போவது; போர்க்குரிய காலம் – இவையெல்லாம் அறியத்தக்கன. (18–20)

தவ விஶ்ரமஹேதோஶ்ச ததை$_2$ஷாம் ரத$_2$வாஜிநாம் ।
ரௌத்$_3$ரம் வர்ஜயதா கே$_2$த$_3$ம் க்ஷமம் க்ருதமித$_3$ம் மயா ॥ (21)

ந மயா ஸ்வேச்ச$_2$யா வீர ரதே$_2$ऽயமபவாஹித: ।
ப$_4$ர்த்ருஸ்நேஹபரீதேந மயேத$_3$ம் யத்க்ருதம் விபோ$_4$ ॥ (22)

ஆஜ்ஞாபய யதா$_2$ தத்த்வம் வக்ஷ்யஸ்யரிநிஷூத$_3$ந ।
தத்கரிஷ்யாம்யஹம் வீர க$_3$தாந்ருண்யேந சேதஸா ॥ (23)

ஸந்துஷ்டஸ்தேந வாக்யேந ராவணஸ்தஸ்ய ஸாரதே$_2$: ।
ப்ரஶஸ்யைநம் ப$_3$ஹுவித$_4$ம் யுத்$_3$த$_4$லுப்$_3$தோ$_4$ऽப்$_3$ரவீதி$_3$த$_3$ம் ॥ (24)

ரத$_2$ம் ஶீக்$_4$ரமிமம் ஸூத ராக$_4$வாபி$_4$முக$_2$ம் குரு ।
நாஹத்வா ஸமரே ஶத்ரூந்நிவர்திஷ்யதி ராவண: ॥ (25)

ஏவமுக்த்வா ததஸ்துஷ்டோ ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
த$_3$தௌ$_3$ தஸ்மை ஶுப$_4$ம் ஹ்யேகம் ஹஸ்தாப$_4$ரணமுத்தமம் ॥
ஶ்ருத்வா ராவணவாக்யம் து ஸாரதி$_2$: ஸ ந்யவர்தத ॥ (26)

ததோ த்$_3$ருதம் ராவணவாக்யசோதி$_3$த:
ப்ரசோத$_3$யாமாஸ ஹயாந் ஸ ஸாரதி$_2$: ।
ஸ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ததோ மஹாரத$_2$:
க்ஷணேந ராமஸ்ய ரணாக்$_3$ரதோऽப$_4$வத் ॥ (27)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஷடு$_3$த்தரஶததம: ஸர்க$_3$: ॥

ஸப்தோத்தரஶததம: ஸர்க$_3$:

ஆதி$_3$த்யஹ்ருத$_3$யம்

ததோ யுத்$_3$த$_4$பரிஶ்ராந்தம் ஸமரே சிந்தயா ஸ்தி$_2$தம் ।
ராவணம் சாக்$_3$ரதோ த்$_3$ருஷ்ட்வா யுத்$_3$தா$_4$ய ஸமுபஸ்தி$_2$தம் ॥ (1)

தை$_3$வதைஶ்ச ஸமாக$_3$ம்ய த்$_3$ரஷ்டுமப்$_4$யாக$_3$தோ ரணம் ।
உபாக$_3$ம்யாப்$_3$ரவீத்$_3$ராமமக$_3$ஸ்த்யோ ப$_4$க$_3$வாந்ருஷி: ॥ (2)

ராம ராம மஹாபா$_3$ஹோ ஶ்ருணு கு$_3$ஹ்யம் ஸநாதநம் ।
யேந ஸர்வாநரீந் வத்ஸ ஸமரே விஜயிஷ்யஸி ॥ (3)

ஆதி$_3$த்யஹ்ருத$_3$யம் புண்யம் ஸர்வஶத்ருவிநாஶநம் ।
ஜயாவஹம் ஜபேந்நித்யமக்ஷய்யம் பரமம் ஶிவம் ॥ (4)

ஸர்வமங்க$_3$ளமாங்க$_3$ல்யம் ஸர்வபாபப்ரணாஶநம் ।
சிந்தாஶோகப்ரஶமநமாயுர்வர்த$_4$நமுத்தமம் ॥ (5)

தங்களுக்கும் தேர்க்குதிரைகளுக்கும் ஏற்பட்ட பயங்கரமான துன்பத்தைப் போக்கவும் இளைப்பாறுவதற்காகவும், நான் செய்த இந்தக் காரியம் உசிதமானதுதான். (21)

வீரரே! தலைவரே! நான் தான்தோன்றித்தனமாக இந்தத் தேரை திருப்பிக் கொண்டு வரவில்லை. யஜமானராகிய தங்களிடம் வைத்துள்ள பேரன்பின் காரணமாகவே, இவ்வாறு செய்தேன். (22)

எதிரிகளை மாய்க்கும் வீரரே! இப்போது கட்டளையிடுங்கள். நான் பட்ட கடனைத் தீர்க்கும் கடமை உணர்ச்சியுடன் தங்கள் கட்டளையைச் செய்து முடிப்பேன்.'' (23)

தேரோட்டியின் பதிலால் திருப்தியடைந்த இராவணன், அவனைப் பலவிதமாகப் புகழ்ந்து பேசி, போரில் முழுநாட்டம் கொண்டிருந்த அவன், பின்வருமாறு கட்டளையிட்டான்— (24)

''தேரோட்டியே! விரைவாக இந்த ரதத்தை இராமன் எதிரில் கொண்டுபோய் நிறுத்து. போரில் எதிரியைக் கொல்லாமல் இராவணன் திரும்பமாட்டான்.'' (25)

இவ்வாறு கூறிவிட்டு, மனமகிழ்ச்சியுடனிருந்த அரக்க மன்னன் இராவணன் அவனுக்கு, தன் கையில் அணிந்திருந்த அழகிய, உயர்ந்த ஓர் அணிகலனைக் கழற்றிக் கொடுத்தான். இராவணனுடைய கட்டளைப்படி, தேரோட்டி போர்க்களத்தை நோக்கித் (தேரைத்) திருப்பி ஓட்டினான். (26)

இராவணனுடைய சொற்களால் முடுக்கிவிடப்பட்ட தேரோட்டி, குதிரைகளை வேகமாகச் செலுத்தினான்; இராக்கத மன்னனின் அந்தப் பெருந்தேர் நொடிப்பொழுதில், போர்முனையில், இராமன் எதிரில் போய் நின்றது. (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றேழு

ஆதித்யஹ்ருதயம்

மிகவும் கடுமையாகப் போர் செய்ததால் களைத்துப் போய், கவலையுடன் போர்க்களத்தில் நின்று கொண்டிருந்தார், இராமன். இதனிடையில், மீண்டும் போரைத் தொடங்குவதற்காக அவர் எதிரில் இராவணன் வந்து நின்றான். போரைக் காண்பதற்காக, தேவதைகளுடன் வந்திருந்த அகஸ்திய மாமுனிவர், அப்போது நிலவிய சூழ்நிலையைப் பார்த்து, (இராமனுக்குத் தைரியமூட்டுவதற்காக,) இராமன் அருகில் வந்து பேசத் தொடங்கினார்— (1,2)

''பெருந்தோளனே! எல்லோரையும் ஆனந்தப்படுத்தும் இராமனே! மிகத் தொன்மையானதும் ரகசியமானதுமான தோத்திரத்தைக் கேட்பாயாக. குழந்தாய்! இந்தத் தோத்திரத்தை மனமுருகிக் கூறினால், எல்லா எதிரிகளையும் போரில் வெற்றி கொள்வாய். (3)

இந்தத் தோத்திரத்தின் பெயர் 'ஆதித்யஹ்ருதயம்'. (இது சூரியனைப் போற்றிப் பாடும் தோத்திரம்.) புனிதமானது; எல்லாப் பகைவர்களையும் அழிக்கக் கூடியது. இதை எப்போதும் ஜபித்து வந்தால், அது நிச்சயமாக வெற்றியைக் கொடுப்பது; அழிவில்லாதது; நலம் செய்வது; மங்களமானவற்றுள் மிகவும் மங்களமானது; எல்லாப் பாவங்களையும் அழிக்கவல்லது; கவலை, வருத்தம் ஆகியவைகளைக் குறைப்பது; ஆயுளை வளர்க்கக் கூடியது; மிகவும் உயர்வானது. (4,5)

ரஶ்மிமந்தம் ஸமுத்$_3$யந்தம் தே$_3$வாஸுரநமஸ்க்ருதம் ।
பூஜயஸ்வ விவஸ்வந்தம் ப$_4$ாஸ்கரம் பு$_4$வநேஶ்வரம் ॥ (6)

ஸர்வதே$_3$வாத்மகோ ஹ்யேஷ தேஜஸ்வீ ரஶ்மிப$_4$ாவந: ।
ஏஷ தே$_3$வாஸுரக$_3$ணாந்(ல்)லோகாந் பாதி க$_3$ப$_4$ஸ்திபி$_4$: ॥ (7)

ஏஷ ப்$_3$ரஹ்மா ச விஷ்ணுஶ்ச ஶிவ: ஸ்கந்த$_3$: ப்ரஜாபதி: ।
மஹேந்த்$_3$ரோ த$_4$நத$_3$: காலோ யம: ஸோமோ ஹ்யபாம்பதி: ॥ (8)

பிதரோ வஸவ: ஸாத்$_4$யா ஹ்யஶ்விநௌ மருதோ மநு: ।
வாயுர்வஹ்நி: ப்ரஜாப்ராண ருதுகர்தா ப்ரப$_4$ாகர: ॥ (9)

ஆதி$_3$த்ய: ஸவிதா ஸூர்ய: க$_2$க$_3$: பூஷா க$_3$ப$_4$ஸ்திமாந் ।
ஸுவர்ணஸத்$_3$ருஶோ ப$_4$ாநு: ஸ்வர்ணரேதா தி$_3$வாகர: ॥ (10)

ஹரித$_3$ஶ்வ: ஸஹஸ்ரார்சி: ஸப்தஸப்திர்மரீசிமாந் ।
திமிரோந்மத$_2$ந: ஶம்பு$_4$ஸ்த்வஷ்டா மார்தாண்ட$_3$ அம்ஶுமாந் ॥ (11)

ஹிரண்யக$_3$ர்ப$_4$: ஶிஶிரஸ்தபநோ ப$_4$ாஸ்கரோ ரவி: ।
அக்$_3$நிக$_3$ர்பே$_4$஽தி$_3$தே: புத்ர: ஶங்க$_2$: ஶிஶிரநாஶந: ॥ (12)

வ்யோமநாத$_2$ஸ்தமோபே$_4$தீ$_3$ ருக்$_3$யஜு:ஸாமபாரக$_3$: ।
க$_4$நவ்ருஷ்டிரப$_4$ாம் மித்ரம் விந்த்$_4$யவீதீ$_2$ப்லவங்க$_3$ம: ॥ (13)

ஆதபீ மண்ட$_3$லீ ம்ருத்யு: பிங்க$_3$ள: ஸர்வதாபந: ।
கவிர்விஶ்வோ மஹாதேஜா ரக்த: ஸர்வப$_4$வோத்$_3$ப$_4$வ: ॥ (14)

நக்ஷத்ரக்$_3$ரஹதாராணாமதி$_4$போ விஶ்வப$_4$ாவந: ।
தேஜஸாமபி தேஜஸ்வீ த்$_3$வாத$_3$ஶாத்மந்நமோ஽ஸ்து தே ॥ (15)

நம: பூர்வாய கி$_3$ரயே பஶ்சிமாயத்$_3$ரயே நம: ।
ஜ்யோதிர்க$_3$ணாநாம் பதயே தி$_3$நாதி$_4$பதயே நம: ॥ (16)

(அகஸ்தியர், இராமபிரானிடம் ஆதித்யனின் பெருமைகளை மேலும் கூறுகிறார்—) கிரணங்கள் உடையவர்; நாள்தோறும் உதிப்பவர்; தேவ–அசுரர்களால் வணங்கப்படுபவர்; ஒளியைத் தருபவரும் உலகத் தலைவருமாகிய அந்த விவஸ்வானை (சூரியனை)ப் பூஜிப்பாயாக. எல்லா தேவதைகளின் வடிவமாக இருப்பவர், இவர்; பேராற்றல் கொண்டவர்; ஒளிக் கிரணங்களை உடையவர்; இவரே, தேவாசுரர் கூட்டங்களையும் உலகங்களையும் தன் கதிர்களால் காப்பாற்றுகிறார். (6,7)

இவர்தான், பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், ஸ்கந்தன், பிரஜாபதி, தேவேந்திரன், குபேரன், காலன், யமன், சந்திரன் மற்றும் வருணன். இவர்தான், பிதுர்தேவதைகள், அஷ்டவசுக்கள், ஸாத்யர்கள், அசுவினீ தேவர்கள், மருத்துக்கள், மனு, வாயு, அக்னி, மக்களின் உயிர்ச்சக்தி மற்றும் பருவ மாற்றங்களை உண்டாக்குபவர்; ஒளி தருபவர். (8,9)

இவர், அதிதியின் புதல்வர்; உலகத்தைத் தோற்றுவிப்பவர் (ஸவிதா); செயலில் ஈடுபடுத்துபவர் (சூர்யன்); ஆகாயத்தில் சஞ்சரிப்பவர்; மழை பொழியச் செய்து, உயிர்களைப் பரிபாலிப்பவர் (பூஷா); ஒளிஉமிழ் கிரணங்களை உடையவர் (கபஸ்திமான்); பொன்வண்ணம் கொண்டவர்; ஒளி வீசுபவர் (பானு); ஆண்மையால் பிரும்மாண்டத்தை உண்டாக்கியவர்; இரவின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுத்து, பகற்பொழுதைத் தோற்றுவிப்பவர் (திவாகரன்); பச்சைவண்ணக் குதிரைகளைக் கொண்டவர்; பல்லாயிரக்கணக்கான கதிர்களை உடையவர்; 'ஸப்த' என்று பெயர் கொண்ட ஒரு குதிரையால் இழுக்கப்படுபவர் (ஸப்தஸப்தி); சிறப்பான பிரகாசமுடையவர் (மரீசிமான்); இருளை ஒழிப்பவர் (திமிரோந்மதந:); இவரிடமிருந்தே எல்லா மங்களங்களும் உண்டாகின்றன (சம்பு); எல்லா உருவங்களையும் அழிப்பவர் (த்வஷ்டா); எல்லா உயிர்களும் அழிக்கப்பட்டு, பின்னர், மீண்டும் படைப்பதற்காகத் தோன்றியவர் (மார்தாண்ட:); கதிர்களை உடையவர் (அம்சுமான்); (10,11)

பொன்மயமான பிரும்மாண்டத்தின் நடுவில் உள்ளவர் (ஹிரண்யகர்ப:); அடியார்களின் தாபங்களைப் போக்கி, மனத்தைக் குளிரச் செய்பவர் (சிசிர:); வெம்மையைத் தருபவர் (தபந:); ஒளியை உண்டாக்குபவர் (பாஸ்கர:); எல்லோராலும் துதிக்கப்படுபவர் (ரவி:); தன்னிடம் எப்போதும் அக்னியைத் தாங்கிக் கொண்டிருப்பவர் (அக்னிகர்ப:); அதிதி தேவியின் புதல்வர்; மாலை நேரத்தில் தானாகவே அடங்கிவிடுபவர் (ஶங்க:); பனியை அழிப்பவர் (ஶிஶிரநாஶந:); (12)

விண்வெளியின் தனிப்பெரும் நாயகர் (வ்யோமநாத:); கவ்விப் பிடிக்கும் ராகுவைப் பிளந்துகொண்டு வெளியே வரும் ஆற்றலுடையவர் (தமோபேதீ); ருக்–யஜுஸ்–ஸாம வேதங்களின் எல்லையைக் கண்டவர்; மழையைப் பொழிபவர்; நீர்நிலைகளுக்கு உற்ற நண்பர்; தட்சிணாயன காலத்தில், விந்தியமலையைத் தடமாகக் கொண்டு (விந்த்யவீதி); வான் கடலில் பரிசல் போல் செல்பவர் (ப்லவங்கம:); (13)

வெயிலின் இருப்பிடம் (ஆதபீ); வட்டவடிவமானவர் (மண்டலீ); மரணத்திற்குக் காரணமாக இருப்பவர் (ம்ருத்யு); உதயகாலத்தில், மஞ்சளும் சிவப்பும் கலந்த வண்ணத்துடன் விளங்குபவர் (பிங்கள:); உச்சிவேளையில் அனலைக் கக்கி எல்லோரையும் வெம்மையால் சுடுகிறவர் (ஸர்வதாபந:); முக்காலமும் உணர்ந்தவர் (கவி:); இந்தப் பிரபஞ்சத்தை நடத்திச் செல்பவர் (விஸ்வ:); கண்களைக் கூச வைக்கும் பேரொளி கொண்டவர் (மகாதேஜா:); எல்லாப் பிராணிகளிடமும் அன்பு பாராட்டுபவர் (ரக்த:); எல்லா உயிர்களுக்கும் மண்ணுலக வாழ்க்கை என்பது இவரால் உண்டாக்கப்படுகிறது (ஸர்வபவோத்பவ:). (14)

தாரகைகள், கோள்கள், விண்ணில் மிதக்கும் ஒளிக்கோளங்கள் ஆகியவற்றிற்கு அதிபதி; அண்டகோளத்தை நிலைநிறுத்துபவர்; ஒளிவீசும் பொருள்கள் எல்லாவற்றைக் காட்டிலும் பேரொளி வீசுபவர்; பன்னிரெண்டு மூர்த்திகளாக (இந்திரன், தாதா, பகன், பூஷன், மித்திரன், வருணன், அர்யமன், அர்ச்சிஸ், விவஸ்வான், த்வஷ்டா, ஸவிதா, விஷ்ணு என்ற பெயர்களுடன்) விளங்குபவரே! தங்களுக்கு என் நமஸ்காரம். கிழக்கு மலையை (உதயகிரியை) உதிக்கும் இடமாகக் கொண்டவருக்கு நமஸ்காரம்; மேற்கு மலையை (அஸ்தாசலம்) மறையும் இடமாகக் கொண்டவருக்கு நமஸ்காரம்; விண்ணில் ஒளிப்பிழம்பாகத் திகழும் கோளங்களின் தலைவருக்கு நமஸ்காரம்; பகல் நேரத்தின் அதிபதிக்கு நமஸ்காரம். (15,16)

ஜயாய ஜயப4த்3ராய ஹர்யஸ்வாய நமோ நம: ।
நமோ நம: ஸஹஸ்ராம்ஶோ ஆதி3த்யாய நமோ நம: ॥ (17)

நம உக்3ராய வீராய ஸாரங்க3ாய நமோ நம: ।
நம: பத்3மப்ரபோ3த4ாய மார்தாண்ட3ாய நமோ நம: ॥ (18)

ப்3ரஹ்மேஶாநாச்யுதேஶாய ஸூர்யாயாதி3த்யவர்சஸே ।
ப4ாஸ்வதே ஸர்வப4க்ஷாய ரௌத்3ராய வபுஷே நம: ॥ (19)

தமோக்4நாய ஹிமக்4நாய ஶத்ருக்4நாயாமிதாத்மநே ।
க்ருதக்4நக்4நாய தே3வாய ஜ்யோதிஷாம் பதயே நம: ॥ (20)

தப்தசாமீகராப4ாய வஹ்நயே விஶ்வகர்மணே ।
நமஸ்தமோऽபி4நிக்4நாய ரவயே லோகஸாக்ஷிணே ॥ (21)

நாஶயத்யேஷ வை பூ4தம் ததே3வ ஸ்ருஜதி ப்ரபு4: ।
பாயத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ க3ப4ஸ்திபி4: ॥ (22)

ஏஷ ஸுப்தேஷு ஜாக3ர்தி பூ4தேஷு பரிநிஷ்டி2த: ।
ஏஷ ஏவாக்3நிஹோத்ரம் ச ப2லம் சைவாக்3நிஹோத்ரிணாம் ॥ (23)

வேத3ாஶ்ச க்ரதவஶ்சைவ க்ரதூநாம் ப2லமேவ ச ।
யாநி க்ருத்யாநி லோகேஷு ஸர்வ ஏஷ ரவி: ப்ரபு4: ॥ (24)

ஏநமாபத்ஸு க்ருச்ச்2ரேஷு காந்தாரேஷு ப4யேஷு ச ।
கீர்தயந் புருஷ: கஶ்சிந்நாவஸீத3தி ராக4வ ॥ (25)

பூஜயஸ்வைநமேகாக்3ரோ தே3வதே3வம் ஜக3த்பதிம் ।
ஏதத்த்ரிகு3ணிதம் ஜப்த்வா யுத்3தே4ஷு விஜயிஷ்யஸி ॥ (26)

அஸ்மிந் க்ஷணே மஹாப3ாஹோ ராவணம் த்வம் வதி4ஷ்யதி ।
ஏவமுக்த்வா தத3ாக3ஸ்த்யோ ஜக3ாம ச யத2ாக3தம் ॥ (27)

ஏதச்ச்2ருத்வா மஹாதேஜா நஷ்டஶோகோऽப4வத்தத3ா ।
த4ாரயாமாஸ ஸுப்ரீதோ ராக4வ: ப்ரயதாத்மவாந் ॥ (28)

ஆதி3த்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வா து பரம் ஹர்ஷமவாப்தவாந் ।
த்ரிராசம்ய ஶுசிர்பூ4த்வா த4நுராத3ாய வீர்யவாந் ॥ (29)

ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா யுத்3த4ாய ஸமுபாக3மத் ।
ஸர்வயத்நேந மஹதா வதே4 தஸ்ய த்4ருதோऽப4வத் ॥ (30)

தாங்கள், வெற்றியின் வடிவம்; மேன்மையையும் நலன்களையும் அளிப்பவர்; பச்சை வண்ணக் குதிரைகளை உடையவர். தங்களுக்குக் கணக்கில்லாத நமஸ்காரங்கள். ஆயிரக்கணக்கான கிரணங்களை உடையவரே! தங்களுக்கு அளவில்லாத நமஸ்காரங்கள். அதிதி தேவியின் புதல்வருக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள். (17)

தன்னை வணங்காதவர்களிடம் கொடுமையைக் காட்டுபவர்; எல்லாப் பிராணிகளையும் தத்தம் தொழிலில் ஏவிவிடுகிறவர்; (அரை நிமிஷத்தில் இரண்டாயிரம் யோஜனை தூரம்) வெகு வேகமாகப் பயணிக்கும் தங்களுக்கு ஏராளமான நமஸ்காரங்கள். தாமரை மொட்டை மலரச் செய்பவருக்கு நமஸ்காரம்; மார்த்தாண்டருக்குப் பற்பல நமஸ்காரங்கள். (18)

பிரும்மா–விஷ்ணு–ருத்ரன் என்ற, படைத்தல்–காத்தல்–அழித்தல் ஆகியவற்றைச் செய்பவர்களுக்கும் மேலானவர்; மக்களைப் பணிசெய்யத் தூண்டுபவர்; ஆதித்யன் மூலமாகத் தன் தேஜஸை வெளிப்படுத்துகிறவர்; பேரொளி பரப்புகிறவர்; எல்லாவற்றையும் விழுங்கி அழிப்பவர்; (அழிக்கும் காலத்தில்) அச்சத்தை உண்டு பண்ணும் தோற்றத்தை உடையவர். தங்களுக்கு நமஸ்காரம். (19)

இருளைப் போக்குகின்றவர்; பனியைப் போக்குகின்றவர்; தன் அடியார்களின் பகைவர்களை அழிப்பவர்; எல்லை காணமுடியாத பேருருவத்தை உடையவர்; நன்றி கொன்றவர்களைக் கொல்பவர்; பிரகாசமான பொருள்களுக்கெல்லாம் தலைவர்; தெய்வ வடிவம் உடையவர்; தங்களுக்கு நமஸ்காரம். (20)

உருக்கி ஓடவிடப்பட்ட தங்கம் போன்று ஒளிவீசுபவர்; வேள்விகளில் அக்னி வடிவமாக இருந்து கொண்டு, அதில் சொரியப்படும் அவிப் பொருள்களை அந்தந்த தேவதைக்கு எடுத்துச் செல்பவர்; எல்லா உலகங்களின் தோற்றத்திற்கும் காரணமானவர்; அஞ்ஞானம் என்ற இருளைப் போக்குகிறவர்; ஒளி வடிவானவர்; மக்களின் இதயத்தில் அந்தர்யாமியாக இருந்து, அவர்களுடைய புண்ணிய–பாவங்களுக்குச் சாட்சியாக இருப்பவர். (தங்களுக்கு) நமஸ்காரம். (21)

ஊழிக்காலத்தில், உலகை அழிப்பவர், இவரே; சர்வசக்தி படைத்த இவரே, மீண்டும் உலகத்தைப் படைக்கிறார்; இவர், தன்னுடைய கிரணங்களால் எல்லாவற்றையும் வற்ற அடிக்கிறார்; பொசுக்குகிறார்; மழை பொழிவிக்கிறார். உயிர் பிராணிகள் உறங்கும்போது, இவர் அந்தர்யாமியாக இருந்து விழித்திருக்கிறார்; அக்னிஹோத்ரம் என்ற வைதிகச்சடங்காக இருப்பவர், இவர்தான்; இவரே, அக்னிஹோத்ரம் செய்பவர்களுக்குப் பலன் கொடுப்பவராகவும் இருக்கிறார். (22,23)

வேதங்கள், வைதிகக் கிரியைகளான வேள்விகள், வேள்வியின் பயன்கள் – இவையாவும் இவரே; உலகின் எல்லாக் காரியங்களும், சர்வசக்தி படைத்த சூரியனாலேயே நடைபெறுகின்றன. இராகவனே! ஆபத்து, விபத்து, அடர்ந்த காட்டு வழி மற்றும் அச்சம் தோன்றும் காலங்கள் ஆகியவற்றின்போது, எவனொருவன் இந்தத் தோத்திரத்தை ஓதுகிறானோ, அவன் வருத்தம் அடையாதிருப்பான். (24,25)

தேவதைகளுக்கு மேலான தேவதையாக விளங்குபவரும் உலகத் தலைவராக விளங்குபவருமாக இருக்கும் இவரை மனமொன்றி வழிபடுவாயாக. இதை மும்முறை பாராயணம் செய்; போர்களில் வெற்றி பெறுவாய். பெருந்தோளனே! இப்போது நடக்கப் போகும் போரில், நீ இராவணனை மாய்க்கப் போகிறாய்.'' இவ்வாறு கூறிவிட்டு, தான் வந்தவாறே அகஸ்தியர் திரும்பிச் சென்றார். (26,27)

எல்லையில்லாத பராக்கிரமசாலியான இராமன், இதனைக் கேட்டதும் கவலை நீங்கியவரானார். மனநிறைவுடன், புலன்களைக் கட்டுப்படுத்தி, அந்த (ஆதித்யஹ்ருதய)த் தோத்திரத்தை மானசீகமாக ஓதினார். சூரியனை நோக்கி, தோத்திரத்தைக் கூறி மிகவும் களிப்புற்றார்; மும்முறை ஆசமனம் செய்து, பரிசுத்தராகி, கையில் வில்லை ஏந்தினார். மனக் குதூகலத்துடனிருந்த அவர், இராவணனை நோக்கிப் போர் செய்வதற்காக முன்னே வந்தார். அவனை மாய்ப்பதில், தன் மனத்தையும் முயற்சியையும் முழுமையாகச் செலுத்தினார். (28–30)

அத$_2$ ரவிரவத$_3$ந்நிரீக்ஷ்ய ராமம் முதி$_3$தமநா: பரமம் ப்ரஹ்ருஷ்யமாண: ।
நிஶிசரபதிஸம்க்ஷயம் விதி$_3$த்வா ஸுரக$_3$ணமத்$_4$யக$_3$தோ வசஸ்த்வரேதி ॥ (31)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஸப்தோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

அஷ்டோத்தரஶததம: ஸர்க$_3$:

ஶுப$_4$ாஶுப$_4$நிமித்தத$_3$ர்ஶநம்

ஸ ரத$_2$ம் ஸாரதி$_2$ர்ஹ்ருஷ்ட: பரஸைந்யப்ரத$_4$ர்ஷணம் ।
க$_3$ந்த$_4$ர்வநக$_3$ராகாரம் ஸமுச்ச்$_2$ரிதபதாகிநம் ॥ (1)

யுக்தம் பரமஸம்பந்நைர்வாஜிபி$_4$ர்ஹேமமாலிபி$_4$: ।
யுத்$_3$தோ$_4$பகரணை: பூர்ணம் பதாகாத்$_4$வஜமாலிநம் ॥ (2)

க்$_3$ரஸந்தமிவ சாகாஶம் நாத$_3$யந்தம் வஸுந்த$_4$ராம் ।
ப்ரணாஶம் பரஸைந்யாநாம் ஸ்வஸைந்யாநாம் ப்ரஹர்ஷணம் ॥
ராவணஸ்ய ரத$_2$ம் க்ஷிப்ரம் சோத$_3$யாமாஸ ஸாரதி$_2$: ॥ (3)

தமாபதந்தம் ஸஹஸா ஸ்வநவந்தம் மஹாஸ்வநம் ।
ரத$_2$ம் ராக்ஷஸராஜஸ்ய நரராஜோ த$_3$த$_3$ர்ஶ ஹ ॥ (4)

க்ருஷ்ணவாஜிஸமாயுக்தம் யுக்தம் ரௌத்$_3$ரேண வர்சஸா ।
தடி$_3$த்பதாகாக$_3$ஹநம் த$_3$ர்ஶிதேந்த்$_3$ராயுத$_4$ாயுத$_4$ம் ॥ (5)

ஶரத$_4$ாரா விமுஞ்சந்தம் த$_4$ாராஸாரமிவாம்பு$_3$த$_3$ம் ।
தம் த்$_3$ருஷ்ட்வா மேக$_4$ஸங்காஶமாபதந்தம் ரத$_2$ம் ரிபோ: ॥ (6)

கி$_3$ரேர்வஜ்ராபி$_4$ம்ருஷ்டஸ்ய தீ$_3$ர்யத: ஸத்$_3$ருஶஸ்வநம் ।
விஸ்ப$_2$ாரயந் வை வேகே$_3$ந ப$_3$ாலசந்த்$_3$ரநதம் த$_4$நு: ॥
உவாச மாதலிம் ராம: ஸஹஸ்ராக்ஷஸ்ய ஸாரதி$_2$ம் ॥ (7)

மாதலே பஶ்ய ஸம்ரப்$_3$த$_4$மாபதந்தம் ரத$_2$ம் ரிபோ: ।
யத$_2$ாபஸவ்யம் பததா வேகே$_3$ந மஹதா புந: ॥
ஸமரே ஹந்துமாத்மாநம் தத$_2$ா தேந க்ருதா மதி: ॥ (8)

தத$_3$ப்ரமாத$_3$மாதிஷ்ட$_2$ந் ப்ரத்யுத்$_3$க$_3$ச்ச$_2$ ரத$_2$ம் ரிபோ: ।
வித்$_4$வம்ஸயிதுமிச்ச$_2$ாமி வாயுர்மேக$_4$மிவோத்தி$_2$தம் ॥ (9)

அவிக்லவமஸம்ப்$_4$ராந்தமவ்யக்$_3$ரஹ்ருத$_3$யேக்ஷணம் ।
ரஶ்மிஸஞ்சாரநியதம் ப்ரசோத$_3$ய ரத$_2$ம் த்$_3$ருதம் ॥ (10)

காமம் ந த்வம் ஸமாதே$_4$ய: புரந்த$_3$ரரதே$_2$ாசித: ।
யுயுத்ஸுரஹமேகாக்$_3$ர: ஸ்மாரயே த்வாம் ந ஶிக்ஷயே ॥ (11)

அப்போது, தேவக் கூட்டங்கள் சூழ நின்றிருந்த சூரிய பகவான், (இராமன் தோத்திரத்தால்) மனம் நிறைந்து, இராமனைப் பார்த்து, தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில், 'அரக்கர்கோன் அழிவான்; விரைந்து செயல்படு' என்று அருள்மொழி கூறினார். (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றெட்டு

நல்ல–தீய நிமித்தங்கள்!

இராவணனுடைய தேரோட்டி, அவன் கூறிய சொற்களால் மனநிறைவடைந்து, அந்தத் தேரை விரைவாகச் செலுத்தினான். அந்தத் தேர், எதிரிகளை அழிக்கவல்லது; (மாயையில் நிர்மாணிக்கப்பட்ட) கந்தர்வ நகரம் போல் வியப்பைத் தரக்கூடியது; அதன் உச்சியில் பல பாவட்டாக்கள் பறந்து கொண்டிருந்தன; சாரதியின் சமிக்ஞையின்படி நடக்கும் உயர்குணம் நிறைந்ததும் பொன் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டதுமான குதிரைகள் பூட்டப்பட்டிருந்தது; ரதத்தில் போர்ப் படைகலங்கள் வைக்கப்பட்டிருந்தன; தோரணங்களும் கொடிகளும் மாலைகள் போல் கட்டப்பட்டிருந்தன; ஆகாயத்தையே விழுங்குவது போல் மிக உயரமாக இருந்தது; சக்கரங்களின் ஒலியால் பூமியை அதிரச் செய்தது; எதிரிப்படைகளை அழிக்கக்கூடியதாகவும், தனது படைகளை உற்சாகப்படுத்துவதாகவும் இருந்தது. (1–3)

மானுடர் மன்னராகிய இராமன், அரக்கர் மன்னனான இராவணனின் தேர், இடியோசை போல் சப்தித்துக் கொண்டு, தன்னை நோக்கி விரைந்து வருவதைக் கண்டார். (4)

அந்தத் தேரில், கறுப்புக் குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன; பயங்கரமான ஒளியுடன் விளங்கியது; மின்னல் போல் ஒளிவீசும் கொடிகள் இருந்தன; வானவில் போல் வளைந்த விற்கள் இருந்தன; மழைத்தாரையைப் பொழியும் மேகம் போல் சரமாரிகளைப் பொழிவது; மேகம் போன்றது; வஜ்ராயுதத்தால் பிளக்கப்படும் மலைபோல் பேரொலியை எழுப்பிக் கொண்டிருந்தது. அந்த ரதத்தைப் பார்த்ததும், பிறைச் சந்திரனைப் போன்ற வில்லை வளைத்து டங்காரம் செய்து, தனது தேரை ஓட்டும் இந்திரனுடைய சாரதி மாதலியைப் பார்த்து, இராமன் கூறினார்— (5–7)

''மாதலியே! மிக வேகமாக, நம்மை நோக்கி எதிர்த்து வருகின்ற எதிரியின் தேரைப் பார்! அவன், வெகுவேகத்துடன் இடதுபக்கமாகவே மறுபடியும் வருகிறான். போரில், தன்னை மாய்த்துக் கொள்ளும் எண்ணத்துடன் தவறான இந்த வழியை மேற்கொண்டிருக்கிறான் போலும்! (8)

ஆகவே, மிகவும் கவனமாக எதிரியின் ரதத்தை எதிர்த்துச் செல். வானில் எழும்பி நிற்கும் மேகத்தை, காற்று கலைத்து சின்னபின்னமாகச் செய்துவிடுவதைப் போல, நான் அவனை அழிக்க விரும்புகிறேன். (9)

சளைக்காமலும் கலவரம் அடையாமலும், கவனத்தையும் பார்வையையும் நிலைப்படுத்தி, கடிவாளத்தைச் சரியாகப் பிடித்துக் கொண்டு வேகமாகத் தேரைச் செலுத்து. (10)

தேவேந்திரனுடைய ரதத்தைச் செலுத்திப் பழகியவன், நீ. அதனால், புதிதாக எதுவும் உனக்குக் கற்பிக்கப்பட வேண்டியதில்லை. நான், மனத்தை ஒருமுகப்படுத்தி, போரில் ஈடுபட விரும்புகிறேன். அதனால்தான், நான் உனக்கு நீ செய்யவேண்டிய காரியத்தை நினைவுபடுத்துகிறேனே தவிர, உனக்கு உபதேசம் செய்யவில்லை.'' (11)

பரிதுஷ்ட: ஸ ராமஸ்ய தேந வாக்யேந மாதலி: ।
ப்ரசோதயாமாஸ ரதம் ஸுரஸாரதிஸத்தம: ॥ (12)

அபஸவ்யம் தத: குர்வந் ராவணஸ்ய மஹாரதம் ।
சக்ரோத்க்ஷிப்தேந ரஜஸா ராவணம் வ்யவதாநயத் ॥ (13)

தத: க்ருத்தோ தஶக்ரீவஸ்தாம்ரவிஸ்பாரிதேக்ஷண: ।
ரதப்ரதிமுகம் ராமம் ஸாயகைரவதூநயத் ॥ (14)

தர்ஷணாமர்ஷிதோ ராமோ தைர்யம் ரோஷேண லம்பயந் ।
ஜக்ராஹ ஸுமஹாவேகமைந்த்ரம் யுதி ஶராஸநம் ॥
ஶராம்ஶ்ச ஸுமஹாதேஜா: ஸூர்யரஶ்மிஸமப்ரபாந் ॥ (15)

ததோ(அ)போடம் மஹத்யுத்தமந்யோ(அ)ந்யவதகாங்க்ஷிணோ: ।
பரஸ்பராபிமுகயோர்த்ருப்தயோரிவ ஸிம்ஹயோ: ॥ (16)

ததோ தேவா: ஸகந்தர்வா: ஸித்தாஶ்ச பரமர்ஷய: ।
ஸமேயுர்த்வைரதம் த்ரஷ்டும் ராவணக்ஷயகாங்க்ஷிண: ॥ (17)

ஸமுத்பேதுரதோத்பாதா தாருணா ரோமஹர்ஷணா: ।
ராவணஸ்ய விநாஶாய ராகவஸ்ய ஜயாய ச ॥ (18)

வவர்ஷ ருதிரம் தேவோ ராவணஸ்ய ரதோபரி ।
வாதா மண்டலிநஸ்தீக்ஷ்ணா ஹ்யபஸவ்யம் ப்ரசக்ரமு: ॥ (19)

மஹத்க்ருத்ரகுலம் சாஸ்ய ப்ரமமாணம் நப:ஸ்தலே ।
யேந யேந ரதோ யாதி தேந தேந ப்ரதாவதி ॥ (20)

ஸந்த்யயா சாவ்ருதா லங்கா ஜபாபுஷ்பநிகாஶயா ।
த்ருஶ்யதே ஸம்ப்ரதீப்தேவ திவஸே(அ)பி வஸுந்தரா ॥ (21)

ஸநிர்காதா மஹோல்காஶ்ச ஸம்ப்ரசேருர்மஹாஸ்வநா: ।
விஷாதயம்ஸ்தே ரக்ஷாம்ஸி ராவணஸ்ய ததாஹிதா: ॥ (22)

ராவணஶ்ச யதஸ்தத்ர ஸஞ்சசால வஸுந்தரா ।
ரக்ஷஸாம் ச ப்ரஹரதாம் க்ருஹீதா இவ பாஹவ: ॥ (23)

தாம்ரா: பீதா: ஸிதா: ஶ்வேதா: பதிதா: ஸூர்யரஶ்மய: ।
த்ருஶ்யந்தே ராவணஸ்யாங்கே பர்வதஸ்யேவ தாதவ: ॥ (24)

க்ருத்ரைரநுகதாஶ்சாஸ்ய வமந்த்யோ ஜ்வலநம் முகை: ।
ப்ரணேதுர்முகமீக்ஷந்த்ய: ஸம்ரப்தமஶிவம் ஶிவா: ॥ (25)

ப்ரதிகூலம் வவௌ வாயூ ரணே பாம்ஸூந் ஸமாகிரந் ।
தஸ்ய ராக்ஷஸராஜஸ்ய குர்வந் த்ருஷ்டிவிலோபநம் ॥ (26)

நிபுணனான தேவசாரதி மாதலி, இராமனின் இந்த உரையைக் கேட்டு மனமகிழ்ந்தவனாய், ரதத்தைக் கவனத்துடன் செலுத்தத் தொடங்கினான். (12)

அவன், இராவணனுடைய பெருந்தேர், தனக்கு வலதுபுறமாக இருக்கும்படி தன் தேரை ஓட்டி, தேர்ச்சக்கரங்கள் கிளப்பிய தூசிப் படலத்தால் இராவணனை மறைத்தான். (13)

தூசிப் படலத்தால் தன்னை மறைத்ததால் இராவணனுக்குக் கோபம் உண்டாயிற்று; கண்கள் சிவந்து விரிந்தன. தன் தேருக்கு எதிரே வரும் இராமனை அம்புகளால் தாக்கினான். (14)

மிகவும் பராக்கிரமசாலியான இராமன், எதிரி தன்னை எதிர்ப்பதைப் பொறாதவராக கோபத்தையும், அதனுடன் தைரியத்தையும் வளர்த்துக் கொண்டு, இந்திரன் கொடுத்தனுப்பிய பேராற்றல் கொண்ட வில்லையும், சூரியகிரணங்கள் போல் தகிக்கும் பாணங்களையும் கையில் எடுத்துக் கொண்டார். (15)

இறுமாப்புக் கொண்ட இரண்டு சிங்கங்கள் போல், ஒருவரையொருவர் மாய்க்க விரும்பிய அவர்கள் ஒருவரையொருவர் எதிர்த்து, கோரமாக சண்டை செய்யத் தொடங்கினார்கள். (16)

இராவணனுடைய அழிவை விரும்பிய தேவர்களும் கந்தர்வ–ஸித்த–மாமுனிவர்களும், இரண்டு தேராளிகள் செய்யும் கடும் போரைக் காணக் குழுமினார்கள். (17)

அப்போது, காண்போருக்கு மயிர்க்கூச்சலை உண்டாக்கும் பயங்கரமான அபசகுனங்கள் தோன்றின. அவை, இராவணனுடைய அழிவையும், இராமனுடைய வெற்றியையும் புலப்படுத்தின. (18)

மேகங்கள், இராவணன் ரதத்தின்மீது குருதி மழை பொழிந்தன; பயங்கரமான சுழற்காற்று, இராவண ரதத்தின் இடதுபக்கமாகச் சுழன்று வீசியது. (19)

ஏராளமான கழுகுகளின் கூட்டம், இராவணனுடைய தேர் எங்கெங்கே சென்றதோ, அங்கெல்லாம் சென்று, ஆகாயத்தில் வட்டமிட்டுத் திரிந்தது. (20)

உரிய காலம் வராதபோதே, பகற்பொழுதிலேயே, செம்பருத்திப் பூவைப் போல் செவ்வண்ணத்தால் சூழப்பெற்ற இலங்கைப் பட்டணம், பூமியே தீப்பற்றி எரிவதைப் போல் காணப்பட்டது. (21)

எரிகொள்ளிகளும், பேரோசையுடன் கூடிய இடிகளும் வானிலிருந்து விழுந்தன. வரப்போகும் தீயவைகளைக் குறிக்கும் அவைகள், இராவணனைச் சேர்ந்த அரக்கர்களுக்கு மனக்கலக்கத்தை உண்டாக்கின. (வீடணன் மற்றும் அவனுடன் வந்த நான்கு அரக்கர்களுக்கு மனக்கலவரத்தை உண்டாக்கவில்லை.) (22)

இராவணன் போகுமிடங்களிலெல்லாம் நிலநடுக்கம் உண்டாயிற்று; அரக்கர்களுடைய கைகள், படைக்கலங்களை எடுத்துத் தாக்கமுடியாதபடி, எவராலோ கட்டப்பட்டாற்போல் ஆகிவிட்டன. (23)

இராவணனுடைய சரீரத்தில் சூரிய கிரணங்கள் சிவப்பு, மஞ்சள், வெளுப்பு, கறுப்பு ஆகிய நிறங்களில் விழுந்து, பற்பல வண்ணங்கள் கொண்ட தாதுக்கள் விளங்கும் மலையை நினைவுபடுத்தின. (24)

நரிகள், நெருப்புச் சுவாலைகளைக் கக்கிக் கொண்டு, இராவணனுடைய முகத்தைப் பார்த்து அமங்களமாக ஊளையிட்டன. அதைத் தொடர்ந்து வந்த கழுகுகளும் பயங்கரமாக ஒலியெழுப்பின. (25)

போர்க்களத்தில், இராக்கத மன்னனின் பார்வையை மறைத்துக் கொண்டு, புழுதியை வாரி இறைத்தவாறு பேய்க்காற்று, அவனை எதிர்த்து வீசியது. (26)

நிபேதுரிந்த்$_3$ராஶநய: ஸைந்யே சாஸ்ய ஸமந்தத: ।
து$_3$ர்விஷ்ஹயஸ்வநா கே$_4$ாரா விநா ஜலத$_4$ரஸ்வநம் ॥ (27)

தி$_3$சஶ்ச ப்ரதி$_3$ஶ: ஸர்வா ப$_3$பூ$_4$வுஸ்திமிராவ்ருதா: ।
பாம்ஸுவர்ஷேண மஹதா து$_3$ர்த$_3$ர்ஶம் ச நபே$_4$ாऽப$_4$வத் ॥ (28)

குர்வத்ய: கலஹம் கே$_4$ாரம் ஶாரிகாஸ்தத்$_3$ரத$_2$ம் ப்ரதி ।
நிபேது: ஶதஶஸ்தத்ர தா$_3$ருணம் தா$_3$ருணாருதா: ॥ (29)

ஜக$_4$நேப்$_4$ய: ஸ்பு$_2$லிங்கா$_3$ஶ்ச நேத்ரேப்$_4$யோऽஶ்ருணி ஸந்ததம் ।
முமுசுஸ்தஸ்ய துரகா$_3$ஸ்துல்யமக்$_3$நிம் ச வாரி ச ॥ (30)

ஏவம்ப்ரகாரா ப$_3$ஹவ: ஸமுத்பாதா ப$_4$யாவஹா: ।
ராவணஸ்ய விநாஶாய தா$_3$ருணா: ஸம்ப்ரஜஜ்ஞிரே ॥ (31)

ராமஸ்யாபி நிமித்தாநி ஸௌம்யாநி ச ஶுப$_4$ாநி ச ।
ப$_3$பூ$_4$வுர்ஜயஶம்ஸீநி ப்ராது$_3$ர்பூ$_4$தாநி ஸர்வஶ: ॥ (32)

நிமித்தாநி ச ஸௌம்யாநி ராக$_4$வ: ஸ்வஜயாய ச ।
த்$_3$ருஷ்ட்வா பரமஸம்ஹ்ருஷ்டோ ஹதம் மேநே ச ராவணம் ॥ (33)

ததோ நிரீக்ஷ்யாத்மக$_3$தாநி ராக$_4$வோ
ரணே நிமித்தாநி நிமித்தகோவித$_3$: ।
ஜக$_3$ாம ஹர்ஷம் ச பராம் ச நிர்வ்ருதிம்
சகார யுத்$_3$தே$_4$ ஹ்யதி$_4$கம் ச விக்ரமம் ॥ (34)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ அஷ்டோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

நவோத்தரஶததம: ஸர்க$_3$:

ராவணத்$_4$வஜோந்மத$_2$நம்

தத: ப்ரவ்ருத்தம் ஸுக்ரூரம் ராமராவணயோஸ்ததா$_3$ ।
ஸுமஹத்$_3$த்$_3$வைரத$_2$ம் யுத்$_3$த$_4$ம் ஸர்வலோகப$_4$யாவஹம் ॥ (1)

ததோ ராக்ஷஸஸைந்யம் ச ஹரீணாம் ச மஹத்$_3$ப$_3$லம் ।
ப்ரக்$_3$ருஹீதப்ரஹரணம் நிஶ்சேஷ்டம் ஸமதிஷ்ட$_2$த ॥ (2)

ஸம்ப்ரயுத்$_3$தெ$_4$ள ததோ த்$_3$ருஷ்ட்வா ப$_3$லவந்நரராக்ஷஸௌ ।
வ்யாக்ஷிப்தஹ்ருத$_3$யா: ஸர்வே பரம் விஸ்மயமாக$_3$தா: ॥ (3)

நாநாப்ரஹரணைர்வ்யக்$_3$ரைர்பு$_4$ஜைர்விஸ்மிதபு$_3$த்$_3$த$_4$ய: ।
தஸ்து$_2$: ப்ரேக்ஷ்ய ச ஸங்க்$_3$ராமம் நாபி$_4$ஜக்$_4$நு: பரஸ்பரம் ॥ (4)

அவனுடைய படையின்மீது, எல்லாப் பக்கங்களிலிருந்தும் வானத்தில் மேகம் மோதிக் கொள்ளும் ஓசையில்லாமலே, பயங்கரமான இடிகள் சகிக்க முடியாத சப்தங்களை எழுப்பிக் கொண்டு விழுந்தன. (27)

எல்லாத் திசைகளும் மூலைகளும் இருளால் சூழப்பட்டன; மிகப்பெரிய அளவில் எழுந்த புழுதிப் படலத்தினால் ஆகாயம் பார்வைக்கு எட்டாததாக ஆயிற்று. (28)

கணக்கிலடங்கா ஸாரிகை என்னும் கிளிகள், ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொண்டும், பயங்கரமாகக் கூச்சலிட்டுக் கொண்டும், அவன் ரதத்தின் மேல் விழுந்தன. (29)

தேர்க் குதிரைகளின் பின்பாகங்களிலிருந்து நெருப்புப் பொறிகள் கிளம்பின; கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. இவ்வாறு, ஒரே சமயத்தில் நெருப்பையும் தண்ணீரையும் குதிரைகள் இடைவிடாது பொழிந்தன. (30)

இவ்விதமாக, இராவணனுடைய அழிவைக் குறிக்கும் பயங்கரமான, அச்சத்தை விளைவிக்கின்ற பல தீயநிமித்தங்கள் தோன்றின. (31)

இராமனுக்கு வெற்றியைக் குறிக்கும் மங்களமான நன்னிமித்தங்கள் எல்லா இடங்களிலும் காணப்பட்டன. (32)

இராமன், தன்னுடைய வெற்றியை அறிவிக்கும் நற்சகுனங்களைப் பார்த்து, உள்ளம் பூரித்து, 'இராவணன் மாய்க்கப்பட்டான்' என்றே உறுதியாக எண்ணினார். (33)

சகுன சாஸ்திர நிபுணரான இராமன், போர்க்களத்தில், தன்னைச் சார்ந்து தோன்றிய நன்னிமித்தங்களைக் கண்டு, திருப்தியும் மன அமைதியும் கொண்டார். போரில், மேலும் அதிகமாகத் தன் வீரத்தைக் காட்ட முற்பட்டார். (34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றொன்பது

இராம–இராவணன் போர்

அப்பொழுது, இரு தேர்வீரர்களான இராமனுக்கும் இராவணனுக்குமிடையே, மிகக்கொடியதும் எல்லா உலகங்களுக்கும் பயத்தைத் தருவதுமான போர் நிகழலாயிற்று. (1)

(இரு தேராளிகளின் பயங்கரமான சண்டையில் பிரமித்துப் போயிருந்த) அரக்கர் படையும் வானரர்களின் பெரும்படையும், கைகளில் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டிருந்தாலும், செயல்படும் எண்ணம் வராமல் அசையாமல் நின்றன. (2)

மானிடர்–அரக்கன் ஆகிய இரு வீரர்களுக்கிடையே மிகவும் கடுமையான போர் நடப்பதைக் கண்டு, எல்லோர் மனமும் அவர்களை நோக்கியே சென்றது. இரு வீரர்களின் திறமையைக் கண்டு எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். (3)

இரு பக்கத்துப் படைவீரர்களின் கைகளிலும் பலவகையான படைக்கலங்கள் இருந்தன; சண்டை போட வேண்டும் என்ற துடிப்பும் இருந்தது. ஆனால், (இராம–இராவண யுத்தத்தைப் பார்த்துத்) திகைத்துப் போயிருந்த அவர்கள், ஒருவரோடொருவர் சண்டை போடாமல் நின்றார்கள். (4)

ரக்ஷஸாம் ராவணம் சாபி வாநராணாம் ச ராக$_4$வம் ।
பஶ்யதாம் விஸ்மிதாக்ஷாணாம் ஸைந்யம் சித்ரமிவாப$_3$பௌ$_4$ ॥ (5)

தௌ து தத்ர நிமித்தாநி த்$_3$ருஷ்ட்வா ராவணராக$_4$வௌ ।
க்ருதபு$_3$த்$_3$தீ$_4$ ஸ்தி$_2$ராமர்ஷௌ யுயுதா$_4$தே ஹ்யபீ$_4$தவத் ॥ (6)

ஜேதவ்யமிதி காகுத்ஸ்தோ$_2$ மர்தவ்யமிதி ராவண: ।
த்$_4$ருதௌ ஸ்வவீர்யஸர்வஸ்வம் யுத்$_3$தே$_4$ऽத$_3$ர்ஶயதாம் ததா$_3$ ॥ (7)

தத: க்ரோதா$_4$த்$_3$த$_3$ஶக்$_3$ரீவ: ஶராந் ஸந்தா$_4$ய வீர்யவாந் ।
முமோச த்$_4$வஜமுத்$_3$தி$_3$ஶ்ய ராக$_4$வஸ்ய ரதே$_2$ ஸ்தி$_2$தம் ॥ (8)

தே ஶராஸ்தமநாஸாத்$_3$ய புரந்த$_3$ரரத$_2$த்$_4$வஜம் ।
ரத$_2$ஶக்திம் பராம்ருஶ்ய நிபேதுர்த$_4$ரணீதலே ॥ (9)

ததோ ராமோऽபி$_4$ஸங்க்ருத்$_3$த$_4$ஶ்சாபமாயம்ய வீர்யவாந் ।
க்ருதப்ரதிக்ருதம் கர்தும் மநஸா ஸம்ப்ரசக்ரமே ॥ (10)

ராவணத்$_4$வஜமுத்$_3$தி$_3$ஶ்ய முமோச நிஶிதம் ஶரம் ।
மஹாஸர்பமிவாஸஹ்யம் ஜ்வலந்தம் ஸ்வேந தேஜஸா ॥ (11)

ஜகா$_3$ம ஸ மஹீம் சி$_2$த்த்வா த$_3$ஶக்$_3$ரீவத்$_4$வஜம் ஶர: ।
ஸ நிக்ருத்தோऽபதத்$_3$பூ$_4$மௌ ராவணஸ்ய ரத$_2$த்$_4$வஜ: ॥ (12)

த்$_4$வஜஸ்யோந்மத$_2$நம் த்$_3$ருஷ்ட்வா ராவண: ஸுமஹாப$_3$ல: ।
ஸம்ப்ரதீ$_3$ப்தோऽப$_4$வத் க்ரோதா$_4$த$_3$மர்ஷாத் ப்ரத$_3$ஹந்நிவ ॥ (13)

ஸ ரோஷவஶமாபந்ந: ஶரவர்ஷம் மஹத்$_3$வமந் ।
ராமஸ்ய துரகா$_3$ந் தீ$_3$ப்தை: ஶரைர்விவ்யாத$_4$ ராவண: ॥ (14)

தே வித்$_3$தா$_4$ ஹரயஸ்தத்ர நாஸ்க$_2$லந்நாபி ப$_3$ப்$_4$ரமு: ।
ப$_3$பூ$_4$வு: ஸ்வஸ்த$_2$ஹ்ருத$_3$யா: பத்$_3$மநாலைரிவாஹதா: ॥ (15)

தேஷாமஸம்ப்$_4$ரமம் த்$_3$ருஷ்ட்வா வாஜிநாம் ராவணஸ்ததா$_3$ ।
பூ$_4$ய ஏவ ஸுஸங்க்ருத்$_3$த$_4$: ஶரவர்ஷம் முமோச ஹ ॥ (16)

க$_3$தா$_3$ஶ்ச பரிகா$_4$ஶ்சைவ சக்ராணி முஸலாநி ச ।
கி$_3$ரிஶ்ருங்கா$_3$ணி வ்ருக்ஷாம்ஶ்ச ததா$_2$ ஶூலபரஶ்வதா$_4$ந் ॥
மாயாவிஹிதமேதத்து ஶஸ்த்ரவர்ஷமபாதயத் ॥ (17)

துமுலம் த்ராஸஜநநம் பீ$_4$மம் பீ$_4$மப்ரதிஸ்வநம் ।
தத்$_3$வர்ஷமப$_4$வத்$_3$யுத்$_3$தே$_4$ நைகஶஸ்த்ரமயம் மஹத் ॥ (18)

விமுச்ய ராக$_4$வரத$_2$ம் ஸமந்தாத்$_3$வாநரே ப$_3$லே ।
ஸாயகைரந்தரிக்ஷம் ச சகாராஶு நிரந்தரம் ॥ (19)

இராவணனை அரக்கர்களும், இராமனை வானரர்களும் வியப்புடன் பார்த்துக் கொண்டு, செயல்படாமல் நின்ற காட்சி, எழுதி வைத்த சித்திரம்போல் இருந்தது! (5)

போர்க்களத்தில் காணப்பட்ட நிமித்தங்களை இராவணனும் இராமனும் பார்த்து, அவற்றின் பலாபலன்களைத் தெரிந்துகொண்டதால், போர் செய்தே தீருவது என்று நிச்சயித்து, ஆத்திரத்துடன் அச்சமில்லாமல் போர் புரிந்தார்கள். (6)

இராமன், 'வெற்றி பெற்றே தீரவேண்டும்' என்பதிலும், இராவணன், 'மடிந்து போகவே வேண்டும்' என்பதிலும் உறுதி கொண்டவர்களாக, போரில் முழுத் திறமையையும் காட்டினார்கள். அப்போது, மாவீரனான இராவணன், கோபத்துடன் வில்லில் பாணங்களைத் தொடுத்து, இராமனுடைய ரதத்தில் இருக்கும் கொடியைக் குறிவைத்துச் செலுத்தினான். (7,8)

அவனால் விடப்பட்ட பாணங்கள், இந்திரனுடைய தேர்க்கொடியை அணுகாமல், ரதசக்தியைத் தொட்டுவிட்டுத் தரையில் விழுந்தன. (தேவரதம் ஆனதால், தேருக்கே தனி ஆற்றல் இருந்ததால், இராவணனுடைய அம்புகளைத் தடுத்து நிறுத்திவிட்டு – என்பதும், சில உரைகாரர்களது கருத்து. ரதசக்தி என்பது, தெய்வீகத் தேரின் ஓர் உறுப்பு என்றும் கூறுவதுண்டு.) (9)

எல்லையில்லா வீரம் படைத்த இராமன், மிகவும் சீற்றமடைந்து, இராவணனின் தாக்குதலுக்குப் பதில் தருவதற்காக வில்லை வளைத்து மனத்திற்குள் திட்டம் போட்டார். (10)

கூர்மையானதும், விஷப்பாம்பு போல் கொடுமையானதும், தன் இயல்பான ஒளிப்பிழம்பு போல் விளங்குவதுமான ஒரு பாணத்தை எடுத்து, இராவணன் தேர்க்கொடியைக் குறிவைத்துச் செலுத்தினார். (11)

இராவணனுடைய தேர்க்கொடி, இராமபாணத்தால் அறுக்கப்பட்டு பூமியில் விழுந்தது; அந்த பாணம், இராவணக் கொடியை அறுத்துத் தள்ளிய பின்னர், பூமிக்குள் சென்று மறைந்தது. அளவிட முடியாத பலங்கொண்ட இராவணன், தேர்க்கொடி வீழ்த்தப்பட்டதைப் பார்த்ததும், பொறாமையாலும் கோபத்தாலும் எதிரியை எரித்துவிடுபவன் போல் அனலைக் கக்கினான். (12,13)

கோபத்தின் வசப்பட்ட இராவணன், இராமனுடைய தேர்க்குதிரைகளின் மீது நெருப்புப் பொறி பறக்கும் பாணங்களை இடைவிடாது மாரியெனப் பொழிந்து நோகடித்தான். (14)

இராவண பாணங்களால் தாக்கப்பட்ட அந்தக் குதிரைகள், நடை தடுமாறவில்லை; மனக்கலவரம் அடையவில்லை; தாமரைத் தண்டுகளால் அடிக்கப்பட்டவை போன்று அமைதி இழக்காமல் இருந்தன. (15)

குதிரைகள் கொஞ்சமும் கலவரமடையாததைப் பார்த்த இராவணனுக்கு, மேலும் கோபம் அதிகரித்தது; மறுபடியும் குதிரைகள்மீது சரமாரி பொழிந்தான். (16)

கதைகள், குண்டாந்தடிகள், சக்கராயுதங்கள், உலக்கைகள், மலைச்சிகரங்கள், மரங்கள், சூலங்கள், கோடாலிகள் போன்ற ஆயுதங்களையும், மாயையால் உண்டாக்கப்பட்ட வேறு பல ஆயுதங்களையும் பொழிந்து தள்ளினான், (இராவணன்). அவைகள், மனத்தைக் கலங்கச் செய்வன; அச்சத்தைக் கொடுப்பன; கொடிய நாச வேலை செய்வன; பயங்கரமான ஒலியுடன் வந்து தாக்கக் கூடியன. போரில், இப்படிப்பட்ட படைக்கலங்களின் இடைவிடாத பொழிவு ஏற்பட்டது. (17,18)

அவனால் விடப்பட்ட ஆயுதங்கள், இராமனுடைய தேரை விட்டுவிட்டு, வானரப் படையின் மேல் எல்லாப் பக்கங்களிலும் வானில் இடைவிடாமல் பரவி விழுந்தன. (19)

ஸஹஸ்ரஶஸ்ததோ ப$_3$ாணாநஶ்ராந்தஹ்ருத$_3$யோத்$_3$யம: ।
முமோச ச த$_3$ஶக்$_3$ரீவோ நி:ஸங்கே$_3$நாந்தராத்மநா ॥ (20)

வ்யாயச்ச$_2$மாநம் தம் த்$_3$ருஷ்ட்வா தத்பரம் ராவணம் ரணே ।
ப்ரஹஸந்நிவ காகுத்ஸ்த$_2$: ஸந்த$_3$தே$_4$ ஸாயகாஞ்ஶிதாந் ॥
ஸ முமோச ததோ ப$_3$ாணாந் ரணே ஶதஸஹஸ்ரஶ: ॥ (21)

தாந் த்$_3$ருஷ்ட்வா ராவணஶ்சக்ரே ஸ்வஶரை: க$_2$ம் நிரந்தரம் ।
ததஸ்தாப்$_4$யாம் ப்ரமுக்தேந ஶரவர்ஷேண ப$_4$ாஸ்வதா ॥
ஶரப$_3$த்$_3$த$_4$மிவாப$_4$ாதி த்$_3$விதீயம் ப$_4$ாஸ்வத$_3$ம்ப$_3$ரம் ॥ (22)

நாநிமித்தோঽப$_4$வத்$_3$ப$_3$ாணோ நாதிபே$_4$த்தா ந நிஷ்ப$_2$ல: ।
அந்யோந்யமபி$_4$ஸம்ஹத்ய நிபேதுர்த$_4$ரணீதலே ॥
தத$_2$ா விஸ்ருஜதோர்ப$_3$ாணாந் ராமராவணயோர்ம்ருதே$_4$ ॥ (23)

ப்ராயுத்$_4$யதாமவிச்சி$_2$ந்நமஸ்யந்தௌ ஸவ்யத$_3$க்ஷிணம் ।
சக்ரதுஶ்ச ஶரௌகை$_4$ஸ்தௌ நிருச்ச்$_2$வாஸமிவாம்ப$_3$ரம் ॥ (24)

ராவணஸ்ய ஹயாந் ராமோ ஹயாந் ராமஸ்ய ராவண: ।
ஜக்$_4$நதுஸ்தௌ தத$_2$ாந்யோந்யம் க்ருதாநுக்ருதகாரிணௌ ॥ (25)

ஏவம் து தௌ ஸுஸங்க்ருத்$_3$தௌ$_4$ சக்ரதுர்யுத்$_3$த$_4$மத்$_3$பு$_4$தம் ।
முஹூர்தமப$_4$வத்$_3$யுத்$_3$த$_4$ம் துமுலம் ரோமஹர்ஷணம் ॥ (26)

ப்ரயுத்$_4$யமாநௌ ஸமரே மஹாப$_3$லௌ
ஶிதை: ஶரை ராவணலக்ஷ்மணாக்$_3$ரஜௌ ।
த்$_4$வஜாவபாதேந ஸ ராக்ஷஸாதி$_4$போ
ப்$_4$ருஶம் ப்ரசுக்ரோத$_4$ தத$_3$ா ரகூ$_4$த்தமே ॥ (27)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ நவோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

த$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$:

ராவணைகஶதஶிரஶ்சே$_2$த$_3$நம்

தௌ தத$_2$ா யுத்$_4$யமாநௌ து ஸமரே ராமராவணௌ ।
த$_3$த்$_3$ருஶு: ஸர்வபூ$_4$தாநி விஸ்மிதேநாந்தராத்மநா ॥ (1)

அர்த$_3$யந்தௌ து ஸமரே தயோஸ்தௌ ஸ்யந்த$_3$நோத்தமௌ ।
பரஸ்பரமபி$_4$க்ருத்$_3$தௌ$_4$ பரஸ்பரமபி$_4$த்$_3$ருதௌ ॥
பரஸ்பரவதே$_4$ யுக்தௌ கோ$_4$ரரூபௌ ப$_3$பூ$_4$வது: ॥ (2)

தளராத மனமும் முயற்சியும் உடைய இராவணன், உயிர்மேல் உள்ள ஆசையை விட்டுவிட்டு, ஆயிரக்கணக்கான பாணங்களை விடுத்தான். (20)

இராவணன், போரிலேயே மனம் ஊன்றியிருப்பதைக் கண்டு, (இராமனை வெல்ல முடியாது என்பதை உணர்ந்து, சீதையைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் இந்தப் பாவிக்கும் அபயம் அளிக்கலாமே? – என்று இராமன் கருணையுடன் எண்ணியபோதிலும்,) சற்றே இளநகை புரிந்து, தன் வில்லில், கூர்மையான பாணங்களைத் தொடுத்தார். (இளநகை புரிந்தது, அவன்மேல் இரக்கம் காரணமாக.) பின்னர், போர்க்களத்தில், நூறு–ஆயிரக்கணக்கில் பாணங்களைச் செலுத்தினார். (21)

இராவணன், அவைகளைப் பார்த்ததும், தனது பாணங்களால் ஆகாயத்தை இடைவெளியற்றதாகச் செய்தான். (இயற்கையான ஆகாயம் மூடப்பட்டுவிட்டது. ஆனால்,) அவ்விருவராலும் எய்தப்பட்ட ஒளிவீசுகின்ற பாணங்களின் பொழிவினால், சரங்களால் வேயப்பட்ட இரண்டாவது ஆகாயம் அங்கே உண்டாயிற்று. (22)

போர்க்களத்தில், இராம–இராவணர்கள் ஆயிரக்கணக்கான பாணங்களை விடுத்தபோதிலும், ஒரு பாணம்கூட இலக்குத் தவறவில்லை; வேறு இலக்கைச் சென்று தாக்கவும் இல்லை; எந்தக் குறியையும் தாக்காமல் பயனற்றுப் போகவுமில்லை. அவைகள் ஒன்றையொன்று தாக்கிக்கொண்டு பூமியில் விழுந்தன. இவ்வாறாக, இராமனும் இராவணனும் பாணங்களை விடுத்தார்கள். (23)

அவ்விருவரும் வலதுசாரி–இடதுசாரியாக, நொடி நேர இடைவெளிகூட இல்லாமல், இடைவிடாது பயங்கரமான பாணங்களை மாரியாகப் பொழிந்து, ஆகாயம் மூச்சுவிடக்கூட இயலாமல் திணறும்படிச் செய்துவிட்டார்கள். இராவணனுடைய குதிரைகளை இராமனும், இராமனுடைய குதிரைகளை இராவணனும் நோகச் செய்து, ஒருவர் செயலுக்கு மற்றவர் எதிர்ச்செயல் செய்வது என்றபடி தாக்கிக் கொண்டார்கள். (24,25)

இவ்வண்ணம், அவ்விருவரும் மிகவும் கோபங்கொண்டு பிரமிப்பூட்டும் வகையில் போரிட்டார்கள். பார்ப்பவர்களுக்கு சிறிதுகாலம் உரோமச் சிலிர்ப்பையும் மனக்குழப்பத்தையும் உண்டாக்குவதாக, அந்தப் போர் நிகழ்ந்தது. (26)

மகாபலசாலிகளான இராம–இராவணர்கள் கூரிய பாணங்களால் போரிட்டுக் கொண்டிருந்தபோது, இராவணனுடைய தேர்க்கொடி அறுத்துத் தள்ளப்பட்டதால் அரக்கமன்னன், இராமன்மீது மிகவும் கோபம் கொண்டான். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பத்து

இராவணனுடைய தலைகளைத் துண்டித்தல்!

போர்க்களத்தில் படுபயங்கரமாகப் போர் செய்யும் இராம–இராவணர்களை எல்லா உயிர்ப்பிராணிகளும் மிகவும் வியப்படைந்த உள்ளத்தோடு பார்த்தன. (1)

அவர்களுடைய உத்தமமான ரதங்கள் இரண்டும் ஒன்றையொன்று நொறுக்கும்விதமாக, சினத்துடன் ஒன்றின்மேல் ஒன்று மோதிக் கொண்டன. எதிர்த் தேரை அழிப்பதில் ஊக்கம் கொண்டு, பயங்கரமாகக் காட்சி தந்தன. (தேர் வீரர்கள் மட்டுமல்லாமல், தேர்ப்பாகர்களும், தேரோடு தேரை மோதவிட்டு, அதை அழிப்பதில் தத்தம் திறமையைக் காட்டினார்கள்.) (2)

மண்ட$_3$லாநி ச வீதீ$_2$ஶ்ச க$_3$தப்ரத்யாக$_3$தாநி ச ।
த$_3$ர்ஶயந்தௌ ப$_3$ஹுவிதா$_4$ம் ஸூதஸாரத்$_2$யஜாம் க$_3$திம் ॥ (3)

அர்த$_3$யந் ராவணம் ராமோ ராக$_4$வம் சாபி ராவண: ।
க$_3$திவேக$_3$ம் ஸமாபந்நௌ ப்ரவர்தநநிவர்தநே ॥ (4)

க்ஷிபதோ: ஶரஜாலாநி தயோஸ்தௌ ஸ்யந்த$_3$நோத்தமௌ ।
சேரது: ஸம்யுக$_3$மஹீம் ஸாஸாரௌ ஜலதௌ$_3$ யதா$_2$ ॥ (5)

த$_3$ர்ஶயித்வா ததா$_2$ தௌ து க$_3$திம் ப$_3$ஹுவிதா$_4$ம் ரணே ।
பரஸ்பரஸ்யாபி$_4$முகௌ$_2$ புநரேவாவதஸ்த$_2$து: ॥ (6)

து$_4$ரம் து$_4$ரேண ரத$_2$யோர்வக்த்ரம் வக்த்ரேண வாஜிநாம் ।
பதாகாஶ்ச பதாகாபி$_4$: ஸமேயு: ஸ்தி$_2$தயோஸ்ததா$_3$ ॥ (7)

ராவணஸ்ய ததோ ராமோ த$_4$நுர்முக்தை: ஶிதை: ஶரை: ।
ஶதுர்பி$_4$ஶ்சதுரோ தீ$_3$ப்தைர்ஹயாந் ப்ரத்யபஸர்பயத் ॥ (8)

ஸ க்ரோத$_4$வஶமாபந்நோ ஹயாநாமபஸர்பணே ।
முமோச நிஶிதாந் பா$_3$ணாந் ராக$_4$வாய நிஶாசர: ॥ (9)

ஸோऽதிவித்$_3$தோ$_4$ ப$_3$லவதா த$_3$ஶக்$_3$ரீவேண ராக$_4$வ: ।
ஜகா$_3$ம ந விகாரம் ச ந சாபி வ்யதி$_2$தோऽப$_4$வத் ॥ (10)

சிக்ஷேப ச புநர்பா$_3$ணாந் வஜ்ரபாதஸமஸ்வநாந் ।
ஸாரதி$_2$ம் வஜ்ரஹஸ்தஸ்ய ஸமுத்$_3$தி$_3$ஶ்ய நிஶாசர: ॥ (11)

மாதலேஸ்து மஹாவேகா$_3$: ஶரீரே பதிதா: ஶரா: ।
ந ஸூக்ஷ்மமபி ஸம்மோஹம் வ்யதா$_2$ம் வா ப்ரத$_3$து$_3$ர்யுதி$_4$ ॥ (12)

தயா த$_4$ர்ஷணயா க்ருத்$_3$தோ$_4$ மாதலேர்ந ததா$_2$த்மந: ।
சகார ஶரஜாலேந ராக$_4$வோ விமுக$_2$ம் ரிபும் ॥ (13)

விம்ஶதம் த்ரிம்ஶதம் ஷஷ்டிம் ஶதஶோऽத$_2$ ஸஹஸ்ரஶ: ।
முமோச ராக$_4$வோ வீர: ஸாயகாந் ஸ்யந்த$_3$நே ரிபோ: ॥ (14)

ராவணோऽபி தத: க்ருத்$_3$தோ$_4$ ரத$_2$ஸ்தோ$_2$ ராக்ஷஸேஶ்வர: ।
க$_3$தா$_3$முஸலவர்ஷேண ராமம் ப்ரத்யர்த$_3$யத்$_3$ரணே ॥ (15)

தத்ப்ரவ்ருத்தம் மஹத்$_3$யுத்$_3$த$_4$ம் துமுலம் ரோமஹர்ஷணம் ॥ (16)

க$_3$தா$_3$நாம் முஸலாநாம் ச பரிகா$_4$ணாம் ச நி:ஸ்வநை: ।
ஶராணாம் புங்க$_2$பாதைஶ்ச க்ஷுபி$_4$தா: ஸப்த ஸாக$_3$ரா: ॥ (17)

க்ஷுப்$_3$தா$_4$நாம் ஸாக$_3$ராணாம் ச பாதாளதலவாஸிந: ।
வ்யதி$_2$தா: பந்நகா$_3$: ஸர்வே தா$_3$நவாஶ்ச ஸஹஸ்ரஶ: ॥ (18)

அவர்கள், மண்டலம், நேர்த்தாக்கு, முன்னோட்டம்–பின்னோட்டம், வலதுசாரி–இடதுசாரி போன்ற நடைகளையும் நடைவகைகளையும் வெளிக்காட்டினார்கள். (3)

இராமன், இராவணனைத் தாக்கித் துன்புறுத்தினார்; இராவணன், இராமனைத் தாக்கிக் காயப்படுத்தினான். இவ்வாறு, முன்னும் பின்னுமாக அவர்கள், செயலுக்கேற்ற நடையை மேற்கொண்டார்கள். (4)

சரமாரியைப் பொழியும் அவ்விருவரின் உத்தம ரதங்களும், மழையைப் பொழியும் இரு முகில்கள் போல ரணகளத்தில் சுற்றித் திரிந்து வந்தன. (5)

அவ்விரு தேர்களும் பலவகையான கதி பேதங்களைக் காட்டிவிட்டு, மறுபடியும் ஒன்றுக்கொன்று எதிரெதிராக வந்து நின்றன. (6)

எதிரெதிரே நின்ற ரதங்களின் நுகத்தடி நுகத்தடியோடும், குதிரைகளின் முகம் எதிர்க் குதிரைகளின் முகத்தோடும், கொடிகள் எதிர்க் கொடிகளுடனும் முட்டிக்கொண்டன. (7)

அப்போது, இராமன், தன் வில்லிலிருந்து தீப்பிழம்பு போல் ஒளிவீசுபவைகளும் கூர்மையானவைகளுமான நான்கு பாணங்ளைச் செலுத்தி, இராவணனுடைய நான்கு குதிரைகளைத் திரும்பியோடச் செய்தார். (8)

குதிரைகள் பின்வாங்கி ஓடியதால், அரக்கனுக்கு அளவுக்குமீறிய கோபம் வந்தது. அதனால், இராமன்மீது கூரிய பாணங்களை ஏவினான். (9)

பலம் மிக்கவனான பத்துத் தலையினனால் தாக்கப்பட்டும், இராமனுடைய திருமுகத்தில் மாறுதல் (அச்சக்குறிகள்) தோன்றவில்லை; துன்பப்படவும் இல்லை. (10)

அரக்கன், இந்திரனுடைய தேர்ப்பாகனை (மாதலியை)க் குறிவைத்து, வஜ்ராயுதம் பாய்ந்து வரும்போது எழும் ஒலியை ஒத்த பாணங்களைச் செலுத்தினான். (11)

மிகவும் வேகத்துடன் மாதலியின் சரீரத்தில் வந்து விழுந்த பாணங்கள், உடல் வேதனையையோ மனமயக்கத்தையோ கொஞ்சங்கூட உண்டாக்கவில்லை. (12)

இராமனுக்கு, தான் தாக்கப்பட்டபோது அவ்வளவாக ஏற்படாத கோபம், மாதலி தாக்கப்பட்டபோது ஏற்பட்டது. உடனே, இடைவிடாது அம்புகளைச் செலுத்தி எதிரியை கதிகலங்கச் செய்தார். (13)

அவ்வேளையில் மாவீரரான இராமன், பகைவனின் ரதத்தை நோக்கி, இருபது–முப்பது–அறுபது–நூறு–ஆயிரம் என்ற கணக்கில், எண்ணிலடங்காத அம்புகளைச் செலுத்தினார். (14)

தேரிலிருந்து போர்புரியும் இராக்கத மன்னன் இராவணனும், கோபங்கொண்டு கதை–உலக்கை முதலான ஆயுதங்களைப் பொழிந்து, இராமனைத் துன்புறுத்தினான். (15)

அவர்களிடையே (சமபலத்துடன் போரிட்டதால், 'யார் வெற்றி பெறுவார்?' என்று தீர்மானிக்க முடியாத வகையில்) மிகக் குழப்பமானதும் உரோமச் சிலிர்ப்பை உண்டாக்குவதுமான மகத்தான போர் நிகழ்ந்தது. (16)

கதைகள், உலக்கைகள், உருளைத்தடிகள் ஆகியன பாய்ந்து செல்கையில் ஏற்பட்ட பேரொலியுடன், அம்புகளில் கட்டப்பட்டிருந்த பறவை இறகுகளைக் காற்று தழுவிச் செல்லும் ஓசையும் சேர்ந்து கொண்டு உண்டாக்கிய பெருஞ்சத்தத்தால் ஏழு கடல்களும் கலக்கமடைந்தன. (17)

பெருங்கடல்கள் நிலைகொள்ளாமல் கலங்கி நடுங்கியதால், (அவற்றின் கீழே) பாதாள உலகில் வசிக்கும் ஆயிரக்கணக்கான பன்னகர்களும் தானவர்களும் துன்பமடைந்தார்கள். (18)

சகம்பே மேதி$_3$நீ க்ருத்ஸ்நா ஸஶைலவநகாநநா ।
பா$_4$ஸ்கரோ நிஷ்ப்ரப$_4$ஶ்சாஸீந்ந வவௌ சாபி மாருத: ॥ (19)

ததோ தே$_3$வா: ஸக$_3$ந்த$_4$ர்வா: ஸித்$_3$தா$_4$ஶ்ச பரமர்ஷய: ।
சிந்தாமாபேதி$_3$ரே ஸர்வே ஸகிந்நரமஹோரகா$_3$: ॥ (20)

ஸ்வஸ்தி கோ$_3$ப்$_3$ராஹ்மணேப்$_4$யோऽஸ்து லோகாஸ்திஷ்ட$_2$ந்து ஶாஶ்வதா: ।
ஜயதாம் ராக$_4$வ: ஸங்க்$_2$யே ராவணம் ராக்ஷஸேஶ்வரம் ॥ (21)

ஏவம் ஜபந்தோऽபஶ்யம்ஸ்தே தே$_3$வா: ஸர்ஷிக$_3$ணாஸ்ததா$_3$ ।
ராமராவணயோர்யுத்$_3$த$_4$ம் ஸுகோ$_4$ரம் ரோமஹர்ஷணம் ॥ (22)

க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸாம் ஸங்கா$_4$ த்$_3$ருஷ்ட்வா யுத்$_3$த$_4$மநூபமம் ।
க$_3$க$_3$நம் க$_3$க$_3$நாகாரம் ஸாக$_3$ர: ஸாக$_3$ரோபம: ॥ (23)

ராமராவணயோர்யுத்$_3$த$_4$ம் ராமராவணயோரிவ ।
ஏவம் ப்$_3$ருவந்தோ த$_3$த்$_3$ருஶுஸ்தத்$_3$யுத்$_3$த$_4$ம் ராமராவணம் ॥ (24)

தத: க்ருத்$_3$தோ$_4$ மஹாபா$_3$ஹு ரகூ$_4$ணாம் கீர்திவர்த$_4$ந: ।
ஸந்தா$_4$ய த$_4$நுஷா ராம: க்ஷுரமாஶீவிஷோபமம் ॥ (25)

ராவணஸ்ய ஶிரோऽச்சி$_2$ந்த$_3$ச்ச்$_2$ரீமஜ்ஜ்வலிதகுண்ட$_3$லம் ।
தச்சி$_2$ர: பதிதம் பூ$_4$மௌ த்$_3$ருஷ்டம் லோகைஸ்த்ரிபி$_4$ஸ்ததா$_3$ ॥ (26)

தஸ்யைவ ஸத்$_3$ருஶம் சாந்யத்$_3$ராவணஸ்யோத்தி$_2$தம் ஶிர: ।
தத்க்ஷிப்ரம் க்ஷிப்ரஹஸ்தேந ராமேண க்ஷிப்ரகாரிணா ॥
த்$_3$விதீயம் ராவணஶிரஶ்சி$_2$ந்நம் ஸம்யதி ஸாயகை: ॥ (27)

சி$_2$ந்நமாத்ரம் து தச்சீ$_2$ர்ஷம் புநரந்யத் ஸ்ம த்$_3$ருஶ்யதே ।
தத$_3$ப்யஶநிஸங்காஶைஶ்சி$_2$ந்நம் ராமேண ஸாயகை: ॥ (28)

ஏவமேகஶதம் சி$_2$ந்நம் ஶிரஸாம் துல்யவர்சஸாம் ।
ந சைவ ராவணஸ்யாந்தோ த்$_3$ருஶ்யதே ஜீவிதக்ஷயே ॥ (29)

தத: ஸர்வாஸ்த்ரவித்$_3$வீர: கௌஸல்யாநந்த$_3$வர்த$_4$ந: ।
மார்க$_3$ணைர்பா$_3$ஹுபி$_4$ர்யுக்தஶ்சிந்தயாமாஸ ராக$_4$வ: ॥ (30)

மாரீசோ நிஹதோ யைஸ்து க$_2$ரோ யைஸ்து ஸதூ$_3$ஷண: ।
க்ரௌஞ்சாரண்யே விராத$_4$ஸ்து கப$_3$ந்தோ$_4$ த$_3$ண்ட$_3$காவநே ॥ (31)

யை: ஸாலா கி$_3$ரயோ ப$_4$க்$_3$நா வாலீ ச க்ஷுபி$_4$தோऽம்பு$_3$தி$_4$: ।
த இமே ஸாயகா: ஸர்வே யுத்$_3$தே$_4$ ப்ராத்யயிகா மம ॥
கிம் நு தத்காரணம் யேந ராவணே மந்த$_3$தேஜஸ: ॥ (32)

இதி சிந்தாபரஶ்சாஸீத$_3$ப்ரமத்தஶ்ச ஸம்யுகே$_3$ ।
வவர்ஷ ஶரவர்ஷாணி ராக$_4$வோ ராவணோரஸி ॥ (33)

மலைகளும் வனங்களும் சோலைகளும் உடைய பூமி முழுவதும் அதிர்ந்தது; சூரியனும் ஒளிமங்கிப் போனான்; காற்றும் வீசவில்லை. (19)

அதனால், தேவர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், மாமுனிவர்கள், கின்னரர்கள், பெரிய உரகர்கள் ஆகிய எல்லோரும் கவலை அடைந்தார்கள். (20)

அப்போது, முனிவர்களின் கூட்டமும் தேவர்களும், 'பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும் நலம் உண்டாகட்டும்; உலகங்கள் அழிவில்லாமல் நீடித்து இருக்கட்டும்; இராமபிரான், போரில் அரக்க மன்னன் இராவணனை வெற்றி கொள்ளட்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டு, இராம–இராவணர்களிடையே நடந்த மிக பயங்கரமானதும் மயிர்க்கூச்சமுண்டாக்குவதுமான யுத்தத்தை (வியப்புடன்) பார்த்துக் கொண்டிருந்தார்கள். (21,22)

கந்தர்வர்களும் அப்சரசுகளும் கூட்டமாக நின்று போரைப் பார்த்துக் கொண்டே, 'ஆகாயத்திற்கு உவமானம் ஆகாயமே! பெருங்கடலுக்கு உவமானம் பெருங்கடலே! அப்படியே, இராம–இராவண யுத்தத்திற்கு நிகர் இராம–இராவண யுத்தமே!' என்று, உரோமச் சிலிர்ப்பை உண்டாக்கும் அந்தப் போரைப் பார்த்துப் பேசிக் கொண்டார்கள். (23,24)

தோள்வலிமை மிக்கவரும், ரகுகுலத்தினரின் புகழைப் பெருக்குபவருமான இராமன், மிகவும் கோபங்கொண்டு, கொடிய விஷத்தைக் கொண்ட சர்ப்பத்தைப் போன்ற பாணத்தை வில்லில் பூட்டி, அழகாகப் பிரகாசிக்கும் செவியணியைக் கொண்ட இராவணனுடைய தலையை வெட்டித் தள்ளினார். வெட்டப்பட்ட அந்தத் தலை, பூமியில் விழுந்ததை மூவுலகங்களும் பார்த்தன. (25,26)

இராவணனிடம் (கழுத்திற்கு மேலே) அதே மாதிரியான வேறு ஒரு தலை எழுந்தது. கைவேகம் கொண்டவரும், எந்தச் செயலையும் உடனே செய்து முடிப்பவருமான இராமன், போர்க்களத்தில், ஒரு விநாடியில் அந்தத் தலையை பாணங்களால் அறுத்துத் தள்ளினார். (27)

அந்தத் தலை அறுக்கப்பட்டவுடனேயே, மீளவும் வேறொரு தலை அங்கே தோன்றியது. அதையும், வஜ்ராயுதம் போன்ற பாணங்களால் இராமன் அறுத்தெறிந்தார். (28)

இவ்வாறு, ஒரே மாதிரியான தோற்றங்கொண்ட நூறு தலைகளை, இராமன் வெட்டித் தள்ளினார். என்றாலும், இராவணனுடைய உயிர் முடிவுக்கு வருவதாகத் தோன்றவேயில்லை. (29)

அப்போது, கௌசல்யையின் ஆனந்தத்தைப் பெருக்குபவரும் எல்லா வகையான அஸ்திரங்களையும் அறிந்தவரும் மாவீரரும் பற்பல பாணங்களை உடையவருமான இராமன் பின்வருமாறு சிந்திக்கலானார். (30)

'என்னுடைய இந்த பாணங்களால்தான் மாரீசன், கரன், தூஷணன் முதலியோர் கொல்லப்பட்டார்கள்; கிரௌஞ்ச வனத்தில் விராதனும், தண்டகாரண்யத்தில் கபந்தனும் மாய்க்கப்பட்டார்கள். ஆச்சா மரங்களும் மலைகளும் துளைக்கப்பட்டன; வாலியின் உயிர் பறிக்கப்பட்டது; கடலரசன் அடக்கப்பட்டான். பல போர்களில் பயன்படுத்தப்பட்ட இந்தப் பாணங்களின் வீண்போகாத தன்மை, நம்பத் தகுந்ததாக உறுதிப்பட்டிருக்கிறது. ஆனால், என்ன காரணத்தால், இராவணன் விஷயத்தில் மட்டும் இவைகள் ஆற்றல் குன்றியவைகளாக ஆகியிருக்கின்றன?' (31,32)

இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்த இராமன், போரில் மனம் சிதறவிடாமல் கவனமாக இருந்தார். இராவணனுடைய மார்பின்மீது அம்புமாரியைப் பொழிந்தார். (33)

ராவணோऽபி தத: க்ருத்$_3$தோ$_4$ ரத$_2$ஸ்தோ$_2$ ராக்ஷஸேஶ்வர: ।
க$_3$தா$_3$முஸலவர்ஷேண ராமம் ப்ரத்யர்த$_3$யத்$_3$ரணே ॥ (34)

தத்ப்ரவ்ருத்தம் மஹத்$_3$யுத்$_3$த$_4$ம் துமுலம் ரோமஹர்ஷணம் ।
அந்தரிக்ஷே ச பூ$_4$மௌ ச புநஶ்ச கி$_3$ரிமூர்த$_4$நி ॥ (35)

தே$_3$வதா$_3$நவயக்ஷாணாம் பிஶாசோரக$_3$ரக்ஷஸாம் ।
பஶ்யதாம் தந்மஹத்$_3$யுத்$_3$த$_4$ம் ஸர்வராத்ரமவர்தத ॥ (36)

நைவ ராத்ரம் ந தி$_3$வஸம் ந முஹூர்தம் ந ச க்ஷணம் ।
ராமராவணயோர்யுத்$_3$த$_4$ம் விராமமுபக$_3$ச்ச$_2$தி ॥ (37)

த$_3$ஶரத$_2$ ஸுதராக்ஷஸேந்த்$_3$ரயோர்ஜயமநவேக்ஷ்ய ரணே ஸ ராக$_4$வஸ்ய ।
ஸுரவரரத$_2$ஸாரதி$_2$ர்மஹாந் ரணக$_3$தமேநமுவாச வாக்யமாஶு ॥ (38)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

ஏகாதஶோத்தரஶததம: ஸர்க$_3$:

பௌலஸ்த்யவத$_4$:

அத$_2$ ஸம்ஸ்மாரயாமாஸ ராக$_4$வம் மாதலிஸ்ததா$_3$ ।
அஜாநந்நிவ கிம் வீர த்வமேநமநுவர்தஸே ॥ (1)

விஸ்ருஜாஸ்மை வதா$_4$ய த்வமஸ்த்ரம் பைதாமஹம் ப்ரபோ$_4$ ।
விநாஶகால: கதி$_2$தோ ய: ஸுரை: ஸோऽத்$_3$ய வர்ததே ॥ (2)

தத: ஸம்ஸ்மாரிதோ ராமஸ்தேந வாக்யேந மாதலே: ।
ஜக்$_3$ராஹ ஸ ஶரம் தீ$_3$ப்தம் நி:ஶ்வஸந்தமிவோரக$_3$ம் ॥ (3)

யமஸ்மை ப்ரத$_2$மம் ப்ராதா$_3$த$_3$க$_3$ஸ்த்யோ ப$_4$க$_3$வாந்ருஷி: ।
ப்$_3$ரஹ்மத$_3$த்தம் மஹாபா$_3$ணமமோக$_4$ம் யுதி$_4$ வீர்யவாந் ॥ (4)

ப்$_3$ரஹ்மணா நிர்மிதம் பூர்வமிந்த்$_3$ரார்த$_2$மமிதௌஜஸா ।
த$_3$த்தம் ஸுரபதே: பூர்வம் த்ரிலோகஜயகாங்க்ஷிண: ॥ (5)

யஸ்ய வாஜேஷு பவந: ப$_2$லே பாவகபா$_4$ஸ்கரௌ ।
ஶரீரமாகாஶமயம் கௌ$_3$ரவே மேருமந்த$_3$ரௌ ॥ (6)

ஜாஜ்வல்யமாநம் வபுஷா ஸுபுங்க$_2$ம் ஹேமபூ$_4$ஷிதம் ।
தேஜஸா ஸர்வபூ$_4$தாநாம் க்ருதம் பா$_4$ஸ்கரவர்சஸம் ॥ (7)

ஸதூ$_4$மமிவ காலாக்$_3$நிம் தீ$_3$ப்தமாஶீவிஷம் யதா$_2$ ।
பரநாகா$_3$ஶ்வவ்ருந்தா$_3$நாம் பே$_4$த$_3$நம் க்ஷிப்ரகாரிணம் ॥ (8)

அப்போது, தேரிலிருந்த அரக்கமன்னன் இராவணன் கோபங்கொண்டு, கதைகள் மற்றும் உலக்கைகளைப் பொழிந்து தள்ளி, போர்க்களத்தில் இராமனைத் திருப்பித் தாக்கினான். ஒப்புவமை இல்லாத அந்தப் பெரும் போர் சிலநேரத்தில் மலைச்சிகரத்திலும், பின்னர் ஆகாயத்திலும், சிலபொழுது பூமியிலும், மிகக்கடுமையாகவும் மயிர்கூச்சலை உண்டாக்குவதாகவும் நடைபெற்றது. (34,35)

தேவர்கள், தானவர்கள், யக்ஷர்கள், பிசாசர்கள், உரகர்கள், அரக்கர்கள் முதலியோர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அந்தப் பெரும் போர் இரவு முழுவதும் நடந்தது. (36)

இராம–இராவணரிடையே நடந்த அந்த யுத்தம் இரவிலும் ஓயவில்லை; பகலிலும் ஓயவில்லை; ஒரு முகூர்த்த காலம் அல்லது ஒரு நொடி நேரங்கூட தடைபடவில்லை. (37)

தேவேந்திரனின் தேரோட்டியான பெருமதிப்புக்குரிய மாதலி, தசரதனின் புதல்வருக்கும் அரக்க மன்னனுக்குமிடையே நடந்து கொண்டிருந்த அந்தப் போரில், இராமன் வெற்றியடைவதற்கான அறிகுறிகள் காணப்படாததால், போரில் முனைப்புடன் இருந்த இராமனை நோக்கி, தயக்கமில்லாமல் ஒரு விண்ணப்பம் செய்தான். (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பதினொன்று

வீழ்ந்தான், இராவணன்!

அப்போது, இராமனைப் பார்த்து, ''வீரர் திலகமே! தாங்கள் ஏதும் அறியாதவர் போல், ஏன் இவனை இன்னும் விட்டு வைத்திருக்கிறீர்கள்? (அவன் செலுத்தும் அஸ்திரங்களைத் தடுத்து நிறுத்துகிறீர்களே தவிர, அவன் உயிரைப் பறிக்கும் அஸ்திரத்தை இன்னும் பிரயோகிக்கவில்லையே?)'' என்று (அவதார ரகசியத்தை) நினைவுபடுத்தினான். (1)

''உலக நாயகரே! இவன் மீது பிரும்மாஸ்திரத்தைச் செலுத்தி மாய்ப்பீர்களாக. இவன் மரணமடைவதற்காக, தேவர்கள் குறித்து வைத்துள்ள நேரம் இப்போது வந்திருக்கிறது.'' (2)

மாதலியின் இந்த வார்த்தைகளால் நினைவூட்டப்பட்ட இராமன், பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் சர்ப்பத்தைப் போன்றதும் ஒளிமிக்கதுமான ஓர் அம்பினைக் கையில் எடுத்தார். தவ ஆற்றல் மிக்க பகவான் அகஸ்தியர், அந்த பாணத்தை முன்பொரு சமயம் இராமனுக்குக் கொடுத்தார். மகத்தான அந்த பாணம், முன்னர், பிரும்மாவினால் (அகஸ்தியருக்குக்) கொடுக்கப்பட்டது; போரில் வீண்போகாதது. (3,4)

முன்பொரு சமயம், எல்லையில்லா ஆற்றலுடைய பிரும்மாவினால் உண்டாக்கப்பட்டு, மூன்று உலகங்களையும் வெற்றி கொள்ள விரும்பிய தேவேந்திரனுக்கு, அந்த பாணம் அளிக்கப்பட்டது. அதன் வேகத்தில் வாயுவும், முனையில் அக்னி–சூரியர்களும், உடலில் ஆகாயமும், கனத்தில் மேரு–மந்திர மலைகளும் நிலைநிறுத்தப்பட்டிருந்தன. (5,6)

அது வடிவழகினால் பிரகாசிப்பது; அழகிய இறகுகள் கொண்டது; பொன்னால் அலங்கரிக்கப்பட்டது; எல்லா பூதங்களின் ஆன்ம ஒளியால் (உயிர்ச்சத்தினால்) ஆக்கப்பட்டது; ஆதவனைப் போல் ஒளிமயமானது; புகையுடன் கூடிய ஊழிக்கால அக்னியைப் போன்றது; அனலைப் போல் தகிப்பது; விஷமுடைய சர்ப்பத்தைப் போல் கொடிய விஷத்தன்மை பொருந்தியது; மனிதர்கள், யானைகள், குதிரைகள் ஆகிய கூட்டங்களைச் சின்னபின்னமாக்குவது; வெகுவிரைவில் இலக்கினைத் தாக்கிப் பிளக்கவல்லது; (7,8)

த்$_3$வாராணாம் பரிக$_4$ாணாம் ச கி$_3$ரீணாமபி பே$_4$த$_3$நம் ।
நாநாருதி$_4$ரஸிக்தாங்க$_3$ம் மேதே$_3$ாதி$_3$க்$_3$த$_4$ம் ஸுத$_3$ாருணம் ॥ (9)

வஜ்ரஸாரம் மஹாநாத$_3$ம் நாநாஸமிதித$_3$ாரணம் ।
ஸர்வவித்ராஸநம் பீ$_4$மம் ஶ்வஸந்தமிவ பந்நக$_3$ம் ॥ (10)

கங்கக்$_3$ருத்$_4$ரப$_3$காநாம் ச கே$_3$ாமாயுக$_3$ணரக்ஷஸாம் ।
நித்யம் ப$_4$க்ஷ்யப்ரத$_3$ம் யுத்$_3$தே$_4$ யமரூபம் ப$_4$யாவஹம் ॥ (11)

நந்த$_3$நம் வாநரேந்த்$_3$ராணாம் ரக்ஷஸாமவஸாத$_3$நம் ।
வாஜிதம் விவிதை$_4$ர்வாஜைஶ்சாருசித்ரைர்க$_3$ருத்மத: ॥ (12)

தமுத்தமேஷும் லோகாநாமிக்ஷ்வாகுப$_4$யநாஶநம் ।
த்$_3$விஷதாம் கீர்திஹரணம் ப்ரஹர்ஷகரமாத்மந: ॥ (13)

அபி$_4$மந்த்ர்ய ததோ ராமஸ்தம் மஹேஷும் மஹாப$_3$ல: ।
வேத$_3$ப்ரோக்தேந விதி$_4$நா ஸந்த$_3$தே$_4$ கார்முகே ப$_3$லீ ॥ (14)

தஸ்மிந் ஸந்தீ$_4$யமாநே து ராக$_4$வேண ஶரோத்தமே ।
ஸர்வபூ$_4$தாநி வித்ரேஸுஶ்சசால ச வஸுந்த$_4$ரா ॥ (15)

ஸ ராவணாய ஸங்க்ருத்$_3$தே$_4$ா ப்$_4$ருஶமாயம்ய கார்முகம் ।
சிக்ஷேப பரமாயத்தஸ்தம் ஶரம் மர்மக$_4$ாதிநம் ॥ (16)

ஸ வஜ்ர இவ து$_3$ர்த$_4$ர்ஷோ வஜ்ரிப$_3$ாஹுவிஸர்ஜித: ।
க்ருதாந்த இவ சாவார்யோ ந்யபதத்$_3$ராவணோரஸி ॥ (17)

ஸ விஸ்ருஷ்டோ மஹாவேக$_3$: ஶரீராந்தகர: ஶர: ।
பி$_3$பே$_4$த$_3$ ஹ்ருத$_3$யம் தஸ்ய ராவணஸ்ய து$_3$ராத்மந: ॥ (18)

ருதி$_4$ராக்த: ஸ வேகே$_3$ந ஜீவிதாந்தகர: ஶர: ।
ராவணஸ்ய ஹரந் ப்ராணாந் விவேஶ த$_4$ரணீதலம் ॥ (19)

ஸ ஶரோ ராவணம் ஹத்வா ருதி$_4$ரார்த்$_3$ரீக்ருதச்ச$_2$வி: ।
க்ருதகர்மா நிப்$_4$ருதவத் ஸ்வதூணீம் புநராக$_3$மத் ॥ (20)

தஸ்ய ஹஸ்தாத்$_3$த$_4$தஸ்யாஶு கார்முகம் தத்ஸஸாயகம் ।
நிபபாத ஸஹ ப்ராணைர்ப்$_4$ரஶ்யமாநஸ்ய ஜீவிதாத் ॥ (21)

க$_3$தாஸுர்பீ$_4$மவேக$_3$ஸ்து நைர்ருதேந்த்$_3$ரோ மஹாத்$_3$யுதி: ।
பபாத ஸ்யந்த$_3$நாத்$_3$பூ$_4$மௌ வ்ருத்ரோ வஜ்ரஹதோ யதா$_2$ ॥ (22)

தம் த்$_3$ருஷ்ட்வா பதிதம் பூ$_4$மௌ ஹதஶேஷா நிஶாசரா: ।
ஹதநாதா$_2$ ப$_4$யத்ரஸ்தா: ஸர்வத: ஸம்ப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (23)

மிகப்பெரிய நுழைவாயில்கள், பரிகாயுதம் மற்றும் பெரிய மலைகள் ஆகியவைகளையும் பிளக்கக் கூடியது; பலவகையான எதிரிகளின் குருதியால் நனைக்கப்பட்டது; கொழுப்பினால் புஷ்டியாக இருப்பது; மிகவும் பயங்கரமானது; வஜ்ராயுதத்தைப் போல் உறுதியானது; பகைவர்கள் கேட்டு நடுங்கும்படியான ஓசையை உடையது; பல போர்களில் ஏராளமான படைவீரர்களை நாசம் செய்தது; எல்லோருக்கும் அச்சத்தைக் கொடுப்பது; சீறிகொண்டிருக்கும் சர்ப்பத்தைப் போல பயங்கரமானது; கழுகுகள், பருந்துகள், கொக்குகள், நரிகள், பிணந்தின்னிப் பிசாசுகள் முதலியவற்றுக்கு எப்போதும் ஆகாரத்தைக் கொடுப்பது; போர்க்களத்தில், திகிலை உண்டாக்கும் யமனைப் போல் இரக்கமின்றி செயல்படுவது; (9–11)

வானரோத்தமர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியது; அரக்கர்களைத் துயரத்தில் ஆழ்த்துவது; கருட பகவானின் அழகிய சிறகுகள் பல கட்டப்பட்டது; (12)

தனிப் பெருமை வாய்ந்த அந்த பாணம், உலகங்கள் மற்றும் இட்சுவாகு பரம்பரையினரின் பயத்தை அழிக்கவல்லது; எதிரிகளின் புகழை நாசம் செய்வது; தனக்கு (அதை தன்வசத்தில் வைத்திருப்பவருக்குப்) பேரானந்தத்தைத் தரக்கூடியது. (13)

பராக்கிரமம் மிக்கவரும் பலசாலியுமான இராமன், அந்த உத்தம பாணத்தை, வேதத்தில் கூறியுள்ள முறைப்படி மந்திரித்து வில்லில் பூட்டினார். (14)

இராமன், உத்தமமான (இணையில்லாத செயல்திறனுடைய) பாணத்தை வில்லில் கோர்த்ததைக் கண்டதும், எல்லாப் பிராணிகளும் அஞ்சி நடுங்கின; பூமியும் அதிர்ந்தது. (15)

மிகவும் கோபங்கொண்ட அவர், மிகவும் கவனத்தைச் செலுத்தி, வில்லின் நாண்கயிற்றை செவிவரை இழுத்து, உயிர்நிலையைப் பிளக்கவல்ல அந்த பாணத்தை (அஸ்திரத்தை), இராவணன்மீது செலுத்தினார் (16)

இந்திரனது கையிலிருந்து விடுக்கப்பட்ட வஜ்ராயுதம் போல் எதிர்கொள்ள முடியாததும், உயிர்பறிக்கும் காலனைப் போல் தடுக்க முடியாததுமான அந்த பாணம், இராவணன் மார்பில் விழுந்தது. உடலைச் சிதைக்கவல்லதும் பேராற்றல் கொண்டதுமான அந்த பாணம் விடுவிக்கப்பட்டவுடன், மிகக்கொடியவனான இராவணனுடைய இதயத்தைப் பிளந்தது. (17,18)

உயிரைப் பறிக்கவல்ல அந்த பாணம் விரைந்து சென்று, இராவணனுடைய உயிரை அபகரித்துக் கொண்டு, குருதி படிந்ததாய் பூமிக்குள் புகுந்தது. (19)

இவ்வாறு, இராவணனைக் கொன்று, குருதிப்பூச்சினால் ஏற்பட்ட ஒளியுடன் தன் பணியை முடித்துவிட்டு, ஒரு வேலைக்காரனைப் போல், மறுபடியும் தன் யஜமானின் அம்புறாத்தூணியை வந்தடைந்தது. (20)

இராமனின் பாணத்தால் கொல்லப்பட்ட அவன், உயிரை இழந்துகொண்டிருந்தான். அப்போது, அவன் உயிருடன் கூடவே, அவன் கையிலிருந்த வில்லும் பாணமும் நழுவிச் சென்றன. (21)

எல்லையில்லாத சக்தி கொண்டவனும், மிகப்பெருமை வாய்ந்தவனுமான அரக்கமன்னன், உயிர் நீங்கியவனாய், வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த விருத்திராசுரனைப் போல் தேரிலிருந்து தரையில் விழுந்தான். (22)

போரில் கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியிருந்த அரக்கர்கள், அவன் தரையில் வீழ்ந்தவுடன் தலைவனை இழந்தவர்களாய், அச்சம் மேலிட்டு எல்லாப் பக்கங்களிலும் விரைந்து ஓடிப் போனார்கள். (23)

நர்த$_3$ந்தஶ்சாபி$_4$பேதுஸ்தாந் வாநரா த்$_3$ருமயோதி$_4$ந: ।
த$_3$ஶக்$_3$ரீவவத$_4$ம் த்$_3$ருஷ்ட்வா விஜயம் ராக$_4$வஸ்ய ச ॥ (24)

அர்தி$_3$தா வாநரைர்ஹ்ருஷ்டைர்லங்காமப்$_4$யபதந் ப$_4$யாத் ।
கதாஶ்ரயத்வாத் கருணைர்பா$_3$ஷ்பப்ரஸ்ரவணைர்முகை$_2$: ॥ (25)

ததோ விநேது$_3$: ஸம்ஹ்ருஷ்டா வாநரா ஜிதகாஶிந: ।
வத$_3$ந்தோ ராக$_4$வஜயம் ராவணஸ்ய ச தத்$_3$வத$_4$ம் ॥ (26)

அதா$_2$ந்தரிக்ஷே வ்யநதத்$_3$ ஸௌம்யஸ்த்ரித$_3$ஶது$_3$ந்து$_3$பி$_4$: ।
தி$_3$வ்யக$_3$ந்த$_4$வஹஸ்தத்ர மாருத: ஸுஸுக$_2$ம் வவௌ ॥ (27)

நிபபாதாந்தரிக்ஷாச்ச புஷ்பவ்ருஷ்டிஸ்ததா$_3$ பு$_4$வி ।
கிரந்தீ ராக$_4$வரத$_2$ம் து$_3$ரவாபா மநோரமா ॥ (28)

ராக$_4$வஸ்தவஸம்யுக்தா க$_3$க$_3$நேऽபி ச ஶுஶ்ருவே ।
ஸாது$_4$ ஸாத்$_4$விதி வாக$_3$க்$_3$ர்யா தை$_3$வதாநாம் மஹாத்மநாம் ॥ (29)

ஆவிவேஶ மஹாஹர்ஷோ தே$_3$வாநாம் சாரணை: ஸஹ ।
ராவணே நிஹதே ரௌத்$_3$ரே ஸர்வலோகப$_4$யங்கரே ॥ (30)

தத: ஸகாமம் ஸுக்$_3$ரீவமங்க$_3$த$_3$ம் ச மஹாப$_3$லம் ।
சகார ராக$_4$வ: ப்ரீதோ ஹத்வா ராக்ஷஸபுங்க$_3$வம் ॥ (31)

தத: ப்ரஜக்$_3$மு: ப்ரஶமம் மருத்$_3$க$_3$ணா
தி$_3$ஶ: ப்ரஸேது$_3$ர்விமலம் நபோ$_4$ऽப$_4$வத் ।
மஹீ சகம்பே ந ஹி மாருதோ வவௌ
ஸ்தி$_2$ரப்ரப$_4$ஶ்சாப்யப$_4$வத்$_3$தி$_3$வாகர: ॥ (32)

ததஸ்து ஸுக்$_3$ரீவவிபீ$_4$ஷணாத$_3$ய:
ஸுஹ்ருத்$_3$விஶேஷா: ஸஹலக்ஷ்மணாஸ்ததா$_3$ ।
ஸமேத்ய ஹ்ருஷ்டா விஜயேந ராக$_4$வம்
ரணேऽபி$_4$ராமம் விதி$_4$நா ஹ்யபூஜயந் ॥ (33)

ஸ து நிஹதாரிபு: ஸ்தி$_2$ரப்ரதிஜ்ஞ:
ஸ்வஜநப$_3$லாபி$_4$வ்ருதோ ரணே ரராஜ ।
ரகு$_4$குலந்ருபநந்த$_3$நோ மஹௌஜாஸ்–
த்ரித$_3$ஶக$_3$ணைரபி$_4$ஸம்வ்ருதோ யதே$_2$ந்த்$_3$ர: ॥ (34)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகாத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

மரத்தையே ஆயுதமாகக் கொண்டு போர்புரியும் வானரர்கள் (மகிழ்ச்சியுடன்) வெற்றி முழக்கத்துடன் அவர்களைப் பின்தொடர்ந்து துரத்தினார்கள். இராவணன் மடிந்ததையும், இராமனின் வெற்றியையும் கண்களால் பார்த்த அரக்கர்கள், பாதுகாப்புத் தரும் தலைவனை இழந்து, உற்சாகத்துடனிருந்த வானரர்களால் நோகடிக்கப்பட்டு, பரிதாபமான முகத்துடன் கண்ணீரைப் பெருகவிட்டுக் கொண்டு, நடுங்கும் உள்ளத்துடன் இலங்கைக்கு ஓடிச் சென்றார்கள். (24,25)

வெற்றித் திருவுடன் விளங்குகின்றவர்களும், பெருமகிழ்ச்சியுடன் இருந்தவர்களுமான வானரர்கள், இராமபிரானது மகத்தான வெற்றியையும், இராவணன் மாய்க்கப்பட்டதையும் சொல்லிச் சொல்லி குதூகலமாகக் கோஷமிட்டார்கள். (26)

அப்போது, ஆகாயத்தில் மங்களமான தேவதுந்துபி முழங்கியது. காற்று, நறுமணத்தைச் சுமந்துகொண்டு சுகமாக வீசிற்று. (27)

இராமனுடைய ரதத்தின்மீது பிறரால் பெற முடியாததும் மனங்கவர்வதுமான மலர்மாரி வானத்திலிருந்து பொழிந்தது. (28)

மகாத்மாக்களான தேவர்கள், ஆகாயத்திலிருந்தபடி இராமனைத் துதித்தார்கள்; அத்துடன், 'வாழ்க, வாழ்க' என்ற வாழ்த்தொலியும் சேர்ந்து வந்தது. (29)

எல்லா உலகங்களுக்கும் நடுக்கத்தைத் தரும் இராவணன் கொல்லப்பட்டவுடன், சாரணர்கள் மற்றும் தேவர்கள் மனத்தில் மகிழ்ச்சி குடிகொண்டது. (30)

இராமன், அரக்கப் பெருந்தகையைக் கொன்று, சுக்ரீவனையும் மகாபலம் பொருந்திய அங்கதனையும், தம் நோக்கம் நிறைவேறியவர்களாகச் செய்தார். அத்துடன், தானும் உவகை அடைந்தார். (31)

அப்போது, தேவர்கள் பூரண அமைதி பெற்றார்கள்; திசைகள் மகிழ்ந்தன; வானம் மாசற்றதாக விளங்கியது; பூமியும் நடுங்காமல் நிலைத்து நின்றது; காற்று சில்லென்று வீசியது; கதிரவனும் ஒளி மங்காமல், இயல்பான கதிரொளியுடன் பிரகாசித்தது. (32)

சுக்ரீவன், விபீஷணன், லட்சுமணன் ஆகியோர் பேரானந்தம் அடைந்து, நெருங்கிய நண்பர்களோடுகூட போர்க்களத்தில் வெற்றித்திருவுடன் பொலியும் இராமனை அணுகி, அபாரமாகப் போரிட்டு வெற்றி பெற்ற ஒரு மாவீரனைக் கௌரவிக்க வேண்டிய முறைப்படி போற்றிக் கொண்டாடினார்கள். (33)

மகாதேஜஸ்வியான ரகுகுல மன்னரின் அருமைப்புதல்வர், எதிரிகளை மாய்த்து வாக்குறுதி நிறைவேறியவராக, உறவினர்களாலும் படைவீரர்களாலும் சூழப்பட்டவராக, தேவகணங்களால் சூழப்பெற்ற இந்திரன் போல், புகழொளி பரப்பிக் கொண்டு ஒளிமயமாய் விளங்கினார். (34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

த்3வாத3ஶோத்தரஶததம: ஸர்க3:

விபீ4ஷணவிலாப:

ப்4ராதரம் நிஹதம் த்3ருஷ்ட்வா ஶயாநம் ராமநிர்ஜிதம் ।
ஶோகவேக3பரீதாத்மா விலலாப விபீ4ஷண: ॥ (1)

வீர விக்ராந்த விக்2யாத விநீத நயகோவித3 ।
மஹார்ஹஶயநோபேத கிம் ஶேஷேऽத்3ய ஹதோ பு4வி ॥ (2)

விக்ஷிப்ய தீ3ர்கௌ4 நிஶ்சேஷ்டௌ பு4ஜாவங்க3த3பூ4ஷிதௌ ।
மகுடேநாபவ்ருத்தேந பா4ஸ்கராகாரவர்சஸா ॥ (3)

ததி3த3ம் வீர ஸம்ப்ராப்தம் மயா பூர்வம் ஸமீரிதம் ।
காமமோஹபரீதஸ்ய யத்தே ந ருசிதம் வச: ॥ (4)

யந்ந த3ர்பாத் ப்ரஹஸ்தோ வா நேந்த்3ரஜிந்நாபரே ஜநா: ।
ந கும்ப4கர்ணோऽதிரதோ2 நாதிகாயோ நராந்தக: ॥
ந ஸ்வயம் த்வமமந்யேதா2ஸ்தஸ்யோத3ர்கோऽயமாக3த: ॥ (5)

க3த: ஸேது: ஸுநீதாநாம் க3தோ த4ர்மஸ்ய விக்3ரஹ: ।
க3த: ஸத்த்வஸ்ய ஸம்க்ஷேப: ப்ரஸ்தாவாநாம் க3திர்க3தா ॥ (6)

ஆதி3த்ய: பதிதோ பூ4மௌ மக்3நஸ்தமஸி சந்த்3ரமா: ।
சித்ரபா4நு: ப்ரஶாந்தார்சிர்வ்யவஸாயோ நிருத்3யம: ॥
அஸ்மிந்நிபதிதே பூ4மௌ வீரே ஶஸ்த்ரப்4ருதாம் வரே ॥ (7)

கிம் ஶேஷமிவ லோகஸ்ய ஹதவீரஸ்ய ஸாம்ப்ரதம் ।
ரணே ராக்ஷஸஶார்தூ3லே ப்ரஸுப்த இவ பாம்ஸுஷு ॥ (8)

த்4ருதிப்ரவால: ப்ரஸஹாக்3ர்யபுஷ்பஸ்தபோப3ல: ஶௌர்யநிப3த்3த4மூல: ।
ரணே மஹாந் ராக்ஷஸராஜவ்ருக்ஷ: ஸம்மதி3ர்தோ ராக4வமாருதேந ॥ (9)

தேஜோவிஷாண: குலவம்ஶவம்ஶ:
கோபப்ரஸாதா3பரகா3த்ரஹஸ்த: ।
இக்ஷ்வாகுஸிம்ஹாவக்3ருஹீததே3ஹ:
ஸுப்த: க்ஷிதௌ ராவணக2ந்த4ஹஸ்தீ ॥ (10)

பராக்ரமோத்ஸாஹவிஜ்ரும்பி4தார்சிர்நிஶ்வாஸதூ4ம: ஸ்வப3லப்ரதாப: ।
ப்ரதாபவாந் ஸம்யதி ராக்ஷஸாக்3நிர்நிர்வாபிதோ ராமபயோத4ரேண ॥ (11)

ஸிம்ஹர்க்ஷலாங்கூ3லககுத்3விஷாண: பராபி4ஜித்3க3ந்த4நக3ந்த4ஹஸ்தீ ।
ரக்ஷோவ்ருஷஶ்சாபலகர்ணசக்ஷு: க்ஷிதீஶ்வரவ்யாக்4ரஹதோऽவஸந்ந: ॥ (12)

ஸர்க்கம் : நூற்றுப்பன்னிரண்டு

விபீஷணனின் கதறல்!

விபீஷணன், தன்னுடைய சகோதரன், இராமனால் வெற்றிகொள்ளப்பட்டு, கொல்லப்பட்டுத் தரையில் படுத்துக் கிடப்பதைப் பார்த்து, தாங்கொணாத் துயரத்துடன் பின்வருமாறு புலம்பினான்— (1)

''பராக்கிரமப் புகழ் படைத்தவரே! சூரரே! கற்றுணர்ந்து அடங்கியவரே! ஆட்சி நெறி நிபுணரே! விலை உயர்ந்த படுக்கையில் சயனம் கொள்பவரே! தோள்வளைகள் அணிந்த நீண்ட கைகள் செயலற்றவைகளாக விரிந்து கிடக்க, கதிரவன் போல் ஒளிவீசும் தங்கள் கிரீடம் எங்கோ விழுந்து கிடக்க, இப்போது கொல்லப்பட்டு, வெறுந்தரையில் சாய்ந்து கிடக்கிறீர்களே! (2,3)

வீரரே! காமத்தினாலும் மதிமயக்கத்தினாலும், நான் முன்னர் சொன்ன நல்லுரைகளைத் தாங்கள் ஏற்கவில்லை. ஆனால், நான் சொன்னதே நடந்திருக்கிறது. (4)

அகந்தை காரணமாக, பிரஹஸ்தன், இந்திரஜித், அதிரதனான கும்பகர்ணன், அதிகாயன், நராந்தகன் ஆகியவர்களும், மற்றவர்களும், ஏன் தாங்களும்கூட என் சொற்களுக்கு உரிய மதிப்பைத் தரவில்லை. அதன் பயன் (என் உரைகளைக் கேட்காததன் விளைவு) இப்போது விளைந்திருக்கிறது. (நீங்கள் எல்லோரும் போரில் கொல்லப்பட்டுவிட்டீர்கள்.) (5)

நல்லொழுக்கங்களின் அணை அழிந்துவிட்டது! தருமத்தின் மூர்த்தி அழிந்துவிட்டது! குவித்து வைக்கப்பெற்ற ஆற்றல் அழிந்துவிட்டது! பல்வகைப் புகழ் போய்ச் சேரவேண்டிய இடம் அழிந்துவிட்டது! (6)

படைக்கலங்கள் தரித்தவர்களுள் முதன்மையானவரான இவர், பூமியில் சாய்ந்துவிட்டவுடனே, கதிரவன் பூமியில் விழுந்துவிட்டான்; சந்திரன், இருளில் மூழ்கிவிட்டான்; அக்னியின் சுவாலை அடங்கிவிட்டது; செயலாற்றும் முனைப்பு செயலற்றுப் போய்விட்டது. (7)

போர்க்களத்தின் புழுதிகளில், அரக்கப்புலியும் வீரத்திற்கு உறைவிடமானவருமான இவர், உறங்குவதுபோல கிடக்கிறார் என்றால், உலகத்தில் வேறு என்னதான் மிகுந்திருக்கிறது? (உலகத்திற்கு ஆதாரமாக இருந்த இவர் போய்விட்ட பின், ஆதாரமில்லாத உலகம் தத்தளிக்கப் போகிறது.) (8)

அரக்க மன்னன் என்னும் பெரிய மரத்திற்கு, தைரியம் என்பது தளிர்; எதனையும் சகித்துக் கொள்ளுந்தன்மையே, மலர்; தவமே பலம்; வீரமே ஆழமான வேர், இந்த மரம், போர்க்களத்தில், இராமன் என்ற சூறைக்காற்றால் முறித்துச் சாய்க்கப்பட்டுக் கிடக்கிறது. இராவணன் என்ற மதயானைக்கு, பராக்கிரமமே தந்தங்கள்; நற்குடிப் பிறப்பு என்பது பின்பாகம்; கோபமே அங்கங்கள்; அருள்பாலித்தல் என்பதே துதிக்கை. இக்ஷ்வாகு குலத் தோன்றலாகிய சிங்கத்தால் (இராகவ ஸிம்ஹத்தால்) உடல் பிளக்கப்பட்டு, தரையில் கிடக்கிறது, அது. (9,10)

அரக்க மன்னன் என்ற அக்னிக்கு, பராக்கிரமம், உற்சாகம் ஆகியவை வீறுகொண்டு எழும் சுவாலைகள்; (கோபத்தால் விடும்) பெருமூச்சு புகை; தன்னுடைய சுய பலமே வெம்மை; எவராலும் அணைக்க முடியாத இந்தப் பெருந்தீ, இராமன் என்ற மேகத்தால் (அம்புமாரி பெய்து) அணைக்கப்பட்டுவிட்டது. (11)

இராவணன் என்ற முரட்டுக் காளைக்கு, அரக்கர்களே வால், திமில், கொம்பு; தன் மதர்ப்பினால் எதிரிகளை வெகு எளிதாக வெல்லக்கூடியது; புலனுகர் இன்பங்களில் இருந்த ஆசையே, காதுகள்—கண்கள். இந்தக் காளை, மண்ணுலகாளும் வேந்தன் என்ற புலியால் தாக்கப்பட்டு மடிந்துபோய் கிடக்கிறது.'' (12)

வத₃ந்தம் ஹேதுமத்₃வாக்யம் பரிம்ருஷ்டார்த₂நிஸ்சயம் ।
ராம: ஸோகஸமாவிஷ்டமித்யுவாச விபீ₄ஷணம் ॥ (13)

நாயம் விநஷ்டோ நிஸ்சேஷ்ட: ஸமரே சண்ட₃விக்ரம: ।
அத்யுந்நதமஹோத்ஸாஹ: பதிதோऽயமஸங்கித: ॥ (14)

நைவம் விநஷ்டா: ஸோச்யந்தே க்ஷத்ரத₄ர்மமவஸ்தி₂தா: ।
வ்ருத்₃தி₄மாஸம்ஸமாநா யே நிபதந்தி ரணாஜிரே ॥ (15)

யேந ஸேந்த்₃ராஸ்த்ரயோ லோகாஸ்த்ராஸிதா யுதி₄ தீ₄மதா ।
தஸ்மிந் காலஸமாயுக்தே ந கால: பரிஸோசிதும் ॥ (16)

நைகாந்தவிஜயோ யுத்₃தே₄ பூ₄தபூர்வ: கத₃ாசந ।
பரைர்வா ஹந்யதே வீர: பராந் வா ஹந்தி ஸம்யுகே₃ ॥ (17)

இயம் ஹி பூர்வை: ஸந்தி₃ஷ்டா க₃தி: க்ஷத்ரியஸம்மதா ।
க்ஷத்ரியோ நிஹத: ஸங்க்₂யே ந ஸோச்ய இதி நிஸ்சய: ॥ (18)

ததே₃வம் நிஸ்சயம் த்₃ருஷ்ட்வா தத்த்வமாஸ்த₂ாய விஜ்வர: ।
யதி₃ஹாநந்தரம் கார்யம் கல்ப்யம் தத₃நுசிந்தய ॥ (19)

தமுக்தவாக்யம் விக்ராந்தம் ராஜபுத்ரம் விபீ₄ஷண: ।
உவாச ஸோகஸந்தப்தோ ப்₄ராதுர்ஹிதமநந்தரம் ॥ (20)

யோऽயம் விமர்தே₃ஷு ந ப₄க்₃நபூர்வ:
ஸுரை: ஸமேதை: ஸஹ வாஸவேந ।
ப₄வந்தமாஸாத்₃ய ரணே விப₄க்₃நோ
வேலாமிவாஸாத்₃ய யத₂ா ஸமுத்₃ர: ॥ (21)

அநேந த₃த்தாநி ஸுபூஜிதாநி
பு₄க்தாஸ்ச பே₄ாக₃ா நிப்₄ருதாஸ்ச ப்₄ருத்யா: ।
த₄நாநி மித்ரேஷு ஸமர்பிதாநி
வைராண்யமித்ரேஷு ச யாபிதாநி ॥ (22)

ஏஷோஹிதாக்₃நிஸ்ச மஹாதபாஸ்ச
வேத₃ாந்தக₃: கர்மஸு சாக்₃ர்யவீர்ய: ।
ஏதஸ்ய யத் ப்ரேதக₃தஸ்ய க்ருத்யம்
தத்கர்துமிச்ச₂ாமி தவ ப்ரஸாத₃ாத் ॥ (23)

ஸ தஸ்ய வாக்யை: கருணைர்மஹாத்மா
ஸம்போ₃தி₄த: ஸாது₄ விபீ₄ஷணேந ।
ஆஜ்ஞாபயாமாஸ நரேந்த்₃ரஸூநு:
ஸ்வர்கீ₃யமாத₄ாநமதீ₃நஸத்த்வ: ॥ (24)

இவ்வாறு, பொருள் நிறைந்ததும் காரணத்தோடு கூடியதுமான சொற்களைக் கூறி, சோகம் மேலிட்டவனாக புலம்பிக் கொண்டிருந்த வீடணனைப் பார்த்து, இராமன் பின்வருமாறு கூறினார்— (13)

''அளவில்லாத பராக்கிரமம் கொண்ட இவன், போர்க்களத்தில் போர் செய்யாமல் (அஞ்சி நடுங்கி) வெறுமே நின்று, உயிரை இழக்கவில்லை. மிகுந்த மனவெழுச்சியோடும் அச்சமில்லாமலும் போரிட்டு, (உயிர் துறந்து) தரையில் வீழ்ந்தான். (14)

(விண்ணுலக நற்பேற்றை விரும்பி) வீரர்களுக்குரிய அறநெறியில் உறுதியாக நின்று, எவர்கள் போர்க்களத்தில் மாய்க்கப்படுகிறார்களோ, அவர்களைக் குறித்து யாரும் துக்கப்படுவதில்லை. (க்ஷத்திரிய நெறி, இராவணன் விஷயத்தில், வீரர்கள் நெறி – என்று கொள்ளப்பட்டிருக்கிறது.) (15)

இவன், மகாபுத்திசாலி. இந்திரன் உள்ளிட்ட மூன்று உலகங்களையும் அச்சத்தில் ஆழ்த்தி வைத்திருந்தான். (அவ்வளவு பெரிய ஈடு–இணையில்லாத வீரன்) இப்போது காலனின் வசப்பட்டு உயிர் நீத்துவிட்டான். அதைக் குறித்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதற்கு, இது உகந்த நேரமல்ல. போர்களில், ஒருவனுக்கு எப்போதும் வெற்றியே கிட்டும் – என்பது, இதற்கு முன் நிகழ்ந்ததேயில்லை. போரில் ஈடுபடும் ஒரு வீரன், ஒன்று தான் கொல்லப்படுகிறான் அல்லது பகைவரைக் கொன்றொழிக்கிறான். (16,17)

(இப்போது இராவணனுக்கு வீர சுவர்க்கம் கிடைத்திருக்கிறது.) போர்நெறியைக் கைக்கொள்ளும் ஒருவனுக்கு இந்த உத்தமநிலைதான் சான்றோர்களால் கூறப்பட்டிருக்கிறது. க்ஷத்திரிய நெறியைப் பின்பற்றும் ஒருவன், போர்க்களத்தில் போர் செய்யும்போது மாய்க்கப்பட்டால், அவனைக் குறித்து வருந்தக்கூடாது என்பது தீர்மானமான விஷயம். (18)

ஆகவே, அறநூல் கூற்றை உணர்ந்து, நிதர்சன உண்மையைக் கருத்தில் கொண்டு, அடுத்தபடியாகச் செய்ய வேண்டிய காரியங்களில் மனத்தைச் செலுத்து.'' (19)

மாவீரரும் மன்னர் மைந்தருமான இராமன் இவ்வாறு கூறியதும், சோகத்தால் வெந்து கொண்டிருந்த விபீஷணன், (மண்ணுலக வாழ்வை நீத்துவிட்ட நிலையில்,) சகோதரருக்கு இனிமேல் நலன்களைக் கொடுக்கக்கூடிய விஷயத்தைப் பற்றிப் பேசினான்— (20)

''அண்ணலே! இவர், இதுவரை நடந்துள்ள போர்களில், இந்திரன் முதலான எல்லா தேவர்களாலும்கூட முறியடிக்கப்பட்டதில்லை. ஆனால், கடல் அலைகள் குமுறிக் கொண்டு அணி அணியாக எழுந்து வந்தாலும், கரையை அடைந்து மேலே போக முடியாமல் அடங்கிப் போய்விடுவதைப் போல, இவர் போர்க்களத்தில், வீரத்துடன் தங்களை எதிர்த்து நின்று அடங்கிப் போய்விட்டார். (21)

இவர் மிக உயர்ந்த பொருள்களைத் தானமாகக் கொடுத்திருக்கிறார்; சுகபோகங்களை அனுபவித்திருக்கிறார்; பணியாளர்களை நல்ல முறையில் போஷித்திருக்கிறார்; நண்பர்களுக்கு, செல்வங்களை வழங்கியிருக்கிறார்; எதிரிகளைப் பழிவாங்கியிருக்கிறார். (22)

இவர், தினந்தோறும் அக்னிஹோத்ரம் செய்தவர்; கடுமையான நியமங்களுடன் தவம் செய்தவர்; வேதங்களின் எல்லையைக் கண்டவர்; சிரத்தையுடன் கர்மாக்களைச் செய்தவர். உயிர் நீங்கிவிட்ட இவருக்கு விதிக்கப்பட்டுள்ள ஈமச்சடங்குகளைத் தங்கள் அனுமதியுடன் செய்ய விரும்புகிறேன்.'' (23)

இவ்வாறு, நெஞ்சுருக வேண்டிக்கொண்ட விபீஷணனுக்கு, பேரரசரின் திருக்குமாரரும், விசாலமனம் கொண்டவருமான இராமன், மறுமையில் அவனுக்கு (இராவணனுக்கு) நல்ல கதி கொடுக்கக்கூடிய சடங்குகளைச் செய்ய உத்தரவிட்டார். (24)

மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம் ।
க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா$_2$ தவ ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$வாத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

த்ரயோத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$:

ராவணாந்த:புரபரிதே$_3$வநம்

ராவணம் நிஹதம் ஶ்ருத்வா ராக$_4$வேண மஹாத்மநா ।
அந்த:புராத்$_3$விநிஷ்பேதூ ராக்ஷஸ்ய: ஶோககர்ஶிதா: ॥ (1)

வார்யமாணா: ஸுப$_3$ஹுஶோ வேஷ்டந்த்ய: க்ஷிதிபாம்ஸுஷு ।
விமுக்தகேஶ்யோ து$_3$:கா$_2$ர்தா கா$_3$வோ வத்ஸஹதா இவ ॥ (2)

உத்தரேண விநிஷ்க்ரம்ய த்$_3$வாரேண ஸஹ ராக்ஷஸை: ।
ப்ரவிஶ்யாயோத$_4$நம் கோ$_4$ரம் விசிந்வத்யோ ஹதம் பதிம் ॥ (3)

ஆர்யபுத்ரேதிவாதி$_3$ந்யோ ஹா நாதே$_2$தி ச ஸர்வஶ: ।
பரிபேது: கப$_3$ந்தா$_4$ங்காம் மஹீம் ஶோணிதகர்த$_3$மாம் ॥ (4)

தா பா$_3$ஷ்பபரிபூர்ணாக்ஷ்யோ ப$_4$ர்த்ருஶோகபராஜிதா: ।
கரேண்வ இவ நர்த$_3$ந்த்யோ விநேது$_3$ர்ஹதயூத$_2$பா: ॥ (5)

த$_3$த்$_3$ருஶுஸ்தம் மஹாவீர்யம் மஹாகாயம் மஹாத்$_3$யுதிம் ।
ராவணம் நிஹதம் பூ$_4$மௌ நீலாஞ்ஜநசயோபமம் ॥ (6)

தா: பதிம் ஸஹஸா த்$_3$ருஷ்ட்வா ஶயாநம் ரணபாம்ஸுஷு ।
நிபேதுஸ்தஸ்ய கா$_3$த்ரேஷு ச்சி$_2$ந்நா வநலதா இவ ॥ (7)

ப$_3$ஹுமாநாத் பரிஷ்வஜ்ய காசிதேநம் ருரோத$_3$ ஹ ।
சரணௌ காசிதா$_3$லிங்க்$_3$ய காசித் கண்டே$_2$ऽவலம்ப்$_3$ய ச ॥ (8)

உத்$_3$த்$_4$ருத்ய ச பு$_4$ஜௌ காசித்$_3$பூ$_4$மௌ ஸ்ம பரிவர்ததே ।
ஹதஸ்ய வத$_3$நம் த்$_3$ருஷ்ட்வா காசிந்மோஹமுபாக$_3$மத் ॥ (9)

காசித$_3$ங்கே ஶிர: க்ருத்வா ருரோத$_3$ முக$_2$மீக்ஷதீ ।
ஸ்நாபயந்தீ முக$_2$ம் பா$_3$ஷ்பைஸ்துஷாரைரிவ பங்கஜம் ॥ (10)

ஏவமார்தா: பதிம் த்$_3$ருஷ்ட்வா ராவணம் நிஹதம் பு$_4$வி ।
சுக்ருஶுர்ப$_3$ஹுதா$_4$ ஶோகாத்$_3$பூ$_4$யஸ்தா: பர்யதே$_3$வயந் ॥ (11)

''விபீஷணா! பகைமை என்பது உயிரோடு வாழும் காலம் வரையில்தான். (ஒருவன் இறந்தவுடன் அவன் மேலிருந்த பகைமை மறைந்துவிடுகிறது.) இப்போது, நாம் விரும்பிய பலனை அடைந்துவிட்டோம். இவனுக்குச் செய்யவேண்டிய ஈமச்சடங்குகளைச் செய்வாயாக. இப்போது இவன், உனக்கு என்ன உறவோ, அவ்வாறேதான் எனக்கும். (எனக்கும் இவனிடம் அன்புறவு உண்டு.)'' (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பதின்மூன்று

அந்தப்புரப் பெண்மணிகளின் கதறல்!

எதிர்க்க முடியாத வீரம் படைத்த இராமனால், இராவணன் கொல்லப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டதும், இராவணனுடைய அந்தப்புரத்திலிருந்த (அவனை நாயகனாகப் பெற்றிருந்த) அரக்கப் பெண்டிர் எல்லோரும் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களாக வெளியே வந்தார்கள். (1)

மற்றவர்களால் பலவாறாக அவர்கள் தடுக்கப்பட்ட போதிலும், அதையும் மீறி, தரையில் விழுந்து, புழுதியில் புரண்டு, தலைவிரிகோலமாகக் கன்றுகளை இழந்த தாய்ப்பசுக்களைப் போல துயரத்தால் தவித்தார்கள். (2)

(அந்தப்புரக் காவலர்களான) அரக்கர்களுடன்கூட, இலங்கையின் வடக்குப்புற வாயில் வழியாக வெளியே வந்த அவர்கள், பயங்கரமாகத் தோற்றமளித்த போர்க்களத்திற்கு வந்து, 'எங்கள் நாயகரே! எங்கள் பிரபுவே!' என்று புலம்பிக் கொண்டு, கொல்லப்பட்ட கணவனை எல்லாப் பக்கங்களிலும் தேடியவாறு, குருதியால் சேறாகி, தலையில்லாத உடல்களால் நிறைந்திருந்த மண்தரையில் விழுந்து புரண்டார்கள். (3,4)

கண்ணீர் நிறைந்த கண்களுடன், கணவனை இழந்த துயரத்தினால் ஆட்கொள்ளப்பட்டு, ஆண்யானையை இழந்த பெண்யானைகள் போலப் பரிதாபமாகக் கதறினார்கள். (5)

மாவீரனும், வலிமையான உடல் பெற்றவனும் மாட்சிமை பொருந்தியவனுமான இராவணன் மாய்க்கப்பட்டு, கரிய மைமலையைப் போல் தரையில் கிடப்பதைக் கண்டார்கள். போர்க்களப் புழுதியில் படுத்துக் கிடக்கும் நாயகனைக் கண்ட அவர்கள், வேர் அறுபட்ட காட்டுக் கொடிகள் உடனே கீழே வீழ்ந்து விடுவதைப் போல, அவன் உடல்மீது வீழ்ந்தார்கள். (6,7)

ஒருத்தி, அவனிடம் வைத்திருந்த கௌரவத்தாலும் நேசத்தாலும் அவனைத் தழுவிக் கொண்டு கதறினாள்; ஒருத்தி, அவன் பாதங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கதறினாள்; இன்னொருத்தி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு புலம்பினாள்; ஒருத்தி, அவன் கைகளை எடுத்துத் தன்மேல் போட்டுக் கொண்டு அழுதாள்; ஒருத்தி, மாய்க்கப்பட்டு உயிரற்ற உடலாகக் கிடக்கும் அவனுடைய முகத்தைப் பார்த்துப் பார்த்து மயக்கம் அடைந்தாள்; ஒருத்தி, அவன் தலையைத் தன் மடிமீது எடுத்து வைத்துக் கொண்டு, பனித்துளிகள் தாமரை மலரை நனைப்பது போல், தன் கண்ணீரால் அவன் முகத்தை நனைத்தாள். (8–10)

இவ்வாறு, சோகத்தில் ஆழ்ந்துகிடந்த அவர்கள், நாயகனான இராவணன் மாய்க்கப்பட்டு, உயிரிழந்து தரையில் கிடப்பதைக் கண்டு, ஓயாமல் புலம்பினார்கள்; கதறினார்கள்; அலறினார்கள்; கண்ணீர் பெருக்கினார்கள். (11)

யேந வித்ராஸித: ஶக்ரோ யேந வித்ராஸிதோ யம: ।
யேந வைஶ்ரவணோ ராஜா புஷ்பகேண வியோஜித: ॥ (12)

க3ந்த4ர்வாணாம்ருஷீணாம் ச ஸுராணாம் ச மஹாத்மநாம் ।
ப4யம் யேந மஹத்3த3த்தம் ஸோऽயம் ஶேதே ரணே ஹத: ॥ (13)

அஸுரேப்4ய: ஸுரேப்4யோ வா பந்நகே3ப்4யோऽபி வா யதா2 ।
ந ப4யம் யோ விஜாநாதி தஸ்யேத3ம் மாநுஷாத்3ப4யம் ॥ (14)

அவத்4யோ தே3வதாநாம் யஸ்ததா2 தா3நவரக்ஷஸாம் ।
ஹத: ஸோऽயம் ரணே ஶேதே மாநுஷேண பதா3திநா ॥ (15)

யோ ந ஶக்ய: ஸுரைர்ஹந்தும் ந யக்ஷைர்நாஸுரைஸ்ததா2 ।
ஸோऽயம் கஶ்சிதி3வாஸத்த்வோ ம்ருத்யும் மர்த்யேந லம்பி4த: ॥ (16)

ஏவம் வத3ந்த்யோ ப3ஹுதா4 ருருது3ஸ்தஸ்ய தா: ஸ்த்ரிய: ।
பூ4ய ஏவ ச து3:கா2ர்தா விலேபுஶ்ச புந: புந: ॥ (17)

அஶ்ருண்வதா ச ஸுஹ்ருதா3ம் ஸததம் ஹிதவாதி3நாம் ।
மரணாயாஹ்ருதா ஸீதா கா4திதாஶ்ச நிஶாசரா: ॥
ஏதா: ஸமமிதா3நீம் தே வயமாத்மா ச பாதிதா: ॥ (18)

ப்3ருவாணோऽபி ஹிதம் வாக்யமிஷ்டோ ப்4ராதா விபீ4ஷண: ।
த்4ருஷ்டம் பருஷிதோ மோஹாத்த்வயாத்மவத4காங்க்ஷிணா ॥ (19)

யதி3 நிர்யாதிதா தே ஸ்யாத்ஸீதா ராமாய மைதி2லீ ।
ந ந: ஸ்யாத்வ்யஸநம் கோ4ரமித3ம் மூலஹரம் மஹத் ॥ (20)

வ்ருத்தகாமோ ப4வேத்3ப்4ராதா ராமோ மித்ரகுலம் ப4வேத் ।
வயம் சாவித4வா: ஸர்வா: ஸகாமா ந ச ஶத்ரவ: ॥ (21)

த்வயா புநர்ந்ருஶம்ஸேந ஸீதாம் ஸம்ருந்த4தா ப3லாத் ।
ராக்ஷஸா வயமாத்மா ச த்ரயம் துல்யம் நிபாதிதம் ॥ (22)

ந காமகார: காமம் வா தவ ராக்ஷஸபுங்க3வ ।
தை3வம் சேஷ்டயதே ஸர்வம் ஹதம் தை3வேந ஹந்யதே ॥ (23)

வாநராணாம் விநாஶோऽயம் ரக்ஷஸாம் ச மஹாஹவே ।
தவ சைவ மஹாபா3ஹோ தை3வயோகா3து3பாக3த: ॥ (24)

நைவார்தே2ந ந காமேந விக்ரமேண ந சாஜ்ஞயா ।
ஶக்யா தை3வக3திர்லோகே நிவர்தயிதுமுத்3யதா ॥ (25)

''எவர், இந்திரனையும் யமராஜனையும்கூட அச்சத்தில் அமிழ்த்தி வைத்திருந்தாரோ; எவர் குபேர மன்னனிடமிருந்து புஷ்பக விமானத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்தாரோ; எவர் கந்தர்வர்களுக்கும் முனிவர்களுக்கும் பேராற்றலுடைய தேவர்களுக்கும் அளவில்லாத பயத்தைத் தருபவராக இருந்தாரோ, அந்தச் சிறப்புகளுக்குரிய இவர் மாய்க்கப்பட்டு, போர்க்களத்தில் சாய்ந்து கிடக்கிறார்! (12,13)

அசுரர்கள், தேவர்கள், பன்னகர்கள் ஆகியவர்களிடமிருந்து மரணபயத்தை அறியாத இவருக்கு, ஒரு மானுடரால் மரணம் ஏற்பட்டிருக்கிறது. (14)

தேவர்களாலும் அசுர–அரக்கர்களாலும் கொல்லப்பட முடியாத இவர், (யானை–குதிரை–தேர்ப்படை இல்லாத, வெற்றுக்) காலால் நடந்துவந்த ஒரு மனிதரால் கொல்லப்பட்டு ரணகளத்தில் படுத்துக் கிடக்கிறார்! (15)

எவர், தேவர்களாலும் யட்ச–அசுரர்களாலும் கொல்லப்பட முடியாதவரோ, அவ்வளவு வீர–பராக்கிரமம் பெற்ற இவர், சக்தியே இல்லாத ஒரு பிராணியைப் போல, ஒரு மனிதனால் காலனிடம் அனுப்பப்பட்டிருக்கிறார்! ஹா!'' (16)

அவனுடைய அந்தப்புரப் பெண்டிர், இவ்வாறு பலவாறாகப் புலம்பிக் கொண்டு ஒப்பாரி வைத்தார்கள். அவனைப் பார்த்துப் பார்த்து, சோகத்தைத் தாங்க முடியாமல் கதறிக் கொண்டே இருந்தார்கள். (17)

''எப்போதும் நலம் தரும் ஆலோசனைகளைக் கூறும் நன்னெஞ்சுடைய நண்பர்களின் அறிவுரையை ஏற்காமல், உங்கள் மரணத்திற்காகவே சீதை கொண்டு வரப்பட்டாள்; எல்லா அரக்கர்களும் கொல்லப்பட்டார்கள். ஒரே சமயத்தில், தங்கள் உயிரும் நாங்களும் கீழே தள்ளப்பட்டுத் தவிக்கிறோம். (18)

அனுகூலத் தம்பியான விபீஷணர், நலன் பயக்கும் சொற்களைக் கூறினார். (ஆனால், தாங்கள் அவருக்குச் செவிசாய்க்கவில்லை.) மரணகாலம் நெருங்கிவிட்ட தாங்கள், மதிமயங்கி கொடிய சொற்களால் அவரை வசைபாடினீர்கள். (19)

மிதிலை மன்னன் புதல்வியாகிய சீதையை இராமனிடம் திருப்பி ஒப்படைத்திருந்தால், எங்கள் உயிர்வேரையே வெட்டித் தள்ளும் இந்தப் பயங்கரமான துக்கம் எங்களுக்கு ஏற்பட்டிராது. (20)

(சீதையைத் திருப்பி அனுப்பியிருந்தால்) சகோதரர் விபீஷணர் மனம் குளிர்ந்திருப்பார்; இராமன், நமது நண்பர் குழாத்தில் சேர்ந்திருப்பார்; நாங்களும் அமங்கலிகளாக ஆகியிருக்க மாட்டோம்; தேவர்கள் முதலான எதிரிகள், தங்கள் பிரார்த்தனை பலித்துவிட்டதாக எண்ணிக்கொள்ள மாட்டார்கள். (21)

இகழத்தக்க முறையில் (திருடிக்கொண்டு வந்து) மிகுந்த கட்டுக்காவலுடன் சீதையை சிறைப்படுத்தினீர்கள். அதனால், ஒரே சமயத்தில் தங்கள் உயிரும் அரக்கர்களும் நாங்களும் வீழ்த்தப்பட்டோம். (22)

அரக்கப் பெருந்தகையே! தாங்கள் மனமொப்பி இவ்வாறெல்லாம் செயல்படவில்லை. எல்லாவற்றையும் விதி ஆட்டுவிக்கிறது. விதியினால் உயிர் பறிக்கப்பட்ட ஒருவனின் ஸ்தூல உடலை அனைவரும் அறியும்படி, வேறொருவன் கொன்று அவனது உயிரைப் பறிக்கிறான். தோள்வலிமை கொண்டவரே! பெரும்போரில் தாங்களும் அரக்கர்களும் வானரர்களும் அழிந்தார்கள். இது தெய்வச் செயலேயன்றி வேறல்ல. (23,24)

உலகில் நற்பலனைக் கொடுக்கத் தொடங்கிவிட்ட தெய்வ கட்டளையை, செல்வத்தினாலோ, விருப்பத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ, ஆணையிட்டோ மாற்றி அமைக்க முடியாது.'' (25)

விலேபுரேவம் தீ$_3$நாஸ்தா ராக்ஷஸாதி$_4$பயோஷித: ।
குரர்ய இவ து$_3$:க$_2$ார்தா ப$_3$ாஷ்பபர்யாகுலேக்ஷணா: ॥ (26)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரயோத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

சதுர்த$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$:

மந்தே$_3$ாத$_3$ரீவிலாப:

தாஸாம் விலபமாநாநாம் தத$_2$ா ராக்ஷஸயோஷிதாம் ।
ஜ்யேஷ்ட$_2$ா பத்நீ ப்ரியா தீ$_3$நா ப$_4$ர்தாரம் ஸமுதை$_3$க்ஷத ॥ (1)

த$_3$ஶக்$_3$ரீவம் ஹதம் த்$_3$ருஷ்ட்வா ராமேணாசிந்த்யகர்மணா ।
பதிம் மந்தே$_3$ாத$_3$ரீ தத்ர க்ருபணா பர்யதே$_3$வயத் ॥ (2)

நநு நாம மஹாப$_4$ாக$_3$ தவ வைஶ்ரவணாநுஜ ।
க்ருத்$_3$த$_4$ஸ்ய ப்ரமுகே$_2$ ஸ்த$_2$ாதும் த்ரஸ்யத்யபி புரந்த$_3$ர: ॥ (3)

ருஷயஶ்ச மஹீதே$_3$வா க$_3$ந்த$_4$ர்வாஶ்ச யஶஸ்விந: ।
நநு நாம தவோத்$_3$வேக$_3$ாச்சாரணாஶ்ச தி$_3$ஶோ க$_3$தா: ॥ (4)

ஸ த்வம் மாநுஷமாத்ரேண ராமேண யுதி$_4$ நிர்ஜித: ।
ந வ்யபத்ரபஸே ராஜந் கிமித$_3$ம் ராக்ஷஸர்ஷப$_4$ ॥ (5)

கத$_2$ம் த்ரைலோக்யமாக்ரம்ய ஶ்ரியா வீர்யேண சாந்விதம் ।
அவிஷஹ்யம் ஜக$_4$ாந த்வாம் மாநுஷோ வநகே$_3$ாசர: ॥ (6)

மாநுஷாணாமவிஷயே சரத: காமரூபிண: ।
விநாஶஸ்தவ ராமேண ஸம்யுகே$_3$ நோபபத்$_3$யதே ॥ (7)

ந சைதத் கர்ம ராமஸ்ய ஶ்ரத்$_3$த$_4$ாமி சமூமுகே$_2$ ।
ஸர்வத: ஸமுபேதஸ்ய தவ தேநாபி$_4$மர்ஶநம் ॥ (8)

யதை$_3$வ ச ஜநஸ்த$_2$ாநே ராக்ஷஸைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ।
க$_2$ரஸ்தவ ஹதோ ப்$_4$ராதா ததை$_3$வாஸௌ ந மாநுஷ: ॥ (9)

யதை$_3$வ நக$_3$ரீம் லங்காம் து$_3$ஷ்ப்ரவேஶாம் ஸுரைரபி ।
ப்ரவிஷ்டோ ஹநுமாந் வீர்யாத்ததை$_3$வ வ்யதி$_2$தா வயம் ॥ (10)

யதை$_3$வ வாநரைர்கே$_4$ாரைர்ப$_3$த்$_3$த$_4$: ஸேதுர்மஹார்ணவே ।
ததை$_3$வ ஹ்ருத$_3$யேநாஹம் ஶங்கே ராமமமாநுஷம் ॥ (11)

அத$_2$வா ராமரூபேண க்ருதாந்த: ஸ்வயமாக$_3$த: ।
மாயாம் தவ விநாஶாய வித$_4$ாயாப்ரதிதர்கிதாம் ॥ (12)

இவ்வாறு அரக்க மன்னனின் மனைவிகள் துயரத்தால் மனம் வெந்து, பரிதவித்துக் கொண்டு, கண்ணீர் நிறைந்த கண்களுடன், அன்றில் பறவைகள் போல் புலம்பிக் கொண்டு கதறி அழுதார்கள். (26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பதிநான்கு

மண்டோதரி புலம்புதல்!

இவ்வாறு புலம்பும் அரக்க மன்னனின் மனைவிகளில் மூத்தவளும், மன்னனுக்குப் பிரியமானவளுமான மண்டோதரி, மிகப் பரிதாபமாகக் கணவரைக் கண்கொட்டாமல் பார்த்தாள். எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அருஞ்செயல்களைச் செய்யும் இராமனால், கணவன் இராவணன் கொல்லப்பட்டதைக் கண்டு, மண்டோதரி மனம் தவித்துப் புலம்பத் தொடங்கினாள்— (1,2)

''பெரும் புண்ணியசாலியே! குபேரனின் தம்பியே! தாங்கள் கோபங்கொண்டு சீறி எழுந்தால், எதிரே நிற்பதற்கு இந்திரன்கூட நடுங்குவானே! (அப்படிப்பட்ட தங்களுக்கா, இந்த முடிவு?) (3)

முனிவர்களும், புகழ்பெற்ற கந்தர்வர்களும் தங்களைப் பற்றி நினைத்தாலே அஞ்சிக் கலக்கம் அடைவார்கள். தங்களிடம் உள்ள அச்சத்தினால் சாரணர்கள் பத்துத் திசைகளிலும் ஓடி ஒளிந்து கொண்டார்களன்றோ! (4)

இவ்வளவு பராக்கிரமமும் மூவுலகங்களிலும் பெருமை பெற்றவருமான தாங்கள், ஓர் அற்பமானுடனால் ஜெயிக்கப்பட்டீர்கள்!... மன்னவரே! அரக்கரே! இதுபற்றி தாங்கள் வெட்கமடையவில்லையா? மூன்று உலகங்களையும் கைப்பற்றி, செல்வச் சீமானாகவும் இணையற்ற வீரராகவும் திகழ்ந்த தங்களின் தாக்குதலை, எவரும் தாங்கிக் கொள்ள முடியவே முடியாது என்னும்போது, காலால் நடந்து காட்டில் சுற்றிவரும் ஒரு மனிதன் கொன்றான் என்றால் நம்பமுடியவில்லையே? (5,6)

மனிதர்களால் வர முடியாத இடத்தில், விரும்பிய உருவம் ஏற்றுத் திரியும் தனிப்பெருமை பெற்ற தங்களுக்கு, போரில் இராமனால் அழிவு என்பது பொருத்தமாக இல்லையே? (7)

போர்முனையில், எப்போதும் வெற்றிகொள்ளும் தாங்கள், இராமன் என்ற வெற்று மனிதனால் வெல்லப்பட்டீர்கள் என்பது நம்பும்படியாக இல்லை. ஜனஸ்தானத்தில், ஏராளமான அரக்கர்களுடன் சென்று போரிட்ட தங்கள் தம்பி கரன், இராமனால் கொல்லப்பட்டான்! இராமன் வெற்று மானுடன் அல்லன் என்பதற்கு இது ஒரு சான்று போதுமே? (8,9)

தேவர்களாலும் கூடப் புகமுடியாத இலங்கைப் பட்டணத்திற்குள், அனுமான் என்ற ஒற்றை வானரம் எப்போது தைரியமாக உட்புகுந்ததோ, அப்போதிருந்தே நாங்கள் கவலைப்படத் தொடங்கி விட்டோம். பலம்மிகுந்த வானரர்களால், பெருங்கடலில் எப்போது அணை கட்டப்பட்டதோ, அப்போதே, 'இராமன் ஒரு மானுடன் அல்லன்' என்ற சந்தேகம் என் மனத்தில் தோன்றிவிட்டது. (10,11)

அல்லது, சீதை என்ற அழகுப் பெட்டகத்தைத் தன் மாயையால் உண்டாக்கி, இராமன் என்ற வடிவத்தைத் தானே ஏற்று, காலதேவனே இங்கு வந்தானோ? (12)

அத$_2$வா வாஸவேந த்வம் த$_4$ர்ஷிதோऽஸி மஹாப$_3$ல ।
வாஸவஸ்ய குத: ஶக்திஸ்த்வாம் த்$_3$ரஷ்டுமபி ஸம்யுகே$_3$ ॥ (13)

வ்யக்தமேஷ மஹாயோகீ$_3$ பரமாத்மா ஸநாதந: ।
அநாதி$_3$மத்$_4$யநித$_4$நோ மஹத: பரமோ மஹாந் ॥ (14)

தமஸ: பரமோ தா$_4$தா ஶங்க$_2$சக்ரக$_3$தா$_3$த$_4$ர: ।
ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீரஜய்ய: ஶாஸ்வதோ த்$_4$ருவ: ॥ (15)

மாநுஷம் வபுராஸ்தா$_2$ய விஷ்ணு: ஸத்யபராக்ரம: ।
ஸர்வை: பரிவ்ருதோ தே$_3$வைர்வாநரத்வமுபாக$_3$தை: ॥ (16)

ஸர்வலோகேஶ்வர: ஸாக்ஷால்லோகாநாம் ஹிதகாம்யயா ।
ஸராக்ஷஸபரீவாரம் ஹதவாந்ஸ்த்வாம் மஹாத்$_3$யுதி: ॥ (17)

இந்த்$_3$ரியாணி புரா ஜித்வா ஜிதம் த்ரிபு$_4$வநம் த்வயா ।
ஸ்மரத்$_3$பி$_4$ரிவ தத்$_3$வைரமிந்த்$_3$ரியைரேவ நிர்ஜித: ॥ (18)

க்ரியதாமவிரோத$_4$ஶ்ச ராக$_4$வேணேதி யந்மயா ।
உச்யமாநோ ந க்$_3$ருஹ்ணாஸி தஸ்யேயம் வ்யுஷ்டிராக$_3$தா ॥ (19)

அகஸ்மாச்சாபி$_4$காமோऽஸி ஸீதாம் ராக்ஷஸபுங்க$_3$வ ।
ஐஶ்வர்யஸ்ய விநாஶாய தே$_3$ஹஸ்ய ஸ்வஜநஸ்ய ச ॥ (20)

அருந்த$_4$த்யா விஶிஷ்டாம் தாம் ரோஹிண்யாஶ்சாபி து$_3$ர்மதே ।
ஸீதாம் த$_4$ர்ஷயதா மாந்யாம் த்வயா ஹ்யஸத்$_3$ருஶம் க்ருதம் ॥ (21)

வஸுதா$_4$யாஶ்ச வஸுதா$_4$ம் ஶ்ரிய: ஸ்ரீம் ப$_4$ர்த்ருவத்ஸலாம் ।
ஸீதாம் ஸர்வாநவத்$_3$யாங்கீ$_3$மரண்யே விஜநே ஶுபா$_4$ம் ॥ (22)

ஆநயித்வா து தாம் தீ$_3$நாம் ச$_2$த்$_3$மநாத்மஸ்வதூ$_3$ஷண ।
அப்ராப்ய சைவ தம் காமம் மைதி$_2$லீஸங்க$_3$மே க்ருதம் ॥
பதிவ்ரதாயாஸ்தபஸா நூநம் த$_3$க்$_3$தோ$_4$ऽஸி மே ப்ரபோ$_4$ ॥ (23)

ததை$_3$வ யந்ந த$_3$க்$_3$த$_4$ஸ்த்வம் த$_4$ர்ஷயந்ஸ்தநுமத்$_4$யமாம் ।
தே$_3$வா பி$_3$ப்$_4$யதி தே ஸர்வே ஸேந்த்$_3$ரா: ஸாக்$_3$நிபுரோக$_3$மா: ॥ (24)

அவஶ்யமேவ லப$_4$தே ப$_2$லம் பாபஸ்ய கர்மண: ।
கோ$_4$ரம் பர்யாக$_3$தே காலே கர்தா நாஸ்த்யத்ர ஸம்ஶய: ॥ (25)

ஶுப$_4$க்ருச்சு$_2$ப$_4$மாப்நோதி பாபக்ருத் பாபமஶ்நுதே ।
விபீ$_4$ஷண: ஸுக$_2$ம் ப்ராப்தஸ்த்வம் ப்ராப்த: பாபமீத்$_3$ருஶம் ॥ (26)

மகாபலம் பொருந்தியவரே! ஒருக்கால், தாங்கள் (மாற்றுருவம் தாங்கி வந்த) இந்திரனால் தாக்கப்பட்டிருப்பீர்களோ? – என்று எண்ணிப் பார்த்தால், (அது சாத்தியமே இல்லை! ஏனென்றால்,) தங்களைப் போர்க்களத்தில் கண்ணால் பார்க்கக்கூட அவனிடம் சக்தி ஏது? (13)

இவர் (இராமன்), மகாயோகி; பரமாத்மா; மிகத் தொன்மையானவர்; தொடக்கம்–நடு–முடிவு இல்லாதவர்; மிக மேன்மை பொருந்திய பொருளைக் காட்டிலும் மேலானவர்; இருளுக்கு (அறியாமைக்கு) அப்பாற்பட்டவர்; உலகைப் படைப்பவர்; சங்கம்–சக்கரம்–கதை ஆகியவைகளைத் திருக்கரங்களில் தாங்கியவர்; ஸ்ரீவத்ஸம் என்னும் மருவை மார்பில் உடையவர்; எப்போதும் எல்லாச் செழிப்பும் பெற்றிருப்பவர்; வெல்லமுடியாதவர்; நிரந்தரமானவர்; எல்லா உலகங்களுக்கும் பெருந்தலைவர்; மகிமை மிக்கவர்; சாட்சாத் விஷ்ணு பகவானே! – என்பது, தெளிவாகத் தெரிகிறது. தோல்வி கண்டறியாத பராக்கிரமம் கொண்ட இவர், உலக மக்களுக்கு நன்மை புரியத் திருவுள்ளம் பற்றினார். அதனால், தான் (பகவான்) மானுட உருவம் ஏற்று, வானர உருவம் பெற்ற எல்லா தேவர்களாலும் சூழப்பெற்று, அரக்கப் பரிவாரங்களுடன் தங்களையும் கொன்றுவிட்டார். (14–17)

முன்னர், புலன்களை அடக்கி (கடுமையான தவங்கள் செய்து, பலப்பல வரங்களைப் பெற்று, அதன் மூலம்) மூன்று உலகங்களையும் வென்றீர்கள். புலன்கள் (தங்களால் நசுக்கி வைக்கப்பட்ட கொடுமையை மறக்காமல்) அதை நினைவிற்கொண்டு பழிதீர்த்துக் கொண்டதைப் போல, புலன்களாலேயே (புலனின்பப் பற்றினாலேயே) வெல்லப்பட்டுவிட்டீர்கள். (18)

இராமனோடு பகைமை கொள்ள வேண்டாம் என்று நான் பல தடவைகள் சொன்னேன். தாங்கள் அதை மனத்திற்கொள்ளவில்லை. அதன் பயன் இப்போது வந்திருக்கிறது. அரக்கப் பெருந்தகையே! தாங்கள், தங்களுடைய செல்வச் செழுமை, உடல் மற்றும் உறவினர்களின் அழிவுக்காகவே, எந்தக் காரணமுமில்லாமல், சீதையிடம் மோகம் கொண்டீர்கள். (19,20)

கெடுமதி கொண்டவரே! அருந்ததிக்கும் ரோகிணிக்கும் மேம்பட்ட கற்புக்கரசி சீதை, அவள், கௌரவிக்கத்தக்கவள். ஆனால், தாங்கள் அவளை அவமதித்தீர்கள். அவள் பெருமைக்கு ஏற்றவாறு தாங்கள் நடந்து கொள்ளவில்லை. ('கௌரவிக்கத்தக்கவள்' என்றதனால், கற்பின் உயர்வினால் மட்டுமல்லாமல், தாய்மைத் தன்மையாலும் வணங்கத்தக்கவள் – என்றும் சொன்னதாகிறது.) (21)

பூமாதேவிக்கும் பூமி போன்றவள் (பொறுமைமிக்கவள்); அனைத்து வகையான செழிப்புக்கும் ஒப்பற்ற தலைவியான திருமகளுக்கும் இடமானவள்; கணவரிடம் வாத்ஸல்யம் உடையவள் (பத்துக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு, கணவனைப் பதினோராவது குழந்தை போல் சீராட்டுவாயாக – என்பது விவாக மந்திரம்); எந்தவிதத்தில் பார்த்தாலும் குற்றமில்லாத திருமேனி உடையவள்; மங்களமானவள். மக்கள் நடமாட்டமே இல்லாத காட்டில் தனித்திருந்த சீதையை, மாரீசன் துணைகொண்டு கபடமாகக் கவர்ந்து வந்தீர்கள். இதனால், தங்கள் பெருமைக்குக் களங்கம் ஏற்பட்டது. மைதிலியை மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்ற தங்கள் விருப்பம் நிறைவேறவில்லை. என் அன்புக்குரிய நாதரே! நிச்சயமாக, கற்புக்கனலான அவளுடைய தவ ஆற்றலால்தான் தாங்கள் எரிக்கப்பட்டிருக்கிறீர்கள். (இராமன், ஒரு நிமித்த காரணமே.) (22,23)

'சிற்றிடையாளான அவளைக் கவர்ந்து வந்தபோது என்னை எரிக்கவில்லையே?' என்றால், அப்போது இந்திரன், அக்னி முதலான எல்லா தேவர்களும் தங்களிடம் பயத்தோடு இருந்தார்கள். (அதனால், அப்போது தங்களை நெருங்க முடியவில்லை.) பாவத்தைச் செய்தவன், பாவச் செயலின் கொடிய பலன்களை உரிய காலம் வந்தவுடன் கட்டாயமாக அனுபவிக்கிறான் என்பதில் ஐயமில்லை. நற்கர்மங்களைச் செய்தவன், புண்ணியப் பயனான நற்பேறுகளை அனுபவிக்கிறான்; பாவச் செயல் புரிந்தவன், அதன் பயனான துன்பங்களை அனுபவிக்கிறான். விபீஷணன் நற்பயன்களை அடைந்துவிட்டார்; தாங்கள் மாற்றி அமைக்க முடியாத இந்தவித (போரில் தோல்வி, மரணம் என்ற) தீய பலன்களை அடைந்துள்ளீர்கள். (24–26)

ஸந்த்யந்யா: ப்ரமத3ாஸ்துப்4யம் ரூபேணாப்4யதி4காஸ்தத: ।
அநங்க3வஶமாபந்நஸ்த்வம் து மோஹாந்ந பு3த்4யஸே ॥ (27)

ந குலேந ந ரூபேண ந தா3க்ஷிண்யேந மைதி2லீ ।
மயாதி4கா வா துல்யா வா த்வம் து மோஹாந்ந பு3த்4யஸே ॥ (28)

ஸர்வதா2 ஸர்வபூ4தாநாம் நாஸ்தி ம்ருத்யுரலக்ஷண: ।
தவ தாவத3யம் ம்ருத்யுர்மைதி2லீக்ருதலக்ஷண: ॥
ஸீதாநிமித்தஜோ ம்ருத்யுஸ்த்வயா தூ3ராது3பாஹ்ருத: ॥ (29)

மைதி2லீ ஸஹ ராமேண விஶோகா விஹரிஷ்யதி ।
அல்பபுண்யா த்வஹம் கோ4ரே பதிதா ஶோகஸாக3ரே ॥ (30)

கைலாஸே மந்த3ரே மேரௌ ததா2 சைத்ரரதே2 வநே ।
தே3வோத்3யாநேஷு ஸர்வேஷு விஹ்ருத்ய ஸஹிதா த்வயா ॥ (31)

விமாநேநாநுரூபேண யா யாம்யதுலயா ஶ்ரியா ।
பஶ்யந்தீ விவிதா4ந் தே3ஶாந்ஸ்தாந்ஸ்தாந்ஶ்சித்ரஸ்ரக3ம்ப3ரா ॥
ப்4ரம்ஶிதா காமபோ4கே3ப்4ய: ஸாஸ்மி வீர வதா4த்தவ ॥ (32)

ஸைவாந்யேவாஸ்மி ஸம்வ்ருத்தா தி4க்3ராக்ஞாம் சஞ்சலா: ஶ்ரிய: ॥ (33)

ஹா ராஜந் ஸுகுமாரம் தே ஸுப்4ரு ஸுத்வக் ஸமுந்நஸம் ।
காந்திஶ்ரீத்3யுதிபி4ஸ்துல்யமிந்து3பத்3மதி3வாகரை: ॥ (34)

கிரீடகூடோஜ்ஜ்வலிதம் தாம்ராஸ்யம் தீ3ப்தகுண்ட3லம் ।
மத3வ்யாகுலலோலாக்ஷம் பூ4த்வா யத்பாநபூ4மிஷு ॥ (35)

விவித4ஸ்ரக்3த4ரம் சாரு வல்கு3ஸ்மிதகத2ம் ஶுப4ம் ।
ததே3வாத்3ய தவேத3ம் ஹி வக்த்ரம் ந ப்4ராஜதே ப்ரபோ4 ॥ (36)

ராமஸாயகநிர்பி4ந்நம் ஸிக்தம் ருதி4ரவிஸ்ரவை: ।
விஶீர்ணமேதோ3மஸ்திஷ்கம் ரூக்ஷம் ஸ்யந்த3நரேணுபி4: ॥ (37)

ஹா பஶ்சிமா மே ஸம்ப்ராப்தா த3ஶா வைத4வ்யகாரிணீ ।
யா மயாஸீந்ந ஸம்பு3த்3தா4 கதா3சித3பி மந்த3யா ॥ (38)

பிதா தா3நவராஜோ மே ப4ர்தா மே ராக்ஷஸேஶ்வர: ।
புத்ரோ மே ஶக்ரநிர்ஜேதா இத்யேவம் க3ர்விதா ப்4ருஶம் ॥ (39)

த்3ருப்தாரிமர்த3நா: ஶூரா: ப்ரக்2யாதப3லபௌருஷா: ।
அகுதஶ்சித்3ப4யா நாத2ா: மமேத்யாஸீந்மதிர்த்3ருட4ா ॥ (40)

தேஷாமேவம்ப்ரப4ாவாணாம் யுஷ்மாகம் ராக்ஷஸர்ஷப4 ।
கத2ம் ப4யமஸம்பு3த்3த4ம் மாநுஷாதி3த3மாக3தம் ॥ (41)

தங்களது அந்தப்புரத்தில், சீதையைக் காட்டிலும் பேரழகு படைத்த அணங்குகள் இருக்கிறார்கள். ஆனால், காமவசப்பட்ட தாங்கள், மதிமயக்கத்தால் இதை உணரவில்லை. (27)

மைதிலி, குடிப்பிறப்பிலோ, உருவ லாவண்யத்திலோ, அனுகூலமாக இருப்பது போன்ற நற்குணங்களாலோ எனக்கு மேம்பட்டவள் அல்லள். ஏன்? எனக்கு சமமானவள்கூட அல்லள். மதிமயக்கத்தில் இருந்த தாங்கள், இதை உணரவில்லை. உலகில் எல்லாப் பிராணிகளுக்கும் மரணம் என்பது எந்த வழியிலாவது ஒரு காரணமும் இல்லாமல் ஏற்படுவதில்லை. அதன்படியே, தங்களுக்கு இத்தகைய மரணம், சீதை என்ற காரணத்தைக் கொண்டு ஏற்பட்டிருக்கிறது. (28,29)

தாங்கள், சீதையை காரணமாகக் கொண்டு ஏற்படப் போகும் மரணத்தை, வெகு தொலைவிலிருந்தே கொண்டு வந்தீர்கள். சோகம் தீர்ந்துபோன மைதிலி, இனி இராமனுடன் கூட இன்பமாக வாழப் போகிறாள். ஆனால், புண்ணியப் பலன்களை அனுபவித்துத் தீர்த்து முடித்துவிட்ட நான், பயங்கரமான துயரக்கடலில் விழுந்துவிட்டேன். (30)

அழகிய மாலைகளையும் உடைகளையும் அணிந்து கொண்டு, தங்களோடுகூட கைலாசம்–மந்தரம்–மேரு முதலிய மலைகளிலும், (குபேரனுடைய) சைத்ரரதம் என்ற பூங்காவிலும், அரக்கர்களுடைய எல்லாப் பூஞ்சோலைகளிலும் சுற்றித் திரிந்தேன். நிகரில்லாத அழகுடன் விளங்கும் விமானத்தில் அமர்ந்து, பற்பல நாடுகளின்மேல் பறந்து சென்று பார்த்துக் கொண்டு வந்தேன். வீரரே! அவ்வளவு சிறப்பான, பெருமைமிக்க சுக–சௌக்கியங்களை அனுபவித்த நான், தங்கள் மரணத்தால், இன்பபோகங்களிலிருந்து விலக்கப்பட்டவளாக ஆகிவிட்டேன். (31,32)

சீரும்சிறப்புமாக வாழ்ந்த நான், வேறொருத்தி (சாதாரண பெண்) போல் ஆகிவிட்டேன்! அந்தோ! மன்னர்களின் வாழ்க்கை வளம்தான் எவ்வளவு நிலையற்றது! (33)

ஆ! பேரரசரே! தங்களுடைய செவ்விய திருமுகம் எவ்வளவு அழகானது! அழகிய புருவங்கள்; தொடுவதற்கினிய சருமம்; நிமிர்ந்த நாசி; அழகுப் பொலிவினால், சந்திரன், தாமரை, சூரியன் ஆகியவைகளுக்கு இணையானது (ஒரே சமயத்தில் குளிர்ச்சி, மணம், ஒளி பொருந்தியது); மலைச்சிகரம் போன்ற பெரிய கிரீடம்; ஒளிவீசும் குண்டலங்கள்; மதுபான அறைகளில், போதை ஏறியதால் கலங்கிச் சலிக்கும் கண்கள்; மனங்கவர் புன்சிரிப்பு–பேச்சு; மணமிகு பல்வகை மலர் மாலைகள் அணிந்து மங்களமாக விளங்கிய தங்கள் முகம், இப்போது இராமபிரானுடைய பாணங்களால் பிளக்கப்பட்டு, குருதிப் பெருக்கில் நனைந்து, உடல் தசையும் கொழுப்பும் சிதறி, தேர் எழுப்பிய புழுதி படிந்து காணச் சகியாததாக ஆகிவிட்டதே! (மலர் மாலை சூடிய முகம், பாணங்களால் பிளக்கப்பட்ட முகம் என்ற வருணனை, மண்டோதரிக்கு சோகத்தால் ஏற்பட்ட சஞ்சலத்தைக் குறிப்பது. முகம் என்பதை உடல் என்றே இங்கே கொள்ள வேண்டும்.) (34–37)

ஐயகோ! நற்பேறு இல்லாதவளாகிய நான், எந்த (தங்கள் மரணம் என்ற) ஒரு விஷயத்தைப் பற்றி நினைத்துப் பார்த்ததுகூட இல்லையோ, அத்தகைய துயரம் நிறைந்த வைதவ்ய நிலையைக் கொடுக்கும், அந்திம நிலை (மரணம்) தங்களுக்கு நேர்ந்திருக்கிறது. என் தந்தையோ அசுர வேந்தர்; கணவரோ அரக்கர்களின் மாமன்னர்; புதல்வனோ இந்திரனையே வென்றவன்! எனக்கு யார் நிகர், இவ்வுலகில்? என்று மிகவும் இறுமாந்திருந்தேன். (38,39)

என்னைப் பாதுகாத்துப் பரிபாலிப்பவர்கள்; செருக்குக் கொண்ட பகைவர்களையும் பிழிந்தெடுப்பவர்கள்; அவர்களுடைய ஆற்றலும் ஆண்மையும் எல்லோருக்கும் தெரிந்தது. (அதனால், படையெடுத்து வரமாட்டார்கள்.) சூரர்கள்; எவரைக் கண்டும் அஞ்சாதவர்கள் – என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு இருந்தது. அரக்கரேறே! இவ்வளவு எல்லையில்லாத பெருமைகளையுடைய உங்களுக்கு, எதிர்பாராவிதமாக ஒரு பேராபத்து வெற்று மனிதனிடமிருந்து எவ்வாறு ஏற்பட்டது? (40,41)

ஸ்நிக்3தே4ந்த்3ரநீலநீலம் து ப்ராம்ஶுஶைலோபமம் மஹத் ।
கேயூராங்க3த3வைடூ4ர்யமுக்தாதா3மஸ்ரகு3ஜ்ஜ்வலம் ॥ (42)

காந்தம் விஹாரேஷ்வதி4கம் தீ3ப்தம் ஸங்க்3ராமபூ4மிஷு ।
பா4த்யாப4ரணபா4பி4ர்யத்3வித்3யுத்3பி4ரிவ தோயத3: ॥ (43)

ததே3வாத்3ய ஶரீரம் தே தீக்ஷ்ணைர்நைகை: ஶரைஶ்சிதம் ।
புநர்து3ர்லப4ஸம்ஸ்பர்ஶம் பரிஷ்வக்தும் ந ஶக்யதே ॥ (44)

ஶ்வாவித3: ஶலலைர்யத்3வத்3பா3ணைர்லக்3நைர்நிரந்தரம் ।
ஸ்வர்பிதைர்மர்மஸு ப்4ருஶம் ஸஞ்சி2ந்நஸ்நாயுப3ந்த4நம் ॥ (45)

க்ஷிதௌ நிபதிதம் ராஜஞ்ஶ்யாவம் ருதி4ரஸச்ச2வி ।
வஜ்ரப்ரஹாராபி4ஹதோ விகீர்ண இவ பர்வத: ॥ (46)

ஹா ஸ்வப்ந: ஸத்யமேவேத3ம் த்வம் ராமேண கத2ம் ஹத: ।
த்வம் ம்ருத்யோரபி ம்ருத்யு: ஸ்யா: கத2ம் ம்ருத்யுவஶம் க3த: ॥ (47)

த்ரைலோக்யவஸுபோ4க்தாரம் த்ரைலோக்யோத்3வேக3த3ம் மஹத் ।
ஜேதாரம் லோகபாலாநாம் க்ஷேப்தாரம் ஶங்கரஸ்ய ச ॥ (48)

த்3ருப்தாநாம் நிக்3ரஹீதாரமாவிஷ்க்ருதபராக்ரமம் ।
லோகக்ஷோபா4யிதாரம் ச நாதை3ர்பூ4தவிராவிணம் ॥ (49)

ஓஜஸா த்3ருப்தவாக்யாநாம் வக்தாரம் ரிபுஸந்நிதௌ4 ।
ஸ்வயூத2ப்4ருத்யவர்கா3ணாம் கோ3ப்தாரம் பீ4மவிக்ரமம் ॥ (50)

ஹந்தாரம் தா3நவேந்த்3ராணாம் யக்ஷாணாம் ச ஸஹஸ்ரஶ: ।
நிவாதகவசாநாம் ச ஸங்க்3ரஹீதாரமீஶ்வரம் ॥ (51)

நைகயஜ்ஞவிலோப்தாரம் த்ராதாரம் ஸ்வஜநஸ்ய ச ।
த4ர்மவ்யவஸ்தா2பே4த்தாரம் மாயாஸ்ரஷ்டாரமாஹவே ॥ (52)

தே3வாஸுரந்ருகந்யாநாமாஹர்தாரம் ததஸ்தத: ।
ஶத்ருஸ்த்ரீஶோகதா3தாரம் நேதாரம் ஸ்வஜநஸ்ய ச ॥ (53)

லங்காத்3வீபஸ்ய கோ3ப்தாரம் கர்தாரம் பீ4மகர்மணாம் ।
அஸ்மாகம் காமபோ4கா3நாம் தா3தாரம் ரதி2நாம் வரம் ॥ (54)

ஏவம்ப்ரபா4வம் ப4ர்தாரம் த்3ருஷ்ட்வா ராமேண பாதிதம் ।
ஸ்தி2ராஸ்மி யா தே3ஹமிமம் தா4ரயாமி ஹதப்ரியா ॥ (55)

ஶயநேஷு மஹார்ஹேஷு ஶயித்வா ராக்ஷஸேஶ்வர ।
இஹ கஸ்மாத் ப்ரஸுப்தோ஽ஸி த4ரண்யாம் ரேணுபாடல: ॥ (56)

பளபளக்கும் இந்திர நீலமணி போன்ற சியாம நிறம்; உயர்ந்து நிற்கும் மாமலைக்கு ஒப்பான கம்பீரமான உடற்கட்டு; மிகச்சிறந்த கேயூரம், தோள்வளைகள், வைடூர்ய–முத்து மாலைகள், மலர்மாலைகள் அணிந்து எடுப்பான தோற்றம்; உல்லாச கேளிக்கைகளின் போது அதிகமான பொலிவு; போர்க்களங்களில் தகிப்பது போன்ற ஒளி; பளிச்சிடும் மின்னல்கள் விளங்கும் மேகம் போல், அணிகலன்களில் மினுமினுக்கும் ஒளிகளுடன் விளங்கும் சரீரம்! அட! தங்களை இனிமேல் தொடவே முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதை உணர்ந்தாலும், இப்போது தங்கள் உடல் கூர்மையான பாணங்களால் துளைக்கப்பட்டு, கட்டித் தழுவிக் கொள்ளவும் முடியாததாக இருக்கிறதே? (42–44)

மன்னரே! முள்ளம்பன்றியின் உடல் முழுவதும் முட்கள் குத்தி நிற்பதைப் போல, சிறிது இடம்கூட விட்டு வைக்காமல், உங்கள் உடலில் பாணங்கள் தைத்து நிற்கின்றன. மர்மஸ்தானங்களில் புகுந்த பாணங்களினால் நரம்பு மண்டலம் கிழிக்கப்பட்டு, (உயிர் அடங்கி) தரையில் கிடக்கும் கருத்தமலை போன்ற தங்கள் உடலில் செங்குருதியின் வெள்ளம் ஓடுகிறது. இந்த நிலையில், தங்களைப் பார்க்கும்போது வஜ்ராயுதத்தால் சிதறடிக்கப்பட்ட மலைபோல் தோன்றுகிறது. (45,46)

ஆ! இதென்ன, கனவா? இல்லை, இல்லை... உண்மையாக நடந்ததுதான்!... தாங்கள் காலனுக்கே காலன் போன்றவர்! இப்போது இராமனால் எவ்வாறு கொல்லப்பட்டீர்கள்? எவ்வாறு காலன் வசப்பட்டீர்கள்? தாங்கள், மூன்று உலகங்களின் செல்வச் செழிப்பையும் அனுபவித்தவர்; மூன்று உலகங்களுக்கும் பேரச்சத்தை விளைவித்தவர்; எட்டு திசைக் காவலர்களையும் வெற்றி கொண்டவர்; கைலாச மலையை அசைத்து பரமேசுவரனையும் எதிர்த்தவர்; (47,48)

செருக்குடன் அலைந்தவர்களை அடக்கியவர்; பராக்கிரமத்தை வெளிப்படுத்தி, உலகத்தைக் கலக்கியவர்; கடூரமான பேரொலிகளால் எல்லாப் பிராணிகளையும் நடுங்க வைத்தவர்; (49)

எல்லை காண முடியாத வீரத் திமிரினால், எதிரிகளின் எதிரிலேயே இறுமாப்புடன் உரையாடியவர்; பயங்கரமாகச் செயலாற்றவல்ல தனது போர்வீரர்களையும் பணியாளர்களையும் நன்கு பரிபாலித்தீர்கள்; (50)

ஆயிரக்கணக்கான அசுரத் தலைவர்களையும் யக்ஷர்களையும் கொன்று போட்டீர்கள்; அழிக்க முடியாத நிவாதகவசர்கள் என்ற அசுரர்களுடன் நட்புப் பூண்டீர்கள்; எல்லோருக்கும் பெருந்தலைவராக இருந்தீர்கள்; கணக்கிலடங்காமல் வேள்விகளை அழித்தவர்; தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றியவர்; அறநெறி வரம்பைத் தகர்த்தெறிந்தவர்; போர் செய்யும்போது மாயைகளை உண்டாக்குபவர்; (51,52)

அவ்வப்போது, தேவ–அசுர–மானுடக் கன்னிகைகளைக் கவர்ந்து கொண்டு வந்தவர்; எதிரிகளின் மனைவியருக்கு சோகத்தைக் கொடுத்தவர்; தன் இனத்தவரின் தனிப் பெருந்தலைவர்; (53)

இலங்கைத் தீவை கட்டிக் காத்தவர்; செயற்கரிய கொடிய செயல்களைச் செய்தவர்; அந்தப்புரப் பெண்டிராகிய எங்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் புலனுகர்ச்சி அளித்தவர்; தேர் வீரர்களுள் சிறந்தவர்; (54)

கணக்கிடமுடியாத சிறப்புகளைப் பெற்ற கணவர், இராமனால் வீழ்த்தப்பட்டுக் கிடப்பதைக் கண்ணால் கண்டபின்னரும், அன்புக்குரியவரைப் பறிகொடுத்த பின்னரும், (உயிருடன் கூடிய) உடலைத் தாங்கிக் கொண்டு நிலைகுலையாமல் இருந்து கொண்டிருக்கிறேன்! (என்னுடைய மனம், கற்பாறை போன்றது என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?) (55)

அரக்கர் வேந்தே! தாங்கள் மிகச்சிறந்த படுக்கைகளில் படுத்து உறங்கியவர். ஏனோ இப்போது, தரையில் செம்புழுதி பூசிக்கொண்டு தூங்கிக் கிடக்கிறீர்கள்? (56)

யத3ா மே தநய: ஶஸ்தோ லக்ஷ்மணேநேந்த்3ரஜித்3யுதி4 ।
தத3ாஸ்ம்யபி4ஹதா தீவ்ரமத்3ய த்வஸ்மிந்நிபாதிதா ॥ (57)

நாஹம் ப3ந்து4ஜநைர்ஹீநா ஹீநா நாதே2ந து த்வயா ।
விஹீநா காமபே4ாகைஃஸ்ச ஶோசிஷ்யே ஶாஸ்வதீ: ஸமா: ॥ (58)

ப்ரபந்நோ தீ3ர்க4மத்4வாநம் ராஜந்நத்3ய ஸுது3ர்க3மம் ।
நய மாமபி து3:க2ார்தாம் ந ஜீவிஷ்யே த்வயா விநா ॥ (59)

கஸ்மாத்த்வம் மாம் விஹாயேஹ க்ருபணாம் க3ந்துமிச்ச2ஸி ।
தீ3நாம் விலபிதைர்மந்த3ாம் கிம் வா மாம் நாபி4ப4ாஷஸே ॥ (60)

த்3ருஷ்ட்வா ந க2ல்வஸி க்ருத்3தே4ா மாமிஹாநவகுண்டி2தாம் ।
நிர்க3தாம் நக3ரத்3வாராத் பத்3ப்4யாமேவாக3தாம் ப்ரபே4ா ॥ (61)

பஶ்யேஷ்டத3ார த3ாராம்ஸ்தே ப்4ரஷ்டலஜ்ஜாவகுண்டி2தாந் ।
ப3ஹிர்நிஷ்பதிதாந் ஸர்வாந் கத2ம் த்3ருஷ்ட்வா ந குப்யஸி ॥ (62)

அயம் க்ரீட3ாஸஹாயஸ்தேऽநாதே2ா லாலப்யதே ஜந: ।
ந சைநமாஸ்வாஸயஸே கிம் வா ந ப3ஹு மந்யஸே ॥ (63)

யாஸ்த்வயா வித4வா ராஜந் க்ருதா நைகா: குலஸ்த்ரிய: ।
பதிவ்ரதா த4ர்மபரா கு3ருஶுஶ்ரூஷணே ரதா: ॥ (64)

தாபி4: ஶோகாபி4தப்தாபி4: ஶப்த: பரவஶம் க3த: ।
த்வயா விப்ரக்ருதாபி4ர்யத்தத3ா ஶப்தம் தத3ாக3தம் ॥ (65)

ப்ரவாத3: ஸத்ய ஏவாயம் த்வாம் ப்ரதி ப்ராயஶோ ந்ருப ।
பதிவ்ரதாநாம் நாகஸ்மாத் பதந்த்யஶ்ரூணி பூ4தலே ॥ (66)

கத2ம் ச நாம தே ராஜந்(ல்)லோகாநாக்ரம்ய தேஜஸா ।
நாரீசௌர்யமித3ம் க்ஷுத்3ரம் க்ருதம் ஶௌண்டீ3ர்யமாநிநா ॥ (67)

அபநீயாஶ்ரமாத்3ராமம் யந்ம்ருக3ச்ச2த்3மநா த்வயா ।
ஆநீதா ராமபத்நீ ஸா தத்தே காதர்யலக்ஷணம் ॥ (68)

காதர்யம் ச ந தே யுத்3தே4 கத3ாசித் ஸம்ஸ்மராம்யஹம் ।
தத்து ப4ாக்3யவிபர்யாஸாந்நூநம் தே பக்வலக்ஷணம் ॥ (69)

அதீதாநாக3தார்த2க்ஞோ வர்தமாநவிசக்ஷண: ।
மைதி2லீமாஹ்ருதாம் த்3ருஷ்ட்வா த்4யாத்வா நி:ஶ்வஸ்ய சாயதம் ॥ (70)

ஸத்யவாக் ஸ மஹாப4ாகே3ா தே3வரோ மே யத3ப்3ரவீத் ।
ஸோऽயம் ராக்ஷஸமுக்2யாநாம் விநாஶ: பர்யுபஸ்தி2த: ॥
காமக்ரோத4ஸமுத்தே2ந வ்யஸநேந ப்ரஸங்கி3நா ॥ (71)

போரில், என் புதல்வன் இந்திரஜித், லட்சுமணனால் கொல்லப்பட்டபோதே, நான் (மனத்தளவில்) மாய்ந்து போய்விட்டேன்; இப்போது, அந்தக் கொடுமை (மீண்டும்) நிஜமாகவே நடந்துவிட்டது! நம் உற்றார்–உறவினர்கள் போரில் மடிந்தபோது, நான் அனாதையாகி விட்டதாகக் கருதி வருத்தப்படவில்லை; தாங்கள் இருக்கும்போது எனக்கு என்ன குறை? – என்றிருந்தேன். இப்போது, என் தலைவரான தங்களை இழந்து, எல்லாவித இன்ப போகங்களையும் இழந்து, நீண்ட காலம் சோகத்தில் மூழ்கியிருக்கப் போகிறேன்! (57,58)

மன்னரே! இப்போது, தாங்கள் கடத்தற்கரியதும் மிக நீண்டதுமான பாதையில் சென்றுவிட்டீர்கள். துயரத்தால் தவித்துக் கொண்டிருக்கும் என்னையும் உடன் அழைத்துச் செல்வீராக. தாங்கள் இல்லாமல் நான் உயிரோடு இருக்க மாட்டேன். துயரக் கடலில் மூழ்கியிருக்கும் என்னை இங்கேயே விட்டுவிட்டு, தாங்கள் மட்டும் தனித்துப் போக விரும்புகிறீர்கள்? நான் பரிதவித்துக் கொண்டிருப்பவள்; துர்பாக்கியசாலி; புலம்பிக் கொண்டிருக்கிறேன். அப்படியும் தாங்கள், ஏன் என்னுடன் பேசாமலிருக்கிறீர்கள்? (59,60)

என் நாதரே! பட்டணத்தின் வாயிலிலிருந்து முகத்தை மூடித் திரை போட்டுக் கொள்ளாமலும், காலால் நடந்துமே இவ்விடம் வந்திருக்கும் என்னை (அரசகுலப் பெண்டிரின் பண்பாட்டுக்கு ஏற்காத வகையில் நடந்த என்னை)ப் பார்த்தும், ஏன் கோபம் கொள்ளாதிருக்கிறீர்கள்? மனைவிகளிடம் பேரன்பு செலுத்துபவரே! தங்கள் மனைவிகள் எல்லோரும் வெட்கத்தை விட்டு, முக்காடும் இல்லாமல், அரண்மனையிலிருந்து வெகுதூரத்திற்கு வந்திருப்பதைக் கண்டும், தாங்கள் ஏன் அவர்கள்மீது கோபப்படாதிருக்கிறீர்கள்? (61,62)

தங்கள் உல்லாசக் கேளிக்கைகளில் பங்கு கொண்ட இந்த மாது, ஆதரவாக இருந்த கணவரை இழந்து தவிக்கிறாள். இவளை (என்னை)ச் சமாதானப்படுத்தவும் இல்லை; வெகுமதிகள் அளித்து மகிழ்விக்கவும் இல்லை. மன்னரே! அறநெறி வழுவாதவர்களும், சான்றோர்களைப் போற்றிப் பணிவிடை செய்வதில் மிக்க ஈடுபாட்டுடன் இருந்தவர்களும் கற்புக்கரசிகளுமான ஏராளமான நற்குலப் பெண்டிர், தங்களால், தத்தம் கணவர்களை இழந்தவர்களாக ஆக்கப்பட்டார்கள். சோகத்தால் பரிதவிக்கும் அவர்கள் கொடுத்த சாபத்தால்தான், இப்போது தாங்கள் பகைவரிடம் சிக்கி காலன் வசப்பட்டீர்கள். தங்களால் துன்பப்படுத்தப்பட்ட மற்றவர்களும் அப்போது கொடுத்த சாபம், இப்போது பலித்துவிட்டது. (63–65)

அரசரே! 'கற்புக்கரசிகளின் கண்ணீர் தரையில் விழுந்தால், அது (பலனைக் கொடுக்காமல்) வீணாகப் போவதில்லை' என்ற பழமொழி, தங்கள் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகிவிட்டது. வேந்தரே! அளவுகடந்த பராக்கிரமத்தால், உலகங்களை வென்று வீரச்செருக்குடனிருந்த தாங்கள், (சீதை என்ற) ஒரு பெண்ணைத் திருடிக்கொண்டு வருவது என்ற அற்பச்செயலை, எப்படித்தான் செய்தீர்களோ? வஞ்சனையாக ஒரு திட்டம் தீட்டி, ஒரு மாயமானை உண்டாக்கி (சீதைக்கு ஆசைகாட்டி), இராமனை ஆசிரமத்திலிருந்து அப்புறம் போகச் செய்து, அவருடைய மனைவியைக் கவர்ந்து வந்தீர்கள் – என்பதே தங்கள் கோழைத்தனத்தைக் காட்டுகிறது. (66–68)

ஏதோ ஒரு பொழுதில், போர்க்களத்தில், தாங்கள் கோழைத்தனமாக நடந்து கொண்டீர்கள் என்ற ஒரு நிகழ்ச்சி என் நினைவில் இல்லவேயில்லை. ஆனால், நன்மையையே தரும் நற்காலம் மாறிப் போனவுடன், (தாங்கள் கோழைத்தனமாக சீதையைத் திருடிக் கொண்டு வந்த அந்த நிமிடமே,) தங்கள் முடிவு சமீபித்துவிட்டது என்பதை சூசகமாக உணர்த்திவிட்டது. (69)

தோள்வலிமை மிக்கவரே! சென்றது, நிகழ்வது, நடக்கப் போவது ஆகிய மூன்று காலங்களையும் நன்றாக அறிந்த என் மைத்துனர் சத்தியம் தவறாதவர்; மைதிலி திருடிக்கொண்டு வரப்பட்டதைத் தெரிந்து கொண்டதும், அதுபற்றி சிந்தித்துப் பார்த்து, 'இது நல்லது அல்ல' என்பதை உணர்ந்து ஏக்கப் பெருமூச்சுவிட்டு, அரக்கத் தலைவர்களுக்கு அழிவு ஏற்படப் போகிறது என்று சொன்னாரே, அது நிகழ்ந்தே விட்டது. காமத்திற்கும் கோபத்திற்கும் இடம் கொண்டு தாங்கள், (வீடணன் சொற்களை) உண்மையாக்கி விட்டீர்கள். (70,71)

நிர்வ்ருத்தஸ்த்வத்க்ருதேऽநர்த2: ஸோऽயம் மூலஹரோ மஹாந் ।
த்வயா க்ருதமித3ம் ஸர்வமநாத2ம் ரக்ஷஸாம் குலம் ॥ (72)

ந ஹி த்வம் ஶோசிதவ்யோ மே ப்ரக்2யாதப3லபௌருஷ: ।
ஸ்த்ரீஸ்வபா4வாத்து மே பு3த்3தி4: காருண்யே பரிவர்ததே ॥ (73)

ஸுக்ருதம் து3ஷ்க்ருதம் ச த்வம் க்3ருஹீத்வா ஸ்வாம் க3திம் க3த: ।
ஆத்மாநமநுஶோசாமி த்வத்3வியோகே3ந து3:கி2தா ॥ (74)

ஸுஹ்ருதா3ம் ஹிதகாமாநாம் ந ஶ்ருதம் வசநம் த்வயா ।
ப்4ராத்ரூணாம் சாபி கார்த்ஸ்ந்யேந ஹிதமுக்தம் த்வயாநக4 ॥ (75)

ஹேத்வர்த2யுக்தம் விதி4வச்ச்2ரேயஸ்கரமதா3ருணம் ।
விபீ4ஷணேநாபி4ஹிதம் ந க்ருதம் ஹேதுமத்த்வயா ॥ (76)

மாரீசகும்ப4கர்ணாப்4யாம் வாக்யம் மம பிதுஸ்ததா2 ।
ந ஶ்ருதம் வீர்யமத்தேந தஸ்யேத3ம் ப2லமீத்3ருஶம் ॥ (77)

நீலஜீமூதஸங்காஶ பீதாம்ப3ர ஶுபா4ங்க3த3 ।
ஸ்வகா3த்ராணி விநிக்ஷிப்ய கிம் ஶேஷே ருதி4ராப்லுத: ॥
ப்ரஸுப்த இவ ஶோகார்தம் கிம் மாம் ந ப்ரதிபா4ஷஸே ॥ (78)

மஹாவீர்யஸ்ய த3க்ஷஸ்ய ஸம்யுகே3ஷ்வபலாயிந: ।
யாதுதா4நஸ்ய தௌ3ஹித்ர கிம் ச மாம் நாப்4யுதீ3க்ஷஸே ॥ (79)

உத்திஷ்டோ2த்திஷ்ட2 கிம் ஶேஷே ப்ராப்தே பரிப4வே நவே ।
அத்3ய வை நிர்ப4யா லங்காம் ப்ரவிஷ்டா: ஸூர்யரஶ்மய: ॥ (80)

யேந ஸூத3யஸே ஶத்ரூந் ஸமரே ஸூர்யவர்சஸா ।
வஜ்ரோ வஜ்ரத4ரஸ்யேவ ஸோऽயம் தே ஸததார்சித: ॥ (81)

ரணே ஶத்ருப்ரஹரணோ ஹேமஜாலபரிஷ்க்ருத: ।
பரிகோ4 வ்யவகீர்ணஸ்தே பா3ணைஶ்சி2ந்ந: ஸஹஸ்ரதா4 ॥ (82)

ப்ரியாமிவோபகூ3ஹ்ய த்வம் ஶேஷே ஸமரமேதி3நீம் ।
அப்ரியாமிவ கஸ்மாச்ச மாம் நேச்ச2ஸ்யபி4பா4ஷிதும் ॥ (83)

தி4க3ஸ்து ஹ்ருத3யம் யஸ்யா மமேத3ம் ந ஸஹஸ்ரதா4 ।
த்வயி பஞ்சத்வமாபந்நே ப2லதே ஶோகபீடி3தம் ॥ (84)

இத்யேவம் விலபந்த்யேவ பா3ஷ்பவ்யாகுலலோசநா ।
ஸ்நேஹாவஸ்கந்நஹ்ருத3யா தே3வீ மோஹமுபாக3மத் ॥ (85)

கஶ்மலாபி4ஹதா ஸந்நா ப3பௌ4 ஸா ராவணோரஸி ।
ஸந்த்4யாநுரக்தே ஜலதே3 தீ3ப்தா வித்3யுதி3வாஸிதே ॥ (86)

தங்களை ஒரு நிமித்தமாகக் கொண்டு, பேரழிவு ஏற்பட்டு, (அரக்கர் குல) ஆணிவேரையே பிடுங்கிப் போட்டுவிட்டது. தங்களால் அரக்கர் குலம் முழுவதும் அநாதையாகப் போய்விட்டது. (காம மயக்கத்திலிருந்த தங்கள் பிடிவாதத்தால் போர் மூண்டது. அதில் அரக்கர்களும் பாதுகாவலராக இருந்த தாங்களும் மாய்க்கப்பட்டீர்கள். அதனால், நம் குலத்திற்கே நாதர் இல்லாமற்போய்விட்டது.) (72)

தங்களது ஆண்மையும் ஆற்றலும் எல்லோராலும் அறியப்பட்டனவே. (வீர சுவர்க்கம் சென்றுவிட்ட) தங்களைக் குறித்து நான் வருந்த வேண்டியதில்லை என்றாலும், பெண்ணின இயல்பினால் என் மனம் மயங்கி இவ்வாறு புலம்புகிறேன். தாங்கள் செய்த புண்ணியத்தையும் பாவத்தையும் கைக்கொண்டு, தங்களுக்கு விதிக்கப்பட்ட வழியில் சென்றுவிட்டீர்கள். தங்களைப் பிரிந்து தவிக்கும் என்னைப் பற்றியல்லவா, நான் துக்கப்பட வேண்டும்? (73,74)

மாசற்றவரே! நம்முடைய நலனை விரும்பும் நண்பர்கள், சகோதரர்கள் கூறிய சொற்களைத் தாங்கள் முற்றிலுமாகக் கேட்கவில்லை. விபீஷணன், (மன்னரான அண்ணனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய) பணிவான முறையில் (சபையிலும் தனிமையிலும்) கூறிய சொற்கள், அரசநீதிக்குப் பொருத்தமாகவும் பொருள் உள்ளதாகவும் நன்மை பயப்பதாகவும் காரணங்களுடன் கூடியதாகவும் இருந்தன. ஆனால், தாங்கள் அவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. (75,76)

மாரீசனும் கும்பகர்ணனும் என்னுடைய தந்தையும் அப்போது கூறிய நல்லுரைகள், வீரத்தினால் இறுமாப்படைந்திருந்த தங்களால் செவி மடுக்கப்படவில்லை. அதன் பலன்தான் இப்போது இவ்வாறாக நேர்ந்திருக்கிறது. (77)

கருமுகில் போன்றவரே! மஞ்சள் பட்டாடை உடுத்தியவரே! அழகிய தோள்வளை அணிந்தவரே! இப்போது, குருதியினால் நனைக்கப்பட்டு, உடல் அங்கங்களைப் பரப்பியவாறு ஏன் படுத்துக் கிடக்கிறீர்கள்? துயரத்தால் தவித்துக் கொண்டிருக்கும் என்னுடன், உறக்கத்தில் ஆழ்ந்து கிடப்பவர் போல, பதில் கூறாமலிருக்கிறீர்களே? மாவீரரும், போர்க்கலை நிபுணரும், போர்களில் பின்வாங்காதவருமான அசுரர் மால்யவானுடைய பெண்வழிப் பேரரே! ஏன், என்னைக் கண்ணெடுத்தும் பாராமல் இருக்கின்றீர்கள்? (78,79)

எழுந்திருங்கள், மன்னரே! எழுந்திருங்கள். இதுவரை நேராத புதிய அவமானம் வந்திருக்கும்போது, தாங்கள் உறங்கிக் கொண்டிருக்கலாமா? இன்றைக்குத்தான் சூரிய கிரணங்கள், அச்சமில்லாமல் இலங்கைக்குள் புகுந்தன. (தாங்கள் உயிருடன் இருந்தவரையில், 'இராவணன் என்ன சொல்வானோ?' என்ற அச்சத்துடனேயே இருந்தன.) (80)

வீரரே! சூரியனைப் போல் ஒளிவீசும் எந்த குண்டாந்தடியினால் போர்க்களத்தில் எதிரிகளை மாய்த்து வந்தீர்களோ, இந்திரனுடைய வஜ்ராயுதம் போல் எதைத் தாங்கள் கௌரவமாக வைத்திருந்தீர்களோ, போர்க்களத்தில் கணக்கில்லாத பகைவர்களின் உயிரைப் பறித்தது எதுவோ, எதனை பொன் அணிகள் அலங்கரித்தனவோ, அந்தப் பரிகாயுதம் (குண்டாந்தடி) (இராமனுடைய) பாணங்களால் ஆயிரம் துகள்களாகப் பிளக்கப்பட்டு, இங்குமங்கும் சிதறிக் கிடக்கிறது. (81,82)

தாங்கள், யுத்தபூமியை மிகவும் மனத்திற்குகந்தவள் போல் தழுவிக்கொண்டு படுத்துக் கிடக்கிறீர்கள்; என்னிடம் அன்பு இல்லாதது போல், எந்தக் காரணத்தாலோ என்னுடன் பேச விரும்பாதிருக்கிறீர்கள். தாங்கள் மரணமடைந்ததைக் கேட்டதுமே சோகத்தில் ஆழ்ந்துவிட்ட என் இதயம், இன்னும்கூட வெடித்துச் சிதறவில்லையே? நான், நாசமாய்ப் போக!'' (83,84)

தேவி (மண்டோதரி) இவ்வாறெல்லாம், அன்பால் உருகிய மனத்துடன் புலம்பிக் கொண்டு, நீர் நிரம்பிய கண்களுடன் மூர்ச்சை அடைந்துவிட்டாள். தன்னுணர்வு இழந்து, சோர்ந்து, இராவணனுடைய மார்பில் விழுந்த அவள், மாலைநேர சூரியக் கதிர்களால் செவ்வண்ணம் பூசப்பட்ட கரிய மேகத்தில் பளீரென ஒளிவீசும் மின்னலைப் போல் விளங்கினாள். (85,86)

ததா$_2$க$_3$தாம் ஸமுத்பத்ய ஸபத்ந்யஸ்தா ப்$_4$ருஶாதுரா: ।
பர்யவஸ்தா$_2$பயாமாஸு ருத$_3$த்யோ ருத$_3$தீம் ப்$_4$ருஶம் ॥ (87)

ந தே ஸுவிதி$_3$தா தே$_3$வி லோகாநாம் ஸ்தி$_2$திரத்$_4$ருவா ।
த$_3$ஶாவிபா$_4$க$_3$பர்யாயே ராக்ஞாம் சஞ்சலயா ஶ்ரியா ॥ (88)

இத்யேவமுச்யமாநா ஸா ஸஶப்$_3$த$_3$ம் ப்ரருரோத$_3$ ஹ ।
ஸ்நாபயந்தீ த்வபி$_4$முகௌ$_2$ ஸ்தநாவஸ்ராம்பு$_3$விஸ்ரவை: ॥ (89)

ஏதஸ்மிந்நந்தரே ராமோ விபீ$_4$ஷணமுவாச ஹ ।
ஸம்ஸ்கார: க்ரியதாம் ப்$_4$ராது: ஸ்த்ரியஶ்சைதா நிவர்தய ॥ (90)

தம் ப்ரஶ்ரிதஸ்ததோ ராமம் ஶ்ருதவாக்யோ விபீ$_4$ஷண: ।
விம்ருஶ்ய பு$_3$த்$_3$த்$_4$யா த$_4$ர்மக்ஞோ த$_4$ர்மார்த$_2$ஸஹிதம் வச: ॥
ராமஸ்யைவாநுவ்ருத்த்யர்த$_2$முத்தரம் ப்ரத்யபா$_4$ஷத ॥ (91)

த்யக்தத$_4$ர்மவ்ரதம் க்ரூரம் ந்ருஶம்ஸமந்ருதம் தத$_2$ா ।
நாஹமர்ஹோऽஸ்மி ஸம்ஸ்கர்தும் பரதா$_3$ராபி$_4$மர்ஶிநம் ॥ (92)

ப்$_4$ராத்ருரூபோ ஹி மே ஶத்ருரேஷ ஸர்வாஹிதே ரத: ।
ராவணோ நார்ஹதே பூஜாம் பூஜ்யோऽபி கு$_3$ருகௌ$_3$ரவாத் ॥ (93)

ந்ருஶம்ஸ இதி மாம் காமம் வக்ஷ்யந்தி மநுஜா பு$_4$வி ।
ஶ்ருத்வா தஸ்யாகு$_3$ணாந் ஸர்வே வக்ஷ்யந்தி ஸுக்ருதம் புந: ॥ (94)

தச்ச்$_2$ருத்வா பரமப்ரீதோ ராமோ த$_4$ர்மப்$_4$ருதாம் வர: ।
விபீ$_4$ஷணமுவாசேத$_3$ம் வாக்யக்ஞோ வாக்யகோவித$_3$ம் ॥ (95)

தவாபி மே ப்ரியம் கார்யம் த்வத்ப்ரபா$_4$வாச்ச மே ஜிதம் ।
அவஶ்யம் து க்ஷமம் வாச்யோ மயா த்வம் ராக்ஷஸேஶ்வர ॥ (96)

அத$_4$ர்மாந்ருதஸம்யுக்த: காமம் த்வேஷ நிஶாசர: ।
தேஜஸ்வீ ப$_3$லவாஞ்ஶூர: ஸம்யுகே$_3$ஷு ச நித்யஶ: ॥ (97)

ஶதக்ரதுமுகை$_2$ர்தே$_3$வை: ஶ்ரூயதே ந பராஜித: ।
மஹாத்மா ப$_3$லஸம்பந்நோ ராவணோ லோகராவண: ॥ (98)

மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம் ।
க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யத$_2$ா தவ ॥ (99)

த்வத்ஸகாஶாத்$_3$த$_3$ஶக்$_3$ரீவ: ஸம்ஸ்காரம் விதி$_4$பூர்வகம் ।
ப்ராப்துமர்ஹதி த$_4$ர்மக்ஞ த்வம் யஶோபா$_4$க்$_3$ப$_4$விஷ்யஸி ॥ (100)

அவளுடைய சக்களத்திகளும் மிகவும் அழுதார்கள். அவர்கள், இராவணனுடைய மார்பில் விழுந்து புரண்டு அரற்றிக் கொண்டிருந்த அவளை நெருங்கிச் சென்று ஆறுதல் கூறினார்கள்— ''மகாராணி! மன்னர்களின் மகோன்னதமான வாழ்க்கை, காலமாறுதலுக்கேற்றபடி மாறும் தன்மையுடையது. அதனால், மக்களின் வாழ்வும் ஒரு நிலைப்பட்டதல்ல என்பது தாங்கள் அறியாததா?'' (87,88)

இவ்வாறு கூறப்பட்ட அவள், நிமிர்ந்த மார்பகங்களைக் கண்ணீர்ப் பெருக்கால் நனைத்துக் கொண்டு, உரத்த குரலில் அழத் தொடங்கினாள். (89)

இதனிடையில் இராமன், வீடணனைப் பார்த்து, 'இந்த மாதரசிகளை அரண்மனைக்குத் திருப்பி அனுப்பி வைப்பாயாக. உன் சகோதரனுக்கு இறுதிச் சடங்குகள் செய்வாயாக' என்று கூறினார். (90)

இந்தச் சொற்களைக் கேட்டு, அறம் அறிந்தவனான விபீஷணன், இராமனை வணங்கி, தான் முன்னர் கூறிய சொற்களை ('நான், இவருக்கு இறுதிச் சடங்குகள் செய்ய விரும்புகிறேன்' என்பதை) நினைவிற்கொண்டு, இராமனுடைய கருத்தை அறிய விரும்பி (இராமன் அனுமதி அளித்தால் செய்வேன்; இல்லாவிட்டால் மாட்டேன் – என்ற எண்ணத்துடன்), அவருக்குப் பதில் கூறுமுகத்தான், பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டான்— (91)

''அண்ணலே! (இராவணன்) அறச்செயல்களை அடியோடு துறந்தவர்; கொடியவர்; கொலை பாதகர்; பொய்யர்; அயலார் மனைவிகளைக் கெடுத்தவர். அப்படிப்பட்ட இவருக்கு நான் இறுதிச்சடங்குகளைச் செய்யமாட்டேன். (92)

எனக்கு மூத்தவர் என்ற கௌரவத்தால் மதிக்கத் தக்கவர்தான். என்றாலும், எல்லோருக்கும் தீங்கிழைப்பதில் பெருநாட்டம் கொண்டவர் என்பதாலும், என் சகோதரர் என்ற உருவில் வந்த பகைவர் என்பதாலும் இராவணன், என்னால் வழிபடத்தக்கவர் அல்லர். இராமபிரானே! நான் இவ்வாறு கூறுவதைக் கேட்டு, உலக மக்கள் என்னைக் கொடியவன் என்று தூற்றுவார்கள். ஆனால், அவருடைய இழிகுணங்களைக் கேட்டறிந்த பின், என்னைப் போற்றுவார்கள்.'' (93,94)

இதைக் கேட்டதும், சொற்றிறன் கொண்டவரும் அறநெறியாளர்களுள் முதன்மையானவருமான இராமன், மிகவும் மிகழ்ச்சி அடைந்து, பேசும் வகை அறிந்தவனாகிய விபீஷணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (95)

''அரக்கர் மன்னனே! உனக்குப் பிரியமானதை நானும் செய்யவேண்டும். ஏனென்றால், உன்னுடைய பிரபாவத்தினால்தான் என்னால் வெற்றி அடையப்பட்டது. இப்போது, உனக்கு உசிதமான ஆலோசனை என்னால் கூறப்பட வேண்டும், கேள். இந்த அரக்கன், அதருமமும் அசத்தியமும் குடிகொண்டவன் என்பது உண்மைதான். ஆனால், போர்களில் இவன் எப்போதுமே ஆண்மை மிக்கவன்; பலம் மிகுந்தவன்; சூரன். (96,97)

இந்திரன் முதலான தேவர்களால்கூட இவன் தோற்கடிக்கப்பட்டதாக நாம் கேள்விப்பட்டதே இல்லை. மக்களைக் கதறச் செய்த இராவணன், மகாத்மா; மிகுந்த பலங்கொண்டவன். (98)

பகையெல்லாம், ஒருவனுடைய மரணகாலம் வரைதான். (பகைவனாக இருந்தவன் மரணமடைந்துவிட்டதும், பகைமையும் மறைந்து போகிறது.) நாம் எந்த நோக்கத்திற்காகப் படையெடுத்து வந்தோமோ, அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. இவன், எவ்வாறு உன் அன்புக்கு உரியவனோ, அவ்வாறே தான், எனக்கும். அதனால், இவனுடைய இறுதிச் சடங்குகளைச் செய்து முடிப்பாயாக. (99)

அறநெறி உணர்ந்தவனே! பத்துத்தலை இராவணன், (உன்னிடத்திலிருந்து) உன் கையால் முறைப்படி உத்தரக்கிரியைகள் பெறத்தக்கவன்; அந்தக் கர்மாக்களைச் செய்து, நீ பெரும்புகழுக்குப் பாத்திரனாக ஆவாய்.'' (100)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா த்வரமாணோ விபீ$_4$ஷண: ।
ஸம்ஸ்காரேணாநுரூபேண யோஜயாமாஸ ராவணம் ॥ (101)

சிதாம் சந்த$_3$நகாஷ்டா$_2$நாம் பத்$_3$மகோஶீரஸம்வ்ருதாம் ।
ப்$_3$ராஹ்ம்யா ஸம்வேஶயாஞ்சக்ரூ ராங்கவாஸ்தரணாவ்ருதாம் ॥ (102)

வர்ததே வேத$_3$விஹிதோ ராக்ஞோ வை பஶ்சிம: க்ரது: ।
ப்ரசக்ரூ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய பித்ருமேத$_4$மநுக்ரமம் ॥ (103)

வேதி$_3$ம் ச த$_3$க்ஷிணப்ராச்யாம் யதா$_2$ஸ்தா$_2$நம் ச பாவகம் ।
ப்ருஷதா$_3$ஜ்யேந ஸம்பூர்ணம் ஸ்ருவம் ஸர்வே ப்ரசிக்ஷிபு: ॥ (104)

பாத$_3$யோ: ஶகடம் ப்ராது$_3$ரந்தரூர்வோருலூக$_2$லம் ।
தா$_3$ருபாத்ராணி ஸர்வாணி அரணிம் சோத்தராரணிம் ॥ (105)

த$_3$த்த்வா து முஸலம் ச அந்யத் யதாஸ்தாநம் விசக்ஷணா: ।
ஶாஸ்த்ரத்$_3$ருஷ்டேந விதி$_4$நா மஹர்ஷிவிஹிதேந ச ॥ (106)

தத்ர மேத்$_4$யம் பஶும் ஹத்வா ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ராக்ஷஸா: ।
பரிஸ்தரணிகாம் ராக்ஞோ க்$_4$ருதாக்தாம் ஸமவேஶயந் ॥ (107)

க$_3$ந்தை$_4$ர்மால்யைரலங்க்ருத்ய ராவணம் தீ$_3$நமாநஸா: ।
விபீ$_4$ஷணஸஹாயாஸ்தே வஸ்த்ரைஶ்ச விவிதை$_4$ரபி ॥ (108)

லாஜைஶ்சாவகிரந்தி ஸ்ம பா$_3$ஷ்பபூர்ணமுகா$_2$ஸ்ததா$_3$ ।
த$_3$தௌ$_3$ ச பாவகம் தஸ்ய விதி$_4$யுக்தம் விபீ$_4$ஷண: ॥ (109)

ஸ்நாத்வா சைவார்த்$_3$ரவஸ்த்ரேண திலாந் தூ$_3$ர்வாபி$_4$மிஶ்ரிதாந் ।
உத$_3$கேந ச ஸம்மிஶ்ராந் ப்ரதா$_3$ய விதி$_4$பூர்வகம் ॥ (110)

ப்ரதா$_3$ய சோத$_3$கம் தஸ்மை மூர்த்$_4$நா சைநம் நமஸ்ய ச ।
தா: ஸ்த்ரியோऽநுநயாமாஸ ஸாந்த்வமுக்த்வா புந: புந: ॥
க$_3$ம்யதாமிதி தா: ஸர்வா விவிஶுர்நக$_3$ரம் ததா$_3$ ॥ (111)

ப்ரவிஷ்டாஸு ச ஸர்வாஸு ராக்ஷஸீஷு விபீ$_4$ஷண: ।
ராமபார்ஶ்வமுபாக$_3$ம்ய ததா$_3$திஷ்ட$_2$த்$_3$விநீதவத் ॥ (112)

ராமோऽபி ஸஹ ஸைந்யேந ஸஸுக்$_3$ரீவ: ஸலக்ஷ்மண: ।
ஹர்ஷம் லேபே$_4$ ரிபும் ஹத்வா யதா$_2$ வ்ருத்ரம் ஶதக்ரது: ॥ (113)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ சதுர்த$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

விபீஷணன், இராமனுடைய ஆணையைக் கேட்டவுடன், இராவணனுக்கு ஏற்ற கிரியைகளை விரைவில் செய்யத் தொடங்கினான். (101)

சந்தனக்கட்டைகள், பத்மகம் என்ற செஞ்சந்தனம், விளாமிச்சவேர் முதலியவைகளை அடுக்கி, வேதமுறைப்படி சிதையைச் செய்து, அதன் மேல் ரங்கு என்ற இனத்தைச் சேர்ந்த மானின் தோலைப் பரப்பினார்கள். (102)

மன்னனுடைய இறுதி வேள்வி (சடங்கு) வேத விதிப்படி ஆரம்பமாயிற்று. அரக்க மன்னனுக்கு, பித்ருமேதம் என்ற முறைப்படி சடங்குகளைச் செய்தார்கள். (103)

தென்கிழக்காய் ஆக்னேய மூலையில் அக்னி குண்டத்தை ஏற்படுத்தினார்கள். மேற்கில், கார்ஹபத்ய அக்னியையும், கிழக்கில் ஆஹவநீய அக்னியையும், தெற்கில் தக்ஷிணாக்னியையும் விதிப்படி மூட்டினார்கள். தயிரும் நெய்யும் கலந்து, ஹோமக் கரண்டியால் அதை எடுத்து, அந்தச் சிதை மேல் தெளித்தார்கள். (104)

பாதங்களுக்கு அருகில் (சோமலதையைக் கொண்டு வருவதற்காக) வண்டியையும், வேள்வியில் உபயோகிக்கப்படும் உரலை தொடைகளுக்கு நடுவிலும், ஸ்தாலீ முதலான எல்லா மரப்பாத்திரங்களையும் மேல் அரணியையும் கீழ் அரணியையும் உலக்கையையும், அறநூல்களில் கூறியுள்ள விதிகளுக்கிணங்கவும் மாமுனிவர்களால் விதிக்கப்பட்ட முறைப்படியும், அந்தத் துறை வல்லுநர்கள், அவையவைக்கு உரிய இடத்தில் வைத்தார்கள். (105,106)

பின்னர், அந்தச் சிதையின் அருகில் (அரக்கர்கள் வழக்கப்படி) சுத்தமான ஆட்டைப் பலி கொடுத்து, நெய்யில் நனைத்த ஒரு துணியினால் மன்னனின் (இராவணனின்) முகத்தைப் போர்த்தி மறைத்தார்கள். (107)

அப்போது, நொந்த மனத்துடனிருந்த அவர்கள், கண்ணீர் நிறைந்த முகத்துடன் விபீஷணனுக்கு உதவி செய்பவர்களாய், இராவணனை சந்தன–புஷ்பங்களாலும் பல்வகை ஆடைகளாலும் அலங்கரித்து நெற்பொறியைத் தூவினார்கள். விபீஷணன், முறைப்படி அந்தச் சிதையில் தீயை வைத்தான். (108,109)

பின்னர், (விபீஷணன்) தலைமூழ்கி நீராடிவிட்டு, ஈர வஸ்திரத்துடன், எள்ளும் அருகம்புல்லும் கலந்த நீரை அவனுக்கு (இராவணனுக்கு)க் கொடுத்து (பிரேத வடிவம் அடைந்துவிட்ட அவனை ஆவாஹனம் செய்து), விதிப்படி நீர்க்கடன் செய்துமுடித்தான். பிறகு, தலைதாழ்த்தி அவனை வணங்கினான். அங்கிருந்த மாதர்களுக்குத் திரும்பத் திரும்ப ஆறுதல் கூறினான். பின்னர், 'நீங்கள் போகலாம்' என்றவுடன், அவர்கள் நகரத்தைச் சென்றடைந்தார்கள். (110,111)

அரக்கப் பெண்டிர் அனைவரும் நகரத்திற்குள் புகுந்த பின்னர், விபீஷணன், இராமபிரான் அருகில் வந்து வணக்கத்துடன் நின்றான். (112)

இராமனும் லட்சுமணனும் சுக்ரீவனும் படைவீரர்களும் தங்கள் பகைவன் அழிந்துவிட்டதால், இந்திரன், விருத்திராசுரனைக் கொன்றவுடன் அடைந்த அளவிட முடியாத ஆனந்தத்தை அனுபவித்தார்கள். (113)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பதினான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பஞ்சத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$:

விபீ$_4$ஷணாபி$_4$ஷேக:

தே ராவணவத$_4$ம் த்$_3$ருஷ்ட்வா தே$_3$வக$_3$ந்த$_4$ர்வதா$_3$நவா: ।
ஜக்$_3$மு: ஸ்வை: ஸ்வைர்விமாநைஸ்தே கத$_2$யந்த: ஶுபா$_4$: கதா$_2$: ॥ (1)

ராவணஸ்ய வத$_4$ம் கோ$_4$ரம் ராக$_4$வஸ்ய பராக்ரமம் ।
ஸுயுத்$_3$த$_4$ம் வாநராணாம் ச ஸுக்$_3$ரீவஸ்ய ச மந்த்ரிதம் ॥ (2)

அநுராக$_3$ம் ச வீர்யம் ச மாருதேர்லக்ஷ்மணஸ்ய ச ।
கத$_2$யந்தோ மஹாபா$_4$கா$_3$ ஜக்$_3$முர்ஹ்ருஷ்டா யதா$_2$க$_3$தம் ॥ (3)

ராக$_4$வஸ்து ரத$_2$ம் தி$_3$வ்யமிந்த்$_3$ரத$_3$த்தம் ஶிகி$_2$ப்ரப$_4$ம் ।
அநுஜ்ஞாய மஹாபா$_4$கோ$_3$ மாதலிம் ப்ரத்யபூஜயத் ॥ (4)

ராக$_4$வேணாப்$_4$யநுஜ்ஞாதோ மாதலி: ஶக்ரஸாரதி$_2$: ।
தி$_3$வ்யம் தம் ரத$_2$மாஸ்தா$_2$ய தி$_3$வமேவாருரோஹ ஸ: ॥ (5)

தஸ்மிஸ்து தி$_3$வமாரூடே$_4$ ஸுரஸாரதி$_2$ஸத்தமே ।
ராக$_4$வ: பரமப்ரீத: ஸுக்$_3$ரீவம் பரிஷஸ்வஜே ॥ (6)

பரிஷ்வஜ்ய ச ஸுக்$_3$ரீவம் லக்ஷ்மணேந ப்ரசோதி$_3$த: ।
பூஜ்யமாநோ ஹரிஶ்ரேஷ்டை$_2$ராஜகா$_3$ம ப$_3$லாலயம் ॥ (7)

அப்$_3$ரவீச்ச ததா$_3$ ராம: ஸமீபபரிவர்திநம் ।
ஸௌமித்ரிம் ஸத்த்வஸம்பந்நம் லக்ஷ்மணம் தீ$_3$ப்ததேஜஸம் ॥ (8)

விபீ$_4$ஷணமிமம் ஸௌம்ய லங்காயாமபி$_4$ஷேசய ।
அநுரக்தம் ச ப$_4$க்தம் ச மம சைவோபகாரிணம் ॥ (9)

ஏஷ மே பரம: காமோ யதீ$_3$மம் ராவணாநுஜம் ।
லங்காயாம் ஸௌம்ய பஶ்யேயமபி$_4$ஷிக்தம் விபீ$_4$ஷணம் ॥ (10)

ஏவமுக்தஸ்து ஸௌமித்ரீ ராக$_4$வேண மஹாத்மநா ।
ததே$_2$த்யுக்த்வா து ஸம்ஹ்ருஷ்ட: ஸௌவர்ணம் க$_4$டமாத$_3$தே$_3$ ॥ (11)

தம் க$_4$டம் வாநரேந்த்$_3$ராணாம் ஹஸ்தே த$_3$த்த்வா மநோஜவாந் ।
ஆதி$_3$தே$_3$ஶ மஹாஸத்த்வாந் ஸமுத்$_3$ரஸலிலாநயே ॥ (12)

அதிஶீக்$_4$ரம் ததோ க$_3$த்வா வாநராஸ்து மஹாப$_3$லா: ।
ஆக$_3$தாஸ்தஜ்ஜலம் க்$_3$ருஹ்ய ஸமுத்$_3$ராத்$_3$வாநரோத்தமா: ॥ (13)

ததஸ்த்வேகம் க$_4$டம் க்$_3$ருஹ்ய ஸம்ஸ்தா$_2$ப்ய பரமாஸநே ।
க$_4$டேந தேந ஸௌமித்ரிரப்$_4$யஷிஞ்சத்$_3$விபீ$_4$ஷணம் ॥ (14)

லங்காயாம் ரக்ஷஸாம் மத்$_4$யே ராஜாநம் ராமஶாஸநாத் ।
விதி$_4$நா மந்த்ரத்$_3$ருஷ்டேந ஸுஹ்ருத்$_3$க$_3$ணஸமாவ்ருதம் ॥ (15)

ஸர்க்கம் : நூற்றுப்பதினைந்து

வீடணனுக்கு முடிசூட்டுதல்!

இராவண வதத்தை நேரில் கண்டுகளித்த தேவ–கந்தர்வ–தானவர்கள், மங்களமான இராமனுடைய வீரப்பிரதாபங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு, தத்தம் விமானங்களில் ஏறி அவரவர் இடத்திற்குச் சென்றார்கள். (1)

மகாபாக்கியசாலிகளான அவர்கள், மனத்தை உலுக்கும் இராவண வதம் என்ற நிகழ்ச்சியையும், இராமனுடைய பராக்கிரமத்தையும், வானரர்களின் போர்த்திறனையும், சுக்ரீவனின் ஆலோசனைகளையும், அனுமான்–இலக்குவர்களுடைய உறுதியான பக்தி மற்றும் வீரத்தைப் பற்றியும் பேசிக் கொண்டே, வந்தவாறே திரும்பிச் சென்றார்கள். (2,3)

வெற்றித் திருவுடன் பொலிந்த இராமன், இந்திரனால் அனுப்பப்பட்டதும் தெய்விகமானதும் அக்னிபோல் மாசற்ற ஒளிவீசுவதுமான ரதம் திரும்பிப் போவதற்கு அனுமதி அளித்தார்; மாதலியைப் பலவாறாகப் பாராட்டினார். இராமனால் விடைகொடுக்கப்பட்ட இந்திரனுடைய தேர்ப்பாகன் மாதலி, அந்த உத்தம ரதத்தில் ஏறி, தேவலோகத்திற்குச் சென்றான். (4,5)

தேவசாரதியான மாதலி, தேவலோகத்திற்குப் புறப்பட்டுச் சென்றதும், இராமன் நிறைந்த மனத்தினராய் சுக்ரீவனை மார்புறத் தழுவிக்கொண்டார். சுக்ரீவனை ஆலிங்கனம் செய்துகொண்ட அவரை, வானரர்கள் மிகவும் போற்றினார்கள். அப்போது, இலக்குவன் நினைவுபடுத்தவே, தன் படைகள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். (6,7)

வந்து சேர்ந்தவுடன், அருகில் நின்றுகொண்டிருந்தவனும் வீரம் நிறைந்தவனும் சுடர்விட்டுப் பிரகாசிப்பவனும் சுமித்திரையின் புதல்வனுமான லட்சுமணனை நோக்கிக் கூறினார்— (8)

''செல்வனே! இலங்கைக்குச் சென்று, இந்த விபீஷணனுக்கு முடிசூட்டுவாயாக. இவன் என்னிடம் பேரன்பு கொண்டவன்; பக்தி உடையவன்; உபகாரம் செய்தவன். (9)

தம்பி! இராவணனின் இளைய சகோதரனான விபீஷணன் இலங்கையில் முடிசூடியவனாக, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை நான் பார்ப்பேனாகில், என்னுடைய உள்ளார்ந்த விருப்பம் நிறைவேறியதாகும்.'' (10)

மகாத்மாவான இராமபிரானால் இவ்வாறு ஆணையிடப்பட்ட இலக்குவன், மிகவும் மகிழ்ச்சி அடைந்து, 'தங்கள் ஆணைப்படி செய்கிறேன்' என்று கூறி, தங்கக் குடங்களைக் கொண்டு வந்தான். (11)

அந்தக் கலசங்களை, மனோவேகம் கொண்டவர்களும் பேராற்றல் உடையவர்களுமான வானரோத்தமர்களின் கையில் கொடுத்து, கடலிலிருந்து புனித நீர் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். (சுலோகத்தில் குடம், கடல் என்று ஒருமையில் கூறப்பட்டிருந்தாலும், அவைகளைப் பன்மைச் சொற்களாகவே கொள்ள வேண்டும். இலக்குவனைத் தொடர்ந்து, அரக்கப் பிரமுகர்களும் வானரோத்தமர்களும் அபிஷேகம் செய்வித்தார்கள் – என்று பின்னால் வருகிறது. அத்துடன், ஒரே ஒரு குடத்தில் நீர் கொண்டு வரவேண்டுமென்றால், பல வானரர்கள் செல்லவேண்டியதில்லையே?) (12)

உடனே, மகாபலசாலிகளான வானரர்கள் வெகுவிரைவாகச் சென்று, குடங்களில் கடல் நீரை நிரப்பிக் கொண்டு திரும்பி வந்து சேர்ந்தார்கள். பின்னர், ஒரு குடத்தை உயர்ந்த பீடத்தில் வைத்து, மந்திரம் கூறிப் பூசித்து, அந்தக் குடத்து நீரைக் கொண்டு, இலங்கையில் அரக்கர்கள் சூழ்ந்திருக்க, நண்பர் கூட்டம் நிறைந்து நிற்க, இராமபிரான் கட்டளைப்படி, வேதங்களில் கூறப்பட்டுள்ள முறையில் விபீஷணனுக்கு, லட்சுமணன் அபிஷேகம் செய்தான். (13–15)

அப்$_4$யஷிஞ்சந்ஸ்தத$_3$ா ஸர்வே ராக்ஷஸா: வாநராஸ்தத$_3$ா ।
ப்ரஹர்ஷமதுலம் க$_3$த்வா துஷ்டுவூ ராமமேவ ஹி ॥ (16)

தஸ்யாமாத்யா ஜஹ்ருஷிரே ப$_4$க்தா யே சாஸ்ய ராக்ஷஸா: ।
த்$_3$ருஷ்ட்வாபி$_4$ஷிக்தம் லங்காயாம் ராக்ஷஸேந்த்$_3$ரம் விபீ$_4$ஷணம் ॥ (17)

ஸ தத்$_3$ராஜ்யம் மஹத் ப்ராப்ய ராமத$_3$த்தம் விபீ$_4$ஷண: ।
ப்ரக்ருதீ: ஸாந்த்வயித்வா ச ததோ ராமமுபாக$_3$மத் ॥ (18)

அக்ஷதாந் மோத$_3$காந்(ல்)லாஜாந் தி$_3$வ்யா: ஸுமநஸஸ்தத$_3$ா ।
ஆஜஹ்ருரத$_2$ ஸம்ஹ்ருஷ்டா: பௌராஸ்தஸ்மை நிஶாசரா: ॥ (19)

ஸ தாந் க்$_3$ருஹீத்வா து$_3$ர்த$_4$ர்ஷோ ராக$_4$வாய ந்யவேத$_3$யத் ।
மங்க$_3$ல்யம் மங்க$_3$ளம் ஸர்வம் லக்ஷ்மணாய ச வீர்யவாந் ॥ (20)

க்ருதகார்யம் ஸம்ருத்$_3$த$_4$ார்த$_2$ம் த்$_3$ருஷ்ட்வா ராமோ விபீ$_4$ஷணம் ।
ப்ரதிஜக்$_3$ராஹ தத்ஸர்வம் தஸ்யைவ ப்ரியகாம்யயா ॥ (21)

தத: ஶைலோபமம் வீரம் ப்ராஞ்ஜலிம் பார்ஶ்வத: ஸ்தி$_2$தம் ।
அப்$_3$ரவீத்$_3$ராக$_4$வோ வாக்யம் ஹநுமந்தம் ப்லவங்க$_3$மம் ॥ (22)

அநுமாந்ய மஹாராஜமிமம் ஸௌம்ய விபீ$_4$ஷணம் ।
க$_3$ச்ச$_2$ ஸௌம்ய புரீம் லங்காமநுக்ஞாப்ய யத$_2$ாவிதி$_4$ ॥ (23)

ப்ரவிஶ்ய ராவணக்$_3$ருஹம் விஜயேநாபி$_4$நந்த்$_3$ய ச ।
வைதே$_3$ஹ்யை மாம் குஶலிநம் ஸஸுக்$_3$ரீவம் ஸலக்ஷ்மணம் ॥
ஆசக்ஷ்வ ஜயதாம் ஶ்ரேஷ்ட$_2$ ராவணம் ச மயா ஹதம் ॥ (24)

ப்ரியமேதது$_3$த$_3$ாஹ்ருத்ய மைதி$_2$ல்யாஸ்த்வம் ஹரீஶ்வர ॥
ப்ரதிக்$_3$ருஹ்ய ச ஸந்தே$_3$ஶமுபாவர்திதுமர்ஹஸி ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

ஷோட$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$:

மைதி$_2$லீப்ரியநிவேத$_3$நம்

இதி ப்ரதிஸமாதி$_3$ஷ்டோ ஹநுமாந் மாருதாத்மஜ: ।
ப்ரவிவேஶ புரீம் லங்காம் பூஜ்யமாநோ நிஶாசரை: ॥ (1)

ப்ரவிஶ்ய ச மஹாதேஜா ராவணஸ்ய நிவேஶநம் ।
த$_3$த$_3$ர்ஶ ம்ருஜயா ஹீநாம் ஸாதங்காமிவ ரோஹிணீம் ॥ (2)

வ்ருக்ஷமூலே நிராநந்த$_3$ாம் ராக்ஷஸீபி$_4$: ஸமாவ்ருதாம் ।
நிப்$_4$ருத: ப்ரணத: ப்ரஹ்வ: ஸோऽபி$_4$க$_3$ம்யாபி$_4$வாத்$_3$ய ச ॥ (3)

அவனைத் தொடர்ந்து அரக்கர்களும் வானரர்களும் அவனுக்கு அபிஷேகம் செய்தார்கள். எல்லோரும் பேரானந்தம் அடைந்து, இராமனைப் போற்றித் துதித்தார்கள். (16)

இராக்கதப் பெருந்தகையான விபீஷணன் இலங்கை மன்னனாக முடிசூட்டப்பட்டதைக் கண்டு, அவனுடைய அமைச்சர்களும், அந்த அரக்கனிடம் முறுகிய அன்பு செலுத்துபவர்களும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். (17)

விபீஷணன், இராமபிரானால் கொடுக்கப்பட்ட செல்வச் செழிப்புடைய அந்தப் பேரரசை அடைந்து, (உற்றார்–உறவினர்களை இழந்திருந்த) குடிமக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, இராமனிடம் வந்து சேர்ந்தான். (18)

அப்போது, நகரத்தில் வசிக்கும் அரக்கர்கள் விபீஷணனுக்கு, அட்சதை–மோதகங்கள்–பொறி–மணமிகு மலர்கள் ஆகியவற்றைச் சந்தோஷத்துடன் கொண்டு வந்து கொடுத்தார்கள். வெல்லற்கரிய வீரனான விபீஷணன், அவைகளை ஏற்றுக்கொண்டு, மங்களமான அந்த மங்கலப் பொருள்கள் அனைத்தையும் இராமனிடமும் இலக்குவனிடமும் சமர்ப்பித்தான். (19,20)

இராமன், விபீஷணன் மேற்கொண்ட காரியத்தை வெற்றிகரமாக முடித்து, விருப்பம் கைகூடியவனாக இருப்பதைக் கண்டு, அவன் திருப்தியடையும் பொருட்டு, அந்த மங்கலப் பொருள்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டார். (21)

பின்னர், அருகில் கைகூப்பிக் கொண்டு மலை போல் அசையாமல் நிற்கும் வானரவீரரான அனுமானைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (22)

"அன்பனே! இதோ நிற்கும் பேரரசன் விபீஷணனிடம் தெரிவித்துவிட்டு, முறைப்படி அனுமதி பெற்றுக்கொண்டு, இலங்கை நகருக்குள் செல்வாயாக. (23)

இராவணன் மாளிகைக்குச் சென்று, வைதேகியிடம் நடந்த வெற்றியைக் கூறி, அவள் மனம் மகிழ்வுறச் செய்து, நானும் சுக்ரீவ–லட்சுமணர்களும் நலம் என்றும் கூறுவாயாக. வெற்றி அடைபவர்களுள் சிறந்தவனே! இராவணன் என்னால் கொல்லப்பட்டான் என்றும் சொல். (24)

வானரத் தலைவனே! இந்த இனிய செய்தியை மைதிலியிடம் தெரிவித்து, அவள் பதிலையும் கேட்டுத் தெரிந்து கொண்டு திரும்பி வா." (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பதினாறு

அனுமான்–சீதை சந்திப்பு

இவ்வாறு ஆணையிடப்பட்ட வாயுமைந்தராகிய அனுமான், அரக்கர்களால் கௌரவிக்கப்பட்டு (அவர்கள் முன்னே வழிகாட்டிச் செல்ல,) இலங்கை நகருக்குள் புகுந்தார். (1)

பராக்கிரமசாலியான அவர், இராவணனுடைய மாளிகைக்குள் நுழைந்து, (பூஞ்சோலையைக் கண்டுபிடித்து,) அசோகமரத்தினடியில் அரக்கிகள் சூழ்ந்து நிற்க, மகிழ்ச்சி இல்லாமலும் நீராடாததால் மாசு படிந்த சரீரத்துடனும் மனம் தவித்துக் கொண்டிருக்கும் ரோகிணியைப் போல் காணப்பட்ட சீதையைக் கண்டார். அடக்க ஒடுக்கத்துடன், அவள் அருகில் சென்று தன் பெயரைக் கூறி, நமஸ்கரித்துக் கைகூப்பி நின்றார். (2,3)

த்$_3$ருஷ்ட்வா தமாக$_3$தம் தே$_3$வீ ஹநுமந்தம் மஹாப$_3$லம் ।
தூஷ்ணீமாஸ்த ததா$_2$ த்$_3$ருஷ்ட்வா ஸ்ம்ருத்வா ப்ரமுதி$_3$தாப$_4$வத் ॥ (4)

ஸௌம்யம் த்$_3$ருஷ்ட்வா முக$_2$ம் தஸ்யா ஹநுமாந் ப்லவகோ$_3$த்தம: ।
ராமஸ்ய வசநம் ஸர்வமாக்$_2$யாதுமுபசக்ரமே ॥ (5)

வைதே$_3$ஹி குஶலீ ராம: ஸஹஸுக்$_3$ரீவலக்ஷ்மண: ।
விபீ$_4$ஷணஸஹாயஶ்ச ஹரீணாம் ஸஹிதோ ப$_3$லை: ॥
குஶலம் சாஹ ஸித்$_3$த$_4$ார்தோ$_2$ ஹதஶத்ருரரிந்த$_3$ம: ॥ (6)

விபீ$_4$ஷணஸஹாயேந ராமேண ஹரிபி$_4$: ஸஹ ।
நிஹதோ ராவணோ தே$_3$வி லக்ஷ்மணஸ்ய நயேந ச ॥ (7)

ப்ருஷ்ட்வா து குஶலம் ராமோ வீரஸ்த்வாம் ரகு$_4$நந்த$_3$ந: ।
அப்$_3$ரவீத் பரமப்ரீத: க்ருதார்தே$_2$நாந்தராத்மநா ॥ (8)

ப்ரியமாக்$_2$யாமி தே தே$_3$வி த்வாம் து பூ$_4$ய: ஸபா$_4$ஜயே ।
தி$_3$ஷ்ட்யா ஜீவஸி த$_4$ர்மக்ஞே ஜயேந மம ஸம்யுகே$_3$ ॥ (9)

லப்$_3$தோ$_4$ நோ விஜய: ஸீதே ஸ்வஸ்தா$_2$ ப$_4$வ க$_3$தவ்யதா$_2$ ।
ராவணஶ்ச ஹத: ஶத்ருர்லங்கா சேயம் வஶே ஸ்தி$_2$தா ॥ (10)

மயா ஹ்யலப்$_3$த$_4$நித்$_3$ரேண த்$_3$ருடே$_4$ந தவ நிர்ஜயே ।
ப்ரதிக்ஞைஷா விநிஸ்தீர்ணா ப$_3$த்$_3$த்$_4$வா ஸேதும் மஹோத$_3$தௌ$_4$ ॥ (11)

ஸம்ப்$_4$ரமஶ்ச ந க$_3$ந்தவ்யோ வர்தந்த்யா ராவணாலயே ।
விபீ$_4$ஷணவிதே$_4$யம் ஹி லங்கைஶ்வர்யமித$_3$ம் க்ருதம் ॥ (12)

தத$_3$ாஶ்வஸிஹி விஶ்வஸ்தா ஸ்வக்$_3$ருஹே பரிவர்தஸே ।
அயம் சாப்$_4$யேதி ஸம்ஹ்ருஷ்டஸ்த்வத்$_3$த$_3$ர்ஶநஸமுத்ஸுக: ॥ (13)

ஏவமுக்தா ஸமுத்பத்ய ஸீதா ஶஶிநிபா$_4$நநா ।
ப்ரஹர்ஷேணாவருத்$_3$தா$_4$ ஸா வ்யாஜஹார ந கிஞ்சந ॥ (14)

அப்$_3$ரவீச்ச ஹரிஶ்ரேஷ்டா$_2$: ஸீதாமப்ரதிஜல்பதீம் ।
கிம் நு சிந்தயஸே தே$_3$வி கிம் நு மாம் நாபி$_4$பா$_4$ஷஸே ॥ (15)

ஏவமுக்தா ஹநுமதா ஸீதா த$_4$ர்மே வ்யவஸ்தி$_2$தா ।
அப்$_3$ரவீத் பரமப்ரீதா ஹர்ஷக$_3$த்$_3$க$_3$த$_3$யா கி$_3$ரா ॥ (16)

ப்ரியமேதது$_3$பஶ்ருத்ய ப$_4$ர்துர்விஜயஸம்ஶ்ரிதம் ।
ப்ரஹர்ஷவஶமாபந்நா நிர்வாக்யாஸ்மி க்ஷணாந்தரம் ॥ (17)

ந ஹி பஶ்யாமி ஸத்$_3$ருஶம் சிந்தயந்தீ ப்லவங்க$_3$ம ।
மத்ப்ரியாக்$_2$யாநகஸ்யேஹ தவ ப்ரத்யபி$_4$நந்த$_3$நம் ॥ (18)

மகாபலசாலியான அனுமான் வந்திருப்பதைக் கண்டு, அவர் யார்? என்பது நினைவுக்கு வந்ததும் உள்ளூர மகிழ்ந்தாள். ஆனால், எதுவும் பேசாமல் மௌனமாகவே இருந்தாள். (4)

மலர்ச்சியடைந்த அவள் முகத்தைப் பார்த்து வானரோத்தமரான அனுமான், இராமனுடைய செய்திகள் அனைத்தையும் சொல்லத் தொடங்கினார்— (5)

''வைதேகி அன்னையே! இராமபிரான், சுக்ரீவ–லட்சுமணர்கள் நலமாக இருக்கிறார்கள். எதிரிகளை அடக்கும் இராமன் விபீஷணனுடைய பேருதவியாலும் வானரர்கள் உடன் இருக்கவும் எதிரியைக் கொன்று, தான் மேற்கொண்ட காரியம் நிறைவேறப்பெற்றவராய், வெற்றிவாகை சூடி நலமாக இருப்பதைத் தெரிவிக்கக் கூறினார். (6)

தாயே! விபீஷணனுடைய அரிய உதவியாலும், லட்சுமணனுடைய போர்த்திறமையாலும், வானரர்களோடு கூடிய இராமப்பிரபுவால் இராவணன் கொல்லப்பட்டான்! (7)

ரகு குலத்தின் ஆனந்தத்தை வளர்ப்பவரும் வீரரும் உவகையுடன் இருப்பவருமான இராமசந்திரமூர்த்தி, தங்கள் நலனைப் பற்றி கேட்டறியச் சொன்னார். தான் மேற்கொண்ட காரியம் வெற்றிகரமாக நிறைவேறியதால், மனமகிழ்ச்சியுடன் இருக்கும் அவர் பின்வருமாறு கூறி அனுப்பியிருக்கிறார்— (8)

தேவி! உனக்குப் பிரியமான செய்தியைச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். (வெற்றிச் செய்தியைக் கேட்டதுமே, நீ மகிழ்ந்திருப்பாய்.) உனக்கு, மேன்மேலும் சந்தோஷத்தைக் கொடுக்க விரும்புகிறேன். அறம் அறிந்தவளே! நான் செய்த போரில் வெற்றி பெற்றுள்ளேன். நல்ல காலமாக நீயும் உயிருடன் இருக்கிறாய்! (நான் போர் தொடங்கியதே உனக்காகத்தானே?) (9)

சீதே! நமக்கு வெற்றி கிடைத்துவிட்டது. மனக்கவலை நீங்கி, நீ நிம்மதியாக இருப்பாயாக. எதிரியான இராவணன் கொல்லப்பட்டான். இந்த இலங்கையும் இப்போது நம் வசத்தில் இருக்கிறது. உன்னைப் பற்றிய நினைவால், உன்னைத் திரும்பப் பெற வேண்டும் என்ற கவலையால் எனக்குத் தூக்கமே வரவில்லை. மாபெருங்கடலில் அணைகட்டி, உன்னை மீட்பது என்ற சபதத்தை நிறைவேற்றினேன். (10,11)

'இராவணன் மாளிகையில் இருக்கிறோமே?' என்று நீ கலவரப்பட வேண்டாம். ஏனென்றால், இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு விபீஷணனிடம் இருக்கிறது. (12)

(அந்நியன் வீட்டில் இருப்பதாக எண்ணிக் கொண்டு சஞ்சலப்பட வேண்டாம். நீ, உன் வீட்டிலேயேதான் இருக்கிறாய்! – என்பதை கருத்தில் கொண்டு, மன அமைதியும் ஆறுதலும் அடைவாயாக.) மகிழ்ச்சியுடன் இருக்கும் விபீஷணனும் உன்னைப் பார்க்கும் ஆவலுடன் அங்கே வரப் போகிறான்.'' (13)

இவ்வாறு, (அனுமானால்) அருகில் வந்து தெரிவிக்கப்பட்ட செய்தி கேட்டு, நிலவு போன்ற திருமுகம் கொண்ட சீதை, ஆனந்த மிகுதியால் ஒரு வார்த்தையும் பேசாதிருந்தாள். (14)

மறுமொழி சொல்லாத சீதையைப் பார்த்து, வானரோத்தமர் கேட்டார்— ''தாயே! இன்னும் மனக்கவலையுடன் இருக்கிறீர்களா? ஏன், எனக்குப் பதில் சொல்லாதிருக்கிறீர்கள்?'' (15)

அனுமான் இவ்வாறு கேட்டதும், அறநெறி வழுவாத சீதாப்பிராட்டி, மிகவும் மனம் பூரித்தவளாய் சொற்கள் தழுதழுக்கப் பின்வருமாறு கூறினாள்— (16)

''என் கணவரின் வெற்றியைக் கூறும் இனிய செய்தியைக் கேட்டு ஆனந்தத்தில் மூழ்கி சிறிதுநேரம் பேச்சிழந்துவிட்டேன்! வானரனே! எனக்கு மிகவும் பிரியமான செய்தியைக் கூறிய உனக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்புகிறேன். ஆனால், அவ்வளவு உயர்ந்த பொருளாக எதுவும் இவ்விடத்தில் இல்லை. (17,18)

ந ஹி பஶ்யாமி தத் ஸௌம்ய ப்ருதி$_2$வ்யாமபி வாநர ।
ஸத்$_3$ருஶம் மத்ப்ரியாக்$_2$யாநே தவ த$_3$ாதும் ப$_4$வேத் ஸமம் ॥ (19)

ஹிரண்யம் வா ஸுவர்ணம் வா ரத்நாநி விவித$_4$ாநி ச ।
ராஜ்யம் வா த்ரிஷு லோகேஷு நைதத$_3$ர்ஹதி ப$_4$ாஷிதும் ॥ (20)

ஏவமுக்தஸ்து வைதே$_3$ஹ்யா ப்ரத்யுவாச ப்லவங்க$_3$ம: ।
க்$_3$ருஹீதப்ராஞ்ஜலிர்வாக்யம் ஸீதாயா: ப்ரமுகே$_2$ ஸ்தி$_2$த: ॥ (21)

ப$_4$ர்து: ப்ரியஹிதே யுக்தே ப$_4$ர்துர்விஜயகாங்க்ஷிணி ।
ஸ்நிக்$_3$த$_4$மேவம்வித$_4$ம் வாக்யம் த்வமேவார்ஹஸி ப$_4$ாஷிதும் ॥ (22)

தவைதத்$_3$வசநம் ஸௌம்யே ஸாரவத் ஸ்நிக்$_3$த$_4$மேவ ச ।
ரத்நௌக$_4$ாத்$_3$விவித$_4$ாச்சாபி தே$_3$வராஜ்யாத்$_3$விஶிஷ்யதே ॥ (23)

அர்த$_2$தஶ்ச மயா ப்ராப்தா தே$_3$வராஜ்யாத$_3$யோ கு$_3$ணா: ।
ஹதஶத்ரும் விஜயிநம் ராமம் பஶ்யாமி ஸுஸ்தி$_2$தம் ॥ (24)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா மைதி$_2$லீ ஜநகாத்மஜா ।
தத: ஶுப$_4$தரம் வாக்யமுவாச பவநாத்மஜம் ॥ (25)

அதிலக்ஷணஸம்பந்நம் மாது$_4$ர்யகு$_3$ணபூ$_4$ஷிதம் ।
பு$_3$த்$_3$த்$_4$யா ஹ்யஷ்டாங்க$_3$யா யுக்தம் த்வமேவார்ஹஸி ப$_4$ாஷிதும் ॥ (26)

ஶ்லாக$_4$நீயோऽநிலஸ்ய த்வம் புத்ர: பரமத$_4$ார்மிக: ।
ப$_3$லம் ஶௌர்யம் ஶ்ருதம் ஸத்த்வம் விக்ரமோ த$_3$ாக்ஷ்யமுத்தமம் ॥ (27)

தேஜ: க்ஷமா: த்$_4$ருதிர்தை$_4$ர்யம் விநீதத்வம் ந ஸம்ஶய: ।
ஏதே சாந்யே ச ப$_3$ஹவோ கு$_3$ணாஸ்த்வய்யேவ ஶோப$_4$நா: ॥ (28)

அதே$_2$ாவாச புந: ஸீதாமஸம்ப்$_4$ராந்தோ விநீதவத் ।
ப்ரக்$_3$ருஹீதாஞ்ஜலிர்ஹர்ஷாத் ஸீதாயா: ப்ரமுகே$_2$ ஸ்தி$_2$த: ॥ (29)

இமாஸ்து க$_2$லு ராக்ஷஸ்யோ யதி$_3$ த்வமநுமந்யஸே ।
ஹந்துமிச்ச$_2$ாம்யஹம் ஸர்வா யாபி$_4$ஸ்த்வம் தர்ஜிதா புரா ॥ (30)

க்லிஶ்யந்தீம் பதிதே$_3$வாம் த்வாமஶோகவநிகாம் க$_3$தாம் ।
கோ$_4$ரரூபஸமாசாரா: க்ரூரா: க்ரூரதரேக்ஷணா: ॥
ராக்ஷஸ்யோ த$_3$ாருணகத$_2$ா வரமேதத் ப்ரயச்ச$_2$ மே ॥ (31)

முஷ்டிபி$_4$: பாணிபி$_4$: ஸர்வாஶ்சரணைஶ்சைவ ஶோப$_4$நே ।
இச்ச$_2$ாமி விவிதை$_4$ர்க$_4$ாதைர்ஹந்துமேதா: ஸுத$_3$ாருணா: ॥ (32)

பேரன்பு கொண்ட வானரனே! எனக்கு மிகமிகப் பிரியமான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறாய். அதற்கேற்ற இணையான ஒரு பொருளை, நான் இவ்வுலகம் முழுவதிலும் காண்கிலேன். தங்கம், வெள்ளி, பலவகையான இரத்தினங்கள், மூன்று உலக அரசாட்சி – இவை எதுவும் நீ சொன்ன செய்திக்கு ஒப்பான பரிசு ஆகாது.'' (19,20)

இவ்வாறு சீதை சொன்னவுடன், வானரர் கைகூப்பிக் கொண்டு, சீதையின் எதிரில் நின்றவாறு பதில் சொன்னார்— (21)

''கணவருக்கு இன்பத்தையும் நலத்தையும் விழைபவரே! கணவரின் வெற்றியைப் பேராவலுடன் விரும்பியவரே! நெஞ்சத்தைத் தொடும் உயரிய இவ்வார்த்தைகளைத் தாங்கள்தான் கூறமுடியும். வணக்கத்திற்குரியவரே! தங்களுடைய இந்தப் பேச்சு, பொருட்செறிவுள்ளது; அன்பைக் காட்டுவது; பலவகையான இரத்தினக் குவியல்கள், தேவருலக ஆட்சி – இவற்றைக் காட்டிலும் மிகவும் மதிப்புமிக்கது. (22,23)

இராமசந்திரமூர்த்தி, எதிரிகளைக் கொன்று வெற்றிவாகை சூடி, எவ்விதக் குறைவுமில்லாமல் இருப்பதைத் தரிசித்துக் கொண்டிருக்கிறேனே? – இதைவிட வேறு என்ன வேண்டும்? இந்தத் தரிசனத்தினாலேயே, அமரலோக ஆட்சி முதலான எல்லாப் பெரும் பயன்களும் பெற்றாகிவிட்டன.'' (24)

அப்போது, ஜனகன் செல்வியாகிய சீதாப்பிராட்டியார், அவருடைய பதிலைக் கேட்டு, வாயுகுமாரனைப் பார்த்து, மிகவும் இனிய சொற்களைக் கூறினாள்— (25)

''அனுமானே! வழுவில்லாத சொல் இலக்கணங்களோடு கூடியதும், இன்சுவை ததும்பியதும், எண்வகையான புத்தி–சக்திகளோடு கூடியதுமான பேச்சை உன்னால் மட்டுமே பேசமுடியும்! [புத்தியின் எண்வகை சக்திகள்:– பிறர் சொன்ன சொற்களின் பொருளை மனத்தில் வாங்கிக் கொள்வது; நினைவில் வைத்துக் கொள்வது; தக்க சமயத்தில் வருவித்துக் கொள்வது (ஸ்மரணம்); அந்தச் செய்தியை உரிய வார்த்தைகளால் பிறருக்குச் சொல்வது (ப்ரதிபாதனம்); கேட்பவரின் உள் அந்தரங்கத்தை ஊகித்து அறிவது (ஊஹம்); உடனே, பதில் சொல்வது (அபோஹம்); சொற்களின் உட்கருத்தை அறிவது (அர்த்த விக்ஞானம்); சொற்களின் உண்மையான பண்புகளை அறிவது (தத்வக்ஞானம்).] (26)

நீ, வாயுபகவானின் குமாரன்; அறத்தில் தோய்ந்து திளைத்துக் கொண்டிருப்பவன்; புகழத்தக்கவன். ஆற்றல், ஆண்மை, அறநூல் அறிவு, குலையாத நெஞ்சம், மேக்கரித்துச் சென்று எதிரிகளை அடக்கும் தன்மை, சாமர்த்தியம், பிறரை வெல்லும் சிறப்பு வல்லமை, குற்றங்களைப் பொறுப்பது, உறுதி, ஆபத்திலும் கலங்காத உரம் வாய்ந்த நெஞ்சம், பணிவு – இவைகளும் மற்றும் பல நற்குணங்களும் உன்னிடம்தான் விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை.'' (27,28)

அப்போது, மனச்சஞ்சலமில்லாமல் கைகூப்பிக் கொண்டு, சீதையின் எதிரே நின்றுகொண்டு, மனமகிழ்ச்சியுடனும் அடக்கத்துடனும், பிராட்டியைப் பார்த்து மேலும் கூறினார்— (29)

''இதோ, இங்கே இருக்கும் அரக்கிகளால் முன்பு தாங்கள் மிகவும் மிரட்டப்பட்டீர்கள். தாங்கள் அனுமதி கொடுத்தால், இவர்கள் எல்லோரையுமே நான் கொல்ல விரும்புகிறேன். இந்த அரக்கிகள் பயங்கரமான உருவமும் நடவடிக்கையும் கொண்டவர்கள்; கொடூரமானவர்கள்; மிகக்கொடூரமான பார்வையுடையவர்கள். கணவரையே தெய்வமாகக் கொண்ட தாங்கள் சொல்லொணாத் துயரத்தைத் தாங்கிக் கொண்டு இங்கே (அசோகவனத்தில்) இருந்தபோது மிகவும் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். அருள்கூர்ந்து எனக்கு அனுமதி அளியுங்கள். (30,31)

மிகக்கொடியவர்களான இவர்களை முஷ்டியாலும் கை–கால்களாலும் பலவிதமான குத்துகளாலும் (உடலை மிகவும் நோகச் செய்து) கொல்ல விரும்புகிறேன். (32)

க$_4$ாதைர்ஜாநுப்ரஹாரைஸ்ச த$_3$ஶநாநாம் ச பாதநை: ।
ப$_4$க்ஷணை: கர்ணநாஸாநாம் கேஶாநாம் லுஞ்சநைஸ்தத$_2$ா ॥ (33)

ப்$_4$ருஶம் ஶுஷ்கமுகீ$_2$பி$_4$ஶ்ச த$_3$ாரணைர்லங்க$_4$நைர்ஹதை: ।
நிபாத்ய ஹந்துமிச்ச$_2$ாமி தவ விப்ரியகாரிணீ: ॥ (34)

ஏவம்ப்ரகாரைர்ப$_3$ஹுபி$_4$ர்விப்ரகாரைர்யஶஸ்விநி ।
ஹந்துமிச்ச$_2$ாம்யஹம் தே$_3$வி தவேமா: க்ருதகில்பி$_3$ஷா: ॥ (35)

ஏவமுக்தா ஹநுமதா வைதே$_3$ஹீ ஜநகாத்மஜா ।
உவாச த$_4$ர்மஸஹிதம் ஹநுமந்தம் யஶஸ்விநீ ॥ (36)

ராஜஸம்ஶ்ரயவஶ்யாநாம் குர்வதீநாம் பராக்ஞயா ।
விதே$_4$யாநாம் ச த$_3$ாஸீநாம் க: குப்யேத்$_3$வாநரோத்தம ॥ (37)

ப$_4$ாக்$_3$யவைஷம்யயோகே$_3$ந புரா து$_3$ஶ்சரிதேந ச ।
மயைதத் ப்ராப்யதே ஸர்வம் ஸ்வக்ருதம் ஹ்யுபபு$_4$ஜ்யதே ॥ (38)

ப்ராப்தவ்யம் து த$_3$ஶாயோக$_3$ாந்மயைததி$_3$தி நிஶ்சிதம் ।
த$_3$ாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ து$_3$ர்ப$_3$லா ॥ (39)

ஆக்ஞப்தா ராவணேநைதா ராக்ஷஸ்யோ மாமதர்ஜயந் ।
ஹதே தஸ்மிந்ந குர்யுர்ஹி தர்ஜநம் வாநரோத்தம ॥ (40)

அயம் வ்யாக்$_4$ரஸமீபே து புராணோ த$_4$ர்மஸம்ஹித: ।
ருக்ஷேண கீ$_3$த: ஶ்லோகோ மே தந்நிபோ$_3$த$_4$ ப்லவங்க$_3$ம ॥ (41)

ந பர: பாபமாத$_3$த்தே பரேஷாம் பாபகர்மணாம் ।
ஸமயோ ரக்ஷிதவ்யஸ்து ஸந்தஶ்சாரித்ரபூ$_4$ஷணா: ॥ (42)

பாபாநாம் வா ஶுப$_4$ாநாம் வா வத$_4$ார்ஹாணாம் ப்லவங்க$_3$ம ।
கார்யம் கருணமார்யேண ந கச்சிந்நாபராத்$_4$யதி ॥ (43)

லோகஹிம்ஸாவிஹாராணாம் ரக்ஷஸாம் காமரூபிணாம் ।
குர்வதாமபி பாபாநி நைவ கார்யமஶோப$_4$நம் ॥ (44)

ஏவமுக்தஸ்து ஹநுமாந் ஸீதயா வாக்யகோவித$_3$: ।
ப்ரத்யுவாச தத: ஸீதாம் ராமபத்நீம் யஶஸ்விநீம் ॥ (45)

தங்களுக்குக் கொடுமை இழைத்த இவர்களை, குத்துக்கள், முழங்கால் முட்டியால் உதைத்தல், பற்களை உடைத்தல், காது–மூக்குகளைக் கடித்துத் தின்பது, தலைமுடியை நீக்குதல், கூர்மையான நக முனைகளால் அழுத்தமாகக் கீறுதல், பாய்ந்து சென்று தாக்குவது, கையால் அறைதல் ஆகிய எல்லா முறைகளாலும் தாக்கித் தரையில் வீழ்த்திக் கொல்ல விரும்புகிறேன். கற்புக்கரசி என்று புகழ்பெற்ற தாயே! தங்களுக்குக் குற்றமிழைத்தவர்களான இவர்களை, இவ்விதம் பலவகையாகத் துன்புறுத்திச் சாகடிக்க விரும்புகிறேன்.'' (33–35)

அனுமான் இவ்வாறு சொன்னவுடன், ஜனகன் புதல்வியும் பெரும் புகழ் பெற்றவளுமான வைதேகி, அவரைப் பார்த்து அறத்தோடு கூடிய சொற்களைக் கூறினாள்— ''வானரோத்தமனே! இவர்கள், அரக்க மன்னனின் தயவில் இருப்பவர்கள்; மேலதிகாரிகளின் கட்டளைக்கு அடிபணிந்து நடப்பவர்கள்; வேலைக்காரிகள். இவர்களிடம் எவனாவது ஒருவன் கோபமடைவானா? (36,37)

என்னுடைய காலமாறுதல், முற்பிறவியின் தீவினைப் பயன் ஆகியவற்றால் துன்பங்கள் அடையப்பட்டன. தன்னுடைய வினைப்பயனை, தான் அனுபவிக்கத்தானே வேண்டும்? (38)

முன் செய்த வினையின் பயனாக நான் இவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் என்பது நிச்சயம். அத்துடன், எனக்கு இளகிய மனம். இராவணனின் ஏவலர்களான இவர்கள், அவன் ஆணைப்படி நடந்திருக்கிறார்கள். (அல்லது, தாங்களாகவே என்னை அதட்டி, உருட்டி, மிரட்டியிருந்தாலும்,) நான் இவர்களை மன்னிக்கிறேன். வானரோத்தமனே! இந்த அரக்கிகள் இராவணனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, என்னை மிரட்டினார்கள். அவனே மாய்க்கப்பட்ட பின் (இனிமேல்) என்னை மிரட்ட மாட்டார்கள். (39,40)

வானரனே! இது சம்பந்தமான ஒரு பழைய கதை இருக்கிறது. ஒரு புலியிடம், கரடி ஒன்று அறநெறிப்படியான சில வார்த்தைகளைக் கூறியது. அக்கதையை நான் சொல்கிறேன் கேள். (41)

(குறிப்பு:– ஒரு காட்டில், புலியால் துரத்தப்பட்ட ஒரு வேடன், தப்பித்துக் கொள்வதற்காக ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். எதிர்பாராதவிதமாக, அங்கே ஒரு கரடி இருப்பதைப் பார்த்தான். வேறு வழி தோன்றாமல், 'என்னைக் காப்பாற்று' என்று வேண்டிக் கொண்டான். அதே சமயம், புலி கரடியைப் பார்த்து, 'நீயும் நானும் விலங்கினம்; அவன், நம்மைக் கொல்லும் வேடன். எனவே, அவனைக் கீழே தள்ளிவிடு. அவனைத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்வேன்' என்றது. கரடி சம்மதிக்கவில்லை. 'என்னைப் புகலடைந்தவனைக் கைவிட மாட்டேன்' என்று கூறிவிட்டது. இரவில், கரடி உறங்கிப் போக, வேடன் கண்விழித்திருந்தான். புலி, அவனைப் பார்த்து, 'என் பசி ஆறுவதற்கு நீயாக இருந்தால் என்ன, கரடியாக இருந்தால் என்ன? கரடியைத் தள்ளிவிடு. அதை உண்டுவிட்டு, உன்னை விட்டுவிட்டுப் போய் விடுகிறேன்' என்றது. நன்றிகெட்ட மனிதன், கரடியை மரத்தின் உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டான். கரடி, கீழே விழும்போது கிளைகளில் மாட்டிக்கொண்டு விழித்துக் கொண்டு உயிர் பிழைத்துவிட்டது. அப்போது புலி, 'பார்! அவன் நன்றி கொன்றவன். இப்போதாவது அவனைக் கீழே தள்ளிவிடு' என்று உசுப்பிவிட்டது. ஆனால், கரடியோ, 'இவன், நல்லவனோ கெட்டவனோ? என்னைச் சரண் அடைந்துவிட்டவன். எனவே, இவனுக்குத் தீங்கு செய்யமாட்டேன்!' என்று அழுத்தமாகக் கூறிவிட்டது. இது ஒரு பழைய கதை.)

நற்குணங்களமைந்த ஒருவன் பிறர் செய்த தீங்குக்குப் பழிதீர்த்துக் கொள்வதில்லை. அதற்குபதிலாக தன்மீது குற்றம் புரிந்தவர்களுக்கும் நன்மையையே செய்வான். அறநெறியே கடைப்பிடிக்கத்தக்கது. சான்றோர்கள் நன்னடத்தையையே அணிகளாகக் கொண்டவர்கள். (42)

வானரனே! நன்னெறியில் நடப்பவன் – ஒரு பாவியாகட்டும்; நல்லவனாகட்டும்; கொலைக்குரியவனாகட்டும் – எல்லோரிடமும் கருணையுடன்தான் நடந்துகொள்வான். ஏனென்றால், ஒரு காலத்திலும் குற்றமே செய்யாதவர் என்று எவருமே இல்லை. உலக மக்களுக்குத் துன்பம் கொடுப்பதையே பிறவி இயல்பாகக் கொண்டவர்களும், நினைத்த உருவம் எடுக்கக் கூடியவர்களுமான அரக்க இனத்தவராகிய இவர்கள் (பாவகரமான) பிறருக்குத் துன்பம் தருவதையே தொழிலாகக் கொண்டவர்களாயினும், இவர்களுக்கு நல்லது அல்லாததை நாம் செய்யக்கூடாது.'' (43,44)

சீதை இவ்வாறு கூறியதும் சொற்றிறம் கொண்ட அனுமான், இராமபத்தினியும் கீர்த்திமிக்கவளுமான சீதையைப் பார்த்துப் பதில் கூறினார்— (45)

யுக்தா ராமஸ்ய ப4வதீ த4ர்மபத்நீ யஶஸ்விநீ ।
ப்ரதிஸந்தி3ஶ மாம் தே3வி க3மிஷ்யே யத்ர ராக4வ: ॥ (46)

ஏவமுக்த்வா ஹநுமதா வைதே3ஹீ ஜநகாத்மஜா ।
அப்3ரவீத்3த்3ரஷ்டுமிச்ச2ாமி ப4ர்தாரம் வாநரோத்தம: ॥ (47)

தஸ்யாஸ்தத்3வசநம் ஶ்ருத்வா ஹநுமாந் மாருதாத்மஜ: ।
ஹர்ஷயந் மைதி2லீம் வாக்யமுவாசேத3ம் மஹாத்3யுதி: ॥ (48)

பூர்ணசந்த்3ராநநம் ராமம் த்3ரக்ஷ்யஸ்யார்யே ஸலக்ஷ்மணம் ।
ஸ்தி2ரமித்ரம் ஹதாமித்ரம் ஶசீவ த்ரித3ஶேஶ்வரம் ॥ (49)

தாமேவமுக்த்வா ராஜந்தீம் ஸீதாம் ஸாக்ஷாதி3வ ஶ்ரியம் ।
ஆஜகா3ம மஹாவேகோ3 ஹநுமாந் யத்ர ராக4வ: ॥ (50)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஷோட3ஶோத்தரஶததம: ஸர்க3: ॥

ஸப்தத3ஶோத்தரஶததம: ஸர்க3:

ஸீதாப4ர்த்ருமுகே2க்ஷணம்

ஸ உவாச மஹாப்ராஜ்ஞப்4க3ம்ய ப்லவங்க3ம: ।
ராமம் வசநமர்த2ஜ்ஞோ வரம் ஸர்வத4நுஷ்மதாம் ॥ (1)

யந்நிமித்தோऽயமாரம்ப4: கர்மணாம் ச ப2லோத3ய: ।
தாம் தே3வீம் ஶோகஸந்தப்தாம் மைதி2லீம் த்3ரஷ்டுமர்ஹஸி ॥ (2)

ஸா ஹி ஶோகஸமாவிஷ்டா பா3ஷ்பபர்யாகுலேக்ஷணா ।
மைதி2லீ விஜயம் ஶ்ருத்வா தவ ஹர்ஷமுபாக3மத் ॥ (3)

பூர்வகாத் ப்ரத்யயாச்சாஹமுக்தோ விஶ்வஸ்தயா தயா ।
ப4ர்தாரம் த்3ரஷ்டுமிச்ச2ாமி க்ருதார்த2ம் ஸஹலக்ஷ்மணம் ॥ (4)

ஏவமுக்தோ ஹநுமதா ராமோ த4ர்மப்4ருதாம் வர: ।
அக3ச்ச2த் ஸஹஸா த்4யாநமீஷத்3பா3ஷ்பபரிப்லுத: ॥ (5)

தீ3ர்க4முஷ்ணம் விநி:ஶ்வஸ்ய மேதி3நீமவலோகயந் ।
உவாச மேக4ஸங்காஶம் விபீ4ஷணமுபஸ்தி2தம் ॥ (6)

தி3வ்யாங்க3ராகா3ம் வைதே3ஹீம் தி3வ்யாப4ரணபூ4ஷிதாம் ।
இஹ ஸீதாம் ஶிர:ஸ்நாதாமுபஸ்தா2பய மா சிரம் ॥ (7)

''(அறம் தவறாத) இராமபிரானுடைய பத்தினி, தாங்கள். நற்குணச் சிறப்புகளால் பாரெங்கும் புகழ்பெற்றவர். தாங்கள் இவ்வாறு கூறியது பொருத்தமானதே. இப்போது நான் இராமபிரானிடம் திரும்பிப் போக வேண்டும். பதில் செய்தி இருந்தால் தாங்கள் கூறவேண்டும்.'' (46)

அனுமான் இவ்வாறு கூறியதும் ஜனகனின் திருமகள், ''வானரோத்தமனே! நான் என் கணவரைப் பார்க்க விரும்புகிறேன்'' என்று சொன்னாள். (47)

அவளுடைய அந்தப் பதிலைக் கேட்டு, ஒப்பற்ற மகிமை கொண்டவரும் வாயுவின் மைந்தருமான அனுமான், சீதைக்கு மகிழ்ச்சி தரும் வகையில் பதில் கூறினார்— (48)

''உயர் குணங்கள் நிறைந்தவரே! பகைவரைக் கொன்றவரும், நட்பில் உறுதியாக இருப்பவர்கள் புடைசூழ நிற்பவரும், முழுமதி போன்ற திருமுகமுடையவருமான இராமனை லட்சுமணனோடுகூட, இந்திராணிதேவி இந்திரனை (பிரிந்து இருந்துவிட்டுப் பின்) சந்திப்பதைப் போலக் காணப் போகிறீர்கள்!'' (49)

இவ்வாறு, சாட்சாத் செல்வத் திருமகள் போல் விளங்கிய சீதாப்பிராட்டியிடம் தெரிவித்துவிட்டு, அனுமான், வெகுவேகத்துடன் இராமன் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். (50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பதினேழு

சீதை, இராமனைப் பார்த்தல்!

சொற்பொருள் அறிந்த அனுமான், பேரறிவாளரும், சகல வில்லாளிகளிலும் முதன்மையானவருமான இராமபிரானிடம் வந்து, பின்வருமாறு கூறினார்— ''எவர் காரணமாக (வானரப்படையைக் கூட்டுவது தொடங்கி, இராவண வதம் வரையிலான) இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ, அந்த அருஞ்செயல்களின் பயனாக விளங்கும் சீதாப்பிராட்டியார் சோகத்தில் மூழ்கியிருக்கிறார். தாங்கள், அவரைப் பார்க்க திருவுள்ளம் கொள்ளவேண்டும். (1,2)

துயரம் மேலிட்டு கண்ணீர் ததும்பும் கண்களுடனிருந்த பிராட்டி, தங்கள் வெற்றியைக் கேட்டு ஆனந்தம் அடைந்தார். என்னை முன்பே பார்த்திருந்ததால், என்னிடம் நம்பிக்கை கொண்டு பேசினார்— 'மேற்கொண்ட முயற்சி நிறைவேறப்பெற்ற என் கணவரை, (அவருக்கு உற்றதுணையாக விளங்கிய) லட்சுமணனோடுகூடக் காண விரும்புகிறேன்' என்று சொன்னார்.'' (3,4)

அனுமான் இவ்வாறு தெரிவித்ததும், அறநெறியில் ஊன்றியவர்களில் தலையாயவரான இராமன், சற்றே கண்கள் கலங்க, உடனே ஆலோசனையில் ஆழ்ந்தார். (5)

வெப்பமாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, (யாரையும், எதனையும் பார்க்க விரும்பாததால்) தரையில் கண்களைச் செலுத்தி, அருகில் நின்று கொண்டிருந்த, மேகம் நிகர் வண்ணங்கொண்ட விபீஷணனைப் பார்த்துக் கூறினார்— (1. அந்நியன் வீட்டிலிருந்தவளை விசாரணை செய்யாமல் ஏற்றுக்கொண்டால் மக்கள் தூற்றுவார்கள். அவள் குற்றமற்றவள் என்பதில் ஐயமில்லை என்பதால், அவள் மனத்தை நோகடிப்பதும் கொடுஞ்செயலாகும். ஆனால், எப்படியும், இப்பிரச்சனைக்குத் தீர்வு காணத்தானே வேண்டும்? 2. முதலில், செய்தியைச் சொல்வதற்குத் தூதனை அனுப்பிய இராமன், அயோத்தி பட்டணத்திற்குரியவளை அழைத்து வருவதற்கு, இலங்கை மன்னனையே அனுப்பும் உயர்மிகு அரசியல் நடைமுறை உய்த்துணரத்தக்கது.) (6)

''ஜனகன் செல்வியாகிய சீதையை, தலைநீராட்டி, மணமிக்க வண்ணப்பூச்சுக்களாலும் சிறந்த அணிகலன்களாலும் அலங்காரம் செய்வித்து, விரைவில் இங்கே அழைத்து வருவாயாக.'' (7)

ஏவமுக்தஸ்து ராமேண த்வரமாணோ விபீ$_4$ஷண: ।
ப்ரவிஶ்யாந்த:புரம் ஸீதாம் ஸ்வாபி$_4$: ஸ்த்ரீபி$_4$ரசோத$_3$யத் ॥ (8)

தி$_3$வ்யாங்க$_3$ராக$_3$ா வைதே$_3$ஹீ தி$_3$வ்யாப$_4$ரணபூ$_4$ஷிதா ।
யாநமாரோஹ ப$_4$த்$_3$ரம் தே ப$_4$ர்தா த்வாம் த்$_3$ரஷ்டுமிச்ச$_2$தி ॥ (9)

ஏவமுக்தா து வைதே$_3$ஹீ ப்ரத்யுவாச விபீ$_4$ஷணம் ।
அஸ்நாதா த்$_3$ரஷ்டுமிச்ச$_2$ாமி ப$_4$ர்தாரம் ராக்ஷஸாதி$_4$ப ॥ (10)

தஸ்யாஸ்தத்$_3$வசநம் ஶ்ருத்வா ப்ரத்யுவாச விபீ$_4$ஷண: ।
யத$_3$ாஹ ராஜா ப$_4$ர்தா தே தத்தத$_2$ா கர்துமர்ஹஸி ॥ (11)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா மைதி$_2$லீ ப$_4$ர்த்ருதே$_3$வதா ।
ப$_4$ர்த்ருப$_4$க்திவ்ரதா ஸாத்$_4$வீ ததே$_2$தி ப்ரத்யப$_4$ாஷத ॥ (12)

தத: ஸீதாம் ஶிர:ஸ்நாதாம் யுவதீபி$_4$ரலங்க்ருதாம் ।
மஹார்ஹாப$_4$ரணோபேதாம் மஹார்ஹாம்ப$_3$ரத$_4$ாரிணீம் ॥ (13)

ஆரோப்ய ஶிபி$_3$காம் தீ$_3$ப்தாம் பரார்த்$_4$யாம்ப$_3$ரஸம்வ்ருதாம் ।
ரக்ஷோபி$_4$ர்ப$_3$ஹுபி$_4$ர்கு$_3$ப்தாமாஜஹார விபீ$_4$ஷண: ॥ (14)

ஸோ஽பி$_4$க$_3$ம்ய மஹாத்மாநம் க்ஞாத்வாபி த்$_4$யாநமாஸ்தி$_2$தம் ।
ப்ரணதஶ்ச ப்ரஹ்ருஷ்டஶ்ச ப்ராப்தாம் ஸீதாம் ந்யவேத$_3$யத் ॥ (15)

தாமாக$_3$தாமுபஶ்ருத்ய ரக்ஷோக்$_3$ருஹசிரோஷிதாம் ।
ஹர்ஷோ தை$_3$ந்யம் ச ரோஷஶ்ச த்ரயம் ராக$_4$வமாவிஶத் ॥ (16)

தத: பார்ஶ்வக$_3$தம் த்$_3$ருஷ்ட்வா ஸவிமர்ஶம் விசாரயந் ।
விபீ$_4$ஷணமித$_3$ம் வாக்யமஹ்ருஷ்டம் ராக$_4$வோ஽ப்$_3$ரவீத் ॥ (17)

ராக்ஷஸாதி$_4$பதே ஸௌம்ய நித்யம் மத்$_3$விஜயே ரத ।
வைதே$_3$ஹீ ஸந்நிகர்ஷம் மே ஶீக்$_4$ரம் ஸமுபக$_3$ச்ச$_2$து ॥ (18)

ஸ தத்$_3$வசநமாக்ஞாய ராக$_4$வஸ்ய விபீ$_4$ஷண: ।
தூர்ணமுத்ஸாரணே யத்நம் காரயாமாஸ ஸர்வத: ॥ (19)

கஞ்சுகோஷ்ணீஷிணஸ்தத்ர வேத்ரஜர்ஜரபாணய: ।
உத்ஸாரயந்த: புருஷா: ஸமந்தாத் பரிசக்ரமு: ॥ (20)

ருக்ஷாணாம் வாநராணாம் ச ராக்ஷஸாநாம் ச ஸர்வஶ: ।
வ்ருந்த$_3$ாந்யுத்ஸார்யமாணாநி தூ$_3$ரமுத்ஸஸ்ருஜுஸ்தத$_3$ா ॥ (21)

தேஷாமுத்ஸார்யமாணாநாம் ஸர்வேஷாம் த்$_4$வநிருத்தி$_2$த: ।
வாயுநோத்$_3$வர்தமாநஸ்ய ஸாக$_3$ரஸ்யேவ நி:ஸ்வந: ॥ (22)

இவ்வாறு இராமன் கூறியவுடன் பரபரப்படைந்த விபீஷணன், அந்தப்புரத்திற்குச் சென்று தன்னைச் சார்ந்த மாதர்களை அழைத்துக் கொண்டு, அவர்கள் மூலமாக சீதையிடம் பின்வருமாறு தெரிவித்தான்— (8)

''வைதேகித் தாயே! மங்களம் பெருகுக. உயர்ந்த மேனிப்பூச்சுக்களாலும், சிறந்த அணிகலன்களாலும் அலங்கரிக்கப்பட்ட தங்களை, தங்கள் கணவர் காண விரும்புகிறார். (உங்களுக்குப் பணி செய்வதற்காகவே அந்தப்புரப் பெண்களை அழைத்து வந்திருக்கிறேன். விரைவில் ஆயத்தமாகி) பல்லக்கில் ஏறிக்கொள்ளுங்கள்.'' (9)

இவ்வாறு சொல்லப்பட்ட சீதை, விபீஷணனைப் பார்த்து, ''அரக்க மன்னரே! தலைநீராடாமல் (இப்போதுள்ள மாசடைந்த தோற்றத்துடனேயே,) நான் கணவரைக் காண விரும்புகிறேன்'' என்று சொன்னாள். (10)

சீதையின் இந்த பதிலைக் கேட்ட விபீஷணன், ''தங்கள் கணவர் (பர்த்தா = தங்களுக்கு சகலமுமாக இருப்பவர்) கூறி அனுப்பியபடியே, தாங்கள் செய்வது சாலச் சிறந்தது'' என்று பதில் கூறினார். (இது, சீதைக்குக் கூறிய அறிவுரை அன்று. வீடணன், இராமனின் அடிமை. அவர் ஆணைப்படி நடக்கக் கடமைப்பட்டவன். 'சீதையை அலங்கரித்து அழைத்து வா' என்பது ஆணை. 'என் தலைவர் சொற்படி, நான் நடக்க தாங்கள் ஒத்துழைக்க வேண்டும்' என்பது விபீஷணனின் பணிவான வேண்டுகோள்.) (11)

கணவனையே தெய்வமாகக் கொண்டவளும், கணவனுக்கு உகந்ததையே கடமையாகக் கொண்டவளுமான ஜானகி, அவனுடைய சொற்களை ஏற்றுக்கொண்டு, 'அவ்வாறே செய்யலாம்' என்று மறுமொழி கூறினாள். (12)

சீதையை, அரக்க மங்கையர் தலைநீராட்டினார்கள்; விலை உயர்ந்த அணிகலன்களாலும் சிறப்பான ஆடைகளாலும் அலங்கரித்தார்கள். பின்னர், ஒளிமிகுந்ததும் அழகிய திரைச்சீலையால் மூடப்பட்டதுமான பல்லக்கில் சீதையை அமரச் செய்து, விபீஷணன் அழைத்து வந்தான். பல்லக்குக்குப் பாதுகாவலாக அநேக அரக்கவீரர்கள் உடன் வந்தார்கள். (13,14)

அவன் வந்திருப்பதை அறிந்தும், ஆழ்ந்த யோசனையிலிருக்கும் இராமனை நெருங்கி, 'தேவியை அழைத்து வந்திருக்கிறேன் (அவர் வந்துகொண்டிருக்கிறார்)' என்று மகிழ்ச்சியுடனும் வணக்கத்துடனும் தெரிவித்தான். அரக்கனின் மாளிகையில் நெடுங்காலம் வசித்த அவள் வந்திருப்பதைக் கேட்டதும், இராமனுக்கு, மகிழ்ச்சி–இரக்கம்–கோபம் ஆகிய மூவகை உணர்ச்சிகள் ஒரே சமயத்தில் தோன்றின. (15,16)

அப்போது, அருகிலிருந்த விபீஷணனைக் கூர்ந்து பார்த்து ஆலோசித்து, மகிழ்ச்சி அடையாதவரைப் போல், பின்வருமாறு கூறினார்— (17)

''அரக்கமன்னனே! நல்லவனே! எப்போதும் என் வெற்றிக்காகப் பாடுபடுபவனே! விரைவில், வைதேகியை என் அருகே அழைத்து வா.'' (18)

இராமனுடைய சொற்களைக் கேட்ட விபீஷணன், (சீதையின் பல்லக்கு நெரிசலில் சிக்காமல் வந்து சேருவதற்காக) அருகில் கூடியிருந்தவர்களை விலக்கும் முயற்சியில் ஈடுபட்டான். (19)

சட்டை–தலைப்பாகை அணிந்து, கையில் பிரம்பைத் தாங்கிய அரசு அலுவலர்கள், (வானர–கரடிக் கூட்டத்தினரை) எல்லாப் பக்கங்களிலும் தள்ளிப் போகும்படி எச்சரித்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தார்கள். (20)

அப்போது, எல்லாப் பக்கங்களிலும் விரட்டப்பட்ட கரடி–வானரர்–அரக்கர்களின் கூட்டங்கள் வெகுதூரம் விலகிச் சென்றன. (21)

விரட்டித் துரத்தப்படும் அவர்கள் எழுப்பிய ஓசை, பெருங்காற்றினால் கடலில் எழும் சப்தத்தைப் போலிருந்தது. (22)

உத்ஸார்யமாணாந்ஸ்தாந் த்$_3$ருஷ்ட்வா ஸமந்தாஜ்ஜாதஸம்ப்$_4$ரமாந் ।
த$_3$ாக்ஷிண்யாத்தத$_3$மர்ஷாச்ச வாரயமாஸ ராக$_4$வ: ॥ (23)

ஸம்ரப்$_3$த$_4$ஶ்சாப்$_3$ரவீத்$_3$ராமஶ்சக்ஷுஷா ப்ரத$_3$ஹந்நிவ ।
விபீ$_4$ஷணம் மஹாப்ராக்ஞம் ஸோபாலம்ப$_4$மித$_3$ம் வச: ॥ (24)

கிமர்த$_2$ம் மாமநாத்$_3$ருத்ய க்லிஶ்யதேऽயம் த்வயா ஜந: ।
நிவர்தயைநமுத்$_3$யோக$_3$ம் ஜநோऽயம் ஸ்வஜநோ மம ॥ (25)

ந க்$_3$ருஹாணி ந வஸ்த்ராணி ந ப்ராகாராஸ்திரஸ்க்ரியா: ।
நேத்$_3$ருஶா ராஜஸத்காரா வ்ருத்தமாவரணம் ஸ்த்ரியா: ॥ (26)

வ்யஸநேஷு ந க்ருச்$_2$ரேஷு ந யுத்$_3$தே$_4$ஷு ஸ்வயம்வரே ।
ந க்ரதௌ ந விவாஹே ச த$_3$ர்ஶநம் து$_3$ஷ்யதி ஸ்த்ரியா: ॥ (27)

ஸைஷா யுத்$_3$த$_4$க$_3$தா சைவ க்ருச்$_2$ரே ச மஹதி ஸ்தி$_2$தா ।
த$_3$ர்ஶநேऽஸ்யா ந தோ$_3$ஷ: ஸ்யாந்மத்ஸமீபே விஶேஷத: ॥ (28)

தத$_3$ாநய ஸமீபம் மே ஶீக்$_4$ரமேநாம் விபீ$_4$ஷண ।
ஸீதா பஶ்யது மாமேஷா ஸுஹ்ருத்$_3$க$_3$ணவ்ருதம் ஸ்தி$_2$தம் ॥ (29)

ஏவமுக்தஸ்து ராமேண ஸவிமர்ஶோ விபீ$_4$ஷண: ।
ராமஸ்யோபாநயத் ஸீதாம் ஸந்நிகர்ஷம் விநீதவத் ॥ (30)

ததோ லக்ஷ்மணஸுக்$_3$ரீவௌ ஹநுமாந்ஶ்ச ப்லவங்க$_3$ம: ।
நிஶம்ய வாக்யம் ராமஸ்ய ப$_3$பூ$_4$வுர்வ்யதி$_2$தா ப்$_4$ருஶம் ॥ (31)

கலத்ரநிரபேக்ஷைஶ்ச இங்கி$_3$தைரஸ்ய த$_3$ாருணை: ।
அப்ரீதமிவ ஸீதாயாம் தர்கயந்தி ஸ்ம ராக$_4$வம் ॥ (32)

லஜ்ஜயா த்வவலீயந்தீ ஸ்வேஷு க$_3$ாத்ரேஷு மைதி$_2$லீ ।
விபீ$_4$ஷணேநாநுக$_3$தா ப$_4$ர்தாரம் ஸாப்$_4$யவர்தத ॥ (33)

ஸா வஸ்த்ரஸம்ருத்$_3$த$_4$முகீ$_2$ லஜ்ஜயா ஜநஸம்ஸதி$_3$ ।
ருரோத$_3$ாஸாத்$_3$ய ப$_4$ர்தாரமார்யபுத்ரேதி ப$_4$ாஷிணீ ॥ (34)

விஸ்மயாச்ச ப்ரஹர்ஷாச்ச ஸ்நேஹாச்ச பதிதே$_3$வதா ।
உதை$_3$க்ஷத முக$_2$ம் ப$_4$ர்து: ஸௌம்யம் ஸௌம்யதராநநா ॥ (35)

அத$_2$ ஸமபநுத$_3$ந்மந:க்லமம் ஸா ஸுசிரமத்$_3$ருஷ்டமுதீ$_3$க்ஷ்ய வை ப்ரியஸ்ய ।
வத$_3$நமுதி$_3$தபூர்ணசந்த்$_3$ரகாந்தம் விமலஶஶாங்கநிப$_4$ாநநா தத$_3$ாநீம் ॥ (36)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஸப்தத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

இராமன், எல்லாப் பக்கங்களிலும் விரட்டித் துரத்தப்படும் அவர்களின் மனம் தவிப்பதைப் பார்த்து, தன் இயல்பான அன்பினாலும், (வானர–கரடிகளை ஓட ஓட விரட்டும் அநீதியாலும்) விபீஷணனிடம் கோபம் கொண்டு, அதைத் தடுத்தார். (23)

பேரறிவாளனான விபீஷணனைப் பார்த்து, இராமன் ஆத்திரமடைந்து, கண்ணால் எரித்து விடுவதைப் போல் நோக்கி, நிந்திப்பதைப் போன்று பின்வருமாறு கூறினார்— (24)

''நான், இங்கே இருப்பதைப் பொருட்படுத்தாமல் (என் கண்ணெதிரிலேயே) இவர்கள் எல்லோரும் உன் அலுவலர்களால் ஏன் துரத்தியடிக்கப்படுகிறார்கள்? முதலில், இந்த அக்கிரமத்தை நிறுத்து. இங்குள்ள எல்லோரும் என் சொந்தக்காரர்கள். (25)

ஒரு பெண்ணுக்குப் பாதுகாவல், பல தடுப்புக்களைக் கொண்ட வீடுகள் அல்ல; முகத்திரை போன்ற ஆடைகள் அல்ல; மதிற்சுவர்களும் அறையின் நுழையுமிடத்தில் தொங்கும் திரைகளும் அல்ல; படைவீரர் சூழ்ந்து வருவது, மக்களை விரட்டி அடிப்பது போன்ற அரச உபகாரங்களும் அல்ல; உறுதியான நல்லொழுக்கமே, காவல். (26)

(பிற ஆடவர்கள் பார்க்கும்படியாக நற்குடிப் பெண்டிர் வெளியில் உலாவக் கூடாது – என்பது பொதுவிதி. ஆனால்,) ஆபத்துக் காலங்களில், துன்ப நேரங்களில், போர்க்காலத்தில், சுயம்வரத்தில், வேள்விச் சாலையில், விவாக நிகழ்ச்சியில் (பிறர் பார்வையில்படுமாறு) அவர்கள் கலந்து கொள்வது தவறு ஆகாது. (27)

இப்போது, இவள் போர்க்களத்திற்கு வந்திருக்கிறாள்; மிகவும் கஷ்டத்தில் இருக்கிறாள். (கொடுஞ்சொல் கூறி, இவளைக் கஷ்டப்படுத்தப் போகிறேன்.) குறிப்பாக, கணவனான என்னருகே வந்துகொண்டிருக்கிறாள். அதனால், என் பந்து ஜனங்கள் இவளைக் காண்பது குற்றமாகாது. ஆகையால், விபீஷணா! இவளை விரைவில் என்னருகில் அழைத்து வா; நண்பர்கள் புடைசூழ்ந்து நிற்கும் இந்த நிலையில், சீதை என்னைப் பார்க்கட்டும்.'' (28,29)

இவ்வாறு, இராமன் கூறியவுடன், விபீஷணன் அதைப் பற்றி ஆலோசித்து, 'அது சரிதான்' என்று இராமனின் அருகே சீதையை அடக்க ஒடுக்கமாக அழைத்து வந்தான். (30)

அப்போது, லட்சுமண–சுக்ரீவர்களும் வானரரான அனுமானும், இராமபிரானுடைய சொற்களைக் கேட்டு மிகவும் மனக்கவலை அடைந்தார்கள். (சீதையை, உரிய மரியாதைகளுடன் அழைத்து வரும் வீடணனைப் பாராட்ட வேண்டிய நேரத்தில், இராமன், அவனிடம் கடுமையாகப் பேசுகிறாரே?) (31)

மனைவியிடம் இரக்கம் கொள்ளாத பேச்சையும், பயங்கரமான அங்க–அசைவுகளையும் கவனித்த அவர்கள், 'இராமனுக்கு சீதையிடம் திருப்தியில்லையோ?' என்று ஊகிக்கத் தொடங்கினார்கள். வெட்கத்தால் அங்கங்களைக் குறுக்கிக் கொண்ட சீதாப்பிராட்டி, விபீஷணன் பின்தொடர்ந்து வர, கணவன் அருகில் வந்து நின்றாள். (32,33)

மக்கள் கூடியிருந்ததால் நாணம் கொண்ட அவள், முகத்திரையிட்டுக் கொண்டு, கணவர் அருகில் சென்று, 'என் உயிர்த்துணையே!' என்று மெல்ல அழைத்துவிட்டு விசும்பத் தொடங்கினாள். (34)

மூவுலகிலும் காணமுடியாத பேரழகு படைத்த அவள், கணவரையே தெய்வமாகக் கொண்ட அவள், கணவரின் அழகு ததும்பும் திருமுகத்தை ஆச்சரியத்தோடும் ஆனந்தத்தோடும் குறைவில்லாத அன்போடும் உற்றுப் பார்த்தாள். உடனே, அவள் தன் மனத்துயரங்களை விட்டொழித்தாள். உதயமாகும் முழு நிலாவின் கவர்ச்சியையுடையதும் நீண்ட நாட்களாகக் காணப் பெறாததுமான கணவருடைய முக மண்டலத்தைப் பார்த்தவுடனேயே, அவள் மருவில்லாத சந்திரனைப் போன்ற குளிர் ஒளியுடைய முகத்தினள் ஆனாள். (35,36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஷ்டாத3ஶோத்தரஶததம: ஸர்க3:

ஸீதாப்ரத்யாதே3ஶ:

தாம் து பார்ஶ்வஸ்தி2தாம் ப்ரஹ்வாம் ராம: ஸம்ப்ரேக்ஷ்ய மைதி2லீம் ।
ஹ்ருத3யாந்தர்க3தம் பா4வம் வ்யாஹர்துமுபசக்ரமே ॥ (1)

ஏஷாஸி நிர்ஜிதா ப4த்3ரே ஶத்ரும் ஜித்வா மயா ரணே ।
பௌருஷாத்3யத3நுஷ்டே2யம் ததே3தது3பபாதி3தம் ॥ (2)

க3தோऽஸ்ம்யந்தமமர்ஷஸ்ய த4ர்ஷணா ஸம்ப்ரமார்ஜிதா ।
அவமாநஶ்ச ஶத்ருஶ்ச மயா யுக3பது3த்3த்4ருதௌ ॥ (3)

அத்3ய மே பௌருஷம் த்3ருஷ்டமத்3ய மே ஸப2ல: ஶ்ரம: ।
அத்3ய தீர்ணப்ரதிஜ்ஞத்வாத் ப்ரப4வாமீஹ சாத்மந: ॥ (4)

யா த்வம் விரஹிதா நீதா சலசித்தேந ரக்ஷஸா ।
தை3வஸம்பாதி3தோ தோ3ஷோ மாநுஷேண மயா ஜித: ॥ (5)

ஸம்ப்ராப்தமவமாநம் யஸ்தேஜஸா ந ப்ரமார்ஜதி ।
கஸ்தஸ்ய புருஷார்தோ2ऽஸ்தி புருஷஸ்யால்பதேஜஸ: ॥ (6)

லங்க4நம் ச ஸமுத்3ரஸ்ய லங்காயாஶ்சாவமர்த3நம் ।
ஸப2லம் தஸ்ய தச்ச்2லாக்4யம் மஹத் கர்ம ஹநூமத: ॥ (7)

யுத்3தே4 விக்ரமதஶ்சைவ ஹிதம் மந்த்ரயதஶ்ச மே ।
ஸுக்3ரீவஸ்ய ஸஸைந்யஸ்ய ஸப2லோऽத்3ய பரிஶ்ரம: ॥ (8)

நிர்கு3ணம் ப்4ராதரம் த்யக்த்வா யோ மாம் ஸ்வயமுபஸ்தி2த: ।
விபீ4ஷணஸ்ய ப4க்தஸ்ய ஸப2லோऽத்3ய பரிஶ்ரம: ॥ (9)

இத்யேவம் ப்3ருவதஸ்தஸ்ய ஸீதா ராமஸ்ய தத்3வச: ।
ம்ருகீ3வோத்பு2ல்லநயநா ப3பூ4வாஶ்ருபரிப்லுதா ॥ (10)

பஶ்யதஸ்தாம் து ராமஸ்ய பூ4ய: க்ரோதோ4 வ்யவர்த4த ।
ப்ரபூ4தாஜ்யாவஸிக்தஸ்ய பாவகஸ்யேவ தீ3ப்யத: ॥ (11)

ஸ ப3த்3த்4வா ப்4ருகுடீம் வக்த்ரே திர்யக்ப்ரேக்ஷிதலோசந: ।
அப்3ரவீத் பருஷம் ஸீதாம் மத்4யே வாநரரக்ஷஸாம் ॥ (12)

யத் கர்தவ்யம் மநுஷ்யேண த4ர்ஷணாம் பரிமார்ஜதா ।
தத் க்ருதம் ஸகலம் ஸீதே ஶத்ருஹஸ்தாத3மர்ஷணாத் ॥ (13)

நிர்ஜிதா ஜீவலோகஸ்ய தபஸா பா4விதாத்மநா ।
அக3ஸ்த்யேந து3ராத4ர்ஷா முநிநா த3க்ஷிணேவ தி3க் ॥ (14)

ஸர்க்கம் : நூற்றுப்பதினெட்டு

சீதையைக் கடிந்து பேசுதல்!

இராமன், வணக்கத்துடன் தன் அருகில் நிற்கும் சீதையைப் பார்த்து, தன் அந்தரங்கத்திலிருந்த எண்ணங்களைக் கூறத் தொடங்கினார்— ''பெண்ணரசியே! போரில் பகைவனை வென்று உன்னை மீட்டுவிட்டேன். ஒரு க்ஷத்திரியனின் வீரத்தினால் எது செய்யப்பட வேண்டுமோ, அதைச் செய்து முடித்துவிட்டேன். (1,2)

என் எதிரியின்மீதிருந்த கோபம் இப்போது தீர்ந்து போய்விட்டது. எனக்கு இழைக்கப்பட்ட குற்றத்திற்குரிய தண்டனையை வழங்கிவிட்டேன். எனக்கு ஏற்பட்ட அவமானமும் அவமானத்திற்குக் காரணமான பகைவனும், ஒரே சமயத்தில் என்னால் அழிக்கப்பட்டார்கள். (3)

இப்போது, என்னுடைய எல்லையற்ற ஆண்மையை எல்லோரும் பார்த்துவிட்டார்கள். நான் மேற்கொண்ட முயற்சியும் பயனைத் தந்துவிட்டது. நான் கொடுத்த சூளுரை நிறைவேறிவிட்டதால், சுமை நீங்கி சுதந்திரமாகி விட்டேன். உறுதியில்லாத மனம் கொண்ட அரக்கன், உன்னை என்னிடமிருந்து பிரித்து எடுத்துக் கொண்டு போனால், அது விதியின் குற்றம். அந்த விதியை மானுட முயற்சியால், நான் வெற்றி கொண்டுவிட்டேன். (4,5)

ஆற்றல் குன்றிய எவனொருவன், தனக்கு நேர்ந்த அவமானத்தைத் துடைக்காமல் இருக்கிறானோ, அவனுக்கு என்ன புருஷார்த்தம் (வாழ்க்கைப் பயன்கள்) கிடைக்கும்? பெருங்கடலைத் தாண்டி வந்தது; இலங்கையை அழித்தது (தீக்கிரையாக்கியது) – ஆகிய மகோன்னதமான அரும்பெருஞ்செயலைச் செய்த அனுமானுடைய முயற்சி பலனுடையதாயிற்று. (6,7)

சுக்ரீவன், போரில் தன் பேராற்றலை வெளிப்படுத்தினான்; எனக்கு உகந்த ஆலோசனைகளைக் கூறினான். படையுடன் வந்து, அவன் செய்த பெருமுயற்சி இப்போது பலனைத் தந்துவிட்டது. நற்பண்புகளில்லாத சகோதரனைத் துறந்து, தானாகவே என்னிடம் வந்து சேர்ந்த பக்தன் விபீஷணனுடைய பெருமுயற்சி, இப்போது பயனைத் தந்துவிட்டது.'' (8,9)

இராமன், இவ்வாறு கூறிக் கொண்டு வரும்போது, சீதாப்பிராட்டியார், (அச்சங்கொண்ட) ஒரு பெண்மானைப் போல் கண்களை மலங்க விழித்து கண்ணீர் பெருக்கினாள். (10)

அப்போது சீதையைப் பார்த்த இராமனுக்கு, நிறைய நெய் வார்க்கப்பட்டு கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல, முன்னிலும் அதிகமாகக் கோபம் பொங்கியெழுந்தது. (11)

அவர் நெற்றிவரை புருவத்தை உயர்த்தி, இலக்கு ஏதும் இல்லாமல் குறுக்காக எங்கோ பார்த்துக் கொண்டு, வானர–அரக்கர்கள் அனைவருக்கும் கேட்கும்படியாக, கடுமையான வார்த்தைகளை, சீதையிடம் சொல்லத் தொடங்கினார்— (12)

''சீதே! தனக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பொறுத்துக் கொள்ளாத ஒருவனுக்கு, பகைவனால் ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொள்ள எவையெவை செய்யத்தக்கனவோ, (மூலத்திலுள்ள 'யத்' என்ற ஒருமை, பன்மைப் பொருள் உடையது.) அவையெல்லாம் என்னால் செய்யப்பட்டுவிட்டன. (13)

தவத்தால் தெளிவாக்கப்பட்ட அந்தராத்மாவைக் கொண்ட அகஸ்திய முனிவர், வாதாபி–இல்வலன் ஆகியவர்களால் விந்தியமலையைத் தாண்டி தென்பகுதிக்குச் செல்ல உயிர் பிராணிகளுக்கு ஏற்பட்டிருந்த பயத்தை நீக்கி, அவர்களுக்குத் தெற்குத் திசையை எவ்வாறு மீட்டுக் கொடுத்தாரோ, அவ்வாறே நான் உன்னை மீட்டுவிட்டேன். (வாதாபி–இல்வலர்களை அகஸ்தியர் மாய்த்தது போல், நான் இராவணனைக் கொன்றுவிட்டேன். இனி, உலகுக்கு அச்சம் என்பது இல்லை.) (14)

விதி3தஸ்சாஸ்து தே ப4த்3ரே யோऽயம் ரணபரிஸ்ரம: ।
ஸ தீர்ண: ஸுஹ்ருத3ாம் வீர்யாந்ந த்வத3ர்த2ம் மயா க்ருத: ॥ (15)

ரக்ஷதா து மயா வ்ருத்தமபவாத3ம் ச ஸர்வஶ: ।
ப்ரக்2யாதஸ்யாத்மவம்ஶஸ்ய ந்யங்க3ம் ச பரிமார்ஜதா ॥ (16)

ப்ராப்தசாரித்ரஸந்தே3ஹா மம ப்ரதிமுகே2 ஸ்தி2தா ।
தீ3போ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே த்3ருட4ம் ॥ (17)

தத்3க3ச்ச2 ஹ்யப்4யநுக்ஞாதா யதே2ஷ்டம் ஜநகாத்மஜே ।
ஏதா த3ஶ தி3ஶோ ப4த்3ரே கார்யமஸ்தி ந மே த்வயா ॥ (18)

க: புமாந் ஹி குலே ஜாத: ஸ்த்ரியம் பரக்3ருஹோஷிதாம் ।
தேஜஸ்வீ புநராத3த்3யாத் ஸுஹ்ருல்லேக்2யேந சேதஸா ॥ (19)

ராவணாங்கபரிப்4ரஷ்டாம் த்3ருஷ்டாம் து3ஷ்டேந சக்ஷுஷா ।
கத2ம் த்வாம் புநராத3த்3யாம் குலம் வ்யபதி3ஶந் மஹத் ॥ (20)

தத3ர்த2ம் நிர்ஜிதா மே த்வம் யஶ: ப்ரத்யாஹ்ருதம் மயா ।
நாஸ்தி மே த்வய்யபி4ஷ்வங்கோ3 யதே2ஷ்டம் க3ம்யதாமித: ॥ (21)

இதி ப்ரவ்யாஹ்ருதம் ப4த்3ரே மயைதத் க்ருதபு3த்3தி4நா ।
லக்ஷ்மணே ப4ரதே வா த்வம் குரு பு3த்3தி4ம் யதா2ஸுக2ம் ॥ (22)

ஸுக்3ரீவே வாநரேந்த்3ரே வா ராக்ஷஸேந்த்3ரே விபீ4ஷணே ।
நிவேஶய மந: ஸீதே யதா2 வா ஸுக2மாத்மந: ॥ (23)

ந ஹி த்வாம் ராவணோ த்3ருஷ்ட்வா தி3வ்யரூபாம் மநோரமாம் ।
மர்ஷயேத சிரம் ஸீதே ஸ்வக்3ருஹே பரிவர்திநீம் ॥ (24)

தத: ப்ரியார்ஹஶ்ரவணா தத3ப்ரியம்
ப்ரியாதுபஶ்ருத்ய சிரஸ்ய மைதி2லீ ।
முமோச பா3ஷ்பம் ஸுப்4ருஶம் ப்ரவேபிதா
க3ஜேந்த்3ரஹஸ்தாபி4ஹதேவ ஸல்லகீ ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 அஷ்டாத3ஶோத்தரஶததம: ஸர்க3: ॥

ஏகோநவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க3:

ஹுதாஶநப்ரவேஶ:

ஏவமுக்தா து வைதே3ஹீ பருஷம் ரோமஹர்ஷணம் ।
ராக4வேண ஸரோஷேண ப்4ருஶம் ப்ரவ்யதி2தாப4வத் ॥ (1)

உனக்கு நலமே விளைக! நான் நன்னெறிகளைப் பின்பற்றுபவன். (இராவணன், உன்னைக் கவர்ந்து சென்றதால்,) பலவாறான அபவாதங்கள் உண்டாகிவிட்டன. நெடுங்காலமாக மிகவும் புகழ் பெற்ற என் குலத்திற்குக் களங்கமும் தலைகுனிவும் ஏற்பட்டுவிட்டது. அதை, என் நண்பர்களின் வீரபராக்கிரமத்தினால் நீக்கிவிட்டேன். பயங்கரமான போரை நான் மேற்கொண்டது உனக்காக இல்லை. இதை, நீ தெரிந்துகொள்ள வேண்டும். (15,16)

என் எதிரில் நிற்கும் உன் நடத்தை குறித்து, நான் ஐயப்படுவதற்குப் போதிய காரணம் இருக்கிறது. கண்வலி கொண்டவனுக்கு விளக்கின் ஒளி ஆகாததைப் போல, நீ எனக்கு வேண்டாதவளாகத் தோன்றுகிறாய். நல்லணங்கே! ஜனகர் புதல்வியே! இனி, எனக்கு உன்னால் ஆகவேண்டிய காரியம் எதுவுமில்லை. உனக்கு அனுமதி கொடுத்துவிட்டேன். பரந்து கிடக்கும் பத்துத் திசைகளில் நீ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். (எட்டுத் திசைகள் என்று சொல்லாமல், பத்துத் திசைகள் என்று இராமன் கூறியது விகற்பமாகத் தோன்றலாம். ஆனால், நிறைவாக எட்டுத் திசைகளில் எங்கும் போகாமல், பத்தாவது திசையான பூமிக்கே சீதை சென்றாள் – உத்தரகாண்டம், 97வது ஸர்க்கம்.) (17,18)

நற்குலத்தில் பிறந்த எந்த ஒரு வீரபுருஷன்தான், அயலார் வீட்டில் தங்கியிருந்த தன் மனைவியை, மறுபடியும் உளமார ஏற்றுக் கொள்வான்? (19)

இராவணன், உன்னைத் தன் மடியில் வைத்துத் தூக்கிச் சென்றிருக்கிறான்; ஆசை பொங்கும் தீய கண்களால் பார்த்திருக்கிறான். அப்படிப்பட்ட உன்னை, மாசற்ற உன்னத குடியில் பிறந்தவன் என்று பெருமை பாராட்டிக் கொள்ளும் நான், எவ்வாறு மறுபடியும் ஏற்றுக் கொள்வேன்? (20)

எனக்கு ஏற்பட்ட இகழ்ச்சியைக் களைந்து, இழந்த கீர்த்தியை மீண்டும் பெறவேண்டும் என்பதற்காகவே, நான் போராடி உன்னை மீட்டேன். எனக்கு உன்னிடம் பற்றுதல் இல்லை. அதனால், உன் இஷ்டப்படி இங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் போகலாம். நங்காய்! நான் நன்றாக ஆலோசித்தபின், எடுத்த தீர்மானத்தை உன்னிடம் கூறிவிட்டேன். உன் விருப்பம் போல, லட்சுமணனிடத்திலோ பரதனிடத்திலோ இருப்பது குறித்து, நீ தீர்மானம் செய்து கொள். (21,22)

சீதே! ('இனி, நான் அயோத்திக்குத் திரும்பி வரமாட்டேன்' என்று நீ முடிவு செய்தால்,) வானர மன்னனான சுக்ரீவனிடத்திலோ, அரக்கவேந்தனான விபீஷணனிடமோ அல்லது உனக்கு விருப்பமான இடத்திலோ இருக்கலாம். சீதே! இராவணன், நிகரில்லாத அழகுடைய உன்மேல் ஆசை வைத்து உன்னை எடுத்துக்கொண்டு போய், தன் வீட்டில் வெகுகாலம் வைத்திருந்தான். அவன் வசத்திலிருந்த உன்னை, அவன் தொடாமல் இருந்திருப்பானா?'' (23,24)

எப்போதும் இனிய மொழிகளையே கேட்கத்தகுந்த சீதை, வெகுநாட்களுக்குப் பின் சந்தித்த கணவரிடமிருந்து சுடுசொற்களைக் கேட்டவுடன், யானையின் துதிக்கையால் அடிபட்ட யானைவணங்கிக்கொடி (ஒருவகை பலவீனமான கொடி) போல் மிகவும் உடல் நடுங்கிக் கண்ணீர் உகுத்தாள். (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பத்தொன்பது

சீதையின் அக்னிப் பிரவேசம்

இவ்வாறு, குரூரமான மயிர்க்கூச்செறியச் செய்யும் சொற்களைக் கோபத்திலிருந்த இராமன் கூறக் கேட்ட சீதை மிகவும் மனம் தவித்தாள். (1)

ஸா தத$_3$ஶ்ருதபூர்வம் ஹி ஜநே மஹதி மைதி$_2$லீ ।
ஶ்ருத்வா ப$_4$ர்த்ருவசோ ரூக்ஷம் லஜ்ஜயா வ்ரீடி$_3$தாப$_4$வத் ॥ (2)

ப்ரவிஶந்தீவ கா$_3$த்ராணி ஸ்வாந்யேவ ஜநகாத்மஜா ।
வாக்ஶல்யைஸ்தை: ஸஶல்யேவ ப்$_4$ருஶமஶ்ருண்யவர்தயத் ॥ (3)

ததோ பா$_3$ஷ்பபரிக்லிஷ்டம் ப்ரமார்ஜந்தீ ஸ்வமாநநம் ।
ஶனைர்க$_3$த்$_3$க$_3$த$_3$யா வாசா ப$_4$ர்தாரமித$_3$மப்$_3$ரவீத் ॥ (4)

கிம் மாமஸத்$_3$ருஶம் வாக்யமீத்$_3$ருஶம் ஶ்ரோத்ரதா$_3$ருணம் ।
ரூக்ஷம் ஶ்ராவயஸே வீர ப்ராக்ருத: ப்ராக்ருதாமிவ ॥ (5)

ந ததா$_2$ஸ்மி மஹாபா$_3$ஹோ யதா$_2$ த்வமவக$_3$ச்ச$_2$ஸி ।
ப்ரத்யயம் க$_3$ச்ச$_2$ மே யேந சாரித்ரேணைவ தே ஶபே ॥ (6)

ப்ருத$_2$க்ஸ்த்ரீணாம் ப்ரசாரேண ஜாதிம் தாம் பரிஶங்கஸே ।
பரித்யஜேமாம் ஶங்காம் து யதி$_3$ தேऽஹம் பரீக்ஷிதா ॥ (7)

யத்$_3$யஹம் கா$_3$த்ரஸம்ஸ்பர்ஶம் க$_3$தாஸ்மி விவஶா ப்ரபோ$_4$ ।
காமகாரோ ந மே தத்ர தை$_3$வம் தத்ராபராத்$_4$யதி ॥ (8)

மத$_3$தீ$_4$நம் து யத்தந்மே ஹ்ருத$_3$யம் த்வயி வர்ததே ।
ப்ராதீ$_4$நேஷு கா$_3$த்ரேஷு கிம் கரிஷ்யாம்யநீஶ்வரா ॥ (9)

ஸஹ ஸம்வ்ருத்$_3$த$_4$பா$_4$வாச்ச ஸம்ஸர்கே$_3$ண ச மாநத$_3$ ।
யத்$_3$யஹம் தே ந விக்ஞாதா ஹதா தேநாஸ்மி ஶாஶ்வதம் ॥ (10)

ப்ரேஷிதஸ்தே யதா$_3$ வீரோ ஹநுமாநவலோகக: ।
லங்காஸ்தா$_2$ஹம் த்வயா வீர கிம் ததா$_3$ ந விஸர்ஜிதா ॥ (11)

ப்ரத்யக்ஷம் வாநரேந்த்$_3$ரஸ்ய த்வத்$_3$வாக்யஸமநந்தரம் ।
த்வயா ஸம்த்யக்தயா வீர த்யக்தம் ஸ்யாஜ்ஜீவிதம் மயா ॥ (12)

ந வ்ருதா$_2$ தே ஶ்ரமோऽயம் ஸ்யாத்ஸம்ஶயே ந்யஸ்ய ஜீவிதம் ।
ஸுஹ்ருஜ்ஜநபரிக்லேஶோ ந சாயம் நிஷ்ப$_2$லஸ்தவ ॥ (13)

த்வயா து நரஶார்தூ$_3$ல க்ரோத$_4$மேவாநுவர்ததா ।
லகு$_4$நேவ மநுஷ்யேண ஸ்த்ரீத்வமேவ புரஸ்க்ருதம் ॥ (14)

அபதே$_3$ஶோ ந ஜநகாந்நோத்பத்திர்வஸுதா$_4$தலாத் ।
மம வ்ருத்தம் ச வ்ருத்தக்ஞ ப$_3$ஹு தே ந புரஸ்க்ருதம் ॥ (15)

ந ப்ரமாணீக்ருத: பாணிர்பா$_3$ல்யே பா$_3$லேந பீடி$_3$த: ।
மம ப$_4$க்திஶ்ச ஶீலம் ச ஸர்வம் தே ப்ருஷ்ட$_2$த: க்ருதம் ॥ (16)

இதற்கு முன் இராமனிடமிருந்து இத்தகைய வார்த்தைகளைக் கேட்டறியாத சீதை, ஏராளமான வானரர்களும் அரக்கர்களும் கூடியிருக்கும் கூட்டத்தில், கணவருடைய மிகக்கொடுமையான சொற்களைக் கேட்டு, நாணத்தால் தலைகுனிந்து கொண்டாள். ஜானகி, தன் சரீரத்தைக் குறுக்கிக் கொண்டாள்; அவருடைய வசை மொழிகள் என்ற கூர்மையான அம்புகளால் முற்றிலும் புண்படுத்தப்பட்டு, வெள்ளமெனக் கண்ணீரைப் பெருக்கினாள். (2,3)

பின்னர், கண்ணீரால் நனைந்திருந்த முகத்தைத் துடைத்துக் கொண்டு, கணவரைப் பார்த்து தழுதழுத்த குரலில் மெதுவாக பின்வருமாறு கூறினாள்— ''வீரரே! ஒரு பாமர மனிதன், ஒரு பாமரப் பெண்ணிடம் பேசுவதைப் போல, தங்கள் உயர் தன்மைக்குப் பொருந்தாததும், கேட்பதற்குக் கடுமையானதுமான கொடிய சொல்லை, என்னிடம் ஏன் பேசுகின்றீர்கள்? (4,5)

பெருந்தோளரே! தாங்கள் நினைப்பது போல் நான் மாசு படிந்தவள் அல்லள். என் கற்பின் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன், நான் குற்றமற்றவள். பண்பில்லாத பெண்களின் நடத்தையை மனத்தில் வைத்துக் கொண்டு, பெண் இனத்திடமே சந்தேகம் கொள்கிறீர்கள். நான், தங்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சந்தேகத்தை விட்டொழியுங்கள். (6,7)

அனைத்தையும் ஆள்பவரே! சகாயமில்லாமல் தன்னந்தனியாக இருந்த என்னை ஒரு கயவன் தொட்டான் என்றால், அதற்கு நான் இணங்கினேன் என்று கொள்ளத் தகுமா? இந்த விஷயத்தில் விதி அல்லவா குற்றம் செய்திருக்கிறது? எப்போதும் என் வசத்திலிருக்கும் என் உள்ளம் தங்களிடமே ஆழ்ந்திருக்கிறது. (அதை யாரும் கைப்பற்ற முடியாது.) தன்னந்தனியாக இருந்த என்னை ஒருவன் கைப்பற்றினால், நான் எவ்வாறு தடுத்து நிறுத்துவேன்? (8,9)

பிறருக்கு மதிப்புக் கொடுக்கும் பெருந்தன்மையரே! நான், தங்களுடன் வெகுகாலம் இருந்திருக்கிறேன்; கூடவே வளர்ந்திருக்கிறேன். அப்படியிருந்தும், என் உள்ளத்தைத் தாங்கள் அறிந்துகொள்ளவில்லை என்றால், நான் முற்றிலும் அழிந்தேன், ஐயகோ! (10)

வீரரே! நான் இருக்குமிடத்தைக் கண்டு வருவதற்காக மாவீரரான அனுமானை அனுப்பினீர்கள். நான், அப்போது இலங்கையில் (இராவணனின் கட்டுப்பாட்டில்) தான் இருந்தேன். (இராவணனின் வீட்டில் வெகுகாலம் இருந்தாய்; அதனால், சந்தேகம் – என்று இப்போது கூறுகிற அதே காரணத்தைக் கொண்டு,) அப்போதே என்னைத் துறந்திருக்கலாமே? (11)

வீரரே! தாங்கள் என்னைத் துறந்துவிட்டதாக அனுமான் மூலம் சொல்லி அனுப்பியிருந்தால், அந்தச் சொற்களைக் கேட்ட அடுத்த விநாடியே, அந்த வானரோத்தமனின் கண்ணெதிரிலேயே, நான் உயிரை விட்டிருப்பேனே? (12)

(அவ்வாறு, நான் உயிரைத் துறந்திருந்தால்) தாங்கள், தங்கள் உயிரைப் பணயம் வைத்து கோரமான போர் முதலியவற்றில் வீணாக ஈடுபட்டிருக்க மாட்டீர்கள். தங்கள் நண்பர்களும் காரணமில்லாமல் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டியிருந்திருக்காது. (13)

ஆண்புலி நிகர் வீரரே! தங்கள் மனத்தில் பெருஞ்சீற்றம் குடிகொண்டிருக்கிறது. அதனால், ஒரு கீழ்த்தர மனிதனைப்போல் என் நல்லியல்புகளை மறந்து, பண்பில்லாத யாரோ ஒரு நங்கை என்ற எண்ணம் கொண்டுவிட்டீர்கள். என் வரலாறு தெரிந்தவர், தாங்கள். நான் ஜனகரிடமிருந்து தோன்றியவள் அல்லள். வேள்விச்சாலையில், பூமியிலிருந்து புகழோடு தோன்றியவள். (நான், மற்ற மங்கைகளைப் போல் ஒரு தாய் வயிற்றிலிருந்து பிறக்காமல், மானுடம் கடந்த இயல்புகளுடன் தோன்றியவள் என்ற,) என் வரலாற்றை தாங்கள் மதிக்கவில்லை. (14,15)

இளம்பருவத்தில், தாங்கள் என் கரம் பற்றினீர்கள். (அப்போது, நாமிருவரும் எப்போதும் பிரியத்தோடும் ஒழுக்கத்தோடும் இருப்பதாக வேத மந்திரம் கூறினோம்.) ஆனால் தாங்கள், இப்போது என்னுடைய உறுதியான அன்பையும் நல்லொழுக்கத்தையும் மற்றுமுள்ள நற்பண்புகளையும் கருத்தில் கொள்ளாமல் புறந்தள்ளிவிட்டீர்கள்.'' (16)

ஏவம் ப்$_3$ருவாணா ருத$_3$தீ பா$_3$ஷ்பக$_3$த்$_3$க$_3$த$_3$பா$_4$ஷிணீ ।
அப்$_3$ரவீல்லக்ஷ்மணம் ஸீதா தீ$_3$நம் த்$_4$யாநபரம் ஸ்தி$_2$தம் ॥ (17)

சிதாம் மே குரு ஸௌமித்ரே வ்யஸநஸ்யாஸ்ய பே$_4$ஷஜம் ।
மித்$_2$யோபகா$_4$தோபஹதா நாஹம் ஜீவிதுமுத்ஸஹே ॥ (18)

அப்ரீதஸ்ய கு$_3$ணைர்ப$_4$ர்துஸ்த்யக்தாயா ஜநஸம்ஸதி$_3$ ।
யா க்ஷமா மே க$_3$திர்க$_3$ந்தும் ப்ரவேக்ஷ்யே ஹவ்யவாஹநம் ॥ (19)

ஏவமுக்தஸ்து வைதே$_3$ஹ்யா லக்ஷ்மண: பரவீரஹா ।
அமர்ஷவஶமாபந்நோ ராக$_4$வாநநமைக்ஷத ॥ (20)

ஸ விக்ஞாய ததஶ்ச$_2$ந்த$_3$ம் ராமஸ்யாகாரஸூசிதம் ।
சிதாம் சகார ஸௌமித்ரிர்மதே ராமஸ்ய வீர்யவாந் ॥ (21)

அதோ$_4$முக$_2$ம் ததா$_3$ ராமம் ஶநை: க்ருத்வா ப்ரத$_3$க்ஷிணம் ।
உபாஸர்பத வைதே$_3$ஹீ தீ$_3$ப்யமாநம் ஹுதாஶநம் ॥ (22)

ப்ரணம்ய தே$_3$வதாப்$_4$யஶ்ச ப்$_3$ராஹ்மணேப்$_4$யஶ்ச மைதி$_2$லீ ।
ப$_3$த்$_3$தா$_4$ஞ்ஜலிபுடா சேத$_3$முவாசாக்$_3$நிஸமீபத: ॥ (23)

யதா$_2$ மே ஹ்ருத$_3$யம் நித்யம் நாபஸர்பதி ராக$_4$வாத் ।
ததா$_2$ லோகஸ்ய ஸாக்ஷீ மாம் ஸர்வத: பாது பாவக: ॥ (24)

யதா$_2$ மாம் ஶுத்$_3$த$_4$சாரித்ராம் து$_3$ஷ்டாம் ஜாநாதி ராக$_4$வ: ।
ததா$_2$ லோகஸ்ய ஸாக்ஷீ மாம் ஸர்வத: பாது பாவக: ॥ (25)

கர்மணா மநஸா வாசா யதா$_2$ நாதிசராம்யஹம் ।
ராக$_4$வம் ஸர்வதர்மக்ஞம் ததா$_2$ மாம் பாது பாவக: ॥ (26)

ஆதி$_3$த்யோ ப$_4$க$_3$வாந் வாயுர்தி$_3$ஶஶ்சந்த்$_3$ரஸ்ததை$_2$வ ச ।
அஹஶ்சாபி ததா$_2$ ஸந்த்$_4$யே ராத்ரிஶ்ச ப்ருதி$_2$வீ ததா$_2$ ॥
யதா$_2$ந்யே஽பி விஜாநந்தி ததா$_2$ சாரித்ரஸம்யுதாம் ॥ (27)

ஏவமுக்த்வா து வைதே$_3$ஹீ பரிக்ரம்ய ஹுதாஶநம் ।
விவேஶ ஜ்வலநம் தீ$_3$ப்தம் நி:ஸங்கே$_3$நாந்தராத்மநா ॥ (28)

ஜந: ஸ ஸுமஹாந்ஸ்த்ரஸ்தோ பா$_3$லவ்ருத்$_3$த$_4$ஸமாகுல: ।
த$_3$த$_3$ர்ஶ மைதி$_2$லீம் தத்ர ப்ரவிஶந்தீம் ஹுதாஶநம் ॥ (29)

ஸா தப்தநவஹேமாபா$_4$ தப்தகாஞ்சநபூ$_4$ஷணா ।
பபாத ஜ்வலநம் தீ$_3$ப்தம் ஸர்வலோகஸ்ய ஸந்நிதௌ$_4$ ॥ (30)

த$_3$த்$_3$ருஶுஸ்தாம் மஹாபா$_4$க$_3$ம் ப்ரவிஶந்தீம் ஹுதாஶநம் ।
ஸீதாம் க்ருத்ஸ்நாஸ்த்ரயோ லோகா: புண்யாமாஜ்யாஹுதீமிவ ॥ (31)

கண்ணீர் மல்க அழுதுகொண்டு தழுதழுத்த குரலில் மேற்கண்டவாறு பேசிய சீதை, பரிதாபமாகச் சிந்தனையில் மூழ்கி நின்று கொண்டிருந்த லட்சுமணனைப் பார்த்துச் சொன்னாள்— (17)

''சுமித்திரையின் புதல்வரே! எனக்கு ஏற்பட்டுள்ள துயரத்திற்கு மருந்தே இல்லை – நெருப்பைத் தவிர! ஆகவே, கட்டைகளை அடுக்கி, நெருப்பு மூட்டுவீராக. பொய்யான பழியைச் சுமந்துகொண்டு, நான் உயிர்வாழ விரும்பவில்லை. (18)

என் குணங்களால், என் கணவர் திருப்தியடையவில்லை. இத்தனை மக்களுக்கு எதிரே என்னைத் துறந்துவிட்டார். நான் செல்லத்தக்க இடம் எதுவோ, (அந்த விண்ணுலகத்திற்குச் செல்ல,) அந்த இடத்தை உடனே அடைவதற்காக அக்னிதேவனைப் புகலடைவேன்.'' (19)

இவ்வாறு, சீதாப்பிராட்டியார் கூறியதும் எதிரிகளை மாய்க்கும் வீரனான லட்சுமணன், கோபம் கனிந்த நெஞ்சத்தினனாக, இராமனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தான். (சீதையினுடைய சொற்களைக் கேட்ட பிறகாவது, இராமன் மனம் மாறியிருக்காதா? – என்றறியும் நப்பாசை.) (20)

வீரம் மிகுந்த இலக்குவன், இராமனுடைய உள்ளத்தை அவர் முகக்குறிப்பால் அறிந்துகொண்டு, (மறுபேச்சுப் பேசாமல்) கட்டைகளை அடுக்கினான். (அடுக்கி, நெருப்பைப் பற்ற வைத்தான்.) (21)

அப்போது சீதை, தலையைக் குனிந்து கொண்டு நிற்கும் இராமனை மெதுவாக வலம் வந்துவிட்டு, கொழுந்துவிட்டெரியும் அக்னியின் அருகில் சென்று நின்றாள். (22)

தெய்வங்களுக்கும் வேதவித்தகர்களுக்கும் மனத்தால் நமஸ்காரம் செய்துவிட்டு, இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, அக்னியின் எதிரில் நின்று, சீதை கூறினாள்— (23)

''என்னுடைய உள்ளம், ஸ்ரீராமனிடமிருந்து ஒரு விநாடி நேரம்கூட விலகி இருந்ததில்லை என்பது உண்மையானால், உலகத்திற்குச் சாட்சியாக விளங்கும் அக்னிதேவர், என்னை எல்லாப்புறங்களிலும் காப்பாற்றுவாராக. (24)

அப்பழுக்கில்லாத என்னை மாசுபடிந்தவளாக நினைக்கிறார். நான், ஒழுக்கம் குறையாதவள் என்பது உண்மையானால், உலகத்திற்குச் சாட்சியாக விளங்கும் அக்னிதேவர், என்னை எல்லாப்புறங்களிலும் காப்பாற்றுவாராக. (25)

எல்லா அறநெறிகளையும் அறிந்தவரான இராமப்பிரபுவை, நான், என்னுடைய மனம்–சொல்–செயல்களால் ஒருபோதும் மீறிச் சென்றதில்லை என்பது உண்மையானால், சூரிய பகவான், வாயு, திசைகள், சந்திரன், பகல், இரு சந்தி காலங்கள், இரவு, பூதேவி, மற்றுமுள்ள (உலக சாட்சி பூதர்களான) தேவதைகள் ஆகியோர், நான் ஒழுக்கம் தவறாதவள் என்பதற்குச் சாட்சியாக இருக்கிறார்கள் என்றால், அக்னிதேவர் என்னைக் காப்பாற்றுவாராக.'' (26,27)

ஜானகிதேவி, இவ்வாறு சூளுரைத்துவிட்டு, அக்னியை வலம் வந்து, கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கும் அக்னியில் உடற்பற்று இல்லாத உள்ளத்துடன் பிரவேசித்தாள். (28)

அப்போது, சிறியவர்களும் முதியவர்களும் நிறைந்த பெரிய கூட்டம், பயத்தால் நடுங்கியவண்ணம், சீதாப்பிராட்டியார் அக்னியில் புகுவதைக் கண்டது. (29)

உருக்கிய பொன்னொளி கொண்டு சொக்கத் தங்கத்தாலான அணிகலன்கள் அணிந்திருந்த அவள், எல்லா மக்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அனல் பறக்கும் அக்னியில் குதித்தாள். (30)

மூவுலகத்தார் அனைவரும், வேள்வியில் சொரியப்படும் புனிதமான நெய் ஆகுதியைப் போல் பெரும்பேறு பெற்றவளான சீதை, நெருப்புக்குள் நுழைவதைப் பார்த்தார்கள். (31)

ப்ரசுக்ருஶு: ஸ்த்ரிய: ஸர்வாஸ்தாம் த்3ருஷ்ட்வா ஹவ்யவாஹநே ।
பதந்தீம் ஸம்ஸ்க்ருதாம் மந்த்ரைர்வஸோர்த4ாராமிவாத்4வரே ॥ (32)

த3த்3ருஶுஸ்தாம் த்ரயோ லோகா தே3வக3ந்த4ர்வத3ாநவா: ।
ஶப்தாம் பதந்தீம் நிரயே த்ரிதி3வாத்3தே3வதாமிவ ॥ (33)

தஸ்யாமக்3நிம் விஶந்த்யாம் து ஹா ஹேதி விபுல: ஸ்வந: ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச ஸம்ப3பூ4வாத்3பு4தோபம: ॥ (34)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஏகோநவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க3: ॥

விம்ஶத்யுத்தரஶததம: ஸர்க3:

ப்3ரஹ்மக்ருதராமஸ்தவ:

ததோ ஹி து3ர்மநா ராம: ஶ்ருத்வைவ வத3தாம் கி3ர: ।
த3த்4யௌ முஹூர்தம் த4ர்மாத்மா ப3ாஷ்பவ்யாகுலலோசந: ॥ (1)

ததோ வைஶ்ரவணோ ராஜா யமஶ்சாமித்ரகர்ஶந: ।
ஸஹஸ்ராக்ஷோ மஹேந்த்3ரஶ்ச வருணஶ்ச பரந்தப: ॥ (2)

ஷட3ர்த4நயந: ஸ்ரீமாந் மஹாதே3வோ வ்ருஷத்4வஜ: ।
கர்தா ஸர்வஸ்ய லோகஸ்ய ப்3ரஹ்மா ப்3ரஹ்மவித3ாம் வர: ॥ (3)

ஏதே ஸர்வே ஸமாக3ம்ய விமாநை: ஸூர்யஸந்நிபை4: ।
ஆக3ம்ய நக3ரீம் லங்காமபி4ஜக்3முஶ்ச ராக4வம் ॥ (4)

தத: ஸஹஸ்தாப4ரணாந் ப்ரக்3ருஹ்ய விபுலாந் பு4ஜாந் ।
அப்3ருவந்ஸ்த்ரித3ஶஶ்ரேஷ்ட2ா: ப்ராஞ்ஜலிம் ராக4வம் ஸ்தி2தம் ॥ (5)

கர்தா ஸர்வஸ்ய லோகஸ்ய ஶ்ரேஷ்டே2ா க்ஞாநவதாம் வர: ।
உபேக்ஷஸே கத2ம் ஸீதாம் பதந்தீம் ஹவ்யவாஹநே ॥ (6)

கத2ம் தே3வக3ணஶ்ரேஷ்ட2மாத்மாநம் நாவபு3த்4யஸே ।
ருதத4ாமா வஸு: பூர்வம் வஸூநாம் த்வம் ப்ரஜாபதி: ॥ (7)

த்ரயாணாம் த்வம் ஹி லோகாநாமாதி3கர்தா ஸ்வயம்ப்ரபு4: ।
ருத்3ராணாமஷ்டமோ ருத்3ர: ஸாத்4யாநாமஸி பஞ்சம: ॥ (8)

அஶ்விநௌ சாபி தே கர்ணௌ சந்த்3ரஸூர்யௌ ச சக்ஷுஷீ ।
அந்தே சாதெ3ள ச லோகாநாம் த்3ருஶ்யஸே த்வம் பரந்தப ॥
உபேக்ஷஸே ச வைதே3ஹீம் மாநுஷ: ப்ராக்ருதோ யத2ா ॥ (9)

இத்யுக்தோ லோகபாலைஸ்தை: ஸ்வாமீ லோகஸ்ய ராக4வ: ।
அப்3ரவீத்த்ரித3ஶஶ்ரேஷ்ட2ாந் ராமோ த4ர்மப்4ருதாம் வர: ॥ (10)

பெண்களனைவரும் வேள்வியில் மந்திரங்களால் புனிதமாக்கப்பட்ட வஸோர்தாரை போல், (மந்திரம் முடியும் வரையில், இடைவிடாது பெருமளவு நெய்யை விடுவதைப் போல்,) அக்னியில் வீழ்ந்து கொண்டிருக்கும் அவளைப் பார்த்துக் கதறினார்கள். (32)

தேவலோகத்து மடந்தை ஒருத்தி, ஏதோ ஒரு காரணத்தால் சபிக்கப்பட்டு நரகத்தில் விழுவதைப் போல, மூன்றுலக மக்களும் தேவ–கந்தர்வ–தானவர்களும், தீயில் விழும் அவளைக் கண்டார்கள். (33)

அவள் அக்னியில் பிரவேசித்தபோது, அரக்கர்களும் வானரர்களும், மனம் துடித்து ஆ... ஆ... என்று எழுப்பிய குரல் உவமையற்ற அதிசயமாக ஒலித்தது. (34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றுப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றிருபது

பிரும்மா, இராமனைத் துதித்தல்!

இவ்வாறு எழுப்பப்பட்ட அவலக்குரலைக் கேட்ட இராமன், அதனால் மனக்குழப்பமடைந்து, கண்ணீரால் கலங்கிய கண்களுடன் சிறிதுநேரம் வரை தனக்குள் ஆலோசிக்கத் தொடங்கினார். (1)

இதனிடையில், குபேரன், எதிரிகளைத் தூள்தூளாக்கும் யமன், ஆயிரங்கண் படைத்த தேவேந்திரன், எதிரிகளை வாட்டும் வருணன், முக்கண்ணரும் ரிஷபக்கொடி உடையவரும் மகிமை மிக்கவருமான மகாதேவர், எல்லா உலகங்களையும் படைப்பவரும் பிரும்மஞானிகளில் தலையாயவருமான பிரும்மா ஆகியோர், சூரியனைப் போல் ஒளிவீசும் தத்தம் விமானங்களில் இலங்கைக்கு வந்து, இராமனை அணுகி வந்தார்கள். (2–4)

இராமபிரான், அவர்கள் எதிரில் கைகூப்பியபடி எழுந்து நின்றார். சிறந்த தேவதைகளாகிற அவர்கள், கை அணிகள் அணியப்பெற்ற நீண்ட கைகளை உயரத் தூக்கிக் கொண்டு, இராமனைப் பார்த்துச் சொன்னார்கள்— (5)

''நீங்கள், எல்லா உலகங்களையும் படைப்பவர்; உத்தமர்; ஞானிகளுள் முதல்வர். சீதை அக்னியில் குதிப்பதைப் பார்த்தும்கூட, அவளைத் தடுக்காமலிருப்பது ஏன்? (6)

நீங்கள், தேவகணங்களில் முதன்மையானவர் என்பதை ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? நீங்கள், மிகத்தொன்மையான காலத்தில் அஷ்ட வசுக்களில் எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் தலைவரான ரிததாமா. (7)

மூன்று உலகங்களையும் முதலில் படைத்த நீங்கள் தனிப் பெருந்தலைவர்; ருத்ர கணங்களுள் எட்டாவது ருத்ரர் (சங்கரர்); சாத்யர்களுள் ஐந்தாவதான (வீர்யவான் என்ற) சாத்யர். (8)

உங்களின் இரு செவிகளும் அசுவினீ தேவர்கள்; இரு கண்களும் சந்திர–சூரியர்கள். எதிரிகளை மாய்ப்பவரே! உலகத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் நீங்கள்தான் இருக்கிறீர்கள். அப்படியிருந்தும் அப்பாவி மனிதனைப் போல, சீதையை அசட்டை செய்கிறீர்கள்.'' (9)

உலகைப் பாதுகாக்கும் அந்த லோகபாலர்களால் இவ்வாறு சொல்லப்பட்ட, தருமத்தை நிலைநிறுத்துபவர்களில் தலையாயவரும் உலக முதல்வருமான இராமன் தேவதோத்தமர்களைப் பார்த்து, பின்வருமாறு கூறினார்— (10)

ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் த$_3$ஶரத$_2$ாத்மஜம் ।
யோऽஹம் யஸ்ய யதஸ்சாஹம் ப$_4$க$_3$வாந்ஸ்தத்$_3$ப்$_3$ரவீது மே ॥ (11)

இதி ப்$_3$ருவந்தம் காகுத்ஸ்த$_2$ம் ப்$_3$ரஹ்மா ப்$_3$ரஹ்மவித$_3$ாம் வர: ।
அப்$_3$ரவீச்ச்$_2$ருணு மே ராம ஸத்யம் ஸத்யபராக்ரம ॥ (12)

ப$_4$வாந்நாராயணோ தே$_3$வ: ஸ்ரீமாந்ஶ்சக்ராயுதே$_4$ா விபு$_4$: ।
ஏகஶ்ருங்கோ$_3$ வராஹஸ்த்வம் பூ$_4$தப$_4$வ்யஸபத்நஜித் ॥ (13)

அக்ஷரம் ப்$_3$ரஹ்ம ஸத்யம் ச மத்$_4$யே சாந்தே ச ராக$_4$வ ।
லோகாநாம் த்வம் பரோ த$_4$ர்மோ விஷ்வக்ஸேநஶ்சதுர்பு$_4$ஜ: ॥ (14)

ஶார்ங்க$_3$த$_4$ந்வா ஹ்ருஷீகேஶ: புருஷ: புருஷோத்தம: ।
அஜித: க$_2$ட்$_3$க$_3$த்$_4$ருத்$_3$விஷ்ணு: க்ருஷ்ணஶ்சைவ ப்$_3$ருஹத்$_3$ப$_3$ல: ॥ (15)

ஸேநாநீர்க்$_3$ராமணீஶ்ச த்வம் பு$_3$த்$_3$தி$_4$: ஸத்த்வம் க்ஷமா த$_3$ம: ।
ப்ரப$_4$வஶ்சாப்யயஶ்ச த்வமுபேந்த்$_3$ரோ மது$_4$ஸூத$_3$ந: ॥ (16)

இந்த்$_3$ரகர்மா மஹேந்த்$_3$ரஸ்த்வம் பத்$_3$மநாபே$_4$ா ரணாந்தக்ருத் ।
ஶரண்யம் ஶரணம் ச த்வாமாஹுர்தி$_3$வ்யா மஹர்ஷய: ॥ (17)

ஸஹஸ்ரஶ்ருங்கோ$_3$ வேத$_3$ாத்மா ஶதஜிஹ்வோ மஹர்ஷப$_4$: ।
த்வம் த்ரயாணாம் ஹி லோகாநாமாதி$_3$கர்தா ஸ்வயம்ப்ரபு$_4$: ॥
ஸித்$_3$த$_4$ாநாமபி ஸாத்$_4$யாநாமாஶ்ரயஶ்சாஸி பூர்வஜ: ॥ (18)

த்வம் யக்ஞஸ்த்வம் வஷட்காரஸ்த்வமோங்கார: பரந்தப: ।
ப்ரப$_4$வம் நித$_4$நம் வா தே ந விது$_3$: கோ ப$_4$வாநிதி ॥ (19)

த்$_3$ருஶ்யஸே ஸர்வபூ$_4$தேஷு ப்$_3$ராஹ்மணேஷு ச கோ$_3$ஷு ச ।
தி$_3$க்ஷு ஸர்வாஸு க$_3$க$_3$நே பர்வதேஷு வநேஷு ச ॥ (20)

ஸஹஸ்ரசரண: ஸ்ரீமாஞ்ஶதஶீர்ஷ: ஸஹஸ்ரத்$_3$ருக் ।
த்வம் த$_4$ாரயஸி பூ$_4$தாநி வஸுத$_4$ாம் ச ஸபர்வதாம் ॥ (21)

அந்தே ப்ருதி$_2$வ்யா: ஸலிலே த்$_3$ருஶ்யஸே த்வம் மஹோரக$_3$: ।
த்ரீந்(ல்)லோகாந் த$_4$ாரயந் ராம தே$_3$வக$_3$ந்த$_4$ர்வத$_3$ாநவாந் ॥ (22)

அஹம் தே ஹ்ருத$_3$யம் ராம ஜிஹ்வா தே$_3$வீ ஸரஸ்வதீ ।
தே$_3$வா க$_3$ாத்ரேஷு ரோமாணி நிர்மிதா ப்$_3$ரஹ்மணா ப்ரபே$_4$ா ॥ (23)

''தேவர்களே! நான், தசரதன் புதல்வன்; இராமன் என்று பெயருடைய மானுடன் – என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். (ஆனால், நீங்களோ வேறுவிதமாகச் சொல்கிறீர்கள்!) ஆகவே, நான் யார்? எவருடன் சம்பந்தமுடையவன்? எதற்காகப் பிறந்தேன்? – என்ற விவரங்களை நீங்கள்தான் கூறவேண்டும்?'' (11)

இவ்வாறு கூறிய இராமனைப் பார்த்து, பிரும்மஞானிகளுள் முதல்வரான பிரும்மா, ''சத்தியமான பராக்கிரமம் படைத்த இராமா! நான், தேவரகசியமான உண்மையைக் கூறப் போகிறேன். அதைக் கேளுங்கள்'' என்றார். (12)

''தாங்கள், மகாலட்சுமியை விட்டு என்றும் பிரியாதவரும், சக்கராயுதம் ஏந்தியவரும், எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பவருமான சாட்சாத் நாராயணன்; (கடலுக்கு அடியிலிருந்து மேலே பூமியைக் கொண்டு வருவதற்காக) ஒற்றைக் கொம்புடன் தோன்றிய வராகமூர்த்தி, தாங்கள்; சென்ற காலங்களிலும் தேவர்களின் பகைவர்களை அழித்தீர்கள்; எதிர்காலத்திலும் அழிப்பீர்கள். (13)

இராகவா! என்றைக்கும் அழிவில்லாத பரப்பிரும்மம், தாங்கள்; சத்தியத்தின் திருவடிவம்; உலகத் தோற்றத்தின் துவக்கத்திலும் மத்தியிலும் இறுதியிலும் இருப்பவர்; தாங்கள்தான் எல்லா உலகங்களுக்கும் அறநெறியைக் காட்டுபவர்; நான்குவிதமான புருஷார்த்தங்களையும் ஒரே சமயத்தில் அளிக்கும் நான்கு திருக்கரங்களை உடையவர். (14)

தாங்கள் சார்ங்கம் என்ற வில்லைக் கையில் தாங்கியிருப்பவர்; புலன்களை அடக்கி ஆள்பவராதலால், ஹ்ருஷீகேசர்; எல்லா உயிர்களுக்குள்ளும் விளங்கும் அந்தர்யாமி; புருஷோத்தமர்; எவராலும் வெல்ல முடியாதவர் (தங்களைச் சரண் அடைந்தவர்களை, அப்போதே காப்பாற்றுகிறவர்); நந்தகம் என்ற கத்தியை ஏந்தி உலகத்தைப் பாதுகாக்கும் விஷ்ணு; (அடுத்த யுகத்தில் அவதரிக்கப் போகும்) மகாபலம் பொருந்திய கிருஷ்ணன். (15)

தாங்கள், தேவசைன்யத்தின் தலைவர்; எல்லா கிராமங்களுக்கும் (புனிதத்தலங்களுக்கும்) மேலாளர்; தாங்கள்தான் அறிவு, சத்துவம், பொறுமை, புலனடக்கம்; உலகத்தை உற்பத்தி செய்பவர்; அவ்வாறே, ஊழிக்காலத்தில் அழிப்பவர்; தேவேந்திரனுக்குத் தம்பியாகத் தோன்றியவர்; மது என்ற அசுரனைக் கொன்றவர். (16)

தாங்களே இந்திரனாக இருந்து, இந்திரனுடைய கடமைகளைச் செய்துவருபவர்; இந்திரனுக்கும் மேம்பட்டவர் (அமரர்கோனாலும் வணங்கப்படுபவர்); தொப்பூழில், பிரும்மா அமர்ந்திருக்கும் தாமரையை உடையவர்; போர்க்களத்தில் எல்லா எதிரிகளையும் மாய்த்து, போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வருபவர். வானுலக மாமுனிவர்கள், தாங்களே அடைக்கலம் புகத்தக்கவர் என்றும், தஞ்சமடைந்தவர்களைக் காப்பவர் என்றும் சொல்கிறார்கள். (17)

தாங்கள், ஆயிரக்கணக்கான சாகைகள் என்ற கொம்புகளையும், நூற்றுக்கணக்கான விதி–நியமங்கள் என்ற நாக்கையும் உடைய வேதமாகிற மகத்தான காளை; தாங்கள், மூன்று உலகங்களுக்கு மூலகாரணர்; தனிப்பெருந்தலைவர்; ஸித்தர்களுக்கும் ஸாத்யர்களுக்கும் அவர்களுக்கு முன்னர் தோன்றியவர்களுக்கும் தாங்களே புகலிடமாக விளங்குகிறீர்கள். (18)

தாங்கள்தான், யக்ஞம்; வஷட்காரம்; ஓங்காரம்; மிக்குயர்ந்த தவம். தங்கள் தோற்றத்தையும் முடிவையும், 'தாங்கள் யார்?' என்பதையும் வேதங்களும் வேதவல்லுநர்களும்கூட அறியமாட்டார்கள். எல்லா உயிர்ப் பிராணிகளிடத்திலும் அந்தணர்களிடத்திலும் பசுக்களிடத்திலும் எல்லாத் திசைகளிலும் வானம்–மலை–வனங்களிலும் தாங்கள் விளங்குகிறீர்கள். (19,20)

ஆயிரக்கணக்கான கால்கள்; நூற்றுக்கணக்கான முகங்கள்; ஆயிரக்கணக்கான கண்கள்; அனைத்து வகைச் செழிப்பு – இத்தகைய பேருருவம் தாங்கி, கணக்கில்லாத பிராணிகளையும் மலைகளையும் உடைய உலகத்தைத் தாங்குகின்றீர்கள். மண்ணுலகத்தின் இருப்பு முடிந்து நீரில் மூழ்கும் காலத்தில், இராமனே! மூவுலகங்களையும் தேவ–கந்தர்வ–தானவர்களையும் சுமந்து கொண்டு, தண்ணீரில் ஆதிசேஷனாகக் காணப்படுகிறீர்கள். இராமமூர்த்தியே! நான், தங்கள் இருதயம்; கலை மடந்தை, நாக்கு; அண்ணலே! தங்கள் உடலில், தேவர்கள் உரோமங்களாகப் படைக்கப்பட்டார்கள். (21–23)

நிமேஷஸ்தே ப4வேத்3ராத்ரிருந்மேஷஸ்தே ப4வேத்3தி3வா ।
ஸம்ஸ்காராஸ்தேऽப4வந் வேத3ா ந தத3ஸ்தி த்வயா விநா ॥ (24)

ஜக3த் ஸர்வம் ஶரீரம் தே ஸ்தை2ர்யம் தே வஸுத4ாதலம் ।
அக்3நி: கோப: ப்ரஸாத3ஸ்தே ஸோம: ஸ்ரீவத்ஸலக்ஷண ॥ (25)

த்வயா லோகாஸ்த்ரய: க்ராந்தா: புரா ஸ்வைர்விக்ரமைஸ்த்ரிபி4: ।
மஹேந்த்3ரஶ்ச க்ருதோ ராஜா ப3லிம் ப3த்3த்4வா மஹாஸுரம் ॥ (26)

ஸீதா லக்ஷ்மீர்ப4வாந் விஷ்ணுர்தே3வ: க்ருஷ்ண: ப்ரஜாபதி: ।
வத4ார்த2ம் ராவணஸ்யேஹ ப்ரவிஷ்டோ மாநுஷீம் தநும் ॥ (27)

ததி3த3ம் ந: க்ருதம் கார்யம் த்வயா த4ர்மப்4ருதாம் வர ।
நிஹதோ ராவணோ ராம ப்ரஹ்ருஷ்டோ தி3வமாக்ரம ॥ (28)

அமோக4ம் ப3லவீர்யம் தே அமோக4ஸ்தே பராக்ரம: ।
அமோக4ம் த3ர்ஶநம் ராம ந ச மோக4: ஸ்தவஸ்தவ ॥ (29)

அமோக4ாஸ்தே ப4விஷ்யந்தி ப4க்திமந்தஶ்ச யே நரா: ।
யே த்வாம் தே3வம் த்4ருவம் ப4க்தா: புராணம் புருஷோத்தமம் ॥
ப்ராப்நுவந்தி ஸத3ா காமாநிஹ லோகே பரத்ர ச ॥ (30)

இமமார்ஷம் ஸ்தவம் நித்யமிதிஹாஸம் புராதநம் ।
யே நரா: கீர்தயிஷ்யந்தி நாஸ்தி தேஷாம் பராப4வ: ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 விம்ஶத்யுத்தரஶததம: ஸர்க3: ॥

ஏகவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க3:

ஸீதாப்ரதிக்3ரஹ:

ஏதச்ச்2ருத்வா ஶுப4ம் வாக்யம் பிதாமஹஸமீரிதம் ।
அங்கேநாத3ாய வைதே3ஹீமுத்பபாத விப4ாவஸு: ॥ (1)

ஸ விதூ4ய சிதாம் தாம் து வைதே3ஹீம் ஹவ்யவாஹந: ।
உத்தஸ்தௌ2 மூர்திமாநாஶு க்3ருஹீத்வா ஜநகாத்மஜாம் ॥ (2)

தருணாதி3த்யஸங்காஶாம் தப்தகாஞ்சநபூ4ஷணாம் ।
ரக்தாம்ப3ரத4ராம் ப3ாலாம் நீலகுஞ்சிதமூர்த4ஜாம் ॥ (3)

அக்லிஷ்டமால்யாப4ரணாம் தத2ாரூபாம் மநஸ்விநீம் ।
த3தௌ3 ராமாய வைதே3ஹீமங்கே க்ருத்வா விப4ாவஸு: ॥ (4)

தாங்கள் கண்களை மூடினால், இரவு; கண்களைத் திறந்தால், பகல்; வேதங்கள், மூச்சுக்காற்று. இப்படி வளர்த்திக் கொண்டே போவானேன்? தாங்கள் இல்லாததாக ஒரு பொருள் இங்கு இல்லவே இல்லை! எல்லா உலகங்களும் தங்கள் சரீரம்; பூமி, தங்கள் சற்றும் ஆட்டங்காணாத உறுதியான தன்மை; அக்னி, தங்கள் கோபம்; சந்திரன், தங்கள் அருள்; ஸ்ரீவத்ஸம் என்ற மருவை மார்பில் தாங்கும் விஷ்ணு, தாங்கள். (24,25)

முன்னொரு (வாமனாவதார) காலத்தில், தாங்கள் தங்கள் காலடி வைப்புகள் மூன்றினால், மூன்று உலகங்களையும் அளந்தீர்கள்; மகாசுரனான பலியை அடக்கி, மகேந்திரனை மன்னனாக ஆக்கினீர்கள். (26)

சீதாப் பிராட்டியார், சாட்சாத் லட்சுமி தேவி; தாங்கள், விஷ்ணு பகவான்; அடுத்த யுகத்தில் கிருஷ்ணனாக அவதரிக்கப் போவதும், தாங்களே; பிரஜாபதி என்ற சொல்லால் குறிக்கப்படுபவர், தாங்கள். இப்போது, இராவணனை மாய்ப்பதற்காக மானுட உடலை ஏற்றீர்கள். (27)

அறநெறியாளர்களுள் முதன்மையானவரே! தாங்கள், எங்கள் பொருட்டு, இந்தக் காரியத்தை (இராவண வதத்தை)ச் செய்து முடித்திருக்கிறீர்கள். இராமநாராயணனே! இராவணன் கொல்லப்பட்டு விட்டான். மனக்களிப்புற்றவராக தேவலோகத்திற்கு எழுந்தருளலாம். தங்களின் வலிமையும் நெஞ்சுறுதியும் வீண்போகாதவை; தங்கள் பராக்கிரமம் வீண்போகாதது; தங்கள் தரிசனம் வீண்போகாதது (பலனைக் கொடுத்தே தீரும்); தங்களைத் துதிப்பதும் பயன் தராமல் போகாது. (28,29)

தங்களிடம் பக்தி செலுத்தும் மானுடர்களும், தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறப் பெற்றவர்களாக ஆகிறார்கள். தங்களின் தொடக்கம் அறியமுடியாதது; தாங்கள் நிலையாக எப்போதும் இருப்பவர்; மறைகள், தங்களை புருஷோத்தமன் என்று போற்றுகின்றன. தன்னிகரில்லா தனிப்பெரும் பொருளான தங்களிடம் பக்தி செலுத்துபவர்கள், இம்மையிலும் மறுமையிலும், எக்காலத்திலும், தாங்கள் பிரார்த்திப்பவைகளை அடைகிறார்கள். (30)

வேதத்திற்கு ஒப்பானதும் பழமையான இதிகாசமாகவுமுள்ள இந்தத் தோத்திரத்தைத் தினந்தோறும் படிப்பவர்களுக்கும் சொல்கிறவர்களுக்கும் வாழ்க்கையில் தோல்வி என்பது ஏற்படவே செய்யாது.'' (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றிருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றிருபத்தொன்று

சீதையை ஏற்றுக்கொள்ளுதல்!

பிரும்மதேவனால் கூறப்பட்ட மங்களகரமான இந்த உரையைக் கேட்டு, அக்னி பகவான், சீதையைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு (அக்னிப் பிழம்பிலிருந்து) வெளியே வந்தார். உருவத்தை ஏற்றுக்கொண்ட அக்னிதேவர், விரைவாக எரிந்து கொண்டிருக்கும் மரக்கட்டைகளை விலக்கி, ஜனகர் புதல்வியாகிய சீதாப்பிராட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். (1,2)

அப்போது சீதாதேவி, இளஞ்சூரியனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தாள். மாசில்லாத தங்கத்தாலான அணிகலன்கள்; செவ்விய ஆடை; கருத்துச் சுருண்ட குழற்கற்றை; வாடாத மலர்மாலைகள் – இவ்வாறு, அனலில் புகும்போது இருந்த மாதிரியே, எவ்வித மாற்றமும் இல்லாதிருந்த தூயவளான மாதர்குல மாணிக்கத்தைத் தன் மடிமீது வாத்சல்யத்துடன் எடுத்து வந்து, இராமபிரானிடம் ஒப்படைத்தார், அக்னிதேவர். (3,4)

அப்3ரவீச்ச தத3ா ராமம் ஸாக்ஷீ லோகஸ்ய பாவக: ।
ஏஷா தே ராம வைதே3ஹீ பாபமஸ்யாம் ந வித்3யதே ॥ (5)

நைவ வாசா ந மநஸா நாநுத்4யாநாந்ந சக்ஷுஷா ।
ஸுவ்ருத்தா வ்ருத்தஸௌண்டீ3ர ந த்வாமதிசசார ஹ ॥ (6)

ராவணேநாபநீதைஷா வீர்யோத்ஸிக்தேந ரக்ஷஸா ।
த்வயா விரஹிதா தீ3நா விவஸா நிர்ஜநாத்3வநாத் ॥ (7)

ருத்3த4ா சாந்த:புரே கு3ப்தா த்வச்சித்தா த்வத்பராயணா ।
ரக்ஷிதா ராக்ஷஸீஸங்கை4ர்விக்ருதைர்கோ4ரத3ர்ஸநை: ॥ (8)

ப்ரலோப்4யமாநா விவித4ம் ப4ர்த்ஸ்யமாநா ச மைதி2லீ ।
நாசிந்தயத தத்3ரக்ஷஸ்த்வத்3க3தேநாந்தராத்மநா ॥ (9)

விஸுத்3த4பா4வாம் நிஷ்பாபாம் ப்ரதிக்3ருஹ்ணீஷ்வ ராக4வ ।
ந கிஞ்சித3பி4த4ாதவ்யமஹமாக்ஞாபயாமி தே ॥ (10)

தத: ப்ரீதமநா ராம: ஸ்ருத்வைதத்3வத3தாம் வர: ।
த3த்4யௌ முஹூர்தம் த4ர்மாத்மா ப3ாஷ்பவ்யாகுலலோசந: ॥ (11)

ஏவமுக்தோ மஹாதேஜா த்3யுதிமாந் த்3ருட4விக்ரம: ।
அப்3ரவீத்த்ரித3ஸஸ்ரேஷ்ட2ம் ராமோ த4ர்மப்4ருதாம் வர: ॥ (12)

அவஸ்யம் த்ரிஷு லோகேஷு ந ஸீதா பாபமர்ஹதி ।
தீ3ர்க4காலோஷிதா ஹீயம் ராவணாந்த:புரே ஸுப4ா ॥ (13)

ப3ாலிஸ: க2லு காமாத்மா ராமோ த3ஸரத2ாத்மஜ: ।
இதி வக்ஷ்யந்தி மாம் ஸந்தோ ஜாநகீமவிஸோத்4ய ஹி ॥ (14)

அநந்யஹ்ருத3யாம் ப4க்தாம் மச்சித்தபரிவர்திநீம் ।
அஹமப்யவக3ச்ச2ாமி மைதி2லீம் ஜநகாத்மஜாம் ॥ (15)

ப்ரத்யயார்த2ம் து லோகாநாம் த்ரயாணாம் ஸத்யஸம்ஸ்ரய: ।
உபேக்ஷே சாபி வைதே3ஹீம் ப்ரவிஸந்தீம் ஹுதாஸநம் ॥ (16)

இமாமபி விஸாலாக்ஷீம் ரக்ஷிதாம் ஸ்வேந தேஜஸா ।
ராவணோ நாதிவர்தேத வேலாமிவ மஹோத3தி4: ॥ (17)

ந ஹி ஸக்த: ஸ து3ஷ்டாத்மா மநஸாபி ஹி மைதி2லீம் ।
ப்ரத4ர்ஷயிதுமப்ராப்தாம் தீ3ப்தாமக்3நிஸிக2ாமிவ ॥ (18)

உலகச் செயல்களுக்குச் சாட்சியாகவுள்ள அக்னி பகவான், அப்போது, இராமனைப் பார்த்து விண்ணப்பித்துக் கொண்டார்— ''இராமனே! இவள், தங்களுடைய வைதேகிதான்! (அவள் போன்ற தோற்றமுடைய வேறொருத்தி அல்லள். விதேக மன்னனின் புத்திரியாகிய எவளைக் கைப்பிடித்தீர்களோ, அதே நங்கைதான் இவள்!) இவளிடம் குறை ஏதும் இல்லை. (5)

நன்னெறி நாயகரே! சீலம் மிகுந்த இவள், தங்களை மீறி (தங்கள் பெருமையைக் குலைப்பதான) எதையும் செய்தவளில்லை. வாக்கு–மனம் (மேம்போக்கான எண்ணம்), சங்கல்பம் (செய்தே தீருவது என்ற உறுதியான எண்ணம்), பார்வை ஆகிய எதனாலும் பிழை செய்யவில்லை. மாவீரன் என்ற திமிரினால் இராக்கதனான இராவணன், மக்கள் நடமாட்டமே இல்லாத காட்டிலிருந்து, மனம் நொந்து ஆதரவில்லாது தனித்து விடப்பட்ட இவளைத் தங்களிடமிருந்து பிரித்துக் கவர்ந்து சென்றான். (6,7)

இவள், இராவணனுடைய அந்தப்புரத்தில் (அசோகவனத்தில்) சிறை வைக்கப்பட்டாள்; கடுமையான காவல் போடப்பட்டு, எவராலும் கண்டுபிடிக்க முடியாதபடி மறைக்கப்பட்டிருந்தாள்; பயங்கரமான தோற்றமுடைய அரக்கிகள், இவளைக் காவல் காத்தார்கள். அந்த நிலையிலும், இவள் தங்களையே நம்பியிருந்தாள்; தங்களிடமே மனத்தைச் செலுத்தியிருந்தாள். (8)

பலவிதமாக ஆசை காட்டப்பட்டாள்; மிரட்டப்பட்டாள். ஆனால், தங்களிடமே மனத்தைப் பறிகொடுத்திருந்த மைதிலி, அந்த அரக்கனைப் பொருட்படுத்தவேயில்லை. இராமசந்திரனே! மாசில்லாத உள்ளமுள்ளவளும் பாவக்கறை படியாதவளுமான இவளை ஏற்றுக் கொள்ளுங்கள். இனி, இது பற்றியப் பேச்சுக்கு இடமில்லை. நான், உங்களுக்கு ஆணையிடுகிறேன்.'' (திசைக்காவலரான அக்னி, நாராயணமூர்த்தியான இராமனுக்குக் கட்டளையிட முடியாது. அதனால், அக்னி மூலமாக சாட்சாத் ருத்ர பகவானே கட்டளையிட்டார் – என்பது சான்றோர் சிலரது கருத்து.) (9,10)

பேச்சாற்றல் கொண்டவர்களில் தலையாயவரும், அறத்தின் உயிர்நிலை போன்றவருமான இராமன், அக்னியின் சொற்களைக் கேட்டு, அதனால் மனத்திருப்தியடைந்து, கண்ணீர் ததும்பிய கண்களுடன் சிறிதுநேரம் ஆலோசித்தார். மகிமை மிக்கவரும், பொலிவான தோற்றமுள்ளவரும் பிறரால் ஈடுகொடுக்க முடியாத பராக்கிரமம் உடையவரும், அறநெறியாளர்களில் முதன்மையானவருமான இராமன், தேவர்களுள் பிரமுகரான அக்னிதேவரைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (11,12)

''சீதை மாசற்றவள் என்று எனக்குத் தெரியும். ஆனால், இராவணனுடைய அந்தப்புரத்தில் நெடுநாட்கள் தங்கியிருந்தவளின் தூய்மையை, பலரும் அறிய பரிசோதித்துப் பார்க்காமல் நான் ஏற்றுக்கொண்டால், 'தசரதன் மைந்தனான இராமன், காம மிகுதியால் அறிவிழந்து அவளை ஏற்றுக் கொண்டான்' என்று மேன்மக்கள் பேசுவார்கள். மூன்றுலக மக்களும் இகழ்ந்துரைப்பார்கள். (13,14)

ஜனககுமாரி சீதை, என்னைத் தவிர வேறிடம் செல்லாத மனத்தை உடையவள்; ஆழமான அன்பு கொண்டவள்; என் விருப்பத்திற்கேற்றபடி நடப்பவள் என்பதை நானும் மனதார அறிவேன். சத்தியத்தையே முற்றிலுமாக நம்பிக் கொண்டிருக்கும் நான், மூன்று உலகிலுமுள்ள மக்களுக்கு சீதையின் தூய்மையில் நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகவே, நெருப்பில் விழச் சென்ற வைதேகியைத் தடுக்கவில்லை. (அவளுடைய கற்பு, அவளைக் காப்பாற்றும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருந்தது.) (15,16)

பெருங்கடல், கரையை மீறிச் செல்லாததைப் போல, (தன் கற்புத்திறத்தால் தன்னைக் காத்துக் கொள்ளக்கூடிய), தடங்கண்ணாளான இவளை, இராவணன் மீறிச் சென்றுவிட முடியாது. (17)

மைதிலி, கொழுந்து விட்டெரியும் அக்னியைப் போன்றவள்; யாராலும் நெருங்க முடியாதவள்; எவராலும் அடைய முடியாதவள். கெடுமதி கொண்ட அவனால், மனத்தால்கூட இவளைக் கெடுக்க முடியாது. (18)

நேயமர்ஹதி சைஸ்வர்யம் ராவணாந்த:புரே ஶுப$_4$ா ।
அநந்யா ஹி மயா ஸீதா ப$_4$ாஸ்கரேண ப்ரப$_4$ா யத$_2$ா ॥ (19)

விஶுத்$_3$த$_4$ா த்ரிஷு லோகேஷு மைதி$_2$லீ ஜநகாத்மஜா ।
ந ஹி ஹாதுமியம் ஶக்யா கீர்திராத்மவதா யத$_2$ா ॥ (20)

அவஶ்யம் து மயா கார்யம் ஸர்வேஷாம் வோ வச: ஶுப$_4$ம் ।
ஸ்நிக்$_3$த$_4$ாநாம் லோகமாந்யாநாமேவம் ச ப்$_3$ருவதாம் ஹிதம் ॥ (21)

இதீத$_3$முக்த்வா விதி$_3$தம் மஹாப$_3$லை:
ப்ரஶஸ்யமாந: ஸ்வக்ருதேந கர்மணா ।
ஸமேத்ய ராம: ப்ரியயா மஹாப$_3$ல:
ஸுக$_2$ம் ஸுக$_2$ார்ஹோऽநுப$_3$பூ$_4$வ ராக$_4$வ: ॥ (22)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க$_3$: ॥

த்$_3$வாவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க$_3$:

த$_3$ஶரத$_2$ப்ரதிஸமாதே$_3$ஶ:

ஏதச்ச்$_2$ருத்வா ஶுப$_4$ம் வாக்யம் ராக$_4$வேண ஸுப$_4$ாஷிதம் ।
இத$_3$ம் ஶுப$_4$தரம் வாக்யம் வ்யாஜஹார மஹேஶ்வர: ॥ (1)

புஷ்கராக்ஷ மஹாப$_3$ாஹோ மஹாவக்ஷ: பரந்தப ।
தி$_3$ஷ்ட்யா க்ருதமித$_3$ம் கர்ம த்வயா ஶஸ்த்ரப்$_4$ருதாம் வர ॥ (2)

தி$_3$ஷ்ட்யா ஸர்வஸ்ய லோகஸ்ய ப்ரவ்ருத்$_3$த$_4$ம் தா$_3$ருணம் தம: ।
அபாவ்ருத்தம் த்வயா ஸங்க்$_2$யே ராம ராவணஜம் ப$_4$யம் ॥ (3)

ஆஶ்வாஸ்ய ப$_4$ரதம் தீ$_3$நம் கௌஸல்யாம் ச யஶஸ்விநீம் ।
கைகேயீம் ச ஸுமித்ராம் ச த்$_3$ருஷ்ட்வா லக்ஷ்மணமாதரம் ॥ (4)

ப்ராப்ய ராஜ்யமயோத்$_4$யாயாம் நந்த$_3$யித்வா ஸுஹ்ருஜ்ஜநம் ।
இக்ஷ்வாகூணாம் குலே வம்ஶம் ஸ்தா$_2$பயித்வா மஹாப$_3$ல ॥ (5)

இஷ்ட்வா துரக$_3$மேதே$_4$ந ப்ராப்ய சாநுத்தமம் யஶ: ।
ப்$_3$ராஹ்மணேப்$_4$யோ த$_4$நம் த$_3$த்த்வா த்ரிதி$_3$வம் க$_3$ந்துமர்ஹஸி ॥ (6)

ஏஷ ராஜா விமாநஸ்த$_2$: பிதா த$_3$ஶரத$_2$ஸ்தவ ।
காகுத்ஸ்த$_2$ மாநுஷே லோகே கு$_3$ருஸ்தவ மஹாயஶா: ॥ (7)

இந்த்$_3$ரலோகம் க$_3$த: ஶ்ரீமாந்ஸ்த்வயா புத்ரேண தாரித: ।
லக்ஷ்மணேந ஸஹ ப்$_4$ராத்ரா த்வமேநமபி$_4$வாத$_3$ய ॥ (8)

கற்புக்கரசியான இவள், இராவணனுடைய அந்தப்புரத்தில் இருந்துகொண்டு செழிப்பான வாழ்க்கை வாழ்வதை விரும்பமாட்டாள். ஏனென்றால், சூரியனிடமிருந்து பிரிக்கமுடியாத ஒளியைப் போல, இவள் என்னிடமிருந்து பிரிக்க முடியாதவள். (19)

ஜனககுமாரியான சீதை, மூன்று உலகங்களிலுமுள்ள தூய்மையான பொருள்களைக் காட்டிலும் தூயவள்! கௌரவமான ஒரு மனிதர், இயல்பாகக் கிடைக்கும் புகழைத் துறக்க முடியாததைப் போல, என்னால் இவளை விலக்க முடியாது. (20)

நீங்கள் எல்லோரும் என்னிடம் அன்பு கொண்டவர்கள்; நலந்தரும் சொல்லைக் கூறுபவர்கள்; எல்லா உலகங்களும் உங்களைப் பணிந்து வழிபடுகின்றன. எனவே, எனக்கு மேன்மை ஏற்படும் வகையில், நீங்கள் கூறியபடி செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன்.'' (21)

இவ்வாறு கூறிவிட்டு, தான் செய்த அரும்பெருஞ்செயல்களை அறிந்து, தேவதைகள் முதலியோரால் புகழப்பட்ட, மகாபலம் பொருந்திய இராமன், சீதையை அருகில் அழைத்துக் கொண்டார். பரம சுக–சௌக்கியங்களை அனுபவிக்கும் உரிமை கொண்ட அவர், நிறைவான மனக்களிப்பை அனுபவிக்கலானார். (22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றிருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றிருபத்திரண்டு

தசரதன் வந்தார்!

இராமன் கூறிய மங்களகரமான சொற்களைக் கேட்ட பின்னர், பரமேசுவரன், மேலும் மகிழ்ச்சியைத் தரும் இனிய மொழிகளைப் பகர்ந்தார்— ''தாமரைக் கண்ணனே! தோள்வலிமை உடையவனே! அகன்ற மார்பு கொண்டவனே! எதிரிகளை வாட்டுபவனே! படைக்கலங்களைத் தாங்கியவர்களுள் முதன்மையானவனே! (இராவண வதம் என்ற) அரிய செயல், பெரும்பேற்றினால் செய்யப்பட்டது. (1,2)

எல்லா உலகத்திலும், இராவணனால் உண்டாக்கப்பட்ட பேரச்சம் என்ற பயங்கரமான காரிருள், போரில் உன்னால் நீக்கப்பட்டது. ஆகா, இது எவ்வளவு மகத்தான பேறு! (3)

பேராற்றல் படைத்தவனே! (அயோத்திக்குத் திரும்பிச் சென்று) மன ஏக்கத்துடன் இருக்கும் பரதனுக்கு ஆறுதல் கூறுவாய். புகழ்மிக்க கௌசல்யை, கைகேயி, லட்சுமணனின் அன்னை சுமித்திரை ஆகியோரைத் தரிசனம் செய்; அயோத்தியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்; நட்பு மக்களை மகிழ்ச்சிக் கடலில் முழுகச் செய்; இக்ஷ்வாகு பரம்பரைத் தொடர் விட்டுப் போகாமல் நற்புதல்வர்களை ஆட்சியில் அமர்த்து; அசுவமேத யாகம் செய்து, பெரும் புகழை அடைவாய்; அந்தணர்களுக்கு செல்வங்களை வாரி வழங்கு; பின்னர், மேலுலகத்தில் உன் இருப்பிடத்திற்குச் செல்வாயாக. (4–6)

காகுத்தனே! இந்த விமானத்திலிருப்பவர், உன் தந்தையான தசரத மன்னர்; பெரும்புகழ் கொண்ட இவர், மனிதர் உலகில் (மண்ணுலகில்) உனக்குத் தந்தையாக இருந்தவர். (மூலத்திலுள்ள **'குரு:'** என்ற சொல் தந்தை என்ற பொருளில் வந்தது. ஒருவனுடைய பிறப்புக்குக் காரணமாக இருந்தவரை மட்டுமல்லாமல், பிரும்மோபதேசம் செய்வித்தவரையும் தந்தை (குரு) என்று மதிக்கத்தக்கவர் என்பது ஆன்றோர் வாக்கு.) (7)

புதல்வனாகிய உன்னால் கரையேற்றப்பட்டு, மிகவும் புண்ணியசாலியான இவர் இந்திரலோகம் சென்றடைந்திருக்கிறார். சகோதரன் லட்சுமணனும் நீயும், இவரைப் பணிந்து வணங்குவீர்களாக.'' (8)

மஹாதே3வவச: ஸ்ருத்வா காகுத்ஸ்த2: ஸஹலக்ஷ்மண: ।
விமாநஸிக2ரஸ்த2ஸ்ய ப்ரணாமமகரோத் பிது: ॥ (9)

தீ3ப்யமாநம் ஸ்வயா லக்ஷ்ம்யா விரஜோऽம்ப3ரத4ாரிணம் ।
லக்ஷ்மணேந ஸஹ ப்4ராத்ரா த3த3ர்ஸ பிதரம் விபு4: ॥ (10)

ஹர்ஷேண மஹதாவிஷ்டோ விமாநஸ்தே2ா மஹீபதி: ।
ப்ராணை: ப்ரியதரம் த்3ருஷ்ட்வா புத்ரம் த3ஸரத2ஸ்ததா3 ॥ (11)

ஆரோப்யாங்கம் மஹாபா3ாஹுர்வராஸநக3த: ப்ரபு4: ।
பா3ஹுப்4யாம் ஸம்பரிஷ்வஜ்ய ததோ வாக்யம் ஸமாத3தே3 ॥ (12)

ந மே ஸ்வர்கோ3 ப3ஹுமத: ஸம்மாநஸ்ச ஸுரர்ஷிபி4: ।
த்வயா ராம விஹீநஸ்ய ஸத்யம் ப்ரதிஸ்ருணோமி தே ॥ (13)

கைகேய்யா யாநி சோக்தாநி வாக்யாநி வத3தாம் வர ।
தவ ப்ரவ்ராஜநார்த2ாநி ஸ்தி2தாநி ஹ்ருத3யே மம ॥ (14)

த்வாம் து த்3ருஷ்ட்வா குஸலிநம் பரிஷ்வஜ்ய ஸலக்ஷ்மணம் ।
அத்3ய து3:க2ாத்3விமுக்தோऽஸ்மி நீஹாராதி3வ பா4ஸ்கர: ॥ (15)

தாரிதோऽஹம் த்வயா புத்ர ஸுபுத்ரேண மஹாத்மநா ।
அஷ்டாவக்ரேண த4ர்மாத்மா கஹோலோ ப்3ராஹ்மணோ யதா2 ॥ (16)

இதா3நீம் து விஜாநாமி யதா2 ஸௌம்ய ஸுரேஸ்வரை: ।
வதா4ர்த2ம் ராவணஸ்யேத3ம் விஹிதம் புருஷோத்தம ॥ (17)

ஸித்3தா4ர்தா2 க2லு கௌஸல்யா யா த்வாம் ராம க்3ருஹம் க3தம் ।
வநாந்நிவ்ருத்தம் ஸம்ஹ்ருஷ்டா த்3ரக்ஷ்யத்யரிநிஷூத3ந ॥ (18)

ஸித்3தா4ர்தா2: க2லு தே ராம நரா யே த்வாம் புரீம் க3தம் ।
ஜலார்த்3ரமபி4ஷிக்தம் ச த்3ரக்ஷ்யந்தி வஸுதா4திபம் ॥ (19)

அநுரக்தேந ப3லிநா ஸுசிநா த4ர்மசாரிணா ।
இச்ச2ாமி த்வாமஹம் த்3ரஷ்டும் ப4ரதேந ஸமாக3தம் ॥ (20)

சதுர்த3ஸ ஸமா: ஸௌம்ய வநே நிர்யாபிதாஸ்த்வயா ।
வஸதா ஸீதயா ஸார்த4ம் லக்ஷ்மணேந ச தீ4மதா ॥ (21)

நிவ்ருத்தவநவாஸோऽஸி ப்ரதிக்ஞா ஸப2லா க்ருதா ।
ராவணம் ச ரணே ஹத்வா தே3வாஸ்தே பரிதோஷிதா: ॥ (22)

க்ருதம் கர்ம யஸ: ஸ்லாக்4யம் ப்ராப்தம் தே ஸத்ருஸூத3ந ।
ப்4ராத்ருபி4: ஸஹ ராஜ்யஸ்தே2ா தீ3ர்க4மாயுரவாப்நுஹி ॥ (23)

மகாதேவருடைய சொற்களைக் கேட்டு, விமானத்தில் ஓர் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்த தந்தைக்கு, லட்சுமணனும் இராமனும் நமஸ்காரம் செய்தார்கள். சகல சக்திகளும் நிரம்பப் பெற்றவரான இராமன், தெய்வத்திருவுடன் பொலிந்துகொண்டிருந்தவரும் மிகத் தூய்மையான உடைகளை உடுத்திக் கொண்டிருந்தவருமான தந்தையை, தம்பியாகிய இலக்குவனுடன் தரிசித்தார். (9,10)

அப்போது, விமானத்தில் சிறந்த ஆசனத்தில் வீற்றிருந்தவரும், பெருந்தோளரும், தனிப்பெரும் தலைவருமான தசரத மன்னர், உயிரினும் மேலான புதல்வனைப் பார்த்ததும் பேரானந்தம் அடைந்து, தன் மடிமீது ஏற்றி வைத்துக் கொண்டு, இரு கைகளாலும் இறுகத் தழுவிக்கொண்டு, பின்வருமாறு கூறத் தொடங்கினார்— (11,12)

''குழந்தாய் இராமனே! நான் உன்னிடம் உண்மையாகவும் உறுதியாகவும் சொல்கிறேன், நீ இல்லாமல், தேவலோக போகங்களும் தேவரிஷிகளின் பாராட்டுக்களும் எனக்கு சுவையைத் தரவில்லை. (13)

சொல்லின் செல்வனே! உன்னை நாடு கடத்த வேண்டுமென்று கைகேயி சொன்ன சொற்கள், என் மனத்தில் அப்படியே பதிந்திருக்கின்றன. லட்சுமணனும் நீயும் சௌக்கியமாக இருப்பதைக் கண்டும், (இருவரையும்) கட்டியணைத்தும், பனிமூட்டத்திலிருந்து வெளிப்பட்ட சூரியனைப் போல் இப்போதுதான் துக்கத்திலிருந்து விடுபட்டிருக்கிறேன். (14,15)

செல்வமே! முன்னர், அஷ்டாவக்ரர் என்ற புதல்வனால், அவருடைய தந்தையும் தருமாத்மாவுமான கஹோலர் என்ற அந்தணர் கரையேற்றுவிக்கப்பட்டதைப் போல, நற்குணங்கள் அமைந்தவனும் பேருள்ளம் கொண்டவனுமான உன்னால், நான் நற்கதி அடைவிக்கப்பட்டேன். (ஜனகரின் அரசவையிலிருந்த கஹோலர் என்பவர் சிறை வைக்கப்பட்டார். அவருடைய குமாரர் அஷ்டாவக்ரர், தன் தவ ஆற்றலினால் அவரை விடுவித்தார் – என்பது புராணக் கதை.) (16)

பிள்ளாய்! புருஷோத்தமனே! இராவணன் வதைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே, (நீ காட்டுக்குப் போனது முதலான நிகழ்ச்சிகள்) தேவத்தலைவர்களால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டன என்பதை, இப்போதுதான் தெரிந்து கொண்டேன். (17)

எதிரிகளை அடக்கும் இராமனே! கௌசல்யை மிகவும் பாக்கியசாலி! – காட்டிலிருந்து திரும்பி நீ வீட்டுக்கு வந்துவிட்டதைப் பெருமகிழ்ச்சியுடன், தன் கண்களாலேயே பார்க்கப் போகிறாளே! (18)

கண்மணி இராமனே! நீ அயோத்தி நகரை அடைந்து, பாராளும் வேந்தனாக (பட்டாபிஷேகம்) அபிஷேகம் செய்யப்பட்டு, புனித நீரால் நனைந்து விளங்குவதைக் காணப் போகும் மக்கள்தான் பெரிதும் கொடுத்து வைத்தவர்கள். (19)

உன்னிடம் தளராத அன்புகொண்டவனும் வலிமை பொருந்தியவனும் எல்லாவிதங்களிலும் தூய்மையானவனும் அறநெறியில் நடப்பவனுமான பரதனுடன் நீ சேர்ந்திருக்கும் காட்சியைக் காண விரும்புகிறேன். (20)

குழந்தாய்! சீதையுடனும் புத்திமானான லட்சுமணனுடனும் பதிநான்கு ஆண்டுகளைக் காட்டில் கழித்திருக்கிறாய், நீ. (21)

வனவாசம் முடிந்துவிட்டது; உன் வாக்குறுதியை நிறைவேற்றி விட்டாய். போரில், இராவணனைக் கொன்று, தேவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டாய். (22)

பகைவர்களை அழிப்பவனே! நீ மேற்கொண்ட அருஞ்செயல் செய்து முடிக்கப்பட்டுவிட்டது. அதனால், நீ அடைய வேண்டிய புகழையும் பெற்றுவிட்டாய். சகோதரர்களுடன்கூட நாட்டை ஆண்டுகொண்டு நெடுங்காலம் வாழ்வாயாக!'' (23)

இதி ப்$_3$ருவாணம் ராஜாநம் ராம: ப்ராஞ்ஜலிரப்$_3$ரவீத் ।
குரு ப்ரஸாத$_3$ம் த$_4$ர்மஜ்ஞ கைகேய்யா ப$_4$ரதஸ்ய ச ॥ (24)

ஸபுத்ராம் த்வாம் த்யஜாமீதி யது$_3$க்தா கைகயீ த்வயா ।
ஸ ஶாப: கைகயீம் கோ$_4$ர: ஸபுத்ராம் ந ஸ்ப்ருஶேத் ப்ரபோ$_4$ ॥ (25)

ஸ ததே$_2$தி மஹாராஜோ ராமமுக்த்வா க்ருதாஞ்ஜலிம் ।
லக்ஷ்மணம் ச பரிஷ்வஜ்ய புநர்வாக்யமுவாச ஹ ॥ (26)

ராமம் ஶுஶ்ரூஷதா ப$_4$க்த்யா வைதே$_3$ஹ்யா ஸஹ ஸீதயா ।
க்ருதா மம மஹாப்ரீதி: ப்ராப்தம் த$_4$ர்மப$_2$லம் ச தே ॥ (27)

த$_4$ர்மம் ப்ராப்ஸ்யஸி த$_4$ர்மஜ்ஞ யஶஶ்ச விபுலம் பு$_4$வி ।
ராமே ப்ரஸந்நே ஸ்வர்க$_3$ம் ச மஹிமாநம் ததை$_2$வ ச ॥ (28)

ராமம் ஶுஶ்ரூஷ ப$_4$த்$_3$ரம் தே ஸுமித்ராநந்த$_3$வர்த$_4$ந ।
ராம: ஸர்வஸ்ய லோகஸ்ய ஶுபே$_4$ஷ்வபி$_4$ரத: ஸதா$_3$ ॥ (29)

ஏதே ஸேந்த்$_3$ராஸ்த்ரயோ லோகா: ஸித்$_3$தா$_4$ஶ்ச பரமர்ஷய: ।
அபி$_4$க$_3$ம்ய மஹாத்மாநமர்சந்தி புருஷோத்தமம் ॥ (30)

ஏதத்தது$_3$க்தமவ்யக்தமக்ஷரம் ப்$_3$ரஹ்மஸம்மிதம் ।
தே$_3$வாநாம் ஹ்ருத$_3$யம் ஸௌம்ய கு$_3$ஹ்யம் ராம: பரந்தப: ॥ (31)

அவாப்தம் த$_4$ர்மசரணம் யஶஶ்ச விபுலம் த்வயா ।
ராமம் ஶுஶ்ரூஷதா ப$_4$க்த்யா வைதே$_3$ஹ்யா ஸஹ ஸீதயா ॥ (32)

ஸ ததோ$_2$க்த்வா மஹாபா$_3$ஹுர்லக்ஷ்மணம் ப்ராஞ்ஜலிம் ஸ்தி$_2$தம் ।
உவாச ராஜா த$_4$ர்மாத்மா வைதே$_3$ஹீம் வசநம் ஶுப$_4$ம் ॥ (33)

கர்தவ்யோ ந து வைதே$_3$ஹி மந்யுஸ்த்யாக$_3$மிமம் ப்ரதி ।
ராமேண த்வத்$_3$விஶுத்$_3$த்$_4$யர்த$_2$ம் க்ருதமேதத்$_3$தி$_4$தைஷிணா ॥ (34)

ந த்வம் ஸுப்$_4$ரு ஸமாதே$_4$யா பதிஶுஶ்ரூஷணம் ப்ரதி ।
அவஶ்யம் து மயா வாச்யமேஷ தே தை$_3$வதம் பரம் ॥ (35)

இதி ப்ரதிஸமாதி$_3$ஶ்ய புத்ரௌ ஸீதாம் ததா$_2$ ஸ்நுஷாம் ।
இந்த்$_3$ரலோகம் விமாநேந யயௌ த$_3$ஶரதோ$_2$ ஜ்வலந் ॥ (36)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்$_3$வாவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க$_3$: ॥

இவ்வாறு பேசி முடித்த தசரத மன்னரைப் பார்த்து, இராமன் கைகூப்பிக் கொண்டு சொன்னார்— ''அறம் அறிந்தவரே! (கோபத்தால் மனம் தடுமாற,) 'உன்னையும் உன் மகனையும் துறக்கிறேன்' என்று கைகேயிடம் கடுஞ்சொல் கூறினீர்களே. அதை விலக்கி, கைகேயியிடமும் பரதனிடமும் தயவுகாட்ட வேண்டும். ஐயனே! அந்தக் கொடுமையான சாபம், கைகேயியையும் அவர் புதல்வனையும் இனியும் பாதிக்க வேண்டாம்.'' (24,25)

கைகளைக் கூப்பிக்கொண்டு நிற்கும் புதல்வன் இராமனை நோக்கி, ''உன் வேண்டுகோள்படியே ஆகட்டும்'' என்று கூறிவிட்டு, லட்சுமணனையும் சேர்த்து மார்புறத் தழுவிக்கொண்ட மாமன்னர், லட்சுமணனிடம் சில சொற்களைக் கூறினார். (26)

''லட்சுமணா! சீதைக்கும் இராமனுக்கும், பக்தியுடன் பணிவிடை செய்திருக்கிறாய். அதனால், நான் மிகவும் திருப்தி அடைந்துள்ளேன். அறநெறிகளுக்கிணங்க நடந்துகொண்டதன் புண்ணியப் பயனையும் நீ அடைந்து விட்டாய்! அறம் அறிந்தவனே! அறம் தவறாது ஒழுகியதன் பயனை நீ அடைவாய். இராமனுடைய மனம் குளிர்ந்ததால், உலகம் முழுவதும் பரவிய புகழையும், ஒப்பில்லாத மேன்மையையும், இறுதியில் தேவலோகத்தையும் அடைவாய், நீ. (27,28)

சுமித்திரையின் ஆனந்தப் பெருக்கே! தொடர்ந்து இராமனுக்கு பணிவிடை செய்து வருவாயாக. சகல நன்மைகளும் உன்னை வந்தடையும். இராமன், எல்லா உலகங்களின் நல்வாழ்விலும் எப்போதும் மிக்க ஈடுபாடுடையவன். (29)

இந்திரன் முதலான மூன்றுலக மக்களும் ஸித்தர்களும் மாமுனிவர்களும், மகாத்மாவான புருஷோத்தமன் இராமனைப் பக்தியுடன் அணுகி வழிபடுகிறார்கள். (30)

மைந்தனே! புலன்களால் உணரமுடியாததும் அழிவற்றதும் வேதங்களின் மறைபொருளாக விளங்குவதும், தத் என்னும் மகாவாக்கிய சொல்லால் குறிக்கப்படுவதுமான பரப்பிரும்மம், எதிரிகளை வாட்டும் இராமனாக வந்திருக்கிறது. (நிர்குணப்பிரும்மம், ஸகுணத்துடன் தோன்றியிருக்கிறது.) இந்தத் தத்துவம் தேவர்களால் உபதேசிக்கப்பட்டது. (31)

விதேக மன்னர் புதல்வியான சீதைக்கும் இராமனுக்கும் நீ பக்தியுடன் சேவை செய்ததால், அறநெறியை முற்றிலும் பின்பற்றியவனாகிவிட்டாய். பார் (உலகம்) முழுவதும் பரவிய புகழையும் அடைந்து விட்டாய்.'' (32)

தருமாத்மாவும் பெருந்தோளருமான மன்னர், கைகூப்பி நிற்கும் லட்சுமணனிடம் இவ்வாறு கூறிவிட்டு, சீதையைப் பார்த்து இனிய சொற்களைக் கூறினார்— (33)

''சீதே! இராமனின் புறக்கணிப்பை ('நான், உன்னை விரும்பவில்லை; நீ எங்கு வேண்டுமானாலும் போகலாம்' என்று சொன்னதை) மனத்தில் கொண்டு, அவனிடம் சீற்றம் கொள்ளவேண்டாம். உன் நலனில் நாட்டமுடைய அவனால், உலக மக்கள் உன் தூய்மையை நம்புவதற்காகவே, இவ்வாறு செய்யப்பட்டது. (34)

நல்லணங்கே! கணவனுக்குச் சேவை செய்வது குறித்து உனக்கு உபதேசிக்க வேண்டியதில்லை. (நீயே அறிவாய்.) இவன் (இராமன்) தான் உனக்கு எல்லாவற்றுக்கும் மேம்பட்ட தெய்வம் என்பதை கட்டாயமாக, நான் சொல்லித்தான் ஆகவேண்டும்.'' (35)

இரு புதல்வர்களுக்கும் மருமகளான சீதாதேவிக்கும், இவ்வாறு அறிவுரையும் ஆசியுரையும் கூறிவிட்டு, தெய்விக ஒளியுடன் விமானத்தின் மூலம் இந்திரலோகத்திற்குச் சென்றார், தசரத மன்னர். (36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றிருபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

த்ரயோவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க$_3$:

இந்த்$_3$ரவரத$_3$ாநம்

ப்ரதியாதே து காகுத்ஸ்தே$_2$ மஹேந்த்$_3$ர: பாகஶாஸந: ।
அப்$_3$ரவீத் பரமப்ரீதோ ராக$_4$வம் ப்ராஞ்ஜலிம் ஸ்தி$_2$தம் ॥ (1)

அமோக$_4$ம் த$_3$ர்ஶநம் ராம தவாஸ்மாகம் பரந்தப ।
ப்ரீதியுக்தா: ஸ்ம தேந த்வம் ப்$_3$ரூஹி யந்மநஸேச்ச$_2$ஸி ॥ (2)

ஏவமுக்தஸ்து காகுத்ஸ்த$_2$: ப்ரத்யுவாச க்ருதாஞ்ஜலி: ।
லக்ஷமணேந ஸஹ ப்$_4$ராத்ரா ஸீதயா ஸஹ ப$_4$ார்யயா ॥ (3)

யதி$_3$ ப்ரீதி: ஸமுத்பந்நா மயி ஸர்வஸுரேஶ்வர ।
வக்ஷ்யாமி குரு தே ஸத்யம் வசநம் வத$_3$தாம் வர ॥ (4)

மம ஹேதோ: பராக்ராந்தா யே க$_3$தா யமஸாத$_3$நம் ।
தே ஸர்வே ஜீவிதம் ப்ராப்ய ஸமுத்திஷ்ட$_2$ந்து வாநரா: ॥ (5)

மத்க்ருதே விப்ரயுக்தா யே புத்ரைர்த$_3$ாரைஶ்ச வாநரா: ।
மத்ப்ரியேஷ்வபி$_4$யுக்தாஶ்ச ந ம்ருத்யும் க$_3$ணயந்தி ச ॥ (6)

த்வத்ப்ரஸாத$_3$ாத் ஸமேயுஸ்தே வரமேதமஹம் வ்ருணே ।
நீருஜோ நிர்வ்ரணாம்ஶ்சைவ ஸம்பந்நப$_3$லபௌருஷாந் ॥
கோ$_3$லாங்கூ$_3$லாம்ஸ்ததை$_2$வர்க்ஷாந் த்$_3$ரஷ்டுமிச்ச$_2$ாமி மாநத$_3$ ॥ (7)

அகாலே சாபி புஷ்பாணி மூலாநி ச ப$_2$லாநி ச ।
நத்$_3$யஶ்ச விமலாஸ்தத்ர திஷ்டே$_2$யுர்யத்ர வாநரா: ॥ (8)

ஶ்ருத்வா து வசநம் தஸ்ய ராக$_4$வஸ்ய மஹாத்மந: ।
மஹேந்த்$_3$ர: ப்ரத்யுவாசேத$_3$ம் வசநம் ப்ரீதிலக்ஷணம் ॥ (9)

மஹாநயம் வரஸ்தாத த்வயோக்தோ ரகு$_4$நந்த$_3$ந ।
த்$_3$விர்மயா நோக்தபூர்வம் ஹி தஸ்மாதே$_3$தத்$_3$ப$_4$விஷ்யதி ॥ (10)

ஸமுத்த$_2$ாஸ்யந்தி ஹரயோ யே ஹதா யுதி$_4$ ராக்ஷஸை: ।
ருக்ஷாஶ்ச ஸஹகோ$_3$புச்ச$_2$ா நிக்ருத்தாநநப$_3$ாஹவ: ॥ (11)

நீருஜோ நிர்வ்ரணாஶ்சைவ ஸம்பந்நப$_3$லபௌருஷா: ।
ஸமுத்த$_2$ாஸ்யந்தி ஹரய: ஸுப்தா நித்$_3$ராக்ஷயே யத$_2$ா ॥ (12)

ஸுஹ்ருத்$_3$பி$_4$ர்ப$_3$ாந்த$_4$வைஶ்சைவ ஜ்ஞாதிபி$_4$: ஸ்வஜநைரபி ।
ஸர்வ ஏவ ஸமேஷ்யந்தி ஸம்யுக்தா: பரயா முத$_3$ா ॥ (13)

ஸர்க்கம் : நூற்றிருபத்து மூன்று

இந்திரன் வரம் கொடுத்தல்!

காகுத்த வம்ச மன்னரான தசரதன் சென்றதும், பாகன் என்ற அசுரனைக் கொன்ற மகேந்திரன், மிகவும் மனக்களிப்புற்றவனாகக் கைகூப்பி நிற்கும் இராமனைப் பார்த்துக் கூறினான்— ''இராமனே! எதிரிகளை மாய்ப்பவனே! தேவர்களாகிய எங்கள் தரிசனம், நற்பலனைக் கொடுக்காமல் பூரணமாகாது. (பலன் கொடுக்காத வெறும் தரிசனமாக மட்டும் இருந்துவிடக் கூடாது.) (இராவண வதத்தால்) நாங்கள் மனக்களிப்புடன் இருக்கிறோம். இப்போது மனத்தால் நீ விரும்புவதைக் கூறுவாயாக.'' (1,2)

இவ்வாறு சொல்லப்பட்டவுடன், தம்பி இலக்குவனோடும், மனைவி சீதையோடும் இருந்த இராமன், கைகளைக் கூப்பிக் கொண்டு பதில் கூறினார்— (3)

''எல்லா தேவர்களுக்கும் தலைவரே! சொல்லாற்றல் உடையவரே! என்னிடம் திருப்தி அடைந்தவராக இருக்கிறீர்கள் என்றால், நான் சொல்லப் போகும் வேண்டுகோளை ஏற்று, உங்கள் வார்த்தையை சத்தியமாக்கிக் காட்டுவீர்களாக. என் நிமித்தமாக போர்க்களத்தில் ஆற்றலை வெளிப்படுத்தி, எதிரிகளால் கொல்லப்பட்டு, யமலோகத்தை அடைந்துவிட்ட வானரர்கள் எல்லோரும் உயிர்பெற்று எழுந்து வருவார்களாக. (4,5)

எந்த வானரர்கள், என் பொருட்டு தம் புதல்வர்களையும் மனைவிகளையும் விட்டுப் பிரிந்து வந்தார்களோ, அவர்கள் என்னிடம் அசையாத அன்பு கொண்டவர்களாக சாவையும் பொருட்படுத்தாமல் போரிட்டார்கள். (6)

எல்லோருக்கும் மதிப்புக் கொடுப்பவரே! போரில் அடிபட்டு உயிரைத் துறந்த வானரர்களும் கரடிகளும், வலிவேதனையும் காயமும் அற்றவர்களாக, வலிமையும் ஆண்மையும் நிறைந்தவர்களாக, தங்கள் பேரருளினால் எழுந்து வரவேண்டும். இந்த வரத்தையே நான் தங்களிடம் வேண்டுகிறேன். (7)

உரிய பருவம் இல்லாத காலங்களிலும், வானரர்கள் இருக்குமிடத்தில் மலர்களும் கிழங்குகளும் பழங்களும் ஏராளமாகக் கிடைக்க வேண்டும்; ஆறுகளில் தூய தண்ணீர் ஓடிக் கொண்டிருக்க வேண்டும்.'' (8)

தேவேந்திரன், மகாத்மாவான இராமனின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, மனம் நிறைந்தவனாகப் பதில் கூறினான்— (9)

''குழந்தாய்! ரகு குல மாணிக்கமே! நீ கேட்ட இந்த வரம் மிகவும் உன்னதமானது. நான், இதுவரை என் சொற்களை மாற்றிப் பேசியதில்லை. அதனால், ('நீ விரும்பும் வரத்தைக் கேள்; நான் தருகிறேன்' என்று,) நான் முன்னர் சொல்லியபடி ஆகட்டும். (10)

யுத்தத்தில் அரக்கர்களால் கொல்லப்பட்ட வானரர்கள், கரடிகள் மற்றும் வாலில்லா வானரங்கள், முகம்–தோள் வெட்டப்பட்டவைகள் ஆகிய அனைத்தும் உயிர்பெற்று எழப் போகிறார்கள்; வலி–புண் இல்லாதவர்களாகவும், முன்னைப் போல் வலிமையும் ஆண்மையும் உடையவர்களாகவும், உறக்கம் கலைந்து விழித்துக் கொள்பவர்களைப் போலவும், வானரர்கள் எழுந்துவரப் போகிறார்கள். (11,12)

மேலும், அவர்கள் எல்லோரும் மிக்க மகிழ்ச்சியுடன் தத்தம் நண்பர்கள், தூரத்து உறவினர்கள், நெருங்கிய உறவினர்கள் மற்றும் தம் இனத்தவர்கள் ஆகியோரைச் சந்திக்கப் போகிறார்கள். (13)

அகாலே புஷ்பஶப$_3$லா: ப$_2$லவந்தஶ்ச பாத$_3$பா: ।
ப$_4$விஷ்யந்தி மஹேஷ்வாஸ நத்$_3$யஶ்ச ஸலிலாயுதா: ॥ (14)

ஸவ்ரணை: ப்ரத$_2$மம் க$_3$ாத்ரை: ஸம்வ்ருத்தைர்நிர்வ்ரணை: புந: ।
தத: ஸமுத்தி$_2$தா: ஸர்வே ஸுப்த்வேவ ஹரிபுங்க$_3$வா: ॥ (15)

ப$_3$பூ$_4$வுர்வாநரா: ஸர்வே கிமேததி$_3$தி விஸ்மிதா: ।
தே ஸர்வே வாநராஸ்தஸ்மை ராக$_4$வாயாப்$_4$யவாத$_3$யந் ॥ (16)

காகுத்ஸ்த$_2$ம் பரிபூர்ணார்த$_2$ம் த்$_3$ருஷ்ட்வா ஸர்வே ஸுரோத்தமா: ।
ஊசுஸ்தே ப்ரத$_2$மம் ஸ்துத்வா ஸ்தவார்ஹம் ஸஹலக்ஷ்மணம் ॥ (17)

க$_3$ச்ச$_2$ாயோத்$_4$யாமிதோ வீர விஸர்ஜய ச வாநராந் ।
மைதி$_2$லீம் ஸாந்த்வயஸ்வைநாமநுரக்தாம் தபஸ்விநீம் ॥ (18)

ஶத்ருக்$_4$நம் ச மஹாத்மாநம் மாத்ரூ: ஸர்வா: பரந்தப ।
ப்$_4$ராதரம் பஶ்ய ப$_4$ரதம் த்வச்சே$_2$ாகாத்$_3$வ்ரதத$_4$ாரிணம் ॥
அபி$_4$ஷேசய சாத்மாநம் பௌராந் க$_3$த்வா ப்ரஹர்ஷய ॥ (19)

ஏவமுக்த்வா தமாமந்த்ரய ராமம் ஸௌமித்ரிணா ஸஹ ।
விமாநை: ஸூர்யஸங்காஶைர்ஹ்ருஷ்டா ஜக்$_3$மு: ஸுரா தி$_3$வம் ॥ (20)

அபி$_4$வாத்$_3$ய ச காகுத்ஸ்த$_2$: ஸர்வாம்ஸ்தாம்ஸ்த்ரித$_3$ஶோத்தமாந் ।
லக்ஷ்மணேந ஸஹ ப்$_4$ராத்ரா வாஸமாஜ்ஞாபயத்தத$_3$ா ॥ (21)

ததஸ்து ஸா லக்ஷ்மணராமபாலிதா மஹாசமூர்ஹ்ருஷ்டஜநா யஶஸ்விநீ ।
ஶ்ரியா ஜ்வலந்தீ விரராஜ ஸர்வதோ நிஶா ப்ரணீதேவ ஹி ஶீதரஶ்மிநா ॥ (22)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ த்ரயோவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க$_3$: ॥

சதுர்விம்ஶத்யுத்தரஶததம: ஸர்க$_3$:

புஷ்பகோபஸ்த$_2$ாபநம்

தாம் ராத்ரிமுஷிதம் ராமம் ஸுகே$_2$ாத்தி$_2$தமரிந்த$_3$மம் ।
அப்$_3$ரவீத் ப்ராஞ்ஜலிர்வாக்யம் ஜயம் ப்ருஷ்ட்வா விபீ$_4$ஷண: ॥ (1)

ஸ்நாநாநி சாங்க$_3$ராக$_3$ாணி வஸ்த்ராண்யாப$_4$ரணாநி ச ।
சந்த$_3$நாநி ச தி$_3$வ்யாநி மால்யாநி விவித$_4$ாநி ச ॥ (2)

அலங்காரவித$_3$ஶ்சேமா நார்ய: பத்$_3$மநிபே$_4$க்ஷணா: ।
உபஸ்தி$_2$தாஸ்த்வாம் விதி$_4$வத் ஸ்நாபயிஷ்யந்தி ராக$_4$வ ॥
ப்ரதிக்$_3$ருஹ்ணீஷ்வ தத் ஸர்வம் மத$_3$நுக்$_3$ரஹகாம்யயா ॥ (3)

வில்லாளிகளில் சிறந்தவனே! இந்த வானரர்கள் இருக்குமிடங்களில், பருவம் அல்லாத காலங்களிலும் (ஆண்டு முழுவதும்) மரங்களில் மலர்களும் பழங்களும் நிறைந்திருக்கும். ஆறுகளில் நீர் இருந்து கொண்டே இருக்கும்.'' (14)

முதலில், உடலில் காயம் ஏற்பட்டுத் துடித்துக் கொண்டிருந்த வானரோத்தமர்கள் புண்கள் நீங்கியவர்களாக, உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர்களைப் போல உயிர் பெற்று, 'அட! இது என்ன! என்ன ஆயிற்று!' என்று வியப்புடன் கூடியவர்களாக, அவர்கள் எல்லோரும் இராமனிடம் வந்து பணிந்தார்கள். (15,16)

வானத்தில் கூடியிருந்த தேவோத்தமர்கள் எல்லோரும், இராமனுடைய (அவதார) நோக்கம் நிறைவேறிவிட்டதைக் கண்டு, போற்றுதலுக்குரிய இலக்குவனோடு விளங்கும் இராமனை, முதலில் துதித்துவிட்டுப் பின்னர் கூறினார்கள்— (17)

''வீரரே! இவ்விடத்திலிருந்து நேராக அயோத்தி செல்லுங்கள்; வானரர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிடுங்கள்; தவக்கட்டுப்பாடுகள் நிறைந்தவரும், தங்களிடம் உறுதியான பற்றுக் கொண்டவருமான சீதாப் பிராட்டியாருக்கு ஆறுதல் கூறுங்கள். (18)

எதிரிகளை வாட்டுபவரே! மகாத்மாவான சத்ருக்னனையும் எல்லா அன்னைமார்களையும் உங்கள் வருகையை எதிர்நோக்கிக் கொண்டு விரத நியமங்களோடிருக்கும் சகோதரன் பரதனையும் சந்தியுங்கள். அயோத்திக்குச் சென்று, குடிமக்களை ஆனந்தப்படுத்துங்கள்; தங்களுக்குப் பட்டாபிஷேகம் செய்து கொள்ளுங்கள்.'' (19)

தேவர்கள், இவ்வாறு கூறிவிட்டு, இராம–லட்சுமணர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, சூரியனைப் போல் பிரகாசிக்கும் விமானங்களில் ஏறிக் கொண்டு விண்ணுலகத்திற்குச் சென்றார்கள். (20)

இராம–லட்சுமணர்கள், தேவோத்தமர்களை வணங்கி விடைகொடுத்து அனுப்பிய பின்னர், எல்லோரும் ஓய்வெடுக்குமாறு கட்டளையிட்டார். (21)

இராம–லட்சுமணர்களால் நன்கு பாதுகாக்கப்பட்டதும், வெற்றிப் பெருமிதத்தால் மகிழ்ச்சியோடு இருந்த வீரர்களைக் கொண்ட அந்த சேனை, முழு நிலவினால் இனிய ஒளியுடன் பிரகாசமாக விளங்கும் இரவைப் போல் அற்புதமாகக் காட்சி தந்தது. (22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றிருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றிருபத்து நான்கு

புஷ்பகம் வந்தது!

அன்றிரவு உறங்கிய பின்னர், சுகமாகக் கண்விழித்த எதிரிகளை அடக்கும் இராமனிடம் வந்து, முதலில் வாழ்த்துக் கூறிய விபீஷணன் கைகூப்பிக் கொண்டு பின்வருமாறு கூறினான்— (1)

''இராமப்பிரபோ! தாங்கள் நீராடுவதற்காக பல புண்ணிய தீர்த்தங்கள், உடற்பூச்சுகள், ஆடைகள், அணிகலன்கள், சந்தனம் மற்றும் விதவிதமான சிறந்த மாலைகளுடன் அலங்காரக்கலை நிபுணர்களும் தாமரையொத்த கண்ணுடையவர்களுமான நாரீமணிகள் வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வரிசை முறைப்படி நீராட்டுவார்கள். அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு, எனக்கு அருள்புரிய வேண்டும்.'' (2,3)

ஏவமுக்தஸ்து காகுத்ஸ்த₂: ப்ரத்யுவாச விபீ₄ஷணம் ।
ஹரீந் ஸுக்₃ரீவமுக்₂யாம்ஸ்த்வம் ஸ்நாநேநாபி₄நிமந்த்ரய ॥ (4)

ஸ து தாம்யதி த₄ர்மாத்மா மம ஹேதோ: ஸுகோ₂சித: ।
ஸுகுமாரோ மஹாபா₃ஹு: குமார: ஸத்யஸம்ஶ்ரவ: ॥ (5)

தம் விநா கைகயீபுத்ரம் ப₄ரதம் த₄ர்மசாரிணம் ।
ந மே ஸ்நாநம் ப₃ஹுமதம் வஸ்த்ராண்யாப₄ரணாநி ச ॥ (6)

இத ஏவ பத₂ா க்ஷிப்ரம் ப்ரதிக₃ச்ச₂ாமி தாம் புரீம் ।
அயோத்₄யாமாக₃தோ ஹ்யேஷ பந்த₂ா: பரமது₃ர்க₃ம: ॥ (7)

ஏவமுக்தஸ்து காகுத்ஸ்த₂ம் ப்ரத்யுவாச விபீ₄ஷண: ।
அஹ்நா த்வாம் ப்ராபயிஷ்யாமி தாம் புரீம் பார்தி₂வாத்மஜ ॥ (8)

புஷ்பகம் நாம ப₄த்₃ரம் தே விமாநம் ஸூர்யஸந்நிப₄ம் ।
மம ப்₄ராது: குபே₃ரஸ்ய ராவணேநாஹ்ருதம் ப₃லாத் ॥ (9)

ஹ்ருதம் நிர்ஜித்ய ஸங்க்₃ராமே காமக₃ம் தி₃வ்யமுத்தமம் ।
த்வத₃ர்தே₂ பாலிதம் சைதத்திஷ்ட₂த்யதுலவிக்ரம ॥ (10)

ததி₃த₃ம் மேக₄ஸங்காஶம் விமாநமிஹ திஷ்ட₂தி ।
தேந யாஸ்யஸி யாநேந த்வமயோத்₄யாம் க₃தஜ்வர: ॥ (11)

அஹம் தே யத்₃யநுக்₃ராஹ்யோ யதி₃ ஸ்மரஸி மே கு₃ணாந் ।
வஸ தாவதி₃ஹ ப்ராக்ஞ யத்₃யஸ்தி மயி ஸௌஹ்ருத₃ம் ॥ (12)

லக்ஷ்மணேந ஸஹ ப்₄ராத்ரா வைதே₃ஹ்யா சாபி ப₄ார்யயா ।
அர்சித: ஸர்வகாமைஸ்த்வம் ததோ ராம க₃மிஷ்யஸி ॥ (13)

ப்ரீதியுக்தஸ்ய மே ராம ஸஸைந்ய: ஸஸுஹ்ருத்₃க₃ண: ।
ஸத்க்ரியாம் விஹிதம் தாவத்₃க்₃ருஹாண த்வம் மயோத்₃யதாம் ॥ (14)

ப்ரணயாத்₃ப₃ஹுமாநாச்ச ஸௌஹ்ருதே₃ந ச ராக₄வ ।
ப்ரஸாத₃யாமி ப்ரேஷ்யோऽஹம் ந க₂ல்வாக்ஞாபயாமி தே ॥ (15)

ஏவமுக்தஸ்ததோ ராம: ப்ரத்யுவாச விபீ₄ஷணம் ।
ரக்ஷஸாம் வாநராணாம் ச ஸர்வேஷாம் சோபஶ்ருண்வதாம் ॥ (16)

பூஜிதோऽஹம் த்வயா ஸௌம்ய ஸாசிவ்யேந பரந்தப ।
ஸர்வாத்மநா ச சேஷ்டாபி₄: ஸௌஹ்ருதே₃நோத்தமேந ச ॥ (17)

விபீஷணன் இவ்வாறு கூறியதும், ''சுக்ரீவன் முதலான வானரர்களை நீராட்டுதல் போன்றவற்றால் உபசரிப்பாயாக'' என்றார் இராமன். (4)

இந்த நேரத்தில், தருமாத்மாவும் வலிமை மிக்கவனும் சத்தியத்தையே நம்பியிருப்பவனும் கட்டழகனும் சிறுவனுமாகிய பரதன், என் காரணமாக தவித்துக் கொண்டிருக்கிறான். (5)

கைகேயியின் புதல்வனான, அறநெறி வழுவாத பரதன் இல்லாமல் நீராடுவதிலோ, ஆடை–அணிகலன் அணிவதிலோ, எனக்கு விருப்பமில்லை. (6)

நான், இங்கிருந்து வெகுவேகமாக அயோத்தி நகரத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அயோத்திக்குச் செல்லும் பாதை (மிகவும் தொலை தூரம் செல்ல வேண்டியிருப்பதால்) மிகவும் கஷ்டமானது.'' (7)

இவ்வாறு காகுத்தன் கூறியவுடன் விபீஷணன் பதில் சொன்னான்— ''மாமன்னர் மைந்தரே! நான், தங்களை அந்தப் பட்டணத்திற்கு (அயோத்திக்கு) ஒரு பகல் பொழுதுக்குள்ளாகக் கொண்டு போய் சேர்த்து விடுவேன்! (8)

வாழ்க நீர், எம்மான்! புஷ்பகம் என்ற பெயருடைய விமானம், சூரியனைப் போல் ஒளி வீசுவது; என் சகோதரர் குபேரனிடமிருந்து, இராவணனால் பலாத்காரமாகக் கொண்டு வரப்பட்டது. (9)

நிகரில்லாத பராக்கிரமம் படைத்தவரே! போரில் (குபேரனை) வென்று, கொண்டு வரப்பட்ட அந்த விமானம் தெய்வத்தன்மை உடையது; மிகவும் உயர்ந்தது; (யஜமானன்) நினைக்கும் இடத்துக்குச் செல்லக் கூடியது. தங்களுக்காகவே இந்த விமானம் பாதுகாக்கப்பட்டு, இப்போது பயணத்திற்கு ஆயத்தமாக இருக்கிறது. (10)

பெருங்காற்றால் தாக்கப்பட்ட மேகம் போல மிகமிக வேகமாகச் செல்லும் இவ் விமானம், இங்கே காத்துக் கொண்டிருக்கிறது. தாங்கள் கவலையை விட்டுவிட்டு, அந்த விமானத்தில் ஏறி அயோத்திக்குச் செல்லப் போகிறீர்கள். (11)

(விபீஷணன் மேலும் பகர்கிறார்—) பேரறிஞரே! அடியேன், தங்கள் பேரருளுக்கு உரியவன் என்று கருதினால், என்னிடம் சில நற்குணங்களையாவது தாங்கள் காண்பீர்களேயானால், என்னிடம் தங்களுக்கு அன்பு இருக்குமேயானால், சகோதரர் லட்சுமணன், பத்தினியாகிய வைதேகி தேவியார் ஆகியோருடன் இங்கு சிலகாலம் தங்கி, என் மனங்கொண்ட மட்டும் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் சுகபோகங்களை ஏற்று அனுபவித்து, பின்னர் தாங்கள் செல்ல வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். (12,13)

இராமப்பிரபு! மனமகிழ்ச்சியுடன் இருக்கும் நான், நண்பர்கள்–படைவீரர்கள் சூழ நிற்கும் தங்களுக்கு, உபசாரங்கள் செய்வதற்குச் சித்தமாக இருக்கிறேன். தாங்கள் ஏற்றருள்வீராக. (14)

இராமபிரானே! தங்கள் ஏவலாளனான நான், தங்களிடம் கொண்டுள்ள அன்பினாலும் கௌரவத்தாலும் நட்பினாலும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேனே தவிர, தங்களுக்கு உத்தரவிடவில்லை.'' (15)

இவ்வாறு வேண்டிக் கொள்ளப்பட்ட இராமன், எல்லா அரக்கர்களும் வானரர்களும் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, விபீஷணனைப் பார்த்துப் பதில் சொன்னார்— (16)

''மனத்திற்கு இனியவனே! எதிரிகளை வாட்டுபவனே! தக்க சமயத்தில் உன்னால் சொல்லப்பட்ட மந்திராலோசனையாலும், சிறந்த நட்புக்கேற்ற செயல்களாலும், நான் எல்லா வகையாலும் கௌரவிக்கப்பட்டு விட்டதாகவே கருதுகிறேன்! (17)

ந க₂ல்வேதந்ந குர்யாம் தே வசநம் ராக்ஷஸேஶ்வர ।
தம் து மே ப்₄ராதரம் த்₃ரஷ்டும் ப₄ரதம் த்வரதே மந: ॥ (18)

மாம் நிவர்தயிதும் யோऽஸௌ சித்ரகூடமுபாக₃த: ।
ஶிரஸா யாசதோ யஸ்ய வசநம் ந க்ருதம் மயா ॥ (19)

கௌஸல்யாம் ச ஸுமித்ராம் ச கைகேயீம் ச யஶஸ்விநீம் ।
கு₃ரூம்ஶ்ச ஸுஹ்ருத₃ஶ்சைவ பௌராம்ஶ்ச தநயை: ஸஹ ॥ (20)

உபஸ்த₂ாபய மே க்ஷிப்ரம் விமாநம் ராக்ஷஸேஶ்வர ।
க்ருதகார்யஸ்ய மே வாஸ: கத₂ம்ஸ்விதி₃ஹ ஸம்மத: ॥ (21)

அநுஜாநீஹி மாம் ஸௌம்ய பூஜிதோऽஸ்மி விபீ₄ஷண ।
மந்யுர்ந க₂லு கர்தவ்யஸ்த்வரிதம் த்வாநுமாநயே ॥ (22)

ராக₄வஸ்ய வச: ஶ்ருத்வா ராக்ஷஸேந்த்₃ரோ விபீ₄ஷண: ।
தத்₃விமாநம் ஸமாத₃ாய தூர்ணம் ப்ரதிநிவர்தத ॥ (23)

தத: காஞ்சநசித்ராங்க₃ம் வைடூ₃ர்யமயவேதி₃கம் ।
கூடாக₃ாரை: பரிக்ஷிப்தம் ஸர்வதோ ரஜதப்ரப₄ம் ॥ (24)

பாண்டு₃ராபி₄: பதாகாபி₄ர்த்₄வஜைஶ்ச ஸமலங்க்ருதம் ।
ஶோபி₄தம் காஞ்சநைர்ஹர்ம்யைர்ஹேமபத்₃மவிபூ₄ஷிதம் ॥ (25)

ப்ரகீர்ணம் கிங்கிணீஜாலைர்முக்தாமணிக₃வாக்ஷிதம் ।
க₄ண்டாஜாலை: பரிக்ஷிப்தம் ஸர்வதோ மது₄ரஸ்வநம் ॥ (26)

யந்மேருஶிக₂ராகாரம் நிர்மிதம் விஶ்வகர்மணா ।
ப₃ஹுபி₄ர்பூ₄ஷிதம் ஹர்ம்யைர்முக்தாரஜதஸந்நிபை₄: ॥ (27)

தலை: ஸ்ப₂ாடிகசித்ராங்கை₃ர்வைதூ₃ர்யைஶ்ச வராஸநை: ।
மஹார்ஹாஸ்தரணோபேதைருபபந்நம் மஹாத₄நை: ॥ (28)

உபஸ்தி₂தமநாத்₄ருஷ்யம் தத்₃விமாநம் மநோஜவம் ।
நிவேத₃யித்வா ராமாய தஸ்தௌ₂ தத்ர விபீ₄ஷண: ॥ (29)

தத் புஷ்பகம் காமக₃மம் விமாந–
முபஸ்தி₂தம் பூ₄த₄ரஸந்நிகாஶம் ।
த்₃ருஷ்ட்வா தத₃ா விஸ்மயமாஜக₃ாம
ராம: ஸஸௌமித்ரிருத₃ாரஸத்த்வ: ॥ (30)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ சதுர்விம்ஶத்யுத்தரஶததம: ஸர்க₃: ॥

அரக்க மன்னனே! உன்னுடைய இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்பது ஒருக்காலும் இல்லை. என் தம்பி பரதன், என்னைத் திருப்பி அழைத்துச் செல்வதற்காகச் சித்திரகூடம் வந்து, தலைதாழ்த்தி வணங்கிக் கேட்டுக் கொண்டான். நான் அப்படியும் அவன் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இப்போது, அவனையும், கௌசல்யை–சுமித்திரையையும், புகழ்பெற்றவரான கைகேயியையும், ஆசார்யர்களையும், நண்பர்களையும், குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கும் நகர மக்களையும் பார்ப்பதற்கு என் மனம் பரபரக்கிறது. (18–20)

அரக்க மன்னனே! நான் மேற்கொண்ட காரியம் வெற்றிகரமாக முடிந்துவிட்ட பின், இங்கே தங்கி காலங்கடத்துவதில் எனக்கு உடன்பாடு இல்லை. அதனால், விமானத்தை உடனே கொண்டு வருவாயாக. (21)

அன்பனே! விபீஷணா! (உன் சொற்களாலேயே) நான் நன்றாக உபசரிக்கப்பட்டு விட்டேன். எனக்கு விடைகொடுப்பாயாக. உன் வேண்டுகோளை ஏற்கவில்லையே என்பதற்காகக் கோபம் கொள்ளக்கூடாது. நான், உடனே செல்ல வேண்டிய அவசியத்தை விளக்கிவிட்டேனே. அதனால், எனக்கு அனுமதி கொடு. (நான், உடனே போவதற்கு அனுமதி கொடு.)'' (22)

இராமனுடைய சொற்களைக் கேட்ட அரக்க மன்னன் விபீஷணன், அந்த (புஷ்பக) விமானத்தைச் செலுத்திக் கொண்டு விரைவில் திரும்பி வந்தான். (23)

அந்த விமானத்தின் ஒவ்வொரு பகுதியும் பொன்னால் இழைக்கப்பட்டிருந்தது; வைடூர்யமயமான மேடைகள் மற்றும் மண்டபங்கள் நிறைந்தது; எல்லா இடத்திலும் வெள்ளியைப் போல் ஒளி வீசிக் கொண்டிருந்தது; வெண்மையான கொடி–தோரணங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது; பொன்மயமான சிறுமாளிகைகள் மேலும் அழகுகூட்டின; பொற்றாமரைகள் அழகாகத் தொங்கவிடப்பட்டிருந்தன; நான்கு புறங்களிலும் சதங்கைகள், நான்கு மூலைகளிலும் பெரிய மணிகளின் குலைகள் – இவைகளிலிருந்து எழும்பும் இனியவோசை; முத்துக்களும் இரத்தினங்களும் இழைக்கப்பட்ட சாளரங்கள்; மேருமலையின் சிகரம் போல் விசுவகர்மாவினால் செய்யப்பட்டது; முத்துப் போலவும் வெள்ளி போலவும் ஒளி வீசும் அநேக மேன்மாடங்கள் கொண்டது; தரையில் படிகக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன; வைடூர்யம் இழைக்கப்பட்ட, விலைமதிக்க முடியாத உத்தமமான ஆசனங்களில் சிறந்த விரிப்புகள் போடப்பட்டிருந்தன. (24–28)

தடைபடுத்த முடியாமல் எங்கும் செல்லக் கூடியதும், மனோவேகம் கொண்டதுமான விமானம் ஆயத்தமாக வந்திருப்பதை இராமனிடம் கூறிவிட்டு, அடுத்த கட்டளைக்காகக் காத்து நின்றான், விபீஷணன். (29)

மாமலை போல் உயர்ந்து விளங்குவதும், விருப்பத்தை அறிந்து செல்லக் கூடியதுமான புஷ்பக விமானத்தைத் தன் கண்களால் பார்த்து, விசால உள்ளங்கொண்ட இராமனும் இலக்குவனும் பெரிதும் ஆச்சரியமடைந்தார்கள். (30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்றிருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பஞ்சவிம்ஶத்யுத்தரஶததமः ஸர்க$_3$:

புஷ்பகோத்பதநம்

உபஸ்தி$_2$தம் து தம் த்$_3$ருஷ்ட்வா புஷ்பகம் புஷ்பபூ$_4$ஷிதம் ।
அவிதூ$_3$ரஸ்தி$_2$தோ ராமம் ப்ரத்யுவாச விபீ$_4$ஷண: ॥ (1)

ஸ து ப$_3$த்$_3$தா$_4$ஞ்ஜலி: ப்ரஹ்வோ விநீதோ ராக்ஷஸேஶ்வர: ।
அப்$_3$ரவீத்த்வரயோபேத: கிம் கரோமீதி ராக$_4$வம் ॥ (2)

தமப்$_3$ரவீந்மஹாதேஜா லக்ஷ்மணஸ்யோபஶ்ருண்வத: ।
விம்ருஶ்ய ராக$_4$வோ வாக்யமித$_3$ம் ஸ்நேஹபுரஸ்க்ருதம் ॥ (3)

க்ருதப்ரயத்நகர்மாணோ விபீ$_4$ஷண வநௌகஸ: ।
ரத்நைரர்தை$_2$ஶ்ச விவிதை$_4$ர்பூ$_4$ஷணைஶ்சாபி பூஜய ॥ (4)

ஸஹைபி$_4$ரஜிதா லங்கா நிர்ஜிதா ராக்ஷஸேஶ்வர ।
ஹ்ருஷ்டை: ப்ராணப$_4$யம் த்யக்த்வா ஸங்க்$_3$ராமேஷ்வநிவர்திபி$_4$: ॥ (5)

த இமே க்ருதகர்மாண: பூஜ்யந்தாம் ஸர்வவாநரா: ।
த$_4$நரத்நப்ரதா$_3$நேந கர்மைஷாம் ஸப$_2$லம் குரு ॥ (6)

ஏவம் ஸம்மாநிதாஶ்சைதே மாநார்ஹா மாநத$_3$ த்வயா ।
ப$_4$விஷ்யந்தி க்ருதஜ்ஞேந நிர்வ்ருதா ஹரியூத$_2$பா: ॥ (7)

த்யாகி$_3$நம் ஸங்க்$_3$ரஹீதாரம் ஸாநுக்ரோஶம் யஶஸ்விநம் ।
ஸர்வே த்வாமவக$_3$ச்ச$_2$ந்தி தத: ஸம்போ$_3$த$_4$யாம்யஹம் ॥ (8)

ஹீநம் ரதிகு$_3$ணை: ஸர்வைரபி$_4$ஹந்தாரமாஹவே ।
த்யஜந்தி ந்ருபதிம் ஸேநா: ஸம்விக்$_3$நாஸ்தம் நரேஶ்வரம் ॥ (9)

ஏவமுக்தஸ்து ராமேண வாநராந்ஸ்தாந் விபீ$_4$ஷண: ।
ரத்நார்தை$_2$: ஸம்விபா$_4$கே$_3$ந ஸர்வாநேவாப்$_4$யபூஜயத் ॥ (10)

ததஸ்தாந் பூஜிதாந் த்$_3$ருஷ்ட்வா ரத்நைரர்தை$_2$ஶ்ச யூத$_2$பாந் ।
ஆருரோஹ ததோ ராமஸ்தத்$_3$விமாநமநுத்தமம் ॥ (11)

அங்கேநாதா$_3$ய வைதே$_3$ஹீம் லஜ்ஜமாநாம் யஶஸ்விநீம் ।
லக்ஷ்மணேந ஸஹ ப்$_4$ராத்ரா விக்ராந்தேந த$_4$நுஷ்மதா ॥ (12)

அப்$_3$ரவீச்ச விமாநஸ்த$_2$: பூஜயந் ஸர்வவாநராந் ।
ஸுக்$_3$ரீவம் ச மஹாவீர்யம் காகுத்ஸ்த$_2$: ஸவிபீ$_4$ஷணம் ॥ (13)

மித்ரகார்யம் க்ருதமித$_3$ம் ப$_4$வத்$_3$பி$_4$ர்வாநரோத்தமா: ।
அநுக்ஞாதா மயா ஸர்வே யதே$_2$ஷ்டம் ப்ரதிக$_3$ச்ச$_2$த ॥ (14)

ஸர்க்கம் : நூற்று இருபத்தைந்து

புஷ்பகம் புறப்பட்டது!

''மலர்களால் அலங்கரிக்கப்பட்ட புஷ்பக விமானம் வந்துவிட்டது'' என்று அருகிலிருந்த விபீஷணன், இராமனைப் பார்த்துக் கூறினான். (1)

பக்தியும் பணிவும் நிரம்பிய அரக்க மன்னன் கைகளைக் கூப்பிக் கொண்டு, சொற்களில் விரைவு தோன்ற, ''அடியேனுக்கு அடுத்த கட்டளை எதுவோ?'' என்று இராமனைக் கேட்டான். மகாதேஜஸ்வியான இராமன், சில விநாடிகள் தன்னுள் ஆலோசித்துவிட்டு, இலக்குவனின் செவிகளில் விழும்படியாக விபீஷணனிடம் அன்பு ததும்பக் கூறினார்— (2,3)

''விபீஷணா! வானரர்கள், தாங்கள் மேற்கொண்ட காரியத்தை மிகவும் பாடுபட்டுச் செய்து முடித்திருக்கிறார்கள். அவர்களை, இரத்தினம்–பொருள்–பல்வகை அணிகலன்களால் உபசாரம் செய்வாயாக. (4)

அரக்கர் வேந்தனே! உயிர் வாழ்வதில் ஆசையைத் துறந்து, போர்களில் புறங்காட்டாமல், மனத்தை முழுமையாகச் செலுத்திய இவர்களுடைய உதவியினால்தான், எவராலும் வெல்லப்பட முடியாத இலங்கை கைப்பற்றப்பட்டது. (5)

தாங்கள் ஏற்றுக் கொண்ட பெரும் பணியை செய்து முடித்துள்ள எல்லா வானரர்களுக்கும் ஏராளமாக செல்வங்களையும் இரத்தினங்களையும் கொடுத்துப் பாராட்டைத் தெரிவி. தங்களுடைய முயற்சிக்குத் தகுந்த பயன் கிடைத்துவிட்டதாக, அவர்கள் மனத்தில் பதிய வேண்டும். எல்லோரையும் பாராட்டிப் போற்றுபவனே! செய்நன்றிக் கடனாக, மிகவும் கௌரவிக்கத்தக்கவர்களான வானர படைத் தலைவர்கள், உன்னால் வெகுமதி அளிக்கப் பெற்று பாராட்டப்பட்டால் அதனால் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். (6,7)

எல்லோரும் உன்னைக் கொடையாளி என்றும் எல்லோரையும் அரவணைத்துச் செல்பவன் என்றும் தயை உள்ளவன், புகழ் மிக்கவன் என்றும் சொல்கிறார்கள். அதனால்தான், உனக்கு எடுத்துக் கூறுகிறேன். (8)

பிறரைக் கவர்ந்திழுக்கும் நற்குணங்கள் எதுவும் இல்லாத ஒரு மன்னன், ஒரு போரை நடத்திக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து, மனம் சலித்துப் போன படைவீரர்கள் மன்னனைக் கைவிட்டு விடுவார்கள்.'' (9)

இவ்வாறு இராமன் கூறியதும், வானரர்கள் அனைவரையும் அவரவர் தகுதிக்கு ஏற்றபடி நவரத்தினங்களாலும் செல்வத்தாலும் கௌரவித்தான், விபீஷணன். படைத்தலைவர்கள் அனைவரும் பொருள்களாலும் நவரத்தினங்களாலும் கௌரவிக்கப்பட்டதைக் கண்டு உகந்த இராமன், பேராற்றல் உடையவனும் வில்லாளியுமான தம்பி இலக்குவனுடன் உத்தமமான அந்த விமானத்தில் ஏறினார். அப்போது, நாணத்துடன் விளங்கியவளும் புகழ் மிக்கவளுமான சீதையைத் தன் மடி மீது வைத்துக் கொண்டார். (10–12)

விமானத்தில் வீற்றிருந்த இராமன், விபீஷணனையும் வீரம் மிகுந்த சுக்ரீவனையும் மற்றெல்லா வானரர்களையும் பாராட்டிவிட்டுக் கூறினார்— (13)

''வானரோத்தமர்களே! ஒரு நண்பனுக்குச் செய்யவேண்டிய நட்புக் கடமையை நிறைவேற்றிவிட்டீர்கள். நான், உங்கள் எல்லோருக்கும் விடைகொடுக்கிறேன். இனி, உங்களுக்கு விருப்பமான முறையில் உங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்லலாம். (14)

யத்து கார்யம் வயஸ்யேந ஸுஹ்ருதா₃ வா பரந்தப ।
க்ருதம் ஸுக்₃ரீவ தத் ஸர்வம் ப₄வதா த₄ர்மபீ₄ருணா ॥
கிஷ்கிந்த₄ாம் ப்ரதியாஹ்யாஶு ஸ்வஸைந்யேநாபி₄ஸம்வ்ருத: ॥ (15)

ஸ்வராஜ்யே வஸ லங்காயாம் மயா த₃த்தே விபீ₄ஷண ।
ந த்வாம் த₄ர்ஷயிதும் ஶக்தா: ஸேந்த்₃ரா அபி தி₃வௌகஸ: ॥ (16)

அயோத்₄யாம் ப்ரதியாஸ்யாமி ராஜத₄ாநீம் பிதுர்மம ।
அப்₄யநுக்ஞாதுமிச்ச₂ாமி ஸர்வாஸ்சாமந்த்ரயாமி வ: ॥ (17)

ஏவமுக்தாஸ்து ராமேண வாநராஸ்தே மஹாப₃லா: ।
ஊசு: ப்ராஞ்ஜலயோ ராமம் ராக்ஷஸஶ்ச விபீ₄ஷண: ॥ (18)

அயோத்₄யாம் க₃ந்துமிச்ச₂ாம: ஸர்வாந்நயது நோ ப₄வாந் ।
உத்₃யுக்தா விசரிஷ்யாமோ வநாநி நக₃ராணி ச ॥ (19)

த்₃ருஷ்ட்வா த்வாமபி₄ஷேகார்த்₃ரம் கௌஸம்யாமபி₄வாத்₃ய ச ।
அசிரேணாக₃மிஷ்யாம: ஸ்வாந் க்₃ருஹாந்ந்ருபதே: ஸுத ॥ (20)

ஏவமுக்தஸ்து த₄ர்மாத்மா வாநரை: ஸவிபீ₄ஷணை: ।
அப்₃ரவீத்₃ராக₄வ: ஸ்ரீமாந் ஸஸுக்₃ரீவவிபீ₄ஷணாந் ॥ (21)

ப்ரியாத் ப்ரியதரம் லப்₃த₄ம் யத₃ஹம் ஸஸுஹ்ருஜ்ஜந: ।
ஸர்வைர்ப₄வத்₃பி₄: ஸஹித: ப்ரீதிம் லப்ஸ்யே புரீம் க₃த: ॥ (22)

க்ஷிப்ரமாரோஹ ஸுக்₃ரீவ விமாநம் வாநரை: ஸஹ ।
த்வமத்₄யாரோஹ ஸாமாத்யோ ராக்ஷஸேந்த்₃ர விபீ₄ஷண ॥ (23)

ததஸ்தத் புஷ்பகம் தி₃வ்யம் ஸுக்₃ரீவ: ஸஹ ஸேநயா ।
அத்₄யாரோஹத்த்வரஞ்ஶீக்₄ரம் ஸாமாத்யஶ்ச விபீ₄ஷண: ॥ (24)

தேஷ்வாரூடே₄ஷு ஸர்வேஷு கௌபே₃ரம் பரமாஸநம் ।
ராக₄வேணாப்₄யநுக்ஞாதமுத்பபாத விஹாயஸம் ॥ (25)

யயௌ தேந விமாநேந ஹம்ஸயுக்தேந பா₄ஸ்வதா ।
ப்ரஹ்ருஷ்டஶ்ச ப்ரதீதஶ்ச ப₃பௌ₄ ராம: குபே₃ரவத் ॥ (26)

தே ஸர்வே வாநரா ஹ்ருஷ்டா ராக்ஷஸாஶ்ச மஹாப₃லா: ।
யதா₂ஸுக₂மஸம்பா₃த₄ம் தி₃வ்யே தஸ்மிந்நுபாவிஶந் ॥ (27)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ பஞ்சவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க₃: ॥

பகைவர்களை வாட்டியெடுக்கும் சுக்ரீவனே! நீ அதருமத்தைக் கண்டு அஞ்சுபவன். அதனால், (என்னிடம் நன்றியைக் காட்ட விரும்பிய நீ) நல்லுள்ளம் கொண்ட ஆருயிர் நண்பனால் செய்யப்பட வேண்டிய உதவிகளைச் செய்து முடித்துவிட்டாய். எனவே, உன் படைகளுடன்கூட விரைவில் கிஷ்கிந்தைக்குத் திரும்பிச் செல்வாயாக. (15)

விபீஷணா! என்னால் கொடுக்கப்பட்ட உன் சொந்த நாட்டில் நிலைத்து வாழ்வாயாக. இந்திரன் உள்ளிட்ட வானுலகத்தவர் எவரும் உன்னை எதிர்க்கத் துணிய மாட்டார்கள். (16)

என்னுடைய தந்தையின் தலைநகரமாகிய அயோத்திக்குச் செல்லப் போகிறேன். நீங்கள் எல்லோரும் எனக்கு விடைகொடுக்க வேண்டும். நானும் உங்கள் எல்லோரிடமும் சொல்லிக் கொள்கிறேன்.'' (17)

இவ்வாறு, இராமன் கூறியதும் மகாபலசாலிகளான வானரர்களும் அரக்கனாகிய வீடணனும், கைகளைக் கூப்பிக் கொண்டு, இராமனைப் பார்த்துப் பின்வருமாறு வேண்டிக் கொண்டார்கள்— (18)

''நாங்களும் அயோத்திக்கு வர விரும்புகிறோம். அருள்கூர்ந்து எங்கள் எல்லோரையும் அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொள்கிறோம். அங்கே எவ்வித அட்டகாசமும் செய்யாமல், மிகவும் கட்டுப்பாடுடன் காடுகளிலும் பட்டணங்களிலும் சுற்றி வருவோம். (19)

மன்னர் மைந்தரே! பட்டாபிஷேக காலத்தில், புனித நீரால் நனைக்கப்பட்டு விளங்கும் தங்கள் திருமேனியைத் தரிசித்துவிட்டு, (தங்களைப் பெற்றெடுத்த) கௌசல்யை தேவியை வணங்கிவிட்டு, விரைவிலேயே எங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்றுவிடுவோம்.'' (20)

விபீஷணனும் வானரர்களும் இவ்வாறு கூறியதைக் கேட்ட தருமமூர்த்தியான அருளாளர் இராமன், சுக்ரீவ–விபீஷணர்களைப் பார்த்துக் கூறினார்— (21)

''நண்பர்களே! நான், உங்கள் எல்லோருடன்கூட அயோத்தி செல்வேனேயானால், அதைவிடப் பேரானந்தம் என்ன இருக்கிறது? ஆகா! அதனால், நான் எவ்வளவு பூரித்துப் போவேன்! (22)

சுக்ரீவனே! வானரர்களுடன்கூட உடனே விமானத்தில் ஏறிக் கொள். அரக்க மன்னனாகிய விபீஷணா! உன் அமைச்சர்களுடன் ஏறிக் கொள்.'' (23)

தெய்விகமான புஷ்பக விமானத்தில், படைகளுடன்கூட சுக்ரீவன் ஏறிக் கொண்டான். உடனேயே, அமைச்சர்களுடன்கூட வீடணன் ஏறிக் கொண்டான். (24)

அவர்கள் எல்லோரும் ஏறிக் கொண்டதும், குபேரனுக்குச் சொந்தமான அந்த விமானம், இராமனின் ஆணையைப் பெற்று, வானத்தை நோக்கி எழும்பிச் சென்றது. (25)

சுமந்து செல்வதைப் போல் நிர்மாணிக்கப்பட்ட அன்னப் பிரதிமைகள் விளங்குவதும், பேரொளி வீசுவதுமான அந்த விமானத்தில், உடல் புல்லரிக்க, மன மகிழ்ச்சியுடன் பயணித்த இராமசந்திர மூர்த்தி, சாட்சாத் குபேரனைப் போலவே விளங்கினார்! (26)

உற்சாகம் கொண்டவர்களும், பெரும் பலசாலிகளுமான வானரர்களும் (கரடிகளும்) அரக்கர்களும், தெய்வத்தன்மை பொருந்திய அந்த விமானத்தில் முண்டியடித்துக் கொள்ளாமல் சுகமாக அமர்ந்து கொண்டார்கள். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஷட்$_3$விம்ஶத்யுத்தரஶததம: ஸர்க$_3$:

ப்ரத்யாவ்ருத்திபத$_2$வர்ணநம்

அநுஜ்ஞாதம் து ராமேண தத்$_3$விமாநமநுத்தமம் ।
உத்பபாத மஹாமேக$_4$: ஶ்வஸநேநோத்$_3$த$_4$தோ யத$_2$ா ॥ (1)

பாதயித்வா ததஶ்சக்ஷு: ஸர்வதோ ரகு$_4$நந்த$_3$ந: ।
அப்$_3$ரவீந்மைதி$_2$லீம் ஸீதாம் ராம: ஶஶிநிப$_4$ாநநாம் ॥ (2)

கைலாஸ ஶிக$_2$ராகாரே த்ரிகூடஶிக$_2$ரே ஸ்தி$_2$தாம் ।
லங்காமீக்ஷஸ்வ வைதே$_3$ஹி நிர்மிதாம் விஶ்வகர்மணா ॥ (3)

ஏதத$_3$ாயோத$_4$நம் பஶ்ய மாம்ஸஶோணிதகர்த$_3$மம் ।
ஹரீணாம் ராக்ஷஸாநாம் ச ஸீதே விஶஸநம் மஹத் ॥ (4)

அத்ர த$_3$த்தவர: ஶேதே ப்ரமாதீ$_2$ ராக்ஷஸேஶ்வர: ।
தவ ஹேதோர்விஶாலாக்ஷி ராவணோ நிஹதோ மயா ॥ (5)

கும்ப$_4$கர்ணோऽத்ர நிஹத: ப்ரஹஸ்தஶ்ச நிஶாசர: ।
தூ$_4$ம்ராக்ஷஶ்சாத்ர நிஹதோ வாநரேண ஹநூமதா ॥ (6)

வித்$_3$யுந்மாலீ ஹதஶ்சாத்ர ஸுஷேணேந மஹாத்மநா ।
லக்ஷ்மணேநேந்$_3$ரஜிச்சாத்ர ராவணிர்நிஹதோ ரணே ॥ (7)

அங்க$_3$தே$_3$நாத்ர நிஹதோ விகடோ நாம ராக்ஷஸ: ।
விரூபாக்ஷஶ்ச து$_3$ர்த$_4$ர்ஷோ மஹாபார்ஶ்வமஹோத$_3$ரௌ ॥
அகம்பநஶ்ச நிஹதோ ப$_3$லிநோऽந்யே ச ராக்ஷஸா: ॥ (8)

அத்ர மந்தோ$_3$த$_3$ரீ நாம ப$_4$ார்யா தம் பர்யதே$_3$வயத் ।
ஸபத்நீநாம் ஸஹஸ்ரேண ஸாஸ்ரேண பரிவாரிதா ॥ (9)

ஏதத்து த்$_3$ருஶ்யதே தீர்த$_2$ம் ஸமுத்$_3$ரஸ்ய வராநநே ।
யத்ர ஸாக$_3$ரமுத்தீர்ய தாம் ராத்ரிமுஷிதா வயம் ॥ (10)

ஏஷ ஸேதுர்மயா ப$_3$த்$_3$த$_4$: ஸாக$_3$ரே லவணார்ணவே ।
தவ ஹேதோர்விஶாலாக்ஷி நளஸேது: ஸுது$_3$ஷ்கர: ॥ (11)

பஶ்ய ஸாக$_3$ரமக்ஷோப்$_4$யம் வைதே$_3$ஹி வருணாலயம் ।
அபாரமபி$_4$க$_3$ர்ஜந்தம் ஶங்க$_2$ஶுக்திநிஷேவிதம் ॥ (12)

ஹிரண்யநாப$_4$ம் ஶைலேந்த்$_3$ரம் காஞ்சநம் பஶ்ய மைதி$_2$லி ।
விஶ்ரமார்த$_2$ம் ஹநுமதோ பி$_4$த்த்வா ஸாக$_3$ரமுத்தி$_2$தம் ॥ (13)

ஏதத் குக்ஷௌ ஸமுத்$_3$ரஸ்ய ஸ்கந்த$_4$ாவாரநிவேஶநம் ॥ (14)

ஸர்க்கம் : நூற்று இருபத்தாறு

வழியில் தென்பட்ட முக்கிய இடங்களைக் காட்டுதல்!

இராமன் ஆணையிட்டவுடன், மிகவும் உத்தமமான அந்த விமானம், பெருங்காற்றினால் முட்டித் தள்ளப்பட்ட மாபெரும் மேகத்தைப் போல் மேலே உயரத்தில் பறந்து சென்றது. (1)

அப்போது, ரகுகுல நாயகரான இராமன் கீழே தரையில் நாற்புறமும் பார்வையைச் செலுத்தி, முழு நிலவு போல் ஒளிரும் மிதிலை மன்னரின் திருக்குமாரத்தியான சீதையைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (2)

''சீதே! திருக்கயிலாயத்தின் கொடுமுடி போல் விளங்கும் திரிகூட மலையின் உச்சியில், விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த இலங்கையைப் பார்! (3)

ஏராளமான வானரர்களும் அரக்கர்களும் போர் செய்து மடிந்ததால், ஊனும் செந்நீரும் பெருகி சேறாகிக் கிடக்கும் இந்தப் போர்க்களத்தைப் பார். (4)

நெடுந்தடங்கண்ணாய்! அரக்கர் மன்னனும் பலவகையான வரங்கள் பெற்றவனும் கொடுமைக்காரனுமான இராவணன், உன் பொருட்டு என்னால் கொல்லப்பட்டு, இதோ இங்கே வீழ்ந்து கிடக்கிறான். (இராவணன் உடல் அப்போது அங்கே இல்லை. 'இங்கேதான் கொல்லப்பட்டுக் கிடந்தான்' என்று இராமன் நினைவுகூர்ந்தான் – எனக் கொள்க.) (5)

பார்! இங்கேதான் கும்பகர்ணன் கொல்லப்பட்டான்; அரக்கன் பிரஹஸ்தன் கொல்லப்பட்டான்; இவ்விடத்தில்தான் வானரோத்தமனான அனுமானால் தூம்ராக்ஷன் கொல்லப்பட்டான். (6)

இவ்விடத்தில்தான் பேராற்றல் கொண்ட சுஷேணனால் வித்யுன்மாலி மாய்க்கப்பட்டான்; இராவணன் புதல்வனான இந்திரஜித், இந்த இடத்தில் போர் செய்து, லட்சுமணனால் கொல்லப்பட்டான். (7)

இதோ, இந்த இடத்தில்தான் விகடன் என்ற அரக்கன், அங்கதனால் கொல்லப்பட்டான்; எவராலும் எதிர்கொள்ள முடியாத விரூபாக்ஷன் மற்றும் மகாபார்சுவன், மகோதரன், அகம்பனன், பலசாலிகளான மற்றும் பல அரக்கர்கள் இங்கேதான் கொல்லப்பட்டார்கள். (8)

இதோ இவ்விடத்தில், கண்ணீர் பெருகும் ஆயிரக்கணக்கான சக்களத்திகளுடன் வந்து, இராவணனின் மனைவியான மண்டோதரி என்பவள், அவனைக் குறித்துப் புலம்பி அழுதாள். (9)

மங்களமான முகம் உடையவளே! இதோ, பெருங்கடலின் கரை காணப்படுகிறது. கடலைக் கடந்து வந்து, ஓர் இரவு முழுவதும் இங்கே தங்கியிருந்தோம். (10)

உப்புக் கடலில் பாலம் அமைப்பது என்பது செயற்கரிய செயல். தடங்கண்ணாளே! உன் பொருட்டு, 'நளஸேது' என்ற பாலம் என்னால் கட்டப்பட்டது. (11)

வைதேகி! எவ்விதத்திலும் கலக்க முடியாததும், வருணனுக்கு இருப்பிடமானதும், எல்லை காண முடியாததும், பேரலைகள் முழங்குவதும், சங்குகள்–முத்துச்சிப்பிகளின் உற்பத்தி நிலையமானதுமான பெருங்கடலைப் பாராய்! (12)

மைதிலி! 'ஹிரண்யநாபம்' என்ற உத்தமமான பொன்மலையைப் பார். அனுமான் இளைப்பாறுவதற்காகக் கடலைக் கிழித்துக் கொண்டு மேலே எழும்பியது, இது. (13)

கடலின் நடுவில் காணப்படும் மணற்திட்டு, படைகள் தண்டு இறங்குவதற்கான இடம். (14)

ஏதத்து த்$_3$ருஶ்யதே தீர்த$_2$ம் ஸாக$_3$ரஸ்ய மஹாத்மந: ।
ஸேதுப$_3$ந்த$_4$ இதி க்$_2$யாதம் த்ரைலோக்யேநாபி$_4$பூஜிதம் ॥ (15)

ஏதத் பவித்ரம் பரமம் மஹாபாதகநாஶநம் ।
அத்ர பூர்வம் மஹாதே$_3$வ: ப்ரஸாத$_3$மகரோத் ப்ரபு$_4$: ॥ (16)

அத்ர ராக்ஷஸராஜோऽயமாஜகா$_3$ம விபீ$_4$ஷண: ॥ (17)

ஏஷா ஸா த்$_3$ருஶ்யதே ஸீதே கிஷ்கிந்தா$_4$ சித்ரகாநநா ।
ஸுக்$_3$ரீவஸ்ய புரீ ரம்யா யத்ர வாலீ மயா ஹத: ॥ (18)

அத$_2$ த்$_3$ருஷ்ட்வா புரீம் ஸீதா கிஷ்கிந்தா$_4$ம் வாலிபாலிதாம் ।
அப்$_3$ரவீத் ப்ரஶ்ரிதம் வாக்யம் ராமம் ப்ரணயஸாத்$_4$வஸா ॥ (19)

ஸுக்$_3$ரீவப்ரியபா$_4$ர்யாபி$_4$ஸ்தாராப்ரமுக$_2$தோ ந்ருப ।
அந்யேஷாம் வாநரேந்த்$_3$ராணாம் ஸ்த்ரீபி$_4$: பரிவ்ருதா ஹ்யஹம் ॥
க$_3$ந்துமிச்சே$_2$ ஸஹாயோத்$_4$யாம் ராஜதா$_4$நீம் த்வயாநக$_4$ ॥ (20)

ஏவமுக்தோऽத$_2$ வைதே$_3$ஹ்யா ராக$_4$வ: ப்ரத்யுவாச தாம் ।
ஏவமஸ்த்விதி கிஷ்கிந்தா$_4$ம் ப்ராப்ய ஸம்ஸ்தா$_2$ப்ய ராக$_4$வ: ॥
விமாநம் ப்ரேக்ஷ்ய ஸுக்$_3$ரீவம் வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (21)

ப்$_3$ரூஹி வாநரஶார்தூ$_3$ல ஸர்வாந் வாநரபுங்க$_3$வாந் ।
ஸ்வதா$_3$ரஸஹிதா: ஸர்வே ஹ்யயோத்$_4$யாம் யாந்து ஸீதயா ॥ (22)

ததா$_2$ த்வமபி ஸர்வாபி$_4$: ஸ்த்ரீபி$_4$: ஸஹ மஹாப$_3$ல ।
அபி$_4$த்வரஸ்வ ஸுக்$_3$ரீவ க$_3$ச்சா$_2$ம: ப்லவகே$_3$ஶ்வர ॥ (23)

ஏவமுக்தஸ்து ஸுக்$_3$ரீவோ ராமேணாமிததேஜஸா ।
வாநராதி$_4$பதி: ஶ்ரீமாந்ஸ்தைஶ்ச ஸர்வை: ஸமாவ்ருத: ॥
ப்ரவிஶ்யாந்த:புரம் ஶீக்$_4$ரம் தாராமுத்$_3$வீக்ஷ்ய பா$_4$ஷத ॥ (24)

ப்ரியே த்வம் ஸஹ நாரீபி$_4$ர்வாநராணாம் மஹாத்மநாம் ।
ராக$_4$வேணாப்$_4$யநுக்ஞாதா மைதி$_2$லீப்ரியகாம்யயா ॥ (25)

த்வர த்வமபி$_4$க$_3$ச்சா$_2$மோ க்$_3$ருஹ்ய வாநரயோஷித: ।
அயோத்$_4$யாம் த$_3$ர்ஶயிஷ்யாம: ஸர்வா த$_3$ஶரத$_2$ஸ்த்ரிய: ॥ (26)

ஸுக்$_3$ரீவஸ்ய வச: ஶ்ருத்வா தாரா ஸர்வாங்க$_3$ஶோப$_4$நா ।
ஆஹூய சாப்$_3$ரவீத் ஸர்வா வாநராணாம் து யோஷித: ॥ (27)

ஸுக்$_3$ரீவேணாப்$_4$யநுக்ஞாதா க$_3$ந்தும் ஸர்வைஶ்ச வாநரை: ।
மம சாபி ப்ரியம் கார்யமயோத்$_4$யாத$_3$ர்ஶநேந ச ॥ (28)

ப்ரவேஶம் சாபி ராமஸ்ய பௌரஜாநபதை$_3$: ஸஹ ।
விபூ$_4$திம் சைவ ஸர்வாஸாம் ஸ்த்ரீணாம் த$_3$ஶரத$_2$ஸ்ய ச ॥ (29)

பாலம் கட்டுவதற்கான தொடக்கப் பகுதியில் இருப்பதால் 'ஸேதுபந்தம்' என்று புகழ் பெற்று, மூவுலகத்தோராலும் வணங்கப்படும் இந்தப் புனிதப் பிரதேசம், பேராற்றலும் பேருருவமும் கொண்ட பெருங்கடலில், இதோ காணப்படுகிறது. (15)

இது, மிகவும் புனிதமானது; (இங்கு நீராடுபவர்களின்) பெரும் பாவங்களையும் அழிக்கக் கூடியது; இவ்விடத்தில்தான், முன்பு, (நான் பாலம் கட்டத் தொடங்கியபோது,) தனிப்பெரும் ஈசரான மகாதேவர் எனக்கு அருள் புரிந்தார். (16)

இதோ பார்! இந்த இடத்தில்தான், அரக்க மன்னனான இந்த விபீஷணன் வந்து வணங்கினான். (17)

சீதே! மனங்கவர் சோலைகள் விளங்குவதும் அழகானதுமான சுக்ரீவனுடைய பட்டணம் கிஷ்கிந்தை இதோ தெரிகிறது. இங்குதான் வாலி என்னால் கொல்லப்பட்டான்.'' (18)

முன்னர், வாலியினால் பரிபாலிக்கப்பட்ட கிஷ்கிந்தை நகரத்தைப் பார்த்ததும், சீதை அன்பும் பரபரப்பும் இணைய வணக்கத்துடன் இராமனிடம் கூறினாள்— (19)

''மாசற்ற மாமன்னரே! நான், தாரை முதலிய சுக்ரீவனுக்குப் பிரியமான மனைவிகளுடனும், மற்ற வானரோத்தமர்களின் மனைவிகளுடனும் சேர்ந்தே, தங்களுடன் தலைநகர் அயோத்திக்குச் செல்ல விரும்புகிறேன்.'' (20)

சீதாப் பிராட்டியார் இவ்வாறு கூறியவுடன், இராமன் அவளைப் பார்த்து, ''அப்படியே ஆகட்டும்'' என்று பதில் கூறினார். பின்னர், இராமன் கிஷ்கிந்தைக்குள் விமானத்தை நிறுத்தி வைத்து, சுக்ரீவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (21)

''வானரப் புலியே! எல்லா வானரோத்தமர்களும் தத்தம் மனைவிமார்களுடன், சீதையோடு சேர்ந்து அயோத்திக்கு வரவேண்டும் – என்று, எல்லோருக்கும் ஆணையிடுவாயாக. (22)

மகாபலசாலியே! வானர மன்னனே! சுக்ரீவனே! நீயும் உன் மனைவியர் அனைவரையும் துரிதப்படுத்துவாயாக. நாம் எல்லோரும் ஒன்றாகவே அயோத்திக்குச் செல்வோம்.'' (23)

அளவிலா மகிமை பொருந்திய இராமன் இவ்வாறு கூறியவுடன், வெற்றித்திருவுடன் விளங்கிய வானர மன்னன் சுக்ரீவன், அவர்கள் எல்லோராலும் சூழப்பட்டவனாய், விரைவாக அந்தப்புரத்திற்குள் (தான் மட்டும்) புகுந்து சென்று, தாரையைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (24)

''அன்புடையாளே! மைதிலியின் விருப்பத்தின்படி வானரத் தலைவர்களின் மனைவிமார்களுடன் நீயும் இப்போது எங்களுடன் அயோத்திக்கு வரவேண்டும் என்று இராமபிரான் உத்தரவிட்டிருக்கிறார். (25)

உடனே புறப்படு. வானரப் பெண்டிர் அனைவரையும் உடன் அழைத்துக் கொண்டு சென்று, அயோத்தியைச் சுற்றிக் காட்டுவோம்; தசரத மன்னரின் பத்தினிகளையும் தரிசிக்க வைப்போம்.'' (26)

அழகு பொருந்திய அங்கங்கள் அமையப் பெற்ற தாரை, சுக்ரீவனுடைய சொற்களுக்கிணங்க, வானரர்களின் மனைவிமார்களை அழைத்து, பின்வருமாறு கூறினாள்— (27)

''நீங்கள் எல்லோரும் உங்கள் கணவன்மார்களுடன் போக வேண்டும் என்று சுக்ரீவனால் ஆணையிடப்பட்டிருக்கிறீர்கள். அயோத்தியைப் பார்ப்பதற்கு நீங்கள் வரவேண்டும் என்று நானும் ஆசைப்படுகிறேன். நகர்ப்புற–கிராமப்புற மக்கள் புடைசூழ, அயோத்திக்குள் இராமபிரான் பிரவேசிக்கும் கண்கொள்ளாக் காட்சியையும், தசரத மன்னரின் பத்தினிகள் அனைவருடைய அபரிமிதமான வள்ளல் தன்மையையும் உபசாரங்களையும் கண்டு அனுபவிக்கலாம்.'' (28,29)

தாரயா சாப்$_4$யநுக்ஞாதா: ஸர்வா வாநரயோஷித: ।
நேபத்$_2$யம் விதி$_4$பூர்வேண க்ருத்வா சாபி ப்ரத$_3$க்ஷிணம் ॥
அத்$_4$யாரோஹந் விமாநம் தத் ஸீதாத$_3$ர்ஶநகாங்க்ஷயா ॥ (30)

தாபி$_4$: ஸஹோத்தி$_2$தம் ஶீக்$_4$ரம் விமாநம் ப்ரேக்ஷ்ய ராக$_4$வ: ।
ருஶ்யமூகஸமீபே து வைதே$_3$ஹீம் புநரப்$_3$ரவீத் ॥ (31)

த்$_3$ருஶ்யதேऽஸௌ மஹாந் ஸீதே ஸவித்$_3$யுதி$_3$வ தோயத$_3$: ।
ருஶ்யமூகோ கி$_3$ரிஶ்ரேஷ்ட$_2$: காஞ்சநைர்தா$_4$துபி$_4$ர்வ்ருத: ॥ (32)

அத்ராஹம் வாநரேந்த்$_3$ரேண ஸுக்$_3$ரீவேண ஸமாக$_3$த: ।
ஸமயஶ்ச க்ருத: ஸீதே வதா$_4$ர்த$_2$ம் வாலிநோ மயா ॥ (33)

ஏஷா ஸா த்$_3$ருஶ்யதே பம்பா நளிநீ சித்ரகாநநா ।
த்வயா விஹீநோ யத்ராஹம் விலலாப ஸுது$_3$:கி$_2$த: ॥ (34)

அஸ்யாஸ்தீரே மயா த்$_3$ருஷ்டா ஶப$_3$ரீ த$_4$ர்மசாரிணீ ।
அத்ர யோஜநபா$_3$ஹுஶ்ச கப$_3$ந்தோ$_4$ நிஹதோ மயா ॥ (35)

த்$_3$ருஶ்யதே ச ஜநஸ்தா$_2$நே ஸீதே ஸ்ரீமாந் வநஸ்பதி: ।
யத்ர யுத்$_3$த$_4$ம் மஹத்$_3$வ்ருத்தம் தவ ஹேதோர்விலாஸிநி ॥
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ஜடாயோஶ்ச மஹாத்மந: ॥ (36)

க$_2$ரஶ்ச நிஹதோ யத்ர தூ$_3$ஷணஶ்ச நிபாதித: ।
த்ரிஶிராஶ்ச மஹாவீர்யோ மயா பா$_3$ணைரஜிஹ்மகை$_3$: ॥
ஏதத்ததா$_3$ஶ்ரமபத$_3$மஸ்மாகம் வரவர்ணிநி ॥ (37)

பர்ணஶாலா ததா$_2$ சித்ரா த்$_3$ருஶ்யதே ஶுப$_4$த$_3$ர்ஶநா ।
யத்ர த்வம் ராக்ஷஸேந்த்$_3$ரேண ராவணேந ஹ்ருதா ப$_3$லாத் ॥ (38)

ஏஷா கோ$_3$தா$_3$வரீ ரம்யா ப்ரஸந்நஸலிலா ஶிவா ।
அக$_3$ஸ்த்யஸ்யாஶ்ரமோ ஹ்யேஷ த்$_3$ருஶ்யதே பஶ்ய மைதி$_2$லி ॥
தீ$_3$ப்தஶ்சைவாஶ்ரமோ ஹ்யேஷ ஸுதீக்ஷ்ணஸ்ய மஹாத்மந: ॥ (39)

வைதே$_3$ஹி த்$_3$ருஶ்யதே சாத்ர ஶரப$_4$ங்கா$_3$ஶ்ரமோ மஹாந் ।
உபயாத: ஸஹஸ்ராக்ஷோ யத்ர ஶக்ர: புரந்த$_3$ர: ॥ (40)

அஸ்மிந் தே$_3$ஶே மஹாகாயோ விராதோ$_4$ நிஹதோ மயா ।
ஏதே ஹி தாபஸாவாஸா த்$_3$ருஶ்யந்தே தநுமத்$_4$யமே ॥ (41)

அத்ரி: குலபதிர்யத்ர ஸூர்யவைஶ்வாநரப்ரப$_4$: ।
அத்ர ஸீதே த்வயா த்$_3$ருஷ்டா தாபஸீ த$_4$ர்மசாரிணீ ॥ (42)

இவ்வாறு, தாரையால் உத்தரவிடப்பட்ட வானரப் பெண்டிர் அனைவரும் உடனே அலங்காரம் செய்து கொண்டு, (வெளியே வந்து) அந்தத் தெய்விக விமானத்தை வலம் வந்து, சீதாப்பிராட்டியாரைக் காணும் பேராவலுடன் அந்த விமானத்தில் ஏறிக் கொண்டார்கள். (30)

அவர்கள் எல்லோரும் ஏறிக் கொண்டபின், காலதாமதமில்லாமல் உயரே புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கும்போது, ரிசியமூக பர்வதம் பார்வையில் பட்டவுடன், சீதையைப் பார்த்து இராமன் பின்வருமாறு மறுபடியும் கூறினார்— (31)

''சீதே! மின்னல் ஒளியுடன் கூடிய மேகம் போல், தங்கத் தாதுக்கள் விரவிக் காணப்படும் உன்னதமான இந்த மாபெரும் மலை 'ரிசியமூகம்' எனப் பெயர் பெற்றது. (32)

சீதே! இந்த இடத்தில்தான் நான், சுக்ரீவனைச் சந்தித்தேன்; வாலியை மாய்ப்பதாக வாக்குறுதி அளித்தேன். (33)

இதோ, கரைகளில் கண்கவர் பூஞ்சோலைகளையுடைய தாமரைத் தடாகம் 'பம்பை' தென்படுகிறது. இந்த இடத்தில், உன்னுடைய பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் மிகவும் துக்கத்துடன் புலம்பிக் கதறினேன். (34)

இதன் கரையில்தான், அறநெறி தவறாத ஒழுக்கமுடைய சபரியைக் கண்டேன். இங்கேதான், ஒரு யோஜனை நீளமுள்ள கைகளைக் கொண்ட கபந்தனை வெட்டி வீழ்த்தினேன். (35)

நற்குணங்கள் அமைந்த ஜானகீ! இதோ, இங்கே ஜனஸ்தானத்தில் காணப்படும் செழுமையான மரத்தைப் பார். இந்த இடத்தில்தான், உன் நிமித்தமாக (உன்னைக் காப்பாற்றுவதற்காக) மகாத்மாவான ஜடாயுவுக்கும், கொடியவனான இராவணனுக்குமிடையே பெரும் போர் நிகழ்ந்தது. (36)

மாதரசியே! எந்த இடத்தில் குறி தப்பாமல் தாக்கக்கூடிய பாணங்களால் கர–தூஷணர்களும், மாவீரனான திரிசிரசும் கொல்லப்பட்டார்களோ, நம்முடைய அந்த ஆசிரம வளாகம், இதுதான். (37)

அரக்க மன்னன் இராவணன், எந்த இடத்திலிருந்து உன்னைப் பலாத்காரமாகக் கவர்ந்து சென்றானோ, அந்த அழகியதும் தவ வாழ்க்கைக்கு ஏற்றபடி இனிய தோற்றத்துடன் அமையப் பெற்றதுமான ஓலைக் குடிசையைப் பார்! (38)

கண்கவர் வனப்புடையதும் தெளிவான நீரைக் கொண்டதுமான புனித கோதாவரி, இதோ! அகஸ்தியருடைய ஆசிரமும் காணப்படுகிறது. பாராய், மைதிலி! மகாத்மா சுதீக்ஷ்ணரின் நெடுந்தவத்தால் பேரொளியுடன் விளங்கும் ஆசிரமம் இதோ இருக்கிறது, பார். (39)

வைதேகி! ஆயிரம் கண்களுடையவனும் புரந்தரனுமான இந்திரன் வந்து சென்றானே, உத்தமமான அந்த சரபங்கரின் ஆசிரமத்தைக் காண்பாய். (40)

இதோ பார்! இந்த இடத்தில்தான், பேருடல் கொண்ட விராதன் என்னால் மாய்க்கப்பட்டான். மெல்லிடையாளே! இதோ தவசிகளின் குடில்கள் தென்படுவதைப் பார். (41)

சீதே! சூரியனையும் அக்னியையும் போல் ஒளிர்பவரும், குலபதியுமான (ஆயிரக்கணக்கான சீடர்களைக் கொண்டவருமான) அத்ரி முனிவர் இங்கேதான் இருக்கிறார். அறம் தவறாத கற்புக்கனலியான தவச்செல்வி(அநஸூயா தேவி)யை இங்கேதான் தரிசித்தாய். (42)

அஸௌ ஸுதநு ஶைலேந்த்₃ரஶ்சித்ரகூட: ப்ரகாஶதே ।
யத்ர மாம் கைகயீபுத்ர: ப்ரஸாத₃யிதுமாக₃த: ॥ (43)

ஏஷா ஸா யமுநா தூ₃ராத்₃த்₃ருஶ்யதே சித்ரகாநநா ।
ப₄ரத்₃வாஜஶ்ரமோ யத்ர ஶ்ரீமாநேஷ ப்ரகாஶதே ॥ (44)

ஏஷா த்ரிபத₂கா₃ க₃ங்கா₃ த்₃ருஶ்யதே வரவர்ணிநி ।
நாநாத்₃விஜக₃ணாகீர்ணா ஸம்ப்ரபுஷ்பிதகாநநா ॥ (45)

ஶ்ருங்கி₃பே₃ரபுரம் சைதத்₃கு₃ஹோ யத்ர ஸமாக₃த: ॥ (46)

ஏஷா ஸா த்₃ருஶ்யதே ஸீதே ஸரயூர்யூபமாலிநீ ।
நாநாதருஶதாகீர்ணா ஸம்ப்ரபுஷ்பிதகாநநா ॥ (47)

ஏஷா ஸா த்₃ருஶ்யதேऽயோத்₄யா ராஜதா₄நீ பிதுர்மம ।
அயோத்₄யாம் குரு வைதே₃ஹி ப்ரணாமம் புநராக₃தா ॥ (48)

ததஸ்தே வாநரா: ஸர்வே ராக்ஷஸஶ்ச விபீ₄ஷண: ।
உத்பத்யோத்பத்ய த₃த்₃ருஶுஸ்தாம் புரீம் ஶுப₄த₃ர்ஶநாம் ॥ (49)

ததஸ்து தாம் பாண்டு₃ரஹர்ம்யமாலிநீம்
விஶாலகக்ஷ்யாம் க₃ஜவாஜிஸங்குலாம் ।
புரீமயோத்₄யாம் த₃த்₃ருஶு: ப்லவங்க₃மா:
புரீம் மஹேந்த்₃ரஸ்ய யதா₂மராவதீம் ॥ (50)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ ஷட்₃விம்ஶத்யுத்தரஶததம: ஸர்க₃: ॥

ஸப்தவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க₃:

ப₄ரத்₃வாஜாமந்த்ரணம்

பூர்ணே சதுர்த₃ஶே வர்ஷே பஞ்சம்யாம் லக்ஷ்மணாக்₃ரஜ: ।
ப₄ரத்₃வாஜாஶ்ரமம் ப்ராப்ய வவந்தே₃ நியதோ முநிம் ॥ (1)

ஸோऽப்ருச்ச₂த₃பி₄வாத்₃யைநம் ப₄ரத்₃வாஜம் தபோத₄நம் ।
ஶ்ருணோஷி கச்சித்₃ப₄க₃வந் ஸுபி₄க்ஷாநாமயம் புரே ॥
கச்சிச்ச யுக்தோ ப₄ரதோ ஜீவந்த்யபி ச மாதர: ॥ (2)

ஏவமுக்தஸ்து ராமேண ப₄ரத்₃வாஜோ மஹாமுநி: ।
ப்ரத்யுவாச ரகு₄ஶ்ரேஷ்ட₂ம் ஸ்மிதபூர்வம் ப்ரஹ்ருஷ்டவத் ॥ (3)

பங்கதி₃க்₃த₄ஸ்து ப₄ரதோ ஜடிலஸ்த்வாம் ப்ரதீக்ஷதே ।
பாது₃கே தே புரஸ்க்ருத்ய ஸர்வம் ச குஶலம் க்₃ருஹே ॥ (4)

நல்லணங்கே! பரதன் (அயோத்திக்குத் திரும்பி வரும்படி) என்னை வேண்டிக் கொள்வதற்காக வந்தானே, உன்னதமான அந்த சித்திரகூட மலை, இதோ காணப்படுகிறது. (43)

அழகிய பூஞ்சோலைகள் நிறைந்த கரைகளையுடைய யமுனை நதி, தொலைவில் காணப்படுகிறது. இதோ, இங்கே தவத் திருமடந்தை பொலிவுடன் விளங்கும் பரத்வாஜருடைய ஆசிரமம் இருக்கிறது. (44)

தேவி! மூன்று உலகங்கள் வழியாகச் செல்வதும், பல்வகை பறவைக் கூட்டங்கள் நிறைந்ததும், ஏராளான மலர்களைக் கொண்ட சோலைகளை உடையதுமான கங்கை நதி, இதோ காணப்படுகிறது. (45)

குகன் வந்து சந்தித்த சிருங்கிபேரபுரம், இதுதான். (46)

சீதே! (ரகு குல மன்னர்கள் மாபெரும் வேள்விகளை நடத்தியபின், நினைவுச்சின்னமாக நிறுவப்பட்ட) யூபஸ்தம்பங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன; பலவகையான மரங்கள் அடர்ந்ததும், ஏராளமான மலர்களைக் கொண்ட சோலைகளை உடையதுமான சரயூ நதி, இதோ காணப்படுகிறது. (47)

(இதன் கரையில் அமைந்துள்ள) என் (முன்னோர்களின்) தந்தையின் தலைநகரமான அயோத்தி இதோ காணப்படுகிறது. வைதேகி! (பதிநான்கு ஆண்டுகளுக்குப் பின், சௌக்கியமாக) திரும்பி வந்து நகரத்தைக் காண்கிறாய். அயோத்திக்கு நமஸ்காரம் செய்வாயாக.'' (48)

அப்போது, எல்லா வானரர்களும், அரக்கனான விபீஷணனும் தத்தம் இடத்திலிருந்து எழுந்து சென்று, எழில்மிகு தோற்றமுடைய அந்த நகரத்தைப் பார்த்தார்கள். அப்போது, வானரர்களும் அரக்கர்களும் வெண்மையான மாடங்களை வரிசையாகக் கொண்டதும், விசாலமான மாளிகைகளைக் கொண்டதும், யானை–குதிரைகள் நிறைந்ததும், இந்திரனுடைய அமராவதிப் பட்டணம் போல் விளங்குவதுமான அயோத்தி நகரத்தை வியப்புடன் பார்த்தார்கள். (49,50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று இருபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று இருபத்தேழு

பரத்வாஜ ஆசிரமத்தில் தங்குதல்!

இராமன், பதிநான்கு வருஷம் நிறைவடைந்து, பஞ்சமி திதியில், பரத்வாஜருடைய ஆசிரமத்தை அடைந்து, மிகவும் பணிவுடன் முனிவரை வணங்கினார். (1)

தவச்செல்வராகிய பரத்வாஜரை பலமுறை வணங்கி எழுந்து, ''ஐயனே! அயோத்தி நகரத்தைப் பற்றிய தகவல்கள் ஏதேனும் தங்களுக்குத் தெரியுமா? நகர மக்கள் வளமாகவும் நோய் நொடி இல்லாமலும் இருக்கிறார்களா? பரதன், மக்களைப் பரிபாலிப்பதில் கவனமாக இருக்கிறானா? என்னுடைய அன்னைகள் உயிருடன் சௌக்கியமாக இருக்கிறார்களா?'' என்று இராமன் கேட்டார். (2)

இவ்வாறு இராமன் கேட்டவுடன், மாமுனிவரான பரத்வாஜர் புன்னகை புரிந்து, முகமலர்ச்சியோடு ரகுகுல மாமணியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (3)

''தூசு படிந்த உடலுடன் ஜடாதாரியான பரதன், உன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். நீ கொடுத்த உனது பாதுகைகளை முன்வைத்தே அரசுப் பணிகளைச் செய்கிறான். உன் வீட்டில் எல்லோரும் நலமாக இருக்கிறார்கள். (4)

த்வாம் புரா சீரவஸநம் ப்ரவிஶந்தம் மஹாவநம் ।
ஸ்த்ரீத்ருதீயம் ச்யுதம் ராஜ்யாத்$_3$த$_4$ர்மகாமம் ச கேவலம் ॥ (5)

பதா$_3$திம் த்யக்தஸர்வஸ்வம் பிதுர்வசநகாரிணம் ।
ஸர்வபோ$_4$கை$_3$: பரித்யக்தம் ஸ்வர்க$_3$ச்யுதமிவாமரம் ॥ (6)

த்$_3$ருஷ்ட்வா து கருணா பூர்வம் மமாஸீத் ஸமிதிஞ்ஜய ।
கைகேயீவசநே யுக்தம் வந்யமூலப$_2$லாஶிநம் ॥ (7)

ஸாம்ப்ரதம் ஸுஸம்ருத்$_3$தா$_4$ர்த$_2$ம் ஸமித்ரக$_3$ணபா$_3$ந்த$_4$வம் ।
ஸமீக்ஷ்ய விஜிதாரிம் த்வாம் மம ப்ரீதிரநுத்தமா ॥
ஸர்வம் ச ஸுக$_2$து$_3$:க$_2$ம் தே விதி$_3$தம் மம ராக$_4$வ ॥ (8)

யத்த்வயா விபுலம் ப்ராப்தம் ஜநஸ்தா$_2$நவதா$_4$தி$_3$கம் ।
ப்$_3$ராஹ்மணார்தே$_2$ நியுக்தஸ்ய ரக்ஷிது: ஸர்வதாபஸாந் ॥ (9)

ராவணேந ஹ்ருதா பா$_4$ர்யா ப$_3$பூ$_4$வேயமநிந்தி$_3$தா ।
மாரீசத$_3$ர்ஶநம் சைவ ஸீதோந்மத$_2$நமேவ ச ॥ (10)

கப$_3$ந்த$_4$த$_3$ர்ஶநம் சைவ பம்பாபி$_4$க$_3$மநம் ததா$_2$ ।
ஸுக்$_3$ரீவேண ச தே ஸக்$_2$யம் யச்ச வாலீ ஹதஸ்த்வயா ॥ (11)

மார்க$_3$ணம் சைவ வைதே$_3$ஹ்யா: கர்ம வாதாத்மஜஸ்ய ச ।
விதி$_3$தாயாம் ச வைதே$_3$ஹ்யாம் நளஸேதுர்யதா$_2$ க்ருத: ॥ (12)

யதா$_2$ வா தீ$_3$பிதா லங்கா ப்ரஹ்ருஷ்டைர்ஹரியூத$_2$பை: ।
ஸபுத்ரபா$_3$ந்த$_4$வாமாத்ய: ஸப$_3$ல: ஸஹவாஹந: ॥ (13)

யதா$_2$ விநிஹத: ஸங்க்$_2$யே ராவணோ தே$_3$வகண்டக: ।
ஸமாக$_3$மஶ்ச த்ரித$_3$ஶைர்யதா$_2$ த$_3$த்தஶ்ச தே வர: ॥
ஸர்வம் மமைதத்$_3$விதி$_3$தம் தபஸா த$_4$ர்மவத்ஸல ॥ (14)

அஹமப்யத்ர தே த$_3$த்$_3$மி வரம் ஶஸ்த்ரப்$_4$ருதாம் வர ।
அர்க்$_4$யமத்$_3$ய க்$_3$ருஹாணேத$_3$மயோத்$_4$யாம் ஶ்வோ க$_3$மிஷ்யஸி ॥ (15)

தஸ்ய தச்சி$_2$ரஸா வாக்யம் ப்ரதிக்$_3$ருஹ்ய ந்ருபாத்மஜ: ।
பா$_3$ட$_4$மித்யேவ ஸம்ஹ்ருஷ்டோ தீ$_4$மாந் வரமயாசத ॥ (16)

அகாலே ப$_2$லிநோ வ்ருக்ஷா: ஸர்வே சாபி மது$_4$ஸ்ரவா: ।
ப$_2$லாந்யம்ருதகல்பாநி ப$_3$ஹூநி விவிதா$_4$நி ச ॥
ப$_4$வந்து மார்கே$_3$ ப$_4$க$_3$வந்நயோத்$_4$யாம் ப்ரதி க$_3$ச்ச$_2$த: ॥ (17)

ததே$_2$தி ச ப்ரதிக்ஞாதே வசநாத் ஸமநந்தரம் ।
அப$_4$வந் பாத$_3$பாஸ்தத்ர ஸ்வர்க$_3$பாத$_3$பஸந்நிபா$_4$: ॥ (18)

பகைவர்களை வெற்றி கொள்பவனே! முன்பு, உன்னை மரவுரியுடன் பார்த்தேன்; சீதையைச் சேர்த்து மூன்று பேர்களாக நாட்டிலிருந்து வெளியேறினாய். எல்லா சொத்து–சுகங்களையும் புறந்தள்ளி, அறம் ஒன்றையே எல்லாமாகக் கொண்டு, தந்தையின் கட்டளைக்குப் பணிந்தாய். சகல போகங்களும் நிரம்பிய தேவலோகத்திலிருந்து நழுவி விழுந்த தேவன் போல, எல்லா போகங்களையும் இழந்து, கைகேயியின் சொற்படி நடப்பவனாக, காட்டில் கிடைக்கும் கிழங்கு–கனிகளைப் புசித்து வாழும் உறுதியுடன் அடர் பெருங்காட்டுக்குள் புகுந்த உன்னைக் கண்டு, அப்போது எனக்குத் துக்கம் உண்டாயிற்று. (5–7)

இப்போது, எதிரிகளை வென்று, மேற்கொண்ட அருஞ்செயலை வெற்றிகரமாக நிறைவேற்றி, நண்பர்களும் சுற்றமும் புடைசூழ வந்திருக்கும் உன்னைக் காணும்போது எனக்குப் பேரானந்தம் உண்டாகிறது. இராமச் செல்வனே! (இரு சந்திப்புக்கும் இடைப்பட்ட காலத்தில்) உனக்கு ஏற்பட்ட சுக–துக்கங்களை நான் அறிவேன். (8)

அறநெறிப் பற்றுடையவனே! ஜனஸ்தானத்தில் (கரன் முதலியோர்) கொல்லப்பட்டதை நான் அறிவேன்; முனிவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அவர்களைப் பாதுகாக்கும் உறுதி கொடுத்ததையும், குற்றமற்ற உன் பத்தினி இராவணனால் திருடிச் செல்லப்பட்டதையும், மாரீச மானைக் கண்டதையும், பின்னர் சீதை நிமித்தமாக எற்பட்ட பெருந்துயரையும் நான் அறிவேன்; நீ கபந்தனைப் பார்த்தது; பம்பைத் தடாகத்திற்குச் சென்றது; சுக்ரீவனோடு நட்பு; உன்னால் வாலி மாய்க்கப்பட்டது; சீதையைத் தேடியது; மாருதியின் ஒப்பற்ற வீரச்செயல்; சீதை இருக்குமிடம் தெரிந்தவுடன் நளனால் பாலம் அமைக்கப்பட்டது; பேரார்வம் கொண்ட வானரத் தலைவர்களால் இலங்கை கொளுத்தப்பட்டது; தேவர்களைத் துன்புறுத்திய இராவணன், போர்க்களத்தில் புதல்வர்கள்–உறவினர்கள்–அமைச்சர்களோடும் படைகள்–வாகனங்களோடும் கொல்லப்பட்டது; தேவர்களைச் சந்தித்தது; அவர்கள் உனக்கு வரங்கள் கொடுத்தது – இவையெல்லாம், என் தவ ஆற்றலால் என்னால் அறிந்து கொள்ளப்பட்டன. (9–14)

ஆயுதம் தாங்கியவர்களுள் தலைசிறந்தவனே! இப்போது, நானும் உனக்கு ஒரு வரம் அளிக்கிறேன். (என் விருப்பத்தை உன்முன் வைக்கிறேன்.) இன்று, இந்த ஆசிரமத்தில் அதிதி உபசாரங்களை ஏற்றுக்கொண்டு, நாளைய தினம் அயோத்திக்குப் புறப்பட்டுச் செல்வாயாக.'' (15)

மன்னர் மைந்தரான இராமன், முனிவருடைய சொற்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, 'அப்படியே ஆகட்டும்' என்று இணக்கம் தெரிவித்துவிட்டு, நுண்ணறிவாளராகிய அவர் பின்வரும் வரத்தைக் கோரினார்— (16)

''அண்ணலே! அயோத்திக்குத் திரும்பிச் செல்லும் எங்கள் பாதையில், எல்லா மரங்களும் பருவமல்லாத காலத்திலும் ஏராளமான பழங்களைக் கொடுக்க வேண்டும்; தேனைப் பெருக்கி, அமுதம் போல் இனிக்கும் பல்வகைப் பழங்களைக் கணக்கில்லாமல் கொடுப்பனவாய் இருக்க வேண்டும்.'' (17)

இராமனின் வேண்டுகோளைக் கேட்ட முனிவர், 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லிய மறுவிநாடியே, அங்கிருந்த மரங்களனைத்தும் தேவலோகத்து மரங்களைப் போல் ஆகிவிட்டன. (18)

நிஷ்ப2லா: ப2லிநஶ்சாஸந் விபுஷ்பா: புஷ்பஶாலிந: ।
ஶுஷ்கா: ஸமக்3ரபத்ராஸ்தே நகா3ஶ்சைவ மது4ஸ்ரவா: ॥
ஸர்வதோ யோஜநாஸ்திஸ்ரோ க3ச்ச2தாமப4வம்ஸ்ததா3 ॥ (19)

தத: ப்ரஹ்ருஷ்டா: ப்லவகர்3ஷபா4ஸ்தே ப3ஹூநி தி3வ்யாநி ப2லாநி சைவ ।
காமாது3பாஶ்நந்தி ஸஹஸ்ரஶஸ்தே முதா3ந்விதா: ஸ்வர்க3ஜிதோ யதை2வ ॥ (20)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 ஸப்தவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க3: ॥

அஷ்டாவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க3:

ப4ரதப்ரியாக்2யாநம்

அயோத்4யாம் து ஸமாலோக்ய சிந்தயாமாஸ ராக4வ: ।
சிந்தயித்வா ஹநூமந்தமுவாச ப்லவகோ3த்தமம் ॥ (1)

ஜாநீஹி கச்சித் குஶலீ ஜநோ ந்ருபதிமந்த்3ரிரே ।
ஶ்ருங்கி3பே3ரபுரம் ப்ராப்ய கு3ஹம் க3ஹநகோ3சரம் ॥
நிஷாதா3தி4பதிம் ப்3ரூஹி குஶலம் வசநாந்மம ॥ (2)

ஶ்ருத்வா து மாம் குஶலிநமரோக3ம் விக3தஜ்வரம் ।
ப4விஷ்யதி கு3ஹ: ப்ரீத: ஸ மமாத்மஸம: ஸகா2 ॥ (3)

அயோத்4யாயாஶ்ச தே மார்க3ம் ப்ரவ்ருத்திம் ப4ரதஸ்ய ச ।
நிவேத3யிஷ்யதி ப்ரீதோ நிஷாதா3தி4பதிர்கு3ஹ: ॥ (4)

ப4ரதஸ்து த்வயா வாச்ய: குஶலம் வசநாந்மம ।
ஸித்3தா4ர்த2ம் ஶம்ஸ மாம் தஸ்மை ஸபா4ர்யம் ஸஹலக்ஷ்மணம் ॥ (5)

ஹரணம் சாபி வைதே3ஹ்யா ராவணேந ப3லீயஸா ।
ஸுக்3ரீவேண ச ஸம்ஸர்க3ம் வாலிநஶ்ச வத4ம் ரணே ॥ (6)

மைதி2ல்யந்வேஷணம் சைவ யதா2 சாதி4க3தா த்வயா ।
லங்க4யித்வா மஹாதோயமாபகா3பதிமவ்யயம் ॥ (7)

உபயாநம் ஸமுத்3ரஸ்ய ஸாக3ரஸ்ய ச த3ர்ஶநம் ।
யதா2 ச காரித: ஸேது ராவணஶ்ச யதா2 ஹத: ॥ (8)

வரதா3நம் மஹேந்த்3ரேண ப்3ரஹ்மணா வருணேந ச ।
மஹாதே3வப்ரஸாதா3ச்ச பித்ரா மம ஸமாக3மம் ॥ (9)

உபயாதம் ச மாம் ஸௌம்ய ப4ரதஸ்ய நிவேத3ய ।
ஸஹ ராக்ஷஸராஜேந ஹரீணாம் ப்ரவரேண ச ॥ (10)

ஜித்வா ஶத்ருக3ணாந் ராம: ப்ராப்ய சாநுத்தமம் யஶ: ।
உபயாதி ஸம்ருத்3த4ார்த2: ஸஹ மித்ரைர்மஹாப3லை: ॥ (11)

கனி இல்லாத மரங்களில் கனிகள் தோன்றின; மலர் இல்லாத மரங்களில் மலர்கள் தோன்றின; காய்ந்து போன மரங்கள், பச்சைப்பசேலென்று இலைகளைத் துளிர்த்தன; எல்லா மரங்களும் தேனைப் பொழியத் தொடங்கின. இவ்வாறு, அயோத்தி நோக்கிச் செல்லும் பாதையில், ஏறக்குறைய மூன்று யோஜனை தூரத்திற்கு மரங்கள் மாறிப் போயின. பின்னர், ஆயிரக்கணக்கான வானரோத்தமர்கள் மகிழ்ச்சி நிரம்பி, தேவலோகவாசிகளான தேவதைகளைப் போல், தத்தம் ருசிக்கேற்ற ஏராளமான பழங்களை உண்ணத் தொடங்கினார்கள். (19,20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று இருபத்தெட்டு

பரதன்–அனுமான் சந்திப்பு

இராமன், அயோத்தி நகரைப் பார்த்ததும் அங்கு சென்று, செய்ய வேண்டிய விஷயம் குறித்து சிந்திக்கத் தொடங்கினார். அவ்வாறு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தவராக வானரோத்தமரான அனுமானைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (1)

''அரசர் மாளிகையில் எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்களா? என்று அறிந்து வருவாயாக. (போகும் வழியில்) சிருங்கிபேரபுரத்தை அடைந்து, வனத்தில் வாழ்பவனும் வேடர் தலைவனுமான குகனைச் சந்தித்து, என் நலனைக் கூறு. (2)

நான் சௌக்கியமாக, ஆரோக்கியமாக, கவலையில்லாதவனாக இருப்பதைக் கேட்டவுடன் குகன் மிகவும் மகிழ்ச்சி அடைவான். அவன், என் உயிருக்கு உயிரான தோழன். (3)

மனமகிழ்ச்சி கொண்ட வேடுவத் தலைவனான குகன், அயோத்திக்குச் செல்லும் வழியைக் காட்டி, பரதனுடைய செயல்பாடுகள் குறித்தும் தெரிவிப்பான். (4)

பரதனிடம் சென்று, நான் அவனுடைய சுக–சௌக்கியம் பற்றி விசாரித்ததாகச் சொல். நான் மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்றிவிட்டு, மனைவியுடனும் லட்சுமணனுடனும் திரும்பி வந்திருப்பதாகக் கூறு. (5)

மிகவும் பலசாலியான இராவணனால் சீதை கவர்ந்து செல்லப்பட்டது; சுக்ரீவனுடன் நட்பு; வாலியை மாய்த்தது; வற்றாத நீர்வளத்தையுடையதும் அழிவற்றதுமான பெருங்கடலைத் தாண்டிச் சென்று, மைதிலியை நீ தேடிக் கண்டுபிடித்தது; கடற்கரையை அடைந்து கடலரசனைப் பார்த்தது; எவ்வாறு பாலம் கட்டப்பட்டது? எவ்வாறு இராவணன் கொல்லப்பட்டான்? இந்திரன், பிரும்மா, வருணன் ஆகியோர் எனக்கு வரம் கொடுத்தது; சிவபெருமான் அருளால் (பிதிரர் தோற்றத்திலிருந்த) தந்தையுடன் சந்திப்பு ஆகியவற்றை அவனிடம் கூறுவாயாக. (6–9)

அரக்கர் மன்னனுடனும், வானரத் தலைவனுடனும் நான் திரும்பி வந்திருப்பதாகத் தெரிவி. செல்வனே! 'இராமன், பகைவர் கூட்டங்களை வென்று, ஒப்பற்ற புகழை அடைந்து, தான் மேற்கொண்ட காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு, பேராற்றல் கொண்ட நண்பர்களோடு வந்திருக்கிறார்' என்றும் கூறுவாயாக. (10,11)

ஏதச்ச்$_2$ருத்வா யமாகாரம் ப$_4$ஜதே ப$_4$ரதஸ்தத$_3$ா ।
ஸ ச தே வேதி$_3$தவ்ய: ஸ்யாத் ஸர்வம் யச்சாபி மாம் ப்ரதி ॥ (12)

க்ஞேயாஶ்ச ஸர்வே வ்ருத்தாந்தா ப$_4$ரதஸ்யேங்கி$_3$தாநி ச ।
தத்த்வேந முக$_2$வர்ணேந த்$_3$ருஷ்ட்யா வ்யாப$_4$ாஷணேந ச ॥ (13)

ஸர்வகாமஸம்ருத்$_3$த$_4$ம் ஹி ஹஸ்த்யஶ்வரத$_2$ஸங்குலம் ।
பித்ருபைதாமஹம் ராஜ்யம் கஸ்ய நாவர்தயேந்மந: ॥ (14)

ஸங்க$_3$த்யா ப$_4$ரத: ஶ்ரீமாந் ராஜ்யார்தீ$_2$ சேத் ஸ்வயம் ப$_4$வேத் ।
ப்ரஶாஸ்து வஸுத$_4$ாம் க்ருத்ஸ்நாமகி$_2$லாம் ரகு$_4$நந்த$_3$ந: ॥ (15)

தஸ்ய பு$_3$த்$_3$தி$_4$ம் ச விக்ஞாய வ்யவஸாயம் ச வாநர ।
யாவந்ந தூ$_3$ரம் யாதா: ஸ்ம க்ஷிப்ரமாக$_3$ந்துமர்ஹஸி ॥ (16)

இதி ப்ரதிஸமாதி$_3$ஷ்டோ ஹநுமாந் மாருதாத்மஜ: ।
மாநுஷம் த$_4$ாரயந் ரூபமயோத்$_4$யாம் த்வரிதோ யயௌ ॥ (17)

அதோ$_2$த்பபாத வேகே$_3$ந ஹநுமாந் மாருதாத்மஜ: ।
க$_3$ருத்மாநிவ வேகே$_3$ந ஜிக்$_4$ருக்ஷந் பு$_4$ஜகோ$_3$த்தமம் ॥ (18)

லங்க$_4$யித்வா பித்ருபத$_2$ம் பு$_4$ஜகே$_3$ந்த்$_3$ராலயம் ஶுப$_4$ம் ।
க$_3$ங்க$_3$ாயமுநயோர்மத்$_4$யம் ஸந்நிபாதமதீத்ய ச ॥ (19)

ஶ்ருங்கி$_3$பே$_3$ரபுரம் ப்ராப்ய கு$_3$ஹமாஸாத்$_3$ய வீர்யவாந் ।
ஸ வாசா ஶுப$_4$யா ஹ்ருஷ்டோ ஹநுமாநித$_3$மப்$_3$ரவீத் ॥ (20)

ஸக$_2$ா து தவ காகுத்ஸ்தோ$_2$ ராம: ஸத்யபராக்ரம: ।
ஸஹஸீத: ஸஸௌமித்ரி: ஸ த்வாம் குஶலமப்$_3$ரவீத் ॥ (21)

பஞ்சமீமத்$_3$ய ரஜநீமுஷித்வா வசநாந்முநே: ।
ப$_4$ரத்$_3$வாஜாப்$_4$யநுக்ஞாதம் த்$_3$ரக்ஷ்யஸ்யத்$_3$யைவ ராக$_4$வம் ॥ (22)

ஏவமுக்த்வா மஹாதேஜா: ஸம்ப்ரஹ்ருஷ்டதநூருஹ: ।
உத்பபாத மஹாவேகோ$_3$ வேக$_3$வாநவிசாரயந் ॥ (23)

ஸோऽபஶ்யத்$_3$ராமதீர்த$_2$ம் ச நதீ$_3$ம் வாலுகிநீம் தத$_2$ா ।
கோ$_3$மதீம் தாம் ச ஸோऽபஶ்யத்$_3$பீ$_4$மம் ஸாலவநம் தத$_2$ா ॥
ப்ரஜாஶ்ச ப$_3$ஹுஸாஹஸ்ரா: ஸ்பீ$_2$தாஞ்ஜநபத$_3$ாநபி ॥ (24)

ஸ க$_3$த்வா தூ$_3$ரமத்$_4$வாநம் த்வரித: கபிகுஞ்ஜர: ।
ஆஸஸாத$_3$ த்$_3$ருமாந் பு$_2$ல்லாந்நந்தி$_3$க்$_3$ராமஸமீபக$_3$ாந் ॥ (25)

ஸ்த்ரீபி$_4$: ஸபுத்ரைர்வ்ருத்$_3$தை$_4$ஶ்ச ரமமாணைரலங்க்ருதாந் ।
ஸுராதி$_4$பஸ்யோபவநே யத$_2$ா சைத்ரரதே$_2$ த்$_3$ருமாந் ॥ (26)

இதைக் கேட்டவுடன் பரதன் முகத்தில் எவ்வகை உணர்ச்சிக்குறிகள் தோன்றுகின்றன என்பதைக் கவனமாகப் பார்க்கவேண்டும். அத்துடன், அவன் என்னைப் பற்றி என்ன கருத்துடன் இருக்கிறான் என்பன போன்ற எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும். (12)

பரதனுடைய மெய்ப்பாடுகள், முகக்குறிப்பு, பார்வை மற்றும் உரையாடல்கள் மூலம் அங்கு நிலவும் சூழ்நிலை–செய்திகள் எல்லாமும் உள்ளபடி தெரிந்து கொள்ளப்பட வேண்டும். (13)

மனம் விரும்பும் எல்லா போகங்களும் கிடைப்பதும், யானை–குதிரை–தேர்கள் நிறைந்ததும், தந்தை–பாட்டன் என்று தலைமுறையாக வந்ததுமான நாட்டை ஆட்சி செய்து அனுபவித்த எவனுடைய மனத்தைத்தான் மாற்றிவிடாது? (14)

பக்திச்செல்வம் உடையவனும், ரகு குலத்தின் பெருமையை வளர்ப்பவனுமான பரதன், நீண்ட காலம் ஆட்சி செய்ததால், அரசில் பற்றுக்கொண்டு தொடர்ந்து அரசாள விரும்புவானேயாகில், அவனே இந்தப் பூமண்டலம் முழுவதையும் அரசாளட்டும். வானரனே! அவனுடைய உட்கருத்தையும் முயற்சியையும் அறிந்து கொண்டு, நாம், இந்த ஆசிரமத்திலிருந்து வெகுதூரம் (அயோத்தி நோக்கி) செல்வதற்குள் நீ திரும்பி வரவேண்டும்.'' (15,16)

இவ்வாறு ஆணையிடப்பட்ட வாயுபுதல்வரான அனுமான், மானுட உருவம் ஏற்றுக் கொண்டு, அயோத்தியை நோக்கி விரைவாகச் சென்றார். (17)

அப்போது, வாயுகுமாரரான அனுமான், ஒரு பெரிய சர்ப்பத்தைப் பற்றிக் கொள்வதற்காக வெகுவேகமாகப் பறந்து செல்லும் கருடனைப் போல, வேகத்துடன் உயரே தாவினார். (18)

(தன்னுடைய தந்தை செல்லும் பாதையான) ஆகாயத்தில் தாவிச் சென்று, சிறந்த சர்ப்பங்கள் வாழ்வதும் புனிதமானதுமான கங்கை–யமுனை கூடும் நடுப்பகுதியைக் கடந்து, சிருங்கிபேரபுரத்தை அடைந்து, குகனைச் சந்தித்து, மகிழ்ச்சி கொண்ட மாவீரரான அனுமான், இனிய சொற்களால் பின்வருமாறு கூறினார்— (19,20)

''உம்முடைய நண்பரும், சத்தியத்தையே பராக்கிரமமாகக் கொண்டவரும், காகுத்தருமான இராமபிரான், சீதையும் லட்சுமணனும் உடனிருக்க, உமது நலன் பற்றி விசாரித்தார். (21)

இன்று பஞ்சமி. முனிவரின் ஆணைப்படி இன்றிரவை ஆசிரமத்தில் கழித்துவிட்டு, பரத்வாஜரிடம் விடைபெற்றுக் கொண்டு, இராமன் வெகுவிரைவில் இங்கு வருவதை காணப் போகிறீர்!'' (22)

பேராற்றல் படைத்த அனுமான், இவ்வாறு குகனிடம் தெரிவித்துவிட்டு, மகிழ்ச்சியால் உரோமச் சிலிர்ப்பு ஏற்பட, குகனிடமிருந்து எந்தவித பதிலையோ உபசாரங்களையோ எதிர்பார்க்காமல், (தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியிலேயே ஒன்றிய கருத்துடையவராக) மிகவும் வேகத்துடன் உயரே தாவினார். (23)

அவர், பரசுராம தீர்த்தத்தையும் வாலுகினி என்ற நதியையும் கண்டார்; கோமதி ஆற்றையும் பயங்கரமான ஆச்சா மரங்கள் நிறைந்த காட்டையும் பார்த்தார்; பல்லாயிரக்கணக்கான மக்களையும் செழிப்பான நாட்டுப்புறங்களையும் கண்டார். (24)

அந்த வானரோத்தமர், விரைவாக வெகுதூரம் கடந்து சென்று, புதல்வர்களோடும் முதியவர்களோடும் விளையாடிக் கொண்டு இனிமையாகப் பொழுதுபோக்கும் மாதர்களால் அழகுடன் விளங்குவதும், நந்திக்கிராமத்திற்கு அருகில் மலர்கள் மலர்ந்து இருப்பதும், தேவேந்திரனுடைய நந்தனம், குபேரனுடைய சைத்ரரதம் என்ற பூஞ்சோலைகளிலுள்ள மரங்களைப் போல் கண்கவர் வனப்புடன் விளங்கும் மரங்கள் நிறைந்ததுமான பிரதேசத்தை அணுகினார். (25,26)

க்ரோஶமாத்ரே த்வயோத்$_4$யாயாஶ்சீரக்ருஷ்ணாஜிநாம்ப$_3$ரம் ।
த$_3$த$_3$ர்ஶ ப$_4$ரதம் தீ$_3$நம் க்ருஶமாஶ்ரமவாஸிநம் ॥ (27)

ஜடிலம் மலதி$_3$க்$_3$த$_4$ாங்க$_3$ம் ப்$_4$ராத்ருவ்யநஸகர்ஶிதம் ।
ப$_2$லமூலாஶிநம் த$_3$ாந்தம் தாபஸம் த$_4$ர்மசாரிணம் ॥ (28)

ஸமுந்நதஜடாப$_4$ாரம் வல்கலாஜிநவாஸஸம் ।
நியதம் ப$_4$ாவிதாத்மாநம் ப்$_3$ரஹ்மர்ஷிஸமதேஜஸம் ॥ (29)

பாது$_3$கே தே புரஸ்க்ருத்ய ஶாஸந்தம் வை வஸுந்த$_4$ராம் ।
சாதுர்வர்ண்யஸ்ய லோகஸ்ய த்ராதாரம் ஸர்வதோ ப$_4$யாத் ॥ (30)

உபஸ்தி$_2$தமமாத்யைஶ்ச ஶுசிபி$_4$ஶ்ச புரோஹிதை: ।
ப$_3$லமுக்$_2$யைஶ்ச யுக்தைஶ்ச காஷாயாம்ப$_3$ரத$_4$ாரிபி$_4$: ॥ (31)

ந ஹி தே ராஜபுத்ரம் தம் சீரக்ருஷ்ணாஜிநாம்ப$_3$ரம் ।
பரிமோக்தும் வ்யவஸ்யந்தி பௌரா வை த$_4$ர்மவத்ஸலம் ॥ (32)

தம் த$_4$ர்மமிவ த$_4$ர்மஜ்ஞம் தே$_3$ஹவந்தமிவாபரம் ।
உவாச ப்ராஞ்ஜலிர்வாக்யம் ஹநுமாந் மாருதாத்மஜ: ॥ (33)

வஸந்தம் த$_3$ண்ட$_3$காரண்யே யம் த்வம் சீரஜடாத$_4$ரம் ।
அநுஶோசஸி காகுத்ஸ்த$_2$ம் ஸ த்வாம் குஶலமப்$_3$ரவீத் ॥ (34)

ப்ரியமாக்$_2$யாமி தே தே$_3$வ ஶோகம் த்யஜ ஸுத$_3$ாருணம் ।
அஸ்மிந் முஹூர்தே ப்$_4$ராத்ரா த்வம் ராமேண ஸஹ ஸங்க$_3$த: ॥ (35)

நிஹத்ய ராவணம் ராம: ப்ரதிலப்$_4$ய ச மைதி$_2$லீம் ।
உபயாதி ஸம்ருத்$_3$த$_4$ார்த$_2$: ஸஹ மித்ரைர்மஹாப$_3$லை: ॥ (36)

லக்ஷ்மணஶ்ச மஹாதேஜா வைதே$_3$ஹீ ச யஶஸ்விநீ ।
ஸீதா ஸமக்$_3$ரா ராமேண மஹேந்த்$_3$ரேண யத$_2$ா ஶசீ ॥ (37)

ஏவமுக்தோ ஹநுமதா ப$_4$ரதோ ப்$_4$ராத்ருவத்ஸல: ।
பபாத ஸஹஸா ஹ்ருஷ்டோ ஹர்ஷாந்மோஹம் ஜக$_3$ாம ஹ ॥ (38)

ததோ முஹூர்தாது$_3$த்த$_2$ாய ப்ரத்யாஶ்வஸ்ய ச ராக$_4$வ: ।
ஹநுமந்தமுவாசேத$_3$ம் ப$_4$ரத: ப்ரியவாதி$_3$நம் ॥ (39)

அஶோகஜை: ப்ரீதிமயை: கபிமாலிங்க்$_3$ய ஸம்ப்$_4$ரமாத் ।
ஸிஷேச ப$_4$ரத: ஶ்ரீமாந் விபுலைரஸ்ரபி$_3$ந்து$_3$பி$_4$: ॥ (40)

அயோத்தியிலிருந்து ஒரு கோச தூரத்தில் (நந்திக்கிராமத்தில்) மரவுரி–மான்தோல் உடுத்திக் கொண்டு, உடல் இளைத்து, மனம் வாடி, ஓலைக்குடிலில் வாழும் பரதனைக் கண்டார். சடையாக முடியப்பட்ட கேசம்; தூசு படிந்த உடல்; அண்ணனின் நிலைகுறித்து வருந்தியதால், இளைப்பு; பழம்–கிழங்குகளே உணவு; மனத்தை அடக்கியவன்; தவசிகள் போன்ற வாழ்க்கை; அறவொழுக்கம்; மேல் நோக்கி நிமிர்ந்து நிற்கும் ஜடாமகுடம்; மரவுரி–மான்தோல் மேலாடைகள்; புலன்கள் கட்டுப்பாடு; ஆத்மாவில் செலுத்தப்பட்ட உள்ளம்; பிரும்மரிஷிகளுக்கு நிகரான ஆன்மவொளி – இவ்வாறு தோற்றமளித்த பரதன், இராம பாதுகைகளை முன்னிறுத்தி அகில பூமண்டலத்தையும் ஆண்டு வந்தான். நால்வகைப்பட்ட மக்களின் வர்ண தருமத்தை எல்லா ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றி வந்தான். துவராடை அணிந்து மன்னன் நலனுக்கு ஏற்ற ஆலோசனை வழங்கும் அமைச்சர்கள், தூயவர்களான புரோகிதர்கள், படைத்தலைவர்கள் ஆகியோர் சூழ்ந்து நிற்கும் பரதனைக் கண்டார், அனுமான். (27–31)

அறநெறி கடைப்பிடிக்கும் அரசகுமாரர் (பரதன்) மரவுரியையும் கருமான் தோலையும் அணிந்து கொண்டு தவசியாக இருக்கும்போது, நகர மக்கள் எவரும் எந்த சுகபோகத்தையும் நாடவில்லை. (32)

வாயுமைந்தரான அனுமான், அறக்கடவுளே உருவம் ஏற்று மற்றொரு உருவில் வந்துள்ளது போல் ஒளிர்பவனும் அறவழிகளை முற்றிலும் அறிந்தவனுமான அவனை (பரதனை)ப் பார்த்துக் கைகூப்பிக் கொண்டு கூறத் தொடங்கினார்— (33)

''மரவுரி–ஜடை தரித்து, தண்டகாரண்யத்தில் வசித்த எந்த இராமபிரானைப் பற்றித் தாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களோ, அவர் தங்கள் நலன் குறித்து விசாரிக்கச் சொன்னார். (34)

ஐயனே! உங்களுக்குப் பிரியமான செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். கொடுமையான சோகத்தை விட்டுத் தள்ளுங்கள். இதோ, இப்போதே தாங்கள், சகோதரர் இராமனைச் சந்திக்கப் போகிறீர்கள்! (35)

இராமசந்திரமூர்த்தி, இராவணனைக் கொன்று, சீதாப்பிராட்டியாரைத் திரும்பப் பெற்று, மேற்கொண்ட காரியம் கைகூடியவராக, ஆற்றல் மிகுந்த நண்பர்களுடன் வந்து கொண்டிருக்கிறார்! (36)

அவருடன் கூட, மகாதேஜஸ்வியான லட்சுமணரும், (கற்புக்கரசி என்று) புகழ் பெற்ற வைதேகி அன்னையும் வருகிறார்கள். தேவேந்திரனோடுகூட இருக்கும் இந்திராணியைப் போல், இராமனோடுகூட இருக்கும் சீதை, எல்லா விருப்பங்களும் நிறைவேறப் பெற்றவராக விளங்குகிறார்.'' (37)

இவ்வாறு அனுமான் கூறியதைக் கேட்டதும், தமையனிடம் எல்லையில்லா பாசம் கொண்ட பரதன், மனம் பூரித்து, நொடிப்பொழுதில் தரையில் விழுந்தான்; ஆனந்த மிகுதியால் மூர்ச்சை அடைந்தான். (38)

சிறிதுநேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து எழுந்த ரகுகுல திலகமான பரதன், இனிய செய்தியைத் தெரிவித்த அனுமானைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (39)

பக்திச் செல்வனான பரதன், பரபரப்புடன் வானரரைத் தழுவி, பேரன்பில் எழுந்து பெருகிய ஆனந்தப் பெருவெள்ளமான கண்ணீர்த் துளிகளால் அவரை நனைத்தான். (பின்னர் பேசத் தொடங்கினான்.) (40)

தே₃வோ வா மாநுஷோ வா த்வமநுக்ரோஶாதி₃ஹாக₃த: ।
ப்ரியாக்₂யாநஸ்ய தே ஸௌம்ய த₃தா₃மி ப்₃ருவத: ப்ரியம் ॥ (41)

க₃வாம் ஶதஸஹஸ்ரம் ச க்₃ராமாணாம் ச ஶதம் பரம் ।
ஸுகுண்ட₃லா: ஶுப₄ாசாரா ப₄ார்யா: கந்யாஶ்ச ஷோட₃ஶ ॥ (42)

ஹேமவர்ணா: ஸுநாஸோரூ: ஶஶிஸௌம்யாநநா: ஸ்த்ரிய: ।
ஸர்வாப₄ரணஸம்பந்நா: ஸம்பந்நா: குலஜாதிபி₄: ॥ (43)

நிஶம்ய ராமாக₃மநம் ந்ருபாத்மஜ: கபிப்ரவீரஸ்ய தத₃த்₃பு₄தோபமம் ।
ப்ரஹர்ஷிதோ ராமதி₃த்₃ருக்ஷயாப₄வத் புநஶ்ச ஹர்ஷாதி₃த₃மப்₃ரவீத்₃வச: ॥ (44)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
யுத்₃த₄காண்டே₃ அஷ்டாவிம்ஶத்யுத்தரஶததம: ஸர்க₃: ॥

ஏகோநத்ரிம்ஶது₃த்தரஶததம: ஸர்க₃:

ஹநூமத்₃ப₄ரதஸம்ப₄ாஷணம்

ப₃ஹூநி நாம வர்ஷாணி க₃தஸ்ய ஸுமஹத்₃வநம் ।
ஶ்ருணோம்யஹம் ப்ரீதிகரம் மம நாத₂ஸ்ய கீர்தநம் ॥ (1)

கல்யாணீ ப₃த கா₃தே₂யம் லௌகிகீ ப்ரதிபா₄தி மே ।
ஏதி ஜீவந்தமாநந்தோ₃ நரம் வர்ஷஶதாத₃பி ॥ (2)

ராக₄வஸ்ய ஹரீணாம் ச கத₂மாஸீத் ஸமாக₃ம: ।
கஸ்மிந் தே₃ஶே கிமாஶ்ரித்ய தத்த்வமாக்₂யாஹி ப்ருச்ச₂த: ॥ (3)

ஸ ப்ருஷ்டோ ராஜபுத்ரேண ப்₃ருஸ்யாம் ஸமுபவேஶித: ।
ஆசசக்ஷே தத: ஸர்வம் ராமஸ்ய சரிதம் வநே ॥ (4)

யதா₂ ப்ரவ்ராஜிதோ ராமோ மாதுர்த₃த்தோ வரஸ்தவ ।
யதா₂ ச புத்ரஶோகேந ராஜா த₃ஶரதோ₂ ம்ருத: ॥ (5)

யதா₂ தூ₃தைஸ்த்வமாநீதஸ்தூர்ணம் ராஜக்₃ருஹாத் ப்ரபோ₄ ।
த்வயாயோத்₄யாம் ப்ரவிஷ்டேந யதா₂ ராஜ்யம் ந சேப்ஸிதம் ॥ (6)

சித்ரகூடம் கி₃ரிம் க₃த்வா ராஜ்யேநாமித்ரகர்ஶந ।
நிமந்த்ரிதஸ்த்வயா ப்₄ராதா த₄ர்மமாசரதா ஸதாம் ॥ (7)

ஸ்தி₂தேந ராக்ஞோ வசநே யதா₂ ராஜ்யம் விஸர்ஜிதம் ।
ஆர்யஸ்ய பாது₃கே க்₃ருஹ்ய யதா₂ஸி புநராக₃த: ॥ (8)

ஸர்வமேதந்மஹாபா₃ஹோ யதா₂வத்₃விதி₃தம் தவ ।
த்வயி ப்ரதிப்ரயாதே து யத்₃வ்ருத்தம் தந்நிபோ₃த₄ மே ॥ (9)

''பெருங்கருணையுடன் இங்கு வந்திருக்கும் தாங்கள், தேவரோ, மானுடரோ? நான் அறியேன். அண்ணலே! இனிய சொற்களால், மனத்திற்குப் பிரியமான செய்தியைத் தெரிவித்தத் தங்களுக்கு நூறாயிரம் பசுக்கள், மேலும் நூறு கிராமங்கள் தருகிறேன்; அழகிய குண்டலங்களை அணிந்தவர்களும் நன்னடத்தை உடையவர்களும் விவாகத்திற்கு உரியவர்களுமான பதினாறு கன்னிப்பெண்களைத் தருகிறேன்; அழகியவர்களும் நிலவைப் போன்று தண்ணொளி வீசும் முகங்கொண்டவர்களும் எல்லா அணிகலன்களும் பூண்டவர்களுமான, நற்குலத்தில் நற்குடும்பத்தில் பிறந்த உத்தமப் பெண்டிர் பலரையும் கொடுக்கிறேன்.'' (41–43)

மன்னர் மைந்தனான பரதன், வானரப் பிரமுகரிடமிருந்து, பேரானந்தத்திற்குரிய இராமனது வருகையைக் கேட்டதும், உள்ளம் பூரித்து, இராமனைக் காணும் ஆவல் கொண்டான். உவகைப் பெருக்குடன், மறுபடியும் பேசத் தொடங்கினான். (44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று இருபத்தொன்பது

அனுமான் கூறிய இராமகதை

(பரதன், அனுமானிடம் கூறுகிறான்—) ''ஐயனே! என்னுடைய யஜமானர் மிக அடர்த்தியான காட்டுக்குச் சென்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அவரைப் பற்றிய இனிப்பான பேச்சை இப்போதுதான் கேட்கிறேன்! (1)

'துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, ஒரு மனிதன் வெகுகாலம் உயிரோடு இருப்பானேயாகில், எப்போதாவது ஒரு காலத்தில் இன்பம் அவனை வந்தடையவே செய்யும்' என்ற உலகமொழி, என் விஷயத்தில் உண்மையாகிவிட்டது. (2)

எந்த நாட்டில், எதன் நிமித்தமாக, எவ்வாறு இராமபிரானுக்கும் வானரர்களுக்குமிடையே நட்பு ஏற்பட்டது? தெரிந்து கொள்ள விரும்பிக் கேட்கிறேன். அந்த விவரத்தை எனக்குச் சொல்லுங்கள்.'' (3)

அவர் (அனுமான்), வேந்தர் மைந்தனான பரதனால் தர்பாசனத்தில் உட்கார வைக்கப்பட்டு, மேற்கண்டவாறு கேட்கப்பட்டதும், வனவாச காலத்தில் இராமனுடைய வரலாறு முழுவதையும் கூறத் தொடங்கினார்— (4)

''ஐயனே! எதிரிகளை மாய்ப்பவரே! பெருந்தோளாய்! தங்கள் அன்னைக்குக் கொடுத்த வரத்தின்படி, இராமன் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்; புதல்வனது பிரிவால் ஏற்பட்ட சோகத்தைத் தாங்க முடியாமல் மன்னர் தசரதன் மரணமடைந்தார்; மாமன் வீட்டிலிருந்த தாங்கள், தூதர்களால் விரைவாக அயோத்திக்கு அழைத்து வரப்பட்டீர்கள்; அயோத்திக்கு வந்த தாங்கள் ஆட்சி செய்வதை விரும்பவில்லை; சான்றோர்கள் வகுத்துக் கொடுத்த அறநெறியைப் பற்றியொழுகும் தாங்கள், சித்திரகூட மலைக்குச் சென்று, அரசை ஏற்றுக் கொள்ளும்படி சகோதரரை வேண்டிக் கொண்டீர்கள்; மன்னரின் கட்டளைப்படி நடந்தே தீருவது என்று உறுதியாக இருந்த அவர், நாட்டாட்சியை ஏற்க மறுத்தார்; பின்னர், அண்ணனின் பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு, தாங்கள் அயோத்திக்குத் திரும்பி வந்தீர்கள். இதுவரை நடந்தனவெல்லாம் தாங்கள் அறிந்ததே. இனி, தாங்கள் சித்திரகூடத்திலிருந்து திரும்பி வந்த பின் நடந்தவைகளை நான் கூறுகிறேன், கேளுங்கள். (5–9)

அபயாதே த்வயி தத$_2$ா ஸமுத்$_3$ப்$_4$ராந்தம்ருக$_3$த்$_3$விஜம் ।
பரித்$_3$யூநமிவாத்யர்த$_2$ம் தத்$_3$வநம் ஸமபத்$_3$யத ॥ (10)

தத்$_3$த$_4$ஸ்திம்ருதி$_3$தம் கே$_4$ாரம் ஸிம்ஹவ்யாக்$_4$ரம்ருக$_3$ாயுதம் ।
ப்ரவிவேஶாத$_2$ விஜநம் ஸுமஹத்$_3$த$_3$ண்ட$_3$காவநம் ॥ (11)

தேஷாம் புரஸ்தாத்$_3$ப$_3$லவாந் க$_3$ச்ச$_2$தாம் க$_3$ஹநே வநே ।
நிநத$_3$ந் ஸுமஹாநாத$_3$ம் விராத$_4$: ப்ரத்யத்$_3$ருஶ்யத ॥ (12)

தமுத்க்ஷிப்ய மஹாநாத$_3$மூர்த்$_4$வப$_3$ாஹுமதே$_4$ாமுக$_2$ம் ।
நிக$_2$ாதே ப்ரக்ஷிபந்தி ஸ்ம நத$_3$ந்தமிவ குஞ்ஜரம் ॥ (13)

தத் க்ருத்வா து$_3$ஷ்கரம் கர்ம ப்$_4$ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
ஸாயாஹ்நே ஶரப$_4$ங்க$_3$ஸ்ய ரம்யமாஶ்ரமமீயது: ॥ (14)

ஶரப$_4$ங்கே$_3$ தி$_3$வம் ப்ராப்தே ராம: ஸத்யபராக்ரம: ।
அபி$_4$வாத்$_3$ய முநீந் ஸர்வாஞ்ஜநஸ்த$_2$ாநமுபாக$_3$மத் ॥ (15)

தத: பஶ்சாச்சூ$_2$ர்பணக$_2$ா ராமபார்ஶ்வமுபாக$_3$தா ।
ததோ ராமேண ஸந்தி$_3$ஷ்டோ லக்ஷ்மண: ஸஹஸோத்தி$_2$த: ॥
ப்ரக்$_3$ருஹ்ய க$_2$ட்க$_3$ம் சிச்சே$_2$த$_3$ கர்ணநாஸம் மஹாப$_3$ல: ॥ (16)

சதுர்த$_3$ஶ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீ$_4$மகர்மணாம் ।
ஹதாநி வஸதா தத்ர ராக$_4$வேண மஹாத்மநா ॥ (17)

ஏகேந ஸஹ ஸம்க$_3$ம்ய ரணே ராமேண ஸங்க$_3$தா: ।
அஹ்நஶ்சதுர்த$_2$ப$_4$ாகே$_3$ந நி:ஶேஷா ராக்ஷஸா: க்ருதா: ॥ (18)

மஹாப$_3$லா மஹாவீர்யாஸ்தபஸோ விக்$_4$நகாரிண: ।
நிஹதா ராக$_4$வேணாஜௌ த$_3$ண்ட$_3$காரண்யவாஸிந: ॥
ராக்ஷஸாஶ்ச விநிஷ்பிஷ்டா: க$_2$ரஶ்ச நிஹதோ ரணே ॥ (19)

ததஸ்தேநார்தி$_3$தா ப$_3$ாலா ராவணம் ஸமுபாக$_3$தா ।
ராவணாநுசரோ கே$_4$ாரோ மாரீசோ நாம ராக்ஷஸ: ॥
லோப$_4$யாமாஸ வைதே$_3$ஹீம் பூ$_4$த்வா ரத்நமயோ ம்ருக$_3$: ॥ (20)

அதை$_2$நமப்$_3$ரவீத்$_3$ராமம் வைதே$_3$ஹீ க்$_3$ருஹ்யதாமிதி ।
அஹோ மநோஹர: காந்த ஆஶ்ரமோ நோ ப$_4$விஷ்யதி ॥ (21)

ததோ ராமோ த$_4$நுஷ்பாணிர்த$_4$ாவந்தமநுத$_4$ாவதி ।
ஸ தம் ஜக$_4$ாந த$_4$ாவந்தம் ஶரேணாநதபர்வணா ॥ (22)

அத$_2$ ஸௌம்ய த$_3$ஶக்$_3$ரீவோ ம்ருக$_3$ம் யாதே து ராக$_4$வே ।
லக்ஷ்மணே சாபி நிஷ்க்ராந்தே ப்ரவிவேஶாஶ்ரமம் தத$_2$ா ॥ (23)

தாங்கள், தங்கள் பரிவாரங்களுடன் திரும்பி வந்த பிறகு, அந்தக் காட்டுப் பகுதியிலிருந்த விலங்குகளும் பறவைகளும் மிகவும் கலவரமடைந்ததால், அந்தப் பிரதேசம் பெரிதும் தவிப்புக்குள்ளாயிற்று. (10)

அதனால் அந்தக் காட்டிலிருந்து புறப்பட்டு, மிகவும் விஸ்தாரமான தண்டகாரண்யத்திற்குள் இராமன் புகுந்தார். பயங்கரான அந்தக் காட்டில் மக்கள் நடமாட்டமே இல்லை; யானைகள் அட்டகாசம் செய்து கொண்டிருந்தன; புலி–சிங்கம்–மான்கள் வசித்துக் கொண்டிருந்தன. (11)

அடர்த்தியான அந்தக் காட்டில் அவர்கள் சென்று கொண்டிருந்தபோது, பலம் மிக்கவனான விராதன் என்பவன் பேரோசை எழுப்பிக் கொண்டு, அவர்கள் எதிரில் தோன்றினான். (12)

யானையைப் போல் பிளிறி பேரோசை எழுப்பியவனும், கைகளை உயரத் தூக்கி கொண்டிருந்தவனுமான அவனைத் தூக்கியெறிந்து (உயிரைப் பறித்து), ஒரு பெரிய குழியில் தலைகீழாகப் போட்டார்கள். சகோதரர்களான இராம–லட்சுமணர்கள் செயற்கரிய அந்தச் செயலைச் செய்து முடித்த பின்னர், அன்று மாலையில் சரபங்கருடைய அமைதி சூழ்ந்த ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். (13,14)

வீண்போகாத பராக்கிரமத்தைக் கொண்ட இராமபிரான், சரபங்கர் தேவலோகத்தை அடைந்தவுடன், அந்த ஆசிரமத்திலிருந்த எல்லா முனிவர்களையும் வணங்கி விடைபெற்றுக் கொண்டு, ஜனஸ்தானம் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார். (15)

பின்னர் ஒரு சமயம், சூர்ப்பணகை என்ற அரக்கி, இராமன் அருகில் வந்தாள். அப்போது, இராமனுடைய உத்தரவின்படி மகாபலசாலியான லட்சுமணன் விருட்டென்று எழுந்து, கத்தியைப் கையிலெடுத்து, அவளுடைய காது–மூக்குகளை அறுத்துவிட்டார். (16)

(அதன்பின், சூர்ப்பணகையின் தூண்டுதலால் போரிடுவதற்கு வந்த) பதினான்காயிரம் அரக்கர்களை, அங்கு வசித்துக் கொண்டிருந்த மகாத்மாவான இராமன் கொன்றார். (17)

போர்க்களத்தில், தனி ஒருவரான இராமனோடு ஒன்றாகக் கூடி போர் புரிந்த அரக்கர்கள் எல்லோரும், பகல்பொழுதின் கால்பாகத்தில், ஒருவர்கூட மிச்சமில்லாமல் கொல்லப்பட்டார்கள். பலம் மிக்கவர்களும் வீரம் மிகுந்தவர்களும் முனிவர்களின் தவத்திற்கு இடையூறு செய்பவர்களுமான தண்டகாரண்யவாசிகள் இராமனால் போரில் கொல்லப்பட்டார்கள்; அரக்கர்கள் அழித்து ஒழிக்கப்பட்டார்கள்; கரன் என்ற அரக்கத் தலைவனும் போரில் கொல்லப்பட்டான். (18,19)

பின்னர், லட்சுமணனால் மூக்கறுபட்ட பெண் சூர்ப்பணகை இராவணனிடம் சென்றாள். இராவணனின் ஏவலாளனும் பயங்கரமானவனுமான மாரீசன் என்ற அரக்கன், இரத்தினமயமான மான் வடிவம் ஏற்று, சீதாப் பிராட்டியாருக்கு ஆசை காட்டினான். (20)

சீதாப் பிராட்டியார், அதன் அழகில் மயங்கி, 'இதைப் பிடித்துத் தாருங்கள்' என்று இராமனிடம் கூறினார். 'நாதா! இந்த மானின் வருகையால் நமது ஆசிரமம் எழிலுடன் விளங்கப் போகிறது' என்றார். (21)

உடனே, இராமன் வில்லை எடுத்துக் கொண்டு, வேகமாக ஓடிச் செல்லும் மானைப் பின்தொடர்ந்து ஓடினார். இலக்கு வைக்க முடியாமல் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்த அதை, நுனி வளைந்த ஒரு பாணத்தால் கொன்றார். (22)

ஐயனே! இராமன் மானைப் பின்தொடர்ந்து வெகுதூரம் சென்றுவிட்ட நிலையில், லட்சுமணரும் வெளியே சென்றுவிட்ட அந்தப் பொழுதில், இராவணன், அந்த ஆசிரமத்திற்குள் நுழைந்தான். (23)

ஜக்$_3$ராஹ தரஸா ஸீதாம் க்$_3$ரஹ: கே$_2$ ரோஹிணீமிவ ।
த்ராதுகாமம் ததோ யுத்$_3$தே$_4$ ஹத்வா க்$_3$ருத்$_4$ரம் ஜடாயுஷம் ॥
ப்ரக்$_3$ருஹ்ய ஸீதாம் ஸஹஸா ஜகா$_3$மாஶு ஸ ராவண: ॥ (24)

ததஸ்த்வத்$_3$பு$_4$தஸங்காஶா: ஸ்தி$_2$தா: பர்வதமூர்த$_4$நி ।
ஸீதாம் க்$_3$ருஹீத்வா க$_3$ச்ச$_2$ந்தம் வாநரா: பர்வதோபமா: ॥
த$_3$த்$_3$ருஶுர்விஸ்மிதாஸ்தத்ர ராவணம் ராக்ஷஸாதி$_4$பம் ॥ (25)

ப்ரவிவேஶ ததோ லங்காம் ராவணோ லோகராவண: ॥ (26)

தாம் ஸுவர்ணபரிக்ராந்தே ஶுபே$_4$ மஹதி வேஶ்மநி ।
ப்ரவேஶ்ய மைதி$_2$லீம் வாக்யை: ஸாந்த்வயாமாஸ ராவண: ॥ (27)

த்ருணவத்$_3$பா$_4$ஷிதம் தஸ்ய தம் ச நைர்ருதபுங்க$_3$வம் ।
அசிந்தயந்தீ வைதே$_3$ஹீ அஶோகவநிகாம் க$_3$தா ॥ (28)

ந்யவர்தத ததோ ராமோ ம்ருக$_3$ம் ஹத்வா மஹாவநே ।
நிவர்தமாந: காகுத்ஸ்தோ$_2$ த்$_3$ருஷ்டவா க்$_3$ருத்$_4$ரம் ப்ரவிவ்யதே$_2$ ॥
க்$_3$ருத்$_4$ரம் ஹதம் ததோ த$_3$க்த்$_4$வா ராம: ப்ரியஸக$_2$ம் பிது: ॥ (29)

மார்க$_3$மாணஸ்து வைதே$_3$ஹீம் ராக$_4$வ: ஸஹலக்ஷ்மண: ।
கோ$_3$தா$_3$வரீமந்வசரத்$_3$வநோத்$_3$தே$_3$ஶாம்ஶ்ச புஷ்பிதாந் ॥ (30)

ஆஸேத$_3$துர்மஹாரண்யே கப$_3$ந்த$_4$ம் நாம ராக்ஷஸம் ।
தத: கப$_3$ந்த$_4$வசநாத்$_3$ராம: ஸத்யபராக்ரம: ॥
ருஶ்யமூகம் கி$_3$ரிம் க$_3$த்வா ஸுக்$_3$ரீவேண ஸமாக$_3$த: ॥ (31)

தயோ: ஸமாக$_3$ம: பூர்வம் ப்ரீத்யா ஹார்தோ$_3$ வ்யஜாயத ।
ப்$_4$ராத்ரா நிரஸ்த: க்ருத்$_3$தே$_4$ந ஸுக்$_3$ரீவோ வாலிநா புரா ॥
இதரேதரஸம்வாதா$_3$த் ப்ரகா$_3$ட$_4$: ப்ரணயஸ்தயோ: ॥ (32)

ராமஸ்ய பா$_3$ஹுவீர்யேண ஸ்வராஜ்யம் ப்ரத்யபாத$_3$யத் ।
வாலிநம் ஸமரே ஹத்வா மஹாகாயம் மஹாப$_3$லம் ॥
ஸுக்$_3$ரீவ: ஸ்தா$_2$பிதோ ராஜ்யே ஸஹித: ஸர்வவாநரை: ॥ (33)

ராமாய ப்ரதிஜாநீதே ராஜபுத்ர்யாஶ்ச மார்க$_3$ணம் ॥ (34)

ஆதி$_3$ஷ்டா வாநரேந்த்$_3$ரேண ஸுக்$_3$ரீவேண மஹாத்மநா ।
த$_3$ஶ கோட்ய: ப்லவங்கா$_3$நாம் ஸர்வா: ப்ரஸ்தா$_2$பிதா தி$_3$ஶ: ॥ (35)

தேஷாம் நோ விப்ரக்ருஷ்டாநாம் விந்த்$_4$யே பர்வதஸத்தமே ।
ப்$_4$ருஶம் ஶோகாபி$_4$தப்தாநாம் மஹாந் காலோऽத்யவர்தத ॥ (36)

ப்$_4$ராதா து க்$_3$ருத்$_4$ரராஜஸ்ய ஸம்பாதிர்நாம வீர்யவாந் ।
ஸமாக்$_2$யாதி ஸ்ம வஸதிம் ஸீதாயா ராவணாலயே ॥ (37)

ஆகாயத்தில் செவ்வாய் கிரகம் ரோகிணியை ஆக்கிரமிப்பதைப் போல, இராவணன் சீதாதேவியைப் பலாத்காரமாகப் பற்றிக் கொண்டான். அவரைக் காப்பாற்ற வந்த ஜடாயு என்ற கழுகைப் போரில் கொன்று, காலதாமதமின்றி சீதையை எடுத்துக் கொண்டு விரைந்து சென்று விட்டான். (24)

அப்போது, ரிசியமூக மலைச்சிகரத்திலிருந்த ஆச்சரியமான உருவம் கொண்டவர்களும் மலைபோல் பேருடல் படைத்தவர்களுமான வானரர்கள், ஆகாயமார்க்கமாக அரக்க மன்னன் இராவணன், சீதாப் பிராட்டியாரை எடுத்துச் செல்வதை அதிர்ச்சியுடன் பார்த்தார்கள். (25)

பின்னர், உலகத்தைக் கதறச் செய்யும் இராவணன் இலங்கையை அடைந்தான். (26)

அங்கு, பொன்மயமான ஒரு மாளிகையில் சீதையைத் தங்க வைத்து, ஆசையைத் தூண்டும் இனிய சொற்களால் சமாதானப்படுத்த முயன்றான். பிறகு, அசோகவனத்தில் காவல் வைக்கப்பட்ட சீதை, அங்கும் வந்து மன்றாடிய அரக்கமன்னனின் ஆசை வார்த்தைகளைத் துரும்பாக மதித்து, அவனைப் பொருட்படுத்தாதிருந்தார். (27,28)

பெருங்காட்டில், மானைக் கொன்றுவிட்டு இராமன் ஆசிரமத்தை நோக்கித் திரும்பி வந்தார். திரும்பி வந்த இராமன், கழுகின் நிலையைக் கண்டு (ஜடாயு, குற்றுயிராகக் கிடப்பதைக் கண்டு) மிகவும் வேதனையடைந்தார். பின்னர், தந்தையின் பேரன்பிற்குரிய நண்பனான கழுகு உயிரை விட்டதும், அதற்கு எரியூட்டினார். (29)

இராம–லட்சுமணர்கள் சீதையைத் தேடிக் கொண்டு கோதாவரி நதிக்கரையில் மலர்கள் பூத்துக் குலுங்கும் வனப்பகுதிகளில் சுற்றி வந்தார்கள். (30)

(சீதையைத் தேடிக் கொண்டு செல்கையில்,) அந்தப் பெருங்காட்டில் கபந்தன் என்ற அரக்கனை எதிர்கொண்டு மாய்த்தார்கள். தோல்வி காணாப் பராக்கிரமமுடைய இராமன், கபந்தன் (திவ்ய சரீரமெடுத்துக்) கூறிய சொற்படி, ரிசியமூக பர்வதத்திற்குச் சென்று சுக்ரீவனைச் சந்தித்தார். (31)

அவ்விருவரும் நேரில் சந்தித்துக் கொண்டவுடனேயே மனப்பூர்வமான நேயம் உண்டாயிற்று. முன்பொரு சமயம், கோபங்கொண்ட அண்ணன் வாலி, சுக்ரீவனை நாட்டிலிருந்து துரத்தி விட்டிருந்தான். (அதனால், மனைவியையும் சுகபோகங்களையும் இழந்து, தற்சமயம் இராமன் இருந்த நிலையில் சுக்ரீவன் இருந்தார்.) ஒருவருடன் ஒருவர் பேசியபின், இருவரிடையேயும் அன்பு வளர்ந்தது. (32)

இராமன், தன் தோள்வலிமையால் மகாபலசாலியும் பேருடல் கொண்டவனுமான வாலியை போரில் கொன்று, அவனுடைய அரசை சுக்ரீவனுக்குக் கொடுத்தார். எல்லா வானரர்களின் ஒப்புதலுடன், சுக்ரீவன் ஆட்சியில் அமர்த்தப்பட்டார். (33)

அப்போது, அரசகுமாரி சீதையைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவதாக, இராமனுக்கு வாக்களித்தார். (34)

அதன்படி, வானரர் மன்னனும் செய்நன்றி மறவாதவருமான சுக்ரீவன், பல கோடிக்கணக்கான வானரர்களை எல்லாத் திசைகளிலும் அனுப்பி வைத்தார். (35)

சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பப்பட்ட வானரர் குழுவிலிருந்த நாங்கள், விந்திய மலையில் ஒரு குகைக்குள் நுழைந்து திரும்பி வெளியே வந்தபோது, சுக்ரீவன் குறித்திருந்த கால எல்லை கடந்து விட்டிருந்தது. அதனால், கவலையில் மூழ்கி இருந்ததால் மேலும் காலம் கழிந்தது. (36)

அந்த நிலையில், கழுகரசரான ஜடாயுவின் மூத்த சகோதரர் வீரம் மிகுந்த சம்பாதி என்பவர், இராவணன் மாளிகையில் சீதாதேவி இருப்பதாகக் கூறினார். (37)

ஸோऽஹம் ஶோகபரீதாநாம் து$_3$:க$_2$ம் தஜ்ஜ்ஞாதிநாம் நுத$_3$ந் ।
ஆத்மவீர்யம் ஸமாஸ்தா$_2$ய யோஜநாநாம் ஶதம் ப்லுத: ॥ (38)

தத்ராஹமேகாமத்$_3$ராக்ஷமஶோகவநிகாம் க$_3$தாம் ।
கௌஶேயவஸ்த்ராம் மலிநாம் நிராநந்தா$_3$ம் த்$_3$ருட$_4$வ்ரதாம் ॥ (39)

தயா ஸமேத்ய விதி$_4$வத் ப்ருஷ்ட்வா ஸர்வமநிந்தி$_3$தாம் ।
அபி$_4$க்ஞாநம் ச மே த$_3$த்தமர்சிஷ்மாந் ஸ மஹாமணி: ॥
அபி$_4$க்ஞாநம் மணிம் லப்$_3$த்$_4$வா சரிதார்தே$_2$ऽஹமாக$_3$த: ॥ (40)
மயா ச புநராக$_3$ம்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
அபி$_4$க்ஞாநம் மயா த$_3$த்தமர்சிஷ்மாந் ஸ மஹாமணி: ॥ (41)

ஶ்ருத்வா து மைதி$_2$லீம் ஹ்ருஷ்டஸ்த்வாஶஶம்ஸே ச ஜீவிதம் ।
ஜீவிதாந்தமநுப்ராப்த: பீத்வாம்ருதமிவாதுர: ॥ (42)

உத்$_3$யோஜயிஷ்யந்நுத்$_3$யோக$_3$ம் த$_3$த்$_4$ரே காமம் வதே$_4$ மந: ।
ஜிகா$_4$ம்ஸுரிவ லோகாந்தே ஸர்வாந்(ல்)லோகாந் விபா$_4$வஸு: ॥ (43)

தத: ஸமுத்$_3$ரமாஸாத்$_3$ய நளம் ஸேதுமகாரயத் ।
அதரத் கபிவீராணாம் வாஹிநீ தேந ஸேதுநா ॥ (44)

ப்ரஹஸ்தமவதீ$_4$ந்நீல: கும்ப$_4$கர்ணம் து ராக$_4$வ: ।
லக்ஷ்மணோ ராவணஸுதம் ஸ்வயம் ராமஸ்து ராவணம் ॥ (45)

ஸ ஶக்ரேண ஸமாக$_3$ம்ய யமேந வருணேந ச ।
மஹேஶ்வரஸ்வயம்பூ$_4$ப்$_4$யாம் ததா$_2$ த$_3$ஶரதே$_2$ந ச ॥ (46)

தைஶ்ச த$_3$த்தவர: ஶ்ரீமாந்ருஷிபி$_4$ஶ்ச ஸமாக$_3$த: ।
ஸுரர்ஷிபி$_4$ஶ்ச காகுத்ஸ்தோ$_2$ வராந்(ல்)லேபே$_4$ பரந்தப: ॥ (47)

ஸ து த$_3$த்தவர: ப்ரீத்யா வாநரைஶ்ச ஸமாக$_3$த: ।
புஷ்பகேண விமாநேந கிஷ்கிந்தா$_4$மப்$_4$யுபாக$_3$மத் ॥ (48)

தம் க$_3$ங்கா$_3$ம் புநராஸாத்$_3$ய வஸந்தம் முநிஸந்நிதௌ$_4$ ।
அவிக்$_4$நம் புஷ்யயோகே$_3$ந ஶ்வோ ராமம் த்$_3$ரஷ்டுமர்ஹஸி ॥ (49)

ததஸ்து ஸத்யம் ஹநுமத்$_3$வசோ மஹந்–
நிஶம்ய ஹ்ருஷ்டோ ப$_4$ரத: க்ருதாஞ்ஜலி: ।
உவாச வாணீம் மநஸ: ப்ரஹர்ஷிணீம்
சிரஸ்ய பூர்ண: க$_2$லு மே மநோரத$_2$: ॥ (50)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகோநத்ரிம்ஶது$_3$த்தரஶததம: ஸர்க$_3$: ॥

என்னுடைய நண்பர்களும் சுற்றத்தவர்களுமான கோடிக்கணக்கான வானரர்கள் துயரத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அவர்கள் துயரத்தைப் போக்குவதற்காக, என் வீரத்தை ஒன்று திரட்டி, நூறு யோஜனை தூரம் கடலைத் தாண்டிச் சென்றேன். (38)

அங்கு (இலங்கையில்) அசோகவனத்தில், பட்டாடை உடுத்தி, புழுதி படிந்து, மகிழ்ச்சியற்று, தன் கற்பில் உறுதியாக, தன்னந்தனியாக இருந்த சீதாப் பிராட்டியாரை, நான் பார்த்தேன். (39)

மாசற்றவரான சீதையை அணுகி, அவரிடம் பேசுவதற்கான முறைகளைப் பற்றி நன்கு ஆலோசித்து, நீதி முறைப்படி, எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அப்போது, ஒளி மிகுந்த சூடாமணி என்ற இரத்தின அணிகலனை அடையாளத்தின் பொருட்டு என்னிடம் கொடுத்தார். அடையாளமாக அந்த மணியை பெற்றுக்கொண்ட நான், அங்கு வந்த காரியம் நிறைவேறப் பெற்றவனானேன். (40)

நான் திரும்பி வந்து எந்த ஒரு மாபெரும் செயலையும், வெகு எளிதாக செய்து முடிக்க வல்லவரான இராமனிடம் ஒளி பொருந்திய அந்த சிறந்த இரத்தினத்தை (நான் பிராட்டியாரைக் கண்டு வந்ததன்) அடையாளமாக ஒப்படைத்தேன். (41)

மரணத்தின் வாயிலை அடைந்துவிட்ட ஒரு நோயாளி, அமுதத்தைப் பருகியவுடன் உயிர் பெற்றுத் துள்ளி எழுவதைப் போல, சீதையின் பிரிவாற்றாமையால் தன் உயிரைத் துறக்கும் நிலையில் இருந்த இராமன், சீதாதேவி உயிருடன் இருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டதும், தன் உயிரின் மேல் ஆசை கொண்டார். (42)

உடனே, ஊழிக்காலத்தில் (ஸம்வர்த்தகன் என்ற பெயர் கொண்ட) அக்னி பகவான், உலகம் முழுவதையும் அழித்துவிடும் வெறியுடன் செயல்படுவதைப் போல, இராவணனை மாய்ப்பதில் உறுதி கொண்டவராக இராமன் முயற்சி எடுக்கத் தொடங்கினார். (43)

அதன்பின் கடலின் கரைக்கு வந்து, நளனைக் கொண்டு பாலம் கட்டுவித்தார். அந்தப் பாலத்தின் வழியாக, வானரப்படை கடலைக் கடந்து சென்றது. (44)

(பின்னர் நடந்த போரில்,) பிரஹஸ்தனை, நீலன் கொன்றான்; கும்பகர்ணனை இராமனும், இராவணனின் புதல்வனான இந்திரஜித்தை லட்சுமணனும் கொன்றார்கள். இராவணனை, இராமன் தானே மாய்த்தார். (45)

(போரில் வெற்றி பெற்ற பின்னர்,) எதிரிகளை மாய்ப்பவரும் வெற்றிதிரு பொருந்தியவருமான இராமன், அங்கு வந்து கூடியிருந்த இந்திரன்–யமன்–வருணன்–சிவபெருமான்–பிரும்மா–தசரதன் முதலியோரிடமிருந்தும், மாமுனிவர்கள், தேவரிஷிகள் முதலியோரிடமிருந்தும் வரங்களைப் பெற்றார். (46,47)

வரங்களைப் பெற்றுக் கொண்ட இராமன், உற்சாகமாக, வானரர்களுடன் கூட புஷ்பக விமானத்திலேறி கிஷ்கிந்தைக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் கங்கைக் கரைக்கு வந்து, பரத்வாஜ முனிவர் ஆசிரமத்தில் தங்கியிருக்கிறார். எவ்விதத் தடங்கலும் இல்லாமல், புஷ்ய நட்சத்திரம் கூடிய நன்னாளான நாளைய தினம் இராமபிரானைக் காண்பீர்கள்.'' (48,49)

அனுமான் கூறிய எல்லையில்லா ஆனந்தத்தைத் தருவதும் சத்தியமுமான சொற்களைக் கேட்டு உள்ளம் பூரித்த பரதன், கைகளைக் கூப்பிக் கொண்டு, ''வெகு காலத்திய என் விருப்பம் இப்போதுதான் நிறைவேறியிருக்கிறது! அப்பாடா!'' என்று, கேட்போர் மனத்தையும் மகிழ்விக்கும் சொற்களை வாய்விட்டுக் கூறினான். (50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

த்ரிம்ஶது$_3$த்தரஶததம: ஸர்க$_3$:

ப$_4$ரதஸமாக$_3$ம:

ஶ்ருத்வா து பரமாநந்த$_3$ம் ப$_4$ரத: ஸத்யவிக்ரம: ।
ஹ்ருஷ்டமாக்ஞாபயாமாஸ ஶத்ருக்$_4$நம் பரவீரஹா ॥ (1)

தை$_3$வதாநி ச ஸர்வாணி சைத்யாநி நக$_3$ரஸ்ய ச ।
ஸுக$_3$ந்த$_4$மால்யைர்வாதி$_3$த்ரைரர்சந்து ஶுசயோ நரா: ॥ (2)

ஸூதா: ஸ்துதிபுராணக்ஞா: ஸர்வே வைதாலிகாஸ்ததா$_2$ ।
ஸர்வே வாதி$_3$த்ரகுஶலா க$_3$ணிகாஶ்சாபி ஸங்க$_4$ஶ: ॥
அபி$_4$நிர்யாந்து ராமஸ்ய த்$_3$ரஷ்டும் ஶஶிநிப$_4$ம் முக$_2$ம் ॥ (3)

ப$_4$ரதஸ்ய வச: ஶ்ருத்வா ஶத்ருக்$_4$ந: பரவீரஹா ।
விஷ்டீரநேகஸாஹஸ்ராஶ்சோத$_3$யாமாஸ வீர்யவாந் ॥ (4)

ஸமீகுருத நிம்நாநி விஷமாணி ஸமாநி ச ।
ஸ்த$_2$லாநி ச நிரஸ்யந்தாம் நந்தி$_3$க்$_3$ராமாதி$_3$த: பரம் ॥ (5)

ஸிஞ்சந்து ப்ருதி$_2$வீம் க்ருத்ஸ்நாம் ஹிமஶீதேந வாரிணா ।
ததோऽப்$_4$யவகிரந்த்வந்யே லாஜை: புஷ்பைஶ்ச ஸர்வஶ: ॥ (6)

ஸமுச்ச்$_2$ரிதபதாகாஸ்து ரத்$_2$யா: புரவரோத்தமே ।
ஶோப$_4$யந்து ச வேஶ்மாநி ஸூர்யஸ்யோத$_3$யநம் ப்ரதி ॥ (7)

ஸ்ரக்$_3$தா$_3$மபி$_4$ர்முக்தபுஷ்பை: ஸுக$_3$ந்தை$_4$: பஞ்சவர்ணகை: ।
ராஜமார்க$_3$மஸம்பா$_3$த$_4$ம் கிரந்து ஶதஶோ நரா: ॥ (8)

ராஜதா$_3$ராஸ்ததா$_2$மாத்யா: ஸைந்யா: ஸேநாக$_3$ணாங்க$_3$ணா: ।
ப்$_3$ராஹ்மணாஶ்ச ஸராஜந்யா: ஶ்ரேணீமுக்$_2$யாஸ்ததா$_2$ க$_3$ணா: ॥ (9)

த்$_4$ருஷ்டிர்ஜயந்தோ விஜய: ஸித்$_3$தா$_4$ர்தோ$_2$ ஹ்யர்த$_2$ஸாத$_4$க: ।
அஶோகோ மந்த்ரபாலஶ்ச ஸுமந்த்ரஶ்சாபி நிர்யயு: ॥
மத்தைர்நாக$_3$ஸஹஸ்ரைஶ்ச ஶாதகும்ப$_4$விபூ$_4$ஷிதை: ॥ (10)

அபரே ஹேமகக்ஷ்யாபி$_4$: ஸக$_3$ஜாபி$_4$: கரேணுபி$_4$: ।
நிர்யயுஸ்துரகா$_3$க்ராந்தை ரதை$_2$ஶ்ச ஸுமஹாரதா$_2$: ॥ (11)

ஶக்த்ய்ருஷ்டிப்ராஸஹஸ்தாநாம் ஸத்$_4$வஜாநாம் பதாகிநாம் ।
துரகா$_3$ணாம் ஸஹஸ்ரைஶ்ச முக்$_2$யைர்முக்$_2$யநராந்விதை: ॥
பதா$_3$தீநாம் ஸஹஸ்ரைஶ்ச வீரா: பரிவ்ருதா யயு: ॥ (12)

ததோ யாநாந்யுபாரூடா$_4$: ஸர்வா த$_3$ஶரத$_2$ஸ்த்ரிய: ।
கௌஸல்யாம் ப்ரமுகே$_2$ க்ருத்வா ஸுமித்ராம் சாபி நிர்யயு: ॥
கைகேய்யா ஸஹிதா: ஸர்வா நந்தி$_3$க்$_3$ராமமுபாக$_3$மந் ॥ (13)

ஸர்க்கம் : நூற்று முப்பது

இராம– லட்சுமண– பரத– சத்ருக்னர்கள் சந்திப்பு

பேரானந்தத்தைத் தரும் செய்தியைக் கேட்டு மனமகிழ்ச்சியுடனிருந்த சத்ருக்னனைப் பார்த்து, புறங்காணாத பேராற்றல் உடையவனும் பகை வீரர்களை ஒழிப்பவனுமான பரதன், பின்வருமாறு கட்டளையிட்டான்— (1)

''நல்லொழுக்கமுடைய ஆண்கள், நகரத்திலுள்ள எல்லா தேவதைகளையும் வழிபாட்டுத் தலங்களையும் மணமிக்க மலர்களால் அலங்கரித்து, இசைக்கருவிகளை மீட்டி வழிபாடு நடத்துவார்களாக. (2)

மன்னரின் புகழ் பாடுபவர்கள், தோத்திர–புராண வல்லுநர்கள், வைதாளிகர்கள் (விதூஷகர்கள்), இசைக் கருவி இயக்குபவர்கள், இறை பணிக்கே வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட கணிகைகள் ஆகிய எல்லோரும், இராமசந்திரனுடைய முழு நிலவு போன்ற குளிர் முகத்தைக் காண்பதற்காக வெளியே புறப்படுவார்களாக.'' (3)

பகை வீரர்களை அழிப்பவனும் மாவீரனுமான சத்ருக்னன், பரதனுடைய ஆணையை சிரமேற்கொண்டு, சம்பளம் வாங்காமல் தொண்டு செய்து வந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பார்த்து, பின்வருமாறு கூறினான்— (4)

''நந்திக்கிராமத்திலிருந்து அயோத்தி வரையிலுள்ள சாலையை, பள்ளம்–மேடு இல்லாமல் சமமாக இருக்கும்படி மேடுகளைத் தகர்த்து செப்பனிடுங்கள். (5)

உங்களில் சிலர், பனிபோல் குளிர்ந்த தண்ணீரைத் தரையில் தெளிக்க வேண்டும்; அதன்பின் பொறி–புஷ்பங்களை எல்லாப் பக்கங்களிலும் இறைக்க வேண்டும். (6)

மிகச்சிறந்த நகரமான அயோத்தியில், நாளைக் காலை சூரியோதயத்திற்கு முன், அரசபாட்டைகளில் கொடிகள் உயரமாகக் கட்டப்பட வேண்டும்; வீடுகள், மலர்மாலைகளாலும் உதிரி மலர்களாலும் அலங்கரிக்கப்பட வேண்டும். அகலமான அரசபாட்டையில் மணங்கமழும் ஐந்து வண்ணப்பொடிகளால் கோலங்கள் போடப்பட வேண்டும். இந்த வேலைகளில் நூற்றுக்கணக்கான நபர்கள் ஈடுபடுவார்களாக.'' (7,8)

(தசரத) மன்னரின் மனைவிகள், அமைச்சர்கள், படைவீரர்கள், படைவீரர்களின் மனைவிகள், வேதியர்கள், க்ஷத்திரியர்கள், நாட்டாண்மைக்காரர்கள், வகுப்பு முக்கியஸ்தர்கள் ஆகியோரும் மற்றும் அமைச்சர்களான த்ருஷ்டி, ஜயந்தர், விஜயன், சித்தார்த்தன், அர்த்தஸாதகன், அசோகன், மந்த்ரபாலன், சுமந்திரன் ஆகியோரும் பொன் அணிகளால் அலங்கரிக்கப்பட்ட மதங்கொண்ட ஆயிரக்கணக்கான யானைகளோடு வெளிக் கிளம்பினார்கள். (9,10)

மிகப் புகழ் பெற்ற மகாரதர்களான சிலர், பொற்கயிற்றால் பிணைக்கப்பட்ட ஆண்–பெண் யானைகளிலும் குதிரைகள் பூட்டப் பெற்ற ரதங்களிலும் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். (11)

கொடி–தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான உயர்ஜாதிக் குதிரைகள்; குதிரை வீரர்கள்; வேல், இரு பக்கமும் கூர்மையுடன் இருக்கும் கத்தி, ஈட்டி ஆகியவற்றை கைகளில் ஏந்திய ஆயிரக்கணக்கான காலாட்படையினர் போன்றோர் புடைசூழ, தலைமைப் பொறுப்பிலிருந்த பலர் இராமனை வரவேற்கச் சென்றார்கள். (12)

தசரத மன்னரின் மனைவிமார்கள் எல்லோரும் ஊர்திகளில் ஏறிக் கொண்டு, கௌசல்யையும் சுமித்திரையையும் முன்னிட்டுக் கொண்டு புறப்பட்டார்கள்; எல்லோரும் கைகேயியுடன்கூட நந்திக்கிராமத்தை அடைந்தார்கள். (13)

க்ருத்ஸ்நம் ச நக3ரம் தத்து நந்தி3க்3ராமமுபாக3மத் ।
அஶ்வாநாம் கு2ரஶப்3தே3ந ரத2நேமிஸ்வநேந ச ॥
ஶங்க2து3ந்து3பி4நாதே3ந ஸஞ்சசாலேவ மேதி3நீ ॥ (14)

த்3விஜாதிமுக்2யைர்த4ர்மாத்மா ஶ்ரேணீமுக்2யை: ஸநைக3மை: ।
மால்யமோத3கஹஸ்தைஶ்ச மந்த்ரிபி4ர்ப4ரதோ வ்ருத: ॥ (15)

ஶங்க2பே4ரீநிநாதை3ஶ்ச வந்தி3பி4ஶ்சாபி4வந்தி3த: ।
ஆர்யபாதௌ3 க்3ருஹீத்வா து ஶிரஸா த4ர்மகோவித3: ॥ (16)

பாண்டு3ரம் ச2த்ரமாதா3ய ஶுக்லமால்யோபஶோபி4தம் ।
ஶுக்லே ச வாலவ்யஜநே ராஜார்ஹே ஹேமபூ4ஷிதே ॥ (17)

உபவாஸக்ருஶோ தீ3நஶ்சீரக்ருஷ்ணாஜிநாம்ப3ர: ।
ப்4ராதுராக3மநம் ஶ்ருத்வா தத்பூர்வம் ஹர்ஷமாக3த: ॥
ப்ரத்யுத்3யயௌ ததோ ராமம் மஹாத்மா ஸசிவை: ஸஹ ॥ (18)

ஸமீக்ஷ்ய ப4ரதோ வாக்யமுவாச பவநாத்மஜம் ।
கச்சிந்ந க2லு காபேயீ ஸேவ்யதே சலசித்ததா ॥ (19)

ந ஹி பஶ்யாமி காகுத்ஸ்த2ம் ராமமார்யம் பரந்தபம் ।
கச்சிந்ந க2லு த்3ருஶ்யந்தே வாநரா: காமரூபிண: ॥ (20)

அதை2வமுக்தே வசநே ஹநுமாநித3மப்3ரவீத் ।
அர்த2ம் விக்ஞாபயந்நேவ ப4ரதம் ஸத்யவிக்ரமம் ॥ (21)

ஸதா3ப2லாந் குஸுமிதாந் வ்ருக்ஷாந் ப்ராப்ய மது4ஸ்ரவாந் ।
ப4ரத்3வாஜப்ரஸாதே3ந மத்தப்4ரமரநாதி3தாந் ॥ (22)

தஸ்ய சைஷ வரோ த3த்தோ வாஸவேந பரந்தப ।
ஸஸைந்யஸ்ய தத2ாதித்2யம் க்ருதம் ஸர்வகு3ணாந்விதம் ॥ (23)

நி:ஸ்வந: ஶ்ரூயதே பீ4ம: ப்ரஹ்ருஷ்டாநாம் வநௌகஸாம் ।
மந்யே வாநரஸேநா ஸா நதீ3ம் தரதி கோ3மதீம் ॥ (24)

ரஜோவர்ஷம் ஸமுத்3பூ4தம் பஶ்ய வாலுகிநீம் ப்ரதி ।
மந்யே ஸாலவநம் ரம்யம் லோலயந்தி ப்லவங்க3மா: ॥ (25)

தத3ேதத்3த்3ருஶ்யதே தூ3ராத்3விமலம் சந்த்3ரஸந்நிப4ம் ।
விமாநம் புஷ்பகம் தி3வ்யம் மநஸா ப்3ரஹ்மநிர்மிதம் ॥
ராவணம் பா3ந்த4வை: ஸார்த4ம் ஹத்வா லப்3த4ம் மஹாத்மநா ॥ (26)

தருணாதி3த்யஸங்காஶம் விமாநம் ராமவாஹநம் ।
த4நத3ஸ்ய ப்ரஸாதே3ந தி3வ்யமேதந்மநோஜவம் ॥ (27)

அயோத்தி நகரம் முழுவதும் நந்திக்கிராமத்தைச் சென்றடைந்தது. குதிரைகளின் குளம்பொலியாலும், தேர்ச் சக்கரங்களின் ஒலியாலும், சங்கு–துந்துபி வாத்தியங்களின் ஒலியாலும் பூமி அசைந்தாடியது. (14)

அறவடிவினன்; அறத்தின் நுட்பம் தெரிந்தவன்; உபவாசத்தால் உடல் இளைத்தவன்; இரங்கத்தக்க தோற்றமுடைவன்; மரவுரியும் மான்தோலும் அணிந்தவன்; 'தமையனார் வந்து கொண்டிருக்கிறார்' என்ற செய்தியைக் கேட்டது முதல் மகிழ்ச்சியால் திளைத்துக் கொண்டிருப்பவன் – இத்தகைய மகாத்மாவான பரதன், வேதோத்தமர்களாலும் விகர் முதலான தொழில்துறை தலைவர்களாலும், மாலைகள்–மோதகங்களைக் கையில் வைத்துக் கொண்டிருந்த அமைச்சர்களாலும் சூழப்பட்டவனாக நின்று கொண்டிருந்தான். அரசன் புகழ் பாடுவோர், போற்றிசைத்துக் கொண்டிருந்தார்கள்; வெண்ணிற மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட வெண்கொற்றக் குடையையும், தங்கப்பிடியுள்ள மன்னருக்குரிய இரண்டு வெண்சாமரங்களையும் எடுத்துக் கொண்டு, அமைச்சர்களோடுகூட தமையனாரின் திருப்பாதுகைகளைத் தலைமீது வைத்துக் கொண்டு, இராமபிரானை எதிர்கொண்டு அழைக்கச் சென்றான். (15–18)

பரதன், அனுமானைப் பார்த்து, ''எதிரிகளை வாட்டும் காகுத்த குலத் திலகமான மாமனிதர் இராமன் இன்னும் கண்ணில் படவில்லையே? வானரர்களுக்குரிய சஞ்சல புத்தியால் ஏதோ சொல்லிவிடவில்லையே நீங்கள்? நினைத்த உருவம் எடுக்கக்கூடிய வானரர்களும் கண்ணில் படவில்லையே?'' என்று கேட்டான். (19,20)

இவ்வாறு பரதன் கேட்டவுடன், வீண்போகாத பராக்கிரமசாலியான அவனைப் பார்த்து தாமதத்திற்கான காரணத்தை, அனுமான் சொல்லத் தொடங்கினார்— (21)

''முனிவருடைய அருளால், இங்கு வரும் வழியிலுள்ள எல்லா மரங்களிலும் பூக்களும் கனிகளும் தோன்றியுள்ளன. அவைகளிலிருந்து தேன் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. மலர்களின் மீது கிறக்கங்கொண்ட வண்டுகள் எப்போதும் ரீங்காரம் செய்து சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. ஏராளமான பழங்களையும் தேனையும் கண்டதும், வானரர்கள் ஆசை தீரப் புசித்துக் கொண்டிருக்கிறார்கள். (22)

இராமபிரானுக்கு, இந்திரனும் இப்படிப்பட்ட ஒரு வரத்தைக் கொடுத்திருக்கிறார். எல்லா சுவைகளையுமுடைய உணவு வகைகளால், படைவீரர்களுக்கும் இராமனுக்கும் முனிவர் விருந்துபசாரம் செய்தார். (உண்ட களைப்பில், வானரர்கள் மெதுவாக வந்து கொண்டிருக்கிறார்கள் போலும்!) (23)

(இவ்வாறு, அனுமான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே,) மிகவும் மகிழ்ச்சியுடனிருக்கும் வானரர்கள் எழுப்பும் பேரிரைச்சல் செவியில் விழுகிறது. வானரப்படை இப்போது கோமதி நதியைத் தாண்டிக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதோ, தூசிப் படலம் தெரிகிறது. இப்போது வாலுகினீ நதிக்கரையிலிருந்து வானரர்கள் புறப்பட்டு, அழகிய சாலமரங்கள் நிறைந்த காட்டில் குதிக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். (24,25)

மாசு–மருவற்றதும் சந்திரன் போல் ஒளி வீசுவதும் பிரும்மதேவரின் சங்கல்பத்தால் தோன்றியதும் தெய்வத் தன்மை கொண்டதுமான புஷ்பக விமானம், அதோ தொலைவில் காணப்படுகிறது. உறவினர்களோடுகூட இராவணனைக் கொன்று, மகாத்மாவான இராமன் இதனைப் பெற்றார். (26)

இராமபிரானுடைய வாகனமாக ஆகிவிட்ட இந்த விமானம் உதயகால சூரியனைப்போல் சோபையுடன் விளங்குகிறது; மனோவேகத்திற்கு ஈடான வேகம் உடையது; பிரும்மாவினால் குபேரனுக்கு அளிக்கப்பட்டது. (இதைக் கவர்ந்து வசப்படுத்திக் கொண்ட இராவணனைக் கொன்று, இராமன் இதனை அடைந்தார்.) (27)

ஏதஸ்மிந் ப்4ராதரௌ வீரௌ வைதே3ஹ்யா ஸஹ ராக4வௌ ।
ஸுக்3ரீவஶ்ச மஹாதேஜா ராக்ஷஸஶ்ச விபீ4ஷண: ॥ (28)

ததோ ஹர்ஷஸமுத்3பூ4தோ நி:ஸ்வநோ தி3வமஸ்ப்ருஶத் ।
ஸ்த்ரீபா3லயுவவ்ருத்3தா4நாம் ராமோऽயமிதி கீர்திதே ॥ (29)

ரத2குஞ்ஜரவாஜிப்4யஸ்தேऽவதீர்ய மஹீம் க3தா: ।
த3த்3ருஶுஸ்தம் விமாநஸ்த2ம் நரா: ஸோமமிவாம்ப3ரே ॥ (30)

ப்ராஞ்ஜலிர்ப4ரதோ பூ4த்வா ப்ரஹ்ருஷ்டோ ராக4வோந்முக2: ।
ஸ்வாக3தேந யதா2ர்தே2ந ததோ ராமமபூஜயத் ॥ (31)

மநஸா ப்3ரஹ்மணா ஸ்ருஷ்டே விமாநே ப4ரதாக்3ரஜ: ।
ரராஜ ப்ருது2தீ3ர்கா4ஸேஷா வஜ்ரபாணிரிவாபர: ॥ (32)

ததோ விமாநாக்3ரக3தம் ப4ரதோ ப்4ராதரம் ததா3 ।
வவந்தே3 ப்ரயதோ ராமம் மேருஸ்த2மிவ பா4ஸ்கரம் ॥ (33)

ததோ ராமாப்4யநுக்ஞாதம் தத்3விமாநமநுத்தமம் ।
ஹம்ஸயுக்தம் மஹாவேக3ம் நிஷ்பபாத மஹீதலே ॥ (34)

ஆரோபிதோ விமாநம் தத்3ப4ரத: ஸத்யவிக்ரம: ।
ராமமாஸாத்3ய முதி3த: புநரேவாப்4யவாத3யத் ॥ (35)

தம் ஸமுத்தா2ப்ய காகுத்ஸ்த2ஶ்சிரஸ்யாக்ஷிபத2ம் க3தம் ।
அங்கே ப4ரதமாரோப்ய முதி3த: பரிஷஸ்வஜே ॥ (36)

ததோ லக்ஷ்மணமாஸாத்3ய வைதே3ஹீம் சாப்4யவாத3யத் ।
அபி4வாத்3ய தத: ப்ரீதோ ப4ரதோ நாம சாப்3ரவீத் ॥ (37)

ஸுக்3ரீவம் கைகயீபுத்ரோ ஜாம்ப3வந்தம் ததா2ங்க3த3ம் ।
மைந்த3ம் ச த்3விவித3ம் நீலம்ருஷப4ம் பரிஷஸ்வஜே ॥ (38)

ஸுஷேணம் ச நளம் சைவ க3வாக்ஷம் க3ந்த4மாத3நம் ।
ஶரப4ம் பநஸம் சைவ ப4ரத: பரிஷஸ்வஜே ॥ (39)

தே க்ருத்வா மாநுஷம் ரூபம் வாநரா: காமரூபிண: ।
குஶலம் பர்யப்ருச்ச2ம்ஸ்தே ப்ரஹ்ருஷ்டா ப4ரதம் ததா3 ॥ (40)

அதா2ப்3ரவீத்3ராஜபுத்ர: ஸுக்3ரீவம் வாநரர்ஷப4ம் ।
பரிஷ்வஜ்ய மஹாதேஜா ப4ரதோ த4ர்மிணாம் வர: ॥ (41)

த்வமஸ்மாகம் சதுர்ணாம் து ப்4ராதா ஸுக்3ரீவ பஞ்சம: ।
ஸௌஹ்ருதா3ஜ்ஜாயதே மித்ரமபகாரோऽரிலக்ஷணம் ॥ (42)

இதில்தான், வீரச் சகோதரர்களான இராம–லட்சுமணர்களும், சீதையும், பேராற்றலுடைய சுக்ரீவனும், அரக்க மன்னரான விபீஷணரும் இருக்கிறார்கள்.'' (28)

அனுமான் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அங்கே குழுமியிருந்த பெண்கள்–குழந்தைகள்–சிறுவர்கள்–வயோதிகர்கள் ஆகியோரின் 'இதோ இராமன்!' என்ற மகிழ்ச்சிகரமான சொல் ஒரே நேரத்தில் புறப்பட்டு வானத்தைத் தொட்டது. (29)

மக்கள், தாங்கள் ஏறியிருந்த தேர்கள், யானைகள், குதிரைகள் முதலியவற்றிலிருந்து இறங்கி தரையில் நின்று கொண்டு, ஆகாயத்தில் ஒளிவீசும் முழுநிலவைப் போன்று புஷ்பக விமானத்தில் விளங்கும் அவரைக் கண்டார்கள். (30)

பரதன், இராமசந்திரனின் திருமுகத்தையே பார்த்துக் கொண்டு, உள்ளம் பூரித்து, இரு கைகளையும் கூப்பி, முறைப்படியான வரவேற்பு உபசாரங்களால் வழிபட்டான். (31)

நெடுந்தடங்கண்ணராகிய இராமன், பிரும்மதேவரின் சங்கற்பத்தால் உண்டாக்கப்பட்ட விமானத்தில், இன்னொரு தேவேந்திரன் போல் பொலிவுடன் விளங்கினார். (32)

அப்போது, விமானத்தின் முன்பகுதிக்கு வந்திருந்த சகோதரர் இராமனை, தான் நின்றவிடத்திலிருந்தபடியே, மேருமலையிலிருக்கும் சூரிய பகவானைச் சேவிப்பது போல மிக்க வணக்கத்துடன் பரதன் அடிபணிந்தான். (33)

அப்போது, ஒப்புயர்வில்லாததும் சுமந்து செல்லும் அன்னப்பறவை போன்ற சிறப்பங்கள் உடையதும் மிக வேகமாகச் செல்லக் கூடியதுமான அந்த விமானம், இராமனின் கட்டளைப்படி பூமியில் இறங்கிற்று. (34)

சத்திய பராக்கிரமம் கொண்ட பரதன் விமானத்திற்குள் ஏற்றப்பட்டான். இராமனை நெருங்கி தரிசித்து ஆனந்தம் அடைந்த பரதன், மறுபடியும் தலைதாழ்த்தி வணங்கினான். (35)

இராமன், நீண்ட காலத்திற்குப் பின் நேரில் பார்க்கும் பரதனைத் தூக்கி நிறுத்தி, தன் மடியில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் கட்டித் தழுவினார். (36)

எதிரிகளைத் தவிக்கச் செய்யும் அவன், லட்சுமணனைக் கண்டு பேசிவிட்டு, நிறைந்த மனத்துடன் சீதையின் பாதங்களில் விழுந்து வணங்கி, 'அடியேன் பரதன்' என்று தெரிவித்துக் கொண்டான். (37)

பின்னர், கைகேயியின் புதல்வனான பரதன், சுக்ரீவன், ஜாம்பவந்தன், அங்கதன், மைந்தன், த்விவிதன், நீலன், ரிஷபன் ஆகியோரையும் அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டான். (38)

பின்னர், சுஷேணன், நளன், கவாக்ஷன், கந்தமாதனன், சரபன், பனஸன் ஆகியோரையும் மார்புறத் தழுவிக் கொண்டான், பரதன். (39)

நினைத்த உருவம் எடுக்கக் கூடிய அந்த வானரர்கள், அப்போது, மானிட உருவம் ஏற்று மகிழ்ச்சியோடு பரதனிடம் அவன் நலன் குறித்து விசாரித்தார்கள். (40)

வேந்தர் மைந்தனும் மகாதேசு பொருந்தியவனும் அறநெறியாளர்களில் முதல்வனுமான பரதன், வானரோத்தமனான சுக்ரீவனைக் கட்டித் தழுவிக் கொண்டு பின்வருமாறு கூறினான்— ''சுக்ரீவனே! நீங்கள் எங்கள் நால்வருடன், ஐந்தாவது சகோதரர் ஆகிவிட்டீர்கள்! அன்புடன் உபகாரம் செய்பவன் நண்பனாகவும் (அதன் மூலம் சகோதரன் போலவும்) ஆகிவிடுகிறான்.'' (41,42)

விபீ4ஷணம் ச ப4ரத: ஸாந்த்வவாக்யமதா2ப்3ரவீத் ।
தி3ஷ்ட்யா த்வயா ஸஹாயேந க்ருதம் கர்ம ஸுது3ஷ்கரம் ॥ (43)

ஶத்ருக்4நஶ்ச ததா2 ராமமபி4வாத்3ய ஸலக்ஷ்மணம் ।
ஸீதாயாஶ்சரணௌ பஶ்சாத்3விநயாத3ப்4யவாத3யத் ॥ (44)

ராமோ மாதரமாஸாத்3ய விஷண்ணாம் ஶோககர்ஶிதாம் ।
ஜக்3ராஹ ப்ரணத: பாதௌ3 மநோ மாது: ப்ரஸாத3யந் ॥ (45)

அபி4வாத்3ய ஸுமித்ராம் ச கைகேயீம் ச யஶஸ்விநீம் ।
ஸ மாத்ரூஶ்ச தத: ஸர்வா: புரோஹிதமுபாக3தம் ॥ (46)

ஸ்வாக3தம் தே மஹாபா3ஹோ கௌஸல்யாநந்த3வர்த4ந ।
இதி ப்ராஞ்ஜலய: ஸர்வே நாக3ரா ராமமப்3ருவந் ॥ (47)

தாந்யஞ்ஜலிஸஹஸ்ராணி ப்ரக்3ருஹீதாநி நாக3ரை: ।
வ்யாகோஶாநீவ பத்3மாநி த3த3ர்ஶ ப4ரதாக்3ரஜ: ॥ (48)

பாது3கே தே து ராமஸ்ய க்3ருஹீத்வா ப4ரத: ஸ்வயம் ।
சரணாப்4யாம் நரேந்த்3ரஸ்ய யோஜயாமாஸ த4ர்மவித் ॥ (49)

அப்3ரவீச்ச ததா3 ராமம் ப4ரத: ஸ க்ருதாஞ்ஜலி: ।
ஏதத்தே ரக்ஷிதம் ராஜந் ராஜ்யம் நிர்யாதிதம் மயா ॥ (50)

அத்3ய ஜந்ம க்ருதார்த2ம் மே ஸம்வ்ருத்தஶ்ச மநோரத2: ।
யஸ்த்வாம் பஶ்யாமி ராஜாநமயோத்4யாம் புநராக3தம் ॥ (51)

அவேக்ஷதாம் ப4வாந் கோஶம் கோஷ்டா2கா3ரம் புரம் ப3லம் ।
ப4வதஸ்தேஜஸா ஸர்வம் க்ருதம் த3ஶகு3ணம் மயா ॥ (52)

ததா2 ப்3ருவாணம் ப4ரதம் த்3ருஷ்ட்வா தம் ப்4ராத்ருவத்ஸலம் ।
முமுசுர்வாநரா பா3ஷ்பம் ராக்ஷஸஶ்ச விபீ4ஷண: ॥ (53)

தத: ப்ரஹர்ஷாத்3ப4ரதமங்கமாரோப்ய ராக4வ: ।
யயௌ தேந விமாநேந ஸஸைந்யோ ப4ரதாஶ்ரமம் ॥ (54)

ப4ரதாஶ்ரமமாஸாத்3ய ஸஸைந்யோ ராக4வஸ்ததா3 ।
அவதீர்ய விமாநாக்3ராத3வதஸ்தே2 மஹீதலே ॥ (55)

அப்3ரவீச்ச ததா3 ராமஸ்தத்3விமாநமநுத்தமம் ।
வஹ வைஶ்ரவணம் தே3வமநுஜாநாமி க3ம்யதாம் ॥ (56)

ததோ ராமாப்4யநுஜ்ஞாதம் தத்3விமாநமநுத்தமம் ।
உத்தராம் தி3ஶமாக3ம்ய ஜகா3ம த4நதா3லயம் ॥ (57)

பரதன், விபீஷணனைப் பார்த்து, ''எவராலும் செய்ய முடியாத அரும்பெரும் பணி உங்கள் உதவியாலேயே நிறைவேற்றப்பட்டது என்பது எங்கள் பெரும்பேறு'' என்று பாராட்டிக் கூறினான். (43)

அப்போது சத்ருக்னன், இராம–லட்சுமணர்களை வணங்கினான். பின்னர், மிகவும் பணிவுடன் சீதையின் பாதங்களில் விழுந்து சேவித்தான். (44)

இராமன், கவலையில் மூழ்கி, சோகத்தில் தவித்துக் கொண்டிருந்த அன்னையின் பாதங்களைப் பற்றிக் கொண்டு, விழுந்து சேவித்து, அவர் மனங்குளிரச் செய்தார்! (45)

அவர், சுமித்திரையையும் புகழ்பெற்ற கைகேயியையும் மற்ற தாய்மார்களையும் வணங்கிவிட்டு, அங்கு வந்திருந்த குலகுருவையும் வணங்கினார். (46)

''பெருந்தோளரே! கௌசல்யா தேவியாரின் ஆனந்தத்தைப் பெருகச் செய்பவரே! தங்களுக்கு நல்வரவு கூறுகிறோம்!'' என்று, நகர மக்கள் அனைவரும் கைகூப்பிக் கொண்டு, இராமனைப் பார்த்துக் கூறினார்கள். (47)

பரதனின் தமையரான அவர், தன்னை நோக்கி விரித்து நீட்டப்பட்ட பட்டணத்து மக்களின் ஆயிரக்கணக்கான அஞ்சலிகள், (சூரியனை நோக்கி) மலர்ந்த தாமரைகள்போல் விளங்குவதைப் பார்த்தார். (48)

அறம் அறிந்த பரதன், இராமபிரானுடைய பாதுகைகளைத் தானே கொண்டு வந்து, புருஷோத்தமரின் திருவடிகளில் சேர்த்தான். (49)

அப்போது, இராமனைப் பார்த்து, கைகளைக் கூப்பிக் கொண்டு, ''மன்னரே! இந்த ராஜ்யம், தங்கள் பொருட்டு இதுகாறும் என்னால் பாதுகாக்கப்பட்டது. அடியேன், இந்த அரசாட்சியைத் தங்களிடம் திரும்பவும் ஒப்படைக்கிறேன். இப்போதுதான், நான் வாழ்வில் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து முடித்தவனாகிறேன். என் மனோரதமும் ஈடேறிவிட்டது! ஆகா, தாங்கள் திரும்பி வந்து, அயோத்திக்கு மன்னராகிவிட்டதை என் கண்களால் பார்க்கிறேனே!'' என்று கூறினான். (50,51)

''தாங்கள், அரசு கருவூலத்தையும் தானியக் கிடங்கையும் நகரத்தையும் சேனையையும் கண்களால் காணவேண்டும். தங்கள் பேரருளால் அவையனைத்தும் பத்து மடங்காக வளர்ந்துள்ளன.'' (52)

அண்ணனிடம் பாசம் மிகுந்த பரதன், இவ்வாறு அன்பு பொங்கக் கூறியதைக் கேட்டு, வானரர்களும் அரக்க மன்னன் விபீஷணனும் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். (53)

அப்போது, இராமன் மிக்க மகிழ்ச்சியுடன் பரதனைத் தன் மடிமேல் ஏற்றி வைத்துக் கொண்டு, படைகளோடு புஷ்பக விமானத்தில் ஏறி, பரதனுடைய ஆசிரமத்திற்குச் சென்றார். படைவீரர்களோடு பரதனுடைய ஆசிமத்தை அடைந்த இராமன், விமானத்திலிருந்து இறங்கிப் பூமியில் நின்றார். (54,55)

அப்போது, ஒப்புவியர்வில்லாத அந்த விமானத்தைப் பார்த்து, ''இனி குபேரனுக்கு வாகனமாக இரு. உனக்கு விடைகொடுக்கிறேன். திரும்பிச் செல்வாயாக'' என்று இராமன் கூறினார். (56)

ஈடு–இணையில்லாத அந்த விமானம், இராமனால் விடைகொடுக்கப்பட்டதும் வடக்குத் திசையில் பறந்து, குபேரனின் இருப்பிடத்திற்குச் சென்றது. (57)

புரோஹிதஸ்யாத்மஸமஸ்ய ராக4வோ
ப்3ருஹஸ்பதே: ஶக்ர இவாமராதி4ப: ।
நிபீட்3ய பாதௌ3 ப்ருத2கா3ஸநே ஶுபே4
ஸஹைவ தேநோபவிவேஶ ராக4வ: ॥ (58)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
யுத்3த4காண்டே3 த்ரிம்ஶது3த்தரஶததம: ஸர்க3: ॥

ஏகத்ரிம்ஶது3த்தரஶததம: ஸர்க3:

ஸ்ரீராமபட்டாபி4ஷேக:

ஶிரஸ்யஞ்ஜலிமாதா4ய கைகேய்யாநந்த3வர்த4ந: ।
ப3பா4ஷே ப4ரதோ ஜ்யேஷ்ட2ம் ராமம் ஸத்யபராக்ரமம் ॥ (1)

பூஜிதா மாமிகா மாதா த3த்தம் ராஜ்யமித3ம் மம ।
தத்3த3தா3மி புநஸ்துப்4யம் யதா2 த்வமத3தா3 மம ॥ (2)

து4ரமேகாகிநா ந்யஸ்தாம்ருஷபே4ண ப3லீயஸா ।
கிஶோரீவ கு3ரும் பா4ரம் ந வோடு4மஹமுத்ஸஹே ॥ (3)

வாரிவேகே3ந மஹதா பி4ந்ந: ஸேதுரிவ க்ஷரந் ।
து3ர்ப3ந்த4நமித3ம் மந்யே ராஜ்யச்சி2த்3ரமஸம்வ்ருதம் ॥ (4)

க3திம் க2ர இவாஶ்வஸ்ய ஹம்ஸஸ்யேவ ச வாயஸ: ।
நாந்வேதுமுத்ஸஹே ராம தவ மார்க3மரிந்த3ம ॥ (5)

யதா2 சாரோபிதோ வ்ருக்ஷோ ஜாதஶ்சாந்தர்நிவேஶநே ।
மஹாம்ஶ்ச ஸுது3ராரோஹோ மஹாஸ்கந்த4ப்ரஶாக2வாந் ॥ (6)

ஶீர்யேத புஷ்பிதோ பூ4த்வா ந ப2லாநி ப்ரத3ர்ஶயந் ।
தஸ்ய நாநுப4வேத3ர்த2ம் யஸ்ய ஹேதோ: ஸ ரோப்யதே ॥ (7)

ஏஷோபமா மஹாபா3ஹோ த்வத3ர்த2ம் வேத்துமர்ஹஸி ।
யத்3யஸ்மாந்மநுஜேந்த்3ர த்வம் ப4க்தாந் ப்4ருத்யாந்ந ஶாதி4 ஹி ॥ (8)

ஜக3த்3த்3யாபி4ஷிக்தம் த்வாமநுபஶ்யது ஸர்வத: ।
ப்ரதபந்தமிவாதி3த்யம் மத்4யாஹ்நே தீ3ப்ததேஜஸம் ॥ (9)

தூர்யஸங்கா4தநிர்கோ4ஷை: காஞ்சீநூபுரநி:ஸ்வநை: ।
மது4ரைர்கீ3தஶப்3தை3ஶ்ச ப்ரதிபு3த்4யஸ்வ ராக4வ ॥ (10)

யாவதா3வர்ததே சக்ரம் யாவதீ ச வஸுந்த4ரா ।
தாவத்த்வமிஹ ஸர்வஸ்ய ஸ்வாமித்வமநுவர்தய ॥ (11)

பின்னர், தேவர்கள் மன்னரான தேவேந்திரன், தன் ஆசார்யர் பிருகஸ்பதியிடம் பணிவு காட்டுவதைப்போல, தன் உயிர் போன்ற புரோகிதர் வசிஷ்டருடைய பாதங்களில் விழுந்து வணங்கி, தனியான உயர்ந்த இருக்கையில் அவரை அமரச் செய்து, அவருடன்கூட வேறு ஓர் ஆசனத்தில் இராமன் அமர்ந்து கொண்டார். (58)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று முப்பதொன்று

இராமனுக்குத் திருமுடி சூட்டுதல்!

கைகேயியின் ஆனந்தத்தைப் பெருக்கும் பரதன், மூத்தவரும் வீண்போகாத பராக்கிரமம் உடையவருமான இராமபிரானைப் பார்த்து, தலைக்குமேல் கைகளைக் கூப்பிக் கொண்டு கூறினான்— ''நான் (தங்கள் அறிவுரைப்படி,) என் தாயாரைப் பெருமையுடன் பராமரித்தேன். (அவர் விருப்பப்படி, இந்த ராஜ்யம் எனக்குக் கொடுக்கப்பட்டது. தாங்கள், எப்படி எனக்குக் கொடுத்தீர்களோ, அதேபோல அதை மீளவும் தங்களுக்குக் கொடுக்கிறேன். (1,2)

மிகவும் பலங்கொண்ட ஒரு காளை தனியாகச் சுமக்கும் பாரத்தை, ஓர் இளங்கன்று சுமக்க முடியாததைப் போல, இந்த பெரும் சுமையை (அரசாட்சியை)த் தாங்க வல்லேன் அல்லேன். வெகுவேகமான நீரோட்டத்தினால் தகர்க்கப்பட்ட அணையிலிருந்து தண்ணீர் வெளியேறிக் கொண்டிருக்கும் போது, அந்தத் தகர்ப்பைச் செப்பனிட்டுக் கட்டுவது என்பது இயலாத செயல். அதுபோல, (உரிமையுள்ள மன்னன் நாட்டை ஆளாததால் ஏற்பட்டுள்ள) ஆட்சிக் குறைபாடுகளை நீக்கிச் செப்பம் செய்யும் திறன் என்னிடம் இல்லை. (3,4)

இராமசந்திர பிரபுவே! எதிரிகளை அடக்குபவரே! குதிரையின் நடையை கழுதையும், அன்னப்பறவையின் நடையை காகமும் பின்பற்ற முடியாததைப் போல, திறன்மிக்க தங்கள் வழியை நான் பின்பற்ற வல்லேன் அல்லேன். (5)

பெருந்தோளரே! மாமன்னரே! ஒரு மரம், வீட்டுத் தோட்டத்தில் வைத்து வளர்க்கப்பட்டது; கப்பும் கிளையுமாகப் பெரிதாக வளர்ந்தது, அது. அதன் மேல் யாரும் ஏறக்கூட முடியவில்லை. பின்னர், மலர்களும் பூத்தது. ஆனால், பழங்களை வெளிக்காட்டாமல் பட்டுப் போகுமேயானால், அந்த மரம் எந்தப் பயனைக் கருதி வளர்க்கப்பட்டதோ, அந்தப் பயன் கிட்டாமலே போய்விடும். தங்களிடம் பக்தியுள்ள ஏவலர்களான எங்களை, இனி தாங்கள் காப்பாற்றிப் பராமரிக்காவிட்டால், மேலே சொன்ன உபமானம் தங்கள் விஷயத்திலும் பொருந்துவதாக ஆகும். (6–8)

அண்ணலே! தாங்கள் இப்போதே முடிசூட்டிக் கொள்வதை உலக மக்கள் எல்லோரும் பார்க்க வேண்டும் என்பது எங்கள் அவா. (முடிசூட்டிக் கொண்டு) மிக்க ஒளியுடன் நண்பகல் சூரியனைப் போல் தாங்கள் பிரகாசிப்பதை உலகம் காண வேண்டும். (9)

(மன்னராக முடிசூட்டிக் கொண்டதுமே, அரசருக்குரிய மரியாதைச் சடங்குகள் தொடங்கப்பட்டுவிடும்.) இராமபிரானே! தாங்கள், பல்வகை இசைக்கருவிகளின் இனிய ஓசை, பெண்களின் மேகலை, சிலம்புகளின் நாதம், செவிக்கினிய பாடல்களின் ஒலி ஆகியவற்றைக் கேட்டுக் கொண்டே (அதிகாலையில்) கண்விழிக்க வேண்டும். சூரிய–சந்திர–நட்சத்திர மண்டலம் எதுவரை சுழல்கிறதோ, இந்த பூமி எவ்வளவு காலம் நிலைத்து இருக்கிறதோ, அந்தக் காலம் வரை தாங்களே இவை எல்லாவற்றுக்கும் அதிபதியாக இருக்க வேண்டும்.'' (10,11)

ப4ரதஸ்ய வச: ஶ்ருத்வா ராம: பரபுரஞ்ஜய: ।
ததே2தி ப்ரதிஜக்3ராஹ நிஷஸாதா3ஸநே ஶுபே4 ॥ (12)

தத: ஶத்ருக்4நவசநாந்நிபுணா: ஶ்மஶ்ருவர்த4கா: ।
ஸுக2ஹஸ்தா: ஸுஶீக்4ராஶ்ச ராக4வம் பர்யுபாஸத ॥ (13)

பூர்வம் து ப4ரதே ஸ்நாதே லக்ஷ்மணே ச மஹாப3லே ।
ஸுக்3ரீவே வாநரேந்த்3ரே ச ராக்ஷஸேந்த்3ரே விபீ4ஷணே ॥ (14)

விஶோதி4தஜட: ஸ்நாதஶ்சித்ரமால்யாநுலேபந: ।
மஹார்ஹவஸநோ ராமஸ்தஸ்தௌ2 தத்ர ஶ்ரியா ஜ்வலந் ॥ (15)

ப்ரதிகர்ம ச ராமஸ்ய காரயாமாஸ வீர்யவாந் ।
லக்ஷ்மணஸ்ய ச லக்ஷ்மீவாநிக்ஷ்வாகுகுலவர்த4ந: ॥ (16)

ப்ரதிகர்ம ச ஸீதாயா: ஸர்வா த3ஶரத2ஸ்த்ரிய: ।
ஆத்மநைவ ததா3 சக்ருர்மநஸ்விந்யோ மநோஹரம் ॥ (17)

ததோ வாநரபத்நீநாம் ஸர்வாஸாமேவ ஶோப4நம் ।
சகார யத்நாத் கௌஸல்யா ப்ரஹ்ருஷ்டா புத்ரலாலஸா ॥ (18)

தத: ஶத்ருக்4நவசநாத் ஸுமந்த்ரோ நாம ஸாரதி2: ।
யோஜயித்வாபி4சக்ராம ரத2ம் ஸர்வாங்க3ஶோப4நம் ॥ (19)

அர்கமண்ட3லஸங்காஶம் தி3வ்யம் த்3ருஷ்ட்வா ரதோ2த்தமம் ।
ஆருரோஹ மஹாபா3ஹூ ராம: ஸத்யபராக்ரம: ॥ (20)

ஸுக்3ரீவோ ஹநுமாந்ஶ்சைவ மஹேந்த்3ரஸத்3ருஶத்3யுதீ ।
ஸ்நாதௌ தி3வ்யநிபை4ர்வஸ்த்ரைர்ஜக்3மது: ஶுப4குண்ட3லௌ ॥ (21)

வராப4ரணஸம்பந்நா யயுஸ்தா: ஶுப4குண்ட3லா: ।
ஸுக்3ரீவபத்ந்ய: ஸீதா ச த்3ரஷ்டும் நக3ரமுத்ஸுகா: ॥ (22)

அயோத்4யாயாம் து ஸசிவா ராக்ஞோ த3ஶரத2ஸ்ய யே ।
புரோஹிதம் புரஸ்க்ருத்ய மந்த்ரயாமாஸுரர்த2வத் ॥ (23)

அஶோகோ விஜயஶ்சைவ ஸுமந்த்ரஶ்சைவ ஸங்க3தா: ।
மந்த்ரயந் ராமவ்ருத்3த்4யர்த2ம்ருத்3த்4யர்த2ம் நக3ரஸ்ய ச ॥ (24)

ஸர்வமேவாபி4ஷேகார்த2ம் ஜயார்ஹஸ்ய மஹாத்மந: ।
கர்துமர்ஹஸி ராமஸ்ய யத்3யந்மங்க3ளபூர்வகம் ॥ (25)

இதி தே மந்த்ரிண: ஸர்வே ஸந்தி3ஶ்ய து புரோஹிதம் ।
நக3ராந்நிர்யயுஸ்தூர்ணம் ராமத3ர்ஶநபு3த்3த4ய: ॥ (26)

எதிரிகளின் நகரத்தை வெற்றி கொள்ளும் இராமன், பரதனின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து, 'அப்படியே ஆகட்டும்' என்று கூறி ஏற்றுக் கொண்டார். பின்னர், இராமன், அழகான ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். (12)

பின்னர், சத்ருக்னனின் கட்டளைப்படி, மென்மையான கைகளைக் கொண்ட விரைந்து வேலை செய்கிற வேலைத்திறன் மிக்க நாவிதர்கள், இராமனின் முடிகளை மழித்தார்கள். (13)

முதலில், பரதன் நீராடினான். பின்னர், மகாபலம் பொருந்திய இலக்குவன் நீராடினான். தொடர்ந்து, வானர மன்னன் சுக்ரீவனும், அரக்கர் மன்னன் விபீஷணனும் நீராடினார்கள். சடை நீக்கப்பட்ட இராமன் நீராடி, மிகச்சிறந்த ஆடைகள் அணிந்து, கண்கவர் மாலைகள் மற்றும் மணமிகு பூச்சுகள் பூசிக் கொண்டு மிக்க எழிலுடன் பிரகாசமாக விளங்கினார். (14,15)

மாவீரனும் சேவைச் செல்வனும் இக்ஷ்வாகு குல மாணிக்கமுமான சத்ருக்னன், இராம–லட்சுமணர்களுக்கு அலங்காரம் செய்தான். (16)

அப்போது, தசரதனின் நல்லுள்ளம் படைத்த மனைவிகள் எல்லோரும், தம் கைகளால் சீதைக்கு அழகூட்டி அலங்காரம் செய்தார்கள். (17)

புதல்வனிடம் பேரன்பு கொண்ட கௌசல்யை, (வானரர்கள், தன் மைந்தனுக்குச் செய்த பேருதவியை நினைவிற்கொண்டு) மிக்க மகிழ்ச்சியுடன் கண்ணும் கருத்துமாக, எல்லா வானரப் பத்தினிகளுக்கும் அலங்காரம் செய்தாள். (18)

பின்னர், சத்ருக்னனின் ஆணைப்படி, சுமந்திரன் என்ற தேரோட்டி எல்லா பாகங்களும் சீராக அமைந்த ஒரு தேரில் குதிரைகளைப் பூட்டி, அங்கு கொண்டு வந்து நிறுத்தினார். (19)

சத்தியத்தையே பராக்கிரமமாகக் கொண்ட பெருந்தோளர் இராமபிரான், சூரிய மண்டலம் போல் தெய்விக ஒளி வீசும் உத்தம ரதத்தில் ஏறிக் கொண்டார். (20)

சுக்ரீவனும் அனுமானும் நீராடிய பின்னர், பட்டொளி வீசும் ஆடைகளை அணிந்து கொண்டு, அழகிய குண்டலங்கள் பூண்டு, தேவேந்திரன் போல் ஒளி வீசிக் கொண்டு அயோத்தி நோக்கிப் புறப்பட்டார்கள். (21)

சுக்ரீவனுடைய மனைவிகளும் சீதாதேவியும், மதிப்புமிக்க அணிகலன்களையும் கம்மல்களையும் அணிந்து கொண்டு பட்டணத்தைப் பார்க்கும் ஆவலுடன் புறப்பட்டுச் சென்றார்கள். (22)

அயோத்தியில் தசரத மன்னருடைய அமைச்சர்கள், குலகுருவான வசிஷ்டரின் தலைமையில், இராமபிரானின் முடிசூட்டு விழா சிறப்பாக நடத்துவது குறித்து ஆலோசனை செய்யத் தொடங்கினார்கள். (23)

அசோகன், விஜயன், சுமந்திரன் ஆகியோர், இராமபிரானுடைய மேன்மைக்காகவும் நகரத்தின் நலனுக்காகவும் ஆலோசனை நடத்தினார்கள். (24)

பின்னர், வசிஷ்டரைப் பார்த்து, 'வெற்றியுடன் வந்திருக்கும் மகாத்மாவான இராமபிரானுடைய பட்டாபிஷேகத்திற்குரிய மங்களமான சடங்குகள் எவை எவை உண்டோ, அவையனைத்தையும் தாங்கள் செய்யவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்கள். (25)

அமைச்சர்கள் எல்லோரும் புரோகிதரிடம் மேற்கண்டவாறு தெரிவித்துவிட்டு, இராமனைக் காண்பதற்காக பட்டணத்திலிருந்து விரைவாக வெளியே புறப்பட்டார்கள். (26)

ஹரியுக்தம் ஸஹஸ்ராக்ஷோ ரத$_2$மிந்த்$_3$ர இவாநக$_4$: ।
ப்ரயயௌ ரத$_2$மாஸ்த$_2$ாய ராமோ நக$_3$ரமுத்தமம் ॥ (27)

ஜக்$_3$ராஹ ப$_4$ரதோ ரஸ்மீஞ்ஶத்ருக்$_4$நஶ்ச$_2$த்ரமாத$_3$தே$_3$ ।
லக்ஷ்மணோ வ்யஜநம் தஸ்ய மூர்த்$_4$நி ஸம்பர்யவீஜயத் ॥ (28)

ஶ்வேதம் ச வாலவ்யஜநம் ஜக்$_3$ராஹ புரத: ஸ்தி$_2$த: ।
அபரம் சந்த்$_3$ரஸங்காஶம் ராக்ஷஸேந்த்$_3$ரோ விபீ$_4$ஷண: ॥ (29)

ருஷிஸங்கை$_4$ஸ்தத$_3$ாகாஶே தே$_3$வைஶ்ச ஸமருத்$_3$க$_3$ணை: ।
ஸ்தூயமாநஸ்ய ராமஸ்ய ஶுஶ்ருவே மது$_4$ரத்$_4$வநி: ॥ (30)

தத: ஶத்ருஞ்ஜயம் நாம குஞ்ஜரம் பர்வதோபமம் ।
ஆருரோஹ மஹாதேஜா: ஸுக்$_3$ரீவ: ப்லவக$_3$ர்ஷப$_4$: ॥ (31)

நவநாக$_3$ஸஹஸ்ராணி யயுராஸ்த$_2$ாய வாநரா: ।
மாநுஷம் விக்$_3$ரஹம் க்ருத்வா ஸர்வாப$_4$ரணபூ$_4$ஷிதா: ॥ (32)

ஶங்க$_2$ஶப்$_3$த$_3$ப்ரணாதை$_3$ஶ்ச து$_3$ந்து$_3$பீ$_4$நாம் ச நி:ஸ்வநை: ।
ப்ரயயௌ புருஷவ்யாக்$_4$ரஸ்தாம் புரீம் ஹர்ம்யமாலிநீம் ॥ (33)

த$_3$த்$_3$ருஶுஸ்தே ஸமாயாந்தம் ராக$_4$வம் ஸபுர:ஸரம் ।
விராஜமாநம் வபுஷா ரதே$_2$நாதிரத$_2$ம் தத$_3$ா ॥ (34)

தே வர்த$_4$யித்வா காகுத்ஸ்த$_2$ம் ராமேண ப்ரதிநந்தி$_3$தா: ।
அநுஜக்$_3$முர்மஹாத்மாநம் ப்$_4$ராத்ருபி$_4$: பரிவாரிதம் ॥ (35)

அமாத்யைர்ப்$_3$ராஹ்மணைஶ்சைவ தத$_2$ா ப்ரக்ருதிபி$_4$ர்வ்ருத: ।
ஶ்ரியா விருருசே ராமோ நக்ஷத்ரைரிவ சந்த்$_3$ரமா: ॥ (36)

ஸ புரோக$_3$ாமிபி$_4$ஸ்தூர்யைஸ்தாலஸ்வஸ்திகபாணிபி$_4$: ।
ப்ரவ்யாஹரத்$_3$பி$_4$ர்முதி$_3$தைர்மங்க$_3$ளாநி யயௌ வ்ருத: ॥ (37)

அக்ஷதம் ஜாதரூபம் ச க$_3$ாவ: கந்யாஸ்தத$_2$ா த்$_3$விஜா: ।
நரா மோத$_3$கஹஸ்தாஶ்ச ராமஸ்ய புரதோ யயு: ॥ (38)

ஸக்$_2$யம் ச ராம: ஸுக்$_3$ரீவே ப்ரப$_4$ாவம் சாநிலாத்மஜே ।
வாநராணாம் ச தத் கர்ம ராக்ஷஸாநாம் ச தத்$_3$ப$_3$லம் ॥ (39)

விபீ$_4$ஷணஸ்ய ஸம்யோக$_3$மாசசக்ஷே ச மந்த்ரிணாம் ।
ஶ்ருத்வா து விஸ்மயம் ஜக்$_3$முரயோத்$_4$யாபுரவாஸிந: ॥ (40)

த்$_3$யுதிமாநேதத$_3$ாக்$_2$யாய ராமோ வாநரஸம்வ்ருத: ।
ஹ்ருஷ்டபுஷ்டஜநாகீர்ணாமயோத்$_4$யாம் ப்ரவிவேஶ ஹ ॥ (41)

பச்சை வண்ணக் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஆயிரங்கண்ணனான இந்திரன் பவனி வருவதைப் போல், தூயவரான இராமன் உத்தம ரதத்தில் ஏறிக்கொண்டு, அயோத்தி நகரத்திற்குப் புறப்பட்டார். (27)

பரதன், தேர்க் குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டான். சத்ருக்னன், குடையை ஏந்திக் கொண்டான். இலக்குவன், இராமன் சிரசில் காற்றுப்படும்படியாக வெண்சாமரம் வீசினான். (28)

(ஒரு புறம் நின்று லட்சுமணன் சாமரம் வீச,) அரக்கர் மன்னனான விபீஷணன், எதிரில் நின்று கொண்டு சந்திரன் போல் ஒளி வீசும் மற்றொரு வெண்சாமரத்தை ஏந்திக் கொண்டு வீசினான். (29)

அப்போது, ஆகாயத்தில் முனிவர்கள்–மருத்துக்கள்–தேவர்கள் நின்று கொண்டு இராமனைத் தோத்தரிக்கும் இனிய ஒலி கேட்டது. (30)

பெரும் பலசாலியும் வானர மன்னனுமான சுக்ரீவன், மலைபோல் பேருருவம் கொண்ட சத்ருஞ்ஜயம் என்னும் யானை மேல் ஏறிக் கொண்டான். (31)

வானரர்கள், மனித உருவத்தை ஏற்று, எல்லா வகையான அணிகலன்களும் அணிந்து கொண்டு, ஒன்பதாயிரம் யானைகள் மீது ஏறிக் கொண்டு சென்றார்கள். (32)

புருஷோத்தமரான இராமன், சங்கு–பேரி–துந்துபி வாத்தியங்கள் ஒலிக்க, வரிசை வரிசையாக மாளிகைகள் விளங்கும் அயோத்தி நகருக்குப் புறப்பட்டார். (33)

அயோத்தி நகர மக்கள், பரிவாரங்கள் முன்னே செல்ல மாபெரும் போர் வீரரான இராமன் எழில்மிகு தோற்றத்துடன் தேரில் வந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள்! (34)

அவர்கள், இராமனுக்கு நல்வரவு கூறி வாழ்த்தினார்கள்; இராமனும் பதில் மரியாதை செய்தார். சகோதரர்களால் சூழப்பட்டிருந்த இராமனுக்குப் பின்னால் அவர்கள் சென்றார்கள். (35)

மந்திரிகளாலும் அந்தணர்களாலும் குடிமக்களாலும் சூழப்பட்ட இராமன், நட்சத்திரக் கூட்டத்தினிடையே சந்திரன் போலப் பொலிவுடன் விளங்கினார். (36)

முன்வரிசையில் தூர்ய வாத்தியக்காரர்கள் சென்றார்கள்; தாளம், ஸ்வஸ்திகம் எடுத்துச் சென்றவர்கள், மகிழ்ச்சியுடன் மங்களப் பாடல்களை இசைத்துக் கொண்டு சென்றார்கள். இராமன், இவர்கள் எல்லோருடனும் நகரத்தை நோக்கிச் சென்றார். (37)

இராமனுக்கு முன்னதாக மஞ்சள் பூசிய அட்சதையைத் தாங்கியவர்கள், பசுக்கள், கன்னிகைகள், வேதியர்கள் மற்றும் மோதகத்தைக் கையிலேந்திய பலரும் சென்றார்கள். (38)

இராமன், சுக்ரீவனுடன் ஏற்பட்ட நட்பு பற்றியும், அனுமானின் ஆற்றல் பற்றியும், வானரர்களின் வீரச்செயல்கள் பற்றியும், அரக்கர்களின் படைபலத்தைப் பற்றியும், விபீஷணனின் சரணாகதி பற்றியும் அமைச்சர்களுக்குக் கூறினார். (அவர்களிடமிருந்து) அயோத்தி நகர மக்கள் கேட்டு பேராச்சரியம் அடைந்தார்கள். (39,40)

அமைச்சர்களிடம் மேற்கண்ட விவரங்களைக் கூறிய பேரொளி பொருந்திய இராமன், வானரர்கள் புடைசூழ, முற்றிலும் மனநிறைவுடன் வாழும் மக்கள் நிறைந்திருந்த அயோத்திக்குள் பிரவேசித்தார். (41)

ததோ ஹ்யப்$_4$யுச்ச்$_2$ரயந் பௌரா: பதாகாஸ்தே க்$_3$ருஹே க்$_3$ருஹே ।
ஐக்ஷ்வாகாத்$_4$யுஷிதம் ரம்யமாஸஸாத$_3$ பிதுர்க்$_3$ருஹம் ॥ (42)

அத$_2$ாப்$_3$ரவீத்$_3$ராஜபுத்ரோ ப$_4$ரதம் த$_4$ர்மிணாம் வரம் ।
அர்தே$_2$ாபஹிதயா வாசா மது$_4$ரம் ரகு$_4$நந்த$_3$ந: ॥ (43)

பிதுர்ப$_4$வநமாஸாத்$_3$ய ப்ரவிஶ்ய ச மஹாத்மந: ।
கௌஸல்யாம் ச ஸுமித்ராம் ச கைகேயீமபி$_4$வாத$_3$ய ॥ (44)

யச்ச மத்$_3$ப$_4$வநம் ஶ்ரேஷ்ட$_2$ம் ஸாஶோகவநிகம் மஹத் ।
முக்தாவைதூ$_3$ர்யஸங்கீர்ணம் ஸுக்$_3$ரீவாய நிவேத$_3$ய ॥ (45)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ப$_4$ரத: ஸத்யவிக்ரம: ।
பாணௌ க்$_3$ருஹீத்வா ஸுக்$_3$ரீவம் ப்ரவிவேஶ தமாலயம் ॥ (46)

ததஸ்தைலப்ரதீ$_3$பாம்ஶ்ச பர்யங்காஸ்தரணாநி ச ।
க்$_3$ருஹீத்வா விவிஶு: க்ஷிப்ரம் ஶத்ருக்$_4$நேந ப்ரசோதி$_3$தா: ॥ (47)

உவாச ச மஹாதேஜா: ஸுக்$_3$ரீவம் ராக$_4$வாநுஜ: ।
அபி$_4$ஷேகாய ராமஸ்ய தூ$_3$தாநாக்ஞாபய ப்ரபே$_4$ா ॥ (48)

ஸௌவர்ணாந் வாநரேந்த்$_3$ராணாம் சதுர்ணாம் சதுரோ க$_4$டாந் ।
த$_3$தெ$_3$ள க்ஷிப்ரம் ஸ ஸுக்$_3$ரீவ: ஸர்வரத்நவிபூ$_4$ஷிதாந் ॥ (49)

யத$_2$ா ப்ரத்யூஷஸமயே சதுர்ணாம் ஸாக$_3$ராம்ப$_4$ஸாம் ।
பூர்ணைர்க$_4$டை: ப்ரதீக்ஷத்$_4$வம் தத$_2$ா குருத வாநரா: ॥ (50)

ஏவமுக்தா மஹாத்மாநோ வாநரா வாரணோபமா: ।
உத்பேதுர்க$_3$க$_3$நம் ஶீக்$_4$ரம் க$_3$ருட$_3$ாநிலஶீக்$_4$ரக$_3$ா: ॥ (51)

ஜாம்ப$_3$வாம்ஶ்ச ஸுஷேணஶ்ச வேக$_3$த$_3$ர்ஶீ ச வாநர: ।
ருஷப$_4$ஶ்சைவ கலஶாஞ்ஜலபூர்ணாநத$_2$ாநயந் ॥
நதீ$_3$ஶதாநாம் பஞ்சாநாம் ஜலகும்பே$_4$ஷு சாஹரந் ॥ (52)

பூர்வாத் ஸமுத்$_3$ராத் கலஶம் ஜலபூர்ணமத$_2$ாநயத் ।
ஸுஷேண: ஸத்த்வஸம்பந்ந: ஸர்வரத்நவிபூ$_4$ஷிதம் ॥ (53)

ருஷபே$_4$ா த$_3$க்ஷிணாத்தூர்ணம் ஸமுத்$_3$ராஜ்ஜலமாஹரத் ।
ரக்தசந்த$_3$நஶாக$_2$ாபி$_4$: ஸம்வ்ருதம் காஞ்சநம் க$_4$டம் ॥ (54)

க$_3$வய: பஶ்சிமாத்தோயமாஜஹார மஹார்ணவாத் ।
ரத்நகும்பே$_4$ந மஹதா ஶீதம் மாருதவிக்ரம: ॥ (55)

உத்தராச்ச ஜலம் ஶீக்$_4$ரம் க$_3$ருட$_3$ாநிலவிக்ரம: ।
ஆஜஹார ஸ த$_4$ர்மாத்மா நள: ஸர்வகு$_3$ணாந்வித: ॥ (56)

அப்போது, நகர மக்கள் தத்தம் வீடுகளில் கொடிகளைத் தூக்கிக் காட்டி வரவேற்றார்கள். பின்னர், இக்ஷ்வாகு மன்னர் பரம்பரையாக வசித்து வந்ததும், தந்தை (தசரதன்) வாழ்ந்ததுமான அழகிய மாளிகைக்குள் சென்றார். (42)

மகாத்மாவான தந்தையின் அரண்மனையை அணுகி, உள்ளே சென்று கௌசல்யை–சுமித்திரை–கைகேயி ஆகியவர்களைச் சிரம் தாழ்த்தி வணங்கிவிட்டு, மன்னர் புதல்வரான இராமன், அறம் அனுஷ்டிப்பவர்களில் தலைசிறந்தவனான பரதனைப் பார்த்து, பொருள் பொதிந்த அன்பான சொற்களை இனிமையாகக் கூறினார்— (43,44)

''பரதனே! அசோக மரங்கள் நிறைந்த பூங்காவை உடையதும், முத்து–வைடூரியங்கள் பதிக்கப் பெற்றதும், எல்லா வசதிகள் உடையதும், விசாலமானதுமான என்னுடைய மாளிகையை சுக்ரீவனுக்குக் கொடு.'' (45)

தோல்வி காணாத பராக்கிரமமுடைய பரதன், அவருடைய ஆணையைக் கேட்டதும், சுக்ரீவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு, அந்தத் திருமாளிகைக்குள் சென்றான். (46)

அவ்வமயம், சத்ருக்னனால் ஏவப்பட்ட வேலையாட்கள், எண்ணெய் விளக்குகளையும் கட்டில்களையும் மேல்விரிப்புகளையும் எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். (47)

பேராற்றல் பொருந்திய பரதன், சுக்ரீவனைப் பார்த்து, ''ஐயனே! இராமபிரானுடைய பட்டாபிஷேகத்திற்காக புனித நீர் கொண்டுவரும்படி உங்கள் தூதர்களுக்கு ஆணையிடுங்கள்'' என்று சொன்னான். (48)

உடனே, பல்வகை இரத்தினங்கள் இழைக்கப் பெற்ற நான்கு பொற்குடங்களை நான்கு வானரோத்தமர்களிடம் சுக்ரீவன் கொடுத்தான். (49)

''வானரர்காள்! நான்கு கடல்களின் நீரால் நிரப்பப்பட்ட குடங்களோடு, நாளை விடியற்காலைக்குள் இங்கே வந்து காத்திருக்க வேண்டும்.'' (50)

இதைக் கேட்டதும், எல்லையில்லா ஆற்றல் படைத்தவர்களும், யானை போன்று பேருருவம் கொண்டவர்களும், கருடனைப்போல் மிகவேகமாக செல்லக்கூடிய அந்த வானரர்கள், உடனே ஆகாயத்தை நோக்கித் தாவினார்கள். (51)

ஜாம்பவான், சுஷேணன், வேகதர்சி, ரிஷபன் ஆகியோர் நீர் நிரம்பிய கலசங்களைக் கொணர்ந்தனர். தங்கக் கலசங்களில், ஐநூறு நதிகளிலிருந்து புண்ணிய தீர்த்தங்களையும் கொண்டு வந்தார்கள். (52)

பலசாலியான சுஷேணன், பல்வகை இரத்தினங்கள் இழைக்கப்பட்ட குடத்தில் கிழக்கு சமுத்திரத்திலிருந்து புனித நீர் கொண்டு வந்தார். (53)

ரிஷபன் என்ற வானரன், தெற்குக் கடலிலிருந்து, செஞ்சந்தனக் கிளைகளால் மூடப்பட்ட பொற்குடத்தில் தீர்த்தம் எடுத்து வந்தான். (54)

வாயுவேகம் பெற்ற கவயன், மேற்குப் பெருங்கடலிலிருந்து, பெரிய இரத்தினமயமான குடத்தில் நீர் கொண்டு வந்தான். (55)

எல்லா நற்குணங்களும் நிரம்பியவனும், கருடன்–வாயுவுக்கு நிகரான வேகம் கொண்டவனுமான நளன், வடக்கு சமுத்திரத்திலிருந்து புனித நீர் கொண்டு வந்தான். (56)

ததஸ்தைர்வாநரஶ்ரேஷ்டை2ராநீதம் ப்ரேக்ஷ்ய தஜ்ஜலம் ।
அபி4ஷேகாய ராமஸ்ய ஶத்ருக்4ந: ஸசிவை: ஸஹ ॥
புரோஹிதாய ஶ்ரேஷ்ட2ாய ஸுஹ்ருத்3ப்4யஶ்ச ந்யவேத3யத் ॥ (57)

தத: ஸ ப்ரயதோ வ்ருத்3தே4ா வஸிஷ்டே2ா ப்3ராஹ்மணை: ஸஹ ।
ராமம் ரத்நமயே பீடே2 ஸஹஸீதம் ந்யவேஶயத் ॥ (58)

வஸிஷ்டே2ா வாமதே3வஶ்ச ஜாபா3லிரத2 காஶ்யப: ।
காத்யாயந: ஸுயக்ஞஶ்ச கௌ3தமோ விஜயஸ்தத2ா ॥ (59)

அப்4யஷிஞ்சந்நரவ்யாக்4ரம் ப்ரஸந்நேந ஸுக3ந்தி4நா ।
ஸலிலேந ஸஹஸ்ராக்ஷம் வஸவோ வாஸவம் யத2ா ॥ (60)

ருத்விக்3பி4ர்ப்3ராஹ்மணை: பூர்வம் கந்யாபி4ர்மந்த்ரிபி4ஸ்தத2ா ।
யோதைஶ்சைவாப்4யஷிஞ்சஸ்தே ஸம்ப்ரஹ்ருஷ்டா: ஸநைக3மை: ॥ (61)

ஸர்வௌஷதி4ரஸைர்தி3வ்யைர்தை3வதைர்நப4ஸி ஸ்தி2தை: ।
சதுர்பி4ர்லோகபாலைஶ்ச ஸர்வைர்தே3வைஶ்ச ஸங்க3தை: ॥ (62)

ப்3ரஹ்மணா நிர்மிதம் பூர்வம் கிரீடம் ரத்நஶோபி4தம் ।
அபி4ஷிக்த: புரா யேந மநுஸ்தம் தீ3ப்ததேஜஸம் ॥ (63)

தஸ்யாந்வவாயே ராஜாந: க்ரமாத்3யேநாபி4ஷேசிதா: ।
ஸப4ாயாம் ஹேமக்லுப்தாயாம் ஶோபி4தாயாம் மஹாஜநை: ॥ (64)

ரத்நைர்நாநாவிதை4ஶ்சைவ சித்ரிதாயாம் ஸுஶோப4நை: ।
நாநாரத்நமயே பீடே2 கல்பயித்வா யத2ாவிதி4 ॥ (65)

கிரீடேந தத: பஶ்சாத்3வஸிஷ்டே2ந மஹாத்மநா ।
ருத்விக்3பி4ர்பூ4ஷணைஶ்சைவ ஸமயோக்ஷ்யத ராக4வ: ॥ (66)

ச2த்ரம் து தஸ்ய ஜக்3ராஹ ஶத்ருக்4ந: பாண்ட3ரம் ஶுப4ம் ।
ஶ்வேதம் ச வாலவ்யஜநம் ஸுக்3ரீவோ வாநரேஶ்வர: ॥
அபரம் சந்த்3ரஸங்காஶம் ராக்ஷஸேந்த்3ரோ விபீ4ஷண: ॥ (67)

மாலாம் ஜ்வலந்தீம் வபுஷா காஞ்சநீம் ஶதபுஷ்கராம் ।
ராக4வாய த3தௌ3 வாயுர்வாஸவேந ப்ரசோதி3த: ॥ (68)

ஸர்வரத்நஸமாயுக்தம் மணிரத்நவிபூ4ஷிதம் ।
முக்தாஹாரம் நரேந்த்3ராய த3தௌ3 ஶக்ரப்ரசோதி3த: ॥ (69)

ப்ரஜகு3ர்தே3வக3ந்த4ர்வா நந்ருதுஶ்சாப்ஸரோக3ணா: ।
அபி4ஷேகே தத3ர்ஹஸ்ய தத3ா ராமஸ்ய தீ4மத: ॥ (70)

பூ4மி: ஸஸ்யவதீ சைவ ப2லவந்தஶ்ச பாத3பா: ।
க3ந்த4வந்தி ச புஷ்பாணி ப3பூ4வு ராக4வோத்ஸவே ॥ (71)

இராமபிரானுடைய பட்டாபிஷேகத்திற்காக, வானரோத்தமர்களால் புனித தீர்த்தங்கள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதை, அமைச்சர்களுடன் சேர்ந்து பார்த்த சத்ருக்னன், மிக்க மரியாதைக்குரிய புரோகிதர்களிடமும் நண்பர்களிடமும் இவ்விவரத்தைத் தெரிவித்தான். (57)

பின்னர், முதியவரும் புலன்களை அடக்கியவருமான குலகுரு வசிஷ்டர், அந்தணர்கள் உடனிருக்க, சீதாப் பிராட்டியாருடன் இராமபிரானை இரத்தினமயமான சிம்மாசனத்தில் வீற்றிருக்க வைத்தார். (58)

வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், காத்யாயனர், சுயக்ஞர், கௌதமர், விஜயர் ஆகிய எண்மரும், தேவலோக மன்னனான இந்திரனுக்கு அஷ்டவசுக்கள் செய்வித்ததைப் போல, நறுமணங்கமழ்வதும் மந்திரங்களால் புனிதப்படுத்தப்பட்டதுமான தீர்த்தத்தால் புருஷோத்தமரான இராமபிரானுக்கு மங்களமான அபிஷேகம் செய்வித்தார்கள். (59,60)

(யார், யாரைக் கொண்டு அபிஷேகம் செய்வித்தார்கள் என்று இங்கே சொல்லப்படுகிறது.) முதலில், வேள்விச் சடங்குகளை நடத்தும் ரித்விக்குகள் (மனநிறைவுடனிருந்த அவர்கள் எண்மரும்); பின்னர், தொடர்ச்சியாக வேதியர்கள், கன்னிகைகள், அமைச்சர்கள், மக்கட்தலைவர்கள், படைத்தலைவர்கள், (பட்டாபிஷேகத்தைக் காண்பதற்காக வந்து) ஆகாயத்திலிருந்த தேவதைகள், உலகபாலகர்கள் நால்வர்; மற்றும் ஒன்றாகத் திரண்டு வந்திருந்த எல்லா தேவதைகள் ஆகியோரைக் கொண்டு திவ்யமான பலவகை மூலிகைச் சாறுகளால் (இராமனுக்கு) அபிஷேகம் செய்வித்தார்கள். (61,62)

பின்னர், தொன்மைக் காலத்தில் பிரும்மாவினால் உண்டாக்கப்பட்டதும், நவரத்தினங்களால் ஒளிர்வதும், முதன்முதலாக மனுவுக்கு சூட்டப்பட்டதும், பின்னர் தொடர்ச்சியாக அவருடைய பரம்பரையில் தோன்றிய மன்னர்களுக்கு முடிசூட்டப்பட்டதுமான கிரீடத்தை, மேன்மக்கள் கூடியிருந்த பொற்சபையில், பலவகையான இரத்தினங்களால் கண்கவரும்வண்ணம் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த நவரத்தினகசிதமான உயர்ந்த பீடத்தில் முறைப்படி வைத்தார்கள். பின்னர், மகாத்மாவான வசிஷ்டர், ரித்விக்குகள் உடனிருந்து உதவி செய்ய, அந்தக் கிரீடத்தையும் அணிகலன்களையும் கொண்டு ராஜாராமனை அலங்கரித்தார். (63–66)

அப்போது, அவருக்கு (இராமனுக்கு) அழகான வெண்கொற்றக் குடையை சத்ருக்னன் பிடித்தான்; வானர மன்னன் சுக்ரீவன் வெண்சாமரம் வீசினான்; அரக்கர் மன்னனான விபீஷணன் முழுநிலா போன்ற இன்னொரு சாமரத்தை வீசினார். (67)

இந்திரனின் சொல்லுக்கிணங்க, வாயுதேவன் பொன்மயமான நூறு தாமரை மலர்களாலானதும் பேரொளி வீசுவதுமான ஒரு மாலையையும், எல்லாவித இரத்தினங்களும் இணைக்கப்பட்ட ஒரு முத்து மாலையையும் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். (68,69)

பேரறிஞரான இராமபிரானுடைய பட்டாபிஷேக வைபவத்தில், தேவகந்தவர்கள் இன்னிசை பாடினார்கள்; அப்சரசுகள் நாட்டியம் ஆடினார்கள். இத்தகைய உயர்வான கோலாகல நிகழ்ச்சிகளுக்கு உரியவராக இராமன் இருந்தார்! (70)

இராம பட்டாபிஷேகக் கொண்டாட்ட காலத்தில், நிலத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்தன; மரங்களில் நறுமண மலர்களும் கனிகளும் ஏராளமாகத் தோன்றின. (71)

ஸஹஸ்ரஶதமஶ்வாநாம் தே$_4$நூநாம் ச க$_3$வாம் ததா$_2$ ।
த$_3$தௌ$_3$ ஶதம் வ்ருஷாந் பூர்வம் த்$_3$விஜேப்$_4$யோ மநுஜர்ஷப$_4$: ॥ (72)

த்ரிம்ஶத்கோடீர்ஹிரண்யஸ்ய ப்$_3$ராஹ்மணேப்$_4$யோ த$_3$தௌ$_3$ புந: ।
நாநாப$_4$ரணவஸ்த்ராணி மஹார்ஹாணி ச ராக$_4$வ: ॥ (73)

அர்கரஶ்மிப்ரதீகாஶாம் காஞ்சநீம் மணிவிக்$_3$ரஹாம் ।
ஸுக்$_3$ரீவாய ஸ்ரஜம் தி$_3$வ்யாம் ப்ராயச்ச$_2$ந்மநுஜர்ஷப$_4$: ॥ (74)

வைடூ$_3$ர்யமணிசித்ரே ச சந்த்$_3$ரரஶ்மிவிபூ$_4$ஷிதே ।
வாலிபுத்ராய த்$_4$ருதிமாநங்க$_3$தா$_3$யாங்க$_3$தே$_3$ த$_3$தௌ$_3$ ॥ (75)

மணிப்ரவரஜுஷ்டம் ச முக்தாஹாரமநுத்தமம் ।
ஸீதாயை ப்ரத$_3$தௌ$_3$ ராமஶ்சந்த்$_3$ரரஶ்மிஸமப்ரப$_4$ம் ॥ (76)

அரஜே வாஸஸீ தி$_3$வ்யே ஶுபா$_4$ந்யாப$_4$ரணாநி ச ।
அவேக்ஷமாணா வைதே$_3$ஹீ ப்ரத$_3$தௌ$_3$ வாயுஸூநவே ॥ (77)

அவமுச்யாத்மந: கண்டா$_2$த்$_3$தா$_4$ரம் ஜநகநந்தி$_3$நீ ।
அவைக்ஷத ஹரீந் ஸர்வாந் ப$_4$ர்தாரம் ச முஹுர்முஹு: ॥ (78)

தாமிங்கி$_3$தக்ஞ: ஸம்ப்ரேக்ஷ்ய ப$_3$பா$_4$ஷே ஜநகாத்மஜாம் ।
ப்ரதே$_3$ஹி ஸுப$_4$கே$_3$ ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பா$_4$மிநி ॥ (79)

தேஜோ த்$_4$ருதிர்யஶோ தா$_3$க்ஷ்யம் ஸாமர்த்$_2$யம் விநயோ நய: ।
பௌருஷம் விக்ரமோ புத்$_3$தி$_4$ர்யஸ்மிந்நேதாநி நித்யதா$_3$ ॥
த$_3$தௌ$_3$ ஸா வாயுபுத்ராய தம் ஹாரமஸிதேக்ஷணா ॥ (80)

ஹநுமாந்ஸ்தேந ஹாரேண ஶுஶுபே$_4$ வாநரர்ஷப$_4$: ।
சந்த்$_3$ராம்ஶுசயகௌ$_3$ரேண ஶ்வேதாப்$_4$ரேண யதா$_2$சல: ॥ (81)

ததோ த்$_3$விவித$_3$மைந்தா$_3$ப்$_4$யாம் நீலாய ச பரந்தப: ।
ஸர்வாந் காமகு$_3$ணாந் வீக்ஷ்ய ப்ரத$_3$தௌ$_3$ வஸுதா$_4$தி$_4$ப: ॥ (82)

ஸர்வே வாநரவ்ருத்$_3$தா$_4$ஶ்ச யே சாந்யே வாநரேஶ்வரா: ।
வாஸோபி$_4$ர்பூ$_4$ஷணைஶ்சைவ யதா$_2$ர்ஹம் ப்ரதிபூஜிதா: ॥ (83)

விபீ$_4$ஷணோऽத$_2$ ஸுக்$_3$ரீவோ ஹநுமாஞ்ஜாம்ப$_3$வாந்ஸ்ததா$_2$ ।
ஸர்வே வாநரமுக்$_2$யாஶ்ச ராமேணாக்லிஷ்டகர்மணா ॥ (84)

யதா$_2$ர்ஹம் பூஜிதா: ஸர்வை: காமை ரத்நைஶ்ச புஷ்கலை: ।
ப்ரஹ்ருஷ்டமநஸ: ஸர்வே ஜக்$_3$முரேவ யதா$_2$க$_3$தம் ॥ (85)

நத்வா ஸர்வே மஹாத்மாநம் ததஸ்தே ப்லவக$_3$ர்ஷபா$_4$: ।
விஸ்ருஷ்டா: பார்தி$_2$வேந்த்$_3$ரேண கிஷ்கிந்தா$_4$மப்$_4$யுபாக$_3$மந் ॥ (86)

மாமன்னர் இராமன், முதலில் லட்சம் குதிரைகளையும், கன்றுடன் கூடிய லட்சம் பசுக்களையும், நூறு காளைமாடுகளையும் இருபிறப்பாளர்களுக்குத் தானம் செய்தார். (72)

இராமன், முப்பது கோடி பொற்காசுகளையும் மிகவும் விலையுயர்ந்த அணிகலன்களையும் ஆடைகளையும் பிற பிராமணர்களுக்கும் கொடுத்தார். (73)

மன்னர் இராமன், சூரிய கிரணங்களைப் போல் ஒளி வீசுவதும், இரத்தினங்கள் கோர்க்கப்பட்டுப் பேரழகுடன் விளங்கிய ஒரு பொன்மாலையை சுக்ரீவனுக்கு அளித்தார். (74)

மனவுறுதி படைத்த ரகுவீரன், அடுத்ததாக, வைடூர்யங்களால் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டதும் சந்திர கிரணங்கள் போல் தண்ணொளி வீசுவதுமான இரு தோள்வளைகளை வாலி மைந்தன் அங்கதனுக்குக் கொடுத்தார். (75)

இராமன், சிறந்த மணிகளுடன் கூடியதும் சந்திரிகை போல் சோபையுடையதும் ஒப்பில்லாததுமான ஒரு முத்து மாலையை சீதாதேவிக்கு அளித்தார். சீதாப்பிராட்டி, இராமனின் கண் அசைவால் அனுமதி பெற்று, எக்காலத்திலும் கசங்காத திவ்யமான இரண்டு ஆடைகளையும் சிறந்த அணிகலன்களையும் அனுமானுக்குக் கொடுத்தாள். (76,77)

ஜனகரின் திருமகள், தன்னுடைய கழுத்திலிருந்து ஒரு மாலையைக் கழற்றி, (அதை யாருக்குக் கொடுப்பது? என்று ஆலோசிப்பதைப் போல,) எல்லா வானரர்களையும் கணவரையும் பல தடவைகள் உற்றுப் பார்த்தாள். (78)

அவளுடைய தயக்கத்தின் காரணத்தைப் புரிந்துகொண்ட அவர், ஜனகரின் புதல்வியைப் பார்த்து, ''மாங்களியே! அழகியே! நீ, எவருடைய நல்லியல்புகளைக் கண்டு மனநிறைவுடன் இருக்கிறாயோ, (எவரைப் பாராட்டிக் கௌரவிக்க விரும்புகிறாயோ,) எவரிடம் எல்லையில்லா பராக்கிரமம், உறுதி, புகழ், செயல்திறன், நுண்ணறிவு, பணிவு, நீதி, ஆண்மை, ஆக்கிரமிக்கும் ஆற்றல், நல்லறிவு ஆகியவை எப்போதும் இருக்கின்றனவோ, அவருக்கு இந்த மாலையைக் கொடு'' என்று கூறினார். கருங்கண்ணாளாகிய அவள், அந்த மாலையை வாயுகுமாரர் அனுமானுக்குக் கொடுத்தாள். (79,80)

வானரோத்தமரான அனுமான், சந்திரன் ஒளி போன்ற வெண்ணிற மாலையை அணிந்து கொண்டு, வெண்மேகம் படிந்த ஒரு மலையைப் போல் விளங்கினார். (81)

எதிரிகளை வதைக்கும் பார்வேந்தரான இராமன், த்விவிதன், மைந்தன், நீலன் முதலியோருக்கும் மற்ற எல்லோருக்கும் அவரவருக்கு ஏற்ற பரிசுகளை வழங்கினார். (82)

முதிய வானரர்களும், மற்ற வானரத் தலைவர்களும் அவரவர் தகுதிக்கேற்றபடி ஆடைகளாலும் ஆபரணங்களாலும் கௌரவிக்கப்பட்டார்கள். (83)

பின்னர், எதையும் எளிதாகச் செய்து முடிக்கும் இராமன், முறையே விபீஷணன், சுக்ரீவன், அனுமான், ஜாம்பவான், வானரத் தலைவர்கள் ஆகிய அனைவருக்கும், அவரவர் தகுதிக்கேற்றபடி, அவரவர் விரும்பிய ஏராளமான பொருள்களையும் இரத்தினங்களையும் வழங்கினார். பரிசுகளைப் பெற்றுக் கொண்ட அவர்கள் எல்லோரும் உள்ளம் மகிழ்ந்தவர்களாக, தாம் வந்தபடியே திரும்பிச் சென்றார்கள். (84,85)

வானரோத்தமர்கள் எல்லோரும் மகாத்மாவான இராமனை நமஸ்கரித்து, அவரால் விடைகொடுக்கப்பட்டு, கிஷ்கிந்தைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். (86)

ஸுக்3ரீவோ வாநரஶ்ரேஷ்டோ2 த்3ருஷ்ட்வா ராமாபி4ஷேசநம் ।
பூஜிதஶ்சைவ ராமேண கிஷ்கிந்தா4ம் ப்ராவிஶத் புரீம் ॥ (87)

விபீ4ஷணோऽபி த4ர்மாத்மா ஸஹ தைர்நைர்ருதர்ஷபை4: ।
லப்3த்4வா குலத4நம் ராஜா லங்காம் ப்ராயாத்3விபீ4ஷண: ॥ (88)

ஸ ராஜ்யமகி2லம் ஶாஸந்நிஹதாரிர்மஹாயஶா: ।
ராக4வ: பரமோதா3ரோ ரராஜ பரயா முதா3 ॥
உவாச லக்ஷ்மணம் ராமோ த4ர்மஜ்ஞம் த4ர்மவத்ஸல: ॥ (89)

ஆதிஷ்ட2 தர்மஜ்ஞ மயா ஸஹேமாம்
கா3ம் பூர்வராஜாத்4யுஷிதாம் ப3லேந ।
துல்யம் மயா த்வம் பித்ருபி4ர்த்4ருதா யா
தாம் யௌவராஜ்யே து4ரமுத்3வஹஸ்வ ॥ (90)

ஸர்வாத்மநா பர்யநுநீயமாநோ யதா3 ந ஸௌமித்ரிருபைதி யோக3ம் ।
நியுஜ்யமாநோऽபி ச யௌவராஜ்யே ததோऽப்4யஷிஞ்சத்3ப4ரதம் மஹாத்மா ॥ (91)

பௌண்ட3ரீகாஶ்வமேதா4ப்4யாம் வாஜபேயேந சாஸக்ருத் ।
அந்யைஶ்ச விவிதை4ர்யஜ்ஞைரயஜத் பார்தி2வாத்மஜ: ॥ (92)

ராஜ்யம் த3ஶ ஸஹஸ்ராணி ப்ராப்ய வர்ஷாணி ராக4வ: ।
ஶதாஶ்வமேதா4நாஜஹ்ரே ஸத3ஶ்வாந் பூ4ரித3க்ஷிணாந் ॥ (93)

ஆஜாநுலம்ப3பா3ஹு: ஸ மஹாஸ்கந்த4: ப்ரதாபவாந் ।
லக்ஷ்மணாநுசரோ ராம: ப்ருதி2வீமந்வபாலயத் ॥ (94)

ராக4வஶ்சாபி த4ர்மாத்மா ப்ராப்ய ராஜ்யமநுத்தமம் ।
ஈஜே ப3ஹுவிதை4ர்யஜ்ஞை: ஸஸுஹ்ருஜ்ஜ்ஞாதிபா3ந்த4வை: ॥ (95)

ந பர்யதே3வந் வித4வா ந ச வ்யாலக்ருதம் ப4யம் ।
ந வ்யாதி4ஜம் ப4யம் வாபி ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி ॥ (96)

நிர்த3ஸ்யுரப4வல்லோகோ நாநர்த2: கஞ்சித3ஸ்ப்ருஶத் ।
ந ச ஸ்ம வ்ருத்3தா4 பா3லாநாம் ப்ரேதகார்யாணி குர்வதே ॥ (97)

ஸர்வம் முதி3தமேவாஸீத் ஸர்வோ த4ர்மபரோऽப4வத் ।
ராமமேவாநுபஶ்யந்தோ நாப்4யஹிம்ஸந் பரஸ்பரம் ॥ (98)

ஆஸந் வர்ஷஸஹஸ்ராணி ததா2 புத்ரஸஹஸ்ரிண: ।
நிராமயா விஶோகாஶ்ச ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி ॥ (99)

வானரத் தலைவனான சுக்ரீவன், இராம பட்டாபிஷேகத்தைக் கண்ணாரப் பார்த்துவிட்டு, இராமனால் கௌரவிக்கப்பட்டு, கிஷ்கிந்தை நகர் சென்றடைந்தான். (87)

அறத்தை உயிராகக் கொண்ட விபீஷணன், தன் பரம்பரைச் செல்வமான (தன் குலதனமாகிய) இலங்கை அரசை அடைந்தவனாக, அரக்கப் பிரமுகர்களுடன் இலங்கைக்குப் போய்ச் சேர்ந்தான். (**குறிப்பு:–** 'இக்ஷ்வாகு குலதனமான ரங்கவிமானத்தை இராமன் அளித்தார்' என்ற விளக்கம் பொருத்தமாக இல்லை; வேறு புராணங்களில் காணப்படும் வரலாற்றுக்கு விரோதமாக இருக்கிறது. இக்ஷ்வாகு குலதனம் பற்றிய பேச்சு, முன்னர் எந்த சந்தர்ப்பத்திலும் பேசப்படவில்லை; விபீஷணன் கேட்கவுமில்லை.) (88)

பகைவர்களை முற்றிலுமாக ஒழித்து பெரும் புகழ்பெற்ற இராமன், நாடு முழுவதிலும் நல்லாட்சி நடத்திக் கொண்டு, பொருள்களை வாரி வழங்கிக் கொண்டு, மிகுந்த மகிழ்ச்சியுடன் நாட்டை ஆண்டு வந்தார். அறவொழுக்கத்தில் உறுதியுடனிருக்கும் இராமன், அறநெறி அறிந்த இலக்குவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (89)

''அறம் அறிந்தவனே! நம்முடைய முன்னோர்களான மன்னர்கள், நால்வகைப் படைகளின் உதவியுடன், பரிபாலித்து வந்த இந்த பூமண்டலத்தின் ஆட்சிப் பொறுப்பை என்னுடன் நீயும் ஏற்றுக் கொள். நமது முன்னோர்கள் ஆட்சி செலுத்திய ராஜ்யத்தை, எனக்கு சமமான பொறுப்புள்ள இளவரசுப் பட்டத்துடன் ஆள்வாயாக.'' (90)

பல வகையாலும், பல தடவைகள் வேண்டப்பட்ட பின்னரும் இலக்குவன் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். (தனக்கு மூத்தவனான பரதன் இருக்கும்போது, தான் இளவரசுப் பட்டம் ஏற்பது சரியல்ல என்பதால் மறுத்தான்.) அதனால், மாமன்னரான இராமன், பரதனை இளவரசனாகப் பட்டம் சூட்டினார். (91)

தசரத மன்னரின் புதல்வரான இராமன், பௌண்டரீகம்–அசுவமேதம்–வாஜபேயம் மற்றும் பல்வகை வேள்விகளை அடிக்கடி நடத்தி வந்தார். இராமன், பதினாயிரம் ஆண்டுகள் நாட்டைப் பரிபாலித்து வந்தார். அப்போது, சிறந்த குதிரைகளை வெளியே செல்லவிட்டு, (தன் மேலாண்மையை உலகறியச் செய்தார்.) ரித்விக்குகளுக்குக் கணக்கில்லாமல் தட்சிணை கொடுத்து, நூற்றுக்கணக்கான அசுவமேத யாகங்களைச் செய்தார். (92,93)

முழங்கால்வரை தொங்கும் கைகளை உடையவரும், உறுதியான தோள்களை உடையவரும், பராக்கிரமம் மிக்கவருமான இராமன், இலக்குவன் பணிவிடை செய்ய, மண்ணுலகை செவ்வனே ஆண்டு வந்தார். (94)

தருமாத்மாவான இராமன், ஒப்பில்லாத நாட்டின் அரசாட்சியை ஏற்று, நண்பர்கள்–உற்றார் உறவினர்களுடன்கூட பலவகையான வேள்விகள் செய்து வானவர்களை மகிழ்வித்தார். (95)

இராமன் ஆட்சி புரிந்த காலத்தில், அந்த நாட்டில் மங்கலம் இழந்த பெண்டிரின் புலம்பல் கேட்கப்படவில்லை; கொடிய விலங்குகளால் ஆபத்து ஏற்படவில்லை; நோய்–நொடித் துன்பமும் இல்லை. (96)

உலகம் முழுவதிலும் திருடர்களே இல்லாமல் போனார்கள்; யாரும், தவறான செயல்களைச் செய்யவில்லை; முதியவர்கள், சிறுவர்களுக்கு ஈமச்சடங்குகளைச் செய்ய நேர்ந்ததில்லை. (97)

எல்லா மக்களும் மனக்களிப்புடன் வாழ்ந்தார்கள்; எல்லோரும் அறத்தின் வழியே சென்றார்கள்; இராமபிரானுடைய கல்யாண குணங்களை நினைவிற்கொண்டு, ஒருவருக்கொருவர் துன்புறுத்தாமல் இருந்தார்கள். இராமனுடைய ஆட்சிக் காலத்தில் மக்கள் எல்லோரும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருந்தார்கள்; ஏராளமான மக்கட்பேற்றை அடைந்தார்கள்; நோயற்றவர்களாகவும் துயர் அண்ட முடியாதவர்களாகவும் இருந்தார்கள். (98,99)

ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமப$_4$வந் கத$_2$ா: ।
ராமபூ$_4$தம் ஜக$_3$த$_3$பூ$_4$த்$_3$ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி ॥ (100)

நித்யபுஷ்பா நித்யப$_2$லாஸ்தரவ: ஸ்கந்த$_4$விஸ்த்ருதா: ।
காலே வர்ஷீ ச பர்ஜந்ய: ஸுக$_2$ஸ்பர்ஶஶ்ச மாருத: ॥ (101)

ப்$_3$ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்$_3$ரா லோப$_4$விவர்ஜிதா: ।
ஸ்வகர்மஸு ப்ரவர்தந்தே துஷ்டா: ஸ்வைரேவ கர்மபி$_4$: ॥ (102)

ஆஸந் ப்ரஜா த$_4$ர்மரதா ராமே ஶாஸதி நாந்ருதா: ।
ஸர்வே லக்ஷணஸம்பந்நா: ஸர்வே த$_4$ர்மபராயணா: ॥ (103)

த$_3$ஶ வர்ஷஸஹஸ்ராணி த$_3$ஶ வர்ஷஶதாநி ச ।
ப்$_4$ராத்ருபி$_4$: ஸஹித: ஸ்ரீமாந் ராமோ ராஜ்யமகாரயத் ॥ (104)

த$_4$ந்யம் யஶஸ்யமாயுஷ்யம் ராக்ஞாம் ச விஜயாவஹம் ।
ஆதி$_3$காவ்யமித$_3$ம் த்வார்ஷம் புரா வால்மீகிநா க்ருதம் ॥ (105)

ய: படே$_2$ச்ச்$_2$ருணுயால்லோகே நர: பாபாத்$_3$விமுச்யதே ।
புத்ரகாமஸ்து புத்ராந் வை த$_4$நகாமோ த$_4$நாநி ச ॥ (106)

லப$_4$தே மநுஜோ லோகே ஶ்ருத்வா ராமாபி$_4$ஷேசநம் ।
மஹீம் விஜயதே ராஜா ரிபூம்ஶ்சாப்யதி$_4$திஷ்ட$_2$தி ॥ (107)

ராக$_4$வேண யத$_2$ா மாதா ஸுமித்ரா லக்ஷ்மணேந ச ।
ப$_4$ரதேந ச கைகேயீ ஜீவபுத்ராஸ்தத$_2$ா ஸ்த்ரிய: ॥
ப$_4$விஷ்யந்தி ஸதா$_3$நந்தா$_3$: புத்ரபௌத்ரஸமந்விதா: ॥ (108)

ஶ்ருத்வா ராமாயணமித$_3$ம் தீ$_3$ர்க$_4$மாயுஶ்ச விந்த$_3$தி ।
ராமஸ்ய விஜயம் சைவ ஸர்வமக்லிஷ்டகர்மண: ॥ (109)

ஶ்ருணோதி ய இத$_3$ம் காவ்யமார்ஷம் வால்மீகிநா க்ருதம் ।
ஶ்ரத்$_3$த$_3$தா$_4$நோ ஜிதக்ரோதோ$_4$ துர்கா$_3$ண்யதிதரத்யஸௌ ॥ (110)

ஸமாக$_3$மம் ப்ரவாஸாந்தே லப$_4$தே சாபி பா$_3$ந்த$_4$வை: ।
ப்ரார்தி$_2$தாம்ஶ்ச வராந் ஸர்வாந் ப்ராப்நுயாதி$_3$ஹ ராக$_4$வாத் ॥ (111)

ஶ்ரவணேந ஸுரா: ஸர்வே ப்ரீயந்தே ஸம்ப்ரஶ்ருண்வதாம் ।
விநாயகாஶ்ச ஶாம்யந்தி க்$_3$ருஹே திஷ்ட$_2$ந்தி யஸ்ய வை ॥ (112)

விஜயதே மஹீம் ராஜா ப்ரவாஸீ ஸ்வஸ்திமாந் வ்ரஜேத் ।
ஸ்த்ரியோ ரஜஸ்வலா: ஶ்ருத்வா புத்ராந் ஸூயுரநுத்தமாந் ॥ (113)

பூஜயம்ஶ்ச பட$_2$ம்ஶ்சேமமிதிஹாஸம் புராதநம் ।
ஸர்வபாபை: ப்ரமுச்யேத தீ$_3$ர்க$_4$மாயுரவாப்நுயாத் ॥ (114)

இராமனுடைய ஆட்சிக் காலத்தில் மக்கள் அனைவரும், 'இராமா, இராமா, இராமா' என்று, இராமனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். உலகமே, இராமமயமாக ஆயிற்று! (100)

இராமனுடைய ஆட்சிக் காலத்தில் மரங்கள் எல்லாம் எல்லாப் பருவங்களிலும் பூத்துக் குலுங்கி பழங்களைத் தந்து கொண்டிருந்தன; மேகங்கள், உரிய காலங்களில், தேவையான அளவு மழையைப் பொழிந்தன; காற்று, உடலை வருடிக் கொண்டு தென்றலாக வீசியது. (101)

அந்தணர்கள், அரச வகுப்பினர், வணிகர்கள் மற்றும் வேளாளர்கள் பேராசைப்படாமல் இருந்தார்கள். தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களில் மனத்திருப்தியுடன் ஈடுபட்டிருந்தார்கள். இராமனுடைய ஆட்சிக் காலத்தில், மக்கள் அறநெறியிலிருந்து பிறழாமல் இருந்தார்கள்; எவரும் உண்மையில்லாததைப் பேசவில்லை; எல்லோரும் நல்ல தோற்றமுடையவர்களாக இருந்தார்கள்; எல்லோரும், அறத்தையே நம்பிக் கொண்டிருந்தார்கள். (102,103)

மகிமை மிக்க இராமப்பிரபு, தம்பிகளோடுகூட பதினோராயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்தருளினார். (104)

முன்னர், வால்மீகி முனிவரால் இந்தக் காவியம் இயற்றப்பட்டது; செல்வம், புகழ், நீண்ட ஆயுளை தரக்கூடியது; மன்னர்களுக்கு வெற்றியை தரக்கூடியது. (105)

உலகில், இந்தப் புனித காவியத்தை எப்போதும் செவிமடுக்கும் மனிதர், பாவங்களிலிருந்து விடுபடுகிறார்; இராம பட்டாபிஷேக வைபவத்தைக் கேட்பவர்கள் மகப்பேற்றை விரும்பினால் மகவுகளையும், பொருள் வேண்டுவோர் பொருளையும் அடைவார்கள். ஒரு மன்னர், இந்தக் காவியத்தைக் கேட்டால், எதிரிகளை அடிமைப்படுத்தி உலகையே வெற்றி கொள்வார். (106,107)

இந்தக் காவியத்தைக் கேட்கும் பெண்மணிகள் எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள்; கௌசல்யை இராமனையும் சுமித்திரை லட்சுமணனையும் கைகேயி பரதனையும் அடைந்தாற்போல நீண்ட காலம் உயிர் பிழைத்திருக்கும் புதல்வர்கள் பேரர்களுடன் கூடியவர்களாக இருப்பார்கள். (108)

அநாயாசமாக அருஞ்செயல்களைப் புரியும் இராமனுடைய வெற்றியை விவரிக்கும் இந்த இராமாயணத்தை முழுமையாகக் கேட்பவர் நீண்ட ஆயுளைப் பெறுகிறார். (109)

வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட, வேதங்களுக்கு ஒப்பான இந்தக் காவியத்தை (பிறர் படிக்கக்) கேட்பவன் கோபத்தை வென்றுவிடுகிறான்; பேராபத்துக்களையும் எளிதில் கடந்து விடுகிறான்; மேலும், வெகுதூரம் யாத்திரையாகச் சென்றவன், திரும்பி வந்து உறவினர்களுடன் கூடுகிறான். மனமுருகப் பிரார்த்திக்கும் எல்லா வரங்களையும் இவ்வுலகிலேயே இராமனிடமிருந்து பெறுகிறார்கள். (110,111)

தேவர்கள் எல்லோரும் இந்த இராமாயணத்தை நம்பிக்கையுடன் கேட்பவர்களுக்கு அருள்புரிகிறார்கள்; அவர்களுடைய வீட்டில், இடையூறு செய்யும் தீய சக்திகள் இருந்தால், அவை அடங்கிப் போகின்றன. (112)

இராமாயணத்தைச் செவிமடுக்கும் மன்னன் மண்ணுலகை வெற்றி கொள்வான்; வெகுதூரம் யாத்திரையாகப் போயிருப்பவன், சுகமாகத் திரும்பி வருவான்; மாதவிடாய் முடித்த பெண்கள் (ருதுமதிகள்) உத்தமப் புதல்வர்களைப் பெறுவார்கள். (113)

தொன்மையான இந்த இதிகாசத்தை நாள்தோறும் பூஜித்துப் பாராயணம் செய்பவன், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு நீண்ட ஆயுளை அடைகிறான். (114)

ப்ரணம்ய ஶிரஸா நித்யம் ஶ்ரோதவ்யம் க்ஷத்ரியைர்த்$_3$விஜாத் ।
ஐஶ்வர்யம் புத்ரலாப$_4$ஶ்ச ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (115)

ராமாயணமித$_3$ம் க்ருத்ஸ்நம் ஶ்ருண்வத: பட$_2$த: ஸதா$_3$ ।
ப்ரியதே ஸததம் ராம: ஸ ஹி விஷ்ணு: ஸநாதந: ॥ (116)

ஆதி$_3$தே$_3$வோ மஹாபா$_3$ஹுர்ஹரிர்நாராயண: ப்ரபு$_4$: ।
ஸாக்ஷாத்$_3$ராமோ ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$: ஶேஷோ லக்ஷ்மண உச்யதே ॥ (117)

குடும்ப$_3$வ்ருத்$_3$தி$_4$ம் த$_4$நதா$_4$ந்யவ்ருத்$_3$தி$_4$ம்
ஸ்த்ரியஶ்ச முக்$_2$யா: ஸுக$_2$முத்தமம் ச ।
ஶ்ருத்வா ஶுப$_4$ம் காவ்யமித$_3$ம் மஹார்த$_2$ம்
ப்ராப்நோதி ஸர்வாம் பு$_4$வி சார்த$_2$ஸித்$_3$தி$_4$ம் ॥ (118)

ஆயுஷ்யமாரோக்$_3$யகரம் யஶஸ்யம்
ஸௌப்$_4$ராத்ருகம் பு$_3$த்$_3$தி$_4$கரம் ஶுப$_4$ம் ச ।
ஶ்ரோதவ்யமேதந்நியமேந ஸத்$_3$பி$_4$ர்–
ஆக்$_2$யாநமோஜஸ்கரம்ருத்$_3$தி$_4$காமை: ॥ (119)

ஏவமேதத் புராவ்ருத்தமாக்$_2$யாநம் ப$_4$த்$_3$ரமஸ்து வ: ।
ப்ரவ்யாஹரத விஸ்ரப்$_3$த$_4$ம் ப$_3$லம் விஷ்ணோ: ப்ரவர்த$_4$தாம் ॥ (120)

தே$_3$வாஶ்ச ஸர்வே துஷ்யந்தி க்$_3$ரஹணாச்ச்$_2$ரவணாத்ததா$_2$ ।
ராமாயணஸ்ய ஶ்ரவணாத்துஷ்யந்தி பிதரஸ்ததா$_2$ ॥ (121)

ப$_4$க்த்யா ராமஸ்ய யே சேமாம் ஸம்ஹிதாம்ருஷிணா க்ருதாம் ।
லேக$_2$யந்தீஹ ச நராஸ்தேஷாம் வாஸஸ்த்ரிவிஷ்டபே ॥ (122)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
யுத்$_3$த$_4$காண்டே$_3$ ஏகத்ரிம்ஶது$_3$த்தரஶததம: ஸர்க$_3$: ॥

ஶ்ரீமத்$_3$வால்மீகிராமாயணே யுத்$_3$த$_4$காண்ட$_3$: ஸம்பூர்ண:

அரச வகுப்பினர், தினந்தோறும் அந்தணர்களைத் தலைதாழ்த்தி வணங்கி இராமாயணத்தைக் கேட்டால், அவர்களுக்குச் செல்வம் பெருகும்; மகப்பேறு உண்டாகும். இதில் ஐயமில்லை. (115)

எவனொருவன், இராமாயணத்தைத் தினமும் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ, அவனிடம் ஆதிப் பரம்பொருளான விஷ்ணுவின் வடிவமான இராமன், எப்போதும் மனத்திருப்தியுடன் இருக்கிறார். (116)

எல்லையற்ற சக்தி கொண்ட மூலப் பரம்பொருள், படைக்கப்பட்டுள்ள அனைத்துக்கும் தலைவர் நாராயணன். அவர்தான் ரகுகுல திலகமான இராமனாக வந்தார்; லட்சுமணன், ஆதிசேஷன் என்று சொல்லப்படுகிறான். (117)

உன்னத பொருளைக் கொண்ட புனிதமான இந்தக் காவியத்தைக் கேட்பவன், இவ்வுலகில் மக்கட்பேற்றையும் தன–தானியப் பெருக்கையும் நற்குணங்கள் கொண்ட உத்தம மனைவியரையும் மனநிறைவையும் பெற்று, எல்லா விருப்பங்களும் கைகூடப்பட்டவனாகிறான். (118)

மேன்மையை விரும்பும் சான்றோர்கள், நீண்ட ஆயுள், உடல் நலம், புகழ், அன்பான சகோதரர்கள், நற்புத்தி, மன அமைதி, ஆன்மசக்தி ஆகியவற்றை அளிக்கக்கூடிய இந்தக் காவியத்தைக் கேட்பார்களாக. (119)

மேன்மக்களே! உங்களுக்கெல்லாம் நலம் உண்டாகட்டும். முன்னர் நடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பே இராமாயணமாக வந்திருக்கிறது. மகாவிஷ்ணுவின் பேரருளால் உலகில் நலம் பெருகட்டும். (120)

இராமாயணத்தைச் சரியானபடி புரிந்து கொள்வதாலும் செவிமடுப்பதாலும் எல்லா தேவர்களும் களிப்படைகிறார்கள்; இராமாயணத்தைக் கேட்பவரின் முன்னோர்களும் திருப்தி அடைகிறார்கள். (121)

மாமுனிவர் ஆதிகவி வால்மீகியால் இயற்றப்பட்ட, வேதங்களுக்கு இணையான இந்த இராமாயணத்தை இராமபிரானிடம் பக்தி கொண்டு எழுதுபவர்களுக்குத் தேவருலகில் இடம் நிச்சயம். (122)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில்
நூற்று முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

யுத்த காண்டம் முற்றிற்று.

॥ ஸ்ரீஹரி: ॥

ஸ்ரீமத் பாகவத மகாபுராணம்

(பத்தாவது ஸ்கந்தத்திலிருந்து சில பகுதிகள்)

நாற்பத்தாறாவது அத்தியாயம்

1. உத்தவரின் கோகுல யாத்திரை

ஸ்ரீசுகர் கூறுகிறார்— விருஷ்ணி வம்சத்தில் தோன்றியவருள் சிரேஷ்டரான உத்தவர், சிறந்த மந்திரி; கண்ணனின் அன்புக்குரிய நண்பர்; பிருஹஸ்பதியின் நேரிடைச் சீடர்; அறிவாளிகளில் மிகச் சிறந்தவர். தன்னை அண்டியவரின் துயர் நீக்குகிற பகவான் ஸ்ரீகிருஷ்ணன், ஒருநாள் தன்னிடம் தனித்த அன்பு கொண்டவரும், தனக்கு மிகவும் பிரியமானவரும், பக்தருமான அவரைத் தனியாக ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று, தமது கைகளால் அவரது கையைப் பிடித்துக் கொண்டு கூறலானார்— (1,2)

''அன்பனே உத்தவா! நீ கோகுலம் சென்று எமது பெற்றோருக்கு மகிழ்ச்சியை அளிக்க வேண்டும். கோபிகைகளுக்கு எனது இனிய செய்தியைக் கூறி, என்னை விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்டுள்ள துயரைப் போக்க வேண்டும். (3)

அவர்கள் என்னிடமே மனத்தைப் பதித்தவர்கள். என்னிடம் உயிரையே வைத்தவர்கள். எனக்காக அவர்கள் தங்கள் பதி–புத்திரர்களைத் துறந்து இனிய சுகத்தை விட்டவர்கள். அன்புக்கும் பிரியத்திற்கும் உரிய ஆத்மாவாக என்னையே கொண்டவர்கள். எனக்காகவே இக–பர உலகங்களையும் ஆற்றவேண்டிய அறநெறிக் கடமைகளையும் நீத்தவர்கள். ஆகவே, எனக்காகவே நான் அவர்களைக் காத்து வருகிறேன். பிரியமானவர்களுள் மிகவும் பிரியமான நான், அவர்களை விட்டு வெகுதூரத்தில் இருப்பதால், என்னையே நினைத்து என்னைக் காணும் பேராவலால் தளர்ந்து, மயங்கி நிற்கின்றனர். (4,5)

'நான் விரைவில் திரும்பி வருவேன்' என்று நான் கூறிய வார்த்தையை நம்பி, என்னிடமே உயிரை வைத்துள்ள கோபிகைகள் எப்படியோ கஷ்டப்பட்டுத் தங்கள் உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பார்கள்.'' (6)

ஸ்ரீசுகர் கூறினார்— அரசே! (ஸ்ரீகிருஷ்ணன்) இவ்வாறு கூறவே உத்தவர் மிக்க ஆதரவுடன் யஜமானனான ஸ்ரீகிருஷ்ணனின் செய்தியைத் தாங்கி, ரதமேறி நந்த கோகுலம் சென்றார். (7)

சூரியன் மறையும்போது உத்தவர் நந்த கோகுலத்தில் நுழைந்தார். கோகுலத்தில் நுழைகிற பசுக்களின் குளம்படித் தூசியால் உத்தவரின் ரதமே மறைந்தது. (8)

பருவமடைந்த பசுக்களுடன் இணைவதற்காகச் சூடடைந்த கொழுத்த காளைகள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கனைத்தன. பால் நிறைந்ததால் மடி கனக்க, பசுக்கள் தன் கன்றுகளை நோக்கிக் கனைத்துக் கொண்டு ஓடின. (9)

தாயின் மடியில் பால் குடிக்க அவிழ்த்துவிடப்பட்ட வெள்ளை நிற பசுங்கன்றுகள் இங்குமங்கும் பாய்ந்து ஓடுவது மிக அழகாக இருந்தது. மாடு கறக்கிற ஒலியும், புல்லாங்குழல் கீத ஒலியும் இனிமையாகக் கேட்டன. (10)

தங்களை நன்கு அலங்கரித்துக் கொண்ட கோபர்களும் கோபிகைகளும் ஸ்ரீராமகிருஷ்ணர்களின் மங்களமான திருவிளையாடல்களைப் பாட, கோகுலம் மேலும் அழகுடன் விளங்கியது. (11)

கோபர்களின் வீடுகளில் அக்னி, சூரியன், அதிதிகள், பசுக்கள், அந்தணர்கள், பித்ருக்கள் (மூதாதையர்), தேவர்கள் ஆகியவர்களின் வழிபாடு நடந்து கொண்டிருந்தது. தூபங்கள், தீபங்கள், பூமாலைகள் – இவைகளால் மனத்தைக் கவர்வதாகவும் இருந்தன. (12)

தோட்டங்கள் எங்கும் பூத்துக் குலுங்கின. பறவைகள் இனிமையாகக் கூவின. வண்டுகள் கூட்டமாக இனிது ரீங்கரித்தன. அன்னப்பட்சிகளும் குளக்கோழிகளும் தாமரைகளும் நிரம்பிய நீர்த்தேக்கங்கள் அழகுடன் விளங்கின. இவ்வாறு அழகாக விளங்கும் நந்தகோகுலத்தை உத்தவர் அடைந்தார். (13)

ஸ்ரீகிருஷ்ணனின் அன்புக்குரிய தோழரான உத்தவர் அங்கு வந்ததும், அவரை கிருஷ்ணனாகவே நினைத்து மகிழ்ச்சியோடு வரவேற்று கட்டியணைத்து அன்புடன் உபசரித்தார், நந்தர். (14)

சிறந்த உணவுண்டு கட்டிலில் சுகமாக அமர்ந்த அவரது கால்களை வருடிக் களைப்பு நீக்கி, நந்தர் நலம் விசாரித்தார்— (15)

''பெரும் பாக்கியம் செய்த அன்பனே! எங்கள் நண்பர் வசுதேவர், கம்சனது துயர் நீங்கி, தம் புதல்வர்கள், நண்பர்கள் சூழ நலமாக உள்ளாரா? (16)

சான்றோர்களும் அறநெறி தவறாதவர்களுமான யாதவர்களைத் துன்புறுத்திய பாவி கம்சன், நல்லவேளையாகத் தன்வினையாலே அவனுக்குத் துணையாக நின்றவர்களுடன் கொல்லப்பட்டான். (17)

எங்களையும், தாயான யசோதையையும், சுற்றங்களையும், நண்பர்களையும், கோபர்களையும், தன்னையே நம்பியிருக்கும் இந்த கோகுலத்தையும், பசுக்களையும், கோவர்த்தன மலையையும் எப்பொழுதாவது கிருஷ்ணன் நினைப்பதுண்டா? (18)

தன் சுற்றத்தைக் காண கிருஷ்ணன் இங்கு ஒரு தடவையாவது வருவானா? அப்போதாவது அவனது இனிய புன்சிரிப்பும் கனிந்த பார்வையும் அழகிய நாசியும் கொண்ட திருமுகத்தைக் காண்போமா? (19)

கிருஷ்ணன் பரந்த மனது படைத்தவன். காட்டுத்தீ, பெருங்காற்று, பெருமழை (மற்றும்) விருஷாசுரன், அகாசுரன் என்று தப்ப முடியாத மரணபயங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றினான். (20)

ஐயனே! கிருஷ்ணனின் சிறந்த ஆற்றல்களையும், விளையாட்டாகக் கடைக்கண்ணால் கனிவோடு பார்த்ததையும் சிரித்ததையும் பேசியதையும் நினைக்கும்போது எங்கள் செயலனைத்தும் தடுமாறுகின்றன. கண்ணனது திருவடி பதிந்த ஆற்றங்கரை, மலை, காடு முதலிய இடங்களையும், அவன் விளையாடிய இடங்களையும் பார்க்கிறபோது, மனத்தினுள் அவனே எங்கும் பரவி நிற்கிறான். அங்கு மெய்மறந்து அவனையே காண்கிறோம். (21,22)

கர்க்க முனிவர் கூறியதுபோல் நிச்சயமாக தேவர்களது காரியத்தைச் செய்து முடிக்க, தேவர்களில் சிறந்த இருவர்தான் கிருஷ்ணனாக, பலராமனாக இங்கு வந்து அவதரித்துள்ளனர் என நினைக்கிறேன். பத்தாயிரம் யானை பலமுள்ள கம்சனையும், மல்லர்களையும், குவலயாபீடம் என்ற யானையையும் சிங்கம் விலங்குகளைக் கொல்வதுபோல் விளையாட்டாகக் கொன்றான். (23,24)

மூன்று பனைமர உயரம் கொண்ட வலிவுமிக்க வில்லை, யானை ஒரு சிறிய குச்சியை முறிப்பதுபோல் ஒரு கையால் முறித்தான். கோவர்த்தன மலையை ஏழு நாட்கள் ஒரு கையால் தாங்கி நின்றான். (25)

தேவர்களையும் அசுரர்களையும் வென்ற பிரலம்பன், தேனுகன், அரிஷ்டன், திருணாவர்த்தன், பகன் முதலிய பல அசுரர்களை இவன் இங்கு விளையாட்டாகக் கொன்றான்.'' (26)

ஸ்ரீசுகர் கூறுகிறார்— ஸ்ரீகிருஷ்ணனிடமே உள்ளம் பதித்த நந்தர் இவ்வாறு நினைத்து நினைத்து ஆசை பொங்க, புதல்வனிடம் வைத்த அன்பு வெள்ளத்தால் நா தழுதழுக்கப் பேசாமலிருந்தார். (27)

தன் புதல்வனின் தீராத விளையாட்டுக்களை நந்தர் வருணிக்கக் கேட்ட யசோதை, கண்ணன் மேல் கொண்ட அன்பினால் மார்பகங்களில் பால் சுரக்க, கண்களில் நீர் பெருக நின்றாள். (28)

பகவான் ஸ்ரீகிருஷ்ணனிடம் நந்தருக்கும் யசோதைக்கும் உள்ள பேரன்பைக் கண்ட உத்தவர், மனம் மகிழ்ந்து நந்தரிடம் கூறினார். (29)

உத்தவர் கூறுகிறார்— ''மனித இனத்திற்கே பெருமை தருபவரே! இவ்வுலகில் உடல் பெற்ற மாந்தருள் நீங்களிருவருமே பாராட்டத்தக்கவர்கள். ஏனெனில், எல்லோரும் கொண்டாடும் ஸ்ரீமந்நாராயணனிடத்தில், புத்திரன் என்ற பாவனையுடன் இத்தகைய பற்று கொண்டுள்ளீர்களே! (30)

பலராமனும் ஸ்ரீகிருஷ்ணனும் உலகத்தின் நிமித்த காரணரும், உபாதான காரணரும் ஆவார்கள். இயற்கையையே ஆள்கின்ற முற்படத்தோன்றிய பிரதான புருஷர்கள். தோன்றிய பொருளனைத்திலும் உட்புகுந்து கலந்து நின்று அவற்றையும், அவற்றிலிருந்து வேறுபட்ட உள்ளறிவான ஜீவனையும் ஆள்பவர்கள்! (31)

மனிதன், பிராணன் (உயிர்) நீங்கும்போது ஒரு கணநேரம் தன் மனதைத் தூய்மையுடன் இவரிடம் பதித்தால், கர்மவாஸனை அகன்று, ஆத்மாவை உணர்ந்து, சூரியனைப் போன்ற தூய ஒளி வடிவம் பெற்று, பெருநிலையான முக்தியைப் பெறலாம். (32)

எல்லா ஜீவர்களுக்கும் ஆன்மாவான மூலகாரணர் இவரே! ஏதோ ஒரு காரணத்திற்காக மனித வடிவம் ஏற்ற ஸ்ரீமந்நாராயணனே இவர். அவரிடம் நீங்களிருவரும் அளவற்ற வாத்ஸல்யத்தைக் காட்டுகிறீர்கள். இதைவிட இனி நீங்கள் செய்யத்தக்க புனிதப் பணி வேறு என்ன இருக்கிறது? (33)

அச்சுதனான ஸ்ரீகிருஷ்ணன் மிக விரைவிலேயே கோகுலம் வந்து உங்கள் அருகிலேயே இருக்கப் போகிறார். பக்தர்களைக் காக்கும் அவர், பெற்றோர்களான உங்கள் விருப்பத்தையும் நிறைவு செய்யப் போகிறார். மல்ல அரங்கின் நடுவே ஸாத்வத வம்சத்தின் எதிரியான கம்சனை அழித்தவுடன் தங்களை அணுகி, 'நான் விரைவில் கோகுலம் வருவேன்' என்று கூறியதை மெய்ப்பிக்கப் போகிறார். (34,35)

பெரும்பாக்கியம் செய்த நீங்கள் வருந்த வேண்டாம். ஸ்ரீகிருஷ்ணனை விரைவிலேயே காணப் போகிறீர்கள். விறகில் நெருப்புபோல் எல்லோருடைய உள்ளத்திலும் அவர் நிறைந்து நிற்கிறார். (36)

உடற்பற்றற்ற அவருக்கு 'இது தன்னுடையது' என்ற நினைப்பு இல்லை. அதனால், அவருக்குப் பிரியத்திற்கு உரியவரோ–அல்லாதவரோ, மேலானவரோ–கீழானவரோ கிடையாது. எங்கும் எல்லாவற்றிலும் ஒரே சீராக உள்ளவராதலின் ஈடற்றவரும் கிடையாது. தீய எண்ணம் கொண்டவனும் அவருக்குத் தீயவனல்லன். (37)

அவருக்குத் தாயோ–தந்தையோ, மனைவியோ–மக்களோ, உற்றாரோ–மற்றாரோ கிடையாது. உடலும் பிறவியும் கிடையாது. (38)

இவ்வுலகில் அவருக்கெனத் தனித்த செயல் எதுவுமே இல்லை. இருப்பினும், சான்றோர்களான பக்தர்களைக் காத்துத் திருவிளையாடல் புரிய ஸத்வ குணம் பொருந்திய தேவர்களாகவும், தாமஸ குணம் பொருந்திய மீன் முதலிய ஈனப் பிறவிகளிலும், முக்குணங்களும் கலந்த மனிதப்பிறவிகளிலும் திருவவதாரம் செய்கிறார். (39)

குணங்களுக்கு அப்பாற்பட்ட அவர் விளையாட்டாக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களையும் ஏற்கிறார். பிறப்பு–இறப்பற்ற அவர் விளையாடல் புரிய மனங்கொண்டு உலகைப் படைத்து, காத்து, ஒடுக்குகிறார். (40)

நாம் வேகமாகச் சுற்றும் போது கண்கள் சுழன்று உலகமே சுழல்வதாகக் காணப்படுகிறது. அதுபோல், சித்தம் செயல்படும்போது ஆத்மாவானது, 'யான், எனது' என்ற எண்ணத்தின் காரணமாக, தன்னையே கர்த்தாவாக எண்ணுகிறது. (41)

உங்களிருவருக்கு மட்டுமே இவர் புதல்வரல்லர். பகவான் ஸ்ரீஹரியே எல்லோருக்கும் புதல்வரும் ஆத்மாவும் தந்தையும் தாயும் ஈசனும் ஆவார். (42)

கண்டது, கேட்டது, நடந்தது, நடப்பது, நடக்கவிருப்பது, அசையாதது, அசைவது, பெரியது, சிறியது என எல்லாமே உண்மையில் ஸ்ரீகிருஷ்ணனைத் தவிர வேறல்ல. அவரே எல்லாமானவர். எல்லாவற்றின் ஆத்மாவான உண்மைப் பொருளும் அவரே.'' (43)

அரசே! இவ்வாறு நந்தரும், ஸ்ரீகிருஷ்ணனின் நண்பரான உத்தவரும் பேசிக் கொண்டிருக்கும்போது இரவு கழிந்தது. விடியற்காலையில் கோபிகைகள் எழுந்தனர். தீபங்களை ஏற்றினர். வாயிற்படிகளில் மஞ்சள் குங்குமமிட்டு வாஸ்து தேவதையை வணங்கினர். பின், தயிர் கடையத் தொடங்கினார்கள். (44)

கடைகிற கயிறு இழுக்கும் கைகளில் உள்ள வளைகளில் பதிக்கப்பட்ட ரத்தினங்களில் தீப ஒளிபட்டு, அவை மேலும் ஒளிர்ந்தன. இடுப்பசைய, மார்பகமும் ஹாரங்களும் குண்டலங்களும் குலுங்கின. கன்னத்தின் சிகப்பும், நெற்றிக் குங்குமத்தின் சிகப்பும் முகத்தை மேலும் அழகுறச் செய்தன. (45)

தாமரைக்கண்ணனான கண்ணனைப் பற்றிப் பாடுகிற கோகுலத்து மாதர்களின் குரல் வானை எட்டியது. அதில் தயிர் கடைகிற ஒலியும் கலந்தது. அவ்வொலியால் நாற்றிசைகளிலுமுள்ள தீயவைகள் (அமங்களங்கள்) விலகின. (46)

சூரிய பகவான் உதிக்கும் காலை வேளையில், நந்தகோபரின் வீட்டுவாயிலில் தங்கத்தாலான ஒரு ரதம் நிற்பது கண்ட கோகுலவாசிகள், "இது யாருடைய ரதம்?'' என்று வினவினர். (47)

''கம்சன் விருப்பத்தை நிறைவேற்றிய அக்ரூரர் வந்துள்ளாரோ? தாமரைக்கண்ணனான கண்ணனை மதுரைக்கு அழைத்துச் சென்றாரே, அந்த அக்ரூரரா? (48)

ஏற்கனவே நம் கண்ணனை அழைத்துச் சென்று, தீயவனான கம்சனுக்கு மகிழ்ச்சியளித்தார். இப்போது இறந்த அவனது ஈமச்சடங்குகளை நம்மைக் கொண்டு நிறைவேற்றப் போகிறாரா?'' என்று இவ்வாறு பெண்கள் பேசிக் கொண்டிருக்கையில், காலையில் செய்ய வேண்டிய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்ட உத்தவர் அங்கு வந்தார். (49)

ஸ்ரீமத்பாகவத மகாபுராணம், பத்தாவது ஸ்கந்தத்தில்
நாற்பத்தாறாவது அத்தியாயம் முற்றிற்று.

நாற்பத்தேழாவது அத்தியாயம்

2. பிரமர கீதம் (வண்டுகளின் இனிய கீதம்)

ஸ்ரீசுகர் கூறுகிறார்— முழந்தாள் வரை நீண்டு தொங்கும் திருக்கைகள், அன்றலர்ந்த தாமரை போன்ற திருக்கண்கள், அரையில் மஞ்சள் பட்டாடை, கழுத்தில் தாமரைப்பூமாலை, அழகிய தாமரை போன்ற திருமுகம், ரத்தினங்கள் பதித்து மின்னுகின்ற குண்டலங்கள், கண்ணனையொத்த திருவடிவம் – இவ்வாறு அழகான ஸ்ரீகிருஷ்ணனின் பக்தனான உத்தவரைக் கோபிகைகள் கண்டனர். (1)

''பார்ப்பதற்கு மிகவும் அழகாக சிரித்த முகத்துடன் விளங்கும் இவர் யார்? ஸ்ரீகிருஷ்ணனைப் போன்று திருவேடம், அலங்காரங்கள் பூண்டது ஏன்? எங்கிருந்து வருகிறார்? இவர் யாரைச் சேர்ந்தவர்?'' என்று (அவரைப் பற்றி முழுமையாக) அறிய விரும்பி புன்னகைத்த கோபிகைகள், உலகம் புகழ் கண்ணனது திருவடிகளில் அடிமைபூண்ட உத்தவரைச் சூழ்ந்து கொண்டனர். (2)

உத்தவர், ஸ்ரீகிருஷ்ணனிடமிருந்து செய்தி கொணர்ந்துள்ளதை அறிந்து, தனிமையில் வெட்கத்துடன் கூடிய புன்சிரிப்பும், இனிய பார்வையும் கொண்டு இன்சொற்கள் கூறி வரவேற்று, உபசரித்து, ஆசனத்தில் அமர்த்தி, வணங்கி வினயமாக வினவினர். (3)

''இங்கு வந்துள்ள தாங்கள் யது நாதரான ஸ்ரீகிருஷ்ணனின் பக்தர் (சேவகர்) என அறிகிறோம். தங்கள் யஜமானர் ஸ்ரீகிருஷ்ணன் தன் பெற்றோர்களுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பித் தங்களை அனுப்பினாரோ? (4)

அதுவன்றி கோகுலத்தில் அவர் நினைப்பதற்கு வேறு ஏதொன்றுமிருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. உற்றாரிடம் கொண்ட அன்பின் பிணைப்பை, முனிவராலும் விடமுடியாதல்லவா? (5)

தாம் நாடும் பொருளைப் பெற பிறரிடம் காட்டும் நட்பு – ஆண்கள் பெண்களிடம் வைப்பதுபோல், வண்டுகள் பூக்களிடம் வைப்பதுபோல் – காரியம் கைகூடும் வரைதான் தொடரும். (6)

கைப்பொருளற்ற ஏழையை வேசியும், ஆளும் திறமையற்ற அரசரை மக்களும், ஆசிரியரைக் கல்வி கற்று முடித்த மாணவரும், தக்ஷிணை தந்துவிட்ட யஜமானனை ருத்விக்குகளும், காய்ப்பு நின்ற மரத்தைப் பறவைகளும், உண்டபின் உண்ட வீட்டை அதிதியும், எரிந்த காட்டை விலங்குகளும், உண்மையில் அன்பு கொண்டிருப்பினும் தான் அனுபவித்த பெண்ணை ஜாரபுருஷனும் புறக்கணிப்பது, உலகின் வழக்கமேயன்றோ! (7,8)

ஸ்ரீகிருஷ்ணனின் தூதரான உத்தவர் கோகுலம் வந்தபோது கோவிந்தனிடமே பேச்சும் உடலும் உள்ளமும் (மனோவாக்காயங்கள்) லயித்துவிட்ட கோபிகைகள், உலக நடைமுறைகளில் ஈடுபாடற்று இருந்தனர். குழந்தைப் பருவத்திலும், இளம்பருவத்திலும் ஸ்ரீகிருஷ்ணன் செய்த பிரியமான லீலைகளை நினைத்து நினைத்து பாடிக் கொண்டு வெட்கத்தைவிட்டு அழுது கொண்டிருந்தனர். (9,10)

ஒரு வண்டைக் கண்ட கோபிகை, ஸ்ரீகிருஷ்ணனுடன் இணைவதைப் பற்றிய சிந்தனையில் தன்னை சமாதானம் செய்ய, கண்ணன் அதைத் தூதுவனாக அனுப்பியுள்ளதாகக் கற்பனை செய்து கொண்டு கூறலானாள். (11)

கோபிகை கூறுகிறாள்— வஞ்சகனுடன் உறவு கொண்ட வண்டே! கண்ணனது வனமாலை எங்கள் சக்களத்தியின் மார்பில் பட்டு கசங்கி அதில் நீ படிந்ததும், அங்குள்ள சிவந்த குங்குமம் உனது மீசைகளில்

படிந்து காணப்படுகிறது. ஆகையால், நீ எங்கள் காலைத் தொடாதே. (வணங்குவதுபோல் பாசாங்கு செய்து எங்களை சமாதானம் செய்ய முயலவேண்டாம்.) யாதவர்களின் தலைவனான கிருஷ்ணன், மதுரை நகரப் பெண்டிர்களிடமே அன்பைச் செலுத்தட்டும். சபையிலுள்ள யாதவர்களும் அதைக் கண்டு ஏளனம் செய்யட்டும். நீ, ஒரே பூவையா காதலிக்கிறாய்? வெவ்வேறு பூக்களைத் தேடியலைகிறாயே! அதுபோலத்தான் கிருஷ்ணனும். அவனது தூதுவன் தானே நீயும். எங்கள் சக்களத்திகளின் மார்ப்புத்தட குங்குமப் பிரசாதம் கிருஷ்ணன் பக்கலிலேயே இருக்கட்டும். அதை ஒன்றும் எங்களுக்கு உன் மூலம் அனுப்ப வேண்டாம். (12)

உருவ நிறத்திலும், செயல்களிலும் உன்னைப் போன்றவன்தான் அவனும். நீயும் கறுப்பு, அவனும் கறுப்பு. நீ, பூவில் தேனை மட்டும் பருகிவிட்டு, பின் அதை விட்டுச் சென்று விடுகிறாயல்லவா? அப்படித்தான் கிருஷ்ணனும். உலகியலையே மறந்து மயங்கச் செய்யும் தன் திருக்கனிவாயமுதத்தை ஒரே ஒரு தரம் எங்களுக்கு அளித்துவிட்டு, உடனே நழுவிவிட்டான். என்ன இருந்தாலும் நாங்கள் நாகரீகம் அறியாத பாமரர்கள்தானே. (மதுரை நகரப் பெண்கள் நல்ல நாகரீகமுடையவர்கள். நாங்கள் அவ்வாறல்ல என்றுதானே நினைத்து எங்களை விட்டுச் சென்றான், கண்ணன்.) இவ்வாறு சபல சித்தமுள்ள கிருஷ்ணனது திருவடிகளை ஸ்ரீலக்ஷ்மிதேவி எவ்வாறுதான் சேவிக்கிறாளோ? ஒருவேளை இவனது மனம் கவரும் கனிந்த வஞ்சப் புகழ்ச்சிச் சொற்களைக் கேட்டு மதிமயங்கியிருப்பாளோ? பாவம்! (13)

வண்டே! நாங்களோ வீடுவாசலற்ற காட்டுவாசிகள். எங்கள் எதிரே யதுக்களின் தலைவனான கிருஷ்ணனைப் பற்றிய பழங்கதைகளை ஏன் வீணாகப் பாடுகிறாய்? அர்ஜுனனின் நண்பனான கிருஷ்ணனது நகரத்துப் பெண்களிடம் சென்று, அவனது வரலாற்றைப் பாடு. அதைக் கேட்டு தங்கள் மார்பகத்து வேதனை குறையவே, மகிழ்ந்த அவர்கள் நீ விரும்பியதை நிறைவுறச் செய்வார்கள். (14)

மனதைப் பற்றி இழுக்கும் கபடு நிறைந்த அவனது புன்சிரிப்பையும், புருவங்களின் நெளிவையும் கண்டு மயங்காத பெண்கள் விண்ணிலும் மண்ணிலும் பாதாள உலகிலும் (மூவுலகிலும்) இல்லை. அப்படியிருக்க, இந்தப் பெண்கள் எம்மாத்திரம்? ஏன்? ஸ்ரீலக்ஷ்மிதேவியே இவரது பாததூளியை வழிபடுகிறாளே! அந்நிலையில் எங்கள் நிலைதான் என்ன? எனினும் கஞ்சனை புகழ்மிக்க வள்ளல் என்பது தகுமா? ஏழைகளிடத்தில் அன்பு செலுத்துபவனைத்தானே 'உத்தமசுலோகன்' (அனைவரும் புகழ்பவன்) என்றழைக்கத்தகும்? (15)

உன் காலைத் தலையில் வைக்காதே, அதை எடு. கிருஷ்ணனிடமிருந்து இங்கு தூது வந்து அழகாக இனிய சொற்களைப் பேசி, கிருஷ்ணன் பக்கம் சாரும்படி சமாதானம் செய்யத் தெரிந்த உன்னை நான் நன்கறிவேன். அவனுக்காகப் பிள்ளைகளையும் கணவரையும் மற்ற உறவினரையும் விட்டு வந்த எங்களைப் பற்றிச் சிறிதும் சிந்தியாது நன்றி மறந்து கைவிட்டானே. இனியும் அவனை நம்பி நாங்கள் (ஸந்தி) நட்பு கொள்ள வேண்டுமா? நீயே சொல்! (16)

ஊன் உண்ண மானைக் கொல்கிற வேடனைப்போல் (ஸ்ரீராமாவதாரத்தில்), வானரர்களின் அரசனான வாலியைக் கொன்றான். பெண்ணிற்கு (சீதைக்கு) அடிமையாகித் தன்னை விரும்பிக் காதலித்து வந்த மற்றொரு பெண்ணான சூர்ப்பணகையை அலங்கோலமாக்கினான். பலிச் சக்கரவர்த்தி அளித்த பூஜையை ஏற்று, பின்னர் அவனையே காக்கையைப்போல் (காக்கைத் தன் இனத்தாரையும் கரைந்தழைத்து, தனக்கு உணவு வைத்தவனைச் சுற்றிச் சுற்றி வந்து தொந்தரவு தருவதுபோல்) (வருணபாசத்தால்) கட்டினான். இந்தக் கறுப்பனின் நட்பு போதுமப்பா! 'அப்படியிருக்க ஏன் அவனைப் பற்றியே நினைக்கிறீர்கள்?' என்று கேட்கிறாயா? உண்மையைக் கூறுவதானால் அவனது திருவிளையாடல்களைக் கேட்டு மனம் பறிகொடுத்தவளுக்கு அவனைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. அதனால்தான் விட முடியவில்லை. (17)

அந்த கிருஷ்ணனின் திருவிளையாடல்களைக் காது குளிரக் கேட்டு, அதன் அமுதத் துளிகளை ஒரு தடவை பருகிய மக்கள், சுகம்–துக்கம் போன்ற துவந்துவ பாதிப்பு (இருமை) நீங்கித் தன்னையே இழந்து, தன்னை நம்பியுள்ள இரங்கத்தக்க வீடுவாசல்களையும், குடும்பத்தையும் துறந்து தாமும் இரங்கத்தக்கவராகி பறவைகள் போல் நிலைகொள்ளாமல் சுற்றித் திரிந்து, உயிரைக் காக்க கரதல பிச்சையேற்றுத் துறவிகளாக இருந்தும், கிருஷ்ணனது திருவிளையாடல்களை மறக்க முடியாமல் இருக்கின்றனர். (18)

தூதுவரே! அறிவற்ற பெண்மான்கள் வேடனது பாட்டை உண்மை என நம்பி, அவன் அம்பால் அடிபட்டுச் சாவதுபோல், நாங்களும் அடிக்கடி அவனது கபடப் பேச்சைக் கேட்டு உண்மையான அன்புடன் பேசுவதாக நம்பி, அவனது நகம் பட்டதால் காம உணர்வு அதிகமாகி இப்பொழுது துன்புறுகிறோம். ஆகையால், இனி பேசுவதானால் அவனைப் பற்றிப் பேசாது, வேறு பேச்சு பேசுங்கள். (19)

எங்கள் அன்பனான கண்ணனின் தோழனே! எங்களது பேரன்புக்குரிய கண்ணனால் அனுப்பப் பெற்று, இங்கு மறுபடியும் திரும்பி வந்தாயா? ஐயனே! நீ மதிப்புக்குரியவன். என்ன வேண்டும்? கேள் (தருகிறோம்). நல்லவனே! ஸ்ரீலக்ஷ்மியென்ற பெண் எப்போதும் அவரது திருமார்பிலேயே நகராமல் இருக்கிறாளே. அவளை விட்டுப் பிரிந்திருக்க முடியாத அவரிடம் எங்களை எப்படித்தான் அழைத்துச் செல்வாயோ? (20)

நல்மனமுடைய ஏ வண்டே! அது சரி! எங்கள் இனியனான கண்ணன் இப்போது மதுரையில்தான் இருக்கிறாரா? அவர் தன் பெற்றோரையும் உற்றாரையும் உறவினர்களான கோபரையும் நினைக்கிறாரா? அவர் அடிமைகளான எங்களைப் பற்றி எப்போதாவது பேசுவதுண்டா? அகிலின் நறுமணம் கொண்ட திருக்கரத்தை எங்கள் தலைமீது எப்போதாவது வைப்பாரா? (21)

ஸ்ரீசுகர் கூறுகிறார்— இவ்வாறு கோபிகைகள் கூறியதைக் கேட்ட உத்தவர், ஸ்ரீகிருஷ்ணன் அன்புடன் சொன்ன செய்திகளைக் கூறி, ஸ்ரீகிருஷ்ணனைக் காணப் பேராவல் கொண்ட கோபிகைகளைச் சமாதானப்படுத்திப் பின்வருமாறு கூறினார். (22)

உத்தவர் கூறுகிறார்— ஆஹா! இவ்வாறு உங்கள் மனம் பகவானான ஸ்ரீகிருஷ்ணனிடம் மட்டுமே தனித்து அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளதே. நீங்களன்றோ கிடைத்தற்கரிய பேறுபெற்றவர்கள். உலகமெல்லாம் உங்களைப் பாராட்டுவதில் என்ன ஆச்சரியம்? (23)

தானம், விரதம், தவம், ஹோமம், ஜபம், வேதமோதுதல், புலனடக்கம் என்று பற்பல மேன்மை தரும் நியமங்களால் ஸ்ரீகிருஷ்ணனிடம் பக்தி பெறப்படுகிறது. (24)

அஞ்ஞானத்தை அகற்றும் பெருமையுடைய பகவானிடம், முனிவர்களாலும் எளிதில் பெற இயலாத மிகச் சிறந்த பக்தியை நீங்கள் கொண்டுள்ளீர்கள். அதுவே உங்கள் பாக்கியம்! (25)

மனைவி–மக்கள், கணவர், உடல், உற்றார்–உறவினர், வீடுவாசல் என்ற பாசங்களைத் துறந்து, ஸ்ரீகிருஷ்ணன் என்ற பரமபுருஷனை விரும்பி அடைந்துள்ளீர்கள் என்பதே பெரும்பேறு! (26)

எவராலும் எவ்வகையிலும் அடைதற்கரிய பெரும்பேறு பெற்ற கோபிகைகளே! மனம், சொல், உடல் என்ற முக்காரணங்களாலும் நீங்கள் கண்ணன் ஒருவரிடமே தனித்த பக்தி கொண்டிருக்கிறீர்களே. ஆஹா! அவரை விட்டுப் பிரிந்த விரகதாபத்தால் எங்கும் எதிலும் கண்ணனையே கண்டீர்களே (ஸர்வாத்மபாவம்). (உங்களது விரகதாபத்தைப் போக்க என்னை கண்ணன் இங்கே அனுப்பினார்.) இப்பொழுது உங்களைக் கண்ட எனக்கு, உண்மையில் கண்ணன் பேரருள் செய்துள்ளார். ஏனெனில், உங்களது விரகதாபத்தைக் கண்டு எனக்கும், எங்கும் எதிலும் கண்ணனைக் காணும் பெரும்பேறு கிடைத்துவிட்டது. (27)

நன்மனம் படைத்தவர்களே! நான் என் நாதனின் ரகசியப் பணியாளன். உங்களுக்கு இன்பமளிக்கும் அன்பனின் அன்புச் செய்தியை இங்கு கொண்டு வந்திருக்கிறேன். அதனைக் கேளுங்கள். (28)

ஸ்ரீபகவான் கூறுகிறார்— எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்துள்ள நான், அனைத்திற்கும் உபாதான காரணன் (மூலகாரணன்). ஆகவே, உங்களிடமிருந்து முழு அளவில் நான் பிரிந்திருப்பது என்பது எப்போதும் இயலாததொன்றே. ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பூமி என்ற பூதங்கள் அசைவன–அசையாதன என அனைத்திலும் எவ்வாறு பரவியுள்ளனவோ, அவ்வாறே மனம், பிராணன், பஞ்ச பூதங்கள், இந்திரியங்கள், அவற்றின் புலன்களான சப்தம், ஸ்பரிசம் முதலிய அனைத்திலும் ஆதாரமாகப் பரவியுள்ளேன். (29)

நானே என் மாயாசக்தியின் பெருமையால் வேறு ஸாதனமின்றி என்னையே ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அவற்றின் தனித்த ஆற்றலாகிய சப்தம் முதலியனவாக ஆக்கி, அவற்றைக் காத்து, அழித்து என்னிடமே ஒடுக்கிக் கொள்கிறேன். (30)

ஆத்மா, பேருணர்வே வடிவானவன்; ஆகையால், குணம் மற்றும் செயல்களிலிருந்து வேறுபட்டவன்; ஸத்வம் முதலிய குணங்களுடன் கலவாதவன்; ஆகவே தூயவன். மாயையின் விளைவான விழிப்பு, கனவு, ஆழ்ந்த தூக்கம் என்ற மூன்று நிலைகளிலும் விச்வன், தைஜஸன், பிராஞ்ஞன் என வெவ்வேறு வடிவில் காணப்படுகிறான். (31)

தூங்கி எழுந்தவன் கனவில் கண்டதைப் பொய்யென நினைப்பது போலவே, நனவில் புலன்நுகர் பொருட்களைப் பொய்யென உணர்ந்து உண்மைப் பொருளை அறியவேண்டும். புலன்நுகர் பொருட்களையே எண்ணும் மனதைச் சோர்வின்றிக் கட்டுப்படுத்தி, எனது உண்மை நிலையை உணரவேண்டும். (32)

ஆறுகளுக்குக் கடலை அடைவது முக்கிய நோக்கம். அதுபோல் வேதமோதுதல், அஷ்டாங்கயோகம், அறிஞர்களுடன் 'ஆன்மா எது? அல்லாதது எது?' என்கிற தத்துவ விசாரம்--பற்றற்றுத் துறவு கொள்வது--தவம் செய்தல்--புலனடக்கம் என்பதெல்லாம், என் உண்மை நிலையை அறிவது என்பதையே நோக்கமாகக் கொண்டவை. மனவடக்கமே இதற்கு ஒரே வழி. (33)

உங்கள் கண்களுக்கு இன்பம் தருகிற நான் இன்று வெகுதூரத்தில் சென்றிருப்பதன் நோக்கம், என்னையே தொடர்ந்து நினைப்பதில் உங்களை ஆர்வம் கொள்ளச் செய்து, மனத்தளவில் என்னையே நெருங்கி நிற்பதற்காகவே. (34)

பெண்கள் மனம், தம் மனத்திற்கினியவன் தூரத்திலிருக்கும்போது அவனையே நினைந்து நினைந்து முழுவதுமாகப் பரவி நிற்கும். ஆனால், கண்களுக்குப் புலப்படும்படி அருகில் இருப்பின் மனம் அவ்வாறு முழுவதுமாகப் பதியாது. (35)

மற்ற வெளிப்பொருட்கள் அனைத்திலும் நாட்டத்தைவிட்டு, மனதை முழுவதுமாக என்னிடமே செலுத்தி, இடைவிடாமல் என்னையே தொடர்ந்து நினைத்து வந்தால் விரைவிலேயே என்னை அடைவீர்கள். (36)

மங்களமானவர்களே! இதே பிருந்தாவனத்தில் சரத்கால பௌர்ணமி இரவில் ராஸலீலை புரிந்த என்னுடன், ராஸத்தில் பங்கு கொள்ள இயலாதபடி சில கோபிகைகள் கோகுலத்திலேயே தடுக்கப்பட்டு நிற்க நேரிட்டதல்லவா? அவர்கள் எனது திருவிளையாடல்களைத் தொடர்ந்து தியானித்தே என்னை அடைந்தார்கள். (37)

ஸ்ரீசுகர் கூறுகிறார்— இவ்வாறு அன்புக்கினிய ஸ்ரீகிருஷ்ணன் அனுப்பிய செய்தியைக் கேட்ட கோபியர், அந்தச் செய்தியால் அவரது திருவிளையாடல்களை நினைவுகூர்ந்து, துயர் நீங்கி மகிழ்ச்சியுற்று உத்தவரிடம் பின்வருமாறு கூறினார்கள். (38)

கோபியர்கள் கூறினார்கள்— ''நல்லவேளையாக, யாதவர்களுக்குக் கெடுதி செய்த கம்சன் துணைவர்களுடன் கொல்லப்பட்டான். விருப்பமனைத்தும் நிறைவுற்ற உற்றார்–உறவினர்களுடன் இருக்கும் ஸ்ரீகிருஷ்ணன், இப்போது நலமுடன்தானே இருக்கிறார்? (39)

உத்தவரே! ஸ்ரீகிருஷ்ணனை நாங்கள் அன்பு நிறைந்து வெள்கிய புன்சிரிப்பும், அழகான கடைக்கண் பார்வையும் கொண்டு சேவித்தோம். அவரும் தன் அழகான பார்வை, புன்சிரிப்பினால் எங்களை மகிழ்வித்தார். அதேபோல், மதுரை நகரப் பெண்மணிகளையும் மகிழ்விக்கிறாரா? (40)

ஸ்ரீகிருஷ்ணன், மனதைக் கவர்ந்திழுக்கும் ரதிவிலாஸங்களை (ஆனந்தம் அளிக்கும் கலையை) நன்கறிந்தவர். மேலும், மதுரை நகரப் பெண்மணிகளுக்கு மிகவும் பிரியமானவர். நகரத்துப் பெண்மணிகளின் இனிய பேச்சுக்களையும், அவர்களது அழகிய சேட்டைகளையும் கண்டு அவர்களிடமே மனம் லயித்திருப்பார். (41)

பெரியவரே! நகரத்துப் பெண்கள் கூட்டத்தின் இடையே விருப்பப்படி பேசிக் கொண்டிருக்கும் போதோ, அல்லது வேறு சமயத்திலாவது கண்ணன் கிராமத்துப் பெண்களான எங்களைப் பற்றி நினைப்பதுண்டா? (42)

தேவர்களும் துதிக்கும் மனங்கவர் திருவிளையாடல்கள் புரியும் கண்ணன், அன்று பிருந்தாவனத்தில் ஆம்பலும் அல்லியும் குந்த மலர்களும் பூத்து, பௌர்ணமி முழுநிலவால் அழகு மிளிர்ந்திருந்த இரவில்

காற்சதங்கைகள் ஒலிக்க ஆடிய ராஸ விளையாட்டில் அன்பர்களான எங்களுடன், நேரத்தை இனிதே கழித்தார். அந்த நல்லிரவுகளை எப்பொழுதாவது அவர் நினைத்துப் பார்க்கிறாரா? (43)

கண்ணன் தன் பிரிவாற்றாமையால் தவிக்கிற எங்களை, இந்திரன் மேகங்களால் மழை பெய்யச் செய்து உலர்ந்த காட்டை வாழ வைப்பதுபோல், தன் திருமேனி அழகால் வாழ வைக்க இங்கு வருவாரா? பகைவர்களை அழித்து அரசும் பெற்று, நண்பர்கள் சூழ அரசகுமாரிகளை மணந்து, அதனால் மகிழ்ச்சியோடு உள்ள ஸ்ரீகிருஷ்ணன் இங்கு எதற்காக வரப்போகிறார்? (44,45)

அவர் திருமகளின் மணவாளன்; பெறவேண்டியது அனைத்தையும் பெற்றவர்; செய்யவேண்டியது அனைத்தையும் செய்து முடித்தவர்; அனைவரின் விருப்பத்தையும் நிறைவேற்றுபவர். அவருக்குக் காட்டுவாசிகளான எங்களாலோ, எங்களைப் போன்ற அரசகுமாரிகளாலோ ஆகவேண்டியதுதான் என்ன உள்ளது? (46)

பற்றற்றிருப்பதே பேரின்பம் (ஆசை அழிவிற்கு வித்து) என்று, வேசி பிங்களை கூறியிருக்கிறாள். அதை நன்கறிந்திருந்தும், ஸ்ரீகிருஷ்ணனிடம் எங்களுக்கு ஆசையை விட இயலவில்லையே. (47)

அவர் விரும்பாவிடினும் ஸ்ரீலக்ஷ்மி அவரது மார்பிலிருந்து அகலுவதில்லை. அப்படியிருக்க, பெரியோர்கள் கொண்டாடும் அத்தகைய கண்ணனின் கனிந்த இனிய பேச்சுக்களை விடுவதற்கு யாருக்குத்தான் மனம் வரும்? (48)

பிரபுவே! பலராமனுடன் ஸ்ரீலக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான ஸ்ரீகிருஷ்ணனது திருவடிகள் சுற்றிச்சுற்றி வந்த இந்த ஆறுகளும், மலைகளும், காட்டுப் பிரதேசங்களும், பசுக்களும், வேணுநாதமும் நந்தகோபரின் புதல்வனான கண்ணனை அடிக்கடி நினைவூட்டுகின்றன. அதை எம்மால் மறக்க இயலவில்லையே! (49,50)

உத்தவரே! பெருமிதத்துடன் கூடிய நடை, மென்மையும் அழகும் மிக்க வெளிறிய புன்சிரிப்பு, விளையாட்டுப் பார்வை, தேனினும் இனிய பேச்சு என இவற்றால் அறிவிழந்த நாங்கள், அவரை எப்படி மறப்போம்? ஏ நாதா! ஏ திருமகள் கேள்வனே! கோகுலத்தின் நாதனே! துயர் தீர்க்கும் கோவிந்தா! (உன்னைவிட்டுப் பிரிந்து) துயரக் கடலில் ஆழ்ந்து மூழ்கிய எங்களைக் கரையேற்றுங்கள்.'' (51,52)

ஸ்ரீசுகர் கூறுகிறார்— இவ்வாறு கூறிய அந்த கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணனது செய்தி கேட்டு, புலன்களுக்கு உட்படாத ஆத்மா அவரே என உணர்ந்து (ஆத்மா என உணர்ந்து = ஸர்வ அந்தர்யாமியாக (நம்முள்ளேயே) அருகில் இருப்பவர் என உணர்ந்து), அவரது பிரிவின் துயரகன்று, உத்தவரைப் பாராட்டிப் பெருமைப்படுத்தினர். (53)

உத்தவர், ஸ்ரீகிருஷ்ணலீலையைப் பற்றிய செய்திகளைப் பாடி, அதனால் கோபிகைகளின் துயரை நீக்கி, கோகுலத்தை மகிழ்ச்சி கொள்ளச் செய்து, சில மாதங்கள் அங்கேயே தங்கியிருந்தார். (54)

உத்தவர் நந்த கோகுலத்தில் வசித்த நாட்கள் முழுவதும் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றிய இனிய பேச்சுக்களால் கோகுலவாசிகளுக்கு ஒரு நொடிப்பொழுதாகக் கழிந்தது. (55)

ஸ்ரீஹரி பக்தரான உத்தவர் ஆறுகளையும், மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், பூத்துக்குலுங்கும் மரங்களையும் கண்டு களித்து, கோகுலவாசிகளுக்குக் கண்ணனையே நினைத்திருக்குமாறு நினைவூட்டிக் கொண்டு பொழுதுபோக்கினார். (56)

ஸ்ரீகிருஷ்ணனிடமே மனதைப் பதித்த கோபியர்கள் படும் ஆற்றாமையையும், அவர்களது பக்தியின் முதிர்ச்சியையும் கண்டு மகிழ்ந்த உத்தவர், அவர்களை வணங்கிப் பின்வருமாறு கூறினார்— (57)

அனைத்து ஜீவன்களிலும் ஆன்மாவாக விளங்கும் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலேயே, அசைவற்ற பிரேம பக்தி தங்களுக்கு வேரூன்றி இருக்க வேண்டுமென உலகியலைக் கண்டு பயந்து நடுங்கும் முமுக்ஷுக்களும் முனிவர்களும் பக்தர்களான நாங்களும் விரும்பி வேண்டுகின்றோம். (அப்படியிருக்க) அவ்வாறான அசைவற்ற பிரேம பக்தியைக் கொண்ட இந்த கோபிகைகளன்றோ உண்மையில் இவ்வுலகில் உடல் பெற்ற பயனைப் பெற்றவர்கள். [ஸ்ரீபகவானது திருவிளையாடல்களின் கதையமுதத்தைப் பருகியவனுக்கு நற்குடிப்பிறப்பு (ஸௌக்லம்), அந்தணர்களுக்குரிய உபநயனம் முதலிய சடங்குகள் (ஸாவித்ரம்), பெரிய பெரிய வேள்விகளை நடத்தும் யஜமானன் தீக்ஷிதர் (யாஞ்ஞிகம்) என்கிற மூன்றுவிதமான பெருமைகளால் யாது பயன்? பகவானது கதையமுதத்தின் மீது பற்றோ அல்லது அதைப்

பருகும் பேற்றினையோ கிடைக்கப் பெறாத ஒருவனுக்கு, பற்பல கல்பங்கள்தோறும் பிரும்ம பதவி கிடைத்துத்தான் என்ன பயன்?] (பன்முறை பிரும்மதேவரின் பதவி கிடைப்பினும் பகவத் பக்தி இல்லையேல், அவனது பிறவி வீணே.) (58)

ஆசார அனுஷ்டானங்களற்ற, அறிவற்ற, இழிபிறப்பினரான இந்த இடைச்சாதி பெண்கள் எங்கே? பரமாத்மாவான கண்ணனிடத்தில் கொண்ட அசைவற்ற அன்புக்காதல் எங்கே? இறைவனைப் பற்றிய உண்மையை உணராதிருந்தும் அவரிடமே காதல் கொண்டு பக்தி செய்பவனுக்கு, இறைவன் நன்மைகளையே செய்கிறான். அமுதமென்றறியாதிருந்தும் அருந்தியவனுக்கு அது நன்மையே செய்கிறதன்றோ! (59)

ராஸக்ரீடையில் ஸ்ரீகிருஷ்ணனது நீண்ட திருக்கைகளால் கழுத்தில் அணைக்கப் பெற்று விரும்பியதனைத்தையும் பெற்ற கோகுல ஸ்திரீகள் பெற்ற அருளை, தாமரை போன்ற மணமும் அழகும் பெற்ற தேவமாதர்களோ, திருமார்பிலேயே எப்போதும் வசிக்கிற ஸ்ரீமஹாலக்ஷ்மியோ கூடப் பெறவில்லையே? எனில், மற்ற பெண்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? (60)

இழக்க இயலாத சுற்றத்தையும், நல்லோரின் அறநெறிகளையும் கைநழுவவிட்ட கோபிகைகள், வேதங்கள் தேடிக் காணக் கிடைக்காத ஸ்ரீகிருஷ்ணனின் பதவியை (பக்தியை) அடைந்தனர். அவர்களது திருவடித்துகள்களைப் பெறுகிற பாக்கியம் பெற்ற பிருந்தாவனத்தில் புல், புதர், செடி, கொடி இவற்றில் ஏதேனும் ஒன்றாக நான் ஆகக் கூடாதா? (61)

ஸ்ரீமஹாலக்ஷ்மியாலும், விரும்பியதனைத்தையும் பெற்ற பிரும்மா முதலானோராலும், யோகீசுவரர்களாலும் தங்கள் இதயத்தினுள் வைத்து வழிபடப் பெற்ற ஸ்ரீகிருஷ்ணனின் திருவடித்தாமரைகளை, ராஸகோஷ்டியில் தங்கள் மார்பகத்தின் மீது வைத்து அணைத்து, தங்கள் மனக்குறைகளை முற்றிலுமாகப் போக்கிக் கொண்டவர்களன்றோ, இந்தக் கோபியர்கள்! (62)

ஸ்ரீகிருஷ்ண லீலை பற்றிய நந்த கோகுலத்துப் பெண்மணிகளின் கானம், மூவுலகையும் புனிதமாக்குகிறது. அவர்களின் திருவடித்துகள்களை அடிக்கடி நான் வணங்குகிறேன். (63)

ஸ்ரீசுகர் கூறுகிறார்— பிறகு தாசார்ஹ வம்சத்திலுதித்த உத்தவர் கோகுலத்திலிருந்து கிளம்பும்போது, கோபிகைகளிடமும் யசோதையிடமும் நந்தரிடமும் கோபர்களிடமும் விடைபெற்றுத் தேரில் ஏறினார். அவர் கிளம்புவதைக் கண்ட நந்தர் முதலானோர் (வெண்ணெய் முதலான) பற்பல காணிக்கைகளைக் கைகளில் ஏந்தி, கண்ணீர் மல்க அவரருகே சென்று அன்புடன் சொன்னார்கள்— (64,65)

"(உத்தவரே!) எங்கள் எண்ணங்கள் (மனது) ஸ்ரீகிருஷ்ணனின் திருவடிகளைப் பற்றியதாகவே இருக்கட்டும். வாய் (வாக்கு) அவரது திருநாமங்களைக் கூறிக் கொண்டிருக்கட்டும். உடல் (காயம்) அவரையே வணங்கிக் கொண்டிருக்கட்டும். (66)

வினைப்பயனால் பகவானது விருப்பத்திற்கேற்ப பல்வேறு பிறவிகள் எடுத்துச் சுழன்று கொண்டிருக்கும் நிலையிலும், அவரது அருளால் புரியும் நற்பணிகள், தானங்கள் ஆகியவற்றினால் யாம் வேண்டும் பயன் ஈசுவரனான ஸ்ரீகிருஷ்ணனிடம் பக்தி ஒன்றே." (67)

அரசே! ஸ்ரீகிருஷ்ணனிடம் கொண்ட பக்தியால் கோபர்கள் உத்தவரை இவ்வாறு நன்கு உபசரித்தனர். அவரும் ஸ்ரீகிருஷ்ணன் பரிபாலிக்கும் மதுரைக்குத் திரும்ப வந்தார். (68)

(பின்னர்,) ஸ்ரீகிருஷ்ணனை கண்டு வணங்கி, கோகுலவாசிகள் அவரிடம் கொண்டுள்ள பக்தியின் சிறப்பைக் கூறி வியந்தார். வசுதேவருக்கும், பலராமனுக்கும், அரசரான உக்ரஸேனருக்கும் கோபர்கள் அளித்த காணிக்கைகளை அளித்தார். (69)

ஸ்ரீமத்பாகவத மகாபுராணம், பத்தாவது ஸ்கந்தத்தில்
நாற்பத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

[ஸ்ரீமத் பாகவத மகாபுராணம் – பத்தாவது ஸ்கந்தம் (ஸ்ரீகிருஷ்ண லீலாம்ருதம்) – வெளியீடு : கீதா பிரஸ்]

॥ ஸ்ரீஹரி: ॥

கீதா பிரஸ்ஸின் பாராயண நூல்கள்

Code No.		பக்கங்கள்	
1.	389	236	கீதா மாதுர்யம் (பகவத்கீதா – வினா-விடை)
2.	600	64	ஸ்ரீஹநுமாந் சாலீஸா – தமிழ் மூலம்
3.	743	256	ஸ்ரீமத் பகவத்கீதா மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்)
4.	793	256	ஸ்ரீமத் பகவத்கீதா – தமிழ் மூலம் & விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழ் மூலம்
5.	794	64	விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழ் மூலம்
6.	795	128	ஸ்ரீமத் பகவத்கீதா – பொழிப்புரை
7.	800	1024	ஸ்ரீமத் பகவத்கீதா–தத்வவிவேசனீ — [மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–பொழிப்புரை–விளக்கவுரை]
8.	823	288	ஸ்ரீமத் பகவத்கீதா – மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–பொழிப்புரை
9.	1256	336	அத்யாத்ம ராமாயணம் – தமிழ் மொழிபெயர்ப்பு
10.	1426	1074	ஸ்ரீமத் பகவத்கீதா – ஸாதக ஸஞ்ஜீவநீ மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–விளக்கவுரை (1 முதல் 9 அத்தியாயங்கள்)
11.	1427	935	(10 முதல் 18 அத்தியாயங்கள்)
12.	1534	426	சுந்தரகாண்டம் (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்) – தமிழ் மூலம்–மொழிபெயர்ப்பு
13.	1605	272	ஸ்ரீ உத்தவ கீதை (ஸ்ரீமத் பாகவத மகாபுராணம் – பதினோராவது ஸ்கந்தம்) – தமிழ் மூலம்–மொழிபெயர்ப்பு
14.	1606	304	ஸ்ரீமந் நாராயணீயம் – தமிழ் மூலம்–விளக்கவுரை
15.	1618	328	சுந்தர காண்டம் (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்) – பொழிப்புரை
16.	1619	248	சுந்தர காண்டம் (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்) – தமிழ் மூலம்
17.	1788	112	ஸ்ரீ முருகன் துதிமாலை (தோத்திரத் தொகுப்பு)
18.	1789	160	திருப்பாவை விளக்கம்
19.	1843	736	ஸ்ரீகிருஷ்ண லீலாம்ருதம் (ஸ்ரீமத் பாகவத மகாபுராணம் – பத்தாவது ஸ்கந்தம்) – (மூலம்–மொழிபெயர்ப்பு)
20.	1807	1056	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் – (பாலகாண்டம்–அயோத்தியா காண்டம்) – (தமிழ் மூலம்–மொழிபெயர்ப்பு) (முதல் பாகம்)
21.	—	768	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் – (ஆரண்ய காண்டம்–கிஷ்கிந்தா காண்டம்) – தமிழ் மூலம்–மொழிபெயர்ப்பு) (இரண்டாம் பாகம்)

அறிவுரை நல்கும் நூல்கள்

21.	127	96	பயனுள்ள கதைகள்
22.	365	96	பசுப் பராமரிப்பின் நற்பயன்கள் – கதைகள்
23.	423	64	கர்ம ரஹஸ்யம்
24.	466	64	ஸத்ஸங்கத்தின் ஸாரமான தத்வங்கள்
25.	499	32	நாரத பக்தி ஸூத்ரம்
26.	536	72	கீதை கற்பதன் பயன்கள்
27.	550	64	திருநாமஜபத்தின் மஹிமை
28.	551	64	தூய்மையான உணவுப் பழக்கம்
29.	553	192	குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்?
30.	568	88	சரணாகதி
31.	569	64	உருவ வழிபாடு
32.	591	128	மஹாபாவத்திலிருந்து உன்னைக் காத்துக் கொள் – பிள்ளைகளின் கடமைகள்
33.	601	96	பகவான் ஸ்ரீகிருஷ்ணன்
34.	606	32	மிக உயர்ந்த நிலையை அடைவதற்கான வழி
35.	607	32	எல்லோருக்கும் மேன்மை எப்படி ஏற்படும்?


	Code No.	பக்கங்கள்	
36.	608	96	பக்தராஜ ஹனுமான்
37.	609	32	மஹாபாரதத்திலுள்ள ஸாவித்ரி–ஸத்யவான் கதைகள்
38.	642	96	ஸ்ரீகிருஷ்ணனின் நண்பரான உத்தவரின் கதை
39.	643	96	பகவான் உறையும் ஐந்து இடங்கள்
40.	644	64	சுசீலா – ஓர் லக்ஷ்யப் பெண்மணி
41.	645	96	மஹாபாரதத்திலுள்ள நள–தமயந்தி கதைகள்
42.	646	96	பல்சுவைக் கதைகள்
43.	647	32	கண்ணன் (சித்திரக் கதை)
44.	648	32	ஸ்ரீகிருஷ்ணன் ,,
45.	649	32	கோபால் ,,
46.	650	32	மோஹன் ,,
47.	655	112	ஒன்றே செய்மின்! நன்றே செய்வீர்!!
48.	741	64	மஹாத்மா விதுரர்
49.	742	48	கருக்கலைப்பு சரியா? தவறா?
50.	792	48	முக்கியமான எச்சரிக்கை
51.	805	32	தாய்மையின் அவல நிலை
52.	850	128	மஹான்களுடைய அமுத மொழிகள்
53.	952	128	மஹான்களின் மணி மொழிகள்
54.	953	128	மஹான்களின் சீரிய உபதேசம்
55.	1007	224	கடையோனுக்கும் கடவுட்காட்சி
56.	1110	128	ஆயிரம் அமுதத் துளிகள்
57.	1117	112	நாட்டின் இன்றைய நிலையும், அதன் விளைவுகளும்
58.	1134	64	கீதையின் பெருமையை விளக்கும் கதைகள்
59.	1243	125	உண்மையான சுகம்
60.	1246	96	பக்த சரித்திரம்
61.	1289	80	ஸாதனை நெறி
62.	1353	176	ராமாயணத்தில் சில முக்கிய பாத்திரங்கள்
63.	1354	160	மஹாபாரதத்தில் சில முக்கிய பாத்திரங்கள்
64.	1480	144	செயல்கள் அனைத்தும் பகவானுக்கே
65.	1481	144	பகவானை நேரில் காண வழி
66.	1482	144	பக்தி யோகத்தின் பெருமை

இந்நூல்கள் அனைத்தும் அனைவரும் வாங்கி பயனடைய மிக மலிவான விலையில் வெளியிடப்பட்டுள்ளது. எங்களது நிறுவனம் ஆன்மீகம் மற்றும் மானிட நல்லொழுக்கம் வளர உதவும் நூல்களை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம், உருது, குஜராத்தி, மராத்தி, பெங்காலி, ஒரியா, அஸ்ஸாமியா மற்றும் நேபாளி மொழிகளில் பல ஆண்டுகளாக வெளியிடுகிறோம் என்பதை மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது தமிழ்நாடு கிளை :

கீதா பிரஸ் புத்தக நிலையம்,
கீதா பிரஸ் மேன்ஷன்,
8/1 M, ரேஸ் கோர்ஸ் சாலை (தாமஸ் பார்க் பஸ்–ஸ்டாப் அருகில்),
கோயம்புத்தூர் – 641 018. Ph. : 0422–3202521

॥ ஓம் ஸ்ரீபரமாத்மநே நம: ॥



1. யத்ர யத்ர ரகு$_4$நாத$_2$கீர்தநம் தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் ।
பா$_3$ஷ்பவாரிபரிபூர்ணலோசநம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ॥

2. பு$_3$த்$_3$தி$_4$ர்ப$_3$லம் யஶோதை$_4$ர்யம் நிர்ப$_4$யத்வம் அரோக$_3$தா ।
அஜாட்$_3$யம் வாக்படுத்வம் ச ஹநுமத் மிரணாத் ப$_4$வேத் ॥

Gita Press, Gorakhpur—273005
Ph. (0551) 2334721, 2331250, 2331251